3L
ω211,N08
N14.7
166913

SUPPLEMENT TO THE "PEOPLE'S FRIEND."

"ஜனுபிமானி" க்கு அனுபந்தம்.



THE KAISER WILLIAM,
THE GERMAN ..

கேய்ஸர் வில்
ஜெர்மனியின் ..



M. POINCARE, PRESIDENT
FRENCH REPUBLIC.

மான்ஷர் பாயின்கரே,
ப்ரெஞ்ச் குடியரசின் ப்ரெஸி

OFFICE OF THE REGISTRAR
23 DEC 1914
MADRAS.

SUPPLEMENT TO THE "PEOPLE'S FRIEND."
"ஜனுபிமானி" க்கு அனுபந்தம்.

[…]ENT [..] THE "PEOPLE'S FRIEND."
ஜனுபிமானி" க்கு அனுபந்தம்.



HIS MAJESTY KING GEORGE V.

நமது சக்ரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ்.



MR. H H. ASQUITH.
Prime-Minister, England.
மிஸ்டர் எச். எச். ஆஸ்க்வித்,
இங்கிலண்டின் ப்ரதம மந்த்ரி.

THE REGISTRAR
23 DEC 1914
MADRAS.



WAR MAP OF EUROPE
ஐரோப்பிய யுத்தப்படம்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE "PRACTICAL LIFE"

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. | ஆனந்தவருஷ புரட்டாசிமீ, SEPTEMBER 1914. | ஸஞ்சிகை 1. No. 12.


OFFICE OF THE REGISTRAR OF ... 23 DEC 1914 MADRAS.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 4 0 | ... ... | 0 6 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| 1/10 do | ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors** :—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1 க்கு | ... 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி | ... 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி | ... 0 4 0 | ... | 0 6 0 |

சந்தாப்பணத்தை ஒரு எஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |
| 1/10 பக்கத்திற்கு | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக் கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

ஜ்ஞாபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்த௵ புரட்டாசி௴, [ஸஞ்சிகை 1.

# THE WAR IN EUROPE.

## ஐரோப்பாவில் யுத்தம்.

சென்ற இரண்டு மாஸகாலமாக ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தத்துக்குமுக்ய காரணம் ஆஸ்ட்ரியா தேசத்து இளவரசரை ஒரு ஸெர்விய மாணவன் சென்ற ஜூன்மாஸம் 28-தேதியன்று ஆஸ்ட்ரியாவுக்கு ஸொந்தமான பாஸ்னியாவின் முக்ய பட்டணமாகிய ஸராஜிவோ பட்டணத்தில் கொன்றதே. இந்தக் கொலையினால் ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் யுத்தம் உண்டாயிற்று. இந்த யுத்தம் எப்படி பெரிய யுத்தமாயிற்று என்பதை இங்கு விவரிக்கிறோம்.

ஸெர்வியா ஜாதியார்களில் ஒரு பாகத்தார் ஆஸ்ட்ரியாவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்ட்ரியாவின் ஆட்சியிலிருந்து மீட்டுக்கொண்டு ஸெர்வியாவுடன் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். இதற்காக அநேக ஸெர்வியர்கள் சதியாலோசனைசெய்து வந்தார்களென்று சொல்லப்படுகிறது. இந்த சதியாலோசனைகளின் பயனாக மேற்சொன்ன ஸெர்விய மாணவன் ஆஸ்ட்ரியாவின் இளவரசரைக் கொன்றுவிட்டான்.

இன்னும், ஸெர்வியா கவர்ன்மெண்டாரே இந்த சதியாலோசனைகளுக்கு உதவிசெய்து வந்தார்களாம். ஸெர்வியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு ஆஸ்ட்ரியா மேல் த்வேஷம் உண்டாகும்படியான பாடங்கள் கற்பித்து வருகிறார்களாம். இவைகளையறிந்த ஆஸ்ட்ரியாவுக்கு ஸெர்வியாவின்மேல் ஆத்ரம் உண்டாயிற்று. இதனால் ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டார், ஸெர்வியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் ஆஸ்ட்ரியாமேல் த்வேஷம் உண்டாகும்படி பாடங்கள் கற்பித்து வருவதை ஸெர்வியா கவர்ன்மெண்டார் நிறுத்திவிட வேண்டுமென்றும், ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமான சதியாலோசனை முயற்சிகளை வெறுப்பதாகவும், அந்த முயற்சிகள் நடந்து வந்ததற்காக தாம் வருத்தப்படுவதாகவும் ஸெர்வியா தெரிவிக்கவேண்டுமென்றும், சதியாலோசனை முயற்சிகளில் ஸம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டுமென்றும், இளவரசருடைய கொலை ஸம்பந்தமான குற்றவாளிகளை தண்டிக்கவும், ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமான முயற்சிகளை யடக்கவும் ஆஸ்ட்ரியா தனது உத்யோகஸ்தர்களை யனுப்பினால் அவர்களை ஸெர்வியா ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டார் ஸெர்வியாவுக்கு ஜூலை மாஸம் 24உ தெரிவித்தார்கள். ஸெர்வியா ஆஸ்ட்ரியாவின் நிபந்தனைகளுக்கு கட்டாயத்தின் மேல் உடன்படுவதாயும், ஆனால் விசாரணைக்கு ஆஸ்ட்ரிய உத்யோகஸ்தர்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் 25உ யன்று தெரிவித்தது. இந்த பதில் ஆஸ்ட்ரியாவுக்கு த்ருப்திகரமாயில்லை. அதனால் ஆஸ்ட்ரியா ஸெர்வியாமேல் யுத்தம் தொடங்கிற்று.

ஐரோப்பாவிலுள்ள 'வல்லரசுகள்' என்று சொல்லப்படும் பெரிய ராஜ்யங்களில் ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, இட்டலி ஆகிய இந்த மூன்றும் 'ட்ரிப்பிள் அல்லையன்ஸ்' என்று ஒரு கக்ஷியாக இருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று யுத்தகாலங்களில் உதவி செய்வதாக உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றன.

ரஷ்யாவும் ப்ரான்ஸூம் யுத்தகாலங்களில் ஒன்றுக்கொன்று உதவி செய்வதாக ஒரு



உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றன.

ஆஸ்ட்ரியா ஸெர்வியாவைத் தோற்கடித்துவிட்டால் அது (ஆஸ்ட்ரியா) மற்ற பால்கன் நாடுகளையும் ஜயித்து தன்னோடு சேர்த்துக் கொண்டுவிடும். இது ரஷ்யாவுக்கு ஸம்மதமில்லை. ரஷ்யாவிலும் பால்கன் நாடுகளிலுமுள்ள ஜனங்கள் ஒரே ஜாதியாயும், ஒரே மதமாயுமிருப்பதால், அவைகளை ஆஸ்ட்ரியா தொந்தரை செய்வதில் ரஷ்யாவுக்கு ஸம்மதமில்லை. அவைகள் ஸ்வாதீனமாக இருக்கவேண்டுமென்பதே ரஷ்யாவின் எண்ணம். மேலும் ஆஸ்ட்ரியா ரொம்ப பலப்பட்டுவிட்டால் ரஷ்யாவுக்குக் கெடுதலாகையால் ரஷ்யா ஸெர்வியாவினுடன் சேர்ந்துகொண்டு சென்ற ஜூலை௴ 31-தேதியன்று ஆஸ்ட்ரியாவின்மேல் யுத்தம் செய்ய ஆரம்பித்தது.

ஆஸ்ட்ரோ-ஸெர்விய யுத்தத்தில் வேறு ராஜ்யங்கள் சேராமலிருக்க வேண்டுமென்றும், ஆஸ்ட்ரியாவும் ஸெர்வியாவும் தங்கள் மனஸ்தாபங்களைதாங்களே தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் ஐரோப்பிய ராஜ தந்த்ரிகளில் சிலர் முயற்சி செய்துவந்தார்கள். அது முடியாமல் போயிற்று. ரஷ்யா ஆஸ்ட்ரியாவின் மேல் யுத்தம்செய்ய ஆரம்பிக்கவே ஜெர்மனி தனது கக்ஷியைச்சேர்ந்த ஆஸ்ட்ரியாவோடு சேர்ந்துகொண்டு ரஷ்யாவின்மேல் யுத்தம் ஆரம்பித்துவிட்டதாக (ஆகஸ்ட்௴ 1-உ) தெரிவித்துவிட்டது. மேலும் ரஷ்யாவுக்கு ப்ரான்ஸ் உதவிசெய்வதாக உடன்படிக்கை செய்துகொண்டிருப்பதால் அதுவும் (ப்ரான்ஸூம்) சண்டைக்குவரும் என்று எண்ணி ஜெர்மனி ப்ரான்ஸோடு யுத்தத்துக்குப் போயிற்று.

ஜெர்மனிக்கு வடமேற்கில் ஜெர்மனிக்கும் ப்ரான்ஸூக்கும் நடுவில் பெல்ஜியம் என்ற ஒரு ராஜ்யமும், லக்ஸம்பர்க் என்று ஒரு சிறு ஸ்வயேச்சையான நாடும் இருக்கின்றன. ஜெர்மனியானது இவைகளின் வழியே தனது ஸைன்யங்களைக் கொண்டுபோய் ப்ரான்ஸை எதிர்க்க எண்ணிற்று. அதற்காக லக்ஸம்பர்க் என்னும் தேசத்திலுள்ள ரயில் வேக்களைக் கைப்பற்றி அந்த ப்ரதேசத்தின் வழியாய் ஒரு லக்ஷம் துருப்புகளைக் கொண்டுபோய் ப்ரான்ஸின் ஸைன்யங்களை லாங்க்வி என்னும் இடத்தில் தாக்கிற்று.

இது நிற்க, ஜெர்மனி தனது ஸைன்யங்களை பெல்ஜியம் தேசத்தின் வழியாக ப்ரான்ஸூக்குக் கொண்டுபோக வேண்டுமென்றும், அதற்காக பெல்ஜியம் கவர்ன்மெண்டார் ஜெர்மனியின் கட்சியாயிருந்து ஸைன்யங்கள் பெல்ஜியத்தின் வழியாகப்போக இடங்கொடுக்க வேண்டுமென்றும் பெல்ஜியத்தைக் கேட்டது. பெல்ஜியம் அதற்கு ஸம்மதப்படவில்லை.

இங்கிலண்டானது இந்த யுத்தத்தில் என்ன செய்வதென்று சிலநாட்களாகயோசனைசெய்து வந்தது. பெல்ஜியத்தை ஜெர்மனிகைப்பற்றினாலும், ப்ரான்ஸின் வடக்கு, மேற்குக் கரைகளை ஜெர்மனியின் கப்பல்படை தாக்கினாலும், இங்லண்டுக்கு பாதமாக முடியுமாதலால் தான் சும்மாவிருக்க முடியாதென்றும், ப்ரான்ஸின் பக்கம் சேர்ந்துகொண்டு ஜெர்மனியோடு யுத்தம் செய்யவேண்டியிருக்கு மென்றும் எண்ணி, ஜெர்மனி பெல்ஜியத்தின் வழிக்குப் போகவில்லையென்றும், ப்ரான்ஸின் வடக்கு, மேற்குக் கரைகளைத் தாக்குவதில்லை யென்றும் உத்தரவாதம் செய்யமுடியுமா வென்று இங்லண்ட் ஜெர்மனியைக்கேட்டது. ஜெர்மனி சரியான பதில் கொடுக்கவில்லை. ஆகவே சென்ற௴ 4-தேதி யன்று இரவு ஜெர்மனிமேல் யுத்தம் தொடங்கி விட்டதாக இங்கிலண்டு தெரிவித்துவிட்டது. ஜெர்மனியும் இங்லண்டின்மேல் யுத்தம் தொடங்கிற்று. இங்லண்ட் ஏன் இந்த ஐரோப்பிய யுத்தத்தில் சேர்

ந்த தென்பதைப்பற்றி ப்ரிட்டிஷ் அன்ய தேச வ்யவஹார மந்த்ரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே பார்லிமெண்டில் பேசினதைக் கீழே சுருக்கி எழுதுகிறோம்.

தற்போது இங்கிலண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் ஸ்நேகம் இருந்து வருவதில், ப்ரான்ஸின் கப்பல்படையானது மத்யதரைக்கடலில் வைக்கப்பட்டிருக்கிறது. ப்ரான்ஸின் வடக்குக் கரையையும், மேற்குக் கரையையும் பாதுகாக்க ப்ரான்ஸுக்கு வேறு கப்பல் படை கிடையாது. ப்ரான்ஸுக்கும் இங்கிலண்டுக்கும் ஸ்நேகிதமில்லாமலிருந்தால் ப்ரெஞ்ச் கப்பல்படை முழுவதும் மத்யதரைக்கடலிலேயே இருந்துவிடாமல், ப்ரான்ஸின் மற்ற பாகங்களையும் பாதுகாக்க ப்ரான்ஸ் ஏற்பாடு செய்திருக்கும். அப்படியின்றி, ப்ரான்ஸின் வடகரையையும், மேற்குக்கரையையும் பாதுகாக்க ப்ரான்ஸ் ஏற்பாடு செய்யாமலிருக்கும்போது, ஜெர்மனியின் கப்பல்படைகள், ப்ரான்ஸின் வடக்கு மேற்குக்கரைகளைத்தாக்க ஆரம்பித்தால் இங்க்லீஷ் ஜனங்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அவர்கள் இந்த யுத்தத்தில் ப்ரான்ஸின் பக்கம் சேர முன்வருவார்கள்.

நிற்க, இங்க்லீஷார் ப்ரான்ஸுக்கு உதவவில்லையென்று வைத்துக்கொள்வோம். ப்ரான்ஸின் வடக்கு மேற்குக்கரைகளை ஜெர்மனி தாக்கினால், ப்ரான்ஸ் அவ்விடங்களைக் காப்பதற்காக மத்யதரைக்கடலில் உள்ள ப்ரெஞ்ச் கப்பல்படையை அவ்விடங்களுக்கு அனுப்பவேண்டிவரும். ஆகவே மத்யதரைக் கடலில் ப்ரெஞ்ச் கப்பல்படை தங்கியிருப்பதற்கில்லை.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்தமோ ப்ரமாண்டமான யுத்தமாகும். இதிலிருந்து என்ன நேரிடுமென்று நாம் நிச்சயமாய் ஒன்றும் சொல்லமுடியாது. இப்போது நாம் ஒரு கக்ஷியிலும் சேரவில்லையென்பதாகச் சொல்லுகிறோமென்று வைத்துக்கொள்வோம். ப்ரான்ஸும் மத்யதரைக் கடலில் உள்ள தன் கப்பல்படையை வேறிடங்களுக்கு அனுப்பி விடுகிறதென்று வைத்துக்கொள்வோம். இவற்றால் நாம் எதிர்பார்க்காத சில ஸம்பவங்கள் நேர்ந்து, நமது தேசத்தின் க்ஷேமத்தை முன்னிட்டு நாமும் யுத்தத்துக்குப் போகும்படி நேரிடுகிறதென்றும், நாம் தனியாக யுத்தம் செய்ய நேரிடுங்காலத்தில், இப்போது ஒரு கக்ஷியிலும் சேராமலிருக்கும் இட்டலி யுத்தத்தில் சேருகிறதென்றும் வைத்துக்கொள்வோம். அப்படியானால் மத்யதரைக்கடலில் நமது நிலைமை என்னவாகும்? மத்யதரைக்கடலில் வ்யாபாரக்கப்பல்கள் போகும் மார்க்கங்களை நாம் காப்பாற்றவேண்டியது ரொம்ப முக்ய கடமையாயிருந்து, ப்ரெஞ்ச் கப்பல் படையும் நமக்கு உதவாமல் போனால், நமது நிலைமை என்னவாகும்? மத்யதரைக்கடலிலுள்ள இங்க்லீஷ் கப்பல்படையோ ஸ்வயமாக, வேறு துணையின்றி மற்ற எதிரிகளின் கப்பல்படையை எதிர்க்கும்படி அவ்வளவு பெரிய படையல்ல. இப்போது ப்ரான்ஸுடன் சேராமல் தனியே இருந்து, பிறகு யுத்தம் நேர்ந்தால் இங்க்லண்டைப் பாதுகாப்பதற்கு வேண்டியவளவு கப்பல்படை இங்க்லண்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டியிருக்குமாதலால், மத்யதரைக்கடலுக்கு வேறு யுத்தக் கப்பல்கள் அனுப்பமுடியாது. ஆகவே நமது தேசத்தின் க்ஷேமத்தை யுத்தேசித்து, இங்க்லண்டின் கப்பல்படையானது ப்ரான்ஸின் வடக்கு, மேற்குக் கடல்கரைகளைக் காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறது.

மேலும், ஜெர்மனியானது பெல்ஜியத்தின் வழியாக தனது ஸைன்யத்தைக் கொண்டு போக பெல்ஜியம் ஸம்மதப்பட வேண்டுமென்று பெல்ஜியத்தைக் கேட்டிருக்கிறது. பெல்ஜியமானது ஒரு கக்ஷியிலும் சேராத தனியரசாக இருக்கவேண்டுமென்று 1839-ம்



வர்ஷத்து உடன்படிக்கையின்படி வல்லரசுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த தேசத்தின் ஸ்வாதீனத்தை ஜெர்மனி பிடுங்கிக்கொள்ளும்படி இங்க்லண்ட் விடுவதானது, பெல்ஜியம் ஸ்வாதீனமாய் இருக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்ட தேசங்களில் ஒன்றாகிய நமது தேசத்துக்கே (இங்க்லண்டுக்கு) கௌரவதைக் குறைவாக ஏற்படும். ஆகையால் இங்க்லண்ட் தனது கௌரவதையைக் காப்பாற்றவும், பெல்ஜியம் ஸ்வாதீனமாயிருப்பதால் இங்க்லண்டுக்கு ஏற்படும் ஸௌகர்யங்களை காத்துக்கொள்ளவும் இங்க்லண்ட் கடமைப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த யுத்தத்தில் இப்போது கலந்துகொண்டாலுஞ் சரி, அல்லது ஒன்றிலும் சேராமல் தனியாகஇருந்தாலுஞ்சரி, நாம் கஷ்டங்கள் அனுபவிக்காமலிருக்கப்போவதில்லை. நாம் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் தனியாக இருந்தால் என்ன கெடுதிகள் நேரிடுமோ அதைவிட யுத்தத்தில் கலந்துகொண்டால் அதிகமாக கஷ்டங்கள் ஏற்படமாட்டா. ஆகையால் இவைகளை யுத்தேசித்து நாம் இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் தனியாயிருப்பது முடியாத கார்யமென்று ஏற்படுகிறது. என்றிப்படி ஸர் எட்வர்ட் க்ரே பேசினார்.

பெல்ஜியம் தனது தேசத்தின் வழியாக ஜெர்மன் ஸைன்யம் போவதற்கு ஸம்மதிக்காமலிருந்தும், ஜெர்மன் ஸைன்யங்கள் பெல்ஜியத்தின் வழியாகப் போக முயன்றன. ஆகவே பெல்ஜியம் அரசர் தனது தேசத்தில் ஆக்ரமித்த ஜெர்மனியை எதிர்க்கலானார்.

ஜெர்மனி பெல்ஜியத்தின் வழியாக தனது ஸைன்யங்களை நடத்திப் போய் ப்ரான்ஸில் புகுந்து பாரிஸைப்பிடித்துவிட எண்ணியிருந்ததாகத் தெரிகிறது. ஆயினும் பெல்ஜிய ஸைன்யங்கள் வெகுநாள் ஜெர்மன் ஸைன்யங்களை எதிர்த்துக்கொண்டிருந்ததால் அதற்குள் ப்ரான்ஸும் இங்க்லண்டும் தங்களுடைய ஸைன்யங்களை ஒன்று சேர்த்துக்கொண்டு ஜெர்மன் ஸைன்யங்களைத் தாக்கின. ஜெர்மானியர்கள் மெதுவாக பெல்ஜியத்தில் பல விடங்களைப் பிடித்துக்கொண்டே பாரிஸு வரையில் போய்விட்டார்கள். பாரிஸின் கிட்ட வந்ததும், பெல்ஜியம், ப்ரான்ஸ், இங்க்லண்ட் ஆகிய இவைகளின் கூட்டு ஸைன்யங்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்து ஜெர்மனிப் பக்கம் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

## இட்டலி.

'ட்ரிப்பிள் அலையன்ஸில்' சேர்ந்திருக்கும் இட்டலியானது, 'ட்ரிப்பிள் அல்லையன்ஸ்' உடன்படிக்கைப்படி, ஜெர்மனியையும் ஆஸ்ட்ரியாவையும் வேறு தேசங்கள் தொந்தரை செய்தால்தான் அவைகளுக்கு உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறதேயொழிய, ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் வேறு தேசங்களோடு வலுவில் சண்டைக்குப் போனால், தான் (அதாவது இட்டலி) அவைகளுக்கு உதவி செய்ய வேண்டியதாகப் பேச்சில்லையென்று சொல்லி, பலமுறை ஜெர்மனி தன்னோடு சேரும்படி கேட்டுங்கூட, தான் யாதொரு கட்சியிலும் சேராமல் தனியாக இருப்பதாகச் சொல்லிவிட்டது.

## ஜப்பான்.

இங்க்லண்டுக்கும் ஜப்பானுக்கும் உள்ள ஒரு உடன்படிக்கையின்படி ஜப்பான் இந்த யுத்தத்தில் இங்க்லண்டுக்கு உதவி செய்து வருகிறது. முதலில் அது, சென்ற ஆகஸ்ட்௴ 17-தேதி ஜெர்மனி சீனக்கடலிலுள்ள தனது போர்க் கப்பல்களின் பீரங்கி முதலியவைகளை எடுத்துவிட வேண்டுமென்றும், கயாசௌ என்னுமிடத்தை ஜப்பானிடம் விட்டுவிட வேண்டுமென்றும், ஜெர்மனிக்கு கடைசிப் பேச்சாக ஒரு கடிதம் அனுப்பிற்று.

ஜெர்மனி அதற்கு ஸம்மதிக்கவில்லை. அதன் மேல் ஆகஸ்ட்மீ 23-தேதி ஜப்பான் ஜெர்மனி மேல் யுத்தம் தொடங்கி சீனாவிலுள்ள கயாசௌ பட்டணத்தைப் பிடிக்க முயன்று கொண்டிருக்கிறது.

ரஷ்யா.

ரஷ்யா ஜெர்மனியின் கீழ்பாகங்களையும் ஆஸ்ட்ரியாவின் கீழ்பாகங்களையும் பிடித்துக் கொண்டு ஜெர்மனியின் ப்ரதானபட்டணமாகிய பெர்லினைப்பிடிக்கவோ, அல்லது ப்ரான்ஸின் பக்கம் அதிகமாயுள்ள ஜெர்மன் ஸைன்யங்களை ரஷ்யாவின் பக்கத்துக்கு இழுக்கவோ, முயன்று கொண்டிருந்ததென்று தோன்றுகிறது.

ரஷ்ய ஸைன்யங்கள் ஆஸ்ட்ரியர்களை ஆஸ்ட்ரியாவின் வடகிழக்கில் பலவிடங்களில் தோற்கடித்து காலீஷ்யா என்னும் ப்ரதேசத்தில் ஒரு பாகத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் கிழக்கிலும் ரஷ்யர்கள் சில ஊர்களைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனி ரஷ்யாவைத் தடுப்பதற்காக ரொம்ப ஸைன்யங்களை (8 லக்ஷம் ஜெர்மானியர்கள்) ரஷ்யாபக்கம் அனுப்பியிருக்கிறது.

ஆஸ்ட்ரியா.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியாமேல் படையெடுத்துப் போனதில் ஸெர்வியர்களாலும் ஸெர்வியாவோடு சேர்ந்துகொண்ட மாண்டிநிக்ரோ தேசத்தாராலும் பலவிடங்களில் தோற்கடிக்கப்பட்டார்கள். ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியாவின் வடகிழக்கில் படையெடுத்து வருவதைத் தடுப்பதற்காக ஆஸ்ட்ரியா ஸெர்வியாவில் சண்டை போடுவதை விட்டுவிட்டு தனது ஸைன்யத்தில் பெரும்பாகத்தை ரஷ்யர்களை எதிர்க்க அனுப்பிவிட்டது. அதனால் ஸெர்வியர்களும், மாண்டிநிக்ரர்களும் ஆஸ்ட்ரியா மேல் ஸுலபமாய் படையெடுத்துப் போய் அநேக விடங்களைப் பிடித்து விட்டார்கள்.

ஜெர்மனிக்கு அநேக விடங்களில் குடியேற்ற நாடுகளிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்க்லீஷ் ஸைன்யங்கள் பிடித்திருக்கின்றன.

## WAR PERSONALITIES.

### சண்டையில் முக்யஸ்தர்கள்.

இப்போது நடந்துவரும் யுத்தத்தில் இன்னின்னார் இன்னின்ன தேசத்துக் கப்பல் படை, தரைப்படை முதலியவைகளுக்குத் தலைவரென்பதையும், இன்னின்ன தேசத்துக்கு இன்னின்னார் அரசர், யுத்தமந்த்ரி, அன்யமந்த்ரி என்பதையும் நமது நேயர்கள் அறிய விரும்புவார்கள். அவர்களைப்பற்றி சிறு குறிப்புகள் இங்கு எழுதுகிறோம்.

இங்க்லண்ட்.

இங்க்லண்டின் ப்ரதம மந்த்ரி மிஸ்டர் ஆஸ்க்வித். அன்யதேச மந்த்ரி ஸர் எட்வர்ட் க்ரே. இவர் (க்ரே) யுத்தத்தைத் தடுப்பதற்கு தம்மாலானமட்டும் முயற்சித்தார். ஆனால் அவர் சொன்ன ப்ரேரணைகளை ஜெர்மானியர்கள் ஏற்றுக்கொள்ளாததால் இங்க்லண்ட் ஜெர்மனி மேல் படையெடுக்கலாயிற்று. இவர் சென்ற ஆகஸ்ட் மாஸம் பார்லிமெண்டில் இங்க்லண்ட் ஜெர்மனியோடு யுத்தம் செய்வதற்கு காரணங்கள் இன்ன வென்பதை விரிவாக எடுத்துச் சொன்னார். அதன் ஸாராம்சத்தை 4-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

லார்ட் கிட்சனர் தற்போது இங்க்லண்டின் யுத்த மந்த்ரியாக இருந்துவருகிறார். இவருக்கு யுத்த விஷயங்களில் விசேஷ ஞானமுண்டு. இவருக்கு கிட்சனர் அப் கார்ட்டூம்என்றும்,கே. அப் கே. என்றும் பெயருண்டு. இவர் 1850-ம் வர்ஷம் ஜூன் மாஸம் 24-தேதி பிறந்தார். இவர் ஈஜிப்ட் யுத்தத்திலும் (1882-84), நைல் நதிப் படையெடுப்பிலும் (1884-85),கார்ட்டூம் படையெடுப்பிலும் (1898) ஸேனாதிபதியாக இருந்தார். தென்னாப்ரிக்காவில் 1900-முதல்-1902-ம் வர்ஷம் வரையில் ஸேனைத்தலைவராக இருந்தார். 1902-ம் வர்ஷம் முதல் 1909-ம் வர்ஷம் வரையில் இந்திய ஸேனாதிபதியாக இருந்தார்.



ஸர் ஜான் ப்ரெஞ்ச்.

பீல்ட்-மார்ஷல் ஸர்ஜான் ப்ரெஞ்ச் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் 1852-ம் வர்ஷத்தில் பிறந்தவர். ஆகவே இவருக்கு இப்போது கிட்டத்தட்ட 62-வயஸாகிறது. இவர் 1874-ம் வர்ஷத்தில் ஸைன்யத்தில் சேர்ந்தார். தென்னாப்ரிக்கா போயர் யுத்தத்தில் அநேக ஸமயங்களில் லார்ட் ராபர்ட்ஸின் ஸைன்யங்களில் சில பிரிவுகளுக்குத் தலைவராக இருந்திருக்கிறார். யுத்த விஷயங்களில் விசேஷ ஞானமுள்ளவர். இவர் ப்ரெஞ்ச் ஸைன்யங்களுக்கு உதவி செய்யவும், ஜெர்மானியரை எதிர்க்கவும்ஸைன்யங்களுடன் ப்ரான்ஸுக்கு போய் யுத்தம் செய்துகொண்டிருக்கிறார்.

ஸர் ஜான் ஜெல்லிகோ.

வைஸ்-அட்மிரல் ஸர் ஜான் ஜெல்லிகோ ப்ரிட்டிஷ் கப்பல் படையின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு இப்போது கிட்டத்தட்ட 55 வயஸாகிறது. இவர் 13-வது வயஸிலேயே கப்பல் படையில் சேர்ந்துகொண்டார். 23-வது வயஸில் ஈஜிப்ட் சண்டையில் போர் செய்து க்யாதியடைந்தார். இவருக்கு அப்போது ஒரு தங்க மெடல் கொடுக்கப்பட்டது. இவர் வேறு பல இடங்களில் காட்டிய ஸாமர்த்யத்திற்காக இவருக்கு பல மெடல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர் கால க்ரமத்தில் கப்பல் படையில் பல உயர்ந்த உத்யோகங்களையடைந்து, 1910-11-ம் வர்ஷத்தில் அட்லாண்டிக் கப்பல் படையின் தலைவராகவும், 1912-ம் வர்ஷத்தில் ஹோம் ப்ளீட் என்று சொல்லப்படும் இங்க்லண்டிலேயே இருக்கும் கப்பல் படையின் ஒரு பிரிவுக்குத் தலைவராகவும் இருந்து வந்தார்.

ப்ரான்ஸ்.

ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மா. ரேமண்ட் பாயின்கரே ப்ரெஸிடெண்டாக வருவதற்குமுன் ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரியாக இருந்தார். ஸர் எட்வர்ட் க்ரேயைப்போல் அன்யதேச வ்யவஹாரங்களில் மிகவும் ஸாமர்த்யசாலி, ப்ரான்ஸுக்கு ரஷ்யாவின் கூட்டுறவு அவச்யம் வேண்டுமென்பது அவருடைய அபிப்ராயம். யுத்தம் ஆரம்பிப்பதற்கு கொஞ்ச காலத்துக்கு முன்தான் அவர் ரஷ்யாவுக்குப் போய் அந்த தேசத்து சக்ரவர்த்தியாகிய ஸாரிடம் ஐரோப்பிய தேசங்களின் வ்யவஹாரங்களைப் பற்றிப் பேசிவந்தார்.

அவருடைய ப்ரதம மந்த்ரிக்கு மா. விவியானி யென்று பெயர். அவர் ஸோஷலிஸ்ட் என்று சொல்லப்படும் அபேதவாதக் கக்ஷியைச் சேர்ந்தவர். அவர் ரொம்ப ஸாத்வீக குணமுள்ளவர். ப்ரான்ஸின் அன்யதேச வ்யவஹார மந்த்ரியின் பெயர் மா. டெல்காஸி. இவருக்கு ஜெர்மனியை யுத்தத்துக்கு இழுப்பதில் கொஞ்சம் ப்ரியமதிக மென்று சொல்வதுண்டு. இவர் ரஷ்யாவில் ப்ரான்ஸின் தூதராக கொஞ்சகாலமிருந்து வந்தார்.

ஜெனரல் ஜ்யாப்ரே.

ப்ரான்ஸின் ஸேனைத் தலைவராகிய ஜெனரல் ஜ்யாப்ரே ரொம்ப ஸாமர்த்யசாலி யென்று சொல்லப்படுகிறது. அவர் 1852-ம் வர்ஷத்தில் பிறந்தார். அவர் அநேக யுத்தங்களில் சண்டை செய்திருக்கிறார். 1870-ம் வர்ஷம் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த சண்டையில் பீரங்கிப்படையில் ஒரு லெப்டினண்டாக இருந்தார். பாரிஸ் முற்றுகையில் உதவி செய்திருக்கிறார். சீனாவில் டாங்கின் சண்டையிலும், ப்ரெஞ்ச்-இண்டோ சைனாவில் நடந்த ஒரு யுத்தத்திலும் யுத்தம் செய்திருக்கிறார்.

அவர் சற்று இரட்டை நாடியானவர். கொஞ்சம் குட்டையான மூக்கும், வெண்மையான

விசையும், ஆழ்ந்த பார்வையும் உள்ளவர். 1912-ம் வர்ஷம் ஜூலை மாஸம் முதல் அவர் ப்ரெஞ்ச் ஸைன்யங்களுக்குத் தலைவராக இருந்து வருகிறார்.

பௌ-டி-லாபய்ரர்.

இவர் ப்ரெஞ்ச் கப்பல் படையின் தலைவர். இவருக்கு இப்பொழுது 61-வயஸாகிறது. சென்ற 1912-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸம் முதல் இந்த உத்யோகத்தை வகித்து வருகிறார். ப்ரெஞ்ச் கப்பல் படையிலுள்ள உத்யோகஸ்தர்களுக்கு கடல் யுத்தம் செய்வதற்கு ஸந்தர்ப்பங்கள் வாய்ப்பதில்லையென்று சொல்லப்படுகிறது. ஆனால் இவருக்கு மாத்ரம் ஒரு தடவை இந்த ஸந்தர்ப்பம் கிடைத்ததாம். கொஞ்ச காலத்துக்கு முன் சைனாவில் யுத்தம் நடந்தபோது பூச்சௌ சண்டையில் ஒரு கப்பல் படைக்கு தலைவராக இருந்து மிகவும் தைர்யமாய் சண்டை செய்தார். இவர் அந்த சண்டையில் ஒரு சீனப் பீரங்கிப் படகை வெகு ஸாமர்த்யமாய் எதிர்த்துப் பிடித்தாராம். இவர் ப்ரெஞ்ச் கப்பல் படையில் பல பிரிவுகளுக்கு தலைவராக இருந்திருக்கிறார்.

ப்ரிட்டிஷ் கப்பல் படையில் படைத்தலைவர்கள் தங்கள் கீழுள்ள உத்யோகஸ்தர்களைக் கொண்டு கப்பல்களின் நடவடிக்கைகளை நிர்வஹிக்காமல் தாங்களே ஸொந்தத்தில் நிர்வஹித்து உத்தரவு முதலானவைகள் இடுவது வழக்கம். அட்மிரல் லாபய்ரரும் அதே வழக்கத்தை அனுஸரிப்பவர். இன்னும் இங்க்லீஷ் கப்பல் படைகளில் தளகர்த்தர்கள் சண்டை நடக்கு மிடத்துக்குப் பக்கத்திலேயிருந்து சண்டையை கவனித்து வருவது வழக்கம். இவரும் அப்படியே செய்வது வழக்கமாம். ஜெர்மன் வழக்கமென்னவென்றால், தளகர்த்தர் சண்டை நடக்குமிடத்துக்கு கொஞ்ச தூரத்தில் அதிக சத்தம் சந்தடியில்லாத இடத்திலிருந்துகொண்டு யுத்தத்துக்கு வேண்டிய ப்ளான்களை தயாரித்துக் கொண்டிருப்பார். ஆனால் இங்க்லீஷ் தளகர்த்தர்கள் சண்டை நடக்கு மிடத்திலேயே இருப்பதால் யுத்தத்தின் போக்கை அப்போதைக்கப்போது கவனித்து யுத்தத்தின் நிலைமைக்குத் தக்கபடி கப்பல்களை நடத்த ஏற்பாடு செய்வார்கள்.

ஜெர்மனி.

ஜெர்மன் சக்ரவர்த்தியின் பெயர் கேய்ஸர் வில்லியம். இவர் 1859-ம் வர்ஷம் பிறந்தார். இவருடைய மூத்த குமாரரும் பட்டத்துக்குரியவருமான ப்ரிடரிக் வில்லியம் ராஜகுமாரருக்கும் சக்ரவர்த்திக்கும் சில ஸமயங்களில் மனஸ்தாபம் நேருவதுண்டு. கெய்ஸர் தம் மனம்போன போக்கின்படியே ராஜ்யம் நடக்க வேண்டுமென்று எண்ணுபவர். ஜெர்மனியின் ப்ரதமமந்திரி டாக்டர் வான் பெத்மான் ஹால்வெக் என்பவர். அன்யதேச மந்த்ரி ஹெர் வான் ஜகௌ என்பவர். இவர் கெய்ஸருக்கு ரொம்பவும் வேண்டியவர்.

ஜெர்மன் யுத்த தளகர்த்தர்.

ஜெர்மன் ஸைன்யங்களின் தலைவர் லெப்டினண்ட் ஜெனரல் ஹெல்மத் வான் மால்ட்க் என்பவர். இவருடைய குணங்கள் அதிச்லாக்யமானவைகளென்று சொல்வதற்கில்லையாம். ஆனால் ரொம்ப தைர்யமும் விவேகமும் உள்ளவர். இவர் 1848-ம் வர்ஷம் பிறந்தார். இவருடைய தகப்பனின் ஸகோதரராகிய காலஞ்சென்ற பீல்ட் மார்ஷல் கௌண்ட் வான் மால்ட்க் என்பவர் ரொம்ப க்யாதி பெற்ற தளகர்த்தர். அவருக்கு "யுத்தங்களில் ஜயிப்பவர்" என்றும், "ஜயம் அடைய ஏற்பாடு செய்பவ" ரென்றும் பெயருண்டு. அவரிடம் இவர் வேலை பார்த்து வந்திருக்கிறார்.

ஜெர்மன் ஸைன்யங்கள் இப்போது உள்ள உயர்ந்த நிலைமையை யடைந்திருப்பதற்கு இவர்தான் காரணம். இவருக்கு விடாமுயற்சி யதிகமுண்டு.



ஜெர்மன் கப்பல் படை.

ஜெர்மன் கப்பல் படையின் தலைவர் வைஸ்-அட்மிரல் ப்ரெடரிக் வான் இன்ஜெனால் என்பவர். இவருக்கு ரொம்ப அனுபோகமும் கப்பல் படையின் விஷயங்களைப் பற்றி ரொம்ப அறிவும் உண்டு. இவர் 1857-ம் வர்ஷத்தில் பிறந்தவர். இவர் 40 வர்ஷகாலம் ஜெர்மன் கப்பல் படையில் வேலை பார்த்து வந்திருக்கிறார். இவர் 1878 ம் வர்ஷத்தில் சீனாவிலும், 1895-ம் வர்ஷத்து சீனா-ஜப்பான் யுத்தத்திலும் சண்டை செய்திருக்கிறார். இவர் கப்பல் யுத்தத்தில் ரொம்ப ஸாமர்த்யமாய் நடந்து கொள்வாரென்று சொல்லப்படுகிறது.

---

## DEFECTS OF PRESENT DAY AGRICULTURE.

BY

K. S. SUBRAMANIA AIYAR.

### தற்கால விவஸாயக் குறைகள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள மிராசுதார்கள் காவேரியில் காலம் தப்பாமல் ஜலம் வருகிறதென்கிறவும் பருவம் தப்பாமல் மழை பெய்கிறதென்கிறவும் அகம்பாவத்தில் விவஸாயிகள் என்கிற பேரைமட்டில் வைத்துக்கொண்டு அதற்குவேண்டிய சாஸ்த்ரங்கள் படிப்பதுமில்லை; சாகுபடியை கூர்மையாய்ச் செய்கிறதுமில்லை. ஜலம் வந்த காலத்தில். அவைகளை வீணாக வடியவிட்டு, பிறகு வேண்டியபோது ஜலத்துக்கு இஞ்ஜினீரிங் டிபார்ட்டுமெண்டுக்கு மனுசெய்து கொள்வதும், அக்கம்பக்கம் மிராசுதார்களுடன் சண்டைபோடுவதை மேஸ்ட்ரிட்டு கோர்ட்டுக்குப் போய் பிராது கொடுப்பதை வழக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இன்னகாலத்தில் இவ்வளவு ஜலம் வருகிறது; இன்னகாலத்தில் காய்ச்சல் உண்டாகும் என்பவை அநேகமாய்த் தெரிந்திருந்தும் அதற்கு முன்யோசனையாய் இன்னது செய்வது என்று சிந்திக்கிறதில்லை. இதற்கெல்லாம் சாஸ்த்ரப் படிப்பு இல்லாததும் சோம்பேறித்தனமும் காரணமேதவிர வேறில்லை.

அமெரிக்காவிலும் ஆப்ரிக்காவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் விவஸாயிகள் மழை ஜலத்தை வீணாகப்போகாமல் காப்பாற்றிவைத்து சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்கள் படிப்பதெல்லாம் பெய்த மழைஜலத்தை வெளிவிடாமல் காப்பாற்றிக்கொள்வது எப்படி என்பதே.

இப்படிக்கெல்லாம் அவர்கள் பாடுபட்டு ஜலத்தை பூமிக்குள் வைத்துக்கொண்டு ஜலத்தை ஸூர்ய வெப்பம் வெளியே கொண்டு போகாதபடி காப்பாற்றிக்கொண்டு வருகிறார்கள். அப்படி ஜலத்தைக் காப்பாற்றுவது எப்படி என்றால், அவர்கள் ஒவ்வொரு இடத்துக்கும் மாஸூல் அறுவடையானவுடன், இவ்வளவு ஆழம் உழுது புழுதிபண்ணி வைக்கிறதென்று கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நம்தேசத்தவர்களோ அறுவடையானவுடன் கிடைத்த மாஸூல்களை எப்படி விற்பது, விற்றபணத்தை இன்னவட்டிக்கு கடன்கொடுப்பது, இன்ன நிலம் வாங்குவது, இன்னகல்யாணச்செலவு செய்வது, இன்ன வ்யவஹாரம் தொடங்குவது, இன்னயாத்ரை செய்வது, என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, மறுசால் சாகுபடிக்கு இன்னின்னவேலை செய்கிறதென்று கவனிப்பதில்லை. அறுப்பு முடிந்தவுடன் ஒவ்வொருவரும் தங்கள் நிலம் பூராவையும் ஒரு உழவு உழுது மாட்டுத் தீவனத்துக்காகவாவது, அல்லது நிலங்களுக்கு எருவுக்காகவாவது தழைகளை வளர்த்துவிடும் பக்ஷத்தில் விளைவுமாஸூல் ஒன்றுக்கு ஒன்றரைப்பங்கு உண்டாகும் என்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை.

இதுவிஷயமாக நான் நேரில் அறிந்த ஒரு ஏழை விவஸாயியின் செய்கையைச் சொல்லு

கிறேன். ஒருவனுக்குப் 10 மா, அதாவது 3-ஏகர் 33 செண்டுநிலம் இருந்தது. அவன் வர்ஷந்தோறும் அக்கம் பக்கங்களில் மாட்டுக்கு வைக்கோல் காப்பாற்றி வைத்துக்கொள்ளாத குடியானவனிடம் இருக்கும் உழவு மாட்டை ஸகாயவிலைக்கு ஐப்பசி, கார்த்திகை மாஸத்தில் வாங்குவது வழக்கம். அவனுடைய நிலம் மார்கழி மாஸத்தில் அறுவடையாகிவிடும். அறுவடையானதும் சோம்பலைப் பாராமல் இரண்டு முறை நன்றாய் உழுது அவுரி கொளுஞ்சி முதலிய தழைப் பயிரை விதைத்து வளரவிட்டு, ஆனி மாஸத்தில் முதல் தண்ணீர் வரும் முன்னமேயே இறவையினால் நாற்று தயார் செய்து வைத்துக்கொண்டு ஆனி மாஸத்தில் வயலில் ஜலத்தைவிட்டு ஒருதடவை மட்டில் உழுது நட்டுவிடுவான். உழவு மாட்டுக்குக் க்ராக்கியான காலமாகிய ஆடிமாஸத்தில் வாங்கின விலைக்கு இரட்டிப்பு விலைக்கு விற்பது வழக்கம். அவனுக்கு உழவுமாட்டில் வரும் லாபம்தவிர மாட்டு விலைப்பணத்தை ஸுமார் 5 மாஸத்துக்கு வட்டிக்குவிட்டும் லாபமடைகிறான். மேல்கண்ட 5மாத தீனியும் மிச்சப்படுகிறது. இவன் கோடை உழவு உழுதிருப்பதால், நிலம் புதுஜலம் வந்ததும் ஒரே உழவில் நல்ல சேறு உண்டாகி நல்ல வளமான பயிருண்டாகி, மா 1-க்கு 12-முதல் 15-கலம் வரையில் அடைகிறான். அக்கம்பக்கத்தில் மா 1-க்குப் 10 கலத்துக்குமேல் கிடைக்கிறதில்லை. "தைமாஸத்து உழவு தங்கத்துக்கு ஸமானம்" என்று பழமொழியுண்டு. மாட்டுத் தீவனத்துக்காக தனி நிலம் ஒதுக்கி வைக்கவில்லையென்று கவர்ன்மெண்டார் பேரில் குறை சொல்வதைவிட, தை மாஸம் ஆனவுடன் கோடை உழவு உழுது சோளம் அல்லது இதர மாட்டுத்தீவனப்பயிரை விதைத்து மாட்டுக்கு தீவனம் சேர்த்தும், வயலுக்கு பசுந்தாள் உரம் செய்தும் கொள்ளலாம். இப்படிப்பட்ட இரண்டாவது பயிருக்கு யாதொரு தீர்வையும் விதிக்கிறதில்லையென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

பூமிக்குள் ஸிகதம் என்கிற ஒருவஸ்துவிருக்கிறது. அதன் குணம் என்னவென்றால் பதார்த்தத்தைக் கெட்டிப்படுத்தல். எப்படியென்றால் ஒரு பூவரசம் போத்து மரத்திலிருந்து வெடித்ததும் நீளமாய் தளதளவென்று வளர்ந்து வருகிறது. அந்தக் காலத்தில் அதின் தோல்களைவெகு ஸுலபமாய் நகத்தால் உரித்துநார் எடுக்கலாம். இப்படிச்செய்வதுபோத்துண்டான 1மீ"த்துக்குள் செய்யலாம். அதே போத்தை இன்னொரு மாஸம் விட்டு வைத்திருந்தால் அதன் மேல்நாரைக்கத்தியினால் சீவி எடுக்கவேண்டும். இன்னும் அதிககாலமானால் அதின்மேல் தோல் சேர்ந்தாற்போல் எடுக்க வராமல் செதுக்கி பட்டைபட்டையாய் எடுக்க வருமே தவிர, நாராய் எடுக்க முடியாது. அப்புறமும் முற்றினால் மேல்பட்டை காய்ந்து பொருக்குத் தட்டினால்போல் ஆய்விடுகிறது. இதுபோல நெல்லுக்கும் மேற்கண்ட ஸிகதம் ஏறுகிறது. ஸிகதம் ஏறின நெல்லுக்கும் ஏறாத நெல்லுக்கும் வித்யாஸம் என்னவென்றால், ஸிகதம் அதிகம் ஏறாத நெல் பசுங்காய் நெல்லென்றும், ஏறின நெல் முதிர்ந்த நெல்லென்றும், விதைக்கேற்ற நெல்லென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பசுங்காய் நெல்லின் அரிசிபச்சையாய்க்குத்தினால் முனை முறியாதிருப்பதுமல்லாமல் அரிசியும் கலத்துக்கு ஒரு பக்காப்படி வேன் காணும். நெல்லுக் குத்துவதும் லகுவாகும். முற்றின நெல்லை பச்சையாய் குத்தினால் அரிசி இடிந்து நொய் ஜாஸ்தியாகும். குத்துவதும் ச்ரமம். அதைக் குத்தப் பொதுவாய் புழுக்கிக் கொள்ளுகிறார்கள். அரிசி அதிக வேன் காணமாட்டாது. ஏனெனில் ஸிகதம் ஏறி மேல்தோலைக் கெட்டிப்படுத்தி உள் அரிசியை இறுக்குகிறது. அதினால் அரிசி குறைவுபடுகிறது. ஸிகதம் ஏறாத பசுங்காய் அரிசி சாப்பாட்டுக்கு ரொம்ப ருசி



யாய் இருக்கும். அமெரிக்காவில் அரிசி ஸாகுபடியில் மேல்கண்ட ஸிகதவஸ்து ஏறாமல் பசுங்காயிலேயே விதையெடுத்து அதிலிருந்து மறுபடியும் பசுங்காய் விதையெடுத்து ஸாகுபடிசெய்து வருகிறார்கள். இப்படிச் செய்வதினால் நெல்லின் மேல்தோல் ரொம்பவும் ம்ருதுவாயும் மெல்லியதாயும் இருப்பதோடு அரிசி ஜாஸ்தி வேன் கண்டு, நெல்லைக் கையால் தேய்ப்பதினாலேயே அரிசி ஸுலபமாய் எடுத்துவிடலாம். இது பற்றியே இங்கிலாந்தில் இந்தியா அரிசியைவிட அமெரிக்கா அரிசியை அதிகவிலை கொடுத்து வாங்குகிறார்கள். அமெரிக்காவில் ரொம்பவும் சாஸ்த்ரோக்தமாயும் கவனமாயும் ஸாகுபடி செய்து வருகிறார்கள். ஸாயரக்ஷை வேளைகளில் மோட்டார் வண்டியிலும் இரட்டைக் குதிரை வண்டிகளிலும் கடற்கரையில் காற்று வாங்கப்போகும் மிராசுதார்கள், காலையில் வயலில் இறங்கி களைப்பூண்டுகள் பிடுங்குவார்கள். நம்மிந்தியாவில் மிராசுதார்களும் சரி, அவர்களிடம் புறக்குடியாகக்குத்தகை பெற்ற குடியானவர்களும் சரி வயலில் இறங்குகிறதில்லை. ஸாகுபடி எப்படி நடந்து வருகிறதென்றால், படிப்பே தெரியாத ஏழைப் பஞ்சமர்கள் மிராசுதார்களுக்கு பிச்சை கொடுப்பதுபோல் இருக்கிறது. பிச்சையென்று எப்படித் துணிந்து எழுதினேனென்றால், முன்பு வேலையாட்கள் வழக்கமாய் 6-மணிக்கு முன்னே வேலைக்கு இறங்கி, கால்வரிசை வேலையானதும் ஆகாரம் உண்டு, 9-மணிக்கு இரண்டாந்தடவை வேலைக்கு இறங்குவது வழக்கம். இப்பொழுதோ முதல் தரம் வேலைக்கே 10-மணிக்கு வருகிறார்கள். மிராசுதார்கள் கண்டிக்க முடிவதில்லை. மீறிக் கண்டித்தால் சொல்லாமல் கப்பலேறித் தீபாந்திரம் போய்விடுகிறார்கள். அவர்கள் வேலையில் சூது செய்யக் கற்றுக்கொள்ளுகிறார்கள். 10-மணிக்குமேல் வேலைக்கு வந்தால் வேலைவாங்கும் மிராசுதார்களோ அல்லது அவர்களின் காரியஸ்தர்களோ வெயிலில் நிற்கப்பயந்து தூரநிழலில் உட்கார்ந்துவிடுகிறார்கள். வேலையாட்கள் செய்தது தான் மிச்சம். இலஸாகுபடிக்கு வேறுவிதமாய் ஏற்பாடு செய்துகொள்ள மிராசுதார்களுக்கு வழியில்லை. தாங்கள் நேரில் வயலில் இறங்குவதும் சாஸ்த்ரத்துக்கும் நாகரீகத்துக்கும் ஒத்ததாயில்லை. வெயிலில் நிற்கவும் உடம்பு பழக்கப்படவில்லை. தேகத்தில் முரட்டு வேலை செய்ய சக்தியுமில்லை. இப்படிக்கிருந்தால் ஏன் பஞ்சமர்கள் அவ்விதம் நினைக்கமாட்டார்கள். மிராசுதார்கள் ஸாகுபடி விஷயமாய் சாஸ்த்ரப் பயிற்சி செய்து கொள்ளல்வேண்டும். தங்கள் குடிகளில் கொஞ்சம் படிக்கத்தெரிந்தவனையும் புத்திசாலியாயும் திடசரீரியாயு முள்ளவனை ஸர்க்கார் வியவஸாயப்பண்ணைகளில் விவஸாய வேலையில் பழகி வரச்செய்யவேண்டும். ஸாகுபடி விஷயம் ஸம்பந்தமான எந்த வேலையும் தான் நேரில் செய்ய ஸங்கோசம் வைக்கலாகாது. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் நேரில் கவனம் செலுத்தாதது தான் வியஸாயிகளின் வறுமைக்கு முக்யகாரணமாகும்.

கே. எஸ் ஸுப்ரமண்ய அய்யர்.

---

## SCHOOL TIME.

### பள்ளிக்கூடத்துக் காலம்.

பள்ளிக்கூடம் காலையிலும், மத்யானவேளையிலும் எப்போது ஆரம்பிக்கிறதென்பது இடத்துக்கிடம் வித்யாஸமாயிருக்கிறது. ஒரே இடத்திலும் கூட ஒரு பள்ளிக்கூடம் திறக்கும் நேரம்போல் மற்ற பள்ளிக்கூடங்கள் திறப்பதில்லை. சில பள்ளிக்கூடங்கள் காலையில் 10 அல்லது $10\frac{1}{4}$ அல்லது $10\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பித்து, $2\frac{1}{2}$ மணி அல்லது 3 மணி நேரம் நடந்து பிறகு ஒரு மணி நேரம் கழித்து மறுபடியும் கூடி $2\frac{1}{2}$ மணி அல்லது 3 மணி நேரம் நடந்து பிற்பாடு மூடப்படுகின்றன. இவைகள் ஸாதாரணமாய் ஸெகண்டரி பாடசாலை

களும் காலேஜுகளுமாகும். சில எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்கள் ஸெகண்டரி ஸ்கூல்களைப்போலவே காலையில் ஆரம்பித்து, மத்யானம் ஒருமணி நேரம் பிள்ளைகள் வீட்டுக்குப் போய் வருவதற்கு விட்டுபிறகு 2 அல்லது 2¼-மணிக்கு மறுபடியும் வேலைதொடங்கி, இரண்டரை அல்லது 3-மணிநேரம் பாடங்கள் நடக்கின்றன.

எலிமெண்டரி பாடசாலைகளில் வேறு சில, முக்யமாய் க்ராமாந்த்ரங்களிலுள்ளவை, காலையில் ஆறு அல்லது 7-மணிக்கு ஆரம்பமாகி, மூன்று மணிநேரம் நடக்கின்றன. பிறகு மாணவர்கள் வீட்டுக்குச் சாப்பிடுவதற்குப் போய்விடுகிறார்கள். பகலில் 2 அல்லது 3-மணிக்கு மறுபடியும் பிள்ளைகள் வந்துகூடி 5 அல்லது 6 மணிவரையில் தங்கிப்பிறகு வீட்டுக்குப்போகிறார்கள். ஸெகண்டரி ஸ்கூல்களைப்போல் காலை பத்து மணிமுதல் மாலை 5-மணிவரையில் எலிமெண்டரி பள்ளிக்கூடம் வைத்திருப்பது நல்லதா, அல்லது க்ராமப்பள்ளிக் கூடங்களைப்போல் காலை 6-மணிமுதல் 9-மணி வரையிலும் ஸாயந்த்ரம் 2 மணிமுதல் 5 மணிவரையிலுமாக பள்ளிக்கூடம் வைப்பது நல்லதா, அல்லது இரண்டு முறையையும் விட்டு வேறு கால அளவு ஏற்படுத்துவது நல்லதா? இதைப்பற்றி ஒருவர் ஒரு இங்க்லிஷ் பத்ரிகையில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அதன் ஸாராம்சத்தைக் கீழே எழுதுகிறோம்.

10 மணிமுதல் 5 மணிவரையில் ஒரே தொடர்ச்சியாக பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் இருக்கும்படிசெய்வது நல்லதல்ல. பிள்ளைகளை அதிகநேரம் பாடசாலையில் இருக்கும்படி செய்தால், சிறுபிள்ளைகளின் மனோசக்திக்கு ரொம்ப ச்ரமம் ஏற்படும். மத்தியில் ஒருமணி காலம் ஓய்வு நேரமாகவிடுவது போதாது. அவர்களுக்கு இன்னும் அதிகநேரம் ஓய்வாக விடவேண்டும். இதை உத்தேசித்துத்தான் அநேக இடங்களில் காலையில் 6 மணிமுதல் 9 மணிவரையிலும் பகல் போஜனத்துக்குப் பிறகு 2 மணிமுதல் 5 மணிவரையிலும் பள்ளிக்கூடம் நடக்கின்றன. ஆனால் இந்த ஏற்பாட்டிலும் குறைகளில்லாமலில்லை. அவைகளில் சில பின்வருமாறு.

(1) சிறுபிள்ளைகள் அதிகாலையில் எழுந்திருப்பது மிகவும்கஷ்டம். ஆகையால் அவர்கள் வெகுவாய் நேரங்கழித்தே பாடசாலைக்குப் போகிறார்கள். இதனால் அவர்கள் முதலில் நடக்கும் பாடத்தை சரியாய் கவனிக்க முடிவதில்லை.

(2) காலையில் அவஸரமாய்ப் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டியிருப்பதால், பிள்ளைகள் பல்தேய்த்து முகம் கழுவாமல் போகிறார்கள். இது கெட்டவழக்கமாவதோடு, தேகஸௌகத்தும் கெடுதலாகிறது.

(3) பிள்ளைகளில் அநேகர் பள்ளிக்கூடத்துக்கு அவஸரமாகப் போகவேண்டி காலையில் சாப்பிடாமலே போய்விடுகிறார்கள். காலைப் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்து பிறகு பல்தேய்த்து ஸ்நானம்செய்து சாப்பிடும்போது மணி 11-ஆகிவிடும். காலையில் அவ்வளவு நேரம் சாப்பிடாமலிருப்பது தேகத்துக்கு மிகவும் கெடுதலுண்டாக்கும்.

(4) க்ராமங்களில் கூலிவேலையாள், விவஸாயி, கடைக்காரன், தச்சன், கொல்லன் முதலியவர்கள் காலையில் 8 மணி முதல் 12 மணி வரையிலும், பிற்பகலில் 2-மணி முதல் 6-மணி வரையிலும் வேலை செய்யப் போகிறார்கள். ஆகையால் அவர்கள் காலையில் 8 மணிக்கு சற்று முன்னும், பகலில் 12 மணிக்குப் பிறகும் சாப்பிடுகிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் காலைப் பள்ளிக்கூடத்துக்குப் போகிறவர்களாயிருந்தால், இரண்டு வேளையிலும் பெற்றோர்களோடு சேர்ந்து சாப்பிட முடியாமல் போகிறது. இந்த ஏற்பாடு குடும்ப வாழ்க்கையை யுத்தேசிக்கும்போது நல்லதல்ல.



(5) எல்லா க்ராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் இருப்பதில்லை. பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களிலுள்ள பையன்கள் பள்ளிக்கூடம் உள்ள பக்கத்தூர்களுக்கு வாசிக்கப்போக வேண்டியிருக்கிறது. இவர்கள் காலையில் இரண்டு அல்லது ஒரு மைல் நடந்து பள்ளிக்கூடத்துக்குப் போய் அங்கே ஸாயந்திரம் வரையில் தங்கியிருந்து பிறகு தங்களுடைய ஊர்களுக்குத் திரும்புகிறார்கள். பள்ளிக்கூடம் இருக்கும் க்ராமத்துப் பையன்களுக்கே காலையில் சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் வர சரிப்படுவதில்லையென்றால், தூரமான ஊர்களிலுள்ள பையன்கள் சரியான காலத்தில் வருவது இன்னும் கஷ்டமென்று சொல்லலாம். காலைப்பள்ளிக்கூட ஏற்பாட்டில் உள்ளூர்ப் பையன்களுக்கு என்ன அஸௌகர்யங்கள் உண்டோ அவைகளெல்லாம் வெளியூர்ப் பிள்ளைகளுக்கும் ஏற்படும்.

இந்த அஸௌகர்யங்களெல்லாம் இல்லாமலிருக்க வேண்டுமென்றால், பள்ளிக்கூடத்தை காலையில் 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்து இரண்டு மணிநேரம் நடுவில் விட்டு, பிறகு 2-மணி முதல் 5 மணிவரையில் வைப்பது நல்லது.

இப்படிப் பள்ளிக்கூட நேரத்தை மாற்றுவதால், பிள்ளைகள் வேண்டிய நேரம் தூங்குவதற்கு ஸௌகர்ய மேற்படுகிறது. பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு காலையில் பல் தேய்க்காமலும் முகத்தைக் கழுவாமலும் போகமாட்டார்கள். முதல் பாடம் தவறிப்போகாது. காலையில் பெற்றோர்களுடனும் ஸகோதரர்களுடனும் போஜனம் செய்து விட்டுப்போகலாம். கொஞ்சம் வயஸான பிள்ளைகள் காலையில் பாடங்கள் படிப்பதற்கும் ஸௌகர்யமுண்டு. அவர்கள் ராத்ரியில் ப்ரகாசமில்லாத விளக்குகளின் பக்கத்தில் உட்கார்ந்து வாசிக்க வேண்டியிராது.

ஸாயந்திரம் 6 மணிக்குப் பள்ளிக்கூடம் விடுவது நல்லதல்ல. 5 மணிக்குமேல் பிள்ளைகளை வாசிக்கச்செய்யாமல் விளையாடவிட வேண்டும். மேலும் வெளியூர்ப் பிள்ளைகள் 6 மணி வரையில் பள்ளிக்கூடத்திலிருந்தால், தங்கள் ஊருக்குப் போகும்போது ரொம்ப இருட்டிப்போகுமாகையால் அவர்களை உத்தேசித்தும் 5 மணிக்கு பள்ளிக்கூடம் விடுவது நல்லது. கோடைகாலத்தில் இரண்டொரு மாஸம் மாத்ரம் இப்போது அநேகவிடங்களில் நடந்துவருவதுபோல காலையில் 7 மணி முதல் 10 மணி வரையிலும், பிற்பகலில் 2 மணி முதல் 5 மணி வரையிலுமாக பள்ளிக்கூடம் நடந்து வரலாம். மற்றக் காலங்களில் முன் சொன்னபடி காலையில் 9 மணி முதல் 12 மணி வரை மூன்றுமணி நேரமும் பிற்பகலில் 2 முதல் 5 மணிவரை மூன்று மணிநேரமும் பள்ளிக்கூடம் நடப்பது நல்லது.

## INDIA'S OFFER FOR THE WAR.

### யுத்தத்தில் இந்தியாவின் உதவி.

தற்போது நடந்துவரும் ஐரோப்பிய யுத்தத்துக்கு இந்தியாவிலிருந்து இரண்டு டிவிஷன் ஸைன்யங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜதானியிலிருந்து ஸைன்யங்கள் ஒன்றும் போகாவிட்டாலும், இந்த ராஜதானியைச்சேர்ந்த இரண்டாவது ஸாப்பர்ஸ் அண்ட் மைனர்ஸ் என்னும் அரண்கள் அகழ்கள்வெட்டும் ஸைன்யமொன்று யுத்தத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இவைகளோடு ஸ்வதேச ஸமஸ்தானங்களிலுள்ள சில ஸைன்யங்களும், சில ஸ்வதேச ராஜாக்களும் சண்டைக்குப்போயிருக்கிறார்கள். மற்ற ஸ்வதேச ராஜாக்களும், மற்ற இந்தியர்களும் யுத்தத்துக்குப் பலவிதத்தில் உதவிசெய்வதாக முன்வந்திருக்கிறார்கள். யாரார் உதவிசெய்ய முன்வந்திருக்கிறார்களென்பதைப்பற்றியும், யாருடைய உதவிகளை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களென்பதைப்பற்றியும் வைஸ்ராய் ஒரு

ஸ்டேட்மெண்ட் எழுதி இந்தியா மந்த்ரிக்கு ஸமீபத்தில் அனுப்பினர். அந்த ஸ்டேட்மெண்டை இந்தியாமந்த்ரி சென்ற 9-ந்தேதி யன்று பார்லிமெண்டில் வாசித்தார். அந்த ஸ்டேட்மெண்டின் ஸாராம்சம் பின்வருமாறு.

இந்தியாவில் கிட்டத்தட்ட 700 ஸ்வதேச ஸமஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகளின் ராஜாக்கள் எல்லாரும் ஒரேமனஸாய் ராஜ்யத்தைப் பாதுகாக்க முன் வந்திருக்கிறார்கள். எல்லாரும் நேரில் யுத்தத்தில் சண்டை செய்வதாயும், தங்கள் ராஜ்யங்களின் வரும்படியை எல்லாம் யுத்தச்செலவுக்காகக் கொடுத்துவிடுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். போர்முனையில் சண்டைசெய்ய முன் வந்திருப்பவர்களில் ஜோட்பூர், பிகானிர், கிஷன்கார், ரட்லாம், ஸச்சின், பாடியாலா ஆகிய இவைகளின் அதிபதிகளையும், ஸர் ப்ரதாபஸிங், போப்பாலின் இளவரசர், கூச்பிஹார் மகாராஜாவின் ஸஹோதரர்களில் ஒருவர் ஆகிய இவர்களையும் இன்னும் ராணுவத்தில் பயின்றுவரும் சில பெரிய வம்சத்துச் சிறுவர்களையும் வைஸ்ராய் தெரிந்தெடுத்திருக்கிறார்.

இவர்களில் ஸர் ப்ரதாபஸிங் யுத்த விஷயங்களில் மிகவும் அனுபவசாலி. அவருக்கு வயது 70 ஆகியும் அவர் சக்ரவர்த்திக்காக யுத்தத்தில் சண்டை செய்வதாகிய பாத்யதையை இழந்துவிடாதபடி அவர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவருடைய ஸஹோதரருடைய புத்ரராகிய ஜோட்பூர் மஹாராஜாவுக்கு வயது பதினாறேயானாலும் அவரும் போருக்குப்போயிருக்கிறார். இவர்கள் எல்லாரும் இந்திய ஸேனாதிபதியின் அங்கீகாரத்தின்மேல் இந்தியாவிலிருந்து யுத்தத்துக்குப்போகும் ஸைன்யங்களோடு சேர்ந்துவிட்டார்கள்.

க்வாலியர் ஸமஸ்தானத்து ஸிந்தியா மஹாராஜாவும், ஜாவோரா, டோல்பூர் ஆகிய இந்த ஸமஸ்தானத்தின் தலைவர்களும், பாலான்பூரின் இளவரசரும் சில அஸௌகர்யங்களால் யுத்தத்துக்குப் போகமுடியவில்லை.

இந்தியாவிலுள்ள பெரிய ராஜ்யங்களில் 27-ல் இம்பீரியல் ஸெர்விஸ் ட்ரூப்ஸ் (என்னும் துருப்புகள்) இருக்கின்றன. (இவைகள் ப்ரிட்டிஷாருக்கு யுத்தகாலங்களில் உதவிசெய்வதற்காக ஏற்படுத்தப்பட்டவை.) யுத்தம் ஆரம்பித்தவுடனே 27 ஸ்வதேச ராஜாக்களும் தங்களிடமுள்ள இந்த இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகளை கவர்ன்மெண்டார் எவ்விதமாக வேண்டுமென்றாலும் உபயோகித்துக்கொள்ளலாமென்று அவர்கள்வசம் விட்டுவிட்டிருக்கிறார்கள். அவைகளில் பன்னிரண்டு ஸமஸ்தானங்களிலிருந்து குதிரைப்படை, காலாட்படை, ஸாப்பர்ஸ் என்னும் அகழ்களும் அரண்களும் கட்டும் ஸைன்யங்கள், ஆகிய இவைகளையும், பிகானீர் ஸமஸ்தானத்திலிருந்து ஒட்டகைப் படையையும் வைஸ்ராய் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இந்த ஸைன்யங்களில் அநேகம் ஏற்கனவே கப்பலேறிப் போய்விட்டன.

இந்தியாவிலிருந்து ஸைன்யங்கள் அனுப்புவதற்கு ஏற்படும் செலவுக்காக மைஸூர் மகாராஜா 50 லக்ஷம் ரூபாய் இந்தியா கவர்ன்மெண்டுக்குக் கொடுத்திருக்கிறார்.

ஸ்வதேச ராஜாக்களின் உதாரகுணத்துக்கும், ராஜவிச்வாஸத்துக்கும் உதாரணமாக இன்னொரு விஷயத்தைக் குறிப்பிடலாம். அநேக ஸமஸ்தானங்கள் ஒன்றுசேர்ந்து இந்தியபடையெடுப்பு ஸைன்யத்தின் உபயோகத்துக்காக 'லாயல்டி' (அதாவது ராஜவிச்வாஸம்) என்று பெயர்கொண்ட ஒரு ஹாஸ்பிடல் கப்பல் அமைத்துக்கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். ஹாஸ்பிடல் கப்பல் அனுப்புவதாகிய யோசனைமுதல் முதலில் ஸிந்தியா மகாராஜா விடத்திலிருந்தும் போபால் ராணியினிடத்திலிருந்துந்தான் உண்டாயிற்று. க்வாலியர் மஹாராஜா ஹாஸ்பிடல் கப்பலுக்குப் பணம் கொடுத்திருப்பதேயல்லாமல் யுத்தத்தில் காயம்பட்டோ அல்லது வேறு விதமாகவோ உபயோகப் படாமல்போகும் குதிரைகளுக்கு பதிலாக உபயோகப்படும்படி 1000 குதிரைகள்கொடுத்து உதவுவதாகவும் ஏராளமான பணம்கொடுத்து உதவுவதாகவும் முன்வந்திருக்கிறார்.



பஞ்சாபிலுள்ள லோஹாருவிலிருந்தும், பலுசிஸ்தானத்திலுள்ள லாஸ்பேலா, கிலட் ஆகிய இந்த ப்ரதேசங்களிலிருந்தும் அநேக சிற்றரசர்களும் ஸர்தார்களும் ஒட்டகைகள் கொடுப்பதாகவும், அவைகளுக்குத் தாங்களே ஒட்டகை யோட்டுபவர்கள் நியமித்துக் கொடுப்பதாகவும் முன்வந்திருக்கிறார்கள்.

அநேக ராஜாக்களும் சிற்றரசர்களும் யுத்தத்துக்குத் தேவையாயிருந்தால் புதிதாக ஸைன்யங்கள் தயாரித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா ஸமஸ்தானங்களும் யுத்தகஷ்ட நிவர்த்தி நிதிக்கு ஏராளமாய்ப் பொருளுதவியும் செய்திருக்கிறார்கள்.

ரீவா ஸமஸ்தானத்து மஹாராஜா தமது துருப்புகளையும், தமது கஜானாவையும் தமது ஸொந்த நகைகளையுங்கூட சக்ரவர்த்திக்கு அர்ப்பணம் செய்ய முன்வந்திருக்கிறார்.

காஷ்மீர், பண்டி, ஆர்ச்சா, க்வாலியர், இந்தூர் ஆகிய இந்த ஸமஸ்தானத்து ராஜாக்கள் இந்தியகஷ்ட நிவர்த்திநிதிக்குப் பணம்கொடுத்து உதவி யிருப்பதோடுகூட இங்க்லண்டில் ப்ரின்ஸ் அவ் வேல்ஸ் இளவரசரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நிதிக்கு பெருந்தொகைகள் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

காஷ்மீர் மகாராஜா இந்தியபண்டுக்கு ஸொந்தத்தில் பணம்கொடுத்ததில் த்ருப்தியடையாமல் ஸ்ரீ நகரில் 20,000 ஜனங்கள் வந்து கூடியிருந்த ஒரு மீட்டிங்கில் ப்ரெஸிடெண்டாக இருந்து, ஜனங்கள் யுத்தநிதிக்குப் பணம் உதவ வேண்டுமென்று ஒரு நேர்த்தியான ப்ரஸங்கம் செய்தார். அந்த ப்ரஸங்கத்தால் அந்த மீட்டிங்கில் யுத்தபண்டுக்கு ஏராளமான தொகை வஸூலிக்கப்பட்டது.

ஹோல்கார் மஹாராஜா தமது ஸமஸ்தானத்திலுள்ள குதிரைகளில் கவர்ன்மெண்டுக் கார்யங்களுக்கு ஏற்றவையா யிருக்கக்கூடிய எல்லாக் குதிரைகளையும் கொடுப்பதாக முன்வந்திருக்கிறார். நிஜாம் அரசரும், ஜாம்நகரத்தின் ஜாம்ராஜாவும், பம்பாயிலுள்ள மற்ற ராஜாக்களும் குதிரைகள்கொடுத்து உதவுவதாக முன்வந்திருக்கிறார்கள்.

பம்பாய் ராஜதானியிலுள்ள ஒவ்வொரு சிற்றரசரும் தமது ராஜ்யத்தின் வரும்படியையெல்லாம் கவர்ன்மெண்டார் எவ்விதமாக வேண்டுமென்றாலும் செலவழித்துக் கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறார்கள். எல்லா சிற்றரசர்களும் கஷ்டநிவர்த்தி பண்டுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். இந்தியாவின் வடமேற்கிலுள்ள சித்ரால் என்னும் ராஜ்யத்தின் தலைவராகிய மேட்டார் என்பவரும், கைபர் கணவாயில் உள்ள ஸ்வதேச ஜாதிகளும் யுத்தத்தில் உதவி செய்யமுன் வந்திருக்கிறார்கள்.

இன்னும் இந்தியாவில் வெகு தூரத்திலுள்ள ஸமஸ்தானங்களும் தாங்கள் இந்த ஸமயத்தில் ஏதாவது உதவிசெய்ய ப்ரியப்படுவதாகக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். இப்படி ஸ்வதேச ஸமஸ்தானங்களே யல்லாமல் இந்தியாவின் எல்லைக்கு அப்புறத்திலுள்ள இரண்டு தேசங்கள்கூட இந்தியா கவர்ன்மெண்டுக்கு உதவிசெய்வதாக முன்வந்திருக்கின்றன. நேபால் கவர்ன்மெண்டார் தங்களுடைய ராணுவத்தை இந்தியா கவர்ன்மெண்டார் இஷ்டப்படி உபயோகிக்கும்படி விட்டிருக்கிறார்கள். அந்த தேசத்தின் ப்ரதமமந்த்ரி மெஷீன் பீரங்கிகள் வாங்குவதற்கு 3-லக்ஷம் ரூபாய்கொடுத்திருக்கிறார்.

மேலும் அவர் ப்ரின்ஸ் அவ் வேல்ஸ் பண்டுக்கும், இம்பீரியல் இண்டியன் ரிலீப் பண்டுக்கும் ஸொந்த ஐவேஜியிலிருந்து ரொம்ப

பணம் கொடுத்திருப்பதோடு பீரங்கிகள் வாங்குவதற்காக 30,000 ரூபாய் கொடுப்பதாகவும் வாக்களித்திருக்கிறார்.

திபேத்து பௌத்தர்களின் லோக குருவும் திபேத்தின் அரசருமாகிய டலாய் லாமா ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு 1000 திபேத்திய துருப்புகள்கொடுத்து உதவுவதாகத் தெரிவித்திருக்கிறார்: மேலும் அவர், தமது தேசத்திலுள்ள லாமாக்கள் (புத்தகுருக்கள்) ப்ரிட்டிஷ் சைன்யத்துக்கு ஜயம் கிடைக்க வேண்டுமென்றும், யுத்தத்தில் இறந்தவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கவேண்டுமென்றும் ப்ரார்த்தனை செய்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ப்ரிட்டிஷ் இந்தியாவிலும் ஜனங்கள் ரொம்ப விச்வாஸமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஜனங்கள் தங்களுடைய ராஜவிச்வாஸத்தையும், யுத்தத்தில் சண்டைசெய்யவும் இந்தியாவிலேயே வேறு விதத்தில் உதவிசெய்யவும் ப்ரியப்படுவதையும் தெரிவிக்கும் தந்திகளும் கடிதங்களும் நூற்றுக்கணக்காக வைஸ்ராய்க்கு வந்திருக்கின்றன. மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் இதேமாதிரியாக நூற்றுக்கணக்காகக் கடிதங்களும் தந்திகளும் வந்திருக்கின்றன. பற்பல வகுப்பார்களும், எல்லாவகுப்பையும் மதங்களையும்சேர்ந்த மதஸம்பந்தமான, அல்லது ராஜாங்க ஸம்பந்தமான ஸங்கங்களும், மற்ற ஜனங்களும் பொருளுதவிசெய்யவும், யுத்தத்தில் சண்டை செய்யவும் முன்வந்திருக்கிறார்கள். அவைகளில் பின் வருவனவற்றை உதாரணமாகச் சொல்லலாம்.

எல்லா இந்திய மஸ்லிம் லீக், பெங்கால் ப்ரெஸிடென்ஸி மஸ்லிம் லீக், ரங்கூன் மஸ்லிம் அஸோஸியேஷன், அலிகார் காலேஜ் ட்ரஸ்டீகள், பேஹார் ப்ரொவின்ஷல் மஸ்லிம் லீக், கல்கத்தா ஸென்ட்ரல் நாஷனல் மகமதிய அஸோஸியேஷன், கோஜாவகுப்பார், ஆகாகானைச்சேர்ந்த மற்றவர்கள், பஞ்சாப் மஸ்லிம் லீக், கீழ்வங்காளத்து மகமதியர்கள், கல்கத்தா, மதராஸ், ரங்கூன் முதலிய நகரத்து ஜனங்கள், பேஹார் கிலஸ்வான்கள் ஸங்கம், மதராஸ் ப்ரொவின்ஷல் காங்க்ரஸ் கமிட்டி, அயோத்தியிலுள்ள தாலுக்தார்கள், பஞ்சாப் சிற்றரசர்கள் ஸங்கம், ஐக்கியமாகாண ப்ரொவின்ஷல் காங்க்ரெஸ்; பஞ்சாப் ஹிந்துக்கள், வைதீக சீக்கியமதத்தைச் சேர்ந்த கலசா திவான், பம்பாயிலுள்ள போராவகுப்பார், பார்ஸிவகுப்பார்.

டெல்லி வைத்ய ஸங்கம் (மெடிகல் அஸோஸியேஷன்) பால்கன் யுத்தத்தில் துருக்கிக்கு அனுப்பின பீல்ட்ஹாஸ்பிடலை அதாவது யுத்தகளத்து ஹாஸ்பிடலை கொடுக்க முன்வந்திருக்கிறது. வங்காளத்து மாணவர்கள் யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கு வைத்யம்செய்யும் 'ஆம்புலன்ஸ் கோர்' என்னும் வைத்யக் கூட்டத்தில் சேருவதாக முன்வந்திருக்கிறார்கள். இன்னும் அநேகர் வைத்ய உதவிசெய்வதாக முன்வந்திருக்கிறார்கள்.

சென்னையிலுள்ள ஜமீன்தார்கள் 500 குதிரைகள் கொடுப்பதாக முன்வந்திருக்கிறார்கள்.

அநேகவிடங்களில் விலைவாசி ஏறுமலிருக்கவும், ஜனங்களிடத்தில் நம்பிக்கையும் நாணயமும் ஏற்படும்படிக்கும் மீட்டிங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

இப்போது ஐரோப்பாவிலுள்ள இந்திய ராஜாக்களும் தங்கள் ராஜ்யங்களின் ஸகல வரும்படிகளையும் கவர்ன்மெண்டினிடம் விட்டுவிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக பரோடாவின் மகாராஜாவாகிய கெய்க்வாரையும், பரதபூர் மகாராஜாவையும் சொல்லலாம்.

இங்க்லண்டிலுள்ள இந்தியர்களும் இந்திய மாணவர்களும் யுத்தத்தில் உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

இந்த விஷயங்கள் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டவைகள். இதற்குப் பிறகு ஸமீபத்தில் நிஜாம் அரசர் 60 லக்ஷம் ரூபாய் கொடுத்து, தாம் அனுப்பியிருக்கும் சைன்யங்களின் செலவுக்கு உபயோகித்துக் கொள்ளும்படி தெரிவித்திருக்கிறார்.



---

## PAINLESS CHILD BIRTH.

### வேதனையில்லாத ப்ரஸவம்.

ஸ்த்ரீகள் ப்ரஸவிக்கும்போது யாதொரு வேதனையு மில்லாமல் ப்ரஸவிக்கும்படியாக ஜெர்மனியில் ஒரு புதுமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையை ஸுமார் 5000 ப்ரஸவங்களுக்கு உபயோகித்துப்பார்த்ததில் ரொம்பவும் த்ருப்திகரமாயிருந்ததாகத் தெரிகிறது. அந்தமுறையை உபயோகித்ததில் சிசு மரணம் ரொம்ப குறைந்து போயிற்றாம். பிற தாய்மார்களுக்கு ப்ரஸவகாலத்திலாவது பிறகாவது தேகத்தில் யாதொரு கெடுதியும் உண்டாகவில்லையாம். இந்த முறை ஜெர்மனியில் பேடன் என்னும் பட்டணத்திலுள்ள ஹாஸ்பிடலில் உபயோகித்துவருகிறார்களாம். அந்த முறை பின்வருமாறு.

ப்ரஸவிக்க வரும் ஸ்த்ரீயின் ரத்தத்தில் 'ஸ்கோபலமின்,' 'மார்பியா' என்னும் இரண்டு மருந்துகளைக் கலந்து 'இஞ்ஜெக்ட்' செய்கிறார்கள். அதாவது தேகத்திலுள்ள ரத்தத்தில் அம்மை குத்தும் மாதிரியாக செலுத்துகிறார்கள். இதனால் அந்த ஸ்த்ரீக்கு ஒருவித தூக்கக் கலக்கம் உண்டாகி கொஞ்சம் நினைவு குறைந்துபோகிறது. சரியானபடி தூக்கக் கலக்கம் உண்டாகா விட்டால் மறுபடியும் 'ஸ்கோபலமின்' என்னும் மருந்தை ப்ரயோகிப்பார்கள்.

அதிக வெளிச்சமும், சத்தமும் இருந்தால் தூக்கம் கெட்டுப்போகுமாதலால் அதிக வெளிச்சமில்லாமல் நிசப்தமாயிருக்கும் இடங்களில்தான் இந்த முறை கைகூடி வரும்.

அவ்வப்போது நடக்கும் விஷயங்களை உடனுக்குடன் மறந்துபோகும்படியாகவும், ஆனால் சொல்லும் விஷயங்களை க்ரஹிக்கும்படியாயும், தேகபலம் குறையாமலும் இருக்கும் வரையில் ஷை மருந்தைக் கொடுப்பார்கள். இதனால் அறிவானது மயக்கமடைந்து கலக்கமடைந்தது போலாகி, பிறகு ப்ரஸவம் நேரிடும்போது அந்த விஷயம் கொஞ்சங்கூட ஞாபகமில்லாமல் மறந்துபோகிறது.

இஞ்ஜெக்ட் செய்த மருந்து சரியாக வேலை செய்கிறதா என்று பார்க்க ஸ்த்ரீயின் ஞாபக சக்தியைப் பரீக்ஷிப்பார்கள். ஏதாவது ஒரு பொருளை யவளிடம் காட்டிப் பிறகு அரை மணிநேரம் கழித்து அதையே மறுபடியும் அவளிடம் காட்டி யதையவள் அதற்குமுன் எப்போதாவது பார்த்ததுண்டா வென்று கேட்பார்கள். அதற்குமுன் பார்த்திருப்பதாக அவள்சொன்னால் மருந்து சரியாய் பலிக்கவில்லையென்று எண்ணி மறுபடியும் மருந்து ப்ரயோகிப்பார்கள். பிறகு அரைமணி நேரம் கழித்து டாக்டர்கள் மருந்து இஞ்ஜெக்ட் செய்தார்களா என்று அவளைக்கேட்க அவள் தனக்கு ஞாபகமில்லை யென்று சொன்னால் மருந்து சரியாய் பலித்ததென்று சொல்லலாம்.

இப்படிப்பட்ட தூக்கமயக்கத்தால் ப்ரஸவ வேதனை தெரிவதில்லை. டாக்டர்களும் ப்ரஸவ காலத்தில் ஆயுதங்களை உபயோகிக்கவேண்டியிராது. ப்ரஸவகாலத்தில் நரம்புகளுக்கு அதிக ச்ரமம் இருப்பதில்லையாகையால் ஸ்த்ரீகள் ரொம்ப சீக்ரமாக குணமடைந்து விடுகிறார்கள். இந்த முறையில் காலை 5-மணிக்கு ப்ரஸவித்த ஒரு ஸ்த்ரீ 8-மணிக்கு காபி முதலிய சிற்றுண்டி சாப்பிடவும் நடுப்பகலில் ஸாதாரண சாப்பாடு சாப்பிடவும் முடிந்ததென்றால், இந்த முறை எவ்வளவு ஸௌக்யமானதென்பது தெரியவரும். அதே ஸ்த்ரீ மறுநாள் காலையில் முற்றிலும் குணமடைந்து எழுந்து உட்காரக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டாள். 5-ம் நாள் வண்டி ஸவாரி போனதோடு வார்க்

கடைசியில் அநேகர் வீட்டுக்குப்போய்ப் பேசிக்கொண்டிருக்கவும் முடிந்ததாம்.

ஆனால் இந்தமுறையை ரொம்ப ஸாமர்த்யமான வைத்யர்கள்தான் உபயோகிக்கலாமாம். இதற்கு நிசப்தமும் தனிமையான இடமும் வெளிச்சக்குறைவும் வேண்டியிருப்பதால், பெரிய வைத்யசாலைகளில் இதை உபயோகிப்பது முடியாதென்று சொல்லப்படுகிறது.

---

## FIXED PRICES

By

M. R. GOPALAKRISHNA AIYENGAR.

### கரூர் விலை.

நமது தேசத்து வ்யாபாரிகளின் முக்யமான துர்க்குணம் ஒன்று என்னவெனில், தங்களிடமிருக்கும் ஸாமான்கள் ஒவ்வொன்றுக்கும் தங்களுக்கு லாபகரமான ஒருவிலை ஏற்படுத்தி அதன்படி விற்றுவராமல் எப்போதும் பேரம் செய்தல் தான். அதாவது ஸுமார் 10, 12 ரூபாய் பெறுமானமுள்ள ஒருபொருளை ஒருவர் வாங்கவந்தால், வந்தவுடன் அதன் விலை கேட்கும்போது 30 அல்லது 40 ரூபாய் என்று சொல்லி, இரண்டொருமணி நேரம் வீண்பொழுதுபோக்கி கடைசியில் அதன் சரியான விலையாகிய 10, 12 ரூபாய்க்குக் கொடுத்துவிடுதலேயாம். இவ்வழக்கம் சரியென்று ஏற்றுக் கொள்ளாத ஐரோப்பிய வ்யாபாரிகளின் பழக்கம் நம்மவர்களுக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குமேல் இருந்துவந்தும் இன்னும் அவ்வழக்கத்தை விடாததின் காரணம் நாம் அறியோம். நம்முன்னோர் கையாடி வந்த பழக்கமாயிற்றே; அதைக் கைவிடலாகாது என்ற கொள்கையோ அல்லது ஏதாவது லாபகரமாகவே இருக்கிறதோ.

இவ்வேற்பாட்டினால் உண்டாகும் வீண் வார்த்தைகளும் வீண்பொழுது போக்கும் சில ஸமயங்களில் நமக்கு மிகவும் வினோதமாயும் அருவருப்பை யுண்டாக்கக்கூடியதாயும் இருக்கும். இக்கெட்ட வழக்கத்தினால் உண்டாகக் கூடிய நஷ்டங்கள் பல. எப்படியெனில், ஒரு துணிக்கடையில் பத்துபதினைந்துபேர் ஏககாலத்தில் வந்து தங்களுக்கு வேண்டியதினுஸுகளை எடுத்து விலைகேட்கும்போது ஒருவரிடத்தில் அதிகநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டால் மற்றவர்களில் சிலர் காத்துக் கொண்டிருக்க முடியாதவர்களாய் வெளிக்கிளம்பி விடுகிறார்கள். தவிர, வ்யாபாரி யாருடன் நெடுநேரம் பேசுகிறானோ அவராவது பொருளை அக்கடையிலேயே வாங்குவதுதான் என்ன நிச்சயம்? ஏனெனில் வ்யாபாரிகளின் இந்த துர்நடத்தையையறிந்த ஒவ்வொருவரும் அவ்வூரிலுள்ள எல்லாக் கடைகளிலும் விசாரிப்பது அவச்யமாகி விடுகிறது. மற்றப் பெரிய பட்டணங்களில் ஏற்பட்டிருக்கும் விலைகளையும் விசாரித்து அறியவேண்டி வருகிறது. இக்காரணங்களால் தனக்கு வேண்டிய பொருளின் விலை இன்னது தான் என்று தெரியாமல் வ்யாபாரி என்ன விலை சொன்னாலும் ஸந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

க்ராமங்களைப்பற்றிச் சொல்லுவானேன்? மற்றும் உள்ள பட்டணங்களைப் பற்றிப் பேசுவானேன்? சென்னைமா நகரத்தையே நாம் ஸம்பாஷணைக் குள்ளாக்குவோம். புடவைகள் சீட்டிகள் முதலியன விற்கும் தெருவழியாய் உங்களில் அநேகர் போயிருப்பீர்களென்று நம்புகிறேன். ஆயினும் ஒவ்வொரு கடையிலும் வ்யாபாரம் செய்திருக்க ஸமயம் வாய்த்திராது. ஒவ்வொருகடையின் முன்னும் என்ன காண்கிறீர்கள். கடைக்காரனுடைய விலாஸமும் அவ்விடத்தில் அகப்படக் கூடிய பொருள்களும் குறித்திருக்கும் "நோட்டீஸ்" பலகை. இப்பலகையில் எழுதி யிருக்கும் முதல் பதங்கள் என்ன? "கரூர்! கரூர்!! கரூர்!!!" என்பவையே. இப்படியிருந்தும் உள்ளேபோய் வ்யாபாரம் செய்து பார்த்தால் இவ்வழிக்கைப் பலகையின் மோசம் தெரியவரும். நாகரீகம் முற்றிய இந்நகரிலேயே இப்படியானால் மற்ற பட்டணங்களில் கேட்பானேன்.



த்ருஷ்டாந்தமாக, நான் சென்ற டிஸம்பர் மாஸம் பல்லாரிக்குப் போயிருந்தபோது, ஒருநாள் நானும் என் ஸ்நேகிதர் இருவரும் ஒருபம்பாய் வ்யாபாரியின் கடைக்கு மகமல் வாங்கப் போனோம். காலை 7 மணிக்கு கடையில் போய் உட்கார்ந்தோம். (என்ஸ்நேகிதர் இருவரும் சிலகாலமாய் அக்கடைக்குப் போவது வழக்கமென்று நான் இவ்விடத்தில் சொல்ல வேண்டியது அவச்யம்.) அங்கே வ்யாபாரி எங்களுக்கு மிகவும் உபசாரம் செய்து, உட்கார வைத்து, மகமலை ஒன்றுக்கு மூன்றாக விலை சொல்லி அரைமணி நேரம் வீண்வார்த்தை பேசி இரண்டு தடவை கடையை விட்டு வெளியில் வந்த எங்களை மறுபடியும் கடைக்கு வரச்சொல்லிக் கடைசியில் சரியான விலைக்கு மகமலை விற்றார்.

இப்படிப் பேரம் பேசுதலை அடியோடு நிறுத்துவது அஸாத்யமான கார்யமோ? அல்லவென்று நான் உறுதியாய் நம்புகிறேன். கரூர்விலையை ஏற்படுத்தியிருக்கும் இந்திய வ்யாபாரிகளுடையவும் இதர ஐரோப்பிய வ்யாபாரிகளுடையவும் அனுபோகமே இவ்வழக்கத்தை நிறுத்தப் போதுமான தூண்டுகோலாகும்.

---

## FACTORS INFLUENCING MANGO CROP.

### மாம்பழ மாஸூல் அதிகம் அல்லது குறைவாவதற்குக் காரணங்கள்.

சிற்சில வர்ஷங்களில் மாம்பழம் ஏராளமாயும் சிற்சிலவர்ஷங்களில் ஸாதாரணமாயும் விளையும், இன்னும் சில வர்ஷங்களில் அதிகவதையும், ஸ்வல்பமாயாது அல்லது முற்றினும் இல்லாமலாவது இருப்பதையும் நாம் அனுபோகத்தில் கண்டிருக்கிறோம். மாம்பழம் நம்மிந்தியாவில் உண்டாகிற சிறந்த கனிவர்க்கங்களிலொன்று. ஆதலால் அதின் மாஸூலைக் குறைப்பதற்கு ஹாஸ்பதமாயிருக்கிற சில முக்ய காரணங்களை இதனடியில் தெரிவிக்கிறோம்.

1. பூச்சிகளினால் உண்டாகும் நாசம்.

2. குளிர் காலங்களிலுண்டாகும் விசேஷப் பனி.

3. புஷ்பகாலங்களிலடிக்கும் அதிக உஷ்ணமாயும் மிக வறட்சியாயுமுள்ள காற்று.

4. புஷ்பிக்கும் காலங்களிலடிக்கும் புயல் காற்று, மழை, சீதளகாற்று.

5. முந்திய வர்ஷத்தில் விசேஷக்காய்ப்பினாலுண்டாகும் பலக்குறைவு.

மேற்கூறிய 5-காரணங்களுள் 2, 3, 4-வது காரணங்கள் காலஸ்திதியை அனுஸரித்திருக்கின்றன. இவைகளைப் போக்குவது அநேகமாய் முடியாத கார்யம். கடைசிக்காரணமாகிய முந்தின வர்ஷத்தில் அதிகக் காய்ப்பினால் மரம் பலவீனப். பட்டிருப்பதை ஒருவாறு சரிப்படுத்தக்கூடுமென்று சொல்லலாம்.

### (i) பூச்சிகள்.

வெயில் காலத்தில் இப்பூச்சிகள் விசேஷமாய் மரங்களில் காணப்படுகின்றன. இவைகள் மரத்தின் இளங்கொம்புகளிலும் பூக்காம்புகளிலுமுள்ள ரஸத்தை உறிஞ்சிவிடுவதினால் பூக்கள் கருகிப்போய் உதிர்ந்து விடுகின்றன.

### (ii) குளிர் பனி.

இது பெரும்பாலும் ஒட்டுமா மரங்களிலுண்டாகும் பூக்களுக்கே நாசத்தை விளைவிக்குமல்லாது நன்றாய்ப்பெருத்து உயர்ந்து வளருகிற ஜாதிமரங்களின் பூக்களை [illegible]டருகிறதில்லை. வடஇந்தியாவில் பிப்ரவரிமாஸம் 15-தேதிக்கு முந்தி மாமரங்கள் புஷ்பிக்க ஆரம்பிக்கிறதில்லை. அதற்குள் பனிகாலம் முடிந்து போகிறது. ஆனாலும் பனியானது மாமொட்டுக்களையும் அவை நிற்கும் இளங்கொம்புகளையும் நாசம் செய்துவிடுகிறது. இன்னும் தெற்கு பாகங்களில் சீக்ரமாய்

புஷ்பிக்கும் புஷ்பங்களை பனி நாசம்செய்து விடுகிறது. முதல் வர்ஷத்தில் அதிக மழை பெய்வது அடுத்து வரும் வர்ஷத்தின் மாம்பழ உற்பத்திக்குக்கேடு. பனியினால் உண்டாகும் கெடுதியை நீக்குவதற்கு மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதுதான் முக்கியமான பக்வம். பனி விழும் என்று காணப்படுவதற்கு முந்தி ஜலம் பாய்ச்சவேண்டும்.

(iii) காற்றுகள்.

உஷ்ணமாயும் வறட்சியாயுமுள்ள காற்றினாலுண்டாகும் முக்ய தீமை என்னவென்றால் புஷ்பங்கள் பருவமடைந்து முதிர்ந்து பிஞ்சாவதில்லை. இக்காற்று புஷ்பங்களின்மேல் வீசாதபடி தோட்டத்தின் சுற்றிலும் உயர்ந்த மரங்களை பயிர் செய்வதினால் இத்தீமை குறைவுபடும்.

(iv) புயல்கள், மழை, சீதளக்காற்று.

ருதுக்கள் ஒன்றினின்று மற்றொன்றுக்கு மாறுங்காலத்தில்தான் மாமரங்கள் புஷ்பிக்கின்றன. அத்தருணங்களில் மழையும் காற்றும் ஸாதாரணமாக ஸம்பவிக்கக்கூடியவை.

காற்று மழையினால் புஷ்பங்களில் கருதங்காமல் பருவமாகி பிஞ்சாவதற்கு யோக்யதையின்றி புஷ்பங்கள் கருகி உதிர்ந்து போகின்றன. இதற்கு நிவர்த்தி மழைக்குப் பிறகு புஷ்பிக்கக் கூடிய தினுஸுகளையாவது அல்லது மழைக்கு முன்னமேயே புஷ்பித்து பக்வத்துக்கு வரக்கூடிய தினுஸுகளையாவது பயிரிடுவது தான்.

(5) முந்திய வர்ஷத்தில் அதிகக்காய்ப்பினாலுண்டாகும் பலக்குறைவு.

ஒரு வர்ஷத்தில் விசேஷபலிதம் ஏற்பட்டால் மறுவர்ஷத்தில் குறைவுபடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதை நிவர்த்திக்க சில பரிஹாரங்கள் சொல்லப்படுகின்றன.

i. சிற்சில கிளைகளிலிருந்து பூக்கொத்துகளைக் கிள்ளிவிடுவது.

ii. இலைகள் துளிர்விடும் சிற்சில கிளைகளை நறுக்கிவிடுவது.

iii. மரத்தில் சில கிளைகள் வெகு வர்ஷங்களுக்கு பூவே பிடிக்காமலிருப்பதை பார்த்திருக்கலாம். அம்மாதிரிக் கிளைகளைப்பார்த்து நறுக்கிவிடுவது. (ஆனால் ஒரே வர்ஷத்தில் அதிகக்கிளைகளை நறுக்குவது நன்றல்ல.)

iv. பெரிய தோட்டங்களில் சில மரங்களின் பூக்களை முற்றிலும் கிள்ளிவிடலாம். இவ்வாறு செய்வதால் அவைகள் அடுத்த வர்ஷத்தில் நன்றாய்க் காய்க்கும். இதனால் தோட்டத்தில் ஒரு வர்ஷத்தில் சில மரங்களும் அடுத்த வர்ஷத்தில் மற்ற மரங்களுமாக பலன் கொடுப்பதால், வர்ஷாவர்ஷம் தவறாமல் மாஸூல் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

(v) மாங்கன்றுகள் நட்டுப் பெரியவையாகி அவை காய்க்கத் தொடங்கின பிறகு அவைகளைப்பற்றி தோட்டக்காரர்கள் வெகுவாய் கவனிப்பதில்லை. அவர்கள் மரங்களுக்கு ஜலம் பாய்ச்சுவதைத்தவிர எருவிடுதல் கொத்திவிடுதல் முதலிய வேலைகள் ஒன்றும் செய்வதில்லை. மாமரங்கள் ரொம்ப நல்லஸ்திதியிலிருக்கும்படி வேண்டிய எருக்களிட்டு, நிலத்தை கொத்திவிடவேண்டும்.

முதல் வர்ஷத்தில் நல்ல பலன் கொடுப்பதால் மரங்கள் ரொம்ப பலவீனமடைந்துவிடுகின்றன. அடுத்த வர்ஷம் பூமியிலிருந்து போதுமான அளவு உணவு க்ரஹித்துக் கொண்டு சரியான நிலைமையை யடைந்து மூன்றாவது வர்ஷத்தில் தான் சரியாகப் பலன் கொடுக்கின்றன. இப்படி மரங்கள் தாமே மெதுவாக பூஸாரத்தை க்ரஹித்து பலமடையும்படி விடாமல் தக்க எருவிட்டு நிலத்தைக் கொத்திவிட்டு மரங்களை நல்ல ஸ்திதியடையும்படி செய்யவேண்டும்.



## THE WAR AND THE INDIAN CHIEFS.

### யுத்தமும் இந்திய ராஜாக்களும்.

ஸமீபத்தில் நடந்த இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் வைஸ்ராய் இந்தியாவிலுள்ள ராஜாக்கள் எல்லாரும் யுத்தத்துக்குப் போக முன் வந்திருக்கிறார்களென்றும், அவர்களில் பாடியாலா, பிகானீர், கிஷன்கார், ஜோட்பூர், ரட்லம், ஸச்சின் ஆகிய இந்த ஸமஸ்தானத்தின் மகாராஜாக்களும், போபாலின் இளவரசர், ஸர் ப்ரதாபஸிங் ஆகிய இவர்களும் யுத்தத்துக்குப்போகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களென்றும் சொன்னார்.

இந்த ஸமஸ்தானங்களைப் பற்றியும், ராஜாக்களைப் பற்றியும் சில குறிப்புகள் எழுதுகிறோம்.

பாடியாலா.

இவைகளில் பாடியாலா என்பது ஒரு ஸீக்கிய ஸமஸ்தானம். இதன் மகாராஜா 1900-வருஷத்தில் பட்டத்துக்கு வந்தார். அப்போது அவருக்கு வயஸு 9. பாடியாலா ஸமஸ்தானத்து ராஜாக்கள் ப்ரிட்டிஷ் அதிகாரத்தின்கீழ் வந்தது முதல் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தினிடம் ராஜ விச்வாஸம் குறையாமல் இருந்து வந்திருக்கிறார்கள்.

இந்த ஸமஸ்தானம் 1762-ம் வர்ஷ முதல் தனி ராஜ்யமாக இருந்து வருகிறது. அந்த வர்ஷந்தான் அந்த ஸமஸ்தானத்தின் தலைவருக்கு அஹமெட்ஷாவினால் ராஜாஎன்னும் பட்டப் பெயர் கொடுக்கப்பட்டது. இந்த ஸமஸ்தானத்து ராஜ வம்சத்தில் ஆண்களே யன்றி ஸ்த்ரீகளும் யுத்தங்களில் தேர்ந்த ஸேனாதிபதிகளாக இருந்திருக்கிறார்கள். ஸாகிப்குவார் என்னும் ராணி மராட்டியர்கள் இந்த ஸமஸ்தானத்தின்மேல் படையெடுத்து வந்ததை வெகு ஸாமர்த்யமாகத் தடுத்திருக்கிறாள். இந்த ராணியின் காலத்தில்தான் பாடியாலா இங்க்லீஷ்காரரின் ஆதீனத்தில் வந்தது.

இந்தியாவில் இம்பீரியல் ஸெர்விஸ் ட்ரூப்ஸ் என்று சில ஸைன்யங்கள் இருக்கின்றன. இவைகள் இந்திய பாதுகாப்புக்காக ஸ்வதேச ஸமஸ்தானங்களால் அவைகளின் ஸொந்தச் செலவில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட துருப்புகளை சேர்த்து நிர்வகித்து வருவதாக ஒப்புக்கொண்ட ஸமஸ்தானங்களில் பாடியாலா தான் முதலாவதாகும். பாடியாலா ஸமஸ்தானத்து ஸைன்யங்கள் 1814-ம் வர்ஷத்து கூர்க்கா யுத்தத்திலும், 1857-ம் வர்ஷத்து சிப்பாய் கலகத்திலும் ப்ரிட்டிஷுக்கு உதவியாக சண்டை செய்தன. இந்த ஸமஸ்தானத்து இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகள் மணிப்பூர், சிட்ரால், காபூல், ஸர்மா ஆகிய இந்த விடங்களில் நடந்த சண்டைகளில் ப்ரிட்டிஷாருக்கு ரொம்ப உதவி செய்திருக்கின்றன.

பாடியாலாவின் மகாராஜா 1910-ம் வர்ஷம் ராஜ்ய நிர்வாகம் செய்ய ஆரம்பித்தார். இவருக்கு மஹாராஜா புபேந்த்ரஸிங் என்று பெயர். இவருக்கு க்ரிக்கட் முதலிய விளையாட்டுகளில் ப்ரிய மதிகம்.

பிக்கானீர்.

பிக்கானீர் மஹாராஜா ராஜபுத்ர ஜாதியில் ராதார் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் ஆஜ்மீரில் ராஜபுத்ரர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மேயோ காலேஜில் கல்விபயின்றார். இங்க்லீஷில் ரொம்ப பயிற்சி யுண்டு. 1909-ம் வர்ஷத்தில் இவருக்கு ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் லெப்டினண்ட் கர்னல் உத்யோகமும் 1910-ம் வர்ஷத்தில் கர்னல் உத்யோகமும் கொடுக்கப்பட்டது. இவர் நமது சக்ரவர்த்திக்கு ஏ. டி. காங்காக இருந்திருக்கிறார். இந்த ஸமஸ்தானம் ப்ரிட்டிஷ் அரசாட்சிக்கு யாதொரு கப்பமும் கட்டுவதில்லை.

கர்னல் உபயதுல்லாகான்.

போபால் ஸமஸ்தானத்து ராணியாகிய பேகமின் இரண்டாவது புதல்வராகிய கர்னல்

உபயதுல்லாகான் இந்திய ஸைன்யங்களுடன் கடலில் போய்க்கொண்டிருக்கையில் உடம்பு அஸௌகர்யம் ஏற்பட்டதால் ஏடனிலேயே இறங்கித் திரும்பிவிட நேர்ந்தது. இவர் இந்த ஸமஸ்தானத்தை முதலில் 1726-ம் வர்ஷத்தில் ஸ்தாபித்தவராகிய டோஸ்ட் மகமத்கானுடைய வம்சத்தைச் சேர்ந்தவர். இவர் 1905-ம் வர்ஷ முதல் இந்த ஸமஸ்தானத்தின் ஸேனைகளின் தலைவராக இருந்து வருகிறார்.

கிஷென்கார்.

கிஷன்கார் என்னும் ராஜ்யம் ரஜபுதனத்தின் மத்தியிலுள்ள 858-சதுரமைல் கொண்ட ஒரு சிறிய ராஜ்யம். கிஷன்கார் மகாராஜாவின் பெயர் மதன்ஸிங். இவர் 16-ம் நூற்றாண்டில் ஜோட்பூர் ஸமஸ்தானத்தின் அரசராக இருந்த உதயஸிங் ராஜாவின் வம்சத்தைச் சேர்ந்தவர். இவர் 1884-ம் வர்ஷம் பிறந்தார். இவர் ராஜபுத்ரர்களின் தலைவர் என்று சொல்லப்படும் உதயபுரத்து மகாராஜாவின் புத்ரியை விவாகம் செய்துகொண்டிருக்கிறார். இவரிடம் ஸுமார் 2000 துருப்புகளும் 65 பீரங்கிகளும் இருக்கின்றன.

ஜோட்பூர்.

ராஜபுதனத்திலுள்ள ஸ்வதேச ராஜ்யங்கள் எல்லாவற்றிலும் ஜோட்பூர்தான் மிகப் பெரியது. இது 34,963 சதுரமைல் உள்ளது. ஜோட்பூர் மஹாராஜா இப்போது மைனராக இருக்கிறார். இவருடைய தகப்பனாரின் ஸஹோதரராகிய கர்னல் ஸர் ப்ரதாபஸிங் ஸமஸ்தானத்தின் ரீஜண்டாக இருக்கிறார். இவர்கள் இருவரும் யுத்தத்துக்குப் போயிருக்கிறார்கள். இந்த ஸமஸ்தானத்தின் இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகளிலுள்ள சிப்பாய்களில் அநேகர் ராஜபுத்ரர்கள்.

மஹாராஜ ஸர் ப்ரதாபஸிங் மிகவும் க்யாதி பெற்றவர். ஸாமர்த்யமான யுத்தவீரர். இவருக்கு பால்ய முதல் கொண்டே பெரிய விளையாட்டுகளிலும் குதிரை ஸவாரியிலும் ரொம்ப ப்ரியம் உண்டு. இப்போது இவருக்கு 68-வயஸாகியுங்கூட குதிரை ஸவாரியில் இவரைப் போல் ஸாமர்த்யசாலி ஒருவருங்கிடையாதாம். இவர் ஜோட்பூர் ஸமஸ்தானத்து ஸைன்யங்களை ரொம்பவும் சீர்திருத்தியிருக்கிறார்.

ரட்லம்.

ரட்லம் என்பது மத்திய இந்தியாவிலுள்ள ஒருசிறிய ராஜ்யம். இதன் விஸ்தீரணம் 902 சதுரமைலாகும். இது 17-வது நூற்றாண்டில் ஷாஜிஹான் சக்ரவர்த்தி காலத்தில் ஜோட்பூர் மகாராஜா உதயஸிங்கின் கொள்பேரர்களில் ஒருவராகிய ரதன்ஸிங் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது உள்ள ராஜாவின் பெயர் ஸஜ்ஜன்ஸிங். இவர் இண்டோரிலுள்ள டாலி காலேஜில் கல்வி பயின்றவர்தார். இவர் ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் ஆனரரி காப்டனாக இருக்கிறார்.

ஸச்சின்.

ஸச்சின் என்பது பம்பாய் ராஜதானியில் ஸூரத் ஜில்லாவிலுள்ள ஒரு சிறிய ஸமஸ்தானம். இது 42 சதுரமைலுள்ளது. இதில் 21 க்ராமங்களிருக்கின்றன. இந்த ஸமஸ்தானத்தின் நவாப் ராஜகோட்டிலுள்ள ராஜகுமார் காலேஜிலும், ஆஜ்மீரிலுள்ள மேயோ காலேஜிலும் கல்விபயின்றார். பால்யத்தில் இம்பீரியல் காடெட் கோர் என்னும் ஸைன்யத்தில் சேர்ந்து ராணுவ விஷயங்களில் பயின்றார். இப்போது அந்த ஸைன்யத்தில் லப்டினண்டாக இருக்கிறார். இவர் ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் கௌரவ காப்டனாக இருக்கிறார்.

---

## CRUELTY TO ANIMALS.

By

S. RANGASWAMI AIYANGAR.

## ஜீவஹிம்ஸை.

எறும்பு முதலாகிய எண்ணாயிரம் ஜீவராசிகளிடத்தும் மனிதன் க்ருபையாயிருந்து அன்பு பாராட்டுவதே ஜீவகாருண்ய மெனப்



படும். அப்படிக்கில்லாமல் ம்ருகங்கள் பக்ஷிகள் முதலியவற்றைக் கஷ்டப்படுத்துவது ஜீவஹிம்ஸை எனப்படும்.

சிலர் ம்ருகங்களை அளவுக்குமிஞ்சி வேலை செய்ய வற்புறுத்துகிறார்கள். மாடு, குதிரை முதலியவைகளைத்தாங்கமுடியாதசுமைகளையும் பாரங்களையும் சுமத்தி நடத்துகிறார்கள். அவைகள் நடக்கமாட்டாமல் தள்ளாடும்பொழுது சாட்டைகளினாலும் கழிகளினாலும் ஓங்கிஓங்கி அடித்தும், தார்க்குச்சிகளால் குத்தியுங் கொடுமை செய்கிறார்கள். இச்செயல்களுக்கு நமது ராஜாங்கத்தார்விதிக்கும் அபராதங்களும் தண்டனைகளும் போதுமான போதகர்களாகவில்லை. இவ்விதம் கஷ்டப்படுத்தி வேலைவாங்கியும் வாயில்லா ஜீவன்களை என்றிரங்கி தின்ன சரியான தீனியும் படுக்க இடமுங் கொடுப்பதுமில்லை. சிலர் தம்மிடத்துள்ள ம்ருகங்கள் மூப்படையும் வரையில் வேலை வாங்குகிறார்கள். அப்படிச் செய்வதனால் இவர்களே அவைகளைப் பல வர்ஷங்களுக்கு முன்பாகவே யமனுலகுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஐயோ! என்னபாவம்!! என்னகொடுமை!!! அவைகள் மரிப்பது இவர்களுக்குக் கொண்டாட்டமா? தவிர, சிலர் தம்மிடத்து வேலைசெய்து கிழத்தன்மையடைந்து வேலைக்கு உதவாதிருக்கும் ம்ருகங்களை அலைந்து திரியும்படி விட்டுவிடுகிறார்கள். சிலர் யாதொரு காரணமுமில்லாமல் மேய்ந்துகொண்டிருக்கும் கழுதை, நாய், ஆடு, மாடு முதலியவைகளைக் கல்லால் எறிந்தும் கழியால் அடித்தும் வதை செய்கிறார்கள். சில சிறுபிள்ளைகள் ஈ, எறும்பு முதலியவற்றைப் பிடித்துக் கொல்வதும், குருவிக்கூண்டுகளைக் கலைத்துக் குருவிகளுக்கும் குஞ்சுகளுக்கும் உபத்ரவஞ் செய்வதுமே கார்யமாய்த் திரிகிறார்கள். சிலர் ஆத்ம த்ருப்தி செய்வது புண்யமெனக் கருதி, ஒரு ஜீவனை வதை செய்வது பாவமென்பதைக் கொஞ்சங் கூட யோசிக்காமல் மிக சாந்தமான ஆடு, கோழி முதலியவற்றை வதை செய்து மாம்ஸ பக்ஷணஞ் செய்கிறார்கள்.

ஆலோசிக்குமிடத்து உலகத்திலுள்ள ஸமஸ்தமான ஜீவகோடிகளையும் கடவுள் மனிதருக்கு உபகாரார்த்தமாகவே ஸிருஷ்டித்துள்ளாரென்பது நம்மெல்லோருக்கும் தெரிகிறது. ஸிருஷ்டித்துள்ள ம்ருகங்கள் பக்ஷிகளுள் மயில், அன்னம் போன்றவை நடனஞ் செய்கிறவைகளாகவும், குயில், கிளி, வானம்பாடி முதலியவை பாடுகிற ஸங்கீத வித்வான்களாகவுமிருக்கின்றன. காகம், பருந்து முதலியவை அசுத்தங்களைப் பக்ஷித்து சுத்தப்படுத்துகின்றன. பசு, எருமை முதலியவை நமக்குப் பால் கொடுக்கின்றன. காளைமாடு, குதிரை முதலியவை நம்மைச் சுமந்து போவதோடு பற்பல வேலைகளுக்கும் உதவுகின்றன. நாய்கள் காவற்காரர்களைப் போல வீடு காக்கின்றன. சேவல்களும் காகங்களும் நமக்கு ஸூர்யனின் வரவை அறிவித்து நம்மை வேலைக்குத் தயாராகும்படி தூண்டுகின்றன. இவ்விதமே உலகில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துக்களும் நமக்கு ஏதேனுமொரு வழியில் உபயோகப்படுகின்றன. இவையில்லாவிட்டால் நாம் நமது ஸுகங்களில் பாதி இழக்கும்படி நேரிடும்!

மனிதன் ஜீவஜந்துக்களிடத்தில் அன்புங் கருணையும் பாராட்டவேண்டி யிருப்பது பற்றியே கடவுள் அவனுக்கு அரிய பெரிய நுண்ணிய வஸ்துவாகிய பகுத்தறிவைத் தந்தருளினார் போலும்; ஒவ்வொரு மதமும் ஜீவஜந்துக்களிடம் கருணைபாராட்ட வேண்டுமென்று முறையிடுகிறது. நமது முன்னோர்களாகிய ஆர்யர்கள் பசு முதலிய ம்ருகங்களை தெய்வீகமாகக் கொண்டாடினார்கள். இவ்வழக்கம் தற்காலத்திலும் சிற்சில விடங்களில் அநுஷ்டானத்தி லிருக்கிறது. முற்காலத்து சோழநாட்டரசர் ஒருவர் ஓர் இளங்கன்றின் நிமித்தம் தன் புத்ரனை இழக்கத் துணிந்தார். சிபி

சக்ரவர்த்தியோ தன்னிட மடைக்கலமென்றடைந்த புறுவைக் காப்பாற்றும் நிமித்தம் தன் உயிரையே நீக்கத் துணிந்தார். பௌத்த மதம் "அஹிம்ஸா பரமோ தர்ம:" என முறையிடுகிறது. மகம்மதியமத தீர்க்கதரிசியாகிய முகம்மதுவும், "நீ உண்ணச் செல்லுமுன் உன் குதிரையை உண்ணச்செய்." என்றார். நமது ஆங்கிலேய அரசாட்சியில் ஜீவஹிம்ஸையைத் தடுக்க அனேக சட்டதிட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வோர் ராஜதானி பட்டணத்திலும் "ஜீவஹிம்ஸா நிவாரண ஸங்கம்" ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நாம் ஜெந்துக்களிடத்தில் அன்பு பாராட்டுவதில் புதிதாய் எவ்விதக் கொள்கையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. நமது முன்னோர்களாலும் மஹா பராக்ரம சாலிகளாகிய சக்ரவர்த்திகள், மஹரிஷிகள் முதலியோராலும் கொண்டாடப்பட்ட கொள்கைகளையே அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறோம்.

---

## HYGIENIC RULES IN CHOLERA SEASON.

### காலராகாலத்தில் கவனிக்கவேண்டிய ஸுகாதார விதிகள்.

காலரா பரவியிருக்கும் காலங்களில் சில ஸுகாதார விதிகளை கவனிப்பதால் காலரா வராதபடி தடுத்துக்கொள்ளலாம். காலரா என்னும் வாந்திபேதி ஸிரிமா பாஸிலஸ் (Cerema bacillus) என்னும் ஒரு க்ருமியால் பரவுகிறது. இந்த க்ருமி குடி ஜலத்தில் சேருவதால்தான் முக்யமாய் வாந்திபேதி பரவுகிறது. ஆகையால் காலராக் காலத்தில் நாம் கவனிக்கவேண்டிய முக்ய விஷயம் என்னவென்றால் குடிப்பதற்கு உதவும் ஜலம் முழுவதையும் நன்றாகக் கொதிக்கவைத்து சுத்தமான பாத்ரத்தில் ஊற்றி ஜாக்ரதையாக மூடி சுத்தமான இடத்தில் வைத்திருக்கவேண்டும்.

காலரா க்ருமியானது ஈரமான துணிகளிலும், அழுகிப்போன பழங்களிலும், பாலிலும் வெகுகாலம் சாகாமல் உயிரோடிருக்கிறது. ஆகையால் வீட்டில் உபயோகிக்கக்கூடிய பாலைக்காய்ச்சி அசுத்தம் அதில் கலக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அழுகிப்போன பழங்களை உபயோகிக்கவே கூடாது. காலரா வந்தவர்களுடைய துணிகளையும், படுக்கைகளையும், வெந்நீரில்போட்டுக் கொதிக்க வைக்கவேண்டும். அல்லது வேறு விதத்தில் வ்யாதி க்ருமிகள் சாகும்படி சுத்தம் செய்யவேண்டும். ரொம்பப் பழையனவாயும் விலையதிகமில்லாதனவாயும் உள்ள துணிகளை கூடுமானால் நெருப்பிட்டு எரித்துவிடலாம்.

மிதந்தப்பி எதுவும் செய்யக்கூடாது. பெருந்தீனி தின்பதும், சுத்த பட்டினி யிருப்பதும் கெடுதலானவை. பெருந்தீனி தின்பதனால் வயிற்றுப்போக்கு ஏற்படும். வயிற்றுப்போக்கு உண்டானால் தேகம் பலவீனம் அடைந்து வ்யாதியைத்தடுக்க சக்தி குறைந்து போகிறது.

பட்டினியிருப்பது வ்யாதி க்ருமி வ்ருத்தியாவதற்கு ஸாதகமானது. ஆகாரம் ஜீர்ணமாவதற்கு உதவும்படியான காஸ்ட்ரிக் ஜூஸ் என்னும் ரஸம் ஒன்று குடலில் உற்பத்தியாகிறது. இது காலரா க்ருமிகளைக் கொன்றுவிடும். பட்டினியாயிருந்தால் இந்த ரஸமுண்டாவதில்லை. ஆகையால் காலரா க்ருமிக்கு ஒரு முக்ய சத்ரு குறைவாதலால் அதுவ்ருத்தியடைவது ஸுலபமாகிறது.

காலராக்காலத்தில் பேதிக்கு மருந்து சாப்பிடக்கூடாது. ஆகாரவிஷயத்தில் இன்னும் சில அம்சங்களில் கவனமாயிருக்கவேண்டும். ஆகாரத்தைக் கூடியமட்டும் கை விரல்களால் தொடாம லிருக்கவேண்டும். ஆறிப்போன, அல்லது ஊசிப்போன ஆகாரங்களை சாப்பிடக்கூடாது. ஈக்கள் வீடுகளில் இல்லாமலும், ஆகாராதிகளில் உட்காராமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். ஈக்கள் வ்ருத்தியாகாதபடி வீடுகளை சுத்தமாகவும், ஈரமில்லாமலும் வைத்துக்கொள்ளவேண்டும். பினைல் மருந்தை ஜலத்தில் கலந்து தரைகளில் தெளித்தால் ஈயின் தொந்தரவு இராது.



வீடுகளில் ஸூர்ய வெளிச்சம் நன்றாய்ப் படும்படி ஜன்னல்களையும் கதவுகளையும் பகலில் நன்றாய்த் திறந்து வைத்திருக்க வேண்டும். சாக்கடைகள் சுத்தமாயிருக்க வேண்டும். கக்கூசுகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். அதில் பினைல் மருந்தை ஜலத்தில் கரைத்துத் தெளிக்க வேண்டும்.

ஜலத்தட்டு ஏற்படுமிடங்களில், ஜனங்கள் கிணற்று நீர் உப்பாயிருந்தாலும் பாதகமில்லையென்று அதையே குடிக்கிறார்கள். கிணற்றில் பெர்மாங்கனேட் அப் பொடாஷ் மருந்து போட்டால், ஜலத்தின் தோஷம் நீங்கி விடும். ஒரு மரக்காலில் கொஞ்சம் பெர்மாங்கனேட் அப் பொடாஷ் மருந்து போட்டு அந்த மரக்காலை கிணற்றில் விட்டு ஜலம் மொண்டு, மறுபடியும் ஜலத்தில் விட்டு, இப்படியே பல தடவை செய்தால் இந்த மருந்து ஜலத்தில் கரைந்து ஜலம் இளஞ்சிவப்பு நிறமாகும். இந்த நிறம் வரும் வரையில் மருந்து போடவேண்டும்.

## THE 'EMDEN' AND ITS PRANKS.

### 'எம்டனும்' அதன் சில்விஷமமும்.

வங்காளக்குடாக்கடலில் ஐந்து வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்து, சென்னையில் சில குண்டுகள் விட்டுப் பிறகு லங்கைக்குத் தென் மேற்கே காலித்துறைமுகத்துக்கும் லக்ஷத் தீவுகளுக்கும் நடுவில் சில ப்ரிட்டிஷ் வ்யாபா ரக் கப்பல்களை மூழ்கடித்து, ஜனங்களுக்கும் வ்யாபாரத்துக்கும் பயமுண்டாக்கி வரும் 'எம் டன்' என்னும் ஜெர்மன் யுத்தக்கப்பலைப்பற்றி யாவரும் கேட்டிருப்பார்கள். இது சீனப்பக் கமிருந்த ஜெர்மன் யுத்தக்கப்பல்களி லொன் றாகும். சீனாவின் கிழக்குக்கரையில் ஜெர் மனிக்கு ஸொந்தமான யுத்தக்கப்பல்கள் யுத்தத்துக்குமுன் 7-இருந்தன. அவைகளில்-4 க்ரூஸர் என்னும் கப்பல்கள். மூன்று ஜலத்தில் மூழ்கிச் சண்டைசெய்யும் டார்பிடோ படகுகள். சீனாவில் ஜெர்மனிக்கு யுத்தக்கப்பல்கள் இருப்பதுபோல இங்க்லண்ட், அமெரிக்கா ஐக்ய மாகாணங்கள், ஆஸ்ட்ரியா, ப்ரான்ஸ் ரஷ்யா ஆகிய இந்த தேசங்களைச் சேர்ந்த யுத்தக்கப்பல்களும் சீனாவில் இருக்கின்றன. இங்க்லண்டுக்கு ஒரு பெரிய யுத்தக்கப்பலும், நான்கு பெரிய க்ரூஸர் கப்பலும் மற்ற சிறு கப்பல்களும் இருந்தன.

யுத்தம் ஆரம்பித்த சில காலத்துக்கெல்லாம் இரண்டு ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் சீனாவை விட்டு வெளியேறினவென்று தோன்றுகிறது. இந்தக் கப்பல்கள் போகுமிடமெல்லாம் அகப்படக்கூடிய எதிராளியின் கப்பல்களை வழிமறித்து அவைகளைப் பிடித்துத் தங்கள் தேசத்துக்குப் பிடித்துக்கொண்டு போயோ, அல்லது ஜலத்தில் மூழ்கடித்தோ விடும். வ்யாபாரக்கப்பல்கள் யுத்தக்கப்பல்களோடு சண்டைபோடமுடியாது. ஆகையால் அந்தக் கப்பல்கள் புறப்பட்டுவிட்டன வென்று தெரிந்ததும் கடல் வ்யாபாரம் சற்றுத் தடைப்பட்டது. ஆயினும் அந்தக்கப்பல்கள் எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டன வாதலால், மறுபடியும் வ்யாபாரக் கப்பல்கள் ஸமுத்ரத்தில் போகலாயின.

ஆயினும் சிறிது காலத்துக்கெல்லாம் ஜெர்மன் யுத்தக்கப்பல்களில் ஒன்றாகிய 'எம்டன்' என்னும் 'க்ரூஸர்' எப்படியோ வங்காள விரிகுடாவுக்குள் வந்துவிட்டது.

அது ஜாவாவிலுள்ள ஒரு துறைமுகத்தில் ஒளித்துகொண்டிருந்து, ஸுமாட்ரா தீவுக்கும் ஜாவாதீவுக்கும் நடுவிலுள்ள ஸுண்டா ஜலஸந்தி வழியாக மேற்கேபோய், வங்காளவிரிகுடாவுக்குள் வந்திருக்கவேண்டு மென்று சொல்லப்படுகிறது.

அது வங்காளவிரிகுடாவில் ஜகன்னாதமென்னும் பூரிபட்டணத்தின் ஓரமாக கடலில் இந்த மாஸம் 10-தேதி முதல் 14-ந்தேதிக்குள் 5 ப்ரிட்டிஷ் கப்பல்களை மூழ்கடித்துவிட்டது. அது பிடித்தமுதல் கப்பலின் பெயர் 'இண்டஸ்'. இது கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்குப் போய்க்கொண்டிருந்தது. சென்ற 10-தேதியன்று காலை 9-மணிக்கு அதை 'எம்டன்' கப்பல் நிறுத்திற்று. உடனே ஒரு லெப்டினண்டும், சில ஜெர்மானியர்களும் ஆயுத பாணிகளாக 'இண்டஸி'ல் ஏறி கப்பலை தங்கள் வசப்படுத்திக்கொண்டு, அதில் ஜெர்மனியின் கொடியை நாட்டினார்கள். பிறகு ஜெர்மானியர்கள் 'இண்டஸை' மூழ்கடிக்கப் போவதாயும், ஆகையால் அதிலுள்ளவர்களெல்லாரும் தங்களுடைய முக்ய ஸாமான்களுடன் வெளியேற வேண்டுமென்றும் சொன்னார்கள். இப்படிச் சொல்லிவிட்டு ஜெர்மானியர்கள் கப்பலிலுள்ள தங்களுக்கு உபயோகப்படக்கூடிய ஸாமான்களைத் தங்கள் கப்பலுக்குக் கொண்டு போனார்கள். அவர்கள் 150 ஸோப் 'கேஸ்'கள் (பெரிய பெட்டிகள்), 2 பெரிய பிஸ்கோத்துப் பெட்டிகள், அரிசி, மா, வெகு நாளுக்கு உபயோகிக்கக்கூடிய ஊறுகாய்போன்ற ஸாமான்கள் முதலிய ஆகாரப்பொருள்கள் ஆகிய இவைகளை தங்கள் கப்பலிலும், கூடக் கொண்டு வந்திருந்த ஜெர்மன் வ்யாபாரக்கப்பலாகிய 'மார்க்கமோனியா' என்னும் கப்பலிலும் ஏற்றிக் கொண்டார்கள். ஸோப்புக் கிடைத்ததால் 'எம்டன்' கப்பலில் இருந்தவர்கள் மறுநாள் காலையில் தங்கள் வஸ்த்ரங்களை ஸோப்புப்போட்டு சுத்தம் செய்து கொண்டிருந்தார்களாம்.

'இண்டஸி'லிருந்தவர்கள் எல்லாரும் 'மார்க்கமோனியா'வில் ஏறிக்கொண்டார்கள். பிறகு 'எம்டன்' கப்பல் பகல்மூன்று மணிக்கு 'இண்டஸ்' கப்பல்மேல் பத்து குண்டுகள் விட்டது. $1\frac{1}{4}$ மணிக்குள் 'இண்டஸ்' மூழ்கி விட்டது. மறுநாள் ஸாயங்காலம் 'லோவட்' என்னும் கப்பல் 'எம்டன்' இருந்த விடத்துக்கு ஸமீபமாய்ப் போகவே எம்டன் அதை நிறுத்துவதற்காக அதை நோக்கி இரண்டு குண்டுகள் போட்டது. உடனே 'லோவட்' நின்று விட்டது. அதிலிருந்தவர்கள் 'மார்க்கமோனியா' கப்பலில் ஏற்றப்பட்டார்கள். 'லோவட்' கப்பலில் வெடி குண்டுகளை வைத்து அதன் மேல் சுட, சிறிது நேரத்துக்கெல்லாம் அதுவும் மூழ்கி விட்டது.

மறுநாள் அதாவது 12-ந்தேதி இரவு 11-மணிக்கு 'காபிங்கா' என்னும் கப்பலும் 1-மணிக்கு 'கில்லின்' என்னும் கப்பலும் 'எம்டனால்' பிடிக்கப்பட்டன. இரவானதால் அவைகளை ஒன்றும் செய்யாமல், அவைகளில் சில ஜெர்மானியர்களை ஆயுத பாணிகளாய் நிறுத்தினார்கள். மறுநாள் காலையில் 8-மணிக்கு 'கில்லின்' என்னும் கப்பலை 'எம்டன்' கப்பல் குண்டுகள் போட்டு மூழ்கடித்தது.

அன்றையதினம் பகலில் 'எம்டன்' 'டிப்ளமாட்' என்னும் கப்பலைத் தடுத்து அதிலுள்ள ஜனங்களை 'காபிங்கா' கப்பலில் ஏற்றி 'டிப்ளமட்'டையும் மூழ்கடித்து விட்டது.

14-ந்தேதியன்று ஸாயங்கிரம் 'மார்க்கமோனியா'விலிருந்த ப்ரிட்டிஷ் கப்பல்காரர்கள் எல்லாரும் 'காபிங்கா'வில் ஏறிக்கொண்டார்கள். அதன் பிறகு ஒருமணி நேரத்துக்குள் 'ட்ராபாக்' என்னும் ப்ரிட்டிஷ் கப்பலை 'எம்டன்' பிடித்தது. அதிலுள்ளவர்களும் 'காபிங்கா'வில் ஏறிக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டார்கள். பிறகு ஜெர்மானியர்கள் இரவு 10-மணிக்கு 'ட்ராபாக்'கில் பலமான வெடிகுண்டுகள் வைத்து கப்பலை நாசம்செய்து மூழ்கடித்து விட்டார்கள்.

பிறகு 'காபிங்கா'வில் இருந்த ஜெர்மானியர்கள் அதைவிட்டு தங்கள் கப்பலுக்குப் போய்விடவே, 'எம்டன்' தலைவர் 'காபிங்கா'வை மற்ற கப்பல்களின் ஜனங்களுடன் கல்கத்தாவுக்குப் போகும்படி உத்தரவு கொடுத்தார். 'எம்டன்' கப்பல் வெகு தூரம்வரையில் 'காபிங்கா'வினுடன் கூடப்போயிற்று.



மேற்சொன்ன ப்ரிட்டிஷ் கப்பல்களைத் தடுத்து மூழ்கடித்ததுமல்லாமல் 'எம்டன்' ஒரு இட்டாலிய கப்பலையும், நிலக்கரி ஏற்றியிருந்த 'பாண்டபாரஸ்' என்னும் ஒரு க்ரீக் கப்பலையும் கடலில் தடுத்தது. இட்டாலியக் கப்பலைப்பிடித்த பிறகு அதைப் போகும்படி விட்டுவிட்டது. ஆனால் ஜெர்மானியர்கள் க்ரீக் கப்பலை எம்டனோடு நிறுத்திக்கொண்டு அதில் இருகத ஒரு இங்க்லீஷ் இஞ்ஜினீயரை கைதுசெய்து 'மார்க்கமோனியா'வில் ஏற்றிக் கொண்டார்கள்.

'எம்டனி'லிருந்த ஜெர்மானியர்கள் தாங்கள் பிடித்தவர்களை மிகவும் மரியாதையாய் நடத்தினார்களென்று தெரிகிறது. க்ரீக் கப்பலில் இருந்த இங்க்லீஷ் இஞ்ஜினியராகிய மிஸ்டர் பார்பஸ்டரை முதலில் 'எம்டனு'க்கு அழைத்துப்போனார்கள். அதில் ஏறினவுடன எம்டனிலுள்ள ஜெர்மன் இஞ்ஜினியர் முன்னால்வந்து, மிஸ்டர் பார்பெஸ்டரின் கையைப்பிடித்துக் குலுக்கி, "பெரியவரே, உங்களுக்குள்ள மரியாதையில் ஒரு குறைவுமிராது. அடுத்த நிமிஷத்தில் எங்களுக்கென்ன நேரிடுமோ யார் கண்டார்; நாளைக்கு நாங்களும் கைதிகளானாலும் ஆகலாம்" என்றார். அங்கிருந்தஜெர்மானியர்களெல்லாம் இவரைக்கண்டதும் தங்கள் தொப்பிகளை எடுத்துவந்தனம் செய்தார்கள். எல்லா ப்ரிட்டிஷ் ஜனங்களும் மிகவும் மரியாதையாய் உபசரிக்கப்பட்டார்கள்.

ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தர்களையும் வேலையாட்களையும் அந்தந்த அந்தஸ்துக்குத் தகுந்தபடி ஜெர்மன் உத்யோகஸ்தர்களும் வேலையாட்களும் சரிவர கவனித்து உபசரித்தார்கள். யாவரும் கலகம் செய்யாமல் சும்மாயிருந்தால் ரொம்ப மரியாதையாய் நடத்தப்படுவார்கள் என்று ஜெர்மானியர்கள் தெரிவித்தார்கள்.

'எம்டனி'லிருந்த ஜெர்மானியர்களுக்கு ஐரோப்பிய யுத்தம் எப்படி நடந்துகொண்டிருந்ததென்பதைப்பற்றி தெளிவாய் ஒன்றும் தெரியாதாம். அவர்கள் பாரிஸை ஜெர்மனி பிடித்துவிட்டதாகவும், வடகடலிலுள்ள ப்ரிட்டிஷ் கப்பல்படை நிர்மூலமாக்கப் பட்டதாகவும் எண்ணியிருந்தார்களாம்.

'எம்டனில்' ஒரு கம்பியில்லா மின்ஸாரத் தந்தி இருக்கிறது. அது தந்தி ஸமாசாரம் ஏற்றுக் கொள்ளத்தான் லாயக்குள்ளதென்றும், அதிலிருந்துவெளியே ஸமாசாரம் அனுப்ப முடியாதென்றும் சொல்லப்படுகிறது. அதைக்கொண்டு 'எம்டன்' ப்ரிட்டிஷ் வ்யாபாரக் கப்பல்கள் புறப்படுவதையும், யுத்தக்கப்பல்கள் இருக்குமிடத்தையும் அறிந்துகொண்டு ஸமயத்துக் கேற்றவாறு நடந்து கொள்ளுகிறதென்று தோன்றுகிறது. இந்தக் கப்பல்கள் மூழ்கிப்போனதில் ஒருகோடி ரூபாய் நஷ்டமாயிற்றென்று சொல்லப்படுகிறது.

'காபிங்கா'வை கல்கத்தாவுக்குப் போகவிட்ட பிறகு 14-தேதியன்று 'க்ளான் மாதீஸன்' என்னும் ப்ரிட்டிஷ் கப்பலை கட்டாக் பட்டணத்துக்கு ஸமீபத்தில் 'எம்டன்' தடுத்து அதிலுள்ள ஜனங்களை 'மார்க்கமோனியா'வில் ஏற்றிவிட்டு, 'க்ளான் மதீஸனை' குண்டு போட்டு மூழ்கடித்துவிட்டது. 18-ந்தேதியன்று 'டோவர்' என்னும் நார்வேகப்பலை நிறுத்தி அதில் 'க்ளான் மதீஸனி'லிருந்த ஜனங்களை ஏற்றி ரங்கூனுக்கு அனுப்பிவிட்டது. 'எம்டனி'லிருந்தவர்கள் எப்போதும் போலவே ப்ரிட்டிஷ் ஜனங்களை மரியாதையாய் நடத்திவந்தார்கள்.

'பாண்டரோபஸ்' என்னும் க்ரீக் கப்பலில் நிலக்கரி இருந்தது, அந்த நிலக்கரியை எடுத்து

'எம்டனில்' போடும்படி ப்ரிட்டிஷ் கப்பலில் இருந்த லஸ்கர்களை வேலைவாங்கி அவர்களுக்கு தாராளமாய்க் கூலி கொடுத்தார்கள். 'பாண்டபாரஸ்' கப்பலிலிருந்து நிலக்கரியை எடுத்து 'எம்டனி'ல் போட்டுக்கொண்டபிறகு, 'எம்டன்' அதை தன் பாட்டில் போகும்படி விட்டு விட்டது.

22-ந்தேதியன்று 'எம்டன்' சென்னைக்கு விஜயம்செய்தது. அதன் வரவை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. அன்று லைட் ஹௌஸில் கூட விளக்கு எரிந்துகொண்டே யிருந்தது. லைட்ஹௌஸ் விளக்கு எரிந்துகொண்டிருந்ததில் 'எம்டனி'லுள்ளவர்களுக்கு மதராஸ் இருக்குமிடத்தை இரவில் அறிந்துகொள்வது ஸௌகர்யமாய் இருந்திருக்குமென்று எண்ணலாம். மேலும் 'எம்டன்' வந்தபோது இரவு 9½-மணி இருக்குமாகையால் கடற்கரை யோரமாயுள்ள ஆபீஸுகளிலும் தெருக்களிலும் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. இவைகளும் 'எம்டனி'லிருந்தவர்களுக்கு ஸௌகர்யமாகவே இருந்தன.

ரேவுதுறைக்கு ஒன்று அல்லது 1½-மைல் தூரம்வந்ததும், 'எம்டன்' ரேவிலிருந்த கப்பல்கள் மேலும் கட்டிடங்கள் மேலும் குண்டுகள் விட்டது. அங்கிருந்த கப்பல் மேலும் சில கட்டிடங்கள் மேலும் சில குண்டுகள் விழுந்தன. பிறகு கடலோரமாயிருக்கும் கிரவின் எண்ணெய்த்தொட்டிகள்மேல் குண்டுகள் விழவே அவைகளில் இரண்டு நெருப்புப் பற்றிக்கொண்டன. 'எம்டன்' குண்டுகள் விட்டுக்கொண்டே தென்புறமாய்ப் போய்க்கொண்டிருந்தது. இன்னும் சில குண்டுகளை பட்டணத்தை நோக்கிவிட்டு சீக்ரம் மறைந்துவிட்டது. ரேவுதுறைக்குப் பக்கத்தில் வைத்திருந்த பீரங்கிகள் 'எம்டனை'நோக்கிச்சுட்டன. சென்னையில்மொத்தத்தில் ஸுமார் 20-ஜனங்கள் காயமடைந்தும் இறந்தும் போனார்கள்.

எண்ணெய்த்தொட்டிகள் எரிந்துபோனதில் 3½-லக்ஷம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம்.

'எம்டன்' தெற்கு முகமாய் கூடலூர் புதுச்சேரி இவைகளின் பக்கம் போய், அவ்விடங்களில் ஒன்றும் செய்யாமல் பிறகு எங்கேயோ போய்விட்டது.

இதேமாதிரி ஸுமார் 150 வர்ஷத்துக்கு முன் ப்ரான்ஸுக்கும் இங்லண்டுக்கும் யுத்தம் நடந்துவந்தபோது, ப்ரெஞ்சு கப்பற் படையொன்று 1746-ம் வர்ஷத்தில் சென்னையிலுள்ள ஸெண்ட் ஜார்ஜ் கோட்டையைத் தாக்கிற்று. மறுபடியும் 12-வர்ஷத்துக்குப்பிறகு லாலி யென்னும் ப்ரெஞ்ச் தளகர்த்தர் புதுச்சேரியிலிருந்து தரைமார்க்கமாய் சென்னைக்கு வந்து கோட்டையை முற்றுகை போட்டார். ஆயினும் ஒரு ப்ரிட்டிஷ் கப்பல்படை சென்னைக்கு உதவியாக வரவே ப்ரெஞ்ச் தளகர்த்தர் பின் வாங்கும்படி நேர்ந்தது.

'எம்டன்' எந்தப்பக்கம் போயிற்றென்றாவது, எங்கெங்கே சுற்றிற்றென்றாவது ஒருவருக்கும் தெரியாது. அதைப்பிடிக்க மூன்று யுத்தக்கப்பல்கள் போயிருக்கின்றனவென்று ஸமாசாரம் வந்தது. 'எம்டன்' எங்கெல்லாமோ சுற்றிக்கொண்டிருந்து சென்றமாஸம் 25 தேதி யன்று பகல் 12½ மணிக்கு லங்கைத்தீவின் தெற்கே யுள்ள காலித்துறை முகத்தின் பக்கத்தில் வந்து அங்கு போய்க்கொண்டிருந்த 'கிங் லட்' என்னும் கப்பலண்டை வந்தது. வந்ததும் "உடனே நிறுத்து" என்று 'கிங் லட்' கப்பலுக்கு ஸங்கேதம் செய்தது. உடனே 'கிங் லட்' நின்றது. பிறகு 'எம்டனி'ன் தலைவர் 'கிங் லட்'டை மூழ்கடிக்கப் போவதாயும் ஆகையால் கப்பலில் உள்ளோரெல்லாம் வெளியில் போகத் தயாராயிருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.



எம்டனிலிருந்து ஒரு ஆபிஸரும் சில ஜெர்மனியர்களும் ஆயுதபாணிகளாய் 'கிங் லட்'டில் ஏறினார்கள். அந்த ஆபிஸர் 'கிங் லட்' கப்பலின் தலைவரைப்பார்த்து 'காப்டன், உமது கப்பலின் தஸ்தவேஜுகளையெல்லாம் பார்க்க வேண்டும்" என்றார். காப்டன் அவைகளை ஜெர்மன் ஆபிஸரிடம கொடுக்க, அவர் அவைகளையெல்லாம் பார்த்து விட்டுப் பிறகு மறுபடியும், "காப்டன், நீங்களெல்லாரும் கப்பலை விட்டுப்போகத் தயாராகுங்கள். நாங்கள் இந்தக்கப்பலை மூழ்கடிக்கப் போகிறோம். இன்னும் ஒரு மணி நேரத்தில் கப்பலை நாசம் செய்யப் போகிறோம். நீங்கள் எங்கள் கப்பலைப்பிடித்து உங்களுடைய துறை முகங்களுக்குக் கொண்டுபோய் வைத்திருப்பதுபோல நாங்களும் உங்கள் கப்பல்களைக்கொண்டு போகலாமென்றால், எங்களுக்கு ஸொந்தமான துறைமுகம் இந்தப்பக்கம் ஒன்றுமில்லை," என்று சொன்னார். பிறகு 'கிங் லட்' கப்பலில் இருந்தவர்களெல்லாரும் 'மார்க்கமோனியா' கப்பலில் ஏற்றப்பட்டார்கள். அவர்களிடமிருந்த துப்பாக்கி முதலிய ஆயுதங்களை எல்லாம் ஜெர்மன் ஆபிஸர் தம்மிடம் கொடுத்து விடும்படி சொன்னார். அவர்களும் அப்படியே கொடுத்து விட்டார்கள். பிறகு 'கிங் லட்' கப்பலில வெடி குண்டுகள் வைத்து அதன் மேல் சுடவே அது மூழ்கிப்போயிற்று.

'டிமெரிக்' என்னும் ப்ரிட்டிஷ் கப்பல் அடுத்தபடியாக 'எம்டனு'க்கு இரையாயிற்று. 'டிமெரிக்' கொழும்பிலிருந்து புறப்பட்டுத் தெற்கு முகமாய்ப்போகையில் 'எம்டன்' அதன் பக்கம் வந்து "நிறுத்து" என்று விளக்கு வெளிச்சத்தால் ஸங்கேதமாகத் தெரிவித்தது. 'எம்டனி'ன் காப்டனும மெகபோன் என்னும்பேசுங் கருவியால் 'நிறுத்து' என்று உரக்கச் சத்தமிட்டார். உடனே 'டிமரிக்' நின்றது. பிறகு ஒரு ஜெர்மன் ஆபிஸரும் சில ஜெர்மனியர்களும் ஆயுதபாணிகளாய் 'டிமரிக்' கில் ஏறி "நாங்கள் ஒரு ஜெர்மன் யுத்தக் கப்பலிலிருந்து வந்திருக்கிறோம். கப்பலின் தஸ்தாவேஜுகளைப்பார்க்கவேண்டும்." என்று சொன்னார்கள். ஆபிஸர் கப்பலின் தஸ்தாவேஜுகளைப்பார்த்துப் பிறகு அதன் காப்டனையும் சீப் இஞ்சினியரையும் கைதுசெய்து எம்டனில் ஏற்றி, மற்றவர்களை 'மார்க்க மோனியா'வில் ஏற்றினார்கள். பிறகு 'டிமரிக்'கில் வெடி குண்டுகள்வைத்து அதை நாசஞ்செய்து ஜலத்தில் மூழ்கடித்துவிட்டார்கள்.

ஜெர்மானியர்கள் எப்போதும்போல மரியாதையாயிருந்தார்கள். ஆபிஸர்கள் 'டிமரிக்'கின காப்டனுக்கும் சீப் இஞ்சினியருக்கும் ஆடுவதற்கு சீட்டுக்கட்டு ஒன்று கொண்டு வந்து கொடுத்தார்கள். ஒருவாலிப லெப்டினண்டு வாசிப்பதற்கு சில புஸ்தகங்கள் கொண்டுவந்து கொடுத்தாராம். பகலில சிற்றுண்டிக்கு விஸ்கியும் ஸோடாவும கொடுத்தார்கள. 27-ந்தேதி ராத்ரி பாண்டுகூட வாசித்தார்களாம்.

'எம்டன்' அடுத்தபடியாக 'க்ரிப்வேல்' என்னும் கப்பலைப்பிடித்தது. ஆயினும் அதை மூழ்கடிக்காமல் நிறுத்தி வைத்துக்கொணடது. அந்தக்கப்பலில் சில ஜெர்மானியர்கள் ஆயுதபாணிகளாய் காவலுக்காக நிறுத்தப்பட்டார்கள். பிறகு சிறிது நேரத்துக்கெல்லாம் 'எமடன்' 'பூரஸக' என்னும் கப்பலைப்பிடித்தது. 'பூரஸ்க்ல' 6000 டன நிலக்கரி இருநதது. அது கொழும்புக்குப் போய்க்கொணடிருந்தது. அதன காப்டன, சீப் ஆபிஸர், சீப் இஞ்ஜினியர், கப்பல் பரிசாரகாகள, உக்ராணக்காரா ஆகிய இவர்களை 'எம்டனி'ன் காப்டன் கைதுசெய்து 'எம்டனில்' ஏற்றிக்கொண்டு, மற்றவாகளை 'க்ரிப்வே'லில் ஏற்றிவிட்டாா.

'எம்டன்' தனக்கு நிலக்கரி கிடைத்ததால் 'பூரஸ்கை' மூழ்கடிககாமல் தன்னிடமிருந்தது வைத்துககொணடது.

27-ந்தேதியன்று 'எம்டன்' தான்பிடித்து வைத்திருந்த கப்பல்களுடன் கொழும்புக்கு 200 மைல் மேற்கே மினிக்காய் தீவுக்கப்பால் போய்விட்டது. அங்கே 'ரிபரா' என்னும் கப்பலைக்கண்டு 'உடனே நிறுத்து' என்று தெரிவித்தது. பிறகு 'எம்டன்' ஜெர்மன் கொடியை உயர்த்திற்று. அதைக் கண்ட 'ரிபரா'வின் காப்டன் கப்பலை நிறுத்தவே 'எம்டனி'லிருந்து ஒரு ஆபிஸரும் சில ஜெர்மானியர்களும் வந்துகப்பலில்ஏறினார்கள். ஏறினதும் ஜெர்மன் ஆபிஸர் "கப்பலில் யாராவது ஸ்த்ரீ இருக்கிறாரா?" என்று கேட்டார். காப்டன் இல்லை யென்று பதில் சொன்னார். கப்பலில் யாராவது ஸ்த்ரீ இருந்திருந்தால் 'எம்டன்' அதை ஒன்றும் செய்யாமல் அப்படியே போகவிட்டிருக்கு மென்று 'ரிபரா'வின் காப்டன் அபிப்ராயப்படுகிறார். பிறகு அந்த ஆபிஸர், காப்டன், உங்கள் வஸ்த்ரங்கள் முதலியவைகளை யெல்லாம் சீக்ரம் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் இந்தக்கப்பலை நாசம்செய்யப் போகிறோம்" என்றார். இன்னும், கப்பலில் என்ன ஆகாரப் பொருள்கள் இருக்கின்றன வென்று கேட்டு, அவைகளை யெல்லாம் தமது கப்பலுக்குக் கொண்டு போகும்படி சொல்லி, தாங்கள் ஜீவித்திருக்க அந்த ஆகாரந்தான் முக்யமென்றும், அகப்பட்டதைக் கொண்டுதான் ஜீவிக்கவேண்டியிருக்கிறதென்றும் சொன்னார். கொஞ்சநேரத்துக்கெல்லாம் 'ரிபரா'விலுள்ள ஜனங்கள் 'க்ரிப்வேலில்' ஏற்றப்பட்டார்கள். பிறகு 'ரிபரா' குண்டுகளால் சுடப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.

27-தேதி ஸாயந்திரம் 'எம்டன்' 'பாயில்' என்னும் கப்பலைக்கண்டு அதை நிறுத்தச் சொல்லிற்று. முதலில் 'பாயில்' கப்பலில் உள்ளவர்களுக்கு 'எம்டன்' யாருடைய கப்பலென்று தெரியவில்லையாம். 'எம்டன்' கப்பல் 'பாயில்' கப்பலின் பக்கத்தில் வந்ததும், அது சில ஆபிஸர்களையும் மனிதர்களையும் ஒரு படகில் அனுப்பிற்று. அவர்கள் கப்பலில் ஏறினதும், அவர்களில் முக்யஸ்தர் 'பாயில்' கப்பலின் காப்டனைப் பார்த்து, "இங்கிலண்டுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தமென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார். காப்டன், "ஆம், தெரியு"மென்றார். ஜெர்மன் ஆபிஸர் சிறிதுநேரம் சும்மாபேசாமலிருந்தார். 'பாயில்'கப்பலின் காப்டன், அவரைப் பார்த்து "நீங்கள், எங்களை என்னசெய்யப்போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த ஜெர்மன் ஆபிஸர், "உங்களுக்கு 20 நிமிஷம் ஸாவகாசம் கொடுப்போம். அதற்குள் நீங்கள் உங்களுடைய சொந்த ஸாமான்களை எடுத்துக்கொண்டு கப்பலை விட்டு வெளியேற வேண்டும். உங்கள் கப்பலை மூழ்கடிக்கப்போகிறோம்." என்றார். அதற்கு 'பாயி'லின் காப்டன "அவ்வளவு சீக்ரத்தில ஒரு ஸாமானையும் எடுத்துக்கொள்ள முடியாதே. இன்னம் கொஞ்சம் ஸாவகாசம் கொடுத்தால் நல்லது" என்றார். 'அதற்கென்ன' ஆகட்டும்', என்று ஜெர்மன் ஆபிஸர் பதில் சொல்லி கப்பலின் தஸ்தாவேஜுகளைப் பார்த்து விட்டு கப்பலிலிருந்து உணவுப்பொருள்கள் முதலியவைகளை 'எம்டனு'க்கு எடுத்துக்கொண்டு போக உத்தரவிட்டு 'பாயில்' கப்பலில் இருந்த ஜனங்களை எல்லாம் 'க்ரிப்வேல்' கப்பலுக்குப் போகச் சொன்னார். பிறகு 'பாயிலை' வெடிகுண்டு வைத்துச்சுட்டு மூழ்கடித்தார். 27-ந் தேதி நடுராத்ரியில் பிடிபட்ட கப்பல்களில் இருந்தவர்களெல்லாரையும் 'க்ரிப்வேல்' கப்பலில் ஏற்றி அதை கொழும்புக்குப் போகும்படி 'எம்டன்' கப்பலின் தலைவர் உத்தரவிட்டார். ப்ரிட்டிஷ் ஜனங்களை 'எம்டன்' தலைவரும் அதிலிருந்த ஆபிஸர்கள், வேலையாட்கள் முதலியவர்களும் மரியாதையாய் நடத்திவந்ததற்காக ப்ரிட்டிஷ் ஜனங்கள் அவர்களுக்கு நன்றி செலுத்துவதற்காக 'ஹிப், ஹிப், ஹுர்ரே' என்று ஸந்தோஷகோஷம் செய்தார்கள். பிறகு 'க்ரிப்வேல்' ஜனங்களுடன் ப்ரயாணமாகி கொழும்புக்கு வந்து சேர்ந்தது.

தற்காலத்து யுத்தங்களில் ஒரு கக்ஷியார் மற்ற கக்ஷியார்களுடையகப்பல்களைப்பிடிப்பது ரொம்ப ஸகஜம். இப்படி தற்போது நடக்கும் யுத்தத்திலும் இங்க்லீஷ்காரர்கள் ஸுமார் 300 ஜெர்மானிய ஆஸ்ட்ரிய வ்யாபாரக் கப்பல்களைப் பிடித்திருக்கிறார்கள். ஜெர்மானியர்களும் ஸுமார்92 இங்க்லீஷ்கப்பல்களைப்பிடித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் எம்டன் தான்பிடித்த கப்பல்களை கொண்டுபோய் பத்ரப்படுத்திவைக்க ஸமீபத்தில் ஜெர்மானிய துறைமுகங்களில்லாததால் அவைகளை நாசப்படுத்திவிட்டது.

'எம்டனின்'நோக்கம் ஜனங்களுக்குயாதொரு கெடுதலும் செய்யாமல் வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்து ப்ரிட்டிஷாருக்கு வ்யாபாரத்தில் நஷ்டமுண்டாக்குவதே என்றுதோன்றுகிறது. காக்கினடா, கூடலூர், புதுச்சேரி ஆகிய இங் தத் துறைமுகங்களின் பக்கம் போய்ப் பார்த்தில் அங்கே கப்பல்கள் ஒன்றுமில்லாததால் ஒரு தொந்தரவும் செய்யாமல் போய்விட்டது. சென்னப்பட்டணத்தைத் தாக்கினதற்குக் காரணம் அதன் துறைமுகத்தில் 'சப்ரா' என்னும் கப்பல் இருந்ததேபோலும். 'வூர்ஸ்டர்ஷைர்' என்னும் கப்பலை 'எம்டன்'கண்டபோது அதில் அதிகமாகஸ்த்ரீகளும் குழந்தைகளும் இருந்தால் அதை'எம்டன்' ஒன்றும்செய்யாமல் விட்டுவிட்டதாம். இப்படிப் பிடித்தவர்களை மரியாதையாய் நடத்தினதைப்பற்றியும், குழந்தைகள் ஸ்த்ரீகள் உள்ள கப்பல்களை விட்டு விட்டதைப்பற்றியும் எல்லாரும் மெச்சிக்கொள்ளுவார்கள். ப்ரிட்டிஷ் கப்பல்கள் 'எம்டனை' சீக்ரம் பிடித்து அதற்குத் தக்க மரியாதை செய்யுமென்று எண்ணலாம்.



## WAR ANECDOTES.

### யுத்தக் கதைகள்.

இப்போது ஐரோப்பாவில் நடந்துவரும் பெரியயுத்தமானது 'மதுபிந்து கலகம்' போல் ஸெர்வியாவுக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் உண்டான மனஸ்தாபத்தால் உண்டாயிருக்கிறது. இந்த யுத்தம் எவ்விதம் மதுபிந்து கலகம் போலிருக்கிற தென்பதைப்பற்றி 'சத்திய வேத பாதுகாவலன்' எழுகிறது. மதுபிந்து கலகம்.

ஒரு கடைக்காரனுடைய திண்ணையிலே ஒரு துளிதேன் விழுந்தது. அத்தேனிலே ஈக்கள் வந்துவிழுந்தன. வீட்டுப்பல்லிவந்து அந்த ஈக்களைப் பிடித்தது. பல்லியைப் பூனைவந்து பிடித்தது. பூனையை அடுத்தவீட்டுப் பட்டாணியினுடைய நாய்வந்து கடித்தது. கடைக்காரன் வாளெடுத்து நாயை வெட்டிவிட்டான். என் நாயை நீயேன் வெட்டினாயென்று பட்டாணி கடைக்காரனோடே சண்டைக்குப் போனான். கடைக்காரனுக்குத் துணையாக மற்றக்கடைக்காரர் சேர்ந்தார்கள். பட்டாணிக்குத் துணையாக மற்றைய பட்டாணிகளாக எல்லாருஞ் சேர்ந்தார்கள். இருகக்ஷியும் அடிபிடிப்பட ஊரெல்லாம் பெரிய சந்தடியும் அலங்கோலமுமாயிற்று. இருகக்ஷியிலும் சண்டையிலே விழுந்தோரும் காயப்பட்டோரும் இறந்தோரும் பலராயினார்கள். இவை யெல்லாம் ஒருதுளி தேனாலே வந்தன.

இவ்வாறே ஸெர்வியருக்கும் ஆஸ்ட்ரியருக்குமிடையே சிறு மனஸ்தாபமுண்டாய்ப் போரெழுந்தது; ஸெர்வியருக்குத் துணையாக ரஷ்யாவும், ரஷ்யாவுக்குத் துணையாக ப்ரான்ஸும் வந்தன. ஆஸ்ட்ரியாவுக்குத் துணையாக ஜெர்மனி சேர்ந்துகொண்டது. ப்ரான்ஸுக்குத் துணையாக இங்க்லண்டும், இங்க்லண்டுக்குத் துணையாக ஜப்பானும் யுத்தத்தில் சேர்ந்துகொண்டன. இப்படியே ஒவ்வொரு

தேசமும் ஒவ்வொரு கக்ஷியில் சேர்ந்து கொண்டன. இவைகளுக்கெல்லாம் காரணம் ஸெர்வியாவின் செயலே.

யுத்தம் ஆரம்பித்தவுடனே ராணுவத்தில் ஏற்கனவே சேர்ந்திருந்து கொஞ்சகாலமான பிறகு அதைவிட்டுவேறு அலுவல்கள் பார்த்து வருபவர்களுக்கு ராணுவத்தில் சேரும்படியாக ராணுவ அதிகாரிகள் உத்தரவுகள் அனுப்புவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ரிஸர்விஸ்ட்ஸ் என்று பெயர். ஒவ்வொரு தேசத்து ராணுவ அதிகாரிகளும் தங்கள் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்களுக்கு உத்தரவுகள் அனுப்புவார்கள்.

இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் பற்பல தேசத்து ராணுவ அதிகாரிகள் அனுப்பின உத்தரவுகளால் சில விநோத ஸம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. அவைகளில் சிலவற்றை 'சுதேசமித்ரனி'லிருந்து எடுத்து எழுதுகிறோம்.

### பிதாவுக்கு விரோதமாய்ப் பிள்ளை.

இங்க்லாந்தின் தலைநகராகிய லண்டனின் தென்பாகத்தில் ஒரு ஜெர்மானிய வ்யாபாரி இருக்கிறார். இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் யுத்த மேற்பட்டவுடனே, தன் தேசத்தின் ராணுவச்சட்டத்திற் கேற்ப, அந்த ஜெர்மன் வ்யாபாரி உடனே லண்டனை விட்டுப் புறப்பட்டு, ஜெர்மனிக்குப் போய், சேனையில் சேர்ந்துவிட்டான்.

அவனுக்கு ஒரு பிள்ளையுண்டு. அந்தப்பிள்ளை ப்ரிட்டிஷ் சேனையின் ஒருவகுப்பைச் சேர்ந்தவன். ஆகவே, அவன் ப்ரிட்டிஷ் சேனையில் சேர்ந்து போர்முனைக்குப் போய்விட்டான். ஜெர்மன் சேனையிற் சேர்ந்து தந்தை யுத்தம் புரிய, பிள்ளையோ ப்ரிட்டிஷ் சேனையில் சேர்ந்து போர்புரிய நேர்ந்திருக்கிறது.

### தமையனொரு பக்கம் தம்பி யொருபக்கம்.

லண்டனில் மற்றொரு ஜெர்மானிய வ்யாபாரி வஸித்து வந்தான். அவனுடைய மூத்த பிள்ளை ஜெர்மனி தேசத்தில் ஜனித்தவன். ஆகவே யுத்த மேற்பட்டவுடன், அவன் ஜெர்மனி தேசஞ்சென்று போர் முனைக்குப் போய் விட்டான். அவனுக்கு 2 தம்பிகளுண்டு. அவ்விருவரும் ப்ரிட்டிஷாரின் வாலண்டியர் படையிற் சேர்ந்தவர்கள். ஆதலினால் தம்பிகள் இருவரும் ப்ரிட்டிஷ் சேனையில் சேர்ந்துவிட நேர்ந்துவிட்டது.

### ஒன்று விட்ட தம்பிகளின் ஒற்றுமை.

லண்டனில் ஒரு ஆங்கிலேய ஸ்த்ரீ முதல் முதல் ஒருஜெர்மானியனைக் கணவனாக அடைந்தாள். அவளுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. பின்பு, சில காலத்திற்கெல்லாம் அவள் அந்த ஜெர்மானியனை விட்டுவிட்டு, ஒரு ப்ரெஞ்சுக்காரனை மணந்து கொண்டாள். (இம்மாதிரி ஆங்கில ஸ்திரீகள் ஒரு கணவனைப் பிரிந்து, வேறு புருஷனை அடைவது ஸகஜம்). அந்த ஸ்த்ரீக்கு ப்ரெஞ்சுக்காரனிடம் ஒருபிள்ளை பிறந்தது. ஐரோப்பிய யுத்தம் ஏற்பட்டவுடனே அந்த ஆங்கில ஸ்த்ரீக்கு ஜெர்மானியனிடம் பிறந்த பிள்ளையும், ப்ரெஞ்சுக்காரனிடம் பிறந்த பிள்ளையும் தங்கள் தங்கள் தேசத்தின் சேனையிற் சேரும்படி உத்தரவு வந்தது. அவ்விரு ஸகோதரரும் அத்யந்த விசுவாஸமுள்ளவர்கள். தங்கள் தேசச்சேனையில் சேர்ந்து ஒருவர்க் கொருவர் விரோதமாய்ப் போர்புரிய இஷ்டப்படவில்லை. ஆதலினால், சேனையில் வந்து சேரும்படி தங்களுக்குக் கிடைத்த உத்தரவின்படி நடக்காமல் சும்மா இருந்துவிட்டார்கள்.

### மனைவியை மரணாவஸ்தையில் பிரிதல்.

லண்டன் நகரிலுள்ள ஒருவன் கடற்படையின் ரிஸர்வ் பிரிவைச் சேர்ந்தவன். யுத்த மேற்பட்டவுடனே, ரிஸர்வ் படையில் சேரும்படி அவனுக்கு உத்தரவு வந்தது. அந்த ஸமயம் அவன் மனைவி மரணாவஸ்தையிலிருந்தாள். படையில் சேரும்படி உத்தரவு வந்ததனால், இப்பொழுதே பின்னையோ இறந்து போவாளென்ற நிலைமையிலிருந்த தன் மனைவியை விட்டு உடனே பிரிய நேர்ந்துவிட்டது. அவன் தன் மனைவியை விட்டுப் பிரிந்த 3-வது மணிக்குள் அவள் மாண்டு போனாளென்ற ஸமாச்சாரம் அவனுக்கு எட்டியது. அந்த ஸமயம் அவனது பரிதாப நிலைமையை என்னென்று சொல்வது.



# Departmental Notes.

## பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Physical-Education.

தேகப்பயிற்சிக் கல்வி.—ஸமீபத்தில் டாக்டர் ஜே. எச். க்ரே என்பவர் சென்னை பச்சையப்பன் ஹைஸ்கூல் மாணவர்களில் 61 பேரை அவர்களுடைய தேக பலம் எப்படியிருக்கிற தென்று அறிவதற்காகப் பரீக்ஷை செய்து பார்த்தார். அவர்களில் 14-வயஸும் 15-வயஸும் உள்ளவர்களின் தேகப்பயிற்சி நிலைமை சராசரியில் பின் வருமாறு இருந்தது.

அவர்கள் நின்றநிலையில் சராசரியில் 4·3 அடிதாண்டிக் குதித்தார்கள். 'புல் அப்' (Pull up) என்னும் தேகப்பயிற்சி ஒருதடவை செய்தார்கள். 16·8 ஸெகண்டில் 100 கஜம் ஒரே ஓட்டமாய் ஓடமுடிந்தது.

16-வயஸுள்ளவர்களோ நின்றநிலையில் 5·13-அடிதாண்ட சக்தியுள்ளவர்களாயிருந்தார்கள். சராசரியில் 2¾-தடவை 'புல் அப்' என்னும் தேகப்பயிற்சி செய்தார்கள். 100 கஜம் ஓடுவதற்கு 15 ஸெகண்டு தான் பிடித்தது.

இதைப்போல் அநேக விடங்களில் உபாத்யாயர்கள் தங்கள் மாணவர்களைப் பரீக்ஷிக்கலாம். பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப்பிள்ளைகளையும் வயஸுக்குத் தகுந்தபடி நான்கு பிரிவாகப் பிரிக்கவேண்டும். பிறகு ஒவ்வொரு பையனும் எவ்வளவுதூரம் நின்றநிலையில் தாண்டுவான், எத்தனை தடவை 'புல் அப்' எடுப்பான், எவ்வளவு நேரத்தில் 100 கஜம் ஓடுவான் என்று பரீக்ஷை செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு பிரிவிலும் அல்லது குறிப்பிட்ட வயஸிலும் 1000 பிள்ளைகளைப் பரீக்ஷை செய்துபார்த்து, எல்லாவற்றிற்கும் சராசரி கண்டு பிடிக்கவேண்டும். இந்த சராசரி அளவின்படி எல்லா பையன்களும் தாண்டுதல், ஓடுதல் முதலியவைசெய்யப்பழகும்படி அவர்களைத் தூண்டவேண்டும். இந்தப் பரீக்ஷைகள் நடத்துவதில் தாண்டும், அல்லது ஓடும் தூரத்தையும், ஓடுவதற்குப் பிடிக்கும் காலத்தையும் வெகு ஜாக்ரதையாகக் கணக்கிடவேண்டியது அவச்யம்.

மேற்சொன்ன பரீக்ஷைகளை இரண்டுமாஸத்துக்கொருதடவை இரண்டொரு தடவை நடத்தி, பிள்ளைகள் எல்லாரும் எவ்விதம் தேகப்பயிற்சியில் அபிவ்ருத்தியடைந்திருக்கிறார்கள் என்று அறிந்துகொண்டு, அதற்கேற்றபடி அபிவ்ருத்தி யடையாத மாணவர்களைப்பற்றி உபாத்யாயர்கள் அதிக கவனம் செலுத்தலாம். உதாரணமாக மாணவர்களுக்குத் தகவல் தெரிவிக்காமல் திடீரென்று மேற்சொன்ன பரீக்ஷைகளை முதல்தடவைசெய்து மாணவர்கள் தேகப்பயிற்சித்திறமையைப்பற்றிக்குறித்து வைத்துக்கொள்ள வேண்டும் பிறகு இந்தப் பரீக்ஷைகளின் நோக்கத்தைப்பற்றி அவர்களுக்குத்தெரிவித்து, அடுத்த தடவை பரீக்ஷிக்கு முன் அவர்களை தங்களுடைய தேகபலத்தை வ்ருத்திசெய்துகொள்ளும்படி ஊற்புறுத்த வேண்டும். இரண்டு மாஸத்துக்குப் பிறகு மறுபடியும் ஒரு தடவை பரீக்ஷைகள் நடத்தி பையன்களுடைய முந்திய நிலைமையையும், இப்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் தேகப்பயிற்சி செய்து எவ்வளவு ப்ரயோஜனமடைந்திருக்கிறார்களென்பது தெரியவரும்.

### New Subjects for Elementary Schools.

எலிமெண்டரிப்பள்ளிக்கூடங்களுக்கு சில புதுப் பாடங்கள்.—இங்க்லண்டில் க்ராமாந்தரங்களிலுள்ள அநேகம் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு பால் கறப்பதையும், கூரை வேய்வதையும் பாடமாகக் கற்பித்து வருகிறார்களாம்.

### Grants for Elementary Education.

எலிமெடரி கல்விக்கு க்ராண்டுகள்.—மதராஸ் கவர்ன்மெண்டார் இந்த வர்ஷம் லோகல் போர்டுகளுக்கும், முனிஸிபாலிடிகளுக்கும் எலிமெண்டரி கல்விக்காக 11,85,921-ரூபாய் க்ராண்டுகள் கொடுத்திருக்கிறார்கள். இந்தத தொகையில் 7,59,391 ரூபாய் 1911-12, 1912-13, 1913-14-ம் வர்ஷங்களில் ஜில்லா போர்டுகளும், முனிஸிபல் கௌன்ஸில்களும் ஸ்தாபித்த எலிமெண்டரி ஸ்கூல்களை நிர்வகிப்பதற்கும், எலிமெண்டரி ஸ்கூல்களின் உபாத்யாயர்களுக்கு காம்பிடேஷன் அல்லவன்ஸ்கொடுப்பதற்காக அதாவது தலைவீதமாய்க் கொடுக்கும் பணத்திற்காக 1,14,300 ரூபாயும், எலிமெண்டரி ஸ்கூல் உபாத்யாயர்களின் சம்பளத்தை 8 ரூபாயிலிருந்து பத்து ரூபாயாக உயர்த்தினதால் ஏற்பட்ட அதிகப்படியான செலவுக்காக கிட்டத்தட்ட 1-லக்ஷம் ரூபாயும் செலவழிக்கப்படும்.

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### The Shape of Tamil Letters.

தமிழ் எழுத்துக்களின் வடிவம்.—ஸமீபத்தில் வெளிவந்த 'செந்தமிழ்' பத்திரிகையில், தமிழ் எழுத்துக்களின் வடிவத்தைப்பற்றி யாழ்ப்பாணம் மிஸ்டர் முத்துத்தம்பி பிள்ளை ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

தமிழ் எழுத்துக்கள் வட்டெழுத்தெனவும், கெட்டெழுத்தெனவும் இரண்டு வகைப்படும். வட்டெழுத்து 'ஓலை, கிழிகல், தாமிர முதலியவற்றில் தெளிவாய் இருக்கும்படி வ்யக்தாக்ஷரமாக' எழுதப்படுவது. இது புஸ்தகங்கள் எழுதுவதற்கும் சாஸனங்கள் எழுதுவதற்கும் உதவும்.

கெட்டெழுத்தென்பது ஓலையிலே ஸாதாரண வ்யவஹாரங்களை எழுதுவதற்கு உபயோகப்படும் தொடையெழுத்தாகும். (தொடையெழுத்தாவது தொடர்ச்சியாக எழுதப்படும் எழுத்தாகும்). வட்டெழுத்தை சிறு மாணவர்களும் ஸுலபமாய் வாசிக்கலாம். கெட்டெழுத்து ஸுலபமானதல்ல. அப்யாஸமுள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் வாசிப்பது கஷ்டம். மாணவர்கள் முதலில் பயில்வது வட்டெழுத்தாகும். அச்சுப் புஸ்தகங்களிலுள்ள எழுத்துகளெல்லாம் வட்டெழுத்துக்களாகும். கணக்கர், ராயஸக்காரர் முதலியவர்கள் வ்யவஹார விஷயங்கள் எழுதும்போது உபயோகிப்பது கெட்டெழுத்தாகும்'.

அநேக வர்ஷங்களுக்கு முன்னால் புதுச்சேரியிலுள்ள (புதுவை) ப்ரபல வித்வான்களும் கணக்கர்களும் சிற்ப நுட்பம் தெரிந்த கம்மாளரும் ஒன்றுகூடி அக்காலத்திலுள்ள கையெழுத்து வட்டெழுத்துக்களையும், சிலா சாஸனம், தாம்ர சாஸனம் முதலியவைகளையும் ஆராய்ந்து பார்த்து அச்செழுத்தின் ரூபங்களை ஏற்படுத்தினார்கள்.

தமிழ் எழுத்துக்களின் வடிவத்தைப்பற்றிச் சிலர் தப்பபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள். 'ப' என்னும் எழுத்தில் (பகர அகரம்) முதலில் இடப்பக்கத்து கோட்டின் மேல்பாகத்தில் ஆரம்பித்து கீழே அழுத்தி இறங்கி, வலப்பக்கமாகப்போய், பிறகு மேல்நோக்கிப் போய் இடக்காலின் உயரத்துக்கு ஸமமாக வந்தவுடன் நின்று மறுபடியும் கீழே அழுத்திக்கொண்டு முடிக்கவேண்டும், பகர அகரத்தில் வலக்காலை மேலே கொண்டுபோய் அப்படியே முடிக்காமல் மறுபடியும் கீழே அழுத்திக்கொண்டு வருவானேன் என்றால், மேலே கொண்டுபோனபடியே நிறுத்திவிட்டு எழுதப் பழகிவிட்டால் பின்பு உண்டாகும் கைவேகத்தால் எழுதுகோல் (அலகு) அளவு கடந்து வீசும். அப்போது பகரத்தின் வலதுகால் மேலே சென்று மகரமோ என்று மயங்க இடமேற்படும்.

மேலும் தொடையெழுத்தாய் எழுதும்போது 'ப' வுக்குப்பின் வரும் எழுத்தை 'ப' வின் வலக்காலின் அடியிலிருந்து தொடுத்து எழுத முடியுமேயல்லாமல், வலக்காலின் நுனியிலிருந்து தொடுத்து எழுத முடியாது. அப்படிக்கில்லாமல் வலக்காலின் நுனியிலிருந்து தொடுத்து எழுதினால் 'பா', 'வா', 'யா' என்னும் எழுத்துக்களை எழுதும்போது எழுதியவைகளை பி, வி, யி என்று ஸந்தேகிக்க இடமேற்படும். ஆகையால் ப, வ, ய ஆகிய இந்த எழுத்துக்களின் வலக்கால்களை உயரக்கொண்டுபோய் மறுபடியும் கீழே அழுத்திக்கொண்டு வரவேண்டியது அவச்யம். இதனால் வலக்கால் மெல்லிய கோடாயிராமல் அகலமான கோடாக இருக்கிறது. இதை யறியாத சிலர் வலக்கால் மெல்லியதாக இருக்கவேண்டுமென்று சொல்வார்கள். அது தவறாகும், என்று எழுதியிருக்கிறார்.

### Seekalathi Puranam.

சீகாளத்தி புராணம்.—இது கருணைப்ரகாச ஸ்வாமிகள், சிவப்ரகாச ஸ்வாமிகள், வேலைய ஸ்வாமிகள் ஆகிய மூவரும் எழுதிய ஸ்ரீகாளஹஸ்தியின் புராண நூலாகும். இதற்கு ப்ரபலவித்வான்களில் ஒருவராகிய காஞ்சீபுரம் மகா வித்வான் ராமானந்த யோகிகள் ஒரு சிறந்த உரை எழுதி யிருக்கிறார். அந்த உரையில் மிகவும் தெளிவான பதவுரையும், முக்யமான விஷயங்களைப்பற்றிய குறிப்புரையும் அடங்கி யிருக்கின்றன. உரை வாசிப்பவர்க்கு மிகவும் பயன்படக்கூடியது. இது ஸஞ்சிகைகளாக வெளிவருகிறது. 18 ஸஞ்சிகைகளில் முடிவுபெறும் என்று தெரிகிறது. ஸஞ்சிகை ஒவ்வொன்றும் 32 பக்கங்கள் கொண்டது. விலை ஸஞ்சிகை ஒன்று அணா இரண்டு.

வேண்டுவோர் பு சண்முக முதலியார், நெ. 5, ஆறுமுகம் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை யென்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.
## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Growth of Hair in Light.

வெளிச்சத்தில் மயிர் வளருதல்.—ஸூர்ய வெளிச்சத்தில் மனிதருடைய மயிர் நன்றாக வளருகிறதென்றும், இருட்டில் அது நன்றாய் வளருவதில்லையென்றும் சொல்லப்படுகிறது. ஆபீஸுகளில் வெளிச்சத்தின் பக்கமாய் உட்கார்ந்திருப்பவர்களுக்கு முகத்தில் வெளிச்சத்தின் பக்கமுள்ள பாகத்தில் மீசையும் தாடியும் ரொம்ப நீளமாகவும், மற்ற பாகத்தில் சற்று குட்டையாகவும் வளருகின்றன வென்று சொல்லப்படுகிறது.

### Dwarf Plants.

குட்டைச் செடிகள்.—செடியின் விதைகளில், ஆல்புமன் என்று ஒரு பொருள் இருக்கிறது. இது விதை முளைக்கும் போது சிறிய செடிக்கு உணவாக உதவுகிறது. விதை முளைப்பதற்கு இந்தப் பொருள் விதையில் இருக்க வேண்டியது அவச்யமில்லை யென்று சொல்லப்படுகிறது. முளைக்கும் செடியின் சிறு வேர் பெரியதாகி பூமியிலிருந்து உணவை க்ரஹித்துக்கொள்ள சக்தியடையும் வரையில் இந்த ஆல்புமென் விதையிலிருக்க வேண்டுமாம். இந்தப் பொருள் இல்லாவிட்டாலுங்கூட விதை முளைத்து விடும். ஆனால் அந்தச் செடிக்குத் தக்க உணவு இல்லாமல் போவதால் அது ரொம்ப கஷ்டப்பட்டு வளருகிறதாம். ஒரு விதையிலிருந்து ஆல்புமனை எடுத்து விட்டு அதை முளைக்கப் போட்டதில் அது ஸாதாரணமாய் முளைத்ததாம். ஆனால் முளைத்த செடி ரொம்ப குட்டையாகவும் இலைகள் மாறுபாடு அடைந்தும் இருந்தனவாம். அதன் புஷ்பங்களும் மாறுபாடடைந்திருந்ததோடு, ரொம்ப விநோதமாகவும் இருந்தனவாம்.

### Aluminium.

அலூமினியம்.—அலூமினியம் என்பது ஒரு உலோகம். இது பூமியில் ஏராளமாய் கலந்திருக்கிறது. பூமியில் ஏராளமாய்க் கிடைக்கும் பொருள்களில் இது மூன்றாவதாகும். ப்ராணவாயுதான் மற்றெல்லாப் பொருள்களையும் விட பூமியில் அதிகமாயிருக்கிறது. பூமியின் அளவில் கிட்டத்தட்டப் பாதி ப்ராணவாயுவாகும். பூமியில் காலில் ஒரு பங்குக்குச் சற்று அதிகமாக ஸிலிகன் என்னும் பொருள் இருக்கிறது. மூன்றாவதாயுள்ள அலூமினியம் பூமியில் நூற்றுக்கு எட்டுபாகமிருக்கிறது. இரும்பு நூற்றுக்கு 5½ பாகம் இருக்கிறது. ஆகவே பூமியில் 8-ல் 7-பாகம் இந்த நான்கு பொருள்களாக இருக்கிறது. களிமண்ணில் பெரும்பாகம் அலூமினியமாகும். ஆனால் களிமண்ணிலிருந்து அலூமினியம் செய்ய இது வரையில் ஸாத்யப்படவில்லை. பாக்ஸைட், க்ரியோலைட் என்னும் இரண்டு பொருள்களிலிருந்து அது செய்யப்படுகிறது. இந்த இரண்டு பொருள்களையும் மின்ஸார அடுப்பில் போட்டுக் காய்ச்சி சுத்தமான அலூமினியம் எடுக்கப்படுகிறது.

### Protection from Flashes of Lightning.

மின்னலிலிருந்து காத்துக்கொள்ளுதல்.—இடி இடித்து மின்னுங்காலத்தில் அபாயம் நேரிடாதபடி காத்துக்கொள்ள ரப்பர்பூட்ஸாவது ஜோடாவது போட்டுக்கொள்வது நல்லது என்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் இப்போது அந்த பூட்ஸுகளால் அதிக பயனில்லை யென்று சொல்லப்படுகிறது. மழை பெய்து இடித்து மின்னிக்கொண்டிருக்கும்போது ஓடுவது நல்லதல்லவாம். ஏனென்றால் ஓடும்போது காற்றானது அசைந்து கொடுப்பதனால், மின்னலானது காற்றுபோகும் பக்கமாக வந்து ஓடுபவருக்குக் கெடுதி ஏற்படும். ம்ருகங்களின் பக்கத்திலும், தந்திக்கம்பங்களின் பக்கத்திலும் போகக்கூடாது. சிலர் இடி இடித்து மின்னும்போது மரங்களின் பக்கம் போகக்கூடாதென்று சொல்வதுண்டு. ஆனால் அது கெடுதலில்லை யென்று பலர் சொல்லுகிறார்கள். ஹங்கேரி தேசத்தில் 1901-1903-ம் வர்ஷம் முடிய இடியால் இறந்தவர்களில் நூற்றுக்கு 15 பேர் மரங்களினடியிலிருந்தபோதும், 57-பேர் மரம் கட்டிடம் முதலியவையில்லாத திறந்த வெளியிலிருந்தபோதும் இறந்தார்களாம்.

அமெரிக்கா ஐக்ய மகாணங்களில் 1900-ம் வர்ஷத்தில் இடியால் இறந்தவர்களில் நூற்றுக்கு பத்து பேர் வீதம் மரங்களின் அடியில் இருந்தபோதும், நூற்றுக்கு 52-பேர் திறந்த வெளியிலிருந்த போதும் இறந்தார்களாம். இந்தக் கணக்குகளின்படி பார்த்தால் மரங்களின் அடியில் ஆபத்து அதிகமில்லை யென்று தெரிகிறது.

# SANITATION AND MEDICINE.

## ஸௌகாதாரமும் வைத்யமும்.

### Mrs. Annie Besant and Vaccination.

அனிபெஸண்டும் அம்மை குத்தலும்.—குழந்தைகளுக்கு அம்மைவைப்பது சரியல்லவென்றும், இப்போது நிர்பந்தத்தின்மேல் அம்மை குத்துவது ஸௌக்யமாயிருக்கும் தேசங்களின் பலத்தைக் குறைவு செய்து அசுத்தப்படுத்திவிடுகிறது என்றும் மிஸஸ் அன்னி பெஸண்ட் எழுதுகிறார். இங்கிலண்டில் அம்மை குத்திக்கொள்ளத்தான்வேண்டும் என்ற நிர்பந்தத்தை விலக்கிவிட்டார்கள். ஆனால் இந்தியாவில் அது இன்னும் விலக்கப்படவில்லை. அம்மை குத்திக்கொள்வதால் தேகத்தில் வ்யாதிகள் வரவொட்டாமல் தடுத்துக்காப்பாற்றிக்கொள்ளலாம் என்று டாக்டர்கள் சொல்லுவதானது, மதாபிமானிகள் தங்கள் மதத்தில் சேர்ந்தால் நரகத்துக்குப்போகாமல் காப்பாற்றிக்கொள்ளலாமென்று சொல்வது போலிருக்கிறதென்றும், மதாபிமானத்தால், ஒருமதஸ்தர்கள் பிறமதஸ்தர்களை வருத்துதல் எவ்வளவு ந்யாயமோ அவ்வளவு ந்யாயமாகவே அம்மை குத்திக்கொள்ளவேண்டுமென்று சொல்வது இருக்கிறதென்றும் அவர் சொல்லுகிறார்.

### Epilepsy.

காக்காய் வலிப்பு.—இது திடீரென்று வருவதுண்டு. ஸாதாரணமாய் இந்த வலி வருகிறவன் ஒரு சத்தம் போட்டு, கோணக் கோண கைகால்களை இழுத்து, வாயில் நுரை தள்ளிக்கொண்டு கீழே விழுவான். வலி வந்திருக்கிறவன் தன் நாக்கை கடித்துக்கொள்வதினால் வரும் ரத்தம் அந்த நுரையுடன் கலந்திருப்பதுண்டு. வலி வந்திருப்பவனை மல்லாந்துப் படுக்கவைத்து, தலையைக்கொஞ்சம் தூக்கிவைக்கவேண்டும். பற்கள் ரொம்பவும் கிட்டித்துப்போகாமலிருக்கும்பக்ஷத்தில், அவன் நாக்கை (மறுபடியும்) கடித்துக்கொள்ளாமலிருக்கும்படி பற்களுக்கு மத்தியில் துணி அல்லது வேறு ஏதாவது கொடுக்கலாம். கழுத்தில் ஏதாவது கட்டியிருந்தால் அதை தளர்த்திவிடவேண்டும். கைகால்கள் இழுத்துக்கொள்வதை பிடித்து நிறுத்தாமல் காயப்படாமல்மாத்திரம் பார்த்து வரவேண்டும். வலி நின்றவுடன், அவனுக்கு தூக்கக் கலக்கம்போலிருக்கும். அப்படியிருக்கும் பக்ஷத்தில், அவனை கீழேபடுத்து தூங்கும்படி செய்யவேண்டும். சுறுசுறுப்பு உண்டாக்கக்கூடிய காபி, டீ முதலியவைகளையாவது, வேறு எந்தப் பானமாவது குடிக்கக்கொடுக்கக் கூடாது.

### Hot Water Bath.

வெந்நீர் ஸ்நானம்.—வெந்நீரில் மிதமிஞ்சி ஸ்நானம் செய்துவந்தால் தேகத்துக்கு கெடுதல் ஏற்படுமென்று ஒரு இங்கிலீஷ் டாக்டர் சொல்லுகிறார்.

வெந்நீர் ஸ்நானம் மிதமாயிருக்கும் வரையில் தேகத்துக்கு ரொம்ப நல்லது. மிதம் தப்பினால் தேகத்திக்கு ரொம்ப பலவீனம் ஏற்படுமாம். புருஷர்களும் ஸ்த்ரீகளும் தேகங்களைப்படைந்திருக்கும் போதும் இன்னும் சில ஸமயங்களிலும் வெந்நீரில் ஸ்நானம் செய்தால் ரொம்ப நன்மை யடையலாம். இதனால் ஹ்ருதயமும், நரம்புகளும் சுறுசுறுப்பு அடைந்து அவைகள் நன்றாய் வேலை செய்யக்கூடும். ஜப்பானியர்கள் சாஸ்த்ர ரீதியாக வெந்நீர் ஸ்நானம் செய்து வருகிறார்களாம். அவர்கள் மூன்று நிமிஷத்துக்கு மேல் வெந்நீரில் ஸ்நானம் செய்வது கிடையாதாம்.

### Remedy for Tooth-ache.

பல்வலிக்குப் பரிஹாரம்.—லோகோபகாரியில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—எருக்கின் பாலைப் பஞ்சில் தோய்த்துப் பற்களின்மேல் வைத்தால், பல்வலிபோகும். கடுக்க் கஷாயத்தைத் தேனில் கலந்து கொப்பளித்தால் பல்நோய் தீரும். சீமைத் துத்தியின் ஸமூலத்தைக் கஷாயமிறக்கிக் காடி சேர்த்துக் கொப்பளித்தால் பற்களின் வலி மாறும். சீனக்காரம் என்னும் படிக்காரத்தைக்கொட்டைப்பாக்கோடு பொடிசெய்து பற்களில் தேய்த்தால் பல்நோய் நீங்கும். தக்காளி, மணத்தக்காளி என்பவற்றைக் கஷாயமிட்டுக் கொப்பளித்தால் பல்நோய் தீரும். தாளிச்ச பத்திரியைப் பொடிசெய்து பற்களிற்றேய்த்தால் பற்களின் வலிபோம். துளசியிலையை மெல்லுவதினால் பற்களின் வலிநீங்கும். நன்னாரிவேர்க் கஷாயத்தைக் காடிசேர்த்துக் கொப்பளித்தால் பல்வலிபோம். நாயுருவிக் கஷாயத்தைக் கொப்பளித்தால் பற்களின் நோய் தீரும். மாசிக்காயைக் கஷாயமிட்டுக் கொப்பளித்தால் பல்நோய் நீங்கும். ஹரிஞ்மக்கியின் வேரை அக்கிராகாரத்தோடு சேர்த்தரைத்துப் பூசப் பல்வலிமாறும். வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிசெய்து தேய்த்தால் பல்நோய்தீரும்.



# LAW.

## சட்டம்.

### Devise of Property by Will.

உயிலால் கொடுத்த ஸொத்து.—ஒரு ஹிந்து தமது ஸொத்துக்கு ஒரு உயில் எழுதிவைத்து அதில் தமது ஸொத்தை தமது இரண்டு புத்ரிகளும் ஆயுஸு முழுவதும் அனுபவிக்கவேண்டுமென்றும், அவர்களில் யாராவது மற்றவர் இறப்பதற்கு முன் இறந்துபோனால் உயிரோடிருப்பவர் அந்த ஸொத்து முழுவதையும் அடையவேண்டுமென்றும், அந்தப் புத்ரிகளுக்குப் பிறகு அந்த ஸொத்தானது அவர்களுடைய புத்ரர்களுக்குச் சேரவேண்டுமென்றும், புத்ரிகளில் யாராவது புத்ரர்களை வைத்துவிட்டு இறந்துபோனால் இறந்த புத்ரிக்கு ஸொத்தில் கிடைக்கவேண்டிய பாகமானது அவளுடைய புத்ரர்களுக்குப் போகவேண்டுமென்றும் எழுதிவைத்திருந்தார்.

புத்ரிகளில் ஒருத்திக்கு அவருடைய தகப்பனார் இறப்பதற்குமுன்னாலேயே பிள்ளைகள் பிறந்திருந்தார்கள். அவன் சிலகாலத்துக்குப் பிறகு இறந்துபோய்விட்டான். அப்படியானால், ஸொத்தில் அவளுக்குச் சேரவேண்டிய பாகமானது அவளுடைய புத்ரர்களுக்குப் போய்ச்சேரும்.—1. லா வீக்லி 731.

### Sale of Immoveable Property.

ஸ்தாவர ஸொத்தின் விற்பனை.—100 ரூபாய் மதிப்புக்குள்பட்ட ஸ்தாவர ஸொத்தை சாஸனபத்ரம் எழுதாமலே வாய்ப்பேச்சாக விற்றுவிட்டால், வாங்கினவன் வசம் ஸொத்தை சேர்ப்பிக்காவிட்டாலுங்கூட ஸொத்துக்கு பாத்யதை வாங்கினவனுடையதாகும். ஆனால் ஸொத்தை சாஸனபத்ரம் எழுதி விற்பனை செய்வதாக எண்ணியிருந்தால், அந்தப் பத்ரத்தை ரெஜிஸ்டர் செய்யவேண்டியது அவசியம்.

நூறு ரூபாய்க்குக் குறைந்த மதிப்புள்ள ஸொத்தை விலைக்கு வாங்கியிருப்பவர் ஸொத்துக்கு பாத்யதை தன்வசம் சேர்ந்துவிட்டதென்று ரெஜிஸ்டர் செய்யாத விற்பனைப் பத்ரத்தை ஆதாரமாகக் கொண்டுவந்தால், விற்பனை சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

எஸ். ஏ. நம்பர் 670 : 1913 மதராஸ் ஹைகோர்ட்.

### Right of Entry into a Temple.

கோவிலுக்குள்போக பாத்யதை.—சூத்ர ஜாதிக்குக் கீழ்ப்படாத ஒரு ஹிந்து ஒரு கோவிலிலுள்ள தேவதையை வணங்குவதற்காக அந்தக் கோவிலுக்குள் போவதற்கு பாத்யதையில்லையென்று யாராவது ஆக்ஷேபித்தால் அப்படி ஆக்ஷேபிப்பவர்தான் அந்த ஹிந்துவுக்கு கோவிலுக்குள் போக பாத்யதையில்லையென்பதை ரூபிக்கவேண்டும்.—1. லா வீக்லி 675.

### Attachment of Salary.

சம்பளத்தை ஜப்தி செய்தல்.—ஸிவில் ப்ரொஸீஜர் கோடு 60-ஸெக்ஷன்படி இந்திய ஸைன்யத்தைச் சேர்ந்த ஆபீஸர்களுடைய சம்பளத்தை டிக்ரியை நிறைவேற்றுவதற்காக ஜப்தி செய்யக் கூடாது.

ஆனால் ஒரு இந்திய ஸைன்ய உத்யோகஸ்தருடைய சம்பளத்தை ஜப்தி செய்து கிடைத்த பணத்தை டிக்ரிஹோல்டர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்திருந்தால் அப்படி கொடுபட்டிருந்த பணத்தை திருப்பிக் கொடுக்கும்படி கோர்ட்டார் உத்தரவு செய்வது கூடாது.—16. பம்பாய் லா ரிபோர்ட் 233.

### Defective Yakalatnama.

குறைவுபாடுள்ள வக்காலத்து நாமா.—அப்பீல் பெடிஷன் கொடுத்திருந்த அப்பீல் மனுதாருடைய வக்கீலின் பெயர் வக்காலத்து நாமாவில் அஜாக்ரதையினால் எழுதப்படாமலிருந்தால், அந்த விஷயத்தை ஒருவரும் கவனிக்காமலே அப்பீல் கேஸில் அநேக நடவடிக்கைகள் நடந்திருந்தாலுங்கூட, வக்காலத்து நாமா செல்லாது. அப்பீல் மனுவும் சரியானபடி கொடுக்கப்பட்டதாகாது. இந்தியன் லா ரிபோர்ட்டுகள் 36 அல்லகபாத்து 46.

### Adoption.

ஸ்வீகாரம் செய்தல்.—ஸ்வீகாரம் செய்த ஆறு வர்ஷத்துக்குள் அந்த ஸ்வீகாரத்தை ஆக்ஷேபித்து வ்யாஜ்யம் கொண்டுவரலாம். அதற்குப் பிறகு வ்யாஜ்யங் கொண்டுவந்தால், லிமிடேஷன் ஆக்ட் 1-வது ஷெட்யூல் 118 ஆர்டிகிளின்படி காலாவதியாய் விடுகிறது. பெற்றோரில்லாப் பையனை ஸ்வீகாரம் செய்துகொள்வது சட்டத்தின்படி செல்லாது. 37. பம்பாய் 513.

### Selection of Bridegroom.

வரன் தெரிந்தெடுத்தல்.—ஒரு தாயாருக்கு தனது மகளுக்கு மாப்பிள்ளை தெரிந்தெடுக்க பாத்யதையுண்டு. விசேஷமான ஸந்தர்ப்பங்களிலன்றி கோர்ட்டார் தாயாருக்குள்ள பாத்யதையை ஆக்ஷேபிக்கக் கூடாது.—15. மதராஸ் லா டைம்ஸ் 146..

## PERSONAL NOTES.
## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Pandit Bishan Narayan Dhar.

பண்டித் பிஷன் நாராயண தார்.—இவர் லக்னோவில் உள்ள ஒரு ப்ரபல பாரிஸ்டர். தேச வ்யவஹாரங்களில் மிகவும் ஊக்கம் காட்டிவருபவர். இவர் 1911-ம் வர்ஷம் கல்கத்தாவில் நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸிற்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவர் கொஞ்சகாலத்துக்கு முன்னால், நாஷனல் காங்க்ரெஸையும், மகமதியர்கள் நடத்தும் எல்லா இந்திய முஸ்லிம்லீக் கான்பரென்ஸையும் ஒன்றாகச் சேர்த்து நடத்தி இந்த சண்டை நடக்கும் ஸமயத்தில் இந்தியர்களுடைய ஒற்றுமையைக் காட்டவேண்டுமென்று ஒரு ப்ரேரணை செய்தார்.

ஐக்யமாகாணங்களின் ப்ரதிநிதியாக இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராக இருந்து வந்த ஸ்ரீராம்பகதூர் என்பவர் ஸமீபத்தில் காலஞ்சென்று விட்டதால், அவருக்குப் பதிலாக பண்டிதர் பிஷான் நாராயண தார் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் ஐக்யமாகாணங்களின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

### A Female Book-Seller.

ஒரு ஸ்த்ரீ புஸ்தக வ்யாபாரி.—பம்பாயில் ப்ரபல புஸ்தக வ்யாபாரிகளில் ஒருவராகிய மிஸ்ஸஸ் ராதாபாய் ஆத்மராம் ஸகூன் என்னும் மாது ஸமீபத்தில் பம்பாயில் காலம் சென்றார். ஸுமார் 50-வர்ஷங்களுக்கு முன்னால் இவருடைய புருஷன் ஒரு புஸ்தகக்கடை ஸ்தாபித்தார். அவர் இறந்து போன பிறகு, மிஸ்ஸஸ் ராதாபாய் புஸ்தகக்கடையை மூடிவிடாமல் அதை நடத்தி வந்து வ்யாபாரத்தை வ்ருத்தி செய்து வந்தார். இவர் கௌட் ஸரஸ்வத் ப்ராமண வகுப்பைச் சேர்ந்தவர். பம்பாய் புஸ்தக வ்யாபாரிகள் இவரிடத்தில் ரொம்ப மதிப்புக் காட்டி வந்தார்கள். இவர் இறந்த தினம் பம்பாயிலுள்ள இந்திய புஸ்தக வ்யாபாரிகள் தங்கள் கடைகளை மூடினார்களாம்.

### Hon. E. C. Hardinge.

ஆனரபிள் இ. ஸி. ஹார்டிஞ்ஜ்.—நமது வைஸ்ராயின் இரண்டு புதல்வர்களுள் ஒருவராகிய ஆனரபிள் எட்வர்ட் சார்ல்ஸ் ஹார்டிஞ் சென்ற மாஸம் 27-ம் தேதி யன்று யுத்தத்தில் ஜெர்மன் பீரங்கிகளுக்குப்பக்கத்தில் சண்டை செய்து கொண்டிருக்கையில், குண்டுகள் பட்டு வலதுகை முழங்கையில் ஒரு எலும்பு முறிந்து போயிற்று. இடது புஜத்திலும் காயம் ஏற்பட்டது. இப்போது அவர் ஹாஸ்பிடலில் சிகிச்சையிலிருந்து வருகிறார். குணமடைந்து வருகிறதாகத் தெரிகிறது. அவருக்கு இப்போது வயஸு 23 நடக்கிறது. 15-வது ஹுஸ்ஸார்ஸ் என்னும் பட்டாளத்தில் லெப்டினண்டாக இருக்கிறார்.

### The late Amba Lal Desai.

காலஞ்சென்ற அம்பா லால் தேசாய்.—திவான் பகதூர் அம்பாலால் ஸகர்லால் தேசாய் கொஞ்ச காலத்துக்கு முன்னால் பரோடாவில் சீப் ஜட்ஜாக இருந்தார். அவர் அகமதாபாத்தைச் சேர்ந்தவர். குஜராத்தி ஜாதியைச்சேர்ந்தவர். ஆரம்பத்தில் உபாத்யாயராக இருந்து வந்தார். ஜன ஸமூகப்படிப்பிலும், கைத்தொழிலபிவ்ருத்தியிலும் மிகவும் ஊக்கங் காட்டி வந்தார். அவர் பருத்தி மில் வைத்து நடத்தி வந்தார். கைத்தொழில் கான்பரென்ஸுகளில் அதிக ஊக்கம் காட்டி வந்தார். அவர் ஒரு பெரிய காங்க்ரெஸ் அபிமானி. அவர் சென்ற 12-தேதி யன்று அகமெதபாத்தில் காலஞ் சென்றார்.

### Dr. T. M. Nair.

டாக்டர் டி. எம். நாயர்.—யுத்தத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகித்ஸை செய்வதற்காக சென்னையிலிருந்து ஒரு ஹாஸ்பிடல் கப்பல் அனுப்பப்போகிறார்கள். இந்தக் கப்பலில் சென்னையில் ப்ரபல டாக்டர்களில ஒருவரும் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களில் ஒருவருமான டாக்டர் டி. எம். நாயர் ஒரு டாக்டராக வேலை செய்யப்போகிறார்.

### Lord Willingdon's Son.

லார்ட் வில்லிங்டனின் புத்ரர்.—பம்பாய் கவர்னராகிய லார்ட் வில்லிங்டனின் புத்ரர் யுத்தத்தில் சண்டை செய்யப்போயிருந்தார். இப்போது அவர் இருக்குமிடம் தெரிய வில்லையாம். யுத்தத்தில் அவருக்கு தொடையில் பலமான காயம் ஏற்பட்டதாம். ஜெர்மானியர்கள் வசம் கைதியாயிருப்பாரென்று தோன்றுகிறதாம்.

### Kaiser's Son.

கெய்ஸரின் புத்ரர்.—ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் வில்லியமின் புத்ரர்களில் ஒருவர் யுத்தத்தில் இறந்து விட்டதாகத் தெரிகிறது.



## SOCIETY AND RELIGION.
## ஜனஸமூகமும் மதமும்.

### Married School Boys.

கல்யாணமான ஸ்கூல் பையன்கள்.—திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் கல்யாணமான பையன்களை ஸர்க்கார் பள்ளிக்கூடங்களில் வாசிக்க எடுத்துக் கொள்வதில்லையென்று ஒரு ரூல் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்களாம். இப்படிச் செய்வதற்கு சிலர் ஆக்ஷேபிப்பதாக தெரியவருகிறது. மனுதர்ம சாஸ்திரத்தில் படிப்பவர்கள் ப்ருமச்சாரிகளாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பெண் சாதி வீட்டுக்கு வந்து பையன் படித்துக்கொண்டிருக்கும் பக்ஷத்தில் அவன் படிப்பும் தேகமும் கெட்டுப் போகின்றன. 25-வயதுக்குள்பட்ட தகப்பனுக்கும் 16-வயதுக்குள்பட்ட தாய்க்கும் பிறக்கும் குழந்தை கர்ப்பத்திலேயேஇறந்துபோகும்; அல்லதுபிறந்தாலும் ரொம்பகாலம் ஜீவித்திராது; அப்படி ஜீவித்திருந்தாலும் துர்பலமாகவே யிருக்கும் என்று சுச்ருத ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் உத்தேசிக்கும்போது சிறவயதில் கல்யாணம் செய்வது சிறுவர்களின் க்ஷேமத்துச்கும் ஜனஸமூகத்தின் முற்போக்குக்கும் கெடுதலானதென்றே சொல்லவேண்டும். ஆனால் இப்படிப்பட்ட கெடுதலை நீக்குவதற்கு கவர்ன்மெண்டார் குறுக்கே புகுவது ஸரியல்லவென்று தோன்றுகிறது. மனித ஜன்மம் எடுத்த ஒவ்வொருவருக்கும் படித்து மேன்மைபெற பாத்யமுண்டு. ஆகையால் கல்யாணமாய்விட்டதால் ஒரு பையனை படிக்கக்கூடாதென்று சொல்வது ந்யாயமாகாது. தவிர, கல்யாணம் என்பது அநேக ஜாதிகளில் வழக்கத்தையும் மதத்தையும் ஜீவனோபாயத்தையும் பொருத்ததாக இருக்கிறது. ஹிந்துஜன ஸமூகத்தில் பெண்களுக்கு ருதுவாகுவதற்கு முன்னமேயே கல்யாணம் ஆகவேண்டுமென்று பலர் எண்ணி வருவதாலும், சில ஜாதிகளில் பிள்ளைகள் அகப்படுவது கஷ்டமானதாலும் வரன்களைத் தேடிப்பிடித்து பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே கல்யாணம் செய்துவிடுகிறார்கள். ச்ராத்தம் போன்ற சடங்குகளில் வரிப்பதற்கு கல்யாணமானவர்களே வேண்டுமானதால், ஏழை வைதீகக் குடும்பங்களில் பிழைக்கும் வழியை உத்தேசித்து பையன்களுக்கு சிறு வயதிலேயே கல்யாணம் செய்துவிடுகிறார்கள், இதே மாதிரியாக சிதம்பரம் தீக்ஷதர்களுக்குள்ளும் கோவில்களில் பூஜை செய்யும் குருக்களுக்குள்ளும், கோவில் வரும்படிகளில் கிடைக்கும் பாகத்திற்காக பையன்களுக்கு சிறுவயதிலேயே கல்யாணம் செய்து விடுகிறார்கள். ஆகவே சிறு பையன்களுக்கு ஏற்படும் கல்யாணம் பலவித நிர்ப்பந்தங்களால் ஏற்படுவதால் அதற்காக அவர்களை ஸ்கூல்களில் விலக்கி தண்டிப்பது ந்யாயமாகாது. சிறுவயதில் கல்யாணம் செய்வதால் உண்டாகும் கெடுதல்களை ஜனங்களுக்கு விடாமல் போதித்து, அவர்களை கட்டாயப்படுத்தாமல் அவர்களே சிறுகச் சிறுக அந்தக் கெட்ட வழக்கத்தை நிறுத்தச்செய்வது ஸரியானமுறையென்று தோன்றுகிறது.

### Cathedral at Rheims.

ரீம்ஸ்பட்டணத்திலுள்ள கோவில். — யுத்தம் செய்வதில் கோவில்களுக்கும், பொதுஜன நன்மைக்கு ஏற்பட்ட புஸ்தகசாலைகள், கண்காட்சி சாலைகள் போன்ற இடங்களுக்கும் ஒருவித சேதமும் நேரிடாமல் யுத்தம் செய்யவேண்டியதென்று நாகரீகம் பொருந்திய ஒவ்வொரு கவர்ன்மெண்டும் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் தற்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் ப்ரான்ஸிலுள்ள ரீம்ஸ் பட்டணத்திலிருக்கும் கோவிலை ஜெர்மனியர்கள் வேண்டுமென்று குண்டுகள்போட்டு தகர்த்துவிட்டார்களென்றும், அதனால் உலக முழுவதும் ஆச்சர்யித்துவந்த அழகான கோவில் நாசமாய்விட்டதென்றும் இந்த அக்ரமத்தை உலகத்திலுள்ள எல்லாரும் அறியவேண்டியதென்றும் ப்ரான்ஸ்தேசத்து அந்தேச மந்த்ரியாகிய டெல்காஸி என்பவர் பலதேசங்களுக்கு தந்தி அனுப்பி யிருக்கிறார். இதைக் கேட்டு அநேக தேசத்தார்கள் ஜெர்மனியின்மேல் கோபம் கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மன் அதிகாரிகள் ரீம்ஸ் பட்டணத்தை ப்ரன்சுக்காரர்கள் அரணாக செய்து கோவிலை வ்யாஜமாக வைத்துக்கொண்டு தங்களை காத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருப்பதால் தங்கள் பேரில் குற்றமில்லை யென்றும் ப்ரன்ச்சுக்காரர்களே பழிக்கு பாத்யப்பட்டவர்களென்றும் சொல்லுகிறார்கள்,

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Cleaning Spectacles.

மூக்குக்கண்ணாடிகளைச் சுத்தம் செய்தல்.—மிதிலெடட் ஸ்பிரிட் என்னும் சாராயம் மூக்குக்கண்ணாடிகளை சுத்தம் செய்ய உதவும். மிதிலேடட் ஸ்பிரிட்டில் ஒரு துணியை நனைத்து கண்ணாடிகளின் மேல் தேய்த்து பிறகு கண்ணாடிகளைக் காயவைத்து, ஷாமாய் லெதர் என்னும் ம்ருதுவான தோலால் நன்றாய்த்துடைக்கவும்.

### Removing Coffee Stains.

காப்பி கறையைப் போக்க.—மற்றெல்லாக் கறைகளையும்விட காப்பிக்கறைதான் லேசில் விடாதது. பின்வரும் முறையை ஜாக்ரதையாய் அனுஸரித்தால் ரொம்ப உயர்ந்த பட்டுத்துணிகளி லிருந்தும் கூட கறையை எடுத்து விடலாமாம். கொஞ்சம் க்ளிஸரின் (Glycerine) என்னும் மருந்தை எடுத்து கறைமேல் தடவி மெதுவாகத் தேய்க்கவேண்டும். பிறகு வெது வெதுப்பான ஜலத்தில் கறைப்பட்ட பாகத்தை அலசவேண்டும். பிறகு துணியில் கறைபட்ட பக்கத்துப் பின்பக்கத்தில் ஒரு துணியை வைத்துக் கீழே வைத்து கறைமேல் ஒரு குளிர்ச்சியான இரும்பு ஸாமானை வைத்து அழுத்தவும். கறை பட்ட துணியில் எவ்வளவு பாகம் அவச்யமாய் நனைக்க வேண்டுமோ அவ்வளவுதான் நனைக்க வேண்டும்.

### A Quickly Made Glue.

அவஸரத்துக்கு உதவும் பசை.—வெந்த உருளைக் கிழங்கை சற்று ஆறின பிறகு கடுதாசில்போட்டுக் கையால் தேய்த்து எடுத்தால் நல்ல ஒட்டவைக்கும் பசையாகும்.

### Polishing Zinc.

துத்திநாகத்தை பளபளப்பாக்குதல்.—துத்திநாகப் பொருள்களின்மேல் கிரஸின் எண்ணெயைக் கொண்டாவது ஜலத்தில் கொஞ்சம் கந்தக த்ராவகத்தைக்கலந்து அதைக் கொண்டாவது தேய்த்தால் அந்த ஸாமான்கள் ரொம்ப பளபளப்பு அடையும்.

### Preserving the Colour of Leaves.

இலைகள் நிறம் போகாமலிருக்க வழி.—பசுமையான இலைகளை பின்வரும் முறைப்படி உலர்த்துவதால் அவைகளின் நிறம் வெகு காலம் கெடாமலிருக்கும். ப்ளாடிங் பேபர்களுக்கிடையில் இலைகளை வைத்து அவைகளின்மேல் பாரத்தை வைப்போமானால் இலைகளின் ஈரத்தை ப்ளாடிங் பேபர் க்ரகித்துக்கொள்ளும். நாளொன்றுக்கு இரண்டு முறை ப்ளாடிங்கு கடுதாசிகளை மாற்றவேண்டும். ப்ளாட்டிங் கடுதாசிகள் நன்றாய்க்காய்ந்தவையா யிருக்கவேண்டும். ஒரு தடவை உபயோகித்தவைகளை மறுபடியும் உபயோகிப்பதற்கு முன்னால் அவைகளை நன்றாய்க் காயவைத்து விடவேண்டும். இந்த முறையில் அதிக ஈரமுள்ள இலைகளை இப்படி உலரவைப்பது கஷ்டம்.

### Preserving Silver Articles.

வெள்ளி ஸாமான்களை பத்ரமாய் வைத்திருக்க.—உபயோகத்திலில்லாத வெள்ளி ஸாமான்களை பத்ரமாய் வைத்திருக்க வேண்டுமானால் அவைகளைப் பெட்டிகளில் போட்டு சுற்றிலும் காய்ந்தமாவைப் போட்டு அடைத்து வைத்திருந்தால் ஸாமான்களின் பளபளப்புக் கெடாமல் அப்படியே இருக்கும்.

### Peeling Oranges.

கிச்சிலிப்பழம் உரித்தல்.—கிச்சிலிப் பழத்தைத் தோலுரிக்கு முன் அரைமணி நேரம் அதை வெந்நீரில் ஊறப்போட்டு வைத்திருந்தால் அதன் தோலை எளிதாக உரித்து விடலாம். பழமும் அப்பொழுது தான் பறித்தது போலிருக்கும்.

### To Clean Oil Bottles.

எண்ணெய் ஸீஸாக்களை சுத்தம் செய்ய.—எண்ணெய் வைத்திருந்த ஸீஸாக்களை (குப்பிகளை) சுத்தப்படுத்த வேண்டுமானால் அவைகளில் சாம்பலைப் போட்டு நிரப்பி தண்ணீர்ப் பாத்ரத்தில் வைத்து தண்ணீரைச் சூடாக்கி அரைமணி நேரத்துக்குப் பிறகு குளிரவிட்டு சவர்க்காரத் தண்ணீரில் அலம்பிக் கழுவி விடவும்—உதய தாரகை.

### Cleaning Boots.

பூட்ஸுகளைத்துடைத்தல்.—பூட்ஸுகளைத் துடைத்து பாலீஷ் போடும்போது, கருப்புப்பாலிஷில் ஜலம் கலப்பதற்குப்பதிலாக குளிர்ந்த தேயிலை டிகாக்ஷனை (கஷாயத்தை)க் கலந்து உபயோகித்தால் பூட்ஸுகள் ரொம்ப பளபளப்பாக இருக்கும்.



## AGRICULTURE.

## விவஸாயம்.

### The Function of Manures.

உரங்களின் வேலை.—உரங்களில் உள்ள முக்ய பாகங்களாகிய பொடாஷ், நைட்ரோஜின், பாஸ்பாரிக் ஆஸிட், சுண்ணாம்பு ஆகிய இந்த நான்கும் செடிக்கு பல விதங்களில் உதவியாயிருக்கின்றன. பொடாஷ் ஸத்தானது செடியின் இளம் இலைகளிலும், இளங் கொம்புகளிலும் ஏராளமாயிருக்கிறது. இது இலையில் 'ஸ்டார்ச்' என்னும் மாஸத்து, சர்க்கரை, முதலிய பொருள்கள் உண்டாவதற்கு ஸாதகமாயிருக்கிறது. காய்கள் காய்க்கும்போது மாஸத்தும், சர்க்கரையும் இலையிலிருந்து காய்க்கும் பழத்துக்கும் போய்ச் சேருவதற்கு உதவியாயிருக்கிறது. இந்த இரண்டு வேலையும் முடிந்த பிறகு பொடாஷில் ஒரு பாகம் மறுபடியும் பூமிக்குப் போய்விடுகிறது.

நைட்ரோஜின் இலையும் தண்டும் வளருவதற்கு ஸாதகமாயிருக்கிறது. இது மொட்டுகளும், புஷ்பங் களும் வளருவதற்குத் தடையாயிருக்கிறது. செடிக்கு நைட்ரோஜின் ஸம்பந்தமான எருக்களிட்டால் செடி ரொம்ப நன்றாய் வளரும். இதனால் செடியில் உள்ள நைட்ரோஜின் அதிகமாவதோடு காய்கள் முதலியவை களில் ப்ரொடீன் என்னும் (மாம்ஸம் வளருவதற் கேற்ற) பொருள் அதிகமாவதற்கும் இடமேற்படும்.

பாஸ்பாரிக் ஆஸிடானது செடிகள் காய் காய்ப்பதற்கு உதவியாக இருக்கிறது. பாஸ்பேட்டுகள் என்னும் பாஸ்பாரிக் ஆஸிட் ஸம்பந்தமான செடி உணவுகள் பொதுவாய் விதைகளில் தான் அதிகம். பாஸ்பேட்டுகள் வேண்டிய அளவு பூமியில் இல்லாவிட்டால் செடியில் விதைகள் உண்டாகமாட்டா.

நிலத்தில் சுண்ணாம்பு இருந்தால் இந்த்ரிய வஸ்துக்கள் அழுகி மாறுபாடடையும். செடிக்கு உணவாக முடியாத ஸ்திதியிலிருக்கும் எருப்பொருள்களை உண வாகக் கூடிய ஸ்திதிக்கு மாற்றிவிடும். இது முக்ய மாய் நிலத்திலுள்ள மண்ணின் தன்மையை வ்ருத்தி செய்ய உதவுகிறது. முக்யமாய் ரொம்ப களியான நிலங்களை புலபுலப்பாக்கவும் மணல் பாங்கான நிலங் களை கெட்டிப்படுத்தவும் உதவுகிறது. மேலும் நிலத் தில் இந்த்ரிய வஸ்துக்கள் அழுகுவதால் உண்டாகும் புளிப்புத்தன்மையையும் அது போக்கிவிடும்.

### Common Millet Straw.

வரகு வைக்கோல்.—தினை, சாமை, வரகு முதலான வைக்கோல்களை பசுவுக்கு கொடுப்பதில் ஸாதாரணமாய் கெடுதல்கள் ஸம்பவிப்பதில்லை. ஆனால் சில வேளைகளில் கெடுதி ஸம்பவிப்பதும் உண்டு. மேற்சொன்ன தான்யப்பயிர்களின் அறுவடை காலத்தில் மப்பு மந்தாரமாயிருந்து, அறுவடை தாமஸப்பட்டால் அவைகளின் கதிர்களிலும் வைக்கோலிலும் ஓர்வித பூஞ்சாளம் ஸம்பந்தமான நோய் (Fungoid disease) நமது கண்ணுக்குத் தெரியாமல் பீடிப்பது உண்டு. இப்படிப்பட்ட பயிர்கள் அறுவடை செய்து தான்யத்தை ஒப்படி செய்யும்போதாவது அல்லது கால்நடைகள் அப்பேர்ப்பட்ட வைக்கோலைத் தின்னும்போதாவது மேற்சொன்ன நோயின் காரணத்தினால் மாடுகள் மயக்கங்கொண்டு போவதுடன் சினை மாடுகள் சினை கலைந்து கன்றுகள் விழுவதும் உண்டு. ஆகையால் சிலர் இந்த தினுஸு வைக்கோலை சினை மாடுகளுக்குக் கொடுக்கக்கூடாதென்று சொல்வதேயொழிய, வாஸ்தவத்தில் இவைகளுக்கு இக்கெட்ட குணங்கள் கிடையாது என்று 'கிருஷிகன்' எழுதுகிறது.

### Feeding Milch Cattle.

கறவை மாடுகளுக்கு தீனி போடுதல்.—(1) மாடுகளுக்காக வாங்கும் பிண்ணாக்குகள் பூஞ்சணம் பூத்துக் கெட்டிருந்தால், அவைகள் விலை மலிவாயிருந்தாலுங்கூட வாங்கக்கூடாது.

(2) மாடுகளுக்குப் போடும் தீனியில் நைட்ரோஜின் ஸம்பந்தமான உணவும் நைட்ரோஜின் ஸம்பந்தமில்லாத உணவும் ஸரியான அளவில் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றனவா என்று பார்க்கவேண்டும்.

(3) ஒரே விதமான தீனி கொடுப்பதை விட இரண்டு மூன்றுவிதத் தீவனங்களைக் கலந்து கொடுப்பது லாபகரமானது.

(4) இளங் கன்றுகளுக்கும், கன்று போடவிருக்கும் பெரிய மாடுகளுக்கும் பருத்திக்கொட்டைப் பிண்ணாக்கை தீனியாகப் போடக்கூடாது.

(5) கால்நடைகளுக்கு தீவனத்தில் கொஞ்சம் உப்புக் கலப்பதால் தீவனம் ருசியாக ஆவதோடு, வேறு விதங்களிலும் நன்மை உண்டாக்குகிறது.

(6) மாடுகளுக்குக் கொடுக்கும் ஆகாரம் ருசியாயிருப்பது ரொம்ப முக்யமானது.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operative Sales Society.

கோவாபரேடிவ் விற்பனை ஸங்கங்கள்.—ஸமீபத்தில் வெளிவந்த 'மதராஸ் புல்லடின் அவ் கோவாபரேஷன்' என்னும் பத்ரிகையில் மைஸூர் கோவாபரெடிவ் ஸங்கங்களின் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராராகிய மிஸ்டர் ஆர். ரெங்கராவ் இதைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

இந்த ஸங்கங்களின் மூலதனம் சிறு பங்குகளாற் சேர்ந்த தொகையாகும். இந்தத் தொகையே விசேஷமாய் போதுமாதலால், கடன் வாங்கவேண்டிய அவச்யமில்லை. இவைகள் பெரும்பான்மை பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஸங்கங்கள். இவ்வகை ஸங்கத்தின் நடவடிக்கை, நாணய பாங்கியைக்காட்டிலும் மிகவும் விசாலித்திருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு இது விசாலித்திருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வ்யாபாரம் வ்ருத்தியடைந்து சுமை கூலி, சிப்பந்திச் செலவு முதலியவைகள் மிகவும் குறைந்து, ஸாமான்களின் விலைகளும் குறையும். இத்தொழில் நடத்தும் முறைகள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறாயிருக்கின்றன. விசேஷமாய் மெம்பர்கள் தங்களுக்குத் தேவையான ஸாமான்களையும், வேண்டிய அளவையும் ஸங்கத்திற்குத் தெரியப்படுத்துவார்கள். ஸங்கமானது ஸென்ட்ரல் ஸங்கத்திலிருந்து அவைகளை வரவழைத்து மார்க்கட்டு ரேட்டு விகிதம் இவர்களுக்குக் கொடுக்கும். வர்ஷக்கடைசியில் ஏற்படும் லாபத்தை தாங்கள் வாங்கின தொகைக்கு தகுந்தபடி மெம்பர்கள் பிரித்துக்கொள்ளுவார்கள். இந்த ஸங்கங்களின் மெம்பர்கள் மிக்க அபிமானத்துடன் மனப்பூர்வமாய் ஒத்து உழைத்தால் மிகவும் வ்ருத்தியடையலாம்.

இந்த ஸங்கங்கள் விவஸாயிகளுக்குத் தேவையான ஸாமான்களை மாத்ரம் வ்யாபாரம் செய்யவேண்டுமா, அல்லது குடித்தனத்திற்கு வேண்டியவைகளையும் விற்பது தகுதியா என்று பார்ப்போம். சிலர் கடைசியிற் கூறிய ஸாமான்களை வ்யாபாரம் செய்தால், சில்லரைக் கடைக்காரர்கள் விரோதிகளாவார்களென்கிறார்கள். ஆனால் இப்படிச்சொல்வது ந்யாயமல்ல. நாணய ஸங்கங்கள் ஏற்பட்டால், ஸாவ்காரின் விரோதம் வருகிறது; அதற்கு நாம் என்ன செய்கிறோம்? ஆகையால் ஸ்தலங்களுக்குத் தகுந்தபடி எந்தெந்த ஸாமான்கள் அவச்யமோ அவைகளை இந்த ஸங்கங்கள் மெம்பர்களுக்கு ஸப்ளை செய்யவேண்டும். உதாரணமாக, டென்மார்க்கு ஐக்யமுறை விற்பனை ஸங்கங்களின் முக்யமான நோக்கம் வீட்டுக்கு வேண்டிய பொருள்களை மெம்பர்களுக்கு விற்பதே. ஸ்விட்ஸர்லெண்டிலும் இம்மாதிரியே. ஆனால் இந்தியாவில் ரயத்துகளின் வீடுகளுக்கு அவச்யமுள்ள பொருள்கள் மிகவும் குறைவாயிருப்பதால், இந்த ஸங்கங்கள் விவஸாயிகளுக்கு வேண்டியவைகளை ஸப்ளை செய்வதே ந்யாயமானது.

### Co-operation in Bengal.

வங்காளத்தில் கோவாபரேஷன்.—வங்காளத்தில் கோவாபரெடிவ் ஸங்கங்களால் ஜனங்களுக்குப் பலவிதத்தில் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவென்று தெரியவருகிறது. கோவாபரெடிவ் ஸங்கங்கள் விவஸாயிகளுக்கு குறைந்த வட்டியில் பணம் கடன் கொடுப்பதால், க்ராம ஸாவ்கார்களும் தங்களுடைய வட்டி விகிதத்தை ரொம்பவும் குறைத்திருக்கிறார்கள். அதோடு தங்களுடைய லேவாதேவி முறைகளையும் சீர்திருத்தி யிருக்கிறார்கள். இதனால் ஸங்கங்களால் ஜனங்களுக்குக் கடன் கொடுக்கும் விஷயத்தில் ஸௌகர்யம் ஏற்படுவதோடு, ஸாவ்கார்களும் தங்கள் வட்டி விகிதத்தைக் குறைத்திருப்பதாலும் ஜனங்களுக்கு ஸௌகர்யம் ஏற்பட்டிருக்கிறது. ஸங்கங்களால் இப்படிப் பணம் கடன் கொடுப்பதில் ஸௌகர்யம் உண்டாகியிருப்பதேயல்லாமல், மெம்பர்களுடைய நடத்தையைச் சீர்திருத்துவதிலும், அவர்களுடைய க்ஷேமத்தை அபிவ்ருத்தி செய்வதிலும் மேற்படி ஸங்கங்கள் ஸாதகமாயிருந்திருக்கின்றன.

சில விடங்களில் மெம்பர்கள் தங்களுக்குள் உண்டாகும் சிறு வழக்குகளை மத்யஸ்தர்களிடம் சொல்லித் தீர்த்துக்கொள்ளும்படி ஸங்கங்கள் தூண்டி வருகின்றன. அநேக இடங்களில் ஸங்கங்களின் ஆதரவில் க்ராம பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. க்ராமங்களிலுள்ள வேறு ஸ்தாபனங்களுக்கும் ஸங்கங்களிலிருந்து பண உதவி செய்யப்பட்டு வருகிறது.



# COMMERCE.
## வ்யாபாரம்.

### Tanning Skins.

தோல்களைப் பதனிடுதல்:—குழிமுயல்போன்ற சிறு ம்ருகங்களின் தோல்களைப் பதனிட ஆஸ்ட்ரேலியாவில் ஒரு ஸுலபமானமுறை அனுஷ்டித்து வருகிறார்களாம். இதனால் தோல்களை 20-நிமிஷத்திற்குள் பதனிட்டு விடலாமாம்.

இரண்டுபடி தவிட்டில் ஐந்து அல்லது ஆறுபடி கொதிக்கும் ஜலத்தை ஊற்றிப்பிறகு ஜலத்தை வடிகட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு அதே அளவுள்ள வெதுவெதுப்பான ஜலத்தில் எவ்வளவு கரையுமோ அவ்வளவு உப்புப் போட்டுக்கரைத்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு இரண்டு ஜலத்தையும் ஒன்றாய்க் கலந்து அதில் ஒரு காலனுக்கு (2·4 - பட்டணம்படி) ஒரு ஔன்ஸ்வீதம் கந்தக த்ராவகம் (ஸல்ப்யூரிக் ஆஸிட்) சேர்க்கவேண்டும். பிறகு அதில் பதனிடவேண்டிய தோல்களை அமிழ்த்தி வைத்து அடிக்கடி புரட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தால், இருபது நிமிஷநேரத்துக்குள் தோல் பதமடைந்திருக்கும. அப்புறம தோல்களை வெளியில் எடுத்து சுத்த ஜலத்தில் அலசியெடுத்து நிழல் உள்ள இடத்தில் தொங்கவிட்டுக் காயப்போடவேண்டும். காயும் போது தோல்களை மடங்காதபடி இழுத்துவிடவேண்டும. காய்ந்ததோல்களை பதனிடுமுன் வெதுவெதுப்பான ஜலத்தில மருதுவாகும்வரையில் ஊறவைத்திருக்கவேண்டும். பதனிடுமுன் தோலில் இருக்கக்கூடிய மாம்ஸத்தையும், கொழுப்பையும் நன்றாய் எடுத்து சுத்தப்படுத்தவேண்டியது மிகவும அவசியம்.

### Peripatetic Instruction in Weaving.

ஊரூராய்ப்போய் நெசவுத்தொழில் கற்பித்தல்:—ஊரூராய்ப்போய் சென்னை கவர்னமெண்டார ராஜதானியின் தென்பாகத்தில் நெசவு தொழிலைச்செய்து காட்டுவதற்காக சிலரை நியமித்து அவர்களை ஊரூராய்ப்போய் நெசவுதொழில் கற்பிக்கும்படி நியமித்தார்கள். அந்த ஏற்பாடு த்ருப்திகரமாக நடந்துவருவதை உத்தேசித்து ராஜதானியின் வடஜில்லாக்களிலுள்ள நெசவுக்காரர்களுக்கு ஊரூராய்ப்போய் நெசவுத தொழில செய்துகாட்டுவதற்காக சில பேர்களை நியமித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு தற்போது ஒருவர்ஷத்துக்கு நடந்துவரும். இந்த ஏற்பாட்டின்படி மாஸம் 75 ரூபாய் சம்பளத்தில் ஒரு ஸூபரின்டெண்டண்டும், 30 ரூபாயில் ஒரு மேஸ்த்ரியும், மாஸம் 20 ரூபாய்க்கு மேற்படாத தினக்கூலிக்கு ஒரு நெசவுக்காரனும், ஒரு ப்யூனும் நியமிக்கப்படுவார்கள்.

### Contract Advertisements.

நீடித்தகால விளம்பரங்கள்:—விளம்பரம் செய்வதின் முக்யநோக்கம் விளம்பரத்தை வாசிப்பவர்கள் விளம்பரம் செய்தவர்களிடம் ஸாமான்கள் வாங்க வேண்டுமென்பதே. விளம்பரம் செய்பவர்களுக்கு விளம்பரம் செய்வதால் வ்யாபாரம் அதிகரிக்காவிட்டால் விளம்பரத்தால் ப்ரயோஜனம் இல்லை. விளம்பரம் வாசிப்பவர்கள் தூரமான இடங்களிலிருந்து தபால்மூலமாய் ஆர்டர்கள் அனுப்பும் தபால் வ்யாபாரத்தில், ஆர்டர்களைக்கொண்டு ஒருபத்ரிகையில் விளம்பரம்செய்வது லாபகரமா என்பதையறிவது ஸுலபமாகும். எந்தப் பத்ரிகையிலும் இரண்டுமூன்று வாரத்துக்கு மேற்படாமல் விளம்பரம் செய்துவந்து, விளம்பரத்தால் தக்க ஆர்டர்கள்கிடைத்து வந்ததாகத்தெரிந்தால் விளம்பரத்தை இன்னும் போட்டுக்கொண்டிருக்கலாம். வேண்டிய அளவுக்கு ஆர்டர் கிடைக்காவிட்டால், வேறு பத்ரிகைகளில் விளம்பரம்செய்து பார்க்கவேண்டும்.

### Supply of Articles for Public Offices.

பப்ளிக் ஆபீஸ்களுக்கு வேண்டிய ஸாமான்கள்:—பப்ளிக் ஆபீஸ்களுக்கு வேண்டிய ஸாமான்களை இந்தியாவிலேயே இந்த யுத்த காலத்தில் வாங்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

### Business Enterprise.

வ்யாபார ஊக்கம்:—சென்ற ஜூன் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 5 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| 1 பாங்கி லேவாதேவி கம்பெனி | 20,000 |
| 1 இன்ஷூரென்ஸ் கம்பெனி | 20,000 |
| 1 வ்யாபாரக் கம்பெனி | 2,00,000 |
| 1 தேயிலைத்தோட்டக் கம்பெனி | 2,50,000 |
| 1 ரெயில்வே கம்பெனி | 35,00,000 |
| 5 | 39,90,000 |

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Production of Rice.

நெல் விளைவு.—ப்ரிட்டிஷ் இந்தியாவில் ஸாகுபடியாகும் நிலங்களில் நூற்றுக்கு முப்பத்தைந்து பாகத்தில் நெல் ஸாகுபடி செய்யப்படுகிறது. 1913-14-ம் வர்ஷத்தில் இந்தியாவில்2 கோடியே $8\frac{1}{2}$-லக்ஷம் டன் அரிசி கிடைத்தது. இதில் பெரும்பாகம் இந்தியாவிலேயே செலவாய்ப்போனபோதிலும், உலகத்திலுள்ள மற்ற தேசங்களெல்லாவற்றையும்விட அதிகமாகவே அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. சென்ற 1913-14-ம் வர்ஷத்தில் 24,52,000 டன் அரிசி இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. லங்கையில் ஸ்வதேச ஜனங்கள் பெரும்பாலும் அரிசியே சாப்பிடுகிறார்கள். அங்கே 1910-11-ம் வர்ஷத்தில் 6,80,574 ஏகர் நிலம் நெல் ஸாகுபடியாகி யிருந்தது.

நெல் மலேநாடுகள், பிஜிதீவு, ஆஸ்ட்ரேலியாவைச் சேர்ந்த க்வீன்ஸ்லண்ட் மாகாணம், ஈஜிப்ட் முதலிய விடங்களில் ஏராளமாக விளைகிறது. மேற்கு ஆப்ரிக்காவிலும், கிழக்கு ஆப்ரிக்காவிலும் அவ்விடங்களிலுள்ள ஸ்வதேசிகள் நெல் ஸாகுபடி செய்கிறார்கள். ஆனால் அங்கே விளையும் நெல் அவ்விடங்களுக்கே போதாமலிருக்கிறதாம்.

### Curds.

தயிர்.—நமது தேசத்தில் தயிர் முக்யமான உணவுப்பொருள்களில் ஒன்றாக இருந்து வருகிறது ஆனால் இதை மேல் நாட்டார் வெகுவாய் உணவாக உபயோகிப்பதில்லை. இப்போது இதை மேல் நாடுகளில் பல கைத்தொழில்களுக்கு உபயோகிக்கிறார்களாம். இதைப் பல உலோகங்களுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்களாம். இதிலிருந்து பலவித கெட்டிப்பொருள்கள் செய்கிறார்களாம். பியானோ 'கீ'கள், போலி ஸலவைக்கல், நெருப்புப்பிடிக்காத சீப்புகள், ஸிகரட் வைத்துக்கொள்ளும் குழாய்கள், வச்சிரத்தைவிட பலமானதும் ஜலத்தால் கெட்டுப்போகாததுமான ஒரு பசை, செங்கல் வேலைகளில் பிளவுகளை அடைக்க ஒரு சாந்து, துணிகளுக்கு பளபளப்புக் கொடுக்க உபயோகப்படும் ஒருவிதப் பொருள் முதலிய பலவித உபயோகமான பொருள்கள் தயிரிலிருந்து செய்யப்படுகின்றன.

### Sunflower.

ஸூர்ய காந்தி.—ஸூர்ய காந்தி ரொம்ப மட்டமான நிலத்திலும் நன்றாய் வளரும். இதன் விதையிலிருந்து ஒருவிதத் தைலம் எடுக்கப்படுகிறது. இதன் பிண்ணாக்கை மாட்டுக்கு உபயோகித்தால் வெண்ணெய் அதிகமாய்க் கிடைக்குமாம். கடலைப் பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, தேங்காய்ப் பிண்ணாக்கு முதலியவைகளை மாட்டுக்குத் தீனியாகப் போட்டால் வெண்ணெய் அதிகமாகக் கிடைக்குமென்பது பலருக்கும் தெரிந்த விஷயமே. அவைகளுள் கடலைப் பிண்ணாக்கும், எள்ளுப்பிண்ணாக்கும், ஸூர்ய காந்தி விதையின் பிண்ணாக்கும் வெண்ணெயை ரொம்ப அதிகப்படுத்தக் கூடியவை.

### Saw Dust.

ரம்பத்தூள்.—மரமறுக்கும்போது விழும் மரத்தூள் அநேக விடங்களில் ப்ரயோஜன மற்று வீணாய்ப் போகின்றது. இது மேல் நாடுகளில் அநேக விதங்களில் உபயோகப்படுகிறதாம். பெரிய யந்த்ரக்கடைகளில் இதனுடன் ஸிமெண்டு கலந்து தரையில் மண்ணிடுவதுபோல் இடுகிறார்களாம். இந்தத்தரை மிகவும் கெட்டியாக இருக்கிறதாம். இதில் ஆணிகளும் அடிக்கலாமாம். ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் பட்டணத்தில் அநேக வ்யாபாரக் கட்டிடங்களில் ரம்பத்தூளோடு மாக்னீஷ்யம் க்ளோரைட் என்னும் பொருளைக் கலந்து தரையில் காரைக்குப் பதிலாக உபயோகிக்கிறார்களாம். இது மிகவும் மலிவாயிருப்பதோடு, நெருப்புப் பிடிக்காமலிருப்பதால் மேல் மெத்தைகளில் இதை உபயோகித்து வருகிறார்களாம்.

### Pineapple Fibre.

அன்னாசி நார்.—அன்னாசி நார் ஒரு வகை உறுதியான கடுதாசி செய்வதற்கு ப்ரயோஜனப்படுகிறதென்று அமெரிக்காவிலுள்ள ஒரு காகிதக் கம்பெனியார் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு டன் அன்னாசி இலைகளிலிருந்து 70 ராத்தல் நிறையுள்ள நார் எடுக்கலாம். ஒரு ஏக்கருக்கு ஸாதாரணமாய் 14 டன் இலை கிடைக்கும். ஆகவே ஒரு ஏக்கருக்கு கிட்டத்தட்ட 1000 ராத்தல் நார் கிடைக்கலாம். தரிசாயிருக்கும் நிலங்களில் இதை ஸாகுபடி செய்தால் ஒரு ராத்தலுக்கு அரையணா லாபம வீதம் ஒரு ஏக்கருக்கு 30 ரூபாய் லாபம் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது.



# BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Magic Squares.

விநோதக் கட்டங்கள்:—பின்வரும் சதுரக் கட்டத்தில் உள்ள எண்களை எவ்விதம் கூட்டினாலும் ஒரே விதமாக 15-என்னும் விடைதான் வரும்.

| | | |
|---|---|---|
| 4 | 9 | 2 |
| 3 | 5 | 7 |
| 8 | 1 | 6 |

இதைப்போல் எப்படிக்கூட்டினாலும் ஒரேவிதமான விடை வரும்படி எண்களை எழுதுவதற்கு ஒரு ஸுலபமான வழியிருக்கிறது. அது பின்வருமாறு. கீழேகாட்டியிருக்கிறபடி 1-முதல் 9-வரையில் உள்ள 9 எண்களை எழுதி அவைகளைச் சுற்றிலும் கட்டங்கள் வரையவும்.




அந்த எண்களில் 1, 3, 7, 9 ஆகிய இந்த எண்கள் கட்டங்களுக்கு வெளியில் இருக்கின்றன. இவைகளில் 1-என்னும் எண்ணை 9-க்குப் பக்கத்திலுள்ள காலிக் கட்டத்திலும், 9-ஐ 1-க்குப் பக்கத்திலுள்ள காலிக் கட்டத்திலும் போட்டு, அதேமாதிரி, 7-ஐ 3-க்குப் பக்கத்திலுள்ள கட்டத்தில் போட்டு, 3-ஐ 7-க்குப் பக்கத்திலுள்ள கட்டத்தில் போட்டுவிட வேண்டும். அப்படிப்போட்டு விட்டால் முன்னால் காட்டியிருக்கிறபடி எண்கள் அமையும். அவைகளை எந்தவிதம் கூட்டினாலும் ஒரே விதமாய் விடைவரும்.

1-முதல் 9-வரையுமுள்ள, 9-எண்களை வரிசையாய் 3-வரிசைகளில் எழுதி அவைகளைச்சுற்றிக் கட்டம் வரைந்ததுபோல், எந்த எண்ணை வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு அதிலிருந்து தொடர்ச்சியாய் 9-எண்கள் எழுதி கட்டங்கள் போட்டு வெளியில் தங்கும் எண்களை இடம் மாற்றி காலிக் கட்டங்களில் பூர்த்திசெய்தால் முன்போலவே எப்படிக் கூட்டினாலும் சரியான விடைவரும். உதாரணம்:—

| | | |
|---|---|---|
| 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 |

இதற்கு கட்டங்கள் போட்டு, எண்களை மாற்றிக் காலிக் கட்டங்களில் எழுதினால்,

| | | |
|---|---|---|
| 23 | 28 | 21 |
| 22 | 24 | 26 |
| 27 | 20 | 25 |

என்றுவரும். இப்படியே மற்ற எண்களுக்கும் எழுதிக் கொள்ளலாம்.

### A Costly Map.

ஒரு விலையுயர்ந்த தேசபடம்.—லண்டன் நகரத்தின் முனிஸிபல் படமொன்று ஸமீபத்தில் செய்து முடிக்கப்பட்டது. இது உலகத்திலுள்ள படங்களெல்லாவற்றிலும் மிகப் பெரியது. இதைத் தயார் செய்ய மூன்று வர்ஷகாலம் சென்றதாம். இதன் விலை பிரதி ஒன்று $23\frac{1}{4}$ ரூபாயாகும். ஆகவே இது சற்று விலையுயர்ந்ததென்று தான் சொல்லவேண்டும். ஆனால் உலகத்திலுள்ள படங்களெல்லாவற்றிலும் மிக விலையுயர்ந்தது ப்ரான்ஸிலிருக்கிறது. இது ப்ரான்ஸ் தேசத்தின் படமாகும். இந்தப்படம் நன்றாய் செதுக்கிய ஜாஸ்பர் என்னும் பச்சைக் கல்லால் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரான்ஸின் முக்ய பட்டணங்கள் எல்லாம் அதில் விலையுயர்ந்த கற்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பெயர்கள் தங்கத்தால் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த தேசத்திலுள்ள நதிகள் விலையுயர்ந்த ப்ளாடினம் என்னும் வெண்மையான உலோகத்தை மெருகிட்டு அதைக் கொண்டு காட்டப்பட்டிருக்கின்றன.

ப்ரான்ஸ் தேசம் 67 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவுகளைக் காட்டுவதற்காக பல வர்ணங்களுள்ள நேர்த்தியான ரத்னக்கற்கள் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் படம் ரஷ்யாவில் செய்யப்பட்டது. இந்தப் படத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் ரஷ்ய ஏகாதிபத்யத்திலுள்ள சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டவை. சில வர்ஷங்களுக்கு முன்னால், ப்ரான்ஸுக்கும் ரஷ்யாவுக்கும் நேச உடன்படிக்கை ஏற்பட்டபோது, ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய ஸார் இதைச் செய்வித்து ப்ரான்ஸுக்கு இனாமாகக் கொடுத்தார். இது $10\frac{1}{2}$ சதுரடி பரப்புள்ளது. இவ்வளவு சிறியதாயிருந்தபோதிலும், இதற்குப் பிடித்த செலவு $37\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயாம்.

# LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### Anatha Balika Ashram.

அநாத பாலிகா ஆச்ரமம்.—பூனாவில் அநாத பாலிகா ஆச்ரமம் என்று ஒரு ஆச்ரமம் சென்ற 18 வர்ஷகாலமாக நடந்து வருகிறது. விதவா விவாகம் செய்யும் வழக்கமில்லாத ஜாதிகளிலுள்ள விதவைகளுக்குக் கல்வி கற்பித்து கௌரவமாய் ஸம்பாதிக்க ஒத்தாசைசெய்வதும், அவர்களுடைய மனோசக்திகளை யபிவ்ருத்தி செய்வதுமே இந்த ஆச்ரமத்தின் நோக்கங்களாகும்.

இந்த ஆச்ரமத்தில் சென்றவர்ஷம் 105 பெண்கள் இருந்தார்கள். இவர்களில் 97-பேர் விதவைகள். மற்ற 8-பேர்கள் ஸுமங்கலிப்பெண்கள். இந்த ஆச்ரமத்துக்கு வெகுதூரமான இடங்களிலிருந்தும் பெண்கள் வந்திருக்கிறார்கள்.

இதில் பெண்களுக்கு இங்க்லீஷ், ஹிந்துஸ்தானி, மராட்டி, ஸம்ஸ்க்ருதம் ஆகிய பாஷைகளும், சித்ரம் வரைதல், வாய்ப்பாட்டு, தையல்வேலை, கணிதம், தேச சரித்ரம், பூகோளசாஸ்த்ரம் முதலிய பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. பெண்கள் இந்த ஆச்ரமத்திலேயே தங்கி கல்வியயின்று வருகிறார்கள். பெரிய கனவான்களின் மனைவிகள்சேர்ந்த ஒரு கமிட்டியார் ஆச்ரமத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை பார்த்து வருகிறார்கள்.

அங்கேவஸிக்கும் பெண்களில் பெரியவர்கள் காலையில் 6-மணிக்கும், சிறியவர்கள் $6\frac{1}{2}$-மணிக்கும் எழுந்திருப்பது வழக்கம். இவர்களில் சிலர் வீட்டுவேலைகள் செய்வார்கள். இவைகளை இன்னதினங்களில் இன்னார் செய்யவேண்டுமென்று முறை யேற்பட்டிருக்கிறது. எல்லாரும் ஸ்நானம்செய்து தங்கள் வஸ்த்ரங்களைத் துவைத்துப்பிறகு ஜெபங்கள் செய்வார்கள் அல்லது மத க்ரந்தங்கள் வாசிப்பார்கள். பிறகு அவர்கள் தங்கள் பள்ளிக்கூடத்துப் பாடங்களைப் படித்துக் கொண்டிருப்பார்கள். பிறகு போஜனம செய்துவிட்டு 11-மணிக்குப் பள்ளிக்கூடம் போவார்கள். பள்ளிக்கூடத்தில் ஸாதாரணபாடங்கள் ஆரம்பிக்குமுன் பகவத் கீதையிலிருந்தும், ஸாதுக்களினுடைய க்ரந்தங்களிலிருந்தும் சில ச்லோகங்களை யொப்பித்து ஆத்தம் சொல்வார்கள்.

பிறகு அவர்களுக்கு ஸாதாரணபாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மத்யானம் அவர்கள் கொஞ்சம் சிற்றுண்டி சாப்பிடுகிறார்கள். ஸாயந்திரம் 5-மணிக்கு பள்ளிக்கூடம் முடிகிறது. பள்ளிக்கூடம் முடிந்ததும் அவர்கள்கொஞ்சம் வீட்டுவேலை செய்கிறார்கள். $6\frac{1}{2}$-மணிக்குள் ராத்ரி சாப்பாடு முடிந்துபோகிறது. 7-மணிவரையில் சும்மா விருந்துவிட்டு பிறகு 9-மணி வரையில் வாசித்துக்கொண்டிருக்கிறார்கள். 9-மணிக்கு எல்லாப்பெண்களும் கீதமந்திரமென்னும் இடத்தில்கூடி பக்தி ரஸமான பாட்டுக்கள் பாடுவார்கள். அல்லது அவர்களில் ஒருவர் மதக்ரந்தங்களிலிருந்து ஏதாவது ஒருபாகம் வாசிக்க மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். சில ஸமயங்களில் யாராவது ஒருவர் மதவிஷயங்களைப்பற்றி ப்ரஸங்கம் செய்வார். இப்படி அரைமணிநேரம் கழியும். பிறகு எல்லாரும் தங்களுடைய படுக்கை யறைகளுக்குப்போய் 10-மணிக்கு படுத்துக்கொண்டு விடுவார்கள்.

### Aviyal.

அவியல்.—அவியல் மலையாளத்தில் ஸர்வஸாதாரணமாக எல்லாரும் செய்து சாப்பிடுகிறார்கள். இது தமிழ் நாட்டுக்கு அபூர்வம். இதுபக்வம் செய்யும் விதம் பின்வருமாறு. வாழைக்காய், பாகற்காய், புடலங்காய், கத்தரிக்காய், பூசனிக்காய், முருங்கைக்காய், வெள்ளரிக்காய், சேனைக்கிழங்கு, கீரைத்தண்டு முதலியவைகளைக் கொண்டுவந்து நன்றாய்க் கழுவி $1\frac{1}{2}$ அங்குலம் நீளமாக நறுக்கிப்போட்டு சுத்த ஜலத்துடன் அடுப்பில் வேகவைக்கவேண்டும். தகுந்த உப்பு புளியும் $\frac{1}{8}$ ரூ. எடை மஞ்சள் பொடியும் போடவேண்டும். காய்களெல்லாம் நன்றாக வெந்த பிறகு ஒரு தேங்காயைத் துருவி அதோடு வேண்டிய பசசை மிளகாயையும் கூடவைத்து ஒன்றிரண்டாக அரைத்து அதில் போட்டு கிளறிவிடவும. கருவேப்பிலையும் கொத்துமல்லித் தழையும் போடவும். புளிக்குப் பதிலாக மாங்காயைத் துண்டித்துப் போடலாம்.—பெண்கல்வி.

### Hints on Breast Feeding.

பால் கொடுக்கும்போது கவனிக்கவேண்டிய முறை.—தாய்மார்கள தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது எவ்விதமான வ்யஸனமும, கவலையும, பயமுமின்றி ஸந்தோஷமும் த்ருப்தியுமுள்ளவர்களாயிருக்கவேணடும்; வ்யஸனம், கவலை, பயம், முதலியவற்றால் ஊட்டும் பால் தோஷமுடையதாய்க் குழந்தைகளுக்கு அஜீர்ணம், மந்தம், பேதி, ஜ்வரம், வலிப்பு முதலிய ரோகங்களை யுண்டாக்கிக் குழந்தைகளை அபாயத்துக் காளாக்கிவிடுமாம்.



# INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Viceroy and Emigration.

வைஸ்ராயும் குடியேற்றமும்.—இந்தமாஸம் 8-ந் தேதியன்று இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது, லார்ட்ஹார்டிஞ்ஜ் தமது ப்ரஸங்கத்தில் இந்தியர்கள் குடியேற்ற நாடுகளுக்குப் போவதைப் பற்றிப் பேசினார்.

முதலில் தென்னாப்ரிக்காவில் உள்ள இந்தியர்களின் குறைகளை எடுத்துக்கொண்டு, அவைகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிஷன் செய்த சிபார்சுகளை அனுஸரித்து இந்தியர்களின் குறைகளில் முக்யமானவற்றை நீக்க சட்டம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் இந்த விஷயத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது புகழத்தக்கதென்றும் சொன்னார்.

இந்தியர்கள் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் எந்த பாகத்திலும் குடியேறி வஸிக்க பாத்யதையுடையவர்கள் என்று சொல்வதைப்பற்றி ப்ரஸ்தாபித்தபோது பின் வருமாறு பேசினார்.

ஒருவர் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் குடியென்றால் அவருக்கு ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் எந்தபாகத்திலும் குடியேறி வஸிப்பதற்கு பாத்யமுண்டென்று பலர்சொல்லி வருகிறார்கள். ஆனால் இப்படிச்சொல்வதற்கு ஒரு ஆக்ஷேபணை யிருக்கிறது. குடியேற்ற நாடுகளுக்கு ஸ்வயஆட்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் தங்கள்உள்நாட்டுவ்யவஹாரங்களைத் தாங்களே கவனித்து நடத்திவர அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடியேறிச்செல்வதாகிய விஷயம் அந்த நாடுகளின் உள்நாட்டு வ்யவஹாரத்தைப்பற்றியதாகையால் ப்ரிட்டிஷ் ப்ரஜைகள் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் எந்தபாகத்திலும் குடியேறலாமென்கிற பாத்யதையானது குடியேற்றத்தைப்பற்றி அந்த நாடுகள்செய்யும் சட்டத்தைப் பொருத்தேயிருக்கிறது.

இந்தியா கவர்ன்மெண்டார் ப்ரிட்டிஷ் ப்ரஜைகள் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் எந்தபாகத்திலும் குடியேறி வஸிக்க பாத்யமுடையவர்கள் என்ற கொள்கையை வெகுகாலமாக வாதித்துவந்தார்கள். அப்படிச்செய்து வந்ததின் பலனென்னவென்றால், குடியேற்றநாடுகள் குடியேற்றதைப்பற்றி மிகக்கடுமையான சட்டங்கள் செய்திருக்கின்றன. ஆகையால் இப்போது வேறு விதத்தில் ச்ரமப்பட்டால் இந்த விஷயத்தை முடிவு செய்யமுடியுமா என்று பார்க்கவேண்டும்.

இங்க்லண்டிலிருந்து தங்கள் தேசத்துக்கு குடியேற வருபவர்களை அப்படி வராமல் தடுக்க குடியேற்ற நாடுகளுக்கு பூரா அதிகாரமிருக்கிறது. ஆஸ்ட்ரேலியா, கனடா, தென்னாப்ரிக்கா ஆகிய இவைகள் அநேக இங்க்லீஷ் வேலையாட்களை தங்கள் தேசங்களிலிருந்தும் அப்புறப்படுத்தி யிருக்கின்றன.

இதனால் குடியேற்ற நாடுகள் இந்தியர்களைமாத்ரம் பாரபக்ஷமாக நடத்தி வருகின்றன வென்பது சரியல்லவென்று தெரியும். கனடாவில் சென்ற பத்து வர்ஷகாலத்தில் 917 இங்க்லீஷ் ஜனங்கள் உள்ளே போகாமல் தடுக்கப்பட்டிருக்க, 376 இந்தியர்கள் தான் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியர்களுக்கு குடியேற்ற நாடுகளில் ஏதாவது ஸௌகர்யங்கள் கிடைக்கவேண்டுமென்றால், அவைகள் ஒற்றுமையால்தான் கிடைக்கக்கூடும். இதற்கு குடியேற்ற நாடுகளுடன் பரஸ்பர ஏற்பாடுகள் செய்துகொள்ள முயற்சி செய்யவேண்டும். கனடாவைப் பற்றினமட்டில், இப்போது அந்த தேசத்துக்கு வர்ஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட ஸங்க்யை ஜப்பானியர்களை உள்ளே விடுகிறார்கள். அதைப்போல் இந்தியர்களுக்கும் ஸௌகர்யமான ஏற்பாடுகள் செய்து கொடுக்கும்படி கேட்கலாம், இத்தனைபேரை பாஸ்போர்ட்டின்மேல் கனடாவிற்குள் விடுவதென்பதைப் பற்றிப் பேசி ஒரு முடிவு செய்வது கஷ்டமல்ல. அதைப்போலவே மாணவர்கள், ஊர்களைச் சுற்றிப் பார்க்க வருபவர்கள் ஆகிய இவர்கள் ஸ்வல்ப காலம் தங்கி யிருப்பதைப்பற்றியும், சாச்வதமாக அங்கேயே குடியிருப்பதுவிஷயமாக நிபந்தனைகள் ஏற்படுத்துவதைப் பற்றியும் தக்க ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

சிலகாலமாய் குடியேற்ற நாடுகள் கூடியமட்டும் இந்தியா கவர்ன்மெண்டின் விருப்பங்களுக்கு இணங்கிப் போக ஸம்மதப்படுவதாய் இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரிந்திருப்பதால், இந்தியா கவர்ன்மெண்டார் பரஸ்பர ஏற்பாட்டுக்காக குடியேற்ற நாடுகளோடு கலந்து பேசி ஒரு முடிவுக்கு வர எண்ணுகிறார்கள். இந்தியர்கள் இந்த அபிப்ராயத்தை ஏற்றுக்கொண்டால் இந்தியா மந்த்ரிக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்து பேச்சுகள் ஆரம்பிப்பார்கள் என்று வைஸ்ராய் பேசினார்.

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Sum in Arithmetic.

கணக்கில் ஒரு கேள்வி.—ஒரு நாள் கடைத்தெருவில் போய்க்கொண்டிருந்த ஓர் பக்கிரி ஒரு சிறுவனைப்பார்த்துப் பின்வருமாறு ஸம்பாஷித்தான்.

பக்கிரி.—பிள்ளாய், நீ எந்தவகுப்பில் படிக்கிறாய்.

பையன்.—நான் நான்காவது வகுப்பில் படிக்கிறேன்.

பக்கிரி.—நான் உன்னை ஒரு கணக்குக்கேட்கிறேன். அதற்கு சரியான விடையளித்தால் நான் உனக்கு ஒரு பைஸா தருகிறேன். இல்லாவிட்டால் நீ எனக்கு இரண்டுபைஸா தரவேண்டுமென்றான். பையன் சரியென்று ஒப்புக்கொண்டான்.

பக்கிரி.—இரண்டோடு இரண்டு சேர்ந்தால் நான்காகிறது. பெருக்கல் வாய்ப்பாட்டில் 2×2 இரண்டுக்கிரண்டு நான்கு என்கிறார்கள். அது எப்படி?

பையன்.—நீ கணக்கையுஞ் சொல்லி விடையையும் சொல்லிவிட்டாய். எனக்குத் தெரியவில்லை, என்று சொல்லிக்கொண்டு திகைத்து நின்றான்.

பக்கிரி.—பார்த்தாயா! உனக்குத் தெரியவில்லையே. காசைக்கொடு. இரண்டையும் இரண்டையும் கூட்டுகிறோம், மறுபடி இரண்டையும் இரண்டையும் பெருக்குகிறோம். பெருக்கினாலென்ன கூட்டினாலென்ன! (வாறுகோலினால் பெருக்குதல் கூட்டுதல் என்பதைக்கொண்டு) என்று சொல்லி நகைத்தான்.

அந்த மூடப்பையன் பக்கிரிக்கு பயந்து காசைக் கொடுத்துவிட்டு வெறுங்கையனாய்ப் போய்ச் சேர்ந்தான். எஸ். ரங்கஸாமி அய்யங்கார்.

### A Costly Tea Service.

விலையுயர்ந்த தேயிலைப் பாத்ரங்கள்.—ஒரு நாடகக்காரனிடம் சில விலையுயர்ந்த தேயிலை சாப்பிடுவதற்கான பாத்ரங்கள் இருந்தன. அவைகள் மிகவும் பழையகாலத்துப் பீங்கான் பாத்ரங்கள். பழையகாலத்துப் பொருள்களின்மேல் மேல்நாட்டாருக்கு ப்ரியமதிகம். இந்தப் பாத்ரங்கள் அவனுடைய தாயாருடையவை. தாயார் இறந்ததன்மேல் அவைகள் அவனுக்குச் சேர்ந்தன. அந்த நாடகக்காரன் அவைகளை விற்றுவிட எண்ணி, பழையகாலத்து ஸாமான்களை விலைமதிக்கும் ஒரு வர்த்தகனிடம் கொண்டுபோய்க் காட்டியதில், அந்த வர்த்தகன் அவைகள் 30,000 ரூபாய் விலை பெறுமென்றும், பாரன் ராத்ஸ்சைல்ட் போன்ற பெரிய தனிகர்களே அவைகளை வாங்கத்தகுந்தவர்களென்றும் சொன்னான். பாரன் ராத்ஸ்சைல்ட் என்பவர் பாரிஸிலுள்ள ஒரு பெரிய பணக்காரர். அதன்மேல் அந்த நாடகக்காரன் 80 வயஸு கிழவனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு, தேயிலைப்பாத்ரங்களை எடுத்துக்கொண்டு பாரன் ராத்ஸ்சைல்டினிடம்போய்ப் பாத்ரங்களைக் காட்டினான். அவர் பாத்ரங்களைப் பார்த்து அவைகளுக்கு 25,000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார். நாடகக்காரன் அவ்வளவு பெரியதொகையை தன்னிடம் வைத்திருந்தால்தான் இழந்துவிடக்கூடுமென்றும், வர்ஷந்தோறும் இவ்வளவுதொகை கொடுப்பதாக ஏற்பாடு செய்யமுடியுமா என்று கேட்டு, வர்ஷத்திற்கு 2000 ரூபாய் வீதம் கொடுப்பதானால் பாத்ரங்களைக் கொடுத்துவிடுவதாகச் சொன்னான். ராத்ஸ்சைல்ட் ப்ரபு அதற்கு ஒப்புக்கொண்டு தமது கஜான்ஜியைக்கண்டு பணம் வாங்கிக்கொள்ளும்படி சொன்னார். அவன் அப்படியேபோய் வர்ஷந்தோறும் வாங்கிக்கொண்டிருந்தான்.

5 வர்ஷமான பிறகுங்கூட நாடகக்காரன் பணத்துக்கு வருவதைக்கண்ட ராத்ஸ்சைல்ட் ப்ரபு அவனைக் கூப்பிட்டு, "அப்பா நீ ரொம்ப பலசாலியாக இருக்கிறாயென்று தோன்றுகிறதே: உனது வயஸு என்ன?"வென்று கேட்டார். அதற்கு நாடகக்காரன் தனது வேஷத்தைக்கலைத்து தனக்கு 28 வயஸு தானாகிறதென்று சொன்னான். அதன்மேல் ராத்ஸ்சைல்ட் தாம் ஏமாந்தவிதம் இன்னதென்பதையறிந்து, அவனுடைய ஸாமர்த்யத்துக்கு மெச்சி, எப்போதும் போலவே பணம் கொடுத்துவரும்படி ஆக்ஞாபித்தார். நாளதுவரையில் 47,500 ரூபாய் வரையில் அவனுக்கு கொடுபட்டிருக்கிறதாம்.

### A Late Start.

ரொம்பநாள் கழித்து ஆரம்பித்தது.—தாத்தா:—"ராமா, நான் உன்னைப்போல் சிறுபையனாகவிருந்தபோது ஒரு பொய்கூட சொன்னதில்லையே. நீ என்—"

ராமன்.—"நீங்கள் எப்பொழுது, தாதா, பொய் சொல்ல ஆரம்பித்தீர்கள்?"



# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Fat People's Association.

தடியர்கள் ஸங்கம்.—தற்பொழுது ப்ரான்ஸின் தலைநகரமான பாரிஸ் பட்டணத்தில் தடியர்கள் ஸங்கமென்பதாக ஓர் ஸபை ஸ்தாபகரமாயிருக்கிறது. இந்த ஸபையில் ஸாமன்யமானவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவது கிடையாது. உடம்பு பருத்து வயிறு சரிந்த தடியர்கள் மாத்ரந்தான் இதில் சேர்ந்திருக்கிறார்கள். மற்றவர்கள் ஸங்கங்கள் கூடுவது எதற்காக? தங்கள் தங்கள் நன்மைக் கடுத்த காரியங்களைச் செய்யவேண்டுமென்று அதிகாரிகளைத் தூண்டுவதற்காக வல்லவா? அதுபோலவே மேற்சொன்ன தடியர்களுடைய ஸபை அதிகாரிகள் தடியர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று போதிப்பதற்காகவே ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. தங்கள் கொள்கைக் கிணங்க அவர்கள் தத்ஸமயத்தில் வாடகை மோட்டார் வண்டிகளுக்கும், ட்ராம் எனப்படும் கார்த வண்டிகளுக்கும் போடப்படுங் கதவுகள் தாங்கள் நுழையத்தக்கதாக விசாலமாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறார்கள். இதைப்போலவே பூர்வ காலத்தில் இங்க்லண்டிலும் ஓர் தடியர்கள் ஸபை ஸ்தாபிக்கப்பட்டிருந்ததாக "எக்கோஸ் ஆப் கிளப்ஸ்" என்ற சரித்ரப் புஸ்தகத்தில் வரையப்பட்டிருக்கிறது. இந்த ஸபையில் 15 மெம்பர்கள் தானிருந்தார்கள். இவர்களுடைய மொத்த நிறை 3 டன் அளவுக்குமேலிருந்ததாம். இவர்களுக்கு ஓர் ஸபைக்கட்டிடமு மிருந்தது. இந்தக் கட்டிடத்திற்கு இரண்டு கதவுகளிருந்தன. ஒரு கதவு ஸாதாரணமாய் வீடுகளுக்குப் போடப்படுங் கதவுகளினளவாகவே யிருந்தது. மற்றொரு கதவு தடியர்கள் தாராளமாய் நுழையத் தக்கதா யமைக்கப்பட்டிருந்தது. ஒருவர் புதிதாய் இந்த ஸபையில் சேர விரும்புவாரானால் அவரை முதலாவது சொல்லப்பட்ட கதவு மார்க்கமாய் ஸபைக் கட்டிடத்திற்குள்ளே நுழையச் சொல்லுவார்கள். அவர் அந்தக் கதவு வழியாகத் தாராளமாய்ச் சென்று விட்டால் அவரை அங்கத்தினராக அங்கீகரித்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர் அந்த வழியாய் உள்ளே நுழைய முடியாவிட்டால் உடனே மற்றொரு கதவைத் திறந்து அவரை உள்ளே யழைத்துச் சென்று அவரை ஸபையிற் சேர்த்துக் கொள்ளுவார்களாம். மற்ற ஸபைகளில் பல விஷயங்களைப் பற்றிப் பேச்சு நடப்பதுபோல் இந்த ஸபையில் நடப்பதில்லை.—சுதேச பரிபாலினி.

### World's Richest Women.

உலகத்தில் பெருஞ்செல்வமுடைய ஸ்த்ரீகள்.—தென்னமெரிக்காவிலுள்ள சினோராகஸின் என்னும் ஸ்த்ரீக்குள்ள ஸொத்துக்கள் 40 கோடி பவுன் மதிப்புடையனவாம். ஜெர்மனியிலுள்ள 'ப்ரூ' என்னும் ஸ்த்ரீக்கு வாரமொன்றுக்கு 10,000 பவுன் வரும்படியுள்ள ஸொத்துக்கள் இருக்கின்றனவாம். வட அமெரிக்காவிலுள்ள மிஸ் கெட்டி க்ரீஸ் என்னும் ஸ்த்ரீக்கு 1,20,00,000 பவுன் மதிப்புள்ள ஆபரணங்கள் இருக்கின்றனவாம். மெக்ஸிக்கோவிலுள்ள மிஸ் க்ரிஸ் என்னும் ஸ்த்ரீக்கு வருஷத்தில் 15,00,00,000 ரூபாய் வரும்படியுள்ள ஸொத்தும் ஆறு லட்சம் கால் நடைகளும் (குதிரை பசு முதலியனவும்) இருக்கின்றனவாம்.

### Annual Birth Rate.

ஒரு வர்ஷத்தில் பிறக்கும் குழந்தைகள்.—இவ்வுலகத்தில் வர்ஷ மொன்றுக்கு ஸுமார் மூன்று கோடியே அறுபது லக்ஷம் குழந்தைகள் பிறக்கின்றனவாம். அதாவது நிமிஷம் ஒன்றுக்கு 70 குழந்தைகள் பிறக்கின்றனவாம். ஒரு வர்ஷத்தில் பிறக்கும் குழந்தைகளை யெல்லாம் ஒரே வரிசையில் தொட்டில்களில் அமைத்துவைத்தால் அந்தத் தொட்டில்களில் இப்பூமண்டல முழுமையுஞ் சுற்றியிருக்குமாம். அதாவது அத்தொட்டில்களெல்லாஞ் சேர்ந்து இருபத்தையாயிரம் மைல் நீளமிருக்குமாம்.

### Delivery After 43 Years.

43-வர்ஷத்துக்குப்பிறகு பட்வாடா செய்யப்பட்டது.—இட்டலியிலுள்ள விடர்போ என்னும் ஊரில் 1870-ம் வர்ஷம் நவம்பர்மீ 23-தேதி தபாலில் போடப்பட்ட ஒரு கடிதம் 43-வர்ஷத்துக்குப் பிறகு ஸமீபத்தில் ரோம் நகரத்தில் பட்டுவாடா செய்யப்பட்டதாம். இவ்வளவுகாலம் தாமஸப்பட்டதற்கு காரண மின்னதென்பது தெரியவில்லை. ஆனால் 43-வர்ஷகாலம் வரையில் கடிதம் தபாலாபீஸுகளிலிருந்து கெட்டுப்போகாமல் பட்வாடா ஆனது ரொம்பவும் ஆச்சர்யமானதே.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

8-தேதி.

ஜெர்மானியர்கள் பாரிஸின் பக்கம் வந்தும் பாரிஸைப்பிடிக்க முடியாமல் பின்னிடைந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். கூட்டு ஸைன்யங்கள் அதிகமாக வந்திருப்பதனால், அவர்கள் பின்வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

10-தேதி.

ஜெர்மானிய ஸைன்யங்களின் வலதுபாகம் பின்னிடைந்துகொண்டிருக்கிறது. இன்றையதினம் மார்ன் நதியண்டை ஒரு பெரிய சண்டை நடந்தது. ஜெர்மானியர்கள் கூட்டுஸைன்யங்களை ஔர்ஸ் நதியண்டை முறியடிக்க முயன்றதில் முடியாமல் போயிற்று. ஜெர்மானியர்கள் இன்று 25-மைல் பின்னுக்குப் போனார்கள்.

11-தேதி.

ஜெர்மானியர்கள் இன்றையதினம் மார்ன்நதிச் சண்டையில் தோற்றுப் பின்னிடைந்தார்கள்.

12-தேதி.

ஜெர்மானியர்கள் பின்னிடைந்து கொண்டிருக்கிறார்கள். கூட்டு ஸைன்யங்கள் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

13-தேதி.

கூட்டு ஸைன்யங்களின் வலதுபாகம் ஏன் என்னும் நதியை ஸ்வாஸோன் என்னுமிடத்தில் கடக்க முயலுகையில் ஜெர்மன் ஸைன்யங்கள் பலமாக எதிர்த்தன. ஆயினும் கடைசியில் கூட்டு ஸைன்யங்கள் அந்த நதியைக் கடந்துவிட்டன.

ஜெர்மானியர்கள் அவர்களுடைய வலது பாகத்தில் பின்னிடைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆமியான் பட்டணத்தை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

ப்ரெஞ்சுதுருப்புகள் ஸ்வாஸோன் பட்டணத்தையும் லூனேவேல் பட்டணத்தையும் பிடித்திருக்கின்றன.

ப்ரெஞ்ச்ஸைன்யங்கள் ரீம்ஸ் பட்டணத்தைப் பிடித்திருக்கின்றன.

14-தேதி.

ஜெர்மன் இளவரசரின் ஸைன்யங்கள் கூட்டு ஸைன்யங்களால் பின் தள்ளப்பட்டன.

ஜெர்மானியர்கள் நான்ஸி ப்ரதேசத்தில் 10 நாள் சண்டை செய்து தோற்று அந்த ப்ரதேசத்தை விட்டு விட்டுப் போய் விட்டார்கள். இந்த யுத்தத்தில் 31,000 ஜெர்மானியர்கள் சேதமாம்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் முற்றுகை போட்டிருந்த ட்ராயன் கோட்டையை கூட்டு ஸைன்யங்களின் வலது பாகம் விடுவித்து விட்டது. கூட்டு ஸைன்யங்களின் வலது பாகம் ஜெர்மன் ஸைன்யங்களை லொர்ரய்னில் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்களின் வலதுபாக ஸைன்யங்கள் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. அவைகள் ஆமியான் பட்டணத்தை விட்டு விட்டன. கூட்டு ஸைன்யங்கள் அதைப் பிடித்துக்கொண்டன.

16-தேதி.

ஒரு ப்ரெஞ்ச் குதிரைப்படை பெல்ஜியத்திலுள்ள பாபரிஞ்ச் என்னுமிடத்தில் ஒரு பெரிய ஜெர்மன் குதிரைப்படையைத் தோற்கடித்துத் துரத்திற்று.

17-தேதி.

ஸ்வாஸோனில் ப்ரிட்டிஷாருக்கும் பின்னுக்கு ஓடிக்கொண்டிருந்த ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் நான்கு நாள் பலமான சண்டை நடந்தது.

ஜெர்மானியர்கள் இன்று டெர்மாண்டைத் தாக்கி அதை நாசம் செய்து விட்டார்கள்.

ஆய்ஸ் நதிக்கும் ம்யூஸ் நதிக்கும் நடுவில் ஜெர்மனியர்களுக்கும் கூட்டு ஸைன்யங்களுக்கும் பெரிய சண்டை நடக்கிறது.

19-தேதி.

பாரிஸுக்கு வடகிழக்கிலுள்ள ரீம்ஸுக்கும் ஸ்வாஸோனுக்கும் இடையிலும் அவைகளைச் சுற்றிலும் ஏன் நதியோரமாக ஜெர்மானியர்களுக்கும் கூட்டு ஸைன்யங்களுக்கும் 17 தேதி முதல் பலமான சண்டை நடந்து வருகிறது. இன்னும் முடிவு பெறவில்லை,



20-தேதி.

ஜெர்மானியர்கள் ரீம்ஸ் பட்டணத்தைத் தாக்கி அதிலுள்ள கோவிலின் ஒரு பாகத்தை எரித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

21-தேதி.

ரீம்ஸ் பட்டணத்திலுள்ள சிறந்த கோவிலை ஜெர்மானியர்கள் நாசம் செய்ததை ஆக்ஷேபிப்பதாக ப்ரான்ஸ் மற்ற ராஜாங்கங்களுக்குத் தெரிவித்திருக்கிறது.

22-தேதி.

ஏன் நதிக்கரையில் இன்னும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. கூட்டு ஸைன்யங்கள் மெதுவாக முன்சென்று கொண்டிருக்கின்றன.

ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப் மாகாணத்தில் ஜனங்களைச் சுட்டுக்கொண்டும், வீடுகளில் நெருப்பு வைத்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

24-தேதி.

ரீம்ஸ் பட்டணத்திலுள்ள கோவிலை ஜெர்மானியர்கள் இடித்ததைப்பற்றி ஆக்ஷேபிப்பதாய் ரோமிலுள்ள போப் கெய்ஸருக்கு தந்தியடித்திருக்கிறாராம்.

25-தேதி.

ப்ரான்ஸில் நடக்கும் சண்டைகளில் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களில் ஆபீஸர்கள் அதிகமாக இறந்துபோகிறார்களாம்.

நோயானுக்கு வடமேற்கில் கூட்டு ஸைன்யங்களின் இடதுபாகத்துக்கும் ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் பலமான சண்டை நடக்கிறது. கூட்டு ஸைன்யங்கள் சற்றுப் பின்வாங்கி யிருக்கின்றன.

26-தேதி.

ஜெர்மானியர்கள் ரீம்ஸிலுள்ள கோவிலை மறுபடியும் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கூட்டு ஸைன்யங்களின் இடது பாகத்துக்கும் ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் ஸாம்நதிக்கும் ஆய்ஸ்நதிக்கும் நடுவில் வெகு உக்ரமான சண்டை நடக்கிறது.

ப்ரான்ஸின் கிழக்கு ப்ரதேசத்திலுள்ள ஸாம்பிக்னி என்னும் ஊர் ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய பாயின்கரேயுக்கு சொந்தமானது. அதை ஜெர்மானியர்கள் தாக்கி நாசம் செய்துவிட்டார்கள். அவர்பிறந்த வம்சத்தைச்சேர்ந்த மற்றவர்களுடைய சொத்தையும் ஜெர்மானியர்கள் கொள்ளையிட்டார்களாம்.

27-தேதி.

ஜெர்மன் ஸைன்யங்கள் மாலின்ஸ் பட்டணத்தைத் தாக்க ஆரம்பித்துவிட்டன.

இன்றையதினம் ஒருஜெர்மன் ஆகாயக் கப்பல்காரர் பாரிஸில் 7-வெடி குண்டுகள் எறிந்தார்.

28-தேதி.

ஜெர்மானியர்கள் 26-தேதி இரவுமுதல் 27தேதிவரையில் இடைவிடாமல் கூட்டு ஸைன்யங்களின் இடது பாகத்தை ஏன் நதிக்கரையில் தாக்கினார்கள்.

சண்டை ஆரம்பித்ததுமுதல் இதுவரையில் ஜெர்மனிக்கு 64,872 பேர் சேதமாம்.

29 தேதி.

ஜெர்மானியர்கள் இன்று ஆண்ட்வெர்ப் கோட்டைகளைத் தாக்கினார்கள்.

அக்டோபர்மீ 1-தேதி.

ஏன் நதிக்கரையில் சண்டை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவிலிருந்து யுத்தத்துக்கு அனுப்பப்பட்ட ஸைன்யங்கள் ப்ரான்ஸுக்குப்போய்ச் சேர்ந்துவிட்டன. இவைகள் மார்ஸேல்ஸில் இறங்கின.

ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப்பை முற்றுகை போட்டு, வெளிக்கோட்டைகளில் சிலவற்றைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

2-தேதி.

ஜெர்மானியர்கள் மாலின்ஸ் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

4-தேதி.

ஆண்ட்வெர்ப்புக்குத் தெற்கே பெல்ஜியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் 5-நாள் உக்ரமான சண்டை நடந்தது. கடைசியில் பெல்ஜியர்கள் பின் வாங்கினார்கள்.

5-தேதி.

ஏன் நதிக்கரையில் இன்னும் சண்டை பலமாக நடந்துவருகிறது. சில இடங்களில் கூட்டு ஸைன்யங்கள் முன்சென்று கொண்டிருக்கின்றன.

6-தேதி.

கிழக்கு ப்ரஷ்யாவுக்குப் போயிருந்த ஜெர்மன் சக்ரவர்த்தி மறுபடியும் மேற்கில் நடக்கும் யுத்தத்துக்குப் போயிருக்கிறார்.

7-தேதி.

ஏன் நதிச்சண்டை இன்னும் நடக்கிறது. லில்லியிலும் லென்ஸிலும் சண்டை பலமாம்.

8-தேதி.

ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப் பட்டணத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஊரைவிட்டு ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

10-தேதி.

இன்று ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப் பட்டணத்தைப் பிடித்தார்கள்.

### ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா ஜெர்மனி ஆகிய இவைகளுக்கும் நடக்கும் யுத்தம்.

10-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியர்களை டோமாஸௌ என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள்.

13-தேதி.

ரஷ்யர்கள் கிழக்கு ஜெர்மனியில் பின்வாங்கிவிட்டார்கள். புதிதாய் அதிக ஜெர்மன் ஸைன்யங்கள் வந்ததே இதற்குக் காரணமாம்.

14-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியர்களை லெம்பர்க்குக்குப் பக்கத்தில்தோற்கடித்து 30,000 ஆஸ்ட்ரியர்களைக் கைதி செய்தார்கள்.

15-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியாவில் ஸான் நதியைக்கடந்து ராவுருஸ்காவுக்குப் பக்கத்தில் ஆஸ்ட்ரியர்களை தோற்கடித்தார்கள்.

16-தேதி.

காலீஷ்யாவில் ஜெர்மன் ஸைன்யங்கள் ஆஸ்ட்ரிய ஸைன்யங்களை தங்கள் பக்கம் வைத்துக்கொண்டு ரஷ்யர்களோடு யுத்தம்செய்ய முயன்றார்கள். ஆனால் ஆஸ்ட்ரியர்கள் பின்வாங்கி யோடிவிட்டார்கள். ஜெர்மானியர்களும் தோற்றுப்போனதோடு 5000 பேர் ரஷ்யர்களால் கைதி செய்யப்பட்டார்கள்.

17-தேதி.

ரஷ்யர்கள் லெம்பர்க்கைப் பிடித்ததுமுதல் இது வரையில் ஆஸ்ட்ரியர்களில் 2½-லக்ஷம்பேர் காயமடைந்தும் இறந்தும் போனார்களாம். ஒரு லக்ஷம்பேர் ரஷ்யர்களால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

18-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் காலீஷ்யா மாகாணத்திலிருந்து ஓடிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்களுக்குத் துணைசெய்யவந்த ஜெர்மானியர்களும் புறங்காட்டியோடுகிறார்களாம்.

19-தேதி.

ஜெர்மானியர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் முன்சென்றுகொண்டிருப்பதை ரஷ்யர்கள் தடுத்துவிட்டார்கள். சில ஜெர்மன் ஸைன்யங்கள் பின்வாங்குகின்றன.

22-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியாவில் தென்கிழக்கிலுள்ள ஜாரஸ்லாவ் பட்டணத்தைத் தாக்கிபிடித்தார்கள்.

23-தேதி.

கீழ்ப்ரஷ்யாவின் ஒரு பாகத்தில் ரஷ்யர்கள் பின்வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

25-தேதி.

ரஷ்யர்கள் வடகிழக்கு ஆஸ்ட்ரியாவில் ஆலிஸ்கி, பௌல்டின் ஆகிய இந்த இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

ரஷ்யர்கள் ப்ரஸிமிஸில் பட்டணத்துக்குத் தெற்கேயுள்ள கைரோ என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

28-தேதி.

ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் 8½ லக்ஷம் வீரர்கள் கொண்ட 22 ஸைன்யங்களுடன் கிழக்கு ப்ரஷ்யாவுக்குப் போயிருக்கிறாராம்.

29-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியாவிலுள்ள ப்ரஸிமிஸில் பட்டணத்தை சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அக்டோபர் மீ 2-தேதி.

ரஷ்யாவுக்கு ஸொந்தமான போலண்டில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டுப் பின்வாங்குகிறார்கள்.

ஜெர்மானியர்கள் அகஸ்டவோ என்னுமிடத்தில் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

3-தேதி.

ரஷ்யசக்ரவர்த்தியாகிய ஸார் போர் முனைக்குப்போயிருக்கிறார்.

5-தேதி.

ஜெர்மானியர்கள் ஆஸ்ஸோவெட்ஸ் என்னும் கோட்டையைத்தாக்கி அதைப் பிடிக்கமுயன்றும் முடியாமல் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டுப் பின்வாங்கி யோடினார்கள்.

6 தேதி.

ரஷ்யா 80 லக்ஷம் ஸேனை சேகரித்திருக்கிறதாம்.

8-தேதி.

ரஷ்யர்கள் ப்ரஸிமிஸில் பட்டணத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அநேக கோட்டைகளை நாசம் செய்துவிட்டார்கள்.



### ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் சண்டை.

15-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ஸெம்லினை விட்டு விட்டு ஓடி விட்டார்கள்.

ஸேவ், ட்ரினா என்னுமிரண்டு நதிகள் கூடுமிடத்தில் ஸெர்வியர்கள் 70,000 ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

18-தேதி.

மாண்டிநிக்ரர்களும், ஸெர்வியர்களும் பாஸ்னியா மேல் படையெடுத்துப்போய் ஸோராஸ்டாவைப் பிடித்து விட்டார்கள்.

21-தேதி.

மாண்டிநிக்ரர்கள் ஒரு பெரிய ஆஸ்ட்ரிய ஸைன்யத்தை லோஸ்னிட்ஸாவுக்குப் பக்கத்தில் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

22-தேதி.

ஸெர்வியர்கள் ட்ரினா நதியோரமாயுள்ள க்ருபாஞ்ச் என்னுமிடத்தில் 1½ லக்ஷம் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

24-தேதி.

மாண்டிநிக்ரர்கள் ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த கட்டாரோவைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

25-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் மறுபடியும் பெல்க்ரேடைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

30-தேதி.

ஆஸ்ட்ரியாவில் ஸெர்வியர்கள் பிடித்திருந்த ஸெம்லினை சில நாள்களுக்கு முன்னால் ஆஸ்ட்ரியர்கள் பிடித்து (25-தேதி) பெல்க்ரேடைத் தாக்கினார்கள். இப்போது ஸெர்வியர்கள் மறுபடியும் ஸெம்லினைப் பிடித்திருக்கிறார்கள்.

### ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை.

16-தேதி.

ஜப்பானியர்கள் கயாசௌ ப்ரதேசத்தில் ட்ஸிமோ என்னும் இடத்தைப் பிடித்தார்கள்.

20-தேதி.

ஜப்பானியர்கள் கயாசௌவிலுள்ள லாவோஷான் விரிகுடாவில் வாங்கோஹுவாங் என்னுமிடத்தில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தார்கள்.

22-தேதி.

கயாசௌவுக்குப் பக்கத்தில் ஜப்பானியர்களுடைய 'டார்ப்பிடோ' படகு ஒன்றைஜெர்மன் க்ரூஸர் கப்பல் ஒன்றுமூழ்கடித்துவிட்டது.

23-தேதி.

இன்றையதினம் ஒரு ப்ரிட்டிஷ் ஸைன்யம் கயாசௌவுக்குப் பக்கத்திலுள்ள லாவோஷான் விரிகுடா ஓரமாக இறங்கி ஜெர்மானியர்களைத் தாக்கப்போயிருக்கிறது.

26-தேதி.

ஜப்பானியர்கள் ட்ஸிங்டௌவைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானியர்கள் இன்றையதினம் கயாசௌவின் பக்கத்தில் ஜெர்மானியர்களை தோற்கடித்துத் துரத்தினார்கள்.

கயாசௌவுக்குப் பக்கத்தில் பைஷா, லிட்ஸன் என்னும் நதிகளுக்கு நடுவில் ஜப்பானியர்கள் ஜெர்மானியர்களை தோற்கடித்துத் துரத்தினார்கள்.

27-தேதி.

இன்று ஜப்பானியர்கள் ட்ஸிங்டௌ என்னுமிடத்துக்கு 7-மைல் தூரத்தில் வந்துவிட்டார்கள்.

அக்டோபர் மீ 1-தேதி.

கயாசௌவில் ஒரு ஜப்பானிய யுத்தக்கப்பல் ஜெர்மானியர்களால் மூழ்கடிக்கப்பட்டது.

5-தேதி.

ட்ஸிங்டோ கோட்டையிலுள்ள ஜெர்மானியர்கள் இரவில் ஜப்பானியர்களை எதிர்க்கமுயன்றதில் தோற்றுப் பின்வாங்கினார்கள்.

6-தேதி.

ஜப்பானியர்கள் பஸிபிக் ஸமுத்ரத்தில் ஜெர்மனிக்கு ஸொந்தமான மார்ஷால் தீவுகளில் ஒன்றாகிய ஜாலுட்தீவைப் பிடித்திருக்கிறார்கள்.

8-தேதி.

ஜப்பானியர்கள் பஸிபிக் ஸமுத்ரத்திலுள்ள ஜெர்மனிக்கு ஸொந்தமான யாப்தீவைப் பிடித்திருக்கிறார்கள்.

### பொது விஷயங்கள்

9-தேதி.

இந்தியர்கள் யாவரும் யுத்தத்தில் ப்ரிட்டிஷாருக்கு உதவி செய்ய முன் வந்திருப்பதைப்பற்றித் தாம் ஸந்தோஷப்படுவதாக நமது அரசர் வைஸ்ராய்க்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

12-தேதி.

ஒரு ஆஸ்ட்ரேலிய கப்பல்படை ஜெர்மனிக்கு ஸொந்தமான பிஸ்மார்க் ஆர்கிபிலாகோவைச் சேர்ந்த ஹெர்பர்ட்ஷோஹி என்னும் தீவைப் பிடித்தது.

வட அட்லாண்டிக் ஸமுத்ரத்தில் இருந்த பெர்விக் என்னும் ஒரு ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் (க்ரூஸர்) 'ஸ்பீவால்ட்' என்னும் ஜெர்மன் வ்யாபாரக்கப்பலைப் பிடித்தது. 'ஸ்பீவால்ட்' கப்பல் யுத்தக்கப்பலாக மாற்றப் பட்டிருந்தது.

## 14-தேதி.

'எம்டன்' என்னும் ஜெர்மன் 'க்ரூஸர்' கப்பல் வங்காளக் குடாக்கடலில் 10-தேதி முதல் 14-தேதி வரையில் 5-ஸ்டீமர்களை மூழ்கடித்து விட்டது. அந்தக் கப்பல்களிலுள்ளவர்களை 'எம்டன்' கப்பலின் தலைவர் இன்னொரு கப்பலில் ஏற்றி கல்கத்தாவுக்கு அனுப்பி விட்டார்.

இன்றையதினம் 'எம்டன்' என்னும் சண்டைக்கப்பல் 'க்ளான் மதீஸன்' என்னும் இங்க்லீஷ் கப்பலை மூழ்கடித்து விட்டது.

## 16-தேதி.

ப்ரிட்டிஷாரைச் சேர்ந்த 'ஸப்மாரின்' என்னும் ஜலத்தில் மூழ்கிச் சண்டைசெய்யும் கப்பலொன்று ஜெர்மனி ஓரமாக உள்ள ஹெலிகோலண்ட் தீவுக்கு 6 மைல் தெற்கில் ஒரு ஜெர்மன் யுத்தக்கப்பலை மூழ்கடித்து விட்டது.

## 18-தேதி.

பினாங்கு, சிங்கப்பூர், சீனா முதலிய விடங்களிலிருந்து தபால்களை எடுத்துக்கொண்டு ரங்கூனுக்குப் போய்க்கொண்டிருந்த 'டோவர்' என்னும் நார்வேக் கப்பலை வங்காள விரிகுடாவில் 'எம்டன்' கப்பல் தடுத்தது; அதன் உத்யோகஸ்தர்கள் தபால்களை எடுத்துக் கொள்ள எண்ணினார்கள். ஆனால் 'டோவர்' கப்பலின் காப்டன் தபால்களை அப்படியே போகும்படி விட்டால் யாதொரு கெடுதலும் இல்லை யென்றும், இல்லாவிட்டால் ரங்கூனிலுள்ளவர்கள் வீணாக கவலைப்படுவார்களென்றும் சொன்னதன்மேல் 'எம்டன்' கப்பலின் தலைவர் 'டோவரைப்' போகும்படி விட்டு விட்டார்.

## 20-தேதி.

'பிகாஸஸ்' என்னும் ஒரு சிறிய ப்ரிட்டிஷ் க்ரூஸர் கப்பல் கீழ் ஆப்ரிக்காவிலுள்ள ஸான்ஸிபார் என்னும் துறைமுகத்தில் கப்பல் யந்த்ரங்களைத் துடைத்துக் கொண்டிருக்கையில் 'கானிக்ஸ்பர்க்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் அதை சண்டைக்கு லாயக்கில்லாதபடி செய்து விட்டது.

## 22-தேதி.

சிலநாள்களாய் வங்காள விரிகுடாவில் அலைந்து கொண்டிருந்த 'எம்டன்' என்னும் ஜெர்மன் யுத்தக் கப்பல் (க்ரூஸர்) இன்று இரவு சென்னைத் துறைமுகத் தோரமாய் வந்து சென்னையைத் தாக்கிற்று. சில கட்டிடங்களில் குண்டுகள் தாக்கின.

கடற்கரை யோரமாய் இருக்கும் பர்மா ஆயில் கம்பெனியின் எண்ணெய் தொட்டிகளில் இரண்டு நெருப்புப்பிடித்துக் கொண்டு எரிந்துபோயின.

ரேவிலிருந்த பீரங்கிகள் 'எம்டனை'த் தாக்கின. சிறிது நேரத்துக்கெல்லாம் 'எம்டன்' கப்பல் புட்டணத்தில் இன்னம் சில குண்டுகள் சுட்டுவிட்டு புதுச்சேரிப் பக்கமாய்ப் போய்விட்டது.

ஸுமார் 20 சென்னைவாஸிகள் இறந்தும் காயமடைந்தும் போனார்கள்.

வடகடலில் ஜெர்மன் டார்பிடோ போட்டுகள் என்னும் யுத்தப்படகுகள் ப்ரிட்டனுக்கு ஸொந்தமான க்ரெஸி, அபெளகர், ஹோக், என்னும் 'க்ரூஸர்' கப்பல்களை மூழ்கடித்து விட்டன.

## 23-தேதி.

'சிக்குமா' என்னும் ஜப்பானியர்களுடைய 'க்ரூஸர்' யுத்தக்கப்பலும் ஒரு இங்க்லீஷ் யுத்தக்கப்பலும் 'எம்டனை'ப் பிடிக்கப்புறப்பட்டிருக்கின்றன.

## 25-தேதி.

அட்ரியாடிக் கடலிலுள்ள லிஸ்ஸா தீவை ப்ரெஞ்ச் கப்பல்படை தாக்கிப் பிடித்துவிட்டது.

## 28-தேதி.

இதுவரையில் 378 ஜெர்மன்கப்பல்கள் ப்ரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டிருக்கின்றன.

## 29-தேதி.

ஒரு இங்க்லீஷ் ப்ரெஞ்ச் படை ஜெர்மன் மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள காமரூன்ஸ் தேசத்தின் ப்ரதான பட்டணமாகிய டுவாலாவைப் பிடித்திருக்கிறது.

இன்றையதினம் இம்பீரியல் இந்தியன் ரிலீப் பண்டின் மதராஸ் பிரிவினுடைய ஜெனரல் கமிட்டியார் ஒரு மீட்டிங் கூடினார்கள். சென்னை கவர்னர் அந்த மீட்டிங்குக்கு சேர்மனாகவிருந்தார். பண்டுக்குச் சேரும் தொகையில் முக்கால் பாகத்தை ஸிம்லாவிலுள்ள ஸென்ட்ரல் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்றும், மிச்சமான பணத்தை இவ்விடத்தில் கஷ்டநிவர்த்திக்குச் செலவழிப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

'எம்டன்' என்னும் க்ரூஸர் 26-தேதி, 27-தேதிகளில் லக்ஷத்தீவுகளுக்கும் லங்கையிலுள்ள காலி துறைமுகத்துக்கும் நடுவில் இந்திய மாகாஸமுத்ரத்தில் 6-கப்பல்களைப் பிடித்து அவற்றில் 4-கப்பல்களை மூழ்கடித்து, அவைகளிலிருந்தவர்களை ஒரு கப்பலில் ஏற்றி கொழும்புக்கு யனுப்பிவிட்டது. இன்னொரு கப்பலில் நிலக்கரியிருந்தது. அதைத்தன்னிடம் வைத்துக்கொண்டது.

## அக்டோபர்௴ 3-தேதி.

ஜெர்மானியர்கள் ஜலத்தில்மூழ்கிச் சண்டைசெய்யும் கப்பல்கள் 50 கட்டிக்கொண்டிருக்கிறார்களாம்.

## 6-தேதி.

லக்ஸம்பர்க் ராஜ்யத்தின் அரசியை ஜெர்மானியர்கள் பிடித்து நூரம்பர்க் என்னும் ஊரில் வைத்திருக்கிறார்கள்.



SIR JOHN WALLIS.
Chief Justice, High Court, Madras.
ஸர் ஜான் வாலிஸ்.
சீப் ஜஸ்டிஸ், சென்னை ஹைகோர்ட்.



KING ALBERT OF BELGIUM.
ஆல்பர்ட், பெல்ஜியத்தின் அரசர்.

SUPPLEMENT TO " THE PEOPLE'S FRIEND."
" ஜனோபிமானி" க்கு அனுபந்தம்.



THE LATE ARCHDUKE FRANCIS FERDINAND
Crown Prince of Austria, and his family.
ஆர்ச்ட்யூக் ப்ரான்ஸிஸ் பேர்டினண்ட்.
காலஞ்சென்ற ஆஸ்ட்ரியாவின் இளவாசர்; அவர் குடும்பம்.



FRANCIS JOSEPH.
Emperor of Austria.
ப்ரான்ஸிஸ் ஜோஸப்.
ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தி.

SUPPLEMENT TO "THE PEOPLE'S FRIEND."
"ஜனுபிமானி"க்கு அனுபந்தம்.



THE LATE SIR T. PALIT.
காலஞ்சென்ற ஸர் தாரகநாத் பலிட்.



THE TSAR OF RUSSIA AND HIS HEIR.
ரஷ்ய சக்ரவர்த்தியும் அவருடைய இளவரசநும்.

OFFICE OF THE REGISTRAR OF ... 23 DEC 1914 MADRAS

SUPPLEMENT TO "THE PEOPLE'S FRIEND."
"ஜநபிமானி" க்கு அநுபந்தம்.



H. H. THE NIZAM OF HYDERABAD.
ஹைதராபாத் நிஜாம் அரசர்.



THE "EMDEN."
"எம்டன்" என்னும் ஜேர்மன் க்ரூஸர்.

SUPPLEMENT TO THE "PEOPLE'S FRIEND."
"ஜநபிமானி" க்கு அநுபந்தம்.



SIR EDWARD GREY.
Foreign Secretary, England.
ஸர் எட்வர்ட் க்ரே,
அன்ய தேச வ்யவஹார மந்த்ரி, இங்கலண்ட்.



EARL KITCHENER.
War Secretary, England.
லார்ட் கிச்சனர்,
யுத்த மந்த்ரி, இங்கலண்ட்.

# ஜனோபகாரி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE'

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 7 } Vol. 7. } ஆனந்தவருஷ ஐப்பசிமீ, OCTOBER 1914. { ஸஞ்சிகை 2, { No. 2.


OFFICE OF THE REGISTRAR ... 23 DEC 1914 ... MA...

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 4 0 | ... ... | 0 6 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page ... | 5 0 0 | per month. |
| ½ do ... | 2 8 0 | do |
| ¼ do ... | 1 4 0 | do |
| 1/10 do ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபகாரி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபகாரி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1 க்கு | ... 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி | ... 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி | ... 0 4 0 | ... | 0 6 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |
| 1/10 பக்கத்திற்கு | , | ,, | 1 0 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**

3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜநோபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்த௵ ஐப்பசி௴, [ஸஞ்சிகை 2.


## ORGANISATION OF AN ARMY.

### ஸைன்யத்தின் அமைப்பு.

ஒவ்வொரு தேசமும் வைத்துக்கொண்டிருக்கும் சேனுபலமானது தரைப்படை, கடல்ப்படை, ஆகாயப்படை என்று மூன்று வகைகளாக இருக்கிறது. தரைப்படையிலுள்ள ஸைன்யங்களில் முக்யமாய் மூன்று பிரிவுகள் உண்டு. அவையாவன: 'இன்பண்ட்ரி' யென்று சொல்லப்படும் காலாள்படை; காவல்ரியென்று சொல்லப்படும் குதிரைப்படை ; 'ஆர்ட்டிலரி' யென்று சொல்லப்படும் பீரங்கிப்படை.

### காலாள்படை.

காலாள் படையிலுள்ள ஸோல்ஜர்கள் 'பயனட்' என்று சொல்லப்படும் சனியன் வைத்திருக்கும் துப்பாக்கிகளுடன் யுத்தம் செய்வார்கள். சண்டைசெய்யும்போது ஸோல்ஜர்கள் முதலில் எதிரிகளை துப்பாக்கியால் சுட்டுத் தாக்குவார்கள். பிற்பாடு கிட்ட நெருங்கின போது சனியனுல் குத்தித்தாக்குவார்கள்.

### குதிரைப்படை.

குதிரைப்படையிலுள்ள ஸோல்ஜர்களின் ஆயுதங்கள் கத்தியும், துப்பாக்கியுமாகும். 'லான்ஸர்ஸ்' என்னும் குதிரைப் படைக்கு கத்திக்குப் பதிலாக ஈட்டிகள் உண்டு. சில உத்யோகஸ்தர்களுக்கும், சில குதிரை வீரர்களுக்கும் 'ரிவால்வர்' என்னும் கைத்துப்பாக்கிகளும் உண்டு.

குதிரைப் படையின் முக்ய கடமைகளாவன:—எதிராளிகளின் ஸைன்யங்கள் இன்ன இடத்தில் இருக்கின்றன, இந்தப் பக்கம் போகின்றன என்பதைப்பற்றி தவறில்லாமல் சீக்ரம் தெரிந்துவருவதற்காக குதிரைப்படையிலுள்ள ஸோல்ஜர்கள் வெளியே சென்று, அவ்விஷயங்களைப்பற்றிய ஸமாசாரங்களை அறிந்துவந்து ராணுவ அதிகாரிகளுக்குத் தெரிவித்தல்; எதிரிகளோடு எதிர்த்துச் சண்டை செய்தல்; தோற்றுப்போன எதிரிகள் ஓடும்போது அவர்களைத் தாக்கி அவர்களை கலைந்தோடும்படி செய்தல் ஆகிய இவைகளே.

### பீரங்கிப்படை.

பீரங்கிப்படைக்கு இங்க்லீஷில் ஆர்ட்டிலரி என்று பெயர். ஆர்ட்டிலரியில் நான்கு விதங்கள் உண்டு. இவைகளில் 'ஹார்ஸ் ஆர்ட்டிலரி' யென்பது யுத்த காலங்களில் குதிரைப்படையோடு கூடப்போகும். இதன் பீரங்கிகளை வெகு ஸுலபமாய் இடம்விட்டு இடம் மாற்றலாம்.

'பீல்ட் ஆர்ட்டிலரி' என்னும் பிரிவுகள் யுத்தகாலங்களில் காலாள் படையின் பின்பக்கமிருந்துகொண்டு எதிரிகளைத் தாக்கும். பீரங்கிகளால் எதிரிகளைத் தாக்கி அவர்களைக் களைக்கச் செய்தபிறகு காலாள்படை எதிரிகளைத்தாக்கும். சிலஸமயங்களில் புறங்காட்டியோடும் எதிரிகளின்மேல் குண்டுகள்விட்டு அவர்களை அலமலங்கச் செய்வதுமுண்டு. 'மௌண்டன் ஆர்ட்டிலரி' யென்பது மலைப்ராந்தியங்களில் உபயோகப்படும் பீரங்கிப் படையின் பிரிவுகள். இந்தப் படையிலுள்ள பீரங்கிகள் அவைகளைப் பாகம் பாகமாகப் பிரித்து ம்ருகங்களின்மேல் ஏற்றி செங்குத்தான இடங்களுக்கும் ஏற்றிப் போகும்படி அமைக்கப்பட்டிருக்கும்.

'காரிஸன் ஆர்ட்டிலரி' என்னும் பீரங்கிப் படைகள் கோட்டைகளைக் காப்பதற்கு ஏற்பட்டிருப்பவை,



### இஞ்ஜினீயர்கள்.

ஸைன்யத்தில் 'இஞ்ஜினீயர்கள்' என்று ஒரு பிரிவு இருக்கிறது. இந்த 'இஞ்ஜினியர்'களின் வேலைகள் பின் வருமாறு :—

ரோடுகள் போடுதல், பாலங்கள் கட்டுதல், ரெயில்வே ரோடுகள் போடுதல், தந்திக் கம்பிகள் போட்டும், டெலிபோன்கள் போட்டும் அவைகளை நடத்தி வருதல், ஸைன்யங்கள் தங்குவதற்கு இடங்களை செப்பனிடுதல்; கோட்டைகளைக் காத்துக்கொள்ளுதலையும், எதிரிகளின் கோட்டைகளைத் தாக்குவதையும் மேற்பார்வை பார்த்தல், இடிக்கவேண்டிய கட்டடங்கள், பாலங்கள் முதலியவைகளை இடித்தல், ஸர்வேக்கள் செய்தல் ஆகிய இவைகளாகும். இந்த ஸைன்யத்திலுள்ளவர்கள் மராமத்து வேலையில் தேர்ந்திருப்பதோடு யுத்தத்திலும் தேர்ந்தவர்கள். இவர்களுக்கு மற்ற ஸோல்ஜர்களைப்போல் துப்பாக்கிகளும் உண்டு.

இவர்களுக்கு இன்னொரு முக்யமான வேலையுண்டு. யுத்தம் நடக்குமிடங்களில் உள்ள பற்பல சேனைப் பிரிவுகளுக்கும் ஸமாச்சாரப் போக்கு வரத்துகள் நடப்பதற்காக தந்தி ஏற்பாடும், கம்பியில்லாததந்தி ஏற்பாடும் அமைத்து தந்தி ஸமாசாரங்கள் அனுப்புவதுண்டு. மேலும் இவர்கள் யுத்தத்தில் வேண்டிய மாப்புகள், ப்ளான்கள் முதலியவைகளும் ராணுவ உத்தரவுகளும் அச்சடிப்பதும், போட்டகிராப் படங்கள் எடுப்பதும் உண்டு.

### ஆர்மி ஸேர்விஸ் கோர்.

இந்தப் பிரிவைச் சேர்ந்த கம்பெனிகள் ஸைன்யங்களின் ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்ற விடத்துக் கொண்டுபோவதற்கும், ஸைன்யங்களுக்கு ஆகாரம் தயார் செய்து கொடுப்பதற்கும் இன்னும் ஸைன்யம் ஸம்பந்தமான மற்ற வேலைகளைச் செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு இரண்டு குதிரைகள் கட்டி இழுக்கப்படும் பெரிய வண்டிகள் உண்டு. இவைகளில் ஸைன்யங்களின் ஸாமான்கள், சாப்பாட்டு ஸாமான்கள் முதலியவைகளைப் போட்டுக்கொண்டு ஓரிடத்திலிருந்து மற்ற விடத்துக்குக் கொண்டுபோவார்கள்.

### ஆர்மி மெடிகல் கோர்.

ஸைன்யங்களுக்கு வைத்ய உதவிசெய்வதற்காக ஏற்பட்டிருக்கும் ஜனங்களுக்கு 'ஆர்மி மெடிகல் கோர்' என்று பெயர். இவர்கள் குதிரைப்படை, காலாள்படை, பீரங்கிப்படை ஆகிய இவைகளோடு கூடப்போய், அந்தந்தப் படையில் காயமடைந்தவர்களுக்கு சிகித்ஸை செய்வார்கள்.

### மற்ற டிபார்ட்மெண்டுகள்.

'ஆர்மி ஆர்ட்னன்ஸ் டிபார்ட்மெண்டு' யுத்தத்துக்குவேண்டிய ஸாமான்கள் ஸப்ளை செய்வதற்காக ஏற்பட்டிருக்கிறது. 'ஆர்மி பே டிபார்ட்மெண்டு' ஸைன்யங்களுக்கு சம்பளம் பட்வாடா செய்வதற்கு ஏற்பட்டிருக்கிறது. 'ஆர்மி வெடிரினரி டிபார்ட்மெண்டு' ஸைன்யங்களின் குதிரைகளையும் மற்ற ம்ருகங்களையும் பராமரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

---

## THE ARMIES OF BELLIGERENT POWERS.

### யுத்தம்செய்யும் அரசுகளின் ஸைன்யங்கள்.

### THE BRITISH EMPIRE.

### ப்ரிட்டிஷ் ராஜ்யம்.

ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் ஸைன்யங்கள்

(1) இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் ஆகிய இவைகளிலும், இங்க்லண்டின் ஆதீனத்துக்குள்பட்ட ப்ரதேசங்களிலும் உள்ள ப்ரிட்டிஷ் யுத்த ஆபீஸுக்குள்பட்ட ஸைன்யங்கள் ;

(2) இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள்; இந்திய ஸைன்யங்கள்;

(3) கனடா, ஆஸ்ட்ரேலியா, ந்யூ ஸீலண்ட், தென் ஆப்ரிக்கா ஆகிய இந்த நாடுகளின் ஸைன்யங்கள் ஆகிய இவைகளாகும்.

ப்ரிட்டிஷ் ஸைன்யம்.

ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் மூன்றுவகைப்படும். அவையாவன.

(1) 'ரெகுலர் ஆர்மி' என்று சொல்லப்படும் க்ரமமான ஸைன்யங்கள்.

(2) 'டெரிடோரியல் ஆர்மி.'

(3) மற்ற சில்லரை ஸைன்யங்கள்.

ராணுவத்தில் சேரும் ஸோல்ஜர்கள் மொத்தம் 12-வர்ஷகாலம் வேலையிலிருக்கவேண்டும். பென்ஷன் வேண்டுமென்பவர்கள் 21-வர்ஷம் வேலையிலிருக்கவேண்டும்.

முன் சொன்ன 12-வர்ஷகாலத்தில் சில வர்ஷங்கள் பட்டாளத்திலேயே சேர்ந்திருக்கவேண்டும். பிறகு பாக்கி வர்ஷங்களில் தங்களுக் கிஷ்டமான வேறு வேலைகளில் அமர்ந்திருக்கலாம். யுத்த காலங்களில் ஸைன்யத்தில் சேரும்படி உத்தரவு வந்தவுடன் ஸைன்யங்களில் சேர்ந்து கொள்ளவேண்டும். இப்படி யுத்தத்தில் பழகி ரெஜிமெண்டை விட்டு விலகியிருப்பவர்களுக்கு 'ரிஸர்வ்' என்று பெயர்.

க்ரமமான ஸைன்யத்தில் ரெஜிமெண்டுகளில் சேர்ந்திருக்கும் துருப்புகளும் 'ஆர்மி ரிஸர்வ்' என்று சொல்லப்படும் துருப்புகளும் இருக்கின்றன.

க்ரமமான ஸைன்யத்தில் உள்ள பல பிரிவுகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| காலாள் படை ... | 1,49,656 |
| குதிரைப்படை ... | 21,228 |
| பீரங்கிப்படை ... | 49,785 |
| இஞ்ஜினீயர்கள் ... | 9,°48 |
| மற்ற டிபார்ட்மெண்ட் ஸிப்பந்திகள் ... | 15,122 |
| குடியேற்ற நாட்டுத் துருப்புகள் ... | 3,977 |
| இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகள் ... | 4,833 |
| மொத்தம் ... | 2,54,249 |
| 'ஆர்மி ரிஸர்வ்' துருப்புகள் ... | 1,40,756 |

இவைகளைத் தவிர 'ஸ்பெஷல்' ரிஸர்வ் என்று சில ஸைன்யங்கள் இருக்கின்றன. இவைகளின் ஸங்க்யை 67,586. இந்த ஸைன்யத்திலுள்ளவர்கள் க்ரமமான ஸைன்யங்களைப்போல் பயிற்சி செய்யப்படாமல் முதலில் ஆறுமாஸம் தொடர்ச்சியாய் யுத்தப் பயிற்சி செய்து, பிறகு வர்ஷந்தோறும் 15 நாள் பயிற்சி செய்யப்படுவார்கள். இவர்களை யுத்தகாலங்களில் தேவையானபோது க்ரமமான ஸைன்யங்களில் சேர்த்துக் கொள்வது வழக்கம்.

படை யெடுப்பு ஸைன்யம்

ஐரோப்பிய யுத்தகாலங்களில் இங்கலண்டிலிருந்து ஏதாவது ஸைன்யங்கள் அனுப்ப வேண்டியிருக்குமென்பதை உத்தேசித்து சில வர்ஷங்களுக்கு முன்னால் இத்தனை ஸைன்யம் அனுப்புவதென்று தீர்மானித்து வைத்திருக்கிறார்கள். இந்தப் படையெடுப்பு ஸைன்யத்தில் ஆபீஸர்களும் ஸோல்ஜர்களும் மற்ற ஸிப்பந்திகளும் சேர்ந்து 1,63,331 பேர் இருப்பார்கள். இதில் குதிரைப்படையைச் சேர்ந்தவர்கள் 9,344. பீரங்கிப்படையைச் சேர்ந்தவர்கள் 28,520; காலாள்படையைச் சேர்ந்தவர்கள் 91,022; இஞ்ஜினீயர்கள் 6,507. இப்படிப்பட்ட ஸைன்யத்துக்கு வைத்யம் செய்பவர்கள், ஸப்ளைசெய்பவர்கள் முதலியவர்கள் 25,640; இப்படிப்பட்ட படையெடுப்பு ஸைன்யத்துடன்தான் ஜெனரல் ஸர் ஜான் ப்ரெஞ்ச் ப்ரான்ஸில்போய் யுத்தம்செய்துகொண்டிருக்கிறார்.

டெரிடோரியல் ஆர்மி.

இது தேச பாதுகாப்புக்காக ஜனங்கள் ஸ்வதாவாகச் சேர்ந்துகொண்டிருக்கும் ஸைன்யங்களாகும். இதில் குதிரைப் படையும் காலாள் படையும், பீரங்கிப் படையும், க்ரமமான ஸைன்யங்களுக்குள்ள மற்ற உபகரணங்களும் உண்டு. இதிலுள்ள ஸோல்ஜர்களுக்கு தொடர்ச்சியாக க்ரமமான ராணுவப் பயிற்சி ஒன்றும் கிடையாது. இவர்கள் வர்ஷத்தில் 8-முதல் 15-நாள் ராணுவ விஷயங்களில் பயிற்சி பெறுவார்கள். இந்த ஸைன்யத்தில் உள்ள பல பிரிவுகளின் ஸங்க்யை பின்வருமாறு.



| | |
|---|---|
| குதிரைப்படை ... | 24,423 |
| 'ஹார்ஸ் ஆர்ட்டிலரி' யென்னும் குதிரை பீரங்கிப்படையும், 'பீல்ட் ஆர்ட்டிலரி' யென்னும் காலாட்படையுடன்கூடப் போகும் பீரங்கிப்படையும் ... | 30,123 |
| 'காரிஸன் ஆர்ட்டிலரி' யென்னும் கோட்டைகளைக் காக்கும் பீரங்கிப் படை ... | 9,484 |
| இஞ்ஜினியர்கள் ... | 13,105 |
| காலாள் படையும் ஸைகிள் ஏறிப்போகிறவர்களும் ... | 168,576 |
| டிபார்ட்மெண்டல் துருப்புகள் ... | 21,106 |
| மொத்தம்... | 2,66,817 |

இவர்கள் தங்கள் தேசத்திலேயே யிருந்து சண்டை செய்யக் கடமைப் பட்டவர்கள். ஆயினும் இஷ்டப்பட்டவர்களுக்கு வேறு தேசங்களிலும் போய் சண்டைசெய்ய இப்போது அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அப்படி வேறு தேசங்களுக்கு அனுப்புமுன், யுத்தம் ஆரம்பித்த பிறகு 6 மாஸகாலம் அவர்களுக்கு ராணுவத்தில் பயிற்சி செய்வித்துப் பிறகுதான் வெளியிடங்களுக்கு அனுப்புவார்கள்.

மற்றசில்லரை ஸைன்யங்கள்.

மேலே சொன்ன ஸ்பெஷல் ரிஸர்வ், டெரிடோரியல் ஆர்மிஆகிய இவைகளுக்கு வேண்டிய ஆபீஸர்களை பயிற்சி செய்விக்க 'ஆபீஸர்ஸ் ட்ரெய்னிங்கோர்' என்று ஒரு ஸைன்யம் இருக்கிறது. இதில் காலேஜுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் உள்ளமாணவர்களை ராணுவத்தில் பயிற்சி செய்விக்கிறார்கள்.

'நாஷனல் ரிஸர்வ்' என்று ஒரு ஸைன்யம் இருக்கிறது. ஸைன்யத்தில் சேர்ந்திருந்து காலக்ரமத்தில் விட்டுவிட்டவர்களில் யுத்த காலங்களில் தேசத்துக்காக சண்டை செய்யத் தயாராயிருப்பவர்களுக்குத்தான் 'நாஷனல்ரிஸர்வ்' என்று பெயர். இவைகளைத் தவிர வேறு சில சில்லரை ஸைன்யங்களும் இருக்கின்றன.

ப்ரிட்டிஷ் ஸைன்யத்தின் அமைப்பு.

ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் காலாள்படையில் ஒரு பட்டாளமென்பது ஸுமார் 800-முதல் 1030-ஸோல்ஜர்கள் வரையிலுள்ள ஒரு பிரிவாகும். ஸாதாரணமாய் இரண்டு பட்டாளங்கள் சேர்ந்த ஒரு ஸைன்யத்துக்கு ஒரு ரெஜிமெண்டென்று பெயர். இரண்டு ரெஜிமெண்டுகள் சேர்ந்தால் ஒரு ப்ரிகேடாகும். இரண்டு ப்ரிகேடும், சில குதிரைப் படையின் பிரிவுகளும் பீரங்கிப் படையின் பிரிவுகளும் இஞ்ஜினியர்களும் ஸைன்யத்துக்கு உதவியாயிருக்கவேண்டியமற்ற வைத்யர்கள் முதலியவர்களும் சேர்ந்த ஒரு ஸைன்யத்துக்கு ஒரு டிவிஷன் என்று பெயர். ஒரு டிவிஷனில் உள்ள மொத்தம் ஜனங்கள் ஸுமார் 20,000. இவர்களில் ஸுமார் 16,000 பேர்கள் ஸோல்ஜர்கள்.

குதிரைப் படையில் 150 பேர் கொண்ட பிரிவுக்கு ஸ்க்வாட்ரன் என்று பெயர். 3-ஸ்க்வாட்ரன் சேர்ந்தால் ஒரு ரெஜிமெண்டாகும். மூன்று ரெஜிமெண்டுகள் சேர்ந்ததற்கு ப்ரிகேட் என்று பெயர். இரண்டு அல்லது நான்கு ப்ரிகேடுகளும், 6-முதல் 24-பீரங்கிகளும் இஞ்ஜினியர்களும் மற்ற உதவி மனிதர்களும் கொண்ட குதிரை ஸைன்யத்துக்கு ஒரு குதிரைப் படை (காவல்ரி) டிவிஷன் என்று பெயர். ஒரு குதிரைப்படை டிவிஷனில் ஸாதாரணமாய் 6000 வீரர்கள் இருப்பார்கள்.

### இந்திய ஸைன்யங்கள்.

இந்திய ஸைன்யங்கள் மொத்தம் பத்து டிவிஷன்களென்னும் வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் இருக்குமிடம் பின்வருமாறு.

| பெயர். | | | இடம். |
|---|---|---|---|
| 1-வது | டிவிஷன் | ... | பெஷாவார். |
| 2 | ,, ,, | ... | ராவில்பிண்டி. |
| 3 | ,, ,, | ... | லாகூர். |
| 7 | ,, ,, | ... | மீரட். |
| 8 | ,, ,, | ... | லக்னௌ. |

இந்த ஐந்து டிவிஷன்களும் சேர்ந்து 'வட ஸைன்யம்' என்று பெயரிடப்படுகிறது. இந்த வடஸைன்யத்தின் தலைமைஸ்தானம் முர்ரீ யென்னும் பட்டணம்.

| | | | |
|---|---|---|---|
| 4-வது | டிவிஷன் | ... | க்வெட்டா. |
| 5 | ,, ,, | ... | மௌ. |
| 6 | ,, ,, | ... | பூனா. |
| 9 | ,, ,, | ... | உதகமண்டலம். |

இந்த நான்கும்சேர்ந்து தென் ஸைன்யமாகும். இந்த தென்ஸைன்யத்தின் தலைமைஸ்தானம் (ஹெட்க்வார்ட்டர்ஸ்) உதகமண்டலம்.

பாக்கி பத்தாவது டிவிஷன் பர்மாவில் மாண்டலேயிலிருக்கிறது.

இந்தியாவிலுள்ள ஸைன்யங்களின்மொத்தத்தொகை 2,52,741. இதில் 1,72,671 இந்தியர்களாகும். மற்றவர்கள் ப்ரிட்டிஷ் ஜனங்கள்.

### ப்ரிட்டிஷ் குடியேற்ற நாட்டு ஸைன்யங்கள்.

(i) ஆஸ்ட்ரேலியாவில் ஸமாதானமுள்ள ஸாதாரண காலங்களில் உள்ள ஸைன்யத்தின் தொகை 1,05,000. யுத்தகாலங்களில் உபயோகப்படக்கூடிய ஸைன்யத்தின் மதிப்பு 1,50,000. ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஸைன்யத்தில் பெரும்பாகம் குதிரைமேலேறி யுத்தம் செய்யும் காலாள் படையாகும். இந்த தேசத்தில் 12-வயஸுக்குமேல் 26-வயஸு வரையிலுமுள்ள எல்லா ஆண்களும் ஸோல்ஜர்களாகப்பயிற்சி பெறவேண்டியது கட்டாயமானது.

(ii) ந்யூஸீலண்ட் என்னும் நாட்டிலுள்ள ஸைன்யத்தின் தொகை ஸமாதானகாலத்தில் 30,000. இந்த தேசத்திலும் ஆண்களுக்குக் கட்டாயப்படுத்தி ராணுவப்பயிற்சி செய்விக்கிறார்கள்.

(iii) கனடாவிலுள்ள ஸைன்யத்தின்தொகை ஸாதாரணகாலங்களில் 75,000. யுத்தகாலத்தில் 1,50,000 பேருக்குமேல் உண்டு. இந்த தேசத்தில் எல்லா ஆண்களும் கட்டாயமாய் ராணுவப் பயிற்சியடைந்து மூன்றுவர்ஷம் ஸைன்யத்தில் சேர்ந்திருக்கவேண்டும்.

(iv) தென்னாப்ரிக்காவில் உள்ள இம்பீரியல் துருப்புகளின் தொகை 6,800. ஸாதாரண ஸமாதானகாலத்தில் உள்ள அந்தநாட்டின் சொந்த ஸைன்யங்கள் 20,000. இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் 17-வது வயதுமுதல் 60-வது வயதுவரையில் யுத்தகாலங்களில் ஸைன்யத்தில்சேர்ந்து சண்டைசெய்யக் கடமைப்பட்டவர்கள். ஒவ்வொரும் 4-வர்ஷம் ராணுவத்தில் பயிற்சியடையவேண்டும்.

## II
## FRANCE.
### ப்ரான்ஸ்.

ப்ரான்ஸிலுள்ள எல்லா ஆண்களும் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்கள். தேகஸுகமில்லாதவர்கள் மாத்ரம் ராணுவத்தில் சேராமல் இருக்க அநுமதி பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் 20-வது வயஸில் ராணுவத்தில் சேரவேண்டும். ராணுவத்தில் ஒவ்வொருவரும் முதலில் மூன்று வர்ஷம் க்ரமமான ஸைன்யத்தில் சேர்ந்திருக்க வேண்டும். பிறகு 11-வர்ஷம் 'ஆர்மி ரிஸர்வ்' என்ற ரிஸர்வ் ஸைன்யத்தைச் சேர்ந்தவராகிறார்.

பிறகு 7-வர்ஷம் 'டெரிட்டோரியல் ஆர்மி' என்ற ஸைன்யத்திலும் இன்னும் 7-வர்ஷம்



'டெரிட்டோரியல் ரிஸர்வ்' என்ற ஸைன்யத்திலும் சேர்ந்திருக்க வேண்டும்.

ப்ரான்ஸிலுள்ள ஸைன்யங்கள் இரண்டு பிரிவுகளாப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கு 'மெட்ரபாலிடன் ஆர்மி' என்று பெயர். இது ப்ரான்ஸிலேயே தயாரிக்கப்பட்ட ஸைன்யமாகும். இரண்டாவது பிரிவுக்குப் பெயர் 'கலோனியல் ஆர்மி.' அதாவது குடியேற்ற நாட்டு ஸைன்யம்.

ப்ரான்ஸில் காலாள்படையின் பிரிவுகள் பின்வருமாறு. 3 பட்டாளங்கள் சேர்ந்து ஒரு ரெஜிமெண்டாகும். இரண்டு ரெஜிமெண்டுகள் ஒரு ப்ரிகேடாகும். இரண்டு ப்ரிகேடுகள் சேர்ந்து ஒரு டிவிஷன் என்னப்படும். இரண்டு டிவிஷன் சேர்ந்த ஸைன்யத்துக்கு ஒரு ஆர்மிகோர் என்று பெயர். ஒரு ஆர்மிகோரில் 33,000 போர்வீரர்கள் இருப்பார்கள். இன்னும் ஒவ்வொரு ஆர்மிகோரிலும் மொத்தம் 144 பீரங்கிகள் கொண்ட 36 பீரங்கிப்படைகள் உண்டு. இப்படிப்பட்ட 'ஆர்மிகோர்' ப்ரான்ஸில் 21 இருக்கின்றன.

காவல்ரி யென்னும் குதிரைப்படையானது 'டிவிஷன்'களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குதிரைப்படை டிவிஷனில் மொத்தம் 4700 போர்வீரர்கள் இருப்பார்கள். இதில் 12-பீரங்கிகள் உண்டு. ப்ரான்ஸில் இப்படிப்பட்ட குதிரைப்படை டிவிஷன்கள் 10 இருக்கின்றன.

### சேனுபலம்.

ப்ரான்ஸில் க்ரமமான ஸைன்யத்தின் தொகை 8,00,000. ரிஸர்வ் ஸைன்யம் மொத்தம் 5 லக்ஷமிருக்கிறது. இவைகளைத்தவிர டெரிடோரியல் ஆர்மி என்றும், டெரிடோரியல் ரிஸர்வ் என்றும் ரிஸர்வ் ஸைன்யங்களும் இருக்கின்றன.

குடியேற்ற நாட்டு ஸைன்யங்களில் மொத்தம் 87,000 ஸோல்ஜர்கள் இருக்கிறார்கள். இதில் 28,000 பேர் ப்ரான்ஸில் இருக்கிறார்கள். பாக்கி 59,000 பேர்கள் குடியேற்ற நாடுகளில் இருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் ப்ரான்ஸின் ஸைன்யம் 40 லக்ஷம் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

## III
## GERMANY.
### ஜெர்மனி.

ஜெர்மனியில் ஒவ்வொருவரும் கட்டாயமாக ராணுவத்தில் சேர்ந்து வேலை செய்யக் கடமைப்பட்டவர். ஒவ்வொருவரும் தமது 17-வது வயஸில் ராணுவத்தில் சேரத் தயாராக இருக்கவேண்டும். ஆனால் ஸாதாரணமாக 20-வது வயஸில் தான் ராணுவத்தில் சேர்த்துக் கொள்வது வழக்கம். இருபது வயஸுள்ள எல்லாரையும் ராணுவத்தில் சேர்த்துக்கொள்வதும் கிடையாது. ஒவ்வொரு வர்ஷமும் 50,000 பேர் விதம் ஜனங்களைத் தெரிந்தெடுத்து ஸைன்யத்தில் சேர்த்துக் கொள்வது வழக்கம். ஒவ்வொரு ஸோல்ஜரும் 7-வர்ஷம் 'ஸ்டாண்டிங் ஆர்மி' என்னும் நிலையான ஸைன்யத்தில் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு சில வர்ஷங்கள் ஸைன்யத்தைச் சேர்ந்த 'ரிஸர்வ்' ஆக இருக்கவேண்டும்.

இதற்குப் பிறகு ஸோல்ஜர்கள் சிலவர்ஷகாலம் லாண்ட்வேர் என்னும் ரிஸர்வ் ஸைன்யத்திலும் சிலவர்ஷங்கள் லாண்ட்ஸ்ட்ரம் என்னும் ரிஸர்வ் ஸைன்யத்திலும் சேர்ந்தவர்களாவார்கள்;

ஜெர்மன் ஸைன்யத்தில் காலாட் படையின் அமைப்பு பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 3 பட்டாளம் | ... | 1 | ரெஜிமெண்ட் |
| 2 ரெஜிமெண்ட் | ... | 1 | ப்ரிகேட். |
| 2 ப்ரிகேட் | ... | 1 | டிவிஷன். |
| 2 டிவிஷன் | ... | 1 | ஆர்மி கோர். |

ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவுகளில் சிலவற்றிற்கு 3-டிவிஷன்கள் உண்டு. யுத்த

காலங்களில் எல்லா ஆர்மிகோருக்குமே 3-டிவிஷன்கள் உண்டு. அநேக டிவிஷன்களுக்கு 3-ப்ரிகேடுகள் உண்டு. ஆர்மிகோர்களில் சிலவற்றிற்கு 30,000 ஸோல்ஜர்களும், வேறு சிலவற்றிற்கு 43,000 ஸோல்ஜர்களும் இருப்பார்கள். இந்த மாதிரியான 'ஆர்மிகோர்' என்னும் ஸைன்யங்கள் ஜெர்மனியில் 25 இருக்கின்றன. இவைகளோடு 8-டிவிஷன் குதிரைப் படையும் அநேக பீரங்கிகளும் இருக்கின்றன.

ஸமாதான காலங்களில் ஜெர்மனியின் ஸைன்யங்கள் ஸுமார் 8,00,000 ஆபீஸர்களும் ஸோல்ஜர்களுமாகும்.

லாண்ட்வெர் என்னும் ரிஸர்வில் 18-லக்ஷம் பேரும், லாண்ட்ஸ்ட்ரம் என்னும் ரிஸர்வ் ஸைன்யத்தில் 8-லக்ஷம் பேரும் இருக்கிறார்கள்.

ஜெர்மனியின் குடியேற்ற நாட்டு ஸைன்யத்தில் ஆபீஸர்களும் ஸோல்ஜர்களுமாக 6400 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 2700 பேர் சீனாவிலுள்ள கயாசௌவில் இருக்கிறார்கள். ஜெர்மன் தென் மேற்கு ஆப்ரிக்காவில் 2150 பேர்கள் இருக்கிறார்கள்.

## IV
## AUSTRIA
## ஆஸ்ட்ரியா.

ஆஸ்ட்ரியாவில் ராணுவத் தொழில் எல்லாருக்கும் கட்டாயமானது. ஒவ்வொருவரும் 19-வயஸில் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்கள். ஆனால் ஸாதாரணமாய் 21-வயஸில்தான் ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு வர்ஷத்திலும் ராணுவத்தில் சேரவரும் வாலிபர்களில் ஒரு பாகத்தை ஆஸ்ட்ரியா ஹங்கேரி ராஜ்யத்தின் இம்பீரியல் ராயல் ஸைன்யத்துக்கும், இன்னொரு பாகத்தை ஆஸ்ட்ரியா ராஜ்யத்து ஸைன்யத்துக்கும், மற்ற பாகத்தை ஹங்கேரி ராஜ்யத்து ஸைன்யத்துக்கும் சேர்த்துக்கொள்வார்கள், ராணுவத்தில் சேரும் வாலிபர்கள் சில வர்ஷம் க்ரமமான ஸைன்யத்திலும், சில வர்ஷங்கள் ரிஸர்வ் ஸைன்யத்திலுமாக மொத்தம் 12-வர்ஷங்கள் ராணுவத்தில் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அதற்குப் பிறகு ஒவ்வொருவரும் தங்கள் 42-வது வயஸு வரையில் லாண்ட்ஸ்ட்ரம் என்னும் இரண்டாவது ரிஸர்வு வகுப்பில் இருக்கவேண்டும்,

ஸாதாரண காலங்களில் ஆஸ்ட்ரியா ஹங்கேரி ராஜ்யத்துக்கு உள்ள ஸைன்யத்தின் தொகை பின்வருமாறு.

| | |
|---|---|
| இம்பீரியல் ஸைன்யங்கள் ... | 600,000 |
| ஆஸ்ட்ரியாவுக்கும் ஹங்கேரிக்கும் ப்ரத்யேகமாயுள்ள ஸைன்யங்களின் மொத்தமதிப்பு. ... | 230,000 |

யுத்தம் நேர்ந்தபோது மற்ற ரிஸர்வுகளையெல்லாம் சேர்த்தால் கிடைக்கக்கூடிய மொத்த ஸைன்யத்தின் மதிப்பு 18 லக்ஷமாகும்.

ஆஸ்ட்ரிய ஸைன்ய ஏற்பாட்டில் ஒரு ஆர்மிகோருக்கு 34,000 போர்வீரர்கள் இருப்பார்கள். ஒரு ஆர்மிகோரில் 32 பட்டாளங்களும், அதற்குவேண்டிய பீரங்கிகளும் மற்ற உதவி ஆள்களும் உண்டு. ஆஸ்ட்ரியா-ஹங்கேரியில் 16-ஆர்மி கோர்கள் இருக்கின்றன.

ஆஸ்ட்ரியா-ஹங்கேரிக்கு 6-டிவிஷன் குதிரைப்படைகள் இருக்கின்றன. ஒரு குதிரைப் படை டிவிஷனில் 4,000 வீரர்கள் இருப்பார்கள்.

## V.
## RUSSIA.
## ரஷ்யா.

ரஷ்யாவில் எல்லாரும் ராணுவத்தில் சேரக் கடமைப்பட்டவர்கள். ஒவ்வொரு வாலிபரும் 20-வது வயஸில் ராணுவத்தில்சேர்ந்து 3-வர்ஷம் அதில் வேலை செய்யவேண்டும். பிறகு 15-வர்ஷம் க்ரமமான ஸைன்யங்களைச்சேர்ந்த ரிஸர்வாக இருக்கவேண்டும், பிறகு தமது



43-வது வயஸுவரையில் இரண்டாவது 'ரிஸர்வாக' இருந்து தேச பாது காப்புக்காகக் கூப்பிடும்போது ராணுவத்தில்சேரத் தயாராயிருக்கவேண்டும்.

ரஷ்யாவில் 37-ஆர்மிகோர் என்னும்சேனைப் பிரிவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆர்மிகோரிலும் 36,000 காலாள்களும், 4000 குதிரை வீரர்களுமாக 40,000 பேர்கள் உண்டு. மொத்தமுள்ள 37-ஆர்மி கோர்களில் 27-ஐரோப்பிய ரஷ்யாவிலும், 3 காகஸஸ் ப்ரதேசத்திலும், 2 துருக்கிஸ்தானத்திலும், 5 ஸைபீரியாவிலும் இருக்கின்றன.

இவைகளைத்தவிர 'காஸாக்ஸ்' என்னும் ஜாதியைச்சேர்ந்த குதிரைப்படைகள் இருக்கின்றன. இந்த ஸைன்யங்களின் மொத்த மதிப்பு 150,000 பேராகும். ஸாதாரண ஸமாதானகாலங்களில் உள்ள ஸைன்யங்களின் மதிப்பு பின்வருமாறு.

| | ஐரோப்பாவும் காகஸஸ் ப்ரதேசமும். | ஆசியா. |
|---|---|---|
| காலாள்படை | 627,000 | 83,000 |
| குதிரைப்படை | 116,000 | 14,000 |
| பீரங்கிப்படை | 138,000 | 15,000 |
| இஞ்ஜினியர்கள் | 34,000 | 8,000 |
| மற்ற ராணுவ ஸிப்பந்திகள் | 34,000 | 5,000 |
| மொத்தம் | 949,000 | 1,25,000 |

யுத்தகாலங்களில் ரஷ்யாவுக்கு 50 லக்ஷம் வீரர்கள் கிடைக்கக்கூடுமாம்.

## VI.
## BELGIUM.
## பெல்ஜியம்.

பெல்ஜியத்தில் ஸமாதானகாலத்தில் உள்ள ஸைன்யத்தின் மொத்த தொகை 50,300. ஆனால் யுத்தகாலத்தில் கிடைக்கக்கூடிய மொத்தம் ஸைன்யம் 3,50,000. அங்கே யுத்தத்தில் சேருபவர்கள் முதலில் 5-வர்ஷம் க்ரமமான ஸைன்யத்தில் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு 3-வர்ஷம் அந்த ஸைன்யத்தைச் சேர்ந்த ரிஸர்வாக இருக்கவேண்டும். இந்த ரிஸர்வுக்கு முதல் ரிஸர்வ் என்று பெயர். க்ரமமான ஸைன்யமும் அதைச் சேர்ந்த முதல் ரிஸர்வும் சேர்ந்து ஆக்டிவ் ஆர்மி என்று பெயர். இதற்குப் பிறகு ஸோல்ஜர்கள் 5-வர்ஷம் இரண்டாவது ரிஸர்வாக இருக்கவேண்டும். யுத்தம் நேர்ந்தால் உடனே அனுப்பக்கூடிய ஸைன்யத்தின் தொகை 6 காலாள் படை டிவிஷனும், 2 குதிரைப்படைடிவிஷனுமாகும். ஒரு காலாள் படை டிவிஷனில் ஸுமார் 22000 போர் வீரர்கள் இருப்பார்கள். ஒரு குதிரைப்படை டிவிஷனில் 4000 போர் வீரர்கள் இருப்பார்கள்.

6 காலாள் படை டிவிஷனிலும் 2 குதிரைப் படை டிவிஷனிலும் உள்ள போர் வீரர்களும் மற்ற ஸிப்பந்தி மனிதர்களும் சேர்ந்து மொத்தம் 1,70,000 பேர் இருப்பார்கள். பெல்ஜியத்தில் கோட்டைகள் அதிகம். தேசத்தைக் காக்கவேண்டுமென்றால் முக்யமாய்க் கோட்டைகளைத்தான் காக்கவேண்டியது. இந்த ஸைன்யத்தில் ஸுமார் 1,40,000 பேர் கோட்டைகளைக்காக்க நியமிக்கப்படுவார்கள்.

ஸாதாரண ஸைன்யங்களைத் தவிர 'ஸாண்டேர்மரி' யென்று ஒரு ஸைன்யம் இருக்கிறது. இதில் மொத்தம் 3800 பேர்கள் இருக்கிறார்கள். கார்ட் ஸிவிக் என்ற இன்னொரு ஸைன்யத்தில் 46,000 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு ஸைன்யங்களும் ராணுவத்தைச் சேர்ந்தவைகளென்றாவது ஸிவில் அதிகாரத்தைச் சேர்ந்தவைகளென்றாவது சொல்வதற்கில்லாமல் நடுத்தரமான ஸைன்யங்களாக இருக்கின்றன.

## VII.
## SERVIA.
## ஸேர்வியா.

ஸெர்வியாவில் ஒவ்வொருவரும் ராணுவத்தில் சேரவேண்டியது கட்டாயமானது, வாலி

பர்கள் 21-வது வயஸில் ராணுவத்தில் சேர்ந்து 1½-அல்லது 2 வர்ஷம் ஸைன்யத்தில் வேலைசெய்துகொண்டிருந்து, பிறகு 10-வர்ஷம் முதல் ரிஸர்விலும், 6-வர்ஷம் இரண்டாவது ரிஸர்விலும், 7-வர்ஷம் மூன்றாவது ரிஸர்விலும் இருப்பார்கள். ஸெர்வியாவுக்கு 5 டிவிஷன் காலாள் படையும், 1 டிவிஷன் குதிரைப்படையும் இருக்கின்றன. பால்கன் யுத்தம் நடப்பதற்கு முன்னால் 1911-ம் வர்ஷத்தில் ஸெர்வியாவுக்கு 3,60,000 ஸோல்ஜர்கள் இருந்தார்கள் என்று தெரிகிறது. இது ஸமாதானகால ஸைன்யத்தின் மதிப்பாகும். யுத்த காலங்களில் அதிகம் கிடைக்கலாம்.

## MANURE

BY

M. VAIDYANADHAN.

### உரம்.

தக்கபடி சாஸ்த்ர மறிந்து உரமிடுதலே ச்லாக்யம். உரமிடுவதற்கு முன் வயலில் இன்ன ஸத்து குறைவாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டிய தவச்யம். நெல்லுக்கு மூன்றுவிதமான ஸத்துக்கள் வேண்டும். சில நிலங்களில் பயிர் ஸத்தாகிய 'நைட்ஜின்' அதிகமாயிருக்கும். வேறு நிலத்தில் தாள் ஸத்தாகிய சாம்பல் காரம் (பொடாஷ்) அதிகமாயிருக்கும். மற்றொரு நிலத்தில் தான்ய ஸத்தாகிய 'பாஸ்பாரிக் ஆஸிட்' என்று சொல்லப்படும் ப்ரகாசதமிலம் அதிகமாய் இருக்கும். அநேகமாய் மூன்றாவது சொன்னதைவிட முதல் இரண்டாவதுதான் அதிகமாயிருக்கும். அநேக இடங்களில் ப்ரகாசதமிலம் கொஞ்சமாகவே யிருக்கும். இவற்றை யெல்லாம் அநுபோகத்தால் ஸாதாரணமா யறிந்துகொள்ளலாம். பயிர் கருப்பாயும், ஓங்கியும், கதிர் காணும் முந்தியே தலை கீழாய் சாய்ந்து விடக் கூடியதும், சாயாமல் இருந்து நெல்குறைவாக காண்கிறதுமான புலங்கள், முறையே நைட்ரஜினும் பொடாஷும் அதிகரித்தவையென்று கண்டுகொள்ள வேண்டும். பயிர்கள் வெளுத்தும் வைத்தது முதல் கிளைவெடிக்காமலும், நெல்காணாமலும் இருந்தால் அந்த ஸ்தலத்தில் மூன்று ஸத்துக்களும் குறைவாகவே யிருக்கின்றனவென்று ஊகித்துக் கொள்ளவேண்டும். சில இடங்களில் வைக்கோல் குறைவாகவும் தான்யம் மதிப்புக்குமேல் மிகுதியாகவும் காண்பதுண்டு; அந்நிலத்தில் தான்ய ஸத்து சற்று அதிகமாய் அமைந்திருக்கும். ஆகவே குறைகளை அறிந்து நிறை செய்யவேண்டும்.

பெரும்பாலும் நமது ராஜதானியில் தொழு எரு, சாம்பல், தழை ஆகிய இவைகளையே உபயோகப் படுத்துவதால், மூன்றாவதாகிய தான்ய ஸத்து (ப்ரகாசதமிலம்) குறைவாகவே யிருக்கிறது.

தான்யத்தை அதிகரிக்க வேண்டுமானால் ப்ரகாசதமிலத்தை (பாஸ்பாரிக் ஆஸிட்) ஜாஸ்தியாகப் போடவேண்டும். இந்த எருவை ரஸாயன உரக்கிடங்குகளிலிருந்து தருவித்துக் கொள்ளலாம். ஆனால் விலை அதிகரிக்கும். சிறிது பணச்செலவுகளில் எரு சேர்க்கவேண்டுமானால் எலும்புத்தூள், இரும்பு சுட்டகரி, பக்ஷிகளின் மலம் ஆகிய இவைகளை உபயோகிக்கவேண்டும். எருக்கந் தழையும் ப்ரயோஜன முண்டு.

அதிக கொழுமை யடைந்த நிலங்களில் சற்று சுண்ணாம்பு சேர்க்கலாம். சாதாரண நிலங்களுக்கு சுண்ணாம்பு சேர்க்க கூடாது. "சுண்ணாம்பு வண்டியின் எருவண்டி போக வேண்டும்", "பிதாவை ப்ரபுவாக்கும், பிள்ளையை தரித்ரனாக்கும் சுண்ணாம்பு" என்ற வாக்யங்களால் சுண்ணாம்பை உபயோகப் படுத்தக் கூடாதென்று தோன்றுகிறது. உரம் பலவிதத்திலும் சேர்க்கவேண்டும். தொழு எரு தகுந்த விதமாய் நீருடன் சேர்க்கப்பட்டால் ச்லாக்யமானதுதான். கோஜலம்



வினில் பூமியில் ஊறிவிடாதபடி காய்ந்த மணலை தினமும் மாடுகட்டுவதற்கு முந்தி தொழுவத்தில் இறைத்து மாடுகட்டி. காலையில் மணலுடன் சேர்த்து குழியில் கொட்ட வேண்டும். தொழு எருவை குழியில் சேகரிப்பதே விசேஷம். ஆனால் கோடையிலேயே வயலில் கொட்டி உலரும்படி செய்வது விவேகமல்ல.

நாற்றங்கால்களுக்கும் குறுவை நிலங்களுக்கும் ஆட்டுமந்தை ச்லாக்யமானது. "ஆடு மிதியாக் கொல்லையும் ஆணில்லாப் பெண்ணும்—வீண்".

சாம்பல் காரம் தாளை அழுத்தமாகவும், நிமிர்ந்தும் இருக்கச் செய்கிறது. தான்யமும் கொழுமையடையும்.

தழை உரங்களை வயலில் விளைவித்துக்கொள்வதே லாபகரமானது. கொளுஞ்சி, அவுரி, தக்கை, சடம்பு இவைகளை மார்கழி மாஸத்தில் அறுவடைக்கு முந்தி தகுந்த ஈரத்தில் விதைத்து விடவேண்டும். கொளுஞ்சி விதைத் தோல் கனமாக இருப்பதால் விதைகள் அழுந்தக்கூடியஈரம் இருக்கவேண்டும். உரலிலிட்டு தீட்டி விதைத்தால் சீக்கிரம் முளைக்கிறது. அவுரியைப் புழுதியில் விதைத்தால் தகுந்தபடி பயிராகிறது. தக்கை களர் நிலங்களுக்கு உபயோகமானது. சணப்பு முதல் தரமான சிகண ஸத்து.

தவிர வேலிகளில் பயிராகும் ஆடு தொடா இலையும், தோட்டங்களில் பயிராகும் உளுந்துப் பயிரும் சிறந்த தழை எரு.

பக்ஷி மலங்களை சேகரிப்பது நமது நாட்டில் அருமையா யிருக்கிறது. வாத்துக்களை வயல்களில் மேயவிடுவதால் முதல் தரமான (பாஸ்பாரிக் ஆஸிட்) தான்ய ஸத்து கிடைக்கும்.

சில இடங்களில் *சவிரியின் கட்டைகளை வாங்கி வந்து அடிக்கு ஓர் துண்டாக சேற்றில் புதைத்து விடுகிறார்கள்.

எம். வைத்யநாதன்.

*சவிரி என்றால் இடிமயிர், அல்லது பெண்கள் தலைமயிருடன் கூட அணிந்துகொள்ளும் மயிர். இது ஓர் வகைமானிடம் கிடைக்கிறது. மயிரின் அடியில் கட்டை இருக்கும்.

## THE WAR AND THE GROUNDNUT TRADE.

### யுத்தமும் வேர்க்கடலை வ்யாபாரமும்.

இப்போது ஐரோப்பாவில் நடந்து வரும் யுத்தத்தினால் இந்தியாவின் வ்யாபாரத்துக்கு தடை யேற்பட்டிருக்கிறது. தான்யவகைகள் எண்ணெய் வித்துகள், பருத்தி, தோல் முதலிய ஏற்றுமதிப் பொருள்கள் அவைகள் போக வேண்டிய இடங்களுக்கு அனுப்ப முடியாமல் இங்கேயே தங்கியிருக்கின்றன. இவைகளில் எப்பொழுதும் ஏராளமான வ்யாபாரம் நடப்பதால், ஏராளமான நஷ்டம் ஏற்படக்கூடும்.

ஏற்றுமதியைப் போலவே இறக்குமதியும் தடைபட்டிருப்பதில், அதனாலும் நமக்குக் கஷ்டங்கள் ஏற்படும்.

இவைகளை யுத்தேசித்து அநேகர் இறக்குமதிச் சரக்குகளில் கூடுமானவற்றை இங்கேயே செய்து தேசத்தின் கைத்தொழில் நிலைமையை பலப்படுத்த வேண்டுமென்றும், ஏற்றுமதிச் சரக்குகளுக்கும் ஏதாவது வழிகள் செய்து வ்யாபாரத்தில் நஷ்டம் ஏற்படாதபடி காக்க முயற்சி செய்யவேண்டுமென்றும் சொல்லி வருகிறார்கள்.

சென்னை கைத்தொழில் டிரெக்டர் யுத்தத்தால் வ்யாபாரம் பாதிக்கப்படுவதைப் பற்றியும், அதற்கு ஏதாவது பரிஹாரங்கள் செய்ய முடியுமா என்பதைப் பற்றியும் பரிசீலனை செய்து ஒரு ரிபோர்ட்டு எழுதி கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார், அந்த ரிபோர்ட்டில் இறக்குமதி வ்யாபாரம், ஏற்றுமதி வ்யாபாரம் ஆகிய இவைகள் யுத்தத்தால் எப்படி பாதிக்கப்படுகின்றன என்பதைப்பற்றியும் புதுக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்க முடியுமா என்பதைப் பற்றியும் ப்ரஸ்தாபித்திருக்கிறார். அந்த ரிபோர்ட்டில் வேர்க்கடலை வ்யாபாரத்தைப் பற்றியும் வேர்க்கடலையை எண்ணெ

யாட்டுவதைப் பற்றியும் சொல்லும் பாகத்தை கீழே சுருக்கி எழுதுகிறோம்.

கிழக்குக்கரை ஜில்லாக்களிலிருந்து வர்ஷந்தோறும் 2,20,000 டன் நிறையுள்ள 30 லக்ஷம் மூட்டை வேர்க்கடலை அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாகிறது. இதன் மொத்த மதிப்பு 4-கோடி ரூபாயாகும். மொத்தம் வேர்க்கடலையில் கொஞ்ச பாகம் கோடைப் பயிரின் மாஸூலாகும். இந்தக் கோடை மாஸூல் ஜூலை மாஸ வாக்கில் விற்பனைக்கு வருகிறது. மழை காலத்து மாஸூல் ரொம்ப ஜாஸ்தியானது. இது டிஸம்பர் மாஸவாக்கில் விற்பனைக்கு வருகிறது. மொத்தம் வேர்க்கடலையில் இந்த ராஜதானியிலேயே உபயோகப்பட்டுப் போனதுபோக பாக்கியுள்ளதில் பெரும்பாகம் ப்ரான்ஸின் தெற்கேயுள்ள மார்ஸேல்ஸுக்கும் மீதி வேறு இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சென்ற ஆகஸ்ட் மாஸம் 31-தேதியன்று ஏற்றுமதி வ்யாபாரிகளிடம் 30 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள வேர்க்கடலை கையிருப்பாக இருந்தது. இது முழுவதும் சென்ற வர்ஷத்து மாஸூலின் ஒரு பாகமாகும். இந்தச் சரக்கானது வ்யாபார நிலைமை சரியானவுடன் ஏற்றுமதி செய்யப்பட்டு போகும்.

இந்த வர்ஷத்து வேர்க்கடலையின் கோடை மாஸூல் விற்பனைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆனால் இப்போது யுத்தம் நடந்துகொண்டிருப்பதில் வ்யாபாரம் தடைப்படவே அநேகமாய் எல்லா மாஸூலும் விவஸாயிகளின் கையிலேயே இருக்கிறது. இந்த மாஸூலின் மதிப்பு ஸுமார் 26 லக்ஷம் ரூபாயாகும்.

இப்போது ஸாகுபடியாகிக்கொண்டிருக்கும் வேர்க்கடலை டிஸம்பர் மாஸத்தில் விற்பனைக்கு வரும். இப்போது கப்பல் போக்குவரத்து அநேகமாய் நின்றுவிட்டதால் வேர்க்கடலை ஏற்றுமதியும் நின்றுபோய்விட்டது. அதனால் கையிருப்பு வேர்க்கடலையானது கெடுதலடைந்துகொண்டு வருகிறது. இன்னும் மூன்று நான்கு மாஸத்தில் இப்போது கையிருப்பிலுள்ள வேர்க்கடலை முழுவதும் கெட்டுப்போகக்கூடும். நமது ராஜதானியில் உள்ளூர் உபயோகத்துக்காக அதிகம் வேர்க்கடலை வேண்டியிருப்பதில்லை. அப்படி ஜனங்களின் உபயோகத்துக்கு வேண்டிய வேர்க்கடலையும் உள்ளூர் வ்யாபாரிகளிடம் இருந்து வருகிறது. ஆகவே வேர்க்கடலையைக் கெடாமல் வைத்திருக்கவேண்டுமானால் அதை எண்ணெயாக ஆட்டுவதைத் தவிர வேறுவழியில்லை. எண்ணெயை சரியானபடி வைத்திருந்தால் அது ஒரு வர்ஷம் கெடாமலிருக்கும்.

முன் சொன்னபடி வேர்க்கடலை மாஸூல் சென்ற வர்ஷத்து பாக்கியும், கோடைமாஸூலும், மழைக்கால மாஸூலும் சேர்ந்து ஏராளமாக விருப்பதால், இவைகளை எண்ணெயாட்டுவதென்றால் பெரிய யந்த்ரங்கள் வாங்கவேண்டியிருக்கும். தக்க யந்த்ரங்கள் வாங்கி ஸ்தாபித்து வேலை நடத்துவதற்கு ஸுமார் 2 அல்லது $2\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் வேண்டியிருக்கும்.

நிற்க, இப்போது வேர்க்கடலை ஏற்றுமதி நின்றிருப்பதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. (1) கப்பல்கள் போக்குவரத்து தடைப்பட்டிருப்பது. (2) மார்ஸேல்ஸில் வ்யாபாரமும் கைத்தொழிலும் தடைபட்டிருப்பது. (3) மதராஸிலுள்ள பாங்கிகள் ப்ரெஞ்ச் பாங்கிகளை நம்பி கப்பல் ரசீதுகளின்மேல் பணம் கொடுக்க ஸம்மதப்படாமலிருப்பது.

இந்த மூன்று காரணங்களும் ஸ்வல்பகாலத்துக்கு மாத்ரம் இருக்குமென்று தோன்றுகின்றனவே யொழிய, இவைகள் நீடித்து நிற்கும்படியான காரணங்கள் என்று தோன்றவில்லை. இப்பொழுதும் அநேக கப்பல் வ்யாபாரிகள் கப்பல் நிறைய சரக்கு ஏற்றுவதாயிருந்



தால் கப்பல்கள் வாடகைக்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். மார்ஸேல்ஸிலும் வ்யாபாரம் வெகுகாலம் தடைப்பட்டிருக்காது. அங்கே இப்போது வ்யாபாரமும் கைத்தொழிலும் மறுபடியும் ஆரம்பமாகி விட்டனவென்று அநேகர் எண்ணுகிறார்கள். ஆகவே சென்னை பாங்கிகள் பணம்கொடுக்க முன்வந்தவுடன் வேர்க்கடலை வ்யாபாரம் மறுபடியும் ஆரம்பித்துவிடும். ஆகையால் இவைகளை யுத்தேசித்து எண்ணெயாட்டுவதற்கு யந்த்ரங்கள் வாங்குவதற்காக ஏராளமான பணம் போடுவது சரியென்று தோன்றவில்லை.

மேலும் கடலையை எண்ணெயாக ஆட்டிவிடலாமென்றால் அதற்கு சிலதடைகள் இருக்கின்றன. முதலாவது இந்தியாவிலிருந்து இதுவரையில் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டதில்லை. புதிதாக எண்ணெய் ஏற்றுமதி செய்வதென்றால் அதை விற்க எந்தவிடங்களுக்கு அனுப்புவதென்று ஒரு கேள்வியுண்டாகிறது. இப்போது மார்ஸேல்ஸில்தான் எண்ணெய் ஆட்டுந்தொழில் ப்ரபலமாய் நடந்துவருகிறது. இந்தத் தொழிலில் ஒரு பாகத்தை இந்தியாவிலேயே நடத்தி, இங்கிருந்து எண்ணெயை நேராக வேண்டியவர்களுக்கு அனுப்புவதென்றால், அதைப்பற்றி பூராவிசாரிக்காமல் அப்படி எண்ணெயாக அனுப்புவது நல்லதா என்பதைப்பற்றி ஒன்றும் திட்டமாய்ச் சொல்ல முடியாது. அப்படி விசாரிப்பதற்கும் வெகு காலமாகும்.

வேர்க்கடலையை எண்ணெயாட்டுவதற்கு இரண்டாவது ஆக்ஷேபணையென்னவென்றால் ஆட்டின எண்ணெயை வெளியூர்களுக்கு அனுப்புவதற்கு ஏராளமாய் பீப்பாய்கள் வேண்டியிருக்கும். இப்போது இந்தியாவில் இறக்குமதியாகும் பீப்பாய்கள் ரொம்ப கொஞ்சமாகையால் அவைகள் ஏராளமாய் ஆட்டப்படும் எண்ணெயைக் கொட்டி அனுப்புவதற்குப் போதமாட்டா. ஆகையால் இந்தியாவிலேயே பீப்பாய்கள் செய்வதற்கு எண்ணெய்ப் பீப்பாய்களும் தகரங்களும் செய்யும் யந்த்ரங்கள் ஸ்தாபிக்க வேண்டும். இதற்கு அரை லக்ஷம் ரூபாய் போல் பிடிக்கும்.

மேலும் இது விஷயமாய் விவஸாயிகளினுடைய அபிப்ராயமும், வ்யாபாரிகளினுடைய அபிப்ராயமும் எப்படியிருக்கின்றனவென்று தெரியவில்லை. அவர்கள் கடலையை எண்ணெயாட்டவேண்டுமென்று விரும்புகிறார்களென்று நிச்சயமாய்த் தெரியவில்லை. ஏனென்றால் கடலையை எண்ணெயாக ஆட்டினால், எண்ணெயை எந்த இடங்களில் விற்கலாமென்பது ஸந்தேகம். ஆனால் வேர்க்கடலையை ஏற்றுமதி செய்வதற்கு ஸௌகர்யம் ஏற்படும் வரையில் அதுரொம்ப கெட்டுப்போகாமல் இருக்குமானால், பிற்பாடு நிச்சயமாய் விலைப்போகும்.

மேலும் எண்ணெய் ஆட்டுந்தொழில் ஏற்படுத்துவதில் அநேக கஷ்டங்களும் ஏராளமான பணச்செலவும் ஏற்படும். அந்தத்தொழில் லாபகரமாய் நடந்துவருமா என்பதும் ஸந்தேகமாயிருக்கிறது. ஏனென்றால் இந்தத் தொழில் கடைத் தேறுவதென்றால் இப்போதுள்ள வ்யாபாரநிலைமை வெகுகாலம் வரையில் நீடித்திருக்கவேண்டும். வேர்க்கடலைப் பருப்பு ஸுமார் 6-மாஸம் கெடாமலிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதற்குள் வ்யாபாரநிலைமை சரிப்பட்டுப்போய், கடலையை ஏற்றுமதிசெய்ய ஸௌகர்யங்கள் வாய்த்துவிட்டால் உடனே எல்லாரும் கடலையை அப்படியே ஏற்றுமதிசெய்ய ஆரம்பித்துவிடுவார்கள். எண்ணெய்த்தொழிலில் போட்டமுதல் வீணாகப்போய்விடும். அதுவரையில் ஆட்டின எண்ணெயை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்வதும் கஷ்டமான கார்யம். ஆகையால் எண்ணெயை விற்பதற்கு மார்ஸேல்ஸைத்தவிர வேறு நல்ல இடமிருக்கிறதென்று தெரியும்

வரையில் ஒன்றும் செய்வதற்கில்லை. சூடியசீக்ரம் வ்யாபாரம் சரியான நிலைமையை அடைந்துவிடுமென்று தோன்றுகிறதால் வ்யாபாரிகள் கடலையை எண்ணெயாக ஆட்டாமல் அப்படியே வைத்திருப்பது நல்லதென்று சொல்லலாம்.

இப்போது விற்பனைக்குவந்து கொண்டிருக்கும் கோடைமாஸ-த்லை வ்யாபாரிகள் ரொம்ப பத்ரமாகக் கட்டிவைத்து வருகிறார்கள். இவைகள் இன்னும் நாலைந்து மாஸம்வரையில் கெடாமலிருக்கும். அதுவரையில் எண்ணெயாட்டுவதற்கு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அதற்குப் பிறகுங்கூட வ்யாபார நிலைமை இப்படியே இருந்துவந்தால், பிறகு எண்ணெயாட்டுவதற்கு யந்த்ரங்கள் வாங்க வேண்டியது அவச்யமாகும். அவைகள் வாங்குவதைப்பற்றியும், யந்த்ரம் ஸ்தாபித்தால் கிடைக்கும் எண்ணெயை விற்பதைப்பற்றியும் பரிசீலனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்படித் தெரிவித்துவிட்டு, கைத்தொழில் டிரெக்டர், இப்போதுள்ள நிலைமையில் ஆண்டர்ஸன் ஆயில் எக்ஸ்பெல்லர் என்னும் எண்ணெயாட்டும் யந்த்ரம் கொஞ்சம் ப்ரயோஜனமாயிருக்குமென்றும், தம்மிடத்தில் ஒ யந்த்ரம் ஒன்று இருப்பதாகவும், அதை சீக்ரம் ஸ்தாபித்து வேலை நடத்துவதாகவும் சொல்லி, அதைப்போல் இன்னும் இரண்டு யந்த்ரங்கள் வேண்டுமென்றும், அவைகளை அமெரிக்காவிலிருந்து தருவிக்க ஸாங்க்ஷன் வேண்டுமென்றும் கவர்ன்மெண்டைக் கேட்டார். கவர்ன்மெண்டார் புதிதாக ஆண்டர்ஸன் ஆயில் எக்ஸ்பெல்லர் வாங்கவேண்டியதில்லை யென்றும், ஜனங்களுக்கு கையிலிருக்கும் யந்த்ரத்தை வேலை செய்து காட்டி, அந்த யந்த்ரம் வாங்கி ஸ்தாபிக்க எண்ணும் முதலாளிகளுக்கு அது விஷயமாய் தக்க ஆலோசனை சொல்லவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் நிரூபண வேலைகளுக்கும் ஆராய்ச்சி வேலைகளுக்கும் அதிக விதைகளை ஆட்டக்கூடிய ஹைட்ராலிக் ப்ரெஸ்களை வாங்குவதே நல்லதென்றும், அதற்கு வேண்டிய செலவு திட்டத்தையும் ப்ரேரணைகளையும் டிரெக்டர் அனுப்பவேண்டுமென்றும், வேர்க்கடலையை மார்ஸேல்ஸைத் தவிர மற்றவிடங்களுக்கும் விற்பனைக்கு அனுப்ப முயற்சி செய்வது அவச்யமாயிருப்பதால், அது விஷயமாயும் பரிசீலனை செய்து ஒரு தனி மெமோராண்டம் எழுதியனுப்ப வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

## THE WAR AND ASTROLOGY.

### யுத்தமும் ஜ்யோதிஷமும்.

1913-ம் வர்ஷத்தில் பால்கன் யுத்தம் ஆரம்பித்தது முதல் யுத்தஸம்பந்தமாகவும் ஜெர்மனி ஸம்பந்தமாகவும் அநேக ஜ்யோதிஷங்களும் ஆரூடங்களும் பத்ரிகைகளில் வெளியாயிருக்கின்றன. அந்த பால்கன் யுத்தம் ஐரோப்பாவின் தென்கிழக்கில் சிறு நாடுகளுக்குள் நடந்துவந்ததால் அதைப்பற்றி அதிக கவலை ஏற்படவில்லை. இப்போது நடக்கும் யுத்தம் மஹாபாரத யுத்தம்போல் மிகப் பெரியதாக கொடூரமாய் நடந்துவருவதால், அநேகர் ரொம்ப ச்ரத்தையாய் பழைய புஸ்தகங்களைப் புரட்டி பல ஆரூடங்களையும் ஜ்யோதிஷ பலன்களையும் பத்ரிகை வாயிலாக வெளியிட்டு வருகிறார்கள். அவைகளில் சிலவற்றை கீழே எழுதுகிறோம். ஜோஸ்யம் ஐந்துக்கிரண்டு பலிக்குமென்பதையும், குழந்தை பிறந்தகாலத்தை சரியாய் கணக்கிட்டு, ஜாதகம் கணிப்பதில் ரொம்ப ச்ரமமேற்படுவது ஸகஜம் என்பதையும் எண்ணும்போது இந்த ஜோஸ்ய பலன்கள் எல்லாம் உண்மையாயிருக்குமென்றுவது, ஜ்யோதிஷ சாஸ்த்ர ஆதாரமில்லாமல் குறத்தி குறி சொல்வதுபோலும், ஜோஸ்யர்



கள் ஆரூடம் சொல்வதுபோலும், தேவதை உபாஸனையுள்ளவர்கள் வருங் காலச்செபல்களைச் சொல்வது போலவும் சொல்லப்படும் அநேக பலன்கள் சரியாய் நிறைவேறுமென்றுவது நிச்சயமாய் எண்ணுவது கூடாது.

பால்கன்யுத்தம் மும்மரமாய் நடந்து வந்தபோது, அநேகர் அந்த யுத்தத்தில் அநேக ராஜ்யங்கள் சேர்ந்து கொண்டு, யுத்தம் பெரிய ஐரோப்பிய யுத்தமாகுமென்றும், அப்போது ஆஸ்ட்ரியா—ஹங்கேரியும், ஜெர்மனியும் நாசமடையுமென்றும் சொல்லி வந்தார்கள். இதற்கேற்றாற்போல ஆரூடங்களும், உபாஸனா பலன்களும் இந்த நம்பிக்கைக்கு ஸாதகமாயிருந்தன. அவைகளில் இரண்டொன்றை இங்கு எழுதுகிறோம்.

இப்போது ஜெர்மன் சக்ரவர்த்தியாக இருக்கும் கெய்ஸர் வில்லியமின் பாட்டனாகிய முதலாவது வில்லியம் என்பவர் இளவரசராக இருந்தபோது 1849-ம் வர்ஷத்தில் ஜிப்ஸி ஜாதியைச்சேர்ந்த ஒரு ஸ்த்ரீயை ஜோஸ்யம் கேட்டாராம். ஜிப்ஸி ஜாதி ஜனங்கள் நமது தேசத்திலுள்ள குறவர்களைப்போன்ற ஒருஜாதியார். இவர்களுக்கு குறவர்களைப்போல் குறி சொல்லுவதில் ஸாமர்த்ய முண்டாம். வில்லியம் ராஜகுமாரர் தாம் எப்போது சக்ரவர்த்தியாவார் என்று கேட்க அந்த ஸ்த்ரீ அந்த வர்ஷத்தோடு, அதிலுள்ள எண்களைக் கூட்டினால் வரும் வர்ஷத்தில் அவர் சக்ரவர்த்தியாவார் என்றாள்.

1849
1
8
4
9
——
1871

அதன்மேல் இளவரசர் தாம் எந்த வர்ஷத்தில் இறப்பார் என்று கேட்டார். அதற்கு அந்த ஜிப்ஸி பட்டத்துக்குவரும் வர்ஷத்தோடு, அந்த வர்ஷத்திலுள்ள எண்களைக் கூட்டினால் வரும் வர்ஷத்தில் அவர் இறந்து போவார் என்று சொன்னாள்.

அதாவது 1871
1
8
7
1
——
1888-ம் வர்ஷத்தில் இறந்துபோவாரென்று சொன்னாள். இளவரசர் மறுபடியும் ஜெர்மன் ராஜ்யம் அதாவது ஏகாதிபத்யம் எத்தனை வர்ஷகாலம் நிலைத்து நிற்குமென்று கேட்டார். அதற்கு அந்த ஸ்த்ரீ 1888+1+8+8+8=1913-ம்வர்ஷம் அந்த ராஜ்யம் முடிந்து போகுமென்று சொன்னாள்.

இந்தமூன்று பலன்களில் முதல் இரண்டும் சரியாய் நடந்தேறின. மூன்றாவது பலன் மாத்ரம் கைகூடவில்லை. அதாவது 1913-ம் வர்ஷம் ஜெர்மன் ராஜ்யம் நாசமடையவில்லை. ஆனால் 1914-ம் வர்ஷத்தில் பெரிய யுத்தம் நடப்பதால் ஜோஸ்யம் ஒருவர்ஷம் முன்னைப் பின்னை நடக்குமோ என்னவோ.

ஜெர்மனி 1913-ம் வர்ஷத்தில் முடிவடையுமென்று அநேக ப்ரெஞ்சுக்காரர்களும் நம்பி வந்தார்கள். க்ளேயர்வாயன்ஸ் என்று சொல்லப்படும் ஒருவித யோகசாஸ்த்ரத்தால் வருங்கால விஷயங்களை அறிந்து விடலாமென்று பலர் எண்ணியும் சொல்லியும் வருகிறார்கள். இந்த சாஸ்த்ரத்தில் நிபுணர்களென்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் ஜெர்மனி 1913-ம் வர்ஷத்தில் நசித்துப்போகுமென்றும், ப்ரான்ஸுக்கு அந்தவர்ஷம் ரொம்ப நல்ல அத்ருஷ்ட காலமென்றும் சொல்லிவந்தார்கள். அவர்களில் ஒருவராகிய மாடேம் டி தீப்ஸ் என்னும் ப்ரஸித்திபெற்ற ஸ்த்ரீ பின்வருமாறு சொல்லியிருக்கிறாள்.

"1913-ம்வர்ஷம் ஒரு யுத்தம்நேர்ந்து அது ஜெர்மனிக்கு நாசமாகமுடியும். இவ்விஷயம் ஜெர்மனிக்குத் தெரிந்ததே. யுத்தம்வந்துவிடுமேயென்று ஜெர்மனி பயப்படுகிறது. அந்த யுத்தத்தைதடுக்க அது இஷ்டப்பட்டாலும் அதனுல்முடியாது. பெரிய யுத்தம் வருமென்று வெகுகாலமாகத் தயார்செய்துகொண்டிருக்கிறது. உள்நாட்டுக் குழப்பங்களால் அது அந்த யுத்தத்தில் சேரும்படி நேரிடும். இவ்விஷயத்தை சக்ரவர்த்தி அறிந்து முன்ஜாக்ரதையாயிருப்பாராக.

"ஆஸ்ட்ரியாவிலும் உள்நாட்டுக் குழப்பங்கள் ரொம்ப இருக்கின்றன. கூடியசீக்ரம் ஜெர்மன்ஜாதி ஜனங்களுக்கும் ஸ்லாவ்ஜாதி ஜனங்களுக்கும் பெரியசண்டை ஏற்பட்டுவிடும்."

ப்ரெஞ்ச் ஜனங்களுக்கு பொதுவாகவே ஜெர்மனிமேல் க்ஷாத்ரமுண்டாகையால் அவர்கள் மேற்சொன்னவைகளைக் கட்டி விட்டிருக்கக் கூடுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தையொட்டிச் சொல்லப்படும் குறிகளும் இரண்டோரிடங்களில் வர்ஷம் மாத்ரம் வித்யாஸமாய்க் காட்டுகின்றனவே யொழிய, மற்றப்படி பலன்கள் எல்லாம் அநேகமாய் ஒரேவிதமாயிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை எழுதுகிறோம்.

(1) "மனிதர்கள் பறவைகளைப்போல் பறக்கும்போது பத்து பெரிய அரசர்கள் யுத்தம் செய்வார்கள். யுத்தம் உலகமெங்கும் நடக்கும். அந்தக் காலத்தில் வயல்களிலிருந்து மாஸூலை வீட்டுக்குக்கொண்டுவர புருஷர்கள் இல்லாமல், ஸ்த்ரீகள் மாஸூலை சேகரம் செய்வார்கள். ஸ்த்ரீகள் த்ராக்ஷை மாஸூலை சேகரம் செய்ய ஆரம்பிப்பார்கள். அந்தத் தொழிலை முடிப்பதற்கு புருஷர்கள் வந்து விடுவார்கள்."

இப்போது நடக்கும் யுத்தத்தில் 9 தேசங்கள் சேர்ந்திருக்கின்றன. எப்போது பத்தாவது தேசம் சேருமோ தெரியவேண்டும். இந்த வதந்தி 1793-ம் வர்ஷத்துக்கு முன்னேயே இருந்து வந்ததாம். யுத்தத்துக்குப்போன புருஷர்கள் த்ராக்ஷை மாஸூல் அறுவடை செய்ய வந்துவிடுவார்களென்றால் யுத்தம் அக்டோபர் மாஸத்தில் முடிவு பெறவேண்டுமே.

(2) இப்போதுள்ள கெய்ஸர் சிறு வயஸாயிருக்கும்போது ஒரு ஜிப்ஸி கிழவியினிடம் போய்க் குறி கேட்டாராம். அப்போது அவள் 1914-ம் வர்ஷத்தில் ஜெர்மனிக்கு ஒரு பெரிய யுத்தம் நேரிடுமென்றும், குதிரைமேல் ஸாதாரணமாய் ஏறும் பக்கத்தில் ஏறாமல் மறு பக்கத்தில் ஏறும் அரசர் அதன் சக்ரவர்த்தியாயிருந்து, அவருடைய இளவரசர் தூக்கிடப்பட்டுக் கொல்லப்படும்போது ஜெர்மன் ராஜ்யம் முடிவடையு மென்று சொன்னாள். கெய்ஸருக்கு ஒரு கை ஊனமாகையால் அவர் குதிரைமேல் எல்லாரும் ஏறுகிற பக்கத்தில் ஏறாமல் மறுபக்கத்திலிருந்துதான் ஏறுகிறாராம்.

(3) ஸுமார் 600 வர்ஷங்களுக்கு முன் இருந்த ஒரு கிறிஸ்தவ ஸன்யாஸி பின் வருமாறு சொல்லியிருக்கிறாராம். "இரண்டாவது வில்லியம் என்னும் அரசர் ப்ரஷ்யாவின் கடைசி அரசராக இருப்பார். இவருக்குப் பின் ஸந்ததி போலண்டின் அரசரும், ஸாக்ஸனியின் அரசரும், ஹானோவரின் அரசருமே." அதாவது ஜெர்மனி ராஜ்யம் பிரிந்து போலண்ட், ஹானோவர், ஸாக்ஸனி என்ற ராஜ்யங்களாகும்.

இதே ஸந்யாஸி முதலாவது வில்லியம் என்னும் அரசர் பார்லி யென்னும் பயிர் கதிர் வாங்குவதற்கும் அறுவடையாவதற்கு மிடையிலுள்ள காலத்துக்குள் ஆஸ்ட்ரியாவின்மேல் படை யெடுத்து ஜயத்துடன் ஆஸ்ட்ரியாவின் முக்யபட்டணமாகிய வியன்னா வரையில் போவாரென்றும், ஒரு பெரிய சக்ரவர்த்தியின் வார்த்தையால் வியன்னா பட்டணம்வரையில் போனவர் உடனே நின்று விடுவாரென்றும் சொல்லியிருந்தார். இந்தவிஷயம் உண்மையாகவே ஸம்பவித்தது. முதலாவது வில்லியம் 1866-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியாமேல் படையெடுத்து, வியன்னாவரையில் போனவர், ப்ரான்ஸின் சக்ரவர்த்தியாகவிருந்த மூன்றாவது நெப்போலியன் தமது ராஜ்யத்தின்மேல் படையெடுத்து தம்மைப் பின்பக்கத்திலிருந்து எதிர்க்க எண்ணியிருப்பதாகக் கேள்விப்பட்டுத் திரும்பி விட்டார். இன்னும் அதே ஸன்யாஸி 1870-ம் வர்ஷம் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடக்குமென்றும், ப்ரான்ஸின் சக்ரவர்த்தியாயிருந்த நெப்போலியன் ஸெடன் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் எதிரிகளால் துரத்தப்பட்டு ஓடிப்போய்ப் பிறகு திரும்பவே மாட்டாரென்றும் சொன்னார். இந்தவிஷயமும் சரியாகவே ஸம்பவித்தது.

ஜெர்மனியில் ரைன் நதியோரமாக மேயன்ஸ் என்று ஒரு ஊர் இருக்கிறது. இதில் ஒருவர் 1854-ம் வர்ஷத்தில் வருங்கால விஷயங்களைப் பற்றி ஒரு சிறிய ப்ரபந்தம் பாடியிருக்கிறார். அதற்கு "மேயன்ஸ் தீர்க்கதர்சனம்" என்று பெயர். இது அநேகமாய் முன்சொன்ன ஸன்யாஸியின் ஜோஸ்யம்போலவே யிருக்கிறது.

ப்ரஷ்யாவுக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் 1866-ம் வர்ஷம் நடந்த யுத்தத்தைப்பற்றியும், 1870-ம் வர்ஷம் மூன்றாவது நெப்போலியனுக்கும் (அதாவது ப்ரான்ஸுக்கும்) ஜெர்மனிக்கும் நடந்த யுத்தத்தைப்பற்றியும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. இன்னும் ப்ரான்ஸ்-ஜெர்மனி யுத்தத்தில் ப்ரான்ஸுக்கு ஸொந்தமான ஆல்ஸேஸ் லொர்ரெய்னை ஜெர்மனி பிடுங்கிக் கொள்ளுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.





இவைகள் ஸம்பவித்துவிட்டன. அந்த க்ரந்தத்தின் பின்பாகத்தில் ப்ரான்ஸுக்கு ஸாதகமாய் இனி நடக்கப்போகும் விஷயங்கள் சில சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு.

"ப்ரெஞ்ச் தேசாபிமானிகளே, தைர்யங் கொள்ளுங்கள். ஜெர்மனி எல்லாரையும்விட பலமுள்ளதாய் ஆவதற்கு நினைத்துச் செய்திருக்கும் ஏற்பாடுகள் கைகூடுவதற்கில்லை.

"பழிவாங்கும் காலம் ஸமீபித்துக் கொண்டிருக்கிறது. ஸார் சக்ரவர்த்தி உங்கள் மத்தியில்வந்து உங்களோடு நேச உடன்படிக்கை செய்துகொள்வார்.

"இவர்தான் உங்களை விடுவிக்க ஏற்பட்டவர். இவர் ப்ரான்ஸின் எதிரியைத் துரத்தியடிப்பார். ஜெர்மனி முழுவதும் நாசமடையும் வரையில் அதோடு அவர் போர்புரிவார்.

"கடைசி யுத்தம் வெஸ்ட்பாலியா (Westphalia) என்னும் ப்ரதேசத்தில் பாடர்போன் (Paderbon) என்னும் ஊருக்குப் பக்கத்தில் போலோ (Bouleaux) என்னும் இடத்தில் நடைபெறும். அப்போது ப்ரெஞ்சுக்காரர்கள், பெல்ஜியர்கள், இங்க்லீஷ்காரர்கள், டட்ச்சுக்காரர்கள், ரஷ்யர்கள், ஜப்பானியர்கள், ஸெர்வியர்கள் ஆகிய ஏழு ஜனங்களும் சேர்ந்துகொண்டு ஜெர்மானியர்கள், ஆஸ்ட்ரியர்கள், ஹங்கேரியர்கள் ஆகிய இவர்களோடு போர் புரிவார்கள்.

"ப்ரஷ்யாவே, உனக்கு நாசகாலம் வந்துவிட்டது. நீ மற்ற ஜனங்கள்மேல் செய்த சண்டைகளுக்கு உனது ஏழாம் தலைமுறையார் ஜவாப்தாரியாவார்கள். (ப்ரஷ்யா ராஜ்யம் 1713-ம் வர்ஷம் ஆரம்பமாயிற்று. ஒரு தலைமுறைக்கு 30-வர்ஷம் வீதம் 7-தலைமுறைக்கு 210-வர்ஷம். ஆகவே 7-ந் தலைமுறையார் 1893-ம் வர்ஷம் முதல் 1923-ம் வர்ஷம் வரையில் இருக்கிறார்களென்றாகிறது.)

"ஆஸ்ட்ரியாவே, உனக்கும் நாசகாலம் வந்துவிட்டது. அப்பேர்ப்பட்ட யுத்தம் இதற்கு முன் ஒருபோதும் நடந்திராது.

"இந்த யுத்தம் மூன்று நாள் அகோரமாய் நடந்து ஒரே புகையாயிருக்கும்.

"கடைசியில் ப்ரஷ்யாவும் ஆஸ்ட்ரியாவும் நிர்மூலமாக்கப்படும். ஹங்கேரி ஐரோப்பாவின் கீழ்கோடிக்குப் போய்விடும்.

"இரண்டாவது வில்லியம்தான் ப்ரஷ்யாவின் கடைசி அரசர். ஆஸ்ட்ரியாவும் ஜெர்மனியும் போலண்டு, ஹானோவர், ஸாக்ஸனி என்று மூன்று ராஜ்யங்களாகப் பிரிந்துவிடும்."

பேர்பெற்ற ஜப்பான் வீரராகிய ஜெனரல் நோகி யென்பவர் ரஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் போர்ட் ஆர்தர் என்னுமிடத்தை முற்றுகை போட்டுக்கொண்டிருந்தபோது பின்வருமாறு சொன்னாராம்.

"இந்த உலகத்தில் இரண்டு பெரிய கோரமான யுத்தங்கள் நடைபெறும். முதல் யுத்தம் ஐரோப்பா முழுவதிலும் நடைபெறும். இதில் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள தகராரும், இங்கலண்டுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள வல்லமைப் போட்டியும் தீர்ந்துவிடும். ப்ரான்ஸும் ஜெர்மனியும் கடைசி நாள் சண்டையில் பெல்ஜியத்தில் நின்று சண்டைபோடும். அநேகமாய் வாடர்லூவுக்குப்பக்கத்தில் நடக்கலாம்.

"இரண்டு தேசத்தாருக்குமுள்ள பெரிய ஸைன்யங்கள் எதிர் நின்று போர் செய்யக்கூடிய இடம்பெல்ஜியந்தான். ப்ரான்ஸின் எல்லை ப்ரதேசத்திலும் ஜெர்மனியின் எல்லைப்ரதேசத்திலும் அநேக பலமான கோட்டைகள் இருப்பதால் அதன் வழியாக எந்த ஸைன்யமும் போவது கஷ்டம். இந்த யுத்தத்தின் முடிவைப்பற்றி ஸந்தேகமே யில்லை. தரைச் சண்டையில் ப்ரான்ஸ் ஜெர்மனியைத் தோற்கடிக்கும். கடல் யுத்தத்தில் இங்கலண்ட் ஜெர்மனியைத் தோற்கடிக்கும்.

"இரண்டாவது யுத்தம் ஜப்பானுக்கும் அமெரிக்க ஐக்ய நாடுகளுக்கும் நடக்கும். இது பஸிபிக் ஸமுத்ரத்தில் நடை பெறும். இந்த யுத்தத்தில் ஜப்பான் ஜயமடையும்."

மேற் சொன்னவைகள் ஆரூடத்தாலும், வேறு உதவிகளாலும் சொல்லப்பட்டவை. ஜெர்மன் சக்ரவர்த்தியின் ஜாதகத்தைக் கொண்டு சிலர் வருங்காலத்தைச் சொல்லி வருகிறார்கள். ஜ்யோதிஷத்தில் விருப்பமுள்ளவர்கள் ப்ருஹத் ஜாதகம், சிந்தாமணி, ஜாதகலங்காரம் முதலிய பல நூல்களைப் புரட்டிப்பார்த்து சொல்லிய பலன்கள் சரியா என்பதை ஊஹித்துக் கொள்வதோடு தாங்களும் பலன் கண்டு பிடிக்கலாம்

## கேய்ஸரின் ஜாதகம்.

1859-ம் வர்ஷம் ஜனவரிமீ" 22-தேதி யன்று ஸாயந்திரம் 3-மணிக்கு பெர்லினுக்கு 13-மைல் தென்மேற்கேயுள்ள பாட்ஸ்டம் என்னும் பட்டணத்தில் ஜனனமானார்.

பாட்ஸ்டம் என்னும் ஊர் க்ரீனிச்சுக்கு 13 டிக்ரி (பாகை) 49 மினிட் (கலை) கிழக்கேயும், நிரக்ஷரேகைக்கு 52 டிகிரி (பாகை) 52 மினிட் (கலை) வடக்கேயுமுள்ளது.

புதுச்சேரி சங்கரலிங்க ஜோதிடர் என்பவர் கெய்ஸருக்கு ஒருஜாதகம் கணித்து அதையும் அதன்பலனையும் 'இந்தியன்' பத்ரிகையில் வெளியிட்டிருக்கிறார். அவைபின் வருமாறு.

1859-ம் வருஷம் ஜனவரிமீ" 22உக்குச் சரியான தமிழ் ஸித்தார்த்திஸூ தைமீ" 10உ ஆதிவாரம் அமாவாஸை உத்ராட நக்ஷத்ரம் பகல் 3-மணிக்கு மிதுன லக்னத்தில்-ஜெர்மனி சக்ரவர்த்தி வில்லியம் ஜனனம். அவருடைய ஜாதகத்தின் ராசிசக்ரம் பின்வருமாறு,



| | | | |
|---|---|---|---|
| | | | ல. / குரு. |
| சு. | ராசி. | | சனி. கேது. |
| ஸூ. பு. ரா. சந். | | | |
| | செ. | | |

## தற்காலம் ஷை சக்ரவர்த்திக்கு நடக்கும் பலன்கள்.

1914-ம் வர்ஷம் ஜூன்மீ" 12உ முதல் அவருக்கு சனி திசையில் சனி புக்தி நடப்பதால் இந்த சனி அஷ்டம பாக்யாதிபதியாக விருந்து தனத்தில் நின்று அஷ்டமத்தை நோக்க, இதற்கு அஷ்டமாதி பத்யமாம்.

தற்காலம் ஜெர்மனி சக்ரவர்த்தியின் படைகள் பெல்ஜியத்தைக் கடந்து ப்ரான்ஸ் எல்லையில் வந்திருந்தும் ப்ரான்ஸையும் இங்கலண்டையும் ஒருபோதும் வெல்லப் போகிறதில்லை.

1914-ம்ஸூ அக்டோபர்மீ" 10-உ முதல் அவருடைய கார்யங்களெல்லாம் கெட ஆரம்பிக்கும். ப்ரான்ஸ், இங்க்லண்ட், ரஷ்யா ஆகிய இவைகளும் இவைகளைச் சேர்ந்தவைகளும் பலப்பட்டு ஜயமடைந்துவரும். ஷை மாஸம் 31-ம் உ முதல் ஜெர்மன் சக்ரவர்த்தியின் படைகள் அதிக நஷ்டமடையும். இன்னும் சில ராஜ்யங்களும் எதிரிகளாகும். ஷை சக்ரவர்த்தியார் ஸ்வதேசத்தைவிட்டு ப்ரான்ஸ் தேசத்தை நோக்கிப் போனவிடத்தில் பலவித கஷ்ட நஷ்டத்தை யடைந்து தன் ஸொந்த தேசத்திற்குத் திரும்பிவிடும்படி நேரிடும். மெலிந்த பெல்ஜியத்து அரசர், வலுத்து கைவிட்டிருந்த தன் ஸொந்த தேசத்தில் சில இடங்களைக் கைப்பற்றுவார். ஜெர்மனியின் சில போர்க் கப்பல்கள் நஷ்டமடையும். தற்காலம் எமனைப்போல் புறப்பட்டு வந்திருக்கும் 'எம்டென்' கப்பலும் எதிரிகளாலேயே நஷ்டமடையும்.

டிஸம்பர்மீ" 3-உ முதல் ஷை சக்ரவர்த்தி தன் படைகளையும் தான் பிடித்த சில ஊர்களையும் கைவிட்டு அதிக பலவீனமடைந்து கஷ்டப்படுவார். டிசம்பர்மீ" 31-ம் உக்குள் தான் பிடித்த ப்ரதேசமுழுவதையும் கைவிட்டுவிடுவார். ப்ரான்ஸ், இங்க்லண்ட், ரஷ்யா இவைகள் ஜெர்மனி தேசத்தில் சில பாகங்களையும், ஆஸ்ட்ரியாவில் சில பாகங்களையும் ஜயித்து சில தேசங்களை யடையும். ப்ரான்ஸைச் சேர்ந்த சில சிற்றரசர்களும் ஷை ஜெர்மனி ஆஸ்ட்ரியா என்கிற தேசங்களில் சில சில பாகங்களை அடைவார்கள். இந்த யுத்தமானது ஸுலபமாய் முடிவுபெறாது. 1870-ம் ஆண்டில் கைவிட்ட ஆல்ஸேஸ், லொரேன் மாகாணங்களை மறுபடியும் ப்ரான்ஸ் ஜெர்மனியிடமிருந்து பிடுங்கிக்கொள்ளும்.

1915-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸத்தில் சண்டை நிற்கும். திண்டுக்கல்சோதிடர் ம-ள-ள-ஸ்ரீ கந்தஸாமி பிள்ளை அவர்களும், கல்கத்தா மகா கல்விச்சங்கத்தி லிருக்கும் சாஸ்த்ர வித்வான் ஒருவரும், ஷை ஜெர்மனி சக்ரவர்த்தி கொல்லப்படுவாரென்று தெரிவித்திருந்தபடி நடவாது. ஜெர்மனி சக்ரவர்த்தி கொல்லப் படமாட்டார்; ஆனால் தோல்வியடைவார்.

இன்னொரு ஜோஸ்யர் ஜெர்மன் சக்ரவர்த்தி ஒரு ப்ரிட்டிஷ் ஸோல்ஜரால் போர்க்களத்தில் கொல்லப்படுவார் என்று தெரிவித்திருக்கிறார்.

சிலர் ஜெர்மன் சக்ரவர்த்தியின் ஜென்ம லக்னம் ஸிம்மம் என்று சொல்லுகிறார்களாம்.

மிஸ்டர் ஒல்ட் என்னும் ஐரோப்பிய ஜோதிஷ சாஸ்த்ரி ஒருவர் 1898-ம் வர்ஷத்தில் கெய்ஸருடைய ஜாதகத்தை கணித்து அதற்குப்பின் வருமாறு பலன் சொல்லியிருக்கிறார்

கெய்ஸர் அநேகமாய் தமது ராஜ்ய முழுவதையும் இழந்து விடுவார். அவரை ஜனங்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள். அவருடைய மனைவி திடீரென்று இறந்து போவார்.

அவர் எப்போதும் சண்டை சச்சரவுகள் செய்துகொண்டே யிருப்பார். அவருடைய செல்வாக்கும் அந்தஸ்தும் போய்விடும். அநேகமாய் அவருடைய ராஜ்யத்தை ப்ரான்ஸும் ரஷ்யாவும் பங்கிட்டுக்கொள்ளும். அவருடைய ஜாதகத்தைப்போல் துரத்ருஷ்ட ஜாதகம் ஐரோப்பாவிலுள்ள அரசர்கள் ஒருவருக்கும் கிடையாது.

கெய்ஸர் பிறந்த வருஷம் மாஸம், தேதி, மணி, இடம் ஆகிய இவைகளைக் குறித்திருப்பதால் இதை வாசிப்பவர்களில் ஜ்யோதிஷப் பழக்கமுள்ளவர்கள் தாங்களே ஸ்வயமாக கெய்ஸர் ஜாதகத்தை கணித்துப் பலன்களை அறிந்துகொள்ளலாம்.

## EVIL EFFECTS OF PAN SUPARI.

## வெற்றிலை போட்டுக்கொள்வதின் கெடுதிகள்.

உலகத்திலுள்ள ஜனங்களில் பத்திலொரு பாகத்தார், வெற்றிலை போட்டுக்கொள்வதால் உமிழ்நீர் அதிகமாக உண்டாகிறதென்றும், ஜீர்ணசக்தி அதிகமாகிறதென்றும், ஜ்வரங்கள் வராமல் அது தடுக்கிறதென்றும நம்பி வெற்றிலைபோடும் பழக்கத்தை அனுஷ்டித்து வருகிறார்கள். வெற்றிலை போடும்வழக்கம் இந்தியாவில் ஸுமார் 2400 வருஷங்களுக்கு முன்னாலிருந்து அனுஷ்டானத்திலிருந்துவருகிறது. இந்த வழக்கத்தால் அநேக கெடுதல்கள் உண்டாகின்றனவென்று ஒரு டாக்டர் சொல்லுகிறார். அவர் சொல்லுகிறவைகளை இங்கே எழுதுகிறோம்.

வெற்றிலை போட்டுக்கொள்வதில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, காசுக்கட்டி ஆகிய இவைகளை உபயோகிக்கிறோம். இவைகளில் வெற்றிலையில் பிப்ரைன் என்று ஒருபொருள் இருக்கிறது. இதுவாயில் சேர்ந்ததும் வாயில் எரிச்சலும், வலியும் உண்டாகின்றன. வெற்றிலையை வெகுகாலம் போட்டுக்கொண்டுவந்தால் குடலிலுள்ள நரம்புமுனைகள் பலங்குறைந்து தங்கள் வேலையைச் செய்யமுடியாமல் போகின்றன. ரத்தம் ரொம்பவேகமாய் ஓடுவதில்லை. ஹ்ருதயத்தைச்சேர்ந்த நரம்புகள் தளர்ச்சியடைகின்றன. பாக்கில் ‘அரிகெய்டைன்’ என்று ஒருபொருள் இருக்கிறது. இதனால் கண்ணிலுள்ள நரம்புகள் பலவீனமடைந்து கண்ணுக்குக் கெடுதி யுண்டாகிறது.

சுண்ணாம்பு தேகத்திலுள்ள எலும்புகளையும் மாம்ஸபாகத்தையும் தின்றுவிடுகிறது.

வெற்றிலை போட்டுக்கொள்வதால் உண்டாகும் கெடுதிகள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. வெற்றிலை போட்டுக்கொள்பவர்கள் வெற்றிலையால் நன்மை யுண்டென்று நம்புகிறார்கள். வெற்றிலைபோட்டுப் பழகினவர்கள் அதை திடீரென்று விட்டுவிட்டால் ரொம்ப ச்ரமம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் வெற்றிலையால் ரொம்ப நன்மையுண்டென்றும் வெற்றிலையை விட்டால்தான் கெடுதியென்றும் எண்ணுகிறார்கள்.

வெகுகாலம் தொடர்ச்சியாக வெற்றிலை போட்டுக்கொண்டுவந்தால், அது குடல்களிலுள்ள, உணவை ஜீர்ணம் செய்வதற்குவேண்டிய ரஸங்களை உண்டாக்கும் கருவிகளை நாசம் செய்துவிடுகிறது. இதனால் தலைவலி, பசியின்மை, தூக்கமின்மை, வாயு உண்டாவது, முதலிய கெடுதிகள் ஸம்பவிக்கும்.

இன்னும் வெற்றிலை போட்டுக்கொள்வதால் ரத்தக்கருவிகளும், ஹ்ருதயமும், நரம்புகளும் கெடுதலடைகின்றன. வேறு சில நோய்களும் ஸம்பவிப்பதுண்டு.



கண் பார்வைக்குறைவு, கண்ணே தெரியாமல்போவது, கண்ணில் பூப்படருவது ஆகிய வ்யாதிகளுக்கு வெற்றிலைபோடும் வழக்கம் ஒரு காரணமாகும். வெற்றிலை போடுவதால் நரம்புகளும் தசைநார்களும் மூத்ரக்கருவிகளும் கெடுதலடைந்து நீர்ரோகம் ஏற்படுவதற்கும் காரணமாகிறது.

இந்தக் கெடுதிகளெல்லாம் போதாவென்று சிலர் புகையிலையையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். புகையிலையின் கெடுதிகளைப்பற்றி ஒரு டாக்டர் பின்வருமாறு சொல்லுகிறார்.

புகையிலை உபயோகிப்பதால் புருஷர்களுக்குள் நபும்ஸகத்வம் ஏற்படுகிறது. ஸுகாதார விதிகளுக்கு விரோதமாக ஏதாவது செய்தால் உடனே தேகத்தில் மிகவும் மெலிவான பாகம் கெடுதலடைகிறது, பொதுவாய் எவருக்கும் மர்மஸ்தானங்களே மிகவும் பலவீனமான பாகமாகையால் புகையிலையை உபயோகிப்பதில் அந்த பாகந்தான் ரொம்பவும் கெடுதலடைகிறது.

## CARNIVOROUS PLANTS.

## பூச்சிகளைத்தின்னும் செடிகள்.

பொதுவாய் செடிகள் பூமியிலிருந்து தாதுவர்க்கத்துக்குரிய உப்புக்களை ஜலரூபமாக க்ரஹித்துக்கொண்டு வளருகின்றன. ஆனால் சில ஜாதிச் செடிகள் அப்படி பூமியிலிருந்து உணவை எடுத்துக்கொள்ளாமல் ஆகாயத்தில் திரியும் பூச்சிகளைப் பிடித்துத் தின்கின்றன. இப்படிப்பட்ட செடிகளில் ஸுமார் 500 ஜாதிகள் இருக்கின்றனவாம். எல்லாச் செடிகளுக்கும் நைட்ரோஜின் என்னும் செடியுணவுப் பொருள் க்ரஹிக்கக்கூடிய நிலைமையில் கிடைக்கவேண்டியதவச்யம். இந்த பூச்சிதின்னும் செடிகளெல்லாம் நைட்ரோஜின் உப்புக்கள் ரொம்பக் குறைவாயுள்ள இடங்களில்தான் வளருகின்றன. இந்தச் செடிகளில் சில மலைப் பாறைகளின் சரிவுகளில் மண் கொஞ்சமும் இல்லாத இடங்களில் வளருகின்றன. வேறு சில மரங்களின் கிளைகளிலும் அடிமரத்திலும் வளருகின்றன. இந்த விடங்களில் மண் இருப்பதற்கில்லை. இன்னும் சில செடிகள் சதுப்பான இடங்களிலும், நீர் தேக்கமான பள்ளங்களிலும் வளருகின்றன. இந்த மூன்று வகை இடங்களிலும் நைட்ரோஜின் ஸம்பந்தமான உப்புக்கள்இருப்பதில்லை. இந்த நைட்ரோஜின் உப்புகளில்லாவிட்டாலோ செடிகள் வளருவது முடியாது. இதனால் செடியானது தனக்கு வேண்டியிருக்கும் நைட்ரோஜினுக்காக பூச்சிகளைப் பிடித்துத் தின்கிறதென்று தோன்றுகிறது. இந்தப் பூச்சிகளில் வேண்டிய அளவு நைட்ரோஜின் இருக்கிறது.

இந்த ஜாதிச் செடிகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

(1) பூச்சிகள் விழுவதற்கு அல்லது அகப்பட்டுக் கொள்வதற்கு குழிகள் அமைந்துள்ள செடிகள். இந்தச்செடிகளுக்கு ரொம்ப ப்ரகாசமானவர்ணங்கள் உண்டு. இந்த வர்ணங்களால்தான் பூச்சிகள் அவைகள் இருக்குமிடம் அறிந்து வந்து மடிகின்றன. இந்தப்பிரிவில் நிபந்தீஸ்என்று ஒருஜாதியிருக்கிறது. இதன் இலைகள் மிகவும் நீண்டு குடம்போல்மடங்கியிருக்கும். இந்தக் குடத்தினுடைய வாயில் தேன் இருக்கும். பூச்சியானது செடியின் வர்ணத்தால் மயங்கி அதனிடம் வந்து குடத்தில் உட்கார்ந்து தேனைக் குடித்துக்கொண்டே உள்ளேபோகும். உள்ளே கொஞ்ச தூரம் போனவுடன் குடத்தின் உள்புறம் மிகவும் வழவழப்பாயிருக்கும். உடனே பூச்சியின் கால் நழுவி குடத்திற்குள் விழுந்து அதிலுள்ள ஒரு வகை ஜலத்தில் மூழ்கி இறந்துபோகும். உடனே செடி, பூச்சியைத் தின்று ஜீர்ணம் செய்வதற்காக ஒரு வகை ரஸத்தை வெளிப்படுத்தி பூச்சியைத் தின்று விடுகிறது.

(2) இரண்டாவது வகுப்புச் செடிகளில் அதன் பாகங்கள் பூச்சிகளைப் பிடிப்பதற்காக

அசைந்து கொடுக்கும். செடியின் பாகங்களின்மேல் பூச்சிகள் பட்டவுடன் அவைகள் பூச்சிகளைப் பிடித்து ஒருவித ரஸத்தால் அதைக்கொன்று தின்றுவிடுகின்றன.

(3) மூன்றாவது வகுப்பு செடிகளுக்கு இலைகளிலும் மற்ற பாகங்களிலும் ஒரு விதப்பசை இருக்கிறது. இந்தச் செடிகள் ரொம்ப பகட்டான வர்ணமுள்ளவை. பூச்சிகள் இந்த ஜாதிச் செடிமேல் பட்டதும் அதில் ஒட்டிக்கொள்ளுகின்றன. பிறகு செடி ஒருவித ரஸத்தை வெளிப்படுத்தி அதனால் பூச்சியைக்கொன்று தின்று விடுகிறது. பூச்சிதின்னும் செடிகளில் இரண்டொன்றை விவரிக்கிறோம்.

'வீனஸ் ப்ளைட்ராப்' என்று ஒரு செடியிருக்கிறது. இதன் இலைகள் இரண்டு மடல்களாகப் பிரிந்திருக்கின்றன. ஒவ்வொரு மடலிலும் கண்ணுக்குத் தெரியாதபடி ரொம்ப சிறியதான மூன்று முட்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு பூச்சி அந்த முள்ளின்மேல் பட்டவுடன் இரண்டு மடல்களும் திடீரென்று ஒன்று சேர்ந்துகொண்டு பூச்சியை மூடிக்கொள்ளுகின்றன. அந்த இலையின் மடல்களில் ஒருவித ரஸம் உண்டாகி, அந்த பூச்சியை ஜீர்ணம் செய்து செடிக்கு உணவாகக் கொடுக்கிறது. பூச்சி ஜீர்ணமானவுடன் மூடிக்கொண்ட இலைகள் மறுபடியும் விரிந்துகொள்ளுகின்றன. பூச்சியைத்தின்று முடிகிறவரையில் இலையின் மடல்கள் திறந்துகொள்வதில்லை.

'ப்ளாட்டர் வொர்ட்' என்னும் ஒரு விதச் செடி பூச்சி தின்னும் வர்க்கத்தைச் சேர்ந்தது. இது ஜலந்தேங்கியிருக்கும் பள்ளங்களில் வளரும். இதன் இலைகளில் கோழிமுட்டை வடிவமான பைகள் இருக்கின்றன. இவைகள் பசுமை நிறமாகவோ ஊதாநிறமாகவோ இருக்கும். இந்தப் பையின்மேல் பாகத்தில் ஒருத்வாரம் இருக்கிறது. இந்த த்வாரத்துக்கு கதவுபோன்ற மெல்லியபாகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதைத் திறந்துகொண்டு உள்ளே போகலாமேயொழிய உள்ளேபோனபின் வெளியில் வரமுடியாது. நீர்த்தாக்குகளில் உள்ள பூச்சிகள் அலைந்து திரிந்து பிறகு தங்குவதற்கு இந்தப் பையின் மேல்பாகத்திலுள்ள த்வாரத்தில் வந்து கதவைப்போன்ற பாகத்தைத் தள்ளிக்கொண்டு உள்ளே போய்விடுகின்றன. உள்ளே போனது போனதுதான். பிறகு திரும்பி வரமுடியாமல் அங்கேயே இறந்துபோய் செடிக்கு ஆகாரமாகின்றன.

## PUPILS AS TEACHERS.

## மாணவர்கள் உபாத்தியாயர்களாவது.

வீடுகளில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சரிவர கவனித்து படிப்புசொல்லிக் கொடுத்து நல்லவழிகளில் நடத்திவருவதால் அந்தப் பிள்ளைகளுக்கு கல்வி, ஒழுக்கம் முதலியவைகளில் ரொம்ப அபிவ்ருத்தி ஏற்படுகிறதென்பது தற்காலத்திய கல்வி முறையைப் பற்றிய கொள்கைகளில் ஒன்று. இது விஷயமாக ஒரு உதாரணம் கொடுக்கிறோம். ஒரு பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்யாயர் வீட்டுப் பயிற்சியால் பிள்ளைகளுக்கு ரொம்ப நன்மையுண்டென்று நம்பியிருந்தார். மேலும், எந்தப் பிள்ளையாவது ரொம்ப கெட்டிக்காரனாகவிருந்தால் அப்படியிருப்பதற்குக் காரணம் அந்தப்பிள்ளையின் பெற்றோர்கள் பிள்ளையின் படிப்பு விஷயமாயும், நடத்தைவிஷயமாயும் ரொம்பவும் கவனம் செலுத்தி பிள்ளைகளை சரிவர நடத்திவருகிறார்களென்பதே யென்று தாம் 20-வர்ஷம் உபாத்யாயராயிருந்த அநுபோகத்தால் அறிந்திருக்கிறதாகவும் சொல்லிவந்தார். ஆயினும் அவருடைய உதவி உபாத்யாயர்கள் இந்தக் கொள்கைகளில் நம்பிக்கை கொள்ளாமல் அவ



ரோடு அடிக்கடி தர்க்கம் செய்வது வழக்கம். ஒருநாள் இதுவிஷயமாகப்பேசிக்கொண்டிருக்கையில் ஒரு உபாத்யாயர் ஒரு வீட்டுப்பிள்ளைகளைக் குறிப்பிட்டு, அவர்கள் ரொம்ப கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள் என்றும், ஆனால் அவர்களுடைய தந்தை மீன்பிடிக்கும் வலைஞனாகவும், தாய் எழுதப் படிக்கத் தெரியாத நிரக்ஷரகுக்ஷியாகவும் இருக்கிறார்கள் என்றும், ஆகையால் அந்தப் பிள்ளைகளுக்கு நல்ல வீட்டுப் பயிற்சி ஏதென்றும், வீட்டுப் பயிற்சியால் அவர்கள் ரொம்ப கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள் என்று சொல்வதெப்படியென்றும் வாதாடினார்.

அதற்குத் தலைமை உபாத்யாயர் அதன் விஷயம் நன்றாய் ஆராய்ச்சி செய்யவில்லையென்றும், விசாரித்தால் விஷயம் நன்குவிளங்கும் என்று சொல்லி, அந்தப் பிள்ளைகளின் வீட்டுக்குப்போய் அவர்களுடைய தாயாரைக் கண்டு, "உமது பிள்ளைகள் ரொம்ப கெட்டிக்காரர்களாயிருக்கிறார்களே. அவர்களுக்கு ஏதாவது விசேஷமாய் வீட்டில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதுண்டோ?" என்றுகேட்டார். அதற்கவள் அவர்கள் அப்படி கெட்டிக்காரர்களாயிருப்பது கடவுளின் அநுக்ரஹமென்றும், தனக்கு எழுதப்படிக்கத் தெரியாதென்றும், தான் அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டியதற்குப்பதிலாக பிள்ளைகள் தான் தாங்கள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை மறக்காமல் வந்து தனக்குக் கற்றுக்கொடுப்பதாகவும், அதனால் தனக்குக் கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும் என்றும் சொன்னாள்.

அதன்மேல் தலைமை உபாத்யாயர், தாயார் தன் படிப்பில் ரொம்ப அக்கரையுள்ளவளாயிருப்பதால்தான், பிள்ளைகளும் தாங்கள் படித்த பாடங்களை மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டுவந்து தங்களுடைய தாயாருக்குக் கற்பித்து வருகிறார்கள் என்றும், அதனால் அவர்களுக்கும் பாடம் நன்றாய்த் தெரிந்து கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள் என்றும் விவரித்துக்கூறினார். அதாவது தாயார் தன் படிப்பில் எவ்வளவுக் கெவ்வளவு அக்கறையுள்ளவளாக இருந்தாளோ, அவ்வளவுக்கு பிள்ளைகளும் தங்கள் பாடத்தைத் தாயாருக்கு கற்பிக்க வேண்டுமென்று கவலை கொண்டு பாடத்தை ச்ரத்தையாய் கவனித்து படித்து வந்தார்கள்.

## PRECEPTS OF GENERAL NOGI.

## ஜெனரல் நோகியின் நீதி போதங்கள்.

ரஷ்ய ஜப்பானிய யுத்தத்தில் ஸாமர்த்யமாய் யுத்தம் செய்தவரென்று பெயர் வாங்கின ஜப்பானியராகிய ஜெனரல் நோகி, சென்ற 1912-ம் வர்ஷத்தில் தற்கொலை செய்துகொண்டு இறந்துபோனாரென்பது பலரும் அறிந்தவிஷயம். இறந்துபோகுமுன் அவர் ஒரு பள்ளிக்கூடத்தில் உபாத்யாயராக இருந்து வந்தார். அவர் தற்கொலை செய்து கொண்டதற்கு சற்று முன்னால், பிள்ளைகளுக்கு உதவக்கூடிய சில நற்போதங்கள் எழுதி வைத்திருந்தார். அந்த நீதி வாக்யங்களை இப்போது ஜப்பானில் அச்சிட்டுப் பிள்ளைகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். அந்த நீதி போதங்கள் பின்வருமாறு:—

(1) உனது வாயை எப்போதும் மூடி வைத்திரு. தனது வாயைஎப்போதும் திறந்து வைத்திருப்பவன் தனது மனம் சூன்யமென்பதை வெளிப்படுத்துகிறான்.

(2) உனது கண் எங்கே பார்க்கிறதோ அவ்விடத்தை நன்றாய் கவனித்துப்பார். கண் ஸதா வெவ்வேறு பொருள்களைப்பார்த்து அலைந்து கொண்டிருப்பவனுடைய மனம் திடமாக இராமல் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பதாகும்.

(3) எவரையாவது வணங்கும் போதும், வந்தனம் செய்யும்போதும் அவரை கவனித்துக் கொண்டிரு.

(4) உனது குடும்பத்தைச் சேர்ந்த யுத்த விருதுகளையும் உனது குடும்பத்தின் கௌரவத்தையும் மறவாதே: உனது முன்னோர்கள் விஷயத்தில் ரொம்ப மரியாதையாயிருக்க வேண்டும்.

(5) பையன்கள் ஆண்பிள்ளைகளைப் போல் நடக்க வேண்டும். பெண்களைப்போல் நடக்கக்கூடாது.

(6) விசேஷ ஸுகத்தை நாடாதே. அதைப்போல் மனிதனைக் கெடுப்பதுவேறொன்றுமில்லை.

(7) ரிக்ஷாக்களில் ரொம்பஏறிப்போகாதே.

(8) குளிர்ந்த காலங்களில் உனது முகத்தை குளிர்ந்த ஜலத்தால் அலம்பு; வெந்நீர்விட்டு அலம்பாதே.

(9) குளிர்ச்சியாயிருக்கும் போது உஷ்ணமாயிருக்கிறதென்றும், உஷ்ணமாயிருக்கும் போது குளிர்ச்சியாயிருக்கிறதென்றும் நினைத்துக்கொள்.

(10) கிழிந்த துணிகளைத் தைக்காமல் தரித்துக்கொள்ளுவது மிகவும் வெட்கமானது. ஆனால் கிழிந்துபோன பாகத்துக்கு ஒட்டுப்போட்டுத்தைத்து உடுத்திக்கொள்வதில் வெட்கப்படவேண்டிய தொன்றுமில்லை.

(11) வெட்கமென்பது இன்னதென்பதையறிந்துகொள். வெட்கமென்பதின்னதென்று அறியாதவன் வாயில்லா ப்ராணிகளுக்கும் கீழானவன்.

(12) தேகம் ஸௌக்ய மாயிருக்கும்போது பசி, தாகம், வலி முதலியவைகளைப் பொறுத்துக்கொள்ளும் சக்தியை வ்ருத்தி செய்து கொள்ள வேண்டும். உடம்பு அஸௌக்யமாயிருந்தால் வைத்யர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி நடக்க வேண்டும்.

(13) உனது உடைகளும் ஜோடுகளும் சற்றுப்பெரியனவாக இருக்கட்டும். பெரியதாகப் போனால் 'ஜோர்' கெட்டுப்போகுமென்று கவலைப்படாதே.

(14) உனது தேசத்துக்கு உபகாரம் செய்பவனாக இரு; அப்படியிருக்க முடியாதவன் இருப்பதைவிட இறப்பது மேல்.

## RULERS AT WAR.

## யுத்தம் செய்யும் தேசாதிபதிகள்.

### KING GEORGE V OF ENGLAND.

### ஜார்ஜ். V, இங்க்லண்டின் அரசர்.

ஜார்ஜ் சக்ரவர்த்தி 1865-ம் வர்ஷம் ஜூன் மாஸம் 3-தியன்று ஜனனமானார். அவர் ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தியின் இரண்டாவது புதல்வர். ஜார்ஜின் தமையன் பெயர் எட்வர்ட். ஜார்ஜுக்கு பால்ய முதல்கொண்டே கடல் வாழ்க்கையில் ரொம்ப ப்ரியம் இருந்தது. அதற்கேற்ப அவரை கப்பல் படை வேலைக்குத் தயாராகும்படி, 1877-ம் வர்ஷம் ஒருகப்பலில் வேலை கற்றுக்கொள்ளும்படி அமர்த்தினார்கள். 1879-ம் வர்ஷம் அவர் மத்யதரைக் கடலிலுள்ள ப்ரிட்டிஷ் கப்பல் படையைச்சேர்ந்து அதைச்சேர்ந்த பற்பல கப்பல்களில் வேலைக்கமர்ந்து வேலைகளை நன்றாய்க் கற்றுக்கொண்டார். 189)-ம் வர்ஷத்தில் அவர் ஒரு சிறியபீரங்கி கப்பலுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1891-ம் வர்ஷம் அவருக்கு கப்பல்படையில் 'கம்மாண்டர்' பதவிகிடைத்தது.

இதுவரையில் அவருக்கு ராஜ்யபாரக் கவலை ஏற்படுமென்ற எண்ணமே யிருக்கவில்லை. ஏனென்றால் அவருடைய தமையனாகிய எட்வர்ட் பட்டத்துக் குரியவராக இருந்தார். ஆனால் 1892-ம் வர்ஷம் எட்வர்ட் இறந்து போகவே, ஜார்ஜ் இளவரசராக ஆகிவிட்டார். அதுமுதல் கடல்வாழ்க்கையை விட்டுவிட்டு இனி காலக்ரமத்தில் அடையப்போகும் சக்ரவர்த்தி பதவிக்குவேண்டிய விஷயங்களைப்பற்றி கவனித்தும், அந்த வாழ்க்கைக்கு ஏற்றவிதமாய் நடந்தும் வரவேண்டியதாயிற்று. 1893-ம் வர்ஷம் அவருக்குக்கல்யாணம் நடைபெற்றது.



நமது சக்ரவர்த்தி அநேக ஸமயங்களில் வெளிதேசங்களுக்குப்போய் வந்திருக்கிறார்.

1891-ம் வர்ஷத்திலும், 1897-ம் வர்ஷத்திலும் அவர் ஐயர்லண்டில் சுற்று ப்ரயாணம் செய்தார். 1901-ம் வர்ஷத்தில் குடியேற்ற நாடுகளுக்குப் போய்வந்தார். இந்தியாவுக்கு ப்ரின்ஸ் அவ் வேல்ஸாக இருந்தபோது ஒரு தடவையும், மகுடாபிஷேக தர்பாருக்காக 1911-ம் வர்ஷம் ஒரு தடவையுமாக இரண்டு தடவை விஜயம் செய்திருக்கிறார். 1905-ம் வர்ஷம் வேல்ஸ் என்னும் தேசத்துக்குப் போய் சுற்று ப்ரயாணம் செய்தார்.

எட்வர்ட் அரசர் ஸ்த்ரீகள் ஸகவாஸத்தில் அடிக்கடி இருந்ததுபோல் ஜார்ஜ் அரசர் இருப்பதில்லை. தமது மனைவி, பெண் ஆகிய இரண்டு ஸ்த்ரீகளைத்தவிர மற்ற ஸ்த்ரீகள் விஷயத்தில் உபேக்ஷையாகவே இருப்பார்.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ர வாதிகளைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. விவாதத்துக்கிடமான எந்த விஷத்தைப்பற்றியும் நமதரசர் யாதொரு அபிப்ராயமும் சொல்லுவது வழக்கமில்லையென்றாலும், ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் விஷயத்தில் மாத்ரம் தமது வெறுப்பைக் காட்டிப் பேசுகிறார்.

அவருக்கு படாடோபம் பிடிக்காது. ஸாதாரண நடையுடையுள்ள ஒரு கனவானைப்போலிருப்பார். அவர் யாரிடத்திலும் முதலில் பேசும் ஸ்வபாவமுள்ளவரல்ல. ஆனால் அவரைப்பார்க்க வருபவர் யாவரும் அரசர்பேசிய பிறகே பேசவேண்டியதாகையால் அவருக்கு மௌன வ்ரதம் ஸாதிக்கமுடியாமல் போகிறது.

அவர் தமது குடும்பவிஷயத்தில் ரொம்ப அக்கரையுள்ளவர். தமது குழந்தைகளிடத்தில் ரொம்ப பக்ஷமுள்ளவர். தமது குஞ்சு குழந்தைகளோடு கூடிக் குலாவுவதில் ரொம்ப ப்ரியமுள்ளவர்.

குழந்தைகளின் படிப்புவிஷயத்தை ராணியே அதிகம் கவனித்து வருகிறார். என்றாலும், குடும்ப விஷயத்தில் அரசர் பேச்சு வேறென்று சொல்லக்கூடாது. தமது குழந்தைகளைப்பற்றிய விஷயங்களிலெல்லாம் தாம் கவனம் செலுத்துவதோடு, தமக்கு எந்தவழி ஸரியென்று தோன்றுகிறதோ அதை அனுஸரித்தே எதுவும் நடக்கவேண்டுமென்றும் கட்டாயப்படுத்துவார்.

தமது குழந்தைகளைப்பற்றி கவனிப்பதற்கு அடுத்தபடி விவஸாயமே அவருக்கு ரொம்ப ப்ரியமென்றாலும், அது விஷயம் கவனம் செலுத்த போதுமான அவகாசம் அவருக்குக் கிடைப்பதில்லை. வேட்டையாடுவதில் அவருக்கு அதிக ஆவல் கிடையாது. குதிரை ஸவாரி செய்யும்போதும் நல்ல வேட்டைக்காரர்போல ஸரியாய் உட்காரத் தெரியாது.

அவர்வேண்டிய அளவு தேகாப்யாஸம் செய்துவருகிறார். லண்டனில் இருக்கும்போது தினம் குதிரை ஸவாரி போய்வருவார். டென்னிஸும் ஆடுவதுண்டு. கால்ப் ஆட்டத்தில் ப்ரியம் கிடையாது. பில்லியர்ட் ஆட்டமும் ஸாமர்த்யமாய் ஆடவராது.

ஆகாரம், பானம் ஆகிய இவைகளில் நமது அரசர் ரொம்பவும் மிதமாக இருப்பவர். அவருக்கு ஷாம்பேன் என்னும் சாராயத்தில் ப்ரியம் கிடையாது. ஜாஸ்திபோதை கொடுக்காத ஒயின் அல்லது ஜலம் கலந்த விஸ்கியைத்தான் குடிப்பார். காரம் அதிகமில்லாத சுருட்டு தினம் ஒருடஜன் குடிப்பது வழக்கம்.

எந்த விஷயத்தைப் பற்றியாவது ஒரு அபிப்ராயம் கொண்டுவிட்டால் அதை மாற்றவாவது பிறருக்காக இணங்கிப்போகவாவது மாட்டார். பொது ஜனவிஷயத்தின் நன்மையை உத்தேசித்து மாத்ரம் தமது அபிப்ராயத்தை மாற்றுவதுண்டு.

தினஸரிப் பத்ரிகைகளைத் தவிர மற்ற புஸ்தகங்கள் வாசிக்க அவருக்கு நேரம் இருப்பதில்லை. எப்போதாவது வாசித்தாலும் பூகோள சாஸ்த்ர ஆராய்ச்சி ஸம்பந்தமான புஸ்தகங்களை வாசிப்பாரே ஒழிய "நாவல்"கள் வாசிப்பது கிடையவே கிடையாது. ஜ்யாக்ராபிகல் ஸங்கத்தின் ரிபோர்ட்டுகளை வாசிப்பதில் அவருக்கு ப்ரியம் அதிகம். அவருக்கு உதவியாக அநேக ஸெக்ரடரிகள் இருக்கிறார்கள். எந்த விஷயத்தையும் மனப்பூர்வமாய் ஆராய்ந்து பார்ப்பார்.

## KAISER WILHELM II OF GERMANY.

ஜெர்மன் சக்ரவர்த்தி கெய்ஸர் வில்லியம் II.

ஜெர்மனியின் சக்ரவர்த்தியாகிய இரண்டாவது வில்லியம் விக்டோரியா ராணியாரின் பெண்வயிற்றுப் பேரனாவார். நமது சக்ரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் விக்டோரியா ராணியாரின் பிள்ளை வயிற்றுப்பேரன். ஆகவே இவர்கள் இருவரும் அத்தான் அம்மான்சேயாகிறார்கள்.

வில்லியம் 1859-ம் வர்ஷம் ஜனவரிமீ 27-ம் தேதிஜனனமானார். 1888-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார். இவருக்கு 6-வது வயஸுமுதல் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. அப்போது முதல் கொண்டே அவருக்கு ராணுவப்பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. பத்தாவதுவயஸில் அவர் புட் கார்ட்ஸ் என்ற ஒரு ஸைன்யத்தில் லெப்டினண்ட் பதவியை யடைந்தார். ஜெர்மன் ராஜ்யத்து இளவரசர்கள் எப்போதும் பத்துவயஸு வரையில்தான் பெற்றோர்களுடைய செல்வக் குழந்தைகளாக வளர்ந்துவரலாம். அதற்குப் பிறகு அவர்களை ஒரு ஆசிரியரிடம் விட்டுவிடுவது வழக்கம். அவர் தம்மிடம் வரும் இளவரசர் ராணுவ ஒழுங்குகளுக்கும், பையன் எந்த ரெஜிமெண்டில் சேருகிறானோ அந்த ரெஜிமெண்டின் ஒழுங்குகளுக்கும் அடங்கி நடந்துவரும்படி கற்பித்துவருவார்.

வில்லியம் ராஜகுமாரருக்கு பால்ய முதல் கொண்டே ராணுவவிஷயங்களில் ரொம்ப ப்ரியமுண்டு. அவர் கர்னல் உத்யோகம் பார்த்துவந்தபோதுதான் ராணுவ விஷயங்களில் விசேஷமாய் கவனம்செலுத்த ஆரம்பித்தார். அது முதல்கொண்டு படிப்படியாக அநேக ராணுவவிஷயங்களைப்பற்றி ரொம்பத் தெரிந்துகொள்ளலானார். அவருடைய ராணுவ ஞானத்தைப்பற்றி, அவருடைய தகப்பனாரும், அப்போது ஜெர்மன் ஸேனாதிபதியாயிருந்த மால்ட்க் என்பவரும் இன்னும் அநேக ராணுவத்தலைவர்களும் ரொம்பவும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

வில்லியம் ஒழிவுநேரங்களில் லோக வ்யவஹாரங்களைப்பற்றியும் ராஜதந்த்ர விஷயங்களைப்பற்றியும் படித்துவருவார்.

அவர்ரொம்ப உழைப்பாளி. மனச்சாக்ஷிக்கு விரோதமாக ஒன்றும் செய்பவரல்ல. தமது கடமையைச் செய்துமுடிக்க ரொம்ப பொறுமையும் உழைப்பும் வேண்டியதவச்யமென்பதையும், தமது கடமையே மற்றெல்லாவற்றையும்விட முக்யமானதென்பதையும் அறிந்திருக்கிறார்.

அவருக்கு தமது ஒழிவுநேரங்களில் மனைவி மக்களுடன்பேசிக் காலங்கழிப்பதில் ரொம்ப ப்ரியம் உண்டு. தமது வேலையில் ஏதாவது ஒழிவுநேர்ந்தால் தமது மனைவியுடன் ராஜ்யகாரியங்களைப்பற்றி ஆலோசனை கேட்கவருவாராம்.

அவருக்கு குதிரைகளின்மேல் ரொம்ப ப்ரியம் உண்டு. அவரிடம் நூற்றுக்கணக்கான குதிரைகள் இருக்கின்றன. இவைகள் பெர்லினிலும், பாட்ஸ்டம் என்னும் பட்டணத்திலும் இருக்கின்றன. இவைகளை அடிக்கடி போய்ப்பார்ப்பதில் அவருக்குரொம்ப த்ருப்தியாம்.

வில்லியம் சக்ரவர்த்தியாக வந்ததுமுதல் அவருக்கு ராஜாங்கவேலைகள் ரொம்ப அதிகம், அவ்வளவையும் வைத்துக்கொண்டு ஏதேனும் புஸ்தகங்கள் படிப்பதென்பது கஷ்டமான காரியம். ஆனாலும் அவர் தமது தேசத்திலும் வெளிநாடுகளிலும் வெளியாகும் ராணுவப் புஸ்தகங்களெல்லாவற்றையும் படித்துவிடுகிறாராம். மற்ற புஸ்தகங்களில் சரித்ர ஸம்பந்தமான கதைப் புஸ்தகங்கள்தான் ரொம்ப ப்ரியம். வேறு முக்யமான புஸ்தகங்கள் ஏதாவது வெளியானாலும் அவைகளையும் வாசிக்காமலிருப்பதில்லை. முக்யமாய் சாஸ்த்ரம், கலைகள் முதலியவைகளில் புதிதாக ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டால் அதைப்பற்றியறிய அவருக்கு ரொம்ப ஆவலுண்டு.

அவருக்குப் படாடோபம் கிடையாது. ஸாதாரண மனிதரைப்போல் நடந்துவருவார். வீண் ஆடம்பரங்களில் பணம் செலவழிப்பது கிடையாது. அவருக்கு ராஜாங்கத்திலிருந்து கிடைக்கும் வரும்படியும் அதாவது கவர்ன்மெண்டார் அவருடைய ஸொந்த செலவுக்காகக்கொடுக்கும்பணமும், அவருடைய ஸொந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வரும்படியும் சேர்ந்து மொத்தம் ஒரு கோடியே 20 லக்ஷம் ரூபாய் கிடைக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு அவர்ரொம்ப தாராளமாய்ச் செலவழிக்க முடியாதென்று சொல்லப்படுகிறது.

கெய்ஸர் தமது இஷ்டத்தின்படி ராஜ்யம் நடக்க வேண்டுமென்று எண்ணுபவர். அவர் சொல்லும் அபிப்ராயங்களை அவருடைய மந்த்ரிகளும் மாற்றுவது கஷ்டம். மந்த்ரிகள் சொல்லுவன அவருக்குப்பிடித்தால் போயிற்று. இல்லாவிட்டால் அவர்கள் என்ன சொன்னாலும் சரி, அவைகள் அவர்காதில் ஏறு. மந்த்ரிகளெல்லாம் பேருக்குத்தான் மந்த்ரிகளாக இருக்கிறார்களாம். அரசரின் இந்த இயல்பை அறிந்த அநேக க்ருத்ரமக்காரர்களும், முகஸ்துத்யம் செய்பவர்களும், அதிகார ப்ரியமுள்ளவர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டு அவருக்கு ஹிதமான வார்த்தைகளைச்சொல்லி அவருடைய மதிப்பை யடைந்து வருகிறார்கள். இவர்கள் அவருக்கு தேசத்தின் உண்மையான நிலைமையை அறிவிக்காமல் அரசருக்கு ஹிதமானவைகளையே சொல்லிக் கொண்டிருப்பதால், அரசர் உண்மையை அறியாமல் இருக்கிறார் என்றும், இப்படியிருப்பது கடைசியில் அரசருக்கு ஆபத்தாய் முடியுமென்றும் சொல்லப்படுகிறது.

கெய்ஸருக்கு ராணுவத்தைப்பற்றி விசேஷ ஞானமுண்டு. ராணுவத்திலுள்ள 25,000 ஆபிஸர்களில் பாதிப்பேர்களை நேரில் அறிந்திருக்கிறாராம். அவருக்கு ஒருராணுவ மந்த்ராலோசனை ஸபையிருக்கிறது. அந்த ஸபையின்மூலமாய் எல்லா ஆபிஸர்களைப்பற்றியும் அறிந்து வைத்திருக்கிறார். கப்பல் படையிலுள்ள எல்லாக்கப்பல்களும் அவருக்கு நன்றாய்த்தெரியும். மேலும் கப்பல்படை ஆபிஸர்களெல்லாரையும் நேரில் நன்றாய்த்தெரியும்.

## EMPEROR FRANCIS JOSEPH OF AUSTRIA.

ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தியாகிய ப்ரான்ஸிஸ் ஜோஸப்.

ஆஸ்ட்ரியா-ஹங்கேரி ராஜ்யத்தின் சக்ரவர்த்தியின் பெயர் ப்ரான்ஸிஸ் ஜோஸப். அவர் 1830-ம் வர்ஷம் ஆகஸ்ட்மாஸம் ஜனனமானார். ஆகவே அவருக்கு இப்போது 85-வயஸு நடந்துகொண்டிருக்கிறது. அவருடைய தகப்பனாரின் பெயர் ப்ரான்ஸ் சார்ல்ஸ். ப்ரான்ஸிஸ் ஜோஸப் பிறந்தகாலத்தில் அவருடைய பாட்டனார் ஆஸ்ட்ரியாவை ஆண்டுகொண்டிருந்தார். அவருக்குப்பிறகு அவருடைய மூத்தபுத்ரரும், ப்ரான்ஸிஸ் ஜோஸபின் பெரிய தகப்பனுருமாகிய பெர்டினண்ட் 1835-ம் வர்ஷம் பட்டத்துக்குவந்து 1848-ம் வர்ஷம் வரையில் ஆண்டுவந்தார். பெர்டினண்டுக்குப் புத்ரனில்லாமையாலும், அவர் ரொம்பமெலிந்து வ்யாதியுடனிருந்ததாலும், ப்ரான்ஸிஸ் ஜோஸபின்

தகப்பனாரும் தாயாரும் ப்ரான்ஸிஸே பட்டத்துக்கு வருவார் என்று நிச்சயம்கொண்டு அவருக்கு சிறு வயஸு முதல்கொண்டே சக்ரவர்த்திக்கு ஏற்றதானகல்வியை கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தார்கள். அவருக்கு ராணுவ விஷயங்களை ரொம்ப ச்ரத்தையுடன் பயிற்சி செய்வித்தார்கள். அவருக்கு ராணுவவிஷயங்களில் ரொம்ப அனுபோகமும் உண்டு. இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் நடந்த சண்டையில் அவர்ரொம்ப ஸாமர்த்யமாய் யுத்தம் செய்தாராம்.

1848-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியாவிலும் அதைச்சேர்ந்த ப்ரதேசங்களிலும் ரொம்ப கலகங்களும் சச்சரவுகளும் நடந்தன. அவைகளையடக்கி யாளுவதற்கு பெர்டினண்ட் சக்ரவர்த்திக்கு போதுமான சக்தியில்லாமையால் அவரை ராஜ்ய நிர்வாகத்திலிருந்து விலகிக்கொள்ளும்படி பலர் தூண்டினார்கள். அதன்படியே அவர் ராஜ்ய நிர்வாகத்திலிருந்து விலகிக்கொண்டார். பெர்டினண்டின் தம்பியாகிய ப்ரான்ஸிஸ் சார்ல்ஸ் தாம் பட்டத்துக்குவர இஷ்டப்படாமல் தமது புத்ரராகிய ப்ரான்ஸிஸ் ஜோஸப்புக்குப்பட்டத்தைக் கொடுத்தார்.

ஆஸ்ட்ரியா சக்ரவர்த்தியாகப் பட்டத்துக்கு வந்ததுமுதல் அவர் தமது தேசத்திலிருந்து வந்த கலகங்களை அடக்கவும், தமது ப்ரஜைகளை தம்மை நேசிக்கும்படி செய்யவும் ரொம்ப பாடுபட்டார். ஆனால் அதுமுற்றிலும் கைகூடவில்லை. இப்போதும் அநேக ஜனங்கள் அவரை வெறுப்பதாகத் தோன்றுகிறது.

அவர் மிகவும் துரத்ருஷ்டசாலி யென்று சொல்லவேண்டும். அவா அநேக யுத்தங்கள் செய்து சில ப்ரதேசங்களை இழந்திருக்கிறார். அதோடுகூட அவருடைய குடும்ப வாழ்க்கையில் அநேக கஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றன. அவருடைய ஸகோதரராகிய மாக்ஸமிலியன் மெக்ஸிகோவில் அரசராக இருந்தபோது அவரைக் கலகக்காரர்கள் பிடித்துச் சுட்டுவிட்டார்கள். அவருடைய (ப்ரான்ஸ் ஜோஸப்) ஒரே புத்ரரும், பட்டத்துக் குரியவருமான ருடால்ப் ராஜகுமாரர் வேட்டையாடப் போயிருந்தவிடத்தில் அந்யாயமாய்க் கொலை செய்யப்பட்டு இறந்துபோனார். யார் கொலை செய்தாரென்றாவது, ஏன் கொலை செய்தாரென்றாவது இன்னும் ஒருவருக்கும் தெரியவில்லை. அவருடைய மனைவியை யாரோ ஒருவன் கொலை செய்துவிட்டான். இவ்வளவு துக்கமும் போதாவென்று இவருடைய ஸகோதரருடைய புத்ரரும் இளவரசருமாகிய ப்ரான்ஸிஸ் பெர்டினண்டையும் அவருடைய மனைவியையும் ஒரு ஸெர்வியமாணவன் சென்ற ஜூன்மாஸம் ஸராஜிவோ பட்டணத்தில் கொலை செய்துவிட்டான். அந்தசெய்தியைக் கேள்விப்பட்ட ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தி தாங்கமுடியாத துக்கத்தால், "ஐயோ, எனக்கு ஒன்றும் கொடுத்துவைக்க வில்லையே" என்று கதறினாராம். அவரைப்போல் வாழ்நாளில் துக்கங்கள் அனுபவித்த அரசர் ஐரோப்பாவில் ஒருவருமே யில்லையென்று சொல்லலாம்.

## CZAR NICHOLAS II OF RUSSIA.

### ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய நிக்கலாஸ் II.

ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய இரண்டாவது நிக்கலாஸ் 1868-ம் வர்ஷம் மே மாஸம் 18-தேதி ஜனனமானார். அவர் 1894-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார். அவருடைய ராஜ்யம் ஐரோப்பாவின் பெரும்பாகமும் ஆசியாவின் வடக்குபாகமுமாகும். இதன் மொத்த விஸ்தீரணம் ஸுமார் $86\frac{1}{2}$-லக்ஷம் சதுரமைலாகும். ரஷ்யாவின் அரசாட்சி கொடுங்கோலரசென்றும், அரசர் ஜனங்களுடைய ஸௌக்யங்களை கவனிக்காமல் நடத்தும் ராஜாங்கமென்றும் சொல்வதுண்டு. இப்போதுள்ள ரஷ்ய சக்ரவர்த்தியைப்பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். அவருக்கு ஜனங்களிடத்



தில் அபிமானமில்லையென்றும் ஜனங்கள் அவரை வெறுக்கிறார்களென்றும், ஜனங்களின் க்ஷேமத்தைப்பற்றி அவர் கவனிப்பதேயில்லையென்றும் பலர் சொல்லுவதுண்டு.

வேறு பலா அவரைப்பற்றி ச்லாகித்துச் சொல்லி யிருக்கிறார்கள். ஜனங்கள் எல்லாரும் ஸாரின்மேல் ரொம்ப விச்வாஸமாயிருப்பதோடு, ஸார் தேவதாம்சம் உள்ளவரென்றும் எண்ணுகிறார்களாம்.

ஐரோப்பாவிலுள்ள சக்ரவர்த்திகள் எல்லாரையும்விட அவர்தான் ரொம்ப சிறந்த கல்விமான். ரொம்ப புத்திசாலி; லோக வ்யவஹாரங்களில் விசேஷ ஞானம் உண்டு. இவ்விஷயங்களில் கெய்ஸரும், ஆஸ்ட்ரியா சக்ரவர்த்தியும் ஸாருக்குக் கீழ்பட்டவரென்றே சொல்லவேண்டுமாம். அநேகர் அவர் ரொம்ப பயந்த ஸ்வபாவமுள்ளவரென்றும், தம்மை யாராவது கொன்றுவிடுவார்களோ என்று ஸதா ஸர்வகாலம் நடுங்கிக்கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். வேறு சிலர் அவர் அப்படியில்லை யென்று சொல்லுகிறார்கள்.

அவர் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவர். தமது கடமை இன்னதென்று அறிந்து அதன்படி நடப்பதோடு தமது தேசத்துக்கு கௌரவக் குறைவாயுள்ள எதையும் செய்ய மனம் துணியமாட்டார்; அவர் பயப்படுவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அதாவது தமது கடமைக்கு விரோதமாகவாவது தமது தேசத்துக்கு கௌரவக் குறைவாயாகவாவது எங்கு தாம் நடந்துவிடுவாரோ என்பது தான்.

ஸாரிடம் அநேக ச்லாக்யமான குணங்கள் அமைந்திருக்கின்றன. அவர் ரொம்ப தெய்வபக்தியுள்ளவர். உண்மை பேசுபவர்களைக் கண்டால் ரொம்ப ப்ரியம். வஞ்சகமான நடத்தையைக் கண்டால் வெறுப்பார். தாம் சக்ரவர்த்தியாக வந்ததில் ரொம்ப கடமைகளை வகிக்கவேண்டி யிருக்கிறதென்பதை யறிந்துகொண்டிருக்கிறார். எப்போதும் சுறுசுறுப்புள்ளவர். ஜனங்களிடத்தில் ரொம்ப அனுதாபமுள்ளவர். ஸமாதானம் ஸமாதானமென்று சொல்லி ஐரோப்பிய தேசங்கள் போர்க்கப்பல்களையும் பீரங்கிகளையும் ஸைன்யங்களையும் ஏராளமாய்த் தயார் செய்துகொண்டிருப்பதில் ஜனங்களுக்கு வரிப்பளு அதிகமாகிறதென்றும், இதனால் எப்போதாவது பெரிய ஆபத்து நேரிடக்கூடுமென்றும், அப்போது ரொம்ப கஷ்டம் நேரிடுமென்றும் எண்ணி, இந்த நிலைமையை மாற்றுவதற்காக எல்லாதேசத்து ராஜாங்கங்களும் ஒன்றுகூடி ஆலோசிக்கவேண்டுமென்று கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு ப்ரேரணைசெய்தார். ஆனால் அந்த ப்ரேரணை நிறைவேறவில்லை. அதுமுதல் அவர் ஸமாதானத்தையே நாடிக்கொண்டிருந்தார் என்று தோன்றுகிறது. அதனால்தான் அவருடையராஜ்யத்தின் ராணுவபலம் எவ்வளவு நேர்த்தியா யிருக்கவேண்டுமோ அப்படி யில்லாமல் போய், ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் ரஷ்யா தோல்வியடைந்ததென்று தோன்றுகிறது. ஆனால் அந்த யுத்தத்திற்குப் பிறகு அவருடைய மந்த்ரிகளும் ப்ரபுக்களும் ஸேனாபலத்தை அதிகப்படுத்துவது அவச்யமென்பதை அடிக்கடி வற்புறுத்தினதால் இப்போது ரஷ்யாவுக்கு ராணுவபலம் அதிக மிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

ஸார் பார்வைக்கு லக்ஷணமா யிருப்பார். அவர் ரொம்ப உயரமில்லாவிட்டாலும், உயரத்துக்குத் தகுந்த பருமனும் நல்ல சரீரமும் உள்ளவர். அவரை போட்டக்ராப்பில் பார்த்தால் நமது சக்ரவர்த்தி சாயலா யிருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் வாஸ்தவத்தில் அவ்வளவு ஒற்றுமை கிடையாது. அவர் சிறுவயஸாக இருந்தபோது அவருடைய

தந்தை அவருடைய படிப்பில் ரொம்ப சிரத்தைபாராட்டி வந்தார். அவருக்கு தேசியக் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. அவருக்கு ரஷ்யர்கள்தான் உபாத்யாயர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர் பால்யத்தில் ரொம்ப பலஹீனமா யிருந்ததாலும், அவருடைய கல்வி முறை ரொம்ப கடினமா யிருந்ததாலும் அவருக்குப் படிப்பு ரொம்ப தாமஸமாக நடந்து வந்ததாம். அவருடைய ராணுவப் பயிற்சி ரொம்ப கடுமையானது. சிறு பையனாக இருந்தபோது அவரை ஓர் குடித்தனக்காரப் பையன்போல் நடத்தி வந்தார்களாம். மூன்றாவது அலெக்ஸாண்டர் சக்ரவர்த்தியின் 16-ம் ரெஜிமெண்டில் அவர் ஒரு ஸோல்ஜராக வேலை பார்த்து வந்தார். அப்படி வேலைபார்த்து வந்தபோது அவர் மிகப்பளுவான ராணுவச் சட்டையும், பைகளில் 120 சுற்றுத் தோட்டாக்களையும் போட்டுக்கொண்டு, மண்வெட்டி அல்லது கட்டப்பாரையைத் தூக்கிக்கொண்டும், சோற்றுப்பையை மாட்டிக்கொண்டும், நடப்பாராம். அவர் தூக்கிக்கொண்டுபோகும் ஸாமான்கள் துப்பாக்கியைச் சேர்க்காமல் 100 ராத்தல் நிறையிருக்கும். யுத்தப் பயிற்சி செய்விக்கும் தாழ்ந்த உத்யோகஸ்தன் அவரை இவ்வளவு சுமையுடன் 7-மைல் தூரம் மேடுபள்ளங்களில் நடத்திக் கூட்டிக்கொண்டு போவானாம். வழியில் எந்த உத்யோகஸ்தர் எதிர்ப்பட்டாலும் அவருக்கு நிக்கலாஸ் ஸலாம் செய்யவேண்டுமாம். ரெஜிமெண்டின் புஸ்தகத்தில் இவர் பெயர் ப்ரைவேட் நிக்கலாஸ் ரோமனாப் என்று மாத்ரம் எழுதப்பட்டிருந்தது.

ஸாருக்கு 1894-ம் வர்ஷம் கல்யாணமாயிற்று. அவருக்கு நான்கு பெண்களும் ஒரு பையனும் உண்டு. பையனின் பெயர் அலெக்ஸிஸ். ஸார் சக்ரவர்த்தியின் தாயாரும், நமது சக்ரவர்த்தியின் தாயாராகிய அலெக்ஸாண்ட்ரா ராணியும் ஸகோதரிகள்.

## THE WAR WITH TURKEY.

## துருக்கியோடு யுத்தம்.

துருக்கிக்கும் இங்கலண்டுக்கும் யுத்தம் நேர்ந்திருப்பதை யாவரும் அறிந்திருப்பார்கள். அப்படி யுத்தம் நேர்ந்ததற்குக் காரணங்கள் வைஸ்ராய் தெரிவித்திருக்கிறபடி பின்வருமாறு.

அக்டோபர்௴ 29-தேதி யன்று இரண்டு மூன்று டார்பிடோ கப்பல்கள் ப்ளாக்ஸீயிலுள்ள (கருங்கடல்) ரஷ்யாவுக்கு ஸொந்தமான ஒடெஸ்ஸா துறைமுகத்துக்குள் போய் அட்டஹாஸம் செய்தன. ரஷ்யர்களுக்கு ஸொந்தமான 'டொனட்ஸ்' என்னும் பீரங்கிக் கப்பலை மூழ்கடித்தன. அந்தக் கப்பலிலிருந்தவர்களில் அநேகர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போனார்கள். ரஷ்ய வ்யாபாரக் கப்பல்களான 'விடியாஸ்,' லையாஸாராப்,' 'வாம்பாஸ்' என்பவைகளைச் சேதப்படுத்தின. மேலும், ப்ரெஞ்சுக்காரர்களுக்குஸொந்தமான 'போர்ட்டுகல்' என்னும் கப்பலையும் சேதப்படுத்திவிட்டன.

இன்னும் இந்த டார்ப்பிடோ கப்பல்கள் அந்தப் பட்டணத்தை நோக்கியும் சுட்டன. இந்தக் கப்பல்கள் துருக்கியைச் சேர்ந்தவைகள் என்று ஒடெஸ்ஸாவின் கவர்னர் தெரிவிக்கிறார்.

கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்த ரஷ்யக் கப்பல்களை துருக்கியர்கள் மூழ்கடித்துவிட்டார்களாம். 'ஒடோஸியா' என்னும் ரஷ்யப் போர்க்கப்பலை துருக்கிய போர்க்கப்பல்கள் தாக்கினவாம்.

இந்தச் செயல்கள் யாவும் யுத்த விளம்பரம் செய்யாம லிருக்கும்போதே நடந்திருக்கின்றன. இப்படி துருக்கி நடந்துகொண்டதற்கு தக்க காரணமாவது, இதற்கு முன் இரண்டு தேசத்துக்கும் மனஸ்தாபமாவது கிடையா. இங்கலண்டோடு ஸ்னேகமாயிருக்கும் ரஷ்யாவோடு துருக்கி இப்படி நடந்துகொண்டதானது துருக்கிக்கும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் மனஸ்தாபத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருக்கிறது.



சில காலமாக துருக்கி கவர்ன்மெண்டார் ஜெர்மனியின் தூண்டுகோலால் இங்கலண்டுக்கு விரோதமாக நடந்துவந்திருக்கிறார்கள். யுத்தம் ஆரம்பித்த சில நாள்களுக்கெல்லாம் மத்யதரைக்கடலில் இருந்த 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் இரண்டு ஜெர்மன் கப்பல்களை, அந்தக் கடலில் இருந்த இங்க்லீஷ் ப்ரெஞ்ச் கப்பல்கள் பிடிக்க முயன்றபோது, அந்த இரண்டு ஜெர்மன் கப்பல்களும் கிழக்கே நோக்கி ஓடிப்போய் துருக்கியைச்சேர்ந்த டார்டனல்ஸ் ஜலஸந்தியில் புகுந்துகொண்டன. பரஸ்பர தேசச் சட்டத்தின்படிக்கும், துருக்கியுடன் செய்யப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளின்படிக்கும் துருக்கியானது இந்தக் கப்பல்களைப் பிடித்துவைத்துக்கொண்டு அவைகளிலுள்ள பீரங்கி முதலிய யுத்த ஸாமான்களை அப்புறப்படுத்திவிட்டு, அவைகளின் வேலையாட்களையும், ஆபிஸர்களையும் துருக்கியிலேயே நிறுத்திவைத்து, யுத்தம் முடிந்தபிறகு அவர்களுடைய ஸொந்த தேசத்துக்கு அனுப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால், அந்தக் கப்பல்கள் வந்து சேர்ந்த 24-மணிக்குப் பிறகு வெளியே போய்விடும்படி செய்யவேண்டும். துருக்கி இவைகளில் ஒன்றும் செய்யாமல், கப்பல்களை டார்டனல்ஸ் ஜலஸந்தியிலேயே யிருக்கும்படி விட்டுவிட்டிருந்தது. பிறகு கொஞ்ச காலத்துக்கெல்லாம், துருக்கி கவான்மெண்டார் தாங்கள் இந்த இரண்டு கப்பல்களையும் விலைக்கு வாங்கிவிட்டதாகச் சொன்னதோடு, ஜெர்மன் கப்பல் வேலையாட்களை கப்பலிலேயே இருக்கவிட்டு துருக்கிக் கப்பல் படையின் தலைவராயிருந்த ப்ரிட்டிஷ் அட்மிரலை அந்த உத்யோகத்திலிருந்து நீக்கிவிட்டு, டார்டனல்ஸ் ஜலஸந்தியில் 'மைன்ஸ்' என்னும் வெடி குண்டுகளை போட்டு விட்டார்கள்.

அந்த ஜலஸந்தியிலிருந்த ப்ரிட்டிஷ் கப்பல்களையும், ப்ளாக்ஸீயிலிருந்து அதன் வழியாக வெளியே போக வந்துகொண்டிருந்த ப்ரிட்டிஷ் கப்பல்களையும் துருக்கி கவர்ன்மெண்டார் பிடித்துக்கொண்டார்கள். முதலில் துருக்கி கவர்ன்மெண்டார் ஸைன்யங்களை ஒன்று சேர்க்கப்போவதால் அவைகளுக்காக அந்தக் கப்பல்களிலுள்ள சரக்குகள் தங்களுக்கு வேண்டுமென்று அவைகளை நிறுத்தினதாகவும், பிறகு, டார்டனல்ஸில் மைன்ஸ் என்னும் வெடிகுண்டுகள் இருப்பதால் கப்பல்கள் போக முடியாதென்று அவைகளை நிறுத்தினதாகவும் ஸமாதானம் சொன்னார்கள்.

துருக்கி கவர்ன்மெண்டார் இப்படிச் செய்தது ந்யாயத்துக்கு விரோதமானது. இதனால் வ்யாபாரிகளுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்படுவதோடு, ப்ளாக்ஸீயில் இருந்த 60,70 வ்யாபாரக் கப்பல்கள் வெளியே மத்யதரைக் கடலுக்குப் போகாமல் தடுக்கப்பட்டுப் போயின.

மேலும் துருக்கி கவர்ன்மெண்டார் டார்டனல்ஸ் ஜலஸந்தியை மூடினது அதாவது கப்பல்கள்போக முடியாதபடி தடுத்தது பரஸ்பரதேச உடன்படிக்கைகளுக்கு விரோதமானது. இவைகளோடுகூட பாக்டாடிலும், மெஸொபொடேமியாவிலுமுள்ள துருக்கிய உத்யோகஸ்தர்கள் அங்குள்ள ப்ரிட்டிஷ் ஜனங்களை சரியாய் நடத்திவராமலிருந்ததோடு, துருக்கிய உத்யோகஸ்தர்கள் ஜனங்களுக்கு இங்கலண்டின்மேலும் அதனிடம் ஸ்னேகமாயுள்ள தேசங்களின்மேலும் த்வேஷமுண்டாகும்படி தூண்டி வந்திருக்கிறார்கள். இவ்வளவு செய்துங்கூட ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார், 'கோபன்,' 'ப்ரஸ்லா' என்னும் கப்பல்

களில் ஜெர்மன் ஆபிஸர்களுக்கும் வேலையாட்களுக்கும் பதிலாக துருக்கிய ஜனங்களை நியமித்து, ப்ரிட்டிஷ் வ்யாபாரக் கப்பல்களின் போக்குவரத்தைத் தடைசெய்யாமலிருந்து, யுத்தத்தில் சேராத தேசங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடமைகளை துருக்கி செய்துவந்தால், இது வரையில் செய்துவந்த அக்ரமங்களை கவனிக்காமல் விட்டுவிட்டு, துருக்கியின் ஸ்வாதீனத்தைக் காப்பாற்றிக் கொடுப்பதாயும் துருக்கி ராஜ்யத்தின் எந்த பாகத்தையும் அது இழக்காமல் பார்த்துக் கொள்வதாயும் எழுத்து மூலமாய் வாக்களிப்பதாகச் சொன்னார்கள். மேலும் யுத்தம் முடிந்தபிறகுங்கூட துருக்கியின் ஸ்வாதீனத்துக்கும், ஒற்றுமைக்கும் கெடுதலாக இருக்கக்கூடிய எந்த நிபந்தனையும் அதற்கு ஏற்படாமலிருக்கவும், அதன் பொருளாதார நிலைமை அதற்கு ஸாதகமா யிருக்கும்படிக்கும் பார்த்துக்கொள்வதாகவும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வாக்களித்தார்கள்.

இவ்வளவு தூரம் வாக்களித்துங்கூட துருக்கி கவர்ன்மெண்டார் சண்டையுண்டாக்கக்கூடிய விதமாகவே நடந்துவந்தார்கள். இவைகளே யல்லாமல் துருக்கியில் வேறு சில கார்யங்களும் நடந்திருக்கின்றன, ஸிரியாவில் ராணுவ வேலைகள் நடந்துகொண்டிருந்தன. இவைகள் ஈஜிப்ட் தேசத்தை எதிர்ப்பதற்காகவே செய்யப்பட்டு வரவேண்டுமென்று தோன்றுகிறது. மெஸபொடேமியா ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவிலிருந்தும் மோஸூல் ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவிலிருந்தும் துருப்புகள் தெற்கே அனுப்பப்பட்டு வந்தன. இவைகள் ஈஜிப்டையும், ஸூயஸ் கால்வாயையும் படையெடுப்பதற்கு வேண்டியிருக்குமென்று அனுப்பப்பட்டவையாகும். இதற்கு உதவியாக அராபியர்களை வரவழைத்து அவர்களுக்குத் துப்பாக்கி முதலியவைகள் கொடுத்து அவர்களை யுத்தத்துக்குத் தயார்செய்தும் வைத்திருக்கிறார்கள். அகாபா வளைகுடாவில் ப்ரிட்டிஷ் கப்பல்கள் வராமல் தடுப்பதற்காக ஈரங்கங்களும் அனுப்பப் பட்டிருக்கின்றன. ஷேக் அஸீஸ் ஷாவிஷ் என்னும் மகமதியர் ஜனங்களை இங்லண்டோடு யுத்தம் செய்யும்படி தூண்டுவதற்காக அநேக துண்டுப் பத்ரிகைகள் அச்சிட்டு ஸிரியாவிலுள்ள ஜனங்களுக்கு அனுப்பியிருக்கிறார். இந்தியாவிலும் ஈஜிப்டிலும் மகமதியர்களிடம் ராஜத்வேஷம் உண்டாக்குவதற்காக அநேக துருக்கியர்கள் போயிருக்கிறார்களென்றும் ஸமாசாரம் எட்டி யிருக்கிறது. மேலும் ஸைன்யத்தையும் கப்பல் படையையும் சேர்ந்த அநேக ஜெர்மன் ஆபிஸர்களும், ஸோல்ஜர்களும் கான்ஸ்டாண்டிநோபிளுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் யுத்தத்துக்கு வேண்டிய எல்லாவித ஸாமான்களையும் தங்களோடுகூடக் கொண்டுவந்திருக்கிறார்கள். இவர்களில் அநேகர் துருக்கியின் உள் நாட்டுபாகங்களில் போய் ஜனங்களுக்கு இங்க்லீஷ்காரர்களின் மேல் த்வேஷம் உண்டாகும்படி தூண்டி வந்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் துருக்கி கவர்ன்மெண்டின் அநுஸரணையில்லாமல் நடந்திருக்கமாட்டா.

மேலும் துருக்கியின் யுத்த மந்த்ரி இங்லண்டுக்கும் துருக்கிக்கும் யுத்தம் நடந்தால் இன்னின்ன செய்யவேண்டு மென்பதைப் பற்றி ஜாப்பாவிலுள்ள சேனைத் தலைவருக்குக் கடிதங்களும் எழுதி யனுப்பியிருக்கிறாராம். மேற்சொன்ன காரணங்களால் இங்லண்ட் துருக்கியோடு யுத்தம் ஆரம்பித்து விட்டது.

இந்தியாவிலுள்ள எல்லா மகமதிய அரசர்களும், ப்ரமுகர்களும் மற்ற ஜனங்களும், ஈஜிப்ட் வடஆப்ரிக்கா முதலிய வேறு இடங்களிலுள்ள அநேக மகமதியர்களும் துருக்கியின் செய்கைகள் ந்யாயமல்ல வென்றும், இது மத ஸம்பந்தமான சண்டை யல்ல வென்றும், ஆகையால் இங்க்லண்டுக்குக் கீழ்ப்பட்டவர்கள் இங்க்லண்டினிடம் ராஜ பக்தியோடிருக்க வேண்டுமென்றும் பத்ரிகைகளுக்கு எழுதியும், ஜனங்களுக்கு போதித்தும் வருகிறார்கள்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Trained Teachers' Certificates.

போதனுமுறை பயின்ற உபாத்யாயர்களின் ஸர்ட்டிபிகேட்டுகள்.—மதராஸ் எடுகேஷனல் ரூல்களில் பின்வரும் ரூல் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

போதனுமுறையில் கீழ்தர க்ரேட் ஸர்ட்டிபிகேட் வாங்கியிருக்கும் ஒரு உபாத்யாயர் பெரிய ஸ்கூல் பரீக்ஷைகள் அல்லது யூனிவர்ஸிட்டி பரீக்ஷைகளில் தேறினல் மறுபடியும் அந்தப் பெரிய பரீக்ஷைகளுக்கு ஒத்த க்ரேடுக்காக ப்ரத்யேகமாக ட்ரெயினிங் ஆகாமலே தாம் தேறிய பெரிய பரீக்ஷைக்கு ஏற்ற க்ரேடுக்கு ஸர்ட்டிபிகேட் வாங்கிக்கொள்ளலாம். ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் இன்ன உபாத்யாயருக்கு அவ்விதம் ஸர்ட்டிபிகேட் கொடுக்கலாமென்று சிபார்சு செய்யவேண்டும். அந்த சிபார்சின்மேல் ட்ரெய்னிங் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் உயர்தர ஸர்ட்டிபிகேட் கொடுக்கலாம். ஆனல் எப். ஏ. ட்ரெய்னிங் ஆன உபாத்யாயர் பி. ஏ. பரீக்ஷையில் தேறினல் எல். டி-க்காக ட்ரெய்னிங் ஆகாமல் ஸர்ட்டிபிகேட் வாங்கிக்கொள்ள முடியாது.

### Coimbatore Agricultural College.

கோயம்புத்தூர் விவஸாயக் காலேஜ்.—கோயம்புத்தூர் விவஸாயக் காலேஜில் பாடக்ரமங்களில் சில குறைகள் இருக்கின்றனவென்பதை உத்தேசித்து விவஸாய டிரெக்டர் அவைகளை மாற்றுவதற்காக சில ப்ரேரணைகள் செய்து சில மாஸங்களுக்குமுன் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினர். கவர்ன்மெண்டார் அவைகளை விவஸாய போர்டுக்கு அனுப்பி, அதன் ஸம்மதத்தின்மேல் அவைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முன்னிருந்த ஏற்பாட்டில் மாணவர்களுக்கு விவஸாய வேலையில் பழக்க மேற்படுவதற்குமுன் விவஸாய சாஸ்த்ரம் கற்பித்து வந்தார்கள். இந்த ஏற்பாடானது மாணவர்களுக்கு ஏற்றதாயில்லை. அவர்களுக்கு ஏற்கனவே போதுமான அளவு கல்வியில்லாததால் அவர்கள் சாஸ்த்ர பாடங்களில் தேர்ச்சியடைவது கஷ்டமாயிருந்தது.

இப்போது அந்தக்காலேஜில் இரண்டு ப்ரத்யேகமான வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. முதல் வகுப்பு இரண்டு வர்ஷகாலம் நடக்கும். இந்த வகுப்பில் மாணவர்களுக்கு அனுபவரீதியாக விவஸாயம் கற்றுக்கொடுப்பார்கள். இரண்டாவது வகுப்பில் மாணவர்கள் $1\frac{1}{2}$ வர்ஷம் வாசிக்க வேண்டும். இதில் மாணவர்களுக்கு விவஸாய ஸம்பந்தமான சாஸ்த்ரங்கள் கற்றுக்கொடுக்கப்படும்.

முதல் வகுப்பில் சேர ப்ரியப்படுகிறவர்கள் ஒரு பரீக்ஷையும் தேறியிருக்க வேண்டியது கட்டாயமல்ல. கற்பிக்கும் பாடங்களைக் கேட்டறிந்துகொள்ளப்போதுமான அளவு இங்க்லீஷ் தெரிந்திருந்தால் போதும். இரண்டாவது வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்கள் முதல் வகுப்பில் சேர்ந்து படித்துத்தேறியிருக்க வேண்டியதோடு, அதிகாரிகள் குறிப்பிடும் ஒரு பரீக்ஷையில் தேறினவர்களாயிருக்க வேண்டும். ப்ரத்யேகமான ஸந்தர்ப்பங்களில் அப்படிக்குறிப்பிட்ட பரீக்ஷையில் தேறாத மாணவர்களை, காலேஜிலுள்ள போதகர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியார் ஸம்மதித்தால், இரண்டாவது வகுப்பில் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

இந்த சீர்திருத்தத்தின் நோக்கமென்னவென்றால்,

(1) காலேஜில் படித்துவிட்டுப் பிறகு தங்களுடைய ஸொந்தநிலங்களின் ஸாகுபடியை கவனிக்க விரும்புகிறவர்களுக்கு அந்த நோக்கத்துக்கு ஏற்றதாயும் போதுமானதாயும் ஸாதாரண விவஸாயக் கல்விகற்பிப்பது; விவஸாய டிபார்ட்மெண்டில் அதிக சாஸ்த்ர அறிவு வேண்டியிராத கீழ்த்தர உத்யோகங்களில் சேரவிரும்புகிறவர்களுக்கு விவஸாயக்கல்வி கற்பிப்பது.

(2) விவஸாயக்கல்வியை அதிகமாகப் பரவச்செய்ய வேண்டுமென்றுஜனங்கள் சொல்லுவதற்சேற்ப அதிக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது. முதல் வகுப்பில் வர்ஷந்தோறும் 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இரண்டாவது வகுப்பில் வர்ஷந்தோறும் 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### The War & Tamil Journalism.

யுத்தமும் தமிழ்ப் பத்ரிகைகளும்.—யுத்தத்தால் தமிழ்ப் பத்ரிகைகளுக்கு நல்ல காலம் ஏற்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறது. இந்துநேசன் என்னும் வாரமிருமுறைப் பத்ரிகை தினசரியாக மாறியிருக்கிறது. வைசியமித்திரன் வாரமிருமுறையாக வெளிவருந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவேயுள்ள சுதேசமித்திரன், சுதேச பரிபாலினியென்ற இரண்டு தினசரிகளோடு புதிதாக இந்தியன், இன்றைய சமாச்சாரம், பிரசங்கநேசன் என்னும் தினசரிப் பத்ரிகைகள், வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தியாவில் இப்பொழுது 6 தமிழ் தினசரி பத்ரிகைகள் வெளியாகி வருகின்றன. யுத்தத்திற்குப்பிறகு இவைகளில் எத்தனைநிலைத்து நிற்குமோ தெரியவேண்டும்.

### Murahari.

முராஹரி.—இது ஒரு துப்பறியும் தமிழ் நாவல். இது 'ஸ்வதேச நண்பன்' என்று புனைவு பெயர்கொண்ட ஒரு ஆசிரியரால் எழுதப்பட்டதாகும். இதன் நடை ஸுலபமாயிருக்கிறது. அன்யபாஷை வார்த்தைகளைத் தமிழில் எழுதும்போது அந்த வார்த்தைகளுக்கு அந்தபாஷைகளில் என்ன சப்தமோ, அந்த சப்தமே தமிழிலும் இருக்கும்படி நமது பத்ரிகையில் வார்த்தைகளை எழுதிவருகிறோம். இந்தமுறையை இந்த நாவலிலும் உபயோகித்துவருவது மிகவும்ச்லாகிக்கத்தக்கது.

இந்த நாவல் வாசிக்க நன்றாயிருக்கிறது. தீமை செய்ய எண்ணுபவர்கள் கடைசியில் கெடுதலடைவார்களென்பதும், நன்மைசெய்பவர்கள் நடுவில் என்ன கஷ்டங்கள் அனுபவித்தாலும் கடைசியில் க்ஷேமம் அடைவார்களென்பதும் இந்த நாவல்தெரிவிக்கும் முக்ய நீதிகளாகும். இதன் விலை அணா 5. வேண்டுவோர் வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பி. கே. ஸ்ரீனிவாஸாசாரியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### A Garland of Instructive Stories.

நீதிகதாஹாரம்.—நீதிக்கதைகள் அடங்கிய இந்தப் புஸ்தகம் விளாச்சேரி எ. எ. எம். பையன்கள் பாடசாலை ஹெட் மாஸ்டராகிய ஸாமுவேல் ஜி. தாமஸால் இயற்றப்பட்டது. இதில் அநேக நீதிக்கதைகள் அடங்கியிருக்கின்றன. நீதிக்கதைகளுக்கு முன்னால் நீதி விஷயங்களைத் தெளிவாய்க்கூறும் வ்யாஸங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. நீதிவாக்யங்களும் கதைகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகத்தின் கடைசியில் ஜார்ஜ் V., ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், ரபீந்த்ரநாத் டாகூர் முதலிய 5 பேர்களுடைய ஜீவ்ய சரித்ரங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. இது சிறுவர்கள் வாசிக்கத்தகுந்த புஸ்தகமாகும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் எஸ். ஜி. தாமஸ், ஹெட் மாஸ்டர் எ. எ. எம் பாய்ஸ் ஸ்கூல், விளாச்சேரி, ஸெண்ட் தாமஸ் மௌண்ட் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

### The War in Europe.

ஐரோப்பிய யுத்தம்.—இது, இப்போது ஐரோப்பாவில் நடந்துகொண்டிருக்கிற யுத்தத்தின் வரலாறு, அதில் தலையிட்டிருக்கிற தேசங்களின் விவரங்கள், அவற்றின் தரைப்படை கடற்படை ஆகாயப்படை இவைகளின் அமைப்பு, பலம், தேசத்தலைவர்களது ஜீவ்ய சரித்ரக்குறிப்புகள், யுத்தத்திற்காக இந்திய அரசர்களும் மகாஜனங்களும் செய்துள்ள உதவிகள் யுத்தகளத்தில் நடந்த அதிசயமான ஸம்பவங்கள் முதலிய பற்பல விஷயங்கள் ஸவிஸ்தாரமாக இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்ற ஓர் அருமையான புஸ்தகமாகும்.

இப்புஸ்தகத்தில் தற்காலம் யுத்தத்தில் ஸம்பந்தப்பட்டுள்ள தேசங்களின் அதிபதிகள் முக்ய உத்யோகஸ்தர்களுடைய உருவப் படங்களும் ராணுவ உத்யோகஸ்தர்களுடைய உருவப் படங்களும் மிக நேர்த்தியான காகிதத்தில் மிக அழகாக அச்சிடப் பட்டுச் சேர்க்கப்பட்டிருக்கும். இப்படங்கள் கண்களுக்கும் மனதிற்கும் களிப்பை ஊட்டுவதுடன் பலவகை அறிவையும் வளர்க்கும்.

இது நவம்பர் மாஸக் கடைசியில் வெளி வரும். இதன் விலை ரூபா. 1—0—0.

"ஜனூபிமானி" சந்தாதார்களுக்கு மாத்ரம் அணா 8-க்கு கொடுக்கப்படும்.

வேண்டுவோர், ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, சுங்குராம செட்டித் தெரு, சென்னை, என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Telectrograph.

தந்திக்கம்பி மூலமாய் படமனுப்புதல்.—தற்காலம் தந்திக்கம்பி மூலமாய்த் தந்தி ஸமாசார மனுப்புவதும், பேசுவதும் ஸகஜமாயிருக்கின்றன. இப்போது இங்க்லீஷ்காரர் ஒருவர் தந்திக்கம்பி மூலமாய் 800 மைல் தூரம் வரையில் படங்கள் அனுப்புவதற்கு ஒரு புதுமுறை கண்டுபிடித்திருக்கிறாராம்.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஒரு மணி நேரத்துக்குள் படங்களை அனுப்பி விடலாமாம். இந்த முறையின்படி படங்கள் அனுப்புந் தொழில் நடத்துவதற்கு ஒரு கம்பெனி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கம்பெனியார் பாரிஸ், லண்டன், லிவர்பூல், க்ளாஸ்கோ முதலிய விடங்களில் படங்கள் ஸப்ளை செய்வதற்காக போடோ தந்தி ஸ்டேஷன்கள் சீக்ரம் ஸ்தாபிக்கப்போகிறார்களாம்.

### Animals that Never Drink.

ஜலமே குடிக்காத ம்ருகங்கள்.—சில ம்ருகங்கள் ஜலம்குடிப்பதே கிடையாதென்று சிலர் சொல்லி வருகிறார்கள். இந்த குணமுள்ள ம்ருகங்களில் ஆடு ஒன்றும். சில வர்ஷங்களுக்குமுன்னால் அமெரிக்காவிலுள்ள ஒரு ஊரில் ஒரு விவஸாயிக்கு பெரிய ஆட்டுமந்தை இருந்தது. அவர் தமது ஆடுகளை புல் வளர்ந்துள்ள எழெட்டு ஏகர் விஸ்தீரணமுள்ளதும், சுற்றிலும் வேலி போட்டுள்ளதுமான வயல்களில் அடைத்துவிடுவது வழக்கமாம். ஒருஸமயம் கோடைகாலத்தில் ஆடுகளை இப்படிப்பட்ட வயலொன்றில் சில வாரங்கள் மறித்து வைத்திருந்தாராம். இந்த வயலிலாவது அல்லது வயலோரமாகவாவது குளம் குட்டையாவது, கால்வாயாவது, அல்லது ஜலம்தேங்கி நிற்கக்கூடிய பள்ளமாவது ஒன்றும் இருக்கவில்லையாம். ஆடுகளும் வெளியில்போக வழிகிடையாது. அவைகள் அந்தக் காலத்துக்குப் பிறகு யாதொரு நோய் நொடியில்லாம லிருந்ததோடு கொழுப்படைந்தும் இருந்தனவாம். இதற்குக் காரணம் காலை நேரங்களில் புல்லில் பனித்துளியிருப்பதால், அதைத் தின்னும் ஆடுகளுக்குப் போதுமான ஜலம்கிடைத்து விடுகிறதென்று சொல்லப்படுகிறது.

ஆட்டைப்போலவே 'ஆண்டிலப்' என்னும் கருப்புமானும், அரேபியா, வட ஆப்ரிக்கா, பாராவீகம் முதலிய இடங்களிலுள்ள காஸல் என்று சொல்லப்படும் ஒரு விதமானும் ஜலம் குடிப்பதே யில்லையென்று சொல்லப்படுகிறது.

### German Guns and Nitric Acid.

ஜெர்மன் பீரங்கிகளும் அக்னி த்ராவகமும்.—பீரங்கிகளுக்கும், வெடிகுண்டுகளுக்கும் வேண்டிய மருந்துகள் முக்யமாய் நைட்ரிக் ஆஸிட் என்னும் அக்னி த்ராவகத்திலிருந்துதான் செய்யப்படுகின்றன. இந்த த்ராவகம் இல்லாவிட்டால் வெடிகுண்டு செய்வது முடியாது. இந்த த்ராவகம் செய்வதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. நைட்ரேட் என்று சொல்லப்படும் சில உப்புக்கள் இருக்கின்றன. இந்த உப்புகளில் பொட்டுலுப்பு ஒன்று, இவைகளிலிருந்து நைட்ரிக் ஆஸிட் செய்யலாம். இந்த நைட்ரேட் என்னும் உப்புக்கள் பெரும்பாலும் தென்னமெரிக்காவிலுள்ள சில்லியென்னும் தேசத்திலிருந்து ஐரோப்பிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

இன்னொருமுறை என்னவென்றால், ஆகாயத்திலுள்ள நைட்ரொஜின் என்னும் வாயுவை மின்ஸார சக்தியால் நைட்ரேட்டாக மாற்றி அதிலிருந்து நைட்ரிக் ஆஸிட்செய்தல். இப்போது ப்ரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் ஜெர்மனிக்கு வரும் வ்யாபாரக் கப்பல்களைத்தடுத்து அவைகளை இங்க்லண்டுக்குக் கொண்டு போய் விடுகின்றன. இந்தக் கப்பல்களில் சிலவற்றில் மேற்சொன்ன நைட்ரேட் என்னும் உப்புகள் ஏற்றியிருந்தனவாம். இந்தச் சரக்கு இனி ஜெர்மனிக்குப் போகாமல் தடுக்கப்படுவதால் ஜெர்மனியில் கையிருப்பாயுள்ள நைட்ரேட்டுகளையும், வெடிமருந்துகளையுந் தவிர அதிகப்படியாக வேண்டியிருந்தால் ஜெர்மனிக்கு நைட்ரேட்டுகள் கிடைக்காமல் கஷ்டம் நேரிடக்கூடுமாம். ஆகாயத்திலுள்ள நைட்ரொஜினைக் கொண்டு நைட்ரேட்டுகள் தயார்செய்ய முடியுமென்றாலும், ஜெர்மனியில் வெடி மருந்துகளும் பீரங்கிகளும் தயார்செய்யும் க்ரப் கம்பெனியார்களுக்கு இந்த முறை தெரிந்திருக்குமென்பது ஸந்தேகமாம். ஜெர்மனியில் கையிருப்பாக வெடி மருந்துகளும், நைட்ரேட்டுகளும் ஏராளமாயிருக்கக் கூடுமென்றாலும், யுத்தம் வெகுகாலம் நடந்துவந்தால் அவர்கள் வெடிமருந்துக்குத் திண்டாடவேண்டி யிருக்குமென்று சொல்லப்படுகிறது.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Dangers of Exposed Fruit.

திறந்து வெளியே வைத்திருக்கும் பழங்களைத் தின்பதால் உண்டாகும் தீமை.—காற்று தூசி முதலியவைகள் படும்படியாக பழங்களைத்திறந்து கடைகளில் வைத்திருப்பதால் அநேக கெடுதிகள் உண்டாகின்றனவாம். இது விஷயமாய் ஒரு சாஸ்த்ரீ ஆராய்ச்சி செய்து பார்த்ததில் வெளியே திறந்து வைத்திருந்த த்ராட்சக் குலையில் ஒரு பழத்தின்மேல் 30 லக்ஷம் பாக்டீரியாக்களும் மூடி வைத்திருந்த பழத்தின்மேல் 7 லட்சத்து எண்பதினாயிரம் பாக்டீரியாக்களுமிருந்தனவென்று தெரிய வந்ததாம்.

### Cholera.

காலரா.—ஒருவருக்குக் காலரா கண்டு, வைத்யர் வருவதற்கு நேரமாகுமானால் க்ளோரோடைன் மருந்தை முழுடோஸ் அளவில் சாப்பிடவேண்டும். கடுகை அரைத்து அடிவயிற்றில் பற்றுப்போட வேண்டும். காய்ந்த கடுகையாவது சுக்கையாவது பொடி செய்து அதைக்கொண்டு காலரா கண்டவருடைய கை கால்களில் நன்றாய்த் தேய்க்கவேண்டும். நோயாளிக்குக் குடிப்பதற்கு ஜலம் கொடுக்கக்கூடாது. ஆனால் பனிக்கட்டியை அவருடைய வாயில் வேண்டும்போது சிறிது நேரம் வைக்கலாம். காலரா கண்ட வீட்டிலுள்ள மற்றவர்கள் தடவைக்கு ஒரு வைன் க்ளாஸ் சுத்த ஜலத்தில் கந்தக த்ராவகமாவது (Sulphuric acid), ஹைட்ரோ க்ளோரிக் ஆஸிடாவது (Hydrochloric acid) பத்து துளிகள் வீதம் விட்டு தினம் மூன்று தடவை உள்ளுக்கு சாப்பிடவேண்டும். இப்படி த்ராவகங்கள் சாப்பிடுவது வ்யாதி வராமல் தடுப்பதற்கேற்ற நல்ல முறையாகும். காலரா க்ருமிகள் புளிப்பான ஆகாரத்தில் ஜீவித்திருக்க மாட்டா ஆதலால் காலராக் காலத்தில் எலுமிச்சம்பழ ரஸம் ரொம்ப ஜாஸ்தியாக உள்ளுக்கு சாப்பிடுவது மிகவும் நல்லது.

### Coffee for Asthma.

ச்வாஸகாசத்துக்கு காப்பி பரிஹாரமாம்.—ச்வாஸகாசத்தால் கஷ்டப்படுகிறவர்கள் காப்பி குடித்தால்காசம் ஏற்குமென்று சொல்லப்படுகிறது. காப்பியை ஜலத்தில் அதிகமாகப்போட்டு கெட்டி டிகாக்ஷனை (ஸ்ட்ராங் காப்பி) குடிக்கவேண்டும். கெட்டியாயில்லாத காப்பி அதாவது அதிகம் ஜலத்தில் கொஞ்சமாகக் காப்பிப்பொடி போட்டுத் தயார் செய்த டிகாக்ஷன் ரொம்பகெடுதி யுண்டாக்கும். ஒரு தடவைக்கு ஒரு ஔன்ஸ் அதாவது இரண்டு ஸ்பூன் நிறைய சாப்பிட்டால் போதும். அதிகமாகக் குடிப்பது கெடுதல். காப்பியில் சர்க்கரையாவது பாலாவது சேர்க்கக்கூடாது.குடிக்கும்போது வயிற்றில் ஒன்றுமிருக்கக்கூடாது. எவ்வளவு சூடாகக் குடிக்கக்கூடுமோ அவ்வளவுசூட்டில் ஸ்பூனால் எடுத்துச் சிப்பிக்குடிக்கவேண்டும். வயிறு நிறையச் சாப்பிட்டுப் பிறகு இதைக் குடித்தால் உணவு ஜீர்ணமாவது தடைபடும். மத்யானம் சாப்பாட்டின்போது காப்பி குடித்தால் சிலருக்கு ச்வாஸகாசம் உண்டாகிறதாம்.

### Drinking Water.

ஜலம் குடித்தல்.—தேகத்தில் ரத்தம் சரிவர ஓடிக்கொண்டிருக்கவும், கெட்ட பொருள்கள் மூத்ரரூபமாயும் வியர்வை ரூபமாயும் வெளிப் போகவும் தேகத்தில் ஜலம் அதிகமாயிருக்க வேண்டும். ஜலம் குறைவுபட்டால் அந்தக் குறையை சரிப்படுத்துவதற்கு ரொம்ப மேலான வழி சுத்த ஜலம் அதிகமாகக் குடிப்பதே. சுத்த ஜலம் அதிகமாகக் குடிப்பதால் அது உணவுப் பொருள்களைக் கரைத்து தேகத்தில் பற்பல பாகங்களுக்குக் கொண்டு போகிறது. மேலும், தேகத்திலுள்ள கழிவுப் பொருள்களைக் கரைத்து மூத்ரரூபமாயும், வியர்வை ரூபமாயும் வெளிப்படுத்துகிறது. காலையில் தூங்கி யெழுந்ததும் ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலமாவது, வெந்நீராவது குடிப்பதும், பகலில் சாப்பிட ஒரு மணி நேரத்துக்கு முன்னும், இரவில் படுத்துக் கொள்ளப் போகு முன்னும் முன்சொன்னபடியே குடிப்பதும் ரொம்ப நன்மையைப்பயக்கக்கூடியவை. இப்படி வர்ஷம் முழுவதும் எந்தக் காலத்திலும் குடித்துவரலாம். கோடைகாலத்தில் வியர்வை உண்டாவதைத் தடுப்பது ரொம்பக் கெடுதல். உஷ்ண ப்ரதேசங்களில உள்ளவர்களுக்கு வியர்வை உண்டாகாவிட்டால் ஸன்ஸ்ட்ரோக் அதாவது ஸூர்ய இடி உண்டாகும். இவர்கள் வியர்வையை க்ரகிக்கக்கூடிய உடுப்புகளை உடுத்திக்கொண்டு, அவைகளை அடிக்கடி மாற்றவேண்டும். க்ரமமாக ஸ்நானம்செய்து வரவேண்டும். இப்படிச் செய்து வந்தால் உஷ்ணத்தின் கடுமை அதிகமாயிராது.



# LAW.

## சட்டம்.

### Promissory Note.

ப்ராமிஸரி நோட்டு.—மைனர் பேருக்கு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுப்பது சட்டப்படி செல்லும். பி - என்பவர் ஸி - என்பவளைக் கல்யாணம் செய்துகொண்டால், ஸி-க்கு 500 ரூபாய் கொடுப்பதாக எ- என்பவர் பி-க்கு வாக்களித்தார். பி - என்பவர் ஸி - என்பவளைக் கல்யாணம் செய்துகொண்டார். அதன் மேல் எ - என்பவர் ஸி-யின் பேருக்கு 500 ரூபாய்க்கு ஒரு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்தார். பி - என்பவர் ஸி-யைக் கல்யாணம் செய்துகொண்டது ப்ராமிஸரி நோட்டுக்குத்தகுந்த ப்ரதிப்ரயோசனமாகாது. ஆகையால் ப்ராமிஸரி நோட்டு சட்டப்படி செல்லாது.

### Signing Letters.

கடிதங்களில் கையெழுத்திடுவது. — இரண்டு நாட்டுக்கோட்டைச் செட்டிக் குடும்பத்திலுள்ள புருஷர்கள் சேர்ந்து நடத்திவந்த ஒரு கடையில் வாதி 1904-ம் வர்ஷம் முதல் 1908-ம் வர்ஷம் வரையில் பற்று வரவு வைத்துவந்தார். அந்தப் பற்றுவரவுகளால் அந்தக் கடைக்காரர்கள் வாதிக்கு இருபத்து நாலாயிரத்துச் சொச்சம் ரூபாய் கொடுக்கவேண்டியதாக ஏற்பட்டது. வாதி 1910-ம் வர்ஷத்தில் அந்தத் தொகைக்காக ப்ராதுபோட்டார். ஸாதாரண நடவடிக்கையில் அந்த வ்யாஜ்யம் காலாவதியாகியிருக்கும். ஆனால் வாதியானவர் இரண்டு குடும்பங்களில் ஒன்றின் தலைவராகிய முதல் ப்ரதிவாதியும், இரண்டாவது குடும்பத்தின் தலைவராகிய 6-வது ப்ரதிவாதியும் 1907-ம் வர்ஷத்தில், கடன் கொடுக்கவேண்டியதுண்டென்று கடிதம் எழுதினார்களென்றும், அப்படியெழுதினது கடனை ஒப்புக்கொண்டதாகு மென்றும், ஆகையால் காலாவதி ஏற்படவில்லை யென்றும் வாதித்தார்.

முதல் ப்ரதிவாதியின் கடிதத்தில் ஆரம்பத்தி "சிதம்பரம் எழுதிய கடிதம்"என்றும் கடைசியில்"இப்படிக்கு முருகர்துணை" யென்றும் எழுதப்பட்டிருந்தது. 6-வது ப்ரதிவாதியின் கடிதத்திலும் முதலில் முன்சொன்ன மாதிரியே ஆரம்பித்துக் கடைசியில் "இப்படிக்கு அண்ணாமலையார் துணை"யென்று முடித்திருந்தது. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தங்களுடையசொந்தக் கடிதங்களில் தங்கள்பெயரைக் கையெழுத்தாக இடுவதில்லையென்றும், அவர்கள் தங்களுடையகுடும்ப தெய்வத்தின் பெயரையே கடைசியில் கையெழுத்தாக இடுவது வழக்கமென்றும் வ்யாஜ்யத்தில் ருசுவாயிற்று. இந்த வ்யாஜ்யத்தை விசாரித்த ராமநாதபுரம் ஸப் ஜட்ஜ் இந்தக் கடிதங்களால் ப்ரதிவாதிகள்கடன் கொடுக்கவேண்டியது உண்டென்று ஒப்புக்கொண்டதாகுமென்று சொல்லி வாதிக்குத் தீர்ப்புக்கொடுத்தார்.

அதன் மேல் முதல் ப்ரதிவாதியின் குடும்பத்தார் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். முதல் ப்ரதிவாதி எழுதின கடிதம் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி கையெழுத்திடப்படவில்லையென்றும், ஆகையால் கடனை ஒப்புக்கொண்டதாகமாட்டாதென்றும், அந்தக்கடிதத்தின்படி முதல் ப்ரதிவாதி கடன் கொடுக்கவேண்டியதுண்டென்று ஒப்புக்கொண்டதாகுமென்றால், முதல் ப்ரதிவாதி அப்படிப்பட்ட கடிதம் எழுதுவதற்கு அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த மற்ற பாகஸ்தர்கள் உத்தரவு கொடுக்கவில்லையாதலால், அந்தக்கடன் மற்ற பாகஸ்தர்களைக் கட்டுப்படுத்தாதென்றும் முதல் ப்ரதிவாதி பக்கம் வாதிக்கப்பட்டது. வாதிபக்கம் பின்வருமாறு வாதிக்கப்பட்டது. கடிதத்தில், எழுதியவருடைய பெயர் இருந்தால் கடிதம் கடனுக்குத் தகுந்த ஆதாரமாகும். செட்டிமார்கள் முன்சொன்னவிதமே தங்கள் கடிதத்தில் கையெழுத்திடுவது வழக்கமென்று ரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படி கையெழுத்திடுவதில் எழுதியவருடைய பெயரில்லாவிட்டாலும், அது சட்டப்படி கையெழுத்திட்டதாகும். சட்டப்படி கையெழுத்திட்டதாகாதென்று தீர்ப்புச்செய்தால் பின்னால் ரொம்ப ஆபத்துக்களுக்கிடமாகும். மேலும் முதல் ப்ரதிவாதி குடும்பத்தின் தலைவரானதால் குடும்பம் கொடுக்கவேண்டிய கடனை ஒப்புக்கொள்ளுவதற்கு அவருக்கு அதிகாரமுண்டு.—என்று வாதிக்கப்பட்டது. அப்பீலில் ஹைகோர்ட்டார் கடிதம் சட்டப்படி செல்லுமென்றும், கடன் முதல் ப்ரதிவாதியையேயல்லாமல்அவருடைய குடும்பத்தின் மற்ற பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்துமென்றும் தீர்ப்புச்செய்தார்கள்.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Mr. Bhupendranath Basu.

மிஸ்டர் புபேந்தரநாத் பாஸு.—கல்கத்தா வக்கீலாகிய மிஸ்டர். புபேந்த்ரநாத் பாஸு இந்த வர்ஷத்துக் காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

### Sir John Wallis.

ஸர் ஜான் வாலிஸ்.—சென்னையில் சீப் ஜட்ஜாக இருந்த ஸர் ஆர்னால்ட் வொய்ட் பென்ஷன் வாங்கிக்கொண்டு தமது ஜன்மதேசத்துக்குப்போய் விட்டார். அவருக்குப்பதிலாக ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளில் ஒருவராகிய ஸர் ஜான் வால்லிஸ் சீப் ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### Sir Narayan Chandavarkar.

ஸர் நாராயண சந்தவர்க்கர்.—சென்ற வர்ஷம் ஏப்ரல் மாஸம் முதல் இந்தூர் ஸமஸ்தானத்தின் ப்ரதம மந்த்ரியாக இருந்து வந்த ஸர் நாராயண சந்தவர்க்கர் தமது உத்யோகத்தை ராஜிநாமா செய்துவிட்டார். அந்த உத்யோகத்திலிருந்தபோது அவர் மாஸம் 5000 ரூபாய் சம்பளம் வாங்கிவந்தார். அவர் அதற்குமுன் பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்தார்.

### Lord Willingdon's Son.

லார்ட் வில்லிங்டனுடைய புதல்வர்.—பம்பாய் கவர்னராகிய லார்ட் வில்லிங்டனுடைய புத்ரர் யுத்தத்தில் காயமடைந்து விட்டாரென்றும் அவரிருக்குமிடந் தெரியவில்லையென்றும் சென்ற மாஸம் தெரிவித்தோம். இப்போது அவர் ஜெர்மானியர்களால் கைது செய்யப்பட்டு காஸ்ஸல் என்னுமூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஹாஸ்பிடலில் இருக்கிறாரென்று ஸமாச்சாரம் எட்டியிருக்கிறது.

### General von Moltke.

ஜெனரல் வான் மால்ட்கி.—ஜெர்மன் சக்ரவர்த்தி தமது ஸேனாதிபதியாகிய ஜெனரல் வான் மால்ட்கியினிடம் அத்ருப்தி கொண்டிருப்பதாகவும், அவரை அந்த வேலையை விட்டு இன்னும் நீக்கவில்லை யென்றாலும், அவருடைய அதிகாரங்களை ரொம்பவும் குறைத்து விட்டதாகவும், கெய்ஸர் தமக்கு ரொம்ப நம்பிக்கையுள்ள சில ஸோல்ஜர்களை சேர்த்து ஒரு ராணுவ ஸபை ஏற்படுத்தி அவர்களைக்கொண்டு ராணுவ காரியங்களை நடத்தி வருவதாகவும் சொல்லப்படுகிறது.

### Sir Tarakanath Palit.

ஸர் தாரகநாத் பலித்.—கல்கத்தாவில் ப்ரபல பாரிஸ்டராக இருந்த ஸர் தாரகநாத் பலித் ஸமீபத்தில் காலஞ்சென்றார். அவர் 1841-ம் வர்ஷம் ஜனனமானார். 1867-ம் வர்ஷம் அவர் இங்க்லண்டுக்குப் போய் பாரீஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துத் தேறி 1872-ம் வர்ஷம் இந்தியாவுக்கு வந்து பாரிஸ்டர் உத்யோகம் செய்து வந்தார். அவர் ரொம்ப ஸொத்துள்ளவர். தர்ம சிந்தனையும் ஜனங்களிடத்தில் அன்பும் பூண்டவர். அவர் சென்ற 1912-ம் வர்ஷம் கல்கத்தா யூனிவர்ஸிட்டிக்கு சாஸ்த்ர காலேஜ் ஏற்படுத்துவதற்காக 15 லக்ஷம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தார். அவர் சில வர்ஷங்களாக ஹ்ருதயவ்யாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு இரண்டுபிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். மூத்தபுத்ரர் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாயிருந்து இப்போது கல்கத்தா ஹைக்கோர்ட்டில் அட்வகேட் ஆக இருந்து வருகிறார்.

### Army Appointments for Indian Chiefs.

இந்திய ராஜாக்களுக்கு ராணுவ உத்யோகங்கள்.—பின்வரும் இந்திய ராஜாக்களுக்கு ராணுவத்தில் ஆனரரி அதாவது கௌரவ உத்யோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாடியாலா மகாராஜாவுக்கு லெப்டினண்ட் கர்னல் உத்யோகம்; இடார் மகாராஜாவுக்கு மேஜர் உத்யோகம்; பான்ஸ ஸமஸ்தானத்து ஹிராஸிங் ராஜகுமாரருக்கும், ஜோட்பூர்மகாராஜாவுக்கும் லெப்டினண்ட் உத்யோகம்.

கீழே சொல்லப்படும் கனவான்களுக்கு யுத்தம் நடக்கும் வரையில் சில ராணுவ உத்யோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஹைட்ரபாட் லான்ஸர்ஸ் என்னும் ஸைன்யத்தைச் சேர்ந்த ஷாமிர்ஸா பேயுக்கு காப்டன் உத்யோகமும் கூச்பேஹார் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த மஹாராஜகுமார் ஹிதேந்த்ர நாராயணருக்கும், அகால்காட்டு ராஜாவுக்கும், டிக்காரி ஸமஸ்தானத்து மஹாராஜகுமார நாராயணஸிங்குக்கும், ஸர்தார் ஜகேந்த்ரஸிங்குக்கும் லெப்டினண்ட் உத்யோகமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.



# SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

### Social Reform.

ஜனஸமூக சீர்திருத்தம்.—சென்னை 'ஹிந்து'ப் பத்ரிகையில் மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர் ஜனஸமூக சீர்திருத்தத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அதன் ஸாராம்சம் பின்வருமாறு.

ஆசாரசீர்திருத்தம் அல்லது ஜனஸமூக சீர்திருத்தமென்றால், ஸ்த்ரீகளுக்கு ஸ்வதந்த்ரம் கொடுத்தல், ஜாதிகளை ஒன்றுசேர்த்தல், தாழ்ந்தஜாதிகளை உயர்த்துதல், அன்யதேச ப்ரயாணம்முதலிய சீர்திருத்தங்கள் என்று பலர் எண்ணிவருகிறார்கள். ஆனால் அந்தப் பதத்தில் அடங்கியது இவை மட்டுமல்ல. ஏழை ஜனங்களையும், கல்வியற்ற ஜனங்களையும் பண்டைக்காலப் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாயிருப்பதிலிருந்து விடுவித்து அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கான எந்தமுயற்சியும் ஜனஸமூக சீர்திருத்தத்தைச் சேர்ந்ததாகும்.

மேல் நாடுகளில் ஜனஸமூக முன்னேற்றத்துக்காக சட்டதிட்டங்கள் செய்ய அநேகர் முயற்சி செய்து வருகிறார்கள். அவைகளில் சில பின் வருமாறு. ஏழை ஜனங்களுக்கு உபகாரமாக இன்ஷுரென்ஸ் பண்டுகள் ஸ்தாபித்தல், வயஸானவர்களுக்கும், தேகத்தில் ஊனமுள்ளவர்களுக்கும் பென்ஷன்கள் கொடுத்தல், வேலைக்காரர்களை இத்தனை மணி நேரந்தான் வேலை வாங்கலாமென்றும் இவ்வளவு சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் நிர்ணயித்தல், தாழ்ந்த ஜாதியிலுள்ள சிறுமாணவர்களுக்குப் பொதுச்செலவில் குடியிருக்க வீடுகொடுத்து சாப்பாடு போடுதல், பெரிய பட்டணங்களில் தாழ்ந்த ஜாதி ஜனங்களுக்கு குடியிருக்க ஸௌகர்யமான வீடுகள் கட்டிக்கொடுத்தல் முதலியவைகளாகும். தற்காலத்தில் ஐரோப்பாவில் அநேக ராஜதந்த்ரிகளும், பரோபகார சிந்தனையுள்ளவர்களும் ஜனஸமூகத்திலுள்ள பற்பலபிரிவுகளில் ஒன்றுக்கொன்றுள்ள ஏற்றத்தாழ்வை சரிப்படுத்தி ஒரே உயர்ந்தநிலைமைக்குக் கொண்டுவர ரொம்பவும் ப்ரயத்தனப் பட்டுக்கொண்டு வருகிறார்கள்.

இந்தியாவில் இப்படிப்பட்ட துறைகளில் முயற்சி செய்யவேண்டியது ரொம்பவும் அவச்யமானது. இப்போது நமது ஜனத்தலைவர்கள் விவஸாயிகள், தொழிலாளிகள் ஆகிய இவர்களினுடைய அறியாமையைப் போக்குவதைப்பற்றி ரொம்பவும் கவனம் செலுத்தி வருகிறார்கள். கவர்ன்மெண்டாரும் ஜனஸமூகக் கல்வியை ரொம்பவும் அபிவ்ருத்தி செய்வதாக வாக்களித்திருக்கிறார்கள். கல்வியறிவில்லாத ஏழை ஜனங்கள் கவர்ன்மெண்டாரும், லோகல் போர்டுகளும் கல்வி விஷயமாய் செய்துகொடுக்கும் ஸௌகர்யங்களை அடைந்து அபிவ்ருத்தியடையும்படி, படித்து முன்னேற்ற மடைந்திருக்கும் இந்தியர்கள் அவர்களைத் தூண்டவேண்டியது அவச்யமாகும்.

நமது ஜனஸமூகத்தில் இன்னொருகுறை என்னவென்றால், கூலிவேலைசெய்து பிழைக்கும் ஜனங்களுக்குள் கள்குடிக்கும் வழக்கம் அதிகரித்து வருவதே. இந்தக்கெட்ட வழக்கத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கெட்டுப்போய்க் கொண்டிருக்கின்றன. படித்தவகுப்பார் இவர்களை முன்னுக்குக் கொண்டுவர இதுவரையில் ரொம்ப ப்ரயத்தனங்கள் ஒன்றும் செய்யவில்லை.

இந்தக்கெடுதியை நிவர்த்தி செய்வதோடு தாழ்ந்த ஜாதிகளை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரவும் முயற்சி செய்யவேண்டியது அவச்யம்.

ஏழை ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு அவர்களுடைய ஸுகாதார நிலைமையையும் அபிவ்ருத்தி செய்யவேண்டும். அவர்களுக்கு தேகசுத்தம், நல்ல ஆகாரம், சுத்தமான ஜலம், சுத்தமான காற்று ஆகிய இவைகளால் உண்டாகும் நன்மைகளை எடுத்துச் சொல்லி, அவர்கள் நம்மைபார்த்துத் திருந்தும்படி நாமும் நடந்து காட்டவேண்டும்.

ஜனஸமூக அபிவ்ருத்தியில் கவனமுள்ளவர்கள் நமது தேசத்தின் பற்பல பாகங்களில் உள்ள ஜனங்களின் பொருளாதார நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்வது மிகவும் நல்லது.

இப்படி ஜனங்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு படித்தவகுப்பார்கள் முன் வரவேண்டும். ஆனால் அவர்களுக்குப் போதுமான அவகாசம் கிடையாது. நிலஸ்வான்களுக்கும், வ்யாபார வகுப்பார்க்கும் போதுமான அவகாசம் இருக்கிறது. ஆனால் அவர்களுக்குப் போதுமான அறிவு கிடையாது. ஆகையால் படித்தவகுப்பாரும், அவகாசம் அதிகமுள்ள நிலஸ்வான்களும் வ்யாபார வகுப்பார்களும் ஒன்றுசேர்ந்து உழைத்தால் அதிக நன்மைகள் ஏற்படக்கூடும்.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### A Bad Practice.

ஒருகெட்ட வழக்கம்.—அநேகர் ஸ்டாம்புகளைக் கடிதங்களில் ஒட்டும்போதும், கவர்களின் (என்வலப்புகளின்) மடிப்புகளை யொட்டும்போதும் அவஸரத்தில் ஸ்டாம்புகளையும், கவர்களையும் நாக்கால் நக்கி நனைத்து ஒட்டிவிடுகிறார்கள். ஸ்டாம்புகளிலும், கவர்களிலும் உள்ள பசை கண்ட ஸாமான்களைப்போட்டுத் தயார் செய்த தாகையால் அப்படிச்செய்வது தேகஸுகத்துக்கு நல்லதல்லவென்று சொல்லப்படுகிறது. மேலும் அது சுசியுமல்ல.

### Bee and Wasp Stings.

தேனீக்கள், குளவிகள் கொட்டினால்.—தேனீக்கள், குளவிகள் ஆகிய இவைகள் கொட்டினால் கொட்டினவர்கள் சில ஸமயம் மூர்ச்சைபோட்டுப் போவதுண்டு. ஹ்ருதயம் வேகமாய் அடித்துக்கொள்ளும். கொட்டின இடத்தைப் பிடித்துக் கெட்டியாய் பிதுக்கி கொட்டுவாயிலிருந்து விஷத்தை வெளிப்படுத்தவேண்டும். ஸ்பிரிட்ஸ் அப் வைன் (Spirits of Wine) சாராயத்தில் கொஞ்சம் எடுத்து கொட்டின இடத்தில் தடவி நன்றாய்த் தேய்க்கவேண்டும். தேய்க்கும்போது கொட்டுவாயை மறுபடியும் பிதுக்கி உள்ளிருக்கக்கூடிய விஷத்தை வெளிப்படுத்த முயலவேண்டும்.

### Preserving Eggs.

முட்டைகளைக் கெடாமல் வைத்தல்.—முட்டைகளைக் கெடாமல் வைத்திருக்க அநேகமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தமுறைகளை ஜெர்மனியில் சில மாஸங்களாகப் பரீக்ஷை செய்தார்களாம். 20 முறைகள் பரீக்ஷை செய்யப்பட்டன. அவைகளில் இரண்டு முறைதான் ரொம்ப ச்லாக்யமாயிருக்கின்றனவென்று தெரிகிறது. அவைகளில் ஒன்று சுண்ணாம்பு தாளித்த ஜலத்தில் முட்டைகளை அமிழ்த்திவைத்தல். இந்த முறையை சென்ற வைகாசிமீ த்துப் 'பிழைக்கும் வழி'ப்பத்ரிகையில் விவரமாய் எழுதியிருக்கிறோம்.

இன்னொருமுறை வாட்டர்-க்ளாஸ் என்னும் மருந்தில் 1 பாகத்துக்கு பத்துபங்கு ஜலம் வீதம் கலந்து அந்த ஜலத்தில் முட்டைகளை அமிழ்த்திவைத்தல். (இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் கம்மர்ஷியல் வாட்டர் க்ளாஸ் என்று கேட்டால் கிடைக்கும்.) ரொம்ப சுத்தமான ஒருசிறு பீப்பாயையோ அல்லது பெரிய ஜாடியையோ எடுத்து, அதில் ரொம்ப சூடான வெந்நீர் விட்டு அலம்பி அதில் பத்ரப்படுத்தவேண்டிய முட்டைகளை ஜாக்ரதையாய்வைத்து முன்சொன்ன "வாட்டர் க்ளாஸ்" கலந்த ஜலத்தை பாத்ரம் நிறைய ஊற்றி மூடிவிடவேண்டியது. இந்த பீப்பாயை அல்லது ஜாடியை குளிர்ச்சியான இடத்தில் வைத்திருந்தால் முட்டைகள் ஆறு மாஸம் வரையில் கெடாமலிருக்கின்றனவாம்.

இப்படிப் பத்ரப்படுத்தின முட்டைகளை வேகவைக்கும்போது அவைகள் வெடித்துப்போகக்கூடும். வேகவைக்கு முன்னால் முட்டையின் அடிப்பாகத்தை ஒரு குண்டூசியினால் குத்திவிட்டால் முட்டை வெடிக்காது.

முட்டைகளின்மேல் 'வாஸலின்' மருந்தைத்தடவி வைத்திருந்தாலும் முட்டைகள் வெகுகாலம் கெடாமலிருக்கின்றனவாம்.

### Cleaning Glass.

கண்ணாடி சுத்தம் செய்யும் விதம்.—1. ஜன்னல் முதலியவைகளுக்கு உபயோகிக்கும் தட்டைக் கண்ணாடியின்மேல் சிறு கீறல்கள் உண்டானால் ஒரு மெல்லிய வஸ்த்ரத் துண்டை ஸ்பிரிட் எண்ணெயில் நனைத்து அக்கண்ணாடியின்மேல் சிறிது நேரம் தேய்த்துப் பின்பு ஒரு பட்டுத்துண்டு அல்லது சிறு தோலினால் தேய்த்தால் கீறல்களெல்லாம் மறைந்துபோய் பளபளப்பாகிவிடும். 2. விளக்குச் சிம்னிகள் அதிக அழுக்கடைந்துபோனால் அவைகளை ஸுமார் ஒரு விநாடிநேரம் கொதிக்கும் நீரிலிருந்து எழும்பும் ஆவிக்குமேல் பிடிக்கவேண்டும். அதன் பின் சுத்த வஸ்த்ரத்தினாலும் பின்பு மெல்லிய காகிதத்தினாலும் சுத்திசெய்ய எவ்வித அழுக்கும் நீங்கி சுத்தமாகிவிடும். 3. கண்ணாடிப்புட்டிகள் முதலியவைகள் நிறங் கெட்டுப்போனால் அவைகளை உருளைக்கிழங்கின் தோலினால் நிரப்பி இறுக அடைத்து வைக்கவேண்டும். இப்படி மூன்றுநாள் இருந்தால் ஒருவகை நுரையுண்டாகும். பிறகு அந்தத் தோல்களைக் கொட்டிவிட்டுத் தண்ணீரினால் தேய்த்துக் கழுவவேண்டும். பின்பு அதை 24-மணிநேரம் ஓடுகின்ற தண்ணீரிலாவது அனலான இடத்திலாவது வைத்திருந்தால் பழைய பளபளப்பு உண்டாகிவிடும்—இந்துநேசன்.



# AGRICULTURE.
## விவஸாயம்.

### Sugar Cane.

கரும்புப் பயிர்.— கரும்புப் பயிரில் செதல் அனேகமாய் தண்ணீர் குறைவாலும், பயிருக்கு இட்ட உரத்தின் குணத்தாலும் இன்னும் அநேக காரணங்களாலும் நேருவதுண்டு. அனேக இடங்களில் செதலை போக்குவதற்கு வெள்ளைப் பாஷாணத்தை ஒரு ரூபாயிடை வாங்கி அதை நன்றாய்த் தூள்செய்து அதை 10 பலம் சர்க்கரையுடனும், ¼ படி கோதுமை மாவுடனும் கலந்து கொஞ்சம் கொஞ்சம் கரும்புப் பயிருக்கு மத்தியில் அங்கங்கே போட்டுக்கொண்டு போனால் அதை செதல்கள் வந்து தின்றுசாகும். செத்த செதலை தின்ன புதுச் செதல்கள் வந்து அவைகளும் மாளும். இப்படி செதல்கள் அநேகமாய் மாண்டு போகும். ஆனால் பாஷாணச் சரக்கைக் கால்நடைகள் ஜனங்கள் முதலானவர்கள் சாப்பிடாதபடி அதி ஜாக்ரதையாய் உபயோகிக்கவேண்டும்.—கிருஷிகன்.

### Cultivation of Rice.

நெல்பயிர் ஸாகுபடி.—நெல் ஸாகுபடியில் பின்வரும் விஷயங்கள் ரொம்பவும் கவனிக்கத் தக்கவை.

(1) கதிர் முற்றுவதற்கு முன்னால் வயலில் உள்ள ஜலத்தை வடியவிட்டு, ஜலம் வயலில் பாயாமலிருக்கும்படி செய்தால் நெல் நன்றாய் முற்றுவதற்கு ரொம்ப ஸாதகமேற்படும்.

(2) ஜாவா தீவில் ரொம்ப செழுமையாயும் ரொம்ப செழுமைக் குறைவாயும் இராமல் நடுத்தரமாயுள்ள நிலங்களில்தான் நாற்று விடுவது வழக்கம். ஏனென்றால் ரொம்ப செழுமையான நிலத்தில் வளர்ந்த நாற்றுக்களை கொஞ்சம் மட்டமான நிலத்தில் நட்டால் அவைகள் நன்றாய் செழுமையாய் வளருவதில்லை.

(3) தூர் கட்டுவதற்குமுன் தூர்கட்டி முடியும் வரையில் நிலத்தின் மேல் ஜலம் தங்கி நிற்காமல், நிலத்து மண்ணில் நன்றாய்ச் சுவறி யிருக்கும்படி ஜலம் பாய்ச்சுவதால், பயிர் அதிக தூர் கட்டுவதோடு, மாஸூலும் அதிகமாகக் கிடைக்கிறதாம்.

### Care of Seed.

விதைகள் கட்டும் முறை.—விவஸாயத்துக்கு விதை கட்டுபவர்களெல்லாரும் பின்வரும் விஷயங்களை கவனிக்கவேண்டியது அவச்யம். லேசான தான்யங்களும் பதரும் போகும்படியாக விதை தான்யத்தை நன்றாய் புடைத்துத் தூற்றவேண்டியது லேசான தான்யங்களுண்டாவதற்குக் காரணங்களாவன. (1) தான்யத்தின் மணி நன்றாய் முற்றாமலிருத்தல். (2) பூச்சிகள் தான்யத்தினுள்ளே யிருக்கும் மணியைத் தின்றுவிடுதல். புடைத்தெடுத்த பிறகு விதையை வெயிலில் நன்றாய்க் காயவைக்கவேண்டும். மறுபடியும் இரண்டு வாரம் கழித்து இன்னம் ஒரு முறை காயவைக்கும்போது ஏதேனும் அந்துகள் தோன்றினால் மூன்றாம் முறை காயவைக்கவேண்டும். இன்னும் வேண்டுமானால் அடியில் சாம்பலைப்போட்டு அதன்மேல் காய்ந்த வேப்பந்தழையைப் பரப்பி விதை தான்யத்தைக் கட்டிவைக்கலாம்.

நெல்விதையை உலர்த்தி பத்ரப்படுத்தும்போது புன்கம் இலைகளை உபயோகிப்பதுண்டு. நெல்விதையில் புன்கம் இலைகள் போடுவது பூச்சி, அந்து முதலியவைகள் நெல்லைக் கெடுக்காமலிருக்கத்தான். வேறுவித இலைகளும் போடுவதுண்டு. நொச்சி, கொட்டைக் கரந்தை, வேப்பிலை முதலிய செடிகளின் இலைகளையும் சில இடங்களில் போடுகிறார்கள். மயில் துத்தப்பொடியும் போடுவதுண்டு. சட்டியில் ஜலம் வைத்து அதில் கொஞ்சம் மண் எண்ணெய் கலந்து குதிர்களில் வைத்தால் இந்த ஜந்துக்கள் அதில் விழுந்து சாகும்.

### Manure for Cocoanut.

தென்னை மரத்துக்கு எரு.—தென்னை மரத்தைச் சுற்றிலுமுள்ள மேல்வேர்களைக் களைந்து, அம்மரத்தினடியைச்சுற்றி இரண்டடி ஆழத்துக்குத் தோண்டி மண்ணை எடுத்துவிட்டு அதில் சப்பாத்தி என்னும் நாகதாளியைக் கொண்டுவந்து அக்குழி நிறைய இட்டு மேலே மண்மூடி ஜலம் பாய்ச்சிவந்தால், அம்மரங்கள் அதிக செழிப்புடன் வளர்வதோடு காய்களும் ஓயாமல் விசேஷமாகக் காய்த்துப் பலன் தருகின்றன. ஆதலால் இத்தோட்டம் வைத்து பயிரிடுவோர்கள் மேலே கூறப்பட்டுள்ள எருவை உபயோகித்து வந்தால் அதிக லாபமுண்டாகுமென்று 'விச்வகர்ம குலோபகாரி' எழுதுகிறது.

### Milch Cattle & Hot-water.

கறவை மாடுகளும் வெந்நீரும்.—கறவை மாடுகளுக்குச் சுடுதண்ணீர் குடிக்க வைப்பதில் பால் வ்ருத்தியாவதாகத் தெரிகிறது.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operation in Denmark.

டென்மார்க்கில் கோவாபரேஷன்.—டென்மார்க்கில் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ரொம்ப முன்னேற்றமடைந்திருக்கின்றன. சென்ற 1913-ம் வர்ஷத்தில் கோவாபரெடிவ் விற்பனை ஸங்கங்கள் 30 லக்ஷம் பவுனுக்கு ஸாமான்கள் விற்பனை செய்தன. கோவாபரெடிவ் விற்பனை ஸங்கங்கள் மிகவும் அதிகரித்திருக்கின்றன. இதைத் தவிர, டேனிஷ் மொத்த விற்பனை ஸொஸைடியும் தகுந்த வ்யாபாரம் செய்து லாபமடைந்திருக்கிறது. இந்த ஸொஸைடிகள் டேனிஷ் அக்ரிகல்சுரல் (வ்யவஸாய) ஸொஸைடியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்கள் விளைவித்துக் கொடுக்கும் விதைகள் யாவற்றையும் வாங்கி அங்கங்கு வேண்டியவர்களுக்கு விற்பனை செய்தனவாம். அந்த தேசத்தில் கோவாபரெடிவ் பாங்கி, கோவாபரெடிவ் ஸிமெண்ட் சாலே, லிலக்கரி வேலே முதலிய வேலேகளும் தொடங்கியிருக்கின்றன. இவைகளில் ஸிமெண்ட்சாலே ரொம்ப ப்ரக்யாதியடைந்திருக்கிறது. லிலக்கரி வ்யாபாரத்தால் உள்ளூர் விலே ரொம்ப இறங்கி விட்டதாம்.

### The Co-operative Movement in India.

இந்தியாவில் கோவாபரேடிவ் ப்ரயற்சி.—கோவாபரெடிவ் ஸங்கங்களில் தனி ஸங்கங்களைத் தவிர மற்ற ஸெண்ட்ரல் பாங்கிகள், ப்ரொவின்ஷ்யல் பாங்கிகள் ஆகிய இவைகளுக்கும் ஸாதாரண நாணய பாங்கிகளுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பற்றியும், மேற்சொன்ன ஸெண்ட்ரல், ப்ரொவின்ஷ்யல் பாங்கிகளுக்கும் அவைகளின் மெம்பர்களாக இருக்கும் ஸங்கங்களுக்கும் உள்ள ஸம்பந்தத்தைப்பற்றியும் இந்த கோவாபரெடிவ் பாங்கிகளின் நிர்வாகம், இன்ஸ்பெக்ஷன், கணக்குகளின் தணிக்கை ஆகிய இவைகளுக்காக எவ்வளவு மட்டில் நிபுணர்களின் உதவி வேண்டியிருக்கு மென்பதைப்பற்றியும், ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியின் கடமைகள் பின் வருமாறு:—கோவாபரெடிவ் ப்ரயற்சி, முக்யமாய் ஸெண்ட்ரல், ப்ரொவின்ஷ்யல் பாங்கிகள் சரியாக அபிவ்ருத்தியடைந்து கொண்டிருக்கின்றனவாவென்றும், அவைகளின் மூலதன நிலைமை சரியாக இருக்கிறதா என்றும் ஆராய்தல்; இவைகளின் அபிவ்ருத்திக்காக எதாவது செய்ய வேண்டியது அவச்யமானல் இன்னது செய்யவேண்டு மென்று ஆராய்தல்; ஸெண்ட்ரல் பாங்கி, ப்ரொவின்ஷ்யல் பாங்கி ஆகிய இவைகளின் அமைப்பு, நிர்வாகம், கோவாபரெடிவ் ஸங்கங்களில் பல வகைகளில் ஒன்றுக்கொன்றுள்ள பண விஷயமான ஏற்பாடுகள்; எல்லாவித ஸங்கங்களுடைய ஆடிட் (தணிக்கை), இன்ஸ்பெக்ஷன், நிர்வாகம், ரிஸர்வ் பண்டுகளே இன்னவிதத்தில் செலவழிப்பது, அல்லது இன்னவிடத்தில் போட்டுவைப்பது, வர்ஷாந்திரக் கணக்குகளில் ரிஸர்வ் பண்டுகளே எப்படிக்காட்டுவது ஆகிய இந்த விஷயங்களேப்பற்றிப் பரிசீலனே செய்வது.

மேற் சொன்ன விஷயங்களேயேயன்றி கமிட்டியார் கோவாபரெடிவ் ப்ரயற்சி ஸம்பந்தமான வேறு முக்யமான விஷயங்களேப்பற்றியும் பரிசீலனேசெய்து அது விஷயமாய் ப்ரேரணேகளும்செய்யலாம். இந்தக் கமிட்டி முதலில் டெல்லியில்கூடி பிறகு இந்தியாவில் அவச்யமான இடங்களுக்குப்போய் வரும்.

### Co-operation among Depressed Classes.

தாழ்ந்த ஜாதியார்களுக்குள் கோவாபரேஷன்—பம்பாயில் தெருக்கூட்டி, கொல்லே வாரி ஜீவனம் செய்யும் தாழ்ந்த ஜாதியார்களில் அநேகர் குடியால், வர்ஷம் ஒன்றுக்கு ரூ 100-க்கு ரூ 150 வீதம் வட்டிக்குக் கடன்வாங்கி, அந்தக்கடனே செலுத்தமாட்டாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இந்திய ஊழியஸங்கத்தில் மெம்பரான மிஸ்டர் தேவதார் என்பவர் அவர்களில் சிலருக்குக் குடியால் வரும் கெடுதிகளே எடுத்துக்காட்டி, அவர்களுக்குள் ஒர் ஐக்ய நாணயஸங்கம் ஏற்படுத்தி, அவர்களுடைய ஸம்பாத்யத்தில் மிச்சப்படும் தொகைகளே அதில் டிபாஸிட் செய்யச்சொல்லி, அவர்களில் அவச்யமான செலவிற்குப் பணம் தேவையா யிருப்பவர்களுக்கு அந்தத் தொகையிலிருந்தே ஸ்வல்ப வட்டிக்குக் கடன் கொடுத்து நடத்திக்காட்டியதில், அவர்கள் அதனுலுண்டாகும் நன்மையை அறிந்து கொண்டு அதைப்போல் அனேக ஸங்கங்கள் ஏற்படுத்தி முன்னிருந்த கடன்களேயும் தீர்த்து பிறிடத்தில் அதிக வட்டிக்குக் கடன் வாங்க அவச்யமில்லாமல், மேற்படி ஸங்கங்களேத் தாங்களே நன்ருய் நடத்திக்கொண்டு வருகிருர்களென்று 'பூர்ண சந்திரோதயம்' எழுதுகிறது.



# COMMERCE.
## வ்யாபாரம்.

### Trade in Cocoanut Products.

தென்னேயிலிருந்து கிடைக்கும் பொருள்களில் வ்யாபாரம்:—சென்னே ராஜதானியிலிருந்து கொப்பரையே யன்றி மற்ற தென்னேப்பொருள்களும் அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாகி வருகின்றன. அவைகளின் விவரத்தை அடியில் கண்ட அட்டவணேயில்கண்டு கொள்ளலாம்.

| — | 1912—13 அளவு | 1912—13 மதிப்பு ரூ. | 1913—14 அளவு | 1913—14 மதிப்பு ரூ. | 1913—14-ல் அதிகம் அல்லது குறைவு அளவு | 1913—14-ல் அதிகம் அல்லது குறைவு மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| தேங்காய் (எண்ணிக்கை) | 82,669 | 4,151 | 70,813 | 5,164 | — 11,856 | + 1,013 |
| தேங்காய்பருப்பு (அந்தர்) † | 8,879 | 94,550 | 14,053 | 1,65,392 | + 5,174 | + 70,842 |
| நாரால்செய்த பொருள்கள் (அந்தர்) | 7,15,969 | 81,48,891 | 7,65,787 | 88,07,356 | + 49,818 | + 6,58,465 |
| கதம்பைக்கயிறு (அந்தர்) | 16,518 | 1,81,178 | 16,531 | 1,82,358 | + 13 | + 1180 |
| கொப்பரை (அந்தர்) | 6,84,721 | 1,28,38,681 | 761,726 | 1,55,45,534 | + 77,005 | 27, 06,853 |
| தேங்காயெண்ணெய் (காலன்) * | 9,29,971 | 18,43,444 | 10,60,139 | 22,48,169 | + 1,30,168 | + 4,04,725 |
| தேங்காய்ப்பிண்ணாக்கு (அந்தர்) | 1,27,396 | 6,18,809 | 81,057 | 3,93,012 | — 46,339 | — 2,25,297 |

* காலன் = 2·4 படி (பட்டணம்படி) † அந்தர் = 112-ராத்தல்

### Match Trade of India.

இந்தியாவின் நெருப்புக்குச்சி வ்யாபாரம்.—இந்தியாவில் சென்ற 1913-14-ம் வர்ஷத்தில் வெளிநாடுகளிலிருந்து 90-லக்ஷம் ரூபாய்க்கு நெருப்புக்குச்சி இறக்குமதியாயிற்று. அதற்கு முந்தின வர்ஷம் 99-லக்ஷம் ரூபாய்க்கு இறக்குமதியாயிற்று. சென்ற வர்ஷம் வெள்ளே பாஸ்பரஸ் என்னும் நெருப்புக்குச்சி ஏற்ற உதவும் பொருள் சேர்த்துச் செய்யப்பட்ட நெருப்புக்குச்சிகள், அதாவது எங்கே வேண்டுமானலும் கிழித்துப் பற்றவைக்கக் கூடிய நெருப்புக்குச்சிகள் இந்தியாவில் இறக்குமதியாவது கூடாதென்று சட்டமேற்பட்டதால், அந்த நெருப்புக்குச்சிகளின் வரத்து நின்றுபோய் அதனல் இறக்குமதி குறைந்துபோயிற்றென்று தோன்றுகிறது. இந்தியாவில் நெருப்புக்குச்சி செய்வதற்கு வேண்டிய ஸாமான்கள் ஏராளமாயிருந்தும், வெளிநாடுகளிலிருந்து நெருப்புக்குச்சி ஏராளமாய் நமது நாட்டுக்குள் இறக்குமதியாகிறது.

சென்ற 1913-14-ம் வர்ஷத்தின் நெருப்புக்குச்சி இறக்குமதி விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| ஜப்பான் | ரூ. 39,07,000 |
| நார்வே, ஸ்வீடன் | 34,38,000 |
| ஆஸ்ட்ரியா | 9,67,000 |
| ஜெர்மனி | 2,51,000 |
| பெல்ஜியம் | 1,10,000 |

கொஞ்சகாலம் வரையில் இந்தியாவில் நார்வே ஸ்வீடன் ஆகிய இவைகளில் செய்யப்பட்ட நெருப்புக்குச்சிதான் விசேஷமாய் செலவாகிக்கொண்டிருந்தது. ஆனல் அந்த இரண்டு தேசங்களுக்கும் போட்டியாக சில காலமாக ஜப்பான் நெருப்புக்குச்சி இந்தியாவுக்கு வந்துகொண்டிருக்கிறது. ஜப்பான் நெருப்புச்குச்சி நார்வே ஸ்வீடன் நெருப்புக்குச்சியை விட மட்டமானது. ஆனலும் அது (ஜப்பான் நெருப்புக்குச்சி) விலே மலிவாயிருப்பதால் விசேஷமாய் விலேப் போகிறது.

இந்தியாவில் சென்ற 1912-ம் வர்ஷத்தில் 6-நெருப்புப் பெட்டி சாலேகள் இருந்தன.

மைஸூரில் நெருப்புக்குச்சி சாலே ஸ்தாபிப்பதைப் பற்றி மைஸூர் பொருளாதாரக் கான்பரன்ஸில் ஆலோசிக்கப் போகிருர்கள் என்று தெரியவருகிறது.

## ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Banana Products.

வாழைப்பழத்திலிருந்து செய்யப்படும் பொருள்கள்.—சென்ற பத்துப்பன்னிரண்டு வர்ஷகாலமாக மேல்நாடுகளில் வாழைக்காயையும், பழத்தையும் காயவைப்பதற்காக அநேக முறைகளை பரீக்ஷைகள் செய்துவந்தார்கள். இப்போது அந்தமுறைகளில் சில கைகூடிவந்திருக்கின்றனவென்று தெரிகிறது. அமெரிக்காவில் வாழைக்காயையும், பழத்தையும் காயவைத்து அநேக தினுஸுகளாகத் தயார்செய்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். வாழைப்பழத்தையோ, அல்லது பழக்காயையோ சர்க்கரை சேர்க்காமல் முழுசாகக் காயவைக்கிறார்கள். இப்படிக் காயவைத்த வாழைப்பழங்கள் காய்ந்த அத்திப்பழம்போல் சிறமுள்ளதாய் தித்திப்பாகவும் சாப்பிடுவதற் கேற்றதாகவும் இருக்கின்றன. இவைகளுக்கு பிக் பனானஸ் (Fig Bananas) அதாவது அத்திப்பழம் போன்ற வாழைப் பழவற்றல் என்றுபெயர்.

வாழைக்காயை அல்லது பழத்தை கொஞ்சங்கூட ஈரப்பசையில்லாமல் காயவைத்தால் அது சமையலுக்கேற்ற வாழை வற்றலாகிறது. இதுமுழுசாக இல்லாமல் துண்டுகளாகவும், அரைத்து நொய்யாகவும் மாவாகவும் விற்கப்படும். வாழைமாவும் நொய்யும் கஞ்சிமுதலிய ஆகாரவகைகள் செய்ய உதவுகின்றனவாம். வாழைமாவிலும் நொய்யிலுமுள்ள கார்போஹைட்ரேட். என்னும்மாஸத்து உணவுப்பொருள் ஸுலபமாய் கரையக்கூடிய நிலைமையிலிருக்கிறது. ஆகையால் இந்த மாவும், நொய்யும் குழந்தைகளுக்கும், பலஹீனமா யிருப்பவர்களுக்கும், குன்ம வ்யாதியஸ்தர்களுக்கும் ரொம்ப உபயோகமுள்ளவைகள் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்களாம்.

மேற்சொன்ன வாழைக்காய்ப்பொருள்கள் ஜெர்மனியிலும் க்ரேட் ப்ரிட்டனிலும் செலவாகின்றனவாம். க்ரேட் ப்ரிட்டனுக்கு ஜமய்க்கா தீவிலிருந்து ரொம்ப வாழைக்காய்ப்பொருள்கள் வருகின்றனவாம்.

### A New Plant Useful for Paper Making.

கடுதாசிசெய்ய உதவும் ஒரு புதியசெடி.—சீமைக் கிச்சிலிக்கிழங்கு என்னும் ஒருசெடி இந்தியாவில் பற்பல இடங்களில் பயிராகிறது. இது இந்தியாவிலேயன்றி, மேல் இந்தியத்தீவுகள், ந்யூஸிலண்ட், ப்ரேஜில் முதலிய இடங்களிலும் வளருகிறது. இதில் உண்டாகும் நார் கடுதாசிசெய்ய ரொம்ப உபயோகமாம். இதிலிருந்து ரொம்ப உறுதியான கடுதாசி செய்யப்படுகிறதாம். இந்தச்செடியின் நாரிலுள்ள ஒருவகைப் பசையால் கடுதாசி தோற்கடுதாசி யென்று சொல்லப்படும் பார்ச்மெண்ட் கடுதாசியைப் போலிருக்கிறதாம். இந்தக் கடுதாசி செய்வதற்கு ப்ரத்யேகமாய்ப் பசையிட வேண்டியதில்லையாம். கடுதாசி செய்வதும் ஸுலபமாயிருக்கிறதாம்.

### Wood from Paper.

கடுதாசியிலிருந்து 'மரம்' செய்தல்.—கடுதாசியை அரைத்துக் கூழாக்கிப் பெட்டிகளும், கூடைகளும், இன்னும் வீட்டுக்கு உதவக்கூடிய பல ஸாமான்களும் செய்யப்படுகின்றன. ஜெர்மனியில் ஒருவர் கடுதாசியிலிருந்து போலி 'மரம்' செய்யப்போவதாகத் தெரிகிறது.

இயற்கை மரத்துக்கு என்னென்ன நல்ல குணங்கள் இருக்கின்றனவோ அத்தனையும் இந்தச்செயற்கை மரத்துக்கு உண்டு. ஆனால் இது இயற்கைப் பொருளைவிட ரொம்ப விலைமலிவாயும் லேசாயுமிருக்கிறதாம்.

இயற்கைமரம் சில சீதோஷ்ண நிலைமைகளில் விரிந்தும் வளைந்தும் போகக்கூடும். ஆனால் இந்த செயற்கை 'மரம்' அப்படியொன்றும் கெட்டுப் போகாது. கரையானும், பூச்சிகளும் இதற்கு ஒரு தீங்கும் செய்யமுடியாதாம். இந்த 'மரம்' செய்வது ரொம்ப ஸுலபமாம். கடுதாசியைக் கூழாகச் செய்து, அதில் ஒருவித பசையைக்கலந்து யந்த்ரங்களில் அழுத்திவிட்டால் மரத்தைப்போல் கெட்டியாய் விடுகிறதாம். இந்தசெயற்கை 'மரத்தை' நமக்கு இஷ்டமான ஸாதாரண மரங்களைப்போலிருக்கவும் செய்யலாயாம். சாராயம், மீன், முதலிய ஸாதாரண ஸாமான்கள்வைக்க ஸாதாரண மரங்களைப்போலும், மோட்டார் வண்டிகளின்மேல் பாகங்கள், வண்டிக்கு வேண்டிய மரப்பாகங்கள் முதலியவைகளுக்கு உயர்ந்த மரங்களைப்போலவும் செய்யலாமாம். இதைக் கண்டுபிடித்த ஜெர்மானியர் முதலில் பீப்பாய்கள் செய்ய உத்தேசித்திருக்கிறாராம்.



16913

## BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Muscular Energy and Altitude.

தேகசக்தியும் பூமியின் உயரமும்.—மலைமேல் ஏறிப் போகிறவர்கள் மேலே ஏற ஏற தளர்ச்சியடைந்து ச்ரமப்படுகிறார்கள். இதற்குக் காரணம் கால் கடுக்க உயர ஏறிப்போகவேண்டி யிருக்கிறதென்பது மாத்ரமல்ல; வேறு காரணமும் இருக்கிறதென்று இரண்டு ப்ரெஞ்ச் சாஸ்த்ரிகள் சொல்லுகிறார்கள். நாம் ரொம்ப உயரமான இடத்தில் இருந்தால் நமக்கு வேலை செய்யக்கூடிய சக்தி குறைந்து போகிறதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் பின்வரும் பரீக்ஷையைச் செய்து பார்த்தார்கள். ஒரு அணில் சுற்றிச் சுற்றி வருவதற்கு உபாயம் அமைத்துள்ள ஒரு வட்டமான கூட்டில் ஒரு அணிலைவிட்டு ஸமுத்ர மட்டமுள்ள ஓர் ஊரில் வைத்துப் பார்க்கையில் அந்த அணில் தினம் 6700 தடவை சுற்றி வந்தது. இப்படி அநேக நாள் செய்து பார்த்ததில் அணில் இந்தக் கணக்குப்படியே சுற்றிக் கொண்டு வந்தது.

சில நாள் கழித்து அந்த அணிலை 15,000 அடி உயரத்துக்கு மேலுள்ள மாண்ட் ப்ளாங்க் என்னும் ஆல்ப்ஸ் மலை சிகரத்துக்குக் கொண்டுபோய் வைத்துப் பார்த்தார்கள். அங்கே அந்த அணில் தினம் 900 தடவை வீதந்தான் சுற்றிற்று. பிறகு அதை ஸமவெளிக்கு மறுபடியும் கொண்டு வந்ததில் 5000 தடவை சுற்றிற்று. இந்தப் பரீக்ஷையில் அணிலுக்கு மலை மேலேறவேண்டிய சிரமம் ஒன்றுங் கிடையாது. ஆகையால் அணில் அதிக தடவை சுற்ற முடியாமல் போனதற்குக் காரணம் அது பூமி மட்டத்துக்கு மேல் ரொம்ப உயரத்தில் இருந்ததே. பூமி மட்டம் ரொம்ப உயரமாயிருந்தால் அங்கே ஆகாயம் நெருக்கமாயிருப்பதில்லை. ஜீவனுக்கு அவச்யமான ப்ராணவாயுவும் குறைந்திருக்கும். ப்ராணவாயு குறைந்தால் தசைநார்களின் சக்தி குறைந்துபோவது ஸகஜமாம்.

### Delhi.

டெல்லி.—டெல்லிப் பட்டணத்துக்கு அந்தப் பெயர் முதல் முதலில் எப்படி வந்தது என்பதற்கு ஒரு புராதன கதை வழங்கி வருகிறது. ஆதிகாலத்தில் டெல்லியின் அரசர் அந்தப் பட்டணத்தைக் கட்டும்போது, ஸமஸ்[illegible] பண்டிதர்கள் அஸ்திவாரத்தில் அஸ்திவார இரும்பை நாட்டி, அந்த இரும்பானது பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஆதி சேஷனுடைய படம் வரையில் போயிருந்ததென்று சொன்னார்கள்.

ராஜா அதில் நம்பிக்கை கொள்ளாமல் பண்டிதர்கள் தாங்கள் சொல்லுவதை ரூபிக்க வேண்டுமென்று சொன்னார். அதன்மேல் அவர்கள் அந்த இரும்பைப் பெயர்த் தெடுக்கச் சொல்லிப் பார்க்கையில் அந்த இரும்பில் பூமிக்குள் போயிருந்த பாகத்தின் நுனியானது முழுவதும் ரத்தமயமாயிருந்தது. எல்லாரும் ஆச்சர்ய மடைந்தார்கள். ராஜா தாம் அவநம்பிக்கையடைந்ததற்காக வெட்கமடைந்து, அந்த இரும்பை மறுபடியும் அதே இடத்தில் வைத்துவிடும்படி பண்டிதர்களைக் கேட்டுக்கொண்டார். அவர்கள் என்ன ப்ரயாஸப்பட்டும் அந்த இரும்பை சரியாக வைக்க முடியாமல் போய் அது 'டிலீ' அதாவது தளர்த்தியாகவே யிருந்தது. அது முதல் அந்தப் பட்டணம் டிலீ, அல்லது டில்லி யென்றும் டெல்லி யென்றும் பெயரடையலாயிற்று.

### Panama Canal.

பனமா கால்வாய்.—அமெரிக்காவின் மத்தியில் மத்ய அமெரிக்காவுக்கும் தென்னமெரிக்காவுக்கும் இடையிலுள்ள பனமா பூஸந்தியில் ஒரு கால்வாய் வெட்டி அதன் மூலமாய் அட்லாண்டிக் மகா ஸமுத்ரத்தையும் பஸிபிக் மகா ஸமுத்ரத்தையும் ஒன்று சேர்த்திருக்கிறார்கள். அந்தக் கால்வாய் சென்ற ஆகஸ்டு மாஸம் 16-தேதி யன்று திறந்துவிடப்பட்டது. அன்றையதினம் அதன் வழியாக அமெரிக்கா ஐக்ய மாகாணங்களின் யுத்த டிபார்ட் மெண்டைச் சேர்ந்த 'ஆன்கன்' என்னும் கப்பல் முதல் முதலில் போயிற்று. அது அந்தக் கால்வாயை 11 மணி நேரத்தில் கடந்துவிட்டது. அது புறப்படும்போது அதை வெட்டுவித்த கர்னல் கீதால்ஸ் என்பவரும், பனமா குடியரசின் ப்ரெஸிடெண்டும் அது புறப்படுவதைப் பார்க்க வந்தார்களாம்.

இப்போது அந்தக் கால்வாயின் வழியாக சிறு கப்பல்கள்தான் போகலாமாம்.

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### Deepagni Sanjeevi Lehya.

தீபாக்னி ஸஞ்சீவி லேஹ்யம்.—சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், வசைக்கு பலம்-1; இவைகளை இளம் வறுப்பாகவறுத்து சூர்ணித்து பசும்பால் படி 2, பனவெல்லம் பலம் 10, ஆகிய இவைகளைச்சேர்த்து பாகுசெய்து, அப்பாகில் சூர்ணத்தைத்தூவி கிண்டி வரும்போது, தேன் பலம் 10, நெய் பலம் 10, விட்டு மெழுகு பதமாகக் கிளறி பரணியில் அடைத்து கழற்சிக்காய் ப்ரமாணம் காலை மாலை இருவேளையும் 10, 5, அல்லது 7 நாள் சாப்பிடவும். வாயு, வாதம், பித்தவாயு, உஷ்ணங்கள், வயிறு உளைவு, குத்து, ஸர்வாங்கவலி, ஆஸனக்கடுப்பு, எரிச்சல் பேதி, பொருமல், வாதக்கிராணி, அஸ்திஜ்வரம், அஸ்திவெட்டை, வாந்தி முதலிய வ்யாதிகள்தீரும். இச்சாபத்யம்.— விச்வகர்ம குலோபகாரி.

### Police Women in Manchester.

மான்சஸ்டால் போலீஸ் ஸ்த்ரீகள்.—அமெரிக்காவில் அநேக பட்டணங்களில் ஸ்த்ரீகள் போலீஸ் காரர்களாக இருக்கிறார்களாம். இவர்கள் சிலவேளைகளில் ஸாதாரண போலீஸைப்போல் 'யூனிபார்ம்' என்று சட்டை, ட்ரௌஸர்கள் போட்டுக்கொண்டும், சில வேளைகளில் இவைகள்போட்டுக் கொள்ளாமலுமிருக்கிறார்களாம்.

இப்போது இங்க்லண்டிலுள்ள மான்சஸ்டர் பட்டணத்திலும் ஸ்த்ரீகளை போலீஸில் சேர்த்துக்கொள்ளப் போகிறார்களாம். இந்த ஏற்பாடு சாச்வதமான ஏற்பாடல்ல. வேண்டும்போது ஸ்த்ரீகளை 'டெம்பரரியாக' போலீஸில் சேர்த்துக்கொள்ளும்படி அந்தப் பட்டணத்து முக்ய கான்ஸ்டபிளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### A Strange Marriage Custom.

ஒரு விநோதமான கல்யாணச் சடங்கு.—ஸ்பெய்ன் தேசத்தில் கல்யாணச் சடங்குகளில் முக்யமான பாகம் என்னவென்றால், மாப்பிள்ளை ஒரு புஷ்பத்தை பெண்ணிடம் கொடுப்பார். பெண் அதை வாங்கிக்கொண்டு தனது வலது காதுக்குமேல் அணிந்து கொள்வதாக ப்ரதிக்ஞை செய்வாள். அப்படியே காதில் அணிந்து கொண்டால் கல்யாணம் முடிந்ததாகிறதாம்.

### A Children Show.

ஒரு குழந்தைக் காட்சி.—மாடுகளை நன்றாய் வளர்க்கும் விஷயத்தில் ஜனங்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவதற்காக நம்முடைய நாட்டில் பல விடங்களில் அடிக்கடி கால்நடைக் காட்சிகள் ஏற்படுத்தி, அந்தக்காட்சிக்குக் கொண்டுவரப்படும் மாடுகளில் எவருடைய மாடு நன்றாய் வளர்க்கப்பட்டிருக்கிறதோ அவருக்கு இனாம் கொடுக்கிறார்களென்பதைப் பார்த்திருக்கிறோம். அது போல இப்போது நம்முடைய தேசத்தில் வரவர அதிகரித்து வரும் சிசு மரணத்தை ஒருவாறு குறைப்பதற்காக நம்முடைய தேசத்தில் மத்ய மாகாணத்தில் காண்ட்வா என்னும் பட்டணத்தில் முனிஸிபாலிடியார் குழந்தைக் காட்சி ஒன்று ஏற்பாடு செய்து, ஸுகாதார விதிகளின்படி நன்றாய் வளர்த்த குழந்தை கொண்டு வந்தவனுக்கு இனாம் கொடுத்தார்களாம். இது போல ஒவ்வொரு வருஷத்திலும் நடத்துவதாயும் தீர்மானித்திருக்கிறார்களாம்.

### Turkish Women.

துருக்கி தேசத்து ஸ்த்ரீகள்.—துருக்கி தேசத்து ஸ்த்ரீகள் இப்போது சில காலமாக தங்களுடைய ஸ்வதந்த்ரங்களை அறிந்து, படிக்கவும், ப்ரஸங்கம் செய்யவும், உத்யோகங்களில் அமரவும் தலைப்பட்டு வருகிறார்கள், "ஸ்த்ரீ ஸ்வதந்த்ரங்களை பாதுகாத்துக் கொள்ளும் ஸங்கம்" என்ற ஒரு ஸங்கத்தை ஸ்தாபித்து அதன் ஆதரவில் ஒரு பத்ரிகை நடத்திவருகிறார்கள்.

அந்தப் பத்ரிகையின் நோக்கங்கள் பின்வருமாறு.—

(1) கோஷா முறையை விலக்குவது; (2) கால தேசவர்த்தமானத்தை யறிந்து விவாகவிதிகளை உயர்த்திக்கொள்ளுவது; (3) ஸ்த்ரீகளை தகுந்தபடி குடும்பக் கார்யங்களை யறிந்து நடக்கும்படி செய்வது; (4) பெண்களை உபாத்தினி மார்களாகவும், தாதிமார்களாகவும் பழகும்படி செய்வது; (5) பெண்களுக்கு வேண்டிய பாடசாலைகள் ஸ்தாபித்து, ஏற்கனவே யுள்ள பாடசாலைகளை வ்ருத்தி செய்வது; (6) பள்ளிக்கூடங்களில் தங்கள் தேசத்துக்கு தேவையான தொழில்களைக் கற்றுக்கொடுப்பது.—பெண்கல்வி.



## INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Emigration to the Straits.

பினங்கு, சிங்கப்பூருக்குக் கூலியாட்கள் போதல்.—பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா ஆகிய இந்த இடங்களுக்கு சென்னைத் துறைமுகங்களிலிருந்து மூன்றாவது வகுப்பு ப்ரயாணிகள் வரக்கூடாதென்று அந்தவிடங்களின் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் இப்போது யுத்தம் நடந்து வருவதில் ஏற்கனவே அநேகம் பேர்களுக்கு வேலை கிடைக்காமல் கஷ்டமாயிருக்கிறதாம். அவர்களில் ஸொந்த தேசத்துக்குப்போக இஷ்டப்படுபவர்களை கவர்ன்மெண்டார் தங்கள் செலவில் அவர்களுடைய தேசத்துக்கு அனுப்ப முன் வந்திருக்கிறார்களாம். மேலும், நாகப்பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வரும் கப்பல்களில் அதிக ஜனங்கள் ஏறி வருவதாலும், அவர்களுக்குள் தொத்து வ்யாதிகள் இருக்கக் கூடுமாகையாலும், அந்தக் கப்பல்களைத் தனியே நிறுத்திவைத்து வரும் ஜனங்களுக்கு வ்யாதிகள் ஏதாவது இருக்கின்றனவா என்று பார்த்துப் பிறகு அவர்களை கரையில் இறக்குவார்கள். ஆனால் இப்போது யுத்த மும்மரத்தில் கப்பல் நிற்கு மிடங்கள் யுத்த ஸம்பந்தமாய் தேவையா யிருப்பதால் சென்னையிலிருந்து வரும் கப்பல்களை நிறுத்துவதற்குத் தக்க இடம் இல்லாமலிருக்கிறதாம். ஆனால் இந்த ஏற்பாடு கொஞ்ச காலத்துக்கு இருந்து வருமே யொழிய சாச்வதமான ஏற்பாடல்ல வென்றும், வ்யாபார நிலைமை பழைய ஸ்திதியடைந்தவுடன் கூலியாட்கள் அங்கே போகலாமென்றும் சொல்லப்படுகிறது.

### Regulation of Emigration.

வேறு தேசங்களுக்குக் குடிப்போவதை ஒழுங்கு படுத்துதல்.—ஸமீபத்தில் ஆசியாவிலுள்ள தேசங் களில் சுற்றுப்ப்ரயாணம் செய்து வந்த ஒரு அமெரிக்கர் ஆசியாவாஸிகள் வேறு தேசங்களுக்குக் குடியேறிப் போவதைப்பற்றி சில விஷயங்கள் தெரிவித்திருக் கிறார். "கீழ் தேசத்து கவர்ன்மெண்டுகள் தங்கள் தேசத்தார்கள் வெளிநாடுகளுக்குப் போவதைப்பற்றியும், வெளி நாட்டார் தங்கள் தேசத்துக்கு வந்து குடியேறுவதைப்பற்றியும் ரொம்ப ஜாக்ரதையாயிருக்க வேண்டும். வேறு தேசங்களுக்குக் குடியேறிப் போகிறவர்களுடைய நிலைமையானது அவர்களுக்கு ஸன்மார்க்கக் குறைவும், தேக பலக்குறைவும், பொருளாதார நஷ்டமும் உண்டாக்கக் கூடியதாயிருந்தால் அவர்களை வெளி தேசங்களுக்குப் போக விடாமல் தடுக்க வேண்டும். கல்யாணமாகாத ஜனங்கள் தங்களுக்கு இப்படி யிருக்குமென்று செவ்வையாய்த் தெரியாத விடங்களில் வேலை ஸம்பாதிக்கப்போனால் அவர்கள் அநேகமாய் தனிமையான தோட்டங்களிலோ, சுரங்கங்களின் ஸமீபத்திலோ, தொழில் சாலைக்கு அருகிலோ வஸிக்கும்படி நேரிடும். அவர்கள் குடும்ப வாழ்க்கை நடத்துவதென்பது முடியாது. இப்படிப் பட்ட நிலைமையில் அவர்கள் ஸன்மார்க்கத்திலும், தேக ஸௌக்யத்திலும் குறைவடைந்து போவார்கள். அவர்கள் ரொம்ப ஹீனஸ்திதியிலிருப்பதனால் பரஸ்பர தேச விவாதங்களும், பரஸ் பரஜாதி விவாதங்களும், குடியேற்ற நாட்டு விவாதமும் ஏற்படுகின்றன" என்று சொல்லுகிறார்.

### A Hindu as an American Citizen.

ஒரு ஹிந்து அமெரிக்கா வாஸியானது.—ஸகாராம் கணேச பண்டிதர் என்னும் மகாராஷ்ட்ர ப்ராமணர் சில வர்ஷங்களுக்கு முன் கல்வி அபிவ்ருத்தியின் பொருட்டு அமெரிக்கா ஐக்ய மாகாணங்களுக்குப் போனார். அந்த மாகாணங்களில் ஒன்றாகிய காலிபோர்னியா (California) மாகாணத்தில் அமெரிக்கா வாஸியாக (American Citizen) தன்னை ஏற்றுக் கொள்ளும்படி அவர் முயற்சி செய்து வந்தார்.

அவருடைய பலமான ப்ரயத்தனத்தின்பேரில் அவரை கவர்ன்மெண்டார் அமெரிக்கா வாஸியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஐக்ய மாகாணங்களின் வாஸியாக அங்கீகரிக்கப் படுவதற்கு அதைச் சேர்ந்த சட்டப்ரகாரம் ஒருவன் 'ஸ்வாதந்த்ரியமுள்ள வெண்மையான மனிதனாக' (Free white person) இருக்கவேண்டும். காலிபோர்னியா மாகாணத்தின் கோர்ட்டில், அவ்வார்த்தைகளுக்குத் தாத்பர்யம் என்னவென்றால் அம்மாகாணங்களின் நகரவாஸியாக அங்கீகரிக்கப்பட விரும்புகிற மனிதன் காகேஸியன் ஜாதியென்ற ஆரிய வகுப்பில் ஜனித்திருந்தால் போதும்; அவன் சரீரத்தின் வர்ணம் வெண்மையாயிருந்தாலும் அல்லது கறுப்பாயிருந்தாலும் பாதகமில்லையென்று தீர்மானமாயிருக்கிறது.—பூர்ணசந்திரோதயம்,

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Good Reply.

சாயான பதில்.—வக்கீல்:-உன் தகப்பனுர் சாகும்போது உன்னிடம் என்ன சொல்லிவிட்டு இறந்தார்.

ஸாக்ஷி.—என்னல்லாமோ சொன்னுர்.

வக்கீல்.—அவர் கடைசி வார்த்தை என்ன?

ஸாக்ஷி.—அது தங்களுக்கு யாதொரு ஸம்பந்தமும் இடையாதே.

வக்கீல்.—எனக்கா ஸம்பந்தம் கிடையாது. இந்த கோர்ட்டிலிருக்கிற ஜனங்களுக்கெல்லாம் ஸம்பந்தம் உண்டு. சொல்.

ஸாக்ஷி.—'உனக்கு ஏதாவது வழக்கு தீரவேண்டுமானுல் பஞ்சாயத்தாரிடம் தீர்த்துக்கொள். கோர்ட்டு பழி போகவே போகாதே.' என்றுர்.

### The Clever Grandson.

ஒரு கெட்டிக்காரப்பேரன்.—ஸ்காட்லண்டிலுள்ள க்ளாஸ்கோ பட்டணத்தில் ஒரு ப்ரபல வ்யாபாரி தமது பேரனுக்கு மோட்டார்ஸைகிள் வாங்குவதற்காக பணம் கடன்கொடுத்தார். பையன் பணத்தை மாஸாமாஸம் கொஞ்சம் தொகையாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும், முழுத்தொகையும் கொடுத்தாகிற வரையில் மோட்டார்ஸைக்கிள் அந்த வ்யாபாரியின் ஸொத்தாக இருக்கவேண்டுமென்றும் ஒப்பந்தம் பேசியிருந்தார்கள். ஒருநாள் பையன்வெளியில் ஸைக்கிளேறிப் போய்க்கொண்டிருக்கையில் தனது பாட்டனுர் எதிரே வரக்கண்டு ஸைக்கிளிலிருந்து கீழே இறங்கி, அவரைப்பார்த்து, "தாத்தா, இந்த ஸைக்கிள் யாருக்கு ஸொந்தம், சொல்லுங்கள்," என்றுகேட்டான்.

தாத்தா:—"நான் இதற்குக்கொடுத்த எல்லாத் தொகையும் நீ எனக்கு திருப்பிக் கொடுக்கும்வரையில் ஸைக்கிள் என்னுடையது; அப்படித்தானே நமக்குள் பேச்சு? ஏன் கேட்கிறுய்?"

பையன்:—"இல்லை, இது யாருடையதென்று நிச்சயம்செய்து கொள்வதற்காகக் கேட்டேன். உங்களுடைய மோட்டார் ஸைக்கிளுக்கு ஒரு புதிய 'டையர்' போடவேண்டியிருக்கிறது."

### Going to His Village.

க்ராமத்துக்கு ஓடிப்போதல்.—'எம்டன்' சென்னைக்குவந்து சென்னையைத் தாக்கினதும் அநேகர் தம்மேல் குண்டுகள்விழுமோ என்று பயந்தும், வேறு அநேகர் மறுபடியும் 'எம்டன்' சென்னையைத் தாக்குமோ என்று பயந்தும் தங்களுடைய க்ராமங்களுக்கு ஓடிப்போய், அங்கே திருடர்களால் தொந்தரையடைந்தும், காலரா முதலிய வ்யாதிகளால் இறந்தும், கஷ்டமடைந்தும் போனுர்கள். 'எம்ட'னுல் சென்னையில்நேர்ந்த கஷ்டங்களைவிட வெளியூர்களுக்கு ஓடிப்போனவர்களுடைய கஷ்டங்கள்தான் அதிகமென்று தோன்றுகிறது. இது ஸம்பந்தமாக ஒருகதை சொல்லப்படுகிறது. முன் ஒரு காலத்தில் ஆசியாதுருக்கியிலுள்ள ஜெருஸலம் என்னும் பட்டணத்தில் ப்ளேக் வ்யாதி மும்மரமாய் இருந்தது. ஆயிரக்கணக்காய் ஜனங்கள் இறந்துபோனுர்கள். ஒருநாள் ஒருபக்தன் யமனைக்கண்டு அன்றைய தினம் அவர் எத்தனைபேரைக் கொன்றுரென்று கேட்டார். அதற்கு யமன் தாம் அன்றையதினம் 10-பேரைக் கொன்றதாகச் சொன்னுர்.

இதைக்கேட்டதும் பக்தன் ஆச்சர்யமடைந்து, அன்றையதினம் ஆயிரத்துக்குமேல் ஜனங்கள் இறந்துபோனதாய்த் தெரிய வந்ததாகச் சொல்லவே, யமன், "ஏ, நரனே, நான் கொன்றது பத்துப்பேர்தான்; என்னுடன்கூட வந்த 'பயம்' என்பவர்தான் மற்றவர்களைக்கொன்றுர்" என்றுராம்.

### A Lawyer and a Guard.

ஒரு வக்கீலும் ரெயில்வே கார்டும்.—வடக்கேலார்க்காடு என்னும் ஊரிலுள்ள ஒரு வக்கீல் ஏதோ ஒரு ஊருக்குப்போகப் புறப்பட்டு, வண்டி புறப்படும் ஸமயத்தில் ஸ்டேஷனுக்குவந்து, வண்டியில் ஏற ஓடினுர். ஆனுல் கார்டானவர் அவரை ஏறவிடாமல் தடுத்துவிட்டார். இரண்டொரு ஸெகண்டுகளுக்குப் பிறகு கார்டு வண்டியிலேறப்போனுர். அப்போது வக்கீல் சட்டப்படி வண்டி போய்க்கொண்டிருக்கும் போது ஒருவரும் ஏறக்கூடாதென்று சொல்லி கார்டைப்பிடித்து நிறுத்திவிட்டார். அதற்குள்வண்டி கொஞ்சதூரம் போய்விட்டது. கார்டு ஏறுவதற்காக வண்டி நின்றது. கார்டு வண்டியிலேறும்போது, வக்கீலும் சட்டத்துக்கு விரோதமில்லாமல், வண்டி நின்று கொண்டிருக்கையில் அதில் ஏறிக்கொண்டார்,



# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Spectacles for Cows.

பசுக்களுக்கு மூக்குக் கண்ணுடிகள்.—ரஷ்யாவைச் சேர்ந்த ஸைபீரியா ரொம்ப குளிர்ந்த தேசம். பசுக்கள் பனிமேல் நடந்து போகும்பொழுது வெய்யில் காய்ந்துகொண்டிருந்தால், சூரிய கிரணங்கள் பனிமீது வீழ்ந்து ப்ரதிபலித்து பசுக்களின் கண்களுக்குக் கெடுதல்கள் விளைக்கின்றனவாம். இப்படிப் பசுக்களின் கண்களுக்கு கெடுதலுண்டாகமலிருக்க கறுப்பு மூக்குக்கண்ணுடிகளை பசுக்களுக்கு ஸைபீரியாவில் உபயோகிக்கிறுர்களாம். இதே மாதிரி கனடாவிலும் உபயோகிக்கிறுர்களாம். பசுக்களுக்கு மூக்குக்கண்ணுடி செய்ய இங்கலண்டிலும் பர்மிங்ஹாமிலும் கம்பெனிகள் இரவு பகலாய் வேலை செய்கின்றனவாம். இந்த வ்யாபாரம் செய்கிறவர்களுக்கும் நல்ல லாபம் கிடைக்கிறதாம்.

### A Coachwoman.

கோச்வண்டியோட்டும் ஸ்த்ரீ.—இங்கலண்டில் ஸ்த்ரீகளுக்குள் கோச்வண்டி யோட்டும் தொழிலுடையவள் ஒருத்திதான் இருக்கிறுள் என்று ஸென்ஸஸ் கணக்குகளால் தெரிகிறது. அவள் இங்கலண்டுக்குப் பக்கத்திலுள்ள வைட் என்னும் தீவில் பெம்ப்ரிட்ஜ் என்னும் ஊரில் இருக்கிறுள். இவள் பெயர் மிஸ்ஸஸ் ஜான் புல். இவள் சென்ற 26-வர்ஷகாலமாக இந்தத் தொழில் செய்து காலக்ஷேபம் செய்துவருகிறுளாம். இவள் முதலில் ஒரு சிறிய குதிரையும் வண்டியும் வைத்து ஓட்டிக்கொண்டிருந்தாள். செட்டாய் ஜீவனம் செய்து வந்து பெரிய வண்டி வாங்கி ஸவாரிக்கு விட்டுக்கொண்டிருக்கிறுள். இவள் பன்றிகள் வளர்த்து விற்றும் லாப மடைகிறுளாம்.

### Income of European Kings.

ஐரோப்பாவிலுள்ள அரசர்களின் வரும்படி.—ஒரு ப்ரான்ஸ் கணித சாஸ்த்ரி ஐரோப்பாவிலுள்ள ப்ரதான அரசர்களின் ஒவ்வொரு நிமிஷ வருமானத்தைப் பின்வருமாறு கணக்கெடுத்திருக்கிறுராம்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ரஷ்ய தேசத்துச் சக்ரவர்த்திக்கு நிமி 1-க்கு | | 243 | 0 |
| ஆஸ்ட்ரியா சக்ரவர்த்திக்கு | ,, | 105 | 12 |
| இட்டலி தேசத்தரசருக்கு | ,, | 65 | 4 |
| ஜெர்மன் சக்ரவர்த்திக்கு | ,, | 52 | 8 |
| இங்க்லீஷ் அரசருக்கு | ,, | 45 | 12 |
| ஸ்பெயின் தேசத்தரசருக்கு | ,, | 42 | 12 |
| ஸ்வீடன் தேசத்தரசருக்கு | ,, | 28 | 8 |
| பவேரியா தேசத்தரசருக்கு | ,, | 26 | 4 |
| ரொமேனியா அரசருக்கு | ,, | 4 | 8 |

இவர்களுடைய நிமிஷ வரும்படியைக் கொண்டு இவர்களுக்கு மாஸத்துக்கு அல்லது வர்ஷத்துக்கு இவ்வளவு வரும்படி யென்று கணக்கிட்டுக் கொள்ளலாம்.

### A Child with Dog's Face.

நாய்முகக் குழந்தை.—ஸமீபத்தில் லண்டனைச் சேர்ந்த பிக்காடெல்லி யென்னுமிடத்தில் ஓர் ஐரோப்பிய ஸ்திரீ நாய் முகத்தோடு கூடிய ஒரு குழந்தையைப் பெற்றுளாம். அப்படிப் பெற்றதற்குக் காரணம் அவள் கர்ப்பமா யிருந்தபொழுது ஒரு நாய்க்குட்டியை ப்ரியமாகவளர்த்து, அதை விட்டு எப்பொழுதும் பிரியாமலிருந்ததேயாம்.

### A Big Child.

ராக்ஷஸக் குழந்தை.—அமெரிக்காவிலுள்ள கனடா தேசத்தில் ஒரு குழந்தை பிறந்து 26 மாதமாகிறது. இதற்குள் அதன் நிறை 127 ராத்தல்களும் மார்பகலம் 40 அங்குலமும் இருக்கின்றனவாம். ஸாதாரண மனிதர்களே 120 ராத்தல் நிறைக்குமேலிருப்பதில்லை. 2 வயதிலேயே 127 ராத்தல் கனமிருக்கிறதென்றுல், இதென்ன ராக்ஷஸக் குழந்தையோ!

### The Largest Safe in the World.

உலகத்தில் மிகப் பெரியதான இரும்புப் பெட்டி.—உலகத்திலுள்ள இரும்புப் பெட்டிகள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது அமெரிக்காவில் ந்யூயார்க் பட்டணத்தில் உள்ள ஒரு கம்பெனிக்காகச் செய்யப்பட்டிருக்கிறது. இதன் கதவுகள் ஒவ்வொன்றும் 40 டன் நிறையுள்ளது. 3-அங்குலம் கனமுள்ளது. இந்தப் பெட்டியில் 900 கோடி ரூபாய் வைத்துப் பூட்டியிருக்கிறுர்கள். இதைத் திருடர்கள் திறப்பதென்பது முடியாத கார்யமாம். இதன் பூட்டுகள் ரொம்ப சிக்கலான வேலைப்பாடுள்ளவை. இரண்டு பேராகச் சேர்ந்துதான் பூட்டுகளைத் திறக்கலாமாம்.

# DIARY OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.
### ஐரோப்பாவில் யுத்தம்.
### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

அக்டோபர்மீ 12-தேதி.

ஜெர்மானியர்கள் ஆண்ட்வெர்ப் பட்டணத்தின் மேல் 30 கோடி ரூபாய் யுத்த அபராதம் போட்டிருக்கிறார்களாம்.

13-தேதி.

ஜெர்மானியர்கள் பெல்ஜியத்திலுள்ள கெண்ட் என்னும் பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

14-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ரூஸ் என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

ஜெர்மானியர்கள் இன்று காலையில் ஆஸ்டண்டைப் பிடித்துக்கொண்டார்கள்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் கலேயைப் பிடிப்பதற்காக அதிக சேனைபலத்துடன் எதிர்த்துப்போனார்கள். ஆனால் கூட்டு ஸைன்யங்கள் ஜெர்மானியர்களை பீரங்கிகளால் எதிர்த்து பின்னுக்குப் போகும்படி செய்துவிட்டன.

ஏன் நதிச்சண்டை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது.

18-தேதி.

ப்ரிட்டிஷ் ஸைன்யம் வடபாகத்தில் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஜெர்மானியர்களைமுப்பது மைல் தூரம் துரத்திவிட்டது.

19-தேதி.

பெல்ஜியத்தின் கடற்கரை யோரமாய் பெல்ஜியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் யுத்தம் நடக்கும் போது ப்ரிட்டிஷ் கப்பல் படையின் ஒருபாகம் பெல்ஜியர்களுக்கு ஸாதகமாயிருந்து ஜெர்மானியர்களைத் தாக்கிற்று. ஜெர்மானியர்களுக்கு ரொம்ப சேதமாம்.

20-தேதி.

கெய்ஸர் பெல்ஜியத்தைப் பிடித்துவிட்டதால், யுத்தத்தில் சேராத அரசுகள் அவரை பெல்ஜியத்தின் அரசராக ஒப்புக்கொள்ளுமா என்று விசாரித்துக்கொண்டிருக்கிறாராம்.

21-தேதி.

இடதுபாகத்தில் லா பாஸ்ஸி என்னுமிடத்துக்கும் வடகடலுக்கும் நடுவில் யுத்தம் கடுமையாய் நடக்கிறது. ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஜெர்மன் ஸைன்யங்களை இன்னும் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

23-தேதி.

ஜெர்மன் ஸேனாதிபதியாகிய ஜெனரல் வான்மால்ட்க் என்பவருடைய புத்ரர் யுத்தத்தில் இறந்துவிட்டாராம்.

பெல்ஜியத்தில் டிக்ஸ்மூட் என்னுமிடத்தில் ஜெர்மானியர்களுக்கும் பெல்ஜியர்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது. ந்யூபோர்ட் என்னுமிடத்தில் ஜெர்மானியர்கள் தோற்றோடினார்கள்.

25-தேதி.

ஜெர்மானியர்கள் யீஸர் கால்வாயைக்கடக்க முயலுகையில் பெல்ஜியர்கள் அவர்களை எதிர்த்தார்கள். கடைசியில் ஜெர்மானியர்கள் அந்தக் கால்வாயைக் கடந்துவிட்டார்கள்.

29-தேதி.

இந்திய ஸைன்யத்தைச்சேர்ந்த ஒரு குதிரைப்படை ஜெர்மானிய காலாள்படையைத் தாக்கி ஒரு மைல் தூரம் துரத்தியடித்தது. இந்தக் குதிரைப்படையின் பெயர் 'பெங்கால் லான்ஸர்ஸ்.'

ஜெர்மானியர்கள் ஸீப்ரூஜ் என்னுமிடத்தில் ஸப்மரீன் கப்பல்கள் கட்டுவதற்காக ஸப்மரீன் கப்பல்களின் பாகங்களை அந்த ஊருக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்தபாகங்களை ஒன்றுசேர்த்து கப்பல்களாகக்கட்டி ப்ரிட்டிஷ் போர்க்கப்பல்களைத் தாக்கப்போகிறார்களாம்.

31-தேதி.

ஜெர்மன் துருப்புகள் இந்திய துருப்புகளால் தோற்கடிக்கப்பட்டதைப் பற்றி ஜெர்மானியர்கள் ரொம்ப விசாரப்படுகிறார்களாம். இந்தியர்கள் ரொம்ப பலசாலிகளாயும் சுறுசுறுப்புள்ளவர்களாயும் இருப்பதால் அவர்களோடு கைகலந்து சண்டைசெய்வது ரொம்ப ச்ரம ஸாத்யமாயிருக்கிறதென்று ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்களாம். கைகலந்து சண்டைசெய்ய ஸமயம் ஏற்படும்வரையில் ப்ரிட்டிஷார் இந்திய துருப்புகளை தனியாக வைத்திருந்து, பிற்பாடு ஸமயம் வந்தவுடன் அவர்களை அனுப்புகிறார்களென்று சொல்லு



கிறார்களாம். இன்னும் இந்தியாவிலிருந்து 2 லக்ஷம் இந்தியர்கள் யுத்தத்துக்கு வருவார்களென்று பெர்லினிலுள்ளவர்கள் எண்ணியிருக்கிறார்களாம்.

நவம்பர்மீ 1-தேதி.

ஒரு ப்ரிட்டிஷ் ஆகாயக்கப்பல்காரர் கெய்ஸர் தங்கியிருந்த வீட்டில் ஆறு வெடிகுண்டுகள் (பாம்ப்) போட்டாராம். அப்போது கெய்ஸர் வெளியில் போயிருந்ததால் அவருக்கு ஒரு ஆபத்தும் நேரவில்லையாம். அங்கிருந்த இரண்டு ஏ-டி-காங்குகள் வெடிகுண்டுகளால் இறந்துபோனார்களாம்.

ப்ரிட்டிஷ் கப்பல்கள் இன்னும் பெல்ஜியத்தின் கரையோரமாக நின்று ஜெர்மானியர்களைத் தாக்குகின்றன.

2-தேதி.

கூட்டுஸைன்யங்கள் பெல்ஜியத்திலுள்ள பெரோன் என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டதோடு, ராம்ஸகாபல் என்னுமிடத்தில் இருந்த ஜெர்மானியர்களைத் தாக்கி, அவர்களை அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டன. ப்ரஞ்ச் ஸைன்யங்கள் ஆராஸுக்கும் ஆல்பட்டுக்கும் மத்தியிலும், ஸ்வாஸோனுக்குப் பக்கத்திலும் முன்சென்று கொண்டிருக்கின்றன.

4-தேதி.

ஜெர்மானியர்கள் யீஸர் நதிக்கரையிலிருந்து பின்வாங்கிப்போய்விட்டார்கள். ஜெர்மானியர்கள் ரீம்ஸுக்குப் பக்கத்தில் கூட்டு ஸைன்யங்களைத் தாக்கினார்கள். ஆனால் கடைசியில் பின் தள்ளப்பட்டார்கள்.

இந்திய துருப்புகள் ப்ரிட்டிஷ் படையெடுப்பு ஸைன்யங்களுடன் சேர்ந்து யுத்தம்செய்ய ஆரம்பித்துவிட்டனவென்று தெரிவிக்கப்படுகிறது.

8-தேதி.

ஜெர்மானியர்கள் ஆராஸ்பட்டணத்தை ரொம்பவும் மும்மரமாய்த் தாக்குகிறார்கள்.

8-தேதி.

வடபாகத்தில் ஜெர்மானியர்கள் கூட்டு ஸைன்யங்களை யிப்ரஸுக்கு பக்கத்தில் ரொம்பவும் பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

9-தேதி.

டிக்ஸ்மூடிலும், யிப்ரஸ்ஸுக்குத் தென் கிழக்கிலும் ஜெர்மானியர்கள் பலமாய் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எவ்விடத்திலும் பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

10-தேதி.

ஆர்மண்டியர்ஸுக்கும் வடகடலுக்கும் நடுவில் யுத்தம் பலமாக நடந்து வருகிறது.

11-தேதி.

கூட்டு ஸைன்யங்களின் இடது பாகத்தில் ந்யூபோர்ட்டுக்கும் லிஸ்நதிக்கும் இடையில் யுத்தம் பலமாக நடக்கிறது. கூட்டு ஸைன்யங்கள் லம்பார்ட்ஸைட் என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன. ஜெர்மானியர்கள் டிக்ஸ்மூட் என்னும் இடத்தை மறுபடியும் பிடித்துக்கொண்டார்கள்.

### ரஷ்யாவுக்கும், ஜெர்மனி ஆஸ்ட்ரியா ஆகிய இவைகளுக்கும் நடக்கும் யுத்தம்.

அக்டோபர்மீ 19-தேதி.

ஜெர்மானியர்கள் விஸ்டுலா என்னும் நதியைக் கடக்க முயலுகையில் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஜெர்மானியர்களுக்கு ரொம்ப ஜனங்கள் சேதமாம்.

22-தேதி.

வார்ஸாவைப் பிடிக்கப்போன ஜெர்மானியர்கள் ரஷ்யர்களால் துரத்தப்பட்டுப் பின்வாங்கி யோடுகிறார்கள்.

ப்ரஸிமிஸல் பட்டணத்துக்குத் தேற்கே ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் சென்ற பத்துநாள்களாக பலமான யுத்தம் நடந்துவருகிறது.

23-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் வார்ஸாவிலிருந்து பின்வாங்கிப் போகிறார்கள். காலிஷியாவில் ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் ஸைன்யங்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது.

28-தேதி.

ஒரு ரஷ்ய குதிரைப்படை லாட்ஸ் என்னும் பட்டணத்தை பிடித்திருக்கின்றது.

29-தேதி.

ரஷ்யர்கள் இன்று டாலோ என்னுமிடத்தில் ஆஸ்ட்ரியர்களைத்தாக்கி 1,000 போர் வீரர்களைக் கைதுசெய்தார்கள்.

30-தேதி.

ஆஸ்ட்ரியாவைச்சேர்ந்த வடமேற்கு ஹங்கேரியிலும் தென்மேற்கு காலீஷ்யாவிலும் காலரா ரொம்ப கடுமையாயிருக்கிறதாம்.

நவம்பர்மீ 5-தேதி.

கிழக்கே ரஷ்யர்கள் ஜயமடைந்து வருகிறார்கள். கிழக்கு ப்ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் பின்வாங்கிப்போகிறார்கள். ரஷ்யர்கள் பாகலார்ஜிவோவைப் பிடித்திருக்கிறார்கள். சென்றவாரத்தில் ரஷ்யர்கள் 15,000 பேரைக் கைதுசெய்திருக்கிறார்கள்.

6-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் பிடித்திருந்த ஜாரஸ்லாவ் பட்டணத்தை ரஷ்யர்கள் மறுபடியும் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

வார்ட்டாநதிக்குப் பக்கத்தில் ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியார்களுக்கும் சிறு சண்டைகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

9-தேதி.

ஆஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகள் தோல்வியடைந்து அவைகளில் ஒரு பாகம் க்ராகோவை நோக்கியும், இன்னொரு பாகம் போஸனை நோக்கியும் போய்க்கொண்டிருக்கின்றன.

10-தேதி.

ரஷ்யர்கள் ஸோல்டா என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள். விஸ்டுலா நதிக்கு மேற்கே யுள்ள ஜெர்மானியர்கள் இன்னும் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

11-தேதி.

லிக் என்னுமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

கயாச்சௌவில் நடந்த யுத்தம்.

அக்டோபர்மீ 16-தேதி.

ட்ஸிங்டோவிலுள்ள இரண்டு கோட்டைகளை ஜப்பானிய கப்பல்கள் சேதப்படுத்திவிட்டன.

17-தேதி.

இன்று இரவு 'டகாசிஹோ' என்னும் ஜப்பான் க்ரூஸர் கப்பல் கயாசௌ விரிகுடாவில் கடல் வெடிகுண்டுகளில் தாக்கி மூழ்கிப்போயிற்று. பத்துபேர் தப்பினார்கள். 254 பேர் இறந்துபோனார்கள்.

31-தேதி.

ஒரு இந்திய ஸைன்யம் ட்ஸிங்டோவுக்குப்போய் ஜப்பானியர்களுடன் சேர்ந்துகொண்டிருக்கிறது.

இன்று ஜப்பானியர்கள் ட்ஸிங்டோ கோட்டைகளை கடலிலிருந்தும் தரையிலிருந்தும் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

நவம்பர்மீ 4-தேதி.

ட்ஸிங்டோவைச்சேர்ந்த இல்டிஸ் கோட்டையை கூட்டு ஸைன்யங்கள் (ஜப்பானியர்கள், ப்ரிட்டிஷார் முதலியவர்கள்) தாக்க ஆரம்பித்திருக்கின்றன.

7-தேதி.

கயாசௌ ப்ரதேசத்திலுள்ள ட்ஸிங்டோ பட்டணம் கூட்டு ஸைன்யங்களிடம் சரணடைந்துவிட்டது. ஆகாரப்பொருள்கள் குறைந்துபோய் அவை வெளியிலிருந்து வருவதற்கு முடியாமல் போனதே இதற்குக் காரணமாம்.

ட்ஸிங்டோ பட்டணம் யுத்தம் முடியும்வரையில் ஜப்பான் வசமிருக்குமாம். பிறகு ஜப்பான் அதை விட்டுவிடுவதைப்பற்றி சீனாவுடன் கலந்து பேசுமாம்.

ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் யுத்தம்.

அக்டோபர்மீ 11-தேதி.

மாண்டிநீக்ரர்கள் 20,000 ஆஸ்ட்ரியர்களை ஸராஜிவோ என்னுமிடத்துக்குப் பக்கத்தில் தோற்கடித்தார்கள்.

15-தேதி.

ஸெர்வியர்களும் மாண்டிநீக்ரர்களும் ஆஸ்ட்ரியர்களை குல்ஸா என்னும் இடத்தில் தோற்கடித்தார்கள்.

துருக்கியோடு யுத்தம்.

அக்டோபர்மீ 14-தேதி.

(ஸமீபத்தில் 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் இரண்டு ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் மத்யதரைக்கடலில் ப்ரிட்டிஷ் கப்பல் படையால் துரத்தப்பட்டு துருக்கியைச்சேர்ந்த டார்டனல்ஸ் ஜலஸந்திக்கு ஓடிப்போயின. துருக்கி அவைகளைத்தான் வாங்கிவிட்டதாகத் தெரிவித்திருக்கிறது. ஆயினும் அந்தக் கப்பல்களில் ஜெர்மானியர்களே கப்பல் வேலைக்காரர்களாகவும் உத்யோகஸ்தர்களாகவும் இருந்துவருகிறார்கள். மற்ற ராஜாங்கங்கள் இதைப்பற்றி ஆக்ஷேபித்திருக்கின்றன.) இப்போது 'கோபனி'ன் தலைவர் துருக்கியின் கப்பல்படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் ப்ளாக்ஸீ என்னும் கடலில் உள்ள ரஷ்யக்கப்பல் படையை தாக்க உத்தேசிக்கிறாராம்.

30-தேதி.

கொஞ்சகாலமாய் துருக்கி ஜெர்மனிக்கு ஸாதகமாயும் நேச அரசுகளுக்கு அதாவது இங்க்லண்ட், ப்ரான்ஸ், ரஷ்யா ஆகிய இவைகளுக்கு விரோதமாயும் செய்துவந்த செய்கைகளைப்பற்றி ஒரு விவரமான அறிக்கைப் பத்ரம் இந்தியா கவர்ன்மெண்டாரால்



வெளியிடப்பட்டிருக்கிறது. (இதன் ஸாராம்சத்தை 'துருக்கியோடு யுத்தம்' என்னும் வ்யாஸத்தில் பார்க்கவும்.)

31-தேதி.

துருக்கியின் ஸைன்யங்களில் சில ஜெர்மனிக்கு விரோதமாக இருக்கின்றனவாம். சில நாள்களுக்கு முன் நான்கு ஜெர்மன் ராணுவ ஆபீஸர்களை துருக்கிய துருப்புகள் சுட்டுக் கொன்றுவிட்டனவாம்.

நவம்பர்மீ 1-தேதி.

இங்க்லண்டுக்கும் துருக்கிக்கும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

2-தேதி.

நேச அரசுகள் துருக்கிய யுத்தக்கப்பல்கள் ப்ளாக்ஸீ (கருங்கடல்)யில் சில பட்டணங்களையும், கப்பல்களையும் தாக்கினதற்குக் காரணமென்னவென்றும், துருக்கிய போர்க்கப்பல்களில் உள்ள ஜெர்மானிய ஆபீஸர்களை அப்புறப்படுத்த முடியுமாவென்றும் 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் கப்பல்களிலுள்ள பீரங்கிகளை எடுத்துவிட முடியுமாவென்றும் துருக்கியைக் கேட்டிருக்கின்றன.

இப்போது நடக்கும் இங்க்லீஷ் துருக்கிய யுத்தத்தில் அரேபியாவிலும் மெஸபடோமியாவிலுமுள்ள மகம்மதிய புண்ய ஸ்தலங்களையும், ஜெட்டா துறைமுகத்தையும் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களும், ப்ரெஞ்ச் ரஷ்ய ஸைன்யங்களும் கப்பல்படைகளும் தாக்கமாட்டாவென்று இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

3-தேதி.

'மினர்வா' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் ரெட்ஸீ ஓரமாக உள்ள அகாபா என்னும் ஊரைத் தாக்கிற்று.

4-தேதி.

கோஜா மகமதியர்களின் தலைவராகிய ஆகாகான் துருக்கி இங்க்லண்டுக்கு விரோதமாக யுத்தத்தில் சேர்ந்திருப்பதைப்பற்றி வருத்தப்படுவதாயும், மகமதியர்கள் எல்லாரும் இந்த யுத்தத்தில் சேராமல் ப்ரிட்டிஷாருக்கு விச்வாஸமாக இருக்கவேண்டுமென்றும் ஒரு கடிதம் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

ஒரு கூட்டுக்கப்பல்படை துருக்கிக்கு சொந்தமான டார்டனல்ஸ் ஜல ஸந்தியிலுள்ள கோட்டைகளைத்தாக்கிக்கொண்டிருக்கிறது.

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸிரியாவுக்குத் தெற்கே மத்யதரைக்கடலில் உள்ள ஸைப்ரஸ் என்னும் தீவை தங்கள் ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

5-தேதி.

இங்க்லீஷ்-ப்ரெஞ்ச் கப்பல்படையொன்று டார்டனல்ஸ் ஜலஸந்தியிலுள்ள கோட்டைகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறது.

காக்கஸஸ் ப்ரதேசத்திலுள்ள ரஷ்ய ஸைன்யமொன்று மைஸௌன், டையாடின் என்னுமிடங்களில் துருக்கியர்களைத் தோற்கடித்து ஆர்மீனியாவிலுள்ள பேயாஸிட் என்னுமிடத்தை பிடித்துக்கொண்டது.

6-தேதி.

துருக்கியர்கள் ப்ளாக்ஸீயில் (கருங்கடல்) 'ஸைனோப்' என்னும் ரஷ்ய யுத்தக்கப்பலை மூழ்கடித்துவிட்டார்கள்.

யுத்தவிஷயமாய் துருக்கியில் மந்த்ரிகளுக்குள்ளே அபிப்ராய பேதங்கள் இருக்கின்றனவென்று தோன்றுகிறது. மந்த்ரிகளில் பாதிப்பேர் ராஜிநாமா செய்துவிட்டார்களாம்.

ப்ரான்ஸுக்கும் துருக்கிக்கும் யுத்தம் ஆரம்பித்திருக்கிறது.

7-தேதி.

துருக்கியிலுள்ள அநேக ஜனத்தலைவர்கள் கவர்ன்மெண்டார் யுத்தத்தில் சேர்ந்துகொண்டதைப்பற்றிக் கண்டிக்கிறார்களாம்.

8-தேதி.

ரஷ்யர்கள் ஆசியா துருக்கியிலுள்ள கோப்ரிகாய் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள். ப்ளாக்ஸீ (கருங்கடல்)யிலுள்ள ரஷ்யக் கப்பல்படை ஸர்குலாக் என்னும் துறைமுகத்தைத் தாக்கிற்று.

9-தேதி.

இந்திய ஸைன்யத்தின் ஒரு பாகமும், ப்ரிட்டிஷ் கடல் படையைச் சேர்ந்த ஒரு ஸைன்யமும், பர்ஷியன் வளைகுடாவில் ஷாடல் ஆரப் என்னும் நதியின் முகத்வாரத்திலுள்ள பாவோ என்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டன.

12-தேதி.

ரஷ்யர்கள் ஆர்மீனியாவிலுள்ள கோப்ரிக்காய் என்னும் இடத்தில் துருக்கியர்களைத் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

## பொது விஷயங்கள்.

அக்டோபர்மீ 10-தேதி.

ரொமானியாவின் அரசர் இறந்துபோய்விட்டார்.

13-தேதி.

பெல்ஜியம் கவர்ன்மெண்டார் யுத்தத்தினால் பெல்ஜியத்தில் தங்கியிருப்பது முடியாமல் ப்ரான்ஸிலுள்ள ஹாவர் என்னும் பட்டணத்துக்குப் போயிருக்கிறார்கள்.

14-தேதி.

ஆஸ்ட்ரியா இளவரசரின் கொலையில் ஸம்பந்தப்பட்ட ஸெர்வியர்களின் விசாரணை இன்று ஸராஜிவோவில் ஆரம்பமாயிற்று,

15-தேதி.

'ஹாக்' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் இன்று வடகடலில் ஒரு ஸப்மரின் படகால் மூழ்கடிக்கப்பட்டது.

'யார்மத்' என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் 'எம்டன்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் கப்பலோடு போய்க்கொண்டிருந்த மார்க்கமோனியா என்னும் கப்பலை மூழ்கடித்து 'பாண்டபாரஸ் என்னும் க்ரீக் கப்பலைப் பிடித்துக்கொண்டது.

17-தேதி.

சில ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஹாலண்டின் கடற்கரையோரமாக ஜெர்மனிக்கு ஸொந்தமான டெஸ்ட்ராயர் என்னும் யுத்தக்கப்பல்களில் நான்கை மூழ்கடித்துவிட்டன.

19-தேதி.

தென்னாப்ரிக்காவில் கர்னல் மாரிட்ஸ் என்னும் ராணுவ ஆபீஸரும் அவரைச்சேர்ந்த 500 பேரும் கலகம் செய்து ஜெர்மானியர்களோடு சேர்ந்துகொண்டார்கள்.

22-தேதி.

இந்த வர்ஷம் க்ரிஸ்ட்மஸ் பண்டிகைக்குள் (டிஸம்பர் மாஸம் 25-தேதிக்குள்) இங்க்லீஷ்காரர்களுக்கு 20 லக்ஷம் ஸோல்ஜர்கள் யுத்தத்துக்குத் தயாராயிருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது.

24-தேதி.

இந்தியாவிலிருந்து யுத்தத்துக்கு அனுப்பப்பட்டிருக்கும் லாகூர் டிவிஷன் ஸைனயம் 'மீரட்' டிவிஷன் ஸைன்யம் ஆகிய இரண்டும் சேர்ந்த ஆர்மிக்காருக்கு ஸர் ஜேமஸ் வில்காக்ஸ் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

26-தேதி.

மேற்கு ஆப்ரிக்காவில் ஜெர்மனிக்கு ஸொந்தமான காமரூன்ஸ் ப்ரதேசத்திலுள்ள இடியா என்னும் பட்டணத்தை இங்க்லீஷ் ப்ரெஞ்ச் ஸைன்யமொன்று கைவசப்படுத்தியிருக்கிறது.

ஸராஜிவோவில் ஆஸ்ட்ரியா இளவரசரின் கொலையில் ஸம்பந்தப்பட்ட ஸெர்வியர்களின் விசாரணை இன்று முடிவாயிற்று. முக்ய கொலையாளியும் வேறு 23-பேரும் குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டார்கள்.

28-தேதி.

இந்திய படையெடுப்பு ஸைன்யத்துடன் போயிருந்த பாடியாலா மகாராஜா உடம்பு அஸௌக்ய மடைந்து விட்டதால் அவர் இந்தியாவுக்கு வரப்புறப்பட்டு விட்டார்.

30-தேதி.

ஆஸ்ட்ரியா இளவரசரின் கொலைக்கேஸை விசாரித்த ஸராஜிவோ கோர்ட்டார், அந்தக் கேஸில் ஸம்பந்தப்பட்ட ஐந்து பேருக்கு மரணதண்டனையும், இளவரசரைச் சுட்டும், வெடிகுண்டெறிந்தும் கொன்ற இரண்டு பேருக்கு 20-வர்ஷம் கடுங்காவலும், மற்றவர்களுக்கு வெவ்வேறுகாலம் கடுங்காவல் தண்டனையும் விதித்திருக்கிறார்கள்.

பெல்ஜியத்திலுள்ள காயம்பட்டவர்களைக் கொண்டுவருவதற்குப்போன 'ரோஹில்லா' என்னும் இங்க்லீஷ் ஹாஸ்பிடல் கப்பல் புயல்காற்றினால் விட்பி என்னுமிடத்தில் பாறைகளில் மோதி உடைந்து போய்விட்டது.

'எம்டன்' கப்பல் பினாங்குத்துறைமுகத்தில் 'ஜெம்ட்செளக்' என்னும் ரஷ்ய க்ரூஸரையும் ஒரு ப்ரெஞ்ச் பீரங்கிக்கப்பலையும் தாக்கி மூழ்கடித்துவிட்டது. 85 ஜனங்கள் மூழ்கிப்போனார்கள். எம்டன் ஒரு ரஷ்யக்கொடியுடன்போய் அங்கிருந்தவர்களை ஏமாற்றி கப்பல்களைத்தாக்கிற்றாம்.

நவம்பர்மீ 1-தேதி.

இன்றையதினம் தென் அமெரிக்காவிலுள்ள சில்லி தேசத்தின் கரையோரமாய் வால்பரைஸோவுக்குப் பக்கத்தில் 5 ஜெர்மன் யுத்தக்கப்பல்களுக்கும், சில ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்களுக்கும் யுத்தம் நடந்தது. ஒரு ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் மூழ்கிப்போயிற்று. இன்னொன்று ரொம்ப சேதமடைந்தது.

ஒரு ப்ரிட்டிஷ் க்ரூஸர் டோவர் ஜலஸந்தியில் ஒரு ஜெர்மன் ஸப்மரின் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டது.



2-தேதி.

கவர்ன்மெண்டு துருப்புகள் கர்னல் மாரிட்ஸ் என்பவருடைய ஸைன்யங்களை லிடன்பர்க் ஜில்லாவில் தோற்கடித்து 240 பேர்களைக் கைதுசெய்தன.

ஹைதராபாத்தின் நிஜாம் அரசர் எல்லா மகமதியர்களும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடம் ராஜபக்தியுடனிருக்க வேண்டுமென்றும், தாம் நேரில் யுத்தத்துக்குப் போகவும், தமது வரும்படி முழுவதையும் யுத்தத்துக்குக் கொடுக்கவும் தயாராயிருப்பதாகவும்,தமது ப்ரஜைகளும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டினிடம் விச்வாஸமாயிருக்க வேண்டுமென்றும் ஒரு விளம்பரம் ப்ரசுரித்திருக்கிறார்.

3-தேதி.

வடகடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் படகுசுரங்கங்களில் பட்டு மூழ்கிப்போய்விட்டது.

5-தேதி.

'யார்க்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் ஜெர்மனியின் வடகரையில் ஜாடே விரிகுடாவுக்குப் பக்கத்தில் சுரங்கங்களில் பட்டு மூழ்கிப்போயிற்று.

10-தேதி.

ஜெர்மன் க்ரூஸர் கப்பலாகிய 'கானிக்ஸ்பர்க்'கை 'சாதாம்' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் கப்பல் ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ருபிஜி என்னும் நதியின் முகத்வாரத்தில் கண்டு நதியின் முகத்துவாரத்தில் சில நிலக்கரிக் சப்பல்களை மூழ்கடித்து 'கானிக்ஸ் பர்க்'கை வெளியில் வராதபடி தடுத்து விட்டது. இரண்டு கப்பல்களுக்கும் சிறிதுநேரம் யுத்தம் நடந்ததாம்.

10-தேதி.

ஜாவாதீவுக்கு 700 மைல் தென்மேற்கேயுள்ள காகாஸ் தீவிற்குப் பக்கத்தில் 'எம்டன்' என்னும் ஜெர்மன் கப்பலை 'ஸிட்னி' என்னும்ப்ரிட்டிஷ் (ஆஸ்ட்ரேலியா) யுத்தக் கப்பல் தாக்கிற்று. 'எம்டன் நெருப்புப் பிடித்து எரிந்துபோயிற்று. அப்போது நடந்த யுத்தத்தில் 200 ஜெர்மானியர்கள் சேதமாம். 'எம்டனி'ன் தலைவரும், அதில் இருந்த ஜெர்மன் ராஜவம்சத்தைச் சேர்ந்த ப்ரான்ஸ் ஜோஸப் ராஜகுமாரரும் மற்ற ஆபிஸர்களும் கைது செய்யப்பட்டார்கள். 'எம்டன்' அந்தத் தீவிலுள்ள தந்திக்கம்பிகளை அறுப்பதற்காக அந்த விடத்துக்குப்போயிற்றாம்

12-தேதி.

டோவர் ஜலஸந்தியில் டீல் என்னும் ஊருக்கு பக்கத்தில் இருந்த நைஜர் என்னும் ப்ரிட்டிஷ் டார்பிடோக் கப்பல் ஒரு ஜெர்மன் ஸப்மரீன் கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கிவிட்டது,

## SEASON.

### கால ஸ்திதி.

**Rainfall.**

மழை.—1914ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஹு நவம்பர்மீ 10உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 53·59 | 41·41 |
| வால்டேர் | 39·48 | 33·14 |
| காக்கினாடா | 29·95 | 35·08 |
| மஸூலிப்பட்டணம் | 29·63 | 36·71 |
| நெல்லூர் | 31·32 | 25·20 |
| மதராஸ் | 52·05 | 34·16 |
| கூடலூர் | 53·20 | 34·20 |
| நாகப்பட்டணம் | 39·31 | 29·96 |
| பாம்பன் | 29·00 | 18·71 |
| கொழும்பு | 55·71 | 61·54 |
| திருவனந்தபுரம் | 54·78 | 54·75 |
| கொச்சி | 103·58 | 105·80 |
| கள்ளிக்கோட்டை | 116·50 | 112·65 |
| மங்களூர் | 146·09 | 125·20 |
| மெர்க்காரா | 127·94 | 123·85 |
| ஐதராபாத் | 41·73 | 29·92 |
| பல்லாரி | 18·97 | 18·74 |
| கர்நூல் | 26·08 | 25·74 |
| கடப்பை | 25·84 | 28·25 |
| ஹாஸ்ஸான் | 26·85 | 33·06 |
| பெங்களூர் | 28·54 | 33·12 |
| கொடைக்கானல் | 59·37 | 46·10 |
| உதகமண்டலம் | 43·80 | 48·24 |
| கோயம்புத்தூர் | 13·40 | 17·70 |
| வேலூர் | 32·52 | 37·16 |
| சேலம் | 34·68 | 36·32 |
| திருச்சினாப்பள்ளி | 16·86 | 25·52 |
| புதுக்கோட்டை | 28·65 | 27·54 |
| மதுரை | 23·06 | 28·84 |
| திருநெல்வேலி | 24·71 | 15·66 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்ன பாக்கி | அகர் மாந | திது | இங் | தமி | வாரம் | 48-ஆனந்தஹு கார்த்திகைமீ-தக்ஷிணாயனம்-சரத்ருது { கார்த்திகம் மார்க்கசிரம் } கொல்லம்-1090 பஸலி-1324 { இங்கிலீஷ்-1914 நவம்பர்-டிசம்பர்மீ } ஹிஜரி-1332-33 ஜில்ஹேஜ்-மொஹறம். |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | |
| | | | | | | | சிதி, (ரங்கூன் அவம) |
| அம | 5 23 | 2846 | 27 | 16 | 1 | தி | சசி-48-1,சுவா-51-23-ஆயு-10-6,உப-49-7,பத்-22-47,தி-11-13,மாஸசிவரா,கரிநாள்,ஸமார்க்கம்,விருச்சிகசதுர்த்த |
| மசி | 12 | 45 | 28 | 17 | 2 | செ | ●-38-19,விசா-43-37,சோ-48-14,சது-13-10,தி-3-33,ரா-23-37,ஸர்வஅமா,பிண்டபிதிரு,புஷ்களா,அலப்யம் |
| அசி | 1 | 44 | 29 | 18 | 3 | பு | ப்ர-28-52,அனு-36-6,அதி-37-27,கிம்-3-31,பால-54-23,ரா-19-43, மார்க்கசிரசுத்த, இஷ்டி,சந்திராஸ்தம் இரவு 1-38 இன்று சந்திரதர்சனமாகாது |
| பிசி | 4 50 | 43 | 30 | 19 | 4 விருச்சிகமீ | வி | த்வி-20-7,கேட்-29-25,சுக-27-26,தை-46-11,ரா-18-44,சந்திரதர்சனம்-திதிதுவயம்,(ரங்கூன்த்விதீயாதி) |
| அபி | விருச்சிக 39 | 42 | 1 | 20 | 5 | வெ | த்ரி-12-35,மூல-23-59,திரு-18-23,வணி-39-25,தி-20-18,ரா-17-34,சதுர்த்தீதி,சதுர்த்தீவிரு,மூர்க்கநாய, (ரங்கூன்திதிதுவயம்) |
| சி | 28 | 41 | 2 | 21 | 6 | ச | சது-6-40,பூரா-20-14,சூல-10-42,பவ-34-26,ரா-10-45,நாகபஞ்சமீ-சிறப்புலிநாயனர் |
| அ | 17 | 40 | 3 | 22 | 7 | ஞா | பஞ்-2-41,உரா-18-28,கண்-4-35,கவு-31-31,தி-28-23,சிரவணஉப,ஷஷ்டியுப,சம்பாஷஷ்டி |
| அசி | 6 | 39 | 4 | 23 | 8 | தி | ஷஷ்-0-51,திரு-18-49,விரு-0-8,உப-57-19,கர-30-47,ரா-0-27,சாபாயன-6-8,சூர்யவிரு |
| சிம | 3 55 | 38 | 5 | 24 | 9 | செ | ஸப்-1-14,அவி-21-17,விபா-56-20,பத்-32-13,ரா-11-48, |
| சிஅ | 44 | 37 | 6 | 25 | 10 | பு | அஷ்-3-40,சத-25-39,ஹ-56-33,பால-35-34,ரா-14-30, கரிநாள், |
| சி | 33 | 37 | 7 | 26 | 11 | வி | நவ-7-49,பூட்-31-30,வஜ்-57-46,தை-40-25,ரா-29-35 |
| சிஅ | 22 | 36 | 8 1333-மொஹறம் | 27 | 12 | வெ | தச-13-16,உட்-38-25,ஸித்-59-40,வணி-46-19,சே-2-11,ஏகாதசீதி |
| பிசி | 11 | 35 | 9 | 28 | 13 | ச | ஏகா-19-29,ரே-45-53,விய-60-0,பவ-52-44,தி-12-7,அதிதி,விபசிரா, ஸர்வகைசிஏகா |
| சிபி | 0 | 34 | 10 | 29 | 14 | ஞா | த்வா-25-59,அசு-53-27,விய-1-53,கவு-59-11,ரா-13-37, துவாதசீதி,பிரதோஷம் |
| சி | 2 49 | 33 | 11 | 30 | 15 | தி | த்ர-32-22,பர-60-0,வரீ-4-5,தை-32-22,தி-20-24,பரணிதீபம் |
| சி | 38 | 32 | 12 | 1 | 16 | செ | சசி-38-22,பர-0-45,பரி-6-6,கர-5-25,ரா-5-44 கிருத்திகை, அருணசலதீபம், ப்ரத்யவரோஹணம்,கணபுல்லர் |
| அசி | 27 | 32 | 13 | 2 டிஸம்பர்மீ | 17 | பு | ○-43-47,திரு-7-38,சிவ-7-44,பத்-11-8,ரா-23-24,தத்தஜயந்தீ,சிவ-விஷ்ணுவாலயதீப,கரிநாள் |
| உம | 16 | 31 | 14 | 3 | 18 | வி | ப்ர-48-34,ரோ-13-56,சித்-8-54,பால-16-15,ரா-0-49,மார்க்கசிரபகுள,இஷ்டி,இராமா |
| சி | 5 | 31 | 15 | 4 | 19 | வெ | த்வி-52-37,மிரு-19-34,சாத்-9-34,தை-20-41,ரா-13-53,திவாமா |
| சி | 1 53 | 30 | 16 | 5 | 20 | ச | த்ரி-55-49,திரு-24-27,சுப-9-39,வணி-24-19,ரா-28-7, |
| சி | 42 | 29 | 17 | 6 | 21 | ஞா | சது-58-6,புன-28-31,சுப்-9-5,பவ-27-5,சே-0-36,ரா-21-12,சங்கடசதுர்த்தீ |
| சி | 31 | 28 | 18 | 7 | 22 | தி | பஞ்-59-18,பூச,31-37,பிரா-7-49,கவு-28-52, |
| சி | 20 | 28 | 19 | 8 | 23 | செ | ஷஷ்-59-16,ஆயி-33-35,மா-5-40,கர-29-27,தி-4-48,வைசிரா |
| சிஅ | 9 | 27 | 20 | 9 | 24 | பு | ஸப்-57-50,மக-34-16,வை-2-34,உப-55-49,பத்-28-45,தி-4-5,ரா-25-45-இராமா |
| சிம | 0 58 | 27 | 21 | 10 | 25 | வி | அஷ்-54-55,பூர-33-31,பிரீ-53-1,பால-26-34,ரா-22-34,காலாஷ்டமி,அஷ்டகா,திவாமா |
| சிஅ | 47 | 27 | 22 | 11 | 26 | வெ | நவ-50-31,உத்-31-17,ஆயு-46-28,தை-22-53,ரா-22-45,மெய்ப்பொருநாயனர் |
| ம | 36 | 26 | 23 | 12 | 27 | ச | தச-44-41,ஹஸ்-27-38,ஸவு-38-46,வணி-17-45,ரா-17-42,ஆநாயனர் |
| சி | 25 | 26 | 24 | 13 | 28 | ஞா | ஏகா-37-38,சித்-22-41,சோ-30-2,பவ-11-16,ரா-6-59,ஸர்வஏகா |
| அம | 0 14 | 2826 | 25 | 14 | 29 | தி | த்வா-29-40,சுவா,16-45,அதி-20-32,கவு-3-44,கர-55-33,ரா-0-51,ப்ரதோஷம்,விருச்சிகத்வாதசீதி |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| ரா | 18-விரு-4 27-த-செ | | |
| குரு | | | கே |
| | ராசெ சு | 4 | |



THE MIKADO OF JAPAN.

ஜப்பான் சக்ரவர்த்தி.



PRESIDENT POINCARE OF FRANCE.

பிரான்ஸ் பிரெஸிடெண்ட் மா. பாயின்கரே.

OFFICE OF REGISTRAR OF ... 28 JAN 1915 MADRAS.

SUPPLEMENT TO "THE PEOPLE'S FRIEND."

"ஜனோபகாரி"க்கு அனுபந்தம்.

OFFICE OF ... 28 JAN 1915 MADRAS.



DR. VON BETHMANN-HOLLWEG
The German Imperial Chancellor,
டாக்டர் வான் பெட்மன்-ஹால்வெக்
ஜெர்மனியின் ப்ரதம மந்த்ரி.



M. RENE VIVIANI
The French Prime Minister.
மா. ரெனெ விவியானி
ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரி.



MR. WINSTON CHURCHILL.
First Lord of the Admiralty, England.
மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில்
இங்கிலாந்து அட்மிரால்டி மந்த்ரி.



KING PETER OF SERVIA.
ஸெர்வியாவின் அரசராகிய பீட்டர்.



HERR VON JAGOW
The German Foreign Secretary.
ஹெர் வான் யாகௌ
ஜெர்மனியின் அன்ய தேச வ்யவஹார மந்த்ரி.



M. SAZONOFF
The Russian Foreign Minister.
மா. ஸஸொனொப்
ரஷ்யாவின் அன்ய தேச வ்யவஹார மந்த்ரி.


# ஜனாபிமானி.

(முன்பு ‘பிழைக்கும் வழி’ யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE ‘PRACTICAL LIFE’

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 7 / Vol. 7. — ஆனந்தஹு கார்த்திகைமீ, NOVEMBER 1914. — ஸஞ்சிகை 3. / No. 3.



OFFICE OF THE REGISTRAR OF ... 28 JAN 1915 MADRAS.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The ‘People's Friend’ is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... | ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... | ... | 0 8 0 |
| Sample copy ... | 0 6 0 | ... | ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| 1/10 do | ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் ‘ஜனாபிமானி’யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1 க்கு | ... 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி | ... 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி | ... 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | „ | „ | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | „ | „ | 1 4 0 |
| 1/10 பக்கத்திற்கு | , | „ | 1 0 0 |

**வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**
3 & 4, சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

# ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்த௵ கார்த்திகை௴. [ஸஞ்சிகை 3.


## THE POST-PUBERTY MARRIAGE BILL.

BY The Hon. Mr. V. S. SRINIVASA SASTRI, B.A.

## ருதுமதி விவாஹ மசோதா.

இந்த மாஸம் நடந்த சென்னைச் சட்ட ஸபையில் ருதுமதி விவாஹ மசோதா என்று ஓர் மசோதா கொண்டுவர அனுமதி கொடுக்கப்பட்டது. ப்ராமணர்களுக்குள்ளும் அவர்களை அனுஸரித்து வரும் வேறு சில ஹிந்து வகுப்பினர்களுக்குள்ளும் பெண்களை ருதுவான பிறகு விவாஹம் செய்து கொடுத்தாலும், அந்த விவாஹம் சட்டப்ரகாரம் செல்லவேண்டுமென்பது மசோதாவின் கருத்து. இப்பொழுது இந்த வழக்கம் இல்லாததாலும், சில ஸ்ம்ருதிகள் ருதுமதி விவாஹம் கூடாதென்று தடுத்திருப்பதாலும், அது செல்லுமோ என்கிற ஸந்தேகம் இருக்கிறது. சிலர் கட்டாயம் செல்லுமென்று திடமாய் சொல்லுகிறார்கள். பம்பாய், பஞ்சாப் முதலிய இடங்களில் அநேகர் துணிந்து பெண்களை வயதானபிறகு மணஞ்செய்துகொடுக்கிறார்கள். சட்டத்திற்கு ஏற்றதா என்ற பயமே அவ்விடத்தில் தோன்றவில்லை போலும். நம்முடைய ராஜதானியில் மட்டும் இந்த புது ஆசாரம் ஏற்படவேண்டுமென்று வெகுகாலமாய் ப்ரயத்னம் செய்தும், இதுவரை ஆந்த்ரநாட்டில் மட்டுந்தான் ஏதோ இரண்டு மூன்று விவாஹங்கள் நடந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலோ வர்ஷந்தோறும் சில பெண்களுக்கு இந்த எல்லை தாண்டியே விவாஹம் நடக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், அதை வெளியில் ஒப்புக்கொள்ளாமல் உண்மையை மறைத்து கார்யம் நடைபெறுகிறது. இப்படி பயந்து பொய் சொல்லி ஆசார வழுவுதல் செய்யாமல், பஹிரங்கமாய் பெரிதான பெண்ணென்றே கல்யாணம் செய்தால் என்ன? இதை ஜாதியார் ஒப்பமாட்டார்கள்; தகுந்த மாப்பிள்ளை கிடைக்க மாட்டான்; கிடைத்தாலும் சுற்றத்தார் கல்யாணம் செய்து கொடுப்பவர்களையும் செய்பவர்களையும் தள்ளி வைப்பார்கள், இவ்வித உபத்ரவம் போதாது போல கோர்ட்டில் விவஹாரம் நேர்ந்தால் கல்யாணம் செல்லாதென்றும், பிறந்த குழந்தைகளுக்கு ஒழுங்காய்ப் பிறந்த குழந்தைகளுக்குள்ள பாத்யதைகள் கிடையாவென்றும் பயம் உண்டாயிருக்கிறது. சட்ட ஸபையார், இந்த பயத்தைமட்டும் மேற்சொன்ன மசோதாவை அங்கீகரித்து போக்கடிக்கலாம். அப்படி போக்கடித்தலும் வேண்டும். ஜாதிக்கட்டு, சுற்றத்தார் விரோதம் முதலிய கேடுகளை மாற்ற ஒருவராலும் முடியாது. இவைகளை புது ஆசாரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று உத்ஸாகம் கொண்டவர்கள் அனுபவித்தே தீரவேண்டும். நம்முள் சிலர் ஆராய்ந்து பார்க்காமல் "அவரவருக்கு தோன்றினபடி செய்யலாமே, யார் அடிக்கிறார்கள்." என்று சொல்வதுண்டு. ஆனால் வேறு சிலர் கட்டுப்பாடுகள் செய்து பழைய வழி போகாதவர்களை ஹிம்ஸிப்பது உண்டு. சட்டத்தில் ஸந்தேகம் உண்டு; அதை தீர்ப்பது அவச்யம்தான் என்று அநேக ந்யாயவாதிகள் அபிப்ராயப்படுகிறார்கள். இவர்களுள் முக்யமாய் இப்பொழுது நம் ஹைக்கோர்ட்டில் ஹிந்து ஜட்ஜிகளாய் விளங்கி வரும் ஸர் சங்கரன் நாயர், திவான் பஹதூர் ஸதாசிவய்யர், மிஸ்டர் சேஷகிரி அய்யர், மிஸ்டர் குமாரசாமி சாஸ்த்ரி ஆகிய இவர்களைச் சொல்லலாம். காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ஸர், டி. முத்துஸாமி அய்யர் ஒரு தீர்ப்



பில் ஹிந்து சாஸ்த்ரம், ஹிந்து வழக்கம் இவைகள் ப்ரகாரம் ப்ராமணப் பெண்களுக்கு பெரியவளாவதற்கு முன்னமேயே கல்யாணம் செய்துவிட வேண்டுமென்று எழுதியிருக்கிறார். ஆகையால் மற்ற மாகாணங்களில் எப்படியிருந்தால் என்ன, இந்த மாகாணத்தில் இம்மாதிரி ஒரு சட்டம் வேண்டுமென்பது நிச்சயம்.

வேறு சில சட்டங்கள் போல இந்த சட்டத்தால் ஒருவருக்கும் நிர்ப்பந்தமில்லை. எல்லாரும் ருதுமதி விவாஹம் செய்யவேண்டுமென்றாவது, செய்தவர்களுடன் வழக்கம்போல ஒன்றுகூடி வாழவேண்டுமென்றாவது கட்டாயம் கிடையாது. யாராகிலும் துணிந்து ருதுமதி விவாஹம் செய்தால் அவ்விவாஹத்தை கோர்ட்டார் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று மட்டும் மசோதாவில் கண்டிருக்கிறது. ஆகையால் நம்முடைய விவாஹமுறை தவறிவிடும், ஸநாதன தர்மம் அழிந்துபோகும், ஹிந்துக்கள் என்ற பெருமை நசித்துவிடும், என்றெல்லாம் அஞ்சுவது அறிவீனம். புது ஆசாரத்தைக் கைக்கொள்பவர்கள் அநேகர் இருக்கமாட்டார்கள். இது நிலைபெற அநேக தலைமுறையாகும். ஏதோ சிலருக்குமட்டும் விவாஹ விஷயத்தில் இஷ்டப்படி செய்ய ஸ்வாதீனம் உண்டாகும்.

இப்படி ஏதோ சிலர் நன்மைக்காக மட்டும் ஒரு சட்டம் செய்வானேன்? ருதுமதி விவாஹம் நாகரிகமுள்ள மற்ற நாடுகளிலும் இந்நாட்டில் ப்ராமணர்கள் தவிர மற்ற ஜாதிகளுக்குள்ளும் பெரும்பாலும் அனுஷ்டானத்திலிருக்கிறது. நாம் மட்டும் அறியாக குழந்தைகளை விவாஹம் செய்து அநேகரை கைம்பெண்களாக்குகிறோம். படிப்பும் வெகுவாய் இல்லை. இருந்தால் அடித்தரப்படிப்புக்கு மேல் ஏறுகிறதில்லை. தம்மையே ஸம்ரட்சிக்கத் தகுந்த அறிவில்லாத சிறு பெண்கள் குழந்தைகளை பெற்று வளர்த்து ஆளாக்கும்படி நேருகிறது. இதனால் ப்ராமண ஜாதியாருக்கே ஆயுள் குன்றியும் தேகபலம் மனோதைர்யம் முதலியவை குறைந்தும் வருகின்றன. ஆண் பெண்கள் கூடி வாழ்ந்து குடும்ப நிர்வாகம் செய்யும் அவஸரம் நேரிடும் வரையில் கல்யாணம் செய்வானேன்? மற்ற ஜாதிப்பெண்கள் 15, 16 பிராயம் வரையில் ஆண் பெண் என்ற வ்யவஹாரமே தெரியாமல் தேகப் பயிற்சி மனப்பயிற்சி இரண்டையும் பெறுவர, நம் பெண்கள் மட்டும், 7, 8 வயஸுமுதல் வேறு குலங்களில் புகுந்து அகமுடையான், மாமியார், நாத்தனார் என்கிற நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு பிஞ்சில் பழுத்து தேய்ந்து போவானேன்? சிலர் கல்யாணத்தை அதிபால்யத்தில் செய்துகொண்டு சாந்தி முகூர்த்தத்தை ஒத்திப் போட்டால் போதாதா என்பார்கள். இதற்கும் சில ஆக்ஷேபணைகள் சொல்லலாம். முதலாவது, இந்த யுக்தியால் வைதவ்ய தசை குறையாது. இரண்டாவது, பெண்களுக்கு அதிசீக்ரத்தில் புத்திமாறி தேகம் தகுந்தபடி திடப்படுவதற்கு முன்னர் ருதுவாய் விடுகிறார்கள்.

ஒரு புது ஆசாரம் எவ்வளவு யுக்திக்கு ஒத்திருந்தாலும், ஹிந்து தர்ம சாஸ்த்ரத்திற்கு விரோதமாயிருந்தால் அதை நாம் கைக்கொள்ளலாகாது என்று ஒருதரத்தார் சொல்லுவார். ருதுமதி விவாஹம் அவ்விதமல்ல. இது சாஸ்த்ர ஸம்மதிபெற்று முற்காலத்தில் நம் தேசத்தில் பெரும்பாலும் வழங்கியது. காவ்ய நாடகங்களிலும், ராமாயணம், பாரதம், மற்றுமுள்ள புராணங்களிலும் சரித்ரங்களிலும் யௌவனம் வந்து காமம் ஜனித்த பிறகே அநேக பெண்களுக்கு விவாஹம் ஆனதாக வெளியாகிறது. ஸ்வயம்வரமென்று பெண் தானே பார்த்து புருஷனை தெரிந்தெடுப்பதாக ஓர் ஸம்ப்ரதாயமுண்டு. இது க்ஷத்ரியப்பெண்களுக்கு மட்டும் அல்ல; ஆரியர் என்று சொல்

லும் ப்ராமணர், க்ஷத்ரியர், வைசியர் என்ற மூன்று வர்ணத்தார்களுக்குமுண்டு. பெரும்பாலும் விவாகச் சடங்குகளும் மந்த்ரங்களும் பொதுவானவை. மந்த்ரங்களின் பொருளை ஆராய்ந்தால் விவாஹ காலத்தில் பெண், பிள்ளை இருவருமே முதிர்ந்த பிராயமுள்ளவர்களாயிருக்கவேண்டு மென்று ஸந்தேகமில்லாமல் தெரியவருகிறது. அநேக ஸ்ம்ருதிகளில் ருதுவான பிறகு 3 வர்ஷம் வரை தகப்பனார் விவாஹம் செய்துகொடுக்கலாமென்றும், அதற்குப் பிறகு பெண்கள் ஸ்வயம்வரம் செய்துகொள்ளலா மென்றும் விதித்திருக்கிறது. இந்த 3 வர்ஷ காலத்துக்குள் செய்யும் விவாஹம் இரண்டாம் பக்ஷம் என்று அநேகர் அபிப்ராயப்படுகிறார்கள். இருக்கட்டுமே. ச்ராத்தங்களிலாகிலும், புண்ய காலங்களிலாகிலும் யாகாதி க்ருதுக்களிலாகிலும் மற்றுமுள்ள சுபாசுபக் கார்யங்களிலாகிலும் எதில் தான் முதல்தரமாக நாம் நடத்துகிறோம்? இந்தப் புண்ய பூமியில் ச்ரத்தை குறைந்து வைதீகம் அழிந்து வர்ணாச்ரமதர்மங்கள் ஒன்றாகிலும் சரியாய் நடக்கவில்லை யென்பது நிராக்ஷேபம். பெண் விவாஹத்தில் மட்டும் ஸௌகர்யத்தையும் நானாவித க்ஷேமங்களையும் உத்தேசித்து சாஸ்த்ர ஸம்மதமான ஒரு வழியைப் பற்றினால் அது இரண்டாம் பக்ஷம் என்று சொல்லுவது தகுமோ? நம் பெரியோர்கள் ஏற்படுத்திய ப்ராம்ம விவாஹம் என்ற உத்தமமான கல்யாண முறை பெண் பெரியவளாகாமலிருந்தால் மட்டும் காப்பாற்றப்படுமோ? அக்ஷரம், ஸ்வரம், அர்த்தம் ஆகிய மூன்றும் பொருந்தாமல் ஸமயா ஸமயம் அறியாமல் மந்த்ரங்களை ப்ரயோகித்து கார்ய கௌரவத்தை மனதில் சிறிதேனும் நினையாமல் எதிர் ஜாமீன், சீர், சாப்பாடு, பலதானம் முதலிய விஷயங்களில் மனதை முழுவதும் செலுத்தி பாட்டும் கூத்தும் சண்டையும் சச்சரவுமாக கல்யாணத்தை நடத்துவது முதற் பக்ஷமாகுமோ? வரதக்ஷிணை, மந்த்ரம் சொல்லுதல் முதலிய முக்ய கார்யங்களில் சாஸ்த்ரத்தை ஒரு பக்கத்தில் தள்ளி, மூன்றாம் பக்ஷம், நான்காம் பக்ஷமான வழக்கங்களைக் கைகொண்ட நாமோ சாஸ்த்ரம் ஒப்புக்கொண்ட ருது மதி விவாஹத்தை இரண்டாம் பக்ஷமென்று ஒதுக்கவல்லவர்!

இது தவிர மற்றொரு முகாந்திரமுண்டு. கல்யாணச் சடங்கையெல்லாம் க்ரமமாய் மந்த்ரங்களுடன் கண்டிருக்கும் பழைய க்ருஹ்ய ஸூத்ரங்கள் என்று சொல்லப்படும் புஸ்தகங்களில் முதல் 3-நாள் இரவில் தம்பதிகள் புணராமல் சேர்ந்து படுத்திருந்து, நான்காவது நாள் ராத்ரியில் 12-மணிக்குமேல் ஸம்போகம் செய்வதைப் பற்றி மிகப் பச்சையாய் வர்ணிக்கும் சில மந்த்ரங்களை சொல்லிப் புணரவேண்டுமென்று கட்டளை தெளிவாய் இருக்கிறது. இதனால் முற்காலத்தில் ருதுமதியான பெண்களுக்குத்தான் விவாகமென்பது நன்கு விளங்கும். தற்காலக் குழந்தை விவாகங்களிலோ சடங்கையெல்லாம் விட்டு மந்த்ரங்களை மட்டும் தாறுமாறாய்ச் சொல்லி உண்மையை மறக்கடித்து ஸாகஸத்துடன் இப்படித் தான் அனாதியாய் நடந்து வருகிறதென்று ஓங்கி ஸாதிக்கிறார்கள். ஆனால் பழைய ஸம்ப்ரதாயம் இன்னவை யென்று ஞாபகப்படுத்துவதற்கு ஒரு வழக்கம் மைஸூரில் மண்டையத்தார் என்று சொல்லப்படும் வகுப்பினரிலும், மாத்யந்தினர் என்கிற சுக்லயஜுர் வேதிகளிலும் இருக்கிறது. அதாவது, விவாஹத்தின் நான்காம் இரவில் வதூவரர்களை க்ஷணகாலம் சேர்த்துப் படுக்கவைத்து ஒரு கம்பளத்தால் போர்வையிட்டு எடுத்துவிடுகிறது. இதில் புருஷர்கள் அதிகமாய்க் கலக்காமல் பெண்டுகள் ஸம்ப்ரதாயம் என்று நடத்திவிடுகிறார்கள்.

மேற்சொன்ன நன்மைகள் விளைந்தாலும், சாஸ்த்ர ஸம்மதி இருந்தாலும், புது வழக்கம் ஒன்றை கைப்பற்றும்பொழுது ஜனங்களுக்கு



ஏதாகிலும் பயம் தோன்றுவது ஆச்சர்யமல்ல. இவ்விஷயத்தில் சிலர் பின்வாங்குவதற்கு சொல்லத்தகாத ஒரு காரணத்தைச்சொல்லுகிறார்கள். ருதுவான பிறகு பெண்களுக்கு விவாஹம் செய்யலாமென்றால் பெண்பாலை தூற்றுவது தோஷமில்லை யென்று எண்ணங்கொண்ட ப்ராமண ஜாதியில் சில பெண்களுக்கு கெட்ட பெயர் வைத்து விடுவார்களே, ஏதோ சில பெண்கள் உண்மையில் கெட்டும்போகலாமே என்கிறார்கள். இதற்கு ஆதாரமாக பெண்பாலருக்கு கபடமும் காமமுமே பெரிது என்பதற்கு புராண வசனங்களும் கதைகளும் ஆதாரமாக எடுத்துரைக்கப்படும். ஆனால் இது முற்றிலும் அநீதி. வாய், கை ஒன்றுமில்லாமல் நம்மையே அடைக்கலமாகப் புகுந்த நம் ஸகோதரிகளையும் பெண்களையும் இவ்வாறு ஸந்தேகிப்பது தகாது. ருதுமதி விவாஹம் வழங்கிவரும் மிக நாகரிகமடைந்த அநேக ஜாதிகளில் பெண்களுக்கு கற்புக் குறைவு என்று நினைப்பது அறிவீனம். இதுவரை காப்பாற்றி வந்த பெண்களை ருதுமதி விவாஹமென்பது உண்டாகிவிட்டால் காப்பாற்ற முடியாதோ? நம்மில் அநேகருக்கு ஹிந்து ஸ்த்ரீகள் மேல் நாட்டு ஸ்த்ரீகளைக் காட்டிலும் ரொம்ப கற்புள்ளவர்கள் என்று பெருமை யுண்டு. இந்த உயர்வு உண்மையானால் எதனால் வந்தது? நம் ஸ்த்ரீகளின் இயற்கையாலா? அல்லது பால்யத்தில் விவாஹத்தை செய்து முடித்தல் என்கிற வழக்கத்தாலா? இரண்டாம் பக்ஷத்தை ஏற்றுக்கொள்வது மிகவும் இழிவு.

வேறு சிலர் வெகு தூரத்ருஷ்டியோடு மற்றொரு கேடு வருமென்று பயப்படுகிறார்கள். வயதான பிறகு கல்யாணமென்றால் சில பெண்களுக்கு ரூபத்தாலோ துர்க்குணத்தாலோ வேறு பிடிவாதத்தாலோ கல்யாணமே ஆகாமல் நின்றுவிடக் கூடும். அப்படி கன்னிகைகளாகவே இருக்கும் பெண்களுக்கு ஜீவனத்துக்கு வழியென்ன? குடும்பச் செல்வத்தில் ஒரு பாகம் கொடுக்கும்படி வருமே. அதற்கு ஒருவாறு சட்டத்தைத் திருத்தவேண்டும். இது தவிர, நாட்டில் மணம்புரியாத பெண்கள் அநேகரிருப்பதே கற்புக்குக் குறைவாகும். விவாஹ முறை தப்பிப் பிறந்த குழந்தைகளின் கணக்கு அதிகமாகும். பெண்களும் எனக்கு இந்தப்பிள்ளை வேண்டாம், அந்தப் பிள்ளை வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கத் தலைப்படுவார்கள். இவையெல்லாம் ஒரு மாதிரி யில்லாடால் வேறொரு மாதிரியாக இப்பொழுதும் உண்டு. புதிதாய் உண்டாகப்போகிறதில்லை. அதிகமாயும் வளரப்போகிறதில்லை. வீணாய் சஞ்சலப்படலாகாது. ருதுமதி விவாஹம் உலகத்தில் எங்கும் வழங்கிவருகிறது. நம் ஊரிலும் ஆதிகாலத்தில் வழங்கியதுதான். நம்முடைய மதத்திற்கும், ஆசாரத்திற்கும் ஏற்றதுதான். நம் ஜாதியார் நாகரிகம பெற்ற மற்ற ஜாதியார்போல் முன் வந்து பெருமை பெறவேண்டுமானால், ஸ்த்ரீ ஜாதியின் நிலையை உயர்த்துவதே முதற் கார்யம். ஸ்த்ரீ ஜாதியின் நிலையை உயர்த்துவதற்கு ருதுமதி விவாஹம் இன்றியமையாததென்று சொல்லவும் வேண்டுமோ?

முடிவில் ஒரு ப்ரார்த்தனை. இவ்வளவு கக்ஷி, ப்ரதிகக்ஷிப் பேசுவதால் மசோதாவின் கருத்து ஏதோ அடியோடு நம் நிலையை கவிழ்த்து விடுவதென்று தோன்றலாம். அது சரியல்ல. முதலில் சொல்லியவாறு யாராகிலும் பதினாயிரத்தில் ஒருவர் துணிந்து தேசக்ஷேமமென்றோ, ஜாதி மேன்மையென்றோ, பெண் கல்வி யென்றோ இந்தப் புதிய வழக்கத்தை அனுஷ்டித்தால் தம்பதிகளுக்கும், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் குற்றம் குறைவு ஒன்றும் நேரிடலாகாதென்பது மட்டுமே இந்த மசோதாவின் முக்யக் கருத்து. ருதுமதி விவாஹம் சென்னை ப்ராமணருள் வேரூன்றுமென்பதே பெரிய ஸந்தேகத்திலிருக்க, அது நாடெங்கும் பரவினால் என்ன தீமை விளைவிக்குமோ என்று யோசிப்பது சற்றேனும் அவசியமில்லை.

வி. எஸ். ஸ்ரீனிவாஸன்.

# SOME RULERS AT WAR.

## சில யுத்தம் செய்யும் தேசாதிபதிகள்.

### PRESIDENT POINCARE OF FRANCE.

ப்ரான்ஸின் ப்ரேஸிடேண்டாகிய
மா. ப்வான்காரே.

ப்ரெஞ்ச் குடியரசின் ப்ரெஸிடெண்டாகிய மாஸ்யே ரேமண்ட் ப்வான்காரெ 1860-ம் வர்ஷம் ஆகஸ்ட்மாஸம் 20-தேதி ஜனனமானூர். ஆகவே இவருக்கு இப்போது 55-வது வயஸு நடந்துகொண்டிருக்கிறது. இவருக்கு தேசாபிமானம் ரொம்ப அதிகம். ரொம்ப மன உறுதியும், ஆழ்ந்த யோசனையும், விடாமுயற்சியும், விஷயங்களைநன்கு கவனித்து அறியும் சக்தியும் உள்ளவர். சாஸ்த்ரம், இலக்கியம், தத்வ சாஸ்த்ரம் முதலியவைகளில் விசேஷ ஞானம் உண்டு. இவருக்கு வெகு சீக்ரமாக பேரும் புகழும் ஏற்பட்டு விட்டது. 27-வயஸு ஆகு முன்னமேயே இவர் சேம்பர் அப் டெபுடீஸ் என்னும் பார்லிமெண்ட்போன்ற ராஜாங்க ஸபைக்கு டெபுடியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் முதலில் சிலகாலம் பத்ராசிரியராக இருந்து, பிறகு வக்கீலாக வேலைபார்த்து வந்தார். அவர் சேம்பர் அப் டெபுடீஸ் ஸபையில் சேர்ந்தவுடன் சீக்ரமே தமது புத்தி வல்லமையால் தாம் இப்படிப்பட்டவரென்பதை காட்டிவிட்டார். இவர் 1893-ம் வர்ஷத்தில் அதாவது 33-வது வயஸிலேயே கல்வியிலாகா மந்த்ரியாக நியமிக்கப்பட்டார். பிறகு வரவு செலவு மந்த்ரியாகவும், மறுபடி வித்யா மந்த்ரியாகவும் இருந்து வந்தார்.

1895-ம் வர்ஷத்தில் அவர் மந்த்ரி ஸ்தானத்தை விட்டுவிட்டு, மறுபடியும் வக்கீல் உத்யோகத்தில் அமர்ந்து செல்வமும் கீர்த்தியும் அடைந்து வந்தார். அப்போதும் ப்ரெஞ்ச் பார்லிமெண்ட் ஸபையை விடாமல் அதில் மெம்பராக இருந்து ராஜாங்க விஷயங்களைப் பற்றி கவனித்துக்கொண்டு வந்தார், மறுபடியும் 1904-ம் வர்ஷத்திலும், 1906-ம் வர்ஷத்திலும் வரவு செலவு மந்த்ரியாகவிருந்து, பிறகு பொதுக்கார்யங்களிருந்து விலகிக் கொண்டார். 1912-ம் வர்ஷத்தில் மறுபடியும் ராஜாங்கத்தில் சேர்ந்துகொண்டு ப்ரதம மந்த்ரியாக இருந்து வந்தார். சென்ற 1913-ம் வர்ஷம் ஜனவரி மாஸத்தில் ப்ரெஸிடெண்டாகத்தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவர் ஸர் எட்வர்ட் க்ரேயைப்போல் அன்ய தேச வ்யவஹாரங்களில் மிகவும் ஸாமர்த்யசாலி. ப்ரான்ஸுக்கு ரஷ்யாவின் கூட்டுறவு அவச்யம் வேண்டுமென்பது அவருடைய அபிப்ராயம்.

### KING ALBERT OF BELGIUM.

ஆல்பர்ட், பெல்ஜியத்தின் அரசர்.

பெல்ஜியத்தின் அரசராகிய ஆல்பர்ட் 1875-ம் வர்ஷம் பிறந்தார். இவர் இவருக்கு முன் பெல்ஜியத்தின் அரசராக இருந்த இரண்டாவது லெப்போல்ட் அரசரின் ஸகோதருடைய புத்ரர். ஆல்பர்ட் அரசர் 1909-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார்.

ஆல்பர்ட் அரசர் உயரமாய் ஒற்றைநாடியாக இருப்பார். இவர் சாந்தமும், அடக்கமும் பிறரிடத்தில் அன்பும் உள்ளவர். இவரிடத்தில் படாடோபம் என்பதே கிடையாது. தமது தேசத்தின் வ்யாபார வ்ருத்தியில் ரொம்ப ஊக்கம் பாராட்டுபவர். இந்த ஐரோப்பிய யுத்தத்தில் இவர் பெல்ஜியஸேனைகளின் தலைவராக இருந்துவருகிறார். ஜெர்மன் ஸைன்யங்களில் ரொம்ப சிறந்தவைகள் தமது தேசத்தைப் படையெடுத்து வந்தபோது அவைகளை வெகு மன உறுதியுடனும் ஸாமர்த்யத்துடனும் எதிர்த்து அவைகளின் முற்போக்கை வெகு நாள் தடைசெய்ததைக் கொண்டு, பெல்ஜியத்தின் அரசர் எவ்வளவு ஸாமர்த்யசாலியென்பதை அறிந்து கொள்ளலாம். சென்ற 8-வர்ஷகாலமாக தமது தேசத்து ஸேனையில் ஜெனரல் என்னும் பதவியில் இருந்து வருகிறார். இவர் பால்யத்தில் வெகு ஜாக்ரதையாக யுத்த விஷயங்களில் பயிற்சி செய்விக்கப்பட்டார். 1890-ம் வர்ஷத்தில் இவர் ப்ரஸ்ஸல்ஸிலுள்ள போர்த்தொழில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து போர்த்தொழில் பயின்று வந்தார். 1892-ம் வர்ஷத்தில் இவர் ஸைன்யங்களில் சேர்ந்தார்.

ஆல்பர்ட் அரசருக்கு இரண்டு புத்ரர்களும், ஒரு புத்ரியும் உண்டு.

### KING PETER OF SERVIA.

ஸேர்வியாவின் அரசராகிய பீட்டர்.

1878-ம் வர்ஷம் வரையில் ஸெர்வியா என்னும் தேசம் துருக்கிக்குக் கீழ்ப்பட்ட ஒரு ஸ்வய அரசாட்சி நாடாக இருந்துவந்தது. அந்த வர்ஷம் பெர்லினில் செய்யப்பட்ட ஒரு உடன்படிக்கையின்படி ஸெர்வியா ஸ்வாதீனமுள்ள நாடாக ஏற்பட்டது. ஸெர்வியாவில் காராஜார்ஜிவிட்ச் என்றும், ஆப்ரினுவிட்ச் என்றும் இரண்டு ராஜ வம்சங்கள் உண்டு. இந்த இரண்டு வம்சங்களுக்கும் எப்போதும் விரோதம். 1903-ம் வர்ஷத்துக்கு முன்னால் ஆப்ரினுவிட்ச் வம்சத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவருடைய ஆட்சியில் ப்ரியங் கொள்ளாத அநேக ஸெர்வியர்கள் அவரைக்கொன்று விட்டு காராஜார்ஜிவிட்ச் வம்சத்தைச் சேர்ந்த பீட்டர் என்னும் இப்போதுள்ள அரசரை ஸிம்மாஸனத்தில் வைக்கவேண்டுமென்று எண்ணி அதற்கு வேண்டிய ஸதியாலோசனை முயற்சிகளைச் செய்தார்கள். பீட்டரும் அவர்களுக்கு உடந்தையாக இருந்து வேண்டிய முயற்சிகள் செய்தார். தாம் பட்டத்துக்கு வருவதற்கு முன்னால் இவர் எப்போதும் கலகக்காரர்களில் ஒருவராகவும், ஸதியாலோசனைக் காரர்களில் ஒருவராகவும் இருந்து வந்தாராம். அலெக்ஸாண்டர் அரசருக்குக் கல்யாணமானபோது அநேக கலகக்காரர்கள், இவருக்குச் சார்பாயிருந்து, அலெக்ஸாண்டரையும், அவருடைய மனைவியையும் கொன்று, பீட்டரை ஸெர்வியாவின் அரசராக ஏற்படுத்த வேண்டுமென்று ப்ரதிக்ஞை செய்தார்களாம். அந்த ஸதியாலோசனைக்காரர்கள் அலெக்ஸாண்டர் அரசரைக் கொல்வதற்கு அநேக முயற்சிகள் செய்து, கடைசியில் 1903-ம் வர்ஷத்தில் அலெக்ஸாண்டரையும் அவருடைய மனைவியையும் கொன்று பீட்டரை பட்டத்தில் வைத்தார்கள். பீட்டர் பட்டத்துக்கு வந்ததைப்பற்றி ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தியும், ரஷ்ய சக்ரவர்த்தியும் ஸந்தோஷப் பட்டதாகக் காட்டிக் கொண்டாலும், அலெக்ஸாண்டரைக் கொலைசெய்த கொலையாளர்களை தண்டிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஆனால் பீட்டர் தாம் ராஜ்யத்துக்கு வருவதற்கு உடந்தையாயிருந்த ஷை கொலையாளர்களை தண்டிக்க மனந் துணியவில்லை. இதன்மேல் இங்கலண்ட், ப்ரான்ஸ், அமெரிக்க ஐக்ய மாகாணங்கள் முதலிய ராஜ்யங்கள் ஸெர்வியாவிலிருந்த தங்களுடைய ப்ரதிநிதிகளை அந்த தேசத்திலிருந்து வரவழைத்து விட்டார்கள். ஸெர்வியா அரசர் மூன்று வர்ஷம் கழித்து ஷை கொலையில் ஸம்பந்தப்பட்டவர்களை உத்யோகங்களிலிருந்து விலக்கி விட்டார். அதன்மேல் இங்கலண்ட் முதலிய ராஜாங்கங்கள் தங்களுடைய ப்ரதிநிதிகளை ஸெர்வியாவுக்கு அனுப்பலாயின. இருந்தாலும் பீட்டர் அவருக்கு முன்னிருந்த அரசரின் கொலையில் ஸம்பந்தப்பட்டிருந்தாரென்ற அபக்யாதி மாத்ரம் இன்னும் முழுவதும் போகவில்லை.

ஸெர்வியர்கள் வெகு காலமாக பல்கேரியா, ஸெர்வியாமுதலிய பல நாடுகளிலுள்ள ஸ்லாவ் ஜாதி ஜனங்களை ஒன்றுசேர்த்து ஒரே ராஜ்யமாக ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணங்

கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பீட்டர் அரசரும் உடந்தையாகவே இருக்கிறார்.

பீட்டர் அரசருக்கு இரண்டு புத்ரர்களும் ஒரு புத்ரியும் இருக்கிறார்கள். மூத்த புத்ரர் தமது தகப்பனாருக்குப்பின் தமக்குப் பட்டம் வேண்டாமென்று சொல்லிவிட்டதால் இரண்டாவது புத்ரராகிய அலெக்ஸாண்டர் ராஜகுமாரர் இளவரசாக ஏற்படுத்தப் பட்டிருக்கிறார். மேலும் பீட்டர் அரசருக்கு 70-வயஸாகிறதாலும், அவர் ரொம்ப வ்யாதியாயிருப்பதாலும் இளவரசாகிய அலெக்ஸாண்டர் ராஜகுமாரர் அரசருக்குப் பதிலாக ராஜ்யபாரத்தை நிர்வகித்து வருகிறார்.

பீட்டர் அரசர் மாண்டிநிக்ரோவின் அரசராகிய நிக்கலாஸின் புத்ரி ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டார். ஆனால் அவள் 1890-ம் வர்ஷம் இறந்துபோய் விட்டாள்.

இவரது இரண்டாவது புத்ரராகிய இளவரசரிடத்தில் ஜனங்கள் ரொம்ப விச்வாஸமாயிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

## THE EMPEROR OF JAPAN.

### ஜப்பான் சக்ரவர்த்தி.

ஜப்பான் ராஜ்யம் ஸுமார் 2500 வர்ஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது. அப்போது ஏற்பட்ட ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள் நாளது வரையில் ஜப்பானை ஆண்டு வருகிறார்கள். இப்போது ஆண்டு வரும் ஜப்பான் சக்ரவர்த்தி 2500 வர்ஷங்களுக்கு முன் ஏற்பட்ட வம்சத்தின் 123-வது அரசராவார். இவருடைய பெயர் யோஷிஹிட்டோ. இவருக்கு டென்னோ என்றும், கோட்டய் என்றும் பட்டப் பெயர்கள் உண்டு. ஆனால் அன்ய தேசத்தார்கள் இவருக்கு மிக்காடோ என்ற பட்டப் பெயரை உபயோகிக்கிறார்கள்.

யோஷிஹிட்டோ சக்ரவர்த்தி காலஞ்சென்ற ஜப்பான் அரசராகிய மட்ஸுஹிடோவின் மூன்றாவது புத்ரர். 1879-ம் வர்ஷம் டோக்யோவில் ஜனனமானார். 1912-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார். இவர் பால்யத்தில் ப்ரபுக்களுக்கு ஏற்பட்ட ஒரு காலேஜில் ப்ரைமரி வகுப்பிலும் உயர்தர வகுப்புகளிலும் நன்றாய்ப் படித்துத்தேறியபிறகு காலேஜைவிட்டு, அரண்மனையில் ஐரோப்பிய உபாத்யாயர்களிடம் வாசித்து வந்தார். இவருக்கு ஜப்பானிய பாஷையிலும் சீனபாஷையிலுமுள்ள இலக்கியங்களில் விசேஷ ப்ரீதியுண்டாம். அன்ய பாஷைகளில் ப்ரெஞ்ச் பாஷையில் விசேஷத் தேர்ச்சியுண்டு. இவருக்கு ராணுவ விஷயங்களிலும், கப்பல் படை விஷயங்களிலும் விசேஷ ஞானமுண்டு. இவர் ஸைன்யத்தில் லெப்டினண்ட்-ஜெனரல் பதவியிலும், கப்பல் படையில் வைஸ்-அட்மிரல் பதவியிலும் இருந்து வருகிறார். இவர் பட்டத்துக்கு வருமுன் அந்த ராஜ்யத்திலுள்ள ப்ரபுக்கள் ஸபையென்னும் பார்லிமெண்ட் ஸபையில் சேர்ந்து ராஜாங்கக் கார்யங்களில் ரொம்ப ஊக்கங்காட்டி வந்தார்.

இவருக்கு 1900-ம் வர்ஷம் கல்யாணமாயிற்று. சக்ரவர்த்தினியின் பெயர் ஸாடா-கோ. சக்ரவர்த்திக்கு மூன்று புத்ரர்கள் உண்டு.

## KING NICHOLAS OF MONTENEGRO.

### மாண்டிநிக்ரோவின் அரசராகிய நிக்கலாஸ்.

மாண்டிநிக்ரோதேசம் வெகுகாலம் வரையில் பேருக்கு மாத்ரம் துருக்கிக்குக் கீழ்ப்பட்டதாய், ஆனால் உண்மையில் ஸ்வாதீனமுள்ளதாக இருந்து வந்தது. 1878-ம் வர்ஷத்தில் பெர்லினில் செய்யப்பட்ட ஒரு உடன்படிக்கையின்படி இந்த தேசம் துருக்கிக்குக் கீழ்ப்பட்டிராத ஒரு ஸ்வாதீனமுள்ள தேசமென்று எல்லா அரசுகளும் ஒப்புக்கொண்டன.

மாண்டிநிக்ரோவின் அரசருக்கு நிக்கலாஸ் என்று பெயர். இவர் 1841-ம் வர்ஷம் பிறந்தார். பால்யத்தில் ஆஸ்ட்ரியாவிலுள்ள ட்ரீஸ்ட் என்னும் பட்டணத்திலும் பாரிஸிலும் கல்வி பயின்றார். 1860-ம் வர்ஷம் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு முதலில் 'ப்ரின்ஸ்' அதாவது ராஜகுமாரர் என்று பட்டப்பெயரிருந்தது. ஆனால் 1910-ம் வர்ஷத்தில் அந்த தேசத்து ஜனஸபையார் கேட்டுக்கொண்டதன்மேல் அவர் 'அரசர்' என்று பட்டம் வைத்துக்கொண்டார். இவருக்கு மூன்று குமாரர்களும், 6 புத்ரிகளும் இருக்கிறார்கள். இவருடைய புத்ரிகளில் ஒருவராகிய ஹெலினை ராஜகுமாரி இட்டலியின் அரசராகிய இம்மானுவலைக் கல்யாணம் செய்துகொண்டு, இட்டலியின் ராணியாக இருந்துவருகிறார். இன்னொரு புத்ரியாகிய ஸார்காவை ஸெர்வியாவின் அரசராகிய பீட்டர் கல்யாணம் செய்துகொண்டார். ஆனால் அந்தப் புத்ரி 1890-ம் வர்ஷத்தில் இறந்துபோய்விட்டார். கொஞ்ச காலத்துக்கு முன் நடந்த துருக்கி-பால்கன் யுத்தத்தில் முதல் முதல் யுத்தம் ஆரம்பித்தவர் மாண்டிநிக்ரோவின் அரசர்தான்.



## SULTAN MUHAMMAD V. OF TURKEY.

### துருக்கியின் ஸுல்தானாகிய ஐந்தாவது மகம்மது.

துருக்கியின் அரசருடைய பெயர் ஸுல்தான் ஐந்தாவது மகம்மது. இவர் 1844-ம் வர்ஷம் நவம்பர்மீ 3உ பிறந்தார். 1909-ம் வர்ஷம் ஏப்ரல்மீ 27உ பட்டத்துக்கு வந்தார். இவர் இவருக்கு முன் துருக்கியை ஆண்டு கொண்டிருந்த ஸுல்தான் அப்தல் ஹமீதின் ஸகோதரர். பட்டத்துக்கு வருவதற்கு முன்னால் 30-வர்ஷகாலம் ராஜாங்கக் கைதியாக இருந்தார். அப்தல் ஹமீதின் காலத்தில் தேசத்தின் அரசாட்சி சீர்குலைந்திருந்தது. தேசாபிமானம் பூண்ட சில துருக்கியர்கள் 1909-ம் வர்ஷத்தில் அரசாட்சியை சீர்திருத்த எண்ணங்கொண்டு, கமிட்டி அப் யூனியன் அண்ட் ப்ரோக்ரஸ் என்று பெயர்கொண்ட ஒற்றுமை, முன்னேற்றத்துக்கான ஒரு ஸபை ஏற்படுத்தி ரொம்பவும் ப்ரயத்தனங்கள் செய்து அப்தல் ஹமீதை பட்டத்திலிருந்து விலக்கி மகம்மதைப் பட்டத்தில் வைத்தார்கள். இவர் வெகுகாலம் லோக வ்யவஹாரங்களை யறியாமல் தனிமையில் இருந்துவந்ததால், இவருக்கு ரொம்ப அனுபோகம் கிடையாதென்று சொல்லப்படுகிறது. இவருக்கு இரண்டு புத்ரர்கள் உண்டு.

## PETROLEUM.

By S. R. ATHMANADHA AIYAR.

### மண்ணெண்ணெய்.

இது பூமியின் கீழிருக்கும் பெரும் கல் பாறைகளிலகப்படும் ஓர்வித எண்ணெய். இத னுடன்கூட உப்புஜலமும் கலந்தகப்படும். எண்ணெய் லேசானதுபற்றி ஜலத்தின்மேலே மிதக்கும். எண்ணெய் முழுதும் வெளிவந்தபிறகு உப்புஜலம் நிற்கும்.

இது அமெரிக்கா கண்டத்தில் பலவிடங்களிலும், ரஷ்யாதேசத்திலும், ஸுமாட்ரா, ஜாவா, போர்னியோ என்னுந் தீவுகளிலும், ஸுமார் இருபது வர்ஷங்களாக பர்மாதேசத்திலும் கிடைக்கிறது. எண்ணெயில் ஒருவகை மஞ்சள்நிறமாயும், ஒருவகை கொஞ்சம் சிவப்பாயும், மற்றோர்வகை ஊதா அல்லது கறுப்புநிறமாயுமிருக்கும். இது 100-க்கு 84 பாகம் கரியும், 12 பாகம் ஜலவாயுவும் மற்றைய நான்குபாகம் கந்தகம் ப்ராணவாயு இவைகளின் ஸம்பந்தமாயுமிருக்கும்.

பூமியின் கீழே இந்த எண்ணெய் சேர்ந்ததற்குக் காரணமென்ன? பூமியின் கீழிருக்கும் நிலக்கரி, எரிமலையின் செயலால் எண்ணெயாய் மாறுகிறதென்று சிலர்கூறுவர். ஒருவகை மீன்கொழுப்பைகாய்ச்சி வடி கட்டுவதா

னுண்டாகிறதென்று கூறுவர் சிலர். ஜீவவர்க்கத்தைச்சார்ந்த உயிர் ப்ராணிகள், தாவர வர்க்கத்தைச்சேர்ந்த செடிமரம், ஆகிய இவைகள் செத்து அழுகி அவைகளிலிருந்து ஊறிப்புறப்படும் வஸ்து எண்ணெயாகிறதென்று வேறு சிலருடைய அபிப்ராயம். அநேக நூற்றாண்டுகளுக்கு முந்தி பூமியின் கீழே மலைகளிலிருக்கும் தாதுக்கள் பௌதிகச்செயலால் வடிகட்டப்பட்டு எண்ணெயாகிறதென்று இப்போது அநேகர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

ஸுமார் இரண்டாயிரம் வர்ஷங்களுக்கு முந்தியிருந்தவர்கள்கூட இவ்வெண்ணெயை உபயோகித்தார்களெனத் தெரியவருகிறது. ஆயினும் பூமியிலதிக ஆழத்திலிருக்கு மெண்ணெயை எடுக்கமுயன்றார்களெனத் தோன்றவில்லை. ஸுமார் நூறு வர்ஷங்களாகத்தான் இது உலகத்திலுபயோகத்திற்கு அத்யாவச்யமான பொருளாக ஏற்பட்டது. ஏறக்குறைய 100 வர்ஷங்களுக்குமுன் அமெரிக்காதேசத்தில் உப்பு செய்வதற்காக உப்புஜலம் வேண்டிக்கிணறு வெட்டுகையில் எதிர்பார்க்காத வண்ணம் எண்ணெய் வந்ததைக் கண்டவர்கள் மிகத்துக்கமடைந்தார்களாம்! இன்னும் சில வர்ஷங்களுக்கப்பால் மற்றோர் கிணறு வெட்டும்பொழுது பெரிய ஏரி விஸ்தீர்ணமுள்ள எண்ணெய்க் களஞ்சியம் தென்பட்டுத் தீமூண்டு ஸுமார் 40, 50 மைல் தூரம் தெரியும்படி மிகபயங்கரமாய் சுடர் விட்டெரிந்ததைப் பார்த்துத் துக்கித்தார்கள். பிறகு சிலர் இந்த எண்ணெயைப் புட்டிகளிலடைத்து மருந்தாக விற்பனை செய்தார்களாம். கொஞ்ச காலஞ்சென்றபிறகு திமிங்கிலங்கள் அரிதாவதுபற்றி, அக்காலம்வரையில் திமிங்கிலத்தின் கொழுப்பிலிருந்து எண்ணெய் எடுத்துவந்தவர்கள் எண்ணெய்க்கு இனியாது செய்வதென்று திகிலடைந்தபொழுது இந்த எண்ணெய் மிக உபயோகமாயிருந்தது.

பூர்வகாலத்தில் இந்த எண்ணெயைச் சேர்ப்பதற்கு உபாயம் யாதெனில், ஜலத்தின்மேல் மிதக்கும் எண்ணெயை ஆடையெடுப்பதுபோலெடுப்பதேயாம். மணற்பாங்கான இடங்களிலெண்ணெய் உண்டாகும்பொழுது முப்பது நாற்பது கஜம்தூரம், அதிக ஆழமில்லாத கால்வாய்களைவெட்டி ஒரு கழியால் மணலைக்கலக்குவதால் மேலெழும்பும் எண்ணெயைச் சேகரிப்பார்கள்.

ஒரு நிலத்திலெண்ணெய் அகப்படுமாவென ஆழத்தோண்டிப் பார்க்கவேண்டும். கொஞ்ச தூரம் தோண்டின மாத்ரத்திலேயே எண்ணெயகப்படவில்லையென அதைரியப் படலாகாது. கொஞ்ச ஆழம் வெட்டிவிட்டு, விடப்பட்ட இடங்களில் இன்னும் கொஞ்சதூரம் வெட்டிப் பார்த்தவர்களுக்குச் சரேலென்று எண்ணெய் கிளம்புவதுமுண்டு. ஸாதாரணமாய் ஒரு கிணற்றுக்கும் மற்றொன்றுக்கும் நான்கு அல்லது ஐந்து ஏகரா தூரமிருந்தால்தான் நலம். இப்படிக்கிணறு வெட்டுவதிலும் நிலத்தின் ஓரங்களில் கிணறுகளை முன்னதாகவெட்டி அங்கிருக்கும் எண்ணெயை முதலிலே யெடுப்பது முக்யமாகும். இல்லாவிடில் வேறுசிலர் ஸமீபத்தில் கிணறுவெட்டும் பட்சத்தில் இவ்வெண்ணெய் அக்கிணற்றுக்கு ஓடிப்போய்விடும்.

அதிக ஆழம்வெட்டாமல் 60, 70 அடி மாத்ரமே தோண்டினால் ஒருக்காலெண்ணெய் வந்தாலும் பூமியின்மட்டம் வரையிலுயர்ந்துவராது. ஆனதுபற்றி யந்த்ரத்தினுதவியால் அந்த எண்ணெயை வெளிவாங்க வேண்டிவரும். அதிக ஆழம்வெட்டினால் பூமி மட்டம்வரையிலும் ஸாதாரணமாய் வரும். சில ஸமயங்களில் திடீரென்று எண்ணெய் 40, 50 அடி உயரம் வரையிலுங்கூடக் கிளம்பும். இப்படிக் கிளம்புவதால் சில மணி நேரத்திற்குள்ளாக கோடிக்கணக்கான டின் எண்ணெய் வ்யர்த்தமாகும். இப்படிச் சேதமாகாதபடி மனிதர்



கள் தோலால் செய்யப்பட்ட ஆடைகளையணிந்து, உலோகத்தால் செய்த தலைச்சீராக்களைத் தலைகளில் தரித்து, எஃகாலியற்றப்பட்ட பெரிய குல்லாபோன்ற மூடிகளைக் கிணற்றின்மேல் போடுவார்கள். இப்படிச்செய்வது மிகக் கஷ்டமான கார்யம். பூமியிலிருந்து இப்படி வர்ஷந்தோறும் எடுக்கு மெண்ணெயின் விலைமதிப்பு ஸுமார்முப்பதுகோடி ரூபாயாகிறது. இந்த எண்ணெயை ஒருங்குசேர்த்தால் பெரிய கப்பல்கள் மிதக்கும்படியான அவ்வளவு விஸ்தீர்ணமான ஸமுத்ரம் போலாகுமாம்.

நீராவியந்த்ரத்தின் ஸகாயத்தால், கருவிகள் பூமியின் கீழே தோண்டிச் செல்லும்படிக்கும், தோண்டும்பொழுது கிளம்பும் மண், களிமண், ஜலம் ஆகிய இவைகளைவெளியிற் கொண்டுவருவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பூமியின்கீழே தோண்டிச் செல்லச்செல்ல, பக்கங்களில் தளமான மரப்பலகைகளாலும் துண்டுகளாலு மடைத்துக்கொண்டு போகவேண்டும். இல்லாவிடில் பக்கங்கள் தூர்ந்துவிழுவதாலும், ஊறும் ஜலப்பெருக்காலும் கெடுதிநேரிடும்.

முன்காலத்தில் எண்ணெயை எடுத்துவருவதற்குத் தோண்டிகளும், பீப்பாய்களும் உபயோகப் படுத்தப்பட்டன. பிறகு குழாய்வழியே வெகுதூரம் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதிகதூர தேசங்களுக்கு ரயில்மார்க்கமா யனுப்பும்பொழுது இதற்காக ப்ரத்யேகமாய் எஃகால் செய்யப்பட்ட பெரிய குளங்களிலும், ஸமுத்ரமார்க்கமா யனுப்பும்பொழுது கப்பல்களிலும் நிரப்பி யனுப்புவார்கள்.

கிணறுகளிலிருந்து எண்ணெய் கிளம்பி வரும்பொழுது அது தீப்பற்றாமலிருக்க ஸாதனம் தேடிக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் அகஸ்மாத்தாய்த் தீமூண்டால் அனர்த்தம் விளையும். அப்போது நீராவியாலும், உலோகத்தால் செய்த பெரிய குல்லாபோன்ற மூடியாலும் அத்தீயை அவிப்பார்கள். சில ஸமயங்களில் எஃகால் செய்த கிராதிகளையும் கம்பிகளையும் ஜ்வாலையின் மீது இழுப்பதாலும் அணைப்பதுண்டு. கப்பல்களில் பெரிய குளங்கள்போன்ற விசாலமான களஞ்சியங்களில் இந்த எண்ணெயைக்கொண்டு வருகிறார்களென்று முந்தியே சொன்னோம். இக்கப்பல்கள்கூட தீப்பற்றாவண்ணம் மிக ஜாக்ரதையாயிருக்கவேண்டும். ஒருக்கால் தீமூண்டால் ஸமீபத்திலிருக்கும் கப்பல்களும் தீப்பிடிக்குமல்லவா? சில மாஸங்களுக்கு முன் ரங்கூனிலிருந்து இந்த எண்ணெயைக் கொண்டுவந்த 'ட்வின்கான்' என்னும் கப்பல் தூத்துக்குடி துறைமுகத்தில் தீப்பற்றி ஆயிரம் டன் எண்ணெயுடனெரிந்து 10, 15-மைல் தூரம்வரையில் ஜ்வாலைதெரியும்படி அநேக நாள்வரையிலெரிந்தது.

இந்த எண்ணெயை பூமியிலிருந்து எடுத்தவுடன் உபயோகப்படுத்தமுடியாது. இதை வடிகட்டினால்தான் இது நின்று எரிவதற்கு ப்ரயோஜனமாகும். இப்படி வடிகட்டுவதால் எரிப்பதற்காக எண்ணெயும், வாயுவை உண்டாக்குவதற்குரிய எண்ணெயும், யந்த்ரங்கள் வழுவழென்றிருக்கச் செய்யும்பொருட்டு உபயோகமான எண்ணெயும், ஒருவகை மெழுகும் கிடைக்கின்றன. பாகப்படாத எண்ணெயைக் காயங்களை ஆற்றுவதற்கும், தோலுக்கடுத்த நோய்களுடைய பரிகாரத்திற்காகவும் உபயோகப்படுத்துகிறார்கள்.

இந்த எண்ணெயினின்றும் சீக்ரம் ஆவியாய்ப் போகக்கூடிய சிலவஸ்துக்களை நீக்கி வடிகட்டி விட்டால், கப்பல்களை நடத்துவதற்கும், மோட்டார் வண்டிகளைச் செலுத்துவதற்கும் உபயோகமாகிறது. இதுவரையில் கப்பல் ஓட்டிச்செல்லுவதற்கு முக்கியமாய் நிலக்கரியல்லவா உபயோகித்து வந்தார்கள்? இப்

பொழுது ஸுமார் 4, 5, வர்ஷகாலமாய் இந்த எண்ணெயை உபயோகித்து வருகிறார்கள். இப்படி உபயோகிப்பதால் மிகமுக்யமான சில பயன்களை நாமடைகின்றோம். அவையாவன;

முதலாவது, நிலக்கரி இன்னும் ஸுமார் 50 வர்ஷங்களுக்கு மேலகப்படாதென்று கூறுகிறார்கள். இந்த எண்ணெயோ அநேகவிடங்களில் ஏராளமாய் கிடைப்பதால் அம்மாதிரி பயமில்லை.

இரண்டாவது, மூன்றுடன் நிலக்கரி எவ்வளவுவேலை செய்யுமோ அதேவேலையை இரண்டுடன் எண்ணெய் செய்யுமாம்.

மூன்றாவது, 67 கன அடிகளில் பரவிக்கொள்ளும் நிலக்கரிக்கு எவ்வளவு உஷ்ணசக்தி இருக்கிறதோ அதேசக்தி 36 கன அடிகளை ஆக்ரமிக்கும் எண்ணெய்க்கு உண்டு.

நான்காவது, நிலக்கரியை உபயோகிப்பதில் யந்த்ரச்சூளையைக் காப்பதற்கும் மற்றும் சில்லறைவேலைக்கும் அநேக வேலையாட்கள் தேவை இவர்களுக்கு உணவுக்காகவேண்டிய ஸாமான்களை சேகரித்துவைப்பதற்கும் கப்பல்களில் இடம் வேண்டும். எண்ணெயை விறகாக உபயோகிப்பதில் இவ்வளவு மனிதர்கள் தேவையில்லை. வேலையில் கைதேர்ந்த சிலர் இருந்தால் போதும். இக்காரணங்கள்பற்றி சண்டைக்கப்பல்களுக்கு இப்பொழுது எண்ணெயையே விறகாய் உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். நிலக்கரியை உபயோகிப்பதைக் காட்டிலும் இவ்வாறு எண்ணெயை உபயோகிப்பதில் இடம் கூடிவருவதால் அந்த இடத்தில் அதிகப் போர்வீரர்களையாயினும் துப்பாக்கி பீரங்கிக் குண்டுகளையாயினும் ஏற்றிக்கொள்ளலாமல்லவா? இக்காரணங்கள்பற்றி யுத்தத்தில் இந்த எண்ணெய் மிகுந்த உபயோகத்தைத் தருகிறது.—எஸ். ஆர். ஆத்மநாத அய்யர்.

## HINTS ON GRAFT MANGO CULTIVATION.

BY N. S. KRISHNASWAMI AIYAR, SALEM.

## ஒட்டுமாஞ்செடி ஸாகுபடியைப்பற்றிய குறிப்புகள்.

### வேலியமைப்பு.

1. "வேலி பயிரைக்காக்கும்" என்ற வாசகப்படி அதிகமான விலை கொடுத்து வாங்கி வைக்கப்பட்ட செடிகளுக்கு வேலியமைப்பு அதிக முக்யமானது. தனித்தனியாய் ஒவ்வொருசெடிக்கும் வேலி போடவேண்டியதில்லை. தோட்டத்தைச் சுற்றிலும் பந்தோபஸ்தாய் கிளுவைவேலிபோட்டு, அதன் பக்கத்தில் கொருக்காய்ப் புளி விதைகளை நட்டுவிட்டால் மழையீரத்திலேயே கிளுவையும் தழைத்துவிடும். கொருக்காய்ப்புளி விதைகளும் முளைத்துவிடும். வேலியோரங்களில் டிவிடிவி செடிகளையும் பயிர் செய்துவிட்டால் அதனாலும் லாபமுண்டு. வேலியமைப்பு தீர்ந்ததும் மேடுபள்ளங்களெல்லாம் ஸமப்படுத்தி, தாக்குத் தாக்குகளாய்ப் பிரித்து ஒவ்வொரு தாக்கிலும் ஒவ்வோர்கினுஸு மாஞ்செடியை வைத்துப் பயிராக்கலாம். அப்படிப் பயிராக்குவதனால் என்ன அனுகூலமென்றால், கினுஸுகள் இன்னின்ன விடங்களிலிருக்கின்றனவென்று கேட்பவர்களுக்குக் காட்டலாம். ஒவ்வொருதாக்கின் நாலாபக்கங்களிலும் மண் மேடுபோட்டு வைப்பதனால் மழைக்காலத்தில் தண்ணீர்நின்று செடிகளுக்குவேண்டிய ஈரத்தைக்கொடுக்கும்.

### பூமி.

2. களர் பூமி நீங்கலாக மற்ற எவ்விதபூமியிலும் ஒட்டுமாஞ்செடிகள் வைத்துப் பயிராக்கலாம். அதிக நீர்ப்பிடிப்புள்ள பூமியும் கெடுதலானதே.



### செடிகள் வைக்கவேண்டிய தூரம்.

3. செடி வ்யாபாரிகளைக்கேட்டால் அவர்கள் தங்களுக்கு அதிகமானசெடிகள் விற்பனையாகுமென்ற எண்ணத்துடன் ஒரு ஏக்கர் பூமியில் 25-30 செடிகள்வரையில் வைக்கலாமென்று சொல்லுவார்கள். தோட்டக்காரர்களும் தங்கள் தோட்டத்தில் அதிகமான செடிகள் இருக்கவேண்டுமென்ற ஆசையோடு அவர்கள் சொல்லுகிறபடியே வாங்கிவைத்துவிட்டு பெருத்த பிறகு மரங்கள் யாதொரு பலனையும் கொடுக்கவில்லையே என்று முறையிடுகிறார்கள். மரங்களும் அதிக நெருக்கமாய் ஒன்றுக்கொன்று முட்டிக்கொண்டு கிளைகள் அதிக கீழாகத் தாழ்ந்து பலனில்லாமல் இருக்கையில், கிளைகளை வெட்டிவிடலாமா, நடுவே ஒவ்வொரு மரத்தை எடுத்துவிடலாமா என்றும் அதிக பரிதாபமாய்க் கேட்கிறார்கள். அப்படிச்செய்யாமல் செடிகள்பெருத்து பலனுக்குவரும் தருணத்தில் ஒவ்வொரு செடிக்கும் செவ்வையாய் வெயில் படும்படியாயும், நல்ல காற்றோட்டம் உண்டாகும்படியாயும் ஒவ்வொரு செடிக்கும் 50 அடி இடைவெளியிருக்கும்படி வைப்பது உத்தமம். இவ்வாறுவைத்தால் ஒரு ஏக்கர் பூமியில் 20 செடிகள்தான் வைக்கலாம். அதிகமான செடிகள்வைத்து கொஞ்சப்பலன் அடைவதைவிட கொஞ்சம் செடிகள்வைத்து அதிக பலன் அடைவது எவ்வளவு நன்மை. அதிகமான செடிகளுக்கு ஆசைப்படவேண்டாம்.

### குழிகள்.

4. குழிகள் ஒரு கஜம் சதுரம், ஒரு கஜ ஆழம் இருக்கவேண்டும். அந்தக் குழிகளில் பாதிக்கு மேல் மண்ணைத்தள்ளி ஒட்டுச் செடிகளுள்ள சட்டியை உடைத்துவிட்டு அச்செடியை மண் கட்டியோடு குழியின் நடுவில் வைத்து சுற்றிலும் மண்ணைத்தள்ளி, செவ்வையாய் காலால் மிதித்துவிட்டு ஒட்டியிருக்கும் பாகம் மண் மட்டத்துக்கு மேலாகவே யிருக்கும்படி செய்ய வேண்டியது. பிறகு காற்றினால் அச்செடி ஆடாமல் ஒரு மூங்கில் நட்டு அதோடு செடியைக்கட்டி வைக்கவும். இவ்வாறு செய்த பின் தண்ணீர் ஏராளமாய்ப் பாய்ச்சி குழியின் மண் ஈரமாகும்படி செய்யவும். ஒட்டின்மேல் சுற்றியிருக்கும் மெழுகுத்துணி தானாகவே விழுகிற வரையில் தினந்தோறும் போய்ப் பார்த்து அதில் கரையான் ஏறாமல் பார்த்து வரவும்.

### எரு.

5. மாமரத்துக்கு யாதொரு எருவும் தேவையில்லையென்பது எனது அபிப்ராயம். வைக்கும்போது மட்டும் குழிகளில் சப்பாத்திக் கள்ளியை சிறு சிறு துண்டுகளாய் வெட்டிப்போட்டு அதில் தண்ணீர் பாய்ச்சி அழுகவிட்டு அதின்மேல் மண்ணைத்தள்ளி செடிகள் வைத்து விடவேண்டியது. பிறகு மரங்கள் பெருத்து அவைகளில் பழுத்து விழும் சருகுகளை மரத்தினடியிலேயே மக்கும்படி செய்வதே அதற்குத் தகுந்த எருவாம். வர்ஷாவர்ஷம் தவறாமல் மரத்தைச் சுற்றிக்கொத்திவிட்டு மக்கின இலைகளைக் கலந்து வைத்து செடியைச் சுற்றிலும் முளைத்திருக்கும் களைப்பூண்டுகளை வேருடன் பிடுங்கி விட்டு சுத்தமாய் வைத்திருப்பதே போதுமானது. மக்கின இலை யெருவில் வேண்டிய ரஸாயன ஸத்துக்கள் கலந்திருக்கின்றன.

### நீர் பாய்ச்சல்.

6. செடிகள் வைத்து 4-5 வர்ஷங்கள் வரையில் வாரத்துக்கு 2-3 தண்ணீர் பாய்ச்சி ஈரம் காயாமல் பார்த்து வரவேண்டியது. பிறகு கோடையில் மட்டும் வாரத்துக்கு ஒரு தண்ணீர் பாய்ச்சினால் போதும். செடிகளைச் சுற்றிலுமுள்ள காலி நிலத்தில் கொத்தி ஏதாவது தோட்டப்பயிர் செய்து அதற்கு தண்ணீர் பாய்ச்சி வந்தால் அந்த ஈரமே செடிகளுக்கும் தாக்கும். பூ பூத்து பிஞ்சுகள்

சுண்டைக்காய், கடுக்காய் ப்ரமாணம் ஆகும்போது வெயில் அதிசமாய் இருந்தால் ஒன்று அல்லது இரண்டு தண்ணீர் பாய்ச்சினால் போதும். பூத்திருக்கும்போது தண்ணீர் பாய்ச்சினால் பூக்கள் அடியோடு கொட்டுண்டு போகும்.

பலன்.

7. ஒட்டுச் செடிகள் வைத்த மறு வர்ஷமே செடிகள் பூக்க வாரம்பிக்கும். அப்பூக்களைக் கிள்ளிவிடவேண்டும். இவ்வாறு 2-3 வர்ஷங்கள் செய்யலாம். நான்காவது வர்ஷம் முதல் பூவை விட்டு விடலாம். அப்போது ஒரு மரத்துக்கு 50-காய்கள் போல் கிடைக்கும். 5-வது வர்ஷமுதல் 10-வது வர்ஷம் வரையில் மரத்துக்கு 100 காய்களுக்கு மேலேயே கிடைக்கும். 10-வது வர்ஷ முதல் ஒரு மரத்துக்கு 400 காய்களுக்கு மேலாகவே கிடைக்கும். வயது ஏற ஏற அதிகமாய் காய்கள் பிடிக்கும். ஆனால் நாட்டு மரங்களைப் போல் ஒட்டு மரங்களில் வர்ஷம் தவறாமல் காய்க்காது. ஒரு வர்ஷம் குறைவாயும் மறு வர்ஷம் அதிகமாயும் காய்க்கும். காய்கள் செவ்வையாய் முற்றிய பக்வம் தெரிந்து பெரிய மூங்கிலின் நுனியில் ஒரு வலையைக் கட்டி அதற்குள் காய்கள் விழும்படியாய் அறுத்து, நெல் வைக்கோலில் மூடி காற்றோட்டமில்லாத ஓர் அறையில் வைத்திருந்தால், காய்கள் செவ்வையாய்ப் பழுத்து நல்ல நிறமுள்ளனவா யிருக்கும். பிறகு விற்பனைக்கு வெளியே கொண்டு வரலாம்.

வ்யாதிகள்.

8. பழத்திற்குள் வண்டு காணப்படுதல்.—இது சில இனிப்பான ஜாதிகளில் காணப்படுகிறது. இந்த வண்டு எப்படி உண்டாகிறதென்று அநேகருக்கு அதிசயமாய்த் தோன்றும். "கல்லுக்குள் தேரை போல்" கனிக்குள் வண்டு உண்டாவது அதிக அதிசயமானதே. எப்போதும் இவ் வண்டுகள் மரங்களிலேயே குடியிருந்துகொண்டு மரங்களில் பூத்துப் பிஞ்சுகளாகும் காலங்களில் இந்த வண்டுகள் முட்டை யிடும். இம் முட்டைகள் ஸூர்ய வெப்பத்தினாலேயே புழுக்களாகின்றன. இந்தப் புழுக்கள் அதிக சிறியவைகளாய் மயிரிழை போல் அதிக மெல்லியனவா யிருக்கும். இப்புழுக்கள் மெதுவாய் நகர்ந்துபோய் கொட்டை முற்றாத அக் காய்களின்மேல் துளைத்துக்கொண்டு உள்ளேசென்று உள்ளிருக்கும் பருப்பைத் தின்று பெருத்து உள்ளேயே வண்டு ரூபமடைகின்றன. புழு உள்ளே போனதும் அது துளைத்துக்கொண்டுபோன ஓட்டை மூடிக்கொள்ளுகிறது. காய் முற்றி கொட்டை பிடித்து பெருத்து பழுத்த பின் அப் பழத்தை யறுத்தால் உள்ளே வண்டு காணப்படுகிறது. இவ்வாறு சில நாட்டு மா மரங்களில் வண்டு காணப்படுகிறதே ஒழிய ஒட்டு மரங்களில் இல்லை. ஆகையால் ஒட்டு மரங்கள் ச்லாக்யமானவை.

கரையானால் அதிகமான கெடுதியுண்டு. இவை செடிகளின் வேர்களிலும் மரத்தின் மேலும் மண்ணைக் கட்டிக்கொண்டு மரத்தைத் தின்றுக்கொண்டே வரும். இதை அடிக்கடி கவனித்துப் பாதுகாக்க வேண்டும்.

மரத்தின்மேல் வேறு விதமான கொடிகள் படர்ந்து கிளைகளைக் க்வர்ந்து கொள்ளுகின்றன. அநேகர் அதைக் கவனிக்காமலே விட்டுவிடுகிறார்கள். அப்படி விடுவது மரத்தின் வளர்ச்சியைக் கெடுத்து விடும்.

இது போன்ற வேறு சில வ்யாதிகளும் உண்டாகும். அவைகளை கவனித்து அவைகளுக்குத் தகுந்த சிகித்ஸை அப்போதைக்கப்போது செய்து வந்தால்தான், அம் மரங்களில் தகுந்த பலனை யடையலாம். நம்முடைய பாதுகாப்புக்குத் தகுந்த பலன் கிடையாமற் போகாது.

என். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.



# SERPENT BITES AND THEIR TREATMENT.

## பாம்புக்கடியும், அதற்கு வைத்யமும்.

விஷப்பாம்புகள், முக்யமாய் நல்ல பாம்பு என்றும் விரியன் என்றும் இருவகைப்படும். இவைகளின் விஷங்களில் ஒரு மாதிரி வேக்காடை உண்டாக்கக்கூடிய வஸ்து ஒன்று இருக்கிறது. அதை 158 டிகிரீ டெம்பெரேச்சருக்குக் காயவைத்தால், அவ்வீர்யம் செத்து விடுகிறது. ரத்தத்திலுள்ள "கார்பஸில்" என்று சொல்லப்பட்ட அணுக்களை பாம்பின் விஷம் கரைத்து விடுகிறது. மேல் சொன்ன வேக்காடை உண்டாக்கக்கூடிய வஸ்துவைத் தவிர, வேறுவித விஷஸாமான்களும் அதில் இருக்கின்றன.

பாம்புக்கடியால் மரணம் நேரிடுவது முக்யமாய் இரண்டு வித விஷத்தால்தான். ஒரு வித விஷம் தேகத்தின் நரம்பு ஏற்பாடுகளை க்ஷீணப்படுத்தி, மூச்சுவிடும் வழிகளை அடைத்து, மூச்சு முட்டி மனிதனை சாக அடிக்கும். இந்த விஷத்திற்கு "ந்யூரோடாக்ஸின்" என்று பெயர். மற்றொரு வகை விஷம் தேகத்திற்குள் போய் ரத்தத்தைக் கட்டியாக்கி, மறுபடி அதை இளகச்செய்து, ரத்தமோடும் வழிகளை நாசம் பண்ணி, வீக்கத்தை உண்டாக்குகிறது. இதன் பெயர் "ஹெமொராகின்." இந்த இரண்டுவித விஷங்களும் எல்லா விஷப்பாம்பு விஷங்களிலும் இருக்கின்றன. ஆனால் நல்ல பாம்பு விஷத்தில் ந்யூரோடாக்ஸின் அதிகமாகவும், விரியன் விஷத்தில் ஹெமொராகின் அதிகமாகவும் இருக்கின்றன. ஆதலால் தான் நல்ல பாம்பு கடித்தால், மனிதன் எல்லாம் ஆய்ந்தோய்ந்து மூர்ச்சை போட்டு மயங்கி, மூச்சு விட முடியாமல் கீழே விழுந்து விடுகிறான். ஆ[illegible] நேரத்துக்குள் அவனது காலம் முடிந்துவிடும். ஆனால் மூச்சு நின்று இரண்டு மணி வரையில் கூட ஹ்ருதயம் அடிக்கலாம். விரியன் பாம்பு கடித்தால், கடித்த இடத்தில் ஸகிக்க முடியாமல் வலி உண்டாகும்; கடித்த பாகம் வீங்குகிறது; நரம்புகளெல்லாம் ரணமாய் பிடித்து இழுக்கின்றன. நாவு வரண்டு, தீராத தாகமெடுக்கிறது. கண் வழியாகவும், வேறு வழியாகவும் ரத்தம் பெருகும். சின்னங்கள் ஏற்படுவது கடியைப் பொறுத்தது. நாம் துணிகள் தரித்துக்கொண்டிருந்தால், அத்தனை விஷம் உள்ளிறங்காது. ஆனால், வீக்கம் சில வேளைகளில் ஜாஸ்தியாகி ஸ்வஸ்தமாவதற்கு அதிக நாட்கள் பிடிக்கும். விரியன் பாம்பு குழந்தைகளைக் கடித்தால், அவர்களது வளர்ச்சி குறைந்து விடும். அது சிரஸிலோ, கழுத்திலோ கடித்து விட்டால் பிழைப்பது ச்ரமம். சில ஸமயங்களில், கண்களும் குருடாய் விடலாம். மேல் சொன்ன சின்னங்களைக் கொண்டு நல்ல பாம்பு கடித்ததா, விரியன் கடித்ததா என்று அறிந்து கொள்ளலாம். சில நிபுணர்கள், கடித்த பற்களின் நீளத்தை தேகத்தில் பார்த்து, இன்ன பாம்பு கடித்ததென்று சொல்லி விடுகிறார்கள்.

எவ்வளவு விஷத்தை பாம்பு தேகத்தில் கக்குகிறதோ, அவ்வளவுக்கும் அதன் வீரியம் இருக்கும். சில ஸமயங்களில், பாம்புகள் ஒருவன் பின் ஒருவனைப் அநேகம் மனிதர்களை கடித்து விடுகின்றன. அப்பொழுது, கடைசியில் கடித்தவன் தேகத்தில் விஷம் மிகக் குறைவாயிருக்கும். வெறுந் தேகத்தில் கடித்தால் விஷம் ஜாஸ்தியாயும் துணிமேல் கடித்தால் குறைச்சலாயு மிருக்கும். தவிர, பெரியவர்களைக் கடித்தால் மரணம் குறைவாயும் சிறுவர்களைக் கடித்தால் ஜாஸ்தியாயு மிருக்கும்.

கீரிப்பிள்ளை போன்ற சில ம்ருகங்கள் விஷப் பாம்பு கடித்தாலுங் கூட பிழைத்து விடுகின்றன. ஸ்வதாவாகவே, பாம்பின்

விஷம் இவைகளை ஒன்றும் செய்கிறதில்லை. சில பாம்பாட்டிகள் கூட பாம்பின் விஷத்துக்கு பயப்படுகிறதில்லை. இவர்களிடம் ரகஸ்ய மருந்தோ, மந்த்ரமோ இருக்கவேணும். ஆனால், இதைப்பற்றி ப்ரேஸர் என்பவர் சொல்வது என்னவென்றால், சிறு பூனைகளுக்கும், வெள்ளை எலிகளுக்கும் கொஞ்சங் கொஞ்சமாய் விஷத்தை வாயின் வழியாய்ப் புகட்டி வந்தால், அவைகளை அப்புறம் பாம்பு கடித்தால் இறக்கிறதில்லையாம். இது போலவே, பாம்பாட்டிகளும் வர்ஷந்தோறும் சிறு பாம்பைக்கொண்டு தம்மை கடிக்கவிட்டுப் பழக்கிக் கொள்கிறார்களென்று ப்ரேஸர் நம்புகிறார்.

பாம்புக்கடிக்கு கால்மெட் என்பவர் ஒரு ஔஷதம் கண்டு பிடித்திருக்கிறார். பாம்பின் விஷத்தையும் 'ஹைப்போக்ளோரைட் அவ்லைம்' என்னும் வஸ்துவையும் சேர்த்து ஒரு குதிரையின்மேல் குத்திச் செலுத்துகிறார்கள். மூன்று நாலு நாட்கள் விட்டு விட்டு இப்படி விஷத்தை குதிரையின் தேகத்திற்குள் செலுத்தி வந்து, வரவர க்ளோரைட் அப்லைமைக்குறைத்து கடைசியாய் அதை நிறுத்தியே விடுகிறார்கள். 16 மாதம் இம்மாதிரி செய்யவேண்டுமாம். இப்படிச் செய்தால், அந்தக் குதிரையின்மேல் 30 க்ரெயின் அதாவது மனிதனைக் கொல்வதற்கு வேண்டியதை விட 80 மடங்கு அதிகமாக விஷத்தைக் குத்தி உள்ளே செலுத்தினாலுங் கூட அது சாகாது. அதிலிருந்து ஒரு 'ஸீரம்' (பால்) எடுக்கலாம். குதிரையின் ரத்தத்தை சில நாள்கள் விட்டு விட்டு மூன்று தடவையாக யெடுக்கிறார்கள்.

இந்த ரத்தத்திலிருந்து ஸுமார் பேர்பாதி பால் தேருகிறது. இதை சீஸாக்களில் வடித்து ஸீல்போட்டு வ்யாதி க்ருமிகள் அணுகாமல் 'ஸ்டெரிலைஸ்' செய்து விடுகிறார்கள். இப்படிச் செய்த பால் வெகு வர்ஷங்கள் நிற்கும். இன்னும் இந்தப்பாலை காயவைத்து 15·4 க்ரெயின் மாத்ரைகளாக வைத்தால் இன்னும் அதிக வர்ஷங்கள் இருக்கும். இதை வேண்டும்போது காய்ச்சி ஆறின ஒரு ஔன்ஸில் மூன்றிலொருபாகம் ஜலத்தோடுகலந்து உபயோகிக்கலாம்.

பாம்பு கடித்ததும் மேல் சொன்ன பாலில் ஒரு ஔன்ஸில் மூன்றில் ஒன்று முதல் அல்லது இரண்டு பாகம் வரையில் வயதுக்குத் தக்கபடி பாலைக்குத்தி செலுத்தினால், விஷம் ஏறாது. கடித்த பாம்பு பெரியதாயாவது அல்லது அதிக விஷமுள்ளதாயாவது இருந்தால் ஒரு ஔன்ஸும் குத்தி ஏற்றலாம். எப்போதும் பாம்பு கடித்ததும் கடித்த இடத்தை நன்றாய்ச் சுரண்டி, சுட்டு விடவேண்டும். உடனே 'பொட்டாஸியம் பெர்மாங்கனேட்டோ' ஹைப்போக்ளோரைட் அவ்லைம்' மோ புண்ணில் அமிழ்த்தி தடவி விடுவது உத்தமம். இப்படிச் செய்வதால் அநேகம் பேர்கள் பிழைத்து விடுகிறார்கள். பாம்பு கடித்தவனுடைய அந்த்ய காலத்திலுங்கூட, இந்த பாலைக் குத்திச் செலுத்தினால் கடித்தவன் பிழைத்து விடுவானாம். இந்தியாவில் மேற் சொன்ன மாதிரி சிகித்ஸை செய்ய ஜனங்கள் ஸம்மதிப்பதில்லையாதலால் பாம்புக்கடியால் மரண விகிதம் அதிகமாக இருக்கிறது.

மேற் சொன்ன சிகித்ஸையில் எந்த விஷப் பாம்பு கடிக்கிறதோ அதே ஜாதி விஷத்தை எடுத்துத் தயாரித்த பால் தான் ப்ரயோஜனப்படுமென்று சிலர் எண்ணினதால், எல்லா விஷப் பாம்புகளின் விஷங்களையும் குதிரையின் ரத்தத்தில் செலுத்தி பிற்பாடு பாலெடுத்து அதை எல்லா பாம்புக்கடிகளுக்கும் உபயோகிக்கிறார்கள்.



# THE ECONOMIC POSITION OF ENGLAND AND GERMANY.

## இங்க்லண்ட், ஜெர்மனி இவைகளினுடைய பொருளாதார நிலைமை.

இப்பொழுது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில், இங்க்லண்டும் ஜெர்மனியுமே முக்ய எதிரிகள். இங்க்லண்டின் பொக்கிஷ மந்த்ரியாகிய மிஸ்டர் லாய்ட் ஜார்ஜ் சொன்னபடி இந்த யுத்தம் வெகுகாலம் நடக்கும் போலிருக்கிறது. இந்த இரண்டு கக்ஷிகளில் யார் பிடித்து நின்று ஒரு நாளைக்கு கூட சண்டை செய்கிறாரோ அவருக்கே ஜயமென்று சொல்ல வேண்டியதாகும். இப்படிச்செய்வது இரண்டு கக்ஷிகளுடையவும் பணமிதப்பை பொறுத்ததாகிறது. அது இரண்டு கக்ஷிக்காரர்களுடையவும் பொருளாதார நிலைமையைப் பொருத்திருக்கிறது. ஆகையால் இந்த வ்யாஸத்தில் அதை விசாரிப்போம்.

இங்க்லண்ட், ஜெர்மனி இவைகளுடைய பொருளாதார நிலைமையைப் பற்றிய சில அம்சங்களை கீழே தருகிறோம்.

| நம்பர். | அம்சம். | இங்க்லண்ட். | ஜெர்மனி. |
|---|---|---|---|
| 1 | நிலக்கரி விளைவு (1911-ம் வர்ஷத்தில்) ... | 27,62,00,000 டன் | 23,45,00,000 டன் |
| | 1886-முதல் 1911 வரையில் நூற்றுக்கு எவ்வளவு அதிகரித்திருக்கிற தென்பது ... | 72·6 | 218·1 |
| 2 | 1910-ம் வருஷத்தில் செய்யப்பட்ட எஃகின் அளவு ... | 61,06,800 டன் | 1,36,98,600 டன் |
| | 1886 முதல் 1910 வரையில் எஃகு நூற்றுக்கு எவ்வளவு அதிகரித்திருக்கிறதென்பது ... | 154·1 | 1,335 |
| 3 | பருத்தித்தொழில்: 1888-முதல் 1909-வரை எத்தனை ராட்டினங்கள்கள் அதிகம் ... | 1,28,60,000 (லங்காஷையரில் மாத்ரம்) | 50,63,000 |
| 4 | சென்ற 30-வருஷத்தில் வ்யாபாரக் கப்பல் அபிவ்ருத்தி ... | நூற்றுக்கு 77·7 | நூற்றுக்கு 156 |
| 5 | கப்பல் கட்டுதல்— | | |
| | i. 1898 முதல் 1904 வரையில் கட்டப்பட்ட கப்பல்களின் நிறை; ஒரு வர்ஷ சராசரி ... | 8,98,000 டன் | 2,40,800 டன் |
| | ii. 1913-ல் கட்டப்பட்டவை ... | 22,03,000 டன் | 6,18,800 டன் |
| 6 | ஸூயஸ் கால்வாய் வழியாய் நடந்த வ்யாபாரம்: அதன் வழியாய்போன கப்பல்களின் மொத்த நிறை ... | மொத்தக்கப்பல்களின் நிறையில் நூற்றுக்கு 62·9 | மொத்தக் கப்பல்களின் நிறையில் நூற்றுக்கு 15·1 |
| 7 | ரெயில்வேக்கள்— 1888-ம் வர்ஷத்தில் கிடைத்த ரெயில்வே வரும்படியைவிட 1910-ம் வர்ஷத்தில் நூற்றுக்கு எவ்வளவு வீதம் அதிகம் ... | 74·3 | 156 |

| நம்பர். | அம்சம். | இங்க்லண்ட். | ஜெர்மனி. |
|---|---|---|---|
| 8 | 1911-ம் ௵த்தில் உள்நாட்டுக் கால்வாய்களின் நீளம் ... | 8,180 | 15,320 |
| 9 | 1888-லிருந்த அன்யநாட்டுவ்யாபாரம் 1912-ல் 100-க்கு எவ்வளவு வீதம் அதிகம் ... | 100·7 | 204 |
| 10 | ப்ரிட்டிஷ் ராஜ்யத்திலிருந்து ஜெர்மனிக்குப் போகும் இறக்குமதி மொத்தத்தில் நூற்றுக்கு 18-பாகம் | | |
| 11 | ஜெர்மனியிலிருந்து ப்ரிட்டிஷ் ராஜ்யத்துக்குப் போகும் ஏற்றுமதி மொத்தத்தில் 100-க்கு 17 பாகம் ... | | |
| 12 | தேசத்தின் ஐச்வர்யம் ... | 24,750 கோடி ரூ. | 22,500 கோடி ரூ. |
| 13 | தேச வரும்படி ... | 3,180 கோடி ரூ. | 3,000 கோடி ரூ. |
| 14 | 1912-ல் ராணுவத்துக்கும் கப்பல் படைக்கும் செலவு ... | தேச ஐச்வர்யத்தில் 100 ரூ-க்கு 7 அணு வீதம் | தேச ஐச்வர்யத்தில் 100-ரூ-க்கு 7½ அணு வீதம் |
| | | தேச வரும்படியில் 100 ரூ-க்கு 3-ரூ 6-அ. வீதம். | தேச வரும்படியில் 100 ரூ க்கு 3½ரூ வீதம் |
| 15 | இறக்குமதியைவிட ஏற்றுமதி எவ்வளவு அதிகம் (1912-ல்) ... | 2,18,51,85,000 ரூ. | 130,40,25,000 ரூ |
| | இறக்குமதியைவிட ஏற்றுமதி எவ்வளவு அதிகம் (1888-ல்) ... | 133,65,00,000 ரூ. | 4,26,75,000 |
| 16 | வெளியில் வட்டிக்கு விடுவது ... | தேசஐச்வர்யத்தில் நூற்றுக்கு 23. | தேச ஐச்வர்யத்தில் 100-க்கு 6·6 |
| | உள்நாட்டிலேயே கடனுக்கு விட்டிருப்பது ... | 67,50,00,000 ரூ. | 206,25,00,000 ரூ |
| | வெளிதேசங்களில் கடனுக்கு விட்டிருப்பது ... | 247,50,00,000 | 20,25,00,000 |
| 17 | ஸர்க்கார்கடன் ... | ஜனத்தொகையில் தலைக்கு 247½ ரூ. வீதம் | ஜனத்தொகையில் தலைக்கு 230 ரூ வீதம் |
| 18 | 1912-ல் கோதுமை, கால்நடை, பன்றி, பால் முதலிய பல விவஸாய விளைவு பொருள்களின் மதிப்பு. ... | 270,22,03,500 ரூ. | 716,25,00,000 ரூ |
| 19 | ஆட்டுரோமநெசவு: 1912-ல் ஏற்றுமதி ... | 56,65,95,000 ரூ. | 25,32,00,000 ரூ |
| 20 | ஜனத்தொகை 1910-ம் ௵ கணக்கு ... | | 6,49,25,000 |
| | 1911 ,, ,, ... | 4,52,16,000 | |



1-வது அம்சமாகிய நிலக்கரி வெட்டி எடுப்பதில் இங்க்லண்டைவிட ஜெர்மனி ரொம்பவும் முன்னேறியிருக்கிறதென்று தெரிகிறது. மூன்றாவது அம்சமாகிய பருத்தித்தொழிலிலும், 19-வது அம்சமாகிய கம்பளித்தொழிலிலும், ஜெர்மனிதேசம் இங்க்லண்டைவிட ரொம்பவும் தாழ்ந்த ஸ்திதியிலிருக்கிறது.

4-வது அம்சமாகிய வ்யாபாரக்கப்பல் விஷயத்தில் சென்ற 30 வர்ஷகாலத்தில் ஜெர்மனியின் அபிவ்ருத்தியானது இங்க்லண்டினுடைய அபிவ்ருத்தியைக் காட்டிலும் இரண்டு பங்குக்கு மேற்பட்டிருக்கிறதென்றாலும், மொத்தத்தில் இங்க்லீஷ் கப்பல்களின் மொத்த நிறையளவு ஜெர்மனியின் கப்பல்கள் நிறையளவைவிட இருபது லக்ஷம் டன் அதிகமாக இருக்கிறது. தவிர முன் காலத்தில் கப்பல்கள் காற்றின் உதவியால் ஓட இப்பொழுது நீராவி விசையால் ஓடுவதோடு வேறு விதங்களிலும் சீர்திருத்தப்பட்டிருக்கின்றன. ஜெர்மனி இதர தேசங்களுக்கு அனுப்பும் ஸாமான்கள் இங்க்லீஷ் கப்பல்களில் அனுப்பப்படுவதால், இங்க்லீஷ் கப்பல்கள் ஜாஸ்தியாக அதிகமாகியிருக்கின்றன. 6-வது அம்சமாகிய ஸூயஸ் கால்வாய் வழியாய் நடக்கும் வ்யாபாரத்தைப்பார்க்கும்பொழுது, வெகு காலத்துக்கு முன்னால் ஏற்பட்டபடியே இங்க்லண்ட் முன்னேற்றம் பெற்றிருக்கிறதென்று தெரியவரும். 7-வது அம்சமாகிய ரயில்பாதைகளைப்பற்றி கவனிக்க வேண்டிய முக்ய விஷயமென்னவென்றால், ஜெர்மனியில் அவைகளைக்கொண்டு ஷேர் ஹோல்டர்கள் லாபமடித்து விடாமல் கவர்ன்மெண்டாரே தங்கள் ஸொந்தத்தில் வைத்துக்கொண்டு பொது ஜனங்களின் நன்மைக்காகவே நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஜெர்மன் ராஜ்யத்தின் மொத்த வரும்படியில், ரயில்வேயிலிருந்து வரும் வரும்படியானது 100-ல் 34 ஆகிறது.

9-வது அம்சம் இங்க்லண்ட் ஜெர்மனி இவைகளுடைய அன்யதேச வ்யாபாரங்களைப் பற்றியது. இதில் சென்ற 25 வர்ஷத்தில் ஜெர்மனியின் அன்யதேச வ்யாபாரம் இங்க்லண்டின் வ்யாபாரத்தைவிட இரண்டு பங்கு அதிகரித்திருக்கிறது. இதற்குக்காரணம் ஜெர்மனி கைத்தொழில்களில் வெகு விரைவாய் முன்னேறியிருப்பதே. ஜெர்மனியின் ஏற்றுமதி இறக்குமதி சரக்குகளை ஆராய்ச்சி செய்த ஒருவர் இன்னம் 10 வர்ஷத்தில், ஜெர்மனி ஒன்றே செய்யக்கூடிய ஸாமான்கள் இங்க்லண்டே செய்யக்கூடிய ஸாமான்களைவிட மொத்த மதிப்பில் ரொம்ப ஆகிவிடுமென்றார். ஆனால் இங்க்லண்ட் செய்யும் வ்யாபாரத்தில் சரக்குகள் வெளிதேசங்களிலிருந்து இங்க்லண்டுக்கு வந்து, அங்கிருந்து வேறு தேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தவ்யாபாரத்தையும் சேர்த்து ஒத்துப்பார்க்கும் பக்ஷத்தில் ஜெர்மனியின் மொத்த வ்யாபாரம் இங்க்லண்டின் மொத்த வ்யாபாரத்தை எட்ட வெகுகாலம் பிடிக்கும். ஜெர்மனி கைத்தொழில்களில் இவ்வளவு விரைவாய் முன்னேறியிருப்பதற்கு ஒரு முக்யகாரணத்தை இங்கே குறிப்பிடுவது உசிதமாகும். இங்க்லீஷ் பாங்கிகளைப் போலல்லாமல் ஜெர்மன் பாங்கிகள், கைத்தொழில்கள் செய்யும் ஜாயிண்ட் ஸ்டாக் அதாவது கூட்டுச்சேர்த்து நடக்கும் கம்பெனிகளுக்குப்பணம் தாராளமாய்க் கடன் கொடுப்பதோடு, அவைகளுக்கு மூலதனம் சேர்ப்பதில் வஸதிகள் செய்து கொடுக்கின்றன.

இங்க்லண்டுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள வ்யாபாரத்தை கவனித்துப் பார்த்தால் வெளிதேசங்களிலிருந்து ஜெர்மனியில் இறக்குமதியாகும் சரக்குகளின் மொத்தத்தில் 100-ல் 18 பாகம் இங்க்லண்டிலிருந்து வருகிறது. ஜெர்மனி இங்க்லண்டுக்கு ஏற்றுமதி செய்வதிலும், அதன் மொத்த வ்யாபாரத்தில் 100-க்கு 17·7

பாகம் இங்க்லண்டுக்குப் போகிறது. ஆகையால் ஜெர்மனிக்கும் இங்க்லண்டுக்கும் நடக்கும் பரஸ்பர வ்யாபாரம் ஒன்றுக்கொன்று குறைவில்லையென்று தோன்றினலும், இரண்டிற்கும் ஒரு பெரிய வித்யாஸமிருக்கிறது. ஜெர்மனிக்கும் இங்க்லண்டல்லாத இதர தேசங்களுக்கும் நடக்கும் வ்யாபாரம், ஒவ்வொரு தேசத்தையும் எடுத்துப்பார்த்தால், இங்க்லண்டோடு ஏற்பட்டுள்ள 100-க்கு 18 வீதம் போவில்லாமல் விகிதம் ரொம்ப குறைவாயிருக்கிறது. இங்க்லண்டின் ஏற்றுமதியோ இதர பிரிட்டிஷ் நாடுகளுக்கு மொத்த வ்யாபாரத்
1 தில் 100-க்கு 36 பாகமாகவும், இறக்குமதி 100-க்கு 20 பாகமாகவுமிருக்கின்றன. ஆகையால் பரஸ்பர வ்யாபாரத்தில் இங்க்லண்ட் ஜெர்
14 மனிக்கு எவ்வளவு அவச்யமோ அவ்வளவு ஜெர்மனி இங்க்லண்டுக்கு அவச்யமல்ல. இங்க்லண்டின் வ்யாபாரம் பெரும்பாகம் ஒரே தேசத்தோடு இல்லாமல் உலகத்திலுள்ள பலதேசங்களோடும் நடக்கிறது. இங்க்லீஷ் ஸாமான்களை ஜெர்மனி வாங்குவது அதிகமென்றாலும் இருதேசங்களுக்குமுள்ள பரஸ்பர வ்யாபாரம் நின்றுபோனால் ஜெர்மனி எவ்வளவு கஷ்டப்படுமோ அவ்வளவு இங்க்லண்ட் கஷ்டப்படாது. இங்க்லீஷ் குடியேற்ற நாடுகளோடு ஜெர்மனி செய்யும் வ்யாபாரம் மொத்தத்தில் ஜாஸ்திதான். ஆகவே அவைகளோடு இங்க்லண்டு செய்யும் வ்யாபாரம் அவைகளோடு ஜெர்மனி செய்யும் ஏற்றுமதி இறக்குமதி வ்யாபாரத்தைப் பொறுத்திருக்கிறது. இங்க்லண்டிலிருந்தும் இங்க்லண்டின் குடியேற்ற நாடுகளிலிருந்தும் ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகள் ஜெர்மனியில் கைத்தொழில்களுக்கு உபயோகப்படக்கூடிய விளைபொருள்களும் பாதி பக்வம் செய்யப்பட்ட பொருள்களுமாகும். ஜெர்மனியிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளோ முக்யமாய் கைத்தொழில் சரக்குகளே. நவீன கைத்தொழில்களுக்கு வேண்டிய மின்ஸார யந்த்ரங்கள், சுரங்கம் வெட்டியெடுப்பதற்கு வேண்டிய யந்த்ரங்கள் முதலியவைகள் இங்க்லண்டுக்கு ஜெர்மனியிலிருந்தே வந்து சேரவேண்டும்.

இங்க்லீஷ்காரர்களே சைனு, ஆஸ்ட்ரேலியா, சிலி, கனடா, இந்தியா முதலிய பல தேசங்களுக்குப்பணம் கடன் கொடுக்கிறார்கள். இந்தப் பணத்தைக் கொண்டுதான் மேற்சொன்ன தேசத்திலுள்ள வ்யாபாரிகள் இங்க்லண்டில் கிடைக்காத ஸாமான்களை ஜெர்மனியிலிருந்து வாங்குகிறார்கள். இது ஜெர்மனிக்கு ஒரு பெரிய அனுகூலந்தான். ஏனென்றால் ஜெர்மானியர்கள் தங்கள் பணத்தை தங்கள் தேசத்திலே போட்டு கைத்தொழில்களை ரொம்பவும் வ்ருத்திசெய்து விட்டார்கள். சாப்பாட்டுக்குவேண்டிய உணவுபொருள்களையும் கைத்தொழில்களுக்கு வேண்டிய பொருள்களையும் இங்க்லீஷ்காரரைச் சேர்ந்த இதரநாடுகளிலிருந்து வரவழைத்துக்கொண்டு அவைகளுக்கு பதிலாக தங்கள் கைத்தொழில் சரக்குகளைக் கொடுத்து உலகமெங்கும் தங்கள் வ்யாபாரத்தை பலப்படுத்தி விட்டார்கள். இதனால் 15 வர்ஷங்களுக்கு முன் போலில்லாமல் ஜெர்மனி வ்யாபாரத்துக்கு ஒரு தேசத்தையே நம்பியிராமல் உலகத்தில் பலதேசங்களோடு பத்து வரவு செய்கிறது. இங்க்லண்டின் மொத்த ஐச்வர்யம் 24,750 கோடி ரூபாயென்றும் ஜெர்மனியின் மொத்த ஐச்வர்யம் 22500 கோடி ரூ. என்றும் மதிக்கப்படுகின்றன. இவைகளைத் தலை வீதமாகப்போடும் பக்ஷத்தில் இங்க்லண்டில் 247½ ரூபா வீதமும், ஜெர்மனியில் 230 ரூபா வீதமுமாகிறது.

சென்ற 16 வர்ஷங்களுக்குள் ஜெர்மனியின் மொத்த வருமபடி 1392½ கோடி ரூபா அதிகப்பட்டிருக்கிறது. அதாவது 650 லக்ஷம் ஜெர்மனியர்களுக்கு தலை வீதமாய்ப்போடும் பக்ஷத்தில், தலைக்கு 307½ ரூபாயிலிருந்து 450 ரூபாயாக அதிகரித்திருக்கிறது. இந்த அதிக வரும்படியில் 3-ல் ஒன்று ஜனோபிவ்ருத்தியினால் ஆனதென்றும், பாக்கி 3-ல் 2-பாகம் சராசரியில் ஒவ்வொரு ஜெர்மானியரும் அதிகமாக ஸம்பாதித்ததென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.



மேற்சொன்ன காலத்தில் இங்க்லண்டின் வரும்படி 1065 கோடி ரூபா அதிகமாயிருக்கிறது. அதாவது 540 ரூபாயிலிருந்து 705 ரூபாயாக ஆயிருக்கிறது. இதில் 7-ல் இரண்டு பாகம் ஜன ஸங்க்யை அதிகரித்ததனால் ஏற்பட்டது என்று தெரிகிறது. இங்க்லண்டையும் அதன் ஆதீனத்துக்குள்பட்ட குடியேற்ற நாடுகளையும் தேசங்களையும் சேர்த்துக் கணக்குப்போட்டால், அவைகளின் மொத்த வரும்படி ஜெர்மனியினுடையவும் அதன் ஆதீனத்துக்குள்பட்ட தேசங்களுடையவும் மொத்த வரும்படியைவிட 5,250 கோடி ரூபாய் அதிகமென்றும், ஜெர்மனியின் ஏகாதிபத்யத்தைவிட இங்க்லீஷ் ஏகாதிபத்யத்தின் ஐச்வர்யம் 15000 கோடி ரூபாய் அதிகமென்றும் தெரிகிறது.

15-வது அம்சமாகிய அன்யதேச வ்யாபாரத்தால் இங்க்லண்டுக்கும் ஜெர்மனிக்கும் அன்ய தேசத்தார்கள் வ்யாபாரக் கணக்குப் பைஸலில் எவ்வளவு கொடுக்கிறார்களென்று தெரியவரும். உலகத்தில் வ்யாபாரத்தில் இங்க்லண்டுக்கே ஜாஸ்தியாக வெளிதேசத்தார்கள் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. 1888-ம் வர்ஷத்தில் எங்கேயோ கீழேகிடந்த ஜெர்மனி இப்பொழுது இங்க்லண்டுக்கு 2-வது ஆகி அன்யதேச வ்யாபாரத்தில் பணம் ஸம்பாதிக்கிறது.

16-வது அம்சமாகிய முதல் போட்டு லாபம் ஸம்பாதிக்கும் விதத்தைப்பார்த்தால், ஜெர்மானியர் ஸ்வதேசத்திலும் இங்க்லீஷ்காரர்கள் வேறு தேசங்களிலும் தங்கள் பணத்தை வட்டிக்கு விடுகிறார்களென்று தெரிகிறது.

ஜெர்மனி காப்புவரி அதாவது இதரதேசங்களிலிருந்து வரும் சரக்குகளின்மேல் வரி போடும் தேசம். இப்படி வரிவிதித்து இதர தொழில்களைவிட விவஸாயத் தொழிலுக்கு அதிக உதவி செய்கிறது. விவஸாயத் தொழிலுக்கு வரி குறைச்சலாய் போட்டும் விவஸாயப் பொருள்களை ரயிலில் கொண்டுபோக சார்ஜ் குறைச்சலாய் செய்தும் இப்படிப் பலவிதமாக விவஸாயத்திற்கு உதவி செய்கிறது. இதனால் விவஸாயத்தில் வரும் வரும்படி அதிகமாகி நிலத்தின் விளைவும் அதிகமாயிருக்கிறது. இப்படி ஸாக்கார் உதவி செய்வதால் ஜெர்மன் விவஸாயிகள் தலைகொழுத்துப்போய் சும்மா இருப்பதில்லை. நிலங்களை எவ்வளவு திறமாய் எத்தனை தடவை ஸாகுபடி செய்யலாமோ அவ்வளவும் செய்வதால் ஜெர்மனி உலகத்திலுள்ள முக்ய விவஸாய தேசங்களில் ஒன்றாயிருக்கிறது. உலகத்தில் உருளைக்கிழங்கின் மொத்தவிளைவு ஜெர்மனியில் தான் அதிகம், கோதுமை, வால்கோதுமை, ரை என்னும் தான்யம் இவைகளின் விளைவில் உலகத்தில் வேறு இரண்டு தேசங்கள் தான் ஜெர்மனிக்கு முந்தியிருக்கின்றன. இவ்வளவு திறமாய் விவஸாயம் செய்தும் ஜெர்மனியிலுள்ள ஜனங்களுக்கு ஆகாரப் பொருள்கள் போதாமல், இதர தேசங்களிலிருந்து அவைகள் ஏராளமாய் இறக்குமதி செய்யப்படுகின்றன. இங்க்லண்டில் விவஸாயத்துக்கு கவர்ன்மெண்டார் செய்வது ஜெர்மனி செய்வதற்கு நேர்விரோதம். இப்படி விவஸாயத்தைப் பராமரிக்காததனால் இங்க்லண்டில் நிலத்தின் விலை குறைந்து போயிருக்கிறது. இருந்த போதிலும் இங்க்லண்டில் ஜனங்களில் பெரும்பாகத்தார் விவஸாயத்தையே முக்யதொழிலாகக் கொண்டாடுகிறார்கள். அந்த தேசத்திற்கு வேண்டிய ஆகாரப் பொருள்கள் பாதிக்கு மேல் அங்கேயே விளைகின்றன.

உலகத்திலுள்ள தேசங்களில் இங்க்லண்டே இதர தேசங்களுக்கு பணம் கொடுத்து உதவும் தேசம். இப்படி இங்க்லண்டு பணம் கொடுத்து உதவுவதனால்தான் இதர தேசங்களில் ஆகாரப் பொருள்களும் கைத் தொழிலுக்கு வேண்டிய பொருள்களும் விளைவிக்கப்படுகின்றன. இன்னம் போகப்போக இங்க்லண்ட், ஜெர்மனி, அமெரிக்க ஐக்யமாகாணங்கள் போன்ற தேசங்களுக்கு ஆகாரப்பொருள்களும் கைத் தொழிலுக்கு வேண்டிய பொருள்களும் ஏராளமாய் வேண்டியிருக்குமாதலால் அவைகள் ரொம்ப க்ராக்கியாயிருக்கும். இப்பொழுது இங்க்லண்டுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடப்பதால் இங்க்லீஷ்காரர்கள் இனிமேல் கொஞ்சகாலத்திற்கு அவர்களுடைய பணத்தை அன்ய தேசத்திற்கு அனுப்பமாட்டார்கள். அதனால் எல்லா தேசங்களிலும் பணவஸதி குறைந்து அவைகள் அன்யதேசங்களிலிருந்து சரக்குகள் வாங்குவதும் குறையும். ஆகையால் இப்பொழுது ஜெர்மனி அன்யதேசங்களோடு செய்யும் வ்யாபாரத்தைக் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமானால், அந்த தேசங்களுக்கு ஜெர்மனி சரக்குகளை வாங்க பணவஸதிகள் செய்து கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் இது வரையில் செய்து வந்தது போல் ஜெர்மானியர் தங்களுடைய தேசத்திலேயே பணத்தை உபயோகப்படுத்தாமல் வெளி தேசங்களுக்கு அனுப்பும்படி வரும். அதனால் ஸ்வதேசத்தில் பணத்தட்டு ஏற்படும் அதனால் அங்குள்ள கைத்தொழில்கள் செழித்தோங்குவதற்கு தடையேற்படும்.

## THE ORGANISATION OF THE NAVY.

## கப்பல் படையின் அமைப்பு.

யுத்தக் கப்பல்கள் எல்லாம் ஒரே மாதிரியல்ல. அவைகளில் பலவிதமானவைகள் இருக்கின்றன. ரொம்ப சக்தியுள்ளனவாயும் பெரியவையாயும் இருக்கிற போர்க்கப்பல்கள் முதல், சின்னவையான டார்பிடோ போட் வரையில் வெவ்வேறு அளவில் எத்தனையோ மாதிரியான யுத்தக் கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்யமானவை பின் வருமாறு:—

1. 'பாட்டில் ஷிப்'என்று சொல்லப்படும் யுத்தக் கப்பல்கள்.
2. 'பாட்டில் க்ரூஸர்' என்று சொல்லப்படும் யுத்தக் க்ரூஸர்கள்.
3. க்ரூஸர்கள்.
4. டிஸ்ட்ராயர்கள்.
5. டார்பிடோ போட்டுகள்.
6. ஸப்மரீன் கப்பல்கள்.

இவைகளைத் தவிர, சுரங்கமிடும் கப்பல்களும், கப்பல்களுக்கு சேதம் நேர்ந்தால், அவைகளை ரிபேர் செய்யவேண்டியதற்குரிய ஸாமான்களை கொண்டு போகும் கப்பல்களும் இருக்கின்றன. ஆனால், மேல்சொன்னவைகளில் முக்யமானவை யுத்தக் கப்பல்களும், யுத்த க்ரூஸர்களுந்தான். மற்ற விதமான கப்பல்களின் உபயோகம். மேற்சொன்ன இரண்டு வகைகளையும் நாசப்படுத்துவதே.

தற்போதைப்போலல்லாமல் பழைய காலத்தில், நீராவியின் சக்தியினால் ஓடாமல் கப்பல்களெல்லாம் காற்றின் விசையினால்தான் ஒரு இடத்திலிருந்து வேறு இடங்களுக்கு ப்ரயாணம் போயின. இப்பொழுதோ, சாஸ்த்ர நிபுணர்களின் புத்தி வல்லமையினால் அநேக கப்பல்கள் நீராவியின் விசையினால் ஓடுகின்றன. ஒவ்வொன்றிலும் மூன்று நான்கு மாடிகள் வைத்த ப்ரமாண்ட கப்பல்களும் கட்டப்பட்டிருக்கின்றன. முன் காலத்து யுத்தக்



கப்பல்களில், ஸாதாரணமாய் ஒரே அளவுள்ள பீரங்கிகளைத்தான் யுத்தத்திற்கு கொண்டுபோவார்கள். ஆனதினாலே, கப்பல்கள் சின்னவையானாலும் பெரியவையானாலும், எல்லாக் கப்பல்களும், எதிரிக் கப்பல்கள் நெருங்கி வந்தால், ஒரே விதமாய்த் தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடும். சத்ருக்களின் கப்பல்களை மிகவும் பலமாய் எதிர்க்கவேண்டுமானால், அதற்கு ஒரே வழிதான் இருந்தது. அதாவது, கப்பலில் அநேகம் பீரங்கிகளையேற்றி அவைகளின் உதவியினால் எதிரிக் கப்பல்களைச் சுடுவதே.

### Dreadnought.

### ட்ரெட்னட்

பிற்பாடு வரவர பீரங்கிகளை அதிகமாக ஏற்றிக்கொண்டு போகாமல் பீரங்கிகளின் வாய்கள் ரொம்ப அகலமாயிருக்கும் பல பீரங்கிகளைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போய்ச் சண்டை செய்தார்கள். நாகரீகமும், புதிது புதிதாய்க் கண்டுபிடித்த நூதன சக்திகளும் நிறைந்த இக்காலத்தில், பலமான போர்க் கப்பல்கள் செய்வது இம்மாதிரியல்ல. கணக்கில்லாமல், ஒரே கப்பலில் அநேகம் பீரங்கிகளை உபயோகப் படுத்துவதைப்பார்க்க, விரைவாய் வெகு சக்தியுடன் சுடக்கூடிய கொஞ்சம் பீரங்கிகளை வைக்க ஆரம்பித்தார்கள். இவ்விதம் முதல் முதலாய்ச் செய்த கப்பலின் பெயர் 'ட்ரெட்னட்'. முதலில் செய்த ட்ரெட்னட்டைக் காட்டிலும் பலமான யுத்தக் கப்பல்கள் எத்தனையோ இப்பொழுது செய்திருக்கிறார்கள். பெரிய யுத்தக் கப்பல்களை ட்ரெட்னட் என்றே சொல்லுகிறார்கள்.

### யுத்தக் கப்பல்களின் அமைப்பு.

போர் கப்பல், போர் க்ரூஸர்—இவைகள் என்னத்திற்கென்றால், நிறைய பீரங்கிகளைச் சுமந்து கடலில் போய் எதிரியின் யுத்தக் கப்பல்களைத் தாக்கவே. ஆகையினால், ஒரு யுத்தக் கப்பல் எவ்வளவுக் கெவ்வளவு பலமான பீரங்கிகளை சுமந்து மிதக்குமோ, அது தான் மிக பலமான கப்பல். யுத்தக் கப்பலை ஸாதாரணமாய் மிதக்கும் பலமான கோட்டையென்றே சொல்லலாம். அந்தக் கப்பலின் பக்கங்களெல்லாம் குண்டினால் நாசமடையாமலிருக்க இரும்புக் கவசம் போடப்பட்டிருக்கும். கவசம் 14 அங்குலம் வரையில் கனமுள்ளதாயிருக்கும். ஒவ்வொரு பீரங்கி இருக்கும் இடமும் ஒரு சிறிய கோட்டைபோலிருக்கும் அந்த பீரங்கிக்கு வேண்டிய வெடி மருந்துகளும், ஸாமான்களும் அதன் கீழே அமைந்த அறைகளில் வைக்கப்பட்டிருக்கும்.

போர்க் கப்பல்கள் யுத்தத்திற்கு போகும் பொழுது பத்தியாயோ அல்லது ஒன்றின் பின் ஒன்றாயோ எப்பொழுதும் கூட்டமாகவே போகும். அந்தக் கூட்டத்தில், ப்ரதானமான கப்பலின் கொடிமரத்தில் அதன் தலைவர் இன்ன அந்தஸ்துள்ளவர் என்பதைக் காட்டும் அடையாளமுள்ள கொடி பறக்கும்.

டார்பிடோ ட்யூப்கள் வந்து கப்பலின் பக்கத்தில் மோதினால், கப்பல் உடைந்து சிதறிப்போகும். இவ்விதமான ட்யூப்கள் கிட்ட வருவதைப் பார்த்தால், தக்ஷணமே அவைகளைப் பிடிக்க ஆற்றுமுடைசலுக்குப் போடும் குதிரை மரங்கள் போன்ற சில கருவிகளை கப்பலின் பக்கத்தில் விட்டுவிடுவார்கள். விட்டவுடன் டார்பிடோ ட்யூப்கள் அவைகளுக்குள் சிக்கிக்கொண்டு வெடித்து கப்பலுக்கு ஒரு சேதமும் நேராது.

## THE TURKISH ARMY.

### துருக்கியின் ஸைன்யம்.

துருக்கியிலுள்ள எல்லா ஆண்களும் ராணுவத்தில் சேரக்கடமைப் பட்டவர்கள். 1908-ம் வர்ஷத்துக்கு முன்னால் கிரிஸ்தவர்களை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளாமலிருந்தார்கள். அந்த வர்ஷத்தில் கிரிஸ்தவர்களையும் ராணுவத்தில் சேர்த்துக் கொள்வதற்காக கவர்ன்மெண்டார் சட்டம் செய்தார்கள்.

வாலிபர்கள் தங்களுடைய 20-வது வயஸில் ராணுவத்தில் சேருகிறார்கள். முதலில் மூன்று வர்ஷம் பட்டாளங்களில் சேர்ந்திருப்பார்கள். அதற்குப் பிறகு 6-வர்ஷம் ஸைன்யத்தைச் சேர்ந்த முதல் 'ரிஸர்வ்' ஸைன்யமாக இருப்பார்கள். பட்டாளத்தில் உள்ள ஸோல்ஜர்களும் அவர்களைச்சேர்ந்த முதல் ரிஸர்வும் சேர்ந்து ஆக்டிவ் ஆர்மி அதாவது யுத்தத்துக்குத் தயாராக இருக்கும் ஸைன்யமென்று சொல்லப்படும். இதற்கு முதல் 'லைன்' ஸைன்யமென்றும் சொல்வதுண்டு. துருக்கியில் இதற்கு 'நிஜாம்' என்றுபெயர்.

ஸோல்ஜர்கள் முதல் 'லைன்' ஸைன்யத்தைச் சேர்ந்து 9-வர்ஷமான பிறகு, 'ரெடிப்' என்ற இரண்டாவது 'லைன்' ஆர்மியென்று சொல்லப்படும் இரண்டாவது ரிஸர்வ் ஸைன்யத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். அதற்குப் பிறகு 'முஸ்டாபிஸ்' என்று சொல்லப்படும் மூன்றாவது 'ரிஸர்வ்' அல்லது மூன்றாவது 'லைன்' ஸைன்யத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். ஆகமொத்தம் 20-வர்ஷம் ராணுவத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

'ரிஸர்வ்' ஸைன்யத்தைச் சேர்ந்தவர்கள் வர்ஷத்துக்கு ஒரு தடவை ஒரு குறிப்பிட்டகாலம் ராணுவப் பயிற்சி யடைவதற்குக் கூப்பிட்டால் போகத் தயாரா யிருக்கவேண்டும்.

யுத்தத்துக்குத் தயாராயிருக்கும் ஸைன்யமாகிய 'நிஜாம்' பிரிவில்தான் காலாள்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை ஆகிய மூன்று வகை ஸைன்யங்கள் இருக்கின்றன. இரண்டாவது மூன்றாவது ரிஸர்வுகளாகிய 'ரெடிபி'லும், 'முஸ்டாபி'ஸிலும் காலாள்படை மாத்ரந்தான் உண்டு. முதல் பிரிவில் யுத்தத்துக்கு வேண்டியிருப்பது போக பாக்கி ஏதாவது குதிரைகளும் பீரங்கிகளும் இருந்தால், அவைகளை இந்த ரிஸர்வுகளுக்கு கொடுப்பார்கள்.

ஏஷியா மைனர் என்னும் பிரிவில் அரபியர்களையும் குர்ட் ஜாதியார்களையும் சேர்த்து குதிரைப்படை ஸைன்யம் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். இந்த குதிரைப்படை ஸைன்யத்தில் 24 ரெஜிமெண்டுகள் இருக்கின்றன.

மேற்சொன்ன ஸைன்யங்களைத்தவிர 'ஸாண்டேர்மரி' என்று சொல்லப்படும் ஒரு ஸைன்யம் இருக்கிறது.

ஸமாதான காலத்தில் துருக்கிக்கு உள்ள ஸைன்யத்தின் மதிப்பு 2,30,000 ஸோல்ஜர்கள். யுத்தகாலத்தில் 5-லக்ஷம் ஸோல்ஜர்கள் கிடைக்கலாமென்று சொல்லப்படுகிறது.

---

ஐரோப்பிய யுத்தம்:—இந்தப் புஸ்தகத்தில் யுத்தத்தின் காரணங்கள், யுத்தத்தில் சேர்ந்துள்ள தேசாதிபதிகள், ஸேனாதிபதிகளின் சரித்ரங்கள், யுத்தம் செய்யும் தேசங்களின் சேனாபலம், கடல்படை பலம், ஆகாயப்படை, யுத்தம் நடக்கும் விதம் முதலிய பல விஷயங்கள் எழுதப்பட்டிருக்கும் 50 படங்களுக்குக் குறையாமல் உள்ளது. ஸுமார் 200 பக்கங்கள் உள்ளது. விலை ரூ. 1. ஜனோபிமானி சந்தாதாரர்களுக்கு அணா 8. டிஸம்பர்மாஸக் கடைசியில் வெளிவரும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, சுங்குராம செட்டித் தெரு, சென்னை.



## INDIAN RAILWAYS.

### இந்துதேசத்திய இருப்புப்பாதைகள்.

1913-14 வர்ஷம் கடைசிவரையில் நமது தேசத்தில் ஏற்கனவே கட்டப்பட்டு ப்ரயாணிகளுக்கு உபயோகப்பட்டு வரும் இருப்புப் பாதைகளுக்காக 440,15,43,000 ரூபாயும், இவ்வர்ஷத்தில் புதிதாய்க் கட்டப்பட்டு வருகிற பாதைகளுக்காக 7,68,53,000 ரூபாயும் மூலத்ரவியம் செலவழிந்திருக்கிறது.

மேற்கண்ட வர்ஷத்தில் மாத்ரம் செலவாயிருப்பது கட்டிடங்கள் முதலியவைக்காக 9,29,00,000ரூபாயும், இஞ்ஜின்கள், வண்டிகள் ஆகிய இவைகளுக்காக 7,31,00,000 ரூபாயும், புதிய பாதைகள் கட்டுவதற்காக 1,86,00,000 ரூபாயும் ஆகமொத்தம் 18,46,00,000 ரூபாய்.

இருப்புப் பாதைகள் மூலமாய் மொத்த வருமானம் ரூ. 63,48,56,000. செலவு போக மீதியிருந்தது ரூ 30,65,52,000. ஆகவே மூலதனத்தின்மேல் 100-க்கு 6.15-வீதம் வட்டியாகிறது.

23,00,00,000 ப்ரயாணிகளும், 5,00,00,000 டன் நிறையுள்ள ஸாமான்களும் இருப்புப் பாதை மார்க்கமாய் சென்றிருக்கின்றன. இவற்றினால் முறையே 22,00,00,000 ரூபாயும், 38,00,00,000 ரூபாயும் வருமானம் ஏற்பட்டன.

இந்த வர்ஷத்தில் இந்தியாவில் 1053·47 மைல் நீளம் இருப்புப்பாதை புதிதாகப் போடப்பட்டது. இதைச் சேர்க்க நம் தேசத்தில் உள்ள இருப்புப்பாதைகளின் நீளம் 34,656 மைல் ஆகிறது. இதைத் தவிர மேற்படி வர்ஷத்தில் 953·59 மைல் நீளம் பாதைபோட கவர்ன்மெண்டார் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். 1904-ம் வர்ஷம் இருந்ததையும் இப்பொழுது இருப்பதையும் கவனித்து பார்த்தால் சென்ற 10-வர்ஷத்தில் இருப்புப்பாதை கட்டுவதில் நம்தேசம் எவ்வளவு வ்ருத்தியடைந்து இருக்கிறதென்பது தெரியவரும், அதன் கணக்குகள் பின் வருமாறு.

| | 1904 மைல் | 1914 மைல் |
|---|---|---|
| 5 அடி 6 அங்குலம் அகலமுள்ள பாதைகள் ... | 14,733 | 17,641 |
| 3 „ $3\frac{3}{8}$ „ „ ... | 11,562 | 14,389 |
| 2 „ 6 „ „ ... | 942 | 2,174 |
| 2 „ „ „ ... | 328 | 452 |
| ஆக ... | 27,565 | 34,656 |
| அதிகம் ... | 7,091 | |

இந்திய இருப்புப்பாதைகளில் மேற்கூறிய ஒரு வர்ஷத்தில் (1913-14) தற்செயலாய் நேர்ந்த ஆபத்துகளால் ரயில்வே வேலையாட்கள் 480 பேரும், ப்ரயாணிகள் 268 பேரும் பாதையில் உத்தரவின்றி நடத்தல், தற்கொலை முதலிய காரணங்களால் 1590 பேரும் இறந்தார்கள். இது தவிர 845 வேலையாட்களும் 815 ப்ரயாணிகளும் 482 இதர ஜனங்களும் காய மடைந்தார்கள். ஆக மொத்தம் 2338 ஜனங்கள் கொலை யுண்டார்கள்; 2,142 பேர் காயமடைந்தார்கள். இது மிகவும் அதிகமாகத்தான் காணப்படுகிறது. ஆயினும் பாதையின் நீளம் 34,656 மைல் என்று காணும் போது, ஆபத்துகளின் ஸங்க்யை மிகக் குறைவென்றுதான் த்ருப்தி யடையவேண்டும்.

சென்னை ராஜதானியிலுள்ள பாதைகளைப் பற்றி நாம் முக்யமாய் கவனிக்கவேண்டியதாகையால், இந்த ராஜதானியில் சென்ற வர்ஷம் புதிதாய் கட்டப்பட்ட சில பாதைகளைப் பற்றியும், மைஸூர் திருவாங்கூர் ராஜ்யங்களில் புதிதாய்க் கட்டி முடிவுக்கு வந்துகொண்டிருக்கிற பாதைகளைப் பற்றியும் சுருக்கமாய்ச் சொல்லுவோம்,

### பாம்பன் ரயில்வே வாராவதி.

இப்பாதை தென்னிந்தியா ரயில்வேயைப் போல 3 - அடி 3⅜ - அங்குல அகலமுள்ளது. இது இந்தியாவையும் ராமேச்வரம் தீவையும் சேர்க்கும் பொருட்டு 1914-ம் வர்ஷம் பிப்ரவரி மாஸம் 24-தேதி கட்டி முடிந்து சென்னை கவர்னர், ஸிலோன் தீவின் கவர்னர், மற்றும் சில பெரிய உத்யோகஸ்தர்கள் இவர்களால் முதல் முதல் திறக்கப்பட்டது. முன் காலத்தில் ஸ்ரீராமர் ஸீதாதேவியைத் தேடிப் போய் ஸமுத்ரத்தைத் தாண்டவேண்டியிருக்கையில் அவருடைய பரமபக்தராகிய ஹநுமான் தமது வானர ஸைன்யத்தின் உதவியால் கட்டுவித்த அணையின் பேரில்தான் இப்பெரிய வாராவதிக்கு அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது. இவ்வாராவதியின் ஒரு விசேஷமென்னவென்றால், இதில் ஒவ்வொன்றும் 40 அடி நீளமுள்ள 145 கண்வாய்களும், இவைகளின் மத்தியில் 225 அடி நீளமுள்ளதும், ஸமுத்ரத்தில் கப்பல்கள் ஓடுவதற்காக ஒரு நூதன யந்த்ரத்தின் சக்தியால் செங்குத்தாய்த் தூக்கி நிறுத்தவும் மறுபடி ரயில்வண்டிகள் போவதற்காக கீழே படுக்கவைக்கவும் கூடியதுமான ஒரு கண்வாயும் சேர்த்து அமைக்கப்பெற்றது. யாத்ரிகர் ஸ்வாமி தர்சனம் செய்வதுடன் மனிதருடைய சக்தியையும் தர்சனம் செய்யலாம். இனி மண்டபம் ஸ்டேஷனில் இறங்காமல் நேரே ரயிலில் ராமேச்வரம் போகலாம்.

### தர்மபுரி ஓஸூர் ரயில்வே.

இது சேலம் ஜில்லாவில் 2 அடி 6 அங்குலம் அகலத்தில் 55 மைல் நீளமுள்ளது. சேலம் ஜில்லாவில் வடமேற்குப் பாகம் வெதுவாய் மழையற்றதாகையால், பஞ்ச நிவாரணத்தின் பொருட்டு இப்பாதை 1913-ம் வருஷம் மே மாஸம் கட்டி முடிக்கப் பட்டது.

### டிஸ்ட்ரிக்ட் போர்டு ரயில்வேக்கள்.

சென்னை ராஜதானியில் அநேக டிஸ்ட்ரிக்ட் போர்ட்டார் தங்கள் ஜில்லாக்களில் இருப்புப் பாதைகள் போடுவிப்பதினால் உண்டாகும் பொதுநன்மைகளையும் வ்ருத்தியையும் இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். 1884-ம் வர்ஷம் முதல்கொண்டு நம் ராஜதானியிலுள்ள டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், நிலவரியில் ரூபாய் ஒன்றுக்கு 3 பைவீதம் ரயில்வே ஸெஸ் வஸூலிக்க உத்தரவுபெற்று, 1914-ம் வர்ஷம் மார்ச்சுமீ 31-ம்தேதி வரையில் 96,31,820 ரூபாய் சேகரித்து வைத்திருக்கின்றன. 1913 வருஷம் ஜனவரிமுதல் 1914 வர்ஷம் மார்ச்சு முடிய, கீழே குறித்திருக்கும் பாதைகளை லோகல்பண்டுகளிலிருந்து போட உத்தரவாகி பாதைகள் போடப்பட்டும் வருகின்றன.

(1) கோயமுத்தூர் ஜில்லா போர்டாரால் போத்தனூரிலிருந்து பொள்ளாச்சிக்கு 3'-3⅜'' அகலத்தில் 25 மைல் நீளமுள்ள ஒருபாதை. இதற்கு 11½ லக்ஷம் ரூபாய் செலவாகும்.

(2) குண்டூர் ஜில்லா போர்டாரால் தெனாலியிலிருந்து ரேபல்லிக்கு 5'-6'' அகலத்தில் 23 மைல் நீலமுள்ள ஒரு பாதை. இதற்கு 14 லக்ஷம் ரூபாய் செலவாகும்.

கோயமுத்தூர் போர்டு சேகரித்திருக்கும் ரயில்வே ஸெஸ் போதாமையால், 5 லக்ஷம் ரூபாய் டிபெஞ்சர் கடன் வாங்கிக்கொள்ளும்படி உத்தரவாகியிருக்கிறது.

மைஸூர் திருவாங்கூர் ராஜ்யங்களிலும் இருப்புப்பாதையின் உபயோகத்தை முன்னிலும் அதிகமாகப் பாராட்டுகிறார்கள். மைஸூர் ராஜ்யத்தில் 170 மைல் நீளம் பாதையும், திருவாங்கூரில் கொல்லம் ஸ்டேஷனிலிருந்து திருவனந்தபுரத்துக்கு ஏறக்குறைய 40 மைல் நீளம் பாதையும் போடப்பட்டு வருகின்றன.

ப்ரயாணிகளுடைய ஸுகத்தைக் கருதி ரயில்வே கம்பெனியார் தங்களாலியன்றமட்டும் வஸதியான வண்டிகள் கட்ட ஏற்பாடு செய்கிறார்கள். முதலாவது இரண்டாவது வகுப்பு வண்டிகளில் ஏற்கனவே யிருக்கும் ஸௌகர்யம் போதாதென்று புதுவகையான வண்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ் வண்டிகளில் பகலில் நால்வர் உட்காரும்படியாகவும் இரவில் அந்நால்வரும் தாராளமாய்ப் படுத்துக் கொள்ளும்படியாகவும் அமைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. இன்டர்மீடியட் வகுப்பு வண்டிகளில் நெடுந்தூரம் ப்ரயாணம் செய்பவருக்கு இரண்டாவது வகுப்பைப்போல்ஸௌக்யங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவஸரமாய்வந்து ஏறும் ஜனங்களுக்கு வழியில்தடங்கல் இல்லாமலிருக்கும்படியும், மூட்டை முடிச்சுகளைப் போட்டுவைக்க அநேக மரப்பரண்களும், கக்கூசுகளும், போதுமான ஜலம் நிரப்பத் தொட்டிகளும் இருக்கும்படியும் நீளமான மூன்றாவது வகுப்பு வண்டிகள் கட்டப்படுகின்றன.

ஏறக்குறைய எல்லா வண்டிகளிலும் கார்டு, ட்ரைவர்களை, ப்ரயாணிகள், விசேஷ காலங்களில் கூப்பிடுவதற்காக "அபாயச் சங்கிலிகள்" கட்டப்பட்டிருக்கின்றன. இச் சங்கிலிகளை யிழுப்பதினால் எந்த இடத்திலும் வண்டியை நிறுத்திவிடவும், எந்த அறையில் இழுக்கப்பட்டதென்று தெரிந்து கொள்ளவும் கூடும்.

இதுவரையில் இந்தியாவில் இருப்புப்பாதை வண்டிகளெல்லாம், அடிப்பாகம் எஃகினாலும் மேற்பாகம் (அநேகமாய் தேக்கு) மரத்தாலும் கட்டப்பட்டு வருகின்றன. மரத்தால் கட்டப்பட்டபாகம் நாளடைவில் ரொம்ப உஷ்ணத்தாலும் சீதளத்தாலும் பிளவடைந்து போவதாலும், தேக்கு மரம் தற்காலம் விலை அதிகரித்துப் போனதாலும் வண்டிகளை முழுவதும் எஃகினாலேயே கட்ட ப்ரயத்தினம் செய்து வருகிறார்கள். இம்மாதிரி வண்டிகள், ஒன்றோடொன்று தற்செயலாய் மோதிக்கொள்ளும் காலங்களில் தீப்பற்றாமலும் சுக்கல் சுக்கலாய் உடைந்து போகாமலும் இருக்கும். ஆயினும் உஷ்ண காலங்களில் இவ்வண்டிகள் நன்றாய் வெயிலில் காயும்போது உள்ளேயிருக்கும் ப்ரயாணிகள் புழுங்கிப்போகாமலிருக்க ஏதாவது தக்க ஏற்பாடு கண்டுபிடிக்கிற வரையில் இவ் வுஷ்ணதேசத்துக்கு இவை உதவாவென்பது நிச்சயம்.

வட இந்தியாவில் கவர்ன்மெண்டாரால் நடத்தப்படும் சில ரயில்வேக்களில் இதுவரையில் முதல், இரண்டாவது வகுப்புகளில் மாத்ரம் மின்ஸார விளக்கு போட்டிருந்தார்கள். இவ் விளக்குகளின் ஸௌகர்யத்தை உத்தேசித்து இன்டர் மீடியேட், மூன்றாவது வகுப்புகளிலும் மின்ஸார விளக்கேற்ற தீர்மானித்திருக்கிறார்கள்.



## RICE TRADE.
## அரிசி வ்யாபாரம்.

உலகத்தில் விளையும் அரிசியில் நூற்றில் 46 பங்கு இந்தியாவில் விளைகிறது. அது 1913-14 வர்ஷத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான சாப்பாட்டு தான்யங்களின் மொத்த மதிப்பில் நூற்றில் 59 பங்காகவும் இந்தியாவின் ஏற்றுமதியின் மொத்த மதிப்பில் நூற்றில் 11 பங்காக்வும் இருந்தது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசியானது அதன் மொத்த விளைவில் நூற்றில் 9-பாகமாகிறது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசியில் பெரும்பான்மை கீழ் பர்மாவில் உண்டாகிறது. அங்கே மழைக்குறைவு என்பதே கிடையாது. ஆதலால் இதர தான்யங்களைப்போல் அரிசி விளைவு அவ்வளவாக சீதோஷ்ண ஸ்திதியைப்

பொருத்ததல்ல. இந்தியாவில் (அதாவது பர்மா நீங்கலாக) பருவகாலத்து மழை ஒரு தடவை தவறி விட்டால் உடனே க்ஷாமம் உண்டாய் விடுகிறது. அப்பொழுது பர்மாவிலிருந்து இதர தேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகிற அரிசி அவ்வளவும் இந்தியாவுக்கு வந்துவிடுகிறது.

1910-11-ம் வர்ஷம் வரைக்கும் ஒரு வர்ஷத்தில் இந்தியாவிலிருந்து சராசரியில் 19,44,387 டன் அரிசி வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாகி வந்தது. 1912-13-ம் வர்ஷம் அரிசி வ்யாபாரம் ரொம்ப ஜாஸ்தியாய் 27,63,321 டன் ஏற்றுமதி செய்யப்பட்டது. சென்ற 1913-14 வர்ஷத்தில் வ்யாபாரம் குறைந்து 24,52,000 டன்தான் ஏற்றுமதியாயிற்று. இதன் விலை 26,64 லக்ஷம்ரூபா. உலக முழுமையிலும், இந்தியாவே அதிகம் அரிசி ஏற்றுமதி செய்யும் தேசம். உலகத்தில் எல்லா பாகங்களுக்கும் குத்தின அரிசி அனுப்பப்படுகிறது. பின்வரும் குறிப்பிலிருந்து ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எவ்வளவெவ்வளவு அரிசி போகிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ஸிலோன் | ... | 4,74 லக்ஷம் ரூ. |
| ஜெர்மனி | ... | 3,14 ,, |
| ஹாலண்ட் | ... | 3,04 ,, |
| ஸ்ட்ரெய்ட் ஸெட்டில்மெண்ட் | | 2,87 ,, |
| ஆஸ்ட்ரியா-ஹங்கேரி | ... | 2,05 ,, |
| இங்க்லண்ட் | ... | 1,69 ,, |
| ஜப்பான் | ... | 1,62 ,, |

மொத்த ஏற்றுமதியில் நூற்றில் 47 பங்கு ஐரோப்பா தேசங்களுக்கும், 42 பாகம் ஆசியா தேசங்களுக்கும்ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. பாக்கி 11 பங்கு கீழ் ஆப்ரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும், மேல் இந்திய தீவுகளிலும் செலவாகிறது. ஏற்றுமதியாகும் அரிசியில் நூற்றில் 52 பாகம் சாப்பாட்டுக்காக உபயோகப்படுகிறது. மற்ற பாகத்தை ஐரோப்பாவில் 'ஸ்டார்ச்' உண்டாக்கவும், சாராயம் இறக்கவும், சாப்பாட்டுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். அந்தர் ஒன்றுக்கு 1911-12-ல் ரூபா 5-14-5 ஆகவும், 1912-13-ல் ரூபா 5-9-7 ஆகவும் இருந்த அரிசி சென்ற 1913-14-ல் ரூ. 5-8-0 ஆக ஆகிவிட்டது. ஆனால் இந்த விலைகள் ஸாதாரண விலைகளைக் காட்டிலும் அதிகந்தான். 1909-10 - முதல் 1913-14 - வரையில் ஐந்து வர்ஷ சராசரி ரூபா 5-5-8 ஆகிறது. 1903-4 முதல் பத்து வர்ஷத்து சராசரி ரூபா 5-0-10 ஆகிறது.

இந்தியாவிலிருந்து பர்மா உள்பட ஏற்றுமதியாகும் அரிசியில் முக்கால் பங்கு ஸாதாரணமாய் பர்மாவிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

பர்மாவை மட்டும் எடுத்துப் பார்த்தாலும் 1913--14ம் வர்ஷத்தில் அங்கிருந்து வெளி தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளில் நூற்றில் 66 பங்கு அரிசியே. அந்த வர்ஷம் ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி மற்றெல்லா வர்ஷங்களைக் காட்டிலும் ஜாஸ்தியானது மாத்ரமல்லாமல், அளவிலும், விலையிலும் முந்தின வர்ஷத்தைவிட அதிகமாயிருந்தது. பர்மா மாகாணத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் அரிசியின் மொத்த அளவில் நூற்றில் 68 பங்கும் ரங்கூனிலிருந்தே ஏற்றுமதி செய்யப்படுகிறது. பெங்காளத்தில் வெள்ளத்தினாலும், பீஹார், ஐக்யமாகாணங்கள் ஆகிய இவ்விடங்களில் மழைக் குறைவினாலும், தென் இந்தியாவிலுண்டான விளைவுக் குறைவினாலும், 1913-14-ம் வர்ஷத்து விளைவு முழுமையும் இந்தியாவின் உபயோகத்துக்கே வேண்டியிருந்ததெனச் சொல்லலாம். 1912-13-ல் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த அரிசியைக் காட்டிலும், 1913-14-ம் வர்ஷம் வந்தவளவு நூற்றில் 234 பங்கு ஜாஸ்தியாயிருக்கிறது.



## MINISTERS OF THE BELLIGERENTS.
## யுத்தம் செய்யும் தேசங்களின் மந்த்ரிகள்.

[இங்க்லண்டின் யுத்த மந்த்ரியாகிய லார்ட் கிச்சனர், ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரியாகிய மா. விவியானி, அன்யதேச வ்யவஹார மந்த்ரியாகிய மா. டெல்காஸே ஆகிய இவர்களின் ஜீவ்ய சரித்ரக் குறிப்புகள் ஸெப்டம்பர் மாஸத்திய 'ஜ்ஞபிமானி'யில் 6-7-ம் பக்கங்களில் வெளிவந்திருக்கின்றன.]

### ENGLAND.
### இங்கலண்ட்.

மிஸ்டர் ஆஸ்க்வித்.

இங்க்லண்டின் ப்ரதம மந்த்ரியின் பெயர் ஹெர்பர்ட் ஹென்ரி ஆஸ்க்வித். இவர் இங்க்லண்டிலுள்ள யார்க்ஷைர் என்னும் ஜில்லாவில் (கௌண்டி) மார்லி யென்னும் ஊரில் 1852-ம் வர்ஷம் பிறந்தார். இவருடைய பால்யத்திலேயே இவர் தகப்பனார் இறந்துபோனார். பால்யத்தில் லண்டனிலுள்ள ஒரு பாடசாலையில் வாசித்துப் பிறகு ஆக்ஸ்பர்ட் ஸர்வகலாசாலை (யூனிவர்ஸிட்டி) யைச்சேர்ந்த ஒரு காலேஜில் வாசித்தார். இவர் 1886-ம் வர்ஷம் பார்லிமெண்டில் ஒரு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1876-ம் வர்ஷம் முதல் சில வர்ஷகாலம் பாரிஸ்டராக இருந்து வந்தார். 1892-ம் வர்ஷம் முதல் 1895-ம் வர்ஷம் வரையில் காபினட் என்று சொல்லப்படும் மந்த்ராலோசனை ஸபையில் உள்நாட்டு மந்த்ரியாக (ஹோம் ஸெக்ரெடரி) இருந்தார். பிறகு மறுபடியும் பாரிஸ்டராக உத்யோகம் பார்த்து வந்தார். 1905-ம் வர்ஷத்தில் மறுபடியும் சான்ஸலர் அப் தி எக்ஸ்ச்சகர் என்னும் பொக்கிஷ மந்த்ரியாக நியமிக்கப்பட்டார். 1908-ம் வர்ஷத்தில் ப்ரதம மந்த்ரியாக நியமிக்கப்பட்டார். ஸமீபத்தில் ப்ரதம மந்த்ரி வேலையோடு யுத்த மந்த்ரி வேலையையும் பார்த்து வந்தார்.

இப்போது நடக்கும் யுத்தம் ப்ரமாதமா[ன] யுத்தமானதால், தாம் ப்ரதம மந்த்ரியாயிருப்[ப]தோடு, யுத்த மந்த்ரியாயிருப்பது தகுதியல்[ல]வென்று ராணுவ விஷயங்களில் ஸமர்த்தரா[ன] லார்ட் கிச்சனரை அந்த யுத்த மந்த்ரி ஸ்தனத்தில் நியமித்து விட்டு, தாம் அந்த வேலை[யி]லிருந்து விலகிக்கொண்டார்.

ஸர் எட்வர்ட் க்ரே.

இங்க்லண்டின் அன்யதேச வ்யவஹா[ர] மந்த்ரியின் பெயர் ஸர் எட்வர்ட் க்ரே. இவ[ர்] 1905-ம் வர்ஷம் முதல் இந்த உத்யோகத்தி[ல்] இருந்து வருகிறார். 1862-ம் வர்ஷத்தி[ல்] ஜனனமானார். 1885-ம் வர்ஷம் முதல் பார்லி[மெண்டில்] மெம்பராக இருந்து வருகிறார். இவருக்கு அன்யதேச வ்யவஹாரங்களி[ல்] விசேஷ ஞானமுண்டு. 1892-ம் வர்ஷ[ம்] முதல் 1895-ம் வர்ஷம் வரையில் உதவி அன்யதேச வ்யவஹார மந்த்ரியாக வேலை பார்த்து வந்தார். இவருடைய ஸாமர்த்யத்தைப்பற்றி முன்பு இங்க்லண்டின் ப்ரதம மந்த்ரியாயிருந்த கீர்த்திபெற்ற ராஜதந்த்ரியான மிஸ்டர் க்ளாட்ஸ்டன் ரொம்பவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். எல்லா ராஜ தந்த்ரிகளும் இவரிடம் கௌரவமும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள். உள்நாட்டு வ்யவஹாரங்களில் ஒருவர்க்கொருவர் எவ்வளவு அபிப்ராய பேதமிருந்தாலும், அன்ய தேச வ்யவஹாரங்களில் மாத்ரம் ஒருவரும் இவருடைய அபிப்ராயத்தை ஆக்ஷேபிப்பது கிடையாதாம். ஸமீபத்தில் பால்கன் யுத்தம் நடந்தபோது, அந்த யுத்தம் ஐரோப்பா முழுமையும் பரவாமலிருக்கும்படி ரொம்பவும் பாடுபட்டு வந்தார். இவர் (க்ரே) இப்போது நடந்து வரும் யுத்தத்தைத் தடுப்ப[த]ற்கு தம்மாலான மட்டும் முயற்சித்தார்.

ஆனால் அவர் சொன்ன ப்ரேரணைகளை ஜெர்மானியர்கள் ஏற்றுக்கொள்ளாததால் இங்கிலண்ட் ஜெர்மனிமேல் படையெடுக்கலாயிற்று. இவர் சென்ற ஆகஸ்ட் மாஸம் பார்லிமெண்டில் இங்கிலண்ட் ஜெர்மனியோடு யுத்தம் செய்வதற்கு காரணங்கள் இன்னவென்பதை விரிவாக எடுத்துச் சொன்னார்.

இவருக்கு படாடோபம் கிடையாது. இவருக்கு டென்னிஸ் ஆடுவதிலும், மீன் பிடிப்பதிலும் ரொம்ப ப்ரியமுண்டு.

மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில்.

இவர் 1911-ம் வர்ஷம் முதல் இங்கிலண்டின் கப்பல் படை மந்த்ரியாக இருந்து வருகிறார். இவர் 1874-ம் வர்ஷம் ஜனனமானார். 1895-ம் வர்ஷத்தில் ராணுவத்தில் சேர்ந்தார். இவர் இந்தியாவிலுள்ள ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் சேர்ந்திருந்து எல்லைநாட்டு யுத்தங்களில் சண்டை செய்திருக்கிறார். 1898-ம் வர்ஷத்தில் ஸுடான் யுத்தத்தில் போர்செய்து க்யாதி யடைந்திருக்கிறார். தென்னாப்ரிக்கா போயர் யுத்தத்தில் ஒரு ஸமாசாரப் பத்ரிகையின் யுத்த நிருபராக இருந்தார். பிறகு 1906-ம் வர்ஷம் முதல் 1908-ம் வர்ஷம் வரையில் குடியேற்ற நாட்டு உதவி ஸெக்ரெடரியாகவும், பிறகு போர்ட் அப் ட்ரேட் என்னும் வ்யாபார ஸபையின் ப்ரெஸிடெண்ட் என்று சொல்லப்படும் வ்யாபார மந்த்ரியாகவும், உள்நாட்டு மந்த்ரியாகவும் இருந்துவந்தார். இவர் ப்ரஸங்கம் செய்வதில் ரொம்ப ஸாமர்த்யசாலி. ராஜாங்க நிர்வாகத்தில் ரொம்ப கெட்டிக்காரர். என்ன செலவானாலும் சரி, ப்ரிட்டிஷ் கப்பல்படை மற்ற தேசத்துக் கப்பல்படைகளை விட உயர்ந்ததா யிருக்கவேண்டுமென்பது இவருடைய கொள்கை.

மிஸ்டர் லாயிட் ஜார்ஜ்.

இவர் இங்கிலண்டின் பொக்கிஷ மந்த்ரி. 1908-ம் வர்ஷம் முதல் இவர் இந்த உத்யோகத்திலிருந்து வருகிறார். 1863-ம் வர்ஷத்தில் பிறந்தார். இவர் சில காலம் வரையில் போர்ட் அப் ட்ரேட் என்னும் கவர்ன்மெண்ட் வ்யாபார ஸபையின் தலைவராய் வ்யாபார மந்த்ரியாக இருந்தார். இவர் பொக்கிஷ மந்த்ரியாக வந்தபிறகு தொழில் சாலைகளிலுள்ள வேலையாட்களுக்கும் மற்ற தொழிலாளிகளுக்கும் உதவியாக ஒரு இன்ஷுரென்ஸ் சட்டம் ஏற்படுத்தினார். அதன்படி வேலையாட்களும், தொழில் நடத்துவோர்களும், கவர்ன்மெண்டாரும் ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தி, அந்த தொகையை ஒரு பண்டாக ஏற்படுத்தி அதிலிருந்து வேலையாட்கள் வ்யாதியால் வேலைசெய்து ஸம்பாதிக்க முடியாமல் போனாலும், வேலையே கிடைக்காமல் போனாலும், அவர்களுக்குப் பணங்கொடுத்து உதவுவார்கள். மிஸ்டர்லாயிட் ஜார்ஜ் ரொம்ப ஸாமர்த்யமாய்ப் பேசக்கூடியவர்.

## GERMANY.

### ஜெர்மனி.

டாக்டர் வான் பெட்மன்-ஹால்வெக்.

ஜெர்மனியின் ப்ரதம மந்த்ரியின் பெயர் டாக்டர் வான் பெட்மன்-ஹால்வெக். இவர் 1856-ம் வர்ஷம் ஜனனமானார். இவர் கெய்ஸருக்கு ரொம்ப ஆப்த ஸ்நேகிதராம். பால்யத்தில் இவரும் கெய்ஸரும் பான் யூனிவர்ஸிட்டியில் சேர்ந்து வாசித்தவர்களாம். இவர் 1885-ம் வர்ஷத்தில் ராஜாங்க உத்யோகத்தில் அமர்ந்து படிப்படியாய் உயர்ந்த உத்யோகங்களை யடைந்து 1907-ம் வர்ஷம் ஜெர்மனியின் உள்நாட்டு மந்த்ரியாக நியமிக்கப்பட்டார். பிறகு 1909-ம் வர்ஷத்தில் "இம்பீரியல் சான்ஸலர்' என்று சொல்லப்படும் ப்ரதம மந்த்ரியாக ஆனார். இவர் அதிகப்பிடிவாதம் உள்ளவரல்ல. கெய்ஸர் சொல்லுகிறபடி ஆடுகிறவர். ஆனால் இந்த யுத்தத்தில் இவருடைய



பெயர் முன்வந்துவிட்டது. ஐரோப்பிய வல்லரசுகளின் உடன்படிக்கையின்படி பெல்ஜியம் தனியரசாக இருக்கவேண்டுமென்று ஏற்பட்ட நிபந்தனைக்கு உள்பட்டே ஜெர்மனி நடக்குமா என்று இங்கிலீஷார் கேட்டதற்கு அது முடியாதென்றும், எல்லா அரசுகளும் சேர்ந்து ஒப்புக்கொண்டு கையெழுத்துப் போட்ட "துளியூண்டுக் கடுதாசி"க்காக இங்கிலண்ட் ஜெர்மனியோடு சண்டை போடுவது ந்யாயமாகாதென்றும் சொன்னதால் இவர் பெயர் ரொம்ப கெட்டுப் போய்விட்டது.

ஹெர் வான் யாகோ.

இவர் 1913-ம் வர்ஷமுதல் ஜெர்மனியின் அன்யதேச வ்யவஹார மந்த்ரியாக இருந்து வருகிறார். இவருக்கு வயது 50-க்கு மேலாகிறது. இன்னும் ப்ரும்மசாரியாகவே இருக்கிறார். இவர் சிலகாலம் இட்டலியில் ஜெர்மன் ராஜாங்கத்தின் ப்ரதிநிதியாக இருந்து வந்தார். இவர் கெய்ஸருக்கு ரொம்ப வேண்டியவராம்.

அட்மிரல் ஹெர் வான் டிர்பிட்ஸ்.

ஜெர்மன் ராஜ்யத்தின் கப்பல் படைக்கு கெய்ஸர் சக்ரவர்த்தியே தலைவராக இருக்கிறார். ஜெர்மன் கப்பல்படை மந்த்ரியின் பெயர் அட்மிரல் ஹெர் வான் டிர்பிட்ஸ். இவருக்கு இப்போது 64-வயது ஆகிறது. ஜெர்மனிக்குள்ள கப்பல்படை வலிமையும், மேன்மையும் இவராலேயே ஏற்பட்டனவென்று சொல்லப்படுகிறது.

இவர் 1865-ம் வர்ஷம் கப்பல்படையில் சேர்ந்துகொண்டார். 1894-ம் வர்ஷத்தில் நடந்த ஒரு போலிச் சண்டையில் இவர் காட்டிய ஸாமர்த்யத்தால் இவர் பேரில் கெய்ஸருக்கு விசேஷ ப்ரீதி ஏற்பட்டது. பிறகு 1898-ம் வர்ஷத்தில் கப்பல் படை மந்த்ரியாக நியமிக்கப்பட்டார். இவர் கப்பல்படையில் அனேக சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்.

## RUSSIA.

### ரஷ்யா

இவான் கோர்மிகின்.

ரஷ்யாவின் ப்ரதம மந்த்ரியின் பெயர் இவான் கோர்மிகின். இவருக்குப் பொருளாதார சாஸ்த்ரத்திலும் ஜனஸமூகத்தைப் பற்றிய சாஸ்த்ரத்திலும் விசேஷ ஞானம் உண்டு. ரஷ்யாவின் பொருளாதார நிலைமையைச் சீர்திருத்த ஏற்பாடுகள் செய்ய எண்ணங் கொண்டிருக்கிறாராம்.

மா. ஸாஸனாப். *

ரஷ்யாவின் அன்யதேச வ்யவஹார மந்த்ரியின் பெயர் மாஸ்யே ஸாஸனாப். 1910-ம் வர்ஷ முதல் இவர் இந்த உத்யோகத்திலிருந்து வருகிறார். ரஷ்யா, இங்கிலண்ட், ப்ரான்ஸ் ஆகிய இந்த மூன்று தேசங்களுக்குள் ஸ்நேகிதம் ஏற்பட்டிருப்பதற்கு இவர்தான் முக்ய காரணமாம். இவர் சில காலத்துக்கு முன்னால் இங்கிலண்டிலுள்ள ரஷ்யாவின் ப்ரதிநிதிக்கு ஸெக்ரடரியாக இருந்தார். இன்னும் பாரிஸிலும், ரோமிலும் இருக்கும் ரஷ்ய ப்ரதிநிதி ஆபீஸிலும் வேலை பார்த்து வந்திருக்கிறார். அன்ய தேச வ்யவஹாரங்களைத் திறமாய் நடத்துவதில் இவரைப்போல் ஸாமர்த்யசாலி ஐரோப்பாவில் ஒருவருமில்லையாம். ரஷ்ய சக்ரவர்த்தி இவரிடத்தில் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறாராம். மா. ஸாஸனாப் ப்ரஸங்கம் செய்வதில் ரொம்ப கெட்டிக்காரர்.

## AUSTRIA HUNGARY.

### ஆஸ்ட்ரியா-ஹங்கேரி.

ஆஸ்ட்ரியா-ஹங்கேரி என்னும் ராஜ்யம் ஆஸ்ட்ரியா என்னும் நாடும் ஹங்கேரி யென்னும் நாடும் சேர்ந்தது. இரண்டு தேசங்களும்

* மா. என்பதை மாஸ்யே என்று வாசிக்கவும். இங்க்லீஷில் மிஸ்டர் என்று சொல்வதை ப்ரெஞ்ச் முதலிய பாஷைகளில் மாஸ்யே என்று சொல்வது வழக்கம்.]

உள் நாட்டு வ்யவஹாரங்களில் ஒன்றுக்கொன்று கீழ்ப்பட்டவையா யிராமல் ஸ்வாதீனமா யிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி கவர்ன்மெண்டுகள் உண்டு. ஒவ்வொரு கவர்ன்மெண்டுக்கும் ப்ரத்யேகமான ப்ரதம மந்த்ரி, உள்நாட்டு மந்த்ரி, வ்யாபார மந்த்ரி, வரவுசெலவு மந்த்ரி முதலிய மந்த்ரிகள் உண்டு. ஆனால் அன்யதேச வ்யவஹாரங்கள், தேச பாதுகாப்பு, இரண்டு தேசங்களுக்கும் பொதுவான வரவு செலவு ஆகிய இவைகளுக்கு இரண்டு தேசங்களுக்கும் பொதுவாய் சில மந்த்ரிகள் இருக்கிறார்கள். இவர்களில் அன்யதேச வ்யவஹாரங்களுக்கு மந்த்ரியாயிருப்பவர் கௌண்ட் லெப்போல்ட். பெர்க்டோல்ட் என்பவர். இவருக்கு இப்போது 50-வயஸாகிறது. இவர் சில காலத்துக்கு முன்னால் ஆஸ்ட்ரியாவின் ப்ரதிநிதியாக பெட்ரோக்ராட் பட்டணத்தில் இருந்து வந்தார். ஆஸ்ட்ரியா ராஜ்யத்தில் ஸ்லாவ் என்னும் ஜாதி ஜனங்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலார் ஸெர்வியாவுடன் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று எண்ணியிருப்பதால் இவர்களுக்கு ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டில் ப்ரியம் கிடையாது. கௌண்ட் பெர்க்டோல்ட் அவர்களை த்ருப்திப்படுத்தி கவர்ன்மெண்டினிடம் விச்வாஸமாயிருக்கும்படி செய்ய எண்ணியிருந்தாராம். காலஞ்சென்ற ஆஸ்ட்ரியா இளவரசராகிய ஆர்ச்-ட்யூக் ப்ரான்ஸ் பெர்டினண்டும் இவ்விதமே எண்ணியிருந்தாராம்.

கௌண்ட் பெர்க்டோல்ட் இளவரசரின் கொலை ஸம்பந்தமாக ஸெர்வியாவைக் கண்டிக்க ப்ரயத்தனப் பட்டதனால்தான் ப்ரமாதமான யுத்தம் ஏற்படலாயிற்று.

ஆஸ்ட்ரியாவின் ப்ரதம மந்த்ரியின் பெயர் கௌண்ட் ஸ்டர்க். இவர் ஒரு ஜெர்மன் வம்சத்தைச் சேர்ந்தவர். காலஞ்சென்ற ஆஸ்ட்ரிய இளவரசருக்கு ரொம்ப அந்தரங்க ஸ்னேகிதர்.

ஹங்கேரியின் ப்ரதம மந்த்ரியின் பெயர் கௌண்ட் டிஸ்ஸா. இவர் எக்கார்யத்தையும் பிறருடைய உதவியில்லாமல் தாமாகவே யோசித்துச் செய்யக்கூடியவர்.

### JAPAN.
### ஜப்பான்.

கௌண்ட் ஒகுமா.

ஜப்பானின் ப்ரதம மந்த்ரியின் பெயர் கௌண்ட் ஒகுமா. இவர் ப்ரதம மந்த்ரியாயிருப்பதோடு உள் நாட்டு மந்த்ரியாயுமிருக்கிறார். இவர் 1838-ம் வர்ஷம் பிறந்தார். இவர் பால்யத்தில் ஜப்பான் பாஷையோடு, சீன பாஷை, இங்க்லீஷ் பாஷை, டட்ச் பாஷை ஆகிய இவைகளில் பயின்று தேர்ச்சியடைந்தார். இவர் விசேஷமாய் இங்க்லீஷ் உபாத்யாயர்களிடம் தான் கல்வி பயின்றார். இங்க்லீஷ்க்காரர்களுடைய ஸகவாஸத்தால் இவருக்கு இங்க்லீஷ் அரசாட்சி ஏற்பாட்டில் விசேஷ ப்ரியம் ஏற்பட்டிருக்கிறது. இவர் சிலகாலம் ஜப்பானில் அன்யதேச வ்யவஹார மந்த்ரியாகவும், பொக்கிஷ மந்த்ரியாகவும், வரவு செலவு மந்த்ரியாகவும் இருந்துவந்தார். இவர் ரொம்ப திறமைவாய்ந்த ராஜ தந்த்ரியென்று சொல்லப்படுகிறது.

### SERVIA.
### ஸெர்வியா.

மாஸ்யே, பாஸிட்ச்.

இவர் ஸெர்வியாவின் ப்ரதம மந்த்ரி. இவருக்கு இப்போது 65-வயஸாகிறது. இவர் இப்போதுள்ள ராஜ வம்சத்துக்கு முன்னிருந்த ராஜ வம்சத்து அரசர் காலத்திலும் ப்ரதம மந்த்ரியாக இருந்து வந்திருக்கிறார்.

ஸெர்வியா எல்லா விஷயத்திலும், அதாவது ராஜாங்கம், வ்யாபாரம், பொருளாதாரம் ஆகிய இவைகளில் ஸ்வாதீனமாக இருக்கவேண்டுமென்றும், அந்த விஷயங்களில் ரொம்ப முன்னேற்றமடைய வேண்டுமென்றும் இவர் எண்ணியிருக்கிறார்.



# Departmental Notes.
# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.
## வித்யாவிஷயம்.

### Education for Workmen.

தொழிலாளிகளுக்குக் கல்வி :—இந்தியாவில் சிறுவர்கள் ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளுவதற்கு முன்னால், அவர்கள் இஷ்டப்பட்டாலும் ஸரி, இஷ்டப்படாவிட்டாலும் ஸரி, அவர்களுக்கு கட்டாயப்படுத்தி எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று அநேக வித்யாபிமானிகள் எண்ணி வருகிறார்கள். ஐரோப்பாவிலுள்ள கோவில்களும், இந்தியாவிலுள்ள கோவில்களும் எழுதப்படிக்கத் தெரியாத வேலையாட்களால் தான் கட்டப்பட்டன வென்பதையும், அவர்கள் இப்போது உயிருடனிருந்தால், எழுதப்படிக்கத் தெரிந்த வேலையாட்களைவிட அதிக சம்பளம் பெறக்கூடியவர்களாயிருப்பார்களென்பதையும் அந்த வித்யாபிமானிகள் மறந்துவிடுகிறார்கள். அவர்கள் ப்ரைமரிக்கல்வியைத் தாறுமாறாகச் செய்ததோடு நில்லாமல் டெக்னிகல் கல்வியோடு சாஸ்த்ரக் கல்வியையும் சேர்த்து, டெக்னிகல் கல்வியென்பதன் அர்த்தத்தையே மாற்றிவிட்டார்கள். தொழிலாளிகளின் சிறுவர்களுக்கும் படிப்பதில் ரொம்ப கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு டெக்னிகல் விஷயங்கள் அதாவது தொழில் ஸம்பந்தமான விஷயங்களைக் கற்பதற்குத்தான் பாடசாலைக் காலம் போதுமானதா யிருக்கிறது. அதோடு மற்ற படிப்புகளையும் கலப்பதால் அவர்கள் படிப்புக்கு ரொம்ப குந்தகம் ஏற்படுகிறது. இந்தக் காலத்தில் வேலையாட்கள் ஏராளமாக வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு கொடுத்த வேலையை நன்றாய் செய்யத் தெரிந்தால் முதலாளிகள் நல்ல சம்பளமும் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளிகளுக்கு எல்லாவிஷயத்திலும் கொஞ்சம் தெரிந்திருந்து எந்தத்தொழிலிலும் பூர்த்தியான அறிவு இல்லாமலிருந்தால் அவர்கள் வேலைக்கு ரொம்ப லாயக்காக இருப்பதற்கில்லை.

ஆகையால் தொழிலாளிகளுக்கு தொழில் ஸம்பந்தமான விஷயங்களையே ரொம்பவும் அதிகமாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். சாஸ்த்ர விஷயங்களையும் மற்ற பாடங்களையும் அதிகமாகக் கற்றுக்கொடுக்க முயலுவது கூடாது என்று 'இந்தியன் டெக்ஸ்டைல் ஜர்னல்' என்னும் பத்ரிகை எழுதுகிறது.

### Technical Education in Madras.

சென்னையில் டெக்னிகல் கல்வி :—சென்னையில் டெக்னிகல் கல்வியை அபிவ்ருத்தி செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் மதுரையிலுள்ள டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்னும் டெக்னிகல் பள்ளிக்கூடத்தின் அமைப்பை மாற்றும்படிக்கு ஏற்கனவே உத்தரவு செய்திருக்கிறார்கள், காக்கினாடாவில் ஒரு மெக்கானிகல் இஞ்ஜினியரிங் ஸ்கூல் ஸ்தாபிப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். சென்னையின் வடபாகத்தில் ஒரு டெக்னிகல் ஸ்கூல் ஸ்தாபிப்பதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஸ்கூல்கள் ஸ்தாபிப்பதற்கும், அவைகள் வ்ருத்தியாவதற்கும் காலமாகுமாதலால், அதற்குமுன் தற்கால ஏற்பாடாக இந்தியாவின் மற்ற பாகங்களில் உள்ள நல்ல டெக்னிகல் ஸ்கூல்களில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்களுக்கு ஸௌகர்யங்கள் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். தற்காலம் வர்ஷந்தோறும் ஆறு சென்னைவாஸிகளுக்கு மாஸம் 30 ரூபாய் வீதம் ஸ்காலர் ஷிப்புகள் கொடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப்பு வாங்கிக் கொள்ளுகிறவர்கள் பம்பாயிலுள்ள விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்து மெக்கானிகல் இஞ்ஜினியரிங், எலெக்ட்ரிகல் இஞ்ஜினியரிங், துணிகள் நெசவு, டெக்னிகல் ரஸாயன சாஸ்த்ரம் ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ளலாம். மாணவர்களுக்கு நான்கு வர்ஷகாலம் ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்துவருவார்கள்.

### Grants For Elementary Education.

எலிமெண்டரி கல்விக்கு க்ராண்டுகள்.—புதிதாக எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபிக்கவும் ஏற்கனவேயுள்ள எலிமெண்டரி ஸ்கூல்களில் உள்ள உபாத்யாயர்களை அதிகப்படுத்தவும் லோகல் போர்டுகளுக்கும் முனிஸிபாலிடிகளுக்கும் 1,47,922 ரூபாய் க்ராண்டு கொடுக்கும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள். இந்தத் தொகையில் 69,442 ரூபாய் புது ஸ்கூல்கள் ஸ்தாபிக்கவும், 78, 840 ரூபாய் ஏற்கனவேயுள்ள ஸ்கூல்களில் உபாத்யாயர்களை அதிகப்படுத்தவும் கொடுக்கப்படும்.

## TAMIL LITERATURE.

### தமிழ்க் கல்வி.

**Some Lullabies.**

சில தாலாட்டுப் பாட்டுகள்.—'விவேக சிந்தாமணி' யின் அக்டோபர் மாஸத்து ஸஞ்சிகையில் சில நேர்த்தியான தாலாட்டுப் பாட்டுகளும் அவைகளுக்கு தெளிவான அர்த்தமும் வெளியாயிருக்கின்றன. அவைகளில் தாலாட்டுகளை மாத்ரம் கீழே எழுதுகிறோம்.

1. ஆறிரண்டும் காவேரி, அதன் நடுவே ஸ்ரீரங்கம், சுவாமி இரண்டு கையினாலே, தந்த என்தன் திரவியமோ.

2. பச்சை இலுப்பைவெட்டி, பால்வடியத் தொட்டிலிட்டு, தொட்டிலிட்ட அம்மானே, நீ பட்டினியாப் போகாதே.

3. ஆராரோ, ஆராரோ, என்னரசே, ஆராரோ, சீராரும் எங்கள் குலதீபமே நீ, ஆராரோ.

4. கங்கைபுனை ஸ்ரீ நாதன், கருணையினால் என்வயிற்றில், மங்களமாய் வந்துதித்த, மணியே நீ கண்வளராய்.

5. பாலே பழரஸமே, பசுநெய்யுந் தெள்ளமுதே, மேலேவிண் ணோர்மகிழும், வித்தே நீ கண்வளராய்.

6. வேதமனு நூற்கலைகள், விளங்கிவரும் இந்நாட்டில், கீதமொழி கேட்கவந்த, பைங்கிளியே துயில் கொள்வாய்.

7. வண்ணமணித் தொட்டிலிலே, வாய்த்த செம்பொற் கட்டிலிலே, கண்ணே என்கண்மணியே, கற்பகமே நித்திரைசெய்.

8. தண்டைமணி சத்தமிட, தாய்மார்கள் முத்தமிட, தொண்டையுடன் வாய்மூடி, துரைமகனே கண்ணமர்வாய்.

9. அத்தைமனம் நோகாமல், உன் அண்ணன்மனம் வேகாமல், சித்தமதில் தயைகொண்டு, சிகாமணியே கண்ணுறங்காய்.

10. தாய்மார்கள் வைதாரோ, தாதியர் என் செய்தாரோ, வாய்திறந்து சொல்லியெங்கள், மன்னவனே கண் அடைவாய்.

11. அத்தை அடித்தாளோ, அக்காள்தான் அடித்தாளோ, முத்தான வாய்திறந்து, மொழிந்துறங்காய் கண்மணியே.

12. தங்கத்தால் யானைகளும், தந்தத்தால் சேனைகளும், அந்தமாக நான்கொடுப்பேன், புத்திரனே கண்வளராய்.

13. பொற்சரிகை வஸ்திரமும், போற்றுபல சித்திரமும், நற்சரிகை அங்கியுமே, நான்தருவேன் நித்திரைசெய்.

14. பஞ்சவர்ணக் கிளிகொஞ்ச, பாடுங்குயில் ஓசைமிஞ்ச, எஞ்சலில்லாப் பஞ்சணைமேல், என்மகனே கண்வளராய்.

15. தந்தையொரு பக்கம்நிற்க, தாயுமொரு பக்கம் நிற்கச், சிந்தை மகிழ் விற்பார்க்கும், தெருட்கடலே நித்திரைசெய்.

16. சரியாய் தவம்தானம் தருமங்கள் செய்தவங்கள், கலிதீர்க்க வந்துதித்த, காதலனே கண்வளராய்.

17. இளையோருடன்தெருவில், இன்பமாய்த் தேருருட்டி, விளையாடி வந்துநின்ற, வேலவனே நீ துயிலாய்.

18. மதுரையிலே குதிரை கட்டி, மாந்தோப்பு விடுதிவிட்டு, சடுதியிலே வந்திறங்கும், என் செல்வன்மகன் பால்குடமே யுறங்குறங்கு.

19. அடித்தாரைச் சொல்லியழு, ஆக்கினைகள் பண்ணிவைப்போம், தொட்டாரைச் சொல்லியழு, தண்டனைகள் பண்ணிவைப்போம்.

**Meyyaram.**

மெய்யறம்.—இந்த நூல் 'மனம்போல வாழ்வு', 'அகமேபுறம்' என்னும் புஸ்தகங்களை எழுதிய மிஸ்டர் வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியதாகும். இது திருவள்ளுவநாயனார் செய்த திருக்குறளின் வழிநூலாக அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களைப் பற்றிக் கூறும் நூலாகும். இது மாணவ இயல், இல்வாழ்வியல், அரசியல், அந்தணவியல், மெய்யியல் என்று 5-இயல்களாக(பிரிவுகளாகப்) பிரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 125-அதிகாரங்கள் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 ஸூத்ரங்கள் இருக்கின்றன. இதில் வரும் கடின பதங்களுக்கு கடைசியில் உரை சேர்க்கப்பட்டிருக்கிறது. இது ஸுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் மிஸ்டர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, 40, பரிபூரண விநாயகர் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை யென்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

### சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

**Substances Harder than Diamond.**

வைரத்தைவிட கெட்டியான பொருள்கள்.—டிடானியம் என்ற ஒரு உலோகம் சிலகாலமாக ரொம்ப உஷ்ணமுள்ள மின்ஸார அடுப்பின் உதவியால் செய்யப்பட்டு வருகிறது. டிடானியம் வெள்ளீயத்தைப்போல இருக்கும். இது சுத்தமாக வேறொரு பொருளோடும் ஸம்பந்தப் படாமலிருந்தால் இரும்பைவிட கெட்டியாக இருக்கும்.

இதோடு ஸிலிகன் என்னும் பொருளைக்கலந்து ஸிலிஸைட் அப் டிடானியம் என்று ஒருபொருள் செய்யப்படுகிறது. இன்னும் போரன் என்னும் பொருளை டிடானியம் என்னும் உலோகத்தோடு கலந்தால் 'போரைட் அப்டிடானியம்' என்னும் பொருள் உண்டாகிறது. இந்த இரண்டு பொருள்களும் அதாவது 'ஸிலிஸைட் அட்டிடானியம்', 'போரைட் அப் டிடானியம்' ஆகிய இவைகள் வைரத்தைவிட கெட்டியாக இருக்கின்றனவாம்.

**Cooking with Newspaper Sheets.**

பத்ரிகைகளின் தாள்களைக்கொண்டு சமைத்தல்.—மாம்ஸத்துண்டுகளில் இரண்டொன்றையாவது காய்கறிகளில் கொஞ்சமாவது இரண்டு மூன்று நிமிஷங்களில் பத்ரிகைகளின் தாள்களைக் எரியவிட்டு பக்வம் செய்வதற்கேற்றதான சமையல் பாத்ரமொன்றை ஒரு ப்ரெஞ்ச் கடைக்காரர் புதிதாய் தயாரித்திருக்கிறார். இந்தப் பாத்ரத்தில் இரண்டு டாகங்கள் உண்டு. ஒவ்வொன்றும் உள்ளே சற்று பள்ளமான, உலோகத்தால்செய்த தட்டமாகும். ஒன்றொடொன்று காற்று உள்ளே போகாதபடி நன்றாய்ப் பொருந்தக்கூடியது. இரண்டிற்கும் பிடியுண்டு. இவைகளில் ஒன்றில் பக்வம் செய்யவேண்டிய ஆகார வஸ்துக்களைப்போட்டு அதில்கொஞ்சம் நெய் அல்லது எண்ணெய் ஊற்றி, மற்ற தட்டால்மூடி அடுப்பின்மேல் வைக்கவேண்டும். பிறகு கடுதாசிகளை நீளமாகக் கிழித்து நீளவாக்கில் சுருட்டி மூன்று சுருள்கள் தயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு சுருளைப் பற்றவைத்து, தட்டத்தின் அடியில் காட்டி தட்டத்தின் அடிப்பக்கம் முழுவதும் நெருப்புப் படும்படி வைத்துக்கொண்டிருக்கவேண்டும். முதல்சுருள் தீர்ந்தவுடன் இரண்டாவது சுருளையும், பிறகு மூன்றாவது சுருளையும் பற்றவைத்துக் கொண்டிருந்தால், மூன்றாவது சுருள்தீர்ந்து போவதற்குள் உள்ளிருக்கும் பொருள்கள் நன்றாய் வெந்து பக்வமாயிருக்கும். ஆகார வஸ்துக்கள் இவ்வளவு சீக்ரம்வெந்து பக்வமானதற்குக்காரண மென்னவென்றால், இரண்டு தட்டங்களும் ஒன்றோடொன்று நன்றாய் இறுகப்பிடித்துக்கொண்டு உள்ளிருக்கும் உஷ்ணத்தை வெளியில் விடுவதில்லை, மாம்ஸம் அல்லது காய்கறிகளில் உள்ள ஈரம் ஆவியாகிறது. உஷ்ணமும் ஆவியும்சேர்ந்து அவைகளை சீக்ரத்தில் வேகவைக்கின்றன. இந்தப் பாத்ரம் வெளியூர்களில் ப்ரயாணம் செய்பவர்களுக்கு மிகவும் ப்ரயோஜனமுள்ளதென்று சொல்லப்படுகிறது.

**House Fly's Range of Flight.**

வீட்டு ஈ பறக்கும் தூரம்.—ஸமீபத்தில் இங்கலண்டில் ஒரு டாக்டர் வீட்டு ஈ எவ்வளவு தூரம் பறக்கும் என்பதைப்பற்றி சில பரீக்ஷைகள் செய்து பார்த்தார். பற்பல சீதோஷ்ண ஸ்திதியிலும், இந்தப் பரீக்ஷைகள் செய்யப்பட்டன. மொத்தம் ஸுமார் 25,000 ஈக்களை பறக்கவிட்டுப் பார்த்தார். அடையாளம் தெரிவதற்காக அந்த ஈக்களின்மேல் மஞ்சள் சீமைசுண்ணாம்புப் பொடியாவது, சிவப்புச் சுண்ணாம்புச் பொடியாவது தூவியிருந்தார். ஈக்கள் பறந்துபோவதை கவனிப்பதற்காக 50 இடங்கள் ஏற்படுத்தியிருந்தார். அந்த இடங்களில் ஈக்களைப் பிடிக்க உதவும் ப்ளை பேபர் என்னும் பசைக் கடிதத்தில் அவைகளைப் பிடித்துப்பார்த்தார். இந்தப் பரீக்ஷைகளால் ஈக்கள் காற்றுக்கு எதிர்புறமாகவாவது, அதற்கு சற்று சாய்வாகவாவது பறக்கின்றனவென்று தெரியவந்தது. ஈக்கள் ரொம்ப ஜாஸ்தியாகப் பறந்த தூரம் 760 கஜமாகும். திறந்த வெளியில்தான் இவைகள் இவ்வளவுதூரம் போயின. ரொம்ப ஜனநெருக்கமான பட்டணங்களில் ஈக்கள் 30 கஜத்துக்குமேல் போவதில்லையென்று மேல்சொன்ன டாக்டர் எண்ணுகிறார். ஆகாசம் ரொம்ப ப்ரகாசமாயிருக்கும் வேளையில்தான் ஈக்கள் ரொம்ப தூரம் பறந்து போகிறன்றவாம்,

## SANITATION AND MEDICINE.

### ஸுகாதாரமும் வைத்யமும்.

**Constipation.**

மலச்சிக்கல்.—மலச்சிக்கல் அநேகமாய் பழக்க வழக்கங்களால் ஏற்படும் வ்யாதியாகும். ஆகார நியமத்தை சரிவர கவனித்து வந்து, காலம் தவறாமல் மலோபாதையைக் கழித்து வந்தால் சீக்ரம் இது தானாக நின்று விடும். மலச்சிக்கலுக்கு ரொம்ப ஸாதாரணமான காரணம் சாப்பிடும் உணவின் அளவிலோ, அல்லது தன்மையிலோ ஏதோ குறையிருந்திருப்பதே. இது அநேகமாய் உயர்தர வகுப்பார்களிடத்தில் தான் அதிகமாய் ஏற்படுகிறதென்று சொல்லலாம். நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களில் சில தேகத்தை போஷிக்க உபயோகப்படா விட்டாலும், குடல்கள் சரிவரத் தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டி யிருக்கின்றன. இந்த உணவுப்பொருள்களை நாம் சாப்பிட வேண்டியது அவச்யமாகும். இப்படிப்பட்ட உணவுப் பொருள்களை சாப்பிடாமலிருந்தால் மலத்தின் அளவு குறைந்து போய் மலச்சிக்கல் ஏற்படுகிறது. மேலும் அநேகர் கார்போஹைட்ரேட் என்னும் மாஸத்துப் பொருள் அதாவது அரிசி போன்ற பொருள்களை வேண்டிய அளவு சாப்பிடாமல் அவைகளுக்குப் பதிலாக ப்ரொடீன் என்று சொல்லப்படும் சதை வளர்க்கும் ஸத்துக்கள் அதாவது பருப்பு, மாம்ஸம் முதலியவைகளை அதிகமாகச் சாப்பிடுவதால் தேகத்தில் வேண்டிய அளவு த்ராவகங்கள் உண்டாகாமல் அதனாலும் மலச்சிக்கல் ஏற்படுவதுண்டு.

இன்னொரு முக்ய காரணமும் இருக்கிறது. சோம்பலினாலும் கார்ய அவஸரத்தாலும் மலோபாதை கழிக்க வேண்டிய நேரம் தப்பி கால ஒழுங்கில்லாமல் இஷ்டப்படி செய்து வருவதாலும் மலச்சிக்கல் ஏற்படுவது ஸகஜம்.

**Dimensions of the Body.**

தேகத்தின் அளவுகள்.—ஸகல லக்ஷணங்களும் சரியாய் அமைந்தவர்களின் அங்கங்களினுடைய அளவுகளும், நிறையும் இன்னின்ன வென்பதையும், ஸாதாரண ஜனங்களின் ஸராஸரி அளவுகளும் நிறையும் இன்னின்ன வென்பதையும் கீழே கொடுக்கிறோம். இதைப் பார்க்கும் எவரும் தாம் ஸராஸரி அளவுக்கு எவ்வளவு குறைவாய் அல்லது அதிகமாயிருக்கிறார் என்பதையும், எவ்வளவு நிறையும் அளவும் இருக்க வேண்டுமோ அவைகளுக்கு எவ்வளவு குறைவாய் அல்லது அதிகமாய் இருக்கிறார் என்பதையும் அறிந்து ஏற்றத் தாழ்வை சரிப்படுத்திக்கொள்ள முயலலாம்.

| — | ஸராஸரி அளவுகளும் நிறையும். | எல்லா லக்ஷணங்களும் பொருந்தியிருக்க வேண்டுமானால் இருக்கவேண்டியவை. |
|---|---|---|
| உயரம் ... | 5 அடி 7·6 அங்குலம் | 5 அடி 8·38 அங்குலம் |
| நிறை ... | 141·39 ராத்தல் | 186·29 ராத்தல் |
| மார்பு (சுற்றளவு) ... | 34·81 அங்குலம் | 40·86 அங்குலம் |
| கழுத்து ... | 14 ,, | 15·50 ,, |
| இடுப்பு ... | 30 ,, | 31·69 ,, |
| கையில் முழங்கைக்கு மேல்பட்ட பாகம் ... | 13·50 ,, | 15·55 ,, |
| முன்கை ... | 10·50 ,, | 13·46 ,, |
| தொடை ... | 20·50 ,, | 24·05 ,, |
| முழங்கால் ... | 13·79 ,, | 16·0[illegible] ,, |

**Pansupari.**

தாம்பூலம்.—தாம்பூலம் போட்டுக்கொள்ளும்போது காலையில் பாக்கு அதிகமாகவும், பகலில் சுண்ணாம்பு அதிகமாகவும், ஸாயந்திரம் வெற்றிலை அதிகமாகவும் போட்டுவந்தால், மலச்சிக்கல் நீங்கி, பசி தீபனமுண்டாகி சிலேஷ்ம வ்யாதியைப் போக்கி ஸுகத்தையுண்டுபண்ணும். தாம்பூலம் உண்ணும்போது முதலில் ஊறுகிற நீரை உமிழ்ந்து விடவேண்டும். ஏனென்றால், முதலில் ஊறுகிற நீரில் விஷமிருப்பதால் அதை வெளிப்படுத்திவிட்டு பிறகு ஊறுகிற நீரை உட்கொண்டால் தேவாம்ருதத்துக் கொப்பாகுமென்று சொல்லப்படுகிறது.

தாம்பூலம் போடும்போது வெற்றிலையின் அடியையும், நுனியையும் நரம்பையும், சுண்ணாம்புவைத்த வெற்றிலையையும், சொத்தைப் பாக்கையும் நீக்கிவிட வேண்டும்.—விச்வகர்ம குலோபகாரி.



## LAW.

### சட்டம்.

**Right of Step-mother to Inherit.**

மாற்றாந்தாய் வாரிஸாவது.—மிதாக்ஷரச் சட்டத்தின்படி ஒரு மாற்றாந்தாய் தமது சக்களத்தியின் மகனுடைய ஸொத்துக்கு வாரிஸாக முடியாது. மகனுடைய ஸொத்தானது மாற்றாந்தாய்க்குச் சேராமல் ஸர்க்காருக்குச் சேருகிறது.

**Alienation by Hindu Widow.**

ஹிந்து விதவை ஸொத்தை பராதீனம் செய்தல்.—ஒரு ஹிந்து விதவை ஸொத்தை பராதீனம் செய்யும் பக்ஷத்தில், பிற்பாடு அனந்தரவாரிஸு ஏற்பட்டு அந்த பராதீனத்தை ரத்து செய்தாலொழிய, ஸொத்தை வாங்கினவன் அனந்தரவாரிஸல்லாதவனிடத்திலிருந்து விற்பனையான ஸொத்தைப்பெற பாத்யமுண்டு. அப்படி அன்யனிடத்திலிருந்து ஸொத்தைப் பெறுவதற்கு விதவை அவச்யமாய்த்தான் அதை விற்றாளென்று ரூபிக்கவேண்டியது அனாவச்யம்.

**Mortgage Decree.**

அடைமான டிக்ரீ.—அடைமான பத்ரத்தின்மேல் வ்யாஜ்யம் செய்து டிக்ரீ பெற்றவன் முதலில் அடைமான ஸொத்தை விற்பனைக்குக் கொண்டுவரவேண்டும். பிறகுதான் கடன்காரனுடைய இதர ஸொத்துக்களின்மேல் ப்ரவேசிக்கலாம். ஆனால், அடைமான ஸொத்தை விற்பனைசெய்ய அடைமானம் வைத்தவனுக்கு பாத்யமில்லை யென்று நன்றாய்த் தெரியும் பக்ஷத்தில், அடைமான ஸொத்தை விற்பனைக்குக் கொண்டுவருவது அனாவச்யம்.

**Gift of Moveable Property.**

ஜங்கமஸொத்து தானம் செய்தல்.—ஜங்கம ஸொத்து தானம் செய்வதில், பார்ட்டிகள் பெற்றோர் குழந்தைகள் என்ற பந்துத்வத்திலிருந்தாலுங்கூட, தான ஸொத்தை தானம் வாங்குபவரிடம் சேர்ப்பிக்காவிட்டால் தானம் கொடுத்ததாகாது.

ஒரு கிழவி மேஜரான தனது அபிமான புத்ரிக்கு ஒரு ஜங்கமஸொத்தை தானம் செய்தாள். ஆனால் அந்த ஸொத்து பெண்ணிடம் சேர்ப்பிக்கப்படவில்லை. இரண்டு பேருக்குமுள்ள பந்துத்வத்தில் ஸொத்தைப் பெண்ணிடம் சேர்ப்பிக்கவேண்டியது அவச்யமில்லை யென்று சொல்லக்கூடாது. ஸொத்தைப் பெண்ணிடம் சேர்ப்பிக்காததால் தானம் கொடுத்ததாக மாட்டாது.

**Gifts to Females.**

ஸ்த்ரீகளுக்கு தானம் கொடுத்தல்.—ஒரு ஹிந்து விதவை தனது புருஷனுடைய ஸொத்தில் ஒரு சிறு பாகத்தை, குடும்பத்திலிருந்து பிரிந்து போகாத தனது புருஷனுடைய ஸஹோதரரின் பெண் ஒருத்திக்கும், அதே ஸஹோதரரின் பெண்வயிற்றுப் பேரனுக்கும் தானமாகக் கொடுத்தாள். இரண்டு பெண்களுக்குக்கல்யாணம் நடந்து வெகுகாலமான பிறகு விதவை ஷை ஸொத்தை தானம் செய்தாள் என்றால் அந்த தானங்கள் சட்டப்படி செல்லமாட்டா.

**Panchayat Courts in Travancore.**

திருவாங்கூரில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள்.—திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒவ்வொரு க்ராமத்திலும் 5 பஞ்சாயத்தார்களை நியமித்து அவர்கள் கோர்ட்டாக இருந்து 30-ரூபாய்வரை மதிப்புள்ள எல்லா வ்யாஜ்யங்களையும் விசாரித்து தீர்ப்பு செய்யவேண்டுமென்றும், அதற்குமேல் 200-ரூபாய்வரை மதிப்புள்ள வ்யாஜ்யங்களை இரண்டு தரப்பு கக்ஷிக்காரர்களும் ஸம்மதித்தால் ஷை பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு விசாரித்து முடிவுசெய்ய அதிகாரம் உண்டென்றும், இரண்டு வர்ஷத்துக் கொருதரம் ஷை பஞ்சாயத்து புதிதாய் நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்களென்று 'பூர்ண சந்திரோதயம்' எழுதுகிறது.

**Dissolution of Partnership.**

பாகஸ்தர்கள் பிரிவினையாவது.—ஒன்றாக இருந்துவந்த பாகஸ்தர்கள் பிரிவினை செய்துகொண்டால் அதற்குப்பிறகு பாகஸ்தர்களில் ஒருவர் மற்றவர்களுடைய நேரிடையான அனுமதியில்லாமல் மற்றவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய கடன்களை ஒப்புக்கொள்ளக்கூடாது.

**Women & Pujari Service.**

ஸ்த்ரீகளும் பூஜாரி வேலைகளும்.—ஸ்த்ரீகள் கோவிலில் பூஜைசெய்யும் உத்யோகத்தை அடைந்து, அந்த வேலையை வேறொருவரைக்கொண்டு செய்யச்சொல்லலாம். இந்தவழக்கம் சட்டத்துக்கு விரோதமானதல்ல.—1 லா-வீக்லி 900.

## PERSONAL NOTES.
## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Maharaja Of Idar.

இடார் மஹாராஜா.—இடார் என்னும் ஸமஸ்தானம் பம்பாய் ராஜதானியில் பரோடா ராஜ்யத்துக்கு வடக்கேயுள்ளது. இதன் விஸ்தீரணம் 1669 சதுரமைலாகும். ஜோட்பூர் ஸமஸ்தானத்து ரீஜண்டாகிய மேஜர் ஜெனரல் ஸர் ப்ரதாப ஸிங்கினுடைய புத்ரர் இதன் மகாராஜாவாக இருக்கிறார். இவர் யுத்தத்துக்குப் போயிருக்கிறார். இவரோடு இவருடைய ஸர்தார்களில் ஒன்பது பேரும், ஸமஸ்தானத்து இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகளில் ஒரு பாகமும் போகிறார்கள்.

### Lieutenant Hardinge.

லெப்டினண்ட் ஹார்டிஞ்ஜ்.—நமது வைஸ்ராயின் புத்ரர்களில் ஒருவராகிய ஆனரபிள் லெப்டினண்ட் இ. ஸி. ஹார்டிஞ்ஜ் என்பவர் யுத்தத்தில் காயமடைந்து ஆஸ்பத்ரியில் இருக்கிறார் என்று ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் தெரிவித்தோம். அவர் ரொம்ப தைர்யமாயும் ஸாமர்த்யமாயும் கஷ்டத்தைக்கவனிக்காமலும், எதிரிகளினுடைய மெஷீன் பீரங்கிகளின் குண்டுகள் பக்கத்தில் விழுவதை லக்ஷ்யம் செய்யாமலும், எதிரிகளின் நிலைமையையும் அவர்களிருக்குமிடத்தையும் தெரிந்து வருவதற்காக தொடர்ச்சியாய் மூன்றுநாள் வெளியில் போயிருந்தாராம். அப்போதுதான் அவருக்குக் காயமேற்பட்டது. அவர் ரொம்ப ஸாமர்த்யமாக வேலை பார்த்ததற்காக நமது அரசர் அவருக்கு "டிஸ்டிங்க்விஷ்ட் ஸெர்விஸ் ஆர்டர்" என்னும் பட்டம் கொடுத்திருக்கிறார். அந்தப் பட்டத்தின் தாத்பர்யம் ச்லாகிக்கத்தக்க வேலை செய்ததற்காக பட்டம் என்பது.

### Lord Roberts.

லார்ட் ராபர்ட்ஸ்.—லார்ட் ராபர்ட்ஸ் மிகவும் ப்ரஸித்திபெற்ற வீரர்களில் ஒருவராவார். இவர் 1832-வர்ஷத்தில் வட இந்தியாவிலுள்ள கான்பூரில் பிறந்தார். 18-வது வயஸில் பெங்கால் ஆர்ட்டிலரியென்னும் பீரங்கிப்படையில் சேர்ந்தார், 1857-ம் வர்ஷம் நடந்த சிபாய் கலகத்திலும் 1879-80-ம் வர்ஷத்தில் ஆப்கன் யுத்தத்திலும் யுத்தம் செய்திருக்கிறார்.

1881-ம் வர்ஷம்முதல் 1885-ம் வர்ஷம் வரையில் மதராஸ் ஸைன்யத்தின் தலைவராகவும், 1885-ம் வர்ஷம் முதல் 1893-ம் வர்ஷம் வரையில் இந்திய ஸைன்யங்களின் தலைவராகவும் இருந்தார். போயர் யுத்தத்தில் இவர் ஸேனாதிபதியாக இருந்து யுத்தம் செய்தார். இவர் 1901-ம் வர்ஷமுதல் 1904-ம் வர்ஷம் முடிய ப்ரிட்டிஷ் ஸைன்யத்தின் தலைவராக இருந்தார். இவர் இந்த யுத்தத்துக்கு ஸைன்யங்கள் சேகரிப்பதை மேற்பார்வை பார்த்து வந்தார்.

எல்லா ப்ரஜைகளுக்கும் சட்டாயப்படுத்தி ராணுவப் பயிற்சி செய்விக்க வேண்டுமென்பது இவரது கொள்கை. இவர் ஸமீபத்தில் தாம் ஸேனாதிபதியாயிருந்த இந்திய ஸைன்யங்கள் யுத்தம் செய்வதை நேரில் பார்க்கவேண்டுமென்று ப்ரான்ஸுக்குப் போயிருக்கையில், ஒரு குன்றின் மேலிருந்து மேலே குளிருக்கு அடக்கமான சட்டையைப் போட்டுக்கொள்ளாமல் பனியில் நின்று கொண்டு யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் ந்யூமோனியா என்னும் ஈரல்நோய் கண்டு நவம்பர்௴ 15௳ இறந்துபோனார்.

### Minister's Sons at the Front.

போர்முனையில் மந்த்ரிகளின் புத்ரர்கள்.—இந்த யுத்தத்தில் அநேக பார்லிமெண்ட் மெம்பர்களும் ப்ரமுகர்களும் போர்முனைக்குப் போயிருக்கிறார்கள். மந்த்ரிகளின் புத்ரர்களும் சண்டைசெய்யப் போயிருக்கிறார்கள். இங்க்லண்டின் ப்ரதம மந்த்ரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித்தினுடைய புத்ரர் ஆண்ட்வெர்ப் பட்டணம் முற்றுகை போடப்பட்டபோது யுத்தம் செய்து கொண்டிருந்தாராம். வரவு செலவு மந்த்ரியாகிய மிஸ்டர் லாய்ட் ஜார்ஜின் புத்ரர்களில் இருவர் யுத்தத்துக்குப் போயிருக்கிறார்கள். இவர்களிருவரும் ஸைன்யத்தில் லெப்டினண்ட் என்னும் பதவியிலிருந்து வருகிறார்கள்.

### German Royal Families.

ஜெர்மன் ராஜ வம்சங்கள்.—ஜெர்மனியிலுள்ள ராஜ வம்சங்களைச்சேர்ந்த எட்டு ராஜ குமாரர்கள் யுத்தத்துக்குப்போய் சண்டைசெய்து இறந்து விட்டார்களாம். இவர்களில் ஒருவர் ஜெர்மன் சக்ரவர்த்திக்கு நெருங்கின பந்துவாம். இந்த 8-பேர்களில் 6-பேர் 22-வயஸுக்குக் கீழ்ப்பட்டவர்களாம்.



## SOCIETY AND RELIGION.
## ஜனஸமூகமும் மதமும்.

### Institution for Defectives.

ஊனமுள்ளவர்களுக்கு பள்ளிக்கூடம்.—மைஸூரில் ஊமை செவிடு, குருடு முதலிய ஊனமுள்ளவர்களுக்காக 1901-ம் வர்ஷத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டு நாளது வரையில் அது நன்றாய் நடந்து வருகிறது. அது ஆரம்பமான வர்ஷத்தில் முதலில் ஒரு ஊமையும் இரண்டு குருடர்களும் சேர்ந்தார்கள். இப்போது அந்தப் பள்ளிக்கூடத்தில் 16 ஊமைச் செவிடும், 25 குருடர்களும் சேர்ந்து வாசித்து வருகிறார்கள்.

இதுவரையில் 35 செவிடர்கள், 48 குருடர்கள், 83-வேறு ஊனமுள்ளவர்கள் ஆகிய இத்தனை பேர்கள் அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்து தொழில்களில் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இவர்களில்அநேகர் ஸங்கீத போதகர்களாகவும், கைத்தொழில் ஸ்கூல்களில் போதகர்களாகவும் இருக்கிறார்கள்.

அந்தப் பள்ளிக்கூடத்தில் பிரம்பு வேலை, நெசவு, ஸங்கீதம், வ்யாபாரம், தையல் வேலை, சித்ரவேலை, ஆகிய இவைகள் கற்பித்து வருகிறார்கள். இந்த ஸ்கூல் ரொம்ப செட்டாக நடந்து வருகிறதாம். இதற்கு மாஸச் செலவு ரூ. 500 தானாம். இதில் 110 ரூபாய் மைஸூர் கவர்ன்மெண்டார் கொடுத்து உதவி வருகிறார்கள்.

### Lepers and the War.

குஷ்ட ரோகிகளும் யுத்தமும்.—இந்தியாவில் குஷ்டரோகிகளை ஸம்ரக்ஷிப்பதற்காக ஒரு மிஷன் (ஸங்கம்) இருக்கிறது. இது இங்க்லீஷ்காரர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு செலவுக்கு வேண்டிய பணத்தை இங்க்லீஷ் முதலிய மேல் நாட்டு ஜனங்களே கொடுத்து உதவி வருகிறார்கள். இப்போது ஐரோப்பாவில் யுத்தம் நடந்து வருவதால் மேல் நாட்டார் அதிக பணம் கொடுத்து உதவ முடியாதென்று சொல்லப்படுகிறது. இந்த மிஷனுக்கு 40 இடங்களில் கிளைகள் இருக்கின்றன. 3300 குஷ்டரோகிகள் இந்த மிஷனின் ஸம்ரக்ஷணையிலிருந்து வருகிறார்கள். இவர்களுக்குச் செலவுக்காக தினம் 1000 ரூபாய் வேண்டியிருக்கிறது. அதாவது வர்ஷத்தில் $3\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய்க்குமேல் இவர்களுக்காக செலவழிக்கப்பட்டு வருகிறது.

இந்த யுத்தத்தில் ப்ரிட்டிஷ் ஜனங்கள் கொடுக்கும் பணம் குறையக்கூடுமாகையால் இந்தியர்கள் முன்பு தென்னாப்ரிக்கா இந்தியர்களின் கஷ்ட நிவர்த்திக்காகப் பணம் கொடுத்து உதவினதுபோல தங்கள் தேசத்திலேயே இருக்கும் இந்த அநாதைகளுக்காக பொருளுதவி செய்ய முன் வரவேண்டியது அவச்யமாகும்.

இந்த ஸங்கத்துக்கு ராஜா ஸர் ஹர்நாம்ஸிங் என்பவர் வைஸ் ப்ரெஸிடெண்டாக இருக்கிறார்.

### Pandas of Brindaban.

ப்ருந்தாவனத்தில் பண்டாக்கள்.—நமது நாட்டில் புரோகிதம் செய்துவைக்கும் ப்ராம்மணர்களைப்போல ப்ருந்தாவனத்தில் பண்டாக்கள் என்று பெயருள்ள சில வைதீகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய தொழிலைச் செய்வதற்கு அந்த ஊர் முனிஸிபாலிடியிலிருந்து அநுமதி பெறவேண்டுமென்றும், வர்ஷந்தோறும் தலைக்கு 5-ரூபாய் வரி செலுத்த வேண்டுமென்றும், முனிஸிபாலிடியின் இந்த உத்தரவை மீறி நடப்பவர்களுக்கு 50-ரூபாய் அபராதம் போடப்படுமென்றும் முனிஸிபாலிடியார் உத்தரவு செய்திருக்கிறார்களாம். பண்டாக்கள் ப்ருந்தாவனத்திற்கு வரும் யாத்ரிகளிடம் கோவிலை தர்சிப்பதற்காக பணம் வாங்குவதுண்டாம்.

### Religious Instruction & Jail Convicts.

ஜெயில் கைதிகளுக்கு மதபோதனை.—திருவாங்கூர் கவர்ன்மெண்டார் திருவனந்தபுரம் ப்ரும்மஞான ஸங்கத்து மெம்பர்களில் சிலருக்கு திருவனந்தபுரம் ஸெண்ட்ரல் ஜெயிலிலுள்ள கைதிகளுக்கு மத விஷயங்களையும் ஸன்மார்க்க விஷயங்களையும் கற்பித்துவர அநுமதி கொடுத்திருக்கிறார்கள்.

### Vedanta.

வேதாந்தம்.—வேதாந்தத்தைப்பற்றி பேசுகையில் அது சிறந்த தத்வம் என்றும், அது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் மதமென்றும் பெரிய வித்வானாகிய ப்ரொபஸர் மாக்ஸ்மூல்லர் என்பவர் எழுதியிருக்கிறார். இனிமேல் பொதுஜனங்கள் நல்ல நடத்தையுள்ளவர்களாயிருப்பதற்கு அது தக்க ஸாதனமாயிருக்குமென்று டாக்டர் டாயிஸின் என்னும் ஒரு ஜெர்மன் வித்வான் சொல்லியிருக்கிறார்.

## HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### A New Use For Sugar.

சர்க்கரைக்கு ஒரு புது உபயோகம்.—ஸாதாரணமாய் ஸோப்புகளைத்தான் கைகளை அலம்ப உபயோகிப்பது வழக்கம். இவைகள் க்ருமிகளைக் கொல்லக் கூடியவையென்று சொல்லப்படுகிறது. ஆனால் புண்களைக் கழுவுவதற்கும், வைத்யர்கள் கையைக் கழுவுவதற்கும் மணல் மணலாயுள்ள சர்க்கரையை உபயோகிக்கலாமென்றும், சவர்க்காரங்கள் இதைவிட ச்லாக்யமானவை யல்லவென்றும், இந்த சர்க்கரையைக்கொண்டு கைகளைக் கழுவினால் சவர்க்காரத்தைப் போல் கைகளுக்கு ஒருவிதச் வறட்சியைஉண்டுபண்ணாமல் கைகளை ம்ருதுவாகவும் சுத்தமாகவும் ஆக்கிவிடுகிறதென்றும் ஒரு டாக்டர் தெரிவிக்கிறதாக 'வைத்திய கலாநிதி' எழுதுகிறது. பெரிய மனிதர்கள் வீட்டில் நெய் சேர்ந்த பதார்த்தங்கள் சாப்பாட்டில் அதிகமாகச் சேர்ந்திருந்தால் கையில் நெய்ப்பசை யதிகமாயிருக்குமாகையால், கையலம்புவதற்கு முன் சர்க்கரையைப்போட்டுத் தேய்த்து அலம்புவது வழக்கமென்பது நமது நேயர்களுக்கு தெரிந்திருக்கும்.

### Ink Stains in Carpets.

ஜமக்காளங்களில் இங்கிக் கறைகள்.—ஜமக்காளங்களில் இங்கிக் கறைகள் விழுந்தால் பின் வருமாறு செய்யவும். ஒரு எலுமிச்சம் பழத்தை இரண்டாக நறுக்கி, அந்தத் துண்டுகளைக் கொண்டு கறைகளின்மேல் தேய்க்க வேண்டும். தேய்த்த பிறகு ஒரு ம்ருதுவான துணியால் துடைக்கவும். அப்பொழுதும் கறை விடாவிட்டால் எலுமிச்சம் பழத்தை உப்பில் தோய்த்து கறைகளின்மேல் தேய்க்கவும்.

### To Remove Paint.

வர்ணத்தைப் போக்க.—மரஸாமான்களில் வர்ணம் பூசியிருந்து அதை எடுத்துவிட வேண்டுமானால் பின் வருமாறு செய்யவேண்டும்.

ஒரு ராத்தல் காஸ்டிக் பொடாஷ் என்னும் மருந்தை 40 ஔன்ஸ் அஸிடோன் (Acetone) என்னும் மருந்தில் கரைத்து, அதோடு 20 ஔன்ஸ் மிதிலேடட் ஸ்பிரிட்டும், 20 ஔன்ஸ் ஸ்பிரிட்ஸ் அப் பெட்ரோலியமும், 10 ஔன்ஸ் விளக்கெண்ணெயும் சேர்த்துக் கலக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த மருந்தால் மரத்தில் பூசி யிருக்கும் வர்ணத்தில் தடவி பழைய கந்தையால் துடைத்து வர்ணத்தைப் போக்கவேண்டும். வர்ணம் ரொம்ப கெட்டியாக இருந்தால், முதலில் மழுங்கலான கத்தியால் வர்ணத்தைச் சீவி யெடுத்துப் பிறகு மருந்தைத் தடவி சுத்தம் செய்துவிடலாம்.

### Uses of Vinegar.

காடியின் உபயோகங்கள்.—புகையடைந்த மரவேலைகளை சுத்தம் செய்ய ப்ளானல் துணியைக் காடியில் நனைத்துத் தேய்க்கவேண்டும்; ஒரு தடவை உபயோகித்த ப்ளானல் துணியை மறுபடியும் உபயோகிக்கவேண்டியிருந்தால் அதை ஜலத்தில் நனைத்து அலசி யெடுக்கவேண்டும். மரஸாமான்கள், கண்ணாடிகள், ஜன்னல்கள் ஆகிய இவைகளில் கையழுக்குப்பட்டாலும், அல்லது வேறு அழுக்குகள் படிந்திருந்தாலும் கொஞ்சம் காடியை ஊற்றித் துடைத்து எடுத்துவிடலாம். ட்ரௌஸர்ஸ் (கால் சட்டை)களின் அடிமடிப்புகள் பூட்ஸுகளில் போட்டிருக்கும் 'பாலிஷ்' களில் பட்டு நிறங்கெட்டுப் போவதுண்டு. இதையும் காடியால் சுத்தம் செய்துவிடலாம்.

### Broken Bottles.

உடைந்த ஸீஸாக்கள்.—உடைந்த ஸீஸாக்கள், அல்லது கண்ணாடி ஜாடிகளின் மேற்பாகத்தை மற்ற பாகத்துக்கு சேதம் ஏற்படாமல் அறுத்து எடுக்க வேண்டுமானால், எந்த பாகத்தோடு அறுக்கவேண்டுமோ அந்த பாகத்தைச்சுற்றி டர்ப்பண்டைன் எண்ணெயில் நனைத்த ஒரு நூலைச் சுற்றிவைக்கவும். நூலின் மட்டத்துக்கு ஸீஸாவில் ஜலம் ஊற்றவும். பிறகு நூலில் நெருப்புப் பற்றவைக்கவும். அநேகமாய் நூல் சுற்றியிருந்த இடத்தோடு கண்ணாடி விரிந்துபோகும். விரிந்த ஸீஸா அல்லது ஜாடியின் அடிப்பாகத்தை பூந்தொட்டிகளாக உபயோகிக்கலாம்.

### Blisters in Walking.

நடக்கும்போது காலில் கொப்புளம் உண்டாவது.—வெகுதூரம் நடந்துபோக வேண்டியிருந்தால், கொஞ்சம் ஸோப்பை ஜலத்தில் நனைத்தெடுத்து ஸ்டாக்கிங்கின் (மேஜோடு) உள்புறத்தில் பாதத்தின் பாகத்திலும் கணுக்காலின் பாகத்திலும் நன்றாய்த் தேய்த்து அதை உலரவைத்து, பிறகு அதைப் போட்டுக்கொண்டு நடந்தால் கால்களில் கொப்புளங்கள் உண்டாகமாட்டா.



## AGRICULTURE.
## விவஸாயம்.

### Soil Survey in Tanjore District.

தஞ்சாவூர் ஜில்லாவில் நிலப் பரிசோதனை.—கோயம்புத்தூர் விவஸாய ரஸாயன சாஸ்த்ரி ஸமீபத்தில் தஞ்சாவூர் ஜில்லா நிலங்களின் தன்மையைப் பரிசோதித்து அதைப் பற்றி ஒரு சிறு புஸ்தகம் வெளியிட்டிருக்கிறார். அதிலுள்ள விஷயங்கள் சுருக்கமாய்ப்பின் வருமாறு.

i. தஞ்சாவூர் தாலுகா தோகூரிலிருந்து பாபநாசம் தாலுகா வேளூர் வரைக்கும் சுமார் 6 முதல் 10 மைல் வரையில் கொள்ளிடத்திற்கு அருகாகவும், மாயவரம் தாலுகா பெருஞ்சேரியிலிருந்து கும்பகோணம் தாலுகா கஞ்சனூர் வரைக்கும் ஒரு குறுகலான பூமியில் பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric acid) போதுமான அளவு இருக்கிறது. மற்ற எந்த இடத்திலும் குறைவாகத்தான் இருக்கிறது; விசேஷமாய் (1) மன்னார்குடிக்கு மேற்கிலிருந்து நாகப்பட்டணம் ரயில்வே பாதைக்கு தெற்கேயும், (2) நன்னிலம் நாகப்பட்டணம் தாலுகாக்களிலும் (3) மாயவரத்திலும் சீயாழி தாலுகா மேற்பாதியிலும் குறைவாக இருக்கிறது.

ii. டெல்டா நிலங்களில் அநேக பாகங்களில் பொடாஷ் (Potash) அதிகமாயிருக்கிறது. கீழ் குறிப்பிட்டிருக்கிற இடங்களில்குறைவாக இருக்கிறது.

(1) சீயாழி தாலுகாவில் மேல்பாகம்; (2) கும்பகோணம் தாலுகாவின் கடிச்சம்பாடியிலிருந்து செல்லூர் வரையிலும்; நன்னிலம் தாலுகாவில் சென்னங்குரிலும்; மேற்கூறிய மூன்று க்ராமத்திற்கும் வடக்கே 10 மைலிலிருந்து 20 மைல் வரைக்கும் அகலமாயுள்ள நிலம்; (3) தஞ்சாவூர் தாலுகாவில் மாடிகையிலிருந்து மன்னார்குடி தாலுகா பெருவழந்தான் வரைக்கும் ஒரு நிலம், அதாவது புஞ்சை பாகங்களை சுற்றி.

iii. ஆகையினால், டெல்டா நிலங்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் வேண்டியிருக்கிறது. முக்யமாய் ii-வது பாராவில் சொல்லப்பட்ட மூன்று பாகங்களுக்கும் பொடாஷ் வேண்டும். மற்ற பாகங்களுக்கு வேண்டியதில்லை.

iv. கொள்ளிடக் கரையிலுள்ள சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் நைட்ரோஜன் (Nitrogen) கொஞ்சம் குறைச்சலாகவே இருக்கிறது.

5. டெல்டாவுக்கு வடபாதியிலும் நாகபட்டணத்தில் கோவில்கண்ணாப்பூரிலிருந்து முத்துப்பேட்டை வரைக்கும் கீழ்பக்கத்திலும் உள்ள நிலங்களுக்கு சுண்ணாம்பு போடுவதினால் அநேகமாய் குணம் அடையலாம்.

6. மேலே சொல்லப்பட்டவைகள் சற்றேறக் குறைய பழக்கத்திற்கு நிற்கும். என்ன எருக்கள் போட்டால் சரியான பலன் கிடைக்குமென்று நமக்கு இதுவரையிலும் தெரியவில்லை. ஆனால் டெல்டாவில் அநேக பாகங்களில் நிலத்திற்கு பொடாஷ் சேர்ப்பது பணச்சேதமென்றும் முதலில் முக்யமாய் பாஸ்பாரிக் ஆஸிடும் நைட்ரொஜனும் உள்ள இந்த எருக்களைக்கொண்டு பரீக்ஷை செய்யவேண்டுமென்றும் இந்த ஸர்வேயினால் தெரிகிறது.

### Fowls and Egg Production.

கோழிகளும் முட்டையிடுதலும்.—கோழிகள் முட்டையிடும் பருவத்தில் அவைகள் இரவில் தங்கியிருக்க நல்ல கூடுகள் இருக்கவேண்டியது அவச்யம். பகலில் வெயில் அல்லது மழை அதிகமாயிருந்தால் அவைகள் தங்குவதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து வைக்கவேண்டும். ஸாதாரணமாய் விவஸாயிகள் மற்ற கால்நடைகள் முதலிய ப்ராணிகள் விஷயத்தில் அவைகள் தங்கியிருக்க இடவஸதிகள் ஏற்படுத்த ச்ரத்தை யெடுத்துக்கொள்வதுபோல் கோழிகள் விஷயத்தில் ச்ரத்தை யெடுத்துக்கொள்வது அபூர்வமென்று சொல்லப்படுகிறது. மழை, வெயில் அல்லது குளிர் அதிகமாயிருக்கும் காலங்களில் கோழிகள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும்படி வேண்டிய அளவு இறகுகள் அவைகளினுடைய தேகத்தில் அமைந்திருக்கின்றனவென்று சொல்லி யாதொரு தக்க ஸௌகர்யமும் செய்யாமலிருப்பது சரியல்ல, ஏனென்றால் ரொம்ப மழை, குளிர் அல்லது வெயிலில் கோழிகள் இருக்க நேர்ந்தால் அவைகள் தேகத்திலுள்ள இறகுகள் வெயில் அல்லது குளிர் தேகத்தை கெடுக்காதபடி முற்றிலும் தடுக்க முடியாது. இது விஷயத்தில் போதுமான அளவு கவனம் செலுத்தாவிட்டால், கோழிகள் பலக்குறைவடைந்து விடும்,

## CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Supply of Agricultural Implements.

விவஸாயக் கருவிகள் ஸப்ளை செய்தல்.—ஸமீபத்தில் நடந்த பூனா கோவாபரெடிவ் கான்பரென்ஸில் ஒரு மெம்பர் கோவாபரேஷன் முறையில் விவஸாயக்கருவிகள் ஸப்ளை செய்வதைப்பற்றி ஒரு வ்யாஸம் வாசித்தார். அதில் அவர் சில ப்ரேரணைகள் சொல்லியிருக்கிறார். அவைகள் பின்வருமாறு.

(1) திருந்திய விவஸாயக் கருவிகளை ஜனங்களிடம் பரவச்செய்ய கோவாபரெடிவ் ஸங்கங்களை தக்க ஸாதனமாக உபயோகிக்கலாம். விவஸாய டிபார்ட்மெண்டார் உபயோகிக்கத் தகுந்தவையென்று சொல்லும் கருவிகளை வாங்கிவைத்து மெம்பர்களுக்கு விற்று வரும்படி ஸங்கங்களைத் தூண்டுவது நல்லது.

(2) விவஸாய டிபார்ட்மெண்டார் பரீக்ஷித்துத் தகுந்தவையென்று சொல்லும் விவஸாயக் கருவிகளை, அவைகள் ஜனங்களிடம் பரவுவதற்காக, ஆரம்பத்திலாவது ஸங்கங்களுக்கு வாங்கின விலைக்கு விற்று வரவேண்டும்.

(3) கோவாபரெடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார் எந்த கோவாபரெடிவ் ஸங்கத்துக்காவது விவஸாயக் கருவிகள் வாங்குவதற்கு அனுமதி கொடுத்தால் அந்த ஸங்கத்தைச்சேர்ந்த மெம்பர்களின் கார்யங்களுக்கு ஏற்றதான கருவிகளை அந்த ஸங்கம் வாங்கிக் கொள்ளுகிறதா என்று பார்க்க (விவஸாய டிபார்ட்மெண்டார்) ஒரு விவஸாய ஒவர்ஸியரை அதாவது இன்ஸ்பெக்டரை அனுப்பிவைக்கவேண்டும்.

(4) ஸங்கங்கள் வாங்கின கருவிகள் எவ்விதம் விவஸாய வேலைகளுக்கு உதவி வருகின்றன என்பதைமேற்பார்வைசெய்யவும், அது விஷயமாய் யோசனைகள் சொல்லவும் விவஸாய டிபார்ட்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(5) விவஸாய டிபார்ட்மெண்டார் தாம் பரீக்ஷை செய்து பார்க்கும் புதுக் கருவிகளைப் பற்றிய அனுபோகங்களை ஸங்கங்களுக்கு அடிக்கடி தெரிவிப்பதோடு, இன்ன கருவிகளை விவஸாயிகள் உபயோகிக்கலாமென்றும் தெரிவிக்க வேண்டும்.

(6) ரெஜிஸ்ட்ராருக்கு உசிதமென்று தோன்றினால், உபயோகமுள்ளவையென்று விவஸாய டிபார்ட்மெண்டார் சொல்லும் கருவிகளை ஸங்கங்கள் தங்கள் ரிஸர்வ் பண்டிலிருந்து வாங்கிக்கொள்ள அவைகளுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

### A Co-operative Building Society.

ஒரு கோவாபரெடிவ் கட்டிட ஸங்கம்.—உதகமண்டலத்தில் ஜன நெருக்கம் ரொம்ப அதிகமாகிக் கொண்டு வருவதையும், வீட்டு வாடகை ரொம்ப ஜாஸ்தியாய்க்கொண்டு வருவதையும், அதனால் கோடைகாலத்தில் அங்கேபோக விரும்புகிறவர்களில் அநேகருக்கு வீடு கிடைக்காமல் கஷ்டமாயிருப்பதையும்உத்தேசித்து அவ்வூரிலுள்ள அநேகர் ஸமீபத்தில் ஒருமீட்டிங் கூடி பின் வருங் கார்யங்களுக்காக ஒரு கோவாபரெடிவ் கட்டிட ஸங்கம் ஏற்படுத்துவதாகத் தீர்மானித்தார்கள். (1) ஸங்கத்துக்காக கட்டிடங்கள் கட்டுவதும், ஸங்கத்தின் ஸொந்தத்தில் கட்டிடங்கள் விலைக்கு வாங்குவதும். (2) மெம்பர்களுக்கு வீடு கட்டுவதற்கும் ரிபேர் செய்வதற்கும் பணம் கடன் கொடுத்தல். (3) ஸங்கத்தின்மெம்பர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல். (4) பொதுஜன உபயோகத்துக்குவேண்டியிருக்கும் கட்டிடங்கள் கட்டுதல். (5) ஜலம் ஸப்ளை செய்வதற்கான பைப் வேலைகளை செய்து அவைகளை நிர்வகித்து வருவது; பாசனவேலைகளை நடத்துவது. (6) வீடுகள் கட்டுவதில் முனிஸிபாலிடியாருக்கு உதவியாயிருப்பது.

### A Co-operative Press Society.

ஒரு கோவாபரெடிவ் அச்சடிக்கும் ஸங்கம்.—ஸமீபத்தில் நடந்த ஐக்ய மாகாணங்கள் கோவாபரெடிவ் கான்பரென்ஸில் 40,000 ரூபாய் முதலோடு ஒரு கோவாபரெவ் அச்சடிக்கும் ஸங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஸங்கத்தின் நோக்கங்கள் பின் வருமாறு. மற்ற ரெஜிஸ்டரான கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு அச்சடிக்கும் விஷயமாக ஸௌகர்யங்கள் செய்து கொடுத்தல்; ஒரு கோவாபரெடிவ் பத்ரிகை வெளியிட்டு அதன் மூலமாய் ஜனங்களுக்கு கோவாபரேஷன் கொள்கைகளையும் முறைகளையும் பரவச்செய்தல்; ஒரு பண்டக சாலை ஏற்படுத்துதல்; கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு எழுதுவதற்கு உதவும் ஸாமான்கள் ஸப்ளை செய்தல் ஆகிய இவைகளாகும்.



## COMMERCE.
## வ்யாபாரம்.

### Business Enterprise.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஜூலை ஆகஸ்ட் மாஸங்களில் அடியில் கண்ட விவரப்படி கம்பெனிகள் ரெஜிஸ்டர்செய்யப்பட்டன.

ஜூலை மாஸம்.

| | | |
|---|---|---|
| 1 | பாங்கி லேவாதேவி கம்பெனி | 5,00,000 |
| 1 | இன்ஷூரன்ஸ் கம்பெனி | 10,000 |
| 1 | அச்சிட்டு ப்ரசுரம் செய்யுங் கம்பெனி | 50,000 |
| 4 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 3,95,000 |
| 2 | கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 2,25,000 |
| 9 | | 11,80,000 |

ஆகஸ்ட் மாஸம்.

| | | |
|---|---|---|
| 1 | பாங்கி லேவாதேவி கம்பெனி | 1,00,000 |
| 1 | இன்ஷூரென்ஸ் கம்பெனி | 20,000 |
| 3 | வ்யாபாரக் கம்பெனிகள் | 4,25,000 |
| 1 | அரிசி மில் கம்பெனி. | 12,000 |
| 2 | தேயிலைத்தோட்டக் கம்பெனிகள் | 7,50,000 |
| 1 | நிலம், கட்டிடக் கம்பெனி | 1,00,000 |
| 1 | கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 2,50,000 |
| 10 | | 16,57,000 |

### Fruit Bottling.

பழங்களைக் குப்பிகளில் அடைத்துவைத்தல்.—பழங்களைக் குப்பிகளில் அடைத்து பத்ரமாய் வைப்பதற்கு பின்வரும் முறை தகுந்தது. வாயகன்ற குப்பிகளை எடுத்து நன்றாய் சுத்தம் செய்யவேண்டும். எந்தப் பழத்தை பத்ரப்படுத்தவேண்டுமோ அதை நன்றாய்ப் பழுத்ததாகப் பார்த்துப் பறித்து வைத்துக் கொள்ளவேண்டும். பழங்கள் சுத்தமாயும், ஈரமாயில்லாமலும் இருக்கவேண்டும். இந்தப்பழங்களை குப்பிகளில்வைத்து சுத்த ஜலம்விட்டு குப்பிகளை நிரப்பவேண்டும். ஆப்பிள், பேரிக்காய் ஆகிய பழங்களில் பெரியவைகளை நான்காக துண்டுசெய்து கொள்ளலாம். பிறகு ஒரு அகன்ற பாத்ரத்தை அடுப்பிலேற்றி அந்த பாத்ரத்தில் ஸீஸாக்களைவைத்து, ஸீஸாக்களின் கழுத்தளவுக்கு வரும்வரையில் பாத்ரத்தில் ஜலம்ஊற்றி, பாத்ரத்திலுள்ளஜலத்தை(கீழ்ல்போலெரியவிட்டு) க்கொதிக்க வைக்கவேண்டும். 20 நிமிஷம் அல்லது அரைமணிநேரம் ஜலம் கொதித்தபிறகு, ஸீஸாக்களிலுள்ள ஜலமும் கொதித்துக்கொண்டிருக்கும். பிறகு ஸீஸாக்களை வெளியிலெடுத்து அவைகளிலுள்ள ஜலத்தின் கொதி அடங்குவதற்குள்ளேயே கார்க்குகளைப்போட்டு மூடிவிடவேண்டும். கார்க்குகளை உபயோகிக்குமுன் அவைகளை ஜலத்தில்போட்டு சற்றுக்கொதிக்க வைக்கவேண்டும். கார்க்குகளைப் போட்டு மூடினவுடன் மேலே அரக்குவைத்து மூடிவிடவேண்டும். பிறகு ஸீஸாக்களை குளிர்ச்சியான இடத்தில் வைத்திருந்தால் பழங்கள் வெகுநாள் வரையில் கெடாமலிருக்கும்.

### The Dyeing Industry.

சாயம் போடும் தொழில்.—தற்காலம் ஐரோப்பா கண்டத்தில் நடக்கும் யுத்தத்தினால் சாயங்கள் அவ்விடமிருந்து வருவதில்லை. கீழே குறிப்பிட்டிருக்கும் விளைவு சாயங்கள் மதுரையில் அதிகமாய் உடனே வேண்டியிருப்பதாய் தெரிகிறது. அப்படிப்பட்ட சாயங்களில் பயிரிடுபவர்கள் தாங்கள் விளைவிக்கும் சாயங்களை மதுரைக்கு ரொம்ப லாபத்துடன் விற்பனைக்கு அனுப்பலாம் என்று தெரிகிறது.

சாயவகைகள் பின் வருமாறு:—

(1) மஞ்சிட்டி.
(2) நுணா வகையரா.
(3) மணிகூடு.

### Commercial Congress.

வ்யாபார காங்கிரஸ்.—இந்தியாவின் வ்யாபார விஷயங்களை கவனிப்பதற்காக ஒரு வ்யாபாரக் காங்க்ரெஸ் நடத்தவேண்டுமென்று சென்றவர்ஷம் பம்பாயைச்சேர்ந்த ஆனரபிள் ஸர் பஸூல்பாய் கரீம்பாய் ஒரு ப்ரேரணைசெய்தார். அநேக இந்திய ப்ரமுகர்கள் அந்த ப்ரேரணைக்கு ஸாதகமாக இருந்தார்கள். இப்போது யுத்தம் நடந்துவருவதை உத்தேசித்து அந்த ப்ரேரணையைப்பற்றி கவனிப்பதை நிறுத்தியிருக்கிறார்கள்.

## ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Kapok.

**இலவம் பஞ்சு.**—ஸாதாரண வளர்ச்சியுள்ளதும் 7-வர்ஷத்துக்கு மேற்படாததுமான ஒரு இலவ மரத்தில் ஒரு வர்ஷத்துக்கு 350 முதல் 450 இலவங்காய் கிடைக்கும். 7-வர்ஷ முதல் 10 வர்ஷம் வரையிலுள்ள மரங்களில் ஸாதாரணமாய் 600 காய்களுக்கு மேல் கிடைக்கும். ஸாதாரணமாய் 100 அல்லது 110 காய்களிலிருந்து 1 ராத்தல் சுத்தமான பஞ்சு கிடைக்கும். 1-ஏகர் நிலத்தில் 125 இலவமரங்கள் இருக்கலாம். அப்படியானால் ஒரு ஏகர் இலவமரத் தோட்டத்திலிருந்து வர்ஷந்தோறும் 400 முதல் 450 ராத்தல் சுத்தமான பஞ்சு கிடைக்கும். ஒரு மரத்தில் எவ்வளவு நிறை பஞ்சுகிடைக்குமோ அவ்வளவு நிறையைப்போல் இரண்டு மடங்கு இலவம் விதையும் கிடைக்கும். 1000 இலவங்காய்களின் விலை ஸுமார் 2¼ ரூபாயாகும்.

### Vegetable Ghee.

**தாவர நெய்.**—மைஸூர் ஸமஸ்தானத்திலுள்ள நரிக்கெரிக்காடுகளில் மறுவின என்னும் ஒருவகைச் செடியிருக்கிறது. அதன் பழங்களை நசுக்கினால் தயிரைப்போன்ற ஒருவகையானவஸ்து வடிகிறது. அதோடுகொஞ்சம் ஜலத்தைச் சேர்த்து வைத்திருந்தால், அதன்மேல் காய்ச்சின பாலின்மேல் மிதக்கும் பாலாடைபோன்ற ஒருவகையான வெண்ணெய் மிதக்கிறது. அதைக் காய்ச்சினால் ஒருவகை நெய்யுண்டாகிறதாம். அந்த நெய் மைஸூர் ப்ராந்தியங்களில் ஏராளமாக தயார் செய்யப்பட்டு விற்பனையாகி வருகிறதாம். அந்தநெய் எவ்விதத்திலும் ஸாதாரண நெய்யை ஒத்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

### The Uses of Aluminium.

**அலூமினியத்தின் உபயோகங்கள்.**—அலூமினியம் என்னும் உலோகம் தற்காலம் அநேக வேலைகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. இந்த உலோகம் உஷ்ணத்தை வெகு சீக்ரம் க்ரஹிக்கிறதாலும், துருப் பிடிப்பதில்லையாகையாலும், இதில் விஷ ஸம்பந்தமான பொருள்கள் இல்லாததாலும், இது உணவுப் பொருள்கள் தயார் செய்வதற்கு வேண்டிய பாத்ரங்கள் செய்ய ரொம்பவும் உபயோகப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில், பெரிய தொட்டிகளும், பெரிய சமையல் செய்யும் பாத்ரங்களும், சாராயம் இறக்குவது, கொழுப்புகள் தயார் செய்வது, ஊறுகாய்ப் போன்ற உணவுப்பொருள்கள் தயார் செய்வது ஆகிய இந்த வேலைகளுக்கு வேண்டிய பாத்ரங்களும் அலூமினியத்தால் செய்யப்படுகின்றன.

இன்னும் வாஸனைகள் இறக்குவது, விரப் செய்வது, வார்னிஷ் செய்வது, சாப்பிடத் தகுந்த எண்ணெய் தயார் செய்வது, 'நைட்ரிக் ஆஸிட்' த்ராவகம் செய்வது முதலிய வேலைகளில் அலூமினியம் பாத்ரங்கள் ஏராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் நைட்ரிக் ஆஸிட் த்ராவகத்தை வெளியூர்களுக்கு ஏராளமான அளவில் அனுப்புவதற்காக அலூமினியத்தால் பெரிய தொட்டிகளாய் அமைந்த வண்டிகள் செய்து உபயோகிக்கிறார்கள்.

அலூமினியத்தைப் பொடிசெய்து அதை வர்ணம் பூசுவதற்கும், வெடி மருந்துகள் செய்வதற்கும், லெத்தோக்ராப் என்னும் முறையால் அச்சடிப்பதற்கும், ஸாதாரண முறையால் அச்சடிப்பதற்கும் உபயோகிக்கிறார்கள். அலூமினிய ரேக்குகளும் மெல்லிய தகடுகளும் புதிய முறையால் ரொம்ப மலிவாகச் செய்யப்படுவதால் இவைகளை அநேக வேலைகளில் ஏராளமாய் உபயோகித்து வருகிறார்கள்.

### Turmeric.

**மஞ்சள்.**—இப்போது சில காலமாக இங்கிலண்டில் புதிதாக ஸைன்யம் சேகரித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஸைன்யத்திலுள்ள ஸோல்ஜர்களுக்கு காக்கியென்று சொல்லப்படும் ஒருவகைப் பழுப்பு நிறமான உடுப்புகள் ஏராளமாக வேண்டியிருக்கின்றன. காக்கி நிறமான உடுப்புகள் தயார் செய்வதற்கு அந்த நிறங்கொண்ட சாயப் பொருள்கள் வேண்டியிருக்கின்றன. அவைகளில் மஞ்சள் ஒன்றாகும்.

மஞ்சள் இந்தியா, ஜாவா, சீனா முதலிய விடங்களில் ஏராளமாய்ப் பயிரிடப்படுகிறது. இதை தருவித்து வைத்திருந்த இங்கிலீஷ் இறக்குமதி வ்யாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைத்துவருகிறதாம். மஞ்சளின் விலை சற்று உயர்ந்திருக்கிறதாம். சென்னை விரளி மஞ்சளின் விலை ஒரு அந்தர் ரூ. 18-12-0; சென்னை முண்டான் மஞ்சள் ஒரு அந்தர் 15-ரூபாய். வங்காளத்து விரளி மஞ்சள் 14-ரூ. 10-அணா முதல் 15-ரூபாய் வரையில் விலைப்போகிறது.



## BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### An Ingenious Sum.

**ஒரு ஜாலக் கணக்கு**—ஒரு புஸ்தகத்தில் ஏதோ ஒரு பக்கத்தைத் (Page) திறந்து அப்பக்கத்தின் எண் இன்னதென்று குறித்துக்கொள்ளவும். அதில் முதல் 9-வரிகளுக்குள் (ஒன்பதுக்கதிகப்படக் கூடாது) ஒரு வரியைக் குறித்துக்கொள்ளவும். அப்படி குறித்துக் கொண்ட வரியில் முதல் 9 எழுத்துக்களுக்குள் ஒரு எழுத்தைக் குறித்துக்கொள்ளவும்.

பக்கத்தின் எண்ணுடன் 2-ஐக் கூட்டி பத்தால் பெருக்கவும். பெருக்கி வந்த தொகையுடன் வரியின் எண்ணைக் கூட்டிக் கொள்ளவும். கூட்டி வந்ததை 10-ஆல் பெருக்கவும். அதோடு 50 சேர்த்துக்கொள்ளவும். பிறகு எழுத்தின் எண்ணைச் சேர்த்துக்கொள்ளவும். அதிலிருந்து 145-ஐக் கழிக்கவும். கழித்து வந்த தொகையைக் கேட்டு அதிலிருந்து மறுபடியும் 105-ஐக் கழித்தால் வரும் தொகையின் கடைசி எண் எழுத்தின் எண்ணாகவும், கடைசியிலிருந்து இரண்டாவது எண் வரியின் எண்ணாகவும், பாக்கியுள்ளது பக்கத்தின் எண்ணாகவும் இருக்கும்.

உதாரணம்:—மேற்சொன்னபடி குறித்துக்கொண்டவைகள் 265-வது பக்கமென்றும், 4-வது வரி யென்றும், 9-வது எழுத்து என்றும் வைத்துக்கொள்வோம். கணிதம் செய்யும் விவரம்:—

குறித்த "பக்கத்தின் எண்" 265; அத்துடன் 2 சேர்த்துக்கொள்ளவும். 265 + 2 = 267; அதை 10-ஆல் பெருக்கவும். 267 × 10 = 2670; அத்துடன் முன் குறித்துக்கொள்ளப்பட்ட "வரியின் எண்" சேர்த்துக் கொள்ளவும். 2670 + 4 = 2674; அதை 10-ஆல் பெருக்கவும். 2674 × 10-26740; அத்துடன் 50 சேர்த்துக்கொள்ளவும். 26740 + 50 = 26790; முன் குறித்துக்கொள்ளப்பட்ட "எழுத்தின் எண்" சேர்த்துக் கொள்ளவும். 26790 + 9 = 26799; அதிலிருந்து 145-ஐக் கழிக்கவும். 26799-145 = 26654; இந்த விடையைச் சொன்ன பிற்பாடு, அதிலிருந்து 105-ஐக் கழித்தால் (26654-105)—26549 என்று வரும். இதில் கடைசி ஸ்தானத்திலுள்ள 9, 9-வது எழுத்து; 10-வது ஸ்தானத்திலுள்ள 4, 4-வது வரி; மீதி 265 என்பது, 265-வது பக்கம்.—பி. வி. வ்யாஸராவ்.

### The Baroda Gymnasium.

**பரோடா தேகப்பயிற்சி சாலை.**—பரோடா பட்டணத்தில் ஜம்மடாடா விஜயம் சாலா என்று பெயருள்ள ஒரு தேகப்பயிற்சி சாலையிருக்கிறது. பரோடா பட்டணத்திலும், அந்த ஸமஸ்தானத்திலுமுள்ள வாலிபர்களே யல்லாமல் பம்பாய் ராஜதானியின் பற்பல பாகங்களிலுள்ள வாலிபர்களும் அந்த வித்யா சாலைக்குப் போய் கற்று வருகிறார்களாம். அங்கே இங்கிலீஷ் தேகப்பயிற்சி விளையாட்டுகளும், இந்திய தேகப் பயிற்சி விளையாட்டுகளும் கற்பித்து வருகிறார்கள். இந்திய விளையாட்டுகளில் முக்யமாய் கத்தி விளையாட்டு, கடாரி விளையாட்டு, குண்டான் தடி விளையாட்டு முதலியவைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த மூன்று விளையாட்டுகளும் ஒவ்வொருவரும் எதிரிகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காகக் கற்றுக் கொள்ளுகிறார்களாம். இவைகளைக் கற்றுக்கொள்ளாவிட்டால் அந்த சாலையில் படிப்பு முடிந்ததாகாது. இந்த தேகப் பயிற்சி சாலையில் 600 மாணவர்கள் இருக்கிறார்கள். இதில் ஒரு புஸ்தகசாலையும், ஆயுதசாலையும், ஒரு ஹோஸ்டலும் இருக்கின்றன. ஒருவர் தம்மை எதிரிகளிலிருந்து காத்துக்கொள்ள உதவும் பற்பல வித்தைகளில் தேர்ந்த ஒரு இந்தியர் அந்த தேகப்பயிற்சி சாலையை நடத்திவருகிறார்.

### A Puzzle.

**ஒரு விடுகதை.**—இரண்டு தம்பதிகள் நடந்து யாத்ரை செய்துகொண்டு போகையில் ஒரு ஆற்றைக் கடக்க நேரிட்டது. ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்றுமில்லை. ஆற்றங் கரையில் ஒரு சிறிய படகு மாத்ரம் இருந்தது. அந்தப் படகில் ஒரு பாகத்தில் அதில் 200 ராத்தல் நிறைதான் ஏற்றலாம் என்று எழுதியிருந்தது. வந்தவர்களில் இரண்டு புருஷர்களும் ஒவ்வொருவரும் 200 ராத்தல் நிறையுள்ளவர்களாக இருந்தார்கள். இரண்டு ஸ்த்ரீகளில் ஒவ்வொருவரும் 100 ராத்தல் நிறை யிருந்தார்கள். அவர்கள் நால்வரும் எவ்விதம் ஆற்றைக் கடந்தார்கள்? (நமது பத்ரிகையை வாசிப்பவர்கள் இதற்கு விடையை எழுதியனுப்பலாம். விடை அடுத்த மாஸம் வெளியாகும்.)

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### Burmese Girls.

பர்மா தேசத்துப் பெண்கள்.—பர்மா தேசத்துப் பெண்கள் கோஷா முறையை அனுஷ்டித்து வருகிறவர்க ளல்லர். பெண்கள் பெரியவர்களாக ஆகும் பொழுது, அவர்கள் பல ஸ்வதந்தரங்களைப்பெற்று வாழ்கிறார்கள். பர்மாவில் பெண்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஸ்கூல்களில் பெண்களே படித்து வர வேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆனால் அந்த ஸ்கூல்களில் பெரும்பாலோர் பெண்களாயிருப்பார்கள். சில வேளையில் ஆண்பிள்ளைகளின் தொகை அதிகமாகும் பொழுது, அவைகள் ஆண்பிள்ளைகளுக் கேற்பட்ட ஸ்கூல்கள் என்ற பெயருடனும் வழங்கி வருவதுண்டு. ஸ்கூல்களில் படிக்கும் பிள்ளைகளுக்கு (ஆண் பெண் பாலர்களுக்கு) பாடங்கள் எல்லாம் ஒன்றுதான். தையல் வேலை மட்டும் பெண்களுக்குக் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது. விளையாட்டுகளிலுங்கூட, பர்மா தேசத்துப் பெண்கள் ஆண்பிள்ளைகளுடன் சேர்ந்து பல விளையாட்டுகள் விளையாடுகிறார்கள். பர்மா தேசத்துப்பெண்கள் இவ்வளவு ஸ்வதந்தரம் பெற்றிருப்பது அவர்களுடைய நன்மைக்கோ, கேட்டுக் கோ என்பதைத் தீர்மானமாகச் சொல்லுவதற்கில்லை. பர்மா தேசத்தில் பெண்களின் கல்விக்கு யாதொருவிதமான குந்தகமும் இல்லை. பர்மா தேசத்துப் பெற்றோர்கள், தங்களுடைய பெண்கள் கல்வியைக் கற்று நிபுணர்களாக வேண்டுமென்று எண்ணங் கொண்டவர்களல்லர். வீட்டுக் கார்யங்களை நன்றாக நிர்வகிப்பதற்குப் போதுமான கணக்கு வழக்குகள், வாசிப்பு முதலியவைகள் இருந்தால் போதும் என்று எண்ணங் கொண்டவர்கள். பர்மாவில் தையல்வேலை ஸ்கூல்களில் கட்டாய பாடமாக்கப் பட்டிருக்கிறதைப்பற்றி பர்மா தேசத்துப்பெற்றோர்கள் த்ருப்திகரமா யிருக்கிறார்கள். பெண்களுக்கு பூகோள சாஸ்த்ரம் கற்பிப்பதற்குப் பதிலாக, வீட்டு நிர்வாகக் கார்யங்கள் ஸம்பந்தமான பாடங்களையும் சமையல் ஸம்பந்தமான பாடங்களையும் கற்பிக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு பிறந்திருக்கிறது. போனவர்ஷம் ரங்கூன் காலேஜில் மூன்று பர்மியப் பெண்கள் வாசித்து வந்தார்கள்.—சுதேசமித்திரன்.

### Teething of Children.

குழந்தைகளுக்குப் பல் முளைத்தல்.—குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்பொழுது வயிறுபோக ஆரம்பிக்கும். இந்த ஸமயத்தில் வயிற்றுப்போக்கு அதிகமாகாதபடி ஜாக்ரதையாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் குழந்தை பலஹீனமாய்ப்போகும். பல்முளைக்கக் காலமும் அதிகமாகும். குழந்தைகளின் கால்களை ஈரமில்லாமலும் உஷ்ணமாயும் வைத்திருக்கவேண்டும். அந்த ஸமயத்தில் அவைகளின் பல்லீறுகள் வீங்கியிருந்தால், கொதிக்கக்காய்ச்சிக் குளிர்ந்துள்ள ஜலத்தை அடிக்கடி கொஞ்சம் சீப்பிக்குடிக்க கொடுத்தால், வலியில்லாமலிருக்கும்.

### A Sad Truth.

விஸனகரமான நிலைமை.—இந்தியாவிலுள்ள பால்ய விதவைகளின் தொகையைக் கணக்கு எடுத்ததில்,

| | |
|---|---|
| 1-வயதுக்குட்பட்டு | 859. |
| 2-வயது முதல் 3-வயது, | 1,886. |
| 3-வயது முதல் 4-வயது, | 3,732. |
| 4-வயது முதல் 5-வயது, | 8,180. |
| 5-வயது முதல் 10-வயது, | 78,407. |
| 10-வயது முதல் 15-வயது, | 2,27,367. |
| ஆக. | 3,20,431. |

பால்ய விதவைகளிருப்பதாக வெளியாகிறது. நாம் பால்ய விவாஹத்தை நிறுத்திவிடும் பக்ஷத்தில் லக்ஷக் கணக்கான குழந்தைகள் இப்படிப்பட்ட கொடுமைக்கு உள்ளாகமாட்டார்கள்.

### A Remedy for Fever.

ஜ்வரத்துக்கு வைத்யம்.—ஒருபலம் இஞ்சியை அம்மியில்வைத்து அரைத்து சாறு பிழிந்துகொண்டு, ஒரு சட்டியை அடுப்பிலேற்றி நெருப்புப்பறக்க காயவைத்து அதில் மேற்படி ரஸத்தைவிட்டு தெளிந்த பிறகு, அந்தரஸத்தை எடுத்துக்கொண்டு சுக்கு, மிளகு, திப்பிலி, லவங்கம், ஏலம், சன்னராஷ்டகம் இவைகளை ஸம எடை எடுத்து வறுத்துத் தூள்செய்து அந்த ரஸத்திலிட்டுக்கலக்கி, 5-துளி தேன்விட்டு சாப்பிட்டுவரவும். இச்சா பத்யம்.—விச்வகர்ம குலோபகாரியில் பி. எம்.



## INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### The "Komagata Maru" Passengers' Affray.

'கோமாகாட்டா மாரு' ப்ரயாணிகளின் கலகம்:- சென்ற மே மாஸம் அநேக இந்தியர்கள் 'கோமாகாட்டா மாரு' என்று பெயர் கொண்ட ஒரு கப்பலில் ஏறி, அமெரிக்காவைச் சேர்ந்த கனடாவிற்குப்போய் அங்கு இறங்க முயற்சி செய்ததையும், கனடா கவர்ன்மெண்ட் அதிகாரிகள் இந்தியர்கள் கனடாவுக்குள் வருவதை ஆக்ஷேபித்ததையும், கடைசியில் இந்தியர்கள் அங்கிருந்து திரும்பி விட்டதையும் நேயர்கள் ஏற்கனவே அறிந்திருப்பார்கள். அவர்கள் கல்கத்தாவுக்கு வந்தவுடன் அவர்களை கவர்ன்மெண்ட் செலவில் பஞ்சாபுக்கு அனுப்புவதற்காக வங்காள கவர்ன்மெண்டார்வேண்டிய ஏற்பாடுகள் செய்துவைத்திருந்தார்கள். இந்தியர்கள் சென்ற ஸெப்டம்பர் மாஸம் 26-தேதி யன்று ஹூக்ளி நதியில் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கப்பலிலிருந்து நேராக பஞ்சாபுக்கு ஏற்றிப்போவதற்காக வங்காள கவர்ன்மெண்டார் ஒரு ஸ்பெஷல் வண்டி ஏற்பாடுசெய்து கல்கத்தாவிற்குப்பக்கத்திலுள்ள பட்ஜ்பட்ஜ் ஸ்டேஷனில் ஷை ஸ்பெஷல் வண்டியை வரவழைத்து வைத்திருந்தார்கள். ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டும் சில பஞ்சாப் ஆபிஸர்களும் இந்தியர்கள் வந்த கப்பலுக்குப் போய், இந்தியர்களைக்கண்டு, கரையில் இறங்கச் சொல்லி, அவர்கள் நேரே பஞ்சாபுக்குப் போக ஸ்பெஷல் வண்டி ஏற்பாடாயிருக்கிற தென்றும், அவர்கள் அதில் ஏறிப்போகலா மென்றும் சொன்னார்கள். ஆனால் இந்திய ப்ரயாணிகள் மாஜிஸ்ட்ரேட் சொன்ன வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளாமல் கல்கத்தாவுக்கு ரோடுமார்க்கமாக நடந்து போகத்தீர்மானித்தார்கள். 1914-ம் வர்ஷத்து 5-வது ஆர்டினன்ஸ் என்னும் சட்டத்தால் அவர்களை நேரே பஞ்சாபுக்குப் போகும்படி கட்டாயப்படுத்துவதற்கு மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் உண்டு. முதலில் மாஜிஸ்ட்ரேட், அவர்கள் யாதொரு தடையுமில்லாமல் வண்டியில் ஏறிக்கொள்வார்கள் என்று நம்பி யிருந்ததால், அவர் ஷை சட்டத்தைப் பற்றி ப்ரஸ்தாபிக்கவில்லை. ஆனால் இந்தியர்கள் வண்டியிலேற மறுக்கவே மாஜிஸ்ட்ரேட் ப்ரயாணிகளின் தலைவர்களிடம் ஆர்டினன்ஸைக் காட்டி அதன்படி யவர்கள் வண்டியிலேறி பஞ்சாபுக்குப் போகவேண்டு மென்று சொன்னார். இந்தியர்கள் அதன்படி நடக்காமல் கல்கத்தாவுக்குபோகும் ரஸ்தாவில் போக ஆரம்பித்தார்கள். அவர்கள் போவதைத்தடுக்க மாஜிஸ்ட்ரேட்டுக்குப் போதுமான போலீஸ் உதவியில்லை. அதன்மேல் அவர் துருப்புகளுக்கும் போலீஸாருக்கும் சொல்லியனுப்பி, அவர்களைக் கொண்டு, அதற்குள் மூன்று நான்கு மைல் போய் விட்ட இந்தியர்களை நிறுத்தி அவர்களை பட்ஜ்பட்ஜுக்கு அழைத்து வந்தார். இதற்குள் இந்திய ப்ரயாணிகளில் 60-பேர் ஏற்கனவே ஒரு ஸ்பெஷல் வண்டியில் ஏறிப்போய்விட்டார்கள். மற்றவர்களை ஏற்றிப்போவதற்கு இன்னொரு ஸ்பெஷல் வண்டியும் ஏற்பாடாய்க் கொண்டிருந்தது.

கல்கத்தாவுக்கு நடந்துபோன இந்தியர்கள் திரும்பி ஸ்டேஷனுக்கு வந்ததும் ஒரு உத்யோகஸ்தர் இந்தியர்களின் தலைவர்களிடம் கார்யங்களின் நிலைமையை விவரித்துச் சொல்வதற்காக அவர்களைக் கூப்பிட்டார். அப்போது இந்தியர்கள் திடீரென்று ஆவேசங்கொண்டு ரிவால்வர்களால் போலீஸ்காரர்களின் மேலும், ஆபிஸர்களின் மேலும் சுட்டார்கள். அதன்மேல் துருப்புகள் இந்தியர்களை எதிர்த்தார்கள். போலீஸ்காரர்களில் சிலரும் உத்யோகஸ்தர்களில் சிலரும் காயமடைந்தும் இரண்டொருவர் இறந்தும் போனார்களென்று தெரிகிறது. கலகம் செய்த இந்தியர்களில் 16 பேரும், பக்கத்திலிருந்த வேறு இரண்டுபேரும் இறந்துபோனார்கள்.

இந்தியர்களில் சிலர் பக்கத்து க்ராமங்களில் போய் புகுந்துகொண்டார்கள். வேறு சிலர் போலீஸாரிடம் தாமாகவே வந்து அகப்பட்டுக்கொண்டார்கள். மற்ற இந்தியர்களையும் பிடிப்பதற்கு கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்து பலரைக் கைதுசெய்து விட்டார்கள்.

மேலே விவரித்த பட்ஜ்பட்ஜ் கலகத்தைப்பற்றி விசாரணை செய்வதற்காக வைஸ்ராய் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார். அந்தக் கமிட்டியார் 'கோமகாட்டா மாரு' கப்பலின் ப்ரயாணம் ஸம்பந்தமான விஷயங்களையும், பட்ஜ் பட்ஜில் நடந்த கலத்தைப்பற்றியும் கலகத்துக்குப்பின் இந்தியர்களைக் கைது செய்ததைப் பற்றியும் விசாரணை செய்து இந்தியா கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் செய்வார்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Contentment.

த்ருப்தி.—ஒரூரில் ஒரு ப்ரஸங்கி அதிக செல்வத்தாலுண்டாகும் கெடுதிகளைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார். ப்ரஸங்கத்துக்கு வந்திருந்தவர்களில் ஒருவராகிய கோவிந்தய்யர் என்பவர் ப்ரஸங்கிக்கு மிகவும் வேண்டியவர். அவருக்கு 7 பெண்கள் உண்டு. ப்ரஸங்கி ப்ரஸங்கத்தின் நடுவில்,

“ஒருவருக்கு 7 பெண்கள் இருக்கிறார்கள் என்றால், அவர் எவ்வளவு ஸந்தோஷமடையக்கூடும்? ஒரு லக்ஷாதிபதி பாக்யவானா? ஏழெட்டு பெண்களுள்ளவன் பாக்யவானா? நீங்களே சொல்லுங்களேன், கோவிந்தய்யர்வாள், யார் ரொம்ப பாக்யசாலி; யார் ரொம்ப ஸந்தோஷசாலி?”

கோவிந்தய்யர் எழுந்து, “ஏழெட்டு பெண்கள் உள்ளவருக்குத்தான் மனஸ் த்ருப்தி ஜாஸ்தி என்று எனக்குத் தோன்றுகிறது. லக்ஷாதிபதி இன்னும் பணம் வேண்டுமென்று மனம் சலித்துக்கொள்ளுகிறான். இவனோ 7 பெண் போதும்; இனிப்பெண்களை வேண்டாமென்று த்ருப்திப்படுகிறான்.”—என்றார்.

### The Policeman & a Thief.

போலீஸ்காரனும் திருடனும்.—ஒரு ஊரில் அதிகமாக திருட்டு நடந்துவந்தமையால், எல்லாவிடங்களிலும் போலீஸ்காரர்களை நிறுத்தி வைத்திருந்தார்கள். அப்படியிருக்கையில் ஒரு திருடன் ஒரு கைவண்டியில் மூட்டையொன்றை யேற்றிக்கொண்டு ஒரு போலீஸ்காரன் இருந்த வழியாக வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் போலீஸ்காரன் தன்னுடைய வழக்கப்படி, “நீ யார்? அந்த வண்டியிலிருப்பது என்ன?” என்று கேட்டான். திருடன் முதலில் கொஞ்சம் பயப்பட்டானாயினும் தைர்யத்தைக் கைவிடாது “ஐயா! கான்ஸ்டபில் வீராஸாமி பிள்ளை நீர்தாமோ” என்று கேட்டான். போலீஸ்காரன் “ஆம்! நான்தான். என்ன விசேஷம்” என்று சொன்னான். அதற்குத் திருடன் “ஐயா! நல்ல காலம்; தங்களை இங்கேயே ஸந்தித்துவிட்டேன். உங்களுடைய இன்ஸ்பெக்டர் க்ருஷ்ணஸாமி ஐயர் ஒரு திருடனைப் பிடிக்கப் போகையில் திருடன் இந்த மூட்டையைப் போட்டுவிட்டு தம்பி நீட்டிவிட்டான். அந்த வழியாக வந்த என்னை இந்த மூட்டையைத் தங்களிடம் ஒப்பித்துவிடும்படி சொன்னார், எனக்கு நேரமாகிறது.” என்று சொல்லிக்கொண்டே மூட்டையை யிறக்கிக்கொண்டிருந்தான். போலீஸ்காரன் “ஐயா! நான் உங்களுக்கு நாலணாத் தருகிறேன். அந்த மூட்டையை தயவுசெய்து போலீஸ் ஸ்டேஷனில் சேர்த்துவிடுங்கள்.” என்று சொல்லி நாலணாவைக் கொடுத்து இன்ஸ்பெக்டரைத் தேடச் சென்றான். திருடன் “வந்த காசுக்கு வட்டமில்லை” யென்று நாலணாவைப் பெற்று வண்டியுடன் ஓட்டம் பிடித்தான். போலீஸ்காரன் இந்த சூதை யறிந்ததும் திருடனைப் பிடிப்பதைவிட்டு நாலணா இனாமும் கொடுக்கவேண்டியதாயிற்றே யென்று ரொம்ப வெட்கமடைந்தான்.—மாதர் மனோரஞ்சனி.

### A German Ruse.

ஜெர்மானியர்களின் தந்த்ரம்.—ஸமீபத்தில் ப்ரான்ஸில் யுத்த களத்தில் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, சில ஜெர்மானியர்கள் பிணத்தை வைக்கும் சவப்பெட்டி ஒன்றைத் தூக்கிக்கொண்டு ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் இருந்த அகழ்களுக்கு வந்தார்கள். பிணப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போகிறவர்களுக்கு முன்னால் ஒரு குரு ஒரு புஸ்தகத்தை திறந்துவைத்து ஏதோ சில ஜப வாக்யங்கள் வாசித்துக்கொண்டு போனார். பின்னால் அநேக ஜெர்மானியர்கள் துக்கம் கொண்டாடிக்கொண்டுவந்தார்கள். இவைகளைக் கண்டதும் அகழிலிருந்த ப்ரிட்டிஷ் துருப்பின் தலைவரான ஆபிஸர், ப்ரேதக் கோலத்துக்கு மரியாதை செய்ய எண்ணி தமது ஸோல்ஜர்களை வந்தனம் (ஸல்யூட்) செய்யும் நிலைமையில் நிற்கச் சொன்னார். ஸோல்ஜர்கள் அப்படியே நின்றார்கள். சவக்கோலத்துக்கு முன்னால் போன குருவும் வந்தனம் செய்தார். பிறகு சவப்பெட்டியின்மேல் போட்டிருந்த துணியை எடுத்துவிட்டார். அதற்குள் பிணப்பெட்டிக்குப் பதிலாக ஒரு மாக்ஸிம் பீரங்கியிருந்தது. ஜெர்மானியர்கள் அந்த பீரங்கியைக் கொண்டு அகழிலிருந்த ப்ரிட்டிஷ் ஸோல்ஜர்களில் சிலரை காயப்படுத்தியும் மற்றவர்களை கொன்றும் விட்டார்கள்.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Novel Savings Bank.

ஒரு நவீன ஸேவிங்க்ஸ் பாங்கி ஏற்பாடு.—பர்லினைச் சேர்ந்த ஒரு முனிஸிபாலிடியார் குழந்தைகளுக்காக ஒரு ஸேவிங்க்ஸ் பாங்கி ஏற்பாடு அனுஷ்டித்து வருகிறார்கள். அந்த முனிஸிபாலிடியிலுள்ளவர்கள் யாருக்காவது ஒரு குழந்தை பிறந்தால் பிறந்தவுடன், அந்த குழந்தை பேரால் ஒரு ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்கு ஏற்படுத்தி அந்தக் கணக்கில் ஒரு மார்க் அதாவது 12 அணா போடுகிறார்கள். ஒருவருக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தபோதிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனி கணக்கு ஏற்படுத்தி ஒவ்வொரு கணக்கிலும் ஒரு மார்க் வரவு வைத்து ஆரம்பித்து விடுகிறார்கள். இந்தத் தொகை ரொம்பவும் குறைவானதே. மேலும் குழந்தையின் பெற்றோராவது அல்லது வயது சென்றபின் அந்தக் குழந்தையாவது அந்தத் தொகையை ஒருபோதும் கணக்கிலிருந்து வாங்கிக் கணக்கை முடித்து விடக்கூடாது. அந்தத் தொகைக்குமேல் பெற்றோர்கள் தங்கள் சக்தியானுஸாரம் குழந்தைகளுக்கு என்று ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்கில் சேர்க்கலாம்.

வேண்டும்போதெல்லாம் முனிஸிபாலிடியார் போட்ட 12-அணாவை வைத்து விட்டு மற்ற பணத்தில் வேண்டிய அளவு பாங்கில் வாங்கிக்கொள்ளலாம். இதனால் ஒரு குழந்தையானது எப்போதும் குறைந்தது 12-அணா ஐவேஜியுள்ளதாக இருக்கிறது. இது கேட்க வேடிக்கையாகத் தான் இருக்கிறது. ஆனால் ஜனங்கள் இதனால் செட்டாய்ச் செலவு செய்யவும், மிச்சம் பிடிக்கவும் பழகிவிட்டார்கள். இந்த ஏற்பாடு 1909-ம் வர்ஷத்தில் அனுஷ்டானத்துக்கு வந்தது. அது முதல் 1912-ம் வர்ஷம் முடிய 8662 குழந்தை ஸேவிங்க்ஸ் பாங்கிக் கணக்குகள் ஏற்பட்டுவிட்டன. முதலில் அவைகளுக்குப் போட்ட 6,496½-ரூபாயும் 2,22,375-ரூபாயாக வளர்ந்துவிட்டது.

### A Costly Picture.

ஒரு விலையுயர்ந்த படம்.—அமெரிக்காவில் பிலடல்பியாவிலுள்ள ஒரு கோடீச்வரர் 23 அங்குலம் நீளம் 17 அங்குலம் அகலமுள்ள ஒரு படத்துக்கு மொத்தம் ஒரு டன் நிறையைவிட அதிகமான தங்க நாணயங்கள் கொடுத்து விலைக்கு வாங்கினாராம். அதற்குக் கொடுத்த தொகை லக்ஷத்து 40-ஆயிரம் பவுனாகும். (1,28,000 பவுன்களை சேர்த்து நிறுத்தால் ஒரு டன் நிறையிருக்கும்.) இவர் டை படத்துக்கு ஒரு சதுர அங்குலத்துக்கு 358-பவுன் வீதம் விலை கொடுத்திருக்கிறார்.

### Three Children in Nine Months.

ஒன்பது மாஸத்துக்குள் மூன்று குழந்தைகள்.—திருச்சூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு க்ராமத்தில் ஒரு நாயர் ஸ்த்ரீ ஒன்பது மாஸத்துக்குள் மூன்று குழந்தைகள் பெற்றாளாம். 1914-ம் வர்ஷம் பிப்ரவரி மாஸம் முதற்குழந்தை பிறந்தது. அதற்குப் பிறகு நாலைந்து மாஸம் அந்த ஸ்த்ரீ வ்யாதியாய் படுத்த படுக்கையாயிருந்தாள். சென்ற அக்டோபர் மாஸத்தில் அவளுக்கு ஒரு குழந்தை மறுபடியும் பிறந்தது. இரண்டாவது குழந்தை பிறந்த ஆறாவது நாள் மறுபடியும் ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் பின்னால் பிறந்த இரண்டு குழந்தைகளும் பிறந்த சில நாள்களுக்கெல்லாம் இறந்துபோய் விட்டனவாம். முதலில் பிறந்த குழந்தை மாத்ரம் உயிரோடிருக்கிறதாம். தாய் ரொம்ப வ்யாதியாயிருக்கிறாளாம்.

### Fowls & Scorpions.

கோழிகளும் தேள்களும்.—தான்யக் களஞ்சியங்கள் இருக்கும் இடங்களிலுள்ள கோழிக்குஞ்சுகளை தேள்கள் கடிப்பதேயில்லையாம். கோழிகள் தேள்களின்மேல் இருக்கும் சதையை ஒரு கொத்து கொத்தித் தின்கின்றனவாம். தவிர பூனைகளும் தேள்களைக் கொல்லுகின்றனவாம். இவைகள் எலிகளை எவ்வளவு துரிதமாய் கொல்லுகின்றனவோ அவ்வளவு துரிதமாய் தேள்களை உள்ளங்கையினால் அடித்துக் கொல்லுகின்றனவாம்.

### Coffee in Brazil.

ப்ரேஜிலில் காப்பி.—தென்அமெரிக்காவிலுள்ள ப்ரேஜில் தேசத்தில் காப்பி ரொம்ப ஏராளமாக விளைகிறது. 1754-ம்வர்ஷத்தில் ஒரு ஸன்யாஸி அந்த தேசத்தின் முக்ய பட்டணமாகிய ரையோ-டி-ஜனீரோவில் ஒரு மடத்து தோட்டத்தில் இரண்டு காப்பிக்கொட்டை விதைகளை நட்டு வைத்தாராம். அந்த இரண்டு விதைகளும் முளைத்து அவைகளிலிருந்துதான் ப்ரேஜில் நாடு முழுவதும் காப்பிச்செடி ஏராளமாய்ப் பரவியிருக்கிறதாம்.

# DIARY OF THE WAR.

## யுத்த வர்த்தமானம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

நவம்பர்மீ 13-தேதி.

லார்ட் ராபர்ட்ஸ் ப்ரான்ஸிலுள்ள இந்திய ஸைன்யங்களைப் பார்க்கப் போயிருக்கிறார்.

ஜெர்மன் ஸைன்யங்களில் சிறு பையன்கள் சேர்ந்து யுத்தத்தில் வெகு தைர்யமாய் யுத்தம் செய்கிறார்கள். ஆனால் அவர்களில் ரொம்ப சேதம் ஏற்படுகிறதாம்.

14-தேதி.

யிப்ரஸைச் சுற்றிலும் யுத்தம் பலமாக நடந்து கொண்டிருக்கிறது.

லார்ட் ராபர்ட்ஸ் இந்திய ஸைன்யங்களைப் பார்க்க ப்ரான்ஸுக்கு வந்திருந்தபோது மழையில் நனைந்ததால் ந்யூமோனியா வ்யாதி கண்டு இறந்துபோனார்.

15-தேதி.

யிப்ரஸிலும் ஆர்கோனிலும் யுத்தம் கடுமையாய் நடக்கிறது. ஏன் நதிச்சண்டை மறுபடியும் கடுமையாய் நடந்துவருகிறது.

16-தேதி.

லா பாஸ்ஸி என்னுமிடத்தில் ஜெர்மானியர்கள் சற்று முன்னுக்குப் போயிருக்கிறார்கள்.

17-தேதி.

ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் போர் முனைக்குப் போயிருக்கிறார்.

ஜெர்மானியர்கள் ரீம்ஸ் பட்டணத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள், ந்யூபோர்ட்டுக்கும் டிக்ஸ்மூடுக்கும் இடையில் பலமான பீரங்கி யுத்தம் நடக்கிறது.

18-தேதி.

ஒரு புது இந்திய ஸைன்யம் 7-தேதியன்று மார்ஸேல்ஸுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

20-தேதி.

ஜெர்மனியில் கவர்ன்மெண்டார் ப்ரசுரித்திருக்கும் ஜாப்தாவின்படி ப்ரஷ்ய ஸைன்யங்களில் 5,50,000 பேரும், மற்ற ஜெர்மன் நாடுகளின் ஸைன்யங்களில் 4,00,000 பேரும் சேதமாம்.

22-தேதி.

இரண்டு 'ஏரோப்ளேன்' ப்ரிடரிக்வேவன் என்னுமிடத்திலுள்ள ஜெர்மனிக்கு ஸொந்தமான ஸெப்பலின் ஆகாயக் கப்பல்கள் நிறுத்திவைக்கும் கொட்டகைகளின்மேல் வெடிகுண்டுகள் எறிந்தன.

23-தேதி.

ஜெர்மானியர்கள் யிப்ரஸை பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்வாஸோனுக்குப் பக்கத்திலும் பலமான பீரங்கி யுத்தம் நடந்தது.

சென்ற மாஸம் மாஸவர்த்தமானத்தில் 106-ம் பக்கத்தில் ஜெர்மானியர்கள் ஸீப்ரூஜ் என்னுமிடத்தில் 'ஸப்மரீன்' கப்பல்கள் கட்டுவதற்காக ஸப்மரீன் கப்பல்களின் பாகங்களை அவ்விடத்துக்குக் கொண்டுபோவதாக எழுதியிருந்தோம். இன்று ப்ரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் அந்த ஊரை கடலிலிருந்து தாக்கின. அநேக கட்டிடங்களும், தொழில்சாலைகளும் நாசமாயினவாம்.

இன்று ஸ்வாஸோனுக்குப் பக்கத்திலும் ரீம்ஸுக்குப் பக்கத்திலும் பீரங்கி யுத்தம் நடந்தது.

24-தேதி.

இங்க்லண்டின்மேல் படை யெடுப்பதற்காக ஜெர்மானியர்கள் மனிதர்கள், ஆயுதங்கள் முதலியவைகள் கொண்டுபோவதற்காக கப்பல்கள் தயார் செய்து கொண்டிருக்கிறார்களென்று ஐரோப்பாவிலுள்ள பலவிடங்களிலிருந்து ஸமாசாரங்கள் பத்திரிகைகளுக்கு எட்டியிருக்கின்றன.

25-தேதி.

ஜெர்மானியர்கள் வெர்டனுக்கு வடமேற்கேயுள்ள பெதின்கோர்ட் என்னுமிடத்தில் கூட்டு ஸைன்யங்களை எதிர்த்தார்கள். ஆனால் பின் தள்ளப்பட்டார்கள்.

ஜெர்மானியர்கள் கலே பட்டணத்தைப் பிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தை இன்னும் விட்டுவிடவில்லை யென்று சொல்லப்படுகிறது.

26-தேதி.

ஜெர்மானியர்கள் ரீம்ஸ் பட்டணத்தை மறுபடியும் பலமாய்த் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர் பிடித்திருந்த டிக்ஸ்மூட் பட்டணத்தை கூட்டுத் துருப்புகள் மறுபடியும் பிடித்திருக்கின்றன.

57-வது "ஒய்ல்ட் ரைபிள்ஸ்" என்னும் ரெஜிமெண்டைச் சேர்ந்த ஹவில்தார் கங்காஸிங் என்பவருக்கு 'விக்டோரியா க்ராஸ்' என்னும் விருது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் யுத்தத்தில் பராக்ரமத்துடன் சண்டை செய்ததற்காகக் கொடுக்கப்படும் ரொம்ப உயர்ந்த மெடலாகும்.



27-தேதி.

ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மா. ப்வான்காரெ ஜெனரல் ஜாப்ரெயுக்கு பராக்ரமத்துக்காக ஒரு மெடல் கொடுத்திருக்கிறார்.

29-தேதி.

இன்று இரவு நமது சக்ரவர்த்தி ப்ரான்ஸிலுள்ள ப்ரிட்டிஷ் ஸைன்யங்களின் ஹெட்க்வார்ட்டர்ஸ் அதாவது தலைமை ஸ்தானத்தைப் பார்க்க ப்ரான்ஸுக்குப் போனார்.

30-தேதி.

பெல்ஜியத்திலுள்ள ஜெர்மன் ஸைன்யங்களில் 4-ஆர்மிகோர்களை ஜெர்மானியர்கள் போலண்டுக்கு அனுப்பியிருக்கிறார்களென்று தெரிகிறது.

கெய்ஸர் ஜெர்மனியின் கிழக்கு எல்லை நாட்டுக்குப் போயிருக்கிறாராம்.

யிஸர் நதிக்கும் லிஸ் நதிக்கும் நடுவில் ஒரு கொடிய யுத்தம் நடக்கிறது. ஜெர்மானியர்கள் யிப்ரஸைப் பிடிக்க ஒருலக்ஷம் ஸோல்ஜர்களை அனுப்பியிருக்கிறார்களாம்.

ஜெர்மனியிலுள்ள முதல் ரிஸர்வ் ஸைன்யமும் இரண்டாவது ரிஸர்வாகிய லாண்ட்வெரும் சேர்ந்து மொத்தம் 40 லக்ஷம் ஸோல்ஜர்களென்றும், அதில் 30 லக்ஷம் ஸோல்ஜர்கள் மேற்கு யுத்தகளத்தில் இருக்க வேண்டுமென்றும் ஒரு ராணுவ நிருபர் சொல்லுகிறார்.

ஜார்ஜ் அரசர் ப்ரான்ஸுக்குப் போய் அநேக ஆஸ்பத்திரிகளைப் பார்வையிட்டார்.

டிஸம்பர்மீ 2-தேதி.

இன்று வடபாகத்தில் 991-ஜெர்மானியர்கள் கூட்டுத் துருப்புகளால் கைது செய்யப்பட்டார்கள்.

பெல்ஜியத்தில் மேற்கே ப்ளாண்டர்ஸ் என்னும் மாகாணத்தில் நடந்து வரும் யுத்தத்தில் இதுவரையில் 3-லக்ஷம் பேர்கள் சேதமென்று 'டைம்ஸ்' பத்திரிகையின் ராணுவ நிருபர் எழுதுகிறார். இதில் 2-லக்ஷம் பேர்கள் ஜெர்மானியர்களாம். 50,000 பேர் ப்ரெஞ்சுக்காரர்களாம். 50,000 பேர் ப்ரிட்டிஷ் ஸைன்யத்தைச் சேர்ந்தவர்கள். இதில் 5000 பேர் இந்தியர்களாம்.

டிக்ஸ்மூடுக்கு மேற்கே லாம்பார்னிஸ்ட் என்னுமிடத்தை ஜெர்மானியர்கள் பலமாய்த் தாக்கினார்கள்.

ஜார்ஜ் அரசரும் ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய ப்வான்காரெயும் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களைப் போய் பார்வையிட்டார்கள். ஜார்ஜ் அரசர் ப்ரிட்டிஷ் ஸைன்யத்தின் ஹெட்க்வார்ட்டர் ஸ்தானத்தில் ஒரு விருந்து செய்தார். ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்ட், ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரியாகிய மாஸ்யேவிவியானி, ஜெனரல் ஜாப்ரெ, ப்ரின்ஸ் அவ் வேல்ஸ், ஸர்ஜான் ப்ரெஞ்ச் முதலியவர்கள் அந்த விருந்துக்கு வந்திருந்தார்கள்.

3-தேதி.

ந்யூபோர்ட்டிலும், யிப்ரஸுக்குத் தெற்கிலும் கொஞ்சம் பலமான பீரங்கி யுத்தம் நடைபெற்றது.

4-தேதி.

ஜார்ஜ் அரசர் யுத்தகளத்தில் அகழ்களிலுள்ள துருப்புகளைப் பார்வையிட்டார். அவருடன் யுத்த மந்த்ரியாகிய லார்ட் கிச்சனரும் ஸேனாதிபதியாகிய ஸர்ஜான் ப்ரெஞ்சும் கூடப்போயிருந்தார்கள். ப்ரின்ஸ் அப் வேல்ஸும் பீரங்கி யுத்தம் நடக்கும் போது அகழ்களுக்குப்போய் துருப்புகளைப் பார்வையிட்டார்.

கூட்டு ஸைன்யங்கள் ஆல்ட்கிர்ச் என்னுமிடத்துப் பக்கத்தில் முன்னுக்குப் போயிருக்கின்றன.

5-தேதி.

ஜெர்மானியர்கள் ரீம்ஸை ரொம்ப பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆர்கோன் ப்ரதேசத்தில் யுத்தம் பலமாக நடக்கிறது.

ஜார்ஜ் அரசர் போர்முனையிலிருந்த அநேக ஆபிஸர்களுக்கு மெடல்கள் கொடுத்தார். அவரும்பெல்ஜியத்தின் அரசரும் துருப்புகளைப் பார்வையிட்டார்கள்.

இன்று ஜார்ஜ் அரசர் 39-வது கார்வால் ரைபிள்ஸ் என்னும் ரெஜிமெண்டைச் சேர்ந்த நாய்க் டர்வான் ஸிங்குக்கும், 129-வது பலுசிஸ் ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு சிப்பாய்க்கும் விக்டோரியா க்ராஸ் என்னும் மெடல்கள் கொடுத்தார்.

6-தேதி.

யுத்தத்தைப் பார்ப்பதற்குப் போயிருந்த நமதரசர் லண்டனுக்குத் திரும்பிவிட்டார்.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா-ஜெர்மனி இவைகளுக்கும் யுத்தம்.

நவம்பர்மீ 13-தேதி.

ரஷ்யர்கள் ப்ரஸிமிஸல் கோட்டைகளை மறுபடியும் முற்றுகைபோட ஆரம்பித்திருக்கிறார்கள்.

14-தேதி.

ஜெர்மானியர்கள் காலிஸ் என்னுமிடத்தில் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் காலீஷ்யாவில் பின்வாங்கியோடிக்கொண்டிருக்கிறார்கள்.

16-தேதி.

ப்ளாக் என்னும் இடத்துக்கும் வார்ட்டா நதிக்கும் இடையில் ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் யுத்தம் நடக்கிறது.

ரஷ்யர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் தாங்கள் பிடித்த பட்டணங்களின்மேல் யுத்த அபராதம் போட்டிருக்கிறார்கள்.

17-தேதி.

க்ராக்கோ பட்டணத்தை ரஷ்யர்கள் முற்றுகை போட்டுக்கொண்டிருக்கிறார்களென்றும், அந்தப் பட்டணத்தில் ஒரு பாகம் எரிந்துகொண்டிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

21-தேதி.

க்ராக்கோவுக்கும் ஸென்ஸ்டோசோவாவுக்கும் இடையில் ரஷ்யர்கள் தங்களை எதிர்த்த ஆஸ்ட்ரோ-ஜெர்மன் ஸைன்யங்களைத் தோற்கடித்தார்கள்.

23-தேதி.

லாட்ஸ் என்னுமிடத்தில் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ரஷ்யர்கள் 6000 ஜெர்மானியர்களைக் கைது செய்தார்கள்.

25-தேதி.

ரஷ்யர்கள் 8000 ஆஸ்ட்ரியர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

26-தேதி.

ரஷ்யர்கள் ஹங்கேரி ராஜ்யத்துக்குள் போயிருக்கிறார்கள். கார்ப்பேதியன் மலைகளைத் தாண்டிப்போன ரஷ்யத் திருப்புகள் ப்ரேஸோ, லாபோர்க்ஸ் என்னும் இடங்களில் ஒரு ஆஸ்ட்ரிய ஜெனரலையும் 40 ஆபிஸர்களையும், 3500 ஸோல்ஜர்களையும் கைது செய்து அநேக மெஷீன் பீரங்கிகளைப் பிடித்துக்கொண்டன.

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைக்கணவாயின் பக்கத்திலுள்ள கௌஜெனு என்னும் பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

லாட்ஸ் என்னும் பட்டணத்துக்குப் பக்கத்தில் பிடித்த ஜெர்மானியர்களைக் கொண்டுவருவதற்காக 48-வண்டித் தொடர்கள் போயிருக்கின்றனவாம். இவைகளில் ஒரு 'ஆர்மிகோர்' ஸைன்யம் அதாவது ஸுமார் 35,000 பேர் ஏற்றலாமாம்.

28-தேதி.

ரஷ்யர்கள் ஜெர்மனியின்மேல் படையெடுப்பார்களோவென்று பயந்து ஜெர்மானியர்கள் மிமல் நதியோரமாய் கோட்டைகள் கட்டிக்கொண்டும், டில்ஸிட் பட்டணத்தைச் சுற்றி அரண்கள் கட்டிக்கொண்டும் இருக்கிறார்களாம்.

29-தேதி.

ரஷ்யர்கள் ஸெர்ஜெவிட்ஸ் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

டிஸம்பர்மீ 1-தேதி.

லாட்ஸுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் கொடிய யுத்தம் நடக்கிறது.

ரஷ்யர்கள் நவம்பர்மாஸத்தின் முதல் பாதியில் 50,000 ஆஸ்ட்ரியர்களைக் கைது செய்தார்கள்.

2-தேதி.

லாவிட்ச் என்னும் இடத்தில் யுத்தம் நடந்து வருகிறது. லாட்ஸுக்கு வடக்கே ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாய்த் தாக்கியும் கடைசியில் பின்னடைந்துவிட்டார்கள். க்ராக்கோவுக்குத் தெற்கேயுள்ள வெலிட்ச்கோவுக்குள் ரஷ்யர்கள் புகுந்திருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் ஸொர்ட்ஸாப் என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

ஸார் சக்ரவர்த்தி போர்முனைக்குப் போயிருக்கிறார்.

3-தேதி.

ரஷ்யர்கள் வெலிட்ச்கோ என்னும் ஊரிலிருந்து க்ராக்கோ கோட்டைகளைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இன்று க்ளாவ்னோ—லாவிக்ஸ் ஆகிய இந்த இடங்களுக்கு நடுவிலும், லாட்ஸுக்கும் பியாட்ருகாவ் என்னும் பட்டணத்துக்கும் நடுவிலுள்ள ரோடிலும் யுத்தம் பலமாக நடந்தது.



4-தேதி.

லாவிக்ஸ் ப்ரதேசத்தில் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைகளைத் தாண்டிச் சென்று பார்ட்பீல்ட் என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

## ஆஸ்ட்ரோ-ஸெர்விய யுத்தம்.

நவம்பர்மீ 17-தேதி.

ஒரு புதிய ஆஸ்ட்ரிய ஸைன்யம் ஸெர்வியர்களைத் தோற்கடித்து ஸெர்வியாவிற்குள் புகுந்திருக்கிறது.

20-தேதி.

ஸெர்வியர்கள் வாலியெவொ என்னும் இடத்தை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

27-தேதி.

ஸெர்வியாவிலுள்ள லாஸரிவாட்ஸ் ப்ரதேசத்தில் ஆஸ்ட்ரியர்களுக்கும் ஸெர்வியர்களுக்கும் யுத்தம் நடக்கிறது. ஆஸ்ட்ரியர்கள் 5-ஆர்மிகோர் ஸைன்யம் கொண்டுபோயிருக்கிறார்களாம்.

8-ஆஸ்ட்ரிய பட்டாளங்கள் விசிக்ராட் ப்ரதேசத்தில் மாண்டிநிக்ர ஸைன்யங்களைத் தாக்கின. மாண்டிநிக்ரர்கள் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

டிஸம்பர்மீ 2-தேதி.

ஸெர்வியர்கள் பெல்க்ரேடை விட்டுவிட்டுப் போய்விட்டார்களென்று சொல்லப்படுகிறது.

ஸெர்வியாவிலுள்ள ஸான்வொடார் என்னுமிடத்தில் ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியர்களைத் தோற்கடித்தார்கள்.

ஸெர்வியர்கள் லாஸார் இவாட்ஸ் என்னுமிடத்தில் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

டிஸம்பர்மீ 3-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் பெல்க்ரேடைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ஸெர்பியர்கள் *ஆஸ்ட்ரியர்களை எல்லா விடங்களிலும் தோற்கடித்து விட்டார்களென்று சொல்லப்படுகிறது, ஸெர்வியர்கள் 2400 ஆஸ்ட்ரியர்களைக் கைது செய்திருக்கிறார்களாம்.

* ஸெர்வியா என்னும் பெயரில் முதல் பாகமாகிய 'ஸெர்வ்' என்னும் பதத்துக்கு 'ஊழியம் செய்' என்று அர்த்தமாகையால், அந்த வார்த்தையை உபயோகிக்காமல் அவர்களுடைய ஜாதியின் பெயராகிய 'ஸெர்ப்' என்னும் பதத்தை ஆதாரமாக வைத்து அந்த தேசத்துக்கு ஸெர்பியா என்றும், ஜனங்களுக்கு ஸெர்பியர்கள் என்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## துருக்கியோடு யுத்தம்.

நவம்பர்மீ 14-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியிலுள்ள கோட்டைகளை நேசக் கப்பல்படை தாக்கினபோது 'கோடன்' என்னும் ஜெர்மன் கப்பல் கொஞ்சம் சேதமடைந்ததாம்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் எர்ஸிரம் பட்டணத்தைச் சுற்றி கோட்டைகள் கட்டிக்கொண்டிருக்கிறார்களாம்.

16-தேதி.

ஆர்மீனியாவில் துருக்கிய ஸைன்யம் புதிதாக வந்ததால் ரஷ்யர்கள் பின்னுக்கு வாங்கிப் போயிருக்கிறார்கள். துருக்கியர்கள் கானஸ்ஸார் கணவாயைப் பிடிக்க முயன்றும் முடியாமல் போயிற்று.

19-தேதி.

யூப்ரட்டீஸ் பள்ளத்தாக்கிலுள்ள டாடா என்னும் ஊரை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

20-தேதி.

ப்ளாக்ஸீ (கருங்கடல்)யிலுள்ள ரஷ்ய கப்பல்படை 'கோபன்', 'ப்ரஸ்லா' என்னும் ஜெர்மன் கப்பல்களைத் தாக்கிற்று. 'கோடன்' ரொம்ப சேதப்பட்டுப்போயிற்றும். இரண்டு ஜெர்மன் கப்பல்களும் ஓடிவிட்டன.

21-தேதி.

எர்ஸிரமுக்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் துருக்கியர்களைத் தோற்கடித்தார்கள்.

24-தேதி.

எர்ஸீரம் ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் துருக்கிய திருப்பு ஒன்றைத் தோற்கடித்தார்கள். காரகிலிஸ்ஸா, அலாஷ்கெர்ட் என்னுமிடங்களிலும் ரஷ்யர்கள் துருக்கியர்களைத் தோற்கடித்தார்கள்.

25-தேதி.

ஆர்மீனியாவில் ரஷ்யர்கள் துருக்கியர்களைத் தோற்கடித்து எர்ஸிரமை நோக்கித் துரத்தியடித்தார்கள்.

துருக்கியைச் சேர்ந்த ஸைன்யங்களில் "ஆர்மிகோர்" என்னும் பிரிவில் ஒன்றாகிய 11-வது ஆர்மிகோரைச் சேர்ந்த இரண்டு டிவிஷன்களில் நூற்றுக்கு அறுபது பாகம் ஸோல்ஜர்கள் துருக்கி ஸைன்யத்தை விட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம். அவர்கள் ரஷ்யர்களுக்கு எதிராகஇன்று யுத்தம் செய்ய மறுக்கிறார்களாம்.

27-தேதி.

ஒரு ரஷ்ய திருப்பு யூப்ரடீஸ் பள்ளத்தாக்கில் துருக்கியர்களைத் தோற்கடித்துத் துரத்திற்று.

டிஸம்பர்மீ 6-தேதி.

ரஷ்யர்கள் ஆர்மினியா ப்ரதேசத்திலுள்ள ஸாரய், காஷ்கால் என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

துருக்கியர்களுக்கு சொந்தமான 'ஹமீடியே' என்னும் க்ரூஸர் கடலிலுள்ள வெடிகுண்டுகளில் பட்டு ரொம்ப சேதமடைந்து போய்விட்டதென்று சொல்லப்படுகிறது.

பொது விஷயங்கள்.

நவம்பர்மீ 13-தேதி.

தென்னாப்ரிக்காவில் ப்ரிட்டிஷாருக்கு விரோதமாய் கலகம் செய்தவர்களை ஜெனரல் போதா விஜன்பர்க் என்னுமிடத்தில் தோற்கடித்தார்.

14-தேதி.

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பெல்ஜியத்துக்கு 4½ கோடி ரூபாயும், ஸெர்வியாவுக்கு 1¼ கோடி ரூபாயும் கடன் கொடுத்திருக்கிறார்கள்.

15-தேதி.

டோவர் ஜலஸந்தியில் இரண்டு ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

கயாச்செளவிலுள்ள ட்ஸிங்டோ கோட்டைக்குப் பக்கத்தில் 'கெய்ஸரின்எலிஸபத்' என்னும் ஆஸ்ட்ரிய க்ரூஸர் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

19-தேதி.

இதுவரையில் கப்பல் படையில் 222 ஆபிஸர்கள் கொல்லப்பட்டும், 27-பேர் காயப்பட்டும் போனார்கள். 3455 போர்வீரர்கள் இறந்தும், 428 பேர் காயமடைந்தும் போனார்கள். இவர்களைத் தவிர ஆண்ட்வெர்ப்புக்கு அனுப்பின கப்பல்படை வீரர்களில் 1000 பேர்கள் போனவழி தெரியவில்லையாம். சில்லி தேசத்துக்குப் பக்கத்தில் நடந்த கடல் யுத்தத்தில் 875 பேர் இறந்துபோனார்கள்.

ஜெர்மானிய கப்பல்படை பால்டிக் கடலிலுள்ள லிபா என்னும் ரஷ்ய பட்டணத்தைத் தாக்கிற்று.

22-தேதி.

தென்னாப்ரிக்காவில் கலகம் அடங்கி வருகிறது. அநேகர் கவர்ன்மெண்டினிடம் சரணடைந்திருக்கிறார்கள்.

24-தேதி.

ஒரு ஜெர்மன் 'டெஸ்ட்ராயர்' கப்பல் டென்மார்க்குச்கு சொந்தமான ஒரு ஸ்டீமரின்மேல் மோதி மூழ்கிப் போய்விட்டதாம்.

26-தேதி.

லண்டனுக்கு ஸுமார் 30 மைல் கிழக்கே தெம்ஸ் நதியின் முகத்வாரத்தில் ஷியர்னஸ் என்னும் ஊரில் இருந்த 'புல்வார்க்' என்னும் பெரிய யுத்தக் கப்பலில் வைத்திருந்த மருந்து வெடித்து கப்பல் உடைந்து மூழ்கிப்போயிற்று. ஸுமார் 700 பேர் இறந்தார்கள். 7-பேர் உயிர் தப்பினார்கள்.

பெர்ஷியா தேசம் இந்த யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சேராமலிருப்பதாக அந்த தேசத்து கவர்ன்மெண்டார் விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

28-தேதி.

ஜப்பான் ரஷ்யாமேல் படையெடுத்தால் ஜெர்மனி ஜப்பானோடு எந்த விதமான நிபந்தனைகள் சொன்னாலும் அதற்கு உடன்பட்டு ஸமாதானம் செய்துகொள்வதாக ஜெர்மன் சக்ரவர்த்தி ஜப்பான் சக்ரவர்த்திக்குத் தெரிவித்தாராம். அதற்கு ஜப்பான் சக்ரவர்த்தி, ஜெர்மனி உடன்படிக்கைகளை அலக்ஷ்யம் செய்வதுபோல ஜப்பான் உடன்படிக்கைகளை அலக்ஷயம் செய்வதற்கில்லையென்று பதில் தெரிவித்தாராம்.

29-தேதி.

இந்திய ராஜாக்கள் யுத்த உதவிக்காக ஏற்படுத்திக் கொடுத்த 'லாயல்டி' (ராஜவிச்வாஸம்) என்னும் ஹாஸ்பிடல் கப்பல் இன்று பம்பாயை விட்டுப் புறப்பட்டுப் போயிற்று.

ஸமீபத்தில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் துருக்கிக்கும் யுத்தம் உண்டாகியிருப்பதைத் தெரிவித்து வைஸ்ராய் அமீருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்கு அமீர் துருக்கி யுத்தத்தில் சேர்ந்து கொண்டதைப் பற்றி வருத்தப்படுவதாயும், தாம் இந்த யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சேராமல் தனிமையாயிருப்பதாகவும் பதில் தெரிவித்திருக்கிறார்.

30-தேதி.

பால்டிக் கடலில் உள்ள லிபா என்னும் பட்டணத்துக்குப் பக்கத்தில் ஒரு ஜெர்மானிய க்ரூஸர் மூழ்கடிக்கப்பட்டதென்றும், ஒரு ஜெர்மன் யுத்தக் கப்பல் கடல் வெடிகுண்டுகளில் பட்டு மூழ்கிப்போயிற்றென்றும் சொல்லப்படுகிறது.

டிஸம்பர்மீ 3-தேதி.

ஒரு ஆகாயக் கப்பல்காரர் எஸ்ஸனிலுள்ள ஜெர்மனிக்கு சொந்தமான க்ருப் பீரங்கிச் சாலையில் சில



வெடி குண்டுகள் போட்டாராம். அந்தச் சாலையில் என்ன சேதம் ஏற்பட்டதென்று தெரியவில்லை. ஆகாய கமனி தமக்கு யாதொரு அபாயமுமில்லாமல் திரும்பிவிட்டாராம்.

கலகம் செய்த போயர்களின் தலைவர்களில் ஒருவராகிய டிவெட் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

4-தேதி.

ஒரு அமெரிக்கர் லார்ட்கிச்சனரைக் கண்டு பேசியதில் லார்ட் கிட்சனர், யுத்தம் குறைந்தது மூன்று வர்ஷம் நடைபெறுமென்றும், ஜெர்மனி முற்றிலும் தோற்கடிக்கப்பட்டால்தான் யுத்தம் முடிவுபெறுமென்றும் சொன்னாராம்.

இன்று இட்டலியின் ப்ரதமமந்த்ரியாகிய ஸின்யா ஸாலண்ட்ரா என்பவர் சேம்பர் அப் டெபுடீஸ் என்னும் இட்டாலிய பார்லிமெண்ட் ஸபையில் இட்டலி யுத்தத்தில் சேரவில்லை யென்றாலும், பின்னால் ஏதாவது நேர்ந்தாலும் அதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்றும், அதற்காக ஸைன்யம் முதலியவைகளைத் தயாராக வைத்துக்கொள்ளவேண்டு மென்றும் சொன்னார்.

ஜெர்மனியின் கிழக்கு எல்லை நாட்டுக்குப் போயிருந்த கெய்ஸர் பெர்லினுக்குப் போயிருக்கிறார்

5-தேதி.

ரொமானிய இந்த யுத்தத்தில் இங்கலண்டோடு சேருமென்றும், எந்தத் தேதியில் சேருவதென்பதை ரொமானியர்கள் யோசித்துக்கொண் டிருக்கிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

7-தேதி.

இதுவரை ஜெர்மன் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் ஜாப்தாக்களின்படி, 658483 ஸோல்ஜர்கள் ஜெர்மனிக்கு சேதமாம். இவைகளைத்தவிர ஜெர்மனியின் பாகங்களாகிய வொர்ட்டம்பர்க், ஸாக்ஸனி, படேரியா ஆகிய இந்த நாட்டு ஸைன்யங்களிலும் ரொம்ப சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளைச் சேர்த்தால் ஜெர்மன் ஸைன்யங்களில் ரொம்ப சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியும். ஆஸ்ட்ரொ ஜெர்மன் ஸைன்யங்களில் தினந்தோறும் ஸராஸரி 20,000 பேர் வீதம் கொல்லப்பட்டும் காயமடைந்தும் போகிறார்களாம்.

## SEASON.

## கால ஸ்திதி.

### Rainfall.

மழை.—1914ஞு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஞு டிஸம்பர்மீ 10உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| சோபால்பூர் | 53·59 | 43·01 |
| வால்டேர் | 39·48 | 35·03 |
| காக்கினாடா | 29·95 | 37·33 |
| மஸுலிப்பட்டணம் | 29·63 | 38·63 |
| நெல்லூர் | 32·75 | 31·25 |
| மதராஸ் | 55·57 | 44·27 |
| கூடலூர் | 72·25 | 44·16 |
| நாகப்பட்டணம் | 52·01 | 43·42 |
| பாம்பன் | 39·68 | 29·51 |
| கொழும்பு | 67·35 | 70·90 |
| திருவனந்தபுரம் | 60·92 | 59·17 |
| கொச்சி | 110·40 | 119·35 |
| கள்ளிக்கோட்டை | 120·46 | 115·06 |
| மங்களூர் | 147·43 | 126·55 |
| மெர்க்காரா | 128·14 | 125·25 |
| ஐதராபாத் | 41·73 | 30·09 |
| பல்லாரி | 18·97 | 19·59 |
| கர்நூல் | 26·08 | 26·17 |
| கடப்பை | 25·87 | 30·34 |
| ஹாஸ்ஸான் | 29·62 | 34·97 |
| பெங்களூர் | 28·80 | 34·29 |
| கொடைக்கானல் | 74·66 | 52·54 |
| உதகமண்டலம் | 46·83 | 51·56 |
| கோயம்புத்தூர் | 15·71 | 19·95 |
| வேலூர் | 35·75 | 41·06 |
| சேலம் | 35·98 | 33·15 |
| திருச்சினாப்பள்ளி | 20·00 | 29·28 |
| புதுக்கோட்டை | 36·97 | 30·69 |
| மதுரை | 26·98 | 31·53 |
| திருநெல்வேலி | 47·23 | 21·68 |

Calendar—பஞ்சாங்கம்.

# ஜனோபிமானி.

(முன்பு ' பிழைக்கும் வழி ' யென்று வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE ' PRACTICAL LIFE '

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 7 Vol. 7. | ஆனந்தவருஷ மார்கழிமீ, DECEMBER 1914. | ஸஞ்சிகை 4. No. 4.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |
| Sample copy ... | 0 6 0 | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| 1/10 do | ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்ய நாடு. |
|---|---|---|
| வர்ஷம் 1 க்கு | ... 4 0 0 | ... 6 0 0 |
| தனிப்ரதி | ... 0 6 0 | ... 0 8 0 |
| மாதிரி காபி | ... 0 6 0 | ... 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| 1/10 பக்கத்திற்கு | ,, ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

# ஜனோபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்தஹு மார்கழிமீ. [ஸஞ்சிகை 4.

## MANUFACTURE OF CHARCOAL.

BY A. RAMANATHAN.

### கரி செய்தல்.

கரி நிலக்கரி, மரக்கரியென இரண்டுவகைப் படும். இவற்றில் நிலக்கரி பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும். மரக்கரி கட்டைகளை சுடுவதால் உண்டாகும். இவ்விடத்தில் மரக்கரி செய்வதைக் குறித்தும் அதன் உபயோகத்தைக் குறித்தும் சுருக்கமாய் சொல்லப்படும்.

கரியானது கட்டையை காற்றுப்படாமல் சுடுவதால் உண்டாகும் வஸ்து. அது நின்று எரிந்து விசேஷ உஷ்ணத்தைக் கொடுப்பதால் விறகைக் காட்டிலும் ச்ரேஷ்டமானது. கட்டையை காற்றில் எரியவிட்டால் அது காற்றுகமாறி கடைசியில் கொஞ்சம் சாம்பலைத் தருகிறது. கட்டையை காற்றுப்படாமல் எரியவிட்டால் அது கரியமில வாயுபோன்ற வாயு பதார்த்தங்களையும், தார் போன்ற ஜல பதார்த்தங்களையும் வெளியிடுகின்றது. மிகுதியாய் நிற்பது கரி. இப்படி எஞ்சிநின்ற கரி சராசரியில் பாதிதான் நிற்கும். ஆனாலும் கட்டையைக் காட்டிலும் கரியை எரியவிடுவது சுளுவாயிருப்பதாலும், அது நீடித்து நின்று உஷ்ணத்தைத் தருவதாலும், புகையில்லாததாலும், ஒரு குறிப்பிட்ட எடையுள்ள கட்டையைக் காட்டிலும் அதே எடைக் கரி இரண்டு மடங்குக்கு அதிகமாய் உஷ்ணத்தைத் தருவதாலும், கட்டையைப் போல் அப்போதைக்கப்போது வெட்டி அல்லது பிளந்து உபயோகிக்கப்படாமல் உடனே உபயோகப்படுத்தக் கூடியதாலும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு லேசாய்க் கொண்டுபோகக் கூடியதாலும், ஒரு எடைக் கட்டையிலுண்டாகும் கரி அவ்வெடையில் கால் பங்கு பளுவுள்ளதாலும், மழைகாலங்களில் கட்டையோடு படும் அவஸ்தையை நிவர்த்திக்கக் கூடியதாலும், கட்டையைவிட கரி நமக்கு எவ்வளவோ பயனுடையது.

கரியை பலவிதமாய் தயார் செய்கிறார்கள் வாய்திறந்த குழிகளில் கட்டையை யடுக்கி நெருப்பிட்டு கரி செய்வது மிகவும் சேதாரமாகிய விதமாகும். கட்டை விலையற்று ஏராளமாய் அகப்படக்கூடிய இடங்களில் மாத்ரம் அப்படி செய்யலாம். குழிகளில் கரி செய்வது பின் வருமாறு. மூன்றடி முதல் ஐந்தடி ஆழமுள்ளதும், வாயண்டை சரிந்து ஐந்தடி அகலமுள்ளதுமான குழியை வெட்டி, அதில் உலர்ந்த கொம்புகளை போட்டு எரித்து தணல் நிறைந்த பிறகு மறுபடியும் அதில் கட்டைகளை போட்டெரிக்கவேண்டும். இப்படி பல தடவை செய்துவந்தால் குழி தணல்களால் நிறைந்துவிடும். பிறகு வாயை ஈரமண்ணால் மூடிவிட, மூடின இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் நெருப்பவிந்து கரி நிற்கும். இப்படி செய்வதில் நெருப்பு கட்டையை சாப்பிட்டுவிடுகிறதே யல்லாமல் போதுமான கரி கிடைப்பதில்லை.

#### கரிச்சூளை.

சுண்ணாம்பு செய்யப்படும் காளவாய்கள் போலவே கரி செய்யவும் காளவாய்களுண்டு. செங்கல் சூளை தரைமீதிருப்பதுபோலவே கரிச்சூளைகளும் தரைமீதிருக்கவேண்டும். இச்சூளைகளின் உருவம் பலவிதம். ஒன்றை இவ்விடத்தில் விஸ்தரித்து சொல்லி மற்றவைகளை ஒருவிதமாய் குறிப்பித்து காட்டுகிறோம்.



OFFICE OF THE ... 30 MAR 1915 ... MADRAS

தரைமீது சூளை.
(பாதி பிளந்தமுகம்)




(1) மத்தியில் நெருப்பிடும் த்வாரம். (2) மேல் ஈரமண் போர்வை. (3) உள்ளே இலை புல் முதலிய போர்வை. (4) மூன்றாவது படுக்கவைத்த விறகடுக்கு. (5) இரண்டாவது நிற்கும் விறகடுக்கு. (6) முதலாவது நிற்கும் விறகடுக்கு.

முதலில் விவரித்து காட்டும்படியானது செங்கல் சூளையைப்போல் சதுர வடிவமாயில்லாமல் குடையைப்போல் பாதி உருண்டை வடிவமுள்ளது. இவ்விதச் சூளை பக்கத்துக்குப் பக்கம் 16 முதல் 20 அடி நீளமுள்ளதாயிருக்கவேண்டும். நடுவில் 8 அடி உயரமுள்ளதா. யிருக்கவேண்டும். இதில் சற்றேறக்குறைய 1500 கன அடி கட்டையை அடுக்கி கரியாக செய்யலாம். கரிச்சூளைக்கு இடம் தகுந்ததாய் வேண்டும். தரை மேடுபள்ளமில்லாமல் ஸமமாயிருக்கவேண்டும். அடியில் 'பொரசல்' மண்ணிருந்தால் அதன் மூலமாய் விசேஷ காற்று உள்ளே வரும். மண் மிகவும் கட்டியாயிருந்தால் கட்டைகள் எரியும்போதுண்டாகும் ஜல பதார்த்தங்கள் இழுக்கப்படாமல் கட்டைகளை சீக்ரத்தில் எரியவிடாது. ஆகையால் பூமி பாதி மணலும் பாதி களிமண்ணும் கூடிய தரையாக இருக்கவேண்டும். சூளையைக் கட்டும்போது வட்டமான அடிப்பாகத்தின் மத்தியில் ஒரு அடி உயரமுள்ளதாய் சுற்றிலும் சூளையின் கடைசி வரையில் தணிவாக இருக்கும்படி மேடிடவேண்டும். இப்படி செய்வதால் ஜலபதார்த்தங்கள் நடுவிலிருந்து வழிந்து பக்கங்களில் செல்லும். இந்த இடத்தை ஸுமார் மூன்று மாஸம் வெயிலில் காயவிட்டால் அது நன்றாய்க் கட்டியாய்விடும்.

#### கட்டைகளை சூளையில் அடுக்குதல்.

கட்டைகளை 3 அடி நீளமுள்ளவைகளாக வெட்டி அவைகளை தரைமட்டத்துக்குமேல் இரண்டடுக்காக நிற்கவைத்து பிறகு மூன்றாவதாகிய மேல் வரிசையில் இரண்டடி உயரமாக அவைகளைப் படுக்க வைக்கவும். கட்டைகளை அடுக்குவதற்கு முந்தி சூளையின் முடியிலிருந்து தரைக்கெட்டும்படி 8 அடி உயரமுள்ள கட்டைகளை ஸம முக்கோணங்களுண்டாகும்படி நாட்டி, அவைகளை வைக்கோல் அல்லது கொடிகளால் சுற்றி நடுவிலுள்ள நீண்ட த்வாரத்தில் உலர்ந்த புல், சதால்கள், உலர்ந்த சிறு கிளைகள் முதலியவைகளை நிரப்பி வைக்கவேண்டும். சூளைக்கு மேல் பக்கத்திலாவது அடிப்பக்கத்திலாவது நெருப்பிடலாம். முன் சொன்ன விதத்தில் மேல் பக்கத்தில் தீ மூட்டவேண்டும். பக்கத்தில் தீ மூட்டவேண்டுமானால், முதலில் கட்டைகளை அடுக்குவதற்கு முந்தி வெளிப்புறத்திலிருந்து சூளையின் மையம்வரையி லெட்டும்படி நடுத்தரமான தூலத்தை படுக்கவைத்து அதன்மீது சாய்ந்தாப்போல் பெருக்கல் குறி (X) மாதிரி முதலில் கட்டைகளையடுக்கி சூளையடுக்கு முடிந்தவுடனே தூலத்தை வெளியே இழுத்துவிடவேண்டும். இந்த த்வாரத்தில் சீக்கிரத்தில் தீப்பற்றக் கூடிய வைக்கோல், சதால்கள் முதலியவற்றை நிரப்பித் தீயிடவேண்டும்.

#### சூளையை மூடுதல்.

கரிச் சூளைக்கு இரண்டு போர்வைகள் வேண்டும். கட்டையடுக்குக்கு அடுத்தாற்போல் மேலே ம்ருதுவான புல்லும் இலைகளும் கொடி

களும் சேர்த்து மூடி, அதன்மேல் கரித்தூள் கலந்த ஈரமண்ணை கனமாகப் பூசவேண்டும். மேல் மூடியிருக்கும் ஈரமண் உள்ளே விழாதபடி உள்ளிருக்கும் தழை தாம்பு புல் முதலியவைகள் கனமாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். மேல் பூசியிருக்கும் மண் மேல் பாகத்தில் கனமாயும் தரையருகில் வரவர லே சாயுமிருக்கவேண்டும். தரையருகில் முதலில் மண் பூசாமலிருக்கலாம். எரிச்சல் அதிகமாக அதிகமாக மூடிக்கொண்டு வரலாம்.

## சூளைக்கு நெருப்பு வைத்தல்.

சூளையின் அடிப்பாகத்தில் நெருப்பிடவேண்டுமானால் நீளமான கொம்புக்கு வைக்கோல் சுற்றி அதைக் கொளுத்தி த்வாரத்தில் நுழைத்தால் தீப்பற்றி நன்றுயெரியும். நன்றுயெரிந்த கட்டைகள் அமுங்கும்பொழுது அமுங்கிய விடங்களில் இன்னம் கட்டைகளை போட்டு முன் சொல்லியபடி மண் பூசிவிடவும். தீ நன்றுய்ப் பற்றிய பிறகு தீயிட்ட த்வாரத்தை கட்டைகளைக் கொண்டும் மண்ணைக் கொண்டும் நன்றுய் மூடிவிடவும். மேலிருந்து தீ வைக்கும்பொழுது மேல் த்வாரத்துள் ஒரு தட்டு தணலைக் கொட்டி கோலால் நன்றுய் துளாவினால் தீவைக்கோல்முதலியவற்றில் பிடித்து நன்றுய் பற்றும். நன்றுய்ப் பற்றியவுடன் த்வாரத்தை முன்போலவே மூடிவிட வேண்டும். கீழிருந்து தீயிடுவதற்கு கட்டைகளை யடுக்குதல் கஷ்டம். ஆகிலும் இதில் தீ நன்றுய்ப் பற்றி, அடுக்கிய கட்டைகளை நன்றுய்க் கருகச் செய்யும். மேலிருந்து தீ யிடுவதில் கட்டைகளை யடுக்குவது ஸுலபமாகிலும் சில ஸமயங்களில் தீ நன்றுய்ப் பற்றுமல் அடியில் அடுக்கிய கட்டைகளை நன்றுய் கருகச் செய்யாமல் விடலாம்.

சூளை நன்றுய்த் தீப்பிடித்தபொழுது சூளையின் மேல்பாகத்திலிருந்து புகைபோன்ற நீலநிறமான ஆவி வெளிப்படும். அடுத்தாற்போல் கபில நிறமான புகை கிளம்பும். பிறகு கரி நன்றுய்க் குதிர்ந்தபொழுது ஒருவித நீலநிற ஜ்வாலைக் கொழுந்து வெளிவரும். எல்லாப் பக்கங்களிலும் ஸமமாய் கரியாவது துர்லபம். அதிகமாயெரியும் பக்கத்தில் போர்வையாகிய தழைகளையும் மண்ணையும் இடவேண்டும். நன்றுயெரியாத பக்கங்களில் எரிகிற பக்கம் நோக்கி நீளமான கோல்களைக்கொண்டு மேல் போர்வையில் சிறு த்வாரங்கள் செய்தால் போதுமான காற்று உள்புகுந்து கட்டைகளை எரியவிடும். நீலநிற ஜ்வாலை யுண்டாகும்போது எல்லா த்வாரங்களையும் மூடிவிடவேண்டும். தேவையாகில் கீழ்மட்டத்தில் த்வாரங்களை வைத்திருக்கலாம். கரி குதிரும்போது சூளை அமுங்கும். அமுங்கிய விடங்களிலும் வெடிப்புகளுள்ள விடங்களிலும் ஈரமண்ணைப் போட்டு மூடவேண்டும். கரி செய்பவன் சூளை வெந்துகொண்டிருக்கும்போது அதன் பக்கங்களை தட்டிப் பார்த்துவந்தால் குழியுள்ள விடங்கள் தெரியும். இராக்காலங்களில் சூளையை கவனித்து வரவேண்டும். இரவு ஆரம்பத்துக்கு முன் ஓட்டைகளையும் வெடிப்புகளையும மூடிவிடவேண்டும். எந்த பக்கத்திலிருந்து காற்றடிக்குமோ அந்த பக்கத்தில் தழைகளடர்ந்த சிறு கிளைகளால் செய்த பெரிய தட்டி யொன்றை வைக்கவேண்டும். அப்படி செய்வதால் காற்று சூளைமேல் மோதாமல் தடுக்கப்படும். இராக் காலங்களில் நெருப்பு மூட்டி சூளையின் வெளிப்புறத்தை சோதிக்க போதுமான வைக்கோல் வைத்திருக்கவேண்டும். சூளையின் அடிவாரத்தில் புகை கிளம்பி நீலநிற ஜ்வாலை வந்தபொழுது கட்டைகளெல்லாம் கரியாய் விட்டிருக்கும். எந்த பக்கத்திலாவது நெருப்புக் கிளம்பினால் அவ்விடங்களை ஈரமண்ணால் மூடவேண்டும்.

## சூளையைப் பிரித்தல்.

சூளையைப் பிரிக்கும்போது வெகு ஜாக்ரதையாயிருக்கவேண்டும். சீக்ரமாய்த் திறந்தால் உள்ளே தணலாயிருக்கும் கரி திடீரென்று பற்றி எரியும். தணல் குளிர்ச்சியாவதற்கு கொஞ்சகாலம் பிடிக்குமாதலால் ஒரு வாரத்துக்கு மேலே சூளையைப் பிரிக்காமல் வைக்க வேண்டும். இராக்காலத்தில் தான் சூளையைப் பிரிக்கவேண்டும். ஏனென்றால் அப்பொழுது தான் உள்ளிருக்கும் தணல் துண்டுகள் நன்றுய்த்தெரியும். பிரிக்கும்போது எல்லா பக்கங்களிலும் பிரிக்கக்கூடாது. ஒரு பக்கத்தில் பிரித்து கொஞ்சங் கரியை வெளியெடுத்து தணல் குண்டுகளிருந்தால் அவற்றை ஒதுக்கி நீரா லவிக்கவேண்டும். பிறகு திறந்த இடத்தை மண்ணால் மூடிவிடவேண்டும். பின்பு மற்றொரு பக்கத்தை பிரித்து அதே மாதிரி செய்யவேண்டும். தணல் அதிகமாயிருந்தால் நீரால‌விப்பது நல்லதல்ல. தணல் துண்டுகளை ஒன்றுய்ச் சேர்த்து ஈரமண்ணால் மூடிவிடுவது நல்லது. பிரித்தெடுத்த கரியை ஒதுக்கிடங்களில் கும்பல் கும்பலாய்ச் சேர்த்து மேலே மூடிவைக்கவும். மூடாவிட்டால் கரி காற்றிலுள்ள ஈரத்தை இழுத்துக்கொள்ளும். நன்றுய்க் கரியாகாத துண்டுகளை அடுத்த சூளைக்கு தீயிட உபயோகிக்கலாம்.

## அடுப்புச் சூளை.

இந்தச்சூளை சுண்ணும்புச் சூளை போன்றது. சதுரமாயில்லாமல் வட்ட வடிவமுள்ளது. கட்டைகளை நிற்கவைத்தடுக்கி மேலே ஆறங்குல கனமுள்ளதாக இலை ஈரமண் போர்வையால் மூடப்படும். தீ அடியிலிருந்து போடப்படும். தணல் நன்றுய் ஆறிய பிறகு ஒரு பக்கத்தில் பெரிய த்வாரம்செய்து கரியை வெளியே எடுத்து விடலாம். காலியிடத்தில் மறுபடியும் கட்டைகளை யடுக்கி முன்போலக் கொளுத்திக் கரிசெய்யலாம். இதனுடைய உருவம் முன் சொல்லிய மாதிரி பாதி உருண்டை வடிவமுள்ளது.



## குழிச் சூளை.

வட்ட வடிவமான குழிகளை 1 அல்லது 2 அடி ஆழமாக வெட்டி குழியின் அடியில் 4 முதல் 6 அங்குல கனமான உலர்ந்த இலைகளைப் பரப்பி அதன்மீது கட்டைகளை யடுக்கவைத்தாலும் நேர்நேராக நிற்க வைத்தாலும் வைக்கலாம். உலர்ந்த இலைகளை பரப்பினால் சூளையிலுண்டாகும் ஈரத்தை இழுக்க முடியும். இதனுடைய மேல்பாகம் குடைபோலிருக்கும்.

குழிச்சூளை (வட்டக்குழி பூமிக்குள் பாதி பிளந்த முகம்.)




(1) சூளையின் மேல்மூடி. (2) முதலடுக்கின் மீது குறுக்கே படுக்கவைத்த கட்டைகள். (3) தரைமீதுள்ள முதலடுக்குக் கட்டைகள். (4) குழியின் தரை. (5) குழியினடியில் உலர்ந்த கிளைகள் கிளைகளின் பரப்பு. (6) பூமிமட்டம்.

முதல் சூளைக்குச் சொல்லியபடி நடுவில் பெரிய த்வாரத்தைவிட்டு அதில் சீக்ரத்தில் பற்றி எரியக்கூடிய வஸ்துகளைப்போட்டு தீவைக்க வேண்டும். தீ அடிவரையிலெட்டுமளவும் பக்கங்களை மூடாமலிருக்கவேண்டும். எட்ட எட்ட மூடிவரவேண்டியது.

சதுரச் சூளை.

நீண்ட சதுரமாகக் கட்டைகளையடுக்கி தரையை யடுத்தாற்போல் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் எட்டும்படி த்வாரங்களை விட்டு மேல் சொல்லியபடி மூடிவிடவும். சூளையின்மேல் பாகம் தரையளவுபோல் சதுரமாயில்லாமல் வண்டியின்கூடுபோல் வளைந்திருக்கும். ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் செல்லும் சந்தில் தீப்பற்றக்கூடிய வஸ்துக்களைப் போட்டு தீயிடவேண்டும். இந்த சூளையின் குணம் யாதெனில் நீளநீளமாகிய கட்டைகளை துண்டிடாமல் நேர்நேராக படுக்க வைத்து அடுக்கலாம். ஆனால் இதை மூடுவது கஷ்டம்; சீக்ரத்தில் உடைந்துவிடும்.

குன்றுச் சூளை.

மலைப்ரதேசங்களில் ஒருவிதமாகிய சூளையை கட்டுகிறார்கள். மலைச்சார்பில் சதுரமாகிய பூமியை யுண்டாக்கி, மலைப்பக்கம் சார்பாக வெட்டி அதன்மீது கட்டைகளை யடுக்குவது வழக்கம். மலைக்கு எதிர்ப் பக்கத்திலிருந்து காற்றடிப்பதால் அப்பக்கத்தில் சீக்ரத்தில் கட்டைகள் கரியாக மாறுமாதலால், கட்டைகளை உயரமாயும் அதிகமாயும் அடுக்கவேண்டும். முன்புறத்திலிருந்து பின்புறம் வரையில் த்வாரத்தைவிட்டு கட்டைகளை யடுக்கவேண்டும். இந்த த்வாரத்தின் மூலமாய் தீப்பற்ற வைக்கவேண்டும். மலைச்சார்பிலிருந்து சூளையின் தரையை எட்டும்படி ஒரு த்வாரம் விட்டு வைக்கவும். எல்லாம் கரியாகும் வரையில் இது திறந்திருக்கவேண்டும். சூளையின் முன்புறம் சரிந்து விழாதபடி கட்டைகள் தாங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

கரியின் வருமானம்.

உலர்ந்த கட்டை ஈரமானகட்டையைவிட பரிமாணத்திலும் நிறையிலும் அதிகமான கரியைக் கொடுக்கும். எண்ணெய் ஸம்பந்தமான கட்டைகளும் பிசின் அதிகமாக கொடுக்கக்கூடிய கட்டைகளும் கரியை அதிகமாகக் கொடுக்கும். நன்றாய் காற்றுப் புகாமல் கட்டிய சூளையில் அதிகமாய் கரி கிடைக்கும். மேலிருந்து தீ யிடுவதைக் காட்டிலும் கீழிருந்து தீ யிடுவதால் கட்டைகளெல்லாம் நன்றாய்க் கரிந்து அதிக கரியைத் தரும். கட்டைகளை படுக்க வைக்காமல் நிற்க வைப்பதால் அதிகமான கரி கிடைக்கும். காற்றை உள்ளே விடாமல் தக்க ஜாக்ரதையுடன் கட்டைகளைச்சுட்டால் அதிகமாய் கரி யுண்டாக்கலாம். கரியின் நிறை கட்டையின் நிறையைப் பொருத்தது. சீக்ரத்தில் காற்றிலுள்ள ஈரத்தை கரி இழுப்பதால், உஷ்ணகாலத்தி லிருப்பதைவிட மழைகாலத்தில் அது இரண்டு மடங்குக்கு அதிக நிறையுள்ளதாயிருக்கும். ஆதலால் கரியை நிறுத்து விலைப்படுத்துவதைவிட பரிமாணக் கணக்காக விலைப்படுத்துவது நல்லது. நல்ல கரி புகையில்லாமல் பரிசுத்தமாகிய தணலைக் கொடுக்கும். நன்றாய் கரியாகாத கட்டை எரியும்போது விசேஷ புகையைத் தரும்.

எ. ராமனாதன்.

## CHILDREN'S LIBRARIES.

## குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகள்.

அமெரிக்காவில் அநேக பட்டணங்களில் பொது ஜனங்களின் உபயோகத்துக்காக லைப்ரரிகள் அதாவது புஸ்தகசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் புஸ்தகசாலைகளில் பெரியவர்களேயன்றி சிறுவர் சிறுமியர்களும் வந்து வாசிக்கும்படி அவர்களுக்கேற்ற புஸ்தகங்களை வாங்கிவைத்து அந்தச் சிறுவர் சிறுமியர்களுக்கு அவைகளை வாசிக்கக்கொடுத்து உதவுகிறார்கள். அங்கே வாசிக்க வரும் குழந்தைகளிடம் யாதொரு சந்தாவும் வஸூலிப்பதில்லை. புஸ்தகங்களை உபயோகிக்கும்போது அவர்கள் அஜாக்ரதையாயிருந்து புஸ்தகங்களுக்கு ஏதாவது கெடுதல் ஏற்பட்டால் மாத்ரம் அவர்களிடமிருந்து அபராதம் வாங்குவதுண்டு.



லைப்ரரிகளில் உள்ள ஸிப்பந்திகளில் சில பேர்களை சிறுவர்களுக்கு வேண்டிய புஸ்தகங்களை எடுத்துக்கொடுக்கவும், அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லவும், ஸந்தேகங்களை நிவர்த்திக்கவும், அவர்கள் புஸ்தகங்களை சரியாக உபயோகிக்கிறார்களா வென்பதை மேற்பார்வைபார்க்கவும் நியமித்திருக்கிறார்கள். ஆனால் முதல் முதலில் புஸ்தகசாலைகளில் சிறுவர்களுக்கென்று ப்ரத்யேகமான அறைகளேற்படுத்தி, அந்த சிறுவர்களுடைய பிரிவுக்கென்று சில ஸிப்பந்திகளை நியமித்தபோது அந்த ஸிப்பந்திகளில் சிலர் இந்த வேலைகளில் ப்ரியங்கொள்ளாமலும், அவைகளுக்கு லாயக்கில்லாமலுமிருந்தார்கள், சிலருக்குமாத்ரம் குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் ச்ரத்தையும் ஊக்கமும் இருந்தன. குழந்தைகளுக்கு புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி, அவைகளைத்தகுந்தபடி நிர்வகிக்கத்தக்க ஸிப்பந்திகளில்லாவிட்டால் புஸ்தகசாலைகள் ப்ரயோசனமற்றவைகளாய் விடுமென்பதை யுத்தேசித்து, குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகளுக்கு ஸிப்பந்திகளாக வருபவர்களைப் பயிற்சி செய்விப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்தப் பள்ளிக்கூடங்களில் பயிற்சியடைந்த ஸிப்பந்திகளைத்தான் வெகுவாய் குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகளில் வேலைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகளின் முக்ய நோக்கமென்னவென்றால், குழந்தைகளுக்குப் படிக்கும் வாடிக்கையை உண்டாக்கி அதைவ்ருத்திசெய்வதே. இந்த வாடிக்கை சிறுவயதிலேயே ஒருவருக்கு உண்டாகிவிட்டால், அவர் பெரியவரானபோதும் வாசிக்கும் வாடிக்கையை வெகுவாய் விடமாட்டார். சிறுவயதில் அதாவது எட்டாவது வயஸுமுதல் பதினோராவது வயஸுவரையில் தான் குழந்தைகளுக்கு வாசிப்பதில் ரொம்ப உத்ஸாகம் உண்டு. அப்போது தான் குழந்தைகளின் மனஸை இஷ்டமான வழிகளில் திருப்புவது ஸுலபம். அப்போது அவர்களுக்கு வேலைத் தொந்தரவு அதிகமிராது. வீட்டில் படிக்க வேண்டிய பாடங்களும் ரொம்ப குறைவு. இந்தப்பருவத்தில் குழந்தைகளுக்கு வாசிக்கும் வாடிக்கையை உண்டாக்காவிட்டால், பிற்பாடு பெரியவர்களான பிறகு வேலைத்தொந்தரவு அதிகமாயிருக்குமாதலாலும், அவர்கள் ப்ரபஞ்சஸுகங்களில் மனம் செலுத்தியிருப்பார்களாதலாலும் அவர்கள் க்ரமமாய் புஸ்தகசாலைகளுக்கு வந்து வாசிப்பதோ, அல்லது வீட்டிலேயே புஸ்தகங்களை க்ரமமாக வாசிப்பதோ அநேகமாய் முடியாதகார்யமாகும். இதனால் தான் அமெரிக்காவிலுள்ள புஸ்தகசாலை அதிகாரிகள் சிறுவர்கள் விஷயத்தில் ரொம்ப கவனஞ் செலுத்திவருகிறார்கள்.

புஸ்தகசாலை அதிகாரிகள் புஸ்தகசாலைக்கு வரும் குழந்தைகளுக்குப் புஸ்தகங்கள் கொடுத்து உதவுவது மாத்ரம் போதாதென்றும், அநேக குழந்தைகள் புஸ்தகசாலைகள் தங்களுடைய வீடுகளிலிருந்து ரொம்ப தூரத்திலிருப்பதாலோ, அல்லது வேறு காரணங்களாலோ புஸ்தகசாலைகளுக்கு வந்து வாசிப்பது முடியாமல் போகுமென்றும், ஆகையால் அவர்களுக்கும் புஸ்தகசாலையால் ப்ரயோஜனம் உண்டாகும்படி ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவச்யமென்றும் எண்ணியிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் பட்டணங்களின் சிற்சில விடங்களில் புஸ்தகசாலைக்கு கிளைகள் ஏற்படுத்தி அங்கே பிள்ளைகள் வந்து புஸ்தகங்கள் வாசிக்கும்படி ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். சில இடங்களில் புஸ்தகசாலைகளின் ஸிப்பந்திகள் ஜனங்களுடையவீடுகளுக்குப்போய் அவர்களுக்குப் புஸ்தகங்களை வாசிக்க இரவல் கொடுத்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவையாகப்போய் புஸ்தகங்களை திரும்ப வாங்கி வருகிறார்கள்.

இப்படிப் பலவிதங்களில் குழந்தைகளுக்குப் புஸ்தகங்கள் வாசிக்க ஸௌகர்யம் செய்து கொடுப்பது மாத்ரம் போதாது. புஸ்தகசாலைகளில் குழந்தைகளின் வயஸுக்குத் தகுந்த உபயோகமான புஸ்தகங்களை வாங்கி வைக்க வேண்டியது அவச்யமாகும். இது விஷயமாக அநேகர் ஆராய்ச்சிசெய்து குழந்தைகளுக்கு ஸாதாரணமாய் இன்னவயஸில் இன்ன மாதிரி புஸ்தகங்களின்மேல் ப்ரியம், இன்ன புஸ்தகங்கள் அவர்களுக்கு ஏற்றவை என்பவைகளைப்பற்றி சில ஸித்தாந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

சிறுவர்களுக்குக் கதைப்புஸ்தகங்கள் தெரிந்தெடுப்பதில் அவைகள் ஸன்மார்க்க முறைகளை அனுஸரித்திருக்கின்றனவா என்றும், நல்ல இலக்கிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றனவா என்றும் பார்க்கிறார்கள். கதைகளல்லாத மற்ற புஸ்தகங்கள் தெரிந்தெடுப்பதில் அவைகள் வாசிக்க உத்ஸாகம் கொடுக்கக் கூடியவையாவென்றும், அவைகளில் சொல்லப்படும் விஷயங்கள் தவறில்லாமலிருக்கின்றனவா என்றும் பார்க்கிறார்கள். ஸன்மார்க்க முறைகளுக்கு விரோதமாயுள்ள புஸ்தகங்களை குழந்தைகள் புஸ்தகசாலைகளில் சேர்ப்பதில்லை. குழந்தைகளில் ரொம்ப சிறியவர்களுக்கு படங்கள் அதிகமாயுள்ள புஸ்தகங்கள்தான் ரொம்ப ப்ரியம். அவைகளில் சிறு பாட்டுகள் இருந்தால் நல்லது. அவர்களைவிட கொஞ்சம் வயஸான குழந்தைகளுக்கு பூதங்கள், பேய்கள் இவைகளைப்பற்றிய கதைகள் ப்ரியமானவை. அதற்குப்பிறகு அவர்களுக்கு புராணக் கட்டுக்கதைகளில் ரொம்ப ப்ரியம் உண்டாகிறது. அதற்குப்பிறகு 10-அல்லது 12-வது வயஸில் சிறுவர்களுக்கு உண்மையான உலகவாழ்க்கையைப்பற்றிய கதைகளை வாசிக்க ப்ரியம் ஏற்படுகிறது. இந்தப் பருவத்தில் பெண்களின் விருப்பமும் பையன்களின் விருப்பமும் வித்யாஸப்படுகின்றன. பெண்கள் குடும்பம், பள்ளிக்கூடம், ஊர் இவைகள் ஸம்பந்தமான கதைகளை வாசிப்பதில் ப்ரியங்கொள்ளுகிறார்கள். பையன்களோ யுத்தம், விளையாட்டுகள், கடல் கொள்ளைக்காரர்கள், மாடுமேய்ப்பவர்கள் முதலிய பல விஷயங்களைப்பற்றிச் சொல்லும் கதைகளை வாசிப்பதில் ப்ரியங்கொள்ளுகிறார்கள்.

தேச சரித்ரம், ஜீவ்யசரித்ரம், ப்ரயாணஞ்செய்தல், சாஸ்த்ரம் ஆகிய இவைகளை உத்ஸாகம் உண்டாக்கக் கூடியவிதமாய் எழுதியிருக்கும் புஸ்தகங்கள் சிறுவர்களுக்கு ரொம்ப ப்ரியமானவை. சில புஸ்தகங்களில் ஏதாவது ஒரு சிறு பையனும் அவனுடைய ஸஹோதரியும் தங்களுடைய மாமன் அல்லது சிற்றப்பன் வீட்டுக்குப் போயிருக்கும்போது, அவர்களை மேல் சொன்ன விஷயங்களைப்பற்றிக் கேள்விகள் கேட்பதும், அவர்கள் பதில் சொல்லுவதும் இவ்விதம் அந்தக் குழந்தைகளுக்கு அவ்விஷயங்களைப்பற்றி கற்பிப்பதுமாய் ஸம்பாஷணை ரூபமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகங்களின்மேல் சிறுவர்கள் ப்ரியங்கொள்வதில்லையாம். ஏனென்றால் ஏதாவது விஷயத்தைப்பற்றி வாசிக்கும்போது அடிக்கடி கேள்வியும் விடையுமாயிருந்தால், வாசிப்பதிலும், மனஸில் விஷயங்களை க்ரஹிப்பதிலும் தடையேற்பட்டு சிறுவர்களுக்கு ச்ரமம் உண்டாகிறது. அவ்விஷயங்களை தெளிவாக கேள்விகள் விடைகளில்லாமல் ஒரே நடையாகச் சொல்லியிருந்தால் சிறுவர்கள் அப்படிப்பட்ட புஸ்தகங்களை வாசிக்க மனங்கொள்ளுகிறார்கள். நன்றாய் அச்சிடப்பட்டு, நேர்த்தியான படங்கள் உள்ளதாய் நன்றாய் பைண்டு செய்யப்பட்ட புஸ்தகங்களின்மேல்தான் சிறுவர்களுக்கு ப்ரியமதிகம்.

புஸ்தகசாலைகளில் குழந்தைகளுக்கு வாசிப்பதற்கு ஸௌகர்யம் செய்திருப்பதின் நோக்கம், அது சிறுவர்களின் கல்விமுறையில் ஒரு பாகமாயிருக்கவேண்டுமென்பதே. இந்த நோக்கத்தை யனுஸரித்துத்தான் புஸ்தகசாலைகளில் சிறுவர்களுக்கென்று ப்ரத்யேகமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் புஸ்தகசாலையின் வேலைக்கும் பள்ளிக்கூடத்து வேலைக்கும் ஸம்பந்தமிருக்கவேண்டுமென்றும், உபாத்யாயர்களும் புஸ்தகசாலை அதிகாரிகளும் ஒத்து வேலைசெய்யவேண்டுமென்றும், ஏற்படுகிறது. இதற்கேற்ப, புஸ்தகசாலை அதிகாரிகளும் சிப்பந்திகளும் அடிக்கடி பள்ளிக்கூடங்களுக்குப்போய் மாணவர்களுக்கு புஸ்தகசாலையின் உபயோகத்தைப்பற்றியும், புஸ்தகங்கள் வாசிப்பதின் உபயோகத்தைப்பற்றியும் ப்ரஸங்கம் செய்து வருகிறார்கள். உபாத்யாயர்களும் அடிக்கடி தங்களுடைய மாணவர்களை அழைத்துக்கொண்டு புஸ்தகசாலைக்குப்போய்ப் பார்வையிட்டு வருகிறார்கள். புஸ்தகசாலை அதிகாரிகள் உபாத்யாயர்களுடன் கலந்து பேசி, பாடசாலையின் பாடக்ரமங்களை யனுஸரித்தவைகளாக இன்ன புஸ்தகங்களை புஸ்தகசாலைகளில் வாங்கிவைக்கலாமென்று அறிந்துவந்து, அந்தப் புஸ்தகங்களை புஸ்தகசாலைகளில் வாங்கி வைக்கிறார்கள். சில ஸமயங்களில் புஸ்தகசாலைகளிலிருந்து 20 முதல் 50 புஸ்தகங்கள் வரையில் தெரிந்தெடுத்து உபாத்யாயர்களிடம் பிள்ளைகளுக்கு வாசிக்கக் கொடுப்பதுண்டு. உபாத்யாயர்கள் தங்களிடம் வாசிக்கும் பிள்ளைகளில் யாராவது மந்தமாய் இருந்தால் அவனுக்கு இன்ன புஸ்தகங்கள் வாசிக்கக்கொடுத்தால் பையன் கெட்டிக்காரனாக மார்க்கமுண்டு என்பதை புஸ்தகசாலை அதிகாரியினிடம் கேட்டு, அவருடைய யோசனைமேல் மந்தமான பையன்களுக்கு நல்ல புஸ்தகம் வாசிக்க வாங்கிக் கொடுப்பதுண்டு.

அமெரிக்காவில் பலவிடங்களில் உபாத்யாயர்களும் பெற்றோர்களும் சேர்ந்துள்ள ஸங்கங்கள் பல இருக்கின்றன. இந்த ஸங்கங்கள் கூடும்போது புஸ்தகசாலை யதிகாரிகள் அங்கேபோய் பெற்றோர்களுக்கு நல்ல புஸ்தகங்கள் வாசிப்பதால் உண்டாகும் நன்மையைப்பற்றியும், பிள்ளைகளை புஸ்தகசாலைகளுக்கு வந்து வாசிக்கும்படி பழக்குவதைப்பற்றியும் ப்ரஸங்கங்கள் செய்வதுண்டு. இதனால் பெற்றோர்களில் பலர் குழந்தைகளுக்கான புஸ்தகசாலைகளில் அதிக ஊக்கங்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அநேக பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு ஸாதாரண பள்ளிக்கூட காலங்களிலும் விடுமுறைக் காலங்களிலும் இன்ன புஸ்தகங்கள் வாசிக்க வாங்கிக் கொடுக்கலாமென்பதைப்பற்றியும், இனும் புஸ்தகங்கள் இன்னவாங்கிக்கொடுக்கலாமென்பதைப்பற்றியும் புஸ்தகசாலைக் காரர்களிடம் யோசனை கேட்பது வழக்கமாயிருக்கிறது.

பிள்ளைகள் வந்து வாசிக்க ஏற்பாடுகளுள்ள புஸ்தகசாலைகள் முனிஸிபாலிடிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. இவைகளுக்கு ஏற்படும் செலவில் பெரும்பாகத்தை முனிஸிபாலிடிகளே பொறுத்து வருகின்றன. கவர்ன்மெண்டார் ஸ்வல்ப பண உதவிதான் செய்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளைகளின் பிரிவிலும் ஸாதாரணமாய் 25,000, முதல் 30,000 வரையில் புஸ்தகங்கள் இருக்கும்.



## PEARLS

BY S. RANGASWAMI AIYANGAR.

## முத்துக்கள்.

பார்த்திபர் பெரிதும் மதிக்கும் நவரத்னங்களாகிய வைரம், மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், வைடூரியம், நீலம், கோமேதம், பவளம், முத்து ஆகியவற்றில், முத்து ஒன்றாகிறது. முத்து, யானையின் தந்தம், பன்றிக் கொம்பு, முத்துச்சிப்பி, பாக்குமரம், வாழை,

சங்கு, வலம்புரிச்சங்கு, மீன்றலை, கொக்கு, தாமரை, மின்னார்கழுத்து, நெல், மூங்கில், கரும்பு, பசுவின் பல், பாம்பு, மேகம், சந்த்ரன், உடும்பு, முதலை, சனீச்வரர் தோள், சிங்கத்தின் புஜம், தென்னை ஆகிய இருபத்து மூன்றிடங்களினின்றும் பிறக்குமென்பது மூத்தோர் வாக்கு. ஆனால் ஸகலருக்கும் "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" தெரிந்துள்ளது மேலே கூறியவைகளுள் நான்காவதாகிய 'முத்துச்சிப்பி'யினிடமிருந்து முத்துப்பிறக்கிற தென்பதேயாம்.

முத்து ஓர் கடல் படுபொருளாகும்; முத்துச்சிப்பியோ ஒரு ஜலசரம். அதன் இடைக்கு மத்தியில் ஓடுகளால் மூடப்பட்ட மெல்லிய தோல்களுண்டு. இந்தச் சதையிலே தான் சிப்பிகளுக்கு வாயும் வயிறுமிருக்கும். இந்தத் தோல்களினூடே பொடிமணல் புகுந்து அப்பூச்சியை மிகுந்த துன்பத்துக்குள்ளாக்குகிறது. அப்பொழுது எரிச்சல் பொறுக்க மாட்டாமல் முத்துச்சிப்பி அங்குமிங்கும் புரள ஓர்விதச் சுண்ணாம்புத் தன்மையுள்ள நீர் கீழேவிழுகிறது. இதைச் சீனரே (Chinese) முதலிலறிந்தார்களாம். இந்நீரே முத்தாகிறதென விவேக சாஸ்த்ரிகள் கூறுகிறார்கள்.

நமது அறிவிற்சிறந்தமுன்னோர்களும், அவர்களுளொருவராகிய பர்த்ருஹரியும் முத்துக்கள் மழைத்துளிகளினால் உண்டாகின்றனவெனக்கருதினார்கள். எப்படியெனில், முத்துச்சிப்பிகள் மழைபெய்யுமளவும் ஸமுத்ர மட்டத்துக்குமேல் வந்து திரிந்துகொண்டிருக்குமாம்; மழை பெய்யும்பொழுது அவை வாய்திறக்க விழும் மழைத்துளியே முத்தாகிறதாம். மேலும் ஆடிமாஸம் ஸ்வாதி நக்ஷத்ரம் உச்சியிலிருக்கும்பொழுது விழுந்த நீர்த்துளியால் உண்டான முத்தே மிக ச்லாக்யமானதென்று சொல்வதுண்டு. இவையெல்லாம் உண்மையல்ல. ஏனெனில் முத்துச்சிப்பிகள் கீழேயிருப்பவைகளே யல்லாமல், ஒரு பொழுதும் மேலே வரப்பட்டவைகளல்ல.

முத்துச்சிப்பியிலிருந்து முத்துக்கள் லங்கையிலுள்ள மன்னார்குடாவிலும், மறிச்சுக்கட்டி என்னும் ஊரையடுத்த கடல்களிலும், இந்தியாவில் தூத்துக்குடி, பாம்பன் கடலோரத்திலும், பெர்ஷியன் கடலிலும், கலிபோர்னியாவிலும் எடுக்கப்படுகின்றன. முத்துக்களில் வெண்முத்து, செந்நீர்முத்து, ஆணிமுத்து என மூன்று வகைகளிருக்கின்றன. வெண்முத்துக்கள் பால் போன்ற வெண்மை நிறமும், செந்நீர் முத்துக்கள் ஓர்விதச் சிவந்த நிறமும், ஆணிமுத்துக்கள் உருண்டை வடிவமும் உடையன. நன் முத்துக்கள் பளபளப்பாயும், கனமாயும், வெண்மை நிறம் பொருந்தியுமிருக்கும். நன் முத்துக்கள் பலவர்ணங்களிலு மகப்படுகின்றன. மெக்ஸிகோ (Mexico)வில் அகப்படும் முத்து கபிலவர்ணமுடையதாம்.

முத்துச்சிப்பி இருக்குமிடத்துக்கு முத்துக்குளிக்கிறவர்கள் படகிலேறிச் செல்வார்கள். அவர்கள், தண்ணீரிலிறங்கிச்சிப்பி எடுக்கிறவர்கள் பத்துப்பேரும், அவர்களை மேலே தூக்கவும் கீழே இறக்கவும் படகில் நிற்பவர்கள் பதின்மூன்று பேரும், ஆக இருபத்துமூன்று பேர்களாவர். ஜலத்திலிறங்கிக் குளியோடுகிறவர்கள் ஐந்தைந்து பேர்களாய் மாறி மாறி இறங்குவார்கள். ஸாதாரணமாய் முத்துக்குளித்தல் பிப்ரவரி மாஸந்தொடங்கி ஏப்ரல் மாஸம் வரை நடக்கும். காலை ஏழு மணிக்குக் குளிக்கத்தொடங்கி ஸூர்யனுச்சிக்கு வருமளவும் குளிப்பார்கள். அதற்குள் நாற்பது அல்லது ஐம்பது தடவை மூழ்குவார்கள். லங்கையிலுள்ள சிங்களர்கள் முத்துக்குளிக்க இறங்கு முன் தெய்வபக்தியுள்ள மலையாள மந்த்ரவாதிகளை ஆருடங்கேட்டுக்கொண்டும், உபவாஸமிருந்துகொண்டும், உடம்பில்



உப்பினால் அரிப்பில்லாமலிருக்க விளக்கெண்ணெய் தடவிக்கொண்டும் இறங்குவார்கள். கடலில் மூழ்கின இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் வெளிவருவார்கள். இறங்கும் பொழுது கல்லைக்கட்டிக்கொண்டும், முத்துச்சிப்பிகள் பொருக்கி வரவேண்டிய பையை ஒரு காலில் மாட்டிக்கொண்டும் இறங்குவார்கள். இறங்கிய பிறகு தங்கள் இடது காலினால் சிப்பிகளைப் பொறுக்கி பையில்போட்டு நிரப்பிக்கொண்டு, மேல் வருவதற்கு அறிகுறியாகக் கயிற்றை அசைப்பார்கள். உடனே படகிலுள்ள மாலுமிகள் இவர்களை மேலே தூக்கி இழுத்து விடுவார்கள்.

பாலினீஷ்யாவில் முத்துக்கள் எடுக்கப்படுகின்றன. ஆனால் அங்கே கல்லைக்கட்டிக்கொண்டு இறங்குவதில்லையாம். அங்கே பெண்டிர்கள், முத்துக்களிப்பதில் ஆடவர்களைக் காட்டிலும் ஸாமர்த்ய முடையவர்களென்பது கேட்க மிகவும் விந்தையாயிருக்கிறது.

முத்துக்குளிக்கிற காலங்களில் அநேக இடங்களிலிருந்து வ்யாபாரிகளும், அதிகாரிகளும், முத்துக்குளிக்கிறவர்களும் வந்திருப்பார்கள். அவர்கள் குடிசைபோட்டு வஸிக்கிறது வழக்கம். சிப்பிகளின் துர்நாற்றத்தினாலும், அசுத்த ஆகாயத்தினாலும், மிகுதியான ஜன நடமாட்டத்தினாலும், அக்காலங்களில் அடிக்கடி வாந்திபேதி முதலிய கொடிய வ்யாதிகள் ஸம்பவிப்பதுண்டு. அதற்காக அந்தக் குடிசைகளை முத்துக்குளித்தல் முடிந்தவுடன் எரித்து விடுவார்கள்.

ஆரண்யங்களில் சிங்கம், புலி முதலிய துஷ்ட ம்ருகங்கள் இருக்கிறது போல ஸமுத்ரத்திலும் கொடிய சுறுமீன்களிருக்கின்றனவாம். அவை மனிதரையும் விழுங்கச் சக்தியுள்ளவையாகையால் முத்துக்குளிக்கிறவர்கள் மிகவும் பயப்படுவார்கள். ஆனால் படகிலிருப்பவர்கள் கூச்சல் போட்டுக் கொண்டேயிருப்பார்களாகையாலும், ஜலம் அசைந்து கொண்டேயிருக்குமாகையாலும் அவை வந்து தாக்கப் பயப்படுமாம். முத்துக்குளிக்கிறவர்கள் குளித்தெடுத்த சிப்பிகளில் மூன்றிலொரு பங்கைத்தாமெடுத்துக்கொண்டு மீதி இரண்டு பங்கை அதிகாரிகளுக்குக் கொடுப்பார்களாம்.

எஸ். ரங்கஸாமி அய்யங்கார்.

## RECLAIMING THE SALINE SOIL]

By T. C. VENKATARAMANA AIYAR.

## களர் நிலத்தை சீர்திருத்தல்.

எவ்வித நிலங்களிலும் களர்பூமியாயிருப்பதை சீர்திருத்தம் செய்து விளை நிலமாக்க வேண்டுமென்றால், அந்நிலவிஸ்தீரணத்திற்கு ஒரு அடி அல்லது 1½ அடி ஆழம் வரையில் கொத்தி மேல்மண்ணை வாரி தூரக்கொட்டிவிட்டு அதில் 50 அடி சதுரத்திற்கு சதுரம் ஸுமார் 5 அல்லது 6 மணங்கு வேர்க்கடலை பிண்ணாக்கு அல்லது வேப்பம் பிண்ணாக்கை நன்றாகப் பொடித்து மேல்பரப்பில் தூவிய பின், அதன் மேல் குளத்துமண், அல்லது ஆற்றுவண்டல் மண்ணைக்கொட்டி ¾ அடி அல்லது 1 அடி ஸமதரையாய்ப்பரப்பி ஸுமார் நாற்பது நாள் விட்டிருந்து அதன்பின் முன் தூவிய பிண்ணாக்கு வரையில் கொத்தி மேல் போட்ட மண்ணும் பிண்ணாக்கும் நன்றாகக் கலக்கும்படிசெய்து, அதன்மேல் ஆட்டு மந்தையை நாலுநாள் வீதம் மடக்கிவைக்கவேண்டும். அப்பால் உழுது நீர் பாயவிட்டு மறுபடியும் இரண்டுசால் உழுது விட்டால் எவ்வகை தான்யங்களையும் விதைக்க, அல்லது பூமியை சேருக்கி நாற்று நட்டு பயிர் செய்ய தகுதியாயிருக்கும். அவைகளை கால க்ரமப்படி களைபிடுங்கி கதிர் சாய்ந்தபிறகு அறுவடை செய்யுங்கால், அதன் விளைச்சல் மற்ற செழிப்புள்ள நிலங்களில் விளையும் விளைச்சலை விட சற்று குறைவாகக் காணப்பட்டாலும், காலக்ரமத்தில் அதுவும் நல்ல நிலமாய் விடும்.

யிந்தி அந்த பூமிக்குச் செழுமை யுண்டாக்கும் வண்ணம் பிண்ணாக்கைத் தூவவேண்டிய அவச்யமே யிராது. காரஸாரமான மட்கின எருவோ அல்லது தழையோ போட்டு வந்தால் போதுமானது.

இத்தேசத்தில் நிலங்களை பண்படுத்துவதற்கு கலப்பை என்ற ஒரே கருவியைத்தான் யாவரும் உபயோகிக்கிறார்கள். இதனால் செய்யும் உழவு ஆழமற்றதாயும் குறைவுள்ளதாயுமிருக்கிறது. இது வெகுவாக உஷ்ணம் மிகுந்த இத்தேசத்து நிலங்களுக்கு எவ்வளவும் போதாது. கடப்பை, நெல்லூர் ஜில்லாக்களில் சற்று ஆழமாய் உழுவதற்கேற்ற ஒருவித கலப்பையை உபயோகிக்கிறார்கள். கோயமுத்தூர் சேலம் ஜில்லாக்களில் வறட்சியான காலங்களில் பருத்திவிளையும் கரிசல் மண்ணில் உழுவது கஷ்ட ஸாத்யமாயிருக்கிறபடியால், நான்கு ஊசிகளையுடைய ஒரு முள்ளைக்கொண்டு கட்டி கட்டியாகப் பெயர்த்து மண்ணைப்புரட்டிப் போடுகிறார்கள். இதனால் மண் புரளுகிறதேயன்றி கொழுமை யுண்டாவதில்லை. ஆனால் இப்படி கட்டிபெயர்ப்பதற்கு முன், ஆமணக்கு, இலுப்பை, கடலை, வேம்பு முதலிய பிண்ணாக்குகளில் ஏதாவது ஒன்றை பூமியின்மேல் தூவிவிட்டு, முள்ளைக்கொண்டு கட்டி பெயர்த்து மண்ணைத்திருப்புவதால் விசேஷ பலனுண்டாகுமென்பதில் தடையில்லை. இப்படியே நீலகிரி ஜில்லாவில் அனேக விடங்களில் பூமியை யுழுவது சருவல்களினால் ஸாத்யமில்லாத படியால், மேற் கண்டபடி முள் போட்டு கட்டிகளைப் பெயர்த்து மண்ணைப்புரட்டுகிறார்கள். ஆனால் இவ்விடத்து விவஸாயிகள் பூமியில் மழையீரம் இருக்கும்பொழுது இவ்விதம் செய்வதால், அடுத்துவருகிற பனியில் இக்கட்டிகள் உடைந்து தூளாகின்றன. பிந்தி அப்பூமிகளில், உருளைக்கிழங்கு, வெள்ளை வெங்காயம் முதலியவைகளைப் பயிரிடுகிறார்கள், இதனால் இவர்களுக்கு ஸாகுபடி ஒருவாறு லாபகரமானதாகக்கண்டாலும், இவர்கள் படும ச்ரமத்திற்கு அதுபோதாதென்றே கூறவேண்டியிருக்கிறது. மேலும் இவர்கள் பூமிக்குக் கொழுப்பையுண்டாக்கத்தக்க மேற்சொன்ன பிண்ணாக்குகளையுபயோகப்படுத்துவதாகக் காணப்படவில்லை.

ஆகவே, பலவகை வித்துகளுக்கும், பூமியில் பலவகையாக ஆழம் வேண்டும். தவிர எவ்வகை விதைகளுக்கும் அடித்தரை நன்றாக உழப்பட்டு பதமாயிருக்கவேண்டும். ஆழமாய் உழாமல் இடப்பட்ட பயிரெல்லாம் காலமழையால் கைகூடிவிளைந்தாலும், தண்ணீர் தேக்கங் கொண்டால் ஸ்வல்பகாலங்கூடத் தாளாது. பெருங்காற்றும், அடைமழையும் கூடில் அழிந்தேபோகும். இத்துடன் அதற்கு பலவித வ்யாதிகளும் வெட்டுப்பூச்சி முதலிய புழுப்பூச்சிகளும் எங்கே யென்று காத்திருக்கும். புதிய பயிர்த்தொழிலின் முறைமைப்படி ஸாகுபடியாகும் நிலங்களின் உழவு நன்றாய் ஆழமாக இருக்கவேண்டும். ஆழமாக உழுவதால் உடனே விளைச்சலுக்கு ஆகாத நிலங்களும் உண்டு. கீழ்த்தரை பிசுக்கென்று வழவழத்த மண்ணாயிருக்கின் அம்மண் உழவினால் மேலே கிளம்ப அது நவீன விவஸாய முறைமைக்குஏற்றதன்று. இப்படி மேல்படிந்த மண் வெயில் காற்று முதலியவைகளின் செய்கையால் தன்னியல்பு மாறிநாளடைவில் ஸாகுபடிக்கு பதம்பெறும். அடித்தரை சாந்தில்லாமல் மேல்மண்ணைவிட ஸாரங்குறைந்திருந்தால், அந்த நிலமும் ஆழமாய் உழுதவுடன் வேளாண்மைக்கு ஏற்றதாயிராது. ஆயினும் ஆழமாக உழப்பட்ட நிலங்களுக்கு ஸத்துள்ள எரு அதிகமாய்ப் போடவேண்டியது அவச்யமாகிறது. பயிரிடப்பட்ட விதைகளின் வேரானது தனக்கு வேண்டிய உணவைப்பெறுவதற்கு ஆஸ்பதமிருக்க வேண்டும். ஆழமான உழவினால் பயிர் நிலத்தில் ஆழ்ந்தே வேர் பற்றும். உழுதிட்ட பாகங்களில் தக்க உணவில்லாவிட்டால், மேலேமிதப்பாய் நின்று பயிர்கள் காற்றுக்காலத்தில் சாய்ந்துவிடும்.



இப்படி களர் நிலங்களை சீர்படுத்தினால் ஒவ்வொரு க்ராமத்திலுமுள்ள எவ்வளவோ விஸ்தீரணமுள்ள பூமியானது ஸாகுபடிக்குத்தக்கதாகு மென்பதில் தடையில்லை.

டி. ஸி. வேங்கட்ராமணய்யர்.

## THE SENSE OF TASTE.

## சுவையறியும் இந்த்ரியம்.

சப்தம், ஸ்பர்சம், ரஸம், ரூபம், கந்தம் என்னும் ஐந்து இந்த்ரியங்களில் ரஸம் அதாவது சுவையும், கந்தம் அதாவது வாஸனையும் மற்ற இந்த்ரியங்களிலிருந்து சில விஷயங்களில் வித்யாஸப்படுகின்றன. இந்த இரண்டு இந்த்ரியங்களுக்கும் மேல்நாட்டார் ரஸாயன இந்த்ரியங்கள் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் பொருள்கள் ஒன்றோடொன்று ஸம்பந்தப்பட்டுக் கொண்டிருந்தால் தான் ரஸாயன மாறுபாடுகள் ஏற்படுவது முடியும். அது போல பொருள்களாவது அல்லது அவைகளின் ஆவியாவது மூக்கிலும், நாக்கிலும் பட்டுக்கொண்டிருந்தால் தான், அந்தப் பொருள்களின் வாஸனையும் ருசியும் இப்படிப்பட்டவை யென்பது தெரியவரும். கண்ணும், காதும் அப்படியல்ல. பொருள்கள் தூரத்திலிருந்த போதிலும் அவைகளினுடைய ரூபத்தையும் சப்தத்தையும் ஸுலபமாய் அறிந்து கொள்ளக்கூடும்.

சுவையறியும் இந்த்ரியமும், வாஸனை யறியும் இந்த்ரியமும் மற்ற இந்த்ரியங்களைப் போல் அவ்வளவு உயர்வு அடைந்தவையாக இராவிட்டாலும், இவைகள் மனிதனுக்கு ரொம்ப உபயோகமான கருவிகளாக இருக்கின்றன. மனிதன் தனக்கு வேண்டிய உணவை அருந்ததாய்ப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்கு இவைகள் ரொம்பவும் அவச்யமாயிருக்கின்றன. இதனால் தான் அந்த இரண்டு இந்த்ரியங்களும் வாயிலும் வாயின் பக்கத்திலும் அமைக்கப் பட்டிருக்கின்றன. இவைகள் மனிதனுக்கு உணவு விஷயத்தில் எவ்வளவு தூரம் உபயோகப்படுகின்றனவோ அதைவிட அதிகமாகவே ப்ராணிகளுக்கு உபயோகப்படுகின்றன. மேலும் ப்ராணிகள் இன்ன பொருள்கள் விஷமுள்ளவை, இன்ன பொருள்கள் கெடுதலைச் செய்யக்கூடியவை என்று அறிந்து கெட்டவைகளைத் தள்ளி, நல்ல பொருள்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள அவைகளுக்கு இந்த இரண்டு இந்த்ரியங்களைத் தவிர வேறு ஸாதனங்கள் கிடையாவென்று அநேகர் நம்பி வருகிறார்கள். ஆனால் மனிதன் விஷயத்தில் இந்த இந்த்ரியங்கள் ரொம்ப உபயோகமுள்ளவையாயிருந்தாலும், ஆகாரப் பொருள்களைத் தெரிந்தெடுப்பதில் இவைகளையே நம்பியிருப்பதற்கில்லை. ஏனென்றால், விஷமான உணவுப் பொருள்களில் சில நல்ல ருசியுள்ளவையாகவும், கெடுதலில்லாத உணவுப் பொருள்களில் சில கெட்ட ருசியுள்ளவையாகவும் இருக்கின்றன.

சிலருக்கு தேகத்தின் கோளாறுகளாலும், வேறு சில காரணங்களாலும் பொருள்களின் சுவை மாறுபட்டுக் காட்டுவதுண்டு. ஜல தோஷம் ஏற்படுதல், தேகத்தின் நரம்பு ஏற்பாடுகள் கெடுதலடைதல் முதலிய பல வ்யாதிகளால் சிலருக்கு பொருள்களின் ருசியே தெரியாமல் போவதுண்டு. பக்ஷவாதம் வந்தால் அநேகருக்கு உப்பின் ருசி தெரியாமல் போவது ஸகஜமாம். காக்கை வலிப்பு வந்தவர்களுக்கு தித்திப்பு ருசி தெரியாமல் போவதுண்டாம். அவர்களுக்கு சில ஸமயங்களில் உவர்ப்பு ருசி தெரியாமல் போகுமாம். ஆனால் கசப்பான பதார்த்தங்களை தெரிந்து

கொண்டுவிடுகிறார்கள். பக்ஷவாதம் வந்தவர்களுக்கு ஸாதாரணமாய் வாயிலும் நாக்கிலும் ஒரு பக்கத்தில் தான் உணர்ச்சியற்றுப் போவதுண்டு. பிறர் தம்மைக் கொடுமையாக நடத்திக் கொன்றுவிடுவார்களோ என்று ஸதா ஸர்வகாலமும் பயந்து கொண்டிருப்பவர்கள் தங்களுக்கு யாராவது விஷம்வைத்துக் கொன்று விட்டால் என்ன செய்கிறதென்று ஸந்தேகப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆகாரப் பொருள்களில் ஸாதாரணமாயுள்ள ருசியை விட அதிகமாயிருப்பதாக எண்ணுவது வழக்கமாம். சில வ்யாதிஸ்தர்களுக்கு ருசி தட்டுக்கெடுதல் உண்டு. சிலருக்குக் கசப்பான மருந்தைக் கொடுத்தால் அது உப்பாயிருக்கிறதென்று அவர்கள் சொல்வார்கள். இதுபோலவே மற்ற ருசியுள்ள மருந்துகளின் உண்மையான ருசி தெரியாமல் வேறு ருசியுள்ளதாகத் தெரிவதுண்டு.

நாக்கில் சில மருந்துகளைத் தடவினால் ருசியே தெரியாமல் போவதுண்டு. கோக்கேய்ன் என்னும் மருந்தை நாக்கில் அதிகமாகத் தடவினால், அந்த மருந்துபட்ட இடத்தில் ருசியே தெரியாமல் போகும். அந்த மருந்தைக் கொஞ்சமாகத் தடவினால் கசப்புத் தெரியாமல்போகும். சில வ்யாதியஸ்தர்களுக்கு சுவையறியும் உணர்ச்சி கெட்டுப்போய், அவர்கள் ருசி கெட்ட பதார்த்தங்களையும் மனஸுக்குப் பிடிக்காத பதார்த்தங்களையும் தின்பதுண்டு. சில ஜனங்கள் மாம்ஸம், அதிலும் முக்யமாய் மானிறைச்சி, கொஞ்சம் அழுகிப் போயிருந்தாலுங்கூட பாதகமில்லையென்று அதை அறுவெறுப்பில்லாமல் தின்கிறார்கள். நாகரீகமற்ற தாழ்ந்த ஜாதிகளில் சிலர் மாம்ஸம் கொஞ்சம் அழுகினதற்கும் ஜாஸ்தியாக அழுகினதற்கும் வித்யாஸம் வைக்காமல் எப்படியிருந்தாலும் பாதகமில்லையென்று தின்கிறார்கள்.

ஏதாவது ஒரு ருசியுள்ள பொருளைத் தின்ற பிறகு வேறு ருசியுள்ள பொருளைத் தின்றால், பின்னால் தின்றபொருளின் ருசி மாறுபட்டிருப்பதாகத் தெரிவதுண்டு. ரொம்ப கசப்பான அல்லது உப்பான பொருள்களைத் தின்ற பிறகு சுத்த ஜலத்தைக்குடித்தால் ஜலம் தித்திப்பாய் இருப்பதாகத் தெரியும். நெல்லிக்காயைத் தின்றபிறகு சுத்தஜலம் குடித்தால் ஜலம் தித்திப்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். பொடாஸியம் க்ளோரேட் என்னும் மருந்தை நூறுபாகம் ஜலத்தில் 1 பாகம் விதம் கலந்தால், அந்த ஜலத்துக்கு ருசி ரொம்பக் குறைவாக இருக்கும். அதைக்கொண்டு வாயைக் கொப்பளித்துப்பிறகு சுத்த ஜலத்தைக்குடித்தால் சுத்தஜலம் ரொம்ப தித்திப்பாக இருக்கும். மயில் துத்தத்தையோ அல்லது பொடாஸியம் பெர்மாங்கனேட் என்னும் மருந்தையோ ஜலத்தில் கலந்து வாயைக் கொப்பளித்துப்பிறகு சுருட்டுக்குடித்தால், சுருட்டின் புகை நாக்கில் பட்டவுடன் அது அறுவெறுப்புள்ள தித்திப்பாக இருக்கும்.

அதிக ருசியுள்ள பதார்த்தங்களாகிய உப்பு, சர்க்கரை, காடி ஆகிய இவைகள் மனிதனுக்கு ரொம்ப அவச்யமாய் வேண்டியிருப்பவை. இவைகளில் உப்பு மனிதனுக்கு அத்யாவச்யமானது. அதற்கு ப்ரதியாக அதைப்போல் உபயோகப் படக்கூடிய பொருள் வேறொன்றும் கிடையாது. காடிக்குப்பதிலாக எலுமிச்சம்பழ ரஸம்போன்ற புளிப்புள்ள பதார்த்தங்களை உபயோகிக்கலாம். சர்க்கரை தனிப் பதார்த்தமல்ல. கரி, ஹைட்ரொஜன் (ஜலவாயு), ஆக்ஸிஜன் (ப்ராணவாயு) ஆகிய இந்த மூன்றும் ஸம்பந்தப்பட்டு உண்டான சில பொருள்கள் சேர்ந்த கலப்புப் பதார்த்தமாகும். இது மனிதனுக்கு உணவுப்பொருளாக இருப்பதோடுகூட, இது இனிப்பான ருசியுள்ளதாகவும் இருப்பதால் சாப்பாட்டில் ப்ரியம் ஏற்படும்படி செய்கிறது.



நீரிழிவுரோகம் உள்ளவர்களுக்கு சர்க்கரை ரொம்ப கெடுதலானது. இதனால் அந்த வ்யாதியஸ்தர்கள் சர்க்கரையே இல்லாமல் சாப்பிட வேண்டியிருக்கிறது. ஆனால் ரஸாயன சாஸ்த்ரிகள் சர்க்கரைக்கு ப்ரதியாக சில தித்திப்பான பொருள்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகளில் முக்யமானது 'ஸாக்கரின்' என்பது. இது சர்க்கரையைவிட ரொம்ப தித்திப்புள்ளது. இது விஷத்தன்மை யுள்ளதல்ல. ஒருவர் 9-நாளில் 1-ராத்தல் 'ஸாக்கரினை'த் தின்றாராம். இந்த 1-ராத்தல் 'ஸாக்கரின்' ஸாதாரணமாய் ஒருவருக்கு நாலைந்து வர்ஷத்துக்குப் போதுமானது. இவ்வளவு 'ஸாக்கரின்' தின்றும் அவருக்கு யாதொரு கெடுதலும் உண்டாகவில்லையாம். ஸாக்கரின் உணவு பதார்த்தமல்ல. அப்படியே அதற்கு ஆகார குணங்கள் இருந்தாலும், ஸாதாரணமாய் உபயோகிக்கும் அளவு ரொம்ப குறைவானதால், அதினால் ஏற்படக்கூடிய உணவு ரொம்பவும் குறைவானதாகவே இருக்கக் கூடுமென்று சொல்லப்படுகிறது.

## '17 INCHERS' FOR GERMAN WARSHIPS.

## ஜெர்மன் யுத்தக்கப்பல்களுக்கு 17-அங்குல பீரங்கிகள்.

ஜெர்மன் யுத்தக்கப்பல்களில் பெரும்பாகம் இதுவரையில் யுத்தத்துக்கு வராமல் பதுங்கியிருந்து வருகின்றன. அநேகர் அவைகள் அப்படியிருப்பதற்குக் காரணம் அவைகளில் 17-அங்குலம் குறுக்களவுள்ள பெரிய பீரங்கிகள் ஏற்றப்போகிறார்கள் என்பதே என்று சொல்லுகிறார்கள். இந்தப்பெரிய பீரங்கிகளைக் கொண்டுதான் ஜெர்மானியர்கள் லீயஜ், நாமூர், ஆண்ட்வெர்ப் முதலிய பட்டணங்களின் கோட்டைகளைத்தாக்கி அவைகளைப் பிடித்தார்களென்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பெரிய பீரங்கிகளை தங்கள் போர்க்கப்பல்களில் ஏற்றிக்கொண்டு ஜெர்மானியர்கள் கடல் யுத்தத்துக்கு வருவார்களானால் அவர்களே ஜயிக்கக் கூடுமென்று சிலர் எண்ணி வருகிறார்கள். ஆனால் அப்படி எண்ணுவது சரியல்லவென்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை சொல்லுகிறது. ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட அளவுள்ள பீரங்கிகளை ஏற்றுவதற்காகக் கட்டப்பட்ட கப்பல்களில் அந்த அளவைவிட அதிகமான அளவுள்ள பீரங்கிகளை ஏற்றிவைப்பது முடியாத கார்யமென்று அந்தப் பத்ரிகை சொல்லுகிறது.

ஒரு போர்க்கப்பல் கட்ட ப்ளான்கள் போடுவதற்கு முன்னால் அந்தக்கப்பலில் எத்தனை அங்குலம் அளவுள்ள பீரங்கிகள் ஏற்றப்படும், அப்படிப்பட்ட பீரங்கிகள் எத்தனை ஏற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது வழக்கம். எந்தமாதிரியான பீரங்கிகள் ஏற்ற உத்தேசித்திருக்கிறதோ அந்த பீரங்கிகளிலிருந்து வெடி தீர்க்கும்போது, உண்டாகும் அதிர்ச்சியை போர்க்கப்பல் தாங்கும்படியாக அதன் மேல் தட்டுகள், கவசங்கள், மற்ற பாகங்கள் முதலியவைகள் அமைக்கப்படும். ஒரு குறிப்பிட்ட அளவுள்ள பீரங்கிகளுக்காகக் கட்டப்பட்ட கப்பலில் அந்த பீரங்கிகளைவிட மிகவும் பெரியவையான பீரங்கிகளை ஏற்றி யுத்தத்துக்குக் கொண்டுபோனால், இரண்டு மூன்று தடவை பீரங்கிகள் வெடி தீர்த்தவுடனேயே கப்பலானது யுத்தம் செய்ய லாயக்கில்லாமல் போய்விடும். கப்பல்களின்மேல் கவசங்கள் பிடிப்புவிட்டுப் போய்விடும்; பீரங்கிகள் ஏற்றி வைக்கும் பீடங்கள் கெட்டுப்போகும்.

நிற்க, ஜெர்மனியின் யுத்தக் கப்பல்களிலுள்ள ரொம்ப பெரிய பீரங்கிகள் 12-அங்குலம் குறுக்களவுள்ளவை. இவைகளில் ஒவ்வொன்றும் 48 டன் நிறையுள்ளது. இவைகளிலிருந்து சுடப்படும் குண்டுகள் ஒவ்வொன்

றும் 1,000 ராத்தல் நிறையுள்ளன. 12-அங்குல பீரங்கிகள் ஏற்றியுள்ள கப்பலில் 15-அங்குல பீரங்கி ஏற்றுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒரு 15-அங்குலபீரங்கி 90-டன் நிறையுள்ளது. அதாவது 15-அங்குல பீரங்கி 12-அங்குல பீரங்கியைவிட 42 டன் நிறை அதிகமுள்ளது. அதிலிருந்து சுடப்படும் குண்டுகள் 1367-ராத்தல் நிறையுள்ளவை. அதாவது ஒரு 15-அங்குல பீரங்கியின் குண்டு 367-ராத்தல் அதிக நிறையுள்ளது. 12-அங்குல பீரங்கிகள் ஏற்றுவதற்காகக் கட்டப்பட்ட ஒரு கப்பலில் 15-அங்குல பீரங்கிகள் பத்து ஏற்றுகிறார்கள் என்று வைத்துக்கொண்டால், பீரங்கிகளின் அதிக நிறையே 430-டன் ஆகிறது. அவைகளுக்கு வேண்டியிருக்கும் குண்டுகளின் அதிகப்படி நிறை மொத்தம் 130 டன் ஆகும். இவைகளைத்தவிர, பீரங்கிகளையேற்றி வைப்பதற்குவேண்டிய கட்டிடங்கள் வகையராக்களும் ரொம்ப நிறையாகும். இவைகளைச் சேர்த்தால் அதிகப்ப:டியான நிறை 2000 டன் ஆகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு நிறை அதிகமாக ஏற்றப்பட்ட ஒரு கப்பல் யுத்தத்துக்குப்போனால் முதலில் அதிலிருந்து பீரங்கிகள் சுடும்போதே அது ரொம்ப சேதப்பட்டு யுத்தத்துக்கு லாயக்கில்லாமல் செப்பனிடத் திரும்பிவிட வேண்டியதுதான். ஆகையால் ஜெர்மானியர்கள் தங்களுடைய கப்பல்களில் 15-அங்குலம் அல்லது 17-அங்குலம் குறுக்களவுள்ள பீரங்கிகளை ஏற்றிக்கொண்டிருக்கிறார்களென்பது வீண் ப்ரமையென்றும், அப்படி தவறி ஏற்றினாலும் கப்பல்கள் யுத்தத்தில் ரொம்பவும் ப்ரயோஜனப்பட மாட்டாவென்றும் மேல்சொன்ன பத்ரிகை எழுதுகிறது.

## SOME MILITARY COMMANDERS.

## சில யுத்த தளகர்த்தர்கள்.

### ஸர் ஜேம்ஸ் வில்காக்ஸ்.

இந்தியாவிலிருந்து யுத்தத்துக்கு அனுப்பப்பட்டிருக்கும் லாகூர்டிவிஷன், மீரட் டிவிஷன் ஆகிய இந்த இரண்டு பிரிவுகளும் சேர்ந்த ஸைன்யங்களுக்கு லெப்டினண்ட் ஜெனரல் ஸர் ஜேம்ஸ் வில்காக்ஸ் என்பவர் கம்மாண்டர் அதாவது தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் 1857-ம் வர்ஷம் பிறந்தார். 1868-ம் வர்ஷத்தில் ராணுவத்தில் சேர்ந்தார். 1879-80-ம் வர்ஷத்து ஆப்கன் யுத்தத்திலும், 1886-89-ம் வர்ஷத்து பர்மா படையெடுப்பிலும் 1885-ம் வர்ஷத்து ஸூடான் படையெடுப்பிலும் இன்னும் சில இந்திய எல்லைநாட்டு யுத்தங்களிலும், யுத்தம் செய்திருக்கிறார். கொஞ்சகாலத்துக்கு முன்னால், இந்தியாவிலுள்ள 'டிவிஷன்' என்னும் ஸைன்யப் பிரிவுகள் ஒன்றின கம்மாண்டராக இருந்தார்.

### க்ராண்ட் ட்யூக் நிக்கலாஸ்.

இவர் ரஷ்ய ஸைன்யங்களின் ஸேனாதிபதி. இவர் வெகு காலமாக ராணுவ விஷயங்களில் ஸாமர்த்யசாலி யென்று பெயர் வாங்கியிருக்கிறார். 1877-ம் வர்ஷத்தில் நடந்த ரஷ்ய துருக்கிய யுத்தத்தில் ரொம்ப ஸாமர்த்யமாய் யுத்தம் செய்ததற்காக, அப்பொழுது இருந்த சக்ரவர்த்தி இவருக்கு ஒரு உயர்ந்த பட்டம் கொடுத்து, அந்தப் பட்டத்துக்குள்ள விருதை தமது கையாலேயே இவருக்கு போட்டு விட்டாராம். இவருக்கு ராணுவ டிபார்ட்மெண்டுகள் ஒவ்வொன்றிலும் விசேஷஞானம் உண்டு. ரஷ்ய துருப்புகளை ஒன்று சேர்ப்பதில் ரொம்ப தாமஸமாகும் என்று ஜெர்மானியர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனால் க்ராண்ட் ட்யூக் நிக்கலாஸ் தமது ஸாமர்த்யத்தால் சேனைகளை வெகு சீக்ரமாகத் தயார் செய்து ஆஸ்ட்ரியா



மேலும் ஜெர்மனிமேலும் படையெடுத்துப் போனது இவரது ஸாமர்த்யம் இவ்வளவென்பதைக் காட்டுகிறது.

### ஆர்ச்-ட்யூக் ப்ரிடரிக்.

இவர் ஆஸ்ட்ரியா ஹங்கேரியினுடைய ஸைன்யங்களின் ஸேனாதிபதி. இவர் ஸ்பெய்ன் தேசத்து ஆல்பான்ஸோ அரசருடைய மாமனார். இவருக்கு இப்போது 58-வயஸாகிறது. வெகு காலம் ராணுவத்தில் உத்யோகம் பார்த்து வந்திருக்கிறார். இவர் ரொம்ப பணக்காரராம். இவருடைய பாட்டனாகிய ஆர்ச்-ட்யூக் சார்ல்ஸ் என்பவர் க்யாதிபெற்ற பெரிய நெப்போலியன் சக்ரவர்த்தியை ஒரு யுத்தத்தில் தோற்கடித்தாராம்.

### ஜெனரல் ராடுமில் பட்னிக்.

ஸெர்விய ஸைன்யங்களின் ஸேனாதிபதியின் பெயர் ஜெனரல் ராடுமில் பட்னிக். இவர் 1849-ம் வர்ஷம் பிறந்தார். பால்யத்தில் ரஷ்யாவிலுள்ள பிட்ரொக்ராடுக்கும், ப்ரான்ஸூக்கும் போய் ராணுவ விஷயங்களில் பயிற்சி பெற்று வந்தார். இவருக்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலுமுள்ள ராணுவ முறைகள் நன்றாகத் தெரியும். ப்ரான்ஸிலிருந்து திரும்பி வந்த பிறகு ஸெர்விய ராணுவ டிபார்ட்மெண்டில் சேர்ந்து ஸெர்விய ஸைன்யங்களைச் சீர்திருத்தம் செய்து உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார். இவர் பால்கன் யுத்தத்தில் துருக்கியையும், பல்கேரியாவையும் வெகு சீக்ரம் தோற்கடித்ததைக் கொண்டு இவருடைய திறமையை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். இவருக்குப் படாடோபம் கிடையாது. ஐந்து பாஷைகள் நன்றாய்ப் பேசவரும். ஸைன்யங்கள் இவரிடத்தில் ரொம்ப விச்வாஸமாயிருக்கின்றனவாம்.

### அட்மிரல் டேவா.

இவர் ஜப்பானின் கப்பல் படையின் பிரிவுகளில் ஒன்றுக்குத் தலைவராக இருக்கிறார். சீனாவில் ஜெர்மனிக்கு ஸொந்தமான கயாச்சௌ ப்ரதேசத்தைப் படையெடுக்க அனுப்பப்பட்டிருந்த கப்பல் படையை இவர் நடத்தி வந்தார். இவருக்குக் கப்பல்படை விஷயங்களில் விசேஷ ஞானமும் அனுபோகமும் உண்டு. இவர் 1855-ம் வர்ஷம் ஜனனமானார்.

ஜப்பானுக்கும் சீனாவுக்கும் நடந்த யுத்தத்திலும் சீனாவில் நடந்த 'பாக்ஸர்' கலகத்திலும், ரஷ்யோ ஜப்பானிய யுத்தத்திலும் கப்பல் யுத்தம் செய்திருக்கிறார்.

## THE CO-OPERATIVE COMMITTEE.

## கோவாபரேடிவ் கமிட்டி.

சென்ற ஐப்பசிமாஸத்து ஸஞ்சிகையில் கோவாபரெடிவ் முயற்சியைப்பற்றி விசாரணை செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்களென்று எழுதியிருந்தோம். அந்தகமிட்டியார் ஸமீபத்தில் பம்பாயிலும் சென்னையிலும் கூடி கோவாபரெடிவ் முயற்சியில் ஸம்பந்தப்பட்டிருப்பவர்களில் சிலரை அந்த முயற்சிவிஷயமாய் விசாரித்தார்கள்.

பம்பாயில் இந்தக் கமிட்டி கூடினபோது விசாரிக்கப்பட்டவர்கள் சொன்ன விஷயங்களைக் குறிப்பிடுகிறோம். ஸர் விட்டலதாஸ் தாக்கர்ஸே என்பவர் இந்தக் கோவாபரேஷன் முயற்சியின் ஆரம்பதசையில் கவர்ன்மெண்டார் அந்த முயற்சி சரியாக அபிவ்ருத்தியடைவதற்காக ஸங்கங்களுக்கு நன்றாய்ப் பணம் செலவழித்து ஸங்கங்களை மேற்பார்வை பார்த்து வரவேண்டுமென்று சொன்னார்.

ராவ் ஸாகிப் எஸ். எஸ். தால்மாகி என்பவர் இந்த முயற்சி ஐக்ய ஏற்பாட்டில் நடை பெற வேண்டுமென்றால் ஸென்ட்ரல் பாங்கிகள், யூனியன்கள் ஆகிய இவைகளினுடைய நிர்வாகத்தை ரூரல் ஸங்கங்களே பெரும்பாலும் கைக்கொள்ளவேண்டுமென்று சொன்னார். இப்போது ஷை ஸங்கங்களின் நிர்வாகம்

ரெஜிஸ்ட்ரார், அவருடைய ஸிப்பந்திகள், ஆகிய இவர்களுடைய விசாரணையிலிருந்து வருகிறது. ஆரம்பத்தில் இப்படியிருக்க வேண்டியது ந்யாயமானாலும், ஸங்கங்களின் நன்மையை யுத்தேசித்து அவைகள் ஸென்ட்ரல் பாங்கிகளின் நிர்வாகத்தை நடத்திவரும்படிக்கு அவைகளுக்கு கற்றுக்கொடுக்கவேண்டியது அவச்யமாகும். இதற்கு முன்னதாக, ஸங்கத்தின் மெம்பர்கள் அந்த ஸங்கத்தின் கார்யங்களில் ரொம்ப ஊக்கமெடுத்துக்கொள்ளும்படி அவர்களைத் தூண்டவேண்டியது அவச்யமாகும் — என்று ராவ் ஸாகிப் தால்மகி சொன்னார்.

இந்திய ஊழிய ஸங்கத்தின் மெம்பராகிய மிஸ்டர் ஜி. கே. தேவதார் இந்தக் கமிட்டிக்கு புதிதாக ஒரு யோசனை சொன்னார். அதாவது கோவாபரெடிவ் ஸங்கங்களில் ஸெக்ரெடரிகளாக வர இஷ்டப்படுகிறவர்களுக்கு ஸெக்ரெடரியின் வேலைகளில் பயிற்சி செய்விக்க மாகாண கவர்ன்மெண்டார் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று சொன்னார். கூடுமானால் ஒவ்வொரு வர்ஷமும் ஒரு பரீக்ஷை வைத்து அதில் தேறுபவர்களுக்கு இனாம் கொடுக்கவேண்டுமாம். இப்படிப் பயிற்சிபெற்ற ஸெக்ரெடரிகளை வேலையில் வைத்துக் கொண்டிருக்கும் ஸங்கங்களைத் தனியாகப் பிரித்து வைக்கவேண்டும். 5-வர்ஷகாலம் ஸெக்ரெடரிகளைப் பயிற்சி செய்விப்பதற்காகும் செலவை கவர்ன்மெண்டே பொறுத்துக்கொள்ள வேண்டும். மெம்பர்களைஸெக்ரெடரி வேலைகளுக்குப் பயிற்சி செய்விப்பதில் ஸங்கங்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களை செய்து கொடுக்கவேண்டும். ஸங்கங்கள் தங்களுடைய மெம்பர்களில் இரண்டொருவரை ஸெக்ரெடரிகளாகப் பயிற்சி செய்துகொள்ள அனுப்பி, அந்த ஏற்பாட்டால் நன்மையிருக்கிறதென்று கண்டுவிட்டால் பிறகு, இந்தப்பயிற்சிக்காக ஏற்படும் செலவில் ஒரு பாகத்தை தாங்கள் ஏற்றுக்கொள்ள மறுக்க மாட்டார்கள்—என்று மிஸ்டர் தேவதார் சொன்னார்.

சென்னையில் கமிட்டியார் கூடினபோது விசேஷமாய் ப்ரஸ்தாபித்த விஷயம் தணிக்கை வரிபோடுவதைப்பற்றியும், ஸென்ட்ரல் பாங்கியின் அமைப்பைப் பற்றியுமே. தணிக்கைவரி போடும் விஷயத்தில் கோவாபரெடிவ் ரெஜிஸ்ட்ராராகிய திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லாரும் தணிக்கை வரிபோடக் கூடாதென்று ஆக்ஷேபித்தார்கள். மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை, தமது ஸாக்ஷ்யத்தில், முதலில் வரிபோடுவதைப்பற்றி அநேகர் ஆக்ஷேபித்தாலும் இப்போது பலர் வரிபோடுவதற்கு ஸாதகமாயிருக்கிறார்களென்று சொன்னார்.

மதராஸ் ஸென்ட்ரல் அர்பன் பாங்கிக்கு முன்பு ஸெக்ரெடரியாயிருந்த ஸர் வி. ஸி. தேசிகாசாரியார், தமது ஸாக்ஷ்யத்தில், பொது ஜனங்கள் கொடுக்கும் வரிப்பணத்தை இந்தக் கோவாபரெடிவ் முயற்சியில் அதிகமாகச் செலழிக்கக் கூடாதென்று 'சிலர் சொல்லுகிறார்களென்றும், இந்தக் கோவாபரெடிவ் ஸங்கங்கள் வரி செலுத்தும் பொதுஜனங்களுக்காகத் தான் ஏற்படுத்தப்பட்டன என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்களென்றும், ஒரு ப்ரத்யேகமான ஜாதி, ஜனங்களின் பிரிவு, அல்லது ஒரு குறிப்பிட்ட ப்ரதேசம் என்றில்லாமல் எல்லாருக்கும் பொதுவாய் உபயோகப்படும்படியாக இந்த கோவாபரெடிவ் முயற்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிற தென்றும், இந்த முயற்சிக்காக பணம் செலவழிப்பது, இந்த ராஜதானியிலுள்ள ஏழைகளான விவஸாயிகளையும் தொழிலாளிகளையும் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரச் செலவழித்ததாகுமென்றும் சொன்னார்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா அர்பன் பாங்கியின் ஸெக்ரெடரியாகிய ராவ்பகதூர் ஒய். நாராயணராவ் தமது ஸாக்ஷ்யத்தில் தணிக்கை



வரி போடுவதை ஆக்ஷேபித்துப் பேசினார். இந்த வரி போடுவதால் கவர்ன்மெண்டுக்குக் கிடைக்கக்கூடிய வரும்படி ரொம்ப குறைவாகவே இருக்கும். ஸங்கங்களின் கணக்குகளை கவர்ன்மெண்டார் தணிக்கை செய்கிறார்கள் என்னும் விஷயத்தால் தான் ஜனங்களுக்கு ஸங்கங்களின்மேல் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. மேலும் கவர்ன்மெண்டார் தணிக்கைக்கு 'பீஸ்' கேட்டால், இப்போது சம்பளமில்லாமல் உபகாரமாக ஸங்கங்களுக்கு உழைத்துவரும் ஜனங்கள் தங்களுக்கும் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்பார்கள். இதனால் இந்தக் கோவாபரெடிவ் முயற்சிக்கு ரொம்ப கெடுதல் ஏற்பட்டு இது கடைத்தேறாமல்போகும்—என்று மிஸ்டர் நாராயணராவ் தெரிவித்தார்.

கோயம்புத்தூர் ஜில்லா பாங்கியின் ஸெக்ரெடரியாகிய மிஸ்டர் வி. என். க்ருஷ்ணஸாமி அய்யர், கவர்ன்மெண்டாருக்கு இந்த கோவாபரேஷன் டிபார்ட்மெண்டால் அதிக செலவு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் உயர்ந்த சம்பளத்தில் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார்கள் நியமித்திருப்பதுதானென்றும், கவர்ன்மெண்டார் கோவாபரெடிவ் டிபார்ட்மெண்டை சாச்வதமான டிபார்ட்மெண்டாக்கி, தணிக்கையையும், மேல்விசாரணையையும் மாத்ரம் தங்களிடம் வைத்துக்கொள்வதாகத் தீர்மானித்து, இன்னும் அதிகமாக யூனியன்கள் ஸ்தாபித்து இவைகளிடம் இன்ஸ்பெக்ஷன் வேலையைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுவிட்டால், காலக்ரமத்தில் அவர்கள் (கவர்ன்மெண்டார்) தங்களுடைய உத்யோகஸ்தர்களைக் குறைத்துவிடக்கூடுமென்றும், அப்போது ஜனஸம்மதமில்லாத இந்தத் தணிக்கை வரி போடுவதற்கு அவச்யமே யிராதென்றும் சொன்னார்.

கமிட்டியார்முன் ஸாக்ஷ்யம் சொன்னவர்கள் ஸென்ட்ரல் பாங்கியின் அமைப்பைப் பற்றி ஒருவர்க்கொருவர் அபிப்ராய பேதப்பட்டார்கள்.

ஒரு கக்ஷியார் ஸென்ட்ரல்பாங்கி யென்பது பணம் லேவாதேவி செய்வதற்கு மாத்ரம் ஏற்பட்டதென்றும், அதில் டிவிடெண்டுகள் எவ்வளவுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறதோ அதற்குத் தகுந்தபடி பாங்கி ரொம்ப நல்ல ஸ்திதியிலிருக்கிறதெனவும், ரொம்ப உபயோகப்பட்டு வருகிறதெனவும் ஏற்படுமென்றும், கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸென்ட்ரல் பாங்கிகளில் ஷேர் ஹோல்டர்களாக இருந்தால் அதாவது ஸென்ட்ரல் பாங்கிகளில் பங்கு வாங்கினால் கெடுதல்கள் நேரிடக்கூடுமென்றும், கோவாபரெடிவ் ஸங்கங்களின் தணிக்கையையும் மேற்பார்வையையும் ஸென்ட்ரல் பாங்கிகள் ஏற்றுக்கொள்வது கூடாதென்றும் சொன்னார்கள்.

இன்னொரு கக்ஷியார் ஸென்ட்ரல் பாங்கிகளில் அதிகமாக டிவிடெண்ட் கொடுக்க எதிர்பார்ப்பது கோவாபரேஷனின் கொள்கைக்கு விரோதமானதென்றும், ரூரல் ஸங்கங்களின் நன்மைக்காகத்தான் ஸென்ட்ரல் பாங்கிகள் ஸ்தாபிக்கப்படுகின்றனவென்றும், ஆகையால் ரூரல் ஸங்கங்கள் தான் அதிகமாக ஸென்ட்ரல் பாங்கிகளில் மெம்பர்களாக இருக்கவேண்டுமென்றும், பாங்கிக்கு ஒரு கௌரவமும், வேலையில் திறமையும் ஏற்படுவதற்காக மாத்ரம் நபர்களை ஸென்ட்ரல் பாங்கிகளில் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், ஸென்ட்ரல் பாங்கிகள் ரூரல் ஸங்கங்களின் இன்ஸ்பெக்ஷனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள்.

## MADRAS WATER SUPPLY.

### சென்னை ஜலவஸதி ஏற்பாடு.

1872-ம் வர்ஷத்துக்கு முன்னால் சென்னைப் பட்டணத்தில் இப்போதிருப்பதுபோல் குடி ஜலவஸதிகள் ஒன்றும் இருக்கவில்லை. ஜனங்கள் பெரும்பாலும் கிணற்று ஜலத்தையே உபயோகித்து வந்தார்கள். கிணறுகள் அதிக ஆழமாயிராமலிருந்ததாலும், சாக்கடை ஜலம் வெகுவாய் பூமியில் சுவறிப்போய் கிணற்று நீரை அசுத்தப்படுத்தினதாலும் கிணற்று ஜலம் குடிப்பதற்கு ஏற்றதாயில்லை. 1868-ம் வர்ஷத்தில் புழலேரியிலிருந்து சென்னைப்பட்டணத்துக்கு குடிஜலம் ஸப்ளை செய்வதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த ஏற்பாடுகள் 1872-ம் வர்ஷத்தில் முடிவுபெற்று அது முதல் சென்னைக்கு புழலேரி ஜலம் உபயோகப்பட்டுவருகிறது. ஆனால் அந்த ஜலவஸதி மராமத்து வேலைகளில் பற்பல குறைகளிருந்தனவாதலால், அந்தக்குறைகளை நிவர்த்தி செய்து சுத்தமான ஜலம் நகரத்துக்கு ஸப்ளை செய்வதற்காக சில புதிய வேலைகள் ஸமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டு இந்த டிஸம்பர்மாஸம் அநேகமாய் முடிவடைந்தன. இந்தப் புது ஜலவஸதி வேலைகளை சென்னை கவர்னர் டிஸம்பர் மாஸம் 17-தேதியன்று திறந்து வைத்தார். இனிமேல் சென்னை நகரத்தில் சுத்தமான ஜலம் போதுமான அளவு தட்டாமல் கிடைக்கலாம். ஆற்காட்டுக்குக் கிழக்கே 5 மைலுக்கப்பால் பாலாற்றில் ஒரு அணைக்கட்டு இருக்கிறது. இந்த அணைக்கட்டிலிருந்து பாலாற்றின் ஜலம் கால்வாய்களின் வழியாக பக்கத்திலுள்ள ஏரிகளுக்குப்போய் நிரம்புகிறது. இந்த ஏரிகளில் முக்யமானது காவேரிப்பாக்கம் ஏரியாகும். இந்தக் காவேரிப்பாக்கம் ஏரியிலிருந்து வழிந்தோடும் அதிகப்படியான ஜலம் கொற்றலையாறு என்னும் சிற்றாறாகப் பாய்கிறது. காவேரிப்பாக்கத்துக்கு 25-மைல் தூரத்தில் இந்த ஆற்றில் ஒரு அணைக்கட்டுக் கட்டி ஜலத்தில் ஒரு பாகம் கூவம் நதியில் விடப்படுகிறது. இன்னும் சில மைல்தூரத்துக்கப்பால் கொற்றலையாறு நதியில் தமரப்பாக்கம் அணைக்கட்டென்று ஒரு அணைக்கட்டு இருக்கிறது. இந்த அணைக்கட்டினால் அந்த ஆற்றின் ஜலம் தடுக்கப்பட்டு ஒரு கால்வாய் வழியாய் ஓடி சோழவரம்ஏரியில் விழுகிறது. இந்த ஜலத்தோடு, அணைக்கட்டிலிருந்து வரும் கால்வாயில் இரண்டு சிற்றாறுகள் வந்து கலக்கின்றன. சோழவரம் ஏரியின் ஜலம் ஒரு கால்வாய் வழியாக அதற்குப் பக்கத்திலுள்ள புழலேரியில் போய்ச்சேருகிறது. இந்தப் புழலேரியின் ஜலந்தான் சென்னைப்பட்டணத்துக்கு உபயோகப்பட்டுவருகிறது. சோழவரம் ஏரியிலும் புழலேரியிலும் கொற்றலையாற்று ஜலமும் மற்ற சிற்றாறுகளின் ஜலமும் வந்து விழுவதேயல்லாமல் ஏரிகளைச் சுற்றிலுமுள்ள நிலங்களில் பெய்யும் மழையும் அவைகளில் வந்து கலக்கின்றன.

இந்த இரண்டு ஏரிகளிலிருந்துமுதல் போகத்துக்கு ஸுமார் 7500 ஏகருக்கும், இரண்டாம் போகத்துக்கு 3200 ஏகருக்கும் ஜலம் ஸாகுபடிக்கு உதவுகிறது. இப்படி விவஸாயத்துக்கு உபயோகமாகும் ஜலம் இப்போது சென்னைப்பட்டணத்துக்கு வரும் ஜலத்தைப்போல் மூன்று மடங்கு அதிகமாயிருக்கிறதென்று மதிப்பிடப்படுகிறது.

புழலேரியிலிருந்து சென்னைக்கு வரும் ஜலத்துக்கு சென்னை முனிஸிபாலிடியார் 1000 கனகஜம் ஜலத்துக்கு 1-ரூபாய் அதாவது, 24,000 படி ஜலத்துக்கு 1 அணாவீதம் கவர்ன்மெண்டாருக்குப்பணம் கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுக்கும் பணம் வர்ஷத்துக்கு 22,000 ரூபாயாகும்.

இந்த டிஸம்பர் மாஸம் புது ஜலவஸதி வேலைகள் திறந்து வைக்கப்படுமுன் இருந்த பழைய



ஜலவஸ்தி ஏற்பாடுகளைப்பற்றி சுருக்கிச்சொல்லுகிறோம். புழலேரியின் ஜலம் அங்கிருந்து நான்கு குழாய்கள் மூலமாய் வெளியில் கொண்டுவரப்பட்டு ஒரு ஸாதாரணக் கால்வாயில் பாய்கிறது. அந்தக்கால்வாய் 6-மைல் 7-பர்லாங்கு நீளமுள்ளது. இந்தக்கால்வாய் சென்னைப்பட்டணம் வந்ததும் வலைகளால் இலைகள் முதலியவைகள் இல்லாமல் வடிகட்டப்பட்டு, அதன் ஜலம் 22 அடி குருக்களவுள்ள வட்டமான செங்கல்லால் கட்டிய ஒரு தொட்டியில் விழுகிறது. அதிலிருந்து குழாய்கள் மூலமாக ஜலம் சென்னையிலுள்ள பற்பல பாகங்களுக்குப் போகிறது. இந்த ஜலவஸதி ஏற்பாட்டைப் பழைய ஏற்பாடு என்று சொல்லலாம். இந்தப்பழைய ஏற்பாட்டில் அநேக குறைகளிருந்தன. அவைகளாவன:—

(1) புழலேரியிலிருந்து ஜலம் கொண்டு வரும் குழாய்கள் ரொம்ப உயரத்திலிருப்பதால், ஏரியின் ஜலம் அந்த மட்டத்துக்குக் குறைவாய் வற்றிப்போனவுடன், ஜலத்தை இஞ்ஜின்கள் கொண்டு இறைத்து குழாய்களில் விடவேண்டியிருந்தது. இதற்கு அதிக செலவு ஏற்படுவதோடு ஜலம் கலக்கமடைந்து அசுத்தப்பட்டுப் போயிற்று. அப்படி ஜலத்தை இறைக்க வேண்டியிருந்த போதெல்லாம் சென்னையில் காலரா அதிகமாயிருந்ததாம்.

(2) புழலேரியிலிருந்து வரும் ஜலம் கால்வாய்களில் ஸுமார் 7-மைல் வரவேண்டியிருப்பதால், அதில் அதிக பாகம் ஆவியாய்ப் போய் குறைந்துபோகிறது. மேலும் அதனிரண்டு பக்கத்திலும், மண்கரைகளிருப்பதால் கரைகளின் மூலமாயும் அடியிலும் ஜலம் சுவறிப் போய் நஷ்டமாகிறது.

(3) சென்னையில் ஜனத்தொகை அதிகமாகி வருவதற்குத் தகுந்தபடி கால்வாயில் அதிக ஜலம் வருவதில்லை.

(4) கால்வாயில் ஜனங்கள் ஸ்நானம் செய்வதாலும், பொருள்களை அதில் போடுவதாலும், ஆடுமாடுகள் தப்பித்தவறி அதில் நீர் குடிக்க வருவதாலும், கால்வாயின் கரையில் வளரும் புல் பூண்டுகளை கூலியாட்கள் வெட்ட வருவதாலும் ஜலம் அசுத்தமடையக்கூடும்.

(5) கால்வாயின் கரைகள் உடைந்து விடுமோ என்ற பயம் எப்போதும் உண்டு. கரைகள் ரொம்ப உடைந்துபோய் விட்டால் சென்னைக்கு ரொம்ப ஜலகஷ்டம் ஏற்படலாம்.

(6) ஜலத்தை வடிகட்டவோ அல்லது வேறு விதத்தில் சுத்தம்செய்யவோ யாதொரு ஏற்பாடும் கிடையாது.

(7) பட்டணத்தில் ஜலம் பாயும் குழாய் ஏற்பாடுகளில் குறைகளிருக்கின்றன. ஜனங்களுக்கு வேண்டிய அளவு ஜலம் கிடைப்பதும் இல்லை. குழாய்களில் வரும் ஜலம் ரொம்ப வேகமாய் வருவதுமில்லை.

இந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்காக புதிதாக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளை இங்கே விவரிக்கிறோம்.

புழலேரியின் நடுவில் கரையிலிருந்து ஸுமார் 110-அடி தூரத்தில் ஒரு கோபுரம் போன்ற கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். இந்தக்கட்டிடத்திற்குள்ளே சில யந்த்ர ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏரியில் ஜலம் வற்றுவதற்குத் தகுந்தபடி அந்தக்கட்டிடத்துக்குள் ஜலம் போகும்படி கட்டிடத்தில் பற்பல உயரத்துக்கு ஜலம் உள்ளே போகும்படியாக வழிகள் அமைத்திருக்கிறார்கள். உள்ளே போகும் ஜலத்தை இரண்டு அடி குருக்களவுள்ள பெரிய இரண்டு இரும்புக்குழாய்கள் மூலமாக கரைக்குக்கொண்டு போகிறார்கள். இதனால் ஏரியில் ஜலம் ரொம்பகுறைந்தாலுங்கூட முன்போல ஜலத்தை இஞ்ஜின் கொண்டு இறைக்க வேண்டிய அவச்யமில்லை,

ஏரியில் ஜலமட்டம் குறையக்குறைய கட்டிடத்தின் பக்கங்களில் ஜலமட்டத்துக் கீழாகவுள்ள வழிகளைத் திறந்துவிட்டுக் குழாய்களில் ஜலம் போகும்படி செய்வார்கள்.

குழாய்களிலிருந்து வரும் ஜலத்தை வடிகட்டுவதற்கு ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். இந்தக்கட்டிடம் 150 அடி நீளமும் 108 அடி அகலமும் 8 அடி ஆழமுமுள்ளதாய் செங்கல்லால் கட்டப்பட்ட ஒரு பெரிய அறையாகும். இந்த அறையின் ஒரு பாகத்தில் முக்கோணமான ஒரு பிரிவு இருக்கிறது. இந்தப்பிரிவுக்கும் மற்ற பாகத்துக்கும் நடுவே தாம்ரக்கம்பிகளால் செய்யப்பட்ட வலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வலைகளின் கண்கள் $1\frac{1}{2}$ வீசம் அங்குலம் குருக்களவுள்ளவை. அறையின் மற்ற பாகத்தில் தரையில் செங்கல்லால் கட்டின 9 அங்குலம் சதுரமுள்ள சிறு தூண்கள் இருக்கின்றன. இவைகளின் மேல் 2-அடி 3-அங்குலம் சதுரமுள்ள கடப்பைக் கற்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. இந்தக் கடப்பைக் கற்களின்மேல், $1\frac{1}{2}$ அங்குலம் குருக்களவுள்ள ஒருவளையத்தில் புகுந்து போகக்கூடியதான உடைத்த பெரிய கற்களும், அந்தக் கற்களின்மேல் $\frac{3}{8}$ அங்குலமுள்ள வளையத்தில் நுழையக்கூடியதும், ஆனால் $\frac{1}{8}$ அங்குல வளையத்தில் நுழையக்கூடாததுமான சிறு கற்களும் பரப்பியிருக்கிறார்கள். ஏரியிலிருந்து குழாய்கள் மூலமாய் வரும் ஜலம் முதலில் முக்கோணமான பிரிவில் வந்து வலைகளில் வடிகட்டப்பட்டு, அறையின் மற்ற பாகத்தில் தரைமட்டத்துக்குப்போய், கடப்பைக் கற்களின் மேல் பரப்பியிருக்கும் சிறு கற்களின் வழியாகப் உயரப்போய் சுத்தமடைகிறது. அங்கிருந்து ஜலம் வெளியே வருகிறது.

வடிகட்டும் அறையிலிருந்து வெளிவரும் ஜலமானது நான்கு பக்கமும் செங்கல் சுவர்களாலும் கான்க்ரீட் என்னும் கெட்டித்த ஜெல்லிக்கற்களாலும் மூடப்பட்ட குழாய் போன்ற கால்வாய் வழியாக சென்னைக்குப் போகிறது. இந்தக்கால்வாயின் உள்புறம் 5 அடி அகலமுள்ளது. உயரம் $5\frac{3}{4}$ அடி உண்டு. மேல் புறமும், அடிப்புறமும் வளைந்திருக்கும். கால்வாய் பூமியில் ரொம்ப ஆழத்தில் இருக்குமிடங்களில் அதன் சுவர்கள் ரொம்ப கனமாயும், ஸ்வல்ப ஆழத்தில் இருந்தால் கனக்குறைவாயும் கட்டப்பட்டிருக்கின்றன. சென்னையில் கீழ்ப்பாக்கத்தில்தான் ஜலம் ஸப்ளை செய்யும் வேலைகள் கட்டியிருக்கிறார்கள். அங்கே குழாய் வழியாய் வரும் ஜலத்தை முதலில் மறுபடியும் வடிகட்டுகிறார்கள். அங்கே வடிகட்ட வரிசைக்கு 7-பாத்திகள் வீதம் இரண்டு வரிசைப்பாத்திகள் கட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு பாத்தியும் 200 அடி நீளமும் 100 அடி அகலமும் உள்ளது. தண்ணீர்க்கால்வாய் இந்தப் பாத்திகளைச் சுற்றிப்போகிறது. இந்தக் கால்வாயிலிருந்து ஒவ்வொரு பாத்திக்கும் வேண்டும்போது ஜலம் விடுவதற்கும், நிறுத்துவதற்கும் வால்வ் என்னும் மூடியுள்ள ஒரு குழாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாத்தியின் மத்தியிலும் 24 அங்குலம் அகலமுள்ள ஒரு சிறு கால்வாயிருக்கிறது. பாத்தியில் விழுந்த ஜலம் வடிந்து மத்தியிலுள்ள கால்வாயில் விழுந்து, பாத்தி வரிசைகளுக்கு நடுவில் கட்டியிருக்கும் ஒரு மூடப்பட்டுள்ள பொதுக் கால்வாயில் விழுகிறது. இந்தக் கால்வாயில் விழும் ஜலம் பாத்திகளுக்குப் பக்கத்தில் கட்டப்பட்டுள்ள 3 பெரிய சுத்த ஜலத் தொட்டிகளில் போய் விழுகிறது.

வடிகட்டும் பாத்தியில் அடித்தரையில் $4\frac{1}{2}$ அங்குல தூரத்துக்கு ஒரு வரிசையாக நல்ல செங்கல்களை நீளத்தில் வரிசை வரிசையாக வைத்திருக்கிறார்கள். இந்த செங்கல்களுக்கு மேல் குறுக்கே செங்கல்களை வைத்து மூடுகிறார்கள். இதனால் அடியில் சிறு சிறுகால்



வாய்கள் செய்தது போலாகிறது. இரண்டாவது அடுக்குச் செங்கலுக்கு மேல் $\frac{3}{4}$ அங்குல வளையத்துக்குள் போகக்கூடியதும் ஆனால் $\frac{3}{8}$ அங்குல வளையத்துக்குள் நுழையக்கூடாததுமான கற்களை இரண்டங்குல கனத்துக்குப் பரப்பி, அதன்மேல் $\frac{3}{8}$ அங்குலம் குருக்களவுள்ள வளையத்துக்குள் போகக்கூடியதும் ஆனால் $\frac{1}{3}$ அங்குல வளையத்துக்குள் போகமுடியாததுமான சிறிய கற்களை 2-அங்குல கனத்துக்குப் பரப்புகிறார்கள். அதன்மேல் பெரும் மணலை 2 அங்குல கனத்துக்குப் பரப்புகிறார்கள். இந்த பெருமணல் பரப்பின்மேல் ரொம்பப் பொடியான மணலை 28 அங்குல கனத்துக்குப் பரப்புகிறார்கள். ஒரு அங்குலத்தில் 30-ல் 1-பாகம் குருக்களவுள்ளவையான கண்களுள்ள சல்லடையில் மணலைச் சலித்து விழுந்ததை, ஒரு அங்குலத்தில் 50-ல் 1-பாகம் குருக்களவுள்ளதான கண்களுள்ள சல்லடையில் சலித்தால் கீழே விழாமல் சல்ல... நிற்கும் மணலைத்தான் பொடிமணலாக ...சொன்ன 28-அங்குலம் ஆழத்துக்குப் ...கிறார்கள். புழலேரியிலிருந்து பெரிய ...ம் ...யில் வரும் ஜலம் பாத்தியின்மேல் பாகத்தில் பாய்ந்து பொடிமணல், பெருமணல், பொடிக்கல், பெருங்கல் ஆகிய இவைகளின் வழியாக இறங்கி செங்கற்களால் கட்டப்பட்ட கால்வாய்களின் வழியாக ஓடி பாத்தியின் நடுவில் உள்ள கால்வாயில் விழுந்து, பிறகு பாத்தி வரிசைகளுக்கு மத்தியிலுள்ள பொது சுத்த ஜலக் கால்வாயில் விழுந்தோடுகிறது. பாத்தியிலுள்ள ஜலம் நிதானமாய் வடிந்து வெளியே போகும்படிக்கு ஒவ்வொரு பாத்தியிலும் அது பொதுக்கால்வாயோடு சேருமிடத்தில் ஒரு யந்த்ரம் அமைத்திருக்கிறார்கள்.

பொதுக்கால்வாய் வழியாக ஓடும் சுத்த ஜலம் விழும் குளங்கள் ஒவ்வொன்றும் 150 அடி சதுரமும் 10 அடி ஆழமும் உள்ளவை. இந்தக் குளங்களின் அடித்தரை கான்க்ரீட் என்னும் ஜெல்லிபோட்டுகெட்டித்திருக்கிறது. அதன் சுவர்கள் செங்கல்லால் கட்டப்பட்டவை. அதன் மேற்புறம் மூடப்பட்டிருக்கிறது. இதில் மனிதர்கள் இறங்குவதற்கு வழிகளும், காற்றுப்புகுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் குளங்களுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய கட்டிடத்தில் ஜலத்தை இறைத்துக் குழாய்களுக்குவிட 3 பெரிய எஞ்ஜின்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்ஜின்கள் இருக்குமிடத்துக்கு அடியில் ஒரு கிணறு இருக்கிறது. குளங்களிலுள்ள ஜலம் இந்தக்கிணற்றுக்குள் வந்து எஞ்ஜினால் பம்பு செய்யப்பட்டு 48 அங்குலம் குருக்களவுள்ளதும் $\frac{1}{2}$ மைல் நீளமுள்ளதுமான பெரிய உருக்குக் குழாய் வழியாகப்போய் பிறகு பெரிய குழாய்களில் பிரிந்து ஓடி பட்டணத்துக்குள் போகிறது.

பட்டணத்தில் ஜனங்களுக்குத் தேவையாயிருக்கக்கூடிய ஜலத்தைவிட அதிகமாக எஞ்ஜின்கள் ஜலம் "பம்ப்" செய்தால் அந்த ஜலத்தை நிரப்பிவைக்க பூமிமட்டத்துக்கு மேல் 37 அடி உயரத்தில் கட்டப்பட்ட ஒரு பெரிய வட்டமான தொட்டி இருக்கிறது. இந்த உயர்ந்த தொட்டியின் மொத்த உயரம் 73 அடியாகும், இதில் 28 அடி ஆழத்துக்கு ஜலம் தங்கியிருக்கக்கூடும். இதன் குருக்களவு 104 அடியாகும். இந்தத் தொட்டியைத்தாங்கி நிற்க, நடுவில் செங்கல்லால் மூடப்பட்ட எண்கோணத்தூண்களும், வெளியில் பெரிய செங்கல் தூண்களும் கட்டப்பட்டிருக்கின்றன. எஞ்ஜின்கள் இறைக்கும் ஜலத்தைவிட அதிகமான ஜலம் பட்டணத்தில் தேவையாயிருக்கும்போது இந்த உயர்ந்த குளத்தில் உள்ள ஜலம் ப்ரயோஜனப்படும். மேலும், ஜலம் ரொம்ப உயரத்திலிருப்

பதால் வீடுகளில் குழாய்களிலுள்ள ஜலம் ரொம்ப வேகமாயும் வரும்.

பட்டணத்தில் குழாய்களில் ஜலம் விடுவதில் பின் வரும் முக்யமான அம்சங்களை யனுஸரித்து வேலை செய்வார்கள்.

(1) பகல்பொழுது முழுவதும் எல்லா ஜனங்களுக்கும் வேண்டிய அளவு ஜலம் வீட்டுக்குழாய்களில் வருவது.

(2) வீட்டுக் குழாய்களில் ஜலம் வேகமாய் வருவது.

(3) எல்லா இடங்களுக்கும் ஜலம் வேகமாயும் சரியாகவும் போவது.

(4) தெருக்களில் எங்கேயாவது நெருப்புப் பிடித்தால் அதையவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இருப்பது.

(5) ஜலம் வீணாவதைக் கண்டு பிடிக்கவும் தடுக்கவும் ஏற்பாடுகள் செய்வது.

பழைய ஜலவஸதி ஏற்பாடுகளில் இந்த விஷயங்களெல்லாம் குறைவாயிருந்தன.

இப்போதுள்ள குழாய்களில் எடுக்க வேண்டியவைகளை எடுத்துப் புதுக் குழாய்களைப் போட ஏராளமாய் சீமையிலிருந்து குழாய்கள் தருவிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் இப்போது யுத்த ஸமயமாயிருப்பதால் குழாய்கள் போடும் வேலைகளில் ரொம்ப முக்யமான பெரிய குழாய்களும், சிறுதெருக்குழாய்களும் மாத்ரம் போடப்பட்டிருக்கின்றன. மற்ற பெரிய குழாய்களும் சிறு தெருக்குழாய்களும் போடுவதற்கு சில காலமாகலாம்.

வீடுகளுக்குள் உள்ள குழாய்களில் எவ்வளவு ஜலம் செலவழிகிற தென்பதைக் கண்டுபிடிக்க 'மீட்டர்' என்னும் ஜலம் அளக்கும் கருவிகள் வைப்பதும், பூமியின் அடியிலிருக்கும் குழாய்கள் துருப்பிடித்துக்கெட்டு, ஓட்டையாகி அதன் வழியாக ஜலம் சேதமாவதைக்கண்டு பிடிக்க ஏற்பாடுகள் அமைப்பதும், நெருப்புப் பிடித்தால் அவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதும் இனி காலக்ரமத்தில் சீக்ரம் முடிவுபெறும்.

இந்தப்புது ஜலவஸதி வேலைகளுக்கு மொத்தத்தில் 63 - லக்ஷம் ரூபாய் பிடிக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இதில் 42 - லக்ஷம் ரூபாய்க்குவேலைகள் நடந்திருக்கின்றன. பாக்கி 21-லக்ஷம் ரூபாயும் இரும்புக்குழாய்கள் முதலியவைகள் வாங்குவதற்கும், அவைகளை பூமியில் வைப்பதற்கும் செலவழியுமென்று சொல்லப்படுகிறது.

## CONGRESS & CONFERENCES.

### காங்க்ரெஸும் கான்பரென்ஸுகளும்.

டிஸம்பர் மாஸக்கடைசியிலும் ஜனவரி மாஸம் முதலிலும் சென்னையில் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸும், கைத்தொழில் கான்பரென்ஸ், ஆசாரசீர்திருத்த கான்பரென்ஸ், மதுவிலக்குக் கான்பரென்ஸ், வித்யாகான்பரென்ஸ், கோவாபரேடிவ் கான்பரெ[illegible] முதலிய பலகான்பரென்ஸுகளும் நடை[illegible]றன. இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ[illegible]கும் கைத்தொழில் கான்பரென்ஸுக்கு[illegible] சென்னை கவர்னர் வந்திருந்து சில நிமிஷ நேரங்கள் அவைகளின் நடவடிக்கைகளை கவனித்திருந்துபோனது மிகவும் ஸந்தோஷிக்கத்தக்கது. அநேக பெரிய உத்யோகஸ்தர்களும் இந்தக் கூட்டங்களுக்கு வந்திருந்து நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

## INDIAN INDUSTRIAL CONFERENCE.

### இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ்.

இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் டிஸம்பர் மாஸம் 26-ந்தேதியன்று சென்னையில் கூடிற்று. சென்னையில் ப்ரபல தோல் வ்யாபாரியும் தென்னிந்திய சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபாரஸங்கத்தின் ப்ரெஸிடெண்டு



மாகிய ராவ்பகதூர் தியாகராஜ செட்டியார் அந்தக் கான்பரென்ஸினுடைய வரவேற்புக் கமிட்டியின்சேர்மனாயிருந்து கான்பரென்ஸின் ப்ரதிநிதிகளை ஏற்று உபசரித்தார். அப்போது அவர் பேசியதின் ஸாராம்சத்தை இங்கு எழுதுகிறோம்.

முதலில் அவர் தமது ப்ரஸங்கத்தில், கவர்ன்மெண்டாரிடமே சாஸ்த்ரநிபுணர்களும், கைத்தொழில், வ்யாபார நிபுணர்களும் அதிகமாக இருப்பதால் அவர்களே கைத்தொழில்களிலும் சாஸ்த்ர முயற்சிகளிலும் ஆராய்ச்சி செய்து ஜனங்களுக்கு வழிகாட்டக் கூடுமென்றார். சென்னை கவர்ன்மெண்டார் சிலகாலமாக தென்னிந்தியாவின் கைத்தொழில் அபிவ்ருத்தியில் ஊக்கங்காட்டி வந்திருக்கிறார்கள். 1905-ம் வர்ஷமுதல் கொண்டே இது விஷயமாக கவனம் செலுத்தி கைத்தொழில் டிபார்ட்மெண்டு ஒன்று ஸ்தாபித்தார்கள். அது மாத்ரம் போ[illegible]ன்று எண்ணி எவ்விஷயங்களில் கைத்[illegible]ல் நிலைமையை அபிவ்ருத்திசெய்ய முய[illegible]ய்யவேண்டும்; எவ்விதம் முயற்சிகள் எடு[illegible]க்கொள்ளவேண்டும், என்பவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக உதகமண்டலத்தில் ஒரு கான்பரென்ஸ் கூடும்படி செய்தார்கள். அந்தக் கான்பரென்ஸானது 1908-ம் வர்ஷத்தில்கூடி கைத்தொழில் விஷயமாக ஆலோசனைசெய்து சில ப்ரேரணைகள் செய்தது. மாணவர்களையும் வேலையில் பயிற்சியடைய வருபவர்களையும் கைத்தொழில்களில் பழக்கவும், புதுக் கைத்தொழில்களின் உபயோகத்தையும் அவைகள் லாபகரமாயிருக்கின்றன வென்பதையும் ஜனங்களுக்குக் காட்டவும், கவர்ன்மெண்டார் புதுக்கைத்தொழில்களையும், புதிய கைத்தொழில் முறைகளையும் ஸ்தாபித்து நடத்தி வரவேண்டுமென்றும், ஜனங்களுக்கு புதுக் கைத்தொழில்களின் ப்ரயோஜனம் நன்றாய் தெரிந்து, அவர்களே, அதாவது ஜனங்களே ஸொந்தத்தில் கைத்தொழில்கள் ஸ்தாபிக்க முன் வந்தவுடன், கவர்ன்மெண்டார் அவர்களுக்குப் போட்டியாய் இல்லாமல் தொழில்கள் நடத்துவதை விட்டுவிட வேண்டுமென்றும், சிறு வீட்டுத் தொழில்களையும், பெரிய தொழில்சாலைத் தொழில்களையும் அபிவ்ருத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டுமென்றும், மேற்படி கான்பரென்ஸ் ப்ரேரணைகள் செய்தது. சென்னை கவர்ன்மெண்டார் இந்த ப்ரேரணைகளை ஏற்றுக் கொண்டு, இது விஷயமாக இந்தியா மந்த்ரிக்கு எழுதி அனுமதி கேட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும் சென்னை கவர்ன்மெண்டுக்கு ஸாதகமாயிருந்தார்கள். ஆனால் இந்தியா மந்த்ரியோ, கவர்ன்மெண்டார் கைத்தொழில் கல்விக்கும் டெக்னிகல் கல்விக்கும் பணம் செலவழித்து அவைகளை அபிவ்ருத்தி செய்வதைவிட்டு, கைத்தொழில்கள் ஸ்தாபிக்க ஆரம்பித்தால் இந்தியாவின் கைத்தொழில்களுக்கு அது பாதகமாய் முடியுமென்றும், கைத்தொழில்களில் இது கடைத்தேறும், இது லாபகரமானது என்பவைகளை ஜனங்களுக்குக்காட்ட வ்யாபாரிகளும், தொழிலாளிகளுமே முன் வரவேண்டுமென்றும் சொல்லி, சென்னை கவர்ன்மெண்டாரின் ப்ரேரணைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். இதனால் ஜனங்களுக்கு ரொம்ப அத்ருப்தியேற்பட்டது. அதன் மேல் சென்னை கவர்ன்மெண்டார் மறுபடியும், இந்தியா கவர்ன்மெண்டுக்கு இது விஷயமாக கடிதங்கள் எழுதலானார்கள். இந்தியாவின் நிலைமைக்கும் ஐரோப்பாவின் நிலைமைக்கும் ரொம்ப வித்யாஸமிருக்கிறதென்றும், தென்னிந்தியாவில் கைத்தொழில் கொஞ்சமும் அபிவ்ருத்தியடைய வில்லையாகையால், கவர்ன்மெண்டாரே ஸொந்தத்தில் கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்தினாலொழிய மாணவர்களுக்குக் கைத்தொழில் கல்வி கற்றுக் கொடுப்பதென்பது முடியாதென்றும், கவர்ன்

மெண்டார் கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்தாவிட்டால் ராஜதானியில் கைத்தொழிலபிவ்ருத்தி ஏற்படுவதென்பது முடியாதென்றும் தெரிவித்தார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் இந்த முறையும் சென்னை கவர்ன்மெண்டார் பக்ஷமாகவே இருந்தார்கள், ஆயினும் இந்தியா மந்த்ரி முன் செய்யப்பட்ட தீர்மானத்துக்கு விரோதமாக தாம் ஒன்றும் சொல்வதற்கில்லை யென்று சொல்லிவிட்டார். ஆகவே இந்தியா கவர்ன்மெண்டும் மாகாண கவர்ன்மெண்டும் கைத்தொழிலபிவ்ருத்திக்கு ஸாதகமாயிருந்தும் இந்தியா மந்த்ரிமாத்ரம் இதற்கு ஆக்ஷேபணை செய்துவிட்டார். இந்த விஷயங்களை மிஸ்டர் செட்டியார் தெரிவித்துவிட்டு, இப்போது ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் ஸமயத்தில் இங்க்லண்டில் சாயம் செய்யுந்தொழில் ஸ்தாபிக்க ஒரு பெரிய கம்பெனி ஸ்தாபிக்கப்போவதாகவும் அந்தக் கம்பெனியின் ஸொத்தின்மேல் வாங்கும் $2\frac{1}{4}$ கோடி ரூபாய் கடனுக்கு வட்டி நஷ்டம் ஏற்பட்டால் தாங்கள் அதை ஒத்துக்கொடுப்பதாக இங்க்லீஷ் கவர்ன்மெண்டார் தெரிவித்திருப்பதாகவும் ஸமாசாரம் எட்டியிருக்கிறதென்றும், அப்படி இங்க்லண்டிலேயே கவர்ன்மெண்டார் கைத்தொழில்களுக்கு ரொம்ப உதவி செய்து வரும்போது, இந்தியாகவர்ன்மெண்டார், இந்தியா மந்த்ரி இரண்டு வர்ஷத்துக்கு முன் சொன்ன ஆக்ஷேபணையை வைத்துக்கொண்டு சும்மாவிராமல், தாங்கள் கைத்தொழில் விஷயமாய் அதிக ஊக்கம் எடுத்து வேலைசெய்ய அனுமதி கொடுக்கும்படி இந்தியா மந்த்ரிக்கு எழுதிக் கேட்கவேண்டுமென்றும் சொன்னார்.

சத்ருக்களின் வ்யாபாரம்.

இப்போது இங்க்லண்டுக்கு விரோதிகளாயிருந்து யுத்தம் செய்துவரும் தேசங்களாகிய ஜெர்மனி ஆஸ்ட்ரியா ஆகிய இவைகளின் வ்யாபாரத்தை இந்தியா கைப்பற்றவேண்டும், அதாவது அந்த இரண்டுதேசங்களிலிருந்து வரும் இறக்குமதிப்பொருள்களை இங்கேயே செய்து கொள்ள வேண்டுமென பலர் சொல்லி வருவதைப்பற்றிப் பேசுகையில், இப்படி புதுக் கைத்தொழில்களை ஸ்தாபிக்க கவர்ன்மெண்டு உதவியில்லாவிட்டால் ஜனங்களால் ஒன்றும் முடியாதென்றும், அநேக தொழில் நிபுணர்களும், ஏராளமான மூலதனமும் உள்ள கவர்ன்மெண்டாருக்கே இன்னது செய்வதென்று தெரியாமலிருக்கும்போது, முதலாளிகள் எதுவும் செய்வதென்பது ச்ரமஸாத்யமென்றும், அப்படிக்கின்றி, பொது ஜனங்கள் எதாவது செய்ய முன்வந்தாலும் அதற்கு கவர்ன்மெண்டார் தக்க உதவி செய்வதில்லையென்றும், இதற்கு உதாரணமாக ஜில்லா போர்டுகளில் சில ரெயில்வே போட முன் வந்தபோது அந்த ஏற்பாட்டை கவர்ன்மெண்டார் ஆதரிக்காமல் விட்டதைச் சொல்லலாமென்றும் சொன்னார்.

மிஸ்டர் மனமோஹனதாஸ் ராம்ஜி.

ராவ் பகதூர் தியாகராஜ செட்டியார் பேசியபிறகு, பம்பாயில் பருத்திமில் வ்யாபாரியும், பம்பாய் இந்தியன் சேம்பர் அப் காமர்ஸ் என்னும் இந்திய வ்யாபாரஸங்கத்தின் ப்ரெஸிடெண்டுமாகிய மிஸ்டர் மனமோஹன் தாஸ் ராம்ஜி என்பவர் கைத்தொழில் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஸ்வதேசிய முயற்சி.

மிஸ்டர் மனமோஹனதாஸ் ராம்ஜி தமது ப்ரஸங்கத்தில் முதலில் ஸ்வதேசிய முயற்சியைப்பற்றிப் பேசினார். இந்த முயற்சி நாளது வரையில் கடைத்தேறுமல் போயிற்றென்றும், தொழில்களை நடத்த தக்க தொழில் நிபுணர்கள் இல்லாததாலும், தொழிலில் அனுபோகமும் அறிவும் இல்லாதவர்கள் தொழில்களை ஸ்தாபித்து நடத்தி வந்ததாலும், நமது ஜனங்களிடத்தில் வ்யாபார நாணயமும்,



தொழில்களில் ந்யாயமான நடத்தையும் குறைவாயிருப்பதாலும், கவர்ன்மெண்டார் தொழிலபிவ்ருத்தியில் ஊக்கங்காட்டி வந்தாலும் ஸ்வதேசியமுயற்சி விஷயத்தில் அச்ரத்தையாயிருந்ததாலும், இந்த முயற்சி கடைத்தேறுமல் போயிற்றென்றும், கவர்ன்மெண்டார் இது விஷயமாக அதிக உதவி செய்திருக்கலாமென்றும், இந்தியாவில் சாஸ்த்ரீயக் கல்விக்கு யாதொரு ஸாதனமு மில்லாமலிருப்பதே பெரிய குறையாக இருக்கிறதென்றும், இந்தக் குறையை முக்யமாய் கவர்ன்மெண்டாரே நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் பொது ஜனங்கள் இந்தியாவில் செய்யப்பட்ட ஸாமான்களை ஆதரித்து இந்தியத்தொழில் அபிவ்ருத்திக்கு ஸாதகமாயிருக்க வேண்டுமென்றும் சொன்னார்.

சத்ருக்களின் வ்யாபாரம்.

ஜெர்மனி ஆஸ்ட்ரியா ஆகிய இந்த தேசங்களின் வ்யாபாரத்தை இந்தியர்கள் கைப்பற்ற வேண்டுமென்று பலர் சொல்லி வருவதைப் பற்றிப் பேசினபோது, அவர், அந்த இரண்டு தேசங்களின் வ்யாபாரம் ரொம்ப அதிகமென்று பலர் நினைத்து வருகிறார்களென்றும், அது அப்படியல்ல வென்றும், ஜெர்மனியிலிருந்து நமது தேசத்துக்குள் இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்பு மொத்த இறக்குமதியின் மதிப்பில் நூற்றுக்கு 6.9-பாகமும், ஆஸ்ட்ரியாவிலிருந்துவரும் இறக்குமதியின் மதிப்பு நூற்றுக்கு 2.3-பாகமும், இந்தியாவிலிருந்து ஜெர்மனிக்குப் போகும் ஏற்றுமதி மொத்த இந்திய ஏற்றுமதியில் நூற்றுக்கு 10.3 பங்கும், ஆஸ்ட்ரியாவுக்குப் போகும் ஏற்றுமதி நூற்றுக்கு 3.9-பங்குந்தானுகின்றன வென்றும், காப்புவரிகள் போட்டு இந்த வ்யாபாரங்களைக்கைப்பற்றுவதென்பதுவீண்ப்ரமையென்றும், பொதுவாய் அன்யதேசங்களின் வ்யாபாரங்களை நாம் கைப்பற்ற வேண்டுமென்றால் ஜனங்களுக்கு சாஸ்த்ரீயக் கல்வியும், அனுபோகமும், வேலையைத் தவறில்லாமல் நன்றாய் செய்யும் பழக்கமும் ஏற்பட்டால் தான் அது முடியுமே யொழிய காப்புவரிகள் போன்ற ஸாதனங்களால் ஒரு கார்யமும்ஆகாதென்றும், கவர்ன்மெண்டார் புதுக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்கப் பணஉதவி செய்யவேண்டுமென்றும், அவர்கள் தொழில் காட்சிகள் நடத்தி, தொழில்களைப்பற்றி சிறு புஸ்தகங்கள் வெளியிடுவதோடு நில்லாமல், தொழில்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து தெரிவிக்க நிபுணர்களை நியமிக்க வேண்டுமென்றும், இந்தியர்களில் பெரும்பாலார் ஏழைகளாயிருப்பதால் அவர்கள் தொழில்கள் விஷயமாய்ப் பரீக்ஷைகள்செய்து பார்க்க அவர்களுக்கு சக்தியில்லையென்றும், இந்த வேலையை கவர்ன்மெண்டாரே மேற்கொள்ள வேண்டுமென்றும், அதோடு, அன்ய தேசங்களில் அபிவ்ருத்தியடைந்திருக்கும் கைத்தொழில்கள் இங்கே கடைத்தேறுமல் போவதற்குக் காரணங்களின்ன வென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றும், இதற்காக இந்திய கவர்ன்மெண்டார் அன்ய தேசங்களின் வ்யாபார ஸ்தலங்களில் கான்ஸல் என்னும் வ்யாபார விஷயங்களை கவனிக்கும் உத்யோகஸ்தர்களை நியமிக்கவேண்டுமென்றும், அது முடியாவிட்டால் ப்ரிட்டிஷ் கான்ஸல் ஆபீஸுகளில் இந்தியப் பிரிவுகள்ஏற்படுத்தி அவைகளில் இந்தியர்களைஉதவி ஆபிஸர்களாக நியமிக்க வேண்டுமென்றும் சொன்னார்.

பாசனவேலைகளும், ரெயில்வேயும்.

பாசன வேலைகளைப்பற்றிப் பேசினபோது இந்தியா விவஸாய தேசமானதால், அடிக்கடி பஞ்சங்கள் உண்டாகாமலிருக்கும்படி பாதுகாக்க வேண்டுமென்றால் பாசனவேலைகளுக்கு அதிகபணம் செலவழித்து அவைகளை விருத்தி செய்ய வேண்டுமென்றும், மேலும் இந்தப் பாசன வேலைகளுக்குப் போடும் பணத்தால் கவர்ன்மெண்டுக்கு லாபம் அதிகமாகவே கிடை

த்து வருகிறதென்றும், ரெயில்வேக்களுக்கு அதிக பணம் போடுவதுபோல் பாசன வேலைகளுக்கு கவர்ன்மெண்டார் அதிக பணம் போடவில்லையென்றும், இந்தியாவில் மாகாணத்துக்கு மாகாணம் நடந்துவரும் வ்யாபாரத்தை அபிவ்ருத்தி செய்ய கிளை ரெயில்வேக்கள் போடவேண்டியது அவச்யமென்றும் சொன்னார்.

இன்னும் அவர், பற்பல முக்யபட்டணங்களில் இந்திய வ்யாபார ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், இந்திய கைத்தொழில் பொருள்களில் எவையெவை அன்யநாட்டுப் பொருள்களைப்போல் சிறந்தனவாயும், விலைமலிவாயும் இல்லையோ அவைகளை உயர்ந்தனவாயும் விலை மலிவாயும் செய்வதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய யூனிவர்ஸிட்டிகளில் இந்தியர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், பேசினார். இன்னும் அவர் தமது ப்ரஸங்கத்தில் விவஸாயம், கோவாபரேஷன், பாங்கி வ்யாபாரம் முதலியவைகளைப்பற்றி ப்ரஸ்தாபித்தார்.

## THE INDIAN SOCIAL CONFERENCE.

### ஆசார சீர்திருத்தக் கான்பரென்ஸ்.

ஆசார சீர்திருத்தக் கான்பரென்ஸ் டிஸம்பர் மாஸம் 27-ந்தேதியன்று கூடிற்று. மைஸூர் மஹாராஜாவின் ஸகோதரராகிய யுவராஜா அதன் ப்ரெஸிடெண்டாக இருந்தார். சென்னை ஹைக்கோர்ட் வக்கீல்களில் ஒருவராகிய மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார் கான்பரென்ஸினுடைய வரவேற்புக் கமிட்டியின் சேர்மனாகவிருந்து கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றார்.

### மிஸ்டர் ஸ்ரீனிவாஸய்யங்கார்.

அவர் அப்போது செய்த ப்ரஸங்கத்தில் ஜனங்களுக்கு ராஜாங்க விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்கும் அவர்களுக்கு ஸமஸரியான பாத்யதைகள் ஏற்படுவதற்கும் முற்காலத்தில் இருந்த மாதிரியான ஜாதி ஏற்பாடு இன்னும் இருந்துவருவது கூடாதென்றும், ஜாதி ஏற்பாட்டைத் தற்கால நிலைமைகளுக்கு ஏற்றவிதமாக மாற்றுவதற்கு ஒரு ஜாதியிலிருந்து வேறு ஜாதிகளில் கல்யாணம் செய்வது அவச்யமென்றும், அப்படிக்கல்யாணம் செய்வது சட்ட ஸம்மதமாகுமென்பதற்கு ஒரு சட்டம் செய்யவேண்டியது அவச்யமென்றும் சொன்னார்.

மேலும் கவர்ன்மெண்டார் ஜனாசார சீர்திருத்த முயற்சி விஷயத்தில் வரவர ஆதரவு குறைவாகக் காட்டி வருகிறார்களென்றும், ஜனாசார சீர்திருத்தத்துக்கு விரோதமாயிருப்பவர்களுக்கு கவர்ன்மெண்டார் ஸாதகமாயிருந்து வருகிறார்களென்றும், பண்டைக்கால வழக்கங்களில் ஏற்பட்ட ஜனாசாரச் சட்டங்களிலிருந்து விலகவேண்டுமென்று சொல்லும் ஜனங்களுக்கு கவர்ன்மெண்டார் உதவியாயிராவிட்டால் ஜனாசார சீர்திருத்தத்தில் முன்னேற்றம் ஏற்படுவதென்பது முடியாதென்றும் சொன்னார்.

இன்னும் அவர் ருதுவான பின் விவாகம், வயதுவராத பெண்களின் பாதுகாப்பு, தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தல் ஆகிய இந்த விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

### மைஸூர் யுவராஜா.

யுவராஜா தமது ப்ரஸங்கத்தில், இந்தியர்கள் ஒன்றுக்கொன்று பொறாமைப்பட்டுக்கொண்டிருக்கும் பற்பல ஜாதிகளாகப் பிரிந்திருக்கிறார்களென்றும், இவர்கள் மேல்நாட்டு ஜனங்களைப்போல் உயர்ந்தவர்களாய் ஆகமுடியாமலிருக்கிறார்களென்றும், தேசத்தில் கல்வி ரொம்பத் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறதென்றும், ஜாதி ஏற்பாட்டின் கெடுதல்களால் கைத்தொழில்கள் அபிவ்ருத்தியடையாமலிருக்கின்றன வென்றும், இந்தியாவுக்கு ராஜரீக



விஷயங்களில் அபிவ்ருத்தி ஏற்படவேண்டுமென்றால் ஜனஸமூகத் தீங்குகளை எல்லாம் ஒழிக்க வேண்டியதவச்யமென்றும், குழந்தை விவாகத்தை நிறுத்த வேண்டுமென்றும், ஸ்த்ரீகளுக்கு அதிக ஸ்வதந்த்ரங்கள் கொடுக்க வேண்டுமென்றும், விதவாவிவாகம் வேண்டுமென்றும், 1911-ம் வர்ஷத்தில் மிஸ்டர் பூபேந்த்ரநாத் பாஸு கொண்டுவந்த ஸிவில் விவாகமசோதா அதாவது சாஸ்த்ரோக்த மாயில்லாமல் ஒப்பந்தம் செய்து கல்யாணம் செய்வது சட்ட ஸம்மதமானதென்பதாகக் கொண்டுவந்த மசோதா தள்ளப்பட்டுப்போனது விஸனிக்கத்தக்கதென்றும் சொன்னார்.

## THE INDIAN NATIONAL CONGRESS.

### இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ்.

இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் டிஸம்பர் மாஸம் 28-ந்தேதியன்று சென்னையில் கூடிற்று. டாக்டர் ஸர். எஸ். ஸுப்ரமண்ய அய்யர் காங்க்ரெஸ் வரவேற்புக் கமிட்டியின் சேர்மனாக இருந்து காங்க்ரெஸ் ப்ரதிநிதிகளை வரவேற்று உபசரித்தார். அவர் அப்போது செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சங்களைக் குறிப்பிடுகிறோம்.

### ஸர். எஸ். ஸுப்ரமண்ய அய்யர்.

அவர் முதலில் ராஜபக்தியைப்பற்றிப் ப்ரஸ்தாபித்துவிட்டு, நிலஸ்வான்கள் அதிகமாக காங்க்ரெஸில் சேர்ந்திருப்பதைப்பற்றி பேசினார். அவர்கள் காங்க்ரெஸில் சேர்ந்து விசேஷமாக ப்ரஸங்கங்கள் செய்ய இஷ்டப்படாவிட்டாலும், அவர்கள் காங்க்ரெஸின் பற்பல முயற்சிகளுக்கு ரொம்ப ஆதரவாக இருந்து வரலாம். அவர்கள் காங்க்ரெஸில் சேர்ந்து உழைக்க வேண்டியதவச்ய மென்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன.

முதலாவது, அவர்கள் காங்க்ரெஸில் சேர்ந்தால், அவர்கள் இதுவரையில் சேராமல் காங்க்ரெஸ் சில வகுப்பார்களின் கூட்டமாகுமென்று பலர் சொல்லிவந்த குறை நீங்கும். காங்க்ரெஸின் முயற்சியால் இந்தியப் பொது ஜனங்களே யல்லாமல் அந்த நிலஸ்வான்களும் நன்மைகள் அடைந்திருக்கிறார்கள். இந்தக் காங்க்ரெஸ் முயற்சியில்லாவிட்டால், அவர்களுக்கு லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களுக்கு ப்ரதிநிதிகள் தெரிந்தெடுக்கும் பாத்யதை கிடைத்திராது.

கவர்ன்மெண்டுகளின் நிர்வாக ஸபைகளில் இந்தியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதற்காக நாம் முயற்சி செய்து, அந்த முயற்சி கைகூடினபோது அந்த வகுப்பார்களே அந்த பாத்யதையை முதலில் அடைந்தவர்கள். ஆகையினால் அவர்கள் இந்தக் காங்க்ரெஸில் அதிகமாகச் சேர்ந்து இதற்காக உழைத்து வரவேண்டியதவச்யமாகும். அந்த வகுப்பார்களில், ராஜாங்கவிஷயங்களில் ப்ரியமுள்ள வாலிபர்களும் மற்றவர்களும் ராஜாங்கவிஷயங்களில் ரொம்பவும் கற்றுத்தேர்ந்து பொதுஜன நன்மைக்காக உழைக்க முன் வரவேண்டியது அவச்யமாகும்.

### க்ராமப் பஞ்சாயத்துகள்.

க்ராம ஒற்றுமை நமது தேசத்தில் க்ஷீணித்துப் போயிருக்கிறது. க்ராம வாழ்க்கையைச் சீர்திருத்த வேண்டியது ரொம்ப அவச்யமாகும். அதிகாரப் பிரிவினைக்கமிட்டியார் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டியது அவச்யமென்று தெரிவித்து 5-வர்ஷ காலமாகியும் இதுவரையில் அதற்காக யாதொரு விசேஷமான முயற்சியும் செய்யப்படவில்லை. தேசத்தின் க்ஷேமத்துக்கு ஒற்றுமையான க்ராம வாழ்க்கை ரொம்ப அவச்யமானதால், க்ராமங்களில் ஒற்றுமை யேற்படும்படி க்ராமப் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்தவேண்டியது அவச்யமாகும். இதற்காக ஒரு உத்யோகஸ்தரை நியமித்து, அவரிடம் க்ராமப் பஞ்சாயத்துகள்

ஸ்தாபிக்கும் வேலையை ஒப்புவிக்க வேண்டும்.

காங்க்ரேஸின் அவச்யம்.

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் அதிக மெம்பர்களை நியமித்திருப்பதாலும், அவர்களுக்கு சில அதிகாரங்கள் ஏற்பட்டிருப்பதாலும், சிலர் இனி காங்க்ரெஸ் நடக்கவேண்டியது அவச்யமில்லை யென்கிறார்கள். அப்படிச் சொல்வது முற்றிலும் சரியல்ல. ஏனென்றால் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் மெம்பர்கள் தங்களால் செய்யக்கூடிய முயற்சிகளைச் செய்து வந்தாலும், அதனால் வரக்கூடிய ப்ரயோஜனம் ரொம்ப ஸ்வல்பமானதே. மேலும் தேசமுழுவதுக்கும் பொதுவானவையும் ரொம்ப முக்யமானவையுமான விஷயங்கள் பல இருக்கின்றன. இவைகளைப்பற்றி ஆலோசிக்க தேசத்தின் பற்பலபாகங்களிலுள்ள ஜனத் தலைவர்கள் நேரில் ஒன்றுகூடவேண்டியது ரொம்பவும் அத்யாவச்யமாகும். மேலும், அவர்கள் ஒன்றுகூடிப்பேசுவதால் ஜனங்களுக்குள் ஒற்றுமையேற்படும்.

காங்க்ரேஸின் சீர்திருத்தம்.

தேசத்தின் க்ஷேமத்துக்கான விஷயங்களைப் பற்றி ஜனத்தலைவர்கள் தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கவும், இந்த அபிப்ராயங்களை பொது ஜனங்களிடம் பரவச் செய்யவும் ஸாதகம் ஏற்படும்படி காங்க்ரெஸைச் சீர்திருத்த வேண்டியது அவச்யமாகும். இதற்கு காங்க்ரெஸ் அபிமானிகள் சேர்ந்த ஒரு ஸங்கம் ஸ்தாபித்து, அவர்களிடம் சந்தா வஸூலித்து, மேற்சொன்ன கார்யங்களை நடத்தி வரவேண்டும்.

ஸர் ஸுப்ரமண்ய அய்யர் இவ்வாறு ப்ரஸ்தாபித்து விட்டு, நாம் ரொம்பதிறமை வாய்ந்த ஜனங்களாக ஆவதற்கு நமக்குத்தேகப் பயிற்சியோடு, ராணுவப்பயிற்சி ஏற்படவேண்டுமென்றும், இந்திய வாலண்டியர் படைகள் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும், ஆயுதங்கள் வாங்கி உபயோகிப்பதில் கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு அதிக ஸ்வதந்தரங்கள் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்.

பாபு பூபேந்த்ரநாத் பாஸு.

ஸர் ஸுப்ரமண்ய அய்யர் தமது ப்ரஸங்கத்தை முடித்தபிறகு கல்கத்தா வாஸியாகிய பாபு பூபேந்த்ரநாத் பாஸு காங்க்ரெஸின் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் தமது ப்ரஸங்கத்தில், தாம், இந்த யுத்தஸமயத்தில் விவாதத்துக் கிடமான விஷயங்களைப் பற்றிப் பேசப் போவதில்லை யென்று சொல்லி விட்டு, முதலில் கொஞ்சகாலத்துக்கு முன்னால் காங்க்ரெஸின் ப்ரதிநிதிகள் இங்க்லண்டுக்குப்போய் இந்தியாவின் விஷயங்களைப் பற்றி ப்ரிட்டிஷ் ஜனங்களுக்குத் தெரிவித்து வந்ததைப்பற்றியும், இந்தியா மந்த்ரியின் ஸபையைச் சீர்திருத்துவதற்காக பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்ட மசோதா தள்ளப்பட்டுப்போனதைப் பற்றியும் ப்ரஸ்தாபித்தார்.

ராயல் கமிஷன்கள்.

பற்பல ஸமயங்களில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியாவின் விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்ய ராயல் கமிஷன்கள் என்ற விசாரணைக் கமிட்டிகள் நியமித்து வருகிறார்கள். உதாரணமாக அதிகாரப் பிரிவினைக் கமிஷன், இந்திய நாணய விசாரணைக் கமிஷன் ஆகிய இவைகளைச் சொல்லலாம். மிஸ்டர் பாஸு இந்தக் கமிஷன்களால், எந்த வ்யவஹாரங்களைப் பரிசீலனை செய்ய அவை ஏற்படுத்தப்பட்டனவோ அந்த வ்யவஹாரங்களைப் பற்றி அநேக உபயோகமுள்ள விஷயங்கள் வெளியாவது உண்மை யென்றாலும், அவைகளால் அதிகபயன் ஏற்படுவதற்கில்லை யென்றும், அந்தக் கமிஷன்களில் பார்லிமெண்ட் மெம்பர்கள் அதிகமிருப்பதில்லை யாகையால், அந்த வ்யவஹாரங்கள் விஷயமாய் அதிக ஊக்



கமெடுத்து பார்லிமெண்டில் பேசுவதற்கு முடியாமல் போகிறதென்றும், இந்த மாதிரிக் கமிஷன்கள் நியமிப்பதற்குப் பதிலாக ஈஸ்ட் இந்தியா கம்பெனி காலத்தில் இந்திய விஷயங்களைப்பற்றி விசாரிக்க பார்லிமெண்டரிக் கமிட்டிகள் நியமித்து வந்தது போல் பார்லிமெண்ட் மெம்பர்கள் சேர்ந்துள்ள பார்லிமெண்டரி கமிட்டிகள் ஏற்படுத்தினால், அவைகளில் சேர்ந்திருந்த பார்லிமெண்ட் மெம்பர்கள்கமிட்டிகள் பரிசீலனை செய்த வ்யவஹாரங்களைப் பற்றி அதிக ஊக்கமெடுத்துக் கொள்ளக் கூடுமென்றும், இதனால் இந்தியாவின் ஆளுகையில் உள்ளகுறைகள் நீங்கக் கூடுமென்றும் சொன்னார்.

இந்தியாவின் குறைகள்.

இந்தியர்களின் நன்மையை யுத்தேசித்து இந்தியாவுக்குச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசுகையில் மிஸ்டர் பாஸு, இந்தியர்களுக்கு ஜாதிமதவித்யாஸமில்லாமல் அவர்களுடைய திறமைக்குத் தக்கபடி உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்கவேண்டு மென்றும், ப்ரஸங்கம் செய்வது, பத்திரிகைகளில் எழுதுவது ஆகிய இவைகளுக்கு கவர்ன்மெண்டார் போட்டிருக்கும் தடைகளை நீக்கிவிட வேண்டுமென்றும், ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் உள்ள மற்ற ஜனங்களுக்கு என்ன ஸ்வதந்தரங்கள் இருக்கின்றனவோ அந்த ஸ்வதந்த்ரங்கள் எல்லாம் இந்தியர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றும், ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் இந்தியா ஒரு தன்னரசுநாடாக இருக்கவேண்டுமென்றும் சொன்னார்.

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்கள்.

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களின் சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசினபோது, அவர் இந்தக் கௌன்ஸில்களின் சரித்ரத்தைப்பற்றி சிறிது சொன்னார். முதல் முதலில் 1773-ம் வர்ஷத்தில் ரெகுலேடிங் ஆக்ட் என்ற ஒரு சட்டத்தால், கவர்னர் ஜெனராலுக்கு உதவியாக ஒரு ஸபை யேற்படுத்தப்பட்டது. அதற்கு அப்போது 3-மெம்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிறகு 1833-வர்ஷத்தில் சட்டவிஷயங்களைப்பற்றி கவனிப்பதற்காக அதிகப்படியாக ஒரு மெம்பர் நியமிக்கப்பட்டார். 1853-ம் வர்ஷத்தில் தான் சட்டநிரூபண ஸபை (லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்) ஏற்படுத்தப்பட்டது. அப்போது அதில் பத்து மெம்பர்கள் உண்டு. அவர்களில் 4-பேர் கவர்னர் ஜெனரலினுடைய கௌன்ஸிலைச் சேர்ந்தவர்கள். மற்ற ஆறுபேரும் கவர்ன்மெண்டால் நியமனம் செய்யப்பட்டவர்கள். அப்போது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ப்ரதிநிதிகள் ஒருவரும் அந்த ஸபையில் இருப்பதற் கிடமில்லாமலிருந்தது. 1861-ம் வர்ஷத்தில், நியமனம் செய்யப்பட்ட மெம்பர்களின் தொகை ஆறிலிருந்து 12 ஆக்கப்பட்டது. பிறகு வெகுகாலங்கழித்து காங்க்ரெஸின் இடைவிடாத முயற்சியால் 1892-ம் வர்ஷத்தில், இங்க்லண்டில் சட்டநிரூபண ஸபைகளின் சீர்திருத்தத்துக்காக ஒரு சட்டம் செய்யப்பட்டது. அந்தச் சட்டத்தினால், இம்பீரியல் அதாவது வைஸ்ராயின் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலும் மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களிலும், மெம்பர்கள் தீர்மானங்கள் கொண்டுவரலாமென்றும், கவர்ன்மெண்டின் கார்யங்களைப்பற்றி கேள்விகள் கேட்கலாமென்றும், வரவு செலவு திட்டத்தைப்பற்றி விவாதங்கள் செய்யலாமென்றும் ஏற்பட்டது.

பிறகு 1909-ம்வர்ஷத்தில் சட்டநிரூபண ஸபைகளின் அமைப்பில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. வைஸ்ராயின் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் 60 மெம்பர்கள் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 27-பேர்கள் ஜனப்ரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். பாக்கி 33-பேர்களும் கவர்ன்மெண்டால் நியமனம் செய்யப்பட்டவர்கள். இந்த 33-பேர்களிலும் 28-பேருக்குமேல் உத்யோகஸ்தர்களாக இருக்கக்கூடாது. கவர்ன்மெண்டார் வரவு செலவு திட்டத்தைப்பற்றிய கணக்

குகளை கௌன்ஸிலில் தெரிவிக்க வேண்டும். ஆனால் மெம்பர்கள் அந்த வரவு செலவு திட்டத்தைப்பற்றி விவாதங்கள் செய்யக்கூடாது. மெம்பர்கள் தேச அரசாட்சியைப்பற்றின விஷயங்களில் தீர்மானங்கள கொண்டுவரலாம். அவைகளைப்பற்றிக் கேள்விகள் கேட்பதற்கும் அதிக ஸௌகர்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தச் சுருக்கமான சரித்ரத்தைத்தெரிவித்துவிட்டு மிஸ்டர் பாஸு இந்தக் கௌன்ஸில்களால் நன்மை ஏற்படாமல் போகவில்லையென்றும், இம்பீரியல் லெஜிஸ்லெடிவ்கௌன்ஸிலில் உத்யோகஸ்தர்கள் அதிகமாயிருப்பதைக் குறைத்து விடவேண்டுமென்றும், சொன்னார்.

பிறகு மிஸ்டர் பாஸு இந்தியாவுக்கு ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்குக் கீழ்ப்பட்டதாய், ஆஸ்ட்ரேலியாவின் அரசாட்சியமைப்பு அமெரிக்க ஐக்ய மாகாணங்களின் அரசாட்சியமைப்பு ஆகிய இவைகள் போன்ற தன்னரசு கவர்ன்மெண்டு ஏற்படவேண்டுமென்றும், இந்தியர்களுக்கு ஆயுதம் உபயோகிக்கும் பாத்யதையேற்பட வேண்டுமென்றும், கல்வியை அபிவ்ருத்திசெய்ய வேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் கைத்தொழில்களுக்கு பணஉதவி செய்யவேண்டுமென்றும், இந்தியாவின் ப்ரதிநிதிகள் அடிக்கடி இங்கிலண்டுக்குப் போய் இந்தியர்களின் குறைகளை ப்ரிட்டிஷ் ஜனங்களுக்கும் காங்க்ரெஸின் ப்ரிட்டிஷ் கமிட்டிக்கும் தெரிவிக்கவேண்டுமென்றும், காங்க்ரெஸின் ப்ரிட்டிஷ் கமிட்டி தனது வேலையைத் தடையின்றிச் செய்துவர அதற்கு இந்தியர்கள் பணஉதவி செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

## THE TEMPERANCE CONFERENCE.

### மதுவிலக்குக் கான்பரென்ஸ்.

இந்தக் கான்பரென்ஸ் சென்னையில் டிஸம்பர் மாஸம் 30-ந்தேதியன்று கூடிற்று. சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களுள் ஒருவரான ஆனரபிள் மிஸ்டர் பி. என். சர்மா கான்பரென்ஸுக்கு வந்திருந்த ப்ரதிநிதிகளை வரவேற்று உபன்யாஸம் செய்தார்.

அதில் அவர், இந்தியா கவர்ன்மெண்டார் மிதமாய் மதுபானங்களை உபயோகிக்கும் ஜனங்களுக்கு மதுபானங்கள் கிடைக்காதபடி தடுக்க முடியாதென்று தெரிவித்திருப்பதாகவும், அப்படி அவர்கள் தீர்மானித்திருப்பதை முடிவான கொள்கையாகக் கொள்ளக்கூடாதென்றும், ஜனங்கள் குடிவழக்கத்தை முற்றிலும் ஒழிக்கும்படி தூண்டவேண்டியது கவர்ன்மெண்டின் கடமையென்றும், 1837-ம் வர்ஷத்தில் சாராயவரி $1\frac{1}{4}$ கோடி ரூபாயாயிருந்தது 1911—12-ம் வர்ஷத்தில் 11 கோடிக்கு அதிகமாக அதிகரித்திருக்கிறதென்றும், சாராயவரியில் பெரும்பாகம் படிப்பில்லாத ஏழை ஜனங்களிடமிருந்து வருகிறதென்றும், இவர்கள் குடிவழக்கத்தால் தங்களுக்கு ஜீவனத்துக்கு வேண்டிய ஐவேஜியை குடிக்குச் செலவழித்து விடுகிறார்களென்றும், புதிய விடங்களில் ஜனங்களுக்கு குடிப்பதற்கு சாராயம் வேண்டியிருக்குமென்று சாராயக்கடைகள் ஏற்படுத்தாமல், ஜனங்களில் பெரும்பாகத்தார் கடை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டால் மாத்ரம் சாராயக்கடைகள் ஸ்தாபிக்க அனுமதி கொடுக்கிறதென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்தால் அதனால் ரொம்ப நன்மை ஏற்படக்கூடுமென்றும், குடிவழக்கத்தைத் தடுக்க கவர்ன்மெண்டாரையே எதிர்பார்த்திராமல் ஜனங்களும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

கல்கத்தாவைச் சேர்ந்த ரெவரெண்ட் ஆண்டர்ஸன் என்பவர் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் இந்தியா கவர்ன்மெண்டும் மற்ற மாகாணகவர்ன்மெண்டுகளும் மதுவிலக்கு முயற்சியில் அனுதாபம் காட்டி வருகிறார்களென்றும், அது இந்த முயற்சியின் அபிவ்ருத்திக்கு ஒரு நல்ல அறிகுறியாகுமென்றும், இந்த மதுவிலக்கு முயற்சியில் சேர்ந்தவர்கள் ஒற்றுமையாயும் ஒழுங்காயும் ப்ரயத்தனப்பட்டு வரவேண்டுமென்றும், சாராயக்கடைகளுக்கு லைஸென்ஸ்கொடுப்பதைப் பற்றி ஆலோசனை கேட்பதற்காக கவர்ன்மெண்டார் நியமித்திருக்கும் ஆலோசனைக் கமிட்டிகளில் இருக்கும் உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் தாங்களிருக்கு மிடங்களில் மதுவிலக்கு ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், லோகல் போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் சாராயவரி விஷயங்களில் விசேஷ ஞான முள்ளவர்களைத் தெரிந்தெடுத்து மேற்சொன்ன ஆலோசனைக் கமிட்டிகளில் நியமிக்க வண்டுமென்றும் சொன்னார்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

OFFICE OF THE REGISTRAR O… 30 MAR 1915 M…RAS.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Features of Good Discpline.

நல்ல க்ரம சிக்ஷையின் அடையாளங்கள்.—ஸமீபத்தில் வெளிவந்த 'மாதர் மனோரஞ்சனி'யில் ஒரு உபாத்யாயர் நல்ல க்ரமசிக்ஷையின் அடையாளங்கள் இன்னவை யென்பதை எடுத்து எழுதியிருக்கிறார். அவை பின்வருமாறு.

1. பாடசாலையில் சப்தமில்லாமலிருப்பது.
2. உபாத்யாயர் கட்டளைகளுக்கு பிள்ளைகள் உடனே ஸந்தோஷத்துடன் கீழ்ப்படிதல்.
3. பாடம் மாற்றுவது, வகுப்பினிடம் மாற்றுவது ஆகிய இவைகளில் சப்தமில்லாமலிருப்பது ; ஆனால் பிள்ளைகள் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும்.
4. பாடசாலையின் யோக்யதை.
5. சிக்ஷை அதிக குறைவாயிருப்பது.

உபாத்யாயர் தமது வகுப்பில் பாடம் நடத்தும் பொழுது பிள்ளைகள் கவனிக்கிறார்களா வென்று பார்க்கவேண்டும். இதற்கு வகுப்பைச் சுற்றிலும் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அடிக்கடி பிள்ளைகளை கேள்வி கேட்டு விடைபெறவேண்டும். பிள்ளைகள் உட்காரும் இடம் தாராளமா யிருக்கவேண்டும்.

போதிக்கும் விஷயங்களை காலத்திற்குத் தகுந்தபடி மாற்றிக்கொண்டே வரவேண்டும். ஒரு விஷயத்தைக் குறித்து நீடித்து போதிக்கவே கூடாது. அப்படிச் செய்தால் பிள்ளைகளுக்கு வெறுப்புண்டாகும். வெறுப்புண்டானதும் கவனம் குறையும். கவனம் குறையவே, க்ரமசிக்ஷைக்கு பங்கம் உண்டாகும்.

உபாத்யாயர் எந்த விஷயத்தை போதித்தபோதிலும், பிள்ளைகளுக்கு நன்றாக விளங்கும்படி அதை போதிக்கவேண்டும். மேலும் பிள்ளைகள் தாங்களே சிரமப்பட்டு செய்யவேண்டிய காரியங்களைச் செய்யும்படி வற்புறுத்திச் சொல்லவேண்டும்.

அடிக்கடி ட்ரில், இடம் மாற்றல், ஒருவரை யொருவர் கேள்வி கேட்டுக்கொள்வது, யாவரும் சேர்ந்து விடைகொடுப்பது முதலியவைகளை உபாத்யாயர் கையாடவேண்டும்.

இவ்விதம் செய்துவந்தால் வகுப்பின் க்ரமசிக்ஷை நன்றாக இருப்பதுடன், பிள்ளைகளுக்கு கவனம், சுறுசுறுப்பு, உபாத்யாயரிடத்தில் அன்பு, மரியாதை முதலியவைகளும் வ்ருத்தியடையவும்.

### Mass Education.

ஜனஸமூகப் படிப்பு.—சிறுவர்கள் எழுதப்படிக்கவும், கணக்குகள் போடவும் கற்றுக்கொள்வது பையன்களினுடைய படிப்பில் முக்யமான பாகமானாலும், அவைகளைக் கற்றுக்கொடுத்தால் மட்டும் போதாது. கல்வி யென்பது நமது வாழ்க்கையில் நாம் சரிவர நடந்து வருவதற்கு ஒரு ஆரம்ப ஸாதனமாகும். ஆகையால் கல்வியால் மாணவர்கள் பெரியவர்களான பிறகு ஏதோ ஒரு தொழிலைச் செய்து ஸம்பாதித்து ஜீவனம் செய்வதற்கு அவர்களுக்குத் திறமை ஏற்படவேண்டியது அவச்யமாகும். அதற்கேற்றாற்போல் அவர்களுக்கு இப்படிப்பட்ட திறமை ஏற்படும்படியாகப் பாடங்கள் கற்பிக்கவேண்டியது அவச்யம். இந்த விஷயத்தை இதுவரையில் வித்யாபிமானிகள் கவனிக்கவில்லை. இப்போதுதான் சிலர் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவரையில் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு இலக்கிய ஸம்பந்தமான கல்வியும், சாஸ்த்ரீய ஸம்பந்தான கல்வியுமே கற்பித்து வந்திருக்கிறார்கள். மாணவர்களுக்குத் தொழில்கள் ஸம்பந்தமான கல்வி ஒன்றும் கற்பிக்க ஏற்பாடு செய்யவில்லை. இலக்கியக் கல்வி, சாஸ்த்ரீய கல்வி ஆகிய இவைகளுடன் தொழில் கல்வியையும் கலந்து கற்பிக்கவேண்டும். இப்படிப்பட்ட படிப்பு முக்யமாய் சில தொழில் பள்ளிக்கூடங்களில்தான் கற்பிக்கப் பட்டு வருகின்றன. இந்தியாவிலும், மற்ற மேல்நாடுகளிலும் குற்றங்கள் செய்த சிறுவர்களில் அநேகரை அவர்களுக்கென்று ஏற்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி அவர்களுக்கு ஸாதாரண கல்வி, தொழில் கல்வி முதலியவைகள் கற்றுக்கொடுத்து அவர்களை நல்வழியில் திருப்பி தொழில்கள்செய்து யோக்யமாய் ஜீவிக்கும்படி வெளியிலனுப்புகிறார்கள். இவர்களுக்கு உபயோகமான கல்வி கற்பிப்பதுபோலவே யோக்யமான பிள்ளைகளுக்கும் தொழில் கல்வி கற்பித்து வர முயலவேண்டும் என்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை எழுதுகிறது.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Rotation of Crops.

மாற்றுப்பயிர் ஸாகுபடி.—டிஸம்பர் மாஸத்து 'கிருஷிகனி'ல் காலஞ்சென்ற ஜே. தர்மரங்க ராஜு அவர்கள் கடைசியாக இயற்றிய சில நேர்த்தியான விவஸாயப் பாட்டுகள் வெளி வந்திருக்கின்றன. அவைகளில் மாற்றுப்பயிர் ஸாகுபடியின் அவச்யத்தைப்பற்றிக் கூறும்பாகத்தை இங்கு தருகிறோம்.

தும்மி மெட்டு.

1. ஒருபயிரே செய்வதனால், உண்டாகுங் கேடு, ஒவ்வொன்றாய் ஓதுகிறோம், பொறுமையுடன் கேளும், விருப்பமுடன் சிறுமணியன், சின்னராமன் சம்பா, அருமையுள நீலன் சம்பா, அன்றி வேறறியார்.

2. தருணத்தில் மழைபெய்து, தாங்கலில் நீர் பெருகி, பருவத்தில் நாற்றுவிட்டு, பாங்குடனே நட்டு, வருணன் மிகக் கருணையுடன், வரிசை மழை பொழிய, வாக்கான சீதோஷ்ணம், வாடை சேரிலன்றே.

3. முன்னேறி மழைபெய்யா, தொழிந்திடச் சீதோஷ்ணம், முற்றிலுமே மாறிடினும், காற்று வீசிடினும், பின்னேறிக் கதிர் நீட்டும், போதுமழை பொழிந்து, நீர்த்தட்டு நேர்ந்தாலும், பிறக்கு பயிர் அழியும்.

4. செய்வதொரே பயிர் அதுவும், கெட்டழுகித் தீய்ந்தால், சிறுமனிதர் கன்றுகாலி, உய்யும்வகை என்னே ? மெய்யிரண்டு மூன்றுபயிர், செய்திருந்தால் ஒன்று, மிகவழுகித் தீய்ந்தாலும், மற்றொன்று விளையும்.

5. நேயர்களே களைப்பூண்டின், நீர்மை நீர் அறிவீர் ; நிலைபயிரின் நோய்கொடிகள், புழுப்பூச்சி யறிவீர் ; வாய்க்கு மொவ்வொரு பயிர்க்கும், வெவ்வேறு களைகள், நோய்களுடன் புழுப்பூச்சி, வெவ்வேறென்றறிவீர்.

6. இடையின்றி ஒருநிலத்தில், ஒருபயிரே இட்டால், இந்நோய்கள் களைபுழுக்கள், எங்குமிகப் பெருகும், நடுபயிர் வெவ்வேறாயின், கவிலும் நோ யாதி, தடையின்றி நாசமுறும், நாளடைவிற் காணீர்.

7. மண்ணிலுள்ள பயிருணவைத், தண்ணீர் கரைத்தூட்டி, வான்பயிரை வளர்ப்பிக்கும், மாணவ ரொவ்வொன்றும், திண்ணமாயோர் வகையுணவை, தெரிந்துமிக அருந்தும், எண்ணிலிவ்வாறு நிலம், சத்திழந்து கெடுமே.

7. நாலைந்து பயிர்மாற்றி, நட்டுவந்தால் அவைகள், தத்தமக்காம் நல்லுணவை, தெரிந்தெடுத்தே அருந்த, ஞாலத்தில் பலவகையாம், பயிருணவுப் பொருள்கள், சமமாகச் செலவாகி, நிலவளத்தைக் காக்கும்.

8. இதனாலே இந்நிலத்தின், எருச் செலவு குறையும், சதமாக ஒரு பயிரே, செய்நிலத்தோ வென்னில், மிதமிஞ்சி ஆண்டுதோறும், மேலெருவிடல் வேண்டும், அதிலேற்படும் செலவோ, மிக அதிகம் எனலாமே.

9. ஊரெங்கும் ஒரு பயிரை, ஒருங்கே செய்து வந்தால், உழவு செய்தல் உரமடித்தல், நடுகை களை பறித்தல், பாரெங்கும் அறுவடைசெய், படிக்கூலியாட்கள், பருவத்தில் கிடையாமல், பகுநஷ்ட மாமே.

10. கிருஷிகர்தம் மாகூலை, விலை செய்யப் போனால், வரிசையாய் வண்டிகளைச் சந்தைகளில் நிற்கும், தரகரும்வியா பாரிகளும், சந்தித்து விலையைச், சரசமாக்கி மிகநஷ்டம், கிருஷிகர்க்கு விளைப்பார்.

### Tales of an Indian Detective.

தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டு பிடித்த அற்புதக் குற்றங்கள்.—இது காலஞ்சென்ற எஸ். எம். நடேச சாஸ்த்ரியார் எழுதிய துப்பறியும் கதைப்புஸ்தகத்தின் இரண்டாவது பதிப்பாகும். இதில் ஐந்து நேர்த்தியான கதைகள் அடங்கியிருக்கின்றன. இந்தக் கதைகளிலுள்ள யுக்தியும் தந்த்ரமுமுள்ள விஷயங்களில் அநேகம் இங்க்லீஷ் ப்ரெஞ்ச் முதலான பாஷைகளிலுள்ள துப்பறியும் கதைகளிலிருந்து க்ரஹித்தவைகளாகும். இந்த கதைகளெல்லாம் நமது நாட்டுக்கு ஒத்தவைகளாக எழுதப்பட்டிருக்கின்றன. கதைகள் வாசிக்க நேர்த்தியாக இருக்கின்றன. நடையும் ஸுலபமாயும் தெளிவாயும் இருக்கிறது. புஸ்தகம் 300 பக்கம் கொண்டது. இதன் விலை அணு 12. வேண்டுவோர் ஜி. எ. நடேசன் அண்ட் கம்பெனி, சுங்குராம செட்டித்தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Are Planets Inhabited ?

க்ரஹங்களில் ஜீவராசிகள் இருக்கின்றனவா ? :—அநேகர் செவ்வாயென்னும் க்ரஹத்தில் ஜனங்கள் இருக்கிறதாகவும், காலக்ரமத்தில் அவர்களுடன் ஸமாசாரப்போக்குவரத்துகள் வைத்துக்கொள்ளக்கூடுமென்றும் நம்பிவருகிறார்கள். வேறு சிலர் வேறு க்ரஹங்களிலும் மனிதர்களோ அல்லது வேறு ஜீவராசிகளோ இருக்கக்கூடுமா என்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். வால்டர் மாண்டர் என்னும் ப்ரபல வானசாஸ்த்ரி க்ரஹங்களின் சீதோஷ்ண நிலைமையைப்பற்றி சில விஷயங்கள் தெரிவித்திருக்கிறார். இவைகளைக்கொண்டு, இன்னின்ன க்ரஹங்களில் ஜீவராசிகள் உயிருடனிருக்க முடியும் முடியாதென்பதைத் தீர்மானிக்கிறார். அவர் சொல்லுவதாவது; ஸூர்யன் (ஸென்டிக்ரேட் தெர்மா மிட்டர் படி) 5000 டிக்ரிக்கு மேல் உஷ்ணமாயிருக்கிறது. அதாவது கொதிக்கும் ஜலத்தைவிட 50 மடங்கு அதிக உஷ்ணமாயிருக்கிறது.

சந்த்ரனில் ஆகாயம் இல்லை. அதனால் அது இரவு காலத்தில் த்ரவரூபமான ஆகாயத்தைப்போல் குளிர்ந்திருக்கும். (ஸூர்யனும் சந்த்ரனும் மேல்நாட்டு வான சாஸ்த்ரத்தின்படி க்ரஹங்களல்ல.)

புதன் என்னும் க்ரஹம் மற்றெல்லா க்ருஹங்களைவிட ரொம்ப உஷ்ணமானது. செவ்வாயோ எப்போதும் (ஸென்டிக்ரேட் தெர்மாமிட்டர் படி) 0-டிக்ரியுக்கும் குறைவாயிருக்க வேண்டும். அதாவது பனிக்கட்டியையும்விட ரொம்ப குளிர்ந்திருக்கும். ரொம்ப தூரத்திலிருக்கும் க்ரஹங்களாகிய வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய நான்கும் ஸூர்யனிடத்திலிருந்து அதிக உஷ்ணத்தையடையாவிட்டாலும், அவைகள் ஸ்வபாவமாகவே ரொம்ப சூடாக இருக்கின்றன. சுக்ரன்மாத்ரம் சராசரியில் (ஸென்டிக்ரேட் தெர்மா மிடர்படி) 69-டிக்ரி உஷ்ணமாயும், நிரக்ஷர ரேகையில் 95-டிக்ரி உஷ்ணமாயும் இருக்கிறது. நிரக்ஷர ரேகையில் 95-டிக்ரி உஷ்ணமிருப்பதால் அங்கே ஜலம் இருப்பதாயிருந்தால் அது கொதிக்க வேண்டும். இப்படிக் கொதிப்பதால் ஏராளமாக நீராவி எழும்பி ஸூர்ய உஷ்ணம் அந்த க்ரஹத்தில் அதிகம் தாக்காதபடி தடுத்துவிடும். 'ப்ரோடோப்ளாஸம்' என்னும் ஜீவமூலப் பொருள் (ஸென்டிக்ரேட் தெர்மாமிட்டர்படி) 0-டிக்ரிக்குக் குறைவான குளிரிலாவது, 100 டிக்ரிக்கு மேற்பட்ட உஷ்ணத்திலாவது வெகுகாலம் உயிரோடிருக்கமாட்டாது. ஆகையால் ஸூர்யன், புதன், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய இவைகள் ரொம்ப உஷ்ணமாதலாலும், சந்த்ரனும் செவ்வாயும் ரொம்ப குளிராதலாலும் இவைகளில் ஜீவராசிகள் எதுவும் உயிரோடிருக்கமாட்டா. சுக்ரனில் மாத்ரம் ஒருக்கால் ஜீவராசிகள் இருக்கலாம். அது விஷயமாக ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை.

### Date of the Mahabarata War.

மகாபாரத யுத்தத்தின் காலம்.—மகாபாரத யுத்தம் எந்தவர்ஷத்தில் நடை பெற்றது என்பதைப்பற்றி சாஸ்த்ர ஆராய்ச்சிக் காரர்கள், பலர், பலவிதமாக அபிப்ராயப்பட்டு வருகிறார்கள். ஒருவர் மகாபாரத யுத்தம் கிரிஸ்த சகாப்தத்துக்குமுன் 1370-ம் வர்ஷத்தில் நடந்ததாகச் சொல்லுகிறார்கள். இன்னொருவர் கி. மு. (கிரிஸ்தவ சகாப்தத்துக்குமுன்) 13-வது நூற்றாண்டில் நடைபெற்றதாகச் சொல்லுகிறார். ஒருவர் பாண்டவர்களில் மூத்தவராகிய யுதிஷ்டிரர் கி. மு. 575-வர்ஷத்தில் இருந்ததாகச் சொல்லுகிறார். காலஞ்சென்ற ரோமேச சந்த்ர டட் பாரத யுத்தம் கி. மு. 13-வது நூற்றாண்டின் மத்தியில் அதாவது கி. மு. 1250-ம் வர்ஷத்துக்கு ஸமீபத்தில் நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறார்.

ஸாதாரணமாய் இந்தியர்கள், பாரதயுத்தம் த்வாபாரயுகத்தின் கடைசியிலும் கலியுகத்தின் ஆரம்பத்திலும் நடைபெற்றதாக எண்ணியிருக்கிறார்கள். கலியுகம் கி. மு. 3102-ம் வர்ஷத்தில் ஆரம்பமாயிற்றென்று எண்ணியிருக்கிறார்கள். அதாவது கலிபிறந்து இப்போது 5016-வர்ஷமாகிற தென்றும் ஆகவே பாரதயுத்தமும் 5016-வர்ஷங்களுக்கு முன் நடந்திருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் பூனாவிலுள்ள மிஸ்டர் டி. ஜி. காளே யென்பவர் அப்படிச் சொல்வது தவறென்றும், கலியுகத்தின் காலம் பிற்காலத்தில் ஜ்யோதிஷ சாஸ்த்ரிகளால் நிர்ணயிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட தென்றும், ஆகையால் கலியுக காலத்தையும், பாரதயுத்த காலத்தையும் ஸம்பந்தப்படுத்தக் கூடாதென்றும் அவர் சொல்லுகிறார். அவருடைய அபிப்ராயப்படி மகாபாரத யுத்தம் கி. மு. 1500-ம் வர்ஷம் முதல் 1200-ம் வர்ஷத்துக்குள் ஏதாவது ஒரு காலத்தில் நடந்திருக்கவேண்டுமாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Remedy for Mosquitoes.

கொசுக்களை ஒழிக்க.—கொசுக்களால் மலேரியாக்காய்ச்சல் பரவுகிறதென்பது யாவருமறிந்த விஷயம். இவைகளில் முக்யமாய் பெண் கொசுக்கள் தான் மனிதர்களைக்கடித்து அவர்களுடைய தேகத்திலிருந்து ரக்தத்தை உறிஞ்சுகிறது. இவைகளால் தான் மலேரியா விசேஷமாய்ப் பரவுகிறதென்று சொல்லப்படுகிறது.

இவைகள் சதுப்பான இடங்களில் வஸித்து அங்கே ஏராளமாய் முட்டைகள் இடுகின்றன. அந்த இடங்களில் மலேரியாவுக்குக் குறைவே கிடையாது. இந்த முட்டைகள் புழுவான பிறகு அவைகள் ஜலத்தில் மூழ்கினதும் மூழ்காததுமாய் மிதந்து கொண்டிருக்கும். இவைகளின் மூச்சுவிடும் கருவிகள் மாத்ரம் ஜலத்துக்குமேல் காற்றுப்படும்படியாக இருக்கும்.

கொசுக்களை ஒழிப்பதற்கு நல்லவழி சதுப்பான இடங்களை நீர்வடிய விட்டு நல்ல உலர்ந்தபூமியாக மாற்றுவது. இது முடியாவிட்டால் அந்த சதுப்பு நிலங்களில் ஜலத்தின் மேல் பெட்ரோலியம் என்னும் மண்ணெண்ணெயை ஊற்றுவது. நல்ல ஜலத்தின் மேல் எண்ணெய் ஒரு மெல்லிய படையாக இருக்கும்படி அவ்வளவு விட்டால் போதும். இதனால் புழுக்களின் மூச்சுவிடும் பாகம் மூடுபட்டுப்போய் அவைகள் இறந்து போகும்.

இன்னொரு முறை என்னவென்றால் ஜலத்தில் நாப்தலீன் மருந்தைப்போடுவது. இது போட்டிருக்குமிடங்களில்கொசுக்கள் தங்குவது இல்லை. ஆனால் குடி ஜலமுள்ள குளம் கிணறுகளில் இந்த மருந்தைப் போட்டால் ஜலத்தின் ருசியும் மணமும் கெட்டுப்போகும். இதற்குப் பின்வரும் உபாயம் தகுந்ததாகும். கிணறுகள் போன்ற அடக்கமான இடங்களில் ஜலமட்டத்துக்குமேல் சற்று உயரத்தில் நாப்தலீன் மருந்தை ஒரு பையில் போட்டுத் தொங்கவிடவும். இந்த மருந்து சீக்ரம் ஆவியாகமாறுவதால் காற்றானது நாற்றமுள்ளதாகிறது. அதனால், அங்கே முட்டையிடவரும் பெண் கொசுக்கள் ஓடிப்போகின்றன.

### Bleeding in the Gum.

ஈறுகளில் ரத்தம் வருதல்.—'லோகோபகாரி'யில் ஒரு நிருபர் ஈறுகரைதலையும், ரத்தம் வருவதையும் நீக்க பின்வரும் வைத்யமுறைகளைக் குறிப்பிடுகிறார். (1) மஞ்சள், கடுக்காய் இவைகளைப் பொடிசெய்து பற்களில் தேய்த்தால் ஈறு கரைந்து போகுதல் நீங்கும். பற்களில் உதிரமோடுதல் நீங்கும். (2) உப்பைக் கொப்பளித்தால் ஈறு இறுகும். உதிரமோடுதல் நீங்கும். பற்களின் வலியும்போம். (3) சீனக்காரத்தை ஜலத்திற் கரைத்து வாய் கொப்பளித்தால் ஈறு பலக்கும்; பல்லிறுகும். (4) தாளிச்சப் பத்திரியைப்பொடிசெய்து பல்லுக்குத் தேய்க்க ஈறு பலக்கும். (5) மாசிக்காயைக் கஷாயமிட்டுக் கொப்பளித்தால் ஈறு பலக்கும். (6) பிஞ்சு கடுக்காயைப் பொடிசெய்து பற்களிலே தேய்த்துவர ஈறு பலக்கும். (7) காப்பூலிக் கடுக்காயின் சாம்பலைப்பொடிசெய்து பற்களில் தேய்த்தால் பல்வலி போம்; ஈறுகரையாது. (8) பொடுதலை என்னும் மூலிகையின் ஸமூலத்தைப் பசுமையாக வாயிலிட்டுமென்று பற்களிற் றேய்க்க ஈறுபலக்கும்; பல்லாடுதல் நிற்கும்; பல்நோய் நீங்கும்; பல்லில் உதிரமோடுதல் நிற்கும். பித்தசாந்தியுமாகும்.

மேற் கூறியவைகளில் 1, 3, 8-வது முறைகள் அநுபவத்தில் கைகண்ட மருந்துகளென்று மேல் சொன்ன நிருபர் தெரிவிக்கிறார்.

### Cloves.

க்ராம்பு.—இரண்டு பலம் க்ராம்பை (லவங்கம்) சிதைத்து, அரைப்படி ஜலத்தில் சேர்த்துக் கொதிக்க வைத்து, ஆறிய பிறகு வடிகட்டி வேளைக்கு 1 அல்லது 2 அவுன்ஸ் வீதம் நடுப்ராயத்திலுள்ளவருக்குக் கொடுக்க அஜீர்ணம், வயிற்றுநோய், வயிற்றில் வாயு சேருதல், குன்மம், ஆயாஸம் இவை தீரும். வாந்தியாவதை நிறுத்துவதற்கும் இதை உபயோகிக்கலாம்.—வைத்திய கலாநிதி.

### Infant Mortality.

சிசுமரணம்.—சிசுமரணம் அதிக உஷ்ணமான சீதோஷ்ண நிலைமையால் அதிகரிக்கிறதென்று ஒரு புதுக் கொள்கை உண்டாயிருக்கிறது.

ரொம்ப உஷ்ணமான ப்ரதேசங்களிலும்,முக்யமாய் மே மாஸம் போன்ற உஷ்ணமான மாஸங்களிலும் சிசுமரணம் ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறதாம். உஷ்ணம் குறைவாயிருக்கும் உயர்ந்த பீடபூமிகளில் சிசுமரணம் குறைவாயிருக்கிறதாம். உஷ்ணம் அதிகமானால் குழந்தைகள் அதைத் தாங்கமுடியாமல் களைத்து இறந்துபோகின்றனவாம்.



# LAW.

## சட்டம்.

### Adoption.

ஸ்வீகாரம் செய்துகொள்ளல்.—ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம்செய்து கொள்ளவேண்டி, நெருங்கின பந்துத்வமுள்ள அனந்தரவார்ஸின் ஒரேபுத்ரரை ஸ்வீகாரத்துக்கு கொடுக்கும்படி கேட்டதில் அவர் மறுத்துவிட்டதோடு, விதவை வேறொரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் தமது அனந்தரவார்ஸு பாத்யதை போய்விடுமென்று அந்த விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதற்கு ஸம்மதம் கொடுக்கவும் மறுத்துவிட்டார். அதன்மேல் விதவை எட்டின பந்துத்வமுள்ள அனந்தரவார்ஸ் ஒருவருடைய ஸம்மதத்தைப் பெற்று, வேறொரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். அப்படியானால், ஸமீப பந்துவாகிய அனந்தர வார்ஸானவர், விதவையின் குடும்பத்தின் க்ஷேமத்தை கவனிக்காமல், தமது ஸௌகர்யத்தையே கவனித்து, ஸ்வீகாரத்துக்கு ஸம்மதம் கொடுக்க மறுத்ததால், தூரபந்துவாகிய அனந்தரவார்ஸின் ஸம்மதம் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதற்கு போதுமானது.

### Principal and Agent.

முதலாளியும் ஏஜெண்டும்.—முதலாளிபேருக்கு ஸொத்து கடனுக்கு விலைக்குவாங்க அதிகாரம்பெற்ற ஏஜெண்டானவர் அப்படி வாங்கினதொகைக்கு ந்யாயமான வட்டிகொடுப்பதாக ஒப்புக்கொண்டால், அப்படி வட்டிகொடுப்பதாக ஒப்புக்கொண்டது முதலாளியைக் கட்டுப்படுத்தும்.

### Endorsement on Promissory Note.

ப்ராமிஸரி நோட்டில் எண்டார்ஸ் செய்வது.—ப்ராமிஸரிநோட்டு எழுதிக்கொடுத்த ஒருவர், ப்ராமிஸரி நோட்டில் "ப்ராமிஸரி நோட்டுக்கு வட்டிக்காக ரூ. 18 செல்லு" என்று எழுதிக்கொடுத்திருந்தார். ஆனால் உண்மையில் பணம் கொடுபடவில்லை. கடன் காலாவதியாக மலிருப்பதற்காக இந்த எண்டார்ஸ்மெண்ட் எழுதிக்கொடுக்கப்பட்டது. அப்படியானால் வாஸ்தவத்தில் பணம் கொடுக்கப்படவில்லையானாலும் அந்த எண்டார்ஸ்மெண்டானது லிமிடேஷன் ஆக்ட் 19-வது ஸெக்ஷன்படி கடனை ஒப்புக்கொண்டதாகிறது.

### Promissory Note.

ப்ராமிஸரி நோட்டு.—இரண்டுபேர் சேர்ந்து எழுதிக்கொடுத்த ப்ராமிஸரி நோட்டின்மேல் கடன் கொடுத்தவர் வ்யாஜ்யம் போட்டபோது, அந்த இரண்டு பேரில் ஒருவர் விஷயத்தில் அது காலாவதியாகிவிட்டது. மற்றவர் அந்தக் கடன் காலாவதியாகாதபடி கடனை ஒப்புக்கொண்டிருந்தால் அவர் விஷயத்தில் கடன் காலாவதியாகவில்லை. கோர்ட்டார் அந்த மற்றவர் கடனைக் கொடுக்கவேண்டுமென்றும் கடன் காலாவதியானவர் கடன் கொடுக்கவேண்டியதில்லையென்றும் தீர்ப்புச் செய்தார்கள். கடன் காலாவதியாகாமல் கடன் கொடுக்கும்படி தீர்ப்புப் பெற்றவர் (வாதி) மற்றவர் (ப்ரதிவாதி), கடனில் அவருடைய பாகத்தைக்கொடுக்கவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். வாதி தீர்ப்புத் தொகைமுழுவதையும் செலுத்தியிருப்பதால், ப்ரதிவாதி ஸம்பந்தப்பட்ட மட்டில் ப்ராமிஸரி நோட்டு காலாவதியாகிவிட்டாலுங் கூட, அந்த ப்ரதிவாதியினிடமிருந்து தீர்ப்புத் தொகையில் பாதியைப் பெற வாதிக்கு பாத்யமுண்டு.

### A Social Reform Case.

ஒரு ஆசார சீர்திருத்த கேஸ்.—ப்ரதிவாதி தமது வீட்டில் ச்ராத்தத்து உபாத்யாயம் செய்து வைக்க ப்ராமண புரோகிதராகிய வாதியைக் கூப்பிட்டிருந்தார். ஆனால் வாதி அதற்குமுன் ஒரு வீட்டில் விதவா விவாகம் நடந்தபோது அங்கே சாப்பிட்டார் என்று ப்ரதிவாதிக்குத்தெரிய வந்ததன்மேல், அவர் வாதியை ச்ராத்தத்துக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார். அதன்மேல் வாதி தம்மை அவமானஞ்செய்தாரென்று ப்ரதிவாதிமேல் கேஸ் கொண்டுவந்தார். கர்நூல் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் வாதிபக்ஷம் 20-ரூபாய்க்கு தீர்ப்பு செய்தார். ப்ரதிவாதி அந்தத் தீர்ப்பின்மேல் அப்பீல் செய்தார். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபின் தீர்ப்பை ரத்துசெய்து ப்ரதிவாதி பக்ஷம் தீர்ப்புச் செய்தார். அதன்மேல் இந்தக் கேஸ் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போயிற்று. ஹைகோர்ட்டார், ஒரு ப்ராமணர் விதவாவிவாகத்தில் சாப்பிட்டார் என்று சொல்வது அவரை அவதூறு செய்ததாகாதென்றும், ஜாதிப்ரஷ்டம்செய்யவேண்டியிராத ஜாதி ஆசாரக்குறைவான கார்யங்களை ஒருவர் செய்ததாகச் சொல்வது அவரை அவதூறு செய்ததாகமாட்டாதென்றும் தீர்ப்புச் செய்தார்கள்.

## PERSONAL NOTES.
## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Late E. C. Hardinge

காலஞ் சென்ற இ. ஸி. ஹார்டிஞ்ஜ்:—நமது வைஸ்ராயின் புத்ரராகிய லெப்டினண்ட் ஆனரபிள் எட்வர்ட் சார்ல்ஸ் ஹார்டிஞ் கொஞ்சகாலத்துக்கு முன்னால் யுத்தத்தில் காயமடைந்தாரென்றும், அந்த ஸமயம் அவர் காட்டிய பராக்ரமத்துக்காக அவருக்கு டி.எஸ். ஓ. என்ற பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் சென்ற மாஸத்துஸஞ்சிகையில் தெரிவித்தோம். சில நாட்களாக அவருடைய காயங்கள் குணமடையாமலே இருந்துவந்து சென்ற 18-ந்தேதியன்று அவர் இறந்து போய்விட்டாரென்று கேட்டு விஸனிக்கிறோம்.

### General Von Moltke.

ஜெனரல் வான்மோல்ட்கே:—ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் தலைவராக இருந்து வந்த ஜெனரல் வான் மோல்ட்கேயினிடம் கெய்ஸர் சக்ரவர்த்தி அத்ருப்தி கொண்டிருந்ததாக ஐப்பசிமாஸத்து 'ஜனாபிமானி'யில் குறிப்பிட்டிருந்தோம். அவர் சிலகாலமாய் தேக அஸௌக்யமாயிருந்தாரென்றும் வைத்யம் செய்து கொள்வதற்காக ஹாம்பர்க் என்னும் ஊருக்குப் போயிருந்தாரென்றும், இப்போது குணப்பட்டு விட்டாரென்றும் சொல்லப்படுகிறது. அவர் இப்போது அந்த உத்யோகத்தில் இல்லை. அவருக்கு பதிலாக ஜெர்மன் யுத்தமந்த்ரியாகிய ஜெனரல் வான்பால்கன் ஹெய்ன் என்பவர் யுத்தமந்த்ரி வேலையோடு ராணுவ அதிகாரிகளின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜெனரல் வான்மோல்ட்கே முற்றிலும் தேக ஸும் அடைந்தபிறகு அவருக்கு வேறு ஏதாவது புதிய உத்யோகம் கொடுக்கப்படுமாம்.

### Rev. Dr. Miller.

ரெவரண்ட் டாக்டர் மில்லர்:—சென்னை க்ரிஸ்டியன் காலேஜுக்கு ஸுமார் 45 வர்ஷகாலம் ப்ரின்ஸிபாலாக இருந்து சில வர்ஷங்களுக்கு முன் பார்வைக் குறைவால் வேலையிலிருந்து நீங்கி தற்போது ஸ்காட்லண்டில் வஸித்துவரும் டாக்டர் மில்லரைப்பற்றி யாவரும் கேட்டிருப்பார்கள். அவருடைய உருவச்சிலையொன்று சென்னையில் க்ரிஸ்டியன் காலேஜுக்கு எதிரே ஹைக்கோர்ட் ஓரமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மாஸம் 10-தேதி யன்று அவருடைய உருவப்படமொன்று சென்னை யூனிவர்ஸிட்டி ஸெனேட் ஹௌஸ் என்ற கட்டிடத்தில் சென்னை கவர்னரின் மனைவியால் திறந்து வைக்கப்பட்டது. இந்தப்படத்தின் விலை 3000 ரூபாயாகும்.

### Havildar Ganga Singh.

ஹவில்தார் கங்கா ஸிங்.—சென்றமாஸம் யுத்தவர்த்தமானத்தில் (162-ம் பக்கம்) ஹவில்தார் கங்கா ஸிங் என்பவருக்கு 'விக்டோரியா க்ராஸ்' என்னும் விருது கொடுக்கப்பட்டிருக்கிறதென்று தெரிவித்தோம். இவர் 57-வது 'ஒய்ல்ட்ஸ் ரைபிள்ஸ்' என்னும் ரெஜிமெண்டைச் சேர்ந்தவர். இவர் வடக்கே பஞ்சாப் மகாணத்தைச் சேர்ந்த காங்க்ரா ஜில்லாவில் டிக்கா என்னும் ஊரைச்சேர்ந்தவர். இவர் டோக்ரா ஜாதியில் பிறந்தவர். இவர் பிரோஸ்பூரிலிருந்த ரெஜிமெண்டில் சேர்ந்திருந்தார். இவர் தமது ரெஜிமெண்டோடு ப்ரான்ஸுக்குப்போய் யுத்தம் செய்து வந்தார். ஒரு நாள் அவரும் அவருடைய ரெஜிமெண்டைச்சேர்ந்த 15-பேரும் அகழ்களில் இருந்தபோது அருணோதயத்துக்குமுன் ஜெர்மானியர்கள் அவர்களை எதிர்த்தார்களாம். அவர்கள் இந்தியர்களுக்கு ஸமீபத்தில் வந்தபோது இந்தியர்கள் இருந்த அகழ்களைச்சுற்றி முள் கம்பிவேலி போட்டிருந்ததால் அவர்கள் சிறிது நேரம் தடுக்கப்பட்டார்கள். அவர்கள் முள்வேலியை அறுத்துக்கொண்டு முன் வருவதற்குள் அநேக ஜெர்மானியர்கள் இந்தியர்களால் சுடப்பட்டு இறந்து போனார்கள். கடைசியில் ஜெர்மானியர்கள் ஸமீபத்தில் நெருங்கிவிடவே இந்தியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் கைகலந்து சண்டையுண்டாயிற்று. அப்போது ஹவில்தார் ஜெர்மன் ஆபிஸரை சுட்டு வீழ்த்தி அவருடைய கத்தியைப் பிடுங்கிக்கொண்டு இன்னும் பத்து ஜெர்மானியர்களைக்கொன்று தள்ளினார். இதற்குள் அவருக்கு 5-குண்டுக்காயங்கள் ஏற்பட்டன. கடைசியில் அவர் காலில் குண்டு தாக்கவே அவர் கீழே விழுந்து விட்டார். ஜெர்மானியர்கள் அவரை இறந்து விட்டதாக எண்ணி விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். மற்ற இந்தியர்கள் 15-பேரும் இறந்துபோய் விட்டார்கள். ஹவில்தாருக்கு மார்பு, கால், இரண்டு கைகள், தலையின்மேல்பாகம் ஆகிய 5-இடங்களில் குண்டுகள் தாக்கினவாம்.



## SOCIETY AND RELIGION.
## ஜனஸமூகமும் மதமும்.

### War and Temperance.

யுத்தமும் மதுவிலக்கும்.—ஜெர்மனியில் கவர்ன்மெண்டார் ஸோல்ஜர்களுக்கு மதுபானங்கள் ஸப்ளை செய்வதில்லையாம். அந்த தேசத்தில் மதுபானங்கள் அதாவது சாராயவகைகள் அகப்படுவது அரிதாயிருக்கிறதாம். ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் இந்த யுத்தத்தில் தங்களுடைய ஸைன்யங்களுக்கு ஒய்ன் சாராயம் ஸப்ளை செய்வதில்லை. ஸோல்ஜர்கள் தங்களுக்கு இஷ்டமிருந்தால் ஸொந்தச் செலவில் சாராயவகைகள் வாங்கிக்கொள்ளலாமாம். ஆனால் லார்ட் கிச்சனர் ஸோல்ஜர்கள் சாராயவகைகள் குடிக்காமலிருக்க வேண்டுமென்று யுத்த ஆரம்பத்திலேயே புத்திமதிகள் சொல்லியிருக்கிறார்.

ரஷ்யாவில் குடிவழக்கம் ரொம்ப ப்ரபலமாக இருந்து வந்தது. அங்கேயுள்ள மதுவிலக்கு ஸபைகள் ஸமீபத்தில் ரஷ்யாவில் சாராயவகைகள் விற்பனை செய்யக்கூடாதென்று உத்தரவு செய்யும்படி ரஷ்ய சக்ரவர்த்திக்கு விண்ணப்பம் செய்துகொண்டன. இப்போது ரஷ்ய சக்ரவர்த்தி, கவர்ன்மெண்டு டிபார்ட்மெண்டுகள் சாராயம் விற்று வந்ததை இனி நிறுத்தி விடுவதாகத் தெரிவித்து அதன்படியே சட்டம் செய்திருக்கிறார். இதனால் ரஷ்யா கவர்ன்மெண்டுக்கு வர்ஷந்தோறும் 139½ கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமாம்.

### Guide Books to Places of Worship.

புண்ய ஸ்தலங்களின் விவரண புஸ்தகங்கள்.—சென்னை கவர்ன்மெண்டால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் சிலாசாஸன டிபார்ட்மெண்டார் கோவில்களிலும் மற்ற இடங்களிலும் உள்ள சில சாஸனங்களைப்பரிசோதித்து தேச சரித்ர ஸம்பந்தமான விஷயங்களையும் கோயில்கள் ஸம்பந்தமான விஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து வெளியிட்டு வருகிறார்கள். இந்த விஷயங்களையும், கோயில்களின் ஸ்தல புராணங்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, அந்தந்த ஊர்கள், அல்லது கோயில்களுக்கு விவரண புஸ்தகங்கள் எழுதினால் அந்த விடங்களைப் பார்க்கப்போகிறவர்களுக்கு அந்த விடங்களைப்பற்றிய விஷயங்களை முன்னாடியே அறிந்து கொள்வதற்கு இந்தப் புஸ்தகங்கள் ரொம்ப உபயோகமாயிருக்கும். தென்னிந்தியாவிலுள்ள தேவஸ்தானம் கமிட்டிகள் இப்படிப்பட்ட விவரண புஸ்தகங்கள் தயார் செய்ய தேவஸ்தானம் நிதியிலிருந்து பணம் கொடுத்து உதவலாமென்று 'மதராஸ் மெயில்' பத்ரிகை எழுதுகிறது.

### Rama Krishna Home of Service.

ராமக்ருஷ்ண ஊழிய க்ருஹம்.—காசியில் ராமக்ருஷ்ண மிஷன் என்னும் மதஸபையார் சென்ற 14-வர்ஷ காலமாக 'ராமக்ருஷ்ண ஹோம் அவ் ஸெர்விஸ்' என்று ஒரு ஊழிய க்ருஹம் ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். இந்த க்ருஹத்தைச் சேர்ந்தவர்கள் காசிக்கு வரும் யாத்ரிகர்களில் வ்யாதியாயிருப்பவர்களுக்கு வைத்யம் செய்தும், அநாதைகளுக்கு வேறு விதங்களில் உதவி செய்தும் வருகிறார்கள். இந்த மிஷனுக்கு லக்ஸார் என்னுமிடத்தில் ஒரு மருந்து சாலையிருக்கிறது. இதில் 46-வ்யாதியஸ்தர்கள் அங்கு தங்கி வைத்யம் செய்து கொள்வதற்கு ஸௌகர்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கே தங்கி வைத்யம் செய்து கொள்ளாத வ்யாதியஸ்தர்களுக்கும் மருந்து கொடுத்து உதவி வருகிறார்கள். அங்கே தொத்து வ்யாதிகளால் வருந்துகிறவர்களுக்கும், கிழவர்களுக்கும் துர்ப்பலமுள்ளவர்களும் தனித்தனியான இடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கு ஷை ஸபையார் வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

### India - The Home of Religons.

இந்தியா - மதங்களின் இருப்பிடம்.—இந்தியா ஹிந்துக்களுக்கு மாத்ரம் ஸொந்தமென்று சொல்வதற்கில்லை யென்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை சொல்லுகிறது. ஏனென்றால் இந்த தேசத்தில் அநேக ஜாதி ஜனங்களும், எல்லா மதஸ்தர்களும் வஸித்து வருகிறார்கள். கீழ்நாடு என்று சொல்லப்படும் ஆசியாதான் எல்லா மதங்களுக்கும் பிறப்பிடமாகும். அதிலும் இந்தியாதான் 'கீழ்நாட்டின்' ஜீவனாகும். உலகத்தின் துக்கத்தைப் போக்கடித்து உலகத்திலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களுக்கு ஸமாதானமும் பரிசுத்தமான வாழ்க்கையும் கொடுக்கும் ச்ரேஷ்டமான ஆத்மஞானமதம் இந்தியாவில்தான் இருக்கிறது—என்று அந்தப் பத்ரிகை எழுதுகிறது.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### How to Rescue the Drowning.

ஜலத்தில் முழ்கிப்போகிறவர்களைத் தப்புவிப்பது.—ஜலத்தில் மூழ்கிப்போனவன் மூன்று தரம் வெளியில் வருவான் என்று சொல்லுகிறார்கள். இது நிஜமல்ல. ஜலத்தில் விழுந்துவிட்டவன் சில விநாடிகள் மட்டும் ஜலத்துக்கு மேலே தத்தளித்து முழுகிப்போவான். இரண்டாம் தரம், மூன்றாந்தரம் மேலே வருவான் என்று ஒருவன் பார்த்துக்கொண்டிருப்பது பிசகு. ஜலத்தில் ஒருவன் விழுந்துவிட்டான் என்று எப்போது தெரிகிறதோ அப்போதே ஜலத்தில் மூழ்கி அவனை விடுவிப்பது பக்கத்திலிருப்பவன் கடமையாகும்.

ஓடுகிற ஜலத்தில் ஒருவன் விழுந்துவிட்டானேயானால் அவன் எவ்வளவு தூரத்தில் போயிருப்பானென்பதைத் தெரிந்து கொண்டு அந்த இடத்தில் மூழ்க வேண்டும். இப்படி உயிர் தப்புவிக்க மூழ்கிறவன் இடையில் மட்டும் ஒரு துணியைக் கட்டிக்கொண்டு, மற்றவைகளைக் களைந்து வைத்து விட்டு முழுகுவது மிகவும் நல்லது.

தப்புவிப்பதில் இரண்டு விதங்களுண்டு. முதலாவது, ஜலத்தின்மேல் தத்தளித்துக்கொண்டிருப்பவனுடைய மயிரையோ, துணியையோ பிடித்து இழுத்துக்கொண்டு தப்புவிக்கலாம். இப்படிப்பட்டவனை நீந்தத் தெரியாதவன்கூட ஒரு துணியையோ அல்லது ஒரு கயிற்றையோ விசிறி எறிந்து பிடித்திழுக்கலாம்.

இரண்டாவது விதம், ஜலத்தில் முழுகி யிருப்பவனைத் தப்புவித்தல் :—ஜலம் ஓடாத ஜலமாயிருந்தால் முழுகினவனைக் கடைசியாய் எங்கே பார்த்தோமோ அந்த இடத்தில் உடனே மூழ்கித் தரையில் தேட வேண்டும். அந்த இடத்தில் அகப்படாவிட்டால் விழுந்த இடத்தைச் சுற்றிலும் விசாலமாய்த் தேடினால் அகப்பட்டுப்போவான். அகப்பட்டவுடன் அவன் சிண்டையோ, உடையையோ பிடித்துக்கொண்டு ஜலத்தில் காலினால் இரண்டு உதைகள் கொடுத்தால் பிடித்துக்கொண்டிருக்கிறவன் மேலே வந்துவிடுவான். ஜலத்தில் கனமுள்ளவைகளைக்கூட ஸுலபமாய் இழுத்து வரலாம். பளுதோன்றாது. அப்படி மேலே வந்தவுடன் முதுகை ஜலத்தின்மேல் வைத்துக்கொண்டு நீந்தின வண்ணமாய்ப் பிடியை விடாமல் ஜலத்தில் விழுந்தவனைக் கரையேற்றி விடலாம். ஓடுகிற ஜலத்தில் விழுந்தவனை முதல் முதலில் அவன் எங்கே விழுந்தானோ அந்த இடம் முதல், ஜலம் ஓடுகிறதிக்கில் நீந்திக்கொண்டு இரண்டு புறங்களிலும் தேடிக்கொண்டே போகவேண்டும். ஓடுகிற ஜலத்தில் மனிதர்கள் அனேகமாய் கரையோரங்களில் நாணலிலும் மரங்களிலும் செடிகளிலும் சிக்கிக்கொண்டிருப்பதுமுண்டு. இப்படி அகப்பட்டிருப்பவன் ப்ரக்ஞையில்லாமலிருந்தால் அவன் மயிரையோ துணியையோ பிடித்து இழுத்துக்கொண்டு வந்து விடலாம். ப்ரக்ஞையுள்ளவனை மீட்டுவருவதே கஷ்டம். அவன் சில ஸமயங்களில் முறட்டுத் தனத்தால் மீட்க வந்தவனையே கீழே தண்ணீரில் அமுக்கி விடலாம். இப்பேர்ப்பட்டவர்களை நீந்துகிறவன் ஒரேபிடியாய் பலமாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பிடித்துக்கொள்வதனால் அவர்கள் அப்படியும் இப்படியும் அசைக்கச் சக்தியற்றவர்களாய் விடவேண்டும். பிறகு நீந்திக் கொண்டே அவர்களை தப்புவித்து விடலாம். அப்படியில்லாமல் ஜலத்தில் விழுந்தவன் புத்தியுடன் இருந்து சாந்த குணமுள்ளவனாயிருந்தால் தோளை மெதுவாய்ப் பிடித்துக்கொள்ளச் சொல்லி மார்பினாலேயே நீந்திவந்து விடலாம்.—சுதேசமித்திரன்

### Polishing Brass Work.

பித்தளை ஸாமான்களைப் பளபளப்பாக்குதல்.—பித்தளை ஸாமான்களின்மேல் ஒய்டிங் என்று சொல்லப்படும் சுத்தமான சாக்கட்டித் தூளில் ஒரு சிட்டிகையைத் தூவி எலுமிச்சம் பழத்தை யறுத்து அதில் ஒரு துண்டை யெடுத்து அதனால் நன்றாய்த் தேய்க்கவும். பிறகு ஒரு ம்ருதுவான துணியால் தேய்க்கவும். ஸாமான்கள் ரொம்ப பளபளப்பாகிவிடும். ரஸம் பிழிந்த எலுமிச்சம்பழத் துண்டுகளைக் கொண்டு உலோகத்தால் செய்த ஸாமான்களை சுத்தம் செய்யலாம்.

### Using Corks.

கார்குகளை உபயோகித்தல்.—ஸீஸாக்களில் கார்க்கைப்போட்டு மூடுமுன் கார்க்கை வெந்நீரில்போட்டு 15-நிமிஷ நேரமாவது, அல்லது கார்க்கு ம்ருதுவாய் வளையக்கூடிய தன்மைக்கு வரும்வரையிலாவது காய்ச்சிப் பிறகு ஸீஸாக்களின் வாயில் அடைத்து மூடினால், கார்க்கு ரொம்ப இருகலாய் மூடிக்கொள்ளும். ஸீல்போடும் அரக்குபோட்டு மூடவேண்டியதில்லை.



# AGRICULTURE.
## விவஸாயம்.

### Disease of Pomegranates.

மாதுளையில் உண்டாகும் வ்யாதி.—மாதுளையில் ஒருவித புழு உண்டாகி பழத்தை நாசப்படுத்துவதுண்டு. நோய்ப்பட்ட பழத்தைப் பரீக்ஷித்துப் பார்த்தால் அதில் சிறிய த்வாரங்கள் இருப்பது தெரியும். இந்த நோய் உண்டாகாதபடி தடுக்க ஸுலபமான முறை ஒன்று இருக்கிறது. மாதுளைத் தோட்டத்தில் தண்ணீர் பாயும் பொதுக் கால்வாயின் தலைப்பில் ஒரு ராத்தல் பெருங்காயத்தைப் பொடிசெய்து போடவேண்டும். அல்லது கால்வாயின் நடுவில் ஒரு பள்ளந்தோண்டி அதில் ஜலத்தை நிரப்பி பெருங்காயத்தைப் போடவேண்டும். இதற்குப் பிறகு செடிகளுக்கு ஜலம் பாய்ச்சவேண்டும். செடிகளுக்கு பாயும் ஜலம் பெருங்காயத்தோடு ஸம்பந்தப்பட்டிருக்கும். செடிகளுக்கு இரண்டு மூன்று தடவை ஸாதாரணமாக ஜலம் பாய்ச்சின பிறகு பெருங்காயம் போட்டு இரண்டு மூன்று தடவை ஜலம் பாய்ச்சவேண்டும். இதனால் இந்தப் புழுக்களின் தொந்தரை குறையும். வேறு கெட்ட நோய் ஒன்றும் செடிக்கு உண்டாகாது.

### Single Seedling Planting.

ஒற்றை நாற்று நடுதல்.—நெல் ஸாகுபடியில் ஒற்றை நாற்று நடும் வழக்கம் அநேக இடங்களில் பரவிக்கொண்டிருக்கிறது. சென்ற வர்ஷம் தென்னாற்காட்டில் வெள்ளம் வந்து வயர்களை யழித்தபோது, ஒற்றை நாற்று நட்டு ஸாகுபடி செய்த பயிர்கள், ஸாதாரண முறைப்படி ஸாகுபடி செய்த பயிர்களைப்போல் ரொம்பக் கெடுதலடையவில்லையாம். இதனால் ஒற்றை நாற்றின் ச்லாக்யம் இவ்வளவென்பது தெரிய வருகிறது.

### Fodder Crops.

தீவனப் பயிர்கள்.—தற்காலம் கால்நடைகளுக்கு உதவக்கூடிய பயிர்களில் சோளப்பயிர் தான் ரொம்ப செலவுமட்டானது. சென்ற வர்ஷத்தில் கோயம்புத்தூரில் அதிக செலவு பிடிக்காத வேறு பயிர்கள் ஸாகுபடி செய்து பார்ப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து இரண்டு புதுப்பயிர்கள் தருவித்துப் பயிர்செய்தார்கள். அவைகளில் ஒன்றுக்கு "ஸில்வர் ஸ்விஸ் கார்ட்" என்றும் "ஸில்வர் பீட்" என்றும் பெயர். இதன் விதைகளை பாரிஸிலிருந்து தருவித்தார்கள். இதைப் பயிரிட்டதில் ஒரு ஏக்கருக்கு 25, 800 ராத்தல் வீதம் தழை கிடைத்தது. [illegible]களும் இதை ஆவலாய்த் தின்றன. தீவனத்துக்காகப் பயிரிடும் சோளம் ஸாகுபடி செய்தால் ஒரு ஏக்கருக்கு 13, 500 ராத்தல் தட்டைதான் கிடைக்கிறதாம்.

கோயம்புத்தூரில் பரீக்ஷித்த இன்னொரு பயிர் தென் ஆப்ரிக்காவிலிருந்து தருவித்த ஒருவகை நேர்த்தியான புல்லாகும். இதற்கு "டெப்" புல் என்று பெயர். இது நன்றாய் வளர்ந்ததாம். இதை அறுக்காமல் அப்படியே விதைக்கு விட்டுவிட்டார்கள். அந்தப் பயிரில் 1300 ராத்தல் வைக்கோல் கிடைத்தது. கால்நடைக்கு இது நல்ல தீனி என்று சொல்லப்படுகிறது.

### Humus.

மக்கின இந்த்ரியவஸ்து.—செடிகள் நிலத்தில் மட்குவதால் உண்டாகும் இந்த்ரியவஸ்துவுக்கு ஹ்யூமஸ் என்று பெயர். இந்த இந்த்ரியவஸ்து பயிர்கள் வளருவதற்கு ரொம்பவும் ஸாதகமானது. செடிகள் நிலத்தில் மடங்குவதால் அந்தச் செடிகள் நிலத்திலிருந்து க்ரஹித்த செடியுணவை அநேகமாய் முழுவதும் நிலத்தில் திரும்பச் சேர்த்துவிடுகின்றன. அதோடு கூட, செடிகள் அழுகும்போது சில த்ராவகங்கள் உண்டாகின்றன. இந்த த்ராவகங்கள், நிலத்திலுள்ள பயிருணவுகளில் பயிர்களுக்கு உதவக்கூடாத நிலைமையில் இருக்கும் பயிருணவுகளை பயிர்களுக்கு உதவக்கூடிய நிலைமைக்கு மாற்றுகின்றன. மேலும் அவுரிபோன்ற கோர்துப்பயிர்களை நிலத்தில் ஸாகுபடி செய்து மடக்கினால், நிலத்தில் இந்த்ரியவஸ்து அதிகரிப்பதோடு, நைட்ரோஜினும் அதிகமாக நிலத்தில் சேருகிறது.

மண்ணின் தன்மையை வ்ருத்தி செய்வதற்கு. தொழுவத்தெரு போடுவது ச்லாக்யமானது. தொழுவத் தெருவில் வேண்டிய அளவு பயிருணவு இருப்பதோடு அதில் மட்கின இந்த்ரிய வஸ்துவும் இருக்கிறது. தொழுவத்தெரு போடுவதால் அதிலுள்ள இந்த்ரியவஸ்துவின் மூலமாக ரொம்ப களியான மண்ணும் புலபுலப்பாகி விடும்.

### A Dairy in Cochin.

கோச்சியில் தயிர் பால் பண்ணை.—திருச்சூரில் சிலர் 20,000 ரூபாய் முதல் பணம் போட்டு, தயிர் பால் பண்ணை யொன்றை ஸ்தாபிப்பதாக உத்தேசித்திருக்கிறார்களாம். இந்தத் தொகை ஷேர் ஒன்றுக்கு 5 ரூபாய் கொண்ட 4000 ஷேர்களடங்கியதாகும்.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

**Co-operation in Europe.**

ஐரோப்பாவில் கோவாபரேஷன்.—ஐரோப்பாவின் வடக்கிலுள்ள நார்வே என்னும்தேசத்தில் 1913 வர்ஷத்தில் கோவாபரேடிவ் யூனியனில் 27 ஸொஸைடிகள் அதிகமாக சேர தாக்கல்ாயிருப்பதுடன் அவைகளின் விற்பனையும் 100-க்கு 24·7-வீதம் ஏறியிருக்கிறது. தவிர மேற்படி யூனியனின் ஸேவிங்ஸ் பாங்க் டிபார்ட்மெண்டில் சென்ற 3, 4 வர்ஷங்களாக போடப்படும் டிபாஸிட் தொகை ஒரே சீராக வ்ருத்தியாய்க் கொண்டுவருகிறது. சென்ற வர்ஷத்தில் ஸொஸைடியார்கள் இரும்பு ஸாமான்கள் விற்பதற்கு புதிதாக ஒரு டிபார்ட்மெண்டு ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

இங்கலண்ட், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் ஆகிய இந்த தேசங்களில் கோவாபரேஷன் முமற்சி ரொம்ப முன்னேற்ற மடைந்திருப்பதாகத் தெரியவருகிறது. 1913-ம் வர்ஷத்தில் ஸொஸைட்டிகளின் மொத்த வ்யாபாரத்தின் மதிப்பு 130,011,066 பவுன். இது 1912-ம் வர்ஷத்தின் பெறுமானத்தைப்பார்க்கிலும் 7,125,655 பவுன் அதிகம். மேலும் சென்ற வர்ஷத்திய பங்கு மூலதனமும் கடன் வாங்கியமூலதனமும் விசேஷமாய் அதிகரித்திருக்கிறது. 1913-ம் வர்ஷத்தில் கிடைத்த லாபம் 14,260,414 பவுன். 1912-ம் வர்ஷத்தில் ஸொஸைடியிலிருந்த மெம்பர்களைச் காட்டிலும் 1913-ம் வர்ஷத்தில் 134,498 பேர்கள் அதிகமாயிருந்தார்கள். ஸொஸைடிகளின் ரிஸர்வு தனம் 5,819,123 பவுனாகும். ஸொஸைடிகளின் வேலைகளைச்செய்ய 145,774 ஊிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். 1913-ம் வர்ஷத்திலவர்களுக்குக் கொடுத்த சம்பளம் 8,491,448 பவுனாகும்.

**Co-operation for Postal Employees.**

போஸ்டாபிஸ் ஊிப்பந்திகளுக்குள் கோவாபரேஷன்.—பம்பாய் ராஜதானியில் போஸ்டாபிஸ்களிலுள்ள ஊிப்பந்திகளுக்கு ஒரு கோவாபரேடிவ் ஸங்கம் ஏற்படுத்துவதைப்பற்றி போஸ்டாபீஸ் உத்யோகஸ்தர்கள் சில காலமாக யோசனைசெய்துவந்து, ஸமீபத்தில் அவர்களுக்காக ஒரு ஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பம்பாய் ராஜதானியின் போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் அதற்கு ப்ரஸிடெண்டாக இருக்கிறார். அநேக உத்யோகஸ்தர்கள் அந்த ஸங்கத்தின் கமிட்டியில் மெம்பர்களாக இருக்கிறார்கள். அந்த ஸங்கத்தின் முக்ய நோக்கங்கள் என்னவென்றால் மெம்பர்களிடம் செட்டு ஏற்படும்படி செய்வதும், அவர்கள் மார்வாரிகளிடமும், மற்ற லேவாதேவிக்காரர்களிடமும் அகப்பட்டுத் திண்டாடாமலிருக்கும்படி அவர்களைக் காப்பாற்றுவதுமே. ஸங்கத்தின் பங்கு ஒன்றின் விலை ரூ. 10. மெம்பர்கள் ஸங்கத்தின் பங்குகளை வாங்குவதோடு, அவர்களுடைய சம்பளத்துக்குத் தகுந்தபடி, ஒருசிறு தொகையை ஸங்கத்தில் டெபாஸிட்டாகப் போட்டு வைக்கவேண்டும். இந்த ஏற்பாடு மற்ற கோவாபரெடிவ் ஸங்கங்களில் கிடையாது. இதனால் மெம்பர்கள் ரொம்பசெட்டாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த கோவாபரெடிவ் ஸங்கம் ஏற்படுத்ினதைப்பற்றி எல்லா ஊிப்பந்திகளும் ஸந்தோஷப்படுகிறார்களாம். இதில் டை. டிபார்ட்மெண்டின் தாழ்ந்த ஊிப்பந்திகளைச் சேர்த்துக் கொள்வதில்லை. அவர்களுக்காக ப்ரத்யேகமாய் உயர்ந்த ஊிப்பந்திகளின் ஸங்கத்தைப் போலவே, ஒரு ஸங்கம் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்களாம்.

**The Ryots' Indebtedness.**

விவஸாயிகள் கடன்பட்டிருப்பது.—விவஸாயிகளில் பெரும் பாலார் கடனாளிகளா யிருக்கிறார்கள். அநேகர் வாங்கியிருக்கும் கடனுக்கு வட்டியும் ரொம்ப கடுமையா யிருக்கிறது. இப்படியிருப்பதால் அவர்கள் அந்தக் கடன் பளுவிலிருந்து மீண்டு நல்ல ஸ்திதிக்கு வருவது ரொம்ப கஷ்டமானது. இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்கவே கோவாபரெடிவ் நாணய ஸங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளால் குறைவான வட்டிக்குக் கடன் கிடைக்கிறது. இதனால் விவஸாயி காலக்ரமத்தில் பழைய கடன்களையடைத்து தங்களுடைய நிலங்களையும் சீர்திருத்தலாம்.

ஆனால் முன்னிருந்த வட்டி விகிதத்தைவிட இப்போது வட்டி குறைந்திருந்தாலும் அதுமாத்ரம் போதாது. கடன் வாங்கினபணத்தை நிலச்சீர்திருத்தத்துக்குச் செலவழித்தால் வாங்கின கடனுக்குக் கொடுக்கும் வட்டித்தொகையைவிட அதிகமான லாபம் நிலத்திலிருந்து வரவேண்டும். ஆனால் அநுபோகத்தில் கடன் வாங்கி நிலத்துக்குப்போடும் தொகைக்கு என்ன வட்டி கொடுக்கிறார்களோ அதைவிட அதிகமாக நிலத்தில் லாபம் கிடைப்பது அரிதாயிருக்கிறது.



# COMMERCE.
## வ்யாபாரம்.

**Conference on Commercial Crops.**

வ்யாபாரப் பயிர்களைப்பற்றி கான்பரேன்ஸ்.—சென்னை ராஜதானியின் விவஸாய டிபார்ட்மெண்டார் இந்த ராஜதானியின் விவஸாய நிலைமையை சீர்திருத்த முயற்சி செய்வதோடு, விவஸாயத் தொழில் ஆதாரமாக உள்ள வ்யாபாரங்களுக்கும் உதவிசெய்ய முயற்சிசெய்து வந்திருக்கிறார்கள். இப்போது கவர்ன்மெண்டார், வ்யாபாரப் பயிர்கள் ஸம்பந்தமாய் விவஸாய டிபார்ட்மெண்டார் செய்யும் எந்த வேலைகளையும், வ்யாபாரப் பயிர்களில் வ்யாபாரம் செய்பவர்களோடும், விவஸாயிகளோடும் கலந்து யோசித்துச் செய்யவேண்டு மென்று எண்ணி, அது விஷயமாய் ஒரு கான்பரென்ஸ் கூடும்படி ஏற்பாடு செய்தார்கள். இந்தக் கான்பரென்ஸ் இந்த மாஸம் 14, 15, 16-ந் தேதிகளில் கூடிற்று. பருத்தி, வேர்க்கடலை, சர்க்கரை, புகையிலை, கம்பளி ரோமம் ஆகிய இவைகளில் கைத்தொழில் செய்யும் கம்பெனிகள், இவைகளில் ஏற்றுமதி அல்லது இறக்குமதி வ்யாபாரம் செய்யும் கம்பெனிகள் ஆகிய இவைகளின் ப்ரதிநிதிகளும், ரெயில்வேக்களின் ப்ரதிநிதிகளும், விவஸாயக் காலேஜின் கௌரவ விஸிடர்கள் அதாவது காலேஜைப் போய்ப்பார்க்க நியமிக்கப்பட்டவர்களும், ஸெண்ட்ரல் அக்ரிகல்சரல் கமிட்டியின் கார்யதர்சிகளும் இந்த கான்பரென்ஸுக்கு வந்திருந்தார்கள். சென்னை கவர்னர் ஹை. கான்பரென்ஸைத் திறந்து வைத்து ஒரு உபன்யாஸம் செய்தார். பிறகு கான்பரென்ஸிற்கு வந்திருந்தவர்கள் பருத்தி, வேர்க்கடலை, கம்பளி ரோமம், உரங்கள், கருவிகள், கிணற்றுப் பாசனம் ஆகிய இவைகளைப்பற்றிய விஷயங்களை கவனிப்பதற்காக ஒவ்வொன்றுக்கும் ஒரு கமிட்டியாகப் பிரிந்து, அந்தந்த விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள்.

**Punalur Paper Mills.**

புனலூர் காகிதச் சாலை.—திருவாங்கூரிலுள்ள புனலூரில் ஒரு காகிதச்சாலை யிருக்கிறது. சிலகாலமாக இதில்வேலை நின்றுபோயிருக்கிறது. இப்போது கவர்ன்மெண்டார் அந்தக் காகிதச்சாலையில் தொழில் நடப்பதற்கு அவச்யமாய் வேண்டியிருக்கும் யந்த்ரங்களைவாங்கி ஒரு வர்ஷம் வரையில் அந்த மில்லை நடத்த உத்தேசித் திருக்கிறார்களென்று தெரிகிறது. ஆனால் அப்படி நடத்துவதில் ஏதாவது நஷ்டம் நேர்ந்தால் அந்தநஷ்டத்தை அந்த பேபர்மில்லின் தற்கால ஸொந்தக்காரரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்டார் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார்களென்றும், அது லாபகரமாய் நடந்துவந்தால் கவர்ன்மெண்டார் அதை அதன் தற்கால ஸொந்தக்காரரிடமிருந்து வாங்கிக் கொள்வார்களென்றும் ஒரு பத்ரிகை தெரிவிக்கிறது.

ஆனால் கவர்ன்மெண்டார் அப்படிப் பரீக்ஷார்த்தமாக நடத்துவதில் அதன் ஸொந்தக்காரர் வேறு சில நிபந்தனைகள் சொல்லுகிறாராம். அவையாவன:

ஒரு வர்ஷத்திற்குள்ளாகவே பரீக்ஷைகள் த்ருப்திகரமாக நிறைவேறி விட்டால், அந்த ஊிப்பந்திகளைக் கொண்டே வர்ஷ முடிவு வரையில் தாம் வேலையைச் செய்யும்படி தம்மிடத்தில் அவர்களை விட்டுவைக்க வேண்டும். ஊிப்பந்திகளின் சம்பளத்தை லாபத்திலிருந்து கொடுத்துவிட ஸொந்தக்காரர் தயாராகவிருக்கிறார்.

கவர்ன்மெண்டார் பரீக்ஷை செய்யும் காலத்தில் லாபம் கிடைக்குமானால், அந்த லாபத்தை அவருக்கு கொடுத்துவிடவேண்டும்; நஷ்டம் ஏற்பட்டால் அவர் ஈடுசெய்து கொடுக்கத் தயாராகவில்லை.

**Dyeing Industry.**

சாயத் தொழில்.—யுத்தத்தால் ஜெர்மனியிலிருந்து சாயம் வருவது நின்று போயிருக்கிறது. இங்க்லீஷ் கவர்ன்மெண்டார் இங்கலண்டிலிருந்து அனிலைன் டை என்னும் சாய வகைகள் வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாதென்று கொஞ்சகாலத்துக்கு முன்னால் சட்டம் செய்தார்கள். ஆனால் இப்போது அவர்கள் இங்கலண்டிலேயே வேண்டியிருக்கக்கூடிய சாயம் போக பாக்கி சாயத்தை அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். இதனால் இங்கலண்டிலிருந்து அனிலைன் சாயவகைகள் இனிமேல் இந்தியாவுக்கு வரலாமென்றும், சாயத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறையக்கூடு மென்றும் சொல்லப்படுகிறது.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

**Coir Industry.**

கதம்பை நார்த்தொழில்.—இது தென்னை மட்டையிலிருந்து செய்யப்படுகிறது. தேங்காய்களில் மேலிருக்கும் பச்சைமட்டைகளைக் குட்டைகளிலோ, சிறிய குளங்களிலோ, அல்லது கழிகளிலோ 3 அல்லது 4 மாதகாலம் நன்றாய் ஊறவைப்பார்கள். பிறகு ஊறவைத்த இம்மட்டைகளை வெளியிலெடுத்து மரக்கொட்டாப்புளியினால் நசுக்குவார்கள். நசுக்கின மட்டைகளை வெயிலில் உலர்த்தி நாராகச் செய்வார்கள். இந்நார்களிலிருந்து கயிறுகள் திரிக்கப்படுகின்றன. இந்நார்கள் ப்ரஷ்களாகவும் செய்யப்படுகின்றன. கண்ணனூர் ஜெயிலில் இத்தொழில் விசேஷமாக நடந்து வருகிறது. 1901-ம் வர்ஷத்தில் ஸுமார் 50,000 பேர்கள் இத்தொழில்களில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். முக்யமாக ஸ்த்ரீகளே இந்தத் தொழிலைச் செய்கிறவர்கள். 1911-ம் வர்ஷத்தில் 1,64,000 நபர்கள் வேலைசெய்து கொண்டிருந்தார்கள். 1901-1902-ம் வர்ஷத்தில் 19,151 டன் நிறையுள்ள கயிறு ஏற்றுமதியாயிற்று. இதின் மதிப்பு 35,81,685 ரூபாய். 1910-11-ம் வர்ஷத்தில் 31,730 டன் எடையுள்ள கயிறு ஏற்றுமதியாயிற்று. இதின் மதிப்பு 66,69,886 ரூபாய். 1912-13-ம் வர்ஷத்தில் 78,700 டன் எடையுள்ள கயிறு ஏற்றுமதியாயிற்று. இதின் மதிப்பு 96,63,000 ரூபாய். ஜெர்மனியே இக்கயிறுகளை விசேஷமாக வாங்கிக்கொண்டிருந்தது. இங்க்லண்ட் அதற்கு இரண்டாவதாக வாங்கிவருகிறது. தற்காலம் நடைபெறும் யுத்தத்தினால் இந்த வ்யாபாரம் குறைவுபட்டிருக்கிறது. அதனால் மலையாள நாட்டில் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம்.

**Rubber Goods.**

ரப்பர் ஸாமான்கள்.—ரப்பர் ஸாமான்கள் முழுவதும் ரப்பராலேயே செய்யப்படுவதில்லை. ரப்பரோடு இதர ஸாமான்கள் சேர்த்துத்தான் செய்வது வழக்கம். இந்த இதர ஸாமான்கள் விலை குறைவாயிருப்பதால், ரப்பர் ஸாமான்களும் விலை அதிகமாகாமல் மலிவாக விற்பது முடிகிறது. ஆனால் இப்படி இதர ஸாமான்கள் சேர்ப்பது விலையைக் குறைப்பதற்காக மாத்ரமல்ல. அவைகளைச் சேர்ப்பதால் ரப்பர் ஸாமான்கள் அதிக நாள் உபயோகத்துக்கு வருவதாலும், உபயோகிக்கும்போது காற்று, மழை, ஸூர்ய வெளிச்சம் ஆகிய இவைகளால் ரப்பர் ரொம்ப கெட்டுப்போகாம லிருப்பதாலும், மேற் சொன்ன மாதிரி மற்ற ஸாமான்களை ரப்பரோடு சேர்க்கிறார்கள்.

**Printing Paper.**

அச்சடிக்கும் கடுதாசி.—உலகத்தில் ஒவ்வொரு முக்யமான தேசத்திலும் ஒவ்வொரு நாளும் எவ்வளவு கடுதாசி செய்யப்படுகிறதென்பதும் எவ்வளவு கடுதாசி உபயோகப்படுகிறதென்பதும் பின் வரும் கணக்குகளால் தெரியவரும்.

| | உற்பத்தியாகும் அளவு. டன் | உபயோகமாகும் அளவு. டன் |
|---|---|---|
| அமெரிக்கா ஐக்ய மாகாணங்கள் | 5000 | 5000 |
| கனடா | 1500 | 400 |
| ஜெர்மனி | 1100 | 800 |
| இங்க்லண்ட் | 800 | 1100 |
| ப்ரான்ஸ் | 700 | 700 |
| ஸ்வீடன் | 300 | 200 |
| நார்வே | 300 | 200 |
| ரஷ்யா | 150 | 150 |
| ஜப்பான் | 100 | 100 |
| சீனா | 25 | 25 |
| பெல்ஜியமும் ஹாலண்டும் | —— | 50 |
| பால்கன் நாடுகளும் துருக்கியும் | —— | 25 |
| மொத்தம். | 9,975 | 7,800 |

தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா முதலிய வேறு தேசங்களுக்கு வேண்டியிருக்கும் கடுதாசி அமெரிக்க ஐக்ய மாகாணங்களிலிருந்தும், கனடாவிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் போகிறது.

**Cotton Seed in India.**

இந்தியாவில் 1912-13-வர்ஷத்தில் 18,00,000 டன் பருத்திக்கொட்டை உற்பத்தியாயிற்று.



# BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

**Japanese Moral Precepts.**

ஜப்பானியர்களின் நீதி வாக்யங்கள்.—ஜப்பானில் உள்ள பாடசாலைகளில் ரொம்ப முக்யமானவையான நீதிகளை பத்துபாட்டுகளில் அமைத்து சிறுவர்களுக்குக் கற்பித்து வருகிறார்களாம். அந்த நீதிகள் பின்வருமாறு.

(1) ராஜபக்தியே எல்லா நற்குணங்களுக்கும் ஆதாரமானது. நாம் நமது சக்ரவர்த்தியினிடத்தில் ரொம்ப விச்வாஸமாயும் மரியாதையும் இருக்கவேண்டும். இடைவிடாத ச்ரத்தையுடன் தேசத்துக்காக உழைக்கவேண்டும்.

(2) நாம் நமது பெற்றோர்களிடம் மரியாதையாயிருக்கவேண்டும். அவர்கள் நம்மிடம் காட்டிவந்த அன்பையும் விச்வாஸத்தையும் ஒருநாளும் மறக்கக்கூடாது.

(3) ஸகோதர ஸகோதரிகள் ஒருவருக்கொருவர் விச்வாஸமாயும் சண்டை சச்சரவில்லாமலும் வாழவேண்டும்.

(4) ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய நன்மைக்காகப் பாடுபடவேண்டும். நல்ல கார்யங்களை ஆதரிக்கவேண்டும். கெட்டதொழில்களை வெறுக்கவேண்டும். அன்யர்களை ஸ்நேகிதர்களாக பாவிக்கவேண்டும்.

(5) பொய் சொல்லாமலிருப்பதே விவேகியாவதற்கு தக்க அஸ்திவாரமாகும். ஆகையால் இது விஷயத்தில் ஒவ்வொருவரும் ஜாக்ரதையாயிருப்பதோடு மற்றவர்களுக்கும் புத்திசொல்லி வரவேண்டும்.

(6) சென்றுபோன விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்வதால் நடக்கும் விஷயங்களை நன்றாயறிவதற்கு ஸாதகமேற்படுகிறது.

(7) கஷ்டப்படுவோர்களிடம் ரொம்ப அனுதாபமுள்ளவனாகவும் கருணையுள்ளவனாகவும் இருக்கவேண்டும்.

(8) வ்யாதியானது வாயின் வழியாக தேகத்தில் நுழைகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகையால் ஆகாரப்பொருள்களும், குடிக்கும் பானங்களும் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

(9) ஒருவர் எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருந்தாலும், அவருடைய வாழ்க்கை ரொம்ப கஷ்டமானதாக இருந்தாலும், அவர் ஏதாவது ஒரு உயர்ந்த லக்ஷ்யத்தை (நோக்கத்தை)க் கைக்கொண்டு அதை அடைய முயலவேண்டும்.

(10) நாம் நமது முன்னோர்களுடைய நீதிகளை அலக்ஷ்யம் செய்யாமல் அதன் படி நடந்து குடும்பத்தின் கௌரவத்தையும், தேசத்தின் கௌரவத்தையும் காப்பாற்றவேண்டும்.

**Solution to the Last Month's Puzzle.**

சென்ற மாஸத்து விடுகதைக்கு விடை.—சென்ற மாஸத்து 'ஜனுபிமானி'யில் 'பையன்கள் பக்கத்தில்' பின்வரும் விடுகதையை எழுதியிருந்தோம்.

இரண்டு தம்பதிகள் நடந்து யாத்ரை செய்து கொண்டு போகையில் ஒரு ஆற்றைக்கடக்க நேரிட்டது. ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்றுமில்லை. ஆற்றங்கரையில் ஒரு சிறிய படகு மாத்ரம் இருந்தது. அந்தப் படகில் ஒரு பாகத்தில் அதில் 200 ராத்தல் நிறை தான் ஏற்றலாம் என்று எழுதியிருந்தது. வந்தவர்களில் இரண்டு புருஷர்களும் ஒவ்வொருவரும் 200 ராத்தல் நிறையுள்ளவர்களாக இருந்தார்கள். இரண்டு ஸ்த்ரீகள் ஒவ்வொருவரும் 100 ராத்தல் நிறையிருந்தாள். அவர்கள் நால்வரும் எவ்விதம் ஆற்றைக் கடந்தார்கள்?

இதற்கு விடை பின்வருமாறு. முதலில் இரண்டு ஸ்த்ரீகள் படகில் ஏறி அக்கரைக்குப் போகிறார்கள். அவர்களில் ஒருத்தி அங்கேயிருக்க, மற்றவள் படகில் ஏறி இந்தப்பக்கம் வருகிறாள்.

பிறகு புருஷர்களில் ஒருவர் படகில் ஏறி அடுத்த கரை சேர்ந்து, தாம் அங்கிருந்து விடுகிறார். அங்கேயிருக்கும் ஸ்த்ரீ படகில் ஏறி இந்தப்பக்கம் வந்து இங்கிருக்கும் ஸ்த்ரீயை ஏற்றிக்கொண்டு அக்கரையில் விட்டு விட்டுத்திரும்ப இந்தப்பக்கம் வந்து விடுகிறாள்.

இந்தக் கரையில் உள்ள புருஷர் தாம் படகில் ஏறி அக்கரை சேர்ந்து, அங்கேயிருக்கும் ஸ்த்ரீயினிடம் படகைக்கொடுக்க, அவள் இந்தக்கரைக்கு மறுபடியும் வந்து இங்கேயுள்ள ஸ்த்ரீயை படகில் ஏற்றிக்கொண்டு அக்கரை சேருகிறாள். இவ்விதம் நால்வரும் ஆற்றைக்கடந்து விடுகிறார்கள்.

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### What Influences Sex of Children.

ஸ்த்ரீ புருஷ பேதத்துக்குக் காரணம்.—குழந்தைகள் ஆணாகவும் பெண்ணாகவும் பிறப்பதற்கு இது வரையில் அநேகர் அநேக காரணங்களைச்சொல்லியிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள டாக்டர் ப்ரூம் என்பவர் இப்போது நூதனமாக சில காரணங்கள் சொல்லுகிறார். அவைகளை இங்கே எழுதுகிறோம்.

தாய் தகப்பனைப்பார்க்கிலும் அதிகமாக ஆகாரம் சாப்பிட்டால், பிறக்கும் குழந்தை பெண்ணாகவிருக்குமென்றும் தகப்பன் தாயைக்காட்டிலும் அதிக ஆகாரம் சாப்பிட்டு தாய்மட்டாக உணவு எடுத்துக்கொண்டால், பிறக்கும் குழந்தை பிள்ளையாக விருக்குமென்றும் அவர் சொல்லுகிறார். இதற்கு த்ருஷ்டாந்தமாக பஞ்சங்களிலும் யுத்தம் நடக்கும் காலங்களிலும் தாய்களுக்குப் போதுமான ஆகாரம் கிடைக்காமலிருந்தபோது அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளெல்லாம் அநேகமாய் பிள்ளைகளாகவே யிருந்தனவாம்.

அல்லாமலும் சரீரத்துக்குள்ளிருக்கும் "அட்ரினல் க்ளாண்ட்" என்னும் ஒரு அவயவம் அதிக சுறுசுறுப்பாயிருக்கும் பட்சத்தில் பிள்ளைக்குழந்தை பிறக்குமென்றும், அந்த அவயவம் கெட்டிருக்கும் பட்சத்தில் பெண்குழந்தை பிறக்குமென்றும் அவர் சொல்லுகிறார். அட்ரினல் க்ளாண்ட் என்னும் அந்த அவயவத்தைக் காயவைத்துப் பொடிசெய்து காய்ந்தபொடியை மருந்தாக தாய்களுக்குக்கொடுக்கும் பட்சத்தில் பிறக்கும் குழந்தை பிள்ளையாயிருக்குமென்றும் அவர் வாதிக்கிறார். 3 மாஸம் கர்ப்பமாயிருந்த இருபது ஸ்த்ரீகளுக்கு ஷை மருந்துகொடுத்ததில் எல்லாருக்கும் பிள்ளைக்குழந்தைகள் பிறந்தனவாம்.

### Pickles.

ஊறுகாய்.—இது உப்பில் ஊறி அதிகநாள் நிற்கக் கூடியதாயும் ஆகாரம் புசிப்பதற்கு ரொம்ப ஸாதகமாயும், காய் பழம் கிழங்கு இவைகளினால் செய்யப்பட்டதாயும் உள்ள ஒரு பக்வவகை. கிச்சிலி, நாரத்தை, தூருஞ்சி, கிடாரை, எலுமிச்சை இவைகளின் பழங்களும், மாங்காய், நெல்லிக்காய் இவைகளும், இஞ்சி, மலை கன்னாரி முதலிய கிழங்குகளும் ஊறுகாய்க்குரிய பதார்த்தங்கள். பீங்கான் ஜாடிகளே ஊறுகாய் போடுவதற்கு உத்தமமான பாத்ரங்கள். மட்பாத்ரங்களில் ஊறுகாய் போட்டால் ஊறுகாயிலுள்ள நீர் வற்றிகெட்டுப்போவதுடன், பூச்சி,புழு முதலியவைகளும் அதில் உண்டாகும். ஊறுகாய் போடும் விஷயத்தில் பெண்கள் ரொம்ப ச்ரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டியது. ஊறுகாய்களை கையால் தொடாமல், அகப்பை முதலியவைகளைக்கொண்டு எடுக்கவேண்டும். ஊறுகாயோடு ஜாடிகளை அடிக்கடி வெயிலில் வைத்துவிடவேண்டும். ராத்ரி காலங்களில் ஊறுகாய் ஜாடிகளை திறப்பதும், ஊறுகாய்களை எடுப்பதும் கூடாது. அப்போதைக்கப்போது உபயோகத்திற்கு வேண்டிய ஊறுகாய்களை எடுத்துக்கொண்டு ஜாடிகளை செவ்வையாக மூடி மெழுகு துணிகளால் அவைகளின் வாயைக்கட்டி வைக்கவேண்டும். இப்படிச் செய்வதனால் ஊறுகாய் எப்பொழுதும் கெட்டுப்போகாமலிருப்பதுமன்றி ஒரு வர்ஷத்திற்கு குறையாமல் நிற்கும்.—பெண் கல்வி

### House to House Itinerary Instruction.

வீடுதோறும் போய்க் கல்விகற்பித்தல்.—ஸ்த்ரீகளுச்கு ஸாவகாசமான நேரத்தில் வீடுதோறும்போய் அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக, பூனாவிலுள்ள ஸேவஸாதன ஸமாஜத்தார் ஒரு கமிட்டி ஏற்படுத்தி ஸ்த்ரீகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்களாம். பம்பாயில் ஹைகோர்ட்டு ஜட்ஜ் உத்யோகம் வகித்துக் காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ராணடேயின் மனைவியாகிய மிஸ்ஸஸ் ராமாபாய் அந்தக்கமிட்டிக்குப் ப்ரஸிடெண்டாகவும், இந்திய ஊழிய ஸங்கத்தின் மெம்பரான ஜி. கே. தேவதார் ஷை கமிட்டிக்குக் கார்யதர்சியாகவும் இருந்து நடத்தி வருகிறார்களாம்.

### Russian Women at the Front.

போர்முனையில் ரஷ்ய ஸ்த்ரீகள்.—அநேக ரஷ்ய ஸ்த்ரீகள் ஸோல்ஜர்களாக மாறுவேஷம் பூண்டும், இன்னும் சில ஸ்த்ரீகள் ராணுவ அதிகாரிகளின் அனுமதி பெற்றும், போர்முனைக்குப் போயிருக்கிறார்களாம். தங்களுடைய கணவர்களுடன் போர் முனையில் கூடவிருந்து சண்டை செய்யவேண்டுமென்பது சில ஸ்த்ரீகளின் விருப்பமாம். இன்னும் சிலருக்கு ஆசை யென்னவென்றால், போர் முனையைக் கண்ணால் கண்டு அங்கு நடக்கும் விஷயங்களைப் பார்த்து வரவேண்டுமென்பது.



## INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### The 'Komagata Maru' Affair.

'கோமகாட்டாமாரு' விஷயம்.—'கோமகாட்டாமாரு' ப்ரயாணிகள் ஸமீபத்தில் கல்கத்தாவுக்கு வந்தபோது ஒரு கலகம் நடந்ததென்றும் அது விஷயமாய் விசாரணை செய்யும்படி வைஸ்ராய் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறாரென்றும் சென்றமாஸம் தெரிவித்திருந்தோம். அந்தக் கமிட்டியார் கல்கத்தாவில் கூடி விசாரணை செய்து, அது விஷயமாக ஒரு ரிபோர்ட்டு எழுதி இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்களென்று தெரியவருகிறது.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள பாடியாலா ஸமஸ்தானத்தைச் சேர்ந்த ப்ருதிவிஸிங் என்பவன் ஸமீபத்தில் அமெரிக்காவிலிருந்து திரும்பிவந்தவன். 'கோமகாட்டாமாரு' கப்பல் ப்ரயாணிகளில் அந்த ப்ருதிவிஸிங்கும் ஒருவனென்று எண்ணி அமரஸிங் என்னும் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் அவனைக் கைது செய்ய முயன்றாராம். அதனால் ப்ருதிவிஸிங் என்பவன் அந்த இன்ஸ்பெக்டரைத் தடிகொண்டு தாக்கி மரணகாயப் படுத்தி விட்டானென்று சொல்லப்படுகிறது. தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இன்ஸ்பெக்டரும் அவன்மீது சுட்டாராம். அவனுக்கும் கழுத்தில் காயமுண்டா யிருக்கிறதாம்.

### The South African Indian Fund.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள் பண்ட்.—தென்னாப்ரிக்கா இந்தியர்கள் கொஞ்சகாலத்துக்கு முன்னால் தங்களுடைய ஸ்வதந்தரத்துக்காக வாதாடினபோது அவர்கள் அநேக கஷ்டங்களை அனுபவித்தார்களென்பதும், அவர்களுக்குப் பொருள் உதவி செய்வதற்காக இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் பணம் வஸூல் செய்து தென்னாப்ரிக்காவுக்கு அனுப்பப்பட்டதென்பதும் நமது நேயர்கள் ஏற்கனவே அறிந்த விஷயங்களாகும். தென்னாப்ரிக்கா இந்தியர்களின் உதவிக்காக பம்பாயில் வஸூல் செய்த பணத்தில் தென்னாப்ரிக்காவுக்கு அனுப்பினதுபோக பாக்கியுள்ள தொகை ரூ. 1,47,867—5—4 ஆகும்.

தென்னாப்ரிக்கா இந்திய நிதிக்குப் பணங்கொடுத்து உதவின அநேக கனவான்கள் ஸமீபத்தில் பம்பாயில் ஒரு மீட்டிங்கு கூடி, ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும், மற்ற அன்ய தேசங்களிலுமுள்ள இந்தியர்களின் ஸ்வதந்த்ரங்களைக் காப்பாற்றுவதற்கும், அவர்களுடைய அபிவ்ருத்திக்கான கார்யங்களைச் செய்வதற்கும் ஷை தொகையை உபயோகிக்க வேண்டுமென்று தீர்மானித்து, அந்த கார்யங்களை கவனிப்பதற்காக ஒரு கமிட்டியும் ஏற்படுத்தி, அந்த நிதிக்கு சில கனவான்களை ட்ரஸ்டிகளாக நியமித்திருக்கிறார்கள்.

### Education of the South African Indians.

தென்னாப்ரிக்கா இந்தியர்களின் கல்வி.—சென்ற மாஸத்து "இந்தியன் எமிக்ரண்ட்" என்னும் பத்ரிகையில் மிஸ்டர் ஒ. கந்தஸாமிசெட்டி யென்பவர் தென்னாப்ரிக்கா இந்தியர்களின் கல்விமுறையில் சில குறைகளிருக்கின்றன வென்றும் அவைகளை நீக்குவதைப்பற்றி அந்த நாட்டு அதிகாரிகள் ஆலோசிக்க வேண்டு மென்றும் எழுதுகிறார். அவர் செய்யும்படி சொல்லும் திருத்தங்களில் சில பின் வருமாறு.

(1) 20 அல்லது அதற்கு மேற்பட்ட இந்தியச் சிறுவர்கள் உள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் க்ராமத்திலும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டும்.

(2) நான்காவது வகுப்பு வரையில் சிறுவர் சிறுமிகளுக்கு கட்டாயப் படுத்தி ப்ரைமரிக் கல்வி கற்பித்து வரவேண்டும்.

(3) அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு பயிற்சி பெற்ற இந்தியர்களை உபாத்யாயர்களாக நியமிக்க வேண்டும். ஹெட்மாஸ்டர் மாத்ரம் ஐரோப்பியராக இருக்கலாம்.

(4) ஐரோப்பிய சிறுவர்களுக்கு எந்த விதமான கல்வி கற்பிக்கப்படுகிறதோ அதே கல்வியை இந்தியர்களுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும்.

### Labourers for Assam.

அஸ்ஸாமுக்குக் கூலியாட்கள்.—இந்தியாவின் வடகிழக்கிலுள்ள அஸ்ஸாம் மாகாணத்துக்கு வேறு மாகாணங்களில் கூலியாட்கள் சேகரிப்பதை மேற்பார்வை பார்ப்பதற்காக ஒரு ஆபீஸ் ஏற்படுத்த சட்டம் செய்வதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்த்ரிக்கு கடிதங்கள்எழுதியிருக்கிறார்களாம்.

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

**The Revenge.**

பழிக்குப்பழி.—சில வாரங்களுக்கு முன்னால் ஆஸ்ட்ரிய துருப்புகள் ரஷ்யாவுக்குள் புகுந்தபோது அதன் தலைவர் இரண்டு ரஷ்யபட்டணங்களின்மேல் யுத்த அபராதம் போட்டு, அந்த அபராதத்தை செலுத்தாவிட்டால் பட்டணங்களை பீரங்கிகளால் தாக்கி அழித்துவிடுவதாக பயமுறுத்தினார். அந்தப் பட்டணங்களில் ஒன்றில் ஒரு ரஷ்ய தளகர்த்தரின் புத்ரி வஸித்து வந்தாள். அவள் அப்பட்டணத்தை நாசமடையாமல் காப்பாற்றுவதற்காக தனது நகைகளைக் கொடுத்துவிடும்படி நேர்ந்ததாம். இந்த விஷயம் அந்த ரஷ்யதளகர்த்தருக்குத் தெரியவந்தது. ஸமீபத்தில் அவர் ஆஸ்ட்ரியாவின்மேல் படையெடுத்து ஸெர்னோவிட்ஸ் என்னும் ஊரைப்பிடித்தபோது, அந்த ஊர்மேல் 9-லக்ஷம் ரூபாய் யுத்த அபராதம் போட்டு, அதை உடனே செலுத்தாவிட்டால் பட்டணத்தை பீரங்கியால் தாக்கி தரைமட்டமாக்கிவிடுவதாக பயமுறுத்தினார். பட்டணத்தின் ஜனங்களெல்லாம் இதைக் கேட்டு ரொம்பவும் திகிலடைந்தார்கள். அந்த ஊர் சமயகுரு அவ்வளவு பெரியதொகை கொடுப்பது ரொம்ப கஷ்டமாயிருக்குமென்றும் இரண்டு லக்ஷம் ரூபாய்க்கு ஸம்மதிக்க வேண்டுமென்றும் கெஞ்சிக்கேட்டு ரஷ்யதளகர்த்தரை ஸம்மதிக்கும்படி செய்தார்.

ஒருநாள் முழுவதும் குருக்கள்மார்களும், முனிஸிபல் மெம்பர்களும் பக்கத்துள்ள ஊர்களுக்குப்போய் ஜனங்களைப் பட்டணத்தைக் காப்பாற்ற தங்களிடத்திலுள்ள பணத்தைக்கொடுத்து உதவும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். குடியானவர்கள் கண்ணுங் கண்ணீருமாய் 'டௌன்ஹாலு'க்கு வந்து தங்களிடத்திலுள்ள நகை நாணயங்களை கஜானாவில் கொடுத்துவிட்டுப் போனார்கள். வ்யாபாரிகளாகிய யூதர்கள் (ஜ்யூ) தங்களுடைய பூஜைகளுக்கு உபயோகிக்கும் வெள்ளி ஸாமான்களை கொண்டுவந்து கொடுத்தார்கள். அந்த ஊர் கோவில் அதிகாரி அந்தக் கோவிலைச்சேர்ந்த 27,000 ரூபாய் பெறுமான வெள்ளி ஸாமான்களைக் கொண்டுவந்து வைத்தார். அப்படி கொடுத்தும் குறித்த தொகை சேராததால், அந்த ஊர் தலைவர், ஊரைவிட்டோடிப்போன தட்டாரர்களின் வீடுகளுக்குள் புகுந்து பணமும் நகைகளும் எடுத்து வந்து கொடுத்தார். முழுத்தொகையும் சேர்ந்தபிறகு ரஷ்யதளகர்த்தர் டௌன்ஹாலுக்குப் போய் அங்கிருந்த நகை நாணயங்களையெல்லாம் பார்வையிட்டுப் பிறகு, முனிஸிபல் அதிகாரிகளைப்பார்த்து "இவைகளை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். இவைகள் எங்களுக்கு வேண்டாம். ஆஸ்ட்ரிய துருப்புகள் எங்கள் ஊர்களுக்குப்போய் அங்கே யுத்த அபராதம் போட்டபோது, அந்த ஊர்களை ஆஸ்ட்ரிய துருப்புகள் நாசம் செய்யாதபடி காக்க ஒவ்வொருவரும் தங்கள் ஸொந்த ஸொத்தை கொடுத்தபோது அவர்கள் மனம் எப்படியிருந்திருக்குமென்பதை நீங்கள் அனுபவத்தில் அறிய வேண்டுமென்பதற்காகவே நான் இப்படிச்செய்தேன்" என்றாராம்.

**Losing His Life for Saving a Goat.**

ஆட்டைக் காப்பதற்காக உயிரைவிட்டது.—ப்ரான்ஸின் ஒரு பாகத்தில் கூட்டுத்துருப்புகள் தங்கியிருந்தபோது ஜெர்மானியர்கள் அவைகளின்மேல் இடைவிடாமல் குண்டுகளை விட்டார்கள். அப்போது இந்தியர்களுக்குப் பால் கொடுப்பதற்காகப் பரிபாலிக்கப்பட்டிருந்த வெள்ளாடுகளுள் ஒன்று வழிதப்பிப் போர்க்களத்திற்கு வந்துவிட்டது. அங்கு குண்டுகள் வெடிக்க ஆரம்பித்தபொழுது, அது வெடிகுண்டு சத்தத்தைக் கேட்டு திகிலடைந்து மிகவும் வருந்திற்று. அது இப்பக்கமும் அப்பக்கமும் ஓடியும், வழியைக்கண்டுபிடிக்கவில்லை. அதற்கு பயம் அதிகப்படுவதாகக் காணப்பட்டது. அது கதறுவது யாவருக்கும் இரக்கத்தை உண்டாக்கிற்று. ஆனால் குண்டுகள் ஓயாமல் வந்து வீழ்ந்து வெடித்துக்கொண்டேயிருந்ததால், கூட்டுத்துருப்புகள் வெளியில் தலையை நீட்ட முடியவில்லை. போர்வீரர்களெல்லாம் அரண்களில் பதுங்கிக்கொண்டிருந்தார்கள். அவ்வாட்டின் துன்பத்தைக்கண்டு மனம் ஸகியாத ஒரு ஸிக்கியவீரன் ஆட்டை துன்பத்தினின்றுங் காக்க திடீரென்று அரணிலிருந்து வெளியில் வந்தான். அவனை ஜெர்மனியர்கள் கண்டு அவன்மேல் வேகமாக குண்டுகளை ஸரமாரியாகவிட்டார்கள். ஆயினும், அவன் அக்குண்டுகளை லக்ஷ்யம் செய்யாமல் ஆட்டினிடம்போய் அதை அன்போடு வெகு ஜாக்ரதையாகச் செலுத்திக்கொண்டு வருகையில் ஒரு குண்டு அவ்வீரனையும் அந்த ஆட்டையும் தாக்கி அவர்களைக் கொன்றுவிட்டது.



# CURIOSITIES.
## விநோதங்கள்.

**England's War Cost.**

இங்க்லண்டினுடைய யுத்தச் செலவு.-இப்போது நடந்துவரும் மகா யுத்தத்தில் ஏராளமான செலவு ஏற்படக்கூடும். இங்க்லண்ட் ஸம்பந்தப்பட்டமட்டில் அதற்கு தினந்தோறும் ஸராஸரியில் 10 லக்ஷம் பவுன் செலவாகிறதென்று இங்க்லண்டின் ப்ரதம மந்திரி தெரிவித்திருக்கிறார். 10 லக்ஷம் பவுன் $1\frac{1}{2}$-கோடி ரூபாயாகும். யுத்தம் குறைந்தது ஒருவர்ஷம் நடக்குமென்றால் மேற் சொன்ன தினசரிச் செலவின்படி ஒரு வர்ஷத்துக்காகும் செலவு $547\frac{1}{2}$ கோடி ரூபாய் அல்லது முழு எண்ணாக 550 கோடி ரூபாய் ஆகுமென்று சொல்லலாம். ஆயிரம், ஐந்நூற்றில் வ்யவஹாரம் வைத்துக்கொண்டிருக்கும் ஏழை இந்தியர்களுக்கு 550 கோடி ரூபாய் என்பது எவ்வளவு தொகையாகுமென்று மனஸில் பாவிப்பது ச்ரமமான கார்யம்.

கல்கத்தாவில் ப்ரசுரமாகும் 'அம்ருத பஜார்பத்ரிகை' இவ்வளவு பெரிய தொகையை மனஸில் பாவிப்பதற்கு சில கணக்குகள் சொல்லுகிறது. 550 கோடி ரூபாய்களையும் ஒன்றின்பக்கம் ஒன்றாக சதுரமாகப் பரப்பினால் 2-சதுரமைல் விஸ்தீரணமுள்ள இடத்தை அடைத்துக்கொள்ளும். இவைகளைக்கொண்டு நூறு மைல் நீளம் நூறு அடி அகலமுள்ள ஒரு ரஸ்தாவில் சரளை போடுவதற்கு பதிலாக வெள்ளியாகவே பரப்பிவிடலாம். இவைகளை ஒன்றின்மேலொன்றாக அடுக்கிக்கொண்டேபோனால் 7200 மைல் உயரம் வரையில் அடுக்கலாம். அதாவது அதன் உயரம் உலகத்திலுள்ள எல்லாமலைச் சிகரங்களிலும் பெரியதாகிய இமயமலையிலுள்ள எவரஸ்ட் சிகரத்தைவிட 1400 மடங்கு அதிக உயரமுள்ளதாயிருக்கும்.

இவைகளை ஒன்றின்பின் ஒன்றாக நீளத்தில் வைத்தால் 1,15,000 மைல் நீளமுள்ள ஒரு சங்கிலியாகும்.

இந்தக் கணக்குகளை வேறுவிதமாய்ப் போட்டுப் பார்ப்போம். ஒரு நாளைக்கு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் என்றால் ஒரு மணிக்கு $6\frac{1}{4}$ லக்ஷம் ரூபாயாகிறது. அதாவது இந்தியாவின் வைஸ்ராய், பம்பாய், பெங்கால், மதராஸ் இவைகளின் கவர்னர்கள் ஆகிய இவர்களுக்கு ஒரு வர்ஷத்துக்கு மொத்தம் என்ன சம்பளமோ அதைவிட அதிகமாக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒரு மணிக்கு யுத்தத்துக்காக செலவழிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நிமிஷத்துக்கு ஆகும் செலவு நமது கவர்னரின் ஒருமாஸச் சம்பளத்துக்கு மேல் (10,000 ரூ.) ஆகிறது. ஒரு ஸெகண்டுக்கு ஆகும் ப்ரிட்டிஷ் யுத்தச் செலவு கிட்டத் தட்ட 160 ரூபாயாகும். இது பீ.ஏ. பாஸ் செய்த ஒருவர் வித்யா இலாகாவில் சேர்ந்தால் 15-வர்ஷங் கழிந்தபிறகு அடையும் சம்பளத்தைவிட அதிகமாயிருக்கிறது.

இந்த 550 கோடி ரூபாயையும் நூற்றுக்கு வர்ஷத்துக்கு 4 ரூபாய் வீதம் 10 வர்ஷத்துக்கு தொடர் வட்டிக்கு விடுவதாகவும், வட்டி வளர்ந்து முதலுடன் சேருகிறதாகவும் வைத்துக்கொள்வோம். பத்து வர்ஷத்தில் வட்டி மாத்ரம் 250 கோடி ரூபாயாகும். இதை முதலுடன் சேர்த்தால் மொத்தம் 800 கோடி ரூபாயாகிறது! இந்தத் தொகையில் அரைக்கால் பாகந்தான் இந்தியா கவர்ன்மெண்டின் வர்ஷ வரும்படியாகும். ஒரு நாளுக்கு ஒருவருக்கு ஏற்படும் சாப்பாட்டுச் செலவு அரை ரூபாயென்று வைத்துக் கொண்டால், இந்த 800 கோடி ரூபாயைக் கொண்டு இந்தியாவிலுள்ள ஜனங்கள் எல்லாருக்கும் ஒரு வாரத்துக்கு சாப்பாடு போடலாம். இந்தத் தொகையில் சதாம்சத்தைக்கொண்டு (அதாவது 8-கோடி ரூபாய்) ஒவ்வொன்றுக்கும் 800 ரூபாய் வீதம் ஒவ்வொரு ஊரிலும் ஒரு கிணறு அல்லது குளம் வீதம் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு லக்ஷம் க்ராமங்களில் குளம், கிணறுகள் வெட்டி, க்ராம ஜலாதாரவஸதிக் குறைவை அநேகமாய் தீர்த்துவிடலாம்.

**The Nizam of Haidarabad.**

ஹைதராபாத்தின் நிஜாம்.—இந்தியாவிலுள்ள இந்தியர்களெல்லாரையும்விட ஹைதராபாத்தின் நிஜாம் அரசர்தான் ரொம்ப பணக்காரர் என்று சொல்லப்படுகிறது. அவருடைய வர்ஷ வரும்படி 75 லக்ஷம் ரூபாயாகும். அவரிடம் ரொம்ப விலை உயர்ந்தவையான 400 மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. அவர் தமது அரண்மனைகளின் சீர்திருத்தத்துக்காக வர்ஷந்தோறும் ஏராளமான தொகை செலவழிக்கிறாராம்.

ஸமீபத்தில் பெரிய மனிதர்கள் வந்திறங்கும் ஒரு பெரிய அரண்மனைக்கு அவர் 75,000 ரூபாய் செலவழித்து சத்தமில்லாத ரப்பர் தளவரிசை போடச் செய்தாராம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் யுத்தம்.

டிஸம்பர்மீ 9-தேதி.

வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் கூட்டுத் துருப்புகளைத் தாக்கினார்கள். ஆனால் பின் தள்ளப் பட்டார்கள்.

10-தேதி.

கூட்டுத் துருப்புகள் பெல்ஜியத்திலுள்ள ரௌலர்ஸ் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்களென்று சொல்லப் படுகிறது.

11-தேதி.

ப்ரெஞ்ச் காலாள் படைகள் லா பாஸ்ஸி என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

போர்டோவுக்குப் போயிருந்த ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டார் மறுபடியும் பாரிஸுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். இன்று ப்ரெஞ்ச் மந்த்ராலோசனை ஸபை பாரிஸில் கூடிற்று.

12-தேதி.

ஜெர்மானிய பீரங்கிப் படைகள் ஸ்வாஸோனிலுள்ள கோவிலைத்தாக்கி நாசம் செய்து விட்டன என்று சொல்லப்படுகிறது.

வாஸ்ஜஸ் ப்ரதேசத்திலும் ஸெஞன் ப்ரதேசத்திலும் பீரங்கி யுத்தம் நடந்தது.

14-தேதி.

ஜெர்மானியர்கள் ஏன்நதி ப்ரதேசத்தில் கூட்டுத் துருப்புகளை பலமாகத் தாக்கினார்கள்.

15-தேதி.

ஜெர்மானியர்கள் பெல்ஜியத்தின்மேல் 21-கோடி ரூபாய் யுத்த அபராதம் போட்டிருக்கிறார்களாம்.

ரௌலர்ஸுக்கு 6-மைல் மேற்கேயுள்ள ஸ்டேடன் என்னும் ஊரை ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் பிடித்திருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது.

16-தேதி.

ந்யூபோர்ட்டுக்கு வடகிழக்கிலும், யிப்ரஸுக்கு தென்கிழக்கிலும் லாபாஸிக்குப் பக்கத்திலும் கூட்டுத் துருப்புகள் முன் சென்றிருக்கின்றன.

ப்ரிட்டிஷ் கப்பல்படையின் ஒரு பாகம் பெல்ஜியம் கடல்கரையோரமாக உள்ள வெஸ்டெண்ட் என்னும் ஊரைத் தாக்கிற்று. இந்த ஊர் ஜெர்மானியர் வசமிருக்கிறது. ஸான் எல்வா என்னுமிடத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன்னுக்குப் போயிருக்கின்றன. ஆராஸ், ஏன் சாம்பேன் என்னுமிடங்களில் பீரங்கி யுத்தம் நடந்தது.

18-தேதி.

கெய்ஸர் தேகஸௌக மடைந்து விட்டாரென்றும், அவர் போர்முனைக்குப் புறப்பட்டு விட்டாரென்றும் சொல்லப்படுகிறது.

20-தேதி.

ஜெர்மனிக்கு ஸொந்தமான ஹைட்ரோப்ளேன் என்னும் ஆகாயக்கப்பல் ஒன்று இன்றையதினம் கலேயில் இரண்டு வெடி குண்டுகளைப்போட்டது.

21-தேதி.

ஜெர்மானியர்கள் யிப்ரஸைத் தாக்குகிறார்கள்.

கூட்டுத் துருப்புகள் ப்யுஸாலினி என்னுமிடத்தில் ஜெர்மானியர்களைத் தாக்கித் துரத்தி முன்னுக்குச் சென்றன. ஸென்ட்வார்ட் காட்டில் கூட்டுத் துருப்புகள் முன் சென்றிருக்கின்றன.

கூட்டுத் துருப்புகள் வெஸ்டண்ட், லாம்பார்ட்ஸைட், ஸெண்ட் ஜார்ஜஸ், மார்ஸ்லீட் என்னும் பட்டணங்களைப் பிடித்திருக்கிறார்களாம்.

ஜெர்மானியர்கள் மிட்டில்கெர்க் என்னும் ஊரை விட்டுவிட்டுப் போயிருக்கிறார்களாம்.

22-தேதி.

இன்றையதினம் ப்ரான்ஸின் பார்லிமெண்ட் பாரிஸில் கூடிற்று. ப்ரான்ஸ் தான் முன்பு இழந்த ப்ரதேசங்களை திரும்ப அடைந்து, பெல்ஜியத்தின் ஸ்வயேச்சையைத் திரும்பக்கொடுத்து, ஜெர்மனியின் ராணுவச் செருக்கை அடக்கியாகிற வரையில் யுத்தத்தை நிறுத்தாதென்று ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரி தெரிவித்தார்.

23-தேதி.

கூட்டுத் துருப்புகள் கிவெஞ்சி-லா-பாஸி-என்னும் ஊரை மறுபடியும் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

விஸ் என்னுமிடத்துக்கும் ஸமுத்ரத்துக்கும் நடுவில் பீரங்கியுத்தம் நடந்தது.



28-தேதி.

லாம்பார்ட்ஸைட் என்னுமிடத்துக்கு மேற்கே கூட்டுத்துருப்புகள் முன்சென்று கொண்டிருக்கின்றன.

பெல்ஜியர்கள் லாம்பார்ட்ஸைட் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் 2000 ஜெர்மானியர்களைக் கைது செய்தார்கள்.

புயல்காற்று கொடுமையாக அடித்ததால்போர்முனையில் பல பாகங்களில் யுத்தம் நடக்கவில்லை.

29-தேதி.

பெல்ஜியத்தில் ஸெண்ட் ஜார்ஜ்ஸ் என்னும் ஊரை ப்ரெஞ்ச் துருப்புகள் பிடித்திருக்கின்றன.

யிஸ் நதியிலிருந்து ஸாம் நதிவரையிலுள்ள ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் கூட்டுத் துருப்புகளை பலமாய் தாக்கினார்கள்.

31-தேதி.

இன்று ப்ரான்ஸிலுள்ள டன்கர்க்கில் 7-ஜெர்மன் ஏரோப்ளேன்கள் பறந்து வந்து அரைமணி நேரம் வெடிகுண்டுகள் போட்டன. 15 பேர்கள் இறந்து போனார்கள். 30-பேர்கள் காயமடைந்தார்கள்.

ஜனவரிமீ 2-தேதி.

ப்ரெஞ்ச் ஆகாயகமனிகள் (ஆகாயக் கப்பல்காரர்கள்) மெட்ஸ், ஆர்னவில் என்னும் பட்டணங்களின் ரெயில்வே ஸ்டேஷன்களைத் தாக்கினார்கள்.

4-தேதி.

ப்ரான்ஸில் அதிகமழை இடைவிடாது பெய்து வருவது, கூட்டுத் துருப்புகள் ஜெர்மானியர்களை எதிர்ப்பதற்குத் தடையாக இருந்துவருகிறது. வேறு ராணுவ கார்யங்கள் செய்வதும் முடியவில்லையாம்.

5-தேதி.

ஆல்ஸேஸ் மாகாணத்திலுள்ள ஸ்டீன்பாக் என்னும் ஊரை ப்ரெஞ்ச் துருப்புகள் பிடித்திருக்கின்றன. அதே மாகாணத்திலுள்ள ஸெர்னே என்னும் ஊரையும் ப்ரெஞ்ச் துருப்புகள் பிடித்திருக்கின்றன.

8-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் வோவர் என்னும் ஊருக்குப் பக்கத்தில் முன் சென்று கொண்டிருக்கின்றன.

### ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா-ஜெர்மனி இவைகளுக்கும் யுத்தம்.

டிஸம்பர் 10-தேதி.

ரஷ்யர்கள் க்ராக்கோவுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்களை எதிர்த்து அநேக ஜெர்மன் பீரங்கிகளையும் 2000 கைதிகளையும் பிடித்தார்கள்.

14-தேதி.

ரஷ்யர்கள் ம்ளாவா ப்ரதேசத்தில் ஜெர்மானியர்களைத் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

16-தேதி.

ம்ளாவா ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களோடு யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். விஸ்டுலா நதியின் இடது கரையில் ஜெர்மானியர்கள் ஏராளமான ஸைன்யங்களை ஒன்று கூட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

17-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் கார்ப்பேதியன் மலையில் முன்னுக்கு வந்து ந்யூஸாண்டக் என்னும் இடத்தை மறுபடியும் பிடித்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

ம்ளாவா ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் எல்லை ப்ரதேசத்தை நோக்கிப் பின் தள்ளப்பட்டார்கள்.

விஸ்டுலா நதியின் இடது கரையில் ஜெர்மானியர்கள் ரஷ்யத் துருப்புகளை பலமாகத் தாக்கினார்கள். ரஷ்யர்கள் ஸோசோஸ்யூ என்னுமிடத்தை நோக்கிப் பின் வாங்கிப்போயிருக்கிறார்கள்.

18-தேதி.

ஜெர்மன் சக்ரவர்த்தி எப்படியாவது வார்ஸாவைப் பிடித்துவிட வேண்டுமென்று தமது ஸேனாதிபதியாகிய ஜெனரல் வான் ஹிண்டன்பர்க் என்பவருக்கு தெரிவித்திருக்கிறாராம். மேற்கு யுத்தகளத்தில் (அதாவது ப்ரான்ஸ் பெல்ஜியம்) கார்யங்களை ஸாவகாசமாய்க் கவனித்துக் கொள்ளலாமென்றும், போலண்டில் யுத்தம் செய்யவேண்டியதுதான் தற்போது ரொம்ப முக்யமென்றும் ஜெர்மன் சக்ரவர்த்தி சொல்லுகிறாராம். இப்போது ஜெனரல் வான் ஹிண்டன்பர்க்கினிடம் போலண்டில் 20 - ஆர்மி கோர்கள் இருக்கின்றனவாம்.

21-தேதி.

ப்ஸுரா நதிக்கரையில் ஜெர்மானியர்களுக்கும், ரஷ்யர்களுக்கும் யுத்தம் பலமாய் நடக்கிறது.

ஜெர்மானியர்கள் விஸ்டுலா நதியின் இடது கரையிலிருந்து வலது கரைக்குக் கடந்துபோக முயலுகையில் ரஷ்யர்கள் அவர்களைத் தாக்கித் துரத்தி விட்டார்கள்.

ப்ஸுரா என்னுமிடத்தில் ஜெர்மானியர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் யுத்தம் பலமாய் நடந்து வருகிறது.

26-தேதி.

ப்ஸூரா என்னுமிடத்தில் நடந்த யுத்தத்தில் ஜெர்மானியர்களுக்கு ரொம்ப சேதமாம். ஒருநாள் சண்டையில் 7000 ஸோல்ஜர்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள்.

29-தேதி.

போலண்டின் மத்ய பாகத்தில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களைப் பல விடங்களில் தாக்க முயன்றும் பின் தள்ளப்பட்டார்கள். கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் 5000 ஸோல்ஜர்களைக் கைது செய்தார்கள். 20-ந்தேதி முதல் 26-ந்தேதி வரையில் விஸ்டுலா நதி ப்ரதேசத்தில் நடந்த யுத்தத்தில் 15,000 ஸோல்ஜர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

ஸ்கியர்னிவிஸ் என்னுமிடத்துக்குத் தென் கிழக்கே ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாய்த்தாக்கியும், ரொம்ப சேதத்துடன் தோற்கடிக்கப்பட்டார்கள். விட்னிகி என்னும் ஊரை ரஷ்யர்கள் தாக்கிப் பிடித்துவிட்டார்கள்.

30-தேதி.

விஸ்டுலா நதிக்கும் பிலிட்ஸா நதிக்குமிடையில்ரஷ்யர்கள் இரண்டிடங்களில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தார்கள்.

ரஷ்யர்கள் நிடாநதியைக் கடந்து ஸ்டார கோரவின், ஜென்னிஸ் லாவிஸ் என்னும் ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள்.

31-தேதி.

விஸ்டுலா நதியின் இடது கரையில் பாலிமாப், இன்வாலாட்ஸ் என்னுமிடங்களில் ஜெர்மானியர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் யுத்தம் பலமாய் நடக்கிறது.

ஜனவரிமீ 3-தேதி.

மேற்கு காலீஷ்யாவில் நடக்கும் யுத்தம் ரஷ்யர்களுக்கு ஸாதகமாக நடந்து வருகிறது. லிஸ்க் என்னும் ஊருக்குத் தெற்கே ஜெர்மானியத் துருப்புகள் ரொம்ப சேதமடைந்து வருகிறார்கள்.

4-ந்தேதி.

ஜெர்மனியின் கிழக்கேயுள்ள கிழக்கு ப்ரஷ்யா நாட்டிலிருந்து ஆஸ்ட்ரியாவிலுள்ள கார்ப்பேதியன் மலை ப்ரதேசம் வரையில் யுத்தம் பலமாக நடந்து வருகிறது.

கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் உஸாக் கணவாயில் ஆஸ்ட்ரியர்களை ரஷ்யர்கள் தோற்கடித்தார்கள்.

8-தேதி.

புகோவின் என்னுமிடத்தில் ரஷ்யர்கள் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

## ஸேர்வியாவுக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் யுத்தம்.

டிஸம்பர்மீ 9-தேதி.

ஸெர்வியர்கள் மேற்கு மொராவாவிலும், லிக் நதியின் இடது கரையிலும் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். லெல்ஜன் குன்றுகளை அவர்கள் பிடித்ததோடு அநேக ஆஸ்ட்ரியர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

10-தேதி.

ஸெர்வியர்கள் இரண்டு ஆஸ்ட்ரிய 'ஆர்மிகோர்'களைத் தோற்கடித்து 20,000 பேரைக் கைது செய்தார்கள்.

இதற்கு முன் ஆஸ்ட்ரியர்கள் பிடித்திருந்த வால்ஜிவோ, உவிட்ஸி என்னும் ஊர்களை ஸெர்வியர்கள் மறுபடியும் பிடித்திருக்கிறார்கள்.

11-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியர்களால் தோற்கடிக்கப்பட்டு இன்னும் புறங்காட்டி யோடிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஸெர்வியர்கள் 2200 ஆஸ்ட்ரியர்களைக் கைது செய்து 20 பீரங்கிகளைப் பிடித்தார்கள்.

15-தேதி.

ஸெர்வியர்கள் தாங்கள் விட்டுவிட்டுப்போன பெல்க்ரேடை மறுபடியும் பிடித்திருக்கிறார்கள்.

16-தேதி.

ஸெர்வியர்கள் கைது செய்திருக்கும் ஆஸ்ட்ரியர்களின் மொத்தம் 60,000 ஆகும்.

## துருக்கியோடு யுத்தம்.

டிஸம்பர்மீ 9-தேதி.

பாரஸிக வளைகுடாவுக்கு வடக்கே யூப்ரடீஸ் நதியோரமாயுள்ள பஸ்ராவிற்கு ஸமீபத்தில் உள்ளகர்னுவில் இருந்த துருக்கிய ஸைன்யங்களின் தளகர்த்தர் 1000 வீரர்களுடன் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களிடம் சரணமடைந்து விட்டார்.

13-தேதி.

ப்ரிட்டிஷ் ஸப்மரீன் படகு ஒன்று இன்றைய தினம் டார்டனல்ஸ் ஜலஸந்தியில் மூழ்கிச் சென்று, கடல்களில் போட்டிருந்த வெடி குண்டுகளுக்குத் தப்பிக்கொண்டுபோய், துருக்கிய போர்க்கப்பலாகிய "மெஸூடியே"யைத் தாக்கி மூழ்கடித்துவிட்டு, ஸாமர்த்யமாய்த் தப்பி வந்துவிட்டது.

'ஸாராஸ் வளைகுடாவின் பக்கத்தில் இருந்த துருக்கிய ஸைன்யங்களை ப்ரிட்டிஷ்யுத்தக்கப்பல்கள் தாக்கின.

17-தேதி.

ஈஜிப்ட் தேசம் ப்ரிட்டிஷ் ஆதீனத்துக்கு உள்பட்ட தேசமாகுமென்றும், அது இனிமேல் துருக்கிக்குக் கீழ்ப்பட்டிராதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

18-தேதி.

இதற்கு முன் ஈஜிப்டின் அரசராயிருந்தவருடைய தகப்பனின் ஸகோதரராகிய ஹுஸ்ஸேன் ராஜகுமாரர் அந்த தேசத்துக்கு ஸுல்தானாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

24-தேதி.

ஏஷியா மைனர் என்னும் துருக்கிக்கு ஸொந்தமான தேசத்தில் வான் என்னும் இடத்துக்குப் பக்கத்தில் துருக்கியர்களும் ஜெர்மனியர்களும் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

30-தேதி.

நார்டன்ஸ்க் ப்ரதேசத்தில் துருக்கியர்களை ரஷ்யர்கள் தோற்கடித்தார்கள்.

ஜனவரிமீ 1-தேதி.

துருக்கியர்கள் காகஸஸ் ப்ரதேசத்திலுள்ள ஆர்டாஹான் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. ஸாரிகாமிஷ் என்னும் ஊரில் துருக்கியர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது.

ரஷ்யர்கள் காகஸஸ் ப்ரதேசத்தில் வொர்க்யூ என்னும் ஊரைத் தாக்கிப் பிடித்தார்கள். இந்தச் சண்டையில் ஒரு துருக்கிய ஜெனரல் கொல்லப்பட்டார்.

6-தேதி

காகஸஸ் ப்ரதேசத்திலுள்ள ஆர்டாஹான், ஸாரிகாமிஷ் என்னும் ஊர்களில் ரஷ்யர்கள் துருக்கியர்களை தோற்கடித்தார்களாம். ஸாரிகாமிஷ் என்னும் ஊரில் இருந்த 9-வது துருக்கிய 'ஆர்மிகோர்' ரஷ்யர்களால் கைது செய்யப்பட்டதாம்.

## பொது விஷயங்கள்.

டிஸம்பர்மீ 8-தேதி.

இன்று தென்னமெரிக்காவின் தென் கோடியில் கிழக்குப்பக்கத்தில் உள்ள பாக்லண்ட் தீவுகளுக்குப் பக்கத்தில் ப்ரிட்டிஷ் கப்பல்படையின் ஒரு பிரிவுக்கும் 5 ஜெர்மன் போர்க்கப்பல்களுக்கும் யுத்தம் நடந்தது. ஷார்ன் ஹார்ஸ்ட், நீஸனு, நூரம்பர்க், லீப்ஸிக் என்ற 4 க்ரூஸர்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரு க்ரூஸர் தப்பி யோடிவிட்டது.

10-தேதி.

இன்று சில ஜெர்மன் ஸப்மரீன் படகுகள் இங்க்லண்டின் தெற்கிலுள்ள டோவர் துறைமுகத்துக்குள் நுழைய முயன்றனவாம். கடல் கரையிலிருந்த பீரங்கிகள் ஸப்மரீன்களைத் தாக்கினவாம். இரண்டொரு ஸப்மரீன்கள் மூழ்கிப்போயினவென்று சொல்லப்படுகிறது.

தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் நடந்து வந்த போயர்கலகம் அடங்கி விட்டதென்று ஜெனரல் போதா தெரிவிக்கிறார்.

11-தேதி.

பால்டிக் கடலில் ஜெர்மனிக்கு ஸொந்தமான 'ப்ரிடரிக் கார்ல்' என்னும் க்ரூஸர் கப்பல் கடல் வெடி குண்டுகளில் தாக்கி மூழ்கிவிட்டதென்று சொல்லப்படுகிறது.

சில ப்ரெஞ்ச் ஆகாயக் கப்பல்காரர்கள் ஜெர்மனியில் ப்ரீபர்க் என்னுமிடத்திலுள்ள ஆகாயக்கப்பல் கொட்டகைகளின்மேல் 16 வெடிகுண்டுகள் (பாம்ப்) போட்டார்களாம். அங்கே ரொம்ப சேதம் ஏற்பட்டதாம். பிறகு அவர்கள் யாதொரு அபாயமு மில்லாமல் திரும்பி வந்துவிட்டார்களாம்.

15-தேதி.

இரண்டு ஆஸ்ட்ரிய டிஸ்ட்ராயர் கப்பல்கள் கடல் வெடிகுண்டுகளால் நாசம் செய்யப்பட்டு மூழ்கிப் போய்விட்டன வென்று சொல்லப்படுகிறது.

16-தேதி.

இன்று காலையில் இங்க்லண்டின் கிழ்புறத்தில் கடல்கரையோரமாக உள்ள ஸ்கார்பரோ, ஹார்ட்டில்பூல், விட்பி என்னும் பட்டணங்களை ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் தாக்கின. ஹார்ட்டில்பூலில் உள்ள பீரங்கிகள் ஜெர்மன் கப்பல்களைத் தாக்கித் துரத்தி விட்டன.

ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்களும் ஜெர்மன் யுத்தக் கப்பல்களோடு யுத்தம்செய்து அவைகளைத் துரத்தி விட்டன.

18-தேதி.

சில ப்ரெஞ்ச் ஆகாய கமனிகள் (ஆகாயக் கப்பல்காரர்கள்) ஜெர்மனியைச் சேர்ந்த பேடன் மாகாணத்

திலுள்ள ப்ரீபர்க் என்னும் ஊரின்மேல் பறந்துபோய் அங்குள்ள ஆகாயக்கப்பல் கொட்டகையின்மேல் வெடிகுண்டுகள் எறிந்தார்கள்.

இங்கலண்டின் கிழக்குக்கரையை ஜெர்மன் கப்பல்கள் தாக்கினபோது கரைப்பட்டணங்களில் இருந்த பீரங்கிகள் அவைகளை எதிர்த்துத் தாக்கினதில் ஜெர்மன் கப்பல்கள் குண்டுகள் பட்டு கொஞ்சம் சேதமடைந்தனவென்று பெர்லினில் உத்யோக முறையில் தெரிவிக்கப்படுகிறது.

இன்றையதினம் லார்ட் ஹார்டிஞ்சின் புத்ரராகிய ஆனரபிள் இ. வி. ஹார்டிஞ்ஜ் யுத்தத்தில் நேர்ந்த காயங்களால் இறந்துபோனார்.

19-தேதி.

ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் தாக்கினதில் ஹார்ட்டில்பூலில் 103-பேர்கள் கொல்லப்பட்டார்களென்றும், 444 பேர்கள் காயமடைந்தார்களென்றும் சொல்லப்படுகிறது. ஸ்கார்பரோவில் 17-பேர் இறந்துபோனார்கள். 50-பேர் காயமடைந்தார்களாம்.

23-தேதி.

இன்று ஒரு ஜெர்மன் 'ஏரோப்ளேன்' டோவரில் பறந்து வந்து ஒரு வெடிகுண்டு எறிந்தது. வெடிகுண்டு ஒரு தோட்டத்தில் விழுந்து வெடித்தது. யாதொரு சேதமும் ஏற்படவில்லை. டோவர்காஸில் என்னும் மாளிகையில் ஒரு வெடிகுண்டுபோட்டது. ஆனால் அது குறிதப்பிப்போனதால் அதிகசேதம் ஏற்படவில்லை.

25-தேதி.

இன்று ப்ரிட்டிஷ் கப்பல் படையைச்சேர்ந்த 7-ஆகாயக் கப்பல்கள் கக்ஸேவன் என்னும் துறைமுகத்துக்குப் பக்கத்தில் கடலிலிருந்த ஜெர்மன் யுத்தக் கப்பல்களைத் தாக்கின. ப்ரிட்டிஷ் ஆகாயக் கப்பல்களோடு ஒரு க்ரூஸர் கப்பலும் டிஸ்ட்ராயர் கப்பல்களும் ஸப்மரீன் கப்பல்களும் கூடப்போயின. ஆகாயக்கப்பல்கள் கக்ஸேவன் பட்டணத்தில் வெடிகுண்டுகள் போட்டன.

ஜெர்மனியில் இன்னும் 40 லக்ஷம் ஸோல்ஜர்கள் புதிதாகக் கிடைக்கக் கூடுமென்றும், அவர்கள் வரும் வஸந்த காலத்தில் மறுபடியும் மும்மரமாய் யுத்தம் தொடங்குவார்களென்றும், லண்டன் 'டைம்ஸ்' பத்ரிகையின் ராணுவ நிருபர் சொல்லுகிறார்.

இன்று ஒரு ஜெர்மன் ஏரோப்ளேன் இங்கலண்டிலுள்ள ஷியர்னஸ் என்னும் பட்டணத்தின்மேல் பறந்து போயிற்று. ப்ரிட்டிஷ் ஏரோப்ளேன் ஒன்று அதைத் தாக்கித் துரத்திவிட்டது.

26-தேதி.

டிஸம்பர்மாஸம் 23-தேதி யன்று ரஷ்யாவில் 1140 ஜெர்மன் ஆபிஸர்களும் 131737 ஜெர்மன் ஸோல்ஜர்களும் 3186 ஆஸ்ட்ரிய ஆபிஸர்களும், 221447 ஆஸ்ட்ரிய ஸோல்ஜர்களும் கைதிகளாக இருந்தார்கள்.

ஜனவரிமீ 1-தேதி.

ஜெர்மனிக்கு ஸொந்தமான ஸாலமன் தீவுகளில் ஒன்றாகிய பௌகான்வில் என்னும் தீவை ஆஸ்ட்ரேலிய (ப்ரிட்டிஷ்) படை யொன்று கைப்பற்றியிருக்கிறது.

'பார்மிடபள்' என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் இங்கலண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் நடுவிலுள்ள சான்னல் என்னும் கடலில் கடல் வெடிகுண்டுகளாலோ ஸப்மரீன் கப்பலாலோ மூழ்கடிக்கப்பட்டது. இது 1901-ம் வர்ஷம் கட்டப்பட்ட ஒரு பழைய கப்பலாம்.

5-தேதி.

ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவிலுள்ள துறைமுகப் பட்டணமாகிய டேரஸ்ஸலாம் என்னும் ஊரிலுள்ள ஜெர்மன் துருப்புகளை 'கோலியாத்' 'பாக்ஸ்' என்னும் ப்ரிட்டிஷ் கப்பல்கள் தாக்கி, துறைமுகத்திலிருந்த கப்பல்களைச் சேதப்படுத்தி, அநேகம் பேர்களைக் கைது செய்திருக்கின்றன.

## GENERAL NEWS.

## பொது வர்த்தமானம்.

டிஸம்பர்மீ 26-தேதி.

இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ்.—இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ் இன்று சென்னையில் கூடிற்று. பம்பாயில் ப்ரபல மில் வ்யாபாரியும், பம்பாய் இந்திய சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வ்யாபார ஸங்கத்தின் சேர்மனுமாகிய மிஸ்டர் மனமோஹனதாஸ் ராம்ஜீ இதற்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

27-தேதி.

இந்தியன் ஸோஷல் கான்பரென்ஸ்.—இந்தியன் ஸோஷல் கான்பரென்ஸ் என்னும் ஜனாசார சீர்திருத்தக் கான்பரென்ஸ் இன்று சென்னையில் கூடிற்று. மைஸூர் யுவராஜா கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார்.



28-தேதி.

எல்லா இந்திய மகம்மதிய கான்பரென்ஸ்.—இன்றையதினம் வடக்கே ராவில்பிண்டியில் எல்லா இந்திய மகம்மதிய கான்பரென்ஸ் கூடிற்று. ஹாஜி ரஹீம் பக்ஷ் என்பவர் ப்ரெஸிடெண்டாக இருந்து, மகம்மதிய யூனிவர்ஸிடி, டெக்னிகல் கல்வி, பெண் கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ்.—இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் இன்று சென்னையில் கூடிற்று. டாக்டர் ஸர் எஸ். ஸுப்ரமண்ய அய்யர் காங்க்ரெஸ் வரவேற்புக்கமிட்டியின் சேர்மனாக இருந்து உபன்யாஸம் செய்தார். வங்காளவாஸியாகிய மிஸ்டர் பூபேந்த்ரநாத் பாஸு காங்க்ரெஸின் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

29-தேதி.

மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யரின் உருவப்படம்.—சென்னையில் ஜனத்தலைவர்களில் ஒருவரும், 'சுதேசமித்திரன்' பத்ராதிபருமான மிஸ்டர் ஜி. ஸுப்மண்ய அய்யரின் உருவப்படம் இன்று சென்னை மகாஜன ஸபைஹாலில் மிஸ்டர் ஸுரேந்த்ரநாத் பனர்ஜியால் திறந்து வைக்கப்பட்டது.

ரிப்பன் உருவச்சிலை—இந்தியாவின் வைஸ்ராயாக விருந்தவரும், இந்தியாவுக்கு ஸ்தலஸ்வய ஆட்சியை ஏற்பாடு செய்தவருமான காலஞ்சென்ற லார்ட் ரிப்பனுடைய உருவச்சிலை யொன்று சென்னை மௌண்ட்ரோடில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை சென்னை கவர்னர் இன்று திறந்து வைத்தார்.

30-தேதி.

எல்லா இந்திய மதுவிலக்குக் கான்பரென்ஸ்:- எல்லா இந்திய மதுவிலக்குக் கான்பரென்ஸ் இன்று சென்னையில் கூடிற்று. கல்கத்தாவைச சேர்ந்த ரெவரண்ட் ஆண்டர்ஸன் இதற்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

31-தேதி.

தாழ்ந்த வகுப்பார்களின் கான்பரென்ஸ்—இந்தக் கான்பரென்ஸ் கூடலூரில் கூடிற்று. ஸுமார் 200 மெம்பர்கள் வந்திருந்தார்கள். ஆனரபிள் ராவ் பகதூர் பி. கேசவப்பிள்ளை கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து தாழ்ந்த ஜாதிகளின் முன்னேற்றத்தைப்பற்றிப் பேசினார். அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன.

## SEASON.

## கால ஸ்திதி.

### Rainfall.

மழை.—1914ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1915ஹு ஜனவரிமீ 11உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 53·59 | 43·71 |
| வால்டேர் | 39·48 | 35·43 |
| காக்கினாடா | 29·95 | 37·92 |
| மஸூலிப்பட்டணம் | 29·63 | 39·19 |
| நெல்லூர் | 32·75 | 34·00 |
| மதராஸ் | 55·57 | 48·47 |
| கூடலூர் | 72·25 | 49·02 |
| நாகப்பட்டணம் | 54·46 | 51·58 |
| பாம்பன் | 41·87 | 34·60 |
| கொழும்பு | 70·09 | 75·62 |
| திருவனந்தபுரம் | 63·37 | 60·59 |
| கொச்சி | 111·28 | 110·67 |
| கள்ளிக்கோட்டை | 121·14 | 116·01 |
| மங்களூர் | 147·50 | 126·95 |
| மெர்க்காரா | 129·25 | 125·85 |
| ஐதராபாத் | 41·91 | 30·27 |
| பல்லாரி | 19·53 | 19·62 |
| கர்நூல் | 26·08 | 26·39 |
| கடப்பை | 25·87 | 31·31 |
| ஹாஸ்ஸான் | 31·08 | 35·53 |
| பெங்களூர் | 28·90 | 34·73 |
| கொடைக்கானல் | 75·45 | 57·12 |
| உதகமண்டலம் | 47·00 | 53·78 |
| கோயம்புத்தூர் | 15·71 | 20·98 |
| வேலூர் | 35·75 | 44·21 |
| சேலம் | 35·98 | 39·14 |
| திருச்சினப்பள்ளி | 20·00 | 31·43 |
| புதுக்கோட்டை | 36·97 | 32·06 |
| மதுரை | 26·98 | 33·01 |
| திருநெல்வேலி | 49·48 | 24·46 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி யோக | லக்ன பாக்கி நா | லக்ன பாக்கி வி | அகர் மாந நா | அகர் மாந வி | துலு உ | இங் உ | தமி உ | வாரம் | 48-ஆனந்தஹு தைமு- உத்தராயணம்-ஹேமந்தருது { புஷ்யம் மாதம் } கொல்லம்-1090 { பஸலி-1324 } இங்கிலீஷ்-1915 { ஜனவரி-பிப்ரவரிமீ } ஹிஜரி-1333 ஸாரப்யூலவல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி | 4 | 47 | 28 | 33 | 27 | 14 | 1 | வி | சசி-39-30,மூல-16-0,துரு-0-52,உப-51 53,பத்-12-36,தி-12-20,ரா-9-40,மகர சதுர்த்தசிதி,போதா-அமா,மாஸ சிவரா, உத்தராயண புண்யகால, சூன்யார்க்கம், கரிநாள் [பூஜை, கரிநாள் |
| பிசி | | 37 | | 34 | 28 | 15 | 2 | வெ | ●-33-55,பூரா-11-47,ஹர்-45-21,சது-6-45,ரா-2-1,அமாதி,பிண்டபிதிரு, உத்ராடத்துக்கு குஹூதோஷ,கோ |
| சி | மகரம் | 27 | | 35 | 29 | 16 | 3 | ச | ப்ர-29-31,உரா-8-35,வஜ-38-55,கிம்-1-33,பால-57-50,தி-18-10,மாகசுத்த, இஷ்டி, சிரவணஉப, சந்திரதர்சன, |
| அம | | 17 | | 36 | 1 தைமீ | 17 | 4 | ஞா | த்வி-26-33,திரு-6-41,வித்-33-40,தை-55-43,தி-16-31, [கரிநாள் |
| சி | | 7 | | 37 | 2 | 18 | 5 | தி | த்ரி-25-19,அவி-6-25,விய-29-49,வணி-55-24,தி-24-41,வியசிரா,குக்தசதுர்த்தீ, அப்பூதியடிகள் |
| ம | 3 | 58 | | 37 | 3 | 19 | 6 மகரமீ | செ | சது-25-57,சத-7-56,வரீ-27-24,பவ-56-58,தி-24-55,சதுர்த்திவிரு,அலப்யம் |
| அசி | | 48 | | 38 | 4 | 20 | 7 | பு | பஞ்-28-26,பூட்-11-14,பரி-26-23,பால-28-26,ரா-7-25,வஸந்தபஞ்சமீ |
| சி | | 38 | | 39 ஜனவரிமீ | 5 | 21 | 8 | வி | ஷஷ்-32-32,உட்-16-10,சிவ-26-37,கவு-0-18,ரா-20-32,ஷஷ்டியுப, கும்பாயண-4-15, |
| அ | | 28 | | 40 | 6 | 22 | 9 | வெ | ஸப்-37-56,ரே-22-26, சித்-27-50,கர-5-6,ரதஸப்தமீ,மன்வாதி [கலிக்காமர் |
| சி | | 18 | | 41 | 7 | 23 | 10 | ச | அஷ்-44-7,அசு,29-35,சாத்-29-43,பத்-10-58,தி-18-21,ரா-27-51,இராமா |
| பிசி | | 9 | | 42 | 8 | 24 | 11 | ஞா | நவ 50-28,பர-36-58,சுப-31-49,பால-17-18,சே-0-32,திவாமா,கரிநாள் |
| மஅ | 2 | 59 | | 43 | 9 | 25 | 12 | தி | தச-56-26,கிரு-44-8,சுப்-33-44,தை-23-32,தி-10-32கிருத்திகை |
| அசி | | 49 | | 44 | 10 | 26 | 13 | செ | ஏகா-60-0,ரோ-50-33,பிரா-35-8,வணி-29-7,தி-28-31,த்ரிதினஸ்பிருக் |
| சி | | 39 | | 45 | 11 | 27 | 14 | பு | ஏகா-1-31-மிரு-55-51,மா-35-43,பவ-33-38,தி-5-53,ஸர்வ ஏகா,சண்ணப்பர் |
| மஅ | | 29 | | 46 | 12 | 28 | 15 | வி | த்வா-5-25,திரு-59-50,வை-35-19,கவு-36-51,தி-18-23,வைசிரா,ப்ரதோஷ,திலபத்மத்வாதசி, அரிவாட்டாயநாய |
| சி | | 20 | | 48 | 13 | 29 | 16 | வெ | த்ர-7-58,புன-60-0,விஷ்-33-53,கர-38-41,ரா-2-32 |
| சி | | 10 | | 49 | 14 | 30 | 17 | ச | சசி-9-4,புன-2-28,பிரீ-31-22,பத்-39-7,தி-23-3,தைப்பூசம், கரிநாள் |
| சி | | 0 | | 50 | 15 | 31 | 18 | ஞா | ○-8-50,பூச-3-49,ஆயு-27-51,பால-38-15,ரா-7-14,ஆகாமாவை,இஷ்டி |
| சிம | 1 | 50 | | 51 | 16 | 1 | 19 | தி | ப்ர-7-24,ஆயி-4-1,ஸவு-23-25,தை-36-17,ரா-4-53,மாகபகுள |
| சி | | 40 | | 52 | 17 | 2 | 20 | செ | த்வி-4-56,மக,3-13,சோ-18-14,வணி-33-21,தி-22-45 |
| அஅம | | 31 | | 54 | 18 | 3 | 21 | பு | த்ரி-1-34,உப-55-59,பூர-1-32,உப-57-40,அதி-12-23,பவ-29-38,தி-18-53,அவம, சங்கடசதுர்த்தீ, சண்டேசுர நாயனர் |
| சி | | 21 | | 55 | 19 பிப்ரவரிமீ | 4 | 22 | வி | பஞ்-52-59,ஹஸ்-56-20,சுக-6-1, உட-53-13,சவு-25-19,தி-19-15 |
| சி | | 11 | | 56 | 20 | 5 | 23 | வெ | ஷஷ்-48-1,சித்-53-2,சூல-52-9,கர-20-33,தி-15-16 |
| அசி | | 1 | | 57 | 21 | 6 | 24 | ச | ஸப்-42-47,சுவா-49-32,கண்-44-53,பத்-15-27,தி-6-15 |
| உம | 0 | 51 | 28 | 59 | 22 | 7 | 25 | ஞா | அஷ்-37-25,விசா-45-54,விரு-37-29,பால-10-7,தி-2-41,ரா-26-19,காலாஷ்டமீ, திருநீலகண்டர் |
| சி | | 42 | 29 | 0 | 23 | 8 | 26 | தி | நவ-32-2,அனு-42-17,துரு-30-6,தை-4-44,வணி-59-22,ரா-26-28 |
| உஅ | | 32 | | 1 | 24 | 9 | 27 | செ | தச-26-46,கேட்-38-47,வியா-22-47,பால-54-13,ரா-28-40, தசமீதி |
| மஅ | | 22 | | 2 | 25 | 10 | 28 | புத | ஏகா-21-47,மூல-35-38,ஹர்-15-43-கவு-49-27,சே-1-42,ரா-2-48,ரா-29-27,திதிதுவய,ஸர்வஏகா,(ரங்கூன்ஏகாதசிதி) |
| சி | 0 | 12 | 29 | 4 | 26 | 11 | 29 | வி | த்வா-17-16,பூரா-32-57,வஜ்-8-58,கர-45-14,சே-2-29,ரா-23-10,மகரத்ரயோதசிதி,ப்ரதோஷம் (ரங்கூன்திதிதுவயம்) |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| குரு ரா | 8-மக-செ 15-கும்-பு 17-தனு-சு | | |
| ர பு | | | கே |
| செ | சு | | |



H. M. S. 'DREADNOUGHT.'

'ட்ரேட்நாட்'

என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்.

OFFICE OF THE REGISTRAR OF ... 30 MAR 1915 MADRAS



GRAND ADMIRAL VON TIRPITZ.
Secretary of State for the German Navy.
க்ராண்ட் அட்மிரல் வான் டிர்பிட்ஸ்.
ஜெர்மனியின் கப்பல்படை மந்திரி.



ADMIRAL DEWA.
Of the Japanese Navy.
அட்மிரல் டேவா.
ஜப்பான் கப்பல் படையில் ஒரு தலைவர்.



ADMIRAL BOUE DE LAPEYRERE.
Commanding the French Fleets.
அட்மிரல் பௌடிலபேரர்
ப்ரேஞ்ச் கப்பல்படையின் தலைவர்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

## THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். — G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 7 Vol. 7. — ஆனந்தவரு தைமீ, JANUARY 1915. — ஸஞ்சிகை 5. No. 5.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | 0 8 0 |
| Sample copy ... | 0 6 0 | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| 1/10 do | ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, **Messrs.** G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்ய நாடு. |
|---|---|---|
| வர்ஷம் 1க்கு ... | 4 0 0 | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |
| 1/10 பக்கத்திற்கு | ,, ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபை நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனோபகாரி.

புஸ்தகம் 7.] ஆனந்தவருஷம் தைமீ. [ஸஞ்சிகை 5.

## THE ECONOMIC POSITION OF INDIA.

## இந்தியாவின் பொருளாதார நிலைமை.

இந்தியா ஒரு சிறு தேசமாயில்லாமல் பல தேசங்களடங்கிய ஒரு கண்டம் போல இருக்கிறது. இதன் விஸ்தீரணம் 1,802,657 சதுர மைலாகும். இதன் ஜனத்தொகை 315,156,396. இதில் ஆறு பெருங்குடும்பங்களைச் சேர்ந்த 130 பாஷைகள் வழங்கி வருகின்றன. இந்தியாவில் பெரும்பாகம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நேரிடையான ஆளுகைக்கு உள்பட்டிருக்கிறது. மூன்றிலொரு பாகத்துக்கு மேல் ஸ்வதேச ராஜாக்களால் ஆளப்பட்டு வருகிறது. ப்ரிட்டிஷ் இந்தியா, அதாவது ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நேரிடையான ஆளுகைக்கு உள்பட்ட பாகம் மாகாணங்களாகவும், மாகாணங்கள் ஜில்லாக்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ப்ரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் 14 மாகாணங்களும், 275 ஜில்லாக்களும் இருக்கின்றன. ஒரு ஜில்லாவின் சராசரி விஸ்தீரணம் 4,000 சதுரமைலாகும். அதன் ஜனத்தொகை கொஞ்சங்குறைய 10-லக்ஷமாகும். ரெவின்யூ கார்யங்களுக்காக ஜில்லாக்களை தாசில்களாகவும், தாலூக்காக்களாகவும், பட்டணங்களாகவும் பிரித்திருக்கிறார்கள். ஸாதாரணமாய் ஒரு ஜில்லாவில் இப்படிப்பட்ட தாலூக்கா, தாசில்கள் 5 முதல் 15-வரையிலிருக்கின்றன.

இந்தியாவில் மொத்தம் 593-ஸ்வதேச ஸமஸ்தானங்கள் இருக்கின்றன. இவைகள் விஸ்தீரணத்திலும், கௌரவத்திலும், அவைகள் அபிவ்ருத்தியடைந்திருக்கும் நிலைமையிலும் ஒன்றுக்கொன்று வித்யாஸப்படுகின்றன. பம்பாய் ராஜதானியிலுள்ள 342 சிறுஸமஸ்தானங்களில் ஒவ்வொன்றும் சராசரியில் 85-சதுர மைல் விஸ்தீர்ணமுள்ளது. ஜனத்தொகை சராசரியில் 10,000 ஆகும்.

ஹைதராபாத் ராஜ்யமோ க்ரேட் ப்ரிட்டனைப்போல் விஸ்தீர்ணமுள்ளது. அதாவது இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், வேல்ஸ், என்னும் மூன்றுதேசங்களின் விஸ்தீரணம் எவ்வளவோ அவ்வளவு விஸ்தீரணமுள்ளது. இதன் (ஹைதராபாத்தின்) ஜனத்தொகை 130 லக்ஷத்துக்கு மேலிருக்கிறது.

இந்தியாவில் 2153 'பட்டணங்கள்' இருக்கின்றன, ஆனால் இவைகளில் 547-ஊர்களில் 5,000-த்துக்கு மேற்பட்ட ஜனமிருப்பதனால் இவைகளை 'பட்டணங்களா'கச் சேர்த்திருக்கிறதேயொழிய மற்றப்படி இவைகள் உண்மையாகப் பட்டணங்கள் அல்ல. லக்ஷம் ஜனத்துக்குமேல்பட்ட ஜனத்தொகையுள்ள ஊர்கள் 30-இருக்கின்றன. இவைகள் 'நகரம்' என்று சொல்லப்படும். இந்த நகரங்களின் மொத்த ஜனத்தொகை 70, 75, 782-ஆகும். அதாவது தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 2·2-வீதமாகும். மேல் நாடுகளிலோ நகரங்களின் மொத்த ஜனத்தொகையானது தேசத்தின் மொத்த ஜனத்தொகையைப் பார்க்கும்போது அதிகமாகவே இருக்கிறது. இங்க்லண்டின் ஜனத்தொகையில் நூற்றில் 45-பாகம் நகரங்களில் வஸிக்கிறார்கள். ஜெர்மனியில் நூற்றில் 21-பாகம் நகரங்களில் வஸிக்கிறார்கள். ப்ரான்ஸில் நூற்றில் 14-பாகம் நகரங்களில் வஸிக்கிறார்கள். பின்வரும் அட்டவணையால் ஒவ்வொரு தேசத்திலும் எத்தனை நகரங்களிருக்கின்றன வென்பதும், எத்தனை ஜனங்கள் நகரங்களில் வஸிக்கிறார்களென்பதும் தெரியவரும்.



| தேசம். | நகரங்களின் தொகை. | நகரங்களில் வஸிக்கும் ஜனங்களின் ஸங்க்யை |
|---|---|---|
| இங்க்லண்ட் | 44 | 16·4 லக்ஷம் |
| ஜெர்மனி | 47 | 13·7 ,, |
| ப்ரான்ஸ் | 15 | 5·8 ,, |
| அமெரிக்கா ஐக்யமாகாணங்கள் | 50 | 20·3 ,, |
| இந்தியா | 30 | 7·0 ,, |

இந்தியா ஒரு விவஸாய தேசமாகும். அதன் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 72-பாகம் ஜனங்கள் விவஸாய வேலைகளைச் செய்து ஜீவிக்கிறவர்கள். இந்த 72-பாகம் ஜனங்களில் 69-பாகம் ஜனங்கள் ஸாதாரண நில ஸாகுபடியிலும், மற்ற 3-பாகம் ஜனங்கள் காய்கறி ஸாகுபடி, ஆடுமாடு, கோழிகள் முதலியவை பராமரித்தல், காடுகளில் வேலைசெய்தல் முதலிய தொழில்களிலும் அமர்ந்திருக்கிறார்கள். மொத்தம் விவஸாயத்தில் அமர்ந்துள்ள 21-கோடியே 70-லக்ஷம் ஜனங்களில் 80-லக்ஷம் ஜனங்கள் நிலஸ்வான்களாவார்கள். 16 கோடியே 70-லக்ஷம் பேர்கள் ஸொந்த நிலத்திலோ, குத்தகைக்குக்கொண்ட நிலங்களிலோ ஸாகுபடிசெய்யும் சிறு குடிகள். 4-கோடியே 10-லக்ஷம் ஜனங்கள் விவஸாய வேலையாட்களும் கூலியாட்களுமாவார்கள். கொஞ்சங்குறைய பத்து லக்ஷம் ஜனங்கள் பெரிய நிலஸ்வான்களிடம் ஏஜெண்டுகளாகவும், மானேஜர்களாகவும், அவர்களுடைய வேறு ஸிப்பந்திகளாகவும் இருக்கிறார்கள்.

பட்டணங்களில் உள்ள ஜனத்தொகையில் நூற்றுக்கு ஆறு பேர்தான் விவஸாயத்தை நம்பியிருக்கிறார்கள். நூற்றில் 30-பேர் கைத்தொழில்களாலும் நூற்றில் 17-பேர்கள் வ்யாபாரத்தாலும், நூற்றில் 14-பேர்கள் ஸர்க்கார் உத்யோகங்கள், மற்ற உத்யோகங்கள் முதலியவைகளாலும் ஜீவிக்கிறார்கள். கைத்தொழில் சரக்குகள் செய்வது, அவைகளை வெளியிடங்களுக்கு அனுப்புவது, அவைகளை வ்யாபாரஞ்செய்வது ஆகிய இவைகளால் 5 கோடியே 82 லக்ஷம் ஜனங்கள் அதாவது ஜனத்தொகையில் நூற்றில் 18-பாகம் பேர்கள் ஜீவனம் செய்கிறார்கள். இவர்களில் கைத்தொழில் சரக்குகள்செய்து ஜீவிப்பவர்கள் மொத்த ஜனத்தொகையில் நூற்றில் 11-பாகத்துக்குக் கொஞ்சம் அதிகமாகும். அதாவது 3-கோடியே 53-லக்ஷம் பேர்கள். கைத்தொழில் சரக்குகளை வெளியிடங்களுக்கு அனுப்புந் தொழில்களால் ஜீவனம் செய்பவர்கள் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 1·6-பாகம் ஜனங்கள். வ்யாபாரத்தில் அமர்ந்திருப்பவர்கள் மொத்தஜனத்தொகையில் நூற்றில் 5·7-ஆகும்.

கைத்தொழிலால் ஜீவிப்பவர்களில் 4-ல் 1-பாகம் நெசவுத் தொழில்களை நம்பியிருக்கிறார்கள். இந்தத்தொழில்களில் முக்யமானது பருத்தி நெசவு. தோல் ஸம்பந்தப்பட்ட கைத்தொழில்களால் 28-லக்ஷம் ஜனங்கள் ஜீவனம் செய்கிறார்கள். ஆனால் இவர்களில் கொஞ்சம் பேர்கள்தான் தோல் பதனிடும் தொழிலைச் சேர்ந்தவர்கள். 25-லக்ஷம் ஜனங்கள் மரமறுப்பது, தச்சுவேலை ஆகிய இவைகளாலும், 13-லக்ஷம் ஜனங்கள் கூடைபின்னுந்தொழிலாலும் ஜீவிக்கிறார்கள். ஸுமார் 19-லக்ஷம் ஜனங்கள் உலோகங்கள் ஸம்பந்தமான வேலையை நம்பியிருப்பவர்கள். இவர்களில் நாலில் மூன்றுபாகம் இரும்பு வேலைகளாலும், 7-ல் ஒருபாகம் பித்தளை, செம்பு, வெண்கலம் ஆகிய இவைகள்

ஸம்பந்தப்பட்ட வேலைகளாலும் ஜீவனம் செய்து வருகிறார்கள். கண்ணாடி, செங்கல், மண்பாத்ரங்கள் ஆகிய இவைகளைச் செய்யும் தொழில்களால் 22-லக்ஷம் ஜனங்கள் ஜீவனம் செய்து வருகிறார்கள். இவர்களில் 8-ல் ஏழு பாகம் ஸாதாரண க்ராமக் குயவர்கள். இந்தக்ராமக்குயவர்கள் சமையலுக்கும் ஜலம் வைப்பதற்கும் வேண்டிய மண்பாத்ரங்கள் செய்வதோடுகூட, ஓடுகள், கிணற்றுக்கு வளையங்கள் முதலியவைகளையும் செய்து ஜீவிக்கிறார்கள். ரஸாயனப்பொருள்கள் செய்யும் தொழில்களால் ஜீவிப்பவர்கள் 10-லக்ஷம் பேர்கள். இவர்களில் தாவர எண்ணெய் தயார் செய்வதால் ஜீவிப்பவர்கள் 9-லக்ஷம் பேர்கள்.

மற்ற தொழில்களாலும் வ்யாபாரத்தாலும் ஜீவிக்கிறவர்களின் கணக்குகளைக் கீழே எழுதுகிறோம்.

| | லக்ஷம் ஜனங்கள். |
|---|---|
| உணவுப் பொருள்கள் செய்யுந்தொழில்கள் ... | 37 |
| உடைகள், தேகத்தை ச்ருங்காரித்துக் கொள்வது ஆகிய இவைகளுக்கான தொழில்கள் ... | 78 |
| ஜம்பத்துக்கும் ஸுகத்துக்குமான தொழில்கள் ... | 21 |
| கழிவுபட்ட பதார்த்தங்களில் ஸம்பந்தப்பட்ட தொழில்கள். ... | 14 |
| ஸாமான்களை இடம் விட்டு இடங்கொண்டு போகும் தொழில்கள் ... | 50 |
| இவற்றில் | |
| (a) ஜலமார்க்கமாக ஏற்றுமதி இறக்குமதிகள் ... | 10 |
| (b) ரஸ்தாமார்க்கம் ஏற்றுமதி இறக்குமதி செய்தல் ... | 28 |
| (c) ரெயில்வேக்கள் மார்க்கம் ஏற்றுமதி இறக்குமதி செய்தல் ... | 10 |
| (d) போஸ்டாபீஸுகள், தந்தியாபீஸ், டெலிபோன் ஆகிய இவைகளால் ஜீவிக்கிறவர்கள் ... | 2 |

ஜீவனத்துக்கு வ்யாபாரத்தை நம்பியிருப்பவர்கள் 178 லக்ஷம் பேர்களாவார்கள். இந்தத் தொகை மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 6-வீதமாகும். இவர்களில் பாதிக்குமேல் ஆகாரப்பொருள்களில் வ்யாபாரம் செய்து ஜீவிக்கிறவர்கள். இவர்களுக்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் துணி வ்யாபாரத்தால் ஜீவிப்பவர்கள்.

ஸர்க்கார் உத்யோகங்களாலும், வேறு உத்யோகங்களாலும், சித்ரகலைகளாலும் ஜீவிப்பவர்கள் 109-லக்ஷம் பேர்கள். இவர்களில் 53-லக்ஷம் பேர்கள் ஸர்க்காருத்யோகங்களல்லாத உத்யோகங்களாலும் சித்ரகலைகளாலும் ஜீவிக்கிறார்கள். இவர்களில் பாதிப்பேர் மத ஸம்பந்தமான வேலைகளாலும், ஆறிலொரு பாகம் இலக்கியம், சித்ரகலைகள், சாஸ்த்ரம் இவைகளாலும், எட்டிலொருபாகம் உபாத்யாயர் தொழில், வைத்யம் இவைகளாலும், பதினெட்டில் ஒருபாகம் சட்ட ஸம்பந்தமான உத்யோகங்களாலும் ஜீவிக்கிறார்கள்.

மொத்த ஜனத்தொகையில் 190-லக்ஷம் பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியும். எழுதப்படிக்கத் தெரியுமென்றால் ஒருவர் மற்றவருக்குக் கடிதம் எழுதவும், அவர் தமக்கு எழுதியனுப்பின கடிதத்தை வாசிக்கவும் தெரிந்திருப்பதென்றர்த்தம். இவர்களில் 17-லக்ஷம் பேர்களுக்குத்தான் இங்க்லீஷ் எழுதப்படிக்கத் தெரியும்.

## THE USES OF COLOURS.

## வர்ணங்களின் உபயோகங்கள்.

அநேக ம்ருகங்களின் தோல் அல்லது மயிரின் வர்ணம் அவைகள் வஸிக்கும் இடங்களின் நிறத்துக்கு ஒத்ததாக இருப்பதுண்டென்றும், அதனால் அந்த ம்ருகங்களை மனி



தர்களாவது மற்ற ம்ருகங்களாவது ஸுலபமாய்க் கண்டுபிடிப்பது முடிவதில்லையென்றும் பலர் அறிந்திருப்பார்கள். உதாரணமாக பச்சைப்பாம்பைச் சொல்லலாம். புலியின் மேல் தோலில் கருப்பும் மஞ்சளுமான கோடுகள் இருக்கின்றன. புலி தான்வஸிக்கும் காடுகளில் உள்ள புல் புதர்களில் பதுங்கியிருக்கும்போது, இந்தக் கோடுகள் புல்லின்மேல் விழுந்து அடிக்கும் வெளிச்சத்தைப் போலும் அதன் நிழல்போலுமிருப்பதால், புலி பதுங்கியிருப்பதை ஸுலபமாய்க் கண்டுபிடிக்க முடியாது. இதன் பக்கத்தில் இதற்கு ஆகாரமாகக்கூடிய வேறு ம்ருகங்கள் வந்தாலும், அந்த ம்ருகங்களுக்கு இது பதுங்கியிருப்பது தெரியாது. ஆகவே புலி அந்த ம்ருகங்களுக்குத் தெரியாமல் அவைகளின்மேல் பாய்ந்து பிடிக்கக்கூடும். சில கம்பளிப்பூச்சிகளுக்கும், வேறு சில பூச்சிகளுக்கும், அவைகளை வேறு ப்ராணிகள் வந்து கொல்லாயலிருப்பதற்காக, அந்தப் பூச்சிகள் வஸிக்கும் இடத்தின் நிறத்தைப் போன்ற வர்ணங்கள் அமைந்திருக்கின்றன. வேறு சில ப்ராணிகள் தாங்கள் மற்ற ப்ராணிகளுக்கு யாதொரு கெடுதலும் செய்யாவிட்டாலும், மற்ற ப்ராணிகள் தங்களைத்தாக்கி ஹிம்ஸிக்காமலிருப்பதற்காக, அவைகளுக்கு, துஷ்ட ப்ராணிகளின் வர்ணங்கள் அமைந்திருக்கின்றன. இந்த வர்ணங்களால் மற்ற ப்ராணிகள் அவைகளைக் கண்டு பயந்துபோய்விடுமாகையால், அவைகள் தங்களுக்கு யாதொரு பயமுமில்லாமல் ஸஞ்சரிக்க முடிகிறது. வர்ணங்கள் ம்ருகங்களுக்கு ஸாதகமாயிருப்பது போலவே செடிகளுக்கும் சில ஸமயங்களில் ஸாதகமாயிருக்கின்றன. பாலைவனங்களான ப்ரதேசங்களில் வளரும் சிறு செடிகளை, சாகபக்ஷணிகளான ம்ருகங்கள் தின்று அழித்துவிடாதபடி, அந்த செடிகளின் இலைகள் அது வளரும் பூமியின் நிறமாகவோ, சுற்றியிருக்கும் கற்பாறைகளின் நிறமாகவோ இருப்பதுண்டு. இதனால் தூரத்திலிருந்து பார்க்கும் ம்ருகங்களுக்கு இந்தச் செடிகள் இருப்பது ஸுலபமாய்த் தெரியாது.

சில சாயங்கள் செடிகளின் வளர்ச்சிக்கு ரொம்ப ஸாதகமாயிருக்கின்றனவென்று சில மேல் நாட்டு தாவரசாஸ்த்ரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். செடியின் இலைகளில் ‘க்ளோரோபில்’ என்று ஒரு பசுமையான பொருள் இருக்கிறது. இதுதான் செடிகள் ரொம்ப பசுமையாயிருப்பதற்கு முக்யகாரணமாயிருக்கிறது. இந்த ‘க்ளோரோபில்’ என்னும் சாயப்பொருளால்தான் செடிகொடிகளும், ப்ராணிகளும் ஜீவித்திருப்பதுமுடிகிறதென்றும் சொல்லலாம். க்ளோரோபில் உள்ள செடிகளில் தான் செடிகளுக்கும், ப்ராணிகளுக்கும் வேண்டிய உணவுப்பொருள்கள் தயார் செய்யப்படுகின்றன. ஸூர்ய வெளிச்சத்தின் உதவியால் ‘க்ளோரோபில்’ என்னும் பொருளானது செடியில் ஸ்டார்ச் என்னும் மா ஸத்தையும் சர்க்கரையையும் உண்டாக்குகிறது. இந்த ஸ்டார்ச், சர்க்கரை இவைகளோடு, பூமியிலிருந்து செடிகளுக்குக் கிடைக்கும் நைட்ரேட், முதலிய உப்புக்கள் சேர்ந்து வேறு ஆகாரப்பொருள்கள் உண்டாகின்றன. ‘ஸ்டார்ச்’ என்னும் மா ஸத்து உண்டாக்க, ‘க்ளோரோபிலுக்கு’ ஜலமும், கரியமிலவாயுவும் உதவியாக வேண்டும். இவைகளைக்கொண்டு ‘ஸ்டார்ச்’ என்னும் மா ஸத்தை உண்டாக்கி, ப்ராணவாயுவை வெளியே விடுகிறது. ஆகவே ஒரே வேலையில் நமக்கு ஆகாரத்தையும், சுத்தமான ப்ராணவாயுவையும் உண்டாக்கி விடுகிறது.

வர்ணங்கள் மனிதர்களுக்கும் பலவிதங்களில் உபயோகப்படுகின்றன. வஸ்திரங்களில் ரொம்ப ப்ரகாசமான வர்ணங்களுள்ளதாய்த் தெரிந்தெடுத்து உடுத்திக்கொண்டால், அவைகள் மனஸுக்கு ரம்யம் கொடுக்கின்றன.

இந்த ப்ரகாசமான வர்ணங்களால் நரம்புகளுக்குப் பலமும், தேகத்துக்கு ஆரோக்யமும், ஸந்தோஷமும் உண்டாகின்றன வென்றும், மற்ற பழுப்பு, சாம்பல் நிறம், கருப்பு முதலிய வர்ணங்கள் மனஸுக்கு மந்தமுண்டாக்கி ஸந்தோஷத்தைக் குறைக்கின்றன வென்றும், ஸ்த்ரீகள் பற்பல ப்ரகாசமான வர்ணங்களில் வஸ்த்ரங்கள் தரித்துக்கொள்வதுபோலவே புருஷர்களும் தரித்துக்கொள்ளவேண்டுமென்றும் ஒருவர் சொல்லுகிறார்.

## SANN HEMP PLANT.
## சடம்புப் பயிர்.

சடம்பு அல்லது சணப்பம் தென்னிந்தியாவில் பற்பல ஜில்லாக்களில் பயிராகும் ஒரு உபயோகமுள்ள நார்ப் பயிர். இது ஸுமார் 2½ அடி முதல் 3½ அடிவரையில் உயர்ந்து வளரும். இது மூன்று அல்லது நான்கு மாஸத்துப் பயிர். இது ரொம்ப உபயோகமற்ற நிலங்களிலும், மணல்பாங்கான நிலங்களிலும் நன்றாய் வளரக்கூடியது. இதைப் பயிரிடுவதற்கு அதிக செலவு ஆவதில்லை. இதன் தண்டுகளிலிருந்து நல்ல நார் கிடைக்கிறது. பற்பல இடங்களில் இந்தப் பயிரை நெல் வயல்களில் பயிரிட்டு நன்றாக வளர்ந்தவுடன் மடக்கி உழுது பசுந்தாள் எருவாக உபயோகிக்கிறார்கள். இதை மாற்றுப்பயிராக ஸாகுபடி செய்வதால் நிலம் செழுமையடைகிறது. இதன் வேர்களில் உள்ள பாக்டீரியாக்கள் மண்ணிலுள்ள காற்றிலிருந்து நைட்ரொஜின் என்னும் வாயுவை க்ரஹித்து மண்ணில் சேர்க்கின்றன. மேலும் இந்தப் பயிரின் இலைகள் பூமியில் உதிருவதாலும் இலைகளிலுள்ள செடியுணவு ஸத்துக்கள் பூமியில் சேருகின்றன.

செம்மண்ணும் கரிசல் மண்ணும் கலந்த வண்டல் மண்ணில் சடம்பு நன்றாகப் பயிராகும். இதற்கடுத்தது கரிசலான அடைமண். இதற்கும் அடுத்தபடியாக இருப்பது செவ்வலான அடைமண். கடற்கரையோரமாகவுள்ள மணல் பாங்கான நிலங்களிலும் இது ஸுமாராகப்பயிராகிறது. ஸாதாரணமாக இந்த ராஜதானியில் தாழ்ந்த நிலங்களில்தான் இதைப் பயிரிடுகிறார்கள். நிலம் மாத்ரம் நல்ல வடிகால் உள்ளதாக இருக்கவேண்டும்.

திருநெல்வேலியில் சடம்பை நெல் பயிரோடு மாற்றுப்பயிராக ஸாகுபடி செய்கிறார்கள். சில ஸமயங்களில் மஞ்சளுக்குப் பிறகு இதைப் பயிரிடுவதுமுண்டு. ஈரோடு தாலுக்காவில் சடம்பை, கம்பு, சோளம் இவைகள் ஸாகுபடி செய்த பிறகு அந்த நிலத்தில் பயிரிடுகிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஏகருக்கு 70 பட்டணம்படி வீதம் விதை தெளிக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லா பவானி தாலுக்காவில் ஒரு ஏகருக்கு 33 பட்டணம்படி வீதம் விதை உபயோகிக்கிறார்கள். பொதுவாய் ஸாகுபடி செய்பவர்கள் மழைகாலத்தைவிட கோடைகாலத்தில் விதை அதிகமாகத் தெளிக்கிறார்கள்.

நிலத்தை உழுது ஸமமாக்கின பிறகு, விதைகளைத் தெளித்து, விதைகள் நிலத்தில் மூடும்படிக்கு, பரம்படிப்பது வழக்கம். திருநெல்வேலியில் விதைகள் ரொம்ப அதிகமாகத் தெளிப்பதால், பயிர் ரொம்ப நெருக்கமாயிருக்கும். செடிகள் ஸாதாரணமாய் ஒன்றுக்கொன்று 2½ அல்லது 3 அங்குல தூரத்துக்கொன்றாயிருக்கும். ஸாதாரணமாக ஒரு ஏகருக்கு ஏழு லக்ஷம் செடிகளிருக்கும். இவ்வளவு அடர்த்தியாய் விதைப்பதால், செடிகள் கிளைவிடாமல் நேராக வளருகின்றன. இதனால் செடிகளிலிருந்து கிடைக்கும் நார்கள் ஒரே நீட்டமாக இருக்கின்றன. கிளைகள் இருந்தால் நார் நடுவில் விட்டுப்போய் நீளமாக இருப்பதற்கில்லை. மேலும் அடர்த்தியாக விதைப்பதால் ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில்



கிடைக்கக்கூடிய நார், அதே நிலத்தில் பரவலாய் விதைப்பதால் கிடைக்கும் நாரைவிட அதிகமாயிருக்கிறது. மணல் பாங்கான நிலங்களில் வளரும் சடம்பும் அடைமண் நிலத்தில் வளரும் செடிகளைப்போலவே ரொம்ப உயரமாகவும் பருமனாயில்லாமலும் இருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லாவில் நிலத்தை உழுத பிறகு, விதை தெளிக்குமுன் ஜலம் பாய்ச்சுகிறார்கள். விதைவிதைத்துப் பரம்படித்த பிறகு ஜலத்தை வடியவிடுகிறார்கள். அதற்கப்புறம் 10-நாள்களுக்குப் பிறகு ஒரு முறை நீர் பாய்ச்சுகிறார்கள். அதற்குப் பிறகு மழை பெய்யாவிட்டால் 15-நாள்களுக்கு ஒரு தடவையாக ஜலம் விடுகிறார்கள். ஆனால் காலம் வெயிலாயில்லாமல் குளிர்ச்சியாயிருந்தால், ஒரு மாஸத்துக்கு ஒரு தடவை ஜலம் பாய்ச்சினால் போதும்.

விதைவிதைத்த மூன்றாவது மாஸத்தில் பயிரை அறுத்தெடுக்கிறார்கள். சில ஸமயங்களில் பயிரின் பூக்கள் உதிர்ந்துவிட்டால் அதை அறுக்காமல் விட்டு, மறுபடியும் பூத்தவுடன் அறுத்துக்கொள்வதுண்டு. ரொம்ப முற்றாத பயிரிலிருந்துதான் ரொம்ப உறுதியான நல்ல நார் கிடைக்கிறதாம். ஆனால் முற்றின பயிரிலும் நல்ல நாரும் விதையும் கிடைக்கும்.

தாள்களை அறுத்த பிறகு, காயவைத்து அடித்து விதையைப் பிரித்தெடுத்த பிறகு தாள்களை வேண்டும்போது உபயோகிப்பதற்காக, சிறுசிறு கட்டுகளாகக் கட்டி மழையில் நனையாதபடி போராகப் போட்டுவைப்பார்கள். இப்படி இரண்டு வாரம் போட்டுவைத்திருந்த பிறகுதான் தாள்களை ஊறப்போட எடுக்க வேண்டும். இந்தத் தாள்கள் ஒரு வர்ஷத்துக்கு மேல்பட்டால் ப்ரயோஜனமில்லையாகையால் அதற்குள் அவைகளை எடுத்து உபயோகித்து விடவேண்டும். தாள்களைக் காயவைக்கையில் உதிரும் இலைகள் நல்ல எருவாகும்.

தாள்களிலிருந்து நார் எடுக்கும் முறை பின்வருமாறு. தாள்களை சிறு கட்டுகளாக எடுத்து ஜலத்தில் ஊறப்போடுவார்கள். காலத்தின் நிலைமைக்குத் தகுந்தபடி 5 அல்லது 7 நாள் ஊறப்போடவேண்டும். தேங்கிநிற்கும் ஜலத்தில் ஊறப்போடுவதைவிட மெதுவாய் ஓடிக்கொண்டிருக்கும் ஜலத்தில் ஊறப்போடுவது நல்லது. திருநெல்வேலியில் ஸாகுபடியில் உபயோகிக்கும் சடம்பு விதைகள் ரொம்ப உயர்ந்தவையாயிருப்பதாலும், தாம்ரபர்ணி நதியின் ஜலம் நன்றாயிருப்பதாலும் அங்கே கிடைக்கும் நார் மற்ற இடங்களில் கிடைக்கும் நாரைவிட உயர்ந்ததாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. தாள்களை ஊறப்போட்டிருக்கும் குளங்குட்டைகள் நிழல் உள்ளவையாயிருக்கக் கூடாது. ஜலத்தின்மேல் வெயில் நன்றாய்ப் பட்டுக்கொண்டிருக்க வேண்டும். காற்று மழையில்லாமல் வெயில் நன்றாய் அடித்துக்கொண்டிருந்தால், தாள்கள் நான்கு நாட்களிலேயே அழுகிவிடும். தாள்கள் ரொம்ப நாள் பட்டவையாயிருந்தால் அதிக நாள் ஊறப்போடவேண்டியிருக்கும். தாள்களில் ரொம்ப கெட்டியான பாகம் அதிக காலம் ஜலத்தில் ஊறவேண்டியிருக்கும். மெல்லிய பாகம் அதிக காலம் ஊறவேண்டியதில்லை. தாள்களின் எல்லா பாகத்தையும் ஒரே ஸமயத்தில் ஊறவிட்டால், அவைகளில் மெல்லியபாகம் அதிக காலம் ஊறிப்போய் கெட்டுப்போகும். கஞ்சம் ஜில்லாவைச் சேர்ந்த அசிகாவில் இந்தக் கெடுதலை நிவர்த்திக்க ஒரு உபாயம் செய்கிறார்கள். அங்கே நாரெடுப்பவர்கள் தாள்களைக் கட்டி, அடிக்கட்டையிலிருந்து தாளின் நீளத்தில் மூன்றிலொரு பாகம் வரையில் ஜலத்தில் நனைந்திருக்கும்படி ஜலத்தில் நிறுத்தி ஊறவைக்கிறார்கள். இப்படி இரண்டு அல்லது மூன்று நாள் ஊறவைத்த பிறகு, தாள் கட்டுகளை ஜலத்தில் மூழ்கியிருக்கும்படி படுக்

கப்போட்டு ஊறவைக்கிறார்கள். இதனால் தாள்களின் நுனிப்பாகம் கெடுதலடைவதில்லை.

ஊறின தாள்களைக் கட்டுகளாக எடுத்து ஜலத்தின்மேல் ஐந்தாறு தடவை அடித்து அலசி, உதறி, ஜலம் நன்றாய் வடியும்படி சிறிது நேரம் வைத்திருந்து, பிறகு நாரைப் பிரித்தெடுக்கிறார்கள். பிறகு நாரைக் காயவைத்துக் கொட்டாப்புளியால் அடித்துப் பிரித்துவிடுகிறார்கள். நாரில் இன்னும் சிறு கற்களும், சிறு குச்சிகளும் இருக்குமாதலால், அதைக் கீழே போட்டு மிதித்து, பிறகு அதை கல்லில்போட்டு அகலமான கட்டையாலோ தடியாலோ அடித்து எடுப்பார்கள். இப்படி எடுத்த நாரை, உபயோகிக்கும் வேலைகளுக்குத் தகுந்தபடி கயிறுகளாகத் திரித்துக்கொள்வார்கள்.

சடம்பு நார், கயிறு திரிக்கவும், மீன் பிடிக்கும் வலைகள் பின்னவும், சாக்குகள் நெய்யவும், குதிரைகளில் மூட்டையேற்றும்போது உபயோகிக்கும் ஜேணம் செய்யவும், இன்னும் மற்ற வேலைகளுக்கும் உபயோகப்படுகிறது.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஏகருக்கு 345 ராத்தல் வீதம் நார் கிடைக்கிறது. ஒரு ஏகருக்கு 250 ராத்தல் சடம்பு விதை கிடைக்கிறது. கோயம்புத்தூரில் 230 ராத்தல் விதை கிடைக்கிறது.

## THE EDUCATIONAL CONFERENCE.

## வித்யா கான்பரென்ஸ்.

வித்யா கான்பரென்ஸ் ஜனவரி மாஸம் 2-ந் தேதியன்று தென்னிந்தியா உபாத்யாயர்கள் யூனியனுடைய (ஸங்கம்) ஆதரவில் சென்னையில் கூடிற்று. சென்னை வெஸ்லி காலேஜைச் சேர்ந்த ரெவரண்ட் ஹூப்பர் கான்பரென்ஸுக்கு வந்திருந்தவர்களை வரவேற்று உபசரித்தார். அவர் அப்போது செய்த ப்ரஸங்கத்தில் உபாத்யாயருடைய தொழில் ரொம்ப உயர்ந்ததும் மேன்மை பொருந்தியதுமான தொழிலென்றும், தேசத்தின் சிறுவர்களுக்குத் தக்ககல்வி கொடுப்பதில் உபாத்யாயர்களுக்கு ரொம்ப பொறுப்பு ஏற்பட்டிருக்கிறதென்றும், உபாத்யாயத்தொழிலில் அமர்ந்துள்ளவர்களுடைய குறைகளையும், அவர்களுடைய அபிவ்ருத்திக்கான விஷயங்களையும் பற்றி ப்ரஸ்தாபிக்க இப்படிப்பட்ட கான்பரென்ஸ் நடத்துவது ரொம்பவும் விரும்பத்தக்கதென்றும், தென்னிந்திய உபாத்யாயர்கள் ஸங்கத்தால் உபாத்யாயர்களுக்கு ரொம்ப ப்ரயோஜனம் ஏற்படக்கூடுமென்றும் சொன்னார்.

பெல்லாரியிலுள்ள வார்ட்லா இன்ஸ்டிட்யூஷன் என்னும் கல்விச்சாலையின் ப்ரின்ஸிபலாகிய மிஸ்டர் ஜே. பி. கோடிலிங்கம் இந்தக் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில், இந்தியாவில் மேல்நாட்டுப்படிப்பு பரவுவதால் ரொம்ப நன்மைகள் ஏற்படக்கூடுமென்றும், இந்தியாவில் கல்வி எவ்வளவு பூர்த்தியாக அபிவ்ருத்தியடைய வேண்டுமோ, அவ்வளவு பூர்த்தியடையாவிட்டாலும், அது ரொம்ப வேகமாகவே அபிவ்ருத்தி யடைந்து வருகிறதென்றும், கல்வி நிலைமை ரொம்ப பூர்த்தியடையும்படி உபாத்யாயர்கள் தங்களாலானமட்டும் ப்ரயத்னப்பட வேண்டுமென்றும், சிறுவர்களுடைய யோக்யதைப் பயிற்சி விஷயத்தில் உபாத்யாயர்கள் அதிக ஜாக்ரதையாயிருக்க வேண்டுமென்றும், தற்காலத்து மாணவர்களுக்கு இன்னமாதிரியான கல்வி கற்பிப்பதென்பதில் உபாத்யாயர்களுக்குள் அபிப்ராய ஒற்றுமை இருக்க வேண்டுமென்றும் சொன்னார்.



## TECHNICAL TRAINING IN GERMANY.

## ஜெர்மனியில் தொழில்கல்விப் பயிற்சி.

ஜெர்மனி தேசம் கைத்தொழில் விஷயத்திலும் தொழில்கல்வி விஷயத்திலும் ரொம்ப முன்னேற்ற மடைந்திருக்கிறது. ஜெர்மனியில் கவர்ன்மெண்டார் ஸாதாரண தொழிலாளிகள் முதல் உயர்ந்த தொழிலாளிகள் வரையில் எல்லாருக்கும் தொழில் கல்விக்கு வேண்டிய ஸாதனங்கள்செய்து கொடுத்திருக்கிறார்கள். அங்கே கவர்ன்மெண்டாரின் நோக்கமென்னவென்றால், ஜெர்மனியை கைத்தொழில் விஷயங்களில் ரொம்ப தேர்ச்சியடைந்ததாக செய்யவேண்டிய தென்பதே. இந்நோக்கம் நிறைவேறுவதற்காக கவர்ன்மெண்டார் எல்லாவித உதவிகளும் செய்து வருகிறார்கள். கைத்தொழில்களில் தலைவர்களாகவும், நிபுணர்களாகவும் வர இஷ்டப்படுகிறவர்களுக்கு அவர்களுக்கேற்றதான உயர்ந்த தொழில்கல்வி கற்பிக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவர்களுக்கு, அவர்கள் பின்னால் என்னதொழில்களில் அமர இஷ்டங்கொள்ளுகிறார்களோ அந்த தொழில்களில் நல்லபயிற்சி ஏற்படும்படி பள்ளிக்கூடங்களில் கற்பித்து வருகிறார்கள். ரொம்ப ஏழைகளையும், அநாதைகளையுங்கூட கவர்ன்மெண்டார் அலக்ஷ்யம் செய்யாமல் அவர்களை கவனித்து வருகிறார்கள். வேலையில் தேர்ச்சியடைந்த தொழிலாளிகளையும், தேர்ச்சியடையாத தொழிலாளிகளையும், 'கண்டின்யூவேஷன் ஸ்கூல்' என்னும் தொழில் பள்ளிக்கூடங்களில்சேர்ந்து வாசிக்கும்படி செய்கிறார்கள். வேலைக்குப்போகாத தருணங்களில் காலையிலோ மாலையிலோ தொழிலாளிகளுக்கு ஏற்ப கல்வி கற்பிக்கும் ஸ்கூலுக்கு 'கண்டின்யூவேஷன் ஸ்கூல்' என்று பெயர்.

ஜெர்மனியிலுள்ள தொழில் பள்ளிக்கூடங்கள் மூன்று வகைப்படும்.

(1) முதலாவது ரொம்ப உயர்ந்ததான தொழில் கல்வி யூனிவர்ஸிட்டி (ஸர்வகலாசாலை). தொழில்கள் ஸ்தாபிக்கவும், அவைகளை நடத்தவும் முன்வரும் நிபுணர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக இந்த யூனிவர்ஸிட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

(2) இரண்டாவது வ்யாபார யூனிவர்ஸிட்டி. தொழில்சாலையில் ஸாமான்கள் செய்யக்கற்றுக் கொடுப்பதற்கேற்ப, அந்த ஸாமான்களை விற்பனைசெய்வது ஸம்பந்தமான வ்யாபாரவிஷயங்களெல்லாம் இந்த வ்யாபார யூனிவர்ஸிட்டியில் கற்றுக்கொடுத்து வருகிறார்கள். வ்யாபாரங்கள் நடத்த இஷ்டப்படுகிறவர்களும், வ்யாபார ஸ்கூல்களில் பெரிய வகுப்புகளில் உபாத்யாயர்களாகப்போக ப்ரியப்படுகிறவர்களும் இந்த யூனிவர்ஸிட்டியில்சேர்ந்து கல்வி பயிலுவார்கள். இந்த யூனிவர்ஸிட்டியில் பெரும்பாலும் ஸெகண்டரி ஸ்கூல்களில் வாசித்துத்தேறின மாணவர்களையும், வ்யாபாரத்துறைகளில் வேலைக்கு அமர்ந்திருப்பவர்களையும் சேர்த்துக்கொள்ளுகிறார்கள்.

(3) மேல்சொன்ன இரண்டு யூனிவர்ஸிட்டிகளுக்கும் அடுத்தபடியாக இருப்பது 'மிடில் ஸ்கூல்கள்.' ப்ரைமெரி ஸ்கூல்களில் வாசித்துத் தேறினமாணவர்களை இந்தப் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். மாணவர்கள் இங்கே மூன்று வர்ஷம் வ்யாபார விஷயங்களை வாசித்து பிறகு இரண்டு வர்ஷகாலம் வ்யாபாரக் கம்பெனிகளில்சேர்ந்து வேலை கற்றுக்கொள்ளுகிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களின் நோக்கம் என்னவென்றால், ஸாதாரண தொழிலாளிகளுக்கு வேலையில் பழக்கமும் தேர்ச்சியும் உண்டாக்கி அவர்களைப் பற்பல தொழில்களில் கைதேர்ந்தவர்களாக்குவதே. அதாவது தொழில் நிபு

ணர்கள் இன்ன மாதிரியான தொழில்கள் செய்யவேண்டுமென்று சொன்னால், ஸாதாரண தொழிலாளிகள் அதையறிந்து அதன்படி வேலைகளைச் செய்து முடிக்கும்படிக்கு இந்தத் தொழிலாளிக்கு அறிவும் ஸாமர்த்யமும் ஏற்படவேண்டும்.

மேற்சொன்ன மூன்றுவகை வித்யாசாலைகளிலும் தொழிலாளிகளைப் பயிற்றுவதோடு கூட, இந்த வித்யாசாலைகளில் சேர்ந்து வாசிக்காத மற்ற ஜனங்களுக்கு தொழில் படிப்புக் கற்றுக்கொடுக்க 'கண்டின்யூவேஷன் ஸ்கூல்' என்று பெயருள்ள தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியில் இந்தக் கண்டின்யூவேஷன் ஸ்கூல்கள் நடைபெறும் முறை ரொம்ப ச்லாகிக்கத்தக்கதாகவும், மற்ற நாடுகளிலுள்ளவர்கள் பின்பற்றத் தக்கதாகவும் இருக்கிறது.

ஜெர்மனியில் மாணவர்கள் தங்களுடைய 14-வது வயஸுவரையில் பள்ளிக்கூடங்களில் சேர்ந்திருக்கவேண்டியது கட்டாயமானது. இவர்களில் பெரும்பாகம் ப்ரைமெரி ஸ்கூல்களில் வாசித்து முடிந்ததும் ஏதாவது தொழில்களில் அமர்ந்துகொள்ளுகிறார்கள். ஆனால் மாணவர்கள் ஏதாவது தொழில்களில் அமர்ந்தவுடனேயே கவர்ன்மெண்டார் தங்கள் பொறுப்பை விட்டுவிடுகிறதில்லை. மாணவர்களுடைய 18-வது வயஸுவரையில் அவர்களுடைய படிப்பை கவர்ன்மெண்டார் மேற்பார்வை பார்த்து வருகிறார்கள். ப்ரைமெரி ஸ்கூல்களில் வாசித்துமுடிந்து, பிறகு பெரிய ஸ்கூல்களில் சேர்ந்து வாசிக்காத பையன்கள் ஏதாவது தொழில்களில் அமர்ந்திருந்தாலுஞ் சரி, அல்லது சும்மா இருந்தாலுஞ் சரி, அவர்களைக் கட்டாயப்படுத்தி ஒருதொழில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாரத்துக்கு 8-அல்லது 9-மணி நேரம் தொழில்கல்வி கற்கும்படி செய்கிறார்கள். இதன் நோக்கமென்னவென்றால் பையன்களை உபயோகமுள்ள ஜனங்களாக ஆக்கவேண்டுமென்பதே. உபயோகமுள்ள மனிதன் என்றால், அவன் தனது வேலைகளால், நேரிடையாகவோ, அல்லது வேறுவிதமாகவோ, தேசத்து ஜனங்களை ரொம்ப நாகரிகமுள்ள ஜனங்களாக ஆக்க ப்ரயத்தனப் படவேண்டும்.

இந்தநோக்கம் நிறைவேறுவதற்கு ஜெர்மானிய கவர்ன்மெண்டார் மூன்றுவிஷயங்களை கவனித்து வருகிறார்கள்.

அவையாவன:—தொழில் பள்ளிக்கூடத்தில்

(1) பையன்களுக்குத் திறமையும், தொழிலில் தேர்ச்சியும், அடைந்த அறிவை உபயோகிப்பதில் ஸந்தோஷமும் ஏற்படவேண்டும்.

(2) பையன்கள் தங்களுக்குத் தெரிந்தவைகளை தங்களுடைய ஸகபாடிகளுக்கும், ஸ்நேகிதர்களுக்கும் கற்றுக்கொடுக்கும்படி பழக்கவேண்டும்.

(3) பையன்களுக்கு ஏற்படும் தொழில் பயிற்சியும், பெரியோர்களிடத்தில் மரியாதையும், பொதுஜன விஷயங்களில் ஊக்கமும், ஜனஸமூகத்தின் நோக்கங்களுக்கு ஏற்றவையாயிருக்கவேண்டும். சுருக்கிச் சொல்லப்போனால் தொழில் பள்ளிக்கூடங்களின் நோக்கம் மாணவர்களுடைய ஸாமர்த்யம், அறிவு, பொதுஜன விஷயங்களில் ஊக்கம் ஆகிய இவைகளை அபிவ்ருத்தி செய்வதே. பார்க்கப்போனால், இவைகள் மூன்றுந்தான் நல்ல ஜனங்களின் முக்ய லக்ஷணங்களாகும். இந்தநோக்கம் நிறைவேறுவதற்காக கவர்ன்மெண்டார் ரொம்ப பாடுபட்டு வருகிறார்கள்.

பையன்கள் ப்ரைமெரி ஸ்கூல்களில் வாசித்துமுடிந்து தொழில் பள்ளிக்கூடங்களில் சேர்ந்ததும், அவர்கள் எந்தத் தொழில்களை வாசிக்க ப்ரியப்படுகிறார்களோ அந்தந்த வகுப்புகளில் பிரித்து அந்தந்தத் தொழில்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். நமது தேசத்தில் ரொம்ப தாழ்ந்த தொழில்கள் என்று நாம் நினைத்துவரும் தொழில்களைக்கூட ஜெர்மனியில் கற்பித்துவருகிறார்கள். அதாவது அம்பட்டத்தொழில், கசாப்புக் கடைக்காரத்தொழில், புகைப்போக்கிகள் துடைப்பது ஆகிய இந்தத் தொழில்கள் முதல் ரொம்ப உயர்ந்த சாஸ்த்ர ஸம்பந்தமான தொழில்கள்வரையில் எல்லா தொழில்களுக்கும் வகுப்புகள் ஏற்படுத்துகிறார்கள். இவர்களுக்கு இன்னின்ன பாடங்கள் கற்றுக்கொடுப்பதென்பதை எடுகேஷன் போர்டு என்னும் வித்யாபோர்டாரும், அந்தந்தத் தொழில்களில் நிபுணர்களாயிருப்பவர்களும்சேர்ந்து நிர்ணயிக்கிறார்கள். மாணவர்களுக்கு அவர்கள்விரும்பும் தொழில்களைக் கற்றுக்கொடுப்பதோடு, அந்தத் தொழில்களுக்கு உபயோகப்படக் கூடியதாயும், அவர்களுடைய அறிவை அபிவ்ருத்தி செய்து அவர்கள் தாங்களே ஸ்வதாவாக யோசனைசெய்து புதிதாக எதையும் செய்துவருவதற்கு ஸாதகமாயிருக்கக் கூடியதாயும் உள்ள வேறு பாடங்களையும் அதிகப்படியாகக் கற்றுக்கொடுக்கிறார்கள். உதாரணமாக யந்த்ரங்கள் செய்யக்கற்றுக்கொள்பவர்களுக்கு ப்ரக்ருதி சாஸ்த்ரமும், கணிதமும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

ஒவ்வொரு தொழில் பள்ளிக்கூடத்திலும் வேண்டிய உபகரணங்கள் எல்லாம் அமைந்துள்ள பட்டறைகள் அநேகம் உண்டு. ஒரு பட்டறையில் 16-மாணவர்களுக்குமேல் வேலை செய்ய விடுவதில்லை. இந்தப் பட்டறைகள் தான் மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொண்டவைகளை அநுபவத்தில் செய்துபார்த்துத் தேர்ச்சியடைவதற்கு ஏற்பட்ட இடங்களாகும். தொழில் பள்ளிக்கூடங்களில் சேர்ந்திருக்கும் மாணவர்களுக்குப் பொது விஷயங்களைப்பற்றிய அறிவு ஏற்படவேண்டுமென்று, அவர்களுக்கு இலக்கியம், பொதுவிஷயங்கள் ஆகிய இவைகளைப்பற்றியும் பாடங்கள் கற்பித்து வருகிறார்கள்.

ஜனங்களின் கடமைகளையும், அவர்களுடைய பாத்யதைகளையும் பற்றிச் சொல்லுவதாகிய ப்ரஜா லக்ஷணசாஸ்த்ரத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டியது ரொம்ப அவச்யமென்று ஜெர்மானிய கவர்ன்மெண்டார் எண்ணி அதன்படியே அவர்கள் எல்லா மாணவர்களுக்கும் இந்த சாஸ்த்ரத்தைக் கற்பித்து வருகிறார்கள். கைத்தொழில் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் மாணவர்களுக்கு ப்ரஜா லக்ஷணசாஸ்த்ரத்தில் கற்பிக்கும் விஷயங்கள் பின்வருமாறு:-தொழில்சாலைகளிலும், தேர்ந்த தொழிலாளிகளிடத்தும்போய் தொழில் அப்யஸிப்பவர்களுடைய கடமைகள்; வேலையில் பழகப்போகுமுன் பாடசாலைகளில் தொழில் விஷயங்களைக் கற்றுக்கொள்ளும்போது காலத்தை வீணாக்காமலிருப்பதின் அவச்யம்; தேக ஸௌக்யத்தைப்பற்றிய விஷயங்கள்; தேகத்தின் அமைப்பு; மாணவர்கள் கற்றுக்கொள்ளும் தொழிலின் சரித்ரம்; அந்தத்தொழிலுக்கும் மற்ற தொழிலுக்கும் உள்ள ஸம்பந்தாஸம்பந்தம்; வ்யாபார ஸங்கங்கள்; அவை அநுஷ்டிக்கும் வ்யாபார நீதிகளும் சட்டதிட்டங்களும்; மாணவர் படிக்கும் ஜில்லாவின் பொதுக் கார்யங்களின் அமைப்பு, ஜனஸமூக அமைப்பு, கைத்தொழிலின் அமைப்பு; தேசத்தின் அமைப்பு, ராஜாங்கத்தின் அமைப்பு; ராஜாங்கத்தோடு மாணவருக்கு ஏற்பட்டுள்ள ஸம்பந்தம். அவைகளை மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது அவ்வப்போது நடக்கும் ஸம்பவங்களோடும், கணக்கு விவரங்களோடும் ஸம்பந்தப்படுத்திக் கற்பிப்பார்கள். மாணவர்கள் தொழில் பள்ளிக்கூடத்தில் வாசித்த பிறகு தொழிலாளிகளிடம் வேலை பயிலும்போது, இவ்வளவு காலம் வேலை பயிலவேண்டும், யாரிடம் வேலை பயிலலாம், வேலை பயிலும்போது இன்னசெய்யவேண்டும் என்பவைகளைப்பற்றி கவர்மெண்டார் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

மாணவர்கள் ஸாதாரணமாய் 3-அல்லது 4-வர்ஷகாலம் வேலை பயிலவேண்டும். வேலை பயிலுங்காலத்தில் மாணவர்கள் வாரந்தோறும் சில மணிநேரம் 'கண்டின்யூவேஷன் ஸ்கூல்' என்று பெயருள்ள தொழில் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிக்கவேண்டும். வேலை பயிலுங்காலம் ஆனபிறகு மாணவர்களைப் பரீக்ஷிக்க ஒருபரீக்ஷை நடத்துவார்கள். இதில் தேறினபிறகு மாணவர்கள் தங்களுடைய ஸாமர்த்யத்துக்குத் தகுந்தபடி வேலை ஸம்பாதித்து உயர்வு அடையலாம். க்ரமமாக வேலையில் அமர்ந்தபிறகு அவர்கள் இன்னும் தேர்ச்சியடைந்திருக்கிறார்களா என்று பார்க்க ஒருபரீக்ஷை நடத்தப்படுகிறது. இந்தப் பரீக்ஷையில் தேறினவர்கள் 'மாஸ்டர் வொர்க்கர்' என்னும் மேஸ்த்ரியாகிறார்கள். இவர்களிடந்தான் டெக்னிகல் ஸ்கூல்கள் வாசித்தவர்கள் வேலை பயிலப்போகவேண்டும். ஏதேனும் ஒரு பெரிய முதலாளி 'மாஸ்டர் வொர்க்கர்' என்னும் வேலையில் தேர்ச்சியடைந்த மேஸ்த்ரியா யில்லாவிட்டால், அவர் மாணவர்களை தொழில்பயில எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்படி மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், வேலையில் ரொம்பத் தேர்ச்சியடைந்த ஒரு போர்மனை வேலைக்கு வைத்திருக்கவேண்டும். அப்படியானால்தான் மாணவர்கள் தேர்ச்சியடைந்த தொழிலாளியினிடம் செவ்வையாய் வேலை பயிலுவது ஸாத்யமாகும்.

முதலாளிகளும் கவர்ன்மெண்டாருடைய இந்த ஏற்பாட்டில் த்ருப்தியடைந்தவர்களாகவே இருக்கிறார்கள். கவர்ன்மெண்டினுடைய ஏற்பாட்டில் தங்களுக்கு நன்மையே ஏற்படுகிறதென்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஏனென்றால் டெக்னிகல் பள்ளிக்கூடங்களிலிருந்து வேலை பயிலவரும் மாணவர்கள் நல்ல வேலைக்காரர்களாகவே இருக்கிறார்கள். இதனால், திறமையற்றவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வதால் முதலாளிகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் ஏற்படாமல் போகிறது. மேலும் வேலை பயிலுபவர்களை கண்டின்யூவேஷன் ஸ்கூல்களுக்குப்போகச் சொல்வதிலும், முதலாளிகளின் வேலை ஸௌகர்யத்தை அனுஸரித்தே 'கண்டின்யூவேஷன் ஸ்கூலு'க்குப் போகும் காலத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அநேக முதலாளிகள் டெக்னிகல் பள்ளிக்கூடங்களில் உபகரணங்கள் நன்றாயிருப்பதற்காக ரொம்பப் பணங்கொடுத்து உதவுகிறார்களாம்.

ஜெர்மனியில் தொழில் கல்வி இவ்வளவு நேர்த்தியாயிருப்பதால் ஒருதலைமுறைக்குள் ஜெர்மனியானது தொழில் விஷயங்களில் மற்றெல்லா தேசங்களையும்விட ரொம்ப உயர்ந்த தேசமாகி விடுமென்று சொல்லப்படுகிறது.

## THE CO-OPERATIVE CONFERENCE.

## கோவாபரெடிவ் கான்பரென்ஸ்.

சென்னை ப்ரொவின்ஷ்யல் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் ஜனவரிமாஸம் இரண்டாந் தேதியன்று ப்ரொவின்ஷ்யல் கோவாபரெடிவ் யூனியனின் ஆதரவில் சென்னையில் கூடிற்று. ஷை யூனியனின் சேர்மனாகிய திவான் பகதூர் எம். ஆதிநாராயணய்யா கான்பரென்ஸுக்கு வந்திருந்த டெலிகேட்டுகளை (ப்ரதிநிதிகளை) வரவேற்று ஒரு ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் தாம் தேசத்தின் பற்பல பாகங்களில் சுற்றுப்ப்ரயாணம் செய்ததில், ஜனங்கள் கோவாபரேஷன் முயற்சி ரொம்ப அபிவ்ருத்தியடையுமென்று நம்பியிருக்கிறார்களென தெரியவந்திருக்கிறதென்றும், கோவாபரேஷன் முயற்சியில் ஒழுங்கீனங்கள் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள ரொம்ப ஜாக்ரதையாயிருக்க வேண்டியது அவச்யமென்றும், ஜனங்களில் அநேகர் இந்த முயற்சியை கவர்ன்மெண்டார் எப்போதும் மேற்பார்வைபார்த்து நடத்தி வருவார்களென நம்பியிருக்கிறார்களென்றும், வெகுகாலம் வரைக்கும் கவர்ன்மெண்டாருடைய உதவி இந்த முயற்சிக்கு வேண்டியிருக்குமென்றாலும், கவர்ன்மெண்டின் உதவியையே நம்பியிருப்பது கோவாபரேஷனின் அபிவ்ருத்திக்கு நல்லதல்லவென்றும், கோவாபரேஷனென்பது ஜனங்களே ஏற்படுத்தி நடத்திவரவேண்டிய கார்யமென்றும், ஜனங்கள் தங்கள் வரும்படியைச் செட்டாய்ச் செலவழித்து மிச்சம் பிடிக்க ப்ரயத்தனப்படாமல், கோவாபரேடிவ் ஸங்கங்கள் பணங்கொடுத்து உதவுகின்றனவென்ற தைர்யத்தால் கடன் அதிகம் வாங்க ஆரம்பித்திருக்கிறார்களென்றும், சொன்னார்.

சென்னை நிர்வாக ஸபையில் மெம்பராகிய ஸர் ஹாரோல்ட் ஸ்டூவர்ட் கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாக இருந்து ஒரு நேர்த்தியான ப்ரஸங்கம் செய்தார். அதன் ஸாராம்சத்தை கீழே எழுதுகிறோம்.

சென்ற வர்ஷத்திய கோவாபரேஷன் முயற்சியில் நாம் கவனிக்கவேண்டிய முக்யமான விஷயம் என்னவென்றால் ஸங்கங்களின் தொகையும், மெம்பர்களின் தொகையும் ரொம்ப அதிகரித்திருக்கின்றனவென்பதே. சென்ற வர்ஷத்தில் 260 ஸங்கங்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன. இந்தத்தொகை முன்னிருந்த ஸங்கங்களின் தொகைக்கு நூற்றுக்கு 24-விதமாகும். மெம்பர்களின் தொகை 82,700 லிருந்து 100,500 ஆக அதிகரித்திருக்கிறது. அதாவது மெம்பர்களின் தொகை நூற்றுக்கு 21½ விதம் அதிகரித்திருக்கிறது. இவ்விதம் இரண்டு தொகையும் அதிகரித்திருப்பது த்ருப்திகரமாகவே இருக்கிறது. சிலர் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ரொம்ப வேகமாய் அபிவ்ருத்தியடையவில்லையென்று குறைசொல்லக்கூடும். ஆனால் மற்ற தேசங்களில் கோவாபரெடிவ் ஸங்கங்கள் முதலில் எப்படி அபிவ்ருத்தியடைந்தனவென்பதைப்பார்த்தால் இந்த அதிருப்திக்கு இடமேற்படாது. 1849-ம் வர்ஷத்தில் முதலாவது ரெய்பிஸன் கோவாபரெடிவ் பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குப்பிறகு 5-வர்ஷங்கழித்து இரண்டாவது பாங்கி ஏற்பட்டது. அதற்குப்பிறகு 8-வர்ஷங் கழித்துத்தான் மூன்றாவது பாங்கி ஏற்பட்டது. ஆகவே 13-வர்ஷத்தில் 3-பாங்கிகள்தான் ஸ்தாபிக்கப்பட்டன. இதைப் பார்க்கும்போது சென்னை ராஜதானியில் ரொம்ப அபிவ்ருத்தி யேற்பட்டிருப்பது தெரியவரும். ஆனால் இதில் ஒருவிஷயம் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். சென்னையில் கோவாபரேஷன் ஏற்படுத்த முயன்றவர்களுக்கு வேறு தேசங்களில் கோவாபரேஷன் எப்படி நடைபெற்றுவந்ததோ அந்த அநுபோகம் உதவியாக இருந்துவந்தது. அதோடு ஸர்க்கார் உதவியும், உத்யோகஸ்தர்களெல்லாருடைய உதவியும் இந்த முயற்சிக்கு ஸாதகமாய் இருந்துவந்தன.

இன்னொருவிஷயம்: சென்றவர்ஷம் ஸங்கங்கள் ரொம்ப அதிகமாக ரெஜிஸ்டர் செய்திருப்பதற்குக்காரணம் அதற்காக வந்த மனுக்களை கண்டபடி ஏற்றுக்கொண்டதால் என்று எண்ணக்கூடாது. ஏனென்றால் அந்தவர்ஷம் ரெஜிஸ்ட்ரார் 260 மனுக்களை ஏற்றுக்கொண்டபோதிலும், 104-மனுக்களைத் தள்ளிவிட்டிருக்கிறார்.

சென்றவர்ஷத்திய கோவாபரெடிவ் முயற்சியில் இன்னொரு த்ருப்திகரமான விஷயமென்னவென்றால், ஸங்கங்களில் ரிஸர்வ் பண்ட் 443-லக்ஷம் ரூபாயிலிருந்து 6·19-லக்ஷத்துக்கு அதிகரித்திருக்கிறதென்பதே. இப்படி அதிகமாயிருப்பது நூற்றுக்கு 40-பங்கு விதமாகும்.

கோவாபரெடிவ் முயற்சி இப்படி அபிவ்ருத்தியடைந்திருக்கிறதென்பது த்ருப்தியான

விஷயமென்றாலும், வேறு சிலவிஷயங்கள் கவலைக் கிடமாயிருக்கின்றன. கோவாபரேஷனின் முக்யமான கொள்கைகளில் ஒன்று மெம்பர்கள் செட்டாயிருக்க வேண்டுமென்பது. கோவாபரேஷன் பணம் ஸம்பாதிக்க மாத்ரம் ஏற்பட்ட ஒரு ஸாதனமல்ல. குறைந்த வட்டியில் மெம்பர்களுக்குப் பணங்கடன் கொடுப்பதற்காகத்தான் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்தப்பட்டனவென்றால், அவைகளுக்கு ஸர்க்கார் உதவிசெய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது ந்யாயமாகாது. கோவாபரேஷனின் நோக்கம் வட்டி விகிதத்தைக் குறைப்பது மாத்ரமல்ல. ஜனங்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சி ஏற்பட்டு அதனால் ஜனஸமூகம் அபிவ்ருத்தியடைய வேண்டுமென்பதும் முக்ய நோக்கம். இதற்கு ஜனங்களுக்குள் பரஸ்பர உபகாரமும், தன்னடக்கமும் இருக்கவேண்டியது அவச்யமாகும். ஒருவர்க்கொருவர் கடனுக்கு ஜாமீனாக இருப்பதுமட்டும் போதாது. ஏனென்றால் அதனால் அவர்கள் எல்லாரும் வாங்கின கடனைக் கண்டபடி செலவழிக்கமாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. முக்யமாய் மெம்பர்களுக்குள் இருக்கவேண்டிய குணம் என்னவென்றால் பணத்தைத் திருப்பிக்கொடுப்பதில் நாணயம். அதாவது எப்போது திருப்பிக் கொடுக்கவேண்டுமோ அப்போது காலந்தவறாமல் பூராத்தொகையையும் திருப்பிவிடவேண்டும். ஆனால் இப்போது இந்த ராஜதானியில் கடனைக்குறித்த காலத்தில் கொடுக்கத்தவறும் கேஸுகள் அதிகமாயிருக்கின்றன. மேலும் கோவாபரேஷன் கொள்கைகள் பரவுவதற்கேற்ப இந்தக் கேஸுகள் குறைவடையாமல் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. விவஸாய ஸங்கங்களில் மெம்பர்கள் வாங்கின கடன்களில் சென்றவர்ஷம் கொடுபடவேண்டிய தொகையில் நூற்றுக்கு 24-பாகம் அந்த வர்ஷக்கடைசியில் கொடுபடாமலிருந்தன. வட்டித்தொகையிலும் நூற்றுக்கு $24\frac{3}{4}$-பாகம் கொடுபடவில்லை. அதுபோலவே கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸெண்ட்ரல் பாங்கிகளிடமிருந்து வாங்கின கடன் தொகையிலும் நூற்றுக்கு 25-பாகம் வீதம் கொடுபடாமலிருந்தது. இப்படிக்கடன் தொகையில் நாலில் ஒரு பாகம் திரும்பிக் கொடுக்கப்படாமலிருப்பதனால் ஜனங்களுக்குள் கோவாபரேஷன் கொள்கைகள் இன்னும் நன்றாய்ப் பதியவில்லையென்பது வ்யக்தமாய் ஏற்படுகிறது. ரொம்ப நன்றாய் நடந்துவரும் க்ராம கோவாபரேடிவ் ஸங்கமென்றால், அதில் ஒவ்வொரு மெம்பரும் தாம் கொடுக்கவேண்டிய கடனை குறித்தகாலத்தில் பாக்கியில்லாமல் செலுத்துவதோடு, தமது ஸங்கமும் ஸெண்ட்ரல் பாங்கிகளுக்குக் கொடுக்கவேண்டிய கடனை குறித்த காலத்தில் முழுத்தொகையும் செலுத்துகிறதா என்று கவனம் செலுத்தவேண்டும். மெம்பர்கள் கோவாபரேடிவ் ஸங்கங்களால் ஏற்படும் ஸௌகர்யங்களை மாத்ரம் அடைந்துகொண்டு, அதனால் ஏற்படுகிற பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளப் பின்வாங்கினால், கோவாபரேடிவ் முயற்சி நன்றாய் நடைபெற்று வருகிறதென்று சொல்வதற்கில்லை. வாங்கின கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்துவதுதான் ஜனங்களுக்குள் செட்டு ஏற்படுவதற்கு முதல் அஸ்திவாரமாகும். ஜனங்களுக்குள் செட்டு ஏற்படுவதுதான கோவாபரேஷனின் முக்யநோக்கமாகும். பணம் கடன்கொடுக்கும் ஸெண்ட்ரல் பாங்கிகள் க்ராம ஸங்கங்களிலிருந்து கடனைத் திரும்பிவாங்குவதில் இன்னும் அதிக கண்டிப்பாக இருந்தால், க்ராம ஸங்கங்கள் மெம்பர்களுடைய கடன்களை வஸூல் செய்வதில் கண்டிப்பாயிருப்பார்கள்.

மெம்பர்கள் கவனிக்கவேண்டிய இன்னொரு முக்ய விஷயமென்னவென்றால், அவர்கள் பாங்கிகளில்போடும் டெபாஸிட்டுகளின் தொகை



அதிகமாக வேண்டுமென்பதே. தற்போது விவஸாயிகளுக்கான ஸங்கத்தின் நடை முதல் பணம் ஸராஸரியில் 4442-ரூபாயாகும். அதில் மெம்பர்கள்போடும் டெபாஸிட் தொகையோ ஸராஸரியில் 168-ரூபாயாகிறது. இதன்படி ஒரு மெம்பர் போடும் டெபாஸிட் தொகை ஸராஸரியில் 3-ரூபாயாகிறது. இந்தத் தொகையால் ஜனங்கள் எவ்வளவு செட்டாயிருக்கிறார்களென்பது தெரியவரும்.

மெம்பர்கள் இன்ன கார்யங்களுக்காகக் கடன் வாங்குகிறார்களென்பதை ஸங்கங்கள் கவனித்துவந்து, அவர்கள் லாபம் கிடைக்காத கார்யங்களுக்கு கடன் வாங்காதபடி கூடியமட்டும் ஜாக்ரதையாயிருந்து வரவேண்டும். 'ரெய்பிஸன்' பாங்கிகள் தொழில்களில் போடுவதற்காக மாத்ரந்தான் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கலாமென்று ஏற்பாடு செய்திருக்கின்றன. ஆனால் இந்தியாவில் அப்படிப்பட்ட ஏற்பாடுசெய்து அதன்படி நடந்துவர வேண்டுமென்பது முடியாமலிருக்கலாம். ஆயினும் கோவாபரேஷன் முயற்சியில் ப்ரமுகர்களாயிருப்பவர்கள், மெம்பர்கள் கல்யாணம் முதலிய காலங்களில் மிதமிஞ்சிச் செலவழிப்பதையும், அனுவச்யமாய் கோர்ட்டு வ்யவஹாரங்களில் பணஞ்செலவழிப்பதையும் நிறுத்தும்படி முயற்சிசெய்வது நல்லது. பஞ்சாப் மாகாணத்தில் க்ராமபாங்கிகள்ஏற்பட்டபிறகு, அநேக வ்யவஹாரங்கள் கோர்ட்டுக்குப் போகாமல், கோவாபரேடிவ் ஸங்கங்களின் பஞ்சாயத்தார்களாலேயே விசாரித்து முடிவுசெய்யப்படுகின்றனவாம். க்ராம ஸங்கங்கள் ஏற்பட்டதனால் க்ராமஸாவ்கார்கள் தங்களுடைய தொழில் நடைபெறாமல் வட்டிக்குக்கடன் கொடுப்பதைவிட்டு விட்டார்களாம். ஒரு க்ராமவாஸி ஏதாவது வ்யாஜ்யம் போடவேண்டியிருந்தால் பணத்துக்கு க்ராம கோவாபரேடிவ் ஸங்கங்களிடம் போகவேண்டியிருக்கிறது, ஆனால் பஞ்சாயத்தார்கள் ரொம்ப வ்யவஹார ஞானமுள்ளவர்களாயும், ஜனங்கள் செட்டாயிருக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்களாயுமிருப்பதால், வீணாக கோர்ட்டுக்குப்போய் பணத்தை வாரியிறைப்பது கெடுதல் என்று சொல்லி தாங்களே வ்யவஹாரங்களை விசாரித்து முடிவு கட்டுகிறார்கள். இதனால் க்ராமவாஸிகள் தங்களுக்கு யாதொரு செலவுமில்லாமலே தங்கள் வ்யவஹாரங்களை சீக்ரமாகத் தீர்த்துக்கொள்ளுகிறார்கள்.

பஞ்சாப் மாகாணத்தில் ஸாவ்காருடைய தொழில் கெட்டுப்போனதுபோல இந்த ராஜதானியிலும் எவ்வளவுதூரம் அவர்களுடைய தொழிலுக்குக் கெடுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதை விசாரணைசெய்வது மிகவும் நல்லது. கோவாபரேஷனில் ச்ரத்தையுள்ளவர்களில் சிலர், க்ராமஸங்கங்களில் சேர்ந்துள்ள மெம்பர்கள் ஸங்கங்களிலிருந்து கடன் வாங்குவதோடு மற்றவர்களிடமிருந்தும் எவ்வளவு கடன்வாங்கி யிருக்கிறார்களென்பதற்குக் கணக்குகள் எடுத்துப்பார்த்தால், ஜனங்களிடம் செட்டுக்குணம் எவ்வளவுதூரம் பரவியிருக்கிறதென்பதும், அவர்களுடைய கடன் பளு எவ்வளவு குறைந்திருக்கிறதென்பதும் தெரியவரும்.

விவஸாயிகள் அதிகமாயுள்ள இந்த தேசத்தில் விவஸாயக்கருவிகள், விதைகள், எருக்கள் முதலியவைகளை கோவாபரேஷன் முறையில் வாங்கி மெம்பர்களுக்கு விற்க கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்துவதால் ரொம்ப நன்மை ஏற்படக்கூடும். இதோடு மாஸுலை விற்பதற்கு கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்துவதும், விற்பனைக்குவந்த மாஸுலின் மேல்பணம் கடன்கொடுப்பதும் நல்ல ஏற்பாடுகளாகும். இப்படிப்பட்ட ஸங்கங்கள் விவஸாய டிபார்ட்மெண்டுக்கு ரொம்ப உதவியாயிருக்கும். இவைகளைக்கொண்டு புதுமுறை

களைப் பரீக்ஷித்துப் பார்க்கவும், அனுபவத்துக்கு நல்லவை என்று ஏற்பட்டவைகளை ஜனங்களிடம் பரவச்செய்யவும் விவஸாய டிபார்ட்மெண்டார் ஏற்பாடுசெய்வது ஸுலபமாகும்.

கோவாபரேடிவ் ஸ்டோர்கள் ஏற்படுத்துவதால் மெம்பர்களுக்கு நல்ல ஸாமான்கள் விலை மலிவாகக் கிடைப்பதோடு, ரொக்கத்துக்கு விற்பதாக ஏற்பாடுசெய்துகொண்டால் அவர்களுக்குள் செட்டுத்தனம் ஏற்படக்கூடும். ஆனால் ரொக்கத்துக்கே விற்பதென்ற நிபந்தனை ஏற்படுத்த வேண்டுமென்பது கட்டாயமல்ல. ஆனால் எல்லா கோவாபரேஷன் நிபுணர்களும் ரொக்க வ்யாபாரமே நல்லதென்று சொல்லுகிறார்கள். ஒருவர் அதோடு நில்லாமல் கடன் வ்யாபாரம் கோவாபரேடிவ் முயற்சிக்கு ரொம்ப கெடுதலென்றுகூடச் சொல்லுகிறார்.

கோவாபரேடிவ் கட்டிட ஸங்கங்கள் க்ராமாந்திரங்களில் அதிகம் பயன்படமாட்டா. ஆனால் அவைகள் அதிக ஜனநெருக்கமுள்ள பட்டணங்களில் ரொம்ப ப்ரயோஜனமுள்ளவையாயிருக்கும். இந்த ஸங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் பண உதவிசெய்ய வேண்டுமென்று இந்தக் கான்பரென்ஸ் ஒரு தீர்மானம்செய்யப் போவதாகத் தெரிகிறது. அப்படிக் கேட்பது உசிதமல்ல. கோவாபரேடிவ் முயற்சியின் முக்ய கொள்கை தனக்குத்தானே உதவிசெய்து கொள்வதாகும். அந்தக் கொள்கையை விட்டு விடுவது நல்லதல்ல. ஸர்க்கார் பணம் பொது ஜனங்களுடைய பணமாகையால், கட்டிட ஸங்கத்தின் மெம்பர்கள் தாங்கள் வீடுகட்டுவதற்காக அந்தப் பணத்திலிருந்து கடன் கேட்பது தகுதியல்ல. கோவாபரேஷனில் ஸம்பந்தப்பட்டவர்கள் பிறருடைய உதவியை எதிர்பார்க்காமல் தங்களையே நம்பியிருக்க ப்ரயத்தனப்படவேண்டும். இதனால் ஜனங்களுக்குள் கோவாபரேஷனுடைய உண்மையான கொள்கைகள் நன்றாய் பரவக்கூடும். இந்தமுயற்சி அபிவ்ருத்தியடைந்தால் ஜனங்களுக்கு ஏராளமான நன்மைகள் ஏற்படக்கூடும்.

## RESOLUTION OF THE CONGRESS & CONFERENCES.

## காங்க்ரெஸிலும் கான்பரென்ஸுகளிலும் செய்யப்பட்ட தீர்மானங்கள்.

சென்ற வர்ஷம் டிஸம்பர்மாஸம் நடந்த காங்க்ரெஸிலும் கான்பரென்ஸுகளிலும் செய்யப்பட்ட தீர்மானங்களில் முக்யமானவைகளைக் கீழே சுருக்கி எழுதுகிறோம்.

### இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ்.

#### இந்தியர்களுச்கு ராணுவ உத்யோகங்கள்.

கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு ராணுவத்தில் உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்க வேண்டும். இந்தியர்களை ராணுவத்தில் ஆபிஸர்களாகப் பயிற்சிசெய்வதற்கு இந்த தேசத்தில் ராணுவப்பள்ளிக்கூடங்களும் காலேஜுகளும் ஸ்தாபிக்க வேண்டியது அவச்யம். ராஜ்யத்தில் மற்ற பாகங்களிலுள்ள ஜனங்களுக்கு என்ன பாத்யங்களுண்டோ அதே பாத்யதைகள் இந்தியர்களுக்கும் உண்டென்பதை யுத்தேசித்தும், இந்தியர்கள் இந்த யுத்த ஸமயத்தில் தாமாகவே தங்களுடைய ராஜவிச்வாஸத்தை வெளிக்காட்டியிருப்பதை உத்தேசித்தும், இந்த ராஜ்யத்தில் ஊழியம் செய்வதற்காக எல்லா வகுப்பாரும் தாங்கள் ஆயுதங்கள் தரித்துக்கொள்ள வேண்டுமென்று பலமாய் விருப்பங்காட்டியிருக்கிறதை யுத்தேசித்தும், ஜாதி, வகுப்பு வித்யாஸமில்லாமல், இந்த தேசத்து ஜனங்களெல்லாரும் வாலண்டியர்களாகச் சேரும்படிக்குஏற்பாடுகள்செய்யவேண்டும் (ராணுவத்தில் க்ரமமாய்ச் சேராமல் வேண்டும்போது யுத்தம் செய்யத்தயாராயிருப்பதாய் அதற்கென்று ஏற்பட்ட ஒரு படையில் தாமாகவே ஜனங்கள் சேர்ந்து கொள்வதற்கு 'வாலண்டியரிங்' என்றுபெயர். அப்படி வாலண்டியர் படையில் சேர்ந்திருப்பவர்களுக்கு 'வாலண்டியர்கள் என்று பெயர்).

#### ஆயுதச்சட்டம்.

உத்தரவன்னியில் ஆயுதங்கள் வைத்துக்கொள்ளக்கூடாதென்னும் தற்காலத்து ஆயுதச்சட்டத்தால் ஜனங்களுக்கு ரொம்ப கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறதாலும், இந்தஆயுதச் சட்டத்தால் ஜனங்களுக்கே ஒரு அவமதிப்பு ஏற்பட்டிருக்கிறதாலும், இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கும் இந்தியாவுக்கு வரும் ஜனங்களுக்கும் சட்டம் ஒரே மாதிரியாக இருக்கும்படி ஆயுதங்கள் வைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகளை தக்கவிதமாக மாற்றவேண்டும். ஆயுதச்சட்டத்தைச்சேர்ந்த ரூல்களின்படி கொடுக்கப்படும் லைஸன்ஸுகளை ஒவ்வொரு ஆறுமாஸமும் ஒவ்வொரு வர்ஷமும் புதுப்பிக்கவேண்டுமென்னும் நிபந்தனையில்லாமல், ஒரே தடவையாகக் கொடுக்கவேண்டும். ஆயுதம் வைத்திருக்க லைசென்ஸ் வாங்கினவர்கள் ஆயுதங்களை கெட்டவழிகளில் உபயோகித்ததாக ருசுவானால்தான் லைசென்ஸுகளை ரத்து செய்யவேண்டும்.

#### இந்தியாவும் குடியேற்ற நாடுகளும்.

இந்தியர்கள் வெளிதேசங்களுக்கு குடியேறிப் போவதைப்பற்றிய விஷயத்தை வைஸ்ராய் அனுதாபத்தோடு கவனித்து நடத்தினதைப்பற்றி இந்தக்காங்க்ரெஸ் நன்றி செலுத்துகிறது. அன்யநாடுகளுக்கு இந்தியர்கள் குடியேறிப்போவது விஷயமாக ப்ரிட்டிஷ் குடியேற்றநாடுகளுடன் ஆலோசிக்கும்போது பரஸ்பர ஸாதகபாதக ஏற்பாட்டில் ஆலோசிக்க வேண்டுமென்று வைஸ்ராய் சொன்னதை இந்தக்காங்க்ரெஸ்ஏற்றுக்கொள்கிறது. ஆனால் இந்தப்பரஸ்பர ஏற்பாடு இந்தியர்களுக்கு ஜனஸம்மதமாக இருக்க வேண்டுமென்றால், குடியேற்றநாடுகள் இந்தியர்களுடைய விஷயங்களை எப்படித்தீர்மானிக்கின்றனவோ அதே மாதிரி இந்தியா கவர்ன்மெண்டாரும் தீர்மானிக்க இந்தியா கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் ஏற்படவேண்டும்.

#### ஸ்வய ஆட்சி.

இந்தியர்கள் ரொம்ப ராஜபக்தியுடன் இருந்து வருவதை யுத்தேசித்து இந்த ராஜபக்தி எப்போதும் நிலைத்து நிற்கும்படி கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு 1911-ம் வர்ஷம் ஆகஸ்ட்மாஸம் 25-ந்தேதி இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்த்ரிக்கு அனுப்பின கடிதத்தில் இந்தியாவுக்கு மாகாண ஸ்வய ஆட்சிகொடுப்பதாகச் செய்திருந்த வாக்குதத்தத்தை நிறைவேற்றி, இந்தியர்களுக்கும் மற்றப்ரிட்டிஷ் நாடுகளிலுள்ள ஜனங்களுக்கும் உள்ள அருவெறுப்பான வித்யாஸங்களைப் நீக்கிவிடவேண்டும். பலபாகங்கள் ஒன்று சேர்ந்த ப்ரிட்டிஷ் ராஜ்யத்தில் இந்தியா ஒரு ஸம பாத்யமுள்ள பாகமாயிருக்கும்படிக்கும், அந்த நிலைமைக்கு ஏற்றபாத்யதைகள் இந்தியாவுக்கும் கிடைக்கும்படிக்கும் கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

#### இந்தியா மந்த்ரி ஸபை.

இந்தியா மந்த்ரிக்கு உதவியாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸபையை (கௌன்ஸில்) ஒழித்துவிடவேண்டும். அப்படி ஒழிக்கும் வரையில் அது விஷயமாகப் பின்வரும் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும்.

(1) இந்தியா மந்த்ரியின் சம்பளத்தை இங்லீஷ் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) கௌன்ஸில் திறமையுள்ளதாயும் ஸ்வதந்த்ரமுள்ளதாயுமிருப்பதற்காக அதில் உள்ள மெம்பர்களில் சிலரை நியமனம் செய்து மற்றவர்களை இந்தியாவிலிருந்து தெரிந்தெடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

(3) மெம்பர்களின் மொத்தம் 9-க்கு மேல் இருக்கக்கூடாது.

(4) தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் தொகை மொத்தத்தொகையில் மூன்றிலொரு பாகத்துக்குக் குறைவாயிருக்கக்கூடாது. தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் உத்யோகஸ்தரல்லாத இந்தியர்களாக இருக்கவேண்டும். இவர்கள் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலும் மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

(5) லார்ட் க்ரூ இந்தியா கௌன்ஸிலின் சீர்திருத்தத்துக்காக முன்பு கொண்டுவந்திருந்த மசோதாவில், கௌன்ஸிலுக்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்க, இன்னின்னாரைத் தெரிந்தெடுக்கலாமென்று இந்தியர்கள் ஒரு ஜாப்தா கொடுக்கவேண்டுமென்றும், அந்த ஜாப்தாவிலிருந்து இந்தியா மந்த்ரி வேண்டியவர்களைப் பொருக்கி யெடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் கண்டிருந்தது. அப்படியில்லாமல், எல்லா சட்டஸபை மெம்பர்களும் சேர்ந்து இந்தியா மந்த்ரிஸபைக்கு நேராகவே மெம்பர்கள் தெரிந்தெடுக்கும்படியாக ரூல்கள் ஏற்படவேண்டும்.

(6) இந்தியா மந்த்ரிஸபையில் கவர்ன்மெண்டால் நியமனம் செய்யப்படும் மெம்பர்களில் பாதிக்குக் குறையாத பேர்கள் இந்திய ராஜாங்கத்தில் ஸம்பந்தப்படாத பொதுஜனங்களாக இருக்கவேண்டும்.

(7) இந்தியா மந்த்ரி ஸபையில் நியமனம் செய்யப்படும் மெம்பர்களில் மற்றவர்கள் பத்து வர்ஷத்துக்குக் குறையாமல் இந்தியாவில் வேலை பார்த்தவர்களான உத்யோகஸ்தர்களாக இருக்கவேண்டும். இந்த உத்யோகஸ்தர்கள் 2-வர்ஷகாலத்துக்கு முன்னால் இந்தியாவை விட்டுப்போனவர்களா யிருக்கக்கூடாது.

(8) இந்திய மெம்பர்களுக்கும் மற்ற மெம்பர்களுக்கும் சம்பளவிஷயத்திலும் 'அல்லவென்ஸ்' (படி) விஷயத்திலும் யாதொரு வித்யாஸமும் இருக்கக்கூடாது.

(9) இந்த ஸபை இப்போது இருப்பது போல ஆலோசனை சொல்லும் ஸங்கமாகவே இருக்கவேண்டும். எந்தவிதத்திலாவது அதற்குக் கார்ய நிர்வாகம் ஏற்படக்கூடியவிதமாக அதன் முறைகளிலும் நடவடிக்கைகளிலும் யாதொரு மாறுபாடுகளும் செய்யக்கூடாது.

இந்தியர்களை ஸமமாக நடத்துதல்.

தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களை அங்கேயுள்ள மற்ற ஜனங்களைப்போலவே ஸமமாய் நடத்தாதவரையில் தென்னாப்ரிக்கா இநதியர்கள் விஷயமாய் செய்யப்படும் எந்த ஏற்பாடும் த்ருப்திகரமாகவாவது முடிவானதாகவாவது இருக்காது. ஆகையால் தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் இந்தியர்களை ஸமமாய் நடத்துவதற்காக வேண்டி இந்தியா கவர்ன்மெண்டார் கூடிய சீக்ரம் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒப்பந்தக் கூலி ஏற்பாடு.

இந்தியாவில் கூலியாட்கள் குறைவாயிருப்பதை உத்தேசித்தும், ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் பல கெடுதல்கள் இருப்பதாலும், ஒப்பந்தக் கூலிக்காலத்தில் கூலியாட்கள் அடிமைகளைப் போலிருக்க வேண்டியிருப்பதாலும், இந்தியாவிலும் மற்ற தேசங்களிலும் வேலை செய்வதற்காக கூலியாட்களை ஒப்பந்தக்கூலியாகச் சேகரிப்பதை இந்தியா கவர்ன்மெண்டார் தடுக்க வேண்டும்.

நீதி நிர்வாக அதிகாரங்களைப்பிரித்தல்.

ராஜ்யத்தின் நன்மையை உத்தேசித்து, கூடிய சீக்ரம் நீதிநிர்வாக அதிகாரங்களைப் பிரித்து விடவேண்டும். அப்படிப் பிரிப்பதில் எல்லா நீதி இலாகா உத்யோகஸ்தர்களும் அந்தந்த மாகாணத்து உயர்ந்த கோர்ட்டாருக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கும்படி செய்யவேண்டும்.



பத்ரிகைச் சட்டம்.

இந்தியப்பத்ரிகைகளுக்கான சட்டம் இன்னும் அனுஷ்டானத்திலிருந்து வருவதைப் பற்றி காங்க்ரெஸ் ஆக்ஷேபிக்கிறது. இந்தச் சட்டத்திலுள்ள பாதுகாப்பு விதிகள் பேருக்கு மாத்ரம் பாதுகாப்புகளாக இருக்கின்றனவே யொழிய, அவைகள் அமுலுக்குக் கொண்டுவர முடியாதவைகளா யிருக்கின்றனவென்று கல்கத்தா ஹைக்கோர்ட்டார் ஸமீபத்தில் தாங்கள் செய்த ஒரு தீர்ப்பில் தெரிவித்திருக்கிறதால், இந்த பத்ரிகைச் சட்டத்தை ரத்து செய்து விடவேண்டும்.

நில ஸெட்டில்மெண்ட்.

நிலத்திற்கு ந்யாயமான வரி இவ்வளவு தான் போடலாமென்று ஒரு வரையறை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவச்யம். அடிக்கடி ஸெட்டில்மெண்ட் செய்யப்படும் ரயத்துவாரி நிலங்களுக்கு சாச்வத ஸெட்டில்மெண்ட் ஏற்படுத்த வேண்டியது அவச்யம். அல்லது 60-வர்ஷத்துக் கொருதடவை ஸெட்டில்மெண்ட் செய்கிறதென்று ஏற்படுத்தவேண்டும். இப்படி ஏற்படுத்தினால்தான் விவஸாயிகளின் தற்போதைய தாழ்ந்த நிலைமையை உயர்த்துவது முடியும்.

ப்ரத்யேகமான எலெக்டர்கள் ஜாப்தா.

வைஸ்ராயின் சட்டஸபையிலும் மாகாண சட்டஸபைகளிலும் (ப்ரத்யேகமான ஜாதிகள் அல்லது வகுப்பார்களுக்கு ப்ரதிநிதிகள் தெரிந்தெடுப்பதற்காக) ப்ரத்யேகமான எலெக்டர்கள் ஜாப்தா ஏற்படுத்துவது சரியல்லவென்று இந்தக்காங்க்ரெஸ் அபிப்ராயப்படுகிறது. அதோடு இந்த ஏற்பாட்டை ஸ்தலஸ்தாபனங்களிலும் அனுஷ்டித்தால், தேச ஒற்றுமைக் கொள்கைகள் ஜனங்களிடம் பரவுவதற்கு பாதகமாக முடியுமாதலால், இந்த ஏற்பாட்டைஸ்தலஸ்தாபனங்களில் அனுஷ்டிக்க இடங்கொடுக்கக்கூடாது.

லார்ட் ஹார்டிஞ்ஜின் உத்யோக காலம்.

யுத்தம் முடிந்த பிறகு இந்தியா ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்ற பாகங்களோடு ஸமபாத்யதைகளுள்ள தேசமாக இருப்பதற்கான கார்யங்களை ஏற்பாடு செய்துமுடிப்பதற்காக, லார்ட் ஹார்டிஞ்ஜ் வேண்டியகாலத்துக்கு இந்தியாவின் வைஸ்ராயாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

மற்ற தீர்மானங்கள்.

இந்தியர்கள் ராஜவிச்வாஸமாயிருப்பதாகவும், இந்தியாவிலிருந்து யுத்தத்துக்கு ஸைன்யங்கள் அனுப்பியிருப்பதைப்பற்றி ஸந்தோஷிப்பதாகவும், லார்ட் ஹார்டிஞ்சின் புத்ரர் இறந்துபோனதைப்பற்றி அனுதாபம் காட்டுவதாகவும், கவர்ன்மெண்டார் இந்தியகைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டுமெனவும், ஜனங்கள் ஸ்வதேசிய முயற்சியை ஆதரித்து வரவேண்டுமெனவும் வற்புறுத்துவதாகவும், இந்தியத்துருப்புகள்ஸாமர்த்யமாய் யுத்தம் செய்து வருவதைப்பற்றி ஸந்தோஷப்படுவதாகவும், பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

அடுத்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் 1915-ம் வர்ஷம் பம்பாயில் கூடும்.

## இந்திய கைத்தொழில் கான்பரென்ஸ்.

தொழில் கல்வி.

மாகாண கவர்ன்மெண்டுகள் மாகாணங்களின் பற்பல முக்யமான பட்டணங்களில், வேலையாட்களுக்குக் கல்விகற்பித்து அவர்களைத் தொழில்களில் பயிற்சிசெய்விப்பதற்காக, தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க வேண்டும். மாகாண கவர்ன்மெண்டுகள் ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில் கற்றுக் கொள்பவர்களுக்கு உபயோகப்படும்படியான டெக்னலாஜிகல் காலேஜ் என்னும் தொழில் கல்வி கற்பிக்கும் காலேஜு ஒன்று ஸ்தாபிக்க வேண்டும்.

இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா முழுவதுக்கும் பொதுவாக எல்லாவித ஸாதனங்களும் அமைந்துள்ளதான ஒரு டெக்னிகல் காலேஜ் ஸ்தாபிக்கவேண்டும். இதற்கு பங்களூரில் உள்ள 'டாட்டா ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்' என்னும் சாஸ்த்ர ஆராய்ச்சிசாலையை அபிவ்ருத்தி செய்யவேண்டும்.

இந்திய முதலாளிகளும் தொழில்சாலை மானேஜர்களும் டெக்னிகல் கல்விகற்ற இந்தியச் சிறுவர்களுக்கு தொழில் பயிற்சியும், வேலையும் கிடைப்பதற்கு வேண்டிய உதவிகள் செய்யவேண்டும். லண்டனில் உள்ள 'பாலிடெக்னிக்' கல்விச்சாலையைப்போல், பலவித டெக்னிகல் கல்விகளைக்கற்பிப்பதற்காக 'பாலிடெக்னிக்' காலேஜ் ஒன்று ஸ்தாபிக்க வேண்டியது அவசியம்.

ஜில்லாபோர்டு ரெயில்வேக்கள்.

தேசத்தின் அபிவ்ருத்திக்காக ரெயில்வேக்கள் போடுவது, பாசனவேலைகள் செய்வது, ஆகிய இவைகளில், கவர்ன்மெண்டார் தங்களிடம் அகப்படக்கூடிய பணத்தில் பெரும் பாகத்தை பாசனவேலைகளுக்கே செலவழிக்க வேண்டும். ரெயில்வேக்களுக்காக எடுத்து வைக்கும் பணத்தில், ஒரு பாகத்தைத் தனியாக எடுத்துவைத்து ரெயில்வேக்கள் போட முன் வரும் ஜில்லாபோர்டுகளுக்குக் கொடுத்து உதவவேண்டும். ரெயில்வேக்கள் போடுவதில் அந்த வேலைகளை ஜில்லா போர்டுகள் செய்யும்படி விடவேண்டுமே யொழிய ப்ரைவேட் கம்பெனிகளுக்கு அந்த வேலைகளைக் கொடுக்கக்கூடாது.

ஜில்லா போர்டுகள் தங்கள் ஸொந்தத்தில் கிளைரெயில்வேக்கள் போட்டு நிர்வகிக்கலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருப்பதைப்பற்றி இந்தக் (கைத்தொழில்) கான்பரென்ஸ் நன்றி செலுத்துகிறது. ஜில்லா போர்டுகளுக்கு ரெயில்வேக்கள் போடுவதற்காக வேண்டியிருக்கும் பணம் அவைகளுக்கு கிடைக்கும்படி அவைகளுக்கு கவர்ன்மெண்டார் உதவி செய்யவேண்டும்.

கைத்தொழில்களும் ராஜாங்க உதவியும்.

பொதுவாய் ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் கைத்தொழில் நிலைமையை உயர்த்த ஏற்பாடு செய்வதோடு, இப்போது இந்தியா தனது பொருளாதார நிலைமைக்கு வேண்டியிருப்பவைகளை அன்ய தேசங்களிலிருந்து எதிர்பார்த்திருப்பதுபோலில்லாமல், அவைகளை பெரும்பாலும் இந்தியாவிலேயே அடையும்படி செய்யவேண்டியது அவசியமென்று இப்போது நடந்துவரும் யுத்தத்தினால் நன்றாய் விளங்கியிருக்கிறது. ஆகையால், இந்தியாவில் விவஸாயத்தை அபிவ்ருத்தி செய்து கைத்தொழில்களுக்கு உபயோகப்படும் பொருள்களை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியமுயற்சிகளையும் செய்வதோடு, கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்வதற்குத் தகுந்தவிதமாக கவர்ன்மெண்டார் தங்களுடைய வரிவிதிக்கும் கொள்கைகளை அனுஸரித்து வரவேண்டும். இதற்கு,

(1) இறக்குமதிகளின் மேலும், ஏற்றுமதிகளின் மேலும், வரிபோடுவதற்கு ஜன ப்ரதிநிதிகளுக்கு ஸ்வதந்தரம் ஏற்படும்படி செயய வேண்டும்.

(2) கவர்ன்மெண்டார் கைத் தொழில் டிபார்ட்மெண்டு ஒன்று ஏற்படுத்தி, புதுக்கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்த உதவி செய்ய வேண்டும்.

(3) கவர்ன்மெண்டார் இலவசமாய் மூலாதாரப்படிப்புக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்வதோடுகூடவே, ஜனங்களுக்கு டெக்னிகல் கல்வி, கைத்தொழில் கல்வி, வ்யாபாரக் கல்வி ஆகிய இவைகளை கற்றுக்கொடுக்கவேண்டும்.

மேற்சொன்ன நோக்கம் நிறைவேறுவதற்கு பின்வருங் கார்யங்களைச் செய்யவேண்டியது அவசியம்.

(4) இந்தியா கவர்ன்மெண்டும், மாகாண கவர்ன்மெண்டுகளும், தேசத்தின் கைத்தொழில் நிலைமைகளைப்பற்றி ஒரோரிடங்களில் தனித்தனியாகச் செய்து வந்த ஆராய்ச்சிகளை ஒன்று சேர்த்து, தேசத்தின் கைத்தொழில் நிலைமையைப்பற்றிய ஆராய்ச்சியைப் பூர்த்தி செய்யவேண்டும்.

(5) கைத்தொழில்கள் ஸ்தாபிக்க முன் வருபவர்களுக்கு ஏற்படக்கூடிய பற்பல சிக்கலான விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படிக்கும், அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் சொல்லும்படிக்கும் கவர்ன்மெண்டார் தங்களுடைய சாஸ்த்ர நிபுணர்களுக்கு உத்தரவு செய்ய ஸம்மதப்படவேண்டும்.

கோவாபரேடிவ் ஸங்கங்கள்.

கோவாபரேடிவ் ஸங்கங்கள் நன்றாய் ஒழுங்குபட்டு, அவைகளுக்குள் யூனியன்கள் ஏற்பட்டு, அந்த யூனியன்களுக்கு ஸங்கங்களின் கணக்குகளை தணிக்கை ஸங்கங்களை இன்ஸ்பெக்ட்செய்வது ஆகிய இந்தக் கார்யங்களை மேற்கொள்ளத் திறமை ஏற்படும் வரையில், இப்போதுபோலவே ஸங்கங்களுக்கு யாதொரு செலவுமில்லாமல் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களே தணிக்கைசெய்வது, இன்ஸ்பெக்ஷன் ஆகிய இந்த வேலைகளைச்செய்து வரவேண்டும். இதற்காக கவர்ன்மெண்டார் பயிற்சியடைந்த உத்யோகஸ்தர்களை போதுமானவளவு வைத்துக்கொள்ளவேண்டும். தச்சன், கொல்லர் முதலிய ஜாதியார்களும், மற்ற தொழில்களில் அமர்ந்துள்ள வகுப்பார்களும் ரொம்பதாழ்ந்த நிலைமையிலிருப்பதை யுத்தேசித்து அவர்களுக்கு உபகாரமாய் அவர்களுக்குத் தகுந்தவையான கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதற்காக கவர்ன்மெண்டார் ப்ரத்யேகமாக உத்யோகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

சிறு தொழில்கள்.

இந்த தேசத்தின் தற்காலத்துப் பொருளாதார நிலைமையையும் பிற்காலத்துப் பொருளாதார நிலைமையையும் அபிவ்ருத்தி செய்யவேண்டியது அவச்ய மென்பதை யுத்தேசித்து, விவஸாயிகளின் வரும்படியை அதிகப்படுத்துவதற்காக, ஏற்கனவேயுள்ள சிறு தொழில்களை அபிவ்ருத்தி செய்யவும், புதுத் தொழில்களை ஸ்தாபிக்கவும் முயற்சிகள் செய்யவேண்டும். கைத்தறி நெசவுத்தொழிலின் இப்போதைய நிலைமையை அபிவ்ருத்தி செய்யவேண்டும். இதற்கு நெசவுக்காரர்களுடைய ஒற்றுமையுடன் கைத்தறி நெசவு ப்ரபலமாக நடக்கும் இடங்களில் வேலையை குறைக்கக்கூடிய கருவிகளையும் ஸாதனங்களையும் உபயோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும், நெசவுதொழில் நடக்கும் ஊர்களில் ஊரூராய்ப் போய் நெசவுதொழில்செய்து காட்டுவதற்காக நிரூபண கூட்டங்கள் ஸ்தாபிக்கவேண்டும்.

கான்ஸல்கள்.

ப்ரிட்டிஷ் இந்தியா ஒழிந்த மற்ற தேசங்களில் (வ்யாபார விஷயங்களையும் மற்ற ப்ரிட்டிஷாருடைய விஷயங்களையும் கவனித்துவர) ஏற்படுத்தப்பட்டிருக்கும் கான்ஸல் என்னும் அதிகாரிகளின் ஆபிஸுகளில், இந்தியாவின் வ்யாபாரத்தைக் கவனித்துவர இந்தியன் கமர்ஷியல் அட்டாச்சி என்னும் இந்திய வ்யாபார உத்யோகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

மற்ற தீர்மானங்கள்.

முன்புநடந்த கான்பரென்ஸுகளில் தீர்மானம் செய்யப்பட்டு இந்தக் கான்பரென்ஸிலும் அங்கீகரிக்கப்பட்டவையான மற்ற தீர்மானங்கள் பின்வருமாறு.

ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் இந்திய கைத்தொழில்களை ஆதரிக்கவேண்டும். இந்தியமுதலாளிகள் (பணமுள்ளவர்கள்) தாதுப்பொருள்களை வெட்டியெடுக்க முயற்சி செய்ய வேண்டும். பருத்தி ஸாமான்களின்மேல் போட்டிருக்கும் வரியைத் தள்ளிவிடவேண்டும். நிறைகளையும் படி மரக்கால் முதலிய அளவுகளையும் தேசமெங்கும் ஒரேமாதிரியாக இருக்கும்படி செய்யவேண்டும். இந்திய ஸர்வ

கலாசாலைகளில் வ்யாபார விஷயங்களைக் கற்பிக்க வ்யாபாரப்பிரிவுகள் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு மாகாணத்தின் முக்யபட்டணத்திலும் வ்யாபாரக்காலேஜ் ஒன்று ஸ்தாபிக்கவேண்டும்.

கான்பரேன்ஸின் அமைப்பும் வேலையும்.

கான்பரென்ஸ் தனது கார்யங்களை சரிவரச் செய்வதற்காக அதற்கு சரியான அமைப்பு ஒன்று ஏற்படுத்தவேண்டும். வர்ஷம் முழுவதும் கான்பரென்ஸ் ஸம்பந்தமான வேலைகளைச் செய்துவர எல்லா மாகாணங்களிலும் கான்பரென்ஸுக்கு ஆபீஸுகள் ஏற்படுத்தவேண்டும். இந்தக் கான்பரென்ஸின் அமைப்பு இன்னவிதமாயிருக்க வேண்டுமென்பதைக் கீழே குறித்திருக்கிறது. இதைப் பற்றி ஆராய்ச்சிசெய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது.

1. இந்திய கைத்தொழில் கான்பரென்ஸின் நோக்கங்கள் நிறைவேறுவதற்குப் பின்வரும் வேலைகள் நடைபெறவேண்டும்.

(1) இந்திய கைத்தொழில்களைப்பற்றியும், கைத்தொழிலபிவ்ருத்தியைப்பற்றியும் ஆலோசிக்க வர்ஷந்தோறும் கான்பரென்ஸ் நடத்துவது.

(2) ஒருஸெண்ட்ரல் கமிட்டியின் ஆதரவில் கைத்தொழில் அபிவ்ருத்திக்காகச் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் சீராய் ஒழுங்குபடுத்துவதற்காக, ஒவ்வொரு மாகாணத்திலும் 'ஸ்டாண்டிங் ப்ரொவின்ஷல் கமிட்டி' என்ற கமிட்டி ஒன்று ஏற்படுத்துவது.

(3) கைத்தொழிலபிவ்ருத்திக்காகச் செய்யப்படும் முயற்சிகளைப்பற்றியும் அந்த முயற்சிகளாலேற்படும் பயன்களைப்பற்றியும் மூன்று மாஸத்துக் கொருதடவை பத்ரிகைகள் ப்ரசுரம்செய்வது. கான்பரென்ஸின் அபிவ்ருத்திக்காகவேண்டிய வேறு யுக்தமான வேலைகளையும் செய்து வருவது.

2. எல்லா இந்தியா கைத்தொழில் கான்பரென்ஸின் ஸ்டாண்டிங் கமிட்டியில் பின்வருபவர்கள் மெம்பர்களாக இருக்கவேண்டும்.

(1) முந்தினவர்ஷத்து இந்திய கைத்தொழில் கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்ட், (2) முந்தினவர்ஷத்து கான்பரென்ஸின் ஸெக்ரெடரி, உதவி ஸெக்ரெடரி; (வேண்டுமானால் ட்ரெஷரரையும் சேர்த்துக்கொள்ளலாம்.) மாகாண கமிட்டிகளின் ஸெக்ரெடரிகள்.

கான்பரென்ஸின் வேலைகளை நடத்தும் கடமை இந்த எல்லா இந்திய கைத்தொழில் ஸ்டாண்டிங் கமிட்டியின் பொருப்பாக இருக்கவேண்டும். கமிட்டியார் தங்களுடைய வேலைகளைச் செய்வதற்காக இந்த ரூல்களின்படி அவர்களுக்குப் பணங்கொடுத்து உதவவேண்டும்.

3. கான்பரென்ஸின் நோக்கங்களை ஏற்றுக் கொள்ளும் மற்ற ஸங்கங்களையும் ஸ்தாபனங்களையும், வர்ஷத்துக்கு 10-ரூபாய் வீதம் சந்தா செலுத்தினால், கான்பரென்ஸைச் சேர்ந்தவைகளாக அங்கீகரித்துக் கொள்ளலாம். அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட ஸங்கங்களுக்கு கான்பரென்ஸுக்கு ப்ரதிநிதிகளை (டெலிகேட்டுகள்) த்தெரிந்தெடுக்க பாத்யதையுண்டு. மாகாண ஸ்டாண்டிங் கமிட்டிகள் அப்போதைக்கப்போது மாகாண கைத்தொழில் கான்பரென்ஸுகளும் ஜில்லா கைத்தொழில் கான்பரென்ஸுகளும், தொழில்காட்சி சாலைகளும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

4. டெலிகேட்டுகள் கொடுக்கும் பணத்தில் பாதி பாகத்தையும், கான்பரென்ஸ் வேலைக்காக ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேற்படாமல் வஸூலிக்கும் தொகையையும்சேர்த்து, கான்பரென்ஸுக்காக இப்போது ஸெக்ரெடரி நடத்திவரும் வேலைகளை எல்லா இந்திய ஸ்டாண்டிங் கமிட்டி நடத்திவருவதற்காகக் கொடுக்கவேண்டும். மேலும் அவச்யம் பணம்



வேண்டியிருக்கும்போது முன் சொன்னமாதிரி இன்னும் பணம்வஸூல் செய்துகொள்ளலாம்.

5. எல்லா இந்திய கமிட்டியார் தாங்கள் வாங்கிச் செலவு செய்திருக்கும் பணங்களுக்கு வர்ஷக்கடைசியில் நடக்கும் கான்பரென்ஸில் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். இந்தக் கணக்கை தணிக்கை செய்யவும் ப்ரசுரம் செய்யவும் கமிட்டி ஏற்பாடு செய்யவேண்டும்.

6. எல்லா இந்தியக்கமிட்டியார் அவச்யமானால் தங்களுடைய வேலைகளை கடிதங்கள்மூலமாக மெஜாரிட்டிகளினுடைய வோட்டுகளின் அபிப்ராயத்தை அனுஸரித்து நடத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு நடவடிக்கையிலும் வோட்டுகள் இன்னபக்கம் இத்தனை யென்பதைக் குறிப்பிடவேண்டும்.

7. கான்பரென்ஸ் நடக்கும் மாகாணத்து ஸ்டாண்டிங் கமிட்டியாரால் வர்ஷந்தோறும் நியமிக்கப்படும் உபசரணைக் கமிட்டியார் கான்பரென்ஸ் நடை பெறுவதற்கான வேலைகளைச் செய்து அதற்கான செலவுகளையும் செய்யவேண்டும்.

இந்திய ஜனசாரசீர்திருத்தக் கான்பரேன்ஸ்.

பெண்கல்வி.

எல்லா இந்தியர்களும் தங்களுடைய பெண்களை பள்ளிக்கூடங்களுக்கு வாசிக்க அனுப்பவேண்டும்; அவர்களிருக்கும் இடங்களில் பள்ளிக்கூடங்கள் இல்லாவிட்டால் பெண்களுக்கு வீட்டிலேயே எலிமெண்டரிக் கல்வியும், உயர்தரக்கல்வியும் கற்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

ருதுவானபின் விவாகம்.

பெண்கள் அதிககாலம் பள்ளிக்கூடங்களில் வாசித்துவர ஸௌகர்ய மேற்படுவதற்கும், இந்தியர்கள் நாளுக்குநாள் க்ஷீணித்துவருவதைத் தடுப்பதற்கும், பால்யவிதவைகள் அதிகமாவதைக் குறைப்பதற்கும்வேண்டி பெண்களுக்கு ருதுவானபின் கல்யாணம் செய்வது நல்லது. சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸசாஸ்த்ரி கொண்டுவந்திருக்கும் ருதுமதி விவாக மசோதாவை இந்தக் கான்பரென்ஸ் ஆதரிக்கிறது.

தாழ்ந்த வகுப்பார்கள்.

தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தி அவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க இன்னும் ரொம்பமுயற்சிகள் செய்யவேண்டியது அவச்யமாகும். அவர்கள் தீண்டாத ஜாதிகள் என்று எண்ணிவரும் வழக்கத்தைப் போக்கடிக்க முயற்சி செய்யவேண்டும்.

ஜாதிபேதம்.

இந்தியாவில் வழக்கத்திலிருந்துவரும் ஜாதி வித்யாஸங்கள் தேச அபிவ்ருத்திக்கு பாதகமானவை. ஜனசார சீர்திருத்த ஸங்கங்கள் புத்திமதி சொல்லியும், உதாரணமாகச் செய்து காட்டியும் ஜாதிவித்யாஸத்தைப் போக்கடிக்க ப்ரயத்தனப்படவேண்டும். வெவ்வேறு ஜாதிகளில் ஒன்றுக்குள் ஒன்று நடக்கும் கல்யாணங்கள் சட்ட ஸம்மதமானவை யென்பதற்கு கவர்ன்மெண்டார் ஒருசட்டம் செய்யவேண்டும்.

விதவைகள்.

விதவைகளை முண்டனம்செய்து விகாரப் படுத்துவது க்ரூரமான செய்கையாகும். அந்த வழக்கம் சரியல்லவென்று இந்தக் கான்பரென்ஸ் சொல்லுகிறது. ஜனசார சீர்திருத்தக்காரர்கள் அவர்களுடைய நிலைமையை உயர்த்தவும், அவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டிய வஸதிகள் செய்துகொடுக்கவும், அவர்கள் மறுவிவாகம் செய்துகொள்வதற்கு ஏற்படக்கூடிய தடைகளை நீக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். முக்யமாய் குழந்தைப்பருவத்தில் விதவையானவர்கள் மறுவிவாகம் செய்துகொள்வதை ரொம்பவும் ஆதரித்து வரவேண்டும்.

மதுவிலக்கு.

ஜனங்கள் முற்றிலும் மதுபானங்கள் குடிப்

பதை ஒழித்துவிடவேண்டும். கவர்ன்மெண்டாரும், மதஸங்கங்களும், ஜநோசார சீர்திருத்த ஸங்கங்களும், மதுபான வழக்கத்தைத்தடுக்கத் தங்களால் கூடியமட்டும் பலமாக முயற்சி செய்து வரவேண்டும்.

நாட்யங்கள்.

(கல்யாண காலங்களிலும், மற்ற ஸந்தர்ப்பங்களிலும்) நாட்யங்கள்வைக்கும் வழக்கம் இப்போது குறைந்துவருகிறது. இந்த வழக்கத்தை முற்றிலும் ஒழிப்பதற்கு ஜநோசார சீர்திருத்த ஸங்கங்களும், மற்ற ஆசாரசீர்திருத்த அபிமானிகளும் இன்னும் அதிகமாக முயற்சி எடுத்துவரவேண்டும்.

கடல்யாத்ரை.

தேசத்தின் அபிவ்ருத்தியை உத்தேசித்து ஜனங்கள் கடல் யாத்ரைசெய்து வெளிதேசங்களுக்குப் போய்வரவேண்டியது அவச்யமாயிருப்பதால், அப்படிப்போய் வருபவர்களை ஜாதியில் மறுபடியும் சேர்த்துக்கொள்வதற்கு ஜனங்கள் யாதொரு தடையும் ஏற்படுத்தக் கூடாது.

## THE TURKISH ARMY.

## துருக்கியின் ஸைன்யம்.

துருக்கியின் ஸைன்யபலத்தைப்பற்றி ஒன்றும் திட்டமாய் சொல்வதற்கு முடியாது. அமெரிக்காதேசத்து ஸைன்ய டிபார்ட்மெண்டைச்சேர்ந்த சில நிபுணர்கள், துருக்கி 5 லக்ஷம் முதல் 12 லக்ஷம் ஸோல்ஜர்கள்வரை நன்ருய் பயிற்சிசெய்து யுத்தத்துக்கு அனுப்பக்கூடுமென்று அபிப்ராயப்படுகிருர்கள்.

1910-ல் துருக்கியின் காலாட்படையில் 11½ லக்ஷம் பேர்கள் இருந்ததாக வெளியிடப்பட்டது. ஆனுல் இத்தனை இருந்திருக்க முடியாதென்பது சிலர் அபிப்ராயம்.

அந்த கொஞ்சில் நடந்த பால்கன் சண்டையில், து. கான்பள்வந்து எதிர்த்தபோது, துருக்கி கய வேறு யுடார் சண்டைக்குத் தயாராகவே யில்லையாம். ஆகையால், வெகு பெரிய தோல்விகள் அடைந்து, தங்களிடமிருந்த பீரங்கி முதலியவையெல்லாம் இழந்தார்கள். மேலும், இத்தோல்வி துருக்கி ஸைன்யத்தின் கீர்த்தியையும் கெடுத்துவிட்டது.

பால்கன் யுத்தத்துக்குப் பிற்பாடு துருக்கி கவர்ன்மெண்டார் ஸைன்யத்தை சீர்திருத்தி வந்தார்கள். எவ்வளவுதூரம் சீர்திருத்தியிருக்கிருர்களென்பதும், தற்போதுள்ள பலமும் நம்மால் சொல்வதற்கில்லை. கான்ஸ்டான்டிநோபிளிலிருந்து வந்துள்ள சில கடிதங்களால் துருக்கியின் ஸைன்யத்தில் உத்யோகஸ்தர்களில் அநேகர் ஜெர்மானியர்களாயிருக்கிருர்களென்றும், அவர்கள் ஜெர்மன் 'பீல்ட்' பீரங்கிகளையும் 'ஹவிட்ஸர்'களையும் புதிதாய்ச் சேர்த்து துருக்கியின் பீரங்கிப்படையை பலப்படுத்தியிருக்கிருர்களென்றும் தெரியவருகிறது.

தற்போது, துருக்கி கவர்ன்மெண்டார் 18-முதல் 45-வயது வரைக்குமுள்ளவர்களை யெல்லாம் ஸைன்யத்தில்சேர கூப்பிட்டிருக்கிருர்களாம். ஆகையால், ஸாதாரண ஜனங்களிலிருந்தே அநேகரை ராணுவத்தில் சேர்ப்பதாகத் தோன்றுகிறது. ஆனுலுங்கூட, துருக்கியில் அரேபியர்களைப்போல சில ஸமூகத்தார் மிக பயங்கரமானவர்களே. நல்ல தருணங் கிடைத்தால், நன்ருய்ச் சண்டை செய்வார்கள்.

ஆனுல், எத்தனைபேர்களைச் சேர்த்துக்கொள்ள முடியுமென்பதை ஆலோசிப்போமானுல், அது நிச்சயமாய் சொல்வது அரிது. ஏனெனில், அது அங்கே உள்ள மொத்த ஜன ஸங்க்யையையும், இவ்யுத்தத்தை யாரார்கள் வேண்டிக்கொள்கிருர்களென்பதையும் பொருத்தது. உதாரணமாக, அரேபியாவிலும், ஆர்மீனியாவிலும் துருக்கி ராஜ்யபாரம் அவ்வளவு வீர்யமாகவில்லை.

துருக்கியின் காலாட்படையில் 'மாஸர் ரைபில்' என்ற துப்பாக்கியையே உபயோகப்படுத்துகிருர்கள். இந்த மாதிரி ரைபில்கள் மொத்தமாய் 10 லக்ஷம் இருக்கின்றனவாம். மேலும் "மார்டினி-ஹென்ரி" ரைபில்களில் 5,00,000 கொஞ்சகாலத்துக்குமுன் இருந்தன.

துருக்கியின் பீரங்கிப் படையைப்பற்றி ஒன்றும் திட்டமாய்த் தெரியாது. பத்து வர்ஷங்களுக்குமுன்னதாக, 1188 பீல்ட் பாட்டரிகளும், 108 குதிரைபாட்டரிகளும், 240 மலைபாட்டரிகளும், 72 'ஹவிட்ஸர்' பாட்டரிகளும் இருந்தன. பீல்ட் பீரங்கிகளெல்லாம் ஜெர்மன் க்ருப் சாலையில் செய்யப்பட்டவை; ஹவிட்ஸர்களில் சிலவும் அவ்விடத்திலேயே தயாராக்கப்பட்டன.

துருக்கியர்களை, சரியான உத்யோகஸ்தர்கள் மேல்பார்வை பார்த்து நடத்திவந்தால், அவர்கள் மிகவும் பராக்ரமத்துடன் சண்டை செய்யக் கூடியவர்கள். சென்ற பால்கன் சண்டையில் தோல்வியடைந்த போதிலுங்கூட, அவர்கள் தைரியமான ஸோல்ஜர்கள் தான்; ஏனெனில், பால்கன் சண்டையில் அவர்களை மேல்பார்த்து நடத்திவர சரியான ஆபீஸர்களுமில்லை; மேலும் பால்கன் தேசத்தவர் திடீரென தயாராயில்லாத ஸமயம்பார்த்து துருக்கியர்களைவந்து எதிர்த்துவிட்டார்கள். ஆனுல், இப்பொழுதோ, ஜெர்மானிய ஆபீஸர்கள் அவர்களை நடத்துவதால், இச்சண்டையில் நன்ருய் சண்டை செய்வார்களென்று சொல்லப்படுகிறது. ஆனுல் ஒரே ஒரு ஆபத்துதான் இப்பொழுது அவர்களுக்கு உளது. அதாவது, முக்யமாய், அவர்கள் ரஷ்யாவுடன் போர் புரிய வேண்டியிருப்பதே. ரஷ்யசேனை துருக்கியதைக்காட்டிலும் ஸங்க்யையில் எவ்வளவோ அதிகமானது. சில அமெரிக்கா தேசத்து சண்டை நிபுணர்கள் நினைப்பதாவது, துருக்கி கவர்ன்மெண்ட் 500,000 ஸோல்ஜர்களை பழக்கி யுத்தகளத்துக்கு அனுப்பமுடியுமானுல், அதுவே ஜாஸ்தி ப்ரயத்னம், அதற்கு மேல் முடியாதென்பதே. ரஷ்யாவுக்கோ ஏராளமான ஸைன்யமிருக்கிறது.

## WHO IS THE FATHER ?

By C. S. KRISHNA AIYAR. M. A.

## அப்பன் யார் ?

[இது விக்ரமாதித்ய சரித்ரத்தில் அவர் வேதாளத்தைப் பிடித்துக்கொண்டு வரும்போது வேதாளம் சொன்ன கதைகளில்ஒன்று. இது ஹிந்துஸ்தானிமுதலிய பாஷைகளில் உள்ள விக்ரமாதித்ய சரித்ரங்களில் இருக்கிறது. தமிழில் இது வரையில் வெளிவரவில்லையென்று தோன்றுகிறது. இது ஹிந்துஸ்தானியில் உள்ள கதைப் புஸ்தகத்தில் 18-வதுகதையாகும்.]

கமலபுரமென்னும் பட்டணத்தில் 'ஸௌதக்ஷி' என்னும் ராஜா இருந்தான். அதே நகரத்தில் 'தநாக்ஷி' என்னும் செட்டியிருந்தான். இவன் தன் பெண்ணுன 'தனவதி'க்கு சிறுவயதிலேயே கௌரிதத்தன் என்ற செட்டிப்பிள்ளையுடன் கலியாணத்தை முடித்தான். ஒரு பெண் குழந்தை பிறக்க அதற்கு மோகினி என்று பெயர் வைத்தார்கள். குழந்தையின் தகப்பன் சீக்ரமே இறந்து போய்விட்டான். ஸகோதர பந்துக்கள் அவனுடைய ஸர்வ ஸொத்தையும் அபகரித்தார்கள். விதவை தனவதி சோகமடைந்து பெண்ணின் கையைப்பிடித்துக்கொண்டு ராத்ரி இருட்டில்வெளிப்புறப்பட்டு தாய்க்ருகம் நோக்கி நடந்தாள். மத்தியில் வழி தப்பி ஒரு மயானத்தையடைந்தாள். அவ்விடத்தில் கழுமரத்தில் ஒருதிருடன் தொங்கிக்கொண்டிருந்தான். அகஸ்மாத்தாய் இவள் கையவன் காலில் பட்டு வேதனையுண்டாக்கிற்று. "யார் என்னை யுபத்ரவிக்கிருர்கள்" என்று திருடன் கதற, "நான் தெரிந்து னையவிலவர்க என்றிவள் மறுமொழி பகன்று, இத்தயாத் கேட்டுக்கொண்டாள்,

றும் பெண்சாதியும்

க்கு.

“ஒருவன் மற்றொருவனுக்கு ஸௌகத்தை யாவது துக்கத்தையாவது உண்டாக்குவதில்லை. ப்ரும்மா எழுதினவெழுத்து ப்ரகாரம் ஒவ்வொருவனுமனுபவிக்கிறான். ‘இக்காரியத்தை நான் செய்தேன்’ என்று சொல்லிக்கொள்ளும் ஜனங்கள் புத்தியில்லாதவர்கள். ஏனென்றால் மனிதர்கள் கர்மமென்னும் கயிற்றில் கட்டப்பட்டிருக்கிறார்கள். அக்கயிறு தனக்கிஷ்டமான விடத்திற்கு ஜனங்களை யிழுத்துக்கொண்டு போகிறது. ப்ரும்மாவின் ஸங்கதியை ஒருவருமறியமாட்டார்கள். மனிதன் ஒன்று விசாரிக்கிறான், ப்ரும்மா ஒன்றுசெய்விக்கிறார்.” இவ்விதமாய் சோரன் வேதாந்தமாய்ப்பதில் சொல்ல, தனவதி ஆச்சரியமடைந்து “நீ யார்” என்று வினவினாள்.

“நான் திருடன்; மூன்று நாள் கழுமரத்தில் தொங்கியும் என் ப்ராணன் போகமாட்டேனென்கிறது” என்று சோரன் பகர்ந்தான். “அதன் காரணம் யாது” என்று தனவதி வினவ, திருடன் “கல்யாணமில்லாததினால் ப்ராணன் போகமாட்டேனென்கிறது. உன் பெண்ணையெனக்குக்கலியாணம் செய்துகொடுத்தாலுனக்குக் கோடி ரூபாய் தருகிறேன். பாபத்துக்கு மூலம் லோபம்; வ்யாதிக்கு மூலம் ரஸம் (நாக்கு ஸௌகம்) ; துக்கத்திற்கு மூலம் ஸ்னேகம்; இம்மூன்றையும் விட்டவர்கள் ஸௌகமாயிருப்பார்கள். ஆனால் இம்மூன்றையும்விட ஒருவராலும் முடிகிறதில்லை” என்றுமொழிந்தான். பணத்தாசையினால் தனவதி பெண்ணை கொடுக்க விஷ்டப்பட்டு, “உனக்குப் பிள்ளையெப்படி யுண்டாகும்” என்று சோரனைக்கேட்டாள். “இவளுக்கு வயது வரும்பொழுது ஒரு – ஸௌந்தரியமுள்ள ப்ராமணனைக் கூப்பிட்டு முடியுவனுக்கு. ஐந்நூறு மொகரா கொடுத்து அந்தீயவளருடமனுப்பு. அப்பொழுது இவளுக் டையில், ‘ள்ளொன்டாகும்,’ என்று திருடன் நருக்கி கூ’ வேறு’னக்கழுமரத்தைநாலு தடவை சுற்றச்செய்து தனவதி கல்யாணத்தை முடித்தாள். “கிழக்கே சுவருடன் காணப்படுகிற கிணற்றின் பக்கம் ஒரு ஆலமரமிருக்கிறது. அதின் கீழ்புதையலிருக்கிறது. போயெடுத்துக்கொள்” என்றுதிருடன் சொல்லிமுடித்தவுடன், அவன் ப்ராணன் போய்விட்டது.

தனவதி திருடன் சொன்னவிடத்தை யடைந்து, கொஞ்சம் ரூபா யெடுத்துக்கொண்டு, தாய்வீடு சென்று, மாதாபிதாக்களுக்கு இந்த வ்ருத்தாந்தத்தை யறிவித்து, அவர்களையுமழைத்துக்கொண்டு புருஷன்தேசமடைந்து பெரிய மாளிகைகட்டி வாழ்ந்து வந்தாள். மோகினியென்றபெண் சிறப்பாய் வளர்க்கப்பட்டாள். யௌவனமடைந்த காலத்தில் ஸகிகளுடன் உப்பரிகையிலிருந்து விநோதம் பார்த்துக்கொண்டிருக்கையில், ரஸ்தாவில் ஒரு ப்ராமணன் வரக்கண்டாள். அவனைக்கண்டு மோகம்கொண்டு, தோழியையனுப்பி யவனைத் தருவித்துத் தாயாரிடம் கொண்டுபோகும்படி சொன்னாள்.

தாயார் “ஓ! ப்ராமணா, என் பெண் யௌவனமடைந்திருக்கிறாள். ஸந்தான நிமித்தமாயுமக்கு ஐந்நூறு மோஹரா கொடுக்கிறேன், உமக்கு இஷ்டமா” என்று கேட்க, அவன் ஸம்மதித்தான். அவனுக்கு இச்சாபோஜனமளித்து ரங்கமஹலில் (படுக்கையறையில்) பெண்ணுடனிருக்கும்படி யனுமதி கொடுக்க, அவன் பொழுதுவிடிந்தவுடனெழுந்து தன் வழி போனான்.

அந்த ராத்ரியே பெண் கர்ப்பம் தரித்தாள். மாதங்கள் கழிந்தவுடன் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. ஆறும் நாள் ராத்ரி மோகினிக்கு ஸ்வப்னமுண்டாயிற்று.

தலையில் ஜடையும், நெற்றியில் சந்திரனும், தேகத்தில் விபூதியும், மார்பில் பூணூலும், கழுத்தில் முண்டமாலையும் ஒருகையில் கப்பரையும் (மண்டையோடும்), இன்னொரு கையில் சூலாயுதமும், உள்ள பயங்கரரூபியான யோகீச்வரன் வெள்ளைக் கமலத்தி லுட்கார்ந்துகொண்டு வெள்ளைப்பாம்பை (கோதுமை நாகன்களை) மாலையாகத்தரித்துக்கொண்டு அவள் பக்கத்தில்வந்து “நாளை அர்த்தராத்ரிவேளையில்பெரிய கூடையில் இக்குழந்தைக்கு ஆயிரம் மொஹரா வுள்ளபையைக் கட்டி யுட்காரவைத்து அரண்மனை வாசலில் விட்டு விட்டுவா” என்று சொன்னதாகத் தோன்றிற்று. பெண் விழித்துக்கொண்டு ஸ்வப்னத்தைத் தாயாரிடம்சொல்ல அவ்வண்ணமே குழந்தையைக் கூடையில் வைத்து ராஜத்வாரத்தில் கொண்டுபோய் வைத்து விட்டார்கள்.



அன்றையதினம் ராஜாவும் ஸ்வப்னம் கண்டார். ஐந்து தலையும், பத்து புஜமும், ஒவ்வொரு தலையிலும் த்ரிநேத்ரமும் சந்த்ரனும், வாயில் பெரிய தந்தங்களும், கையில் சூலாயுதமும், உள்ள ஒரு பயங்கரரூபமான புருஷன் எதிரில் வந்து, “ஓ! அரசனே உன் வாசலில்கூடையொன்றிருக்கிறது. அதில் குழந்தை யொன்றைக் காண்பாய். அவனை யெடுத்துக்கொள். அவன் தான உன் ராஜ்ய பாரத்தை வகிப்பான்” என்று சொல்லி மறைந்தான்.

அரசன் விழித்துக்கொண்டு வ்ருத்தாந்தத்தை ராணிக்குத் தெரியப்படுத்தி வெளியில் வந்து பார்க்கையில் கூடையகப்பட்டது. அதைத்திறந்துபையையும் பையனையும் எடுத்துக்கொண்டு குழந்தையை ராணிமடியிலுட்காரவைத்தான். பொழுதுவிடிந்தவுடன் பண்டிதர் ஜோதிஷர்களை யழைத்து வினவ, ஸாமுத்ரிகா சாஸ்த்ரம் கற்ற ஒரு சாஸ்திரி குழந்தைக்கு முப்பத்திரண்டு லக்ஷணங்கள் பூர்த்தியாகவுண்டென்றும், ராஜ்யபாரம் செய்வானென்றும் சொன்னான். அந்த சாஸ்த்ரிக்கு ராஜா ஒரு முத்துமாலையைத் தன் கழுத்திலிருந்தெடுத்து இனமாய்க் கொடுத்தார். ப்ராமணர்களுக்கு தானங்கள் அளித்தபிறகு, அவர்களைப் பார்த்து “இப்பிள்ளைக்கு நாமகரணம் செய்யுங்கள்” என்று ராஜா சொன்னார். அப்பொழுது பண்டிதர்கள்:—

“மகாராஜ், தாங்கள் கட்ஜோடா*கட்டி உட்காரவேண்டும். குழந்தையை மகாராணியின் மடிமேல் வைக்கவேண்டும். ஸௌமங்கலிகள் மங்களாசாரம் (ஆசீர்வாதம்) செய்யவேண்டும். அப்பொழுது நாங்கள் சாஸ்த்ரரீதியாய் நாமகரணம் செய்வோம்.” என்றார்கள்.

இவ்விதம் நடத்தும்படி ராஜா மந்த்ரிக்கு உத்திரவு செய்தார். மந்திரியின் ஆக்ஞையால் தண்டோரா போடப்பட்டு, ஒவ்வொரு க்ருகத்திலும் ராஜாவுக்குப் பிள்ளையுண்டான உத்ஸவம்கொண்டாடப் பட்டது. அரண்மனையில் வாத்யங்கள் முழங்க, ஸௌமங்கலிகள் ஆஜராய்வந்து மங்களாசாரம் செய்தார்கள். கோலம் போட்ட சவுக்கத்தில் (சதுரத்தில்) ராஜா ராணி யிருவருமுட்கார்ந்து குழந்தையை மடியில் வைத்துக்கொள்ள, ப்ராமணர்கள் வேதமோத, ஜோதிஷன் சுபலக்னம் முகூர்த்தம் பார்த்து, குழந்தைக்கு “ஹரதத்தன்” என்று நாமமிட்டான். நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாயிப்பிள்ளை வளர்ந்து, ஒன்பது வயதிற்குள் ஆறு சாஸ்திரம் பதினான்கு கலைகற்று பண்டிதனான்.

இப்படியிருக்க, பகவானிச்சையினால் தாய் தந்தையர்கள் மரிக்க, ஹரதத்தர் ஸிம்மாஸனத்திலுட்கார்ந்து தர்மராஜ்யம் செய்து வந்தார். பத்துவயதில் பட்டமடைந்த ஹரதத்தராஜாவானவர் சிலவர்ஷங்கள் கழிந்தபிறகு ஒரு நாளிவ்விதம்யோசித்தார்:—

“நான் பிறந்து தாய் தந்தையருக்கு என்ன செய்தேன். ஒன்றும் செய்யவில்லை. தயாவான்கள்தான் ஞானிகள். அவர்களேதான் வைகுண்டவாஸிகள் என்னும் பழமொழி வாஸ்தவந்தான். மேலும் சுத்தமான மனமில்லாதவர்களுக்கு தானம், பூஜை, தபஸு, தீர்த்தயாத்

* கட்ஜோடா என்பது புருஷனும் பெண்சாதியும் முடிபோட்டு உட்காரும் ஒரு சடங்கு.

ரை, சாஸ்த்ரக்கேள்வி, இவைகள் வ்யர்த்தமாகின்றன. மேலும் ச்ரத்தையில்லாமல் டம்பத்திற்காகச் செய்யப்படும் சடங்கு நிஷ்பலமாய்விடும். வேஷத்திற்காகச் சடங்கு செய்பவர்களின் பித்ருக்கள் நிராசையாய் விடுவார்கள். ஆகையால் நான் சரியாய் பிதுர்கர்மம் செய்யவேண்டியது அவச்யம்."

இவ்வாறு யோசித்து ஹாரதத்தராஜா கயாவுக்குச் சென்றார். அங்கு பல்கூ நதிதீரத்தில் பித்ருக்களை யுத்தேசித்து பிண்டமளித்தார். நதி ஜலத்திலிருந்து மூன்று பேர்களின் கைகள்மேல் வந்தன. இவ்வாச்சரியத்தைக் கண்டு பயந்தார். "நான் யார் கையில் பிண்டத்தைப் போடுவேன்" என்று ஸந்தேகமடைந்தார்.

இவ்வண்ணம் கதை சொன்ன வேதாளம் விக்ரமாதித்தனைப் பார்த்து "ஓ! விக்ரம பூபதியே, இம்மூன்றுபேர்களில் யாருக்குப்பிண்டம் கொடுப்பது யுக்தம்" என்று வினவ, ராஜன் "திருடனுக்கு" என்று பதில் சொன்னார்.

"என்ன காரணம் ஐயா" என்று மறுபடியும் வேதாளம் கேட்க, விக்ரமாதித்யன் மொழிந்ததாவது:—

"ப்ராமணன் கார்யார்த்தமாய் விலைக்கு வாங்கப்பட்டவன். ராஜா ரூபா யெடுத்துக்கொண்டு ஆதரித்தவன். ஆகையினாலிவ்விரண்டு பேருக்கும் பிண்டம் பெற்றுக்கொள்ள அதிகாரமில்லை."

இதைக் கேட்டு வேதாளம் மரத்தில்போய் தொங்க, விக்ரமாதித்தனதை யவ்விடத்திலிருந்து மறுபடியும் கட்டிக்கொண்டு வந்தான்.

ஸி. எஸ். கிருஷ்ணய்யர், எம். ஏ.

## NAVAL GUNS.
## கப்பல் பீரங்கிகள்.

யுத்தக் கப்பல்களில் உபயோகப்படுத்தப்படும்பீரங்கிகள்ப்ரம்மாண்டமானவை. வேலைப்பாடு அமைந்துள்ளவுமானவை.

இந்த பீரங்கிகள் செய்யும்விதம் பின் வருமாறு: முதல்முதலில் ப்ரம்மாண்டமான எஃகுக்கட்டியை யெடுத்து அதைப் பழுக்கப் பழுக்க உலையில் காய்ச்சி, நீராவி யந்த்ரத்தால் இயக்கப்படும் பெரிய சம்மட்டியின் கீழே கொடுத்து வேண்டிய நீளமும் வாயுமுள்ளதாய் ஒரு குழாய் செய்வார்கள். பிற்பாடு வண்டியில் தூக்கிக்கொண்டுபோய் வொர்க்ஷாப்பில் கடைசல் பிடித்து, பிறகு தக்க யந்த்ரங்களைக்கொண்டு பீரங்கிக்குழாயின் உள்புறத்தை வேண்டியபடி வெட்டி, உள்ளே ஸ்க்ரூ ஆணியி லிருப்பதுபோல துருவி எடுப்பார்கள். இப்படி வன் துருவுகிறார்கள் என்றால், அப்படிச் செய்தால்தான் உள்ளே கிட்டிக்கப்படும் குண்டு வெளிவரும்போது சுழன்றுகொண்டு வந்து நேராய் ஓடும். பிறகு மேல்பக்கத்தைச் செப்பனிட்டு, குழாய்க்குள் எஃகுக் கம்பிகளை சுற்றிச்சுற்றி அடைப்பார்கள். 13½-அங்குலம் வாயகலமுள்ள பீரங்கிக்கு 130-மைல் நீளமுள்ள எஃகுக்கம்பி சுற்றப்படும். இப்படி எஃகுக்கம்பி அடைத்தான பிறகு, குழாயின்மேல் வேறொரு எஃகுக்கூடு போடுவார்கள். எஃகை எடுத்துக் காய்ச்சி யடித்துக் கூடாகச் செய்து வேண்டிய அளவில் நறுக்கி, மறுபடி பழுக்கக்காய்ச்சி குழாயின்மேல் போடுவார்கள். இப்படிச் செய்த பிறகு, முழு பீரங்கியையும் ஒரு பெரிய எண்ணெய்த் தொட்டியில் போடுவார்கள். இப்படிப் போட்டதும் பீரங்கியின் மேல்கூடும் உள் குழாயும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு உறுதியாகிவிடுகிறது. இப்படித் தயார் செய்யப்பட்ட பீரங்கியை ரெயிலில் ஏற்றி எந்தக் கப்பலுக்குக் கொண்டுபோகவேண்டுமோ அதில் ஏற்றிவிடுவார்கள்.

யுத்தக் கப்பல் பீரங்கிகள் பல அளவிலிருக்கின்றன. குறைந்தது மூன்று ராத்தல் கனமுள்ள குண்டை வீசத்தக்கது. சில பீரங்கிகள்



53-அடி நீளமும் 13½-அங்குலம் குறுக்களவும் உள்ளவையாய் இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் 76-டன் நிறையுள்ளது. அதிலிருந்து வரும் குண்டுகள் ஒவ்வொன்றும் 1250-ராத்தல் பளுவுள்ளது. குண்டுகள் அதிக சக்தியுடன் போவதற்காகவே மேல் சொன்னதைப்போல், 130-மைல் நீளமுள்ள கம்பியை சுற்றிச்சுற்றி பீரங்கியின் உள்ளே அடைத்துவைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட குண்டு ஒன்று 3000-கஜ தூரத்தில் 13 அங்குல கனம் எஃகு கவசம்போட்ட கப்பலைத் துளைத்துவிடும்.

கப்பல் யுத்தஞ் செய்யும்போது அதன் உச்சாணியில் 'கண்ட்ரோல் பொஸிஷன்' என்னுமிடத்தில் சிலபேர்களிருந்துகொண்டு எதிரி பத்துமைல் தூரத்திலிருந்தாலுங்கூட சரியாய்ப் பார்த்து பீரங்கிகளை ஸுலபமாய்த் திருப்பி வெடி தீர்ப்பார்கள். எதிரி இப்படியிருந்து சுடுகிறவர்களைக் கண்டுகொண்டு அவர்களைச் சுடும்பக்ஷத்தில், அவர்களெல்லாரும் கீழே இறங்கிவந்து 'கானிங் டவர்' என்னும் கவசம் போட்டஇடத்திலிருந்துகொண்டு முன்போல குறிப்புப் பார்த்துச் சுடுவார்கள். இன்னும் இதற்குக் கீழே இருந்தும் சுடுவதுண்டு.

பீரங்கிகள் இவ்வளவு பளுவும் அளவுமுள்ளவையானபோதிலுங்கூட, வெகு ஸுலபமாய் அவைகளை உபயோகிக்கிறார்கள். ஆனால் ஜல சக்தியினாலேயோ, அல்லது மின்ஸார சக்தியினாலேயோதான் அவைகளை எளிதியில் கையாளக்கூடும். 30 பீரங்கிகள் வரையில் ஒரு போர்க்கப்பல் சுமந்து செல்கிறது. எல்லா பீரங்கிகளையும் எந்தப் பக்கத்திற்கு வேண்டுமோ அந்தப்பக்கம் திருப்பலாம். சரியாய்த் திருப்பிவிட்டு, ஒரு எலக்ட்ரிக் பட்டனை அமிழ்த்தினால், எல்லா பீரங்கிகளும் பட்டாரென வெடிக்கும். 'க்விக் பயரர்ஸ்' என்ற பீரங்கிகள் படபடவென ஒரு நிமிஷத்தில் 16-வெடி வரையில் வெடிக்கும்.

இங்க்லண்ட், ஜெர்மனி ஆகிய இரண்டு தேசங்களுக்கும் வடகடலிலிருக்கும் யுத்தக் கப்பல்களின் மொத்த பீரங்கிகள் பின் வருமாறு:—

| | அங்குலம் 15 | அ 14 | அ 13.5 | அ 12 | அ 11 | அ 6 |
|---|---|---|---|---|---|---|
| இங்க்லண்ட் | 16 | 10 | 162 | 106 | | 68 |
| ஜெர்மனி | ... | ... | ... | 128 | 60 | 137 |

இதனால் இங்க்லண்டிற்கே பெரிய பீரங்கிகளிருக்கின்றன வென்று தெரிகிறது. 12-அங்குல வாயுள்ள பீரங்கியிலிருந்து வரும் குண்டு 8000-கஜதூரத்துக்குள் என்ன உறுதியான கவசம் போட்டாலும் கப்பலைத் துளைத்துவிடும். 6-அங்குல வாயுள்ள பீரங்கிகளின் குண்டுகள் 9-அங்குலத்துக்குக் குறைந்த கவசங்களுள்ள கப்பல்களைத் துளைத்துவிடும்.

## THE TAMARIND TREE.
By N. RAMIAH.
## புளிய மரம்.

புளியமரம் தென்னிந்தியாபோன்ற உஷ்ண தேசங்களில் கொஞ்சம் கறிய காரமான வண்டல் ப்ரதேசங்களில், தழைத்து வளர்ந்து அநேகமாய்க்கொழுத்தபலனைக் கொடுக்கிறது.

இந்த மரத்தின் ஒவ்வொருபாகமும் மனிதனுக்குப் பற்பல விஷயங்களில் ப்ரயோஜனப்படுகிறது. புளியம்வேரும், பட்டையும் மருந்துகள் புடம்போடவும், வேர், கஷாயம் முதலியவைகள் போடவும் உதவுகின்றன. செக்கு மரத்திற்கு புளியமரமே ஏற்ற மரம். இதன் பெரிய கிளைகளும், சிறியகுச்சி முதலியவைகளும் நல்ல விறகாகின்றன. இரண்டடி சுற்றளவும் ஐந்து அல்லது ஆறடி நீளமும்வாய்ந்த ஒழுங்கான புளியங்கிளையை நன்றாய்ச் சீவித் திரட்டி எடுத்தால் உத்தம உலக்கையாகும். இன்னும் கொஞ்சம் பருமன்கொண்ட குட்டைக் கட்டைகளும், அடிமரத்தின் பாகங்களும் உரமுள்ள உரல்களாகும்.

புளியம் விறகுகளை ஸாதாரணமாகச் சமையலுக்கு உபயோகப் படுத்துவதைக்காட்டிலும், சுண்ணாம்புக் காளவாய்களுக்கு விறகாக உபயோகித்தால் இம்மரத்தின் விறகுகள் வெந்து தணிந்ததும் நீற்றுப்போய் நீரோடு நீராய்க் கலந்து சுண்ணாம்பின் அளவை அதிகரித்து தக்க லாபத்தைக் கொடுக்கும். புளியம் இலையும் பலவிஷயங்களில் உபயோகமுள்ளது. வாயுப்பிடிப்பாயுள்ள இடங்களில் புளியம் இலைவெந்த நீரைவிட்டுக்கழுவ, வாயுப்பிடிப்பு நீங்கும். இந்தநீரை உட்கொள்ள உள்ளிருக்கும் வாயுக்கட்டுகள் உடைந்து ஸுலபமாய் பேதியாகும்.

புளியம்பூவோ, ஏழைக் குடியானவர்கள், பறையர்கள் முதலியவர்களுக்கு குடும்பயோகக்ஷேம ஸாமான்களில் ஒன்று. இதைப் பச்சையாய் உதிர்ந்தவுடன் பொறுக்கி புளிக்குபதிலாக இதையேவைத்து துவையல் முதலியவைகளை அரைத்துக்கொள்கிறார்கள். ஒவ்வொரு மரமும் வர்ஷத்தில் எவ்வளவு புளி காய்க்குமோ சற்றேறக்குறைய அவ்வளவு பூவும் உதிர்க்கிறது. இந்தபூவை நம்நாட்டார் கொஞ்சமேனும் கவனிப்பதில்லை. இந்தப்பூவிலும் புளிப்பு இருக்கிறது. ஆனால் புளியில் இருப்பதுபோல் அவ்வளவு ஜாஸ்தியாயிருக்குமென்று சொல்லக்கூடாது. ஆகவே காட்டுக் கருவேப்பிலை, வேப்பம்பூ முதலியவைகளைப் பொறுக்கி சமையலுக்கு உபயோகப்படுத்திக் கொள்வதுபோலவே, புளியம் பூவையும் பொறுக்கி சேகரித்து அதிகப்புளிப்புத் தேவையில்லாத ஆகார பதார்த்தங்களுக்குச் சேர்த்துக் கொள்ளலாம். இது அனுபோகத்தில் கண்டது.

புளியிலை காய்ந்து சருகாய்ப் போனபிறகும் அடுப்புக்கு உமிபோலும், கண்ணாடி முதலிய ஸாமான்கள் வைத்தனுப்புவதற்கு இடை ஸாமான்களாகவும் உதவும்.

புளியங்காய்கள் நன்றாய் சோட்டானாய்ப் பழுத்த பிறகேதான் பொதுவாய் உபயோகப்படுகின்றன. பிஞ்சில் வெம்பிவிழுந்த காய்களையும் காயவைத்து, அவைகளைப்பிறகு ஸமயங்களில் வெந்நீரில் வேகவைத்துக் கஷாயம் செய்து இந்தப் புளித்தண்ணீரை சமையலுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் புளி தேகக்கட்டை கெடுக்கக்கூடும். புளியங்கொட்டை பலவிஷயங்களுக்கு உபயோகப்படுகிறது. புளியங்கொட்டை உயர்ந்த பசை செய்வதற்கு உபயோகப்படுகிறது. வண்ணான் வேஷ்டிசட்டை முதலியவைகளுக்கு இஸ்திரிபோடும் பெட்டிக்கு, நெருப்புப் போடப் புளியங்கொட்டையே முதலில் எடுத்தது. கடலை, பயிறு முதலிய தான்யங்களைச் சுண்டல்பண்ணிச் சாப்பிடுவதுபோல், புளியங்கொட்டையையும் நன்றாய் ஊறவைத்து, மேல்தோல்போக்கி சுண்டித்தாளித்து தேங்காய் முதலியவைகள்சேர்த்து ஏழை ஜனங்கள் சாப்பிடுகிறார்கள். புளி தேகத்தின் கட்டை எவ்வளவுக்கு எவ்வளவு கெடுக்குமோ, புளியம்கொட்டை அவ்வளவுக் கவ்வளவு தேகத்திமிரைக் கட்டும்.

என். ராமய்யா.

## SHORT STORIES.

## சிறு கதைகள்.

### ஒரு ஞானியின் புத்திமதி.

பாரஸீக தேசத்தரசர்களுள் ஒருவரான கஸல் அர்ஸ்லான் (Gusal Arslan) என்பவருக்கு பாரஸீகதேசத்து அல்வந்து (Alwant) மலை போல் உயர்த்தியுள்ள ஒரு வலிமை பொருந்திய கோட்டையுண்டு. அக்கோட்டைக்குள் யாராவது சத்ரு வந்துவிடுவானோ என்ற பயமில்லை. வேறு ஏதாவது பொருள் தேவை என்ற கவலையுமில்லை. அக்கோட்டைக்குள் செல்லும்வழி வாலிபப்பெண்ணின் தலைமயிரின் சுருள்போல் கோணலாயும், சுற்றலாயுமிருந்தது. நீலவர்ணமுள்ள ஒருதட்டின் மத்தியில்வைத்த ஒருகோழிமுட்டைபோல் கோட்டை ஒரு அழகிய தோட்டத்தின் நடுவே ஏற்பட்டிருந்தது. ஒரு ஸமயம் கௌரவம் பொருந்திய, நிதானித்த பார்வையோடு கூடிய ஒருபெரியவர் வெகு தூரத்திலிருந்து அவ்வரசனைப் பார்க்கவந்தார். அவர் எல்லா உண்மையையும் அறிந்தவரும், அனுபோகத்தில் முதிர்ந்தவரும், எல்லா வித்தையையும் கற்றுணர்ந்தவரும், உலகமெங்குந் திரிந்தவரும், வாக்கில் சிறந்தவரும், வயது தளர்ந்தவரும், உலக இயல்பைமுற்றிலும் தெரிந்தவருமான மகாத்மாவாய் இருந்தார். அவரைப் பார்த்தவுடன் கஸல் அரசன், "தாங்கள் வெகு தேசங்கள் சுற்றிப் பார்த்திருக்கிறீர்களே, எங்கேயாகிலும் இக்கோட்டையைப் பார்க்கிலும் அதிகபலமான கோட்டையைக் கண்டதுண்டோ" என்று வினவினான். அதற்கந்த மகான் நகைத்து, "இக்கோட்டை அழகாயிருக்கிறது, ஆனால் வலிமையைப்பற்றி அவ்வளவு நான்பொறுத்துச் சொல்லமாட்டேன். ஏனெனில் உனக்கு முன்பு அநேகம் கர்விகள் இதில் வசித்ததில்லையா? அவர்களிதில் சில நாள் தங்கிவிட்டு காலம் சென்றுவிட்டார்களே. இனி உனக்குப் பின்னும் வேறு அரசர்கள் இதை ஆண்டு அனுபவிக்கப் போவதில்லையா? உன் தகப்பனாரின் ஆளுகையை ஞாபகத்தில் வை; குடும்பப்பற்றுதலினின்று நீங்கி உன் மனதைத் திடப்படுத்திக்கொள்ளு. உன் தகப்பனார் விதியினால் ஏற்பட்ட காலங்குறுகி தனிமையில் ஒருமூலையில் உட்கார்ந்தபொழுது தனக்கு ஸொந்தம் இன்னதுதானென்று குறிப்பிட்டு சொல்லமுடியாமல் போயிற்றல்லவா? கற்றறிந்த வித்வான்களின் முன் இவ்வுலகம் ஒரு வைக்கோல் துரும்புக்கு ஸமானம்; இது ஒவ்வொரு நிமிஷமும் பிறரின் வாஸஸ்தலமாயிருக்கின்றது. ஆகையால் இது என்னுடைய கோட்டை; அதிக வலிவுள்ளது என்ற மதியீனத்தை மனதினின்றும் சீக்ரம் நீக்க வேண்டு" மென்றாராம்.



### அரசன் தீர்க்காயுஸாயிருக்க வேண்டுதல்.

முன் காலத்தில் ஓர் அரசனுக்கு அதிக நற்குணம் பொருந்திய ஒரு மந்த்ரி இருந்தார். அவர் ஏழைகளுக்கு வேண்டியபொழுதெல்லாம் வட்டியின்றி பணம் கடன் கொடுத்து உதவிசெய்தார். அந்த முதலை கடன் வாங்கினவர்கள் எல்லாரும் அரசன் இறந்தவுடன் தாமதமின்றி தன்னிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி எழுத்து மூலமாய் பலப்படுத்திக்கொண்டார். இந்த ப்ரகாரம் நெடுநாளாக அம்மந்த்ரி நடத்திக்கொண்டு வந்தார். இப்படியிருக்க ஒருநாள் ராஜாங்கத்திலுள்ள ஒரு பொறாமைக்காரன் அரசனிடத்தில் போய் "ப்ரபுவே, இம்மந்த்ரி தங்களுக்கு கெடுதல் நினைக்கிறான். கடன் கொடுத்தவரிடத்தெல்லாம் தாங்கள் இறந்து போனபின் தான் பணம் திரும்பி வாங்கிக் கொள்வதாகச் சொல்லி வட்டி இல்லாமல் பொருளுதவி செய்திருக்கிறான். ஆகையால் அவன் எப்பொழுதும் தங்களுடைய மரணத்தையே எதிர் பார்த்திருக்கிறான்" என்றான். அரசன் மந்த்ரியின் இக்கருத்தைக் கேட்டவுடன் அவன்மீது வெறுப்புற்று அவனைக் கொன்றுவிடும்படி கொலையாளிகளுக்கு உத்தரவு செய்யக் கருதிவிட்டான். ஆனால் தீர்க்காலோசனைக் காரணதலால் கொஞ்சம் நிதானித்து பொறுத்து, ஒருநாள் தன்னுடைய ஏகாந்த அறைக்குள் மந்த்ரியை வரவழைத்து, "மந்த்ரியே, நீ ஏன் கொடுத்த கடனை திரும்பி வாங்குவதற்கு என் மரண காலத்தைக் குறிப்பிட்டிருக்கிறாய்?" என்றான். அதற்கு மந்த்ரி "ராஜனே, இவ்விஷயத்தில் தங்களுக்கு நான் தீர்க்காயுளை விரும்புவதுடன், என்னிடத்தில் கடன் வாங்கினவர்களெல்லாரும் அரசன்

தீர்க்காயுளுடன் இருந்துவிட்டால் நாம் மந்திரிக்குப் பணங்கொடுக்கும்படி நேரிடாதே என்று, அரசன் சிரஞ்சீவியா யிருக்கவேண்டுமென்று அல்லும் பகலும் கடவுள் ஸன்னிதானத்தில் மன்றாடுகிறார்கள். இவ்வுள் கருத்தைக்கொண்டு நான் என் கடன்காரர்களுக்கு அவ்வித ஷரா ஏற்படுத்தினேன்" என்றான். இதைக்கேட்ட அரசன் மனமகிழ்ந்து அந்த க்ஷணமே அவனுக்கு உயர்ந்த ஆடைகளை இனாமளித்து வேண்டிய த்ரவிய ஸகாயமும் செய்து அனுப்பியதுடன் கோள் சொன்ன தீயனையும் தண்டித்தான்.

### கிளியும் காக்கையும்.

ஒருவன் ஒரு காலத்தில் ஒரு கிளியையும் ஒரு காக்கையையும் ஒரே கூட்டில் சேர்த்து வைத்தான். அப்பொழுது கிளி காக்கையின் அருவருப்பான பார்வையில் கோபங்கொண்டு "இதென்ன கோரமான பார்வை! அருவருப்பான உருவம்! காலையில் நித்ரை விட்டெழுந்ததும் உன் முகத்தில் விழிப்பவனுக்கு, கூட வேண்டிய ஸம்பத்தெல்லாம் ஆபத்தாக முடியுமே. உன்னைப்போல் குணத்திலும் உருவத்திலும் இவ்வளவு கெடுதலுள்ளவன் உலகத்தில் கிடைப்பது அரிது" என்று காகத்தைப் பார்த்து வெறுத்துச் சொல்லிற்று. கிளியின் ஸகவாஸத்தில் முற்றிலும் வெறுப்படைந்த காக்கையும் சினங்கொண்டதுதான் அதிக வியப்பை விளைவிக்கிறது. காகம் தன்னைத்தானே நொந்துகொண்டு காலத்தின் கொடுமையைப் பற்றி முறையிட ஆரம்பித்தது. "என் தலையில் இப்படியும் எழுதப்பட்டதே! என்ன எதிர்பார்க்காத துன்பம்! என்ன நிர்பாக்யம்! ஒரு தோட்டத்தின் சுவரின்மீது என் ஜாதி ஸ்நேகிதர்களுடன் உல்லாஸமாக நான் தத்திக் குதித்துப்போகும் ஆனந்தம் பொருந்திய கௌரவத்திற்கு எது ஈடாகும். கெட்டவனுடன்கூட கொஞ்சநேரம் இருக்கும்படி நேர்ந்தாலும், ஒரு ஸாதுவுக்கு அது போதுமான தண்டனை. முற்பிறப்பில் நான் என்ன பாவம் செய்தேனோ? அதனால் இந்த உளறுவாயனுடைய ஸகவாஸம் கிடைத்திருக்கிறது; இவனொரு தற்பெருமைக்காரன்; இவனுடன் இச்சாணிடத்தில் நெருங்கிஇருக்கும்படிநேர்ந்ததே! 'ஊமைக் குளறுவாயன் சண்டப்ரசண்டன்' என்ற பழமொழியை ஒட்டி இவன் ஸமர்த்தன்தான். ஆகிலும், அகந்தை உள்ளவன். இவனுருவம் எழுதப்பட்டிருக்கிற இடத்தைக்கூட ஒருவனும் மிதிக்க மாட்டான். இவனுக்கு வஸிப்பதற்கு ஸ்வர்க்கத்தில் இடம் கிடைத்தபோதிலும் இவனுடன்கூட இருப்பதைப் பார்க்கிலும் நரகத்தில் இருப்பது நலம் என்று மற்றவர்கள் எண்ணுவார்கள்." என்று முடித்தது. இந்தக் கதையின் நீதி என்னவென்றால், கற்றுணர்ந்தவன் கல்லானை எவ்வளவு இகழ்ந்து பேசுவானோ, அதற்கு நூறு மடங்கு அதிகமாகக் கல்லானும் கற்றுணர்ந்தவனை அவமதிக்கிறான்.

இதற்கு உதாரணமாக இன்னொரு கதை சொல்லலாம்:—

ஒரு ஸமயம் ஒரு ஸன்யாஸி சில நாடோடிக் கூட்டத்தின் நடுவே இருக்கும்படி நேர்ந்தது. அக்கூட்டத்திலிருந்த பாக் பட்டணவாஸி ஒருவன் இந்தஸன்யாஸியைப்பார்த்து "எங்களிடத்தில் உமக்கு அருவருப்பு இருக்குமாயின் அவ்வளவு வெறுப்புடன் பார்க்கவேண்டாம். ஸ்வபாவத்திலேயே உம்முடைய முகம் மிக கோரமாயிருக்கிறது. ரோஜாவும் மல்லிகையும் கூடிய பூங்காவனத்தின் மத்தியில் ஒட்டி உலர்ந்த ஒரு வைக்கோல் துரும்பை ஒத்ததாக இருக்கிறீர்" என்றான்.



# Departmental Notes.

## பகுதிக் குறிப்புகள்.

### EDUCATION.

### வித்யாவிஷயம்.

**Public Libraries in Mysore.**

**மைஸூரில் பப்ளிக் லைப்ரரிகள்.**—மைஸூரில் சில ப்ரமுகர்கள் பப்ளிக் லைப்ரரிகள் அதாவது பொது ஜன புஸ்தகசாலைகள் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்களாம். கைத்தொழில், பொருளாதாரம் ஆகிய இவைகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்யும் மாணவர்கள், பத்ராசிரியர்கள் முதலியவர்களுக்கு உதவும்படியாக ரெபரென்ஸ் ரூம்ஸ் என்று சில புஸ்தகசாலைகள் ஸ்தாபிக்ப்போகிறார்கள். லைப்ரரிகளில் உள்ள புஸ்தகங்களை வீட்டில் வாசிக்க ப்ரியப்படுவர்களுக்கு இரவல் கொடுப்பார்கள். யார் வேண்டுமென்றாலும் புஸ்தகங்களை இரவல் வாங்கிக்கொள்ளலாம். யாராவது புஸ்தகங்களைக் கெடுத்துவிட்டாலும் அல்லது போக்கடித்து விட்டாலும், அவர்களிடம் அபராதம் வஸூல் செய்யப்படும். சில ஸமயங்களில் புஸ்தகம் பெறுவதற்குள்ள பாத்யதையை அவர்கள் இழந்துவிடவும் வேண்டியிருக்கும்.

பப்ளிக் லைப்ரரிகளிலிருந்து பள்ளிக்கூடங்களிலுள்ள லைப்ரரிகளுக்குப் புஸ்தகங்கள் கொடுத்து உதவுவார்கள். பப்ளிக் லைப்ரரிகளில் சிறுவர்கள் வந்து வாசிப்பதற்காக அவர்களுக்கென்று ப்ரத்யேகமான அறைகள் கட்டிக்கொடுக்கப்படும்.

**An Industrial School For Negapatam.**

**நாகப்பட்டணத்துக்கு ஒரு தொழில் பாடசாலை.**—தஞ்சாவூர் ஜில்லா போர்டார் ஸமீபத்தில் ஒரு மீட்டிங் கூடினபோது, நாகப்பட்டணத்தில், சிறுவர்களுக்கு ஆயில் இஞ்ஜின்வேலை, பிட்டர்கள் வேலை, மெஷின் நடத்துபவர்கள் வேலை முதலிய வேலைகளைக் கற்றுக்கொடுப்பதற்காக ஒரு தொழில் பாடசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்று ஒரு ப்ரேரணை கொண்டுவரப்பட்டது. அந்த ப்ரேரணையைக் கொண்டுவந்த ராவ் பகதூர் கே. எஸ். வெங்கட்டராமய்யர், தஞ்சாவூர் ஜில்லாவில் மெஷின் வேலைகள் ரொம்பவும் அதிகரித்து வருவதற்கேற்ப, மெஷின் வேலைகள் தெரிந்த வேலையாட்கள் போதுமான அளவு கிடைப்பது கஷ்டமாயிருக்கிறதென்றும், அதற்கு அவைகளைக் கற்பிக்கக்கூடிய ஒரு பாடசாலை ஸ்தாபிக்க வேண்டியது அவச்யமென்றும், நாகப்பட்டணத்தில் தென்னிந்தியா ரெயில்வேயின் வொர்க்ஷாப் இருப்பதால் அங்கேயே தொழில் பாடசாலை ஏற்படுத்துவது நல்லதென்றும் சொன்னார். ஜில்லா போர்டு மெம்பர்களில் ஒருவரான மிஸ்டர் என். க்ருஷ்ணஸாமி அய்யங்கார் தொழில் பாடசாலை அவச்யந்தானென்றும், ஆனால் அதற்கு என்ன செலவு பிடிக்குமென்பது தெரியவேண்டுமென்றும், அதிக செலவு பிடிக்குமென்றால் அதை ஸ்தாபிக்க முடியாதென்றும், அதைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதுநல்லதென்றும்சொன்னார். அதன் மேல் அதைப்பற்றி ஒரு ஸ்கீம்தயார் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விஷயத்தை அடுத்த மீட்டிங்கில் ஆலோசிப்பார்களென்று தெரிகிறது.

**Literacy in India.**

**இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை.**—இந்தியாவிலுள்ள ஜனங்களில் 1000-பேருக்கு 941-பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். அதாவது 59-பேர்கள் தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்தியாவிலுள்ள பற்பல வகுப்புகளில் ஒவ்வொன்றிலும் ஆயிரத்துக்கு இத்தனை பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களென்பதற்கு சில கணக்குகள் எழுதுகிறோம்.

| | ஆயிரத்துக்கு இத்தனை பேர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமென்பது. |
|---|---|
| ஜடப்பொருள்களை தெய்வீகம் என்று எண்ணி வணங்குபவர்கள் | 6 |
| மகம்மதியர்கள் | 38 |
| ஹிந்துக்கள் | 55 |
| ஸீக்கியர்கள் | 67 |
| இந்திய கிரிஸ்தவர்கள் | 163 |
| கிரிஸ்தவர்கள் | 217 |
| பௌத்தர்கள் | 229 |
| ஆர்ய ஸமாஜத்தைச் சேர்ந்தவர்கள் | 260 |
| ப்ரும்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவர்கள் | 696 |
| பார்ஸி ஜாதியார் | 711 |

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### Manuring Cocoanuts

தென்னைக்கு எருவிடுதல்.—இதைப்பற்றி 'கிருஷி கனி'ல் ஜே. தர்மரங்கராஜு ஒரு பாடல் எழுதியிருக்கிறார். அது 'தலையே நீவணங்காய்' என்னும் தேவார மெட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

கேளீர் கிருஷிகரே—கிளர்
மீன் தழைக் கலப் பெருவால்
பானை தென்னை பலனுறு பான்மையைக்
கேளீர் கிருஷிகரே.
முன்னே நீர் அறிவீர்—சொன்ன
மீன்எருச் சொறிவதனால்
செந்நெல்-சோளம்-ராகிபெரும்பயன்
முன்னே நீர் அறிவீர்.
மீன் எரு கதிர்நீட்டும்—மிக்க
இலைஎரு தழைகாட்டும்
தானியப் பயிர்களில் தனித்தனியாக
மீன் எரு கதிர்நீட்டும்.
மீன்எருப் போடுகிறார்—மிக
மேல்கரைக் கிருஷிகரும்
தேன்பொழி தென்னைச் சோலைகளெங்கணும்
மீன்எருப் போடுகிறார்.
அத்துடன் தழை சேர்த்தால்
மெத்தவும் நன்றாகும்
தொத்திய காய்மிக தோப்புத்தருமிது
சத்தியமெனலாகும்.
நேயரே நீர் நோக்கீர்—சிறக்கும்
தென்னையின் காய்ப்பதனை
கோயம் புத்தூர் பண்ணையின் தோப்பைப்போய்
நேயரே நீர் நோக்கீர்.
எருவிடும் வகை கேளீர்-எங்கும்
மரங்களைச் சுற்றிலும் மண்
ஒருநீள் பாரையால் ஓரடி தோண்டிப்பின்
விரிந்திடும் வேர்தறிமின்.
வெட்டிய மண் காய்ந்து-பின்
கட்டிகளை உடைத்து
பட்டமாய் மண்ணை சிரவிப் பாத்தியாய்
மட்டமாய்ச் செய்திடுமின்.
பாரிய பாத்திதனில்-விரைந்து
நேராய் வளர்கின்ற
காரா மணி காணஞ் சடம்பொன்றைச்
சீராய் விதைத்திடுமின்.
முளைத்த தழைப்பயிர் முன்
தளிர்த்துத் தாள் செழித்து
கிளைத்துப் பூத்து சிற்கையில்வேருடன்
களைந்து கட்டிக் கொள்ளும்.
பாத்திகளைக் கொற்றி-பத்து
இராத்தல் மீன் எருவை
பூத்திட்ட தழை எரு எண்பது ராத்தலைச்
சேர்த்து நீர் புதைத்திடுமின்.

### Thiruchenthoor Velavan Keerthanaigal.

திருச்செந்தூர் வேலவன் கீர்த்தனைகள்.—இது கௌரியம்மாள் என்ற ஒரு ஸ்த்ரீ இயற்றியதாகும் இதில் திருச்செந்தூரிலுள்ள ஸுப்ரமண்யஸ்வாமியின்மேல் பாடப்பட்ட நேர்த்தியான கீர்த்தனைகள் ஸுமார் 120 அடங்கியிருக்கின்றன. இதில் ஸுப்ரமண்ய ஸ்வாமியின் நேர்த்தியான படமொன்று வைக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டு ஸ்த்ரீகளுக்கு ஏற்ற புஸ்தகமாகும். இதன் விலை அணா 4. வேண்டுவோர் கே. கைலாஸமய்யர் 8, முத்துகாளாத்தி செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Germany & British Rule.

ஜெர்மன் தேச விளக்கமும் ப்ரிட்டிஷ் ஆளுகையின் நன்மைகளும்.—இது திருவுறந்தை கி. ராஜகோபாலனால் எழுதப்பட்டது. இதில் ஆசிரியர் 1800-வர்ஷம் முதல் நாளது வரையில் ஜெர்மனியின் சரித்ரத்தை ஸுலபமான நடையில் எழுதியிருக்கிறார். இதில் இந்தியா ப்ரிட்டிஷ் ஆட்சியால் அடைந்த நன்மைகளையும் தெளிவாய் எழுதியிருக்கிறா. இந்தப் புஸ்தகத்தின் விலை அணா. 1. வேண்டுவோர் டி. கே. ராஜகோபாலன், க்ருஷ்ணா போட்டோ ஸ்டுடியோ, தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி யென்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Other Books.

மற்ற புஸ்தகங்கள்.—வீணையும் கொல்லுமோ (1-அணா); கண்ணும் கண்ணீரும் (1-அணா); மூன்று பரதேசிகள் (2-அணா). இந்தச் சிறுகதைப் புஸ்தகங்கள் மிஸ்டர் வி. பி. க்ருஷ்ணஸ்வாமியால் இயற்றப்பட்டவை. இந்தக்கதைகள் சிறுவர்கள் வாசிக்கத் தகுந்தவையாகும். கதைகள் நேர்த்தியா யிருப்பதோடு, நடையும் ஸுலபமாயிருக்கிறது. வேண்டுவோர் வி. குமாரஸாமி நாயுடு அண்ட்ஸன்ஸ், 35, சின்னதம்பி தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



# SCIENCE AND INVENTION.
## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Taube Aeroplane.

டாப் ஏரோப்ளேன்:—ஜெர்மானியர்கள் 'டாப் ஏரோப்ளேன்'என்னும் ஆகாயக்கப்பல்களையும் 'ஸெப்பலின்' என்னும் ப்ரஸித்திபெற்ற ஆகாயக்கப்பல்களையும் உபயோகித்து வருகிறார்கள். இவைகளில் 'டாப்' ஏரோப்ளேன் கப்பல்கள்தான் இந்த யுத்தத்தில் ரொம்ப உபயோகமாயிருக்கின்றனவாம். இதை முதலில் கண்டுபிடித்துச் செய்தவர் ஆஸ்ட்ரியா தேசத்து கோடீச்வரர் ஒருவர். அவர் இந்தியாவிலுள்ள ஸானோனியா என்னும் மரத்தின் (இதற்கு மலையாளத்தில் பேனார்வள்ளியென்று பெயர்.) இலை அமைப்பைப்பார்த்து அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு அந்த ஏரோப்ளேனுடைய சிறகுகளை அமைத்தாராம். இந்த மரத்தின் இலைகள் உதிரும் போது, அவைகள் நேராக பூமியில் விழாதபடி அவைகளைக்காற்று வெகுதூரம் அடித்துக்கொண்டு போயிற்றாம். இப்படி இலைகள் நேராக பூமியில் விழாததற்குக் காரணம் அவைகளின் ரூபந்தான் என்று அந்தக் கோடீச்வரர் எண்ணிக்கொண்டு அந்த இலைகளின் ரூபத்தைப் போலவே முதல் முதல் செய்த ஏரோப்ளேன் சிறகுகளையும் கட்டினாராம், இப்போதுள்ள டாப் ஏரோப்ளேன்களின் சிறகுகளும் கிட்டத்தட்ட மேற்படி இலையின் ரூபத்தைப்போலவே இருக்கின்றனவாம்.

### The Electrical Auctioneer.

மின்ஸார ஏற்பாட்டால் ஏலம் போடுதல்.—ஸாமான்கள் ஏலம் போடும்போது பல ஜனங்கள் போட்டிபோடுவதால் கூச்சல் அதிகமாகிறது. இந்தச் சத்தத்தைக் குறைப்பதற்காக ஹாலண்ட் தேசத்தில் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். இந்த ஏற்பாட்டில் சத்தமேயிருப்பதில்லையாம். இந்த ஏற்பாட்டை தற்போது முட்டைகள் விற்பதற்கு மாத்ரம் உபயோகிக்கிறார்களாம். சந்தைகளில் ஏலம்போடுகிறவன் ஒரு இடத்தில் உட்காருகிறான். அவனுக்கு எதிரே ஒரு பெரிய வட்டமான தகடு வைக்கப்படும். அதில் சுற்றிலும் குறைந்த விலை முதல் உயர்ந்த விலைவரையில் கேட்கக்கூடிய விலைகளெல்லாம் எழுதப்பட்டிருக்கும். அதற்குப் பக்கத்தில் ஒரு பெரிய பலகையில், வட்டமான தகட்டில் உள்ள எண்களெல்லாம் எழுதப்பட்டிருக்கும். இந்த எண்களை மின்ஸாரத்தால் ப்ரகாசமாகும்படி செய்யலாம். ஏலம் போடுகிறவனுக்குப் பக்கத்தில் ஏலம் கேட்கிறவர்களுக்கு எண்கள் போட்டுக் குறித்துள்ள ஆஸனங்கள் போட்டிருக்கும். ஒவ்வொரு ஆஸனத்திலும் ஒரு பொத்தான் இருக்கும். இதுவும் பெரிய பலகையிலுள்ள எண்களும் கம்பிகளால் ஸம்பந்தப்படுத்தப்பட்டிருக்கும். எந்த எண்களை ப்ரகாசமாக இருக்கும்படி செய்யவேண்டுமென்றாலும் அதற்குத் தகுந்தபடி ஆஸனத்திலுள்ள பொத்தானை அமிழ்த்தினால் போதும்.

ஏலம் போடுகிறவன் தனது இடத்திலிருந்துகொண்டு முட்டைகள் இத்தனை என்பதையும், இன்ன மாதிரி யென்பதையும் சொல்லிவிட்டு வட்டமான தகட்டிலுள்ள ஒரு முள்ளை அதில் காட்டியுள்ள எண்களில் படும்படி திருப்புகிறான். ஏலம் கேட்கிறவர்கள் தாங்கள் வாங்கக்கூடிய விலைக்கு முள் வந்தவுடன் தங்கள் ஆஸனத்திலுள்ள பொத்தானை அமிழ்த்துகிறார்கள். உடனே பலகையிலுள்ள விலையைக் குறிக்கும் எண் ப்ரகாசமடைகிறது. இதை யறிந்த ஏலம் போடும் வியாபாரிகளில் ஒருவன் பொத்தானைத் தொட்டது யார் என்பதையும் அவர் இன்ன விலைக்கு வாங்க இஷ்டப்படுகிறார் என்பதையும் குறித்துக்கொள்கிறான். தகட்டிலுள்ள முள் இன்னும் சுற்றும்போது, மறித்துக் கேட்க இஷ்டமுள்ளவன் வேண்டிய தொகைக்கு தனது ஆஸனத்திலுள்ள பொத்தானை அமிழ்த்திக்கொள்கிறான். இவன் பெயரையும், இவன் கேட்கும் விலையையும் ஏலம்போடும் வியாபாரி முன் போலவே குறித்துக்கொள்கிறான். இப்படியே கடைசியாகக் கேட்கிறவன் வரையில் நடக்கிறது. இந்த ஏற்பாடு த்ருப்திகரமாக நடந்துவருகிறதாம்.

### Trees and Plant Food.

மரங்களும் மர உணவும்.—ம்ருகங்களும் மனிதனும் முதலில் உணவை உட்கொண்டு பிறகு அதை ஜீர்ணம் செய்கிறார்கள். ஆனால் மரமானது உணவை முதலில் ஜீர்ணம் செய்த பிறகே க்ரஹித்துக்கொள்ளுகிறதென்று சொல்லப்படுகிறது. மரத்தின் வேர்களிலுள்ள சிறு வேர்கள் மண்ணிலுள்ள உணவுப்பொருள்களையடைந்து அவைகளைக் கரைத்து செடிக்கேற்ற உணவாக மாற்றிப் பிறகுதான் க்ரஹித்துக்கொள்ளுகின்றனவாம்.

## SANITATION AND MEDICINE.

### ஸௌகாதாரமும் வைத்யமும்.

**Water Supply & Mortality.**

**ஜலவஸதியும் ஜனங்களின் மரணமும்.**—ஜனங்களுக்கு நேரும் வ்யாதிகளில் பலவற்றிற்கு முக்யகாரணங்களில் ஒன்று அவர்கள் உபயோகிக்கும் ஜலம் கெடுதலடைந்திருப்பதே. ஜனங்களுக்கு நல்ல ஜலம் கிடைக்கும்படி செய்தால் வ்யாதியின் கொடுமையும் குறையக்கூடும்.

அமெரிக்காவிலுள்ள பிலடல்பியா பட்டணத்தில் சில வர்ஷங்களாக ஜலத்தை வடிகட்டி ஜனங்களுக்கு ஸப்ளைசெய்து வருகிறார்கள். பட்டணத்தில் எல்லா பாகங்களிலும் ஜலம் ஸப்ளை செய்வதற்கு ஏற்பாடு செய்ய சிலகாலம் சென்றது. சுத்தஜலம் சீக்ரம் ஸப்ளைசெய்யப்பட்ட பாகங்களில், சுத்த ஜலம் வந்தவுடனேயே அங்கு ப்ரபலமாயிருந்த டைபாய்ட் காய்ச்சல் குறைய ஆரம்பித்ததாம். இப்படியே ஒவ்வொரு பாகத்திலும் சுத்தஜலம் வந்தவுடன் காய்ச்சலின் கொடுமை குறையலாயிற்று. 1906-ம் வர்ஷத்தில் அந்த ஊரில் டைபாய்ட் காய்ச்சலால் மரணம் லக்ஷத்துக்கு 72·4-வீதமாயிருந்தது. 1912-ம் வர்ஷத்தில் டைபாய்ட் காய்ச்சல் மரணவிகிதம் 1-லக்ஷத்துக்கு 12·5 வீதமாயிருந்தது. அந்தப் பட்டணத்தின் மற்ற பாகங்களோடு சேர்ந்திராத ஒரு பாகத்தில் 1912-ம் வர்ஷத்தில் டைபாய்ட் காய்ச்சல் மரணம் லக்ஷத்துக்கு 5·9—வீதமாக இருந்ததாம். சுத்த ஜலம் உபயோகிப்பதால் எவ்வளவு நன்மை யுண்டென்பது இதனால் தெரியவருகிறது.

**Evils of Smoking Tobacco.**

**புகைச்சுருட்டுக் குடிப்பதின் கெடுதிகள்.**—புகைச் சுருட்டுக் குடிப்பதால் பற்பல விதங்களில் கெடுதல்கள் உண்டாகின்றன. புகைச்சுருட்டுக் குடிப்பவர்களுடைய தேகத்தின் வளர்ச்சியையும், சுருட்டுக் குடிக்காதவர்களுடைய தேகத்தின் வளர்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், சுருட்டுக் குடிப்பவர்களுடைய தேகவளர்ச்சிக்கு ரொம்ப தடை ஏற்படுகிறதென்று வ்யக்தமாய் தெரியவருகிறதாம்.

சுருட்டுக் குடிப்பதால் பையன்களுடைய நடத்தை கெட்டுப்போக ஏதுவுண்டு. பையன்கள் சுருட்டுக் குடிக்க ஆரம்பித்தால் அவர்களுடைய படிப்பு வ்ருத்தியடையாது. கெட்ட நடத்தையுள்ள சிறுவர்கள் அநேகமாய் சுருட்டுக் குடிக்கிறவர்களாகவே இருப்பார்கள்.

மேலும், சுருட்டுக் குடிப்பதால் குடிப்பவர்களுடைய மனோசக்திகள் அபிவ்ருத்தியடையாமல் போய்விடுகின்றன. அநேக கெட்டிக்காரப் பையன்கள் சுருட்டுக் குடிக்க ஆரம்பித்தவுடன் மந்தமாக ஆகிவிடுகிறார்கள்.

**Sanitation & the Masses.**

**ஸௌகாதாரமும் பாமர ஜனங்களும்.**—இப்போது படித்தவர்களுக்கு ஸுலபமாய் ஸௌகாதார விஷயங்களையும் அதன் வழிகளையும் பற்றி போதிக்கமுடியும். ஆடுமாடுகள் காணாமல் போனாலும், வீட்டில் திருடன் வந்து கொள்ளை அடித்துக்கொண்டு போனாலும், குழந்தை வ்யாதியாயிருந்தாலும், இவையெல்லாம் ஈச்வர ஸங்கல்பம் ஈச்வர ஸங்கல்பம் என்று சொல்லிக்கொண்டு மனம் ஆறுதலடைகிறபடிப்பில்லாத பாமர ஜனங்களுக்கு ஸௌகாதார விஷயங்களைப் போதிப்பது தான் கஷ்டமானகார்யம். இவர்களுக்கு ஸௌகாதாரவழிகளை பூர்வகதைகள் மூலமாயும், புராணங்கள் மூலமாயும் தகுந்தபடி வக்கணையோடு சொன்னால், மனதில் நன்றாய்ப்பதிந்து நம்பிக்கையுண்டாகி ஸௌகாதார வழிகளை அநுஷ்டிக்க ஆரம்பிப்பார்கள் என்று ஒருவர் சொல்லுகிறார். அது எப்படி என்றால் ஸாதாரணமாக குடிக்கும் ஜலத்தில் உள்ள கெடுதலைச்செய்யக் கூடிய கண்ணுக்குதெரியாத 'மைக்ரோப்ஸ்' 'பாஸிலி' என்னும் க்ருமிகளை நன்றாய்க்காய்ச்சி போக்கடித்துப் பிறகு சாப்பிடவேண்டுமென்று சொல்லாமல், ஜலத்தில் அஸுரர்களும் பூதங்களுமிருக்கிறார்களென்றும், ஜலத்தை நன்றாகக் கொதிக்கவைக்கும் பட்சத்தில் அவர்கள் சூடுபொறுக்காமல் ஓடிப்போவார்களென்றும் பாமர ஜனங்களுக்குச் சொன்னால், அதை நன்றாகக் காதுகொடுத்துக் கேட்டு அதன்படி அநுஸரிப்பார்கள் என்று அவர் சொல்லுகிறார்.

இம்மாதிரியாகவே ஸௌகாதாரமுறைகள் எல்லாவற்றையும் பாரத, பாகவதங்களிலும் புராணங்களிலும் உள்ளகதைகளில் ஸம்பந்தப்படுத்தி, ஸௌகாதாரக் கதைகளினாலேயே ஸௌக்யமாயிருப்பதற்கு வேண்டிய ஆதாரங்களை விளங்கும்படி செய்தால் ஸுலபமாக படிக்காதவர்களைக்கூட தெரிந்துகொள்ளும்படி செய்யலாம்.

இதைப்பற்றி முக்யமாக வைத்யர்களும் சாஸ்த்ரிகளும் கலந்து யோசித்து, பொருத்தமான கதைகளையெழுதி வெளியிடும் பக்ஷத்தில் ஸௌகாதார விஷயங்கள் பரவுவதற்கு ஸாதகமாகும்.



## LAW.

### சட்டம்.

**Civil Suits.**

**ஸிவில் வ்யாஜ்யங்கள்.**—ஸ்வதேச ராஜ்யங்கள் நீங்கலாக ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளில் 1912-ம் வர்ஷத்தில் 20,85,471 ஸிவில் வ்யாஜ்யங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

**Gift to a Member of a Joint Family.**

**அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தானம் கொடுத்தல்.**—ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பேருக்கு ஒரு அன்யர் ஒரு ஸொத்து தானம்செய்தால், அந்த ஸொத்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த பொது ஸொத்தென்று அனுமானிப்பதற்கில்லை. அப்படிக் கொடுக்கப்பட்ட ஸொத்து அவிபக்த குடும்ப ஸொத்தென்று சொல்லுபவர்களே அது அவிபக்த குடும்ப ஸொத்தென்பதை ரூபிக்கவேண்டும்.

**Adoption by Junior Widow.**

**விதவைகளில் இளையவள் ஸ்வீகாரமெடுத்துக் கொள்வது.**—ஒரு ஹிந்துவின் இரண்டு விதவைகளில் இளையவள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள ஸபிண்டர்களின் ஸம்மதம் பெற்றாலும், பெரிய விதவையின் அனுமதியில்லாமல் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது. மூத்த விதவைக்குத்தான் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள முதல் பாத்யதை இருக்கிறது.—2-லா வீக்லி 24.

**Purchase in the Name of Wife.**

**மனைவி பெயரால் ஸொத்து வாங்குவது.**—தமது மனைவி பெயரால் ஒரு ஸொத்து வாங்குவதற்கு ஒரு ஹிந்து பணம் கொடுத்தார் என்பதனாலேயே, அப்படி வாங்கினது பேர் இரவலாய் வாங்கினதாகும் என்று சொல்வதற்கில்லை.

**Father and Son's Share.**

**தகப்பனும் ஸொத்தில் புத்ரருடைய பாகமும்.**—தகப்பனையும் புத்ரரையும் ப்ரதிவாதிகளாகச் சேர்த்துப்போட்ட ஒரு வ்யாஜ்யத்தில் புத்ரரை கட்டுப்படுத்தக் கூடாதென்று விலக்கியிருந்தபோதிலும், தகப்பனரின்மேல் ஏற்பட்ட டிக்ரியை நிறைவேற்ற குடும்ப ஸொத்தில் புத்ரருக்குள்ள பாகத்தையும் கட்டுப்படுத்தலாம்.

**Reversioner and Alienation.**

**அனந்தரவார்ஸும் ஸொத்தைப் பராதீனம் செய்தலும்.**—ஒரு ஹிந்து விதவை சில ஸொத்துக்களைப் பராதீனம் செய்தது சட்டப்படி செல்லாது என்று ஒரு அனந்தரவார்ஸ் வ்யாஜ்யம் போட்டார். வ்யாஜ்யம் தீருவதற்குள் விதவை இறந்து போனாள். அதன்மேல் அந்த அனந்தரவார்ஸ் வ்யாஜ்யத்தை வாப்ஸு வாங்கிக்கொண்டார். ஆனால் புதிதாக வ்யாஜ்யங்கொண்டுவர கோர்ட்டாரிடம் அனுமதி பெறவில்லை. அப்படியானால் ஸிவில் ப்ரொஸீஜர் கோடு, ஆர்டர் 23 - ரூல் 1-ன்படி அதே அனந்தரவார்ஸு ஸொத்தைப் பராதீனம் வாங்கியிருப்பவர்கள்மீது ஸொத்துத் தம்வசம் சேரவேண்டுமென்று மறுபடியும் வ்யாஜ்யம் கொண்டுவரக்கூடாது.

புருஷன்பட்ட கடனைத்தீர்க்க ஸ்தாவர ஸொத்துக்களே யல்லாமல் வேறு ஆதாரங்கள் இருந்தால், விதவை நிலங்களை விற்பனை செய்யக்கூடாது. ஸொத்தைப் பராதீனம் செய்யாமல் விதவை கடனைத்தீர்க்க முடியுமென்று தெரிந்திருந்துங்கூட ஒருவர் விதவையினிடம் ஸொத்து வாங்கினார். பிறகு அந்த விற்பனை கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட்டது. நிலம் வாங்கினவர் கொடுத்த பணம் புருஷன் பட்ட கடனைத் தீர்ப்பதற்காக உபயோகிக்கப்பட்டது என்பதனாலேயே நிலம் வாங்கினவருக்கு தாம் கொடுத்த விலைப்பணத்தைத்திரும்ப அடைய பாத்யதை கிடையாது.

**Hire-Purchase Agreement.**

**தவணையில் விலை செலுத்துவது.**—ஒருவன் ஸாமான்களை வாங்கிக்கொண்டு அவைகளின் விலையை தவணைகளாகச் செலுத்துவதாக ஒப்பந்தம் பேசிக்கொண்டால், செலுத்தவேண்டிய தொகை முழுவதையும் செலுத்தும்வரையில் அந்த ஸாமான்கள் வாங்கினவனுக்கு ஸொந்தமாகமாட்டா. பூராத்தொகையையும் செலுத்துவதற்கு முன்னால், ஸாமான் வாங்கினவன்மேல் ஏற்பட்ட டிக்ரிக்காக அந்த ஸாமான்களை கோர்ட்டில் விற்றுவிட்டால், அந்த ஸாமான்களை மறுபடியும் வாங்குபவன், ஸாமான்களை ஆதியில் விற்றவனுக்கு பாக்கித்தொகையைச் செலுத்த கடமைப்பட்டவனாகிறான்.

## PERSONAL NOTES.
## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Raja Sir T. Madhava Row.

ராஜா ஸர் தஞ்சாவூர் மாதவ ராவ்.—சென்ற டிஸம்பர் மாஸத்தில் ராஜா ஸர் தஞ்சாவூர் மாதவராவின் 86-வது பிறந்தநாள் சென்னையில் கொண்டாடப்பட்டது. திருவாங்கூரைச்சேர்ந்த திவான் பகதூர் வி. நாகமய்யா அவருடைய சரித்ரத்தைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதி மீட்டிங்கில் வாசிக்க அனுப்பியிருந்தார்.

ராஜா ஸர். டி. மாதவராவ் இந்தியராஜ தந்த்ரிகளில் ரொம்ப மேன்மை பெற்றவர். அவர் 1828-ம் வர்ஷம் ஜனனமானார். அவர் பால்யத்தில் மிஸ்டர் பவல் என்னும் பேர்போன ஆசிரியரிடம் வாசித்துத் தேர்ந்தார். அவர் முதலில் அக்கௌண்டண்ட் ஜெனரல் ஆபிஸில் ஒரு குமாஸ்தாவாக அமர்ந்திருந்து பிறகு, திருவாங்கூர் ராஜ்யத்தில் ராஜகுமாரர்களுக்குக் கல்விகற்பிக்க நியமிக்கப்பட்டார். அதற்குப்பிறகு, திருவாங்கூரில் டெபுடி பேஷ்காராகவும், திவான் பேஷ்காராகவும், பிறகு திவானாகவும் நியமிக்கப்பட்டார். திவான் வேலையை யடைந்தபோது அவருக்கு வயது 30. திருவாங்கூரில் சில காலம் திவானாக இருந்தபிறகு ஹோல்கார் மகாராஜா தம்மிடம் திவானாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதின்மேல் இந்தூர்க்கு திவானாகப்போனார். பிறகு இந்தியா கவர்ன்மெண்டார் அவரை பரோடா ராஜ்யத்துக்கு மந்த்ரியாகவும், திவான்-ரீஜெண்டாகவும் நியமித்தார்கள். அங்கே 7-வர்ஷகாலம் வேலைபார்த்துப்பிறகு 1882-ம் வர்ஷத்தில் உத்யோகத்திலிருந்து விலகிக்கொண்டார். அவர் உத்யோகம் பார்த்த விடங்களிலெல்லாம் தமது ஸாமர்த்யத்தைக்காட்டி வந்திருக்கிறார். அவரது திறமையைப்பற்றி இந்தியாவின் வைஸ்ராயும், இங்கிலண்டிலுள்ள மந்த்ரிகளும், பார்லிமெண்ட் மெம்பர்களும், ஜெர்மனியின் ப்ரதமமந்த்ரியாயிருந்த ப்ரின்ஸ் பிஸ்மார்க் போன்ற அன்ய கவர்ன்மெண்டுகளின் மந்த்ரிகளும் ச்லாகித்துப் பேசியிருக்கிறார்கள்.

அவர் ரொம்ப புத்திசாலி எந்த விஷயத்தையும் க்ரஹித்துக் கொள்ளக்கூடியவர். அவர் ரொம்ப உழைப்பாளி. வேலை செய்வதில் ரொம்ப ஸந்தோஷமடைபவர். அவருக்கு ரொம்ப பொறுமையும், மனஉறுதியும், விடாமுயற்சியும் உண்டு. ஜனங்களுடைய க்ஷேமத்தில் ரொம்ப கவனம் செலுத்துபவர். அவர் 1891-ம் வர்ஷம் சென்னையில் இறந்துபோனார்.

### Mr. Sailendra Nath Basu.

மிஸ்டர் ஸைலேந்த்ரநாத் பாஸு.—போன டிஸம்பர் மாஸத்தில் சென்னையில் நடந்த காங்க்ரெஸின் ப்ரெஸிடெண்டாயிருந்த மிஸ்டர் பூபேந்த்ர நாத் பாஸுவின் மருமகனாகிய மிஸ்டர் ஸைலேந்த்ர நாத் பாஸு என்பவர் தமது மோட்டார் வண்டியுடன் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு போர்முனைக்குப்போயிருக்கிறாரென்று தெரியவருகிறது. அவர் கல்கத்தாவிலுள்ள பேர் போன 'மாஹன்பாகன் அத்லெடிக் க்ளப்' என்னும் தேகாப்யாஸ விளையாட்டுகள் ஸங்கத்துக்கு அநேக தடவைகள் ஸெக்ரெடரியாக இருந்திருக்கிறாராம். அவர் க்ரிக்கெட், கால்பந்து (புட்பால்), குஸ்தி முதலிய பலவிதமான தேகாப்யாஸ விளையாட்டுகளில் கைதேர்ந்தவராம். அவர் கொஞ்சகாலத்துக்கு முன் ஹிமயமலையில் சுற்று ப்ரயாணம் போயிருந்து ஸமீபத்தில்தான் திரும்பிவந்தாராம்.

### Mr. Ghandi.

மிஸ்டர் காந்தி—தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்கு ஸ்வதந்த்ரங்கள் ஏற்படுவதற்காக மிகவும் பாடுபட்டு வந்தவரான மிஸ்டர் மோஹன்தாஸ் காரம்சந்த் காந்தி இந்த மாஸம் இங்கிலண்டிலிருந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். அவர் 22-வர்ஷங்களுக்கு முன்னால் இந்தியாவை விட்டுப் புறப்பட்டு தென்னாப்ரிக்காவுக்குப் போய் கொஞ்சகாலத்துக்கு முன்னால் வரையில் இந்தியர்களுடைய ஸ்வதந்த்ரத்துக்காக ரொம்பவும் பாடுபட்டு, தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் ஏகதேசம் த்ருப்திகரமான ஒரு ஏற்பாட்டை செய்து கொடுக்கும்படியாகச் செய்தார்.

இந்தியாவில் 'அவர் ஸெர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸொஸைடி' யென்னும் இந்திய ஊழியஸங்கத்தில் ஒரு மெம்பராகச் சேர்ந்திருக்கிறார்.

### H. H. The Maharaja of Baria.

பாரியா மஹாராஜா.—வடக்கே பம்பாய் மாகாணத்திலுள்ள பாரியா ஸமஸ்தானத்தின் அதிபராகிய மஹாராஜா மஹாராவ்ஜி ஸ்ரீரஞ்சித் ஸிங்ஜி போர்முனைக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறாரென்று தெரியவருகிறது. அங்கே அவர் ஜெனரல் எட்வர்ட் என்னும் யுத்ததளகர்த்தருடைய ஆபீஸர்களோடு இருப்பாராம். இவர் ப்ரஸித்திபெற்ற ப்ருத்விராஜ் என்னும் அரசருடைய வம்சத்தில் பிறந்தவர்.



## SOCIETY AND RELIGION.
## ஜனஸமூகமும் மதமும்.

### Good Manners.

மரியாதை.—லார்ட் ரோஸ்பரி என்பவர் இங்கிலாந்திலுள்ள ஒரு பெரிய ப்ரபு. அவர் ஸமீபத்தில் ஒரு பரிசளிப்பு கொண்டாட்டத்தில் மரியாதையாக நடக்க ஸ்கூல் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்திலேயே கற்றுக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தி பேசினார். ஒருவன் நற்குணமுள்ளவனென்பதற்கு அடையாளம் அவன் பிறரிடத்தில் நடந்துகொள்ளும்பொழுது காட்டும் மரியாதையே. ஆனால், ஒருவன் மரியாதையாக நடந்துகொள்ளுகிறானா இல்லையா என்பதைமட்டும் பார்த்து அவனுடைய குணாகுணங்களைப்பற்றி அபிப்ராயம் கொள்ளக்கூடாது. ஏனென்றால், சில மஹாகுணசாலிகள் கூச்சத்தினால் மரியாதைக்குறைவாக நடந்துகொள்ளலாம். வெகு மரியாதையாக நடக்கும் சிலரும் அயோக்ய சிரோமணிகளாகவும் இருக்கலாம்.

### Widow Remarriage.

விதவா விவாகம்.—விதவா விவாகம் சாஸ்த்ர ஸம்மதமென்று பின்வரும் க்ரந்தங்களில் தெரிய வருவதாக 'ந்யூ இந்தியா' பத்ரிகையில் ஒரு நிருபர்எழுதுகிறார்.

(1) ரிக்வேதம். 10,18-8,9,10.

(2) ஐத்ரேய ப்ரமாணம் 3, பக்கம் 68 (பம்பாய் பதிப்பு)

(3) தைத்ரேய ஆரண்யகம் 6-1

(4) அதர்வண வேதம்.

(5) மனு, 8-226 ; 9-76,97-175,176.

(6) விதவா விவாகம் சாஸ்த்ரீயமானது என்று மனு சொல்வதாக மாத்வர் தமது க்ரந்தத்தில் சொல்லியிருப்பது.

(7) விதவா விவாகம் சாஸ்த்ரீயமென்று மனு சொல்லியிருப்பதாக வைத்யநாத தீக்ஷிதர் தமது க்ரந்தத்தில் சொல்லியிருப்பது.

(8) விஷ்ணு, 15-வது அத்யாயம், 92,93-ச்லோகங்கள்.

(9) யாஜ்ஞவல்க்யர் விதவா விவாகத்தை ஒப்புக்கொள்வதாக க்ருஷ்ணாசார்ய ஸ்ம்ருதியில் சொல்லியிருப்பது.

(10) பராசரர் 231-வது அத்யாயம்.

(11) வசிஷ்டர் 17-வது அத்யாயம். 489வது பக்கம் (கல்கத்தா பதிப்பு)

(12) பௌதாயனர் 22-3,27 ; 4,1,17, (மாக்ஸ் முல்லர் இயற்றிய மொழிபெயர்ப்பு)

(13) விதவா விவாகம் சாஸ்த்ர ஸம்மதமென்று காத்யாயனர் சொல்லியிருப்பதாக நிர்ணயஸிந்துவில் சொல்லியிருப்பது.

(14) நாரதர் 12-வது அத்யாயம் 95-100.

(15) மஹாபாரதம் பீஷ்மபர்வம் 90-வது அத்யாயம்.

(16) அக்னி புராணம் 154-வது அத்யாயம்.

(17) பாகவதம் 9,9,34.

(18) சாதுர்விஸ்னதி ஸ்ம்ருதி, பட்டோஜி தீக்ஷிதர் இயற்றிய பாஷ்யம்.

(19) ஸ்ரீமத் மகாபாரதம் ; தாத்பர்ய நிர்ணயம் (ஆனந்த தீர்த்தாசார்யார் இயற்றியது) 20-வது அத்யாயம்.

சாந்தியாவதற்கு முன் விதவையான பெண் இஷ்டப்பட்டால் வேதமந்த்ரத்தோடு மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ளலாமாம். சாந்தியானவளாயிருந்தால், வேதகர்மா இல்லாமல் புனர் விவாகம்செய்து கொள்ளலாமாம்.

### Libraries for Depressed Classes.

தாழ்ந்த ஜாதியாருக்குப் புஸ்தகசாலைகள்.—பம்பாயில் ஸோஷல் ஸெர்விஸ் லீக் என்னும் பரோபகார ஸங்கத்தார், அதிகப் படிப்பில்லாத தாழ்ந்த ஜாதியார்களின் ப்ரயோஜனத்துக்காகச் சில புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி, அவைகளிலுள்ள புஸ்தகங்களை அவர்களுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து, அவர்களைப் படிக்கும்படி செய்து, அவர்கள் படித்தான பிறகு, அதில் கண்ட விஷயங்கள் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும் பொருட்டு, அந்த ஸங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள், நேரில் அந்த விஷயங்களைப் பற்றி உபந்யாஸங்கள் செய்தும் மாஜிக் லாண்டர்ன் என்னும் புகைப்படக் காட்சி மூலமாய் அவர்களுக்குக் காட்டியும், கல்வியைச் சிறுகச் சிறுகப் புகட்டுகிறார்களாம்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Soda for Burns.

அக்னி வ்ரணங்களில் ஸோடா.—நெருப்புப்பட்டு உண்டாகும் வ்ரணங்களுக்கு வீட்டில் ஸாதாரணமாய் வழங்கப்படும் ஸோடாவை உபயோகிப்பது உத்தமமான சிகித்ஸை. இதை உபயோகிக்கும் முறை வெகு ஸுலபமானது. கட்டியான ஒரு ஸோடாத் துண்டை ஜலத்தில் நனைத்து உடனே தாமஸஞ்செய்யாமல் எரிந்தவிடத்தில் தேய்க்கவும். இவ்விதம் செய்தவுடனே வலி பெரும்பாலும் குறைந்துவிடும். மறுதடவையில் ஜலத்தில் 10-இல் ஒரு பங்கு ஸோடாவைக் கரைத்து இடைவிடாமல் வ்ரணத்தின்மேல் தேய்க்கவும்; இதை உடனே செய்தால் வ்ரணம் சீழ்கொள்வதும் தடுக்கப்படும் என்று ஒரு வைத்யர் கூறுவதாக 'வைத்ய கலாநிதி' எழுதுகிறது.

### To Destroy Bugs.

மூட்டுப்பூச்சிகளை அழிக்க.—எந்த அறையிலிருந்தாவது மூட்டுப்பூச்சிகளைத் தொலைக்க வேண்டுமானால், அந்த அறையில் கந்தகத்தை எரியவிட்டால் அவைகள் இறந்து போகுமாம். அறையின் ஜன்னல்கள், கதவுகள், காற்றுப்போகக்கூடிய வேறு த்வாரங்கள் ஆகிய இவைகளையெல்லாம் நன்றாய் அடைத்துவிடவேண்டும். பிறகு, தரையில் ஒரு பெரிய பாத்ரத்தை வைத்து அதற்குள் ஒரு சிறிய கிண்ணத்தில் 4 ஔன்ஸ் கந்தகத்தை வைத்து எரியவிடவேண்டும். கந்தகம் உருகி வழிந்து தரையில் ஓடாமலிருப்பதற்காகத்தான் பெரிய பாத்ரத்துக்குள் சிறிய பாத்ரம் வைப்பது. நாலைந்து மணிநேரம் கந்தகப்புகை அறைக்குள் தங்கியிருந்தால் மூட்டுப்பூச்சிகள் புகைபொறுக்க மாட்டாமல் இறந்துபோகுமாம். ஆனால் எல்லா மூட்டுப்பூச்சிகளும் இறந்து போகவேண்டுமென்றால் இன்னும் அதிகநேரம் அறையில் புகைபோட்டுவைப்பது நல்லது.

மூட்டுப்பூச்சிகளைப் போக்க இன்னொரு வழியென்னவென்றால், அவைகள் இருக்கக்கூடிய சந்து, பிளவுகளில் கேரோஸின் எண்ணெய், பெட்ரோலியம் எண்ணெய் முதலியவைகளை சிறு ப்ரஷ்ஷினாலாவது, இறகுகளினாலாவது விரிஞ்சினாலாவது எடுத்து விடுவது. இதுமாதிரியே டர்ப்பண்டைன் எண்ணெயையும் உபயோகிக்கலாம். கூடுமானால் சந்து பொந்துகளில் கொதிக்கும் ஜலத்தை விட்டாலும் மூட்டுப்பூச்சிகள் இறந்துபோகும்.

### Smoking Room.

புகைச்சுருட்டுக்குடிக்கும் அறை.—புகைச் சுருட்டுக்குடிக்கும் அறையில் ஒரு அகன்ற வாயுள்ள சட்டியில் ஜலத்தை ஊற்றிவைத்து விட்டால், ஜலமானது கெட்டநாற்றங்களை க்ரஹித்துக்கொள்ளுமாம். சுருட்டுக்குடித்த பிறகு பாக்கியாயிருக்கும் பாகங்களை அறைக்குள் போட்டுவைக்காமல் தூர எறிந்துவிடவேண்டும். வ்யாதிஸ்தர்கள் படுத்திருக்கும் அறைகளில் எந்தக்காரணத்தினாலாவது ஜன்னல்களைத் திறந்து வைக்கமுடியாமலிருந்தால், அந்த அறைகளில் வாய்அகன்ற சட்டி அல்லது தொட்டியில் ஜலம்விட்டு வைத்திருப்பது நல்லது. இதனால் அறைகளில் மூடாமல் திறந்துவைத்திருக்கும் ஜலம் குடிப்பதற்கேற்றதல்லவென்று சொல்லலாம்.

### Rope Shoes For Horses.

குதிரைகளுக்கு கயிற்று லாடங்கள்.—ஜெர்மனியில் அநேக குதிரைகளுக்கு தார்போட்ட கயிற்றால் செய்தலாடங்கள் அடிக்கிறார்களாம். இதன் நோக்கம் குதிரைகள் கல்கள் பாவியிருக்கும் ரோடுகளில் சறுக்கி விழாதபடி செய்வதே. இந்த லாடங்களில் சிலவற்றில் கட்டைகள் கொடுத்து அவைகளில் ரொம்ப கெட்டியான பன்றிமயிர்கள் செலுத்தப்பட்டிருக்குமாம். இது குதிரை சறுக்கிவிழாமலிருப்பதற்கு இன்னொரு ஸாதனமாகும். இவைகள் குதிரைக்கு லேசாகவும், ஸுகமாயும் இருப்பதோடு, குளம்புகள் தரையில் படுவதால் உண்டாகும் சத்தத்தையும் குறைத்துவிடுகிறதாம்.

### Scratches on Furniture.

மரஸாமான்களில் கீறல்கள்.—நாற்காலி மேஜை முதலிய மரஸாமான்களில் கீறல்கள் உண்டாகியிருந்தால், ஷெல்லக் என்னும் அரக்கு சேர்த்த வார்னிஷை ம்ருதுவான ப்ரஷ்ஷில் எடுத்துகீறல்களில் தடவி பள்ளங்களை நிரப்பிவிடவேண்டும். வார்னிஷ் நன்றாய்க்காய்ந்த பிறகுதான் ஸாமான்களை மறுபடியும் துடைப்பதாயிருந்தால் துடைக்கலாம்.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Diseases of Sheep

ஆடுகளின் நோய்கள்.—ஆடுகளுக்கு தெரிப்பு நோய், பெருநோய், அலறி என்னும் நோய்களும் துன்னல், கொக்கு என்னும் வ்யாதிகளும் வருவதுண்டு.

தெரிப்பு, பெருநெய், அலறி முதலிய வ்யாதிகளின் தன்மை பலவிதமாக விருக்கிறது. சில ஆடுகள் வ்யாதி கண்டவுடன் இரண்டு மூன்று நாள்வரையில் கழியும். சில ஆடுகள் தொண்டையில் ஏதோ சிக்கிக்கொண்டதுபோல் கனைத்துக்கொண்டேயிருக்கும். சில வயிறு உப்பி தீனி தின்னாமல் தவிக்கும். மற்றும் சில அலறிக்கொண்டே யிருக்கும். இவைகளுக்கு பரிஹாரமாக மிளகுத்தூளை காடியில் (Vinegar) கலக்கி உள்ளுக்குக்கொடுக்க சிறிது குணமுண்டாகும்.

துன்னல் நோய்க்கு பொசுக்குநோய், கிருக்குநோய், தலை வெட்டிநோய் என பல பெயர்களுண்டு. இவ்யாதிகள் காணும் ஆடுகள் திடீரென்று மந்தையை விட்டுப் பிரிந்து குதித்துக்கொண்டுபோய் தலையைப் பல தடவை யாட்டிக்கொண்டு கீழேவிழுந்து சாகும். இதற்கு மருந்துகள் அநேகமாய் பலிக்கிறதில்லை.

கொக்குநோயை எரிநோய், இருமல் என்றும் சொல்லுகிறார்கள். இந்தநோய் தாக்கியவுடன் ஆடுகள் இருமத்தொடங்கும். கால்களில் குளம்பையடுத்து சொரி போன்ற ரணமுண்டாய் நடக்க அவஸ்தைப்படும். இந்த வ்யாதி ஆட்டுமந்தையில் கண்டுவிட்டால், அநேகமாக மந்தையிலுள்ள ஆடுகளையெல்லாம் சேதப்படுத்திவிடும். இந்த வ்யாதிகளெல்லாம் அநேகமாய் தொத்து வ்யாதிகளென்றே நம்பப்படுகிறது. ஆகையால் ஒருமந்தையில் ஒரு ஆட்டுக்கு வ்யாதி கண்டால் உடனே அதை அம்மந்தையை விட்டுப் பிரித்துவைப்பது முக்யமானது.

இந்த வ்யாதிகள் அநேகமாய் ஆடுகளின்பேரில் உண்டாகிற உண்ணிப்பூச்சிகள் என்கிற ஒருவிதப் பூச்சிகளால் உற்பத்தியாகின்றனவென்று நம்பப்படுகிறது. ஆகையால் இந்த வ்யாதிகளுக்குப் பரிஹாரமாக பல ஔஷதங்களை உள்ளுக்குக்கொடுப்பதைவிட, உடம்பிலிருக்கிற பூச்சிகள் சாகும்படிசெய்கிற ஸாதனமே மேலானது. மரப்பலகை அல்லது செங்கல் சுண்ணாம்பினால் செய்யப்பட்டதொட்டிகளில், புகையிலை, கந்தக த்ராவகம் ஆகிய இவைகளை சேர்த்துக்காய்ச்சிய கஷாயத்தையும் தண்ணீரையும் ஆடுகளை முழுகுமளவும் விட்டு, ஆடுகளை அதில் தூக்கிப்போட்டு கழுவவேண்டும். இந்தத் தண்ணீரில் வெந்த சுண்ணாம்புத்தூளையும் போடலாம். இவ்விதம் செய்தால் உடம்பில் பிடித்திருக்கிற விஷப்பூச்சிகள் சாகுமென்பதில் தடையில்லை. —டி. ஸி. வெங்கட்டராமணய்யர்.

### Korai Weed.

கோரைப்புல்.—கோரைப்புல்லை அடியோடு தொலைக்கவேண்டுமென்றால் விசேஷ செலவு செய்ய வேண்டிவரும். ஏனென்றால் கோரைப்புல்லின் கிழங்கையும் அதன் வேரையும் சற்று கவனித்துப் பார்த்தால் முதலில் ஒரு கிழங்கிலிருந்து ஒரு வேர் கீழோடி, அந்தவேர் நுனியில் திரும்பவும் ஒரு கிழங்கு வைத்து, அந்தக் கிழங்கிலிருந்து திரும்பவும் வேர் ஓடி அதன் நுனியில் திரும்பவும் கிழங்கிட்டு இம்மாதிரி 7 முதல் எட்டு கிழங்குகள் வரையிலிருக்கும். மணல்சார் நிலங்களாயிருந்தால் இவ்வேரும் கிழங்கும் சுமார் 6-அடி ஆழம் செல்வதும் உண்டு. களிப்புள்ள நிலங்களில் இவ்வேர்களும் கிழங்குகளும் பக்கவாட்டாய்ச்செல்லும். ஆகையால் களைவெட்டும்போது கோரைப்புல்லைமட்டும் மேலே வெட்டுவதால், கிழங்குகளை பூராவும் அப்புறப்படுத்தமுடியாதாகையால், சில ஸமயங்களில் களைவெட்டும்போது மேல்பரப்பிலுள்ள கிழங்குகள் ஒவ்வொன்றும் 2 அல்லது 3 துண்டுகளாய் வெட்டப்பட்டு, அவைகள் ஒவ்வொன்றிலிருந்தும் துளிர்கிளம்பி ராக்ஷஸசேனையைப்போல மறுபடியும் மறுபடியும் உண்டாகிவிடும். ஆகையால் இதை நிர்மூலமாக்கவேண்டுமென்றால், வேர் எதுமட்டும் போகிறதோ அதுமட்டும் தோண்டி கிழங்குகளை வெட்டி எறிந்தாலொழிய நிர்மூலமாக்கமுடியாது. ஆனால் சில முறைகளால் தற்கால சாந்தி செய்துகொள்ளலாம். அதாவது கோரைப்புல் ஜாஸ்தியாயிருக்குமிடத்தில் தண்ணீர்கட்டி உழுது சிலநாள்களுக்கு அக்கிழங்குகளை அழுகவைத்து மேல்வரவொட்டாமல் செய்யலாம். ஆனால் இதற்கு ஜாஸ்தி ஜலவஸதிவேண்டும். சில இடங்களில் பூமியில் ஸூர்ய கிரணம் படக்கூடாமல் சீக்ரமாய் மூடிக்கொள்ளக்கூடிய பயிர் தினுஸுகளை அடர்த்தியாய் விதைத்து அவ்வுபாயத்தால் இக்கிழங்குகள் தலையெடுக்கவொட்டாமல் 2, 3 வருஷங்களுக்குச் செய்துகொண்டுவந்தால் சில நாட்களுக்கு இதன் பாதை இல்லாமலிருக்குமென்று 'க்ருஷிகன்' எழுதுகிறது.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Co-operative Societies in England.

இங்க்லண்டில் கோவாபரேடிவ் ஸங்கங்கள்.—இங்க்லண்டில் 1901-ம் வர்ஷத்தில் 25-விவஸாய கோவாபரெடிவ் ஸங்கங்கள் இருந்தன. 1907-ம் வர்ஷத்தில் 170-ஸங்கங்கள் இருந்தன. 1913-ம் வர்ஷத்தில் 530-ஸங்கங்கள் இருந்தன.

### A Land Bank for Tanjore.

தஞ்சாவூர் ஜில்லாவுக்கு ஒர் நில பாங்கி.—தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் தாலுக்காவைச் சேர்ந்த சேங்காலிபுரம், வேம்பனூர், சிறுகளத்தூர் இந்த க்ராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஐக்ய ஸங்கங்களின் எல்லைக்குள்ளிருக்கும் மிராசுதார்கள் தங்களுக்கு ஒரு நில பாங்கி ஸ்தாபிக்கவேண்டுமென்று அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராருக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த மனுவில் பின்வரும் விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

க்ராம ஐக்யச் ஸங்கங்களுக்கு வேண்டிய நாணயம் ஸங்கங்களில் மெம்பர்களாயுள்ள நிலக்காரர்களின் ஸொத்தின் பெறுமானத்தை முக்யமாய் பொருத்திருக்கிறது. அந்த பெறுமானத்தின் உதவியைக் கொண்டு பயிரிடுபவர்கள் மற்றுமுள்ள வேலைக்காரர்கள், தொழிலாளிகள் வகையரா தங்கள் ஸ்திதியை மேன்மேலும் வ்ருத்தி செய்யக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள்.

ஒவ்வொரு க்ராம ஐக்ய ஸங்கத்திலும் வரையிடப்பட்டிருக்கிற பணத்தின் அளவு, இந்த மிராசுதார்களுடைய அந்தஸ்தைப் பாதுகாக்கப் போதுமான தாகவில்லை. அதன்பொருட்டு கல்யாணம், மற்ற மதவிஷயமான சடங்கு, வீடுகட்டுதல், வேண்டும்போது அக்கம் பக்கத்திலுள்ள நிலங்களை வாங்குதல், தங்கள் ஜாதி மதவழக்கங்களால் கட்டாயமாக ஏற்படும் பெருஞ்செலவு ஆகிய இவைகளுக்கு லேவாதேவி பண்ணுபவர்களிடம் போகும்படி நேரிடுகிறது.

இரண்டொரு ஸாபிக்ஷமில்லாத காலங்களோடு, பெண்கள் கல்யாணம், பிள்ளைகளின் படிப்பு இவைகள் சேர்ந்தால் அவர்கள் நிலைமை பலவிதங்களிலும் மாறுதலை அடைகின்றது. முதல், மானேஜ்மெண்டு, புத்திசாலித்தனம் இவைகளுள்ள ஒருமிராசுதார் நாளாவர்த்தியில் பெருங் கடனாளியாகிவிடுகிறான். அதன்பொருட்டு தனக்குள்ள ஐவேஜி போதாததினால் உண்டாகும் ச்ரமத்தினால் தன் நிலத்தை சரிவர கவனிக்க ஸாத்யமில்லாமல் போய்விடுகிறது. ஆனதுபற்றி வர வர வ்ருத்தியாகும் அவன் குடும்பத்திற்கு விளையும் மாஸூலானது போதாமல் போய்விடுகிறது.

அடியில் குறிப்பிட்டிருக்கிறபடி ஐந்து அல்லது ஆறு மைல் சுற்றளவுக்குள் இருக்கும் ஐக்ய ஸங்கங்களின் எல்லைக்குள் ஒரு பாங்கி ஏற்பட்டால் இவர்களுடைய கஷ்டங்கள் நீங்க வழியாயிருப்பதுடன், இந்த க்ராம ஐக்ய ஸங்கங்களுக்கு ஒரு ஆதரவாயுமிருக்கும்.

(1) நிலஜாமீன் அல்லது இதர தகுந்த ஜாமீன் பேரில் பாங்கி கடன் கொடுக்கவேண்டும்.

(2) ஸர்க்கார் கொடுக்கும் கடன்களைப்போல் 25 அல்லது 30 வர்ஷங்களில் கடன்கள் திருப்பிக் கொடுக்கவேண்டியதா யிருக்கவேண்டும்.

(3) 100-க்கு வருஷம் 1-க்கு 9 ரூபாய் வீதம் பாங்கியில் வட்டி வாங்கவேண்டும். ஆனால் தவணையில் செலுத்தவேண்டிய தொகைகளை செலுத்துபவர்களுக்கு நூற்றுக்கு வர்ஷம் 1½ வீதம் வட்டி தள்ளி கொடுக்கவேண்டும்.

(4) குறித்த காலத்திலாவது அதற்கு முந்தியாவது சேரவேண்டிய வட்டியும் 100-க்கு 4 வீதமும் முதலும் செலுத்தாமலிருந்தாலும், கடன் வாங்கினவர் அக்கடனை சரியான வழியில் செலவிடாமலிருந்தாலும், அல்லது வேறு தகுந்தபோதுமான காரணங்கள் இருந்தாலும், பாங்கி ஜாமீனை ரத்துசெய்து அதற்கு சேரவேண்டிய தொகையையும் வஸூலிக்கவேண்டும்.

இன்னும் இந்த மிராசுதார்கள் தங்களுடைய மனுவில் இந்த பாங்கிகளை நிர்வகிக்க கோவாபரெடிவ் ஸங்கங்களிலிருந்து தக்க மெம்பர்களைத் தெரிந்தெடுத்து ஒரு நிர்வாக ஸபை ஏற்படுத்தலாமென்றும், இந்த பாங்கியை நடத்த ஸ்வல்ப ஸப்பந்திகள் போதுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.



# COMMERCE.
## வ்யாபாரம்.

### The Cocanada Pencil Factory.

காக்கினாடா பென்ஸில் பாக்டரி.—காக்கினாடாவில் சில காலத்துக்கு முன்னால் ஒரு பென்ஸில் பாக்டரி (தொழில்சாலை) ஸ்தாபிக்கப்பட்டது. அது ஸமீபத்தில் நின்று போய்விட்டது. இப்போது சென்னை கைத்தொழில் டிபார்ட்மெண்டார் அந்தத் தொழில்சாலையை எடுத்து வேலை செய்யப்போகிறார்களென்று தெரிகிறது. அந்தத் தொழில்சாலையை வேலை நடத்தக்கூடிய சரியான நிலைமையில் வைப்பதற்காக ஒரு தகுந்த இஞ்ஜினியரை நியமித்திருக்கிறார்களாம்.

### Business Enterprise in India.

இந்தியாவின் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஸெப்டம்பர், அக்டோபர்மாஸங்களில் அடியில் கண்ட விவரப்படி கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| | ஸெப்டம்பர் மாஸம் | ரூ. |
| 1 | வ்யாபாரக் கம்பெனி | 1,00,000 |
| 1 | பருத்திமில் கம்பெனி | 5,00,000 |
| 1 | மரமறுக்கும் கம்பெனி | 1,00,000 |
| 1 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 1,00,000 |
| 4 | மொத்தம் | 8,00,000 |

| | | |
|---|---|---|
| | அக்டோபர்மாஸம் | ரூ. |
| 3 | பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | 4,70,000 |
| 2 | இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் | 40,000 |
| 2 | வ்யாபாரக் கம்பெனிகள் | 1,50,000 |
| 1 | பருத்திமில் கம்பெனி | 5,00,000 |
| 1 | நிலக்கரிச்சுரங்கக் கம்பெனி | 5,000 |
| 9 | | 11,65,000 |

### Commercial Exhibition.

வ்யாபாரப் பொருள்காட்சி.—அனேகர் ஜெர்மனியின் வ்யாபாரத்தை இந்தியர்கள் கைப்பற்றவேண்டுமென்றும், அதற்கு கவர்ன்மெண்டார் தக்க உதவி செய்யவேண்டுமென்றும் சொல்லி வருகிறார்கள். கல்கத்தாவிலுள்ள கம்மர்ஷல் இண்டலிஜன்ஸ் டிபார்ட்மெண்ட் என்னும் வ்யாபார ஸமாசார டிபார்ட்மெண்டார் ஜெர்மனி ஆஸ்ட்ரியா இவைகளின் வ்யாபார ஸம்பந்தமான சில உபயோகமுள்ள சிறு புஸ்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்கள், அதோடு, ஜெர்மனி ஆஸ்ட்ரியா ஆகிய இந்த தேசங்களிலிருந்து வரும் இறக்குமதிப்பொருள்களின் மாதிரிப்பொருள்களையும், அந்த ஸாமான்களைப்போல் இந்தியாவில் செய்யப்படும் மாதிரிகளையும், அந்த ஸாமான்கள் வேறு தேசங்களில் செய்யப்பட்டிருந்தால், வேறு தேசங்களிலிருந்து வரும் அந்த ஸாமான்களின் மாதிரிகளையும் ஒன்று சேர்த்து முதலில் கல்கத்தாவில் ஒரு பொருள்காட்சி நடத்திக்காட்டினார்கள். அதே காட்சியை சென்ற மாஸக் கடைசியிலும் இந்த மாஸம் முதலிலும் சென்னையிலும் வைத்துநடத்தினார்கள்.

### Copra.

கொப்பரை.—இப்போது ஐரோப்பாவில் நடந்துவரும் யுத்தத்தில் சேனைகளுக்கு இறைச்சி ஆகாரம் கொடுப்பதற்குமாடுகள் ரொம்ப அதிகமாகக் கொல்லப்பட்டு வருவதால், ஐரோப்பாவில் அநேக விடங்களிலுள்ள பால் தயிர்ச்சாலைகளுக்கு வேலை குறைந்து போய்விட்டதாம். இதனால் ஜனங்களுக்குப் போதுமான அளவு வெண்ணெய் கிடைப்பது கஷ்டமாகும். இதற்கு தாவர வர்க்கப் பொருள்களிலிருந்து வெண்ணெய் தயார் செய்வதைப்பற்றி யோசனைசெய்து வருகிறார்கள். ஏற்கனவே பல விடங்களில் கொப்பரை (காய்ந்த தேங்காய்ப்பருப்பு) யிலிருந்து வெண்ணெய் தயார் செய்து வருகிறார்கள். இதைப்போலவே வேறு இடங்களிலும் கொப்பரையிலிருந்து வெண்ணெய் செய்ய முயற்சி செய்வார்களாகையால் கொப்பரையின் விலை அதிகமாகும் என்று சொல்லப்படுகிறது.

### Fixing Iron in Wood & Stone.

இரும்புத் துண்டுகளை கல் மரம் முதலியவற்றில் வைத்துப் பதித்தல்.—கல், மரம் முதலியவற்றில் செய்யப்பட்ட த்வாரங்களில் கந்தகத்தூளை நிரப்பி, இரும்புக்கம்பியை சிவக்கக் காய்ச்சி அதில்வைத்து குளிரச்செய்யவும். இதில் கந்தகம் உருகி, ஆறினதும் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். கல் த்வாரங்களில் இரும்புக் கம்பிகளைவைத்துபின்பு ஈயத்தை உருக்கிவிட்டு பதித்தலும் வழக்கம்.—விச்வகர்ம குலோபகாரி.

## ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Oil from Grape Seed.

த்ராக்ஷப்பழ விதையிலிருந்து எண்ணெய்.—த்ராக்ஷப்பழத்திலுள்ள விதையில் நூற்றுக்கு 15-முதல் 20-வரையில் எண்ணெயிருக்கிறது. சென்ற இரண்டு மூன்று வர்ஷகாலமாக இட்டலியில் த்ராக்ஷப்பழ விதையிலிருந்து எண்ணெய் ஆட்டி வருகிறார்கள். இந்த எண்ணெய் ஸோப் செய்வதற்கும், யந்த்ரங்களுக்கு எண்ணெய் போடுவதற்கும், விளக்கு எரிப்பதற்கும் உபயோகப் படுகிறது. ப்ரான்ஸில் இந்த விதையை கவனிப்பதில்லையாம். அங்கே வர்ஷத்தில் 20-அல்லது 30-கோடி ராத்தல் விதைகள் கிடைக்குமாம். அவைகளை எண்ணெயாட்டினால் பத்து லக்ஷம் காலன் எண்ணெய் கிடைக்குமாம். (காலன் என்பன் 2·4 பட்டணம் படி)

### Kapok Tree.

இலவ மரம்.—இதன் பஞ்சு தலையணை, மெத்தைகளுக்கு உபயோகிக்கப்படுகிறது. இலவம் பஞ்சு ஜாவாத்தீவிலே தான் அதிகம், இதன் பஞ்சு தெப்பங்களுக்கும் உபயோகப்படுகிறது. இம்மரப்பட்டையிலுள்ள பிசின் மருந்திற்கு உபயோகமாகும். இதன் விதையிலிருந்து எண்ணெய் இறக்கப்படுகிறது. இதனெண்ணெய் ஸோப்செய்வதில் சேர்க்கப்படுகிறது. இதன் பிண்ணாக்குமாடுகளுக்குணவாகிறது. இதில் நூற்றுக்கு 5-பாகம் நைட்ரொஜின் இருப்பதால் இது நிலத்துக்கு நல்ல எருவாகும். மரம் பதுமைகள் செய்யக் உதவும். இதைப் பயிர் செய்ய அதிகம் ப்ரயாஸையில்லை.

இதுவரையில் இலவம்பஞ்சு நூல் நூற்பதற்கு ப்ரயோஜனப்படாதென்று நம்பிவந்தார்கள். ஸமீபத்தில் ஜெர்மனியில் உள்ள ஒரு சாஸ்த்ரீ பஞ்சை நூலாக நூற்பதற்கு ஒருவழி கண்டுபிடித்திருக்கிறாராம். இலவம் பஞ்சின் நூல் ரொம்ப நேர்த்தியாயிருக்கிறதாம். மெத்தை, தலையணை முதலியவைகளுக்கு இலவம்பஞ்சே ச்லாக்யமானது. இது பருத்திப் பஞ்சைப்போல் அடையாய்ப் போய்விடுவதில்லை.

### Sugar from Lucerne.

லூஸர்ன் என்னும் புல்லிலிருந்து சர்க்கரை.—அநேகவிடங்களில் லூஸர்ன் என்னும் புல்லை மாடுகளுக்குத் தீனியாக உபயோகிக்கிறார்கள். அமெரிக்காவில் இந்தப் பயிரிலிருந்து சர்க்கரையும், சர்க்கரைப் பாகும் தயார்செய்யப்போகிறார்களாம். லூஸர்ன் சர்க்கரைப்பாகில் நூற்றில் 33·15-பாகம் சர்க்கரையிருக்கிறதாம். இந்தப் பாகு ருசியாயிருக்கிறதாம்.

லூஸர்னைப் பயிரிட்டு அது 12-நாள் பயிரானவுடன், அதை அறுத்து அதிலிருந்து பாகு செய்கிறார்கள். இதனால் ஒரு வர்ஷத்தில் இந்த லூஸர்ன் பயிரை 12 தடவை ஸாகுபடி செய்யலாமென்று சொல்லப்படுகிறது. லூஸர்னிலிருந்து பாகு செய்ய 2·4-படி பாகுக்கு 12-அணா வீதம் செலவாகிறதாம். இன்னும் இதிலிருந்து மட்டமான சர்க்கரை செய்யவும் உத்தேசித்திருக்கிறார்களாம். இதற்காக அமெரிக்காவில் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

### Medicinal Properties of Papaw.

பப்பாளியின் மருந்து குணங்கள்.—பப்பாளிக்காயின் பாலை உள்ளுக்கு சாப்பிட்டால் அது குடல்களிலுள்ள புழுப் பூச்சிகளைக்கொன்று வெளிப்படுத்தக்கூடும். இந்தக் குணம் பப்பாளி விதைகளுக்கும் உண்டு. முகத்திலுள்ள தேமல், பருக்கள் முதலியவைகளைப் போக்குவதற்கும் இந்தப்பால் ரொம்ப உபயோகமுள்ளது. இந்தப் பாலுக்கு இன்னொரு ச்லாக்யமான குணமென்னவென்றால், அது மாம்ஸத்திலுள்ள நார்களைப் பிரித்து அதை ம்ருதுவாக்கிவிடும். இந்த குணம் பாலுக்குமாத்ரம் உண்டென்பதில்லை. மரத்திலிருந்துவரும் ஆவிக்குக்கூட இந்த குணமுண்டாம். ப்ரேஜிலுள்ள கசாப்புக்கடைக்காரர்கள் பப்பாளியின் இந்த குணத்தை யறிந்துகொண்டு, தாங்கள் ம்ருகங்களைக்கொன்று எடுத்த மாம்ஸத்தை பப்பாளி மரத்தின் அடியில் தொங்கவிடுகிறார்களாம். அல்லது மாம்ஸத்தை பப்பாளியிலையில் சுற்றி வைக்கிறார்களாம். ஆனால் மாம்ஸத்தை பப்பாளியிலையில் சுற்றி வைப்பதிலும், அதை மரத்தில் தொங்கவிடுவதிலும் சற்று ஜாக்ரதையாயிருக்கவேண்டும். ஏனென்றால் இறைச்சியை அதிகநேரம் வைத்திருந்தால் அது சிறு சிறு துண்டுகளாக உதிர்ந்து விழுந்துவிடும். பிறகு அது உண்ண லாயக்கில்லாமல் போய்விடக்கூடும்.

இறைச்சியை வேகவைக்கும்போது ஜலத்தில் பப்பாளியின் பாலில் கொஞ்சம் விட்டு வேகவைத்தாலும் அல்லது பப்பாளிக்காயில் ஒரு சிறு துண்டை இறைச்சியோடு போட்டு வேகவைத்தாலும் இறைச்சி நன்றாய்ப் பக்வமாகும்.



## BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Jupiters' Satellites.

வியாழனுடைய உபக்ரஹங்கள்.—வியாழனுக்கு இதுவரையில் 8-உபக்ரஹங்கள் உண்டென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். வியாழனுடைய 8-வது உபக்ரஹத்தை சென்ற ஜூலை மாஸம் 21-தேதி முதல் 24-தேதி வரையில் போட்டக்ராப் படம் எடுத்துப் பார்த்ததில் அதன் பக்கத்தில் ஒரு பொருள் இருந்ததாம். இது 21-தேதியிலும் 24-தேதியிலும் இடம் விட்டுப் பெயர்ந்திருப்பதைக்கொண்டு, அது வியாழனுடைய 9-வது உபக்ரஹமாயிருக்கலாமென்று வான சாஸ்த்ரிகள் சொல்லுகிறார்கள்.

ஏழு வர்ஷத்துக்கு முன்னால் லண்டனுக்குப் பக்கத்தில் க்ரீனிச் என்னும் ஊரிலுள்ள வான சாஸ்த்ர ஆராய்ச்சி சாலையில் வியாழனை போட்டோ எடுத்தபோது அதன் மூலமாய் வியாழனுடைய 8-வது உபக்ரஹம் கண்டுபிடிக்கப்பட்டது.

5-வது, 6-வது, 7-வது, உபக்ரஹங்களை அமெரிக்காவிலுள்ள வானசாஸ்த்ரிகள் கண்டு பிடித்தார்கள்.

### Wireless Telephone.

கம்பியில்லா டெலிபோன்.—வின்யார் மார்வி என்னும் இட்டலிதேசத்து இஞ்ஜினியர் ஒருவர் கம்பியில்லா டெலிபோன் மூலமாக பாட்டுகள் பாடுவதைத் தெரிவிக்க மைக்ரொபோன் என்னும் யந்த்ரம் ஒன்று புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறாராம். பாரிஸில் 'இப்பில் டவர்' என்று ரொம்ப உயரமான கோபுரம் இருக்கிறது. அங்கேயிருந்து ப்ரஸ்ஸல்ஸுக்கு உள்ள தூரம் 225 மைல். ப்ரஸ்ஸல்ஸில் ஒருவர் பாடிக்கொண்டிருந்தால் இந்தப்புது மைக்ரோபோன் யந்த்ரத்தின் உதவியால் அந்தப் பாட்டை யிப்பில் கோபுரத்திலிருந்துகொண்டு கேட்கலாமாம். ஆனால் பாட்டின் வார்த்தைகள் ரொம்ப ஸ்பஷ்டமாகக் கேட்கவில்லையாம். ப்ரஸ்ஸல்ஸுக்கு 60 மைல் தூரத்திலுள்ள ஒரு ஊரில் ஒரு க்ராமபோனைவைத்து; அதில் ரொம்ப ப்ரஸித்திபெற்ற இரண்டு பாட்டுகளைப் பாடச்செய்ததில், அந்தப் பாட்டுகள் இன்ன பாட்டுகள்தானென்று யிப்பில் கோபுரத்திலிருப்பவர்களுக்கு நன்றாய்த் தெரிந்ததாம்.

### Physical Exercise.

தேகப் பயிற்சி.—தேகபயிற்சியில் கவனிக்கவேண்டிய விதிகள்:

(i) ஆரம்பத்திலேயே கடினமான பயிற்சிகளை அதிகமாகச் செய்யாதே. லேசானவைகளிலாரம்பித்து, கொஞ்சங் கொஞ்சமாய் அதிகப்படுத்து.

(ii) அதிகவேகமாய் தேகப்பயிற்சிகளைச் செய்து சீக்ரம் களைப்படையும்படி விடாதே. ஆனால் மெதுவாய் அதிக நேரம் கடினமான பயிற்சிகளைச் செய்.

(iii) சுத்தமான ஆகாயமுள்ள வெளிகளிலேயே தேகப்பயிற்சிகளைச் செய்.

(iv) தினந்தோறும் தவறாமல் தேகப்பயிற்சி செய்.

(v) தேகப்பயிற்சி செய்யும்பொழுது அதிலேயே ஞாபகமாயிரு. மனோ தத்வங்களுக்கு எவ்விதகாரணங்களை முன்னிட்டும் வேலை கொடுக்காதே.

(vi) தேகப்பயிற்சி செய்தான பிறகு, தேகத்தில் குளிர்ந்த காற்று முதலியன வீசும்படிக்கு இடங்கொடாதே.—விவேக போதினி.

### The Victoria Cross.

விக்டோரியா க்ராஸ்.—ஹவில்தார் கங்காஸிங் என்னும் இந்தியர் இந்த ஐரோப்பிய யுத்தத்தில் அதிக பராக்ரமத்தோடு போர் செய்ததற்காக அவருக்கு விக்டோரியா க்ராஸ் என்னும் விருது கொடுத்திருக்கிறார்களென்று முன் ஸஞ்சிகைகளில் எழுதியிருக்கிறோம். இந்த விருது கொடுக்கும் வழக்கம் முதலில் 1856-ம் வர்ஷம் ஏற்பட்டது. அப்போது ரஷ்யாவுக்கும் இங்க்லண்டுக்கும் நடந்த க்ரிமியன் யுத்தத்தில் இங்க்லீஷ்காரர்கள் ரஷ்ய பீரங்கிகளில் சிலவற்றைப் பிடித்துக்கொண்டார்கள். அவைகளின் உலோகத்தைக்கொண்டு இந்த விக்டோரியா க்ராஸ் என்னும் விருதைச்செய்து வருகிறார்கள். இந்த விருதில் உள்ள உலோகத்தின் விலை 4½ அணாவுக்கு மேலில்லை. ஆனால் இதை அநேகர் 1,500 ரூபாய்வரைக்கும் விற்றிருக்கிறார்களாம். இந்த விருதைப்பெற்ற ஆபிஸர்களல்லாத ஸோல்ஜர்களுக்கு கவர்ன்மெண்டார் வர்ஷந்தோறும் 150 ரூபாய் இனாம் கொடுத்துவருகிறார்கள். வேண்டுமானால் கவர்ன்மெண்டார் இத்தத்தொகையை 750-ஆக உயர்த்தலாமாம். இந்த விருதை கண்டபேர்களுக்கெல்லாம் கொடுக்காமல் ரொம்ப பராக்ரமத்தோடு யுத்தம் செய்வோர்க்கு மாத்ரம் கொடுத்து வருகிறார்கள்.

# LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### Asafoetida.

காயம்.—ஈரமாயும், வெள்ளுள்ளி வாஸனையுடையதாகவுமிருக்கும் காயம் ஔஷதங்களுக்கு ஏற்றதாகும். இதை மாத்ரைகளாகச் செய்தாவது, ஜலத்தில் கரைத்தாவது உட்கொள்ளக் கொடுக்கலாமென்று 'வைத்தியகலாநிதி' எழுதுகிறது. எவ்விதமெனில்:—ஸுமார் ½ அல்லது 1 பலம் காயத்தை 8 அவுன்ஸ் ஜலத்தில் சிறுகச்சிறுகத் தேய்த்துக் கரைத்து, ஒருவித கட்டிப்பால் மாதிரி வந்தவுடனே வடிகட்டி, குப்பிகளில் வைத்துக்கொண்டு, ½ முதல் 1 அவுன்ஸ் வரையில் கடுப்ராயத்தி விருப்பவருக்குக் கொடுத்து வரலாம். ஸூதகவாயு, ஸூதகமூர்ச்சை (Hysterical fits), நெடுநாட்களாகத் தொந்தரவுசெய்யும் இருமல், ச்வாஸகாஸம், வாயு, கடினமான விக்கல், குன்மவலி இந்த வ்யாதிகளில் மேற்கூறிய த்ரவம் பல ஸமயங்களில் நற்குணமுண்டாக்குவதுண்டு. இந்த த்ரவத்தை இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை கொடுத்து வரலாம். ½ பலம் சுக்கை நன்றாகச் சிதைத்து, 4 ஆழாக்கு ஜலத்தில் சேர்த்து ஒரு ஆழாக்காக வற்றவைத்து வடிக்கட்டியெடுத்து அதில் 1 அவுன்ஸ் கஷாயத்தில் மேற்கூறிய காயத்தின் த்ரவத்தையும் கலந்து உட்கொள்வதும் நலம். வலி மிகவும் அதிகமாயிருந்தால் அரைக்குன்றுமணி யெடை அபினியை அத்துடன் கலந்து உபயோகிக்கலாம்.

குழந்தைகளுக்குக் காணும் வயிற்றுப் பொருமல், குன்மவலி முதலியவற்றில் மேற்சொன்ன காயஜலத்தில் ஒரு தேக்கரண்டி யளவு எடுத்து, சிறிது கருவாப்பட்டைத் தூளோடாவது, ஓமத்ராவகத்துடனாவது கொடுக்கலாம். தேஹம் வெளிரிப் போயுள்ள குழந்தைகளுக்கு இந்த த்ரவத்தை ஒரு தேக்கரண்டியளவில் இரண்டொரு மணிக்கொருமுறையாகக் கொடுத்துவந்தால், வ்யாதி சாந்தமாகும். குழந்தைகளை நெடுநாட்களாப் பீடித்துவரும் இருமலில் இது மிக்க உபயோகமாயிருக்கும்; ஆனால் இதைக் கொடுக்கும்போது ஜ்வரமிருக்கக் கூடாது. அதிக வயதான குழந்தைகளுக்கு காயஜலத்தை க்ரமமாக அளவில் அதிகமாகக் கொடுத்துவரவேண்டும். ஜ்வரம் இல்லாமலிருந்தால் கக்கிருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினத்திற்கு நாலைந்துமுறை இந்தத்ரவத்தைக் கொடுத்துவர நற்குணமேற்படுவதுண்டு.—

### Baby Marriages.

கைக்குழந்தைகள் கல்யாணம்.—ராஜபுதனத்தில் கைக்குழந்தைகளுக்கு விவாகம் நடப்பது ஸகஜமாம். ஸமீபத்தில் வெளியான கணக்குகளால் அந்த ப்ரதேசத்தில் ஒரு வயஸுக்குள்பட்ட ஆண்குழந்தைகள் 52 - பேருக்குக் கல்யாணமாயிருந்ததாம். இரண்டு குழந்தைகள் தாரமிழந்தவர்களாம். ஒரு வயஸுக்குள்பட்ட பெண்குழந்தைகளில் 135-பேர் கல்யாணமானவர்களா யிருந்தார்கள். 2-பேர் விதவைகளாம். இப்படிப்பட்ட கல்யாணங்கள் பெரும்பாலும் ஹிந்து குடும்பங்களில் தான் நடக்கின்றன. ஆஜ்மீர் - மீர்வாரா என்னும் ப்ரதேசத்தில் ஒரு வயஸுக்குள்பட்ட குழந்தைகள் ஆண்களில் 10-ம் பெண்களில் ஒன்றும் கல்யாணமாயிருந்தன. அந்த ப்ரதேசத்தில் ஒரு வயஸுக்குள்பட்டவர்களில் விதவைகளாகவாவது தாரமிழந்தவர்களாகவாவது ஒருவரும் கிடையாதாம். அந்த ப்ரதேசத்திலுள்ள குன்பிஸ் ஜாதியாருக்குள் தான் இந்தவழக்கம் இருந்து வருகிறது. இந்த வழக்கம் எப்படி ஏற்படுகிறதென்றால், இரண்டு குடும்பத்தில் குழந்தைகள் பிறக்கப்போவதாயிருந்தது, பெற்றோர்கள் ஒருவருக்கு ஆணும் இன்னொருவருக்குப் பெண்ணுமாகப் பிறந்தால் இரண்டு குழந்தைகளுக்கும் கல்யாணம் செய்துவிடவேண்டுமென்று பேசிக்கொள்ளுகிறார்கள். பேசிக்கொண்டபடியே குழந்தைகள் பிறந்தால் அப்படியே கல்யாணமும் நடந்துவிடுகிறது.

### An Expert Lady Tailor.

ஒரு தேர்ந்த தையல்காரி.-பம்பாய் வாஸியான சம்புபாய் என்னும் ஒரு மகாராஷ்ட்ரப் பெண் பட்டுநூலால் தையல் வேலைகள் செய்து சித்ரங்கள் அமைப்பதில் சிறந்தவள். இவள் தான் செய்த சில தையல் வேலைகளை ஸமீபத்தில் போப்பாலில் நடந்த பொருட்காட்சிக்கு அனுப்பினாள். இவளது அற்புத வேலைகளின் அழகைமெச்சிய போப்பால்பீகம் மகாராணியார் ரொம்ப ஸந்தோஷமடைந்தவராய் இந்தப் பெண்ணை உடனே தந்திவாயிலாய் வரவழைத்து ஒரு தங்கப்பதக்கம் கொடுத்ததோடு தமது உருவம் போன்ற வேலையொன்று செய்து தரும்படியும் உத்தரவு செய்தாராம்.



# INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indians in British Colonies.

ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள்.—தென் அமெரிக்காவின் வடக்கேயுள்ள ப்ரிட்டிஷ் கயானா, தென்னமெரிக்காவுக்கும் வட அமெரிக்காவுக்கும் மத்தியில் உள்ள ட்ரினிடாட்தீவு, ஜமய்க்காதீவு, ஆஸ்ட்ரேலியாவுக்குக் கிழக்கேயுள்ள பிஜிதீவுகள் ஆகிய இந்த நான்கு ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலுமுள்ள இந்திய கூலியாட்களின் நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்படி கொஞ்சகாலத்துக்கு முன்னால் இந்தியா கவர்ன்மெண்டார் இரண்டு உத்யோகஸ்தர்களை நியமித்திருந்தார்கள். அவர்கள் அவ்விடங்களிலுள்ள நிலைமைகளைப்பற்றி விசாரித்து ஒரு பெரிய ரிபோர்ட் எழுதி இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் அந்தநாடுகளுக்குக் குடியேறிப்போயிருக்கும் இந்தியர்கள் ஸாதாரணமாய் ஸௌக்யமாயும், ஸம்பத்துடனும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இப்போது உள்ள ஏற்பாட்டின்படி இந்தியர்கள் விஷயத்தில் அநேக அஸௌகர்யங்கள் இருக்கின்றனவென்றும், அஸௌகர்யங்களையும் ஸௌகர்யங்களையும் ஒப்பிட்டுப்பார்த்தால் ஸௌகர்யங்களே அதிகமாயிருப்பதாகத் தெரியவருமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த ரிபோர்ட்டில் அவர்கள் அநேக ப்ரேரணைகள் செய்திருக்கிறார்கள்.

அந்த ப்ரேரணைகள் பின்வருமாறு:—

(1) ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் தகுதியற்றவர்களாக விருந்தால் அவர்களைக் குடியேறவிடக்கூடாது. ஒப்பந்தங்களில் தப்பான நடத்தைக்கு இன்னின்ன தண்டனைகள் உண்டென்று வ்யக்தமாகக் கண்டிருக்கவேண்டும். நூறு ஆண்களிருந்தால் 40 பெண்கள் வீதந்தான் குடியேறவிடலாமென்பதை மாற்றி நூற்றுக்கு 50-வீதம் ஸ்த்ரீகளைக் குடியேறவிடவேண்டும்.

(2) எல்லா குடியேற்ற நாடுகளிலும் குடியேற்றத்தைப்பற்றிய சட்டங்களிலிருந்து ரொம்ப கடுமையாயுள்ள பாகங்களை, அவைகள் அமுலில் இருந்தாலும் ஸரி, இல்லாவிட்டாலும் ஸரி நீக்கி விடவேண்டும். அநேக குற்றங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தண்டனைகளை ரொம்பவும் குறைக்கவேண்டும். அபராதம் போட்டால் அபராதத்தொகையை சிறுசிறு தொகைகளாக வஸூலிக்கவேண்டும்.

(3) சட்டத்தில் கூலியாட்களை சரிவர நடந்து வரும்படி செய்வதற்காக ஏற்பட்டுள்ள ரூல்களை முதலாளிகள் மிதமிஞ்சி கடுமையாக அனுஷ்டிக்காம லிருப்பதற்காக, இந்த விஷயத்தில் அவர்களை (முதலாளிகளை) அடக்கி வருவதற்கு இமிக்ரேஷன் டிபார்ட்மெண்ட் உத்யோகஸ்தர்களுக்கு அதிகாரம் ஏற்படவேண்டும்.

(4) முதலாளிகள் வேலையாட்களின் மேல் கொண்டுவரும் கேஸ்கள் க்ரிமினல் கோர்ட்டுகளுக்குப் போவதைக் குறைப்பதற்காக, இமிக்ரேஷன் டிபார்ட்மெண்ட் ஆபிஸர்களுக்கு இந்தக் கேஸுகளை விசாரித்துத் தீர்ப்பு செய்ய அதிகாரம் ஏற்படவேண்டும்.

(5) குடியேறின கூலியாட்கள் சரிவர நடந்து கொள்ளாமலிருந்து குற்றங்கள்செய்து அவர்களுக்கு காவல் ஏற்பட்டால், அவர்களை அடைத்துவைக்க ப்ரத்யேகமான இடங்கள் ஏற்படுத்தவேண்டும்.

(6) ஒரு வர்ஷத்தில் ஒரு தோட்டத்தில் (பண்ணையில்) இத்தனை கூலியாட்கள்தான் தாங்கள் கொடுத்திருக்கும் ஒப்பந்த ஏற்பாட்டிலிருந்து விலகிக்கொள்ளலாமென்று ஒருவரையறை ஏற்படவேண்டும். வேலையாள்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் இவ்வளவு தொகையை சிறுசிறு பாகமாகச் செலுத்தி ஒப்பந்தச்சீட்டை ரத்துசெய்து கொள்ளலாமென்று ஏற்பாடு செய்யவேண்டும்.

(7) வேலையாட்கள் நிலங்களை ஸொந்தத்தில் ஸாகுபடி செய்து அவைகளை அனுபவித்து வருவதற்கு, அவர்களை நினைத்தபோது நிலத்தைவிட்டுப் போகும்படி செய்யாமல் த்ருப்திகரமான ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

(8) கல்யாணம் செய்து கொள்வதை ரெஜிஸ்டர் செய்வதற்கு ஸௌகர்யங்கள் ஏற்படுத்தவேண்டும்.

(9) இந்தியக் குழந்தைகளுக்கு ப்ரைமரிக் கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

(10) பண்ணைகளில் தங்கியிராத ஏழைகளான இந்தியர்களுக்கு வைத்ய உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

(11) ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் உள்ள இம்மிக்ரேஷன் டிபார்ட்மெண்டார் தாங்கள் எழுதும் ரிபோர்ட்டுகளில் ஒப்பந்தக் கூலிகளின் தேக ஸௌக்யத்தைப்பற்றித் தெளிவான விஷயங்கள் அதிகமாக எழுத வேண்டும். அதோடு கூலியாட்களின் சராசரி வரும்படியையும், அவர்களுக்கு ஏற்படும் செலவையும், அவர்கள் எவ்வளவு தொகை மிச்சம் பிடிக்கலாமென்பதையும் குறிப்பிட வேண்டும்.

## FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### The Boy's reply.

பையனுடைய் பதில்.—உபாத்தியாயர் "ஏண்டா! நீ இந்தக்காரியம் செய்தாயா ? செய்யல்லேயா?

பையன் அடிபட்டவனுதலால் அழுதுகொண்டே "ஹா, ஹா."

உபாத்தியாயர் (கோபித்து) "செய்தேன், செய்யல்லேன்னு சொல்லேண்டா."

பையன்:—"செய்தேன், செய்யல்லே. ஸார்!"

### A French Ruse.

ப்ரெஞ்ச்சுக்காரர்களின் தந்த்ரம்:—சில ப்ரெஞ்ச்சுக்காரர்கள் ஒரு புகைக்கூண்டில் (பலூன்) ஆகாயக்கப்பல் யாத்ரிகள் போன்ற மூன்று பதுமைகளை வைத்து ஜெர்மன் துருப்புகளிருந்த இடத்திற்கு மேலே பறக்கவிட்டார்கள். ஜெர்மானியர்கள் அந்த புகைக்கூண்டை துப்பாக்கியால் தாக்கி அதை நாசப்படுத்தினுர்கள். புகைக்கூண்டு கீழேவிழுந்ததும் அதில் இருந்த 100 வெடிகுண்டுகளும் வெடித்து அநேக ஜெர்மன்துருப்புகளை நாசம் செய்துவிட்டன.

### Desertion of Four Germans.

நான்கு ஜெர்மானியர்கள் தங்கள் ஸைன்யத்தை விட்டோடினது.—நான்ஸிக்குப் பக்கத்தில் யுத்தம் நடந்துகொண்டிருந்த போது, நான்கு ஜெர்மானியர்கள் யுத்தம் செய்ய மனமில்லாமல் கூட்டுத்துருப்புகளிடம் கைதிகளாக அகப்பட்டுவிட வேண்டுமென்று எண்ணினுர்கள். அவர்களுடைய காப்டனுக்குத் தெரியாமல் ஓடிவிட உத்தேசித்தும் முடியவில்லை. காப்டனைக்கொன்றுவிடவும் அவர்களுக்கு ஸம்மதமில்லை. அவருக்குத் தெரிந்து ஓடினுலும் அவர் இவர்களைச்சுட்டுக்கொன்று விடக்கூடும். தாங்கள் ஓடிப்போக எண்ணியிருப்பதாக அவரிடம் தெரிவித்ததில் அவர் அவர்களை ரொம்பவும் கண்டித்தாராம். உடனே அந்த நான்கு பேரும் காப்டனைப்பிடித்து கயிறுகளால் இறுகக்கட்டி ஒரு பெரியதுணியில் போட்டுத்தூக்கிக்கொண்டு கூட்டுத்துருப்புகள் இருக்குமிடத்தை நோக்கிப் போனுர்கள். வழியில் காப்டன் திமிறித் தப்பியோடமுயன்ருர். ஸோல்ஜர்கள் அவரை நான்குமுறை தொப்பு தொப்பென்று கீழேபோடவே வலிபொறுக்க மாட்டாமல் சும்மாயிருப்பதாக ஒப்புக்கொண்டாராம். பிறகு ஜெர்மானியர்கள் ஒரு ப்ரெஞ்ச் ஆபிஸரிடம் போய் தாங்கள் கொண்டு வந்திருந்த மூட்டையைக் கீழே வைத்து ஸங்கதிகள் யாவையும் சொல்லி ஐந்து பேரும் கைதியானுர்களாம்.

### Tommy's Love of Bathing.

இங்க்லீஷ் ஸோல்ஜர்களுக்கு ஸ்நானம் செய்வதிலுள்ள ப்ரியம்.—இங்க்லீஷ் ஸோல்ஜர்களுக்கு ஸ்நானம் செய்வதில் ரொம்ப ப்ரியமிருப்பதைப் பார்த்து ப்ரெஞ்ச்சுக்காரர்கள் ரொம்ப ஆச்சரியப்படுகிருர்களாம். இதைப்பற்றி அநேகம் கதைகள் யுத்தமுனையிலிருந்து வந்திருக்கின்றன. ஆர்மிஸெர்விஸ் கோர் என்னும் போர்க்கூட்டத்தைச்சேர்ந்த சிலஜனங்கள் தேகத்தில் வஸ்த்ரம் ஒன்றுமில்லாமல் ஒரு நதியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தபோது ஜெர்மானிய ஸோல்ஜர்கள் அவர்களை கைது செய்துவிட்டார்களாம்.

ஒருநாள் ஸோல்ஜர்கள் ஏற்றியிருந்த ஒரு ரெயில் வண்டி போர்முனையில் ஸோல்ஜர்கள் காம்ப் போட்டிருந்தவிடத்தில் போய்க் கொண்டிருந்தபோது வண்டியிலிருந்த ஒரு இங்க்லீஷ் ஸோல்ஜர் ஒரிடத்தில் வயலில் சில மரத்தொட்டிகள் வைத்திருக்கக் கண்டான். குதிரைகள் ஜலங்குடிப்பதற்கு தண்ணீர் நிரப்பிவைப்பதற்காக அந்தத்தொட்டிகள் அங்கேவைக்கப்பட்டிருக்கின்றன வென்று அவன் எண்ணினுன். அப்போது வெயில் உக்ரமாயிருந்தது. ஸ்நானம் செய்தால் ஸுகமாயிருக்குமென்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் விரும்பினதற்கேற்ப வண்டியும் அந்தத் தொட்டிகளண்டைவந்து நின்றது. அந்தத் தொட்டியில் நிறைய குளிர்ந்த ஜலமிருப்பதாக அவனுக்குத் தெரியவே, அவன் உடனே வண்டியை விட்டுக்கீழே இறங்கி தனது சட்டையையும் ஷர்ட்டையும் கழற்றிவிட்டு நிர்வாணியாக ஆத்ரத்துடன் ஒரு தொட்டியினிடம்போய், அதில் தனது தலையையும் கழுத்தையும் விட்டு மூழ்கினுன். உடனே அலறிக்கொண்டு தொட்டியிலிருந்த கரிய ஜலம் சொட்டச்சொட்ட தலையை வெளியிலெடுத்தான். தொட்டிகளிலெல்லாம் தார் நிரப்பி வைத்திருந்தது.



## CURIOSITIES.
## விநோதங்கள்.

### An 'Emden' Dog.

'எம்டன்' கப்பலிலிருந்த நாய்.—வங்காளக்குடாக் கடலிலும் இந்து மகா ஸமுத்ரத்திலும் சில காலம் உலாவித்திரிந்து பலகப்பல்களைக் கடலில் மூழ்கடித்த எம்டன் என்னும் ஜெர்மன் போர்க்கப்பலில் இருந்த ப்ரான்ஸிஸ் ஜோஸப் என்னும் ஜெர்மன் ராஜகுமாரர் டி கப்பலிலிருந்தபொழுது ஒரு நாயைவளர்த்து வந்தாராம். 'எம்டன்' சில மாஸங்களுக்கு முன் கொச்சிக்கு ஸமீபத்தில் சில ப்ரிட்டிஷ் கப்பல்களை மூழ்கடித்து அவைகளிலிருந்தவர்களை 'எக்பெர்ட்' என்னும் கப்பலில் ஏற்றியனுப்பியபொழுது, ஜெர்மன் இளவரசர் 'எக்பெர்ட்' கப்பலின் தலைவரை வழியனுப்புவதற்காக அந்தக்கப்பலில் போனுராம். அப்பொழுது அவரது நாயும் கூடச்சென்றது. ஆனுல் அவர் மறுபடியும் 'எக்பெர்ட்' கப்பலிலிருந்து 'எம்டனு'க்கு வந்தபொழுது அதைமறந்து 'எக்பெர்ட்'டிலேயே விட்டு வந்துவிட்டார்.

பிறகு 'எம்டன்' கப்பல் நாசம் செய்யப்பட்டதும், ஜெர்மன் ராஜகுமாரரும் அதன் காப்டன் முதலியோரும் லண்டனில் கைதிகளாக விருப்பதும் நேயர்கள் அறிந்தவிஷயம்.

'எக்பெர்ட்' கப்பலிலிருந்த ஜெர்மன் நாயை அதன் காப்டன் கொச்சிதுறைமுகத்துமெடிகல் ஆபீஸருக்குக் கொடுத்தார். அவர் அதை மற்றொருவருக்குக் கொடுக்க அது பலரிடம் மாறிச்சென்று, இப்பொழுது கடைசியாக வட திருவாங்கூர் கோட்டையத்திலுள்ள ஸிரியன் கிறிஸ்தவர்களின் குருவான ஒரு பாதிரியாருக்கு இனுமாகப்போய்ச் சேர்ந்திருக்கிறது. ராஜபோகத்திலிருந்த டி ஜெர்மன் நாய் ஸாதாரண ஆகாரமொன்றும் சாப்பிட விரும்புவதில்லையாம். இங்குப் பேசும்பாஷைகளும் அதற்குத் தெரியவில்லை. 'எம்டன்' என்னும் வார்த்தைமட்டும் அதற்குத் தெரிகிறதாம். அவ்வார்த்தையை சொல்லி அழைப்பவர்களிடம் ரொம்ப ப்ரியத்துடன் போகிறதாம்.

'எம்டன்' கப்பல் உத்யோகஸ்தர்கள் கஷ்டங்கள் அடைந்ததுபோல, இந்த நாயும் தனது யஜமானனைப் பிரிந்து கஷ்டமடைகிறது. இது விதியின் வலியே. ஒருக்கால் ஐரோப்பாயுத்தம் விரைவில் முடிந்தால், அது தனது பழைய யஜமானிடம் போய்ச்சேர்ந்து ஸந்தோஷமாய் வாழக்கூடும்.

### An Elephant & a Diamond Ring.

யானையும் வைரமோதிரமும்.—அமெரிக்கா ஐக்ய மாகாணங்களிலுள்ள ஸின்ஸினுட்டியென்னும் பட்டணத்தில் ஒரு கனவான் தனக்குப்பழக்கமான யானைக்கு வேர்க்கடலையைத் தமது கையில் வைத்துக் கொடுத்துக்கொண்டிருந்தார். அந்த யானை அவர் கையிலிருந்து கடலையை பொறுக்கித் தின்றுக்கொண்டிருந்தபொழுது, அவர் கைவிரலிலிருந்த விலையுயர்ந்த வைர மோதிரத்தையும் பிடுங்கி வாயிற்போட்டு விழுங்கிவிட்டது. மோதிரம் யானை வயிற்றில் எங்கிருக்கிறதென்று அறிவதற்காக அதனை 'எக்ஸ்ரேஸ்' என்னும் ஜோதியை உபயோகித்து போட்டோக்ராப் படம் எடுத்தார்கள். அப்பொழுது டி மோதிரம் யானையின்தொண்டையில் மேலும் கீழும் செல்ல மார்க்கமில்லாமல் இருப்பதாகத் தெரியவந்தது. உடனே ஒரு ம்ருக வைத்யரின் உதவியைக்கொண்டு டி மோதிரம் யானையின் தொண்டையிலிருந் தெடுக்கப்பட்டது. அதனுல் அந்த யானை ரொம்ப கஷ்டமடைந்ததென்று தெரிகிறது.

### The Czar's Hundred Palaces.

ஸாரினுடைய நூறு அரண்மனைகள்.—ரஷ்ய சக்ரவர்த்தியாகிய ஸாருக்கு அவருடைய தேசத்தின் பற்பல பாகங்களில் மொத்தம் நூறு அரண்மனைகளிருக்கின்றனவாம். இந்த அரண்மனைகளைப் பாதுகாக்க 32,000 வேலையாட்களிருக்கிருர்களாம். இவர்களுக்கு ஒரு வர்ஷத்துச் சம்பளம் மொத்தம் 1-கோடியே 20 லக்ஷம் ரூபாயாகும். ஸார் சக்ரவர்த்திக்கு தமது ஸொந்தத்தில் 5,000 குதிரைகளிருக்கின்றன. இவைகளோடு 50,000 மாடுகள் இருக்கின்றனவாம். இவைகள் ஸாரின் ஸொந்த நிலங்களில் இருக்கின்றனவாம்.

ஸார் சக்ரவர்த்தி தமது 100 அரண்மனைகளில் பாதிக்குமேல் உள்ளே போய்ப் பார்த்திருக்கமாட்டார். உள்ளே போய்ப்பார்க்காதவைகளில் 25 தான் அவர் வெளியிலிருந்து பார்த்திருப்பவை. இருந்தாலும் எல்லா அரண்மனைகளிலும் அதற்கு வேண்டிய ஸாமான்களில் ஒன்றும் குறைவில்லாமல் இருக்கின்றன. ஸிப்பந்திகளிலும் குறைவு கிடையாது.

# MISCELLANEOUS NOTES.

## நாநா ஸங்கதி.

### Healing Wounds in the Face.

முகத்திலுள்ள காயங்களைப் போக்கல்.—போர் முனையிலுள்ள பல ஸோல்ஜர்கள் வெடிகுண்டுபட்டு, உடலின் பலபாகங்களிலும் காயமடைந்து போவார்கள். அப்படி காயம்பட்ட ஸோல்ஜர்களில் பலருக்கு முகத்தில் காயம்பட்டிருப்பதனுல், அவர்களுடைய முகம் பார்வைக்கு விகாரமாய்த்தோன்றும். ஆகவே, முகத்தில் காயம்பட்டிருப்பதால், அம்முகம் பார்ப்பதற்கு விகாரமாயில்லாதபடி அவ்விடத்தில் சதையை வளரச் செய்வதற்கு வேண்டிய சிகித்ஸையைச் செய்யும்படியாக மூன்று வைத்ய நிபுணர்களை ப்ரஞ்சுக்காரர் திட்டப்படுத்தி யிருக்கிறார்கள். காயத்தினுல் மூக்கு காது முதலிய அங்கங்கள் சீர்குலைந்திருந்தாலும், அவைகளில் புதிதாகச் சதை வளரும்படி அந்த நிபுணர் செய்துவிடுகிறார்கள் என்று தெரிகிறது.

### Light for Fighting in the Dark.

இருட்டில் யுத்தம் செய்யும்போது வெளிச்சம்.—ஈஸர் கால்வாயண்டையில் இரவும் பகலும் ஓயாமல் சண்டை நடந்துவந்தது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம். இரவில் போர் புரியும்பொழுது, தங்களுடைய ஸோல்ஜர்களுக்கு வெளிச்சங் கொடுப்பதற்காக ஒருவகை வாணத்தை ஜெர்மானியர்கள் உபயோகித்துவருகிறார்கள். அந்த வாணம் பந்து போல் உருண்டை வடிவமா யிருக்கிறது. அதை ஆகாயத்தில் தூக்கி யெறிந்தால், உயரப் போகப் போக அதன் வெளிச்சம் அதிகரிக்கிறது. பின்பு, அது கீழே விழும்பொழுது, திடீரென்று விழாமல், மெதுவாக சக்ராகாரமாய்ச் சுற்றிக்கொண்டே வருகிறது. மேலும், அதன் வெளிச்சம் கீழேயுள்ள கால்வாயின் ஜலத்தில் ப்ரதிபலிக்கவே, இன்னும் ப்ரகாசமாயிருக்கிறது. இம்மாதிரி பலவற்றை அவர்கள் கையாளுவதால், அவை உயரச் செல்வதையும் கீழே மெதுவாக விழுவதையும் உற்று நோக்கும் ஸோல்ஜர்கள் வாணவேடிக்கையே யென மதித்து மகிழ்ச்சி கொள்ளுகிறார்களாம். அதன் வெளிச்சம் 300-கஜதூரம் நாலாபக்கத்திலும் வீசுகிறது. அந்த வெளிச்சமானது ஜெர்மன் ஸோல்ஜர்களுக்கு ஸாதகமாகவே யிருந்ததென்று சொல்லப்படுகிறது.

### Wonderful Effect of Bombs.

வெடிகுண்டுகளின் ஆச்சர்யமான செய்கை.—தற்போது யுத்தத்தில் உபயோகிக்கப்படும் வெடிகுண்டுகள் மிக்க திறமையுள்ளனவே யல்லாமல் சேட்போர்களுக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கக்கூடியனவாயுமிருக்கின்றனவென்று 'இந்துநேசன்' எழுதுகிறது. ஒரு படைவகுப்பைச் சேர்ந்த ஓர் உத்யோகஸ்தர் 25 போர் வீரர்களுக்கு ஓர் இடத்தில் நின்று யுத்தத்தில் நடந்துகொள்ள வேண்டிய அலுவல்களைப்பற்றி போதித்துக்கொண்டிருந்தபோது, இருந்தாற்போல் ஒரு வெடிகுண்டு படைவீரர்கள் நின்றுகொண்டிருந்தவிடத்தில் விழுந்து வெடித்தது. சில நேரம் கழித்து வெடிகுண்டினுலுண்டான புகை அடங்கினவுடன் குண்டு விழுந்தவிடத்தில் நின்றுகொண்டிருந்த மனிதர்களின் அடையாளம் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அவ்வீரர்கள் நின்றுகொண்டிருந்த இடமானது தோட்டத்தில் செடிகளை நட, புதிதாய் மண் பரப்பப்பட்டிருப்பதைப்போல் காணப்பட்டது. ஆராந்து உற்றுப்பார்க்கும்போது, நடந்த ஸங்கதியானது நன்கு விளங்கிற்று. அந்த வெடிகுண்டானது அங்கு கூடியிருந்த மனிதர்களைக் கொன்றுவிட்டதல்லாமல், அவர்கள் நின்றுகொண்டிருந்த விடத்திலேயே அவர்களை அடக்கம்பண்ணி விட்டது. அவர்களின் ப்ரேதங்களின்பேரில் வெடிகுண்டினுல் ஆழம் பண்ணப்பட்ட சுற்றுப்புறத்திலிருந்த மண் மேலேவிழுந்து அவர்களை மூடிவிட்டன. இன்னொரு ஸமயத்தில் இதே ப்ரகாரம் 5, 6 பேர் நடுவில் ஒரு வெடிகுண்டு விழுந்தது. அது வெடித்த பிறகு அம்மனிதர்களில் சிலர் கொல்லப்பட்டதோடு, சிலர் மூலைக்கு ஒருவராக குண்டின் விசையினுல் அடித்துக்கொண்டு போகப்பட்டார்கள். இவர்களில் ஒருவன் ஒரு மரத்தின் கிளையில் தொங்கிக்கொண்டிருந்ததாகக் காணப்பட்டான். சில நேரம் கழித்து இவன் மரத்திலிருந்து கீழே இறக்கப்பட்டான். அவனுக்குக்காயம் கொஞ்சங்கூட படவில்லை. ஆனால் அவன் இரண்டு நாட்கள் ஊமையாகவும் செவிடனுகவு மிருந்தான். அவன் தற்போது யுத்தத்தின் முன்னணியில் எப்போதுமுள்ள மாதிரியாகவே எல்லா உணர்ச்சிகளுடனும் காணப்படுகிறான்.



### The Captain of the 'Emden'.

'எம்டன்' தலைவர்.—"எம்டன்" என்ற ஜெர்மன் யுத்தக்கப்பலின் தலைவராகிய காப்டன் வான் முல்லர் என்பவர் இப்பொழுது க்ரேட் ப்ரிட்டனிலிருக்கிறார். அவருடைய கப்பல் நாசமானதும், கொழும்பு துறை முகத்துக்கு அவரைக் கொண்டுபோனார்கள். பின்பு அங்கிருந்து அவரை ஒரு ப்ரிட்டிஷ் யுத்த கப்பலில் ஏற்றி, ஈஜிப்டிலுள்ள போர்ட் ஸெட் என்னும் துறை முகத்திற்குக் கொண்டுபோய், அங்கே அவரை வேறொரு ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பலுக்குமாற்றி இங்கிலாந்துக்குக் கொண்டுபோனார்கள். இங்கிலாந்தில் அவர் இறங்கியதானது பரம ரகஸ்யமாக இருந்தது. வேல்ஸ் என்ற நாட்டிலுள்ள ஒரு இடத்தில் பந்தோபஸ்தாய் அவரை வைத்திருக்கிறார்கள். அவரை அதிகாரிகள் மிகவும் கவனமாய்ப் பார்த்து வருகிறார்களாம்.

### A Vishnu Idol.

விஷ்ணுவின் விக்ரஹம்.—வட இந்தியாவிலுள்ள கொராப்பூர் என்னும் ஊருக்குப்பக்கத்தில் விஷ்ணு விக்ரகம் ஒன்று பூமியில் அகப்பட்டிருக்கிறதாம். கொராப்பூருக்குஅருகே புல்லடர்ந்த திடரொன்றில் நான்கு அல்லது ஐந்து அங்குலம் உயரமான ஒரு கல்லிருந்தது; புல் செதுக்குவோர் தங்கள் உழவாரத்தை (புல் செதுக்கும் கருவி) அக்கல்லில் தீட்டிக் கூராக்குவது வழக்கம். அந்தக் கல் பெரிதாயிருக்குமென்று நினைத்து அதைக் கட்டிடத்திற்காகப் பெயர்த்தார்களாம். அது 5-அடி நீளமும் 2-அடி அகலமுமுள்ள ஒரு கருங்கல்லாயிருந்தது. அந்தக் கல்லின்கீழ் அழகான பெரிய விஷ்ணுவின் விக்ரஹம் ஒன்றிருந்தது. அது கொஞ்சமுஞ் சேதமடையாததாய், அப்பொழுதுதான் செய்த புது விக்ரஹம்போல இருந்தது. அதைச்சுற்றி 24-சிறு விக்ரஹங்கள் இருந்தன. அவை விஷ்ணுவின் இருபத்து நான்கு அவதாரங்களின் ஸ்வரூபங்களென்று சொல்லப்படுகிறது. யாரோ ஒருவர் முன்னிருந்த மகம்மதிய அரசர்களுக்கு பயந்து அவைகளை பூமியில் புதைத்து, அந்தக்கல்லை அடையாளமாக வைத்தார்களென்று தோன்றுகிறது. பல வூர்களிலிருந்து ஆயிரக் கணக்கான ஜனங்கள்வந்து அந்த விக்ரஹங்களைத் தரிசித்து வருகிறார்களாம். இப்பொழுது அம் மூர்த்திகள் அபாகி நாதன் ப்ரஸாத் என்னும் ஒரு ப்ரபுவின் வீட்டில் இருக்கின்றனவாம். விக்ரஹங்களைக் கண்டெடுத்த அந்த இடத்தில் ஓர் கோவில் கட்டுவதற்காக அவ்வூர் ஜனங்கள் பணஞ் சேர்த்துக்கொண்டிருக்கிறார்களாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### WAR IN EUROPE.

#### ஐரோப்பாவில் யுத்தம்.

#### மேற்கு ப்ரதேசத்தில் நடக்கும் சண்டை.

ஜனவரிமீ 9-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் எதிரிகளை ஆல்ஸேஸ் மாகாணத்தில் தாக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகள் பர்ன்ஹாப்ட்-லா-ஹாட் என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

11-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஷாலான்ஸ் என்னுமிடத்துக்கு வடகிழக்கேயுள்ள பெர்த்ஸ் என்னும் க்ராமத்தைப்பிடித்திருக்கின்றன.

ஜெர்மன் துருப்புகளுக்கு உதவி ஸைன்யங்கள் அதிகம் வந்தனவால், அவைகள் பெர்ன்ஹாப்ட் என்னும் ஊரை மறுபடியும் பிடித்திருக்கின்றன.

12-தேதி.

ஸ்வாஸோன் என்னும் ஊருக்கு வடகிழக்கேயுள்ள சில ஜெர்மன் அகழ்களை ப்ரெஞ்ச்சுத் துருப்புகள் பிடித்திருக்கின்றன.

சில ஜெர்மன் ஏரோப்ளேன்கள் டன்கர்க்குக்குப் பக்கத்திலுள்ள ஸெண்ட் மாலோ என்னும் ஊரில் பறந்துவந்து சில வெடிகுண்டுகள் போட்டன. ஆறு பேர்கள் இறந்துபோனார்கள்.

13-தேதி.

ரீம்ஸ் என்னுமிடத்துக்குக் கிழக்கேயுள்ள பெர்த்ஸ் என்னுமிடத்தில் ஜெர்மானியர்கள் தாங்கள் இழந்த இடத்தை மறுபடியும் பிடிப்பதற்காக பலமாக யுத்தம் செய்துவருகிறார்கள்.

14-தேதி.

ஸ்வாஸோனுக்கு வடகிழக்கிலும், பெர்த்ஸ் என்

னும் இடத்துக்குப் பக்கத்திலும் யுத்தம் பலமாக நடக்கிறது.

15-தேதி.

ஸ்வாஸோனுக்கு வடக்கேயும் வடகிழக்கேயும் ஜெர்மானியர்கள் ப்ரெஞ்ச் துருப்புகளைத் தாக்கி கொஞ்சம் பின் வாங்கும்படி செய்தார்கள்.

16-தேதி.

வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் கூட்டு ஸைன்யங்கள் ஜெர்மானியர்களை ஸெனான்ஸ் என்னுமிடத்துக்குத் தெற்கே துரத்தியடித்தன.

18-தேதி.

பெர்த்ஸ் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

21-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் போண்ட்-ஆ-மௌஸன் என்னுமிடத்துக்கு வடகிழக்கே முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

23-தேதி.

ஜெர்மானியர்கள் ந்யூபோர்ட் என்னும் ஊரைப் பலமாகத்தாக்கினார்கள்.

ஆல்ஸேஸ் மாகாணத்தில் ப்ரெஞ்ச் காலாள்படையும் ஜெர்மன் காலாள்படையும் கைகலந்து பலமாக யுத்தம் செய்தன.

27-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ் துருப்புகளை லாபாஸி என்னுமிடத்தில் தாக்கினார்கள். ஆனால் சேதத்துடன் பின் தள்ளப்பட்டார்கள்.

இன்று கெய்ஸரின் பிறந்தநாளாகையால், இன்றையதினம் ஜெர்மானியர்கள் ரொம்ப உக்ரமாக யுத்தம் செய்தார்களாம். ஆனால் பற்பல இடங்களில் தோற்கடிக்கப்பட்டார்கள்.

பிப்ரவரிமீ 1-தேதி.

ஆர்கோன் ப்ரதேசத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் சற்றுப் பின் வாங்கிப்போயிருக்கின்றன.

3-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் பெர்த் என்னும் இடத்துக்குப் பக்கத்தில் சற்று முன்னுக்குப் போயிருக்கின்றன.

ஒரு ஜெர்மானிய ஆகாய கமனி டன்கர்க்கில் வெடிகுண்டுகள் போட்டார். ஜெர்மானியர்கள் ஆல்ஸேஸிலுள்ள ஸெர்னே யென்னும் ஊரைவிட்டு விட்டுப் போயிருக்கிறார்கள்.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா-ஜெர்மனி இவைகளுக்கும் நடக்கும் யுத்தம்.

ஜனவரிமீ 11-தேதி.

விஸ்டுலா நதியின் இடது கரையில் ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது.

12-தேதி.

விஸ்டுலா நதியின் இடது கரையில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாகத்தாக்கியும் யாதொருபயனும், அடையவில்லையென்று சொல்லப்படுகிறது.

14-தேதி.

ரஷ்யர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் முன்னுக்குப்போய் பல க்ராமங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

15-தேதி.

ரஷ்யர்கள் விஸ்டுலா நதியின் கீழ்பாகத்தில் முன்னுக்குச் சென்று ஸியர்ப் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

16-தேதி.

கார்ப்பேதியன் மலைக்கணவாய்கள் ரஷ்யர்கள் வசமிருக்கின்றனவென்று தோன்றுகிறது. மழைக்காலமாகையால் ரஷ்யர்கள் ஹங்கேரியினுள் போக முடியவில்லையாம்.

18-தேதி.

ரஷ்யர்களின் படையொன்று கார்ப்பேதியன் மலையில் புகுந்து ட்ரான்ஸில்வேனியா என்னும் ஆஸ்ட்ரியாவுக்கு ஸொந்தமான ப்ரதேசத்துக்குப் போகும் வழியாகிய கிர்ல்ஸ் பாபா கணவாயைப் பிடித்திருக்கிறது.

22-தேதி.

ரஷ்யர்கள் தார்ன் என்னும் கோட்டையை நோக்கி முன்னுக்குப் போயிருக்கிறார்கள். ஸ்க்ருவா என்னும் நதிக்கு 10-மைல் மேற்கேயுள்ள ஸ்கெப்னே என்னும் ஊரை ரஷ்யர்கள் கைப்பற்றிருக்கிறார்கள்.

26-தேதி.

காலீஷ்யாவில் கார்ப்பேதியன் மலைக்கணவாய்களிலெல்லாம் ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரியர்களுக்கும் யுத்தம் நடக்கிறது.

28-தேதி.

ரஷ்யர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் விஸ்டுலா நதியின்



வடக்குக் கரையில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

30-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் கார்ப்பேதியன் மலையில் ஸைன்யங்கள் ஏராளமாக சேகரித்துக் கொண்டிருக்கிறார்களாம். அங்கே டுக்லா என்னுமிடத்துக்கும் வைஸ்கோ என்னும் கணவாய்க்கும் இடையில் யுத்தம் பலமாக நடக்கிறதாம்.

பிப்ரவரிமீ 1-தேதி.

கார்ப்பேதியன் மலையோரமாக ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரியர்களுக்கும் பலமாக யுத்தம் நடந்து வருகிறது.

2-தேதி.

கிழக்கு ப்ரஷ்யாவில் உள்ள ரஷ்யர்கள் கம்பின்னன் என்னுமிடத்துக்கு வடக்கே முன்னுக்குப் போயிருக்கிறார்கள்.

## துருக்கியோடு யுத்தம்.

ஜனவரிமீ 9-தேதி.

ஸாரிகாமிஷ் என்னுமிடத்தில் 30,000 வீரர்கள் உள்ள 9-வது துருக்கிய 'ஆர்மிகோரை' ரஷ்யர்கள் தோற்கடித்துத் துரத்திவிட்டார்களென்று ஸமாஸாரம் எட்டுகிறது. அந்தச்சண்டையில் ரஷ்யர்கள் எல்லா பீரங்கிகளையும் பிடித்ததோடு சில ஜெனரல்களையும் ஆபிஸர்களையும் கைது செய்தார்கள்.

11-தேதி.

துருக்கியர்களுடைய 10-வது 'ஆர்மிகோர்' (ஸைன்யம்) சிதறடிக்கப்பட்டதன்மேல், அவர்கள் மறுபடியும் பலமான ஸைன்யங்களுடன் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

14-தேதி,

காகஸஸ் ப்ரதேசத்தில் துருக்கியர்கள் ரஷ்யர்களோடு பலமாக எதிர்த்து யுத்தம் செய்து வருகிறார்கள்.

16-தேதி.

காரௌகான் என்னும் ப்ரதேசத்தில் ரஷ்யர்களுக்கும் துருக்கியர்களுக்கும் யுத்தம் பலமாக நடக்கிறது. எர்ஸிரம் என்னுமிடத்திலிருந்து துருக்கியர்களுக்கு உதவிச் சேனைகள் வந்துகொண்டிருக்கின்றனவாம்.

19-தேதி.

காகஸஸ் ப்ரதேசத்தில் காராகுவான் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்ட துருக்கியர்களை ரஷ்யர்கள் இன்னும் துரத்திக்கொண்டு போகிறார்கள். யெனிகென்ஸி யென்னுமிடத்தில் இருந்த துருக்கிய டிவிஷன் ஒன்றை ரஷ்யர்கள் தோற்கடித்தார்கள்.

20-தேதி.

காகஸஸ் ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் துருக்கியர்களை சாரக் என்னும் நதிக்கு அப்பால் துரத்தியடித்தார்கள்.

30-தேதி.

துருக்கியர்களுக்குப் புது ஸைன்யங்கள் வந்ததன் மேல், அவர்கள் சோரக் என்னும் கணவாயிலும், ஆல்டி ஜில்லாவிலும் ரஷ்யர்களைத்தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பிப்ரவரிமீ 1-தேதி.

ரஷ்யர்கள் டாப்ரீஸ் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

கருங்கடலில் ரஷ்ய கப்பல்படை துருக்கியைச் சேர்ந்த மெட்ஜிடியே, ப்ரஸ்லா என்னும் யுத்தக்கப்பல்களைத் தாக்கித்துரத்தி, பிறகு ட்ரெபிஸாண்ட் என்னும் ஊரைத்தாக்கிற்று.

3-தேதி.

துருக்கியர்கள் டைக்ரிஸ் நதியின் வலதுகரையில் ப்ரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கினார்கள். ஆனால் அவர்கள் பின்தள்ளப்பட்டார்கள்.

## பொது விஷயங்கள்.

ஜனவரிமீ 11-தேதி.

காமரூன்ஸ் ப்ரதேசத்திலுள்ள ஈட் என்னுமிடத்தைத்தாக்க வந்த ஜெர்மானியர்களை ப்ரெஞ்சுக்காரர்கள் தோற்கடித்துத் துரத்திவிட்டார்களென்று ஸமாசாரம் எட்டுகிறது.

12-தேதி.

ப்ரிட்டிஷ் கப்பல்களும் ப்ரெஞ்ச் கப்பல்களும் ஜெர்மனிக்கு ஸாமான் கப்பல்கள் போவதைத்தடுத்து வருவதால் ஜெர்மனியில் தாம்ரம் அகப்படுவது அரிதாயிருக்கிறதாம். இங்க்லண்டில் 900 ரூபாய் விலையுள்ள ஒருடன் தாம்ரத்துக்கு ஜெர்மானியர்கள் 2400-ரூபாய் கொடுத்து எல்லை நாடுகளிலிருந்து வாங்குகிறார்களாம்.

18-தேதி.

ப்ரிட்டிஷ் ராஜ்யத்தைச் சேர்ந்த 180 ப்ரபுக்கள் யுத்தத்தில் சேர்ந்திருக்கிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

20-தேதி.

3-ஜெர்மன் ஆகாயக்கப்பல்கள் இங்கிலண்டின் கடற்கரையோரமாகவுள்ள யார்மத் என்னும் பட்டணத்தையும், இன்னும் சில துறைமுகங்களையும், கிங்க்ஸ்லின், ஸாண்ட்ரிங்காம் என்னும் ஊர்களையும் வெடிகுண்டுகள் போட்டுத்தாக்கின.

24-தேதி.

3-ஜெர்மானிய க்ரூஸர்களும், ஒரு கவசம் போட்ட ஜெர்மானிய க்ரூஸரும் இங்கிலண்டின் கிழக்குக் கரையைத் தாக்க இன்று வந்தன. ஆனால் ஒரு ப்ரிட்டிஷ் கப்பல் படையைப் பார்க்கவே அவை திரும்பியோடின. ப்ரிட்டிஷ் கப்பல்படை ஜெர்மன் கப்பல்களைத் துரத்திப்போய் கவசம் போட்ட ஜெர்மன் க்ரூஸரை மூழ்கடித்து, இரண்டு ஸாதாரண க்ரூஸர்களை சேதப்படுத்திவிட்டது.

25-தேதி.

ஜெர்மானிய ஆகாய விமானங்கள் இன்று டன்கர்க் என்னும் ஊரை வெடிகுண்டுகள் போட்டுத் தாக்கின. ப்ரிட்டிஷ் ஆகாயவிமானங்கள் ஸிப்ரூஜ் என்னும் (ஜெர்மனி வசமுள்ள) ஊரை வெடி குண்டுகள் போட்டுத்தாக்கின.

27-தேதி.

வடகடலில் யுத்தத்துக்குப் போயிருந்த பரிட்டிஷ் யுத்தக்கப்பல்களெல்லாம் அதிக சேதமில்லாமல் திரும்பி வந்து விட்டன. 'லையன்' என்னும் யுத்தக்கப்பலில் ஜலமட்டத்துக்கு அடியில் குண்டு தாக்கினதால், அதின் உட்புறத்தில் ஜலம் புகுந்துகொண்டது. அதைவேறொரு கப்பல் இழுத்துக்கொண்டு வந்தது. 'மீடியார்' என்னும் டிஸ்ட்ராயர் கப்பலும் கொஞ்சம் சேதமடைந்தது.

பிப்ரவரிமீ 1-தேதி.

ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்கள் ஐரிஷ் கடலிலும், இங்க்லீஷ் சான்னல் கடலிலும் ஆறு வ்யாபாரக்கப்பல்களை மூழ்கடித்து விட்டன.

## GENERAL NEWS.

## பொதுவர்த்தமானம்.

### இந்திய நாட்டு வர்த்தமானம்.

ஜனவரிமீ 9-தேதி.

**மிஸ்டர் காந்தி.**—இன்று மிஸ்டர் எம். கே. காந்தியும் அவரது மனைவியும் இங்கிலண்டிலிருந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்கள்.

10-தேதி.

**பம்பாயில் ஸங்கீதம்.**—பம்பாயில் இந்திய ஸங்கீத சாஸ்த்ர வித்யாசாலைக்காகக் கட்டப்பட்டிருக்கும் புதுக்கட்டிடத்தை பம்பாய் கவர்னர் இன்று திறந்து வைத்தார். அப்போது அவர்செய்த ஒரு ப்ரஸங்கத்தில், இந்திய ஸங்கீத வித்யாசாலை 14-வர்ஷகாலமாக ஸங்கீதத்துக்காக ரொம்ப உழைத்துவருகிறதென்றும், மேல் நாடுகளில் உள்ள ஸங்கீத வித்வான்களைப்போல் இங்கேயும் வித்வான்கள் தயாராகும்படிக்கு இந்த வித்யாசாலை பாடுபடவேண்டுமென்றும் சொன்னார்.

**ப்ரொபஸர் எம். ரங்காசாரியர்.**—சென்னை ப்ரெஸிடென்ஸிக் காலேஜில் ஸம்ஸ்க்ருதம், கம்பாரடிவ் பைலாலஜி அதாவது பலபாஷாவிவரண சாஸ்த்ரம் ஆகிய இவைகளுக்கு போதகராயிருந்து ஸமீபத்தில் வேலையிலிருந்து விலகிக்கொண்டவரான ப்ரொபஸர் ராவ்பகதூர் எம். ரங்காசாரியருடைய உருவப்படமொன்று ஆனரபிள் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யரால் சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் திறந்துவைக்கப்பட்டது.

12-தேதி.

**மிஸ்டர் காந்தி.**—இன்றையதினம் பம்பாய் வாஸிகள் மிஸ்டர் காந்திக்கு ஒரு விருந்துக்கச்சேரி வைத்து அவரை உபசரித்தார்கள்.

**ஸர் அஷுதோஷ் முகர்ஜி.**—வெகுகாலம் 'கல்கத்தா யூனிவர்ஸிட்டியின் (ஸர்வகலாசாலை) வைஸ்சான்ஸலராக இருந்தவரும், இப்போது கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருப்பவருமாகிய ஸர். அஷுதோஷ் முகர்ஜியின் உருவச்சிலையொன்றை வங்காளத்து கவர்னர் இன்று கல்கத்தாவில் திறந்துவைத்தார்.

15-தேதி.

**ஒரு தற்கொலை.**—கல்கத்தாவில் வஸித்து வந்த இரண்டு தாயாதிகள் தங்களுடைய பித்ரார்ஜித சொத்துக்கள் விஷயமாக சண்டைபோட்டார்கள். அவர்களில் ஒருவன், மஹூத் என்னும் மற்றவனை செங்கல்லால் தலையில் அடித்துக்கொன்றுவிட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மஹூத் என்பவனுடைய மனைவி வீட்டுக்குள்போய் கதவைத் தாளிட்டு தனது கணவனுடைய ஜோடு ஒன்றைத்தனது மார்பில் கட்டிக்கொண்டு தனது வஸ்த்ரத்தில் க்ரஸின் எண்ணெயை ஊற்றிக்கொண்டு, வஸ்த்ரத்துக்கு நெருப்பு வைத்து இறந்துபோனாள்.



16-தேதி.

**காலஞ்சென்ற டாக்கா நவாப்.**—டாக்காவின் நவாப்பாகிய ஆனரபிள் நவாப் பகதூர் ஸர் காஜா ஸாலி முல்லா இன்று காலையில் கல்கத்தாவில் ஹ்ருதய வ்யாதியால் இறந்துபோனார். இவர் சிலகாலமாக வ்யாதியாக இருந்தாராம். இவர் மகமதியர்களுக்குள் ரொம்ப செல்வாக்குள்ளவர்.

19-தேதி.

**க்ராமப் பஞ்சாயத்துக்கள்.**—க்ராமங்களில் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிப்பது விஷயமாக அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சில ப்ரேரணைகள் செய்திருந்தது. அதைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்த்ரிக்கு எழுதியிருந்த கடிதங்களுக்கு இந்தியா மந்த்ரி பதில் எழுதியிருக்கிறாரென்றும், அந்த பதில் இந்தியாவுக்கு வந்திருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

21-தேதி.

**ஜஸ்டிஸ் கார்ன்டப்.**—கல்கத்தா ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்த ஆனரபிள் ஸர் டபள்யூ கார்ன்டப் சிலகாலமாக வ்யாதியாக இருந்து இன்று இரவு இறந்துபோனார்.

22-தேதி.

**கொச்சி ராஜா.**—கொச்சி ஸமஸ்தானத்துக்கு இதற்கு முன்ராஜாவாக இருந்த ஸர் ராமவர்மா சென்ற டிஸம்பர்மாஸம் பட்டத்திலிருந்து விலகிக்கொண்டார். இளைய ராஜாவாகிய ராமவர்மா இன்று கொச்சியின் ராஜாவாகப் பட்டம் சூட்டப்பெற்றார்.

29-தேதி.

**சென்னை ஹைகோர்ட்டுக்கு ஒரு புது ஜட்ஜ்.**—சென்னையில் க்ரௌன் ப்ராஸிக்யூட்டராக இருந்த ஸி. எப். நேபியரை இந்தியா கவர்ன்மெண்டார் சென்னை ஹைகோர்ட்டில் அடிஷனல் டெம்பரரி ஜட்ஜாக நியமித்திருக்கிறார்கள்.

## SEASON.

## கால ஸ்திதி.

### Rainfall.

**மழை.**—1914ஹு எப்ரல்மீ 1உயிலிருந்து 1915ஹு பிப்ரவரிமீ 5உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 53·83 | 43·83 |
| வால்டேர் | 39·67 | 36·06 |
| காக்கினாடா | 30·36 | 38·05 |
| மஸூலிப்பட்டணம் | 32·06 | 39·37 |
| நெல்லூர் | 43·76 | 34·70 |
| மதராஸ் | 65·18 | 49·01 |
| கூடலூர் | 75·74 | 49·78 |
| நாகப்பட்டணம் | 55·19 | 52·63 |
| பாம்பன் | 42·06 | 35·81 |
| கொழும்பு | 70·36 | 78·45 |
| திருவனந்தபுரம் | 64·53 | 61·07 |
| கொச்சி | 112·69 | 111·09 |
| கள்ளிக்கோட்டை | 121·31 | 116·27 |
| மங்களூர் | 147·70 | 126·97 |
| மெர்க்காரா | 129·98 | 125·97 |
| ஐதராபாத் | 42·63 | 30·45 |
| பல்லாரி | 19·77 | 19·71 |
| கர்நூல் | 27·94 | 26·48 |
| கடப்பை | 26·98 | 31·46 |
| ஹாஸ்ஸான் | 31·44 | 35·54 |
| பெங்களூர் | 29·46 | 34·89 |
| கொடைக்கானல் | 76·87 | 57·79 |
| உதகமண்டலம் | 47·85 | 54·72 |
| கோயம்புத்தூர் | 16·86 | 21·34 |
| வேலூர் | 39·98 | 44·72 |
| சேலம் | 35·98 | 39·41 |
| திருச்சினாப்பள்ளி | 20·75 | 31·73 |
| புதுக்கோட்டை | 38·19 | 32·60 |
| மதுரை | 27·05 | 33·38 |
| திருநெல்வேலி | 49·69 | 25·25 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி யோக | லச்ன பாக்கி நா | வி | அகர் மாந நா | வி | துலு உ | இங் உ | தமி உ | வாரம் | 48-ஆனந்த வருஷ மாசிமூ உத்தராயணம்-சிசிருது { மாகம் பால்குனம் } கொல்லம்-1090 பஸலி-1324 { இங்கிலீஷ்-1915 பிப்ரவரி-மார்ச்சுமீ } ஹிஜரி-1333 ரப்யூலவ்வல்-ரப்யூஸானி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிம | 4 | 22 | 29 | 5 | 27 | 12 | 1 | வெ | த்ர-13-25,உரா-31-0,வி த்-2-45,உப-54-27,பத்-41-48,ரா-11-41,கும்பரவி-14-40, கும்பசதுர்த்தசிதி, விஷ்ணு பதிபுண்யகால, வியசிரா, மஹாசிவராத்ரி, ஸமார்ச்சம் |
| சி | | 13 | | 6 | 28 | 13 | 2 | ச | சசி-10-26,திரு-29-59,வரீ-52-28,சது-39-20,ரா-10-50,ஸர்வஅமா,சிரவணஉப,யுகாதி |
| மசி | | 5 | | 8 | 29 | 14 | 3 | ஞா | ●-8-31,அவி-30-3,பரி-48-39,கிம்-38-1,ரா-19-12,பிண்டபிதிரு,இஷ்டி,அலப்யம் |
| சி | 3 | 56 | | 9 | 30 | 15 | 4 | தி | ப்ர-7-53,சத-31-27,சிவ-45-57,பால-38-6,ரா-18-55,பால்குணசுத்த,சந்திரதர்சனம்,கோட்செங்கட்சோழர், |
| மஅ | | 47 | | 10 | 1 | 16 | 5 | செ | த்வி-8-41,பூட்-34-14,சித்-44-23,தை-39-37,ரா-30-34 |
| சிஉ | | 39 | | 12 | 2 | 17 | 6 | பு | த்ரி-10-56,உட்-38-27,சாத்-43-55,வணி-42-36,சே-3-46,சதுர்த்திவிரு |
| சிஅ | | 30 | | 14 | 3 | 18 | 7 | வி | சது-14-37,ரே-43-57,சுப-44-28,பவ-46-57,தி-11-2,பஞ்சமீதி [யுப |
| அசி | | 21 | | 15 | 4 | 19 | 8 | வெ | பஞ்-19-34,அசு-50-32,சுப்-45-52,கவு-52-24,ரா-10-10,மீஞயன-40. 24,அதிதி, ஷஷ்டி |
| சிஅ | | 12 | | 16 | 5 | 20 | 9 | ச | ஷஷ்-25-24,பர-57-46,பிரா-47-49,கர-58-31,தி-17-23,ஷஷ்டீதி |
| சி | | 4 | | 18 | 6 | 21 | 10 | ஞா | ஸப்-31-39,கிரு-60-0,ரா-49-56,வணி-31-39,ரா-2-13,கிருத்திகை,மித்ரஸப்தமீ |
| மஅ | 2 | 55 | | 19 | 7 | 22 | 11 | தி | அஷ்-37-46,கிரு-5-9,வை-51-50,பத்-4-46,ரா-20-34,வைசிரா |
| அசி | | 46 | | 20 | 8 | 23 | 12 | செ | நவ-43-11,ரோ-12-8,விஷ்-53-5,டால-10-37,தி-27-38 |
| சி | | 38 | | 22 | 9 | 24 | 13 | பு | தச-47-23,மிரு-18-9,பிரீ-53-30,தை-15-27,ரா-13-2 [இராமா |
| மஅ | | 29 | | 23 | 10 | 25 | 14 | வி | ஏகா-50-3,திரு-22-53,ஆயு-52-41,வணி-18-56,ரா-25-16, ஸர்வஜீவவார ஆமலகஏகா, |
| சிஉ | | 20 | | 24 | 11 | 26 | 15 | வெ | த்வா-51-0,புன-25-59,ஸெள-50-32,பவ-20-45,ரா-17-15,திவாமா,கரிநாள் |
| சிம | | 12 | | 26 | 12 | 27 | 16 | ச | த்ர-50-11,பூச-27-23,சோ-47-1,கவு-20-49,ரா-30-1,ப்ரதோஷ,கரிநாள் |
| சிம | | 3 | | 28 | 13 | 28 | 17 | ஞா | சசி-47-43,ஆயி-27-8,அதி-42-13,கர-19-9,சே-3-27,ரா-26-59,மாசிமகம்,கரிநாள் |
| மசி | 1 | 54 | | 29 | 14 | 1 | 18 | தி | ○-43-50,மக-25-25,சுக-36-15,பத்-15-57,சே-0-27,ரா-15-0,மன்வாதி,ஹோளிகா,காமதகனம் [வர் |
| சிஅ | | 45 | | 31 | 15 | 2 | 19 | செ | ப்ர-38-48,பூர-22-28,திரு-29-21,பால-11-28,ரா-9-52,பால்குணபகுள,இஷ்டி, ஆம்ரகுஸுமாசனம், திருவள்ளு |
| அம | | 37 | | 32 | 16 | 3 | 20 | பு | த்வி-32-54,உத்-18-34,சூல-21-42,தை-5-56,வணி-59-46,ரா-8-32,எறிபத்தர் |
| சி | | 28 | | 34 | 17 | 4 | 21 | வி | த்ரி-26-30,ஹஸ்-14-5,கண்-13-36,பவ-53-11,ரா-2-58,த்ரிதியாதி,சங்கடசதுர்த்தி |
| சி | | 19 | | 35 | 18 | 5 | 22 | வெ | சது-19-52,சித்-9-18,விரு-5-16,உப-51-38,கவு-46-33,தி-22-10, திதித்வயம் |
| அசி | | 11 | | 37 | 19 | 6 | 23 | ச | பஞ்-13-19,சுவா-4-33,வியா-48-47,கர-40-8,தி-17-28,ஷஷ்டீதி,இராமா |
| உமம | | 2 | | 38 | 20 | 7 | 24 | ஞா | ஷஷ்-7-5,விசா-0-6,உப-56-1,ஹர்-41-3,பத்-34-9,தி-9-14,திவாமா,மித்ரஸப்தமீ |
| சி | 0 | 53 | | 39 | 21 | 8 | 25 | தி | ஸப்-1-24,உப-54-58,கேட்-52-50,வஜ்-33-49,பால-28-47,தி-9-18,காலாஷ்டமீ,அவம |
| அசி | | 45 | | 41 | 22 | 9 | 26 | செ | நவ-52-12,மூல-50-22,வித்-27-14,தை-24-12,தி-11-56,ரா-16-49, |
| அ | | 36 | | 43 | 23 | 10 | 27 | புத | தச-48-53,பூரா-48-44,விய-21-18,வணி-20-26,தி-13-36, காரிநாயனார்,வியசிரா |
| சி | | 27 | | 44 | 24 | 11 | 28 | வி | ஏகா-46-31,உரா-48-2,வரீ-16-7,பவ-17-35,தி-8-24,ரா-28-17, ஸர்வஜீவவாரஏகா |
| மசி | | 18 | | 46 | 25 | 12 | 29 | வெ | த்வா-45-8,திரு-48-19,பரி-11-42,சவு-15-43,சே-2-2,ரா-28-42,சிரவணத்வாதசி,சிரவணஉப |
| சிஅ | 0 | 10 | 29 | 47 | 26 | 13 | 30 | ச | த்ர-44-44,அவி-49-33,சிவ-8-3,கர-14-49,சே-2-28,கும்பத்ரயோதசிதி,சனிப்ரதோஷம் |

| | | | |
|---|---|---|---|
| | | | சனி |
| ர-ப<br>கு-ரா | 17-மக-சு<br>17-கும்-செ | | |
| செ | | | கே |
| சு | | | |

SUPPLEMENT TO "THE PEOPLES' FRIEND."



THE LATE MR. G. K. GOKHALE, C.I.E.

காலஞ்சென்ற ஜி. கே. கோகலே, ஸி ஐ. இ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 MAY 1915
MADRAS






A SUBMARINE BOAT.
ஒரு ஸப்மரின் கப்பல்.



A BRITISH DESTROYER (H. M. S. *TARTAR.*)
Speed 33 miles an hour.
பிரிட்டிஷ் டிஸ்ட்ராயர் கப்பல் ('டார்ட்டார்.')
மணிக்கு 38 மைல் போகக்கூடியது.



SUBMARINE MINES.
கடல் சுரங்கங்கள்.




**MAP OF WAR WITH TURKEY.**

துருக்கி யுத்த படம்.

# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 7 } Vol. 7. } ஆனந்தவருஷ மாசிமீ, FEBRUARY 1915. { ஸஞ்சிகை 6. No. 6.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Page ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do ... | 2 | 8 | 0 | do |
| ¼ do ... | 1 | 4 | 0 | do |
| 1/16 do ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors** :—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்ய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 | 4 | 0 |
| 1/16 பக்கத்திற்கு | , ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**

3 & 4, கொண்டி செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

ஜ்ஞாபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்த௵ மாசி௴. [ஸஞ்சிகை 6.

## TYPES OF WAR VESSELS.

## யுத்தக்கப்பல்களின் வகைகள்.

சென்ற கார்த்திகை மாஸத்து ஸஞ்சிகையில் 134-ம் பக்கத்தில் கப்பல்படையின் அமைப்பு என்ற வ்யாஸத்தில் யுத்தக்கப்பல்களில் இன்னின்ன வகைகளுண்டென்று தெரிவித்தோம். அதே வ்யாஸத்தில்'ட்ரெட்னாட்' என்ற கப்பலைப்பற்றியும் எழுதினோம். இப்பொழுது மற்ற கப்பல் வகைகளைப்பற்றி விவரமாய் எழுதுகிறோம்.

### Cruisers.

### க்ரூஸர்கள்.

க்ரூஸர்களில் யுத்த க்ரூஸர்களென்றும் ('பாட்டில் க்ரூஸர்') 'லைட்க்ரூஸர்களெ'ன்றும் இரண்டுவகையுண்டு. 'லைட்க்ரூஸர்' என்பது யுத்தக்ரூஸரைவிட நிறைகுறைவானது. 'லைட் க்ரூஸர்' என்ற பெயருக்கு லேசான க்ரூஸர் என்பது பொருள்.

யுத்த க்ரூஸர்கள் போர்க் கப்பலைக் காட்டிலும் வெகு வேகமாய்ச் சென்று, சத்ருக்களின் கப்பல்களைத் தாக்கி அவைகளுக்கு நாசத்தை விளைவிக்கும். சில க்ரூஸர்கள் மணி ஒன்றுக்கு 40 மைல் வரையில் ஓடும். யுத்த க்ரூஸர் ('பாட்டில் க்ரூஸர்') இருபது அல்லது இருபத்தைந்தாயிரம் டன் கனமிருக்கும். ஆறு வருஷங்களுக்கு முன் 13,550 டன் கனமுள்ள க்ரூஸர்கள் கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது, 27,000 டன் கனமுள்ளவை ஸாதாரணம். உதாரணமாக, 'லயன்' (ஸிம்மம்) என்னும் யுத்த க்ரூஸர் 660 அடி நீளமுள்ளதாயும், 25,500 டன் கனமுள்ளதாயும், 13½ அங்குலம் வாய் குருக்களவுள்ள 8 பீரங்கிகளைச் சுமந்துகொண்டு, மணியொன்றுக்கு ஸுமார் 33 மைல் ஓடக்கூடியதாயும் இருக்கிறது.

இங்க்லீஷ் கப்பல்படைக்குத் தலைவராயிருந்த பெயர் பெற்ற லார்ட் நெல்ஸன் என்பவர் க்ரூஸர்களை போர்க் கப்பல் கூட்டத்தின் கண்களென்று சொல்லியிருக்கிறார். ஏனென்றால், மனிதனுக்கு கண் எவ்வளவு ப்ரதானமானதோ, அவ்வளவு உபயோகமானவை க்ரூஸர்கள் யுத்தக் கப்பல்களுக்கு. கப்பல்கள் யுத்தத்திற்குப்போனால், க்ரூஸர்கள் கடலின் நாலா பக்கங்களிலும் விரைவாய் ஓடி எதிரியின் இருப்பிடங்களையும் ஸமாசாரங்களையும் கப்பல் படையின் தலைவனுக்கு வந்து தெரியப்படுத்தும். பண்டை நாட்களில் கப்பல் சண்டை போடும்பொழுது, தூரத்திலிருந்து ஸமாசாரம் அனுப்பவேண்டுமானால், ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு கொடிகள் மூலமாய் ஸமிக்ஞைசெய்து அறிவிப்பது வழக்கம். இப்படிச் செய்ய, க்ரூஸர்களை கிட்டக்கிட்ட நிறுத்தி ஒரு கப்பலிலிருந்து இன்னொன்றிற்கு ஸாமாசாரம் சொல்லி அனுப்புவார்கள். இப்பொழுதோ, எல்லாக்கப்பல்களிலும் கம்பியில்லாத்தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் ஒரு யுத்தக் கப்பலின் படத்தைப் பார்த்தால், அதன் இரு பக்கத்திலும் ஆகாசம் அளாவிய நீண்ட கோல்கள் நாட்டி அவைகளில் கம்பிகள் பிணைத்திருப்பதைக் காணலாம். அவைகளெல்லாம் கம்பிகளின் உதவி இல்லாமல் தந்தி ஸமாசாரம் அனுப்புவதற்கான கருவிகள். தந்தி ஸமாசாரங்களை எழுதி யெடுப்பதற்கு கப்பலினுள்ளேயே ஒரு அறையிருக்கிறது. அங்கேவேலை செய்பவரைத் தவிர, வேறு யாரும் போகக்கூடாது.



எல்லா க்ரூஸர்களிலும் பீரங்கிகள் உண்டு. சில க்ரூஸர்கள் எதிர்த்து யுத்தஞ் செய்யும்படி கவசம் போட்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற க்ரூஸர்கள் அவ்வளவு பலமாய்க் கட்டப்படாமல் எதிரிகளின் ஸாமான் கப்பல்கள் சிறு பீரங்கிகளை வைத்துக்கொண்டு தாக்கினால், அவைகளை எதிர்த்துத் தோற்கடிக்க வேண்டிய பலமுள்ளவைகளாய்க் கட்டப்பட்டிருக்கின்றன.

க்ரூஸர்கள் செய்யும் ரொம்ப முக்யமான உபகாரம் என்னவென்றால், எல்லா ஸமுத்ரங்களிலும் அங்கு மிங்கும் ஓடி, தங்கள் ராஜ்யத்திற்குக் கொண்டுவரப்படும் உணவுப் பொருள்களை எதிரிகள் பிடிக்காமல் காப்பாற்றுவதே. ப்ரிட்டனுக்கு வேண்டிய உணவு ஸாமான்களில் பெரும்பாகம் இந்தியா முதலிய வெளிதேசங்களிலிருந்தே போகிறது. சாப்பாடு இல்லாவிட்டால், எங்ஙனம் சண்டை செய்வது? ஆகையினால், சிறிய க்ரூஸர்களின் வேலை எதிரிகள் உணவுப்பொருளை அபகரித்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்வதே. இதற்காகவே, ப்ரிட்டிஷார் நூற்றுக்கணக்காய் சிறிய க்ரூஸர்கள் கட்டிவைத்திருக்கிறார்கள். இரண்டு அரசுகள் சண்டைபோட ஏற்பட்டவுடன், தம்தம் க்ரூஸர்களைக் கொண்டு சத்ருவின் ராஜ்யத்திற்குப் போகும் சாப்பாட்டு ஸாமான்களைக் கொள்ளை போட்டு, தமது நாட்டிற்கு எடுத்துப் போவது வழக்கம். இவ்விதம் கொள்ளையடிப்பதை நிறுத்த, விரைவாய்ப்போகும் க்ரூஸர்கள் ரொம்ப உதவியாயிருக்கும்.

யுத்தக் கப்பல்களோடு கூடப்போகும் க்ரூஸர்கள் முன்காலங்களில் போலல்லாமல் வரவர மிக கனம் குறைந்தவையாகவும், விரைவாய் ஓடுவதில் மேம் பட்டவையாகவும் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், இங்க்லண்ட் தேசத்திற்கு அருகிலுள்ள வடகடலிலேயே இனி போர்கள் ஸம்பவிக்கக்கூடும். ஆகையினால், அந்த சிறிய கடலில் பெரிய க்ரூஸர்களைப் பார்க்க, சிறியவையே மேலான பலன் கொடுக்கக்கூடுமென்று எண்ணி இப்படிச் சிறிய க்ரூஸர்களை அதிகமாக கட்டியிருக்கிறார்கள்.

### Torpedo Boats and Destroyers.

### டார்பிடோ போட்டுகளும், டிஸ்ட்ராயர்களும்.

போர்க்கப்பல் கூட்டத்தோடு,மேற்சொன்ன க்ரூஸர்களைத் தவிர சிறிய கப்பல் கூட்டமொன்று எப்போதும் தொடரும். இவை பொதுவாய் 'டிஸ்ட்ராயர்' எனப்படும். இந்த மாதிரி 24 டிஸ்ட்ராயர்கள் ஒரு கூட்டத்தைத் தொடர்ந்துபோகும். டிஸ்ட்ராயர்கள் உண்டானதற்குக் காரணம் என்னென்றால், முற்காலத்தில், ப்ரான்ஸுக்கும் இங்க்லண்டுக்கும் யுத்தம் நேர்ந்தால் இங்க்லீஷ் துறைமுகப் பட்டணங்களை எதிர்க்க வேண்டியிருக்குமென்று எண்ணி ப்ரெஞ்சுக்காரர்கள் தம் கடற்கரை யோரத்திலிருந்து அதிதுரிதமாய் இங்க்லண்டின் தெற்குப் பாகத்திற்குச் செல்லக்கூடிய டார்பிடோ போட்டுகள் என்று சொல்லப்படும் கப்பல்களை கணக்கில்லாமல் கட்டினார்கள். டார்பிடோ போட்டுகள் என்றால் டார்பிடோவைச் சுமந்துபோகும் கப்பல் என்று அர்த்தம். டார்பிடோ என்பது கப்பலை உடைப்பதற்காக விடப்படும் வெடிமருந்து வைத்துள்ள ஸுமார் 14 அடிமுதல் 19 அடி நீளமுள்ளதாய் உருவத்தில் சுருட்டுப் போலிருக்கும் ஒரு கருவி. இதைப்பற்றி பின்னால் விஸ்தாரமாய் எழுதுவோம்.

இவ்விதம் தாக்குவதை தடுப்பதற்காக ப்ரிட்டிஷார், ப்ரெஞ்ச் டார்பிடோ போட்டுகளைக் காட்டிலும் விரைவாய்ச் செல்லும் பெரிய கப்பல்களைக்கட்டி அவைகளின் மூலமாய் டார்பிடோ போட்டுகளை நாசப்படுத்த எண்ணினார்கள். இந்தக் கப்பல்களின் பெயர்தான் 'டிஸ்

ட்ராயர்' இங்க்லீஷ் பாஷையில் 'டிஸ்ட்ராயர்' என்றால் 'நாசஞ்செய்வது' என்று அர்த்தம். அந்தக் கப்பல்கள் ப்ரென்ச் டார்பிடோக் கப்பல்களை நாலாபக்கங்களிலும் கண்டபொழுதெல்லாம் நாசப்படுத்துவதற்காக கட்டப்பட்டதனால், அவைகளுக்கு 'டிஸ்ட்ராயர்ஸ்' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. டிஸ்ட்ராயர்கள் டார்பிடோ போட்டுகளைவிட அதிகம் உபயோகம் உள்ளவை. ஆதலால் அவைகளே இப்பொழுது எல்லா நாட்டிலும் அதிகமாயிருக்கின்றன. போர்க் கப்பலைச் சூழ்ந்து செல்லும் டிஸ்ட்ராயர்கள் கூட்டத்தை 'ப்லோட்டில்லா என்று சொல்லுவார்கள்.

தற்காலத்தில், பெரிய பெரிய போர்க்கப்பலைத் தாக்குவதே டிஸ்ட்ராயர்களின் வேலை. ஸாதாரணமாய் இப்பொழுது டிஸ்ட்ராயர்கள் ராத்ரிகாலத்தில் பெரிய கப்பல்களை மூழ்கடிப்பதற்கும், சத்ருவின் போக்குவரத்தை அறிவதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன. எதிரிக்கப்பலை தாக்கப்போகும்பொழுது, ஒரு டிஸ்ட்ராயர் 'டார்பிடோ' என்னும் கருவிகளை ஏராளமாய் ஏற்றிக்கொண்டு, தனது விளக்கையெல்லாம் அணைத்துவிட்டு, இருட்டான ஸமயம்பார்த்து, சத்ருக்கப்பலினருகில் வேகமாய்ச்சென்று, டார்பிடோக்களை விட்டு அதை அழிப்பது வழக்கம்.

### The Submarine Boat.
### ஸப்மரீன் கப்பல்.

ஸப்மரீன் என்பது வேண்டியபொழுது ஜலத்தில் மூழ்கியும் மேலேவந்தும் சண்டைசெய்யும் கப்பல். ஸப்மரீன் எவ்விதம் இருக்குமென்பதையும், அது எவ்விதம் திருட்டுத்தனமாய் ஜலத்தில்சென்று யாருக்கும் தெரியாமல் பெரிய போர்க்கப்பல்களை உடைக்குமென்பதையும் இங்கே விவரிக்கிறோம்.

ஸப்மரீன் பார்ப்பதற்கு ஸாதாரண ஒரு சிறிய கப்பல்போல் இருக்கும். அதன் நடுவில் சக்ரம்போன்ற வளைவான கோபுரம் ஒன்று உண்டு. அதன் மத்தியில், நீண்டகோல் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும். ஸப்மரீனின் ஸ்வபாவம் யாதெனில், நினைத்தபோதெல்லாம் கடலுக்குள் மூழ்கிவிடுவது. இத்தனை கனமுள்ள ஸாமான் ஒன்று எப்படிசீக்ரம் நினைத்தமாத்ரத்தில் தண்ணீருக்குள் போய்விடுகிறதென்பது பலருக்கு ஆச்சர்யமாய்த் தோன்றும். அதன் காரணம் வெகு ஸுலபமாய் அறியக்கூடிய சாஸ்த்ரவிதியானபோதிலும், அந்த விதியை அப்யாஸத்தில் கொண்டுவர நூற்றுக்கணக்கான வர்ஷங்கள் சென்றன.

ஒரு குவளையை நீரில்போட்டால் அது மிதக்கும். ஆனால், அந்தக்குவளை மிதக்கும் இடத்திலிருந்துகொஞ்சம் தண்ணீரைத் தான் மிதப்பதற்காகத் தள்ளுகிறது. சாஸ்த்ரம் சொல்லும்விதி என்னவென்றால்,

(1) ஒரு பொருளின் நிறையைவிட அதன் பரிமாணமுள்ள ஜலத்தின் நிறை அதிகமானால், அந்தப் பொருள் ஜலத்தில் மிதக்கும்.

(2) ஜலத்தின் எடை குறையுமானால் அது அமிழ்ந்து விடும்.

(3) ஸமமானால் கொஞ்சமேனும் ஜலமட்டத்திற்குமேல் தெரியாமல் ஜலத்தில்மிதக்கும்.

ஆகவே, ஸப்மரீனால் விலக்கப்பட்ட ஸமுத்ரநீரின் கனம் ஸப்மரீனின் பளுவைப் பார்க்க ஜாஸ்தியானதினால், ஸப்மரீன் (வேறெல்லாக் கப்பல்களையும் போல) நீரின் மேலாக மிதக்கிறது.

ஸப்மரீன் கீழே போகவேண்டுமானால் அதற்குள் வேறேபாரம் போடவேண்டும். இதற்கு, ஸப்மரீனுடைய அடியில் பெரியகுளமொன்று இருக்கிறது. எப்பொழுது கப்பல் மூழ்கவேண்டுமோ, அப்பொழுது அந்தக் குளத்தில் ஜலத்தின் பக்கமாயிருக்கும் சிறு கதவைத்திறந்துவிட்டால் ஸமுத்ர ஜலம் அதற்



குள் நிறைந்துவிடும். உடனே மேற்சொன்ன விதிப்படி ஸப்மரீன் தண்ணீரில் மூழ்கும். வேறுபாரம் போடுவதற்குப்பதிலாக குளத்தை ஜலத்தால் நிரப்புவது வழக்கம்; ஏனென்றால், ஜலத்திற்கும் பளுவுண்டல்லவா? மூழ்கின ஸப்மரீன் மறுபடி மேலே வரவேண்டுமானால், மேல்சொன்ன குளத்தின் பக்கத்தில் ஒரு அறையில் 'கம்ப்ரெஸ்ட் ஏர்' என்று காற்று அமிழ்த்தி நிறைய வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறையின் கதவைத் திறந்துவிட்டால், காற்றின் பலத்தினால், குளத்திலுள்ள ஜலம் அவ்வளவும் வெளியில் ஓடிவிடும். தக்ஷணமே கதவைச் சாத்திவிடலாம். உடனே ஸப்மரீன் மேலே வந்துவிடும்.

ஸப்மரீன் கப்பல் ஜலத்தில் மூழ்கியிருக்கும்போது அந்தக் கப்பலிலிருக்கிறவர்கள் கஷ்டமில்லாமல் மூச்சுவிடவும் ஸுகமாயிருக்கவும் சில உபாயங்கள் செய்திருக்கிறார்கள். மனிதன் நீரில் ஜீவித்திருக்க, ஏதாவது மார்க்கத்தில் காற்றை சேகரித்து வைக்கவேண்டும். ஸப்மரீன் வேலைக்காரர் ஒவ்வொருவரிடமும் 'ப்யூரிபையர்' என்று சொல்லப்படும் உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு சிறிய தொட்டியிருக்கும். அதில் 'ஆக்ஸிலித்' என்றமருந்து நிறைந்திருப்பதால், அவர் மூச்சுவிடும் கரியமலவாயு ஆக்ஸிலித்தோடு சேர்ந்து ப்ராணவாயுவை விடுவிக்கும். அந்த ப்ராணவாயுவை திரும்பவும் திரும்பவும் உள்ளே யிழுக்கலாம். இம்மாதிரி ஸப்மரீனில் உள்ளவர்கள் மேலே வராமல் 24-மணி நேரம் வரையில் ஜலத்துக்குள் ஸுகமாய் ஜீவித்திருக்கலாம். பேர்பெற்ற எடிஸன் என்னும் சாஸ்த்ரி ஸப்மரீன் ஒரு மாஸம் வரையில் தண்ணீரில் மூழ்கியிருக்கும்படி ஒரு கருவியைக்கண்டுபிடித்திருக்கிறாராம். அது ஸமுத்ரத்திலிருந்து ப்ராணவாயுவை மீன் இழுப்பதுபோல் க்ரஹித்து ஸப்மரீனுக்குள் உள்ளவர்களுக்கு மூச்சுவிட உபயோகிக்கக் கொடுக்கிறதாம்.

இசைகேடாய் ஜலத்தில்மூழ்கின கப்பல் மேலே வரமுடியாமற்போனால், கப்பலிலிருப்பவர்கள் மேலேவந்து தப்பித்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு 'ஜாக்கெட்' அதாவது சொக்காயும், ஒரு 'ஹெல்மெட்', அதாவது கழுத்துக்குமேல் மூடியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் போட்டுக்கொண்டுவிட்டால் ஜலத்தில் மூழ்கிப்போய்விடாமல் மிதந்து மேலே வந்துவிடலாம்.

ஸப்மரீன் ஜலத்துக்குள்ளிருக்கும்போது, எவ்விதம் மேலே நடக்கும் ஸங்கதிகளை அறிவது? அதன்மேல் பக்கத்தில் நீண்ட கோல் ஒன்று இருக்கிறதென்று சொன்னோமல்லவா? அதற்கு 'பெரிஸ்கோப்' என்றுபெயர். பெரிஸ்கோப்பின் நுனியில் பெரிய கண்ணாடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. மேலே நடக்கும் செய்கைகள் அந்தக் கண்ணாடிகளில் ப்ரதிபிம்பிக்கப்பட்டு, அந்த ப்ரதிபிம்பங்கள் சிறிய குழாய்க்குள்ளாக வந்து கப்பலின் உள்ளேயிருக்கும் ஒரு அறையில் விழும். அதிலிருந்து மேல்நடமாட்டங்களை ஸுலபமாய் அறியலாம்.

தற்காலத்து ஸப்மரீன்களெல்லாம், 200 முதல் 1000 டன்வரை கனமுள்ளவையாயிருக்கின்றன. ஸப்மரீன்களில் பீரங்கிகளும், வையர்லெஸ் டெலிக்ராப்பும் அதாவது கம்பியில்லாத்தந்தியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அநேகம் டார்பிடோ ட்யூப்களும் இருக்கும். ஸப்மரீன் தண்ணீரில் மூழ்கியிருக்கும்போது பீரங்கிகள் இருப்பதே தெரியாது. இப்படி தண்ணீருக்குள் மூழ்கிக்கொண்டே போய் எதிரிப் போர்க் கப்பலினருகே சென்று டார்பிடோ ட்யூப்களை விடும். ஸப்மரீனின் முக்ய உபயோகம் இதுதான்.

ஆனால் இனிமேல் போகப்போக ஸப்மரீன்களால் கடல் யுத்தங்களில் அவ்வளவு ப்ரயோஜனம் உண்டாகாதென்று சில நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஏனென்றால் ஸப்மரீன்கள்

எதிர்த்து யுத்தம் செய்யும்படி நேர்ந்துவிட்டால், அவைகள் போர்க் கப்பல்களுடைய சக்திக்கு ஈடாகமாட்டா. இரண்டாவது, ஸப்மரீன் தண்ணீருக்குள்ளே அதிவேகமாய்ச் செல்வது கஷ்டம். தண்ணீரின் மேலே 20 மைல் போகலாம். ஸாதாரணமாய் ஸப்மரீன் ஜலத்திற்குள் 10 அல்லது 12 மைல்கள்தான் போகும். மூன்றாவது, தண்ணீருக்குள் ஸப்மரீன் கப்பலை வேண்டிய மார்க்கத்தில் செலுத்துவது கஷ்டம். நாலாவது, ஸப்மரீனின் தலைவன் எப்பொழுதும் போர்க் கப்பல்களைத்தேடி பின்தொடர்ந்து போகவேண்டும். இப்படிப் பின்தொடர்ந்தால், யுத்தக்கப்பல்கள் முழு வேகத்தில் அங்குமிங்கும் ஓடி ஸப்மரீன்களுக்கு அகப்படாமல் தப்பிவிடும். ஐந்தாவது, வேறு போர்க்கப்பல்கள் ஸப்மரீன்களைப் பின்தொடர்ந்து நாசஞ்செய்யாமலும் ஸப்மரீன் தலைவன் ஜாக்ரதையா யிருக்கவேண்டும். அவனுக்கு ஸாமர்த்யம் அவசியம். ஆறாவது, சில ஸமயங்களில் ஜலத்தின்மேல் வந்து, அதன் தலைவன் நடவடிக்கைகளை அறிவான். தவிர, எதிரிக்கப்பலைத்தாக்கி டார்பிடோவைவிட ஸப்மரீன் மேலேவந்தே தீரவேண்டும். இப்படி மேலேவந்து தலையைக்காட்டினால், எதிரி போர்க்கப்பல்கள் ஸப்மரீனை தாக்கி நாசம் செய்துவிடக்கூடும். ஏழாவது, ஸப்மரீனின் பெரிஸ்கோப் உடைந்தால், எதிரிகள் கடலிலிருந்து போகும்வரையில் அது ஜலத்தில் மூழ்கியேயிருக்கவேண்டும். பெரிஸ்கோப் இல்லாவிடில், ஸப்மரீன் உபயோகமில்லை.

## SUBMARINE MINES.

## கடல் சுரங்கங்கள்.

சத்ருக்களை நாசம் செய்ய ஒரு தந்த்ரம் என்னவென்றால், ஸமுத்ரத்தில் சுரங்கமிடுவது. இதற்கென்றே ப்ரத்யேகமாய் கப்பல்கள் வைத்திருக்கிறார்கள்.

கடலில் இடும் சுரங்கங்கள் நம் நாட்டில்தங்கம் வெள்ளி முதலிய லோஹங்களை வெட்டியெடுக்க தரையில் சுரங்கம் தோண்டுவது போலல்ல. அலைகளில் மிதக்கும் சுரங்கம், தண்ணீரில் அமிழ்ந்து கிடக்கும் சுரங்கம், என இரண்டு வகைகள் உண்டு. கடல் சுரங்கத்தில் மூன்று பாகம் உண்டு. முதலாவது வெடிமருந்து நிரப்பி வைத்திருக்கும் பந்து போன்ற பெட்டி. இதன் பக்கத்தில் இதைத் தொட்டுக்கொண்டு 'லீவர்' என்று சொல்லப்பட்ட லோகத்தால் செய்யப்பட்ட கழி ஒன்று இருக்கும். இரண்டாவது இந்தப் பந்தின்கீழ் தொங்கவிட்டிருக்கும் ஸம சதுரமான பெட்டி. இதில் காற்று அடைக்கப்பட்டிருக்கிறது. ஸாதாரணமாய் ஒரு காற்றடைத்த பந்தை நீரில் போட்டால் அது மிதக்குமல்லவா? அதுபோலவே அந்த அறையில் காற்றடைத்துவைப்பதின் நோக்கம் சுரங்கம் கடலின் அடிவாரத்திற்குப் போய்விடாமல், கொஞ்சம் மேலாக மிதக்கும்படி செய்வதே. ஆனால் அந்தச் சுரங்கத்தை ஜலத்தின் பரப்பிலிருந்து சில அடிகள் தாழ மிதக்கும் படிசெய்ய, காற்றறையின் கீழ் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு கனத்தைத் தொங்க விடுவார்கள். இந்த கனமான பொருள்தான் மூன்றாவது பாகமாகும். ஒரு எதிரிக்கப்பல் விரைவாய் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். கடலின் மேலே பார்த்தால் சுரங்கம் ஒன்றும் இருப்பதே தெரியாது. அதனருகில் கப்பல் வந்தவுடன், கப்பலின் முன்னம் புறத்தின் கீழ்ப்பாகம் அந்த லீவரின் மேல் மோதலாம். உடனே சுரங்கம் பட்டாரென்று வெடித்து கப்பலை சில்லுசில்லாக ஆக்கிவிடும். இவ்வளவும் சுரங்கத்தில் மின்ஸாரக்கருவிகளை அடைத்து செய்யும் கார்யம்.

முதல் முதலாய் 1777-ம் வர்ஷத்தில் ஒரு அமெரிக்கா தேசத்தவர் சண்டையில் சுரங்கமிடும் விதத்தைக் கண்டுபிடித்தார். இதை



ப்ரதானமாய் அப்யாஸத்தில் கொண்டுவந்தவர் ராபர்ட் புல்டன். ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் போர்ட்ஆர்தர் என்ற துறைமுகத்தைக்காக்க ரொம்ப சுரங்கங்களையிடவே, அதனால் இருபக்கத்தாருக்கும் பெரும்பாலும் நாசம் விளைந்தது. துறைமுகங்களை அன்யர்கள் வந்து எதிர்க்காமல் பாதுகாக்க ஸாதாரணமாய் சுரங்கங்களை உபயோகிப்பது வழக்கம்.

நாம் விவரித்த சுரங்கம், கனம்கட்டிப் போட்டிருப்பதால், ஒரே இடத்திலேயே யிருக்கும். வேறு சில சுரங்கங்கள் இடம்விட்டு இடம் மாறிக்கொண்டேயிருக்கும். இவை மிகவும் அபாயகரமானவை. ஏனென்றால், அவை எவ்வெவ்விடமெல்லாம் போகுமென்று நாமறியோம். எந்த பாகத்தில் கப்பல்கள் இவைகளை மோதுமோ தெரியாது. வழக்கமாய் இம்மாதிரி சுரங்கங்களை துறைமுகத்திலிருந்து சில மைல்களுக்கப்பால் போட்டிருப்பார்கள். அங்கிருந்து கொஞ்சம் கிட்டத்தில், மேற்கூறிய மாதிரி ஒரே இடத்தில் நிற்கும் சுரங்கங்களை இடுவார்கள். இன்னம், வேறு விதச் சுரங்கம் போடுவதுமுண்டு. இது துறைமுகத்தோரமாய் கடலில் வைக்கப்படும். இந்தச் சுரங்கத்தை கரையிலிருந்துகொண்டே மின்ஸாரக் கம்பிகள்மூலமாய் வேண்டியபொழுது வெடிக்கும்படி செய்யலாம். எதிரியின் போர்க்கப்பல் மேல் சொன்ன இரண்டுவிதமான சுரங்கங்களையும் தாண்டி கரையை யணுகிவருவதைப் பார்த்தவுடன், துறைமுகத்தில் கடலோரத்தில் கிடக்கும் சுரங்கத்தை வெடிக்கச்செய்வார்கள். கரையில், அதற்காக வைத்திருக்கும் மின்ஸாரப்பொத்தானை அமிழ்த்தினால், உடனே அந்தச் சுரங்கம் வெடித்துவிடும். இந்தமாதிரிச் சுரங்கம், பொத்தானை அமிழ்த்தினாலொழிய வெடிக்காததினால், துறைமுகத்தி லுள்ளவர்களுக்குத் தெரியாமல் கப்பலுக்கு இவைகளால் நாசம்விளைவது அரிது. ஸ்நேகிதருடைய கப்பலோ அல்லது தன்னைச் சேர்ந்த கப்பலோ துறைமுகத்தின் அருகில் வந்தால் அதற்கு யாதொரு ஆபத்தும் நேரிடாது. சத்ரு வென்று அறிந்தாலொழிய பொத்தானைத் தொடமாட்டார்கள்.

சுரங்கம் என்ற வ்யாதி ஏற்படவே அதற்கு சிகித்ஸையும் ஏற்படலாயிற்று. ஸமுத்ரத்தில் கிடக்கும் சுரங்கத்தை வாரியெடுக்க 'ட்ராலர்ஸ்' என்ற கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவை கடலில்கிடக்கும் சுரங்கங்களைக் கண்டுபிடித்து, அவைகளை மீன் பிடிப்பதுபோல், வாரி யெடுத்துவிடும்; இல்லாவிடில், அவைகளின் எலக்ட்ரிக் கம்பியை அறுத்தாலும்போதும். இப்படிச்செய்வதில் ட்ராலர்களே நாசமாய்ப்போவதுமுண்டு. சுரங்கத்தை எதிர்ச் சுரங்கம்போட்டு வெடிக்கச் செய்துவிடுவதும் உண்டு.

## TORPEDOES.

## டார்பிடோக்கள்.

டார்பிடோ-போட்டுகள் என்றால் டார்பிடோக் குழாய்களைச் சுமந்து செல்லும் கப்பல்கள் என்று அர்த்தம்.

டார்பிடோ குழாய் (ட்யூப்) என்றால் என்ன? அதின் ப்ரயோஜனமும், அதில் வைத்திருக்கும் ஸாமான்களும் என்ன? இவைகளைக் கொஞ்சம் விஸ்தாரமாய் இங்கு யோசிப்போம்.

டார்பிடோ குழாய்களை ஸப்மரீனிலும், பெரிய போர்க் கப்பல்களிலும், யுத்த க்ரூஸர்களிலும், இதற்கென்று கட்டப்பட்ட டார்பிடோ-போட்டுகளிலும் கொண்டுபோவது வழக்கம்.

ரொம்ப காலத்திற்கு தரையில் போலவே கடலிலும் பீரங்கிகளின் உதவியினாலேயே யுத்தஞ்செய்து வந்தார்கள். ஆனால், எதிரிக் கப்பல்களைத் தாக்குவதற்கு பீரங்கியினால் சுடுவதைவிட மேலான உபாயம் ஏதாவது செய்ய

லாமாவென்று சாஸ்த்ர நிபுணர்கள் வெகு கவனத்துடன் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். அவர்களுடைய முக்ய எண்ணம் என்னவென்றால், ஒரு தூரமான விடத்திலிருந்து அதி வேகத்துடன் போகக்கூடிய ஒரு கருவியை விட்டு, அது பிற்பாடு மனிதனது உதவியில்லாமல் தானே விட்ட மார்க்கத்தில் போய் விரோதிக் கப்பலை தாக்கி வெடித்து அவைகளை நாசம் செய்யவேண்டுமென்பதே. இவ்விதமான ஒரு நூதன கருவியைக் கண்டுபிடிக்க ஆஸ்ட்ரியா கப்பல்படையின் தலைவராயிருந்த 'காப்டன் லூயி' என்பவரும், இங்க்லீஷ் தேசத்தவரான 'வொய்ட்ஹெட்' என்பவரும் சேர்ந்து ஆலோசித்தார்களாம். அதன் பயனாக 1866-ம் வருஷத்தில் வொய்ட்ஹெட் என்பவர் டார்பிடோவென்பதைக் கண்டுபிடித்தார். முதலில் அது ஒரு பருத்த குழாய்போலிருந்தது. அதன் குறுக்களவு 13-அங்குலமும், பளு 400-ராத்தலும், அதிலுள்ள வெடிமருந்தின் நிறை 35-ராத்தலும் இருந்தன. அதி வேகமாய்ச் சென்றால் ஸுமார் $9\frac{1}{2}$-மைல்தான் போகக்கூடும். மேலும் 656-அடிகளுக்குள் சத்ருவிருந்தால்தான் அந்த டார்பிடோ உபயோகப்படும்.

இந்தமாதிரி டார்பிடோவை முதல் முதலாக 1877-ம் வர்ஷத்தில் நடந்த தென் அமெரிக்கா போரில் உபயோகித்தார்களாம். அந்தச் சண்டையிலிருந்து இந்த டார்பிடோ அவ்வளவு சக்தியுடையதல்லவென்று எல்லாருக்கும் தென்பட்டது. ஆகையினால், அதன் உபயோகத்தை ஜாஸ்தியாக்க, அது போகும் தூரம், அதினுள் இருக்கும் வெடிமருந்தின் அளவு ஆகிய இவைகளையெல்லாம் அதிகரிக்க வேண்டுமென்ற ஆவலுடன் முயற்சித்து வந்தார்கள். மிகவும் கூர்மையான வேலைத்திறத்தினால், வொய்ட்ஹெட்டினது யந்த்ரம் எல்லா விதத்திலும் மேம்பட்டு, தற்காலம் கடல் யுத்தங்களில் அது இல்லாமல் முடியாதென அவ்வளவு உபயோகமான ஒரு நாசக்கருவியாய் விட்டது.

தற்காலத்து டார்பிடோக் குழாய்கள் எவ்விதமிருக்குமென்பதைச் சற்று பார்ப்போம்.

'டார்பிடோ' வென்பது கப்பலை யுடைக்கும் ஒரு யந்த்ரம். தோற்றத்திற்கு இரும்பினால் செய்த ஒரு பெரிய புகைச் சுருட்டைப்போலிருக்கும். டார்பிடோவில் ஏறக்குறைய 24-மாதிரிகள் உள்ளனவாம். எல்லாவற்றிலும் யுக்தி ஒரே மாதிரியானபோதிலும், வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு நிபுணர்களால் செய்யப்படுவனவாதலால், அவரவர்கள் புத்திக்கேற்றபடி வெவ்வேறு மாதிரியாய் அவைகள் இருக்கின்றன. அவைகள், ஒவ்வொன்றும், ஸாதாரணமாய் 14-அடி முதல் 19-அடிவரையில் நீளமுள்ளன. அவைகளின் குறுக்களவோ, 14-அங்குலம் முதல் 18- அங்குலம் வரையில் இருக்கும்;

டார்பிடோவின் உள்பாகம் குறுக்கே தகடுகளால் தடுக்கப்பட்டு ஐந்து அறைகளாக அமைக்கப்பட்டிருக்கிறது. முகத்தின் கூர்மையான முனைப்பாகமே இதன் முதல் அறை. இந்த அறை டார்பிடோவின் மொத்த நீளத்தில் ஆறில் ஒரு பாகமுள்ளது. இதில்தான் வெடிமருந்தை அடைப்பது. ஸாதாரண இரும்பினால் செய்தால், இரும்பைக் கடல்நீர் அரித்து தின்றுவிடுமாதலால், இந்த அறை "பாஸ்பர்-ப்ரான்ஸ்" என்று சொல்லப்பட்ட ஒரு மாதிரி கலப்பு லோஹத்தினால் செய்யப்பட்டது. இவ்வறையில் ஸுமார் 300-ராத்தல் 'கன்-காட்டன்' என்று சொல்லப்பட்ட வெடிமருந்தை நனைத்து அடைத்திருப்பார்கள். இந்த அறையின் நடுவில் 'ப்ரைமிங்-ட்யூப்' என்று சொல்லப்பட்ட ஒரு சிறிய இரும்புக் குழாய் உள்ளே போடப்பட்டிருக்கிறது. இந்த சிறிய குழாயினுள் நன்றாய் உலர்ந்த 'கன்-காட்டனை'யே வைத்திருக்கிறார்கள். வெளியறையில் அடைத்திருக்கப்பட்ட நனைந்த வெடிமருந்தை வெடிக்கச் செய்ய உலர்ந்த 'கன்-காட்டனை' உபயோகிக்கிறார்கள். இது போதாமல், சிறிய குழாய்க்குள் முன்பக்கத்தில் வெகு லேசாய் வெடிக்கக்கூடிய "பல்மினேட் அவ் மெர்க்குரி' என்று சொல்லப்பட்ட ஒரு வெடிமருந்து இருக்கும். டார்பிடோவின் ஒருபாகத்தில் கூர்மையான முனை ஒன்று இருக்கும், அதுவே முதலாய் தடுக்குப் வஸ்துவின்மேல் போய் மோதும். மோதும்பொழுது, அந்த விசையினால், அவ்விடம் வைத்திருக்கப்பட்ட ஒரு இரும்புக் கம்பி அமிழ்த்தி உள்ளே தள்ளப்படும். உடனே "பல்மினேட் அவ் மெர்க்குரி" வெடிக்கும். அதினால், ப்ரைமிங் ட்யூபிலிருக்கும் உலர்ந்த 'கன்-காட்டன்' வெடிக்கும். இது பெரிய அறையிலுள்ள நனைந்த வெடிமருந்தை வெடிக்கச்செய்யும். இப்படி டார்பிடோ வெடித்து தாக்கித் கப்பலில் பெரிய ஓட்டையை உண்டாக்கிவிடும். அதனால் எதிரிக் கப்பல் மூழ்கியோ அல்லது சண்டைக்கு லாயக்கில்லாமலோ போய்விடும்.

முதல் அறைக்கு அடுத்தாற்போல இருக்கும் இரண்டாவது அறையில் அமிழ்த்தின காற்றை யடைப்பார்கள். மூன்றாவது அறையை "பாலன்ஸ் சேம்பர்" என்பார்கள். அதாவது, டார்பிடோ ஆடாமலிருப்பதற்கான ஏற்பாடு. நான்காவதுதான் என்ஜின் (யந்த்ரங்கள் வைத்திருக்கப்படும்) அறை. ஐந்தாவது, அறை டார்பிடோ மிதப்பதற்கான அமைப்பு. பின்பு கடைசியில் முன்னால் தள்ளும் காற்றாடி போன்ற யந்த்ரம் ஒன்று இருக்கிறது.

டார்பிடோ 1230- பவுண்டு கனமுள்ளது. மணி ஒன்றுக்கு ஸுமார் 86-மைல் ஓடும். ஒரு டார்பிடோ ட்யூப் 200-முதல் 500-பவுன் விலையிருக்கலாம்.

போர்க்கப்பல்களுக்கு டார்பிடோவே மிகவும் பலமான எதிரி. இவைகளை போர்க்கப்பல்களிலிருந்தோ, அல்லது அவைகளைச் சுமந்துபோவதற்கென்றே கட்டப்பட்ட டார்பிடோப் படகுகளிலிருந்தோ, டிஸ்ட்ராயர்களிலிருந்தோ, அல்லது ஸப்மரீன்களிலிருந்தோ விட்டுவிட்டால், அவைகள் துரிதமாய் ஓடி எதிரிக்கப்பலை மோதி உடைத்து நாசப்படுத்திவிடும்.

டார்பிடோவை மூன்றுவிதமாக விடுவதுண்டு. முதலாவது, போர்க்கப்பலினுடையவோ அல்லது க்ரூஸர்களினுடையவோ தண்ணீரினுள்ளிருக்கும் 'ஹல்' என்ற அடிபாகத்திற்குள்ளாக வைத்திருக்கப்பட்ட ட்யூப் (குழாய்) வழியாய் டார்பிடோவை விடுவதுண்டு. இவ்விதம் விட்டால், ஸுமார் பதினைந்து அடி தண்ணீர்க்குள்ளிருந்து விடவேண்டிவரும். இரண்டாவது, 'டெக்' என்ற கப்பல்களின் மேல் பாகத்தில் இதற்கென்று அமைத்திருக்கப்பட்ட "லாஞ்சிங் ட்யூப்" என்ற குழாய் வழியாய் விடலாம். ஸாதாரணமாய், டார்பிடோக்களை டிஸ்ட்ராயர்களில் கொண்டுபோனால் 'டெக்' கிலிருந்தே விடுவது வழக்கம். மூன்றாவது, இவைகளை ஸப்மரீன் முன்பாகத்திலிருந்தும் விடக்கூடும். தண்ணீருக்குள்ளாக விட்டால், அது மணி ஒன்றுக்கு 17-மைலுக்குமேல் போகாது.

தற்காலத்தில் அநேகமாய் தண்ணீருக்கு மேலிருந்தே விடுவது வழக்கம். இப்படி விட்டதும் அது தண்ணீரில் மூழ்குகிறது. அப்பொழுது அதன் என்ஜின் வேலை செய்யத் தொடங்கி, குறிப்பிட்ட ஆழத்தில் விரைவாய் ஓடி எதிரிக் கப்பலை உடைக்கும்.

டார்பிடோக்களை ப்ரயோகிப்பது ரகஸ்யமாயும் சத்ருவின் கண்ணுக்குத் தெரியாமலுமிருப்பதனால் தான், கடல் சண்டையில் அவைகள் எதிரிகளைத் தாக்க ரொம்ப உபயோகப்படுகின்றன. இப்படி ரகஸ்யமாயும் கண்ணுக்குத் தென்படாமலும் டார்ப்பிடோக்களை விடுவதில், வேறுவித போர்க்கப்பல்களிலிரு

ந்து விடுவதைவிட ஸப்மரீனிலிருந்து விடுவதே தகுந்த பலனை அளிக்கும். ஏனெனில், பெரிய போர்க் கப்பல்கள், க்ரூஸர்கள் ஆகிய இவைகளிலிருந்து டார்பிடோவை ப்ரயோகஞ்செய்தல் எப்பொழுதும் ஸாத்யமாகாது. கடல் சண்டை ஆரம்பிக்கும்பொழுது, இரு பக்கத்துக் கப்பல்களும் தூரத்திலிருந்து கொண்டு முதலில் பீரங்கிகளைச் சுட்டு சண்டை செய்யும். பீரங்கி கர்ஜ்ஜனை கொஞ்சநேரம் ஆரவாரித்து, ஒருபக்கம் கொஞ்சம் சளைத்து பீரங்கியின் ஓசை அடங்கியதின் பின்னரே, சத்ருவை அணுகி அதன்மேல் டார்பிடோவை ப்ரயோகிக்கலாம். மேலும், டிஸ்ட்ராயர்களும் ராத்ரி காலத்திலோ, அல்லது ஆகாசம் மூடுபனியால் மூடப்பட்டிருக்கும் பொழுதோதான் எதிரியைத் தாக்குதல் ஸாத்யம். ஆகையால், டிஸ்ட்ராயர்களிலிருந்துகூட எப்பொழுதும் டார்பிடோக்களை விடுதல் அரிது. ஆனால், ஸப்மரீன்கள் இரவும் பகலும் வேண்டியபோதெல்லாம் யாருக்கும் தெரியாமல் சத்ருவைத் தாக்கக் கூடுமாதலால், அவைகளிலிருந்து டார்பிடோக்களை விடுதலே எப்பொழுதும் உத்தமம். இதுகாறும் ஐரோப்பிய யுத்தத்தில் நடந்த சிறு கடல்சண்டைகளின் அனுபவத்தால், ஸப்மரீனே இக்கார்யத்திற்கு அதிக பலன் கொடுக்கக்கூடியதென்று தெரியவருகிறது.

ஸாதாரணமாய், விடும் டார்பிடோக்களெல்லாம் சத்ருவைத் தாக்கி ப்ரயோஜனத்தை விளைவிக்குமா வென்பது, அநேகமாய் சத்ருவுக்கும் டார்பிடோவை விடும் கப்பலுக்குமுள்ள தூரத்தைப் பொறுத்தது. எவ்வளவுக்கெவ்வளவு தூரம் குறைச்சலோ அவ்வளவுக்கவ்வளவு டார்பிடோவின் குறியும் சரியாய் இருக்கும். ஆனதினால், எந்த ஸமயத்திலும் ஸப்மரீனிலிருந்து தாக்குதல் வேண்டுமானால், ஸப்மரீனை கூடியவளவு சத்ருவின் அருகில் தெரியாமல் கொண்டு செல்வது நலம்.

நல்ல ப்ரிட்டிஷ் டார்பிடோ புறப்படும் பொழுது மணி ஒன்றுக்கு 4[illegible]-மைல் வேகத்துடன் ஆரம்பித்து ஸுமார் ஆறுமைல் தூரம் ஓடும்.

டார்பிடோக்கள் எதிரிக் கப்பல்களை வந்து தாக்கி அவைகளை நாசப்படுத்தாமல் தடுக்க முக்யமாய் இரண்டு வழிகள் இருக்கின்றன. டார்பிடோவை எதிரிக் கப்பலின் கிட்டவந்து விடவேண்டுமாதலால், அதைச் சுமந்துவரும் கப்பலை கிட்ட அணுகாமல் வெகுதூரம் குண்டுகளை எறியக்கூடிய பீரங்கிகளைச் சுடுவது ஒருவழி. இரண்டாவது, டார்பிடோ ட்யூப்கள் வந்து கப்பலின் பக்கத்தில் மோதினால், கப்பல் உடைந்து சிதறிப் போகும். இவ்விதமான ட்யூப்கள் கிட்ட வருவதைப் பார்த்தால், தக்ஷணமே அவைகளை பிடிக்க ஆற்று முடைசலுக்குப்போடும் குதிரை மரங்கள் போன்ற சில கருவிகளை கப்பலின் பக்கத்தில் விட்டுவிடுவார்கள். விட்டவுடன் டார்பிடோ ட்யூப்கள் அவைகளுக்குள் சிக்கிக்கொண்டு வெடித்து கப்பலுக்கு ஒரு சேதமும் உண்டாக்கமுடியாமல் போகும்.

டார்பிடோ கடல் யுத்தத்தில் ஒரு முக்ய கருவியாக, பலத்திலும், வேகத்திலும், சக்தியிலும் அதிகரித்து வரவர, கப்பல் பீரங்கிகளையும் வெகு பலமாய்க் கட்டிக்கொண்டு வருகிறார்கள். தற்காலம் பீரங்கிகளிலிருந்து குண்டுகள் வெகுதூரம் போகின்றன. ஆனதினால் சண்டையில் இருகக்ஷிக் கப்பல்களும் லேசில் அணுகா. இப்படியான நிலையில், டார்பிடோக்களை இன்னும் சீர்திருத்தி ரொம்ப வேகத்துடன் அதிகதூரம் போகும்படியாகச் செய்ய அநேகர் எத்தனித்து வருகிறார்கள்.



## THE NAVAL STRENGTH OF THE BELLIGERENTS.

## யுத்தம் செய்பவர்களின் கப்பல்படை பலம்.

யுத்தத்தில் உபயோகப்படும் முக்யமான மாதிரிக் கப்பல்களையெல்லாம் நாம் விவரித்தோம். இனி, ஒவ்வொரு தேசத்தாருக்கும் ஒவ்வொருமாதிரியிலும் எத்தனை கப்பல்கள் இருக்கின்றன வென்பதையும், அவைகளின் பலத்தையும் பார்ப்போம்.

அடியில்கண்ட அட்டவணையில் குறித்திருக்கும் கணக்குகள் 1914௵ ஸெப்டம்பர௴ முதல்தேதியிலுள்ள நிலைமையைக் காட்டுகின்றன.

| | Britain ப்ரிட்டன் | Germany ஜெர்மனி | Austria-Hungary ஆஸ்ட்ரியா-ஹங்கேரி | France ப்ரான்ஸ் | Russia ரஷ்யா |
|---|---|---|---|---|---|
| Modern Battleships. புதுமாதிரி யுத்தக்கப்பல்கள். | 34 | 20 | 4 | 18 | 9 |
| Older Battleships. பழையதினுஸு போர்க்கப்பல்கள். | 38 | 20 | 9 | 13 | 6 |
| Battle Cruisers. யுத்த க்ரூஸர்கள். | 10 | 7 | ... | ... | 4 |
| First-class Cruisers. முதல்தர க்ரூஸர்கள். | 35 | 9 | 1 | 18 | 6 |
| Light Cruisers. லேசான க்ரூஸர்கள். | 88 | 40 | 9 | 12 | 16 |
| Destroyers. டிஸ்ட்ராயர்கள். | 238 | 152 | 19 | 87 | 141 |
| Torpedo-Boats. (1st & 2nd class) டார்பிடோ-போட்டுகள். (முதல்தரமும், இரண்டாம் தரமும் சேர்ந்து.) | 70 | 47 | 85 | 153 | 25 |
| Submarine-Boats. ஸப்மரீன்-கப்பல்கள். | 96 | 39 | 14 | 93 | 43 |

ஜப்பான் கப்பற்படை.

| | |
|---|---|
| யுத்தக் கப்பல்கள் ... ... | 20 |
| க்ரூஸர்கள் ... ... ... | 37 |
| டிஸ்ட்ராயர்கள் ... ... ... | 59 |
| டார்பிடோ-போட்டுகள் ... ... | 60 |
| ஸப்மரீன்-கப்பல்கள் ... ... | 13 |

துருக்கியின் கப்பற்படை. *

| | |
|---|---|
| யுத்தக் கப்பல்கள் ... ... | 4 |
| க்ரூஸர்கள் ... ... ... | 2 |
| டிஸ்ட்ராயர்கள் ... ... ... | 8 |
| டார்பிடோ-போட்டுகள் ... | 15 |
| பீரங்கி-போட்டுகள் ... ... | 15 |

மேல் வரைந்திருக்கப்பட்ட அட்டவணையில் ஒவ்வொரு தேசத்திலும் கட்டி முடிந்த பலமாதிரிக் கப்பல்களையும், கட்டப்பட்டு வருகிறவைகளையும் சேர்த்து மொத்தமாக கொடுத்திருக்கிறோம்.

புதுமாதிரி யுத்த கப்பல்களில், மேல்கொடுத்த கணக்குகளில் யுத்தத்திற்கு தயாராகாதவைகள்:—ப்ரிட்டனுக்கு 10; ஜெர்மனிக்கு 7; ரஷ்யாவுக்கு 7; ப்ரான்ஸுக்கு 8. இவைகளில் சென்ற டிஸம்பர் மாஸம் 1-ந்தேதிக்குள்

[* துருக்கியின் கப்பற்படையில், 'கோபன்' என்ற யுத்தக்கப்பலையும், 'ப்ரெஸ்லா' வென்ற பெரிய க்ரூஸரையும் சேர்க்கவில்லை. இப்பொழுது இவைகள் துருக்கியின் வசமே இருக்கின்றன.]

முடிந்திருக்கக்கூடியவை :—ப்ரிட்டனுக்கு 2; ஜெர்மனிக்கு 3; 1915-ம் வர்ஷம் மார்ச்சுமாஸம் 1-ம் தேதிக்குள் கட்டி முடியக்கூடியவை:—ப்ரிட்டனுக்கு 3; ஜெர்மனிக்கு 1; ரஷ்யாவுக்கு 2; ப்ரான்ஸுக்கு 2.

யுத்த க்ரூஸர்களில் தயாராகாதவைகள், ஜெர்மனிக்கு 3-ம், ரஷ்யாவுக்கு 4-ம்.

லேசான க்ரூஸர்களில், தயாராகாதவைகள்; ப்ரிட்டனுக்கு 9; ஜெர்மனிக்கு 6; ஆஸ்ட்ரியாவுக்கு 3; ரஷ்யாவுக்கு 8. இவைகளில் சென்ற டிஸம்பர்மாஸம் 1-ந் தேதிக்குள் முடிந்திருக்கக்கூடியவை:—ஜெர்மனிக்கு 2. ஆஸ்ட்ரியாவுக்கு 2. 1915-ம் வர்ஷம் மார்ச்சு மாஸம் 1-ம் தேதிக்குள் கட்டி முடியக்கூடியவை:—ப்ரிட்டனுக்கு 2; ஜெர்மனிக்கு 2; ஆஸ்ட்ரியாவுக்கு 1.

க்ரேட் ப்ரிட்டன், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ப்ரான்ஸ், ரஷ்யா ஆகிய இந்த தேசங்களுக்கிருக்கும் டிஸ்ட்ராயர்கள், டார்பிடோ போட்டுகள், ஸப்மரீன் கப்பல்கள் ஆகிய இவைகளில் கட்டி முடிந்தவை, கட்டப்பட்டு வருபவை, இவைகளின் மொத்தம் முதலியவைகளைக் காட்டும் கணக்கு.

| | க்ரேட் ப்ரிட்டன். | | | ஜெர்மனி. | | | ஆஸ்ட்ரியா. | | | ப்ரான்ஸ். | | | ரஷ்யா. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டி முடிந்தவை. | கட்டப்பட்டு வருபவை. | மொத்தம். | கட்டி முடிந்தவை. | கட்டப்பட்டு வருபவை. | மொத்தம். | கட்டி முடிந்தவை. | கட்டப்பட்டு வருபவை. | மொத்தம். | கட்டி முடிந்தவை. | கட்டப்பட்டு வருபவை. | மொத்தம். | கட்டி முடிந்தவை. | கட்டப்பட்டு வருபவை. | மொத்தம். |
| டிஸ்ட்ராயர்கள் ... | 218 | 20 | 238 | 142 | 10 | 152 | 19 | ..... | 19 | 83 | 4 | 87 | 105 | 36 | 141 |
| முதல்தரமும், இரண்டாந்தரமும் சேர்ந்த டார்பிடோ-போட்டுகள்... | 70 | ... | 70 | 47 | ... | 47 | 58 | 27 | 85 | 153 | ..... | 153 | 25 | ... | 25 |
| ஸப்மரீன்-கப்பல்கள் ... | 76 | 20 | 96 | 27 | 12 | 39 | 10 | 4 | 14 | 70 | 23 | 93 | 25 | 18 | 43 |

## COMPARATIVE NAVAL STRENGTH.

## யுத்தக்கக்ஷிகளினுடைய கப்பல்படையின் தாரதம்யம்.

| கப்பல் வகைகள். | ஸ்நேஹராஜ்யங்கள். | சத்ருக்கள். |
|---|---|---|
| | ப்ரிட்டன், ப்ரான்ஸ், ரஷ்யா, ஜப்பான். | ஜெர்மனி, ஆஸ்ட்ரியா-ஹங்கேரி, துருக்கி. |
| யுத்தக்கப்பல்கள் ... ... | 138 | 57 |
| க்ரூஸர்கள் (எல்லாமாதிரியும்) | 226 | 68 |
| டிஸ்ட்ராயர்கள் ... ... | 525 | 179 |
| டார்பிடோ-போட்டுகள் ... | 308 | 147 |
| ஸப்மரீன்-போட்டுகள் ... | 245 | 53 |
| மொத்தம் ... | 1,442 | 504 |



## ADMINISTRATION OF THE NAVY.

## கப்பல் படையின் நிர்வாகம்.

### இங்க்லீஷ் கப்பல் படை.

பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே, இங்க்லீஷ்காரருக்கு எல்லா ராஜ்யங்களைக் காட்டிலும் அதிகம் போர்க்கப்பல்கள் உண்டு. இங்க்லண்ட் தேசத்து சக்ரவர்த்தியே பூலோகத்தில் பெரும்பாகம் கடல்களை ஆண்டுவருகிறார். எந்த ஜாதிக்காரரும் ப்ரிட்டிஷாரை கடலில் யுத்தம்செய்து தோற்கடித்தது இதுவரையில் கிடையாது. ஆகையினால் இங்க்லண்டை கடல்களுக்கு ராணி (அதிபதி) யென்று சொல்லுவது வழக்கம். ப்ரிட்டிஷாரது யுத்தக் கப்பல்கள் 18,000 முதல் 25,000 டன் வரையில் கனமுள்ளன. அவைகளில் இருக்கும் பெரிய பீரங்கிகள் இப்பொழுது அனேகமாய் $13\frac{1}{2}$, 14, 15 அங்குலம் குறுக்களவுள்ளவை. பீரங்கிகளில் பெரியவை இங்க்லண்டிற்கே ஜாஸ்தி. முதல்தர இங்க்லீஷ் கப்பல்கள் மணிக்கு ஸுமார் 25 'நாட்' அதாவது $28\frac{1}{2}$-மைல் ஓடும். 15 அங்குலம் குறுக்களவுள்ள பீரங்கி 98·6 டன் பளுவிருக்கும். அதினின்று வரும் குண்டோ 19·25 ராத்தல் நிறையிருக்கும். 6 மைல் தூரத்துக்குள் சுட இந்த பீரங்கியைவிட அதிகமாக நாசப் படுத்தக்கூடியது வேறொன்றுமில்லை. ஒரு யுத்தக் கப்பலில் பெரிய பீரங்கிகளில் பத்தும் சிறிய பீரங்கிகளில் 16 முதல் 20 வரையிலும் இருக்கும்.

கப்பல்களை இங்க்லீஷ்காரர்கள் 'ஹோம் ப்ளீட்', 'கிழக்கு ப்ளீட்' என்று இரண்டுபிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். 'ப்ளீட்'என்றால் கப்பல் கூட்டம் என்று அர்த்தம். ஒரு ப்ளீட்டில் ஸுமார் 8 யுத்தக் கப்பல்களும், 8 க்ரூஸர்களும், 22 டிஸ்ட்ராயர்களும், இன்னும் சுரங்க மிடும் கப்பல்கள், சுரங்கம் வாரும் கப்பல்கள், ஸப்மரீன் கப்பல்கள் ஆகிய இவைகளும் அடங்கி யிருக்கும். ஹோம்ப்ளீட்டில், மூன்று உள்பிரிவுகள் உள. அதில், முதலாவது உள்பிரிவில் நான்கு 'ஸ்க்வாடரன்' (கூட்டங்கள்) இருக்கின்றன. இரண்டாவதில், இரண்டு ஸ்க்வாடரன்களும் மூன்றாவதில் இரண்டு ஸ்க்வாட்ரன்களும் இருக்கின்றன. மூன்றாவதில், ப்ளோட்டிலாக்கள், ஸப்மரீன்கள், மெடிட்டரேனியன் கூட்டம் இவைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கிழக்கு ப்ளீட்டானது கிழக்கு இந்தியா ஸ்க்வாட்ரன், சீனா ஸ்க்வாட்ரன், ஆஸ்ட்ரேலியா ஸ்க்வாட்ரன், இன்னும் இரண்டுபிரிவுகள், ஆக ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

'ஹோம் ப்ளீட்'டின் முதல்பிரிவு எப்பொழுதும்சண்டைக்குத் தயாராக விருக்கும். இரண்டாவதோ, 24 மணி நேரத்தில் தயாராகிவிடும். கிழக்கு ப்ளீட்டில் சில வங்காளக்குடாக்கடலிலும், வடக்கு இந்திய ஸமுத்ரத்திலும், பெர்ஷியன் கடலிலும் இருக்கின்றன. சைனா டிவிஷனே, ஸிங்கப்பூர், ஜப்பான் முதலிய விடங்களில் இருக்கின்றன. ஆப்ரிக்காவிலும் சில க்ரூஸர்கள் இருக்கின்றன.

ப்ரிட்டிஷ் கப்பற் படைக்குத் தலைவர் "பஸ்டு லார்ட் ஆவ் தி அட்மிரல்டி." என்ற கப்பல்படை மந்த்ரியாவர். இவரே கப்பல் படையைப் பற்றிய ஸகல விஷயங்களுக்கும் ஜவாப்தாரி.

### ஜேர்மன் கப்பல் படை.

ஜெர்மனி தேசத்து கப்பல் படைக்கு அதன் சக்ரவர்த்தியே முக்யத் தலைவர். கப்பலில் வேலை செய்பவர் எல்லோரும் அவரிடம் நேரே போய் ஸத்யம்செய்து வேலை வாங்கிக் கொள்ள வேண்டுமாம். ஆனால், அவைகளின் செலவு கணக்கு, நியமனம் முதலியவைகளைப் பார்ப்பதற்கு "இம்பீரியல் நேவி ஆபீஸ்" "நாவல் காபினெட்" "அட்மிரால்டி ஸ்டாப்" என்று

மூன்று கவுன்ஸில்கள் இருக்கின்றன. அவைகளில் "இம்பீரியல் நேவி ஆபீஸ்" தான் கப்பல் படையைத் தயாரிப்பதற்கு வேண்டிய பணத்தைச் செலவுசெய்து வித்தப்படுத்தும். 'நேவல் காபினெட்'டின் வேலை ஆட்களை நியமிப்பதும், அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பதும். "அட்மிரல்டி ஸ்டாப்" என்பது ஒரு ஆலோசனை ஸங்கம்.

ஜெர்மானியர்களுடைய கப்பல்கள் பால்டிக் கடலிலும் வடகடலிலும் இருக்கின்றன. ப்ரதான துறைமுகங்கள் பால்டிக்கடலில் "கீல்" என்பதும், வடகடலில் "விலெம்ஸ்ஹேவன்" என்பதும். பால்டிக் கடலையும் வடகடலையும் சேர்ப்பதற்காக 'கீல் கனால்' என்ற ஒரு பெரிய கால்வாய் வெட்டியிருக்கிறார்கள். இதில் அதிசயிக்கத்தக்க வேலைப்பாடு அமைந்திருப்பதுமாத்ரமல்லாமல், ஒரே ஜெர்மானிய போர்க்கப்பல் இரண்டு கடல்களிலும் அங்குமிங்கும் ஓடி இரண்டு பக்கத்திலும் எதிரிகளைத் தாக்க முடியும். இந்த கீல் கனால் தற்போது யுத்தம்செய்துவரும் கெய்ஸரினால் வெட்டப்பட்டது. ஜெர்மானிய கடல்களில் சத்ருக்கள் மடமடவென்று ஸுலபமாய் வந்து விடாமலிருக்க, கணக்கற்ற சுரங்கங்களிடப்பட்டிருக்கின்றன. பால்டிக் கடலின் வடகிழக்கு கரையெல்லாம் ரஷ்யாவைச் சேர்ந்தது. ரஷ்யர்கள் அங்கு ஒரு கப்பல் கூட்டம் வைத்திருக்கிறார்கள். சத்ருக்கள் வந்து எதிர்க்கா வண்ணம் எந்தவிதத்திலெல்லாம் தடுக்க முயலலாமோ, அந்த விதங்களிலெல்லாம் ஜெர்மானியர் முயற்சித்திருக்கிறார்கள். ஜெர்மானிய கப்பல் படைகள் பால்டிக் கடலுக்குள் தங்கி இருக்குமளவும், யாருமே அவ்விடம்போய் வெற்றி பெறுவது கஷ்டம். ஆனால், கப்பல் ஸைன்யங்கள் வடகடலில் வெளியே வந்து விட்டால், ப்ரிட்டிஷார் அவைகளோடு ஸுலபமாய் சண்டை செய்யக்கூடும்.

ஜெர்மனியில், 20 வயதிற்கப்புறம் சிலர் கட்டாயமாய் கொஞ்ச காலத்திற்கு கடல் படையில் வேலை பார்க்கவேண்டும். சிலர் 15 வயதுக்குமேல் ஒரு வர்ஷகாலம் வேலைபார்ப்பார்கள். வேறுசிலர் 17-க்கு மேல் மூன்று வருஷம் கப்பலில் இருப்பார்கள். 15-க்கு மேல், 18-க்குள்ளாக மற்று சிலர் 9 வருஷம் வேலை செய்யவேண்டியது. மொத்தத்தில் 73,000 ஜனங்கள் கப்பல் படையில் அமர்ந்திருக்கிறார்கள். ரிஸர்விலிருப்பவர்கள் 110,000 பேர்கள்.

சென்றவர்ஷம் கப்பற் படையை திடப்படுத்த 240 லக்ஷம் பவுன் செலவு செய்யப்பட்டது.

ஜெர்மனியின் யுத்தக்கப்பல்கள் எப்பொழுதும் யுத்தத்திற்கு தயாராயிருக்கும்.

## ப்ரெஞ்ச் கப்பல்படை.

ப்ரான்ஸ் தேசத்து கப்பல்படையின் அதிபதிக்கு "மினிஸ்டர் ஆப் மரீன்" என்று பெயர். அதாவது கப்பல்படையின் மந்த்ரியென்று அர்த்தம். இவருக்கு ஸமீபத்தில் ஒரு ஆலோசனை ஸபையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் கப்பல்படை விஷயங்களில் கைதேர்ந்தவர்கள் நான்குபேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் கப்பல்படை விஷயங்களில் ஒவ்வொருபாகத்தைப் பார்த்துவருகிறார்கள். ப்ரான்ஸ்தேசத்தின் கடல்கரைகளை ஐந்து பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகத்துக்கும் 'வைஸ் அட்மிரல்' என்ற ஒரு கப்பல் அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். இந்த வைஸ்-அட்மிரல்கள் அவரவருடைய கடல் கரைகளை பாதுகாத்து வரவேண்டும்.

ப்ரான்ஸ் தேசத்துக்கப்பல்களில் பெரும் பாகம் மத்யதரைக்கடலிலேயே இருக்கிறது. இங்க்லீஷ் சானலில் சில க்ரூஸர்களும், டார்பிடோ கப்பல்களும், ஸப்மரீன்களும் இருக்கின்றன. சில கப்பல்கள் ப்ரான்ஸுக்கு



ஸொந்தமான கொச்சின் சைனாவில் இருக்கின்றன.

ப்ரெஞ்ச் கப்பல்படையி லுள்ளவர்களில், சிலர் கட்டாயப்படுத்தி நியமிக்கப்பட்டவர்கள்; வேறு சிலர் தாமாகவே வந்து அமர்ந்தவர்கள். தரைப்படைக்குள்ளவை போலவே கப்பல்படையைச் சேர்ந்தவர்களுக்கும் பயிற்சி பெறுவது, ரிஸர்விலிருப்பது முதலிய விஷயங்களைப்பற்றி ரூல்களிருக்கின்றன.

சென்ற வர்ஷத்தில் ப்ரெஞ்ச் கப்பல்படையில் ஆபிஸர்களும் வீரர்களுமாகச்சேர்ந்து 63,596 பேர்கள் இருந்தார்கள். ரிஸர்விலிருந்தவர்கள் 49,300. 1914-ம் வர்ஷத்தில் கப்பல் படை செலவுக்காக ஏற்படுத்தப்பட்ட தொகை $27\frac{1}{2}$ கோடி ரூபாய்.

## ரஷ்யாவின் கப்பல்படை.

ரஷ்யாவின் கப்பல் படையின் அதிபதிக்கு 'மினிஸ்டர் ஆப் மரீன்', அதாவது கப்பல்படை மந்த்ரி என்று பெயர். இவரே கப்பல் படையை நிர்வாகம்செய்து வருகிறார். இவருக்கு ஆறு பேர்களடங்கிய ஒரு ஆலோசனை ஸபை யிருக்கிறது. தவிர, கப்பல் படையை நியமித்து, பயிற்சிசெய்து யுத்தத்திற்குத் தயார் செய்வதற்காக 'ஹெட் க்வார்டர் ஸ்டாப்' என்பதாக சில உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்கள்.

ரஷ்யாவில் ஆட்களை கட்டாயப்படுத்தி சேர்ப்பார்கள். அவர்கள் வேலையிலிருக்கும்போது கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது. ஒவ்வொரு வர்ஷமும் இவ்வளவு பேர்கள் வேண்டுமென்று பொறுக்கி எடுப்பார்கள். 1913-ம் வர்ஷத்தில் 53,000 பேர்கள் இருந்தார்கள். 1914-ம் வர்ஷம் கப்பல்படை செலவுக்காக வைக்கப்பட்டதொகை $37\frac{1}{2}$-கோடி ரூபாய்.

ரஷ்யா ராஜ்யம் பல இடங்களில் சிதறி இருப்பதுபோல், அதன் கடல்களும் சிதறி இருப்பதால், ரஷ்யா, கவர்ன்மெண்டார் நான்கு கப்பல் கூட்டங்களை, ஏற்படுத்தி ஒவ்வொன்றையும் தனித்தனியே பூராவாயிருக்கும்படி அமைத்து, முதலாவது கப்பல்கூட்டத்தை பால்டிக் கடலில் க்ரான்ஸ்டாட் என்னுமிடத்திலும், இரண்டாவதை கருங்கடலில் ஸிபாஸ்டபூல் என்னுமிடத்திலும், மூன்றாவதை காஸ்பியன் கடலிலும், நாலாவதை பஸிபிக் மஹாஸமுத்ரத்தில் வ்ளாடி வொஸ்டாக் என்னுமிடத்திலும், வைத்திருக்கிறார்கள்.

## ஜப்பானின் கப்பல்படை.

ஜப்பான் கப்பல்படைக்கு அதன் அரசராகிய மிக்காடோவே அதிபதி. கப்பல்படை விஷயங்களை நிர்வாகஞ்செய்ய மினிஸ்டர் அப் மரீன் என்ற மந்த்ரி ஒருவர் இருக்கிறார். கப்பல்படை விஷயமாய் ஆலோசனை சொல்ல கப்பல் தலைவர்கள் சேர்ந்த ஒரு கௌன்ஸிலுமிருக்கிறது.

ஜப்பான் யுத்தக்கப்பல்கள் ஜப்பானிலேயே கட்டப்படுகின்றன. அங்கே எல்லாரும் கட்டாயமாய் கப்பலில் கொஞ்சகாலம் இருக்கவேண்டும். 5000 உத்யோகஸ்தரும், 45,000 ஆட்களும், ரிஸர்வில் 6000-பேர்களும் இருக்கிறார்கள். சென்றவர்ஷம் 6-கோடி ரூபாய் கப்பலுக்காகவேண்டி செலவிட்டார்கள்.

## ஆஸ்ட்ரியாவின் கப்பல்படை.

ஆஸ்ட்ரியா-ஹங்கேரி தேசத்துக் கப்பல் படைக்குத் தலைவர் அதன் யுத்த மந்த்ரியே. உத்யோகஸ்தர்கள், வீரர்கள், ரிஸர்வுகள் ஆக மொத்தத்தில் 36,000-பேர் இருக்கிறார்கள். சென்றவர்ஷம் கப்பல்படைக்காக செலவிட்ட பணம் 9-கோடி ரூபாய்.

## துருக்கியின் கப்பல்படை.

துருக்கியில் கப்பல்படைக்கு கட்டாயப்படுத்தி ஆள்களை வேலையில் சேர்ப்பது கிடையாது. வேலையில் சேர்ந்தால், ஐந்துவர்ஷம் படையிலும், மூன்று வர்ஷம் ரிஸர்விலும், 4 வர்ஷம் 'ரெடிப்' என்னும் இரண்டாவது

ரிஸர்விலுமாக மொத்தம் 12 வர்ஷம் வேலையில் அமர்ந்திருக்கவேண்டும்.

1909-ம் வர்ஷம் முதல் துருக்கியின் கப்பல்படை ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தர்களால் சீர்திருத்தப்பட்டு வந்திருக்கிறது.

1913-ம் வர்ஷத்தில், உத்யோகஸ்தர்களும், வேலையாட்களும் சேர்ந்து ஸுமார் 13,000 பேர்கள் இருந்தார்களாம். உத்யோகஸ்தர்களை பின் வருமாறு பிரிவுபடுத்தி யிருக்கிறார்கள்.

| | |
|---|---|
| வைஸ் அட்மிரல்கள் | 3 |
| ரியர்-அட்மிரல்கள் | 6 |
| காப்டன்கள் | 20 |
| ப்ரெய்ட்—காப்டன்கள் | 46 |
| கம்மாண்டர்கள் | 171 |
| லப்டனண்ட்-கம்மாண்டர்கள் | 624 |
| லப்டனண்டுகள் | 1,528 |
| ஸப்-லப்டனண்டுகள் | 1,838 |

## COCOANUT INDUSTRIES.

## தென்னை ஸம்பந்தமான கைத்தொழில்கள்.

தென்னையிலிருந்து கிடைக்கும் தேங்காய்ப் பருப்பு, நார், எண்ணெய் முதலிய பொருள்களில், மலையாளக்கரையில் கிடைக்கும் சரக்குகளே மற்றவிடங்களில் கிடைக்கும் சரக்குகளைவிட உயர்ந்தவை. இவைகளுக்குத் தான் விலையும் அதிகம். அயல் நாடுகளாகிய பிலிப்பைன் தீவுகள், பிஜி தீவுகள், ஸான்ஸிபார் முதலியவிடங்களில் கிடைக்கும் தென்னைமரத்துச் சரக்குகளுக்கு இவ்வளவு விலை கிடைப்பது கிடையாது.

ஆனால் தற்போது மேற்குக்கரையிலிருந்து அதாவது மலையாளம், கொச்சி, திருவாங்கூர் ஆகிய இந்த இடங்களிலிருந்து கிடைக்கும் கொப்பரையும் (அதாவது காய்ந்த தேங்காய்ப் பருப்பு) கதம்பை நாரும் ரொம்ப உயர்ந்தவையாயிருந்தாலும், அவைகளின் தன்மை ரொம்பவும் கெடுதலையடைந்து கொண்டுவருகிறது. இதற்குப் பலகாரணங்கள் இருக்கின்றன. இந்தக் காரணங்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பது தேங்காய்க்கு ரொம்ப க்ராக்கி ஏற்பட்டிருப்பதே. அதோடு தேங்காய்ப்பருப்பு, நார் முதலியவைகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், விவஸாயிகள் ரொம்ப லாபமடையலாமென்று எண்ணி, உபயோகமற்ற நிலங்களிலும் தென்னையைப் பயிரிட ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் அந்தத் தாழ்ந்த நிலங்களை நன்றாய்க் கொத்திப் பண்படுத்துவதும் இல்லை. அதற்குத் தக்க எருக்கள் போடுவதும் இல்லை. தென்னம் பிள்ளைகளையும் தோப்புகளில் ரொம்ப நெருக்கமாய் வைத்து விடுகிறார்கள். இந்தக் காரணங்களினால் தேங்காய்ப் பருப்பு, நார் இவைகளின் தன்மை நாளடைவில் க்ஷீணித்துக்கொண்டே வருகிறதென்று சொல்லப்படுகிறது.

தென்னிந்தியாவிலுள்ள ப்ரதேசங்களில் கொச்சியில் உண்டாகும் தேங்காய்ப் பருப்பும், நாருந்தான் மற்றவிடங்களிலுண்டாகிறவைகளைவிட உயர்ந்தவையா யிருக்கின்றன. கோதாவரி ஜில்லாவைச்சேர்ந்த அமலாபுரம் தாலுக்காவில் கிடைக்கும் கொப்பரையும் நாரும் ச்லாக்யமானவைகள்.

கடற்கரையோரமாக உள்ள தென்னைமரங்கள் சீக்ரம் பலன்கொடுக்கக்கூடியவை. ஆனால் அவை சீக்ரம் பட்டுப்போகின்றன. உள்நாட்டில் வளரும் தென்னைகளோ நாள் கழித்துக் காய்க்க ஆரம்பித்து வெகு காலம்வரையில் பலன்கொடுத்து வருகின்றன.

### நார்.

தென்னைநாரில் பொன்னிறமாக இருப்பது தான் ரொம்ப ச்லாக்யமானது. அதற்கடுத்தபடியாக இருப்பது வெண்மையான நார். கறுப்பு நிறமானநார் ரொம்பத் தாழ்ந்ததாகும். நாரின் நிறமானது, உரிமட்டையை எந்தவிடத்தில் ஊறப்போடுகிறோமோ அந்தவிடத்தின் நிறத்துக்குத் தகுந்தபடி நார் மாறிவிடுகிறது. ஸாதாரணமாய் செய்யும் வழக்கமென்னவென்றால், பூமியில் ஒரு குழியைவெட்டி, அதில் ஜலத்தைப்பாய்ச்சி, அதில் தேங்காய்களை உரிக்காமல் ஊறப்போட்டு வைப்பதே. இதனால் நாரின் நிறம் ரொம்ப கெட்டுப்போகிறது. பேப்பூரில் எடுக்கப்படும் நார் சிலகாலத்துக்கு முன்பு ரொம்ப நேர்த்தியாக இருந்தது. இப்போது அவ்விடத்தில் ஜனங்கள் மட்டையை உவர் ஜலத்தில் அழுகப்போடுவதால் நார் ரொம்பக் கெட்டுப்போய் விட்டதென்று சொல்லப்படுகிறது. மட்டையை ஊறப்போடும் முறை சீர்திருந்தினால் நாரின் தன்மையும் உயர்ந்ததாகலாம்.

### கொப்பரை.

தேங்காய்ப் பருப்பை வெயிலில் காயப்போடுவதே ச்லாக்யமான முறையென்று சொல்லப்படுகிறது. வெயிலில் காய்ந்த பருப்பிலிருந்துதான் ரொம்ப தெளிவான எண்ணெய் கிடைக்கும். ஆனால் தற்காலம் கொப்பரை எப்படிப்பட்டதாக இருந்தாலும் விலைப் போவதால், ஜனங்கள் பருப்பை நன்றாய்க் காயவைப்பதில் அச்ரத்தையாக இருக்கிறார்கள்.

### எண்ணெய்.

தற்போது நமதுநாட்டில் தேங்காய் எண்ணெய் ஆட்டுந்தொழில் ஸ்வல்பமாக நடந்துவருகிறது. எண்ணெயாட்ட ஸாதாரண செக்குகள்தான் உபயோகப்பட்டு வருகின்றன. இதற்கு ஹைட்ராலிக் ப்ரெஸ் என்னும் யந்த்ரங்களை எண்ணெயெடுக்க உபயோகிப்பது நல்லது.

கொப்பரை அன்யநாடுகளுக்கு ஏற்றுமதியாவதால், எண்ணெயோடு பிண்ணாக்கும் நமது தேசத்துக்கு இல்லாமல் போகிறது.

### தென்னையின் நோய்கள்.

தென்னையில் குருத்து ஓலைகள் அழுகித்தீய்ந்து போவதற்கு முக்யகாரணம், தென்னையை அதற்கேற்றதாயில்லாத நிலங்களில் பயிரிடுவதே. தென்னம் வண்டுகளாலும் மரத்துக்குக் கெடுதல் ஏற்படுகிறது. எலியாலும் அதற்கு உபத்ரவம் உண்டு. எலியின் உபத்ரவத்தைப்போக்க கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையில் தென்னையின் அடிமரத்தில் தகரத் தகடுகளையாவது, துத்தநாகத் தகடுகளையாவது கட்டி வைக்கிறார்களாம். இதனால் எலிகளின் உபத்ரவம் குறைகிறதென்று சொல்லப்படுகிறது.

### எரு.

தென்னைக்கு தக்க எருக்கள் போடுவதால் தேங்காய் நல்லதாகக் கிடைக்கக்கூடும். 'கெய்னிட்' என்னும் பொட்டாஷ் ஸம்பந்தமான உரத்தைப் போடுவதால் நல்லபலன் கிடைக்கிறதென்று சொல்லப்படுகிறது. கோயம்புத்தூரில் தழையெருவும் மீனெருவும் கலந்து தென்னைக்கு வைத்ததில் தென்னை நல்லபலன் கொடுத்ததாம். எலும்புத்தூளும் பொட்டுப்பும் கலந்து தென்னைக்கு எருவாக வைப்பதும் நல்லமுறையே.

## OPEN *Versus* CLOSED DRAINS.

## திறந்த சாக்கடைகளும் மூடின சாக்கடைகளும்.

தெருக்களிலுள்ள சாக்கடைகள் இப்போது அநேக விடங்களில் இருப்பதுபோல திறந்திருந்தால், அவைகளை சுத்தம் செய்வது ஸுலபமென்றும், ஆகையால் திறந்த சாக்கடைகளே ச்லாக்யமென்றும் பலர் எண்ணி வருகிறார்கள். இந்தக் கொள்கை சரியல்லவென்று தற்காலத்து மேல்நாட்டு ஸுகாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

திறந்த சாக்கடைகள் எந்த விஷயத்தில் குறைபாடுள்ளனவென்பதைப் பற்றி மதராஸ் கவர்ன்மெண்டின் ஸர்ஜன் ஜெனரலாகிய பான்னர்மன் என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்.

மழை ஜலத்தைக் கொண்டுபோக மாத்ரம் திறந்த சாக்கடைகள் ஏற்றவையேயொழிய மற்ற எதற்கும் அவை தகுந்தவையல்ல. சாக்கடை ஜலம் போவதற்காகக் கட்டப்பட்டிருக்கும் திறந்த சாக்கடைகளால் பற்பல ஸங்கடங்கள் உண்டாகின்றன. இந்த சாக்கடைகள் தாமாகவே சுத்தம் பண்ணிக்கொள்ளக் கூடாதவைகளாயிருக்கின்றன. சாக்கடையில் ஜலம் நிறையப்போகா விட்டால், சாக்கடையின் உள்புறத்தில் இரண்டு பக்கங்களிலும் கெட்ட நாற்றமுள்ள கறுப்பு நிறமான அழுக்கு படிந்துகொள்ளுகிறது. இந்த அழுக்கைச் சுத்தம் செய்ய சாக்கடை கூட்டுபவர்கள் எப்போதும் கவனமாயிருந்து அடிக்கடி சுத்தம் செய்யவேண்டும். அடிக்கடி உள்புறத்துச் சுவர்களை சுத்தம் செய்வதால் அவைகளிலுள்ள ஸிமெண்ட் அதாவது சாந்து விரிந்துபோய் உடைந்துவிடுகிறது. அதனால் சாக்கடை கரடுமுரடாயும், த்வாரங்களுள்ளதாயும் ஆகிவிடுகிறது. சாக்கடையில் உள்ள குப்பை சேறு முதலியவைகளை சாக்கடை தள்ளுபவர்கள் வெளியிலெடுத்து சாக்கடையின் பக்கத்தில் போட்டுவிடுகிறார்கள். இந்த ஈரமான குப்பை ஈக்கள் வ்ருத்தியாக ரொம்ப ஸாதகமாயிருக்கிறது. மேலும் அதிலிருந்து கெட்ட நாற்றமுள்ள வாயுக்கள் உண்டாகின்றன. ஈக்களால் காலரா, டைபாய்ட், காய்ச்சல் முதலிய வ்யாதிகள் வ்ருத்தியாகுமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஆகையால் பட்டணங்களில் சாக்கடை கட்டவேண்டுமென்றால் மேலே சொன்ன கெடுதல்கள் நேரிடாதபடி மூடியுள்ள சாக்கடைகள் கட்டுவதே ச்லாக்யமானது.

மழை ஜலத்தைக் கொண்டுபோகத் திறந்த சாக்கடைகள் கட்டுவதால் கெடுதல் ஒன்றுமில்லை. ஆனால் இந்தத் திறந்த சாக்கடைக்கும் வீடுகளிலுள்ளேயிருக்கும் ஸ்நான அறைகளுக்கும் ஸம்பந்தமிருக்கக்கூடாது. ஏனென்றால் இந்த ஸ்நான அறையில் ஜனங்கள் இரவில் மலஜலாதிகள் கழிக்கிறார்கள். இதனால் தெருச் சாக்கடை ரொம்ப ஆபாஸமடைகிறது. இரவில் ஜனங்கள் அவஸரத்தில் ஸ்நான அறைக்குள் மலஜலாதிகளை விடும்படி நேரிடுவதால்தான், இந்த ஸ்நான அறைக்கும் மழைஜலம் கொண்டுபோகக் கட்டியிருக்கும் சாக்கடைக்கும் ஸம்பந்தமே இருக்கக்கூடாதென்று சொல்வது. ஏனென்றால், காலராவால் அவஸ்தைப்படும் நோயாளி ஒருவர் ஸ்நான அறையில் மலங்கழிக்கிறானென்று வைத்துக்கொள்வோம். மலங்கழித்தவுடன் வீட்டிலுள்ளவர்கள் அந்த இடத்தில் ஜலத்தைக் கொட்டி சுத்தம் செய்கிறார்கள். காலரா மலமானது திறந்த சாக்கடையில் போய்ச் சேருகிறது. சாக்கடை கூட்டுகிறவன் காலையில்வர சற்று நேரமாகுமாதலால், அதற்குள்ளாக ஈக்கள் காலரா மலத்திலுட்கார்ந்து காலரா க்ருமிகளைப் பக்கத்து வீடுகளுக்குள் கொண்டுபோய் வ்யாதியை உண்டாக்கக்கூடும். காலரா வ்யாதிஸ்தர்களுடைய மலம் திறந்திருக்கும்படி விடக்கூடாது. மூடியிருக்கும் சாக்கடைகளின் வழியாக வெளியே கொண்டுபோய்விடவேண்டும். இல்லாவிட்டால் வ்யாதி க்ருமிகளைக் கொல்லும் மருந்துகளைப் போட்டு, காலரா க்ருமிகளைக் கொன்று மலத்தை நெருப்பால் எரித்துவிடவேண்டும். தொத்து வ்யாதியுள்ளவர்களின் மலத்தில் ஈக்கள் வராதபடி ஜாக்ரதையாயிருக்கவேண்டும். அதற்கு மூடின சாக்கடை நல்லதேயொழிய திறந்த சாக்கடை நல்லதல்ல.

## TECHNICAL TRAINING IN FRANCE.

## ப்ரான்ஸில் தொழில் பயிற்சி.

ப்ரான்ஸின் முக்ய பட்டணமாகிய பாரிஸில் கைத்தொழில்களில் நிபுணர்களாகவும், வேலையாட்களில் முதன்மையானவர்களாகவும் இருக்க இஷ்டப்படுகிறவர்களுக்கு கவர்ன்மெண்டார் அவர்கள் அந்த நிலைமைகளை யடையும்படி எல்லாவித ஏற்பாடும் செய்திருக்கிறார்கள். ஸாதாரண தொழிலாளிகளைச் சீர்திருத்த அந்த நகரத்துக் கல்வி அதிகாரிகள் யாதொரு ஏற்பாடும் செய்வதில்லை. ஜனோபிமானம் உள்ள பொது ஜனங்கள் தான் ஸாதாரண தொழிலாளிகளுக்குக் கல்வி கற்றுக்கொடுத்து அவர்களுக்கு தொழில்களில் பயிற்சி செய்விக்கிறார்கள்.



பாரிஸில் 15-உயர்ந்த தொழில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளில் 7-பள்ளிக்கூடங்கள் பையன்களுக்கும், 8-பள்ளிக்கூடங்கள் பெண்களுக்குமாகும். இவைகள் எல்லாம் பகல் பொழுதில் நடக்கும் பள்ளிக்கூடங்களாகும். ப்ரைமெரி ஸ்கூல்களில் வாசித்த பையன்களை மறுபடியும் பரீக்ஷை நடத்தி அவர்கள் அதில் தேறுகிறார்களா என்று பார்த்து, அதில் தேறுகிறவர்களை மாத்ரம் அந்தத் தொழில் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் அநேக மாணவர்கள் சேர ப்ரியப்படுவார்களாதலால், அவைகளில் சேருவதென்பது ரொம்ப கஷ்டமாம். மாணவர்களுக்கு மூன்று அல்லது நான்கு வர்ஷம் தொழில் கல்வி கற்பிக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் ஸம்பந்தப்படாதவர்களைக்கொண்டு ஒரு பரீக்ஷை நடத்துகிறார்கள். அந்தப் பரீக்ஷையில் தேறினவர்களில் அநேகருக்கு பள்ளிக்கூடம் விட்டவுடனேயே மாஸம் 60-ரூபாய் வீதம் சம்பளமுள்ளவேலை கிடைத்து வருகிறதாம்.

அந்தப் பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் ரொம்ப கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டும். அநேக ஸமயங்களில் மாணவர்களுக்கு வாரத்துக்கு 51-மணி நேரம் பள்ளிக்கூட வேலையிருப்பதுமுண்டு. இவ்வளவு நேரம் பள்ளிக்கூடத்தில் வேலை கற்றுக்கொள்வதால், அவர்களுக்கு தொழில்களில் நேரக்கூடிய எல்லாவித ஸங்கடங்களும், வ்யாபார விஷயங்களும் தெரிந்துவிடுகின்றன. அவர்களுக்கு அநுபவ பூர்வமான பாடங்கள்தான் அதிகம். ஆனால் தொழில்களைப்பற்றிய சாஸ்த்ர ரீதியான விஷயங்களையும் மாணவர்களுக்கு வேண்டியவளவு கற்றுக்கொடுக்காமலிருப்பதில்லை. பாரிஸ் பள்ளிக்கூடங்கள் மாலைப்பொழுதில் நடக்கும் தொழில் பள்ளிக்கூடங்களோடு ஸம்பந்தப்படாமல், தனிப் பள்ளிக்கூடங்களாக இருப்பதாலும், மாணவர்கள் தொழில்களை அப்யஸிக்க தொழில்சாலைகளுக்குப் போகவேண்டிய அவச்யம் நேராதபடி பள்ளிக்கூடங்களிலேயே தொழில்களை அநுபவபூர்வமாய் கற்றுக் கொடுப்பதாலும் இந்தப் பள்ளிக்கூடங்கள் திருப்திகரமாய் நடந்து உபயோகப்பட்டு வருகின்றன.

## Mr. BUCKLEY ON CO-OPERATION.

## கோவாபரேஷனைப்பற்றி ஆனரபில் மிஸ்டர் பக்ளி பேசியது.

சென்ற மாஸம் தஞ்சாவூர் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் கும்பகோணத்தில் கூடின போது ஆனரபில் மிஸ்டர் எல். இ. பக்ளி ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். சில கோவாபரேஷன் அபிமானிகள் கோவாபரேஷன் ஸம்பந்தமாக கவர்ன்மெண்டார் சில விஷயங்களில் உதவி செய்யவேண்டுமென்கிறார்கள். அப்படிச்செய்தால் கோவாபரேடிவ் ஸங்கங்கள் கவர்ன்மெண்ட் ஸ்தாபனங்களாக ஆகிவிடும். உதாரணமாக ஸென்ட்ரல் பாங்கிகளுக்கு ஸொத்து ஈட்டின்மேல் ‘டிபஞ்சர்’ கடன்வாங்க அதிகாரம் ஏற்படவும், அந்தக் கடனுக்கு கொடுக்கவேண்டிய வட்டிக்கு கவர்ன்மெண்டார் ஜாமீனாக இருக்கவும் கவர்ன்மெண்டார் சட்டம் செய்யவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் கோவாப

ரெடிவ் முயற்சி நன்றாயும், குறைபாடு இல்லாமலும் இருக்கவேண்டுமென்றால் ஜனங்கள் தங்களுக்குத்தாங்களே உதவிசெய்து கொள்ள வேண்டுமேயொழிய, கவர்ன்மெண்டின் உதவியை எதிர்பார்க்கக்கூடாது. ஸென்ட்ரல் பாங்கிகள் நன்றாய் நடைபெற்று வருகின்றனவென்றால், அவைகள் தங்களுடைய ஜாமீன் பேரிலேயே வேண்டிய கடன்களை வாங்கிக் கொள்ளக்கூடும். ஸொந்த ஜாமீன்பேரில் அவைகள் கடன் வாங்கமுடியவில்லையென்றால், அவைகளுடைய பண நிலைமை நன்றாயில்லையென்று ஸந்தேகிக்க இடம் ஏற்படுகிறது. கவர்ன்மெண்டார் வட்டிக்கு ஜாமீனாகவிருப்பதால் கோவாபரெடிவ் முயற்சிக்கு உண்மையான பலம் ஏற்படாது. அப்படிக்கில்லாமல் கவர்ன்மெண்ட் ஸகாயத்தால் அந்த முயற்சிக்கு பலக்குறைவும், ஊக்கக்குறைவும் ஏற்படக்கூடும்.

ஸங்கங்களின் கணக்குகளை கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் தணிக்கை செய்யும் வழக்கமும் கோவாபரெடிவ் முயற்சிக்குக் கெடுதலானதே. கவர்ன்மெண்ட் தணிக்கையிருப்பதால், பொது ஜனங்கள் கோவாபரெடிவ் ஸங்கங்கள் சரியாக நடந்துவரும் என்பதற்கு கவர்ன்மெண்டார் உத்தரவாதியாக இருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்கள். கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் தணிக்கை செய்வதற்கு பதிலாக ஸாமர்த்யமும் நாணயமும் உள்ள ப்ரைவேட் அக்கௌண்டண்டுகள் ஸங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்யும் படியாக முயற்சியெடுத்து வரவேண்டும். ஸங்கங்களின் தொகை ரொம்ப அதிகமானால், கவர்ன்மெண்டார் எல்லா ஸங்கங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்துவர முடியாமல் போகும்.

அநேகர் ஸாதாரண வ்யாபாரிகளுக்குக்கூடக்கிடைக்காத பற்பல ஸௌகர்யங்களை கவர்ன்மெண்டார் கோவாபரெடிவ் ஸங்கங்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். இப்படிக்கேட்பதும் கெடுதலானதே. கோவாபரேஷன் முயற்சி கடைத்தேறவேண்டுமானால் அந்த முயற்சியை வ்யாபார முறையில் நடத்த வேண்டியது அவச்யமாகும். ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்காமல் உழைத்துவரும் அபிமானிகள் கோவாபரேஷன் ஸம்பந்தமான வேலைகளைச் செய்யாவிட்டால், அந்த வேலைகளைச் செய்பவர்களுக்கு ஸாதாரணமாக வ்யாபாரங்களில் என்ன ப்ரதிப்ரயோஜனம் கொடுப்பார்களோ அந்த மாதிரியாகவே பணம் கொடுக்கவேண்டும். கவர்ன்மெண்டார் தணிக்கை வரிபோடுவதாக ப்ரேரித்ததைப்பற்றி எல்லாரும் ஆக்ஷேபித்திருக்கிறார்கள், கவர்ன்மெண்டார் தணிக்கை செய்யாவிட்டால் ஸங்கங்களின் கணக்குகளை வேறு யாரையாவது கொண்டு தணிக்கை செய்யச்சொல்ல வேண்டியது தானே. கோவாபரேஷனில் விசேஷ அபிமானங்கொண்டவர்களைக்கொண்டு சில ஸங்கங்களின் கணக்குகளைத்தான் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யலாம். பெரும்பான்மையான ஸங்கங்களுக்கு பணங்கொடுத்துத்தான் தணிக்கை செய்யச் சொல்லவேண்டியிருக்கும். ஆகையால் கவர்ன்மெண்டார் தணிக்கை செய்வதற்கு, ஸங்கங்கள் தணிக்கைவரி செலுத்த வேண்டியது ந்யாயமானதென்றே தோன்றுகிறது.

அநேகர் இன்னொரு ஸௌகர்யம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதாவது ஸாதாரண வ்யாஜ்யங்களில் கோர்ட்டார் விதிக்கும் வட்டி விகிதத்தைவிட அதிகமாக, கோவாபரெடிவ் ஸங்கங்கள் கொண்டு வரும் வ்யாஜ்யங்களில் வட்டிவிகிதம் ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஒரு ஸங்கத்தில் ஒரு மெம்பர் தாம் வாங்கின கடனைக் கொடுக்கும்படி மற்ற மெம்பர்கள் வற்புறுத்த முடியாவிட்டால், அவ்வி



டத்தில் கோவாபரேஷன் முயற்சி கடைத்தேறவில்லை யென்பதை ஒப்புக்கொண்டதாகும். கடனை வஸூல்செய்ய கோர்ட்டுக்குப் போனால் கோவாபரெடிவ் ஸங்கத்துக்குமாத்ரம் ஏன் விசேஷ ஸௌகர்யம் செய்து கொடுக்க வேண்டுமோ தெரியவில்லை.

பெரும்பாலும் கோவாபரெடிவ் ஸங்கங்கள் வெளியிலிருந்து கடன் வாங்கின பணத்தைக் கொண்டு நடந்து வருகின்றனவே யொழிய, மெம்பர்கள் செட்டுப்பிடித்து ஸங்கத்தில் டெபாஸிட் செய்த பணத்தைக் கொண்டு நடந்து வருவதாயில்லை. ஸமீபத்தில் நடந்த மதராஸ் கோவாபரெடிவ் கான்பரென்ஸில், உள்ளூரிலுள்ள மெம்பர்களும் மெம்பர்களல்லாதவர்களும், ஸங்கங்களில் டெபாஸிட்டுகள் போடும்படி முயற்சியெடுக்க வேண்டுமென்றும், பணத்துக்கு ஸென்ட்ரல் பாங்கிகள் போன்ற பணங்கடன் கொடுக்கும் ஸ்தாபனங்களை எதிர்பார்க்கக் கூடாதென்றும் ஒரு தீர்மானம் செய்தார்கள்.

இந்த ராஜதானியில் பொறுப்பு வரையறுக்கப்படாத க்ராம ஸங்கங்கள் ஸுமார் 1200-க்குமேல் இருக்கின்றன. இவைகளில் எழுபத்தையாயிரம் மெம்பர்கள் வரையிலிருக்கிறார்கள். இந்த ஸங்கங்களின் பங்கு மூலதனமோ 3½ லக்ஷம் ரூபாய் தான். மெம்பர்கள் போட்டிருக்கும் டெபாஸிட்டுகள் இரண்டு லக்ஷத்துக்கும் குறைவாயிருக்கிறது. ஆனால் மற்ற ஸங்கங்களிலிருந்து வாங்கும் கடன்களும், மெம்பர்களல்லாதவர்கள் போடும் டெபாஸிட்டுகளும் சேர்ந்து 46½ லக்ஷம் ரூபாயாகின்றன. ஒரு ஸங்கம் வாங்கியிருக்கும் கடன் ஸராஸரி கிட்டத்தட்ட 4,000 ரூபாயாகிறது. ஒரு ஸங்கத்தின் பங்கு மூலதனமோ 300 ரூபாய்க்கும் குறைவாயிருக்கிறது. ஒரு மெம்பரின் கடன் ஸராஸரி ரூ. 60 ஆகிறது. பங்கு மூலதனத்தில் ஒவ்வொரு ரூபாய்க்கும் கிட்டத்தட்ட 13 ரூபாய் வீதம் கடனிருக்கிறது. இந்தக் கணக்குகளைப் பார்த்தால், ஸங்கங்களின் தொகை அதிகமாக வேண்டுமென்றால், இந்த முயற்சியில் இன்னும் ரொம்ப சீர்திருத்தம் செய்யவேண்டியதிருக்கிறதென்று தெரியவரும். ஏனென்றால், ஸங்கங்களின் தொகை அதிகரிப்பதற்கேற்ப வெளியிலிருந்து அதிக பணம் கடன் கிடைக்குமென்பது நிச்சயமில்லை. கோவாபரேஷனுடைய முக்யநோக்கம் மெம்பர்களுக்குள் செட்டும், தனக்குத்தானே உதவிசெய்து கொள்ளும் குணமும் ஏற்படுவதே. ஸங்கங்கள் தங்களுக்கு வேண்டிய பணத்துக்கு மெம்பர்கள் போடும் மூலதனத்தையே ரொம்பவும் அதிகமாக எதிர்பார்க்கவேண்டும். மெம்பர்கள் அதிகமூலதனம் போடும்படி செய்வதற்கு என்ன செய்யலாமென்று பார்ப்போம். இதற்கு அநேக உபாயங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றை இங்கே விவரிப்போம். இப்போது ஸங்கங்களில் மெம்பர்கள் சேரும்போது எடுத்துக்கொள்ளும் பங்கின் மதிப்பு ஒரு ரூபாயாகும். மெம்பர்கள் தொகையை சேரும்போதே செலுத்திவருகிறார்கள். இப்படி முதலில் சேருவதற்குச் செலுத்தவேண்டிய பங்குப் பணத்தை அதிகப்படுத்தக் கூடாது. அதிகப்படுத்தினால், எந்த வகுப்பு ஜனங்கள் அதிகமாக மெம்பர்களாகவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ, அவர்கள் ஸங்கத்தில் சேர முன் வர மாட்டார்கள். அப்படிச்செய்யாமல் மெம்பர்கள் மாஸந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில ஒரு சிறு தொகை செலுத்த வேண்டுமென்று ஏற்பாடுசெய்தால் மூலதனத்தின் தொகை அதிகமாக மார்க்கமுண்டு. ஒரு பேச்சுக்காக, மெம்பர்கள் மாஸந்தோறும் 4-அணா கொடுக்க வேண்டுமென்று ஏற்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். மூன்று வர்ஷ காலம் இப்படிச்செலுத்தி வந்தால், முதலில் செலுத்தின தொகையைச் சேர்த்து மொத்

தம் ரூபாய் 10-ஆகும். இந்த ஏற்பாடு ஏற்கனவே அனுஷ்டானத்திலிருந்ததென்றும், இப்போது உள்ள ஒவ்வொரு மெம்பரும் ஒரு பங்கு எடுத்துக் கொண்டிருந்தாரென்றும் வைத்துக்கொள்வோம். அப்படியானால்மூன்று வர்ஷத்தில் பங்குமூலதனம் $7\frac{1}{2}$ லக்ஷமாகியிருக்கும். ஆனால் இப்போது ஒவ்வொரு மெம்பரும் ஸராஸரியில் 4 முதல் 5 வரையில் பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. மாஸந்தோறும் பணங்கொடுப்பதை மெம்பர்கள் நிர்ப்பந்தமாக எண்ணாமலிருந்து, இப்போதுபோலவே அதிக பங்குகள் எடுத்துக்கொண்டிருந்தால், மேற்சொன்ன கணக்குகளின்படி ஸங்கங்களின் மூலதனம் கிட்டத்தட்ட 35 லக்ஷமிருக்கக்கூடும். அப்படியானால், இப்போது மூலதனத்தில் ஒவ்வொரு ரூபாய்க்கும் 12 அல்லது 13 ரூபாய் வீதம் கடன் வாங்காமல் ஒவ்வொரு ரூபாய்க்கும் $\frac{1}{2}$ ரூபாய் வீதம் கடன்வாங்கினால் போதுமானதாயிருக்கும். இதனால் ஸங்கங்களுக்கு வட்டி விஷயத்தில் 2 லக்ஷம் ரூபாய் மிச்சமாகும். அதாவது ஒரு க்ராம ஸங்கத்துக்கு வர்ஷந்தோறும் ஸராஸரியில் 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரையில் லாபமாகும். இந்த ஸங்கங்களின் பண நிலைமையும் சரியாயிருக்கும். பொது ஜனங்களும் அவைகளிலும், ஸெண்ட்ரல்பாங்கிகளிலும் பணம் போட தாராளமாய் முன் வருவார்கள்.

டெபாஸிட் ஸம்பந்தமாக இன்னொரு விஷயம் குறிப்பிடத்தக்கது. இந்த ராஜதானியிலுள்ள ஸங்கங்களின் டெபாஸிட் தொகை முழுவதும் சேர்த்தால் இரண்டு லக்ஷந்தானாகிறது. பம்பாய் ராஜதானியிலோ ஒரு ஜில்லாவில் மாத்ரம் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் மெம்பர்கள் ஸங்கங்களில் டெபாஸிட் செய்திருக்கிறார்கள்.

சென்றவர்ஷத்திய கோவாபரேஷன் முயற்சியில் இன்னொரு கவலைக்கிடமான விஷயமென்னவென்றால், மெம்பர்களும், ஸங்கங்களும் தாங்கள் செலுத்தவேண்டிய பணத்தில் ரொம்ப பாகத்தை ஏற்பட்டதவணையில் செலுத்தவில்லையென்பதே. கொடுக்கவேண்டிய கடனைக் குறிப்பிட்ட காலத்தில் தவறாமல் செலுத்திவந்தால் தான் வேலை குறைவின்றி நடந்து வரக்கூடும். கோவாபரேஷனில் அபிமானமுள்ளவர்கள் ஒவ்வொரு மெம்பரும் தமது பொறுப்பை யறிந்துகொண்டு நடக்கும்படி அவர்களுக்கு அறிவு புகட்ட என்ன முயற்சிசெய்ய வேண்டுமோ அதைச்செய்ய வேண்டும். கடனைக் குறித்தகாலத்தில் கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் கட்டாயப்படுத்துவது முடியாது. இதற்கு ஸங்கத்தாருடைய கெடியும் கண்டிப்புந்தான் ப்ரயோஜனப்படும். இந்தக்குறையை நிவர்த்தி செய்ய ஒரு வழியிருக்கிறது. அதாவது ஸங்கங்களை மேற்பார்வை செய்வதையும், தணிக்கை செய்வதையும் பிரித்துவிடுவதே. ப்ரைவேட் அக்கௌண்டண்டுகள் கிடைக்கும் வரையில் தணிக்கையை கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களே செய்துவரலாம். மேற்பார்வையை கோவாபரேடர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள், ஸங்கங்கள் வ்யாபார முறையில் நடந்துவருகின்றனவா வென்று பார்ப்பதோடு, தணிக்கையில் காட்டப்படும் குறைகளையும் ஸங்கங்கள் நிவர்த்தி செய்திருக்கின்றனவா வென்று பார்க்கவேண்டும். ஸங்கங்களின் மேற்பார்வையையும், இன்ஸ்பெக்ஷனையும் யூனியன்களிடத்தில் விடுவது நல்லது.

## HAIR TRADE.

By

T. K. RAMIAH.

## ரோம வ்யாபாரம்.

ஐரோப்பிய தேசங்களில் ரோம வ்யாபாரம் ஏராளமாய் நடந்து வருகிறது. அதில் சில பிரிவுகளை இங்கு கவனிப்போம்,



### குதிரை மயிர்.

குதிரையின் பிடரிமயிரைக் காட்டிலும் வாலிலுள்ளமயிர் அதிக நீளமானதால், அது அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. அது ம்ருதுவான ப்ரஷ்கள் (brushes) முதலியன செய்வதற்கும், பிடரிமயிர் தலையணைகள், மெத்தை, நாற்காலி, ரயில்வண்டிகளிலுள்ள ம்ருதுவான படுக்கைகள், குஷன்கள் முதலியன செய்வதற்கும் உதவுகின்றன.

### பன்றி மயிர்.

துணிகளிலுள்ள தூசிகள் முதலியவைகளைத் தட்டுவதற்கு வேண்டிய ப்ரஷ்களும், வெள்ளி ஸாமான்கள் செய்பவர்களால் சுத்தம் செய்வதற்கும் பளபளப்பாக்குவதற்கும் உபயோகிக்கப்படும் ப்ரஷ்களும் செய்ய பன்றி மயிர் மிகவும் ஏராளமாய் ப்ரயோஜனப்படுகிறது.

### ஒட்டக மயிர்.

பொட்டக்ராப் படம் எடுப்பதில் கண்ணாடி ப்ளேட்டுகளை (தகடுகள்) கறுப்புச் சட்டங்களுள் (slides) வைப்பதற்குமுன் அவைகளிலுள்ள தூசிகளைத் தட்டுவதற்கு உதவும் ப்ரஷ்களும், வ்யாபார ஆபீஸ்களிலும் ரயில்வே ஆபீஸ்களிலும் ஏராளமாய் உபயோகிக்கப்படும் ப்ரஸ் காப்பிப் புஸ்தகங்களின் பக்கங்களை மிதமாக ஈரமாக்குவதற்கு உதவும் ப்ரஷ்களும் செய்ய ஒட்டக மயிர் அதிகமாக விற்பனையாகிறது.

### மனிதர் மயிர்.

இம்மட்டோ! மனிதர்களுடைய மயிரும் ஐரோப்பிய தேசங்களில் மிகுதியாய் வ்யாபாரமாகிறதாம். ஒரு குடியானவன் தன்வயல்களிலுள்ள பயிர்களைப்பற்றி எவ்வளவு கவலையெடுத்துக்கொள்வானோ அவ்வளவு ஜாக்ரதையுடன் ஜெர்மனியிலுள்ள சீமாட்டிகளும் வளர்ந்த பெண்களும் தங்களுடைய தலைமயிரை வளர்த்து வருகிறார்களாம். ஜெர்மன் ஸ்திரீகளின் தலைமயிர் தங்க நிறங்கலந்த பழுப்பாயும், ப்ரான்ஸ் தேசத்து ஸ்திரீகளின் மயிர் கறுப்பு நிறமுடையதாயு மிருக்கும்., வர்ஷத்தில் ஒரு குறித்த காலத்தில் இம்மயிர்கள் விற்பனைக்காகக் கத்தரிக்கப்படுகின்றன. அப்பொழுது பல கம்பெனிகளின் ஏஜெண்டுகள் இவைகளை வாங்குவதற்கு பல விடங்களிலிருந்து வருவார்கள். அவர்கள் இம்மயிர்களுக்கு உயர்ந்த விலை கொடுப்பார்களாதலால் ஸ்த்ரீகளும் அவர்களுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ஸாதாரணமாக, ஒரு ஸ்த்ரீயின் தலையில் ஸுமார் 25 தோலா மயிர் இருக்கும், இது 30 முதல் 60 ஷில்லிங் வரையில் அதாவது ஸுமார் 20 முதல் 45 ரூபாய்க்குவிற்கும். இம்மயிரிலிருந்து பெல்ட்கள், காப்புகள் (armlets) சிமிழ்ப் பதக்கங்கள், சட்டை முதலியவைகளில் குத்திக்கொள்ளும் அலங்கார வஸ்துக்கள், மாலைகள், கடியாரச்சங்கிலிகள் முதலிய நானாவித ஸாமான்கள் செய்யப்படுகின்றன. காலஞ்சென்ற தங்கள் உறவினர்கள், ஸ்னேகிதர்கள் முதலியவர்களுடைய ஞாபகார்த்தமாக மனதிற்கிசைந்த சில ஸாமான்களும் சிலர் செய்கிறார்கள். இவைதவிர, நாடகக்காரர்களால் உபயோகிக்கப்படும் செயற்கைதாடிகளும் மீசைகளும் செய்வதற்கும் மனிதர்களுடைய மயிர் ஏராளமாக உபயோகப்படுகிறது.

இந்தியாவில் கிடைக்கும் மயிர் மேல்நாடுகளில் கிடைக்கும் மயிர்களைப்போல் அவ்வளவு மெல்லியதாயும் ம்ருதுவாயு மிராததால், அது நேர்த்தியான வேலைகளுக்குத் தகுதியானதல்ல. ஆனால், அதை ஆட்டின் ரோமத்துடன் கலந்து கம்பளிகள் செய்ய உபயோகிக்கிறார்கள். இப்பொழுது மனிதர்களுடைய மயிர் கடலில் உபயோகிக்கப்படும் கயிறுகள் செய்வதற்கும் உதவுமெனக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இராப்பகலாய் ஸமுத்ரத் தண்ணீரில் கிடந்தாலும் கெட்டுப்போகாமலிருப்பதால், தேங்காய்

நார் முதலிய நார்களினுற் செய்யப்படும் கயிறுகளைவிட, இம்மயிர்களினுல் செய்யப்படும் கயிறுகள் அதிக நாள் நீடித்திருக்கக்கூடும் என்பது சோதனையால் காட்டப்பட்டிருக்கிறது.

மேலே கூறியவற்றிலிருந்து, மயிர் மிகவும் உபயோகமுள்ள வஸ்து வென்பதும், அதன் வ்யாபாரம் மிகவும் லாபத்தைத் தரக்கூடியதென்பதும் வெளிப்படை. இந்தியாவில் மயிர் ஸ்வல்பச் செலவில் சேகரிக்கலாம். சேகரித்து, அவைகளை அதிக க்ரயம்கொடுத்து வாங்கக்காத்துக் கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இந்தியர்களில் சிலர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

டி. கே. ராமய்யா.

## PLOUGHING.

By

M. VAITHIANATHAN.

### உழவு.

உழவின் உபயோகம் தஞ்சாவூர் ஜில்லா வாஸிகள் அறியவில்லையென்று தோன்றுகிறது. சேறு செய்வதில் மாடுகள் நிலமுழுதும் நடந்து வந்தால் போதுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். வயல் உளையாயிருப்பதால் இவ்விதம் செய்வதுபோது மென்று அபிப்ராயப்படுகிறார்கள். உளையாயிருப்பதால் உழவடைந்ததென்று மேலுழவு செய்வது பிசகு. கீழே உழவடையாத சகதிமண் அதிகமாயிருப்பதால், பயிரில் குழிச்செம்பு, சூறை, ஆனைக்கொம்பன் முதலிய நோய்கள் உண்டாகின்றன. "அகல உழுவதை ஆழஉழு", "ஆழ உழுதாலும் அடுக்க உழு" என்ற வாக்யங்களை அனுஸரித்து ஆழ உழுவதால், சகதிமண் இன்றி மண் நயப்பட்டு வெண்ணை போலாகும். "எழுழவு உழுதால் எருப்போடவேண்டாம்." என்றபடி தக்க மாடுகளைக் கொண்டு உழவு வேலை நன்றாய் நடத்தவேண்டும். இளைத்த காளை மாடுகளே உழவுக்கு எங்கும் உபயோகப்பட்டுவருகிறது. சேற்றுழவுக்கு கடாமாடே ச்லாக்யமானது. கடாமாடுகள் மெதுவாய் போவதுந்தவிர, பளுவுள்ள கலப்பைகளை இழுத்துச் செல்லும். அநேகர் துரிதமாய் செல்லும் காளைமாடுகளையே உழவுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு ஜதை மாட்டைக்கொண்டு 6 அல்லது 7 ஏக்கர் நிலம் ஸாகுபடி செய்துவிட வேண்டுமென்று நினைப்பவர்கள் அநேகர் உண்டு. இவ்விதம் நினைப்பவர்கள் $1\frac{1}{2}$ அல்லது 2 அங்குலத்துக்கு கீழ் உழுததை நான் கண்டதில்லை. இட்டலி தேசத்தில் 12-அங்குலம் வரையில் உழுகிறார்களாம். அதிகமாய் உழவு செய்தநிலங்களில் மண் குழம்பாய் இளகியிருக்கும். இதனுடன் எருவும் சேர்ந்திருக்குமானால், மண் கறுத்து சாக்கடை மண்போலிருக்கும். இவ்விதம் எருவினுலும் உழவினுலும் கறுப்படைந்த மண்ணில் மாடுகள் வேலை செய்வது கஷ்டமல்ல. மேலும் அந்த மண்காய்ச்சல் தாங்கும். சூறை, எரிவு உண்டாகமாட்டா. களர் பொங்கி நாசப்படுத்தாது. இப்பொழுது இருக்கும் ஸ்திதியில் ஆழ உழுதால், களர் பொங்கி நாசப்படுத்துவது ஆச்சரியமல்ல. சில இடங்களில் களர் இருந்தே இவ்வாறு நாசப்படுத்துகிறது. இந்நிலங்களில் பயிர் நன்றாய் வளராதபடி தடுக்கக்கூடிய சில சவுட்டு உப்புக்கள் இருக்கின்றன. காலக்ரமத்தில் ஆழ உழுவதாலும், கீழ்மண் மேலாகும்படி செய்து பணி போன்ற மண் வெண்ணை போலாகும்படி செய்து, சவுட்டு உப்புக்களை மாற்றும்படியான உரங்களைக்கொடுப்பதாலும், பூமியை வளமுள்ள நிலமாக்கிவிடலாம். இரண்டொருவர்ஷம் பலன் கொஞ்சமாய்க் கிடைத்தாலும், ஆழ உழுவதையே விவஸாயிகள் கைக்கொள்ள வேண்டும். நிலஸ்வான்தார்கள் நேரில் பார்வையிடாமலும் உழவுகாலங்களில் ஊரிலில்லாமலும் போவதே நல்ல உழவு செய்



யாததற்கு காரணங்கள். "உழுகிறநாளில் ஊரைவிட்டுப்போனால், அறுக்கிறநாளில் ஆளே தேடவேண்டாம்". இவர்களுக்கு இந்த வாக்யம் மிகப் பொருத்தமானது.

இன்னும் உழவு வேலை ஸுலபமாய் முடியவேண்டுமானால் கோடை உழவு எடுக்கவேண்டும். கோடை உழவுக்கு புழுதி என்று பெயர். மணல் ஸம்பந்தப்பட்ட இடத்தில் கோடை உழவு வாய்க்கும். களிமண்ணில் அதிகநீர் கோத்திருப்பதால் உழவுக்குப் பதமாகிறதில்லை. காயுந்தருணம் வெடித்து பக்வப்படுவதில்லை. நீர்வடியாது ஜலம் கோத்திருக்கும் ஸமயத்தில் களிமண்ணை உழுதால் கெடுதி செய்வதாகும். ஈரத்தை வெளியேறச் செய்வதற்கு முன் உழுதால், மேல்மண் ஒரு அங்குலம் உலர்ந்து அடி ஈரத்தைப் போக்காமல் வைத்திருக்கும். நிலம் உலர்ந்து காற்று மண்ணுக்குள் சென்றால்தான் அம்மண் மறு பயிருக்குதவுகிறது.

ஆகவே மணற்பாங்கான பூமிகளையே புழுதி செய்யவேண்டும்.சம்பா அறுவடையானவுடன் (தகுந்த ஈரம் இருக்கும்போது) உழுவது நலம். தை மாஸத்தில் செய்யும் புழுதி ரொம்பவும் ச்லாக்யமானது. அப்போதுள்ள ஈரங் காய்ந்துபோனால், பின்பு மழையை எதிர்பார்க்கவேண்டும். இல்லையானல் சித்ரை மாதத்துக்குள் எந்தமாதத்திலும் பெய்யும் மழையைக் கொண்டு புழுதி செய்யவேண்டும். முன்னடி செய்த புழுதியானது சித்ரை மாஸத்தில் நன்றாய்க் காய்ந்து போகும்படி மூன்று நான்கு உழவு செய்யவேண்டும். "சித்ரை மாஸத்துப் புழுதி பத்தரை மாற்றுத்தங்கம்." மணல் ஸம்பந்தமான இடங்களில் புழுதி முதல் வர்ஷம் நல்ல பலனைக் கொடுக்காவிட்டாலும் மறுவர்ஷம் நல்ல பலனைக் கொடுக்கிறது. மேலும் நிலத்தில் தான்யஸத்து அதிகரிக்கிறது. தெலுங்கு ஜில்லாக்களில் சேற்றுக்கு 7-8-உழவு செய்கிறார்கள். நமது தமிழ் ஜில்லாக்களில் நான்கு உழவு அபூர்வம். திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு ஏக்கர் நிலத்துக்கு மேல் ஒரு குடியானவன் ஸாகுபடி செய்யமாட்டான். இதனின்றும் குத்தகைக்கு அளந்தும் தன் குடும்பத்துக்கு போதுமான தான்யத்தை உண்டு பண்ணுகிறான்.

எம். வைத்ய நாதன்.

## THE SUEZ CANAL.

### ஸூயஸ் கால்வாய்.

ஆப்ரிக்காக் கண்டத்தின் வடக்கேயுள்ள ஈஜிப்ட்தேசத்தின் கிழக்கிலிருக்கும் ஸூயஸ் கால்வாயை துருக்கியர்கள் கைப்பற்றி, அங்கிருந்து ஈஜிப்டின்மேல் படையெடுக்கலாமென்று எண்ணியிருப்பதாகத் தோன்றுகிறது. ஈஜிப்ட்தேசம் சிலகாலத்துக்கு முன்னால் துருக்கி கவர்ன்மெண்டின் ஆதீனத்துக்கு உள்பட்டிருந்தது.

சென்ற டிஸம்பர் மாஸம் 17-ந்தேதிமுதல் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அந்த தேசத்தை தங்கள் வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். துருக்கியர்கள் தாங்கள் இழந்த தேசத்தை மறுபடியும் பிடிக்க ஆசைப்படுவதோடு, ஸூயஸ் கால்வாயையும் கைப்பற்றி இங்லண்டினுடைய வ்யாபாரத்துக்கு தடைசெய்யவும் எண்ணியிருக்கிறார்களென்று தோன்றுகிறது.

ஸூயஸ் கால்வாய் என்பது மத்யதரைக் கடலுக்கும், ரெட்ஸீ யென்னும் செங்கடலுக்கும் மத்தியிலுள்ள கப்பல் போக்கு வரத்துக்காக வெட்டப்பட்ட, ஒரு பெரிய கால்வாய். இதை துருக்கியர்கள் கைப்பற்றினுல் ப்ரிட்டிஷாருடைய கௌரவம் குறைந்து போகுமாதலாலும், ப்ரிட்டிஷார் இந்தியாவோடும் கீழ்தேசங்களோடும் செய்து வரும் வ்யாபாரத்துக்குத் தடை யேற்படுமாகையாலும், ஈஜிப்டிலேயே கலகங்களும் வேறு ஸங்கடங்களும் ஏற்படக் கூடுமாகையாலும், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸூயஸ்

கால்வாயைப் பாதுகாக்கவேண்டியது ரொம்ப அவச்ய மாகிறது. அதற்காக ப்ரிட்டிஷ் ஸைன்யங்களும் இந்திய ஸைன்யங்களும் ஈஜிப்டில் இருந்துகொண்டு அதைப்பாதுகாத்து வருகின்றன. ஸமீபத்தில் 10,000 பேர்கள் கொண்ட ஒரு துருக்கிய ஸைன்யம் ஸூயஸ் கால்வாயைப் பாதுகாத்து வரும் ப்ரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கிற்றென்றும், ஆனால் தோற்றுப் பின்வாங்கிற்றென்றும், ஸமாசாரம் வந்திருக்கிறது.

ஸூயஸ் கால்வாயைப் பாதுகாக்க ப்ரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களென்று நாம் திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஆனால் அந்தக் கால்வாயில் டிஸ்ட்ராயர் கப்பல்களும், லைட்க்ரூஸர்களும் அதைப் பாதுகாக்க ஏற்பட்டிருக்கு மென்றும், அதன்கரையில் ரொம்பபலமான அரண்கள் கட்டி அவைகளில் பெரிய பீரங்கிகளும் வைக்கப்பட்டிருக்கு மென்றும் நம்பலாம்.

மத்யதரைக்கடலையும் செங்கடலையும் ஒன்று சேர்த்து, கப்பல் போக்குவரத்து செய்யக் கால்வாய் வெட்டுவதைப்பற்றி ஆதிகாலம் முதல்கொண்டே பலபேர்கள் ஆலோசனை செய்து வந்தார்கள். ஸுமார் 2000 வர்ஷங்களுக்கு முன் இருந்த க்ரீஸ்தேசத்து தத்வசாஸ்த்ரியாகிய அரிஸ்டோடிலும், ரோம் தேசத்திலிருந்த ப்ளினி யென்ற சரித்ரக்காரரும், ஸூயஸ் பூஸந்தியில் ஒரு கால்வாயிருந்ததாக எழுதி வைத்திருக்கிறார்கள். ஈஜிப்டில் கார்னக் என்னும் ஊரிலுள்ள ஒரு கோவிலில் அகப்பட்ட சிலாசாஸனங்களால் அப்படிப்பட்ட கால்வாயொன்று ஸுமார் 3300 வர்ஷங்களுக்கு முன்னே இருந்ததாகத்தெரிய வருகிறது. அப்படிப்பட்ட கால்வாய் ஒன்று ஆதிகாலத்திலிருந்திருந்தபோதிலும், பிற்காலத்தில் அதுமூடப்பட்டுப்போய்விட்டது. எட்டாம் நூற்றூண்டில் பாக்டாட் பட்டணத்தில் ஆண்டு வந்த காலிப் ஹரூன் அல்ராஷிட் என்னும் மகமதிய அரசர் ஸூயஸ் பூஸந்தியில் ஒரு கால்வாய் வெட்டவேண்டுமென்று எண்ணியிருந்தாராம். ஆனால் அப்படிக் கால்வாய் வெட்டிவைத்தால் ரோம் ராஜ்யத்தின் போர்க் கப்பல்கள் அதன் வழியாக வந்து அரேபியாவின் கடற்கரையைத் தாக்கக்கூடுமென்று பயந்து அதைப்பற்றிய யோசனையை விட்டு விட்டாராம்.

15-வது நூற்றூண்டின் கடைசியில் இட்டாலியின் வடகிழக்கிலுள்ள வெனீஸ் நாட்டார், தாங்கள் அது வரையில் கிழக்கு தேசங்களோடு செய்து வந்த வ்யாபாரத்தை வ்ருத்தி செய்வதற்காக, ஸூயஸ்பூஸந்தியில் ஒரு கால்வாய் வெட்ட அனுமதி கொடுக்கும்படி ஈஜிப்ட் ராஜாங்கத்தைக் கேட்டார்களாம். ஆனால் சிறிதுகாலத்துக் கெல்லாம் துருக்கியர்கள் ஈஜிப்டைப்பிடித்துக் கொண்டதால் அந்த ஆலோசனை முற்றுப் பெறவில்லையாம். 17-வது நூற்றூண்டிலும் 18-வது நூற்றூண்டிலும் இரண்டு பேர்கள் கால்வாய் வெட்டுவதைப் பற்றி ஆலோசித்தார்களாம். அவை ஒன்றும் பயன் பெறவில்லை.

ப்ரான்ஸின் அரசராயிருந்த க்யாதிபெற்ற நெப்போலியன் பொனபார்ட் என்பவர் 1798-ம் வர்ஷத்தில் ஸூயஸ் கால்வாயைவெட்டிவைக்க எண்ணங்கொண்டு, இஞ்ஜினீயர்களைக்கொண்டு கால்வாய் வெட்ட வேண்டிய ப்ரதேசத்தை ஸர்வே செய்யும்படி செய்தார். ஆனால் இஞ்ஜினியர்கள் மத்ய தரைக்கடலின் ஜலமட்டத்துக்கும், செங்கடலின் ஜலமட்டத்துக்கும் 29 - அடி வித்யாஸம் இருப்பதாகச் சொல்லவே அந்த யோசனையை விட்டுவிடவேண்டியதாயிற்று. ஆனால் 1847-ம் வர்ஷத்தில் ஒரு ப்ரெஞ்ச் ஸங்கத்தார் மறுபடியும்அந்த ப்ரதேசத்தை ஸர்வேசெய்ததில் ஜலமட்டத்தில் வித்யாஸம் இல்லை யென்று தெரியவந்தது.

பிறகு 1854-ம் வர்ஷத்தில் பெர்டினெண்ட் டி-லெஸ்ஸப்ஸ்என்னும் ப்ரெஞ்ச் இஞ்ஜினியர்



ஒருவர் மேலே சொன்ன ஸங்கத்தாரோடு சேர்ந்து கால்வாய் வெட்டுவதைப்பற்றி பலமாக முயற்சிகள் செய்தார். அவருக்கு ஸ்நேகிதமாயிருந்த ஸையட் பாஷா என்பவர் அப்போது ஈஜிப்டின் வைஸ்ராயாக வரவே அவரிடமிருந்து கால்வாய் வெட்ட ஒரு கம்பெனி சேர்ப்பதற்கு உத்தரவு வாங்கிக் கொண்டார்.

இந்தக் கம்பெனியானது கால்வாயை 99-வர்ஷகாலம் அனுபவித்து வரலாமென்றும், பிறகு வேறு ஏற்பாடுகள் ஒன்றும் செய்து கொள்ளாவிட்டால், அந்தக் கால்வாய் ஈஜிப்ட் கவர்ன்மெண்டைச்சேர்ந்துவிடவேண்டு மென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் இதற்கு ஈஜிப்டின் வைஸ்ராய் அனுமதி கொடுத்தது மட்டும் போதவில்லை. அப்படி அனுமதி கொடுத்ததை துருக்கி கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருந்தது. அதற்காக லெஸ்ஸப்ஸ் துருக்கியின் ராஜதானியாகிய கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் போனார். ரஷ்யா, ப்ரான்ஸ், ஆஸ்ட்ரியா ஆகிய இந்த தேசங்கள் கால்வாய் வெட்டுவதற்கு ஸம்மதங் கொடுத்துவிட்டன. ஆனால்அங்கேயிருந்த ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ப்ரதிநிதி கால்வாய் வெட்டுவதை ஆக்ஷேபித்தார். அதன்மேல் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடைய ஸம்மதத்தையடைவதற்காக அவர் லண்டனுக்குப் போனதில் அங்கிருந்த மந்த்ரிகள், கால்வாய் வெட்டுவது அஸாத்யமான கார்யமென்றும், அப்படியே வெட்டினாலும், ப்ரிட்டிஷ் கவர்ன் மெண்டின் அதிகாரத்துக்கு பாதகம் ஏற்படுமென்றும் சொல்லி ஆக்ஷேபித்தார்கள். ஆனால் கடைசியில் லெஸ்லெப்ஸ் 1866-ம் வர்ஷத்தில் துருக்கி ஸுல்தானுடைய ஸம்மதத்தை வாங்கிக் கொண்டார். பிறகு 12-கோடி ரூபாய் மூலதனத்துடன் ஸூயஸ் கால்வாய் கம்பெனியை ஸ்தாபித்தார்.

ஆனால் 1859-ம் வர்ஷத்திலேயே கால்வாய் வெட்டும் வேலைகள் ஆரம்பமாய் விட்டன. 10-வர்ஷங்கழித்து அதாவது 1869-ம் வர்ஷம் நவம்பர் மாஸம் 17-ந்தேதியன்று கால்வாய் கப்பல் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப் பட்டது.

சிலவர்ஷங்கள் வரையில் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தக் கால்வாயின் நிர்வாகத்தில் யாதொரு ஸம்பந்தமும் வைத்துக்கொள்ளவில்லை. 1875-ம் வர்ஷத்தில் ஈஜிப்டின் வைஸ்ராயாகவிருந்த இஸ்மெய்ல் பாஷா தமக்கு ரொம்பப் பணமுடையாயிருந்ததால், ஸூயஸ் கால்வாய் கம்பெனியில் அவருக்கு இருந்த 6-கோடிரூபாய் பெறுமானமுள்ள 1,76,000 பங்குகளை ஒரு ப்ரெஞ்ச் கம்பெனிக்கு விற்றுவிட எண்ணினார். இந்த ஸங்கதி சில காலம் ரகஸ்யமாக விருந்தது. கடைசியில் லண்டனில் உள்ள 'பால்மால் கெஜட்' என்னும் பத்ரிகைக்கு அதிபராக இருந்த மிஸ்டர் க்ரீன்வுட் என்பவருக்கு இந்த ஸமாசாரம் எட்டவே, அவர், அப்போது இங்கலண்டின் ப்ரதம மந்த்ரியாக இருந்த பெஞ்சமின் டிஸ்ரெலி யென்பவரிடம் ஸமாசாரத்தைத் தெரிவித்தார். அவர், வேறு எந்த தேசமாவது அந்தப் பங்குகளை வாங்கிவிடக் கூடுமென்றும், அப்படி வாங்கினால், அந்தக் கால்வாய் வழியாக ப்ரிட்டிஷ் துருப்புகள் போகக்கூடாதென்று அந்த தேசத்து அரசர் சொல்லக் கூடுமென்றும், அதனால் ப்ரிட்டிஷாருக்கு கெடுதல்கள் ஏற்படலாமென்றும் சொல்லவே, ப்ரதம மந்த்ரி மற்ற மந்த்ரிகளை ஆலோசனை கேட்காமலே அந்தப் பங்குகளை ரொக்கப்பணங் கொடுத்து வாங்கிவிட்டார். இந்தப் பங்குகள் மொத்தமுள்ள பங்குகளில் கிட்டத்தட்டப் பாதியாகும். இதனால், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கு ஸூயஸ் கால்வாயின் நிர்வாகத்தில் அதிக செல்வாக்கு ஏற்பட்டது.

கப்பல் போக்குவரத்துக்காக வெட்டப்பட்ட பெரிய கால்வாய்களுக்குள் இதுதான் முதலில் வெட்டப்பட்டதாகும். இது ஸுமார் 100-மைல் நீளமுள்ளது. இதை வெட்டுவதற்குப் பிடித்த செலவு 25½ கோடி ரூபாயாகும். பிறகு இந்தக் கால்வாயை அதிக ஆழமாக்கவும், குறுகலான விடங்களில் அகலமாகச் செய்யவும், ஸுமார் 7½ கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள்.

இந்தக் கால்வாய் வழியாக வர்ஷந்தோறும் ஸுமார் 5000 கப்பல்கள் ப்ரயாணம் போகின்றன. இவைகளில் ஸுமார் 3500 கப்பல்கள் அதாவது 10-ல் 7-பாகம் ப்ரிட்டிஷ் வ்யாபாரிகளினுடைய கப்பல்களாகும்.

இந்தக் கால்வாயை வெட்டுவதில் மொத்தம் 8-கோடி கன கஜம் பரிமாணமுள்ள பாறை, மண், மணல் வெட்டியெடுத்து அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. இந்த வேலையைச் செய்ய நாளொன்றுக்கு 30,000 வேலையாட்கள் வேண்டியிருந்தது. இந்தக் கால்வாயின் இருபுறமும் புல்பூண்டற்ற பெரும் பாலைவனமாகையால் ஒரு பெரிய ஸைன்யம் போன்ற இத்தனை ஜனங்களுக்கும் குடியிருக்க வீடுகள் கட்டிக்கொடுத்துச் சாப்பாடு போடவேண்டியிருந்ததாம். வேலையாட்களுக்குக் குடிக்க ஜலமில்லாமல் ஈஜிப்டின் முக்யபட்டணமாகிய கெய்ரோபோன்ற ரொம்ப தூரமுள்ள விடங்களிலிருந்து சுத்த ஜலத்தை ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டு வரவேண்டியிருந்ததாம். இப்போது இந்தக் கால்வாயோடு சேர்ந்தனவாக 5-ஏரிகளிருந்தபோதிலும், கால்வாய் வெட்டுவதற்குமுன்னால் அவைகள் வரண்டுபோன பெரும் பள்ளங்களாக இருந்தன.

ஸூயஸ் கால்வாய் முதலில் எந்த விடத்திலும் ஒரே சீராக 25-அடி ஆழமுள்ளதாக இருந்தது. இப்போதோ அது 31-அடி ஆழமிருக்கிறது. கால்வாயின் அடித்தரை 108-அடி அகலமுள்ளது. மேல் ஜலமட்டத்தில் 420-அடி அகலமுள்ளது. இதை வெட்டி வைத்த கம்பெனியார் இன்னும் அதை அகலமாகச் செய்து வருகிறார்கள். இன்னும் சில வர்ஷங்கள் சென்றால் ரொம்பப் பெரிய கப்பல்களும் அதன் வழியாகப் போகக் கூடுமாம்.

ஸாதாரணக் கப்பல்கள் 100-மைல் நீளமுள்ள இந்தக் கால்வாயை 16-முதல் 17-மணி நேரத்துக்குள் கடந்துவிடுகின்றன. மேலே சொன்ன கம்பெனியார் கப்பல்கள் கால்வாய்க்குள் நுழைவதையும், அதைவிட்டு வெளிவருவதையும் ஒழுங்குபடுத்தி மேற்பார்வை பார்த்து வருகிறார்கள். எந்தக் கப்பல் முன்னால் போகலாம், எது பின்னதாகப் போகவேண்டுமென்பதை அந்தக் கம்பெனியாரே தீர்மானிப்பார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு கப்பலும் தான் முன்னதாகப் போகவேண்டுமென்று கேட்கக்கூடாது. ஆனால் கவர்ன்மெண்டின் ஆதீனத்துக்குள்பட்டு க்ரமமாக தபால்கள் கொண்டுபோகும் கப்பல்களை மாத்ரம் முன்னால் போகவிடுவார்கள்.

கால்வாயைப் பற்பல பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இந்தக் கால்வாயைச் சேர்ந்த ஹெட்டாபீஸ் இருக்கும் இஸ்மேலியா என்னும் ஊரில் இந்தக் கால்வாயைப்போல் ஒரு சிறு மாதிரிக் கால்வாய் செய்து வைத்திருக்கிறார்கள். அதில் எந்தக் கப்பல்கள் எந்த விடத்தில் போய்க்கொண்டிருக்கின்றன வென்பதைக் காட்ட ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வழியில் வேறு கப்பல்கள் இல்லையென்றால்தான் எந்தக் கப்பலும் முன் செல்லலாம். அங்கே டெலிபோன் மூலமாக கால்வாயில் கப்பல்கள் போவதை யறிந்துகொள்ளுகிறார்கள். இதற்கு கால்வாயில் 12 ஸ்டேஷன்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஒரு பெரிய கொடிமரம் நாட்டியிருக்கும். அதில் பகல் பொழுதில் மஞ்சளான பந்துகளும், சிவப்பான பந்துகளும் கட்டியிருக்கும். ராத்ரிக் காலங்களில் அந்த வர்ணங்களுள்ள வெளிச்சங்கள் போட்டிருக்கும். இந்த வர்ணங்களைக் கொண்டு கப்பல்கள் ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுக்குப் போவதா அல்லது எதிர்ப்புறத்திலிருந்து வரும் கப்பல்கள் போவதற்காக இருந்த விடத்திலேயே தங்குவதா என்பதை யறிந்துகொள்ளும். ஒரே திசையை நோக்கிப் போகும் கப்பல்கள் ஒன்றின்பின் ஒன்றாகப் போகவேண்டுமே யொழிய, எதுவும் மற்றவைகளுக்கு முன்னால் போகக் கூடாது. ஐந்தாறு மைல் தூரத்துக்கு ஒருதரம் கால்வாய் சற்று அகலமாயிருக்கிறது.



## THE LATE HON Mr. GOKHALE, C. I. E.

## காலஞ்சென்ற ஆனரபிள் மிஸ்டர் கோகலே, ஸி. ஐ. இ.

இந்தியர்களில் மிகவும் கீர்த்தி பெற்றவர்களுள் ஒருவராயும், உத்தம தேசாபிமானியாயும், தேசத்தின் க்ஷேமத்தையே எப்போதும் நினைத்துக்கொண்டு அதற்காக எப்போதும் பாடுபட்டுக்கொண்டு வந்தவராயுமிருந்த ஆனரபிள் மிஸ்டர் கோபால க்ருஷ்ண கோகலே இந்தமாஸம் 19-ந்தேதி யன்று புனாவில் இறந்துபோனதைப்பற்றி நாம் மிகவும் வருத்தப்படுகிறோம். அவர் சிலகாலமாக நீரிழிவு வ்யாதியாலும், ஹ்ருதய ஸம்பந்தமான வ்யாதியாலும் வருந்திக்கொண்டிருந்தார். ஆனால் அவர் தேசக்ஷேமத்துக்காக உழைக்க வேண்டியதுதான் ரொம்ப முக்யமென்றும், தேகஸௌக்யத்துக்காக தமது வேலைகளை நிறுத்துவது கூடாதென்றும் எண்ணி எப்போதும் ச்ரமப்பட்டு வேலைசெய்து உடம்பைக் கெடுத்துக்கொண்டதால், வைத்யர்கள் என்ன சிகித்ஸை செய்தும் பயன்படாமல் இறந்துபோய்விட்டார். இந்த மாஸம் 13-ந்தேதி யன்று ஸாயந்திரம் மிஸ்டர் காந்திக்காக ஒரு விருந்துக் கச்சேரிவைத்து நடத்தினார். அப்போது அவருக்கு மார்பு அடைத்துக்கொண்டு, அது முதல் கொண்டு ஹ்ருதய ஸம்பந்தமான ச்வாஸகாசம் உண்டாகி பிறகு வரவர அதிகமாயிற்று. டாக்டர்கள் என்ன சிகித்ஸைசெய்தும் ப்ரயோஜனப்படவில்லை. அப்படியிருந்துங்கூட அவருக்கு தேசத்தைப்பற்றிய விசாரம் இன்னும் விடவில்லை. இறந்துபோவதற்கு இரண்டுநாள் முன்பு அதாவது 17-ந்தேதி புதன்கிழமையன்றுகூட காலை மூன்று மணிநேரம் வேலை செய்தாராம். அதற்குப் பிறகுங்கூட பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாராம். தாம் ஸ்தாபித்து நடத்திவந்த ஸெர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸங்கம் என்னும் இந்திய ஊழிய ஸங்கத்தின் மெம்பர்களைக் கூப்பிட்டு, அவர்கள் தமக்குப்பிறகு, ஸங்கத்தை எப்படி நடத்திவரவேண்டுமென்பதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாராம். அவர் இறப்பதற்கு பதினைந்து நிமிஷத்துக்கு முன்னால் வரையில் தமது ஸ்நேகிதர்களுடனிருந்தார். பிறகு இரவு 10-25-க்கு இறந்துபோனார்.

மறுநாள் அநேக ப்ரபலமான ஜனங்கள் மிஸ்டர் கோகலேயின் ப்ரேதத்தைப் பார்க்க வந்திருந்தார்கள். மிஸ்டர் பால கங்காதர திலகர், டாக்டர் ஸர் ராமக்ருஷ்ண பந்தார்க்கர், ஆனரபிள் மிஸ்டர் சௌபால், மிஸ்ஸஸ் ராமாபாய் ரானடே முதலியவர்களும், பூனாவிலுள்ள காலேஜுகளின் உபாத்யாயர்களும், பள்ளிக்கூடத்து மாணவர்களும், இன்னும் மற்ற கனவான்களும் ஸ்த்ரீகளும் வந்திருந்தார்கள். ப்ரேதத்தை ஸ்மசான பூமிக்குக் கொண்டு போனபோது ஸுமார் 20,000 ஜனங்கள் கூடப்போனார்கள். ப்ரேதம் ஸ்மசானத்துக்குப் போவதற்கு ஸுமார் 2-மணி நேரமாயிற்று.

தகனத்துக்குமுன் டாக்டர் பந்தார்க்கரும், மிஸ்டர் திலகரும் மிஸ்டர் கோகலேயின் குணங்களைப்பற்றி ச்லாகித்துப் பேசினார்கள். டாக்டர் பந்தார்க்கர், மிஸ்டர் கோகலே தமது கடமையைச் செய்வதில் ரொம்ப ச்ரத்தையுள்ளவரென்றும், தமது தேசத்து ஜனங்க

ளுக்காக ரொம்பவும் பாடுபட்டு வந்தாரென்றும் சொன்னார். அவர் 20-வர்ஷகாலம் ஒரு பெரிய காலேஜில் ஸ்வல்ப சம்பளத்துடன் உழைத்துவந்தார். அந்தக் காலேஜில் ப்ரொபஸராக இருந்தபோதுதான் அவர் ராஜாங்க விஷயத்தில் ஜனங்களுக்கு அதிக ஸௌகர்யம் ஏற்படுவதற்காகப் பாடுபட்டது. பம்பாய் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலும், இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலும் மெம்பராக இருந்தபோது ஜனங்களுடைய அபிப்ராயங்களை கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து ஜனங்களுக்கு ராஜாங்க ஸம்பந்தமாய் பல ஸௌகர்யங்கள் கிடைக்கும்படி செய்தார். அவர் பத்து வர்ஷங்களுக்கு முன்னால் பெர்குஸன் காலேஜிலிருந்து மாஸம் 20-ரூபாய் பென்ஷனில் விலகிக்கொண்டு, அதுமுதல், இறந்துபோகும் வரையில் இடைவிடாமல் ஜனங்களுக்காகப் பாடுபட்டு வந்தார். அவர் அடிக்கடி இங்லண்டுக்குப்போய் இந்தியர்களினுடைய குறைகளை இங்லீஷ் ஜனங்களுக்கு எடுத்துக் காட்டிவந்தார். மிஸ்டர் கோகலே தென்னாப்ரிக்கா இந்தியர்களுடைய குறைகளை நிவர்த்திப்பதற்காகப் பாடுபட்டது யாவருமறிந்த விஷயம். இப்போது லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் அதிக மெம்பர்கள் நியமிக்கப்பட்டு வருவதும், அவர்களுக்கு அதிக ஸ்வதந்தரங்கள் ஏற்பட்டிருப்பதும் மிஸ்டர் கோகலேயினுடைய முயற்சிகளின் பலன்களாகும். இவ்விஷயங்களைச் சொல்லிவிட்டு, டாக்டர் பந்தர்க்கர், மிஸ்டர் கோகலேயின் மரணத்தால் இந்தியாவில் ஒருபெரிய அந்தகாரம் உண்டாய்விட்டதென்றும், அவர் இந்தியர்களுக்கு செய்துவந்த நன்மைகளுக்கு பதிலாக இந்தியர்கள் செய்யவேண்டியது அவர் செய்துவந்த தேச நன்மைக்கான கார்யங்களை பூர்த்திசெய்ய முயலுவதேயென்றும் சொன்னார்.

மிஸ்டர் பாலகங்காதர திலகர் தாம் செய்த ப்ரஸங்கத்தில், மிஸ்டர் கோகலேயின் ஜீவ்ய சரித்ரத்திலிருந்து என்ன நீதிகள் கற்றுக் கொள்ளவேண்டு மென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் ஆலோசிக்க வேண்டுமென்றும், அவர் தேசத்துக்காகப் பாடுபட வேண்டுமென்று ரொம்ப கவலையாயிருந்தாரென்றும், எல்லோரும் அவர் நடந்து வந்ததுபோல தாங்களும் நடந்துவருவதாக ப்ரதிக்ஞைசெய்தால் தேசம் ரொம்ப நன்மை யடையுமென்றும் சொன்னார்.

மிஸ்டர் கோகலேயின் சரித்ரத்தைப்பற்றி ஏற்கனவே சென்றவர்ஷம் ஜூன்மாஸத்துப் 'பிழைக்கும் வழியில்' ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறோம். அவருடைய ஜீவ்ய சரித்ரத்தில் முக்யமான அம்சங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

கோபாலக்ருஷ்ண கோகலே 1866-ம் வர்ஷம் கோலாபூரில் ஜனனமானார். பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் வாசித்து, 1884-ம் வர்ஷம் பி. ஏ. பரீக்ஷையில் தேறினார். பிறகு, பூனாவிலுள்ள டெக்கான் எடுகேஷன் ஸொஸைடியென்ற தக்ஷிணவித்யா ஸங்கத்தில் மெம்பராகச்சேர்ந்து, பூனாவிலுள்ள பெர்குஸன் காலேஜில் 20-வர்ஷகாலம் உபாத்யாயராக இருந்தார். அவர் சிலகாலம் பூனா ஸர்வ ஜனிக ஸபையின் பத்ரிகைக்கு பத்ராதிபராகவும், பிறகு பூனா டெக்கான் ஸபையின் கௌரவ ஸெக்ரெடரியாகவும், இங்லீஷ் மராத்தி பாஷைகளில் ப்ரசுரமாகும் 'ஸுதாரக்' என்னும் வாரப்பத்ரிகைக்கு அதிபராகவும் இருந்துவந்தார். பம்பாய் ப்ரொவின்ஷல் கான்பரென்ஸுக்கு 4-வர்ஷகாலம் ஸெக்ரெடரியாக இருந்தார். 1895-ம் வர்ஷம் புனாவில் நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸுக்கு ஸெக்ரெடரியாக இருந்தார். 1897-ம் வர்ஷம் இங்லண்டில் வரவுசெலவு விஷயங்களைப்பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட வெல்பி கமிஷனில் ஸாக்ஷ்யம் சொன்னார். 1900-ம் வர்ஷமும் 1901-ம் வர்ஷமும் பம்பாய் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராக இருந்தார்.



1902-ம் வர்ஷம் வைஸ்ராயின் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

1905-ம் வர்ஷம் ஜூன்மாஸம் ஸெர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸொஸைடி என்ற ஸங்கத்தை ஸ்தாபித்தார். 1904-ம் வர்ஷம் காங்க்ரெஸின் ப்ரதிநிதியாக இங்லண்டுக்குப்போய் இந்தியர்களின் குறைகளைத் தெரிவித்து வந்தார். 1905-ம் வர்ஷம் இந்தியாவுக்குத் திரும்பிவந்து காசியில்நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரெஸின் ப்ரெஸிடெண்டாக இருந்தார். 1907-ம் வர்ஷம் ஐக்யமாகாணங்களிலும், பஞ்சாப்பிலும் ஊர் ஊராகப்போய் ப்ரஸங்கங்கள் செய்தார்.

1908-ம் வர்ஷம் காங்க்ரெஸின் அமைப்பை மாற்றுவதில் உதவியாயிருந்தார். அதே வர்ஷத்தில் இங்லண்டுக்குப்போய் அப்போது இந்தியா மந்த்ரியாக இருந்த லார்ட் மார்லியுடன் சட்டஸபை சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசிவந்தார்.

1911-ம் வர்ஷம் ப்ரைமெரிக் கல்வி மசோதாவை வைஸ்ராய் சட்டசபையில் கொண்டுவந்தார். ஆனால் அந்த மசோதா அடுத்த வர்ஷம் தள்ளிவிடப்பட்டது. 1912-ம் வர்ஷம் தென்னாப்ரிக்கா இந்தியர்களின் குறைகளைப் பற்றி கவனிப்பதற்காக தென்னாப்ரிக்காவுக்குப் போய்வந்தார். அதே வர்ஷம் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷனில் ஒரு மெம்பராக நியமிக்கப்பட்டார். 1913-ம் வர்ஷம் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் வேலை ஸம்பந்தமாக இங்லண்டுக்குப் போனார். 1914-ம் வர்ஷம் நவம்பர்மாஸம் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். காங்க்ரெஸில் இரண்டு கக்ஷிகளையும், ஒன்று சேர்ப்பதில் ஊக்க மெடுத்துக்கொண்டார். 1915-ம் வர்ஷம் பிப்ரவரிமாஸம் 19-ந்தேதியன்று இறந்து போனார்.

மிஸ்டர் கோகலே இறந்து போனதைப் பற்றி [illegible] இந்தியாவின் பற்பல பாகங்களில் மீட்டிங்கள் நடந்து வருகின்றன. இந்தமாஸம் 23-தேதியன்று டெல்லியில் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ் மிஸ்டர் கோகலேயின் ஜீவ்யசரித்ரத்தையும் அவருடைய சிறந்த குணங்களையும் பற்றி விஸ்தாரமாகப் பேசினார். மிஸ்டர் கோகலே கவர்ன்மெண்டை ரொம்பவும் ஆதரித்துப்பேசியும், அநேக ஸமயங்களில் ராஜாங்க நிர்வாக முறைகளைப்பற்றியும், கவர்ன்மெண்டின் கொள்கைகளைப்பற்றியும் ரொம்பவும் கண்டித்துப்பேசியும் வந்தாரென்றும், முக்யமாய் வித்யா விஷயங்களைப்பற்றியும், பணவரவு செலவைப்பற்றியும் பேசும்போது, அவரை ஆக்ஷேபிப்பவர்கள் தக்கபடி பதில் சொல்லக்கூடமுடியாமல் கஷ்டப்படும்படி, அவ்வளவு ஸாமர்த்தயமாய்ப் பேசுவாரென்றும், ஆனால் ஸபையில் பேசும்போது பெருந்தன்மையுடனும், மரியாதையுடனும் பேசுவது வழக்கமென்றும் வைஸ்ராய் சொன்னார்.

மிஸ்டர் கோகலேயுக்கு கவர்ன்மெண்டார் 1904-ம் வர்ஷத்தில் ஸி. ஐ. இ. பட்டம் கொடுத்தார்கள். சென்றவர்ஷம் அவருக்கு கே. ஸி. ஐ. இ. பட்டம் கொடுக்கவேண்டுமென்று லார்ட் ஹார்டிஞ்ஜ் நமதரசருக்கு சிபார்சு செய்தபோது மிஸ்டர் கோகலே அந்தப் பெரிய பட்டம் வேண்டாமென்றும், இந்தியாவின் ஊழியனுக்கு ஏற்கனவேயுள்ளது போதுமென்றும்சொல்லி மறுத்துவிட்டார். இந்தியாவின் நன்மைக்கு உழைக்க இவரைப்போன்ற மஹான் இனியேல் ஜனிப்பாரோ என்பது ஸந்தேகம்.

## A CUNNING GARDENER.

## தந்த்ரமுள்ள தோட்டக்காரன்.

ஒரு வேதாந்தி, ஒரு வக்கீல், ஒரு சிப்பாய், ஒரு பலசரக்கு வ்யாபாரி ஆகிய இந்நான்கு பேரும் ஒரு தோட்டத்துக்குள் சேர்ந்துபோகும்படி நேர்ந்தது. தோட்டத்து மரங்களில்

பக்வமான பழங்கள் ஏராளமாய் இருந்தன. இந்நால்வரும் தோட்டக்காரன் அயர்ந்து நித்ரை செய்வதைப் பார்த்து பழங்களை தங்கள் மனம்போல் கொள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். இவர்களுடைய ஆரவாரங்களால் தோட்டக்காரன் விழித்துக்கொண்டான். அவன் இந்நால்வரையும் சேர்ந்து எதிர்க்க தன்னால் முடியாதென்று எண்ணி ஓர் உபாயம் செய்தான். அதென்னவெனில்:—"நான் வேதாந்தியின் சிஷ்யன், வக்கீல் கோர்ட்டு உத்யோகஸ்தர், சிப்பாய் ராணுவத்தைச் சேர்ந்தவன், ஆகையால் இவர்கள் எந்த ஸமயத்திலாவது எனக்கு தகுந்த உபகாரம் செய்வார்கள். அவர்கள் பழம் பறித்துக்கொள்ளுவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. இந்தப் பலசரக்கு வ்யாபாரிக்கு இங்கு என்ன வேலை? நான் அவனுக்குக் கொடுக்கவேண்டியதாக பாக்கி ஒன்றுமில்லையே. அப்படியிருக்க, இவன் இங்கு ஏன் வந்தான்?" என்று அந்த வ்யாபாரியை நன்றாய் அடித்துத் துரத்திவிட்டான். அவனை அடிக்குங்காலத்தில் மற்ற மூவரும் அவனுக்கு உதவியாக வரவில்லை. பிறகு சிப்பாயினிடத்து திரும்பி 'நான் ஸர்க்காருக்குக் கொடுக்க வேண்டியது ஒன்றுமில்லையே. அப்படியிருக்க, இந்த ராணுவ வீரனுக்கு இங்கு என்ன வேலை?' என்று சொல்லி அவனையும் அடித்துத் துரத்திவிட்டான். அடுத்தபடியாக வக்கீலைப் பார்த்து "ஐயா, சட்டங்கள் பார்த்து தேர்ந்து வழக்குகளின் ந்யாயங்களை நன்றாய் அறிந்த ப்ரபுவே, எந்தச் சட்டத்தில் பிறர் பொருளைக் கொள்ளையடிப்பது ஒழுங்குத் தப்பு அல்லவென்று சொல்லியிருக்கிறது? பேராசை கொண்ட வீணு," என்று உரக்கக்கூவி உதாஸீனமாக திட்டும்பொழுது வக்கீல் "பலசரக்கு வ்யாபாரிக்கும் சிப்பாய்க்கும் ஒத்தாசை செய்திருந்தால் நாம் இக்கதிக்கு வந்திருக்கமாட்டோம்" என்று வேதாந்தியை நோக்கிச் சொன்னான். அப்பொழுது வேதாந்தி தனக்கு ஒன்றும் நேரிடாதென்று தான் தப்பினதாக எண்ணி, வக்கீலின் வார்த்தைகளுக்கு செவிகொடாமலே இருந்தான். வக்கீலை தோட்டத்தினின்று துரத்திய பிறகு, வேதாந்தியைப் பார்த்து "தாங்கள் படித்த வேதாந்தத்தின் பயன் இது தானோ? 'படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்' என்பதுபோல, வேதாந்தம் படித்து ஊரைக் கொள்ளையிடவா கற்றுணர்ந்தீர்? நீங்கள் நால்வரும் சேர்ந்து கொள்ளையடித்த பழங்களுக்குள்ள க்ரயத்தைக் கொடாதவரையில் நான் உம்மை விடேன்" என்று தோட்டக்காரன் வெகு ஆக்ரத்துடன் கூற, வேதாந்தி தப்பித்துக் கொள்ளுவதற்கு வேறு வழியில்லாததனால் தன் உடையையும் தலைப்பாகையையும் ஈடாக வைத்து தன்னை மீட்டுக்கொண்டானும்.

## A KING AND A VEDANTI.

## அரசனும் வேதாந்தியும்.

ஈஜிப்ட் என்று கூறப்பட்ட எகிப்து நாட்டில் உயர்ந்த குலத்தில் உண்டான இரண்டு வாலிபர்களிருந்தார்கள். அவர்களில் ஒருவர் பணம் சேர்ப்பதிலும், மற்றொருவர் படிப்பிலும் மும்மரமாய் இருந்தார்கள். நாளாவர்த்தியில் படிப்பில் முயன்றவர் கல்வியில் தேர்ந்து அக்காலத்திலுள்ள கற்றோர்களுள் முதன்மையாய் இருந்தார். மற்றவரோ எகிப்து நாட்டரசரானார். வேதாந்தியான தன் ஸ்நேகிதரைப் பார்த்து அந்த தனிகன் "நான் அரசனாகி ராஜ்யமாளுகிறேன்; நீயோ தரித்ரத்தில் மூழ்கி இருக்கிறாயே" என்றார். அதற்கு வேதாந்தி "முக்திக்கு ஸாதனமானதும் பக்தர்களுக்கு பரம்பரையாகக் கிடைத்துவருகிறதுமான ஞானம் என்ற அம்ருதத்தை நான் அடைந்ததற்காக ஸச்சிதானந்த ஸ்வரூபியாகிய லோகநாதனிடத்தில் நன்றியறிவுள்ளவனாக இருக்கிறேன். உனக்கோ ஒரு அரசனுடைய பூமியாகிய எகிப்து தேசம் ஒன்றுமட்டும் கிடைத்திருக்கிறது. நான் எல்லாருடைய காலில் அகப்பட்டு தேய்படும் எறும்பாக இருக்கிறேன். 'ஐயோ, கொட்டிவிட்டதே' என்று எல்லாரும் புலம்பும்படியான குளவியல்ல. இப்படிப் பிறருக்கு கொஞ்சமேனும் தீங்குக்கிடமில்லாமலிருக்கும்படி என்னை கடவுள் க்ருபை செய்து காப்பாற்றி வருவதற்கு நான் எவ்வளவு நன்றியறிவுள்ளவனாய் இருக்கிறேன்" என்றார்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Elementary Education in Tenali.

தெனாலியில் எலிமென்டரிப் படிப்பு.—தெனாலித்தாலுக்காவில் க்ராமாந்தரங்களில் எலிமெண்டரிப் படிப்பை அபிவ்ருத்தி செய்வதற்காக எலிமெண்டரி கல்வி லீக் என்று ஒரு ஸங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். அந்தத் தாலுக்காவில் 20 க்ராம ஸங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் 10 ஸங்கங்கள் டி லீக்கில் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கின்றன. எலிமெண்டரி ஸ்கூல் இல்லாத ஒவ்வொரு க்ராமத்திலும் எலிமெண்டரி ஸ்கூல் ஸ்தாபித்து பிள்ளைகளுக்கு இலவசமாகப் படிப்புச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பது இந்த லீக்கின் நோக்கமாம். ஏற்கனவே இரண்டு இலவச எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

### An Agricultural School in Travancore.

திருவாங்கூரில் ஒரு விவஸாய பள்ளிக்கூடம்.—திருவாங்கூரில் ஒரு விவஸாய பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பதைப்பற்றி யோசனை நடந்து வருவதாகத்தெரிகிறது. அந்தஸமஸ்தானத்து வித்யா இலாகா டிரெக்டரின் வேண்டுகோளின்மேல், விவஸாய டிரெக்டர் ஒரு ஸ்கீம் தயார்செய்து அனுப்பியிருக்கிறாராம். அந்த ஸ்கீமை கவர்ன்மெண்டாருக்கு அனுப்புவார்களென்று சொல்லப்படுகிறது.

### Elementary Schools in Madras Presidency.

சென்னை ராஜதானியில் எலிமென்டரிப் பள்ளிக் கூடங்கள்.—சென்ற 1912-13-ம் வர்ஷத்தில் பையன்களுக்காக 6638 எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்களும், பெண்களுக்காக 256 எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. அதே வர்ஷத்தில் பையன்களுக்காக 68 எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடங்களும், பெண்களுக்காக 1 ஸ்கூல் கட்டிடமும் புதிதாகக் கட்டப்பட்டன. 1913-14ம் வர்ஷத்தில் 5887 பையன்கள் எலிமெண்டரி ஸ்கூல்களும், 283 பெண்கள் எலிமெண்டரி ஸ்கூல்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. 115 பையன்கள் எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடங்களும், 11 பெண்கள் எலிமெண்டரி ஸ்கூல் கட்டிடங்களும் புதிதாகக் கட்டப்பட்டன.

சென்ற 1913-14-ம் வர்ஷத்தில் இன்னின்ன ஜில்லாக்களில் இத்தனை பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன வென்பது பின்வரும் கணக்குகளால் தெரியவரும்.

| ஜில்லா | ஆண் ஸ்கூல்கள் | பெண் ஸ்கூல்கள் |
|---|---|---|
| கஞ்சம் | 304 | 30 |
| விசாகப்பட்டணம் | 237 | 12 |
| கோதாவரி | 199 | 21 |
| க்ருஷ்ணா | 493 | 7 |
| குண்டூர் | 461 | 20 |
| கர்நூல் | 202 | 6 |
| பல்லாரி | 207 | 13 |
| அனந்தப்பூர் | 296 | 5 |
| கடப்பை | 279 | 7 |
| நெல்லூர் | 267 | 16 |
| மதராஸ் | 15 | 1 |
| செங்கல்பட்டு | 220 | 18 |
| வட ஆற்காடு | 192 | 14 |
| சித்தூர் | 156 | 3 |
| தென்னாற்காடு | 319 | 10 |
| தஞ்சாவூர் | 319 | 9 |
| திருச்சினாப்பள்ளி | 315 | 11 |
| மதுரை | 150 | 7 |
| ராமநாதபுரம் | 171 | 6 |
| திருநெல்வேலி | 196 | 18 |
| கோயமுத்தூர் | 385 | 5 |
| சேலம் | 279 | 9 |
| நீலகிரி | 11 | 0 |
| மலையாளம் | 176 | 30 |
| தென் கன்னடம் | 38 | |
| மொத்தம். | 5887 | |

# TAMIL LITERATURE
## தமிழ்க் கல்வி.

### In Praise of Belgium.

பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து.—புதுச்சேரியில் இருக்கும் ஸி. சுப்ரமண்ய பாரதி பெல்ஜியம் நாட்டின்மேல் ஒரு வாழ்த்துக்கவி பாடியிருக்கிறார். அதைக் கீழே ப்ரசுரிக்கிறோம். அந்தக்கவியில் கருணை, வீரம், அத்புதம் என்னும் ரஸங்கள் நிறைந்திருக்கின்றன. அந்தப் பாட்டுகளைப் பாடும்போது துயரமும், உத்ஸாகமும், ஆச்சர்யமும் தோன்றும்படி பாடவேண்டும். நாட்டை, அஸாவேரி, தோடி என்ற ராகங்கள் ஏற்றவை யாகும்.

அறத்தினால் வீழ்ந்து விட்டாய்
அன்னியன் வலியனாகி
மறத்தினால் வந்து செய்த
வலிமையைப் பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைக் காக்கு
முழைவரைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளியையாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய். (1)

மானத்தால் வீழ்ந்துவிட்டாய்
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடையனேனும்
ஊனத்தால் உள்ளமஞ்சி
ஒதுங்கிட மனமொவ்வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய். (2)

வீரத்தால் வீழ்ந்து விட்டாய்,
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே யொதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ்வாமல்
பாரத்தை யெளிதாக் கொண்டாய்,
பாம்பினைப் புழுவே யென்றாய்
நேரத்தே பகைவன் றன்னை
“நில்”லென முனைந்து நின்றாய். (3)

துணிவினால் வீழ்ந்து விட்டாய்,
தொகையிலாப் படைகளோடும்
...வனர் செருக்கினோடும்
...ம்பொழுதுக யெதிர்த்த போது.
...ரிக்கும் சிப்பாய்களுமாட்டாய்
...தால் நாம் இக்கதிக்கு வ
என்று வேதாந்தியை நோ
அப்பொழுது வேதாந்தி த...

வீ
டு
டா
“ஜ
களி
எந்த
யடிட்
சொல்
வீணே,” என

பதுங்குதல் பயனென்றெண்ணுப்
தணிவது நினைக்க மாட்டாய்
நில்லெனத் தடுத்தல் செய்தாய். (4)

வெருளுத லறிவென் றெண்ணாய்
விபத்தையோர் பொருட்டாக் கொள்ளாய்
சுருளலை வெள்ளம் போலத்
தொகையில்லாப் படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேலை
“உருளுக தலைகள், மான
மோங்குக”வென் றெதிர்த்து நின்றாய். (5)

யாருக்கே பகையென்றாலும்
யார்மிசை யிவன்சென்றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி
உத்தர வெண்ணிடாமல்
போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கு மிடமில்லாமல்
வெட்டுவே னென்று நின்றாய். (6)

வேள்வியில் வீழ்வதெல்லாம்
வீரமும் புகழு மிக்கு
மீள்வதுன் நிலகிற் கென்றே
வேதங்கள் விதிக்கு மென்பர்
ஆள்வினை செய்யும் போதில்
அறநதிலே யிளைத்து வீழ்ந்தார்
கேள்வியுன் னுடனேமீளக்
கிளர்ச்சி கொண் டுயிர்த்து வாழ்தல். (7)

விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்று மட்டும்
களக்கமா யிருளின் மூழ்குக்
கனக மாளிகையு முண்டாம்
அளக்கருந் துயருற் றாலும்
அச்சமே யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பர்
துயருண்டோ துணிவுள் ளோர்க்கே? (8)

### Gitams of the Hour.

ஸமயோசித கீர்த்தனங்கள்.—இது உடுமலைப்பேட்டை சரபம் முத்துஸாமிக்கவிராயர் எழுதியது. இதில் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ், காங்க்ரெஸ் முறையீடு, யுத்தம் முதலியவைகளைப்பற்றி ஸமயோசிதமான பாட்டுகள் இருக்கின்றன. புஸ்தகம் வேண்டுவோர் ஸி. எம். ராஜா செட்டியார், ராஜன்டேல், வால்டாக்ஸ் ரோட், சென்னை, என்று எழுதினால் இலவசமாய்க் கிடைக்கும்.



# SCIENCE AND INVENTION.
## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Wood from Straw.

வைக்கோலிலிருந்து மரம்:—ப்ரான்ஸிலுள்ள லையான்ஸ் என்னும் பட்டணத்தில் சில ப்ரெஞ்சுக்காரர்கள் வைக்கோலிலிருந்து ‘போலி மரம்’ செய்திருக்கிறார்களாம். அது இயற்கை மரத்துக்குப்பதிலாக அநேக வேலைகளுக்கு உபயோகப்படுமாம். வைக்கோலை சிறுதுண்டுகளாக நறுக்கி ஜலத்தில் போட்டு அதோடு சில ரஸாயனப் பொருள்களைக் கலந்து கொதிக்கவைத்து கூழாகச்செய்கிறார்கள். நன்றாய்க் கொதித்த பிறகு அதை அச்சுகளில் வார்த்து ப்ரெஸ்களால் அழுத்தி இஷ்டமானபடி பலகைகளாகவும், தூண்களாகவும், வேறு ஸாமான்களாகவும் செய்கிறார்களாம். இந்த ‘மர’த்தை ரம்பத்தால் அறுக்கலாமாம். ரொம்ப கெட்டியாயிருக்கிறதாம். இதை எரியவிட்டால் புகையில்லாமல் ப்ரகாசமாய் எரிகிறதாம். நெருப்புக்குச்சிகள் செய்ய இது உபயோகப்படுமென்று சொல்லப்படுகிறது.

### A New Life Preserver.

ஜலத்தில் முழ்காமலிருக்க ஒரு புதுச்சட்டை.—ஜலத்தில் நீந்தத் தெரியாதவர்களுக்கு உபயோகப்படக் கூடியதான புது உயிர்ச்சட்டையொன்றை அமெரிக்காவிலுள்ள ஒருவர் புதிதாய்க் கண்டுபிடித்திருக்கிறார். சிலவித உயிர்ச்சட்டைகளைப் போட்டுக்கொண்டால் கைகால்களை வேண்டியபடி அசைக்க முடிவதில்லை. இதில் அப்படியல்ல. ஒருவர் தமது அவயவங்களை வேண்டிய விதமாக அசைக்கலாம். கண், மூக்கு, வாய் முதலியவைகளை சட்டை மூடிக்கொள்ளாது. தேகத்தில் திறந்தபாகங்களைத் தவிர, சட்டை மூடிக்கொண்டிருக்கும் மற்ற பாகங்களில் ஜலம் புகாதபடி சட்டை தேகத்தில் நன்றாய் இறுக ஒட்டிக்கொள்ளுகிறது. சட்டையில் இரண்டொரு பைகள் அமைத்துக்கொள்ளலாமாம். இந்தப் பைகளில் சுத்தமான ஜலம் நிறைந்த ஸீஸா ஒன்றையும், ஒரு மின்ஸார விளக்கையும், பருமன் குறைக்கப்பட்ட ஆகாரத்தையும் வைத்துக்கொள்ளலாமாம்.

### Source of the Nile.

நைல் நதியின் உத்பத்திஸ்தானம்.—ஆப்ரிக்காவிலுள்ள,மிகப் பெரிய நதியாகிய ‘நைல்’ நதியைப் பற்றி பழைய காலத்து இந்தியர்களுக்கு தெரிந்திருந்ததென்று ஊகிக்க இடமிருப்பதாக ஒரு பத்ரிகை எழுதுகிறது. இந்தியர்கள் தான் அந்த நதியின் உற்பத்தி ஸ்தானத்தை முதல் முதலில் கண்டுபிடித்தார்களென்று சொல்லலாமாம். தற்காலம் அதன் உற்பத்தி ஸ்தானத்தை முதலில் கண்டுபிடித்தவர் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த காப்டன் ஸ்பீக் என்பவர். அவர் புராணங்களில் குச த்வீபத்தைப் பற்றியும், அதிலுள்ள க்ருஷ்ணு என்ற நதியைப்பற்றியும் வாசித்திருந்தாராம். குசத்வீபம் என்பது அபிஸ்ஸீனியா தேசமென்று சொல்லப்படுகிறது. காப்டன் ஸ்பீக், க்ருஷ்ணு நதி நைல் நதியாகும் என்று எண்ணி புராணங்களில் காட்டியுள்ள மார்க்கத்தை யனுஸரித்து ப்ரயாணம் செய்ததில் அந்த நதியின் உற்பத்தி ஸ்தானத்துக்குப் போய்ச்சேர்ந்தாராம். நைல் நதி விக்டோரியா நையான்ஸா என்னும் ஏரியிலிருந்து உற்பத்தியாகிறது. நமது முன்னோர்கள் அதற்கு அமரா ஏரியென்று பெயரிட்டிருந்தார்கள்.

### Annihilite.

‘அன்னிஹிலைட்’ என்னுய் வெடிகுண்டு.—ஒரு இங்லீஷ் ரஸாயன சாஸ்த்ரி ‘அன்னிஹிலைட்’ என்று சொல்லப்படும் நாசம் செய்வதற்கான வெடிகுண்டு ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறாராம். அந்த வெடி குண்டை ப்ரிட்டிஷ் யுத்த ஆபீஸ் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களாம். அதை வெடி தீர்த்தால், அது வெடிக்கும் இடத்தைச் சுற்றிலும் 2,000 கஜம் நீளம் 200 கஜம் அகலமுள்ள ப்ரதேசம் முழுவதும் பற்றிக்கொண்டு எரிகிறதாம். அதன் கீழ் உள்ள மனிதர்களும், ம்ருகங்களும் மரஞ் செடி கொடிகளும் வெந்து கரியாய்ப் போய்விடுகின்றன. யுத்தகளத்தில் பூமியின் கீழ் பள்ளங்கள் தோண்டி அவைகளில் வஸித்துவரும் ஸோல்ஜர்களும் அதற்கு இரையாகவேண்டியதுதானும். ஏனென்றால் வெடிகுண்டு வெடித்தவுடன், அதிலுள்ள மருந்துகளின் ரஸாயன மாறுபாட்டால் ஆகாயத்திலுள்ள ப்ராணவாயு உடனே பற்றிக்கொண்டு எரிகிறதாம். ஆனால் விஷம் பந்தமான வாயுக்கள் உண்டாகும் குண்டுகள் உபயோகிக்கக்கூடாதென்று ஹேக் என்னும் ஊரில் நடந்த பரஸ்பரதேச மீட்டிங்கில் தீர்மானமாயிருக்கிறது.

# SANITATION AND MEDICINE.

## ஸௌகாதாரமும் வைத்யமும்.

### Precautions against Plague.

ப்ளேக்குக்காலங்களில் வேண்டிய முன்ஜாக்ரதைகள்.—ப்ளேக் பரவியிருக்கும் இடங்களிலும், அவ்விடங்களுக்குப் பக்கத்திலுள்ள ஊர்களிலும் ப்ளேக் வராதபடி பார்த்துக்கொள்ள ஜனங்கள் சில முன்ஜாக்ரதைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவச்யமாகும். அவையாவன:—

எலிகளை எலிக் கூண்டுகளிலும், பொறிகளிலும் பிடித்து ஜலத்தில் மூழ்கடித்து நெருப்பிட்டு எரித்துவிட்டால், அவைகளில் இருக்கக்கூடிய தெள்ளுப் பூச்சிகள் இறந்துபோகும். இந்தத் தெள்ளுப்பூச்சிகளால்தான் ப்ளேக்வ்யாதி விசேஷமாய் பரவுகிறது. தெள்ளுப்பூச்சி ப்ளேக் வ்யாதிகண்ட மனிதர்களையும், எலிகளையும் கடித்து அவர்களிடத்திலிருந்து ப்ளேக் க்ருமிகளைக்கொண்டு போய், நோயற்ற மனிதர்களையும், எலிகளையும் கடித்து, அவர்கள் சரீரத்தில் சேர்த்து விடுகிறது. ஆகையால் இந்தப் பூச்சிகள் பரவாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது அவச்யமாகும். படுக்கைகளிலும் துணிகளிலும் இந்தப் பூச்சிகள் இருக்கக்கூடுமாகையால் அவைகளை தினந்தோறும் இரண்டு மணி நேரம் வெயிலில் காயப்போடவேண்டும்.

வீடுகளில் சுவர்களின் இடுக்குகளிலும், இருட்டான மூலைகளிலும் இந்தப் பூச்சிகள் இருக்கக்கூடுமாகையால், க்ரெஸால் (Cresol) என்னும் மருந்தை இங்க்லீஷ் மருந்துக் கடைகளில் வாங்கி, வீட்டுக்குள் எரிமுட்டைத் தணலைவைத்து, அதில் இரண்டு அவுன்ஸ் மருந்தை ஊற்றிப் புகையும்படிவிட்டு, ஜன்னல்கள், கதவுகள் எல்லாவற்றையும் மூடி இரண்டு மணி நேரம் அப்படியே புகைந்து கொண்டிருக்கும்படி விடவேண்டும். இதனால் ப்ளேக்வ்யாதிக்குக் காரணமான தெள்ளுப்பூச்சிகள் இறந்துபோகும்.

எந்த வீட்டிலாவது எலிசெத்துக்கிடந்தால் உடனே வீட்டிலுள்ளவர்கள் அவ்வீட்டை விட்டு விட்டு வேறு இடங்களுக்குப் போய் விடவேண்டும்.

ஒவ்வொருவரும் ப்ளேக் அம்மைகுத்திக் கொள்ள வேண்டும். இது வ்யாதிவராமல் தடுப்பதற்குள்ள மற்ற ஸாதனங்களைவிட மேலானது.

ப்ளேக் உள்ள ஊரிலிருந்து யாராவது ஸ்நேகிதர்கள், பந்துக்கள் வந்தால், அவர்களுடைய படுக்கைகள், துணிகள், மற்ற ஸாமான்கள் ஆகிய எல்லாவற்றையும் வெயிலில் நன்றாய்க் காயப்போட்ட பிறகுதான் அந்த படுக்கைதுணி ஸாமான்களை வீட்டிலுள்ளவைகளோடு கலக்கவேண்டும்.

வீட்டில் எல்லா அறைகளையும் எப்போதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். வீட்டிற்குள் எங்கேயும் குப்பை சேரும்படி விடக்கூடாது.

எலிகள் வீட்டுக்குள் நுழையாமலும், பண்டங்களைத் தின்னாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

### Too Much Sugar is Dangerous.

அதிக சர்க்கரை ஆபத்துகிடமாகும்.—குழந்தைகள் சர்க்கரையை அதிகமாகத் தின்பதால் தேகத்துக்குப் பலவிதங்களில் கெடுதல்கள் உண்டாகின்றன. (1) அதிக சர்க்கரையால், வயிற்றில் காஸ்ட்ரிக் ஜூஸ் என்னும் ஜீர்ணரஸம் உண்டாகும் இடத்திலுள்ள கருவிகளுக்கு எரிச்சல் உண்டாகும். (2) அனாவச்யமாய் ஏராளமான புளிப்புத்ராவகங்கள் வயிற்றில் ஊறும். (3) உணவு ஜீர்ணமாவதற்குத் தடையேற்படும். எண்ணெய்ப் பதார்த்தங்கள் தேகத்தில் சேர்ந்து கொள்ளாதபடி தடுக்கும். இவைகளால், குழந்தைகளுக்கு தேகத்தில் ரத்தக்குறைவு ஏற்படும். (4) சாப்பிடும் உணவுப் பொருள்கள் தேகத்தில் சதை, ரத்தம் முதலிய பொருள்களாக மாறுவது கஷ்டம். (5) சர்க்கரை அதிகமாகச் சாப்பிடுவதால் தேகத்தில் த்ராவக ஸம்பந்தமான ஒரு விதமயக்கமுண்டாகும். (6) நரம்பு ஏற்பாடுகளுக்கும் அதிக சர்க்கரையால் கெடுதல்கள் ஏற்படக்கூடும். மேற்சொன்னவைகளால் குழந்தைகளுக்கு சர்க்கரை அதிகமாகக் கொடுக்கக் கூடாதென்று ஏற்படுகிறது. இதைப் பெற்றோர்கள் அவச்யம் கவனிக்கவேண்டும்.

### Medical Grants.

வைத்யக்ராண்டுகள்.—சென்னை ராஜதானியில் ஸ்த்ரீகள் குழந்தைகளுக் கென்றே ஏற்பட்டிருக்கும் 12-ஆஸ்பத்ரிகளுக்கு சென்னை கவர்ன்மெண்டார் 39,599-ரூபாய் க்ராண்ட் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இவைகளில் சென்னை வண்ணாரப்பேட்டை ஆஸ்பத்ரிக்கு 3,550-ரூ., கரூர் ஆஸ்பத்ரிக்கு 540-ரூ., தண்டையார்பேட்டை ஆஸ்பத்ரிக்கு 3,000-ரூ, திருவல்லிக் கேணி விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரிக்கு 8467-ரூ. கொடுத்திருக்கிறார்கள்.



# LAW.

## சட்டம்.

### Cat versus Dog.

நாயும் பூனையும்.—வாதியாகிய ஒரு ஸ்த்ரீ இங்கிலண்டில் ஒரு ஊரில் ஒரு தேயிலைக் கடைக்குப் போனாள். போகும்போது தன்னுடைய நாயையும் கையில் தூக்கிக்கொண்டு போனாள். அவள் அந்தக் கடையில் பக்ஷணங்கள் தின்ன ஆரம்பித்தபோது நாயைத் தரையில்விட்டு, அதைக் கட்டியிருந்த தோல் வாரைத் தனதுகையில் பிடித்துக்கொண்டிருந்தாள். அந்தக் கடையில் அவள் உட்கார்ந்திருந்த அறைக்குப் பக்கத்தில் ஒரு பூனையும் அதன் குட்டிகளும் இருந்தன. ஸ்த்ரீ சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, நாய் பூனையிருந்த அறையின் கதவண்டை பலமாக மூச்சுவிட்டு மோப்பம் பார்த்துக்கொண்டிருந்தது. அப்போது பூனை கோபங்கொண்டதோ என்னவோ அது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் பூனையானது சிறிது நேரத்துக்கெல்லாம் வெளியில்வந்து நாயைக் கடித்தது. உடனே அந்த ஸ்த்ரீ, நாயின்மேல் பூனை தாவிப் பிடித்துக்கொண்டிருந்தபோது, நாயைத் தூக்கி எடுத்தாள். உடனே பூனை கீழேவிழுந்து, பிறகு ஸ்த்ரீயின்மேல் தாவி அவள் கையில் கடித்துக் காயம் உண்டாக்கிவிட்டது. அதனால் அந்த ஸ்த்ரீயின் தேகத்தில் ரத்தம் விஷ ஸம்பந்தமடைந்துவிட்டது. அதன்மேல் அந்த ஸ்த்ரீ தனக்கும் நாய்க்கும் தொந்தரவு ஏற்பட்டதற்காக தேயிலைக் கடைக்காரர்களின் மேல் நஷ்டத்துக்கு வ்யாஜ்யம் போட்டாள். கீழ்க் கோர்ட்டார், தேயிலைக்கடைக்காரர்கள் பூனையால் கடைக்குவருபவர்களுக்குத் தொந்தரவுகள் நேரிடாதபடி ந்யாயமாய் வேண்டிய அளவு ஜாக்ரதை எடுத்துக் கொள்ளவில்லையென்றுசொல்லி வாதிக்கு 1,!00 ரூபாய்க்குத் தீர்ப்புச்செய்தார்கள்.

இந்தக்கேஸ் அப்பீலுக்குப் போனதில் அப்பீல் கோர்ட்டார் பின்வருமாறு அபிப்ராயப்பட்டார்கள். "ஒரு மனிதனுடைய கார்யங்களால் விளையும் ஸாதாரண பலன்களல்லாத மற்ற செய்கைகளுக்கு அவன் ஸாதாரணமாக பாத்யப்பட்டவனல்ல. அவன் செய்யுங் கார்யங்களால் ஸாதாரணமல்லாத பலன்கள் ஏற்படக்கூடுமென்று அவனுக்குத் தெரிந்திருந்ததாக ரூபிக்கப்பட்டால்மட்டும், அவன் தன் செய்கைகளுக்கு பாத்யப்படுவான். பூனை குட்டிகளை வளர்த்துக்கொண்டிருக்கும்போது அது மனிதர்களுக்கு அபாயம் உண்டாக்கக் கூடியதல்ல. ஆகையினால் அது சாந்தமாயிருந்து பிறகு மூர்க்கத்தனமடைந்த ப்ராணிவர்க்கங்களைச் சேர்ந்ததல்ல. நாய் அந்தக் கடைக்குள் வந்தவரையில் யாதொரு அபாயமும் கிடையாது.

நாய் வந்ததால் நாய்க்குத்தான் முக்யமாய்க் கெடுதலே யொழிய, மனிதர்களுக்குக் கெடுதல் ஏற்படுவது நாயோடுகூட இருந்து அதைக்காக்க முயன்றதால்தான். இந்தக்கேஸில் பூனை மூர்க்க குணமடைந்த ப்ராணியென்றும், சிவப்புக் கழுத்துப் பட்டைகள் (அல்லது வஸ்த்ரம்) தரித்திருக்கும் ஜனங்களுக்கு எப்படி காளைமாடு அபாயமானதோ அப்படியே நாய் வைத்திருக்கும் ஜனங்களுக்கு பூனை அபாயகரமான ம்ருகமென்று எண்ணவேண்டு மென்றும், வாதியின் வக்கில் வாதித்தார். ஆனால் இந்த வாதம் சரியல்ல. ஏனென்றால் சிவப்பு வஸ்த்ரம் தரித்திருக்கும் மனிதரைத் தாக்கும் காளைமாடு, மற்ற மனிதர்களையும் தாக்கக்கூடும். ஆனால் நாயும் பூனையும் விரோதிகள் என்பது பழமொழிபோல் வழங்கிவருகிறது. ஒரு பூனை நாயின்மேல் பாயும்போது, ஒரு மனிதரும் ஸமீபத்திலிருந்தால், பூனை மனிதருக்கும் அபாயம் உண்டாக்கக்கூடியதென்று சொல்வதற்கில்லை. பூனை மனிதர்களுக்கு அபாயம் உண்டாக்கக்கூடிய ம்ருகமல்ல. ஆனால் காளைமாடோ மனிதருக்குக் கெடுதி செய்யக்கூடியது." இப்படி அப்பீல் கோர்ட்டார் அபிப்ராயப்பட்டு கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை மாற்றி விட்டார்கள்.

### Promissory Note by a Father.

தகப்பன் எழுதிக்கொடுத்த ப்ராமிஸரி நோட்டு.—ஒரு ஹிந்து தகப்பனார் வாதிக்கு ஒரு ப்ராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்திருந்தார். வாதி பணத்துக்காக வ்யாஜ்யம் போட்டதில், ப்ராதில் ப்ரதிவாதியின் (தகப்பனார்) பிள்ளைகளும் கடனைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களென்று கண்டிருந்தார். கோர்ட்டார் சரியென்று தோன்றினால் பிள்ளைகளின்பேரிலும் தீர்ப்புச்செய்யலாம். ப்ராமிஸரி நோட்டுக்கு ப்ரதிப்ரயோஜனம் இல்லையென்று பிள்ளைகள் சொன்னால், அவர்களே அதை ரூபிக்கவேண்டும்.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

**Messrs. Basu & Banerji.**

மெஸ்ஸர்ஸ் பாஸுவும் பானர்ஜியும்.—1907-ம் வர்ஷம் லாலா லாஜ்பட்ராயும் அஜித்ஸிங்கும் கொஞ்சகாலம் தேசப்ரஷ்டம் செய்யப்பட்டார்கள் என்பதும், கொஞ்சகாலத்துக்குப்பிறகு வங்காளத்தில் 9-கனவான்கள் தேசப்ரஷ்டம் செய்யப்பட்டார்களென்பதும் நேயர்களுக்கு எற்கனவே தெரிந்திருக்கும். வங்காளத்தில் இன்னின்னரை தேசப்ரஷ்டம் செய்வது என்பதற்கு ஒரு ஜாப்தா தயார் செய்தபோது, அப்போது பங்காளத்து லெப்டினண்ட் கவர்னராக இருந்த ஸர் ஆண்ட்ரு ப்ரேஸர் அந்த ஜாப்தாவில் ஆனரபிள் மிஸ்டர் ஸுரேந்த்ரநாத் பானர்ஜியின் பெயரையும் மிஸ்டர் பூபேந்த்ரநாத் பாஸுவின் பெயரையும் சேர்த்திருந்தாராம். அந்த ஜாப்தாவில் மிஸ்டர் பானர்ஜியின் பெயர்தான் முதலில் இருந்ததாம். ஸர் ஆண்ட்ரு ப்ரேஸர் சீக்ரம் உத்யோகத்திலிருந்து விலகிக்கொண்டதின்மேல் அவருக்கு பதிலாக வந்த ஸர் எட்வர்ட் பேகர் என்பவர் அந்த இரண்டு பேர்களின் பெயரையும் ஜாப்தாவிலிருந்து அடித்துவிட்டாராம். ஸர் எட்வர்ட் பேகருக்கு மிஸ்டர் ஸுரேந்த்ரநாத் பானர்ஜியின்மேல் ரொம்ப அபிமானமிருந்ததால், மிஸ்டர் ஸுரேந்த்ரநாத் பானர்ஜி இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்காவது, மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்காவது மெம்பராக இருக்க ப்ரியப்பட்டால் அதற்காக எலெக்ஷன் ரூல்களை அவர் விஷயத்தில் தள்ளிவைப்பதாகவும், பங்காளத்து லெப்டினண்ட் கவர்னருடைய நிர்வாக ஸபையில் இந்திய மெம்பருடைய ஸ்தானத்தை அவருக்குக் கொடுப்பதாயும் ஸர் எட்வர்ட் பேகர் சொன்னாராம். ஆனால் மிஸ்டர் பானர்ஜி அந்த இரண்டு உதவியையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

**The Maharaja of Bikaneer.**

பிக்கானீர் மஹாராஜா.—ஸுமார் 6-மாஸங்களுக்குமுன் போர்முனைக்குப் போயிருந்தவர்களாகிய பிக்கானீர் மகாராஜாவும் கிஷன்கார் மஹாராஜாவும் இந்தமாஸம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். பிக்கானீர் மஹாராஜா முதலில் ப்ரான்ஸின் வடக்கு பாகத்தில் 'மிரட் டிவிஷன்' என்ற இந்தியத் துருப்புகளுடன் இருந்தாராம். பிறகு ப்ரிட்டிஷ் சேனைகளின் தலைவராகிய ஸர் ஜான் ப்ரெஞ்சினிடமுள்ள உத்யோகஸ்தர்களில் ஒருவராக இருந்து வந்தாராம். பிறகு ஈஜிப்டுக்கு வந்து அங்கு சிலகாலமிருந்தார். அங்கே தமது ஸமஸ்தானத்தைச் சேர்ந்த பிக்கானீர் ஒட்டகப்படை துருக்கியர்களுடன் சண்டைசெய்தபோது கூடவிருந்தாராம். பிக்கானீர் ஒட்டகப்படை ஈஜிப்டின் நிலைமைகளை ஸகிக்கக்கூடியதாய் திறமையுடன் சண்டைசெய்ததாம். மஹாராஜா இன்னும் சில காலத்துக்கெல்லாம் மறுபடியும் இங்க்லண்டுக்குப் போவார் என்று சொல்லப்படுகிறது.

**Sardar Daljit Singh.**

ஸர்தார் டல்ஜித் ஸிங்.—இந்தியாமந்திரி ஸபையில் மெம்பராயிருந்து வரும் ஸர் க்ருஷ்ண கோவிந்த குப்தா இன்னும் சிலகாலத்துக்குள் அவ்வேலையிலிருந்து விலகிக்கொள்வார். அவருக்குப் பதிலாக ஆனரபிள் ஸர்தார் டல்ஜித் ஸிங் என்பவர் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸர்தார் டல்ஜித்ஸிங் காபூர்த்தாலா ராஜவம்சத்தைச்சேர்ந்தவர். இவர் பஞ்சாப் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராக இருந்தார். காசி ஸெண்டரல்ஹிந்து காலேஜின் ட்ரஸ்டிகளில் ஒருவராக இருந்தார். இப்போது ஹிந்து யூனிவர்ஸிட்டி கமிட்டியின் ஒரு மெம்பராக இருக்கிறார். இவர் வருகிற எப்ரல் மாஸத்தில் இங்க்லண்டுக்குப் போவாரென்று சொல்லப்படுகிறது.

**The Late Father Sewell.**

காலஞ்சென்ற ஸூவெல் பாதிரியார்.—திருச்சி ஸெண்ட் ஜோஸப் காலேஜுக்கு வெகுகாலம் மானேஜராக இருந்த ரெவரண்ட் பாதர் ஸூவெல் இந்தமாஸம் சென்னையில் இறந்துபோனார்.

பாதர் ஸூவல் 1836-ம் வர்ஷம் மதராஸில் பிறந்தார். அவர் 18-வது வயஸில் ராணுவத்தில் சேர்ந்து இந்தியாவில் வேலைபார்த்து வந்தார். காலக்ரமத்தில் ராணுவத்தில் மேஜர் பதவியை அடைந்தார்.

1877-ம் வர்ஷத்தில் அவரது மனைவி இறந்துபோகவே, ராணுவத்திலிருந்து விலகிக்கொண்டு 1879-ம் வர்ஷம் ஜெஸூட் மிஷன் ஸங்கத்தில் சேர்ந்துகொண்டார். 1883-ம் வர்ஷத்தில் அவர் திருச்சி ஸெண்ட் ஜோஸப் காலேஜில் மானேஜராக ஆனார். சென்ற பத்து வர்ஷங்களாக அவர் சென்னை யூனிவர்ஸிட்டியின் ஸிண்டிகேட் ஸபையில் ஒரு மெம்பராக இருந்தார்.

# SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

**Child Widows in India.**

இந்தியாவில் பால்ய விதவைகள்.—இந்தியாவில் இன்னின்ன வயஸில் இத்தனை விதவைகளும் தாரமிழந்தவர்களும் இருக்கிறார்களென்பது பின்வரும் கணக்குகளால் தெரியவரும்.

| இன்ன வயஸு முதல் இன்ன வயஸு வரையில். | ஆண். கல்யாணமானவர்கள். | ஆண். தாரமிழந்தவர்கள். | பெண். கல்யாணமானவர்கள். | பெண். விதவைகள். |
|---|---|---|---|---|
| 0—1 | 10,164 | 432 | 13,212 | 1,014 |
| 1—2 | 9,675 | 473 | 17,753 | 856 |
| 2—3 | 26,153 | 1,044 | 49,787 | 1,807 |
| 3—4 | 40,879 | 1,802 | 8[illegible],568 | 4,753 |
| 4—5 | 64,647 | 2,917 | 134,1[illegible]5 | 9,273 |
| 0—5 | 1[illegible]1,518 | 6,668 | 302,425 | 17,7[illegible]3 |
| 5—10 | [illegible]10,577 | 91,995 | 2,[illegible]19,778 | 94,270 |
| 10—15 | 2,40[illegible],[illegible]36 | 177,694 | 10,087,024 | 223,042 |

மேற்கண்ட கணக்குகளால் 5-வயஸுக்குள்பட்ட விதவைகள் 17000 பேர்கள் என்றும், 15-வயஸுக்குள்பட்ட விதவைகள் $3\frac{1}{2}$ லக்ஷம் பேர்களென்றும் தெரியவருகிறது. 1901-ம் வர்ஷத்தில் 5-வயஸுக்குள்பட்டு 19487 பேர்களும், 15-வயஸுக்குள்பட்டு 3,90,000 பேர்களும் விதவைகளாக இருந்தார்கள். ஆகவே சென்ற பத்து வர்ஷத்தில் விதவைகளின் தொகை ஏறக்குறைய நூற்றுக்கு 11-வீதம் குறைந்துபோயிருக்கிறது. இப்படிக் குழந்தை விதவைகள் குறைந்துபோயிருப்பதற்குக் காரணம், பால்யவிவாகம் குறைந்து வருவதென்று எண்ணலாம்; ஆனால் அது அப்படியல்லவென்றும், குழந்தை விதவைகள் அதிகமாயுள்ள ப்ரதேசங்களில் குழந்தைகளுக்குள் மரண விகிதம் குறைந்திருப்பதே யென்றும் ஒரு பத்ரிகை சொல்லுகிறது.

**Married Boys in School.**

பள்ளிக்கூடங்களில் கல்யாணமான பையன்கள்.—வடக்கே பஞ்சாப் மாகாணத்தில் லாகூரில் உள்ள தயாநந்த ஆங்க்லோ வேடிக் ஸ்கூல் என்னும் பாடசாலையில் மிடில் ஸ்கூல் இலாகாவில் விவாகமான பையன்களை இனிமேல் சேர்த்துக்கொள்ள மாட்டார்களாம். அதில் எற்கனவே கல்யாணமானவர்கள் இருந்தால் அவர்கள் யாதொரு தடையுமில்லாமல் வாசித்து வரலாம். இப்போது அந்த ஸ்கூலில் உள்ள விவாகமாகாதவர்கள் பள்ளிக்கூடக்காலம் முடிவதற்குள் விவாகம் செய்துகொண்டால் அவர்களைப் பள்ளிக்கூடத்திலிருந்து வலக்கிவிடுவார்களென்று 1914-ம் வர்ஷம் ஜூலை மாஸத்திலேயே ஒரு நியந்தனை ஏற்படுத்தி யிருக்கிறார்களாம்.

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் விவாகமான சிறுவர்களை கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் சேர்த்துக்கொள்ளக் கூடாதென கவர்ன்மெண்டார் சட்டம் செய்யவேண்டுமென்று சிலர் முயற்சி செய்து வந்ததாக சென்ற ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் தெரிவித்தோம்.

சிறிய பிள்ளைகளுக்கு விவாகஞ்செய்து முடிக்கும் பொறுப்பு பெற்றோர்களுடைய தாகையால் பால்ய விவாகஞ் செய்த குற்றத்திற்குப் பெற்றோர்களுக்கு தண்டனை விதிப்பதை விட்டு, பிள்ளைகளை ஸ்கூலில் சேர்த்துக்கொள்ளாமல் தடுத்துவிடும் யோசனை ச்லாகிக்கத் தக்கதல்ல. மேலும், படிப்பினாலேயே, ஸகல குணங்களும் அபிவ்ருத்தியாகும். பால்ய விவாகஞ் செய்துகொள்ளும் பிள்ளைகளை ஸ்கூலிலிருந்து நீக்கிவிடுவது என்று சட்டம் ஏற்படும் பட்சத்தில், அது படிப்பின்மையினால் உண்டாகும் மௌடிகம் என்ற ஒரு பெரிய குழியில் ஜனங்களைத் தள்ளுவிடுமேயன்றி, அவர்களைக் கரையேற்றுவதற்கு வேண்டிய ஸௌகர்யங்களை உண்டுபண்ணுவது ஆகாது. இக்காரணங்களை யோசித்து திருவாங்கூர் கவர்ன்மெண்டார், பால்ய விவாகஞ் செய்துகொண்ட பிள்ளைகளை ஸ்கூலில் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தில் யாதொரு இடைஞ்சலான கார்யமும் செய்வதில்லை என்று தீர்மானஞ் செய்துவிட்டார்கள்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### To Destroy Ants.

**எறும்புகளைக் கொல்ல.**—எறும்புகளைக் கொல்ல எறும்புகளின் வளையில் கொதிக்கும் ஜலத்தை ஊற்றினால் உள்ளேயிருக்கும் எறும்புகள் வெளியில் வந்துவிடும். இப்படிச்செய்ய முடியாவிட்டால், பூந்தொட்டி யொன்றைக் கொண்டுவந்து, அதன் அடியிலுள்ள த்வாரத்தையடைத்து, தலைகீழாக, எறும்புவளையின் பக்கத்தில் கவிழ்த்து வைக்கவேண்டும். பிறகு, வளையைச்சுற்றிலும் அடிக்கடி ஜலம் ஊற்றவேண்டும். இதனால் எறும்புகள் தாங்களிருக்குமிடத்தை விட்டுவிலகி, தொட்டியில் வந்து தங்கும். இரண்டொரு வாரத்துக்குள் தொட்டி முழுவதும் எறும்பாக இருக்கும். பிறகு தொட்டியையும் அதிலுள்ள மண் எறும்பு முதலியவைகளையும் வெந்நீரில் போட்டு எறும்புகளைக் கொன்றுவிடலாம். ஜலத்தில் தாளிக்காமல் தானாக காற்றுப் பட்டதால் தாளிக்கப்பட்ட சுண்ணாம்பை மழையில்லாத காலங்களில் எறும்பு, கரையான் புற்றுகளில் நிறையத்தூவினால் எறும்புகள் அவ்விடங்களை விட்டு ஓடிவிடும். வீட்டு அறைகளிலுள்ள எறும்பு வளைகளிலும் சுண்ணாம்பைத் தூவுவது நல்லது.

சூடான ஜலத்தில் சற்பூரத்தைப்போட்டு சற்று நேரம் வைத்திருந்து, ஜலம் குளிர்ந்தபிறகு, தொட்டிகளிலுள்ள செடிகளுக்கும், மற்ற செடிகளுக்கும் ஊற்றினால் எறும்புகளின் பாதை நீங்கும். ரஸபஸ்பம் 1-பாகம், ரொம்பப் பொடியான வெள்ளைச்சர்க்கரை 10-பாகம், இந்த இரண்டையும் ஒன்றாய்க்கலந்து, எறும்பு வளைகளுக்குப் பக்கத்திலும், அவைகள் ஊரும் இடங்களிலும் கொஞ்சம் கொஞ்சம்போட்டு வைத்தால், எறும்புகள் அவைகளைத்தின்று செத்துப்போகும்.

### Treatment for Swooned Persons.

**மூர்ச்சையாய்ப் போகிறவர்களுக்கு சிகித்ஸை.**—மூர்ச்சையாகி விழுபவர்களைக் காண்பவர்கள், அவர்கள் தரையில் விழாதபடி பிடித்து நிற்பது வழக்கம். இப்படிச் செய்வது பிசகான கார்யமென்று 'சத்தியவேத பாது காவலன்' எழுதுகிறது. ஒருகாலத்தில் ஒரு வைத்யர் உலாவிப் போகும்போது வழியில் ஒரு பெண்பிள்ளை விழுந்ததையும் அங்கிருந்தவர்கள் அவளைப் பிடித்து நிற்பதையும் கண்டு, அந்த ஸ்த்ரீயின் கையைப் பிடித்து நாடி பார்க்கையில் அவளுக்கு நாடி விழுந்துவிட்டதென்று தெரியவந்ததாம். உடனே அவர், அவளை தலை பள்ளத்திலும் உடல் மேட்டிலுமிருக்கும்படியாகப் படுக்கவைத்தார். ப்ரேதம்போல் காணப்பட்ட அந்த ஸ்த்ரீக்குக் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ப்ரஜ்ஞை வந்தது. அவர் அவ்விதம் சிகித்ஸை செய்யாமல் பத்து நிமிஷமாகிலும் தாமஸம் செய்திருந்தால் இறந்தே போயிருப்பாளென்று அந்த வைத்யர் தெரிவித்தாராம். மூர்ச்சையாய் விழுவதற்குக் காரணம் மூளையில் ரத்தமில்லாமல் போவதே. ஆகையால் அந்த விடத்தில் மறுபடியும் ரத்தம் வரும்படி செய்தால் மூர்ச்சை போனவர்களுக்கு மறுபடியும் ப்ரஜ்ஞை வரும். ஹ்ருதயத்திலிருந்து தேகத்தின் எல்லா பாகங்களுக்கும் ரத்தம் ஓடுவதுண்டென்றாலும், தலைக்கு ரத்தம் போவது சற்று ப்ரயாஸை என்று சொல்லப்படுகிறது.

ஆகையால்தான் மூர்ச்சையாய் விழுந்தவர்களை உட்காரவும் நிற்கவும் விடக்கூடாது. தலை கொஞ்சம் தாழ்த்தியாகவும், உடல் கொஞ்சம் உயரமாகவும் இருக்கும்படி படுக்கச்செய்து வைத்தால் ரத்தம் சாய்ந்த பக்கமாக ஓடி சிரஸில் பாய்ந்து கொஞ்ச நேரத்துக்குள் ப்ரக்ஞை திரும்பிவரும்.

### To Fill Nail-head Holes.

**மரங்களில் ஆணியடித்த பள்ளங்களை மூட.**—மரங்களில் ஆணியடித்ததால் உண்டான பள்ளங்களை மூட, அந்த ஜாதி மரத்தின் ரம்பத்தூளில் கொஞ்சம் எடுத்து அதனுடன் வஜ்ரப் பசையைக் கலந்து, பள்ளங்களில் திணித்து விடவேண்டும். அது காய்ந்த பிறகு உப்புக் காகிதத்தால் நன்றாய்த் தேய்த்துப் பளபளப்பாக்கிவிடலாம். இதனால் பள்ளமிருந்தது கொஞ்சங்கூடத் தெரியாதாம்.

### Use of Camphor.

**கற்பூரத்தின் உபயோகம்.**—தேளாவது குளவியாவது கொட்டினால் உடனே காரமுள்ள கர்ப்பூரத்தை அவ்விடத்தில் வைத்துத் தேய்ப்பதால் குணமுண்டாகும். அக்னி முதலியவற்றால் அழற்சியுண்டானாலும் அவ்விடங்களில் கர்ப்பூரத்தைப் பொடித்துத் தேய்ப்பது அல்லது தூவுவதால் ப்ரயோஜனமுண்டு.—வைத்திய கலாநிதி.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Increasing the Production of Milk.

**பால் அதிகம் கறக்கும்படி செய்தல்.**—மாடு பால் அதிகம் கறக்க வேண்டுமானால், பால் கறப்பதில் ஜாக்ரதையாயிருக்க வேண்டியது அவச்யம். பால் வற்றாமல் அல்லது குறையாமலிருக்க வேண்டுமானால், மடியை ஒட்டக்கறந்து விடவேண்டியது அவச்யமாகும்.

ஜெர்மனியிலுள்ள ஒரு விவஸாய உத்யோகஸ்தர் ஒரு நல்ல முறையைத் தெரியப்படுத்தியிருக்கிறார். அந்த முறையானது, கன்றுக்குட்டி எப்படிப் பால் ஊட்டுமோ அதைப்போலவே இருக்கிறது.

முதலில் உலர்ந்த பருத்தித் துணியால் மாட்டின் மடியைத்தேய்த்து சுத்தஞ்செய்யவேண்டுமாம். ஆனால் அப்படித் தேய்ப்பதில் மடியிலுள்ள எண்ணெய்ப் பசை விட்டுப்போகக்கூடாது. பால் கறப்பதில் முதலில் இடது கைப்புறமுள்ள இரண்டு முலைகளையும், பிறகு வலது பக்கமுள்ள இரண்டு முலைகளையும் கறக்க வேண்டும். கறக்கும்போது முலையை கட்டைவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் அமிழ்த்திப்பிடித்துக் கொண்டு, பிறகு மற்ற மூன்று விரல்களால் ஒன்றன்பின் ஒன்றாக முலைக்காம்பை அமிழ்த்தவேண்டும். அமிழ்த்தும்போது, மடியைப் பிடித்து இழுக்கக் கூடாது. நான்கு முலைக்காம்புகளையும் கறந்தபிறகு, மடியை கன்றுக்குட்டி வாயால் அமிழ்த்தித்தேய்த்து முலைக்காம்பை மேல்பக்கமாக இழுப்பதுபோல, பால் கறப்பவரும் மடியை மேல்பக்கம் நோக்கி அமிழ்த்தித் தேய்த்து முலைக்காம்பையும் வெளியில் இழுத்துவிட வேண்டும். இதனால் மடியில் பால் வந்து சேர்ந்து கொள்ளும். இவ்விதம் இரண்டு முறை செய்யவேண்டும். இந்த முறை அனுபவத்துக்கு ரொம்ப ஸபலமாயிருக்கிறதாம். ஸாதாரண வழக்கப்படி கறந்தபோது ஒரு மாட்டில் $7\frac{3}{4}$ ராத்தல் பால் கிடைத்திருக்க, அதே மாட்டில் மேலே விவரித்தபடி பால் கறந்ததில் 22 ராத்தல் பால் கிடைத்ததாம்.

இப்படிப் பால் கறப்பதால் மாடு ரொம்ப இளைத்துப் போகுமென்று சொல்லப்படுகிறது. இந்த வழக்கத்தைக் கையாடுகிறவர்கள் மாட்டுக்கு ரொம்ப புஷ்டியான தீனி போடவேண்டியது அவச்யமாகும்.

### Manuring in Market Gardening.

**காய்கறிப் பயிர்களுக்கு எரு விடுதல்.**—எருக்களை சேகரித்தவுடனே வயலில் இடுவது நல்லதா அல்லது அவைகளை நன்றாய் மட்கவிட்டுப் பிறகு வயலுக்கு இடுவதா என்பதைப்பற்றி ஒரு அமெரிக்கர் பின் வருமாறு சொல்லுகிறார். ஸாதாரணமாய் சில பயிர்களுக்கு எருக்களை கிடைத்தவுடனே இடுவது நல்லது. உதாரணமாக சோளப்பயிருக்கு, அதற்கு முன் இருந்த பயிர் அறுவடையானவுடனேயே நிலத்தில் எருவிட்டுவிடலாம்.

ரொம்ப பெரிய நிலங்களில் காய்கறிகள் ஸாகுபடி நடந்து கொண்டிருந்தால் அந்த நிலங்களில் எப்பொழுது வேண்டுமென்றாலும் எருவிடலாம். ஆனால் ஸ்வல்ப நிலங்களில் காய்கறிகள் பயிர்செய்து அதிக உரங்களிட்டு அதிக மாஸூல் அடைவதாகிய ஸாகுபடியில் நிலங்களுக்கு நன்றாய் மட்காத தொழுவத் தெருவைப் போடுவது நல்லதல்ல. ஏனென்றால் அவைகள் நன்றாய் மட்காமலிருப்பதால் நிலத்து மண்ணில் கலந்து கொள்ளவும், சீக்ரம் பயிருக்கு உணவாகவும் முடியாது. சீமைத்தக்காளி (டோமாடோ,) கத்தரி, வெள்ளரி, முலாம்பழம் முதலிய பயிர்களுக்கு நன்றாய் மட்காத புதிதான தொழுவத்தெருவைப் போட்டால் பயிர்களில் இலைகள் ரொம்ப வளர்ந்து காய்கள் ரொம்ப குறைந்துபோகும். முள்ளங்கி, காரட்போன்ற கிழங்குப் பயிர்களுக்கு மட்காத புதுத் தொழுவத்தெருவை இட்டால் இலைகள் அதிகமாக வளர்ந்து, கிழங்குகள் உண்டாவதற்கு பாதகம் ஏற்படும். ஆகையால் சிறிய நிலங்களில் அதிக உரமிட்டு, அதிக லாபமடைய விரும்புகிறவர்கள் நன்றாய் மட்கின எருவையே உபயோகிப்பது நல்லது.

### Digging Trenches near River Banks.

**ஆற்றங்கரைகளுக்கு பக்கத்தில் கால்வாய்கள் வெட்டுவது.**—தஞ்சாவூர் ஜில்லாவில் அநேகர் ஆற்றங்கரைக்குப் பக்கத்திலுள்ள தங்கள் நிலங்களில், வாழை ஸாகுபடி முதலியவைகளுக்காக, கரைக்கு அதிக ஸமீபமாக பள்ளம், வாய்க்கால்கள் ஆகிய இவைகள் வெட்டுகிறார்கள். இதனால் அந்தக் கரைக்குக்கீழாக ஜாஸ்தியாக ஊற்றம் உண்டாகி கரைக்குக் கெடுதி ஏற்படக்கூடியதாக இருக்கிறது. அடிக்கடி கரைகள் உடைப்பெடுத்துக் கொள்வதும் உண்டு. தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் அப்படித் தோண்டும் பள்ளங்களும், வாய்க்கால்களும் கரைக்கு 5-அடிக்குள்ளாக இருக்கும் பக்ஷத்தில் நிலக்காரர்களும் அதை ஸாகுபடி செய்கிறவர்களும் இ. பி. கோ 240-வது பிரிவுப்படி தண்டனைக்குள்ளாவார்களென்று தெரிவித்திருக்கிறார்.

# CO-OPERATION
## கோவாபரேஷன்.

### Co-operative Progress in Madras.

சென்னையில் கோவாபரேஷனின் அபிவ்ருத்தி.—சென்னை ராஜதானியில் கோவாபரெடிவ் ஸங்கங்கள் 1913-14-ம்வர்ஷத்தில் எவ்வளவு அபிவ்ருத்தியடைந்திருக்கின்றன வென்பதை பின்வரும் கணக்கால் கண்டுகொள்ளலாம்.

| ஸங்கங்களின் வகுப்புகள் | ஸங்கங்களின் தொகை. 1912-13 | ஸங்கங்களின் தொகை. 1913-14 | மெம்பர்களின் தொகை 1912-13 | மெம்பர்களின் தொகை 1913-14 | நடைமுதல் பணம் 1912-13 | நடைமுதல் பணம் 1913-14 |
|---|---|---|---|---|---|---|
| ஸெண்ட்ரல்பாங்குகள் | 11 | 16 | 835 | 941 + 232 ஸங்கங்கள் | ரூ. 40,39,626 | ரூ. 52,19,370 |
| விவஸாயிகளுக்கான ஸங்கங்கள். ... | 59 | 64 | 17,841 | 21,694 | 10,75,260 | 15,21,890 |
| மற்ற ஸங்கங்கள்... | 1008 | 1253 | 64,037 | 77,902 | 44,38,865 | 55,78,926 |
| மொத்தம். ... | 1078 | 1333 | 82,713 + 198 ஸங்கங்கள் | 1,00,537 +232 ஸங்கங்கள் | 95,53,731 | 12,320,186 |

### Cattle Breeding.

கால்நடைகள் வளர்த்தல்.—வடக்கே மத்ய மாகாணங்களில் கால்நடைகள் வளர்ப்பதற்காக ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அந்த ஸங்கத்தார் 490-ஏக்கர் நிலம் கவர்ன்மெண்டாரிடம் குத்தகைக்கு வாங்கியிருக்கிறார்கள். இவர்கள் முதலில் 40 பசுக்களைப் பராமரிக்க ஏற்பாடு செய்தார்களாம். விவஸாய டிபார்ட்மெண்டார் இந்த ஸங்கத்துக்காக ஒரு காளைமாடு வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். பசுக்களுக்கு அடையாளங்கள் போட்டுவிடுகிறார்களாம். இந்தப் பசுக்கள் மெம்பர்களுக்கு ஸொந்தமாக இருக்கும். காளைமாடு மாத்ரம் ஸங்கத்துக்கு பொதுவாக இருக்கும். இந்த மாடுகளுக்காகும் செலவை மெம்பர்கள் வைத்திருக்கும் மாடுகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி வீதாசாரம் போட்டுக் கொள்ளுகிறார்களாம்.

ஸங்கத்தின் மூலதனம் 3,000 ரூபாயாகும். பங்கு ஒன்றின் விலை 100 ரூபாய்.

இந்த ஸங்கம் நன்றாய் நடந்து வருவதை உத்தேசித்து இதைப்போலவே இன்னொரு ஸங்கம் ஸ்தாபிக்கப்போகிறார்களாம்.

### Co-operation among Municipal Employees.

முனிஸிபாலிடி வேலையாள்களுக்குள் கோவாபரேஷன்.—கள்ளிக்கோட்டை முனிஸிபாலிடியின் ஸிப்பந்திகளுக்காக ஒரு கோவாபரெடிவ் நாணய ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, சில காலமாக நடந்து வருகிறது. இதில் எல்லா முனிஸிபல் ஸிப்பந்திகளும் சேரலாம். ஆனால் முக்யமாய் அந்த முனிஸிபாலிடியைச் சேர்ந்த தெருக்கூட்டுகிறவர்கள், குப்பை வாறுகிறவர்கள் ஆகிய இவர்களுக்காகவே இது ஸ்தாபிக்கப்பட்டதால், அந்த ஸங்கத்தில் இவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். முனிஸிபாலிடியின் ஸெக்ரடரி அந்த ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டாக இருக்கிறார். இப்போது அந்த ஸங்கத்தில் 133 மெம்பர்கள் இருக்கிறார்கள். இந்த ஸங்கத்தில் ஒரு விசேஷமென்னவென்றால் ஸுமார் 50 மெம்பர்கள் 4-அணா முதல் 8-அணா வரையில் ஸேவிங்க்ஸ் டெபாஸிட் செய்து வருகிறார்கள். மெம்பர்களுக்குக்கொடுக்கும் கடன்களை அவர்களுடைய சம்பளத்திலிருந்து மாஸந்தோறும் சிறு தொகையாக வஸூலித்து வருகிறார்கள்.

கும்பகோணத்திலும் முனிஸிபாலிட்டியிலுள்ள கீழ்த்தர ஸிப்பந்திகளினுடைய ஸௌகர்யத்துக்காக சென்ற ஜனவரிமாஸம் 24-ந்தேதி யன்று ஒரு ஐக்ய நாணய ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.



# COMMERCE.
## வ்யாபாரம்.

### Ground-nut Trade.

வேர்க்கடலை வ்யாபாரம்.—வேர்க்கடலை வ்யாபாரம் யுத்தத்தால் தடைப்பட்டிருப்பதை உத்தேசித்து அந்த வ்யாபாரத்துக்கு ஏதாவது ஸௌகர்யம் செய்ய முடியுமா என்பதை அறிவதற்காக, சென்னைக் கைத்தொழில் டிரெக்டராகிய மிஸ்டர் ட்ரெஸ்லர் இங்கிலண்டிலுள்ள ஒவ்வொரு கம்பெனிகளிடத்திலும் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. வேர்க்கடலை வ்யாபாரிகள் தங்களிடம் எவ்வளவு வேர்க்கடலை யிருக்கிறதென்றும், அதை எப்போது விற்பனைக்குக் கொடுக்கமுடியுமென்றும் அவருக்குத் தெரிவிக்கும் பக்ஷத்தில், அவர் அதை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வாராம். ஆனால், சென்ற வர்ஷத்தில் வேர்க்கடலைக்கு என்ன விலை கிடைத்ததோ அதற்குப் பாதிக்குமேல் இப்போது கிடைக்காதென்று தெரிகிறது. அந்த விலையுங்கூட இன்னும் சிறிது காலம் சென்றால் குறையுமென்றும் சொல்லப்படுகிறது. எந்த மிராசுதாராவது, தம்மிடம் இவ்வளவு கடலை யந்த்ரங்களால் தோலுரிக்கப்பட்டதாயிருக்கிறது, இவ்வளவு கடலை கையால் தோலுரிக்கப்பட்டதாக இருக்கிறதென்று மிஸ்டர் ட்ரெஸ்லருக்குத் தெரிவிக்கும் பக்ஷத்தில், அவர் (மிஸ்டர் ட்ரெஸ்லர்) சென்னையிலுள்ள கம்பெனிகளுக்கு இவ்விஷயத்தைத் தெரியப்படுத்துவார். கடலையை சென்னைக்கோ அல்லது வேறு துறைமுகங்களுக்கோ கொண்டுவருவதற்கு ஏற்படும் செலவை வேர்க்கடலையை விற்க இஷ்டப்படுகிறவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமாம். கம்பெனிகள் சொல்லும் விலையை மிஸ்டர் ட்ரெஸ்லெர் மிராசுதார்களுக்குத் தெரியப்படுத்துவார். பிறகு மிராசுதாரர்கள் ஷை கம்பெனிகளிடம் நேரில் கடிதப்போக்குவரத்துகள் வைத்துக் கொள்ளலாம்.

### Mysore Pharmacy.

மைஸூர் மருந்துச்சாலை.—மைஸூரில் உள்ள யெஸ்வாந்தபூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் 20 ஏகர் விஸ்தீரணமுள்ள ஒரு இடத்தில் மைஸூர் மருந்துச்சாலை (மைஸூர் பார்மஸி) என்று பெயர் கொண்ட ஒரு மருந்து செய்யும் தொழில்சாலை ஸ்தாபிக்கப் போகிறார்களென்று தெரியவருகிறது, இதற்காக ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலதனம் 2-லக்ஷம் ரூபாயாகும். பங்கு ஒன்றின் விலை 100 ரூபா. இந்தக் கம்பெனியின் பங்குகளில் ஒருபாகம் பம்பாயிலும் மற்ற பாகம் மைஸூரிலும் சேர்க்கப்படும்.

மைஸூர் கவர்ன்மெண்டார் இந்த கம்பெனிக்கு சில ஸாதகங்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். நிலங்கள் மலிவான விலைக்கு வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்திருப்பதோடு, அந்த நிலங்களுக்கு 20-வர்ஷத்துக்கு நில வரியைத் தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். மைஸூர் காடுகளிலுள்ள பொருள்களில் ஷை தொழில்சாலைக்கு வேண்டியவைகள் விஷயத்தில் கவர்ன்மெண்டார் சில ஸாதகம் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

இந்த தொழில் கம்பெனியின் முக்ய நோக்கம் விவஸாயிகளோடு சேர்ந்துகொண்டு பற்பல மருந்துச் செடிகளைப் பயிர் செய்து அவைகளைத் தயார்செய்து மொத்த விலைக்கு மருந்து வ்யாபாரிகளுக்கு விற்பது. கொஞ்சகாலம் சென்ற பிறகு சாயப்பொருள்கள் செய்வதைப்பற்றியும் இந்தத் தொழில் சாலையார் கவனிப்பார்களாம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற நவம்பர் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 13-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | இன்ஷூரென்ஸ் கம்பெனி | 5,000 |
| 1 | ரெயில்வே, ட்ராம்வேக்கள் போடுங் கம்பெனி | 17,25,000 |
| 1 | அச்சடித்து ப்ரசுரம் செய்யுங் கம்பெனி | 10,00,000 |
| 6 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 10,90,000 |
| 1 | தேயிலை, தோட்டக் கம்பெனி | 2,00,000 |
| 1 | சாராயம் இறக்கும் கம்பெனி | 8,00,000 |
| 1 | சர்க்கரை செய்யுங் கம்பெனி | 10,00,000 |
| 1 | கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 1,00,000 |
| 13 | | 59,20,000 |

## ECONOMIC PRODUCTS.

### விலையுள்ள பொருள்கள்.

### Uses of Sugar.

சர்க்கரையின் உபயோகங்கள். — சர்க்கரை ஆகாரமாக உபயோகப்படுவதல்லாமல், கைத்தொழில்களிலும் பற்பல விதங்களில் உபயோகப்பட்டு வருகிறது. அதை கந்தக த்ராவகத்தோடு சேர்த்துச் சுடவைத்தால் த்ராவகத்தின் குணம் மாறுபட்டுப் போய் ம்ருதுவான கருப்புப்பசை உண்டாகிறது. இது தான் ஸாதாரணமாய் ஜோடுகளுக்கு உபயோகப்படும் கருப்புப் பாலிஷாகும். இந்தப் பாலிஷானது மற்றெல்லாவித பாலிஷுகளைவிட உயர்ந்ததாயிருப்பதோடு, தோல் கெட்டுப்போகாதபடியும் வைக்கிறது. தோல் சாலைகளில் தோலை சுத்தம் செய்ய உபயோகித்த சுண்ணும்பைப்போக்குவதற்கு சர்க்கரை ரொம்பவும் உபயோகப்படுகிறது.

காப்பியிங் இங்கி என்று சொல்லப்படும், எழுதிய கடிதங்கள் முதலியவைகளுக்கு நகல்கள் எடுக்க உதவும் இங்கி செய்வதிலும், அச்சடிக்க உதவும் உருளைகள் செய்வதிலும் சர்க்கரை ரொம்பவும் உபயோகப்படுகிறது. ட்ரான்ஸ் பேரண்ட் ஸோப் என்று சொல்லப்படும் கண்ணுடிபோல் வெளிச்சம் ஊடுருவிச்செல்லக்கூடிய ஸோப்புகள் செய்ய உதவும் க்ளிஸரின் என்னும் பொருளும், ஆல்கஹால் சாராயமும் ரொம்ப விலையுள்ளனவாக இருப்பதால், சர்க்கரையை அந்த மாதிரி ஸோப்புகள் செய்வதில் அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். ஸோப்பில் வெளிச்சம் ஊடுருவிச் செல்லமுடியாதபடி தடுத்துக்கொண்டிருக்கும் பொருள்கள் சர்க்கரை சேர்ப்பதால் நீங்கி விடுகின்றனவாம்.

சர்க்கரை வெடி மருந்துகள் செய்வதிலும் உபயோகப்படுகிறது. நைட்ரிக் ஆஸிட் என்னும் த்ராவகத்தில் சர்க்கரையைச் சேர்த்து, அதனால் ஏற்படும் கலப்புப்பொருள்களை வெடிமருந்துகளில் உபயோகிக்கிறார்கள்.

சர்க்கரைக்கு ஆகார குணங்கள் இருப்பதோடுகூட, அதற்கு குடலில் காஸ்ட்ரிக் ஜூஸ் என்றும், பாசகநீர் என்றும் சொல்லப்படும் ஆகாரத்தை ஜீர்ணம் செய்ய உதவும் ஒருவித ரஸத்தை அதிகரிக்கச் செய்யும். சாப்[illegible]டுப்பிறகு தித்திப்பான பானங்கள் குடிக்கும் வழக்கம் இதை [illegible]சித்துத்தான் ஏற்பட்டதென்று தோன்றுகிறது. ஆனால் சர்க்கரையை அதிகமாக உபயோகித்தால் குடலின் பாகங்களுக்கு எரிச்சலுண்டாகி ரொம்பகாரமான ஜீர்ணரஸம் ஊறி தேகத்துக்குக் கெடுதியுண்டாக்கும்.

### Cocoanut Water for Rubber.

ரப்பர் செய்வதற்கு இளநீரின் உபயோகம்.— எண்ணெயாட்டுவதற்கு தேங்காய்களை உடைக்கும் போது இளநீர் வீணுகப்போகிறது. தேங்காய்ப் பருப்பு (கொப்பரை), தேங்காய் எண்ணெய் ஆகிய இவைகளில் வ்யாபாரம் அதிகமாக நடக்கும் லங்கைத்தீவு, கொச்சி, திருவாங்கூர் ஆகிய இந்த இடங்களில் வீணுகப்போகும் இளநீர் ரொம்ப அதிகமாகஇருக்குமென்று சொல்லலாம். இளநீர் ரப்பரை கெட்டியாக்க ப்ரயோஜனப்படக் கூடுமென்று சொல்லப்படுகிறது. இளநீரை மூன்று நாள் புளிக்கவைத்தால். அது ரப்பரை நன்ருக கெட்டியாகும்படி செய்கிறதாம். ரப்பரை இப்போதுள்ள முறையில் செய்வதைவிட புளித்த இளநீரை உபயோகித்துத் தயாரித்தால், ரப்பர் ரொம்ப நேர்த்தியாயிருக்கிறதாம். ஆனுல் இளநீரை தேங்காய் உடைக்குமிடத்திலிருந்து ரப்பர் செய்யுமிடங்களுக்குக் கொண்டுபோக வேண்டியிருக்குமாதலால், இளநீர் எத்தனை நாள் கெட்டுப்போகாதபடி இருக்குமென்பதையறியப் பலர் யோசனைசெய்து வருகிறார்கள். இந்த யோசனை கைகூடிவந்தால், தேங்காய் வ்யாபாரத்துக்கு இன்னும் அதிகலாபம் கிடைக்கலாம்

### Dupa Trees.

வெள்ளைக்குங்கிலியமரம்.—மைஸூர் ப்ராந்த்யத்திலும், தென்கன்னடம் ஜில்லாவிலும் தூபமரம் என்று ஒருவகை மரம் இருக்கிறது. இதற்கு வெள்ளைக்குங்கிலியமரம் என்று பெயர். இதன் விதைகளிலிருந்து ஒருவித எண்ணெய் கிடைக்கிறதாம். இந்த எண்ணெய் விளக்கேற்றவும், ஆகாரத்தில் உபயோகிக்கவும், நெய்யோடு கலப்படம் செய்யவும், மருந்துகளில் சேர்க்கவும் உபயோகப்படுகிறதாம். மைஸூர் ப்ரதேசங்களில் இந்த விதைகளை சேகரிக்க அந்த ராஜ்யத்து கவர்ன்மெண்டார் மைஸூர் இகனுமிக் யூனியன் என்னும் பொருளாதார ஸங்கத்துக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்களாம்.



## BOYS' PAGE.

### பையன்கள் பக்கம்.

### Homing Instinct in Crabs.

நண்டுகள் நமது வளைகளைத் தெரிந்துகொள்ளுதல்.—நண்டுகளை அவைகளிருக்கக்கூடிய வளையிலிருந்து பிடித்து வெகுதூரமான இடத்தில் கொண்டு போய்விட்டால், அவைகள் காலக்ரமத்தில் தங்களுடைய வளையைத் தேடி அங்கே போய்ச் சேருகின்றனவாம். இதற்கு உதாரணமாக இங்க்லண்டில் நடந்த இரண்டு ஸம்பவங்களைச் சொல்லலாம். இங்க்லண்டின் வடபாகத்தில் யார்க்ஷைர் என்றும், லிங்கன்ஷைர் என்றும் இரண்டு ஜில்லாக்கள் இருக்கின்றன. இவைகளில் லிங்கன்ஷைர் ஜில்லாவில் ஸ்கெக்னஸ் என்று ஒரு ஊர் இருக்கிறது. இதற்கும் யார்க்ஷைர் ஜில்லாவுக்கும் குறைந்தது 30-மைல் தூரமிருக்கும். யார்க்ஷைர ஜில்லாவில் கடற்கரையில் சில நண்டுகளைப் பிடித்து லிங்கன்ஷைர் ஜில்லாவிலுள்ள ஸ்கெக்னஸ் என்னும் ஊரின் கடற்கரையில் விட்டதில், அவைகள் திரும்பவும் யார்க்ஷைரில் உள்ள தங்களுடைய வளைகளுக்குப் போய்விட்டனவாம்.

யார்க்ஷைரில் கடற்கரை யோரமாய் ஒரு வளையில் ஆணும் பெண்ணுமா யிருந்துவந்த இரண்டு நண்டுகளைப் பிடித்து லிங்கன்ஷைருக்குக் கொண்டு போய், அவைகளின் தேகத்தில் அடையாளங்களிட்டு, கடலில் வெவ்வேறு இடங்களில் விட்டதில், அவைகள் இரண்டும் கடலில் ஸந்தித்துக் கொஞ்சகாலத்துக்குப் பிறகு யார்க்ஷைர் ஜில்லாவிலுள்ள தங்களுடைய வளைக்குப் போய்விட்டனவாம்.

### Caste among Insects.

பூச்சிகளுக்குள் ஜாதி வித்யாஸம்.—மனிதர்களுக்குள் ஜாதி வித்யாஸமிருப்பதுபோலவே பூச்சிகளுக்குள்ளும் ஜாதி வித்யாஸம் இருக்கிறதாம். ஜாதிக்குத் தகுந்தபடி அவைகளின் ரூபம் வித்யாஸப்படுகிறதாம். கறையான்களில் க்ஷத்ரியஜாதிக்கு அதாவது சண்டைசெய்யும் இனத்துக்கு சிறகுகள் கிடையா. அந்த ஜாதிக் கறையான்களின் அலகும் ரொம்ப பலமுள்ளதாம். வேலை செய்யும் ஜாதிக் கறையான்களுக்கும் ப்ரத்யேகமான ரூபம் உண்டாம். இந்த இரண்டு ஜாதிக்கறையான்களும் முட்டையிடுவதில்லையாம். கறையானில் முட்டையிடும் ஜாதியென்று ஒரு ஜாதியிருக்கிறது. இதைச் சேர்ந்தவைகளுக்கும் ப்ரத்யேகமான ரூபமும், தேக அமைப்பும் உண்டு. இவைகள் வேலை செய்வது கிடையாது. தின்று விட்டு முட்டையிடுவது தான் அவைகளின் கார்யம்.

சிலர் ஜாதி வித்யாஸமானது பூச்சிகள் முட்டையிலிருக்கும்போது ஏற்படுவதில்லையென்றும், முட்டையிலிருந்தும் வெளிவந்த பிறகு, ஆகாரம் ஸம்பாதிக்க வேண்டியிருப்பதாலும், வேறுவகைப் பூச்சிகள் தொந்தரவு செய்யாதபடி காத்துக்கொள்ளவேண்டியிருப்பதாலும், அந்தந்தத் தொழிலை மேற்கொண்டவைகளுக்கு அந்தந்தத் தொழிலுக்கேற்ப தேகத்தின் அமைப்பு மாறுபட்டுப் போகின்றனவென்றும்எண்ணிவந்தார்கள். ஆனுல் ஸமீபத்தில் செய்த ஆராய்ச்சிகளால், ஜாதிக்கேற்ற தேக அமைப்பு வித்யாஸங்கள் முட்டையிலிருந்து வெளிவந்த புதுப்பூச்சிகளிலும் காணப்படுகின்றனவென்றும், இந்த வித்யாஸங்கள் முட்டையிலிருந்து புழு உண்டாகுமுன்னேயே ஏற்பட்டு விடுகின்றனவென்றும் தெரியவருகிறதாம்.

### Ocean Waves.

ஸமுத்ர அலைகள்.—ஸமுத்ர அலைகள் எவ்வளவு உயரம் வரையில் எழுவதுண்டு என்பதைப்பற்றி சில கப்பல்தலைவர்கள் குறிப்புகள் எழுதிவைத்திருக்கிறார்கள். ஒரு கப்பல் தலைவர் கொஞ்சகாலத்துக்கு முன்னுல் அட்லாண்டிக் மகா ஸமுத்ரத்தில் 60 அடி உயரமுள்ள அலைகளைப் பார்த்தாராம். 1863-ம் வர்ஷத்தில் அட்மிரல் பிட்ஸ்ராய் என்னும் கப்பல் படைத்தலைவர் ஒருவர் 60 அடி உயரமுள்ள அலைகளைப் பார்த்ததாக ஒரு புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். கெல்டிக் என்ற கப்பலின்தலைவராகிய காப்டன் கிட்டில் என்பவர் 70-அடி உயரமுள்ள அலைகளைப் பார்த்திருக்கிறாராம். இரண்டொரு வர்ஷங்களுக்கு முன்னுல் இங்க்லீஷ் சான்னல் என்னும் கடலில் புயற்காற்று அடித்தபோது அலைகள் 70 அடி உயரம் வரையில் எழும்பினவாம். ஆனுல் அலைகளின் உயரத்தை எப்படிக் கணக்கிட்டார்களென்பதற்கு அவர்கள் யாதொரு ஆதாரமும் சொல்லாததால், அவர்கள் குறிப்பிடும் அலைகளின் உயரம் கொஞ்சம் குறைவாகவே இருக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது.

# LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்

### Thayir Vadai.

தயிர் வடை.—அழுத்தமான ஒரு கனத்த வெள்ளைத் துணியின் நான்கு மூலைகளையும் கட்டி, பைபோலாக்கி ஓர் மூலையில் தொங்கவிட்டு, அதில் தயிரைக் கொட்டி ஒரு நாளெல்லாம் தொங்கவிட்டிருந்தால், அதன் ஜலமெல்லாம் வடிந்து இறுகப்போய்விடும். இப்படி இறுகிய தயிருக்கு கட்டித்தயிர் என்று பெயர். அவ்விதக் கட்டித்தயிரில் 5 பலம் எடுத்து ஈயம் பூசிய தாம்பாளத்தில் போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். வேர் கிள்ளிய கொத்துமல்லி கால்பலம், காம்பில்லாத பச்சைமிளகாய் அரைப்பலம், தோல்சீவிய இஞ்சி அரைக்கால் பலம், இவற்றைச் சிறுதுண்டுகளாக நறுக்கிவைத்துக்கொள்ளவேண்டும். இவற்றையும், 3 பலம் கோதுமை நொய்யையும், காலேயரைக்கால் பலம் பொடிசெய்த உப்பையும் கை கட்டித் தயிரில்போட்டு, நன்றாய்க் கலந்து பிசைந்து தட்டி நெய்யில் வேகவைத்தெடுத்துக்கொள்ளவேண்டும். தயிர் ஸம்பந்தப்பட்ட பக்ஷணமாதலால், கொஞ்சம் சூடாயிருக்கும்போதே இதைச் சாப்பிடவேண்டும். கோதுமை நொய்க்குப் பதிலாக கோதுமைமாவைச் சேர்ப்பதுமுண்டு.—விசவகர்மன்.

### Mango Seed.

மாங்கொட்டை.—மாங்கொட்டையின் பருப்பை உலர்த்தித் தூள்செய்து 20 முதல் 30 கெல்லெடை வரையும் தேனில் அல்லது வெல்லத்தில் கலந்துக் கொடுத்தால், வயிற்றில் சேர்ந்திருக்கும் க்ருமிகள் வெளியாகும். மூலத்திலிருந்து ரத்தம் அதிகமாய் வடிவதையும், மாதவிடாயில் சோணிதம் மிதமிஞ்சிப் பெருகுவதையும் மாங்கொட்டைத்தூள் நிவ்ருத்தி செய்யும். சீதபேதியிலும், ரத்தக்கடுப்பிலும் இதைக் குழம்பாக்கி அன்னத்துடன் கலந்து உபயோகிப்பது நாட்டு வழக்கம். இதனால் சீதபேதி முதலியவற்றில் நற்குணம் உண்டானதாக அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறதென்று 'வைத்யகலாநிதி' எழுதுகிறது.

### Water for Growing Children.

வளரும் குழந்தைகளுக்கு ஜலம்.—வளரும் குழந்தைகளுக்குக் குடிப்பதற்கு ஜலம் அதிகமாகக் கொடுக்க வேண்டியது அவச்யமென்று அநேக தேகதத்வ சாஸ்த்ரிகள் சொல்லி வருகிறார்கள். குழந்தைகளுக்குத் தாகமெடுத்தபோது மாத்ரம் அவைகள் குடித்தால் போதுமென்று சொல்வது சரியல்ல. ஏனென்றால், உண்மையில் சாப்பிடவேண்டியது அவச்யமாயிருக்கும்போது பசி தோன்றாமலிருப்பதுபோல, ஜலம் அவச்யமாய்க் குடிக்கவேண்டியிருக்கும்போது தாகம் எடுக்காமலிருந்து விடக்கூடும். மேலும் குழந்தைகளின் தேகத்திலுள்ள குடல் முதலிய பற்பல அவயவங்கள் ரொம்பவேகமாய் வேலை செய்வதாலுண்டாகும் கழிவுகள் ஜாஸ்தியாயிருப்பதால் ஜலம் அதிகமாய்க் குடிக்கவேண்டியிருக்கிறது. இன்னும், குழந்தையின் உயரத்தையும், நிறையையும் உத்தேசிக்கும்போது அவர்களுடைய தேகத்தினுடைய தோலின் பரப்பு, பெரியவர்களின் தேகத்துத் தோலின் பரப்பைவிட அதிகமாயிருப்பதால் தோலின் த்வாரங்கள் வழியாக அதிக ஜலம் ஆவியாய்ப்போவதாலும், குழந்தைகளுக்குக் குடிக்க அதிக ஜலம் கொடுக்கவேண்டியது அவச்யமாகிறது.

### Female Drunkenness in England.

இங்கலீஷ் ஸ்த்ரீகளுக்குள் குடிவழக்கம்.—இங்கலீஷ் ஸ்த்ரீகளுக்குள் குடிவழக்கம் அதிகமாயிருக்கிறதாம். இப்போது யுத்தத்துக்கு ஆள்கள் சேகரித்து வருவதில் அந்த ஆள்களுடைய மனைவிகளுக்கு கவர்ன்மெண்டார் பண உதவிசெய்து வருகிறார்கள். ஸமாதான காலத்தில் புருஷன் கஷ்டப்பட்டு சில ஸமயங்களில் அதிகமாயும் சில ஸமயங்களில் ரொம்பக் குறைவாயும் ஸம்பாதித்துக் குடும்பத்துக்குக் கொடுத்து வருவான். அப்போது குடிப்பதற்கு அதிக பணம் கிடைப்பது அரிது. இப்போது கவர்ன்மெண்டார் புதிதாய்ச் சேர்ந்திருக்கும் ஸோல்ஜர்களின் மனைவிகளுக்கு க்ரமமாய் அதிகபணம் கொடுத்து வருவதால், அந்த ஸ்த்ரீகள் அதிகபணத்தைக் கொண்டு குடிக்க ஆரம்பித்திருக்கிறார்களாம். இந்த வழக்கம் மற்ற ஸ்த்ரீகளிடத்திலும் பரவிக்கொண்டு வருகிறதாம்.

### Care of Babies.

குழந்தைகளின் ஸம்ரக்ஷணம்.—அமெரிக்க ஐக்ய மாகாணங்களில் ஒன்றாகிய பிலடல்பியா என்னும் மாகாணத்தில் கவர்ன்மெண்டார் எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்களில் பெண்களுக்கு குழந்தைகளைப் பராமரிப்பதைப் பற்றிப் பாடங்கள் கற்பித்து வருகிறார்களாம். ஒவ்வொரு பெண்ணிடமும் ஒரு குழந்தையை ஒப்புவித்து, அதைப் பராமரித்து வரும்படி போதித்து வருகிறார்கள்.



# INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Colour Prejudice.

வர்ண வித்யாஸம் பாராட்டுதல்.—தென்னாப்ரிக்காவில் வெள்ளைக்காரர்கள் கருப்பு மனிதர்களான ஸ்வதேசிகளையும் இந்தியர்களையும் வெகுகாலமாக அலக்ஷியம்செய்து வருகிறார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். கனடா, ஆஸ்ட்ரேலியா ஆகிய இந்த நாடுகளிலும் இந்தியர்களைக் குடியேற விடாதபடி நிர்ப்பந்தமான சட்டங்கள் செய்திருக்கிறார்கள். அந்த நாடுகளில் வெள்ளைக்காரனும் கருப்பு மனிதனும் சேர்ந்து உட்கார்ந்திருப்பதைப் பார்ப்பது அரிதாம். வெள்ளைக்காரச் சிறுவர்களும், மற்ற நிறமுள்ள சிறுவர்களும் ஒரே பள்ளிக்கூடத்தில் போய் வாசிப்பதென்பதும் கிடையாதாம். ஆனால் போர்த்துகல் தேசத்துக்கு ஸொந்தமான குடியேற்ற நாடுகளில் வர்ண வித்யாஸம் பாராட்டுதலென்பதே கிடையாதாம். பள்ளிக்கூடங்களில் எல்லா வர்ணத்தாரும் சேர்ந்து வாசிக்கலாமாம். கவர்ன்மெண்ட் ஆபீஸுகளிலும் எல்லா வர்ணத்தாரும் வேலைக்கமர்ந்திருக்கிறார்களாம். போர்த்துகேசியர்கள் வெள்ளைக்காரரல்லாத மற்ற வர்ணத்தார்களிடம் யாதொரு வித்யாஸமும் பாராட்டுவதில்லையாம். ஆனால் போர்த்துகேசிய குடியேற்ற நாடுகளிலுள்ள ஐரோப்பியர்களில் பெரும்பாலார் வேறு ஜாதிகலக்காத ஸ்வயமான ஐரோப்பியர்களல்லவென்றும், வேறு ஜாதிகளிடத்திலும் அவர்களுக்கு ஸம்பந்தமுண்டென்றும் சொல்லப்படுகிறது.

ப்ரெஞ்ச்கவர்ன்மெண்டார் தங்களுடைய குடியேற்ற நாடுகளில் வெள்ளையர்களுக்கு ஒரு ஏற்பாடு, கருப்பு மனிதர்களுக்கு ஒரு ஏற்பாடு என்று நிறவித்யாஸம் பாராட்டுவதில்லையாம். ப்ரெஞ்ச் ஜனங்களுக்கே இந்த எண்ணம் வெகுவாய் உண்டாவதில்லையாம். குடியேற்ற நாடுகளில் உள்ள வெள்ளைக்காரர்கள் ஆரவாரிப்பார்களே யென்று பயந்து, அங்கேயுள்ள கருப்பு மனிதர்களுக்கு அவர்களுக்குள்ள பாத்யதைகளையும் ஸ்வதந்தரங்களையும் கொடுக்காமலிருப்பதில்லை. ப்ரெஞ்ச் நாடுகளிலுள்ள கருப்பு மனிதர்கள் தேர்ச்சியும் திறமையுமடைந்தால் உயர்ந்த உத்யோகங்களையும் அடையலாம். அவர்கள் கருப்பு மனிதர்களென்ற காரணத்தைக்கொண்டு அவர்களுக்கு உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்காமலிருப்பதில்லை. ப்ரான்ஸின் பார்லிமெண்டில் குடியேற்ற நாடுகளின் ப்ரதிநிதிகள் மெம்பர்களாக இருந்து வருகிறார்கள். குடியேற்ற நாடுகளில் அநேகமாய் ஒவ்வொன்றுக்கும் ஸெனேடர் என்ற ப்ரதிநிதியையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட டெபுடி யென்ற ப்ரதிநிதிகளையும் ப்ரெஞ்ச் பார்லிமெண்டில் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்க பாத்யதையுண்டு. ஸமீபத்தில் ப்ரெஞ்ச் மேற்கு ஆப்ரிக்காவைச் சேர்ந்த ஸெனிகால் என்னும் நாட்டில் ப்ரெஞ்ச்பார்லிமெண்டுக்கு 'டெபுடி' யென்ற ப்ரதிநிதி தெரிந்தெடுத்தபோது அங்குள்ளவர்கள் கருப்பு மனிதரை மெம்பராகத் தெரிந்தெடுத்தார்களாம்.

### Visiting Permits for S. A. Indians.

தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்கு விஸிடிங் பெர்மிட்டுகள்.—தென்னாப்ரிக்காவில் வஸிக்கும் இந்தியர்கள் தென்னாப்ரிக்காவில் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்துக்குப்போய் வரவேண்டுமென்றால் அவர்கள் 'விஸிடிங் பெர்மிட்டுகள்' என்று சொல்லப்படும், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போகக் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டுகள் வாங்கிக்கொண்டு போகவேண்டுமாம். இந்தச் சீட்டுகள் கொடுக்கும் ஏற்பாடு இந்தியர்களுக்கு மிகவும் கடுமையாயிருக்கிறதென்றும், சகிக்கும் படியான மாதிரியாயில்லையென்றும், தென்னாப்ரிக்காவிலுள்ள ஒரு நிருபர் ஒரு தமிழ்ப் பத்ரிகைக்கு எழுதுகிறார்.

இந்த ஏற்பாட்டினால் போகக்கு விஸிடிங் பெர்மிட் கொடுக்கிறதாக சட்ட பூர்வமாகக் காட்டிவிட்டு, இந்தியர் ஒருவரையும் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்துக்கு நகரவொட்டாமல் தடுப்பதே கவர்ன்மெண்டாரின் நோக்கமாயிருக்க வேண்டுமென்று அந்த நிருபர் ஊகிக்கிறார்.

விஸிடிங் பெர்மிட் வேண்டிய இந்தியர் அவர் இருக்கும் ஊர் மாஜிஸ்ட்ரேட்டினிடம் மனுசெய்ய வேண்டுமாம். அதற்காக ஏற்பட்டிருக்கும் நமூனாவில் கேட்டிருக்கும் கேள்விகளுக்குப்பதில் எழுதிக் கொடுப்பதுதான் ரொம்ப கஷ்டமாயிருக்கிறதாம். ஏனென்றால் அந்தக் கேள்விகளில் பல அனாவச்யமும் மரியாதையற்றவும், ஸங்கடமுள்ளதுமானவையாயிருக்கின்றனவாம்.

தென்னாப்ரிக்காவிலுள்ள அநேக இந்திய ஸங்கங்கள் அந்த ஏற்பாடு ரொம்ப கடுமையாயிருக்கிறதென்று எடுத்துக்காட்டி, இப்போதுள்ள நமூனாவை ஸுலபமான நமூனா ஏற்படுத்த வேண்டுமென்று தென்னாப்ரிக்கா உள்நாட்டு மந்த்ரியாகிய ஜெனரல் ஸ்மட்ஸுக்கு எழுதிக்கேட்டதில், அவர் அதைத் தீர ஆலோசித்தே ஏற்படுத்தப் பட்டபடியால் கடந்த ஜூலை மாதம் 19-ந்தேதி அமுலுக்கு வந்து பழக்கப்படுவதற்கு முன் இரண்டு திருத்த வேண்டியது அவச்யமில்லையென்று ... தெரிவித்திருக்கிறாராம்.

## FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Russian Motor-Cars.

ரஷ்யாவிலுள்ள மோட்டார்வண்டிகள்.—யுத்தம் ஆரம்பிப்பதற்கு கொஞ்சநாள்களுக்குமுன் ஒருநாள் ரஷ்யாராணுவ அதிகாரிகளுக்கும், ரஷ்யாவிலுள்ள ஆஸ்ட்ரிய ப்ரதிநிதியின் ராணுவ ஸெக்ரெடரிக்கும் ஸம்பாஷணை நடந்தது. அப்போது ராணுவ ஸெக்ரெடரி, ரஷ்ய கவர்ன்மெண்டார் மோட்டார் வண்டிகள் ஏராளமாக வாங்கிவருகிறார்களென்றும், அதற்குத் தகுந்தாற்போல ரஷ்யாவின் ரஸ்தாக்கள் நல்ல நிலைமையிலில்லை யென்றும் சொன்னார். அதற்கு ராணுவ அதிகாரி ஒருவர் ரஷ்யாவின் ரோடுகள் வாஸ்தவத்தில் ரொம்ப திருப்திகரமாயில்லையென்றும் ஆஸ்ட்ரிய ரோடுகள் ரொம்ப நல்ல நிலைமையிலிருக்கின்றனவென்றும் பதில் சொன்னாராம்.

### All for a Pig.

பன்றிநிமித்தம் சண்டை.—மேற்கு யுத்தகளத்தில் பான் டிஸாப்ட் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கே யுத்தம் பலமாக நடந்து வந்தபோது ஒருநாள் ஜெர்மானியர்களுடைய அகழ்களுக்கும் ப்ரெஞ்சுக்காரர்களுடைய அகழ்களுக்கும் நடுவில் ஒரு தோட்டத்தில் ஒரு பன்றி மறைந்திருப்பதைக் கண்டு, இரண்டு கக்ஷியார்களும் அந்தப் பன்றியைப் பிடித்து வருவதற்கு சில ஸோல்ஜர்களை அனுப்பினார்கள். முதலில் ப்ரெஞ்ச் ஸோல்ஜர்கள் பன்றியிருக்குமிடத்துக்குப்போய் நுனியில் சுருக்குள்ள நீளமான கயிற்றை வீசியெறிந்து பன்றியைக்கட்டி இழுத்தார்கள். ஆனால் ஜெர்மானியர்கள் கிட்டநெருங்கவே, கயிறு நீளமாயிருந்ததால் சற்றுப்பின் வாங்கிப்போய் பன்றியையும் மெதுவாக இழுத்துப் பார்த்தார்கள். பன்றி லேசில் வருவதாகவில்லை. ஜெர்மானியர்களும் பன்றியைப்பிடிப்பதற்காக ரொம்ப கிட்டவந்து விட்டார்களாம். அதன்மேல் ஜெர்மானியர்களுக்கும் ப்ரெஞ்சுக்காரர்களுக்கும் பலமாக யுத்தம் நடந்தது. ஜெர்மானியர்களுக்கு பன்றி போனதற்குணி, அவர்களில் 30-பேர்கள் வரையில் இறந்திருக்கிறார்களாம்.

### Water for ( )t of Prisoners.

வாரும் ... நடத்தும் விதம்.—ஜெர்மானியர்கள் ...தைகளுக்குக் கு...த்துவைத்திருக்கும் ப்ரெஞ்ச் கைதிகளை வேண்டியது ...துகிறார்களென்பது ஸமீபத்தில் வந்த சாஸ்த்ரிகள் செ... கடிதத்தால் தெரியவருகிறதாம். ஜெர்மானிய அதிகாரிகள் கைதிகள் தங்களுடைய பந்துக்களுக்கு எழுதும் கடிதங்கள் முழுவதையும் நன்றாய்ப் பார்த்து அவைகளில் எழுதப்படும் விஷயங்கள் ஆக்ஷேபணைக்கிடமாயிருந்தால் அனுப்புவதில்லையாம். எல்லாக் கைதிகளுக்கும் நல்ல சாப்பாடு கிடைக்கிறதென்றும், தங்களுக்கு வேண்டியவை எல்லாம் அதிகாரிகள் கொடுத்து வருகிறார்களென்றும் கடிதத்தில் எழுதவேண்டுமாம். ஒரு கைதி தன்னுடைய பந்துவுக்கு எழுதின கடிதம் ஒன்றில் அதிகாரிகள் சொல்லும் மாதிரியாக எழுதி, தனது பேருக்கு பதிலாக கொச்சையான ப்ரெஞ்ச் பாஷையில் 'நாங்கள் பட்டினிகிடக்கிறோம்' என் எழுதியனுப்பினானும். இதனால் கைதிகள் எப்படி நடத்தப்படுகிறார்களென்று தெரியவருகிறது.

### A Chauffeur's Revenge.

மோட்டார்வண்டிக்காரன் பழிக்குப்பழி வாங்கினது.—ஒரு ஆஸ்ட்ரிய ஜெனரல் ஒரு சண்டையில் ரஷ்யர்களால் தோற்கடிக்கப் பட்டுப்போய் ஒரிடத்தில் தங்கியிருக்கையில், ரொம்ப குடித்துவிட்டு, குடிவெறியில் தனது மோட்டார்வண்டியோட்டுபவனைத் திட்டி நன்றாய் அடித்தாராம். வண்டியோட்டுபவன் அடிக்கும்போது சும்மாவிருந்துவிட்டு, ஜெனரல் வண்டியில் நன்றாய் மெய்மறந்து தூங்க ஆரம்பித்தவுடன் வண்டியை ஒட்டிக்கொண்டு ரஷ்ய ஸைன்யங்களிருந்த விடத்துக்குப்போய், ஜனரலை அவர்களிடம் விட்டுவிட்டானும்.

### Kindness to Animals.

ப்ராணிகளிடத்தில் அன்பு.—தாய்:—எண்டி குழந்தை அழுகிறது? நான் கொடுத்த பிஸ்கோத் எங்கே?

மூத்தபெண்:—அம்மா, நாமெல்லாரும் நாய் பூனை முதலிய ப்ராணிகளிடத்தில் பக்ஷமாயிருக்கவேண்டும்; ஸ்வயநலம் பாராட்டப் படாதென்று நீ சொல்லவில்லையா?

தாய்:—ஆமாம். அதற்கும் குழந்தை அழுகிறதற்கும் என்ன ஸம்பந்தம்?

மூத்தபெண்:—குழந்தைக்கு இளமையிலேயே இதைக்கற்றுக்கொடுத்தேன். பிஸ்கோத்தில் பாதியை எனக்கும், மற்றொருபாதியை நாய்க்கும் கொடுத்துவிடச்செய்தேன்.—பெண்கல்வி.



## CURIOSITIES.
## விநோதங்கள்.

### Mensruation of a Child.

ஓர் இளங்குழந்தை மாதவிடாய்.—டாக்டர் ஸ்மித் என்கிற ஒரு மேல்நாட்டு வைத்யர் ஓர் இளங்குழந்தையைப்பற்றி ஒரு ரிபோர்டு வெளியிட்டிருக்கிறார். அவர், 22-வயதுள்ள ஒரு ஸ்த்ரீ ப்ரஸவிக்கும்போது அவளுக்கு சிகித்ஸைசெய்து வந்தார்; அவளுக்கு அது தான் முதல் ப்ரஸவம்; அவள் தேஹம் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்தது. அவளுக்குப் பிறந்த பெண்குழந்தை பார்க்கப் பார்க்க மிகவும் அழகாகக் காணப்பட்டது. அவள் ப்ரஸவித்த ஏழாவதுநாள் குழந்தையைப் பார்ப்பதற்காக டாக்டர் ஸ்மித்தை அழைத்தார்கள். அவர் வந்தபோது குழந்தையின் காலிடுக்குகளிலிருந்து ரத்தப் பெருக்கு உண்டானதைக்கண்டு தாயார் மிகவும் திகைத்து வருந்திக்கொண்டிருந்தாள். அவர் பார்க்கையில், அக்குழந்தையின் சின்னஞ்சிறிய மார்களில் இயற்கைக்கு மாறாக அதிகமாய் பால் சுரக்க ஆரம்பித்தது; கண்களைச் சுற்றிலும் ஒரு வகையான கருநிறம் தோன்றிற்று. அக்குழந்தைக்கு உடம்பில் வலியாவது வேறு வகையான கஷ்டமாவது உண்டானதாய் ஒரு குறியும் ஏற்படவில்லை. இவ்விதம் ரத்தப் பெருக்கு மூன்று நாட்கள் தொடர்ந்திருந்து பிறகு தானாகவே நின்றுவிட்டது. பிறகு 28-நாட்கள் கழிந்ததும் முன்போல மறுபடியும் ரத்தப் பெருக்கும் மற்றக்குறிகளும் உண்டாயின! ஆனால் மார்புகளில் பால் சுரக்காமல் அவை இயல்பாயிருப்பதைவிட சற்றுப் பருத்திருந்தனவாம். மறுபடியும் அக்குழந்தைக்கு அவ்வித மாதவிடாயால் மாறுபாடுகள் ஏதேனும் ஏற்படுமோவென்று அவர் கவனித்து வருகிறாராம். அக்குழந்தைக்கு வெளியான ஸூதகத்திற்கு நடுவயதிலுள்ளவருடைய ஸூதக ரத்தத்திற்குள்ள எல்லா லக்ஷணங்களு மிருந்தனவாம்.—வைத்தியகலாநிதி.

### Two Belgium Refugees.

பெல்ஜியம் தேசத்து இரண்டு அகதிகள்.—வேல்ஸ் தேசத்தில் வஸித்துக் கொண்டிருக்கும் ஸ்த்ரீ புருஷர்கள் இருவர் பெல்ஜியத்திலிருந்து அநாதைகளாய் இங்கிலண்டுக்கு வந்திருக்கும் குழந்தைகளில் ஒன்றை ஸ்வீகாரம் செய்துகொள்ள எண்ணி பெல்ஜியன் குழந்தைகள் வந்திருந்த ஒரு ஊர்க்குப் போய்ப் பார்க்கையில் ஸகோதர ஸகோதரிகளாய் இரண்டு குழந்தைகளிருந்தன. அவைகளில் ஒரு குழந்தையை மாத்ரம் கூட்டிக்கொண்டு போக எண்ணினதில் அந்தக் குழந்தைகள் ஒன்றை விட்டு ஒன்று பிரிய மனங் கொள்ளவில்லை. அதன்மேல் தம்பதிகள் இரண்டு குழந்தைகளையும் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதாகத் தீர்மானித்தார்கள்.

ஸ்த்ரீயானவள் பெண் குழந்தையின் வஸ்த்ரங்களையவிழ்க்கையில் அந்தக் குழந்தையின் தேகத்தில் படம் வைத்திருந்த ஒரு டப்பியிருந்ததாம். இந்த ஸ்த்ரீயின் ஸகோதரி ஒருத்தி, வெகு வர்ஷங்களுக்கு முன்னால் பெல்ஜியம் நாட்டிற்கு நோயாளிகள் குழந்தைகள் முதலியவர்களை கவனிக்கும் நர்ஸாகப்போயிருந்தாளாம். அவளுடைய படந்தான் அந்த டப்பியில் வைத்திருந்தது. அவள்தான் இந்தக் குழந்தைகளின் தாயாராம். அதன் மேல் அவர்கள் அந்த இரண்டு குழந்தைகளையும் ஸந்தோஷத்துடன் அழைத்துக்கொண்டு போனார்களாம்.

### A Curious Birth.

ஒரு விநோதப்பிறவி.—வடசேரியில் ஒரு வீட்டின் மாடியில் ஸொந்தக்காரர் அறியாமல் ஒரு கோழி சில முட்டைகள் இட்டு முடிவில் அது தானாகவே அடைகாத்து 21 நாள் கழிய முட்டைகள் வெடித்து குஞ்சுகள் வெளிப்பட்டனவாம். அதில் 11 குஞ்சுகளிருந்தனவாம். இந்தக் குஞ்சுகளின் சத்தத்தை ஸொந்தக்காரர் அறிந்து கவனித்துப் பார்க்கும்போது ஒரு குஞ்சுக்கு இரண்டு தலையும் நான்கு கண்களும் இரண்டு காலும் வால் ஒன்றும் இருந்தனவாம். இது ஒரு விதமான மஞ்சள் வர்ணமாம். மிகவும் அழகாயிருந்ததாம்.—இந்துநேசன்.

### Prolific Cows.

அதிக கன்றுகள் ஈனும் பசுக்கள்.—இங்கிலண்டிலுள்ள டெர்பி என்னும் ஊரில் ஒரு பசு ஒரேதடவையில் மூன்று கன்றுகள் ஈன்றதாம். கன்றுக்குட்டிகள் ஸௌக்யமாய் இருக்கின்றனவாம்.

மதுரைஜில்லாவில் மேலூர்த்தாலுகா தேத்தாம்பட்டி க்ராமத்தில் சென்ற ஜனவரி மாதம் 19-ந்தேதியில் ஒரு பசுவினுடைய வயிற்றிலிருந்து இரண்டு காளைக் கன்றுகள் ஒரு மணி நேரத்திற்குள் பிறந்து ஸௌகமாயிருக்கின்றனவாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

பிப்ரவரிமாஸம் 6-தேதி.

மேற்கு யுத்தகளத்திலிருந்து யாதொரு விசேஷமும் கிடையாது.

9-தேதி.

ஆர்கோன் ப்ரதேசத்தில் யுத்தம் பலமாக நடக்கிறது. மற்ற விடங்களில் விசேஷ மொன்றுமில்லை.

10-தேதி.

ஜெர்மானியர்கள் யிப்ரஸையும், பர்ன்ஸ் என்னும் ஊரையும் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

11-தேதி.

மேற்கு யுத்தகளத்தில் சில விடங்களில் பீரங்கி யுத்தம் நடந்து வருகிறது. கிழக்கே ரஷ்யா செய்யும் போரை யுத்தேசிக்கும்போது இது ரொம்ப ஸாமான்ய மென்று சொல்லலாம்.

13-தேதி.

ஜெர்மானியர்கள் பெல்ஜியத்தின் கடற்கரையோரமாக உள்ள ஸீப்ருஜ் என்னும் பட்டணத்தை ஸப்மரீன் கப்பல்கள் தங்குவதற்கேற்ற இடமாகச் செய்ய முயன்று வருகிறார்கள். 34 ப்ரிட்டிஷ் ஆகாயக்கப்பல்கள் அந்தப் பட்டணத்தின்மேல் பறந்து போய் அங்கே வெடிகுண்டுகள் போட்டு, பட்டணத்தின் பல பாகங்களை சேதப்படுத்தி விட்டன.

ப்ரெஞ்ச் துருப்புகள் வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் ஒரு மலையைப் பிடித்திருக்கிறார்கள்.

16-தேதி.

இன்று 40 ப்ரிட்டிஷ் ஆகாயக்கப்பல்கள் ஆஸ்டெண்ட், மிட்டில்கர்க், ஸீப்ருஜ் என்னும் இடங்களைத் தாக்கின.

19-தேதி.

மேற்கு யுத்தகளத்தில் யுத்தம் கொஞ்சம் மும்முரமாக நடந்து வருகிறது. பற்பல விடங்களில் ப்ரெஞ்சுக்காரர்களுக்கு ஜயம் ஏற்பட்டிருக்கிறது.

23-தேதி.

ஜெர்மானியர்கள் ரீம்ஸை பலமாகத் தாக்கினார்கள். அநேக ஜனங்கள் காயமடைந்தும் கொல்லப்பட்டும் போனார்கள்.

ஒரு ஜெர்மன் ஸெப்பலின் ஆகாயவிமானம் கலே பட்டணத்தில் பறந்துவந்து பத்து வெடிகுண்டுகளைப் போட்டது.

ப்ரெஞ்சுக்காரர்கள் ஏன் ஜில்லாவில் சற்று முன்னுக்குப் போயிருக்கிறார்கள்.

ஆர்கோன் ப்ரதேசத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன்னுக்குப் போயிருக்கின்றன.

26-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ராஸ்னிஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் பெர்த்ஸ் என்னுமிடத்தில் முன்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்

28-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் சாம்பேன் ப்ரதேசத்தில் முன்னுக்குப் போயிருக்கிறார்கள்.

### ரஷ்யாவுக்கும், ஜெர்மனி-ஆஸ்ட்ரியா இவைகளுக்கும் யுத்தம்.

பிப்ரவரிமாஸம் 5-தேதி.

மத்ய போலண்டில் ஜெர்மானியர்களுக்குப் புது ஸைன்கள் உதவிக்கு வந்துகொண்டிருக்கின்றன. பெரிய பீரங்கிகளும் வந்துகொண்டிருக்கின்றன. இவைகளால், ஜெர்மானியர்கள் ஓயாமல் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்களாம்.

கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்திலும் ஜெர்மானியர்கள் புது ஸைன்யங்களுடன் பலமாய் யுத்தம் செய்து வருகிறார்களாம்.

ரஷ்யர்கள் தார்னுவென்னும் ஊரைபெரிய பீரங்கிகளைக் கொண்டு தாக்கினதால், ஆஸ்ட்ரியர்கள் அவ்வூரை விட்டு விட்டுப்போய் விட்டார்கள். கிழக்கு ப்ரஷ்யாவிலும் போலண்டிலும் ரஷ்யர்கள் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறதாக ஆஸ்ட்ரியர்கள் சொல்லுகிறார்களாம்.



6-தேதி.

மத்ய போலண்டில் யுத்தம் கடுமையாக நடந்து வருகிறது. கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் நடக்கும் யுத்தம் யார் பக்ஷமாகு மென்று இன்னும் தெரியவில்லை. ரஷ்யர்கள் சில விடங்களில் பின் வாங்கியும் சில விடங்களில் முன்னுக்குப்போயு மிருக்கிறார்கள்.

7-தேதி.

ஜெர்மானியர்கள் வார்ஸாவை எந்த விதத்திலும் பிடித்து விட வேண்டுமென்று எண்ணியவர்களாய் யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் ப்ஸுரா நதியை ஒரு இடத்தில் கடந்து விட்கோவிஸ் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

9-தேதி.

ஜெர்மானியர்கள் வார்ஸாவுக்கு வராதபடி ரஷ்யர்கள் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் கார்பேதியன் மலைப்ரதேசங்களில் டுக்லா கணவாய்க்குப் பக்கத்தில் சில இடங்களைப்பிடித்திருக்கிறார்கள். அவ்விடத்தில் யுத்தம் இன்னும் பலமாக நடந்து கொண்டிருக்கிறது. ரஷ்யர்கள் புகோவினவுக்குப் பக்கத்தில் பின் வாங்கிப்போயிருக்கிறார்கள். கிழக்கு ப்ரஷ்யாவில் ஜெர்மானியர்களுக்கு உதவி ஸைன்யங்கள் வந்திருப்பதால் யுத்தம் பலமாக நடக்கிறது.

10-தேதி.

கார்ப்பேதியன் மலையில் நடக்கும் யுத்தம் ரொம்ப முக்யமானதென்று சொல்லப்படுகிறது. அங்கே மேற்கு பாகத்தில் ரஷ்யர்கள் டுக்லா கணவாயில் எதிரிகளை பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிழக்கு பாகத்தில் புகோவினவிலிருந்து பின் வாங்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். மத்யபாகமாகிய உஸாக் கணவாயில் ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் ரஷ்யர்களை பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

11-தேதி

சென்ற சில நாட்களாக கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் நடந்துவந்த யுத்தம் ரஷ்யர்களுக்கு ஸாதகமாயிருக்கிறதென்று தெரியவருகிறது.

12-தேதி.

ஜெர்மானியர்கள் கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் காலியாமோகா என்னுமிடத்தை பலமாய்த்தாக்கியும், ரஷ்யர்களால் பின் தள்ளப்பட்டார்கள். ஆனால் ஜெர்மானியர்கள் இன்னும் மும்மரமாய் மறுபடியும் யுத்தம் செய்வார்கள் என்று தோன்றுகிறது.

கிழக்கு ப்ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் புதிதாய் உதவிக்கு வந்த ஏராளமான ஸைன்யங்களுடன் ரஷ்யர்களைத்தாக்கி எல்லை நாட்டுப்பக்கம் அவர்களைத் துரத்தி விட்டார்களென்று தெரிகிறது.

கார்ப்பேதியன் மலைப்ரதேசத்திலும் ரஷ்யர்கள் புகோவினா வென்னுமிடத்திலிருந்து பின்வாங்கியிருக்கிறார்கள்.

13-தேதி.

வார்ஸாவுக்குப் பக்கத்தில் நடந்த சண்டையில் ஜெர்மானியர்களுக்கு 40,000 பேர்கள் சேதம் என்று சொல்லப்படுகிறது.

15-தேதி.

ஜெர்மானியர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் எல்லை ப்ரதேசத்தைத் தாண்டி, ரஷ்யாவிலுள்ள காவ்னு என்னும் ஊரைத்தாக்கப் முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். விஸ்டுலாவின் வடகரையில் முன்னுக்குப் போயிருந்த ரஷ்யர்களை ஜெர்மானியர்கள் துரத்தியடித்து, போலண்டில் உள்ள ஸெர்பிட்ஸ் என்னுமிடத்தைப்பிடித்து, ரஷ்யர்களோடு யுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

16-தேதி.

கிழக்கு ப்ரஷ்யாவில் ரஷ்யர்கள் இன்னும் பின்வாங்கிப் போகிறார்களென்று தெரிகிறது.

17-தேதி.

கிழக்கு ப்ரஷ்யாவில் ஜெர்மானியர்கள் ஏராளமாக வந்ததால் ரஷ்யர்கள் பின்வாங்கிப்போய் விட்டார்களாம். புகோவினவில் ஆஸ்ட்ரியர்கள் மாட்வோர்னு என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

18-தேதி.

ஜெர்மானியர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் ரஷ்யர்களைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள். ஜெர்மானியர்களுக்கு கிழக்கு ப்ரஷ்யாவில் 8 முதல் 10 'ஆர்மிகோர்கள்' வரையிலிருக்கின்றனவாம்.

19-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்னொவிட்ஸ் என்னும் ஊரை மறுபடியும் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் புகோவினா என்னும் ப்ரதேசத்தை விட்டுவிட்டுப் போய் விட்டார்கள். நீமன் நதிக்கும் விஸ்டுலாநதிக்கும் மத்தியில் யுத்தம் பலமாக நடக்கிறது.

20-தேதி.

கிழக்கு ப்ரஷ்யாவில் ரஷ்யர்கள் ஆகஸ்டோவா ப்ரதேசத்திலிருந்து பின் வாங்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் யுத்தம் கடுமையாக நடந்து கொண்டிருக்கிறது.

22-தேதி.

ரஷ்யர்கள் எட்விக்னோ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

23-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் புகோவினாவைக் கைப்பற்றியதோடு கிழக்கு காலீஷ்யாவிலும் புகுந்திருக்கிறார்கள். ஸ்டானிஸ்லாவ் என்னுமிடத்துக்குத் தென்கிழக்கே ரஷ்யர்களோடு யுத்தம் செய்து வருகிறார்கள்

24-தேதி.

வடபோலண்டில் யுத்தம் கடுமையாயிருக்கிறது. ஜெர்மானியர்கள் ஓஸோவிக்ஸ் என்னும் கோட்டைக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

25-தேதி.

ஜெர்மானியர்கள் ஆஸ்ஸோவிக்ஸ் என்னும் கோட்டையைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

27-தேதி.

நீமன் நதிக்கரையிலும் நாரு நதிக்கரையிலும் யுத்தம் பலமாக நடந்து கொண்டிருக்கிறது. க்ராட்னோ என்னும் ஊருக்கு 20 மைல் வடக்கே நீமன் நதியைக் கடந்துபோன ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் தாக்கித் துரத்தி விட்டார்கள்.

## துருக்கியோடு யுத்தம்.

பிப்ரவரி மாஸம் 3-தேதி.

ஸுமார் 12,000 துருக்கியர்கள் இன்று 12-மணி நேரம் ஸூயஸ் கால்வாயில் ப்ரிட்டிஷ் துருப்புகளோடு யுத்தம் செய்தும் தோற்றுப்போனார்கள்.

4-தேதி.

ரஷ்யர்கள் டாப்ரிஸ் என்னும் பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

12-தேதி.

துருக்கியர்கள் ஈஜிப்டைத்தாக்கும் எண்ணத்தை விட்டு விட்டதாகவும், பாலஸ்டீன் ஸைன்யம் கிழக்கேயுள்ள எர்ஸீரம், பாக்டாட் என்னுமிடங்களுக்குக் கொண்டுபோகப் படுமெனவும் சொல்லப்படுகிறது.

15-தேதி.

காக்கஸஸ் ப்ரதேசத்தில் இப்போது துருக்கிய ஸைன்யங்கள் அநேகமாய் ஒன்றுமில்லையாம்.

25 தேதி.

இன்று ஒரு கூட்டுக்கப்பல்படை டார்டனல்ஸ் ஜலஸந்தியிலுள்ள 4-துருக்கியக் கோட்டைகளைத் தாக்கி நாசம் செய்தது.

## பொது விஷயங்கள்.

பிப்ரவரிமாஸம் 5-தேதி.

தென்னாப்ரிக்காக் கலகத்தின் தலைவர்களில் ரொம்ப ஸாமர்த்யசாலியான கெம்ப் என்பவர் ஸமீபத்தில ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவுக்கு ஓடிப்போனார். அவர் இப்போது தமது ஸைன்யத்தில் பெரும் பாகத்துடன் தென் ஆப்ரிக்காவுக்கு வந்து ப்ரிட்டிஷாரிடம் சரணடைந்தார். கர்னல் மாரிட்ஸினிடம் இருந்த ஸைன்யங்களில் பெரும்பாகமும் அதிகாரிகளிடம் சரணடைந்து விட்டதாம்.

8-தேதி.

வங்காள ராஜதானியில் ப்ரெஞ்சுக்காரர்களுக்கு ஸொந்தமான சந்த்ரநகரம் என்னும் பட்டணத்தின் கவர்னராகிய மான்ஸ் எல். வெர்க்னோல் என்பவர் ஸைன்யத்தில் சேருவதற்காக ப்ரான்ஸுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

10-தேதி.

இன்று காமன்ஸ் ஸபையில், ஜெர்மனிக்கு யுத்த ஆரம்பத்தில் 28-ஸப்மரீன்கப்பல்கள்இருந்தனவென்றும், அங்கே அந்த தேசத்து உபயோகத்துக்காக 16 ஸப்மரீன் கப்பல்களும், வேறு தேசங்களுக்காக 6-ஸப்மரீன் கப்பல்களும் கட்டிக்கொண்டிருந்தார்களென்றும் இங்க்லீஷ் கப்பல்படை மந்த்ரி தெரிவித்தார்.

11-தேதி.

இன்று ரஷ்யாவின் பார்லிமெண்ட் கூடினபோது அதில் ரஷ்யாவின் யுத்தச்செலவு தினந்தோறும் 2-கோடியே 10 லக்ஷம் பவுனாகிறதென்று தெரிவிக்கப் பட்டது.

15-தேதி.

இரண்டு ஆஸ்ட்ரிய டார்ப்பிடோ கப்பல்களும் ஒரு டிஸ்ட்ராயர் கப்பலும் ஆண்டிவாரியைத் தாக்கின.

சென்ற டிஸம்பர் மாஸம் 31-தேதி வரையில் நேசவரசுகளுக்கு இந்த யுத்தத்தில் 3000 கோடி ரூபாய்க்குக் குறையாமல் செலவழிந்திருக்குமென்று இங்க்லண்டின் வரவு செலவு மந்த்ரி இன்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.



ஜெர்மானியர்கள் வடகடலிலும், ஐரிஷ்கடலிலும் மிதக்கும் கடல் வெடிகுண்டுகளை ஏராளமாய்ப்போடப்போகிறார்களென்றும், இதனால் வர்த்தகக்கப்பல்களுக்கு அபாயம் நேரிடக்கூடுமென்றும் சொல்லப் படுகிறது.

16-தேதி.

போர்முனைக்குப் போயிருந்த பிக்கானீர் மஹாராஜாவும் கிஷன்கார் மஹாராஜாவும் இந்தியாவுக்குத் திரும்பியிருக்கிறார்கள். அவர்கள் இந்த மாஸக்கடைசியில் பம்பாய்க்கு வந்து சேருவார்களாம்.

19-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் மறுபடியும் பெல்க்ரேடைத் தாக்கினார்கள். அநேக ஸெர்வியர்கள் இறந்துபோனார்கள். ஸெர்வியர்கள் ஆஸ்ட்ரியாவுக்கு ஸொந்தமான ஸெம்லின் என்னும் ஊரைத் தாக்கினார்கள்.

20-தேதி.

இன்னும் 15 நாள்களுக்குள் இட்டலி ஜெர்மனிக்கு விரோதமாக நேசவரசுகளுடன் யுத்தத்தில் சேர்ந்து கொள்ளுமென்று சொல்லப்படுகிறது.

சென்ற 5-நாள்களாக இட்டலி கவர்ன்மெண்டார் லிவிலிதீவிலிருந்து குதிரைகளும் கோவேறு கழுதைகளும் தருவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

18-ந்தேதி முதல் வடகடலிலும் இங்க்லீஷ் சானலிலும் வரும் கப்பல்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவைகளாயிருந்தாலும் ஸரி, அவைகளை ஜெர்மானியர்கள் தாக்கி மூழ்கடித்து விடுவார்கள் என்று விளம்பரம் செய்திருந்தார்கள். அதன்படியே,இங்க்லீஷ் சானல் என்னும் கடலில் இரண்டு வ்யாபாரக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுப்போயின. போக்ஸ்டோன் என்னும் ஊருக்குப் பக்கத்தில் ஒரு நார்வே கப்பல் ஜெர்மன் ஸப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டது.

ஜெர்மனிக்கு ஸொந்தமான இரண்டு ஸெப்பலின் ஆகாயக்கப்பல்கள் டென்மார்க்குக் கடல் கரையோரமாக புயல்காற்றில் அகப்பட்டு நாசமடைந்தன.

21-தேதி.

இன்று இரவு இங்க்லண்டிலுள்ள கோல்செஸ்டர், பெய்ன்ட்ரீ என்னும் ஊர்களில் ஜெர்மானிய ஆகாய விமானிகள் வெடிகுண்டுகள் போட்டார்கள்.

இட்டாலியிலுள்ள ஜனங்கள் ஜெர்மனிக்கு விரோதமாக இட்டலி இந்த யுத்தத்தில் சேரவேண்டுமென்று விரும்புகிறார்களாம். இதற்காக தேசத்தின் பற்பல பாகங்களில் மீட்டிங்குகள் நடைபெற்றன. வெனிஸில் ஒரு மீட்டிங் நடைபெற்ற பிறகு ஜனங்கள் ஆஸ்ட்ரியா தேசத்துக் கொடியை பஹிரங்கமாக நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டார்களாம்.

5-வ்யாபாரக் கப்பல்கள் அட்லாண்டிக் ஸமுத்ரத்தில் 'க்ரான்ப்ரின்ஸ் வில்ஹெல்ம்' என்னும் ஜெர்மன் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டன.

22-தேதி.

ந்யூ யார்க்கிலிருந்து ஜெர்மனிக்குப் போய்க்கொண்டிருந்த 'ஈவ்லின்' என்னும் அமெரிக்கன் கப்பல் ஜெர்மனியின் கடற்கரையோரமாகவுள்ள போர்க்கம் என்னும் தீவுக்குப் பக்கத்தில் கடல் வெடிகுண்டால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

23-தேதி.

'காரிப்' என்னும் அமெரிக்க வ்யாபாரக்கப்பல் ஜெர்மன் கடல்கரை யோரமாக மூழ்கடிக்கப்பட்டது. அதில் 4,600 மூட்டை பருத்தியிருந்ததாம்.

24-தேதி.

ப்ரிட்டனுக்கு ஸொந்தமான 'டெப்ட்போர்ட்' என்னும் கப்பல் ஜெர்மன் டார்பிடோக்களால் தாக்கப்பட்டு, இங்க்லண்டின் கிழக்குக் கரையோரமாக மூழ்கிப் போயிற்று.

ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்கள் இரண்டு ப்ரிட்டிஷ் கப்பல்களை டார்ப்பிடோக்களால் தாக்கி மூழ்கடித்து விட்டன.

26-தேதி.

ஒரு ப்ரெஞ்ச் டிஸ்ட்ராயர் கப்பல் ஆஸ்ட்ரியாவின் கடற்கரையோரத்தில் ஆஸ்ட்ரியர்கள் போட்டிருந்த வெடிகுண்டுகளில் தாக்கி மூழ்கிப் போய்விட்டது.

27-தேதி.

இங்க்லீஷ் சானல் கடலில் இரண்டு லண்டன் கப்பல்கள் டார்பிடோக்களால் நாசஞ்செய்யப்பட்டன. பீரங்கிகள் உள்ள ஒரு வ்யாபாரக் கப்பல் போனவழி தெரியவில்லையாம்.

## GENERAL NEWS.

## பொது வர்த்தமானம்.

### இந்திய நாட்டு வர்த்தமானம்.

*பிப்ரவரிமாசம் 13-தேதி.*

காலஞ்சென்ற ரெவரண்ட் பாதர் ஸூவெல்.—திருச்சிறுப்பள்ளி ஸெண்ட் ஜோஸப் காலேஜில் மானேஜராக இருந்த ரெவரண்ட் பாதர் ஸூவெல் இன்றையதினம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்ரியில் காலகதியடைந்தார். இவருக்கு வயது 79.

சித்தூர் ஜில்லா கான்பரென்ஸ்.—இது இன்று சித்தூரில் கூடிற்று. சென்னை வக்கீலாகிய மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார் ப்ரெஸிடெண்டாக இருந்து, மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்கள், நிலத்தீர்வை, தேவஸ்தான ஸொத்துகள், ஸ்தலஸ்வய ஆட்சி, கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

14-தேதி.

சித்தூர் ஜில்லா கான்பரென்ஸ்.—இது இன்று மறுபடியும் கூடி, தீர்வை வஜா, காட்டிலாகாக் குறைகள், விவஸாயக்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்தது.

15-தேதி.

நீடாமங்கலம்-மன்னார்குடி ரெயில்வே.—தஞ்சாவூர் ஜில்லாவில் புதிதாகப் போட்டிருக்கும் இந்தக்கிளை ரெயில்வேயை சென்னை நிர்வாக கௌன்ஸிலின் மெம்பராகிய ஆனரபிள் ஸர் ஹாரோல்ட் ஸ்டுவர்ட் இன்று திறந்து வைத்தார்.

17-தேதி.

போலீஸ் ஆபிஸரைக் கொலைசெய்ய யத்தனித்தது.—இன்று வங்காளத்திலுள்ள ரங்பூரில் அடிஷனல் போலீஸ் ஸூபரிண்டண்டாகிய ராய் ஸாகிப் நந்தாலால் போஸ் என்பவன் வீட்டில் இரண்டு பேர் அவருடன் பேச வந்தவர்கள்போல வந்து அவரை கைத்துப்பாக்கியால் சுட முயன்றார்கள். ஆனால் குறி தப்பிவிட்டது.

நந்தலால் போஸ் ஒரு அறைக்குள் போய் ஒளித்துக் கொண்டார். ஒரு ஆர்டலியும் ஒரு கான்ஸ்டபிளும் அவர்களைப் பிடிக்க முயன்றதில் அவர்கள் ஆர்டலியை வயிற்றை நோக்கி சுட்டுவிட்டு ஓடிவிட்டார்களாம்.

19-தேதி.

காலஞ்சென்ற மிஸ்டர் கோகலே.—ஆனரபிள் மிஸ்டர் கோகலே இன்று புனாவில் ஹிருதய ஸம்பந்தமான ச்வாஸகாஸத்தால் இறந்து போய்விட்டார்.

20-தேதி.

போர்முனைக்குப் போன இந்திய ராஜாக்கள்.—போர்முனைக்குப் போயிருந்த இந்திய ராஜாக்களில் கிஷன்கார் மகாராஜாவாகிய மகாராஜா ரஞ்சிதஸிங்கும், பிக்கானீர் மஹாராஜாவும் இன்று பம்பாய்க்குத் திரும்பி வந்தார்கள்.

23-தேதி.

வைஸ்ராயின் சட்ட ஸபை.—இன்று வைஸ்ராயின் சட்டஸபை டெல்லியில் கூடினபோது, வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ் மிஸ்டர் கோகலே இறந்து போனதைப் பற்றி அனுதாபப்பட்டுப் பேசினார். மிஸ்டர் கோகலே ரொம்ப ராஜபக்தியுள்ளவராய் கவர்ன்மெண்டின் காரியங்களை ஆமோதித்து வந்தாரென்றும், ஆனால் யாருக்கும் பயப்படாமல், கண்டித்துப் பேசவேண்டியவைகளைக் கண்டித்து பேசி வந்தாரென்றும், கல்வி விஷயத்திலும், பணவரவு செலவு விஷயத்திலும், அவருக்கு விசேஷ ஞானமுண்டென்றும் எலிமெண்டரிக் கல்வி விஷயத்திலும் தென்னாப்ரிக்கா இந்தியர்களுடைய குறைகள் விஷயத்திலும் அவர் ரொம்ப பாடுபட்டு உழைத்துவந்தாரென்றும் வைஸ்ராய் பேசினார்.

மற்ற மெம்பர்கள் கோகலேயைப்பற்றிப் பேசின பிறகு, மிஸ்டர் கோகலேயுக்கு மரியாதையாக கௌன்ஸில் மறுநாள் கூடுவதற்காகக் கலைந்தது.

28-தேதி.

ஸெர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸொஸைடி.—காலஞ்சென்ற மிஸ்டர் கோபாலக்ருஷ்ண கோகலே ஸ்தாபித்து நடத்திவந்த ஸெர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸொஸைடி யென்னும் ஸங்கத்து மெம்பர்கள் ஆனரபிள் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியை மூன்று வர்ஷத்துக்கு அந்த ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் கொலை.—இன்று கல்கத்தாவில் நான்கு வாலிபர்கள் ஸுரேச சந்த்ர முக்கர்ஜியென்னும் போலீஸ் இன்ஸ்பெக்டரை கார்ன்வாலிஸ் ஸ்க்வயர் என்னுமிடத்தில் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். அவருடன் இருந்த ஒரு கான்ஸ்டபிள் வாலிபர்களைப் பிடிக்க யத்தனித்தபோது



அவனையும் சுட்டார்களாம். அவனுக்கு காயங்கள் ஏற்பட்டன. வாலிபர்கள் தப்பியோடிவிட்டார்கள்.

### அன்யநாட்டு வர்த்தமானம்.

*பிப்ரவரிமாஸம் 9-தேதி.*

ட்ரிப்போலியில் அரபியர்களுடைய கலகம்.—இட்டலிக்கு ஸொந்தமான ட்ரிப்போலியில் 1000 அரபியர்கள் இட்டாலியர்களை பங்கீம் என்னுமிடத்தில் தாக்கி ஒரு பகல் முழுவதும் யுத்தம் செய்தார்கள். ஆனால் கடைசியில் பின்தள்ளப்பட்டார்கள். அரபியர்களுக்கு ரொம்ப சேதமாம்.

15-தேதி.

க்ரீஸுக்கும் துருக்கிக்கும் மனஸ்தாபம்.—க்ரீசைச் சேர்ந்த ஒரு கப்பல்படை உத்யோகஸ்தரை ஒரு துருக்கிய போலீஸ்காரன் அவமதித்ததற்கு துருக்கிய கவர்ன்மெண்டார் தகுந்த ஸமாதானம் சொல்லாமையால், துருக்கிக்கும், க்ரீஸுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது. கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள க்ரீஸின் ப்ரதிநிதி அவ்வூரைவிட்டுப் போய்விட்டாராம்.

16-தேதி.

ஆல்பானியா.—ஆல்பானியர்கள் ஸெர்வியாவின் மேல் படையெடுத்துப் போயிருக்கிறார்கள். ஸெர்வியர்கள் அவர்களுடன் அதிகமாக யுத்தம் செய்யாமல் பின்வாங்கிப் போய்விட்டார்களாம்.

18-தேதி.

க்ரீஸுக்கும் துருக்கிக்கும் மனஸ்தாபம்.—கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள போலீஸின் டிரெக்டர் ஜெனரல் க்ரீஸைச் சேர்ந்த கப்பல்படை அதிகாரியை துருக்கிய போலீஸ்காரன் அவமதித்ததைப்பற்றி வருத்தப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார். (15-ந்தேதி பார்க்க) இதனால் துருக்கிக்கும் க்ரீஸுக்கும் நேர்ந்த மனஸ்தாபம் உத்யோகமுறையில் தீர்ந்துபோனதாகிறது.

20-தேதி.

பனமாப் பொருள்காட்சி.—பனமா கால்வாய் திறந்து வைக்கப்பட்டதை யொட்டி பனமாவில் ஒரு பொருள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை இன்று அமெரிக்கா ஐக்ய நாடுகளின் ப்ரெஸிடெண்டாகிய வுட்ரோ வில்ஸன் திறந்துவைத்தார்.

## SEASON.

## கால ஸ்திதி.

### Rainfall.

மழை.—1914ஹு எப்ரல்மீ 1உயிலிருந்து 1915ஹு மார்ச்சுமீ 2உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 53·91 | 44·34 |
| வால்டேர் | 40·93 | 36·91 |
| காக்கினடா | 30·45 | 38·45 |
| மஸூலிப்பட்டணம் | 33·06 | 39·78 |
| நெல்லூர் | 44·03 | 34·87 |
| மதராஸ் | 65·48 | 49·29 |
| கூடலூர் | 78·89 | 50·69 |
| நாகப்பட்டணம் | 57·41 | 53·13 |
| பாம்பன் | 42·32 | 36·65 |
| கொழும்பு | 77·00 | 80·51 |
| திருவனந்தபுரம் | 67·97 | 61·67 |
| கொச்சி | 119·15 | 111·78 |
| கள்ளிக்கோட்டை | 123·59 | 116·45 |
| மங்களூர் | 147·70 | 126·93 |
| மெர்க்காரா | 130·15 | 126·18 |
| ஐதராபாத் | 43·45 | 30·70 |
| பல்லாரி | 20·93 | 19·79 |
| கர்நூல் | 28·47 | 26·64 |
| கடப்பை | 27·55 | 31·58 |
| ஹாஸ்ஸான் | 31·81 | 35·67 |
| பெங்களூர் | 29·53 | 35·05 |
| கொடைக்கானல் | 78·72 | 59·54 |
| உதகமண்டலம் | 48·58 | 55·39 |
| கோயம்புத்தூர் | 20·32 | 21·66 |
| வேலூர் | 40·70 | 45·22 |
| சேலம் | 35·98 | 39·69 |
| திருச்சிறுப்பள்ளி | 21·42 | 32·41 |
| புதுக்கோட்டை | 38·51 | 33·30 |
| மதுரை | 27·11 | 33·80 |
| திருநெல்வேலி | 51·13 | 26·25 |

## Calendar—பஞ்சாங்கம்.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

THE PEOPLE'S FRIEND

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 7 } Vol. 7. } ஆனந்தஹு பங்குனிமீ, MARCH 1915. { ஸஞ்சிகை 7. { No. 7.


OFFICE OF THE REGISTRAR OF ... 2 - JUN 1915 MADRAS.

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு | ... 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி | ... 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி | ... 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 4 0 |
| 1/10 பக்கத்திற்கு | , | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேண்டும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**
3 & 4, கொண்டி செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன்,
மதராஸ்.

ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ஆனந்த௵ பங்குனி௴. [ஸஞ்சிகை 7.

## THE SPY SYSTEM OF GERMANY.

## ஜெர்மனி உளவறியும் ஏற்பாடு.

ஐரோப்பாவிலும், மற்ற கண்டங்களிலுமுள்ள பற்பல ராஜாங்கங்களில் ஒவ்வொன்றும் மற்ற ராஜாங்கங்களுடைய ராணுவ நிலைமை, கப்பல்படை நிலைமை, தேச பாதுகாப்புக்கான வேலைகளின் நிலைமை முதலியவைகளையும், தேசத்து ஜனங்களின் நிலைமையையும் உளவறிந்து தெரிவிப்பதற்காக உளவாளிகளை வேலைக்கு வைத்திருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள பற்பல தேசங்களுக்குள் ஜெர்மனி செய்திருக்கும் ஏற்பாடு தான் ரொம்பப் பெயர்போனது. அங்கே உளவறியும் ஏற்பாடு ஸுமார் 50-வர்ஷத்துக்கு முன்னாலேயே உயர்ந்த நிலைமைக்கு வந்துவிட்டதென்று சொல்லப்படுகிறது. உளவறிதலை ஜெர்மனியில் அவ்வளவு உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவந்தவர் ஸ்டீபர் என்பவர்.

அவர் 1818-ம் வர்ஷம் ஜனனமானார். காலக்ரமத்தில் படித்துத் தேறி ப்ரஷ்யாவின் ரகஸ்யப் போலீஸ் டிபார்ட்மெண்டில் சேர்ந்து தமது ஸாமர்த்யத்தால் உயர்ந்த உத்யோகங்களை அடைந்து, தமது பெயர் ப்ரஷ்யாவின் அரசருக்கு எட்டும்படி செய்து கொண்டார். ப்ரஷ்யாவில் அப்போது ப்ரிடரிக் என்ற அரசர் ஆண்டுகொண்டிருந்தார். அவர் இப்போதுள்ள ஜெர்மனி சக்ரவர்த்தியாகிய இரண்டாவது வில்லியமின் பாட்டனார். லோக ப்ரஸித்தி பெற்ற பிஸ்மார்க் அவருக்கு ப்ரதம மந்த்ரியாக இருந்துவந்தார். இப்போது நடந்துவரும் யுத்தத்தின் ஆரம்பத்தில் ஜெர்மன் யுத்த ஆபிஸர்களுக்குத் தலைவரா யிருந்தவரான ஜெனரல் வான் மோல்ட்கேயின் தகப்பனாருடைய ஸஹோதரராகிய கௌண்ட் வான் மோல்ட்கே அப்போது யுத்த தளகர்த்தராக இருந்தார். 1866-ம் வர்ஷத்தில் ஜெர்மனி கவர்ன்மெண்டார் ஆஸ்ட்ரியாவின்மேல் படையெடுக்க எண்ணினார்கள். அப்போது ஸ்டீபர் என்பவர் ஸைன்யம் போகவேண்டி யிருக்கும் மார்க்கங்களையும், அவைகளின் நிலைமைகளையும் தாம் உளவறிந்து வந்து சொல்வதாக பிஸ்மார்க்கினிடமும், மோல்ட்கேயினிடமும் தெரிவித்து உளவறிவதற்காகப் புறப்பட்டார். அவர் போனவிடங்களில் சில ஸமயம் போட்டக்ராப் படம் பிடிப்பவர் போலவும், சில ஸமயம் கூடை பின்னுகிறவர் போலவும், சில ஸமயம் ஊர் ஊராய்ப்போகும் வ்யாபாரி போலவும் வேஷம் போட்டுக்கொண்டுபோய் பற்பல ஊர்களில் உளவறிவதற்காக உளவாளிகளை நியமித்தார். போகுமிடங்களிலெல்லாம் ஜனங்களுடைய எண்ணங்கள் எப்படி யிருக்கின்றனவென்றும், ஊர்களின் நிலைமை எப்படி யிருக்கின்றனவென்றும் குறிப்பிட்டுக்கொண்டார்.

அவர் தாம் நேரிடையாக தேசத்தின் நிலைமையை அறிந்துகொண்டதோடுகூட, அவர் பற்பல விடங்களில் நியமித்து வந்த ஒற்றர்களும் (உளவாளிகள்) வேண்டிய விஷயங்களை அறிந்து தெரிவித்தார்கள். இதனால் ப்ரஷ்யா ராணுவ அதிகாரிகளுக்குத் தாங்கள் ஸைன்யங்களை எந்த வழியாக நடத்தவேண்டுமென்பது முதலான பல விஷயங்கள் நன்றாய்த் தெரிந்தன. இவ்வளவு ஸாதகங்களோடு யுத்தத்துக்குப் போனால்ஜயிக்கக்கேட்பானேன்? 1866-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியா ப்ரஷ்யாவால் தோற்கடிக்கப்பட்டுப் போயிற்று.



பிஸ்மார்க்கும், மோல்ட்கேயும் ஸ்டீபரினுடைய திறமையைப் பற்றி ரொம்ப ச்லாகித்துப் பேசினார்கள். அரசரும் அவருடைய ஸாமர்த்யத்துக்கு மெச்சி அவரை ப்ரஷ்யாவின் போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு மந்த்ரியாக நியமித்தார்.

பிஸ்மார்க் என்பவர் பெரிய ராஜதந்த்ரி. அவர் இன்ன காலத்தில் இன்ன தேசத்தோடு யுத்தம் நடக்குமென்று ஊகித்துக்கொள்ளக் கூடியவர். 1870-ம் வர்ஷவாக்கில் ப்ரான்ஸோடு யுத்தம் செய்யவேண்டி யிருக்குமென்று தீர்மானித்துக்கொண்டு, அதற்கு முன்ஜாக்ரதைகள் செய்யலானார்; ஆஸ்ட்ரியாவோடு யுத்தம் செய்வதற்கு முன்னால் ஆஸ்ட்ரியாவில் உளவறிந்து வந்ததுபோல, ப்ரான்ஸிலும் உளவறிந்து வருவது நல்லதென்று எண்ணி, ஸ்டீபர் என்பவரை ப்ரான்ஸுக்கு அனுப்பினார். ஸ்டீபர் ப்ரான்ஸுக்குப் போனதின் நோக்கம் ப்ரான்ஸில் வேண்டிய விடங்களிலெல்லாம் உளவறிய ஒற்றர்களை ஏற்படுத்தி அவர்கள் மூலமாய் ப்ரான்ஸின் நிலைமையை அறிந்து கொள்வது. ஒற்றர்களை நியமிக்க ஏராளமாய்ப் பணம் வேண்டியிருக்கும். கவர்ன்மெண்டார் இதற்கு முன்னால் உளவறியும் வேலைக்காக வர்ஷந்தோறும் 3½ லக்ஷம் ரூபாய்க்குக் கொஞ்சம் அதிகமாகக்கொடுத்து வந்தார்கள். இப்போது அந்தத் தொகை 6-லக்ஷம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

ஸ்டீபர் 1866-ம் வர்ஷம் முதல் 1869-ம் வர்ஷம் வரையில் இதே வேலையாக இருந்துவந்தார். நான்கு முறை அவர் ப்ரான்ஸுக்கு இந்த வேலையாக ப்ரயாணம் செய்துவந்தார். இந்த மூன்று நான்கு வர்ஷகாலத்துக்குள் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடக்கக்கூடியவையான 14-ஜில்லாக்களில் ஸுமார் 20,000 ஒற்றர்களை நியமித்துவிட்டார். இந்த ஒற்றர்களில் இரண்டு வகை உண்டு. அதாவது நிலையான ஒற்றர்களும், அவர்களுக்கு உதவியான மற்றவர்களும். ஸாதாரண ஜனங்கள்; ஒற்றர்கள் என்றால், அவர்கள் மாறுவேஷம் பூண்டு ஓர் ஊர்விட்டு மற்ற ஊருக்குப்போய் ஒருவருக்கும் தெரியாமல் இருந்துகொண்டு வேண்டிய ஸமாசாரங்களை அறிந்து வருவார்கள் என்று எண்ணியிருப்பது ஸகஜம். ஊர் விட்டு ஊர் ப்ரயாணம் செய்யும் உளவாளி ஓரிடத்துக்குப்போனவுடன், அவர் யார், ஏன் இங்கு வந்திருக்கிறார், என்று ஊரிலுள்ளவர் கேட்கக்கூடும். தக்க ஜவாப் சொல்லமுடியாமல் போனால் அவரைப் பற்றி ஜனங்களிடத்திலும் அதிகாரிகளிடத்திலும் ஸந்தேகம் ஜனிக்கக்கூடும். அப்படி ஸந்தேகம் ஒருமுறை உண்டாகிவிட்டால் பிறகு ஒற்றர்களுடைய கார்யமே கெட்டுப்போய்விடும். மேலும் ப்ரயாணம் செய்யும் ஒற்றர்கள் ஒவ்வொரு ஊரிலும் ஸ்வல்ப காலமே யிருப்பார்களாகையால், அந்த ஸ்வல்ப காலத்துக்குள் யாரைக் கேட்டால் ஒரு குறிப்பிட்ட ஸமாசாரம் கிடைக்குமோ அவரை யறியவும், அவருடன் பழகவும் முடியாமல் போய்விடும். மேலும் அவர்கள் எந்த விஷயத்தைப் பற்றியாவது விசாரிக்க ஆரம்பித்தால், அது வரையில் அவர்களைப் பற்றி ஸந்தேகங்கொண்டது ஊர்ஜிதப்பட்டுப் போய், அவர்கள் வந்த கார்யம் ப்ரயோஜனப் படாமல் போய்விடும்.

இதை யறிந்திருந்த ஸ்டீபர் ஒற்றர்களை ஒவ்வோரிடத்திலும் நிலையாக இருக்கச் செய்துவிட்டார். ஒற்றர் தாம் தங்கவிரும்பும் ஊர்களில் ஏதாவது ஒரு தொழிலில் அமர்ந்து, ஊரார்களோடு தாமும் ஒருவராய் இருந்துகொண்டு தம்மைப்பற்றிப் பிறர் ஒருவரும் ஸந்தேகங் கொள்ளாதவிதமாய் நடந்துகொண்டு வரும்படிக்கும், அதன்மேல் அவர் அதிகாரிகளுடைய கவனத்தைக் கவராமலே தமக்குவேண்டிய ஸமாசாரங்களை யறிந்துகொண்டு அவைகளை

ஜெர்மனியிலுள்ள தமக்கு அனுப்பிவிடும் படிக்கும் ஏற்பாடு செய்தார். ஸ்டீபர் ஆண்களையேயன்றி ஸ்த்ரீகளையும் ஒற்றர்களாக நியமித்திருந்தார். ஒற்றர்கள் பற்பல தொழில்களில் அமர்ந்துகொண்டு தங்கள் வேலைகளை நடத்திவந்தார்கள். உதாரணமாக, அவர்கள் விவஸாயி, காய்கறி ஸாகுபடிக்காரன், விவஸாயக்கூலியாள், ரெயில்வே போர்ட்டர்கள், கடைக்காரர்கள், ஊர் ஊராய் ப்ரயாணம் செய்யும் வ்யாபாரிகள், காபிக்ளப், சாப்பாட்டு ஹோட்டல் முதலியவைகளில் வேலையாட்கள், துருப்புகள் தங்கியிருக்குமிடங்களில் உள்ள மதுபானக்கடைகளில் வேலையாட்கள், குடும்பங்களில் ஸ்த்ரீ வேலையாட்கள் முதலிய பற்பல வேலையாட்களாக அமர்ந்துகொண்டார்கள். இந்த ஒற்றர்கள் முக்யமாய், ஜெர்மன் துருப்புகள் ப்ரான்ஸின்மேல் படையெடுப்பதாயிருந்தால் எந்தவழியாகப் போகவேண்டியிருக்குமோ அந்த வழியில்தான் அதிகமாயிருந்தார்களாம்.

ஸ்டீபர் ப்ரான்ஸில் 14-ஜில்லாக்களில் ஒற்றர்களை நியமித்திருந்தாரென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள ஒற்றர்களுக்கு ஒருதலைவர் உண்டு. இந்த 14-ஜில்லாக்களையும் 4-பிரிவுகளில் அடக்கி, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு உத்யோகஸ்தரைத் தலைவராக நியமித்தார். இவர்களுக்கு மேல் இரண்டு போலீஸ் லெப்டினண்டுகள் நியமிக்கப்பட்டார்கள். இந்த இருவருக்கும் அதிபராக ஸ்டீபர் இருந்துவந்தார்.

1870-ம் வர்ஷத்தில் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் நடந்தது. அப்போது ஸ்டீபர் தமது ஒற்றர்களால் ராணுவ அதிகாரிகளுக்கு இன்னமாதிரியான விஷயங்களை தெரிவித்துவந்தார் என்பதற்கு சில உதாரணங்கள் கொடுக்கிறோம்.

(1) ப்ரான்ஸின் ஸைன்யங்களில் ஒவ்வொரு பிரிவும் இருக்குமிடம், அதன்தொகை, அது போகும் இடங்கள்.

(2) எதிரிகளின் சேனைத் தலைவர்களினுடைய வயஸு, ஸ்வபாவம், கீர்த்தி ஆகிய இவைகளைப்பற்றிய விவரங்கள்.

(3) ஜெர்மன் ஸைன்யம் போகக்கூடிய ஜில்லாக்களில் இன்ன நடந்துகொண்டிருக்கின்றனவென்பது, ஜனங்களுடைய அபிப்ராயம், அந்த ஜில்லாக்களின் ராணுவ ஸம்பந்தமான பொருளாதார நிலைமை.

(4) அந்த ஜில்லாக்களில் சேனை போகும்போது வேண்டிய ஸமாசாரங்கள் உளவறிந்து வந்துசொல்ல தக்க ஆஸாமிகளைத் தெரிந்தெடுப்பது.

இந்த உளவறியும் ஏற்பாட்டால் ஜெர்மனி ரொம்ப ப்ரயோஜனமடைந்து, அந்த யுத்தத்திலும் அதுவே ஜயமடைந்தது. அது முதல் நாளதுவரையில் ஜெர்மனியில் இந்த உளவறியும் ஏற்பாடு ப்ரபலமாகவே நடந்துவருகிறது. ஜெர்மனியின் உளவாளிகள் ப்ரான்ஸ், பெல்ஜியம், இங்கலண்ட், அமெரிக்காமுதலிய பற்பல நாடுகளில் இருந்து வருகிறார்களென்றும், இப்போது இந்த ஏற்பாட்டுக்காகச் செலவழிக்கப்படும் பணம் வர்ஷத்துக்குக் கிட்டத்தட்ட பத்து லக்ஷம் ரூபாயிருக்குமென்றும் சொல்லப்படுகிறது.

தற்காலம் ஜெர்மனியில் உள்ள உளவறியும் ஏற்பாடு அநேகமாய் 1870-ம் வர்ஷத்துக்கு முன்னிலிருந்ததுபோலவே யிருக்கிறது. ஜெர்மன் உளிவாளிகள் 'தோட்டிமுதல் தொண்டமான்வரையில்' என்றபடி பற்பல தொழில்களிலும் அமர்ந்தவர்களா யிருக்கிறார்கள். 1890-ம் வர்ஷத்தில் ஸ்டீபர் இந்த ரக்ஸ்யப் போலீஸ் ஏற்பாட்டை இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். ஒன்று ராஜாங்க ஸம்பந்தமான வேலை. இந்தப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ப்ரான்ஸிலும் மற்ற தேசங்களிலும் அரசாட்சியில்



மனஸ்தாபங்கள் உண்டாக்குவதும், தொழில் சாலைகளிலும் மற்ற வேலைகளிலும், வேலையாட்களை கட்டுப்பாடாயிருந்து வேலைக்குப் போகாமலிருக்கும்படி செய்வதும் தொழிலாகக் கொண்டவர்கள். இவர்களில் சிலர் ரயில்வேக்களுக்குப் பக்கத்தில் தங்கியிருந்துகொண்டு, யுத்தம் ஆரம்பித்தவுடன் ரயில்வேக்களை நாசப்படுத்தி ஸைன்யம் சேகரிக்கமுடியாமல் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாவது பிரிவு க்ரமமாய் உளவறிவது. இந்தப் பிரிவில் உள்ளவர்களில் சிலர் ராணுவ அதிகாரிகளின் குணதிசயங்களைப் பற்றியும் அவர்களுடைய நிலைமையைப்பற்றியும் உளவறிந்து தெரிவிப்பார்கள். இந்த விஷயங்களையெல்லாம் சேகரித்து பெர்லினில் வைத்திருக்கிறார்களாம். தளகர்த்தர்களுடைய குணதிசயங்கள் யுத்தகாலங்களில் ரொம்பவும் ப்ரயோஜனப்படுமாம். கொஞ்சம்தாழ்ந்த உத்யோகஸ்தர்களுடைய குணதிசயங்களைத்தெரிந்து வைத்துக்கொள்வதால், ராணுவ ரகஸ்யங்கள் அறிந்து கொள்வதற்கு மார்க்கமுண்டு. உதாரணமாக, ஏதாவது ஒரு உத்யோகஸ்தருக்கு ரொம்பப் பணமுடையாக இருந்தாலும், அல்லது அவர் தம்மை அதிகாரிகள் சரியாக நடத்தவில்லையென்று மனக்குறையடைந்து வந்தாலும், இவைகளையறிந்த உளவாளி அவரிடம் போய் ராணுவ ரகஸ்யங்களை வெளியிட்டால் பணம் கொடுப்பதாகச்சொல்லி அவர்களை வசப்படுத்துவதுண்டு. ரொம்பப்பணத் தட்டாயிருப்பவர்கள் பணத்துக்கு ஆசைப்பட்டு ரகஸ்யங்களை வெளியிடுவார்கள். ப்ரமோஷன், தடைபட்டோ, அல்லது மேலதிகாரிகளால் அன்யாயமாய்க் கண்டிக்கப்பட்டோ இருப்பவர்கள் ஆத்ரத்தால் தேசாபிமானத்தை மறந்து ராணுவ ரகஸ்யங்களை வெளியிடுவதுமுண்டு. ஆகையால் இப்படிப்பட்ட ஆபிஸர்களை ஸமயம் பார்த்து வசப்படுத்த உளவாளிகள் முயலுவார்கள். வேறு சிலர் கோட்டைகளுடைய ப்ளான்கள், போட்டக்ராப் படங்கள் முதலியவைகளை அடைய முயலுவார்கள். ஸாதாரண ஜனங்கள், கோட்டை கொத்தளங்களுடைய ப்ளான்களும், ராணுவபலம், கப்பல்படை பலம் முதலியவைகளுமே தெரியவேண்டிய விஷயங்களென்றும், ஆகையால் ஒற்றர்கள் காய்கறித் தோட்டக்காரனும், ஹோட்டல்களில் விப்பந்திகளுமாக இருந்துவருவது அவச்யமில்லையென்றும் எண்ணுவார்கள். மேற்சொன்ன விஷயங்களேயல்லாமல் வேறு பலவிஷயங்களையும் அறியவேண்டியது அவச்யமானது. உதாரணமாக, தேசத்தின் பொருளாதார நிலைமை, அதன் ஜலாதாரம், போக்கு வரவுக்கு உரிய ஸாதனங்கள், போஸ்டாபீஸ், தந்திமார்க்கம் ஆகிய இவைகளைப்பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியது யுத்தம் செய்வதற்கு அவச்யமானது. இந்தவிஷயங்களைத் தெரிவிக்க ஸாதாரண வேலையாட்கள் போதும்.

நிலையாய்வஸித்துவரும் உளவாளிகளுக்கு அவர்கள் செய்யும் வேலைகளுக்காகப் பணம் கொடுத்து வர சில உளவாளிகளை ஜெர்மன் அதிகாரிகள் நியமித்து வருகிறார்கள். அவர்கள் ஊர்ஊராய்ப்போகும் வ்யாபாரிகளாகவோ ஊர்பார்க்கப் போகிறவர்களாகவோ, பந்துக்களாகவோ சொல்லிக் கொண்டுபோய் நிலையாய் வஸித்துவரும் உளவாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைச் செலுத்திவருவார்கள்.

இவர்கள் இரண்டாவது வகையான நிலையாயில்லாத உளவாளிகளைச் சேர்ந்தவர்கள். நிலையாக வஸித்துவரும் உளவாளிகள் எப்படி ஓரிடத்தில் தங்கியிருந்து நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி ஜெர்மனியில் உள்நாட்டு மந்த்ரியாக இருந்த பட்காமர் என்பவர் பின் வருமாறு தெரிவித்திருக்கிறார். ஒவ்வொரு உளவாளியும் ஏதாவது ஒரு கடை

வைத்துக்கொள்ளவேண்டும். எந்த விதமான கடைவைத்துக்கொள்வது என்பதை உளவாளியே தீர்மானித்துக் கொள்ளலாம். பல சரக்குக்கடை, காப்பிக்கடை, ஹோட்டல், இன்ஷுரென்ஸ் ஆபீஸ், வீடுகள் விற்பனை செய்வது வாடகைக்கு விடுவது இவைகளுக்கான ஏஜென்டாபீஸ் முதலிய எந்த தொழிலில் வேண்டுமென்றாலும் அமர்ந்து கொள்ளலாம். எந்தத் தொழிலாயிருந்தாலும் அது அந்தந்தவூர் வ்யாபார முறைகளை அனுஸரித்ததாயிருக்கவேண்டும். செம்மையாய் நடந்து வரவேண்டும். கடை யாரிடம் மாறினாலும் வ்யாபாரம் நடந்து வரக்கூடியதாயிருக்கவேண்டும். முக்யமாய் எந்த வகுப்பாரிடத்திலிருந்து உளவறிய வேண்டியிருக்குமோ அந்த வகுப்பார்கள் தங்களிடம் நம்பிக்கை கொள்ளும்படி நடந்து கொள்ளவேண்டும். நடுத்தர வகுப்பார் எப்படி நடந்து கொள்ளவேண்டுமோ அப்படி அவர்கள் நடந்து கொள்ளவேண்டும். எல்லாவித ஸங்கங்களிலும், பொதுஜன முயற்சிகளிலும் கலந்துகொண்டு, தக்கவிதமாக தானதர்மங்கள்செய்து வரவேண்டும். அவர்கள் தங்களுக்கு தக்க கௌரவம் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். எங்கேபோனாலும் அவர்களை ஜனங்கள் வரவேற்கும்படியாக நடந்துகொள்ளவேண்டும். ஜனங்கள் அவர்களை ரொம்பவும் மதித்துப் பேசும்படியாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் அவர்கள் ஸமாசாரங்களை உளவறிந்து கொள்ள முடியும். உளவறியும் ஒற்றர்கள் எவ்விதம் தங்களுடைய வேலைகளைச் செய்கிறார்களென்பதற்கு சில த்ருஷ்டாந்தங்கள் எழுதுகிறோம்.

### அழகுள்ள ஸ்த்ரீகள்.

ஜெர்மனியிலுள்ள ரகஸ்யப் போலீஸ் அதிகாரிகள் ஸ்த்ரீகளில் அழகுள்ளவர்களை அன்ய தேசங்களிலுள்ள காப்பி ஹோட்டல், சாராயக்கடை, ஹோட்டல், ஸங்கீதசாலை முதலிய இடங்களில் வேலை பார்த்துக்கொண்டு உளவாளிகளாக இருக்க அனுப்புகிறார்கள். இவர்கள் இருக்கும் இடங்களுக்கு வரும் ராணுவ ஆபிஸர்களும் ஸிப்பந்திகளும் இவர்களைக் கண்டு மோஹங்கொண்டு, இவர்கள் தங்களுக்கு இணங்குவதற்காக இவர்கள் கேட்கும் ராணுவ ரகஸ்யங்களை இவர்களிடம் தெரிவித்து விடுவார்கள். உடனே இந்த ஸ்த்ரீகள் அந்த ரகஸ்யங்களை ஜெர்மனியிலுள்ள ரகஸ்யப் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரிவித்து விடுவார்கள்.

இந்த ஸ்த்ரீகளே ஸொந்தத்தில் நேர்த்தியான காப்பி ஹோட்டல்களோ, மற்ற கடைகளோ வைத்து ஜனங்களை இழுப்பதற்குவேண்டிய பணத்தை ரகஸ்யப் போலீஸார் கொடுத்து உதவுகிறார்களாம்.

### ஜிப்ரால்டருடைய ப்ளான்கள்.

ஜிப்ரால்டர் என்ற துறைமுகப்பட்டணம் அட்லாண்டிக் ஸமுத்ரத்துக்கும் மத்யதரைக் கடலுக்கும் மத்தியில் ஸ்பெய்ன் தேசத்தின் தெற்கேயிருக்கிறது. இதன் கோட்டைகள் முதலிய தேசகாப்பு வேலைகளை மற்ற தேசத்தார்கள் அறியாதபடி அதிகாரிகள் ஜாக்கிரதையாக இருந்து வந்தார்கள். ஆனால் சில வர்ஷங்களுக்கு முன்னால் ஜிப்ரால்டரினுடைய ப்ளான்களின் ஏகதேசம் சரியான நகல் ஒன்று ஜெர்மன் அதிகாரிகள் வசமிருப்பதாகத் தெரியவந்தது. என்னவென்று விசாரிக்கையில், ஸங்கதி வெளிவந்தது.

ஜிப்ரால்டரில் ரொம்ப அழகுள்ள ஜெர்மன் ஸ்த்ரீ ஒருத்தி சில காலமாய் வஸித்து வந்தாள். அவள் அங்கேயுள்ள ராணுவ உத்யோகஸ்தர்களுடன் நாட்ய மாடுவதும் அவர்கள்மேல் காதல்கொள்வதாய் அபிநயிப்பதுமாக இருந்து, அவர்களை தனது அழகால் மயக்கி, அவர்களிடமிருந்து ராணுவ ரகஸ்யங்களைத் தெரிந்து கொண்டாள். அவள் ஒரு ஜெர்மன் உளவாளி. இந்த ஸங்கதி தெரிந்ததும் அதிகாரிகள் அவளை ஜெர்மனிக்கு அனுப்பிவிட்டார்கள்.



### கௌண்ட் வான் ஷுலென்பர்க்.

எல்லா உளவாளிகளையும் விட கௌண்ட் வான் ஷுலென்பர்க் என்னும் ஜெர்மனி தேசத்து ப்ரபுதான் உளவு அறிவதில் ரொம்ப ஸாமர்த்யமாய் நடந்து கொண்டவர். அவர் ஸுமார் ஐந்தாறு வர்ஷங்களுக்கு முன்னால் இங்க்லண்டிற்கு வந்து, அங்கே நாட்டுப்புறத்தில் ஒரு ஜமீன்தாரைப்போல ஸுகமாய்க் காலங்கழிக்க எண்ணுவதாக பாவனைசெய்து, கெண்ட் என்னும் மாகாணத்தில் ஒரு ஊரில் தங்கினார். ஆனால் அவர் அங்கே குடிவந்ததின் நோக்கமென்னவென்றால், அவர் குடியிருந்த ஊருக்கும் சாத்தம் என்னும் ஊரின் கப்பல் கட்டும் துறைமுகத்துக்கும் இரண்டு மூன்று நாழிகை வழிதானகையால், அங்கிருந்துகொண்டு சாத்தம் துறை முகத்தின் ரகஸ்யங்களை ஒருவாறு அறிந்துகொள்ளலாமென்பதே. அங்கே சில காலம் தங்கியிருந்த பிறகு, அதாவது அவர் அங்கே வந்த கார்யம் முடிந்தபிறகு, மறுபடியும் லண்டனுக்குப் போய், சில காலம் அங்கே வஸித்து, பிறகு வேட்டை நாய் வளர்ப்பவர் போல பாவனை செய்து, அதற்கு க்ராமாந்தரம் போகவேண்டியது அவச்யமாகையால், ஹார்விச் என்னும் துறை முகத்துக்கு ஒன்றரை நாழிகை வழி தூரமுள்ள ஒரு ஊரில் தங்கி வஸிக்கலானார். அங்கே யிருந்துகொண்டு, சில ஸமயங்களில் தமது நாய்களை யழைத்துக்கொண்டும், வேறு ஸமயங்களில் ரொம்ப உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த ஸ்த்ரீகளை தமது மோடார் வண்டியில் அழைத்துக் கொண்டும், அந்தத் துறை முகத்தைச்சுற்றித் திரிந்து அதைப்பற்றிய விஷயங்களை யெல்லாம் அறிந்துகொண்டார். யுத்தத்துக்கு முன்னால் அவர் ஜெர்மனிக்கு போய்ச்சேர்ந்தார். அவர் மூலமாக சாத்தம் என்னும் கப்பல் கட்டும் துறையின் ரகஸ்யங்களும், ஹார்விச் துறைமுகத்தின் ரகஸ்யங்களும் ஜெர்மனியின் ரகஸ்யப்போலீஸுக்கும், அதன் மூலமாய் கப்பல்படை அதிகாரிகளுக்கும் தெரிந்திருக்குமென்று எண்ணலாம்.

### யுத்தத்தில் உளவாளிகளின் உதவி.

பெல்ஜியம் ப்ரான்ஸ் ஆகிய இந்த தேசங்களில் குடியிருந்த ஜெர்மானிய ஒற்றர்கள் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னோ, ஆரம்பித்த உடனேயோ, ஜெர்மனிக்குப்போய், ஸைன்யங்களுக்கு உதவியாக இருந்து வருகிறார்கள். சில ஜெர்மன் உளவாளிகள் துருப்புகளை க்ராமங்களுக்குள் வழிகாட்டிகள்போல் கூட்டிக்கொண்டு போகிறார்களாம். ஹாம் என்னும் ஒரு ஊரில் ஒருஜெர்மன் துருப்பு வந்தபோது, அந்த ஊரில் சென்ற வர்ஷம் ஜுலைமாஸம் 20-ந்தேதி வரையில் சாராயமிறக்கும் சாலையொன்றில் வேலையாயிருந்த ஒரு ஸிப்பந்தி அந்தத்துருப்புக்குத்தலைவராக இருக்கக்கண்டு ஜனங்கள் ஆச்சர்யப்பட்டார்கள்.

செல்லி யென்னும் ஒரு ஊரில் ஜெர்மன் துருப்புகள் வந்தபோது ராணுவ ஆபிஸர்களுக்கு தங்கியிருக்க இடமும், சாப்பாடும் கிடைக்கக்கூடிய வீடுகளைத் தெரிந்தெடுக்க ஒரு ஸார்ஜண்டை அனுப்பினார்கள். அவன் யாரென்று பார்க்கும்போது அந்த ஊரில் ரொம்ப பழக்கமுள்ள ஒரு சக்கிலியனென்று தெரியவந்தது. அவன் ஜனங்களிடத்தில் ரொம்ப ஸ்நேகம் பாராட்டி வந்திருந்தானும்.

வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் ஒரு சிறிய பட்டணத்தில் ஒரு கிழவி வஸித்து வந்தாள். அதற்குப் பக்கத்திலுள்ள ஒரு ஸர்வகலாசாலையில் வாசித்துக்கொண்டிருந்த சில ஜெர்மானிய மாணவர்களுக்கு தனதுவீட்டில் தங்குவதற்கு இடம் வாடகைக்கு விட்டிருந்தாள். யுத்தம் ஆரம்பித்தவுடன் மாணவர்கள் ஜெர்மனிக்குப்

போய் விட்டார்கள். ஜெர்மன் துருப்புகள் அந்த ஊருக்குள் வந்தபோது அந்த மாணவர்களில் ஒருவன் துருப்புகளுடன் வந்து, அந்தக் கிழவியின் வீட்டுக்குள் ஒரு கைத்துப்பாக்கியுடன் புகுந்து, அவள் சேர்த்து ஒளித்து வைத்திருந்த தங்க நாணயங்களை கொண்டு வந்து வைக்கும்படி சொன்னானாம். அந்த மாணவன் தான் அங்கே வஸித்துக்கொண்டிருந்தபோது, கிழவி தன் பணத்தை எங்கே ஒளித்து வைத்திருந்தாள் என்பதை பார்த்து வைத்திருந்தான்.

### பசுவின் படம்.

ஜெர்மன் உளவாளிகள் தங்கள் துருப்புகளுக்கு ஸமாசாரம் தெரிவிக்க ஒரு ஸாமர்த்யமான உபாயம் ஒன்றை இந்த யுத்தத்தில் கையாடி வந்திருக்கிறார்கள். அதாவது கறுப்பு சீமைச் சுண்ணாம்பால் பசுவின் உருவத்தை சுவர்களிலும், கதவுகளிலும் எழுதுவதே.

ப்ரஞ்ச் ஸோல்ஜர்கள் இந்த உருவங்களைப் பார்த்தபோது முதலில் ஸந்தேகம் கொள்ளவில்லையாம். உருவங்கள் பார்வைக்கு நன்றாக இல்லையாம். இவைகளில் சில சிறியவையாயும், சில பெரியவையாயும், சில கொழுத்த பசுக்களின் உருவங்களாகவும், சில படுத்துக் கொண்டிருக்கிற பசுக்களின் உருவங்களாகவும் இருந்தன. சில பசுக்களின் கொம்புகள் தேகத்தின் பருமனுக்குத் தகுந்தபடி யில்லாமல் ரொம்ப நீளமாக இருந்தன. இவைகளுக்கு யாதொரு தாத்பரியமும் கிடையாதென்று அநேகர் எண்ணியிருந்தார்கள். ஆனால் அவைகளின் விசேஷம் இப்போது தான் தெரியவருகிறது. பசுவின் உருவம் சிறியதாயிருந்தால், அந்த ரோட்டில் எதிரித் துருப்புகள் ஸ்வல்பமே இருக்கின்றனவென்று தாத்பர்யமாம். நடுத்தரமாய் இருந்தால், அந்த இடத்தின் பக்கத்தில் எதிரித்துருப்புகள் அதிகம் இருக்கின்றன என்று தாத்பர்யம். பசுவின் படம் ரொம்பப் பெரியதாயிருந்தால், அந்த இடத்துக்குப்பக்கத்தில் அகழ்களும் மற்றமண்வெட்டிக் கொட்டின வேலைகளும் இருக்கின்றனவென்று அர்த்தம். பசுவின் தலை எந்தப்பக்கத்தை நோக்கியிருக்கிறதோ அங்கே தான் ஆபத்து இருக்கிறதென்று அர்த்தம். பசுவின் தலை ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் ஜெர்மானியர்கள் முன்னுக்குப் போவதற்கு முன்னால் ஆகாயக்கப்பலில் ஏறி சுற்றுப்புறங்களைப் பார்க்கவேண்டுமென்று சொல்வதாகும்.

### யுத்தகளத்தில் உளவாளிகள்.

யுத்தகளத்திலுள்ள எதிரித்துருப்புகளை ஜெர்மானியர்களுக்குக் காட்டிக் கொடுப்பதற்கு உளவாளிகள் இன்னும் சில உபாயங்களைக் கையாடுகிறார்கள். இரவில் உளவாளிகள் வர்ணவிளக்குகளால் தூரத்திலுள்ள ஜெர்மன் துருப்புகளுக்கு ஸமாசாரங்களைத் தெரிவிப்பதுண்டு. பகல் பொழுதாயிருந்தால் வீட்டின் புகைப் போக்கியில் புகையை ஒரு குறிப்பிட்ட விதமாக வெளிப்படுத்தி அதன் மூலமாக ஸமாசாரம் அனுப்புவார்கள். ஜெர்மன் ஆபிஸர்களும் ஸோல்ஜர்களும் ஸாதாரண உடைதரித்துக்கொண்டோ, அல்லது ப்ரெஞ்சுக்காரர்களுடைய உடைகளையாவது இங்லீஷ்காரர்களுடைய உடைகளையாவது தரித்துக்கொண்டோ, ஜெர்மானியர்கள் விட்டுவிட்டுப்போன ஊர்களில் தங்கியிருந்து, எதிரிகளின் நிலைமையை அறிந்து சொல்வதுண்டு. கொஞ்ச நாள்களுக்கு முன்னால் ஏன் நதிச் சண்டையில் ஒரு ஸ்த்ரீ தனது வீட்டிலிருந்து கொண்டு தூர இருந்த ஜெர்மானியத் துருப்புகளுக்கு பளிச்சென்றடிக்கும் மின்ஸார விளக்கால் ஸங்கேதம் காட்டி ஸமாசாரம் தெரிவிக்க யத்தனித்தபோது அவளை ராணுவ அதிகாரிகள் பிடித்து விட்டார்கள்.

ரொம்ப அழகுள்ள ஒரு ஜெர்மன் ஸ்த்ரீ சில வாரங்களுக்கு முன்னால் யுத்தகளத்தில்



ஒரு மோட்டார் வண்டியிலேறிக்கொண்டு நாலாபக்கங்களிலும் போய் ஸமாசாரங்களை யறிந்து ஜெர்மானியர்களுக்கு அறிவித்து வந்தாள். அவளை ஒருவரும் தடுக்காமலிருப்பதற்காக அவள் ஜெனரல் ஜாப்ரே, லார்ட்கிச்சனர் ஆகிய இவர்கள் கையெழுத்து போர்ஜரி செய்திருந்த பாஸ்போர்ட்டுகளை வைத்திருந்தாள். ஆனால் கடைசியில் ராணுவ அதிகாரிகள் வெர்டேன் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் அவளுடைய உண்மையான நடத்தையை அறிந்து அவளை பிடித்துக்கொண்டார்கள்.

### கைக்குட்டை.

ஒரு ஸமயம் ப்ரிட்டிஷ் துருப்பு ஒன்று ஓரிடத்தில் பதுங்கியிருந்தது. அந்தத் துருப்பு இருந்தவிடம் வெகு நேரம் வரையில் ஜெர்மானியர்களுக்குத் தெரியவில்லை. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வேலையாள் போல் உடைதரித்திருந்த ஒரு மனிதன் ஸமீபத்திலிருந்த ஒரு தோப்பிலிருந்து வந்து, ப்ரிட்டிஷ் ஸோல்ஜர்களிருந்தவிடத்துக்குப் பக்கத்தில்வந்தான். தான் வழிதப்பிப்போய் விட்டதாகவும், பக்கத்திலுள்ள க்ராமத்துக்குப்போக வழியெதுவென்றும் கேட்டான். ஒரு ஸோல்ஜர் வழியிதுவென்று காட்டினான். உடனே அந்த அன்யன் தனதுசட்டைப்பையிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்து கண்களைத்துடைத்தான். பிறகு அவனைப் போகும்படி சிலர் வற்புறுத்த அவன் போய்விட்டான். அவன் போன பத்து நிமிஷநேரத்துக்கெல்லாம் ஜெர்மன் துருப்புகள் இந்த ப்ரிட்டிஷ் துருப்பின் மேல் ஸரமாரியாக குண்டுகளை விட்டன. அநேக ப்ரிட்டிஷ் ஸோல்ஜர்கள் இறந்துபோய் விட்டார்கள். துருப்புகளிடம் வழிகேட்கவந்த அன்யன் ஜெர்மன் உளவாளிகளில் ஒருவன். அவன் தனது கைக்குட்டையை எடுத்துக் காட்டியதைக்கொண்டு ப்ரிட்டிஷ் துருப்பு இருப்பதை ஜெர்மானியர்கள் அறிந்துகொண்டு அதைத்தாக்கினார்கள்.

### ஆகாயக் கப்பல்.

ஜெர்மானியர்கள் ஆகாயக்கப்பலில் ஏறிப் போய் எதிரிகளின் இருப்பிடத்தை அறிய முயலுவதில் அவர்களுடைய காரியம் ரொம்ப ஸாதகமடைவதில்லையாம். ஒரு ஸமயம் ஒரு ஜெர்மன் ஏரோப்ளேன் கூட்டுத்துருப்புகள் இருந்த இடத்தின்மேல் பறந்து வந்து திடீரென்று உயரத்தில் போயிற்று. கீழே இருந்த துருப்புகளை தளகர்த்தர் உடனே வேறு இடத்துக்குக்கொண்டு போய் விட்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் துருப்புகள் முதலில் இருந்த இடத்தைநோக்கி ஜெர்மானியர்கள் பீரங்கிகளால் தாக்கினார்கள்.

### டாக்டர்களாக வேஷம் போடுவது.

ஜெர்மானிய ஸோல்ஜர்கள் டாக்டர்களாகவும் வேஷம் போடுகிறார்கள். ஒரு ஸமயத்தில் ஜெர்மன் டாக்டர் கூட்டமொன்றை ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் கைது செய்தன. அந்த டாக்டர்கள் கொண்டுவந்திருந்த ஸாமான்களைச் சோதித்துப் பார்த்தபோது அவர்களிடம் வைத்ய ஸாமான்களோடு துப்பாக்கிகளும் தோட்டாக்களும் வெடிக்கும் மருந்துகளும் இருந்தன. டாக்டர்களுக்குத் துப்பாக்கிகளும் வெடிமருந்தும் எதற்கென்று கேட்க அவர்கள், ஜெர்மன் டாக்டர்கள் எப்போதும் தங்களைக் காத்துக்கொள்ள துப்பாக்கிகள் வைத்துக்கொள்வது ஸகஜமென்றும், வெடிக்கும் மருந்துகள் தங்கள் ஸாமான்களோடு இருப்பதற்குக் காரணம் தெரியவில்லையென்றும், அவைகள் தட்டுமாறாக வந்திருக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். ப்ரெஞ்ச் வைத்யர்களின் தலைவர் அவர்கள் சொன்ன பதிலில் த்ருப்தி கொள்ளவில்லை. ஜெர்மானியர்களில் சிலருடைய முகங்கள்விஸனகரமாயும், அத்ருப்திக் குறியுள்ளவையாயும் இருந்ததைக்கண்டு அவர்கள் எல்லாரும் வைத்யர்களாயிருக்க முடியாதென்று ஸந்தேகித்து, தமதுஸந்தேகத்தை

ப்ரெஞ்ச் தளகர்த்தரிடம் தெரிவித்து, அவர்களை சோதிக்க ஏற்பாடு செய்தார். யுத்தகளத்தில் டாக்டர்கள் சிகித்ஸை முறைகளைப் பற்றி ஒருவர்க்கொருவர் ஸந்தேகம் கேட்டுத் தெரிந்து கொள்வதுண்டு. அதேமாதிரி ஜெர்மன் டாக்டர்களை ஒவ்வொருவராய்க் கூப்பிட்டு, அவர்களை பற்பல வ்யாதிகள், காயங்கள் முதலியவைகளில் இன்ன சிகித்ஸைசெய்வது என்பதைப்பற்றி கேள்விகள் கேட்க, மொத்தம் 48-பேர்களில் 37-பேர்கள் தான் வாஸ்தவத்தில் வைத்யம் தெரிந்தவர்களாக இருந்தார்கள். மற்ற 11-பேர்களுக்கும் வைத்யம் ஒன்றும் தெரியாமலிருந்ததாலும், அவர்களுடைய நடத்தையால் ஸோல்ஜர்களென்றும், உளவறிய மாறுவேஷம்பூண்டு வந்திருந்தார்களென்றும் தெரியவந்ததாலும், அந்த 11-பேர்களையும் சுட்டுக்கொன்று விட்டார்கள். பாக்கி 37-டாக்டர்களை ஸ்விட்ஸர்லண்டிலுள்ள ஜினிவாவுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கே ஜெர்மானியர்கள்பிடித்து வைத்திருக்கக்கூடிய ப்ரெஞ்ச் டாக்டர்களுக்கு பதிலாக, அவர்களை ஜெர்மனிக்குப் போகவிட்டு விடுவார்கள்.

ஜெர்மன் உளவாளிகளின் தலைவர்.

ஜெர்மன் ரகஸ்யப் போலீஸுக்குத் தலைவராக இருந்த ஸ்டீபர் என்பவர் 1892-ம் வர்ஷத்தில் இறந்துபோனார். அவர் முடித்து வைத்த ஏற்பாடு மாத்ரம் இன்னும் நடந்துகொண்டு வருகிறது. ஆனால் அந்த ஏற்பாடு இங்க்லண்ட் ஸம்பந்தப்பட்டமட்டில் ப்ரயோஜனப் படவில்லையென்று தெரிகிறது. ஏனென்றால் ப்ரிட்டிஷ் துருப்புகள் ஆகஸ்ட்மாஸம் 9-ந்தேதி ப்ரான்ஸுக்குப்போக ஆரம்பித்தன. ஆனால் அந்தவிஷயம் ஜெர்மானிய ராணுவ அதிகாரிகளுக்கு ஆகஸ்ட்மாஸம் 21-தேதி வரையில் தெரியவேயில்லை. இதனால் இங்க்லீஷ் அதிகாரிகள் எவ்வளவு ஜாக்ரதையாக இருக்கிறார்களென்பது தெரியவரும்.

ஸ்டீனர்.

இப்போது ஜெர்மன் ரகஸ்யப் போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு ஸ்டீனர் என்பவர் தலைவராக இருக்கிறார். அவர் 1911-ம் வர்ஷத்தில் தாம் இன்னாரென்று காட்டிக்கொள்ளாமலே ஜெர்மன் சக்ரவர்த்தியோடு கூட இங்க்லண்டுக்கு வந்து ராஜ விருந்துகளில் உட்கார்ந்து சாப்பிட்டாராம். இவருடைய உண்மையான நிலைமையை யறிந்த இங்க்லீஷ் ரகஸ்ய ஸமாசார டிபார்ட் மெண்டார் இவருடைய முயற்சிகள் ஒன்றும் பயன்படாதபடி செய்து வருகிறார்கள். இங்க்லீஷ் ரகஸ்யப் போலீஸ்காரர்கள் இங்க்லண்டிலுள்ள ஜெர்மன் உளவாளிகள் ஜெர்மனிக்கு அனுப்பும் கடிதங்களைப் பிரித்துப் பார்த்து (பிறகு கடிதங்களை ஜெர்மனிக்குப் போகவிட்டு) இன்ன ஸமாசாரங்கள் ஜெர்மனிக்குப் போகின்றனவென்று அறிந்துகொண்டு, அதற்கேற்றபடி நடந்து ஸ்டீனருடைய ஏற்பாடுகள் முற்றுப் பெறாதபடி செய்து விடுகிறார்களாம்.

## THE TEACHER AND HIS IDEALS.

BY. T. S. RAJAGOPALAN.

## உபாத்யாயரும் அவருடைய லக்ஷ்யங்களும்.

உபாத்தியாயர்கள் வீண்பொழுது போக்கிக்கொண்டு கொஞ்சமேனும் ஸுகமின்றித் தங்கள் வாழ்நாள்களை வீணாக்குகிறார்கள் என்ற வொருநம்பிக்கை பொதுவாக ஜனங்களின் மனதில் குடிகொண்டிருக்கிறது. அவ்வித நம்பிக்கை யவர்களுக்கேற்பட இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, நம்மிலநேகர் வேறு உத்யோகங்களில் அமரத் தம்மாலானமட்டும் முயன்றுபார்த்துப் பலிக்காமல், கடைசியாய் இத்தொழிலே கதியென்றெண்ணி இதை மேற்கொண்டு, தாமும் ஸுகம்பெறாமல் தொழிலுக்கும் ஒருவித அபவாதத்தை விளைப்பது! இரண்டாவது, பொதுஜனங்கள்



ஐச்வரியத்தையும் அதிகாரத்தையும் கண்டு தலைவணங்கி மகிழ்ந்து, மற்றத்தொழில்களை இகழ்வதே!

உபாத்யாயர்கள் கௌரவமும் மேன்மையும் அடையவேண்டுமானால், அவர்களுக்கு சில குணங்கள் அமைந்திருக்க வேண்டியது அவச்யமாகும். முதலாவது, தாம் ஏற்றுக்கொண்ட வேலைக்குத் தாம் தகுதியானவர் என்ற திடமான நம்பிக்கை ஒவ்வொரு உபாத்யாயர் மனதிலும் ஏற்படவேண்டும். பள்ளிக்கூடத்தின் கௌரவம் முதலியன அதில் பாடுபட்டுவரும் ஒவ்வொரு உபாத்யாயரையும் பொறுத்திருக்குமென்பதை ஒவ்வொரு உபாத்யாயரும் உணர்ந்துகொண்டு, 'கல்வி' என்ற பதத்தின் தாத்பர்யத்தை நன்கறிந்து அவ்வாறு நடக்கவேண்டும். தாம் கற்பிக்கும் பாடங்களுக்கு ஸம்பந்தமான விஷயங்களை முந்தியே அவர் மாசறக் கற்றிருக்கவேண்டியதுந்தவிர, எவர்களுக்குப் போதிக்கிறாரோ அவர்களுடைய குணவிசேஷங்களையும், மனப்போக்கையும் அறிந்திருக்கவேண்டும். பிள்ளைகளை அசுத்தமான விடங்களில் உட்காரவைத்தால் அவர்களுடைய தேகஸௌக்யம் கெட்டுவிடுமாதலால், அவ்விதத் தொல்லைகள் நேராதிருக்கும்படி பார்த்துக்கொள்ள அவருக்கு ஸுகாதார விதிகளிலும், தேகதத்வ சாஸ்திரத்திலும் (Physiology) பரிச்ய மிருக்க வேண்டும். சிறுவர்களின் மூளைகளைப் பலப்படுத்தவும், அவர்களை நன்னடக்கையில் பழக்கவும் ஒருபாத்தியாயர் கடமைப்பட்டவராதலால், அவருக்கு மனோதத்வ சாஸ்த்ரத்தில் (Psychology) மிகுந்த அனுபோகந்தேவை. அவர் தன் ஸௌகர்யத்தை வெகுவாய் நாடாமல் புதிதுபுதிதான போதனா முறைகளைக் கற்று, குழந்தைகள் களிப்புடன் க்ரகித்துக் கொள்ளும் வண்ணம் எவ்விஷயத்தையும் தெளிவாய் விளக்கிச் சொல்லவேண்டும். தமக்குத்தாமே மேன்மேலும் ஆராய்ந்தறியப் பிள்ளைகளுக்கு அவா உண்டாவதே அவர் போதனையின் முக்யநோக்கம். இன்னும், எந்த ஸந்தர்ப்பத்திலும் ஈடுகொடுத்து நிற்கப் போதுமான ஸாமர்த்யம் அவருக்கிருக்கவேண்டியது இன்றியமையாதது.

ஒருபாத்யாயரின் பதவியோ அநேகவித ஆபத்துக்குள்ளானதாகும். பிள்ளைகள் விஷமம் செய்வதும், கார்யங்களை மறப்பதும், ஏனையோரோடு வாதாடுவதும் அவர்களது இயற்கைக் குணங்கள். அந்த ஸமயங்களில் போதகர் மிதமிஞ்சிக் கோபங்கொள்வது தகாது. ஏனெனில் அவர்களுடைய குற்றங்களை அநேகவிதங்களில் அவர் கண்டறிந்து கொடுமையாய்த் தண்டிக்கப் போனாரானால், அதே குற்றங்களைச்செய்ய மற்றும் ஒருவழி அவர்களுக்குத் தோன்றிக்கொண்டே யிருக்கும். ஆதலால் அவர்கள்செய்யும் பிழைகளைக் கவனிப்பதை விட, எவ்வெண்ணத்தால் அப்பிழைகள் நேர்ந்தனவென்று ஊகிப்பது நலம். தாம்செய்யும் கார்யம் நல்லதா கெட்டதாவென்று பகுத்தறியும் சக்தி பிள்ளைகளிடத்தில் முதிர்ந்திருக்குமென்று எவரும் வைத்துக் கொள்ளக்கூடாது. கண்டித்து குரூரமாயிருப்பதைவிட இனிய மொழிகள்பேசி நல்வழியில் ஏவிவருவது எளிது. அநேகமாய்க் குழந்தைகள்செய்யும் பிழைகளுக்கு அடித்துக் கண்டிக்கவேண்டியது அனாவச்யமென்றே சொல்லலாம். இருந்தும், சிலர் அடியாமல்போனால் கௌரவக் குறைச்சலென்றோ, அல்லது "அடியாதமாடு படியா" தென்றோ கருதி அல்பவிஷயங்களுக்கும் பிரம்பை ப்ரதானமாக வுபயோகிக்கிறார்கள். பையன்களை மாடுகளென நினைக்கிற உபாத்யாயர்கள் தங்களை இடையர்களெனச் சொல்லிக்கொள்ளத் தயாராயிருப்பார்களா? இவ்வாறு சிறுவர்களைத் தண்டிப்பதால் அநேக தீமைகள் உண்டாகின்றன. அந்தரங்க அபி

மானமில்லாமல் "கோலாடக் குரங்காடுகிற" தென்றபடி பிள்ளைகள் கழியொன்றுக்கே பயப்படுகிறார்கள். தண்டனை என்பதின் பெருமையே போய்விடுவதுமன்றி, உபாத்யாயருக்கும் மாணாக்கனுக்கு மிருக்கவேண்டிய மரியாதைகெட்டு, ஒரேவண்டியில் பூட்டப்பட்ட எருதும் எருமையும் ஒன்று நிழலிருக்கு மிடத்திற்கும், ஒன்று வெய்யிலிருக்கு மிடத்திற்குமாக இழுப்பதுபோல் இருவரும் தாறுமாறாய், நடந்துகொள்கிறார்கள். தாம் செய்த குற்றமதிகமல்ல, பின்செய்யும் நற்காரியங்களால் அது மறைந்து போய்விடும் என்று பிள்ளைகள் எண்ணவேண்டியதே தண்டனையின் முக்யக் கருத்து. தயை தாக்ஷண்யம் பெரியவர்களுக்கே இல்லாதிருந்தால் குழந்தைகளுக் கெங்கிருந்துண்டாகும்! ஆதலால் அவர்களும் எளியோரையோ அல்லது ஜீவஜந்துக்களையோ துன்பப்படுத்துவது ஆச்சர்யமாகுமா? சட்ட ஸம்பந்தமான அபிப்ராயங்களில்கூட தயை என்பது மேல் நோக்கியிருக்கிறதென்று நாம் கேள்வியுற்ற துண்டு!

நாகராஜனென்ற பையனொருவன் வீட்டினின்று கிளம்பி மூன்று மைலுக்கப்பாலுள்ள பள்ளிக்கூடத்துக்கு நாள்தோறும் தாமஸமாய்ப்போய், தன் புஸ்தகங்களைக் கீழே வைத்துவிட்டுப் பெஞ்சியின்மேல் ஏறிவிடுவது வழக்கமாயிருந்தது! இப்படியிருக்க ஒரு நாள் நாகராஜன் அத்ருஷ்ட வசத்தால் சீக்ரம் போஜனஞ் செய்துவிட்டு அதிவேகமாயோடி வந்தான். பள்ளிக்கூடத்தின் வாசல்படியண்டை வந்ததும் மணியடித்தாய் விட்டது. பையன்மூன்றே நிமிஷம் தாமஸமாய் வகுப்பில் நுழைந்து வழக்க விரோதமாய் இடத்தில் நின்றுகொண்டிருந்தான்.

உபாத்யாயர்:—நாகராஜா!

நாக:—ஐயா!

உபா:—இம் ('வழக்கம்போல்' என்பதற்கு அடையாளம்).

நாக:—தயவுசெய்து இன்றைக்கு மன்னித்து விடுங்கள். எனக்கு வெகுவாய் இரைக்கிறது.

உபா:—அடே! மடையா, என்னுடன் நீ வாதா செய்கிறாய்? ஏறு!

நாக:—இன்றுமட்டும் என்னால் முடியாது! ஐயா, க்ருபை கூறவேண்டும்.

என்ன சொல்லியும் கேளாதவராய் உபாத்யாயர் ஒரு துண்டுக் காகிதத்தில் நாகராஜன் நேரம்சென்று வந்ததாகவும், தன்னாஜ்ஞைக்குக் கீழ்ப்படிய மறுப்பதாகவும் எழுதி, அதைத் தலைமை உபாத்யாயருக்கனுப்ப, அவர் வந்து என்செய்வார்? பையனைத் தண்டிப்பது ந்யாயமாகுமா? அவனையொன்றும் செய்யாமல் விட்டால் உபாத்யாயருக்கு முகங்கோணி விடாதா? உபாத்யாயருக்குப் புத்தியும் தயையுமிருந்தால் "நாகராஜா, இன்று நீ வெகுசீக்ரம் வந்ததைப் பற்றி ஸந்தோஷிக்கிறேன். இப்பொழுது உட்கார்ந்துகொள். நாளையதினம் இன்னும் கொஞ்சம் சீக்ரமே வீட்டைவிட்டு கிளம்பினால் இங்கு சரியானகாலத்தில் வந்து விடக்கூடாதா?" வென்று சொல்லி யிருக்கலாம். பிறகு தலைமை உபாத்யாயர் என்ன செய்தாரென்பதைச்சொல்ல எனக்கு மனமில்லை! ஆனால் இம்மாதிரியான விஷயங்களில் ஒரு விதத் தீர்மானத்திற்குவர அவருக்கிட மில்லாமற்போய் விடுகிறதென்று நாமெல்லோரு மறிகிறோமல்லவா!

எத்தொழிலையெடுத்துக் கொண்டபோதிலும், ஒருவேலை சரிவர நடைபெறுவது முக்யமாய் அதைச்செய்பவரின் குணம் முதலியவைகளைப் பொறுத்திருக்கும். அதுபோல் உபாத்யாயரும் இதர ஸாதகங்களிலும் தன்னடத்தையையும் குணங்களையுமே விசேஷமாய்க் கொண்டால், பிள்ளைகளுக்கு நன்னடத்தையும் நற்பழக்கங்களும் எளிதில்படியும். அப்படிக்கில்லாமல் தாம் சோம்பேறியா யிருந்து கொண்டு பையன்களுக்கு உழைப்பின் சிறப்பைப்பற்றி உபதேசித்தும், தாம் காலதாமஸமாக வந்து அவர்களுக்கு ஒழுங்கென்பதைப் பற்றி ப்ரஸங்கித்தும், தாம் துஷ்க்ருத்யங்கள் செய்துவந்து அவர்களை நற்கருமங்கள் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தித்தும் வந்தால், அதில் சிறிதும் பயனில்லை. தனது குணாகுணங்களை உள்ளபடி சீர்தூக்கி நிறுத்து, அவற்றிற்குத் தக்கவாறு நடப்பவர்கள் பிள்ளைகளன்றி வேறெவருமில்லை என்றோருபாத்யாயர் அறிவாராயின், தாம் சொல்வதிலும், செய்வதிலும், தமக்கிருக்கும் நற்குணமே சிறந்ததென அவருணர எந்நேரமாகும்?



நாம் சொல்லவேண்டியது இன்னும் ஒரு வார்த்தையுண்டு. சம்பளவிஷயமாய் ஒரு உபாத்யாயருக்கு மேலதிகாரிகளிடத்தில் அத்ருப்தி யிருந்தபோதிலும் அவர் தாம் கற்றுக்கொடுக்குந் திறமைக்கு மிதற்கும் ஒருவித ஸம்பந்தத்தையும் பாராட்டக்கூடாது. பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்போது தம்முடைய தேகச்ரமமும் குடித்தனக் கவலைகளும் இடையூறுகளாகப் பாதிக்காவண்ணம் அவர் காத்துக் கொள்வது முறை. அவர் தம்மிடத்தில் கற்கும் குழந்தைகளின் க்ஷேமத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து, தாமெடுத்த தொழிலுயர்ந்ததென்று எண்ணி, கடமை விடாதனுஸரித்து, ஊக்கத்துடன் போதித்து வருவாரானால் அவருக்கும் க்ஷேமம், குழந்தைகளுக்கும் க்ஷேமம், பின்னால் அவர்கள் பெறும் உத்யோகங்களுக்கும் க்ஷேமம், அவர்கள் பிறந்த நாட்டிற்கும் க்ஷேமமென்பதற்கு ஐயமுண்டோ?

டி. எஸ். ராஜகோபாலன்.

## A PADDY DISEASE.

By K. R. SANKARA AIYAR.

## நெல் பயிரில் ஓர் வ்யாதி.

நஞ்சையில் வர்ஷாவர்ஷம் பூச்சிகளின் தொந்தரவால் மாஸூலில் நூற்றுக்குப் பத்து நஷ்டமாகிறதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்தில் பெரும்பாகம் குறுத்துப் பூச்சியால் உண்டாகிறதென்று தெரியவருகிறது. இப்பூச்சியால் கதிர்பூராவும் சாவியாய் நின்றுவிடுகிறது. இந்த ஸமயத்தில் ஆனைக்கொம்பு அல்லது தண்டீத்துபென்று சொல்லப்பட்ட வ்யாதி பயிர்களை விசேஷமாய் பாதிக்கிறது. சில இடங்களில் வர்ஷாவர்ஷம் இந்த வ்யாதியால் மிகுந்தநஷ்டம் உண்டு. குடியானவர்கள் இது க்ராம தேவதையின் கோபத்தினால் உண்டானதென்று அதற்கு பூசைபோடுகிறார்கள். வேறு சிலர் அகால மழையாலும் இடி இடிப்பதாலும், மேல்காற்றாலும் வருகிறதென்றும், தங்களால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை என்றும் கைகட்டி ஏங்கி நிற்கிறார்கள். சிலர், வேப்பம் பிண்ணாக்கையும் பன்றியின் எருவையும் நிலத்திற்குப்போட்டு இந்த வ்யாதியை நிவர்த்திக்கப் பார்க்கிறார்கள். ஆனால் இவ்வெருக்களால் வ்யாதி நின்றுவிடுகிறதாகத் தெரியவில்லை. சில மாஸங்களுக்குமுன் நான் க்ராமாந்தரங்களில் வயல்கள் வழியாய்போகும் போது பயிர்களில் ஆனைக்கொம்புநோய் விசேஷமாய்ப் பரவியிருப்பதைப் பார்க்க நேர்ந்தது. அநேக பயிர்களை பரிக்ஷை செய்த பின் இந்த வ்யாதி ஒருவித ஈயினால் உண்டாகிறதென்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆனைக்கொம்பு விழுந்தபயிர் ஒன்றை வேருடன் பிடுங்கி அதை நடுவே கிழித்துப் பார்த்தால் அடித்தண்டின் நடுவே வளர்கிற பாகத்தை ஒரு சிறு புழு தின்பதைக் காணலாம். நெல் இலைக்காம்பானது இப்புழுவைச் சுற்றிலும் ஒரு குழாய் மாதிரிவளைந்துகொண்டு ஒரு சிறு அறைபோலிருக்கிறது. புழு வளரவளர இந்த அறையு நீண்டுவளர்கிறது. வளர்கிறபாகம் தின்னப்படுகிறதால் மேலே பயிருணவு ஏறுகிறதில்லை. ஆகையால் அந்த அறைவெளுத்துக்கொண்டே வருகிறது. முற்றினபுழுநல்ல சிவப்பு நிறமுள்ளதாய் கால் அங்குல நீளமிருக்கும். வெண்மை

யான நீண்ட குழாய்போலிருக்கிற இதன் அறையை ஆனைக்கொம்பென்று சொல்லுகிறோம். பிறகு கதிரும் உண்டாவதில்லை. இப்படிவளர்ந்த சிவப்புப் புழு தனக்கொரு கூடு கட்டிக்கொண்டு அதனுள்ளே கொஞ்சகாலமிருக்கிறது. இப்போது அது உண்பதில்லை. மேலும் இந்தக் காலந்தான் அது புழு உருவிலிருந்து ஈயாகமாறுகிற ஸமயம். ஆறு கால்களும், நீண்ட இரண்டு மீசைமயிரும் இதற்கு உண்டாகி இறக்கையும் முளைக்கிறது. பிறகு அந்த அறையின் உச்சியில் ஒரு பக்கத்தை தின்று ஓட்டைசெய்து அதன்வழியே இந்த கொசுபோன்ற ஈ வெளியே பறந்துபோகிறது. இந்த ஈ ஒவ்வொன்றும் முட்டையிடுகிறது. அதாவது ஓரிடத்தில் ஒருமுட்டை தானிடும். இம்முட்டையிலிருந்து மேலே சொன்ன புழு உண்டாகிறது. இதைத் தடுப்பதற்கு ஒன்றுமில்லையோவென்று கேள்வி பிறக்கலாம். கருணைக்கடலான கடவுள் இந்த ஈயை தன்னிஷ்டப்படி நாசம் செய்யும்படி விடாமல் அதைக் கண்டிக்க வேறு ஒருஜாதிஈயைஉண்டாக்கியிருக்கிறார். இந்த ஈ ஒரு எள்ளத்தனை பெரிதாயிருக்கும். இச்சிறு ஈ மேற்சொன்ன ஆனைக்கொம்புப்புழுவின் உடலில் 20,30, முட்டைகள் இட்டுவிடும். முட்டைகளிலிருந்து சிறு புழுக்கள் கிளம்பி அப்பெரும் புழுவின் வயிற்றில் வளரும். பெரிய புழு கூடுகட்டி உள்ளிருக்கும் ஸமயத்தில் அதன்குடல் முதலியவைகளை சிறு புழுக்கள்தின்று அதைக் கொன்றுவிட்டு அதன் கூட்டிலேயே தாங்களும் உருமாற விருக்கின்றன. சிலநாள் க்ரமித்து அக்கூட்டினின்று 20,30 சிறு ஈக்கள் வெளிக்கிளம்பி வெள்ளைத்தண்டின் ஒருபக்கம் ஒரு த்வாரம்செய்து அதன்மூலமாய் வெளியே வருகின்றன.

குறுவை அல்லது கார் நெல்லானால் தண்டு சிவப்பாய் இருக்கிறது. சம்பாப்பயிர் இந்த நோயினின்றும் கொஞ்சம் தாங்கிக் கொடுக்கிறது.

கே. ஆர். சங்கரய்யர்.

## PIGEON POST IN WAR.

## யுத்தத்தில் புறாத்தூது.

ஸமீபத்தில் இங்க்லண்டில், லைஸென்ஸில்லாமல் நிருபம் வகிக்கும் புறாக்கள் வைத்திருந்ததற்காக, வேற்றுநாட்டார் சிலர் கைது செய்யப்பட்டார்களென்று தெரிகிறது. யுத்தத்தில் புறாக்களைத் தூது விடுவது ஒரு புதிய விஷயமல்ல. தொன்று தொட்டு வழங்கி வருகிறது.

### புராதன காலம்.

கிருஸ்து சகாப்தத்திற்கு 1600 வருஷங்களுக்கு முந்தி இஸ்ரவேலர் தலைவராகிய ஜோஷுவா என்பவர் அவைகளை உபயோகப்படுத்தி யிருந்ததாகத் தெரியவருகிறது. பண்டைக்காலத்து ஈஜீப்ட் தேசத்தாரும், க்ரேக்கர்களும், ரோம் தேசத்தார்களும் யுத்தங்களில் புறாக்களை தூதர்களாக உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். மங்கோலியர்கள் பாக்டாட் (Baghdad) நகரத்தைப் பிடித்த காலத்தில், பாரஸீகர்கள் புறாக்களைத் தூது விடுத்திருக்கிறார்கள்.

### தற்காலம்.

1815-ம் வருஷத்தில் இங்க்லீஷ்காரர்களும் ப்ரஷ்யர்களும் பெரிய நெப்போலியனை எதிர்த்துநின்ற வாட்டர்லூ (Waterloo) சண்டையில் வெல்லிங்டன் பிரபு ஜயித்த விஷயம் முதல் முதலாக இங்க்லண்டுக்கு புறாக்கள் தான் கொணர்ந்தன. என்றாலும் தென் ஆப்ரிக்கா யுத்தம் வரையில் இங்க்லண்டில் இது விஷயத்தில் ஒருவரும் ச்ரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. அந்த யுத்தத்தில் தான், பரீட்சார்த்தமாக முதலில் இவைகள் உபயோகப்படுத்தப்பட்டன. தென் ஆப்பிரிக்காவின் தென்மேற்கேயுள்ள கேப்டவுனில் (Cape Town) புறாக்களுக்கு ஒருவஸதி ஏற்படுத்தப்பட்டு, அவைகள் போயர் யுத்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டன.



### தூது தயார் செய்யும் விதம்.

புறாக்கள் கொண்டுபோவதற்கான ராணுவ விஷய லிகிதங்களை அடியிற்கண்டமாதிரி தயார் செய்வார்கள். முதலில் ஸங்கேதங்களில் எழுதுவார்கள். இவைகளை மெல்லியதோல் அல்லது ஜவ்வில் போட்டோ பிடித்து, ஒரு ஜவ்வில் 1,500 கடிதங்கள் அச்சடிக்கும்படி குறைக்கிறார்கள். இம்மாதிரி ஜவ்வில் ஒரு டஜனுக்கு குறைவில்லாமல், ஒரு புறா தூக்கிக்கொண்டு போகும். இந்த ஜவ்வுகளை ஒரு இறகுக்குள் வைத்து, புறாவின் காலில் ரப்பரினால் கட்டுகிறார்கள். குறிப்பிட்ட இடத்திற்குப் புறாபோனதும், போட்டோ பிடிப்பவர்கள் இந்த ஜவ்வின் எழுத்துக்களைப் பெரிதாக்கி ராணுவ ஸமாசாரம் அறிவிக்கும் டிபார்ட்மெண்டாரிடம் கொடுப்பார்கள். அவர்கள் இந்த ஸங்கேதங்களை தெளிவாக எழுதுவார்கள்.

### ரஷ்யா.

ஐரோப்பாக் கண்டத்தில் சேனைகளொவ்வொன்றிலும் இப்புறாக்கள் உபயோகப்படுத்தப் படுகின்றன. ஆதியில் ரஷ்யாவில் 1871-ம் ஆண்டில் புறாக்களைத் தூது விடுவதற்குத் தயார் செய்ய ஏற்பாடுகள் செய்தார்கள். மற்றைய தேசத்தார் இதை அனுஷ்டிக்கத் தொடங்கினார்கள்.

### ஜெர்மனி.

இது விஷயத்தில் அதிக ஊக்கத்துடன் வேலைசெய்பவர்கள் ஜெர்மானியரே. சில வருஷங்களாக, வருஷம் ஒன்றுக்கு 1,500 பவுன் இவ்விஷயத்திற்காக ராணுவச் செலவில் ப்ரத்யேகப்படுத்தி, ஏறக்குறைய இரண்டு லட்சம் புறாக்கள் தயார்செய்திருக்கிறார்கள். ராணுவப் புறாக்களைத் தவிர, ஸாதாரண ஜனங்களிடத்திலிருக்கும் பட்சிகளெல்லாம் "ரிஜிஸ்தர்" செய்யப் படவேண்டும். அப்பக்ஷிகளை விற்பவர்கள் கடின தண்டனைக் குள்ளாவார்கள். ராணுவத்தார் வேண்டும்பொழுது இப்பட்சிகளையும் உபயோகிப்பார்கள்.

### ப்ரான்ஸ்.

ஜெர்மனியைவிட அதிகப் புறாக்கள் பிரான்ஸ் தேசத்தில் உண்டு. 1870-ம் ஆண்டில் பாரீஸ் நகரை ஜெர்மானியர் முற்றுகை போட்டகாலத்தில், இதரவகையில்லாமையால், மாகாணங்களுக்குத் தூதுபோய்வரபுறாக்களே உபயோகிக்கப்பட்டன. ராணுவத்தைச் சேர்ந்தவைகளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், புறாக்களுக் கெல்லாம் ஒரு ஸங்க்யை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. புறாக்களைக்கொல்ல லாகாது.

### உபயோகங்கள்.

தந்திக் கம்பிகள் அறுபட்ட காலத்திலும், சேனைகளால் சூழ்ந்துகொள்ளப்பட்டகாலத்திலும், இப்புறாக்கள் மிக்க ஸௌகர்யமான தூதர்களாகும். மேலான சில புறாக்கள் நிமிஷத்திற்கு 1-மைல் வீதம் 150 மைலுக்குமேல் போகும் என்று தெரிகிறது. பெரிய புயல்களைத் தவிர வேறு அபாயங்கள் இவைகளின் வேகத்தை தடுக்கமாட்டா.

## LONG LIFE LAWS.

## நீண்ட ஆயுள் விதிகள்.

மனிதனுக்கு விதித்தவயஸு 100என்றாலும் நம்மவருக்குள் ரொம்பவும் சிலர்தான் அந்த வயஸுவரையில் ஜீவித்திருக்கிறார்கள். ஸாதாரணமாக நம்முடைய தேசத்தில் 50 அல்லது 60 வயஸுக்குள்ளாக அநேகம்பேர்கள் இறந்துவிடுகிறார்கள். இதன் காரணம் என்னவென்று விசாரிக்கும்போது, அது பெரும்பாலும் ஸுகாதார விதிப்படி நாம் வஸிக்காததினால்தான் ஸம்பவிக்கிறதென்பது நிச்சயமாய் ஏற்படுகிறது. உண்ணல், பருகல், மனக்கிளர்ச்சி, தேகப்பயிர்ச்சி இவை முதலியவற்றில் நாம் ஸுகாதார விதிப்படி நடப்போமாயின் நீண்ட ஆயுளை யடையலாம். இது நம்மவர் அநேகருக்குப் புலப்படுவதில்லை. இவைகளைப்பற்றி இங்கு விவரிப்போம்.

## ஆகாரம், பானம்.

முதலாவது இவற்றில் மிதமாக இருத்தல் அவச்யம். நாம் தேக அஸௌக்யமாயிருக்கும்போது நமது வைத்யர்கள் 'லங்கணம் பரம ஔஷதம்'மென்று சொல்லுகிறார்களல்லவா? இந்த லங்கணத்தினால் வரும் மேலான ப்ரயோஜனங்களினால் அதிக உத்ஸாகங்கொண்டே அப்டன் ஸிங்க்ளேர் என்பவர் எந்த வ்யாதியையும் லங்கணம் ஒன்றினாலேயே நிவர்த்தி செய்து விடலாமென்று எழுதியும் பேசியும் அனுஷ்டித்தும் வருகிறார். நோய் நீங்குவதற்கு லங்கணமாயிருத்தல் போதுமான மருந்தென்றால், நோய் வராமலிருப்பதற்கும் அதைவிட வேறொன்றும் வேண்டியதில்லையே. தவிர, ஒரு வேளை சாப்பாடு தவறுவதினால், யாதொரு தீங்கும் இல்லை. ம்ருகங்கள்கூட நோய்கொண்டால் அன்னபானாதிகளைத் தொடாமலிருப்பதை நாம் பார்க்கவில்லையா? இதில் நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. நாம் சாப்பிடுகிற உணவெல்லாம் நம்மைப் போஷிப்பதில்லை. நமக்கு எவ்வளவு உணவு ஜீரணமாகிறதோ அவ்வளவுதான் நமது போஷணைக்கு உதவுகிறது. ஆகலால் நமக்கு எவ்வளவு ஜீரணமாகுமோ அவ்வளவுக்குமேல் சாப்பிட்டால், தலைவலி, வயிற்றுச்சிக்கல், அஜீரணம் முதலிய அஸௌக்யங்கள் நேரிடுகின்றன. ஸ்வபாவத்திலேயே இளைத்த சரீரஸ்தர்கள்கூட, தங்களுடைய அன்னபானாதிகளில் மிதமான அளவுடனிருந்தால், நீண்டகாலம் வஸிப்பார்கள் என்பது துணிபு.

சாப்பிடவேண்டிய அளவு அவரவர்களுடைய வழக்கங்களையும், தொழில் முறையையும் பொறுத்தது. வீட்டுக்குள்ளிருந்து ஸாதாரண வேலையைச் செய்பவர்களைவிட வெளிவாசல்களில் தேக ச்ரமத்துடன் உழைப்பவர்களுக்கு அதிக உணவு வேண்டுமென்பது வெளிப்படையாகிறது. இது அனுபவத்தால் அறியவேண்டியதாகும். வயதாக ஆக நமது தேகமும் செயல்களும் சுறுசுறுப்பில் குறைகின்றனவாதலால், அன்னபானங்களும் அதற்கேற்ப குறைகின்றன. வயோதிகர்கள் அளவுக்கு மிஞ்சி உண்பது ப்ரதிகூலத்தையேயுண்டுபண்ணும்.

இரண்டாவது எவ்வகை உணவுகளையுண்பது என்னும் கேள்வி. இந்தவிஷயத்தில் ஒவ்வொருவர் தேகமும் வெவ்வேறு மாதிரியாகையால் கண்டிப்பான விதிகள் ஏற்படுத்த முடியாது. அவரவர்களுடைய இயற்கைபுத்தியே இங்கு அவர்களுக்குத் துணையாம். ஆயினும், எவைகளை சாப்பிடக்கூடாது என்பதை ஒருவாறு சொல்லக்கூடும். வாய்க்கு ருசியாக இருக்கிறவைகளெல்லாம் அந்தக் காரணத்தாலேயே தேகத்துக்கும் ப்ரயோஜனப்படும் என்பது தவறு. ஸாதாரணமாக தித்திப்புள்ள பதார்த்தங்கள், பட்சணங்கள், காரமானவை, உப்புக்கண்டங்கள் முதலியவைகளைச் சாப்பிடுவது கெடுதலாகும். ஸாதாரண லகுவான உணவுக்கு மிஞ்சியது ஒன்றுமில்லை. தண்ணீரைத் தவிர வேறு எதையும் குடிப்பது உசிதமன்று.

மூன்றாவது, உணவை மென்று தின்னவேண்டும். அறியாமையினால் தாய்மார் "என் மாடு போல் மெல்லுகிறாய்" என்று குழந்தைகளைக் கண்டிக்கிறார்கள். நாம் உண்ணும் உணவெல்லாம் வயிற்றில் போய் ஜீரணமாவதில்லை. ஜீரணத்துக்கு முக்யமான அம்சம் வாய்தான். வாயிலுள்ள பற்களை உபயோகப்படுத்தாமல் பலர் அஜீரணத்தினால் வருந்துகிறார்கள். மென்று தின்பதற்காகத்தான் பற்கள் ஏற்பட்டன. வாயூறலாகிய உமிழ்நீருக்கு ஜீரணஞ்செய்யுங் குணமுண்டு. ஆகலால் நாம் சாப்பிடும்பொழுது மெதுவாக மென்று, உணவானது வாயூறலுடன் சேர்ந்து பிசின் அல்லது மாப்போல வாகும்பொழுது நமது முயற்சியில்லாமலே நாம் உணவை உட்கொள்ள ஹேதுவாகிறது. இம்மாதிரியாக நாம் உண்பதாயிருந்தால் அஜீரணமென்பதையே கேள்விப்படமாட்டோம்.

இதிலிருந்து இன்னொரு விதி ஏற்படுகிறது. சிலர் சரசரவென்று, அதிக அவஸரமாய் சாப்பிடுவார்கள். அது தவறாகும். அப்படிச் சாப்பிடுவது நமது போஷணைக் கேற்காது. அவஸரமாக இருக்கும்பொழுது, அப்படிச் சாப்பிடுவதைவிட குறைவாய் முறைப்படி சாப்பிடுவதே மேல். சாப்பிடுவதற்கு இடையிடையே தண்ணீர் குடிப்பது தவறு. அந்தத் தண்ணீரால், ஜீரணரஸங்கள் பலங்குறைவடைகின்றன. சாப்பாடு முடிவில்தான் தீர்த்தம் குடிக்கவேண்டும்.

## குணாகுணங்கள்.

கோபிஷ்டர்கள் ஆயுள் நீடித்திருப்பது மிகவும் துர்லபம். ஹ்ருதயம், மூளை இவைகளுக்குக் கெடுதல் விளைவிப்பதுமன்றி, கோபம் ஜீரணசக்தியைக் கெடுத்துவிடுகிறது. மூர்க்கமான கோபத்தினால் பைச்யம், மரணம் இவை ஏற்படுமென்று தெரிகிறது. 'மனம்போல வாழ்வு' என்று சொல்லுவது மிகவும் உண்மையே. நமது மனமே பல வ்யாதிகளுக்குக் காரணமென்பது பலருடைய அபிப்ராயம். மனதை அடக்குவது நோயற்ற வாழ்விற்கு மிக்க ஸாதகமாம். சோர்வு, துக்கம் இவைகளுண்டாக்கும்படியான விஷயங்களில் மனதை ப்ரவேசிக்கவிடலாகாது. பொறாமை, க்ரோதம், தீமைக்குத் தீமை செய்தல் இப்படிப்பட்ட கெட்ட எண்ணங்களுக்கு இடங்கொடுக்கலாகாது. மனதை ஸஞ்சலப்படுத்தவும் கூடாது. எப்பொழுதும் ஸந்தோஷமாயிருப்பதும் ஸந்தோஷமாயிருப்பவர்களுடன் கூடியிருப்பதும் மிக்க அவச்யம்.

## ஒழுங்கான பழக்கங்கள்.

ஆயுள் நீடித்திருப்பதற்கு சாப்பிடுதல், இளைப்பாறுதல், மலங்கழித்தல் ஆகிய இவற்றில் ஒழுங்காயிருத்தலும் அவச்யமாகும். குறித்த நேரங்களில் சாப்பிடவேண்டியதவச்யம். கூடுமானவரையில் சாப்பாட்டுக்கு இடையிடையே சிற்றுண்டிகளை விலக்குவது அவச்யம். நமக்குற்ற வேலைகள் அதிகமாக இருக்கையில், அவைகளுக்கு ஸம்பந்தமில்லாதவேறு வேலைகளைக்கொடுத்தால், நம்வேலை சீர்குலைந்து போகாதா? அம்மாதிரியே ஜீரணசக்தியும். நீர் பருகுதலும் சிறிது சிறிதாக, குறித்தநேரத்திலேயே இருக்கவேண்டும். "வைகறைபாமந் துயிலெழுதல்" அவச்யமாகும். அதுபோலவே இரவில் சீக்ரமே தூங்கப் போகவேண்டும். நாம் தூங்கும்போது நமது ச்ரமம் பரிகாரமாவதால் அதைக் கெடுப்பது மிகத் தவறு. ஒரு இரவு கண் விழித்து மறுநாட்காலையில் தேகஸ்திதியைப் பரீட்சித்துப் பாருங்கள். குறித்த நேரங்களில் அன்றன்று மலபாதையை நீக்கும் வழக்கத்தை அனுஷ்டித்தல் அவச்யம். தாய்தகப்பன்மார்கள் இந்த வழக்கத்தை சிறு ப்ராயத்திலேயே குழந்தைகளுக்கு உண்டாக்கிவைத்தால் அவர்களுக்கு அதுவே மிக்க ஐச்வர்யத்தைக் கொடுத்ததாகும்.

## தேகப் பயிற்சி.

தேகப் பயிற்சியினால் நரம்புகளில் நல்ல ரத்தம் ஓடுகிறது. தேகத்தில் ஏதேனும் ஒரு பாகம் பயிற்சி பெறாமலிருந்தால், அது ரத்த ஓட்டம் குன்றி கெடுதலடையும். தேகப் பயிற்சி செய்வதற்கு பலவித ஒத்தாசைகள் தற்காலம் ஏற்பட்டிருக்கின்றன. மனிதர் உண்ண உணவில்லாமலும், குடிக்க தண்ணீரில்லாமலும் சில காலம் இருந்திருக்கிறார்களென்றாலும் ச்வாஸிக்கக் காற்றில்லாமலிருக்க முடியாது. ச்வாஸாசயங்களை பலப்படுத்த வேண்டியது அவச்யம். இவ்விஷயத்தின் முக்யத்தை நமது முன்னோர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். ப்ராணாயாமம் என்பது இதை யடியாகக் கொண்ட ஓர் தேகப்பயிற்சியேயாம்,

இங்கே இன்னொரு விஷயஞ் சொல்வதற்குண்டு. தூங்கும்பொழுது வாயைத் திறந்துகொண்டு தூங்கக்கூடாது. ஒவ்வொருநாளும் அழுக்குத் தேய்த்து ஸ்நானஞ் செய்தற்கியலாமற்போனால், ஈரத்துணி யொன்றால் தேகத்தை நன்றாய்த் துடைத்து, பிறகு உலர்ந்த துண்டொன்றைக்கொண்டு உடம்பைத் துடைத்து, மறுபடியும் ஹ்ருதயத்தை நோக்கி கைகளால் உடம்பை நன்றாய்ப் பிடித்துவிடவேண்டும் இதனால் ரத்த ஓட்டம் மிக நன்றாவதுமன்றி, தேகத்தின் தோல் மெல்லியதாயும் பளபளப்பாயுமிருக்கும்.

### தேக ஆரோக்ய விதிகள்.

வ்யாதி க்ருமிகளைக் கொல்லும் மருந்துகளைக் கொண்டு சாக்கடைகளையும், கக்கூஸ்களையும் தினந்தோறும் காலையில் சுத்தஞ் செய்யவேண்டும். தரையைச் சுத்தம் செய்யும் ஜலத்திலும் இந்த த்ராவகத்தைச் சேர்த்துக் கொள்ளுவது மேலாகும். எவ்வளவு வெளிச்சமும் காற்றும் அநுபவிக்க முடியுமோ, அவ்வளவிற்கும் இடங்கொடுக்கும்படி வீடுகள் இருக்க வேண்டும். எப்படி மரஞ்செடிகளுக்கு வெளிச்சமும் காற்றும் அவச்யமோ அம்மாதிரியே மனிதனுக்கும் வெளிச்சமும் காற்றும் இன்றியமையாதது. க்ஷயரோக க்ருமிகள் ஸூர்யனது கிரணங்களைத் தாங்கமாட்டா. காற்று வீசுவதற்குத் தகுந்த வஸதிகளிருக்கவேண்டும். காற்றடிக்கும் நாட்களில் முற்றங்களை மிகவும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். குப்பைத் தொட்டிகள் வீட்டிற்கு அருகாமையில் இருக்கக்கூடாது.

## HISTORY OF AIR CRAFT.

## ஆகாய விமானங்களின் சரித்ரம்.*

### விளக்குக் கூண்டு.

ஒரு வஸ்து தானாக தரையில் படியாமல் ஆகாயத்தில் மிதக்கவேண்டுமானால், அந்த வஸ்துவின் எடையும் அதன் பரிமாணமுள்ள வாயுவின் பளுவும் ஸமமாயிருக்கவேண்டியது அவச்யம். அந்த வஸ்துவின் பாரம் குறையுமானால் அது மேன்மேலும் பறந்து உயரச் செல்லும். இம்மாதிரியான இவ்வளவு லேசான வஸ்துக்களும் உண்டோ? சூடாகிய காற்று ஸாதாரணக் காற்றைவிட மெலிந்ததும் எடையிற் குறைந்ததுமாகையால் அடுப்புகளிலிருந்து புறப்படும் காற்று மேலே கிளம்புகிறது. அது கரித்தூள்களையும் சாம்பல் பொடிகளையும் அடித்துக்கொண்டு மேலே செல்லும். இதைப்புகை என்கிறோம். சிம்ணியுள்ள விளக்குகளில் சூடுள்ள வாயு நிறமற்று இருப்பதால் மேலே செல்லுவது நமது கண்ணுக்குத் தென்படுவதில்லை. கையை சிம்னிக்கு மேலே பிடித்தால் சூடான வாயு மேலே கிளம்புவது நன்றாய்த் தெரியும். புகைவண்டிக் குழாய்களிலிருந்தும், மில் என்னும் யந்திர சாலைகளிலுள்ள உன்னதமான புகைபோக்கிகளிலிருந்தும், வெளியேறும் கரிப்புகை மேகங்களெல்லாம் கரித்தூள் கலந்த சூடுண்ட காற்றே. இக்காற்றுக்குளிர, கரித்தூள்களெல்லாம் நாளடைவில் பூமியில் படிகின்றன. உஷ்ணமான வாயுவை உள்ளடக்கிய பெரிய மெல்லிய காகிதக் கூண்டுகள் அக்கூண்டு அடைத்துக்கொள்ளும் இடத்திலுள்ள வாயுவின் பளுவைவிட எடையில் குறைவாயிருக்கும். இம்மாதிரிக் கூண்டுகள் மேலே செல்லும். திருவிழாக்களிலும் மற்ற வேடிக்கை காலங்களிலும் இப்புகைக்கூண்டுகளை பறக்கவிட்டு ஜனங்கள் ஸந்தோஷப்படுவதை யாவரும் பார்த்திருக்கலாம். இக்கூண்டுகளில் உள்ள வாயு சூடாகியிருக்க விளக்குகள் வைத்திருப்பார்கள். விளக்கு அணையுமானால் உள்ளேயுள்ள காற்று குளிர்ந்துபோகும். அப்பொழுது கூண்டின் பளுவும் அதிகரித்து, மேலே ஏறச் சக்தியற்றதாகி கூண்டு கீழே விழுந்துவிடும்.



### பலூனுக்கு உதவும் வாயுக்கள்.

ஆகாயத்தைவிட லேசான வாயு பதார்த்தங்கள் அநேகம் உள. ஜலத்தின் அம்சமாகிய ஹைட்ரோஜன் என்னும் ஜலவாயு இவற்றில் ஒன்று. இது ஆகாயத்தைவிட 14 மடங்கு லேசானது. நிலக்கரியிலிருந்து தயார் செய்யும் கோல் காஸ் என்பது மற்றொன்று. நிலக்கரி அதிகமாய்க் கிடைக்கும் மேல் நாட்டுப் பட்டணங்களில் வீடு வீடாய் ஜலக்குழாய்கள் போல் குழாய்கள் போட்டு இவற்றின் வழியாய் தயார் செய்யுமிடத்திலிருந்து இந்த வாயுவைக் கொணர்ந்து விளக்குகளுக்காகவும் சமையல் அடுப்புகளுக்காகவும் உபயோகப் படுத்துகிறார்கள். இந்த வாயு ஆகாயத்தைவிட ஸுமார் 3 மடங்கு லேசானது. சென்னை இருப்புப்பாதை ரெயில் வண்டிகளில் உபயோகிக்கும் விளக்குகள் காஸ் விளக்குகளே. இதில் எரியும் காற்றை கெரோஸின் எண்ணெயிலிருந்து தயார் செய்கிறார்கள். இதுவும் ஆகாயத்து வாயுவைவிட லேசானதே. ஆதலால் இக்காற்றுகள் அடங்கிய பாத்ரங்களை வாய் மேல்நோக்கும்படி பிடித்தால் இவை மேலேசெல்ல பாத்ரங்களில் ஸாதாரண ஆகாய வாயுவே நிரம்புகிறது. திட பதார்த்தங்களிலும் த்ரவ பதார்த்தங்களிலும் ஆகாய வாயுவைவிட லேசானது ஒன்றும் கிடையாது. ஆகாயத்தைவிட லேசான திட பதார்த்தம் ஒன்றிருந்தால் அதை தெப்பமாகக் கட்டிக்கொண்டு ஆகாய மண்டலத்தில் உல்லாஸமாய் உலாவலாமே? ஆதலால் முன் கூறிய லேசான வாயு பதார்த்தங்களை வைத்து உள்ளடக்கி கூடுகள் கட்டியேதான் நாம் ஆகாயத்தில் மிதக்க யத்தனிக்கவேண்டும்.



பலூன் கூண்டு.

### பலூன்

ஓட்டை கொஞ்சமேனுமில்லாத லேசான மெழுகு பூசிய பட்டுத்துணியால் பெரிய பையொன்றைத் தைத்து அதை வாயுவால் நிரப்பிவைக்க, அது உப்பி அதிக இடத்தை அடைத்துக்கொள்ளும். ஸாதாரண வாயுவால் நிரப்பினால், பை எவ்வளவு பெரியதானாலும், அது அடைத்துக் கொள்ளும் இடத்திலுள்ள வாயுவின் எடையைவிட பளுவாக இருக்கும். லேசான வாயு நிறைந்து இருந்தால், அதன் எடை குறையும்படி செய்யலாம். அப்போது இக்கூண்டு மேலே கிளம்பிச் செல்லுமல்லவா? இம்மாதிரி கட்டிய கூண்டுகள் பெரியவையானால் எடை வித்யாஸம் அதிகமாவதால் மனிதர்களும் அக்கூண்டுகளில் ஏறிச்செல்லலாம். மனிதர்கள் ஏறிச் செல்லும் பலூன் கூண்டை அநேகர் பார்த்திருக்கலாம். இதிலுள்ள பை கொஞ்சங்கூட ஓட்டை யில்லாததாக இருக்கவேண்டும். மிகச்சிறிய துவாரம்

* ஆகாய விமானங்களைப்பற்றிய வ்யாஸங்களில் சில பாகங்கள் முன்பு "பிழைக்கும் வழி"யில் எம்.வி. எஸ். அநந்த பத்மநாபராவ் அவர்களால் எழுதப்பட்டவை. விஷயம் தொடர்ச்சியாயிருப்பதற்காக அவைகளை மறுபடியும் இங்கு ப்ரசுரிக்கிறோம்.

இருந்தாலும், 'எரும்பு ஊரக் கல்லும் தேயும்' என்கிறபடி அதின் வழியாக லேசான காற்று இடைவிடாமல் வெளியே சென்றுகொண்டிருக்குமாகையாலும், ஸாதாரண வாயு உட்புகுமாகையாலும் பையின் பாரம் அதிகரித்துக்கொண்டே வரும். பையின் கன அளவுள்ள வாயுவின் எடையைவிட அதிகரிக்குமானால், பைமேலே கிளம்பாமல் கீழே இறங்கும். இக்கூண்டுகளில் நிரப்பும் காற்றுகள் எல்லாம் எளிதில் தீப்பற்றி எரியும் தன்மையுடையனவாகையால் இவைகளின் பக்கத்தில் விளக்குகளைக் கொண்டுபோக வேண்டியிருந்தால் அதிக ஜாக்ரதையாயிருக்கவேண்டும். பெரிய கூண்டுகளைக் கட்டி அவற்றைச் சுற்றிலும் மெல்லிய பலமான கயிறு வலை போட்டு அதிலிருந்து லேசான தொட்டில் ஒன்று கட்டித் தொங்கவிட்டால் அது மனிதர்கள் உட்கார்ந்து செல்லத் தகுந்த இடமாகும். மூன்று பேரைத்தாங்கக் கூடிய பலூன் 16 கஜம் உயரமும் 12 கஜம் குறுக்களவும் உள்ளதாய் இருக்கவேண்டும்!



பாரச்சூட்

பாரச்சூட்.—

பெலூனில் ஏறிச்செல்பவன் கீழே வருவது எப்படி? ஒரு கல்லை நாம் கைவிட்டால் அது உடனே தரையைச் சேருகிறது. ஒரு காகிதத்துண்டை விட்டால் அது தள்ளாடிக்கொண்டு கொஞ்சம் தாமஸமாய் பூமியை அடைகிறது. அக்காகிதத்தைச் சுருட்டிப் போட அது சீக்ரம் விழுந்துவிடுகிறது. ஆதலால் எந்த ஸாமானுக்கும் மேல் பரப்பு அதிகமானால், அதன்மேல் படும் வாயு அதிகரிப்பதால் அதன் வேகம் தடைபடுகிறது. பைஸிக்ளின்மேல் ஸவாரி செய்கிறவன் வேகமாய்ப் போகும்போது படுத்துக் கொண்டாற்போலப்போவது வாயுவின் 'ப்ரிக்ஷன்' அதாவது உராஞ்சுவதால் உண்டாகும் காற்றின் எதிர்க்கும் சக்தியை குறைப்பதற்கேயல்லவா? மெல்லிய துணியால்செய்த குடையுறை போன்ற பையின் விளிம்புகளிலிருந்து மெல்லிய நூல்களைக் கட்டித் தொங்கவிட்டு அக்கயிறுகளின் மற்றொரு நுனிகளைச் சேர்த்து முடியிட்டு அதிலிருந்து ஒரு சிறிய கல்லைத் தொங்கவிடுங்கள். இத்துணிப்பையை விட்டதும், விரிந்து காற்றடைத்துக் கொள்கிறது. ஆதலால், கல் மெதுவாய் கீழே இறங்குகிறது. இப்பை பெரியதானால் மனிதனையும் தாங்கும்படியான சக்தி புடையதாயிருக்கும். பலூனிலிருந்து கீழே இறங்க இம்மாதிரியான பெரிய 'பாரச்சூட்' என்னும் மெல்லிய பட்டுக்குடையொன்றை உபயோகிக்கிறார்கள். இக்குடையின் மையத்தில் காற்றுச்செல்ல ஒரு சிறு த்வாரம் இருக்கும். ஒரு மனிதனைத் தாங்கக் கூடிய பாரச்சூட் 16 அடி குறுக்களவு உள்ளதாய் இருக்கவேண்டும். பலூனில் ஏறியவன் கீழே இறங்கவேண்டுமென்று தோன்றியவுடன் இக்குடையின் கீழ் ஓரத்தைப் பிடித்துக் கொண்டு பலூனை விட்டுவிட காற்றால் குடை விரிந்து அவனை மெதுவாய்க் கீழே இறக்கிவிடுகிறது.



## DIRIGIBLES AND AEROPLANES.

## ஆகாய விமானங்கள்.

ஆகாயத்தைவிட லேசான வாயுக்கள் நிறைந்த பெலூன் கூண்டில் ஏறிச் சென்று ஆகாய மண்டலத்தில் உலாவி பாரச்சூட் என்னும் குடையின் உதவியால் அபாயமின்றி கீழே இறங்கலாம் என்று மேலே விவரித்தோம். இதை மான்ட்கோல்பியர் என்னும் குலப் பெயரையுடைய இரண்டு ஸகோதரர்கள் 1783-ம் வர்ஷத்தில் நிரூபித்துக் காட்டியது முதல், அநேகர் வேடிக்கைக்காக பெலூனில் ஏறி இறங்கி வந்தார்கள். வரவர பலூனை வெவ்வேறு விஷயங்களுக்காக உபயோகிக்க எத்தனித்தார்கள். அநேக ஸயன்டிஸ்ட்ஸ் (தத்வ விசாரணை சாஸ்த்ரிகள்) இதன் உதவியால் ஏறிச் சென்று ஆகாய மண்டலத்தின் மேல்தட்டுகளில் தென்படும் தோற்றங்களையும் மாறுதல்களையும் பற்றி முதல் முதல் எழுதினார்கள். ஒரு பெரிய பலூனில் க்லெஷர் என்னும் ஸயன்டிஸ்ட் ஸுமார் 30,000 அடி உயரம் வரையில் சென்று, தான் அனுபவித்த சீதோஷ்ண வித்யாஸங்களைப்பற்றி எழுதியிருக்கிறார். உயரம் அதிகரிக்க அதிகரிக்க சீதோஷ்ணம் குறைந்துகொண்டே இருந்ததாம். 29,000 அடி உயரத்தில் ஜலம் தானே குளிர்ந்து இறுகக் கூடிய குளிர்ச்சியைவிட 19 டிக்ரீ குறைவாய் இருந்ததாம். ஆகாய வாயுவின் அழுத்தம் மிகவும் மெலிந்து மூச்சுவிட அதிகக் கஷ்டப்பட்டாராம். ஆகாயம் அதிக நீல நிறத்துடன் காணப்பட்டதாம். நிஸ்சப்தமாக இருந்ததாம். ஆகாயத்தில் நீராவி அதிகமாய்க் குறைந்து வரண்டு இருந்ததால், அவர் கொண்டுபோன காகிதத்துண்டுகள் பதம்தப்பி, நெருப்பின் முன் வைத்தவைபோல் சுருங்கிப் போயினவாம்.

### பலூனில் தோன்றிய குறைகள்.

நாளடைவில், வேடிக்கைக்காக உபயோகித்துக்கொண்டிருந்த பலூனை உபயோகித்து ராணுவ இலாகாதார் எதிரிகளின் கோட்டைகளிலும்போர்க்களங்களிலும் நடப்பவைகளைக் கொடி யசைத்தல் முதலான ஸமிக்ஞைகளால் தெரிந்துகொள்ள முயன்றார்கள். 100-வர்ஷங்களுக்கு முன் நடந்த ஒரு சண்டையில் பெலூனுக்கு நீண்ட கயிறு கட்டிக் கீழே பிடித்துக் கொள்ள அதன்மேல் சென்றவர்கள் பார்த்தவைகளைத் தங்கள் நண்பர்களுக்குச் சொல்லி வந்ததாக சரித்ரங்களில் எழுதியிருக்கிறார்கள். 45 வர்ஷங்களுக்குமுன் ஐரோப்பாவில் நடந்த யுத்தங்களில் இம்மாதிரி பலூன்களை அநேகமாய் உபயோகித்து வந்தார்கள். ப்ரான்ஸ் தேசத்தில் சண்டை நேரிட்ட காலத்தில், பாரிஸ் என்னும் முக்ய பட்டணத்தை எதிரிகள் சூழ்ந்துகொண்டார்கள். அக்கோட்டையில் அடைபட்டவர்கள் காகிதங்களை எழுதி பெலூனுக்குக் கட்டிப் பறக்கவிட, வெளி ப்ரதேசங்களிலுள்ள அவர்களுடைய நேசர்கள் அதைப் பிடித்து ஸமாசாரம் தெரிந்துகொண்டார்கள். ஆனால், இதேமாதிரி வெளியிலிருந்து உள்ளே யிருந்தவர்களுக்கு ஸமாசாரம் அனுப்ப முடியாமற் போயிற்று. காற்றடித்த வழியே தானே பெலூன் செல்லும். இக்கஷ்டத்தை அனுபவித்தது முதல் ப்ரான்ஸ் தேசத்தார் தாங்கள் விரும்பிய இடத்திற்குக் கொண்டுபோகக்கூடிய ஸூத்ரங்களையுடைய பலூனைக்கட்டி முடிக்க எவ்வளவோ விதமாய் ப்ரயத்தனம் செய்தார்கள்.

### டிரிஜிபில் பெலூன்.

கப்பல்களை ஸமுத்ரத்தில் ஓட்டுவதற்கு நீராவி யந்த்ரங்களை உபயோகிப்பதுபோல், பெலூன்களுக்கும் இந்த யந்த்ரங்களைக் கட்டி நடத்த முதல்முதலில் யத்தனித்தார்கள். இந்த யந்த்ரங்களெல்லாம் அதிக பளுவுள்ளவை

ளாதலால், இந்த யுக்தி ப்ரயோஜனப்படாமல் போயிற்று. இவ்வாறு இருக்க, மிகவும் லேசானதும் அதிக சக்தியுள்ளதுமான பெட்ரோலின் எண்ணெயை உபயோகித்து நடத்தும் மோட்டாரைக் கண்டுபிடித்து மோட்டார்காரைக் கட்ட ஆரம்பித்தார்கள். இதுமுதல் மோட்டாரை உபயோகித்து பலூனை நடத்த யத்தனித்து இப்போது அநேக விதமான கூண்டுகளைக் கட்டியிருக்கிறார்கள். கௌண்ட் ஸெப்பெலின் என்னும் எஞ்ஜினீயரால் கட்டப்பட்ட லேசான ஆகாயக் கப்பல் ஒன்று 8 பேரை ஏற்றிக்கொண்டு 37½ மணி நேரத்தில் 700 மைல் தூரம் சென்றதாம். அநேக இடங்களுக்குச் சென்று தான் புறப்பட்ட இடத்திற்கே சுலபமாய் வந்து சேர்ந்ததாம். இம்மாதிரியான ஆகாயக் கப்பல்களுக்கு 'டிரிஜிபில் பலூன்' என்று பெயர். இவை காற்றையும் எதிர்த்து வேகமாய்ச் செல்லும். இவைகளில் சுருட்டுப் போன்ற நீண்ட வடிவமுள்ள புகைக் கூண்டுகள் உள. இக்கூண்டுகள் உறுதியுடைய லேசான உலோகமாகிய அலுமினியக் கம்பிகளால் செய்தசட்டங்களை உள்ளே உடையன. 8-ப் பேரைத் தாங்கக் கூடிய டிரிஜிபில் ஒன்று 420அடி நீளமும் 38 அடி உயரமும் உள்ளது. இவைகளை யுத்தகாலத்தில் உபயோகிப்பதற்கென்றே அநேக மேல்நாட்டு ராஜாங்கத்தார் கட்டிவைத்திருக்கிறார்கள்.

### டிரிஜிபிலின் கஷ்டங்கள்.

இந்தபலூன்களை உபயோகிக்கும்போது சில ஸங்கடங்கள் நேரிடுகின்றன. இக்கூண்டுகள் பெரியன வாகையால், எதிரிகளின் கண்ணுக்குத் தெரியாதபடி பறக்க அதிக உயரம் செல்லவேண்டியிருக்கிறது. ஸாதாரண உயரத்தில் பறந்தால், பகைவர்கள் எளிதில் கண்டு குறிப்புப்பார்த்துச் சுட்டுவிடலாம். யுத்த காலங்களில் இவைகளில் காற்று நிரப்பியே எப்போதும் தயாராக வைத்திருக்கவேண்டும். வெயிலாலும், மற்ற ஆகாயமாறுபாடுகளாலும் கெடாதபடி இக்கூடுகளை விசாலமான பந்தோபஸ்துள்ள இடத்தில் வைத்திருக்க வேண்டும். சண்டைக் காலத்தில் இவைகளைக் காப்பாற்ற கொட்டங்களையும் சேனையுடனே எடுத்துச் செல்லவேண்டும். இவைகளில் எளிதில் தீப்பற்றி எரியும் வாயு பதார்த்தங்கள் நிறைந்திருப்பதால், ஆகாய மார்க்கமாய்ச் செல்லும்போது மின்னல் பாய்ந்ததானால் கப்பல் எரிந்து போய்விடும். இக் கப்பல் பெரிய பருமனை யுடையதாகையால், மின்னல் பாயும்படியாக ஆகாயத்திலுள்ள மின் ஸாரத்தை க்ரஹிக்கவும் சக்தியுடையதாகிறது.

### பக்ஷிகளைப்போல் பறக்க யத்தனங்கள்.

அனேக ஆண்டுகளாக, பக்ஷி ஜாதிகளைப் பறக்கும்போது கவனித்து, அம்மாதிரியாகவே இறக்கைகளைக் கட்டிக்கொண்டு அவைகளை அசைப்பதால் பறக்க அநேகர் முயன்றும், பலிக்காமல் ஏமாந்துகொண்டே வந்தார்கள். வர வர பக்ஷி ஜாதிகளைக் கவனித்துத் தெரிந்துகொண்டதென்ன? செய்த யுக்திகளெல்லாம் வீணானதென்ன வென்பதைப் பரிசோதிக்க யத்தனித்ததில், நம் தேகத்தின் அமைப்பு பக்ஷிகளைப்போல் பறக்க ஒவ்வாததென்று மனதில் பட்டது. பக்ஷி ஜாதிகள் அதிக பளுவில்லாதவை யென்றாலும், ஆகாயத்தைவிட பளுவுள்ளவைகளே. இறக்கைகளைச் சாய்வாக விரித்துவைத்துக்கொண்டு அடித்துக்கொள்வதால், அவைமேலே கிளப்புகின்றன. பின்புறத்துள்ள அகன்ற புச்சத்தை அசைப்பதால், படகுகளில் பின்புறத்துள்ள சுக்கானைத் திருப்புவதால் படகுகள் செல்லும் நேரான திசையைவிட்டுப் பக்கமாய் திரும்புவதுபோல, பக்ஷிகள் புச்சத்தின் உதவியால் வலமிடமாகவும் மேல் கீழாகவும் திரும்புகின்றன. பக்ஷிகளின் இறக்கைகள் அகன்று வழவழப்புள்ள



பரப்புள்ளவைகள் அவற்றின் எலும்புகள் போலாக இருப்பதால், அதிக வலுவுள்ளனவாகவும் லேசாகவும் இருக்கின்றன. இறக்கைகளை அடித்துக்கொள்வதற்காக அவைகள் உபயோகிக்கும் தசைகள் அதிக உறுதி உடையன. நம் கைகால்களிலுள்ள தசைகளின் சக்தியையும் நம் தேகத்தின் பளுவையும் ஒப்பிட்டுப் பார்க்க, பளுவுக்குத் தக்க தசையின் வலு பக்ஷிகளுக்கு இருப்பதைவிட நமக்குக் குறைவே என்று எளிதில் கண்டுகொள்ளலாம். இக்காரணத்தாலேயே பறப்பதற்கென்று செய்த எத்தனங்களெல்லாம் நிஷ்பலனாகிவிட்டன என்று தோன்றுகிறது. நம் தேகத்தின் எடையைக் குறைக்க முடியாதே. ஆகையால், பறப்பது முடியாததென்று கைவிட வேண்டியதுதானோ? என்று ஆலோசிக்கையில், இறக்கைகளை அசைத்துக்கொண்டேதான் பறக்கவேண்டியது என்பது அவச்யமோ? என்னும் ஸந்தேகம் தோன்றி, வேறு வழியால் பறக்க யத்தனித்தால் நல்லதென்று தோன்றிற்று. இவ்வாறு யோசித்து உடம்பில் இறக்கைகளைக் கட்டிக்கொண்டு பறக்கவேண்டுமென்ற ஆசையை ஒழித்து, வேறு யுக்திகளைப் பரிசோதித்து வந்தார்கள்.

### புதிய யுக்தி.

ஸம பரப்புள்ள ஒரு வஸ்துவை வேகமாக ஆகாயத்தில் வீசி எறிந்தால் எவ்வளவுக் கெவ்வளவு விசையாகப் பாய்கிறதோ அதற்குத் தக்கபடி அதிக தூரம் வரையில் ஆகாயத்திலேயே சென்று பிறகு பூமியில் விழுகிறதென்று நாம் அநுபவத்தில் காண்கிறோம். ஒரு தகட்டைச் சாய்வாகப் பிடித்து வேகமாய்த் தள்ள அது ஆகாயத்தால் தாங்கப்பட்டுப் பறந்து செல்லுகிற தென்பதை லேங்லே என்னும் ஸயன்டிஸ்ட் நிரூபித்த காலம்முதல், இந்த யுக்தியை உபயோகித்துப் பறக்கும் யந்திரம் கட்ட அநேகர் யத்தனித்தார்கள். பக்ஷிகள் இறக்கைகளை அடித்துக்கொள்வது போலன்றி நிலையான இரண்டு இறக்கைகளைப் பக்கத்துக்கு ஒன்றாய் சாய்வாய் வைத்துக்கொண்டும், பக்ஷிகளின் புச்சங்களைப்போல் அகன்ற துடுப்புகளைப் பின்புறமாக அசைத்துக்கொண்டும், முன் வேகமாய்ச் செல்வதற்கு மோடாரிலுள்ள விசையை உபயோகித்தும் உள்ள பறக்கும் சூஸ்த்ரப் பறவைகளைக் கட்ட யத்தனித்து, விதம் விதமான உருவங்களை அமைத்து இப்போது பறந்து வருகிறார்கள். இவைகளுக்கு ஏரோப்ளேன் என்று பெயர். (ஏர்-ஆகாயம், ப்ளேன்-தகடு). வெவ்வேறு விதமான யந்த்ரங்களை ஒப்பிட்டுச் சிறந்தது எது என்று தெரிந்தெடுக்க வென்றே ஐரோப்பாவில் அனேக ராஜாங்கத்தார் பல பறக்கும் பந்தயங்களுக்கு ஏற்பாடு செய்து ஜெயித்தவர்களுக்கு அதிக வெகுமதியும் கொடுத்து வருகிறார்கள்.



ப்ளேரியாட் மானேப்ளேன் (1)




(2)

மானேப்ளேனின் பாகங்கள்.
மானேப்ளேனின் பாகங்கள்.

A. A. இரு பக்கத்து இறக்கைகள்.
B. H. P. இறக்கைகளைத் தாங்கும் கம்பிகள்.
D. D. மேல் கீழ் செல்லச்செய்யும் புச்சங்கள்.
E. வலம் இடம் திரும்பச் செய்யும் புச்சம்.
H. முன்புறம் சுழலும் காற்றாடியின் ஒரு இதழ்.
M. மோட்டார்வைத்த இடம்.
R. மோட்டாருக்கு வேண்டிய எண்ணெய்க் கலயம்.
C. இரும்புக் குழாய்களாலாகிய கெட்டியான உடல் பாகம்.

| | |
|---|---|
| இதன் மொத்த அகலம். | 28 அடி. |
| மொத்த நீளம் | 30 அடி. |
| ஆள், எண்ணெய் உள்பட மொத்த பாரம். | 705 பவுண்டு. |
| காற்றாடியின் குறுக்களவு. | 7 அடி. |

1250 தடவை ஒரு நிமிஷத்தில் சுற்றும்.
மையத்தில் மனிதன் உட்கார்ந்திருக்கிறான்.



பார்மன் பைப்ளேன்.

(3)

ப்ளேரியாட் மானேப்ளேன்.

கீல் பறவைகளில் அநேக விதங்கள் இருக்கின்றன. 1,3 படங்களில் இரண்டு விதமான பறவைகள் வரையப்பட்டிருக்கின்றன. முதல்



படத்தில் காட்டிய மாதிரியான ஒரு யந்திரம் சென்னை ஐலண்ட் க்ரௌண்டில் 1911-ம் வர்ஷம் பிப்ரவரிமீ 17,18 தேதிகளில் காலையில் வட்டமிட்டுப் பறந்தது. இது 2000 அடி உயரம் பறந்ததாம். இதன் உருவம் பக்ஷியைப் போலவே இருக்கிற தல்லவா? இதில் ஏறிச் சென்றவர் ப்ரான்ஸ் தேசத்து மாஸ்யே டிக் என்பவர். இவர் இக்கீல் பறவையை முதல் முதல் கட்டிய ப்ளெரியாட் என்பவருடன் சேர்ந்து வேலை செய்தவர். இவர் மையத்தில் உட்கார்ந்துகொண்டு தன் பக்கத்திலுள்ள ஸூத்ரங்களால் மோட்டாரையும், புச்சங்களையும், இறக்கைகளையும் வேண்டியபடி திருப்பிக்கொண்டு சென்றார். இந்த மாதிரி யந்த்ரத்திற்கு ப்ளெரியாட் மானேப்ளேன் என்று பெயர். இதில் ஒரு தட்டுப் போலி இறக்கைகள் உண்டு. இதன் கட்டிடம் தெளிவாய்த் தெரியும்பொருட்டு 2-வது படம் வரையப்பட்டிருக்கிறது. இது பூமியில் இறங்கும்போது பூமியில் பட்டு உடைந்துபோகாத வண்ணம் ரப்பர்க் குழாய்க் கட்டுகளையுடைய சக்ரங்களின்மேல் கட்டியிருக்கிறது. இது பறக்க ஆரம்பிக்கும் போதும் இறங்கும்போதும் பக்ஷிகளைப் போலவே தோன்றும். இருதட்டுப் போலி இறக்கைகளையுடைய ஹென்ரி பார்மன் என்பவரால் கட்டப்பட்ட பைப்ளேன் (இரண்டு தட்டுகள்,) என்னும் ஸூத்ரப் பறவையின் வடிவத்தை 3-வது படத்தில் காணலாம்.

## தட்டுகளின் உபயோகம்.

காகிதக் காற்றாடிகளைச் சாய்வாகப் பிடித்துக் காற்றடிக்கும்போது முன் இழுத்தால் மேலே கிளம்புகிறதையும், காற்றடிக்காமலிருந்தபோதும் கயிற்றைப்பிடித்துக்கொண்டு முன்னால் வேகமாய் ஓடினால், மேலே போவதையும் பார்த்திருக்கிறோம். பறவை யந்த்ரத்தில் இரண்டு இறக்கைகளும் சாய்வாகவே கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பாகச் சுழலும் காற்றாடியைப்போல இரண்டு தட்டையானவும், கொஞ்சம் திருகலானவுமான சட்டங்கள் மோட்டாரின் உதவியால் அதிவேகமாய்ச் சுழலுகின்றன. இப்படிச் சுழலுவதால், காற்று வேகமாய் அடிக்க கீல்பறவை முழுவதும் முன்புறமாகத் தள்ளப்படுகிறது. சென்னையில் பறந்த யந்த்ரத்தில் காற்றாடி சுற்றினபோது 7,8 மனிதர்கள் அதைப் பின்புறமாகத் தள்ளிப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. இவ்வளவு வேகமாகச் சுற்ற ஆரம்பித்தும் அவர்கள் யந்த்ரத்தை விட்டுவிட, அது பறந்தது. இறக்கைகள் முன்னால் தள்ளப்பட்டவுடனே, காகிதப் படத்திற்குச் சொன்னபடி, இவ்விறக்கைகளும் மேலே கிளம்ப வேண்டியதுதானே? காற்றின் விசை அதிகமானால், பளுவுள்ள கதவு படங்களும் மேலே ஏறுவதுபோல், அதிக பளுவுள்ள கீல்பறவைகள் பறக்க, அதிலுள்ள காற்றாடி அதிக வேகமாய்ச் சுற்ற வேண்டியதுதானே? இறக்கைகளைத் தவிர பின்புறத்தில் சில ஸன்னத் தகடுகள் உள. இவற்றை முன்புறத்து உட்கார்ந்த மனிதன் சில கம்பிக் கோர்வைகளால் எளிதில் திருப்பலாம். இவற்றில் இரண்டு வலம் இடம் திரும்பவும், வேறிரண்டு மேல் கீழாகப் பாயவும் உதவும். மெல்லிய இரும்புக் குழாய்களையும் ஸன்னச்சட்டங்களையும் வேண்டியபடி கட்டி மெழுக்குத் துணியால் போர்த்து இறக்கைகளைச் செய்கிறார்கள். இத்துணி வழவழப்பாய் இருப்பதால், மேல்படும் காற்றை சுலபமாய்த் தள்ளிக் கொண்டு செல்லலாம்.

## கீல் பறவைகளின் நடு நிலைமை.

காகிதப் படங்களில் கயிறு ஸரியான இடத்தில் கட்டியிராவிட்டாலும், வால் தகுந்த பளுவில்லாவிட்டாலும், பளு வித்யாஸத்தால் படம் தத்தளித்து தலை கீழாகச் சுழலுவதைப்

போல் இந்த யந்திரம் சுழன்றால், பிரயாணமெல்லாம் வீணாகுமல்லவா? காற்றடிப்பதாலும், யந்திரம் வலம் இடம் திரும்புவதாலும், மையநிலை தப்பி குடை சாயாதபடி, யந்த்ரத்திலுள்ள பளுவை முன்னதாகவே கணக்கிட்டு ஸரியான இடங்களில் வைத்திருப்பார்கள். திடீரென்று காற்றடித்தாலும் தள்ளாடாமல் இது செல்லவேண்டியது அத்யாவசியமல்லவா?

ஸூத்ரப் பறவைகளின் சிறப்பு.

இவை பெலூன் கூண்டைவிட அதிகச் சிறியனவாக இருப்பதுமன்றி, மேலேகொஞ்ச தூரமாகப் பறந்தாலும், எதிரிகளின் கண்ணிற் படாமலும், அவர்கள் சுட்டுவிடாமலும் எளிதில் செல்லலாம். வண்டிகளைப்போல வேண்டுமானபோது உடனே உபயோகிக்கலாம். காற்றால் நிறப்பிவைத்திருக்கவேண்டுமென்பது இல்லை. சிறியதாகையால், உபயோகப்படாதபோது வீட்டிற்குள் கொண்டு வைத்துவிடலாம். விளக்கினாலும் மின்னலாலும் அபாயம் ஒன்றும் இல்லை. மற்றெந்த விதத்திலும் இவ்வகைப் பறவை யந்திரங்கள் டிரிஜிபில்களைவிட மேலானவையென்று சொல்லலாம். என்றாலும், இவ்விரண்டுவித வாகனங்களையும் கைவிடாமல் நாளுக்குநாள் சீர்திருத்தங்கள் செய்துகொண்டே வருகிறார்கள்.

ஸாராம்சம்.

ஆகாய விமானங்கள் காற்றைக்காட்டிலும் லேசானவையும், காற்றைக்காட்டிலும் கனமானவையும் ஆக இரண்டு விதங்கள் உள. கனமானவைகளை ஏரோப்ளேன் என்றும், மற்ற மாதிரியானவைகளை டிரிஜிபிள் என்றும் சொல்வார்கள். 1660-ம் வர்ஷத்தில் அல்லர்ட் என்பவரும், 1678-ல் பெஸ்னியர் என்பவரும் ஆக இரண்டு ப்ரெஞ்ச்சுக்காரர்கள் காற்றைப் பார்க்க கனமுள்ள யந்த்ரங்களில் மேலே பறக்க முயன்றதாகவும், கொஞ்சங் கொஞ்சம் அவ்விஷயத்தில் ஜயமடைந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கப்புறம், சில வர்ஷங்கள் வரையில் வேறு ஒருவரும் யாதொரு ப்ரயத்னமும் செய்ததாகத்தெரியவில்லை. 1783-ம் வர்ஷத்தில் மாண்ட்கோல்ப்பர்ன் ஸகோதரர்களும், ராபர்ட் ஸகோதரர்களும் காற்றைக் காட்டிலும் லேசான கருவிகளில் பறக்கமுயன்றார்களாம். மாண்ட் கோல்ப்யர் ஸகோதரர்கள் ஒரு பலூனில் (புகைக் கூண்டில்) நிறைய சூடான காற்றையடைத்தார்கள். காற்று சூடுகொள்ளும் பக்ஷத்தில் அது லேசாகி மேலே எழும்பும். ஆகவே பெலூனும் மேலே ஏறும். ஆனால், ராபர்ட் ஸகோதரர்கள் ஹைட்ரோஜன் என்ற லேசான வாயுவையே உபயோகித்தார்கள். இதன்பின் சிற்சில முயற்சிகள் செய்யப்பட்டன. முதல் முதலாய் 1850-ம் வர்ஷத்தில் 'கிப்பர்ட்' என்ற ஒருவர் 'டிரிஜிபிள்', அதாவது வேண்டியபடி திருப்பக்கூடிய பெலூனைச் செய்தார். அது நீராவியின் விசையினால் ஓட்டப்பட்டது. இப்பொழுது, இம்மாதிரி பலூன்களும் ஏரோப்ளேன்களும் 'பெட்ரோல்', என்னும் எண்ணெயைக்கொண்டு இயக்கப்படும் எஞ்ஜினால் ஓட்டப்படுகின்றன.

## DIRIGIBLES.

### டிரிஜிபில்கள்.

டிரிஜிபில்கள் காற்றைக் காட்டிலும் லேசான வகுப்பைச் சேர்ந்தவையென மேலே சொன்னோம். அது பார்வைக்கு, ஒரு பெரிய ஸிகார் அதாவது, புகைச் சுருட்டைப்போல் இருக்கும். மேல்பாகமெல்லாம் நிறைய லேசான காற்று அடைக்கப்பட்டிருக்கும். கீழே, தொட்டில் போன்ற பாகத்தில், இடம்வலம் திருப்ப யந்த்ரங்களும், மேல் கீழ் போவதற்குரிய ஸூஸ்த்ரங்களும் இருக்கின்றன. ஒரு காற்றை சுடப்படுத்தினால், அது முன்னிருந்த பரிமாணத்தைவிட ஜாஸ்தியாகிறது. அல்லாமல், அதைக் குளிரச்செய்தால், முன்னிருந்த பரிமாணத்தைப் பார்க்கக் குறைந்துவிடுகிறது. டிரிஜிபில் அதிக உயரத்தில் பறக்கும்பொழுது, ஸூர்ய வெப்பத்தினால் மேல்சொன்ன விதிப்படி அதில் அடைத்திருக்கப்பட்ட காற்று விசாலமாகும். அதை ஒரு பையில் அடைத்திருப்பதால், காற்று விசாலமாகும்போது, அந்தப் பை வெடித்துவிடும். அப்படி வெடிக்காமலிருக்க சிற்சில 'வால்வ்' என்று சொல்லப்பட்ட வாய்கள் பையில் அமைத்திருக்கிறார்கள். காற்று விசாலமானால், பை தாங்குவதற்குமேல், அதிகமான காற்று வெளியில் போய்விடும்.

இதற்குப் பதிலாய், தற்காலத்து டிரிஜிபில்களில், காற்றுப்பையின் நடுவில் 'பலோனெட்' என்று சொல்லப்பட்ட காற்றடைத்த சிறிய பையொன்று வைத்திருக்கிறார்கள். பெரிய பையிலுள்ள லேசான காற்று விசாலமாகும்பொழுது, பலோனெட்டிலுள்ள காற்று வேண்டியவளவு கொஞ்சங் கொஞ்சமாக வெளிவந்துவிடும்.

பெரிய டிரிஜிபில்களில் இப்படிப்பட்ட அனேக பலோனெட்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

ஸூர்ய வெப்பத்தில் டிரிஜிபில் பறந்து, அதன் பிற்பாடு மரநிழலுக்கு அருகில் வந்தால், டெம்பெரேச்சர் அதாவது சீதோஷ்ணம் குறைந்திருக்கும். அப்பொழுது, பையிலுள்ள காற்று சுருங்கிவிடும். அப்பொழுது, சுருங்கின இடத்தில் வேறு புதுக்காற்றை அடைக்கவேண்டும். அதற்காக, டிரிஜிபிலில் வைத்திருக்கப்பட்ட ஒரு விசிறியை என்ஜினால் திருப்புவார்கள். அப்பொழுது, பலோனெட்டில் ஜாஸ்தி காற்று அடைக்கப்படும். உடனே, பலோனெட்டின் பரிமாணம் அதிகமாகும். இதின் பரிமாணம் அதிகமாவதும், பெரிய பையின் பரிமாணம் குறைவதும், இவையிரண்டும் சேர்ந்து பெரிய பையின் பரிமாணம் அதிகம் வேறுபாடில்லாமல் இருக்கும்.

டிரிஜிபில்கள் ஆகாயத்தில் எவ்வளவு நேரம் பறக்கக் கூடுமென்பது, பையிலிருந்து லேசான காற்று வெளியில் ஒழுகிப்போகும் தன்மையைப் பொருத்தது.

### டிரிஜிபில்களின் விதங்கள்.

டிரிஜிபில்கள், காற்றைக்காட்டிலும் கனமான ஏரோப்ளேன்களைப்போல அவ்வளவு பூர்த்தியான ஸ்திதிக்குக் கொண்டுவரப்படவில்லை. சுழல்காற்று, அல்லது பலமான காற்றடிக்கும் இடத்தில் அகப்பட்டுக் கொண்டால், டிரிஜிபில்களுக்கு எளிதில் அபாயம் நேரிடும். இந்த ஆபத்தைத் தாங்க, சில யுக்திகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்நூதனங்களை உபயோகப்படுத்திக் கட்டப்பட்ட டிரிஜிபில்கள் 'ப்ளெக்ஸிபில்' டிரிஜிபில் என்றும் 'ரிஜீட்' டிரிஜிபில் என்றும் 'ஸெமிரிஜிட்' டிரிஜிபில் என்றும் மூன்று வகைப்படும்.

'ப்ளெக்ஸிபில்' டிரிஜிபிலின் பக்கங்களெல்லாம் காற்றடித்தால் வளையக்கூடிய ஸாதனத்தால் செய்யப்பட்டவை. 'ரிஜிட்' டிரிஜிபிலோ, அனேக பலமான பலோனெட்கள் வைக்கப்பட்டு ரொம்ப கனத்த ஸாதனத்தால் மூடப்பட்டிருக்கும். இந்த இரண்டு மாதிரிகளுக்கும் நடுவாக, "ஸெமி (பாதி) ரிஜிட்" என்றவைகளையும் கட்டிவருகிறார்கள். இவை, 'ப்ளெக்ஸிபில்' டிரிஜிபிலைப்போல அவ்வளவு காற்றுக்கு இணங்கவுமாட்டா; 'ரிஜிட்'டைப்போல அத்தனை கனமாயிருக்கவுமாட்டா. இரண்டிற்கும் நடுத்தரமாயிருக்கும்.

### ஜெர்மானியருடையவும் இங்க்லீஷ்காரருடையவும் டிரிஜிபில்கள்.

ஜெர்மானியர்கள் அநேகமாய் 'ரிஜிட்' டிரிஜிபில்களையே கட்டிவருகிறார்கள். இங்க்லீஷ்காரரும் ப்ரெஞ்ச்சுக்காரரும் முக்யமாய் 'ஸெமி-ரிஜிட்'களையே செய்துவருகிறார்கள். ஸெமி

ரிஜிட்களின் முக்ய அனுகூலம் என்னவென்றால், பெருங் காற்றடிக்கும்போது வேண்டிய அளவு அவைகளின் பக்கங்கள் இணங்கிக் கொடுக்கும். ஆனதினால், ரிஜிட் டிரிஜிபில்களைப் போல எளிதில் நாசமடையா.

## ஸெப்பலின்கள்.

ஸெப்பலின் என்னும் ஒரு ஜெர்மன் ப்ரபு ஆகாய விமானங்களைப்பற்றிய கல்வியில் மிகச் சிறந்தவர். ஜெர்மனியின் தரைப்படையுடன் ஆகாய ஸைன்யங்களையும்நன்றாய் வ்ருத்திபெறச்செய்து சேர்க்கவேண்டுமென்ற அவாவுடன், அவர் வேலை செய்துவருகிறார். அவர் கண்டுபிடித்த ஆகாய விமானத்திற்கு அவர் பெயரே இடப்பட்டிருக்கிறது. அதை ஸெப்பலின் என்றே சொல்லுவார்கள். ஸெப்பலின் நாம் முற்கூறிய டிரிஜிபில் பலூன்தான். டிரிஜிபில் பலூனைக்காட்டிலும் எவ்வளவோ பெரிதாக அதன் பக்கங்கள் கெட்டியான ஸாமான்களால் கட்டப்பட்டது.

ஸெப்பலின்களில், 'வயர்லெஸ் டெல்லிக்ராப்'பும் ஏற்படுத்தி யிருக்கிறார்களாம். ஏகதேசம், 300-மைல்கள்வரை அதின் மூலமாய் தந்தி ஸமாசாரங்கள் அனுப்பக்கூடும்.

ஸெப்பலின் ஐந்நூறு மைல்தூரம் ஒரே தடவையில் போய்வரக்கூடும். ஆகையால் ரொம்பதூரம் போய், சத்ருக்களின் படைகள் ஓரிடத்திலிருந்து மற்றவிடத்துக்கு போவதை அறிவதற்கும், தொலைக்கப்பால் கடலில் சண்டை நடக்கும்பொழுது தங்கள் ராஜ்யத்து படைக்கப்பல்களைக் காத்து உதவி புரிவதற்கும், ஸெப்பலின் ரொம்ப உபயோகப்படும். மேலும் ஏரோப்ளேன்களைக் காட்டிலும் ஸெப்பலின் அதிகம் சுமை தாங்கக்கூடியது. டிரிஜிபிலில் ஸுமார் முப்பது டன் கனம் கொண்டுபோகலாம். ஆகையினால், பீரங்கிகளும், நிறைய வெடிமருந்தும், அதிகம் ஆட்களும் ஏறிச் செல்லக்கூடும். இங்க்லீஷ்காரரது டிரிஜிபில் ஸெப்பலினைக் காட்டிலும் வெகு சிறியதாகவும், அதன் மேல்மூடி வளையும்படியான ஸாதனத்தாலும் செய்யப்பட்டிருக்கிறது. பெரிய புயல்காற்றின் நடுவில் ப்ரிட்டிஷாரது டிரிஜிபில் அகப்பட்டால், எளிதில் கேடு வராது. ஸெப்பலினானால், சீக்ரம் வெடித்துவிடலாம்.

## ஏரோப்ளேனுக்கும் டிரிஜிபிலுக்கும் உள்ள தாரதம்யம்.

(1) ஏரோப்ளேனைப் பார்க்க டிரிஜிபில் அதிகம் செலவு பிடிக்கும்.

(2) ஏரோப்ளேன் ஸராஸரியில் மணிக்கு 75-மைல் பறக்கும்; அதிகவேகமாய்ச்சென்றால் டிரிஜிபில் 45-மைல்களுக்குமேல் போவது வருத்தம். ஆகையால், யுத்தத்தில் ஓடியாடி ஸமாசாரம் கொண்டுவர, ஏரோப்ளேனே ரொம்ப லாயக்கானது.

(3) ஏரோப்ளேன் டிரிஜிபிலைக்காட்டிலும் லேசானது. ஆகையால் ஓடியாடி சத்ருக்களின் நடமாட்டங்களை அறிந்துவர, ஏரோப்ளேனே ச்ரேஷ்டம்.

(4) ஓரிடம்விட்டு வேறிடத்துக்குக் கொண்டுபோகவேண்டுமானால், ஏரோப்ளேனை வெவ்வேறு பாகமாய்ப் பிரித்து சிறிதாய் பாக் பண்ணிவிடலாம்; இல்லாமற்போனால், அதன் சிறகுகளை மடக்கி, அதை ஒரு மோட்டார் வண்டியுடன் சேர்த்து கட்டிவிட்டால், எளிதில் இழுத்துக்கொண்டு போய்விடும்.

(5) டிரிஜிபில் அதிக பரிமாணமுள்ளதாயும் அதிக வேகமில்லாததாயும் இருப்பதால் அதை கீழே இருந்து குண்டுபோட்டு எளிதில் நாசப்படுத்திவிடலாம். ஏரோப்ளேன்களோ, சிறியவையாயும் துரிதமாயும் மேலேயும் கீழேயும் ஓடி, குண்டுக்கு அகப்படாமல் தப்பிக் கொள்ளக்கூடும்.

(6) டிரிஜிபிலின் கட்டு நுட்பமானது. ஆகையால் ஒரு குண்டுபட்டாலும் நாசமாகக்கூடியது. ஏரோப்ளேனிலோ அவச்யமான பாகங்கள் சிலவே யாகையால் மற்ற பாகங்களில் குண்டுபட்டாலுங்கூட அவைகள் லகுவில் நாசமடையா.

ஆனால், சில விஷயங்களில், டிரிஜிபிலே ஏரோப்ளேனைக்காட்டிலும் மேன்மையானது.

(1) டிரிஜிபிலை ஆகாயத்தில் உயரத்தில் கொண்டுவந்து, என்ஜினை நிறுத்தி, ஒரே இடத்தில் நின்று, சத்ருவின் நடமாட்டங்களைத் தெரிந்துகொள்ளவும், திடீரென பட்டணங்களிலும் எதிர் பட்டாளக் கூட்டத்திலும் வெடிகுண்டை திட்டமாய்ப் போடவும், ஏரோப்ளேனைவிட டிரிஜிபிலே மேன்மையானது.

(2) ஏரோப்ளேனைவிட டிரிஜிபில் அதிக தூரம் ப்ரயாணஞ்செய்யும். புது ஸெப்பலின்கள் 1000-மைல்கள் போகும்.

(3) புதிதாய்க் கட்டப்பட்ட டிரிஜிபில் ஒரே தடவையில் 48-மணிநேரம் ஆகாயத்தில் இருக்கும்.

(4) டிரிஜிபில் ஏரோப்ளேனைப் பார்க்க அதிக கனத்தைச் சுமந்துகொண்டு போகக்கூடும். புதிதாய்க் கட்டப்பட்ட ஸெப்பலின் என்னும் டிரிஜிபில்கள் 30-டன் நிறையை சுமந்துகொண்டு பறக்கக்கூடும்.

(5) டிரிஜிபிலுள்ள பீடங்கள் அசையாமல் வெகு கனமாய் கட்டப்பட்டிருப்பதால், வயர்லெஸ் டெல்லிக்ராப் ஏற்படுத்திக்கொள்ளவும், பீரங்கியை வைத்துச் சுடவும், அவை ரொம்பவும் ஏற்றவை.

(6) ஏரோப்ளேன்களில் அநேகமாய் ஒரே என்ஜின்தானிருக்கும். இது வேலை செய்யாமல் நின்றுவிட்டால், ஏரோப்ளேன் காற்றைவிட பளுவானதால் ஆகாயத்தில் தங்க முடியாமல் கீழே வந்தே தீரவேண்டும். டிரிஜிபில்களிலோ, பல என்ஜின்கள் இருக்கும். ஆகவே, அவைகளில் ஒன்று கெட்டுப்போனாலும் பாதகமில்லை.

டிரிஜிபில் சாதாரணமாய் 5000 அடி உயரத்திற்குமேல் போகாது. புதிதாய்க் கட்டின ஸெப்பலின் பதினாயிரம் அடிக்கு மேல் கூட போகமுடியுமாம்; ஆனால் அப்படி ரொம்ப நாழிகைபறக்க முடியாதாம். ஏரோப்ளேனோ ஸாதாரணமாய் பூமியிலிருந்து 7000 அடிக்குமேல் பறக்கக்கூடும். ஸாமர்த்யமுள்ள ட்ரைவர் ஓட்டினால், 7000 அடி உயரம் போய், டிரிஜிபிலைச்சுட்டு விடலாம்.

இனிமேல் உண்டாகும் யுத்தங்களிலெல்லாம் ஆகாயப்போர்களே யுத்தத்தில் ஜயம் அபஜயத்தை தீர்மானப்படுத்துமென ஆகாய விமான விஷயங்களில் நிபுணர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். தற்காலம் நடக்கும் ஐரோப்பிய சண்டையில்தான் இவைகளை வெகுவாய் உபயோகிப்பதால் இந்த விஷயத்தில் இப்போது ஒன்றும் திட்டமாய்ச்சொல்ல முடியாது. இந்த யுத்தத்தில் நடக்கும் குணதோஷங்களை சரியாய் தெரிந்தபின்னரே, ஆகாய விமானங்கள் சண்டையில் எவ்வளவு ப்ரயோசனப்படுமென்பதை திட்டமாய்ச் சொல்லலாம்.

## USES OF THE ÆROPLANE.

## ஏரோப்ளேனின் ப்ரயோஜனம்.

ஸைன்யங்கள், யுத்தகளத்தில் அங்குமிங்கும் வெவ்வேறு பிரிவுகளின் நிலையைமாற்றி கொண்டிருக்கும் பொழுது, ஒவ்வொரு பக்கத்து ஸேனாதிபதிக்கும் எதிர்ப்பக்கத்துத் தலைவன் எங்கு இருக்கிறான், அவனது ஸேனைகள் எப்படி நிறுத்தப்பட்டிருக்கின்றன, அவனது பலமற்ற பாகம் எது, எந்தப்பக்கமாய்ப் போய் எதிர்த்தால் எளிதில் விரோதியை வெல்லலாம், ஆகிய இவைகளை அறிவதே முக்யக்கருத்து. ஆனால், ஒவ்வொருதலைவனுக்கும் அவன் விரோதியின் நிலைமையைத் தெரிந்து கொள்ள வெகு ஆசையிருந்தபோதிலும், கூடுமானவரையிலும் தன் ஸ்திதியை சத்ரு எவ்விதமும் அறியாமல் பாதுகாத்துக்கொள்வதே இரு

வருடைய கருத்தும். இதற்காக, காலாள், பீரங்கி, குதிரைப்படை ஆகிய இவைகளையெல்லாம் எங்கெந்த வழிகளிலெல்லாம் மறைத்துவைக்கக் கூடுமோ, அப்படிக்கெல்லாம் ப்ரயத்னங்கள் செய்து வருவார்கள். இப்படி முப்பது நாற்பது ஆயிரம் ஸைன்யங்களைக் கூட தெரியாமல் மறைத்து வைக்கலாம். பூமியில் ஸ்வேச்சையாய் உள்ள மறைவு ஸ்தலங்கள், மரம், வீடு, குன்று, ஆகிய இவைகளையெல்லாம் படைகளை ஒளித்து வைப்பதற்கு உபயோகித்து வருகிறார்கள்.

முன் காலத்தில் எதிரியின் ஸ்திதியை அறிய குதிரைப்பட்டாளத்தை அனுப்பிவித்து, தூது அறிந்து வந்தார்கள். இப்பொழுது ஏரோப்ளேன்களை தாராளமாய் இவ்விஷயத்துக்கு உபயோகித்து வருகிறார்கள். குதிரைப் பட்டாளம் மூன்று நாட்களில் அறியும் ஸமாசாரங்களை இப்பொழுது ஏரோப்ளேனைக் கொண்டு இரண்டு மூன்று மணி நேரத்தில் அறிகிறார்கள்.

இனிமேல் நடக்கும் போர்களில், ஏரோப்ளேன்கள் ஏராளமாய் உபயோகப்படும். தூது அறிவது மாத்ரமல்ல, ஒவ்வொரு ஏரோப்ளேனும் தன்னைப்போல தூது அறியவரும் எதிரியின் விமானங்களினின்று காத்துக்கொள்ளவும் வேண்டும்; சில ஸமயங்களில் இருபக்கத்து ஏரோப்ளேன்களுக்குள்ளேயே சண்டை நடந்தாலும் நடக்கலாம். ஏனென்றால் ஒரு ஸேனாதிபதிக்கு ஏரோப்ளேன் துப்பறிய எவ்வளவு உபயோகமாகுமோ, அவ்வளவு உபயோகமாகும் அது சத்ருவின் ஏரோப்ளேன் தன் ஸங்கதிகளை அறியாமல் தடுக்க. கடல் சண்டையிலும், துப்பறிவது முக்யம்.

ஒரு பெரிய கோட்டையை முற்றுகை போடும் பொழுதுகூட, ஏரோப்ளேன் வெடி குண்டை கோட்டைக்குள் போட்டு, நாசத்தையும் குழப்பத்தையும் விளைவிக்கும்.

யுத்தக்கப்பல்கள் எங்கே ஸப்மரீன் தங்களைத் தாக்கிவிடுமோவென்று ஸதாபயந்துகொண்டு இருக்கவேண்டும். கப்பலின் மேல்தட்டிலிருந்து பார்த்தாலும் ஸப்மரீன் எவ்விடம் இருக்கிறதென்பதைக் கண்டு பிடிப்பது அரிது. ஆனால் ஸப்மரீன் ஜலத்திற்குள் அதி பாதாளத்தில் மூழ்கியிருக்கவும் முடியாது. அதன் பெரிஸ்கோப்பின் மேல்பாகம் கடல் ஜலமட்டத்திற்குமேல் இருக்கவேண்டியது அவச்யம். ஆகையால் மேலே ஏரோப்ளேனிலிருந்து பார்த்தால் வெளியே தெரிகிற பெரிஸ்கோப்பைக் கொண்டு ஸப்மரீனை உடனே அறியலாம். ஆகையினால், கப்பல்களுக்கு தங்கள் பக்கத்து ஸப்மரீனின் நடமாட்டங்களைத் தெரிவிக்க, ஏரோப்ளேன் உபயோகப்படும். தவிர, ஏரோப்ளேனிலிருந்து எதிரியின் ஸப்மரீன்மேல் குண்டைப்போட்டு அதை நாசப்படுத்திவிடலாம். ஆகவே ஏரோப்ளேன் ஸப்மரீனின் முக்ய சத்ரு.

வெட்ட வெளிச்சமான பெரிய மைதானத்தில் சண்டை நடக்குங்கால், தூது அறிவது மிக எளிது. கூட்டங் கூட்டமாக, சோலைகள், மரங்கள் போர்க்களத்தில் வளர்ந்திருக்குமாகில், ஆகாயத்திலிருப்பவனுக்கு ஒன்றும் தெரியாது. இனிமேல், கோட்டைகளைச் சுற்றியும், போர் நடக்கக்கூடிய களத்தைச் சுற்றியும் பெரிய மரங்களை நட்டு வளர்ப்பாரெனத் தோன்றுகிறது.

## ARTILLERY TO ATTACK AIR CRAFT.

### ஆகாய விமானங்களை சுட பீரங்கிகள்.

ஆகாய விமானங்களை பூமியிலிருந்தே சுட, ப்ரத்யேகமான பீரங்கிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வித பீரங்கிகள் மூன்று விதமாகும். முதலாவது, ஸாதாரண பீரங்கிகளைப் போல், தரையில் வைத்துச்சுடப்படும் பீரங்கிகள். இரண்டாவது, மோட்டார் வண்டியிலேற்றி விமானங்கள் இருக்குமிடத்தை நோக்கிச்சென்று வெடி தீர்க்கும் பீரங்கிகள்; மூன்றாவது, கப்பல்களிலிருந்து சுடச் செய்யப்பட்ட பீரங்கிகள்.



கடைசியில் சொல்லிய இருவகை பீரங்கிகளையும், இணைத்திருக்கும் பீடங்களுடன் நாலாபக்கமும் சுற்றலாம் முதலாவது மாதிரி பீரங்கிகளை சக்ரத்துடன் திருப்பக்கூடும். இந்த வகுப்பைச் சேர்ந்த பீரங்கிகளிலிருந்து சரியான பலன் அடையவேண்டுமானால், அவைகளை ஆகாயத்தைப் பார்த்து 70 டிக்ரி கோணத்தில் வைக்கவேண்டுமாம். இப்படி வைக்கத்தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

மேலே சொல்லிய பீரங்கிகளின் வாயளவு மிகச் சிறியது. ஆகவே, வெளிவரும் குண்டின் அளவும் சின்னதே. எவ்வளவுக்கெவ்வளவு குண்டு சிறியதோ, அவ்வளவுக்கவ்வளவு அது உயரப் போகும்.

ஒரு டெல்லஸ்கோபினால், ஆகாய விமானம் பறக்கும் இடத்தையும், வேறொரு சூஸ்த்ரத்தினால் அதற்கும் பூமிக்கும் உள்ள தூரத்தையும் அறிந்துகொள்ளலாம். இத்தனை தூரத்துக்கப்பால் ஒரு ஆகாயவிமானம் பறந்தால், அதை குண்டினால் சுட பீரங்கியை இத்தனை 'ஆங்கிலில்' அதாவது கோணத்தில் திருப்பி, வைக்க வேண்டுமென்று அறிந்து காலதாமதமில்லாமல் சுட்டுவிடலாம்.

டிரிஜிபிலின்மேல் குண்டுபட்டால்கூட, அது அதிகமாய் நாசமடையாமல் தப்பிவிடும். ஏனென்றால் குண்டு பண்ணின ஓட்டை வழியாய் டிரிஜிபிலிலுள்ளகாற்று கொஞ்சங்கொஞ்சமாய் வெளியே போய் விடுவதற்குள் டிரிஜிபிலை கீழே பூமிக்கு இறக்கிவிடலாம். ஆகையினால் பலூனின் உள்ளே போயேவெடிக்கும் புது மாதிரி குண்டுகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்பொழுது டிரிஜிபிலுக்கு நாசம் விளைவது நிச்சயம். ஏனென்றால், பலூனுக்குள் குண்டு வெடித்ததும், அதற்குள்ளேயுள்ள லேசான காற்று தீப்பிடித்து எல்லாம் எரிந்து போகும். மேல் விவரிக்கப்பட்ட பீரங்கிகளும், இம்மாதிரி குண்டுகளும் ஜெர்மன் க்ரூப்சாலையில் செய்யப்படுகின்றனவாம்.

மேலும், அந்த குண்டுகள் பீரங்கியிலிருந்து புறப்பட்டு விமானத்தைப் போய்த்தாக்கும் வரையிலும் அவைகளிலிருந்து ஒருவித புகை உண்டாகிறது. அந்தப் புகையை உற்று நோக்கி, விமானம் நாசமடைந்ததாவெனத் தெரிந்து கொள்ளலாம். ராத்ரிகாலமானால், அந்தப்புகையுடன் உண்டாகும் தீயினால் விமானம் நாசமடைந்ததாவென்பதை அறியலாம். அந்த குண்டு விமானத்தைத் துளைக்கும்பொழுதுதான் வெடிக்கும்.

முதலாவது சொன்ன ஸாதாரண பீரங்கி 2·6 அங்குலம் வாயளவுள்ளது. அதன் கனம் 775-ராத்தல். அதற்கான வாஹன அமைப்பின் கனம் 1150-ராத்தல். இந்த பீரங்கியை முன் சொன்னதுபோல 70 டிக்ரீ வரை ஆகாயத்தைப்பார்த்து வைக்கலாம் அதன் குண்டின் கனம் 9-ராத்தல். ஒரு ஸெக்கண்டுக்கு 2050 அடி வேகத்துடன் அது பீரங்கியிலிருந்து புறப்படும். இப்படிப் போகும் குண்டு 28,550 அடி தூரமும், 18,800 அடிஉயரமும் போகும்.

இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த பீரங்கி ஸாதாரணமாய் 3-அங்குல வாயளவுள்ளது; அது பெரிய மோட்டார் வண்டியில் ஏற்றிக் கொண்டு போகப்படும். இந்த பீரங்கியை மெதுவாயோ அல்லது சீக்ரமாயோ, எப்படி வேண்டுமோ அப்படித் திருப்பிக்கொள்ளலாம். ஆகாய விமானங்கள் வெகு வேகமாய்ப் பறப்பதால், பீரங்கிகள் சீக்ரம் திருப்பக்கூடியவையாயிருக்கவேண்டியது அவச்யம். இந்த மாதிரி பீரங்கியின் கனம் 990 ராத்தல். அதன் வாஹன அமைப்பின் கனம் 1550 ராத்தல், ஆக மொத்த பளு 2540 ராத்தல்,

இந்த பீரங்கியை 75 டிக்ரீ வரையில் ஆகாயத்தைப் பார்த்துவைக்கலாம். இதன் குண்டு 30,000 அடி தூரமும் 20,000 அடி உயரமும் போகும். இந்த பீரங்கியைச் சுமந்து போகும் மோட்டார்கார் மிகவும் செங்குத்தானகுன்றுகளிலும் எளிதில் ஏறுமாம். மெஷீன் ஒடிந்துவிட்டால் ரிபேர்செய்வதற்கு வேண்டிய ஸாமான்களை வண்டியிலேயே வைத்திருக்கிறார்கள்.

மூன்றுவதாய்ச்சொன்ன பீரங்கி முதல் இரண்டுவகுப்பு பீரங்கிகளைக் காட்டிலும் வெகு பளுவானது. இதன் வாயளவும் ஜாஸ்தி (4·2 அங்குலம்). ஸாதாரணமாய், இந்த பீரங்கியை டார்பிடோ போட்டுகளிலும், விரைவாய் ஓடிச்செல்லும் க்ரூஸர்களிலும் வைப்பதுண்டு. பீரங்கியின் கனம் 3080 ராத்தல். அதன் வாஹன அமைப்பின் கனம் 3520 ராத்தல். ஆகமொத்தம் 6,600 ராத்தல் கனம். ரொம்ப உயரத்தில் திருப்பினால், 75 டிக்ரீ வரையில் ஆகாயத்தைப்பார்த்து வைக்கலாம். இதன் குண்டு 40 ராத்தல்கனமுள்ளது. ஆரம்பத்தில் ஸெக்கண்டு ஒன்றுக்கு 2,300 அடி விதம் வேகம் போகும். அதுபோகும் தூரம் 44,500 அடி. ஜாஸ்தியாய் போகக்கூடிய உயரம் 37,620 அடி.

மேல்சொல்லிய விவரங்களெல்லாம் பரீட்சையில் ஏற்பட்டவைகள். சண்டையில் எவ்வளவுதூரம் இவைகள் ப்ரயோஜனப்படும் என்பது இனிமேல் ஏற்படவேண்டும்.

## LIGHT HOUSES FOR AIR CRAFT.

### ஆகாய விமானங்களுக்கு விளக்குக் கூண்டுகள்.

ஸமுத்ரத்திலுள்ள கப்பல்களுக்கு துறைமுகங்களைக் காட்ட விளக்குக் கூண்டுகள் ஏற்பட்டிருப்பதுபோல, இரவு காலத்தில் ஏரோப்ளேன்களை உபயோகிக்க நேரிட்டால், அவைகளுக்கு வழிகாட்ட தீபஸ்தம்பங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உயரமான மலைகள்மேல் அவை மோதாமலிருப்பதற்கும், பெரிய பள்ளத்தாக்கில் காற்று குறைந்திருக்குமிடங்களில் அகப்படாமலிருப்பதற்கும் தீபஸ்தம்பங்கள் அதிக உபயோகமானவை. இன்னொரு உபாயமும் செய்வதாகத் தெரிகிறது. பாஸ்பரஸ் என்ற வஸ்து சேர்ந்த சில வர்ணங்களை சுவரின்மேல் தடவினால், இருட்டான ஸமயத்தில்அவை தாமே ப்ரகாசிக்கின்றன. இவைகளை வீடுகளின் கூரைமேல் மெழுகிவிட்டால், ராத்ரியில் ஒளி வீசும். உயரப் பறக்கும் விமானங்களுக்கு, வழி காண்பிக்க இது ஒரு நல்ல வழியாகும்.

## MESSAGES FROM ÆROPLANES.

### ஏரோப்ளேனிலிருந்து ஸமாசாரம்.

ஏரோப்ளேன்களில் கம்பியில்லாத் தந்தி அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று ஏற்கனவே சொன்னோம். சில ஸமயங்களில் அவை உபயோகப்படுவதில்லை. அப்பொழுது ஏரோப்ளேனிலிருந்து கீழிருப்பவர்க்கு ஸமாசாரங்களைத் தெரிவிக்க, ஒரு புதிய யுக்தி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. குழாய் போன்ற ஒரு கருவியில் கடிதத்தை எழுதி அடைத்து, விடுவார்கள். அந்தக் குழாயின் கீழ்பாகத்தில் உருக்கின ஈயத்தை விட்டிருக்கிறார்கள். ஆனதினால், அது கையிலிருந்து விட்டவுடன், நேரே தரையில் வந்து விழும். அதற்குள் ஒரு பாகத்தில், வெடிமருந்து போன்ற 'பெங்கால்-பயர்' என்ற ஸாதனம் இருக்கிறது. குழாய் பூமியில் விழுந்தவுடன், அந்த ஸாதனம் தீப்பற்றி யெரிகிறது. ஆகையினால், கடிதம் வந்து விழும் இடத்தை 300 கஜ தூரத்திலுள்ள ஒரு ஸோல்ஜர் இரவிலும் பகலிலும் உடனே கண்டுபிடித்து, அருகில் போய் எடுத்துவிடலாம். கடிதம் மாத்ரமல்ல, சத்ருவின் பட்டாளங்களை நிறுத்தியிருக்கும் இடங்களைக் குறிப்பிட்டு ஒரு படம் வரைந்து குழாய்க்குள் போட்டு அனுப்பிவிடவும் கூடும்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

### வித்யாவிஷயம்.

**Industrial Education.**

கைத்தொழில் கல்வி.—கைத்தொழில் கல்வியைப் பற்றி பரிசீலனை செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் ஒரு கமிட்டியை நியமித்திருந்தார்கள். அந்தக் கமிட்டியார் சில ப்ரேரணைகள் செய்திருக்கிறார்கள். அவை பின்வருமாறு.

தொழில் கல்வி கற்கவரும் மாணவர்களுக்கு ஸாதாரணக்கல்வி கற்பிப்பதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கவேண்டும். தொழில் சாஸ்த்ரக் கல்விகற்க விரும்பும் மாணவர்கள் வெளியிடங்களில் அவைகளைக் கற்றுவருவதற்காக அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் அதாவது உபகாரச்சம்பளம் கொடுக்கவேண்டும்.

தொழில்கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஸாதாரணக்கல்வி கற்பிப்பதற்காக 4-வது பாரம் வரையில் ஸாயங்காலப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவேண்டும். அந்தப் பள்ளிக்கூடங்களில் மெக்கானிகல் ட்ராயிங் ப்ரீஹாண்ட் ட்ராயிங் என்னும் சித்ரம் வரையும் பாடங்களையும் கற்றுக்கொடுக்கவேண்டும். இந்தப் பள்ளிக்கூடங்களில், தொழிலில் அமர்ந்துள்ள வேலையாட்களையும், தொழில் கற்றுக்கொள்பவர்களையுந் தான் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

தொழில் பயிற்சி பெறுபவர்கள் எல்லாருக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கிறதாக ஏற்பாடு செய்யக்கூடாது. ஆனால் சில பேர்களுக்குப் பண உதவி செய்யவேண்டி யிருக்குமாதலால், அவர்களுக்கு மாத்ரம் ஸ்காலர்ஷிப்பு கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

மாணவர்களுக்கு சாப்பாட்டுக்கும், தங்கியிருப்பதற்கும் ஹோஸ்டல் கட்டவேண்டியது அவச்யமில்லை.

எந்தத் தொழிலைக் கற்பிக்கிறதிலும், அந்தத் தொழிலில் ரொம்ப அனுபோகமுள்ளவர்களே கூடியமட்டும் கற்பித்துவரும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் பூராக்காலமும் உபாத்யாயர்களாயிருக்க முடியாவிட்டாலும் பாதகமில்லை. கூடுமானால் தொழில்களில் அமர்ந்துள்ளவர்களை ஒரு தினத்தில் ஏதாவது ஒரு நேரத்தில் வந்து கற்பித்துவிட்டுப் போகும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

**Medical Inspection of Pupils.**

மாணவர்களின் சரீர ஸௌக்ய ஆராய்ச்சி:—பெரிய நகரங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகளின் சரீர ஸௌக்யம், வரவர க்ஷீணித்து வருகிறது. அதை ஒருவாறு தடுக்கும் பொருட்டு பார்ஸி ஜாதியார் ஸமீபத்தில் ஒரு கூட்டம் கூடி, பள்ளிக்கூடங்களில் படிக்கும் தங்களுடைய சிறுவர்களின் தேக ஸ்திதியை சோதித்துப் பார்க்கவும், உள்ள குறைகளைத் தெரிந்து கொள்ளவும், சீர்திருத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். அதற்காகப் புருஷர்களில் 27 டாக்டர்களும் ஸ்த்ரீகளில் 8 டாக்டர்களும் ஆக 35 டாக்டர்கள் வரும்படியை எதிர்பார்க்காமல் இனாமாக உழைப்பதாக ஒப்புக்கொண்டு வேண்டிய வேலையைச் செய்துவருகிறார்கள். பம்பாயிலுள்ள வாடியா தர்மபரிபாலன ட்ரஸ்டிகள் அது விஷயமாய் வேண்டிய பொருளுதவி செய்துவருவது மல்லாமல், பம்பாய் நகரத்திற்கு ஸமீபத்தில் ஆந்தேரி என்னும் இடத்திலுள்ள ஒரு நேர்த்தியான பங்களாவை விடுமுறை நாட்களில் சிறுவர்கள் பம்பாய் நகரத்தை விட்டுப் போய் இருந்து சுத்தமான காற்றில் ஸந்தோஷமாய் உலாவித்திரிந்து வருவதற்காக இனாமாய்க் கொடுத்திருப்பதாயும் தெரியவருகிறது.

**Indian Students in America.**

அமெரிக்காவில் இந்திய மாணவர்கள்.—அமெரிக்காவிலுள்ள காலேஜுகளிலும் யூனிவர்ஸிடிகளிலும் இப்போது ஸுமார் 300 இந்திய மாணவர்கள் இருக்கிறார்களென்று தெரிகிறது.

**Mahomedan Education.**

மகம்மதியர்களின் கல்வி.—சென்னை ராஜதானியிலுள்ள மசம்மதியர்களின் கல்வி அபிவ்ருத்திக்காக இந்தியா கவர்ன்மெண்டார் இந்த வர்ஷம் முதல் வர்ஷந்தோறும் 30,000 ரூபாய் க்ராண்டு கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Late Mr. Gokhale: An Elegy.

கோகலேயின்மேல் இரங்கற்பாக்கள்.—மிஸ்டர் கே. வி. ராமச்சந்திர அய்யர் காலஞ்சென்ற மிஸ்டர் கோகலேயின்மீது சில நேர்த்தியான இரங்கற்பாக்கள் பாடியிருக்கிறார். அவைகளை இங்கு எடுத்து எழுதுகிறோம்.

1. மண்ணாட்டின் மனுவெனவே வரையறுக்கும்
 மதிகாண்பான் வானோ ரெல்லாங்
 கண்ணாட்ட மிகக்கொண்டாங் குள்ளபல
 சிக்கறுப்பான் கருத்தி லுன்னி
 பண்ணாட்டுங் கந்திருவர் (1) சரங்கொண்டு
 மலர்சொரிந்து பரவி வாழ்த்த
 விண்ணாட்டிற் கழைத்தனரோ மேவிசுகந்
 தினைத்தனையோ விளம்பாய் மேலோய்.

2. பூபால ரவையேறிப் புவிக்கிதமே
 புகன்றுபுவி புகழ்ந்து போற்றுங்
 கோபால கிருட்டினனுங் கோகலேநற்
 சீமானே குணத்தின் மிக்கோய்
 பாபால ரறிவிழக்கப் பண்டிதருங்
 கலையிழக்கப் பதும மேலோன்
 நாபாவை துணையிழக்க நானிலமாண்
 பிழக்கவுமின் னுட னன்றோ.

3. கற்றதினாற் கேட்டதினால் விளைபொருளை
 யொருங்கடைந்து கவின் (2) பெற் றோங்கி
 உற்றபெருஞ் சம்பளத்தைக் கருதாது
 சிறுபொருளே யுயர்வென் றெண்ணி
 பற்றுமறை போதக நல் லாசானாய் ;
 பற்குஸன்க லாசா லைக்கண்
 குற்றமற வாழுமயம் அதன் றலைமை (3)
 வாய்த்தபுகழ் கூறற் பாற்றோ.

4. பன்னூற்றுக் கணக்கான மாணவர்கள்
 படித்துயர்வாம் பட்டம் பெற்று
 மன்னூழிக் காலளவு வாழெனவின்
 னாசிமொழி வாங்கிச் செல்வர் ;
 தன்னாற்றல் மிகுந்தவனே தயைகுணனே
 கன்னடையத் தகையே தாங்கள்
 பொன்னாட்டிற் கேகிடவிம் மண்ணாட்டா
 ரென்செய்வார் புலம்பா நின்றார்.

5. முன்னாட்டுங் கொடியுடைய முடிமன்னர்
 வந்தடியில் முறைபாய் வீழ்ந்து
 சொன்னாட்டுந் தோள்வலியா னேந்தாகுஞ்
 ஜார்ஜ்மனன் றொடங்கும் போரில்
 பன்னாட்டங் கொண்டகத்தாற் பகைதேடும்
 வன்மன்னர் பலரி னாவி
 தென்னாட்டிற் சேர்க்கு வணம்
 அந்நாட்டிற் கேகினையோ தெரியேம் யாமே.

6. சத்துருவொன் றேனுமிலாய் தரணிதனக்கே
 வுதவ தகுவைக் கொண்டாய்
 மெத்தகுரு பத்திகொண்டாய் அவர்பாலீ
 ராராண்டு மேவிவாழ்ந்தாய்
 சுத்தகுண னாய்விசுவாசத்தொடுநற்
 பொறைசல்வி யிவற்றால் தூய
 முத்திகண்டா யினிக்காண்ப தொன் றுண்டோ
 நீமொழியாய் கல்வி முன்னோய்.

7. கோலேந்து மாற்றரசர் வல்லுயிரைக்
 கொள்ளைகொண்டு குருதி நாறும்
 வேலேந்தைத் தாஞ்ஜார்ஜ் வேந்தனுடன்
 பிரதிநிதியும் வெகுவாய் மண்ணிற்
 பாலேந்து வாய்க்குழவி முதலாக
 நின்பிரிவைப் பகரக் கேட்டு
 மாலேந்தி வரைகடிதம் நின்பாலங்
 குற்றதுவோ மறையோய் கூறே.

8. உலகிலொருவர்க்குயர்வாழ் வுண்டாமே
 லவர்பிறரை யுளமெண்ணாது
 குலவுபொருள் தமர்சுற்றம் குறுபல
 நலமதிப்புங் கொள்வர் தாமே
 அலகில்புகழுடையவரா யரசசபை
 யேறியுயர் வடைந்த வன்றும்
 நிலவுலகுக் குதவிசெய்தாய் புதல்வியரை
 நினைந்திலையே நின்மாண்பென்னே.

குறிப்பு:—(1) கந்திருவர் = கந்தர்வர் (2) கவின் = அழகு குணம் (3) அதன் தலைமை: மிஸ்டர் கோகலே பெர்குஸன காலேஜில் தலைவராயிருக்கவில்லை.

### Aims of Indian Art.

இந்தியகலையின் நோக்கங்கள்.—இது டாக்டர் ஆ. கே. குமாரஸ்வாமியால் இயற்றப்பட்ட இங்க்லீஷ் புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். இதை மொழிபெயர்த்தவர் மிஸ்டர் ஜே. எம். நல்லஸாமி பிள்ளை. சித்ரங்கள் உள்ளது. விலை அணா 6. புஸ்தகம் வேண்டுவோர் இந்தியன் ஸொஸைடி அப் ஆர்ட், 7-பழைய போஸ்டாபீஸ் தெரு, கல்கத்தா, என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Yolk of Eggs.

முட்டையின் மஞ்சள் கரு.—முட்டையிலுள்ள மஞ்சள் கருவின் நிறம் கோழி தின்னும் தீனிக்குத் தகுந்தபடி நல்ல மஞ்சளாகவோ, அல்லது லேசான மஞ்சளாகவோ இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இது வெகுவாய் கோடைகாலத்தில் ஆழ்ந்த மஞ்சளாகவும் மழைக்காலத்தில் லேசான மஞ்சளாகவும் இருக்கிறது. இதற்குக் காரணம் கோழிகள் கோடைகாலத்தில் பசுமையான உணவுகளையும் பூச்சிகளையும் ஏராளமாய்த் தின்கின்றனவென்பதே. மேலும் கோழிகளுக்கு பால், கோதுமை, ஓட்ஸ்தான்யம், தவிடு முதலியவைகள் தின்னப்போட்டால், அவைகள் இடும் முட்டைகளின் வெண்கரு நல்ல மஞ்சள் நிறமாயிருப்பதில்லையாம். கோழிகளுக்கு சோளம் தின்னப்போட்டால் மஞ்சள்கரு ரொம்ப மஞ்சள் நிறமாயிருக்கிறதாம். ரொம்ப மஞ்சளாயில்லாத மஞ்சள்கரு அவ்வளவு ச்லாக்யமில்லையென்று சொல்லப்படுகிறது. ஆகையால் கோழிகள் வளர்ப்பவர்கள் அவைகளின் ஆகார விஷயத்தில் மேற்கூறியவைகளை கவனிப்பது நல்லது.

### Life Saving at Sea.

கடல் விபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள.—மேல்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கடல் விபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்ள உதவக்கூடியதான ஒரு மிதக்கும் மெத்தையைக் கண்டுபிடித்திருக்கிறார். ஜலம் பட்டால் ஒட்டிக்கொள்ளாத பொருள்களால் அந்த மெத்தை செய்யப்பட்டிருக்கிறது. அந்த மெத்தைக்குள் மானினுடைய மயிர் அடைத்திருக்கிறது. கப்பல்களில் அந்த மெத்தைகளை ப்ரயாணிகள் இருக்கும் அறைகளில் ஸாதாரண மெத்தைகளைப்போல உபயோகிப்பார்களாம். கப்பல்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் ப்ரயாணிகள் அந்த மெத்தையை ஒரு படகுபோல மடித்து, அதை ஜலத்தில் போட்டு அதில் உட்கார்ந்து கொள்ளலாம். வேறு கப்பல்கள் அவ்வழியாக வந்து மெத்தைப் படகிலுள்ளவர்களைக் காப்பாற்றும் வரையில் தண்ணீரில் மூழ்காமல் மிதந்து கொண்டிருக்கலாம். அந்தப் படகில் ஜலம் புகுந்து கொண்டால் அதை இறைப்பதற்கு பம்பு அதில் அமைக்கப்பட்டிருக்கிறது. ராத்ரிக்காலங்களில் படகு இருப்பதை பக்கத்தில் போகும் கப்பல்கள் தெரிந்து கொள்வதற்காக ஒருவித விளக்கு அமைக்கப்பட்டிருக்கும். அதை ஜலத்தில் போட்டால் உடனே அது ப்ரகாசமாய் எரியும்.

### Horse Power.

குதிரை பலம்.—யந்த்ரங்களைப் பற்றிய விவரங்களில், இன்ன யந்த்ரம் இத்தனை குதிரை பலம் உடையதென்று குறிப்பிட்டிருப்பதுண்டு. ஒரு சக்ரத்தின்மேல் ஒரு கயிற்றைப்போட்டு, அந்தக் கயிற்றின் ஒரு நுனியில் 150 ராத்தல் பளுவுள்ள ஒரு பொருளைக்கட்டித் தொங்கவிட்டு, இன்னொரு நுனியை ஒரு குதிரையின் கழுத்தில் கட்டி, கயிறு சக்ரத்தின்மேல் உருண்டு ஓடும்படி யமைத்து, குதிரை அந்தக் கயிற்றை இழுத்துக்கொண்டு அதே ஸமயத்தில் கயிற்றில் கட்டியிருக்கும் பாரத்தை செங்குத்தாக ஒரு நிமிஷத்துக்கு 220 அடி உயரம் வீதம் உயர்த்திக்கொண்டு மணிக்கு $2\frac{1}{2}$ மைல் போகும்படி ஓட்டினால், அந்தக் குதிரைக்கு அதை இழுத்துக்கொண்டுபோக என்ன சக்தி வேண்டியிருக்குமோ அந்த சக்திக்கு ஒரு குதிரை பலம் என்று பெயர். இந்த சக்தியானது 33,000 ராத்தல் நிறையை ஒரு நிமிஷ நேரத்துக்கு ஒரு அடி வீதம் உயர்த்துவதற்கு வேண்டிய பலத்துக்கு ஸமானமாகும்.

### Accidents to War Aviators.

யுத்த ஆகாயவிமானிகளுக்கு நேரும் ஆபத்துகள்.—யுத்தம் நேருவதற்கு முன்னால் ஸமாதான காலங்களில் ஆகாயவிமானிகள் ஆகாயவிமானங்களில் பறந்துபோகும் போது அடிக்கடி விபத்துகள் நேருவதுண்டு. அந்தக்காலங்களில் ஆகாயவிமானிகள் பற்பல தீரமான செய்கைகள் செய்து காட்ட முயன்றதனால் இப்படி ஆபத்துகள் நேர்ந்தனவென்று சொல்லப்படுகிறது. இதனால் ஜனங்கள் ஆகாயத்தில பறப்பது மிகவும் ஆபத்தானதென்று எண்ண ஆரம்பித்தார்கள். ஆனால் இப்போது நடக்கும் யுத்தத்தில் நேரும்விபத்துகள் ரொம்பக் குறைவாயிருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் ரொம்ப ஸாமர்த்யசாலிகள் மாத்ரம் ஆகாயவிமானங்களில் ஏறிப்போகிறார்கள். மேலும் அவர்கள் தாங்கள் செய்யவேண்டிய யுத்த ஸம்பந்தமான கார்யங்களை மாத்ரம் கவனிக்கிறார்களே யொழிய மற்றதீரத்தையும்ஸாமர்த்யத்தையும் காட்டும் செய்கைகளைச் செய்ய முயலுவதில்லையாம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Mortality in Crowded Houses.

நெருக்கமான வீடுகளில் மரணவிகிதம்.—விசாலமாயில்லாமல் நெருக்கமாயிருக்கும் வீடுகளில் வஸிப்பவர்களுக்குள் மரண விகிதம் அதிகமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இங்க்லண்டிலுள்ள ப்ராட்பர்ட் என்னும் ஊரில் மரணக்கணக்குகளை ஆராய்ச்சி செய்ததில் சென்றவர்ஷத்தில் ஒரே அறை அல்லது இரண்டு அறைகள் உள்ளவீடுகளில் வஸிப்பவர்களுக்குள் மரணவிகிதம் ஆயிரத்துக்கு 25-வீதம் இருந்ததாகவும், 3 அறைகளுள்ள வீடுகளில் வஸிப்பவர்களுக்குள் மரணவிகிதம் 1000-க்கு 20-வீதமிருந்ததாகவும், தெரியவந்தது. நான்கு அறைகளுள்ள வீடுகளில் வஸிப்பவர்களுக்குள்ளோ மரணவிகிதம் 1000-க்கு 12.4-ஆம். 4-க்கு மேற்பட்ட அறைகளுக்குள் வஸிப்பவர்களுக்குள் மரணவிகிதம் 1000-க்கு 8-வீதமிருந்ததாம். இதனால் சிறியவீடுகளில் வஸிப்பவர்களுக்குள் உள்ள மரணவிகிதம் விசாலமான வீடுகளில் வஸிப்பவர்களுக்குள் உள்ள மரணவிகிதத்தைவிட 3-மடங்கு அதிகமாயிருக்கிறதென்று தெரிகிறது.

### Consumption and Tobacco.

க்ஷயரோகமும் புகையிலையும்.—அமெரிக்காவைச்சேர்ந்த பிலடல்பியாவிலுள்ள ஒரு ஆராய்ச்சி சாலையில் புகைச்சுருட்டுக் குடிப்பவர்களைப்பற்றி சென்ற 15-வர்ஷங்களுக்கு சில கணக்குகள் தயாரித்து வைத்திருக்கிறார்கள். அந்தக் கணக்குகளால் ஒரு வர்ஷத்தில் புகைச்சுருட்டுக் குடிக்காதவர்களில் எத்தனைபேருக்கு க்ஷயரோகம் ஏற்படக்கூடுமோ அதைவிட இரட்டிப்பு மடங்கு புகைச்சுருட்டுக் குடிப்பவர்களுக்கு க்ஷயரோகம் ஏற்பட ஹேதுவிருக்கிறதென்று தெரியவருகிறதாம். புகையிலையிலுள்ள நிகோடின் என்னும் விஷத்தால் நுரையீரல்கள்கெடுதலடைகின்றனவாம். புகைச்சுருட்டுக் குடிக்காத சிறுவர்களின் நுரையீரல்கள், சுருட்டுக் குடிப்பவர்களுடைய நுரையீரல்களைவிட நூற்றுக்கு 75-வீதம் அதிகபலம் அடைந்து வருகிறதாம். சுருட்டுக் குடிக்கும் சிறுவர்கள் சுருட்டுக் குடிப்பதால் தங்களுடைய நுரையீரல்களுடைய வளர்ச்சிக்குத் தடைசெய்துகொள்ளுகிறார்கள். இதனால் அவர்களுக்கு அதி பால்யத்திலேயே க்ஷயரோகம் வந்துவிடுகிறது.

### Treatment for Malaria.

மலேரியாக்காய்ச்சலுக்கு சிகித்ஸை.—மலேரியா வ்யாதி கண்ட எவருக்கும் முதலில் தினந்தோறும் 30-க்ரெய்ன் க்வினைன் மருந்துவீதம் 3-நாள்களுக்கு கொடுத்து வரவேண்டும். 30-க்ரெய்ன் மருந்தையும் ஒரே தடவையில் கொடுத்துவிடக்கூடாது. வயஸுக்குத் தகுந்தபடி கொஞ்சம் கொஞ்சமான அளவில் கொடுத்துவர வேண்டும். மூன்று நாளானபிறகு, மறுபடியும் 6-நாள்வரையில் யாதொருமருந்தும் கொடுக்கக்கூடாது. 7-வது நாள் மறுபடியும் 30-க்ரெய்ன் க்வினைன் மருந்து கொடுக்கவேண்டும். இப்படி ஆறு வாரம் வரையில் ஆறுநாள் விட்டு 7-வது நாள் மருந்து கொடுத்துவந்தால் எந்தமாதிரியான மலேரியாவும் ஸ்வஸ்தமாகிவிடும்.

### Diabetes.

நீரிழிவு ரோகம்.—வங்காளத்திலே இந்தியன் ரிஸர்ச் பண்ட் என்னும் இந்திய ஆராய்ச்சி நிதியின் பரிபாலகர்கள் நீரிழிவுரோகம் எப்படி உண்டாகிறதென்பதைப் பற்றியும், அந்த ரோகத்தை நிவர்த்தி செய்ய என்ன உபாயங்கள் செய்யலாம் என்பதைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய ஏற்பாடு செய்யப்போகிறார்கள். இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கு கல்கத்தா மெடிகல் காலேஜில் போதகராகிய மேஜர் மக்கே என்பவரைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். சென்னையிலும் நீரிழிவு ரோகத்தைப் பற்றிப் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்திருப்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயம்.

### Tea.

தேயிலை.—வழக்கமாய், விடாமல் தேயிலைப் பானம் பருகுவதால் பசியின்மை, வயிற்றுப் பொருமல், அஜீர்ணரோகம், அவற்றிற்கு ஸம்பந்தப்பட்ட வேறு குறிகளான வயிற்றுவலி, இரைப்பை எரித்தல், தேஹத்திற்கு அமைதியின்மை, சரீரம் நடுங்கக்கூடிய நரம்புத் தளர்ச்சி, சில இந்த்ரியக்கோளாறுகள், தூக்கமின்மை, தசைநார்களின் நடுக்கம், ஹ்ருதயத் துடிப்பு, புத்திமாறாட்டம், மற்றும் அநேகவிதமான விகாரக் குறிகளும் பிணிகளும் ஸம்பவிப்பதற்கு ஹேதுவாகிறது. வாத ப்ரக்ருதியான மனிதர்கள் மற்றவர்களைவிட தேயிலைப் பானகத்தையுபயோகிப்பதால் விசேஷமான தீங்குகளுக்கு உள்ளாகிறார்கள்; ஆகவே அவ்வித ஸ்பாவமுள்ளவர்கள் முற்றிலும் அதை யுபயோகிக்காமலிருப்பது நலம்.—வைத்திய கலாநிதி.



# LAW.

## சட்டம்.

### Registration of Gift Deed.

தான சாஸன பத்ரங்களை ரெஜிஸ்தர் செய்தல்.-ஒரு ஸ்த்ரீ தனக்கு ஸொந்தமான சில ஸ்தாவர ஸொத்துக்களை ப்ரதிவாதிக்கு தானம் செய்வதாக ஒரு பத்ரம் எழுதினாள். ஆனால் அந்தப் பத்ரத்தை ரெஜிஸ்டர் செய்யவில்லை. அதற்குப் பிறகு சில காலத்துக்கெல்லாம் அதே ஸொத்துக்களை வாதிகளுக்கு தானம் செய்வதாக ஒரு பத்ரம் எழுதி அந்தப் பத்ரத்தை ரெஜிஸ்டர் செய்தாள். அதன் பிறகு ப்ரதிவாதி மேற்குறித்த ஸ்த்ரீ தன் பேரில் எழுதிக்கொடுத்த தான சாஸன பத்ரத்தை ரெஜிஸ்டர் செய்ய இஷ்டப்படவில்லையென்றும், அதை ரெஜிஸ்டர் செய்ய உத்தரவாக வேண்டுமென்றும் கோர்ட்டில் மனுப்போட்டார். கோர்ட்டார் பத்ரத்தை ரெஜிஸ்டர் செய்யும்படி உத்தரவிடவே அது, தானங்கொடுத்தவர் இறந்துபோன பிறகு ரெஜிஸ்டர் செய்யப்பட்டது.

இந்தக் கேஸ் அப்பீலுக்குவரவே, அப்பீல் கோர்ட்டார், ப்ரதிவாதி சொல்லுகிறபடியே தானம் கொடுத்தவருக்கு முதல் தான பத்ரத்தை ரெஜிஸ்டர் செய்ய இஷ்டமில்லாதிருந்ததால், அதை ரெஜிஸ்டர் செய்தது ப்ரயோஜனமற்றதாகுமென்று அபிப்ராயப்பட்டார்கள்.—2 லா வீக்லி 269.

### Interest on Mortgage Loan.

ஈட்டுக்கடனுக்கு வட்டி.—ஈட்டுக் கடன் பத்திரத்தில் ஒரு குறிப்பிட்ட வட்டித் தொகையை தவணையில் செலுத்தத்தவறினால், அதேவட்டி விகிதத்தின்பேரில் தொடர்வட்டியாகக் கொடுக்கவேண்டுமென்று எழுதுவது தண்டனை வட்டியாகாது. ஆனால், வட்டித் தொகையை தவணைத்தேதியில் செலுத்தத்தவறினால், அதிகவட்டி விகிதத்தில் தொடர்வட்டியாகச் செலுத்தவேண்டுமென்று கண்டிருந்தால், அது தண்டனை வட்டியாகும். அந்த ஏற்பாடு சட்டப்படி செல்லாது,

ஒரு அடைமானக்கடன் பத்ரத்தில் கடனுக்கு நூற்றிற்கு 9-வீதம் வட்டி செலுத்தவேண்டுமென்றும் வட்டித்தொகையைச் செலுத்தத்தவறினால் நூற்றுக்கு 12-வீதம் தொடர்வட்டி கொடுக்கவேண்டுமென்றும் கண்டிருந்தது. அப்படியானால் அந்த வட்டியேற்பாடு தண்டனை வட்டியாகும். அது செல்லாது. ஸொத்தை அடைமானம் வாங்கியிருப்பவருக்கு முதலில் ஏற்படுத்திக்கொண்ட 9-வீதம் வட்டி பெறத்தான் பாத்யதை உண்டு.

### Partnership.

கூட்டு வ்யாபாரம்.—சில பேர்கள் சேர்ந்து ஒரு குறிப்பிட்டகாலம் வரையில் கூட்டாக தொழில் நடத்துவதென்று ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். கொஞ்சகாலத்துக்கெல்லாம் கூட்டாளிகளில் ஒருவர் கூட்டு வ்யாபாரத்தில் இருக்க இஷ்டப்படாமல் ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொண்டார். கொஞ்சகாலத்துக்குப் பிறகு இன்னொரு கூட்டாளி இறந்துபோய்விட்டார். மற்ற கூட்டாளிகள் விலகிக்கொண்ட முதலாளிமேல் நஷ்டத்துக்கு வ்யாஜ்யம் போட்டால், கூட்டு வ்யாபாரம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டகாலம் வரையில் நடந்திருந்தால் என்ன லாபம் கிடைத்திருக்குமோ அந்தத்தொகையை நஷ்டத் தொகையாக பிரிந்துபோன கூட்டாளியிடமிருந்து பெற மற்ற கூட்டாளிகளுக்கு பாத்யதையுண்டு.

இரண்டாவது கூட்டாளி இறந்துபோனதினால் நஷ்டத்தொகை குறைந்துபோய் விடாது.

### Redemption of Mortgage.

அடைமானத்தைத் திருப்புதல்.—அடைமானம் வைக்கப்பட்ட ஸொத்தில் ஒரு பாகத்தை விலைக்கு வாங்கினவர் அடைமானம் வைத்த பாகத்தைமாத்ரம் திருப்புவதற்காக வ்யாஜ்யப்போட்டால் அது செல்லாது.

### Stridana.

ஸ்த்ரீதனம்.—ஒரு ஸ்த்ரீக்கு கல்யாணமாகுமுன் அவளுக்கு அவளுடைய தகப்பனார் தானமாகக்கொடுத்த ஸொத்துக்கள் அவளுடைய ஸௌதாயிக ஸொத்தாகும், அதை அவள் எவ்விதமாக வேண்டுமென்றாலும் உபயோகப்படுத்தலாம்.

ருதுசாந்தி முகூர்த்தத்தின் போதும், ஊர் கோலத்தின் போதும் கொடுக்கப்படாமல் மற்றக்காலங்களில் அன்யர்கள் பெண்ணுக்கு ஏதாவது தானங்கள் செய்தாலும் ஸரி, அல்லது கல்யாணமான ஸ்த்ரீ வேறு மார்க்கங்களில் ஸொத்து அடைந்தாலும் ஸரி அவைகள் அந்த ஸ்த்ரீயின் ஸௌதாயிக ஸொத்துக்கள் அல்ல. அவள் அந்த ஸொத்துக்களை புருஷனுடைய மேற்பார்வைக்கு உள்பட்டே விற்பனை முதலியனவைகள் செய்யலாம்.—2. லா வீக்லி. 38.

## PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Kaiser's Suite.

கெய்ஸரின் பரிவாரங்கள்.—ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸர் போர்முனைக்குப் போகும்போது அவருடன் கூடப்போகிறவர்கள் பின்வருமாறு:—ஜெனரல் வான் ப்ளெஸ்ஸன் என்னும் யுத்த தளகர்த்தரும் இன்னும் 8-ஏய்டிகாங்குகளும்; 3-டாக்டர்கள்; ராணுவ மந்த்ராலோசனை ஸபையின் தலைவர், அவரைச்சேர்ந்த 5 உதவி ஆபீஸர்கள்; கப்பல்படை மந்த்ராலோசனை ஸபையின் தலைவர்; ஸிவில் மந்த்ராலோசனை ஸபையின் தலைவர்; அன்யதேச வ்யவஹார மந்த்ரி ஆபிஸின் ப்ரதிநிதி; சில அரண்மனை உத்யோகஸ்தர்கள்; ஜெர்மனியின் ப்ரதம மந்த்ரி, அவருடைய ஆபிஸைச்சேர்ந்த இரண்டு உத்யோகஸ்தர்கள்; அன்ய மந்த்ரி, அவருடைய ஆபிஸைச் சேர்ந்த இரண்டு உத்யோகஸ்தர்கள்; யுத்தமந்த்ரி ஆபிஸின் ப்ரதிநிதி ஒருவர்; ஜெர்மன் ராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்ட நாடுகளாகிய பவேரியா, வொர்ட்டம்பர்க், ஸாக்ஸனி ஆகிய இந்த நாடுகளின் ராணுவ ப்ரதிநிதிகள்; ஆஸ்ட்ரிய ஸைன்யத்தின் ப்ரதிநிதிகள் இரண்டு பேர்கள்; ஜெர்மனியிலுள்ள ராஜ வம்சங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ராஜ குமாரர்கள்.

### Twelve Great Bengalis.

பன்னிரண்டு பங்காள ச்ரேஷ்டர்கள்.——இங்கிலீஷ் அரசாட்சி ஆரம்பித்தபிறகு பங்காளத்தில் பொதுஜனத் தலைவர்களாய் விளங்கிய பெரியவர்களுள் முக்யமான 12-பெயர்களைத் தெரிவிக்கும்படி ஒரு வங்காளிப் பத்ரிகை கேட்டதற்கு அதன் சந்தாதாரர்கள் விடையளித்தார்கள். அவர்களுடைய வோட்டுகளைக் கணக்கிட்டதில் பின் வருபவர்கள் முக்யமானவர்கள் என்று ஏற்பட்டது. (1) ராஜாராம் மோஹன்ராய் (2) ரபீந்த்ரநாத் டாகூர் (3) ஈச்வர சந்த்ர வித்யாஸாகர் (3) ஜகதீச்சந்த்ரபோஸ் (5) ஸ்வாமி விவேகாநந்தர் (6) பங்கிம் சந்த்ரசட்டர்ஜி (7) கேஷப் சந்த்ரஸென் (8) ப்ரபுல்லசந்த்ரரே. (9) ஸுரேந்த்ரநாத் பனர்ஜி (10) ரோமேஷ் சந்த்ரடட் (11) மகர்ஷி தேவேந்த்ரநாத் டாகூர். (12) அரவிந்த கோஷ்.

### Mr. Ghandi.

மிஸ்டர் காந்தி.—சில நாள்களுக்கு முன்னால் மிஸ்டர் காந்தி வடக்கே போல்பூர் என்னும் ஊரைப் பார்க்கப்போனார். அப்போது அவரை வரவேற்பதற்கு அநேக ஜனங்கள் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் வண்டி வந்ததும், முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு வண்டிகளில் அவர் இருப்பார் என்று தேடினார்கள். ஆனால் அவரைக் காணவில்லை. கடைசியாக வரவேற்க வந்த ஜனங்கள் ஏமாந்தவர்களாய் ஸ்டேஷனை விட்டு வெளியே போக இருக்கும்போது, மிஸ்டர் காந்தியும் அவரது மனைவியும் ஒரு மூன்றாவது வகுப்பு வண்டியிலிருந்து இறங்கிவரக்கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். இதனால் மிஸ்டர் காந்தி தமது நடையுடை பாவனைகளில் எவ்வளவு ஸாமான்யமாயிருக்கிறாரென்று தெரியவரும்.

### Dr. Aghore Nath Chattopadyaya.

டாக்டர் அகோர் நாத் சட்டோபாத்யாயா.—இங்கிலீஷ் கவிகள் கமனம் செய்வதில் ப்ரஸித்தி பெற்ற இந்திய ஸ்த்ரீயாகிய மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடுவின் தகப்பனாராகிய டாக்டர் அகோரநாத் சட்டோபாத்யாயா என்பவர் சென்ற ஜனவரி மாஸம் 28-ந் தேதியன்று இறந்துபோனார். அவர் ரஸாயன ஆராய்ச்சிகள் செய்வதில் மிகவும் க்யாதி பெற்றவர். அவருக்கு ரஸவாத வித்தையில் விசேஷ ப்ரியம் உண்டாம். அவர் வெகு காலம் ஹைதராபாத் நிஜாம் கவர்ன்மெண்டில் உத்யோகம் பார்த்து வந்தார். அவர் பெரிய பரோபகாரியாக இருந்தாராம்.

### Mahamahopadyaya Nilamega Sastrigal.

காலஞ்சென்ற மகாமகோபாத்யாய நீலமேக சாஸ்த்ரிகள்.—தென்னிந்தியாவில் ப்ரபல ஸம்ஸ்க்ருத வித்வான்களில் ஒருவராகிய கும்பகோணத்தைச் சேர்ந்த மகாமகோபாத்யாய நீலமேக சாஸ்த்ரிகள் ஸமீபத்தில் காலஞ்சென்று போனதைப்பற்றி மிகவும் விஸனிக்கிறோம். அவர் திருவிசைநல்லூர் மகாமஹோபாத்யாய ராமஸுப்ரமண்ய சாஸ்த்ரிகளுடைய சிஷ்யர். அவரிடம் பூர்வமீமாம்ஸை வாசித்துத் தேறியிருந்தார். அவர் சிலகாலம் சென்னை ஸம்ஸ்க்ருத காலேஜில் ஒரு பண்டிதராக வேலை பார்த்து வந்தார். அதற்குப் பிறகு திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜில் ப்ரதம பண்டிதராக நியமிக்கப்பட்டார். சில வர்ஷங்களுக்கு முன்னால் அவர் உத்யோகத்திலிருந்து விலகிக்கொண்டார். கவர்ன்மெண்டார் அவருடைய ஸாமர்த்யத்தை மெச்சி அவருக்கு மகாமஹோபாத்யாய பட்டம் கொடுத்தார்கள்.



## SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

### Religious and Charitable Endowments.

தேவாலய நிதிகளும் தர்மஸ்தாபன ஸொத்துக்களும்.—தேவாலய நிதிகள், தர்மஸ்தாபன ஸொத்துக்கள் ஆகிய இவைகளின் பரிபாலனத்தில் சில ஊழல்களிருக்கின்றனவென்றும், அவைகளை திருத்துவதற்கு கவர்ன்மெண்டார் சட்டம் செய்யவேண்டுமென்றும் அநேகர் வெகு காலமாகச் சொல்லி வருகிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் சில காலத்துக்கு முன்னால் இதைப்பற்றி ஆலோசிப்பதாக டெல்லியில் ஒரு கான்பரென்ஸ் கூட்டினார்கள்.

அதற்குப் பிறகு, இந்திய கவர்ன்மெண்டார் இது விஷயமாக சில ப்ரேரணைகள் செய்து இந்தியா மந்த்ரிக்கு அனுப்பியிருந்தார்கள். இப்போது இந்தியா மந்த்ரி அந்தப்ப்ரேரணைகளை அங்கீகரித்துவிட்டாரென்று தெரிகிறது. கவர்ன்மெண்டார் யுத்தம் முடிந்தபிறகு இது விஷயமாக ஒரு மசோதா சட்டஸபையில் கொண்டுவந்து சட்டமாக்குவார்களாம். அதுவரையில் மாகாண கவர்ன்மெண்டுகள் இதற்கு ப்ரத்யேகமான சட்டங்கள் செய்யவேண்டியதில்லையென்று இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

### A Widow Remarriage Association.

ஒரு விதவா விவாக ஸங்கம்.—தமது பெயரைத் தெரிவிக்க இஷ்டப்படாத ஒரு பரோபகாரி லாகூரில் ஒரு விதவா விவாக ஸங்கம் ஏற்படுத்த 30,000 ரூபாய் முதலுள்ள ஒரு பண்டு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அந்த ஸங்கம் ஸ்தாபிதமாகி யிருக்கிறது. அதன் ஆதீனத்தில் ஒரு விதவாச்ரமம் ஸ்தாபிக்கப்படும். அங்கே விதவைகள் வந்து தங்கலாமாம். அவர்கள் புனர் விவாகம் செய்துகொள்ள இஷ்டப்பட்டால், கல்யாணம் செய்து கொள்வதற்கு ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கப்படும்.

### Temperance in India.

இந்தியாவில் மது விலக்கு.—குடியால் குடிப்பவன் கெட்டுப்போவதே யன்றி, அவனுடைய குடும்பத்தார்களும் அவனை அண்டியிருப்பவர்களும் கெட்டுப்போகிறார்கள். மேலும் குடிவழக்கம் குடிப்பவனிடத்திலிருந்து வம்ச பரம்பரையாக தொடர்ந்து போகிறதென்றும் சொல்லப்படுகிறது.

சென்ற 1906-ம் வர்ஷம் முதல் நாளது வரையில் இந்தியாவிலுள்ள சாராயக்கடைகளின் தொகையில் 7,788-குறைந்து போயிருக்கிறதென்று தெரிகிறது. அபின் கடைகளின் தொகையில் 2,383 குறைந்து போயிருக்கிறது. அன்ய நாடுகளிலிருந்து வரும் மதுபானங்கள் விற்கப்படும் கடைகளின் தொகையில் 181 குறைந்திருக்கிறது. கள்ளுக்கடையின் தொகையில் 11,150 குறைந்திருக்கிறது. கஞ்சா மருந்துக் கடைகளின் தொகையில் 1,516 குறைந்து போயிருக்கின்றன. மொத்தம் எடுபட்டுப்போன கடைகள் 22,653.

### A Sanyasi's Sangam.

ஒரு ஸன்யாஸிகளின் ஸங்கம்.—திருச்சினாப்பள்ளியில் சில ஸன்யாஸிகள் "ஸத்குருமிஷன்" என்று பெயர் கொண்ட ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். தாய் தந்தைகளற்ற ஹிந்துக் குழந்தைகளைப் பரிபாலனம் செய்வதும், தாழ்ந்த ஜாதியார்களை முன்னுக்குக் கொண்டுவருவதும் அவர்களுடைய முக்யமான நோக்கங்கள் என்று தெரியவருகிறது. அதற்காக அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட ஒரு விஸ்தாரமான பங்களாவில் வேலையை ஆரம்பித்து நடத்தி வருகிறார்களாம். ஸாமான்ய ஜனங்களுடைய அபவாதங்களைக் கவனிக்காமல் தேசக்ஷேமத்தின் பொருட்டு உழைக்க இந்த ஸன்யாஸிகள் முன் வந்திருப்பது மிகவும் புகழத்தக்கது.

### The Decline of the Hindus.

ஹிந்துக்களின் க்ஷீணம்.—ஹிந்து மதத்திலிருந்து பலர் வேறு மதங்களுக்குப் போய்ச் சேர்ந்து கொள்ளுகிறார்களென்பது பலரறிந்த விஷயம். அது ஸம்பந்தமாய் ஒருவர் ஊகிப்பாக ஒரு கணித விவரம் தெரிவிக்கிறார். இவ்வாறாக ஹிந்துக்கள் மதம் மாறிக்கொண்டே வருவார்களானால் 101-வர்ஷத்தில் வடமேற்கு மாகாணங்களில் ஹிந்துக்களே அருமையாகிவிடுவார்களாம். பஞ்சாப்பில் 119-வர்ஷத்திற்குள்ளும், அஸாமில் 190-வருஷத்திற்குள்ளும் குடகில் 203-வருஷத்திற்குள்ளும் வங்காளத்தில் 332 வருஷத்திற்குள்ளும், மாளவதேசத்தில் 564-வருஷத்திற்குள்ளும் சென்னை மாகாணத்தில் 1058-வர்ஷத்திற்குள்ளும் ஹிந்துக்களே இல்லாமல் போய்விடுவார்களென்று அவர் தெரிவிக்கிறார்.

## HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### Treatment for Burns.

நெருப்புக் காயத்துக்கு சிகித்ஸை.—நெருப்புப் பட்டதால் உண்டான கொப்புளங்கள், புண்கள், காயங்கள் முதலியவைகளுக்கு இன்ன சிகித்ஸைகள் நல்லவை யென்பதைப் பற்றி 'விச்வகர்ம குலோபகாரி'யில் ஒரு கிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

நெருப்புக் காயத்தின்மேல் கொஞ்சமாகிலும் காற்று படாமலிருக்கும்படிச் செய்யவேண்டும். நெருப்புப் பட்டபின்பு எவ்வளவு சீக்ரத்தில் காயத்தின்மேல் காற்றுப்படாமலிருக்கும்படிச் செய்கிறோமோ அதற்குத் தக்கபடி வெகு சீக்ரத்தில் நோய் குறைந்து ஆறிப் போகும்.

தெளிந்த சுண்ணும்புத் தண்ணீரையும், தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயையுஞ் சரிக்குச் சரி யெடுத்துக் கலப்பதினால் உண்டாகும் கலவைத் தைலத்தை நெருப்புக்காயங்கள் மேல் நன்றாய்ப்பூசி அதன்மேல் துணியைச் சுற்றிவைத்தால் மிகுந்த ப்ரயோஜனமுண்டாகும்.

கருவேலம் பிசின் அல்லது விளாம்பிசினை தண்ணீரில் கரைத்துப் பசைசெய்து காயத்தின் மேல் நன்றாய்ப் பூசினால் உடனே குணமுண்டாகும். மெல்லிதான கோதுமை மா, அரிசி மா, சீமை சுண்ணும்புத் தூள் ஆகிய இவைகளை காயத்தின்மேல் கனமாய் தூவி வைத்தால் காயத்தின்மேல் காற்றுப்படமாட்டாது. காயத்திலிருந்து சுரக்கும் நீர் வறண்டுபோகும். கெட்டி ம்ருதுவாக்கப்பட்ட பருத்திப் பஞ்சை யெடுத்து எண்ணெயில் தோய்த்தாவது தனியாயாவது நெருப்புப்பட்ட காயங்களின்மேல் நன்றாய்ப் போர்த்துக் கட்டிவைத்தால் ப்ரயோஜன முண்டாகும்.

அன்னபேதியை வெறும் ஜலத்தோடாவது, கடுக்காய் ஜலத்தோடாவது சேர்த்துக் காயத்தின்மேல் போட்டால் குணமுண்டாகும். இவைகள் இல்லாத பக்ஷத்தில் கடுக்காயில் கூட்டிய எழுதுகிற இங்கி மையையும் போடலாம்.

ப்ராந்தி, சாராயம், ஸ்பிரிட், வெண்ணுத்தம் ஆகிய இவற்றை ஜலத்தில் சேர்த்து உபயோகிக்கலாம். இவைகள் முதலில் எரிச்சலை யுண்டாக்கினபோதிலும் சற்றுநேரத்திற்குள்ளே குணத்தை யுண்டாக்கும். நெருப்புப் புண்களின்மேல் பொருக்குகள் உண்டானால் மாவுகிளறி போல்டிஸ் கட்டிவர வேண்டும். சில வேளை நெருப்புப் புண்களிலிருந்து வடியும் நீர் ஓர்வகை கரகரப்புள்ளதாயிருந்து அது பட்டவிடங்களில் எல்லாம் புண்களை யுண்டாக்கும். இப்படிப்பட்ட புண்களின்மேல் சீமைசுண்ணும்புத் தூளை தூவுவதனாலும் மாவுகிளறி வைத்து கட்டுவதனாலும் குணமுண்டாகும்.

கொதிக்கிற ஜலம் முதலியவற்றால் கொப்புளங்கள் உண்டானால் ஊசியினால் கொப்புளத்தைப் பத்ரமாய்க் குத்தி உள் நீரை வடித்து விட்டு மேலேசொல்லிய மருந்துகளை ப்ரயோகிக்கவேண்டும்.

நெருப்புக் காயத்தின்மேல் தேகம் அதிக உஷ்ணமாகி மலச்சிக்கல்பட்டால் சிற்றாமணக்கெண்ணெய் அல்லது எப்ஸம்ஸால்ட் என்னும் பேதி உப்பு முதலிய பேதிமருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

### To Keep Flowers from Withering.

புஷ்பங்களை வாடாமல் வைத்திருத்தல்.—பறித்த புஷ்பங்களை அப்படியே சிறிது நேரம் வைத்திருந்தால் அவைகள் வாடிப்போகின்றன. புஷ்பங்களைக் காம்புடன் பறித்து, ஒரு பாத்ரத்தில் ஜலத்தை விட்டு அதில் சிறிது நவச்சாரத்தைப் போட்டுக் கறைத்து, புஷ்பங்களை அந்த ஜலத்தில் வைத்திருந்தால் அவைகள் வெகுநேரம் வாடாமலிருக்கும். புஷ்பத்தின் காம்புகளினுடைய நுனி காய்ந்து போயிருக்கக்கூடாது. காய்ந்திருந்தால் அது ஜலத்தை க்ரஹித்துக் கொள்ளமுடியாது. புஷ்பக்காம்புகளை ஜலத்தில் வைத்து காய்ந்துபோன பாகத்தை நறுக்கிவிட்டால், காயாத பசுமையான பாகத்தின் வழியாக ஜலம் க்ரஹிக்கப்பட்டு புஷ்பத்தில் உயரப்போய் அது வாடாமலிருக்கும்படி செய்யும். காம்பில் நறுக்கின பாகத்தின்மேல் காற்றுப் படக்கூடாது.

### Dirty Shoes.

அழுக்கடைந்த ஜோடுகள்.—ரொம்ப அழுக்கடைந்து சுத்தம் செய்வதற்கு லாயக்கில்லாத வெள்ளை ஜோடுகளை பின்வரும் முறையால் நல்ல லக்ஷணமுள்ள கருப்பு ஜோடாக மாற்றிவிடலாமாம். 2-தேயிலைக் கரண்டி மஞ்சள் தூளோடு 20-துளிகள் ஆலிவ் எண்ணெயைக் கலந்து ஜோட்டின்மேல் தேய்க்கவும். நல்ல கறுப்பாவதற்கு இரண்டுதரம் தேய்க்கவேண்டியது அவசியமாகும்.



## AGRICULTURE.
## விவஸாயம்.

### Planting Seed Cocoanuts.

தென்னை நெற்றுகள் சாற்றுதல்.—தென்னை நெற்றுகளை சாற்றுவதற்கு இடம் சற்று நிழலுள்ளதாக இருக்கவேண்டும். ஸுமார் 50 அடி சதுரமுள்ள இடத்தைத் தெரிந்தெடுத்து, அதில் 1 அடி அல்லது $1\frac{1}{2}$ அடி அகலம், $1\frac{1}{2}$ அடி ஆழம், 50 அடி நீளமுள்ளன வாய்ப் பள்ளங்கள் தோண்டவேண்டும். பள்ளங்களில் ஒன்றுக்கொன்று கொஞ்சம் இடைவெளி யிருக்கவேண்டும்.

முதல் பள்ளத்தில் தோண்டியெடுத்த மண்ணைத் தனியாக எடுத்து வைத்துக்கொண்டு, இரண்டாவது பள்ளத்திலிருந்து எடுத்த மண்ணை முதல் பள்ளத்திலும், மூன்றாவது பள்ளத்திலிருந்து எடுத்த மண்ணை இரண்டாவது பள்ளத்திலுமாக இப்படி ஒரு பள்ளத்துக்கு அதற்கடுத்த பள்ளத்து மண்ணைப் போட்டு நிரப்பவேண்டும். கடைசிப் பள்ளத்துக்கு முதல் பள்ளத்திலிருந்து எடுத்து வைத்திருந்த மண்ணைப் போடவேண்டும். பிறகு காய்ந்த தென்னை யோலைகளை பாத்தியில் நாலைந்தடி கனத்துக்குப் பரப்பி நெருப்பிடவேண்டும். பிறகு நிலம் தென்னை நெற்று சாற்றுவதற்குத் தகுந்ததாயிருக்கும். 50 அடி சதுரமுள்ள பாத்தியில் 400 தென்னை நெற்றுகள் சாற்றலாம்.

தென்னை நெற்றுகளை மரத்திலிருந்து கீழே போடக்கூடாது. கயிற்றால் மெதுவாகக் கீழே இறக்கவேண்டும், ரொம்ப முதிர்ந்த மரத்தின் நெற்றுகள், ப்ரயோஜனப்படா. நன்றாய்க் காய்க்கும் மரத்து நெற்றுகளை எடுத்து சாற்றுதலே நல்லது. உருண்டையாய் அதிக நாரில்லாமல் உள்ளே காய் பெரியதாயிருக்கும் நெற்று ச்லாக்யமானது.

நெற்றுகளை நேராக நடுவதே நல்லது. ஒன்றுக்கொன்று இரண்டடி தூரமுள்ளதாக நடுவது நல்லது. நெற்றில் முக்கால் பாகம் மண்ணில் மறைந்தும் கால் பாகம் வெளியில் தெரிந்துகொண்டும் இருக்கவேண்டும். மழை பெய்யாவிட்டால் வாரத்துக்கு இரண்டு தடவை ஜலம் பாய்ச்சவேண்டும்.

மேற்சொன்ன முறையில் தென்னம் பிள்ளைகள் ஆறு மாஸகாலத்தில் 4 அடி உயரமுள்ளவையாக இருக்குமென்று சொல்லப்படுகிறது.

### Conservation of Moisture.

மண்ணீரத்தைப் பாதுகாத்தல்.—நிலத்தைப் பண்படுத்தி ஸாகுபடி செய்வதால் அதிலுள்ள ஈரம் வீணாகாமல் அதைப் பாதுகாக்கலாம். நிலத்தைப் பண்படுத்துவதால் நிலத்தில் விழும் அல்லது பாயும் ஜலம் ஓடிப்போகாமல் அதிலேயே தங்கி சுவறிக்கொள்ளுகிறது. பண்படுத்துவதால் களைகள் அழிந்து போகின்றன. இதனால் இவைகள் ஈரத்தை க்ரஹித்து வீணாக்குமென்ற பயம் கிடையாது. நிலத்தை உழுது கொத்துவதால் மேல்மண் தளர்ச்சியடைந்து காய்ந்து போய் உள்ளிருக்கும் ஈரம் மேலே வந்து ஆவியாகாதபடி தடுக்கிறது. உள்ளிருக்கும் ஈரம் வீணாகாமலிருப்பதற்காக மேல் மண்ணின் ஈரத்தை வேண்டுமென்று இழந்துவிடுகிறோம்.

### Manure for Vegetables.

காய்கறிப் பயிர்களுக்கு எரு.—ஆட்டுத்தோல், மாட்டுச்சாணி, சாம்பல் இம்மூன்றையும் சேர்த்து ஒரு பெரிய குழி தோண்டி அதிலிட்டு மேலே மண் போட்டு மூடி 1-வர்ஷம் அல்லது $1\frac{1}{2}$-வர்ஷம் வரையில் மட்கவைத்து, அவ்வெருவை கொடி படரும் காய்கறிச் செடிகளுக்கு எருவிட்டால், செடிகள் செழித்தோங்கி காய்ப்பு அதிகமாகும்.—விச்வகர்ம குலோபகாரி.

### Dried Plantain Leaves.

வாழைச்சருகு.—வாழைச்சருகு முதலியவைகள் அழலை மாற்றுவதில் ச்லாக்யமான குணத்தை உடையவை. வயலில் அழுகச்செய்தல் நலம்.

### Selection of Seed.

விதை தேர்ந்தெடுத்தல்.—விதைகளில் லேசானவைகளை விதைப்பதைவிட கனமான விதைகளை விதைப்பதுதான் மேலானது. ஜப்பானில் விதைகளை சாப்பிடும் உப்பு கரைத்த ஜலத்தில் போட்டு அதில் மிதக்கும் விதைகளை லேசானவைகளென்று எடுத்து எறிந்துவிட்டு, அமிழ்ந்து கிடக்கும் விதைகளை மாத்ரம் உபயோகிக்கிறார்கள். இந்த முறையை நமது நாட்டு விவஸாயிகளும் கையாடலாம். விதை நெல்லை இவ்விதம் தெரிந்தெடுப்பதே நல்லது. விதையை நெருக்கமாய் விதைப்பதைவிட பரவலாய் விதைத்தால் பாஸுல் அதிகமாகக் கிடைக்கிறதென்று அனுபவத்தில் தெரியவந்திருக்கிறது.

# CO-OPERATION
## கோவாபரேஷன்.

### The Madura Co-operative Conference.

மதுரை கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.—ஸமீபத்தில் மதுரையில் நடந்த மதுரை-ராமநாதபுரம் கோவாபரெடிவ் கான்பரென்ஸில் சில அனுபவத்துக்கேற்ற தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளை இங்கு எழுதுகிறோம்.

(1) மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் தகுந்த இடங்களில் மேல் விசாரணை செய்யும் ஸங்கங்கள் ஏற்படுத்துவது நல்லது.

(2) ஒவ்வொரு கோவாபரெடிவ் ஸங்கத்திலும் மெம்பர்கள் ஒவ்வொருவரும் வர்ஷத்துக்குக் குறைந்தது 1-ரூபாயாவது மிச்சம் பிடித்து ஸங்கத்தில் டெபாஸிட்டாகப் போடவேண்டும்.

(3) மெம்பர்கள் தாங்கள் வாங்கின கடன்களை தவணைப்படி காலந்தவறாமல் கொடுக்கும்படி செய்வதற்காக, ஸங்கங்களின் மானேஜிங் கமிட்டியார், கடன் வாங்கப்பட்ட காரணங்களுக்குத் தகுந்தபடி, கடனைத் திருப்பிக்கொடுக்க கெடுக்கள் ஏற்படுத்தவேண்டும். கடன்களை தவணைப்படி சரியான காலத்தில் செலுத்தும்படி கட்டாயப்படுத்தவேண்டும்.

(4) ஜனங்களிடத்தில் கோவாபரேஷனைப் பரவச்செய்வதற்காக ஸௌகர்யமான இடங்களில் கோவாபரேஷன் ஸம்பந்தமான மீட்டிங்குகள் கூட்டவேண்டும்.

(5) கோவாபரெடிவ் முயற்சியைப் பரவச் செய்வதற்கும், அதை ஒழுங்குபடுத்தவும், ஸங்கங்களை மேற்பார்வை செய்யவும், அவைகளுக்கு ஆலோசனை சொல்லவும், மதுரை ராமநாதபுரம் ஸெண்ட்ரல் பாங்கி ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி ஏற்படுத்தவேண்டும்.

(6) இப்போதுள்ள கோவாபரெடிவ் ஸங்கங்களும் இனியேற்படும் ஸங்கங்களும் விவஸாயத்தை அபிவ்ருத்தி செய்வதற்காக, ஸங்கத்து மெம்பர்களுக்கு கூட்டு நபர் ஜாமீன்பேரில் பணம் கடன் கொடுக்கவேண்டும். ஆனால் விவஸாய அபிவ்ருத்திக்கு அதற்கென்று ப்ரத்யேகமான ஸங்கங்கள் ஸ்தாபிப்பதுதான் நல்லது.

### Co-operative Progress in India.

இந்தியாவில் கோவாபரேஷனின் முன்னேற்றம்.—இந்தியாவில் சென்ற 1912-13-ம் வர்ஷத்தில் மொத்தம் 12,324 ஸங்கங்கள் இருந்தது 1913-14-ம் வர்ஷத்தில் 15,673-ஸங்கங்களாக அதிகரித்திருக்கிறது 1913-14-ம் வர்ஷத்தில் 329 ஸென்ட்ரல் ஸங்கங்களும் 806-விவஸாயிகளுக்கல்லாத ஸங்கங்களும், 14,538 விவஸாயிகளுக்கான ஸங்கங்களும் இருந்தன. அந்த வர்ஷத்தில் விவஸாயிகளுக்கான ஸங்கங்கள் 3,156 புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. மொத்தம் உள்ள மெம்பர்கள் 7,44,226. நடை முதல் பணம் 77-கோடியே ஒரு லக்ஷத்து 50-ஆயிரம் ரூபாய். அந்த வர்ஷம் ஸென்ட்ரல் ஸங்கங்களுக்கு 6,38,577-ரூபாயும், விவஸாயிகளுக்கான ஸங்கங்களுக்கு 15,21,486-ரூபாயும், விவஸாயிகளல்லாதவர்களுக்கு 3,86,696-ரூபாயும் ஆகமொத்தம் 25,46,759-ரூபாய் லாபம் கிடைத்தது.

பின் வரும் அட்டவணையால் இன்னின்ன மாகாணத்தில் இன்னின்ன வர்ஷத்துக்கு இத்தனை ஸங்கங்களும் மெம்பர்களும் இருந்தார்கள் என்பது தெரியவரும்.

| மாகாணம் | ஸங்கங்களின் தொகை | | மெம்பர்களின் தொகை | |
|---|---|---|---|---|
| | 1912-13 | 1913-14 | 1912-13 | 1913-14 |
| சென்னை ... | 1,078 | 1,333 | 82,713+198 ஸங்கங்கள் | 1,00,537+232 ஸங்கங்கள் |
| பம்பாய் ... | 615 | 698 | 46,223 | 66,775 |
| பெங்கால் ... | 1,123 | 1,663 | 56,889 | 90,363 |
| பஞ்சாப் ... | 2,845 | 3,333 | 1,33,780 | 1,60,892 |
| ஐக்யமாகாணங்கள் ... | 2,530 | 2,800 | 1,06,627 | 1,16,069 |
| மத்யமாகாணங்கள் ... | 1449 | 2213 | 27,571+825 ஸங்கங்கள் | 40,415+1,807 ஸங்கங்கள் |
| பர்மா ... | 1,155 | 1,352 | 31,570 | 37,131 |
| பேஹார் ... | 595 | 822 | 30,673 | 50,804 |



# COMMERCE.
## வ்யாபாரம்.

### Export of Rice from Rangoon.

ரங்கூனிலிருந்து அரிசி ஏற்றுமதி.—இந்தியாவில் பர்மாவிலிருந்துதான் அரிசி ஏற்றுமதி அதிகமாக நடக்கிறது. அதிலும் ரங்கூனிலிருந்து தான் மற்ற பர்மாத் துறைமுகங்களிலிருந்து போவதைவிட அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. சென்ற 17 வர்ஷங்களாக ரங்கூனிலிருந்து இன்னின்ன தேசங்களுக்கு இவ்வளவு டன் அரிசியும் அரிசிமாவும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது பின் வரும் கணக்குகளால் தெரியவரும்.

| வர்ஷம். | ஐரோப்பா | அமெரிக்கா. | ஸ்ட்ரெய்ட்ஸ், ஆஸ்ட்ரேலியா, இதர நாடுகள். | இந்தியா, மொரிஷஸ். |
|---|---|---|---|---|
| 1914 | 6,69,000 | 14,000 | 39,1,000 | 8,64,000 |
| 1913 | 7,37,000 | 23,000 | 7,05,000 | 5,78,000 |
| 1912 | 7,34,000 | 16,000 | 8,70,000 | 1,68,000 |
| 1911 | 7,93,000 | 17,000 | 7,98,000 | 2,04,000 |
| 1910 | 7,25,000 | 27,000 | 5,98,000 | 5,73,000 |
| 1909 | 6,39,000 | 19,000 | 2,78,000 | 9,57,000 |
| 1908 | 6,53,000 | 14,000 | 3,08,000 | 7,33,000 |
| 1907 | 6,63,000 | 19,000 | 5,05,000 | 6,88,000 |
| 1906 | 6,79,000 | 29,000 | 4,58,000 | 5,51,000 |
| 1905 | 6,66,000 | 37,000 | 7,57,000 | 2,51,000 |
| 1904 | 6,40,000 | 58,000 | 8,66,000 | 2,06,000 |
| 1903 | 5,67,000 | 52,000 | 7,55,000 | 1,23,000 |
| 1902 | 6,09,000 | 74,000 | 4,85,000 | 5,17,000 |
| 1901 | 4,87,000 | 67,000 | 3,76,000 | 6,16,000 |
| 1900 | 3,78,000 | 59,000 | 2,81,000 | 7,18,000 |
| 1899 | 5,04,000 | 89,000 | 2,32,000 | 3,40,000 |
| 1898 | 5,07,000 | 92,000 | 4,22,000 | 3,02,000 |

சென்ற 1913-1914-ம் வர்ஷங்களில் பர்மாவிலிருந்து இன்னின்ன துறைமுகங்களிலிருந்து இவ்வளவு அரிசியும் அரிசிமாவும் ஏற்றுமதி செய்யப்பட்டன வென்பது பின்வரும் கணக்குகளால் தெரியவரும்.

| | 1914 | 1913 |
|---|---|---|
| துறைமுகம் | டன்கள் | டன்கள் |
| ரங்கூன் | ...19,39,600 | 20,45,074 |
| அக்யாப் | ... 2,53,400 | 2,71,000 |
| பேஸ்ஸீன் | ... 2,05,800 | 3,63,500 |
| மௌல்மீன் | ... 1,99,600 | 2,37,900 |
| மொத்தம் | ...26,98,400 | 29,17,474 |

மேல்கண்ட அட்டவணையால் ரங்கூனிலிருந்துதான் அதிகமாக அரிசியும் அரிசிமாவும் ஏற்றுமதியாகிறதென்று தெரியவரும். ரங்கூனிலிருந்து ஏற்றுமதியாகும் அரிசியில் இவ்வளவு பாகம் இன்னின்ன இடங்களுக்குப் போகிறதென்பது பின் வரும் கணக்குகளால் தெரியவரும்.

| ஏற்றுமதி செய்யப்படும் தேசம். | | 1913 டன்கள். | 1914 டன்கள். |
|---|---|---|---|
| ஐரோப்பா | ... | 7,37,033 | 6,69,001 |
| இந்தியா | ... | 5,78,696 | 8,64,322 |
| ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்ட்ஸ், ஆஸ்ட்ரேலியா, ஜாவா, ஜப்பான் | ... | 7,05,419 | 3,91,636 |
| அமெரிக்கா | ... | 23,926 | 14,641 |
| | | 20,45,074 | 19,39,600 |

### Soap Factories.

ஸோப் தொழில்சாலைகள்.—எஸ். ஆர். எம். எ. ஆர். என்ற விலாஸமுள்ள நாட்டுக்கோட்டைக் கம்பெனியார் பட்டுக் கோட்டையில் "ஸ்டார் அப்பர் இந்திய ஸோப் தொழில்சாலை" யென்று பெயருள்ள ஸோப்செய்யும் ஒரு தொழில்சாலையை ஸமீபத்தில் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

மலையாளத்தில் தானூரில் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில்சாலையில், ஸோப்பு, எண்ணெய் வகையருக்களில் அதிநிபுணரான மிஸ்டர் எ. கே. மேனன், மீன் வ்யாபார இலாகாவுக்கு கௌரவ டிரெக்டரான ஸர் ப்ரிடரிக் நிக்கல்ஸன் என்பவருடைய அனுமதியின்மேல் ஒரு ஸோப்புத் தொழில்சாலை ஸ்தாபித்திருக்கிறதாக தெரிகிறது.

### Business Enterprise in India.

இந்தியாவின் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற டிஸம்பர் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 9-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 2 | பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | ...25,50,000 |
| 4 | வ்யாபாரக் கம்பெனிகள் | ... 5,70,000 |
| 1 | அரிசிமில் கம்பெனி | ... 50,000 |
| 1 | ரப்பர் தோட்டக் கம்பெனி | ... 5,00,000 |
| 1 | கிலங்கள் கட்டிடக் கம்பெனி | ... 20,00,000 |
| 9 | | 56,70,000 |

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### A Soap Weed.

ஒரு சவர்க்காரப் பூண்டு.—அமெரிக்கா ஐக்யமாகாணங்களில் ஒன்றாகிய கான்ஸாஸ் என்னும் நாட்டிலும், அதற்குப் பக்கத்திலுள்ள ப்ரதேசங்களிலும் 'ஸோப் வீட்' என்று சொல்லப்படும் ஒரு சவர்க்காரப் பூண்டு ஏராளமாய் முளைத்திருக்கிறதாம். அமெரிக்காவிலுள்ள பூர்வீக ஜனங்களாகிய இந்திடர்களும், மெக்ஸிகோதேசத்து ஜனங்களும் இந்தப் பூண்டிலிருந்து ஒருவித கஷாயம் தயார் செய்து, அதைத் தங்கள் தலையிரில் தடவிக்கொண்டு ஸ்நானம் செய்கிறார்களாம். தற்காலம் ஸோப் செய்கிறவர்கள் அந்தப் பூண்டைக் கொண்டு, தேகத்துக்குத் தேய்த்துக் கொள்ளும் ஸோப்பும், கம்பளிரோமம் சுத்தம் செய்ய உதவும் ஸோப்பும் செய்கிறார்களாம்.

அந்தப் பூண்டு காடுகளில் எங்கும் முளைத்து அதிசீக்ரம் பரவி மற்றப் பயிர்களை நாசம்செய்து விடுகிறபடியால், அந்த நாடுகளிலுள்ள காட்டிலாகா அதிகாரிகள் அதைத் தொலைக்க வழிதேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது அந்தப் பூண்டு ஸோப்பு செய்வதற்கு உபயோகிக்கப்பட்டு வருவதால், அநேக ஜனங்கள் அதைக் காடுகளில் பிடுங்கிவந்து ஸோப்பு தொழில் சாலைகளுக்கு விற்கிறார்களாம். ஒருடன் நிறையுள்ள பூண்டுக்கு 24-ரூபாய் கிடைக்கிறதாம்.

### Dead Animals.

இறந்துபோன ப்ராணிகள்:—ப்ராணிகளின் எலும்புகள் நெருப்புக்குச்சியின் பற்றியெரியும் பாகம் செய்வதற்கு வேண்டிய ரஸாயனப் பொருள்கள் செய்ய உதவுகின்றன. ம்ருகங்களின் கால் எலும்புகளைக் கொண்டு, பல் தேய்க்க உதவும் ப்ரஷ்களுக்கும் கத்திகளுக்கும் பிடிகள் செய்கிறார்கள். ஸாதாரணமாய் தந்தம் உபயோகிக்கப்படும் ஸாமான்களிலெல்லாம் கால் எலும்பை உபயோகிக்கிறார்கள். சமையல் செய்த மாம்ஸத்திலுள்ள எலும்புகளைக்காய்ச்சி அதிலிருந்து கொழுப்பும், ஜிலட்டின் என்னும் பொருளும் எடுக்கிறார்கள். கொழுப்பு ஸோப்பு செய்வதற்கு உபயோகப்படுகிறது. ஜிலட்டின் என்னும் பொருளும் ரஸாயனத் தொழில்சாலைகளில் உபயோகப்படுகிறது.

ம்ருகங்களின் பற்களிலிருந்து பொத்தான்கள் செய்யப்படுகின்றன. செத்த ம்ருகங்களின் பற்பலபாகங்களிலிருந்து பல ரஸாயனப் பொருள்களும், வச்ரப் பசை, க்ளிஸரின், முதலிய பல உபயோகமுள்ள பொருள்களும் பலவித உரங்களும் கிடைக்கின்றன. தோல், மயிர், கொம்புமுதலிய பொருள்களின் உபயோகம் பலருக்கும் தெரிந்ததே. பார்க்கப்போனால் இறந்த ப்ராணியின் ஒவ்வொரு பாகமும் மனிதர்க்கு ஏதாவது ஒருவிதத்தில் உபயோகப்பட்டு வருகிறதென்று சொல்லலாம். உபயோகமற்றபொருள் என்பது ஒன்றுமேயில்லை.

### Fish for Cattle.

கால்நடைகளுக்கு மீன்.—மீனை மற்ற தீனிகளோடு கலந்து மாடுகளுக்குக் கொடுத்தால், மாடுகள் அதைத் தின்கின்றனவாம். அதனால் மாடுகளுக்குக் கெடுதல்கள் உண்டாவதில்லையாம். முதலில் மாடுகள் அதைத் தின்ன ப்ரியப்படாவிட்டாலும், கொஞ்சகாலத்துக்குப்பிறகு அவைகள் பழக்கமடைந்து ஆவலாய்த் தின்கின்றனவாம். ஆனால் மீன்தீனி கடலைப் பிண்ணாக்கைவிடக் கொஞ்சம் மட்டமானது. கடல் கரையோரங்களில் மீன் அதிகமாய்க் கிடைக்கும் காலங்களில் அதை மாடுகளுக்குத் தீனியாக உபயோகப்படுத்தலாமென்று சொல்லப்படுகிறது.

### Silk from Flesh.

மாம்ஸத்திலிருந்துபட்டு.—ஜெர்மானிய ரஸாயனிகள் இறந்துபோன குதிரைகளின் மாம்ஸத்திலிருந்து நாரைப் பிரித்தெடுத்து பட்டாகச் செய்கிறார்களாம். மாம்ஸத்தில் த்ராவகங்களைச் சேர்க்க அது நாராகப் பிரிந்துவிடுகிறது. அந்த நாரை ஒருவித முறையால் பதனிட பட்டுத் தன்மையடைகிறது. இந்தப் பட்டை ஸாதாரணப் பட்டைப்போல் நெய்து கூச்சுக் என்னும் ஒரு சரக்கு கலந்த த்ரவபதார்த்தத்தில் நனைத்தெடுத்தால் அந்தப் பட்டுத்துணியில் ஜலம் ஒழுகாமலிருக்குமாம். காற்றும் உள்புகாதாம். இந்தப்பட்டை பலூன் கூண்டுகளுக்கு உபயோகிக்கமுடியும்.



# BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Life's 14 Mistakes.

நம் உயிர்வாழ்க்கையின் 14 தப்பிதங்கள்:—

1. நாம் எது சரி, எது தப்பு என்று எண்ணுகிறோமோ அதனை மேலானதாக எண்ணி நிலைநாட்ட முயலுவது; மற்றெல்லோரும் அதையே பின்பற்ற வேண்டுமென்று எதிர் பார்ப்பது.

2. பிறருடைய ஸுகதுக்க அநுபவங்களை நம்முடைய ஸுகதுக்க அளவைக்கொண்டு அளக்க முயலுதல்.

3. இவ்வுலகத்தில் எல்லோரும் ஒரே விதமான அபிப்ராயமுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்று எதிர் பார்த்தல்.

4. வாலிபப் பருவத்தில் வயோதிகப் பருவத்துக்குரிய அநுபவத்தையும், தேர்ந்த அறிவையும் தீர்மானமான புத்தியையும் எதிர்பார்த்தல்.

5. பல வகையான குணமுடையவரை ஒரே விதமான குணமுடையவராகத் திருப்ப முயலுதல்.

6. அற்ப காரியங்களில் ஒத்துப்போகாமை; அவற்றை ப்ரதானமாகக் கொண்டு வழக்கிடுதல்.

7. நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலும் பூரணமாகச் சரியா யிருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தல்.

8. எது சரிப்படுத்த முடியாமல் மிஞ்சிப்போய் விட்டதோ, அதற்காக நம்மையும் உபத்ரவப்படுத்திக் கொண்டு, பிறரையும் உபத்ரவப்படுத்தல்.

9. எங்கெங்கே துக்க நிவ்ருத்திக்கு இடமுண்டோ அங்கங்கே நம்மால் கூடுமானவிடத்தில் துக்க நிவ்ருத்தி செய்யாதிருத்தல்.

10. அன்யருடைய குறைகளை ஒருபொருட்டா யெண்ணாமலும் அவர்களிடத்து அநுதாபம் பாராட்டாமலு மிருத்தல்.

11. நம்மால் செய்ய முடியாததை எவராலுமே செய்ய முடியாதென் றெண்ணுதல்.

12. காலதேச வர்த்தமானக் கட்டுக்குள்ளடங்கிய நம்முடைய மனஸு எதை யுணருகிறதோ அதை மாத்ரமே நம்புதல்.

13. தற்கால உயிர்வாழ்க்கையை ப்ரதானமாகக் கொண்டு, இது எப்போதும் இப்படியே நீடித்திருக்குமென் றெண்ணி, மற்ற ஆத்மலாப விஷயங்களை கவனியா திருத்தல்.

14. வெளியில் காணப்படுங்குணங்களால் ஜனங்களை மதித்து உள்குணங்களைக் கவனியாதிருத்தல்.

இப்பதினான்கு குற்றங்களையும் நீக்கி ஒருவன் உயிர்வாழ முயலுதலே உத்தமம் என்று இங்க்லண்டிலுள்ள ஜட்ஜ் ரென்டெளல் என்பவர் சொல்லுகிறார்.—

லோகோபகாரி.

### The Dailies.

தினஸரிப் பத்ரிகைகள்.—உலகம் முழுவதிலும் உள்ள தினஸரிப் பத்ரிகைகளின் மொத்தம் 5,500, அல்லது 6000 இருக்கலாமென்று சொல்லப்படுகிறது. ஜெர்மனியில் 900 தினஸரிகளுக்குமேல் ப்ரசுரமாகி வருகின்றன. அங்கே ட்ராங்க்போர்ட் என்னும் ஊரிலுள்ள 'போஸ்ட் வீட்டிங்' என்னும் பத்ரிகை ஐரோப்பாவிலுள்ள பத்ரிகைகள் எல்லாவற்றிலும் ரொம்ப பழையதாம். க்ரேட் ப்ரிட்டனில் அதாவது இங்க்லண்ட், வேல்ஸ், ஸ்காட்லண்ட் என்னும் மூன்று ப்ரிட்டிஷ் நாடுகளிலும் 250 தினஸரிப் பத்ரிகைகள் தான் உண்டு. ப்ரான்ஸின் முக்ய பட்டணமாகிய பாரிஸில் 150 தினஸரிகள் இருக்கின்றன. அங்கேயுள்ள 'லாபெடிட் ஜர்னல்' என்னும் பத்ரிகை உலகத்திலுள்ள மற்றெல்லாப் பத்ரிகைகளையும்விட அதிக சந்தாதாரர்களுள்ளதாம்.

### The Mosquito.

கொசு.—கொசு முட்டையிலிருந்து வெளிவந்த 10-வது நாளுக்குள் பெரியதாகி முட்டையிடுகிறது. ஒரு பெண் கொசு ஸுமார் 400 முட்டைகள் இடுகிறது. இதில் பாதி பெண் கொசுக்களாகும். ஒரு பெண் கொசு ஏப்ரல் மாஸம் 1-தேதி முட்டையிலிருந்து உண்டாகி, பத்தாவது நாள் முட்டையிடுகிறதென்றும், ஒரு கொசுவாவது சாகிறதில்லையென்றும் வைத்துக்கொண்டால், ஜூலை மாஸம் 1-தேதி யன்று அதாவது 90 நாள்களுக்குப்பிறகு அதன் ஸந்ததிகளின் தொகை 102,91,45,928,64,48,000,80,04,001 ஆகும். இதை வாசிக்கக்கூட கஷ்டமாயிருக்கும். இதனால் கொசுக்கள் வ்ருத்தியாகாதபடி தடுக்க வேண்டியது எவ்வளவு அவச்யமென்பது நன்றாய்த் தெரியவரும்.

## LADIES' PAGE.
### ஸ்த்ரீகள் பக்கம்

**Female Education.**

பெண் கல்வி.—ஸமீபத்தில் காஞ்சீபுரம் பெண்பாடசாலையில் பரிசளிப்புக் கொண்டாட்டம் நடைபெற்றபோது ஆனரபிள் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து பெண் கல்வியைப் பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். இப்போது ஆண் பிள்ளைகளுக்கு கற்பிக்கும் கல்வியை பெண்பிள்ளைகளுக்கும் கற்பித்து வருவதற்கான நிலைமைக்கு இந்தியா இன்னும் வரவில்லை. ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் சேர்ந்து படிப்பதைப்பற்றி சில ஆக்ஷேபணைகள் இருக்கின்றன. பெண்கள் தங்கள் புருஷர்களுடைய வீட்டுக்குப் போனபிறகு வீட்டிலேயே அவர்கள் படித்து வருவதற்கு வேண்டிய வஸதிகள் ஏற்படுத்துவது நல்லது. கிறிஸ்தவப் பாதிரிமார்களுள் ஸெனனா ஸங்கங்கள் என்று பெயர்கொண்ட ஸங்கங்கள் இருக்கின்றன. அந்த ஸங்கங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ ஸ்த்ரீகள் வீடுவீடாகப் போய் பெரிய பெண்களுக்குப் படிப்புச் சொல்லிவைக்கிறார்கள். அந்த முறையை சில ஹிந்துக்கள் ஆக்ஷேபிக்கிறார்களாதலால் பெண் கல்வி அபிவ்ருத்தியில் ஆவல் கொண்டவர்கள் ஹிந்து ஸ்த்ரீகளுக்கு நன்றாகக் கல்வி கற்பித்து, அவர்களைக் கொண்டு வீடுவீடாகப் போய் ஸ்த்ரீகளுக்குப் படிப்பைக் கற்பித்து வரும்படி செய்யவேண்டும்.

எலிமெண்டரி ஸ்கூல்களில் படிக்கும் பெண்களின் தொகை 97,658. ஸெகெண்டெரி ஸ்கூல்களில் 5,166 பெண்கள் படித்து வருகிறார்கள். அவர்களில் 3424 பேர்கள் இந்திய கிறிஸ்துவர்கள்; 446 பேர்கள் ப்ராம்மணர்கள்; 1154 பேர்கள் ப்ராம்மணர்களல்லாதவர்கள். மிஷனெரிகள் 32 ஸெகெண்டெரி ஸ்கூல்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், இந்தியர்களுக்கு பெண் கல்வி அபிவ்ருத்தியில் ச்ரத்தை யில்லையென்று ஏற்படுகிறது.

**Aluminium Vessels.**

அலூமினியப் பாத்ரங்கள்.—க்ளாஸ்கோ யூனிவர்ஸிடியைச் சேர்ந்த ப்ரொபஸ்ஸர் ஜான் க்ளெஸ்டர் என்பவர் செய்த சில ஆராய்ச்சிகளால் அலூமினியப் பாத்ரங்களைப் பற்றி சில விஷயங்கள் வெளியாயிருப்பதாக 'வைத்திய கலாநிதி' தெரிவிக்கிறது. ஆரெஞ்சு என்னும் கிச்சிலிப்பழரஸம், எலுமிச்சம்பழரஸம், மணத்தக்காளிப்பழரஸம் முதலிய இன்னும் இரண்டொரு பதார்த்தங்கள் அலூமினியப் பாத்ரங்களில் வைத்திருப்பதால் கொஞ்சம் கெட்டுப்போகின்றன. அதாவது இவற்றின் சேர்க்கையால் அலூமினியம் கரைந்து களிம்பேறுவதுண்டு. ஆனால் அலூமினியம் கரைந்திருப்பதாகவும் அறியமுடியாதபடி அவ்வளவு ஸ்வல்பந்தான் கரையும்; அதனால் மனித சரீரத்திற்கு யாதொரு கெடுதியுமில்லை. அதைப் பரிசோதித்துப் பார்த்ததில் தெரிந்துகொண்ட வாஸ்தவாம்சம் என்னவென்றால்—அலூமினியமானது விஷகுணமற்றதான வஸ்து; மிக எளிதில் சுத்தம் செய்யக்கூடியது; இதில் வெகு சீக்ரத்தில் சூடு ஏறுமாகையால் சமையலும் சீக்ரமாகும்; வெள்ளியைப்போல் கந்தகம் பட்டால் கருப்பாக ஆகாது; ஆகையால் சமையற் பாத்ரங்கள் செய்வதற்கு அலூமினியமே முதல் தரமான லோஹமாகும்.

**Curry Powder.**

கறிமாப் பொடி.—இது காய்வகைகளைக் கறிசமைப்பதில் உபயோகிக்கப்படுவது.

கடலைப்பருப்பு $2\frac{1}{2}$ பலம், உளுத்தம்பருப்பு $2\frac{1}{2}$ பலம், அரிசி 3 பலம், மிளகாய் $2\frac{1}{2}$ பலம், கொத்துமல்லி விதை 4 பலம், மிளகு $\frac{1}{4}$ பலம், சீரகம் $\frac{1}{8}$ பலம், மஞ்சள் $\frac{1}{8}$ பலம், காயம் $\frac{1}{8}$ பலம், கருவேப்பிலை $\frac{1}{2}$ பலம்.

இவைகளையெடுத்து காயம் மிளகாய் என்னுமிரண்டு வஸ்துக்கள் தவிர, மற்றவற்றை வெவ்வேறாக பக்குவமாய்க் காந்திப்போகாமல் வறுத்து, காயத்தைத் தணலின்மேல் வைத்துப் பொரிபோலாக்கி, எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இயந்திரத்திற்போட்டுக் குங்குமம்போலரைத்தெடுத்து ஓர் மரவையிற்போட்டு நன்றாய்மூடி வாஸனைபோகாமல் வைத்துக்கொள்ளவேண்டியது.—விச்வகர்மன்.

**Styes in the Eyes.**

கண் கட்டி.—குழந்தைகளுக்குக் கண்களில் கட்டி வெடிப்பதுண்டு. இதற்கு அடியில் கண்ட சிகித்ஸை செய்யவேண்டும். போரிக் ஆஸிட் ஒரு தேயிலைக் கரண்டியளவு எடுத்து அரை பைண்ட் ஜலத்தில் கரைத்து வைத்துக்கொள்ளவேண்டும். சுத்தமாயும் ம்ருதுவாயுமுள்ள துணியை இந்த ஜலத்தில் நனைத்து கட்டியை அலம்பவேண்டும். தினந்தோறும் புதிய துணியை எடுத்துக்கொண்டு 3 தடவை அலம்பவேண்டும். ஒவ்வொரு தடவையும் கால் மணி ஸாவகாசம் அலம்பவேண்டும். இப்படிச் செய்தால் கட்டி சீக்ரம் குணமடையும்.



## INDIANS ABROAD.
### இதர தேசங்களில் இந்தியர்கள்.

**An All-India Committee for Emigration.**

குடியேற்றத்தைக் கவனிக்க ஒரு எல்லா இந்திய கமிட்டி.—அநேக இந்தியர்கள் இந்தியாவை விட்டுக் கப்பலேறிப்போய் தென்னாப்ரிக்கா, அமெரிக்கா, பஸிபிக் மஹா ஸமுத்ரத்திலுள்ள சில தீவுகள், மேற்கு இந்திய தீவுகள், மலேயா நாடுகள் முதலிய இடங்களில் தங்கி வஸித்துவருகிறார்கள். இந்த இடங்களில் இருக்கும் இந்தியர்களின் தொகை அதிகமாக இருக்கிறது. அவர்கள் வஸிக்கும் தேசங்களின் பொருளாதார நிலைமைக்கு அவர்கள் ரொம்பவும் உதவியாக இருந்து வருகிறார்கள். அவர்களுடைய பாத்யதைகளை கவனிக்கவும், அவர்களுடைய க்ஷேமத்தை கவனிக்கவும் இந்தியாவில் தக்க ஸ்தாபனம் அதாவது ஸங்கம் ஒன்றுமில்லை. இந்தக் குறையை நீக்கவேண்டியது ரொம்ப முக்யமானதென்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகைக்கு ஒரு நிருபர் எழுதுகிறார்.

மேற்கு இந்திய தீவுகளில் உள்ள ஜனத்தொகையில் ஒரு முக்யமான பாகம் இந்தியர்களாகும். அவர்களில் பெரும்பாலார் கரும்புத் தோட்டங்களில் கூலியாள்களாக இருந்துவருகிறார்கள். அவர்களைப்பற்றி இந்தியர்களுக்கு விசேஷமாக ஒன்றும் தெரியாது. இந்தியப் பத்ரிகைகளும் அவர்களுடைய நிலைமையைப்பற்றி ப்ரஸ்தாபிப்பது கிடையாது. பொதுஜனத் தலைவர்களுக்கும் அவர்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. இப்படித் தெரியாமலிருப்பதற்குக் காரணம் இந்தியர்களுடைய குற்றம் மாத்ரமல்ல. அன்ய நாடுகளிலிருந்து வரும் ஸமாசாரங்கள் ராய்ட்டர் தந்தி ஏஜென்ஸி மூலமாய்த்தான் வருகின்றன. அந்தத் தந்தி ஆபீஸ்காரர்கள் அன்ய நாடுகளிலுள்ள இந்தியர்களைப் பற்றி விசேஷமாக ஸமாசாரங்கள் அனுப்புவதில்லை.

தென்னாப்ரிக்கா இந்தியர்களுடைய குறைகளை நிவர்த்திக்க மிஸ்டர் காந்தி பாடுபட்டது யாவரும் அறிந்த விஷயம். அவர் 'பாஸிவ் ரெஸிஸ்டன்ஸ்' என்னும் ஸாத்வீக எதிர்ப்பு அதாவது எதிர்க்காமல் எதிர்ப்பது என்னும் முறையைக்கைக்கொண்டபோது தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்கு உதவிசெய்ய இந்தியாவில் பற்பல இடங்களில் 'தென்னாப்ரிக்கா இந்திய லீக்' ஏற்படுத்தப்பட்டன. இந்த ஸங்கங்கள் தென்னாப்ரிக்கா இந்தியர்களுக்கு ஸாதகமாய் இந்தியாவில் உழைத்து வந்தது அங்குள்ள இந்தியர்களுக்கு ஒரு பெரிய ஆதரவாகவும் பலமாகவும் இருந்தது. அதுபோல மற்ற நாடுகளிலுள்ள இந்தியர்களுடைய குறைகளை கவனித்துவர ஒரு ஸங்கம் ஏற்படுவது அவச்யமாகும். அவர்களைக் கவனிக்கத்தக்க முயற்சிசெய்து வராவிட்டால் அவர்களுக்கு தாங்கள் இந்தியர்கள் என்ற ஜாதியபிமானம் போய் இந்தியர்களுக்குள்ள ஸ்வபாவங்களை யிழந்து, அந்த நாடுகளிலுள்ள தாழ்ந்த ஜாதிகளோடு ஒன்றாக மறைந்து போவார்கள். அந்த விடங்களிலுள்ள ஜனங்களுக்குள் ஜாதியபிமானம் பரவும்படி செய்வது ரொம்ப ஸுலபம். ஏனென்றால் அவர்களுக்குள் இன்னின்ன மாகாணத்திலிருந்து வந்தவர்களென்ற வித்யாஸம் இருப்பது அரிது. இந்தியாவில் ஜாதிக் கட்டுப்பாட்டால் பற்பல ஜாதிகள் இருப்பதுபோல அங்கே பற்பல ஜாதிகளேற்படுவதற்கும் இடமில்லை. மிஸ்டர் காந்தி தென்னாப்ரிக்கா இந்தியர்கள் பல நாட்டார்களாக இருந்தபோதிலும் அவர்களை ஒன்றுசேர்த்து, அவர்கள் எல்லாரும் இந்தியர்கள் என்ற தேசாபிமானம் ஏற்படும்படி செய்தார்.

இந்தியாவிலுள்ள ஜனத்தலைவர்கள் கொஞ்சம் ச்ரத்தை யெடுத்துக்கொண்டால், அன்ய நாடுகளிலுள்ள இந்தியர்களுக்குள், தாங்கள் இந்தியர்கள் என்ற எண்ணமும், இந்திய ஜாதியபிமானமும் ஏற்படும்படி செய்துவிடலாம்.

இந்த நோக்கம் கைகூடுவதற்கு இந்தியாவில் ஒரு கமிட்டி ஏற்படவேண்டியது அவச்யம். அன்ய நாடுகளிலுள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி அடிக்கடி பரிசீலனை செய்ய அந்தக் கமிட்டியார் சில பேர்களை நியமிக்கவேண்டும். அவர்களுடைய நிலைமையைப் பற்றி வர்ஷந்தோறும் ரிபோர்ட்டுகள் ப்ரசுரம் செய்யவேண்டும். ப்ரிட்டிஷ் ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளேயல்லாமல் அமெரிக்கா நாடுகளுக்கும் மற்ற ஸௌகர்யமுள்ள இடங்களுக்கும் இந்தியர்கள் குடியேறிப் போகும்படி தூண்டவேண்டும். கமிட்டியார் குடியேற்றத்தைப்பற்றித் தெரியவேண்டிய விஷயங்களை தேசபாஷைப் பத்ரிகைகளின் மூலமாயும், துண்டுப் பத்ரிகைகள் மூலமாயும் ஜனங்களுக்குள் பரவச்செய்யவேண்டும்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### God's Trouble.

தெய்வத்திற்கு ஒரு கஷ்டம்.—ஜெர்மானியர்களும் அவர்களுக்கு விரோதமாய் சண்டை செய்யும் ஆங்கிலேயர்களும், தங்கள் தங்களுக்கு ஜெயம் கிடைக்கவேண்டுமென்று தெய்வத்தை வேண்டுகிறார்கள். தெய்வம் யாருக்கு உதவி செய்யுமோ தெரியவில்லை!

ஒரு இங்க்லீஷ் ஸ்த்ரீ ஒரு உயர்ந்த ஜெர்மானிய ராணுவ உத்யோகஸ்தனை கல்யாணம் செய்து கொண்டாள். அவளுக்கு அவனிடத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. கொஞ்ச நாள்களுக்கு பிற்பாடு அந்த ஸ்த்ரீ அவனைத் தள்ளிவிட்டு, ஒரு இங்க்லீஷ் ராணுவ உத்யோகஸ்தனைக் கல்யாணம் செய்து கொண்டாள். இவனிடத்திலும் அவளுக்கு மற்றொரு பெண் பிறந்தது. இந்த இரண்டு பெண்களும் இவளிடத்தில் தற்காலமிருக்கின்றன. இவர்களின் தகப்பன்மார்கள் இரண்டு பேர்களும் யுத்தம் செய்ய போயிருக்கிறார்கள். இந்தக் குழந்தைகள் தங்கள் தங்கள் தகப்பன் ஸௌக்யமாய் திரும்பிவரவேண்டுமென்று தினந்தோறும் தெய்வத்தை ப்ரார்த்திக்கிறார்கள். அவர்களில் ஒரு பெண்ணுக்கு இவிலின் என்று பெயர். இன்னொரு பெண்ணுக்கு வீபிலின் என்று பெயர். இவிலின் தினந்தோறும் "ஸ்வாமி, வீபிலின் தகப்பனார் என் தகப்பனாரைக் கொல்லாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்" என்பாள். வீபிலும் "ஸ்வாமி, இவிலினுடைய தகப்பனார் என் தகப்பனாரைக் கொல்லாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்" என்பாள். அவர்களுடைய தாயார், இரண்டு தகப்பன்களும் எந்த ஸமயத்தில் எதிர் நின்று ஒருவர்க்கொருவர் கொடிய யுத்தம் செய்வார்களோ என்று ஏங்கியிருக்கிறாளாம். கடவுள் என்ன செய்வது! ஒருவருடைய ப்ரார்த்தனையையும் காதில் போட்டுக்கொள்ளாமலிருப்பதுதான் மேலான உபாயம்!!

### Tunnelling Underground.

பூமிக்குள் சுரங்கம் தோண்டிப்போனது.—ஒரு ஸமயம் ப்ரெஞ்ச் துருப்புகள் ஸ்வாஸோனுக்குப் பக்கத்தில் யுத்தம் செய்து கொண்டிருந்தபோது, அகழ்களில் இருந்த ஒரு ஜெர்மானியத் துருப்பைத் துரத்த என்ன செய்தும் முடியாமலிருந்தது. அதன்மேல் சிலர் ஸோல்ஜர்கள் ஜெர்மானியத் துருப்புகள் இருந்த இடத்துக்கு ஸுமார் 200 கஜம் தூரத்தில் பூமியில் குழிதோண்டி, ஜெர்மன் துருப்புகள் இருந்த விடம் வரையில் பூமிக்குள்ளேயே சுரங்கப்பாதை செய்து கொண்டுபோய் ஜெர்மன் துருப்புகள் இருந்த இடத்துக்குப் பக்கமாக டைனமிட் மருந்தை வைத்து அதை வெடிக்கும்படி செய்து திரும்பி வந்துவிட்டார்கள். மருந்து வெடித்ததில் 400 அல்லது 500 ஜெர்மானியர்கள் ஒரே தடவையில் இறந்துபோனார்கள்.

இன்னொரு ஸமயம் ஜெர்மானியப் படையிலிருந்த ஒரு பீரங்கியால் ப்ரெஞ்ச் துருப்புகளுக்கு ரொம்ப சேதம் ஏற்பட்டதையறிந்த சில ப்ரெஞ்ச் ஸோல்ஜர்கள் பூமிக்குள் சுரங்கம் பறித்துக்கொண்டுபோய் அந்த பீரங்கி வைத்திருந்த இடத்துக்குப் பக்கத்தில் டைனமிட் மருந்தை வைத்து வெடிக்கச்செய்து நாசம் செய்துவிட்டார்கள்.

### The Doctor's Boast.

ஒரு வைத்யருடைய பெருமை.—ஒருநாள் ஒருவன் வைத்யர்களைப்பற்றி பரிகாஸமாய்ப் பேசினபோது, அதைக்கேட்டிருந்த ஒரு வைத்யர் கோபங்கொண்டு, அவனைப்பார்த்து "நான் வைத்யம் செய்தவர்களில் என்னை குறைவாகப்பேசினவர்களுண்டா?" என்று சர்வத்தோடு பேசலானார். அக்கூட்டத்திலிருந்த ஒருவன் அவரைப்பார்த்து, "வைத்யரே! நீர் தாராளமாய்ப் பேசும்; தங்களுடைய மாத்ரையால் எமலோகஞ் சென்றவர்கள் திரும்பிவந்து உம்மைப்பற்றி குறை சொல்லப்போகிறார்களா? நீர் தைர்யமாய் பேசும்" என்றான்.

### Dogs to Save the Wounded.

காயமடைந்தவர்களைக் காப்பாற்ற நாய்கள்.—ஸமீபத்தில் இங்க்லண்டிலிருந்து யுத்தம் நடக்குமிடத்துக்குப் போயிருக்கும் ஒரு வைத்யக்கூட்டத்தார் தங்களுடன் சில வேட்டை நாய்களை கூட்டிக்கொண்டு போனார்களாம். தோப்பு துரவுகளிலும், வயல்களிலும் காயமடைந்து விழுந்த ஸோல்ஜர்களைக் கண்டுபிடித்துக் கொடுக்க இந்த நாய்களை உபயோகப்படுத்துவார்களென்று தெரிகிறது.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Hindu Temple in Russia.

ரஷ்யாவில் ஒரு ஹிந்து ஆலயம்.—ரஷ்யாவின் தெற்கு பாகமாகிய காகஸஸ் ப்ரதேசத்தில் காஸ்பியன் கடலோரமாக பாகு என்று ஒரு பட்டணமிருக்கிறது. இந்த நகரத்திலிருந்து கிரஸின் எண்ணெய் விசேஷமாய் வெளிதேசங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்தப் பட்டணத்தில் ஒரு புராதன ஹிந்து ஆலயமிருக்கிறதாம். இந்த ஆலயத்தைப்பற்றி ஒரு யாத்ரி பின் வருமாறு எழுதியிருக்கிறார். நாற்புறமும் மதில்கள் சூழப்பட்ட ஒரு வட்டமான இடத்தில் இந்த ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தின் அகலம் கிட்டத்தட்ட 100 அடியிருக்கும். அது ஓர் பழைய காலத்துக் கோவிலானாலும் அது நல்லநிலைமையில் தானிருக்கிறது. கட்டிடங்கள் கெடுதலடையவில்லை. கட்டிடங்களுக்கு நடுவில் 30 அல்லது 40 அடி உயரமுள்ள ஒருமண்டபம் இருக்கிறது. கோவிலின் ஓர் அறையில் விநாயகருடைய உருவமும் மற்ற தெய்வங்களுடைய உருவமும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கோவிலுக்கு இந்தியாவிலிருந்துபோன ஒரு ஹிந்து பூஜைசெய்து வருகிறாராம். அது ஸுமார் 900-வர்ஷங்களாக அவ்விடத்தில் இருந்து வருகிறதாம். எப்படி அது அவ்வூரில் ஏற்பட்டதென்பது தெரியவில்லை.

### The White General.

வெள்ளை ஸேனாதிபதி.—ரஷ்ய ஸைன்யங்களுக்கு நடுவில் ஒரு தெய்வீகமான புருஷன் வெண்மையான குதிரைமேல் ஏறிக்கொண்டு அடிக்கடி உலாவுகிறதாக அநேக ரஷ்ய ஸோல்ஜர்கள் சொல்லுகிறார்களாம். அந்தப் புருஷனை ரஷ்யர்கள் "வெள்ளை ஸேனாதிபதி" என்று சொல்லுகிறார்களாம். அந்தப் புருஷன் போகும்போது எந்த ஸோல்ஜரை நன்றாய்ப்பார்த்து விட்டுப்போகிறாரோ அந்த ஸோல்ஜர் ரொம்ப ஸௌக்யமாய் இருப்பானாம். எந்த ஸோல்ஜரை கவனிக்காமல் போகிறாரோ அந்த ஸோல்ஜர் இறந்துபோவது நிச்சயமாம். கொஞ்சகாலமாய் அந்த "வெள்ளை ஸேனாதிபதி" ரஷ்ய ஸைன்யங்களுக்குப் பக்கத்தில் இல்லாமல், ஜெர்மன் ஸைன்யங்களுக்கு நடுவிலும் ஆஸ்ட்ரிய ஸைன்யங்களுக்கு நடுவிலும் தலைகுனிந்து பூமியைப் பார்த்துக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறாராம். அதனால் தான் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் ஸைன்யங்களுக்குத் தோல்வியும் ஏராளமான நஷ்டமும் ஏற்பட்டனவாம்.

### Vaccine in War.

யுத்தத்தில் அம்மைகுத்தும் மருந்து.—யுத்தத்தில் ஸோல்ஜர்களுக்கு டைபாய்ட் காய்ச்சல் முதலிய வ்யாதிகள் வராமல் காப்பதற்கு அவர்களுக்கு அம்மைகுத்துவதுண்டு. ஒரு ஆஸ்பத்திரி மாத்ரம் ஸோல்ஜர்களுக்காக 14,76,374 டோஸ் அம்மைகுத்தும் மருந்து கொடுத்திருக்கிறதாம். ஒருதடவை உபயோகப்படுத்தக் கொடுக்கும் மருந்தின் அளவுக்கு ஒரு டோஸ் என்று பெயர். இந்த ஆஸ்பத்ரியிலிருந்து டைபாய்ட் காய்ச்சலுக்கு அம்மைகுத்தும் மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மருந்திலுள்ள டைபாய்ட் பாஸில்லி என்னும் விஷக்ருமிகளை ஒன்றின்பின் ஒன்றாய் நீளத்தில் வைத்தால் அந்த க்ருமிகளின் மொத்த நீளம் பத்துலக்ஷம் மைலாகும். இந்த தூரம் பூமிக்கும் சந்த்ரனுக்கும் உள்ள தூரத்தைவிட நான்கு மடங்கு அதிகமாகும்.

### Shaving in the Air.

பறக்கும்போது க்ஷவரம் செய்து கொள்ளல்.—கொஞ்ச காலத்துக்கு முன்னால் ஒரு ஆகாய கமனி ஆகாயக் கப்பலில் ஏறிப் பறக்கும்போது தமது முகத்துக்கு க்ஷவரம் செய்துகொண்டார். அவர் முதலில் 3,000 அடி உயரம் பறந்து அந்த உயரத்திலேயே சுற்றிச் சுற்றிப்பறந்து கொண்டே, தமது முகத்துக்கு ஸோப்பு தடவிக்கொண்டார். ஸோப்புத் தடவிக்கொள்வது ஸுலபமாயிருந்ததாம். க்ஷவரம் செய்துகொள்வது கடினமாயிருந்ததாம். க்ஷவரம் செய்துகொள்வதற்கு முகத்தைப் பிடித்துக்கொள்ளவும் க்ஷவரம் செய்து கொள்ளவும் இரண்டு கையையும் உபயோகிக்க வேண்டியிருந்ததால், அவர் தமது காலாலேயே ஆகாயவிமானத்தை நடத்தவேண்டியிருந்ததாம்.

### Signing with the Toe.

கால் கட்டைவிரலால் கையெழுத்திட்டது.—ஸமீபத்தில் அமெரிக்காவிலுள்ள ஒரு ஊரில் கையில்லாத ஒரு ஸ்த்ரீக்குக் கல்யாணம் நடந்தது. அவள் கல்யாண உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு தன் கால் கட்டை விரலால் கையெழுத்திட்டாளாம். அவளிப்போது ஒரு ஸர்க்கஸில் சேர்ந்திருக்கிறாளாம்.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Kathwal State.

கத்வால் ஸமஸ்தானம்.—கத்வால் ஸமஸ்தானம் என்பது நிஜாம் ராஜ்யத்தைச் சேர்ந்தது. அது ஒரு ஹிந்து சிற்றரசரால் ஆளப்பட்டு வருகிறது. அது ராய்ச்சூர் ஜில்லாவுக்குக் கிழக்கே இருக்கிறது. அதில் 214 க்ராமங்கள் சேர்ந்திருக்கின்றன. அது 864 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. அதன் ஜனத்தொகை 9,68,491; அந்த ஸமஸ்தானத்தின் வரும்படி 5-லட்சம் ரூபாய். அதன் சிற்றரசர் நிஜாம் அரசருக்கு வர்ஷத்திற்கு 86,000 ரூபாய் கப்பங் கட்டிவருகிறார். ஹைதராபாத் ஸமஸ்தானம் ஸ்தாபனமாவதற்கு முந்தியே கத்வால் ஸமஸ்தானம் ஒரு சிற்றரசரால் ஆளப்பட்டு வந்தது. அந்த ஸமஸ்தானத்திற்குரிய ஒருவித நாணயம் அங்கேயே செய்யப்பட்டுச் செலாவணி ஆகிவருகிறது. அந்த நாணயம் இப்பொழுதும் ராய்ச்சூர் ஜில்லாவில் வழங்கிவருகிறது. ஆனால் செலாவணி நாளுக்குநாள் குறைந்து வருகிறதென்று தெரிகிறது. கத்வால் ஸமஸ்தானம் தர்மத்திற்குப் பேர்போனதென்று சொல்லப்படுகிறது. வர்ஷத்திற் கொருமுறை அக்டோபர் மாஸத்தில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து சாஸ்த்ரப் பண்டிதர்களும், பாடகர்களும் கத்வாலுக்கு வருகிறார்கள் அவர்களைப் பரீட்சை செய்வதற்காக ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. தேறினவர்களுக்கு யோக்யதானுஸாரம் ஸன்மானங்கள் கொடுக்கப்படுகின்றன. இதற்கென்று அதன்ராஜா 50,000 ரூபாய் வர்ஷா வர்ஷம் தனியாக எடுத்து வைக்கிறார். இப்பொழுதிருக்கும் ராஜாவுக்கு வயஸு 27. அவர் நல்ல படிப்பாளி. உத்தம குணங்களுடன் விளங்கிவருகிறார். அவருக்கு இங்க்லீஷ் பாஷையிலும் தேசபாஷையிலும் நல்ல பாண்டித்யமுண்டு. ராஜாவுக்கு ஸமீபத்தில்தான் விவாகம் நடந்தது. விவாகம் முடிந்தவுடனே நிஜாம் அரசரின் உத்தரவைப்பெற்று, அவரைப் பார்க்கச் சென்றிருந்தாராம். நிஜாம் அரசரைப் பார்க்கப்போனபோது வழக்கப்படி ஏற்பட்டிருக்கும் காணிக்கைகளைக் கொண்டுபோய் அவருக்கு ஸமர்ப்பித்தாராம். இந்த ஸமஸ்தானத்தின் கார்யங்கள் அனுபோகம் பெற்ற கவர்ன்மெண்ட் பென்ஷன் உத்யோகஸ்தர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஸமஸ்தானத்தில் பட்டுத் தொழில்கள் அபிவ்ருத்தியடைந்து வருகின்றன.

### The Ten Commandments of Germany.

ஜெர்மனியின் பத்துநீதிகள்.—ஜெர்மன் சக்ரவர்த்தி கீழ்க்கண்ட கட்டளைகள் அடங்கிய துண்டுப் பத்ரிகைகளைக் கோடிக்கணக்காக அச்சிட்டு ஜெர்மனி தேசமெங்கும் ப்ரசுரம் செய்யும்படி செய்திருக்கிறாரென்று பத்ரிகைகளால் தெரிகிறது:—

1. நீ செலவுசெய்ய நேரிடும்போதெல்லாம் உனது தாய் நாட்டாரின் நன்மை உனது மனதிலிருக்கட்டும்.

2. நீ ஒரு விதேச (அன்ய தேச) வஸ்துவை வாங்கும்பொழுது உனது தேசம் வறுமையடைகின்றதென்பதை நீ யென்றும் மறவாதே.

3 உனது பொருள் ஜெர்மனியரைத் தவிர வேறு அயலாருக்குச் செல்லாதவாறு கவனித்துக்கொள்.

4. அந்ய நாட்டு யந்த்ரங்களை உபயோகித்து ஜெர்மன் தொழிற்சாலைகளைப் புறக்கணியாதே.

5. உனது சாப்பாட்டில் விதேச வஸ்துக்களை ஒன்றும் உபயோகியாதே.

6. ஜெர்மன் கடுதாசியில் ஜெர்மன் பேனாவால் எழுது; ஜெர்மன் மையொற்றுங் காகிதத்தை(ப்ளாட்டிங் பேபர்) உபயோகப்படுத்து.

7. ஜெர்மன் மா, ஜெர்மன் பழங்கள், ஜெர்மன் பீர், இவையே உனது சரீரத்திற்கு உண்மையான ஜெர்மன் சக்தியைக்கொடுக்கும்.

8. ஜெர்மனியில் உற்பத்தியாகும் காபி உனக்கு விருப்பமில்லாவிடின், ஜெர்மன் குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் காபியை உபயோகப்படுத்து.

9. உனது உடுப்புக்கு ஜெர்மன் துணியையே உபயோகப்படுத்து; உனது தலையில் ஜெர்மன் தொப்பியையே வை.

10. அந்ய நாட்டாரின் கேலியைக் கருதி இந்த உத்தம நீதிகளினின்றும் நீ வழுவிவிடாதே. பிறர் என்னசொன்னாலும், ஜெர்மனியில் உற்பத்தியான வஸ்துக்களே ஜெர்மனியைத் தாய்நாடாகக் கொண்ட ஒருவனுக்குத் தகுதியானவை யென்பதில் உறுதியாகவிரு.

### A German Hidden in a Box.

பெட்டியில் ஒளிந்திருந்த ஒரு ஜெர்மன்.—இங்க்லாந்திலிருந்து ஒரு ஜெர்மன் உத்யோகஸ்தன் ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியில் ஒளித்திருந்து வேறு தேசத்திற்குப் போக யத்தனித்தான். அப்பெட்டியைக் கப்பலில் ஏற்றுவதற்காக வேலைக்காரர்கள் தூக்கிக் கொண்டுபோனபொழுது அது தவறிக் கீழே விழுந்தது. அதனால் அப்பெட்டி திறக்கப்பட்டது. உடனே அதில் ஒளித்திருந்த ஜெர்மன் தப்பியோட யத்தனஞ் செய்தான். அங்கிருந்தவர்கள் அவனை உடனே கைதுசெய்து அதிகாரிகளிடம் ஒப்புவித்து விட்டார்கள். அப்பெட்டியில் அந்த ஜெர்மன் 36 மணிநேரம் ($1\frac{1}{2}$ நாள்) இருந்தானென்றும், அதற்குள் சிறிது பிஸ்கோத்தும் வெண்ணெயும் ஒரு புட்டி கோக்கோவும் தவிர வேறொன்றுமில்லையென்றும் தெரியவந்தது. குளிராலும் பசியின்கொடுமையாலும் ரொம்பவும் வருந்திய அந்த ஜெர்மானியனுக்கு அப்போது போலீஸ் அதிகாரிகள் ஒரு கிண்ணம் சூடான காப்பி கொடுத்தார்கள். அப்பொழுது அவன் ரொம்பவும் வந்தன மளித்தானும்.



### Forethought of the Germans.

ஜெர்மனியரின் முன்யோசனை.—பின்வரும் விஷயம் ஓர் ஆங்கிலப்பத்திரிகையில் காணப்படுகிறது:—

பெல்ஜியத்திலுள்ள கெண்ட் நகரிலிருந்த ஒரு ஜெர்மானியன் இரண்டு வர்ஷங்களுக்கு முன் ஒரு புதிய வீடொன்றைக் கட்டினான். அவ்வீட்டின் கூரை மிகவும் விநோதமாயிருந்தது. இந்த யுத்தத்தில் ஆண்ட்வர்ப் பட்டணத்தை ஜெர்மானியர் பிடித்தவுடன் அதனையடுத்த ஷெல்ட்நதியைத் தாண்டிக் கெண்ட் நகருக்குச் செல்லும்படி நேர்ந்தது. அந்நதியைக் கடப்பதற்குப் பாலமில்லை. ஆனால் கெண்ட் நகரிலிருந்த மேற்படி ஜெர்மானியனுடைய வீட்டுக்கூரை அப்படியே பெயர்த்தெடுத்து ஷெல்ட்நதியைத் தாண்டுவதற்கேற்ற பாலமாக உபயோகமாகும்படி முன்னரே செய்யப்பட்டிருந்தது. அவ்வீட்டில் அமைக்கப்பட்டிருந்த இருப்புத்தூண்களும் அப்பாலத்தைத் தாங்குவதற்காகவே அமைக்கப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் ஜெர்மானியர் உடனேபெயர்த்தெடுத்து வந்து, ஷெல்ட்நதியில் பாலமாக்கி அதைக் கடந்துபோனார்கள். இதனால் நீண்டகாலத்திற்கு முன்பே ஜெர்மானியர்கள் யுத்தத்திற்கு ப்ரயத்தனஞ் செய்திருந்தார்களென்றும், பெல்ஜியத்திற்குள் சென்று அங்கு நடக்கவேண்டிய ஒவ்வொரு முக்ய விஷயத்தையும் நுட்பமாகக் கவனித்து ஏற்பாடு செய்திருந்தார்களென்றும் விளங்குகின்றதென்று 'லோகோபகாரி' எழுதுகிறது.

### A Patriotic Frenchman.

ஒரு தேசாபிமானமுள்ள ப்ரெஞ்சுக்காரர்.—ப்ரான்ஸு தேசத்தில் கால்பந்து விளையாட்டில் ப்ரஸித்த புருஷரான ஜின் என்பவர் தேசாபிமானமுள்ள ஒரு தீர புருஷராவார். அவர் போர்முனையில் கடும் யுத்தம் செய்தார்; ஆயினும் ஜெர்மானிய வெடிகுண்டொன்றால் அவரது இரண்டு கால்களும் போய்விட்டன. எனினும் தாம் ஸ்வஸ்தமடைந்ததும், சேனாதிபதியிடம் சென்று—'ஐயா! என்னைப் போர்முனைக்கு அனுப்புங்கள், எனக்குக் கால்கள் போயினவேயென்று நினைக்கவேண்டாம். என்னுடைய தேசத்தில் பகைவர் இருக்க, நான் வீட்டில் சும்மா உட்கார்ந்திரேன். எவ்விதத்திலாவது தேசஊழியம் செய்ய வேண்டுமென்பதே என் விருப்பம். ஆகவே போர் முனையிலுள்ள ஆபீஸில் டைபிஸ்ட் அல்லது குமாஸ்தா வேலையாவது எனக்குக் கொடுங்கள்'—என்று கேட்டு இப்போது அவ்விதமே ஒரு அலுவல் பெற்று தேச கைங்கர்யம் செய்து வருகிறார்.

### A Kerosene Suicide.

ஒரு கிரஸின் தற்கொலை.—கல்கத்தாவில் ஹாரோலால் தாஸ் சந்தில் வசித்துவந்த சாரதாபாலதாஸி என்ற 19 பிராயமுள்ள ஓர் மாது தனது கணவனுடன் வஸித்து வருகையில், தனக்கும் தனது கணவனுக்கும் சிறிது விரோதம் நேர்ந்ததின் நிமித்தம், ஒரு நாள் இரவில் தனது உடுப்புகளில் மண் எண்ணெயை விட்டு நனைத்து தீ வைத்துக்கொண்டுவிட்டாள். அவளை அவ்வாபத்திலிருந்து நீக்குவதற்கு முன் அவள் நெருப்பினால் எரிக்கப்பட்டு இறந்துபோனாள்.

### A Glass Factory.

ஒரு கண்ணாடித் தொழில் சாலை.—புனாவுக்கருகிலுள்ள தலிகானில் 1907-ம் வருஷமுதல் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை நடந்து வருகிறது. இதற்கு அப்பக்கங்களில் பொது ஜனங்களிடத்தில் பைஸா நிதி யொன்று ஏற்படுத்தி ஒவ்வொரு பைஸாவாக வசூல் செய்து மூலதனம் சேர்க்கப்பட்டதாம். இந்தத் தொழிற்சாலையில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து சென்று 12 சிறுவர்கள் தொழில் கற்றுவருகிறார்கள்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் யுத்தம்.

*மார்ச்சுமீ 3-தேதி.*

சாம்பேன் ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் ப்ரெஞ்ச் துருப்புகளை பலமாகத் தாக்குகிறார்கள். ஆனால் அவர்கள் முன்னுக்குப்போக முடியவில்லை.

6-தேதி.

ஜெர்மானியர்கள் ரீம்ஸ் பட்டணத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

சாம்பேன் ப்ரதேசத்திலும் ஆர்கோன் ப்ரதேசத்திலும் ப்ரெஞ்ச்துருப்புகள் முன்னுக்குப் போயிருக்கின்றன.

8-தேதி.

ப்ரெஞ்ச்துருப்புகள் பெர்த்ஸ் என்னும் இடத்தில் தினம் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. வாஸ்ஜஸ் ப்ரதேசத்திலும் முன்னடைந்து வருகின்றன.

9-தேதி.

நேச ஆகாயவிமானங்கள் ஆஸ்டண்டின்மேல் பறந்துபோய் வெடிகுண்டுகள் போட்டன.

11-தேதி.

ப்ரிட்டிஷ் ஸைன்யங்கள் ப்ரெஞ்ச் பீரங்கிப்படையின் உதவியோடு, லாபாஸ்ஸியென்னும் ஊருக்கு 4-மைல் வடக்கேயுள்ள ந்யூஷாபல் என்னும் ஊரை பிடித்தன. ஜெர்மானியர்களுக்கு ரொம்ப சேதமாம். ஆயிரம் ஜெர்மானியர்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள்.

13-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் லெபினட் என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

14-தேதி.

ஜெர்மானியர்கள் இன்று ஸான் எலாய் என்னும் ஊரை பலமாகத் தாக்கினார்கள்.

18-தேதி.

ப்ரெஞ்ச்துருப்புகள் சாம்பேன் ப்ரதேசத்தில் பெர்த்ஸ் என்னுமிடத்தில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்து முன்சென்று கொண்டிருக்கின்றன.

23-தேதி.

ஆர்கோன் ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் இரண்டு தடவை தோற்றுப்போனார்கள்.

28-தேதி.

ஆறு ப்ரெஞ்ச் ஆகாயகமனிகள் மெட்ஸுக்குப் பக்கத்திலுள்ள ஜெர்மனியின் ஆகாயக்கப்பல் கொட்டகையையும், ஸ்ட்ராஸ் பர்க்குக்கு கிழக்கிலுள்ள பட்டாளந் தங்குமிடத்தையும் தாக்கினார்கள்.

29-தேதி.

ப்ரெஞ்ச்துருப்புகள் வட ஆல்ஸேஸ் மாகாணத்தில் ஹார்ட்மான் வீலர்காப் என்னும் மலையைப் பிடித்திருக்கின்றன.

30-தேதி.

மேற்கு யுத்தகளத்தில் லெஸ் எஸ்பார்ஜஸ் என்னுமிடத்தில் ப்ரெஞ்சுத் துருப்புகளுக்கும் ஜெர்மானியர்களுக்கும் பலமான சண்டை நடந்தது. ஜெர்மானியர்கள் சில அகழ்களைப் பிடித்திருக்கிறார்கள்.

### ரஷ்யாவுக்கும் ஆஸ்ட்ரியா-ஜெர்மனிக்கும் யுத்தம்

*மார்ச்சுமீ 2-தேதி.*

வார்ஸாவுக்கு 50 மைல் வடக்கேயுள்ள ப்ராஸ்னிஸ் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் ரஷ்யர்கள் ஜயமடைந்தார்கள். ஜெர்மானியர்கள் எல்லை ப்ரதேசத்தைநோக்கி புறங்காட்டி யோடிக்கொண்டிருக்கிறார்கள்.

3-தேதி.

ஜெர்மானியர்கள் ஒஸோவிக்ஸ் என்னும் கோட்டையைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். போலண்டில் மற்றவிடங்களில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் ஆஸ்ட்ரியர்கள் ரஷ்யர்களை பலமாக எதிர்த்தும் ரொம்ப சேதத்துடன் தோற்றுப்போனார்கள். கிழக்கு காலிஷ்யாவிலும் ஆஸ்ட்ரியர்கள் தோற்றுப்போய் விட்டார்கள்.

6-தேதி.

ரஷ்யர்கள் கிழக்கு காலிஷ்யாவில் ஆஸ்ட்ரியர்களைத் துரத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஸ்டானிஸ்லாவ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.



அப்போது அவர்கள் பதினெண்ணாயிரம் ஆஸ்ட்ரியர்களைக் கைது செய்தார்கள்.

ரஷ்யர்கள் கிழக்கு காலிஷ்யாவில் ஆஸ்ட்ரியர்களைத் துரத்தியடித்து, புகோவினாவை மறுபடியும் பிடித்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

ஆஸ்ட்ரியர்கள் டுக்லா கணவாயின் பக்கத்தில் ரஷ்யர்களை பலமாய்த் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள்.

ரஷ்யர்கள் கிழக்கு காலிஷ்யாவில் லாம்னிகா நதியைத்தாண்டி ஸ்டானிஸ்லாவின்மேல் படையெடுத்துப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 6000 ஆஸ்ட்ரிய ஸோல்ஜர்களையும் 64 ஆஸ்ட்ரிய ஜெனரல்களையும் கைது செய்திருக்கிறார்கள்.

8-தேதி.

வார்ஸாவுக்குத் தெற்கேயுள்ள, விஸ்டுலாநதியின் உபநதியாகிய பிலிகா நதியின்கரையில் 5உ முதல் பெரிய யுத்தம் நடந்துவருகிறது.

9-தேதி.

வார்ஸாவுக்குத் தென்மேற்கில் நடக்கும் யுத்தம் ரஷ்யர்களுக்கு ஸாதகமாக மாறிவருகிறது.

11-தேதி.

வடபோலண்டில் புதிதாக ஜெர்மானிய துருப்புகள் வந்திருக்கின்றன. அவைகள் ப்ராஸ்னிஸைநோக்கி யுத்தம்செய்யப் போகின்றன. அவர்கள் ஆஸ்ஸோவிக்ஸ் பட்டணத்தையும் தாக்குகிறார்கள்.

15-தேதி.

கார்ப்பேதியன்மலை மத்ய ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்து ஸ்மாலினிகா, லப்கௌ என்னும் ஊர்களைப் பிடித்திருக்கிறார்கள்.

16-தேதி.

ப்ராஸ்னிஸைநோக்கி வந்துகொண்டிருந்த ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

18-தேதி.

ரஷ்யர்கள் கிழக்கு ப்ரஷ்யாவுக்குள் மறுபடியும் புகுந்துவிட்டார்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் டில்ஸிட் என்னுமிடத்துக்கு வடக்கேயுள்ள லாங்க்ஸார்கன என்னும் ஊரைத் தாக்கினார்கள்.

ரஷ்யர்கள கார்ப்பேதியன்மலை ப்ரதேசத்தில் புகோவினா என்னும் ப்ரதேசத்தை நோக்கிப்போய்க் கொண்டிருக்கிறார்கள்.

20-தேதி.

ரஷ்யர்கள் கிழக்கு ப்ரஷ்யாவில் பால்டிக் கடலோரமாகவுள்ள ஜெர்மன் துறைமுகமாகிய மிமல் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்களென்று தெரிகிறது.

22-தேதி.

ரஷ்யர்கள் ப்ரஸிமிஸல் கோட்டையைப் பிடித்திருக்கிறார்கள்.

23-தேதி.

ரஷ்யர்கள்பிடித்த ப்ரஸிமிஸல் பட்டணத்தை ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் மறுபடியும் பிடிக்க பலமாக ப்ரயத்தனப்படுகின்றார்கள்.

25-தேதி.

ரஷ்யர்கள் மத்யகார்ப்பேதியன் ப்ரதேசத்தில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

26-தேதி.

ரஷ்யர்கள் மிமல் என்னும் ஜெர்மன் துறைமுகத்தைப் பிடித்ததன்மேல் 7 ஜெர்மானிய போர்க்கப்பல்கள் மிமலுக்கும் லிபா என்னும் ரஷ்ய துறைமுகத்துக்கும் நடுவில் உள்ள மீன்பிடிக்கும் துறைமுகங்களைத் தாக்கின.

மத்ய கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் லப்கௌ கணவாய்க்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

29-தேதி.

மத்யபோலண்டில் யுத்தம் பலமாக நடக்கிறது.

30-தேதி.

வடபோலண்டில் யுத்தம் கடுமையாயிருக்கிறது. வாச் என்னுமிடத்தில் கடுமையானசண்டை நடந்துகொண்டிருக்கிறது.

31-தேதி.

வடபோலண்டில் ரஷ்யர்கள் வாச் என்னுமிடத்திலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்திவிட்டார்கள்.

கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் நடக்கும் சண்டை ரஷ்யர்களுக்கு ஸாதகமாயிருக்கிறது. ஆஸ்ட்ரியர்கள் புகோவினாவிலிருந்து ரஷ்ய மாகாணங்களின் மேல் படை யெடுத்துப்போயிருக்கிறார்களாம்.

### துருக்கியோடு யுத்தம்.

*மார்ச்சுமீ 2-தேதி.*

மூடுபனியாலும் மழையாலும் டார்டனல்ஸ் ஜலஸந்தியில் தூரத்திலுள்ள கோட்டைகளைத் தாக்குவது முடியாமலிருக்கிறது. ஆகாயக்கப்பல்களில் ஏறிப்

போய் கோட்டைகளிருக்குமிடத்தைப் பார்ப்பதும் முடியாமலிருக்கிறது.

4-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியில் மேற்குக் கோடியிலிருந்து $8\frac{1}{2}$ மைல் தூரம்வரையில் கடல் வெடிகுண்டுகளை அப்புறப்படுத்தி யிருக்கிறார்கள்.

5-தேதி.

யுத்தக்கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலஸந்தியிலுள்ள கோட்டைகளைத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இன்று மூன்றுகோட்டைகள் சேதமடைந்தன.

8-தேதி.

'க்வீன் எலிஸபெத்' என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் டார்டனல்ஸ் ஜலஸந்தியில் புகுந்து ஜலஸந்தியின் குறுகிய பாகத்தின் வடகரையில் உள்ள கோட்டைகளைத் தாக்குகிறது.

இந்த மாஸம் 3-தேதி முதல் 5-ந்தேதி வரையில் 'க்வீன் எலிஸபெத்' என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் டார்டனல்ஸ் ஜலஸந்தியில் குறுகிய பாகங்களின் ஓரமாயுள்ள துருக்கிய கோட்டைகளைத்தாக்கி நாசம்செய்தது. 'க்வீன் எலிஸபெத்' கப்பலில் 15-அங்குலம் குருக்களவுள்ள பீரங்கிகள் இருக்கின்றன.

டார்டனல்ஸ் ஜலஸந்திக்குப் பக்கத்திலுள்ள ஸாராஸ்வளைகுடாவின் கரையோரமாகவுள்ள புலேர் கோட்டைகளை ப்ரெஞ்ச் யுத்தக்கப்பல்கள் தாக்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு ப்ரிட்டிஷ் கப்பல்படை ஸ்மிர்ணு என்னும் துறை முகத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறது.

9-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியிலுள்ள கோட்டைகளையும் மற்றதுருக்கிய கோட்டைகளையும் தாக்குவதற்கு 15-ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்களும் 5 ப்ரெஞ்ச் யுத்தக்கப்பல்களும் 3 ப்ரிட்டிஷ் க்ரூஸர்களும் போயிருப்பதாகத் தெரிகிறது.

12-தேதி.

இந்தியாவிலிருந்தும் இங்க்லண்டிலிருந்தும் போர் முனைக்குப் படையெடுப்பு ஸைன்யங்கள் போயிருப்பதுபோல டார்டனல்ஸ் ஜலசந்தி ப்ரதேசத்தைப் படையெடுக்க ஒரு ப்ரெஞ்ச்சுப்படை வட ஆப்ரிக்காவில் தயாராயிருக்கிறதாம். ப்ரெஞ்ச்சுக்காரர்களும் ஆல்ஜீரியா தேசத்தார்களும் அதில் போர்வீரர்களா யிருக்கிறார்களாம். அந்தப் படையில் ஒரு பாகம் ஏற்கனவே புறப்பட்டு விட்டதாம்.

15-தேதி.

'க்வீன் எலிஸபெத்' என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக் கப்பல் டார்டனல்ஸ் ஜலஸந்தியோரமாயுள்ள காலிபோலி யென்னும் ஊரைத் தாக்கிற்று. ப்ரெஞ்ச் யுத்தக் கப்பல்கள் புலேர் என்னும் கோட்டையைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

20-தேதி.

கருங்கடலில் உள்ள ரஷ்யகப்பல்படை கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் பக்கத்திலுள்ள பாஸ்பரஸ் ஜலஸந்தியண்டை வந்திருப்பதில் காண்ஸ்டாண்டி நோபிளில் பெரும் மனக்கலக்கம் ஏற்பட்டிருக்கிறதாம்.

24-தேதி.

ஸூயஸ் பட்டணத்துக்கு பக்கத்திலுள்ள எல்குப்ரி யென்னுமிடத்தில் ஒரு ப்ரிட்டிஷ் படை 1,000 துருக்கியர்களைத் தோற்கடித்துத் துரத்தி விட்டது.

24-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியில் மூன்று நாள் பலமான காற்று அடித்ததால் யாதொரு வேலையும் செய்ய முடியவில்லை.

28-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியில் நேசக் கப்பல்கள் கடல் வெடிகுண்டுகளை வாரிக் கொண்டிருக்கின்றன.

ரஷ்யாவின் கருங்கடல் கப்பல்படை பாஸ்பரஸ் ஜலஸந்தியிலுள்ள கோட்டைகளைத் தாக்கிற்று.

31-தேதி.

நேசக் கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலஸந்தியை மறுபடியும் தாக்க ஆரம்பித்திருக்கின்றன.

## பொது விஷயங்கள்.

மார்ச்சுமீ" 6-தேதி.

டோவருக்குப் பக்கத்தில் ஒரு ப்ரிட்டிஷ் டிஸ்ட்ராயர் கப்பல் ஒரு ஜெர்மன் ஸப்மரீன் கப்பலைத் தாக்கி மூழ்கடித்து விட்டது.

8-தேதி.

'பென்க்ரோவ்' என்னும் லிவர்ப்பூல் கப்பல் ஜெர்மன் ஸப்மரீன் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டுப் போய் விட்டது.

10-தேதி.

யூ 20-என்னும் ஜெர்மன்ஸப்மரீன் கப்பலை 'ஏரியல்' என்னும் ப்ரிட்டிஷ் டிஸ்ட்ராயர் கப்பல் தாக்கி மூழ்கடித்துவிட்டது.



'டாங்கிஸ்டான்', 'ப்ளாக்வுட்' 'ப்ரின்ஸஸ் விக்டோரியா' என்னும் ப்ரிட்டிஷ் கப்பல்கள் ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்களால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டன.

11-தேதி.

'ப்ரின்ஸ் ஈடல் ப்ரியாரிச்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் ஜனவரிமீ" 27-தேதியிலிருந்து பிப்ரவரி மாஸம் 20-தேதிக்குள் மூன்று ப்ரிட்டிஷ் கப்பல்களையும், 3-ப்ரெஞ்ச் கப்பல்களையும், ஒரு அமெரிக்கன் கப்பலையும் ஒரு ரஷ்யன் கப்பலையும் மூழ்கடித்து விட்டதென்று தெரிகிறது.

13-தேதி.

'க்ரான் ப்ரின்ஸ் வில்லியம்' என்னும் ஜெர்மன் க்ரூஸர் 'காடேலோப்' என்னும் ப்ரெஞ்ச் கப்பலை மூழ்கடித்து விட்டது.

14-தேதி.

இன்று இரண்டு ப்ரிட்டிஷ் க்ரூஸர்களும் பீரங்கிகள் அமைக்கப்பட்டுள்ள ஒரு ப்ரிட்டிஷ் வ்யாபாரக் கப்பலும் தென்னமெரிக்காவிலுள்ள சில தேசத்தோரமாய் ஜூவன் பெர்னண்டஸ் என்னும் தீவுக்குப் பக்கத்தில் 'ட்ரெஸ்டன்' என்னும் ஜெர்மன் க்ரூஸரைத்தாக்கி மூழ்கடித்தன.

'பாயானே' என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் கப்பல் ஸ்காட்லண்டின் தென் மேற்கேயுள்ள பெர்த் அப் க்ளைட் என்னும் கடலில் போய்க்கொண்டிருந்தபோது ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

15-தேதி.

'பின்கால்' என்னும் ப்ரிட்டிஷ் வ்யாபாரக் கப்பல் இங்க்லண்டின் கடற்கரை யோரமாக ஜெர்மன் ஸப்மரீன் கப்பலால் தாக்கப்பட்டு மூழ்கிப் போயிற்று.

25-தேதி.

ஆண்ட்வர்ப்பில் ஜெர்மானியர்கள் ஸப்மரீன் கப்பல்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்காக 5 ப்ரிட்டிஷ் ஆகாயக்கப்பல்கள் அந்தப்பட்டணத்தின்மேல் பறந்துபோய் வெடிகுண்டுகள் போட்டு கப்பல்கட்டும் இடங்களை நாசப்படுத்தின. ஒரு ஸப்மரீன் நாசமடைந்தது. இன்னொன்று சேத மடைந்தது.

31-தேதி.

இரண்டு ப்ரிட்டிஷ்க்கப்பல்கள் இங்க்லண்டுக்குத் தென்மேற்குக் கோடிலுள்ள ஸில்லிஸ் தீவுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்களால் மூழ்கடிக்கப்பட்டது.

# SEASON.

## காலஸ்திதி.

### Rainfall.

மழை.—1915ஹூ ஏப்ரல்மீ" 1உயிலிருந்து 1915ஹூ ஏப்ரல்மீ" 6உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 0·13 | 0·03 |
| வால்டேர் | 0·08 | 0·06 |
| காக்கிநாடா | 0·06 | 0·11 |
| மஸூலிப்பட்டணம் | ·00 | 0·06 |
| நெல்லூர் | ·00 | ·00 |
| மதராஸ் | ·00 | 0·06 |
| கூடலூர் | ·00 | ·00 |
| நாகப்பட்டணம் | ·00 | 0·01 |
| பாம்பன் | ·00 | 0·24 |
| கொழும்பு | 0·12 | 1·17 |
| திருவனந்தபுரம் | ·00 | 0·62 |
| கொச்சி | 1·03 | 0·52 |
| கள்ளிக்கோட்டை | 1·18 | 0·10 |
| மங்களூர் | 0·01 | 0·04 |
| மெர்க்காரா | 0·46 | 0·28 |
| ஐதராபாத் | ·00 | 0·20 |
| பல்லாரி | ·00 | 0·07 |
| கர்நூல் | ·00 | 0·08 |
| கடப்பை | ·00 | ·00 |
| ஹாஸ்ஸான் | ·00 | ·24 |
| பெங்களூர் | ·00 | 0·10 |
| கொடைக்கானல் | ·00 | 0·87 |
| உதகமண்டலம் | ·00 | 0·28 |
| கோயம்புத்தூர் | ·00 | 0·14 |
| வேலூர் | ·00 | 0·01 |
| சேலம் | ·00 | 0·33 |
| திருச்சிநாப்பள்ளி | ·00 | 0·03 |
| புதுக்கோட்டை | ·00 | 0·12 |
| மதுரை | ·00 | 0·15 |
| திருநெல்வேலி | ·00 | 0·27 |

Calendar—பஞ்சாங்கம்.

# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. Vaidya Raman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸ ஸ்ஹு சித்திரைமீ, APRIL 1915. — ஸஞ்சிகை 8. No. 8.

2 APR 1915 MADRAS

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 ... | ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 ... | ... | 0 8 0 |
| Sample copy | 0 6 0 ... | ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| 1/10 do | ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 ... | | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 ... | | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 ... | | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ ,, | ,, ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மத்ராஸ்.

ஜனபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸஹு சித்திரைமீ. [ஸஞ்சிகை 8.

## GUNS.

## பீரங்கிகள்.

பீரங்கி ஸாதாரணமாய் மிகவும் கனமான ஒரு யுத்தக்கருவி. கையில் கொண்டுபோவதற்கு வெகு பளுவானதால், வண்டியின்மேல் வைத்து குதிரைகளைக் கட்டி இழுத்துக்கொண்டு போவார்கள். பீரங்கியில் முக்யமான பாகம், 'பாரல்'. அது பலமான எஃகினல் செய்யப்பட்ட ஒரு நீண்ட பெரிய குழாய். உருண்டையான ஒரு பீரங்கிக் குண்டை அதற்குள் போட்டு, அந்த குண்டின் பின் நிறைய வெடிமருந்தை நிரப்பிவைப்பார்கள். வெடிமருந்தின்மேல் ஏதாவது பலமாய் மோதினல், உடனே அது தீப்பிடித்துப் படாரென்ற சப்தத்துடன் வெடிக்கும். வெடிக்கும்பொழுது அந்த மருந்தில் சிலபாகம் ஒருவித வாயுவாக மாறிவிடுகிறது. இப்படி உண்டான வாயு பாரலிலுள்ள சிறிய துவாரத்துக்குள் அடங்கமுடியாமல், நாலுபக்கமும் வெளிவர முயலுகிறது. ஆனல் அதற்கு வெளிவர ஒரே ஒரு மார்க்கந்தான் இருக்கிறது. அதாவது, முன்னுள்ள குண்டை பாரலிலிருந்து வெளியில் தள்ளிவிடுவதே. சின்ன அறைக்குள் நிறைய அமிழ்த்தின காற்றிருந்தால், அது வெளிவரும்பொழுது விசை ரொம்ப ஜாஸ்தியாயிருக்கும். எவ்வளவுக் கெவ்வளவு விசை அதிகமாகுமோ, அவ்வளவுக் கவ்வளவு விசையுடன் குண்டும் வெளிவரும். இப்படி குண்டு வெகு விசையுடன் ஒரு பலமான சுவரின் மேலோ, அல்லது வேறு ஸாமான்களின்மேலோ மோதினல் உடனே குண்டு வெடித்து மோதின வஸ்துவுக்கு கெடுதியை உண்டாக்கும். இதுதான் சுருக்கத்தில் பீரங்கியினல் சுடுவது. எதைச்சுடவேண்டுமோ, அதை சரியாய்க் குறிபார்த்து பீரங்கியைச் சுடவேண்டும்.

எத்தனை தூரம் குண்டு போகவேண்டுமென்பதையும், எந்தப்பக்கத்தில் போகவேண்டுமென்பதையும் திட்டப்படுத்தி, அதின் கணக்குப்படி ஆலோசித்து பீரங்கியைத் திருப்பிவைக்க வேண்டும்.

போர்க்களத்தில் புதர்களின் நடுவிலோ, அல்லது பெரிய மரங்களின் மறைவிலோ, பீரங்கியை வைத்திருப்பார்கள். ஒருவன் மரத்தின் மேலோ, அல்லது வேறு உயர்ந்த இடத்திலோ ஏறி, சத்ருவின் இருப்பிடத்தை 'டெல்லஸ்கோப்' என்று சொல்லப்படும் தூரத்ருஷ்டிக் கண்ணாடியினல்பார்த்து, கீழிருப்பவனிடம் சொல்வான். உடனே அந்த லக்குப்பார்த்து பீரங்கியைச் சுடலாம். எதிரிகளுக்கு பீரங்கியிருக்குமிடத்தையும் அதனருகில் இருப்பவரையும் பார்க்கமுடியாது. மேலும், தற்காலத்து பீரங்கிகளிலெல்லாம், பின்னலிருந்து வேலைசெய்பவரை எதிரியின் குண்டுவந்து அடிக்காமல் காப்பாற்ற, சுவர்போல பெரிதாய் உயர்ந்த எஃகுத்தகடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. குண்டுகள்வந்து இந்தத் தகட்டின்மேல் விழுந்தால்கூட, அதைப் பொத்துக்கொண்டு போகமுடியாது. அபாயத்துக் குள்பட்டவன் உயர்ந்த இடத்திலிருந்து உத்தரவு கொடுப்பவனே.

பீரங்கியினல் சுடுவதில் நாம் கவனிக்கவேண்டியவை என்னவென்றல்:—பீரங்கியின் கனம், குறுக்களவு, அதிலிருந்துவரும் குண்டின் அளவும் விசையும், அந்த குண்டுபோகும் தூரம், குண்டின் கனம், ஒரு நிமிஷத்தில் போடக்கூடிய வெடிக்கும் குண்டுகள்.



பீரங்கி அதிக கனமானல், அதை யுத்தகளத்திற்கு எடுத்துக்கொண்டு போவது கஷ்டம். ஆ ல் பெரிய கோட்டைகளை பாதுகாக்க பெரிய ங்கிகள் ரொம்ப உபயோகப்படலாம். குறுக் வு என்றல் பீரங்கியின் பாரலின் வாயளவு.பீர லிருந்து வெளியேவரும் குண்டின் அளவு ின் வாயளவுக்குத் தக்கதாயிருக்கும். பார குறுக்களவு 4 அங்குலமானல், குண்டின் களவும் 4 அங்குலந்தான். பாரலின் வாயள வெட லும் குண்டின் குறுக்களவு குறை ருக்களை டுவிசையுடன் வெளிவரவும் மாட் முற்றலைவ் விளையும் நாசமும் வெகு குறை அழிக்கவு ஆகையினல் எப்பொழுதும் பாரலின் வாயளவும் குண்டின் குறுக்களவும் ஸமமாய்த்தானிருக்கவேண்டும். முன் சொன்னதுபோல, குண்டு எவ்வளவு விசையுடன் வெளியில் தள்ளப்படுகிறதோ அதற்குத் தக்கபடி அது தூரம் போகும். குண்டுகள் அதிகதூரம் சென்றல்தான் ப்ரயோஜனமாகும். ஏனென்றல், ஸாதாரணமாய் பீரங்கியின் உதவியால் சண்டைசெய்யும் பொழுது, 2, 3, மைல் தூரத்திற் கப்பாலிருந்தே சுடுவார்கள். குண்டின் கனம் அதிகமாக ஆக, அதை பாரலிலிருந்து வெளியில் தள்ளுவதற்கு வேண்டியதற்கு விசையும் ஜாஸ்தியாகவேண்டும் அதினல் நேரிடும் நாசமும் அதிகரிக்கும். யுத்தத்தில் எந்தப்பக்கத்தார் அதிகம் சுடும்படியாக பீரங்கிகளும் வெடிமருந்தும் வைத்திருக்கிறர்களோ அவர்களுக்கே அனுகூலம் ஜாஸ்தி. ஆகையினல், பீரங்கிகள் ஒரு நிமிஷத்திற்கு இத்தனை குண்டுகள் போடுமென்பதை நாமறியவேண்டும்.

தற்காலத்து யுத்தங்களில் பலவித பீரங்கிகள் உபயோகிக்கப்படுகின்றன. வழக்கமாய், பாரலின் குறுக்களவைக் குறிப்பிட்டோ, அல்லது குண்டின் கனத்தைக் குறிப்பிட்டோ பீரங்கிகளைப் பெயரிடுகிறர்கள். 13-பவுண்டு பீரங்கி யென்றல், அதினின்று வெளிவரும் குண்டின் கனம் 18-ராத்தல் என்று அர்த்தம். 4-அங்குலம் பீரங்கி என்றல், அதின் பாரலின் குறுக்களவு 4-அங்குலம் என்று அர்த்தம். தவிர, ஒவ்வொரு ஸௌகரியத்துக்குத் தக்கபடி செய்த ஒவ்வொரு மாதிரி பீரங்கிக்கும், பொதுவாய் வேறு பெயர்களிடப்பட்டிருக்கின்றன. முக்யமான பீரங்கி வகைகளின் பெயர்களாவன :—

### பலவித பீரங்கிகள்.

(i) 'மெஷின்' பீரங்கிகள்.
(ii) குதிரைகள் இழுத்துக்கொண்டுபோகும் "ஹார்ஸ் ஆர்ட்டிலரி" பீரங்கிகள்.
(iii) 'பீல்ட்-ஆர்ட்டிலரி' பீரங்கிகள்.
(iv) ஹவிட்ஸர்கள்.
(v) மலைமேல் கொண்டுபோய் உபயோகிக்கப் பட்ட பீரங்கிகள்.
(vi) வேறு கனமான பீரங்கிகள்.

### மெஷின் பீரங்கிகள்.

'மெஷின்' பீரங்கி ஸாதாரணமாய் மூன்று அங்குலம் வாயளவுள்ளதாயிருக்கும். இது, பெரிய பாரலையுடைய பீரங்கிக்கும், 'ரைபில்' என்று சொல்லப்பட்ட சின்னதுப்பாக்கிக்கும் நடுத்தரமானதென்று சொல்லலாம். இந்த பீரங்கியில் பெரிய பீரங்கிகளில் இல்லாத விசேஷம் என்னவென்றல், அதில் சின்னச் சின்னதாய் அநேகம் பாரல்கள் (குழாய்கள்) இருக்கும். எந்தப்பக்கம் சுடவேண்டுமோ, அந்தப்பக்கம் லக்குப்பார்த்து பீரங்கியின் வாயை திருப்பி வைத்துவிடவேண்டும். அதன் பின்னர், முதல் பாரலில் உள்ள குண்டை வெடிக்கச்செய்துவிட்டால், அந்த பாரல் கொஞ்சம் பக்கத்தில் விலகிவிடும். பீரங்கியின் பாரல்களெல்லாம் ஸதா சுற்றிக் கொண்டேயிருக்கும். முதல் பாரல் விலகினவுடன், குண்டு நிறைந்த இரண்டாவது பாரல் அதின் இடத்துக்கு வந்துவிடும். அது சுட்டவுடன் அதனிடத்தில் வேறென்று வந்துவிடும். ஒவ்வொன்றும் சுட்டவுடன், அதற்குள் இருக்கும் தோட்டாக்கள் வைத்திருந்த 'கார்ட்ரிஜ்'

என்று சொல்லப்படும் குழாயைப் பிடுங்கி, அதற்கு பதிலாக தோட்டா நிறைந்த வேறொரு குழாயை உள்ளே போட, பீரங்கியிலேயே ஸூத்ரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், 400, 'கார்ட்ரிஜ்'கள் • சேர்த்து பீரங்கியில் ஒரு அறையில் வைத்துவிட்டால், அவை நிருபளவும் பீரங்கி தானே வெடிக்கும். மெஷீன் பீரங்கிகள் ஸாதாரணமாக ஒரு நிமிஷத்துக்கு 200 முதல் 500 வெடி வரையில் தீர்க்கும்.

பண்டைக்காலத்து பீரங்கிகளில் இவ்விதமான ஸூத்ரங்களே இல்லாமலிருந்தன. ஒரு தடவை வெடித்தவுடன், வெடித்த'கார்ட்ரிஜ்ஜை' பிடுங்குவது, வேறொன்றைப்போடுவது ஆகிய இந்த வேலைகளெல்லாம், அருகிலிருக்கும் மனிதர்களே செய்யவேண்டியிருந்தது. இப்பொழுதோ, மனிதனுக்கு அதிகம் ச்ரமமில்லை. லக்குப் பார்த்து திருப்பிவைத்து விட்டால், அதன் பின்னர், வேலையெல்லாம் யந்த்ரம்தானே செய்துவிடுகிறது.

ஒரு 'மெஷின்' பீரங்கியினது சக்தி காலாட்படையால் உபயோகிக்கப்பட்ட ஐம்பது ரைபில் கைத்துப்பாக்கிகளுக்கு ஸமமாகும். தவிர ஒரு மெஷின் பீரங்கியை வைக்க, ஐந்து அடி நீளம் ஸ்தலம்போதும். ஒரு மெஷின் பீரங்கியை உபயோகிக்க இரண்டு ஆட்கள் போதும். காலாட்படையுடனும், குதிரைப் படையுடனும் இந்த பீரங்கியை இழுத்துக் கொண்டுபோய், ரைபில் துப்பாக்கியை சுடும் தூரத்திலிருந்துகூட சுடலாம். மெஷின் பீரங்கியை ஒரு மனிதன் எடுத்துக்கொண்டு போகமுடியும். அதை ஒரு முக்காலியின்மேல் வைத்து சுடுவார்கள். இங்க்லீஷ் ஸைன்யத்தில், ஒவ்வொரு பட்டாளத்துடனும், குதிரைப்படையின் ஒவ்வொரு ரெஜிமெண்டுடனும், இரண்டு மெஷீன் பீரங்கிகள் கொண்டு போவார்கள். பெரிய சேனைகளுடன் அநேகம் கொண்டு போகவேண்டுமானால், இந்த பீரங்கிகளுக்காக ஒரு ப்ரத்யேகமான உத்யோகஸ்தரை நியமிப்பதுமுண்டு. ஜெர்மனியில், ஆறு மெஷின் பீரங்கிகள் சேர்ந்தது ஒரு 'ஸெக்ஷன்' ஆகும். ஒவ்வொரு ஸெக்ஷனிலும், இரண்டு பீரங்கி(ன) அமைந்த மூன்று டிவிஷன்கள் இருக்கின்ற(கடு)

ஜெர்மனியில், 87000 வெடிகளுக்கு வே(தில்)டிய வளவு வெடிமருந்து வண்டிகள் (மா,) வொரு ஸெக்ஷனுடனும் கொண்டு போக(சுட)கின்றனவாம். இங்க்லீஷ்காரர்கள், ஒவ்வொ(ன்ப) ஜோடி பீரங்கிகளுடனும் எழாயிரம் வெடிக(மென்ப) வேண்டிய மருந்தும், ரிஸர்வில் 160(ணக்குப்படி) ளுக்கு வேண்டிய அளவும் கொண்(திருப்பிவைக்க) ரஷ்யாவில், ஒவ்வொரு பீரங்கி வெடிகளுக்கு மருந்து கொண்டு ...

ஒவ்வொரு ராஜ்யத்து 'மெஷின்' பீரங்கிக்கும் வெவ்வேறு பெயர்கள் உள. ப்ரிட்டிஷ், ஜெர்மன் மெஷின் பீரங்கிகளுக்கு, 'மாக்ஸிம்' என்றும், ப்ரான்ஸ் பீரங்கிகளுக்கு "ஹாட்ச்கிஸ்" என்றும், ஆஸ்டிரியாவில் 'ஷ்க்வார்ஸ்லூஸ்' என்றும், பெயரிடப்பட்டிருக்கின்றன.

'க்விக்பயரர்.'

'க்விக்பயரர்' என்றாலும் சின்ன பீரங்கிதான். அதி சீக்ரத்தில் படபடவென வெடிப்பதால், இப்பெயரிடப் பட்டதென்று தோன்றுகிறது. 18-பவுண்டு இங்கிலீஷ் "க்விக்பயரர்" பீரங்கியை ஆறு குதிரை கட்டி யிழுக்கவேண்டுமாம். இதின் "ஷ்ராப்னலில்" (அதாவது, குண்டில்) 375 சிறுகுண்டுகள் இருக்கும். ஒவ்வொரு சிறுகுண்டும் கட்டவிரல் பருமன் இருக்கும். 'கார்டைட்' என்ற வெடிமருந்தை இதில் உபயோகிக்கிறார்கள். ஒரு நிமிஷத்தில் பதினைந்து தடவை சுடலாம். குண்டு ஸுமார் 3½-மைல் போகும்.

ஹார்ஸ் ஆர்டிலரி பீரங்கிகள்.

இவைகளை மிகவும் வேகமாய் இழுத்துக் கொண்டுபோகலாம். குதிரைப் பட்டாளத்துடன் உபயோகிப்பதற்காக செய்திருக்கிறார்கள். சீக்ரத்தில் இடம் விட்டு இடத்திற்குக் கொண்டு



செல்லக்கூடியவையான போதிலும், மெஷின் பீரங்கிகளைப்போல அவ்வளவு ப்ரயோஜனமுள்ளவை அல்ல.

'ஹவிட்ஸர்கள்'

'ஹவிட்ஸர்' என்பது மற்றொருவித பீரங்கி. இதனுடைய விசேஷம் என்னவென்றால், அதிலிருந்து போகும் குண்டு நேரே ஆகாயத்தை நோக்கி கொஞ்சதூரம் சென்று, அதன் பின்னர் செங்குத்தாய் கீழே விழும். ஆகையினால் குழி வெட்டி அதிலுள்ளிருந்து சண்டைசெய்யும் சத்ருக்களைத் தாக்கவும், பெரிய கோட்டையை முற்றுகைபோடவும், பலமான கட்டிடங்களை அழிக்கவும் 'ஹவிட்ஸரை' உபயோகிக்கிறார்கள். ஹவிட்ஸரினால் விளையும் நாசங்கள் வெகு கொடூரமானவை.

ஹவிட்ஸரினுடைய 'ஷெல்' (குண்டு) வெகு பளுவானதால், 'மெஷின்' பீரங்கியினால் சுடுவதுபோல ஸ்வல்பகாலத்தில் அத்தனை குண்டுகள் ஹவிட்ஸரினால் சுடுவது வருத்தம். ஹவிட்ஸரின் 'ஷெல்' மெஷின் பீரங்கியின் ஷெல்லைக் காட்டிலும் இரண்டு மடங்கு பெரிதானபோதிலும், அது செய்யக்கூடிய நாசம் இரண்டு மடங்குக்கு குறையாது என்று சொல்வதற்கில்லை.

ஹவிட்ஸர்களிலும், லேசானவையும், வெகு கனமுள்ளவையும் உள. லேசானவை "பீல்ட்-ஆர்டிலரி ஹவிட்ஸர்கள் என்பனவாம்.

மலைபீரங்கிகள்.

மலைகளின்மேல் கொண்டுபோக வேண்டுவதால், இவைகள் லேசாய்த்தான் இருக்கவேண்டுமல்லவா? இவைகளை கோவேறு கழுதைகளின் மேல் ஏற்றிக்கொண்டு போவார்கள். சில ஸமயங்களில் கூலி ஆட்கள் தோள்மேலும் எடுத்துக் கொண்டு போவார்கள். காலாட்படை ஏறக்கூடாத இடங்களில்கூட இந்த பீரங்கிகளை சுமந்துபோக முடியுமாம். இந்த பீரங்கிகள் லேசானபோதிலும், அவைகளின் குண்டுகள் பளுவாயிருக்கும். மலைகளும், அடிவாரங்களும் நிறைந்தவிடங்களில் யுத்தம் நேரிடுமானால், இந்த பீரங்கிகள் ரொம்ப ப்ரயோஜனப்படும்.

## PROJECTILES.

## குண்டுகள் முதலியன.

நல்ல குண்டின் லக்ஷணம் என்னவென்றால், லக்குப்பார்த்து சுட்டால், ஒரே லைனில் அந்த குண்டு பாரலிலிருந்து புறப்பட்டு குறிப்பிட்டவிடத்தில் போய்விழவேண்டும். விசையும் குறையக்கூடாது. இதற்காக, பாரலின் உள்புறமெல்லாம், 'ஸ்க்ரூ' ஆணியைப்போல, துருவி எடுத்திருக்கப்படும். இவ்விதம் செய்யாமல்போனால், வெகு நீளமான கம்பிகளைச்சுற்றி அதனுள் அமிழ்த்திவைத்திருக்கலாம். இப்படி அமைத்திருப்பதால், குண்டுவெளியில் ஓடும்பொழுது வெகு விசையாக சுற்றிக்கொண்டுபோகும்.

கொஞ்சகாலத்துக்கு முன்னால் வரையில் பீரங்கிகளுக்கு பந்துபோல் உருண்டையான குண்டுகளையே உபயோகித்துவந்தார்கள். குண்டின் அளவு பாரலின் உள்புறத்து அளவைவிட சற்றுக்குறைவாகவே இருக்கவேண்டுமாகையால், பீரங்கியைச் சுடும்போது உண்டாகும் வாயு குண்டுக்கும் பாரலின் உள்புறத்துப் பக்கங்களிலும் உள்ள இடைவெளி வழியாக வெளியே போய்விடும். காற்றுக்குறைந்து போவதால் அதன் சக்தியும் குறைந்துபோய், குண்டு வேகமாய்ப் போகமுடியாமல் போகிறது. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்காக தற்காலம் பீரங்கிகளில் ஒரு பக்கம் சற்றுக்கூர்மையாயும் நீண்டு உருண்டையாயுமுள்ள குண்டுகளை உபயோகித்து வருகிறார்கள்.

தற்போது, பீரங்கியில் உபயோகிக்கும் குண்டுகள் 'ஷெல்' என்றும், 'ஷ்ராப்னல்' என்றும் இரண்டு வகைப்படும்.

ஷெல்.

'ஷெல்' என்பது 'லிடைட்' எனப்பட்ட வெடிமருந்து நிரப்பின எஃகாலான ஒரு கூடாகும். அந்த ஷெல்லில் தொடர்ச்சியாக, தீபாவளி பட்டாஸ்களின் முனையில் தீப்பிடிக்கவைத்

திருக்கும் சிறிய திரிபோல, ஒரு மருந்து அடைத்த குழாய் வைத்திருப்பார்கள். இதற்கு இங்க்லீஷில் 'ப்யூஸ்' (Fuse) என்று பெயர். பாரலிலிருந்து வெளிவந்து இத்தனை தூரம் போனால்தான் குண்டு வெடிக்கவேண்டுமென்பதற்குத் தக்கபடி ப்யூஸை அமைத்திருப்பார்கள். இல்லாவிடில், வேறுசில 'ஷெல்கள்' மோதினால் உடனே வெடிக்கும்படியாகவும் செய்யப்பட்டிருக்கலாம். இந்த 'ஷெல்' போய்விழுந்த இடத்தில் 25 கோல் சுற்றளவில் தீரா நாசத்தை விளைவிக்கும். ஹவிட்ஸரிலும், பெரிய கனமான பீரங்கிகளிலுமே, ஷெல்களை உபயோகிக்கிறார்கள். ஷெல் வேறொரு பீரங்கியின்மேல் விழுந்தால்கூட, அது நாசமடையும். மிகவும் கொடூர சக்தியை உடையதால், கட்டிடங்கள், கோட்டைகள், பலமான சுவர்கள் ஆகிய இவைகளை அழிக்க ஷெல்லே ஏற்றது.

ஷ்ராப்னேல்.

'ஷ்ராப்னல்' என்பது பார்வைக்கு குண்டும் வெடிமருந்தும் நிறைந்த பீரங்கி பாரல்போல இருக்கும். இதுவும் எஃகினால் செய்யப்பட்ட ஒரு கூடு. இதனுள், 'புல்லெட்' என்று சொல்லப்பட்ட சிறிய வெடிகுண்டுகள் நிரப்பப்பட்டிருக்கும். அதனுள்ளேயே, புல்லெட்களுக்கு சற்று கீழாக கொஞ்சம் வெடிமருந்தும் இருக்கும். இங்க்லீஷ் 'ஷ்ராப்ன' லில் 263 புல்லெட்டுகளும், ஜெர்மன் ஷ்ராப்னலில் 300-புல்லெட்டுகளும் இருக்கின்றன. ஷ்ராப்னல் போய் எதன்மேலாவது மோதினால், உள்ளேவைத்திருக்கப்பட்ட மருந்து வெடித்து ஷ்ராப்னல் சில்லு சில்லாகிவிடும். அப்பொழுது அதுவந்த விசையைக்காட்டிலும் அதிகவேகத்துடன் அதிலுள்ள புல்லெட்கள் சிதறிப்போகும். ஒவ்வொரு புல்லெட்டும் போய் விழும் இடத்தில் உடைந்துவிடும். இவ்விதமாக ஒரு 'ஷ்ராப்னல்' நாலாபக்கத்திலும் சிதறி மனிதர்களைக் கொன்று விடுகிறது. ஒரு குறிப்பிட்ட காலம் குண்டு போன பிறகு தானாகவே வெடிப்பதற்கும் ஷ்ராப்னலில் உபாயம் அமைப்பதுண்டு.

'மெஷின்' பீரங்கியில் மாத்ரம் துப்பாக்கியில் போடும் வெடிமருந்தும் ரவைகளும் உபயோகிக்கிறார்கள். ஹவிட்ஸரிலும், கனமான பீரங்கிகளிலும் கட்டிடங்களை அழிக்க, பலமாய் வெடிக்கக்கூடிய குண்டை உபயோகப்படுத்துகிறார்கள். இந்த பீரங்கிகளிலும் மற்றவகை பீரங்களிலும் 'ஷ்ராப்னல்'லை உபயோகப் படுத்துகிறார்கள்.

ஸாதாரணமாய் மனிதர்களைக் கொல்ல, ஷ்ராப்னல் ரொம்ப ப்ரயோஜனப்படும். 'மனிதனைக் கொல்வது' என்றே ஷ்ராப்னலுக்கு இன்னொரு பெயருண்டு. பெரிய கோட்டைச் சுவர்களை இடிக்க 'ஷ்ராப்னல்' ப்ரயோஜனமில்லை. அதற்கு பெரிய குண்டுகளே ஏற்றவை. 'ஷ்ராப்னல்' வேறு பீரங்கித்தகடுகளின்மேல் மோதினாலும், அந்தத் தகட்டுக்கு தீங்கு விளையமாட்டாது. வீட்டிற்குள்ளோ, கோட்டையினுள்ளோ, அல்லது பாதைகளில் வரிசைபாய் நடந்துபோகும் துருப்புகளிலோ, துன்பத்தை விளைவிக்க, 'ஷ்ராபனல்' ரொம்ப உபயோகப்படும்.

## GUNPOWDER.
## வெடிமருந்து

ஆதியில் பீரங்கிகளுக்கு உபயோகித்துவந்த வெடிமருந்து 'கன்பௌடர்' என்று சொல்லப்படும். இங்க்லீஷ் வெடிமருந்து 75 பாகம் வெடியுப்பும், 15 பாகம் கரியும், 10 பாகம் கந்தகமும் சேர்த்து செய்யப்பட்டது. வெடிமருந்தில் தீப்பற்றுவதற்காக கந்தகம் உபயோகிக்கப்படுகிறது. வெடியுப்பில் ப்ராணவாயு ஜாஸ்தி. மருந்து தீ பிடித்தவுடன் வெடியுப்பிலுள்ள ப்ராணவாயுடன் கரி சேர்ந்து 'கார்பன்-டை - ஆக்ஸைட்' என்ற வாயுவாய் மாறிவிடுகிறது. இந்த வாயு பீரங்கியில் முன்னிருக்கும் குண்டை வெளியில் பலமாய் தள்ளிவிடும்.

இந்த வெடிமருந்தை பொடியாய் உபயோகித்துப் பார்த்ததில் குண்டுக்கு அதிகம் விசை



யைக் [illegible] ர் விலை [illegible]றதில்லையென்று, கொஞ்சகாலத்திற்கு 'கன்பௌடரை' கட்டிகளாக ஆக்கி ப்ரயோகித்து வந்தார்கள். இதுவும் ரொம்ப த்ருப்தியாயில்லை. ஆகையினால், சாஸ்த்ர நிபுணர்கள் புதிதாக வேறு வெடிமருந்தைக் கண்டுபிடிக்க யத்தனித்தார்கள்.

இப்பொழுது உபயோகிக்கும் வெடிமருந்துகள் "பிக்ரிக் ஆஸிட்", "கன்காட்டன்", "நைட்ரோ ஸெலுலூஸ்" என்ற ஸாதனங்களிலிருந்து தயாராக்கப்பட்டவைகள். இந்த மருந்துகள் வெடித்தால், புகையே உண்டாகாதாம். 'கன்-பவ்டர்' வெடித்தால், ரொம்பப்புகை உண்டாய், யுத்தகளமுழுமையும் நிரம்பிவிடும். சண்டை செய்யும் ஸோல்ஜர்களுக்கு முன் பின் பார்த்தால் புகையினால் ஒன்றும் தெரியாது. நூதன மருந்துகளெல்லாம் கன்-பவ்டரைக் காட்டிலும் எவ்வளவோ மேன்மையானவை. இவ்விதமான புகையில்லாத வெடிமருந்தைக் கண்டுபிடிக்க, ஜெர்மனியிலே ப்ரதானமாய் மற்றெல்லா ராஜ்யங்களைக் காட்டிலும் முயற்சிகள் செய்யப்பட்டன. மருந்துக்கு வேண்டிய ஸாதனங்களெல்லாம் எல்லா தேசங்களிலும் ஏராளமாய் அகப்படும். ஆகையினால் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே, தேசங்களிலெல்லாம் வேண்டிய அளவு வெடிமருந்தைத் தயாராக வைத்துக்கொண்டிருப்பார்கள்.

இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்திற்கு பலத்திலும், திறமையிலும், லக்ஷக்கணக்காய் சண்டை போடும் ஸோல்ஜர்களின் ஸங்க்யையிலும் சரியாய் உவமைகூற இதுவரையில் உலகில் யாதொரு போருமே நேரிட்டதில்லை. இவ்வளவு ப்ரம்மாண்ட யுத்தத்தில் தினந்தோறும் வேண்டிய வெடிமருந்தை திட்டமாய்ச் சொல்வது கஷ்டம். 'ரஷ்யா' ஜப்பானிய யுத்தத்தில், நடந்த 'முக்டன்' போரில், 3,000 பீரங்கிகள் கர்ஜித்துக் கொண்டிருந்தனவாம். அவைகளுக்கு ஆனமருந்தின் அளவையும், இப்பொழுது ஐரோப்பாவில் உபயோகிக்கும் பீரங்கிகளின் ஸங்க்யையும் பார்த்து, தற்போது நடக்கும் யுத்தத்தில் தினந்தோறும் 1,200,000 குண்டுகளுக்கு வேண்டிய வெடிமருந்து செலவழியும் என்று ஒருவர் கணக்கிட்டிருக்கிறார்.

இங்க்லீஷ் ஸைன்யத்தில் ஒவ்வொரு டிவிஷனோடும் 54-பீல்ட் பீரங்கிகளும், 18-ஹவிட்ஸர்களும் கொண்டுபோகப்படுகின்றன. இங்க்லீஷ் ஹவிட்ஸரின் வாயளவு $4\frac{1}{2}$-அங்குலம்; குண்டின் கனம் 35-ராத்தல்; அது போகும் தூரம் 7000 கஜம் அதாவது 4-மைலுக்குமேல்.

ப்ரெஞ்சுக்காரர் பீல்ட் பீரங்கிகளுடன் ஹவிட்ஸரை உபயோகிப்பதில்லை.

ஜெர்மானியர்களின் ஹவிட்ஸர்கள் இருவிதமானவை. 6-அங்குலம் வாயளவுள்ளவை 90-ராத்தல் கனமான குண்டைச் சுடுகின்றன; 4, 2-அங்குலம் ஹவிட்ஸர்களுமுள. ஒவ்வொரு ஜெர்மன் ஆர்மி கோரிலும், 4.2 அங்குலமுள்ள ஹவிட்ஸர்கள் 18-ம், பளுவானவையில் 16-ம், 'பீல்ட்' பீரங்கிகள் 126-ம் கொண்டுபோகப்படுகின்றன.

இவைகளைத்தவிர, ஜாஸ்தி கனமுள்ள வேறு பீரங்கிகளும் யுத்தங்களுக்கு கொண்டுபோகப்படுகின்றன. ஒவ்வொரு ப்ரிட்டிஷ் டிவிஷனுடனும் 60-ராத்தல் பீரங்கிகள் நான்கு கூடப்போகும். இவைகளிலிருந்து வரும் குண்டு 9500-கஜம் அதாவது ஸுமார் $5\frac{1}{2}$ மைல்தூரம்போய் பலத்த கோட்டைகளையும் வீடுகளையும் அழித்துவிடும். கோட்டைகளை முற்றுகைபோட இன்னும் பலமான பீரங்கிகளை கொண்டுபோவார்கள். ஆனால் அவைகளை இழுத்துக்கொண்டுபோவது கஷ்டம். மேலும், அவைகளுக்கு வேண்டிய வெடிமருந்துக்கும் அளவில்லை. காட்டிலும், மலையிலும், வனாந்தரத்திலும், மழை பெய்து சகதியான வழிகளிலும் இவ்வளவு ப்ரம்மாண்ட பீரங்கிகளை இழுத்துச்செல்வது வெகு கஷ்டம்.

வெவ்வேறு தேசங்களில் முற்றுகைக்கு உபயோகப்படும் பீரங்கிகளின் விவரம் பின் வருமாறு. இவையெல்லாம் ஹவிட்ஸர்களே.

| ராஜ்யம். | வாயளவு. | பீரங்கியின் கனம். | வாஹன அமைப்புடன் மொத்தகனம். |
|---|---|---|---|
| (i) ப்ரிட்டன் | 9·4 அ. | 5½ டன் | 20 டன் |
| (ii) ஜெர்மனி | 11·2 ,, | 6 ,, | 28 ,, |
| (iii) ப்ரான்ஸ் | 10·7 ,, | 5¾ ,, | 22 ,, |
| (iv) ரஷ்யா | 12 ,, | 6 ,, | 28 ,, |

### ஜெர்மனியின் பலமான பீரங்கிகள்.

மிகவும் பலமான லீயஜ், நாமூர், ஆண்ட்வர்ப் என்னும் கோட்டைகளை ஜெர்மானியர் வெகு சீக்ரத்தில் பிடித்ததற்குக் காரணம் அவர்களிடத்தில் ஒருவருக்கும் தெரியாமல் பெரிய முற்றுகை பீரங்கிகள் இருந்ததே. அந்த பிரங்கிகளைக் கட்டியிழுக்க 40 குதிரைகள் வேண்டுமாம். அவைகளெல்லாம், 'எஸன்' நகரத்திலுள்ள 'க்ரப்' என்ற ஜெர்மானிய கம்பெனியில் செய்யப்பட்டவை. இவைகளிலிருந்து 8 மைல் தூரத்துக்கு 16½ அங்குலம் குருக்களவுள்ள குண்டு போட்டு மேற்படி கோட்டைகளைப் பிடித்தார்களாம்.

ஜெர்மெனியிலுள்ள 'எஸன்' நகரத்தில், 'க்ரப்' குடும்பத்தை சேர்ந்தவர்கள் மூன்று தலைமுறையாய் உலகில் பெயர்பெற்ற 'க்ரப்' பீரங்கிகளை செய்துவருகிறார்களாம். அவ்விடத்து பீரங்கிச்சாலை வெகு ப்ரமாண்டமானது என்று சொல்கிறார்கள். அறுபது சிறிய சாலைகள் சேர்ந்து இந்த வேலைகளை செய்கின்றன. அந்த சாலைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு ஸாமான்களை அங்குமிங்கும் கொண்டுபோக, முப்பதுமைல் ரயில்பாதைகள் உள. வருஷமுழுமையும் புதிதுபுதிதாய் பீரங்கிகளை செய்வதையும், அவைகளைப் பரீக்ஷிப்பதையும் அவ்விடம் செல்பவர் காணலாம். ஸாதாரண காலங்களிலேயே, 40,000 கூலியாட்களும், 4000 உத்யோகஸ்தர்களும் வேலையில் அமர்ந்திருப்பார்கள். யுத்தகாலத்தில், இச்சாலையில் நடக்கும் வேலைக்குக் கேட்பானேன் ? தவிர, நிலக்கரி வெட்டியெடுப்ப

னவில் உபாயம்

திலும், மற்ற கார்யங்களைச்செய்வத வர்களாக ஆயிரக்கணக்காய் ஜனங்கள் உண்டு. ஸமாதானகாலத்தில், எல்லாதேசங்களிலிருந்தும், பீரங்கியும் ஆயுதங்களும் தங்கள் நாடுகளுக்கு வாங்கிப்போக அநேகர் வருவார்கள். அந்தவிடத்திலேயே, வேலையாட்களுக்கும், வந்தவர்களுக்கும் ஸௌகர்யமான சாப்பாட்டு விடுதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பீரங்கிகள் மாத்ரமல்ல, எல்லாவித யுத்தக்கருவிகளும் இங்கு செய்யப்படுகின்றன. 'க்ரப்' சாலையிருக்குமளவும் தோல்வியே அறிய மாட்டோமென்பது ஜெர்மானியரின் கொள்கையாம்.

கப்பற் பீரங்கிகளைப்பற்றி தை மாஸத்து ஸஞ்சிகையில் (252-ம் பக்கம்) "கப்பல்படை" என்ற வ்யாஸத்தில் சொல்லியிருப்பதால், அவைகளை இங்கு விவரிக்கவில்லை.

## CATTLE REARING IN THE TANJORE DISTIRCT.

BY G. SESHADRI.

## தஞ்சாவூர் ஜில்லாவில் மாடுவளர்க்கிற வ

தஞ்சாவூர் ஜில்லாவில் நிலஆக்ரமிப்புசட்ட மிராசுதார்களை மிகவும் துன்பப்படுத்துகிறதென்பதும், நிலங்கள் அதிக விலையாயிருப்பதால் அவர்கள் வரம்புகளுக்கு, சச்சரவு செய்கிறார்களென்பதும், திடல்களையெல்லாம் தோப்பாக்கி, புஞ்சை ஸாகுபடிக்கு கொணர்ந்து விடுகிறார்களென்பதும் நமக்குத் தெரிந்த விஷயம். நமது மிராசுதார்கள், உழவு காலத்துக்கு சந்தைக்குச் சென்று, நல்ல மாடுகளை வாங்கிவந்து, களிமண் நிலங்களில் உழுகிறபோது கம்புகளால் அவைகளை அடித்துக், தோலெடுத்து, அடுத்த வர்ஷம் சந்தைக்கு வேறு மாடுகள் வாங்கச் செல்லுகிறார்கள். ஏனெனில், மாடுகளை வைத்து போஷிக்க ஆள் கூலியும், அவைகளுக்கு தீனிச்செலவும், ஒரு புது மாட்



யைக் கொடுக்கி

டின் விலை ஆகிறதென்று சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் நமது மாடுகளை பன்றியின் தொழில் செய்யும்படி,விட்டு தீனிபோடாமலிருப்பதும் நாட்டு மாடுகளை வாங்காமல் மேல் தேசத்து மாடுகளை வாங்குவதுந்தான்.

இந்த ஜில்லாமாடுகள் மேல்தேசத்தவைபோல பெரிதாயும், வேகமாய் கல்ரோட்டில் ஓடாமலுமிருந்த போதிலும், மணல் பாங்கான இடங்களில், பாரமான வண்டிகளை இழுத்துச் செல்லுகின்றன. உழவில் பெரிய மாடுகள் அவஸ்தைப்படும்போது இவை களைக்காமல் போகின்றன. தவிர இம் மாடுகள் வயது அதிகரிக்கிற காலத்தில் மேல் தேசத்தவைகளைப்போல உடைந்து போகாமல், பலத்திலும் பருமனிலும் அதிகரிப்பதை யாவரும் கவனித்திருக்கலாம். இந்த நாட்டு மாடுகளை வ்ருத்தி செய்வது அவச்யம்.

இதற்கு அநேக பரீக்ஷை செய்து பார்த்தோம். சிலர் கள்ளி இதழைகொடுக்கச் சொல்லுகிறார்கள். கள்ளி இதழ்களில் முள்ளை எடுப்பது மிகவும் கஷ்டமாயிருந்தாலும், அப்படி எடுத்துப் பத்ரமாக மாடுகளுக்கு தவிடுகளில் பிசைந்து வைத்ததில், சில மாடுகள் வாஸனையைக் கண்டு தீனியை தின்கிறதில்லை. சில, தவிட்டைமாத்ரம் தின்றுவிட்டு கள்ளிப் பசையுள்ளவற்றை தள்ளி விடுகின்றன.

சில எருமைகளுக்கு வைத்ததில் பாலில் கொஞ்சம் நாற்றம் உண்டாயிற்று. தீனிவைக்கச் சோம்புகிற நமது மிராசுதார்களுக்கு கள்ளி போட்டு புஷ்டியாக்குகிற விஷயம் அஸாத்யமான காரியமே.

நல்ல மாடுகளாகவைத்துக் கொள்வதற்கு கன்றுக்குட்டிமுதல் பலப்படுத்தினால் தான் அது வ்ருத்தியடையும். அநேகமாக மிராசுதார்கள் எல்லாரும் காப்பி குடிக்கிறபடியால் கன்றுக்குட்டிகள் சீக்ரம் இறந்துபோய்விடுகின்றன. நாங்கள் ஒரு கன்றுக்குட்டியை ரூ 50 க்கு வாங்கி ரூ 350 விலையாகும்படி கொணர்ந்தோம். கன்றுக்குட்டிகளை நல்லஜாதியாய்ப் பார்த்து வாங்கிவிடவேண்டியது அவச்யம். நல்ல ஜாதிக்கன்றுகள் போஷணையால், நல்ல பலத்தை அடையும். கெட்ட ஜாதிக்கன்றுகள், போஷணைக்குத் தகுந்தபடி லக்ஷணமும் பலமும் அடையமாட்டா.

சிலர் கன்றுக்குட்டிகளுக்கு காலையில், நல்லெண்ணெயும் சோற்று நீறும் புகட்டியும், மனிதரைப்போல கொஞ்சம் எண்ணெயை தலையில் தேய்த்தும், நல்ல புஷ்டியாகச் செய்கிறார்கள். ஆனால் பிண்ணாக்கு ஊறவைத்து, ஸன்னமான மெஷீன் தவடுகலந்து புகட்டுவது ரொம்ப ச்லாக்யமானது.

இப்படிச் செய்தால் அவைகள் பெரிதானவுடன் தீனியைத் தாமே விரும்பும். சிலர் கன்றுகளுக்கு தவிடு பிண்ணாக்கைக் காட்டாமல் பெரியதானவுடன் வெயிலில் இரண்டு மூன்று நாள் கட்டி தவிட்டுத் தண்ணீரைக் குடிக்கச்செய்து, தீனிபழக்குகிறார்கள்.

சிலர் மாடுகளுக்கு வைக்கோல் தவிர வேறு ... றும் போடுவதில்லை. கல்கத்தாவில்செய்வது ... வைக்கோலை யந்த்ரத்தினால் அரைத்து ... ளுக்கு வைப்பதில் அவைகளுக்கு கடிக்க ... டியதில்லை. தவிர வைக்கோலும் சேதமா... தில்லை. மாடுகளுக்கு மெஷீன் தவிட்டை பி... ந்தாவது தண்ணீரில் கலந்தாவது நாளுக்கு ஒ... முறை வைத்தால் பலனைத்தரும்.

மாடுகளுக்கு தொட்டியில் சிலர் சுத்தஜல... த்தைத் தவிர வேறு ஊற்றுவதில்லை. கோடைகாலத்தில் சுத்தஜலமும் கிடைப்பதரிது. இக்காலத்தில் மாடுகளை காலையிலே மேயவிட்டு வெயில் அதிகமானவுடன் தவிடும் பூசினிக்காய் துண்டங்களும் நிறைந்த, தொட்டிநீரைக் குடிக்கச்செய்து வெயில் தணிந்தவுடன் மறுபடியும் வெளியேவிடுவது அவச்யம்.

மேலும் மாடுகள் தங்கியிருப்பதற்கு கொட்டகைகள் இருக்கவேண்டியது அவச்யம். மாரிகாலத்தில் குளிர் பொறுக்கமுடியாததினாலும்,

ஸாகுபடி காலமானதால் திடல்களில்லாததினுலும், கட்டுமிடம் மூத்ரம்பெய்து ஈரமாயிருக்குமாகையாலும் கொட்டகை சிறியதாயும், தளவரிசு போட்டுமிருக்கவேண்டும்.

கொட்டகையில் ஒருத்தங்குமென்று குழியாகப் பறித்துவிட்டு அதில் மாடுகளைக்கட்டி வைக்கோலைப்போட்டு அப்படியே நாளடைவில் வைக்கோலும் மூத்திரமும் சாணமும்சேர்ந்து நல்லஉரமாகுமென்று பரீக்ஷை செய்ததில், மாடுகள் குப்பையின் நாற்றம் பொறுக்காமலும், படுக்க ப்ரியமில்லாமலும் அவஸ்தைப் படுகின்றனவென்று தெரியவந்தது. சிலர் மாடுகளுக்குத் தீனிவைத்தால் லாபமில்லையென்கிறார்கள். நாங்கள் மாடுகளுக்கு வருஷமுழுவதும் தீனிவைத்துப் பார்த்ததில் மாட்டின் புஷ்டியும், செய்கிற வேலையும், உண்டாகிற நஷ்டத்திற்கு ஈடுகொடுக்கிறதென்று அனுபவத்தில் தெரிகிறது.

ஜி. சேஷாத்ரி.

## LONDON BEGGARS.

BY A LADY.

## லண்டன் நகரத்துப் பிச்சைக்காரர்கள்.

யாசகமென்னும் உத்யோகம் இவ்வுலகம் உற்பத்தியானதுமுதல் இருந்துகொண்டிருக்கவேண்டும். காலம் செல்லவும், ஜனஸமூகங்கள் ஏற்படவும், நாகரிகம் வ்ருத்தியாகவும், பிச்சைக்காரர்கள் ஜாதியும் நன்றாய் வேரூன்றி, செழித்து, காட்டுமூங்கில் புதர்கள்போல் அடர்த்தியாய் வளர்ந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் இப்போது உலகமெங்கும் இவ்வளவு ஏராளமாய், பிச்சைக்காரர்கள் வாழ்வதற்கு காரணம் சொல்ல முடியாது. இங்கிலாந்து தேசத்தில், தரித்ரத்தை ஓர் குற்றமென்றே ஜனங்கள் நினைக்கிறார்கள்: அங்கே, பிச்சை கேட்பவர் போலீஸார் வசம் ஒப்புவிக்கப்படுவார்கள்; நாடோடிகளைப் பொறுக்க என்றே ஓர் சட்டம் வழங்குகின்றது; ஒருவன் ஜீவனோபாயம் இல்லாமல் திரிபவன் என்று தெரிந்தால், உடனே அகதி மடத்திற்கு அனுப்பப்படுவான்; ஸன்மார்க்க போதகர்கள் அநேகர், வேலைசெய்ய சக்தியுள்ளவர்களுக்கு தர்மம் செய்வது பாபம் என்று போதிக்கின்றனர். என்றாலும் என்ன ப்ரயோஜனம்? இன்றைக்கு, லண்டன்மாநகரத்தில் வசிக்கும் பிச்சைக்காரர்களின் தொகையை எண்ணிப்பார்த்தால், இதுவரையில் ஒருநாளும் இருந்திராத எண்ணிக்கை நமக்கு கிடைக்கும். நாடோடிகளைப் பொறுக்குவதென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஸபைகள் சொல்லுவதும் இதுவே. எப்படி 'ப்ளேக்' என்னும் வ்யாதியை பரவவொட்டாமல் செய்ய எலிகளையெல்லாம் கொன்றால், சாகாமல் தப்பியிருக்கும் எலிகள், தாம் முன்பு போடுவதைப்போல் மூன்று நான்கு மடங்கு குட்டிகள் போட்டு தம் வர்க்கத்தை வ்ருத்தி செய்கின்றனவோ அப்படியே, பிச்சைக்காரர்களும் பிடிக்க பிடிக்க, அதிகரித்துக்கொண்டே வருகிறார்கள். யாசககுலம், தத்ஸமயம் கைலாஸபருவதம்போல் விளங்குகின்றது; அதை அழிக்க யத்தனிப்போர் பூர்வத்தில் இராவணன் பட்டபாடுதான் படுவர்.

நாம் (ஹிந்துக்கள்) எப்போதும் தர்மசிந்தையுள்ள ஜனங்கள். நாளைக்கும் 'சந்திபிக்ஷை' என்று ஒருவன் நம்மை நாடிவந்தால், ஒருபொழுதும் அவனை விரட்டமாட்டோம், ஆகவே நமது பிச்சைக்காரர்களும் பொய்விசேஷமாய் பேசுவதில்லை. பேசுவதற்கிடமுமில்லை; பேசினாலும், அவர்களுக்கு அனுபவமில்லாதிருப்பதால் இது பொய்யென்று ஸ்படிகம்போல் விளங்கும். ஆனால் இங்கிலாந்திலோ, அம்மம்ம! பிறந்த நாள் முதல், சாகும்வரையில் பொய் தவிர வேறு ஒன்றும் அவர்கள் பேசியறியாததால் 'பொய்யுடையொருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே' என்ற வாக்யத்திற்கு த்ருஷ்டாந்தங்கள் அபரிமிதமாய் பார்க்கலாம். (பொய்யென்றால், அதன் உறவினர்களாகிய, வஞ்சகம், திருட்டுத்தனம் முதலியவைகளும் அடங்கியிருக்கின்றன.) பணம் ஸம்பாதிப்பதற்காக அவர்கள் செய்யும் தந்த்ரங்கள் வெகு விசித்ரமானவை, அவர்கள் கற்பிக்கும் கதைகள் அபார புத்தி ஸூக்ஷ்மத்தைக் காட்டுகின்றன. இதில் ஓர் புதுமை என்னவென்றால், இன்றைக்குப் பார்க்கும் தந்த்ரத்தை நாளைக்கு பார்க்கமுடியாது; மனிதரை ஏமாற்றுவதற்காக அவ்வளவு கஷ்டப்பட்டு புது வழிகள் கண்டு பிடிக்கின்றனர் அப்பிச்சைக்காரர்கள்.

ஸுமார் முப்பது வர்ஷங்களுக்கு முன்பு, ஓர் பிச்சைக்காரன் தரையில் விழுந்து, வாயில் நுரைததும்ப, சாலைவழியாய் போகிறவர்களையெல்லாம் தனக்கு பொருளுதவி செய்யுமாறு மன்றாடுவது, ஸர்வ ஸாதாரணமாயிருந்தது. வாயில் நுரைவருவதற்காக அவன்சவர்க்காரக் கட்டிகளை மெல்லுவான்; பார்ப்பவர்களும் 'பாவம், காக்கை வலியால் பேதை வருந்துகிறான்' என்று மனமிரங்கி தம்மாலியன்றதைக் கொடுப்பர். இன்னொரு தந்த்ரமாவது ஒரு ஏழைக்குழந்தையை கூலிக்கு அமர்த்திக்கொண்டு அதை தெருவோரத்தில் நிறுத்தி அழச்சொல்வது. தெருவில் போகிறவர்கள் 'ஏன் அழுகிறாய்?' என்று அக்குழந்தையை கேட்டால் அது தனது அன்னை கடைக்குப்போய் ரொட்டி வாங்கி வரச் சொன்னதாகவும், பணத்தைதான் எங்கேயோ இழந்துவிட்டதாகவும் வீட்டுக்குப்போக தனக்கு பயமாயிருக்கிறதென்றும் தேம்பித் தேம்பி சொல்லும். ஓர் குழந்தை இவ்வாறு பரதவிப்பதைக் கண்டால் யார்மனம்தான் இளகாதிருக்கும்? ஆகவே, ஜனங்கள் ஏதாவது குழந்தைக்கு அளித்துப் போவார்கள். போதுமான ரொக்கம் வஸூலானவுடன், சிறிது தூரத்தில் நின்று, நடப்பவைகளை பார்த்துக் கொண்டிருக்கும் பிச்சைக்காரன் குழந்தையை எடுத்துச் செல்வான். ஒரு தரம், தான் ஓர் குருட்டு-செவிட்டு-நொண்டியென்று நடித்து வழிப்போக்கர்களிடம் பணம் பறித்துவந்த பிச்சைக்காரனொருவன், தன்னை டாணாகாரர்கள் பிடிக்கப்போகிறார்கள் என்று தெரிந்ததுதான் தாமஸம், முயலைப்போல் ஓடி, மாயமாய் போய்விட்டான். அவன் ஓடும்போது கீழே எறிந்த கக்கதண்டம் இப்பொழுதும், லண்டன் நகரத்தில், நாடோடி மடம் ஒன்றை சார்ந்த ஓர் கண்காட்சி சாலையில் இருக்கிறது. மற்றொருவன் கையில் ஓர் படத்தையும், புட்டியையும் வைத்துக்கொண்டு பிழைத்துவந்தான்: அப்படத்தில் அம்மனிதன் நாவை ஓர் ரணவைத்தியர் அறுக்கும் பாவனையாக சித்திரிக்கப்பட்டிருந்தது; அந்த புட்டியில் ஓர் நாக்கு ஏதோ ஒரு த்ராவகத்தில் ஊறிக்கொண்டிருந்தது. 'நாவில்லா பிராணியாயிற்றே' என்று கருணைகூர்ந்து பலர் அவனுக்கு பொருளுதவினர். உண்மையில் அந்நாக்கு ஓர் ஆட்டினது; அதை அத்திருடன் பணம் ஸம்பாதிக்க ஒரு வழியாய் வைத்திருந்தான். ஆனால் இதைப்போன்ற எத்துகள் இப்பொழுது வெகு அபூர்வமாய்விட்டன. ஏனெனில் இப்போது இப்படி, ஓர் பிச்சைக்காரன் செய்வானாகில் ஜனங்கள் அவனை சுற்றிலும் கூடுவார்கள்; ஜனங்கள் கூடினால் போலீஸாரும் கூடுவது ஸஹஜமல்லவா?

தற்காலத்து பிச்சைக்காரர்களெல்லோரும் வெகு டாம்பீகமாய் சிங்காரித்துக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு கொச்சையில்லாமல் பேசவும் சக்தி உண்டு. நகரத்தில் ஓர் பெரிய எலெக்ஷன் நடக்கப்போகிறதென்று வைத்துக்கொள்வோம். நமது பிச்சைக்காரன் பெரிய மனிதனைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு ஓர் சீமான் வீட்டிற்குள் நுழைவான்; நுழைந்து, தான் நடக்கப்போகும் நியமனத்திற்கு ஓர் அபேக்ஷகர் என்றும், அதற்கு அச்சீமான் தன் 'வோட்' கொடுக்கவேண்டுமென்றும், கேட்டுக்கொள்வான். அல்லது தான் ஓர் 'ஜனோபகாரி' என்றும் தனது ஸங்கத்திற்கு, ஏதாவது கைங்கர்யம் செய்யவேண்டுமென்றும் ப்ரார்த்திப்பான். தன் கதையை மெய்யைப்போல் தோற்றுவிக்க, அவர் ஸ்நேகிதர் ஒருவர் பெயரை ப்ரஸ்தாபிப்பான். (இந்த

சில்லரை விஷயங்களை யெல்லாம் முன்பே தெரிந்துவைத்துக்கொண் டிருப்பான்.) விடைபெற்றுக்கொள்ளும் ஸமயத்தில், சிறிது தீர்த்தம் கொடுக்குமாறு வேண்டுவான். துரை தீர்த்தத்திற்காக ஓர் நிமிஷம் அகலுவதற்குள் அருகே மேஜைமேல் கிடக்கும், துரையின் நண்பர்களுடைய விஸிடிங்கார்டுகள் சிலவற்றை எடுத்துத் தன் சட்டைப்பைக்குள் சொருகிவிடுவான். பல்லி, தன் நாவை நீட்டி விட்டிலை எவ்வளவு சீக்ரமாய் பிடிக்குமோ அவ்வளவு துரிதமாய் இந்த கார்டுகள் அவன் பைக்குள் நுழையும். சிறிது நேரங்கழித்து, பிச்சைக்காரன் எடுத்துப்போன கார்டுகளில் ஒன்றை வேறொருமனிதன் கொண்டுவருவான். அதனடியில் "இதைக் கொண்டுவருபவன் பரமயோக்யன்; வேலையில் சேரப்போகிறான்; ஆனால் பணம் கொஞ்சம் வேண்டுமாம் நான், அரை ஸவரன் கொடுத்தேன். நீர் ஏதாவது போடமுடியுமா?" என்று எழுதியிருக்கும். கௌரவத்திற்காக பயந்து துரை பணம் கொடுப்பார். ஆனால் தன் ஸ்னேகிதரை மறுபடி ஸந்தித்தபோது இதைப்பற்றி விசாரித்தால் விஷயம் வெளிப்படும். மற்ற ஸ்னேகிதர்களின் கார்டுகளையும், இப்படியே உபயோகிப்பான் பிச்சைக்காரன். சில பிச்சைக்காரர்கள் கடைகளில் இம்மாதிரி கார்டுகள் விற்கப்படுகின்றன.

பிச்சைக்காரர்கள் நிருபங்கள் வரைந்து பிழைப்பது இன்னும் வேடிக்கை. ஏலம்போட விருக்கும் தன் வீட்டை மீட்க உதவிவேண்டுமென்று ஓர் பிச்சைக்காரன் துரைமகனொருவருக்கு எழுதுவான்; இன்னொருவருக்கு, தன் மகனை வேலையிலமர்த்த பணம் வேண்டுமென்று வரைவான்; தான் ஓர் புத்தகத்தைப் பதிப்பிக்கவோ அல்லது ஓர் பத்ரிகையை ஸ்தாபிக்கவோ உத்தேசித்திருப்பதாகவும், அதற்கு சிறிது ஸஹாயம் வேண்டுமென்றும் வேறொருவருக்கு விண்ணப்பம் செய்வான். இல்லாவிட்டால் தான் அநேக வர்ஷங்களுக்கு முன் 'எஜமான்' வீட்டில் வண்டியோட்டியதாக சொல்லி அன்னியர்கள் காதுக்கெட்டியிருக்க முடியாத சில குடும்ப ரகஸ்யங்களையு கூட சேர்ப்பான். (இந்த ரகஸ்யங்களை யறிவதற்கு, பணக்காரர் வீட்டு வேலையாட்கள் கூடும் 'ஓட்டல்க'ளுக்குப் போகவேண்டும்) அல்லது வெள்ளைக்காரர்களுள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் எல்லாருக்கும் ஓர் பொதுப்பெயர் உண்டு. ஆகையால், தனக்கும் அப்பெயரை இட்டுக்கொண்டு, தான் ஓர் தூரபந்து என்றும் சொல்லுவான்.

இதைப்போன்ற காகிதங்கள் எழுதுவதற்கென்றே ஓர் ஆள் ஏற்பட்டிருக்கிறான். அவன் கற்பனசக்திதான் என்னே! தன்னிடம் வரும் பிச்சைக்காரன் ஒவ்வொருவனுக்கும் மூன்று அல்லது நான்கு கதைகள் கட்டி எழுதிகொடுக்க வேண்டும். பெயர், விலாஸம் இவைகள் கூட புதிதுபுதிதாய் உண்டாக்கவேண்டும். இவனுக்கு இந்த வ்யாபாரத்தினால் நல்ல லாபம் கிடைக்கிறது போலும்! கிடைக்காவிட்டால் இவன் போலீஸாரால் சிறையில் அடைக்கப்பட்டு பின்பு விடுதலையான பிறகும், தன் பழைய உத்யோகத்தில் ப்ரவேசிக்கமாட்டானே.

நமது நாட்டில் சித்ரஸஹிதமாய் மாதாந்தர பத்திரிகைகள் அகப்படுவது துர்லபமாய் இருக்கிறது. ஆனால் இப்பிச்சைக்காரர்களது நிருபங்களில் ஒன்றாவது சித்ரமில்லாமல் வெளிக் கிளம்பாது. பிணியினால் வருந்தும் மகளுக்கு வைத்தியரைக் கொண்டு சிகித்ஸை செய்வதற்காக பணம் வேண்டும் என்று ஒருவன் ஒரு கனவானுக்கு எழுதினால் அப்பிணியாளியின் படம் ஒன்று கடிதத்தின் கூடவே போகும். வீட்டு வாடகைக்காக பணம் கேட்கும் பிச்சைக்காரன், தனது கொடுக்கல் வாங்கல்களை குறித்திருக்கும் புத்தகத்தையும் கூட அனுப்பிவைப்பான்: அதிலிருந்து, வீட்டில் குடியிருந்தவன் பல வருஷங்கள், தாமஸமில்லாமல் வாடகை கொடுத்து வந்ததாகவும், ஆனால் கடைசியில் சில மாதங்கள்



அப்படிக் கொடுக்க தவறினதாகவும் தெரியவரும். இந்த கணக்குகளெல்லாம் ஒரே ஸமயத்தில் ஒரேமையைக்கொண்டு எழுதப்பட்டன என்று யாராவது கண்டு பிடித்து விட்டால் பிச்சைக்காரன் திண்டாட வேண்டியது தான். வேறொரு கடிதத்தில், ஒருவன் தான் ஓர் ஏழைக் கிழவனென்றும், தன் மனைவி திடீரென்று இறந்துபோய் விட்டதாகவும், தக்ஷணம் இரண்டு சவரன்கள் எவரும் கொடுத்துதவாவிட்டால், பிணம் திக்கற்றதாய் கிடக்கவேண்டி வருமென்றும் முறையிட்டான். கொஞ்சம் ச்ரத்தையுடன் இவனைப்பற்றி விசாரித்ததில் அவன் அதுவரையில் இருபது பெண்சாதிகளைப் புதைத்திருப்பதாக தெரியவந்தது.

ஸாதாரணமாக ஓர் பிச்சைக்காரன், தினசரி நான்கு ரூபாய்கள் ஸம்பாதிப்பான். வருஷம் ஒன்றுக்கு, மூவாயிரம் பிச்சைக்காரர்கள் வரையில், போலீஸார் ஜெயிலில் அடைக்கின்றனர்; இப்படி அடைத்தும் வருஷத்திற்கு 3,12,000 ஸவரன்கள் வீதம் பிச்சைக்காரர்கள் வயிற்றில் போய் விழுகின்றன என்று ஒருவர் எழுதுகிறார் "பிச்சைக்காரர்கள் சிரஞ்சீவிகள்: அவர்களுக்கு அழிவு கிடையாது. தர்மசிந்தையும் மனுஷ்ய ஸ்வபாவம்: அது மனிதனிடம் இருக்குமளவும், யாசகம் கேட்பவர்களும் இருப்பர்." ஆனாலும், அகதிகளை சீர்திருத்தும் ஸபைகள் எல்லாம் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வதும் தவறு. ஏனென்றால், நம்மை ஒருவன் பிச்சைகேட்டால், அவனைப்பற்றி இந்த ஸபைகளின் ரிகார்டுகளில் தேடிப்பார்த்து, அவனது பூர்வீகத்தை தெரிந்துகொண்டு, அவன் நமது தர்மத்திற்கு பாத்ரவானா என்று தீர்மானித்து பின்பு தானம் செய்யலாமன்றோ?

சோம்பேறித்தனம்தான் இம்மனிதர்களை யாசிக்குமாறு தூண்டுகிறதுபோலும். ஸமயம் வாய்த்தால் யோக்யமாய் வேலைசெய்து பிழைக்கும் பிச்சைக்காரர் இரண்டொருவர் இருக்கலாம். இருந்தாலும், நூற்றில் தொண்ணூற்றொன்பதுபேர்களுக்கு, ஒரு கர்மமுமில்லாமல், ஸுகமாய் சோம்பேறிகளாய் வாழ்வதில்தான் ப்ரியம். சாகுந்தருவாயிலிருந்த பிச்சைக்காரன் ஒருவன் தன் ஞாபகார்த்தமாய், பின் வரும் பொருள் கொண்டு எழுதிய பாடலிலிருந்து, பிச்சைக்காரர்களின் ஸ்வபாவம் தெரியவரும். 'பெரியோர்களே! இக்குடிசையில் ஓர் பிச்சைக்காரன் வாழ்ந்துவந்தான். அவன் பட்ட அலுப்பு உங்களுக்கு எப்படி தெரியப்போகிறது! இவ்வுலகத்தில் அவன் அபாரமாய் உழைக்கவேண்டியிருந்தது. இப்பொழுது அவன் இறந்து போகின்றானே என்று நீங்கள் விஸனிக்காதீர்கள். ஏனென்றால் இனி எப்பொழுதும், வேலையொன்றுமில்லாமல், ஸுகமாய் இருக்கப்போகிறானே.'

இம்மாதிரியான பிச்சைக்காரன் ஒருவனைப்பற்றிய ஓர் கதையுடன் முடிப்போம். கனவான் ஒருவர் லண்டன் நகரத்தின் வெளிப்புறத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் கந்தல்களை உடுத்திக்கொண்டிருந்த ஓர் ஆஸாமி அவரை நெருங்கி யாசித்தான். 'கொடுக்கமாட்டேன்' என்று கண்டிப்பாய் சொல்லிவிட்டார் துரை. இதைப் பார்த்த பிச்சைக்காரன் 'ஆனால், ஐயா, உங்களை தொந்தரை செய்யவில்லை. இந்த அற்பதொகையை நீர் எனக்குக் கொடுப்பீரானால், நான் இப்போது என்ன செய்ய தீர்மானித்து விட்டேனோ அதை செய்யாதிருப்பேன்' என்று கூறி பெருமூச்செரிந்து மெதுவாய் அப்பால் அகன்றான். இதைக் கண்ட பிரபு 'இவன் தரித்ரத்தினால் தற்கொலை செய்து கொள்ளப்போகிறான் பாவம்! நம்மால் ஏன் இவன் சாகவேண்டும்' என்று இரங்கி, அவனைக் கூப்பிட்டு, அவன் கேட்ட தொகையை கொடுத்து விட்டார். பின்பு 'நீ என்னவோ செய்யப்போவதாகச் சொன்னாயே அது என்ன'? என்று கேட்டார். அதற்கு அவன் சொன்னதாவது: "மஹாராஜா! இன்று முழுவதும் யாசித்து பார்த்தேன். ஒருபைஸாவாவது கிடைத்தபாடில்லை. நீங்கள் மட்டும் என்மீது க்ருபை வைக்காதிருப்பீர்களாகில் நான் உழைக்க வேண்டியிருந்திருக்கும். உழைக்க வேண்டுமே என்று தான் அவ்வளவு ஸஞ்சலப்பட்டேன்."

ஒரு ஸ்த்ரீ நிருபர்.

## MEDICAL INSPECTION OF SCHOOLS.

## பள்ளிக்கூடங்களை வைத்யர்களைக் கொண்டு சோதிப்பது.

அநேக பள்ளிக்கூடங்களினுடைய ஸுகாதார நிலைமை மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறது. அவைகளில் படிக்கும் மாணவர்களுடைய தேக ஆரோக்ய நிலைமையும் ரொம்ப தாழ்ந்த நிலைமையில் இருக்கிறது. மாணவர்களுடைய அறிவை வ்ருத்திசெய்து, மனோசக்திகளை பலப்படுத்தி விட்டு, அவர்களுடைய தேகபலத்தையும், தேக ஸுகத்தையும் கவனிக்காமலிருப்பது சரியல்ல. அவர்களுக்கு க்ரமமாக தேகப்பயிற்சி செய்விக்க வேண்டியது அவச்யமாகும். ஆனால் தேகப் பயிற்சியை கவனிப்பதற்கு முன்னால் அவர்களுடைய தேகஸுகத்தின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியது அவச்யம். ஏனென்றால் பையன்களுடைய தேகஸுகம் எப்படியிருக்கிறதென்று தெரிந்து கொள்ளாமல் தேகப்பயிற்சியை மாத்ரம் கவனித்தால் அது அவ்வளவு ப்ரயோஜனப்படாது. இந்த விஷயத்தைப்பற்றி அமெரிக்காவிலும், இங்க்லண்டிலுமுள்ள வித்யா அதிகாரிகள் அதிக கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தியாவிலும் பற்பல மாகாணங்களின் கவர்ன்மெண்டுகள் இது விஷயமாக கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். மத்யமாகாணங்களிலும் பேராரிலும் பள்ளிக்கூடங்களை வைத்ய இலாகா அதிகாரிகள் போய்ப்பார்த்து சோதித்து வருகிறார்களென்று தெரியவருகிறது. பம்பாயில் கொஞ்ச காலத்துக்கு முன் நடந்த மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டர் லலுபாய் ஸமால்தாஸ் பள்ளிக்கூடங்களை வைத்யர்களைக் கொண்டு சோதிக்கும் விஷயமாக ஒரு ப்ரேரணை செய்தார். கவர்ன்மெண்டார் தாங்கள் இது விஷயமாக ஒரு ஸ்கீம் தயார்செய்து அதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்களென்றும், சீக்ரம் இது ஸம்பந்தமாக ஏதாவது செய்வார்கள் என்றும் பதில் சொன்னார்கள். பஞ்சாப் மாகாணத்திலும் கவர்ன்மெண்டார் வைத்யர்களைக்கொண்டு சோதனை செய்ய ஒரு ஸ்கீம் தயார்செய்து அதைப் பற்றி ஆலோசனைசெய்து வருகிறார்களாம்.

ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார் கொஞ்ச காலத்துக்குமுன் ஒரு கமிட்டி ஏற்படுத்தி இதைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படி செய்தார்கள். அவர்கள் கவர்ன்மெண்டுக்கு எழுதியனுப்பின ரிபோர்ட்டில் பல ப்ரேரணைகள் செய்திருக்கிறார்களாம். அவைகளில், எல்லாப் பள்ளிக்கூடங்களினுடையவும் ஸுகாதார நிலைமையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கொருதடவை பரீக்ஷித்துப் பார்க்கவேண்டு மென்பதும், யோக்யதா பத்ரம் பெற்ற வைத்யர்களைக்கொண்டு மாணவர்களுடைய தேகஸுகத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை பரீக்ஷிக்கவேண்டு மென்பதும் முக்யமான ப்ரேரணைகள். சென்னை கவர்ன்மெண்டார் சென்னையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஏழு எலிமெண்டரி ஸ்கூல்களின் ஸுகாதார நிலைமையை சோதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஒரு இங்க்லீஷ் பத்ரிகையில் ஒரு நிருபர் இது விஷயமாக சில யோசனைகள் சொல்லுகிறார். முதலில் அவர் ஆஸ்பத்ரி அல்லது டிஸ்பென்ஸரி இருக்கும் பட்டணங்களிலுள்ள பள்ளிக்கூடங்களை வைத்யர்களைக்கொண்டு சோதிக்கச் செய்யவேண்டும் என்கிறார். பட்டணங்களிலுள்ள அஸிஸ்டெண்ட் ஸிவில் ஸர்ஜன் அல்லது ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களைக் கொண்டு பள்ளிக்கூடங்களை சோதிக்கச் செய்யவேண்டும். அவர்கள் இந்த வேலைகளைச் செய்வதற்காக அவர்களுக்கு தக்க 'அல்லவென்ஸ்' (அதாவது படி) கொடுக்கவேண்டும். அவர்கள் பின்வரும் விஷயங்களைச் சோதிக்கவேண்டும்.

I மாணவர்களின் ஸாதாரண நிலைமை. அதாவது:—(1) அவர்களின் நிறை (2) உயரம் (3) அவர்களுடைய ஆகாரம். (4) தேக சுத்தம் முதலியவை.

II மாணவர்களின் அங்கங்களின் நிலைமை. அதாவது:—மூக்கு, தொண்டை, கண் (பார்வை), காது (அதாவது நன்றாய் காது கேட்குமா என்பது); மனோ நிலைமை முதலியவை.

III மாணவர்களுக்கு இருக்கக்கூடிய வ்யாதிகளும் அங்கஹீனங்களும்; உதாரணமாக, ஹ்ருதயத்தின் நிலைமை, ரத்தோட்டம், நுரையீரல், நரம்புகளின் நிலைமை, இன்னும் ஏதாவது குறைகளிருந்தால் அவைகள்.

மேலே சொன்னவைகளைப்பற்றி வைத்யர்கள் சோதனைகள் செய்து ரிபோர்ட்டுகள் எழுதி அவைகளை பாடசாலைகளின் தலைமை உபாத்யாயர்களுக்கும், அந்தந்த டிவிஷன் ஸ்கூல் இன்ஸ்பெக்டருக்கும் அனுப்பவேண்டும். பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்யாயர் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு வைத்யர்கள் பிள்ளைகளின் நிலைமையைப்பற்றிச் சொல்லியிருக்கும் விஷயங்களைத் தெரிவித்து, பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு வைத்யம் பார்க்கும்படி செய்யவேண்டும். ரொம்ப ஏழைகளாயிருக்கும் பிள்ளைகளை தர்மவைத்யசாலைகளுக்கு அனுப்பும்படி சொல்லவேண்டும். எந்தப் பிள்ளையாவது தொத்து வ்யாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால், அந்த வ்யாதி மற்ற மாணவர்களிடம் பரவாதபடி பார்த்துக்கொள்ளும்படி வைத்யர்கள் தலைமை உபாத்யாயர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இப்படிப் பரீக்ஷை செய்வதோடு பிள்ளைகளுக்கு ஸுகாதார விஷயங்களைக் கற்பித்து வரவேண்டும். வேண்டுமானால் ஸுகாதாரப் புஸ்தகங்களை க்ரமமாகக் கற்பித்துவர ஏற்பாடு செய்யவேண்டும்.

பள்ளிக்கூடங்களை ஸுகாதார வஸதியுள்ள தகுந்த இடங்களில் கட்டும்படி பள்ளிக்கூடத்து சொந்தக்காரர்களை அதிகாரிகள் வற்புறுத்த வேண்டும்.



## THE CIRCULATION OF BLOOD.

BY T. S. RAJAGOPALAN.

## ரக்தச் சுழற்சி.

நம் தேகத்தில் எந்தவிடத்திலாவது ஒரு குண்டூசியைக் குத்தினோமானால் அவ்விடத்திலிருந்து ரக்தம் கசிந்து வருவதை நாம் காணலாம். இதிலிருந்து நம் சரீரத்தில் ரக்தமில்லாதவிடமில்லை யென்பது புலப்படுகிறது. மேலும் ரக்தம் சுத்தமாகவே இருந்துகொண்டு அவயவங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை அவை யுட்கொள்ளக்கூடிய நிலைமையில் கொண்டு போய்க் கொடுக்கவேண்டியது, அவச்யமாதலால் ரக்தச் சுழற்சியுமிருக்கவேண்டியதென்று அறிகிறோம்.

நமது தேகத்தில் ரக்தச் சுழற்சிக்காக செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடு, ஒரு பெரிய பட்டணத்திலிருக்கும் ஜனங்களுக்கு வேண்டிய நீரை பலவிடங்களில் கொண்டுபோக வைத்திருக்கும் குழாய்களின் ஏற்பாடு போலிருக்கிறதென்று ஒரு விதத்தில் சொல்லலாம். சில பட்டணங்களில் யந்திரங்களின் ஸகாயத்தால் ஜலம் இறைக்கப்பட்டு அவைகளிலுள்ள தெருக்களுக்கு கொண்டுபோகப் படுகிறது. இந்த யந்த்ரங்களிலிருந்து வெவ்வேறு திக்குகளுக்கு பெரியகுழாய்கள் போகின்றன. அவைகளிலிருந்து சிறிய குழாய்கள் பிரிந்து தெருக்களுக்கும் சந்துகளுக்கும் செல்லுகின்றன. அவைகளிலிருந்து மற்றும் சிறியவை பிரிந்து ஜலத்தை ஒவ்வொரு வீட்டிலும் கொண்டு போய்ச் சேர்க்கின்றன.

சரீரத்தின் ரக்தாசயத்திலிருந்து (ஹ்ருதயம்) ரக்தத்தை யெடுத்துச்செல்லுகிற ஆர்ட்டரிகள் (சுத்தரக்தக் குழாய்கள்) இவ்விதத் தண்ணீர்க் குழாய்களை ஒக்கும். ஹ்ருதயத்திலிருந்து ஒரு பெரிய ஆர்ட்டரி ரக்தத்தை எடுத்துக்கொண்டு கிளம்பி, பற்பல கிளைகளாகப் பிரிந்து, கடைசியில் மயிர்போன்ற குழாய்களாக தசைநார், நரம்பு, எலும்புக்கூடு, தோல் இவைகளில் வ்யாபித்து ரக்தத்தை விடுகிறது.

சிறிது யோசித்துப் பார்த்தால், மனித சரீரத்தில் மற்றொரு ஏற்பாடும் அவசியமெனப் புலப்படும். ஒரு பட்டணத்திலுள்ள ஜனங்கள் குழாய்களில் வரும் நீரை உபயோகித்துக் கொள்ளவும் வீண்படுத்தவும் கூடும். ஹ்ருதயத்திலிருந்து வரும் ரொம்ப முக்யமான ரக்தமோ திரும்பி வந்தே தீரவேண்டும். நமது தேக ஸௌக்யம் சரியான ரக்தச் சுழற்சியை பொருத்திருக்கிறது. இப்படி கிளம்பிப்போகும் உதிரத்தைத் திருப்பிக்கொண்டுவர, நம்முடைய சரீரத்தில் மற்றொருவிதக் குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை மிக நுட்பமான சிறு குழாய்களாய் ஆரம்பித்து, வரவரப் பல குழாய்கள் ஒன்று கூடிப் பருத்து கடைசியில் இரண்டு குழாய்களாக ஹ்ருதயத்தில் உதிரத்தை விடுகின்றன. இவ்விதக் குழாய்களுக்கு வேன்கள் (Vein) என்று பெயர்.

தோற்றத்திற்கு இவை ஆர்ட்டரி போலவேயிருக்கும். ஆனால் இவைகளுக்குள் சில வித்யாஸங்கள் உண்டு. ஆர்ட்டரியில் ரக்தம் ஒரு குழாய்வழியாய்க் கிளம்பி பலகிளைகளாகப் பிரிந்து போகிறபடியால் அதில் ரக்த வோட்டம் அதிகவேகமாயிருக்கும். வேனிலோ பல ஸன்னக் குழாய்கள் ஒருங்கு சேர்ந்து வரவரப் பெருத்து வருவதால் ஓட்டம் அவ்வளவு வேகமாயிராது.

மற்றொரு வித்யாஸமுமுண்டு. ஆர்ட்டரியில் ஓடும்ரக்தம் சுத்தமானது ; சிவந்த நிறமுள்ளது. வேனிலோடும் ரக்தம் கொஞ்சம் கறுத்திருக்கும்; அசுத்தமானது.

## ரக்தாசயம்

ரக்த ஸஞ்சாரத்துக்கு ஆதாரமாயிருந்து வேலைசெய்யும் யந்த்ரத்திற்கு ரக்தாசயம் அல்லது ஹ்ருதயம் என்று பெயர். அது நமது இடது முலைக்கண்ணுக்கு சற்றேறக்குறைய ஓரங்குலத்துக்குக் கீழுருக்கிறது. கைப்பிடியவ்வளவு பருமனுள்ளது. பார்வைக்கு அது தலைகீழாய்த் தொங்கவிடப்பட்ட தாமரை மொட்டுப் போலிருக்கும். அதனால் தான் அதற்கு ‘ ஹ்ருதய கமலம் ’ என்ற பெயருமுண்டு. அதன் பலமான தசைநார் அடுக்குச்சுவர்களுக்குள் நான்கு அறைகளிருக்கின்றன. மேலிருக்கும் இரண்டு அறைகளுக்கு ஆரிகிள்கள் என்றும், கீழிருக்கும் இரண்டு அறைகளுக்கு வெண்ட்றிகிள்கள் என்றும் பெயர். வலது புற ஆரிகிள் வெண்ட்றிகிள்களுக்கும் இடது புற ஆரிகிள் வெண்ட்றிகிள்களுக்கும் சிறிதும் ஸம்பந்தமில்லாமல் அழுத்தமான சுவர் நடுவில் இருக்கிறது. அந்தந்தப்புற ஆரிகிளிலிருந்து அந்தந்தப்புற வெண்ட்றிகிளுக்குமட்டும்போக மத்தியில் சிறு த்வாரமொன்றுண்டு. அந்த த்வாரத்தில் ஒரு ஜவ்வுக்கதவு போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வெண்ட்றிகிளிலிருந்தும் ஒரு ஆர்ட்டரி கிளம்பி ஹ்ருதயத்துக்கு வெளியே செல்லுகிறது. இந்த ஆர்ட்டரி கிளம்புமிடத்தில் மூன்று கிண்ணங்கள் போல் காணக்கூடிய ஜவ்வுக்கதவு ஒன்றுமிருக்கிறது.

ஜவ்வுக்கதவுகள் நம்வீட்டு கெட்டிக்கதவுகள் போல் ஒரேபுறத்தில் திறக்கக்கூடியவை. இவை மேற்கூறிய விடங்களிலேயும் சிலவேன்கள்முழுவதிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹ்ருதயத்தின் ஒருபக்கத்துமேலறையில் சிறிதுநீரை நாம் ஊற்றி அறையை அமிழ்த்தினால் நீரெல்லாம் கீழறைக்கு வந்துவிடும். இப்பொழுது கீழறையை அமிழ்த்தினால் மேலறைக்கு நீர்போகாதபடி ஜவ்வுக்கதவு த்வாரத்தை இறுக மூடிவிடுகிறது.

ஹ்ருதய அறைகளின் சுவர்களுக்கு சுருங்கி அகன்றுகொள்ளத் திறமையுண்டு. முதலில் இரண்டு ஆரிகிள்களும் ஒரேஸமயத்தில் சுருங்கும். பிறகு அவை விரியும்பொழுது இரண்டு வெண்ட்றிகிள்களும் நெருங்கும். வெண்ட்றிகிள்கள் அகலும்பொழுது ஆரிகிள்கள் கூடும். இந்த மாதிரியாக இவ்வற்புத யந்த்ரத்தின் அறைகள் ஒரு நிமிஷநேரத்தில் ஸாதாரண உடம்பில்





தடவை மாறி மாறி அகன்று கூடுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இப்பொழுது ரக்த வோட்டத்தைப் பற்றி விசாரிக்க, ப்ரதமத்தில் இடது வெண்ட்றிகிளில் ரக்தமிருப்பதாக வைத்துக்கொண்டு ஆரம்பிப்போம். நரம்புகளின் அதிகாரத்தால் இடது வெண்ட்றிகிள் சுருங்கும்பொழுது மேலேயிருக்கும் ஜவ்வுக்கதவு மூடிக்கொண்டு இடது ஆரிகிளுக்குள் ரக்தம் போகாதபடி தடுக்கிறது. உடனே, வெண்ட்றிகிளுக்கும் அதிலிருந்து கிளம்பும் அயோர்டா என்ற ஆர்ட்டரிக்கும் மத்தியிலுள்ள கிண்ணங்கள் போன்ற ஜவ்வுக்கதவுகளைத் திறந்துகொண்டு ரக்தம் அந்த ஆர்ட்டரிக்குள் பாய்கிறது. உடனே வெண்ட்றிகிள் அகலுகிறது. அப்பொழுது அயோர்டாவிலிருக்கும் உதிரம் கீழேவர முயற்சி செய்யும். அப்படி வரவொட்டாமல் முன் சொன்ன கிண்ணக் கதவுகள் வழியை அடைத்துவிடுகின்றன. மேன்மேலும் வெண்ட்றிகிளிலிருந்து ரக்தம் இறைபடவே அயோர்டாவழியாய் அது ஓடவாரம்பிக்கிறது. இந்த ஆர்ட்டரியினின்று ஒரு கிளை தோன்றி கழுத்து, முகம் முதலிய மேலிருக்கும் அவயவங்களுக்குச் செல்லுகிறது. ப்ரதான ஆர்ட்டரி, கீழிருக்கும் இரைப்பை, ஈரல், குடல் முதலான அவயவங்களுக்குள் பல்லாயிரம் கிளைகளாய்ப் பிரிந்து அவைகளின் தசைநார், நரம்பு, சர்மம், இவைகளில் பரவிவிடுகிறது. இக்குழாய்களின் சுவர்கள் மிகவும் ஸன்னமானவை. அவைவழியாய் ரக்தத்திலிருக்கும் உணவுப் பொருள்கள் ஊடுருவிச்சென்று அவயவங்களின் தசைகளினிடையே கலக்கின்றன. பிறகு தசைகளால் கழிக்கப்பட்ட பதார்த்தங்களை எடுத்துக் கொண்டு ஹ்ருதயத்தை நோக்கி ரக்தம் வேன்கம்பிக்குழாய்கள் மூலமாய்த் திரும்புகிறது. இவை வரவரப் பருத்து ஆங்காங்குள்ள அவயங்களிலிருந்துவரும் வேன்களோடு சேர்ந்து கடைசியில் இரண்டு த்வாரங்களால் உதிரத்தை ரக்தாசயத்து வலது ஆரிகிளில் கொட்டுகின்றன. அந்த ரக்தம் கறுநீல நிறமாயிருக்கும். பிறகு வலது ஆரிகிள் நெருங்கும்பொழுது அதில் கொட்டப்பட்ட ரக்தம் வலது வெண்ட்றிகிளுக்குள்பாய்கிறது. வெண்ட்றிகிள் சுருங்கும் பொழுது ரக்தம் மறுபடி ஆரிகிளுக்குள் போகாதபடி ஜவ்வுக்கதவு வழியை மூடிவிடுகிறது. உடனே ரக்தம் வெண்ட்றிகிளிலிருந்து கிளம்பும் ‘பல்மனரி ஆர்ட்டரி’ என்ற குழாய்க்குள் பீச்சப்படுகிறது. வெண்ட்றிகிள் மறுபடி அகலும்பொழுது பல்மனரி ஆர்ட்டரிக்குள்ளிருந்து ரக்தம் வெண்ட்றிகிளுக்குத் திரும்பாமல் கிண்ணங்கள் போன்ற கதவு தடுத்துக் கொள்ளுகிறது. மேன்மேலும் ரக்தம் இறைபட, அது பல்மனரி ஆர்ட்டரியில் இரண்டு முகங்களாகப் பிரிந்து ச்வாஸாசயங்களுக்குப் போய்ச் சேருகிறது. ச்வாஸப்பைகளில் ரக்தக் குழாய்கள் வெகு நுட்பமாய்ப் பிரிந்து படர்ந்து, ஸன்னமான காற்றுக்குழாய்களோடு கலந்து, அவைகளிலிருக்கும் ப்ராணவாயுவை க்ரகித்துக் கொண்டு, தாம் முன்பு அவயவங்களிலிருந்து கொண்டுவந்த கரியமல வாயுமுதலிய கழிவு பதார்த்தங்களை ச்வாஸக்குழாய்களில் தள்ளிவிடுகின்றன. இவ்விடத்தில்தான் ரக்தம் சுத்தமாகி சிவந்த நிறமாக மாறுகிறது. மாறின ரக்தத்தை கம்பிபோன்ற பல்மனரி வேன்கள் திரட்டி ரக்தாசயத்தின் இடதுஆரிகிளில் இரண்டு த்வாரங்களால் கொட்டுகின்றன. இந்த இடது ஆரிகிள்நெருங்க அதில் கொட்டப்பட்ட ரக்தம் இடதுவெண்ட்றிகிளுக்குள் பாய்கிறது. உடனே இடது வெண்ட்றிகிள் சுருங்கவாரம்பிக்க முன்போல் ரக்தம் சுற்றியோடத்தொடங்குகிறது. இப்படிச் சுற்றிவரும் முறைக்குத்தான் ரக்தச் சுழற்சி யென்றுபெயர்.

குறிப்பு:—ஆர்ட்டரியில் ஒரு காயமேற்பட்டு விட்டால் அதிலிருந்து உண்டாகும் உதிரநஷ்டம் ஜாஸ்தியாதலால், ஸாதாரணமாய் அது

பத்ரமாயிருக்கக்கூடிய விடங்களில் மாம்ஸங்களுக்கு இடையிலும், எலும்புகளுக் கிடையில் இதற்காக ஏற்பட்டிருக்கும் பள்ளங்களிலும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆர்ட்டரியில் ரக்தவோட்டத்தின் வேகமதிகமானதால், அவ்வேகத்தைத் தாங்க அதற்கு அழுத்தமானவும் நெகிழக்கூடினதுமான தசை நார்ச்சுவர் இருக்கிறது. வேனில் ரக்தவோட்டத்தின் வேக மதிகமில்லையாதலால் அதற்கு இவ்விதச் சுவர் வேண்டிய தவச்யமில்லை.

(2) ஏற்றமிறைக்கும்போது அலைகள் முன்னால் செல்வதும், தண்ணீர் நிற்காமல் ஓடிக்கொண்டே யிருப்பதும்போல், இடது வெண்ட்ரிகிள் சுருங்கும்பொழுது ரக்தாசயத்திலிருந்து அலைகளுண்டாகி ஆர்ட்டரிகளின் வழியே செல்லுகின்றன. அவை கைநுனியில் நன்றாய்த் தெரியும். அவைகளைக் கொண்டே கைபிடித்துப் பார்த்து "தாது எவ்விதம் பேசுகிற" தென்று தெரிந்துகொள்ளுகிறார்கள்.

(3) உதிரக்குழாய்கள் காற்றுக்குழாய்களோடு கலந்து அவைகளிலிருந்து ப்ராணவாயுவை க்ரஹித்துக் கொள்ளுகிறபடியால் நல்ல காற்று உட்கொண்டால்தான் ரக்தம் சுத்தமாயிருக்குமென்றும், ரக்தம் சுத்தமாயிருந்தாலல்லாது அதன் ஓட்டத்தினால் சரீரஸௌக்யம் இல்லையென்றும் நிரூபிக்கப்படுகின்றன. தேகாப்யாஸம் செய்வதனால் தேகத்திலுள்ள தசைமுதலானவைகளுக்கு ரக்த ஆர்ட்டரிகள் கொண்டுபோகும் உணவுகளை முற்றிலும் உபயோகித்துக்கொள்ளத் திறமை உண்டாகிறதென்றும் புலப்படுகிறது.

டி. எஸ். ராஜகோபாலன்.

## AIR STRENGTH OF THE POWERS.

## யுத்த அரசுகளின் ஆகாயவிமான பலம்.

### ஜெர்மனி.

எந்த ராஜ்யத்து ஆகாய விமானங்களைப் பற்றியும் திட்டமாய் கணக்குச்சொல்ல இடமில்லை. ஆகிலும், ஜெர்மனியர்களே மற்றெல்லா தேசத்தாரையும்விட, ஜாஸ்தியாய் இவைகளைச் செய்து வைத்திருக்கிறார்களெனத் தெரிகிறது. ஸெப்பலின் என்று சொல்லும் ஆகாயக்கப்பல்கள் ஜெர்மனியில் அநேகமுள.

ப்ரிட்டிஷாரைக் காட்டிலும் ஜெர்மானியருக்கு யுத்தக்கப்பல்கள் வெகு குறைவானதால், இங்லீஷ் போர்க்கப்பலின் பலத்தைக் குறைப்பதற்காக ஜெர்மானியர்கள் பலமான அனேக ஆகாய விமானங்களைக் கட்டியிருக்கிறார்களென்று சில நிபுணர்கள் எண்ணுகிறார்கள். கடல் யுத்தம் நடக்கும்பொழுது, தங்களது போர்க்கப்பல்களை உபயோகிப்பதோடு ஆகாய விமானங்களையும் விசேஷமாய் உபயோகிப்பார்களென்று தோன்றுகின்றது.

ஆகாயவிமானங்களை சீர் திருத்தி, செம்மையாக்குவதற்காக ஜெர்மனியில் வர்ஷந்தோறும் அளித்திருக்கும் மொத்தத் தொகையையும் அவைகளிலின்று விழுந்து செத்தவர்களின் தொகையையும் பார்த்தால், ஜெர்மனிக்கே வேறு நாட்டார்களைக்காட்டிலும் அதிகம் ஏரோப்ளேன்களும், டிரிஜிபில்களும் இருக்கவேண்டுமென்று சொல்லக்கூடும். இது விஷயமாய் ஆராய்ச்சிசெய்து "லண்டன்டைம்ஸ்" பத்திரிகையில் 1913-ம் வர்ஷத்தில் எழுதிய ஒருவர் ஜெர்மெனிக்கு 200-க்குக் குறையாமலும் 250க்கு மேற்படாமலும் ஆகாயவிமானங்கள் உண்டென்று எழுதினார். இது ஒரு வர்ஷத்துக்கு மேற்பட்ட ஸமாசாரம். ஜெர்மெனிக்கு 600 ஏரோப்ளேன்களுண்டு என்று சிலர் சொல்லுவார்கள். எல்லாவிதமான விமானங்களும் சேர்த்து ஸுமார் ஐந்நூற்றுக்குக் குறைவில்லாமல் இருக்கலாம். ஜெர்மானியருக்கு ஆகாயக்கப்பல்கள் (ஸெப்பலின்) 23-ம், ஏரோப்ளேன்கள் 500-ம் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.



### ப்ரான்ஸ்.

ப்ரான்ஸ் தேசத்திலும் ஏரோப்ளேன்களும் டிரிஜிபில்களும் அநேகம் இருக்கின்றன. ஏரோப்ளேன்களும் அவைகளுக்குவேண்டிய என்ஜின்களும் மோட்டார்களும் ஏராளமாய் ப்ரெஞ்சுக்காரர் செய்திருக்கிறார்கள். ஸெப்பலின் மாதிரி ஆகாயக்கப்பல்கள் கொஞ்சம் ஜெர்மனியைக் காட்டிலும் குறைவானபோதிலும், ப்ரான்ஸிலிருக்கும் ஏரோப்ளேன்கள் ஐந்நூற்றுக்குக் குறைவில்லையாம். ஜெர்மன் ஏரோப்ளேனைப் பார்க்க வேகம் சற்று கொஞ்சமானாலும், ப்ரெஞ்சு ஏரோப்ளேன்களெல்லாம் கவசமிடப்பட்டவை. ஜெர்மனியின் பெரிய ஆகாயக்கப்பல்களை சீக்ரம் எதிர்ப்பதற்காக, ப்ரத்யேகமாக ஏரோப்ளேன்களும் செய்திருக்கிறார்கள்.

### ரஷ்யா.

ரஷ்யா கவர்ன்மெண்டார் ஆகாய ஸைன்யத்திற்காக அதிகம் பணம் செலவு செய்திருக்கிறார்களாம். எல்லாம் சேர்ந்து 7-ஆகாயக் கப்பல்களும், 300 ஏரோப்ளேன்களும் யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றன.

### கிரேட் ப்ரிட்டன்.

க்ரேட் ப்ரிட்டனில் 5 ஆகாயக்கப்பல்களும் 120 ஏரோப்ளேன்களும் தயாராயிருக்கின்றன. ரிஸர்வில் 120 ஏரோப்ளேன்கள் உள. கட்டுவதற்குள்ள ஸாமன்கள் தாராளமாய் ப்ரிட்டனில் இருக்கின்றன. ஆனால், இப்பொழுது வேண்டிய மோட்டார்கள் ப்ரான்ஸிலிருந்து வருகின்றன.

### ஆஸ்ட்ரியா.

ஆஸ்ட்ரியாவில் டிரிஜிபிலில் 4-ம், ஏரோப்ளேனில் 120-ம் இருக்கின்றன.

### ஸேர்வியா.

ஸெர்வியாவில் 20 ஏரோப்ளேன்கள் இருக்கின்றன. ஆனால் ஸெர்வியாவுக்கு ரஷ்யாவின் உதவி எப்பொழுதும் அகப்படும்.

## ANANDA CHELVI.

BY V. P. KRISHNASWAMI.

## ஆனந்தச் செல்வி.

வெங்குவய்யர் வீட்டில் ஒருநாள் மத்யானம் ஒரு பெரிய ஸபை கூடிற்று. அவ்வூர் அக்ரகாரத்தில் உள்ள முக்ய பெண்மணிகள் யாவரும் அங்கே கூடியிருந்தார்கள். கனகம் கூப்பிட்டால் யார் வரமாட்டேனென்று சொல்லுவார்கள்? சாச்சி, எச்சி, பாப்பச்சி, அவையாம்பாள், கங்கை, சுப்பு, காவேரி, (நம் பெண்மணிகளின் நாமதேயங்களின் அழகைத்தான் சொல்லுவானேன்!) முத்து, அலமேலி, சேஷி முதலிய சிரோமணிகளெல்லாம் கனகத்தினுடைய வீட்டில் கூடி ஒரே இரைச்சலாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சாச்சி,

"ஆமாண்டி, தொணதொணவென்று என்ன பேச்சுங்கடி, கும்பல்கூடிப் பேசிப்பேசிக் கெடுங்கள். எங்கே, கனகம், மணைப்பலகைகளையெல்லாம் எடுத்துப்போடேன்." என்றாள்.

கனகவல்லியின் ஒரே பெண் ஜானகிக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. முகூர்த்தம் வைகாசி மீ 2-ந்தேதிக்கு வைத்திருந்தார் வாத்யார். ஏனென்றால் ஜானகிக்கு வயஸாய்விட்டது. அதுவுமல்லாமல் அந்த வர்ஷம் அநேக முகூர்த்தங்களிருந்ததால் உபாத்தியாயர் தன் வரும்படியைவிட மனமில்லாமல் இந்த நக்ஷத்ரங்களுக்கு இந்த முகூர்த்தந்தானென்று சொல்லிவிட்டார். ஆனால் இன்னும் மாப்பிள்ளை நிச்சயமாகவில்லை. ஒருபிள்ளை உயரம், ஒருபிள்ளை குட்டையென்று வெங்குவய்யர் முப்பத்திரண்டு லக்ஷணங்களையுங்குறித்து ஒரு கணவனைத் தேடிக்கொண்டிருந்தார். அவர் ஊரைவிட்டுப்போய் இருபது நாளாயின. இன்னும் கடிதம் ஒன்றும் வரவில்லை. கனகவல்லியோ கல்யாணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும்செய்து, ஊரிலுள்ள ஸ்திரீகளைக் கூப்பிட்டு அப்பளாம் இடச் செய்தாள்.

அந்த ஊர் பெண்களுக்கெல்லாம் சாச்சியே வெகு கீர்த்திவாய்ந்தவள். அவளுடைய குணங்கள் ஒவ்வொன்றும் அதிசயிக்கத் தக்கது. அந்த ஊரில் எந்தக் கல்யாணம், ருது ஸ்நானம், சஷ்டியப்த பூர்த்தி, சவண்டி நடந்தாலும், எதற்கும் சாச்சி அம்மாளுக்குத்தான் முதல் தாம்பூலம் வைக்கவேண்டியது. சாச்சிதான் அந்த ஊருக்கு ஜாம்பவான். அவளைக் கேட்காமல் ஒரு காரியமும் ஒருவரும் செய்யமாட்டார்கள். ஏனென்றால் சாச்சிக்கு எட்டு பாஷை தெரியும். அவள் தகப்பனார் 'ஸ்டேஷன் மாஸ்டராய்' இருந்ததால் அவள் சென்னை ராஜதானியில் ஒவ்வொரு மூலையிலுமிருந்ததில் தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம், ஊரியா, இந்துஸ்தானி, மகாராஷ்ட்ரம், இங்க்லீஷ் முதலிய பாஷைகளெல்லாம் தனக்குத் தெரியுமென்று சொல்லுவாள். ஆனால், அவள் ஒரு பாஷையுடன் ஒரு பாஷை கலந்து தற்காலத்திய மணிப்ரவாளம் என்று சொல்லும்படி, ஸாகு, பேகு, பைடோ, பாய்க்காட் என்று பற்பலவிதமாகப் பதங்களைச் சேர்த்து ப்ரயோகிப்பாள். அப்பொழுது சுற்றுப் புறத்திலிருக்கும் பெண்களெல்லாம் அச்சமுற்று இப்படிப்பட்ட ஸரஸ்வதியை ஒன்றும் சொல்லப்படாதென்று போய்விடுவார்கள். சாச்சி தற்காலத்திய நாகரிக எண்ணங்கள் கொண்டவள். இவள் வெகு நாளைக்கு முன் ஏதோ துர்ப்பாக்ய வசத்தால் மாங்கல்யத்தை இழந்தாள். தன் ஸ்வபாவ சாதுர்யத்தினாலும், தன் தகப்பனாருடன் தென்னிந்தியா முழுவதும் ப்ரயாணம் செய்திருந்த அனுபவத்தினாலும் மற்றவர்களுடைய பயபக்தியை அடைந்திருந்தாள். பத்துவர்ஷத்துக்கு முன் இவளுக்குப் பல்வலி வந்ததால், சென்னையில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள ஒரு துரை இவள் பல் முப்பத்திரண்டையும் பிடுங்கிவிட்டானாம். அது முதல் சாச்சிக்கு ஒரு கைபலம் குறைந்தது போலிருந்தது. மற்றவர்களுடன் பந்தயம் போட்டு சீடை, முறுக்கு, 'பொரி விளங்காய்', தேன்குழல் முதலான பக்ஷணங்கள் சாப்பிடமுடியாதே என்று தான் இவளுக்கு விசனமதிகம். அதுவுமல்லாமலும் பல்வரிசை இல்லாமல் இந்துஸ்தானி நன்றாகப் பேச முடியவில்லை. 'பைடோ' என்பதற்கு 'பைதோ' என்று தான் பேசமுடியும். ஆனால் அவள் கல்விக்காக அவ்வூர் பெண்ணரசிகள் இக்குற்றத்தை மன்னித்துவிட்டார்கள். பல் போன கொஞ்ச நாளைக்கெல்லாம் சாச்சி தன் கூந்தலைக் களைந்து விபூதியணிந்து ஒரு ஸ்படிகமாலையுடன் சிவமயமாகத் தோன்றினாள். என்ன விருந்தபோதிலும் அவள் கௌரவம் கொஞ்சமேனும் குறையவில்லை. இப்பொழுதும் அவள் சீடை, முறுக்கு பக்ஷணங்களை அம்மியில் வைத்து அரைத்துத் தூளாக்கித் தின்பாள். ஒரு பித்தளைக்குழாய் வாங்கி வெற்றிலைப்பாக்கை "அதில் போட்டுக் கிடித்து, ஒருவருக்கும் தெரியாமல் ராத்ரி படுத்துக்கொள்ளும்பொழுது போட்டுக்கொண்டு நித்திரைசெய்வது வழக்கமாம். கடைசியில் பார்க்கப் போனால் சாச்சியும் ஒரு மனுஷிதானே! அவளைப்பற்றி குறை கூறுவது ந்யாயமாகுமா? அவளுக்கு உலகத்தில் எல்லா விஷயங்களைக் காட்டிலும் இரண்டின்மேல் தான் அத்யந்த ப்ராணன். முதலாவது வெங்காயக்குழம்பு. இரண்டாவது ஊர்வம்பு.

இப்பொழுது கனகவல்லி பலைகளைக்கொண்டு வந்து போட்டதும் எல்லா ஸ்த்ரீகளும் உட்கார்ந்து அப்பளாம் இட ஆரம்பித்தார்கள்.

"எங்கேடி, நீ வட்டம் இட்டுப்போடு,போதும். அப்பளாம் இடத்தெரிஞ்சூட்டதாக்கும்" என்றாள் சாச்சி.

சேஷிக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிட்டது. ஆனாலும் படித்தவளாகிய சாச்சியினுடன் வாக்கு வாதம் செய்யப்பயந்து,

"ஆமாம் எனக்குத் தெரியு மான்னா! எம் பல்லை யார் பிடுங்கிவிட்டிருக்கா. எனக்கு எட்டு பாஷை தெரியுமா என்ன?" என்றாள்.



சாச்சிக்கு இதைக்கேட்க மனம் பொறுக்கவில்லை, "ஆமாண்டி, எனக்கு பல்லை பிடுங்கினா; உன் நாக்கை அறுத்து விடுவா, நீ எங்கேயாவது பட்டணத்துக்குப்போனேயானா. தெரியாதா, நேத்திப்பேபரிலே வந்திருக்கே கேஸூ?" என்றாள்.

இதற்குள் அலமேலு கேஸூ என்னவென்று கேட்க, சாச்சி எப்படி ஒருவன் சென்னைக்குச் சென்று டாக்டர் என்று சொல்லிக்கொண்ட ஒரு அம்பட்டனிடம் போய் காதை அறுத்துக்கொண்டு வந்தானென்று விஸ்தாரமாய் சொல் சுவை பொருள் சுவையுடன் சொன்னாள்.

இதற்குமேல் சேஷி என்ன செய்யக்கூடும்? பாழாய்ப் போன தன் தகப்பனார் தனக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கவில்லையே யென்று விதியை நொந்துகொண்டு வட்டமிட்டுப் போட்டாள்.

இம்மாதிரி சாச்சியம்மாள் அக்ராஸனாதிபத்யம் வகிக்க கனகவல்லியின் யானையடி அப்பளாங்கள் ஒன்றின் மேலொன்றாய் வளர்ந்துக் கொண்டுவந்தன. மணி மூன்றடித்ததும் கனகவல்லி ஒரு பெரிய தாம்பாளத்தில் தேங்குழல், முறுக்கு முதலிய பக்ஷணங்களைக் கொண்டுவந்து, அப்பளாம் இட்டுக் களைத்தவர்கள் ஆயாஸம் தீர சாப்பிடட்டுமென்று சொன்னாள். உடனே எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். சாச்சிக்கோ ஒன்றும் செய்யமுடியவில்லை. அப்பொழுது சேஷி இதுதான் ஸமயமென்று,

"அம்மாமி, எங்கே, சாச்சிப் பாட்டிக்குக் கொஞ்சம் ஸத்துமா கொண்டுவந்து கொடுக்கிறது தானே." என்றாள்.

"ஆமாம், அம்மாமி கொஞ்சம் மோரை விட்டுக் கரைத்துக்கொடுங்கள். ஆனால் தொட்டுக்கறத்துக்கு என்ன இருக்கு" என்றாள் காவேரி. காவேரி விஷமத்தில் அதிக ப்ரியமுள்ளவள். ஒன்றுந் தெரியாதவள் போலிருந்து ஏழூருக்குக் கொள்ளிவைத்து விடுவாள். சாச்சி வெங்காயம் சாப்பிடுவது எல்லாருக்குந் தெரிந்த ரகஸ்யம். இதைக் குறித்தே காவேரி ஸத்துமாவுடன் உடகாரணம் வேண்டுமென்று சொன்னது.

"ஏன், ஏதாவது மிளகாய், இஞ்சி, ஏன் வெங்காயம் ஏதாவது தொட்டுக்கலாமே. இந்த நாளில் அதெல்லாம் தோஷமில்லை யாமே." என்று கண்சிமிட்டினாள் அவையாம்பாள். தன்னைப் பகிரங்கமாகப் பரிகாஸஞ் செய்த இக்குட்டிகளைக் கண்ட சாச்சிக்குக் கோபம் பொங்கி,

"ஆமாண்டி, பொங்களா, ஆமாண்டி. குண்டு சுரைக்காயும் கூறிட்ட மாங்காயும் கூடிக்குலாவித்தாம் தோழிப் பெண்கள்! நீங்கள் ஆயிரம் பேர் சொன்னால்தான் என்ன ப்ரயோஜனம்: உங்களுக்கென்ன சாஸ்த்ரம் தெரியுமா, ஸம்ப்ரதாயம் தெரியுமா. நேத்தி பிறந்த குட்டிகள், இவ்வளவு வாயென்ன உங்களுக்கு? 'பராஸபர'ஸ்மிருதியில் 'வெங்காயம் வ்யாதி நாசம்' என்று சொல்லியிருக்கிறது உங்களுக்கு என்ன தெரியும். கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமென்ன தெரியும்? நாலு மூணு என்னவென்றால் ஆந்தைபோல் முழிக்கிறேள். சீ! கிடவுங்கோ பேசாதே!!" என்று ஸரமாரியாய்ப் பொழிந்த காளமேகமாய் நின்றாள்.

ஒவ்வொரு ஸமயத்திலும் இவள் சாஸ்த்ர ஞானமும், உலக அனுபவமுந்தான் இவளுக்கு ஜயத்தைக் கொடுக்கின்றனவென்று எல்லாப் பெண்களும் மனம் வெட்கிப்பேசாமலிருந்தார்கள். இப்பொழுது ஜானகி,

"அம்மா, அம்மா, இதோ அப்பா கடுதாசி போட்டிருக்கா. நாளைக்கார்த்தாலே இங்கே வாராளாம். எல்லாம் நிச்சயமாய் விட்டதாம்,' என்று ஆவலாய்த் தன் தாயைப்பார்த்துச் சொன்னாள்.

"உன் கல்யாணத்துக்கு எனக்கு ஒரு நல்ல நார்படிவாங்கித் தரணம். இல்லாப்போனால் உன்னை பொக்கையில் வைத்துவிடுவேன்; பத்ரம் குட்டி." என்று சாச்சி சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய்விட்டாள். அக்ராஸனாதிபதி சென்றதும் ஸபையும் முடிவு பெற்றது.

மறுநாள் ஸாயங்காலம் ஜானகி மாடிமீது நின்று மலைவாயில்விழும் ஸூர்யனைப் பார்த்துக்கொண்டு சிந்தையில் ஆழ்ந்திருந்தாள். பளிங்குபோன்ற அவள் முகத்தில் மஞ்சள்வெயில் அடித்துப் பளபளவென்று மின்னியது. அவள் தகப்பனார் அன்று காலையிலேயே ஊருக்கு வந்துவிட்டார். வக்கீல் பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்த கோமதிநாதனை அவர் தன் பெண்ணுக்கு நிச்சயம் செய்துகொண்டுவந்தார். அவன் எப்படியிருப்பான், சிவப்போ, கறுப்போ, அன்பு நிறைந்த காளையோ, கசடனோ என்று ஜானகி மனோராஜ்யம் செய்து அருகே பூஞ்செடியிலிருந்த ஒரு ரோஜாபுஷ்பத்தை எடுத்துக் கண்ணில் ஒத்தி மெய்மறந்திருந்தாள். அப்பொழுது இருபது வயதானவனும், எலுமிச்சம் பழம்போன்ற தேககாந்தியுடையவனுமான ஒரு ஸுந்தரன் நேராக வீட்டிற்குள் நுழைந்து மாடிமீது வந்து ஜானகியைப்பார்த்து,

"ஏனம்மா, உங்களப்பா எங்கே போயிருக்கிறார்? அவஸரமாய் ஒரு விஷயம் அவரோடு பேசவேண்டும்." என்றான்.

ஸகஜமாய் ஜானகி எல்லாப் பெண்களையும் போலவே ஒரு புருஷருடனும் பேசுவதில்லை. இவன் கேட்டதும் வெட்கத்தால் உத்தரமளிக்க முடியாமல் கீழே குனிந்து நின்றாள்.

"அம்மா, நான் உங்கள் ஸம்பந்தி ஊரிலிருந்து வருகிறேன். மாப்பிள்ளைக்கு உயிர்த்தோழன் நான். ஒரு விஷயமாய் நான் அகத்தியம் உன் தகப்பனாரைப் பார்த்துவிட்டு ராத்ரி எட்டுமணி ரயிலுக்கு ஊருக்குப் போகவேண்டும். கொஞ்சம் சீக்ரம் சொல்" என்றான்.

தன் மணாளனைக்குறித்து வந்திருக்கிறானென்று கேட்டதும், ஜானகி முன்விட அதிகமாக மனக்குழப்பமுற்று,

"அப்பா வயலுக்குப் போயிருக்கிறார். இதோ சட்டுனு வந்துவிடுவார். நீங்கள் உட்காருங்கள். இதோ அம்மாவினிடம்போய்ச்சொல்லுகிறேன்." என்று ஜானகி கீழேபோனாள்.

அன்றிரவு மாப்பிள்ளை கோமதிநாதனுடைய நண்பனுக்கு நல்ல விருந்து நடந்தது. ஸ்நேகிதனுக்காக தான் பெண்ணைப் பார்த்து விட்டுப்போக வந்ததாகச் சொன்னான். போஜன முடிந்ததும் ஜானகி கூடத்தில் உட்கார்ந்து வீணையையெடுத்து நாதம் மீட்டி மனமுருக நாலைந்து ராகங்கள் வாசித்தாள். புதிதாய் வந்தவன் மகா ஸந்தோஷமடைந்து மாப்பிள்ளையின் தோழனைப்போலில்லாமல் மாப்பிள்ளையைப் போலவே ஜானகியை எறிட்டுப்பார்த்து விழித்தான். மறுநாட்காலை இவன் ஊருக்குச் செல்லும்பொழுது,

"பாபா, நான் சொன்னால் கோமதி கட்டாயமாய்க் கேட்பான். எனக்குத் தோன்றின வரையில் ஜானகியைப் போல மனைவி அவனுக்கு அகப்படமாட்டாள்" என்று சொல்லிவிடைபெற்றுப் புறப்பட்டான்.

முகூர்த்தமும் ஸமீபித்தது. சாச்சி பக்ஷணம் முதலிய சீர், ஸம்பந்தி வரிசைகளுக்கு முக்ய கார்யதர்சியாக நியமிக்கப்பட்டாள். அவள் பக்ஷணங்களை அதிகமாகத் தின்ன முடியாதென்றே அந்த வேலையை அவளுக்குக் கொடுத்தாள் கனகமென்று, வருத்தமுற்ற சேஷிசொல்லிக்கொண்டிருந்தாள். ஊர்வாயை மூட யாரால் முடியும்?

ஸம்பந்திகள் திங்கட்கிழமை காலை எட்டுமணி ரயிலுக்கு வந்திறங்கினார்கள். ஜானகி ஆவலுடன் கூடத்தறை பலகணியின் வழியாய் யார் தன் நாதன் என்று பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அன்றையதினம் வந்த சிநேகிதனே இருந்தானே ஒழிய அவன் அருகாமையால் மாப்பிள்ளை ஒரு வரையுங் காணோம்.

அன்றிரவு நிச்சயதார்த்தம் செய்வதற்காக மேளதாளத்துடன் (அடடா மோட்டூர் மாணிக்கம் என்ன ஆனந்தமாய் காம்போதி ராகத்தை எடுத்து வாசித்தான்!) வெங்குவய்யர் ஸகல



ஜனங்களுடனும் ஸம்பந்தி வீட்டுக்குப் போய்ப் பிள்ளையை அழைத்து வரச்சொன்னார்.

மாப்பிள்ளை இரட்டைக் குதிரை 'ஸாரட்டில்' வாணவேடிக்கைகளின் நடுவில் உல்லாஸமாக மகாவிஷ்ணுபோல் ஊர்வலம் வந்து வெங்குவய்யர் வீட்டிற்குள் அழைத்துக் கொண்டு போகப்பட்டான். அப்பொழுது சாஸ்த்ரிகள்,

"அடி, அம்மா, அங்கே யார்? என்ன பெண்ணை வரச்சொல். லக்னம் தப்பிப்போகிறது. (உபாத்யாயருக்கு இன்னொரு காரணமுமிருந்தது. அடுத்த தெருவில் தலை தவசம் ஒருவர் வீட்டில். ஒரு ஜோடு வேஷ்டியையும் தக்ஷிணையையும் மறக்க மனமில்லாமல் விடியற் காலையிலேயே பிதுர்க்களைப் பட்டினி போடாமல் அவிர்ப்பாகம் கொடுத்துவிடுவதாக உத்தேசித்திருந்தார்.) "ஜானகி, ஜானகி." என்று கூப்பிட்டார்.

ஸ்வர்ண விக்ரகம்போல் முகத்தில் நகைதளும்ப ஆனந்தச்செல்வியாய், ஜானகி ஆபரணங்கள் துலங்க கூடத்தில் வந்து மாப்பிள்ளையைப் பார்த்தாள். உடனே இவள் முகம்மாறிற்று. ஸ்நேகிதன் என்று சொல்லிவந்து பார்த்தவனே தன்நாதனென்று இவள் நினைத்து உள்ளம் பூரித்த போதிலும் மனக்குழப்பத்தினால் தலைகுனிந்து நின்றாள். காதற் கள்வன் கோமதிநாதன் அவள் குழப்பத்தைப்பார்த்து அத்யந்த ஸந்தோஷங் கொண்டவனாகக் காணப்பட்டான். மறுநாள் ஸாயங்காலம்.

"இப்படித்தான் என்னை ஏமாற்றுகிறதா?" என்றாள் ஜானகி,

"ஆமாம் அப்படி செய்ததனால்தானே உனக்கு என்மேலே இப்பவே ஆசையாயிருக்கு" என்றான் கோமதிநாதன்.

## ORIGIN OF THE MADRAS SEPOY.

## மதராஸ் சிப்பாயின் வரலாறு.

ஸுமார் 250 வர்ஷங்களுக்கு முன்னால் தென்னிந்தியாவில் ப்ரெஞ்சுக்காரர்களும் இங்கிலீஷ்காரர்களும் சோழமண்டலக்கரையிலும் மலையாளக்கரையிலும் தங்கியிருந்து வ்யாபாரம் செய்து வந்தார்கள். இவர்கள் ஒருவருக்கொருவர் ஸமீபமான ஊர்களில் தங்கியிருந்தார்கள். வ்யாபார ஸம்பந்தமான போட்டிகளினால் இந்த இரண்டு தேசத்தாருக்கும் அடிக்கடி மனஸ்தாபங்கள் நேர்ந்தன. வ்யாபார ஸாமான்களில் அப்போது முக்யமானது மிளகு. அது சீனா, பாரஸீகம், ஐரோப்பா இவ்விடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அந்தக்காலத்தில் மலையாளக்கரையையொட்டிய ப்ரதேசங்கள் ஸ்வதேச சிற்றரசர்களால் ஆளப்பட்டுவந்தன. இங்கிலீஷ் கம்பெனியாரும், ப்ரெஞ்சு கம்பெனியாரும் இந்த சிற்றரசர்களது தேசங்களில் மிளகு வாங்குவதற்குரிய ஸ்வதந்த்ரங்களை தங்களுக்கென்று ப்ரத்யேகமாக அடைய முயற்சிசெய்தார்கள். இருதேசத்தாரும் தங்கள் வ்யாபாரத்தை வ்ருத்திசெய்து, மற்றவருடைய வ்யாபாரத்தைக் கெடுக்க முயற்சிசெய்து இதற்கு வேண்டிய க்ருத்ரிமங்களும் செய்து வந்தார்கள். இது சில ஸமயங்களில் ப்ரெஞ்சுக்காரருக்கும் இங்கிலீஷ்காரருக்கும் ரொம்ப மனஸ்தாபத்தை உண்டாக்கினதேயல்லாமல், இருவருக்கும் சண்டையை உண்டாக்கிவிடும்போலவுமிருந்தது. இதோடுகூட அநேக ஸமயங்களில் மலையாளத்துச் சிற்றரசர்கள் ஒன்றுகூடி தலைச்சேரி, மாஹி, ஆகிய இந்த இரண்டு சிறு கோட்டைகளையும் தாக்குவதாய் பயமுறுத்த ஆரம்பித்தார்கள். ஐரோப்பாவிலிருந்து காபந்துக்காக சிப்பாய்களைக் கொண்டுவரும்படியாக அந்த இடங்களின் வ்யாபாரம் அவ்வளவு பலப்படவில்லை. ஆயினும் வ்யாபாரக் கோட்டைகளைக் காக்கவேண்டியது அவச்யமாயிருந்ததால் கம்பெனியார்கள் அந்தந்த இடங்களிலேயே ஆள்களைச்சேர்த்து சிப்பாய்களாகப் பழக்க ஆரம்பித்தார்கள்.

இந்தத் துருப்புகளையும், இவைகளின் அமைப்பையும்பற்றிப்பேசுவோம். பேர்போன சிலவீரர்கள் இந்தப்படைகளை சேர்த்துவந்தார்கள். இவர்

களில் முக்யமானவர்கள் அப்துல் ரஹ்மான், இஸ்மேல் கான் என்பவர்கள். இஸ்மேல்கான் அக்காலத்தில் 'ஆசியாமுழுவதும்' க்யாதிபெற்றிருந்தானும். அவனை இங்க்லிஷ்காரர்கள் தங்களிடம் சேர்த்துக்கொள்ள முயன்றும், அவன் இணங்காமல் போர்த்துகேசியரிடம் வேலைக்குப் போய்ச் சேர்ந்து கொண்டான். தற்காலம் மதராஸ், பம்பாய் ராஜதானிகளின் பிரிவுகளாயுள்ள தென்கன்னடம் வடகன்னடம் ஜில்லாக்களிலிருந்துதான் ஆதியில் இந்த சிப்பாய்கள் சேர்க்கப்பட்டார்கள். ஸொந்த ஆயுதங்கள் வைத்திருக்கும் ஆட்களாகச் சேர்ப்பது முதலில் பெரிய கஷ்டமாகவிருந்தது. சிப்பாய் சேர்க்கும் ஏஜண்டுகளுக்குக் கொடுத்த உத்தரவுகளில், துப்பாக்கியாவது வாளாவது ஸொந்தத்தில் இல்லாதவர்கள் உபயோகமில்லையென்று குறிப்பிட்டிருந்தது.

இவர்களைப்பற்றி முதல்முதலாக புதுச்சேரி சாஸனங்களில்தான் ப்ரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கிறது. 1741-ம் வர்ஷத்தில் நாயர்கள் தாக்கிவந்த மாஹிகோட்டையை விடுவிப்பதற்காக லாபோர்டனே என்னும் ப்ரெஞ்சு கவர்னர் அந்த ஊருக்குப்போனபோது அங்கே ப்ரஞ்சுக்காருடைய ஸைன்யத்தில் சிப்பாய்கள் இருந்ததைக் கண்டாராம். அடுத்த வருஷத்தில் மூன்று சிப்பாய்ப் பட்டாளங்கள் மேற்கேயிருந்து சோழமண்டலக்கரைக்குக் கொண்டுவரப்பட்டன. இந்தப்பட்டாளங்கள் அப்தல்ரஹ்மான், ஹாஸன் ஸாஹிப், பிக்கன்கான் இவர்களது தலைமைக்குள்ளிருந்தன. இவர்களுள், அப்தல்ரஹ்மான் என்பவன்தான் ஆம்பூர் யுத்தத்தில் ஆன்வாருடின்கானைக் கொன்றதாக நம்பப்படுகிறது. இதுதான் சோழமண்டலக் கரையில் சிப்பாயின் ஆரம்பம்.

ப்ரெஞ்சுக்காரர்களிடமிருந்த சிப்பாய் பட்டாளங்களின் அமைப்பைப்பற்றியும் பயிற்சியைப் பற்றியும் வ்யக்தமாக ஒன்றும் தெரியவில்லை. அநேக ஆசிரியர்கள் ட்யூப்ளே என்னும் ப்ரெஞ்சு கவர்னர் (1742-1754) இந்த சிப்பாய்களை ஐரோப்பியமுறைகளில் பழக்கினரென்று அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் ட்யூப்ளே காலத்து சிப்பாய்களின் வரலாற்றில் அநேக பொய்கள் கலந்திருக்கின்றனவென்று தெரிகிறது. அவைகளை அப்படியே நம்புவது சரியல்ல. 1742-ம் வர்ஷத்திலேயே சிப்பாய்கள் இந்தப் பக்கங்களிலிருந்திருந்தும், ட்யூப்ளே தாம் ஐரோப்பாவிற்குப் போனபிறகு இதைப்பற்றி எழுதுகையில், 1746-ம் வர்ஷத்துக்கு முன்னாக சோழமண்டலக்கரையில் சிப்பாய்களென்பதே தெரியாதென்று எழுதியிருக்கிறார். புதுச்சேரியில் 1740-ம் வர்ஷத்தில் 1500 சிப்பாய்கள் இருந்ததாக பிஷப் வீபர் என்பவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் 300 பேர்தான் இருந்ததாகத் தெரிகிறது. கர்னல் மாலிஸன் என்னும் சரித்ர ஆசிரியரோ 5000 சிப்பாய்களிருந்ததாகத் தெரிவித்திருக்கிறார். ட்யூப்ளேயின் காலத்துக்கு 40 வர்ஷத்துக்கு முன்பு புதுச்சேரி கவர்னராயிருந்த ப்ரான்கோ மார்டின் என்பவர் ஐரோப்பிய முறையில் சிப்பாய்களைப் பயிற்சி செய்வித்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

ஸெண்ட் டேவிட் கோட்டையிலிருந்த இங்க்லீஷ்காரர்கள் அநேக வர்ஷங்கள் வரையில் ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் மலையாள தேசத்திலிருந்தே சிப்பாய்கள் தருவித்து வந்தார்கள். மேலும், சிப்பாய்கள் சேகரித்தவர்களையே பட்டாளங்களுக்குத் தலைவர்களாகவும் நியமித்துவந்தார்கள். ஆனால் இந்த ஏற்பாட்டில் ஸங்கடம் ஏற்படலாயிற்று. 1742-ம் வருஷத்தில் ப்ரெஞ்சுக்காரர்களின் பட்டாள மொன்றுக்கு பிக்கன்கான் என்பவன் தலைவனாக இருந்தான். அடுத்த வர்ஷம் அவனையும் அவனது பட்டாளத்தையும் ப்ரெஞ்சுக்காரர் வேலைக்கு வேண்டாமென்று அனுப்பிவிட்டார்கள். சிறிதுகாலத்திற்கெல்லாம் அவன் இங்க்லீஷ்காரர்கள் கீழ் சிப்பாய் தலைவனாக அமர்ந்தான். அவன் முன்னமேயே ப்ரெஞ்



சுக்காரரிடமிருந்தவனாகையாலும், அவனுடன் இருந்தவர்களில் சிலர் அப்பொழுதும் ப்ரெஞ்சுக்காரர் ஸைன்யத்திலிருந்தமையாலும் இங்க்லீஷ்காரரை விட்டு மறுபடியும் ப்ரெஞ்சுக்காரரிடம் போவதற்கான ஏற்பாடுகளை செய்ய ஆரம்பித்தான். இது தெரிந்த இங்க்லீஷ்காரர்கள் அவனையும் இதிற் சேர்ந்த சில சிப்பாய்களையும் பிடித்து ஸெண்ட் ஹெலினா என்னும் தீவுக்கு அனுப்பிவிட்டார்கள். என்றாலும், 1756-ம் வர்ஷத்தில் அவன் அங்கிருந்து தப்பி ஓடிவந்து மலையாள பாகத்தில் ப்ரெஞ்சுக்காரர்களுக்கு சிப்பாய்கள் சேர்த்துக்கொடுத்து மாஹியில் சிப்பாய்களின் தலைவனாக இருந்து வந்தான். பிறகு ஒரு ஸமயம் அஜாக்ரதையாக இங்க்லீஷ்காரரது நாட்டின் வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது இங்க்லீஷ்காரரால் கைது செய்யப்பட்டான். ஆனால் மதராஸ் கௌன்ஸிலில் அவனை விட்டுவிடும்படி தீர்மானிக்கப்பட்டது. இதேமாதிரியாக அநேக சிப்பாய்த் தலைவர்கள் அதிக சம்பளத்துக் காசைப்பட்டு இங்க்லீஷ்காரர்களையேயன்றி ப்ரெஞ்சுக்காரர்களையும் மோசஞ் செய்ததாகவும், செய்ய யத்தனித்ததாகவும் தெரிகிறது.

இந்த மாதிரியான அஸௌகர்யங்களை உத்தேசித்தே, கவுண்ட் டி லாலி என்னும் ப்ரெஞ்ச் தளகர்த்தர் சென்னையை 1758-59-ல் முற்றுகை போட்டது முதல் இங்க்லீஷ்காரர்கள் தாங்களே ஸொந்தத்தில் சிப்பாய்கள் சேர்த்து, ஐரோப்பிய முறையில் பழக்க ஆரம்பித்தார்கள். இது முதல் கொண்டு தென்னிந்தியாவில் க்ரமமான சிப்பாய் பட்டாளங்கள் ஏற்படலாயினவென்று சொல்லலாம்.

## IMPROVEMENT OF INDUSTRIES.

BY P. SRINIVASACHARI.

## கைத்தொழில்களின் அபிவ்ருத்தி.

தென் இந்தியாவில் கைத்தொழில்களின் நிலைமையானது ரொம்ப கேவலமாயும் பரிதபிக்கத்தக்கதாயுமிருக்கிறது. நமது தொழிலாளிகள் அந்தந்த ஜாதிகளுக்குரியன என்று எண்ணப்படுகிற கைத்தொழில்களைப் பரம்பரையாகச் செய்து வருகிறார்கள். நமது கொல்லரும், தட்டாரும், தச்சரும், செம்மான்களும், நெசவுகாரரும், சாயக்காரரும், தையற்காரரும் மற்றுமுள்ள சில்லரைத் தொழிலாளிகளும் தங்கள் முப்பாட்டர்கள் காலத்திலிருந்த தொழில் திறமையையே இப்போது தாங்களும் உடையவர்களாயிருக்கிறார்கள். பல தலைமுறைகளுக்கு முன்பு தங்கள் முன்னோர்கள் உபயோகித்துவந்த ஆயுதங்களைக் கொண்டே இன்னும் தொழில் செய்துவருகிறார்கள். நவீன நாகரீகம் நம்முடைய க்ராமவாஸிகளான தொழிலாளிகளையும், அநேகமாக நம்முடைய நகரவாஸிகளான தொழிலாளிகளையுங் கூட இன்னும் பாதிக்கவில்லை என்று சொல்லலாம். நவீன யந்த்ரங்களையும் நல்ல ஆயுதங்களையும் உபயோகித்துக்கொண்டு நமது தொழிலாளிகள் கைத்தொழில்களை வ்ருத்திசெய்யாததற்கு என்னகாரணம்?

**கைத்தொழில்கள் முன்னுக்கு வராததற்குக் காரணங்கள்.**—நம்முடைய தொழிலாளிகளில் பெரும்பாலோர் பரம ஏழைகள்; 'அன்றாடங்காய்ச்சியுண்பவர்க்ள்' என்று சொல்லலாம். அதனால் முதல்சேர்த்து, புதுமாதிரியான யந்த்ரங்களையும் ஆயுதங்களையும் வாங்கி, பெரியதாகத் தொழில்செய்து, அன்ய சரக்குகளோடு போட்டி போட அசக்தர்களாக இருக்கிறார்கள். மேலும் நவீன நாகரீகம் முதிர்ந்த நம்மவர்களில் பலர், வெளிப்பகட்டையும் மினுக்கையும் விசேஷமாகப் பாராட்டிவருகிறார்கள். ஆதலால், அவ்வளவு பகட்டில்லாமல் ஆனால் ரொம்ப உபயோகமாயும் நீடித்தும் இருக்கக்கூடிய நாட்டுச் சரக்குகளை மதிப்பதில்லை, ஸோப்புக்களாலும் ஈகோ ஸெண்டுகளாலும் தங்களைச் சீர்திருத்தி மினுக்கிக்கொள்ளத் தெரியாத நாட்டுப்புறத்தாரை நாம் அவமதிப்பதுபோலவே, நாட்டுப்புறத்துக் கைத்தொ

ழில்களையும் நாம் வெறுப்பதால், ஸ்வதேசக் கைத்தொழில்கள் ஆதரிப்பில்லாமல் மாண்டு போகின்றன.

**நம்முடைய தொழிலாளிகளின் புத்திசாலித்தனம்.**—நம்முடைய தொழிலாளிகள் புத்திசாலித்தனத்தில் அன்யநாட்டுத் தொழிலாளிகளுக்குச் சிறிதும் இளைத்தவர்களல்ல. டாக்டர் போஸ் என்னும் பேர்பெற்ற பௌதிக சாஸ்த்ரியானவர் தாம் ஆராய்ச்சிசெய்து அநேக அபூர்வமான விஷயங்களை கண்டுபிடிப்பதற்கு உதவியாயிருந்த சில அருமையான யந்த்ரங்களை யெல்லாம் தம்முடைய மேற்பார்வையின் கீழ் வேலைசெய்த சில ஸ்வதேசத் தொழிலாளிகளைக் கொண்டே செய்துகொண்டதாய்க் கேள்விப்பட்டு ஆனந்தம் அடைகிறோம். இன்னும் மதுரை ஜில்லாவில் திண்டுக்கல் முதலான இடங்களில் செய்யும் 'லீவர்' பூட்டுகளும், இரும்புப் பெட்டிகளும் வேறுசில இரும்பு ஸாமான்களும் மிகநேர்த்தியாகவும் புத்திசாலித்தனமாகவும் செய்யப்படுகின்றன. தென் ஜில்லாக்களில் தட்டார்கள் நல்ல தொழிலாளிகள் தான். ஆனால் அவர்களுக்கு வாக்குறுதி என்பதே இல்லை. நகை செய்யக்கொடுத்தவர்களை ரொம்ப அலைக்கழித்து விடுகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில், நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் இவர்களுடைய பொய்யும் பித்தலாட்டமும் வரவர ஜாஸ்தியாகின்றன. நகை செய்வதில் தங்கம் திருடுவது இவர்கள் ஜாதியின் ஸ்வதர்மம் என்றும், அதனால் பொன்னுக்கு 'பறி' என்று தமிழில் ஒரு பெயர் உண்டு என்றும் தமிழ் நாட்டுப் பேதைஜனங்களுக்குள் ஒரு அபிப்ராயம் இருந்து வருகிறது. இது எந்தசாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறதோ தெரியவில்லை. "தட்டானுக்கு அஞ்சி அல்லவோ அணிந்தான் சிவன் ஸர்ப்பத்தையே" என்று ஒரு கவிராயரும் விகடமாகப் பாடிவைத்தார். ஆனால், போலீஸ்காரர் தற்காலத்து விச்வகர்மர்க்களுக்கு அஞ்சுவதில்லை; தட்டார்களை தங்கள் இஷ்டப்படி செய்ய விடுவதில்லை. பெரிய நகரங்களிலும் க்ராமங்களிலும்கூட, சில தட்டார் திருட்டு உடைமைகள் வாங்குவதாயும், சோதனைக்கு அகப்படாமலும், ஸந்தேகத்திற்கு இடமில்லாமலும், அவற்றை உடனே உருக்கி புத்திசாலித்தனமாக உருமாற்றி விடுவதாகவும், அநேக போலீஸ்காரர்கள் நினைக்கிறார்கள். இன்னும் மேற்பூச்சு நகைகள் செய்து க்ராமாந்தரங்களிலும் பட்டணங்களில் கடைத் தெருக்களிலும் விலைகூறவும், அடகுவைத்துப் பணம் வாங்கவும் தட்டார்களில் சிலர் வேண்டிய உதவி செய்து வருவதாக, ஸமீபத்தில் நடந்த சில போலீஸ் கேஸ்கள் மூலமாய்த் தெரிகிறது. ஆனால் தட்டார்களிலும், மற்ற ஜாதிகளில்போலவே எத்தனையோ யோக்யர்கள் இருப்பதாக எனக்குத்தெரியும். சில தட்டார்கள் செய்வது போலவே, இதர தொழிலாளிகளும், வாக்குசுத்தம் இல்லாமல் ஸமயம் நேர்ந்தால், வாயாடிகள் அல்லாத ஏழை ஜனங்களை ஏமாற்றிவிடப் பார்க்கிறார்கள்; ஆளுக்கு ஒரு விலை சொல்லுகிறார்கள். தொழிலில் செய்யும் மோசம் தொழிலின் நாசத்துக்கே ஏதுவாகிறது என்பது இவர்கள் தெரிந்து கொள்ளாததற்குக் காரணம் நம்முடைய தொழிலாளிகளின் புத்தியீனமேயாம்.

**கடன்கொண்டு தொழில் செய்தல்.**—மேலே கூறியபடி, நம்முடைய தொழிலாளிகள் முதலும் ஆதரவும் இல்லாமையாலும் அறிவீனத்தாலும் கஷ்ட நஷ்டங்கள் அடைகிறார்கள். இவர்களில் சிலர் சிறிது ஊக்கங்கொண்டு தொழிலைப் பலப்படுத்துவதற்கு செட்டிகளிடத்தும் மிராசுதார்களிடத்தும் அதிக வட்டிக்கு கடன்வாங்குகிறார்கள். முதலும், முதல் குட்டிபோடுகிற வட்டியும், வட்டிக்கு வட்டியும் சேர்ந்து, தொழிலாளிகளையே சாப்பிட்டு ஜீர்ணம் செய்து விடுகிறது. ஊக்கமும் உத்ஸாகமும் சுறுசுறுப்பும் புத்திசாலித்தனமுமுள்ள தொழிலாளிகளுக்கு ஸமயத்தில் பொருளுதவி செய்து, தொழில்களை ஆதரித்து பலப்படுத்தி, கடைசியில் தாங்களும் அதனால் பலன் அடையக்கூடிய பொறுமையும் முன்யோசனையுமுள்ள முதலாளிகளும் தேசாபிமானிகளும் தென் தேசத்தில் விசேஷமாக இல்லை, 'பெரிய மீனுக்கு சின்ன மீன்கள் இரை' என்றபடி பெரிய முதலாளி, சிறிய தொழிலாளிகளைக்கெடுத்துவிடுவது ஸாதாரணமாயிருக்கிறது. சென்ற சில வருஷங்களாக ஸ்வதேசியத்தைப் பற்றிப் பேரிரைச்சலிட்டு ஆரவாரம் செய்தவர்கள் ஆத்ரத்தால் "தடபுடல்" செய்து ஸ்வதேசியத்தை மூன்றேமுக்கால்நாழிகை வாழ்வாக்கி விட்டார்கள். அப்போது ஏற்பட்ட ஸ்வதேச பண்டசாலைகளும் நெசவு சாலைகளும் இப்போது மங்கிவருகின்றன.



**ஸ்வதேசீயம் அபிவ்ருத்தி யடையாததற்குக் காரணம்.**—ஸ்வதேசிய மானது, விசேஷமாகத் தென்னாட்டில், ஆரம்ப சூரத்தனமுள்ள பல இளையோராலும், முன்யோசனையில்லாத சில முதியோராலும், வந்தபின் காப்போராய் பேராசையும் அதை நிறைவேற்றக்கூடிய சக்தியின்மையும் ஒற்றுமையின்மையும் உள்ள சில சண்டப்ரசண்டர்களாலுமே ஆதரிக்கப் பெற்றுவந்தது. பொறுப்பும், படிப்பும் உள்ள பேர்கள், யாது காரணத்தினாலோ சும்மா இருந்துவிட்டார்கள். ஸ்வதேசியக்கிளர்ச்சியில் தலையிட்டுக் கொண்டவர்களும், கல்யாண தடபுடலில் தாலி கட்ட மறந்துவிட்டது போல, ஸ்வதேசிய மும்மாத்தில், கைத்தொழில் வ்ருத்திக்கு மூலாதாரமான படிப்பைப்பற்றி ஜாஸ்தியாக ஞாபகப்படுத்திக் கொள்ளவில்லை. கைத்தொழிற் படிப்பே தென் இந்தியாவிற்கு அவச்யம் வேண்டும். அதற்கு எங்கே பணம் என்றால், நம்முடைய நிலைமையை உள்ளபடி தெரிந்துகொள்ளாத சில ஐரோப்பிய ஸ்னேகிதர், நாம் புதைத்துவைத்திருக்கும் பணத்தை யெல்லாம் வெளியே எடுத்துவிடச் சொல்லுகிறார்கள். அப்படிச்சொல்லுவது சரியல்ல. ராஜாங்கத்தார் கைத்தொழில் கல்விக்கு உதவி செய்யவேண்டியது அவச்யம். ஆனால் எல்லாம் அவர்களே தான் செய்யவேண்டுமென்று நாம் கையைக்கட்டி வாயையும் பொத்திக்கொண்டு இருந்து விடலாமா? நம்முடைய ராஜாக்களும்,ஜமீன்தார்களும், மிராசுதார்களும், செட்டிமார்களும் கைத்தொழில் பாடசாலைகளுக்கு பொருளுதவி செய்யவேண்டும். டாக்டர் பர்னார்டோ என்பவர் லண்டன் மாநகரத்திலே அநாதைப்பிள்ளைகளுக்கு ஜீவனத்துக்கு ஆதாரமான சில்லரைத் தொழில்கள் கற்பித்துக் கொடுக்கப் பாடசாலைகள் ஏற்படுத்தினார். அவருக்கு பணமில்லை; சிநேகிதரில்லை; ஸர்க்கார் உதவி இல்லை. ஆனால் கருணை இருந்தது. அவரது முயற்சியால் அநாதைப்பிள்ளைகளுக்கென்று இங்க்லண்டிலும் ஸ்காட்லண்டிலும்ஏற்பட்டிருக்கிற தொழில் பாடசாலைகள் விஷயமாகவும் ஆராய்ச்சி சாலைகள் விஷயமாகவும் வருஷந்தோறும் ஸுமார் 45 லட்சம் ரூபாய் இப்போது செலவு செய்யப்பட்டுவருகிறது. இவ்வளவு பணமும் அநேக தர்மப்ரபுக்களுடைய நன்கொடைகளாலே சேருகிறது. ஹிந்துக்கள் தர்மவிஷயங்களில் இங்க்லீஷ்காரருக்கு இளைத்தவர்களா? நம்முடைய ஏழைத் தொழிலாளிகளிடம் இரங்குவதற்கு 'பர்னாடோ'க்கள் இந்தியாவில் இல்லையா? ஸர் தாரகநாத் பாலிட் என்பவர் தன்னுடைய த்ரவியத்தை எல்லாம் 'ஸையன்ஸ்' அல்லது சாஸ்த்ரீயக் கல்விக்காக கொடுத்துவிடவில்லையா?

**முடிவு.**—பழைய காலங்களில் நம்முடைய முன்னோர் சத்ரம் சாவடிகளும் கோயில் குளங்களும் ஏற்படுத்தி அவற்றிற்கு தர்ம ஸொத்துக்களும் ஏற்படுத்தினார்கள். தற்காலத்தில் நாம் செய்யவேண்டிய தர்மங்களில் 'பாலிடெக்னிக்' அல்லது பலவகையான கைத்தொழிற் பாடசாலைகளும், ஆராய்ச்சிசாலைகளும் பொருட் காட்சிசாலைகளும் ஏற்படுத்துவதைக் காட்டிலும் சிறந்ததான தர்மம் ஒன்றுமில்லை. இங்கிலாந்திலுள்ள கைத்தொழில் கலாசாலைகளும் பாடசாலை

களும் அநேகமாக ஸர்க்கார் உதவிகூட இல்லாமல் பொதுஜனங்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன. அப்படி நமது நாட்டிலும் பலர் ஒன்றாகக்கூடி கூட்டுத்தொழில் ஸங்கங்கள் சேர்த்து கைத்தொழில் ஸம்பந்தமான பகற் பள்ளிக்கூடங்களும் ராத்ரிப்பாடசாலைகளும் ஏற்படுத்த வேண்டும்; தற்கால சாஸ்த்ரீயமான ஆயுதங்களையும் யந்த்ரங்களையும் உபயோகிக்கும் வழிகளையும் அவற்றால் உண்டாகும் நன்மைகளையும் போதிக்கவேண்டும். வீடுகளில் நடத்தக்கூடிய தொழில்களை வீடுகளிலே நடத்தவேண்டும். தனித்தனி வீடுகளில் தொழில்செய்யும் தொழிலாளிகளை 'கோவாபரேஷன்' அல்லது கூட்டு முறையில் சேர்க்கவேண்டும். அவச்யமான இடங்களில் காலை மாலை கைத்தொழில் வகுப்புக்கள் ஏற்படுத்தி நிபுணருடைய அபிப்ராயங்கள் எல்லாத் தொழிலாளிகளுக்கும் தெரியும்படி பரவச்செய்யவேண்டும். முக்யமான க்ராமங்களில் தொழில்பாடசாலைகளும், முக்யமான நகரங்களில் மேற்படி கலாசாலைகளும், தகுந்த இடங்களில் ஆராய்ச்சி சாலைகளும் பொருட்காட்சிசாலைகளும் ஏற்படுத்தவேண்டும். இவற்றை எல்லாம் செய்வதற்கு ஐக்யநாணய ஸங்கங்கள் எங்கே பார்த்தாலும் ஏற்படுத்தவேண்டும். ஐக்யநாணயஸங்கங்களின் உபயோகங்களையும், தொழில் ஸங்கங்களின் ப்ரயோஜனங்களையும், கைத்தொழில் முயற்சியின் மகத்வத்தையும்பற்றி தமிழிலே துண்டு பத்ரிகைகளும் சிறுபுஸ்தகங்களும் ப்ரசுரம்செய்து ஜனங்களுக்குள் பரவச்செய்ய வேண்டும். கான்பரன்ஸ்களிலும் காங்க்ரஸ் பந்தல்களிலும் மட்டும் ப்ரஸங்க மழைபொழிந்தால் போதாது. படித்தவர்களும், அறிவும் ஊக்கமும் உள்ளவர்களும் இவற்றிலே தலையிட்டு, தொழில் ஸங்கங்கள் முதலியன ஏற்படுத்தி மேற்படி ஸங்கங்களில் தொழிலாளிகளை அங்கத்தினராக்க முயலவேண்டும்.

பி. ஸ்ரீநிவாஸாச்சாரியார்.

## ESTIMATED PRODUCTION OF COPRA IN INDIA.

## இந்தியாவில் கிடைக்கும் தேங்காய்ப் பருப்பின் மதிப்பு.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான தேங்காய்ப் பருப்பு (கொப்பரை) வெகுவாய் ஜெர்மனிக்கே போய்க்கொண்டிருந்தது. 1913-14-ம் வர்ஷத்தில் இந்தியாவிலிருந்து 1 கோடியே 56 லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள தேங்காய்ப் பருப்பு மொத்தத்தில் ஏற்றுமதியாயிற்று. இதில் 97½ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள பருப்பு ஜெர்மனிக்குப் போயிருக்கிறது. யுத்தத்தினால் ஜெர்மனிக்கு ஏற்றுமதியாவது நின்றுபோய் விட்டது. இதனால் இந்திய வ்யாபாரிகளுக்கும் விவஸாயிகளுக்கும் ரொம்ப நஷ்டம் ஏற்படக்கூடுமென்று பலர் பயந்தார்கள். ஆனால் தற்போது இங்க்லண்டில் அநேகர் தேங்காயெண்ணெயாட்டுவதைப் பற்றி யோசித்துவருவதாலும், மற்ற சில காரணங்களாலும் அவ்வளவு பயப்படவேண்டியதில்லையென்று சொல்லுகிறார்கள். இந்தியர்கள் இதைப் பற்றி கொஞ்சம் கவனித்து வருவதால் இந்தியாவில் எவ்வளவு தேங்காய்ப் பருப்பு உற்பத்தியாகிற தென்பதற்கு உத்தேசமான கணக்கு ஒன்று தருகிறோம். இந்தக் கணக்கைக் கண்டுபிடிக்க இந்தியா முழுவதும் கவனிக்காமல் சென்னை ராஜதானியின் ஏற்றுமதியை மட்டும் கவனித்தால் போதும். ஏனென்றால் மற்ற இடங்களிலிருந்து ஏற்றுமதியாவது ரொம்ப ஸ்வல்பம்.

1913-14 ம் வர்ஷத்தில் ஏற்றுமதியான தென்னைப் பொருள்களின் மதிப்புப் பின்வருமாறு.

| | |
|---|---|
| கொப்பரை அந்தர் | 875,000. |
| தேங்காய் எண்ணெய் காலன் * | 44,46,000. |
| தேங்காய்கள் | 380 லக்ஷம். |

ஸாதாரணமாக 1000 தேங்காய்களிலிருந்து பருப்பு எடுத்து, நாட்டுச் செக்கிலாட்டினால் 201 ராத்தல் எண்ணெய் கிடைக்குமென்றும், 1000 தேங்காயிலிருந்து 300 ராத்தல் பருப்புக்கிடைக்குமென்றும் வைத்துக்கொள்ளலாம். அதாவது 10 ராத்தல் பருப்பிலிருந்து 7 ராத்தல் எண்ணெய் கிடைக்கும். அப்படியானால் 300 ராத்தல் பருப்பிலிருந்து 210 ராத்தல் எண்ணெய் கிடைக்குமென்று சொல்லலாம். மேலே காட்டிய கணக்கில் 44,46,000 காலன் தேங்காயெண்ணெய் ஏற்றுமதியாகிறதென்று சொன்னோம். 12 காலன் எண்ணெய் 1 அந்தர் நிறைக்கு சரி. அதாவது 44,46,000 காலன் எண்ணெயும் 3,70,500 அந்தர் நிறையாகிறது. 7 ராத்தல் எண்ணெய்க்கு 10 ராத்தல் பருப்பு வேண்டியிருக்குமென்று ஏற்கனவே சொன்னோம். இதன்படி பார்த்தால் 3,70,500 அந்தர் எண்ணெய் கிடைப்பதற்கு 5,29,000 அந்தர் கொப்பரை வேண்டும்.

ஆகவே வெளிதேசங்களுக்கு அனுப்பும் எண்ணெயையும் தேங்காய்ப் பருப்பையும் பருப்பாகவே அனுப்புவதாக வைத்துக்கொண்டால், மொத்தம் 8,75,000 + 5,29,000 = 14,04,000 அந்தர் நிறையாகிறது. இந்த மதிப்புத் தென்னிந்தியாவில் ப்ரிட்டிஷ் துறைமுகங்களிலிருந்து போகும் சரக்கை மாத்ரம் குறிக்கிறது. இதில் ஆலப்பிழை, திருவாங்கூரிலுள்ள சில துறைமுகங்கள் இவைகளின் வழியாக ஏற்றுமதியாகும் சரக்குகளின் மதிப்பு சேரவில்லை. அவைகளையும் சேர்த்தால், தென்னிந்தியாவில் எண்ணெயாகவும், கொப்பரையாகவும் ஏற்றுமதி செய்வதற்கு கொப்பரையாக வேண்டியிருப்பது ஏறக்குறைய 15 லக்ஷம் அந்தர் என்று சொல்லலாம். இதற்கு ஸுமார் 60 கோடி தேங்காய் வேண்டியிருக்கும். மேற்சொன்ன 15 லக்ஷம் அந்தர் கொப்பரையும் உள்நாட்டின் செலவைச் சேர்க்காமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பருப்பை மாத்ரம் குறிக்கிறது.

இப்பொழுது நமது தேசத்திலேயே உபயோகப்பட்டுப் போகும் தேங்காயின் மதிப்பைப் பார்ப்போம். தென்னிந்தியாவில் ப்ரிட்டிஷ் ஜில்லாக்களில் 5,50,000 ஏக்கர் நிலங்களில் தென்னை ஸாகுபடியாகிறது. திருவாங்கூர், கொச்சி ராஜ்யங்களில் ஏராளமான நிலங்களில் தென்னை ஸாகுபடியாகிறது. அவைகளையும் சேர்த்தால் மொத்தம் தென்னை ஸாகுபடியின் விஸ்தீரணம் 8 லக்ஷம் ஏக்கராகலாம். மேற்குக்கரை ப்ரதேசங்களில் ஒரு ஏக்கருக்கு ஒரு வர்ஷத்துக்கு 1500 தேங்காய்கள் கிடைக்கலாம். கிழக்குக் கரையில் அவ்வளவு கிடைக்கமாட்டா. சில தோட்டங்கள் சில காரணங்களால் நல்ல பலன் கொடுப்பதில்லை. இவைகளை யுத்தேசித்து ஒரு ஏகருக்கு 1250 தேங்காய் கிடைக்குமென்று வைத்துக்கொள்வோம். இதன்படி மொத்தம் நூறுகோடி தேங்காய்கள் கிடைக்குமென்று சொல்லலாம். ஏற்கனவே 60 கோடி தேங்காய்க்கு கணக்கு சொல்லியாயிற்று; அதாவது அவ்வளவு தேங்காயிலிருந்து கிடைக்கும் கொப்பரையும் எண்ணெயும் அன்ய நாடுகளுக்கு ஏற்றுமதியாவதாகச் சொன்னோம். பாக்கியுள்ள 40 கோடி தேங்காயில் குறைந்தது 30 கோடியாவது பருப்பாக்கப்பட்டு. பிறகு எண்ணெயாட்டப் படுவதாக வைத்துக்கொள்ளலாம். இந்த 30 கோடிக்கும் 8,00,000 அந்தர் பருப்பாகிறது. இது உள்ளூரிலேயே உபயோகப்பட்டுப் போகிறது. அன்ய நாடுகளுக்கு ஏற்றுமதியாவதையும் சேர்த்தால் மொத்தம் உற்பத்தியாகும் கொப்பரையின் (தேங்காய்ப் பருப்பின்) நிறை 15,00,000 + 8,00,000 = 23 லக்ஷம் அந்தர் அல்லது 1,15,000 டன் என்று ஏற்படும். இந்தக் கணக்குகள் எல்லாம் உத்தேசமாகப் போடப்பட்டிருக்கின்றன.

* காலன் என்பது 2·4 பட்டணம் படி கொண்டது.

## PAPER AS A HYGIENIC MATERIAL.

## காகிதம் ஸுகாதாரத்துக் கேற்ற பொருளாவது.

காகிதமானது எழுதுவதற்கும் அச்சடிப்பதற்கும் ஸாமான்கள் சுற்றுவதற்குந்தான் உபயோ

கப்படுகிறதென்று பலர் எண்ணியிருப்பார்கள். இப்போது மேல்நாட்டில் அநேகர் அதை பற்பல கார்யங்களுக்கு உபயோகிக்க முயன்றுவருகிறார்கள்.

காகிதத்துக்கு நான்கு ச்லாக்யமான குணங்களிருக்கின்றன. (1) துவளக்கூடிய தன்மை அதற்குண்டு. கடுதாசியை வேண்டியவிதத்தில் சுருட்டக்கூடும். மேலும் கடுதாசி செய்வதில் எவ்வளவு மெல்லியதாகவும், உறுதியாகவும் செய்யவேண்டுமோ அவ்வளவு மெல்லியதாகவும், உறுதியாகவும் செய்யலாம். (2) அது ஜலத்திலாவது, கொஞ்சமாக ரஸாயனப் பொருள்கள் கரைந்துள்ள ஜலத்திலாவது கரையாது. (3) ஸாதாரண சீதோஷ்ண ஸ்திதியில் கடுதாசி கெட்டுப்போகாமலிருக்கிறது. (4) அதை எரித்து நாசம்செய்து விடலாம். இந்த நான்கு குணங்களிருப்பதால் கடுதாசியைப் பலவித கார்யங்களுக்கு உபயோகிக்க முடிகிறது.

பண்டைக்கால முதல் சீனாதேசத்தில் ஆகாராதிகளை காகிதப்பைகளில் பக்வம் செய்கிறார்களாம். இதனால் ஆகாரப்பொருள்கள் சேதமடையாமலிருப்பதோடு, அவைகளினுடைய வாஸனையும் கெடாமலிருக்கிறதாம்.

நாம் ஆகாரப் பொருள்களை உலோகத்தால் செய்த பாத்ரங்களிலும் மண்பாத்ரங்களிலும் பக்வம் செய்கிறோம். மேல் நாடுகளில் அநேகர் கண்ணாடிப் பாத்ரங்களை உபயோகிக்கிறார்கள். ஆகாராதிகளைத் தயார் செய்த பிறகு அவைகளை பலர் சுத்தமானவை யென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாத பாத்ரங்களில் வைத்துச் சாப்பிடுகிறார்கள். அந்தப் பாத்ரங்களில் வ்யாதிக்ருமிகள் இல்லையென்று சொல்வதற்கில்லை. இப்படிப்பட்ட பாத்ரங்களில் ஆகாரத்தை வைத்து சாப்பிடுவதைவிட, கடுதாசியால் தட்டங்களும், கோப்பைகளும் மற்ற பாத்ரங்களும் செய்து உபயோகிக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். காகிதத்தை அறைத்துக் கூழாக்கி அதில் வஜ்ரமோ, மரப்பிசினோ, அல்லது மரப்பசையோ கலந்து, வேண்டிய பாத்ரங்களாகச் செய்து காயவைத்துப் பிறகு தக்க வார்னிஷ் கொடுத்துவிட்டால், அவைகள் உபயோகிக்கத் தகுந்தவைகளாக இருக்குமாம். சில வார்னிஷ்களுக்கு அருவருப்பான வாஸனையுண்டாகையால் வாஸனையே உண்டாக்காத பாரபின் வாக்ஸ் என்னும் மெழுகைப் பூசலாம்.

ஹோட்டல்கள், காப்பிக்கடைகள் போன்ற இடங்களில் ஒருவர் குடித்த பாத்ரத்தில் மற்றவர் குடிப்பதாலும், ஒருவர் உபயோகித்த தட்டுகளையும் கிண்ணங்களையும் நன்றாய் சுத்தம் செய்யாமல் மற்றவர்கள் உபயோகிப்பதாலும், டைபாய்ட் காய்ச்சல் போன்றவ்யாதிகள் அந்தப் பாத்ரங்கள் மூலமாகப் பரவக்கூடும். இதைத்தடுக்க, கூடுமானவரையில், உபயோகித்தபின் எரித்துவிடக்கூடியதும், பார்வைக்கு லக்ஷணமானதுமான பாத்ரங்களை உபயோகிப்பது நல்லது. இப்படிப்பட்ட பாத்ரவகைகளை கடுதாசியால் செய்யலாம். அநேக மேல்நாட்டுப் பட்டணங்களில் காகிதக் கிண்ணங்களும் தட்டுகளும் உபயோகத்தில் இருந்துவருகின்றன. ஒருவகைக் காகிதத் தட்டில் உள்புறத்தில் எண்ணெயால் கெடுதலடையாத காகிதத்தை வைத்திருக்கிறார்கள். ஒரு தடவை தட்டை உபயோகித்ததும், உள்புறத்திலுள்ள காகிதத்தை எடுத்து எறிந்து விடலாம்.

ஜப்பானியர்களும் சீனர்களும் ஆதிகாலமுதல்கொண்டே கடுதாசியை உடுப்புகள் செய்வதில் உபயோகித்து வந்திருக்கிறார்கள். காகிதத்தால் செய்த உடுப்புகள் பார்வைக்கு லக்ஷணமாயிருக்கின்றனவாம். மேலும் அவைகள் லேசாயிருக்கின்றன. காகிதம் உஷ்ணத்தை க்ரஹித்துக் கொள்ளாமல், வெளியே தள்ளிவிடுவதால், காகித உடுப்புகளை உடுத்திக்கொண்டால் குளிர்காலத்தில் கத கதப்பாகவும், வெயில்காலத்தில் குளிர்ச்சியாயும் இருக்கிறது. இவைகளோடு இன்னொரு ஸௌகர்யமென்னவென்றால், காகிதம்



ரொம்ப மலிவானது; அதனால் காகித உடுப்புகள் அழுக்கடைந்துபோனால் சுத்தம் செய்ய வேண்டிய கஷ்டமில்லாமல், அப்படியே நெருப்பிட்டு எரித்துவிடலாம்.

மேல் நாட்டில் காகிதத்தால் கழுத்துப்பட்டைகளும் கைப்பட்டைகளும் செய்து உபயோகிக்கிறார்கள். மற்ற உடுப்புகள் ஒன்றிலும் காகிதம் உபயோகப்படுவதில்லை. இதற்குக் காரணம் காகித்தை நனைத்தால், அது நைந்துபோவதே. மற்ற துணிவகைகளில் இழைகள் நீளமாயிருப்பதாலும், அந்தந்த வகை இழைகளுக்கு சில ப்ரத்யேகமான நல்ல குணங்களிருப்பதாலும், துணிகளை ஜலத்தில் நனைத்தால் அவைகள் கெடுவதில்லை. பருத்தி நூல் ஜலம் பட்டதும் முறுக்கு ஏறுகிறது. லினன் துணியின் நூல்களில் பக்கவாட்டில் மெல்லிய இழைகளிருப்பதால் துணி கெடாமலிருக்கிறது. கம்பளித்துணியின் நூல்கள் ஒன்றோடொன்று அடையாய் ஒட்டிக்கொள்ளுகின்றன. ஆனால் கடுதாசி செய்வதிலோ, கந்தைத்துணி மரம் முதலியவைகளை உபயோகிப்பதில் அவைகளிலுள்ள நார்களை சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கூழ்செய்து அதிலிருந்து கடுதாசி செய்வதால், கடுதாசியை ஜலத்தில் நனைத்ததும், நார்கள் சிறியவையானதால், நீளமான இழைகள் போல ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு உறுதியாயிருக்க முடிவதில்லை.

இப்படிப்பட்ட குறை கடுதாசிக்கு இருந்தபோதிலும், அதை சட்டைகளுக்குள் போட்டுக்கொள்ளும் உள் உடுப்புகள் செய்ய உபயோகிக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த உடுப்புகளை அழுக்கானவுடன் எரித்துவிடலாம். சிலர் மரக்கூழிலிருந்து ஒருவித நூல் செய்திருக்கிறார்களாம். அந்த நூலுக்கு ஸாதாரண நூல்களுக்குள்ள உறுதியில் பாதி உறுதி இருக்கிறதாம். அதைச் செய்யச் செலவோ ரொம்பக் குறைவாம். கடுதாசியால் செய்த துணிகளின் விலை லினன் துணிகளின் விலையில் 12-ல் ஒருபாகந்தானிருக்குமாம்.

மேல் நாடுகளில் அநேக இடங்களில் ஜனங்கள் காகிதக் கைக்குட்டைகளை உபயோகிக்கிறார்கள். அது நல்ல ஏற்பாடென்று சொல்லப்படுகிறது. மேலும் மேஜைகளுக்கு மேலே துணிகளுக்கு பதிலாகப் போடுவதற்கும், திரைகளுக்கும், தட்டிகளுக்கும் காகிதத்தையே உபயோகிக்கலாம். இவைகளால் தொத்து வ்யாதி பரவுவது தடைபடும். ஏனெனில் இவைகள் விலை மலிவானதால், வேண்டும்போது எடுத்தெரித்துவிடலாம்.

## IMPROVED AGRICULTURAL IMPLEMENTS.

## சீர்திருந்திய விவஸாயக் கருவிகள்.

நமது நாட்டு விவஸாயத்தை அபிவ்ருத்தி செய்யப் பற்பல வழிகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று விவஸாயிகளுக்குள் சீர்திருந்திய விவசாயக் கருவிகளைப் பரவச் செய்வதாகும். மேல்நாட்டுக் கருவிகள் வேலைக்கு ரொம்ப உபயோகப்படுவதைப்பற்றியும் அவைகளின் மேன்மையைப்பற்றியும் யாவரும் அறிந்திருக்கிறார்கள். விவஸாயிகள் மேல்நாட்டுக் கருவிகளை அதிகம் வாங்காமலிருப்பதற்குக் காரணம் பணக்கஷ்டமல்ல. ஏனென்றால் விவஸாயி எவ்வளவு ஏழையாயிருந்தாலும், ஒரு கருவி வேலைக்கு ரொம்ப ஏற்றதென்று கண்டுவிட்டால், அதைவாங்கப் பின்வாங்குவதில்லை. பம்பாயில் சென்றவர்ஷம் 21,000 ரூபாய் பெறுமான முள்ள விவஸாயக் கருவிகள் விலைப்போயின. வாங்கினவர்களில் பெரும்பாலார் ஏழைக்குடியானவர்களாம். ஏழைகளேயென்று அவர்கள் ஸ்வல்ப விலையுள்ளவைகளை மாத்ரம் வாங்கினதாக எண்ணக்கூடாது. சிலபேர்கள் 46 ரூபாய்வரை விலையுள்ள உயர்ந்த கலப்பைகளையும் வாங்கியிருக்கிறார்கள். விவஸாயிகள் சீர்திருந்திய கருவிகளை வாங்குவதற்குத் தடையாயிருப்பது, பின்னென்னவென்றால்,

அவைகளை வாங்குவதற்கும், கெடுதலடைந்தால் செப்பனிடுவதற்கும் தக்க வஸதிகளில்லாமலிருப்பதே. விவஸாய ஸங்கங்கள் இந்த வஸதிகள்செய்து கொடுப்பதைப்பற்றித் தான் ரொம்ப கவலையெடுத்துக் கொள்ளவேண்டும். சீர்திருந்திய கருவிகளைச் செய்துகொடுக்க நமது நாட்டில் தக்க தொழிலாளிகள் இல்லை. க்ராமாந்தரங்களிலுள்ள தச்சர்களும், கொல்லர்களும் வாங்கிய கருவிகளில் பழுதாகப் போனவைகளைச் செப்பனிட்டுக் கொடுக்கத் தகுந்தவர்களாயில்லை. ஆகையால், இவர்களுடைய உதவியைத் தேடாமல் விவஸாயக் கருவிகளைப் பரவச்செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். இந்த வேலையை மேற்கொள்ள விவஸாய ஸங்கங்களே ஏற்றவை. விவஸாய ஸங்கங்கள் பெரிய ஊர்களில் விவஸாயக் கருவிகள் விற்பதற்காகக் கடைகள் ஏற்படுத்தவேண்டும். இந்தக் கடைகள் கருவிகளை விலைக்கு வாங்கி விற்க ஏராளமாகப் பணம் வேண்டியிருக்கும். ஆனால் ஸங்கங்களின் உத்தரவாதத்தின்மேல், விவஸாயக் கருவிகள் விற்கும் பெரிய கம்பெனிகளை தங்களுடைய கருவிகளில் சிலவற்றை மேற்சொன்ன கடைகளில் விற்பனைக்கு வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டால், கடை நடத்த அதிக பணம் வேண்டியிராது. விவஸாய ஸங்கங்களுக்கு செல்வாக்கும் நாணயமும் உண்டாகையால் இப்படிச்செய்வது ஸுலபம். கடைகளில்உள்ள கருவிகள்அவை விற்பனையாகும் வரையில் கம்பெனிகளுக்கே ஸொந்தமாகவிருக்கும். கருவிகள் விற்பனையானவுடன் அவைகளின் விலைப்பணத்தை கம்பெனிகளுக்கு அனுப்பிவிடவேண்டும். அந்தந்தக் கடைகளுக்கு ஏற்படக் கூடிய செலவை அந்தக் கடைகளின் வரும்படியைக்கொண்டே சரிப்படுத்திக் கொள்ளும்படி ஏற்பாடு செய்யலாம். கடைச் செலவுக்குப் போதுமானவளவு கிடைக்கும்படி ரூபாய்க்கு இவ்வளவு வீதமென்று விற்பனையில் கமிஷன் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்த யாந்திரிக் கடைகள் நன்றாய் நடந்து வரவேண்டுமென்றால் சில விஷயங்கள் கவனிக்கவேண்டும். எந்த கருவிகளை விவஸாய டிபார்ட்மெண்டார் விடாமல் பரீக்ஷை செய்து பார்த்து, நல்லவையென்று சொல்லியிருக்கிறார்களோ, அவைகளையே இந்தக் கடைகளில் விற்கவேண்டும். விற்பனையில் பணக்காரருக்கு ஒரு விதமாகவும் ஏழைகளுக்கு ஒருவிதமாகவும் கடையிப்பந்திகள் நடந்து கொள்ளக்கூடாது. வ்யாபாரத்தில் நாணயமிருக்கவேண்டும்.

## HYDRO-PLANE.

## ஹைட்ரோப்ளேன்.

ஆகாய விமானங்களில் சில ஆகாயத்தில் பறப்பதல்லாமல் தண்ணீரின்மேல் கப்பல்போல் மிதக்கவும் கூடும். அவைகளுக்கு 'ஹைட்ரோப்ளேன்'கள் என்று பெயர். ஸாதாரண ஏரோப்ளேனின் அடிபாகத்தில் 'ப்ளேட்' என்று சொல்லப்படும் சிறிய தெப்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஹைட்ரோப்ளேன் யுத்தக் கப்பல்களோடு கொண்டுபோகப்படும். அதன் உபயோகம் முக்யமாய் ஸமுத்ரத்தில் எதிரியின் நிலைமையை அறிவதற்கே. வேண்டியபொழுது ஹைட்ரோப்ளேனை கப்பலுக்குப் பக்கத்தில் ஸமுத்ரத்தில் விடுவார்கள். விட்டதும், ஏரோப்ளேன் பூமியிலிருந்து கிளம்புவதுபோல ஹைட்ரோப்ளேன் ஸமுத்ரத்திலிருந்து கிளம்பி எதிரியின் நிலைமையை அறிந்துகொண்டு கப்பலின் பக்கத்தில் வரும். அப்பொழுது கப்பலிலுள்ளவர்கள் ஹைட்ரோப்ளேனை கப்பலில் ஏற்றிக் கொள்வார்கள்.

---



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### The Hindu University.

ஹிந்து யூனிவர்ஸிட்டி.—சென்ற சில வர்ஷங்களாக வட இந்தியாவிலுள்ள சிலப்ரமுகர்கள் காசியில் ஒரு ஹிந்து யூனிவர்ஸிட்டி அதாவது ஸர்வகலாசாலை ஸ்தாபிக்க முயன்றுவந்தார்கள். அம்முயற்சி இப்போது தான் கைகூடியிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டாரும், இந்தியா மந்த்ரியும் சிலநிபந்தனைகளின் மேல் ஹிந்து யூனிவர்ஸிட்டிஸ்தாபிக்கலாமென்று ஸம்மதம் கொடுத்திருப்பதோடு, அதை ஸ்தாபிப்பதற்காக இந்தியாகவர்ன்மெண்டின் கல்வியிலாகா மெம்பர் ஒரு மசோதாவும் கொண்டுவந்திருக்கிறார்.

ஹிந்து யூனிவர்ஸிட்டியின் முக்ய அம்சங்கள் என்னவென்றால், முதலாவது, மாணவர்கள் யூனிவர்ஸிட்டிக் கட்டிடத்திலே தங்கியிருந்து கல்விபயிலுவார்கள்; இரண்டாவது, அதில் வாசிக்கும் ஹிந்துமாணவர்களுக்கு மத ஸம்பந்தமான கல்வி கட்டாயப்படுத்தி கற்றுக்கொடுக்கப்படும். (இதில் ஹிந்துக்களல்லாத மற்றவர்களும் சேர்ந்து படிக்கலாம். ஆனால் இவர்களுக்கு மதக்கல்வி கட்டாயமல்ல.) மூன்றாவது இதை ஹிந்துக்களே நிர்வஹித்து வருவார்கள். இந்த யூனிவர்ஸிட்டியில் ஆர்ட்ஸ் என்று சொல்லப்படும் எம். ஏ., பி. ஏ. வகுப்புகளுக்குக் கற்பிக்கப்படும் பாடங்கள், சாஸ்த்ரஸம்பந்தமான பாடங்கள், சட்டம், கீழ்நாட்டு ஸம்பந்தமான விஷயங்கள், மதம் ஆகிய ஐந்து வகையான பாடங்கள் கற்பிக்கப்படும். இந்தியாவின் எந்த பாகத்திலிருந்தும் மாணவர்கள் யூனிவர்ஸிட்டியில் சேர்ந்து படிக்கலாம்.

காசியிலுள்ள ஸெண்டரல் ஹிந்து காலேஜ் ஹிந்து யூனிவர்ஸிட்டியைச் சேர்ந்ததாகும். இந்த யூனிவர்ஸிட்டியால் கொடுக்கப்படும் டிகிரிகளும், பட்டங்களும் டிப்ளோமாக்களும், ஸெர்டிபிகேட்டுகளும் மற்ற யூனிவர்ஸிட்டிகளால் கொடுக்கப்படுபவைகள் போலவே கவர்ன்மெண்டால் ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது இந்த யூனிவர்ஸிட்டியில் தேறியவர்கள் ஸர்க்கார் உத்யோகங்கள் பெற லாயக்குள்ளவர்களாவார்கள்.

### Free Night Schools for Labourers' Children.

கூலியாட்களின் பிள்ளைகளுக்கு இரவில் தர்மப் பள்ளிக்கூடங்கள்.—பகல் முழுவதும் சிறு குழந்தைகளைக் கூடக் கூலிவேலைக்கு அனுப்பிக் கஷ்ட ஜீவனம் செய்யும் எளிய ஜனங்கள், பிள்ளைகளுக்கு சம்பளம் கொடுத்துப் படிப்பிக்கச் சக்தியற்றவர்களாயிருப்பதையும், பகல்காலங்களில் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூட ஸாத்யமில்லாம விருப்பதையும் உத்தேசித்து, கோதாவிரிஜில்லா பெத்தப்பூர் தாலூகாவில் ஸ்ரீபுரம், சோமவரம், செங்காவரம், திருமாலி, ரங்கம்பேட்டை முதலான அநேக க்ராமங்களில் உள்ள கனவான்கள் அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு ராக்காலங்களில் சம்பளமில்லாமல் கல்வி கற்றுக்கொடுப்பதற்காகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்திவருகிறார்களாம். அவைகள் மிகவும் நன்றாய் நடந்துவருகின்றனவாம். அதுபோல மற்ற ஜில்லாக்களிலுள்ள க்ராமங்களிலும் ராத்ரிப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது நல்லது.

### Mid-day Meals for Pupils.

மாணவர்களுக்குப் பகல் சாப்பாடு.—திருவாங்கூர் கவர்ன்மெண்டார் க்ராமப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் விஷயத்தில் ரொம்ப ஊக்கமெடுத்து வருகிறார்களென்று தெரிகிறது. அந்த ஸமஸ்தானத்தில் க்ராமப் பள்ளிக்கூடங்கள் ரொம்பக் குறைவாதலால் பிள்ளைகள் படிப்பதற்காக தங்களூரைவிட்டு அதிக தூரம்போக வேண்டியிருக்கிறதாம். இதனால் பிள்ளைகள் மத்யானவேளையில் வீட்டுக்குவந்து சாப்பிடமுடியாமல் போகிறது. ரொம்ப தூரமாயிருப்பதால் பிள்ளைகளின் பெற்றோர்கள் சாப்பாடு கொண்டுவந்து போடுவதும் கஷ்டம். இதற்காக கவர்ன்மெண்டார் பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்திலேயே மத்யான காலத்தில் சாப்பாடுபோட ஏற்பாடு செய்துவருகிறார்களாம். ஏழைப்பிள்ளைகளுக்கு பகல் வேளையில் பள்ளிக்கூடத்திலேயே சாப்பாடுபோடுவதற்குப் பொருளுதவி செய்யும்படி பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலுள்ள பெரிய பணக்காரர்களை கவர்ன்மெண்டார் தூண்டி வருகிறார்களாம். கவர்ன்மெண்டின் இந்த முயற்சி கைகூடி வருகிறதென்று சொல்லப்படுகிறது. அநேக பணக்காரர்கள் இதுவிஷயமாக ஊக்கம் பாராட்ட ஆரம்பித்திருக்கிறார்களாம். அவர்கள் ஒன்றுசேர்ந்து இதற்காகக் கமிட்டிகள் ஸ்தாபித்திருக்கிறார்களாம்.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### The Late Mr. Gokhale: An Elegy.

**காலஞ்சென்ற மிஸ்டர் கோகலேயின்மேல் இரங்கற்பாக்கள்.—**

தேசாபி மானிகளின் சிரமணியே
சிரமணியி னொளியே தேசத்
தாசாபி மானமன்றி யயலொன்று
மறியாத வறிவின் குன்றே
வாசாம கோசரமே வானவரும்
நின்குணங்கள் வழுத்தும் வண்ணம்
பேசாது போயினையோ பிரிவாற்றேம்
பிரிவாற்றேம் பிரிவாற்றேமே. (1)
முன்னுளி னம்பெரியோர் மாதவத்தால்
வேதாந்த முறையால் முற்றிப்
பண்ணும் நிலையான பக்தர்களாய்த்
தேவ ரிஷிப்பட்டம் பெற்றார்
இன்னுளி லாயுளெலாந் தாய்நாட்டிற்
கீடாக்கி யின்பம் நீக்கி
என்னு மழியாத ராஜரிஷி
யெனும்பட்ட மேற்றாயன்றே. (2)
சொல்லாலும் பொருளாலுஞ் செயலாலும்
நந்தேசத்துயரம் நீங்க
எல்லோரும் திருத்தொண்டு புரிவதற்கா
யொருகழக மியற்றினாய் நீ
நல்லோனே நன்னாட்டு நாயகமே
யுலகமெல்லாம் நயக்கும் நாவின்
வல்லோனே யுனையிழந்து வருந்துவமோ
ஐய்யோ வலிது பாவம். (3)
வானவர்க்கா யொருமுனிவன் றனதுமுது
கெலும்பதனை வழங்கினான் முன்
கானகத்தி லொருபறவை தனக்குடலின்
றசையளித்துக் காத்தானோர் மன்
மானவர்க்கும் மாதவர்க்கு மிருப்பிடமாம்
நம்பரத வளநாட்டிற்காய்த்
தானமென நினதரிய வாழ்நாளை
யழித்தனையால் தரணி மெச்ச. (4)
மாதாவின் றிருத்தொண்டே யல்லாது
மற்றொன்றும் வாழ்விற்காணாத்
தாதாபாய் நௌரோஜி முதலான
தவமுனிவர் தளரும் நாளில்
வாதாடு மன்னியர் முன் வழக்காடி
யரசவையும் வாழ்த்த நின்றாய்
நீதானே வெமைப்பிரிவாய் நினைப்பிரிந்து
முயிர்பேணி நிற்கின்றேமே. (5)

‘இந்துநேசனி’ல் பி. ஆதிமூர்த்தி.

### Orthography and Pronunciation in Tamil.

**தமிழில் எழுதும் முறையும் உச்சரிப்பு முறையும்.—** இது சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் பாஷைகளின் உத்பத்தி, சரித்ரம் முதலியவைகளின் போதாகாசிரியரா யிருந்துவந்த ராவ்பகதூர் எம். ரங்காசார்யர் இங்லீஷில் எழுதிய புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பாகும் இதில் தமிழை க்ரமமாய் எழுதுவதிலும் உச்சரிப்பதிலும் அநேக ஸம்சயங்கள் ஏற்படலாமென்பதை ஆசிரியர் தெளிவாய் எடுத்துக்காட்டியிருப்பதோடு அம்மாதிரியான ஸம்சயங்களைப் போக்கி எழுதும் முறையையும் உச்சரிப்பு முறையையும் சீர்திருத்துவதற்கு வேண்டியவையான சில முக்ய நியமங்களையும், தமிழ்நாட்டில் வழங்கிவரும் வ்யவஹாரத்துக்கும் நவீன சப்த சாஸ்த்ர விதிகளுக்கும் ஒத்தபடியாக விவரித்திருக்கிறார்.

தமிழ் பாஷையை க்ரமமாய் எழுதுவதற்கும் உச்சரிப்பதற்கும் ஏற்றதாக ஒரு புதிய அக்ஷரமாலையும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகம் கற்றுத்தேர்ந்த பண்டிதர்களுக்கேயன்றி தமிழில் ஸாமான்ய அறிவுள்ளவர்களுக்கும், வ்யாஸங்கள், நாவல்கள், பத்ரிகைகளுக்கு நிருபங்கள் முதலியன எழுதும் ஜனங்களுக்கும் ரொம்பவும் ப்ரயோஜனப்படும். இதன் விலை அணா 4. புஸ்தகம் வேண்டுவோர் சென்னை, திருவல்லிக்கேணியில் ஆசிரியர்க்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இங்க்லீஷ் பதிப்பும் அவரிடமே கிடைக்கும்.

### Vishnu Puranam Part I.

**விஷ்ணுபுராணம், முதல் பாகம்.—** இது சென்னை ஸர்வகலாசாலை ப்ரதம தமிழ்ப் பண்டிதராயிருந்த மிஸ்டர் ஸ்ரீனிவாஸராகவாச்சார்யரால் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து மொழிபெயர்த்த புஸ்தகமாகும், இதில் விஷ்ணுபுராணத்தின் முதல் மூன்று அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. இதன் நடை ஸுலபமாயிருக்கிறது. ஹிந்து மதாபிமானிகள் யாவரும் வாசிக்கவேண்டிய நூல்களில் இது ஒன்றாகும். இதன்விலை அணா 12. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3. 4, கொண்டிசெட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னையென்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A Weather Glass.

**ஆகாய நிலைமையைக்காட்டும் ஸீஸா.—** மழைபெய்யுமா, மழைக்காற்றடிக்குமா, அல்லது ஆகாயம் நிர்மலமாயிருக்குமா என்று காட்டுவதற்கு ஒரு ஸுலபமான கருவியிருக்கிறது. அதை யாவரும் செய்துகொள்ளலாம். குறைந்தது 7 அங்குலம் உயரமுள்ளதான ஒரு குறுகிய வெண்மையான கண்ணாடி ஸீஸா எடுத்துக்கொள்ளவும். முக்காலேயரைக்கால் தோலா ($2\frac{1}{2}$ ட்ராம்) எடை கற்பூரம், $1\frac{3}{8}$ ஔன்ஸ் (11 ட்ராம்) ஆல்கஹால் சாராயம், $1\frac{1}{8}$ ஔன்ஸ் (9 ட்ராம்) சுத்த ஜலம், கால்தோலா (38 க்ரெய்ன்) பொட்டிலுப்பு, கால் தோலா (38-க்ரெய்ன்) நவச்சாரம் ஆகிய இவைகளை ஒரு கண்ணாடிப்பாத்ரத்தில்போட்டுக்கலந்து, ஸீஸாவில் ஊற்றி மேலே கார்க்குப்போட்டு மூடிவிடவும். உள்ளேயிருக்கும் மருந்து ஜலத்துக்கும் வெளியிலுள்ள ஆகாயத்துக்கும் ஸம்பந்தமிருக்கவேண்டுமாகையால் கார்க்கில் குண்டூசியால் சிறிது த்வாரம் செய்யவும். இந்த ஸீஸாவை வீட்டு ஜன்னலில் வைத்துவிடவேண்டும். ஸீஸாவிலுள்ள ஜலம் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி மாறுதலடையும். உதாரணமாக ஆகாயம் நிர்மலமாய் காற்றில் ஜலவாயு ஸம்பந்தம் ரொம்பக் குறைவாயிருந்தால், ஸீஸாவிலுள்ள ஜலத்தில் கலந்திருக்கும் திடபதார்த்தங்கள் (கெட்டியான பொருள்கள்) அடியில் தங்கியிருக்க மேல்பாகத்து ஜலம் சுத்தமாயும் தெளிவாயும் இருக்கும். மழை வரும்போலிருந்தால் ஸீஸாவின் அடியிலுள்ள கெட்டியான பொருள்கள் பார்வைக்கு ஒரு சிறகுபோல் கூட்டமாய் எழுந்து உயரப்போகும். காற்றும் மழையும் ரொம்ப வரும்போலவிருந்தால் ஸீஸாவின் உள்புறம் முழுவதும் சிறுசிறு நீர்த்துளிகள் படிந்திருக்கும். பலமான காற்றுவீசினால் ஸீஸாவின் உள்புறத்தில் கார்க்குக்கு சற்று கீழ்பாகத்தில் மாத்ரம் நீர்த்துளிகள் படிந்திருக்கும். இந்த ஸீஸாவானது ஸாதாரணமாய் 24-மணிநேரத்துக்குப் பின்னால் உண்டாகும் சீதோஷ்ண நிலைமையைக்காட்டும். இதைப் பலமுறை கவனிப்பதால் ஆகாயநிலைமைகளுக்குத் தகுந்தபடி எந்தந்த விதங்களிலெல்லாம் ஸீஸாவின் ஜலம் மாறுமென்பதையறிந்துகொள்ளலாம்.

### Heating Water Without Fire.

**நெருப்பில்லாமல் ஜலத்தை சூடாக்குதல்.—** ஜலமுள்ள ஒரு பானையை நெருப்பின்மேல் வைக்காமலும் வேறு எந்தவித உஷ்ணமும் அதன் மேல் தாக்கவிடாமலும் அதிலுள்ள ஜலத்தைக் கொதிக்கவைக்கலாமாம். ஒரு மர அகப்பையைக் கொண்டு ஜலத்தை இடைவிடாமல் துழாவிக்கொண்டு வந்தால் ஜலம் சிறிது நேரத்துக்கெல்லாம் சூடடைந்துவிடும். ஸுமார் 5-மணி நேரம் விடாமல் துழாவினால் ஜலம் முதலில் ரொம்ப சூடாகிப் பிறகு கொதிக்கிறதாம். இதை அமெரிக்காவில் ஒருவர் செய்து காட்டினாராம்.

### How Smoke Injures Plants.

**புகையால் செடிகள் கெடுதலடைவது.—** தொழில்சாலைகளிலும் மற்றவிடங்களிலும் உண்டாகும் புகையால் அவைகளின் பக்கத்திலுள்ள மரஞ்செடி கொடிகளின் வளர்ச்சிக்கு ரொம்ப தடை ஏற்படுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால் புகையில் கரியும், தாரும், த்ராவகங்களும் இருப்பதே. இவைகள் மரஞ்செடிகளின்மேல் பட்டு அங்கேயே தங்கி அவைகளை அரித்துத் தின்று விடுகின்றன. தாரானது செடிகளின்மேல் ஒட்டிக்கொள்வதால், செடியானது தனது உள்புறத்திலிருந்து ஜலத்தை ஆவிரூபமாய் வெளிவிட முடியாமல் போகிறது. மேலும் புகையால் ஸூர்ய வெளிச்சம் குறைந்து போகிறது. ஸூர்ய வெளிச்சம் குறைவது செடிவளர்ச்சிக்கு பாதகமானது.

### Exploring a Volcano.

**எரி மலைக்குள் ப்ரவேசம்.—** கருங்கற்களை குழம்பாக உருக்கிக் கக்கும் எரி மலைகளின் உள்புறத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்கொண்ட, ப்ரொபஸர் அலெக்ஸாண்ட்ரோ மல்லாட்ரா என்பவர் 1912-ம் வர்ஷம் மே மாஸத்தில் இட்டலி தேசத்திலுள்ள வெஸுவியஸ் என்னும் எரிமலையின் முகத்வாரத்து வழியே, தைர்யமாய் உள்ளேசென்று, 1200 அடி ஆழம் வரை கீழே இறங்கிப் பார்த்து வந்தாராம். அது முதல் அநேகம் வித்வான்கள் போய்ப்பார்த்து வருகிறார்களாம். கடைசியாய்ப் போய்ப்பார்த்த பர்லிங்காம் என்னும் வித்வான், ஸினிமோடாகிராப் என்னும் யந்த்ரங்களைக் கொண்டு படங்கள் பிடித்து, லண்டன் முதலான பெரிய பட்டணங்களுக்கு வந்து, ஜனங்களுக்கு அந்தக் காட்சிகளை காட்டுகிறாராம்.—பூர்ண சந்திரோதயம்.

## SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Prevention of Plague.

**ப்ளேக் வாராமல் தடுப்பது.**—ப்ளேக் வராமல் தடுப்பதற்கு ஒரு ஸுலபமான முறையிருப்பதாகவும், அது ஓஸூரில் ரொம்ப ப்ரயோஜனமுள்ளதாய் இருந்ததாகவும் ஓஸூர் நிருபர் ஒருவர் சில பத்ரிகைகளுக்கு எழுதியிருக்கிறார். சென்ற வர்ஷத்தில் அந்த ஊரில் ஸுமார் 65-பேர்களுக்கு ப்ளேக் கண்டு அவர்களில் 34-பேர் இறந்து போய்விட்டார்களாம். ஆனால் இந்த வர்ஷம் அந்த நூதனமுறையைக் கையாடியதில் 6-ஜனங்களுக்கே ப்ளேக் நோய் கண்டதாகவும், 4-பேர் தான் இறந்ததாகவும், ஜனங்கள் வ்யாதி பயமில்லாமலும், ஊர் விட்டோட வேண்டுமே யென்ற கவலையில்லாமலும் இருப்பதாகவும் அந்த நிருபர் தெரிவித்திருக்கிறார். அந்த முறையாவது வீட்டில் ஹோமம் உண்டாக்கி அந்த நெருப்பில் சில செடிகளின் காய்ந்த குச்சிகளை (ஸமித்துகள்)ப் போட்டு நெய் ஆகுதி செய்து புகைய விடுவதே. அந்த ஹோமப் புகையானது நமது ச்வாஸத்தோடு தேகத்துக்குள் ரத்தத்தில் புகுந்து அதில் இருக்கக்கூடிய வ்யாதிக்ருமிகளைக் கொன்றுவிடுமாம். எருக்கன், முருக்கன், கருங்காலி, உத்திராணி, அத்தி, அரசு, வன்னி, அருகு, தர்ப்பை (நாணல் புல்) ஆகிய இவைகளின் காய்ந்த குச்சிகளை உபயோகிக்க வேண்டுமாம். நெய்யின் விலை அதிகமாயிருப்பதால் அநேகருக்கு இது செய்வதற்கு ஸாத்யமில்லாததாகத் தோற்றும். ஆனால் அந்த நிருபர், நெய் உபயோகிக்க முடியாதவர்கள் எல்லா ஸமித்துகளையும் சேர்த்து உபயோகிக்கலா மென்றும், அப்படிச் செய்வதும் முடியாவிட்டால் ஐந்தாறு தினுஸுகளையாவது சேர்த்து உபயோகிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார். இந்த முறையால் அதிக நன்மை யேற்பட்டிருக்கிறதென்று அந்த நிருபர் சொல்வதால் ப்ளேக் வ்யாதி பரவியிருக்கு மிடங்களிலுள்ளவர்களும், ப்ளேக் வ்யாதி வரக்கூடிய இடங்களிலுள்ளவர்களும் இந்த ஸுலபமான முறையைக் கையாடுவது நல்லது.

### Lime-water.

**சுண்ணாம்பு நீர்.**—வயிற்றில் புளிப்பு அதிகரித்து வருத்தப்படவேண்டி நேரிடும்போது சுண்ணாம்புத் தெளிவு நீர் அப்புளிப்பை அடக்கி அமைதியைத் தரக்கூடியது; ஒரு பலம் சுண்ணாம்பு நீற்றில் இரண்டு படி ஜலம் சேர்த்து கெட்டியான மூடியுள்ள ஒரு புட்டியில் விட்டு, சிறிதுநேரம் கழித்து, அப்புட்டியை இரண்டு மூன்று நிமிஷம் வரையில் நன்றாகக் குலுக்கி, கரையாமலிருக்கும் சுண்ணாம்புப் பொடிகள் அடியில் முற்றிலும் படியும் வரையில் புட்டியை ஓரிடத்தில் அசையாமல் வைத்திருந்து, பிறகு மேலே தெளிவாக நிறமற்று நிற்கும் ஜலத்தைமட்டும் மற்றொரு புட்டியில் வடித்து வைத்துக் கொள்ளவும்; இது சுண்ணாம்புத் தெளிவுநீர் செய்யும் முறையாகும். ஸுமார் 12-மணி ஸாவகாசமாவது கழித்து எடுத்தால் சுண்ணாம்புநீர் சுத்தமாயிருக்கும். நெருப்புப்பட்டு வெந்துபோன அவயவங்களின் எரிச்சலைத் தணிப்பதற்கும், அந்த ரணத்தை ஆற்றுவதற்கும் இது உபயோகமானது. அவ்வித ஆபத்தான ஸமயங்களில் சுண்ணாம்புநீர் அதிகமாகத் தெளிய வேண்டுமென்று எதிர்பாராமல் சுமார் அரை மணிநேரம் தெளியவைத்து அந்த நீரை உபயோகிக்கலாம். இந்த நீரை 1-முதல் 3-அவுன்ஸ்வரையில் உட்கொள்வதற்கும் உபயோகிக்கலாம். இரப்பையில் புளிப்பு அதிகரித்தல், நெஞ்செரிவு, அஜீர்ணம் அதிஸாரம், வாந்தி, சில குன்மவியாதிகள், விஷகுணமுள்ள தாதுப் பொருள்கள் குடலிற் சேருவதாலுண்டாகும் கெடுதி ஆகிய இவற்றில் உபயோகிக்க இது பெயர் போன ஔஷதம். ஜனனேந்த்ரியங்களிலுண்டாகும் எரிச்சல், மூலக்காம்பிலுண்டாகக்கூடிய புண்கள், நெருப்பு முதலியவற்றாலான எரிச்சல், பெரும்பாடு இவற்றில் மேலுக்குக்கழுவவும் இதை உபயோகிக்கலாம். இளங்குழந்தைகளுக்கு அஜீர்ணரோகங்களில் பாலுடன் கலந்து இதைப் புகட்டுவது நலம். ஆனால் ஒருதேக்கரண்டியளவு உபயோகிக்க வேண்டும்.—வைத்தியகலாநிதி.

### Selling Quinine to the People.

**ஜனங்களுக்கு க்வினைன் மருந்து விற்பது.**—போஸ்ட் மாஸ்டர்கள் க்வினைன் மருந்து விற்றுவருவது யாவருமறிந்த விஷயம்; இப்போது கவர்ன்மெண்டார் க்ராமபள்ளிக்கூடங்களின் உபாத்யாயர்களிடத்திலும், வாக்ஸினேடர்களிடத்திலும் க்வினைன் மருந்தைக் கொடுத்துவைத்து, அவர்கள் சிறிது கமிஷனுக்கு மருந்தை விற்கும்படி பரீக்ஷார்த்தமாக ஏற்பாடு செய்யப்போகிறார்கள்.



## LAW.

## சட்டம்.

### A Widow's Right to Collect Debts.

**கடன்களை வஸூலிக்க விதவையின் பாத்யதை.**—ஒரு ஹிந்து விதவை தன் புருஷன் இறந்துபோன சிறிது காலத்துக்கெல்லாம் புருஷனுக்குச் சேரவேண்டிய கடன்களை வஸூல் செய்வதற்கு அதிகாரம் ஏற்படும்படி ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில் ஒரு ஸர்டிபிகேட்டுக்கு மனுப்போட்டாள். புருஷனுடைய ஸகோதரர் குடும்பம் பாகமாக வில்லையென்றும், கடன்களை வஸூலிக்க விதவைக்கு பாத்யமில்லை யென்றும் சொல்லி ஆக்ஷேபித்தார். ஜில்லா ஜட்ஜ் ஒரு ஸாக்ஷியை மாத்ரம் விசாரித்து ஒரு பத்ரத்தைப் பார்வையிட்டு, குடும்பம் பாகமாய் விட்டதென்று நிர்ணயித்து, விதவைக்குகடன்களை வஸூலிப்பதற்கு பாத்யதை யுண்டென்று சொல்லி ஸர்டிபிகேட் கொடுக்கும்படி உத்தரவு போட்டார்.

இறந்துபோன புருஷனுடைய ஸகோதரர் இந்த உத்தரவின்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். எப்படியும் ஸகோதரருக்கு கடனில் அனந்தர வார்ஸு பாத்யதை உண்டென்றும், அந்தக் கடன்களை விதவை இறந்த பிறகு வஸூலிக்க அவருக்கு பாத்யதை உண்டென்றும், ஆகையால் விதவைக்குக் கொடுக்கப்பட்ட ஸர்டிபிகேட்டை ரத்து செய்துவிடவேண்டுமென்றும், அப்பீல்தாருடைய வக்கீல் வாதித்தார். ஆனால் ஹைக்கோர்ட்டார் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல், குடும்பம் பாகமாயிருப்பதாகத் தெரியவருவதால், விதவை கடனை வஸூல் செய்வதற்கு முன்னால் அவள் அந்தக் கடன் தொகைக்கு ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று சொல்வது சரியல்லவென்று தீர்மானித்து கீழ்க் கோர்ட்டின் தீர்ப்பை உறுதி செய்தார்கள்.

### Mortgage on Immoveable Property.

**ஸ்தாவர ஸொத்தின்மேல் ஈடு.**—ஒரு டிக்ரியின் மேல் போட்ட நிறைவேற்று நடவடிக்கையில் ஒரு ஸ்தாவர ஸொத்து கோர்ட்டில் விற்பனைக்கு வந்தது. அந்த ஸொத்தின்மேல் ஒரு ஈடு இருப்பது தெரியாமல் ஒருவர் அந்த ஸொத்தை விலைக்கு வாங்கிக்கொண்டார். பிறகு சிலகாலத்துக்கெல்லாம் அந்த ஸொத்தை மூன்றாம் மனிதர் ஒருவருக்கு விற்றார். அந்த மூன்றாம் மனிதருக்கும் ஈடு இருப்பது தெரியாது. அதன் பிறகு ஈடு இருப்பது வெளியாயிற்று. ஈட்டுக்கடன் கொடுத்தவர் வ்யாஜ்யம் போட்டதில் இரண்டாவது தடவை வாங்கினவர் ஈட்டுத் தொகையை ஈட்டுக்கடன் கொடுத்தவருக்கு செலுத்தவேண்டுமென்று தீர்ப்புச் செய்யப்பட்டது.

ஆனால் அதற்காக இரண்டாவது தடவை வாங்கினவர் முதலில் வாங்கினவரிடமிருந்து நஷ்டஈடுபெற பாத்ய முள்ளவராகமாட்டார். ஏனென்றால் கோர்ட் விற்பனையில் ஸொத்துவாங்குபவர் அந்த ஸொத்தை யொட்டிய லாபங்களை யடைவதன்றி, அதன் மேலுள்ள கடன் வகையறாக்களுக்கும், கட்டுப்பட்டே அந்த ஸொத்தை வாங்குகிறவராகிறார்.—

2 லா வீக்லி 517.

### Consideration for Promissory Note.

**ப்ராமிஸ்ஸரி நோட்டுக்கு ப்ரதி ப்ரயோஜனம்.**—வாதி முதல் ப்ரதிவாதி மேலும் அவரது தகப்பனார் மேலும் கடனுக்காக வ்யாஜ்யம் போட்டு தமக்கு ஸாதகமாக தீர்ப்புப்பெற்று தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக சில ஸொத்துகளை ஜப்திசெய்தார். ஜப்திசெய்த ஸொத்துக்களை அப்புறப்படுத்த வந்த அமீனை முதல் ப்ரதிவாதியும் அவருடைய தகப்பனாரும் தடுத்துவிட்டார்கள். அதன்மேல் வாதி கோர்ட்டின் அனுமதிபெற்று ப்ரதிவாதிகளை ப்ராஸிக்யூட் செய்தார். அந்தக் கேஸ் விசாரணைக்கு வந்த வன்றையதினம் முதல் ப்ரதிவாதியும் அவருடைய மாமனாரும் வாதிக்கு டிக்ரித் தொகைக்கு ஒரு ப்ராமிஸரி நோட் எழுதிக் கொடுத்தார்கள். அதன்மேல் வாதி க்ரிமினல் கேஸை வாபஸ் வாங்கிக்கொண்டார். பிறகு வாதி ப்ராமிஸரி நோட்டின் மேல் வ்யாஜ்யம் போட்டதில் கோர்ட்டார் ப்ராமிஸரி நோட்டுக்குக் காட்டியுள்ள ப்ரதி ப்ரயோஜனம் சட்டஸம்மதமில்லை யென்றும், ஆகையால் வாதி ப்ராமிஸரி நோட்டில் கண்ட தொகையை அடைய முடியாதென்றும் தீர்ப்புச் செய்தார்கள்.

### Stridana.

**ஸ்த்ரீதனம்.**—ஒரு ஸ்த்ரீ ஒரு ஸொத்தை வாங்கினாள். அதற்குக் கொடுக்கவேண்டிய பணத்துக்கு அந்த ஸொத்தை இன்னொருவருக்கு ஈடுவைத்துப் பணம் வாங்கி ஸொத்து விற்றவருக்குச் செலுத்தினாள். பிறகு காலக்ரமத்தில் ஈட்டை மீட்டுக்கொண்டாள். இந்த ஸ்த்ரீயின் ஸொத்து யாரைச் சேருமென்பது கேள்வி. ஒருஸ்த்ரீ புருஷர்களால் தனக்கு வந்த ஸொத்துக்களிலிருந்து யாதொரு உதவியும் இல்லாமல் தனது புத்திசாதுர்யத்தால் ஒரு ஸொத்தை யடைந்தால், அது அவளுடைய ஸ்த்ரீதனமாகும். அது அவளுக்குப் பிறகு அவளுடைய வார்ஸுகளுக்குப் போகும். பெண்களும் பிள்ளைகளும் இருந்தால் ஸொத்து பெண்களுக்குப் போகும்.—2 லா வீக்லி 415.

## PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Rao Bahadur A. C. Pranatharthi Hara Iyer.

**ராவ்பகதூர் எ. ஸி. ப்ராணதார்த்திஹர அய்யர்.**- சென்னை ராஜதானியில் 4-வது ஸர்க்கிள் என்று சொல்லப்படும் ப்ரஸிடென்ஸி ஸர்க்கிள் ஸ்கூல் இன்ஸ்பெக்டராயிருந்த ராவ்பகதூர் எ. ஸி. ப்ராணதார்த்திஹரய்யர் இந்த மாஸம் 6-ந்தேதியோடு தமது வேலையிலிருந்து பென்ஷன்பெற்று விலகிக்கொண்டார். அவர் மாகாண எடுகேஷனல் ஸர்விஸில் ரூ. 700 சம்பளம் வாங்கும்முதல் வகுப்பு உத்யோகஸ்தராயிருந்தார். அவர் 36-வர்ஷம் கல்வியிலாகாவில் உத்யோகம் பார்த்து வந்திருக்கிறார். மிஸ்டர் ப்ராணதார்த்தி ஹரய்யர் தஞ்சாவூர்ஜில்லா நீடாமங்கலத்தையடுத்துள்ள பூவனூர் க்ராமத்தில் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அவர் பால்யத்திலேயே கும்பகோணத்தில் வாசிக்க ஆரம்பித்தார். அவர் கும்பகோணம் காலேஜில் மிஸ்டர் போர்ட்டர், ராய்பகதூர் கோபாலராவ், திவான்பகதூர் ஆர். வி. ஸ்ரீனிவாஸய்யர் முதலியவர்களிடம் வாசித்து 1878-ம் வர்ஷத்தில் பி எ. பரீக்ஷை தேறினார். பீ. எ. யில் தேறினதும் கவர்ன்மெண்டு நார்மல் ஸ்கூலில் வாசித்து உபாத்யாயர் தொழிலில் பயிற்சியடைந்து, நரஸாப்பூர் டெய்லர் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராக வேலையில் அமர்ந்தார். பிறகு பல்லாரி முனிஸிபல் ஹைஸ்கூலில் ஹெட்மாஸ்டராகப் போனார். 1889-ம் வர்ஷத்தில் அவர் ஆக்டிங் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராய் நியமிக்கப்பட்டார். பிறகு காலக்ரமத்தில் அந்தவேலை காயமாகி, இன்ஸ்பெக்டர் வேலையும் கிடைத்தது. அவர் சிலகாலம் டெபுடிடிரெக்டராக வேலைபார்த்து வந்தார்.

அவருக்கு 1911-ம் வருஷத்தில் ராவ்பகதூர் பட்டமும், 1913-ம் வருஷத்தில் இம்பீரியல் ஸெர்விஸ் ஆர்டர் (ஐ. எஸ். ஓ) என்ற அந்தஸ்தும் கொடுக்கப்பட்டன.

1913-ம் வருஷத்தில் சென்னையில் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் கூடினபோது அவர் ஒரு ஸாக்ஷியாக விசாரிக்கப்பட்டார். இந்தியர்கள் காலேஜ் போதகர் வேலை பார்ப்பதிலும், இன்ஸ்பெக்டர் வேலைபார்ப்பதிலும் ஐரோப்பியர்களுக்குப்பின் வாங்குகிறவர்களல்லவென்றும், அவர்களைவிட ஸாமர்த்ய சாலிகளே யாவார்களென்றும் அவர் அபிப்ராயமுடையவர். இந்த அபிப்ராயத்தை ஷை கமிஷனில் கூசாது வெளியிட்டுச் சொன்னார்.

### Late Mr. A. Raja Ram Iyer.

**காலஞ்சென்ற மிஸ்டர் ராஜாராமய்யர்.**—மதுரைக் காலேஜின் ப்ரின்ஸிபலாக இருந்துவந்த மிஸ்டர் எ. ராஜாராமய்யர் இந்த மாதம் 23-ந்தேதியன்று ஹ்ருதய வ்யாதியால் இறந்துபோனதைக்கேட்டு விஸனிக்கிறோம். அவர் சிலகாலமாக மூளையில் ரத்த ஓட்டக் குறைவு ஏற்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

அவர் 1866-ம் வருஷத்தில் மதுரை ஜில்லாவில் பிறந்தார். திருச்சி ஸெண்ட் ஜோஸப் காலேஜில் வாசித்து 1884-ம் வருஷத்தில் பி. எ. பரீக்ஷையில் தேறி, மதுரை நேடிவ் ஹைஸ்கூலில் ஒரு உபாத்யாயராக அமர்ந்து அங்கே சிலகாலமிருந்து பிறகு 1911-ம் வருஷத்தில் கள்ளிக்கோட்டை ஸாமோரின் காலேஜில் ப்ரின்ஸ்பலாகப் போனார். ஒரு வருஷங்கழித்து மதுரைக் காலேஜுக்கு ஆக்டிங் ப்ரின்ஸிப்லாகவந்து, அதன் காயமான ப்ரின்ஸ்பல் இறந்துபோனதின்மேல், அவரே அந்த வேலைக்குக் காயமாக்கப்பட்டார். அவருடைய ஊக்கத்தாலும் முயற்சியாலும் காலேஜில் ஒரு ஹொஸ்டல் கட்டுவதற்கு கவர்ன்மெண்டார் 38,000 ரூபாய் க்ராண்டு கொடுத்தார்கள்.

மிஸ்டர் ராஜாராமய்யர் கல்வி விஷயங்களிலும், மதுரைப்பட்டணத்து பொதுஜன விஷயங்களிலும் அதிக ஊக்கம் பாராட்டி வந்தார். அவர் தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிஸிபல் கௌன்ஸில் ஆகிய இவைகளில் மெம்பராக இருந்துவந்தார். அவர் சில காலம் மதுரையில் உள்ள ஒரு பத்ரிகைக்கு பத்ராசிரியராக இருந்துவந்தார்.

### Dr. P. Kesava Menon.

**டாக்டர் பி. கேசவமேனன்.**—காலஞ்சென்ற மிஸ்டர் பி. க்ருஷ்ணமேனனுடைய குமாரரான டாக்டர் பி. கேசவமேனன் ஐ. எம். எஸ். என்னும் வைத்ய உத்யோகப் பரீக்ஷையில் தேறியிருக்கிறாரென்றும், அவர் இப்பொழுது இங்கிலாந்திலுள்ள ப்ரைடென் மிலிடெரி ஆஸ்பத்திரிக்குவரும் காயமடைந்த இந்திய ஸோல்ஜர்களுக்கு சிகிச்சை செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும் தெரியவருகிறது. அவருக்கு இப்பொழுது 500 பவுன் வர்ஷ சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஐ. எம். எஸ். பரீட்சையில் தேறின மலையாளிகளில் அவர் இரண்டாவதாவர். முதல் மாணவர் திருவாங்கூரைச் சேர்ந்தவர்.



## SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

### Drink in England.

**இங்கிலண்டில் மதுபானம்.**—ஜெர்மனி, ப்ரான்ஸ், ரஷ்யா ஆகிய இந்த தேசங்களின் கவர்ன்மெண்டார் மதுபானத்தைத் தடுக்க சட்டங்கள் செய்திருக்கிறார்கள். இங்லண்டில் இதற்காக யாதொரு சட்டமும் செய்யப்படவில்லை. யுத்தமந்த்ரியாகிய லார்ட் கிச்சனர்மாத்ரம் யுத்த ஆரம்பத்தில் ஸோல்ஜர்கள், மதுபானம், பரஸ்த்ரி ஆகிய இவைகளை விலக்கிவிடவேண்டுமென்று அவர்களுக்கு புத்திமதி சொல்லியனுப்பினார். இங்லண்டிலுள்ள மற்ற ஜனங்கள் குடியைக் கொஞ்சமும் குறைக்கவில்லை. யுத்த ஸாமான்கள் தயார் செய்யும் தொழிற்சாலைகளிலும், மற்ற தொழில்சாலைகளிலும் வேலைசெய்துவரும் தொழிலாளிகள் தங்களுக்கு வரும் சம்பளத்தில் ஒருபாகத்தைக் குடிப்பதில் செலவழித்து சரியானபடி வேலைசெய்யாம லிருந்துவருகிறார்களாம். இதனால் யுத்தத்துக்கு வேண்டிய ஆயுதங்கள், மருந்துகள், மற்றஸாமான்கள் முதலியவைகள் வேண்டிய அளவில் சீக்ரமாகத் தயாராவதில்லை. கப்பல் கட்டும் தொழில்சாலைகளின் தலைவர்களும், குடியால் ரொம்ப பாதிக்கப்பட்டவர்களாய் சில நாள்களுக்கு முன்னால் தக்கசட்டம் ஒன்று செய்யும்படி இங்லண்டின் வரவுசெலவு மந்த்ரியைக் கேட்டுக்கொண்டார்கள். இவ்விஷயங்கள் நமதரசருக்குத் தெரியவரவே, தாம் மதுபானங்கள்செய்து மற்றவர்களை மதுபானம் செய்யக்கூடாதென்று கட்டளையிடுவதைவிட, தாமே மதுபானத்தை நிறுத்திவிட்டால் தம்மைப்பார்த்து மற்றவர்களும் சீர்திருந்தலாமென்றெண்ணி, அவ்விதமே தமது எண்ணத்தை வெளியிட்டதோடு, தமது அரண்மனைகளில் இனிமேல் மதுபானவகைகள் வரக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறார். அரசரைப் பார்த்து அநேக மந்த்ரிகளும், ப்ரபுக்களும மதுபானத்தை நிறுத்தியிருக்கிறார்களென்று தெரிகிறது. இவர்களைப் பார்த்து மற்ற ஜனங்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் குடியை நிறுத்திவிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### Varnasrama Dharma Samrakshana Sabha.

**வர்ணாச்ரம தர்ம ஸம்ரக்ஷண ஸபை.**—இந்த மாஸம் முதல் தேதி யன்று ஸுமார் 100 ப்ரமுகர்கள் சென்னை மைலாப்பூரில் ஒரு மீட்டிங்கு கூடி வைதிக ஹிந்து மதத்தைப் பாதுகாப்பதற்காக ஒருஸபை ஏற்படுத்தினார்கள். அதன் பெயர் வர்ணாச்ரம தர்ம ஸம்ரக்ஷணஸபா. ப்ராசீன லக்ஷ்யங்களைப்பற்றிய அறிவைப் பரவச்செய்தலும், அந்த லக்ஷ்யங்களை யடைவதின் அவச்யத்தை ஜனங்களுக்கு வற்புறுத்துவதும், இவைகளை செய்துவர சென்னையில் ஒரு ஸங்கம் ஏற்படுத்தி அதற்கு வெளியூர்களில் கிளைகள் ஸ்தாபிப்பதும் இந்த ஸபையின் முக்ய நோக்கங்களாம். இந்த ஸபையார் மதஸம்பந்தமான க்ரந்தங்களின் உண்மையான தாத்பர்யத்தை ஜனங்களுக்குக் கற்பிக்க தேசபாஷைகளிலும் இங்லீஷிலும் பத்ரிகைகள் ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள். ஹிந்து மதவிஷயங்களையும் ஸன்மார்க்கங்களையும் சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பிக்க பாடசாலைகள் ஏற்படுத்துவதும், பண்டிதர்களுக்கு ஸன்மானங்கள் கொடுக்க பற்பலவிடங்களில் ஸபைகள் ஏற்படுத்துவதும், மதஸம்பந்தமான துண்டுப்பத்ரிகைகளும் சிறு புஸ்தகங்களும் ப்ரசுரம் செய்வதும் இந்த ஸபையார் மேற்கொள்ளப்போகும் மற்ற வேலைகளாகும். நித்ய நைமித்திக கர்மாக்களை ஏற்றுக்கொள்ளும் ஹிந்துக்கள் எல்லாரும் இந்தஸபையில் சேரலாம்.

### Post Puberty Marriage.

**ருதுவானபின் விவாகம்.**-ஐயர்லண்டிலுள்ள இந்தியர்கள் சென்ற மார்ச்சுமாஸம் 28-ந் தேதியன்று டப்ளின் என்னும் பட்டணத்தில் ஒரு மீட்டிங் கூடி ஆனரபிள் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியார் சென்னை சட்டஸபையில் கொண்டு வந்திருக்கும் ருதுமதிவிவாக மசோதாவை ஆதரித்து சில தீர்மானங்கள் செய்தார்கள்.

கல்வியின் பொருட்டு வெளி தேசங்களுக்குச்சென்று அங்கே பல வருஷங்களிருந்து ஸுமார் 25-அல்லது 30-வயதில் திரும்பி வருகிறவர்களை எழெட்டு வயதுப் பெண்களை விவாகம் செய்து கொள்ளச் சொன்னால், அவர்கள் அதற்கிஷ்டப்படாமல், தங்கள் வயதுக்குத் தக்க பெண்களை விவாகம் செய்துகொள்வதற்காக ஹிந்து ஸமூகத்திலிருந்து நீங்கி கிறிஸ்தவர்களாய்விட வேண்டியிருக்கிறதென்றும், ஆகையால் ஷை மசோதாவை கவர்ன்மெண்டார் அவச்யம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Cleaning Sponges.

**கடற்பஞ்சுகளை சுத்தம் செய்தல்.**—ஸ்பஞ்ஜ் என்னும் கடற்பஞ்சு அழுக்கடைந்துபோனால், இரண்டு தேயிலைக்கரண்டி கந்தக த்ராவகத்தை, ஒரு படியில் மூன்றில் ஒருபாகம் ஜலமெடுத்து அதில் கலந்து, அந்த த்ராவகம் கலந்த ஜலத்தில் கடற்பஞ்சை இரண்டுமணி நேரம் போட்டுவைத்திருந்து, பிறகு பலதடவை அலசியெடுத்து, த்ராவகம் போவதற்காக சுத்தஜலத்தில் அலசியெடுக்கவும். கடற்பஞ்சு புதியதுபோல இருக்கும்.

### Stains in Flannels.

**ப்ளானல் துணிகளில் கறைகள்**—வெண்மையான ப்ளானல் துணிகளில் கறைகள் பட்டு அழுக்கடைந்திருந்தால் க்ளிஸரின் என்னும் மருந்தை இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் வாங்கி, அதோடு ஸரியளவு முட்டையின் மஞ்சள் கருவைச்சேர்த்துக் கலக்கி, கறையின்மேல் தடவி அரைமணிநேரம் அப்படியே விட்டிருந்து பிறகு துணியை ஸாதாரணமாய் சுத்தம்செய்வதுபோல் சுத்தம்செய்தால் கறைகள் விட்டுப்போகும்.

### Hair Brushes.

**தலைமயிர் ப்ரஷ்கள்.**—தலைமயிரை வாருவதற்கு உபயோகிக்கும் ப்ரஷ்களை நல்ல நிலைமையில் வைத்திருக்கப் பின்வருமாறு செய்யவும். வெது வெதுப்பான ஜலத்தில் ஸோடா மாவையும், வெண்காரத்தையும் கரைத்து அதில் ப்ரஷை சுத்தம் செய்து, பிறகு ரொம்ப சூடான ஜலத்தில் கொஞ்சம் படிக்காரத்தைக் கரைத்து, அந்த ஜலத்தில் ப்ரஷினுடைய மயிர்களை நனைத்து எடுக்கவும்.

### Tomato.

**சீமைத்தக்காளி.**—பல்வலி உவலித்தால் சீமைத்தக்காளிப் பழத்தில் ஒரு துண்டை இரவில் வாயில் போட்டு வைத்துக்கொண்டிருந்தால் வலி நீங்கும். சீமைத்தக்காளியின் சாற்றை இங்கிக் கறையின்மேல் தேய்த்தால் கறை விட்டுப்போகும். துணியில் கறைபட்டபாகத்தின் அடியில் ஒரு ப்ளாட்டிங் கடுதாசியை வைத்து கறைமேல் சீமைத்தக்காளிப் பழத்தை அதன் மேல் தேய்க்கவேண்டும். ப்ளாடிங் கடுதாசி ஈரமாய்ப் போனால் அதை எடுத்து விட்டு புதுக்கடுதாசி உபயோகிக்கவேண்டும்.

### To Stop Bleeding.

**ரத்தம் வருவதை நிறுத்த.**—தேகத்தில் பெரிய ரத்தக் குழாய்கள் காயமடையாமல் ஸாமான்யமான ரத்தக் குழாய்களில் காயமேற்பட்டு ரத்தம் வந்தால், அதை நிறுத்துவதற்கு ஒரு தேயிலைக் கரண்டியளவு படிக்காரத்தூளை ஒரு கோப்பை ஜலத்தில் கரைத்து காயத்தின்மேல் தடவவும். மூக்கில் ரத்தம் வந்தாலும் அந்த ஜலத்தை உறிஞ்சினால் ரத்தம் வருவது நின்றுபோகும்.

### Cleaning Metal Articles.

**உலோகத்தால் செய்த ஸாமான்களை சுத்தி செய்ய.**—செம்பு, பித்தளை, நிக்கல், ஜெர்மன் வெள்ளி, வெள்ளி ஸாமான்களில் களிம்பு பிடித்து பச்சையாயும் அழுக்காயுமிருந்தால் அவைகளை ஓர் புதிய மண் சட்டியில் போட்டு ஜலம்விட்டு அதில் ஸன்னமான சீயக்காய் தூளையும், கால் பாகம் உப்பையும் போட்டு கொதிக்க வைத்து அலம்பினால் அவைகள் சுத்தமடைந்துவிடும்.

### Cleaning Diamonds.

**வைரங்களை சுத்திசெய்தல்.**—1. ப்ளாட்டிங் காகிதத்துண்டாலும் ம்ருதுவான துணியை ஸ்பிரிட் அல்லது ஒடிகுலோன் என்னும் சாராயத்தில் நனைத்து அதனாலும், தேய்த்து துடைக்கலாம். 2. செங்கல்மாவு கொண்டு சுத்திசெய்வது முண்டு.—விச்வகர்ம குலோபகாரி.

### Treatment for Swelling.

**வீக்கங்களுக்கு சிகித்ஸை.**—சீமை யிந்துப்பை சிறிது ஜலத்தில் கரைத்து வீக்கங்களின்மேலும் வலியுள்ள விடங்களிலும் உபயோகிப்பதால் வலி சாந்தமாகும். வீக்கமும் குறைந்துவிடும். இந்த உப்பு ஜலத்தை வஸ்த்ரத்தில் அல்லது பஞ்சில் நனைத்து வீக்கம் அல்லது வலியுள்ள விடத்தில் விடாமல் வைத்து வரவேண்டும்.

—வைத்திய கலாநிதி.

### Polishing Zinc Articles.

**துத்திநாக ஸாமான்களை பளப்பளப்பாக்குதல்.**—துத்திநாகப் பாத்ரங்களை கிரஸின் எண்ணெயைக் கொண்டாவது, சிறிது கந்தகத்ராவகம் கலந்த ஜலத்தைக் கொண்டாவது தேய்த்தால், அவைகள் ரொம்ப ப்ரகாசமடையும்.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Duration of the Action of Manures.

**உரங்கள் பயன்படும் காலம்.**—இங்க்லண்டிலுள்ள ராதம்ஸ்டட் என்னுமிடத்துப் பண்ணையில் உரங்கள் எவ்வளவு காலம் பயிர்களுக்கு ப்ரயோஜனப்படும் என்பதையறிய சில பரீக்ஷைகள் செய்தார்கள். பிண்ணாக்கு முதலிய அதிக ஸத்துள்ள தீனியை மாடுகளுக்குக் கொடுத்துக் கிடைக்கும் தொழுவத்தெருவை நிலத்துக்குப்போட்டால், பயிர் முதல் பருவத்தில் நல்ல பலன் கொடுக்கிறதாம். இரண்டாவது பயிரில் அதிக பலன் கிடைப்பதில்லை. பிறகு அந்த எருவால் ப்ரயோஜனம் ஒன்றுமிருப்பதில்லை.

மாடுகளுக்கு வைக்கோல், காய்ந்தபுல் முதலியமட்டமான தீனிபோடுவதால் கிடைக்கும், நன்றாய் ஜீர்ணமாகாத எருவை நிலத்துக்குப் போட்டால் உடனே பலன் கொடுப்பதில்லை. அந்த எருவின் ப்ரயோஜனம் மெதுவாகத்தான் தெரிகிறது. இது நிலத்தில் வீணாகப் போவதில்லை. பல வருஷங்கள் வரையில் இந்த எருவானது பயிர்களுக்கு ப்ரயோஜனப்பட்டு வருகிறது. ஆனால் ஸாதாரணமாக நான்கு வர்ஷம் வரையில்தான் இந்த எருவின் ப்ரயோஜனம் நன்றாய்த் தெரியவரும். நைட்ரோஜின் ஸம்பந்தமான எருக்களில், அம்மோனியங்கலந்த உரங்களும், நைட்ரேட் அப் ஸோடாவும் முதல் வர்ஷம் மாத்ரம் ப்ரயோஜன முள்ளவைகளாக இருக்கின்றன. கம்பளிரோமம், மயிர், மீன் எரு முதலிய நைட்ரோஜின் ஸம்பந்தமான எருக்கள் 4-வர்ஷங்கள் வரையில் பலன் கொடுக்கக் கூடியவை. இவைகளில் சேதம் எற்படுவதில்லை. பாஸ்பாரிக் ஆஸிட் ஸம்பந்தமான எருக்கள், கரையக்கூடிய தன்மையிலிருந்தாலும், நிலத்தில் வீணாய்ப்போகாமல், பயிர்கள் அவைகளை க்ரஹித்துக்கொள்ளுகிறவரையில், ப்ரயோஜனப்பட்டுவருகின்றன.

### Cultivation of the Bitter Orange.

**நாரத்தை ஸாகுபடி.**—நாரத்தைக் கன்றுகளை 15 முதல் 18 அடி தூரத்திற்கு ஒன்றாய் நட்டு அவைகளில் அப்போதைக்கப்போது காய்ந்துகொண்டுவரும் கிளைகளைக் கபாத்துசெய்து, செடிகளில் காற்றோட்டம் படாமலும் சூரிய உஷ்ணம் படாமலும் செய்யும் அடர்த்தியான கிளைகளை அப்போதைக்கப்போது வெட்டி, காற்றும் ஸூர்ய வெப்பமும் செடிகளுக்குப் படும்படி செய்வதுடன், செடிகளைச்சுற்றி அவைகளில் நிழல் படும் விஸ்தீரணம்வரை சுமார் ஒரு அடி ஆழத்திற்குக் குறையாமல் வருஷத்திற்கு இரண்டுதரம் கொத்தி பாத்திகட்டி, ஆட்டுச்சாணி, மீன் எரு இவைபோலொத்த எருக்களைவைத்து தண்ணீர் இறைத்துக் கொண்டுவந்தால் சரியான பலன் கொடுக்குமென்பதில் ஸந்தேகமில்லை.—கிருஷிகன்.

### Export of Cattle.

**கால் நடைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது.**—சென்னை ராஜதானியிலிருந்து பினாங்கு, சிங்கப்பூர், மலேயா ஆகிய இந்த விடங்களுக்கு கால்நடைகள் ஏற்றுமதி செய்வதைப்பற்றி ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்ட் அதாவது பினாங்கு சிங்கப்பூர் முதலிய விடங்களின் கவர்ன்மெண்டார் சில நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாகப்பட்டணத்திலுள்ள வெடிரினரி அஸிஸ்டெண்டுக்குத் தெரிந்தமட்டில் ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்டுகளுக்கு அனுப்பப்படும் கால்நடைகள் கால்நடை வ்யாதிகள் இல்லாத விடங்களிலிருந்து வந்தனவாக இருக்கவேண்டும். கால்நடைகளைக் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னால் வெடிரினரி அஸிஸ்டண்ட் கால்நடைகளை நேரில் பரிசோதித்து அவைகள் வ்யாதியில்லாமலிருப்பதாகத் தெரிந்தால் மட்டும் அவைகளைக் கப்பலில் ஏற்றவேண்டும்.

### Price of Agricultural Crops.

**விவஸாய விளைபொருள்களின் விலை.**—1915-ம் வர்ஷத்திலும், 1916-ம் வர்ஷத்தின் முற்பாதியிலும் பருத்தியின்விலை குறையக்கூடும். அவுரி, சர்க்கரை இவைகளின் விலை அதிகமாகக்கூடும். புஞ்செய், தான்யங்களின் விலையும் அதிகமாகலாம். நெல்லின் விலை குறையுமோ ஏறுமோ சொல்லமுடியாது. நிலக்கடலையின் விலை அநேகமாய்க் குறைந்துகொண்டே வரலாம். ஆனால் யுத்தம் முடிந்துவிட்டால் 1916-ம் வர்ஷத்தில் நிலக்கடலையின் விலை மறுபடியும் அதிகமாகலாம் என்று தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் தெரிவிக்கிறார்.

### Banana tree.

**வாழை மரம்.**—ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜனங்கள் கோடை காலங்களில் வாழைப்பட்டைகளையும் தண்டுகளையும் மாடுகளுக்குத் தீனியாகப் போடுகிறார்களாம். ஒரு பெரிய மாட்டுக்கு ஒரு மரம் போதுமாம். பட்டைகளை நீளத்துண்டுகளாக வெட்டிப்போடுகிறார்களாம்.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

## Organisation Societies.

**ஐக்ய ஸங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு ஸங்கங்கள்.**—இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், ஐயர்லண்ட் ஆகிய இந்த மூன்று ப்ரிட்டிஷ் நாடுகளில் கோவாபரேடிவ் முயற்சியைப் பரவச்செய்து ஸங்கங்கள் ஸ்தாபிப்பதற்கு ஆர்கனிஸேஷன் ஸங்கங்கள் என்ற ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கோவாபரேஷன் விஷயமாய் இன்னின்ன வேலைகள் செய்கின்றன வென்பதைத் தெரிவிக்கிறோம்.

(1) கோவாபரேஷன் முயற்சி பரவும்படி ஏற்பாடு செய்தல், கோவாபரேஷன் ஸம்பந்தமான ப்ரசுரங்களையும், துண்டுப் பத்ரிகைகளையும் ப்ரசுரம் செய்தல், ப்ரஸங்கங்கள் செய்வதற்கு ஏற்பாடுசெய்தல்.

(2) ஸங்கங்கள் ஸ்தாபனம் செய்வதற்கு ஆலோசனை சொல்வது; வேண்டிய உதவி செய்வது.

(3) தங்களைச் சேர்ந்த ஸங்கங்களை பரிசோதனை செய்தல்.

(4) ஸங்கங்களுக்கு ரஸாயன சாஸ்த்ரிகளைக் கொண்டு பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்தல், கணக்குகளை சரியாய் வைக்கத்தக்க நிபுணர்களின் உதவியை ஸம்பாதித்துக் கொடுத்தல், ஸாகுபடி செய்வதிலும், மாஸூலை விற்பனை செய்வதிலும் வேண்டிய உதவி செய்தல்.

(5) கோவாபரேடிவ் ஸங்கங்களை பாதிக்கக்கூடிய சட்டங்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்து, அந்த சட்டங்களால பாதகம் நேரிடுமானால் அவைகளுக்குத்தக்க பரிஹாரங்களை யோசித்துச் சொல்வது.

(6) வேண்டிய விடங்களில் பொருள் காட்சிகள் வைத்து நடத்தி, இனாம்கள் கொடுப்பது.

(7) ஸ்வல்ப வரும்படியுள்ளவர்களுக்கு பொருளபிவ்ருத்தியும் ஸன்மார்க்க அபிவ்ருத்தியும் ஏற்படுவதற்காக எல்லா வேலைகளிலும் கோவாபரேஷன் முறை ஏற்படும்படி பாடுபடுவது.

இப்படிப்பட்ட ஸங்கங்கள் இந்தியாவில் ஏற்பட்டால் கோவாபரேஷனில் ரொம்ப அபிவ்ருத்தி ஏற்படும்.

## Societies for Agricultural Improvement.

**விவஸாய அபிவ்ருத்திக்கான ஸங்கங்கள்.**—மெம்பர்கள் விதை, எரு, விவஸாயக் கருவிகள் முதலிய ஸாமான்கள் வாங்குவதில் உதவி செய்வதற்காக இந்த ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. சென்னை ராஜதானியில் இப்பொழுது இந்த மாதிரி ஸங்கங்கள் 6-இருக்கின்றன. இவைகளில் ஒன்றாகிய (ராமநாதபுரத்திலிருக்கும்) வடமலைபுரம் ஸங்கத்தார் ஸ்வல்பபூமியில் கலப்பில்லாத கருங்கண்ணிப் பருத்தியை ஸாகுபடி செய்து வருகிறார்கள். அதோடு அந்த ஸங்கத்தார் எரு, கால் நடைத் தீனி, தண்ணீர்ச் சால்களுக்குத் தோல்கள், கிணறுகளுக்குத் தாம்புகள் முதலியவைகளை மொத்தத்தில் வரவழைத்து மெம்பர்களுக்கு விற்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஆவல்நத்தம், லிங்கம்பட்டி ஸங்கங்கள் கலப்படமில்லாத சுத்தமான கருங்கண்ணிப்பருத்தி ஸாகுபடியைப் பரவச்செய்வதில் ரொம்ப முயற்சி யெடுத்து வருகின்றன. ஊத்தங்குடி ஸங்கமானது கால்நடைத்தீனி, எருமுதலியவைகளை வாங்கி மெம்பர்களுக்கு விற்பதோடு, விவஸாயிகளுக்குள் திருந்திய கலப்பைகளைப் பரவச்செய்ய ப்ரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறது.

## Village Panchayats.

**க்ராமப் பஞ்சாயத்துகள்.**—சென்ற மார்ச்சுமாஸம் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் ராவ்பகதூர் எம். ராமச்சந்த்ரராவ், அதிகாரப்பிரிவினைக் கமிஷன் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதை உத்தேசித்து, சென்னை கவர்ன்மெண்டார் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதற்காக எப்போது சட்டம் செய்யப் போகிறார்களென்றும், அந்த விஷயத்தைத் தாமஸப்படுத்தாமல் சீக்ரம் கவனிப்பார்களாவென்றும், அதிகாரப்பிரிவினைக் கமிஷனுடைய சிபார்சுகளைப் பூராவும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவராவிட்டாலும், ஒவ்வொரு ஜில்லாக்களிலும் சில தெரிந்தெடுக்கப்பட்ட க்ராமங்களிலாவது பஞ்சாயத்து நியமிப்பார்களாவென்றும் கேட்டார்.

அதற்கு கவர்ன்மெண்டார், க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதான விஷயத்தைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் கவனித்துவருகிறார்களென்றும், அவர்களுடைய உத்தரவு வரும்வரையில் தாங்கள் ஒன்றும் செய்யப்போகிறதில்லையென்றும் பதில் சொன்னார்கள்.



# COMMERCE.
# வ்யாபாரம்.

## Trade in Buttons.

**பொத்தான் வ்யாபாரம்.**—அடியிற்கண்ட கணக்குகளால் இந்தியாவுக்கு அன்யதேசங்களிலிருந்து எத்தனை ரூபாய் மதிப்புள்ள பொத்தான்கள் வந்திருக்கின்றன வென்பது தெரியவரும்.

| | | |
|---|---|---|
| ஜெர்மனி | ... | 1,78,020 |
| இங்க்லண்ட், ஸ்காட்லண்ட, அயர்லண்ட் | | 1,07,411 |
| ஆஸ்ட்ரியா-ஹங்கேரி | ... | 5,11,007 |
| இட்டலி | ... | 84,589 |
| பெல்ஜியம் | ... | 16,130 |
| ப்ரான்ஸ் | ... | 8,662 |
| ஜப்பான் | ... | 1,17,282 |
| ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில் மெண்ட்ஸ் | ... | 1,475 |
| லங்கை | ... | 100 |
| ஹாங்காங் | ... | 4846 |
| அமெரிக்கா ஐக்யமாகாணங்கள் | ... | 60 |
| மொத்தம் (இதில் கல்கத்தாவில் இறக்குமதியான பொத்தான்களின் மதிப்பு சேரவில்லை) | ... | 10,29,582 |

மேல்கண்ட கணக்குகளால் ஆஸ்ட்ரியாவும் ஜெர்மனியும் இந்தியாவுக்கு ஏராளமாக பொத்தான்கள் அனுப்புகின்றனவென்று தெரிகிறது. இந்தக் கணக்குகளில் கல்கத்தாவுக்கு அன்யதேசங்களிலிருந்து இறக்குமதியாகும் பொத்தான்களின் மதிப்பைச்சேர்க்கவில்லை யாதலால், கணக்குகள் பூர்த்தியாகமாட்டா.

இந்தியாவின் பற்பல பட்டணங்களில் நடத்தப்பட்ட வ்யாபாரப் பொருள் காட்சிகளில் இந்தியாவில் செய்யப்பட்ட பொத்தான்களில் அநேகமாதிரிகள் காட்டப்பட்டன. இந்தக் கைத்தொழிலை இந்தியாவில் ஸ்தாபித்தால் இது அபிவ்ருத்தி யடையக்கூடுமென்று சொல்லப்படுகிறது. வடக்கே ஐக்ய மாகாணங்களில் இது விஷயமாய் யோசித்து வருகிறார்களென்று தெரிகிறது. ஆக்ராபட்டணத்தில் எலும்பு வ்யாபாரம் ப்ரபலமாகையால் அங்கே இந்தத்தொழிலை ஸ்தாபிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

யந்த்ரங்களுக்கு என்ன செலவாகு மென்பதைப் பற்றியும், என்னலாபம் கிடைக்கு மென்பதைப்பற்றியும், அந்த மாகாணத்தில் ஆராய்ச்சிசெய்து வருகிறார்களாம்.

## Raiway to Pudukotta.

**புதுக்கோட்டைக்கு இருப்புப்பாதை.**—திருச்சிநாப்பள்ளியிலிருந்து புதுக்கோட்டைக்கு சீக்ரம் இருப்புப்பாதைபோடப்படுமென்றுதெரிகிறது. அதன் நீளம் 32 மைலாகும். அதற்கு 20 லட்சம் ரூபாய் பிடிக்குமாம். ரெயில்வே போர்டார் அதை சீக்ரத்தில் கட்டிமுடிப்பதற்கு ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

அந்த இருப்புப்பாதை போடுவதற்கு வேண்டிய நிலத்தை வாங்கி ஸ்வாதீனப்படுத்துவதற்கும், இன்னும் இருப்புப்பாதை ஸம்பந்தமான வேறு கார்யங்களை செய்வதற்கும் தென்னிந்தியா இருப்புப்பாதை சீப் இஞ்சினியருக்கும், நிலத்தைவாங்கி ஸ்வாதீனப்படுத்தும் ஆபீஸருக்கும் புதுக்கோட்டை தர்பார் அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

## Business Enterprie in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற டிஸம்பர் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 9 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2 பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | ... | 25,50,000 |
| 4 வ்யாபாரக் கம்பெனிகள் | ... | 5,70,000 |
| 1 அரிசிமில் கம்பெனி | ... | 50,000 |
| 1 ரப்பர் தோட்டக் கம்பெனி | ... | 5,00,000 |
| 1 நிலங்கள் கட்டிடக் கம்பெனி | ... | 20,00,000 |
| 9 | | 56,70,000 |

## The Commercial Exhibition.

**வ்யாபாரப் பொருள் காட்சி.**—சென்ற ஜனவரி மாஸத்து ஸஞ்சிகையில் (267-ம் பக்கத்தில்) கல்கத்தாவிலும் சென்னையிலும் நடந்த வ்யாபாரப் பொருள் காட்சியைப்பற்றி எழுதினோம். இப்போது கல்கத்தாவில் இரண்டாவது முறையாக அந்தக் காட்சியை நடத்தி வருகிறார்கள். அந்தக் காட்சிக்கு அதிக ஸாமான்கள் வந்திருக்கின்றன வென்றும், தென்னிந்தியத் தொழில்சாலைகளிலிருந்தும், மற்ற விடங்களிலிருந்தும் பல ஸாமான்கள் போயிருக்கின்றன வென்றும் தெரியவருகிறது.

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Paper from Grass.

**புல்லிலிருந்து கடுதாசி செய்தல்.**—வடக்கே ஐக்ய மாகாணங்களைச் சேர்ந்த டாராய் என்னும் ப்ரதேசத்தில் உலு என்று ஒரு வகைப் புல் பயிராகிறது. அந்தப் புல்லிலிருந்து கடுதாசி செய்யமுடியுமென்று சொல்லப்படுகிறது.

கொஞ்சகாலத்துக்கு முன்னல் அல்லகபாத்தில் ஒரு பொருள் காட்சி நடந்தபோது காட்சியில் இப் புல்லை வைத்திருந்தார்கள். அதை ஒரு கடுதாசிசெய்யும் நிபுணர் பார்வையிட்டதில் அது கடுதாசிக்கூழ் செய்வதற்கு ரொம்பவும் தகுதியானது என்று சொன்னாராம். அவர் அந்தப் புல்லிலிருந்து கடுதாசிக் கூழ்செய்து இங்க்லண்டுக்கு அனுப்பினதில், இங்க்லண்டிலுள்ள சில காகிதச்சாலைக்காரர்கள் மற்ற கடுதாசிக் கூழ்களைப் போல் அதுவும் ரொம்ப உயர்ந்த கூழாய் இருப்பதாகச் சொன்னர்களாம்.

கொஞ்சகாலத்துக்கு முன்னல்கூட ஒரு கம்பெனியார் அந்தப்புல் அறுப்பதற்கு அனுமதி கொடுக்கும்படி ஐக்யமாகாண கவர்ன்மெண்டாரைக் கேட்பதாயிருந்தார்களாம். ஆனல் வேலை ஸுலபமாக நடக்கக்கூடிய வேறு ஒரு ப்ரதேசத்தில் புல்லறுக்க வஸதி ஏற்பட்டதால், அவர்கள் ஐக்யமாகாணங்களில் புல்லறுக்க இஷ்டப்படவில்லையாம். இப்போது ஐக்யமாகாண கவர்ன்மெண்டார் ஸொந்தத்தில் ஒரு தொழில்சாலை ஸ்தாபித்து மேற்குறித்த புல்லிலிருந்து மரக்கூழ் செய்யப் போகிறார்களாம். அதற்கு வேண்டியிருக்கும் யந்த்ரங்களைப்பற்றியும், தொழில்சாலைக்குப் பிடிக்கும் செலவைப்பற்றியும் கவர்ன்மெண்டார் கவனம் செலுத்தி வருகிறார்களாம்.

### Cement from Beet.

**பீட்கிழங்கிலிருந்து ஸிமெண்டு செய்தல்.**-ப்ரான்ஸ், ஜெர்மனி முதலிய மேல் நாடுகளில் 'பீட்' என்னும் ஒரு வகைக்கிழங்கிலிருந்து சர்க்கரை செய்கிறார்கள். சர்க்கரை காய்ச்சும்போது, பாகின்மேல்வரும் நுரையை உபயோகமற்றதென்று தூர எறிந்து விடுகிறார்கள். இப்போது ஒரு ப்ரெஞ்க் கம்பெனியார் அந்த நுரையிலிருந்து ஸிமெண்ட் செய்யப்போகிறார்களாம். மேலே சொன்ன நுரையில் சாக் என்னும் சீமைச் சுண்ணும்பும் ஜலமும் இருக்கின்றன. 70,000 டன் பீட் கிழங்கை சர்க்கரையாகக் காய்ச்சினல் 4,000 டன் சாக் தூள் கிடைக்கிறது. இதோடு 1,100 டன் ரொம்ப நயமான களிமண்ணைச் சேர்த்தால் 3162 டன் நல்ல ஸிமெண்டு (சாந்து) கிடைக்கிறது.

சர்க்கரை காய்ச்சும் தொட்டிகளிலிருந்து நுரையை பெரிய தொட்டிகளில் பம்பு செய்து இறைத்து, கொஞ்சம் ஜலம் சுண்டும்படி செய்கிறார்கள். அதில் ரொம்ப நயமான களிமண் தூளைப் போட்டு ஒரு மணி நேரம் யந்த்ரங்களால் கலக்கிறார்கள். கலந்த பொருளைக் காளவாயில்போட்டு எரித்து, பிறகு அதைப் பொடி செய்து ஸிமெண்டாக விற்கிறார்களாம்.

### Artificial Milk.

**செயற்கைப் பால்.**—ஸோயா அவரையிலிருந்து செயற்கைப்பால் செய்வது ஸாத்யமென்று ஒரு பத்ரிகை தெரிவிக்கிறது. ஸோயா அவரையை ஜலத்தில் ஊறப் போட்டுப் பிறகு அதை வேகவைத்து, வேகும்போது சர்க்கரையையும், பாஸ்பேட் அப் பொடாஷ் என்னும் சாக்கையையும் குறிப்பிட்ட அளவுகளில் கலந்தால், மூன்று பொருள்களும் ஒன்று சேர்ந்து வெண்மை நிறமுள்ள கெட்டியானத்ரவமாகிறது. இது பார்வைக்கு கட்டிப்பால் (கண்டன்ஸ்ட் மில்க்) போலிருப்பதோடு, கட்டிப்பாலில் என்னென்ன ஆகாரப் பொருள்கள் இருக்கின்றனவோ அவைகள் இதில் இருக்கின்றனவாம் கட்டிப் பாலுக்கு என்ன ஆகார குணங்கள் உண்டோ அத்தனையும் இந்த செயற்கைப் பாலுக்குமுண்டாம். இந்த செயற்கைப் பாலில் கொஞ்சம் ஜலம் சேர்த்தால் ஸ்வயப் பசும்பாலுக்கும் அதற்கும் வித்யாஸமே தெரியாதாம்.

### Bread from Straw.

**வைக்கோலிலிருந்து ரொட்டி.**—ஜெர்மனியில் தற்காலம் ஆகாரம் கிடைப்பது ரொம்ப கஷ்டமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இந்தக் குறையை நீக்க ஒரு ஜெர்மானிய டாக்டர் வைக்கோலிலிருந்து ரொட்டி செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறாராம். அவர் ஸமீபத்தில் பெர்லினில் உள்ள சிலருக்கு இந்த முறையைச் செய்து காட்டினராம். இந்த முறையால் செய்த ரொட்டி சாப்பிடத் தகுந்ததாயிருக்கிறதென்று அதைப் பார்த்தவர்கள் சொல்லுகிறார்களாம்.



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Rockfeller's Clock Tower.

**ராக்பெல்லரின் கடியார கோபுரம்.**—ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியென்னும் பெரிய எண்ணெய் வ்யாபாரக்கம்பெனியின் ஸொந்தக்காராகிய மிஸ்டர் ஜே. டி. ராக்பெல்லர் என்னும் கோடீச்வரர் தமது நிலங்களில் வேலை செய்யும் வேலையாட்கள் சரியான காலத்தில் வேலைக்கு வாராமலிருப்பதைக் கண்டு, அதற்காக ஒரு புது ஏற்பாடு செய்திருக்கிறாராம். அவர் கீழ் வேலை செய்யும் மேஸ்த்ரிகளை ஏன் தாமதித்து வந்தீர்களென்று கேட்டால் தங்களுடைய கடியாரங்கள் சரியாய் ஓடுகின்றனவென்றும், கடியாரக் கணக்குப்படி வருவதாகவும் சொல்லுவார்கள். அவர்களுடைய கடியாரங்கள் ஒன்றுக்கொன்று வித்யாஸமாக ஓடிக்கொண்டிருந்தன. அதற்காக அவர் தமது தோட்டத்தில் ஒரு பெரிய கோபுரம் கட்டி அதில் ஒரு பெரிய கடியாரம் வைத்திருக்கிறாராம். இந்த கடியாரம் மணியடிக்கும் சத்தம் பண்ணையில் ரொம்ப தூரத்தில் வஸிக்கும் வேலையாட்களுக்கும் நன்றாய்க் கேட்கிறதாம். ஆனல் அது இரவிலும் மணியடித்தால், மிஸ்டர் ராக்பெல்லருக்குத் தூக்கம் கெட்டுப்போகுமாதலால் காலை 6-மணி முதல் இரவு 10-மணி வரையிலும் மாத்ரம் மணி யடிக்கும்படிக்கும், இரவு பத்து மணி முதல் காலை 6-மணி வரையில் மணியடிக்காம லிருக்கும் படிக்கும் கடியாரத்தில் வேண்டிய ஏற்பாடு அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி கடியாரம் வைத்திருப்பதால் வேலையாட்கள் குறித்த நேரத்தில் வேலைக்குப் போவது ஸாத்யமாகிறதாம்.

### Food of the Serpents.

**பாம்புகளின் உணவு.**—சில பாம்புகள் புழுக்களையும் பூச்சிகளையும் தின்கின்றன. வேறு சில பல்லி, தவளை, சிறு பாம்பு முதலியவைகளைத் தின்கின்றன. நீர்ப்பாம்புகள் அநேகமாக மீன்களைத் தின்கின்றன. ஆப்ரிக்காவிலுள்ள ஒரு ஜாதிப்பாம்பு முட்டைகளைத் தின்கிறது. இந்தப் பாம்புக்கு பற்கள் இல்லையாம். ஆனல் இரண்டு கோர தந்தங்கள் உண்டு. இந்த தந்தங்களால் முட்டைகளையுழுத்து விழுங்குகின்றது. தொண்டையில் கத்திபோன்ற எலும்பு இருக்கிறதாம். அதனல் முட்டையின் ஓடுகள் வயிற்றுக்குள் போகாமல் தடுக்கப்பட்டு, வெளியில் தள்ளப்படுகின்றன. பாம்பானது முட்டையை வாயில் எடுத்துக்கொண்டவுடன் தாடைகளை நிலத்தில் மோதி முட்டைகளை உடைக்கின்றதாம்.

பாம்புகள் தீனி தின்னும்போது யாரும் பக்கத்திலிருக்கக்கூடாதாம்.

### Thumbs of the Apes.

**வாலில்லாக் குரங்குகளின் கட்டைவிரல்கள்.**—கொரில்லா, சிம்பன்ஸீ என்னும் குரங்குகள் வாலில்லாக்குரங்கு ஜாதிகளில் ரொம்ப உயர்ந்தவைகளாம். இவைகள் அநேக விஷயங்களில் மனிதனை ஒத்திருக்கின்றன. ஆனல் ஒரு செய்கை அவைகள் செய்யமுடியாதாம். அதாவது அவைகள் தங்கள் கட்டைவிரலை மடக்கவும், பலவிதங்களில் அசைக்கவும், விரலின் நுனியால் வட்டம் உண்டாகும்படிச் சுற்றவும் முடியாதாம். கொரில்லாவின் கட்டைவிரல் குட்டையாயிருக்கிறது. அது ஆள்காட்டி விரலின் முதல் கணுவைக்கூட எட்ட முடியாது. மற்றவிரல்களை வேண்டியபடி மடக்கவும் நீட்டவும் உதவியாக தசை நார்கள் அந்தந்த விரல்களில் அமைந்திருப்பதுபோல கட்டைவிரலில் மடக்க உதவும் தசைநார் கிடையாது. இதனல்தான் கொரில்லாவானது கட்டைவிரலை மற்றவிரல்களிருக்கும் பக்கமே வைத்துக்கொண்டிருக்கிறது. ஏதாவது ஒரு பொருளைப்பிடிக்கும்போது கட்டைவிரலை மடக்கி அதை உபயோகிப்பதில்லை.

### Some Don'ts.

**சில கூடாதவைகள்.**—ஸ்லேட்டைத் துடைக்கும் போது அதில் எச்சில் உமிழ்ந்து அந்த ஈரத்தால் அதைத் துடைக்காதே. தரையிலும், பல ஜனங்கள் நடக்கும் இடத்திலும் எச்சில் உமியாதே. வாயில் விரலை வைத்து எச்சிலாக்காதே: முழங்கையாலாவது, கையின் மேலுள்ள சட்டைத்துணியாலாவது மூக்கைத் துடைக்காதே. புஸ்தகங்களின் பக்கங்களைத் திருப்பும் போது கைவிரலை வாயில்வைத்து ஈரமாக்கிப் பிறகு பக்கங்களைத் திருப்பாதே. பென்ஸில்களை வாயில் வைத்து நனைக்காதே. வாயில் காசு, குண்டூசி முதலியவைகளைப் போட்டுக்கொள்ளாதே. ஒருவர் எச்சில் செய்து தின்று மிச்சமான பழங்கள் பக்ஷணங்கள் முதலியவைகளை நீ தின்னதே. ஒருவர் வாயில் வைத்துக் கொண்டு ஊதின ஊது குழலை (விஸில்) வாங்கி ஊதாதே. மொத்தத்தில் மற்றவர் வாயில் வைத்துக் கொண்டிருந்த எதையும் நீ உபயோகியாதே.

## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Women Police.

**ஸ்த்ரீ போலீஸ்காரர்கள்.**—இங்கிலண்டில் ஸ்த்ரீகளை போலீஸ் டிபார்ட்மெண்டில் சேர்த்துக்கொள்ளும்படி அதிகாரிகளைத் தூண்ட பலமான முயற்சிகள் நடந்துவருவதாகத் தெரிகிறது. மிஸ் நினா பாயில் என்ற ஒரு ஸ்த்ரீ இது விஷயமாக ரொம்ப ஊக்கம் காட்டி வருகிறாராம்.

அவர் சில ஸ்த்ரீகளை ஒன்று கூட்டி போலீஸ் வாலண்டியர்களாகத் தயார் செய்து வருகிறாராம். இவர்களுக்குப் போலீஸ் முறைகள் எல்லாம் தெரிந்ததும், இவர்களை க்ரமமான போலீஸில் சேர்த்துக்கொள்ளும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்பாராம். இந்த ஸ்த்ரீகளுக்கு, காயம்பட்டவர்களுக்கு முதல் சிகித்ஸை செய்தல், ஜுஜுட்ஸு என்னும் ஜப்பானிய தற்காப்புப் பயிற்சிகள், போலீஸ் ட்ரில்கள், போலீஸ் கோர்ட்டு வேலைகள், ஜனங்களுடைய பாத்யதைகள் முதலியவைகளைக் கற்பித்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸ்த்ரீ போலீஸ்காரர்கள் ஆழ்ந்த நீலநிறமான உடுப்புகள் போட்டிருப்பார்கள். அவர்களுடைய கழுத்துப் பட்டையில் ஒரு சிலுவை தொங்கிக்கொண்டிருக்கும்.

ஸ்த்ரீ போலீஸின் வேலை குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதல்லவாம். அநாதைகளாகவும், ஸ்நேகிதர்களில்லாதவர்களாகவும் பெரிய பட்டணங்களுக்கு வரும் பெண்கள் கெட்ட நடத்தையுள்ள இடங்களுக்குப் போகாமல் அவர்களுக்கு புத்திசொல்லி நல்வழிக்குத் திருப்புவதும் வேறு வழிகளில் அவர்களுக்கு உதவி செய்வதுமே.

போர்முனைக்குப் போயிருக்கும் ஸோல்ஜர்களின் மனைவிகள் யுத்த ஸமாசாரங்கள் தெரிந்துகொள்வதற்காக சாராயக் கடைகளுக்குப் போவதுண்டு. அவர்களுக்கு உதவியாக ஸங்கங்களும் மதுபானங்களைத் தவிர மற்ற பலகாரங்களை விற்கும் கடைகளும் ஏற்படுத்தி, அவர்களை ஸங்கக் கட்டிடங்களுக்கு வரும்படி தூண்டி வருகிறார்கள். பெல்ஜியம் போன்ற அன்ய தேசங்களிலிருந்து வரும் அநாதையான ஸ்த்ரீகளுக்கு இங்கிலீஷ் பாஷை தெரியாததாலும், இன்னவிடத்தில் போய்த்தங்குவது, வேலைக்கமருவது என்பது தெரியாமலிருக்குமாதலாலும், அவர்கள் கஷ்டப்படவும், நடத்தை கெட்டுப்போகவும் மார்க்கமுண்டு. அவர்களைப்பற்றியும் இந்த ஸ்த்ரீ போலீஸார் கவனம் செலுத்துவார்களாம். ஸ்த்ரீ போலீஸ் ஏற்பாட்டைப் பற்றிப் பலர் ஸாதகமாய்ப் பேசி வருகிறார்களாம்.

### Mango-Curds Pachadi.

**மாங்காய்த் தயிர்ப் பச்சடி.**—மூன்று பொதுவான அளவுடைய மாங்காயை, ஒழுங்காய்வெட்டி வென்னீரிலே வேகவைத்து, அரைரூபாயெடை உப்பை ஒரு பாத்ரத்திலே போட்டு உழக்குத் தயிரையும் அதிலே விட்டு ஒரு ரூபாயெடை பச்சை மிளகாயை துண்டாக்கி நெய்யிலேவதக்கி அதையும், வேகவைத்து ஆறின மாங்காயையும், தயிரிலேபோட்டு நன்றாய்ப் பிசைந்து சற்று எண்ணெயையோ நெய்யையோ பொதுவான ஒழுங்கின்படி தாளித்துப் பச்சடியிலே விடவும்.

வாழைக்காய் புடலங்காய் வெண்டைக்காய் முதலியவைகளை யெல்லாம் இவ்விதமாய்த் தயிர்ப்பச்சடியாக்கலாம்.

### Kaiser's Daughter & Daughter-in-Law.

**கெய்ஸரினுடைய பெண்ணும் மருமகளும்.**—ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸருடைய புத்ரர்கள் போர்வீரர்களாக இருப்பதோடு அவருடைய புத்ரியும், மருமகளுங்கூட ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்களாம். அவருடைய புத்ரி ராணுவத்தில் நன்றாய்பழகி யிருப்பதோடு, 'டெத்ஸ் ஹெட் ஹுஸ்ஸார்ஸ்' (யமகிங்கிலியர்கள்) என்னும் பட்டாளத்துக்குக் கர்னலாக இருக்கிறாராம். இளவரசருடைய மனைவியும் புத்ரியைப்போலவே ராணுவத்தில் பழகி ட்ராகூன் என்கிற படைவகுப்பில் ஒரு பட்டாளத்துக்கு கர்னலாய் இருக்கிறார். இவர்கள் இருவரும் ராணுவத்தில் கமிஷன் பெற்ற ஆபிஸர்கள் அந்தஸ்தில் இருக்கிறார்கள்.

### Vaccination Time for Babies.

**குழந்தைகளுக்கு அம்மை குத்துவதற்கேற்ற காலம்.**—பெரியம்மை அதிகமாய் ஒரு இடத்தில் பரவி வரும்போது எல்லாக் குழந்தைகளுக்கும் எவ்வயதிலும் வைஸூரி குத்திவிடவேண்டியது அவச்யம்; இப்பெருவாரி வ்யாதி விசேஷமாக வ்யாபிக்காத ஸமயங்களில் ஆரோக்ய நிலைமையிலுள்ள சிறு குழந்தைகளுக்கு 4-முதல் 6-மாஸத்திற்குள்ளும், வ்யாதிகொண்ட குழந்தைகளுக்கு ஒருவயது நிறைந்தபிறகும் வைஸூரி குத்துவீது உசிதம்:—வைத்திய கலாநிதி.



## INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Coloured Persons in Johannesburg.

**ஜோஹன்னஸ்பர்க்கில் வெள்ளைக்காரர்களல்லாதவர்கள்.**—ஜோஹன்னஸ்பர்க் முனிஸிபாலிட்டியார் வெகு காலமாக வெள்ளைக்காரர்களுக்கு ஒருவிதமாகவும் மற்றவர்ணத்தாருக்கு ஒருவிதமாகவும் சட்டதிட்டங்கள் செய்து வருகிறார்களென்று தோன்றுவதாக 'பஞ்சாபி' பத்ரிகை தெரிவிக்கிறது. நிறமுள்ள மனிதர்கள் அதாவது வெண்மை நிறமில்லாத மற்ற நிறமுள்ளவர்கள் அந்த ஊர் ட்ராம்வண்டிகளில் ஏறி ப்ரயாணம் செய்யாதபடி அந்த ஊர் முனிஸிபாலிடியார் பைலாக்கள் செய்திருக்கிறார்களாம். ஆனால் ஆப்ரிக்காவின் ஸ்வதேசிகளும் இந்தியர்களும் இந்த ட்ராம் வண்டிகளின் செலவுக்கு ஏதோ ஒருவிதத்தில் பணம் கொடுத்துத்தான் வருகிறார்கள். இந்த அநீதியைப் போக்குவதற்காக அங்கேயுள்ள ஒரு ஸங்கத்தார் முனிஸிபாலிடியின் மேல் வ்யாஜ்யம் போட்டார்கள். கீழ்கோர்ட்டில் முனிஸிபாலிடிக்கு ஜயமேற்பட்டது. ஆனால் அப்பீலில் ஸுப்ரீம் கோர்ட்டார் முனிஸிபாலிட்டியார் செய்துள்ள பைலாக்கள் சட்டத்துக்கு ஒத்தவைகளல்லவென்று தீர்ப்புச்சொல்லிவிட்டார்கள். ஆனால் இப்படித் தீர்ப்பாயும் முனிஸிபாலிட்டியார் அந்தத் தீர்ப்பின்படி நடக்க இஷ்டமில்லாதிருக்கிறார்களாம். மேலும் அவர்கள் வெள்ளைக்காரர்களல்லாத மற்ற வர்ணத்தாருடைய பாத்யதைகளை முற்றிலும் போக்கடிக்கும்படியாக புது ரெகுலேஷன்கள் செய்யப்போகிறார்களாம். நிறமுள்ள ஜனங்களும் அந்த ரெகுலேஷன்களை அமுலுக்கு வராமல் தடுக்கவும், அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காமலிருக்கவும் தீர்மானித்திருக்கிறார்களாம். ந்யாயமாய்த் தீர்ப்புச்செய்ய மேற் குறித்த ஸுப்ரீம் கோர்ட்டு இருக்கும் வரையில் இந்தியர்களும் மற்ற நிறமுள்ள ஜனங்களும் தங்கள் கக்ஷிதோற்கும் என்று எண்ண ந்யாயமில்லையென்று 'பஞ்சாபி' பத்ரிகை எழுதுகிறது.

### Basra and Indian Emigration.

**பஸ்ஸோராவும் இந்தியர்களின் குடியேற்றமும்.**—சென்ற மாஸம் கூடிய இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் லார்ட் ஹார்டிஞ்ச் பஸ்ஸோரா இந்தியர்கள் குடியேறுவதற்கேற்ற இடமென்று சொன்னார். பஸ்ஸோரா என்பது பர்ஷியன் வளைகுடாவின் வடக்கேயுள்ள ஒருதுறைமுகப்பட்டணம். அது வெகு காலத்துக்கு முன் ஒரு ப்ரபல வ்யாபார ஸ்தலமாயிருந்தது. அது யுத்தத்துக்கு முன்னால் துருக்கியர் வசமிருந்தது. ஸமீபத்தில் இந்தியத் துருப்புகளால் பிடிக்கப்பட்டது. துருக்கியர்களுடைய அரசாட்சி ஒழுங்கீனத்தால் அது மிகவும் தாழ்ந்த ஸ்திதியடைந்திருக்கிறது. ஸ்வல்ப செலவில் அந்தப்பட்டணத்தை ஒரு நல்ல துறைமுகமாகச் செய்து விடலாம். அந்தப்பட்டணத்து வடக்கே யூப்ரட்டீஸ், டைக்ரிஸ் என்னும் நதிகளுக்கு மத்தியிலுள்ள செழிப்பான ப்ரதேசமாகிய மெஸபொடேமியா என்னும் நாடு, வட பாரஸீகம் ஆகிய இந்த தேசங்களின் வ்யாபாரம் முழுவதும் இந்தத் துறைமுகத்தின் வழியாக நடக்கும்படி செய்து விடலாம். பஸ்ஸோரா மகாணம் ரொம்ப செழிப்புள்ளது. ஆனால் ஷாடல் ஆரப் நதியோரமாய் ஸ்வல்ப பாகங்களே ஸாகுபடி செய்யப்படுகின்றன. ரொம்ப ஸாமான்யமான பாசன வேலைகளால் ஏராளமான நிலங்களை ஸாகுபடிக்குக் கொண்டுவந்து விடலாம். அந்த மாகாணத்தின் சீதோஷ்ண நிலைமை வட பஞ்சாபின் சீதோஷ்ண நிலைமையை ஒத்திருக்கிறது. அவ்விடத்தில் நிலையான அரசாட்சி ஏற்பட்டால், இந்தியர்கள் குடியேறிப் போக அதைவிட ரொம்ப ச்லாக்யமான தேசம் வேறு இல்லையென்று சொல்லலாம் என்று லார்ட் ஹார்டிஞ்ச் சொன்னார்.

### Labour Conditions in Canada.

**கனடாவில் கூலியாட்களின் நிலைமை.**—கனடாவில் தொழிலில் நிபுணர்களான வேலையாட்களில் பலரும், ஸாதாரண வேலையாட்களில் பலரும் வேலையின்றி சும்மாயிருக்கிறார்களாம். ஆகையால் அந்த தேசத்துக்கு ஒருவரும் கூலியாளாகப்போவது நல்லதல்லவென்று 'இந்தியன் எமிக்ரெண்ட்' என்னும் பத்ரிகை தெரிவிக்கிறது. இப்போது சில விடங்களில் தொழில்சாலைகளில் வேலை யாரம்பமானாலும், பல தொழில்சாலைகள் மூடிபட்டுப்போயிருக்கின்றன. வேலை நடக்குமிடங்களிலும் கூலி விகிதம் ரொம்பக் குறைவாயிருக்கிறதாம்.

### Indians in Australia.

**ஆஸ்ட்ரேலியாவிலுள்ள இந்தியர்கள்.**—மேற்கு ஆஸ்ட்ரேலியாவில் குடியேறியிருக்கும் 200 ஸீக்கியர்களும் கூர்க்கர்களும் தாங்கள் யுத்தத்துக்குப்போகத் தயாராயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Russian Girl at the Front.

**போர்முனையில் ஒரு ரஷ்யச் சிறுமி.**—ஆசியாக் கண்டத்தின் வடபாகமாகிய ஸைபீரியாவில் பெய்க்கால் என்று ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இர்க்கட்ஸ்க் என்று ஒருபட்டணம் இருக்கிறது. அதற்கும் போலண்டுக்கும் உள்ளதூரம் 5000 மைல். அந்த ஊரில் உள்ள லுட்மிலா என்னும் ஒரு சிறு பெண், தான் போரில் ஜயங்கொடுக்கும் தேவராகிய ஸெண்ட் ஜார்ஜ் என்னும் மகாத்மாவை நேரில் கண்டதாகவும், தான் போர்முனைக்குப் போகவேண்டுமென்றும் சொல்லி, தான் சிறுவயதுமுதல் சேர்த்துவைத்திருந்த 15 ரூபாய் மதிப்புள்ள ரஷ்யநாணயங்களுடன் 5000 மைல் ப்ரயாணம் செய்து போர்முனைக்குப் போனளாம். சிலஸமயம் நடந்தும், சிலஸமயம் வண்டிகளிலும் ப்ரயாணம் செய்தாளாம். வழியில் தான் கண்ட காட்சியையும், தான்போகும் கார்யத்தையும் அநேகருக்குச் சொல்ல. சிலர் அவளுக்குப் பணங் கொடுத்து உதவினார்கள். வேறு சிலர் அவளைப் பரிகாஸம் செய்தார்களாம். மாஸ்கோவுக்குப் போனதும் தனது தலைமயிரை கறுக்கிவிட்டு, காயம்பட்ட போர் வீரனுடைய உடுப்பு ஒன்று வாங்கித்தரித்துக்கொண்டு, பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் போர்வீரர்களுடன் போர்முனைக்குப்போய்ச் சேர்ந்தாளாம். ஒருநாள் ராத்ரி ரஷ்யர்கள் ஜெர்மானியரைத் தாக்கினபோது, இந்தப் பெண் மற்றவர்களைவிட அதிகம் முன்னால் சென்றதால், ஜெர்மானியர்கள் அவளைக் கைதியாக்கினார்கள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களுடைய அகழ்களைப் பிடிக்கவே அவள் விடுதலை செய்யப்பட்டாளாம்.

### A Dog's Faithfulness.

**ஒரு நாயின் விச்வாஸம்.**—ஸெண்ட் விஹியல் என்னும் இடத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் அகழில் இருந்து யுத்தம் செய்துகொண்டிருந்தபோது, ஒரு ஸோல்ஜருடைய நாயும் கூட இருந்தது. ஒரு ஸமயம் ஒருபெரிய குண்டு அந்த அகழில்விழுந்து வெடித்து அகழைத் தூர்த்து அதிலுள்ள 2 ஸோல்ஜர்களை மூடிவிட்டது. நாய் மாத்ரம் எப்படியோ குண்டுக்குத் தப்பியிருந்து, தனது யஜமானன் இருந்த இடத்தில் பூமியை இடைவிடாது தோண்டி, யஜமானனுடைய முகம் வெளியில் தெரியும்படி செய்தது.

அவன் எழுந்திருக்க முடியாவிட்டாலும் ச்வாஸம் விட்டுக்கொண்டு உயிரைப் பிடித்துக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உதவி ஸைன்யங்கள் வரவே, ஸோல்ஜர்கள் புதைபட்டிருப்பதை யறிந்து எல்லாரையும் வெளியிலெடுத்தார்கள். ஆனால் நாயின் யஜமானனைத் தவிர மற்றவர்களெல்லாரும் இறந்து போயிருந்தார்கள். அவனும் ரொம்ப காயமடைந்திருந்ததால் அவனுடைய காலொன்றை வெட்டிவிட வேண்டியிருந்ததாம்.

### Germans Outwitted.

**ஜெர்மானியர்கள் ஏமாற்றப்பட்டது.**—கொஞ்ச காலத்துக்கு முன்னால் ஜெர்மானியர்கள் ட்ராயன் கோட்டையைத் தாக்கினபோது, அந்தக் கோட்டையிலிருந்த ப்ரெஞ்ச் துருப்புகளின் தலைவர் அந்தக் கோட்டையிலிருந்த இரண்டுவண்டி வைக்கோலில் நெருப்பு வைத்தார். ஜெர்மனியர்கள் வைக்கோல் பற்றி யெரிவதைக்கண்டு, ப்ரெஞ்சுக்காரர்கள் கோட்டையை விட்டு விட்டு ஓடிவிட்டதாக எண்ணி கோட்டையின் பக்கத்தில் வந்து விட்டார்கள். உடனே ப்ரெஞ்ச் துருப்புகள் ஜெர்மானியர்களை பலமாகத் தாக்கி ஸுமார் 1000 ஜெர்மானியர்களைக்கொன்று மற்றவர்களைத் துரத்திவிட்டன.

### The Judge and the Juror.

**ஜட்ஜும் ஜூரரும்.**—ஜூரர் ஜட்ஜியைப்பார்த்து.—"என்னை இந்த ஜூரியில் சேர்த்துக்கொள்ளாமலிருக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். நான் ஒரு ஏழைக் குடியானவனுக்கு 100-ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவன் இன்று ஊரைவிட்டுப்போகிறுனதலால், அவன் ஸ்டேஷனுக்குப் போவதற்குள் அவனை வீட்டில் பார்த்து 100 ரூபாயையும் செலுத்திவிட வேண்டும்"

ஜட்ஜ்.—"நீர் போகலாம். உம்மைப்போல் பொய் சொல்லக்கூடியவர்கள் ஜூரியிலிருக்கவேண்டாம்."



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### The Largest Typewriter.

**மிகப் பெரியதான டைப்ரைட்டர்.**—அமெரிக்காவிலுள்ள ஸான் ப்ரான்ஸிஸ்கோ என்னும் பட்டணத்தில் இப்போது ஒரு பெரிய பொருள் காட்சி நடத்தி வருகிறார்கள். அங்கே டைப்ரைடிங் மெஷினை வைத்துக் காட்ட விரும்பிய ஒரு கம்பெனியார், அநேக மெஷின்களின் நடுவில் தங்களுடைய மெஷினை வைத்திருந்தால் காட்சியைப் பார்க்க வருபவர்கள் கவனிக்காமல் போய் விடக்கூடுமென்று எண்ணி ஒரு ப்ரும்மாண்டமான டைப்ரைடிங் மெஷின் செய்து காட்சியில் வைத்திருக்கிறார்கள். இது அவர்கள் விற்பனைக்கு வைத்திருக்கும் மெஷினைவிட 1728 மடங்கு பெரியது.

இதில் 9 அடி அகலமுள்ள கடுதாசியில் ஒவ்வொன்றும் 3 அங்குலம் உயரமுள்ள எழுத்துக்களை அச்சடிக்கும். ஒவ்வொரு எழுத்துக்கும் இடைவெளி 2 அங்குலமிருக்கும். பெரிய மெஷின் 14-டன் நிறையுள்ளது. (ஸாதாரண மெஷின் 30 ராத்தல் நிறைதான் உள்ளது.) இது 21 அடி அகலமும், 15 அடி உயரமும் உள்ளது. இதை 30 அடி நீளம் 25 அடி அகலம் 25 அடி உயரம் உள்ள ஒரு அறையில் வைத்திருக்கிறார்கள். இந்த மெஷினில் அச்சடிக்க இதற்குப் பக்கத்தில் ஒரு சிறிய மெஷினை வைத்து இரண்டுக்கும் மின்ஸாரஸம்பந்தம் ஏற்படுத்தி, சிறிய யந்த்ரத்தில் 'டைப்' அடிக்க பெரிய யந்த்ரத்திலும் அச்சடிக்கும்படி உபாயம் அமைத்திருக்கிறார்கள். இந்த யந்த்ரத்தை செய்துமுடிக்க 2 வர்ஷம் சென்றதாம். இதற்குப் பிடித்த செலவு 3 லக்ஷ ரூபா யாகும்.

### A Curious Birth.

**ஒரு விநோதப் பிறவி.**—கல்கத்தாவிலுள்ள துல்ஜர்சந்தில் வசித்துவந்த ஒரு வண்ணார ஜாதி ஸ்த்ரீக்கு ஸமீபத்தில் ஓர் ஆச்சர்யமான குழந்தைபிறந்தது. அக்குழந்தை ஸாதாரணமாக இரண்டு கண்களும், நெற்றியில் இரண்டு கண்களும் ஆக 4-கண்களுடையதாய் விநோதப் பிறவியாயிருந்தது. அக்குழந்தையைப் பார்க்க பலபல விடங்களிலிருந்துந் திரளான ஜனங்கள் குவிந்தனர். ஆனால் அக்குழந்தை பிறந்ததினம் பகல் முழுதும் உயிரோடிருந்து அன்று ஸாயந்திரமே இறந்துபோய்விட்டது.



### A Centenarian.

**நூறுவயஸுக்கு மேற்பட்டவன்.** — ஸமீபத்தில் லங்கையிலுள்ள போலீஸ் கோர்ட்டு ஒன்றில் ஒரு வயது சென்ற மநுஷ்யன் ஸாக்ஷி சொல்ல வந்தானும். அவனை கோர்ட்டார் வயஸு என்ன என்று கேட்டதற்கு அவன் தனக்கு 110 வயஸாயிற்றென்று சொன்னானும். "இங்கிலீஷ்காரர் கண்டி பட்டணத்தைப் பிடித்தது உனக்கு ஞாபகமிருக்கிறதா?" வென்று அவனைக் கேட்டதற்கு, அவன் தான் அக்காலத்தில் ஒரு சிறுவனாயிருந்ததாய்ச் சொன்னானும். அவன் விவாகம் செய்து இப்போது 99-வர்ஷமாகிறதாம்.

### A Wonderful Hen.

**ஒரு அதிசய பெட்டைக்கோழி.** — அமெரிக்கா தேசத்தை சேர்ந்த பிலடெல்பியா வென்னும் ஓர் நகரத்தில் கோழிக்காட்சி ஒன்று நடந்ததில் ஒரு கனவான் ஒரு பெட்டைக்கோழியை 2,400 பவுனுக்கு வாங்கினாராம். அந்த கோழி, பஞ்சவர்ணமும் மனோகரமான குரலோசையும் அழகான நடையுமுள்ளதாம். அதின் முட்டை ஒன்று 5 பவுன் விலையாம்.

### A Female Cannibal.

**நரமாம்ஸம் புசித்த ஒரு ஸ்த்ரீ.**—கல்கத்தாவுக்கு அருகிலுள்ள ஒரு க்ராமத்திலே ஸ்த்ரீ யொருத்தி இரண்டு குழந்தைகளைத் தாக்கி, ஒரு குழந்தையைக் கன்னத்தில் கடித்து ரத்தத்தைக் குடித்துக்கொண் டிருந்தபோது போலீஸார் அவளைக் கைது செய்தார்களாம். அக்குழந்தை வைத்யசாலையில் அபாயமான நிலைமையில் இருப்பதாகத் தெரிகிறது.

### Clothing the Chicken.

**கோழிக்குஞ்சுக்கு சட்டை போடுதல்.**—அமெரிக்காவிலுள்ள ஒரு ஊரில் ஒரு குடியானவன் தனது கோழிக்குஞ்சு குளிர்காலத்தில் ஸாயங்காலவேளையில் ரொம்ப கஷ்டப்படுவதை யறிந்து ஒரு பழைய ப்ளானல் ஷர்ட்டைக்கொண்டு ஒரு விநோதமான சட்டை தயாரித்து அதற்குப் போட்டிருக்கிறானும். அந்தச் சட்டையால் அதற்கு இறக்கைகளை ஆட்டத் தொந்தரவு ஏற்படாதபடி சட்டையில் த்வாரங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Marriage Customs.

**விவாக வழக்கங்கள்.**—மதராஸ் டைம்ஸ் பத்ரிகை அடியில் வருமாறு எழுதுகிறது:—

ஹிந்துக்கள் விவாககாலத்தில் ஏராளமாய்ப் பணம் செலவு செய்கிறதை நிறுத்திவிட வேண்டுமென்று ஆசாரத் திருத்தக்காரர்கள் பலமான ப்ரயத்தனம்செய்து வரும் இக்காலத்தில் பஞ்சாப்பில் ஒரு கனவான், கட்டை, கற்கள் முதலிய அசேதன வஸ்துக்களுக்கு விவாகஞ் செய்து முடிப்பதில் 1500 ரூபாய் செலவு செய்தார் என்று வங்காளப் பத்திரிகை ஒன்றில் வெளியாயிருக்கிறதை வாசிக்க வியப்பாயிருக்கிறது. மேற்சொன்ன கனவான் நாராயண விக்ரகத்திற்கும் லட்சுமி விக்ரகத்திற்கும் முதலில் விவாகத்தைச் செய்துமுடித்தார். இரண்டாவதாக, மரக்கட்டையினால் செய்யப்பட்ட ஆண் பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச் செய்து முடித்தார். மூன்றாவதாக மாமரத்திற்கும் புளியமரத்திற்கும் விவாகத்தைச் செய்து முடித்தார். இவ்விதமான மூன்று விவாகங்களை முடித்து வைக்க ஏற்றுக்கொண்ட புரோகிதருக்கு 200 ரூபாய் ஸம்பாவனை கொடுக்கப்பட்டது.

ஆண் பொம்மைக்கும் பெண் பொம்மைக்கும் விவாகத்தைச்செய்து முடிக்கும் வழக்கம் புதிதல்ல. பூமி செழித்து நல்ல வெள்ளாமையைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையின் பேரில் இவ்வித விவாகம் பூர்வத்தில் நடத்தப்பட்டு வந்ததாம்.

வ்ருக்ஷங்களுக்கு விவாகம் நடத்துவதும் இந்தியாவில் புதிய வழக்கமல்ல. அவ்வித விவாகம் ஸாதாரணமாய் இந்தியாவில் நடத்தப்பட்டு வருகிறது. வட இந்தியாவில் மாமரத்திற்கும் புளியமரத்திற்கும் விவாகஞ் செய்துவருகிறார்கள். தென்னிந்தியாவில் வேப்பமரத்திற்கும் அரசமரத்திற்கும் விவாகம் செய்து முடிப்பது வழக்கம்.

### Over Crowding in Trains.

**வண்டிகளில் அதிக ஜனங்கள் ஏறுவது.**—சில தினங்களுக்குமுன் பம்பாய் ராஜதானியில் ஒரு ரெயில்வண்டியில் ஒரு வக்கீல் ப்ரயாணஞ் செய்தார். அவரேறியிருந்த வண்டியில் ஜனங்கள் அளவிற்கு மிஞ்சியேறி யிருந்தார்கள். ரயில்வே அதிகாரிகள் அதை கவனியாமல் அவ்வண்டியில் பலரை யேற்றினார்கள். அந்த வக்கீல் அவ்வாறு செய்வது ரயில்வேச் சட்டத்திற்கு விரோதமானதென்று பலவாறாக அவர்களிடத்தில் விரித்துச் சொல்லியும் அவர்கள் அவர் கூறியவற்றை அசட்டை செய்து போய்விட்டார்கள். அந்த வக்கீல் வண்டி புறப்படத்தொடங்கியவுடன் அபாயச்சங்கிலியைப் பிடித்திழுத்தார். உடனே வண்டி நிறுத்தப்பட்டது. அவ்வண்டியின் கார்டு ஓடிவந்தார்; அவரைப்பார்த்த அந்த வக்கீல், இவ்வண்டியில் அளவிற்கு மிஞ்சிய பேர் ஏற்றப்பட்டார்கள்; அவர்களை யிறக்கிவிடுங்கள், என்று ந்யாயவாதம் பேசினார். அதற்கு அந்த கார்டு ஒன்றும் பேசாமல் போய்விட்டார். மறுபடியும் அவர் வண்டி புறப்பட்ட வுடனே அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்தார். அப்போதும் வண்டி நிறுத்தப்பட்டது. அந்தக் கார்டு வந்து 'உம்மைப் ப்ராஸிக்யூஷன் செய்யப்போகிறேன்' என்று கூறி பயமுறுத்தி அவரது விலாஸத்தை யெழுதிக்கொண்டு போய்விட்டார். பிறகு வண்டி புறப்பட்டது. அப்போதும் அவர் அவ்வாறே செய்தார்; வண்டியும் நிறுத்தப்பட்டது. கார்டு வந்து ஒன்றும் பேசாமல் அதிகமாக ஏற்றப்பட்டிருந்தவர்களை அவ்வண்டியிலிருந்திறக்கி மற்றொரு வண்டியிலேற்றிப் போய்விட்டார்.

### A Fire Accident.

**ஒரு தீவிபத்து.**—ஸமீபத்தில் பம்பாயில் 20-வயதுள்ள ஒரு பார்ஸி ஸ்த்ரீ தன்னுடைய மேற்புடவையை தளர்த்தியாய்த் தொங்கவிட்டு, தன்னுடைய நீண்ட தலைமயிரை அவிழ்த்துவிட்டு முழங்கால் வரையில் தொங்கவிட்டுக்கொண்டு அடுப்பண்டை போய் அதில் வைத்திருந்த ஒரு பாத்ரத்தை யெடுத்து அப்புறப்படுத்துகையில், அவளது தலைமயிரானது திடீரென்று பக்கத்திலிருந்த விளக்குத் தீயில் பற்றிக்கொண்டு புடவையும் தீப்பிடித்துக்கொண்டது. கூகூவென்று கூக்குரலிட்டாள். பக்கத்தறையி லிருந்த அவளுடைய கணவன் ஓடிவந்து நெருப்பை அவிப்பதற்குள் அவளுடைய சரீரத்தில் பலவிடங்கள் ரணமாகிவிட்டன; அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சிகித்ஸை செய்தார்கள்; ஆயினும் ஒன்றும் பலியாது அவள் இறந்துபோனாள். ஸ்த்ரீகள் சமையல்வேலை செய்யும்போது வஸ்த்ரத்தைத் தளர்த்தியாய் உடுத்திக்கொள்ளாமலும், மயிரை அவிழ்த்துக் கொள்ளாமலுமிருப்பதற்குஇது ஓர் எச்சரிக்கையே.



### A Soldiers Daily Ration.

**ஸோல்ஜரின் தினசரி ஆகாரம்.**—பிரிட்டிஷ் ஸோல்ஜர் ஒருவனுடைய ஒரு நாளாகாரம் பின் வருமாறு என்று 'இந்துநேசன்' எழுதுகிறது.

1¼ பவுன் புதியமாம்ஸம் அல்லது 1 பவுன் "டின்" [மாம்ஸம்.
1¼ பவுன் ரொட்டி.
4 அவுன்ஸு பன்றி மாம்ஸம்.
3 ஷை பாலேடை.
4 ஷை 'ஜாம்' என்னும் பழவர்க்கம்.
½ பவுன் காய்கறி, அல்லது 2 அவுன்ஸு வற்றல்.
⅝ அவுன்ஸு தேயிலை, காப்பி, அல்லது கொக்கோ [கஷாயம்.
2 ஷை புகையிலை, அல்லது 50 சிகெரெட்டு (ஒரு வாரத்திற்கு.)

### Supplies for Jamabandi.

**ஜமாபந்தி உத்யோகஸ்தர்களுக்கு ஸாமான்கள் கொடுப்பது.**—ஜமாபந்திக்குவரும் குமாஸ்தாக்கள் சிப்பந்திகளுக்கு பணமில்லாமல் க்ராமாதிகாரிகளும், ரயத்துகளும் ஸாமான்கள் ஸப்ளை செய்யகூடாதென்றும், சிப்பந்திகளும் வாங்கக்கூடாதென்றும், ஜமாபந்திச் செலவுக்காவது, அல்லது ஜமாபந்தி சிப்பந்திகளுக்காவது பணங்கொடுப்பதற்கு பணவரி வஸூல் செய்யக்கூடாதென்றும் தஞ்சாவூர் ஜில்லா கலெக்டர் தெரிவித்திருக்கிறார். இது விஷயமாக புகார் செய்ய விரும்புகிறவர்கள் ஜமாபந்தி ஆபீஸரிடம் நேராகச் சொல்லிக் கொள்ள வேண்டும். அநாமதேய பெடிஷன்கள் ஸாதாரணமாக பொய்யாயிருக்கிறபடியால், எல்லா பெடிஷன்களும் பொய்யாகவே எண்ணப்படும்.

### Wound and Vision.

**காயமும் பார்வையும்.**—ஸமீபத்தில் நடந்த ஒரு சண்டையில் ஒரு போர்வீரனுடைய நெற்றியில் ஒரு குண்டுதாக்கி தலையின் மேல்பாகத்தில் புகுந்து பின்புறமாகப்போய் விட்டது. இதனால் அவனுக்கு மரணம் ஏற்படவில்லை. குண்டுதாக்கின போது ப்ரஜ்ஞைகூடத் தப்பவில்லை. ஆனால் அவனுக்கு இப்போது எதைப்பார்த்தாலும் பச்சை நிறமாகத் தெரிகிறதாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் யுத்தம்.

**ஏப்ரல்மீ 2-தேதி**

ப்ரிட்டிஷ் ஆகாயகமவிமானிகள் ஆண்ட்வெர்ப்பின் மேல் பறந்து போய் அங்கே கட்டப்பட்டு வரும் ஸப்மரீன்களின்மேல் வெடிகுண்டுகள் போட்டார்கள். ஸீப்ருஜுக்கு வெளியில் இருந்த இரண்டு ஸப்மரீன் களின்மேலும் வெடிகுண்டுகள் போட்டார்கள்.

**7-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் வோவர்ப்ரதேசத்திலும், வெர்டனுக்குத் தெற்கிலும் முன்சென்று கொண்டிருக்கின்றன.

**10-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் வெர்டனுக்கு மேற்கேயுள்ள லெஸ் எஸ்பார்ஜஸ் என்னும் இடத்தைப் பிடித்திருக்கின்றன.

**13-தேதி.**

ஜெர்மானியர்கள் வெர்டுனுக்குத் தென் கிழக்கில் இழந்த இடத்தை மறுபடியும் அடைய பலமுறை முயன்றும் பயன்படவில்லை.

**16-தேதி.**

அநேக ஆகாயக்கப்பல்கள் ஆஸ்டெண்டின்மேல் பறந்து போய் பல ராணுவக்கட்டிடங்களின்மேல் வெடி குண்டுகள் போட்டன.

**19-தேதி.**

ஆல்ஸேஸில் ப்ரெஞ்ச் துருப்புகள் பெச்ட் பள்ளத்தாக்கில் ஒரு குன்றைப் பிடித்தன.

**20-தேதி.**

யிப்ரஸுக்குப் பக்கத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் சற்று ஜயமடைந்திருக்கின்றன. ஆல்ஸேஸ் மலைகளில் ப்ரெஞ்சுதுருப்புகள் முன்சென்றுகொண்டிருக்கின்றன.

**21-தேதி.**

ஸெய்ண்ட் மிஹியல் என்னும் இடத்திலும் ஆல்ஸேஸிலும் சண்டை பலமாக நடக்கிறது.

22-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் பிடித்துக்கொண்டிருக்கிற 60-ம் குன்று என்னும் மலையை ஜெர்மானியர்கள் பிடிக்க ரொம்ப ப்ரயத்தனப்பட்டும் பயன்படவில்லை. ஸெண்ட் மிஹியலுக்குப் பக்கத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன்னுக்குப் போய்க் கொண்டிருக்கின்றன.

24-தேதி.

யிப்ரஸுக்குத் தெற்கே ஜெர்மானியர்கள் ப்ரெஞ்சுத் துருப்புகளைத் தாக்கி, அவைகளின்மேல் மூச்சுவிட முடியாமலும் ப்ரஜ்ஞையற்றுப் போகும்படியும் செய்யும் காற்றுகள் உண்டாக்கக்கூடிய குண்டுகள் ப்ரயோகித்து, அதனால் ப்ரெஞ்ச் துருப்புகளை நாலைந்து மைல் பின்வாங்கும்படி செய்தார்கள்.

26-தேதி.

ஜெர்மானியர்கள் மறுபடியும் கலேயைப்பிடிக்க எண்ணியிருக்கிறார்களாம். அவர்கள் இஸர் கால்வாயைக் கடந்து விட்டார்கள். ஜெர்மானியர்கள் வெர்டுனுக்குப் பக்கத்தில் ப்ரெஞ்சுத் துருப்புகளை பலமாகத் தாக்கினார்கள்.

27-தேதி.

யிப்ரஸைச் சுற்றிலும் யுத்தம் நடக்கிறது. ஜெர்மானியர்கள் ப்ரஞ்சுக்காரர்களைத் தாக்கி யிஸர் கால்வாய்க்குத் துரத்தி யிப்ரஸ் பக்கம் முன்சென்று ஸான்ஜூலியன் என்னும் ஊரைப் பிடித்துக்கொண்டார்கள்.

வெர்டுனுக்குத் தென்கிழக்கில் ஜெர்மானியர்கள் லெஸ் எஸ்பார்ஜஸ் என்னும் ஊரை பிடிக்க ரொம்ப ப்ரயத்தனப்பட்டார்கள். ஆனால் முடியாமல் போயிற்று. வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் ஹார்ட்மான்ஸ்வீலர்காப் என்னும் இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

28-தேதி

ப்ரெஞ்ச் துருப்புகள் யிப்ரஸுக்குப் பக்கத்திலுள்ள ஹெட்ஸாஸ் என்னும் இடத்தைப் பிடித்திருக்கின்றன. ப்ரிட்டிஷ் ஆகாய விமானிகள் கோர்ட்ராய் என்னுமிடத்திலுள்ள ரெயில்வே ஜங்க்ஷனை நாசம் செய்தார்கள்.

30-தேதி.

ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் பெல்ஜியம் கரையோரமாக உள்ள டன்கர்க் என்னும் பட்டணத்தைத் தாக்கின.

## ரஷ்யாவுக்கும் ஆஸ்ட்ரியா-ஜெர்மனிக்கும் யுத்தம்

ஏப்ரல்மீ 1-தேதி.

நீமன் நதிக்கு மேற்கே க்ராஸ்னு ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தார்கள்.

2-தேதி.

புகோவினாவிலிருந்து ரஷ்யாவின் மேல் படையெடுத்துப்போன ஆஸ்ட்ரியப் படை தோற்கடிக்கப்பட்டது.

3-தேதி.

வடபோலண்டில் ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

6-தேதி.

கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் டுக்லா கணவாய்க்குத் தெற்கே பலமான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. லப்கௌ கணவாயிலும், உஸாக் கணவாயிலும் ரஷ்யர்கள் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். புகோவினா மாகாணத்தின் தலை நகராகிய ஸெர்னோவிட்ஸில் கொடுமையான யுத்தம் நடந்ததாகவும், ஆஸ்ட்ரியர்கள் பின் தள்ளப்பட்டதாகவும் தெரிகிறது.

7-தேதி.

ரஷ்யர்கள் கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் ரஸ்டாக் கணவாயில் ரொம்ப முன் சென்றிருக்கிறார்கள்.

12-தேதி.

கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் ஏராளமாய் ஸைன்யங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

13-தேதி.

ஏராளமான ஜெர்மன் படைகளும் ஆஸ்ட்ரிய படைகளும் கார்ப்பேதியன் மலைப்ரதேசத்துக்குப் புதிதாக வந்திருப்பதால் ரஷ்யர்கள் முன் செல்வது தடைபட்டிருக்கிறது.

14-தேதி.

சென்ற 11,12,-ந் தேதிகளில் கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் யுத்தம் பலமாக நடந்தது. ரஷ்யர்கள் டுக்லா கணவாயின் தெற்கில் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். உஸாக் கணவாயின் பக்கத்தில் சில குன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள். உஸாக் கணவாய் இன்னும் ஆஸ்ட்ரியர்கள் வசம் இருக்கிறது.

நீமன் நதிக்குமேற்கில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களைத் தோற்கடிக்க முயன்றும் பயன் படவில்லை.



15-தேதி.

உஸாக் கணவாயில் நடந்த சண்டையில் இருகக்ஷியாரும் தங்கள் பக்கமே ஜயமென்கிறார்கள். மற்றவிடங்களில் ஆஸ்ட்ரியர்களாவது, ரஷ்யர்களாவது முன் செல்லவில்லை.

17-தேதி.

கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் பனிக்கட்டி உருகுவதாலும், மலை யருவிகளில் ஜலம் அதிகம் வருவதாலும், ரோடுகள் நன்றாயிராததாலும் இருகக்ஷியாரும் ஒன்றும் செய்யமுடிய வில்லையாம்.

ஆஸ்ட்ரியா-ஹங்கேரியின் ஒருபாகமாகிய ஹங்கேரியில் ஜனங்களெல்லாம் ஸமாதானத்தை விரும்புகிறார்களென்று ஹங்கேரியிலுள்ள ஒரு நிருபர் ஒரு ப்ரிட்டிஷ் பத்ரிகைக்கு எழுதியிருக்கிறாராம்.

ப்ரஸீமிஸலை ரஷ்யர்கள் பிடித்தபோது, அவர்களுக்குக் கிடைத்த பீரங்கிகள் 1010.

19-தேதி.

ரஷ்யர்கள் பிடித்த இடங்களை ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் மறுபடியும் பிடிப்பதற்காக ரொம்ப உக்ரமாக சண்டைசெய்தார்கள்.

21-தேதி.

கார்ப்பேதியன் மலைகளில் காலஸ்திதி அஸௌகர்யமாயிருப்பதால் ரஷ்யர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை.

22-தேதி.

கார்ப்பேதியன் மலையில் ஆஸ்ட்ரியர்கள், ரஷ்யர்கள் பிடித்த இடங்களை மறுபடி பிடிக்க வீண்ப்ரயத்தனங்கள் செய்தார்கள்.

26-தேதி.

ரஷ்யர்கள் உஸாக் கணவாய்க்கு 2 மைல் பக்கத்திலுள்ள சில குன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

கார்ப்பேதியன் மலை ப்ரதேசத்தில் ஸ்ட்ரிஜுக்குப் பக்கத்தில் பலமான யுத்தம் நடக்கிறது.

28-தேதி.

கார்ப்பேதியன் மலைப்ரதேசத்தில் ரஷ்யர்களை ஆஸ்ட்ரியர்கள் பலமாகத் தாக்குகிறார்கள். ரஷ்யர்கள் கொஞ்சமும் முன் செல்லவில்லை. ஸ்ட்ரிஜ் என்னுமிடத்தில் பலமான யுத்தம் நடக்கிறது.

29-தேதி.

ஜெர்மானியர்கள் வடநீமனில் ரஷ்யர்களை ரொம்ப பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

## துருக்கியோடு யுத்தம்.

ஏப்ரல்மீ 1-தேதி.

பாஸ்பரஸ் ஜலஸந்தியில் மூடுபனியாயிருப்பதால் ரஷ்ய யுத்தக் கப்பல்கள் பாஸ்பரஸ் கோட்டைகளைத் தாக்க முடியவில்லை.

அநேக நேசப் போர்க்கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலஸந்தியைத்தாக்கிக் கொண்டிருகின்றன.

6-தேதி.

'கோபனும்,' 'ப்ரஸ்லாவும்' கருங்கடலில் க்ரிமியன் தீபகல்பத் தோரமாய்வந்து ரஷ்ய கப்பல் படையுடன் சிறிதுநேரம் சண்டையிட்டன.

10-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியில் சானக் தீவுக்குப் பக்கத்தில் துருக்கியர்கள் போட்டிருந்த கடல் வெடிகுண்டுகளை நேசக்கப்பல்கள் வாரிக்கொண்டிருக்கின்றன.

14-தேதி.

பஸ்ராவுக்கு வடமேற்கேயுள்ள பார்ஜிஸியா என்னுமிடத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகளும் இந்திய துருப்புகளும் 15,000 பேர்கள் கொண்ட ஒரு துருக்கிய ஸைன்யத்தைத் தோற்கடித்துத் துரத்தின.

நேசக்கப்பல்கள் டார்டனல்ஸ் ஜலஸந்தியில் சில கோட்டைகளைத் தாக்கினதாகத் தெரிகிறது.

17-தேதி.

ஒரு ப்ரெஞ்ச் க்ரூஸர் கப்பல் ஸிரியன் ரெயில்வேயையும், ஏகர் பட்டணத்தையும் ஸம்பந்தப்படுத்தும் ஒரு ரெயில்வே பாலத்தை நாசப்படுத்திற்று.

ரஷ்யன் டிஸ்ட்ராயர் கப்பல்கள் 4-துருக்கிய ஸ்டீமர்களை மூழ்கடித்துவிட்டன.

பாஸ்பரஸ் ஜலஸந்திக்கு கிழக்கில் உள்ள குங்குல்டாக் பீரங்கி பாட்டரிகளை ரஷ்யன் டிஸ்ட்ராயர் கப்பல்கள் தாக்கின.

19-தேதி.

துருக்கிய டார்ப்பிடோ போட்டுகள் ஈஜியன் கடலில் ப்ரிட்டிஷ் துருப்புகளை ஏற்றிக்கொண்டுபோன 'மானிடேள' என்னும் கப்பலைத்தாக்கின. டார்ப்பிடோக்கள் மானிடேளவில் படவில்லையாம். ஆனால் படகில் ஏறியிருந்த 51 ஜனங்கள் படகு கவிழ்ந்ததால்மூழ்கியிறந்தார்களாம். ப்ரிட்டிஷ் க்ரூஸர்கள் டார்ப்பிடோ போட்டுகளை 'ஷியாஸ்' என்னும் க்ரீக் தீவுவரையில் துரத்திச் சென்றன. டார்ப்பிடோக்கப்பல்கள் கரைதட்டிப்போயின. அந்தக் கப்பல்களிலிருந்த ஜனங்கள் அங்கேயே சிறைவைக்கப்பட்டார்கள்.

**25-தேதி.**

இன்று ரஷ்யாவின் கருங்கடல்படை பாஸ்பரஸ் ஜலஸந்தியின் முகத்வாரத்தில் உள்ள சில கோட்டைகளையும், சற்று உள்பக்கமுள்ள கோட்டைகளையும் தாக்கிற்று.

டார்டனல்ஸின்மேல் படையெடுக்க அனுப்பப்பட்டிருக்கும் ஸைன்யம் காலிப்பொலி தீபகல்பத்தில் பற்பலவிடங்களில் இறங்கின.

**27-தேதி.**

ரஷ்யாவின் கருங்கடல் கப்பல் படை பாஸ்பரஸ் கோட்டைகளைத்தாக்கி, அவைகள் ஒன்றில் சேதமுண்டாக்கிற்று.

**28-தேதி.**

டார்டனல்ஸ் ஜலஸந்தியின் முகத்வாரத்திலுள்ள கம்காலே யென்னும் ஊரை ப்ரெஞ்ச் துருப்புகள் தாக்கிப் பிடித்துக்கொண்டன.

**30-தேதி.**

டார்டனல்ஸ் ஜலஸந்தி யோரமாயுள்ள காலிபோலி தீபகல்பத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் துருக்கிய கோட்டைகளை நோக்கி முன்சென்று கொண்டிருக்கின்றன. டார்டனல்ஸ் ஜலஸந்தியின் கீழ்ப்புறமாகிய ஏஷ்யா மைனரில் ப்ரெஞ்சு துருப்புகள் துருக்கியர்களைத் துரத்திக்கொண்டிருக்கின்றன.

## பொதுவிஷயங்கள்.

**ஏப்ரல்மீ 1-தேதி.**

ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்கள் 'ஸெவன்ஸீஸ்' 'ஏம்மா' 'ஸௌத்பாயிண்ட்' 'ஜேஸன்' 'க்ளாக்ஸிமியா' 'நெல்லி' என்னும் ப்ரிடிஷ் கப்பல்களை மூழ்கடித்துவிட்டன.

**2-தேதி.**

ஒரு ப்ரிட்டிஷ்கப்பலும் ஒரு ப்ரெஞ்சுக்கப்பலும் ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்களால் மூழ்கடிக்கப்பட்டன.

**3-தேதி.**

மூன்று மீன்பிடிக்கும் கப்பல்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்களால் மூழ்கடிக்கப்பட்டன.

**7-தேதி.**

ஜெர்மன் ஸப்மரீன்கள் இரண்டு ப்ரிட்டிஷ் கப்பல்களை மூழ்கடித்துவிட்டன.

**14-தேதி.**

இன்று இரவு ஒரு ஸெப்பலின்கப்பல் இங்க்லண்டின் வடகிழக்குக்கரையில் உள்ள ந்யூகாஸில் என்னும் ஊருக்குப்போய் வெடிகுண்டுகள் போட்டு பல கட்டிடங்களுக்கு சேதம் உண்டாக்கிற்று.

**16-தேதி.**

ஒரு ஸெப்பலின் கப்பலும் வேறு இரண்டு ஆகாயக் கப்பல்களும், இங்க்லண்டின் கீழ்க்கரையிலுள்ள லோஸ்டாப்ட், மால்டன் என்னும் ஊர்களில் வெடிகுண்டுகள் போட்டன.

**17-தேதி.**

ஒரு ஜெர்மன் ஆகாயவிமானி ஸ்விட்ஸர்லண்டிலுள்ள பொர்னவிலின் என்னும் ஊரில் வெடிகுண்டுகள் போட்டாராம். ஸ்விட்ஸர்லண்ட் கவர்ன்மெண்டார் அந்த செய்கையைப்பற்றி ஆக்ஷேபித்து ஜெர்மனிக்கு ஒருகடிதம் எழுதியிருக்கிறார்களாம்.

**19-தேதி.**

இதுவரையில் வெளியான கணக்குகளால் ஜெர்மானியர்களுக்கு 27½ லக்ஷம் ஸோல்ஜர்கள் காயமடைந்தும், இறந்தும், கைதியாக்கப்பட்டும் போனார்களென்று தெரிகிறது.

**21-தேதி.**

தென்னாப்பிரிக்காத் துருப்புகள் ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவில் கட்மான்ஸுப் என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

**29-தேதி.**

ப்ரான்ஸுக்கு ஸொந்தமான 'லியான் காம்பெட்டா' என்னும் க்ரூஸர்கப்பல் அட்ரியாட்டிக் கடலில் ஒரு ஆஸ்ட்ரிய ஸப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டது.

ந்யூ ஷாபல் என்னுமிடத்தில் ரொம்ப தைர்யமாய் சண்டைசெய்து இறந்துபோன கோபார் ஸிங் நெகி என்னும் சிப்பாய்க்கு விக்டோரியா க்ராஸ் என்னும் விருது கொடுக்கப்பட்டிருக்கிறது.

**30-தேதி.**

இங்க்லண்டின் கீழ்பாகத்திலுள்ள இப்ஸ்விச், பரி ஸெய்ண்ட் எட்மண்ட்ஸ் என்னும் ஊர்களின்மேல் ஜெர்மன் ஆகாயகமனிகள் வெடிகுண்டுகள் போட்டார்கள்.



## INDIAN NEWS.

### இந்திய நாட்டு ஸமாச்சாரங்கள்.

**ஏப்ரல் 3-தேதி**

**விசாகப்பட்டணம் ஜில்லா கான்பரென்ஸ்.**—இன்று விசாகப்பட்டணம் ஜில்லா கான்பரென்ஸ் விசாகப்பட்டணம் ஜில்லாவைச் சேர்ந்த ராஜும் என்னும் ஊரில் கூடிற்று. ஆனரபிள் ராவ்பகதூர் பி. என். சர்மா ப்ரெஸிடெண்டாக இருந்து, யுத்தம், தேசமுன்னேற்றம், உயர்தரக்கல்வி, ஸம்ஸ்க்ருதக்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினார்.

**விச்வகர்ம மஹாஜன கான்பரென்ஸ்.**—இது இன்றையதினம் கும்பகோணத்தில்கூடிற்று. சென்னையைச் சேர்ந்த முக்கண்ணாச்சாரி ப்ரெஸிடெண்டாக இருந்து ஜாதி அபிவ்ருத்தி, கல்வி முதலிய விஷயங்களைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

**7-தேதி.**

**சென்னையில் விவஸாயம்.**—இந்தியா மந்திரி சென்னை ராஜதானிக்கு அதிகப்படியாக 4-விவஸாய டெபுடி டிரெக்டர்களை நியமிக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார்.

**9-தேதி.**

**வைஸ்ராயின் நிர்வாகஸபை.**—பம்பாய் நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர் க்ளாட் ஹில் வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சிறிது காலம் கல்வி மெம்பராக இருப்பார்.

**17-தேதி.**

**சென்னையில் மிஸ்டர் காந்தி.**—மிஸ்டர் காந்தியும் அவரது மனைவியும் இன்று ஸாயந்திரம் ஹரித்வாரிலிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். சென்னையிலுள்ள பல ப்ரமுகர்கள் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அவரை வரவேற்றார்கள்.

**21-தேதி.**

**மிஸ்டர் காந்திக்கு உபசரிப்பு.**—மதராஸிலுள்ள இந்திய தென்னாப்ரிக்கா லீக் என்னும் ஸங்கத்தார் இன்று மிஸ்டர் காந்திக்கு ஒரு அட்ரஸ் வாசித்துக் கொடுத்தார்கள்.

**28-தேதி.**

**அரசர் பிறந்த நாள்.**—இந்த வர்ஷம் சக்ரவர்த்தி பிறந்த நாள் (ஜூன் மாஸம் 3-தேதி) உத்யோக முறையில் கொண்டாடப்படமாட்டாது. அன்றைய தினம் மரியாதை குண்டுகளும் போ[illegible]படமாட்டா.

## SEASON

### கால ஸ்திதி

**Rainfall.**

மழை.—1915ஞு ஏப்ரல்மீ 1௳யிலிருந்து 1915ஞு. மேமீ 5௳ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸாரஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 0·54 | 0·93 |
| வால்டேர் | 1·32 | 1·00 |
| காக்கினாடா | 2·41 | 0·75 |
| மஸூலிப்பட்டணம் | 0·33 | 0·70 |
| நெல்லூர் | 0·04 | 0·46 |
| மதராஸ் | 0·54 | 0·65 |
| கூடலூர் | ·00 | 0·79 |
| நாகப்பட்டணம் | ·00 | 0·79 |
| பாம்பன் | 5·18 | 2·06 |
| கொழும்பு | 10·93 | 11·56 |
| திருவனந்தபுரம் | 3·82 | 5 88 |
| கொச்சி | 6·83 | 6·12 |
| கள்ளிக்கோட்டை | 7 49 | 4 56 |
| மங்களூர் | 0·54 | 1·66 |
| மெர்க்காரா | 7·07 | 3 16 |
| ஐதராபாத் | 0·96 | 1 13 |
| பல்லாரி | 2·08 | 1·09 |
| கர்நூல் | 0·24 | 0 86 |
| கடப்பை | 0·02 | 0·58 |
| ஹாஸ்ஸான் | 2·22 | 3·17 |
| பெங்களூர் | 2·45 | 1·84 |
| கொடைக்கானல் | 3 94 | 5.16 |
| உதகமண்டலம் | 1 75 | 3·61 |
| கோயம்புத்தூர் | 0·73 | 2·10 |
| வேலூர் | 2 72 | 1·66 |
| சேலம் | 1·72 | 2·64 |
| திருச்சிராப்பள்ளி | 0 70 | 2 34 |
| புதுக்கோட்டை | 4·16 | 1·81 |
| மதுரை | 1·60 | 2·75 |
| திருநெல்வேலி | 2·92 | 3·22 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி யோக | உதய லக்ன நா வி | அஹஸ் நா வி | துலு உ | இங் உ | தமி உ | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்ல-1090 பஸலி-1324, இங்கி-1915 மே-ஜூன்மீ } 49-ராக்ஷஸ வருஷ வைகாசிமீ { நிஜவைசாக-ஜ்யேஷ்ட, உத்தராயண-வஸந்தருது ஹிஜரி-1333 வருஷ, ஜமாதிசானி-ரஜப்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| ஸிம | 5 9 | 31 13 | 28 | 14 | 1 | வெ | ● 7-49, கிரு 59-33, சோ 41-8, கிம் 40-51, தி 25-49, ரிஷபரவி 22-0, ரிஷபருன்யதி, பிண்டபிதிரு, இஷ்டி கிருத்திகை, வஷ்ணுபதிபுண்யகாலம், ஸமார்க்கம் [தர்சனம் |
| அ | 4 59 | 14 | 29 | 15 | 2 | ச | ப்ர 13-53, ரோ 60-0, அதி 43-32, பால் 46.57, சே 1-17, ரா 13-17, ரிஷபத்வீதீயாதி, நிஜவைசாகசுத்த, சந்திர |
| ஸி | 49 | 15 | 1 | 16 | 3 | ஞா | த்வி 19-58, ரோ 7-1, சுக 45-52, தை 52-56 தி 22-45, அதிதி, பலராமஜயந்தீ |
| அஸி | 39 | 16 | 2 | 17 | 4 | தி | த்ரி 25-49, மிரு 14-19, திரு 47-58, வணி 58-37, ரா 6-34, ரிஷபத்ரிதீயாதி, யுகாதி, கல்பாதி, அக்ஷயத்ரிதீயை, |
| மஸி | 30 | 17 | 3 | 18 | 5 | செ | சது 31-14, திரு 21-14, சூல 49-38, பத் 31-14, ரா 23-10, சதுர்த்திவிரதம், பௌமசதுர்த்தி [தாரதினை |
| ஸி | 20 | 18 | 4 | 19 | 6 | பு | பஞ் 35-48, புன 27-24, கண் 50-35, பவ 3-39, ரா 17-56, லாவண்யகௌரீவிரதம், ஸ்ரீசங்கரபகவத்பாதாள் அவ |
| அஸி | 10 | 19 | 5 | 20 | 7 | வி | ஷஷ்ஷ் 39-10, பூச 32-28, வ்ரு 50-33, கவு 7-39, ஷஷ்டியுபவாஸம், கரிநாள் |
| ம | 4 0 | 20 | 6 | 21 | 8 | வெ | ஸப் 40-46, ஆயி-36-1, த்ரு 49-15, கர 10-16, தி 6-34, கங்கோத்பத்தி |
| அஸி | 3 51 | 21 | 7 | 22 | 9 | ச | அஷ் 40-53, மக 37-49, வ்யா 46-29, பத் 11-8, தி 6-40, ரா 26-38, மிதுனயனம் 9-9 |
| ஸிஅ | 41 | 22 | 8 | 23 | 10 | ஞா | நவ 38-48, பூர 37-38, ஹர் 42-1, பால 10-6, சே 1-59, ரா 23-4 |
| ஸி | 31 | 23 | 9 | 24 | 11 | தி | தச 34-43, உத் 35-27, வஜ் 36-5, தை 7-0, ரா 23-51 |
| ஸி | 21 | 23 | 10 | 25 | 12 | செ | ஏகா 28-48, ஹஸ் 31-26, ஸித் 28-14, வணி 1-58, பவ 55-12, ரா 18-19, ஏகாதசீதி, ஸர்வஏகாதசீ |
| ஸி | 12 | 24 | 11 | 26 | 13 | பு | த்வா 21-15, சித் 25-49, வ்ய 19-44, கவு 47-0, ரா 6-54, திதித்வயம், வ்யசிரா, ப்ரதோஷம் |
| அஸி | 3 2 | 25 | 12 | 27 | 14 | வி | த்ர 12-28, சுவா 18-59, வரீ 9-50, பரி 59-15, கர 37-45, தி 31-16, சதுர்த்தசீதி, நரஸிம்மஜயந்தீ [மாவை |
| ஸி | 2 52 | 26 | 13 | 28 | 15 | வெ | சஸி 2-53, ○ 52-57, விசா 11-24, சிவ 48-21, பத் 27-56, தி 20-6, வைசாகஸ்நானபூர்த்தி, அவம, இராமா, ஆகா |
| ஸி | 42 | 27 | 14 | 29 | 16 | ச | பர 43-10, அனு 3-33, கேட் 55-57, சித் 37-31, பால 18-6, தி 15-44, நிஜவைசாகபகுளம், இஷ்டி, கரிநாள், |
| அஸி | 33 | 28 | 15 | 30 | 17 | ஞா | த்வி 34-0, மூல 49-5, சாத் 27-11, தை 8-28, வணி 59-47, தி 13-33, ரா 14-4, கரிநாள் [திவாமா |
| உம | 23 | 28 | 16 | 31 | 18 | தி | த்ரி 25-52, பூரா 43-23, சுப 17-41, பவ 52-19, தி 10-38, த்ரிதீயாதி, ஸங்கடசதுர்த்தீ |
| ஸி | 13 | 29 | 17 | 1 | 19 | செ | சது 19-10, உரா 39-15, சுப 9-19, கவு 46-28, தி 1-49, ரா 17-16, திதித்வயம், அலப்யம், பௌம சதுர்த்தி |
| [illegible] | 2 3 | 29 | 18 | 2 | 20 | பு | பஞ் 14-13, சிர 36-57, ப்ரா 2-21, மா 56-57, கர 42-28, ரா 15-16, ஷஷ்டிதிதி, சிரவணஉபவாஸம் |
| ஸிம | 1 54 | 30 | 19 | 3 | 21 | வி | ஷஷ்ஷ் 11-12, அவி 36-37, வை 53-11, பத் 40-27, ரா 23-2, வைசிரா |
| ஸி | 44 | 30 | 20 | 4 | 22 | வெ | ஸப் 10-12, சத 38-16, விஷ் 50-59, பால 40-27, ரா 23-31, காலாஷ்டமீ |
| மஸி | 34 | 31 | 21 | 5 | 23 | ச | அஷ் 11-9, பூட் 41-43, ப்ரீ 50-11, தை 42-17 |
| அ | 24 | 31 | 22 | 6 | 24 | ஞா | நவ 13-48, உட் 46-41, ஆயு 50-35, வணி 45-40, தி 7-33 |
| ஸி | 15 | 32 | 23 | 7 | 25 | தி | தச 17-51, ரே 52-49, ஸவ 51-53, பவ 50-16, தி 19-38, ஏகாதசீதி |
| ஸி | 1 5 | 32 | 24 | 8 | 26 | செ | ஏகா 22-54, அசு 59-42, சோ 53-48, கவு 55-40, ரா 6-57, அதிதி, ஸர்வஏகாதசீ |
| ஸி | 0 55 | 33 | 25 | 9 | 27 | பு | த்வா 28-35, பர 60-0, அதி 56-5, தை 23-35, தி 26-36, ரா 9-13, த்வாதசீதி, ப்ரதோ |
| ஸிம | 45 | 33 | 26 | 10 | 28 | வி | த்ர 31-35, பர 7-2, சுக 58-31, கர 1-34, மாஸஸிவராத்ரி, கிருத்திகை, இராமா [ஷம் |
| ஸிம | 36 | 33 | 27 | 11 | 29 | வெ | சஸி 40-37, கிரு 14-30, திரு 60-0, பத் 7-37, ரா 27-53, திவாமா |
| அஸி | 26 | 34 | 28 | 12 | 3[illegible] | ச | ● 46-27, ரோ 21-53, திரு 0-55, சது 13-34, சே 3-27, ரா 5-58, ஸர்வஅமா, பிண்டபிதிரு |
| ஸி | 16 | 34 | 29 | 13 | 31 | ஞா | பர 51-58, மிரு 28-58, சூல 3-7, கிம் 19-16, ரா 20-46, ரிஷபப்ரதமாதிதி, ஜ்யேஷ்டசுத்த, இஷ்டி, காவீரவிரதம் |
| ஸிஅ | 0 6 | 31 34 | 30 | 14 | 32 | தி | த்வி 56-56, திரு 35-36, கண் 5-2, பால 24-22, மிதுனரவி 38-42, ரிஷபருன்யதி, ஷடசீதி, புண்யகாலம், சந்திரதர்ச |

| | | | |
|---|---|---|---|
| மச சு | | ர-பு | ச |
| குரு | 2-மே-சு 3-மே-செ 3-மீனகுரு 11-மிது-பு 27-ரிஷ-சு | | கே |
| ரா | | | |
| | | | |



SIR C. SANKARAN NAIR.
ஸர் ஸி. சங்கரன் நாயர்.

# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. Vaidya Raman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸ௵ வைகாசிமீ, MAY 1915. — ஸஞ்சிகை 9. No. 9.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| $\frac{1}{10}$ do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்

| | உள் நாடு. | | | | அந்ய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 | 0 | 0 |
| ½ ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| $\frac{1}{10}$ ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்

# ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸ௵ வைகாசி௴. [ஸஞ்சிகை 9.

## ITALY AND THE WAR.

## இட்டலியும் யுத்தமும்.

சென்ற பத்து மாஸங்களாக ஐரோப்பிய யுத்தத்தில் சேராமல் தனித்து நின்றுவந்த இட்டலி, இந்த மாஸம் 24-தேதி யன்று ஜெர்மனிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் விரோதமாக யுத்தம் ஆரம்பித்துவிட்டது. ஜெர்மனியானது ப்ரான்ஸின் மேலும் ரஷ்யாவின்மேலும் யுத்தம் ஆரம்பித்த போதே, அது ஏற்கனவே ஏற்பட்டுள்ள ட்ரிபிள் அல்லையன்ஸ் என்னும் உடன்படிக்கையின்படித் தன் கக்ஷியில் சேரவேண்டுமென்று இட்டலியைக் கேட்டது. ஆனால் இட்டலியோ, ட்ரிப்பிள் அல்லையன்ஸ் என்பது மற்ற நாடுகளை அக்ரமமாக படையெடுப்பதற்காக ஏற்பட்டதல்லவென்றும், ட்ரிப்பிள் அல்லையன்ஸ் என்னும் உடன்படிக்கையில் சேர்ந்த ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, இட்டலி ஆகிய இவைகளை வேறு தேசங்கள் போருக்கு இழுத்தால் ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொள்வதற்காக மாத்ரம் ஷை உடன்படிக்கை ஏற்பட்டதென்றும் பதில் சொல்லி ஜெர்மனியோடு சேர மறுத்துவிட்டது. வெகு காலம் வரையில் இட்டலி எந்தக் கக்ஷியிலும் சேராமல் சும்மா இருக்குமா அல்லது இங்கிலீஷ்காரர்களுடைய கக்ஷியில் சேருமா என்பதைப் பற்றிப் பலர் ஆலோசனை செய்துவந்தார்கள். இட்டலி ஜெர்மனியுடன் சேருவதற்கு ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் ப்ரதிப்ரயோஜனம் ஏதாவது கொடுக்க வேண்டுமென்று இட்டலி எதிர்பார்த்தது. இட்டலிக்கு வேண்டியிருப்பன ஆஸ்ட்ரியா தன்னிடமிருந்து முன்பு பிடுங்கிக்கொண்ட ட்ரீஸ்ட், ட்ரெண்டினோ முதலிய ப்ரதேசங்களே. ஆஸ்ட்ரியா அதற்கு ஸம்மதப்படவில்லையென்று தோன்றுகிறது. இந்த விஷயம் ஒருவாறு நிச்சயப்படுவதற்கு சிலகாலம் சென்றது. ஆகவே தனக்கு வேண்டிய ப்ரதேசங்களை யடைய இட்டலி ஆஸ்ட்ரியாவோடும் ஜெர்மனியோடும் யுத்தம் தொடங்கலாயிற்று. மேலும் இட்டலிக்கு இன்னொரு குறையுமுண்டு. பால்கன் நாடுகளில் இன்னின்ன விடங்களில் இன்னாருக்கு செல்வாக்கு உண்டென்று ஆஸ்ட்ரியாவும் இட்டலியும் ஒருவரையறை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆஸ்ட்ரியாவாகட்டும் இட்டலியாகட்டும் பால்சன் நாடுகள் ஸம்பந்தமான எந்தக் காரியங்களிலும் ஒன்றுக்கொன்று முன்னடி அறிவித்து யோசனை கேட்டுக்கொள்ள வேண்டியது அவச்யமென்று அந்த இரண்டு தேசங்களுக்குள் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது.

சென்ற ஜூலைமாஸத்தில் ஸராஜிவோ கொலை நடந்த பிறகு ஸெர்வியா சில நியந்தனைகளுக்கு உள்பட வேண்டுமென்று அதற்கு ஆஸ்ட்ரியா ஒரு கடைசிப் பேச்சான கடிதம் அனுப்பினபோது, அது (ஆஸ்ட்ரியா) இட்டலியினிடம் யோசனை செய்யவில்லை. அதைப்பற்றி முன்னடி இட்டலிக்குத் தெரிவிக்கக் கூட வில்லை. இது இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் உள்ள உடன்படிக்கைக்கு விரோதமாக ஆஸ்ட்ரியா நடந்ததாகிறது. ஆகவே இட்டலியானது இந்தமாஸம் (௳) 4-ந் தேதியன்று ஷை உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொண்டதாகத் தெரிவித்து விட்டது.

இட்டலி இதுவரையில் யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சேராமலிருந்து வந்ததற்கு இன்னொரு



காரணமும் சொல்லுகிறார்கள். ட்ரிப்பொலியில் நடந்த யுத்தத்தினால் ஸைன்யத்தில் ரொம்ப குறைவு ஏற்பட்டிருந்ததாம். அந்தக்குறைகளை சரிப்படுத்த முடியாமலிருந்தது. ஆனால் சென்ற ஏழெட்டுமாஸங்களுக்குள் ஸைன்யத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்களென்று சொல்லுகிறார்கள்.

இட்டலியின் சேனை.—இட்டலியில் எல்லா ஆண்களும் தரைப்படையிலாவது கப்பல் படையிலாவது சேரவேண்டியது அவச்யம். மொத்தம் ராணுவத்தில் சேர்ந்திருக்கவேண்டிய காலம் 20-வது வயஸுமுதல் 19 வர்ஷமாகும். ஆனால் எல்லா ஆண்களையும் படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை.

ராணுவத்தில் சேருபவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கிறார்கள். முதல் பிரிவை சாச்வதமான ஸைன்யத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள். இரண்டாவது பிரிவை சாச்வதமான ஸைன்யத்தில் சேர்ந்தவர்களாக வைத்து அவர்களுக்கு சாச்வதமான லீவுகொடுத்து விடுகிறார்கள். அவர்களை யுத்தகாலத்தில் சாச்வத ஸைன்யத்துக்கு ஏற்படும் ஜனச்சேதத்தை சரிப்படுத்துவதற்காக அனுப்புவார்கள். மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்களை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளாமல் டெரிடோரியல் மிலிஷியா என்னும் படையில் சேர்த்துக் கொள்வார்கள். இந்த மிலிஷியாவைச் சேர்ந்தவர்கள் ஸமாதான காலங்களில் படைகளாக வகுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுத்து, பேர்களை மாத்ரம் தாக்கல் செய்து வைத்துக்கொண்டு யுத்த காலங்களில் தேச பாதுகாப்புக்காக உபயோகிப்பார்கள். இவர்கள் ஸாதாரணமாய் அன்ய தேசங்களில் போய் சண்டை செய்வதில்லை.

சாச்வதமான ஸைன்யத்தைச் சேர்ந்தவர்கள் காலாள், பீரங்கி, குதிரை ஆகிய இவற்றுள் எந்தப் படையைச் சேர்ந்திருந்தாலுஞ் சரி, 2-வர்ஷம் படைகளில் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு அவர்களை ரிஸர்வுகளாக மாற்றி 6-வர்ஷம் லீவு கொடுத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு 4-வர்ஷம் மொபைல் மிலிஷியா என்னும் படையைச் சேர்ந்தவர்களாகிறார்கள். இவர்களை யுத்த காலத்தில் சீக்ரம் ஸைன்யங்களாக சேகரித்து விடலாம். 4-வர்ஷமான பிறகு 7-வர்ஷகாலம் டெரிடோரியல் மிலிஷ்யா படையில் சேர்ந்தவர்களாகிறார்கள். ஆக 39 வது வயஸில் ராணுவ ஸேவகம் முடிந்துபோகிறது.

இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களும் முதல் எட்டு வர்ஷகாலம் சாச்வதமான ஸைன்யத்தைச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு 2-முதல் 6 மாஸகாலம் ராணுவப்பயிற்சி கொடுப்பார்கள். 8-வர்ஷத்துக்குப் பிறகு 4-வர்ஷகாலம் மொபைல் மிலிஷியாவிலும், 7-வர்ஷகாலம் டெரிட்டோரியல் மிலிஷியாவிலும் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டவுடனேயே டெரிட்டோரியல் மிலிஷியாவில் சேர்க்கப்படுவார்கள். இவர்களுக்கு 30 நாள் ராணுவப்பயிற்சி கொடுப்பார்கள்.

யுத்தகாலத்தில் முதலில் கிடைக்கக்கூடிய ஸைன்யம் 12 ஆர்மிகோர் காலாள் படையும் 3 குதிரைப்படை டிவிஷனுமாகும். 11 ஆர்மிகோர்களுக்கு ஒவ்வொன்றிலும் 2 டிவிஷன்கள் உண்டு. பாக்கியாயுள்ள ஆர்மிகோருக்கு 3 டிவிஷன்கள் உண்டு. ஒரு டிவிஷனுக்கு, ஒவ்வொன்றிலும் 3-பட்டாளங்கள் உள்ள 2-ரெஜிமெண்டுகளும், 5-பீரங்கி பாட்டரிகள் கொண்ட ஒரு ரெஜிமெண்ட் பீரங்கிப்படையும் உண்டு. ஒரு டிவிஷனில் ஆபிஸர்களும் வீரர்களும் சேர்ந்து 14,156 பேர்களும், 1,399 குதிரைகளும், 30 பீரங்கிகளும் உண்டு. இவைகளைத்தவிர ஒவ்வொரு ஆர்மிகோரிலும் ஆறு பாட்டரிகொண்ட ஒரு ரெஜிமெண்ட் பீல்ட் ஆர்ட்டிலரியும் (பீரங்கிப்படை), இரண்டு அல்லது மூன்று கனமான பீரங்கிப் படைகளும், ஒரு குதிரைப்படை ரெஜிமெண்

டும், வேகமாய்ப் போகக்கூடிய 'பெர்ஸாக்லியர்' என்னும் காலாள் படையும் உண்டு.

ஒரு குதிரைப்படை டிவிஷனில் ஒவ்வொன்றிலும் இரண்டு ரெஜிமெண்டுகள் உள்ள 2 ப்ரிகேடுகளும், 2 குதிரை பீரங்கி பாட்டரிகளும் உண்டு.

இவைகளைத்தவிர இட்டலியின் வடபாகத்தில் உள்ள மலைக்கணவாய்களைப் பாதுகாக்க மொத்தம் 26-பட்டாளங்கள் கொண்ட 8 ரெஜிமெண்டு ஆல்பினி யென்னும் துருப்புகளும், மொத்தம் 36 பீரங்கி பாட்டரிகள் கொண்ட இரண்டு ரெஜிமெண்ட் பீரங்கிப்படைகளும் இருக்கின்றன. இன்னும் 8-பாட்டரிகள் கொண்ட குதிரை பீரங்கிப்படை 1 ரெஜிமெண்டும், ஒவ்வொன்றிலும் 10 பாட்டரிகள் கொண்ட 2-ரெஜிமெண்டு பெரிய பீரங்கிப்படையும், பத்து ரெஜிமெண்டுகள் கோட்டைகளைக் காக்கும் பீரங்கிப்படைகளும் ஆறு ரெஜிமெண்டுகள் இஞ்ஜினியர்களும், இருக்கின்றன. ஆகாயப்படையில் ஒரு நிபுணர் பட்டாளமும், ஒவ்வொன்றிலும் 7-ஏரோப்ளேன்கள் கொண்ட 30-ஸ்க்வாட்ரன் ஆகாயப்படையும் இருக்கின்றன. இட்டலிக்கு 1913-ம் வர்ஷத்தில் இருந்த ஆகாயக்கப்பல்களின் (டிரிஜிபில்கள்) தொகை 9. இட்டலியின் ஆகாயக்கப்பல் படை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

யுத்தகாலத்தில் ஆரம்பத்தில் இட்டலிக்குக் கிடைக்கக்கூடிய சைன்யத்தொகை 4-லக்ஷம். இதைத்தவிர 'மொபைல் மிலிஷியா'வில் யுத்தத்துக்கு லாயக்காயிருக்கக்கூடியவர்கள் 2,00,000, சிலர் மொத்தம் 10,00,000 வீரர்கள் கிடைக்கக் கூடுமென்கிறார்கள். சைன்ய விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| படைகளிலுள்ளவர்கள் (ஆபீஸர்களும் வீரர்களும்) | 2,50,000 |
| இரண்டாவது பிரிவைச் சேர்ந்த சாச்வதமான லீவு கொடுக்கப்பட்டவர்கள். | 4,50,000 |
| மொபைல் மிலிஷியா | 3,20,000 |
| டெரிடோரியல் மிலிஷ்யா (பயிற்சியடைந்தவர்களும் பயிற்சியடையாத இரண்டாவது மூன்றுவது பிரிவைச் சேர்ந்தவர்களும்) | 22,00,000 |
| மொத்தம். | 32,20,000 |

இந்தத்தொகையில் 10 லக்ஷம் பேர்கள்தான் ராணுவப்பயிற்சி யடைந்திருப்பவர்கள்.

### படையிலுள்ளவர்களின் விவரம்

| | ஆபீஸர்கள். | வீரர்கள். |
|---|---|---|
| நிர்வாகம், பயிற்சி, ராணுவ ஸ்கூல்கள் இவைகளைச் சேர்ந்தவர்கள் | 1,284 | 1,952 |
| காலாள்படை | 7,627 | 1,62,000 |
| குதிரைப்படை | 1,006 | 27,416 |
| பீரங்கிப்படை | 2,359 | 49,256 |
| இஞ்ஜினியர்கள் | 630 | 11,099 |
| வைத்யம் | 769 | 3,712 |
| ராணுவ ஸாமான்கள் ஸப்ளை செய்பவர்கள் | 452 | 3,978 |
| மிலிட்டரி போலீஸ் | 709 | 30,087 |
| மொத்தம் | 15172 | 289,500 |

இட்டலிக்கு ஆப்ரிக்காவில் ஸொந்தமாயுள்ள ப்ரதேசங்களில் சில சைன்யங்கள் இருக்கின்றன. அவைகளின் தொகை 20,000 இருக்கலாம்.

### கப்பல்படை.

இட்டாலியின் கப்பல்படையில் ஆபிஸர்களும் வீரர்களும் சேர்ந்து 40,063 பேர்கள் உண்டு. 1914-ம் வர்ஷம் அக்டோபர்மாஸத்தில் இட்டலியிலிருந்த கப்பல்படையின் விவரம் பின்வருமாறு.

| விவரம். | கட்டப் பட்டவை. | கட்டப்பட்டு வருபவை. |
|---|---|---|
| யுத்தக்கப்பல்கள் | 15 | 6 |
| கவசம்போட்ட க்ரூஸர்கள் | 10 | 0 |
| லைட் க்ரூஸர்கள் | 16 | 2 |
| பெரியடார்பிடோக் கப்பல்கள் | 3 | 0 |
| டிஸ்ட்ராயர்கள் | 33 | 13 |
| சிறுடார்ப்பிடோ போட்டுகள் | 94 | 1 |
| ஸப்மரீன்கள் | 20 | 0 |



# RAGI HUSKS.

BY G. V. GOVINDARAJAN.

## கேழ்வரகின் காவு.

மேல் நாட்டார் எந்த வ்யாபாரத்தையும் ஊக்கத்துடன் செய்வதோடு எவ்வளவும் இழிவாக நினையாமல் அதிக கௌரவத்துடன் செய்து வருகிறார்கள். ஆனதுபற்றியே அவர்கள் ஸர்வேச்வாருடைய கிருபையால் யாதொரு வறுமையுமன்றி ஸுகமாய் வாழ்ந்துவருகிறார்கள். நம் நாட்டார்களோ அவ்விதமின்றி யாராயினும் ஒருவன் ஒரு சிறிய வ்யாபாரம் செய்தால் அவனைப் பரிஹாஸம் செய்வதால் அவன் மறுபடியும் அந்த வ்யாபாரத்தைச் செய்யாமல் மனத்தளர்ச்சி கொண்டுவிட்டுவிட நேரிடுகிறது. அப்படி கேலி செய்யாமல் அடியில் சொல்லும் வ்யாபாரத்தை ஊக்கத்துடன் செய்து பயன் அடையலாம்.

### கேழ்வரகின் காவு என்பது என்ன.

கேழ்வரகின் காவு என்பது, கேழ்வரகானது அறுவடையானதும் அதன் கதிர்களை மாடுகளினால் மிதிக்கவிட்டு அவைகளிலிருந்து உதிர்ந்த கேழ்வரகை எடுத்து காற்று வீசும் வாடையில் தூவினால் கெட்டியாயுள்ள கேழ்வரகின் மணி ஒரு புறமாகவும் அதினுடைய பொட்டு அல்லது உமி என்பது மற்றொரு புறமாகவும் போய் தங்கி விடுகிறது. இந்த உமிக்குத்தான் காவு என்று பெயர்.

### காவு கிடைக்கு மிடங்கள்.

நமது தென்னிந்தியாவில் அநேக ஏழை ஜனங்களுக்கு கேழ்வரகு முக்யமான உணவாயிருக்கிறது. விசேஷமாய் தென்னிந்தியாவிற்கு மேற்கேயுள்ள பெங்களூர், மைஸூர் ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளிலும் இன்னும் தெற்கு பாகங்களிலுள்ள நாடுகளிலும் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. இந்த இடங்களில் அறுவடையாகும் காலங்களில் விசேஷமான காவு கிடைக்கும்.

### காவு எத்தனை வகைப்படும்.

கொல்லைக்காவு, தூவுல்காவு என்று இரண்டு வகைப்படும். அவைகளில் புஞ்சை நிலமாகிய மேட்டுப்பாங்கான பூமியில் விளையும் கேழ்வரகின் காவுக்கு கொல்லைக்காவு என்றும், நஞ்சை நிலமாகிய கழனி அல்லது வயல்களில் விளையும் கேழ்வரகின்காவுக்கு தூவுல்காவு என்றும் பெயர். இந்த இரண்டு வகைக்காவுகளில் கொல்லைக்காவு என்பதே மிகவும் திடமானது. மற்ற தூவுல்காவானது இதற்கு இரண்டாந்தரம். காவு வெண்ணிறமாயிருந்தால் மிகவும் ச்ரேஷ்டம்.

### காவு கிடைக்கும் காலம்.

கேழ்வரகு அதிகமாய் பயிராகும் இடமாகிய தென்னிந்தியாவிற்கு மேற்கு பாகத்தில், அதாவது பெங்களூர், மைஸூர் இவைகளைச்சேர்ந்த நாடுகளில் பிப்ரவரி, மார்ச்சு, நவம்பர், டிஸம்பர், ஆகிய இந்த மாதங்களிலும், தென்னிந்தியாவிற்குத் தெற்கும், கிழக்குமாயுள்ள நாடுகளில் ஜனவரி, பிப்ரவரியில் கொல்லைக்காவும், ஏப்ரல், மே, நவம்பர், டிஸம்பர் ஆகிய இந்த மாதங்களில் தூவுல்காவும் கிடைக்கும். மேற்கு ராஜ்யத்தில் உற்பத்தியாகும்காவு முழுவதும் கொல்லைக்காவேயாகும்.

### காவு சேகரிக்கும் விதம்.

கேழ்வரகு ஒப்படியாகும் காலங்களில் ஒவ்வொரு களத்திலும் 50,100, பெரிய கோணிப்பைகளாகிய பெஜவாடா பைகள் கொண்டுபோய் காவை, சாணம்முதலியவை இல்லாமல் சுத்தஞ்செய்து ஷெ களத்தின் ஸொந்தக்காரரிடம் $\frac{1}{4}$-அல்லது $\frac{1}{2}$-அணுக் கொடுத்துவிட்டு, அவ்விடமுள்ள பண்ணையாட்களைக் கொண்டு அவர்களுக்கு மூட்டை 1-க்கு 2-தம்பிடி வீதம் கூலிகொடுத்து மூட்டைக்குள் ஷெ காவைப்பர்த்திசெய்து, அதாவது காலினால் நன்றாய் மிதித்து கிட்டித்து பர்த்திசெய்து, வண்டியிலேற்றிக் கொண்டு அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு

போய் நமக்கு எவ்விடத்திற்கு அனுப்பவேண்டுமோ அவ்விடத்திற்கு அனுப்பவேண்டும். பர்த்திசெய்யும்போது காவானது மாட்டின் மூத்திரத்தினால் நனைந்து தூர்வாஸனை இல்லாததாய்ப் பார்த்து பர்த்திசெய்தால் மிகவும் ச்ரேஷ்டம்.

### காவின் உபயோகம்.

வடஆற்காடு ஜில்லாவில் திருப்பத்தூர் தாலூக்காவிலுள்ள பசுமாடுகளுக்கும், எருதுகளுக்கும், எருமை மாடுகளுக்கும், காவை முக்யமான உணவுபொருளாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மாடுகளுக்கு தவிடு, பிண்ணாக்கு முதலியவைகள் சேர்ந்த குளுத்தி என்று சொல்லப்பட்ட உணவு கொடுக்கும்போது 2 மரக்கால் தவிட்டுடன் ஒருமரக்கால் காவையும் பிண்ணாக்கு முதலியவைகளையும் கலந்து கொடுக்கிறார்கள். இதை மாடுகள் அதிக ப்ரியமாய்த் தின்று ஸுகமாய் பலத்துடன் வளருகின்றன. கறவைமாடுகளும் கூடிய வரையில் பால் சீராய் கொடுக்கின்றன.

### காவு வ்யாபாரம் நடக்குமிடம்.

இந்த வ்யாபாரம் வடஆர்க்காடு ஜில்லா திருப்பத்தூர் டவுனில் திங்கட்கிழமைதோறும் நடக்கும் சந்தையில் 100 ரூபாய்க்கு குறையாமல் நடந்துவருகிறது. இதுதவிர, ஷை டவுனில் அநேக இடங்களில் தவிடு, காவுமுதலியவைகள் விற்கும் கடைகளும் தனியாய் ஏற்பட்டிருக்கின்றன. திருப்பத்தூர் தாலுக்காவை சேர்ந்த க்ராமச்சந்தைகளிலும் விசேஷமாய் வ்யாபாரம் செய்யப்பட்டுவருகிறது.

### விற்பனையாகும் விலைகளின் விவரம்.

மார்ச்சு, மே, மாதங்களில் பெஜவாடா மூட்டை 1-க்கு 8-அணா முதல் 12-அணா வீதமும், மற்றக்காலங்களில் 6-அணா முதல் 10-அணா வரையிலும் விற்கப்பட்டு வருகிறது.

### இதற்கு வேண்டிய முதல்.

ரூபாய் 50-இருந்தால் போதுமானது. அதாவது 25-ரூபாய் 100-பெஜவாடா கோணிப்பைகள் வாங்குவதற்கும், மற்ற 25-ரூபாய் காவு வாங்கவும், பர்த்திசெய்யக்கூலி, வண்டி சத்தம், ரெயில்சார்ஜ் முதலியவைகள் கொடுப்பதற்கும் வேண்டியது.

### இதில் லாபம்.

ஒரு ஊக்கமுள்ள வ்யாபாரி வாரம் 100-மூட்டைகளுக்குக் குறையாமல் விற்று வருவானாகில் மூட்டை 1-க்கு (0 2 0) இரண்டணா வீதம் வாரம் ஒன்றுக்குக்கிடைக்கும். 100-மூட்டைகளுக்கும் லாபம் ரூ. 12 8 0 யானால் ஒரு மாதத்தின் வருமானம் 50 ரூபாய் ஆகிறது ஒரு பீ. ஏ. வாசித்தவர் ஸம்பாதிக்கும்படியான வருமானத்திற்கு ஈடாகிறது. ஆகையினால் இந்த சிறு வ்யாபாரத்தை சற்றுயோசித்துப் பயனடையலாம்.

ஜி. வி. கோவிந்தராஜன்.

## THE EARTH AND ITS CHANGES.

BY. S. A. ATHMANATHA IYER.

## பூமியும் அதன் மாறுதல்களும்.

நாம் வஸிக்கும் இந்த பூமியானது நமக்கு இப்பொழுது தென்படும் ஸ்திதியிலேயே எப்பொழுதும் இருந்ததில்லை. இது அநேக மாறுதல்களை யடைந்திருக்கின்றது. தற்காலத்திலும் மாறுதல்கள் ஸம்பவித்துக்கொண்டே யிருக்கின்றன. இந்த மாறுதல்களுண்டாவதற்கு மூன்று காரணங்களுண்டு. அவைகள் ஜலம், காற்று, நெருப்பு, இவைகளுடைய சக்தியாலுண்டாகின்றன.

மழை பூமியை ஸமமாக்கிக்கொண்டே வருகிறது. சில காலங்களில் உயர்ந்த மட்டத்திலிருக்கும் பெரிய குளங்கள் ஏரிகள் இவைகள் பலத்த மழையால் ததளித்து கரைபுரண்டு உடைப்பெடுத்து சுற்றிலுமுள்ள க்ராமங்களையும் தேசத்தையும் சேதப்படுத்துவதை நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். தவிரவும், மலைகளின் உயர்ந்த ப்ரதேசங்களில் ஒருங்கு சேர்ந்து தடைப்



பட்டிருக்கும் ஜலம் சில ஸமயங்களில் எல்லை மீறிச் செல்லுவதாலும் மாறுதல்களுண்டாகின்றன.

மலையருவிகள் மலைச்சாரிபிலிருக்கும் மண் முதலியவற்றை பள்ளத்தாக்கில் சேர்க்கின்றன. சில ஸமயங்களில் பெருத்த மழை யடிக்கும் பொழுது சிறிய குன்றுகளும் மலைகளுடைய இறக்கமும் நன்றாய் ஊறி பிடிப்பற்று பாறை பாறைகளாகச் சரிந்து ஸமநிலத்தில் வந்து விழுவதுமுண்டு.

மேலும் மழை ஆகாயத்திலிருந்து பெய்யும் பொழுது வழியில் ப்ராணவாயு, கரியமலவாயு, சில புளிப்பு த்ராவகங்கள் இவைகளுடன் கலந்து விழுகிறது. இவைகள் கற்களின் அணுக்களை ஒன்று சேர்த்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும் இரும்பு முதலிய தாதுக்களை மெள்ள மெள்ள அரித்துக் கரைத்து விடுவதாலும் பாறைகள் பிளவு படுகின்றன.

நதிகள் மலைகளினின்றும் உற்பத்தியாகி போகும் வழியில் கற்களையும் மணலையும் புரட்டிக்கொண்டு முகத்வாரத்திற்கு அடித்துக் கொண்டு போகின்றன. முகத்வாரத்திலிருந்து ஸமுத்ரத்தா லடித்துக்கொண்டு போகப்பட்டு அந்தக் கற்களும் மணலும் மணற்கரைகளாகவும் திடர்களாகவும் மாறுவதுமுண்டு. இப்படி மணலையடித்துக்கொண்டே வருவதால் சில வருஷங்களுக்குள் ஆற்றுத்தரை மாறுதல் அடைவது மாத்ரமேயல்லாமல் நதிசெல்லும் தேசத்தை வடிவிப்பதும் அஸாத்யமாய்விடும்; மேலும் இப்படிப்பட்ட நதிகளில் வெள்ளம் வந்துவிட்டால் சுற்றிலுமிருக்கும் தேசம் நாசமாவதுந் தவிர வெள்ளப் பெருக்கு புதியமார்க்கமாகச் சென்று புதிய நதிகளையும் உண்டாக்கிவிடக் கூடும்.

ஸமுத்ரத்தைச் சார்ந்த பூமியின் பாகங்கள் ஸமுத்ர அலைகளால் மாறுபாடு அடைகின்றன. சிலவிடங்களில் கடல் அலைகள் மலைகளின் அடிப்பாகத்தின் மேலடித்து மோதுவதால் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்பாறைகள் பெயர்க்கப்படுகின்றன. இவ்வாறே அநேக வருஷங்களானபிறகு அந்த மலைகளிருந்த ப்ரதேசம் ஒரு பூகண்டமாகும். நாம் ஒரு துறைமுகத்தைப்போய்ப் பார்த்தால் நாம் நடப்பதற்கும் நிற்பதற்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்குமென்று ஏற்படுத்தப்பட்டபாதையை ஸமுத்ரத்தின் அலைகள் அடித்து நாசம் செய்யாதபடி இருபக்கங்களிலும் ப்ரமாண்டமான கற்பாறைகள் போடப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவைகள் நாசமானால் புதிய கற்களையும் பாறைகளையும் போடுவார்கள். இம்மாதிரியே ஸமுத்திரத்தின் நடுவிலிருக்கும் தீவுகளில் வஸிப்பவர்கள் தங்கள் நிலத்தை ஸமுத்திரம் பக்ஷிக்காதபடி ஸமுத்ரக்கரையைச் சுற்றிலும் ஆங்காங்கு பெரிய பாறைகள் போட்டிருப்பார்களாம்.

பனியும் உறைபனியுங்கூட பூமிமாறுதலடைகிற விஷயத்தில் உதவி புரிகின்றன. எப்படியென்றால் குளிர் அதிகமான தேசங்களில் நாம் ஒரு குறுகிய கழுத்தையுடைய ஒரு புட்டியில் ஜலத்தையூற்றி வாயையடைத்து ராத்ரி தோட்டத்தில் அல்லது பனி படியும்படியான இடத்தில் வைத்துவிட்டு மறுநாள் பார்த்தால் உள்ளிருக்கும் ஜலம் உறைந்திருப்பதையும் புட்டி உடைந்திருப்பதையும் காணலாம். புட்டியிலிருந்த த்ரவபதார்த்தமான ஜலம் கெட்டியான பனியாக மாறுந் தருணத்தில் அதன் பருமன் அதிகமாகும் காரணத்தால் அதிக இடம் வேண்டியிருக்கிறது. அதிக இடம் கொடாமலடைபட்டிருந்ததால் புட்டியை உடைத்துவிட்டு அதிக இடம் ஸம்பாதித்துக்கொண்டது. இவ்வாறே மழைத்துளிகள் பாறைகளுக்குள் சென்று சில ஸமயங்களில் உறைபனி ஸம்பந்தத்தால் பனிக்கட்டியாக மாறி அதிக இடம் தேடிக்கொள்ளுவதால் கற்களையும் பாறைகளையும் உடைத்து விடுகிறது.

மிகக்குளிர்ந்த தேசங்களில் மலைகளிலிருந்து விழும் பனி பெரிய ஆறுகளாக வ்ருத்தியடைந்து வேகமாக ஓடி மலைகளின் சிகரங்களை உடைத்தும் குன்றுகளைப் புரட்டியும் கற்பாதைகளை அறுத்தும் அநேக மாறுதல்களைச் செய்கின்றன.

காற்றின் செயலாலும் பூமிக்கு அநேக மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஸமநிலங்களில் பெய்யும் மழை ஜலம் சீக்ரமாக வறண்டு விட்டாலும், மணலை உயரத்திலிருந்து தாழ இருக்கும் மட்டத்திற்கு அடித்துக்கொண்டு போவதையும், பூமியின் அடிப்பாகம் ஊறி மேலே ம்ருதுவான மணலை மெல்லிய படையாகச்சேர்ப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். பலமான காற்று அல்லது பெருங்காற்று இதன்மேல் அடிக்குங்காலத்தில் இந்த மெல்லிய மணல்படை மேலே கிளப்பப்பட்டு பூமியை ஸமமாக்குகிறது. சில ஸமயங்களில் பாலைவனங்களில் மணல்காற்று அடித்து ஜனங்கள், ம்ருகங்கள், புலங்கள் எல்லாவற்றையும் கீழே புதைத்து விடுவதுமுண்டு.

மணற்காற்று கற்பாறைகளின்மேல் பலமாக அடிக்கும்பொழுது சிறிய மணல் துளிகள் பாறைகளைத்தேய்த்துச் சுறண்டி விடுவதால் சிறிய வாய்க்கால்போன்ற வடிவங்களும் விநோதமான ரூபங்களும் ஏற்படுகின்றன. சில ஸமயங்களில் பாறைகளின் அடிப்பாகத்தில் தாக்கி சுற்றிலும் குடைந்து விடுவதனால் செங்குத்தான கம்பம் மாத்ரமே நிற்கும். அதுவும் ஒரு பெருங்காற்று அடித்தால் கீழேவிழுந்துவிடும்.

உஷ்ணமானது பொருள்களை விரிவாக்குமென்பதும் சீதத்தால் வஸ்துக்கள் சுருங்குமென்பதும் நாம் அறிந்த விஷயம். ஸூர்யனுடைய வெப்பத்தால் கற்பாறைகளின் மேல்பாகம், பகற்காலத்தில் சூடேறி, கொஞ்சம் விரிவாகும். இராக்காலத்தில் குளிர்ச்சியால் சுருங்கும். இம்மாதிரியே அதிக காலஞ்சென்றால் பாறைகளின் மேல்பாகம் தோல்போல உரிந்து சரிந்துபோம். இப்படி மலைகள் ஓடுகளாக பெயர்ந்து கொண்டே வந்து பூமியின் மட்டத்தைமாற்றும்.

பூமியின் கீழிருக்கும் எரிமலைகளின் செயலாலும் வேறு சில காரணங்களாலும் பூகம்பங்களுண்டாகி பூமியின் அதிர்ச்சி அநேக மைல் தூரம் பரவுவதால் கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன. பட்டணங்கள் இருந்த இடந்தெரியாது கீழேமறையும். நதிகள் போம்வழியும் மாறும்.

இதாலியா தேசத்தில் பம்பியை என்னும் பட்டணம் ஸுமார் இரண்டாயிரம் வர்ஷங்களுக்கு முன் பூகம்பத்தால் பூமியில் மறைந்துபோய் விட்டது. சில வர்ஷங்களுக்கு முன் அது அகஸ்மாத்தாய் கண்டு பிடிக்கப்பட்டது. மேலே மூடியிருந்த மணலை எடுத்துவிட்டுப் பார்க்கையில் நாசமடைந்த பட்டணம் வீடு வீதிகளுடன் மிக ஆச்சர்யத்தை விளைவிக்கும்படி தோன்றிற்று.

இம்மாதிரியே ஸமுத்ரத்தின் அடிப்பாகத்திலிருக்கும் தரையும் மாறுதலடைவதால் ஓரிடத்தில் நிலம் மெள்ள மெள்ள எழும்பும்; வேறு சிலவிடங்களில் தாழ்ந்துபோகும். முன்னொரு காலத்தில் ஸமுத்ரத்தின் அடியிலிருந்த நிலம் மேலே கிளம்பலாம். ஸமுத்ர மட்டத்திற்கு உயர இருந்த நிலம் ஜலத்தில் ஆழ்ந்துபோகலாம். இதற்கு ருஜுக்களுமிருக்கின்றன.

நீராவி யந்த்ரங்களுக்கும் நீராவிக்கப்பல்களுக்கும் முக்யமான நிலக்கரி பூமியினடியிலிருந்து வெட்டியெடுக்கப்படுகிறதல்லவா? அங்கே நிலக்கரி சேர்ந்ததற்குக் காரணமென்ன? அது அநேக காலத்திற்கு முந்தி மரமடர்ந்த காடாக இருந்து பிறகு பூமியின் கீழே மறைந்துபோய் அடிப்பாகத்திலிருக்கும் உஷ்ணத்தால் நிலக்கரியாக மாறிவிட்டது. நிலக்கரியின்மேல் இலைகளின் உருவம் படிந்திருப்பதையும் நாம் காணலாம்.

இன்னும் நீரிலும் நிலத்திலும் வஸிக்கும் சில ப்ராணிகளுடைய காலடிகளையும் எலும்புகளையும் கற்பாறைக்கு அடியிலிருந்து சிலவிடங்களில் வெட்டியெடுத்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தாலும் ஜந்துக்கள் வஸித்துவந்த நீர்ப்பாகமும் நிலப்பாகமு மாறுதலடைந்திருக்கின்றன என்கிற விஷயத்தை நாம் தெரிந்துகொள்ளலாம்.

இந்த விஷயத்தில் நாம் மறவாதிருக்கவேண்டிய முக்யமான ஸங்கதி ஒன்று உண்டு. அது யாதெனில் நம்முடைய வாழ்நாட்களுக்குள்ளேயாவது நூறு அல்லது ஆயிரம் வர்ஷங்களுக்குள்ளாவது பூமி விசேஷமாறுதல்கள் அடையாவிட்டாலும் அநேக ஆயிரம் வர்ஷங்களுக்குள்ளே மாறுதல்களடைவது நிச்சயம் என்பதுதான். ஆனதுபற்றி, பூமியின் பாகங்கள் ஸமுத்ரத்திற்குள் ஆழ்ந்துபோகலாம்; புதிய பூகண்டங்கள் தோன்றலாம். மலைகள் ஸமநிலமாகலாம்; ஸமநிலம் மலையாகலாம். ஸமுத்ரத்தின் ஆழம் மாறலாம். ஒன்றாயிருந்த பூகண்டத்தின் மத்தியில் குறுக்கே கடல் ஆக்ரமித்து இரண்டு பூகண்டங்களாகப் பிரித்துவிடலாம். கடலில் புதிய தீவுகள் உண்டாகிறதும் இப்போது தோன்றும் சில தீவுகள் ஸமுத்ரத்திற்குள் மறைந்து போவதுங்கூட ஒரு அதிசயமல்ல.

எஸ். ஏ. ஆத்மநாதய்யர்.

## RAMADAS.

BY T. S. VAIDYANATHAN.

## ராமதாஸர்.

நாம் எழுதத் துவக்கியிருக்கும் ராமதாஸர் என்பவர் பத்ராசலத்தில் விளங்கின ராமதாஸரல்ல. சிவாஜி மஹாராஜாவின் பரமகுருவாக விளங்கின மஹாபுருஷர். இவரது ஜீவ்ய சரித்ரம் பின்வருமாறு.

கோதாவரிக் கரையிலிருக்கும் ஜாம்பவபுரம் என்ற க்ராமத்தில் 17-ம் நூற்றாண்டின் பின்பாதியில் ஸூர்யாஜி பண்ட் என்றொரு ப்ராம்மணோத்தமர் வெகுகாலமாய் புத்ரபாக்யம் பெறாமல், கடைசியாக ஒருபெரிய யாகத்தைச்செய்து அதின்பலனாக அவருடைய மனைவியான ராணுபாய் என்பவள் கர்ப்பந்தரித்து இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றாள். இரண்டாவது குழந்தைக்கு நாராயணன் என்று நாமகரணம் செய்தார்கள். மூத்த குழந்தையின் பெயர் நமக்குத் தெரியவில்லை. இரண்டு குழந்தைகளையும் வெகு செல்வமாக வளர்த்துவந்தார்கள். குழந்தை நாராயணனுக்கு வயதானதும் விதிப்ரகாரம் உபநயனத்தைச் செய்வித்து வித்யாப்யாஸம் பெறவேண்டி அவனை பாடசாலைக்கு அனுப்பினார்கள். பையன் புத்திகூர்மையிலும், ஞாபகசக்தியிலும் சிறந்தவனானபடியால், சிலமாதங்களுக்குள்ளேயே அவன் நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தான். இந்த ஸமயத்தில் ஸூர்யாஜி தேகவியோகமானார். ஆகவே நாராயணனுக்கு மேலே படிக்க முடியாமல் அதிபால்யத்திலேயே குடும்பவிசாரணைசெய்யநேரிட்டது. ஆனால் அதில் நாராயணனுக்கு சிறிதும் ப்ரியமில்லை. ஆகவே தனக்கு வீட்டு வேலைபோக ஒழிந்தநேரங்களிலெல்லாம் தன் தாயாருக்காவது தமயனுக்காவது தெரிவிக்காமலே கோதாவரிக் கரைக்குப் போய் அங்கிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ்ப் படுத்துக்கொண்டு எதையோகுறித்து சிந்தித்துக்கொண்டிருப்பார். இவ்வளவு பால்யத்திலேயே மேலான எண்ணங்கள் இவர் மனதில் உதித்தன. தேசத்தின் நிலைமை க்ஷீணத்தையடைந்திருந்ததை கவனித்தார். பூர்வகாலந் தொடங்கி அநுஷ்டிக்கப்பட்டு வந்த யாதொரு ஸனாதன தர்மமுண்டோ அதை ஜனங்கள் மறந்துபோய் அவரவர் அவரவருக்குத் தோன்றினபடியெல்லாம் தங்களுடைய ஜாதி தர்மத்தை விட்டு விலகினவர்களாய் முகலாயரின் அரசாட்சிக்குட்பட்டு அவர்களுடைய மதக் கோட்பாட்டுகளின்படி நடக்கதொடங்கிவிட்டதை கவனித்து மனந்துடித்தார். அந்தோ! அவர்களை தேசத்தின் பழைய ஸன்மார்க்கத்தில் திருப்ப தான் ஏன் முயற்சிக்கக்கூடாது என்றெண்ணினார். இவரது மஹிமையையும் மநோபாவத்தையும் அறியாத தாயும், தமயனும் ஆரம்பத்தில் இவரை ரொம்

பவும் ஹிம்ஸித்தார்கள். ஆனால் அவற்றை யொன்றையும் லக்ஷ்யம் செய்தவரல்ல நாராயணன் (ராமதாஸர்). கடைசியாக அவரை ஏமாற்றி கல்யாணத்திற்கு உட்படச்செய்து, முகூர்த்தத்திற்கு ஆகவேண்டிய கார்யங்களைத் திட்டஞ் செய்திருந்தார்கள். நாராயணர் (ராமதாஸர்) கல்யாணத்திற்கு முதலில் உட்பட்டாரேயானாலும், அதில் அவருக்கு சிறிதும் மனமில்லை. ஏனெனில், தான் விவாஹம்செய்துகொண்டுவிடுவாரேயாகில் தான் தேசத்தை சீர்திருத்துவதாயிருக்கும் பெரிய கார்யம் நிறைவேறாது என்று கண்டார். ஆகவே, எப்படியாவது அந்த வலையில் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று நிச்சயஞ்செய்தார். தாலிகட்டும்வரை எல்லாரும் நாராயணர் கல்யாணத்திற் குட்பட்டதாகவே எண்ணியிருந்தார்கள். ஆனால் தாலிகட்டப்போகும் ஸமயத்தில் நாராயணர் திடீரென்று ஓடத்தலைப்பட்டார். எல்லாரும் ப்ரமித்துப்போய் அவரைப் பிடிக்க பின்னால் ஓடினார்கள். ஆனால் நாராயணர் அவர்கள் கையில் அகப்படவேயில்லை.

நாராயணர் ஸந்யாஸி வேஷம் பூண்டார். ஊர் ஊராகச் சுற்றத்தலைப்பட்டார். அங்கங்கு ஜனங்களிருந்த நிலைமையைத் தெரிந்துகொண்டார். கடைசியாக நாஸிகை என்ற ஊர்வந்து சேர்ந்தார். இதுமுதல்தான் இவருக்கு ராமதாஸர் என்று பெயர் உண்டானது. இதற்குள்ளாக இவருக்கு நூற்றுக்கணக்கான சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். அங்கங்கு ப்ரஸங்கங்கள்செய்தார். வேதத்தின் ரஹஸ்ய அர்த்தங்களை வெகு ஸாமர்த்யமாய் எடுத்துச்சொல்லுவார். ஸந்தேகங்களைத் தீர்ப்பார். ப்ராமணரிடத்தில் அதிக விச்வாஸமும் அன்புங்காட்டிவந்தார். உலகத்தில் எவனும் குருவினுடைய அனுக்ரஹமில்லாமல் மோக்ஷத்தை யடைவது துர்லபம் என்னும் வேதவாக்யத்தை பன்முறையும் சொல்லிவந்தார். இவரது மஹிமையைக் கேள்வியுற்ற சிவாஜி மஹாராஜா தனக்குத் தகுந்த குரு இவரேதான் என்று நிச்சயித்து 1659-வர்ஷத்தில் இவர் இருக்குமிடந் தேடிவந்து தன்னையும் ஒரு சிஷ்யராக பாவித்துக்கொள்ளவேண்டுமென்று அவரது கால்களில் விழுந்தார். ராமதாஸர் மஹாராஜாவை அனுக்ரஹித்துவிட்டு, பிற்பாடு ராஜ்ய வ்யவஹாரங்களைக் குறித்து பேசத்தொடங்கினார். தேசத்தில் அங்கங்கு தாம்கண்ட ஜனங்களின் நிலைமையையும், அவர்களை சீர்திருத்தவேண்டிய மார்க்கங்களையும் எடுத்துச்சொன்னார். அவைகளையெல்லாம் சிவாஜிசெவிகொடுத்துக் கேட்டுவிட்டு, அன்றுமுதல் அவருடைய ஆலோசனைகளின்படியே நடக்கத்தொடங்கினார். ப்ராமணர் முன்போல தங்களுக்கு விதிக்கப்பெற்ற தர்மத்தை யனுஸரித்தார்கள். அந்தப்ரகாரமே ஒவ்வொரு வர்ணத்தாரும் நடக்க ஆரம்பித்தார்கள். நாளுக்குநாள் சிவாஜிக்கு தன்குருவும் மந்த்ரியுமாயிருந்த ராமதாஸரிடம் அன்பும் விச்வாஸமும் அதிகரித்தது. தன் குருவைவிட்டுப் பிரிந்திருக்கிறதென்றால் தாயைபிழக்கும் கன்றுபோல் தவிப்பார். இதின் உண்மை பின்வரும் ஒரு உதாரணத்தினால் விளங்கும். ஒரு ஸமயம் ராமதாஸர் வழக்கப்ரகாரம் சதாராவில் ஒரு ப்ராமணன் வீட்டுவாசலில் நின்றுகொண்டு பிக்ஷைகேட்கும் பாவனையாய் "ஜயாகுபதி" என்றார். அந்தஸமயம் அடுத்த வீட்டில் சிவாஜி மஹாராஜா இருந்தார். வெளியே தன் குருவின் குரலைக் கேட்டதும் பரபரப்புடன் ஓடி வந்து அவரைத் தமது அரண்மனைக் கழைத்துப்போய் விதிப்ரகாரம் அர்க்கியம் முதலானவை கொடுத்துவிட்டு, ராமதாஸருடைய கமண்டலுவில் பிக்ஷை போடுகிற மாதிரியாக ஒரு கடிதத்தைப் போட்டார். அதைக்கண்டு ராமதாஸர் புன்னகை கூர்ந்து, "குழந்தாய், பசியினால் வருந்துகிறவனுக்கு இந்தக் கடிதம் என்ன ப்ரயோஜனமாகும்?" என்றார். பிறகு கடிதத்தையெடுத்துப் படித்தார். ஆச்சர்யத்தை யடைந்தார். ஏனெனில் கடிதத்தில் சிவாஜி தன் ராஜ்யம் முழுமையையும் ராமதாஸருக்கு தத்தம் செய்துவிட்டதாக யெழுதியிருந்தது. சற்று நேரம் யோசித்துவிட்டு "நல்லது, இன்னும் என்ன செய்ய எண்ணியிருக்கிறாய்" என்றார். சிவாஜி சிறிதும் யோசிக்க முயலாமலே, "தங்களுடைய அனந்த கோடி சிஷ்யர்களுள் ஒருவனாயிருந்து தங்களுக்கு ஊழியம் செய்ய எண்ணியிருக்கிறேன்" என்றார். ராமதாஸர்: "குழந்தாய், அது உன்னாலாகாத கார்யம். ஏனெனில் என் மாதிரியாக ஒரு கௌபீனத்துடன் கிடைத்த யிடத்தில் பிச்சை வாங்கிக் காலங்கழிக்க உன்னாலாகுமா?" என்று கேட்டார். சிவாஜி: "தங்களுடைய பாதத்தின் கீழிருந்துகொண்டு என்னால் செய்யமுடியாத கார்யம் எது" என்று சொல்லிவிட்டு உடனே தனது ராஜ உடைகளை அவிழ்த்துப் போட்டுவிட்டு, கௌபீனத்துடன் வந்து நின்றார். ராமதாஸருக்கு ஒன்றும் நிதானிக்க முடியவில்லை. மஹாராஜா இவ்விதமாக ராஜ்யத்தை விட்டு விட்டு தன்னுடனிருந்து விட்டால், ஜனங்களுடைய கதி என்னமாய் முடியும் என்பதையும், அரசனில்லாத நாட்டை அன்ய அரசர் கைப்பற்ற லகுவாய் முடியுமே யென்பதையும் நினைத்து கவலை கொண்டார். ஆகிலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. சில மாதங்கள் மகுடாதிபத்யம் செய்த அதி வீரபராக்ரம சிவாஜி மஹாராஜா அன்பு நிறைந்த தன் குருவுடன் வாஸ்தவமாய் திரிந்தாரென்றே சொல்லப்பட்டிருக்கிறது. ராமதாஸர் ஒரு யுக்தி செய்தார். அதாவது ஒரு நாள் சிவாஜியை அழைத்து, "குழந்தாய், நான் ஒரு கார்யம் சொல்லுகிறேன். அதைக் கேட்கிறாயா?" என்றார். சிவாஜி சற்றும் தயங்காமல், "தாங்கள் என்னவேலை யிட்டபோதிலும் சிரஸில் வஹித்து செய்யக்காத்திருக்கிறேன் என்றார். ராமதாஸர் இதுதான் ஸமயமென்று தெரிந்து, "நல்லது, அப்படியானால் நீமுன்போல ராஜனாக இருந்து ராஜ்யபாரம் செய்யக்கடவாய்" என்றார்: சிவாஜி: "ராஜ்யம் தங்களுடையதாச்சுதே" என்றார். ராமதாஸர்: "நல்லது என்னுடையதானால் என் கீழிருந்துகொண்டு ராஜ்யத்தை ஆண்டுவா" என்றார். சிவாஜிக்குமேலே பேச இடமில்லாமல் போயிற்று. குருவின் மொழியைத் தட்டவும் முடியவில்லை. வருத்தத்துடன் மறுபடியும் ராஜ்யபாரத்தை ஒப்புக்கொண்டார். அன்றுமுதல் எவ்வித வ்யவகாரத்திலும் தன் குருவின் ஆலோசனையைக் கைக்கொண்டே ஆண்டுவந்தார்.

ராமதாஸர் 1861-ம் வர்ஷத்தில் காலகதியடைந்தார்.

டி. எஸ். வைத்யநாதன்.

## THE MADRAS CONFERENCES.

## மதராஸ் கான்பரென்ஸுகள்.

### மாகாண ராஜீய கான்பரென்ஸ்.

சென்னை மாகாண ராஜீய கான்பரென்ஸ் இந்த மாஸம் 5-ந் தேதியன்று நெல்லூரில் நடைபெற்றது. சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டர் பி. நரஸிம்மேச்வர சர்மா ப்ரெஸிடெண்டாக இருந்தார். ஆனரபிள் மிஸ்டர் ஏ. எஸ். க்ருஷ்ணராவ் வரவேற்புக் கமிட்டியின் ப்ரெஸிடெண்டாக இருந்து கான்பரென்ஸுக்கு வந்திருந்த ப்ரதிநிதிகளை வரவேற்று உபசரித்தார்.

மிஸ்டர் ஏ. எஸ். க்ருஷ்ண ராவ்.—அவர் அப்போது செய்த ப்ரஸங்கத்தில் முதலில் யுத்தத்தைப்பற்றியும் காலஞ்சென்ற மிஸ்டர் கோகலேயைப்பற்றியும் ப்ரஸ்தாபித்தார். மிஸ்டர் கோகலேயைப்பற்றிப் பேசுகையில், அவரது குணதிசயங்களை எடுத்துச் சொல்லி, அவருடைய பெயர் என்றென்றைக்கும் அழியாமலிருப்பதற்கு முயற்சிகள் நடந்து வருவதைப்பற்றி ஸந்தோஷப்படுவதாயும், அந்த முயற்சிகளுள் அவர் ஸ்தாபித்து நடத்திவந்த ஸெர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸொஸைடியென்னும் இந்திய ஊழியர் ஸங்கத்தை பலப்படுத்தி, அது எப்போதும் நடந்து

வரும்படி செய்வதே உயர்ந்ததென்றும் சொன்னார். அவர் பேசிய மற்ற விஷயங்களின் ஸாராம்சம் பின்வருமாறு.

மாகாண ஸ்வய ஆட்சி.—இந்த யுத்தத்தில் இந்தியா ப்ரிட்டிஷாருக்கு உதவியாக யுத்தம் செய்துவருவதை யுத்தேசித்து இந்தியாவுக்கு ப்ரத்யேகமான நன்மைகள் ஏதாவது செய்ய வேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். உதாரணமாக யுத்தத்தில் இந்தியர்கள் சேர்ந்துகொண்டதற்காக இந்தியாவுக்கு மாகாண ஸ்வய ஆட்சி கொடுக்கவேண்டுமென்று பலர் கேட்கிறார்கள். யுத்தத்தில் சேர்ந்ததற்கு ப்ரதிப்ரயோஜனமாக நாம் மாகாண ஸ்வய ஆட்சிவேண்டுமென்று கேட்கவில்லை. ந்யாயத்தை உத்தேசித்தும், எல்லாரும் ஸமமான ஸ்வதந்தரங்கள் உள்ள ப்ரஜைகள் என்ற நீதியை உத்தேசித்துமே மாகாண ஸ்வய ஆட்சி வேண்டுமென்று நாம் கேட்கிறோம். ந்யாயமாய் நமக்கு என்னபாத்யதைகள் உண்டோ, அதிகாரிகள் ஏற்கனவே என்ன கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்களோ அவைகளையே நாம் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோம்.

கல்வி.—இப்போது பெண்களுக்குக் கட்டாயப்படுத்திக் கல்வி கற்பிப்பது உசிதமல்ல வென்றாலும், பையன்களுக்குக் கட்டாயப்படுத்திக் கல்வி கற்பிப்பதற்கு யாதொரு ஆக்ஷேபமும் சொல்வதற்கில்லை. மேலும் முதலிலேயே எல்லா விடங்களிலும் கட்டாயக் கல்வி ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வர வேண்டுவதில்லை. மொத்தமுள்ள முனிஸிபாலிடிகளில் 39-ல் பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடிய வயஸுள்ள ஜனத்தொகையைவிட அதிகமான சிறுவர்கள் அந்த முனிஸிபாலிடியைச்சேர்ந்த பள்ளிக்கூடங்களில் வாசித்து வருகிறார்கள். இந்த 39-முனிஸிபாலிடிகளிலும் சிறுவர்களுக்குக் கட்டாயப்படுத்தி கல்விகற்பித்து வரலாம் முனிஸிபாலிடிகள் வரிவஸூலால் கிடைக்கும் தொகையில் நூற்றில் 5·8-வீதம்தான் கல்விக்கு செலவழிக்கின்றன. ஸாதாரணமாக ஒரு ஸ்தலஸ்தாபனம் தனது வரும்படியில் நூற்றில் 15-பாகம் கல்விக்காகச் செலவழிக்கலாம். இந்தக் கொள்கை சரியான கொள்கை யென்று பலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது ராஜதானியிலோ குடியாத்தம், மஸூலிப்பட்டணம் ஆகிய இரண்டு முனிஸிபாலிடிகளையும் தவிர வேறு எந்த முனிஸிபாலிட்டியும் தனது ஸாதாரண வரும்படியில் நூற்றுக்கு 15-வீதம் கல்விக்காக செலவு செய்யவில்லை.

கவர்ன்மெண்டார் ஜில்லா முனிஸிபாலிடி ஆக்டைத் திருத்தப் போகிறதாகத் தெரிகிறது. கவர்ன்மெண்டின் அங்கீகாரத்துக்கு உள்பட்டு முனிஸிபாலிடிகள் தங்களுடையமுனிஸிபல் எல்லைக்குள் சிறுவர்களுக்கு கட்டாயப்படுத்தியும் இலவசமாகவும் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய ஷெ ஆக்டில் அவைகளுக்கு அதிகாரம் ஏற்படுத்த வேண்டுவது அவச்யம். ஆக்டில் இந்தத் திருத்தத்தைச் செய்து விட்டால், கவர்ன்மெண்டார் எந்த முனிஸிபாலிடிகள் இலவசக் கல்வி கொடுக்க இஷ்டப்படுகின்றனவோ, அவைகளினுடைய நிலைமையைச் சோதித்து எந்தெந்த முனிஸிபாலிடிகளுக்கு அனுமதி கொடுக்கலாமென்று தோன்றுகிறதோ அவைகளுக்கு அனுமதி கொடுக்கலாம். முனிஸிபாலிட்டிக்கு இலவசக்கல்விக்குப் பணம் போதாமலிருந்து, கவர்ன்மெண்டாரும் பணஉதவிசெய்ய முடியாவிட்டால், கவர்ன்மென்டாருடைய அனுமதியின்மேல் கல்வி வரிபோடுவதற்கு முனிஸிபாலிடிகளுக்கு ஸ்வதந்தரம் கொடுக்கவேண்டும்.

க்ராம பஞ்சாயத்துகள்.—ஸ்தல ஸ்வய ஆட்சி அபிவ்ருத்தி யடையவேண்டுமானால் அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சு செய்திருக்கும் மாதிரியில் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க வேண்டியது அவச்யமாகும். மேல்நாட்டு நாகரீகத்தின் அபிவ்ருத்தியாலும் இன்னும் பற்பல காரணங்களாலும் பண்டைக்கால க்ராம ஏற்பாடுகள் நின்றுபோயின வென்றாலும், இப்போதுங்கூட பற்பல க்ராமங்களில் ஜனங்களுக்குள் ஒற்றுமையான வாழ்வும் ஒற்றுமை யுணர்ச்சியும் இருந்துவருகின்றன. இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு க்ராம பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கலாம்.



ராஜதானியின் பற்பல பாகங்களில் யூனியன் பஞ்சாயத்துகளும், காட்டிலாகா பஞ்சாயத்துகளும், க்ராம பெஞ்ச் கோர்ட்டுகளும், கோவாபரேடிவ் ஸங்கங்களும், ஸ்தாபிக்கப்பட்டிருப்பதைக் கொண்டுபார்த்தால், அநேக ஜனங்களுக்கு க்ராமப் பஞ்சாயத்துகளின் வேலையை நடத்திவரவேண்டிய பொதுஜன ஊக்கமும், அறிவும், பயிற்சியும், அனுபவமும் இருக்கின்றனவென்று நன்றாய்த் தெரியவருகிறது. மதராஸ் கவர்ன்மெண்டார் க்ராமப் பஞ்சாயத்து ஸ்தாபிக்க இஷ்டப்படவில்லையென்று ஒரு வதந்தியிருந்துவருகிறது. ஸமீபத்தில் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மீட்டிங்கில் சில உத்யோகஸ்தரல்லாத மெம்பர்கள் இதைப்பற்றி ப்ரஸ்தாபஞ்செய்தார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் வதந்தி பொய்யென்று ஆக்ஷேபிக்கவில்லை. இந்த வதந்திக்கேற்ப கவர்ன்மெண்டார் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கக்கூடாதென்று தீர்மானித்தால், இந்த ராஜதானியில் ஸ்தலஸ்வய ஆட்சிக்கு இதுவரையில் ஏற்பட்டிருக்கும் அபிவ்ருத்திக்குக் குறைவு ஏற்படும். ஜனங்களுக்குள் அத்ருப்தியும், வருத்தமும் ஏற்படும்.

பாசனம்.—இந்த ராஜதானியில் ஸாகுபடிக்கு ஜலம் சரியாகக் கிடைப்பதில்லையென்று குடிகள் பல வர்ஷகாலமாகக் குறை சொல்லிவருகிறார்கள். இப்போதுள்ள பாசன ஏற்பாட்டில் மராமத்திலாகா உத்யோகஸ்தர்கள் தான் பாசனவேலைகளை கவனித்து வருகிறார்கள். இந்த ஏற்பாட்டால் அநேக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ராஜதானியின் பற்பல பாகங்களில் முக்யமான க்ராமங்களில் ஜலம் பாய்ச்சுவதைக் கவனித்து வருவதற்காக இரிகேஷன் போர்டு என்னும் பாசன கமிட்டிகள் ஏற்படுத்த வேண்டும். நெல்லூர் ஜில்லாவில் சில க்ராமங்களில் பாசனக் கமிட்டிகள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் ரொம்ப த்ருப்திகாமாக நடந்து வருகின்றன.

மிஸ்டர் சர்மா சட்ட ஸபையின் அமைப்பை சீர்திருத்த வேண்டியதின் அவச்யத்தைப் பற்றியும், லார்ட் ஹார்டிஞ்சின் உத்யோககாலத்தை அதிகரிப்பதைப் பற்றியும் பேசினார்.

### மிஸ்டர் பி. என். சர்மா.

ப்ரெஸிடெண்டாகிய ஆனரபிள் மிஸ்டர் பி. என். சர்மா தமது ப்ரஸங்கத்தில் முதலில் காலஞ்சென்ற மிஸ்டர் பி. ஆர். ஸுந்தரய்யர், மிஸ்டர் கோகலே முதலியவர்களைப் பற்றி ப்ரஸ்தாபம் செய்துவிட்டு பிறகு, ஐக்ய மாகாணத்துக்கு நிர்வாக ஸபை கொடுக்கக்கூடாதென்று பார்லிமெண்டில் லார்ட் ஸபையார் தீர்மானித்ததைப் பற்றிக் கண்டித்துப் பேசினார்.

பிறகு சென்னைராஜதானியின் தாழ்ந்த நிலைமையைப் பற்றிப் பேசினார். ஜப்பான் தேசத்தின் நிலைமையை நமது ராஜதானியின் நிலைமைக்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். இரண்டு தேசங்களும் விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும் கிட்டத்தட்ட சரியாயிருக்கின்றன. 1850-ம் வர்ஷத்தில் ஜப்பான் கவர்ன்மெண்டின் வருமானம் 5-கோடி ரூபாய். அதே காலத்தில் சென்னையிலும் இவ்வளவு வரும்படிதான் கிடைத்துவந்தது. ஆனால் அதற்குப் பிறகு ஜப்பான் தேசத்தில் கல்வி, விவஸாயம், கைத்தொழில்கள், வ்யாபாரம் ஆகிய இவைகள் ரொம்ப அபிவ்ருத்தியடையவே ஸர்க்கார் வரும்படியும் அதிகரிக்கலாயிற்று. சென்ற 1913-14-ம் வர்ஷத்தில் அந்த தேசத்து கவர்ன்மெண்டுக்கு 80-கோடி ரூபாய் வரிமுதலியவைகளால் கிடைத்தது. ஆனால் சென்னை ராஜதானியிலோ அதே வர்ஷத்தில் ஸர்க்காருக்குக் கிடைத்த வரும்படி 18-கோடி ரூபாய் தான். ஆஸ்ட்ரேலியாவை எடுத்

துக்கொள்வோம். அதன் விஸ்தீரணம் ரொம்ப அதிகம். ஆனால் ஜனத்தொகை குறைவு. 40-லக்ஷம் ஜனந்தான் உண்டு. 1850-ம் வர்ஷத்தில் ஸர்க்கார் வருப்படி கிட்டத்தட்ட 1-கோடி ரூபாய். ஆனால் இப்போதோ 30-கோடியாக அதிகரித்திருக்கிறது.

கனடாவின் ஜனத்தொகை 70-லக்ஷம். 1850-ம் வர்ஷத்தில் அந்த கவர்ன்மெண்டுக்குக் கிடைத்த வருமானம் 11-ம் லக்ஷம். 1906-ம் வர்ஷத்திலோ ஸர்க்கார் வருமானம் 25-கோடி ரூபா யாகும்.

தென்னாப்ரிக்காவின் ஜனத்தொகை 60-லக்ஷம். இதில் ஐரோப்பியர்கள் 12 லக்ஷம் பேர்கள். 1850-ம் வஷத்தில் ஸர்க்கார் வரி 50-லக்ஷமாயிருந்தது. இப்போது 27-கோடிக்கு மேல் அதிகரித்திருக்கிறது. மற்ற தேசங்களெல்லாம் அபிவ்ருத்தியடைய நமது ராஜதானி மாத்ரம் முன்னேற்றமடையாமலிருக்கக் காரணமென்னவென்றால் கவர்ன்மெண்டார் இதுவிஷயமாய் வேண்டிய அளவு கவனம் செலுத்தாமலிருப்பதே.

**ராணுவத்தில் இந்தியர்கள் சேருவது.**—பெல்ஜியத்தில் ஜெர்மானியர்கள் புகுந்து அக்ரமங்கள் செய்ததுபோல, இந்தியாவில் வேற்றரசுகள் புகுந்து அப்படிப்பட்ட அக்ரமங்கள் செய்யாமல் தடுப்பதற்கு இந்திய ராணுவ அமைப்பை மாற்ற வேண்டியது அவச்யமாகும். ஜனங்கள் வேற்றரசுகள் தங்கள் தேசத்தின்மேல் படையெடுத்து வாரதபடி தடுக்க பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இப்போது ஸைன்யத் தொகையைக் குறைப்பதென்பது முடியாது. ஸைன்யத் தொகையை ரொம்ப அதிகரிப்பதற்கும் வேண்டிய பணம் கிடைக்காது. ஆகையால் ஸைன்யத் தொகையை அதிகமாக்க வேண்டுமானால், கவர்ன்மெண்டார் இந்தியர்களின்மேல் அதிக நம்பிக்கை வைத்து அவர்களை அதிகமாக ராணுவத்தில் சேர்த்துக்கொள்வதோடு படிப்படியாக ராணுவத்தில் உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்கவும் வேண்டும். நூறு வர்ஷகாலம் தேசத்தில் இடைவிடாத ஸமாதானமிருந்துவந்தும், இப்போதைய யுத்தத்தில் இந்தியர்கள் தங்கள் ராஜ விச்வாஸத்தைக் காட்டியுங்கூட ப்ரிட்டிஷ் ராஜதந்த்ரிகள் இந்தியர்களுடைய ராஜவிச்வாஸத்தில் நம்பிக்கை கொள்ளாவிட்டால், நாம் நமது தீர்மானங்களில் இதைப்பற்றி ப்ரஸ்தாபிப்பதில் ப்ரயோஜனமேயில்லை. மேலும், ராஜாங்கத்தைச் சேர்ந்தவர்கள், நாம் விச்வாஸமாயிருக்கிறோம் என்பதில் நம்பிக்கை கொள்ளாமலும், இந்தியர்களை வாலண்டியர் படையில் சேர்த்துக்கொள்ளாமலும், அவர்களுக்கு ராணுவத்தில் உயர்ந்த உத்யோகங்கள் கொடுக்காமலுமிருக்கும் வரையில், ஜனத்தலைவர்கள் கவர்ன்மெண்டாரோடு தேசத்துக்காக ஒத்துழைப்பார்களென்று எதிர் பார்க்கமுடியாது. அப்படி ஒத்து உழைக்காவிட்டாலோ, தேசத்தில் அபிவ்ருத்தி ஏற்படுவதற்கில்லை.

பிறகு மிஸ்டர் சர்மா, மாகாணங்களுக்கு ஸ்வய ஆட்சி கொடுக்க வேண்டுமென்றும், லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றும், இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குப் பணம் உதவி வரும் ஏற்பாட்டை சீர்திருத்த வேண்டுமென்றும், க்ராமங்களில் கௌன்ஸில்கள் ஏற்படுத்தி, ஸுகாதாரம், பாசனம் முதலிய க்ராம வேலைகளை நிர்வகித்துவர ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பேசினார்.

### தீர்மானங்கள்.

இந்தக் கான்பரென்ஸில் செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்கள் சுருக்கமாய்ப் பின்வருமாறு:—மிஸ்டர் கோபால க்ருஷ்ண கோகலே யிறந்துபோனதைப்பற்றி அனுதாபம் காட்டுவதாகவும், லார்ட் ஹார்டிஞ்ஜின் உத்யோககாலத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று விரும்புவதாகவும், தென்னாப்ரிக்காப் போராட்டத்தை த்ருப்திகரமாக நடத்தி ஜனங்களுக்கு ஸ்வதந்த்ரங்



களை வாங்கிக்கொடுத்ததற்காக மிஸ்டர் காந்திக்கு நன்றி செலுத்துவதாகவும் முதலில் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

நிலவரியை சாச்வதமாகச் செய்யவேண்டுமென்றும், திண்டுக்கல் பாலக்காட்டு ரெயில்வே போடுவதை பின்னி அண்ட் கம்பெனிக்குக் கொடுத்ததைப்பற்றி கான்பரென்ஸ் வருத்தப்படுகிறதென்றும், சென்னை ராஜதானிக்கு மாகாண ஸ்வயஆட்சி கொடுப்பதற்குக் காலம் வந்துவிட்டதென்றும், சிறுவர்களுக்கு கட்டாயப்படுத்தியும், இலவசமாகவும் எலிமெண்டரிக் கல்வி கற்றுக் கொடுக்கவேண்டுமென்றும், ராஜதானியின் கைத்தொழில் நிலைமையை ஆராய்ச்சிசெய்தும் அன்ய தேசங்களிலுள்ள ப்ரிட்டிஷ் கான்ஸல்கள் என்னும் ப்ரிட்டிஷ் ஸ்வதந்த்ரங்களைக் கவனிக்க ஏற்பட்டிருக்கும் உத்யோகஸ்தருடைய ஆபீஸில் இந்திய வ்யாபார டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்தியும், கைத்தொழில் பொருள்காட்சி சாலைகள் (ம்யூஸியங்கள்) ஏற்படுத்தியும், இந்திய வ்யாபாரத்துக்கு ஸாதகமாய் ரெயில்வே சார்ஜுகளை மாற்றியும் கைத்தொழில்களுக்கு கவர்ன்மெண்டார் உதவிசெய்யவேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**ஸ்தல ஸ்வய ஆட்சி.**—கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி ஸமீபத்தில் செய்த தீர்மானம் த்ருப்திகரமாயில்லை. கவர்ன்மெண்டார் சீக்ரம் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும். முனிஸிபாலிடிகளிலும் லோகல்போர்டுகளிலும் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் தொகையை இப்போது அனுஷ்டானத்திலுள்ள சட்டத்தில் சொல்லியிருக்கும் அளவுவரையில் அதிகரிக்கவேண்டும். ஒவ்வொரு ரெவின்யூ தாலுக்காவுக்கும் ஒருதாலுக்கா போர்டு ஸ்தாபிக்கவேண்டும். எல்லா முனிஸிபாலிடிகளுக்கும் சேர்மனைத் தெரிந்தெடுக்கும் ஸ்வதந்தரம் ஏற்படவேண்டும். எல்லா லோகல் போர்டுகளுக்கும் ப்ரெஸிடெண்டைத் தெரிந்தெடுக்க ஸ்வதந்த்ரம் கொடுக்கவேண்டும்.

**மதஸம்பந்தமான கல்வி.**—ஒரு குறிப்பிட்ட மதஸம்பந்தமான பாடங்கள் கற்பித்துவரும் பள்ளிக்கூடங்களில் அந்த மதத்தைச் சேராத மற்ற மதஸ்தர்களின் பிள்ளைகள்வாசித்து வந்து, அந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள்,பிள்ளைகள் அந்த மதஸம்பந்தமான பாடங்களை கவனிக்கக்கூடாதென்று எண்ணினால், அப்படியே பிள்ளைகளை மதப்பாடங்களை வாசிக்காமலிருக்கும்படி செய்ய அனுமதி கொடுக்கவேண்டும்.

ராஜதானியில் ஸௌகர்யமான விடங்களில் இன்னும் அதிகப்படியாக ஸர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கவேண்டும்.

பி. ஏ. வகுப்பு வரையில் தேசபாஷைகளைக் கட்டாய பாடமாக வைக்கவேண்டும்.

இவைகளைத் தவிர வேறு சில தீர்மானங்களும் செய்யப்பட்டன.

### மாகாண கைத்தொழில் கான்பரென்ஸ்.

சென்னை மாகாண கைத்தொழில் கான்பரென்ஸ் இந்த மாஸம் 7-ந்தேதியன்று நெல்லூரில் கூடிற்று. கொச்சி திவானாகவிருந்த மிஸ்டர் என் பட்டாபிராம ராவ் ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

மிஸ்டர் வி. நாஸிங்கராவ் ஷெ கான்பரென்ஸின் வரவேற்புக்கமிட்டியின் சேர்மனாகவிருந்து செய்த ப்ரஸங்கத்தில் விவஸாயத்தை வ்ருத்தி செய்வதில் ஜனங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும், முற்றிலும் க்ஷீணித்துப் போகும் நிலைமையிலிருக்கும் நமது தேசத்துக் கைத்தொழில்களை ஆதரித்து அபிவ்ருத்தி செய்யவேண்டியது அவச்யமென்றும், கவர்ன்மெண்டார் கைத்தொழில்களை அபிவ்ருத்திசெய்யக் கைக்கொண்டிருக்கும்முறை அத்ருப்திக்கிடமாயிருக்கிறதென்றும் சொன்னார்.

### ப்ரெஸிடெண்டின் ப்ரஸங்கம்.

மிஸ்டர் என். பட்டாபிராமராவ் தமது ப்ரஸங்கத்தில், இந்திய கைத்தொழில்கள், வ்யாபா

ரம் ஆகிய இவைகளினுடைய வ்ருத்தாந்தத்தை சரித்ர பூர்வமாக விவரித்துச்சொல்லிவிட்டு, இந்திய வ்யாபாரம் சென்ற சிலவர்ஷங்களாக அபிவ்ருத்தியடைந்திருப்பதனாலேயே தேசம் செல்வ அபிவ்ருத்தி யடைந்திருக்கிறதென்று சொல்வதற்கில்லையென்றும், ஏனென்றால் வெளிநாட்டுக் கைத்தொழில் ஸாமான்களே பெரும்பாலும் இந்தியாவில் இறக்குமதி யாகின்றனவென்றும், தொழிலுக்கு உபயோகப்படக்கூடிய சரக்குகளெல்லாம் அநேகமாய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிப்போய் விடுகின்றனவென்றும் சொன்னார். அவர்பேசின மற்றவிஷயங்களின் ஸாராம்சம் பின்வருமாறு.

**கைத்தொழில் கல்வியின் அவச்யம்.**—பல வர்ஷங்களாக இந்தியாவில் கற்றுத் தேர்ந்த அறிவாளிகள் கைத்தொழில் வேலைகளில் சேர்ந்து உழைக்காமல் ஒதுங்கியிருந்துவந்திருக்கிறார்கள். முக்யமாய் இந்தக் காரணத்தால்தான் நமதுதேசத்தின் கைத்தொழில்கள் அபிவ்ருத்தியடையாமலிருக்கின்றன. ஜனங்களுக்கு க்ரமமாக கைத்தொழில் கல்வி கற்பிப்பதால் கைத்தொழில் ரொம்ப அபிவ்ருத்தி யடையக்கூடும். கைத்தொழில் கல்வியால் ஜப்பான் ஸ்வல்பகாலத்தில் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்து விட்டது. 1872-ம் வர்ஷம் முதல் 1897-ம் வர்ஷம் வரையில் ஜப்பான் கவர்ன்மெண்டார் ராணுவ அபிவ்ருத்திக்கும் ராஜாங்க முறை அபிவ்ருத்திக்கும் எவ்வளவு பாடுபட்டார்களோ, அவ்வளவு கைத்தொழில் அபிவ்ருத்திக்கும் பாடுபட்டார்கள். ஜப்பான் தேசத்து ஜனங்களும் தொழில் விஷயங்களை தீவிரமாகக் கற்றுக்கொண்டார்கள். அவைகளில் சீக்ரம் தேர்ச்சி யடைந்தார்கள். அவர்கள் உழைப்பாளிகளாக இருந்ததோடு செட்டாகவும் வாழ்ந்து வந்தார்கள். தக்க கல்வியும் ஆதரிப்பும் இருந்தால் எதையும் கற்றுச் செய்யக் கூடியவர்களா யிருந்தார்கள். ஜப்பான் தேசமெங்கும் பற்பல வி...ங்களில் வ்யாபாரப் பள்ளிக் கூடங்கள் ஸ்தாபிக்கப் பட்டன. ஜனங்கள் கைத் தொழில் விஷயமாக அதிக ஊக்கங் கொள்ளும்படி ஜனத்தலைவர்களும் அதிகாரிகளும் அவர்களைத் தூண்டி வந்தார்கள். இவ்வளவு ஒழுங்காய்க் கைத்தொழி லபிவ்ருத்திக்குப் பாடுபட்டுவந்ததின் பலனென்னவென்றால், இப்போது இங்கலண்டிலும் ஜெர்மனியிலும் செய்யப்படும் ஸாமான்கள் எல்லாவற்றையும் ஜப்பானிய கைத்தொழிலாளிகள் செய்துமுடிக்கக் கூடிய திறமை வாய்ந்தவர்களா யிருக்கிறார்கள்.

**ராஜாங்க உதவி அவச்யமா?**—கைத் தொழில் விஷயத்தில்நமது தேசத்தின் நிலைமை மற்ற தேசங்களைப்போல் இல்லை. கைத்தொழிலபிவ்ருத்தி விஷயமாய் இன்னது செய்யலாம் செய்யக்கூடாதென்பதை இந்தியாவிலுள்ள அதிகாரிகள் தீர்மானிக்க முடிவதில்லை. 5000 மைலுக்கு அப்பாலுள்ள இந்தியா மந்த்ரிதான் தீர்மானிப்பவராயிருக்கிறார். இந்த ஏற்பாட்டால் கைத்தொழிலபிவ்ருத்திக்கு ரொம்ப தடையேற்பட்டிருக்கிறது. இதுவரையில் சவர்ன்மெண்டார் கைத்தொழிலுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று எதிர்பார்த்து சும்மா இருந்ததுபோல் இராமல் இனி நாமே பாடுபட ஆரம்பிக்கவேண்டும். நமது க்ஷேமத்தைப்பற்றின எந்தக் கார்யத்தையும் நாம் செய்து கொள்ளாமல் கவர்ன்மெண்டை எதிர்பார்த்திருப்பதால், அந்தக் கார்யங்களை நாமே ஆலோசித்து செய்து முடித்துக்கொள்ள அசக்தர்களாயிருக்கிறோமென்று காட்டிக்கொள்கிறோம்.

**நமது கைத்தொழில்கள் கடைத் தேருததற்குக் காரணங்கள்:**—நம்மிடத்தில் ஒரு முக்யமான குறை இருக்கிறது. நாம் எடுத்துக்கொள்ளும் எந்த வேலையையும் சரியாயும் இடைவிடாமலும் செய்து வருவதற்கு ஒருதக்க ஸ்தாபனம் ஒன்றுமில்லாமலிருப்பதே. நாம் செய்யும் யோசனைகளையும் தீர்மானங்களையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரமுடியாமல் போனதற்கு இதுதான் முக்ய காரணம். ஆகையால் நாம் கான்பரென்ஸுகளிலும் மீட்டிங்குகளிலும் செய்யும் யோசனைகளையும் தீர்மானங்களையும் பற்றி கவனித்து அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதற்காக பற்பல விடங்களில் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியது அவச்யம்.



## மாகாணக் கல்விக் கான்பரேன்ஸ்.

மாகாணக் கல்விக் கான்பரென்ஸ் இந்த மாஸம் நெல்லூரில் நடைபெற்றது. ப்ரெஸிடெண்டாகிய ஆனரபிள் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியார் தாம் செய்த ப்ரஸங்கத்தில், சென்ற இரண்டு வர்ஷகாலமாக வித்யாபிமானிகள், கவர்ன்மெண்டார் இதற்குமுன் கல்வி அபிவ்ருத்திக்கு பாதகமாகச் செய்திருந்த கார்யங்களை மாற்றுவதற்கு முயன்று வந்தார்களென்றும், தாம் மாணவர்களின் சம்பள விகிதங்களைக் குறைப்பதைப் பற்றியும், எலிமெண்டரி ஸ்கூல்களிலுள்ள சிறுவர்கள் ஸெகண்டரி ஸ்கூல்களுக்குப் போகாதபடி தடுக்க அபராதச் சம்பளங்கள் போட்டிருப்பதை எடுத்து விடுவதைப் பற்றியும் கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டியிருக்கிறாரென்றும், முதலில் சொன்ன சம்பள விகிதத்தைக் குறைக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் ஸாதகமாயில்லையென்றும், க்ராண்ட்-இன்-எய்ட் கோடை கவர்ன்மெண்டார் திருத்தியிருப்பது த்ருப்திகரமாயில்லையென்றும், உபாத்யாயர்கள் தங்களுடைய கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடாதென்றும், அவர்கள் தங்களுடைய ஸ்வதந்தரங்களில் எவரும் ஆக்ரமிக்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டு மென்றும் சொன்னார்.

## ஸநாதன தர்ம கான்பரேன்ஸ்.

இந்தக் கான்பரென்ஸ் முதல் தடவையாக இந்த மாஸம் 5-ந் தேதியன்று நெல்லூரில் கூடிற்று. கும்பகோணத்து ப்ரொபஸர் ஸுந்தர ராமய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் மேல்நாட்டு நாகரீகத்தையும் கீழ்நாட்டு நாகரீகத்தையும் அவைகளின் உற்பத்தி முறைகள், அவைகளாலுண்டான பலன்கள் ஆகிய இவைகளையும் ஒப்பிட்டுக் காட்டி, கீழ்நாட்டு நாகரீகமே சிறந்ததென்பதை விவரித்துச் சொன்னார். ஜநசார சீர்திருத்தத்தில் இப்போது மூன்று கக்ஷியார்கள் இருக்கிறார்கள். (1) வைதீகர்கள். (2) வேதசாஸ்த்ரங்களை ஆதாரமாகக்கொள்ளாமல், தமது அறிவையே ஆதாரமாகக்கொண்டுள்ள யுக்திவாதிகள். (3) வேதசாஸ்த்ரக் கொள்கைகளை தமது விருப்பத்துக்கும் ஸௌகர்யத்துக்கும் ஏற்றபடிமாற்றி அனுஸரித்துக்கொள்பவர்கள். இவர்களில் பின்சொன்ன இரண்டு கக்ஷியார்களுடைய முறைகள் தவறானவைகளாகவும், பயனற்றவைகளாகவும் இருக்கின்றனவென்றும், மூன்றாவது கக்ஷியார்கள் வேதங்களுக்குத் தப்பர்த்தம் செய்துவிடுகிறார்களாதலால் அவர்களுடைய முறை ரொம்பவும் கண்டிக்கத் தக்கதென்றும் ப்ரொபஸர் ஸுந்தரராமய்யர் சொன் சொன்னார்.

இன்னும் அவர், ஆர்யதர்மத்தை ஸ்தாபித்து அதைப் பரவச்செய்த மகர்ஷிகளும், ஆசார்ய புருஷர்களும் நமது மதக்கொள்கைகளை எப்படி விவரித்திருக்கிறார்களோ அதன்படியே நமது ஆசாரங்களை சீர்திருத்தவேண்டுமென்றும், ஹிந்துக்கள் வைராக்யக்கொள்கைகளையும், சுத்தத்தையும் கைவிடக்கூடாதென்றும், இந்தக்கொள்கைகளால்தான் ஹிந்துக்கள் தமது நிலைமைகெடாமல் வஸித்து வந்தார்களென்றும், இன்னும் பிற்காலத்திலும் நாம் அபிவ்ருத்தியடையவதற்கும் வைதீகக் கொள்கைகளே ஏற்றவையென்றும் சொன்னார்.

## ஜநசார சீர்திருத்த கான்பரேன்ஸ்.

இந்த வர்ஷத்திய சென்னை மாகாண ஜநசார சீர்திருத்த கான்பரென்ஸ் இந்த மாஸம் நெல்லூரில் கூடிற்று. வரவேற்புக் கமிட்டியின் சேர்மனாயிருந்த மிஸ்டர் எம். செங்கப்பா தமது ப்ரஸங்கத்தில் ருதுமதிவிவாகம் அவச்யமென்றும், ருதுமதி விவாக மசோதாவை சட்டமாக்கவேண்

டியது அவச்யமென்றும் ஜனாசார விஷயங்களில் கவர்ன்மெண்டார் தலையிட்டுக்கொள்வது விரும்பத்தக்கதென்றும் சொன்னார்.

இந்தக் கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாக இருந்த மிஸ்டர் மகாதேவ சாஸ்த்ரியார் ஜனாசாரங்களை சாஸ்த்ர ரீதியாக சீர்திருத்தவேண்டுமென்று சொன்னார். தர்மசாஸ்த்ரத்தின்படி பார்த்தால் ஒரே ஒரு ஜாதிதான் உண்டு; இப்போது ஜாதிகள் நூற்றுக் கணக்காக இருப்பதற்கு வேதங்களிலும் மற்ற பூர்வீக க்ரந்தங்களிலும் ஆதாரம் கிடையாது. ஜனங்களில் பற்பல வகுப்பாருக்கு ப்ரத்யேகமான தொழில்கள் ஏற்பட்டதால் தான் ஜாதிகள் வ்ருத்தியடைந்தன. ஆகையால் நாம் புராதனமான வைதீகக் கொள்கைகளை அனுஸரித்து நமது ஆசாரங்களை சீர்திருத்தவேண்டும். எல்லாரும் ஒரே ஜாதியாக ஆகவேண்டும். ஸமபந்தி போஜனத்தில் த்ருஷ்டி தோஷம் பாராட்டக்கூடாது. எல்லா ஜாதியார்களுக்குள்ளும் பரஸ்பர விவாஹம் செய்து கொள்ளவேண்டும்—என்று மிஸ்டர் சாஸ்த்ரியார் சொன்னார்.

சாஸ்த்ரியார் ஸ்த்ரீகளுக்கு உயர் தரக்கல்வி கொடுக்கவேண்டுமென்றும், அவர்களுடைய நிலைமையை உயர்த்தவேண்டுமென்றும், ஸ்த்ரீகளுக்கும் புருஷர்களுக்கும் ஸமமான ஸ்வதந்த்ரங்கள் ஏற்படவேண்டுமென்றும் சொன்னார்.

## DEVELOPMENT OF INDUSTRIES.

## கைத்தொழில்களின் அபிவ்ருத்தி.

கொஞ்ச காலத்துக்கு முன்னால் வங்காள கவர்ன்மெண்டார் அந்தமாகாணத்துக் கைத்தொழிலபிவ்ருத்தியைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படி மிஸ்டர் ஸ்வான் என்பவரை நியமித்திருந்தார்கள். அவர் கைத்தொழிலபிவ்ருத்தியைப்பற்றிப் பரிசீலனை செய்து எழுதிய ரிபோர்ட்டை ௸ கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் ப்ரசுரம் செய்தார்கள். அந்த ரிபோர்ட்டில் சொல்லிய விஷயங்களில் பல நமது ராஜதானிக்கும் ஏற்குமாகையால் அவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

ஸ்வதேசியம் ப்ரபலமாயிருந்த காலத்தில் வங்காளத்தில் பல ஸ்வதேசிய கைத்தொழில் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் அவைகளில் பெரும்பாகம் கடைத் தேறாமல் போய்விட்டன. இதற்குக் காரணங்கள் முக்யமாய் போதுமான மூலதனமில்லாமையும், தக்க நிர்வாகமில்லாமையுமே. இந்தியர்கள் தங்கள் ஸொந்த மூலதனத்தைக்கொண்டு நடத்தும் கைத்தொழில் கம்பெனிகளுக்கு போதுமான மூலதனம் வேண்டியது ரொம்ப அவச்யமாகும். ஏனென்றால் பாங்கிகளும், யந்த்ரங்கள், கைத்தொழில் பொருளாகச் செய்வதற்கு வேண்டிய ஸாமான்கள் ஆகிய இவைகள் ஸப்ளை செய்யும் கம்பெனிகளும், இந்திய கைத்தொழில் கம்பெனிகளுக்கு கடன்கொடுக்கவும் கடனாக ஸாமான்கள் கொடுக்கவும் இஷ்டப்படுவதில்லை.

இந்திய கைத்தொழில் கம்பெனிகள் கைத்தொழிலுக்கு வேண்டிய ஸாமான்களை ரொக்கம் கொடுத்து வாங்கி அவைகளினிடம் ஸாமான்கள் வாங்குபவர்களுக்கு ஸாமான்களை ரொக்கத்துக்கு விற்காமல் கடனாகக் கொடுக்கவேண்டியிருப்பதால், பாங்கி வஸதிகளுள்ள தொழில் கம்பெனிகளுக்கு எவ்வளவு நடைமுதல்பணம் வேண்டியிருக்குமோ அதைவிட அதிகமாக இந்திய தொழில் கம்பெனிகளுக்கு நடைமுதல் பணம் வேண்டியிருக்கிறது. பணம் கடன்வாங்கவும், கடனாகக் கைத்தொழில் ஸாமான்கள் வாங்கவும், பாங்கி வஸதிகளில்லாமலிருப்பதுதான் அநேகமாய் எல்லா இந்திய கைத்தொழில் கம்பெனிகளுக்கும் பெரிய கஷ்டமாயிருக்கிறது.

இன்னும் சிலகாலம்வரையில் இந்தியர்கள் கைத்தொழில் துறைகளில் பணம்போட முன்வருவார்களென்று சொல்வதற்கில்லை. இந்தியாவில் செல்வமுள்ளவர்கள் மார்வாடிகளும், நிலஸ்வான்களும், உத்யோகங்களில் அமர்ந்திருப்பவர்களுமே.



உத்யோகங்களில் அமர்ந்திருப்பவர்களில் சிலர் தங்கள் பணத்தை நிலத்தில் போடுகிறார்கள். வேறு சிலர் வட்டிக்கு விடுகிறார்கள். ஸொத்தீட்டின்பேரில் கடன்கொடுத்தால் பணம் பத்ரமாயிருப்பதோடு, வட்டியும் நூற்றுக்கு 6 வீதம் கிடைக்கிறது. புதுக் கைத்தொழில்களில் பணம்போடுவதால் தக்க லாபம் நிச்சயமாய்க் கிடைக்குமென்று தொழிலாளிகள் நிரூபித்தாலொழிய வங்காளத்திலுள்ளவர்கள் தங்கள் பணத்தை தொழில்களில் போட முன்வருவது அரிது. மேலும் தொழில்கல்வி கற்ற சிறுவர்களுக்கு கைத்தொழில்களில் விசேஷ அறிவு இருந்தாலும் அவர்களுக்கு வ்யாபாரப்பயிற்சி கொஞ்சமும் இல்லை.

கைத்தொழில்கள் அபிவ்ருத்தியடைவதற்கு ஜனங்களே முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்றாலும் கவர்ன்மெண்டார் கைத்தொழில்கள் விஷயமாக இப்போது செய்துவரும் உதவியைவிட அதிகமாக உதவிசெய்யவேண்டும். கைத்தொழில்களைப்பற்றிப் பல புஸ்தகங்கள் எழுதி வெளியிடுவதைவிட ஒரு தொழிலைச்செய்து காட்டினால் ஜனங்களுக்குத் தொழில்களில் அதிக நம்பிக்கை உண்டாகும். ஒரு கைத்தொழில் ஸ்தாபிக்கத் தீர்மானித்திருப்பவருக்கு அந்தக் கைத்தொழிலைப்பற்றி கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்திருக்கும் புஸ்தகத்தை வாசிப்பதால் பலவிஷயங்கள் தெரியவரும். ஆனால் ௸ புஸ்தகத்தை வாசிப்பதனாலேயே எவரும் கைத்தொழிலை ஸ்தாபிக்க முன்வரமாட்டார்கள். அப்படிக்கின்றி, கவர்ன்மெண்டார் இன்னஸாமானை இன்னவிலையில் செய்யலாம், இன்னவிலைக்கு வெளியில் விற்கலாம், இன்னலாபம் கிடைக்குமென்று குறிப்பிட்ட தொழிலைச் செய்து ரூபித்தால், தொழில் செய்வதில் நோக்கமுள்ளவர்கள் தொழில் நடத்த முன் வருவார்கள்.

வங்காள கவர்ன்மெண்டார் 1910ம் வர்ஷத்துக்கு முன்னால் ஸொந்தத்தில் தொழில்கள் ஸ்தாபித்து நடத்த ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அந்த வர்ஷத்தில் இந்தியா மந்த்ரி கவர்ன்மெண்டார் தொழில்கள் ஸ்தாபித்து நடத்துவது கூடாதென்றும், தொழில்கள் ஸம்பந்தமாக யோசனைகள் சொல்லுவதற்கு இன்பர்மேஷன் பீரோ என்னும் ஆபீஸ்கள் ஸ்தாபித்தால் போதுமென்றும் சொல்லிவிட்டார். ஆனால் தொழில்களைப்பற்றி ஆலோசனைகளும் விஷயங்களும் தெரிவிப்பதென்றால், உண்மையில் தொழில்களைப்பற்றி பரீக்ஷைகள் நடத்தி அவைகளை அனுஸரித்தே ஆலோசனைகள் சொல்லவேண்டும்.

வங்காளத்தில் ஒரு நெருப்புக் குச்சித் தொழில்சாலை வேலை நிறுத்தியிருக்கிறது. இன்னொரு தொழில்சாலை சீக்ரம் வேலையை நிறுத்திவிடுமென்று தெரிகிறது. இந்த இரண்டு தொழில்சாலையும் கடைத்தேறாமல் போனதற்குக் காரணம் மூலதனமில்லாமையே. இவைகளுக்கு நெருப்புக்குச்சி செய்வதற்கு ஏற்ற மரம் கிடைப்பதும் கஷ்டமாயிருக்கிறது. இதற்கு கவர்ன்மெண்டார் காட்டிலாகாதாருடன் சேர்ந்து நெருப்புக்குச்சித்தொழில் ஸம்பந்தமாக பரீக்ஷைகள் நடத்தினால் ரொம்ப நன்மையாக இருக்கும்.

மேலும் கவர்ன்மெண்டார் இந்த தேசத்தில் செய்த ஸாமான்களை இப்போது ஆதரிப்பதைவிட அதிகமாக ஆதரித்து வரவேண்டும். இந்தியாவிலுள்ள கவர்ன்மெண்டுகள் தங்களுடைய ஆபீஸ்களுக்கு வேண்டிய ஸாமான்களை விசேஷமாய் இங்க்லண்டிலிருந்து தருவித்துக் கொள்கின்றன. இன்ன ஸாமான்கள் வேண்டுமென்று இங்க்லண்டுக்குப் பட்டி அனுப்புமுன், இந்தியாவிலுள்ள கம்பெனிகளுக்கு டெண்டர் கொடுக்க வஸதிகள் செய்து கொடுக்கவேண்டும். இந்தியக் கம்பெனிகளிடம் அதிக ஸாமான்கள் வாங்காமல் குறைவாய் வாங்குவதால், இந்தியக் கம்பெனிகள் அதிக ஸாமான்கள் வாங்கினால் என்ன விலை சொல்லுமோ அதைவிட அதிகமாகவே விலை சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் இது விஷயத்திலும் கவர்ன்மெண்

டார் அதிக ஸௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டும்.

கைத்தொழில் ஸம்பந்தமாக கவர்ன்மெண்டார் இன்னும் சில ஸௌகர்யங்கள் செய்து கொடுக்க வேண்டும். (1) சிறு தொழிலாளிகள், அதாவது பருத்தி நூல் நெசவுகாரர்கள், பட்டு நெசவுக்காரர்கள், பித்தளை வேலைக்காரர்கள் ஆகிய இவர்களுக்குள் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். இந்த ஸங்கங்களை மேற்பார்வை பார்க்கும் அதிகாரி தொழில்களுக்கு வேண்டிய சரக்குகளை வாங்குவதிலும், செய்யப்பட்ட ஸாமான்களைவிற்பதிலும் தொழிலாளிகளுக்கு உதவிசெய்யவேண்டும். (2) சீர்திருந்திய முறைகளையும் கருவிகளை உபயோகிக்கும் விதத்தையும் அவைகளால் ஏற்படும் ஸௌகர்யத்தையும் தக்க விடங்களில் ரூபித்துக்காட்ட வேண்டும். (3) நெருப்புக்குச்சி, பேனா, பென்ஸில் ஆகிய இந்தத் தொழில்களுக்கு ஏற்ற மரங்களை ஸௌகர்யமான நிபந்தனைகளின் மேல் ஸப்ளை செய்ய காட்டிலாகாதார் ப்ரத்யேகமான ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இவ்விதம் கவர்ன்மெண்டார் செய்து வந்தால் கைத்தொழில்களைக் கூடிய மட்டும் ஆதரித்ததாகும். மற்ற தொழில் விஷயங்களை ஜனங்களே கவனித்துக்கொள்ளவேண்டும். ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் தொழில்கள் நடத்துவதைவிட பணமுள்ளவர்கள் ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனியாகச் சேராமல் ஸொந்தத்தில் தனியாக நடத்துவது நல்லது. அவர்கள் தொழில் துறைகளில் நல்ல லாபம் வருமென்று காட்டினால் பணமுள்ள மற்றவர்கள் காலக்ரமத்தில் தொழில் துறைகளில் பணம் போட முன்வருவார்கள்.

## FEEDING THE ARMY.
## ஸைன்யத்தை போஷித்தல்.

யுத்தகளத்திற்கு ஆயிரக்கணக்கான ஸைன்யங்கள் செல்வது, ஒரு பெரிய நகரமே ஊர்ந்து போவதுபோலாகும். இத்தனை ஆள்களை அடக்கிச்சென்று, பெரிய சத்ருக்களைத்தாக்கி வெற்றி பெற்று வருதல் ஸாமான்ய கார்யமல்ல. சண்டை செய்வதில், கவனிக்கவேண்டிய இரண்டு முக்யமான விஷயங்கள் என்னவென்றால், படைகளைச் செலுத்தும் திறமையும் விசேஷமான சண்டை உபாயங்களும்.

யுத்தம் நடக்கும்பொழுது ஸைன்யங்களெல்லாம் ஓரேயிடத்தில் இருப்பது அரிது. ஏனென்றால், சத்துருக்களைத் தோற்கடிப்பதற்குரிய தந்த்ரங்களுக்குத் தக்கபடி ஸைன்யங்களை இடம் விட்டு இடம்மாற்றி நிறுத்தவேண்டிவரும். நன்றாய்ப் போர்புரிவதற்கு தற்பீத்து செய்திருந்தால், எந்ததேசத்து ஸைன்யத்தின் சக்தியும் ஸமமாய்த்தானிருக்கும். எந்த ஸேனாதிபதி சத்ருவின் உபாயத்தையும் பலமற்றிருக்கும் பக்கத்தையும் யுக்தியுடன் அறிந்து எதிர்பாராத ஸமயத்தில் சத்ருவைப்போய் தாக்குவானோ, அவனுக்கே ஜயம். ஆகையினால் புத்திவல்லமையும், தந்த்ரசாலித்தனமும் கூடின கக்ஷிக்காரரே ஸாதாரணமாய் வெற்றிபெற்று வருகிறார்கள்.

ஜயமடைய இவைகள் மாத்ரமே போதா. ஸோல்ஜர்களுக்கு தக்கஸமயத்தில் உணவையளிப்பதற்கும், ஸமயாஸமயத்தில் அவர்களுக்கு வேண்டிய வெடிமருந்து, உடைகள், பூட்ஸுகள் முதலிய அவச்ய வஸ்துக்களைக் கொடுப்பதற்கும் எப்பொழுதும் ஏற்பாடு தயாராயிருக்கவேண்டும். நகரவாஸிகளுக்கு என்னென்ன ஸௌகர்யங்களும் ஸாமான்களும் வேண்டுமோ, அவைகளையெல்லாம் போர்க்களத்திற்குக் கொண்டுபோவது அவச்யம். ஸைன்யங்கள் எங்கெங்கெல்லாம் போகுமோ, அந்த இடங்களுக்கெல்லாம் ஸாமான்களையும் சுமந்துகொண்டுபோகவேண்டும்.

இவையெல்லாம் எளிதில் ஆகும் கார்யங்களல்ல. யுத்தங்கள் எத்தனைநாட்கள் நீடித்திருக்குமென்பது திட்டமாய் யாருக்குமே தெரியாது. நூறுவர்ஷ காலங்கூட நீடித்திருந்த சண்டை நடந்ததாக சரித்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவனா இரண்டுபேரா, பாதுகாப்பதற்கு?



ஒரு சிறிய குடும்பத்தை ரக்ஷிக்கவே மனிதர்கள் திண்டாடுகிறார்கள். 30 அல்லது 40 லக்ஷம் ஜனங்களைப் போஷித்து, எதிரியின் பலத்தைத் தாக்கி, சண்டையில் வெற்றிபெறுவது ஒரு ஸுலபமான கார்யமா?

### ஆர்மி ஸேர்விஸ் கோர்.

ஸைன்யத்திற்குத் தேவையான பொருள்களையும் கருவிகளையும் வேண்டிய இடத்தில் தயாராய் வைக்க ஒவ்வொரு தேசத்திலும் ஒரு ப்ரத்யேக டிபார்ட்மென்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இங்க்லீஷில் "ஆர்மி ஸர்விஸ் கோர்" என்று பெயர். அநுபவமுள்ளவர்களே இந்த டிபார்ட்மெண்டுக்குத் தலைவராக நியமிக்கப்படுவார்கள். இந்த டிபார்ட்மென்ட் தலைவரும் யுத்தகளத்து ஸேனாதிபதிக்குள் அடங்கியவர்தான். ஸைன்யத்துக்கு வேண்டிய எல்லா ஸாமான்களையும் எங்கெங்கிருந்து வரவழைக்க வேண்டுமோ அந்தந்த இடங்களிலிருந்து வருத்தி தணிக்கைசெய்து, கொஞ்சங்கொஞ்சமாக வேண்டிய இடங்களுக்குக் கொடுத்தனுப்புவதே இந்த டிபார்ட்மெண்டில் அமர்ந்தவர்களுடைய வேலை. இதிலும், பல சிறிய பிரிவு டிபார்ட்மெண்டுகள் உள. உதாரணமாக, ஸோல்ஜர்களுக்கு வேண்டிய ஆகார வகைகளுக்கென்று "கமிஸேரியட்" என்று சொல்லப்பட்ட ஒரு டிபார்ட்மென்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த டிபார்ட்மென்டில் 'க்வார்டர்-மாஸ்டர்' என்பவரே முக்ய உத்யோகஸ்தர். இவருடைய வேலையைப்பற்றி பின் சொல்வோம்.

### முன் காலத்தில் ஸோல்ஜர்களுக்கு ஸப்ளைசெய்தல்.

முன்காலத்தில் யுத்தகளத்திலிருக்கும் ஸோல்ஜர்களுக்கு ஆகாரம் முதலிய வேண்டியவைகளை ஸாதாரணமாய் மூன்று விதமாய் சேகரித்து வந்தார்கள்.

1. ஸ்வதேசத்திலிருந்து வேண்டிய ஸாமான்களை வரவழைத்தல். இது இடைவிடாமல் சரியாய் வந்துகொண்டேயிருக்கும். சண்டைபோடும் ஸைன்யங்கள் இதைத்தான் முக்யமாய் நம்ப வேண்டும்.

2. யுத்தகளத்துக் கருகிலிருக்கும் பட்டணங்களில் கிடைக்கும் உணவுப்பொருள்களை கூடியவரையிலும் சேகரித்து உபயோகப்படுத்திக் கொள்வது. முன்காலத்தில், ஒருபக்கத்தார் சத்ருவின் நகரத்தை பிடித்துவிட்டால், வழக்கமாய் அந்த நகரிலுள்ள சாப்பாட்டு ஸாமான்களையெல்லாம் பிடுங்கி தங்களுடைய ஸோல்ஜர்களைக் காப்பாற்றுவது ஸகஜமாயிருந்தது. ஆனால் இம்மாதிரி வழக்கம் வெகு கொடூரத்துக்கு இடமாயிருந்தது. ஏனெனில், அந்நகரிலுள்ள ஜனங்களுக்கு அதிகக் கஷ்டத்தை யுண்டுபண்ணுவதுமல்லாமல், ஜனங்களுக்கும் ஸோல்ஜர்களுக்கும் எத்தனையோ வித சண்டை சச்சரவுகளுக்கும் இடமாயிருந்தது. இதுமாத்ரமல்ல; இவ்வி சத்ருக்கள் கொள்ளையிட்டால், அந்த நகரில் வ்யாபாரம் வேரோடு அற்று, உள்ள பொருள்கள்கூட கிடைக்காமலிருக்கவும் நேரிட்டது.

இவ்வித கஷ்டங்களையெல்லாம் நிறுத்துவதற்காக ஜயித்த கக்ஷிக்காரர் பிடித்த நகரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் போய் கொள்ளையிடாமல், அவ்விடத்து சில முக்ய உத்யோகஸ்தரிடம் மொத்தமாய் இவ்வளவு ஸாமான்களை சேகரித்துக்கொடுத்து விடவேண்டுமென்று உத்தரவு அளிக்கத் தொடங்கினார்கள். உடனே, ஒவ்வொரு நகரவாஸியிடமிருந்தும், அவனுடைய ஸொத்துக்கும் வரும்படிக்கும் தக்கபடி, அந்நகரத்து உத்யோகஸ்தர்களே ஸாமான்களையோ பணத்தையோ சேகரித்து சத்ருவிடம்கொடுத்துவிடுவார்கள். இந்த உத்யோகஸ்தர்கள் அவரது பட்டணத்தில் யாவரையும் தெரிந்திருக்கக் கூடுமாதலால், அதிகக் கஷ்டப்படுத்தாமல் அவரவர் யோக்யதைக்குத் தக்கபடி வஸூல் செய்யலாம். கொஞ்சகாலம் இம்மாதிரி நடந்து வந்தது. இப்பொழுதோ, வாங்கின ஸாமான்களுக்கு உடனே ரசீது கொடுத்து விடுகிறார்கள். இதற்கு உடனேயோ பின்னாலோ பணம் பெற்றுக்கொள்ளலாம்,

3. ஸாதாரணமாய், ஒவ்வொரு பட்டணத்திலும் சில நாட்களுக்கு வேண்டிய ஆகாரப்பொருள்கள் இருக்கும். ஒவ்வொரு குடும்பத்திலும் அந்தக் குடும்பத்துச் செலவுக்கு வேண்டிய பொருள்களை முன்னமேயே வாங்கி வைப்பது எல்லா விடத்திலும் வழக்கமல்லவா ? ஒரு வீட்டில் நான்குபெயர்கள் இருக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். நான்குபேர்களுக்கு 10-நாட்களுக்கு வேண்டிய ஸாமான்களிருக்கட்டும். அந்த வீட்டில் அவ்வூரில் வந்து யுத்தஞ் செய்யும் 4 ஸோல்ஜர்களுக்கு சாதம் போடும்படியாக ஏற்படுத்தி விட்டால், எட்டுப் பேர்களுக்கும் 5-நாட்களுக்குப் பூர்த்தியாய் உணவு கிடைக்குமல்லவா? இவ்விதமான ஏற்பாட்டை இங்க்லீஷில் 'பில்லெட்டிங்' என்று சொல்வார்கள். யுத்தகளத்தருகிலுள்ள பட்டணங்களில் கூடுமான வரையிலும் எல்லா ஸோல்ஜர்களுக்கும் இவ்விதமான ஏற்பாடு செய்து விடலாம். ஆனால், தேச உடன்படிக்கைப்படி, பின் சொல்லி யிருக்கும் குடும்பத்தாரையும் பொது ஸ்தாபனங்களையும் மாத்ரம் இந்த மாதிரி சத்ருக்கள் கஷ்டப்படுத்த மாட்டார்கள்.

(1) யுத்தத்தில் காயம்பட்ட ஒருவனை தன் வீட்டில் வைத்து ரக்ஷிப்பவன்.

(2) ஆஸ்பத்ரிகள், வயது முதிர்ந்தவர்கள், முடம், குருடு இவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கும் பொதுஸ்தாபனங்கள், மதஸம்பந்தமான விடங்கள், தர்மத்துக்காக ஏற்படுத்தியிருக்கும் இடங்கள்—ஆகிய இவ்விடங்களில் ஸோல்ஜர்களை சாப்பாட்டுக்கு அனுப்பக்கூடாது.

இந்த மாதிரி 'பில்லெட்டிங்' ஏற்பாடு செய்து விட்டால், தினசரிவேலை முடிந்து ஸோல்ஜர்கள் திரும்பி களைப்பாய் வீடுவந்து சேரும்பொழுது சமையல் தயாராயிருக்கும். ஆனால், ஸோல்ஜர்களெல்லாம் விட்டுப்பிரிந்து வெவ்வேறு வீடுகளுக்கு உணவுக்குப்போகவேண்டியதால், சட்டங்களுக்கு அடங்கி நடப்பதும் கட்டுப்பாடுகளும் குறைந்து விடும். தவிர, ராத்ரிவேளைகளில் சத்ரு திடீரென்று யுத்தத்துக்குத் தொடங்கி விட்டால் ஸோல்ஜர்களை ஒன்று சேர்ப்பதும் கஷ்டம். இவைகளை யுத்தேசித்து முடியுமானால் ஸோல்ஜர்களை பொதுஜன வீடுகளுக்கு சாப்பாட்டுக்கு அனுப்பமாட்டார்கள்.

## ஸப்ளை சேகரிக்கும் விதம்.

களத்தில் போர்செய்யும் லக்ஷக்கணக்கான ஸோல்ஜர்களுக்கு வேண்டும் ஸாமான்களின் 'ஸப்ளை'யை எங்கிருந்து வரவழைப்பது, எவ்வளவு வரவழைப்பது, எப்படி அதன் அளவைத் திட்டப்படுத்துவது, இவைகளைப் பற்றி கொஞ்சம் சொல்வோம்.

முக்யமாய், யுத்தகளத்தில் வேண்டியவைகளையெல்லாம் தங்கள் ஸொந்த நாட்டிலிருந்தேகொண்டுபோகவேண்டும். இதல்லாமல், சண்டையில் ஜயித்துப் பிடித்த தேசங்களிலிருந்தும் ஸாமான்களை எடுத்துக்கொள்வார்கள். சண்டை ஆரம்பித்து விட்டால் இந்த இரண்டு வழிகளினாலல்லாமல் வேறெந்த மார்க்கத்திலும் ஸாமான்கள் சேகரிப்பது அரிது. நிச்சயமாய் எதிர்பார்க்கக் கூடியவை ஸொந்ததேசத்திலிருந்து வருபவையே. ஆனால், வேறு எந்த மார்க்கத்திலெல்லாம் உணவுப்பொருள்கள் கிடைக்கக்கூடுமென்பதை முன்னதாக திட்டப்படுத்திக்கொண்டே ஸொந்த ராஜ்யத்திலிருந்து பொருள்களை அனுப்புவது வழக்கம்.

"இன்டர் நாஷனல் லா" என்று சொல்லப்பட்ட ஸர்வதேசங்களுக்குள்ளுமுள்ள கொள்கைப்படி சண்டையில் ஒரு பக்கத்திலும் சேராத தேசத்தார், யுத்தம் நடக்குங் காலமளவும், ஸைன்யங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களையோ, வெடிமருந்தையோ, வேறு சண்டைக்குதவக்கூடிய ஸாமான்களையோ இருகக்ஷிக்காரருக்கும் கொடுக்கவோ, அல்லது அவர்கள் ராஜ்யத்தில் இறக்குமதி செய்யவோ கூடாது. ஆகையினால், யுத்தம் ஆரம்பித்துவிட்டால், உணவுப் பொருள் வேறு தேசங்களிலிருந்து வருவது



கஷ்டம். சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னமேயே இவைகளைச்சேகரித்து வைக்கவேண்டும். சண்டை முடிவதற்கு முன்னால், சேகரித்தவைகள் தீர்ந்து விட்டாலோ, தன் ராஜ்யத்தில் கிடைக்கக்கூடியவைகளைத்தான் நம்பிக்கொண்டிருக்கவேண்டும்.

யுத்தகளத்திற்கு ஸாமான்களை அனுப்புவதற்கு முன்னால், எவ்வளவெவ்வளவு சேர்த்து அனுப்பவேண்டுமென்பதை திட்டப்படுத்த வேண்டும். இதுவும் ஸுலபமல்ல. ஏனெனில், யுத்தகளத்திற்கு அருகிலுள்ள ஊர்களில் கிடைக்கக்கூடிய ஸாமான்கள், அவைகளில் எதெதெல்லாம் தனது அவச்யத்திற்கு உபயோகப்படுமென்பது, அவ்வப்போதிருக்கும் சீதோஷ்ண நிலைமை, யுத்தத்தின் மாதிரி, யுத்தகளத்திற்குப் போகும் வழிகளின் தூரம், அவ்வழிகளைக் கடப்பதற்குள்ள மார்க்கங்கள், அந்த இடங்களில் குடியிருப்பவரின் ஸ்வபாவம், ஆகிய இவைகளையெல்லாம் முன்னமே தெரிந்துகொண்டே தகுந்தபடி வேண்டிய ஸாமான்களைக்கொண்டுபோகயத்தனஞ் செய்யப்படும். இவைகளை எளிதில் அறிவதற்கு பின்வரும் விஷயங்களைக் குறித்துக்காட்டும்படியாக கணக்குகளும் மாப்பு (படம்) களும் அப்போதைக்கப்போது தயார்செய்ய ப்ரத்யேகமாய் உத்யோகஸ்தர்களை நியமனஞ் செய்திருக்கிறார்கள். வெவ்வேறு தேசங்களிலுண்டாகும் முக்ய பயிர்கள், இவைகள் எத்தனை தூரத்திற்கப்பால் விளைகின்றன, எங்கெல்லாம் விற்கப்படுகின்றன, சென்ற மாஸூலின் தன்மை, அதில் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது, எவ்வளவு ஆகாரத்திற்காக அந்த இடத்திலேயே உபயோகிக்கப்படுகிறது, அந்தந்த இடங்களில் அகப்படும் ஆடுமாடுகளின் தொகை, அங்கு இருக்கும் மாவு யந்த்ர சாலைகளில் எவ்வளவு மாவு அகப்படும், ரொட்டிக்கிடங்குகள், ஸாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்ய மார்க்கங்கள், குடியிருப்பவர்கள், விறகு, குடிக்கும் தண்ணீர்—ஆகிய இவைகளையெல்லாம் ஒவ்வோரிடத்திலும் திட்டமாய்க் காட்ட கணக்குகளும் படங்களும் தயாராகும்.

மேல்சொன்னவைகளையெல்லாம் திட்டப்படுத்தி, ஆங்காங்கு கிடைக்கும் ஸாமான்கள்போக, மீதி எவ்வளவு வேண்டியிருக்குமோ அவ்வளவும் ஸமயத்திற்குத் தக்கபடி ஸொந்த தேசத்திலிருந்து அனுப்பிக்கொண்டே யிருப்பார்கள்.

## பேஸ் ஸ்டேஷன்கள்.

இந்த ஸாமான்களை முதல் முதல் எங்கு கொண்டுபோவார்கள் ? யுத்தகளத்திலிருந்து சில மைல்களுக்கப்பால் "பேஸ் ஸ்டேஷன்" என்று சொல்லப்படும் சில ஸௌகர்யமான இடங்கள் திட்டப் படுத்தப் பட்டிருக்கும். ஸாமான்களை முதலில் அங்கு கொண்டு செல்வார்கள்.

## ஆர்மி ஸேர்விஸ் கோரின் வேலை.

ஸொந்த நாடுகளிலிருந்தோ அல்லது ஜயித்துப் பிடித்த நாடுகளிலிருந்தோ பொருள்களை யுத்தகளம் வரைக்கும் கொண்டுபோய்ச் சேர்க்கும் 'ஆர்மி ஸெர்விஸ்கோர்' டிபார்ட்மென்டின் வேலையை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

முதலாவது, பேஸ் ஸ்டேஷனில் வரும் ஸாமான்களைப் பெற்றுக்கொண்டு கணக்குப் பார்த்து, வேண்டிய பொழுது முன்னுக்கு அனுப்புதல்.

இரண்டாவது, பேஸ் ஸ்டேஷனிலிருந்து வேண்டியவளவு பொருள்களை அப்போதைக்கப்போது பெற்று கூடிய சீக்கிரத்தில் யுத்தகளத்திற்குக் கொண்டுபோதல்.

மூன்றாவது, இவைகளை வாங்கி, சமைக்க வேண்டியவைகளைச் சமைத்து யுத்தஞ்செய்யும் ஸோல்ஜர்களுக்கெல்லாம் கொடுத்தல்.

இந்த மூன்று வேலைகளுக்கும் வெவ்வேறு ஆட்களை நியமித்திருந்த போதிலும், எல்லாரும் ஒற்றுமையாய் ஒரு தங்கு தடையுமில்லாமல் கார்யத்தை நிறைவேற்றி வருவார்கள்.

## ஸப்ளையை அனுப்பும் வழி.

மேல் விவரித்த வேலைகளில் மிக முக்யமானதும் கஷ்டமானதுமான வேலை பேஸ் ஸ்டேஷனிலிருந்து யுத்தகளத்திற்கு ஸாமான்களைக்

கொண்டுபோய்ச் சேர்த்தல். ஆகையினால் இந்த வேலைக்கு அனுபவமுள்ள ஸாமர்த்ய சாலியையே தலைவராக ஏற்படுத்துவார்கள். அவருக்கு உதவியாக, ஏராளமாய் வேலையாட்களும், வழியில் பொருள்களைச் சத்ரு கொள்ளைபோடாமல் காக்க கொஞ்சம் சேனையும் அளித்திருப்பார்கள். இந்த உத்யோகஸ்தர் பேருக்குமாத்ரம் யுத்தகளத்திலிருக்கும் ஸேனாதிபதிக்கு கீழ்ப்பட்டவர் ; ஆனால், உண்மையில், இவருக்குள்ள கடமைகளும் பொறுப்புகளும் வெகு ஜாஸ்தி.

'பேஸ்' ஸ்டேஷனுக்கும் யுத்தகளத்திற்கும் நடுவில் எத்தனையோ 'டிபோ' க்கள் இருக்கும். இவைகளில் எப்பொழுதும் ஸாமான்கள் சரியாய் இருக்கின்றனவா வென்று பார்ப்பதும் இவர்கடமை. மேலும் யுத்தகளத்திலிருந்து காயம்பட்ட ஸோல்ஜர்களை 'பேஸ்' ஆஸ்பத்ரிகளுக்கு அனுப்பும் வழியும் ஸாமான்களை யுத்தகளத்துக்கு அனுப்பும் வழியும் ஒன்றுதான். அவர்களை, வழியில் இறக்கி, போஷித்து, பின் அனுப்புவதும் இவரது கடமை. என்னென்ன ஸாமான்கள் வேண்டுமோ, அவைகள் அவரிடம் கொடுக்கப்படும். ரொட்டிசெய்யும் யந்த்ரமுதல், பாதுகாக்க ஸோல்ஜர்கள் வரை எல்லாம் அவரிடமுண்டு.

## பேஸ் ஸ்டேஷனிலிருந்து யுத்தகளத்துக்கு அனுப்புதல்.

பேஸிலிருந்து யுத்தகளத்துக்கு உணவுப் பொருள்களையும் வெடிமருந்து முதலிய மற்ற ஸாமான்களையும் கொண்டுபோக தூரத்துக்கும் ஸௌகர்யத்துக்குத் தக்கபடி ரெயிலோ அல்லது மோட்டார் வண்டிகளோ இருக்கும். இந்த யுத்தத்தில் மோட்டார் வண்டிகளின் ப்ரயோஜனம் ரொம்பத் தெளிவாய் ஏற்பட்டு விட்டது. ஒரு மோட்டார் வண்டி 3-டன் ஸாமான்களை ஏற்றிக்கொண்டு 47 மைல் தூரம்போய் அவைகளை இறக்கிவிட்டு அதே தினத்தில் புறப்பட்ட இடத்துக்கு வந்து விடுகிறதாம்.

## ஸோல்ஜரினுடைய உணவின் அளவு.

எவ்வளவுக்கெவ்வளவு நன்றாய் ஸோல்ஜர்களை போஷிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் தேகஸௌக்யமும் ஆரோக்யமும் கூடும். ஆரோக்யம் கூடும்தோறும், ஸோல்ஜர்களுக்கு மனக்களிப்பும், ஸந்தோஷமும், தைர்யமும் அதிகரிக்கும். இவை அதிகரிக்குந்தோறும், தங்கள் ராஜ்யம் கீர்த்தியடைய வேண்டுமென்ற ஆவலுடன் அவர்கள் திடத்துடன் போர்புரிவார்கள்.

சத்ருவின் எதிரேநின்று, களத்தில் யுத்தஞ்செய்யும்பொழுது, ப்ரிட்டிஷ் ஸோல்ஜர் வேறு தேசத்து ஸைன்யத்தில் உள்ளவரைக்காட்டிலும் நன்றாய் போஷிக்கப்படுகிறானும். மற்ற ராஜ்யத்து ஸோல்ஜரைப்பார்க்க அதிக உணவு கிடைப்பதுமல்லாமல், ப்ரிட்டிஷ் ஸோல்ஜருக்கு அளிக்கும் சாப்பாடு பலவிதமானது. ஒவ்வொருவனுக்கும் $1\frac{1}{2}$-பவுண்டு ரொட்டி, 1-பவுண்டு மாமிஸம், $\frac{3}{4}$-அவுன்ஸ் காப்பி, $\frac{1}{6}$-அவுன்ஸ் தேயிலை, 20 அவுன்ஸ் சர்க்கரை, இவைகளைத் தவிர ஜாம், பால்கட்டி, ஊறுகாய்விதங்கள், காய்கறிகள் ஆகிய இவைகளெல்லாம் தினந்தோறும் கிடைக்கும். எந்த விதத்தில் கஷ்டப்பட்டாலும், இங்க்லீஷ் ஸோல்ஜர் பசியினால் வருந்தமாட்டான்.

இங்கிலீஷ் ஸைன்ய டிபார்ட்மெண்டில், சாப்பாட்டைச் சேர்ந்த விஷயங்களைப் பார்த்து வரும் உத்யோகஸ்தருக்கு, ரெஜிமெண்டல் க்வார்டர் மாஸ்டர் என்று பெயர். ஒவ்வொரு பட்டாளத்திலும் ஒரு க்வார்டர் மாஸ்டர் இருப்பார். மறு நாளைக்கு எத்தனை பேர்களுக்கு ஆகாரம் அளிக்கவேண்டு மென்பதற்கும், எவ்வளவு ஸாமான் தயாரிக்க வேண்டு மென்பதற்கும், க்வார்டர் மாஸ்டர் முன் ராத்ரியே ஒரு ஜாப்தா தயார்செய்ய வேண்டும்.

ஸாதாரணமாய் ஒவ்வொரு பட்டாளத்துக்கும் ஆயிரம் பெயர்களுக்கு இரண்டு தடவை சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.



இப்படிப் போட்ட ஜாப்தாவை க்வார்டர் மாஸ்டர் கமிஸேரியட் உத்யோகஸ்தருக்கு அனுப்புவார். அந்த கமிஸேரியட் உத்யோகஸ்தர் வேண்டிய ஸாமான்களை அருகிலுள்ள பேஸ் ஸ்டேஷனிலிருந்து எவ்வளவு சீக்ரமாய் வரவழைக்க முடியுமோ அவ்வளவு சீக்ரமாய் வரவழைத்து, எந்தெந்த பட்டாளத்துக்கு எவ்வளவு எவ்வளவு ஸாமான் சேரவேண்டுமோ அவ்வளவு ஸாமான்களையும் வண்டிகளில் ஏற்றி காலையில் அந்தந்த க்வார்டர் மாஸ்டர் வசம் ஒப்புவித்து விடுவார். இப்படி வந்த ஸாமான்களை அந்தந்த பட்டாளத்து சமையல்காரர்கள் க்வார்டர் மாஸ்டரிடம் பெற்றுக்கொண்டு தாங்கள் இருக்கும் இடத்துக்கு எடுத்துக்கொண்டுபோய் சமையல் செய்து சாப்பாடு தயார் ஆக்கி தங்களைச் சேர்ந்த ஸோல்ஜர்களுக்கும் ஆபீஸர்களுக்கும் சாப்பாடு போடுவார்கள்.

## வேண்டிய ஸாமான்களின் மொத்த அளவு.

ஒவ்வொரு ஸோல்ஜருக்கும் கொடுக்கவேண்டிய சாப்பாட்டு ஸாமான்களின் அளவை மேலே குறித்தோம். இப்பொழுது நடக்கும் ப்ரம்மாண்டமான யுத்தத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் லக்ஷக்கணக்கான ஸோல்ஜர்கள் சண்டை போடுவதால் அவர்களுக்காக ஒவ்வொரு நாளும் வேண்டிய ஸாமான்கள் எவ்வளவென்று ஸுலபமாய் அறிந்து கொள்ளலாம். இப்படிக்கு நான்குமாஸத்துக்குக் குறையாமல் பேஸ் ஸ்டேஷன்களில் ஸாமான்களை சேகரித்துவைக்கவேண்டுமென்றால், ஸாமான் வகைகள் எத்தனை, ஒவ்வொரு வகையிலும் வேண்டியிருக்கும் அளவு எவ்வளவு என்பவைகளை மனஸால் தான் ஊகித்துக்கொள்ள வேண்டும்.

ஆகாரம் ஸப்ளை செய்தால் மாத்ரம் போதாது. ஸொந்த நாட்டிலிருந்து ஸோல்ஜர்களுக்கு உடைகளும் பூட்ஸ்களும் ஸப்ளை செய்யவேண்டியதவச்யம். தவிர, ஆடு, மாடு, குதிரைகள் இவைகளுக்கு வேண்டிய தீனியையும் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும். சண்டையில் காயம்பட்டவர்களுக்கு சிகித்ஸை செய்வதற்கு வேண்டிய மருந்துகள் முதலியவைகளையும் ஆர்மி ஸெர்விஸ்காரர்கள் வைத்திருக்க வேண்டும்.

ஆர்மிஸெர்விஸ்கோரில், அநேகம் சமயல்காரரும் கசாப்புக்காரர்களு மிருப்பார்கள். ஆகாரத்திற்காக, ஆடுமாடுகளை வெட்டி நொடிப்பொழுதில் சமையலுக்கு தயாராக்கி விடுவார்கள். ரொட்டி சுடுவதற்காக, பெரிய யந்த்ரங்கள் இருக்கும். ஜலத்தைக் காய்ச்சி சுத்தி செய்ய வண்டியின் மேல் அமைத்த பெரிய அடுப்புகளுமிருக்கும். ஜெர்மானியர் உபயோகிக்கும் ரொட்டி யந்த்ரத்தில் தினமொன்றுக்கு. 16,000 ரொட்டிகள் செய்யலாமாம்.

ப்ரிட்டிஷாரது "பீல்ட் கிச்சன்" என்று சொல்லப்படும் அடுப்பு இரண்டு குதிரைகள் இழுத்துச் செல்லக்கூடியது. ஒவ்வொரு வண்டியிலும் நாலு அடுப்புக்களும், வெந்நீர் தயாராக்குவதற்காக ஒரு பாய்லரும் இருக்குமாம். இம்மாதிரி போகுமிடமெல்லாம் இழுத்துச் செல்லக்கூடிய அடுப்புக்கள் வெகு ப்ரயோஜனமானவை. ஏனென்றால், நன்றாய் சண்டைசெய்து தளர்ந்து வரும் ஸோல்ஜர்களுக்கு சுடச்சுட உணவு தயார்செய்து கொடுக்கலாம்.

## அவஸரத்துக்கு ஆகாரம்.

அகஸ்மாத்தாய் சத்ருக்கள் ஆகாரத்தை கொள்ளையடித்து விட்டாலோ அல்லது அவை வந்து சேருவதற்கு தாமதமாய் விட்டாலோ, அவஸரத்தில் பட்டினி கிடக்காமலிருக்க ஒவ்வொரு ஸோல்ஜரிடமும் நாள் நிற்கும்படி பக்வம் செய்த ஒரு பவுன் மாம்ஸம், 12-அவுன்ஸ் பிஸ்கோத்து, $\frac{1}{8}$ அவுன்ஸ் தேயிலை, 2 அவுன்ஸ் சர்க்கரை, $\frac{1}{2}$ அவுன்ஸ் உப்பு, 3 அவுன்ஸ் பால்கட்டி, 1-அவுன்ஸ் மாம்ஸ ரஸம் ஆகிய இவைகளைக் கொடுத்திருப்பார்கள். காட்டிலுள்ள உணர்ந்த மரக்கிளைகளை விறகாய் உபயோகித்து, வெந்நீர் காய்ச்சி, அதில் இவைகளை வேண்டியபடி பக்

வட்டடுத்தி கொள்ளலாம். சுடுநீர் காய்ச்ச சௌகர்யமில்லாவிடில், பிஸ்கோத்தையும் ஜாமையும் உபயோகிக்கலாம்.

தவிர, சாக்கொலெட்டும், பாலினால் செய்த ஆகாரமும், தகரங்களில் அடைத்து ஒவ்வொருவரிடமும் கொடுத்திருப்பார்கள். ஒவ்வொரு தகரமும் 672 அவுன்ஸ் கனமிருக்கும்.

தலைவனுடைய உத்தரவு இல்லாமலோ அல்லது தீரா ஆபத்து காலமன்னியிலோ, இவைகளை திறந்து ஆகாரங்களை உபயோகிக்கக்கூடாது.

## LOCAL SELF-GOVERNMENT IN INDIA.

## இந்தியாவில் ஸ்தல ஸ்வய ஆட்சி.

இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி ஸமீபத்தில் ஒரு தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் முனிஸிபாலிடிகள், ஜில்லா போர்டுகள், தாலுகா போர்டுகள், க்ராம பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் அமைப்பு அதிகாரம் முதலியவைகள் இன்ன விதமாயிருக்கவேண்டுமென்பதை விவரித்துக் கூறியிருக்கிறார்கள்.

ஸ்தல ஸ்வய ஆட்சியானது 1868-ம் வர்ஷம் முதல் 1870-ம் வர்ஷம் வரையில் இந்தியாவின் வைஸ்ராயாக விருந்த லார்ட் மேயோ காலத்தில் தான் ஆரம்பமாயிற்று. அதற்கு முன்னால் 1850-ம் வர்ஷத்தில் சிற்சில பட்டணங்களின் கார்யங்களைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஆலோசனைக்கமிட்டிகள் நியமிக்கப்பட்டன. 1864-ம் வர்ஷத்திலும் அதற்குப்பின்னும் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி சிற்சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. என்றாலும் லார்ட் மேயோ காலத்தில் தான் ஸ்தல ஸ்வய ஆட்சி ஸம்பந்தமான பல விஷயங்களையும்பற்றி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பற்பல மாகாணங்களில் ஸ்தல ஸ்வய ஆட்சி ஏற்படுத்துவதற்காக சட்டங்கள் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு வைஸ்ராயாகவந்த லார்ட் ரிப்பனுடைய காலத்தில் ஸ்தல ஸ்வய ஆட்சி ரொம்ப அபிவ்ருத்தி யடையலாயிற்று. ஜனங்கள் தங்கள் ஊர்க்கார்யங்களை தாங்களே வேண்டிய அளவு கவர்ன்மெண்ட் மேற்பார்வையுடன் கவனித்து நடத்திவருவதற்கு வேண்டிய ஸாதகங்கள் செய்யப்பட்டன. ஸ்தல ஸ்தாபனங்களில் ஜனங்களின் ப்ரதிநிதிகள் மெம்பர்களாவதற்கும், அவைகளுக்கு பண வ்யவஹாரங்களில் அதிக ஸ்வாதீனமேற்படுவதற்கும், ஸர்க்காருடைய மேற்பார்வையைக் குறைப்பதற்கும் வேண்டிய சட்டங்கள் செய்யப்பட்டன. வைஸ்ராய் லார்ட் எல்ஜினுடைய காலத்தில் 1896,1897-ம் வர்ஷங்களில் கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சியின் அபிவ்ருத்திக்கு இன்னும் சில சௌகர்யங்கள் செய்து கொடுத்தார்கள். ஸுமார் ஐந்தாறுவர்ஷங்களுக்கு முன்னால் அதிகாரப்பிரிவினைக் கமிஷன் இந்திய ராஜாங்க நிர்வாக முறைகளைப்பற்றி பரிசீலனைசெய்து, ஸ்தல ஸ்வய ஆட்சியின் பாகங்களாகிய முனிஸிபாலிடி, ஜில்லாபோர்டுகள், தாலூகாபோர்டுகள், க்ராம பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளினுடைய அமைப்பிலும் நிர்வாகத்திலும் இன்னின்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்று சில ப்ரேரணைகள் செய்தது. இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் ஷை கமிஷன் செய்த சிபார்சுகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஸ்தல ஸ்தாபனங்கள் ஸம்பந்தமாக இன்னின்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்று தங்கள் தீர்மானத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின் ஸாராம்சத்தை இங்கெழுதுகிறோம்.

இதுவரையில் ஸ்தல ஸ்வய ஆட்சி ஏற்பாடானது மொத்தத்தில் த்ருப்திகரமாக நடைபெற்று வந்திருக்கிறது. ஜனங்கள், முக்யமாய் பட்டணத்திலுள்ளவர்கள், தங்கள் பாத்யதைகளையும் பொறுப்புகளையும் நன்றாயறிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அபிவ்ருத்திக்கு முக்ய காரணம் ஜனங்களுக்குள் கல்வி அபிவ்ருத்தியடைந்திருப்பதே. ஆனால் ஸ்தல ஸ்வய ஆட்சி ஏற்படுத்தினதின்



நோக்கங்கள் முற்றிலும் நிறைவேறவில்லை. அப்படி நிறைவேறுவதற்குப் பல தடைகள் இருக்கின்றன. ஸ்தல ஸ்தாபனங்களின் வரும்படி ஸ்வல்பமாயிருப்பதோடு அதிகமாவதற்கு இடமில்லாமலுமிருக்கிறது. புதுவரிகள் போடுவதற்கும் முடியாமலிருக்கிறது. அநேக இடங்களில் ஜனங்கள் பொதுக்கார்யங்களில் தலையிட்டுக் கொள்ள விரும்புவதில்லை. அநேக இந்திய கனவான்கள் ஸ்தலஸ்தாபனங்களில் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு எலெக்ஷனுக்கு நிற்க இஷ்டப்படுவதில்லை. ஏனென்றால் எலெக்ஷனுக்கு நிற்பதில் ஸங்கடங்களும், பணச்செலவும், இதர அசௌகர்யங்களும் நேரிடுகின்றன. இவைகளைப் பொருள் படுத்தாமல் எலெக்ஷனுக்கு நின்று ஸ்தல ஸ்தாபனங்களில் சேருபவர்களில் சிலர் தாங்கள் வகிக்கும் ஸ்தானங்களுக்கு லாயக்கில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் ஜாதி வித்யாஸத்தால் மெம்பர்களுக்குள் மனஸ்தாபங்களும் உண்டாகின்றன. இத்யாதி காரணங்களால் ஸ்தலஸ்வய ஆட்சி பூர்த்தியாக அபிவ்ருத்தி யடைவது முடியாமலிருக்கிறது. மேலும் பட்டணங்களிலுள்ள படித்த வகுப்பார்கள் ஸ்தலஸ்தாபனங்களின் வேலைகளை இன்னும் திறமையாக நடத்தவேண்டுமென்றும், ஸுகாதாரம், கல்வி ஆகிய விஷயங்களில் நிபுணர்களுடைய மேற்பார்வை இருக்கவேண்டியது அவச்யமென்றும் சொல்லிவருகிறார்கள். இவைகளை உத்தேசித்து ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரங்கள் கொடுப்பதில் சற்று ஜாக்ரதையாயிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. ஆனால், மொத்தத்தில் ஸ்தல ஸ்வய ஆட்சி அபிவ்ருத்தி யடையும்படி அதன் ஏற்பாட்டை சீர்திருத்த வேண்டுமென்றும், எவ்வளவுதூரம் அந்த ஏற்பாட்டை சீர்திருத்தலாமென்பதை மாகாண கவர்ன்மெண்டுகளே அந்தந்தவிடத்து நிலைமைகளுக்குத் தக்கபடி நிர்ணயித்துக்கொள்ளலாமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள்.

முனிஸிபாலிடிகள் :—அதிகாரப் பிரிவினைக் கமிஷன், முனிஸிபாலிடிகளில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் அதிகமாக இருக்கவேண்டுமென்றும், அதிக ஜனத்தொகையில்லாத வகுப்பார்களுடைய ப்ரதிநிதிகள் முனிஸிபல் கௌன்ஸில்களில் சேர்ந்திருப்பதற்கும், கௌன்ஸிலுக்கு உத்யோக அனுபவம் உள்ளவர்களின் உதவி இருப்பதற்கும் வேண்டிய அளவு ஸர்க்கார் மெம்பர்களை நியமிக்கவேண்டுமென்றும் சிபார்சுசெய்தது. அநேக மாகாண கவர்ன்மெண்டுகள் இந்த சிபார்சை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்த சிபார்சை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்தக் கொள்கை எந்த இடங்களில் அனுஷ்டானத்தில் த்ருப்திகரமாயிராதென்று தோன்றுகிறதோ, அவ்விடங்களில் சில தெரிந்தெடுக்கப்பட்ட முனிஸிபாலிடிகளில் பரீக்ஷார்த்தமாக அனுஷ்டித்துப்பார்த்து த்ருப்திகரமாக இருந்தால், கொஞ்சங் கொஞ்சமாக அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரலாம்.

முனிஸிபல் சேர்மன்.—அதிகாரப் பிரிவினைக் கமிஷன், முனிஸிபல் சேர்மன் ஸாதாரணமாய் தெரிந்தெடுக்கப்பட்ட உத்யோகஸ்தரல்லாத மெம்பராக இருக்கவேண்டுமென்றும், கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் சேர்மன் ஸ்தானத்துக்கு எலெக்ஷனுக்கு நிற்கக்கூடாதென்றும், எந்த முனிஸிபாலிடிக்காவது ஸர்க்காரால் நியமிக்கப்பட்ட சேர்மன் இருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் விரும்பினால், ஸர்க்கார் உத்யோகஸ்தரையே சேர்மனாக நியமிக்கவேண்டுமென்றும் தெரிவித்தது. இந்தியா கவர்ன்மெண்டார், ஸர்க்கார் உத்யோகஸ்தர் சேர்மனாக உள்ள முனிஸிபாலிடிகளில் கூடுமானவரையில் உத்யோகஸ்தரல்லாதவர்களையே சேர்மனாக நியமிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாகாண கவர்ன்மெண்டுகளில் பல இவ்விதமே அபிப்ராயப்படுகின்றன. ஆனால் இந்த மாறுபாட்டைக்

கொஞ்சங் கொஞ்சமாய்ச் செய்யவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள். சில விடங்களில் சேர்மனாயிருக்கத் தகுந்த செல்வாக்குள்ள கனவான்கள் எலெக்ஷனுக்கு நிற்க ப்ரியப்படுவதில்லை. அப்படிப்பட்ட விடங்களில் உத்யோகஸ்தர்களான சேர்மனுக்குப் பதிலாக தெரிந்தெடுக்கப்பட்ட சேர்மனே வேண்டுமென்று சொன்னால் தக்க சேர்மன்கள் கிடைப்பது கஷ்டமாகலாம். அந்த ஸந்தர்ப்பங்களில் எலெக்ஷனுக்கு வர ப்ரியப்படாத கனவான்களை சேர்மனாக நியமிக்க மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். மேலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் உத்யோகஸ்தர்களை சேர்மனாகத் தெரிந்தெடுக்சக்கூடாதென்று தடுப்பதும் யுக்தமல்ல. ஆனால் உத்யோகஸ்தர்களை சேர்மனாகத் தெரிந்தெடுக்கவேண்டுமானால், அப்படித் தெரிந்தெடுப்பதற்கு மாகாண கவர்ன்மெண்டாரின் அனுமதி வேண்டியது அவச்யமாகும்.

**பம்பாய் முனிஸிபல் ஏற்பாடு.**—பம்பாய் பட்டணத்து முனிஸிபாலிடி*யில், முனிஸிபல் கௌன்ஸிலுக்கு ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட சேர்மனும் முனிஸிபல் வேலைகளை நிர்வகிக்க கமிஷனர் என்னும் உத்யோகஸ்தர் ஒருவரும் இருக்கிறார்கள். சேர்மன் கௌன்ஸில் முழுவதுக்கும் ப்ரதிநிதியாயிருப்பவர். கமிஷனர் பூராகாலமும் வேலை செய்பவர். அவர் முனிஸிபாலிடிக்கும் அதனுடைய ஸ்டாண்டிங் கமிட்டிக்கும் கீழ்ப்பட்டு அவைகளின் மேற்பார்வைக்கு உள்பட்டு வேலைகளை நடத்தி வருவார். பம்பாய் ராஜதானியில் இதர பெரிய பட்டணங்களில் முனிஸிபாலிடிகளுக்கு இப்படிப்பட்ட அமைப்பு ஏற்படுத்த சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாட்டில் முனிஸிபல் கௌன்ஸில்தான் நிர்வாகவேலைகளை மேற்பார்வை செய்து வருகிறது. மேற்சொன்ன கமிஷனர் முனிஸிபல் வேலைகளை நிர்வகித்துவருகிறார். முனிஸிபல் கமிட்டிக்கு பண வரவு செலவு விஷயங்களில் அதிகாரம் உண்டு. முனிஸிபல் நிர்வாகத்தை யொட்டின கணக்குகளையும் ரிபோர்ட்டுகளையும் தயாரித்துக் கொடுக்கும்படி ஷை கமிட்டியார் கமிஷனருக்கு உத்தரவிடலாம். இந்த ஏற்பாடு பம்பாய் ராஜதானியில் த்ருப்திகரமாக நடந்து வருகிறது. ஸௌகர்யமான விடங்களில் மாகாண கவர்ன் மெண்டுகள் இந்த ஏற்பாட்டை அநுஷ்டிக்கலாமென்றும், இதில் சில ஸௌகர்யங்க ளிருக்கின்றன வென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் அபிப்ராயப் படுகிறார்கள். மேலும் சிறு பட்டணங்களின் முனிஸிபாலிடிகளில் பொறுப்புள்ள ஸெக்ரெடரிகளுக்கும், இஞ்ஜினியர்களுக்கும் ஸுகாதார ஆபிஸர்களுக்கும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கலாம் என்றும், இதனால் பம்பாய் முனிஸிபல் ஏற்பாட்டின் நோக்கங்கள் நிறைவேறு மென்றும், இவைகளுக்காக மாகாண கவர்ன்மெண்டுகள் சட்டம் செய்து கொள்ளலாமென்றும் இந்தியாகவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள்.

**முனிஸிபாலிடியின் வரும்படிகள்.**—1912-1913-ம் வர்ஷத்தின் கடைசியில் இந்தியாவில் ராஜதானிப் பட்டணங்களும், ரங்கூனும் நீங்கலாக 701-முனிஸிபாலிடிகள் இருந்தன. இவைகளின் மொத்த வருமானம் 4,92,42,675 ரூபாய். இதன்படி ஒரு முனிஸிபாலிடியின் ஒரு வர்ஷத்து சராசரிவரும்படி 70,245 ரூபாயாகும். சென்னையிலுள்ள முனிஸிபாலிடிகளின் மொத்த வரும்படி 68-லக்ஷம் ரூபாயாகும். சென்னை முனிஸிபாலிடிகளுக்கு வரிகளால் கிடைக்கும் வரும்படியில் நூற்றில் 45 பாகம் வீட்டு வரி, நிலவரியால் கிடைக்கிறது. வண்டிகள், ம்ருகங்கள் இவைகளின் மேல் போடப்படும் வரியால் நூற்றுக்கு 10·2-பாகம் கிடைக்கிறது. தொழில் வரி வரும்படி நூற்றுக்கு 8·6 ஆகிறது. சுங்கவரி நூற்றுக்கு 19-ஆகிறது. தண்ணீர் வரி மொத்த

* பம்பாய், கல்கத்தா, மதராஸ் முதலிய பெரிய நகரங்களின் முனிஸிபல் கௌன்ஸில்களுக்கு முனிஸிபல் கார்ப்பரேஷன் என்று பெயர்.



வரி வரும்படியில் நூற்றுக்கு, 16·8 வீதமாகிறது.

சென்னை முனிஸிபாலிடிகளுக்கு கடன் வாங்குவது தவிர மற்ற விதங்களால் வரும் வரும்படியில் நூற்றுக்கு 44-பாகம் வரி வஸூலால் கிடைக்கிறது. 15·1 பாகம் முனிஸிபல் ஸொத்துக்களால் கிடைக்கிறது. 36·4 பாகம் கவர்ன்மெண்டார் கொடுக்கும் க்ராண்டுகளாகும்.

**செலவு.**—சென்னை ராஜதானியிலுள்ள முனிஸிபாலிடிகளின் செலவு விவரம் பின்வருமாறு. மொத்தச்செலவில் நூற்றில் 6 9 பாகம் ஆபீஸ் ஸிப்பந்திச் செலவு; பொதுஜன பாதுகாப்பு 4·2, ஜலவஸதி, வடிகால்வேலைகள் 10·5, தெருக் கூட்டல், குப்பை யெடுத்தல், கக்கூஸ் கூட்டுதல், 20 3, பொது மாரமத்து வேலைகள் 27·6, மற்ற ஸுகாதாரவேலைகள் 13·2, கல்வி 10·2, சில்லரைச்செலவு 7·1.

**வரி.**—முனிஸிபாலிடிகள் இன்னின்ன வரிகள் சுங்கங்கள் முதலியவைகள் போடலா மென்பதற்கு ஒவ்வொரு மாகாணங்களிலும் முனிஸிபல் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஸாதாரணமாய் முனிஸிபாலிடிகள் எந்த வரிகளையும் முனிஸிபல் சட்டங்களின் நிபந்தனைகளுக்குள்பட்டு, மாகாண கவர்ன்மெண்டுகளின் அனுமதியின்மேல்தான் விதிக்கலாம்.

முனிஸிபாலிடிகள் விதிக்கக்கூடிய வரிகள் பின் வருமாறு :

1. சித்ரகலைத் தொழில்கள், கைத்தொழில்கள், உத்யோகங்கள் முதலியவைகளில் அமர்ந்துள்ளவர்களின்மேல் போடும் வரிகள்.

2. கட்டிடங்கள், நிலங்கள் இவைகளின் மேல் வரிகள்.

3. ஜலம், வடிகால், சாக்கடை, தெருக்கூட்டல், கக்கூஸு கூட்டல், விளக்கு ஆகிய இவைகளுக்காக வரிகள்.

4. முனிஸிபல் எல்லைக்குள் வைத்திருக்கப்பட்ட அல்லது உபயோகிக்கப்படும் வண்டிகள், படகுகள், பல்லக்குகள், ம்ருகங்கள் இவைகளுக்கு வரிகள்.

5. ஸொத்தின்மேல் வரி.

6. ஸ்வல்ப சம்பளமுள்ள வேலைக்காரர்கள், குடும்ப வேலைக்காரர்கள் ஆகிய இவர்களின் மேல் வரிகள்.

7. (முனிஸிபாலிடிக்கு ஸொந்தமில்லாத) கடைத்தெருக்களின்மேல் வரிகள்.

8. முனிஸிபல் எல்லைக்குள் முனிஸிபாலிடியின் ஜனங்களுடைய ப்ரயோஜனத்துக்காக கொண்டுவரப்படும் மிருகங்கள், ஸாமான்கள் இவைகளின்மேல் வரிகள்.

9. முனிஸிபல் எல்லைக்குள் வரும் வண்டிகளுக்கு சுங்க வரிகள்; பரிசல் துறைகள், பாலங்கள், கம்பி போட்ட ரஸ்தாக்கள் இவைகளுக்கு சுங்கவரிகள்.

10. முனிஸிபல் எல்லைக்குள் விற்கப்படும் கால்நடைகள், வண்டிகள் முதலியவைகளை ரெஜிஸ்டர் செய்யும்போது ரெஜிஸ்டர் கட்டணம் வாங்குவது.

மேல்குறித்த வரிகள் எல்லாமே ஒருமாகாணத்தில் போடுவது கிடையாது, இந்த வரிகளைத் தவிர வேறு புதுவரிகள் போடவேண்டுமென்றால் இந்தியா கவர்ன்மெண்டினுடைய அனுமதியை முன்னாடிப் பெறவேண்டும்.

**வரிபோடும் அதிகாரம்.**—முனிஸிபாலிடிகள், முனிஸிபல் சட்டங்களின் நிபந்தனைகளுக்குள்பட்டு வரிபோடுவதிலும், வரிகளை மாற்றுவதிலும் அவைகளுக்கு பூரா ஸ்வதந்தரம் இருக்கவேண்டுமென்றும், ஒரு குறிப்பிட்டவரியில் இன்ன தொகைவரையில் போடலாமென்று ஒரு வரையறையில்லாமலிருந்து அந்தவரி விகிதத்தை அதிகப்படுத்தவேண்டியிருந்தால் மாத்ரம் முனிஸிபாலிடிகள் கவர்ன்மெண்டின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும், அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சு செய்தது. இப்போது உள்ள அநுஷ்டான மென்னவென்றால் வரி

விதிக்கும் கொள்கைகள் இப்படியிருக்கவேண்டுமென்பதை பொதுவாய் இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்து வருகிறார்கள். வரிகள் விதிப்பதற்கு மாகாண கவர்ன்மெண்டுகள் அனுமதி கொடுத்து வருகிறார்கள். அதிகாரப் பிரிவினைக் கமிஷனுடைய சிபார்சை எல்லா மாகாண கவர்ன்மெண்டுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. முனிஸிபாலிடிகளுக்கு பூராஸ்வதந்தரம் கொடுத்துவிட்டால், அவைகள் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளுக்கு எவ்வளவு பணம் வேண்டியிருக்குமென்பதையும், அவைகள் வாங்கியிருக்கக்கூடிய கடன்களுக்கு ஜாமீன் எவ்வளவு வேண்டியிருக்குமென்பதையும் கவனிக்காமல், வரிவிகிதத்தை ரொம்பவும் குறைத்துவிடக்கூடுமென்று சில மாகாண கவர்ன்மெண்டுகள் ஆக்ஷேபிக்கின்றன. இருந்தாலும் இந்தியா கவர்ன்மெண்டார் கமிஷனின் சிபார்சுக்கு ஸாதகமாயிருக்கிறார்கள். ஆனால் எந்த மாகாண கவர்ன்மெண்டார் கமிஷனின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லையோ, அவைகளின் கீழுள்ள முனிஸிபாலிடிகள் கவர்ன்மெண்டின் அதிகாரம்பெற்று வரிவிகிதங்களை மாற்ற வேண்டுமென்றும், கடன் வாங்கியுள்ள முனிஸிபாலிடிகளெல்லாம் வரிவிகிதங்களை மாற்றவேண்டுமென்றால், முன்னடி மாகாண கவர்ன்மெண்டின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள்.

வரவுசெலவு திட்டமும் வரவு செலவின் மேற்பார்வையும்.—சில மாகாண கவர்ன்மெண்டுகள் முனிஸிபாலிடிகளின் வரவு செலவுகளை ரொம்ப நுட்பமாக கவனித்து மேற்பார்வை செய்து வருகின்றன. முனிஸிபாலிடிகள் வரவு செலவு திட்டங்கள் போடுவதில் கவர்ன்மெண்டார் கடுமையான நிபந்தனைகள் போடக்கூடாதென்றும், முனிஸிபாலிடிகள் செலவுக்குமேல் ஒரு குறிப்பிட்ட தொகை மிச்சமாகக் காட்டவேண்டுமென்றும் மாகாண கவர்ன்மெண்டுகள் விதித்தால் போதுமென்றும் கமிஷன் சிபார்சு செய்தது. இன்னும் இப்படி ஸ்வதந்தரங்கள் கொடுத்து மேற்பார்வையைக் குறைத்து விட்டால் தவறுகள் ஏற்படக்கூடுமென்றாலும், தவறுகள் ஏற்பட்டு, அவைகளால் ஏற்படும் நஷ்டங்களை முனிஸிபாலிடிகளே ஏற்றுக் கொள்ளும்படி செய்தால், அவைகளுக்குப் பணவிஷயத்தில் பொறுப்பு ஏற்படுமென்றும், கடன்கள் விஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டுகள் மேற் பார்வையை வகித்துக் கொள்ளவேண்டுமென்றும், கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறின முனிஸிபாலிடிகளை சரிவரக் கடனைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்த மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்றும் ஷை கமிஷன் அபிப்ராயம் கொடுத்தது. இந்த ஏற்பாடு பம்பாய் ராஜதானியில் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. மாகாண கவர்ன்மெண்டுகள் இந்த சிபார்சை சிற்சில நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொள்ளுகின்றன. இந்தியா கவர்ன்மெண்டார் தற்போதைக்கு இந்த விஷயத்தை மாகாண கவர்ன்மெண்டுகளின் போக்கின்படி விட்டாலும், அவைகள் கமிஷனின் பூரா சிபார்சையும் கொஞ்சம் கொஞ்சமாய் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதில் கவனமாயிருக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

போது மராமத்து வேலைகளுக்கு மதிப்பு திட்டங்கள்.—முனிஸிபாலிடிகள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட செலவு ஏற்படக்கூடிய மராமத்து வேலைகளைச்செய்ய வேண்டுமென்றால் மேலதிகாரிகளினுடைய அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. இந்த நிபந்தனையை நீக்கிவிடவேண்டுமென்றும், ஆனால் கடன் வாங்கின பணத்தைக் கொண்டு ஏதாவது மராமத்துவேலைகள் செய்ய வேண்டுமானால் கவர்ன்மெண்டார் அந்த வேலைகளுக்காகும் செலவுகளின் மதிப்பு திட்டங்களைப் பரிசீலனைசெய்தே வேலைதொடங்க அனுமதி கொடுக்கவேண்டுமென்றும், அதிகாரப் பிரிவினைக்கமிஷன் சிபார்சு செய்தது.



மாகாண கவர்ன்மெண்டுகள் இவ்விஷயத்தில் முனிஸிபாலிடிகளுக்கு அதிக ஸ்வதந்தரங்கள் ஏற்படும்படி நிபந்தனைகளைக் குறைக்க ஸம்மதிக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும் இப்படியே அபிப்ராயப்படுவதோடு, முனிஸிபாலிடிகள் தீர ஆலோசனைசெய்து தீர்மானிக்காமல் அதிகச் செலவுள்ள மராமத்து வேலைகளை ஆரம்பிக்காதபடி தக்க நிபந்தனைகள் ஏற்படுத்தவேண்டுமென்று அபிப்ராயப்படுகிறார்கள். முனிஸிபாலிடிகளுக்கு அதிகமாக என்ன ஸ்வதந்தரங்கள் கொடுக்கலாமென்பதை மாகாண கவர்ன்மெண்டுகளே தீர்மானிக்கவேண்டும்.

முனிஸிபல் ஸிப்பந்திகள்.—அதிகாரப் பிரிவினைக் கமிஷன் முனிஸிபல் ஸிப்பந்திகளின் நியமனம் முதலிய விஷயங்களில் கவர்ன்மெண்டார் வைத்துக்கொண்டிருக்கும் அதிகாரங்களைக் குறைக்கவேண்டுமென்றும், முனிஸிபல் ஸெக்ரடரி அல்லது வேறு முக்யமான நிர்வாகப் பொறுப்புள்ள உத்யோகஸ்தர்கள், இஞ்ஜினியர்கள், ஸுகாதார உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களை நியமிக்கவேண்டுமானாலும், அவர்களுடைய சம்பளத்தை மாற்றவேண்டுமானாலும், அவர்களை வேலையைவிட்டு நீக்கவேண்டுமானாலும், முனிஸிபாலிடிகள் மாகாண கவர்ன்மெண்டின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும், மற்ற ஸிப்பந்திகளின் நியமனம், சம்பளம், லீவு முதலியவைகள் விஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டுகள் சில பொதுவிதிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், முனிஸிபாலிடிகள் அந்த விதிகளை மாற்றி நடக்க இஷ்டப்பட்டால் அதற்கு கவர்ன்மெண்டின் அனுமதி வேண்டியது அவசியமென்றும் சிபார்சுசெய்தது. இந்தியா கவர்ன்மெண்டார் முனிஸிபல் ஸெக்ரடரிகள், இஞ்ஜினியர்கள், ஸுகாதார ஆபிஸர்கள் ஆகிய இவர்களுடைய நியமனம், இவர்களை வேலையை விட்டு நீக்குதல் விஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டுகளினுடைய அதிகாரம் வேண்டியதென்றும், மற்ற ஸிப்பந்திகள் விஷயத்தில் கவர்ன்மெண்டுகள் தங்கள் அதிகாரத்தைக் குறைக்கலாமென்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

க்ராமபஞ்சாயத்துகள்.—அதிகாரப் பிரிவினைக் கமிஷன் க்ராம பஞ்சாயத்துகள் விஷயமாய்ப்பின் வருமாறு ப்ரேரணை செய்தது. சில நிர்வாக அதிகாரங்களும், சிறு ஸிவில், க்ரிமினல் கேஸ்களை விசாரிக்க அதிகாரமும் உள்ளனவாய் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும். இந்த பஞ்சாயத்துகளுக்கு நில செஸ்ஸிலிருந்து கொஞ்சம் பணம் கொடுத்தும், ப்ரத்யேகமான க்ராண்டுகள் கொடுத்தும், மாட்டுப்பட்டிகளிலும், சந்தைகளிலும் கிடைக்கும் பணத்தை எடுத்து உபயோகித்துக்கொள்ள அனுமதிகொடுத்தும் ஸிவில் வ்யாஜ்யங்களில் ஸ்வல்பமாக வரி வஸூலிக்க அனுமதிகொடுத்தும் பண உதவி செய்யவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார் இந்த சிபார்சை ஏற்றுக்கொண்டிருப்பதோடு, அவைகளுக்கு வரி போடுவதற்கும் அனுமதி கொடுக்கலாமென்று தெரிவித்திருக்கிறார்கள். சென்னை கவர்ன்மெண்டார் பரீக்ஷார்த்தமாக பஞ்சாயத்துகள் ஸ்தாபித்துப்பார்க்க இஷ்டப்படுகிறார்கள். ஆனால் க்ராமத்தார்கள் கவர்ன்மெண்டாரின் தூண்டுதலில்லாமல் தாங்களே ஸ்வதாவாக பஞ்சாயத்துகளாகச் சேர்ந்து கொண்டால் அவைகளை ஆதரிப்பதாகவும், வ்யாஜ்ய வ்யவஹாரங்களை விசாரிப்பதற்கு ஏற்கனவே இரண்டு சட்டங்கள் இருக்கின்றனவென்றும், அவைகளின்படி க்ராமவாஸிகள் பஞ்சாயத்துகளாகக் கூடி கக்ஷிக்காரர்களுடைய விண்ணப்பத்தின்மேல் ஸிவில் வ்யாஜ்யங்களை விசாரிப்பதற்கு வஸதிகளிருக்கின்றனவென்றும், இந்த சட்டங்களை கூடுமானவிடங்களில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயலுவார்களென்றும் சொல்லுகிறார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தை மாகாண கவர்ன்மெண்டுகள் தங்கள் யுக்தம்போல் தீர்மானிக்கட்டுமென்று சொல்லிவிட்டு

சில பொதுக் கொள்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைகளாவன:—

1. பரீக்ஷார்த்தமாகப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதில் ஜனங்கள் ஸம்மதிக்கிற க்ராமங்களிலும், க்ராமங்களை விடப்பெரியதான ப்ரதேசங்களிலும் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவைகளில் பஞ்சாயத்துகளை ஸ்தாபிக்கவேண்டும்.

2. பஞ்சாயத்துகள் ஸம்பந்தமாகச் சட்டஞ் செய்யவேண்டியிருந்தால், அந்தச் சட்டத்தின் நிபந்தனைகளை பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரலாமென்றிருக்கவேண்டும். பஞ்சாயத்தின் அதிகாரங்களும் கடமைகளும் ஒவ்வொரு க்ராமத்திலும் ஒரே மாதிரியாய் இருக்க வேண்டியதில்லை. அப்படி இருப்பதும் கூடாது.

3. எந்த ப்ரதேசத்திலாவது நீதி அதிகாரங்களும் நிர்வாக அதிகாரங்களும் கொடுக்க வேண்டுமானால் அவைகளை ஒரே பஞ்சாயத்து ஸபைக்குக் கொடுக்கவேண்டும்.

4. ஏற்கனவே ஸ்தாபிக்கப் பட்டுள்ள க்ராம ஸுகாதார கமிட்டிகளையும், கல்விக் கமிட்டிகளையும் பஞ்சாயத்துகளோடு சேர்த்துவிடவேண்டும்.

5. நீதி வ்யவஹாரங்களில் பஞ்சாயத்துகளுக்கு இன்ன அதிகாரங்கள் உண்டென்பதை ஏற்படுத்தும்போது, அந்த அதிகாரங்களை பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் மட்டும் வகிக்கும்படி சட்டம் அமைக்கவேண்டும். கக்ஷிக்காரர்கள் தங்கள் வழக்குகளை பஞ்சாயத்தாரிடம் விசாரிக்கக் கொண்டுவருவதற்காக அவர்களுக்கு ஸ்வல்பமான கோர்ட் 'பீஸ்', சீக்ரமாக வழக்குகளை முடிவு செய்தல் முதலிய ஸாதகங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

6. பஞ்சாயத்துகள், வேண்டுமானால் மாகாண கவர்ன்மெண்டின் மேற்பார்வைக்கு உள்பட்டு, வரிகள்போட சட்டம் ஏற்படவேண்டும்.

7. பஞ்சாயத்துகளுக்கும் மற்ற நிர்வாக ஸ்தாபனங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் இன்னதென்பதை வ்யக்தமாக தீர்மானிக்கவேண்டும். ஜில்லா போர்டுகளும் தாலுக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளுக்குப் பண உதவி செய்தால் அந்த போர்டுகள் பஞ்சாயத்துகளின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யலாம்.

இந்தத் தீர்மானத்தில் ஜில்லா போர்டுகள், தாலுகா போர்டுகள் ஆகிய இவைகளின் அமைப்பு அதிகாரங்களைப் பற்றிச் சொல்லும் பாகங்களை அடுத்த ஸஞ்சிகையில் எழுதுகிறோம்

---


## USEFUL BOOKS.

## உபயோகமுள்ள புஸ்தகங்கள்.

**ஷேக்ஸ்பியர் பன்னிரு பெண்மணிகள்** 0 6 0

இதில் ஷேக்ஸ்பியர் மஹாகவி எழுதிய நாடகங்களில் வந்துள்ள பெண்மணிகளின் குணதிசயங்களும், இல்லறதர்மமும் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

**புத்தாது தீவ்விய சரித்திரம்** ... 0 12 0

வி. வி. ஸாமிநாதய்யர் பதிப்பித்தது.

**அனுபவ ஹிப்னுடிஸம், மெஸ்மெரிஸம் முதலிய மனோவச்ய ரகஸ்யங்கள் (முதல்பாகம்)** ... ... 1 0 0

இதில் ஹிப்னு டிஸம் மெஸ்மரிஸம், யோகம் முதலிய மனோவசிய சாஸ்த்ரங்கள் அநுபவரீதியாக அப்யாஸங்களுடன் விவரிக்கப்பட் டிருக்கின்றன.

G. A. VAIDYARAMAN & CO.,
*Booksellers and Publishers,*
*3, 4, Kondi Chetty Street,*
*Georgetown, Madras.*

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
புஸ்தக வ்யாபாரிகள்,
ஹைகோர்ட்டுக் கெதிரில்
3, 4, கொண்டி செட்டித் தெரு, சென்னை.




# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Practical Education.

**அனுபவ பூர்வமான கல்வி.**—பம்பாய் கவர்ன்மெண்டார் சிலகாலமாக பள்ளிக்கூடங்களில் அனுபவ பூர்வமாகக் கல்வி கற்பித்து வர ஏற்பாடு செய்வதைப் பற்றி கவனித்து வருகிறார்கள். பையன்கள் வாய்மொழியாகக் கேட்டோ, புஸ்தகங்களை வாசித்தோ தெரிந்து கொண்ட விஷயங்களை நன்றாயறிந்துகொள்வதற்கு கற்பிக்கப்பட்ட விஷயங்களை நேராகப்பார்த்தும், படங்கள், மாதிரிகள் முதலியவைகளைப் பார்த்தும் நன்றாயறிந்துகொள்ளலாம். இதற்கு பம்பாய் கவர்ன்மெண்டார் சில ஸாதனங்களைக் குறிப்பிட்டிருப்பதோடு அவைகளில் சிலவற்றை அனுஷ்டிப்பதற்கு பண உதவியும் செய்திருக்கிறார்கள். கைப்பழக்கப்பாடத்தில் 'ஸ்லாய்ட்' பயிற்சியென்று ஒரு உயர்ந்த முறை இருக்கிறது. அந்த முறையை பம்பாயில் அனுஷ்டிக்கப் போகிறார்களாம். பூகோளசாஸ்த்ரம், தேசசரித்ரம் முதலிய பாடங்களைக்கற்பிக்கும்போது மாஜிக்லாண்டர்ன்படங்களைஉபயோகிப்பதால் பாடங்கள்நன்றாய்விளங்கும். இந்தப்படங்களையும், அவைகளைக் காட்டுவதற்கு வேண்டிய விளக்குகளையும் வாங்கி பள்ளிக்கூடங்களுக்கு ஸப்ளை செய்வதற்காக பம்பாய் கவர்ன்மெண்டார் ஒரு லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இங்கிலண்டில் வெளியாகும் 'ஸ்பியர்,' 'இல்லஸ்ட்ரேடட் லண்டன் ந்யூஸ்,' 'க்ராபிக்' என்னும் பத்ரிகைகளில் நல்ல படங்கள் வெளியாகின்றன. இவைகளையும் இவைபோன்ற பத்ரிகைகளையும் பூகோள பாடத்திலும், தேசசரித்ர பாடத்திலும் உபயோகிப்பது நல்லதென்று பம்பாய் மாகாணத்து வித்யா டிரெக்டர் சிபார்சு செய்ததின்மேல் அந்த மாகாணத்து கவர்ன்மெண்டார் பள்ளிக்கூட புஸ்தகசாலைகளுக்கு டை பத்ரிகைகளை ஸர்க்கார் செலவில் வாங்கிக் கொடுக்கும்படி ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களில் தோட்டங்கள் போட்டு வைத்து பையன்களை அவைகளிலுள்ள செடிகொடிகளின் இயல்பையும் அவைகளின் வளர்ச்சியையும் பற்றிக்கவனிக்கும்படி செய்வதால் பையன்களுடைய உற்றுப்பார்க்கும் சக்தி வ்ருத்தியடைகிறது. பம்பாய் கவர்ன்மெண்டார் இரண்டொரு வர்ஷங்களுக்கு முன், பள்ளிக்கூடத் தோட்டங்கள் வைக்கும் ஏற்பாட்டை பரீக்ஷார்த்தமாகச் செய்து பார்க்க வர்ஷந்தோறும் 4,000 ரூபாய் கொடுத்து வரும்படி ஸாங்க்ஷன் செய்தார்கள். தோட்டவேலையிலும், தாவர சாஸ்த்ரம், ப்ராணி சாஸ்த்ரம் ஆகிய இவைகளிலும் தேர்ச்சியுள்ளவர்களாயும் பையன்களுக்கு உற்றுப்பார்க்கும் சக்தியை உண்டுபண்ணக்கூடிய விதமாக கற்பிக்கக் கூடியவர்களாயுமுள்ள உபாத்யாயர்கள் அகப்படுவது பம்பாயில் அரிதாயிருந்ததாம். ஆனால் தேசபாஷை ட்ரெய்னிங் காலேஜுகளில் இயற்கைப் பாடத்தை ஒரு பாடமாகச் சேர்த்திருப்பதால் இந்தக் குறை ஒருவாறு நீங்கி விடுமென்று தோன்றுகிறதாம்.

பாடங்களை அனுபவ பூர்வமாய் கற்பிப்பதற்கு இன்னொரு ஸாதனம் பையன்களை பாடங்கள் ஸம்பந்தப்பட்டுள்ள விடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போவது. எலிமெண்டரி ஸ்கூல்களில் பையன்களுக்கு பொருள் பாடங்களும், பூகோளசாஸ்த்ரமும் கற்பிக்கையில் கூடுமானபோது உபாத்யாயர்கள் பையன்களை வயல்கள், தோப்புகள், குளங்கள், நதிகள், சரித்ர ஸம்பந்தமான இடங்கள் முதலியவைகளுக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று வித்யாதிகாரிகள் சில வர்ஷங்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறார்கள். இதோடு, கவர்ன்மெண்ட் காலேஜிலுள்ள மாணவர்கள் சரித்ர ஸம்பந்தமான ஊர்களுக்குப் போய்வருவதற்காக 2000 ரூபாய் க்ராண்டு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு கவர்ன்மெண்டு ஹைஸ்கூலுக்கும் வருஷந்தோறும் 500 ரூபாய் பண உதவி செய்து வருகிறார்கள்.

ஆனால் மேற்சொன்ன மாதிரி நூதன முறைகளைக் கையாடுவதில் முக்ய கஷ்டம், இந்த முறைகளில் தேர்ச்சியும், ஊக்கமும் உள்ள உபாத்யாயர்களும், இன்ஸ்பெக்டர்களும் வேண்டியவரை அகப்படாததே. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்காக, மேற்சொன்ன முறைகளில் எதையாவது கைக்கொள்ள முன்வரும் உபாத்யாயர்களுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும் ப்ரத்யேகமாக வெகுமதியாவது படியாவது (அல்லவன்ஸ்) கொடுக்க ஏற்பாடு செய்யலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கும்படி கவர்ன்மெண்டார் வித்யாடிரெக்டரை கேட்டிருக்கிறார்கள்,

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Prizes for Tamil Essays.

**தமிழ் வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்:**—சென்னையிலுள்ள தமிழ் அக்காடமி என்னும் தமிழ்க் கல்வி ஸங்கத்தின் கௌரவ மெம்பர்கள் அடியில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி வ்யாஸம் எழுதுகிறவர்களுக்கு பொன்பதக்கங்கள் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். விஷயங்களாவன:—நச்சினார்க்கினியரும் அவர் இயற்றிய நூல்களும்; பேராசிரியரும் அவரியற்றிய நூல்களும்; தமிழ் பாஷைக்கும் மற்ற த்ராவிட பாஷைகளுக்கும் உள்ள ஸம்பந்தம்; திருவள்ளுவநாயனாரும் அவர் இயற்றிய நூல்களும்; தமிழ் இலக்கியங்களின் காலவரையறை; தமிழ் பாஷையும் தமிழ் நூல்களும்; இளங்கோவடிகளும் அவர் இயற்றிய நூல்களும்; ராமானுஜரும் அவரியற்றிய நூல்களும்; சென்னை ராஜதானி நாணயங்களின் வரலாறு; குலவாணிகன் சாத்தனாரும் அவர் இயற்றிய நூல்களும்; பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், மதுரகவி யாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரிய ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் ஆகிய இவர்களுடைய சரித்ர ஆராய்ச்சியும் அவர்கள் இயற்றிய திருப்பாசுரங்களும்; கம்பரும் அவர் இயற்றிய நூல்களும்; சேக்கிழாரும் அவரியற்றிய நூல்களும்; மாணிக்க வாசகரும் அவரியற்றிய நூல்களும்; தமிழ்நாட்டில் நாடக விலக்கியம்; திருத்தக்க தேவரும் அவரியற்றிய நூல்களும்; திருமங்கை யாழ்வாரும் அவரியற்றிய திருப்பாசுரங்களும்; அப்பரும் அவரியற்றிய திருப்பதிகங்களும்; தமிழரும் ஸங்கீதமும்; சிவஞான முனிவரும் அவர் இயற்றிய நூல்களும்; வில்லிப்புத்தூராரும் அவரியற்றிய நூல்களும்; நம்மாழ்வாரும் அவரியற்றிய திருப்பாசுரங்களும்; ஆண்டாள் அம்மையும் அவரியற்றிய நூல்களும்; பெருந்தேவனாரும் அவரியற்றிய நூல்களும்; ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் அவரியற்றிய திருப்பதிகங்களும்; ஸம்பந்தரும் அவுரியற்றிய திருப்பதிகங்களும்; ஔவையாரும் அவரியற்றிய நூல்களும்; நக்கீரரும் அவருடைய உரை முதலியனவும்; ஒட்டக் கூத்தரும் அவரியற்றிய நூல்களும்; கச்சியப்ப சிவாச்சாரியாரும் அவரியற்றிய நூல்களும்; புகழேந்தியும் அவரியற்றிய நூல்களும்; வீரமாமுனிவரும் அவரியற்றிய நூல்களும்; கல்லாடரும் அவரியற்றிய நூல்களும். வ்யாஸம் எழுத விரும்புவோர் தாங்கள் எழுத உத்தேசித்திருக்கும் விஷயங்களை ஸங்கத்தின் கௌரவ ஸெக்ரெடரிக்குத் தெரிவித்து அவைகளை எழுதவேண்டியதைப்பற்றிய விவரங்களை யறிந்துகொண்டு பின்பு எழுத ஆரம்பிப்பது நல்லது. ஸெக்ரடரியின் விலாஸம்:—மிஸ்டர் வி. கே. க்ருஷ்ணஸாமி பிள்ளை, பி. ஏ, கௌரவ கார்யதர்சி, தமிழ் அக்காடமி, ந்யூட்டன் ஹவுஸ், சர்ச்ரோட், வேப்பேரி. மதராஸ்.

### Gardening.

**தோட்டப்பயிர்.**—இது சேலம் மேட்டுத் தெரு, என். எஸ். க்ருஷ்ணஸாமி அய்யர் இயற்றியது. இதில் ஆசிரியர் முக்யமாய் பழமரங்களின் ஸாகுப்டியைப் பற்றி எழுதியிருக்கிறார். ஒட்டுக்கட்டுதல், பதியன் போடுதல், கன்றுகள் நடுதல், வேலிபோடுதல் முதலிய விஷயங்களைப்பற்றியும், பழமரங்களின் பலவகைகளைப்பற்றியும், அவைகளைப் பயிர் செய்யும் விதங்களைப் பற்றியும் தெளிவாய் எழுதியிருக்கிறார். விவஸாயிகள் இதை வாசித்துப்பயனடையலாம். புஸ்தகத்தின் விலை 2½ அணா. வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### Sri Venkatesa Kalyanam.

**ஸ்ரீ வேங்கடேச கல்யாணம்.**—இது டி. எஸ். ஸோமஸுந்தரம் பிள்ளை எழுதிய ஒரு நாடகமாகும். இதில் திருப்பதி ஸ்தலத்தின் மகிமை நாடக ரூபமாகக் கூறப்பட்டிருக்கிறது. திருப்பதி ஸ்தலத்துக்கு நான்கு யுகங்களிலும் நான்கு பேர்கள் வந்ததற்குக் காரணம் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. நாராயணவனம் என்னும் க்ராமத்தை யாண்டுவந்த ஆகாச ராஜன் என்னும் அரசனுடைய புத்ரியாகிய பத்மாவதியை ஸ்ரீ மகாவிஷ்ணு கல்யாணம் செய்துகொண்டதுதான் கதையின் முக்ய அம்சம்

நாடகத்தின் நடை ஸுலபமாயும் தெளிவாயும் இருக்கிறது. யாவரும் வாசிக்கவேண்டிய புஸ்தகங்களில் இது ஒன்றாகும். இதன் விலை 10 அணா

வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, ஹைக்கோர்ட்டுக் கெதிரில் 3,4, கொண்டி செட்டித் தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Keeping Fish Alive.

**மீனை உயிருடன் வைத்திருப்பது.**—ஒரு மேல்நாட்டு வித்வான் மீன்களைப் பிடித்தபிறகு அவைகளை சில மாஸகாலம் வரையில் அப்படியே உயிரோடிருக்கும்படிசெய்ய ஒரு முறைகண்டு பிடித்திருக்கிறாராம். இதனால் மீன்களை எவ்வளவு தூரமுள்ள இடத்துக்கும் விற்பனைக்கு அனுப்புவது ஸாத்யமாகும். அவர் மீன்களைப் பிடித்து பனிக்கட்டிகளுக்கு நடுவில்வைத்து மீன்களையும் குளிர்ந்து விறைத்துப் போகும்படிசெய்து, பிறகு இஷ்டப்பட்டபோது வெளியிலெடுத்து சிலகாலம் மெதுவாக அவைகளின் குளிர்ச்சியைக் குறைத்து பூர்வநிலைமைக்குக் கொண்டுவந்துவிடுகிறாராம். அவர், ஸமீபத்தில் ஜலத்தில் அதிக ப்ராணவாயு இருக்கும்படிசெய்து, அந்த ஜலத்தின்மேல் பனிக்கட்டித் துண்டுகளை மிதக்கப்போட்டு ஜலத்தின் உஷ்ணத்தைக் குறைத்தாராம். ஜலமும் மீனும் ஒரேபனிக்கட்டியாகப் போய்விட்டது. பிறகு இரண்டுமாஸம்கழித்து, 'மீன் பனிக்கட்டி'யை மெதுவாக சூடாக்கினதில் மீன்களெல்லாம் உயிரோடிருந்தனவாம். இந்தமுறையில் கவனிக்கவேண்டிய முக்யவிஷய மென்னவென்றால் ஜலத்தை மெதுவாக குளிரச்செய்யவேண்டும். பனிக்கட்டிகளை ஜலத்தின்மேல் மிதக்கப்போடுவதற்கும், ஜலம்முழுவதும் கட்டியாவதற்கும் மத்தியில் 15-மணி முதல் 18-மணிவரையில் ஸாவகாசம் இருக்கவேண்டுமாம்.

### Torpedoes as Floating Mines.

**டார்பிடோக் குழாய்கள் மிதக்கும் கடல் வெடிகுண்டுகளாவது.**—கப்பல்களிலிருந்து விடும் டார்ப்பிடோக் குழாய்கள் குறிதப்பி எதிரிக்கப்பல்களைத் தாக்கத் தவறிப்போனால், பிறகு அவைகளால் ஸாதாரணமாக யாதொரு கெடுதலும் ஏற்படுவதில்லை. குறிதப்பிப்போனபிறகு கெடுதலுண்டாகக் கூடியவையான டார்ப்பிடோக்களை யுத்தக்கப்பல்கள் ப்ரயோகிக்கக் கூடாதென்று ஹேக் என்னும் பட்டணத்தில் நடந்த ஒரு பரஸ்பரதேச உடன்படிக்கையில் கண்டிருக்கிறது. ஜெர்மன் ஸப்மரீன்கள் ப்ரயோகித்த டார்ப்பிடோக்களில் குறிதப்பிப்போன சிலவற்றைப் பரீக்ஷித்துப் பார்த்ததில், அவைகளை கடலில் மிதக்கும் வெடிகுண்டுகளாக மாற்றுவதற்கு வேண்டிய உபாயங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கபட்டிருக்கின்றனவென்று தெரியவந்ததாம். இதனால் அந்த டார்ப்பிடோக்கள் எந்தக் கப்பலின்மேல் ப்ரயோகிக்கப்பட்டனவோ அவைகளைத் தாக்காவிட்டாலும், அவைகள் கடல்களில் மிதந்து கொண்டுபோவதால் வேறு எந்தக் கப்பல்களாவது அவைகளின்மேல்பட்டால் நாசமடைந்துவிடக்கூடுமாம்.

### Colouring the Wood of Growing Trees.

**வளரும் மரங்களின் வைரமானபாகத்துக்கு வர்ணங்கொடுத்தல்.**—மர வேலைகளில் ஸாமான்களுக்கு ப்ரத்யேகமான வர்ணங்கள் பூசுவதில் அநேகர் ப்ரியங்கொள்வதுண்டு. இதற்காக சிலர் வளரும் மரத்தில் சிலவர்ணங்கொடுக்கும் பொருள்களைச்செலுத்தி, அந்தப் பொருள்களும், மரத்திலுள்ள பொருள்களும் சேருவதால் ஏற்படும் ரஸாயன மாறுபாடுகளால் மரம்முழுவதும் வேறுநிறங் கொள்ளும்படி செய்யலாமென்று ஆராய்ச்சிகள் செய்துபார்த்தார்கள். இந்தமாதிரிப் பரீக்ஷைகள் ஸுமார் 80 வர்ஷ காலமாகச் செய்யப்பட்டு வருகின்றன. ஆயினும் அவைகளில் ஒன்றாவது பலிக்கவில்லை. ஸமீபத்தில் ஒருவர் சில பரீக்ஷைகள் செய்து மரங்களின் உள்ளேயிருக்கும் பாகங்களுக்கு தமக்கிஷ்டமான நிறம் உண்டாகும்படி செய்திருக்கிறார் என்று தெரிகிறது. அவர் மரங்களில் சில த்வாரங்கள் செய்து அதன்மூலமாக மரத்தில் சிலசாயப்பொருள்களையும் ரஸாயனப்பொருள்களையும் செலுத்துகிறாராம். மரம் அதை க்ரஹித்து, எல்லாபாகங்களிலும் கொண்டு போகிறது. மரத்தின் உள்பாகங்கள் நிறம் மாறுகின்றன. சிலஸமயங்களில் இலைகள் கூட நிறம் மாறுகின்றனவாம்.

### Conversing with the Dead.

**இறந்து போனவர்களுடன் ஸம்பாஷணை.**—இப்போது உலகத்தில் பிரசித்திபெற்ற பௌதிக சாஸ்த்ர வித்வான்களுக்குள் சிறந்தவர் என்று கொண்டாடப்படும் ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் ஸமீபத்தில் இங்கிலாந்தில்செய்த ஒரு ப்ரஸங்கத்தில் இறந்துபோனவர்களை ஸூக்ஷ்ம த்ருஷ்டியால் ஸந்தித்து, ஸம்பாஷிப்பது ஸாத்யம் என்றும், தம்முடைய இறந்துபோன சில ஸ்நேஹிதர்களுடன் தாம் அவ்விதமாக ஸம்பாஷித்ததாகவும் தெரிவித்தாராம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Cremation.

**தகனம்.**—ஹிந்துக்களில் ப்ராமண வகுப்பாருக்குள்ளும் மற்றும் சில ஜாதிகளுக்குள்ளும் ப்ரேதத்தை தகனம் செய்வது வழக்கம். மற்ற ஹிந்து ஜாதிகளும், வேறு மதஸ்தர்களும் பிணங்களைப் புதைப்பது வழக்கம். ப்ரேதங்களைப் புதைப்பதைவிட எரித்துவிடுவது ஸுகாதாரத்துக்கேற்றது. புதைப்பதால் பல அஸௌகர்யங்கள் ஏற்படுகின்றன. ஸ்கார்லட் காய்ச்சல் என்னும் ஒருவித தொத்து வ்யாதியால் இறந்தவரைப் புதைத்துவைத்து, 30-வர்ஷங்கழித்து பூமியை வெட்டிப்பார்த்தால், ஷை காய்ச்சல் க்ருமிகளின் ஜீவமூலங்கள் உயிருடனிருக்கின்றனவாம். எட்டடி ஆழத்துக்குக்கீழே கூட புழுக்கள் சாகாமலிருக்கின்றன. அவைகள் அந்த ஆழத்திலுள்ள மண்ணை உயரக் கொண்டுவரக்கூடும். அவை உயரக்கொண்டுவரும் பொருள்கள் காய்ந்துபோனால் ரொம்ப சிறிய அணுக்களாக இருக்கின்றன.

டார்வின் என்னும் ஜீவநூல்சாஸ்திரி சில வர்ஷங்களுக்கு முன்னால் ஆப்ரிக்காவின் மேற்குக்கரைக்கு ஒரு ஸமயம் போயிருந்தபோது காற்றானது 300-மைல் தூரத்திலிருந்து புழுதியைக்கொண்டுவந்து வீசிற்றென்று கண்டார். ஆகையால் 30-வர்ஷங்களுக்கு முன்னால் ஸ்கார்லட் காய்ச்சலால் இறந்தவன் புதைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து வ்யாதி க்ருமிகளின் மூலங்கள் புழுக்கள் மூலமாய் வெளியில்வந்து அந்த க்ருமி மூலங்கள் காற்றால் 300-மைல் தூரத்திலுள்ள ஊர்களுக்கும் போய் ஷை காய்ச்சல் பரவக்கூடும். மேலும் ஸமாதிகளிலிருந்து கெட்ட வாயுக்கள் உண்டாகின்றன. மழை ஜலம் ஸமாதிகளில் சுவறி அருகிலுள்ள ஜலாதாரங்களில் கலந்து ஜலத்தை அசுத்தப்படுத்துகிறது. தகனம் செய்வதால் இந்தத் தொந்தரவுகள் கிடையா. மேலும் தகனம் செய்வதற்குச் செலவு குறைவு. ஸமாதிகள் கட்டுவதற்கு செலவு அதிகமாகும்.

### Malaria and Rice Cultivation.

**மலேரியாவும் நெல் ஸாகுபடியும்.**—இந்தியாவில் சிலர் நெல் ஸாகுபடியாகும் இடங்களில் ஜலந்தேங்கியிருப்பதால் மலேரியாவைப் பரவச்செய்யும் கொசுக்கள் வ்ருத்தியாகின்றனவென்று சொல்லிவருகிறார்கள். அது சரியல்லவென்று தெரிகிறது. ஸமீபத்தில் மேல்நாட்டுப் பட்டணமொன்றில் நெல்லைப்பற்றி ஆலோசிப்பதற்காக நடந்த ஒரு காங்க்ரெஸில், மலேரியாக்காய்ச்சல் பரவியிருக்கும் ப்ரதேசங்களில் நெல் ஸாகுபடி செய்வதால் வ்யாதி குறைகிறதென்றும், எங்கேயாவது சதுப்பான நிலங்களிருந்தால் அவைகளை ஸாகுபடிக்குக் கொண்டுவந்து ஸுகாதாரக்குறைவை நிவர்த்திசெய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். வயல்களில் உள்ள கொசுக்களில் ஆயிரத்துக்கொன்றுதான் மலேரியாவைப் பரவச்செய்யக்கூடியவையாயிருக்கின்றனவென்று ஆராய்ச்சிகளால் தெரியவருகிறது. வயலோரமாயும், தோட்டங்களோரமாயும், விவஸாயக்கருவிகள் வைப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் குடிசைகளில் மலேரியாவைப் பரவச்செய்யும் கொசுக்கள் இருப்பதேயில்லை. க்ராமாந்தரங்களில் உள்ள கொசுக்களில் 100-க்கு 5-வீதம் வ்யாதியைப் பரவச்செய்யக்கூடியவை. க்ராமங்களிலுள்ள சிறு குளங்கள், உபயோகமற்ற கிணறுகள், மற்றும் ஜலந்தேங்கியிருக்குமிடங்கள் ஆகிய இவைகளைத் தூர்த்துவிட்டால் க்ராமத்தில் மலேரியாக்காய்ச்சல் வருவதில்லையாம்.

### Hygienic Education of the People.

**ஜனங்களுக்கு ஸுகாதாரக் கல்வி கற்பிப்பது.**—ஸர்ஜன்-ஜெனரல் பான்னர்மன் என்பவர் ஸமீபத்தில் செய்த ஒரு ப்ரஸங்கத்தில் ஜனங்களுக்கு ஸுகாதார விஷயங்களை போதிக்கவேண்டியது அவச்யமென்றார். ஸுகாதார சாஸ்த்ரத்தில் ஆராய்ச்சி செய்வதுமாத்ரம் போதாது. ஜனங்களுக்கு ஸுகாதார விதிகளைக் கற்பிக்கவேண்டும். ஒவ்வொரு ராஜதானியிலும் ஸாமான்யர்களுக்கு ஸுகாதாரக்கல்வி கற்பிப்பதை கவனித்துவர ஒரு உத்யோகஸ்தரை நியமிக்கவேண்டும். அவர் ஸுகாதார ஸம்பந்தமான சிறு புஸ்தகங்களும், ப்ரஸங்கங்களும் தயார்செய்யவேண்டும். ப்ரஸங்கங்களில் மாஜிக்லாண்டர்ன் படங்கள் உபயோகித்து விஷயங்களை விளக்கிச் சொல்லவேண்டும். இந்தப் புஸ்தகங்களையும், படங்களையும், ஊருராய்ப்போய் ஜனங்களுக்குக் கற்பிக்க முன்வரும் ப்ரஸங்கிகளுக்கு கொடுத்து உதவவேண்டும். உபாத்யாயர்கள் பயிலும் போதனாமுறைக் காலேஜுகளில் ஸுகாதார வகுப்புகள் ஏற்படுத்தவேண்டும் என்று மிஸ்டர் பான்னர்மன் சொன்னார்.



# LAW.

## சட்டம்.

### Adoption by Widows.

**விதவை ஸ்வீகாரம் செய்து கொள்வது.**—(1) ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளவேண்டுமென்று ஒரு ஸபிண்டரை அனுமதிகேட்டால், அந்த ஸபிண்டர் தமது ஸொந்த ஸௌகர்யத்தைக்காரணமாக வைத்துக்கொண்டு ஸ்வீகாரம் செய்யலாம், செய்யக்கூடாதென்பதைத் தீர்மானிக்காமல், விதவையின் குடும்பத்துக்கு எது நன்மையானதென்பதை உத்தேசித்தே தீர்மானிக்கவேண்டும். ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டி ஸமீப அனந்தரவார்ஸ் ஒருவரை அனுமதி கேட்டாள். அந்த அனந்தரவார்ஸுக்கு புத்ரன் ஒருவருமில்லை. தமக்கு "ஒரு புத்ரன் பிறக்கும்வரையில் காத்திராமல், ஒரு பையனை ஸ்வீகாரம் செய்வதற்கு இப்போது அவச்யமில்லை" யென்று சொல்லி ஸ்வீகாரத்துக்கு அனுமதி கொடுக்க மறுத்தால் அப்படி மறுத்தது சரியல்ல.

2. லா வீக்லி 284.

(2) ஒரு ஹிந்து புத்ரனில்லாமல் இறந்து போனார். அவருடைய ஸகோதரர்களில் சிலர் பாகமாகிப் பிரிந்து போய் விட்டார்கள். மற்றவர்கள் இறந்துபோனவருடன் ஏககுடும்பமாக வஸித்துவந்தார்கள். இறந்துபோனவரின் விதவை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளவேண்டுமானால் ஒன்றாக வஸித்துவரும் குடும்பத்திலுள்ளவர்களுடைய அனுமதியைப் பெற்றால் போதும். பிரிந்துபோன ஸகோதர்களுடைய அனுமதியைப்பெறவேண்டிய அவச்யமில்லை. குடும்பத்தின் தலைவர் அனுமதிகொடுக்க மறுத்து, விதவை மற்ற ஸமபாகஸ்தர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களுடைய அனுமதியைப்பெற்றுக்கொள்ளாமல் ஸ்வீகாரம் செய்து கொண்டால் அந்த ஸ்வீகாரம் செல்லாது. குடும்ப ஸொத்தை அன்யர்களுக்குப் பாராதீனம் செய்யும் எண்ணத்துடன் ஒரு விதவை தன் புருஷன் இறந்துபோய் முப்பது வர்ஷம் கழிந்தபின்பு, ஒரு பையனை ஸ்வீகாரம் செய்து கொண்டாள். புருஷனுடைய ஸகோதரராகிய அவிபக்த குடும்பத்தின் தலைவர் அந்த ஸ்வீகாரத்தை ஒப்புக்கொள்ள மறுத்தால், அப்படி மறுத்தது கெட்ட எண்ணத்துடன் மறுத்ததாகாது. 2. லா வீக்லி 286.

3. ஒரு ஹிந்து தமது உயிலில் (மரண சாஸனத்தில்) ஒரு குறிப்பிட்ட பையனை தமது மனைவி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி எழுதி வைத்துவிட்டு இறந்து போனார். ஷை பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட சில காலத்துக்கெல்லாம் அவன் இறந்து போனான். பிறகு 20 வர்ஷம் கழித்து, உயிலின் ஆதாரவின் மேல் வேறொரு பையனை ஸ்வீகாரம் செய்து கொண்டாள். ஒரு பையனை ஸ்வீகாரம் செய்து கொள்ளவேண்டுமென்று புருஷன் எண்ணியிருந்தாலும், இரண்டாவது தடவை ஸ்வீகாரம் செய்யக்கூடாதென்று அவர் எண்ணியிருந்ததற்கு யாதொரு ஆதாரமும் இல்லாததால் இரண்டாவது ஸ்வீகாரம் சட்டப்படி செல்லும்.

### Women's Courts.

**ஸ்த்ரீகள் கோர்ட்டுகள்.**—அமெரிக்காவில் ஸ்த்ரீகளுடைய குற்றங்களையும், வ்யவஹாரங்களையும் விசாரித்துத்தீர்ப்பதற்காக ப்ரத்யேகமான கோர்ட்டுகள் இருக்கின்றன. ந்யூயார்க்கில் ஸ்த்ரீகளுக்கென்று ப்ரத்யேகமாயுள்ள ஒரு கோர்ட்டில் ஸ்த்ரீகளும், சிறு பெண்களும் செய்த சிறுகுற்றங்களை விசாரணை செய்துவருகிறார்கள். இந்தக் கோர்ட்டும், பிலடல்பியாவிலுள்ள ஒரு ஸ்த்ரீகோர்ட்டும் ராத்ரியும் பகலும் நடக்கின்றன. குற்றவாளிகளை நன்றாய் விசாரித்து அவர்களுடைய மனோநிலைமைகளையும்தேகநிலைமைகளையும் அறிந்துகொண்டு, தக்க ஸங்கம் அல்லது ஸ்தாபனங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இதனால் குற்றவாளிகள் மற்றவர்களைக் கெடுப்பது குறைகிறது. வேலை செய்ய சக்தியுள்ளவர்களுக்கு தொழில் ஸம்பாதித்துக் கொடுக்கிறார்கள். சென்ற வர்ஷத்தில் பிலடல்பியா பட்டணத்தில் ஸ்த்ரீ வ்யவஹாரங்களை விசாரிக்க ஒரு முனிஸிபல் கோர்ட்டு ஸ்தாபித்தார்கள். அதில், சிறு பெண்களின் குற்றங்கள், சிறு குற்றங்கள், ஸிவில் வ்யாஜ்யங்கள், குடும்ப வ்யவஹாரங்கள், நடத்தையைப்பற்றிய வழக்குகள் ஆகிய ஐந்து விதமான வ்யவஹாரங்களை விசாரிக்க ஐந்து பிரிவுகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒரு வர்ஷத்தில் பிலடல்பியாவில் மாத்ரம் 15300 கேஸ்கள் ஸ்த்ரீ கோர்ட்டார்கள் விசாரித்து தீர்ப்பு செய்தார்கள்.

### Illegitimate Son and Family Property.

**வைப்பாட்டி பிள்ளையும் குடும்ப ஸொத்தும்.**—ஒரு சூத்ரர் ஒரு தேவடியாளை ஸ்திரமாக வைத்துக்கொண்டிருந்து, அவளுக்கு ஒரு மகன் பிறந்தால், அந்த மகனுக்கு அவிபக்த குடும்ப ஸொத்தில் ஒரு பாகம் பெற பாத்யதை உண்டு.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Kaiser's Income.

**கெய்ஸருடைய வரும்படி.**—ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸருக்கு கவர்ன்மெண்டார் கொடுக்கும் பணமேயன்றி, ஸொந்த வரும்படியும் ஏதேஷ்டமாகக் கிடைத்து வருகிறதாம். கொஞ்சகாலத்துக்கு முன்பு ஒருவர் அவருடைய ஆஸ்திகளைக் கணக்கிட்டுப்பார்த்ததில் அவருக்கு 30 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸொத்துகளிருக்கின்றனவென்றும், வர்ஷந்தோறும் அந்த ஸொத்துக்களிலிருந்து 1½ கோடி ரூபாய் வரும்படி கிடைத்து வருகிறதென்றும் தெரிய வந்திருக்கிறது. அவருடைய மூத்த புத்ரராகிய இளவரசருக்கு ஸொந்தத்தில் 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள ஸொத்துக்களிருக்கின்றனவாம். அவைகளிலிருந்து 7½ லக்ஷம் ரூபாய் வரும்படி வருகிறதாம். கெய்ஸருடைய ஸகோதரராகிய ஹென்ரி ராஜகுமாரருக்கு 75 லக்ஷம் ரூபாய் ஸொத்துக்கள் இருக்கின்றனவாம். கெய்ஸரின் குடும்பத்துக்கு ஹொஹன் ஸால்லர்ன் குடும்பம் என்று பெயர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மொத்தத்தில் 37½ கோடி ரூபாய் மதிப்புள்ள ஸொத்துக்கள் இருக்கின்றனவாம். கெய்ஸருக்குக் கிடைத்துள்ள ஸொத்தெல்லாம் அநேக வ்யாபாரக் கைத்தொழில் துறைகளில் பணம் போட்டதால் கிடைத்தவை. ஜெர்மன் கப்பல் கம்பெனிகளில் அவருக்கு ஏராளமான பங்குகள் இருக்கின்றன. ஜெர்மன் மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள வைரச் சுரங்கங்களில் அவர் ஏராளமாய்ப் பணம் போட்டிருக்கிறார். அவருக்கு 5½ கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களும் இருக்கின்றன. மேற்கு ரஷ்யாமாகாணத்தில் அவருக்கு ஒரு குதிரை வளர்க்கும் பண்ணை யொன்றிருக்கிறது. அதில் அவருக்கு நல்ல வரும்படி கிடைத்துவருகிறது. ஹானோவரில் உள்ள ஒரு சாராயமிறக்கும் சாலையில் ரொம்பப்பணம் போட்டிருக்கிறார். கார்டினன் என்னும் ஊரிலுள்ள அவருடைய ஸொந்த நிலங்களில் ஒரு மண்பாண்டத் தொழில் சாலை ஸ்தாபித்திருக்கிறார். அவருக்கு 40 கோட்டைகளும், க்ராமாந்தர அரண்மனைகளும் இருக்கின்றன. இவைகளின் மதிப்பு 3 கோடி ரூபாயாகும். அவர் அமெரிக்கா ஐக்யமாகாணங்களின் மேற்கு மாகாணங்களிலும், கனடாவின் மேற்குப் பிரதேசத்திலும் நிலங்களில் ஏராளமாய்ப் பணம் போட்டிருக்கிறார்.

### Mr. Gandhi.

**மிஸ்டர் காந்தி.**—மிஸ்டர் மோஹனதாஸ் காரம்சந்த் காந்தி சென்ற ஏப்ரல் மாஸம் 17-ந் தேதி சென்னைக்கு வந்து இந்த மாஸம் 4-ந் தேதிவரையில் இங்கே தங்கியிருந்தார். அவர் தென்னாப்ரிக்காவை விட்டு இங்கே வந்துவிட்டதால் அங்கேயுள்ள இந்தியர்களின் கார்யங்களை யார் கவனிப்பாரென்று அவரை ஒரு பத்ரிகை நிருபர் கேட்டதற்கு, அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையென்றும், அங்கேயுள்ளவர்களில் இந்தியர்களுக்கு ஸாதகமாயிருப்பவர்களும், முக்யமாய் தென்னாப்பிரிக்காப் போராட்டத்தில் ரொம்ப உதவியாயிருந்த மிஸ்டர் எச். எஸ். எல். போலக்கும் அங்கேயுள்ள இந்தியர்களின் விஷயங்களை கவனித்துக் கொள்வார்களென்றும் பதில் சொன்னார். அவர் இந்தியாவில் இனிமேல் என்ன செய்யப் போகிறாரென்பதைப்பற்றி பின்வருமாறு தெரிவித்திருக்கிறார். காலஞ்சென்ற மிஸ்டர் கோபாலக்ருஷ்ண கோகலே சொல்லியிருக்கிறபடி அவர் தேசமெங்கும் சுற்றுப்ப்ரயாணம் செய்து தேசத்தின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்து பிறகு இன்னது செய்கிறதென்று தீர்மானிப்பாராம். ஆயுள் முழுவதும் தேச நன்மைக்கு உழைப்பதற்கு இந்திய வாலிபர்களை பழக்குவதற்காக அவர் ஒரு ஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ஸங்கத்தை யதாப்ரகாரம் நடத்திவருவார். தென்னாப்ரிக்காவில் அவர் நடத்திவந்த போராட்டத்தில் சேர்ந்தவர்களில் சிலரும், மற்றவர்களுடைய பிள்ளைகளும் இந்த ஸங்கத்தில் சேர்ந்து உழைப்பதற்காக அவரோடுகூட இந்தியாவிற்கு வந்திருக்கிறார்களாம்.

### Sir. C. Sankaran Nair.

**ஸர். ஸி. சங்கரன் நாயர்.**—சென்னை ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜாக இருந்த ஸர். ஸி. சங்கரன் நாயர் இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக ஸபையில் கல்வி மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார் அவர் கல்வியையேயன்றி, ஸ்தல ஸ்வய ஆட்சி, ஸுகாதாரம் ஆகிய இவைகளையும் கவனித்து வருவார்.

ஸர் சங்கரன் நாயர் 1875-ம் வர்ஷம் ஜனனமானார். சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் கல்வி பயின்றார். பிறகு சிறிதுகாலம் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப் உத்யோகம் பார்த்து வந்தார். அதை விட்டுவிட்டு, 1879-ம் வர்ஷம் முதல் வக்கீலாக இருந்து வந்தார். 1890-ம் வர்ஷத்தில் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஒரு மெம்பராக கவர்ன்மெண்டால் தெரிந்தெடுக்கப்பட்டார். 1897-ம் வர்ஷத்தில் அம்ரோடியில் நடந்த இந்தியன் நாஷனல் காங்க்ரஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். 1906-ம் வர்ஷத்தில் சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். ஸர் சங்கரன் நாயர் ஹைகோர்ட்டுக்கு ஜட்ஜாகப் போகுமுன் காங்க்ரெஸில் சேர்ந்து உழைத்து வந்தார். இப்போதும் ஜன ஆசார சீர்திருத்த முயற்சியில் ரொம்பவும் பாடுபட்டு வருகிறார்.



# SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

### The Library Movement.

**புஸ்தக சாலைகள் ஏற்படுத்துதல்.**—இம்மாகாணத்தைச்சேர்ந்த தெலுங்கு ஜில்லாக்களில் சென்ற 4-வருஷங்களுக்குள் பல பொதுப் புஸ்தகசாலைகளும் வாசகசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் தொகை இன்னும் அந்த ஜில்லாக்களில் அதிகமாய்க் கொண்டுபோவதாகவே தெரிகிறது. அச்சாலைகள் பொது ஜனங்களுக்கு அறிவையுண்டாக்கும் நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. போன வர்ஷத்தில் பெஜவாடாவில் தெலுங்கு ஜில்லா பொதுப் புஸ்தகசாலைகளின் கான்பரென்ஸொன்று நடந்ததாகவும், அப்போது அவைகளை மேற்பார்வை பார்க்க ஒரு தாய்ச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதாகவு மறிகிறோம். இப்போது அந்த ஜில்லாக்களில் 160-இலவசப் புஸ்தகசாலைகளிருக்கின்றன வென்றும், அவைகளில் 19-புஸ்தகசாலைகளுக்குச் ஸொந்தக் கட்டிடங்க ளிருக்கின்றனவென்றும், 6-புஸ்தக சாலைகளில் 1000-க்கு மேற்பட்ட புஸ்தகங்க ளிருக்கின்றன வென்றும், 26-புஸ்தகசாலைகளில் 500-க்கு மேற்பட்ட புஸ்தகங்க ளிருக்கின்றன வென்றும், மற்றவைகளில் அத்தொகைக்குக் குறைந்த புஸ்தகங்க ளிருக்கின்றன வென்றும் தெரிகிறது. அவைகளில் 12 புஸ்தகசாலை ஸ்தாபனங்கள் இராப் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்துகின்றனவாம். வேறே 22-ஸ்தாபனங்களின் ஆதரவில் புராண காலக்ஷேபங்கள் நடக்கின்றனவாம். ஒரு ஸ்தாபனம் வர்ஷந்தோறும் தொழிற் பொருட்காட்சி நடத்துகிறது. 10-ஸ்தாபனங்கள் காவ்யங்களிலும், சாஸ்த்ரங்களிலும், போட்டிப் பரீக்ஷைகள் நடத்தி வெகுமதிகள் கொடுக்கின்றன. 4-ஸ்தாபனங்கள் தெலுங்குப் புஸ்தகங்களும், துண்டுப் பத்திரிகைகளும் அச்சிட்டு வெளியிடுகின்றன. மேலே சொன்ன ஸ்தாபனங்களில் 5-ஸ்தாபனங்களை இந்திய ஸ்த்ரீகள் தங்களுக்கென்றே ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. மற்ற ஸ்தாபனங்களில் ஸ்த்ரீ மெம்பர்களு மிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய புஸ்தகங்கள், ஸமாசாரப்பத்ரிகைகள் முதலியன, அவர்களுடைய வீட்டுக்கே புஸ்தகசாலைச் சேவகனொருவனால் கொண்டுபோய்க் கொடுக்கப்படுகின்றன. ஒரு ஸ்த்ரீ ஸ்தாபனத்தில் அந்த ஸ்தாபனத்தைச்சேர்ந்த மெம்பர்கள் மெம்பர்களல்லாத தங்களுடைய ஸகோதரிகளைக் கூட்டி வைத்துக்கொண்டு அவர்களுக்கு நல்ல புஸ்தகங்களிலிருந்து வாசித்துக் காட்டுகிறார்களென்றும் தெரிகிறது. அந்த ஸ்தாபனங்களெல்லாம் விதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட்டு நடந்துவருகின்றன வென்றும், அவைகளுக்கு நிர்வாகக் கமிட்டிக ளிருக்கின்றன வென்றும், அவைகள் தங்கள் வருஷதினத்தைக் கொண்டாடி வருகின்றன வென்றும் அறிகிறோம்.—சுதேசமித்திரன்.

### Schools for Depressed Classes.

**தாழ்ந்த வகுப்பாருக்குப் பள்ளிக்கூடங்கள்.**—பேரார் மாகாணத்திலுள்ள அமராவதி (அம்ரோடி) பட்டணத்தில் தாழ்ந்த ஜாதியார்களை உயர்த்தும் ஸங்கத்தாரின் ஆதரவில் நடந்துவரும் பள்ளிக்கூடங்களின் பரிசளிப்புக் கொண்டாட்டம் ஸமீபத்தில் நடந்தபோது பேரார் மாகாணத்தின் கமிஷனர் தாழ்ந்த ஜாதிகளை உயர்த்துவதைப்பற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். அந்த ப்ரஸங்கத்தில் ஒரு முக்யமான விஷயத்தைப்பற்றி ப்ரஸ்தாபம் செய்தார். இப்போது தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தும் ஸங்கங்கள் விசேஷமாக அந்த ஜாதிப்பிள்ளைகளுக்கு ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதை மாத்ரம் கவனித்துவருகின்றன. இந்த ஏற்பாட்டால் தீமையும் ஏற்படக்கூடும். உயர்ந்த ஜாதிகளுக்கும் தாழ்ந்த ஜாதிகளுக்கும் உள்ள வித்யாஸத்தை அதிகப்படுத்துமேயொழிய குறைக்காது. ஏனென்றால் தாழ்ந்த ஜாதிகளுக்கென்று ப்ரத்யேகமாய் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதனாலேயே, அந்த ஜாதிகள் தாழ்ந்தவைகளென்பதை ஊர்ஜிதப்படுத்தினதாகிறது. அப்படிக்கில்லாமல் அந்தப் பிள்ளைகளை ஸ்தலஸ்தாபனங்களின் ஆதரவில் நடந்துவரும் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினால் இந்தக் குறை ஏற்படாது. ஒருதாழ்ந்த ஜாதிப்பையன் உயர்ந்த ஜாதிப் பிள்ளைகள் வாசிக்கும் வகுப்பில் சேர்ந்து, தான் படிப்பு விஷயத்தில் உயர்ந்த ஜாதிப்பிள்ளைக்குத் தாழ்ந்தவனல்லவென்பதை யறிந்துகொண்டால், அவனிடம் தன்மதிப்பு ஏற்படும். மேலும் அவனுடைய ஸகவாஸத்தால் உயர்ந்த ஜாதிப்பையனுக்கும், அவன் தாழ்ந்த ஜாதிப்பையன் என்ற எண்ணமும் குறையக்கூடும். ஆகையால் இந்த விஷயங்களை மனவில் வைத்துக்கொண்டு, தாழ்ந்த ஜாதிப்பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதை கவனித்து வரவேண்டும்.

### Prohibition of Varadakshina Practice.

**வரதக்ஷிணை வழக்கத்தைத் தடுத்தல்.**—வரதக்ஷிணை ஏற்பாட்டால் ஜனங்களுக்குப் பலவிதங்களில் ஸங்கடங்கள் ஏற்படுவதை உத்தேசித்து, பரோடா கவர்ன்மெண்டார் அந்த ஸமஸ்தானத்து சட்ட ஸபையில், வரதக்ஷிணை வாங்குவதும் கொடுப்பதும் கூடாதென்று ஒரு மஸோதா கொண்டுவந்திருக்கிறார்களாம்,

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### To Soften Putty.

**லப்பத்தை இளகவைக்க.**—கண்ணாடிகளை ஜன்னல்கள் பீரோக்கள் முதலியவைகளில் ஒட்டவைப்பதற்கு உபயோகிக்கும் லப்பம் கெட்டியாகி உலர்ந்து போனால் அதை மறுபடியும் இளகச்செய்து, புதியது போல் உபயோகிக்கலாம். காய்ந்த லப்பத்தை உடைத்துத் தூளாக்கி, கொஞ்சம் லின்ஸீட் எண்ணெயைக் காய்ச்சி கலந்து அப்படியே சற்றுநேரம் வைத்திருக்கவும். பிறகு எண்ணெயையும் லப்பத்தையும் நன்றாய்க் கலந்து, வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் லின்ஸீட் எண்ணெயையும் சேர்த்து வேண்டியபதத்தில் எடுத்துக்கொள்ளவும். லப்பத்தில் கெட்டியான துண்டுகளில்லாதபடி எடுத்துவிடவும். லப்பத்தில் அதிக எண்ணெய் ஊற்றக்கூடாது. இல்லாவிட்டால் லப்பம் ரொம்ப நெகிழ்ந்திருக்கும். ரொம்ப நெகிழ்ந்திருந்தால் வொய்ட்டிங் என்னும் சுத்தமான சாக்கட்டியை (சீமைச் சுண்ணாம்பு) வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும்.

### Preventing Rust on Iron.

**இரும்பில் துருப்பிடிக்காமலிருக்க.**—இரும்பு அல்லது உருக்கு ஸாமான்களில் துருப்பிடிக்காமலிருக்க வேண்டுமானால், கூச்சுக் ஆயில் என்னும் எண்ணெயை ஒரு ப்ளானல் துணியிலெடுத்து ஸாமான்களின்மேல் மெல்லிய படையாகத்தடவிக் காயவைத்தால் துருப்பிடிக்காது. ஸாமான்களை மறுபடியும் உபயோகிக்க அந்த எண்ணெயை எடுத்துவிடவேண்டுமானால், அந்த ஸாமான்களில் மறுபடியும் ஷை எண்ணெயைத் தடவி 12-மணி அல்லது 24-மணிநேரங்கழித்து ஜலத்தில் அலம்பியெடுக்கவேண்டும். உருக்கு, இரும்பு, ஈயம் இவைகளால் செய்த ஸாமான்களின்மேல், பென்ஸைன் என்னும் மருந்துகரைத்த ஜலத்தைத்தடவி வைத்திருந்தால் அவைகள் துருப் பிடிப்பதில்லை, உருக்கு ஸாமான்கள்வைக்கும் பெட்டிகளில் தாளிக்காத புதுச்சுண்ணாம்புக் கற்களைப்போட்டுவைத்திருந்தாலும், ஸாமான்கள் கெடுதலடையா.

### Varnishing Brass Articles.

**பித்தளையின்மேல் அரக்கு வார்னிஷ் பூசுதல்.**—(1) ஸாமான்களின்மேல் அழுக்கு, எண்ணெய் பசை முதலியன இல்லாமல் செய்து கொள்ளவேண்டும்.

(2) நமது கைவிரல்களினால் தொடாமல் கயிறு அல்லது கம்பிகட்டியாவது, சிராமணத்தினலாவது எடுக்கவேண்டும்.

(3) எப்போதும் சுத்தமான வெள்ளைத் துணியைக் கொண்டுதான் எடுத்தல், வைத்தல் வேண்டும்.

(4) ப்ரஷ் ஒரேமட்டமாக யிருக்கவேண்டும். இல்லையாயின் ஸமமாக பூசமுடியாது. ஆகையால், கத்திரிக்கோலால் மட்டமாக வெட்டிக்கொள்ளவேண்டும்.

(5) ப்ரஷின் நுனியால் வார்னிஷை தொட்டு ஒரே மாதிரியாக பூசவேண்டும்.

(6) வார்னிஷ் அதிக கெட்டியாகவிருந்தால் வேண்டிய அளவு ஸ்பிரிட் சேர்க்கவும்; தண்ணீரைப்போலிருந்தால் அடுப்பிலாவது வெய்யிலிலாவது வைத்து வற்றச்செய்யவேண்டும்.

(7) வார்னிஷ் பூசப்பட்ட ஸாமான்களை உலருகிற வரையில் கையாளப்படாது.— விச்வகர்மகுலோபகாரி.

### Inflammation of the Face.

**முகம் எரிச்சலெடுத்தல்.**—முகம் எரிச்சலெடுத்து, வேர்க்குருக்கள் உண்டாகித்தோல் பொரிந்து போனால் பின்வருமாறு செய்யவேண்டும். பொடிசெய்த வெண்காரம் ½ ஔன்ஸ், ஸோடா மாவு 1 ஔன்ஸ், க்ளிஸரின் 1 ஔன்ஸ், பால் பட்டணம்படியால் ½ படி இவைகளைக் கலந்து தினம் இரண்டு முறை முகத்தில் தடவி வந்தால் எரிச்சல் நின்றுபோவதோடு தோல் பொரிவதும் நேராது. பாலுக்கு பதில் பன்னீரையும் சேர்க்கலாம்.

### Fastening Metals to Marble.

**ஸலவைக்கல்லில் உலோகங்களைப் பொருத்த.**—ஸலவைக்கல்லில் உலோகங்களைப் பொருத்துவதற்கு பின்வருமாறு ஸிமெண்டு (சாந்து) செய்து உபயோகிக்கலாம். 30 பாகம் ப்ளாஸ்டர் அப் பாரிஸ், பத்து பாகம் அரப்பொடி, ½ பாகம் நவச்சாரம், ஆகிய இவைகளை நன்றாய்க்கலந்து, நெகிழான பசையாக்குவதற்கு வேண்டிய அளவு அஸெக்டிக் ஆஸிட் த்ராவகத்தை விட்டுக்கலந்து பசையாக்கி, கலந்தவுடனேயே உபயோகிக்கவும்.

### Kerosine Oil.

**கிரோஸினெண்ணெய்.**—தலைமயிரில் பேன்பிடித்தால் அதற்குத் தலையில் வேண்டியவளவு கிரோஸின் எண்ணெயைத் தடவிவிட்டால் அப் பேன்கள் அழிந்துவிடும். இதற்கு இந்த எண்ணெயே சிறந்த ஔஷதமாகும்.—வைத்தியகலாநிதி.



## AGRICULTURE.

## விவஸாயம்.

### Sorghum as Cattle Fodder.

**சோளத்தைக் கால்நடைத் தீவனமாக உபயோகிப்பது.**—கால்நடைத் தீவனத்திற்காக சோளம் விதைக்க விரும்புகிறவர்கள் ஏகர் ஒன்றுக்கு 16 முதல் 20 பட்டணம்படி விதை விதைக்கலாம். கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையிலும் கோயில்பட்டி விவஸாயப் பண்ணையிலும் கால்நடைத் தீவனத்திற்கு சோளப்பயிர் விதை எவ்வளவு விதைத்தால் நல்லது என்று பரீட்சை செய்ததில் 16 முதல் 20 பட்டணம்படி விதைத்தலே நலமென்றும், அதற்கு குறைவாயாவது அல்லது ஜாஸ்தியாயாவது விதைப்பது நஷ்டமென்றும் பரிஷ்காரமாய் தெரியவந்திருக்கிறது. விதைத்து 3 மாஸத்துக்குள் அறுவடை செய்வது நன்று. ஸாதாரணமாய் பூத்து விதைபிடிக்கும் ஸமயத்தில் அறுப்பது நல்லதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் சிலவேளைகளில் சீதோஷ்ண மழைப் பருவ பேதங்களினால் சில தினுஸு சோளங்கள் விதைத்து 4 அல்லது 5 மாஸம்வரை பூக்கமாட்டா. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் விதைத்த 3 மாஸத்துக்குள் அறுவடை செய்துவிடலாம். சோளப்பயிர் சரியானபடி வளருமுன் அதாவது 2 மாஸத்திற்குமுன் அதில் ஒருவித விஷஸத்து இருக்கிறது. அது முற்றினபின் வேறுவிதமாய் மாறிப்போகிறது. ஆகையால் இளம் சோளப்பயிரை மேய்ந்த மாடுகள் இறந்துபோவதுண்டு. பயிர் இளசாயிருக்கும்போது அறுத்து அதை காயப் போட்டுப்போட்டாலும் மாடுகளுக்கு மோசம் ஸம்பவிக்காதென்று சொல்லமுடியாது. ஆகையால் பயிர் 2½ முதல் 3 மாஸமானபின் வெட்டி பச்சையாயாவது அல்லது காயவைத்தாவது உபயோகிப்பது நல்லது— கிருஷிகன்.

### Taste of Rice.

**அரிசியின் ருசி.**—சில அரிசிகளைச் சமைத்து சூடாயிருக்கும்போது சாப்பிட்டால் அவைகள் ருசியாயிருக்கின்றன வென்றும் சாதத்தில் ஜலம் விட்டு வைத்திருந்து பழையதாகச் சாப்பிட்டால் சாதம் வாய்க்கு நன்றாயிருப்பதில்லை யென்றும் தென்னிந்தியாவில் அநேகர் எண்ணிவருகிறார்கள். வடஇந்தியாவின் மற்றபாகங்களில் ஜனங்கள் நெற்பயிருக்குப் பிண்ணாக்கு எருப் போட்டால் சாதம் நன்றாயிருப்பதில்லை யென்றும், அரிசியை முதல் நாள் இரவு சமைத்து சாதத்தை ஜலத்தில் போட்டுவைத்திருந்து மறுநாள் காலையில் சாப்பிட்டால், சாதத்தில் கெட்டருசியொன்று தெரிகிறதென்றும் சொல்லுகிறார்களாம். இதனால் சில விடங்களில் விவஸாயிகள் நெற்பயிருக்கு பிண்ணாக்கு எருபோட இஷ்டப்படுவதில்லையாம்.

வடக்கேயுள்ள ஒரு மாகாணத்தின் விவஸாய டிபார்ட்மெண்டார் இது விஷயமாக ஒரு பரீக்ஷைசெய்தார்கள். 24 பாத்திகளில் சிலவற்றில் பற்பலவித எருக்கள் போட்டும், சிலவற்றில் எருக்கள் போடாமலும், நெல்பயிரிட்டு, அவைகளிலிருந்து நெல் எடுத்து அரிசியாக்கி, ஒவ்வொரு பாத்தியரிசையையும் தனித்தனியாக ஒரு நாள் ராத்ரி சமையல் செய்து, பண்ணை வேலையாட்களுக்குப் போட்டார்கள். அவர்களுக்கு சாதத்தில் ஒருவித கெட்டருசியும் தெரியவில்லையாம். மேலும் வெவ்வேறு பாத்திகளிலிருந்து எடுத்த அரிசியின் சாதத்தில் ருசி யாதொரு வித்யாஸமும் தெரியவில்லையாம்.

### Groundnuts.

**வேர்க்கடலை.**—சென்ற 1913-ம் வர்ஷத்தில் ஜாவாவைச் சேர்ந்த ப்யூடன்ஸார்க் என்னும் ஊரில் நிலக்கடலை ஸம்பந்தமாக சில பரீக்ஷைகள் செய்தார்கள். அந்தப் பரீக்ஷைகளால் பின்வரும் விஷயங்கள் தெரியவருகின்றன. வேர்க்கடலைப் பயிரை, இலைகள் பசுமையாயிருக்கும்போது நிலத்தில் மடக்கி உழுதால், பிறகு அடுத்த பருவத்தில் பயிரிடும் நெல்லில் மாஸூல் அதிகமாகக் கிடைக்கிறதோடு நெல் பயிருக்குப் பிறகு ஸாகுபடி செய்யும் வேர்க்கடலையிலும் அதிக மாஸூலாகிறது.

(2) ஒரே நிலத்தில் இடைவிடாது வேர்க்கடலையைப் பயிர் செய்தால், அதற்கு வ்யாதி வருவது அரிது. வேர்க்கடலை வ்யாதியைத் தடுக்கக்கூடியதாக அவ்வளவு பலமடைந்துவிடுகிறது. நிலத்தில் செடிகள் இறந்துபோவதும் குறைந்துபோகும்.

## CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Co-operative Societies and Agriculture.

கோவாபரேடிவ் ஸங்கங்களும் விவஸாயமும்.— வடக்கே ஐக்யமாகாணங்களில் கோவாப்ரெடிவ் ஸங்கங்கள் விவஸாய ஸம்பந்தமாக விவஸாய டிபார்ட்மெண்டாருடன் ஒத்து வேலைசெய்து வருகின்றனவாம். விவஸாய வேலைகளுக்காகத் தனியாக கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதில் அங்கேயுள்ள ஸங்கத்தார்களுக்கு இஷ்டமில்லையாம். ஸெண்ட்ரல் பாங்கிகள் க்ராம பாங்கிகளுக்கு பணம் கடன்கொடுத்து அவைகளை மேற்பார்வை பார்த்துவருவதால், ஸெண்ட்ரல் பாங்கிகளே ஸப்ளை ஸங்கங்கள் அதாவது ஸங்கத்துக்கு வேண்டிய ஸாமான்களை வாங்கிக்கொடுக்கும் ஸங்கங்களின் வேலைகளை மேற்கொள்வது ஸௌகர்யமாயிருக்கிறதாம். அங்கேயுள்ள பெரிய ஸெண்ட்ரல் ஸங்கங்களில் நான்கில் விதை டெப்போக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸெண்ட்ரல் ஸங்கங்கள் விவஸாய டிபார்ட்மெண்டாரோடு சேர்ந்துகொண்டு, தங்கள்கீழ் உள்ள ஸங்கங்களின் மெம்பர்களுக்குள் தெரிந்தெடுக்கப்பட்ட உயர்ந்த விதைகளைப் பரவச்செய்ய முயன்றுவருகின்றன. ஸெண்ட்ரல் ஸங்கங்கள் க்ராமஸங்கங்களுக்கு விதைகளை அனுப்புகின்றன. க்ராமஸங்கம் அதிலுள்ள மெம்பர்களில் வேண்டியவர்களுக்குக் கொடுத்து விதைக்க ஏற்பாடு செய்கிறது. அறுவடையான விதையை சேகரித்து அடுத்த வர்ஷம் விதை வேண்டும் மெம்பர்களுக்கு விற்கிறார்கள்.

இவ்விதம் விவஸாய டிபார்ட்மெண்டின் முயற்சிகளுக்கு ஸங்கங்கள் உதவி செய்வதற்காக, ஷை டிபார்ட்மெண்டாரும், தங்கள் இன்ஸ்பெக்டர்களை ஸங்கங்களுக்கு அனுப்பி, விதை தெரிந்தெடுத்தல், பருத்தியில் விதையைப் பிரித்தெடுத்தல் முதலிய வேலைகளை விவஸாயிகளுக்குச் செய்து காட்டுவதில் உதவியாயிருக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கோவாபரெடிவ் ஸங்கங்களின் மானேஜர்கள் நிலங்களின் ஜலவஸதியை அபிவ்ருத்தி செய்வது விஷயமாக கவனம் செலுத்திவருகிறார்களாம். கிணறுகளில் அதிக ஜலம் வரும்படி செய்வதற்கு டிபார்ட்மெண்டார் போரிங் டிபார்ட்மெண்ட் ஸிப்பந்திகளை அனுப்புகிறார்கள். இரண்டிடங்களில் இஞ்ஜின் வைத்து ஜலமிறைப்பதற்கும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

### Nagpore Co-operative Dairy.

நாக்பூர் கோவாபரேடிவ் பால்சாலை.—மத்ய மாகாணங்களின் முக்யபட்டணமாகிய நாக்பூரில் ஒரு கோவாபரெடிவ் பால்சாலை நடந்துவருவ்தாகத் தெரிகிறது. அதில் 13 இடையர்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள். அந்த ஸங்கத்துக்கு 131 கறவை மாடுகளும், 90 கன்றுகளுமிருக்கின்றன. ஒரு பாங்கி அந்தஸங்கத்துக்கு 2000 ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இதோடு மாஸந்தோறும் 100 ரூபாய் கடனுகவும் கிடைத்துவருகிறது. மாடுகளை ஸங்கத்தின் மேற்பார்வையில் கறந்து, பாலை மொத்தத்தில் வாங்கும் கண்ட்ராக்டருக்கு ரூபாய்க்கு 8½ சேர் வீதம் விற்கிறார்கள். கண்ட்ராக்டர் பாலை ஜனங்களுக்கு ரூபாய்க்கு 6 சேர் வீதம் விற்கிறான். ஒரு வர்ஷகாலத்தில் அந்த ஸங்கம் மொத்தத்தில் 1388 மணங்கு பால் விற்றது. வர்ஷ வரும்படி 6772 ரூபாய். மாட்டுத் தீனிச் செலவு முதலியவைகளுக்காக 3630 ரூபாய் செலவழிந்தது. ஆகவே கிடைத்தலாபம் 3141 ரூபாய். ஆனால் இந்த ஸங்கத்துக்குத் தீவனப்பொருள்கள் ரொம்ப மலிவாகக் கிடைத்தன. மேலும் வேலைகளை மேற்பார்வை செய்தவர்கள் யாதொரு சம்பளமும் இல்லாமல் வேலை செய்தார்கள். கட்டிட வகையறுக்களுக்கு என்ன செலவாயிற்றென்று தெரியவில்லை. இவைகளுக்குக் கொஞ்சம் தொகை குறைந்துபோகுமென்றாலும், ஸங்கத்துக்கு நல்ல லாபந்தானென்று தெரிகிறது.

### Government Servants and Co-operation.

ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் கோவாபரேஷனும்.—கோவாபரெடிவ் டிபார்ட்மெண்டில் வேலையாயிராத ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் விவஸாயிகளுக்கல்லாத கோவாபரெடிவ் ஸங்கங்களிலும் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும் மெம்பர்களாகச் சேரலாம். ஆனால் அவர்கள் எந்த ஸங்கத்திலும், ஸெக்ரெடரி, ட்ரெஷரர் முதலான உத்யோகங்களை வகிக்கக்கூடாது. ஸங்கங்களின் நடவடிக்கைகளை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளிலும் மெம்பர்களாக இருக்கக்கூடாது. ஆனால் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஸங்கங்களிலுள்ளவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது.



## COMMERCE.

## வ்யாபாரம்.

### Indigo Trade.

நீலி வ்யாபாரம்.—சென்ற பிப்ரவரி மாஸத்தில் டெல்லியில் நீலச்சாயக் கைத்தொழிலுக்கு உதவிசெய்வதைப்பற்றி ஆலோசிப்பதற்காக கவர்ன்மெண்டார் ஒருகான்பரென்ஸ் கூட்டினார்கள். அவுரி ஸாகுபடிக்கு உதவிசெய்யும் விஷயமாய் கவர்ன்மெண்டார் தங்களாலானமட்டும் உதவிசெய்து வருவதாகவும், அவுரி ஸாகுபடி ரொம்பவும் அபிவ்ருத்தியடையுமென்று வ்யக்தமாகத் தெரிகிறதாகவும் கான்பரென்ஸ் அபிப்ராயப்பட்டது. மிஸ்டர் ஹோவர்ட் என்னும் விவஸாய இலாகா உத்யோகஸ்தரும் அவரது மனைவியும் அவுரி விஷயமாய் அநேக புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிகளைப் பின்பற்றி ஸாகுபடிசெய்து, நல்ல விதைகளும் வேண்டியமட்டும் கிடைக்குமானால் அவுரி ஸாகுபடியில் அதிகசேதம் ஏற்படாதாம்; மாஸூலும் அதிகமாகக்கிடைக்குமாம்.

நீலச்சாயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வது விஷயமாகவும் ஷை கான்பரென்ஸ் ஆலோசித்தது. இப்போது தொழில்களுக்கு வேண்டியிருக்கிற நீலச்சாயத்தைவிட அதிகமாகக் கிடைக்கும்படி முயற்சி எடுத்துக்கொள்வதென்றால், அந்தச் சாயத்தை சுத்தம் செய்வதைப் பற்றியும், பற்பலவிடங்களில் செய்யப்படும் சாயத்தை ஒரே சீரான தன்மையுடையதாகச் செய்வதைப்பற்றியும், சாயத்தை எந்த விதத்தில் தயார்செய்து விற்றால் சாயத்தொழிலாளிகள் வாங்கக்கூடுமோ அந்த விதமாகத் தயார் செய்வதைப் பற்றியும் கவனித்துவர ஒரு ரஸாயன சாஸ்த்ரியை நியமிக்கவேண்டுமென்று ஷை கான்பரென்ஸ் அபிப்ராயப்பட்டது. இதைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் விளையும் அவுரிச்சாய வ்யாபாரத்துக்கு என்ன ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கலாமென்பதைப் பற்றியும், இங்க்லண்டில் செய்யப்படும் செயற்கைச் சாயத்துக்கு என்ன வஸதிகள் செய்து கொடுக்கலாமென்பதைப் பற்றியும் அந்தக் கான்பரென்ஸ் கவனித்தது. இவைகளைப் பற்றியும் இந்தியா கவர்ன்மெண்டார் கவனித்து வருகிறார்கள்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஜனவரி பிப்ரவரி மாஸங்களில் அடியில்கண்ட விவரப்படி கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | |
|---|---|
| ஜனவரி மாஸம் | ரூ. |
| 1 இன்ஷூரன்ஸ் கம்பெனி | 20,000 |
| 4 வ்யாபாரக் கம்பெனிகள் | 3,70,000 |
| 1 பருத்தி மில் கம்பெனி | 5,00,000 |
| 1 பருத்தி, ஜூட்ப்ரெஸ் கம்பெனி | 3,00,000 |
| 1 தேயிலைத் தோட்டக் கம்பெனி | 1,50,000 |
| 1 ரப்பர் தோட்டக் கம்பெனி | 3,00,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 1,75,000 |
| 10 | 18,15,000 |
| பிப்ரவரி மாஸம் | |
| 2 பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | 1,50,000 |
| 1 ரெயில்வே கம்பெனி | 18,00,000 |
| 1 கப்பல் கம்பெனி | 2,00,000 |
| 5 வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 14,80,000 |
| 1 தேயிலைத் தோட்டக் கம்பெனி | 2,00,000 |
| 1 நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 3,00,000 |
| 1 சுரங்கக் கம்பெனி (மேலே சொன்னது தவிர) | 6,00,000 |
| 12 | 47,30,000 |

### Composition for Bell Metal.

வெண்கலத்துக்கு சேர்மானம்.—செம்பு 6 ராத்தல்; நிக்கல் 1-ராத்தல்; இரண்டையும் சேர்த்து உருக்கிக் குளிர்ந்தவுடன், 1-ராத்தல் நாகமும், ¼-அவுன்ஸ் அலுமினியமும் சேர்த்துருக்கவேண்டும். மறுபடியும் குளிர்ந்தவுடன் மறுபடியும் உருக்கி அரை அவுன்ஸ் ரஸமும், 6-ராத்தல் உருக்கின செம்பும் கலந்துவிடவும். இப்படிச்செய்த வெண்கலம் கொஞ்சங்கூடக் கருப்பதில்லையாம். இது அதிக கனமில்லாமல் லேசாயிருப்பதோடு, நாதம் ரொம்ப நன்றாயிருக்கிறதாம்.

வாத்யமணிக்கு செம்பு 21-பாகமும் வெள்ளீயம் 4-பாகமும் சேர்க்கவும்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### New Uses for India-rubber.

**ரப்பருக்குப் புதிய உபயோகங்கள்.**—சிறிது காலத்துக்கு முன்னுல்வரையில் ரப்பர் ரொம்பவிலை யுள்ளதாக இருந்ததால், அதை கைத்தொழில்களில் அதிகமாக உபயோகப் படுத்துவதற்கில்லாமலிருந்தது. இப்போது அதன்விலை ரொம்ப குறைந்திருப்பதால் அதைப் பலவிதங்களில் உபயோகிக்க முயன்றுவருகிறுர்கள். ஸாதாரணமாக தோல் எந்த வேலைகளுக்கெல்லாம் உபயோகப்படுமோ அவைகளிலெல்லாம் ரப்பரை உபயோகிக்கலாம். ஜோடு, பூட்ஸுகளில் குதிகாலுக்கும், அடித்தோலுக்கும், ட்ரங்குகளுக்கும் தோலுக்கு பதிலாகவும் ரப்பரை விசேஷமாய் உபயோகித்து வருகிறுர்கள்.

பாய்கள், ஓடுகள் முதலியவைகளை இப்போது ரப்பரினுல் செய்து மேல்நாடுகளில் வீடுகளில் உபயோகிக்கிறுர்கள். ரப்பரை ரொம்ப கெட்டியாகவோ, அல்லது கொஞ்சம் மெதுவாகவோ செய்து வீடுகளில் தரையில் தளவரிசைக்கு உபயோகிக்கலாம். இந்த ரப்பர் தளவரிசைக்கு வார்னிஷ் பூசவேண்டிய அவச்யமில்லை. எண்ணெய் பூசவேண்டியதுமில்லை. பாலிஷ் செய்தால் மாத்ரம் போதும். மரங்களின்விலை இப்போது ரொம்ப அதிகமாக இருப்பதால் ரப்பர் உபயோகிப்பது ஸௌகர்யமாயிருக்குமென்று சொல்லுகிறுர்கள். தளவரிசைக்கு உபயோகிப்பதில் ரப்பரை அடிப்பாகத்தில் கெட்டியாகவும் மேற்பாகம் ம்ருதுவாகவும் இருக்கும்படி தயார் செய்யலாமாம். இதனுல் ரப்பரில் ஆணிகள் அடிப்பது ஸுலபமாயிருக்குமாம். இது விசேஷமாய் நெருப்பால் கெடுதலடையாது. காலஸ்திதி வேறுபட்டாலும் ஜலத்தாலும் சுருங்காது; பருமனுகவும் ஆகாது. அதில் ஈரம் தங்காது. புழுப்பூச்சிகளும் அண்டமாட்டா. கரையான் தொல்லையுள்ள ப்ரதேசங்களில் இந்த ரப்பர் தளவரிசை ரொம்ப ஸௌகர்யமானதாம். மேலும் கெட்டியான ரப்பரை, ஸாதாரண மரங்கள் போல அறுத்து, இழைத்து நாற்காலிகள், மேஜைகள், மற்ற மரஸாமான் முதலியவைகள் செய்யலாமாம். ஸாமான்களும் ரொம்ப நேர்த்தியாக இருக்கின்றனவாம். கெட்டி ரப்பரை அறுக்கும்போது கிடைக்கும் ரம்பத்தூளை தூர எறிந்துவிடாமல் மறுபடியும் ரப்பர் ஸாமான் செய்வதில் உபயோகிக்கலாம்.

மேலும் கெட்டி ரப்பர் ஸாமான்கள் கெடுதலடைந்துபோனுல் அவைகளை மறுபடியும் கெட்டிரப்பராக மாற்றி புது ஸாமான்கள் செய்யலாம்.

படகுகள் செய்வதில் ரப்பரை உபயோகிக்கலாமாம். மரத்தால் படகுகள் செய்தால், அவைகளை கடலில் போட்டு வைத்திருக்கும்போது, கடலிலுள்ள ஒரு ஜந்து மரத்தைக் குடைந்து நாசம் செய்துவிடுகிறது. அந்த ஜந்து ரப்பரை ஒன்றும் செய்வதில்லையாம்.

### A Substitute for Alpaca.

**ஆல்பாக்காவுக்கு பதில்.**—கொரியா தேசத்திலுள்ள ஒரு கவர்ன்மெண்ட் சாஸ்த்ர ஆராய்ச்சிசாலையில் ஆல்பாக்கா துணியைப்போல் உள்ள ஒரு போலித் துணி கண்டு பிடித்திருக்கிறுர்களாம். இந்தப் போலி ஆல்பாக்கா நெய்வதற்கு, பாவு நூலுக்கு டாஸ்ஸா பட்டும், தார் நூலுக்கு பருத்தி நூலும் உபயோகிக்கிறுர்களாம். இந்த ஆல்பாக்கா கிட்டத்தட்ட ஸ்வயம் ஆல்பாக்காவைப்போல் ரொம்ப நேர்த்தியாயிருக்கிறதாம்.

### Banana Essence.

**வாழைப்பழஸத்து.**—மேல்நாட்டு சாஸ்த்ரியொருவர் வாழைப்பழத்திலிருந்து ஒருவித ஸத்து தயார் செய்திருக்கிறுராம். ஒரு பெரிய குலைவாழைக்காயை வெட்டிக்கொண்டுவந்து, பழுக்கவைத்து, பழங்களின் தோலுரித்துப்பிறகு அதில் நீராவியை விட்டு வ்யாபிக்கும்படி செய்து, அதிலிருந்து வாழைப்பழ ஸாரம் தயார் செய்திருக்கிறுராம். இந்த ஸத்தை உபயோகித்தால் அது யாதொரு கெடுதியும் செய்யாதாம். அதை உபயோகித்து ஒரு வாஸனை பதார்த்தம் தயார் செய்துவருகிறுராம்.

### Saw Dust.

**ரம்பத்தூள்.**—ஸாதாரண ரம்பத்தூளிலிருந்து ரொம்ப உயர்ந்த அல்கஹால் சாராயம் தயார் செய்யலாம். 200 ராத்தல் ரம்பத்தூளிலிருந்து 5 பட்டணம்படி சாராயம் கிடைக்கும். மேல்நாடுகளில் பிர்ச் என்று ஒரு மரம் இருக்கிறது. அதை அறுக்கும்போது கிடைக்கும் ரம்பத்தூளில் சில ரஸாயனப் பொருள்களைக் கலந்து பக்வம் செய்து சர்க்கரை உண்டாக்கலாமாம்

இன்னும் விளையாட்டு பொம்மைகள் செய்வதில் ரம்பத்தூளை உபயோகிக்கிறுர்களாம்.



# BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Self Government in Schools.

**பள்ளிக்கூடங்களில் ஸ்வய ஆட்சி.**—அமெரிக்காவில் ந்யூயார்க் பட்டணத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் பையன்களுடைய வ்யவஹாரங்களை விசாரித்துத் தீர்ப்புச்சொல்ல பையன்களைக் கொண்டே கோர்ட் ஏற்படுத்தியிருக்கிறுர்களாம். பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்யாயர் ஒரு ஸாமர்த்யமுள்ள பையனைத் தெரிந்தெடுத்து அவனுக்கு 'கமிஷனர் அப் போலீஸ்' உத்யோகம் கொடுக்கிறுர். அந்தப் பையன் சில பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து இன்ஸ்பெக்டர் முதலிய சில்லரை உத்யோகஸ்தர்களாக ந்யமிக்கிறுன். சில்லரை உத்யோகஸ்தர்கள் வேறு சில பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து 'போலீஸ் கான்ஸ்டபிள்'களாக நியமிக்கிறுர்கள். மேலும் 'கமிஷனர்' பையன் விசாரணைக்கு வரும் கேஸுகளைப்பற்றி அபிப்ராயம் சொல்ல ஜூரர்களை நியமிக்கிறுன். கேஸுகளை கமிஷனர் பையனே விசாரிப்பான். பையன்கள் இன்ன விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு உபாத்யாயர்களாவது, பையன்கள் கோர்ட்டாவது சில சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவார்கள். இந்த சட்டதிட்டங்களை கவனியாமல் நடக்கும் பையனை ஒரு 'போலீஸ் கான்ஸ்டபிள்' பையன் கண்டு பிடித்து விட்டால், உடனே 'கான்ஸ்டபிள்' சட்டத்தை மீறி நடந்த பையனுடைய பெயரையும் அவன் வாசிக்கும் வகுப்பையும் கேட்டு எழுதிக்கொண்டு, 'கமிஷனருக்கு'த் தெரிவிக்கிறுன். 'கமிஷனர்' குற்றவாளிக்கு இன்ன நேரத்தில் அல்லது நாளில் விசாரணை நடக்குமென்று தெரிவிக்கிறுன். குற்றவாளி தனது கேஸை நடத்த பையன்களுக்குள் ஒருவனை வக்கீலாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். குற்றவாளியைப் பிடித்த 'போலீஸ்காரனும்' ஒரு பையனை வக்கீலாக வைத்துக்கொள்வதோடு, தானும் கேஸ் நடக்கும்போது கோர்ட்டில் ஆஜராகவேண்டும். கேஸ் நடக்கும் காலத்தில் ந்யாயாதிபதி, ஜூரர்கள், வக்கீல்கள், சாக்ஷிகள் (யாராவது இருந்தால்), போலீஸ்காரன், குற்றவாளி, கேஸை கவனிக்க வருகிறவர்கள் ஆகிய பலபேர்கள் கோர்ட்டில் இருப்பார்கள்.

கோர்ட்டின் நடவடிக்கைகள் க்ரமமான கோர்ட்டின் நடவடிக்கைகளைப் போலவே யிருக்கும். வக்கீல்கள் தங்கள் கேஸைச் சொல்லிக்கொள்வதும், சாக்ஷிகளைகுறுக்கு விசாரணை செய்வதும், ஜூரர்கள் குற்றவாளி குற்றஞ்செய்தானு இல்லையா என்பதைத் தீர்மானிப்பதுமாக எல்லா நடவடிக்கைகளும் நடக்கும். குற்றவாளி குற்றஞ் செய்ததாக ஏற்பட்டால் குற்றத்துக்குத் தகுந்தபடி தண்டனையடைவான். அவன் குற்றஞ் செய்யவில்லையென்று ஏற்பட்டால் போலீஸ்காரனை வேலையினின்று நீக்கி, வேறொரு பையனுக்கு அந்த வேலையைக் கொடுப்பார்கள்.

இந்த மாதிரி ஏற்பாட்டில் சில நன்மைகள் உண்டாகின்றன. மாஜிஸ்ட்ரேட் பையனுக்குத் தெளிவான புத்தியும், ந்யாய அன்யாயம் இன்னதென்று அறியும் சக்தியும் ஏற்படுகின்றன. பையன்கள் தாங்கள் போலீஸ்காரர்களா யிருப்பதனுலேயே இஷ்டப்படி செய்யக்கூடாதென்பதையறிந்து கொள்ளுகிறுர்கள். உபாத்யாயர்களுக்கு தங்களுக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளை தண்டிக்கும் ச்ரமம் குறைகிறது. பையன்களுக்கு தங்களைத் தாங்களே ராஜாங்கம்போல் ஆண்டு அடக்கிவரவும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் பழக்கம் ஏற்படுகிறது.

### To Square a Number Ending in 5.

**5-ல் முடியும் எண்ணின் சதுரம் கண்டுபிடிக்க.**—5-ல் முடியும் எண்ணைச் சதுரம் செய்தால் வரும் எண் 25-ல் முடியும். ஆகவே 5-ல் முடியும் எண்ணில் 5-க்கு பதிலாக 25-ஐப்போட்டுக் கொள்ளவும். பிறகு, 5-க்கு முன் எண்ணை அதைவிட உயர்ந்த அடுத்த எண்ணுல் பெருக்கி 25-க்கு முன்னுல் எழுதிக்கொள்ளவும். விடை சரியாயிருக்கும்.

$$75 = (7 \times 8)\ 25 = 5625$$
$$95 = (9 \times 10)\ 25 = 9025$$
$$115 = (11 \times 12)\ 25 = 13225$$

### A City on Piles.

**ஸ்தம்பங்களின் மேல் கட்டப்பட்ட நகரம்.**—சிங்கப்பூருக்குக் கிழக்கே போர்னியோ என்றொரு தீவு இருக்கிறது. அந்தத் தீவில் ப்ரூனி என்றொரு சிறு ராஜ்யமிருக்கிறது. அந்த ராஜ்யத்தின் முக்ய பட்டணமாகிய ப்ரூனி யென்பது லிம்பாங் என்னும் நதி மேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்தில் தெருக்களெல்லாம் வாய்க்கால்களே. அதோடுகூட கட்டிடங்கள் எல்லாம் ஜலத்தில் கெடாத ஒருவகைப் பனையின் அடிமரங்களை பூமியில் நிறுத்தி அவைகளில் கட்டப்பட்டவைகள்.

## LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Milk for Babies.

**குழந்தைகளுக்குப் பால்**—ஒருவயஸுக்குள்பட்ட குழந்தைகளுக்கு முலைப்பால் கொடுக்கமுடியாமல் இதர பால்வகைகள் கொடுக்கவேண்டி யிருந்தால் அவைகளை அப்படியே ஸ்வயமாகக் கொடுக்கக்கூடாது. முதல்மாஸத்தில் இரண்டு தேயிலைக் கரண்டிபாலுடன் 2½ தேயிலைக்கரண்டி பார்லிக்கஞ்சியைக்கலந்து கொடுக்கவேண்டும். இரண்டாவது மாஸத்தில் இரண்டையும் ஸம அளவில் சேர்த்துக்கொடுக்கலாம். ஒவ்வொன்றிலும் 3-தேயிலைக்கரண்டியளவு சேர்க்கவேண்டும். மூன்றாவது மாஸத்தில் 5 தேயிலைக்கரண்டி பாலோடு 4 தேயிலைக்கரண்டி பார்லிக்கஞ்சியைச் சேர்த்துக் கொடுக்கவேண்டும். இந்த அளவு தேகஸௌக்யமுள்ள குழந்தைகளுக்காகும்.

பார்லிக்கஞ்சிசெய்யும் விதம் பின்வருமாறு. 2 தேயிலைக்கரண்டி பார்லிமாவில் ஒரு 'சிமிட்டா' உப்புப் போட்டு ஜலம்விட்டுப்பிசைந்து நெகிழ்பதத்தில் எடுத்து, பட்டணம்படியால் கால்படிஜலத்தில் கரைத்து, அதை மோர்வடிகட்டும் தகரத்தில் வடிகட்டியெடுத்து ஒரு எனமல் பாத்ரத்தில்விட்டு கால்மணிநேரம் கொதிக்கவிடவும். அது ஆறினபிறகு அதன் மேல்பாகத்தில் ஏடுபோல்வருவதை யெடுத் தெறிந்துவிட்டுப் பிறகு உபயோகிக்கவும்.

பல்முளைக்காத குழந்தைகளுக்கு பாலைத்தவிர வேறு ஆகாரம் ஒன்றும் கொடுக்கக்கூடாது. பால் 95 டிக்ரி சூடுள்ளதாக இருக்கவேண்டும். குழந்தை பால்குடிக்கும் குப்பியை (பாட்டில்) எப்போதும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இரண்டு குப்பி வைத்துக் கொள்வது நல்லது. ஒன்று உபயோகத்திலிருக்கும் போது இன்னொன்றை போரிக் ஆஸிட்கலந்த குளிர்ந்த ஜலத்தில் போட்டுவைத்திருப்பது நல்லது.

### Turmeric.

**மஞ்சள்.**—ஸாதாரண மஞ்சளைச் சூர்ணம்செய்து சிறிது சுண்ணாம்பு கலந்து சுளுக்கு, நசுங்கிப்போன அங்கம், நோயுள்ள புண்கள் இவைகளின் மேல் தடவி, கம்பளி அல்லது ஸல்லாத்துணியைப்போட்டு கட்டி வைப்பது நல்லது. ஸாதாரணமாய் கண்ணோய்கள் உண்டானபோது இதைக் கஷாயமிட்டு, சுத்தமாய் வடிக்கட்டி நேத்ரங்களை அலம்பி வந்தால் நோய் குணமாவதுண்டு. மஞ்சளை சிறிதளவு பாலில் போட்டுக் காய்ச்சி, சர்க்கரையும் சேர்த்து, ஜலதோஷத்தில் உபயோகிப்பது வடதேசத்தில் பொதுவான வழக்கம்; அப்படிச் செய்வதால் சிறந்த குணம் உண்டாவதாகவும் தெரியவருகிறது. பீநஸரோகத்தில், இதன் கஷாயத்தை நஸ்யமாக உபயோகித்து வருவது நல்லது. இதன் சூர்ணத்தை நெய்யிலாவது, சோற்றுக் கற்றாழையின் ரஸத்திலாவது கலந்து உட்கொண்டால் இருமல் குணமாகும். ஒரு தோலா மஞ்சள் சூர்ணமும், ½ தோலா மிளகுப்பொடியும் பாலில் சேர்த்து சுடச்சுட அதைப் பானம்பண்ணினால், ஜலதோஷத்தினால் நேரிடும் ஜ்வரம் நின்றுவிடும். மஞ்சளுடைய புஷ்பத்தை அரைத்து, தழுதணை அல்லது படர்தேமல்களுக்கும், சொறி சிரங்குகளுக்கும் போடலாம்.—

வைத்திய கலாநிதி.

### Pulses Flour.

**பருப்பு பொடி.**—உளுத்தம் பருப்பு அரையாழாக்கு; துவரம்பருப்பு மூன்றுழாக்கு; கடலைப்பருப்பு இரண்டாழாக்கு—இம்மூன்றையும் தனித் தனியாக வாணலியிற்போட்டு சிவந்து வாஸனை வருகிறமட்டும் வறுத்து எடுத்துக்கொள்ளவேண்டும். அரைக்கால் பலம் மிளகாய், முக்காற்பலம் உப்பு—இவற்றையும் வெவ்வேறாக வறுத்துக்கொண்டு, மேற்படி பருப்புகளுடன் சேர்த்துக்கலந்து கொஞ்சங் கொஞ்சமாய் இயந்திரத்தில்போட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும். இந்தப் பொடியில் கொஞ்சம் சாதத்திலிட்டு நெய்விட்டுக் கொண்டு சாப்பிடலாம். ப்ரியமானவர்கள் எலுமிச்சம் பழரஸத்தையும் பிழிந்து கொள்வதுண்டு.—விச்வகர்மன்.

### Covering Food Vessels.

**ஆகாரப் பாத்ரங்களை மூடிவைத்தல்.**—மலையாளம் ஜில்லா சௌகாட்டில் ஒரு நாயர் ஸ்த்ரீ சமையல் பாத்ரங்களை மூடிவைக்காத பிசகினால் ஒரு பானையில் பல்லி இனத்தைச் சேர்ந்த ஒரு விஷஜந்து விழுந்து இறந்துபோக அதன்விஷம் சாப்பாட்டில் கலந்திருந்தது. அதை அறியாமல் அந்த ஸ்திரீயும், அவள் புருஷனும் இரண்டு குழந்தைகளும் அந்த ஆகாரத்தை சாப்பிட்டு இறந்துபோனார்களாம். ஒவ்வொரு ஸ்த்ரீயும் சமையலானதை மூடிவைப்பதில் ரொம்ப கவனமாக இருக்கவேண்டும்.



## INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indians in Canada.

**கனடாவில் இந்தியர்கள்.**—அமெரிக்காவின் ஒரு பாகமாகிய கனடாதேசத்துக்கு இந்தியர்கள் முதன் முதலாக 1905-ம் வர்ஷம்போய்க் குடியேற ஆரம்பித்தார்கள். முதல்வர்ஷத்தில் 6000 இந்தியர்கள் அந்த தேசத்தில் போய்க் குடியேறினார்கள். ஆனால் இப்போது 4500 இந்தியர்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள், கனடாவின் மேற்கு மாகாணமாகிய ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் விசேஷமாய் வஸித்து வருகிறார்கள். அவர்களில் மூன்று பேர்கள் தவிர மற்ற எல்லாரும் ஆண்களே. அந்த மூன்று ஸ்த்ரீகளும் குடியேறுவதற்கு தயாவிஷயமாக கனடா கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்தார்கள். அங்குள்ள இந்தியர்களில் நூற்றுக்கு 90 பேர்கள் ஸீக்கியர்கள். அவர்கள் தொழில் சாலைகளில் கூலியாள்களாகவும், விவஸாயிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய விடாமுயற்சியாலும், ஊக்கத்தாலும் பொருள் ஸம்பாதித்து, பத்து வர்ஷ காலத்துக்குள்ளாக 2¼ கோடி ரூபாய் முதலுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியர்கள் கனடாவில் குடியேறுவதால் அங்கேயுள்ள வெள்ளைக்காரக் கூலியாள்களுக்குக் கஷ்டம் ஏற்படுமென்று சில கனடா வாஸிகள் நினைத்து, இந்தியர்கள் குடியேறுவதைத் தடுக்க சட்டம் செய்ய வேண்டுமென்று முயற்சி செய்து வந்தார்கள். 1910-ம் வர்ஷத்தில் ஆச்யாவாஸிகளின் குடியேற்ற விஷயமாக ஒரு சட்டம் செய்யப்பட்டது. கனடாவுக்குக் குடியேற வருகின்றவர்கள் தங்களுடைய ஸொந்த தேசத்திலிருந்து நடுவில் தங்காமல் ஒரே டிக்கட்டாக வைத்துக்கொண்டு நேர் ப்ரயாணமாக வரவேண்டு மென்றும், ஒவ்வொரு ப்ரயாணியும் கையில் 600 ரூபாய் வைத்திருக்கவேண்டு மென்றும் அந்தச் சட்டத்தில் விதித்தார்கள். இந்தச் சட்டம் சீனாவாஸிகளையும் ஜப்பானியர்களையும் பாதிக்கிறதில்லை. ஏனென்றால் அவர்களுடைய தேசத்திலிருந்து நேராகக் கனடாவுக்குப் போகக் கப்பல் கம்பெனிகள் இருக்கின்றன. இந்தியாவிலிருந்து கனடாவுக்கு நடுவில் தங்காமல் ப்ரயாணம் செய்வதற்கேற்றதாக கப்பல் போக்குவரத்துக் கிடையாது. இதனால் இந்தியர் கனடாவில் குடியேறுவது முடிவதில்லை மேலும் சீனா ஜப்பான் தேசங்களுக்கும் கனடாவுக்கும் ஏற்பட்டிருககும் உடன்படிக்கைகளால் சீனர்களும் ஜப்பானியர்களும் குடியேறுவதற்கு தடையேற் படுவதில்லையாம். வர்ஷந்தோறும் 400 ஜப்பானியர்கள் கனடாவில் குடியேறுகிறார்கள். இவர்கள் ஆளுக்கு 200 ரூபாய் கையில் ரொக்கமாகவோ அல்லது பத்ரங்களாகவோ வைத்திருந்தால் போதுமாம். சீனர்களோ தலைக்கு 1500 ரூபாய் வீதம் வரி கட்டினால், எத்தனைபேர்கள் வேண்டுமென்றாலும் கனடாவில் குடியேறலாம். சீனர்களும் ஜப்பானியர்களும் தங்கள் மனைவி மக்களையும் தங்களுடன் அழைத்துக் கொண்டுபோகலாமாம். இந்தியர்களோ தங்கள் மனைவி மக்களை அழைத்துக்கொண்டு போகமுடியாது.

இவ்விதம் குடியேற்ற நாடுகள் இந்தியர்கள் குடியேற்றத்தைத் தடுக்க சட்டங்கள் செய்வதால் வேறு விதங்களிலும் கெடுதல்கள் ஏற்படுகின்றன. குடியேற்ற நாடுகளைப் பார்த்து, போர்த்துகலுக்கு ஸொந்தமான கிழக்கு ஆப்ரிக்கா கவர்ன்மெண்டார், அமெரிக்கா ஐக்யமாகாண கவர்ன்மெண்டார் முதலியவர்கள் இந்தியர்கள் அந்த தேசங்களில் குடியேறுவதைத் தடுப்பதோடு, ரொம்ப ஹீனமான நிபந்தனைகளும் ஏற்படுத்துகிறார்களாம்.

சென்ற ஸெப்டம்பர் மாஸம் 8-ந்தேதி கூடிய இம்பீரியல் லெஜ்ஸ்லெடிவ் கௌன்ஸிலில் வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ், ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள் குடியேறுவது விஷயமாய் அவைகளோடு பரஸ்பர ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி அந்தந்த கவர்ன்மெண்டுகளோடு பேச்சுகள் ஆரம்பிக்க வேண்டுமென்றும், சில காலமாக குடியேற்ற நாடுகள், இந்தியா கவர்ன்மெண்டின் விருப்பத்துக்கு இணங்கிப்போக ஸம்மதப்படுவதாய்த் தெரிய வருகிறதென்றும் சொன்னார். மேலும் இந்த யுத்தத்தால் குடியேற்ற நாடுகள் இந்தியர்கள் விஷயத்தில் அதிக அனுதாபம் காட்டி வருவதாகவும் தோன்றுகிறது. இவைகளால் கூடிய சீக்ரம் குடியேற்ற விஷயம் திருப்திகரமாக முடிவு பெறுமென்று எதிர்பார்க்கலாம்.

### Emigration from South India.

**தென்னிந்தியர்கள் வெளிநாட்டுக்குப் போவது.**—சென்ற 1913-ம் வர்ஷத்தில் தென்னிந்தியாவி லிருந்து 1,17,783 இந்தியர்கள் பினங்கு, சிங்கப்பூர், மலேநாடுகள் முதலியவைகளுக்குப் போனார்கள்; 1,90,059 பேர்கள் லங்கைக்குப்போனார்கள். 1,30,725 பேர் பர்மாவுக்குப் போனார்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Clever Dog.

**ஒரு ஸாமர்த்தியமுள்ள நாய்.**—யுத்தகளத்தில் காயமடைந்தவர்களை தூக்கிக்கொண்டுவந்து சிகித்ஸைகள் செய்வதற்கு சில ஜனங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களோடு, இந்தவேலைகளுக்கு உதவியாக நாய்களும் இருக்கின்றன. இந்த நாய்கள் காயம்பட்டவர்களுக்குப் பலவிதங்களில் உபகாரம் செய்கின்றனவாம். ஒரு ஸோல்ஜர் ஒரு சண்டையில் காயமடைந்து கீழே வீழ்ந்துவிட்டான். குண்டின் துண்டு ஒன்றால் அவனது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. ஒரு சிறுகுண்டு அவனது தாடையைத்துளைத்துப் போயிருந்தது. அவனது தலையில் ஒரு பெரிய வெட்டுக்காயம் இருந்தது. போதாக்குறைக்கு அவன்மேல் இறந்துபோன ஸோல்ஜர்கள் வீழ்ந்து கிடந்தார்கள். அவன் முக்கால்வாசியும் பிணக்குவியலால் மூடப்பட்டிருந்தான். அவன் என்ன செய்வது என்று ஏங்கியிருக்கையில் ஒருநாய் அவனது முகத்தை நக்கிற்று. அது வைத்ய டிபார்ட்மெண்டைச் சேர்ந்ததென்று அறிந்து, அவன் அதனிடம் 'நீ போய் எனது தோழர்களை யழைத்துவா' என்றான். உடனே அந்த நாய் அவன் சொல்வதை யறிந்து காம்புக்குப் போய் குலைத்து காயம்பட்டவர்களைக் கொண்டுவர ஏற்பட்டவர்களுடைய சட்டைகளைப்பிடித்துஇழுத்தது. அதன்மேல் அவர்கள் நாயின் பின்னோடு காயம்பட்ட ஸோல்ஜர் இருந்த இடத்துக்குப்போய் அவனை வைத்ய சாலைக்கு எடுத்துப்போனார்கள். அந்த நாயின் உதவி இல்லாவிட்டால் அவன் பாடு கஷ்டந்தான்.

### Counting the Stars.

**நக்ஷத்ரங்களை எண்ணினது.**—ஷுஜாடௌலா என்னும் நவாப் வங்காளத்தை யாண்டுகொண்டிருந்தபோது, அவர் ஒருநாள் வானத்தில் நக்ஷத்ரங்கள் எத்தனையிருக்கின்றனவென்று அறிய எண்ணி தமது அரண்மனை மௌல்விகளை (மகமதிய வித்வான்கள்) கூப்பிட்டு, நக்ஷத்ரங்களை எண்ணச்சொன்னார். ஆனால் அவர்கள் தங்களால் எண்ணமுடியாதென்றும், ஹிந்து வித்வான்களால் முடியுமென்றும் சொன்னார்கள். ஏனென்றால் மகமதியர்கள் இறந்தபின் புதைக்கப்படுவதால், அவர்களுக்கு பூமிக்குக் கீழேயிருக்கும் விஷயங்களை அறியத்தான் சக்தியுண்டேயொழிய வானத்திலுள்ளவைகளை அறிய சக்தியில்லையென்றும், ஹிந்துக்களை இறந்தபின் எரித்துவிடுவதால் அவர்கள் புகையோடு மேலே போவதால் அவர்களுக்கு மேலுலகத்து விஷயங்களையறிய சக்தியுண்டென்றும் சொன்னார்கள். இந்த ந்யாயத்தை ஏற்றுக்கொண்ட நவாப் அப்போது நதியாவில் தமக்குக் கீழ்ப்பட்டு ஆண்டுகொண்டிருந்த க்ருஷ்ண சந்த்ர மகாராஜா என்னும் ஒரு சிற்றரசருக்கு ஒரு கடிதம் அனுப்பி, அதில், நக்ஷத்ரங்களை எண்ணக்கூடிய தேர்ந்த ஹிந்து பண்டிதர்களை அனுப்பவேண்டுமென்றும், அப்படி அனுப்பாவிட்டால் அவருடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வதோடு அவரையும் ஜெயிலில் போட்டுவிடுவதாகவும் தெரிவித்திருந்தார். இதைப்பார்த்த க்ருஷ்ண சந்த்ரர் இன்னசெய்வதென்று தெரியாமல் விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில், அவருடைய விகடகவி தானே நவாப்பினிடம் போய் நக்ஷத்ரங்களை எண்ணிக் கொடுத்துவருவதாகச் சொல்லி, தமது அரசரிடம் விடைபெற்று நவாப்பினிடம் வந்து ஒரு வாரகாலமும், சில ரீம் கடுதாசிகளும் கொடுத்தால் நக்ஷத்ரங்களை எண்ணிச் சொல்வதாகச் சொன்னான். நவாப் அதற்கு ஸம்மதப்படவே, விகடகவி கடுதாசிகளை வாங்கிக்கொண்டு போனான். ஒருவாரம் சென்றதும் நவாப் ஒரு பெரிய தர்பார் நடத்தி, அதில் விகடகவியை தனது நக்ஷத்ரக்கணக்குகளைத் தெரிவிக்கச் சொன்னார். விகடகவி பற்பல ரூபங்களும் கணக்குகளும் குறித்திருந்த கடுதாசிகளை ஸபையில் விரித்துப்போட்டுக் கொண்டு, ஆகாயத்திலுள்ள நக்ஷத்ரங்களின் மொத்த ஸங்க்யை 31,74,45,993-என்றான். ஸபையிலிருந்த சில மௌல்விகள் கணக்குகள் ஸரியில்லை யென்று வாதித்தார்கள். அதற்கு விகடகவி, "வேண்டுமானால் நீங்களே நக்ஷத்ரங்களை எண்ணிப்பாருங்கள். ஸரியாயிருக்கும். இல்லாவிட்டால் என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்" என்றான்.

### The Reason.

**காரணம்.**—ஓர் பெரியவர்.—ஏ பையா! இங்கே வா. (பையன் வருகிறான்).—உனக்கு இன்னம் கல்யாணமாகவில்லையே.

பையன்.—இல்லையே!

பெரியவர்.—ஏன் ஆகவில்லை! (யோசிக்கிறார்) உன் பெயரென்ன?

பையன்.—என் பெயர் கணபதி.

பெரியவர்.—சரிதான். அதுதான்கல்யாண மாகவில்லை என்னடா அப்பா என்று யோசித்தேன்.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### Making Trees Bear Fruit.

**மரங்களைக் காய்க்கச் செய்தல்.**—வடக்கே பஞ்சாபிலுள்ள ஒரு ஊரில் ஒரு கனவானுக்கு ஒரு தோட்டமிருக்கிறது. அதில் பல மாமரங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று மாத்ரம் பத்துவருஷகாலமாக ஒன்றும் காய்ப்பதில்லை. அவருடைய ஸ்நேகிதர் ஒருவர் அந்த மரம் காய்ப்பதற்குப் பின்வருமாறு செய்யவேண்டுமென்று சொன்னாராம். மரத்துக்குடையவர் ஒரு கூலியாளுடன் மரத்தடியில் போய், மரம் காய்க்கவில்லை யாதலால் அது தோட்டத்திலிருப்பது ப்ரயோஜனமில்லையென்று சொல்லி, மரத்தைக் கோடரியால் வெட்டித் தள்ளும்படி கூலியாளுக்கு உத்தரவிடவேண்டும். கூலியாளும் மரத்தில் இரண்டொரு வெட்டுக்கள் வெட்டவேண்டும். உடனே இன்னொருவர் அங்கே வந்து மரத்துக்காகப் பரிந்து பேசுபவர் போல, ஒருவர்ஷ காலம் வெட்டாமலிருக்கவேண்டும், அப்பொழுதும் காய்க்காவிட்டால் மரத்தை வெட்டிவிடலாமென்று சொல்லித் தடுக்கவேண்டும். மரத்தின் ஸொந்தக்காரர், "உம்முடைய சிபார்சுக்காக அதை இப்போது வெட்டாமல் விடுகிறேன். அடுத்த வர்ஷம் அது காய்க்காவிட்டால் அதை நிச்சயம் வெட்டிவிடுவேன்." என்று சொல்லவேண்டும். மேல் சொன்ன கனவான் சென்ற டிஸம்பர் மாஸம் இந்தப்படியே செய்தார். பிறகு ஜனவரி மாஸத்தில் ஒருநாள் தோட்டத்திற்குப்போய் ஷை மரத்தண்டை நின்று மரத்தோடு பேசும் பாவனையாய், மரத்தைக்கூப்பிட்டு, இந்த வர்ஷம் காய்க்காவிட்டால் அதை வெட்டிவிடுவாரென்றும், அந்த விஷயம் மரத்துக்கு ஞாபகமிருக்கட்டுமென்றும் சொன்னார். அடுத்த மார்ச்சு மீ அந்த மரம் பூத்துக் காய்க்க ஆரம்பித்ததாம். மரம் காய்த்ததற்கு அவர் செய்த முறைதான் காரணமா அல்லது வேறு எந்தக் காரணத்தாலாவது அது காய்த்ததா என்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் காய்க்காத பழமரங்கள் உள்ளவர்கள் இப்படிச் செய்துபார்ப்பது நல்லது என மேற்சொன்ன கனவான் தெரிவிக்கிறார்.

### Virilism in a Woman.

**ஒரு ஸ்த்ரீயினிடம் புருஷத்தன்மை.**—ப்ரான்ஸில் ஒரு ஸ்த்ரீக்கு முகமும் கைகளும், புருஷர்களுடைய முகம், கைகள்போல விருக்கின்றனவாம். அவளுக்கு இப்போது வயஸு 62-ஆகிறதாம். அவளுடைய 50-வது வயஸில், அவளுக்கு ஒரு வ்யாதி உண்டாகி, தேகத்தில் சில அங்கங்கள் மாறுபாடு அடையலாயினவாம். அதுமுதல் அவளுடைய புஜங்களிலும், துடையிலுமுள்ள தசைநார்கள் மனிதர்களுக்கு உள்ளவைபோல பருமனாகவும், பலமாகவும் ஆய்விட்டனவாம். அவளுடைய தோள்கள் விசாலமாக ஆயிருக்கின்றனவாம். அவள் தலையில் மயிர் உதிர்ந்துபோனதோடு அவளுக்கு தாடி வளர்ந்து இடுப்புவரையில் தொங்குகிறதாம். அவள் ரொம்பதேக பலமுள்ளவளாயிருக்கிறாளாம். வைத்யர்கள் இந்த மாறுபாட்டிற்குக்காரணம் சொல்ல முடியவில்லை.

### Shell Explosions and Loss of Senses.

**குண்டுகள் வெடிப்பதும் இந்த்ரியங்கள் கெட்டுப் போவதும்.**—ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் சில ஸோல்ஜர்களுக்கு அருகில் குண்டுகள் வெடிப்பதால் ருசியறியும் சக்தியும், வாஸனையறியும் சக்தியும் போய்விட்டனவாம். ஸாதாரணமாக குண்டுகளின் சத்தத்தால் காதுகேட்காமல் போவதுண்டென்று சொல்வது ஸகஜம்; ஆனால் இவர்களுக்கு காது நன்றாய்க் கேட்கிறதாம். அவர்களுக்கு தேகத்தில் குண்டுகளால் காயமொன்று மேற்படவில்லையாம். ஒரு ஸோல்ஜருக்கு ஒரு மூக்கில் உணர்ச்சியற்றுப் போயிருக்கிறதாம். மேலும் அவனுக்கு சர்க்கரை, க்வினைன், த்ராவகம், உப்பு இவைகளின் ருசி தெரியவேயில்லையாம்.

### Praying for Rain.

**மழை பெய்வதற்காக பூஜை செய்தல்.**—ஹிந்துக்கள், மழைபெய்யாவிட்டால் மகாபாரதத்தில் விராடபர்வம் வாசித்து அர்த்தம் சொல்லச் செய்து கேட்பது வழக்கம். விராடபர்வம் வாசித்தால் மழைபெய்யுமென்பது ஹிந்துக்களில் அநேகருடைய கொள்கை. அரபியர்கள் மழை பெய்யாவிட்டால் எருக்கஞ் செடியையும் சாலா என்னும் செடியையும் பசுவின் வாலில்கட்டி அதற்கு நெருப்புவைத்து பசுக்களை மலைகளுக்கு ஓட்டிக்கொண்டுபோய் கடவுளைத் தொழுவார்களாம்.

### Four Children in a Birth.

**ஒரு ப்ரஸவத்தில் நான்கு குழந்தைகள்.**—திருவாங்கூரைச் சேர்ந்த கருநாகப்பள்ளி யென்னும் ஊரில் ஒரு ஸ்த்ரீ ஒரே தடவையில் 4-குழந்தைகளைப் பெற்றாளாம். அவற்றில் இரண்டு பிறந்த சிறிது நேரத்துக்கெல்லாம் இறந்து போயின. மற்ற இரண்டும் ஸௌக்யமாயிருக்கின்றனவாம். ஆனால் இவை யிரண்டும் ரொம்ப கனமாக இருக்கின்றனவாம்.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Alleged Misconduct of A European Lady.

**ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீயின் விபரீத நடத்தை.**— ஸமீபத்தில் வட இந்தியாவில் ஒரு வக்கீல் இரண்டாவது வகுப்பு வண்டியில் ப்ரயாணம் செய்துகொண்டிருந்தார். முதலில் அவர் ஏறியிருந்த அறையில் வேறொரு ப்ரயாணியும் இல்லை. சிறிது நேரத்துக்கெல்லாம், ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீ அந்த அறையில் ஏறி உட்கார்ந்தாள். வக்கீல் ஒரு கேஸில் கிடைத்த தமது பணத்தை தாம் உட்கார்ந்திருந்த ஆஸனத்தில் வைத்து எண்ணிக்கொண்டிருந்தார். பணத்தாசையால் ஷை ஸ்த்ரீ வண்டி புறப்பட்டவுடன் அந்தப் பணத்தைத் தனக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அபாயச் சங்கிலியை யிழுத்து வண்டியை நிறுத்தி தன்னை மானபங்கம் செய்ய முயன்றதாகக் கேஸ் கொண்டுவருவதாகவும் பயமுறுத்தினாள். வக்கீல் அதற்கு யாதொரு பதிலும் சொல்லவில்லை. அந்த ஸ்த்ரீ மறுபடியும் பயமுறுத்தினாள். வக்கீல் ஒன்றும் கவனியாதவர்போல் சும்மாவிருந்தார். பிறகு அந்த ஐரோப்பிய ஸ்த்ரீ எழுந்து அபாயச் சங்கிலியண்டைபோனாள். உடனே வக்கீல் அவளிடம்போய் ஏன் சங்கிலியை இழுக்கவேண்டுமென்றும், தமக்குக் காது கேட்காததால், இன்னவேண்டுமென்பதை எழுதிக்கொடுத்தால், வேண்டிய உதவியைச் செய்வதாகவும், சொன்னார். அவள் உடனே தான் முதலில் சொன்னவற்றை ஒரு கடிதத்தில் எழுதிக்கொடுத்தாள். வக்கீல் அதை வாங்கிக்கொண்டு, அவள்மேல் கேஸ் கொண்டுவருவதாகச் சொல்லி, அடுத்த ஸ்டேஷனில் போலீஸாரிடம் விஷயங்களைத் தெரிவித்தார். கேஸ் நடந்துகொண்டிருக்கிறதென்று தெரிகிறது.

சில வர்ஷங்களுக்கு முன்னால் கல்கத்தாவுக்குப் பக்கத்தில் இதுபோன்ற ஸம்பவம் ஒன்று நடந்ததாம். பாபு மோஹிம் சந்த்ர பால் என்ற டெபுடி மாஜிஸ்ட்ரேட் கல்கத்தாவுக்குப் பக்கத்திலுள்ள ப்ராஸட் என்னும் ஊரில் வேலையாயிருந்தார். அவர் ஒரு சனிக்கிழமையன்றையதினம் சம்பளம் வாங்கிக்கொண்டு, கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போனார். டம் டம் ஸ்டேஷனுக்கு வரும்வரையில் அவர் ஏறியிருந்த வண்டியில் அவரைத் தவிர வேறொரு ப்ரயாணியும் இல்லை. டம் டம் ஸ்டேஷனில் ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீ அந்த அறையில் ஏறினாள். அவளைக் கண்டதும், அவள் பக்கத்திலிருக்க இஷ்டப்படாமல் டெபுடி கலெக்டர் அறையின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்துகொண்டார். ஆனால் அந்த ஸ்த்ரீ அவரண்டைபோய் உட்கார்ந்து பேச ஆரம்பித்தாள். பேச்சில் அவரிடம் பணமிருப்பது வெளியாயிற்று. வண்டி டம் டம் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டதும், அவர் தம்மிடமுள்ள பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும் கொடுக்காவிட்டால் மானபங்கம் செய்யமுயன்றதாக கேஸ் கொண்டு வருவதாகவும் பயமுறுத்தினாள். ஸ்த்ரீ வெள்ளைக்காரியாக விருப்பதால்தாம் டெபுடி மாஜிஸ்ட்ரேட்டா யிருந்தாலும் தமதுசொல் அம்பலமேறாதென்று தீர்மானித்து மானக்கேடான கேஸில் அகப்பட்டுக்கொள்ள பயந்து பணத்தைக் கொடுத்துவிட்டார். அதுமுதல் அவர் ரெயில்வண்டியில் தனியாக ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீயுடன் ப்ரயாணம் செய்வதில்லையென்று ப்ரதிக்ஞைசெய்து கொண்டாராம்.

### The "Emden."

"எம்டன்":— "எம்டன்" கப்பல் சில மாஸங்களுக்கு முன் சென்னையைப் பீரங்கியா தாக்கிய பின் சில தினங்கள்வரை அதன் இருப்பிடமே தெரியாதிருந்தது. இப்பொழுது அதன் விவரம் வெளியாகிறது.

அது லட்சத் தீவுகளுள் ஒன்றான டிகோகார்ஸியா என்னும் சிறு தீவில் போய்ப் பல நாள் தங்கியிருந்ததாம். அங்கேயுள்ளவர்களுக்கு யுத்தத்தைப்பற்றி ஒன்றுந் தெரியாதாம். அதனால் ஸுமார் இருபது இங்க்லீஷ்காரர் உள்பட அத்தீவாரும் அத்தீவிலுள்ள அதிகாரிகளும் "எம்டனுக்கு" உதவிகள் செய்தார்களாம். அங்கு "எம்டன்" தனது கரிக்கப்பல்களை அடிக்கடி ஸந்தித்துக்கொள்வது வழக்கமாம். "எம்டன்" கப்பல்காரர்கள் அங்கே ஸாவகாசமாக அதை சுத்தஞ் செய்துகொண்டார்கள். அதற்கு அங்குள்ள இங்க்லீஷ் அதிகாரிகளும் உதவி செய்தார்களாம். அதற்குப் பதிலாக "எம்டனின்" எஞ்ஜினீர் ஷை தீவிலுள்ள மோட்டார்ப் படகைப் பழுது பார்த்துக் கொடுத்தாராம். அங்குள்ள தேங்காய்த் தொழிற் சாலையின் மானேஜரான ஒரு வயது சென்ற ஆங்கிலேயர் "எம்டன்" கப்பலுக்கு உல்லாஸமாக விஜயஞ்செய்தாராம். காப்டன் வான் முல்லரும் மற்றக்கப்பல் அதிகாரிகளும் அவரை



ரொம்பமரியாதையாக வரவேற்றார்களாம். ஷை ஆங்கிலேயர் எம்டன் தலைவரான காப்டன்வான் முல்லரை நோக்கித் "தாங்கள் இந்தத் தீவுக்கு விஜயஞ் செய்த நோக்கம் என்ன" வென்று கேட்டார். காப்டன் முல்லர் "நான் ப்ரிட்டிஷ் கடற்படையுடன் கடற்காவல் புரிந்து வருகிறேன்" என்று விகடமாகப் பதில் சொன்னாராம். "எம்டன்" கப்பல் மீதும், தமக்கு யுத்தத்தைப்பற்றி ஒரு வார்த்தையும் கூறாத "எம்டன்" காப்டன் மீதும் ஷை வயது சென்ற கிழவர் மிகுந்த ஸந்தோஷ மடைந்தாராம். யுத்தந் தொடங்கி 6-மாஸகாலமாகியும் அந்தத் தீவாருக்கு அவ்விவரம் தெரியாமல் போனது ஓர் ஆச்சரியமேயாம். இருபதாவது நூற்றாண்டில் இத்தகைய ஸம்பவங்கள் நிகழ்வதும் ஆச்சரியமே.—லோகோபகாரி.

### New Warships for Russia.

**ரஷ்யாவுக்கு புது யுத்தக்கப்பல்கள்.**—பால்டிக் கடலில் உள்ள ரஷ்ய கப்பல்படைக்கு இன்னும் எட்டு யுத்தக்கப்பல்கள் சேருமென்று தெரிகிறது. இவைகள் சென்ற 1911-ம் வர்ஷத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்டன. இன்னும் சில மாஸங்களில் அவைகள் கட்டிமுடியும். அவைகளில் நான்கு கப்பல்கள் ட்ரெட்னட்டுகளாகும். ஒவ்வொன்றும் 23,026 டன் நிறையுள்ளது. மணிக்கு 26½-மைல் வேகம் போகும். ஒவ்வொன்றிலும் பன்னிரண்டங்குல பீரங்கிகள் 12-ம், 4. 7-அங்குல பீரங்கிகள் 16-ம் இருக்கின்றன.

மற்ற நான்கு கப்பல்களும் யுத்தக்ரூஸர்கள். இவைகளைப்போல் பெரிய யுத்த க்ரூஸர்கள் வேறு எந்த தேசத்துக்கும் கிடையாதாம். இவைகளில் ஒவ்வொன்றும் 32 200 டன் கனமுள்ளது, மணிக்கு 32¼ மைல் போகும். ஒவ்வொன்றிலும் பதினான்கு அங்குல பீரங்கிகள் 12-ம், 5. 1-அங்குல பீரங்கிகள் 14-ம் இருக்கும்.

### The British King at the Front.

**போர்முனையில் ப்ரிட்டிஷ் அரசர்.**—ப்ரிட்டிஷ் அரசர் போர்க்களத்திற்குப் போகக்கூடாது என்று இங்லண்டில் ஒரு சட்டம் இருக்கிறது. அது 1743-ம் வர்ஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. அந்த வர்ஷம் இரண்டாவது ஜார்ஜ் அரசர் ஐரோப்பாவுக்குப் போய் அநேக சண்டைகளில் யுத்தம் செய்து, டெட்டிஞ்சன் என்னும் இடத்தில் நடந்த ஒரு சண்டையில் தமது திறமையாலும், தைர்யத்தாலும் அபாயத்திலிருந்த தமது ஸைன்யத்தைக் காப்பாற்றினார். அதற்குப் பிறகு ஷை சட்டம் செய்யப்பட்டது.

### The Mahomedan Population.

**மகம்மதியர்களின் ஜனத்தொகை.** — தற்போது ப்ரிட்டிஷ் ராஜ்யத்திலுள்ள மகம்மதியர்களின் ஜனத்தொகை 9,62,37,000. துருக்கிய ராஜ்யத்தில் 1,80,00,000 மகம்மதியர்கள் இருக்கிறார்கள். ப்ரெஞ்ச் ராஜ்யத்தில் 1,20,00,000 மகம்மதியர்கள் இருக்கிறார்கள்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

#### ஐரோப்பாவில் யுத்தம்.

#### ப்ரான்ஸிலும் ஜெர்மனியிலும் யுத்தம்.

**மேமீ 1-தேதி.**

ஜெர்மானியர்கள் யிப்ரஸுக்குப் பக்கத்திலுள்ள 60-வது குன்றை பலமாகத் தாக்கினார்கள். இந்த ஸமயத்தில் அவர்கள் விஷமுள்ள வாயுக்களை உண்டாக்கும் குழாய்களையும் குண்டுகளையும் ப்ரயோகித்தார்களாம்.

**7-தேதி.**

யிப்ரஸுக்கு வடக்கே ஜெர்மானியர்கள் பிடித்த இடங்களை ப்ரெஞ்சுக்காரர்கள் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

**12-தேதி.**

யிப்ரஸுக்கு கிழக்கில் ஜெர்மானியர்கள் பின் தள்ளப்பட்டார்கள். ஆராஸுக்கு வடக்கே ப்ரெஞ்ச் துருப்புகள் முன்சென்றுகொண்டிருக்கின்றன.

**14-தேதி.**

ப்ரெஞ்ச் துருப்புகள் ஆராஸுக்குக் கிழக்கிலுள்ள காரன்ஸி யென்னும் ஊரையும் அதற்கு வடக்கிலுள்ள சில ஊர்களையும் பிடித்திருக்கின்றன.

**17-தேதி.**

ப்ரிட்டிஷ் துருப்புகள் லாபாஸ்ஸிக்கு வடக்கே ஜெர்மன் துருப்புகளைத் தோற்கடித்து ஒரு மைல் முன்சென்றிருக்கின்றன.

**18-தேதி.**

ஹெட்லாஸ் என்னும் இடத்துக்குப் பக்கத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன்சென்றிருக்கின்றன.

22-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் லாபாஸ்ஸியின் வடக்கில் சற்று முன்சென்றிருக்கின்றன.

சென்ற ஆறு மாஸகாலமாய் ஜெர்மானியர் பிடித்துக்கொண்டிருந்த லார்ட் குன்றை ப்ரெஞ்ச் துருப்புகள் பிடித்துக்கொண்டன.

24-தேதி.

பெஸ்டெபர்ட் என்னுமிடத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் முன் சென்று கொண்டிருக்கின்றன.

28-தேதி.

18 ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் ஜெர்மனியிலுள்ள லட்விக் ஷேவன் என்னும் ஊரிலுள்ள யுத்த மருந்துகள் செய்யும் தொழில் சாலையைத் தாக்கின. அநேக விடங்களில் தீப்பிடித்துக் கொண்டன.

ஆர்ராஸுக்குப் பக்கத்தில் ப்ரெஞ்சுத்துருப்புகளுக்கும் ஜெர்மானியர்களுக்கும் பலமாக யுத்தம் நடக்கிறது.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா-ஜெர்மனிக்கும் யுத்தம்.

மே மாஸம் 4-தேதி.

நிடாநதியின் கீழ்பாகத்திலிருந்து கார்ப்பேதியின் மலைவரையில் யுத்தம் பலமாக நடக்கிறது.

ரஷ்யர்கள் மாகுல்கா என்னும் குன்றைப் பிடித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ரஷ்யர்கள் மேற்கு ப்ரஷயாவில் கோய் ப்ரதேசத்தில் துருக்கியர்களைத் தோற்கடித்தார்கள். துருக்கியர்களுக்கு 3500 பேர் சேதமாம்.

7-தேதி.

விஸ்டுலா நதிக்கும் கார்ப்பேதியன் மலைக்கும் மத்தியில் யுத்தம் பலமாயிருக்கிறது.

ஆஸ்ட்ரியர்கள் டார்னோ பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்களாம்.

8-தேதி.

விஸ்டுலா நதிக்கும் கார்ப்பேதியன் மலைக்கும் நடுவில் யுத்தம் வர வர வலுத்துக்கொண்டிருக்கிறது. அநேக ஜெர்மன் ஆர்மி கோர்கள் யுத்தத்துக்கு வந்திருக்கின்றனவாம்.

11-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் க்ராஸ்னோ ப்ரதேசத்தில் விஸ்லோகா நதியைத்தாண்டி முன்சென்றிருக்கிறார்கள். ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் 35 மைல் முன் சென்றிருக்கின்றன. அவைகள் ப்ரிஸிமிஸலுக்கு 40 மைல் தூரத்திலிருக்கின்றன. பால்டிக் மாகாணங்களின்மேல் படையெடுத்துப்போன ஜெர்மன் துருப்புகள் ஸெஜ்னிஸ்டேஷனுக்குப் பக்கத்தில் தோற்கடிக்கப்பட்டன.

12-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மானிய துருப்புகள் விஸ்டுலா நதிக்கும் கார்ப்பேதியன் மலைக்கும் நடுவில் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. ஸ்ட்ரிஸ் சேபா என்னும் ப்ரதேசத்தில ரஷ்யர்கள் பின்வாங்கியிருக்கிறார்கள்.

ரஷ்யாவுக்கு ஸொந்தமான பால்டிக் மாகாணங்களில் ஜெர்மானியர்கள் பிடித்துள்ள ஷாவ்லி என்னும் பட்டணத்தை ரஷ்யர்கள் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

13-தேதி.

ஷாவ்லியிலிருந்த ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் பின்னுக்குத் துரத்திவிட்டார்கள்.

14-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ரிஸிமிஸல் கோட்டைக்கு 17 மைல் தூரத்திலுள்ள டாபியக்கோ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் நீஸ்டர் நதி தீரத்தில் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

15-தேதி.

ஜெர்மன் துருப்புகள் ப்ரிஸிமிஸலுக்குப் பக்கத்தில் வந்துவிட்டன. ரஷ்யர்கள் பின் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

19-தேதி.

ஜெர்மானியர்களும் ஆஸ்ட்ரியர்களும் ப்ரஸிமிஸலின் மேற்குக் கோட்டைகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பால்டிக் நாடுகளில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை பின் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

20-தேதி.

விஸ்டுலா நதியின் இடதுகரையில் ஒபாடௌ என்னுமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தாக்கித் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஜாரஸ்லாவுக்கு வடக்கில் ஆஸ்ட்ரியர்கள் சில விடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

21-தேதி.

ரஷ்யர்கள் பலமாக எதிர்த்தும் ஜெர்மனியர்கள் ஸான் நதியை ஓரிடத்தில் கடந்து போயிருக்கிறார்கள்.



ஜெர்மானியர்கள் ப்ரிஸிமிஸல் கோட்டைகளை பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ஸான் நதியும் விஸ்டுலா நதியும் சேருமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைப் பின் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் ஸ்ட்ரிஜ்ப்ரதேசத்தில் சில விடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

தற்போது ஜெர்மனிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் காலிஷ்யாவில் 34 ஆர்மி கோர்கள் இருக்கின்றனவென்றும் ப்ரிஸிமிஸல் கோட்டைகளைப் பிடிக்க 17 ஆர்மிகோர்களும், ஸான்நதிச் சண்டைக்கு 10 ஆர்மிகோர்களும், மேற்கூறிய இரண்டு ஸைன்யங்களினுடைய பக்கவாட்டில் இருக்க 8 ஆர்மிகோர்களும் உபயோகிப்பார்களென்றும் ஒரு ராணுவ நிருபர் தெரிவிக்கிறார்.

22-தேதி.

பால்டிக் மாகாணங்களில் ரஷ்யர்கள் ஷாவாலிக்கு மேற்கே ஒரு க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

காலிஷ்யாவில் நடக்கும் யுத்தம் இன்னமும் ஒரு கக்ஷிக்கும் தோல்வி, வெற்றி ஏற்படாமல் கடுமையாகவே நடந்து வருகிறது.

ப்ரிஸிமிஸலுக்கு 10 மைல் கிழக்கேயுள்ள ஹாஸ்ஸாக்கௌ என்னுமிடத்தில் யுத்தம் கடுமையாய் நடந்து வருகிறது.

26-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் ப்ரஸிமிஸலுக்கு வடக்கேயுள்ள 5-பலமான கோட்டைகளைப் பிடித்திருக்கின்றன.

ஸான் நதியின் இரண்டு கரையிலும் கொடிய யுத்தம் நடந்துவருகிறது.

28-தேதி.

ப்ரஸிமிஸலைச் சுற்றிலும் கொடிய யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. ப்ரஸிமிஸலுக்கு வடகிழக்கேயுள்ள நியனௌர்ஸ் என்றும் ஊரைத்தாங்கள் பிடித்திருக்கிறதாக ஆஸ்ட்ரியர்கள் சொல்லுகிறார்கள்.

## துருக்கியோடு யுத்தம்.

மே மாஸம் 5-தேதி.

காலிப்பொலி தீபகற்பத்தில் இறங்கியுள்ள நேசத் துருப்புகளை துருக்கியர்கள் பலமாகத் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள். ரஷ்ய கப்பல் படை பாஸ்பாரஸ் ஜலஸந்திக் கோட்டைகளைத் தாக்கிக் கொண்டிருக்கிறது.

7-தேதி.

நேசக் கப்பல் படைகள் காலிபொலி தீபகல்பத்தின் குறுகிய பாகத்திலுள்ள நாகரா என்னும் கோட்டையைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

12-தேதி.

ப்ரிட்டிஷாருக்கு ஸொந்தமான ‘கோலியத்’ என்னும் யுத்தக்கப்பல் டார்டனல்ஸ் ஜல ஸந்தியில் டார்ப்பிடோக் குழாய்களால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று. ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன்கப்பல் டார்டனல்ஸ் ஜலஸந்தி வழியாக மார்மோரா கடலுக்குப் போய் இரண்டு பீரங்கிப் படகுகளையும் ஒரு பெரிய துருப்புக்கப்பலையும் மூழ்கடித்து விட்டது.

16-தேதி.

காகஸஸிலுள்ள ரஷ்ய துருப்புகள் துருக்கி எல்லை ப்ரதேசத்துக்கு வந்து வான் பட்டணத்தை நோக்கி யுத்தம் செய்து கொண்டிருக்கின்றன.

18-தேதி.

டார்டனல்ஸ் ஜலஸந்தியின் வடகரையாகிய காலிபொலி தீபகல்பத்தில் இங்க்லீஷ்-ப்ரெஞ்ச் துருப்புகள் துருக்கியர்களைத் துரத்திக்கொண்டிருக்கின்றன.

19-தேதி.

காலிபொலி தீபகல்பத்திலுள்ள இங்க்லீஷ் ப்ரெஞ்ச் துருப்புகள் துருக்கியர்களை பற்பல விடங்களில் தோற்கடித்து முன்சென்று கொண்டிருக்கின்றன.

நேற்றையதினமும் இன்றும், துருக்கியர்கள் காலிப்பொலி தீபகல்பத்திலுள்ள ப்ரிட்டிஷ் துருப்புகளை பலமாகத் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள்.

26-தேதி.

டார்டனல்ஸில் ப்ரிட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச் துருப்புகளும் முன்சென்று கொண்டிருக்கின்றன.

27-தேதி.

‘ட்ரையம்ப்’ என்னும் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல் டார்டனல்ஸில் ஸப்மரீனால் மூழ்கடிக்கப் பட்டது.

28-தேதி.

காலிப் பொலி தீபகல்பத்தின் பக்கத்தில் இருந்த ‘மஜெஸ்டிக்’ என்னும் யுத்தக்கப்பல் ஒரு விரோதி ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப் போயிற்று.

ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் மார்மோராக் கடல் வழியாக கான்ஸ்டாண்டி நோபிள் வரையில் போய் துருக்கிய ஸைன்யங் கொண்டுபோன ஒரு கப்பலை மூழ்கடித்து மார்மோராக் கடலில் போய்க் கொண்டிருந்த யுத்தஸாமான் கப்பலையும் மூழ்கடித்து விட்டது.

## இட்டலி செய்யும் யுத்தம்.

மேமாஸம் 22-தேதி.

இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் யுத்தம் நேரிடும் போலிருக்கிறது. யுத்தம் நேரிட்டால் இட்டாலியன் கவர்ன்மெண்டுக்கு சில விசேஷமான அதிகாரங் கொடுக்க வேண்டுமென்று இட்டலியின் பார்லிமெண்டில் ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள்.

ஆஸ்ட்ரிய ராணுவ அதிகாரிகள் இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் ரெயில்வே தந்திப் போக்குவரத்துகளை நிறுத்திவிட்டார்கள்.

24-தேதி.

இட்டலியின் கவர்ன்மெண்டார் தரைப்படை கப்பல் படைகளை சேகரிக்க உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

இட்டலி ஆஸ்ட்ரியாவின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ஆஸ்ட்ரிய ஏரோப்ளேன்கள் வெனீஸில் குண்டுகள் போட்டுத்தாக்கின. அட்ரியாடிக் கடல் கரையோரமாகவுள்ள சில விடங்களையும் ஆஸ்ட்ரிய ஏரோப்ளேன்கள் தாக்கின. ஆஸ்ட்ரியாவுக்கும் இட்டலிக்கும் எல்லையாகவுள்ள ப்ரதேசங்களில் சிறு சண்டைகள் நடந்தன. இட்டாலியர்கள் ஆஸ்ட்ரிய தீவாகிய போர்ட்டோ பூஸோ என்னும் தீவின்மேல் படையெடுத்துப்போய் சில ஆஸ்ட்ரியக்கப்பல்களை மூழ்கடித்தார்கள்.

26-தேதி.

இட்டாலியர்கள் வட கிழக்கு எல்லைநாட்டைக் கடந்து ஆஸ்ட்ரியாவுக்குள் ப்ரவேசித்து 5-க்ராமங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

இட்டாலியர்கள் இட்டலியின் வட கிழக்கு எல்லை நாட்டிலுள்ள கார்னிக் ஆல்ஸ் என்னும் மலையில் உள்ள ஆஸ்ட்ரியாவுக்கு ஸொந்தமான ஒரு கணவாயைப் பிடித்திருக்கிறார்கள்.

28-தேதி.

இட்டலியின் அரசர் கடல் படைக்கும் தரைப் படைக்கும் தலைமை ஸ்தானத்தை வகித்துக் கொண்டிருக்கிறார். அவர் தரைப்படை யிருக்கும் யுத்தகளத்துக்குப் போயிருக்கிறார்.

இட்டாலியர்கள் ட்ரீஸ்ட் வளைகுடாவில் உள்ள க்ராடோ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

29-தேதி.

இட்டாலியர்கள் ட்ரெண்டினோவை முற்றுகைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## பொதுவிஷயங்கள்.

மேமீ 7-தேதி.

'மெயோரி' என்னும் டிஸ்ட்ராயர் கப்பல் பெல்ஜியன் கடல்கரையோரமாக இருக்கையில் ஒரு கடல் வெடிகுண்டில் தாக்கி மூழ்கிப்போயிற்று.

8-தேதி.

குனார்ட் கப்பல் கம்பெனியைச்சேர்ந்த 'லூஸிடானியா' என்னும் கப்பல் அயர்லண்ட் கரையோரமாக ஒரு ஜெர்மன் ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

'லூஸிடானியா' கப்பலில் மூழ்கிப்போனவர்களும் காணமல் போனவர்களும் சேர்ந்து மொத்தம் 1457 பேராம். (அதிலிருந்த மொத்தம் ஜனங்கள் 2160.)

13-தேதி.

ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவின் முக்யபட்டணமாகிய விண்டக் என்னும் ஊரை ஜெனரல் போதா (தென்னாப்ரிக்காத் துருப்புகளின் தலைவர்) பிடித்துக் கொண்டிருக்கிறார்.

17-தேதி

ஒரு ஜெர்மன் ஸெப்பலின் இங்க்லண்டின் தென் கிழக்கு கரையோரமாகப் பறந்துவந்து ராம்ஸ்கேட் என்னும் ஊரில் வெடிகுண்டுகள் போட்டது. ப்ரிட்டிஷ் ஏரோப்ளேன்கள் அதைத் துரத்திவிட்டன.

20-தேதி.

இதுவரையில் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் மூழ்கிப்போனபோது 1282 ஜெர்மானியர்களை கடலுக்கு இரையாகாமல் காப்பாற்றி யிருக்கின்றன. ஜெர்மன் யுத்தக்கப்பல்களோ ஒரு ப்ரிட்டிஷ் கப்பல்வீரரையும் கடல் விபத்திலிருந்து காப்பாற்றவில்லையாம்.

## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

4-தேதி.

**சென்னை மாகாண கான்பரென்ஸ்.**-இந்தக் கான்பரென்ஸ் இன்றையதினம் நெல்லூரில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் பி. என். சர்மா ப்ரெஸிடெண்டாக இருந்து சென்னை ராஜதானியின் பொருளாதார நிலைமை, மாகாண ஸ்வய ஆக்ஷி, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மாகாண வரவு செலவு, க்ராம பஞ்சாயத்துகள், பப்ளிக் ஸர்விஸ் கமிஷன், முதலியவைகளைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

5-தேதி.

**சென்னை மாகாண கான்பரென்ஸ்.** — இன்று மாகாண கான்பரென்ஸ் நெல்லூரில் இரண்டாவது நாள்கூடி நிலத்தீர்வையை சாச்வதமாக்க வேண்டுமென்றும், திண்டுக்கல் பாலக்காட்டு ரெயில்வே போடுவதை பின்னி கம்பெனியாருக்குக் கொடுத்ததைப்பற்றி கான்பரென்ஸ் ஆக்ஷேபிக்கிறதென்றும் தீர்மானங்கள் செய்தது.

**ஸநாதன தர்ம கான்பரென்ஸ்.**— இது இன்றைய தினம் நெல்லூரில் கூடிற்று. கும்பகோணம் ப்ரொபஸர் கே. ஸுந்தரராமய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து வைதீக தர்மத்தைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

6-தேதி.

**சென்னை மாகாண கான்பரென்ஸ்.**—இன்று சென்னை மாகாணகான்பரென்ஸ் கூடி கவர்ன்மெண்டார் கைத்தொழில்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றும், பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு ரெவின்யூ தாலூக்காவுக்கும் ஒரு தாலுக்கா போர்டு ஸ்தாபிக்க வேண்டுமென்றும், முனிஸிபாலிட்டிகள், லோக்கல் போர்டுகள், ஆகிய இவைகளுக்கு ப்ரெஸிடெண்டுகளைத் தெரிந்தெடுக்க ஸ்வதந்த்ரம் ஏற்படவேண்டுமென்றும், சென்னை ராஜதானியில் இன்னும் சில யூனிவர் ஸிட்டிகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், பி. எ. வகுப்பு வரையில் தேசபாஷைகளைக் கட்டாயபாடமாக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்தது. வேறு சில தீர்மானங்களும் செய்யப்பட்டன.



**சென்னை மாகாண ஸோஷல் கான்பரென்ஸ்.**— இந்தக் கான்பரென்ஸ் இன்று கூடி பெண்கல்வி அபிவ்ருத்தி, விதவாவிவாகம், கல்யாண வயஸு, ஜாதிக்கலப்பு, மதுவிலக்கு, தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தல், முதலிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்தது.

**ஸநாதனதர்ம ஸம்ரக்ஷண ஸபை.**—இது இன்று நெல்லூரில் கூடி, ஹிந்துக்கள் சாஸ்த்ர ஆசாரணையைக் கைவிடக் கூடாதென்றும், ருதுவானபின் விவாகம், த்விஜர்கள் விதவாவிவாகம், மூன்றுநாள்களுக்கு மேற்பட்ட கடல் ப்ரயாணம் செய்தல் ஆகிய இவை கூடாதென்றும் தீர்மானங்கள் செய்தது.

7-தேதி.

**சென்னை மாகாண கைத்தொழில் கான்பரென்ஸ்.**- இது இன்று நெல்லூரில் கூடிற்று. மிஸ்டர் என். பட்டாபிராம ராவ் ப்ரெஸிடெண்டாக இருந்தார். கைத்தொழில்களுக்கு ஸர்க்கார் உதவி, விவஸாயத்தில் சீர்திருந்திய முறைகளை அனுஷ்டிப்பது, பழமரங்கள் வளர்ப்பது, ஸ்வதேசக் கைத்தொழில்களை ஆதரிப்பது, நெசவுத்தொழில் முதலிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

8-தேதி.

**மாகாணக் கல்விக் கான்பரென்ஸ்.**—மாகாணக் கல்வி கான்பரென்ஸில் ஸெகண்டரி ஸ்கூல் லீவிங் ஸெர்டிபிகேட், க்ராண்ட் இன் எய்ட்கோடு, ஸெகண்டரி பாடசாலைகளில் தேசபாஷைகளின் மூலமாகக் கற்பித்தல், உபாத்யாயர்களின் சம்பளம், எலிமெண்டரிபடிப்பை கட்டாயப் படிப்பாகச்செய்தல், முதலிய பலவிஷயங்களைப்பற்றி தீர்மானங்கள் செய்யப்பட்டன.

17-தேதி.

**'பெங்காலி' ஆஸ்பத்திரிக்கப்பல்.**—வங்காளவாஸிகள் பணம்சேகரித்துக் கட்டிக்கொடுத்த 'பெங்காலி' ஆஸ்பத்திரிக்கப்பல் சென்னைக்கு ஸுமார் 260 மைல் கிழக்கே மூழ்கிப்போயிற்று. ஜனச்சேதமில்லை.

21 தேதி.

**ஸர் சங்கரன் நாயர்.**—வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் வித்யா இலாகா மெம்பராக இருக்கும் ஸர்ஹார்கோர்ட் பட்லருடைய ஸ்தானத்தில், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்த ஸர்சங்கரன் நாயர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## SEASON

## கால ஸ்திதி

### Rainfall.

**மழை.**—1915ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1915ஹு ஜூன்மீ 9உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 1·95 | 3·73 |
| வால்டேர் | 6·38 | 4·37 |
| காக்கிநாடா | 2·44 | 2·50 |
| மஸூலிப்பட்டணம் | 1·05 | 3·06 |
| நெல்லூர் | 0·08 | 1·40 |
| மதராஸ் | 0·88 | 2·27 |
| கூடலூர் | 1·22 | 1·76 |
| நாகப்பட்டணம் | 0·89 | 2·81 |
| பாம்பன் | 5·18 | 2·83 |
| கொழும்பு | 16·32 | 24·22 |
| திருவனந்தபுரம் | 12·48 | 18·07 |
| கொச்சி | 24·72 | 24·63 |
| கள்ளிக்கோட்டை | 12·94 | 21·18 |
| மங்களூர் | 3·81 | 17·60 |
| மெர்க்காரா | 9·09 | 13·62 |
| ஐதராபாத் | 1·36 | 3·07 |
| பல்லாரி | 6·63 | 3·68 |
| கர்நூல் | 1·11 | 2·33 |
| கடப்பை | 1·07 | 3·02 |
| ஹாஸ்ஸான் | 4·78 | 8·55 |
| பெங்களூர் | 8·48 | 7·13 |
| கொடைக்கானல் | 6·95 | 11.57 |
| உதகமண்டலம் | 6·86 | 12·82 |
| கோயம்புத்தூர் | 3·78 | 4·55 |
| வேலூர் | 3·69 | 4·75 |
| சேலம் | 6·01 | 8·20 |
| திருச்சிநாப்பள்ளி | 3·94 | 5·58 |
| புதுக்கோட்டை | 7·26 | 4·11 |
| மதுரை | 3·49 | 5·68 |
| திருநெல்வேலி | 3·13 | 4·69 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | உதய லக்ன | அஹஸ் | தெலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்லம்-1090 பஸலி-1324-25 இங்கி-1915 ஜூன்-ஜூலைமீ } 49-ராக்ஷஸ௵ ஆனிமீ { ஜ்யேஷ்ட-ஆஷாட, உத்தராயண-கிரீஷ்மருது ஹிஜரி-1333௵, ஷாபான்-ரம்ஜான்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | |
| சி | 5 25 | 31 35 | 1 | 15 | 1 | செ | த்ரி 60-0, புன 41-35, வ்ரு 6-35, தை 29-7, தி 7-51, மிதுனசூன்யதி, ரம்பாவிரதம், கரிநாள், த்ரிதினஸ்பிருக், விருத்யாங்கம் |
| சி | 15 | 35 | 2 | 16 | 2 | பு | த்ரி 1-8, பூச 46-44, துரு 7-22, வணி 32-54, தி 3-24, மிதுனசதுர்த்தீதி, சதுர்த்தீவிரதம், உமாவதாரம் |
| சிஅ | 5 4 | 35 | 3 | 17 | 3 | வி | சது 4-24, ஆயி 50-48, வ்யா 7-31, பவ 35-36, தி 21-3 |
| மசி | 4 54 | 35 | 4 | 18 | 4 | வெ | பஞ் 6-29, மக 53-30, ஹர் 6-42, கவு 36-59, தி 22-20, ஷஷ்ட்யுபவாஸம் |
| சிஉ | ஸ்ரீ ரிஷப 43 | 35 | ஸ்ரீ ஆஷாட 5 | 19 | ஸ்ரீ ஆனி 5 | ச | ஷஷ்஠ 7-7, பூர 54-40, வஜ் 4-46, கர 36-51, தி 14-4 |
| அ | 33 | 36 | 6 | 20 | 6 | ஞா | ஸப் 6-10, உத் 54-9, ஸித் 1-35, வ்ய 57-0, பத் 34-51, தி 12-42, வ்யசிரா, மித்ரஸப்தமீ, கரிநாள் |
| சிபி | 22 | 36 | 7 | 21 | 7 | தி | அஷ் 3-28, ஹ 59-6, ஹஸ் 51-57, வரீ 51-3, பால 31 29, தி 14-34, அவம |
| சி | 12 | 36 | 8 | 22 | 8 | செ | நச 53-8, சித் 48-9, பரி 43-46, தை 26-18, தி 10-51, கடகாயனம் 29-50 |
| சி | 4 2 | 36 | 9 | 23 | 9 | பு | ஏகா 45-50, சுவா 42-58, சிவ 35-21, வணி 19-38, தி 1-3, ரா 24-0, ஸர்வ-நிர்ஜல-ஏகாதசீ |
| சி | 3 50 | 36 | 10 | 24 | 10 | வி | த்வா 37-28, விசா 36-42, சித் 26-0, பவ 11-46, ரா 14-0, ப்ரதோஷாந்தம் 37-17, இராமா |
| சிம | 40 | 35 | 11 | 25 | 11 | வெ | த்ர 28-29, அனு 29-47, சாத் 16-1, கவு 3-2, கர 53-51, ரா 10-33, த்ரயோதசீதி, ப்ரதோஷம், திவாமா |
| சி | 30 | 35 | 12 | 26 | 12 | ச | சசி 19-13, கேட் 22-36, சுப 5-44, சுப் 55-28, பத் 44-36, ரா 8-36, திதித்வயம் [தம் |
| அசி | 20 | 35 | 13 | 27 | 13 | ஞா | ○ 10-6, மூல 15-37, ப்ரா 45-38, பால 35-44, தி 12-4, ரா 5-4, ப்ரதமாதி, இஷ்டி, மன்வாதி, வடஸாவித்ரீவிர |
| உம | 3 9 | 35 | 14 | 28 | 14 | தி | பர 1-36, த்வி 54-8, பூரா 9-18, மா 36-31, தை 27-43, தி 27-25, ஜ்யேஷ்டபகுளம், அவம |
| பிசி | 2 59 | 35 | 15 | 29 | 15 | செ | த்ரி 48-4, உரா 45, வை 28-33, வணி 20-55, தி 13-22, வைசிரா, சிரவணஉபவாஸம் |
| சிபிசி | 48 | 34 | 16 | 30 | 16 | பு | சது 43-43, சிர 0-25, அவி 58-21, விஷ் 21-53, பவ 15-40, தி 9-57, ஸங்கடசதுர்த்தீ |
| மசி | 38 | 34 | 17 | 1 | 17 | வி | பஞ் 41-15, சத 58-17, ப்ரீ 16-44, கவு 12-15, தி 16-8 |
| சி | 27 | 34 | 18 | 2 | 18 | வெ | ஷஷ் 40-47, பூட் 60-0, ஆயு 13-7, கர 10-47, தி 14-36 |
| மசி | 17 | 33 | 19 | 3 | 19 | ச | ஸப் 42-14, பூட் 0-10, ஸவு 11-6, பத் 11-17, தி 25-27 |
| அ | 2 6 | 33 | 20 | ஸ்ரீ ஜூலை 4 | 20 | ஞா | அஷ் 45-25, உட் 3-53, சோ 10-31, பால 13-38, ரா 4-47, காலாஷ்டமீ |
| சி | 1 56 | 33 | 21 | 5 | 21 | தி | நவ 49-59, ரே 9-10, அதி 11-10, தை 17-33 |
| சி | 46 | 33 | 22 | 6 | 22 | செ | தச 55-27, அசு 15-41, சுக 12-45, வணி 22-38, தி 4-32, ரா 10-55 |
| சிஅ | 35 | 32 | 23 | 7 | 23 | பு | ஏகா 60-0, பர 22-48, திரு 14-55, பவ 28-24, ரா 24-59, கிருத்திகை, த்ரிதினஸ்பிருக் |
| மஉ | 25 | 32 | 24 | 8 | 24 | வி | ஏகா 1-25, கிரு 30-15, சூல 17-21, கவு 34-25, சே 0-31, ஸர்வ-ஜீவவார-ஏகாதசீ, கூர்மஜயந்தீ, இராமா |
| மசி | 14 | 31 | 25 | 9 | 25 | வெ | த்வா 7-24, ரோ 37-35, கண் 19-44, கர 40-17, தி 15-11, ரா 21-44, ப்ரதோஷம், திவாமா |
| சி | 1 4 | 31 | 26 | 10 | 26 | ச | த்ர 13-5, மிரு 44-31, வ்ரு 21-50, பத் 45-44, மாஸசிவராத்ரி |
| சி | 0 53 | 30 | 27 | 11 | 27 | ஞா | சசி 18-13, திரு 50-47, துரு 23-30, சது 50-30, தி 7-48, ஸர்வஅமாதிதி [டி புஷ்களா அல்பயம் |
| அசி | 43 | 29 | 28 | 12 | 28 | தி | ● 22-35, புன 56-17, வ்யா 24-33, கிம் 54-26, தி 23-39, அதிதி, பிண்டபிதிரு, ப்ரதக்ஷிணம், போதாயனஇஷ் |
| சி | 32 | 29 | 29 | 13 | 29 | செ | பர 26-4, பூச 60-0, ஹர் 24-55, பால 57-27, தி 17-55, ப்ரதமாதி, ஆஷாடசுத்த, இஷ்டி, சந்திரதர்சனம் |
| சி | 22 | 28 | 1 | 14 | 30 | பு | த்வி 28-33, பூச 0-51, வஜ் 24-32, தை 59-25, ரா-3-24 |
| சிஅ | 0 12 | 31 28 | 2 | 15 | 31 | வி | த்ரி 29-59, ஆயி 4-24, ஸித் 23-18, கர 29-59, ரா 4-19, மிதுனத்ரிதீயாதிதி |

| | | | |
|---|---|---|---|
| குரு | செ | சு | ர-பு ச |
| | 11-ரிஷ செ 20-மிது-சு | | கே |
| ரா | | | |
| | | | |



THE INDIAN ARMY IN ACTION AT FESTUBERT; NAIK DARWAN SING NEGI WINNING V.C.
இந்திய சைன்யம் யுத்தம்செய்வது. நாயக் தர்வான் ஸிங் நேகி பெஸ்டுபர்ட் என்னுமிடத்தில் யுத்தம்செய்து விக்டோரியா கிராஸ் விருது பெற்றது.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸஹு, ஆனிமீ, JUNE, 1915. — ஸஞ்சிகை 10. No. 10.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| $\frac{1}{10}$ do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 | |
| ½ ,, | ,, ,, | 2 8 0 | |
| ¼ ,, | ,, ,, | 1 4 0 | |
| $\frac{1}{10}$ ,, | ,, ,, | 1 0 0 | |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாஸியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நேயர்கள் அறியவேண்டும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

ஜநபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸஹு ஆனிமீ. [ஸஞ்சிகை 10.

# THE COST OF THE WAR.
## யுத்தத்தின் செலவு.

சில நாள்களுக்கு முன்னால் எட்கர் க்ராமண்ட் என்பவர் இது ஸம்பந்தமாக ராயல் ஸ்டாடிஸ்டிகல் ஸங்கத்தில் ஒரு வ்யாஸம் வாசித்தார். அந்த வ்யாஸத்தில் யுத்தச்செலவை நான்கு வகையாக வகுத்திருக்கிறார்.

1. ஒவ்வொரு ராஜாங்கத்தாரும் தாங்கள் நேரிடச்செய்யும் செலவு, அதாவது யுத்தத்தில் சண்டைசெய்யும் போர்வீரர்களை போஷித்தல், அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள், வெடிமருந்துகள், வேறு சிப்பந்திகள் ஆகிய இவைகளுக்குப் பிடிக்கும் செலவு,

2. சேதமாகும் ஸொத்துக்களின் மதிப்பு,

3. உயிர்ச்சேதத்தின் பண ஈடு. அதாவது யுத்தத்தில் சேர்ந்து இறந்தும், பிற்பாடு வேலைக்கு லாயக்கில்லாமல் காயம்பட்டும் போகும் சிப்பாய்கள் ஒவ்வொருவரும் ஸாதாரணமாய் சண்டையில்லாவிட்டால் எவ்வளவு ஸம்பாதிப்பானோ அந்தத் தொகை வட்டியாகக் கிடைப்பதற்கு வேண்டிய முதல்,

4. வ்யாபாரம் கைத்தொழில் முதலியவைகள் நடக்காததால் உண்டாகும் நஷ்டங்கள்,

ஆக நான்குவிதமாகப் பிரித்திருக்கிறார். அந்த வ்யாஸத்தின் ஸாராம்சத்தை கீழே எழுதுகிறோம்.

### பெல்ஜியம்.

பெல்ஜியத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் 790½ கோடி இருக்குமென்றார். எப்படி யென்றால்,

| | ரூபாய் |
|---|---|
| ராஜாங்கத்தின் செலவு | 55½ கோடி |
| பொருள் சேதம் | 375 ,, |
| உயிர்ச்சேதத்தின் ஈடு | 60 ,, |
| வ்யாபார நஷ்டம் முதலியவை | 300 ,, |

### ப்ரான்ஸ்.

இதுவரையில் ப்ரான்ஸ் தேசத்தில் 40 லட்சம் ஸோல்ஜர்கள் கூட்டியிருக்கிறார்களென்று மதிப்பிடுகிறார்கள். இந்தத் தொகையில் 30 லட்சம் ஸோல்ஜர்கள் யுத்தகளத்தில் இருக்கிறார்களென்று நிச்சயிக்கிறார்கள். இவர்களது தீனிச்செலவு முதலியவை, ஆள் ஒன்றுக்கு 7 ஷில்லிங் 6 பென்ஸ் வீதம், நாள் ஒன்றுக்கு 1,500,000 பவுன் கணக்காகிறது. அதாவது இரண்டேகால் கோடி ரூபா யாகிறது. இது அல்லாத நஷ்டங்கள் ப்ரான்ஸ் தேசத்தில் அதிகம் உண்டு. 19 முதல் 50 ப்ராயம் வரையிலுள்ள ஆண்கள் யாவரும் கைத்தொழிலினின்றும் நீங்கி விட்டார்கள். இதனால் உண்டான நஷ்டம் 937½ கோடி ஆகிறது. யுத்தம் ஆரம்பித்தது முதல் ஐந்து மாதங்களில் ப்ரான்ஸ்தேசத்தின் அயல்நாட்டு வ்யாபாரம் அடியிற்கண்டபடி குறைந்துபோயிற்று:—இறக்குமதி-85,000,000 பவுன் குறைந்தது: ஏற்றுமதி 79,000,000 பவுன் குறைந்தது.

வருகிற ஜூலைமாதம் 13-ம் தேதிவரையில் ப்ரான்ஸ் தேசத்துக்கு ஏற்படும் சேதத்தை அடியில் கண்டபடி மதிப்பிடலாம்.

| | ரூபாய் |
|---|---|
| ராஜாங்கச் செலவு. | 829 கோடி 50 லட்சம் |
| பொருள் சேதம். | 240 கோடி |
| உயிர்ச்சேத ஈடு. | 522 கோடி |
| வ்யாபாரம் முதலியவை. | 937½ கோடி |
| ஆக மொத்தம். | 2529 கோடி |



### ரஷ்யா.

ரஷ்யாவில் கூட்டப்பட்ட ஸோல்ஜர்களின் தொகை 60,00,000 என்றும் இதில் 40 லட்சம் ஸோல்ஜர்கள் பல இடங்களில் யுத்தம் செய்கிறார்களென்றும் சொல்லலாம். ஜூலைமாதம் 31-ம் தேதிவரை ரஷ்யாதேசத்தின் நஷ்டம் அடியில் வருமாறு இருக்கும்.

| | ரூபாய் |
|---|---|
| ராஜாங்கச் செலவு | 900 கோடி |
| பொருட் சேதம். | 150 கோடி |
| உயிர்ச்சேத ஈடு. | 450 கோடி |
| வ்யாபாரச்சேதம் முதலியவை. | 600 கோடி |
| மொத்தம் | 2,100 கோடி |

### ஆஸ்ட்ரியா ஹங்கேரி.

ஆஸ்டரியாவின் சேனை மொத்தம் 35-லட்சம் என்று எண்ணலாம். ஜூலைமாத முடிவிற்குள்ளாக இன்னும் 5 லட்சம் ஸோல்ஜர்களை சேர்க்கலாம். இந்தத்தொகையில் 10-லட்சம் மனிதர்கள் இப்பொழுது கையிலில்லையென்று வைத்துக் கொள்ளலாம். இவர்களுடைய தீனிச்செலவு நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு ஆளுக்கும் 10-ஷில்லிங் பிடிக்கும். காலீஷ்யாவில் ரஷ்யா ப்ரவேசித்திருப்பதால் ஆஸ்ட்ரியாவுக்கு அதிக சேதமாவதுமன்றி, யுத்தச் செலவுக்குப் பணம் அகப்படுவதும் அதிக கஷ்டமாகும். ஜூலைமாதம் 31-ம் தேதிவரையில் உண்டாகும் நஷ்டத்தை அடியில் வருமாறு கணக்கிடலாம்.

| | ரூபாய். |
|---|---|
| ராஜாங்கச் செலவு. | 843 கோடி |
| பொருள் சேதம். | 150 கோடி |
| உயிர்ச்சேத ஈடு. | 360 கோடி |
| வ்யாபார முதலிய சேதம். | 900 கோடி |
| மொத்தச்சேதம் | 2253 கோடி |

### ஜெர்மனி.

சென்ற ஜனவரிமாதம் முடிவுவரை ஸுமார் 65-லட்சம் ஸோல்ஜர்கள் ஜெர்மெனியில் சேர்ந்திருக்கிறார்களென்று மிஸ்டர் க்ராமண்ட் உத்தேசிக்கிறார். இந்தத் தொகையில் 20-லட்சத்திற்கு மேலாக செத்தும், கைதுசெய்யப்பட்டும், வ்யாதியாயும் போயிருக்கலாம்.

இப்படி 65-லட்சம் ஆட்கள் நீங்குவதனாலுண்டாகும் கைத்தொழில் குறைவு இதுவரையில் சரித்ரத்தில் வாசித்திராததாகும். முதல் வர்ஷத்தில் ஜெர்மனிக்கு குறைந்தது 1012-கோடியே 50 லட்சம் ரூபாய் வ்யாபார முதலியவற்றால் ஏற்படும் சேதம் ஆகுமென்று தக்க காரணங்களைக் கொண்டு மிஸ்டர் க்ராமண்ட் உத்தேசிக்கிறார். சராசரியில் மேற்சொன்ன சேனையின் தீனிச் செலவு நாளொன்றுக்கு ஒரு ஆளுக்கு 9-ஷில்லிங் ஆகுமாம். இந்தச் சேனையின் ஸங்க்யை ஸுமார் 45-லட்சம் என்று வைத்துக்கொண்டால், அதன் செலவு நாளொன்றுக்கு 3 கோடி ரூபாய் பிடிக்கும். ஒரு வர்ஷத்துக்கு 1095 கோடி ரூபாய் ஆகும். இது தரைச்சேனைக் காயிற்று. கப்பல் சண்டை விஷயமாக ஒரு வர்ஷத்திற்கு குறைந்தது 75-கோடி ஆகும்.

தவிர, இவ்வளவு ஸோல்ஜர்களின் குடும்பங்களை ஆதரிப்பதற்கு முதல் வர்ஷத்திற்கு 132 கோடி ரூபாய் ஆகும். ராஜாங்கத்தார் நேரிடச்செய்யும் செலவு முதல் வர்ஷத்தில் 1407 கோடி ரூபாய் ஆகுமென்று மிஸ்டர் க்ராமண்ட் உத்தேசிக்கிறார். ஜெர்மனியின் விவஸாய மாஸூலின் மதிப்பு 975-கோடி ரூபாய். ஜெர்மனியின் அயல்நாட்டு வ்யாபாரமும் குறையும். இவைகளையெல்லாம் கணக்குப் பார்த்தால் ஜெர்மெனிக்கு ஒரு வர்ஷத்தில் உண்டாகும் நஷ்டம் பின் வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| ராஜாங்கத்தார் செலவு. | 1407 கோடி |
| விளைவும் கைத்தொழிலும் குறைவதால் ஏற்படும்சேதம். | 1437 கோடி |
| உயிர்ச்சேதத்தின்ஈடு | 1318½ கோடி |
| மொத்தம். | 4162½ கோடி |

க்ரேட் ப்ரிட்டன்.

பணமிதப்பையும், தேச வருமானத்தையும் உத்தேசிக்கையில், யுத்த ஆரம்பத்தில் க்ரேட் ப்ரிட்டன் மிகவும் ஸௌகர்யமான ஸ்திதியில் இருந்தது. சென்ற டிஸம்பர் மாதம் 31-ந்தேதி வரையில் யுத்தச் செலவு 267 கோடி ரூபா ஆயிற்று.

ஜனவரி முதல் தேதி முதல் ஜூலை முடிவு வரையில் நாளொன்று $3\frac{3}{4}$கோடி ரூ. வீதம், ஒரு வர்ஷம் (அதாவது) வருகிற ஜூலை முடிவு வரையில்) 1062கோடி ரூ. செலவு ஆகும். இருபது லட்சம் தொழிலாளிகள் தொழில் செய்யாமலிருந்து விட்டால் அதனுல் 300கோடி ரூ. நஷ்டமாகக் கூடும். ப்ரிட்டிஷ்காரரது அயல் நாட்டு வ்யாபாரம் எதிர் பார்த்ததைவிட அதிக நஷ்டமாகவில்லை. வருகிற ஜூலை மாதம் 31 தேதிவரை யுண்டாகக்கூடிய நஷ்டத்தின் கணக்கு பின்வருமாறு.

| | ரூபாய் |
|---|---|
| ராஜாங்கச் செலவு | 1062 கோடி |
| உயிர்ச்சேத ஈடு | 450 ,, |
| வ்யாபாரம் முதலிய நஷ்டம் | 375 ,, |
| ஆக மொத்த நஷ்டம். | 1887 ,, |

மேலே சொல்லப்பட்ட தொகை க்ரேட்ப்ரிட்டனின் ஐச்வரியத்தில் 14-ல் ஒரு பாகமும், ப்ரிட்டிஷ் ராஜ்யம் முழுமையின் ஐச்வர்யத்தில் இருபதில் ஒரு பாகமும், அதாவது க்ரேட் ப்ரிட்டனின் ஏழுமாத வருமானத்திற்கும், ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் நாலுமாத வருமானத்திற்கும் ஸமமாகிறது.

ஸாராம்சம்.

சண்டையில் சேர்ந்திருக்கும் தேசங்கள் யாவற்றினுடையவும் மொத்த நஷ்டம், வருகிற ஜூலை மாதம் முடிவு வரையில், 14,718 கோடி ரூபாய் ஆகுமாம்.

| ராஜாங்கம். | கவர்ன்மெண்ட் நேரிடச்செய்யும் செலவு. | பொருட் சேதம். | உயிர்ச் சேதத்தின் ஈடு. | விளைபொருள், வ்யாபாரக் குறைவு முதலிய நஷ்டம். | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பெல்ஜியம். கோடி ரூ. | 551½ | 375 | 60 | 300 | 790½ |
| ப்ரான்ஸ். ,, | 829½ | 240 | 522 | 937½ | 2529 |
| ரஷ்யா. ,, | 900 | 150 | 450 | 600 | 2100 |
| ப்ரிட்டிஷ் ராஜ்யம். ,, | 1062 | ... | 450 | 375 | 1887 |
| மொத்தம்... | 2847 | 765 | 1482 | 2212½ | 8303-10 லட் |
| ஆஸ்ட்ரியா. ,, | 843 | 150 | 360 | 900 | 2253 |
| ஜெர்மெனி. ,, | 1407 | ... | 1318½ | 1437 | 4162½ |
| மொத்தம்... | 2250 | 150 | 1678½ | 2337 | 6415½ |

ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தின் ஐச்வர்யமும் பெருமானமும் யுத்தத்தினுல் சிறிதும் குறைவுபடவில்லை. ஆதலால் இங்க்லீஷ்காரருக்கும் ஜெர்மனியாருக்கும் யுத்தம் நீடித்து நடக்குமானுல் பணத்தின் பலத்தைப்பற்றியமட்டில் இங்க்லீஷ்க்காருக்கே ஜயமாகுமென்பதைப்பற்றி ஸந்தேகமில்லை.



## INSTRUCTION THROUGH THE MEDIUM OF VERNACULARS.

## தேச பாஷைகள் மூலமாய்க் கல்வி கற்பிப்பது.

சிலகாலமாக பல வித்யாபிமானிகள் பாடசாலைகளில் கற்பிக்கும் பாடங்களை சில வகுப்புகள் வரையில் தேசபாஷையில் கற்பித்துவர ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிவருகிருர்கள்.

சென்ற வர்ஷம் ஏப்ரல் மாஸம் சென்னை சட்ட ஸபையில் ஆனரபிள் ராவ்பகதூர் நரஸிம்மேச்வர சர்மா, கவர்ன்மெண்ட் பாடசாலைகளிலும், கவர்ன்மெண்ட் உதவிபெற்ற பாடசாலைகளிலும் ஆறுவது பாரம் முடிய பாஷைப்பாடமல்லாத மற்ற பாடங்களை தேசபாஷைகள் மூலமாகக் கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானங்கொண்டு வந்தார். அப்போது கவர்ன்மெண்டாரும் சில உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களும் அந்த ப்ரேரணையை சில காரணங்களின் மேல் ஆக்ஷேபித்தார்கள். அந்தத் தீர்மானத்தை மிஸ்டர் சர்மா கடைசியில் வாபஸ் வாங்கிக் கொண்டார்.

சென்ற மார்ச்சு மாஸம் 17-தேதி கூடிய வைஸ்ராயின் சட்ட ஸபையில் சென்னைராஜதானியின் ப்ரதிநிதிகளில் ஒருவராகிய ஆனரபிள் மிஸ்டர் ராமராயனிங்கார் இதைப்பற்றி ஒரு ப்ரேரணை கொண்டுவந்தார். அதாவது, எல்லா ஸெகண்டரி ஸ்கூல்களிலும் இந்திய மாணவர்களுக்கு இங்க்லீஷை கட்டாயமாய்ப் படிக்கவேண்டிய இரண்டாவது பாஷைப்பாடமாக வைக்கவும், இதர பாடங்களை இந்திய தேசபாஷைகள் மூலமாகக் கற்பிக்கவும் கவர்னர் ஜெனரல் மாகாண கவர்ன்மெண்டுகளுடன் ஆலோசனை செய்து ஏற்பாடு செய்யவேண்டும் என்பதே.

சென்னை ராஜதானியைப் பொறுத்தமட்டில் இப்போதுள்ள முறை என்னவென்றல் 4-வது பாரம் வரையில் இங்க்லீஷ் பாடந்தவிர மற்ற சரித்ரம், சாஸ்த்ரம், கணிதம், பூகோளம் முதலிய பாடங்களை தேசபாஷைகள் மூலமாகக் கற்பிப்பதே. இவ்விதமுறையை அனுஷ்டிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஒரு ரூல் விதித்திருக்கிருர்கள். இதற்கு முன்னுல் 1-வது பாரம் முதல்கொண்டே சரித்ரம் முதலிய பாடங்களை இங்க்லீஷில் கற்றுக்கொடுத்து வந்தார்கள்.

இப்படி இங்க்லீஷ் பாஷைப்பாடமல்லாத மற்ற பாடங்களை இங்க்லீஷில் கற்பிக்கும் வழக்கம் ஸுமார் 80-வர்ஷத்துக்குமுன் ஆரம்பமாயிற்று. 1835-ம் வர்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் ஜனங்களுக்குள் கல்வியைப் பரவச்செய்ய எண்ணி, எந்தவிதமான கல்வி கற்பிப்பதென்று ஆலோசனை செய்தார்கள். சிலர் இந்தியர்களுக்கு ஐரோப்பிய பாஷைகளையும், சாஸ்த்ரங்களையும் கற்பிக்கவேண்டுமென்றும், இவைகளை இங்க்லீஷ் மூலமாகக் கற்பித்துவரவேண்டுமென்றும், தேச பாஷையின் மூலமாக கல்வி கற்பிக்கக்கூடாதென்றும் அபிப்ராயப்பட்டார்கள். ஏனென்றல், தேசபாஷைகள் இங்க்லீஷ்பாஷையைப் போல் அபிவ்ருத்தியடைய வில்லையென்றும், ஆகையால் மேல் நாட்டு சாஸ்த்ரங்களை தேச பாஷை மூலமாகக் கற்பிப்பது முடியாதென்றும், இந்தியர்கள் மேல் நாட்டு சாஸ்த்ரங்களைக் கற்பதற்காக அவர்களுக்கு இங்க்லீஷ் பாஷையைக் கற்பித்து, அந்தபாஷை மூலமாக அவைகளைக் கற்பிக்கவேண்டுமென்றும் சொன்னர்கள். இப்படி அபிப்ராயப்பட்டவர்களில் முக்யமானவர் அப்போது வைஸ்ராயின் ஸபையில் சட்ட மெம்பராக விருந்த லார்ட் மெகாலே என்பவர்.

ஆனல் அவர்கள் தேசபாஷைகளை அலக்ஷ்யம் செய்து தள்ளிவிடவென்று அபிப்ராயங்கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. லார்ட் மெகாலேயும் தேசபாஷைகள் தகுந்தவளவு அபிவ்ருத்தி யடையாததால் தான் இங்க்லீஷ்மூலமாகக் கற்பிக்கவேண்டியிருந்ததென்று தெரிவித்திருக்கிருர். அவர் சொன்னதாவது " தற்போது

ஜனங்களுக்கு அவர்களுடைய ஸொந்தபாஷை மூலமாகக் கல்வி கற்பிப்பது முடியாமலிருக்கிறது. அவர்களுக்கோ கல்வி கற்பிக்கவேண்டியிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு ஏதாவது ஒரு அன்யபாஷையைக் கற்றுக்கொடுக்கவேண்டியிருக்கிறது"

அப்போது ஒரு வித்யா கௌன்ஸில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதற்கு லார்ட் மெகாலே ப்ரெஸிடெண்டாக இருந்தார். அந்தக் கௌன்ஸிலும் தனது முதல் ரிபோர்ட்டில், தேசபாஷைகளை ஆதரித்து அபிவ்ருத்தி செய்யவேண்டியது அவச்யமென்றும், அதன் அவச்யத்தை எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும், அப்போது இங்க்லிஷ் பாஷை மூலமாகக் கல்வி கற்பிக்கவேண்டுமென்று அபிப்ராயப்பட்டாலும், கடைசிவரைக்கும் இங்க்லிஷ்பாஷை மூலமாகவே கல்வி கற்பிக்கவேண்டியதா, அல்லது தேசபாஷைகள் மூலமாகக் கல்வி கற்பிக்கவேண்டியதா என்பதைப்பற்றி இப்போது தீர்மானிக்க வேண்டியதில்லையென்றும், தேசபாஷைகளில் புஸ்தகங்கள் அதிகமாக ஏற்படும்படி செய்வதே முடிவான நோக்கமாயிருக்க வேண்டுமென்றும், தேசபாஷைகளில் தக்கபுஸ்தகங்கள் இல்லாததால்தான், இந்தியர்கள் அன்யபாஷையைக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறதென்றும், இந்தியர்களுக்கு இங்க்லிஷ் கல்வி கற்பித்து அவர்களை நல்ல அறிவாளிகளாக ஆக்கிவிட்டால், அவர்கள் தாங்கள் படித்தவைகளை தேசபாஷைகளில் எழுதி வெளியிடக்கூடுமென்றும் தெரிவித்திருந்தது. இதனால் அந்தக்காலத்து அதிகாரிகள் எப்போதும் இங்க்லீஷ் மூலமாகவே பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்று எண்ணியிருக்கவில்லையென நன்றாய்த் தெரியவருகிறது.

1854-ம் வர்ஷத்திலும் இங்க்லண்டில் இந்திய ராஜாங்க விஷயங்களை கவனிக்க ஏற்பட்டிருந்த கோர்ட் அப் டிரெக்டர்ஸ் என்னும் ஸபையார் இதே மாதிரி அபிப்ராயப்பட்டார்கள். மேலும் அவர்கள் பள்ளிக்கூடங்களில் இங்க்லீஷ்பாஷையைக் கற்பிப்பதோடு, அந்தந்த ஜில்லாவின் தேசபாஷையையும் கற்பிக்கவேண்டுமென்றும், தேசபாஷை மூலமாக எந்தப் பாடங்களைக் கற்பிக்கலாமோ அவைகளை தேசபாஷை மூலமாகக் கற்பிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

1884-ம் வர்ஷத்திலும் இந்தியா கவர்ன்மெண்டார் மிடில் ஸ்கூல்களில் (அதாவது 7-வது வகுப்புமுடிய) பாடங்களை தேசபாஷைகள் மூலமாகக் கற்பிப்பது நல்லதென்றும், இந்த ஏற்பாட்டை மாகாண கவர்ன்மெண்டுகள் அனுஷ்டிக்கலாமென்றும் தெரிவித்தார்கள்.

இப்போது மிஸ்டர் ராமராயநிங்கார் ப்ரேரித்ததெல்லாம் 3-வது பாரம்முடிய தேசபாஷை மூலமாகக் கல்விகற்பிக்கலாமென்றிருப்பதைமாற்றி ஹைஸ்கூல் வகுப்புகள் எல்லாவற்றிலும் இங்க்லீஷ் பாஷைப்பாடத்தைத் தவிர மற்ற பாடங்களை தேசபாஷைகள் மூலமாகக் கற்பிக்கவேண்டுமென்பதே. அதற்கு அவர் சொன்ன காரணங்களையும், அந்த ப்ரேரணைக்கு பாதகமாக இருந்தவர்கள் சொன்ன ஆக்ஷேபணைகளையும் இங்கு எழுதுகிறோம்.

மிஸ்டர் ராமராயநிங்கார் தமது தீர்மானத்தைத்தாங்கிப் பேசுகையில் தேசபாஷைகள் மூலமாகக் கல்விகற்பிப்பதால் பல ஸௌகர்யங்கள் ஏற்படுகின்றனவென்று சொன்னார். அன்ய பாஷை மூலமாக பாடங்கள் கற்பதில் பிள்ளைகள் விஷயங்களை அறியப் பாடுபடுவதோடு அன்ய பாஷையின் வார்த்தைகளையும் கற்கவேண்டியிருக்கிறது. இரண்டையும் கற்க நேருவதால் பையன்கள் ஒன்றையும் சரியாய் கற்றுக்கொள்ள முடிவதில்லை. அவர்கள் வார்த்தைகளைக் குருட்டுப்பாடமாக ஒப்பிக்கிறார்கள். இதனால் அவர்களிடம் நெட்டுருப்பண்ணும் வழக்கம் ஏற்படுகிறது. தேசபாஷை மூலமாகக் கற்பிப்பதிலோ பையன்களுக்கு விஷயங்களை க்ரஹிப்பதில் மாத்ரம் ச்ரமம் ஏற்படும். மனஸுக்கு இதைத்தவிர வேறு



வேலை கொடுக்காமலிருப்பதால் அவர்கள் விஷயங்களை ஸுலபமாக அறிந்துகொள்கிறார்கள்.

முன் சொன்னபடி இப்போதுள்ள முறையில் பையன்கள் பாடங்களை நெட்டுருப்பண்ணி வருகிறார்கள். அவர்கள் தங்கள் ஸொந்த பாஷையையாவது இங்க்லீஷ் பாஷையையாவது சரியாய்க் கற்றுக்கொள்வதில்லை. தற்காலக் கொள்கைப்படி கல்வி என்றால் கற்பவர்களுடைய மனோசக்திகளை அபிவ்ருத்தி செய்தல் என்றர்த்தம். அப்படிப்பட்ட கல்வி அவர்களுக்குக் கற்பிப்பதென்பது கிடையாது. பால்யப்படிப்பில் - அதுகமாகறைகள் பிற்காலத்திலும் அப்படியே பண்டிவருகின்றன. இதனால்தான் நமது தீர்மானை பி. ஏ. பாஸ் செய்தவர்களில் அநேகர் ஆலே. கார்யமொன்றும் செய்ய லாயக்கில்லாத மிக்கவ யிருக்கிறார்கள். மெட்ரிகுலேஷன் பரீவ்யநில் தேறாதவர்களும் தக்க கல்வி யில்லாத லோ வாழ்நாளில் ரொம்பவும் கஷ்டப்படுகிறார் மூ: அவர்களுக்கு தேசபாஷையில் தக்கபடி வழி கற்பித்துவந்தால் தேர்ந்த தொழிலாளிக /ாகவும் வ்யாபாரிகளாகவும் பயிற்சியடைய ஸாதகமாகும்.

இப்போதுள்ள ஏற்பாட்டால் இன்னொரு பெருங்குறை யிருக்கிறது. நமது தேசத்தின் முன்னேற்றத்துக்கு பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்யவேண்டியது அவச்யமென்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஸெகண்டரி ஸ்கூல்களில் பாடங்களை தேசபாஷை மூலமாகக் கற்பிப்பதுதான் நல்ல வழி. இப்போதுள்ள முறையில் பெண்கள் உபயோகமற்ற கல்வியைக் கற்பதில் தங்கள் காலத்தை வீணாக்குகிறார்கள். பள்ளிக் கூடங்களில் தேசபாஷைகள் மூலமாகக் கற்பிப்பதில் இன்னொரு ஸௌகர்யமும் இருக்கிறது. வீட்டில் பையன்கள் பாடங்களை தேசபாஷைகளில் வாசிக்கும்போது பெண்களும் அவைகளைக் கேட்டுக்கொண்டிருந்து விஷயங்களை அறிந்து கொள்ளலாம்.

மேலும் தேசபாஷைகளில் புஸ்தகங்களும் அதிகமாகும். தேசபாஷைகள் மூலமாகத்தான் ஸாமான்ய ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பது முடியும். இப்போது ஜனத்தொகையில் ஒரு ஸ்வல்ப பாகத்தார்க்குத்தான் அதிகமாகக் கல்வி கற்பித்து வருகிறோம். நாம் செய்யவேண்டியது என்னவென்றால் ஜனங்களில் பெரும்பாலாருக்கு ஸ்வல்ப கல்வியாவது கற்றுக்கொடுக்க வேண்டும்.

அநேக வித்யாதிகாரிகளும், வித்யாபிமானிகளும் தேசபாஷை மூலமாகக் கல்வி கற்பிப்பதுதான் மேலான முறை யென்று சொல்லி யிருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும் 1913-ம் வர்ஷத்தில் வெளியிட்ட ஒரு தீர்மானத்தில் தேசபாஷைகளை நன்றாய் படித்த மாணவர்கள் ரொம்ப புத்திசாலிகளாக இருக்கிறார்களென அனுபவத்தில் தெரியவருகிற தென்று தெரிவித்திருக்கிறார்கள்.

சிலர் இந்த ப்ரேரணைக்குப் பின் வருமாறு ஆக்ஷேபணை சொல்லுகிறார்கள்.

அந்த ஆக்ஷேபணைகளையும் அவைகளுக்கு மிஸ்டர் ராயணிங்கார் சொல்லும் ஸமாதானங்களையும் இங்கு சொல்லுகிறோம்.

(1) பையன்களுடைய இங்க்லீஷ் ஞானம் குறைந்துபோகும்.

ஸமாதானம்.—இங்க்லீஷ் பாஷைப் பாடத்தைக் கட்டாய பாடமாகவைத்து அதில் பையன்களுக்கு ரொம்ப தேர்ச்சி ஏற்படவேண்டுமென்று விதித்துவிட்டால், இந்தக்குறைவு ஏற்படாது. புது முறையில் பையன்களுக்கு அதிக ச்ரமம் இல்லாததால், அவர்கள் இங்க்லீஷ் பாஷைப் பாடத்தை இன்னும் அதிக ச்ரத்தையுடன் படிக்க ஸௌகர்யமுண்டு. மற்ற பாடங்களை பையன்களுடைய ஸொந்த பாஷையில் கற்றுக்கொடுப்பதால், அவைகளையும் பையன்கள் ஸுலபமாகக் கற்றுக்கொள்வார்கள். பாஷைப்பாட மல்லாத மற்ற பாடங்களை இங்க்லீஷில் கற்றுக்கொடுக்கும் உபாத்யாயர்களுக்கு ஸாதாரணமாய் இங்க்லீஷில்

அதிக ஞானம் கிடையாதாகையால் அவர்கள் கற்றுக்கொடுப்பதைக் கேட்ட மாணவர்கள் இங்க்லீஷை சரியாக உச்சரிக்கவும், சரியாய் இங்க்லீஷ் பேசவும் முடிவதில்லை. புதுமுறையில் இக்குறையை நிவர்த்திசெய்துவிடலாம்.

(2) தேச பாஷைகளில் தக்க பாடப்புஸ்தகங்கள் இல்லை.

ஸமாதானம்.—இப்போது அநேக தேசபாஷைகளில் ஸெகண்டரி ஸ்கூல்களில் கற்பிக்கப்படும் பாடங்களுக்கு பாடப்புஸ்தகங்கள் இருக்கின்றன. இன்னும் உயர்ந்த புஸ்தகங்கள் வேண்டுமென்றால் அவைகள் சீக்ரம் எழுதப்பட்டு வெளியாகிவிடும். இங்க்லீஷ் புஸ்தகங்களை மொழிபெயர்ப்பதிலும், தேச பாஷைகளில் முதல்நூல்களாகப் புஸ்தகங்கள் எழுதுவதிலும் தக்க லாபமுண்டென்று தெரிந்தால், அநேகர் இந்த மாதிரிப் புஸ்தகங்கள் எழுத சீக்ரம் முன்வந்துவிடுவார்கள்.

(3) தேச பாஷைகளில் சாஸ்த்ர ஸம்பந்தமான வார்த்தைகள் அதிகம் இல்லாததால், பூகோளசாஸ்த்ரம், கணிதம், சாஸ்த்ரம் முதலிய பாடங்களை தேசபாஷைகள் மூலமாகக் கற்பிப்பது முடியாது.

ஸமாதானம்.—தற்காலம் அநேக இலக்கிய ஸங்கங்கள் வேண்டிய சாஸ்த்ர வார்த்தைகளை தேச பாஷைகளில் தயார் செய்துகொண்டிருக்கின்றன. கால க்ரமத்தில் இங்க்லீஷ் வார்த்தைகளும் தேச பாஷைகளில் கலந்து கொள்ளக்கூடும். இப்போதும் அநேக இங்க்லீஷ் வார்த்தைகள் தேச பாஷைகளில் கலந்து கொண்டிருக்கின்றன.

(4) பாஷைப்பாடமல்லாத மற்ற பாடங்களை தேச பாஷைகளில் கற்பிக்க தக்க உபாத்யாயர்கள் இல்லை.

ஸமாதானம்.—பள்ளிக்கூடங்களில் பாஷைப்பாடமல்லாத பாடங்களை இங்க்லீஷில் கற்பிக்கும் உபாத்யாயர்களில் பெரும்பாலார் இந்தியர்களே. இவர்களுக்கு தேசபாஷைகள் தெரியும். தாங்கள் கற்பிக்கும் பாடங்களை நன்றாயறிந்திருந்தால், அவைகளை தேசபாஷைகளில் கற்பிப்பது ச்ரமமாயிராது. அவர்களுக்கு இந்த முறையில் பயிற்சிபோதாதென்றால், அவர்கள் சீக்ரம் பயிற்சியடைந்து விடக்கூடும்.

(5) ஒவ்வொரு மாகாணத்திலும் பல பாஷைகள் பேசப்படுவதால் அவைகளின் மூலமாய்க் கற்பிப்பதில் ச்ரமம் ஏற்படும். இதற்கு அநேக உபாத்யாயர்கள் வேண்டியிருக்குமாதலால் பணச்செலவும் அதிகமாகும்.

ஸமாதானம்.-இந்தக் கஷ்டம் சி...
தான் ஏற்படும். அவ்விடங்களில் ஸ...
வகுப்புகளில் பையன்கள் அதிகமாக ...ரேரித்த
கிறார்கள். வகுப்புகளில் உள் பிரிவு ...ஷ மூல
படுத்துவதுண்டு. இந்தப் பிரிவுகளை தே...மாற்றி
களை ஆதாரமாகக்கொண்டு ஏற்படுத்தின...இங்க்
டம் பெரும்பாலும் குறைந்துவிடும். ஏ...டங்
ஒரு பாஷைப் பிரிவில் வேண்டியவளவு ...ண்டு
கள் இல்லாவிட்டால், பள்ளிக்கூடத்து அதி...ங்
கள் அந்த ஸ்வல்ப பையன்களைப் பள்ளிக்கூட...
தில் சேர்த்துக்கொள்ள மறுத்துவிடலாம் அல்லது அவர்களுடைய பாஷைக்கு ரொம்ப ஒற்றுமையுள்ள வேறு பாஷைப் பிரிவுகளில் சேர்த்துவிடலாம்.

(6) இந்த ப்ரேரணையை ஏற்றுக்கொண்டால் இந்தியர்கள் ஒரே ஜாதி ஜனங்களாக ஆவது முடியாமல் போகும்.

ஸமாதானம்.—இந்த ஆக்ஷேபணைக்கு அர்த்தமே கிடையாது. சில ஜனங்கள் இந்தியாவில் பல பாஷைகளில்லாவிட்டால் இந்தியர்கள் ஒரே ஜாதியாக இருப்பார்களென்று சொல்லுகிறார்கள். இந்த அபிப்ராயம் சரியென்று தோன்றவில்லை. தேசத்தில் பற்பல மதங்களும் ஜாதிகளும் இருப்பதற்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? இவைகள் போய்விட்டால், பல பாஷைகள் இருப்பதால் ஏற்படும் கஷ்டமும் நிவர்த்தியாய்விடும்.



இந்தத் தீர்மானத்தைத் தாங்கிப் பேசியவர்கள் ஆனரபில் ராஜா குஷால்பால் ஸிங்கும், ஆனரபிள் பண்டிட் மதன்மோஹன் மாளவியாவும். ராஜா குஷால்பால்ஸிங் தேசபாஷை மூலமாகக் கற்பிப்பதால், அவைகளில் சாஸ்த்ரபுஸ்தகங்கள் அதிகமாக எழுதப்படுமென்றும், தேசபாஷைக் கல்வி ரொம்ப அபிவ்ருத்தியடையுமென்றும், தேசபாஷைப் பள்ளிக்கூடங்களில் பள்ளிக்கூட முடிவு பரீக்ஷையில் தேறினபிறகு இங்க்லீஷ் பாஷையைக்கற்கும் மாணவர்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையிலும் ஸ்கூல் பைனல் பரீக்ஷையிலும் அதிகமாகத் தேறுகிறார்களென்றும் சொன்னார்.

பண்டிட் மதன்மோஹன் மாளவியா இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது உசிதமா என்று ஆலோசிக்க கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்றார். இன்னும் அவர் இந்த வ்யாஸத்தின் முதலில் காட்டியபடி, லார்ட் மெகாலேயும் அவரைச் சேர்ந்தவர்களும் இங்க்லீஷின் மூலமாகக் கல்வி கற்பிக்கவேண்டுமென்று சொன்னதற்குக் காரணம் மேல் நாட்டுக் கல்வி கற்பிப்பதற்கு தேசபாஷைகள் தகுந்தபடி அபிவ்ருத்யடையவில்லை யென்பதே யென்றும், அவர்கள் எப்போதும் இங்க்லீஷின் மூலமாகவே கல்வி கற்பிக்கவேண்டுமென்று ஒருமுடிவான அபிப்ராயம் சொல்லவில்லை யென்றும், கவர்ன்மெண்டாரும் பற்பல ஸமயங்களில் தேசபாஷைகள் மூலமாகக் கல்வி கற்பிக்கவேண்டு மென்று அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்களென்றும், அநேகர் அப்படிச் செய்தால் இங்க்லீஷ்பாஷைக் கல்வி குறைந்துபோகுமென்று பயந்து அதை ஆக்ஷேபித்து வந்தார்களென்றும், அப்படிப் பயப்படுவதற்கு தக்க ஆதாரமொன்று மில்லையென்றும், சொன்னார். இப்போது இந்தியாவில் 30 கோடி ஜனங்களிருக்கிறார்கள். இவர்களில் பத்துலக்ஷம்பேர்கள் தான் இங்க்லீஷ் தெரிந்தவர்கள். அதாவது 300 பேரில் ஒருவருக்குத்தான் இங்க்லீஷ் தெரியும். மேற்சொன்ன பத்துலக்ஷம் பேர்களில் ஐரோப்பியர்களுடைய தொகையும் யூரேஷ்யர்களுடைய தொகையும் சேரும். 50 வர்ஷத்துக்கு மேலாக இங்க்லீஷ் கல்வி கற்பித்துவந்தும், 300 பேர்களுக்கு ஒருவரே இங்க்லீஷ் தெரிந்தவரென்றால், மற்ற ஜனங்களுக்கு இங்க்லிஷ் மூலமாக ஐரோப்பிய கல்வி கற்பிக்க எத்தனை காலம் செல்லும்? ஆகையாலும் ஜனங்களுக்கு தேசபாஷை மூலமாக ஐரோப்பிய கல்வி கற்பிப்பது அவச்யமென ஏற்படுகிறதென்று பண்டித மாளவியா சொன்னார்.

தேசபாஷைகளின் மூலமாயல்லாமல் அன்ய பாஷைகள் மூலமாகக் கல்வி கற்பிப்பதென்னும் வழக்கம் இந்தியாவிலன்றி வேறெங்கும் கிடையாது. இங்க்லண்டில் மாத்ரம் 14ம் நூற்றாண்டுக்கு முன்னால் பிள்ளைகளுக்கு இங்க்லீஷ் மூலமாகக் கல்வி கற்பிக்காமல் ப்ரெஞ்ச் பாஷை மூலமாகக் கல்வி கற்பித்து வந்தார்கள். ஆனால் அந்த முறை சரியல்ல வென்று தள்ளி விட்டார்கள்—என்று மிஸ்டர் மாளவியா சொன்னார்.

அநேக மெம்பர்கள் இந்தத் தீர்மானத்தை ஆக்ஷேபித்துப் பேசினார்கள். ஒருவர், கவர்ன்மெண்டாரே இந்த யுத்தகாலத்தில் விவாதத்துக்கிடமான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்காமலிருக்கும்போது, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தது யுக்தமல்ல வென்றும், இதற்குப் பொது ஜன ஸம்மதமில்லையென்றும், இப்போதுள்ள கல்வி முறையை மாற்றுவதற்கு அநேகர் ஆக்ஷேபிக்கிறார்களென்றும் சொன்னார். இன்னொரு மெம்பர் இந்த விஷயத்தைப்பற்றி மாகாண கவர்ன்மெண்டுகள் ஆலோசனை செய்யும்படி சொன்னால் நல்லதென்று சொன்னார். வேறொருவர் இந்தப் புதுமுறையை ஏற்றுக் கொள்ள இன்னும் தக்க காலம் வரவில்லை யென்று சொன்னார் ஒரு மெம்பர் தேசபாஷை மூலமாக மற்ற பாடங்களைப் படித்த மாணவர்கள் காலேஜுகளில் சேர்ந்தால், அங்கே இங்க்லீஷ் மூலமாகக் கற்பிக்கப்படும் பாடங்களை சரிவர அறிந்து கொள்வது

முடியாதென்றார். ஆக்ஷேபணை செய்த எல்லா மெம்பர்களும் இங்க்லீஷ் கல்வியின் அவச்யத்தைக் குறைக்கக் கூடாதென்றும், அவர்களில சிலர் இந்தத் தீர்மானத்தால் பையன்களுக்கு இங்க்லீஷ் அறிவு குறைவுபடு மென்றும், அப்படிக் குறைந்துபோவது கெடுதலென்றும், இங்க்லீஷ் கல்வியால்தான் இந்தியா உயர்ந்த நிலைமைக்கு வந்திருக்கிற தென்றும் சொன்னார்கள்.

கவர்ன்மெண்ட் மெம்பராகிய ஸர் ஹார்கோர்ட் பட்லர் மேல்நாட்டுக் கல்வியையாவது இங்க்லிஷ் பாஷைப் படிப்பையாவது குறைக்கும்படி எந்த ஏற்பாடும் செய்யப்படமாட்டாதென்றும், கல்வி விஷயமான அனுபோகம் இடத்துக்கிடம் வித்யாஸப்படுமாகையால், இவ்விஷயத்தைப்பற்றி பரிசீலனை செய்ய அந்தந்த மாகாணங்களில் ப்ரத்யேகமான கமிட்டிகள் நியமிக்கவேண்டுமென்றும், இந்தத் தீர்மானத்தில் கண்டவிஷயத்தைப் பலர் ஆக்ஷேபிப்பதால், யுத்தத்துக்குப் பிறகு இதைப்பற்றி ஆலோசிக்கும்படி இந்தியாகவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளைக் கேட்பார்களென்றும் சொன்னார். மிஸ்டர் ராமராயனிங்கார் ஸர் ஹார்கோர்ட் பட்லர் கொடுத்த வாக்குத்தத்தின்மேல் தமது தீர்மானத்தை வாபஸு வாங்கிக்கொண்டார்.

## THE TRICHINOPOLY DISTRICT CONFERENCE.

## திருச்சினாப்பள்ளி ஜில்லா கான்பரென்ஸ்.

இரண்டாவது திருச்சினாப்பள்ளி ஜில்லா கான்பரென்ஸ் இந்த மாஸம் 10-தேதி யன்று திருச்சினாப்பள்ளியில் கூடிற்று. மிஸ்டர் கே. வி. ரங்கஸாமி அய்யங்கார் உபசரிப்புக் கமிட்டியின் சேர்மனாக இருந்து ப்ரதிநிதிகளை வரவேற்றார். அவர் தமது ப்ரஸங்கத்தில் கண்ணம்பாடி அணைக்கட்டைப்பற்றிப் பேசும்போது, அந்த அணைக்கட்டால் காவேரிப்பாசனமுள்ள மற்ற ப்ரதேசங்களை விட திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள நிலங்களுக்கு ரொம்ப கெடுதல்கள் ஏற்படுமென்று சொன்னார். திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் காவேரியில் ஸ்வல்ப ஜலம் ஓடும்போது அதிலிருந்து வாய்க்கால்களில் ஜலம் பாயும்படி செய்ய ஆற்றின் குறுக்கே சிறிது தூரம் இலை கிளைகளால் அணைகட்டி, ஜலமட்டத்தை உயர்த்தி, அதனால் ஆற்றிலிருந்து பிரிந்துபோகும் வாய்க்கால்களில் ஜலம் அதிகமாகப் போகும்படி செய்வார்கள். இந்த ஏற்பாட்டுக்குக் குறம்பு அடைத்தல் என்று பெயர். வெள்ளக்காலங்களில் காவேரியில் அதிக ஜலம் வருமாகையால் அப்போது வாய்க்கால் தலைப்புகளில் குறம்பு அடைக்கவேண்டியிராது. ஆனால் இப்போது காவேரி மத்யஸ்தக் கமிட்டியார் கண்ணம்பாடி அணையில் ஆறடி ஜலம் விடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வெள்ளக்காலத்தில் இவ்வளவு ஜலந்தான் வருமாகையால் வாய்க்கால்களில் வேண்டியவளவு ஜலமும் போகாது. இந்த ஆறடி ஜலத்தில் குறம்பு அடைப்பதும் முடியாது. இப்போதே நிலங்களுக்கு வேண்டிய அளவு ஜலமில்லாமலிருக்கும்போது, காவேரியின் மேல்பாகத்தில் அணைபோட்டால் இன்னும் ஜலகஷ்டம் அதிகமாகுமென்பதில் ஸந்தேகமில்லையென்று மிஸ்டர் ரங்கஸாமி அய்யங்கார் சொன்னார்.

இன்னும் அவர் தமது ப்ரஸங்கத்தில் ரயில்வே ஸெஸ் போடக்கூடாதென்றும், அதனால் ஜனங்களுக்கு வரிப்பளு அதிகமாகிறதென்றும், நிலத்தீர்வையை அடிக்கடி உயர்த்தாமல் ஒரே தடவையாக சாச்வதமாக்க வேண்டுமென்றும் சொன்னார்.

சீயாழியைச் சேர்ந்த ஆனரபிள் மிஸ்டர் கே. சிதம்பரநாத முதலியார் கான்பரென்ஸின் ப்ரஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர் பேசியதின் ஸாராம்சத்தை இங்கெழுதுகிறோம்.

நமது ராஜதானியிலுள்ள ஜனத்தொகையில் கிட்டத்தட்ட நூற்றுக்கு 70-பேர்கள் தங்கள் ஜீவனத்துக்கு நிலத்தையே நம்பியிருக்கிறார்கள். மொத்த ஸர்குபடி நிலங்களில் ஸுமார் 2½கோடி



ஏகரா நிலங்கள் ரயத்துவாரி நிலங்களாகும். ஸுமார் 1-கோடியே 90-லக்ஷம் ஏகர்கள் சாச்வதத்தீர்வையுள்ள நிலங்கள். ரயத்துவாரி நிலங்களுக்குத்தான் உயர்ந்த தீர்வை விகிதம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு ஏகருக்கு சராசரியில் 2-ரூபாய் தீர்வை விதிக்கப்படுகிறது. ஆனால் சாச்வதத் தீர்வையுள்ள நிலங்களுக்கோ சராசரித் தீர்வை விகிதம் ஏகருக்கு 4-அணாவாகும். அதாவது ரயத்துவாரி நிலங்களுக்கு சாச்வதத்தீர்வை விதித்துள்ள நிலங்களின் தீர்வையைவிட 8-மடங்கு அதிகமாகும். 30 ரூபாயும் அதற்குக் குறைந்தும் தீர்வைசெலுத்தும் பட்டாதார்களின் தொகை மொத்தபட்டாதார்களின் தொகையில் நூற்றுக்கு 90-வீதமாகும். இதில் பத்து ரூபாயும் அதற்குக் குறைவாயும் தீர்வை செலுத்தும் பட்டாதார்கள் நூற்றுக்கு 68-வீதமாகும்.

ஒருகாலத்தில் இந்த ராஜதானிமுழுவதும் சாச்வதத் தீர்வை ஏற்படுத்துவதாக இருந்தது. ஆனால் மாகாண அதிகாரிகள் இது விஷயத்தில் ப்ரியமில்லாமலிருந்ததாலும், இங்க்லண்டிலிருந்த அதிகாரிகளின் உத்தரவுப்படி நடப்பதில் இங்குள்ள அதிகாரிகள் தாமஸித்ததாலும், அந்த ஏற்பாடு அனுஷ்டானத்துக்கு வரவில்லை. அதற்குப் பிறகு அதிகாரிகள் பற்பல தீர்வை ஏற்பாடுகளை அனுஷ்டித்துப் பார்த்தார்கள். இப்போதுள்ள ஏற்பாட்டில் என்ன குறையென்றும், அது ஏன் ஆக்ஷேபிக்கத்தக்கதென்றும், முன்பு ஸெட்டில்மெண்டு டிபார்ட்மெண்டில் டிரெக்டராக இருந்த மிஸ்டர் பக்கிள் என்பவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கும் தீர்வையை மாற்றுவது தவறாகும். விலைவாசி ஏற்றத்தால் ஏற்படும் லாபத்தை குடிகளுக்கே விட்டுவிடவேண்டும். தரிசாய்க் கிடந்த நிலங்களை ஸாகுபடிக்குக் கொண்டுவரும்போதும், புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றும்போதும், ஒருபோக ஸாகுபடி நிலங்களில் இரண்டுபோகம் ஸாகுபடி செய்யும்போதும் மாத்ரம் கவர்ன்மெண்டார் அதிகத் தீர்வை போடவேண்டும். இந்தத் தீர்வைப் பணமானது அதிகமாகவே இருக்கும். இது வர்ஷாவர்ஷம் அதிகமாகும். மேலும் ஒவ்வொரு தடவையும் ஸெட்டில்மெண்டுக்காகப் பணம் செலவழிக்கவேண்டியதில்லை. இதனாலும் அதிகப் பணம் மிச்சமாகும். ரயத்துகளுக்கும் வரியை எங்கு உயர்த்தி விடுவார்களோ என்ற பயம் ஏற்படாது. ஸ்வல்ப கிஸ்தி செலுத்தும் ரயத்துகள் தங்கள் மாஸுலை விற்காமல் ஸொந்தத்துக்கு உபயோகிக்கிறார்களாகையால், விலைவாசி அதிகரித்ததைக்கொண்டு தீர்வை விகிதத்தை உயர்த்துவதால் அவர்களுக்கு ரொம்ப கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சீனாவில்கூட நிலத்தீர்வையை சாச்வதமாகச் செய்திருக்கிறார்கள்."

கவர்ன்மெண்டார் நிலங்களுக்கு மறு ஸெட்டில் மெண்ட் செய்யுமுன் இன்ன தீர்வை விதிக்கவேண்டு மென்று முன்னாடியே தீர்மானித்துப் பிறகு ரிவிஷன் ஸர்வே, விலைவாசி விசாரித்தல், முதலியன செய்து பிறகு நிலத்தீர்வையை மாற்றுவதாகத் தோன்றுகிறது. முதலில் தீர்வைவிகிதத்தைத் தீர்மானித்துப் பிறகு ஸர்வே, விலைவாசி ஏற்றம், ஜல ஸௌகர்யம் முதலியவைகளை விசாரித்தல் இவைகளைச் செய்வானேனென்றால் ஸௌகர்யததுக்காக, அதாவது தீர்வை விகிதம் ஏற்படுத்தினது ந்யாயம் என்று காட்டுவதற்காக இப்படிச் செய்கிறார்கள். இப்படிச் செய்வதெல்லாம் தீர்வை விகிதத்தை உயர்த்துவதற்காகவே யொழிய அதைக் குறைப்பதற்கல்ல. விலைவாசிகளின் கணக்குகள் அடிக்கடி தவறானவையாகவும், நம்பத்தகாதவையாகவும் இருக்கின்றன. வெவ்வேறு ப்ரதேசங்களில் வெவ்வேறு பருவகாலங்களால் ஸாதகபாதகங்கள் எவ்வளவு ஏற்பட்டிருக்கின்றன என்று அறிவதும் கஷ்டம். ஆகையால் பருவ காலங்களின் மாறுதல்களுக்காக தீர்வை விகிதத்தை குறைத்துப் போடுவது ஸாதாரணமாய் ரொம்ப குறைவாகவே இருக்கி

றது. செய் நேர்த்திச் செலவையும் வெவ்வேறு வகை நிலங்களுக்கு வெவ்வேறு விதமாக ஏற்படுத்துகிறார்கள். உயர்ந்த நிலங்களுக்கு அதிக சாகுபடிச் செலவு ஏற்படுமென்றும், தாழ்ந்த நிலங்களுக்கு அதிக செலவு ஏற்படாதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அனுபவத்தில் அது அப்படியல்ல. தாழ்ந்த நிலங்களுக்குத்தான் விவஸாயிகள் அதிகமாகச் செலவு செய்கிறார்கள். உயர்ந்த நிலங்களுக்கு அதிகம் செலவு செய்வதில்லை. ஸாகுபடிச் செலவையும் எல்லா நிலங்களுக்கும் ஸாதாரணமாய் ஏற்படக்கூடிய அளவைவிடக்குறைவாகவே ஏற்படுத்துகிறார்கள். ஸெட்டில்மெண்ட் காலத்தில் பருவகாலங்களின் வித்யாஸத்தால் ஏற்படும் பாதகங்களுக்காக தீர்வை விகிதத்தில் ரொம்ப குறைத்து விட்டதாகச் சொல்லி, பூராசாவியான நிலங்களைத் தவிர மற்ற நிலங்களுக்கு தீர்வை வஜா கொடுப்பதேயில்லை. இவையெல்லாம் போகட்டு மென்றாலும், நிலவரும்படியில் மேல்சொன்னபடி ஸாகுபடிச் செலவைத் தள்ளிவிட்டு நிகரான வரும்படியில் ஸரிபாதியை தீர்வையாக விதித்துவிடுகிறார்கள். இந்த மாதிரி தீர்வை ஏற்படுத்தும் வழக்கம் இந்தியாவிலன்றி நாகரீகம் பெற்ற வேறெந்த நாட்டிலும் கிடையாது.

இந்த நிலத்தீர்வை ஏற்பாட்டின் பலனென்னவென்றால், பிலிப்பைன்தீவுகள் போன்ற ரொம்ப முன்னேற்றமடையாத ப்ரதேசங்களில் ஜனங்கள் ஸ்வல்பகாலத்தில் ரொம்ப அபிவ்ருத்தியடைந்திருக்க, நூறுவர்ஷத்துக்குமேல் ப்ரிட்டிஷ் அரசாட்சி ஏற்பட்டு நடந்துவந்தும், ஜனங்கள் கொஞ்சமும் முன்னேற்றம் அடையவே இல்லை. பெரும்பாகம் நிலஸ்வான்களுக்கு ஸாதாரண வர்ஷங்களில் சாப்பாட்டுக்குத் தான் கிடைத்து வருகிறது. மழைபெய்யாமல் காலஸ்திதிவேறுபட்டாலோ அந்த வர்ஷங்களில் நிலஸ்வான்கள் ரொம்ப திண்டாடவேண்டியிருக்கிறது. இப்படியிருப்பதால் தேசத்தில் மூலதனம் வ்ருத்தியாவதற்குத் தடை ஏற்படுகிறது. நமது ராஜதானி முழுவதிலும் ஸ்வதேச மூலதனத்தைக்கொண்டு ஒரு பெரிய தொழிலாவது நடைபெற்றுவரவில்லை. எல்லாவற்றிற்கும் அன்யநாட்டு மூலதனமே வேண்டியிருக்கிறது. அன்ய நாட்டு மூலதனத்தை உபயோகிப்பதில் நமக்கு நஷ்டமேயொழிய லாபம் கிடையாது. இந்தியாவொழிந்த மற்ற தேசங்களிலும் அன்யநாட்டு மூலதனத்தை உபயோகித்தாலும், அந்த தேசங்களில் மூலதனத்துக்கு ஒரு குறிப்பிட்ட வட்டி மாத்ரம் கொடுத்துவருகிறார்கள். அன்ய நாட்டு மூலதனத்தால் வரும் லாபம் அதை வாங்கியிருக்கும் தேசத்தாருக்கே சேருகிறது. இதனால் அந்த தேசத்தாருக்கு மூலதனம் அதிகமாகிறது. ஆனால் இந்தியாவிலோ அப்படியல்ல. இந்தியாவுக்கு ப்ரிட்டிஷாருடைய மூலதனம் கிடைத்துவருகிறது. ஆனால் அந்த மூலதனத்தை உபயோகிப்பதால் ஏற்படும் லாபம் இந்தியர்களுக்குச் சேராமல் ப்ரிட்டிஷாருக்குப் போய்ச் சேருகிறது. அதோடு அந்த மூலதனத்துக்குள்ள வட்டியும் அந்த மூலதனத்தை உபயோகித்து ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் துறைகளில் அமர்ந்துள்ள பெரிய உத்யோகஸ்தர்களுடைய சம்பளமும் ப்ரிட்டிஷாருக்கே போய்ச் சேருகிறது. இந்தியர்களுக்குக் கிடைப்பதெல்லாம் கூலியாட்களின் சம்பளமும், தொழில்சாலைக்கும் வாங்குகிறவர்களுக்கும் நடுவிலிருந்து வ்யாபாரம் செய்யும் வ்யாபாரிகளினுடைய லாபமுந்தான். இதைத்தான் இந்தியாவிலிருந்து பணம் அநாவச்யமாய் வெளிநாட்டுக்குப் போகிறதென்று சொல்லுகிறோம். பணம் போகவில்லையென்று சொல்பவர்கள் அர்த்த சாஸ்த்ரத்தின் ப்ரதமக் கொள்கைகளை உள்ளபடி அறியவில்லை. அவர்கள் கூலிக்கும் லாபத்துக்கும் வித்யாஸம் பாராட்டுவதில்லை. இந்தியாவுக்குக் கூலிகிடைக்கிறது. அன்யதேசங்கள் லாபத்தை அடித்துக்கொண்டு போகின்றன.



இந்த சீர்கேடான நிலைமையை எப்போதும் இப்படியே இருக்கும்படி விடுவது ந்யாயமல்ல. இதற்கு விவஸாய முறைகளைச் சீர்திருத்தினால் மாத்ரம் போதாது. அப்படி விவஸாயமுறைகளைச் சீர்திருத்துவதற்கும் மூலதனம் வேண்டியிருக்கிறது. மேலும் இந்தியாவில் தொன்றுதொட்டு விவஸாயம் நடந்துவருவதால், விவஸாயிகள் பல காலத்திய அனுபவத்துடன் விவஸாயத்தை நடத்திவருகிறார்கள். அதில் அதிக சீர்திருத்தம் செய்வதும் முடியாது.

விவஸாயிகளின் நிலைமையைச் சீர்திருத்த ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதாவது இப்போதுள்ள தீர்வை விகிதத்தை ரொம்பவும் குறைத்து விதிப்பதே. இப்படிச்செய்யும்படி அதிகாரிகளைத் தூண்ட நாம் இன்னும் அதிகமாகப் பாடுபடவேண்டும். க்ராமங்களிலும், தாலூக்காக்களிலும், ஜில்லாக்களிலும், மாகாணத்திலும் நிலஸ்வான்களின் விஷயங்களை கவனிக்க ஸங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். அந்த ஸங்கங்கள் நிலங்கள் விஷயமாக உண்மையான நிலைமையைத் தெரியப்படுத்தவேண்டும். அவை விஷயமான கணக்குகளை சேகரித்து, வேண்டிய விடங்களில் விசாரணைசெய்து, ஜனங்களின் குறைகளைப் பற்றிப் பரிசீலனைசெய்து, குறைகளை நிவர்த்திக்கத் தக்க வழிகள் தேடவேண்டும். இன்னும் விவஸாயிகளின் குறைகளைப்பற்றி கவனிக்க ஒரு பத்ரிகை ப்ரசுரம் செய்யவேண்டும். இவைகளை எவ்வளவுக் கெவ்வளவு சீக்ரம் செய்கிறோமோ அவ்வளவுக்கு நாம் கோரும் பலன்கள் சீக்ரம் கைகூடும்.

இன்னும் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் பாசன ஏற்பாட்டை சீர்திருத்த வேண்டுமென்றும், சிறு கால்வாய்களை க்ராம பஞ்சாயத்தின் நிர்வாகத்தில் விடவேண்டுமென்றும், காடுகளிருப்பதால் மழையதிகமாகப் பெய்கிறதென்றும், ஆகையால் கவர்ன்மெண்டார் காடுகளை அழிக்காமல் அவைகளை வ்ருத்தி செய்யவேண்டுமென்றும், கால்நடைகளுக்கு ஜல வஸதி செய்துகொடுக்க வேண்டுமென்றும், க்ராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்.

## தீர்மானங்கள்.

இந்தக் கான்பரென்ஸில் செய்த முக்ய தீர்மானங்களைக் கீழே எழுதுகிறோம்.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கிளை ரெயில்வேக்கள் போடுவதற்காக ரூபாய்க்கு 3-பை வீதம் ரெயில்வே ஸெஸ் போடுவதாக ஜில்லா போர்டார் தீர்மானித்ததை கான்பரென்ஸ் ஆக்ஷேபிக்கிறது.

இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி ப்ரசுரம் செய்திருக்கும் தீர்மானம் த்ருப்திகரமாயில்லை. அதிகாரப் பிரிவினைக் கமிஷன் செய்த சிபார்சை அனுஸரித்து கவர்ன்மெண்டார் க்ராமங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க வேண்டும். அவைகளுக்குப் பின்வரும் வேலைகளைக் கொடுக்கவேண்டும்.

(1) ஜலாதாரங்களை பழுதுபார்த்து நல்ல நிலைமையில் வைத்தல்; குடி ஜலத்துக்கான குளங்களையும் கிணறுகளையும் நிர்வகித்தல்.

(2) க்ராமங்களின் ஸுகாதாரத்தையும் போக்கு வரவுக்குரிய மார்க்கங்களையும் சீர்திருத்தல்.

(3) ரிஸர்வு செய்யப்படாத காடுகளை நிர்வகித்தல்.

(4) மூலாதாரக்கல்வியை அபிவ்ருத்திசெய்தல்.

(5) சிறுஸிவில்க்ரிமினல்கேஸ்களைவிசாரித்தல்.

நிலத்தீர்வை இப்போது ரொம்ப அதிகமாயிருப்பதால் அதைக்குறைத்து, அதை சாச்வதமாகச் செய்யவேண்டும்.

கண்ணம்பாடி அணைக்கட்டுத் தகராரைப்பற்றி மத்யஸ்தர் செய்த தீர்ப்பு த்ருப்தி காமாயில்லை. தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மிராசுதார்கள் தங்கள் பாத்யதைகளைப் பாதுகாக்கும்படி இந்தியா

கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருக்கும் விண்ணப்பத்தை இந்தக் கான்பரென்ஸ் சரியென்று ஆமோதிக்கிறது.

பள்ளிக்கூட முடிவு பரீக்ஷை (ஸ்கூல்பைனல்) வரையில் இங்க்லீஷை கட்டாயமான இரண்டாவது பாஷைப்பாடமாக வைத்து, மற்ற பாடங்களை தேசபாஷை மூலமாகக் கற்பிக்க கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டும்.

எலிமெண்டரி ஸ்கூல்களிலிருந்து ஸெகண்டரி ஸ்கூல்களுக்குப் போகும் மாணவர்களுக்கு ஒரு வர்ஷத்து சம்பளத்தை அதிகமாக வாங்குவதை நிறுத்திவிடவேண்டும். ஹெட்மாஸ்டர்கள் பையன்களைப் பரீக்ஷித்து எந்த வகுப்புக்குத் தகுதியானவர்களென்று தெரிகிறதோ அந்த வகுப்பில் அவர்களைச்சேர்க்க அனுமதி கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் தக்கவிடத்தில் குறைந்தது ஒரு தொழில் பள்ளிக்கூடமாவது ஸ்தாபிக்கவேண்டும்.

ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்கு தேசபாஷையையாவது ஸம்ஸ்க்ருதம் போன்ற உயர்ந்த பாஷையையாவது கட்டாய பாடமாக வைக்கவேண்டும்.

ஒரு ஸர்வே நம்பர் உள்ள நிலங்களில் ஒரு பாகம் சாவியாயும் அழிகாலாயும் போனால் அந்த பாகத்துக்கு தீர்வையை வஜா செய்து கொடுக்க வேண்டும். ஒவ்வொருக்ராமத்திலும் கால்நடைகள் மேய்வதற்காக ஸமுதாய நிலங்கள் தனியாக வைக்கவேண்டும். க்ராமாந்தரங்களில் கால்நடைகளுக்கு ஜல வஸதி ஏற்படுத்த வேண்டும். பட்டா நிலங்களில் சப்பாத்துக்கள்ளி முளைத்து அது புறம்போக்கு நிலங்களில் படர்ந்தால் அதற்கு அபராதத் தீர்வை போடுவது கூடாது. புறம்போக்கு நிலங்களில் மரங்கள் வைத்து ஸாகுபடி செய்ய ரயத்துகளுக்கு அதிக ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

## THE WAR AND SEA-BORNE TRADE OF MADRAS.

## யுத்தமும் சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரமும்.

சென்னை ராஜதானியின் கடல் வ்யாபாரம் யுத்தத்தால் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பது கடல் வ்யாபாரக் கணக்குகளால் நன்றாய்த் தெரியவருகிறது. 1913-14ம் வர்ஷத்தில்கடல்வ்யாபாரத்தின் மதிப்பு ஏற்றுமதி இறக்குமதி இரண்டும் சேர்ந்து கிட்டத்தட்ட 5816-லக்ஷம் ரூபாயாகும். 1914-15-ம் வர்ஷத்தில்இது 4868-லக்ஷம் ரூபாயாகக் குறைந்துபோய்விட்டது. இந்தக்குறைவு நூற்றுக்கு 16-க்கு மேலாகும். இப்படிக் குறைந்ததற்குக் காரணங்களைக் கீழே விவரிக்கிறோம். யுத்தம் ஆரம்பித்ததும் ஆஸ்ட்ரியா, ஜெர்மனி ஆகியஇந்த தேசங்களோடு இந்தியா செய்துவந்த ஏராளமான வ்யாபாரம் அடியோடு நின்று போய்விட்டது. 1913-14-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானிக்கு அன்ய நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிப் பொருள்களின் மதிப்பு16-கோடியே 35-லக்ஷத்து 46-ஆயிரம்ரூபாய். இதில் 92 லக்ஷத்து 32-ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் ஜெர்மனியிலிருந்து வந்தன. இது மொத்த இறக்குமதி வ்யாபாரத்தில் நூற்றுக்கு 5·6-வீதமாகும். 27-லக்ஷத்து 35-ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகள் ஆஸ்ட்ரியாவிலிருந்து வந்தன. இது மொத்த இறக்குமதியில் நூற்றுக்கு 1.6-வீதமாகும்.

1913-14-ம் வர்ஷத்தில் மொத்தம் ஏற்றுமதியின் மதிப்பு 25-கோடியே 90 லக்ஷத்து 93 ஆயிரம் ரூபாயாகவிருந்தது. இதில் 2-கோடியே 47 லக்ஷத்து 19 ஆயிரம் ரூபாய் ஜெர்மனிக்கு சென்னை ராஜதானியிலிருந்து அனுப்பப்பட்ட சரக்குகளின் மதிப்பாகும். இது மொத்த ராஜதானி ஏற்றுமதியில் நூற்றுக்கு 9·5-வீதமாகும். 43-லக்ஷத்து 64-ஆயிரம் ரூபாய் ராஜதானியிலிருந்து ஆஸ்ட்ரியாவுக்கு அனுப்பப்



பட்ட சரக்குகளின் மதிப்பாகும். இது மொத்த ஏற்றுமதியில் நூற்றுக்கு 1·7-வீதமாகும்.

ஜெர்மனி, ஆஸ்ட்ரியா-ஹங்கேரி ஆகிய இந்த தேசங்களுடன் வ்யாபாரம் நின்று போனதில் முக்யமாய் ஏற்றுமதி வ்யாபாரத்தால் தான் கஷ்டம் அதிகமாயிற்று. இறக்குமதி வ்யாபாரம் நின்றுபோனதால் அதிக நஷ்டம் ஏற்படவில்லை. ஏனென்றால் அந்த தேசங்களிலிருந்து வரும் ஸாமான்களை மற்ற தேசங்களிலிருந்து தருவித்துக் கொள்ளக்கூடும். ஆனால் அந்த தேசங்களுக்கு ஏற்றுமதி யாகிவந்த சரக்குகளை இனிமேல் அங்கே அனுப்பமுடியாமல் போனதால், அந்த ஏற்றுமதிச் சரக்குகளின் விலை குறைந்து போனதோடு, அவைகளில் நடந்துவந்த வ்யாபாரமும் குறைந்துபோய்விட்டது. மேலும் யுத்தத்தால் பெல்ஜியத்தோடு நடந்துவந்த வ்யாபாரம் முற்றிலும் நின்று போய்விட்டது. ப்ரான்ஸோடு நடந்துவந்த வ்யாபாரமும் ரொம்ப குறைந்து விட்டது. துருக்கி இங்க்லண்டுக்கு விரோதமாக யுத்தம் தொடங்கினதால் சென்ற நவம்பர் மாஸம் முதல் துருக்கியோடு நடந்து வந்த வ்யாபாரமும் நின்று போய்விட்டது.

யுத்தத்தால் விரோத தேசங்களோடு நடந்து வந்த வ்யாபாரம் நின்றுபோனதே யல்லாமல், யுத்தத்தில் இங்க்லண்ட் கக்ஷியில் சேர்ந்துள்ள தேசங்களோடும், ஒரு கக்ஷியிலும் சேராத தேசங்களோடும் நடந்துவந்த ஏற்றுமதி வ்யாபாரமும் ரொம்ப குறைந்து போயிருக்கிறது. இதற்குக் காரணம் முதலாவது இங்க்லண்ட் கக்ஷியில் சேர்ந்துள்ள தேசங்களுக்கு அதிக சரக்குகள் தேவையாயிராதது. இரண்டாவது, இங்க்லீஷ் ராணுவத்துக்கு சிலஸாமான்கள் வேண்டியிருப்பதை யுத்தேசித்தும், நடுநிலைமைத் தேசங்கள் வழியாக விரோதிகளுக்கு தோல், சணல், கம்பளி, கோதுமைபோன்ற சில சரக்குகள் போய்ச் சேர்ந்து விடாதபடி தடுக்க வேண்டியதை உத்தேசித்தும் இந்தியா கவர்ன்மெண்டார் சில வ்யாபாரப் பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று சட்டம் செய்ததால், ஒரு கக்ஷியிலும்சேராத நடுநிலைமைத் தேசங்களுக்கு அந்த வ்யாபாரப்பொருள்களை ஏற்றுமதிசெய்ய முடியாமல்போயிற்று.

மேலும் ராணுவ டிபார்ட்மெண்டார் ஸோல்ஜர்களை ஏற்றிக்கொண்டு போவதற்காக வ்யாபாரக் கப்பல்களை உபயோகித்துவந்ததாலும், வேறிடங்களில் வ்யாபாரக்கப்பல்கள் அதிகமாக வேண்டியிருந்ததாலும், சென்னை ராஜதானியில் வ்யாபாரத்துக்காகக் கிடைக்கக்கூடிய கப்பல்களின் தொகை ரொம்ப குறைந்து போய் விட்டது. இதனால் கப்பல் வாடகையும் ரொம்ப ஏறி விட்டது.

சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் ஜெர்மன் க்ரூஸர் கப்பலாகிய 'எம்டன்' வங்காளக்குடாக்கடலிலும், அரபிக் கடலிலும் பல வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்து விட்டதாலும் வ்யாபாரத்துக்கு ரொம்ப நஷ்டமேற்படலாயிற்று.

இத்யாதி காரணங்களால் உண்டான பலன் என்னவென்றால், சென்னைராஜதானியின் அன்ய வ்யாபாரம் 1913-1914 ல் 43,42 லக்ஷம் ரூபாயாக விருந்தது 1914-15-ல் 3500 லக்ஷம் ரூபாயாகக் குறைந்து விட்டது. அதாவது அன்ய தேசங்களோடு நடந்துவரும் வ்யாபாரத்தில் நூற்றுக்கு 19 வீதம் குறைவு ஏற்பட்டிருக்கிறது. உள் நாட்டு கடல்கரை வ்யாபாரமும் 14,08 லக்ஷம் ரூபாயிலிருந்து 13,11 லக்ஷம்ரூபாய்க்குக் குறைந்திருக்கிறது. அதாவது இதில் நூற்றுக்கு 7-வீதம் குறைவு ஏற்பட்டிருக்கிறது.

அடியில் கண்ட அட்டவணையில் வ்யாபாரிகள் நடத்தும் அன்யவ்யாபாரம், உள் நாட்டுக் கடல்கரை வ்யாபாரம், கவர்ன்மெண்டார் நடத்தும் அன்ய வ்யாபாரம், உள் நாட்டுக்கடல் கரை வ்யாபாரம் ஆகிய இவைகளின் மதிப்பு 1913-14-ம் வர்ஷத்திலும் 1914-15-ம் வர்ஷத்திலும் இவ்வளவென்பதையும், 1914-15-ம் வர்ஷத்தில் வ்யாபாரம் எவ்வளவு குறைந்தோ அல்லது அதிகப்பட்டோ இருக்கிறதென்பதையும் காட்டியிருக்கிறோம்.

| விவரம். | 1913—14 | 1914—15 | 1914—15-ல் அதிகம் அல்லது குறைவு. | வித்யாஸம் நூற்றுக்கு எவ்வளவென்பது. |
|---|---|---|---|---|
| I. வ்யாபாரிகள் நடத்தும் வ்யாபாரம். | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | லக்ஷம் ரூ. | |
| (1) அன்ய வ்யாபாரம் ... | | | | |
| (a) இறக்குமதி | | | | |
| வ்யாபாரப் பொருள்கள் ... | 16,35·46 | 12,52·30 | — 3,83·16 | — 23·43 |
| தங்கம் ... ... | 3·90 | 0·95 | — 2·95 | — 75·45 |
| வெள்ளி ... ... | 14·31 | 17·92 | + 3·61 | + 25·22 |
| மொத்தம் இறக்குமதி ... | 16,53·68 | 12,71·18 | — 3,82·50 | — 23·13 |
| (b) ஏற்றுமதி | | | | |
| அன்ய வ்யாபாரப் பொருள்களை மறுபடியும் ஏற்றுமதி செய்தது. ... | 20·61 | 15·14 | — 5·46 | — 26·54 |
| இந்திய வ்யாபாரப் பொருள்கள் ... | 25,70·31 | 21,46·04 | — 4,24·26 | — 16·51 |
| தங்கம் ... ... | 15·06 | 23·62 | + 8·56 | + 56·91 |
| வெள்ளி ... ... | 82·38 | 43·93 | — 38·44 | — 46·67 |
| மொத்தம் ஏற்றுமதி ... | 26,88·37 | 22,28·75 | — 4,59·61 | — 17·10 |
| மொத்தம் அன்ய வ்யாபாரம் ... | 43,42·05 | 34,99·93 | — 8,42·11 | — 19·40 |
| (2) உள்நாட்டுக் கடல்கரை வ்யாபாரம்... | | | | |
| (a) இறக்குமதி | | | | |
| இந்திய வ்யாபாரப் பொருள்கள் ... | 7,55·69 | 6,70·32 | — ·85·37 | — 11·30 |
| அன்ய நாட்டுச் சரக்குகள் ... | 97·28 | 78.95 | — 18·33 | — 18·84 |
| வெள்ளி ... ... | 3·37 | 4·06 | + ·69 | + 20·77 |
| மொத்தம் இறக்குமதி ... | 8,56·35 | 7,53·33 | — 1,03·01 | — 12·03 |
| (b) ஏற்றுமதி | | | | |
| இந்திய வ்யாபாரப் பொருள்கள் ... | 536·05 | 5,44·47 | + 8·41 | + 1·57 |
| அன்ய நாட்டுச் சரக்குகள் ... | 12·90 | 9·30 | — 3·59 | — 27·90 |
| வெள்ளி ... ... | 2·87 | 3·80 | + ·93 | + 32·40 |
| மொத்தம் ஏற்றுமதி ... | 5,51·83 | 5,57·58 | + 5·74 | + 1.04 |
| மொத்தம் உள்நாட்டுக் கடல்கரை வ்யாபாரம் ... ... | 14,08·18 | 13,10·92 | — 97·26 | — 6·91 |
| வ்யாபாரிகளின் மொத்த வ்யாபாரம் ... | 57,50·24 | 48,10·85 | — 9,39·38 | — 16 33 |
| II. கவர்ன்மெண்ட் வ்யாபாரம் | | | | |
| (1) அன்ய நாட்டு வ்யாபாரம் ... | | | | |
| இறக்குமதி ... ... | 44·08 | 36·26 | — 7·82 | — 17·74 |
| ஏற்றுமதி ... ... | 1·86 | 3·56 | + 1·70 | + 91·93 |
| (2) உள்நாட்டு கடல்கரை வ்யாபாரம் ... | | | | |
| இறக்குமதி ... ... | 11·22 | 11·44 | + ·21 | + 1·96 |
| ஏற்றுமதி ... ... | 8·51 | 5·66 | — 2·84 | — 33·49 |
| மொத்தம் கவர்ன்மெண்ட் வ்யாபாரம் ... | 65·68 | 56·94 | — 8·74 | — 13·32 |
| எல்லா வ்யாபாரமும் சேர்ந்து மொத்தம் | 58,15·93 | 48,67·80 | — 9,48·13 | — 16·30 |



அன்ய வ்யாபாரத்தை முதலில் எடுத்துக் கொள்வோம். இதில் வ்யாபாரிகள் இறக்குமதி செய்யும் சரக்குகளின் மதிப்பு 1913-14-ம் வர்ஷத்தில் 16,35. 46 லக்ஷம் ரூபாயாக இருந்தது. 1914-15-ம் வர்ஷத்தில் இது 12,52·30 லக்ஷம் ரூபாயாகக் குறைந்துபோயிருக்கிறது. அதாவது நூற்றுக்கு 23-வீதம் குறைந்திருக்கிறது. இதற்குக் காரணம் பருத்தி ஸாமான்கள், உலோகங்கள், பருத்திநூல், யந்த்ரங்கள், ரெயில்வே ஸாமான்கள், கண்ணாடி, கண்ணாடி ஸாமான்கள், இரும்பு ஸாமான்கள், தங்கம் வெள்ளி சரிகைகள், வாஸனைச் சரக்குகள், சாயப் பொருள்கள், தோல் பதனிட உதவும் பொருள்கள், மோட்டார் வண்டிகள், சர்க்கரை ஆகிய இவைகள் அதிகமாய் இறக்குமதி யாகாம லிருந்ததே. அன்யதேசங்களிலிருந்து வரும் சரக்குகளில் கிரஸின் எண்ணெய் ஒன்று தான் முந்தின வர்ஷத்தை விட அதிகமாய் இறக்குமதியாயிற்று.

ஏற்றுமதியின் மதிப்பும் 1913-14-ம் வர்ஷத்தில்25,90·93 லக்ஷம் ரூபாயாக விருந்தது 1914-15-ம்வர்ஷத்தில் 21,61.19 லக்ஷமாகக்குறைந்துவிட்டது. இந்தக் குறைவு நூற்றுக்கு 17-வீதமாகும். இதற்குக் காரணம் எண்ணெய் விதைகள், பருத்தி, பதனிடாத ஆட்டுத்தோல், பதனிட்ட ஆட்டுத்தோல், கதம்பைக் கயிற்றால் செய்த பொருள்கள், பருத்தித்துணி வகைகள், மாங்கள், பருத்திநூல், பிண்ணாக்கு, உயிருள்ள மிருகங்கள் ஆகிய இவைகள் ஸ்வல்பமாக ஏற்றுமதியானதே. மேற்சொன்ன பொருள்கள் குறைவாய் ஏற்றுமதி யானதால் ஏற்பட்ட நஷ்டத்தில் ஒருபாகம் பதனிட்ட மாட்டுத்தோல், தான்யங்கள், பருப்புவகைகள், ரப்பர், தேங்காய் எண்ணெய், அவுரி, காப்பிக் கொட்டை ஆகிய இவைகள் அதிகமாக ஏற்றுமதியானதால் ஒருவாறு சரிக்கட்டிப் போயிற்று.

இனி, இந்தியாவிலேயே ஒரு துறைமுகத்திலிருந்து இன்னொரு துறைமுகத்தோடு செய்யும் உள்நாட்டுக் கடல் வ்யாபாரத்தை கவனிப்போம். 1913 14-ம் வர்ஷத்தில் உள்நாட்டுக்கடல் இறக்குமதி வ்யாபாரம் 8,52.98-லக்ஷம் ரூபாயாக இருந்தது 1914-15-ம் வர்ஷத்தில் 7,49.27-லக்ஷம் ரூபாயாகக் குறைந்து போய்விட்டது. அதாவது நூற்றுக்கு 12-வீதம் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் தான்யம், பருப்புவகைகள், பருத்தி, சாக்குகள், ஆகிய இவைகளின் இறக்குமதி குறைந்து போனதே.

ஆனால் உள்நாட்டுக் கடல் வ்யாபாரத்தில் ஏற்றுமதி சற்று அதிகமாயிருக்கிறது. ஏற்றுமதியின் மதிப்பு 1913-14-ம் வர்ஷத்தில் 5,48·96-லக்ஷம் ரூபாயாக இருந்தது.

1914-15-ம் வர்ஷத்தில் 5,53.78 லக்ஷம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. இந்த அதிகம் நூற்றுக்கு 0.9-வீதமாகும். இந்த வர்ஷத்தில் (1914-15) சென்னை ராஜதானியிலிருந்து வங்காளத்துக்கு வேர்க்கடலை ரொம்ப அதிகமாக ஏற்றுமதியாயிற்று. ஆனால் தேங்காயெண்ணெய், காய்கறிகள், வாஸனைப்பொருள்கள், வேர்க்கடலையெண்ணெய் ரொம்ப குறைவா யேற்றுமதி செய்யப்பட்டதால், ஏற்றுமதியின் மதிப்பு மொத்தத்தில் ரொம்ப அதிகரிக்கவில்லை.

**விலைவாசிகள்.**—யுத்தத்தால் விலைவாசிகளும் மாறுதலடைந்திருக்கின்றன. அன்ய நாடுகளிலிருந்து வரும் இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகமாகியிருக்கிறது. முக்யமாய் சர்க்கரை, தாம்ரம், இரும்பு, எஃகு ஆகிய இவைகளின் விலை ரொம்ப உயர்ந்துவிட்டது. ஆனால் பாக்கு, வெள்ளி இவைகளின் விலை சற்றுக் குறைந்துவிட்டது. ஏற்றுமதிப் பொருள்களில் அநேகமாய் எல்லாம் விலை குறைந்து விட்டன. பதனிடாத ஆட்டுத்தோல், சர்க்கரை, பதனிட்ட மாட்டுத்தோல் ஆகிய இவைகளின் விலை மாத்ரம் ரொம்ப ஏறிவிட்டது.

**யுத்தத்துக்கு முன்னும் பின்னும் வ்யாபாரத்தின் நிலைமை.**—யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னும்

அன்யதேசத்துக் கடல் வ்யாபாரத்தின் மதிப்பு அதிகரித்துக்கொண்டிருந்தது. யுத்தம் ஆரம்பித்தவுடன் அது ரொம்பவும் குறைந்துபோய் விட்டது. இங்கே குறிப்பிட்டுள்ள கணக்குகளில் வர்ஷம் என்பது ஏப்ரல்மாஸம்1-ந்தேதியிலிருந்து அடுத்த வர்ஷத்து மார்ச்சுமாஸம் 31-ந்தேதி முடிவாகும். யுத்தமானது 1914-ம் வர்ஷம் ஜூலை மாஸக் கடைசியில் ஆரம்பமாயிற்று. ஆனால் யுத்தத்தால் கடல் வ்யாபாரம் ஆகஸ்ட்மாஸம் முதல் பாதிக்கப்பட்டது என்று சொல்லாம். 1914-15-ம் வர்ஷத்தில் 1914-ம் வர்ஷம் ஏப்ரல் மாஸம் முதல் ஜூலைமாஸம் முடிய 4-மாஸத்தை யுத்தத்துக்கு முன்னுள்ள பாகமாகவும், ஆகஸ்ட்முதல் 1915-ம் வர்ஷம் மார்ச்சுமாஸம் முடிய 8-மாஸகாலத்தை யுத்தத்துக்குப் பின்னுள்ள பாகமாகவும் பிரித்துக்கொள்வோம். அடியில்கண்ட கணக்குகளில் 1913-14-ம் வர்ஷத்திலும், 1914-15-ம் வர்ஷத்திலும் முதல் 4-மாஸ காலத்திலும் அதாவது ஏப்ரல்முதல் ஜூலை முடியவும், அடுத்த 8-மாஸகாலத்திலும் அதாவது ஆகஸ்ட்முதல் மார்ச்சு முடியவும், அன்யதேசத்து வ்யாபாரத்தின் மதிப்பு இவ்வளவென்பதைக் காட்டுகிறோம்.

| | இறக்குமதி. லக்ஷம் ரூபாய் | ஏற்றுமதி. லக்ஷம் ரூபாய் |
|---|---|---|
| **1913-14.** | | |
| (1) ஏப்ரல்-ஜூலை | 5,51·39 | 8,50·65 |
| (2) ஆகஸ்ட்-மார்ச்சு | 10,84·07 | 17,19·66 |
| **1914-15.** | | |
| (1) ஏப்ரல்-ஜூலை | 5,72·27 | 10,05·08 |
| (2) ஆகஸ்ட்-மார்ச் | 6,80·03 | 11,40·96 |
| **வித்யாஸம்.** | | |
| (1) ஏப்ரல்-ஜூலை | +20·88 | +1,54·43 |
| (2) ஆகஸ்ட்-மார்ச்சு | —4,04·04 | —5,78·70 |
| மொத்த வித்யாஸம். | —3,83·16 | —4,24·27 |

மேற்காட்டிய கணக்குகளில் இறக்குமதியின் மதிப்பானது 1913-14-ம் வர்ஷம் ஏப்ரல்முதல் ஜூலைவரையில் 5,51·39 லக்ஷம் ரூபாயாக இருந்தது. 1914-15-ம் வர்ஷம் ஏப்ரல்முதல் ஜூலை வரையில் 5,72·27 லக்ஷம் ரூபாயாக அதிகரித்தது. அதாவது 20·88 லக்ஷம் ரூபாய் அல்லது நூற்றுக்கு 4-வீதம் அதிகம். ஆனால் 1913-14-ம் வர்ஷம் ஆகஸ்ட் முதல் மார்ச்சுவரையில் இறக்குமதியின் மதிப்பு 10,84.07 லக்ஷம் ரூபாயாக இருந்தது. 1914-15-ம் வர்ஷத்தில் 6,80·03 லக்ஷமாகக் குறைந்து போய்விட்டது. அதாவது 4,04·04-லக்ஷம் ரூபாய் அல்லது நூற்றுக்கு 37-வீதம் குறைந்து போய்விட்டது. ஆகவே முதல் நான்குமாஸங்களில் ஏற்றுமதி சற்று அதிகமானாலும், பின் எட்டுமாஸங்களில் ரொம்ப குறைந்து போனதால் மொத்த மதிப்பானது 1913-14-ல் 16,35·46 லக்ஷம் ரூபாயாக இருந்தது 1914-15-ம் வர்ஷத்தில் 12,52·30 லக்ஷம் ரூபாயாகக் குறைந்துவிட்டது. அதாவது 3,83·16 லக்ஷம் ரூபாய் அல்லது நூற்றுக்கு 23-வீதம் குறைவு ஏற்பட்டது.

அதேமாதிரி ஏற்றுமதியின் மதிப்பும் 1913-14-ம் வர்ஷம் ஏப்ரல் முதல் ஜூலைவரை 4-மாஸத்தில் 8,50·65 லக்ஷம் ரூபாயாக இருந்தது 1914-15-ம் வர்ஷம் ஏப்ரல் முதல் ஜூலைவரை 4-மாஸத்தில் 10,05·08 லக்ஷம் ரூபாயாக அதிகரித்தது. அதாவது 1,54·43 லக்ஷம் ரூபாய் அல்லது நூற்றுக்கு 18-வீதம் அதிகம். ஆனால் 1913-14-ம் வர்ஷம் ஆகஸ்ட்மாஸம் முதல் மார்ச்சுவரையில் 8 மாஸகாலத்தில் ஏற்றுமதியின் மதிப்பு 17,19·66 லக்ஷம் ரூபாயாக இருந்தது 1914-15-ம் வர்ஷம் ஆகஸ்ட் முதல் மார்ச்சுவரையில் 8 மாஸகாலத்தில் 11,40·96 லக்ஷம் ரூபாயாகக் குறைந்துவிட்டது. அதாவது 5,78·70 லக்ஷம் ரூபாய் அல்லது நூற்றுக்கு 34-வீதம் குறைவு ஏற்பட்டது. ஆகவே, இறக்கு மதியின் மதிப்பைப்போலவே ஏற்றுமதியின் மதிப்பும் முதல் நான்கு மாஸங்களில் அதிகமானாலும், பின்பாகமாகிய 8 மாஸங்களில் ரொம்ப குறைந்துவிட்டதால் மொத்தமதிப்பு நூற்றுக்கு 16·50-வீதம் குறைந்து விட்டது.



## LOCAL SELF-GOVERNMENT IN INDIA

## இந்தியாவில் ஸ்தல ஸ்வய ஆட்சி.

சென்ற மாஸத்து 'ஜனோபிமானி'யில் இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சி ஸம்பந்தமாக வெளியிட்டிருக்கும் தீர்மானத்தில் முனிஸிபாலிடிகள், க்ராம பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளைப் பற்றிச் சொல்லும் பாகங்களை எழுதியிருந்தோம். இந்த வ்யாஸத்தில் ஜில்லாபோர்டுகள், தாலுகாபோர்டுகள் இவைகளைப் பற்றிச் சொல்லும் விஷயங்களைத் தருகிறோம்.

**ஜில்லாபோர்டுகளும் தாலுக்காபோர்டுகளும்.**—தேசத்தின் எல்லாபாகங்களிலும் தாலுக்காபோர்டுகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், க்ராமாந்தர நிர்வாக வேலைகளை இவைகளைக் கொண்டேவெகுவாய் நடத்தவேண்டுமென்றும், அவைகளுக்குப் போதுமான அளவு பணமும், ஸ்வாதீனமும் கொடுக்க வேண்டுமென்றும், அவைகளினுடைய அதிகார ப்ரதேசம் குறைந்ததாய் இருந்தால் போர்டு மெம்பர்களுக்கு அந்தந்த ப்ரதேசத்தைப் பற்றிய விஷயங்களில் அறிவும் ஊக்கமும் ஏற்படக்கூடுமென்றும், இதற்கு தாலுக்கா போர்டுகளை தாலுக்கா அல்லது தாசில்களையனுஸரித்து அமைக்க வேண்டுமென்றும், அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சு செய்தது. இந்த ஏற்பாடு சென்னை ராஜதானியில் அனுஷ்டானத்திலிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒரு போர்டு நியமிக்காமல், ஒவ்வொரு ரெவின்யூ டிவிஷனுக்கும் ஒருபோர்டு நியமித்திருக்கிறார்கள். வேறு மாகாணங்களில் வேறு விதமான ஏற்பாடுகள் அனுஷ்டானத்தில் இருந்துவருகின்றன. சில மாகாணங்களில் தாலுக்காபோர்டுகள்தான் க்ராமாந்தர ஸம்பந்தமான வேலைகளை கவனித்துவருகின்றன. வேறு சில மாகாணங்களில் தாலுக்கா போர்டுகள் ஜில்லாபோர்டுகளுக்குக் கீழ்ப்பட்டு அதிக அதிகாரங்களில்லாமலிருக்கின்றன. மாகாண கவர்ன்மெண்டுகள் ஜில்லாபோர்டுகளின் அதிகாரத்தைக் குறைத்து தாலுக்கா போர்டுகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க இஷ்டப்படவில்லை. சில மாகாண கவர்ன்மெண்டுகள் தங்கள் மாகாணங்களிலுள்ள தாலுக்கா போர்டுகள் விஷயத்தில் வேறு சில ஏற்பாடுகள் செய்து வருகின்றன. இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களபிப்ராயப்படி ஏற்பாடுகள் செய்துகொள்ளட்டுமென்று சொல்லுகிறார்கள்.

**தேரிந்தேடுக்கப்பட்ட மெம்பர்கள் அதிகமாயிருப்பது.**—ஜில்லா போர்டுகளிலும் தாலுக்கா போர்டுகளிலும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் ரொம்பவும் அதிகமாயிருக்கவேண்டுமென்றும், ஸ்வல்பஜனத்தொகையுள்ள வகுப்பார்களுக்குவேண்டியவளவு ப்ரதிநிதிகள் இருக்கும்படிக்கும், உத்யோகஸ்தர்கள் போர்டில் இருக்கும்படிக்கும் சில மெம்பர்களை நியமிக்க வேண்டுமென்றும் அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சுசெய்தது. சென்னை கவர்ன்மெண்டார் ஜில்லா போர்டுகளின் மெம்பர்களில் மூன்றில் இரண்டு பாகமும் தாலுக்கா போர்டுகளில் சரிபாதியும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாயிருப்பதற்கு ஸம்மதித்திருக்கிறார்கள்.

**ஜில்லா போர்டுகள், தாலுகா போர்டுகளின் ப்ரேஸிடேண்டுகள்.** — ஜில்லா போர்டுகளிலும் தாலுகா போர்டுகளிலும் ஸர்க்கார் உத்யோகஸ்தரே ப்ரெஸிடெண்டாயிருக்க வேண்டுமென்று அதிகாரப் பிரிவினைக் கமிஷன் அபிப்ராயப்படுகிறது.

ஏனென்றால், கலெக்டர், டிவிஷனல் ஆபிஸர்களை ப்ரெஸிடெண்டாக இருக்கக்கூடாதென்று சொன்னால், ரோடுகள், கல்வி, ஸுகாதாரம்போன்ற ஜில்லாவின் பொது வ்யவஹாரங்களில் அவர்களுக்கு அதிக ஸம்பந்தமில்லாமல் போகும், மேலும் இந்த போர்டுகளிலுள்ள கற்றுத்தேர்ந்த உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்களின் அபிப்ராயங்கள் அவர்களுக்குத் தெரியாமல் போகக்கூடும்.

முனிஸிபாலிடிகளில்மாத்ரம் உத்யோகஸ்தர்களல்லாதவர்கள் சேர்மனாக இருக்கலாமென்று சொல்லி, இந்த போர்டுகளில் அப்படிக்கூடாதென்று கமிஷன் சொல்லுவதற்குக் காரணமென்னவென்றால், முனிஸிபாலிடிகளினுடைய நிலைமை வேறு; இந்த போர்டுகளினுடைய நிலைமை வேறு; முனிஸிபாலிடிகளுக்கு ஜில்லாவின் பொதுக்கார்யங்களில் அதிக ஸம்பந்தம் கிடையாது. அவைகளிலுள்ள மெம்பர்களுக்கு ராஜீய விஷயங்களில் அதிக ஞானம் உண்டு; மேலும் அவைகளின் அதிகார ப்ரதேசங்களும் சிறியவை. இந்த சிபார்சை எல்லா மாகாண கவர்ன்மெண்டுகளும் இந்தியா கவர்ன்மெண்டும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் எங்கேயாவது போர்டுகளில் உத்யோகஸ்தரல்லாதவர்கள் ப்ரெஸிடெண்டாக இருந்தால் அந்த ஏற்பாடு அப்படியே இருக்கலாமென்றும், எந்த மாகாண கவர்ன்மெண்டாவது பரீக்ஷார்த்தமாக போர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாதவர்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்க இஷ்டப்பட்டால் அப்படியே செய்து பார்க்கலாமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

**போர்டுகளின் வரும்படி.**—போர்டுகளுக்குக் கிடைக்கும் வரும்படி முக்யமாய் நிலஸெஸ்ஸினால் கிடைக்கிறது. இது ஸாதாரணமாய் ரெவின்யூ கிஸ்தியில் ரூபாய்க்கு 1-அணா வீதமாகும். கவர்ன்மெண்டார் 1905-ம் வர்ஷத்தில் போர்டுகளுக்கு அப்போதுள்ள வரும்படியில் நூற்றுக்கு 25-பாகம் வீதம் பணஉதவி செய்து வருகிறார்கள். இதைத் தவிர அடிக்கடி க்ராண்டுகளும் கொடுத்துவருகிறார்கள். 1912-13-ம் வர்ஷத்தில் இந்தியாவில் 199-ஜில்லா போர்டுகளும் 536-தாலுக்கா போர்டுகளும் இருந்தன. இவைகளின் மொத்த வரும்படி 5,68,08,292. ரூபாய்

**வரிபோடுதல்.**—ரெவின்யூ கிஸ்தியில் ரூபாய்க்கு ஒரு அணாவுக்குமேல் நிலஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்றும், அப்படி உயர்த்துவது ஜனஸம்மதமாயிராதென்றும் கமிஷன் சிபார்சு செய்தது. இப்போதுள்ள நிலைமையில், சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் அளவுக்கு அதிகமாக நிலஸெஸ் போடவேண்டுமென்றால், அதற்கு இந்தியா கவர்ன்மெண்டின் அனுமதி வேண்டியிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டார் நிலஸெஸ் விஷயமாய் யாதொரு அபிப்ராயமும் இப்போது சொல்லத் தயாராயில்லை,

**ரெயில்வே ஸெஸ்.**—ஜில்லாக்களில் ரெயில் வேக்களோ, ட்ராம்வேக்களோ போடுவதற்காக, ரெவின்யூ கிஸ்தியில் ரூபாய்க்கு காலணா வீதம் அதிகப்படியாக நிலஸெஸ் போட ஜில்லா போர்டுகளுக்கு அதிகாரமிருக்க வேண்டுமென்றும், அப்படி வரிபோடும் ப்ரேரணையை ஜில்லாபோர்டில் நூற்றுக்கு 75 பாகத்துக்கு குறையாமல் மெம்பர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அதேப்ரேரணையை ஆறுமாஸங்கழித்து போர்டு மீட்டிங்கில் மறுபடியும் கொண்டுவந்து முன்போலவே 100-க்கு 75 பாகம் மெம்பர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும், அந்த ப்ரேரணைக்கு மாகாண கவர்ன்மெண்டார் அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் கமிஷன் சிபார்சு செய்தது. இஷ்டப்பட்டால் கமிஷனின் சிபார்சை அனுஸரித்து ரெயில்வே ஸெஸ் போடுவதற்கு சட்டங்கள் செய்ய இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

மாகாண கவர்ன்மெண்டுகள் சீக்ரம் மேல் குறித்த சட்டங்கள் செய்யவேண்டுமென்றும், தேசமெங்கும் தெரிந்தெடுத்த ஜில்லாபோர்டுகள் பரீக்ஷார்த்தமாக ரெயில்வேக்கள் ட்ராம்வேக்கள் போட ஆரம்பிக்கவேண்டுமென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

**மராமத்து வேலைகளுக்கு மதிப்பு திட்டங்கள்.**—போர்டுகள் ஏதாவது மராமத்து வேலைகள் செய்ய எண்ணங்கொண்டு அவைகளுக்கு மதிப்புத் திட்டங்கள் போட்டால், அதற்கு கவர்ன்மெண்டார் பல கடுமையான நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிபந்தனைகளை எடுத்து விடவேண்டுமென்று அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சிபார்சு செய்தது. ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் இந்த சிபார்சை ஏற்றுக்கொள்ளவில்லை.

**ஆபீஸ் ஸிப்பந்திகள்.**—போர்டுகளின் ஸிப்பந்திகள் விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் முனிஸிபாலிடிகள் விஷயத்தில் என்ன அபிப்ராயம் கொடுத்திருக்கிறார்களோ அதே அபிப்ராயந்தான் தெரிவித்திருக்கிறார்கள்.

**வரவு செலவு திட்டமும் பண விஷயங்களில் மேற் பார்வையும்.**—போர்டுகள் தங்களுடைய வரவு செலவு திட்டங்களை ஸர்க்கார் மேற்பார்வையின்றி தயாரித்துக்கொள்ள ஸ்வதந்தரங்கள் ஏற்பட வேண்டுமென்றும், ஆனால் அவைகள் செலவுக்குமேல் ஒரு குறிப்பிட்ட தொகை கையில் மிச்சமாக வைத்துக் கொள்ளவேண்டுமென்றும் கமிஷன் சிபார்சு செய்தது. இந்த ஏற்பாடு பம்பாய் ராஜதானியில் அனுஷ்டானத்தில் இருந்து வருகிறது. மற்ற மாகாணங்கள் மேற்பார்வையை முழுவதும் நீக்கிவிட ஸம்மதிக்கவில்லை. ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் அந்தந்த விடத்து நிலைமைகளுக்குத் தக்கபடி மேற்பார்வை நிபந்தனைகளைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால் அநேகமாய் எல்லாவிடத்திலும் போர்டுகளுக்கு ஸர்க்கார் உத்யோகஸ்தர்களே ப்ரெஸிடெண்டாக இருப்பதாலும், போர்டுகள் ஸம்பந்தப்பட்ட ஆக்டுகளில் சில ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் போர்டுகளின் வ்யவஹாரங்களைச் சோதனைசெய்து மேற்பார்வை செய்ய வேண்டுமென்று விதித்திருப்பதாலும்; மேற்சொன்னபடி வரவு செலவு மதிப்புத் திட்டங்களைப் பற்றிய நிபந்தனைகளைக் குறைப்பதால் தவறுகள் ஏற்படாவென்கிறார்கள்



## SOIL VENTILATION.

## நிலத்திற்குள் காற்றோட்டம்.

செடிகளின் வளரும் பாகங்களுக்கு யதேஷ்டமாய் காற்று கிடைக்கவேண்டியது அவச்யமென்பதைப் பலர் அறிந்திருப்பார்கள். வளரும் செடியிலுள்ள ஸெல்ஸ் என்னும் சிற்றறைகள் ம்ருகங்களைப் போலவே காற்றை ச்வாஸிக்கின்றன. அவைகள் ஆகாயத்திலுள்ள ப்ராண வாயுவை உபயோகித்துக்கொள்வதோடு கரியமிலவாயுவையும் வெளியே விடுகின்றன. செடியின் மேற்பாகங்களுக்கு காற்று ஸுலபமாய்க் கிடைத்துவிடுகிறது. பூமிக்குள் இருக்கும் பாகமாகிய வேர்களுக்கு சில ஸமயங்களில் போதுமான அளவு ஆகாயம் கிடைப்பதில்லை. வேர்களுக்கும் போதுமான அளவு ஆகாயம் கிடைக்கும்படி செய்யவேண்டியது அவச்யமென்பதையும், அதற்காக மண்ணில் காற்றோட்டமிருக்கும்படி செய்யவேண்டியது அவச்யமென்பதையும் பலர் சரிவர கவனிப்பதில்லை, மேலும் இந்தியாவில் ஸாகுபடிக்கு ஜலம் முக்ய ஸாதனமாயிருப்பதாலும், ஜலகஷ்டத்தை நிவர்த்திசெய்வதற்காக புழுதிமண் ஸாகுபடி செய்வதையும், ஜலத்தை நிலத்தில் காப்பாற்றி வைப்பதையுமே அதிகமாய் கவனித்து வருவதாலும், நிலத்திற்குள் காற்றோட்டம் இருக்கும்படி செய்யவேண்டுமென்பதில் பலர் அச்ரத்தையாயிருந்து விடுகிறார்கள்.

வடக்கே பூஸா என்னும் ஊரிலுள்ள விவஸாய ஆராய்ச்சி ஸங்கத்தைச்சேர்ந்த இரண்டு உத்யோகஸ்தர்கள் நிலத்திற்குள் காற்றோட்டமிருக்கச் செய்யவேண்டியதின் அவச்யத்தைப் பற்றியும், காற்றோட்ட மில்லாவிட்டால் நேரிடும் கெடுதிகளைப்பற்றியும், ஸ்வபாவமாகவே காற்றோட்டத்துக்கு வஸதிகளில்லாவிட்டால் அதற்கென்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றியும் ஆராய்ச்சி செய்து அதன் முடிவுகளை ப்ரசுரம் செய்திருக்கி

ருர்கள். அவ்விஷயங்கள் தென்னிந்தியாவிலுள்ள நிலங்களில் சிலவற்றிற்கும் ஏற்குமாகையால் அவைகளை இங்கு விவரிக்கிறோம்.

வடக்கே ஸிந்து, கங்கை ஆகிய இரண்டுநதிகளும், அவைகளின் உபநதிகளும் பாயும்ஸமபூமிகளில் மண் வண்டலாக இருக்கிறது. வண்டல் ரொம்ப நயமாகவும் ஒரே சீராகவும் இருக்கிறது. இதனால் மண்ணிற்குள் காற்று புகுவதற்கும், அங்கே காற்றோட்டமிருப்பதற்கும் முடிவதில்லை. சிலவிடங்களில் இந்த வண்டலானது ஜலம் பாய்ச்சினதும் பருமனில் குறுகிவிடுவதால் காற்றோட்டத்துக்கு இன்னும் தடை யேற்படுகிறது. மேலும் வண்டல்மண் காய்ந்ததும் நன்றாய் வெடிப்பதுமில்லை.

மண்ணிற்குள் காற்றோட்டமில்லாததால் சில கெடுதிகள் உண்டாகின்றன. பயிருக்குப்போதுமான அளவு நைட்ரோஜின் இல்லாவிட்டால் என்ன கெடுதிகள் நேரிடுமோ அதே கெடுதிகள் காற்றோட்டமில்லாவிட்டாலும் ஏற்படுகின்றன. இதனால் பயிருக்கு நைட்ரோஜின் போதுமான அளவில்லாததால் இந்தக் கெடுதிகள் நேரிட்டனவா அல்லது காற்றோட்டமில்லாதத்தால் நேரிட்டனவா வென்று அறிவது கஷ்டமாகிறது. சில ஸமயங்களில் பயிர்கள் வேரில் காற்றோட்டக் குறைவால் வாடிப்போவதுண்டு. இதைக்கண்டு விவஸாயிகள் பயிர்களுக்கு வ்யாதி கண்டிருக்கிறதென்று சொல்வதுண்டு. இந்தியாவில் சிலபாகங்களில் மாஸூல் அதிகமாகக் கிடைக்காததற்குக் காரணம் முக்யமாய் மண்ணில் வேண்டிய அளவு காற்றோட்டமில்லாமலிருப்பதே. நிலத்திற்குள் காற்றோட்டமிருக்கும்படி செய்வதில் எவ்வளவு ஈரம் வேண்டியிருக்குமோ அவ்வளவு ஈரமும் இருக்கும்படி செய்தால் ஸாகுபடியில் நல்ல மாஸூல் கிடைக்கும்.

**ஏன் காற்றோட்டமிருக்கவேண்டும்.**—பயிர்கள் வளரும்போது மயிரிழைபோன்ற வேர்களிலுள்ள ப்ரோடோப்ளாஸம் என்னும் ஜீவமூலப் பொருளும் மற்ற உயிருள்ள சிற்றறைகளும் மண்ணில் உள்ள ப்ராணவாயுவை க்ரஹித்துக் கொண்டு கரியமிலவாயுவை வெளிவிடுகின்றன. இதோடு, மண்ணிலுள்ள இந்த்ரிய வஸ்துக்கள் அழுகிப் போவதாலும் கரியமிலவாயு உற்பத்தியாகிறது. அங்கேயுள்ள பாக்டீரியா என்னும் சிறு ஜீவராசிகளும் அங்குள்ள ப்ராணவாயுவை உபயோகித்து அதன் அளவைக் குறைத்து கரியமிலவாயுவை வெளிவிடுகின்றன.

மண்ணில் நல்லகாற்றோட்டமில்லாவிட்டால், அதிலுள்ள காற்றில் மேற் சொன்ன காரணங்களால் ப்ராணவாயுவின் அளவு குறைந்துபோய், அதற்குபதிலாக கரியமிலவாயு அதிகமாகும். மேலும் மண்ணிலுள்ள ஜலத்திலும் கரியமிலவாயு அதிகமாகும். அதிகமானால் இரண்டு விதங்களில் பயிரின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிறது. முதலாவது, வேர்களின் சிற்றறைகளுக்கு வேண்டிய அளவு ப்ராணவாயு கிடைக்காது. இரண்டாவது கரியமிலவாயுவே வேர்களுக்கு ஓர் விஷமாகும். இந்த விஷமிருப்பதால் பயிரின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிறது.

**காற்றோட்டத்தால் வேர்வளருகிறது.** காற்றோட்டத்தால் வேருக்கு என்ன ஸாதகமேற்படுகிறதென்றறிய கொஞ்சகாலத்துக்கு முன்னால் சிலர் ஆராய்ச்சி செய்தார்கள். செடிகளுக்கு உணவாகக்கூடிய பொருள்களை த்ரவப் பொருள்களில் கரைத்து அந்த த்ரவத்தைபற்பல வகையான மண்ணில் கலந்து, அந்த மண்ணில் செடிகளை வளர்த்தும், அந்த த்ரவத்திலேயே மண்போடாமல் செடிகளை வளர்த்தும் பார்த்ததில், பெருமணல் கலந்துள்ள மண்ணில் செடிகள் ரொம்ப நன்றாய் வளர்ந்ததோடு, அவைகளின் வேர்களும் நன்றாய் பரவியிருந்தன. ரொம்பப் பொடியான மணலிலும், வண்டலிலும், செடியுணவு கரைத்த ஜலத்திலும் பயிரிட்ட செடிகள் நன்றாய் வளரவில்லை. அவைகளின் வேர்களும் நன்றாய்ப் பரவவில்லை. பொடிமணலிலும் வண்டலிலும் ஜலத்திலும் செடிகள் நன்றாய் வளராததற்குக் காரணம் வேர்களுக்குப்பக்கத்தில் நல்ல காற்றோட்டமில்லாதது என்று ஸந்தேகித்தார்கள். செடியுணவுப்பொருள்களை ஜலத்தில் கரைத்து அதைப் பாத்ரங்களிலூற்றி, அவைகளில் பார்லியென்னும் வால் கோதுமையை வைத்துப் பயிரிட்டுப் பார்த்தார்கள். சில பாத்ரங்களில் ஒருநாளைக்கு ஒருதடவை ஜலத்திற் காற்றோட்டமிருக்கும்படி செய்தார்கள். வேறு சில பாத்ரங்களின் ஜலத்தில் எப்போதும் காற்றோட்டமிருக்கும்படி செய்தார்கள். எப்போதும் காற்றோட்டமிருந்த பாத்ரங்களில் வைக்கப்பட்டிருந்த வாற்கோதுமையில் வேர்கள் நன்றாய் வளர்ந்ததோடு, இலைகளும் தண்டும் ரொம்ப நன்றாய் வளரலாயின. ஒரு நாளைக்கொருதடவை காற்றோட்டமிருக்கும்படி செய்த பாத்ரங்களில் வாற்கோதுமை அவ்வளவு நன்றாய் வளரவில்லை. இதனால் வேர்களுக்கு காற்றோட்டம் வேண்டியதவச்ய மென்று ஏற்படுகிறது.

மற்றப்பயிர்களைவிட அவுரிபோன்ற கோதுப் பயிர்களுக்கு வேரில் காற்றோட்டமிருக்க வேண்டியது ரொம்ப அவசியம். இந்தப் பயிர்களின் வேர்களில் சிலமுண்டுகள் இருக்கின்றன. இவைகள் மண்ணிலுள்ள பாக்டீரியா என்னும் ஜீவராசிகளின் உதவியால் ஆகாயத்திலுள்ள நைட்ரோஜின் என்னும் வாயுவை க்ரஹித்து, நைட்ரோஜின் ஸம்பந்தமான வஸ்துக்கள் தயார் செய்து பயிர்களுக்கு உணவாக கொடுக்கின்றன. முண்டுகள் இந்த வேலைகளைச் செய்வதற்கு நைட்ரோஜினோடு ப்ராணவாயுவும் வேண்டிய தவச்யம். இந்த வாயுக்கள் அவைகளுக்குக் கிடைத்து வருவதற்கு நிலத்தின் கீழ்பாகத்தில் காற்றோட்டமிருக்கும்படிக்கும், ஆகாயத்திலுள்ள காற்றுபூமிக்குள் போவதற்கும், பூமியிலுள்ள காற்றுவெளியில் போவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டிய தவச்யமானது.

**மண்ணிற்குள் காற்றோட்டமுண்டாக்கு முறைகள்: எருவிடல்:**—நிலத்திற்கு எருவிடும்போது பயிருக்கு இன்னவிதமான எருபோட வேண்டுமென்பதைக் கவனிப்பதோடு, நிலத்தின் தன்மையையும் கவனிக்கவேண்டும். நல்ல நிலமென்றால் மண்ணானது பயிர் வளருவதற்கு வேண்டிய ஜலத்தை காப்பாற்றி வைத்துக் கொள்ளக் கூடியதாயும், மண்ணிலுள்ள இடைவெளிகளில் எப்போதும் ஜலம் தங்கியிருந்து மண்ணிற்குள் காற்றோட்டம் இல்லாதபடி செய்யாததாயும் இருக்கவேண்டும். ரொம்ப வண்டலான நிலத்திற்கு எருவிடும்போது, காற்றோட்டமிருக்கும் படிக்கும் மண் புலபுலப்பாக ஆகும்படிக்கும் தக்க எருக்களை உபயோகிக்கவேண்டும். இதற்கு அநேக நிலங்களில் தொழுவத்தெரு போடுவது ரொம்ப ச்லாக்யமான முறையாகும். தொழுவத் தெருவால் மண் புலபுலப்பாக ஆவதோடு, ஆகாயத்திலுள்ள காற்று நிலத்துக்குள் போகவும், நிலத்திலுள்ள வாயுக்கள் வெளியில் வரவும் ஸௌகர்ய மேற்படுகிறது. இந்தியாவில் பல விடங்களில் மாடுகளுக்குப் படுக்கைக்கு வைக்கோல் அதிகமாகப் போடாததாலும், சாணத்தை விரட்டி தட்டி அடுப்பெரிக்க உபயோகித்து விடுவதாலும், போதுமான அளவு தொழுவத்தெரு நிலங்களுக்குக் கிடைப்பதில்லை. அவுரிச் சாயம் செய்யுமிடங்களில் சாயமெடுத்தபின் உபயோகமற்றதென எறிந்துவிடும் மடிந்த அவுரி இலைகளை நிலங்களுக்கு இடுவது வழக்கமுண்டு. இந்த மடிந்த இலைகளால் நிலத்தில் இந்த்ரிய வஸ்து சேருகிறது. மேலும் இது சீக்ரம் நிலத்தில் மட்கி பயிருக்கு உதவக்கூடியது. இதனால் நிலமானது புலபுலப்பாகிறது. மண்ணில் காற்றோட்டம் வ்ருத்தியாகி, பயிர்களின் வேர்கள் நன்றாய் வளருவதற்கு ஸாதகம் செய்கிறது. மண்ணிலுள்ள பாக்டீரியா என்னும் நுண்ணிய ஜீவராசிகள் தங்கள் வேலைகளைச்செய்வதற்கும் வேண்டிய அளவு ப்ராண வாயு கிடைக்கிறது.

புகையிலைக்கு பிண்ணாக்கும் தொழுவத்தெருவும் போடுவதை விட மடிந்த அவுரியிலையை

போடுவதால் புகையிலை நன்றாய்ப் பயிராகிறதென்று அனுபவத்தில் தெரியவருகிறது. புகையிலையின் வேர்களுக்கு யதேஷ்டமாக காற்றோட்டம் வேண்டும். இதற்கு மடிந்த அவுரியிலை ரொம்ப ச்லாக்யமான எருவாகும்.

**பசுந்தாள் எரு:**—தொழுவத்தெருவுக்குப் பதிலாக பசுந்தாள் எருப்போடுவதாலும் மண்ணிற்குள் காற்றோட்டம் ஏற்படும். ஆனால் பசுந்தாள் எருப்போடுவதில் ஒரு அசௌகர்யமிருக்கிறது. ஸாதாரணமாய் சணப்பம் பயிரை நிலத்தில் பயிரிட்டு, அது நன்றாய் வளர்ந்தவுடன் அதை நிலத்திலேயே மடித்துவிடுகிறார்கள்.

சணப்பம் பயிர் வளரும்போது அதன் வேர்கள் நிலத்திலுள்ள ப்ராணவாயுவை ரொம்ப க்ரஹித்துக்கொண்டு, அதற்குப்பதிலாக கரியமில வாயுவை வெளிவிடுகின்றன. சணப்பம் பயிர் நிலத்தில்மட்கும் போதும் அதற்கு ரொம்ப காற்று வேண்டியிருக்கிறது. இதனால் இந்த எருவிட்டுப் பயிர்செய்யும் புகையிலை போன்ற செடிகளின் வேர்களுக்கு வேண்டிய அளவு சுத்தமான காற்று இல்லாமையால் பயிர் நன்றாய் வளராமல் போகிறது. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் சணப்பஞ்செடிகளை வெட்டி நிலத்தில் அப்படியே விட்டு வாடச்செய்து, பிறகு அவைகள் நிலத்தில் கலக்கும்படி உழுவதாலும், பயிர்களை நட்ட பிறகு அடிக்கடி ஆழ உழுவதாலும், இந்தக் குறை ஒருவாறு நீங்கலாம். ஏனென்றால் சணப்பம் செடிகளை வாடப் போடுவதால் அவைகளுக்குள் காற்று அதிகமாகப் புகுந்து கொள்ளுகிறது. மேலும் வாடப்போட்ட சணப்பம் செடிகள் சீக்ரம் நிலத்தில் மட்கிப்போகின்றன. நிலத்தை அடிக்கடி ஆழமாக உழுவதால் மண்ணிற்குள் இருக்கக்கூடிய கரியமிலவாயுவில் பெரும்பாகம் வெளியில் வந்து விடுகிறது. மேலும் உழுவதால் மண்ணில் நல்ல காற்றோட்டம் ஏற்படுவதோடு, இந்த்ரிய வஸ்துக்கள் சீக்ரம் நைட்ரொஜின் ஸம்பந்தமான பொருள்களாக மாறுகின்றன.

அநேக வண்டல் நிலங்களில் பசுந்தாள் உரங்களைப் போட்டதில் நல்ல பலன் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் பசுந்தாள் பயிர் ஸாகுபடி செய்த பிறகு பயிரிடப்படும் பயிர்களின் வேர்களுக்கு வேண்டிய அளவு சுத்தமான காற்றுக் கிடைக்காமல் போனதே என்று சொல்லலாம். ரொம்ப புலபுலத்ததாய், உள்ளே நல்ல காற்றோட்டமிருக்கக்கூடிய நிலங்களில் பசுந்தாள் எருப்போட்டால் நல்ல பலன் கிடைக்கிறதென்பதும், களியான நிலங்களிலும் நீர்த்தாங்கலான நிலங்களிலும் இந்த எருவிட்டால் நல்ல பலன் கிடைப்பதில்லையென்பதும் பலர் அறிந்த விஷயங்கள். பின் சொன்ன வகை நிலங்களில் பசுந்தாளால் நிலத்தின் தன்மை ஸாதகமாக மாறினாலும், பசுந்தாள் பயிர் மட்குவதற்கும், அந்தப் பயிருக்குப் பிறகு செய்யப்படும் பயிரின் வேர்களுக்கும் வேண்டிய அளவு ப்ராணவாயு இல்லாமல் போவதால் மாஸூல் குறைந்து போகிறது. ஆனால் உயர்ந்ததாயும் நல்ல வடிகால் உள்ளதாயுமுள்ள நிலங்களில் பசுந்தாள் எருப்போட்டு, மண்ணில் காற்றோட்டம் ஏற்படும்படி எருப்போட்ட பிறகு அடிக்கடி நிலத்தை ரொம்ப ஆழமாக உழுதுவந்தால், நிலம் நன்றாய் சீர்திருந்துவதோடு நல்ல மாஸூல் கிடைக்குமென்று சொல்லலாம்.

**ஓடு, செங்கல் இவைகளின் துண்டுகள்.**—நிலத்திற்குள் நல்ல காற்றோட்டம் உண்டாக்குவதற்கு, மண்ணில் செங்கல் துண்டுகளையும், ஓட்டுத் துண்டுகளையும் போட்டுக் கலக்கலாம். இவைகளைக் கலப்பதால் நிலத்திற்குள் காற்றோட்டம் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். வடக்கே பூஸா என்னும் ஊரிலுள்ள விவஸாய ஆராய்ச்சிப் பண்ணையில் சில நிலங்களுக்கு செங்கல் துண்டுகளையும் ஓட்டுத்துண்டுகளையும் போட்டு, சணப்பம் பயிரைப் பயிரிட்டு மடித்து உழுது புகையிலை ஸாகுபடி செய்ததில் எப்போதும் நல்ல மாஸூலே கிடைத்து வருகிறதாம். ஆனால் செங்கல் துண்டுகளையும் ஓட்டுத்துண்டுகளையும்



சேகரித்து வயலுக்குப் போடுவதற்கு அதிக செலவு ஏற்படுமோ என்ற கேள்வியுண்டாகும். இதைப்பற்றி பூஸாவிலுள்ள விவஸாய உத்யோகஸ்தர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

**மேல்மண் கெட்டிப்படுவது.**—மண் கூடிய மட்டும் புலபுலப்பாயிருந்தால்தான் ஆகாயத்திலுள்ள காற்று உள்ளே போகமுடியும்; எந்தக் காரணத்தாலாவது மண் ரொம்ப கெட்டியாகிவிட்டால் கெடுதிகள் நேரிடும். சில ஸமயங்களில் உழும்போது வயலின் சில பாகங்களில் மாடுகள் போனவிடத்திலேயே மறுபடியும் போக நேரிடுவதுண்டு. இதனால் அந்த பாகங்களில் மண் ரொம்ப கெட்டியாகிவிடும். மண் ரொம்ப கெட்டியாகிவிட்டால் அடிப்பாகத்திலுள்ள ஈரம் சீக்ரம் மேல் பாகத்துக்கு வந்து ஆவியாக மாறிவிடும். மேலும் மண் கெட்டியாவதால் ஆகாயத்திலுள்ள காற்று மண்ணிற்குள் போகமுடியாது. இப்படிப்பட்ட இடங்களில் பயிர் முதலில் நன்றாக வளர்ந்தாலும் கடைசியில் அவை பட்டோ அல்லது பலன் கொடுக்காமலோ போய்விடும்.

மழை பெய்வதாலும் மண்கெட்டியாகப்போய்விடும். இதற்கு மழைக்குப் பிறகு மண்ணைக் கொத்திவிடுவது நல்லது.

மேலும் மழை பெய்வதால் நிலத்தின்மேல் பாகத்தில் நயமான மண் ஒரு மெல்லிய படையாகப் படிந்துவிடுகிறது. இந்த மெல்லிய படையானது ஆகாயத்திலுள்ள காற்று மண்ணிற்குள் போவதைத் தடுத்து விடுகிறது. மண்ணிற்குள் ஏற்கனவே உள்ள ப்ராணவாயு இருக்கும் வரையில் செடி நன்றாய் வளர்ந்து வருகிறது. ப்ராணவாயு குறைந்து கரியமிலவாயு அதிகமானதும், செடியின் இலைகள் மஞ்சளாக மாறி வளர்ச்சியும் குறைந்துபோய், இலை வாடி செடி அழிந்துவிடுகிறது. மழை ஓய்ந்த பிறகு மேல் மண்ணை உடைத்து விட்டால், இந்தக் குறை நிவர்த்தியாகும். இலைகள் முன்போல பசுமையாகி பயிர் நன்றாக வளரும்.

**துவரை.**—சில பயிர்கள் ஸ்வபாவமாகவே நிலத்திற்குள் காற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்கின்றன. இவைகளில் துவரை முக்யமானது. துவரைக்கு ஆணிவேர் ரொம்ப நீளம். அது பூமிக்குள் ரொம்ப ஆழம் போகிறது. அதன் பக்கவேர்களும் நாலா பக்கங்களிலும் போய் மண்ணை உடைத்து விடுகின்றன. துவரையை அறுவடை செய்த பிறகு அதன் வேர்களைக் கரையான் தின்றுவிடுவதால், பூமிக்குள் சிறு சுரங்கங்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. இவைகளால் பூமிக்குள் நல்ல காற்றோட்டம் ஏற்படுகிறது. துவரை அறுவடைக்குப் பிறகு புகையிலையைப் பயிரிட்டால் புகையிலையில் நல்ல மாஸூல் கிடைக்கிறது.

**சர்க்கரை வள்ளி.**—புல் நிறைந்த தரிசு நிலங்களை ஸாகுபடிக்குக் கொண்டுவர பேஹார் மாகாணத்தில் விவஸாயிகள் முதலில் சர்க்கரை வள்ளியைப் பயிரிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலங்களை ஸாதாரணமாய் உழுது பயிரிட்டால் ஒரு பயிரும் நன்றாய் வளருவதில்லையாம். புல்நிலங்களில் மண்ணிற்குள் நல்ல காற்றோட்டமிருப்பதில்லை. மண் ரொம்ப கெட்டியாயிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட நிலங்களில் மற்ற பயிர்கள் வளராவிட்டாலும் சர்க்கரைவள்ளிக்கிழங்கு மாத்ரம் நன்றாய் வளருகிறது. ஏனென்றால் அதன்வேர்கள் மெதுவாகப் பருத்துக் கிழங்காகும்போது, அவை அடி மண்ணை உடைத்து நல்ல காற்றோட்டமிருக்கும்படி செய்கின்றன. மேலும் சர்க்கரைவள்ளி ஸாகுபடி செய்யும் நிலத்தை முதலில் உழுவதாலும், கிழங்கை வெட்டும்போதும் மண்ணை நன்றாய்க் கிளறிவிடுவதாலும், மண்ணுக்குள் காற்றோட்டத்துக்கு இன்னும் ஸௌகர்யமேற்படுகிறது. புல்நிலங்களில் முதலில் ஒரு தடவை சர்க்கரை வள்ளிக்கிழங்கைப் பயிரிட்டுவிட்டால் பிறகு அந்த நிலம் ஸாதாரண ஸாகுபடிக்கு ஏற்றதாய்விடுகிறது.

**கரையானும் காற்றோட்டமும்.**—மரங்களை வெட்டித் தள்ளினபிறகு கரையானது பூமிக்குள்

இருக்கும் மரத்தின் பாகங்களை அரித்துத் தின்று பூமிக்குள் நீண்டு குறுகிய வளைகளை யதேஷ்டமாக உண்டாக்கிவிடுகிறது. இதனால் பூமிக்குள் காற்றோட்டம் விருத்தியாவதோடு, மண்ணிலுள்ள பாக்டீரியாக்கள் செடிக்குதவும் நைட்ரேட்டுகளைத் தயாரிப்பதற்கும் ஸௌகர்ய மேற்படுகிறது.

மரம் வெட்டின ஒரு வர்ஷத்துக்குப் பிறகு அதன் ஸமீபத்தில் ஏதாவது பயிர் செய்தால் நல்ல மாஸூல் கிடைக்கிறது. பூஸா விவஸாயப் பண்ணையில் ஓரிடத்திலிருந்த சில மரங்களை வெட்டினபிறகு அவைகளுக்குப் பக்கத்திலிருந்த நிலங்கள் ரொம்ப செழுமையாகக் காணப்பட்டனவாம். அதாவது அவைகளில் நல்ல மாஸூல் கிடைத்தனவாம்.

**பள்ளங்களை மூடுவது**—கட்டிடங்கள் கட்டும்போது, அவைகளுக்கு அருகில் செங்கல்லை அணைப்பதற்கு குழிகள் தோண்டுவதுண்டு. சுண்ணாம்பு அரைக்கும் சக்கரங்கள் அமைப்பதற்காகப் பள்ளந்தோண்டுவதுமுண்டு. கட்டிட வேலை முடிந்த பிறகு இந்தப் பள்ளங்களை மூடி விடுவார்கள். ஆனால் இவைகளில் போடும் மண்ணில் ஸாதாரணமாய் கற்கள் அதிகமாக இருப்பதுண்டு. இப்படி மூடின விடங்களில் ஏதாவது பயிரிட்டாலும் அல்லது மரங்கள் நட்டாலும் அவைகள் நன்றாய் வளருகின்றன. ஏனென்றால் மண்ணில் கற்கள் அதிகமாக இருப்பதால், அதில் எப்போதும் நல்ல காற்றோட்டமிருக்கிறது. அதிலுள்ள பாக்டீரியாக்களுக்கு நல்ல காற்று வேண்டியவளவு கிடைப்பதால், அவைகள் நைட்ரேட்டுகளையதேஷ்டமாக உண்டாக்குகின்றன. இந்த நிலங்களில் வளரும் பயிர்களைப்பார்த்தால் ரொம்ப எருக்கள் போட்டிருப்பதுபோலத் தோற்றும். உண்மையில் நிலங்களுக்குக் கிடைத்ததெல்லாம் ப்ராணவாயு ஒன்றுதான்.

**நெல் ஸாகுபடியும் காற்றோட்டமும்.**—சதுப்பான நிலங்களில் நெல் ஸாகுபடி செய்யும்போது நெற்பயிரின் வேர்களுக்கு எப்படி ப்ராணவாயு கிடைக்கிறதென்பதை யறிய சென்னை விவஸாய ரஸாயனியாகிய மிஸ்டர் ஹாரிஸன் சில பரீக்ஷைகள் செய்துபார்த்தார். அந்தப் பரீக்ஷைகளால் தெரியவந்த தென்னவென்றால், நெல்வயல்களில் தேங்கியிருக்கும் ஜலத்தின்மேல் சில பாசிவகைகள் மிதந்துகொண்டிருக்கின்றன. வேறு சில ஜீவராசிகளும் ஜலத்தின்மேல் மிதந்து கொண்டிருக்கின்றன. இவைகள் ப்ராணவாயுவை ரொம்ப அதிகமாக வெளிவிடுகின்றன. இந்த ப்ராணவாயு ஜலத்தில் கலந்து வேருக்குப் போய், அதற்கு உதவுகிறது. ஆனால் வடிகால் இல்லாதநிலங்களில் இந்த ப்ராணவாயு கலந்த ஜலம் பூமிக்குள் ரொம்ப ஆழத்துக்குப் போவதில்லை யாகையால், பயிரின்வேர்கள் பூமிமட்டத்துக்குப் பக்கத்திலேயே இருக்கின்றனவே யொழிய ரொம்ப ஆழம் பூமிக்குள் போவதில்லை. இதனால் அந்த வேர்களுக்கு அடிமண்ணில் உள்ள பூஸாரம் அதிகமாகக் கிடைக்கிறதில்லை. ஆனால் நல்ல வடிகால் உள்ள நிலங்களிலோ, ப்ராணவாயு கலந்துள்ள ஜலம் பூமிக்குள் ரொம்ப ஆழம்போவதால் வேர்களும் வெகு ஆழம் வளர்ந்து, ஜலத்திலுள்ள ப்ராண வாயுவை க்ரஹிப்பதோடு, மண்ணின் அடிப் பாகத்திலுள்ள பயிருணவையும் க்ரஹித்துக் கொள்ளுகின்றன. மாஸூலும் அதிகமாகக் கிடைக்கிறது.

ஆனால் வயல்ஜலம் ரொம்பவேகமாயும் வடியக்கூடாது. ஏனென்றால் வயலிலுள்ள ஜலத்தில் பாசிகள் உண்டாவது குறையும். அதனால் வேர்களுக்கு ப்ராணவாயு கிடைப்பதும் குறைந்து போகும்.

நல்லவடிகால் உள்ள நிலங்களில் பசுந்தாள் உரம் போடுவதால், ஜலத்தில் மிதக்கும் பாசிகள் ரொம்ப சுறு சுறுப்பாக வேலை செய்து ப்ராணவாயுவை அதிகமாக ஜலத்தில் சேர்க்கின்றன. இதனால் வேர்களுக்கு ப்ராணவாயு அதிகமாகக் கிடைக்கிறது.



# LOVE'S TRIUMPH.

BY V. P. KRISHNASWAMI AIYAR.

# காதல் வெற்றி.

## I

'டிங்டாங் டிங்டாங்' என்று கலாசாலை மணியடித்தது. புற்றிலிருந்து புறப்பட்ட ஈசல்போல் மாணவர்கள் தம் இருப்பிடத்தை நோக்கிச்சென்றார்கள். ஒருநாளுமில்லாத ஸந்தோஷம் இன்றையதினம் இப்பாலியர்களின் முகங்களில் ப்ரகாசித்தது. ஸ்ரீநிவாஸன் தோழர்கள் சூழ தம்பு செட்டித் தெருவிலுள்ள தன் 'ரூமு'க்குப் போனான். ஸ்ரீநிவாஸன் என்றைக்குமில்லாத ஆனந்தம்கொண்டு அறைக்குப் போனதும் புஸ்தகங்களை ஒருபுறம் வீசியெறிந்து, பெட்டியிலிருந்து தன் சிறு பணப்பையை யெடுத்துக்கொண்டு அவஸரமாய்க் கீழே யிறங்கினான். 'நானும் வரேன், ஸார்' என்று அவ்வீட்டிலிருந்த மற்றொரு மாணவன் சொல்ல, ஸ்ரீநிவாஸன் கூடத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து சுவரில் மாட்டியிருந்த தமயந்தியின் படத்தை உற்று நோக்கலானான். என்ன அழகு! என்னகாந்தி! அப்பொழுது கலாசாலையில் வாசித்த வாணிதாஸர்களுக்கெல்லாம் ஸ்ரீநிவாஸனே முதல்தரமான அழகுள்ளவனென்று சொல்லலாம். அவன் பறந்தகண்கள் நெருங்கிய இமைகளினால் காக்கப்பட்டு தமயந்தியின் முகலாவண்ணியத்தைப் பார்த்துக் கொஞ்சிப்பேசின. அவன் கரியகேசம் செவ்வனவே கோதி முடியப்பட்டு தோளில் விழுந்து புரண்டது. முல்லையரும்பைப்போன்ற அவன் பற்கள் சிவந்த செம்பருத்தி உதடுகளின் நடுவில் ப்ரகாசித்துக் கண்டோர்மனதைக் கவரும்வண்ணம் அமைந்திருந்தது. எப்படியிருந்தாலென்ன? ஸ்ரீநிவாஸன் மனம் இரவில் ஜில்லென்று குளிர்ந்திருக்கும் தடாகத்தின்மேல் சோர்ந்துவிழும் தாமரையைப்போல் வாடியிருந்தது. சிறியவர்களாயிருந்தாலும் முதியவர்களாயிருந்தாலும் ஒவ்வொரு காலத்தில் இவ்வுலகத்தின்மேல் அதிக வெறுப்பு உண்டாகிறது. பால் பருகுபவர்கள் சர்க்கரை யில்லையென்றும், ஒருவாய்க் கஞ்சிக் கழும் ஏழைகள் உப்பில்லையென்றும் வருந்துவது உலகவழக்கம். ஆயினும் கலாசாலையில் படித்து உலக அனுபவமே இல்லாத ஸ்ரீநிவாஸனுக்கு என்னகவலை! உடனே அவன் கண்ணீர் பெருக தலைகுனிந்து மேஜையின்மீது கையைவைத்து மோவாய்க்கட்டையை ஊன்றி பரமதுக்கத்தின் தோற்றமென விளங்கினான். இதற்குள் இவன் ஸ்நேகிதன் கீழேவர ஸ்ரீநிவாஸன் சரேலென்று தன் கைக்குட்டையினால் முகத்தைத் துடைத்து 'போவமா, ஸார், நாழியாய்விட்டது.' என்று எழுந்தான்.

ஸ்ரீநிவாஸன் முதல் முதல், சைனா பஸாருக்குப் போய் கழுத்துப்பட்டை போடும் நாலும் ஊசியும், பெண்கள் கோக்கும் சிலமணிகளும், ஒரு கத்தரிக்கோலும் வாங்கிக்கொண்டு பூக்கடையை நோக்கிப் போனான். அங்கே அவன் நண்பன் 'ஆரஞ்ஜ்', கொடிமுந்தரி, பேரிக்காய் முதலிய பழவர்க்கங்கள் வாங்கினான். ஸ்ரீநிவாஸனும் அவைகளில் சில வாங்கி ஒரு பழக்கூடையில் போட்டுக்கொண்டு, ஜாமந்தியும், மல்லிகைக் கொத்தும், ஜாஜியும் வாங்கி, அவைகளையும் பழக்கூடையிலேயே வைத்துத் திரும்பினான். பின்பு ஏதோ நினைத்துக்கொண்டு இரண்டு பவுண் 'பிஸ்கட்டும்', 'பெப்பர்மெண்டும்' வாங்கிக்கொண்டு வெகு அவஸரமாய் வீட்டிற்குத் திரும்பினான். கேட்ட விலையை அப்படியே கொடுத்துவிட்டு 'கம்யமாய்' விளங்கும் ஸ்ரீநிவாஸனைக் கண்ட கடைக்காரர்களெல்லாம் எப்பொழுதும் தம் கடைக்கே வரவேண்டுமென்றும், தம்மைப்போல நாணயஸ்தர்கள் இச்சென்னை ராஜதானியிலேயே இல்லையென்றும் சாதித்து விட்டார்கள்.

உடனே ஸ்ரீநிவாஸன் ஹோட்டலுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு ஒரு நேர்த்தியான 'கான்வாஸ்' பெட்டியில் ஒன்றிரண்டு புஸ்தகங்களையும், அந்த

ளையும், ஊசி, நூல், கத்தரிக்கோல், மணிகளையும் வைத்து, ஸந்தோஷங்கொண்டு 'பீச்' ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தான். அன்றையதினம் சட்டப்படிக்கு ஆறுமணிக்குப் புறப்படவேண்டிய மதுரை 'எக்ஸ்ப்ரெஸ்' வழக்கம்போலவே மணி ஆறரை ஆகியும் ஸ்டேஷனுக்கே வரவில்லை. ஸ்ரீநிவாஸனுக்கு வந்த கோபத்துக்கோ அளவில்லை. வெகுநாள் காத்தும் வாராதது கண்டு ஸ்ரீராமன் தன் கோதண்டத்தை வளைத்து வருணனைப் பங்கப்படுத்த யத்தனித்தவுடன், தானே அவன் தன்முதுகைக் கொடுத்து ஸமுத்ரத்தை அணை தடுக்க ஸம்மதித்தான். ரயில்வே உத்யோகஸ்தர்களின் மேல் காட்ட அம்மாதிரி சக்தி தனக்கொன்றுமில்லையேயென்று ஸ்ரீநிவாஸன் பலவாறு க்லேசப்பட்டான். பத்ரிகைகளில் தாமதமாயும் ஸாவகாசமாயும் ஆடிப்பாடிப்போகும் ரயில் ப்ரயாணத்தைப்பற்றி இவன் வாசித்திருக்கிறான். இப்பொழுது தான் நேராகபட்ட கஷ்டத்தினின்றல்லவோ ஸ்ரீநிவாஸன் இவ்வருத்தம் எவ்வளவுண்மையென்பதை யறிந்து நிச்சயப்பட்டான்.

மணி ஏழடித்ததும், குபுகுபுவென்று வேகத்தைவிட சப்தம் அதிகமாக ஒரு வண்டித்தொடர் 'பீச்ஸ்டேஷனில்' வந்து நின்றது. 'எஞ்ஜினுக்கு' அருகாமையில் தனியாய்த் தடுக்கப்பட்டிருந்த ஒரு அறையில் ஸ்ரீநிவாஸன் ஏறினான். வண்டியில் ஒருவருமில்லை. இவன் ஏறி ஜன்னல்களைத் தூக்கிவிட்டு, பெட்டியையும் பழக்கூடையையும் உயரவைத்துவிட்டு ஏதோ ஒரு தமிழ்க் கடிதத்தைவைத்து வாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு அழகிய பெண்ணும் அவள் தாயும் கையில் ஒரு கைக் குழந்தையை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தார்கள். 'அப்பா, நாங்கள் வந்து உட்காரலாமா' என்றாள் பெரியவள்.

'அதற்கென்னம்மா! நன்றாய் வந்து உட்காருங்கள். நான் வேண்டுமானால் அடுத்த வண்டிக்குப் போகிறேன்' என்று ஸ்ரீநிவாஸன் எழுந்தான்.

'வேண்டாம், வேண்டாம்! இங்கேயே இரப்பா. நீயே எங்களுக்குத் துணையாயிருப்பாய். நாங்கள் மதுரைக்குப் போகிறோம். வேறே புருஷாள் துணை கிடையாது' என்றாள்.

ஸ்ரீநிவாஸன் அவள் சொற்படியே உட்கார்ந்துவிட்டான். அழகுள்ள பெண்களின் வார்த்தைகளை யார்தான் தட்டுவார்கள்? மேலும் அவர்கள் துணையில்லாமல் போவதனால் ஏதாவது தான் அவர்களுக்கு ஒருகால் உதவியாயிருக்கலாமென்றே ஸ்ரீநிவாஸன் இருக்க ஸம்மதித்தான். 'பீச்சை' விட்டு ரயிலும் புறப்பட்டுவிட்டது. ஸ்ரீநிவாஸன் முகத்தில் பளிச்சென்று ஒரு ஸந்தோஷக்குறி தோன்றிற்று. சென்னை தீபஸ்தம்பத்திலிருந்து சுழலும் வெளிச்சம் ஒரு விநாடி அவன் முகத்தில் பட்டதும் இவன் தேகம் படபடத்து மயிர்கூச்செறிந்தது. தான் சென்னையைவிட்டு உலகத்திலிருக்கும் எல்லாரைக்காட்டிலும் சிறந்த ஒருவர் இருக்கிற இடத்துக்குப் போகப்போகிறோமென்ற எண்ணம் இவன் மனத்தில் ஊடுருவிப்பாய்ந்து ஒவ்வொரு அங்க அமைப்பிலும் ஸந்தோஷத்தைக் காட்டியது.

வண்டி எழும்பூரில் வந்து நின்றதும் 'ப்ளாட்பாரத்தில்' அளவற்ற ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். நீ, நானென்று ஜனங்கள் இங்கு மங்குமோடி வண்டியில் ஏறிக்கொள்வதைவிட்டு, ஒருவரையொருவர் மோதிக்கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்ததாகத் தோன்றிற்று. அப்பொழுது ஒரு பெரிய தகரப்பெட்டியையெடுத்துக்கொண்டு சிவப்பு தலைப்பாகையும் ஸரிகை உத்தரியமும் தரித்த ஒரு புது மாப்பிள்ளை, மஞ்சளெண்ணெய், மருக்கொழுந்து, கருப்புமேனி, சிவப்பு ஓலை இவைகளால் சிங்காரமாய் விளங்கிய தன் தர்மபத்னியுடன் ஸ்ரீநிவாஸனும், மதுரைக்குப்போகும் அழகியதாயும் பெண்ணும் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து, பெட்டியை வழியில் வைத்து தன் மனைவியை அதைத் தாண்டி உள்ளேபோய் உட்காரச்சொன்னான்.



'புதுநாட்டுப்பெண்' ஆதலால் ஸம்ப்ரதாயப்படி அவள் தலைகுனிந்து வெகு நாணப்பட்டு பெட்டியைத் தாண்டினாள். பாவம், தகரப்பெட்டியில் புடவை மாட்டிக்கொண்டது. உடனே அகஸ்மாத்தாய் எழும்பூரில் மாற்றும் புது இஞ்ஜினும் வண்டித்தொடரை ஒரு விசையுடன் சேர்ந்தது. பாவம்! புடவை ஒருபக்கம் இழுக்க, நாணம் ஒருபக்கம் உறுத்த, வண்டியின் விசை இவளை முன்னுக்குத் தள்ளிவிட்டது. அதுவும் போதாமல் அவள் மதுரைக்குப் போகும் பெரிய மாதரசியின் மீது விழுந்து, அவள் கையிலிருந்த குழந்தையையும் நசுக்கி அருகில் வைத்திருந்த பாலையும் கொட்டி விட்டாள். இதைப் பார்த்த தாயார் புதுமாப்பிள்ளையைப் பார்த்து,

'அப்பா, இவ்வளவு இடமிருக்கே, வேறெங்கேயாவது ஏறப்படாதா. பச்சைக் குழந்தை, இதன்மேல் விழுந்தாளடா. நீ மகாராஜனாயிருப்பாய்; அடுத்த வண்டிக்குக் கொஞ்சம் போடா'' என்றாள்.

'ஏன், பாப்பாத்தி, அடாபிடா என்று பேசுகிறையே. உன்வீட்டில் எத்தனை நாள் மாடு மேய்த்தேன். யார் இன்னு பாத்துக்கிட்டே. உனக்கொத்தருக்குத்தான் ரயில் விடராங்களா? நான் டிக்கட்டு வாங்கலையா? வேணுமனா நீயெயுந்துபோ. ஓகோ, அந்த சில்லரைப் பரிகாசமெல்லாம் இங்கே செல்லாது' என்றான்.

இவன் இவ்வளவு தைரியமாய்ப் பேசுவதற்குக் காரணம் தன் புதுமனைவியே. அவளெதிரில் ஒரு பெண் தன்னை 'அடா' என்று அலக்ஷியமாய்க் கூப்பிட்டால், இவன் எப்படி மனம் தாங்குவான். மேலும் தன்னை ஒன்றும் தெரியாத பட்டிக்காட்டானென்று அவள் கருதினாள் என்று இவன் உண்மையில் அவள் மனதிலிருந்ததை அறிந்ததும் உள்ளம் வெதும்பி ஸாமாரியாய் வார்த்தைகளைப் பொழிய ஆரம்பித்தான். இவ்வளவு வீராவேசத்தைக் கண்ட பெரிய மாது மனம் நடுங்கி இன்ன செய்வதென்று தெரியாமல் ஸ்ரீநிவாஸனைப் பார்த்தாள். அவ்வளவுதான். உடனே ஸ்ரீநிவாஸன் எழுந்து ஸாம, தான, பேத உபாயங்களை ஒவ்வொன்றாக ப்ரயோகித்துத் தம்பதிகளைத் தயவுசெய்து வேறொரு 'கம்பார்ட்மெண்டு'க்குப் போகும்படி ப்ரார்த்தித்தான். ஆனால் மாதம் போங்காதவழி அற்புதப் புளி போல் புதுமாப்பிள்ளை அவைகளுக்கெல்லாம் பயப்படாமையால், தண்டமென்னும் மீதியிருந்த ஒரே ராஜநீதியை ப்ரயோஜனப்படுத்த வெண்ணி,

'டேய். நீ வீணாக இங்கே வந்து சண்டைக்கிழுத்ததற்காக உன்னை போலீஸாரிடம் ஒப்புவிக்கிறேன்பார், 'கான்ஸடபில்!'' என்று கூப்பிட்டான். முன்னொருகால் ஒரு 'கான்ஸ்டபில்' தான் விளக்கில்லாமல் வண்டியோட்டியதற்காக ஒரு அணா பணம் கேட்டதையும், இவன் அதைக் கொடுக்க இஷ்டமில்லாமல் நியாயம் பேசி நின்றதையும், அந்த துன்மார்க்கன் சட்டவிவகாரத்தைக் கொஞ்சமேனும் கவனிக்காமல், இவன் கையில் ஒரு செம்பைக் கொடுத்து கொடுங்காராக்ரகத்திலடைத்து இல்லாத துன்பத்துக்கெல்லாம் ஆளாக்கியதையும் இவன் கொஞ்சமேனும் மறக்கவில்லை. ஆதலின் நமது புதுமாப்பிள்ளை 'கான்ஸ்டபில்' என்னும் வார்த்தையைக்கேட்டதும் அவன் ஸ்ரீநிவாஸனைக்கெஞ்சி,

'ஐயா, நான் போய்விடரேன். என்னைப் போலீஸாரிடம் விடாதேயுங்கள். ஐயா, நீங்கள் எல்லாம் ஸுகமாய்ப் போங்கோ' என்று பெட்டியை எடுத்துக்கொண்டு தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு அடுத்த அறைக்குப்போய் விட்டான். ஆகா! நம்நாட்டில் போலீஸாருடைய நாமதேயமே எவ்வளவு பயத்தை உண்டுபண்ணுகிறது. எமன் வந்துவிட்டான் என்று சொன்னாலும், புது எமனா பழைய எமனா [illegible]

கேட்ட சூதனே போலீஸாரென்று சொன்னால் உடனே தேகங்குன்றி ஸ்தம்பித்துவிடுவான் போலும்.

தம்பதிகள் வெளியில் போய்விட்டதும் ஸ்ரீநிவாஸனை மதுரைத் தாயார் மிகவும் கொண்டாடினாள். அவள் பெண்ணும் ஸ்ரீநிவாஸன் ஒரு உத்தமச் செல்வனென்று தன் புன்னகையாலும் அன்பு ததும்பியகண்களின் விழியாலும் தெரிவித்தாள். இதற்குள் ரயில் எழும்பூரை விட்டுப் புறப்பட்டுவிட்டது. அப்பொழுது ஸ்ரீநிவாஸன் தாயாரைப்பார்த்து 'அம்மா நீங்கள் ஏன் தனியாய்ப் போகிறீர்கள்? அவ்வளவு தூரம் போகிறதற்குத் துணை யாரையாவது ஒருவரை அழைத்துக்கொண்டு போகப்படாதா. காலங் கெட்டுக்கிடக்கிறதே. நீங்கள் என் தனியாய்ப் போகிறீர்கள்?' என்றான்.

'ஒன்றுமில்லை, அப்பா. உன்னிடத்தில் சொல்லுவதில் என்ன தப்பு. எல்லாம் சொல்லுகிறேன், கேள். நாங்கள் ஏழைக்குடித்தனம். எங்களகத்துக்காரர் பட்டணத்தில் ஐம்பது ரூபாய் வேலையிலிருக்கிறார். பட்டணத்தில் ஐம்பது ரூபா எதற்குப்போதும். ஜலம்கூட நிறுத்துத் தானே செலவழிக்கவேண்டும். அதுவுமல்லாமல் எனக்கொரு பிள்ளையிருந்தான். அப்பா, அவன் உன்னைப்போல்தான் இருப்பான். (இங்கே அவள் பலபலவென்று அழ ஆரம்பித்தாள்.) அவனை எப். ஏ பரீக்ஷை வரையில் வாசிக்கவைத்தோம். ஐயோ, ஒரு நாழிகையில் ஜ்வரம் கண்டு போய்ட்டான். எங்களுக்கொன்றும் கதியில்லை. அப்பொழுது இவள் சின்னக்குட்டி. சின்னக் குட்டியாயிருந்தாலும் கல்யாணம் விடுமா. ஆயிரம் இரண்டாயிரம் தேடி எங்கேபோகிறது மாப்பிள்ளைக்கு. நாங்கள் ராத்தூக்கமில்லாமல் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது மதுரையிலிருந்து ஒரு கிழவர் வந்து இந்தக் குட்டியைக்கேட்டார். முதலில் நாங்கள் அவர் தம்பிள்ளைக்குக் கேட்கிறாரென்றிருந்தோம். ஆனால் அவர் தாமே கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னார். என் வயிற்றில் ஒரு இடிவிழுந்தது. என்னப்பா செய்வது. ஏழைக்குடித்தனம். துணியிருந்து தானே முழம்போடவேண்டும். ஆனால் என் பெண்ணை அவருக்குக் கொடுக்கக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. என்னகத்துக்காரர் இதைவிட நல்லவரான் நமக்கு வராதென்று, கிழவர் மதுரையில் ஒரு பெரிய வக்கீலென்று அக்கிழவருடன் வந்த ஒருவன் சொன்னதை நம்பி இப்பாழும் பெண்ணை அவனுக்குக் கொடுத்துவிட்டார். பின்பு நாங்கள் க்ரகப்ரவேசத்திற்காக மதுரைக்குப் போனோம். எங்கள் சுந்தர மாப்பிள்ளை வக்கீலுமில்லை இக்கீலுமில்லை. அவன் ஒரு வக்கீல் குமஸ்தாவாம். தன் முதலிரண்டு பெண்டாட்டிகளின் பிள்ளை பெண்களே வீட்டுக்கு ஆடைகளாகவும், ஆபரணங்களாகவும், தீபட்டிகளாகவும் விளங்கின. எனக்கு துக்கம் நெஞ்சையறுத்தது. விதியை யாரப்பா வெல்லக்கூடும்? கல்யாணம் பண்ணிவிட்டு என்ன செய்வது? கொண்டவிடத்தில் குலம் பேசலாமா? இவ்வளவு தான் விசேஷம். இரண்டுமாஸத்துக்கு முன்தான் இவள் ப்ரஸவிப்பதற்காகப் பட்டணத்துக்கு வந்தாள். இப்பொழுது திரும்பவும் மதுரைக்கு அழைத்துக் கொண்டு போகிறேன். தன்னை ஏமாற்றியதற்காக என்னகத்துக்காரர் இவளகமுடையான் முகத்திலேயே விழிக்கிறதில்லை. அதற்காகவே அவர் வரமாட்டேனென்றார். அதோடு மதுரைக்குப் போகிறதென்றால் எவ்வளவு ரயில் சார்ஜ்! என்னமோ இது தரித்திரர்களின் கதை. நீயேன் அப்படி முகம் சிவந்து பார்க்கிறாய்.' என்று பெரியவள் பரிதாபமாய்ச்சொன்னாள்.

ஸ்ரீநிவாஸன் இந்தக் கதையைக் கேட்டதும், பொல்லாத உலகத்தின் சேஷ்டைகளை அறியாதவனாதலால், ஹ்ருதயம் படபடவென்று அடிக்க அப்படியே உருகிப்போய்விட்டான்.

'அம்மா, ஒன்றுமில்லை. கேவலம் இவ்வளவு துஷ்டர்களும் இருப்பார்களா வென்றுதான் எனக்கு வருத்தமாயிருக்கிறது. நீங்கள் சொல்லுவதெல்லாம் வாஸ்தவமாய் இருக்கும்பக்ஷத்தில் இந்த உலகத்தில் ஒரு நிமிஷமாயினும் இருக்க எனக்கு இஷ்டமில்லை. ஐயோ ஏன் இப்படிப்பட்டவர்களைக் கடவுள் சிருஷ்டிக்கவேண்டும்?' என்று கண்ணீர் ததும்ப மெல்லெனச் சொன்னான்.

ஒரு கலாசாலை மாணவன் உலகத்தில் தினந்தோறும் நடக்கும் செய்கைகளைக் கேட்டுக் கண்ணீர்ப்பெருக்குவ தெங்ஙனமென்று சிலர் ஸந்தேகிக்கக்கூடும். ஆனால் எவ்வளவு மாணவர்கள் தேனும் சர்க்கரையும் தித்திக்கும் பாலுந்தான் உலகமென்று கருதி இறுதியில் ஏமாந்துபோகிறார்கள்? ஸ்ரீநிவாஸன் இம்மாதிரி ஏமாந்தவர்களில் ஒருவன். மேலும் ஏன் இவ்வளவு சீக்ரம் தான் கேட்ட கதையினால் வருத்தமுற்றானென்பதற்கு வேறு காரணமுமிருக்கிறது. அதை இனிமேல் கவனிப்போம். கூடலூரில் ஸ்ரீநிவாஸன் இறங்கி வண்டியில் தன்னுடன் வந்த துர்ப்பாக்யவதியின் மேல்விலாஸத்தைக் கேட்டுக் கொண்டு தன் ஊரை நோக்கிச் சென்றான்.



## II

ஸ்ரீநிவாஸன் ஒரு வண்டியை வைத்துக் கொண்டு வீட்டிற்குப்போனான். வாசற்றிண்ணையில் பெட்டியையும் பழக்கூடையையும் வைக்கச் சொல்லி வண்டிக்காரனை அனுப்பிவிட்டு இவன் கதவைத் தட்டினான். உள்ளே கொஞ்சமேனும் தூங்காமல் இராத்ரி முழுவதும் விழித்திருந்த ஸௌந்தரி, 'அம்மா, அம்மாடி! சீமாத்தான் வந்திருக்கான். 'அம்மா, அம்மாடி! கதவை நான் திறக்கட்டுமா' என்றாள்.

அலமேலு அம்மாளுக்கு உலகத்தில் எல்லா விஷயங்களைக்காட்டிலும் நித்ரா தேவதையின் மேல்தான் விச்வாஸம். ஸ்ரீநிவாஸன் வந்திருக்கிறானென்று தன் பெண் சொன்னதும் கோபங் கொண்டு,

'சரிதான் போ. குறைச்சலில்லை. வெறும்னே தூங்கடி. ஈச்வரன் உனக்கு என்ன தொண்டை கொடுத்திருக்கிறான்.' என்று கதவைத்திறப்பதை விட்டுக் கடவுளைத் தூறவாரம்பித்தாள். நித்ரைக் கப்புறம் இவளுக்கு யாரையாவது எதைப் பற்றியாவது ஏதாவது மெள்ளவோ இரைந்தோ தூற்றிக்கொண்டிருக்கவேண்டும். இப்பொழுது இவள் தன் வழக்க ப்ரகாரம் ஸௌந்தரியைத் திட்டியும், தன் புக்ககத்து தரித்ரத்தையும், பிறந்தகத்துச் செல்வத்தையும் கணக்கிட்டு இடையிடையே கொட்டாவிவிட்டு 'க்ருஷ்ண க்ருஷ்ண' என்று ஸ்ரீமந்நாராயண நாமத்தையும் சொல்லிக் கொண்டிருந்தாள். இதைக்கண்ட ஸௌந்தரிக்குக் கொஞ்சமேனும் மனம் பொறுக்கவில்லை. ஓரேயோட்டமாய் ஓடி கதவைத் திறந்து விட்டாள்.

ஸ்ரீநிவாஸன் உள்ளே வந்தும் ஸ்ரீமதி அலமேலம்மாள் ஓய்ந்ததைக் காணோம். ஏதோ மாடு கறக்கவில்லை யென்றும், சாதத்தைப் பூனை உருட்டி விட்டதென்றும், சூத்ரச்சி அரிசி தீட்டவில்லை யென்றும், ஒன்றுக் கொன்று ஸம்பந்தமில்லாமல் ஏதோதோ பிதற்ற வாரம்பித்தாள். என்னமோ பட்டணத்திலிருந்து வந்தானே 'அப்பா சாப்பிட்டையா' வென்றுகூட இவள் கேட்கவில்லை. அவனுக்கு பதிலாக ஸௌந்தரி,

'அத்தான், ஒருபிடி சாப்பிட்டுப்படுத்துகிறது தானே.' என்றாள்

'வேண்டாம், சுந்து, சாப்பிட்டுவிட்டுத் தான் வந்தேன்.'

'ரயில்தான் போதோடு பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு விடுகிறதே. எப்போ, அத்தான் சாப்பிட்டே, கொஞ்சம்போற சாப்பிடலாம். பொறித்த அப்பளாங்கூட அப்படியே இருக்கு.'

'ஏண்டி, அவன் தான் வேண்டாங்கிறானே. என்னத்துக்கு வெறும்மனே அவனைக்கேட்கிறே. மாப்பிள்ளையாயென்ன. ஒணம் என்றா சாப்பிட்றான். எல்லாம் கார்த்தாலே பாத்துக்கலாம். படுத்துக்கோ.' என்றாள்.

இதற்குமேல்பேச ஸௌந்தரிக்குத் தைர்யமில்லை. ஏனெனில் வார்த்தைகள் ப்ரயோஜனப் படாவிட்டால், அலமேலு அம்மாள் ஸாதாரணமாய் கை, முறம், துடைப்பம், கட்டை, முட்டை எவை அகப்படுமோ அவைகளை வித்யாஸமின்றி தன் எதிரியின்மேல் ப்ரயோகித்து விடுவாள். இவைகளின் அநுபோகம் ஆறுமாதக் குழந்தையாயிருந்தது முதல் அடைந்திருந்த ஸௌந்தரி தன் கண்கள் ஊற்றெடுக்கச் சப்தம் செய்யாமல் வாயை துணியால் மூடி அழ ஆரம்பித்தாள். பாவம்! சிறு பெண்ணாதலால் தன் தாய் இவ்வளவு மூர்க்கமாயிருப்பதால் மனம்விண்டு தன் துக்கத்தை அழுது ஆற்றினாள்.

ஸ்ரீநிவாஸனை ஒருவரும் கவனிக்கவில்லை. சிறிதுநேரம் அங்கேயிருந்த விசிப்பலகையில் உட்கார்ந்திருந்தான். உடனே இவன் பெருச்சாளிவளை தோண்டுவதுபோல் ஒரு சப்தத்தைக் கேட்டான். அவ்வூரில் திருடர் பயம் அதிகமுண்டு. ஒரு வேளை இது திருடன் கன்னம் வைக்கும் சப்தமோ வென்று யோசித்தான். ஆயினும் சற்றுநேரம் யோசித்தபிறகு இது தன் மாமியின் 'குறட்டை' யென்று நிச்சயப்பட்டான். இதைப்பார்க்க இவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது. இச்சூர்ப்பணகையை வைத்துத்தன் மாமா எப்படி ரக்ஷிக்கிறாரோ வென்று இவன் பலமுறை ஆச்சரியப்படுவான். மேலும் இவன் தன் அம்மானிடத்தில். ஆச்சரியப்படும்படி

அமைந்த குணங்களில் இது ஒன்றே முதன்மையானது. ஸௌந்தரியும் தூங்கி விட்டாள். தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை நாகராஜன் மாத்ரம் போர்த்திருந்த துணிவிலகி கொசுகுகடிக்கக்காலை இப்படியும் அப்படியும் தூக்கிப்போட்டுக் கொண்டிருந்தான் ஸ்ரீநிவாஸனுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. ரயில்வண்டியில் கேட்ட பரிதாபக்கதையும் இங்கே நடந்த ஸமாசாரங்களும் இவன் மனதைச் சூழ்ந்துகொண்டன. விதியைநொந்துகொண்டு இவன் மாடிக்குஏறிப்போய் அங்கே மறைந்துகொண்டிருக்கும் கீறல் சந்த்ரனைப் பார்த்து யோசித்துக்கொண்டிருந்தான். இவன் மனதில் என்ன என்ன எண்ணங்கள் ஓடின! பூலோகமெல்லாம் பைத்யக் கூத்தென்றும், ஜனங்களெல்லாம் கூத்தாடிகளென்றும் அன்பு, காதல், நன்றிமறவாமை இவைகளெல்லாம் புஸ்தகங்களிலும் வார்த்தைகளிலுந்தான் காணமுடியுமென்றும் நினைத்தான். இந்த ஸ்ரீநிவாஸன்யார்? இவன் தன் அம்மான் க்ருகத்திற்கு வருவானேன்? ஸௌந்தரிக்கு இவன்மேல் என்ன அன்பு? இவைகளெல்லாம் இவன்மனதில் ஒரு நொடியில் ஓடின. அவைகளென்னவென்று நாம் பார்ப்போம்.

ஸ்ரீநிவாஸன் ஜனித்த மூன்றாம்நாளே அவன் தாய் ஜன்னி கண்டு பரலோகம் புகுந்தாள். கும்பகோணத்திலிருக்கும் கவர்ன்மெண்ட் கலாசாலையில் கணிதசாஸ்த்ர போதகரா யிருந்த, இவன் தகப்பனார் மனைவியைப்பிரிந்த துக்கத்தால் சித்த ப்ரமைகொண்டு கலாசாலையை விட்டு மூன்று மாதத்துக்குப் பிறகு உயிரையும் விட்டார். இப்படி பிறந்த சிலநாட்களுக்குள்ளேயே அநாதையாகிய ஸ்ரீநிவாஸனை அவன் பாட்டி எடுத்து வளர்த்து வந்தாள். ஆனால் துரத்ருஷ்டம் அவனை விட்டகலவில்லை. மெட்ரிகுலேஷன் பரீக்ஷை முடிந்து பெரிய லீவுக்கு ஊருக்கு வந்திருந்தபொழுது இவன் பாட்டி காலஞ் சென்றுவிட்டாள். அதுமுதல் இவனுக்கு கஷ்டம் ஆரம்பித்தது. வட்டியும் முதலுமா யிருந்த ஆயிரம் ரூபாயையும் இவன் மாமன் கலாசாலைப் படிப்பில் செலவழித்துவிட்டார். இவனுடைய ஸத்குணங்களும் பெரிய பி. எ. வகுப்பில் வாசிக்கும் நிலைமையையுந்தான் ஆஸ்தி. இப்படிப்பட்ட தரித்ரனைக் கண்ட அலமேலம்மாளுக்குக் கோபம் வருமா வாராதா? ஒருவேளை ஸௌந்தரியைக் இக் கள்வன் எங்கே தன் மருமகனுக்கில்லாமல் அடித்துக்கொண்டு போகப்போகிறானோ யென்கிற பயம் இவளுக்கதிக மிருந்தது. இவனைக் கண்டபோதெல்லாம் ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பாள். தன் வீட்டிற்கு இவன் ஒரு கேடாய் வந்து முடிந்தானென்று கருதினாள். ஆனால் ஸௌந்தரிக்கோ ஸ்ரீநிவாஸனைக் கண்டால் ஏதோ வெகு ப்ரியம். குழந்தை முதல் ஸ்ரீநிவாஸன் தான் அவளுக்குத் தோழனும் ஸ்நேகிதனும் அன்புகொண்ட ஆப்தனுமாயிருந்தான். அலமேலுவினிடம் அடிபட்ட போதெல்லாம் ஸௌந்தரி ஸ்ரீநிவாஸனிடம் ஓடிவந்து விடுவது வழக்கம். இக்குழந்தைகளிருவரும் ஒருங்குசேர்ந்து தம்மை ஹிம்ஸிக்கும் ராக்ஷஸியை வெறுத்தார்கள். இதுமுதல் அன்பு முற்ற முற்ற ஸ்ரீநிவாஸன் ஸௌந்தரிக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதும், அவளுக்காக மாமியினிடம் பரிந்துபேசுவதுமாய் அவன் மனதில் கருதியவைகளெல்லாவற்றையும் அனுபோகத்தில் செய்துகாட்டினான். இவனுக்கு வயது இப்பொழுது பத்தொன்பது. ஸௌந்தரி இவனைவிட ஏழுவயது சிறியவளாயிருந்தும், இவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஸ்நேகித்தம் முற்றி காதலராய்விட்டார்கள். எப்படியிருந்தாலும் ஸௌந்தரியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்ற யெண்ணம் இவன் மனதில் விழுந்துவிட்டது. அப்படிச் செய்வதற்கு தனக்கு வேண்டிய செல்வம் இல்லாததனால் படிப்பாவது இருக்கட்டுமென்று சோம்பலின்றி இராப்பகலாய் உட்கார்ந்துத் தன் பாடங்களைப் படிப்பான். இவன் முயற்சியே இவனைக் காப்பாற்றியது. வகுப்பில் இவன்தான் முதலாவது. கலாசாலை உபாத்யாயர்கள் இவன்மேல் உயிராயிருந்தார்கள். என்ன நம்பிக்கையிருந்தாலும் ஸௌந்தரியை எங்கே ஒருவேளை வேறெவனுக்காவது கொடுத்துவிடப் போகிறார்களோ வென்ற ஸந்தேகம் இவனை வெகுதூரம் வெருட்டிற்று அப்படி ஸௌந்தரியும் போய்விட்டால் இவனுக்கு உலகத்தில் என்ன பற்று இருக்கிறது. அவளொருவளுக்காகத் தானே இவன் இவ்வளவு தூரம் படித்து முன்னுக்குவந்தது. அவளேபோய்விட்டால் கல்வியும் கீர்த்தியும் இவனுக்கெதற்கு? உலகமே இவனுக்கு அதற்கப்பால் அநித்யமன்றோ?

வெகு நேரம் சிந்தையலாழ்ந்திருந்த ஸ்ரீநிவாஸன் கீழேயிறங்கிக் கூடத்தறையில்போய்ப் படுத்துக்கொண்டான்.

**வி. பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.**

(இன்னும் வரும்.)



# Departmental Notes.

## பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### The Strain of Work.

**வேலையால் ஏற்படும் ச்ரமம்.**—உபாத்யாயர்களுக்குப் பாடங் கற்பித்தபிறகு களைப்பும் ச்ரமமும் ஏற்படுவது ஸகஜம். அவர்கள் தங்களுக்கு ஏற்படும் களைப்பை கவனித்து தக்க பரிகாரம் தேடிக்கொள்ளாவிட்டால் பின்னால் கெடுதல்கள் ஏற்படக்கூடும். உபாத்யாயர்களுக்குவரும் வ்யாதிகளில் பல பாடஞ்சொல்லிக்கொடுத்த ச்ரமத்தாலேயே உண்டாகின்றனவென்று சொல்லலாம். உபாத்யாயர்களுக்குக் களைப்பு உண்டாவதற்கு இரண்டுவித காரணங்களிருக்கின்றன. முதலாவது, வகுப்பில் பிள்ளைகளை ஒழுங்காயிருக்கும்படி பார்த்துக்கொள்வதால் ச்ரமம் ஏற்படுவது. இரண்டாவது தற்காலத்துப் புதுக்கல்வி முறைகளின்படி கற்பிக்க முயலுவதில் உபாத்யாயர்கள் அதிக ச்ரமம் எடுத்துக்கொண்டு, பாடங்களைத் தயார்செய்து, கற்பித்தல். ஒரு உபாத்யாயர் நன்றாய்ப் பாடஞ்சொல்லிக்கொடுத்தார் என்றால், அவருக்கு பிற்பாடு ரொம்ப ச்ரமம் ஏற்படுமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஏனென்றால், அவர் வகுப்பிலுள்ள ஒவ்வொரு பையனுடைய மனோசக்திகளுக்கும் வேலைகொடுத்து அவைகளைப் பயிற்சியடையும்படி செய்யவேண்டியிருக்கிறது.

உபாத்யாயர்களுடைய ச்ரமத்தைக் குறைப்பதற்கு இரண்டுவித வழிகள் இருக்கின்றன. ஒன்று வித்யா அதிகாரிகள் செய்யக்கூடியவை. இரண்டாவது உபாத்யாயர்களே செய்துகொள்ளக்கூடியவை. அதிகாரிகள் செய்யக்கூடியவை வகுப்பின் அளவைக் குறைத்தல், உபாத்யாயர்களின் தொகையை அதிகமாக்கி அவர்கள் தினந்தோறும் கற்பிக்கவேண்டிய காலத்தைக் குறைத்தல் முதலியன. ஆனால் அதிகாரிகள் செய்யக்கூடிய ஸாதகங்களுக்கு அதிக செலவு பிடிக்குமாகையால், இது மெதுவாகத்தான் முடியும். ஆகையால் உபாத்யாயர்கள் ஸொந்த ஸாதனங்களையே கவனிக்கவேண்டும். முதலாவது உபாத்யாயர்கள் பையன்களுடைய விளையாட்டுகளில் கலந்துகொண்டு அவர்களோடு 'ஸௌஜன்யமாக' இருந்துவரவேண்டும். இதனால் வகுப்பில் பாடங் கற்பிப்பதில் ச்ரமம் குறையும். இரண்டாவது, உபாத்யாயர்கள் தேகப்பயிற்சியாலும், மற்ற ஸாதனங்களினாலும் தங்களுடைய தேகஸௌக்யத்தை சீர்திருத்த வேண்டும். இப்படிச்செய்வதால் பாடங் கற்பிப்பதில் ச்ரமம் அதிகமாகத்தோற்றாது. மூன்றாவது ஒவ்வொரு உபாத்யாயரும் தங்களுடைய மனஸுக்குப்பிடித்ததான ஏதாவது ஒரு வேலை வைத்துக்கொள்ளவேண்டும். சுத்த காற்று கிடைக்கும்படியான வெளியில் செய்யக்கூடிய தொழில் ரொம்ப ச்லாக்யமானது. தேகத்துக்கு ச்ரமபரிகாரம் வேண்டியிருக்கும்காலத்தில் அந்தத் தொழிலானது, உபாத்தியைத் தொழிலைப்பற்றிய ஞாபகம் வாராதபடி செய்யவேண்டும். மேலும் ஒவ்வொரு உபாத்யாயரும் தமது வேலையை முறைப்படி ரொம்ப சீக்ரமாகச் செய்யப் பழகவேண்டும். ஸாதாரணமாய் மறுநாள் பாடத்தை முதல்நாள் இரவில் தயார்செய்யும்போது தாமஸமாயும் அஜாக்ரதையாயும் வேலை செய்வதால், எடுத்துக்கொண்ட கார்யம் சரிவர முடியாமல்போவதோடு, அதிக நேரமாவதால் ச்ரம பரிஹாரம் செய்துகொள்வதற்கும் போதுமானநேரம் கிடைப்பதில்லை.

### Industrial School for Criminal Classes.

**சென்னையில் குற்றச் செயல்களைச் செய்யும் வகுப்பார்களின் பிள்ளைகளுக்கு ஒரு தொழிற்சாலை.**—இந்த வகுப்புப் பிள்ளைகளுக்கு தொழிற்சாலை யொன்றை சென்னையில் ஸ்தாபிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் காலத்திற்கு முந்தி கவர்ன்மெண்டார், கர்னாடிக் மில்லுக்கருகில் ஒரு பெரிய கட்டிடத்தை வாங்கினார்கள். அதில் இந்த வகுப்புப் பிள்ளைகளுக்கு ஒரு ஸ்கூல் ஏற்பட்டு நடந்துவருகிறது. அந்த ஸ்கூல் ஸால்வேஷன் ஆர்மியைச் சேர்ந்தவர்களின் மேற்பார்வையில் இருந்து வருகிறது. அங்குதான் தொழிற்சாலையும் ஏற்படும்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Welcome Ode to Mr. Gandhi.

**மிஸ்டர் காந்திக்கு நல்வரவு.—**

*நின்வரவெங்கள் நல்வரவாக*
*நிறைமதிகண்ட நீள்கடல்போல*
*மன்பதைமுழுதும் மனக்களிப்படைய*
*வஞ்சகர் மனங்களும் குளிர*
*பொன்விளை நமது பாரதநாட்டின்*
*புண்ணியம் புகழுடன் துலங்க*
*அன்பினிலுதித்த வன்பொறை யெதிர்ப்பா*
*மாயுதம் வெற்றியே யடைக.* (1)

*" தருமமே துணைவன் கருணையே தோழன்*
*சாந்தமே நலனுருதாரம்*
*அரியதிண் பொறையேமைந்தன் மற்றெனக் "*
*கறைந்தவோராரியன் மொழியைப்*
*பெரியவ னீநின் குணத்தினலின்ஞள்*
*பேருலகறிவுறச் செய்தாய்*
*கருமமே பெரிதென் றன்னியர் சிறையைக்*
*கனகமாளிகையென வேற்ருய்.* (2)

*மறையெலாம் புகலும் பாரதநாட்டின்*
*மானமும் ஞானமும் விளங்க*
*முறையிலார்புரிந்த கொடுமைகளனைத்தும்*
*முற்றற முழுமனத்தேற்றுக்*
*கறையிலாவுளத்துப் பாண்டவர் தமைப்போற்*
*காலமுந் தேயமும் கருதி*
*பொறையினு லெதிர்த்து வெற்றியும் பெற்ருய்*
*பூதலத்தியாவரும் புகழ.* (3)

*தன்மொழி புரப்பான் றனதரசிழந்த*
*தாணிபனொருவனுந் தன்பேர்*
*முன்னுரைத் துயிரைக் களப்பலி கொடுத்த*
*மூதறிவாளனும் பிறந்த*
*ஜன்மபூமியின்சீர் ஜகமெலாம் புகழத்*
*தென்றிசை யரக்கர்செய் கொடுமை*
*துன்பெலாமேற்றுப் பொறைமுடி தரித்த*
*தோன்றலே யான்றவர் கடரே.* (4)

*பொறையெனுஞ் சிகரப் பெருவரையதனைப்*
*புகழெனும் புணரியினிருவி*
*யறிவெனுங் கயிற்ருற் பிணித்திருபாலு*
*மமரரு மரக்கருமாக*
*மறைவழி வருநம் பாரதநாட்டு*
*மைந்தரும் வஞ்சருங் கடையப்*
*பெறவருந் தேசச் சேவையா மமுதைப்*
*பெற்றெமக் களித்தனை பெரியோய்.* (5)

*" பொறையெனப்படுவ தாடவர்தமக்குப்*
*பூணெனப் புகலினும் பொருந்தார்*
*முறையறப் புரிந்தா லக்கணத்தவர்*
*முடித்தலை துணிப்பதே முழுப்பூண் "*
*கறையறு முனத்தோ யிம்முறை கடந்துங்*
*காட்டிய நின்பெருங் கருணைக்*
*கிறைவரும்புகழ்ந்தா ரென்னின்மற்றென்னே*
*யாமெடுத் தியம்புதலெந்தாய்.* (6)

பா. ஆதிமூர்த்தி.

### Madura Tamil Sangam.

**மதுரைத் தமிழ்ச் சங்கம்.**—மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 14-வது வர்ஷக்கொண்டாட்டம் இந்த மாஸம் 12-ந்தேதி யன்று மதுரையில் நடைபெற்றது. அந்த ஸமயம் கோவாபரெடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராராகியஆனரபிள்மிஸ்டர் எல்.டி. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்து இங்க்லீஷில் தமிழபிவ்ருத்தியைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் தமிழ்ச் சங்கம் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிப் பேசுகையில், அது பழைய தமிழ் ஏடுகளைச் சேகரித்து அச்சிட்டு ப்ரசுரம்செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், தமிழபிமானிகள் மாணவர்களுக்கு எவ்விதமான தமிழ்க் கல்வி கற்பிக்க வேண்டுமென்பதைப்பற்றி ஆலோசித்து கவர்ன்மெண்டாருக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்றும் சொன்ஞர்.

இந்த ஸங்கத்தின் ஆதரவில் நடந்துவரும் தமிழ்க் கலாசாலையில் 3-உபாத்யாயர்களும் 24 மாணவர்களும் இருக்கிருர்கள். மாணவர்களில் 20-பேர்கள் உபகாரச் சம்பளம் பெற்று வாசிப்பவர்கள்.

ஸங்கம் நடத்திவரும் தமிழ்ப் பரீக்ஷைகளில் மெட்ரிகுலேஷன் தமிழ்ப் பரீக்ஷையில் தேறியவர்களுள் 6 பேர்கள் பெண்களாவர்.

இதுவரையில் அச்சிட்டு வெளிவராத 'மாறனலங்காரம்' என்னும் நூல் 'செந்தமிழ்' வாயிலாக வெளிவந்து பூர்த்தியடைந்திருக்கிறது.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### A Life Saving Waistcoat.

**ஜலத்தில் விழுந்தவர்களைக் காப்பாற்றும் உள் சட்டை.**—ஜலத்தில் விழுந்தால் அதில் முழுகாமல் தப்பித்துக்கொள்ள அநேக மாலுமிகளும், கப்பல் ப்ரயாணிகளும் உயிர்ச்சட்டை யென்றும், உயிர் அரைக்கச்சை (பெல்ட்) என்றும் கார்க்கால் செய்யப்பட்ட சில ஸாதனங்களை உபயோகிக்கிருர்கள். ப்ரிட்டிஷ் கப்பல் படையில் 'பாடி உயிர்ச்சட்டை' யென்று ஒரு ஸாதனம் உபயோகத்திலிருந்து வருகிறது. அந்தச் சட்டையில் இலவம் பஞ்சைச் செலுத்திவைக்கிருர்கள். இலவம் பஞ்சு கார்க்கைவிட 5-மடங்கு லேசானது. ஒவ்வொரு சட்டையிலும் 18-ஔன்ஸ் பஞ்சைச் செலுத்தித் தைப்பார்கள். இந்தப் பஞ்சு ரொம்ப மெல்லியதாக இருப்பதால் இதில் அடைபட்டிருக்கும் காற்று சீக்ரம் வெளியே போவதில்லை. மேலும் பஞ்சின் இழைகள் சற்று எண்ணெய்ப் பசையுள்ளனவாகையால் ஜலத்தை க்ரஹிப்பதும் இல்லை. இது ரொம்ப உபயோகமுள்ளதாயிருக்கிறதாம்.

### The Telescribe

**டெலிபோன் ஸம்பாஷணையை போனேக்ராபில் பிடித்தல்.**—போனேக்ராப் கண்டு பிடித்த தாமஸ் அல்வா எடிஸன் என்னும் அமெரிக்கர் டெலிபோன் மூலமாக இருவர் ஸம்பாஷிப்பதை போனேக்ராப்பில் பிடிக்க ஒரு யந்த்ரம் கண்டு பிடித்திருக்கிருராம். இந்த யந்த்ரத்துக்கு 'டெலிஸ்க்ரைப்' என்று பெயர். இந்த யந்த்ரத்தை உபயோகிக்கும்போது, டெலிபோனில் பேசுபவருக்கு பேசுவதில் யாதொரு தடையுமில்லாமலும், அவர் தம்முடன் ஸம்பாஷிக்கும் மற்றவருடைய பேச்சைக் கேட்பதில் யாதொரு ச்ரமமுமில்லாமலும் இருப்பதோடு, இரண்டு ஸம்பாஷணையையும் 'டெலிஸ்க்ரைபில்' எடுத்து விடலாமாம். இன்னொரு விசேஷமென்னவென்ருல், ஸம்பாஷணையில் ஏதாவது ஒரு முக்யமான பாகத்தை மாத்ரம் 'டெலிஸ்க்ரைபில்' எடுக்கவேண்டுமென்ருலும் அதை மாத்ரம் எடுத்து விடலாமாம்.

### Animals and Earthquakes.

**ம்ருகங்களும் பூகம்பங்களும்.**—பூகம்பங்கள் நேரும் இடங்களில் ம்ருகங்கள் அவைகள் வருவதை முன்னுடியே யறிந்து, தாமறிந்ததை சில செய்கைகளால் காட்டுகின்றனவாம். ஜப்பானில் பூகம்பங்கள் அடிக்கடி நேருவதுண்டு. பூகம்பம் நேருவதற்கு முன்னல் குதிரைகள் உடல்பதறி நடுங்குகின்றனவாம். மத்ய அமெரிக்காவில் பூகம்பம் வரும்போலிருந்தால் நாய்களும் பூனைகளும் வீட்டைவிட்டு வெளியே ஓடிப்போகின்றனவாம். இந்த ம்ருகங்களின் ஸ்வபாவத்தையறிந்த அங்குள்ள ஜனங்களும், தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வீட்டைவிட்டு ஓடிப்போகிருர்களாம். இட்டலியில் பூகம்பம் வருவதற்கு முன்னல் பக்ஷிகள் சத்தம் செய்யாமல் தங்கள் கூடுகளைவிட்டு ரொம்ப உயரப் பறந்து, பிறகு பூகம்பம் இருக்கும் வரையில் உரக்க சத்தமிடுகின்றனவாம். ஸிஸிலித்தீவில் பூகம்பங்கள் உண்டாவதற்கு முன்னல் காக்கைகள் கத்துமாம்: நாய்கள் ஊளையிடுமாம்.

### Amputating the Brain.

**மூளையை வெட்டிவிடுவது.**—ப்ரான்ஸில் யுத்தம் செய்துகொண்டிருந்த ஒருபோர்வீரனுடைய தலையின் பின்பக்கத்தில் ஒருகுண்டுதாக்கி எலும்பை முறித்துவிட்டது. எலும்பின் உள்புறத்திலுள்ள மூளையும் காயமடைந்து காயம்பட்ட எலும்பின் வழியாக ஒரு கொப்புள மேற்பட்டது. இந்தக் கொப்புளத்தை டாக்டர்கள் அறுத்து அப்புறப்படுத்தினுர்கள். அப்படிச் செய்தும், மறுபடியும் கொப்புளங்கள் ஏற்படவே, டாக்டர்கள், காயத்தோரமாயிருந்த மூளையின்பாகத்தை இரண்டுதடவை வெட்டிவிட வேண்டியதாயிற்று. இப்படி வெட்டினதால் அவனுடைய மூளையில் ஆறிலொருபாகம் குறைந்துபோயிற்று. அப்படிக்குறைந்துபோனபோதிலும், அந்தப் போர்வீரனுக்கு, நடப்பது கைகால்களை யசைப்பது, உணர்ச்சி, அறிவு, இவைகளில் எதிலும் குறைவு ஏற்படவில்லையாம்.

### The Human Tongue.

**மனிதர்களுடைய நாக்கு.**—மனிதர்களுடைய நாக்கில் ருசியறியும் பாகங்கள் மூன்று இருக்கின்றன. நுனிப்பாகம் புளிப்பு ருசியை நன்ருயறிந்துகொள்ளும். மத்யபாகத்தில் தித்திப்பும் கசப்பும் தெரிகின்றன. மாம்ஸம், எண்ணெய்கள், வெண்ணெய் இவைகளினுடைய ருசி நாக்கின் அடிப்பாகத்தில் தெரிகிறது.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Flies and Cod Liver Oil.

**ஈக்களும் காட்லிவர் எண்ணெயும்.**—ஈக்களால் பல வ்யாதிகள் பரவுகின்றனவென்பது யாவருக்கும் தெரிந்திருக்கும். ஈக்களின் முதல் பிறவியாகிய 'லார்வா' என்னும் புழு தேங்கியுள்ளஜலத்தில் வ்ருத்தியாகும். ஜலத்தில் காட்லிவர் ஆயில் என்னும் எண்ணெயை ஊற்றினால், அந்த எண்ணெய் ஜலத்திலுள்ள ஈயின் புழுக்களைக்கொன்றுவிடுகின்றன. மேலும் அந்த விடத்துக்கு மற்ற பறக்கும் பூச்சிகளும் வருவதில்லை. இந்த எண்ணெய் மெதுவாக ஆவியாக மாறிப்போகிறது. எண்ணெய் தோலின்மேல் பட்டால் தோலுக்கு யாதொரு கெடுதலும் ஏற்படுவதில்லை. இதை குதிரை, மாடுகளின் மேல் தடவுவதால், அவைகளைத் தொந்தரைசெய்யும் ஈக்களைப் போக்கிவிடலாம். அவைகளின்மே லிருக்கக்கூடிய காயங்களும் புண்களும் சீக்ரம் ஸ்வஸ்தமாய்விடும். ஆனால் இந்த எண்ணெய்க்கு ஒரு கெட்டநாற்ற மிருப்பதாலும், இதற்கு விலை அதிகமானதாலும் இதை உபயோகிப்பது அநேகருக்குக் கஷ்டமாயிருக்கும்.

### A Simple Remedy for Cholera.

**காலராவுக்கு ஒரு ஸுலபமான மருந்து**—ராஜா டி. வெங்கடேச பட்டர் என்னும் ஆயுர்வேத வைத்தியர் காலராவுக்கு தமது அனுபவத்தில் வந்த எளிதில் செய்துகொள்ளக்கூடிய பின்வரும் முறையை 'வைத்ய கலாநிதி'யில் தெரிவித்திருக்கிறார். "கற்பூரம் ½ பலமெடை, பளிங்கு ஸாம்ப்ராணி ¼ பலமெடை, இவ்விரண்டையும் முதலில் நன்ராய் உஷ்ணமுண்டாகும்படி கல்வத்தி லிட்டு ஆட்டவும். பிறகு இரண்டு குன்றுமணியெடை அபினையும் சேர்த்து அரைத்து மிளகு ப்ரமாணம் உருண்டைகளாகச் செய்து, காலரா கண்டவுடன்கூடிய சீக்ரத்தில் அடிக்கடி ஜலத்துடன் கலந்துவிழுங்கி விடச் சொல்லலாம். குணமுண்டாகும் வரையில் கொடுத்துவரவும். அஜீர்ணபேதிக்கும் சீதபேதிக்குங்கூட இது உபயோகப்படும்."

### Collars and Headache.

**கழுத்துப்பட்டையும் தலைவலியும்.**—ரொம்ப உயரமாயும் பிடிப்பாயும் கழுத்துப்பட்டைகள் (காலர்)போட்டுக்கொண்டால் அடிக்கடி தலைவலி வருகிற தென்று வியன்னாவிலுள்ள ஒரு டாக்டர் சொல்லுகிறாராம். அவரிடம் ஒருநாள் தலைவலிக்கு வைத்யம் செய்துகொள்ள வந்த ஒரு ஸ்த்ரீ ரொம்ப பிடித்தமாயும் உயரமாயும் கழுத்துப்பட்டையைக் கட்டிக்கொண் டிருக்கக்கண்டு, அவர் அதை எடுத்து விடும்படி சொல்ல, கழுத்துப் பட்டையால் நெருக்கப்பட்டிருந்த கழுத்து ஸாதாரண நிலைமையை யடைந்து, தலைவலியும் நின்று போய்விட்டதாம்.

இதைக் கண்ட அந்த டாக்டர் தம்மிடம் தலைவலியோடு வருபவர்களையெல்லாம், அதிக உயரமில்லாமல் தளர்த்தியாயுள்ள காலர்கள் போட்டுக் கொள்ள சொன்னதில் ரொம்ப ஸாதகமுண்டாயிற்றாம். தலைவலி வரக்கூடியவர்கள் ஒருவரும் உயரமாய் இறுகப்பிடிக்கும்படியான காலர்கள் போட்டுகொள்ளக் கூடாதென்று அந்த டாக்டர் சொல்லுகிறாராம்.

### Facts Concerning Flies.

**ஈயைப்பற்றிய சில விஷயங்கள்.**—வீடுகளில் ஈக்கள் இல்லாமல் இருந்தால், அங்கே ஸுகாதாரக் குறைவு இல்லையென்று தாத்பர்யம்.

ஒரு வீட்டில் ஈக்கள் எவ்வளவு அதிகமாயிருக்கின்றன என்பதைக்கொண்டு வீட்டின் ஸுகாதார நிலைமையை அறிந்து கொள்ளலாம்.

ஒரு பெண் ஈ ஒருமாஸகாலத்தில் 50,62,50,000 ஈக்களை வ்ருத்தி செய்யும்.

ஈக்கள் வ்ருத்தியாகாமல் தடுக்க அவைகள் வ்ருத்தியாகக் கூடிய இடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய தவச்யம்.

வீட்டுக்குப் பக்கத்திலுள்ள மாட்டுக்கொட்டில்களிலிருந்து சாணம் முதலிய குப்பைகளை வாரத்துக்கொருதடவையாவது அப்புறப்படுத்த வேண்டும்.

ஈக்கள் வ்ருத்தியாகக் கூடிய இடங்களை குறைந்தது வாரத்துக்கொருதடவை சுத்தம் செய்ய வேண்டியது அவச்யம்.

எருக்குவியல்களிலும், லாயங்களிலும், மாட்டுக்கொட்டில்களிலும், கசாப்புக் கடைகளிலும், வீட்டுக் குப்பைகளிலும், குப்பைத் தொட்டிகளிலும், சாம்பல் குவியல்களிலும், அழுகும் பொருள்கள் உள்ள மற்ற இடங்களிலும் ஈக்கள் வ்ருத்தியாகின்றன.

ஈக்களால் டைபாய்ட், காலரா, டீபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகம், வயிற்றுக்கடுப்பு, அதிஸாரம், அம்மைமுதலிய பல வ்யாதிகள் பரவுகின்றன.



# LAW.

## சட்டம்.

### Punishment of Stocks.

**குட்டைமராத் தண்டனை.**—சென்ற மாஸம் சென்னை சட்டஸபை கூடியபோது ஆனரபிள் மிஸ்டர் பி. நரஸிம்மய்யர் க்ரமாந்தரங்களில் குற்றவாளிகளான தாழ்ந்த ஜாதிகளுக்கு குட்டை மரத்தண்டனை விதிக்கும் வழக்கத்தை நிறுத்திவிடுவதற்காக ஒரு மசோதா கொண்டுவந்தார். அவரும் அவரைத் தாங்கிப் பேசிய மெம்பர்களும் அந்த மசோதா மகா அவச்யமென்றும், தற்கால நாகரீகத்துக்கு அத்தண்டனை சிறிதும் பொருந்தாதென்றும் பேசினார்கள். கவர்ன்மெண்ட் தரப்பில் ஆனரபில் மிஸ்டர் ஸ்டேவர்ட் பதில் சொன்னபோது க்ராமாதிகாரிகள் விதிக்கும் தண்டனைகளனைத்தையும் திருத்தி மாற்ற ஸமீபத்தில் ஒரு மசோதா கொண்டுவருவதாக கவர்ன்மெண்ட் நினைத்திருக்கிறார்களென்றும், அப்போது மற்ற விஷயங்களோடு கூட இதுவும் ஆலோசிக்கப்படுமென்றும், இம்மாதிரி தண்டனையை நிறுத்திவிடவேண்டு மென்பதே கவர்ன்மெண்டின் அபிப்ராயமென்றும், இன்னும் ஆறுமாஸத்துக்குள்ளாக இந்த மசோதா கொண்டு வரப்படுமென்றும், கொண்டு வரப்பட்ட இரண்டு மூாஸத்துக்குள்ளாக மசோதா அனுஷ்டானத்துக்கு வந்துவிடு மென்றும், சென்ற 97-வர்ஷகாலமாய் சட்டத்திலிருந்த இந்த வழக்கம் இன்னும் ஆறுமாஸம் இருப்பதால் விசேஷக்கேடு உண்டாகாதென்றும், ஆகையால் மிஸ்டர் நரஸிம்மய்யர் கொண்டுவந்த ப்ரேரணையை கவர்ன்மெண்ட் அங்கீகரிக்க முடியாதென்றும் சொன்னார். அதன்மேல் ஆனரபில் மிஸ்டர் நரஸிம்மய்யர் இப்போது இந்த வழக்கத்தை நிறுத்த சட்டம் செய்யாவிட்டாலும், கவர்ன்மெண்டார் தங்கள் நிர்வாக அதிகாரத்தை உபயோகித்து இந்தக் கொடிய வழக்கத்தை நிறுத்திவிடவேண்டுமென்று சொன்னார். க்ராம உத்யோகஸ்தர்கள் தங்கள் வசமுள்ள குட்டைமரங்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை மேலதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்காக அவர்களிடம் காட்டுவது வழக்கம். இப்போது கவர்ன்மெண்டார் ஷை சட்டம் செய்யும் வரையில் ஷை குட்டை மரங்களை க்ராமாதிகாரிகள் மேலதிகாரிகளுடைய ஹெட்க்வார்ட்டர் ஸ்தானங்களுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று உத்தரவு செய்தால் நல்லதென்று மிஸ்டர் நரஸிம்மய்யர் சொன்னார். ஆனால் ஸர் ஹாரோல்ட் ஸ்டேவர்ட் அப்படிப்பட்ட வாக்குத்தத்தம் கொடுக்க முடியாதென்றும், ஆனால் மிஸ்டர் நரஸிம்மய்யர் சொன்ன யோசனையைப் பற்றி ஆலோசிப்பார்களென்றும் சொன்னார். அதன்மேல் மிஸ்டர் நரஸிம்மய்யர் தமது மசோதாவை வாப்ஸ் வாங்கிக்கொண்டார்.

### Allotment of Shares in Partition.

**பிரிவினையில் பாகங்களை இன்னாருக்கென்று ஏற்படுத்துவது.**—ஒரு அவிபக்த குடும்பத்தின் ஸொத்துக்களை பாகம் செய்து கொடுக்கும்படி நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனர் (உத்யோகஸ்தர்) ஸொத்துக்களை பாகம் செய்து இன்னாருக்கு இன்னபாகமென்று சீட்டுக் குலுக்கிப் போட்டு நிச்சயிப்பது ஸி. பி. ஸி. ஆர்டர் 26, ரூல் 14-ன் நிபந்தனைகளுக்கு விரோதமானதல்ல. ஸமபாகஸ்தர்களுக்கு ஸொத்துக்களை பாகம் செய்து கொடுப்பதில் சீட்டுக் குலுக்கிப் போடுவதே நியாயமான வழியாகும்.

2. லா வீக்லி 430.

### Partition of Joint Family.

**அவிபக்த குடும்பம் பிரிவினையாவது.**—ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், குடும்ப ஸொத்தை பாகம் செய்யவேண்டுமென்று கோர்ட்டில் மனுப்போட, ஸொத்துபாகமாக வேண்டுமென்று கோர்ட்டார் முதல் டிக்ரீ (ப்ரிலிமினரி டிக்ரீ) போட்டால், அப்போதே குடும்பம் பாகமாகி விட்டதென்று ஏற்பட்டு விடுகிறது. பைனல் டிக்ரி அதாவது, இன்ன ஸொத்து இன்னாருக்கென்று தீர்மானித்து கடைசியாகக் டிக்ரி கொடுக்கும்வரையில் குடும்பம் ஏககுடும்பமாக இருக்கிறதாகாது. முதல் டிக்ரி கொடுத்த பிறகு கடைசி டிக்ரி ஏற்படுவதற்கு முன்னால், குடும்பம்பாகமாகவேண்டுமென்று மனுப்போட்டவர்களில் ஒருவர் இறந்துபோனால், அவருடைய மனைவி அவருடைய ஸொத்துக்கு பாத்யமுள்ளவளாகிறாள்.

2 லா வீக்லி 325.

### Unchastity and Maintenance.

**கெட்ட நடத்தையும் ஜீவனாம்சமும்.**—மிதாக்ஷர ஸ்ம்ருதி, ப்ராயச்சித்த காண்டத்தின்படி நடத்தை கெட்ட ஒரு ஸ்த்ரீ பிறகு நல்ல வழிக்குத் திரும்பினால், ஜீவனாம்சம் மாத்ரம் பெற பாத்யமுண்டு.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Mr. K. Srinivasa Aiyangar.

**மிஸ்டர். கே. ஸ்ரீநிவாஸய்யங்கார்.**—வைஸராய் நிர்வாக ஸபையில் கல்வி மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கும் ஸர். சங்கரநாயர் அவ்வேலையை ஏற்றுக்கொள்வதற்கு முன் 3 மாஸம் ரஜாவெடுத்திருக்கிறார். அதனால் சென்னை ஹைக்கோர்டில் அவருடைய ஜட்ஜ் ஸ்தானம் காலியாயிருக்கிறது. அந்தக்காலி ஸ்தானத்திற்கு நமது கவர்னர் மிஸ்டர் கே. ஸ்ரீநிவாஸய்யங்காரை நியமித்திருக்கிறார். மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஹைக்கோர்ட்டிலிப்போது திறமையுள்ள முதல்தர வக்கீலாயிருக்கிறதால், அவரது நியமனம் யாவருக்கும் த்ருப்தியைத் தருவதாகும். மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார் 1892-வது வருஷத்தில் வக்கீல்வேலையில் ப்ரவேசித்தவர்; மிஸ்டர் வில்லி க்ராண்டின்கீழ் பயிற்சி பெற்றவர். வக்கீல் வேலையில் ப்ரவேசித்த காலத்திலேயே திறமையுள்ளவரென்று பேரெடுத்தவர். மிஸ்டர் க்ருஷ்ணஸாமி ஐயரும், ஸர் வி. பாஷ்யம் ஐயங்காரும், மிஸ்டர் ஸுந்தரம் ஐயரும் இவரைப்பற்றி மேன்மையான அபிப்ராயங்கொண்டவர்களாக விருந்தார்கள். மிஸ்டர் ஸுந்தரம் ஐயர் ஜட்ஜாக நியமிக்கப்பட்ட பிறகு, பெரிய கேஸுகளையெல்லாம் இவர்தாம் நடத்திவந்தார்; நாட்டுக்கோட்டை செட்டிமார்களின் கேஸுகளின் நுட்பங்களையெல்லாம் நன்கு கவனித்து நடத்தும் திறமை பெற்றவரென்று ப்ரஸித்தி பெற்றவர். சென்னையிலேயன்றி, சென்னைராஜதானியில் நடைபெற்ற பெரிய கேஸுகளிலெல்லாம் இவர்தாம் வக்கீலாக நியமிக்கப்பட்டுவந்தார். இதனால் இவர்க்கு வருமானம் மிகவும் அதிகமாகவந்தது. இப்போது ஜட்ஜாக நியமிக்கப்பட்டதால், இவருக்கு அந்தஸ்து உயர்ந்ததேயன்றி, வருமானங் குறைந்துவிட்டது என்று கூறலாம்.—லோகோபகாரி.

### Late Rao Saheb Vaithianatha Aiyar.

**காலஞ்சென்ற ராவ் ஸாகிப் வைத்யநாதய்யர்.**—கள்ளிக்கோட்டை வ்யாபார ஸ்கூலின் ஹெட்மாஸ்டராக இருந்த ராவ்ஸாகிப் வைத்யநாதய்யர், இந்த மாஸம் 24-ந் தேதியன்று க்ஷயரோகத்தால் காலஞ்சென்றார். அவர் 1895-ம் வர்ஷம் அந்தப் பள்ளிக்கூடத்தில் முதல் உதவி ஆசிரியராகப் போனார். அப்போது ஹெட்மாஸ்டராக இருந்த மிஸ்டர் கே. எஸ். அய்யருக்குப் பின் ஹெட்மாஸ்டராக ஆனார். அவருடைய முயற்சியால் அந்தப் பள்ளிக்கூடம் ரொம்ப உன்னத நிலைமைக்கு வந்திருக்கிறது. அவர் பள்ளிக்கூட விஷயங்களிலேயன்றி பொதுஜனக்கார்யங்களிலும் ஊக்கத்துடன் உழைத்துவந்தார்.

கவர்ன்மெண்டார் அந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றிய ரிபோர்ட்டுகளில் அவருடைய ஸாமர்த்யத்தைப் பற்றியும் யோக்யதையைப்பற்றியும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். 1911-ம் வர்ஷத்தில் அவருக்கு ராவ் ஸாகிப் பட்டம் கொடுத்தார்கள்.

### Brithday Honours.

**பிறந்தநாள் பட்டங்கள்.**—சென்னை நிர்வாக ஸபை மெம்பராகிய ஆனரபிள் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யருக்கு கே. ஸி. எஸ். ஐ பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மைஸூர் ஸமஸ்தானத்து திவான் மிஸ்டர் எம். விச்வேச்வரய்யாவுக்கு கே. ஸி. ஐ. இ பட்டமும், சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் எய்லிங், கல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் ராஷ்பேஹாரி கோஷ், டாக்டர் ரவீந்த்ர நாத் டாகூர் ஆகிய இவர்களுக்கு நைட் (ஸர்) பட்டமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மிஸ்டர் மோஹனதாஸ் காரம் சந்த் காந்திக்கு கெய்ஸரிஹிண்ட் தங்கப் பதக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

### Miss Ahalya Bai Bandarkar.

**மிஸ் அகல்யாபாய் பந்தர்க்கர்.**—பம்பாயில் ப்ரபல ஸம்ஸ்க்ருத வித்வானும், ப்ரும்மஸமாஜத்தைச் சேர்ந்தவருமான டாக்டர் ஸர் ராமக்ருஷ்ண பந்தர்க்கர் என்பவருடைய புத்ரியாகிய மிஸ் அகல்யாபாய் பந்தர்க்கர் என்பவள் பம்பாய் யூனிவர்ஸிட்டியில் (ஸர்வகலாசாலை) எம். ஏ. பரீக்ஷையில் தேறியிருக்கிறார்.

ப்ரும்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவர்களுள் மிஸ் அகல்யாபாயைச் சேர்த்து மூன்று எம். ஏ. பட்டதாரிகளிருக்கிறார்கள். முதல் முதலில் எம். ஏ. யில்தேறிய ப்ரும்ம ஸமாஜத்து ஸ்த்ரீ மிஸ் ஹேமப்ரபா போஸ். இவர் கல்கத்தா பெத்யூன் காலேஜில் போதகராயிருக்கிறார். இரண்டாவது எம். ஏ. மிஸ் ஜோதிமயிகாங்குலி. இவர் ஷை காலேஜைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் உபாத்யாயராயிருக்கிறா.



# SOCIETY AND RELIGION.

## ஜனஸமூகமும் மதமும்.

### Intermarriage between Sub-castes.

**ஜாதிகளின் உள்பிரிவுகளுக்குள் கல்யாணம் செய்வது.**—ஸமீபத்தில் காலடியில் சங்கரஜயந்தி உத்ஸவம் நடந்தபோது, உத்ஸவத்துக்காக வந்திருந்த அநேக வித்வான்கள் ஜாதிகளின் உட்பிரிவுகளுக்குள் கல்யாணம் செய்வது சாஸ்த்ரஸம்மதமா என்பதைப்பற்றிபரிசீலனை செய்தார்கள். ஸ்ரீங்கேரி மடத்தின் ஏஜெண்டாகிய மிஸ்டர் ஸ்ரீகண்ட சாஸ்த்ரிகள் இதைப் பற்றிய வாதத்தை ஆரம்பித்துப் பேசுகையில் ஒரு ஜாதியின் உட்பிரிவுகளுக்குள் கல்யாணம் செய்வது கூடாதென்பதற்கு சாஸ்த்ரங்களில் ஒரு விதியும் இருப்பதாகத் தெரியவில்லையென்றும், ஸ்ம்ருதியில் சொல்லியிருப்பதெல்லாம் வதூவரர்கள் ஒரே வர்ணத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டுமென்பதேயென்றும், இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டால் வரனுக்காக பெற்றோர்கள் படுங்கஷ்டங்களில் பல குறைந்து போகுமென்றும் சொன்னார்.

சிதம்பரத்தைச் சேர்ந்த மகாமகோபாத்யாய ஹரிஹர சாஸ்த்ரிகளும், புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச் சேர்ந்த ப்ரும்ம ஸ்ரீ கோபால சாஸ்த்ரிகளும், ஸ்ரீங்கேரி மடத்து ஸம்ஸ்க்ருத காலேஜில் வேதாந்தபோதகராயிருக்கும் மகாமகோபாத்யாய ஸுப்ரமண்யசாஸ்த்ரிகளும் ஸ்ம்ருதிகளில் அப்படிக் கல்யாணஞ் செய்யக் கூடாதென்பதற்கு யாதொரு விதியுமில்லாவிட்டாலும், சிஷ்டாசாரம் அப்படிப்பட்ட கல்யாணங்களை ஆதரிக்க வில்லையென்றும், சிஷ்டாசாரமானது ச்ருதி, ஸ்ம்ருதிகளைப் போலவே தக்க ப்ரமாணமாகுமென்றும், இப்போதுள்ள வழக்கம் வெகு காலமாக அனுஷ்டானத்திலிருந்து வருவதால் அதை மாற்றுவது முடியாதென்றும் சொன்னார்கள்.

மைஸூர் ஸமஸ்தானத்து தர்மாதிகாரியாகிய ப்ரும்ம ஸ்ரீ கே. ராமாசாஸ்த்ரிகள் அப்படிப்பட்ட விவாகங்கள் செய்வதற்கு அவச்யமொன்றுமில்லையென்றும், வரதக்ஷிணை அதிகமாகி வருவதற்குக் காரணம் பெண்ணைப் பெற்றோர்கள் பி. ஏ. பாஸ் செய்தவர்களை அபேக்ஷித்து நிற்பதேயென்றும், ஏதேனும் ஒரு உட்பிரிவில் கல்யாணம் செய்யத்தகுந்த வயஸுள்ள பையன்கள் மற்ற உட்பிரிவுகளிலிருப்பதை விட அதிகமாக இருக்கிறார்களென்பதற்குத் தக்க ஆதாரமில்லையாதலால், உட்பிரிவுகளுக்குள் கல்யாணம் செய்வதால் யாதொரு நன்மையும் ஏற்படாதென்றும், அதற்குபதிலாக கெடுதல்களே ஏற்படுமென்றும், சிஷ்டாசாரமானது ச்ருதி ஸ்ம்ருதிகளின் கருத்துகளுக்கு விரோதமாயிருந்தாலும், சிஷ்டாசாரத்தையே ஆதாரமாக வைத்துக்கொள்ளவேண்டுமென யாக்ஞவல்கியர் அபிப்ராயப் படுகிறாரென்றும், ப்ராமணர்கள் வம்ச சுத்தத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால், அநேக ஆயிரம் வர்ஷங்களாக சிஷ்டாசாரத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தர்மத்தை அவர்கள் ஒருபோதும் கைவிடக் கூடாதென்றும் சொன்னார். இவருடைய வாதத்தை ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை.

### Kumbakonam Mutt & Religious Education.

**கும்பகோணம் மடமும் மதக்கல்வியும்.**—சென்ற மாஸம் கும்பகோணத்தில் சங்கர ஜயந்தி உத்ஸவம் நடந்தபோது கும்பகோணம் மடத்து ஸ்வாமிகள் தமது சிஷ்யர்களுடைய நன்மைக்காக சில கார்யங்கள் செய்யப்போவதாகத் தெரிவித்தார். அவைகளாவன.—(1) ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலை ஸ்தாபிப்பது; அதில் சேரும் ப்ரும்மசாரிகள் குருகுலவாஸம் செய்யவேண்டும். (2) ஆர்ய ஆஸ்திக தர்மத்தை ஜனங்களுக்குள் பாவச் செய்வதற்காக ஒரு ஆஸ்திக ஸபையும், தேசத்தின் பற்பலவிடங்களில் அதற்குக் கிளையும், ஸ்தாபித்தல். (3) ஆர்யதர்மத்தை ஜனங்கள், சரிவர அறிந்து கொள்ளும்பொருட்டு தேசபாஷையில் மாஸந்தோறும் ஒரு பத்ரிகை ப்ரசுரம் செய்தல், துண்டுப் பத்ரிகைகள் ப்ரசுரித்தல். (4) தேசத்தின் வெவ்வேறு பாகங்களில் மதஸம்பந்தமாக மாஸந்தோறும் இரண்டு உபன்யாஸங்கள்செய்தல். (5) ஆஸ்திக ஸபை மெம்பர்களின் உபயோகத்துக்காக ஒரு ஸம்ஸ்க்ருத புஸ்தகசாலை ஸ்தாபித்தல்.

### ATemple in the Proposed Hindu University.

**ஹிந்து யூனிவர்ஸிட்டியில் ஒரு தேவாலயம்.**—இப்பொழுது காசியில் ஸ்தாபிக்கப்படப்போகும் ஹிந்து யூனிவர்ஸிட்டி வித்யா சாலைக் கட்டிடத்தையடுத்து ஒரு த்ரிபுர ஸுந்தரி ஆலயம் கட்டப்படுமென்று தர்பங்கா மகாராஜா சில தினங்களுக்கு முன் ஹரித்துவாரத்தில் தெரிவித்தார். அவர் யூனிவர்ஸிட்டிக்குக் கொடுத்துள்ள 5 லட்ச ரூபாயில் ஒரு லட்ச ரூபாய் ஷை ஆலயத்திற்காகச் செலவிடப்படுமாம்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Preserving Flowers.

**புஷ்பங்களைக் கெடாமல் வைத்திருக்க.**—புஷ்பங்கள் பறிப்பதற்கேற்ற காலம் காலையில் பனிமுற்றிலும் போய்விடுவதற்கு முன்னாகும். அப்போது பறித்த புஷ்பங்கள் மற்ற வேளைகளில் பறித்த புஷ்பங்களைவிட அதிக காலம் வாடாமலிருக்கும். புஷ்பங்கள் மலர்ந்ததும் மலராததுமாயிருக்கும்போது பறிப்பதுதான் நல்லது. மலர்ந்து நேரமானபின் பறித்த புஷ்பங்கள் அதிக காலம் வாடாமலிருப்பதில்லை. புஷ்பங்களை சில நாள்கள் வாடாமல் வைத்திருக்க வேண்டுமென்றால் அவைகளைக் காம்புடன் பறித்து, சுத்தமான கத்தியினால் காம்புகளை நறுக்கிவிடவேண்டும். காம்புகள் சற்று கட்டையாக இருந்தால் அவைகளின்மேல் தோல்களைக் கொஞ்சம் உரித்துவிடவேண்டும்.

புஷ்பங்களின் காம்புகளை சுத்த ஜலத்தில் அமிழ்த்தி வைத்திருக்கவேண்டும். அடிக்கடி பழைய ஜலத்தைக் கொட்டிவிட்டு புது ஜலம் வார்க்கவேண்டும். இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை பூக்காம்பின் அடிப்பாகத்தை புதிதாக நறுக்கிவிடவேண்டும்.

சுத்த ஜலத்தில் சில பொருள்களைப்போட்டு அதில் புஷ்பங்களை வைப்பதால் புஷ்பங்கள் இன்னும் அதிககாலம் வாடாமலிருக்கும்.

கால்படி (பட்டணம்படி) வெதுவெதுப்பான ஜலத்தில் ஒரு தேயிலைக்கரண்டி ஸோடா உப்பைக்கரைத்து, ஜலம் ஆறினவுடன் அதில் புஷ்பக்கொத்துகளைவைக்கலாம். ஜலத்தில் ரொம்பக் குறைவாக உப்பைக்கரைத்து அதிலும் புஷ்பங்களைவைத்திருக்கலாம்.

### Shoes.

**ஜோடுகள்.**—எவரும் காலைநேரத்தில் பூட்ஸுகளும் ஜோடுகளும் வாங்கக்கூடாது. அங்குமிங்கும் அலைவதாலும், நிற்பதாலும், வேறு வேலைகள் செய்வதாலும் பாதங்கள் பெரியனவாகின்றன. ஸாயங்காலநேரத்தில் தான் அவைகள் ரொம்பப்பருத்திருக்கின்றன. ஆகையால் காலையில் போட்டுக்கொள்ள சரியான அளவாக இருக்கும் ஜோடுகள் மாலை நேரத்தில் சரியாயிருப்பதில்லை. காலுக்கு சற்றுப் பிடிப்பாக இருக்கும் ஜோடுகளை வாங்கக்கூடாது.

ஜோடுகளை அடிக்கடி ஈரத்துணியால் துடைத்து ராத்ரிக்காலங்களில் எண்ணெய் போடவேண்டும். எண்ணெய்க்கு பதிலாக ஜோடுகளுக்குப்போடும் பாலிஷை உபயோகப்படுவது ரொம்ப நல்லது. இதனால் ஜோடுகள் ரொம்ப ப்ரகாசமாக இருக்கும்.

ஜோடுகள் ஈரமாய்ப்போனால் அவைகளை நெருப்புக்குப் பக்கத்தில் வைக்கக்கூடாது. அவைகளை காய்ந்த துணியால் துடைத்து பிறகு, மேலே எண்ணெய் தடவவேண்டும்.

மழைக்காலங்களில் பழைய ஜோடுகளைப்போட்டுக் கொள்வது உத்தமம்.

### To Test Diamonds.

**வைரம் பரிசோதிக்க.**—வைரத்தைப் பரிசோதிக்க இரண்டு முறைகளிருக்கின்றன. ஒரு கடுதாசி அட்டையிலே ஊசியினால் ஒரு சிறு த்வாரத்தைச் செய்து வைரம் என்று சொல்லப்படுகிற கல்லின் வழியாய் அந்த த்வாரத்தைப் பார்த்தால், நிஜவைரமானால் ஒரே த்வாரமும், போலிவைரமானால் இரண்டு த்வாரங்களும் கண்ணிற்குப் புலப்படும். இன்னொரு முறை: வைரத்தின் வழியாய் விரலைப் பார்த்தால் அது எப்பொழுதும் போலிருந்தால் வைரம் சுத்தமானது, அதுபெருத்துப் பிரிந்து தோன்றினால் வைரம் போலி வைரமாகும்.

### Sea Water.

**கடல் ஜலம்.**—கடல் ஜலத்தில் கால்படி ஜலத்துக்கு (பட்டணம் படி) ஒரு ஔன்ஸ் வீதம் ஸிட்ரிக் ஆஸிட் என்னும் மருந்தைக் கலந்தால், யாதொரு கெடுதலுமின்றி அந்த ஜலத்தைக் குடிக்கலாம். குடிப்பதற்கும் ருசியாயிருக்கும்.

### Stained White Flannels.

**கறைபட்ட வெள்ளை ப்ளானல்கள்.**—வெள்ளை ப்ளானல்களில் (ம்ருதுவான கம்பளி) கறைபட்டு அழுக்கேறினால், க்ளிஸரின் என்னும் மருந்தையும், முட்டையின் மஞ்சள் கருவையும் ஸமபாகம் கலந்து, கறைகளின் மேல் தடவி, அரைமணி நேரம் கழித்து, துணியை வழக்கப்படி சுத்தம் செய்தால், துணி சுத்தமாய்விடும்.

### Remedy for Toothache.

**பல்வலிக்கு சாந்தி.**—காட்டுக் கொட்டைப்பாலை இலையை கஷாயமிட்டு அக்கஷாயத்தை கொப்பளிக்கவும். (2) உப்பு, மாசக்காய், கடுக்காய் இம்மூன்றையும் ஸமனளவு சேர்த்துப் பொடித்து பல்விளக்கி வரவும்.

—விச்வகர்ம குலோபகாரி.



# AGRICULTURE.

## விவஸாயம்.

### The Department of Agriculture.

**விவஸாய டிபார்ட்மெண்ட்.**—சென்னை விவஸாய டிபார்ட்மெண்டானது 1905-06-ம் வர்ஷத்தில் சீர்திருத்தி யமைக்கப்பட்டது. அதுமுதல் இந்த டிபார்ட்மெண்டின் முயற்சியால் நமது ராஜதானியின் விவஸாயத்தில் சில நல்ல சீர்திருத்தங்கள் ஏற்பட்டபோதிலும், அப்படி சீர்திருத்தங்கள் பரவியிருக்கும் ஜில்லாக்கள் எட்டு அல்லது ஒன்பதுக்குமேலில்லை. இன்னும் பல இடங்களில் விவஸாயப் பண்ணைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், முன்சொன்ன ஜில்லாக்கள் போக மற்ற ஜில்லாக்களிலும் விவஸாய முறைகளை சீர்திருத்த டிபார்ட்மெண்டார் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டு மென்றும் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களும், ஜில்லா ஸங்கங்களும் அடிக்கடி கேட்டுக்கொண்டும், வேண்டிய வஸிப்பந்திகளில்லாததால் கவர்ன்மெண்டார் மேற்சொன்ன வேலைகளைச் செய்ய ஸாத்யப்படாமல் போயிற்று. ஆனால் இப்போது சென்னை கவர்ன்மெண்டார் அதிகப்படியாகப் பண்ணைகள் ஸ்தாபிப்பதற்கும், இப்போது டிபார்ட்மெண்டார் கவனித்து வரும் ப்ரதேசங்களையன்றி மற்ற விடங்களிலும் சீர்திருத்தங்களைப் பரவச்செய்வதற்கும் ஸௌகர்யமாக டைரக்டர் டிபார்ட்மெண்டில் சில திருத்தங்கள் செய்யப்போகிறார்கள்.

இந்த ராஜதானியை மொத்தம் 7-பிரிவுகளாகப் பிரிப்பார்கள். அந்தப் பிரிவுகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு டெபுடி டிரெக்டர் தலைவராக நியமிக்கப் படுவார்.

தற்போது கோயம்புத்தூர் விவஸாய காலேஜில் ஒரு பண்ணையும், மலையாளம் ஜில்லா தளிப்பறம்பாவில் ஒன்றும், திருநெல்வேலி ஜில்லா கோயில்பட்டியில் ஒன்றும், தஞ்சாவூர் ஜில்லா மங்கநல்லூரில் ஒன்றும், பல்லாரி ஜில்லா ஹகரியில் ஒன்றும், கர்நூல் ஜில்லாவில் நந்தியால், சிறுவெல் ஆகிய இரண்டிடங்களில் இரண்டும், கோதாவரி ஜில்லா ஸாமல்கோட்டையில் ஒன்றும், விசாகப்பட்டணம் ஜில்லா அனகாபள்ளியில் ஒன்றும், தென்னாற்காடுஜில்லா பாலூரில் ஒன்றுமாக மொத்தம் 10- விவஸாயப் பண்ணைகள் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

புது ஏற்பாட்டின்படி இன்னும் 9 பண்ணைகள் ஏற்படுத்துவார்கள். அவைகள் ஸ்தாபிக்கப்படும் ஜில்லாக்கள் பின்வருமாறு: கஞ்சம்-1; குண்டூர்-1; க்ருஷ்ணா டெல்டாவிலாவது நெல்லூரிலாவது-1; அனந்தபுரம்-1; வட ஆற்காடு-1; சேலம்-1; மதுரை-1; மலையாளம்-1; தென்கன்னடம்-1. புதுப்பண்ணைகள் ஸ்தாபிப்பதற்கும், அதிகப்பிரிவுகள் ஏற்படுத்துவதற்கும் தக்கபடி பண்ணை மானேஜர்களும் ஜில்லா இன்ஸ்பெக்டர்களும் மற்ற வஸிப்பந்திகளும் அதிகமாக நியமிக்கப் படுவார்கள்.

இந்தப் புது ஸ்கீமுக்கு வர்ஷத்துக்கு $2\frac{3}{4}$ லக்ஷம் ரூபாய் அதிகப்படியாகச் செலவழியுமாம்.

### Paddy Cultivation.

**நெல் ஸாகுபடி.**—நெல் ஸாகுபடியில் பின்வரும் சீர்திருத்தங்களால் அனுபவத்தில் நல்ல பலன் உண்டாகிறதென்று தெரியவருவதாக மைஸூர் விவஸாய டிரெக்டராகிய மிஸ்டர் கோல்மன் தெரிவிக்கிறார். (1) சடம்பு அல்லது காராமணியை பசுந்தாள் பயிராக ஸாகுபடி செய்து மடக்கி உழுதல். (2) எலும்புத்தூளை உரமாக உபயோகித்தல். (3) பல நாற்றுகளைச் சேர்த்து நடுவதற்கு பதிலாக ஒற்றை நாற்றாகவாவது இரண்டு மூன்று நாற்றுகளைச் சேர்த்தாவது நடுவது. (4) உப்பை ஜலத்தில் கரைத்து அந்த ஜலத்தில் விதை நெல்லைப்போட்டு, ஜலத்தின்மேல் மிதக்கும் நெல்லைத் தள்ளிவிட்டு ஜலத்தில் அமிழ்ந்துகொள்ளும் விதையை மாத்ரம் உபயோகித்தல். (5) நெல் பயிரிடுவதற்கு ரொம்ப காலத்துக்கு முன் நிலத்தை உழாமலிருப்பது.

### Buying Cattle.

**மாடுகள் வாங்குவது.**—மாடுகள் வாங்கும்போது க்ருஷிகர்கள் கவனிக்கவேண்டியவைகளைப் பற்றிக் 'க்ருஷிக'னில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

(1) ஒரு மாட்டுக்கு ஒரு மாடு ஜதை ஒத்திருக்க வேண்டும். (2) சண்டிமாடு அல்லாமலும், (3) கால்கள் அழுத்தமாயுமிருக்கவேண்டும். (4) கழுத்தின் மேல்பக்கம் வேலைசெய்து கழுத்தின் தோல் கெட்டியாயும் அகலமுள்ளதாயும் இருக்கவேண்டும். (5) புல்லையும், தொட்டித்தண்ணீரையும் குடித்து போஷிக்கப்படாத மாடாயிருக்கவேண்டும். (6) தாங்கள் உத்தேசித்து வாங்கும் வேலைக்கு லாயக்குள்ளதா யிருக்கவேண்டும்.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

## Arbitration in Co-operative Societies

**கோவாபரேடிவ் ஸங்கங்களில் மத்யஸ்தம் செய்தல்.**—பம்பாய் ராஜதானியிலுள்ள கோவாபரெடிவ் ஸங்கங்கள் தங்களுக்கு வரவேண்டிய பணத்தை வஸூலிப்பதற்காகக் கோர்ட்டுகளில் வ்யாஜ்யம் போடுவதில் ரொம்ப ஸங்கடங்களும், செலவும், காலதாமஸமும் ஏற்படுகின்றனவாம். கோர்ட்டுகளுக்குப் போவதால் கால தாமஸ மேற்படுவது ஸகஜ மென்றாலும், வ்யாஜ்யம் போடுவதால் பணநஷ்டம் ஏற்படுவது ரொம்பவும்விஸனிக்கத்தக்கதா யிருக்கிறது. பாரமதி என்னும் ஊரிலுள்ள கோர்ட்டில் கோவபரெடிவ் ஸங்கங்கள் சென்ற 1913-ம் வர்ஷத்தில் 18வ்யாஜ்யங்கள் போட்டன. இந்த வ்யாஜ்யங்களில் ஒன்றிலாவது ப்ரதிவாதிகள் பணங் கொடுக்கவேண்டியதில்லை யென்று ஆக்ஷேபிக்கவில்லை.

அப்படியிருந்தும் ஸங்கங்களுக்கு கோர்ட்டுச் செலவுகளுக்காக 914 ரூபாயும், வக்கீல் பீஸுக்காக 348 ரூபாயும் செலவு ஏற்பட்டது. இந்த 18-வ்யாஜ்யங்களில் 12-வ்யாஜ்யங்களை கோர்ட்டார் அந்த வர்ஷத்தில் விசாரித்து முடிவு செய்தார்கள். இந்த 12-வ்யாஜ்யங்களில் ஒன்றிலாவது கோர்ட்டார் வ்யாஜ்யம் தாக்கலான தேதி முதல் டிக்ரிசெய்த தேதிவரையில் கடனுக்கு வட்டி கொடுக்க வேண்டு மென்று உத்தரவு செய்ய ஸம்மதப்படவில்லை. டிக்ரி தேதிக்குப் பிறகு பணத்தை வஸூல் செய்யும் வரையில் நூற்றுக்கு 7½-வீதம் வட்டிபோட்டுக் கொடுத்தார்கள். ஸங்கங்களோ ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்து இதேவட்டிக்குத்தான் பணம் கடன் வாங்குகின்றன. சில ஸமயங்களில் கோர்ட்டார் டிக்ரிதேதிக்குப் பிறகு பணம்வஸூலாகும் வரையில் கடன்வாங்கியவர் ஸங்கங்களுக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு வட்டி செலுத்த வேண்டியதில்லை யென்றும் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். இதனால் ஸங்கங்களுக்கு கோர்ட்டுச் செலவும், வக்கீல் 'பீஸு' மேயன்றி, வட்டி நஷ்டமும் ஏற்படுகிறது.

ஸங்கங்களுக்கும், ஸங்கத்து மெம்பர்களுக்கும் நடக்கும் வியாஜ்யங்களெல்லாம் அதிக சிக்கலில்லாத ஸாதாரண வ்யாஜ்யங்களென்று சொல்லலாம். அநேகமாய் எல்லா வ்யாஜ்யங்களும் ந்யாயமானவை. ஆகையால் இவைகளை மத்யஸ்தர்களைக் கொண்டு விசாரித்தால் ஸௌகர்யமா யிருக்கும். இப்போது பம்பாய் கவர்ன்மெண்டார் இந்த வ்யாஜ்யங்களை மத்யஸ்தர்களைக் கொண்டு விசாரித்து முடிவு செய்யவேண்டுமென்று அதற்காக சில ரூல்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவைகளின் ஸாராம்சம் பின்வருமாறு.

கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸம்பந்தமாக, அவைகளின் மெம்பர்களுக்கும், முன்பு மெம்பராயிருந்து பிறகு விலகிக் கொண்டவர்களுக்கும், ஸங்கங்களுக்கும் ஏதாவது வ்யவஹாரம் நேர்ந்தால், அந்த வ்யவஹாரத்தை கோவாபரெடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராருக்குத் தெரிவிக்க வேண்டும். ரெஜிஸ்டரார் அந்த வ்யவஹாரத்தை ஒன்று தாமே விசாரிப்பார். அல்லது ஒரு மத்யஸ்தரை நியமித்து விசாரிக்கச் சொல்வார். அல்லது கக்ஷிக்காரர்கள் இருவரும் ஆளுக்கு ஒரு மத்யஸ்தரை ந்யமிக்க, ரெஜிஸ்ட்ரார் ஒரு மத்யஸ்தரை நியமித்து, இந்த மூன்றுபேர்களைக் கொண்டு விசாரிக்கச்செய்வார். மத்யஸ்தர்கள் வ்யாஜ்யங்களை விசாரிக்கும் நடவடிக்கைகள் ரொம்ப ஸுலபமானவை. மத்யஸ்தர் களுக்குள் அபிப்ராய பேதமேற்பட்டால், எந்த அபிப்ராயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாயிருக்கிறார்களோ அந்த அபிப்ராயத்தின்படி தீர்ப்புச் செய்யப்படும். மத்யஸ்தர்களின் தீர்ப்பின்மேல் ஸிவில் கோர்ட்டுக்கு மனுப்போட்டு தீர்ப்பை நிறைவேற்றிக் கொள்ளலாம். எந்தக் கக்ஷிக்காரருக்காவது மத்யஸ்தர்களுடைய தீர்ப்பு த்ருப்திகரமாயில்லாவிட்டால், அவர் தீர்ப்பு சொன்னபிறகு ஒரு மாஸத்துக்குள் ரெஜிஸ்ட்ராருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்; ரெஜிஸ்ட்ராரே நேரில் வ்யாஜ்யத்தை விசாரித்திருந்தால் விவஸாயம், கோவாபரேஷன் இலாகா டிரெக்டருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

## Dividend Hunting in Co-operation.

**கோவாப்ரேடிவ் ஸங்கங்களில் அதிக டிவிடெண்ட் எதிர் பார்ப்பது.**—பம்பாயிலுள்ள சில அர்பன் ஸங்கங்களில் மெம்பர்கள் அதிக டிவிடெண்ட் வேண்டு மென்று எதிர் பார்க்கிறார்களாம். பம்பாய் கவர்ன்மெண்டார் இதைத் தடுப்பதற்காக ஒரு ரூல் ப்ரசுரித் திருக்கிறார்கள். அதாவது, எந்த ஸங்கமும் எப்போதும் நூற்றுக்கு 12-க்கு மேல் டிவிடெண்ட் கொடுக்கக்கூடாது. எந்த ஸங்கத்திலும் ரிஸர்வ்பண்டின் தொகை செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் நாலில் ஒரு பாகத்துக்கு மேற்படும் வரையில் நூற்றுக்கு 9-க்கு மேல் டிவிடெண்ட் கொடுக்கக் கூடாது.



# COMMERCE.
# வ்யாபாரம்.

## Handloom Weaving.

**கைத்தறி நெசவு.**—ஆனரபில் மிஸ்டர் சாட்டர்ட்டன் ஸமீபத்தில் 'ஹிந்து'ப் பத்ரிகைக்கு எழுதியிருக்கும் ஒரு வ்யாஸத்தில், கைத்தறி நெசவில் திருத்தங்கள் செய்யும் விஷயமாய் இரண்டு ஆலோசனைகள் சொல்லுகிறார். முதலாவது, நெசவுக் காரர்களுக்கு தற்காலமுள்ள முக்ய கஷ்டம் பாவுநூல்கள் தயார் செய்வதில் உண்டாகிறதாகையால், இங்க்லண்டில் உபயோகப்படுத்தப்படும் ஒரு விதமான ட்ரெஸ்ஸிங் மெஷினை நம் நெசவுக்காரர்களும் உபயோகப் படுத்துவார்களானால் மேற்கூறிய கஷ்டம் நீங்கும். இந்த ட்ரெஸ்ஸிங் மெஷினால் தினத்துக்கு 1000 கஜம் முதல்தரமான பாவுநூல்கள் செய்யக்கூடுமாம். ஆனால் அந்த மெஷினை உபயோகப்படுத்துவதற்கு விசேஷத் திறமையும் அநுபோகமும் அவசியம். செலவும் அதிகமாய்ப் பிடிக்கும். ஆகையால், அதனாற்செய்யப்படும் நூல்களை உபயோகப்படுத்துகிறவர்கள் இருந்தாலன்றி அது ப்ரயோஜனப்படமாட்டாது. நூறு அல்லது இருநூறு தறிகளை ஒரு சாலையில் ஒன்று சேர்த்து, இந்த மெஷினை உபயோகப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட தொழிற்சாலை அல்லது பாக்டரி ஸ்தாபிப்பதற்கு அதிகப்பணம் வேண்டுமாகையால் கவர்ன்மெண்டுடைய உதவியைப் பெற்று ஒரு தொழிற்சாலையை ஸ்தாபித்துப் பார்க்கலாமென்று அவர் சொல்லுகிறார்.

அவர் சொல்லும் இன்னொரு ஆலோசனை என்னவென்றால், கரைகள் போட்டதுணிகள் செய்வதில் நெசவுக் காரர்களோடு மான்செஸ்டர் வர்த்தகர்கள் போட்டி போடுவது ஸாத்யமல்ல. நமது நெசவுகக்காரர்கள் வெகு நேர்த்தியான கரைகள்போட்டு துணி செய்கிறார்கள். அதைக் கையினால் செய்ய அதிகநாள் பிடிப்பதால் தகுந்தலாபம் கிடைப்பதில்லை. ஜாக்கார்டு மெஷீன் என்னும் யந்த்ரத்தால் கரைகள் வெகு எளிதாய்ப் போட்டு விடலாமென்றும், அந்த மெஷினை இந்திய நெசவுக்காரர்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார்.

## Ground Nuts.

**வேர்க்கடலை.**—ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் பற்பல பாகங்களில் ஸுமார் 70 லக்ஷம் அந்தர் நிறையுள்ள வேர்க்கடலை உற்பத்தியாகிறது. இதில் பெரும்பாகம் இந்தியாவிலும், ஆப்ரிக்காக்கண்டத்திலுள்ள காம்பியா, நைஜீரியா என்னும் ப்ரதேசங்களிலும் விளைகிறது. இந்தியாவில் விளையும் வேர்க்கடலையில் பெரும்பாகம் ப்ரான்ஸிலுள்ள மார்ஸேல்ஸுக்குப் போகிறது. ஆனால் இந்த யுத்த சமயத்தில் மார்ஸேல்ஸில் அவ்வளவு வேர்க்கடலை வேண்டி யிராததால், லண்டனிலுள்ள இம்பீரியல் இன்ஸ்டிட்யூட் என்னும் ஸங்கத்தார் இந்தியாவிலும் ப்ரிட்டிஷ் குடியேற்றநாடுகளிலும் விளையும் வேர்க்கடலையை இங்க்லண்டில் உபயோகிக்கும்படி, அதாவது, இங்க்லண்டில் வேர்க்கடலையெண்ணெயாட்டுதல், பிண்ணாக்கிலிருந்து கால்நடைத் தீனி தயார்செய்தல் முதலிய தொழில்களை ஸ்தாபிக்கும்படி தூண்டிவருகிறார்கள். இங்க்லண்டில் ப்ரபல எண்ணெய் வ்யாபார ஸ்தலமாகிய ஹல் என்னும் பட்டணத்துக்கு இந்தியாவிலிருந்து கொஞ்சம் வேர்க்கடலை ஏற்றுமதியாகி யிருக்கிறது. வேர்க்கடலைப் பிண்ணாக்கு மற்றெல்லாப் பிண்ணாக்குகளையும் விட உயர்ந்த கால்நடைத் தீனியாக இருக்கிறதாம். இந்தப் பிண்ணாக்கு லண்டனில் நன்றாய் விலைப்போகிறதாம். இங்க்லண்டில் வேர்க்கடலை யெண்ணெயாட்டுந் தொழில் அபிவ்ருத்தியடையுமானால், இந்தியாவில் வேர்க்கடலை பயிரிடும் விவஸாயிகளினுடைய கஷ்டம் ஒருவாறு நீங்கக்கூடும்.

## Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற மார்ச்சு மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 14-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 1 | பாங்கி லேவாதேவிகம்பெனி | 50,000 |
| 1 | இன்ஷூரன்ஸ் கம்பெனி | 20,000 |
| 8 | வ்யாபாரக் கம்பெனிகள் | 23,67,000 |
| 1 | நிலக்கரிச்சுரங்கக் கம்பெனி | 1,00,000 |
| 1 | சாராயக் கம்பெனி | 10,00,000 |
| 2 | கம்பெனிகள் (மேலே சொன்னவைதவிர) | 1,05,000 |
| 14 | | 36,42,000 |

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### The Uses of Banana.

வாழையின் உபயோகங்கள்.—தென்னமெரிக்காவில் கயானு என்னும் தேசத்திலுள்ள ஸ்வதேச ஜனங்கள் வாழைப்பழத்திலிருந்து ஒருவித சாராயம் செய்கிறார்கள். பழங்கள் நன்றாய்ப் பழுத்தவுடன், அவைகளைச் சேகரித்து தோலை உரித்து ஒரு சற்று ஆழமான பெரிய தட்டில் போட்டு, அப்படியே சில நாள் வைத்து விடுகிறார்கள். பழமானது புளித்து அதிலிருந்து ஒருவித த்ரவம் உண்டாகிறது. அந்த த்ரவத்தைத் தனியாக வடித் தெடுத்து குப்பிகளில் போட்டு வைத்து வேண்டும்போது குடிக்கிறார்கள். இதற்கு அவர்கள் ‘ ரம் ’ சாராயம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது ரொம்ப காரமாயும், போதை கொடுக்கக்கூடியதாயும் இருக்கிறது. இதை அதிகமாகக் குடித்துவிட்டால் இரண்டு மூன்றுநாள் வரையில்கூட போதை போவதில்லை.

கயானுதேசத்திலும் மேல் இந்திய தீவுகளிலும் வாழைக்காய் மாவை குழந்தைகளுக்கும் வ்யாதிஸ்தர்களுக்கும் ஆகாரமாக உபயோகிக்கிறார்களாம். வாழைத்காயின் மேலுள்ள தோலை உரித்து விட்டு, உள்ளேயிருக்கும் பாகத்தை ஸன்னமாக நருக்கி வெயிலில் உலர்த்தி, நன்றாய்க் காய்ந்த பிறகு, மாவாக அரைத்து சலித்து எடுத்துக்கொள்ளுகிறார்கள். காயை வெயிலில் காயப்போடுவதால் அதற்கு ஒரு இனியவாஸனை உண்டாகிறதாம். ஆனால் காயை வெகு சீக்ரம் காயவைக்க வேண்டுமென்றும், காலஸ்திதி சரியாயில்லாமல் தாமஸமாய்க் காய்ந்தால் மா அவ்வளவு நன்றாயிருப்பதில்லையென்றும் தெரியவருகிறது.

வாழைப்பழத்திலிருந்து காடி செய்ய ஒரு ஸுலபமான முறையிருக்கிறது. வாழைப்பழம் நன்றாய்ப் பழுத்தவுடன், அதை உரிக்காமல் கூடைகளில்போட்டு கூடைகளை திறந்த பீப்பாய்களில் வைக்கவேண்டும். பழங்கள் ஜலமாக மாற அது அந்தக் கூடைகளின் த்வாகள் வழியாக, பீப்பாய்க்குள் வைத்திருக்கும் பாத்ரங்களில் விழுகிறது. அந்த ஜலம் புளிப்படைந்து சீக்ரம் காடியாக மாறுகிறது.

ஆனும், கோச்சின் சைனு, பிலிப்பைன் தீவுகள் ஆகிய இந்த இடங்களில் வாழைப்பட்டையை சர்க்கரையை சுத்திசெய்வதில் உபயோகிக்கிறார்களாம். பழுப்புச் சர்க்கரையை ஒரு அங்குல கனத்துக்குப் பரப்பி அதன்மேல் பச்சை வாழைப்பட்டையை சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு வரிசைபோட்டு அதன்மேல் பழுப்புச் சர்க்கரையை ஒரு அங்குலம் கனத்துக்கொட்டி, இப்படி சர்க்கரையும் வாழைப்பட்டையுமாகப் பரப்புகிறார்கள். வாழைப்பட்டையிலுள்ள ஜலமானது சர்க்கரையில் கலந்து அதிலுள்ள அழுக்கை க்ரஹித்து வடிந்துபோகிறதாம். பாக்கி சர்க்கரை உயர்ந்த வெள்ளைச் சர்க்கரையாக நிற்கிறதாம்.

### Reclaiming Waste Rubber.

உபயோகமற்ற ரப்பரை மறுபடியும் உபயோகித்தல்.—ரப்பர் ஸாமான்கள் உபயோகமற்றவைகளாய்ப் போனபிறகு அந்த ஸாமான்களிலுள்ள ரப்பரை மறுபடியும் ரப்பர் ஸாமான்கள் செய்வதில் உபயோகிப்பதுண்டு. உபயோகமற்ற ரப்பரை சேகரித்து அதோடு 1½ மடங்கு அல்லது இரண்டு மடங்கு இதர ஸாமான்கள் சேர்த்து சேர்க்கை ரப்பர் ஸாமான்கள் செய்கிறார்கள். இந்த மட்டமான ரப்பர் செய்வதற்காக வர்ஷந்தோறும் சேகரிக்கப்படும் உபயோகமற்ற ரப்பர் 1-லக்ஷம் டன் முதல் 2½ லக்ஷம் டன் வரையில் இருக்குமாம். சிலர் 2-லக்ஷத்து 80-ஆயிரம் டன் இருக்குமென்றும் சொல்லுகிறார்கள். இந்த உபயோகமற்ற ரப்பரிலிருந்து ஸுமார் 1,40,000 டன் சேர்க்கை ரப்பர் பொருள்கள் செய்யப்படுகின்றனவாம்.

### Burma Teak.

பர்மா தேக்கு.—சென்ற வர்ஷத்தில் பர்மாவிலிருந்து 189 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தேக்குமரங்களும், அதற்கு முன்வருஷத்தில் 185 லட்ம் ரூபாய் மதிப்புள்ளதேக்குமரங்களும் அன்யநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன, அவற்றுள் பெரும்பாகம் க்ரேட்ப்ரிட்டனுக்கும், அதற் கிரண்டாவதாக ஜெர்மெனிக்கும் அனுப்பப்பட்டது. இப்போது அம்மரங்கள் ஜெர்மெனிக்கு யுத்தக் காரணமாக ஏற்றுமதியாகாமலிருக்கின்றன. ஆனால் அவை இப்போது மிகுதியாக க்ரேட் ப்ரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டுவருகின்றன. க்ரேட்பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் தேக்கு மரங்கள் யுத்த விஷயமாகவே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### Moral Sayings.

நீதி வாக்யங்கள்.—பிறர் உன்னை எவ்விதம் நடத்த வேண்டுமென்று நீ உத்தேசிக்கிறாயோ, அதுபோலவே நீயும் பிறரிடம் நட.

சுறுசுறுப்பு வேலையை ஸுலபமாய்ச் செய்கிறது. சோம்பேறித் தனமோ அதைக் கஷ்டமாய்ச் செய்கிறது.

நீ வாழ்நாளை அதிகமாய் விரும்பினால் காலத்தை வீணாக்காதே.

உனக்கும், உன் குடும்பத்திற்கும், உன் தேசத்திற்கும், உன் ராஜாவிற்கும் நீ செய்யவேண்டிய கடமை அதிகமா யிருப்பதால் சோம்பேறியாக இராதே.

குறை கூறாமல் உனது வேலையை ஸந்தோஷமாய்ச் செய்.

இன்றைக்குச் செய்ய வேண்டிய வேலையை நாளைக்குச் செய்யலாம் என்று தயங்கி ஏமாந்து போகாதே.

உன் வேலையை நீயே சீக்ரமாய் அவஸரமின்றி செய்; வேலை முடிகிறபோது முடியட்டும் என்றிராதே.

சுறுசுறுப் புள்ளவருக்கு கடவுள் கருணை புரிவார்.

காலத்தை வீணாக்காமலும், பணத்தை வீண்செலவு செய்யாமலும் அதை சரியான வழியில் உபயோகித்தால் செல்வம் உன்னை வந்து அடையும்.

நீ பெருமையை யடைய ஆசைப்பட்டால், உன் காரியங்களில் சரியாயும், வாக்குறுதியாயும், நீதியாயும் இரு.

உன் சுறு சுறுப்பு, சிக்கனம், ஸாமர்த்யம் முதலியவைகள் மேலானபோதிலும் அவைகளை நம்பியிராதே; ஏனெனில் கடவுள் கடாக்ஷமின்றி ஒன்றும் சரியாய் நடவாது. ஆகையால் கடவுளை த்யானி—நல்லாசிரியன்.

### Instinct in White Ants.

கறையான்களின் இயற்கை யறிவு.—சுறுசுறுப்பிலும் வருங்காலப் பாதுகாப்பிலும் எறும்பு, கறையான் முதலிய ஜந்துக்கள் வெகுவாய்த் தேர்ந்தவைகள் என்று சொல்லுவதுண்டு. கறையானுக்குள் சிப்பாய் கறையான் (Soldier) என்று ஒருவகையுண்டு. இவைகள் தங்கள் இனத்தாருக்கு ஏதோ எச்சரிக்கை செய்வதற்காகவோ அல்லது ஸந்தோஷகரமான செய்தியைத் தெரிவிக்கிற...க்காகவோ அநேக குறிப்புகளும் ஜாடைகளும் செய்கின்றனவாம். அதாவது தங்களது தாடைகளினால் காய்ந்த சருகுகளிலோ அல்லது மற்றப் பதார்த்தங்களிலோதேய்த்து சலசலவென்றொரு சப்தம் செய்கின்றன. இக்காரணம் பற்றித்தான் போலும் கறையான் சலசலத்து வளைக்குள் சென்றால் ஏதோ மழைவரும்போலிருக்கிறதென்று குடியானவர்கள் சொல்கிறார்கள் என்று தோன்றுகிறது. அவைகள் ஒன்றோடொன்று நன்றாய் ஸம்பாஷணையும் செய்துகொள்கின்றனவாம். இவைகளெல்லாம் தவிர ஸமீபத்தில் அவைகள் ஒன்றுக்கொன்று வந்தனம் முதலியன செய்கின்றனவென்றும் கவனித்திருக்கிறார்கள். எப்படி யென்றால் தங்கள் பின்னங்கால்களினால் தலைநிமிர்ந்து நின்றுகொண்டு, பிறகு இரண்டொருதடவை தங்கள் தலைகளையாட்டி வணங்குகின்றனவாம். இம்மாதிரியான விசேஷங்கள் ஜந்துக்களினிடம் காணப்படுவது மிகவும் வியக்கத்தக்கது.—எஸ். எக்ஞஸ்வாமி.

### Constitution of Comets.

வால் நக்ஷத்ரங்களின் அமைப்பு.—வால் நக்ஷத்ரங்கள் எவைகளாலானவை யென்பதைப்பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். சில வானசாஸ்த்ரிகள் வால் நக்ஷத்ரத்தின் முக்யமான பாகம் கெட்டிப் பொருள் என்றும், வேறு சிலர் த்ரவப்பொருள் என்றும், இன்னும் சிலர் வாயுக்கள் என்றும், சொல்லுகிறார்கள்.

சிலர் வால் நக்ஷத்ரமானது உதிர் நக்ஷத்ரங்களைப் போல கெட்டி வஸ்துவென்றும், ஏராளமான திடபதார்த்தங்கள் சேர்ந்து ஒரு பெரும் மேகம்போல் இருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். வால் நக்ஷத்ரங்களிலுள்ள திடபதார்த்தங்கள் புழுதியிலுள்ள ஒரு அணு முதல் அநேக கனகஜம் பருமனுள்ளவைகள் வரையில் இருக்கின்றனவாம். இவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள தூரம் ரொம்ப ஜாஸ்தியாக விருக்கிறதாம். வால் நக்ஷத்ரத்தில்உள்ள ஒவ்வொரு திடபதார்த்தத்தையும் சுற்றிக்கொண்டு ஒருவிதவாயு இருக்கிறதாம். ஸூர்யகிரணங்களாலும் வேறு காரணங்களாலும் அந்த வாயு கோளமானது ப்ரகாசமடைகிறதாம் வால் நக்ஷத்ரத்தின் வழியாக அதன்பின்னாலுள்ள ப்ரகாசம் குறைந்த ஸாதாரண நக்ஷத்ரத்தையும் பார்க்கமுடியுமாம்.

# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### A Girl with Marvellous Memory.

அபார ஞாபகசக்தியுள்ள ஒரு பெண்.-குமாரி லக்ஷ்மாம்பாள் என்னும் 7-வயஸுள்ள ஒரு பெண் அபார ஞாபகசக்தியுள்ள வளாயிருக்கிறாளாம். பகவத்கீதை, கோபிகாகீதை முதலிய க்ரந்தங்களை பாராமல் ஒப்பிக்க முடியுமாம். ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு ஆகிய இந்த பாஷைகளில் ஸுமார் 5000-ச்லோகங்கள் பாராமல் வருமாம். அவள் எதையும் ஐந்தாறு தடவை கேட்டவுடன் க்ரஹித்துக்கொண்டு பிழையில்லாமல் சொல்லுகிறாளாம். இப்படி அபார சக்தியிருந்தும் அவளுடைய தேகஸுகத்துக்கு யாதொரு கெடுதலும் ஏற்படவில்லையாம். அவள் ரொம்ப சுறுசுறுப்பாயிருக்கிறாளாம். அவள் சற்று நேரங்கூட சும்மா உட்கார்ந்திருக்க முடிவதில்லையாம். ஆனால் அவள் தன் மனதை எந்த விஷயத்திலும் செலுத்தி அதில் சற்றுநேரங்கூட அதே ஞாபகமாய் இருக்க முடியாதாம்.

அவள் பிறந்த பத்தாவது மாஸத்திலேயே பேச ஆரம்பித்து விட்டாளாம். தனது தகப்பனார் சொல்லும் மந்த்ரங்களை தினந்தோறும் கேட்டுக் கொண்டிருந்து பாடம் பண்ணி யிருக்கிறாளாம். இப்போது அந்தப் பெண்ணை யவளுடைய தகப்பனார் காசிக்கு அனுப்பி ஸம்ஸ்க்ருதம் வாசிக்க செய்யப்போகிறாராம். ஸமஸ்க்ருதம் வாசித்த பிறகு அவளுக்கு இங்க்லீஷ் கற்றுக் கொடுக்க உத்தேசமாம்.

### Defects in Speech.

சரியாய்ப் பேசத் தெரியாமை.—குழந்தைகள் பேசும்போது ஒரு வார்த்தையைச் சொன்னதும் பேசுவதை நிறுத்தி அந்த வார்த்தையின் கடைசிபாகத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதுண்டு. இதற்குக் காரணம் குழந்தை எவ்வளவு வேகமாய்ப் பேசுகிறதோ அதற்குத் தகுந்தபடி அதன் மூளை வேகமாய் விஷயங்களை நினைக்காததே. அடுத்தபடியாகப் பேசவேண்டிய வார்த்தையை நினைத்து உபயோகிக்கும் வரையில், முன்னால் சொன்ன வார்த்தையையோ, வார்த்தையின் கடைசி பாகத்தையோ திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறது. இப்படிக் குழந்தைகள் பேசினால், தாய்மார்களும் மற்ற பந்துக்களும் குழந்தையைப் பார்த்து "திக்கிப்பேசாதே, சரியாய்ப்பேசு, அந்த வார்த்தையை மறுபடியும் சரியாய்ச்சொல்," என்று சொல்லக்கூடாது. குழந்தை திக்கிப் பேசுகிறதென்ற விஷயத்தை அதற்குத் தெரிவிக்கக்கூடாது. அப்படி அடிக்கடி திக்கிப் பேசுவதை எடுத்துக்காட்டினால், அதே வழக்கம் குழந்தையினிடம் படிந்து, ஆயுள் முழுவதும் அது கஷ்டப்படும். நிதானமாய்ப் பேசும்படி செய்தால் இந்தக்குறை சீக்ரம் நிவர்த்தியாகிவிடும்.

### Bagalapath.

பகாளாபாத்.—கால்படி சிறு அரிசியைச் சமைத்து இரண்டுபடி கொள்ளக்கூடியதோர் ஈயம்பூசிய பாத்ரத்தில் கொட்டி ஆற்றி, கால்படி வட்டுத்தயிர், அரைப்படி சுண்டக்காய்ச்சின பால், மூன்றுபலம் புது வெண்ணெய், கால்பலம் உப்புப்பொடி இவற்றை ஷை சாதத்திற் கொட்டித் தயிர்கடையும் மத்தினால் நன்றாய்க் கடையவேண்டும். ஒரு வாணலியில் ஒன்றரைப்பலம் நெய்யை விட்டுக் காய்ச்சி, அதில் அரைக்கால்பலம் மிளகாய், வீசம்பலம் கடுகு, அரைக்கால்பலம் உளுத்தம்பருப்பு, அரைக்கால்பலம் கடலைப்பருப்பு, கால்பலம் பச்சை மிளகாய் (சிறு சிறு துண்டுகளாக்கப்பட்டிருக்க வேண்டும்.) இவற்றைப் போட்டுத் தாளித்து, வீசம் பலம் கருவேப்பிலையும் அதில் போட்டு சடபட வென்னுஞ் சப்தம் நின்றதும், ஷை கடைந்துள்ள சாதத்திற் கொட்டிக் கலக்கவேண்டும்.—விச்வகர்மன்

### Pregnant Women & Children.

கர்ப்பிணிகளும் குழந்தைகளும்.—கர்ப்பிணிகள் தமது குழந்தைகளைத் தாமே பால் கொடுத்து வளர்ப்பது பிசகு. அவ்விதம் செய்தால் அக்குழந்தைகளுக்குக் குடலைப்பற்றிய அநேக விதமான கோளாறுகள் ஸம்பவிக்கும்.—வைத்யகலாநிதி.

### Kaiser-i-Hind Medals for Ladies.

ஸ்த்ரீகளுக்கு கேய்ஸரி ஹிண்ட் பதக்கங்கள்.—இந்த வர்ஷம் சக்ரவர்த்தி பிறந்த நாளன்று, ஜனஸமூகத்துக்காகப் பாடுபட்டுவரும் சில இந்திய ஸ்த்ரீகளுக்கு கெய்ஸரிஹிண்ட் பதக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பதக்கங்கள் பெற்றவர்களின் பெயர்கள் பின்வருமாறு. வடக்கே ராதான்பூரைச் சேர்ந்த காலஞ்சென்ற ஸேத் காடிலால் ஸுபக்சந்த் என்பவரின் மனைவியாகிய பாய் கால்பிபாய்; மூர்ஷிதாபாத் நவாப்பின் மனைவியாகிய டில்ஷாட் பேகம்; ஸர் நாராயண சந்தவர்க்கரின் புத்ரியாகிய பாய் ஸுந்தரிபாய்; பம்பாயைச் சேர்ந்த மிஸ்டர் ஜிஹாங்கிர் போமான்ஜி பெடிட்டின் மனைவியாகிய பாய் ஜாய்ஜி.



# INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### The Tamil Community in South Africa.

தென்னாப்பிரிக்காவில் தமிழ் ஜனங்கள்.—மிஸ்டர் காந்தி ஸமீபத்தில் ரங்கூனுக்குப் போயிருந்த போது ஒரு பத்ரிகை நிருபர் மிஸ்டர் காந்தியைக்கண்டு, தென்னாப்ரிக்காவிலுள்ள தமிழ்ஜனங்களைப்பற்றி அவருடைய அபிப்ராய மென்னவென்று கேட்டார். அதற்கு மிஸ்டர் காந்தி, தமிழ் ஜனங்களைப்பற்றி மிகவும் ச்லாகித்துப் பேசி அவர்கள் தென்னாப்ரிக்காவில் பற்பல நல்ல கார்யங்கள் செய்திருக்கிறார்களென்றும், அங்கே அவர் 'பாஸிவ் ரெஸிஸ்டென்ஸ்' என்னும் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொண்டு, கவர்ன்மெண்டினுடன் இந்தியர்களுடைய பாத்யதைகளுக்காகப் போராடினபோது, தமிழ் ஜனங்கள் ரொம்ப உதவியாயிருந்தார்களென்றும், சொன்னார். ராஜாங்கத்தோடு தமது பாத்யதைகளுக்காக வாதாடுவதாகிய பொதுக்கார்யத்துக்கு உழைப்பதற்காக ஒவ்வொரு தமிழனும் ஒருதடவையாவது ஜெயிலுக்குப்போயிருக்க வேண்டுமாம். இல்லாவிட்டால் அது அவர்களுக்குள் ஒரு கௌரவக்குறைவாம். இப்படிப்பட்ட கொள்கை மற்ற இந்தியர்களிடம் கிடையாதாம்.

### Indians in British Colonies.

ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள்.—சில ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இருக்கும் இந்தியர்களின் ஸங்க்யை பின்வருமாறு.

| | |
|---|---|
| ப்ரிட்டிஷ் கயானா | 1,26,517 |
| பீஜீ தீவுகள் | 40,286 |
| ஜெமெய்கா | 17,380 |
| மலேயா, ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில்மெண்ட்ஸ் | 2,55,000 |
| மொரீஷஸ | 2,57,697 |
| ட்ரினிடாட், டுபாகோ | 50,585 |
| லங்கை | 4,70,651 |
| கிழக்கு ஆப்ரிகா ப்ரொடக்டரேட் | 11886 |
| ஆண்டிகுவா, பார்புடா, ரெடொண்டா தீவுகள் | 3 |
| டாமினிகா | 8 |
| மாண்ட்ஸெர்ராட் | 2 |
| ஸெண்ட் க்ரிஸ்டாபர் தீவும், நெவிஸ் தீவும் | 38 |
| ஸெஷல் தீவுகள் | 420 |
| யுகாண்டா | 1,622 |
| க்ரெனடா தீவு | 406 |
| ஸெண்ட் லூஷியா | 2,064 |
| ஸெண்ட் வின்ஸெண்ட் | 376 |

இவைகளுடன் நேட்டால் கனடா முதலிய இன்னம் சில தேசங்களிலுள்ள இந்தியர்களின் ஸங்க்யையும் சேர்ப்போமானால், இதரதேசங்களில் உள்ள இந்தியர்களின் ஸங்க்யை ஸுமார் 15-லட்சத்திற்கு மேலாகுமென்று சொல்லலாம்.

### Indian South African League.

இந்திய தென்னாப்ரிக்கா ஸங்கம்.—தென்னாப்ரிக்காவில் இந்தியர்கள் தங்கள் ஸ்வதந்த்ரங்களுக்காகப் போராடினபோது அவர்களுக்குப் பணவுதவி செய்வதற்காக இந்தியாவில் பல விடங்களில் இந்தியர்கள் தென்னாப்ரிக்கா லீக் என்று ஸங்கங்கள் ஸ்தாபித்து ஜனங்களிடம் பணவஸூல் செய்து தென்னாப்ரிக்காவுக்கு அனுப்பிவந்தது பலர் அறிந்த விஷயம். சென்னையில் ஸ்தாபிக்கப்பட்ட ஸங்கம் இது வரையில் 75,000 ரூபாய் வஸூல் செய்தது. இப்போது தென்னாப்ரிக்கா தகரார் ஒருவிதமாக முடிந்துபோய் விட்டதால், இது வரையில் அனுப்பினதுபோக பாக்கியாயுள்ள ரூ. 3554-14-10-வை இன்னசெய்வதென்பதை கவனிக்கவும், ஸங்கத்தை யொட்டின வேறு சில விஷயங்களை கவனிக்கவும் ஷை சென்னை லீக் சென்ற மேமாஸம் சென்னையில் ஒரு மீட்டிங்கூடிற்று. அப்போது மிஸ்டர் காந்திஅந்த மீட்டிங்குக்குவந்திருந்தார். அவர் தென்னாப்ரிக்காப் போராட்டம் இந்தியர்களுக்கு ஸாதகமாய் முடிந்து விட்டதாலும், சென்னை லீக் அந்தப் போராட்டத்துக்குப் பணவுதவி செய்வதற்காகவே ஏற்பட்டதாலும், இனி அந்த ஸங்கத்தைக் கலைத்து விடலாமென்றும், கையில் மிச்சமாயுள்ள பணத்தை ஷை போராட்டத்தில் கஷ்டமடைந்த 30 இந்தியர்களின் ஸம்ரக்ஷணைக்காக செலவழிக்கலாமென்றும் சொன்னார். அதன்படியே அந்த மீட்டிங்கு தீர்மானம் செய்தது. அதோடு அந்த லீகின் ஆரம்பத்தைப் பற்றியும், அது செய்த வேலையைப் பற்றியும் வரவு செலவு கணக்கைப் பற்றியும் ஒரு ரிபோர்ட் தயார் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தது.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Joffre Story.

**ஜெனரல் ஜாப்ரேயைப்பற்றிய ஒரு கதை.**—ப்ரெஞ்ச் தளகர்த்தராகிய ஜெனரல் ஜாப்ரே தமது நெருங்கிய ஸ்நேகிதர்களுடன் உத்ஸாகமாயும் ஸந்தோஷமாயும் இருப்பவர். ஆனால் போர்முனையில் தன் னிஷ்டப்படி நடப்பவர். மனம் கலங்காதவர் எதையும் ஸாதித்து நடத்தக்கூடியவர்.

அவர் அநேக வர்ஷகாலங்களாக தமது வாழ்நாளை ஒரு ஒழுங்குடன் கழித்து வந்திருக்கிறார். அதனால் தான் தமது தேகம் நல்ல நிலைமையிலிருக்கிறதென்று அவர் சொல்வாராம். போர் முனையிலிருக்கும்போதும், தீராத அஸந்தர்ப்பங்கள் நேர்ந்தாலொழிய, அந்த ஒழுங்கை மாற்றுவதில்லையாம்.

ஸமீபத்தில் மான்ஸ் என்னும் இடத்திலிருந்து ப்ரெஞ்ச் துருப்புகள் பின்வாங்கிப் போனபோது, ஒரு நாள் ராத்ரி ஒரு ராணுவ உத்யோகஸ்தர் ஒரு அவஸரமான நிருபத்துடன் ஜாப்ரேயைப் பார்க்கவந்தார். ஜாப்ரே படுக்கப் போய்விட்டார். மேலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒருவரும் தம்மை எழுப்பக்கூடாதென்று கண்டிப்பான உத்தரவு இட்டிருந்தார். வந்த உத்யோகஸ்தர் ஒரு டிவிஷன் ஸைன்யத்தை எதிரிகள் சூழ்ந்துகொள்வதாக இருக்கிறதென்றும், ஆகையால் அவரை எழுப்பித்தான் ஆகவேண்டும் சொன்னார். ஜாப்ரேயின் காம்பில் இருந்த உத்யோகஸ்தர் ஜாப்ரேயை காலை ஆறுமணிக்கு முன்னால் எழுப்பக்கூடாதென்றும், மத்தியில் ஏதாவது ஆபத்துகள் நேரிடுமென்று எண்ணி அவர் நேரிடக்கூடிய ஆபத்துகளுக்கெல்லாம் இன்னவிதம் செய்யவேண்டுமென்று பதில் எழுதிவைத்திருக்கிறாரென்றும் சொன்னார். அப்படியே எழுதிவைத்திருந்தவைகளைப் பிரித்துப் பார்க்கையில், அவர் கொண்டுவந்த ஸமாசாரத்துக் கேற்றதான பதிலிருக்கக் கண்டு, அதிலுள்ள விஷயங்களை உத்யோகஸ்தரை யனுப்பிய ஸேனாதிபதிக்கு தந்தி மூலமாகத் தெரிவித்தார்கள். ஜெனரல் ஜாப்ரே மறுநாள் இந்த விஷயங்களைக் கேட்டதும், ஸேனாதிபதி அந்த ஆபத்தான நிலைமையைத் தந்தி மூலமாய் தெரிவிக்காமல், மோட்டார் வண்டி மூலமாய் அனுப்பினது தவறென்று அவரைக் கண்டித்தாராம்.

### Communicating His Death.

**தன் சாவைத் தெரிவித்தது.**—பாரிஸில் ஒரு ஸங்கீத வித்வான் போர்க்களத்துக்குப் புறப்படுமுன்னால், ஸங்கீதம் தெரிந்த தமது மனைவியினிடம் தாம் போரில் இறந்துபோனால் இறந்துபோன விஷயம் உத்யோக முறையில் அவளுக்குத் தெரிவதற்குமுன் தாமே தெரிவிப்பதாகச் சொல்லிப்போனார். அவர் பெயர் ரிமி என்பது. அவர் போனபிறகு சில நாள் அவரது மனைவி பாடவேயில்லை. பிறகு ஒரு நாள் வையலின் என்னும் வாத்யத்தை எடுத்து வாசிக்க ஆரம்பிக்கையில் இரண்டு கம்பிகள் அறுந்து போயின. என்ன கம்பிகள் அறுந்தன வென்று பார்க்கையில் ரி, மி, என்னும் ஸ்வரங்களைக் குறிக்கும் கம்பிகள் அறுந்தன வென்று தெரிய வந்தது. தனது கணவன் இறந்தாரோ என்று அவள் ஏங்கியிருக்கையில், மறுநாள் யுத்தஆபீஸிலிருந்து அவள் கணவன் இறந்துபோனதாக ஸமாசாரம் கிடைத்ததாம்.

### Asphyxiating Dogs.

**நாய்களை விஷக்காற்றுகளால் மூர்ச்சித்திணறும்படி செய்தது.**—ஸமீபத்தில் யிப்ராஸுக்குப் பக்கத்தில் நடந்த சண்டைகளில் ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ் ஸோல்ஜர்களை மூச்சுவிட முடியாமல் ப்ராஜனை தப்பிப்போகும்படி செய்ய சில விஷவாயுக்களை ப்ரயோகித்தார்களென்று ஏற்கனவே ஜனாபிமானியில் தெரிவித்திருக்கிறோம். இந்த வாயுக்களை மனிதர்களின்மேல் ப்ரயோகிக்குமுன் நாய்களின்மேல் ப்ரயோகித்துப் பரீக்ஷைசெய்தார்களாம். அவர்கள் வடகிழக்கு பெல்ஜியத்திலுள்ள ஹாஸ்ஸல்ட் என்னும் ஊரிலும் அதற்குப்பக்கத்திலும் இருந்தநாய்களையெல்லாம் ஓட்டிக்கொண்டுவந்து, அவ்வூருக்குப் பக்கத்தில் வெட்டப்பட்டிருந்த ஆழமான அகழ்களுக்குள் அவைகளை நிறுத்தி, அந்த அகழ்களை விஷவாயுக்கள் நிறைத்துவைத்திருந்த குண்டுகளால் தாக்கினார்கள். சிறிது நேரம்கழித்து அந்த அகழ்களைப் பரிசோதித்தபோது சில அகழ்களில் நாய்களெல்லாம் செத்துக் கிடந்தனவாம். வேறு சில அகழ்களில் அவைகள் ஸ்மரணைதப்பிக் கிடந்தனவாம்.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Blind Indian Matriculute.

**மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறிய ஓர் குருட்டு இந்தியன்.**—இந்த வர்ஷம் கண்தெரியாத ஒரு இந்திய மாணவன் பஞ்சாப் யூனிவர்ஸிட்டியில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியிருக்கிறான் என்று தெரிகிறது. அந்த மாணவனின் பெயர் தாமஸ் க்ரீன். இது கிறிஸ்தவப்பெயர். அவனுடைய ஸொந்தப்பெயர் ராம் ஸிங் என்பது. அவன் மீவார் ஸமஸ்தானத்திலுள்ள ஓர் ராஜபுதன குடும்பத்தில் ஜனித்தவன். இளம் பிராயத்திலேயே அவன் தாய்தந்தையர் காலகதியடைந்து விட்டதால், அவனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் 'கொஞ்ச நஞ்ச' மல்ல. கையில் ஓர் பைஸாக்கூட இல்லாமல் அநாதையாக நின்ற அக்குருட்டு மாணவன் தன் பூர்வ விதிவசத்தால், உஜ்ஜெயினி ஸமஸ்தானத்தில் அப்போது வந்திருந்த சில அமெரிக்கப் பாதிரிகளது தூண்டுதலின் பேரில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி கொஞ்சகாலம் அவர்களிடம் வளர்ந்து வந்தான். பாதிரிமார்களும் பையனை பக்ஷமாகக் கவனித்து வந்ததுடன், அவனுக்கு குருடர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறையில் கல்வியும் கற்பித்துவந்தார்கள். சிறிது காலத்துக்கெல்லாம் அவன் இந்தூர் ஸமஸ்தானத்திலிருக்கும் மிஷன் பாடசாலையில் சேர்ந்துகொண்டான். அங்கு அவனுக்கு கற்பிக்கப்பட்ட படிப்பின் திறமையாலும், இயற்கையாகவே படிப்பின்மேல் அவனுக்கிருந்த அவாவினாலும் அப்பையன் உயர்தரப் படிப்புப் படிக்கவேண்டுமென விருப்பங்கொண்டான். கொஞ்சகாலங் கழிந்ததும், அவனது பிற்கால வாழ்வின் ஸம்பந்தமாய் அவ்வாலிபனுக்கும் அவனது போஷகர்களாகிய பாதிரிகளுக்கும் சில தகராறுகள் ஏற்படவே, வாலிபன் அவர்களை விட்டு லக்னௌ, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்குச் சென்று அங்குமிங்குமாக அலைந்து திரியலானான். அப்போதுங்கூட அவனுக்கு படிப்பின்பேரிலிருந்த அவா குன்றவில்லை. பம்பாயில் குருடர்களுக்காக 2 பள்ளிக்கூடங்களிருப்பதாகவும், ஆனால் அவற்றில் உபாயப் படிப்புதான் கற்பிக்கப்படுகிறதென்றும் கேள்வியுற்ற அவன் கடைசியில் லாகூருக்கு வந்துசேர்ந்து அங்கோர் முனிஸிபல் அநாதைச்சாலையில் தங்கினான், அந்த ஸமயத்திலும் அவன் தனது படிப்பை அலக்ஷ்யம் செய்யாமல் லாகூர் "கவர்ன்மெண்ட் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்"டில் சேர்ந்து படித்து மேற்படி இன்ஸ்டிட்யூட்டின் தலைமை உபாத்யாயரான லாலா மதன்கோபால் பி. ஏ. அவர்களின் நட்பையும் நன்மதிப்பையும் பெற்றான். அப்பால் ஒரு வருஷத்துக்குள் அவனுக்குத் தியால்ஸிங் ஹைஸ்கூலில் சம்பளமில்லாமல் இடம் கிடைத்தது. அப்போதைக்கப்போது சில தர்மிஷ்டர்களிடமிருந்து அவன் சேகரித்து வைத்திருந்த ரூபா 51-ஐ அம்மாணவன் இங்கிலாந்திலிருந்து குருடர்கள் வாசிப்பதற்கென்று ப்ரசுரம் செய்துள்ள புஸ்தகங்களையும் ஸ்லேட்டுகளையும் வாங்குவதில் செலவழித்து மெள்ள மெள்ள தன் கல்வியை வ்ருத்திசெய்து கொண்டான். பிறகு அவனுக்கு லாகூர் டிஸ்டிரிக்ட் போர்டார் ப்ரதி மாஸமும் ரூபா 10-வீதம் வருஷம் வரையில் உபகாரச்சம்பளம் கொடுப்பதாக வாக்களித்த தன்பேரில் அப்பையன் தானிருந்த அநாதைச்சாலையை விட்டுவிட்டு "தியால்ஸிங்" காலேஜ் ஹாஸ்டலில் குடிவந்தான். அங்கிருந்துகொண்டே அவன் 3 வர்ஷகாலம் கஷ்டப்பட்டு வாசித்து பீஜகணிதம், க்ஷேத்ரகணிதம், ஸம்ஸ்க்ருதம் முதலியவைகளைக் கற்றுக்கொண்டான். பிறகு டை. காலேஜில் இண்டர்மீடியேட் வகுப்பில் படித்துவந்த சில மாணவர்களிடம் ஒரு வருஷகாலம் 'தர்பீத்'தாக விருந்து கடைசியாக இவ்வர்ஷம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியிருக்கிறான்.

### Blood Storm.

**ரத்தமழை பெய்ததாம்.**—கான்பூரிலுள்ள ஒரு மசூதியிலே ஸமீபத்தில் ரத்தமழை பெய்ததாம். அதனால் அம்மசூதியிலுள்ள முற்றம் சுவர் முதலிய எல்லா இடங்களிலும் ரத்தக் கறைகள் பட்டிருக்கின்றனவாம். அந்த அபூர்வமான காட்சியைக் காண்பதற்காக ஹிந்துக்களும் முகம்மதியர்களும் ஆண் பெண் அடங்கலாக ஆயிரக்கணக்காய் அம்மசூதியைப் பார்த்து வருகிறார்களாம்.

இது வாஸ்தவமாயிருக்கலாமென்றும், ஆகாயத்தில் ஒருராஜாளி எதையேனும் பிடித்துக்கொண்டுபோக, அதனால் ரத்தம் பூமியில் விழுந்திருக்கலாமென்றும் 'கான்பூர் கெஸட்' கூறுகிறது. ஆனால் அவ்வாறு ஏற்படும் ரத்தம் ஒரு கட்டிடம் முழுமையும் ரத்தக்கறையாக்குமா என்பது ஸந்தேகத்திற் குரியது.

## MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### The German Army.

ஜெர்மன் ஸைன்யம்.—1912-ம் வர்ஷம் வெளியான ஒரு ஜெர்மன் ராணுவப் புஸ்தகத்தின்படி ஜெர்மனிக்கு யுத்தத்துக்கு முன்னால் ஆபிஸர்களும் வீரர்களும் சேர்ந்து 98,98,000 பேர்கள் இருந்ததாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| பயிற்சி பெற்ற ஆபிஸர்களும் வீரர்களும், (ரிஸர்வுவீரர்களும், லாண்ட்வெர் என்னும் இரண்டாவது ரிஸர்வ் வீரர்களும்) | 33,02,000 |
| லாண்ட்ஸ்ட்ரம் படையிலுள்ள பயிற்சி பெற்றவர்கள். | 6,23,000 |
| ஒருவர்ஷத்து வாலண்டியர்கள் | 85,000 |
| ஸமாதான காலத்தில் வேலைபார்த்து வரும் நான் கமிஷண்ட் ஆபிஸர்கள் | 92,000 |
| மொத்தம் பயிற்சிபெற்ற போர்வீரர்கள். | 41,02,000 |
| பாதிப்பயிற்சியடைந்த 'எர்ஸாட்ஸ்' என்னும் ரிஸர்வ் படை. | 1,13,000 |
| பயிற்சி பெறாத எர்ஸாட்ஸ் ரிஸர்வும் லாண்ட்ஸ்ட்ரம் ரிஸர்வும். | 56,83,000 |
| ஆகமொத்தம் | 98,98,000 |

எர்ஸாட்ஸ் என்பவர்கள் ராணுவத்தில் இது வரையில் சேராதவர்கள். யுத்தம் நடக்கும்போது ஏற்படும் போர்வீரர்களின் குறைவை சரிப்படுத்துவதற்காக இவர்களைப் பயிற்சிசெய்து வேண்டும்போது போருக்கு அனுப்புவார்கள்.

### A Russian Girl at the Front.

போர்முனையில் ஒரு ரஷ்யப் பெண்.—தற்போது நடந்துவரும் யுத்தத்தில் தனது மூன்று ஸகோதரர்களுடன் பற்பல படைக்கூட்டத்தில் சேர்ந்து தீரமாய்ச் சண்டை செய்துவந்த அலெக்ஸாண்ட்ரா பாங்கோ என்னும் ஓர் ஆண்மை வாய்ந்த ரஷ்யப்பெண் ஸமீபத்தில் தனது ஜன்ம நகரமாகிய கீப் என்னும் துறைமுகப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறாள். கொஞ்ச நாளைக்கு முன் ரஷ்யருக்கும் ஆஸ்ட்ரியருக்கும் ப்ரமாதமான ஈட்டிச்சண்டை நடந்தபோது அச்சிறிய ரஷ்யப் பெண் ஒரேதடவையில் மூன்று ஆஸ்ட்ரியப் படைவீரர்களை கொன்றுப்போட்டதாகவும், தனது கண்ணெதிரில் நின்றுகொண்டிருந்த ஸகோதரர்களில் ஒருவன் கொல்லப்பட்டதைக்கண்ட அவள் மனந்தாளாது கீழே மூர்ச்சையாய் விழுந்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. தற்போது அப்பெண்ணுக்கு உபாயமாக காயம்பட்டிருக்கிறதாம்.

### A Fisherman and a Fish

செம்படவனும் மீனும்.—மதாராவென்பது ஸிலோனிலுள்ள ஒரு க்ராமம். அங்கு சிங்களவனொருவன் ஒரு மீனைப்பிடித்துக் அதை கொல்லுவதற்காக தன் வாயண்டை கொண்டுபோனதும், அது தவழ்ந்து சரேலென்று வாய்க்குள் பாய்ந்து தொண்டையிலுள்ள ம்ருதுவான பாகத்தில் கவ்விக்கொண்டது. வெளியிலிழுக்கத் தன்னாலானவரையில் முயற்சித்தும் பயனடையாத அந்த சிங்களவன் இன்னது செய்வதென்று தெரியாமல் நாலாபக்கமும் சுற்றிச் சற்றியோடி, கடைசியாக அவ்வூர் ஆஸ்பத்திரிக்குப் போய் சேர்ந்தான். அவனது வாயைப் பரிசோதனை செய்த டாக்டர் உடனே ரணக்கத்தி யெடுத்து அம்மனிதனுடைய தொண்டையை ஜாக்ரதையாக "ஆபரேஷன்" செய்து தொண்டைக்குள் அகப்பட்டுக் கொண்டு உயிர்துறந்த மீனை வெளியே எடுத்தார். ஆயினும் மீனுனது தொண்டையிலிருந்து எடுக்கப்பட்டபோது உண்டான வலியை அந்த செம்படவன் ஸகிக்க முடியாமல் கொஞ்ச நேரத்துக்குள் உயிர் துறந்தான்.

### Parrots and Aeroplanes.

கிளிகளும் ஏரோப்ளேன்களும்.—கிளிகள் ஏரோப்ளேன்கள் வருவதைக்கண்டால் நடுக்கமும் பயமும் கொண்டு க்ரீச் என்று சத்தமிடுகின்றனவாம். மனிதர்கள் ஏரோப்ளேன்கள் வருவதையறியுமுன்னாலேயே கிளிகள் அவற்றின் வரவையறிந்து சத்தமிடுகின்றனவாம். பாரிஸிலுள்ள ஈபில் கோபுரத்திலும் இன்னும் சில தக்கவிடங்களிலும் இந்தப் பக்ஷிகளைவைத்து, ஏரோப்ளேன்கள் வருவதைத் தெரிவிக்கும் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அவைகள் நேச ஏரோப்ளேன்கள் வந்தாலும்கூட அனாவச்யமாய் சத்தமிடுவதால் அவைகள் அவ்வளவு ப்ரயோசன மில்லையென்று சொல்லுகிறார்கள்.



### Sending Guns in Vegetable Waggons.

கறிகாய் வண்டிகளில் பீரங்கிகளையேற்றி அனுப்புதல்.—இட்டலி யுத்தத்தில் சேர்ந்து கொள்வதற்கு முன்னால், அந்த தேசத்திலுள்ள ஜினேவா நகரிலிருந்து ஸ்விட்ஸர்லாந்து மார்க்கமாக ஜெர்மனிக்குச் சென்ற ரயில்வண்டிகளில் கறிகாய்கள் என்றெழுதியுள்ள சீட்டுக்கள் ஒட்டப்பட்டிருந்தனவாம். ஸ்விட்ஸர்லாந்து தேசத்ததிகாரிகள் அவ்வண்டிகள் மேல் ஸந்தேகங்கொண்டு, அவைகளை சோதனை செய்தார்கள். அவ்வண்டிகளில் அமெரிக்காவில் செய்யப்பட்ட மெஷீன் பீரங்கிகள் தனித்தனியாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, அவற்றைத் தம் வசஞ் செய்து கொண்டார்கள்.

### Bees in War.

யுத்தத்தில் தேனீக்கள்.—ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ஜெர்மானியர்களுக்கும் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களுக்கும் யுத்தம் நடந்தபோது, ஜெர்மானியர்கள் பழக்கப்படாத தேனீக்களை ஓரிடத்தில் அடைத்துவைத்து, ப்ரிட்டிஷ் துருப்புகள் அவர்களைத் தாக்கினபோது, அவைகளை வெளியில் விட்டு விட்டார்களாம். தேனீக்கள் ப்ரிட்டிஷ் துருப்புகளைக் கொட்டின. ப்ரிட்டிஷ் ஸைன்யங்களில் இருந்தவர்கள் பெரும்பாகம் இந்தியர்களும் ஆப்ரிக்க ஸ்வதேசிகளுமாம். பல ஸோல்ஜர்கள் தேனீக்கள் கொட்டினதால் இறந்து போனார்களாம்.

### Samples of Fertilizers Free.

மாதிரிக்கு உரங்கள் இனும்.—உரங்கள் வ்யாபாரம் செய்யும் மெஸ்ஸர்ஸ் அல்லன் ப்ரதர்ஸ் கம்பெனியாரின் சென்னை ஏஜெண்ட், ஸூபர்பாஸ் பேட்டு உரமும், நைட்ரேட் அப் ஸோடா உரமும் (ஒவ்வொன்றிலும் ஒரு ராத்தல் நிறையுள்ளது) மாதிரிக்காக விவஸாயிகளுக்கு இனமாய் அனுப்புவதாகத் தெரிவிக்கிறார்கள். விவஸாயிகள் இவைகளை எழுதி வரவழைத்து தங்கள் நிலங்களில் ஒரு பாத்தியில் (11 கஜசதுரம்) போட்டுப்பார்த்து பலனுள்ளவையென்று கண்டால் பிறகு அதிகமாக உபயோகிக்கலாம். உபயோகிக்கும் விதத்தை ஏஜெண்டினிடம் கேட்டறிந்து கொள்ளவும். வேண்டுவோர் ஏஜெண்ட், மெஸ்ஸர்ஸ் அல்லன் ப்ரதர்ஸ் அண்ட் கோ., 69, வெள்ளாளத் தெரு, புரசவாக்கம், வேப்பேரி போஸ்ட், மதராஸ் என்று எழுதிக் கொள்ளவும்.

## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

ஜூன்மீ 2-தேதி.

ஆர்ராஸுக்கு வடக்கே ப்ரெஞ்ச் துருப்புகள் முன்னுக்குப் போயிருக்கின்றன. அவைகள் ஸௌசெஸ் என்னுமிடத்திலுள்ள சர்க்கரைச்சாலையைப் பிடித்திருக்கின்றன.

3-தேதி.

பெல்ஜியத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் சாடோ ஹூஜ் என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றன.

4-தேதி.

29 ப்ரெஞ்ச் ஆகாயகமனிகள் ஜெர்மன் இளவரசர் இருந்த இடத்தில் 176 வெடிகுண்டுகள் போட்டார்கள்.

7-தேதி.

இன்று கெண்டுக்கும் ப்ரஸ்ஸல்ஸுக்கும் மத்தியில் ஒரு ப்ரிட்டிஷ் ஆகாயவிமானி ஒரு ஜெர்மன் ஸெப்பலினை நாசம் செய்தார்.

8-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஆர்ராஸுக்கு வடக்கே முன் சென்றுகொண்டிருப்பதோடு, ஏனுக்கு வடக்கில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்திருக்கின்றன.

9-தேதி.

மேற்கு யுத்தகளத்தில் லொரட் என்னுமிடத்தில் கடுமையான பீரங்கிப்போர் நடக்கிறது.

10-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ந்யூவில் என்னும் ஊர் முழுவதையும் பிடித்துக்கொண்டன.

12-தேதி.

ஹெபுடர்னே என்னுமிடத்துக்குத்தெற்கே ப்ரெஞ்ச் துருப்புகள் 5-பர்லாங் முன் சென்றிருக்கின்றன.

16-தேதி.

23-ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் கார்ல்ஸ்ரூஹி என்னும் பட்டணத்தின்மேல் 130-குண்டுகள் போட்டன.

18-தேதி.

ஆர்ராஸுக்கு வடக்கே இரண்டு நாளாக பலமான சண்டை நடந்துவருகிறது.

21-தேதி.

ப்ரிட்டிஷ் ஆகாயகமனிகள் லாபாஸ்ஸியிலுள்ள மின்ஸாரம் உண்டுபண்ணும் சாலையைத் தாக்கினார்கள்.

22-தேதி.

ஜெர்மானியர்கள் பெரிய பீரங்கிகளைக்கொண்டு டன்கர்க் என்னும் பட்டணத்தைத் தாக்கினார்கள்.

24-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஆல்ஸேஸில் மெட்ஸிரல் என்னுமிடத்தைத்தாண்டி முன்சென்றுகொண்டிருக்கிறார்கள்.

28-தேதி.

சென்ற இரண்டுநாளாக ஆர்ராஸ் ப்ரதேசத்திலும், ஸௌசெஸ் என்னுமிடத்துக்கு வடக்கிலுள்ள குன்றிலும் யுத்தம் பலமாக நடக்கிறது.

29-தேதி.

ஒரு ப்ரெஞ்ச் ஏரோப்ளேன் ப்ரிடரிக்ஷேவன் என்னுமிடத்திலுள்ள ஸெப்பலின் கொட்டகைகளில் வெடிகுண்டுகள் போட்டது.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா-ஜெர்மனிக்கும் யுத்தம்.

ஜூன்மீ 1-தேதி.

ப்ரஸிமிஸலைச் சுற்றியுள்ள ப்ரதேசத்தில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ப்ரஸிமிஸலுக்கு 25-மைல் வடக்கேயுள்ள லுபாசௌகா நதியைத் தாண்டி ஸான்நதி விஸ்டுலாநதியோடு சேருமிடத்துக்குப் பக்கத்தில் ஒரு க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

2-தேதி.

ப்ரஸிமிஸலுக்குத் தென் கிழக்கில் பலமான சண்டை நடக்கிறது. ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸ்ட்ரிஜ் என்னும் ஊரைப்பிடித்திருக்கின்றனவாம். பால்டிக் மாணங்களில் ரஷ்யர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

3-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் தாங்கள் ப்ரஸிமிஸலைப் பிடித்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள்.

5-தேதி.

வடகாலீஷ்யாவில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

7-தேதி.

மத்ய காலீஷ்யாவில் ஆஸ்ட்ரோ - ஜெர்மானிய துருப்புகள் ப்ரெஸிமிஸலுக்கு 16-மைல் கிழக்கேயுள்ள நாஸிகாவுக்குப் பக்கத்தில் வந்திருக்கின்றன. நாஸிகா லெம்பர்க்குக்குப் போகும்வழியில் இருக்கிறது. பால்டிக் மாகாணங்களில் ஜெர்மானியர்கள் மிமலுக்கு 80-மைல் கிழக்கே வரையில் போயிருக்கிறார்கள்

8-தேதி.

காலீஷ்யாவில் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் மாஸோஸிஸ்கா என்னும் ஊரில் ரஷ்யர்களை பலமாய் தாக்கியும் பின் தள்ளப்பட்டன.

ஆஸ்ட்ரிய எல்லைமாகாணத்தில் இட்டாலியர்கள் முன்சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அநேக இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். இட்டாலியர்கள் இஸோன்ஸா நதியின் இருகரைகளையும் தங்கள் வசத்தில் வைத்திருக்கிறார்கள்.

மத்ய காலீஷ்யாவில் ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்கள் விஸ்னியா நதியின் இடதுகரையில் ரஷ்யர்களைத்தாக்கித்துரத்தினார்கள். ஆனால் அவர்கள் அந்த நதியை இன்னும் கடக்கவில்லை.

10-தேதி.

பால்டிக் மாகாணங்களில் ஷாவ்லி ப்ரதேசத்திலும், நீமன், விர்பாலன் ரெயில்வேக்களுக்கு நடுவிலும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

12-தேதி.

ஒபர்டின், ஹோராடாங்கா என்னுமிடங்களிலுள்ள ரஷ்யர்களை ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் தோற்கடித்துவிட்டன.

14-தேதி.

காலீஷ்யாவின் தென்கிழக்குக் கோடியில் ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் ரஷ்யர்களைப் பின்னுக்குத் துரத்திக் கொண்டிருக்கின்றன.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஒபர்ட்டினுக்கு வடக்கேயுள்ள ஒரு க்ராமத்தைப் பிடித்ததோடு, ஹோராடென்கா என்னுமிடத்துக்குக் கிழக்கே நீஸ்டர் நதியைக் கடந்திருக்கின்றன. பால்டிக் மாகாணங்களில் டூபிஸ்கா நதியோரமாய் கடுமையான யுத்தம் நடக்கிறது.



15-தேதி.

காலீஷ்யாவில் பெரிய யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ப்ரஸிமிஸலுக்கு வடகிழக்கே மாஸிஸ்காவுக்கும் லீனுவாவுக்கும் மத்தியில் ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்கள் ரஷ்யர்களைத் தாக்கித் துரத்தி 16,000 கைதிகளைப் பிடித்திருக்கிறார்களாம்.

ஜெர்மானியர்கள் லுபாஸ்காநதியின் கீழ் பாகத்தைத் தாண்டி, லுபாஸ்காவுக்கும் விஸ்நியாவுக்கு மத்தியிலுள்ள டேலா என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

நீஸ்டர் நதிக்குத் தெற்கே கடுமையான யுத்தம் நடக்கிறது.

ஜெர்மானியர்கள் பால்டிக் மாகாணங்களில் ஷாவ்லியென்னும் பட்டணத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

16-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் லெம்பர்க்கைப் பிடிக்கும் நோக்கத்துடன் ப்ரஸிமிஸலுக்கு வடகிழக்கேயுள்ள ரஷ்யர்களைத் தாக்கித்துரத்தினதோடு, ப்ரஸிமிஸலுக்குக் கிழக்கேயுள்ள மாஸிஸ்காவையும், ஸான்நதியின் கீழ்பாகத்திலுள்ள ஸியனுவாவையும் பிடித்திருக்கின்றன. ரஷ்யர்கள் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

17-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்கள் காலீஷ்யாவில் ரஷ்யர்களைத் துரத்திக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் கிழக்கு நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

18-தேதி.

ஜெர்மானியர்கள் லுபாக்ஸௌ என்னும் இடத்தைப் பிடித்து, நியமிரௌ என்னுமிடத்தில் ரஷ்யர்களைத் தோற்கடித்து, லெம்பர்க்குக்கு தெற்கே 30-வரையில் முன் சென்றிருக்கிறார்கள். ரஷ்யர்கள் க்ராடக்கை நோக்கி பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்கள் லெம்பர்க்கின் மேற்கு பாகத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்களாம்.

19-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை ஸான் நதியிலிருந்து போலண்டுக்குத்துரத்தி, டார்னோக்ராட் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு, டானவ் நதியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

ப்ருத் நதிக்கும் நீஸ்டர் நதிக்கும் மத்தியில் ரஷ்ய எல்லை நாட்டுக்குள் போன ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியாவுக்குள் துரத்திவிட்டார்கள்.

20-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்கள் க்ராடக் என்னுமிடத்துக்குப் பக்கத்திலிருந்த ரஷ்யர்களைத் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள், அவர்கள் க்ராடக்கையும் கோமார்னௌவையும் பிடித்துவிட்டதாக ஆஸ்ட்ரியர்கள் சொல்லுகிறார்கள்.

ப்ருத் நதிக்கும் நீஸ்டர் நதிக்கும் மத்தியில் பலமான யுத்தம் நடக்கிறது.

22-தேதி.

லெம்பர்க்குக்கு 20 மைல் வடக்கேயுள்ள ஸால்கியன் என்னும் ஊரும், ராவாருஸ்கா என்னும் ஊரும் ஜெர்மானியர் வசமிருக்கின்றனவாம்.

24-தேதி.

ரஷ்யர்கள் லெம்பர்க்கை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

23-தேதியன்றும் இன்றும் பால்டிக் மாகாணங்களிலுள்ள ஷாவ்லி ப்ரதேசத்தில் பலமான பீரங்கிச் சண்டை நடந்தது.

25-தேதி.

நீஸ்டர் நதியோரமாய் ஸுராவ்னோ, வாலியஸ் என்னுமிடங்களுக்கு நடுவில் நடக்கும் கடுமையான யுத்தம் ரஷ்யர்களுக்கு ஸாதகமாக மாறிவருகிறது.

தெற்குப் போலண்டில் ஸான் நதிக்கும் விஸ்டுலா நதிக்கும் இடையில் ரஷ்யர்கள் தோற்கடிக்கப்பட்டு ஸான் நதியின் பின் பக்கத்தில் பின்வாங்கினார்கள்.

ஆஸ்ட்ரோ-ஜெர்மானியர்கள் ஆஸ்ட்ரோவிட்ஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஹாலிக்ஸ் என்னுமிடத்துக்கு வடமேற்கே ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டு மார்ட்டினிவ் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் நீஸ்டரைக் கடந்து பின்வாங்கிச் சென்றார்கள். அவர்கள் நீஸ்டர் நதியின் மேல்பாகத்தில் சோடாரௌ என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

28-தேதி.

லெம்பர்க்குத் தென்கிழக்கில் பாபர்க்கா ஸுராவ்னோ போர் முனையில் ரஷ்யர்கள் தோற்றுப்போய் கீலாலிபா நதியை நோக்கி ஓடுகிறார்கள்.

லெம்பர்க்குக்கு வடக்கே 15 மைல் தூரத்திலுள்ள ஸால்க்யூ என்னுமிடத்துக்கு வடக்கிலும், ராவாருஸ்காவுக்கு வடக்கிலும் ரஷயர்கள் பின்வாங்கிப்போய்க்கொண்டிருக்கிறார்கள்,

29-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் இடைவிடாமல் முன்னுக்குப்போய்க் கொண்டிருக்கின்றன. ரஷ்யர்கள் நீஸ்டர் நதியின் மேல்பாகத்திலிருந்து பின்வாங்கிப் போய் விட்டார்கள்.

30-தேதி.

ரஷ்யர்கள் பக் நதியையும், க்வாய்லாலிபா நதியையும் தாண்டிப் பின்வாங்கிப்போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோ ஜெர்மானியர்கள் வடகாலீஷ்யாவில் ரஷ்யர்களைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் டோமாஸௌ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்களாம்.

## இட்டலி செய்யும் யுத்தம்.

ஜூன்மீ 1-தேதி.

ஒரு இட்டாலிய ஆகாயக்கப்பல் போலா என்னும் ஆஸ்ட்ரியத்துறை முகத்தில் வெடிகுண்டுகள் போட்டு அங்குள்ள ஆயுதச்சாலையை நாசம் செய்தது.

2-தேதி.

இட்டாலியர்கள் ட்ரெண்டினோ ப்ரதேசத்திலும் கார்டா ஏரிக்குக்கிழக்கிலும் முன் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

3-தேதி.

இஸோன்ஸா நதியின் இடதுகரையில் டால்மினோ என்னும் ஊருக்கு 6-மைல் வடமேற்கேயுள்ள நிரோ மலையை இட்டாலியர்கள் பிடித்திருக்கிறார்கள். இட்டாலியர்கள் ட்ரெண்டிஸை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

6-தேதி.

இட்டாலியர்கள் ட்ரெண்டினோ ப்ரதேசத்தில் ரோவரிடோவுக்குப்பக்கத்தில் இரண்டிடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

லாக்ரிடோ என்னும் ஊருக்குப் பக்கத்தில் இட்டாலியர்கள் இஸான்ஸோ நதியைக் கடக்கமுயன்றதைத் தாங்கள் தடுத்து விட்டதாக ஆஸ்ட்ரியர்கள் சொல்லுகிறார்கள்.

9-தேதி.

ஒரு ஆஸ்ட்ரிய ஏரோப்ளேன் வெனீஸ் பட்டணத்தில் வெடிகுண்டுகள் போட்டது. சில இட்டாலிய போர்க்கப்பல்கள் மான்பால்கோன் என்னும் பட்டணத்தைத் தாக்கிற்று ஒரு இட்டாலிய ஆகாயக்கப்பல் போலா என்னும் ஆஸ்ட்ரிய பட்டணத்தில் வெடி குண்டுகள் போட்டது.

14-தேதி.

இட்டாலியர்கள் இஸோன்ஸா நதியின் மேற்குக் கரையிலுள்ள க்ராடிஸ்கா என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

15-தேதி

இட்டாலியர்கள் கார்னியா ப்ரதேசத்தில் உள்ள மால்பார்கெட்டோ என்னுமிடத்தைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

16-தேதி.

இட்டாலியர்கள் டைரோல் ட்ரெண்டினோ எல்லை நாட்டில் ஒவ்வொரு இடமாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். கார்னியா ப்ரதேசத்தில் ஆஸ்ட்ரியர்களுக்கும் இட்டாலியர்களுக்கும் கடுமையாக யுத்தம் நடக்கிறது.

18-தேதி.

இட்டாலியர்கள் காரிஸா என்னுமிடத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷனை நாசம் செய்தார்கள்.

19-தேதி.

இஸோன்ஸா நதியோரமாய் ப்ளாவா என்னுமிடத்தைச்சுற்றி யுத்தம் பலமாக நடந்து வருகிறது.

21-தேதி.

இட்டாலியர்கள் இஸான்ஸோ நதியின் இடதுகரையிலுள்ள ப்ளாவா என்னுமிடத்துக்குப் பக்கத்தில் சில குன்றுகளைப்பிடித்திருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் ட்ரீஸ்டுக்குப் பக்கத்திலுள்ள ஆயுதச் சாலையைத் தாக்கினார்கள்.

22-தேதி.

கார்னியா ப்ரதேசத்தில் இட்டாலியர்கள் மார்பார்கெட்டோ என்னும் இடத்தைத் தாககிக்கொண்டிருக்கிறார்கள்.

25-தேதி.

இட்டாலியர்கள் இஸான்ஸோ நதியின் இடதுகரையில் கியார்னோ என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

28-தேதி.

ட்ரெண்டினோ ப்ரதேசத்தில் பீரங்கியுத்தம் கடுமையாய் நடந்து வருகிறது.

ஆஸ்ட்ரிய ஸப்மரீன் ஒன்று ஒரு இட்டாலிய டார்பிடோக் கப்பலை மூழ்கடித்தது.

## பொதுவிஷயங்கள்.

ஜூன்மீ 4-தேதி.

விரோதி ஆகாயக்கப்பல்கள் இங்க்லண்டின் கிழக்குக் கரையிலும் தென்கிழக்குக் கரையிலும் வெடிகுண்டுகள் போட்டன. சேதம் அதிகமில்லை.

ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் மார்மோராக் கடலில் ஒரு பெரிய ஜெர்மன் ஸைன்யக் கப்பலைத்தாக்கி மூழ்கடித்தது.

8-தேதி.

ஆப்ரிக்காவில் ந்யாஸா ஏரியிலுள்ள ஜெர்மன் துறைமுகமாகிய ஸ்பிங்க்ஸ்ஹேவன் என்னும் பட்டணத்தை இங்க்லீஷ் துருப்புகளும், கப்பல் படையும் தாக்கி, ஜெர்மானியர்களை பட்டணத்திலிருந்து துரத்தினதோடு, யுத்தஸாமான்களையும் பீரங்கிகளுள்ள ஒரு வ்யாபாரக்கப்பலையும் பிடித்துக்கொண்டன.

11-தேதி.

ஒரு ப்ரிட்டிஷ் டார்பிடோக் கப்பல் இங்க்லண்டின் கிழக்குக்கரையோரமாக ஒரு ஜெர்மன் ஸப்மரீனால் மூழ்கடிக்கப்பட்டது.



## GENERAL NEWS.

## பொது வர்த்தமானம்.

ஜூன்மீ 3-தேதி.

**ஸர் ஆர்னல்ட் ஒய்ட்.**—சென்னை ஹைகோர்ட்டில் ப்ரதம ஜட்ஜாக இருந்த ஸர் ஆர்னல்ட் ஒய்ட் லண்டனிலுள்ள இந்தியா மந்த்ரி ஸபையில் ஒரு மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

12-தேதி.

**பூதானம்.** — பூதானம் கவர்ன்மெண்டு இந்திய யுத்த கஷ்டநிவர்த்தி பண்டுக்கு 1-லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறது.

**மதுரைத்தமிழ்ச் சங்கம்.**—இந்த ஸங்கத்தின் 14 வது வருஷாந்தரக்கொண்டாட்டம் இன்று மதுரையில் நடைபெற்றது. கோவாபரெடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராகிய ஆனரபிள் திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக் கண்ணுப்பிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

14-தேதி.

**வைஸ்ராயின் உத்யோககாலம்.** — வைஸ்ராயின் உத்யோககாலம் நவம்பர் மாஸத்தோடு முடிந்து போகிறது. அரசர் அவருடைய உத்யோககாலத்தை வருகிறமார்ச்சுமாஸம் வரையில் அதிகப்படுத்தி யிருக்கிறார்.

18-தேதி.

**இந்திய ஒப்பந்தக் கூலிகள்.**—ஜமய்க்கா கவர்ன்மெண்டார் ஒப்பந்தக் கூலிகள் அந்தத் தீவுக்குள் வரக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். யுத்தத்தால் அங்குள்ள தோட்டக்காரர்கள் தங்கள் வேலைகளைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்களாம். ஆகையால் அங்கே கூலிகள் தேவையில்லையாம்.

19-தேதி.

**மிஸ்டர் கே. ஸ்ரீநிவாஸய்யங்கார்.** — சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்த ஸர். ஸி. சங்கரன் நாயர் லீவு வாங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்கு பதிலாக சென்னை ஹைகோர்ட் வக்கீலாகிய மிஸ்டர் கே. ஸ்ரீநிவாஸய்யங்காரை ஹைகோர்ட் ஜட்ஜாக கவர்னர் நியமித்திருக்கிறார்.

29-தேதி.

**இந்தியாவில் யுத்த ஸாமான்கள் செய்தல்.**—இந்தியா மந்த்ரி கேட்டுக்கொண்டதன்பேரில் இந்தியா கவர்ன்மெண்டார் யுத்தஸாமான்கள் செய்து ஐரோப்பாவுக்கு அனுப்பும் வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஒரு தனி டிபார்ட்மெண்ட் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்ட், ரெயில்வே, ஸொந்த வ்யாபாரிகள் இவர்களுடைய தொழிற்சாலைகளில் யுத்த ஸாமான்கள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

## SEASON

## கால ஸ்திதி

---

### Rainfall.

மழை.—1915௵ ஏப்ரல்மீ 1௳யிலிருந்து 1915௵ ஜூன்மீ 9௳ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 5·65 | 11·63 |
| வால்டேர் | 12·20 | 9·21 |
| காக்கினடா | 7·[illegible]0 | 8·96 |
| மஸூலிப்பட்டணம் | 8·96 | 8·45 |
| நெல்லூர் | 1·03 | 3·73 |
| மதராஸ் | 3·33 | 5·09 |
| கூடலூர் | 1·46 | 4·10 |
| நாகப்பட்டணம் | 2·43 | 4·59 |
| பாம்பன் | 5·49 | 3·08 |
| கொழும்பு | 26·13 | 30·72 |
| திருவனந்தபுரம் | 24·31 | 29·53 |
| கொச்சி | 55·24 | 54·90 |
| கள்ளிக்கோட்டை | 48·11 | 58·76 |
| மங்களூர் | 38·77 | 61·64 |
| மெர்க்காரா | 45·69 | 50·86 |
| ஐதராபாத் | 10·49 | 8·21 |
| பல்லாரி | 7·69 | 5·47 |
| கர்நூல் | 2·74 | 6·75 |
| கடப்பை | 2·49 | 6·82 |
| ஹாஸ்ஸான் | 12·91 | 13·16 |
| பெங்களூர் | 12·93 | 10·31 |
| கொடைக்கானல் | 14·35 | 16.04 |
| உதகமண்டலம் | 23·59 | 18·80 |
| கோயம்புத்தூர் | 8·14 | 6·20 |
| வேலூர் | 8·36 | 8·10 |
| சேலம் | 10·46 | 11·38 |
| திருச்சினப்பள்ளி | 5·83 | 6·92 |
| புதுக்கோட்டை | 10·02 | 7·21 |
| மதுரை | 6·86 | 7·46 |
| திருநெல்வேலி | 5·59 | 5·04 |

# Calendar—பஞ்சாங்கம்.


# ஜனோபிமானி.

(முன்பு ‘பிழைக்கும் வழி’ யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE ‘PRACTICAL LIFE.’

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸஹு, ஆடிமீ, JULY, 1915. — ஸஞ்சிகை 11. No. 11.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The ‘People's Friend’ is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் ‘ஜனோபிமானி’யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ ,, | ,, ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசுந் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் [illegible]வாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸஹூ ஆடிமீ. [ஸஞ்சிகை 11.

## BACKWARDNESS OF INDIAN AGRICULTURE.

## இந்திய விவஸாயிகள் வ்ருத்தியடையாததற்குக் காரணங்கள்.

இந்தியாவில் விவஸாயிகளின்நிலைமை வலுக்காததற்குக் காரணமென்ன ? இந்தக் கேள்விக்கு இதுவரையில் எவரும் தக்க த்ருப்திகரமான காரணங்கள் சொல்லவில்லை. கவர்ன்மெண்டார் விவஸாயத்தை வ்ருத்திசெய்ய ரொம்ப ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்களென்பதில் ஸந்தேகமில்லை. பல வர்ஷங்களாக ஸைதாப்பேட்டையில் ஒரு விவஸாயக் காலேஜ் ஒன்று ஸ்தாபித்து நடத்திவந்தார்கள். இப்போது கோயம்புத்தூரில் ஒரு விவஸாயக்காலேஜ் நடத்திவருகிறார்கள். வடக்கே பேஹார் மாகாணத்தில் பூஸா என்னும் ஊரில் ஒரு விவஸாய ஆராய்ச்சிசாலை ஸ்தாபித்திருக்கிறார்கள். அநேக இடங்களில் விவஸாய ஆராய்ச்சிப்பண்ணைகளும், நிரூபணப் பண்ணைகளும் ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தியாவின் பற்பலவிடங்களில் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபித்திருக்கிறார்கள். இன்னும் ஸமீபத்தில் விவஸாய டிபார்ட்மெண்டைச் சீர்திருத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவைகளால் கவர்ன்மெண்டார் விவஸாயத்தில் அதிக ஊக்கமுள்ளவர்களாயிருக்கிறார்களென்பது நன்றாய்த் தெரியவருகிறது. இவ்வளவு சீர்திருத்தங்கள்செய்தும் விவஸாயமானது ரொம்ப அபிவ்ருத்தியடைந்ததாகத் தெரியவில்லை. இதற்குக் காரணமென்ன ? விவஸாயக் காலேஜுகளில் அடைந்த அறிவை அனுஸரித்து விவஸாயத் தொழில்செய்ய சீர்திருந்திய கலப்பைகளும், மற்ற கருவிகளும், செயற்கை உரங்களும், வாங்கவேண்டியது அவச்யம். இவைகள் வாங்குவதற்கோ மூலதனம்வேண்டும். இந்திய விவஸாயிகளோ பொதுவாய் ரொம்ப ஏழைகளென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அவர்கள் ரொம்ப செலவாகக்கூடிய எந்த சீர்திருத்தத்தையும் செய்வதென்பது ஸாத்யமல்ல. கோவாபரெடிவ் ஸங்கங்களால் பணம் ஸுலபமாய்க் கிடைக்கிறதென்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் கோவாபரெடிவ் ஸங்கங்களால் ரொம்ப நன்மை ஏற்பட்டுவிடவில்லை. இதற்கு முன்னால் விவஸாயிகள் அதிகவட்டியின்பேரில் ஸாவ்கார்களிடத்தில் கடன்வாங்கிவந்தார்கள். கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஏற்பட்டபிறகு விவஸாயிகள் ஸாவ்கார்களிடத்தில் வாங்குவதற்கு பதிலாக சற்றுகுறைந்த வட்டியில் ஷை ஸங்கங்களிடத்திலிருந்து கடன்வாங்கி வருகிறார்கள். கோவாபரெடிவ் ஸங்கங்களின் மெம்பர்கள் தாங்கள் வாங்கியிருக்கும் கடன்களை தவணைப்படி திருப்பிச் செலுத்துவதில்லையென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதனால் விவஸாயிகளுக்கு ஸ்வல்ப வட்டி விகிதத்தில் பணம்கிடைத்தும், அதைக் குறித்தகாலத்தில் திருப்பிச் செலுத்த அசக்தர்களாயிருக்கிறார்களென்று வ்யக்தமாய் ஏற்படுகிறது.

எல்லா விவஸாயப்பொருள்களினுடைய விலைவாசியும் உயர்ந்திருந்தும், விவஸாயிகள் இன்னும் ஏழைகளாகவே இருந்து வருகிறார்கள்.

திவான் பகதூர் கே. க்ருஷ்ணஸ்வாமி ராவ் ஸமீபத்தில் ஒரு கல்வியறிவுள்ள விவஸாயியை இது விஷயமாய்க் கேட்டதில், அவர் பின்வருமாறு பதில்சொன்னாராம்,



நிலத்திற்கு எரு கிடைக்காததனால் நிலத்தின் செழுமை குறைந்துகொண்டே வருகிறது. பொது மேய்ச்சல் தரைகள் ரொம்ப குறைந்துபோய்விட்டதால், விவஸாயிகள் வேண்டிய அளவு கால்நடைகள் வைத்துப் பராமரிக்க முடிவதில்லை. இதனால் தொழுவத்தெரு வேண்டிய அளவு கிடைப்பது கஷ்டமாய்விட்டது. காடுகள் அழிந்துபோகாம லிருப்பதற்காக கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கும் கடுமையான நிபந்தனைகளால் வேண்டிய அளவு தழை எரு கிடைப்பதும் இல்லை. கால்நடைகளை அன்யதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்வதாலும், இதர பொருளாதார ஸம்பந்தமான காரணங்களாலும் உழவு மாடுகளின் விலை ரொம்ப உயர்ந்துவிட்டது. கூலியாட்களோ சில வர்ஷங்களுக்கு முன்பு வாங்கிவந்த கூலி விகிதத்தைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகமாக கூலி கேட்கிறார்கள். இதற்குமுன் க்ராமவாஸிகள் ஸர்க்கார் நிலங்களில் தங்கள் கால்நடைகளை யாதொரு பணச்செலவுமில்லாமல் மேய்த்து வந்தார்கள்; ஸர்க்கார் காடுகளிலிருந்து பணங்கொடுக்காமல் கூரைபோடுவதற்கு நாணலும், புல்லும் அறுத்து வந்தார்கள்; வீட்டு உபயோகத்துக்காக விறகு வெட்டி வந்தார்கள்; விவஸாயக் கருவிகள் செய்வதற்காக மரங்கள் வெட்டிவந்தார்கள். இப்போது அப்படிப்பட்ட ஸௌகர்யங்கள் கிடையா. இவைகளையெல்லாம் இப்போது விலை கொடுத்துத் தான் வாங்கவேண்டியிருக்கிறது.

முன்பு க்ராமவாஸிகள் வீடுகளில் நூல் நூற்று நல்ல வரும்படி யடைந்துவந்தார்கள். இப்போது மெஷீன் நூல் வந்ததில் அந்தத் தொழில் அடியோடு போய்விட்டது.

விவஸாயிகள் தங்கள் நிலங்களில் விளையாத மற்ற உணவுப் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டி யிருக்கிறது.

மேற் சொன்ன பலவகைக் காரணங்களால் நேர்ந்த பலன் என்னவென்றால், விவஸாயிகளுக்கு தங்கள் மாஸூலை உயர்ந்த விலைக்கு விற்பதால் கிடைக்கும் லாபமானது, இந்தியாவின் தற்கால பொருளாதார நிலைமையால் ஏற்பட்ட அதிகப்படிச் செலவுக்குப் பாதிக்குக்கூடப் போதுவதில்லை.

மேலும் விவஸாயம் அபிவ்ருத்தியடையாததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. நிலக்காரர்கள் தங்கள் ஸொந்தச் செலவில் நிலத்தில் ஏதாவது சீர்திருத்தம் செய்தால் ஸெட்டில்மெண்ட் உத்யோகஸ்தர் ஸெட்டில்மெண்ட் ரிவிஷன் காலத்தில் நிலத்தின் வரியை உயர்த்தி விட்டால் என்ன செய்கிறதென்று பயந்து, அவர்கள் விவஸாய சீர்திருத்தத்துக்கு ஒன்றும் செலவு செய்ய முன்வருவதில்லை. கவர்ன்மெண்டார் 30 வர்ஷத்துக்கொருதடவை நிலவரியை ஸெட்டில்மெண்ட் செய்யும் வழக்கத்தை விட்டுவிட்டாலொழிய, விவஸாயத்தில் சீர்திருத்தம் ஏற்படுவதென்பது ஸாத்யமல்ல.

## OIL PRESSING INDUSTRY.

## எண்ணெயாட்டுந் தொழில்.

சென்ற ஐப்பசிமாஸத்து 'ஜனாபிமானி' யில் எண்ணெய் வித்துக்களில் முக்யமாய் வேர்க்கடலையை இந்தியாவிலேயே எண்ணெய் ஆட்டுவதைப் பற்றி கைத்தொழில் டிரெக்டர் சொன்ன விஷயங்களைப் பிரசுரித்தோம். அவர் தமது ரிபோர்ட்டில், அப்போதிருந்த நிலைமையில் வ்யாபாரம் கூடிய சீக்ரம் சரியான நிலைமையை அடைந்து விடுமென்று தோன்றினதால், எண்ணெயாட்டுவதற்கு பெரிய வேலைகள் ஒன்றும் செய்யவேண்டியதில்லையென்றும், வ்யாபாரத்தின் நிலைமை சீக்ரம் சீர்திருந்தாவிட்டால் எண்ணெயாட்டுவதற்கு யந்த்ரங்கள் வாங்கவேண்டியது அவச்யமாகுமென்றும் தெரிவித்திருந்தார்.

சென்ற நவம்பர் மாஸத்தில் கைத்தொழில் டிரெக்டர்பொதுவாய் எண்ணெயாட்டும் தொழில் ஸ்தாபிப்பதைப்பற்றிப் பரிசீலனை செய்து சில

ப்ரோஜனகள் செய்து ஒரு குறிப்பு எழுதி கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார். அவர் சொல்லும் விஷயங்களையும் அது விஷயமாய் கவர்ன்மெண்டின் அபிப்ராயத்தையும் இங்கு சுருக்கமாய்த் தெரிவிக்கிறோம்.

எண்ணெய் வித்துக்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒருவகை வித்துக்களை ஒரு தடவை எண்ணெயாட்டினால் போதும். இன்னொருவகை வித்துக்களை இரண்டு தடவை ஆட்டவேண்டும். ஒருதடவை மாத்ரம் எண்ணெய் ஆட்டவேண்டுமென்றால், அதற்கு 'ஆங்லோ-அமெரிக்கன் ப்ரெஸ்' என்று சொல்லப்படும் யந்த்ரம் போதுமானது. இரண்டுதடவை ஆட்டி எண்ணெ யெடுக்கவேண்டிய இரண்டாவது வகுப்பு விதைகளுக்கு 'டபிள் கேஜ்' என்று சொல்லப்படும் யந்த்ரங்கள் வேண்டியதாயிருக்கும். ஆனால் இந்த இரண்டுவகை யந்த்ரங்களில் எது வேண்டுமானாலும் வாங்கி இரண்டுவகை விதைகளுக்கும் உபயோகிக்கலாம். ஆனால் இரண்டுதடவை ஆட்டவேண்டிய விதைகளுக்கு ஆங்க்லோ அமெரிக்கன் ப்ரெஸ்களை உபயோகித்தால் எண்ணெய் நல்லதாகக் கிடைக்காது. ஒருதடவை ஆட்டவேண்டிய வித்துக்களுக்கு 'கேஜ்' யந்த்ரங்களை உபயோகித்தாலோ, இந்த யந்த்ரங்களுக்கு செலவு அதிகம் பிடிக்குமாகையால், அனாவச்யமாக முதல் பணம் அதிகமாகப் போடவேண்டியிருக்கும்.

மேற்கூறிய இரண்டுவகை ப்ரெஸ்களும் பற்பல அளவுகளில் விலைக்குக் கிடைக்கும்.

ஆனால் பெரியதாக எண்ணெயாட்டும் தொழில் ஸ்தாபிக்கவேண்டு மென்றால் அதற்கு வாங்க வேண்டிய ப்ரெஸ் ஒருநாளுக்குக் குறைந்தது ஸுமார் 20-டன் எண்ணெய் வித்துக்களை ஆட்டக்கூடியதாக இருக்கவேண்டும்.

ஸுமார் 15-வர்ஷங்களுக்கு முன்னால் ஸ்வல்ப எண்ணெய் வித்துக்களை ஆட்டுவதற்காக அமெரிக்காவில் ஆயில் எக்ஸ்பெல்லர் என்று ஒரு யந்த்ரம் செய்து உபயோகித்தார்கள். இந்த யந்த்ரம் கேஜ் ப்ரஸ்ஸை அனுஸரித்து அமைக்கப்பட்டதாகும். ஆனால் இது தற்போது ரொம்ப உபயோகத்திலில்லை.

இதற்குக் காரணம் என்னவென்றால், சிறு யந்த்ரங்களை உபயோகிப்பதில் இரண்டுவித நஷ்டமேற்படுகிறது. சிறு ப்ரெஸ்களில் கிடைக்கும் எண்ணெய் பெரிய ப்ரெஸ்களில் கிடைக்கும் எண்ணெயைவிடத் தாழ்ந்ததாயிருப்பதோடு, எண்ணெயும் குறைவாய்க் கிடைக்கிறது. சென்ற சில வர்ஷங்களாக எண்ணெய் வ்யாபாரிகள் ஒரு குறிப்பிட்ட மாதிரியான எண்ணெயே வேண்டுமென்கிறார்கள். சிறு யந்த்ரத்தில் இந்த மாதிரி உயர்ந்த எண்ணெய் கிடைப்பது கஷ்டம். வ்யாபாரிகள் சிறு யந்த்ரங்களில் கிடைக்கும் எண்ணெய் தாழ்ந்ததா யிருக்கிறதென்று அதற்குக் குறைந்த விலைதான் கொடுக்கிறார்கள்.

உதாரணமாக வேர்க்கடலையை எடுத்துக்கொள்வோம். சிறு ப்ரெஸ்ஸில் ஆட்டினால் நூற்றுக்கு 80-வீதம் எண்ணெய் கிடைக்கும். பெரிய ப்ரெஸ்ஸுகளிலோ நூற்றுக்கு 88-வீதம் அல்லது அதற்குமேல் எண்ணெய் கிடைக்கிறது. சிறு ப்ரெஸில் கிடைக்கும் பிண்ணாக்கில் எண்ணெய் அதிகமாகத் தங்கியிருக்கிறது. ஆனால் எண்ணெய் அதிகமாய்த் தங்கியிருப்பதற்காக பிண்ணாக்குக்கு அதிக விலை கிடைப்பதில்லை. எண்ணெய் குறைவாய்க் கிடைத்ததினால் நூற்றுக்கு 8-வீதம் எண்ணெயில் நஷ்டம் ஏற்படுகிறது.

மேலும் பெரிய ப்ரெஸ்களில் விதையை இரண்டு தடவை ஆட்டுகிறார்கள். முதலில் கிடைக்கும் எண்ணெயை சாப்பாட்டில் உபயோகிக்கிறார்கள். இரண்டாவது கிடைத்த எண்ணெயை ஸோப்பு செய்வதில் உபயோகிக்கிறார்கள். ஆகவே இரண்டு தடவை ஆட்டுவதில் இரண்டுவகை எண்ணெய் கிடைக்கிறது. முதலில் கிடைக்கும் எண்ணெய்க்கு அதிக விலை கிடைக்கிறது. சிறு ப்ரெஸ்களிலோ ஒரேதரம் தடவை எண்ணெயாட்டுவதால்



இரண்டுவகை எண்ணெயும்கலந்து கிடைக்கிறது. கலந்த எண்ணெய் பெரிய ப்ரெஸ்களில் கிடைக்கும் இரண்டாந்தரத்து எண்ணெயைவிட உயர்ந்ததென்றாலும், இரண்டுவகைகளையும் பிரிக்க முடியாதாகையாலும், கலப்பு எண்ணெயை இரண்டாந்தரத்து எண்ணெய் உபயோகப்படும்தொழில்களில்தான் உபயோகிக்கலா மாகையாலும், அதற்கு இரண்டாம் தரத்து எண்ணெய்க்குக்கிடைக்கும் விலைதான் கிடைக்கிறது.

ஆகவே அன்ய தேசங்களுக்கு எண்ணெய் அனுப்பும் நோக்கத்துடன் எண்ணெய் ஆட்ட வேண்டு மென்றால், அதற்கு தினம் குறைந்தது 20-டன் வித்துக்களையாவது ஆட்டக்கூடியபெரிய ப்ரெஸ்கள்தான் தகுந்தவை.

ஆனால் இந்தியாவிலேயே எண்ணெய் விற்பதற்காக எண்ணெய் ஆட்டவேண்டுமென்றால், அதற்கு தினம் ஒன்றுக்கு 3-டன் வித்துக்களை ஆட்டக்கூடிய சிறிய ப்ரெஸ்கள் போதும். ஏனென்றால் இந்தியாவின் உள்நாட்டு வ்யாபார நிலைமை அன்யதேசங்களின் வ்யாபாரநிலைமையைப்போல் அவ்வளவு கடுமையாயில்லை. எண்ணெய் ஆட்டுவதில் எண்ணெய் கொஞ்சம் குறைவாய்க் கிடைப்பதால் ரொம்ப நஷ்டம் ஏற்பட்டுவிடாது. எண்ணெய் விலை மலிவாகக் கிடைக்கக்கூடு மென்றால் போதும். அது ரொம்ப உயர்ந்ததாக இருக்க வேண்டியது கட்டாயமில்லை. பொதுவாய்ச்சொல்லுமிடத்து, எண்ணெய் சுத்தமாயும் உயர்ந்ததாயும் கிடைப்பதற்கு என்ன செலவு ஏற்படுகிறதோ, அதற்குத் தகுந்தபடி அந்த உயர்ந்த எண்ணெய்க்கு அதிகவிலை கிடைப்பது கிடையாது. ஆகவே இந்தியாவில் செலவாகக்கூடிய எண்ணெய்க்கு, மேற்சொன்னபடி 3 டன் ஆங்க்லோ அமெரிக்கன் ப்ரெஸை உபயோகிப்பது நல்லது. இது செக்குகளில் ஆட்டுவதைவிட உயர்ந்தது. ஆண்டர்ஸன் ஆயில் எக்ஸ்பெல்லர் என்னும் யந்த்ரத்தையும் உபயோகிக்கலாம். ஆனால் இது கொஞ்சம் விலை ஜாஸ்தி.

சிறு யந்த்ரங்கள் ஸ்தாபிப்பதற்கு ஸாதகமாக சில ந்யாயங்கள் சொல்லலாம். முதலாவது இதற்கு அதிக மூல தனம் வேண்டியதில்லை. எண்ணெய் வித்துக்களும் கொஞ்சமாகத்தான் வேண்டியிருக்கும். தக்க இடம் பார்த்து யந்த்ரங்களை ஸ்தாபித்து விட்டால், எண்ணெய் வித்துக்கள் கிடைப்பதற்கு கஷ்டம் ஏற்படாது. கிடைக்கும் எண்ணெயோ ஸாதாரண கடை விலைக்கு ஸுலபமாய் விலைப்போகக்கூடியது. இந்த யந்த்ரங்கள் ஸ்தாபிப்பதில் ஸாதாரணமாய் லாபமே கிடைத்து வரும். எப்படியும்ரொம்ப நஷ்டம் ஏற்படுவதற்கில்லை. ஆனால் சிறு யந்த்ரங்கள் ஸ்தாபிப்பதில் அதிக லாபம் வராது. ஏனென்றால் புது யந்த்ரங்கள் ஸ்தாபிப்பதற்கு வாங்கிப்போடும் முதலுக்கு வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. யந்த்ரங்களின் மதிப்புக்குறைவுக்காக லாபத்தில் ஒரு தொகை எடுத்து வைக்க வேண்டும். சிறு யந்த்ரங்களால் வரும் அதிக லாபத்தில் மேலே விவரித்த இரண்டு பாபத்துக்கும் ஒரு தொகையை எடுத்து விட்டால், நிகரான லாபம் குறைவாகத்தான் இருக்கும்.

இந்த சிறு யந்த்ரங்களைக் கொண்டு எண்ணெயாட்டுந் தொழிலானது, தேசத்தில் எண்ணெய்க்கு எவ்வளவு க்ராக்கியிருக்கிறதோ, அவ்வளவு தூரந்தான் அபிவ்ருத்தியடையும். நமது தேசத்தில் எண்ணெய்க்குள்ள க்ராக்கியை ரொம்ப அதிகமாக்குவதும் முடியாது. அதாவது நமது தேசத்தில் இப்போது வேண்டியிருக்கும் எண்ணெயைவிட ரொம்ப அதிகமாக எண்ணெய் வேண்டியிராது. ரொம்ப உயர்ந்ததாக எண்ணெய் வேண்டுமென்று சொல்கிறவர்களும் அதிகமாக இருக்க மாட்டார்கள்.

மேலும் சிறு யந்த்ரங்கள் ஸ்தாபிப்பது இந்த யுத்த காலத்தில் தான் ஸௌகர்யமாய் முடியுமென்பதற்கில்லை. யுத்த காலத்தில் எவ்வளவு ஸௌகர்யமாய் ஸ்தாபிக்கலாமோ அவ்வளவு ஸௌகர்யமாகவே யுத்த மில்லாத ஸாதாரண

காலத்திலும் இவைகளை ஸ்தாபித்துக் கொள்ளலாம்.

நமது தேசத்திலிருந்து எண்ணெய் வித்துக்கள் அன்யநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதியாகிவருகின்றன. அவைகளை இவ்விடத்திலேயே எண்ணெயாக ஆட்டினால், எண்ணெய் அவ்வளவையும் நமது நாட்டிலேயே உபயோகிக்க முடியாது. வெளி நாடுகளுக்குத்தான் ஏற்றுமதி செய்ய வேண்டி வரும். அப்படி எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கு இந்த யுத்த காலத்தை விட ரொம்ப ஸௌகர்யமான காலம் வேறு கிடைக்காது.

ஸாதாரண காலங்களில் ஓரிடத்தில் பற்றுவரவு ஏற்பட்டுவிட்டால், அந்த வ்யாபாரத்தைக் கலைப்பது ச்ரமம். உதாரணமாய் மார்ஸேல்ஸுக்கு இந்தியர்கள் வேர்க்கடலையை அனுப்ப, மார்ஸேல்ஸிலுள்ள தொழில்சாலைகள் அதிலிருந்து எண்ணெய் முதலியவைகள் தயார் செய்து இதர தேசங்களுக்கு விற்கிறார்கள். இந்தியர்களே இந்தியாவில் வேர்க்கடலையை ஆட்டி எண்ணெயையும் மற்றப் பொருள்களையும் மார்ஸேல்ஸிலிருந்து வாங்கிப்போன தேசத்தார்களுக்கு விற்கலாமென்றால், அது ஸாதாரணமாய் ஸாத்யப் படுவதில்லை. ஆனால் தற்காலம் யுத்தத்தால் உலகமெங்கும் வ்யாபாரம் நிலைகுலைந்திருப்பதால், மேற்குறித்த வ்யாபாரக் கஷ்டம் இப்போது இந்தியாவுக்குக் கிடையாது. அன்ய நாடுகளுக்கு வேண்டியிருக்கும் சரக்குகளை இந்தியாவில் உடனே செய்து அனுப்பக்கூடுமானால், இந்திய அன்யவ்யாபாரம் ரொம்ப பலமடையும். ஆனால் அப்படி உடனே தாமஸமின்றி அன்ய நாடுகளுக்குவேண்டியிருக்கும்சரக்குகளைச்செய்ய இந்தியாவில் வேண்டிய யந்த்ரங்களும், கருவிகளும் போதா. மேலும் யுத்தம் முடிந்தபின் வ்யாபாரம் நிலை குலைந்திருக்கக்கூடிய காலத்துக்குள், ஐரோப்பாவிலுள்ள எண்ணெயாட்டும் தொழில்களைப்போல் அவ்வளவு ப்ரபலமாக இந்தியாவில் ஷை தொழிலை ஸ்தாபித்து விடலாமென்று எண்ணுவதற்கில்லை.

இன்னும், கையில் உள்ள எண்ணெய் வித்துக்களைக் கேட்பாரில்லையே என்று, எல்லாவற்றையும் எண்ணெயாக ஆட்டி மேல்நாடுகளுக்கு அனுப்பலாமென்றால், அதுவும் ஸாத்யப்படாத கார்யமாகும்.

அப்படியிருந்தாலும், வெளிநாடுகளில் தேவையாயிருக்கும் எண்ணெய் வகைகளை இங்கு தயார்செய்ய சில யந்த்ரசாலைகள் ஸ்தாபித்து அவ்விடங்களுக்கு அனுப்பி இவ்விதமாக எண்ணெய் வ்யாபாரத்தை வ்ருத்தி செய்வதற்கு யாதொரு ஆக்ஷேபணையும் சொல்வதற்கில்லை. இந்த வ்யாபாரம் ஐரோப்பாவில் கொஞ்சம் வேரூன்றிவிட்டால், காலக்ரமத்தில் எண்ணெயாட்டும் தொழில் முழுவதும் இந்தியாவுக்கே சேர்ந்ததாய்விடும். எண்ணெயாட்டுந் தொழிலை ஆரம்பிப்பதற்கு இந்த ஸமயத்தைப்போல் வேறு எந்த ஸமயமும் நல்லதாய் கிடைப்பது கஷ்டம். ஆனால் அன்யநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஏராளமாய் எண்ணெயாட்டுவதில் சில கஷ்டங்களும் இருக்கின்றன. முதலாவது இந்தியாவில் எண்ணெயாட்டுவதால் லாபம் கிடைக்குமா என்பது ஸந்தேகம். தற்காலத்துத் தொழில் சாலைகளில் செய்யப்படும் முக்யபொருள்களின் விலை தொழில்சாலையின் செலவுக்கு சரியாய்ப் போய்விடுகிறது. முக்யப்பொருள்களைத் தவிர உள்ள மற்ற உபபொருள்களை விற்பதால்தான் லாபம்கிடைக்கிறது. எண்ணெயாட்டுகிறவர்கள் தங்கள் மில்லில் கிடைக்கும் பொருள்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இடத்துக்கு அனுப்பி விற்று, ஒவ்வொன்றுக்கும் உயர்ந்த விலையை அடைகிறார்கள். முதல் தடவை ஆட்டிக் கிடைத்த எண்ணெயை ஆகாரப்பொருள்கள் செய்பவர்களுக்கு விற்கிறார்கள். இரண்டாவது தடவை ஆட்டிக் கிடைத்த எண்ணெயை ஸோப் செய்பவர்களுக்கு விற்கிறார்கள். பிண்ணாக்கை விவஸாயிகளுக்கு விற்கிறார்கள். எண்ணெயை சுத்தம் செய்யும்போது நிற்கும் 'கசடு'களை மிட்டாய் செய்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் விற்கிறார்கள்.



எண்ணெய் வித்துக்கள் உண்டாகும் இடத்திலேயே எண்ணெயாட்டுவதில் சிலஸௌகர்யங்களிருக்கின்றனவென்றாலும், எண்ணெயையும் மற்ற உபபொருள்களையும் விற்பதில் நஷ்டங்கள் ஏற்பட்டு, லாபத்தைக் குறைத்து விடும்.

மேலும் ஐரோப்பாவில் இன்னமாதிரியான எண்ணெய் வகைகள் தேவையாயிருக்கின்றன என்பதும் வ்யக்தமாய்த் தெரியாது. வ்யாபாரிகள் தங்களுக்கு வேண்டிய குணங்கள் அமைந்த பொருள்களை வாங்குவதில் எவ்வளவு பணம் தேவையானாலும் செலவழிக்கிறார்கள். தாங்கள் விரும்பாத குணங்கள் உள்ள பொருள்களாயிருந்தாலோ தக்கவிலை கொடுப்பதில்லை.

மேலும் எண்ணெய் வித்துக்கள் வேண்டிய மட்டும் கிடைப்பதும் கஷ்டம்.

ஆனால் மேற்சொன்ன ஸங்கடங்களெல்லாம் எவ்வளவு தூரம் தொழிலபிவ்ருத்தியைத் தடுக்கக் கூடுமென்பது அனுபவத்தில் பரீக்ஷார்த்தமாக கொஞ்சம் எண்ணெயாட்டி, ஐரோப்பாவுக்கு அனுப்பி, அவைகள் எப்படி விலைபோகின்றன என்று பார்த்தால் தான் தெரியும். ஆனால் இப்படிச்செய்வதற்குரொம்பகாலம் பிடிப்பதோடு, மூலதனமும் அதிகம் வேண்டியிருக்கும். நஷ்டம் ஏற்பட்டாலும், அது ஸாமான்யமாயிராது. ஆனால் இந்தியாவில் எப்பொழுது எண்ணெயாட்டுந் தொழிலை அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றாலும் அப்பொழுது முதலில் இந்தமாதிரி நஷ்டத்துக்குத் துணிந்துதான் தொழிலாரம்பிக்க வேண்டி வரும். தற்காலம் எண்ணெய் வித்துக்களுக்கு விலைகுறைவாதலால் அப்படி நஷ்டம் ஏற்படுவதாயிருந்தால் அது ரொம்ப குறைவாகவே இருக்கும். ஆனால் இந்தத் தொழில் லாபகரமாய் நடந்தாலோ அதனால் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய நன்மைகள் ஏராளமானவை.

இவைகளையெல்லாம் உத்தேசிக்கையில், பெரிய யந்த்ரங்களை வாங்கிவைத்து எண்ணெயாட்டுந்தொழிலை ஸ்தாபிப்பது நல்லதென்று ஏற்படுகிறது.

அன்யதேசங்களுக்கு அனுப்ப எண்ணெய் வகைகளை ஆட்டுவதற்கு இரண்டுதடவை ஆட்டக்கூடிய பெரிய ப்ரெஸ்கள் வேண்டும். தற்போது சென்னை, பெஜவாடா, பல்லாரி, கோயம்புத்தூர், கூடலூர் ஆகிய இந்த இடங்களுள் ஏதாவது மூன்றில் மூன்று பெரிய ப்ரெஸ்கள் ஸ்தாபிக்கலாம். இந்த ப்ரெஸ்களில் ஒன்று ஸ்தாபிக்க, கட்டிடச் செலவு உள்பட $1\frac{1}{4}$ லக்ஷம் ரூபாய் ஆகும். இதைத்தவிர நடைமுதல் பணம் ப்ரத்யேகமாய் வேண்டியிருக்கும். மொத்தம் மூன்று எண்ணெய்ச் சாலைகளுக்கும் எல்லாச் செலவும் சேர்த்து ஸுமார் 5-லக்ஷம் ரூபாய் பிடிக்கும்.

எண்ணெயை மேல்நாடுகளுக்கு அனுப்புவதற்கு பீப்பாய்கள் உதவா, ஏனென்றால் அவைகளில் எண்ணெய் ஒழுகிப்போகக் கூடும். அவைகளுக்கு விலையும் அதிகம். அவைகள் அதிகமாயும் கிடைக்கமாட்டா. இதற்கு எண்ணெய்த் தகரங்கள் தான் ச்லாக்யமானவை. எண்ணெய்த் தகரங்கள் செய்ய ஸுமார் 7500 ரூபாயில் சில யந்த்ரங்கள் வாங்கவேண்டி யிருக்கும்.

பெரிய யந்த்ரங்கள் ஸ்தாபிக்காமல் சிறு யந்த்ரங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் அபிப்ராயப்பட்டால் பலவகைச் சிறு யந்த்ரங்களைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம். இந்த யந்த்ர சாலைகளில் ஒன்றில் எண்ணெய் சுத்தம் செய்ய ஒரு சிறு யந்த்ரத்தை பரீக்ஷார்த்தமாக உபயோகித்துப் பார்க்கலாம். 5-சிறு ப்ரெஸ்கள் உபயோகிக்கலாமென்றால் அதற்கு ஸுமார் $1\frac{1}{8}$ லக்ஷம் ரூபாய் செலவுபிடிக்கும். சிறு ப்ரெஸ் ஒன்று மாத்ரம் ஸ்தாபிப்பதென்றால் 47,000 ரூபாய் போதும்.

**கவர்ன்மெண்டின் தீர்மானம்**—மேலே விவரித்த யோசனைகளின்பேரில் கவர்ன்மெண்டார் பின்வருமாறு தீர்மானித்திருக்கிறார்கள். மேல்நாட்டில் அநேக தேசங்களில் எண்ணெய் இறக்குமதிக்கு வரி போடுவதாலும், எண்ணெய்வித்துக்களுக்குப் பதிலாக எண்ணெயாக ஏற்றுமதி செய்வதில் ரொம்ப அசௌகர்யங்கள் இருப்பதாலும், மேல்நாடுகளில் எண்ணெயை விலைக்கு வாங்குகிறவர்கள் ரொம்ப உயர்ந்த எண்ணெயாக இருந்தாலொழிய வாங்கமாட்டார்களாகையாலும், இப்போதிருக்கும் நிலைமையை உத்தேசித்து ஏற்றுமதிக்காக எண்ணெய் ஆட்டுந் தொழில் ஸ்தாபித்தால் லாபமாக இருக்குமென்பது ஸந்தேகமாயிருக்கிறது. ஆனால், இது ஒரு புறமிருக்க, தற்போது நமது நாட்டில் அநுஷ்டானத்திலிருந்து வரும், அதிக சேதம் உண்டாகக்கூடிய, எண்ணெயாட்டும் முறைகளை சீர்திருத்தவும், புது முறைகளால் கிடைக்கும் எண்ணெயை உபயோகித்து புதுக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்கவும் முயற்சி செய்யலாம். உதாரணமாக நெய்க்குப் பதிலாக எண்ணெயிலிருந்து தாவர நெய் தயாரிக்கலாம். ஸோப்புத் தொழில் ஸ்தாபித்தாலும் லாபகரமாயிருக்கும்.

மேலும் தற்போது எண்ணெய் வித்துக்கள் ஸௌகர்யமாய்க் கிடைக்குமாதலால், மேல் நாடுகளில் விற்பதற்கும், இந்த தேசத்திலேயே உபயோகிப்பதற்கும், ஏராளமாக எண்ணெயாட்டுவது ஸாத்யமாகுமா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யவேண்டியது அவச்யம். இதற்கு கவர்ன்மெண்டார் 1-லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்கிறார்கள். கைத்தொழில் டிரெக்டர் இந்தப் பணத்தை எப்படிச் செலவழிக்கலாமென்பதைப் பற்றியும், எண்ணெயாட்டுந் தொழிலை யனுஸரித்து என்ன கைத்தொழில்கள் ஸ்தாபிக்கலாமென்பதைப்பற்றியும் பரிசீலனை செய்து தெரிவிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள்.

மேலும், கைத்தொழில் டிரெக்டர் தமது ரிபோர்ட்டில் தெரிவித்திருக்கும் பெரிய ப்ரெஸ்களில் ஒன்றையும், சிறு ப்ரெஸ்களில் சிலவற்றையும் வாங்கி எண்ணெயாட்டுவது நல்லதென்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

## SOME HEALTH RULES.

BY T. K. RAMIAH.

## சில ஸௌகாதார விதிகள்.

1. சோம்பேறித்தனமாய்ப் படுத்துக்கொண்டிராமல், விடியற் காலத்தில் ஸுமார் 4 அல்லது 5 மணிக்கு ஸந்தோஷமாயும் சிரித்த முகத்துடனும் எழுந்திரு. வாயைத் தண்ணீரால் கழுவி, தேகம் முழுவதையும் உள்ளங் கைகளினால் 5-நிமிஷம் நன்றாய்த் தேய். பிறகு ஸுமார் 10-தடவை பெரும் மூச்சாய் காற்றை ச்வாஸித்து பெரும் மூச்சாயே வெளியே விடு. பின்பு, ஒரு சுத்தமான இடத்தில், குறித்த நேரத்தில், ஜல மலங்களைக் கழிக்கவேண்டும்.

2. வேப்பங்குச்சி, ஆலங்குச்சி அல்லது வேலங்குச்சியினாலாவது (ஆலும் வேலும் பல்லுக்குறுதி.) ப்ரஷினாலாவது பற்களை சுத்தமாய் விளக்கு. வாரத்தில் ஒருமுறையாவது தேகம் முழுவதும் எண்ணெயால் தேய்த்து ஸ்நானம் செய்யவும். நன்றாய்க்காற்று வீசும் இடத்தில் தினஸரி குறைந்தது அரைமணி நேரம் தேகாப்யாஸம் செய்வது அத்யாவச்யம். தேகாப்யாஸம் செய்யும் போது உன் மனது வேறு ஒரு விஷயத்திலும் செல்லக்கூடாது. விடு முறை நாட்களில், கூடிய மட்டும் திறந்த வெளியிலிரு; வெகு தூரம் நடந்து சென்று வா. ஒரே தடவையில் 20 மையில் தூரம் நடக்க முடியாமல் போனால், நீ "ஆண்பிள்ளை" என்று சொல்லிக் கொள்ளத் தகுதியற்றவன்.

3. சுத்தமாயிருத்தல் தேக ஸௌக்யத்தையும் மனஸ் ஸமாதானத்தையும் வ்ருத்தி செய்கிறது.



காலை தேகாப்யாஸத்திற்குப் பிறகு, ச்வாஸம் ஸாதாரண நிலைமைக்கு வந்ததும், கண், முகம், தலை, மார்பு இந்த இடங்களில் முதலில் குளிர்ந்த தண்ணீரை விட்டு, பிறகு நன்றாய் ஸ்நானம் செய்து, ஒரு துவாலையால் நன்றாய்த் துவட்டிக் கொள்ளவும்.

4. 'கந்தையானாலும் கசக்கிகட்டு' என்றவாறு உன்னுடைய உடைகளை எப்பொழுதும் சுத்தமாய் வைத்துக்கொள். சுத்தமான காற்று தேகத்தின் மேல் பரவுவதற்குத்தடையாக இராதபடி, உன் உடைகள் தேகத்தை இறுக்கிப்பிடித்துக் கொண்டிராமல் இருக்கட்டும். காலைக் கெட்டியாய்ப் பிடிக்கும் பூட்ஸ்களைத்தரியாதே.

5. பரிசுத்தமானதும் புதிதானதுமான காற்றையே உட்கொள். சாப்பிடுவதற்கு முந்தியும் பிந்தியும் கைகளையும் வாயையும் தண்ணீரால் அலம்பு. சாப்பிடும்பொழுது ஸந்தோஷமாயும் புன் சிரிப்புடன் கூடியவனாயுமிரு. மிகவும் சூடானதும் மிகவும் குளிர்ந்ததுமான பானங்கள் (தண்ணீர் முதலியன) கெடுதலானவை. இரவில் வெகுநேரம் கழித்து சாப்பிடாதே. ஒன்றையும் அடிக்கடியாவது அளவுக்கு மிஞ்சியாவது சாப்பிடாதே. அளவுக்கு மிஞ்சினால் அம்ருதமும் நஞ்சன்றோ. பசியாயிருக்கும் பொழுதுதான் ஆகாரம் உட்கொள்ளவேண்டும்; தாகமாயிருக்கும் பொழுதுதான் நீர் அருந்தவேண்டும். கோதுமை, மா, அரிசி, காய்கறிகள், பருப்பு முதலிய போஷணசக்தியுள்ள பதார்த்தங்களையே, மிதமாய், சரியான காலங்களில், நன்றாய் மென்று, உட்கொள்ளவேண்டும். உன் பற்களுக்கும் தாடைகளுக்கும் வேலை கொடுக்கவேண்டுமென்பதை மறந்துவிடாதே. பரிசுத்தமானதும் புதிதாயுமுள்ள பாலை வேண்டியமட்டும் சாப்பிடலாம். அது மூளைக்கு நல்ல மருந்து. புளித்த மோரை உபயோகிப்பது அனேக வ்யாதிகளைத்தடுக்கும். சாப்பாட்டின் முடிவில் பழங்களைச் சாப்பிடவேண்டும், இது பற்களைச் சுத்தமாக்குவதற்கு உதவியாயுள்ள இயற்கையின் வழி. ஆப்பிள் கடவுளின்பழம் எனச் சொல்லப்படுவதுண்டு. அதில் பாஸ்பாஸ் இருக்கிறது. வாழைப்பழம், வாதாம்பருப்பு, கிச்சிலிப்பழம், கொடிமுந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அத்திப்பழம் முதலியவை போஷண சக்தியுள்ள பதார்த்தங்கள். சாப்பிடும்பொழுது தண்ணீரைக் கூடியமட்டும் குறைவாகக்குடி. சாப்பிட்டு அரைமணி வரையில் கடினமான வேலையொன்றும் செய்யாதே. எப்பொழுதும் சிறிது இளைப்பாறு அல்லது இடது புறமாகப்படுத்துக்கொள். கண்டதையெல்லாம் வயிற்றிற்போட்டு திணாத்திணா நிரப்புவதைவிட பட்டினியாய்க் கிடப்பது மேல்.

6. நல்ல வெளிச்சமில்லாத இடத்தில் வாசிக்காதே. மேஜையின்மீது சாய்ந்துகொள்ளாதே. எப்பொழுதும் நிமிர்ந்து உட்கார். உன் கண்கள் களைத்துப்போயிருப்பதாய்த் தோன்றினால், அப்பொழுது வாசிப்பதும் எழுதுவதும் கூடாது. முகத்திலிருந்து ஸுமார் 14 அங்குல தூரத்தில் புஸ்தகத்தைப் பிடித்துக்கொள். வாசிப்பதற்கு வெளிச்சம் பின்புறத்திலிருந்து இடதுதோளின் வழியாய் வரவேண்டும். சில நிமிஷங்களுக்கு ஒருதடவை புஸ்தகத்தைவிட்டு வேறு எதையாவது பார்த்து கண்ணைக் களைப்பாறச் செய்யவும். படிக்கத்தொடங்குமுன் சுத்தமான குளிர்ந்த தண்ணீரினால் கண்களைக் கழுவவேண்டும். ஸூர்யனையாவது மிகவும் ப்ரகாசமான வெளிச்சத்தையாவது உற்றுப்பார்க்காதே. மணல், சிறு கற்கள், புகை, தூசி முதலியவைகளினின்று கண்ணைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். ஏதாவது கண்ணில் விழுந்தால் கண்ணைக் கசக்கலாகாது.

7. படுக்குமுன் மூத்ரப்பை காலியாயிருக்கவேண்டும். இரவில் 10-மணிக்குள், ஸந்தோஷமாய் படுக்கைக்குச் செல்லவேண்டும். ஜன்னல்களையெல்லாம் நன்றாய்த் திறந்துவைத்துவிட்டு,

தலையையும் முகத்தையும் மூடாமல், சப்தமில்லாத விடத்தில், தனிமையாய்ப் படுத்துறங்கு. குறைந்தது 7 மணிநேரம் தூங்குவது அத்யாவச்யம்.

8. எப்பொழுதும் மனதில் கவலைகொண்டிருப்பதும், வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதும், வ்யாதியாயிருப்பதும் ஜன ஸமூகத்திற்கும் வீட்டிற்கும் செய்யக்கூடிய பெருந் தீங்குகளாகும். இருப்பதைக்கொண்டு ஸந்துஷ்டி யடைவதே உன் கடமை. உன் மனதை ஸந்தோஷமாய் வைத்துக்கொள்வதும், ஸந்தேகம், பயம், கவலை முதலியவைகளால் பாதிக்கப்படாமலிருப்பதுமே தேகத்தை ஸௌக்யமாய் வைத்துக்கொள்வதற்கு பரம ரகஸ்யமான வழியாகும். விஷயங்கள் எவ்வாறு நடப்பினும் நடக்கட்டும்; ஸந்தோஷத்தையும் மனோதைர்யத்தையும் கைவிடாதே. சிரிக்கவேண்டிய ஸமயங்களில் சிரிப்பை அடக்காதே. புன்சிரிப்புடனும் ஸந்தோஷத்துடனு மிருப்பது டாக்டருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தில் பெரும்பாகத்தை மிச்சப்படுத்தும்.

9. அன்பனே! வியாதி என்னும் பெருஞ் சத்துரு உன்னுடன் எப்பொழுதும் கடும்போர் புரிந்துகொண்டிருக்கிறது. தேகம் என்னும் உனது கோட்டையைப் பலப்படுத்திக்கொள். பரிசுத்தமான வாழ்க்கை, சுத்தமான காற்று, தண்ணீர், ஆகாரம், ஸூர்யவெளிச்சம் முதலியவைகள் உன் பக்கம் நின்று உன் எதிரியைத் தோற்கடிக்க வல்லமையுள்ள போர்வீரர்கள்.

10. கெட்ட எண்ணங்களை மனதினின்றும் விலக்கவேண்டும். கெட்டவார்த்தைகளை நாவினின்றும் விலக்கவேண்டும். பகை, பயம், கோபம், ஸ்வயநலம், பொறாமை முதலிய துர்க்குணங்களை வ்ருத்திசெய்யக்கூடிய எண்ணங்களால் கடவுள் வஸிக்கும் இடமாகிய மனஸை அசுத்தமாக்காதே. நற்காரியங்களைச் செய்து முடிப்பதில் மனோதிடமுள்ளவனாயிரு. எக்காரியத்தையும் ‘என்னால் முடியும், நான்செய்து முடிப்பேன்’ என்று தைர்யமாய் நினைத்து, நிறைவேற்ற முயலவேண்டும். அன்பும், பரிசுத்த ஹ்ருதயமும், நற்காரியங்களில் மனோதைர்யமு முள்ளவனைக் காப்பாற்ற எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் தாஸனாய்க் காத்திருக்கிறார். உன் மனச்சாட்சி கட்டளையிடுகிறபடி நடந்தால், நீ எடுத்த எக்காரியத்திலும் அபஜயம் உன்னை நெருங்காது. உனது எண்ணம் மாத்ரம் நல்லதாயிருக்கட்டும்; காந்தத்தினிடம் ஊசிபோவதுபோல் எல்லாம் உன்னை நாடிவரும். பரிசுத்த ஆத்மாவையுடையவர்களே ஸூக சரீரிகளாயும், கடவுள் அவர்கள் பக்கமிருப்பதால் மிகுந்த பலசாலிகளாயுமிருக்கிறார்கள். கடவுளை நம்பினோர் கைவிடப்படாராதலால், ஒவ்வொருவரும் கடவுளால் குறிக்கப்பட்ட பாதைகளில் நடந்து, ஸூகாதாரவிதிகளை அநுஸரித்து, குறைவற்ற செல்வமாகிய நோயற்ற வாழ்வைப்பெற்று, தமக்கும் தம் தேசத்திற்கும் உதவியுள்ளவர்களாய், வெகுநாள் ஜீவித்திருப்பார்களாக.

டி. கே. ராமய்யா.

## HANDWRITING.

## கையெழுத்து.

அநேக மாணவர்கள் தங்களுடைய கையெழுத்தைப்பற்றி வேண்டிய அளவு கவலை யெடுத்துக்கொள்வதில்லை. பெற்றோர்களில் பலரும் இது விஷயமாய் அச்ரத்தையா யிருந்துவிடுகிறார்கள். கவர்ன்மெண்டார் வெகு காலமாக நடத்திவந்த கையெழுத்துப் பரீக்ஷையை சிலவர்ஷங்களுக்கு முன்பு நிறுத்திவிட்டதால், இனி உத்யோகத்தில் அமர இஷ்டப்படுகிறவர்களுக்கு நல்ல கையெழுத் திருக்கவேண்டியது அவ்வளவு அவச்யமில்லை யென்று சிலர் தப்பெண்ணம் கொண்டிருக்கிறார்கள். கையெழுத்துப் பரீக்ஷையை நிறுத்தினதற்குக் காரணம் வேறு. நல்ல கையெழுத்துள்ளவர்களும் அந்தப் பரீக்ஷையில் தேற ரொம்பவும் ச்ரமப்படுகிறார்கள். ஷை பரீக்ஷையில் தேறுகிறவரையில் எந்த உத்யோகத்திலும் ‘காய’மேற்படுவது முடியாமலிருந்தது. இந்த அஸௌகர்யங்களை உத்தேசித்து ஷை பரீக்ஷையை நிறுத்திவிட்டதாக சிலர் சொல்லுகிறார்கள்.



கையெழுத்துப் பரீக்ஷையை நிறுத்தினதாலேயே கையெழுத்து முக்யமல்லவென்று ஏற்படாது. அநேக மேல் உத்யோகஸ்தர்கள் நல்ல கையெழுத்துள்ளவர்களை ரொம்பவும் விரும்புகிறார்கள். மற்ற சிபார்சுகளோடு நல்ல கையெழுத்திருந்தால், ஒருவர் உத்யோகம் ஸம்பாதிப்பதும், ப்ரமோஷன் அடைவதும் அநேக ஸமயங்களில் ஸூலபமாய் முடியும்.

வ்யாபார ஆபீஸ்களில் அமரவிரும்புவோர்களில் சிலர் டைப்ரைட்டிங் யந்த்ரம் உபயோகத்தில் வந்திருப்பதால் கையெழுத்தைப்பற்றி கவனிக்கவேண்டியது அவ்வளவு அவச்யமில்லை யென்று எண்ணுகிறார்கள். அதற்காக அவர்கள் டைப்ரைட்டரில் தேர்ச்சியடைவதையே முக்யமாய் எண்ணுகிறார்கள். வ்யாபார ஆபீஸ்களில் உயர்ந்த உத்தியோகத்தை யடைய விரும்புகிறவர்கள் டைப்ரைட்டரை மாத்ரம் நம்பி யிருப்பது சரியல்ல. கணக்குப் புஸ்தகங்களில் கணக்குகள் எழுதுவதற்கு நல்ல கையெழுத்தில்லாவிட்டால் ப்ரயோஜனமில்லை. மேலும் அந்த ஆபீஸ்களில் அநேக வேலைகளில் டைப்ரைட்டர் ப்ரயோஜனப்படாது. அவைகளுக்கு எழுதித்தான் ஆகவேண்டும்.

சிறு வ்யாபார ஆபீஸ்களில் டைப்ரைட்டர் உபயோகத்திலிருப்பதில்லை. எப்போதுமே எல்லாருக்கும் எடுத்தவுடன் பெரிய ஆபீஸ்களில் வேலை கிடைப்பதில்லை. அதற்கு முன் சிறு வ்யாபார ஆபீஸ்களிலும், மற்ற ஆபீஸ்களிலும் கொஞ்சகாலம் அமர்ந்திருக்கவேண்டியிருக்கிறது. இதை உத்தேசித்தும் வாலிபர்கள் நன்றாய் எழுதக் கற்றுக்கொள்ள வேண்டியது அவச்யமென்று ஏற்படுகிறது.

மேலும் எவரும் அதிபால்யத்திலேயே இன்ன உத்யோகத்தில்தான் அமரப் போகிறேமென்று நிச்சயமாய் இருக்கமுடியாது. ஒரு குறிப்பிட்ட உத்யோகத்துக்கு நல்ல கையெழுத்து அவ்வளவு அவச்ய மில்லையென்று வைத்துக்கொள்வோம். அந்த உத்யோகத்தில் அமர இஷ்டப்படுகிறவர்கள், சில காரணங்களால் அந்த உத்யோகத்தை யடைய முடியாமலிருந்து வேறு உத்யோகத்தை நாடவேண்டியிருக்கும். சில ஸமயங்களில் கையெழுத்து முக்யமாயில்லாத உத்யோகத்தில் முதலில் அமர்ந்து பிறகு வேறு உத்யோகத்தை நாடவேண்டியிருக்கலாம். அப்போது நல்ல கையெழுத்தில்லாதவர்களுக்கு ரொம்ப கஷ்ட மேற்படக்கூடும். பெரிய உத்யோகங்களுள் ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையில் கையெழுத்தைப்பற்றி ரொம்பவும் கவனிக்கிறார்கள். ஸமீபத்தில் ஒரு மாணவருக்கு நல்ல கையெழுத்தில்லாததால், அவரைப் பரீக்ஷைக்கு எடுத்துக்கொள்ளவில்லையாம். அதனால் அவர் வேறு உத்யோகத்தை நாடவேண்டியதாயிற்று.

ஆகையால் இவைகளை உத்தேசிக்கையில் ஒவ்வொரு பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளின் கையெழுத்தைப்பற்றி ரொம்ப கவலை யெடுத்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும்.

அநேக சிறுவர்களுக்கு ஸ்வபாவமாகவே நல்ல கையெழுத்து படிந்துவிடுகிறது. மற்றவர்களுக்கு அப்படிப்படிவதில்லை. ஆனால் எவரும் கொஞ்சம் ச்ரத்தையெடுத்துக்கொண்டால் தமது கையெழுத்தை சீர்திருத்திக்கொள்ளலாம். தினம் தோறும் காப்பி எழுதுவதாலும், எதை எழுதினாலும் நிறுத்தி எழுத்துக்கள் நல்ல லக்ஷணமாய் அமைகின்றனவா என்று கவனித்து எழுதுவதாலும் கையெழுத்து சீக்ரம் நல்லதாக ஆகிப் படிந்துவிடும்.

கையெழுத்து அப்யஸிப்பதற்கு பால்யப்பருவமே ஏற்றது. அப்போது கைவிரல்களின் அசைவுகளை ஒழுங்குபடுத்தும் தசைநார்களும்,

எலும்புகளும் நமது இஷ்டப்படி சொன்னபடி கேட்கும். வயஸானபிறகோ தசைநார்கள் சொன்னபடி கேட்பதில்லை. விரல்களை வேண்டியபடி ஸுலபமாய் அசைப்பது முடியாது. பெற்றோர்கள் இந்த விஷயத்தை கவனிப்பதோடு உபாத்யாயர்களும் நன்றாய் கவனிப்பது அவசியம்.

தற்காலம் பௌண்டன் பேனா ரொம்ப உபயோகத்திலிருந்து வருகிறது. அநேக மாணவர்கள் இதை உபயோகித்துவருகிறார்கள். பௌண்டன் பேனாக்களில் எல்லாமே உயர்ந்தவையல்ல. அநேக பேனாக்கள் விலை மலிவாயிருப்பதால் மாணவர்கள் அவைகளை தாராளமாய் வாங்கி உபயோகிக்கிறார்கள். விலை மலிவான பேனாக்களில் பல உபயோகமற்றவைகள். அவற்றால் மாணவர்களுடைய கையெழுத்து சீக்ரம் கெட்டுப்போகிறது. அநேகர் 'ஸ்டைலோபென்' என்னும் முள் அமைத்த பௌண்டன் பேனாக்களை உபயோகிக்கிறார்கள். இந்தப் பேனாக்களால் கையெழுத்து ரொம்பவும் கெட்டுப்போகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். நல்ல பேனாக்களுக்கு விலை அதிகமாகையால் அநேக மாணவர்கள் அவைகளை வாங்க முடியாது. உபயோகமற்றவையான விலைமலிந்த பேனாக்களை வாங்குவதைவிட அவைகளை வாங்காமலிருப்பது நல்லது. பொதுவாய்ச் சொல்லுமிடத்து காலேஜ் வகுப்புகளுக்குக் குறைந்த வகுப்புகளில் உள்ள மாணவர்கள் பௌண்டன் பேனாக்களை உபயோகிப்பது உசிதமல்ல.

'காப்பி' எழுதும்போதும், மற்ற கையெழுத்துப் பாடங்களை எழுதும்போதும் யாவரும் கவனிக்கவேண்டிய முக்யமான விஷயங்களை இங்கு சுருக்கமாய் எழுதுகிறோம்.

1. எழுதுகிறவர் ஸ்வபாவமாய் எப்படி உட்காருவாரோ அப்படி உட்காரவேண்டும். ரொம்ப நிமிர்ந்து விரைப்பாய் உட்காரக்கூடாது. 'டெஸ்கி'ன் மேலும் மேஜையின் மேலும் ரொம்பவும் சாய்ந்துகொள்ளக்கூடாது. மார்பானது மேஜையின் ஓரத்தைத் தொட்டுக் கொண்டிருக்கக் கூடாது. தேகத்தை எந்தப் புறமாயும் வளைத்துக்கொள்ளக்கூடாது. பாதங்கள் அங்குமிங்கும் அசையாமல் தரையில் உறுதியாய் அமர்ந்திருக்கவேண்டும். முழங்கையை விலாவின் பக்கத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. உள்ளங்கை எழுதுபவருக்குத் தெரியாதபடி கையை வைத்துக் கொள்ளவேண்டும்.

2. கடுதாசியின் எந்த பாகத்தைப் பேனா தொடுகிறதோ அந்த பாகம் எழுதுபவரின் வலது தோளுக்கு நேர் எதிரில் இருக்கும்படி கடுதாசியை வைத்துக்கொள்ளவேண்டும். கடுதாசியின் தலைப்பக்கம் டெஸ்க் அல்லது மேஜையின் முன் பக்கத்து ஓரத்துக்கு ஸமதூரமுள்ளதாயிருக்கவேண்டும். எழுத எழுத கடுதாசியை மேலே நகர்த்திக்கொண்டு போகவேண்டும்.

3. பேனாவை கட்டைவிரலுக்கும், ஆள்காட்டி விரல் பெரிய விரல் ஆகிய இவைகளுக்கும் இடையில் பிடித்துக்கொள்ளவேண்டும். மூன்றாவது விரல் உள்ளங்கைப் பக்கமாய் வளைந்திருக்கவேண்டும். விரல்களின் நுனிகள் 'நிப்'புகளைத் தொட்டுக்கொண்டிருக்கக்கூடாது. 'நிப்'புகளின் இரண்டு முனைகளும் கடுதாசியைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

எழுதும்போது கையும் தேகமும் எப்படியிருக்கவேண்டுமென்பதற்கு ஆர்னால்ட் காப்பி புஸ்தகங்களின் அட்டையில் சித்ரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்து அதன்படி உட்கார்ந்து எழுதுவது நல்லது.

'காப்பி'களை மெதுவாய் நிறுத்தி ஒவ்வொரு எழுத்தும் அச்செழுத்துச் சட்டத்தைப்போலிருக்கிறதா என்று கவனித்து எழுதவேண்டும். ஒரு 'நம்பர்' புஸ்தகம் முடிந்ததும் அதற்கடுத்தபடி 'நம்ப'ருள்ள புஸ்தகங்களை எழுத ஆரம்பிக்கவேண்டும். ஒரு 'நம்பர்' புஸ்தகத்தை எழுதியும் கையெழுத்து நன்றாய் சீர்திருந்தாவிட்டால், மறுபடியும் அதே 'நம்பர்' புஸ்தகத்தை அடிக்கடி



எழுதவேண்டும். தினம் ஒருபக்கம் எழுதவேண்டுமென்பது அவச்யமல்ல. தினந்தோறும் மூன்று நான்கு வரிகள் கவனமாய் எழுதுவதாலேயே கையெழுத்து நன்றாய்த் திருந்தும்.

காப்பி எழுதுவதோடு தினந்தோறும் வேறு புஸ்தகங்களைப் பார்த்து எழுதுவதும் அவச்யம். அப்படி எழுதுவதிலும் காப்பி எழுதுவதில் எவ்வளவு கவலை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளவேண்டியது அவச்யமாகும்.

## CROPS AND INSECTS.

## பயிர்களும் பூச்சிகளும்.

பூச்சிபுழுக்களால் பயிர்களுக்கு ரொம்ப நஷ்டமேற்படுகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அவைகளால் சென்னை ராஜதானியில் மாத்ரம், வர்ஷந்தோறும் 20 கோடி ரூபாய் மாஸூல் நஷ்டமாகிறதென்று தெரியவருகிறது. நெல் பயிரில் மாத்ரம் 10 கோடி ரூபாய் நஷ்டமேற்படுகிறதாம்.

பூச்சி புழுக்களை அழிக்கப் பற்பல வகை மருந்துகள் இருக்கின்றன. ஆனால் பூச்சி புழுக்களை நிலங்களில் வ்ருத்தியடையும்படி விட்டுவிட்டுப் பிறகு அவைகளைக் கொல்ல வழிதேடுவதைவிட, முதலில் அவைகள் நிலங்களில் அதிகரிக்காமலிருக்க உபாயங்கள் தேடுவது நல்லது. கோயம்புத்தூரிலுள்ள ஸர்க்கார் பூச்சிபுழு சாஸ்த்ரியாகிய டி. பெய்ன்ப்ரிக்கி ப்ளெட்சர் என்பவர் நிலங்களில் பூச்சி புழுக்கள் அதிகரிப்பதைத் தடுப்பதற்கேற்றவையான உபாயங்களில் சிலவற்றை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவைகள் எல்லா விவஸாயிகளும் ஸுலபமாய் உபயோகிக்கக் கூடியவையாயிருக்கின்றன. அவைகளை இங்கு விவரிக்கிறோம்.

**களையெடுத்தல்.**—வயல்களிலும் வாப்புகளிலுமுள்ள களைகளையும் உபயோக மற்ற செடிகளையும் ஒன்றுகூட விடாமல் எடுத்து விடுவதால், பூச்சி புழுக்கள் பரவுவதற்குத் தடையேற்படுகிறது. வயலில் விதை தெளிப்பதற்கு முன்னும், பயிர் வளர்ந்து கொண்டிருக்கும் போதும் களை பிடுங்குவது அவச்யம். இதோடு, வாப்புகளிலும், வயல்களுக்குப் பக்கத்திலுள்ள திடர்களிலுமுள்ள களைகளையும் பிடுங்குவது அவச்யம். ஏனென்றால் அநேக பூச்சி புழுக்கள், தானாக முளைத்து வளரும் செடிகளைத் தின்று ஜீவிக்கின்றன. அவைகள் அந்தச் செடிகளைத் தின்றவுடன் பக்கத்திலுள்ள பயிர்களுக்குப்போய் அவைகளையும் அழிக்கின்றன. இந்த மாதிரிப் பூச்சிகளில் நவாப் பூச்சியென்பது ஒன்று. இந்தப் பூச்சி வயலோரங்களிலுள்ள காட்டுப் புல்லில் தங்கியிருந்து, அதன் விதைகளைத் தின்று ஜீவித்திருக்கிறது. வயலிலுள்ள நெல் கதிர்கள் பால் பிடிக்கும்போது, இந்தப் பூச்சி மெதுவாய் நெல்பயிரில் புகுந்து கதிர்களைச் சப்பிவிடுகிறது. ஆகையால் வயல்களில் களையெடுப்பதோடுகூட வயலோரங்களிலும், அதற்குப் பக்கத்திலுள்ள இடங்களிலும் களையெடுக்கவேண்டியது அவச்யமாகும். இதனால் வயலைச் சுற்றிலும் ஒரு திறந்த வெளி யேற்படுவதால், அதற்கப்பாலில் இருக்கக்கூடிய பூச்சிகள் அந்தத் திறந்தவெளியின் வழியாக நெல்வயலுக்குப்போக முயலும்போது பக்ஷிகளும், அவைகளின் வேறு சத்ருக்களும் அந்தப் பூச்சிகளைக் கொன்று தின்று அவைகளை வயலுக்குள் போகாமல் தடுக்கக்கூடும்.

**பயிர்களின் அடிக் கட்டைகளை எரித்தல்.**—சோளம், ராகி, நெல், கோதுமைமுதலிய தான்யப்பயிர்களின் தண்டுகளில் ஒருவகைப்பூச்சிகள் புகுந்து அந்தப் பயிர்களை நாசம் செய்கின்றன. ஒருவயலில் இப்படிப்பட்ட பூச்சிகளிருக்கின்றனவென்று வைத்துக்கொள்வோம். விவஸாயிகள் அந்தவயலில் மாஸூலை அறுவடைசெய்தபிறகு, பயிர்களின் அடிக்கட்டைகளை அப்படியே வயலில் விட்டுவிடுகிறார்கள். தண்டுகளைத் துளைக்கும் பூச்சிகளும் அடிக்கட்டைகளில் தங்கியிருக்கின்

றன. அதே வயலில் மறுபடியும் ஸாகுபடி செய்யும்போது இந்தப்பூச்சிகள் மறுபடியும் பயிர்களை அழிக்க ஆரம்பிக்கின்றன. இதோடு நில்லாமல் பக்கத்துவயல்களுக்கும் போய் அங்கேயுள்ள பயிர்களையும் அழிக்கின்றன.

வயல்களில் அடிக்கட்டைகளை அப்படியே விட்டுவைப்பதால் இன்னொரு கெடுதியும் ஸம்பவிக்கும். இந்த அடிக்கட்டைகளில் கறையான்கள் வந்து சேருகின்றன. அவைகள் அடிக்கட்டைகளைத் தின்றபிறகு அவைகளுக்குப் போதுமான உணவில்லாமல் அந்தநிலத்தில் அடுத்தபடி ஸாகுபடிசெய்யும் பயிரையும் தின்று நாசம் செய்கின்றன. விவஸாயிகள் அடிக்கட்டைகளைச் வெட்டி ஒன்றாய்ச்சேர்த்து எரித்துவிட்டால் இந்தத் தொந்தரவுகள் ஏற்படா. சிலர் அடிக்கட்டைகளை அப்படியே விட்டுவைத்தால், அவைகள் அடுத்த பயிருக்கு எருவாக உபயோகப்படுமென்று சொல்லுவார்கள். அவைகளால் ஏற்படும் நஷ்டம் அவைகளை எருவாக உபயோகிப்பதில் உண்டாகும் லாபத்தைவிட அதிகமாகையால், இந்த ஆக்ஷேபணை சரியானதல்ல.

இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கது. மேலே சொன்ன களையெடுத்தலிலும், அடிக்கட்டைகளை எரிப்பதிலும் விவஸாயிகளுக்குள் ஒற்றுமை இருக்கவேண்டிய தவச்யம். அப்படிக்கில்லாமல் ஒருவர் தமது நிலத்தில் அடிக்கட்டைகளை எரித்துவிட,பக்கத்தில் நிலமுள்ள இன்னொருவர் தமது நிலத்தில் அடிக்கட்டைகளை அப்படியே விட்டிருந்தால், அடிக்கட்டையை எரிக்காத நிலத்திலுள்ள தண்டைத் துளைக்கும் பூச்சிகளும், கறையான்களும், அடிக்கட்டையை எரித்த நிலங்களில் மறுபடியும் ஸாகுபடி செய்யும்போது, அங்கே போய் பயிர்களை அழிக்கக் கூடும்.

நமது ராஜதானியில் பருத்தி ஸாகுபடி செய்யும் விவஸாயிகள் நல்ல பருத்தியைப் பொறுக்கியான பிறகு, செடிகளில் இருக்கக்கூடிய உபயோகமற்ற காய்களும் வெடிக்கட்டுமென்று எண்ணி செடிகளை வெட்டிவிடாமல், மறுபடி உழ வேண்டிய காலம் வரையில் அப்படியே விட்டு வைக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு ரொம்ப தாழ்ந்ததாயும் பூச்சி யரித்ததாயும் உள்ள பருத்தி கொஞ்சம் கூடக்கிடைக்கிறது. இந்தத் தாழ்ந்த பருத்திக்காக ஆசைப்படுவதினால்,அடுத்துப் பயிர் செய்யப்படும் பருத்தியில் ரொம்ப சேதம் ஏற்படுகிறது. ஏனென்றால், முதலில் பயிரிட்ட பருத்திச்செடிகளில் இருந்த பூச்சிகளெல்லாம் மறுபடி ஸாகுபடி செய்யப்படும் பருத்திச் செடிகளில் சேர்ந்துகொள்ளுகின்றன. இரண்டாவது பயிரில் பருத்திச்செடிகள் முளைக்கும்போதே பூச்சிகளால் பாதிக்கப்படுகின்றன. விவஸாயிகள் செய்யவேண்டிய தென்னவென்றால், புதுப்பயிர் ஸாகுபடி செய்ய ஆரம்பிப்பதற்கு மூன்று நான்கு மாஸங்களுக்கு முன்னாலேயே பழைய பயிர்களைப் பிடுங்கி எரித்துவிடவேண்டும். இதனால் பழைய பயிர்களிலிருந்த பூச்சிகளுக்கு மூன்று நான்கு மாஸகாலம் உணவில்லாமல்போய், அவைகள் இறந்துபோகும்.

மாற்றுப்பயிர் செய்தல்.—ஒரு நிலத்தில் ஒரே பயிரைத் தொடர்ச்சியாகப் பயிர் செய்யாமல் மாற்றுப்பயிர் செய்வதால், பயிரை யழிக்கும் பூச்சிகள் வ்ருத்தியாவதைத்தடுக்கலாம். ஒரே பயிரைத் தொடர்ச்சியாகப்பயிர் செய்வதால் ஒரு பருவத்துப்பயிரிலிருந்த பூச்சிகள் அடுத்த பருவத்தில் ஸாகுபடி செய்யப்படும் அதே வகைப் பயிரைத்தின்று வ்ருத்தியாகின்றன. ஆனால் மாற்றுப்பயிர் செய்வதிலும் விவஸாயிகளுக்குள் ஒற்றுமை இருக்க வேண்டியதவச்யம். ஏனென்றால் ஒன்றுக்கு கொன்று பக்கமாயுள்ள இரண்டு நிலங்களுள் ஒன்றில் மாத்ரம் மாற்றுப்பயிர் செய்ய, இன்னொரு நிலத்தில் மாற்றுப்பயிர் ஸாகுபடி செய்யாமல் முன் பயிரிட்டதையே ஸாகுபடி செய்தால், பின் சொன்ன நிலத்தில் முந்தின பருவத்திலிருந்த பூச்சிகள் இரண்டா



வது பருவத்துப்பயிரில் வ்ருத்தியாகி, அவைகள் பக்கத்து நிலத்தில் ஸாகுபடி செய்திருக்கும் மாற்றுப்பயிரையும் அழிக்கக்கூடும்.

மாற்றுப்பயிர் செய்வதில் இன்னொரு விஷயமும் கவனிக்கவேண்டும். ஒரே ஜாதியைச் சேர்ந்த பயிர்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பயிர் செய்யக்கூடாது. உதாரணமாக, உருளைக் கிழங்கும் புகையிலையும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவையாகையால், உருளைக் கிழங்கைப் பயிர் செய்த பிறகு புகையிலையையும், புகையிலையைப் பயிர் செய்த பிறகு உருளைக் கிழங்கையையும் பயிர் செய்வது கூடாது. இஞ்சியும், மஞ்சளும் ஒரு ஜாதியைச் சேர்ந்தவை. பருத்தியும் புளிமஞ்சி (புளிச்சக்கீரை) யும் ஒரு ஜாதியைச் சேர்ந்தவை. இவைகளுள் ஒன்றை பாதிக்கும் பூச்சி வகைகள், அதைச்சேர்ந்த மற்ற பயிரையும் அழிக்கக்கூடும். இதற்காக விவஸாய சாஸ்த்ரிகளில் சிலர் சில பயிர்களை பூச்சியழிப்பதற்காக வென்று ஸாகுபடி செய்யலாமென்கிறார்கள். ஒரு பயிரில் மாஸூலை அறுத்த பிறகு நிலத்தில் சில பயிர்களை ,விதைத்து விடவேண்டும். முந்தின பயிரில் இருந்த பூச்சிகளெல்லாம் இரண்டாவது பயிரில் வந்து சேர்ந்துகொள்ளும். இரண்டாவது பயிர் ஸுமாராக வளர்ந்தவுடன், அதையழித்து விடவேண்டும். இதனால் பூச்சிகள் அழிந்துபோய், மூன்றாவதாகச்செய்யப்படும் முக்யப்பயிருக்கு கெடுதலேற்படாமல் போகிறது. ஆனால் இந்தமுறை தக்க மேற்பார்வையும், செய்யவேண்டிய வேலைகளை காலத்தில் செய்யும் வழக்கமும் உள்ள விவஸாயப் பண்ணைகளில்தான் ஏற்றதாயிருக்கிறதேயொழிய, ஸாதாரண விவஸாயிகள் அனுஸரிக்கக் கூடியதாயில்லை. ஏனென்றால் விவஸாயிகள் இரண்டாவது பயிரில் பூச்சிகள் எல்லாம் வந்துசேர்ந்தவுடன் அதை அழிக்காமலிருந்துவிடுகிறார்கள். பூச்சி பிடிப்பதற்காக பயிர்கள் ஸாகுபடி செய்யாமலிருந்தாலாவது, முதல் பயிரில் இருந்த பூச்சிகள், அடுத்தபயிர் ஸாகுபடி செய்யும் வரையில் வேண்டிய உணவில்லாமல் அநேகமாய் இறந்துபோகக்கூடும். நடுவில் ஒரு பயிர் ஸாகுபடி செய்வதால்,முதல் பயிரிலிருந்த பூச்சிகள் நடுப்பயிரின் உதவியால் இறந்துபோகாமல் இருந்து வ்ருத்தியாகி, அதற்கடுத்தபடி செய்யப்படும் பயிரை அழிப்பது ஸுலபமாகிறது. நடுவில் ஒரு பயிர் ஸாகுபடி செய்வதென்பது ரொம்ப விவேகமுள்ள விவஸாயிகளுக்கே ஏற்றது.

கலப்புப்பயிர் ஸாகுபடி—அநேக ஜில்லாக்களில் ஒரு வயலில் அநேக பயிர்களை கலந்து விதைக்கிறார்கள். பல்லாரி ஜில்லாவில் ஒரு வயலில் 5-அல்லது 6 வெவ்வேறு தினுஸு பயிர்களைப் பயிரிடுவதுண்டு. அவ்விடங்களிலுள்ள விவஸாயிகளின் நோக்கமென்னவென்றால், இரண்டொரு பயிர்களில் மாஸூல் கிடைக்காமல் போனாலும், மற்ற பயிர்களிலாவது தக்கமாஸூல் கிடைக்குமென்பதே. இப்படிப் பயிர்களைக் கலப்பாக விதைப்பதால் பூச்சிகள் வ்ருத்தியாவதும் குறைவு படலாம். ஏனென்றால் ஒரு பயிரைச் சுற்றி, வேறு ஜாதிப்பயிர்கள் இருக்குமாதலாலும், அந்தப் பயிரில் இருக்கும் பூச்சிகள் பக்கத்திலுள்ள வேறு ஜாதிப் பயிர்களை ஸாதாரணமாய்த் தின்னுவாதலாலும், அந்தப் பூச்சிகள் சுற்றியிருக்கும் வேறு பயிர்களைக்கடந்து முதல் ஜாதிப் பயிர்களைத் தேடிப்போய் வ்ருத்தியாவது கடினம். உதாரணமாக வேர்க்கடலையைத் தனிப்பயிராக விதைத்தால், அதற்குச் சுருள் பூச்சியால் எவ்வளவு கெடுதல் ஏற்படுகிறதோ அவ்வளவு கெடுதல், வேர்க்கடலையையும் கம்பையும் கலந்து விதைத்தால், ஏற்படுவதில்லையென்று அனுபவத்தில்தெரியவந்திருக்கிறது.

உழுதல்.—கோடை காலத்தில் நிலங்களில் பயிரில்லாமலிருக்கும்போது நிலத்தை நன்றாய் உழுவதால் பூச்சிகள் வ்ருத்தியாவதைத் தடுக்கலாம். வெட்டுக்கிளிகள் பூமிக்கு சில அங்குலம் கீழே முட்டையிடுகின்றன. அநேக பூச்சிகள்,

உதாரணமாகக் கம்பளிப் பூச்சிகள், பூமிக்குள் புகுந்து கோடைகால முழுவதும் அங்கேயே தங்கியிருக்கின்றன. மழைகாலம் வந்ததும் அவைகளும், முட்டைகளின்று வெளிவரும் வெட்டுக்கிளிகளும் வெளியேவந்து பயிர்களை அழிக்க ஆரம்பிக்கின்றன. கோடைகாலத்தில் நிலத்தை நன்றாய் உழுதால் அடியிலுள்ள முட்டைகளும், பூச்சி, புழுக்களும் வெளியில் வருகின்றன. அப்போது பக்ஷிகள் அவைகளைக் கொன்று தின்றுவிடும். இல்லாவிட்டால் ஸூர்ய உஷ்ணத்தால் அவைகள் இறந்துபோனாலும் போகும். மேலும் உழுவதில், சில புழுக்களும் முட்டைகளும் ரொம்ப ஆழத்தில் புதைந்துபோய் வெளிவரவேண்டிய காலத்தில் வரமுடியாமல் போய் இறந்துபோகும். இதற்கு நாட்டுக் கலப்பை உதவாது. நாட்டுக் கலப்பையால் அதிக ஆழம் உழ முடிவதில்லை. நல்ல இரும்புக் கலப்பையால் குறைந்தது ஆறங்குலம் ஆழமாவது உழவேண்டும்.

**பாசனம்.**—சிள் வண்டு என்னும் பூச்சி சில ஜில்லாக்களில் பயிர்களுக்கு ரொம்ப சேதம் உண்டாக்குகிறது. இது பூமிக்குள் வளை தோண்டி அதில் வஸிக்கிறது. இது ராத்ரிக் காலங்களில் வெளியில் வந்து பயிர்களின் இளங் குருத்துகளை நறுக்கி எடுத்து வளைக்குக் கொண்டு போய் வைத்துக்கொண்டு பகல் காலங்களில் தின்கிறது.

இப்படிப்பட்ட விடங்களில் நிலங்களுக்கு ஜலம் பாய்ச்சுவதால், இந்தப் பூச்சிகள் வளைகளை விட்டு வெளியில் வந்துவிடும். அப்போது, காக்கைகளும் பருந்துகளும் அவைகளைப் பிடித்துத் தின்றுவிடும். ஸாதாரணமாய் நிலங்களுக்கு ஜலம் பாய்ச்சும்போது காக்கைகளும் பருந்துகளும் ஏராளமாய் நிலங்களில் வந்து கூடுவதை அநேகர் பார்த்திருக்கலாம். சற்றுகவனத்துடன் பார்த்தால் வயல்களிலுள்ள வளைகளில் ஜலம் பாய்வதால் அங்கே இருக்க முடியாமல் வெளியேவரும் வெட்டுக்கிளி, சிள்வண்டு, முதலிய பல பூச்சிகளை இந்தப் பறவைகள் பிடித்துக்கொண்டிருக்கின்றனவென்பது தெரியவரும்.

**பூச்சிகளால் பாதிக்கப்படாத பயிர்வகைகளைப் பயிரிடுவது.**—ஒரு ஜாதிப்பயிரில் சிலவகைகள் பூச்சிகளால் ரொம்பவும் பாதிக்கப்படுவதில்லை. வேறு சில வகைகளை பூச்சிகள் ரொம்பவும் பாதிக்கின்றன. பூச்சிகள் பாதிக்காத பயிர் வகைகளைப்பயிரிட்டு வந்தால் அதிக நஷ்டம் ஏற்படாது. அதோடு, எந்த வகைப்பயிரிலும், விதையெடுக்கும்போது, நல்ல வளர்ச்சியுள்ளதாயும் நோய் நொடியில்லாததாயுமுள்ள செடிகளிலிருந்து விதையெடுத்து அடுத்த பயிருக்கு உபயோகிப்பதால் ரொம்ப ஸௌகர்யங்கள் ஏற்படும்.

**பூச்சியழித்த பாகங்களை அப்புறப்படுத்தல்.**—சில ஸமயங்களில் ஓரே பயிர் செய்துள்ள பெரிய நிலங்களில் ஏதேனும் ஒரு பாகத்தில் மாத்ரம் பயிர்களை பூச்சிகள் அழிப்பதுண்டு. அதை அப்படியே விட்டுவிட்டால் வயலிலுள்ள மற்ற பயிரையும் பூச்சிகள் நாசம்செய்துவிடும். அந்த ஸந்தர்ப்பங்களில் பூச்சிகள் அழித்த பாகங்களை மாத்ரம் அறுத்து அப்புறப்படுத்திவிட்டால், மற்றபாகம் பூச்சிகளுக்கு இரையாகாமல் தப்பக்கூடும். அறுத்த இளம்பயிரில் கம்பளிப்பூச்சி போன்ற விஷஜந்துக்கள் இருந்தால், அதை கால்நடைகளுக்குத் தீனியாகப் போடக்கூடாது. பயிரின் தண்டுகளை பூச்சிகள் துளைத்திருந்தால் அந்தப் பயிரை மாட்டுக்குப் போடுவதால் கெடுதல் ஒன்றும் நேராது. ஆனால் இளம்பயிரில் ஹைட்ரோஸியானிக் ஆஸிட் என்னும் ஒருவித விஷஸத்து இருப்பதால் அதை கால்நடைகளுக்கு அதிகமாகப் போடுவது உசிதமல்ல.

**விதைக்கலப்பையால் விதைத்தல்.**—விதைகளை விதைக்கலப்பையால் விதைப்பதும், நாற்றுக்களை வரிசை வரிசையாய் நடுவதும் பூச்சிகளின் உபத்ரவத்தைக் குறைப்பதற்கு ஏற்ற நல்ல முறைகள். உதாரணமாக வயலில் பருத்திச் செடி



கள் ஒழுங்காயும் வரிசை வரிசையாயும் இருந்தால், விவஸாயிகள் பருத்திச் செடிகளுக்கு மத்தியில் போய் ஒவ்வொரு செடியிலுமிருக்கக் கூடிய பூச்சிகளை யழிப்பது ஸுலபமாகும். பருத்திச்செடிகள் வரிசையாயில்லாமலிருந்தால் இப்படிச் செய்வது கஷ்டம். மேலும் விதைக்கலப்பைகளால் விதைத்து வளர்ந்த பயிரில் பூச்சிகள் ஏதாவது தோன்றினால் அதை உடனே தெரிந்து கொள்ளலாம்.

## COIMBATORE DISTRICT CONFERENCES.

## கோயம்புத்தூர் ஜில்லா கான்பரென்ஸுகள்.

கோயம்புத்தூர் ஜில்லா கான்பரென்ஸ் இந்த மாஸம் 24-ந் தேதியன்று ஈரோட்டில் கூடிற்று. மிஸ்டர் டி. ஸ்ரீநிவாஸமுதலியார் உபசரிப்புக் கமிட்டியின் சேர்மனாக இருந்து ப்ரஸங்கம் செய்தார்.

கோயம்புத்தூர் ஜில்லாவின் க்ராமங்களிலுள்ள வெள்ளாளர்கள் குத்துக் கொலைக் கஞ்சாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களால் இந்த ஜில்லாவில் கொலைக் கேஸுகள் அதிகமாகிவருகின்றன. வெள்ளாளர்கள் இப்படிக் கெட்டுப்போனதற்குக் காரணம் அவர்களுக்குப் படிப்பில்லாமையும், குடியுமே. ஜில்லாபோர்டார் தங்கள் ஸொந்தவரும்படியைக் கொண்டும், மாகாண கவர்ன்மெண்டார் கொடுக்கும் க்ராண்டுகளைக் கொண்டும் க்ராமாந்தரங்களில் படிப்பை அபிவ்ருத்தி செய்துவருகிறார்கள். ஆனால் அவர்கள் செய்யும் வேலை போதுமானதாயில்லை. குடி விஷயத்திலோ வென்றால் ஜனங்களுடைய நிலைமை ரொம்ப பரிதாபகரமாயிருக்கிறது. ஜில்லாவில் எங்குபார்த்தாலும் கள்ளுக் கடையும் சாராயக் கடையுமாய் இருக்கின்றன. வர்ஷந்தோறும் கள்ளுக் குத்தகைவரி உயர்ந்து கொண்டேயிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகளோ வரி அதிகமாக வருவதைப் பற்றி ஸந்தோஷப்படுகிறார்கள். குத்தகைக் காரர்களோ, ஜனங்கள் கள்ளுக் கடைக்கு அடிக்கடி வருவதற்கு என்னென்ன செய்யலாமோ அவையெல்லாம் செய்துவருகிறார்கள். இன்னின்ன இடத்தில் கள்ளுக்கடை சாராயக் கடை வைக்கலாமென்பதை அந்தந்த விடத்து ஜனங்களே தீர்மானித்துக்கொள்ள ஜனங்களுக்கு ஸ்வதந்தரம் ஏற்படவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டால், சாராயம் குடிக்காத ஜனங்கள் அவைகளைக் குடிக்கும் ஜனங்களுடைய ப்ரதிநிதிகளாக மாட்டார்களென்றும், குடிக்கும் ஜனங்களே இவைகளைப்பற்றி ஆலோசித்துத் தீர்மானிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். இந்த வாதம் கேட்க வேடிக்கையாயிருக்கிறது. ப்ரான்ஸ், ரஷ்யா, க்ரேட் ப்ரிட்டன் ஆகிய இந்த தேசங்களில் கவர்ன்மெண்டுகள் குடியின் தீமையைத்தடுக்க ஏற்பாடுகள் செய்திருக்க, நமது மாகாண கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் அலக்ஷ்யம் பாராட்டுவது சரியென்று தோன்றவில்லை.

கோயம்புத்தூர் ஜில்லாவில் கோவாபரெடிவ் முயற்சி சற்று நன்றாய்ப் பரவியிருக்கிறது. அதிகாரிகள் இந்த முயற்சி இன்னும் அபிவ்ருத்தியடையும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். நாணயஸங்கங்கள் ஸ்தாபிப்பது மாத்ரம் போதாது. மற்றவகை கோவாபரெடிவ் ஸங்கங்களும் ஸ்தாபிக்க வேண்டியது அவச்யமாகும். இவைகளை ஸ்தாபித்தால்தான் ஜனங்கள் செட்டாய் செலவழிக்கத் தெரிந்துகொண்டு குடி முதலிய கெட்ட வழக்கங்கள் இல்லாமல், தரித்ரத்திலிருந்து நீங்கி ஸுகப்பட முயலுவார்கள்.

இந்த ஜில்லாவில் அநேக க்ராமங்களில் அருமைக்காரர்கள் என்று பெயர் கொண்ட சிலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு தங்கள் க்ராமத்தில் ரொம்ப செல்வாக்குண்டு. வேறு சில க்ராமங்களில் இன்னும் ரொம்ப செல்வாக்கும் அதிகாரமும் உள்ள ப்ரமுகர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சொல்லும் வார்த்தையை ஜனங்கள் வேத-

வாக்கென்று கொண்டு நடந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட இடங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதில் யாதொரு கஷ்டமும் நேராது. பரிக்ஷார்த்தமாக இந்த இடங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபித்துப்பார்க்கலாம். சில க்ராமங்களில் கக்ஷிப்ரதி கக்ஷிகள் இருக்கின்றன வென்பது வாஸ்தவம். ஆனால் அப்படிப்பட்ட க்ராமங்களில் சிலவற்றை பஞ்சாயத்து ஸ்தாபிப்பதற்காக ஒன்று சேர்த்து, பஞ்சாயத்துக்கு மெம்பர்களை ஜாக்ரதையாகத் தெரிந்தெடுத்து விட்டால், இந்தக் குறை நிவர்த்தியாய் விடும்.

இப்போது கல்வி விஷயமாகச் செய்ய வேண்டிய முக்யமான கார்யமொன்று இருக்கிறது. அதாவது, கோயம்புத்தூரிலுள்ள காலேஜை நிலையான ஸ்திதியில் ஏற்படுத்தி, அதை உயர்தரக் காலேஜாக உயர்த்த வேண்டுமென்பதே. ஜனங்கள் இதுவிஷயத்தில் எவ்வளவு ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்களென்பது, காலேஜுக்கு அவர்கள் ரொம்பப்பண உதவி செய்திருப்பதிலிருந்து நன்றாய்த் தெரியவரும். இப்போதுள்ள நிலைமையில் கவர்ன்மெண்டார் இந்தக்காலேஜை தங்களுடைய மேற்பார்வையில் வைத்துக்கொண்டு, அதை உயர்தரக் காலேஜாக உயர்த்தினால் ஜனங்களுக்கு ஒரு பெரிய உபகாரம் செய்ததாகும்.

நமது ஜில்லாவிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு வெளியூர்களிலிருந்து வரும் மாணவர்களில் பெரும்பாலார் ரொம்ப சீர்கேடான ஹோட்டல்களில் சாப்பிட்டுவருவதோடு, நல்ல இடங்களில் வஸிக்காமல் கெட்ட ஸகவாஸம் உள்ள இடங்களில் தங்கிவஸித்து வருகிறார்கள். இவைகளால் அவர்களுடைய ஸன்மார்க்கம் ரொம்பவும் கெட்டுப்போகக்கூடும். சென்னையில் மிஸ்ஸஸ் அனிபெஸண்டும், சென்னை ப்ரமுகர்களும் சேர்ந்து மாணவர்கள் தங்கியிருப்பதற்கும் சாப்பிடுவதற்கும் ஹோஸ்டல்கள் ஏற்படுத்தியிருப்பதுபோல, இந்த ஜில்லாவிலும் ஹோஸ்டல்கள் ஏற்படுத்த வேண்டியது அவச்யமாகும். இந்த ஜில்லாவிலுள்ள ஜனங்கள் இது விஷயமாய் தாராள சிந்தையுடன் கவனம் செலுத்தவேண்டியது அவச்யம்.—என்று இப்படி மிஸ்டர் ஸ்ரீநிவாஸ முதலியார் சொன்னார்.

### டாக்டர் டி. மாதவன் நாயர்.

இந்தக் கான்பரென்ஸுக்கு ஆனரபிள் டாக்டர் டி. மாதவன் நாயர் ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவருடைய ப்ரஸங்கத்தில் ஸ்தல ஸ்வய ஆட்சியைப் பற்றிச் சொல்லும் பாகத்தைச் சுருக்கி எழுதுகிறோம்.

இந்தியாவில் ஸ்தல ஸ்வயஆட்சி யென்பது லார்ட் மேயோ காலத்தில் ஆரம்பமாயிற்று. ஆனால் 1882-ம் வர்ஷத்தில் (லார்ட்ரிப்பன் வைஸ்ராயாக இருந்தபோது) தான் ஸ்தல ஸ்வயஆட்சியில் அபிவ்ருத்தி ஏற்படலாயிற்று. தேசத்தில் கல்வி அதிகரிக்கவே ஜனங்களில் சிலர் பொது விஷயங்களில் ஊக்கங்காட்டத் தலைப்பட்டார்கள். இப்படிப்பட்ட ஜனங்களை நல்ல பொதுஜனக் கார்யங்களுக்கு உபயோகிக்க வேண்டியது அவச்யமென்று லார்ட் ரிப்பன் அபிப்ராயங்கொண்டு, ஸ்தல ஸ்வய ஆட்சி ஏற்பாட்டை ஸ்தாபிக்கலானார். லார்ட் ரிப்பன் ஏற்படுத்தின ஸ்தலஸ்வய ஆட்சிமுறையின் சில முக்யமான கொள்கைகள் என்னவென்றால், எல்லா ஸ்தல ஸ்தாபனங்களிலும் பாதிக்குக்குறையாமலும், மூன்றில் இரண்டு பாகத்துக்கு மேற்படாமலும் உத்யோகஸ்தரல்லாத மெம்பர்கள் இருக்கவேண்டும். லோகல் போர்டுகளின் ஆதீனத்தில் இருக்கக்கூடிய ப்ரதேசம் ஒரு தாலுக்காவின் அளவுக்குக் குறையக்கூடாது. கூடுமான விடங்களிலெல்லாம் ஸ்தல ஸ்தாபனங்களின் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களா யிருக்கவேண்டும். கவர்ன்மெண்டார் ஸ்தலஸ்தாபனங்களின் வேலைகளை கவனித்து ஏதாவது குறைகளிருந்தால் எடுத்துக்காட்டிக் கண்டிக்கவேண்டும். ஆனால் இன்ன வேலைகளைச் செய்யவேண்டுமென்று கட்டளையிடக்கூடாது.



லார்ட் ரிப்பன் வெளியிட்ட ஸ்தல ஸ்வய ஆட்சி தீர்மானத்தில் கண்ட முக்யமான கொள்கைகள் ரொம்ப சரியானவை. அனுதாபத்தோடும், ஆதரவோடும் அந்தக் கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்திருந்தால், முனிஸிபல் ஸ்தாபனங்கள் இப்போதுள்ளதைவிட அதிகமாக அபிவ்ருத்தியடைந்திருக்கும்.

ஸமீபத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்ட தீர்மானத்தில், ஸ்தல ஸ்வய ஆட்சியின் நோக்கங்கள் முற்றிலும் நிறைவேறுவதற்குப் பல தடைகளிருக்கின்றனவென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தத் தடைகளாவன.

1. ஸ்தல ஸ்தாபனங்களின் வருப்படிகள் ஸ்வல்பமாயிருப்பதோடு, அதிகமாவதற்கு இடமில்லாமலிருக்கிறது.

2. புதுவரிகள் போடுவதற்கு முடியாமலிருக்கிறது.

3. அநேக இடங்களில் ஜனங்கள் பொதுக் கார்யங்களில் தலையிட்டுக்கொள்ள விரும்புவதில்லை.

4. அநேக இந்திய கனவான்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு எலெக்ஷனுக்கு நிற்க இஷ்டப்படுவதில்லை. ஏனென்றால் எலெக்ஷனுக்கு நிற்பதில் ஸங்கடங்களும் பணச் செலவும், இதர அஸௌகர்யங்களும் நேரிடுகின்றன.

5. இவைகளைப் பொருள் படுத்தாமல் எலெக்ஷனுக்கு நின்று ஸ்தல ஸ்தாபனங்களில் சேருபவர்களில் சிலர் தாங்கள் வகிக்கும் ஸ்தானங்களுக்கு லாயக்கில்லாதவர்களா யிருக்கிறார்கள்.

6. ஸ்தல ஸ்தாபனங்களில் ஜாதி வித்யாஸத்தால் மெம்பர்களுக்குள் மனஸ்தாபங்கள் நேரிடுகின்றன.

உலகத்தின் பற்பல பாகங்களிலுமுள்ள முனிஸிபல் ஸ்தாபனங்கள் எப்படி நடந்து வருகின்றனவென்று ஆராய்ச்சிசெய்தால், மேற் சொன்ன குறைகள் இந்தியாவில் மாத்ரம் இருக்கின்றனவென்று சொல்வதற்கில்லையெனத் தெரியவரும். இவைகள் மற்ற உயர்வு அடைந்த தேசங்களிலுங்கூட இருக்கின்றன. அமெரிக்காவில் முனிஸிபாலிடிகளின் நிலைமையைப் பற்றிப் பரிசீலனை செய்த மிஸ்டர் ப்ரைஸ் என்பவர், அங்குள்ள ஜனங்களில் திறமை வாய்ந்தவர்கள் தங்கள் ஸொந்த அலுவல்களின் மேல் கவனமுள்ளவர்களாயும், படித்த ஜனங்கள் முனிஸிபாலிடி ஸம்பந்தமான வேலைகளில் தலையிட்டுக்கொள்வது கௌரவக் குறைவு என்றெண்ணுபவர்களாயுமிருக்கிறார்களென்றும், இந்த இருவகுப்பாரும், பணஞ் செலவழித்து எலெக்ஷன் முதலியவைகளை தங்களுக்கு ஸாதகமாக மாற்ற எண்ணும் ஜனங்களுடனும், ஸமயத்துக் கேற்றபடி ஜனங்களுக்கு ஹிதமாகப் பேசி கார்யத்தை முடித்துக் கொள்ளுபவர்களுடனும் எலெக்ஷனில் போராடித் தங்கள் காலத்தையும் ஸௌக்யங்களையும் வீணாக்க இஷ்டப்படுகிறதில்லை யென்றும், தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிலேயே இப்படியிருக்கிறதென்றால், இந்தியாவிலும் மேற் சொன்ன காரணம் கொஞ்ச தூரம் பொருந்துமென்று சொல்லலாம்.

தக்க கனவான்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் சேராமலிருப்பதற்கு இன்னொரு காரணமும் சொல்லலாம். அதாவது கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்த சிறு விஷயங்களிலும் அனாவச்யமாகத் தலையிட்டுக்கொள்வதே. இப்படித்தலையிட்டுக்கொள்வதால் ஸ்வய ஆட்சி யென்பதற்கு அர்த்தமேயில்லாமல் போகிறதென்று சொல்லலாம். இதனால் ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ளவர்கள் கவர்ன்மெண்டாருடைய உத்தரவுகளை அமுலுக்குக் கொண்டுவருகிறவர்களாக ஆகிறார்கள். ஆகவே தன் மதிப்பு உள்ள எவரும் ஸ்தல ஸ்தாபனங்களில் சேர்ந்து உழைக்க முன் வருவதில்லை. சென்னை கவர்ன்மெண்டார் சென்ற 25 வர்ஷகாலமாக இதே மாதிரியாக முனிஸிபல் ஸ்தாபனங்களில் சிறு விஷயங்களில் கூட அனாவச்யமாகத் தலையிட்டு வந்தி

ஆகவே, கவர்ன்மெண்டார் தக்க கனவான்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் சேருவதில்லையென்றால் அதற்கு ஒரு விதத்தில் அவர்களே (கவர்ன்மெண்டாரே) காரணம்.

ஸமீபத்தில் அதிகாரப்பிரிவினைக் கமிஷன் இதுவரையில் முனிஸிபாலிடிகளின் பணவ்யவஹாரங்களில் கவர்ன்மெண்டார் வைத்திருந்த ரொம்ப கடுமையான மேற்பார்வையைக் குறைக்கவேண்டுமென்று சிபார்சு செய்தது. மாகாண கவர்ன்மெண்டுகளில் சில மேற்பார்வை நிபந்தனைகளைக் கொஞ்சம் குறைக்க இஷ்டப்படுகின்றன. வேறு சில இன்னும் சற்று அதிகமாக குறைக்க இஷ்டப்படுகின்றன. இந்தியா கவர்ன்மெண்டாரோ மாகாண கவர்ன்மெண்டுகள் தங்கள் அபிப்ராயப்படி நடக்கட்டுமென்றும், ஆனால் அதிகாரப்பிரிவினைக் கமிஷன் சொல்லும் கொள்கைகளை வரவர முற்றிலும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயலவேண்டுமென்றும் அபிப்ராயப்படுகிறார்கள்.

முனிஸிபல் ஸ்தல ஸ்வயஆட்சி ஏற்பட்டு 33 வர்ஷமாகியும், அதிகாரப்பிரிவினைக் கமிஷன் பலமாக சிபார்சு செய்திருந்துங்கூட, ஸ்தல ஸ்வய ஆட்சியின் முக்ய கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதில் கவர்ன்மெண்டார் இவ்வளவு தயங்குவார்களானால், இவைகளைத் தக்கமாதிரியில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவார்களென்று நினைப்பதற்கு ஹேதுவேயில்லையென்று சொல்லலாம்.

முனிஸிபாலிடிகள் விஷயத்தில் மாகாண கவர்ன்மெண்டுகள் ஸ்வல்பமாவது மேற்பார்வை நிபந்தனைகளைக் குறைக்க இஷ்டப்படுகின்றன. ஜில்லா போர்டுகள், தாலுக்கா போர்டுகள் விஷயத்திலோவென்றால், அவ்வளவு தூரங்கூட நிபந்தனைகளைக் குறைக்க இஷ்டப்படவில்லை. இந்தியா கவர்ன்மெண்டோ எல்லாவற்றையும் மாகாண கவர்ன்மெண்டுகள் தங்கள் யுக்தம்போல் செய்துகொள்ளட்டுமென்று சொல்லிவிட்டிருக்கிறார்கள். லார்ட் ரிப்பன் அப்படி ஒன்றையும்விடவில்லை. அவர் தமக்கு எது சரியென்று தோன்றிற்றோ, அதையே, கீழதிகாரிகள் என்ன ஆக்ஷேபித்தாலும் கவனியாமல்; ஸாதித்துவந்தார். மாகாண கவர்ன்மெண்டுகள் எந்த சீர்திருத்தத்திலும் ஊக்கங்காட்டுவதில்லை. இவைகள் தங்கள் யுக்தம்போல் ஸ்தல ஸ்வயஆட்சியில் சீர்திருத்தம் செய்யட்டுமென்று சொன்னால், ஸ்தல ஸ்வய ஆட்சியில் ஒரு முன்னேற்றமும் ஏற்படுவதென்பது முடியாது.

இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்தாபனங்களின் வரும்படி குறைவாயிருப்பதையும், புதுவரிகள் போடமுடியாமலிருப்பதையும், மற்றவைகளோடு, ஸ்தல ஸ்வய ஆட்சிக்குத் தடைகளாக இருக்கின்றனவென்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாவிதமான வரிகளையும் தங்களுக்கு என்று எடுத்துக்கொண்டுவிட்டால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு புதுவரிகள்போட மார்க்கங்கள் எப்படி ஏற்படும்? இந்தியா கவர்ன்மெண்டார் சிலவரிகளை ஸ்தல ஸ்தாபனங்களுக்கென்று விட்டுவிட்டு, அதோடு க்ராண்டுகள் கொடுத்து உதவி, அந்தந்த ப்ரதேசங்களுக்கென்று வரிகள் போடுவதற்கும், முனிஸிபாலிடிகள் ஸொந்தத்தில் வ்யாபாரம் செய்வதற்கும் அனுமதிகொடுத்துவந்தால் ஸ்தல ஸ்தாபனங்களின் பணநிலைமை வ்ருத்தியாகும்.

முனிஸிபல் எலெக்ஷன்களில் (லஞ்சங்கொடுத்தல் முதலிய) கெட்ட வழக்கங்கள் ஏற்பட ஹேது இருக்கிறதென்று பலர் சொல்லுகிறார்கள். இந்தக் குறையும் இந்தியாவுக்கு மாத்ரம் புதிதல்ல. குடியாட்சி எங்கெங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் இந்தக் கெட்டவழக்கங்கள் ஏற்பட ஹேது உண்டு. இம்பீரியல் கவர்ன்மெண்டார் இந்தக் குறையை நீக்க தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்காக ஒரு சட்டம் செய்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

மேலும் இந்தியாவிலுள்ள முனிஸிபல் ஸ்தாபனங்களை மேற்பார்வை செய்யும் உத்யோகஸ்தர்கள் அவ்வளவு திறமையுள்ளவர்கள் அல்ல, ஜில்லா அதிகாரி தனது அதிகாரத்தைப் பூராசெலுத்துகிறவர். ஜன ஸ்வய ஆட்சியின் கொள்கைகளையும் முறைகளையும் அறிந்து அனுதாபத்துடன் நடந்துகொள்ள அவருக்குத் தெரியாது. முனிஸிபாலிடிகள் எவ்வளவு கெவ்வளவு நாள் பட்டவையோ, அவ்வளவுக்கு அதன் மேலதிகாரியாய் வரும் உத்யோகஸ்தரும் ரொம்ப பால்யமாயிருக்கிறார். முனிஸிபல் வேலைகளைக் கார்ய அவஸரங்களுக்கேற்ப நடத்தாமல், சட்டப்படி க்ரமமாயும் மெதுவாயும் செய்யவேண்டியிருக்கிறது. இதனால் முனிஸிபல் ஸ்தாபனங்களில் தகுந்த அளவு முன்னேற்றம் ஏற்படுவதிற்கில்லை.

**கோயம்புத்தூர் ஆசார சீர்திருத்தக் கான்பரேன்ஸ்.**

இந்தக் கான்பரென்ஸ் இந்த மாஸம் 24-ந் தேதி யன்று ஈரோடில் கூடிற்று. உப்பிலாகாவைச்சேர்ந்த மிஸ்டர் அ. மாதவய்யா ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில், ஆசார சீர்திருத்தமென்பது முக்யமாய் ப்ராமண ஜாதியையும், அந்த ஜாதியின் ஆசாரங்களைப் பின்பற்றி நடந்துவரும் இதரவகுப்பார்களையும் ஸம்பந்தப்பட்டதாக இருக்கிறதென்றார். ப்ராம்மண வகுப்பல்லாத மற்ற ஜாதிகளில் பெரும்பாலார் ப்ராமணர்கள் ரொம்ப உயர்ந்த ஜாதியென்றும், அவர்களுடைய ஆசாரங்கள் ரொம்ப மேன்மையானவை என்றும் நம்பி அவர்களுடைய மாயவலையில் சிக்கியிருக்கிறார்கள். ஆகவே ப்ராம்மணர்கள் செய்த ஆசார ஸம்பந்தமான தீங்குகளை ப்ராமணர்களே சீர்திருத்தவேண்டும். அவர்கள் தான் ஜாதி ஏற்பாட்டால் உண்டான தீங்குகளை நீக்கி ஜனங்களை உயர்த்த முன்வரவேண்டும். அநேக ப்ராம்மண ப்ரமுகர்கள் ஆசார சீர்திருத்தத்துக்காக ரொம்பவும் பாடுபட்டுவருவது ரொம்பவும் ஸந்தோஷிக்கத்தக்கது.

அநேக நல்ல ஆசாரங்கள் காலக்ரமத்தில் கெட்ட ஆசாரங்களாய்ப் போய்விடுகின்றன. எந்த ஆசாரங்கள் நல்லவை, எவை கெட்டவைகள் என்று நிர்ணயிக்கவேண்டியது அவச்யமாகிறது; இப்படி நிர்ணயிப்பதற்கு சாஸ்த்ரங்களை ஆதாரமாகக் கொள்வது சரியல்ல. சாஸ்த்ர க்ரந்தங்களில் நல்ல விஷயங்களோடு அநேக கெட்ட விஷயங்களும் கலந்திருக்கின்றன—என்று மிஸ்டர் மாதவய்யா சொன்னார்.

இன்னும் அவர், ஜாதி ஏற்பாட்டை கொஞ்சங்கொஞ்சமாய்ப் போக்கிவிட வேண்டுமென்றும், ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டியது அவச்யமென்றும், பால்யவிவாகத்தைநீக்கவேண்டுமென்றும், ஸ்த்ரீகளுக்கு 19-வது வயஸில் தான் கல்யாணம் செய்யவேண்டுமென்றும், ஆனரபிள் மிஸ்டர் ஸ்ரீநிவாஸ சாஸ்த்ரியாரின் ருதுமதி விவாக மசோதாவை சட்டமாக்கவேண்டியது அவச்யமென்றும், பால்யவிதவைகளுக்குப் புனர்விவாகம் செய்வதை ஆதரிக்கவேண்டுமென்றும் சொன்னார்.

## WAR HOSPITALS.

## யுத்த ஆஸ்பத்ரிகள்.

யுத்தத்திற்குப் போகும் ஸோல்ஜர்கள் அவர்களுடைய ஸௌகர்யங்களைப் பற்றி கொஞ்சமாவது கவலைப்படவேண்டியதில்லை. அவர்களுடைய உடைகளை சுமந்து போவதற்கு ஒரு ப்ரத்யேக டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சாப்பாட்டு ஸாமான்களைக் கொண்டுபோக வேறொரு டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அதே மாதிரியாக அவர்களுடைய தேக ஸுகத்துக்கு வேண்டியவைகளையெல்லாம் கொடுப்பதற்கு தகுந்த ஸிப்பந்திகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சத்ருக்களைக் கொல்லும் கார்யத்தில் ஸோல்ஜர்கள் தங்களுக்கும் அங்கஹானிகளை அடைகிறார்கள். அங்கச் சேதமாத்ரமல்ல; காடு, மலை, வனாந்த்ரங்களில் திரிந்து, மாறுபாடான சீதோஷ்ண ஸ்திதிகளுக்கு உள்படுவதால், சில ஸமயங்களில்பெரிய வ்யாதிகளினாலும் வருந்துகிறார்கள். எவ்வளவு தான் ஸைன்ய டிபார்ட்மெண்டார் ஸோல்ஜர்களின் தேக ஸுகத்திற்

காக கவலை யெடுத்தபோதிலும், மனிதனுடைய அதிகாரத்திற்குள் படாத மழை மாரிகளையும், ஸகிக்க முடியாத குளிர்காற்றையும் நிறுத்த மனிதனால் ஆகுமோ? இதுவரையிலும் நடந்த யுத்தங்களில் அனுபவித்த கஷ்டங்களை நன்றாய் உணர்ந்து, அவைகளை நிவர்த்திசெய்ய கூடுமான வரையிலும் இப்பொழுது ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

### ராணுவ வைத்ய ஸிப்பந்திகள்.

குதிரைப் படைகள், காலாட்படைகள் யுத்தத்துக்குப் போகும்பொழுது எப்பொழுதும் அவைகளுடன் டாக்டர்களும் நர்ஸுகளும் அதாவது ஆயாள்களும் போவார்கள்.

ஒவ்வொரு ஸோல்ஜருக்கும் அவன் பெயர், மதம், ஸைன்யப் பிரிவின் நம்பர் ஆகிய இவைகளை யெழுதிய அலுமினியத் தகடொன்றும், காயம்பட்டவுடன் புண்ணை சுத்திசெய்து கட்டுவதற்குரிய மருந்து, துணிகள் ஆகிய இவைகள் அடங்கிய ஒரு சிறியபையும் கொடுத்திருப்பார்கள். யுத்தம் ஆரம்பிக்கப்போகும் ஸமயத்தையறிந்தவுடன் "ஸ்ட்ரெச்சர்" என்று சொல்லப்பட்ட வ்யாதிக்காரரைத் தூக்கிக்கொண்டுபோகும் கட்டில்களை சுமப்பதற்கு ஆள்களை நியமித்துவிடுவார்கள். ஒவ்வொரு டாக்டருடன் சுத்தஜலமும் மருந்துப் பெட்டியும் எடுத்துக்கொண்டு காவலாளன் ஒருவன் இருப்பான், 'ஸ்ட்ரெச்சர்' தூக்குபவரின் வேலை என்னவென்றால், காயம் பட்டவர்களை யுத்தகளத்திலிருந்து அங்கேயே ஒரு பக்கத்தில் மருந்துபோட்டுக் கட்டும் இடத்திற்கு சுமந்து வருவதே.

### யுத்தகளத்தில் காயங்கட்டுதல்.

இப்படி கொண்டுவரப்பட்ட காயம்பட்டவர்களுடைய காயங்களைப்பார்த்து அவைகளை சுத்திசெய்து கட்டி, இன்னும் வேண்டியதைச்செய்து, காயம்பட்டவனை காயம் ஸ்வல்பமாயிருந்தால் மறுபடியும் போய் சண்டைபோடவோ, அல்லது பின்னுள்ள ஆஸ்பத்ரிக்குப்போகவோ யுத்தகளத்து டாக்டர் சொல்லி விடுவார். இவர் செய்வதெல்லாம் தற்கால சாந்திகளே.

### ட்ரெஸிங்க் ஸ்டேஷன்.

யுத்தகளத்திற்கு வெகு ஸமீபமாக புண்களை யலம்பிக்கட்டுவதற்கு "ட்ரெஸ்ஸிங்க் ஸ்டேஷன்" என்ற ஸ்தானங்கள் சில இருக்கும். பலமாக காயம்பட்டவர்களை யெல்லாம் இந்த விடத்திற்கே கொண்டு போவார்கள். அவஸரமாய்ச் செய்யவேண்டிய சிகித்ஸைகளைச்செய்து அதிலிருந்து தூரத்திலிருக்கும் "பீல்ட் ஆஸ்பத்ரிகளுக்கு" உடனே அனுப்பிவிடுவார்கள். இந்த மாதிரி ட்ரெஸ்ஸிங் ஸ்டேஷன்களை யுத்தம் நடக்கும் இடத்திற்கு அருகிலும், கூடியவரையிலும் சுத்தஜலம் கிடைக்குமிடத்திலுமே அமைப்பார்கள். ஆனால் இந்த ஸ்டேஷன்கள் யுத்தந்தீருமளவும் ஒரே விடத்தில் இரா. ஸைன்யம் போகுமிடமெல்லாம் இவைகளையும் மாற்றுவார்கள்.

### பீல்ட் ஆஸ்பத்ரிகள்.

பீல்ட் ஆஸ்பத்திரிகள் ட்ரெஸ்ஸிங் ஸ்டேஷனிலிருந்து தள்ளி இருக்கும். ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும், 100 படுக்கைகள் இருக்கும். இங்கே வெகு தேர்ச்சியடைந்த 4 டாக்டர்கள் இருப்பார்கள். அவர்களில் ஒருவர் எந்த ஆபரேஷன் வேண்டுமென்றாலும் செய்யக்கூடிய அவ்வளவு நிபுணராயிருப்பார். இந்த பீல்ட் ஆஸ்பத்ரியில், எந்த சிகித்ஸை வேண்டுமென்றாலும் செய்யலாம். அவ்வளவு ஸாதனங்களுமுண்டு. வீடு கிடைத்தால் வீட்டிலும், அல்லது பெரிய கூடாரங்களிலும் இந்த ஆஸ்பத்ரிகள் நடத்தப்படும்.

ஸாதாரணமாய் தங்கள் ஸைன்யங்களை நிறுத்தியிருக்கும் இடத்திற்கு பின்னதாகவே, இந்த பீல்ட் ஆஸபத்ரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். ஸைன்யம் ஜயம் பெற்று முன் செல்லுந்தோறும். இந்த ஆஸ்பத்ரிகளையும் தகுந்தபடி தொடர்ந்து முன்னே கொண்டு போவார்கள். யுத்தம் நடக்கும்பொழுது, மேல் மேலும் காயப்பட்டு வருகிறவர்களுக்கு சிகித்ஸை செய்யும் பொருட்டு வந்தவர்களுக்கு சீக்ரத்தில் சிகித்ஸை செய்து இன்னும் பின்னுள்ள பெரிய பேஸ் ஆஸ்பத்ரிகளுக்கு அனுப்பிவிட வேண்டும்.



### வழிப்போக்கு பீல்ட் ஆஸ்பத்ரிகள்.

மேல் விவரிக்கப்பட்ட 'பீல்ட்' ஆஸ்பத்ரிகள் ஸ்திரமாய் இருப்பனவல்ல. ஸைன்யம் ஜயித்து முன்னே போகப்போக பீல்ட் ஆஸ்பத்ரிகளும் முன்னே போகும். ஆகவே இப்படி முன்னே போய்க்கொண்டிருக்கும் பீல்ட் ஆஸ்பத்ரிகளுக்கும் அநேகமாய் அடிக்கடி மாறாத பேஸ் ஆஸ்பத்ரிக்கும் நடுவிலுள்ள தூரம் ஜாஸ்தியாகிக்கொண்டு வரும். இப்படி தூரமான பேஸ் ஆஸ்பத்ரிக்கு காயம்பட்டவர்களை அனுப்புவதென்றால் அவர்களுக்கு ஸௌகர்யங்கள் வேண்டாமா? அதற்காக ஒருநாள் ப்ரயாண தூரத்துக்கு மேற்படாமல் வழியில் வழிப்போக்கு ஆஸ்பத்ரிகளும் இருக்கும். இங்கே வ்யாதிக்காரரை இளைப்பாற வைத்து, மருந்து உணவுகள் அளித்து மறுபடியும் வண்டிகளில் போட்டு பேஸ் ஆஸ்பத்ரிக்கு அனுப்பவே, இந்த வழிப்போக்கு ஆஸ்பத்ரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எப்பொழுதும் வ்யாதிக்காரர் வழியில் வந்து கொண்டே இருப்பார்களாதலால், இந்த ஆஸ்பத்ரிகள் எப்போதும் சுறுசுறுப்பாயே இருக்கும். சிலவேளை எவனாவது ஒருவன் அபாயகரமான ஸ்திதியில் மேல் ப்ரயாணத்துக்கு லாயக்கில்லாமல் போய்விட்டால், அவனைமட்டும் அவ்விடத்தில் வைத்துக்கொண்டு சிகித்ஸை செய்வார்கள். இப்படிப்பட்டவர்கள் இங்கே இறந்தும் போவதுண்டு.

### பேஸ் ஆஸ்பத்ரிகள்.

இப்படி யுத்தகளத்திலிருந்து, காயம்பட்டவர்களும் நோயாளிகளும் பெரிய "பேஸ் ஆஸ்பத்ரிக்கு" கொண்டுவரப்படுவார்கள். வ்யாதி ஸ்வஸ்தமாகும்வரையிலும் இவ்விடமே அவர்கள் இருக்க வேண்டும். நோயாளிகளது தேக ஸௌகர்யத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மிகவும் ஒழுங்காய் இங்கு செய்யப்படும்.

இதுதான் யுத்த பூமியில் காயம்பட்டவர்களை ஸ்வஸ்தமாக்கும் வைத்ய டிபார்மெண்டாரின் வேலையின் சிறிய விவரணை. இப்படி ஸைன்யத்தின் தொகைக்குத் தக்கபடி அநேக ஆஸ்பத்ரிகள் ஏற்படுத்தப்படும். ஆஸ்பத்ரிகளெல்லாம், யுத்தகளம் மாறும்பொழுது, ஸைன்யத்துடன் வெகு சீக்ரமாய் பிரித்து எடுத்துக்கொண்டு போகும்படியாய் இருக்கவேண்டும். ஒரு பெரிய ஆஸ்பத்ரியில், ஸுமார் 500 படுக்கைகள் இருக்கலாம். அவச்யமான ஔஷதங்களும், கேவலம் ஒரு குண்டூசி முதல், விலைபிடித்த ஆயுதங்கள் வரையில், ஒவ்வொன்றும் சரியாய் சுத்தி செய்யப்பட்டு, அதது அததன் குறிப்பிட்ட இடத்தில் தயாராய் வைத்திருக்கப்படும். ஸாமான்கள் ஒன்றுக்கொன்று மாறியோ, அல்லது வேறெந்த விதமாவது கலந்தோ போகாம லிருப்பதற்காக அந்தந்த ஸாமான்களின்மேல் சீட்டுகள் ஒட்டியிருக்கும்.

பீரங்கி, துப்பாக்கி, சனியன்களினால் காயம் படுவதுமல்லாமல், ஊர்விட்டு ஊர்திரிந்து தேக ச்ரமப்படுவதால், வேறு விதமான வ்யாதிகளாலும் அநேகர் வருந்துவார்கள். ஆகவே சிகித்ஸைக்கு வேண்டிய டாக்டர்களுக்கும், நர்ஸுகளுக்கும் கணக்கில்லை. அவர்கள் எல்லாரும் வேலையில் திறமடைந்து மிகவும் சுறுசுறுப்பாய் இருப்பது மிகவும் அவச்யம். மேலும், ஸோல்ஜர்கள் பல மதத்தவர்களாயும், வெவ்வேறு பாஷைகள் பேசுபவராயும் இருப்பார்களாதலால், டாக்டர்களும் அநேக பாஷைகள் தெரிந்தவர்களாயும், வரும் நோயாளிகளது மதாசாரம், பழக்க வழக்கங்கள் ஆகிய இவைகளை அறிந்தவர்களாயும் இருந்தால் மிகவும் உத்தமம். இதற்காகவே, ஒவ்வொரு நாட்டிலிருந்தும் ஸைன்யத்துடன் அவ்விடத்து டாக்டர்கள் போவார்கள்,

பண்டக சாலைகள் எவ்வளவோ ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில் ஸாமான்கள் குறைந்துபோனால், உடனே பண்டக சாலைகளிலிருந்து அவைகளை அனுப்பிவிடுவார்கள்.

யுத்தகளத்திற்கு அருகிலிருக்கும் ஆஸ்பத்ரிகள்மேல் ஒரு மாதிரி கொடி பறக்கச் செய்வார்கள். ராத்திரி காலங்களில் ஆஸ்பத்ரியென்று தெரிவதற்கு ப்ரத்யேகமான விளக்குகள் போடப்படும். அதில் வேலை செய்பவர்களெல்லாரும் ஒருமாதிரி விருது மார்பில் அணிந்து கொள்வார்கள். ஆகையினால் ஸ்நேகிதானாலும் சத்ருவானாலும், ஜீவகாருண்யத்திற்காக உழைக்கும் இவர்களை சண்டையில் எதிர்க்காமலும் வேறு யாதொரு தொந்தரவும் செய்யாமலும் விட்டு விடுவார்கள். இதுதான் நாகரிகம் உயர்ந்த இந்நாளில் மனிதத் தன்மையோடு யுத்தஞ் செய்யும் வழி.

## AGRICULTURAL IMPLEMENTS.

BY M. VAIDYANATHAN.

## விவஸாயக் கருவிகள்.

மரக்கலப்பைகள் அங்கங்கே மாட்டின் சக்திக்கேற்றபடி அமைந்திருக்கின்றன. கடப்பை, கர்நூல், பல்லாரியில் ஒரு முழ ஆழம் கரிசல் மண்ணை புரட்ட "பெத்தமடகு" என்று ஒரு கலப்பை உபயோகப்படுகிறது. மாடு சிறியதாயுள்ள மலையாள தேசத்தில் கலப்பைக்கடியில் குழிவாய் செய்து மேல்பக்கத்தில் இருபுறமும் சாய்பாகச் செய்து உழ, மாட்டுக்கு கஷ்டமில்லாமல் இருக்கிறது. வலுவு குன்றிய மாடுகளை உடைய தஞ்சை ஜில்லாவில் மலையாளம் கலப்பைகளை உபயோகிக்கலாம். மேடு பள்ளத்தை ஒத்தடி செய்வதற்கு திருநெல்வேலியிலுள்ள பரம்பு ச்லாக்யமானது. தகுந்த ஆழ உழவை ஸ்வல்ப ப்ரயாஸத்தில் செய்யக்கூடிய இரும்புக்கலப்பைகள் அவச்யமானவை. புன்செயில் உபயோகிக்கும் இரும்புக் கலப்பைகள் நன்செய்க்கு வேண்டியதில்லை. சேற்றுக்கு ஏற்றவாறு சிறிய இரும்புக் கலப்பைகள் இருக்கின்றன. இப்போதுள்ள மரக்கலப்பைகளையே ஆழ உழும் வண்ணம் அமைத்துக்கொள்ளலாம். உழவுக்கேற்ற கொழு வேண்டும். நடவு காலங்களில் ஸுலபமாய் ஒரு ஜதை மாட்டைக்கொண்டு $1\frac{1}{2}$ ஏக்கரை 6 மணி நேரத்திற்குள் களறிகொடுக்கும்படி சில புதுமாதிரிக் கலப்பைகள் அங்கங்கே உபயோகத்தில் இருக்கின்றன.

மாயவரத்தில் மிஸ்டர் ரத்னஸாமி ஆசாரியால் உருண்டு கொண்டு போகும் வண்ணம் "அகலம் 3 அடி முதல் 5 அடிவரையில்" உள்ளதாய் ஒரு கலப்பை செய்து விற்கப்படுகிறது. விலை ரூபா பத்து முதல் பதினைந்து வரையாக இருக்கிறது. இது இரும்புவேலை. சேற்றுக்கு மட்டும் உபயோகமானது. முன்னாடி ஸாதாரண கலப்பைகளால் நன்றாய் உழவு ஐந்த பிறகு, இந்த கலப்பையை நடவின் போதுமட்டும் உபயோகப்படுத்த வேண்டும். இன்னும் மரத்தினால் குழந்தைகளின் நடை வண்டி போல் செய்து கீழ் மூன்று முதல் ஏழு பல்லுகள் வரையில் மரத்தினால் சொருகி இரும்புக்கொழு போட்டு உழவு வேலையை ஸுலபமாய் முடிக்கிறார்கள். திருவாரூருக்கு ஸமீபத்தில் ஸாதாரணமாய் உழும் மரக்கலப்பையின் மேழியில் "ட" மாதிரி இரண்டு இரும்பு கொழுக்களைச் சொருகி உழுகிறார்கள். இவ்விதம் செய்து பார்த்ததில் இரண்டு கொழுவின் மத்தியில் காலியிடம் விழுகிறது. இந்த கலப்பைகளில் எந்தக் கலப்பை வேண்டுமானாலும் அனுப்பப்படும். மேற் சொன்னபடி கீழ்மண்ணை மேலே புரட்டக்கூடிய ரெக்கைக் கலப்பைகளையும், இன்னும் தான்யத்தை தூற்றி ஒப்படி செய்யும் காற்றுடிபட்டரையையும் (Winnowing Machine), கால்நடை தீவனமாக உபயோகிக்கும் சோளத்தட்டு, கேழ்வரகு தட்டு இவைகளை துண்டு துண்டாய் வெட்டும் (Chaff cutter) யந்த்ரங்களையும் விவஸாயிகள் வாங்கி உபயோகிக்கவேண்டும்.

எம். வைத்யநாதன்.



## LOVE'S TRIUMPH.

BY V. P. KRISHNASWAMI AIYAR.

## காதல் வெற்றி.

(536-ம் பக்கத் தொடர்ச்சி.)

### III

மணி எட்டாகியும் ஸ்ரீநிவாஸன் எழுந்திருக்கவில்லை. ரெயில்வண்டியில் மூன்றாவது வகுப்பில் ப்ரயாணம் செய்த களைப்பினால் அயர்ந்து தூங்கிவிட்டான். ஆனால் அவன் தூக்கத்தில் இனிய கனவுகள் காணாமல் இருக்கவில்லை. ஸுந்தரி தன்னை எழுப்பி 'அத்தான், கொஞ்சம் காப்பி சாப்பிடுகிறதுதானே; எத்தனை நாழிகை தூங்குகிறது. அத்தான், எழுந்திரு,' என்று கூப்பிட்டதாகக் கனவுகண்டான். என்ன ஆச்சரியம்! அவன் எழுந்து உடனே கண்ணை விழித்துப் பார்த்ததும், ஸுந்தரி கையில் வெள்ளி டம்ளரில் காப்பியும் ஒருதட்டில் உப்புமாவையும் வைத்துக்கொண்டு சிரித்து நிற்பதைப் பார்த்து மகா ஸந்தோஷங்கொண்டு,

'சுந்து, வா, இங்கே உட்காரு' என்றான்.

'இல்லை, என்னைத் தொடாதே. நான் மடி. ஸ்நானம் செய்தாய்விட்டது. சமைக்கப்போகிறேன்.' என்றாள்.

'ஆமாம், மடியுமாச்சுக் கிடியுமாச்சு' என்று அவளை இழுத்துப்பக்கத்தில் உட்காரவைத்து,

'ஏன், சுந்து, அப்பா எங்கே' என்று கேட்கு முன்,

'அடி ஸுந்தரி! சுந்து!' என்று அலமேலு அம்மாள் ஒலமிட, ஸுந்தரி அவஸரமாய் உள்ளேபோய் விட்டாள்.

ஸ்ரீநிவாஸனுக்கு அலமேலம்மாளிடம் வெகு கோபம் வந்துவிட்டது. அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு எழுந்து பல் தேய்த்துவிட்டு சிற்றுண்டியருந்தி தினஸரிஸமாசாரப் பத்ரிகையைப் பார்ப்பதற்காக க்ளப்புக்குச் சென்றான்.

அன்றைய தினம்தான் நவராத்ரி ஆரம்பம். அதற்காகவே பத்துநாளைக்குக் கலாசாலை மூடப்பட்டது. ஸுந்தரியைப் பார்த்துவிட்டு வரலாமென்றே அவன் ஊருக்கு வந்தான். வேறொரு பற்றும் இங்கே அவனுக்குக் கிடையாது. மேலும் நவராத்ரி ஆரம்பித்ததும் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு மண்டூகத்தைப்போல் ஸதா படித்துக்கொண்டு கொஞ்சங்கூட அன்பின் ஆதரவில்லாமல் யார்தா னிருப்பார்கள்? இதை நினைத்தே அவன் ஊருக்குவந்தான். ஏனெனில் நவராத்ரியின் மகாத்மியம் தானென்ன! நமக்கிருக்கும் பண்டிகைகளிலெல்லாம் அது ஒவ்வொரு விதத்திலும் சிறந்தது. அதற்கு முதற்காரணம் அது ஸ்த்ரீகளுக்குமாத்ரம் ஸம்பந்தப்பட்ட பண்டிகையாயிருப்பதே. புருஷர்களுக்கு ஸொந்தமான உபாகர்மம், விநாயக சதுர்த்தி முதலியவைகள்போலில்லாமல் சித்ராபௌர்ணமி, வரலக்ஷ்மி வ்ரதம், மங்கலியப் பெண்டுகள், அரசப்ரதட்சணம் ஆகிய பெண்களின் சுபதினங்களைப்போல் நவராத்ரி எப்பொழுதும் நம்மனதில் ஒரு மேன்மையான எண்ணத்தையும் உத்ஸாகத்தையும் தருகிறது. மேலும் ரிஷிபஞ்சமியைப்போல் கிழவிகள் கொண்டாடுவதாயில்லாமல், கன்னிப்பருவம் அடைந்தும் அடையாததுமாயிருக்கிற சிறுமிகளே நவராத்ரியைக் கொண்டாடுவதால் அது எப்பொழுதும் நம் ஆதரவை அடைகிறது. இந்த வர்ஷம் நவராத்ரிதான் ஸ்ரீநிவாஸன் செம்மையாக அனுபவிக்கக்கூடும். அடுத்த வருஷம் பி. ஏ. முடிந்ததும் எங்கேயோ ஒரு வேலையாய்ப்போய் தன் தலைபாரத்தைத் தானேச் சுமக்க நேரிட்டால் எப்படி ஸந்தோஷப்படுவது! ஒரு வேளை ஸுந்தரி அடுத்த நவராத்ரிக்குள் வேறொருவனுக்கு வாழ்க்கைப்படலாம். அப்பொழுது அவன் எண்ணமெல்லாம் விழலுக்கிறைத்த நீராய்ப்போய்விடுமன்றோ?

கொலு ஸாமான் வாங்குவதற்காக புதுச்சேரிக்குப்போன அருணாசலய்யரும் அன்று பத்துமணி ரெயிலில் ஊருக்கு வந்து விட்டார். அன்று முழுவதும் ஸுந்தரி கொலு வைப்பதும்

யாரைக் கூப்பிட்டு என்னென்ன பாட்டுகள் பாடுகிறதென்று மனோராஜ்யம் செய்வதுமாய் பொழுதைப்போக்கினாள். அன்று ஸாயங்காலம் மஞ்சள் வெய்யில் தாழ்ந்ததும், இவள் ஒரு ரமணீயகரமான பட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு 'லண்டன் தர்பார்' ரவிக்கையைப் போட்டுக்கொண்டு, தங்க ஒட்டியாணத்தைப் பூட்டி, தனக்கிருந்த பாட்லி, வங்கி, காரை, கிள்ளட்டிகை முதலிய ஸ்வர்ண ஆபரணங்களைப் போட்டுக்கொண்டு 'மஞ்சள் குங்குமத்திற்கு' கூப்பிடப் புறப்பட்டாள். அப்பொழுது அவளைக்கண்ட ஸ்ரீநிவாஸன் என்ன செய்வான்! ஒன்றுமேயில்லாமல்ஒரு தோம்பு ரவிக்கையையும் மதுரைப் புடவையுங் கட்டிக்கொண்டு இருக்கும் பொழுதே சுந்தரி மகா ரம்யமாய் விளங்குவாள். இப்பொழுது அவள் தாழம்பூவைத்துப் பின்னி, மயிரைத் தொங்கவிட்டு, அதில் திருகியிருந்த ஜடைநாகரும், கல்லிழைத்த அம்ஸக்கட்டிடம் திருகுபூவும், குஞ்ஜிலிப்பொட்டும், புன்னகைமுகமும், அன்பு நிரம்பிய வதனமும் இவன் மனதைப் பிடித்து அவள் பார்வையாகிய காராக்ருகத்தில் அடைத்து விட்டன. திருட்டுத்தனமாய் மறைவில் நின்று அவள் புறப்பட்டு அக்ரஹாரத்துப் பெண்களைக் கூப்பிடப் போகுமுன் அவள் முகலாவண்யத்தைப் பார்த்து தேன் குடித்த நரி போல் விழித்துக்கொண்டிருந்தான். இதை எப்படியோ பார்த்துவிட்ட ஸ்ரீமதி அலமேலம்மாள் ஓவென்று கதறி, தன் அருமைப் பெண்மேல் யாரோ கேடுகெட்டவர்கள் கண் த்ருஷ்டி போட்டுவிட்டார்களென்று பத்துநாள் கொலுவுக்கும் எடுத்துவைத்திருந்த கர்ப்பூரம் எல்லாவற்றையும் எடுத்துக்கொளுத்தி தன் பெண்ணைச்சுற்றி, ஸ்ரீநிவாஸனையும் ஒரு முறை எறிட்டுப்பார்த்து, வாசலில் கொண்டுபோய்க் கொட்டிவிட்டாள். ஸ்ரீநிவாஸன் மனம் முற்றும் முறிந்து விட்டது. கண்ணீர்ததும்ப அவன் வீட்டை விட்டு வெளியில் போயாவது இயற்கையினிடம் தன் குறையைத் தீர்த்துக் கொள்ளலாமென்று அந்தவூர் நதிக்கரையை நோக்கிப் புறப்பட்டான்.

ராத்ரி 7 மணிக்கு ஸ்ரீநிவாஸன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். உள்ளே பெண்களெல்லாம் எதெதோ பேசிக்கொண்டிருந்தார்கள். இவன்போனால் எல்லாரும் எழுந்து பூனையைக் கண்ட எலி போல் ஓடிவிடுவார்களென்று இவனுக்குத் தெரியும். அதனால் வாயில் திண்ணையில் உட்கார்ந்து என்ன செய்கிறார்களென்று உற்றுக்கேட்டான்.

'ஏண்டி, லக்ஷ்மி! நீ தான் ஒரு பாட்டுச் சொல்லேன்' என்றாள் ஸௌந்தரி.

இல்லடீம்மா, எனக்குத் தொண்டை கம்மி, யிருக்கு. ஸரஸ்வதியைப் பாடச்சொல். நாகாளத்திலே கூட அவள்தான் நன்னா பாடினாள்.'

'ஆமாண்டி! நான்தான் இளக்காரம். நீங்களெல்லாம் தொண்டை கம்மியிருக்கு, நாக்கு தடிச்சிருக்கு, என்று உட்கார்ந்திருங்கோ; நான் வீடு வீடாய்ப் போய் பாடிவிட்டு சுண்டல் வாங்கிக்கொண்டு போகிறேன். என்னைத் தான் தண்ணி தெளிச்சுவிட்டிருக்கு' என்று தன் ஸ்வய ரூபத்தைக் காட்ட ஆரம்பித்தாள்.

'மீனு, நீயாவது ஒரு சந்தை சொல்லேன் என்றாள் ஸௌந்தரி திரும்பவும். 'சுந்து, எனக்கு வெட்கமாயிருக்கு. நீ மின்னே ஒண்ணு சொல்லு. அப்புறம் கட்டாயமாய் நான் பாடறேன்' என்றாள்.

இவ்வளவு ஒய்யாரத்தையும் பிகுவையும் பார்த்து அலமேலம்மாள், 'ஆமாண்டி, தேஞ்சுவிடப் போகிறது. நான் சின்னப் பெண்ணாயிருக்கும் பொழுது என்ன பாட்டுப் பாடுவேன் தெரியுமா. எனக்கு ஒருநாளும் உங்களாட்டம் தொண்டை கம்மிப்போகாது; வெட்கமாயிருக்காது. (அதற்குக் கேட்பானேன்!). ஸரிதான். கலிகாலத்துப் பெண்களோன்னோ. மூளைக்கச்சேயே ராங்கியும் கர்வமுந்தா னிருக்கு. அடி சுந்து, நீ ஒரு சந்தை சொல்லு, யாராவது பாடினால் பாடட்டும்.



இல்லாவிட்டால் அவாள் பாட்டை அவாளே வைத்துக்கட்டும்' என்று பரபரவென்று பேசினாள். உடனே ஸௌந்தரி அருகிலிருந்த ஹார்மோனியப் பெட்டியை எடுத்து ச்ருதிவைத்து 'இதினமே ஸுதினமு' என்கிற கீர்த்தனத்தைப் பாடிக்கொண்டே வாசித்தாள். இதைத் தெருவிலிருந்து கேட்ட ஸ்ரீநிவாஸன் மெய்மறந்து தான் முன் லீவில் கேட்டதைவிட இப்பொழுது எவ்வளவு கெட்டிக்காரியாய் ஸௌந்தரி தேர்ச்சியடைந்து விட்டாளென்று ஸந்தோஷங்கொண்டு கீர்த்தனத்தின் ஒவ்வொரு த்வனியையும் அப்படியே விழுங்கிவிட்டான். இனிமேல் கேட்கவேண்டியதில்லை; அம்மா போதும் போதும் என்று சொல்லியும் ஒருவரும் கேட்கவேயில்லை. தலைவலியெடுக்க ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த ஜாவளிகளையும், கும்மிகளையும், ஓடங்களையும், லாலிகளையும், பத்யங்களையும்பக்ஷபாதமின்றிப் பாட ஆரம்பித்துவிட்டார்கள். லக்ஷ்மிக்குக் கொஞ்சமேனும் தொண்டை கம்மவில்லை. ஸரஸ்வதி கொஞ்சமேனும் ஸங்கோசப் படவில்லை. மீனுவுக்கு வெட்கப்படுவதே வெட்கமாய்விட்டது. ஸௌந்தரியை விட வேறொருவரும் பாட இஷ்டப்படாத ஸ்ரீநிவாஸன் இதேது விடாது போலிருக்கிறதே கஷ்டம் என்று உள்ளே சென்றான். அதே ஸமயத்தில் அலமேலம்மாள்,

'அடி குட்டிகளா! நாழியாச்சு. உங்களம்மா தேடப்போகிறாள். அடி சுந்து, அவாளுக்கு வெத்திலைப் பாக்குக்கொடு' என்றாள்.

இதற்குமேல் ஸங்கீதவித்வான்கள் ஒன்றும் செய்யமுடியவில்லை. அரைமனதுடன் மழை ஓய்ந்ததெனப் பாட்டை நிறுத்தி தத்தம் வீட்டுக்குச் சென்றார்கள்.

அன்றிரவு எல்லாரும்போஜனம் முடித்தவுடன் அருணாசலய்யர் ஏதோ சில ஸமாசாரங்களை அலமேலம்மாளிடம் பேசிவிட்டுப் படுக்கைக்குப்போய்விட்டார். ஸ்ரீநிவாஸன் கூடத்தறையில் கட்டிலில் போயுட்கார்ந்து ஒருமெழுகு வர்த்தி விளக்கைவைத்துக்கொண்டு ஏதோ வாசிக்க ஆரம்பித்தான். அப்போது ஸௌந்தரி உள்ளே வந்து,

'அத்தான் நான் வரலாமா? உன் படிப்பைக் கெடுக்கிறேனோ?' என்றாள்.

'அதெல்லாமில்லை, வாம்மா' என்றான்.

'நீ கொஞ்சம் சுண்டல் எடுத்துக்கிறயா?

'அதுக்கென்ன இருக்கட்டும். அப்பா என்னமோ பேசிக்கொண்டிருந்தாரே, அது என்ன? என்றான்.

ஸௌந்தரி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அவள் தேகம் முழுவதும் வியர்த்து சோகமுற்றுப் பரிதாபமாயிருந்தாள்.

'சுந்து, எதற்கு அழுகிறாய்? சொல்லம்மா. என்ன விசேஷம் நடந்துவிட்டது'

'நான் என்னென்று சொல்லுவேன். எங்களப்பா எங்க மாமாப் பிள்ளை ஜாதகத்தைக் கேட்டிருந்தார். அதுவும் இன்னிக்கு வந்தது. ஜாதகமும் ஒத்திருக்கிறது என்று அம்மாவினிடம் சொன்னார். அதுமுதற்கொண்டு, சீமா, என்னை என்னமோ பண்ணுகிறது. நானென்ன செய்வேன். ஐயோ!' என்று கதற ஆரம்பித்தாள்.

'சுந்து, நீ ஒன்றுக்கும் பயப்படாதே. அப்படி ஒன்றும் நடக்காது. நான் உயிருள்ள வரையில் உன்னைக் காப்பாற்றுகிறேன். ஏன் சுந்து, சுந்து, கொஞ்சம் அழாதேம்மா. மாமி வந்து விடப்போகிறாள். இதோ என்னைப் பார். துரைச்சி!' என்று ஸௌந்தரியைக்கிட்ட இழுத்து அவள் கண்களைத் துடைத்து மயிரைக்கோதி முகத்தைப் பார்த்தான்.

'சுந்து, நீ மாத்ரம் ஒன்று சொல்லு. எது நடந்தாலும் நீ என்னைவிட வேறொருவனுக்கும் வாழ்க்கைப்படவில்லையென்று எனக்குக் கைபோட்டுக்கொடு. நான் உன்னை ஒரு நாளும் கைவிடமாட்டேன். இதோ பார் சுந்து. என் மார்பில் கை வைத்துப்பார். அது எப்படி அடித்துக்கொள்ளுகிறது. நீ என்னைக் கைவிட்டாயானால் நான் மனமுறிந்து அகத்யம் உயிரைவிடுவேன்' என்றான்.

இந்த வார்த்தைகளைக்கேட்ட ஸௌந்தரி மனம் பதறி, 'சீமா, இத்தனைநாள் என்னோடிருந்தும் என் குணம் உனக்குத் தெரியாதுபோச்சே; அடே, நீ என்னைவிட்டால் எனக்குக் கிணறுங் குளமும் தானிருக்கு. இதைக் சட்டாயமாகச் சொல்லுகிறேன். சீமாத்தான், என்னை இப்படியெல்லாம் கேட்காதே. குழந்தைமுதல் நான் உன்னைத்தவிர வேறொருவரையும் சட்டைபண்ணவில்லையே. எது வந்தாலும் வரட்டும். உலகமே எனக்கெதிராக நிற்கட்டும். நான் ஒன்றும் செய்யப்போகிறதில்லை. கல்யாணம் பண்ணிக்கொண்டால் உன்னைப் பண்ணிக்கொள்கிறது. இல்லாவிட்டால் தூக்குப்போட்டுக்கொண்டு சாகிறது' என்று படபடவென்று சொன்னாள்.

இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஸ்ரீநிவாஸன் ஒருகாலும் மறவாதபடி அவன் ஹ்ருதயத்தில் படிந்துவிட்டன. இதுவரையில் ஒருநாளும் அவள் அப்படிப்பேச அவன் கேட்டதில்லை. தேவாம்ருதமென இந்த இன்பச் சொற்களை அவன் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது, ஸௌந்தரி திரும்பவும், 'அத்தான், இந்த வர்ஷம் உனக்கு பி. ஏ. முடிந்துவிடுகிறது. அடுத்த வர்ஷம் எப்படி யிருந்தாலும் ஒரு பத்துரூபாய் வேலைகிடைக்கும். ஒத்தரைப்பற்றி நமக்காக வேண்டியதென்ன? நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள். இல்லாவிட்டால் நானென்ன செய்வேன்'. என்று திரும்பவும் அழ ஆரம்பித்தாள்.

ஸ்ரீநிவாஸன், 'சுந்து நீ ஒன்றுக்கும் பயப்படாதே. நான் அகத்தியம் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளுகிறேன். இன்னும் கொஞ்ச நாள் மாத்ரம் பொறுத்திரு. எல்லாம் சரியாய் நடக்கும். என் உயிர்போனாலும் உன்னைக் கைவிடமாட்டேன். என் கண்ணே! நீ இல்லாவிட்டால் இந்த உலகம் முழுவதும் எனக்கு ஸொந்தமாய்வந்தாலும் அது எனக்கொரு லக்ஷ்யமா. நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே' என்று அவளை இறுகத்தழுவி ஒரு முத்தமிட்டான்.

IV.

நவராத்ரி பத்துநாளும் ஸ்ரீநிவாஸன் ஊரிலேயே யிருந்தான். லீவு முடிந்ததும் சென்னைக்குப்போய் பழையபடி தன் பாடங்களைப் படிப்பதிலேயே காலங்கழிப்பான். 'மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளா' ரென்பது இவனுக்கே நன்கு அமையும். ஒரு நாடகம், பாட்டுக்கச்சேரி, வேடிக்கை ஒன்றுக்கும் அவன் போவது கிடையாது. ஸதா படிப்பதிலேயே காலத்தைக் கழித்தான். ஒருவேளை படிப்பினால் களைப்பு அடைந்தால் ஸௌந்தரியைப்பற்றி நினைப்பான். அவளுருவம் தன் மனக்கண்ணுக்கு முன் நிற்கவே திரும்பவும் உத்ஸாகங்கொண்டு புஸ்தகங்களை எடுப்பான். இவ்வாறு காதலின் மகிமையால் தன்னைப்போன்ற உழைப்பாளிகளாகிய மற்ற மாணவரைக்காட்டிலும் அதிகம் வாசித்து வகுப்பில் முதன்மையாய்விட்டான். தன் தரித்ர தசையைப்பற்றி பலமுறை பலவாறு நொந்தழுவான். தானாகவே தேறுவான். ஸதா ஸௌந்தரி மனோகரியின் ஜபத்தைச் செய்துகொண்டிருப்பான்.

இவ்வாறு முயற்சியையே துணையாகக்கொண்டு கல்விக்கடலில் உழலும்போது, ஒரு நாள் இவன் 'காலேஜ்' ப்ரதம உபாத்யாயர் இவனைக் கூப்பிட்டு,

'ஸ்ரீநிவாஸன்! கலெக்டர் பரீக்ஷைக்கு படிப்பதற்காக உன்னை இங்லண்டுக்கு ராஜாங்கத்தார் அனுப்பினால் உனக்குப்போக ப்ரியமுண்டா' என்றார்.

இதைக்கேட்ட ஸ்ரீநிவாஸன் தன்னைத்தானே நம்பவில்லை. 'முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்' என்னும் வாக்யம் இவனுக்கே பொருந்தியது. இங்லண்டுக்குப்போய் கலெக்டர் பரீக்ஷையில் தேறினால் மாமியுங்கூட தனக்கே ஸௌந்தரியைக் கொடுக்க ஸம்மதிப்பாளென்கிற எண்ணம் இவன் மனதில் பட்டது. உடனே அப்படிப்போக தனக்கு ஸம்மதமென்று சொல்ல, பெரிய துரை இவனை நடக்கப்போகும் 'யூனிவர்ஸிடி' பரீக்ஷைக்கு நன்றாக வாசிக்கும்படி புத்தி கூறி அனுப்பிவிட்டார்.



பெரிய துரை இவனைப் பொறுக்கி யெடுத்து கவர்ன்மெண்டாருக்கு சிபார்சு செய்தது ஆச்சரியமல்லவே! ஆனால் இதை ஸ்ரீநிவாஸன் பெருமையாகபாவித்து மேன்மேலும் ஊக்கங்கொண்டு புஸ்தகமும் கையுமாயினான். இப்படி இவன் இருக்கும் பொழுது ஒரு நாள் ஸாயங்காலம் பவழக்காரத் தெருவில் நண்பன் ஒருவனைப்பார்க்கப் போன போது ஒரு வீட்டு வாயிலின் முன் ரெயிலில் தன்னுடன் மதுரைக்கு ப்ரயாணஞ் செய்த பெண்மணியைப் பார்த்தான். ஓடோடியும் 'அம்மா ஸௌக்யமா? நீங்கள் வேறு விலாஸமன்றோ எனக்குக் கொடுத்திருந்தீர்கள்' என்றான்.

'வா அப்பா, உள்ளே வா. முன்னிருந்த வீட்டைவிட்டு இங்கு வந்து பத்து நாளாகிறது. நன்றாய் படிக்கிறாயாப்பா. கொஞ்சம் பட்சணம் சாப்பிடேன்' என்று தேன்குழலும் ஒரு டம்ளரில் குளிர்ந்த தீர்த்தமும் கொண்டு வந்து வைத்தாள்.

ரெயில் ஸ்நேகம் என்று ஸகஜமாய் வழங்கப்படும் சிலமணி நேரத்தின் உறவு, இந்த மாதினிடம் எவ்வளவு பக்ஷத்தை உண்டாக்கியது என்று ஸ்ரீநிவாஸன் மனங்கரைந்து, அவள் கொடுத்த பக்ஷணத்தைச் சாப்பிட்டு எதெதோ பேசிவிட்டு, 'ரூமுக்கு' வந்து விட்டான். இது முதல் இவன் அவள் வீட்டுக்குப் போவதுண்டு. அவளிடம் தன் பூர்வீக சரித்ரத்தை யெல்லாம் சொன்னான். அவள் கணவனும் இவன் மேல் அன்பு கொண்டு பக்ஷமாயிருந்தார். தன் வீட்டிலேயே வனுக்கு மறு தளிக்கப்பட்ட உறவும் பற்றும் வர் வீட்டில் இவனுக்கிருந்தது.

நாட்கள் ஓடின. ஸ்ரீநிவாஸன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய விஷயங்கற்றுக்கொண்டு தன் படிப்பில் வெகுவாய்த் தேறி விட்டான். 'க்ரிஸ்ட்மஸ்' லீவு வந்தது. அதற்கு இவன் ஊருக்குப்போகவில்லை. பின்பு பைத்யம் பிடித்தவன்போல் ஸதா வாசித்துக்கொண்டிருப்பான். இதெல்லாம் ஸௌந்தரியின் காதலையடைய அல்லவோ உபாயம்? காதல் இருக்கப்பெறின் எது முடியாத கார்யம்! காதலே இவ்வுலகத்தில் நடக்கும் எல்லா கார்யங்களுக்கும் முதற் கடவுளாயிருக்கிறது. அதுவே மனிதர்களின் உயிர் வாழ்க்கைக்குக் காரணமாயிருந்து ஸந்தோஷிப்பிக்கிறது.

V.

ஏப்ரல் மாஸம் பரீக்ஷை முடிந்தது. ஸ்ரீநிவாஸன் எல்லா கேள்விகளுக்கும் சரியான உத்தரமே யளித்திருந்தான். ஆனால் அவனுக்கு அப்பொழுது அஸாத்யஜ்வரம். எங்கே ஒருவேளை முதலில் தேற தவறிவிடப்போகிறோமோ என்கிற பயம் இவனுக்கு அதிக மிருந்தது. ஸௌந்தரியின் ஞாபகமே இவனை அபாயத்தினின்று நீக்கியது. பரீக்ஷை முடிவுபெற்றதும் இவன் ஊருக்குப் போய்விட்டான். போனதும் ஜ்வரம் அதிகமாக இவன் பாயும் படுக்கையுமாய்விட்டான். ஸௌந்தரியோ மனங்கலங்கி அன்ன ஆகாரம் வெறுத்து இவன் ஸௌகர்யங்களைப் பார்ப்பதிலேயே கண்ணோக்கமாயிருந்தாள். அலமேலம்மாளுக்கு இந்த விஷயத்தைப்பற்றி வெகு கோபம். என்ன சொல்லியும் கேட்காத இந்தக் குட்டியை ஒருநாளும் ஸ்ரீநிவாஸனுக்குக் கொடுக்கப்படாதென்று தீர்மானித்துவிட்டாள். ஆதலின், ஸ்ரீநிவாஸனிடம் நெருங்கி வெளிப்படையாக அன்புகொண்டாடும் ஸௌந்தரியைப் பலவாறு தூஷிக்க ஆரம்பித்தாள். அப்படி அவள் செய்வதற்கு எல்லாம் ஸௌகர்யமாயிருந்தது. பாவம், ப்ராமணன் அருணாசலய்யர் ஊருக்கு ஒரு சிங்கம்போலிருந்தாலும், தன் பத்னியைக் கண்டால் தலைகுனிந்து நாய்க்குட்டிபோல் ஓடி யொளிப்பார். இவர் மனைவி பலமுறை இவருடைய புத்தியின்மையைப்பற்றி, கல்வியில்லாக்

கசடனென்று, பக்கத்து, ஸ்திரீகளுடன் உபன்யாஸம் செய்திருப்பது இவருக்கு நன்றாய்த் தெரியும். எப்படியிருந்தாலும் தன் மனைவி வெகு பதிவ்ரதையென்றும், தன் நன்மைக்காகத் தான் இவ்வளவுதூரம் ப்ரயாஸை யெடுத்துக் கொண்டு சொல்லுகிறாளென்றும், அவள் இல்லாவிட்டால் தன் குடித்தனம் இவ்வளவு முன்னுக்கு வந்திராதென்றும் இவர் எண்ணியிருந்தார். ஆதலின் இப்படிப்பட்ட சிரோமணி என்ன சொன்னாலும் இவர் பொறுத்திருப்பார். இவருக்கே ஒவ்வொரு முறை கோபம் வரும். ஆனால் அந்த ஸமயங்களில் ஸ்ரீமதி அலமேலம்மாள் மதயானைபோல் கர்ச்சித்து, இப்படிப்பட்ட வீட்டில் தன்னைக் கொடுத்ததற்காக தன் தாய் தகப்பன்மாரை தூஷித்து, இதைவிட பாழுங்கிணற்றில் தள்ளி விட்டிருக்கலாமென்றும், தன் அரிய ஸகோதரன் வாலாஜாபேட்டை போலிஸ் இன்ஸ்பெக்டர் இவள் துக்கத்தைக் கேட்டால் அருணாசலய்யரை ஜெயிலில் அடைத்து ஆறுமாதம் களிதின்று செக்கிழுக்கச் சொல்லுவாரென்றும், ஓவென்று கூக்குரலிட்டு அழுவாள். மானியாகையால் அருணாசலய்யர் அச்சங்கொண்டு 'நான் தெரியாமற் செல்லிவிட்டேன், மன்னிக்கவேண்டும்' என்று கெஞ்சுவார். ஆனால் இந்த ஜாலத்துக்கெல்லாம் அலமேலம்மாளா உட்படுவாள்? முன்னைவிட அதிகமாக ஆக்ரோஷித்து, நாயென்றும், பேயென்றும், அன்பில்லாக் கசடனென்றும், வேறுயாரையோ வைத்துக்கொண்டு அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டு தன்னை அடிக்கிறாரென்றும், விடியற்காலை ரெயிலில் வாலாஜாபேட்டை போய் விடுகிறேனென்றும், கண்ணீர் சொரிந்து பலாக்கணம் பாட ஆரம்பிப்பாள். இதற்குமேல் அருணாசலய்யருக்கு ஒன்றும் செய்யத் தோன்றாது. கொஞ்சம் இருந்த தைர்யமும் போய், வாஸ்தவமாய் தான் வெகு துன்மார்க்கனென்றும், அப்படியில்லாவிட்டால் தன் தர்மபத்னி ஏன் பொய் சொல்லவேண்டுமென்றும், பலவாறு சிந்தித்து அவள் மோவாய்க் கட்டையைப் பிடித்து, 'நான் இனிமேல் ஒன்றும் செய்யவில்லை. அலமேலு, அலமேலு, கோபித்துக் கொள்ளாதே. இந்த ஒரு தடவைமாத்ரம் என்னைப் பொறுத்துக்கொள். இனிமேல் நான் ஏதாவது செய்தால் கண்டிப்பாய் என்னை ஜெயிலில் அடைக்கும்படிசெய்' என்று மன்றாடுவார். இவ்வளவு சிகித்ஸைகளுக்குப் பிறகு அலமேலம்மாள் ஒருவாறு கோபந்தணிந்து நெற்றிக்கண்ணை மூடி, தன் ப்ரிய நாதனை அன்புடன்தழுவி ஆனந்தத்துக் குள்ளாக்குவாள்.

இப்படி யிருக்கும் குடும்பத்தில் ஸௌந்தரியை யார் லக்ஷ்யம் செய்யப்போகிறார்கள். அம்மாளடித்தாளானால் அணைப்பது யார்? குழந்தை முதல் இவள் தானாகவே அழுது தானாகவே தேர்ந்து தன்னைப் பெற்ற தாயை பேயென கசந்தாள். இப்பொழுது ஸ்ரீநிவாஸனை தன்எண்ணத்துக்கு விரோதமாக இவள் நேசிப்பதைப் பார்த்து மனந் தாங்காமல் நெய்யைக் கொட்டினாள், பாலைச் சிந்தினாள், வடித்த கஞ்சியில் ஒரு ஆள் சாதமிருக்கிறது, என்று ஸமயத்துக்கு வேண்டிய ந்யாயங்களை முகாந்தரமாகக்கொண்டு அபராதமும் சிட்சையும் விதிப்பதற்கு பதிலாக அரிவாள்மணை, மணைப்பலகை, கல்சட்டி முதலிய யுத்தகருவிகளால் குழந்தை ஸௌந்தரியை ஸதா மோதிக்கொண்டிருப்பாள். இவள் அடிப்பட்டு இவளுக்கு உடம்பெல்லாம் காய்ப்புக்காய்ச்சிவிட்டது. இவைகளை ஒரு மேல்நாட்டான் கண்டால், இவளுக்கு 'விக்டோரியா க்ராஸ்' மெடல் கொடுக்கலாமென்று கட்டாயமாய்ச் சொல்லி யிருப்பான். ஸ்ரீநிவாஸன் வைத்யன் சிகித்ஸையைக் காட்டிலும் கடவுள் அருளினால் கொஞ்சங் கொஞ்சமாவ்யாதி மெலிந்து தேகவலியுண்டாகி ஸௌக்பட்டான். ஸ்ரீநிவாஸன் குணப்பட்டு விட்டனை; கண்ட ஸௌந்தரி ஆனந்தங்கொண்டு அவனை சுற்றி சுற்றிக் கூத்தாடினாள். இதை திடீரென்று உள்ளேவந்த அலமேலம்மாள் பார்த்துவிட்டு,



'ஆடம்மா ஆடு, கூத்தாடு, அங்கே அடுப்பு வீணாக எரியறது, இங்கே கூத்தாடு, உன் ஜன்மத்துக்கு ஆட்டமும் ஒன்று, கேடா! 'வந்ததே சிறுக்கி பந்தடித்தாள், வர வரச்சிறுக்கி கழுதை மேய்க்கிறாள்' என்கிற கதைபோலிருக்கிறது. நீ என்னபண்ணுவேடி, இடங்கொடுத்துக் கொடுத்து உன்னைக் கெடுத்துவிட்டா, நீ என்ன செய்யுவே, சீ, இப்படிப் போ', என்று தன் தமையன் போலீஸ் இன்ஸ்பெக்டராதலால் இவளுக்கும் போலீஸ் 'கல்தா' அனுபோகமுண்டாயிருந்தது பற்றி, தன் பெண்கழுத்தில்கையைக் கொடுத்து, ஒரு தள்ளாகத்தள்ளி, அடுப்பங்கரைக்குப் போகும்படி செய்தாள். இதைப்பார்த்த ஸ்ரீநிவாஸன் மனம் நொந்து,

'மாமி அவளென்ன செய்து விட்டாள், எதற்காக இப்படித் திட்டுகிறீர்கள்?' என்று கேட்டான்.

'அப்பா! நீ பெரிய மனுஷ்யன், யானை மேலிருக்கிறவனிடம் சுண்ணாம்பு வாங்குவதெப்படி? உன்னோடு பேசினால் எனக்கவமானம். என் வீட்டிலேயே என்னைப்பற்றித் தாங்கள் ஒன்றும் கேட்க வேண்டியதில்லை. திருவாயை மூடிக்கொண்டு கொஞ்சம் வெறும்மனே இருங்கள்,' என்று சொல்லிப்போய்விட்டாள்.

என்ன செய்வான் ஸ்ரீநிவாஸன்! தன்னெதிரிலேயே தன் காதலைக்கொள்ளை கொண்டவளை ஒரு ராக்ஷஸி ஹிம்ஸிக்க, அவளை வெல்ல முடியவில்லையே யென்று ஏக்கங்கொண்டு வாயில் திண்ணையில் போ யுட்கார்ந்தான். அப்பொழுது இவனுக்கு இரண்டு தந்திகளை 'போஸ்ட்' ஸேவகன் கொண்டுவந்து கொடுத்தான். ஒன்று இவன் பி. ஏ.—யில் ராஜதானியில் முதல் தரமாய்த் தேர்ந்துவிட்டானென்று ஒரு நண்பன் அனுப்பியிருந்தான். இரண்டாவது, கலாசாலை ப்ரதம உபாத்யாயரிட மிருந்து வந்தது.

'நீ முதல் வகுப்பில் முதலாய் இருப்பது பற்றி எனக்கு வெகு ஸந்தோஷம், உன்னை இங்க்லண்டுக்கு அனுப்ப ஸர்க்கார் ஸம்மதித்திருக்கிறார்கள். "நீ உடனே புறப்பட்டுப் பட்டணம் வரவும்." என்று எழுதியிருந்தார். இவனுக்கு இவைகளைப் படித்ததும் ஸந்தோஷம் கொஞ்சமில்லை. ஆனால் இந்த ஸமாசாரத்தை யாருடன் சொல்லவேண்டும்? மாமி இதை கேட்டால் அகங்காரப்படுவாளே யொழிய வேறேதாவது ப்ரயோஜனமுண்டா? ஆனால் ஸ்ரீநிவாஸன் இவைகளை கவனியாமல் ஒரே ஓட்டமாய்ஓடி,

"மாமி, மாமி! நான் பாஸ்பண்ணிவிட்டேன். மத்யானம் ஊருக்குப் போகிறேன். இன்னும் பத்துநாளில் நான் சீமைக்கு கலெக்டர் பரீக்ஷைக்கு வாசிக்கப்போகிறேன். ஸர்க்கார் எனக்குப் பணம் கொடுத்தனுப்பப் போகிறார்கள்' என்றான்.

இந்தவார்த்தைகள் ஒன்றையாவது அலமேலம்மாள் நம்பவில்லை. முதலில் இதெல்லாம் பகிரங்கமான பொய்யென்று நினைத்தாள். பிறகு, தந்திக்காகிதங்களையே நேரில் கண்டவுடன் இவன் 'பாஸ்' செய்ததென்பது உண்மையாயிருக்கும்; ஆனால் ஸர்க்கார் எங்கே இவனை இங்க்லண்டுக்கு அனுப்பப்போகிறார்களென்று ஸந்தேகப்பட்டாள். தன் தமையன் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருமைப் புதல்வனையே ஒருவரும் இங்க்லண்டுக்கு அனுப்பாதபோது, அநாதையாகிய ஸ்ரீநிவாஸனை அவ்வளவு பெரிய வேலைக்காக அனுப்புவதென்பதெல்லாம் வெறும் புரட்டென்று எண்ணினாள். ஆனால் அலமேலம்மாளை நம்பும்படி செய்வது பகீரத ப்ரயத்தனமாகையால், நம்பினால் நம்பட்டும், இல்லாவிட்டால் சும்மாவிருக்கட்டுமென்று ஸ்ரீநிவாஸன் போய்விட்டான்.

சுந்தரியோ ஸ்ரீநிவாஸன் தேறியதைப்பற்றி குதூகலங்கொண்டாள். அன்றையதினம் அவள் தாயாரே சமையல் நன்றாயிருக்கிறதென்றால் பின் கேட்பானேன். அன்று மத்யானம் ஸ்ரீநிவாஸன் சென்னைக்குப் போய்விட்டான். போகுமுன் பலாத்காரமாய் சுந்தரியைக் கலியாணம் பண்ண யத்தனித்தால், அவள் சென்னையில் தனக்கு ஸ்நேக

மான மாதரசியினிடம் அடைக்கலம் புகவேண்டுமென்று சொல்லிப்போய்விட்டான்.

## VI.

சென்னைக்குச் சென்றதும் ஸ்ரீநிவாஸன் நேராகப் பவழக்காரத்தெருவுக்குப் போனான். இவனைப்பார்த்ததும் லக்ஷ்மி அம்மாள் அதிக ஸந்தோஷமடைந்து அங்கேயே அவனை சாப்பிடும்படி வேண்டிக்கொண்டாள். ஸ்ரீநிவாஸன் தான் பரீக்ஷையில் தேறினதைத் தெரிவிக்க, பிள்ளை பெண் இருவரையும் பரிகொடுத்தவளாகையால் அவனைத் தன் பிள்ளையென்றே கருதி ஆனந்தக் கண்ணீர் விட்டாள். அன்று ஸாயந்த்ரமே ஸ்ரீநிவாஸன் 'காலேஜ்' துரையைப் பார்க்கச் சென்றான். அவர் களிப்புற்று தன் மனைவிக்கும் ஸ்ரீநிவாசனுக்கும் ஸ்நேகமுண்டாக்கி ஸாயங்கால நேரத்தை இன்பமாகப் போக்கும்படி செய்தார். ஸ்ரீநிவாஸன் இங்கிலண்டுக்குப் போகவேண்டிய தினமும் நெருங்கி விட்டது. அவன் குடுமியையெடுத்துவிட்டு, 'கிராப்' வைத்துக்கொண்டு, வேண்டிய உடைகளையும் தைத்துக்கொண்டு மேல்நாட்டு ஆசாரங்களை அங்கீகரிக்கத் தயாராயிருந்தான். இங்கிலண்டுக்குப்போகுமுன் ஒரு முறை ஸௌந்தரியைப் பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்று அவன் மனம் தூண்டிற்று. அப்படிப் போக இவனுக்குக் கொஞ்சமேனும் இஷ்டமில்லை. மாமியின் முகத்தில் விழிக்கவேண்டுமே யென்கிற பயம் அதிக மிருந்தது. ஆயினும் அன்பு தூண்ட, அச்சம் கண்டிக்க, ஒருவாறு மனம் ஸ்திரப்பட்டு ஊருக்குப்போகத் தீர்மானித்தான்.

ஸௌந்தரியைப் பார்த்ததும் இவன் மனம் உருகி,

'சுந்து, காத்ததெல்லாம் காத்தாய்விட்டது. இன்னுங் கொஞ்ச நாளுக்குப் பொறுத்திருந்தால் நாம் ஸௌக்யமாயிருப்போம். என்ன செய்வது, சொல்! இனிமேல் கொஞ்சமேனும் மாமா தாமஸிக்கமாட்டார். யாரையாவது தேடி உன்னைக் கொடுத்துவிடுவார். அப்புறம் நாமென்ன செய்வது. எனக்குக் கொடுக்க அவர் கனவிலும் நினைக்கவேயில்லை போலிருக்கிறது. என்னவோ நான் பண்ணின பாக்யம் அவ்வளவு தான். உனக்கு என்ன தோன்றுகிறது' என்றான்.

'சீமா! நான் என்ன சொல்லப்போகிறேன்! எனக்கு ஒன்று தான் தெரிகிறது—உனக்கு வாழ்க்கைப்பட்டால் நான் ஸௌக்யமா யிருப்பேன்; இல்லாவிட்டால் இதோ பார்த்துக்கொள், இந்த உயிர் என்னுடையதில்லை' என்று மார்பைத்தட்டிக் கண்ணீர் ததும்ப நின்றாள்.

'சரி, சுந்து இப்படி நாம் ஒருவர்க்கொருவர் பந்தயம் போட்டுக்கொண்டு நிற்கவேண்டாம். நான் சொல்லுகிறதைக் கேள். பட்டணத்தில் பவழக்காரத் தெருவில் 5-நெம்பர் வீட்டில் நான் முன் சொன்ன தங்கக் கம்பியான லக்ஷ்மியும் அவள் புருஷனும் இருக்கிறார்கள். அவர்கள் ரொம்ப நல்ல மனுஷ்யாள். உன்னை பலாத்காரமாக உன் அம்மான்சேய்க்காவது வேறு யாருக்காவது கல்யாணம் பண்ணிக்கொடுக்கத் தீர்மானித்தால், நீ அவர்கள் வீட்டுக்கு வந்துவிடு. உன்னை ஒருவரும் கண்டு பிடிக்கமாட்டார்கள். அவர்கள் உன்னைக் கண்ணுக்குக் கண்ணாக வைத்துக் காப்பாற்றுவார்கள். நான் இந்த விஷயத்தைப்பற்றி அவர்களிடம் பேசியிருக்கிறேன். இந்தா, உன் செலவுக்கு இந்த மூன்று பவுனையும் ஐந்து ரூபாயையும் வைத்துக்கொள். உனக்கு வைத்துக்கொள்வது கஷ்டமா யிருக்குமென்று மாற்றிக் கொண்டுவந்தேன்', என்று நாணயங்களை அவள் முன் நீட்டினான்.

'பணமெதற்காக, அத்தான்? எனக்கு வேண்டியதில்லை; தேசம்விட்டு தேசம்போகிறீர்கள். உங்களுக்கிருக்கட்டும். மேலும் அப்பாவிடத்தில் பணமிருக்கிறது' என்றாள்.

'அப்பாப் பணம் கிடக்கிறது. அதில் ஒரு காசுகூட நீ தொடாதே. இதை வாங்கிவைத்துக்கொள். எல்லாம் ஒருகாலத்துக்கு உதவும்' என்று அவள் கையில் கொடுத்தான்.

ரெயிலுக்கு நாழியாய்விட்டது. ஸௌந்தரியினிடம் பரபரப்புடன் உத்தரவு வாங்கிக்கொண்டு மாமாவையும் மாமியையும் நமஸ்காரம்செய்து, போய்விட்டு வருவதாகச் சொல்லி குழந்தை நாகராஜனுக்கு ஒரு ரூபாயை எடுத்துக்கொடுத்துவிட்டு ஸ்டேஷனுக்குப் போனான்.

சென்னைக்குச் சென்றதும் லக்ஷ்மி யம்மாளிடம் ஸௌந்தரிக்கு அபாயம் வந்தால் காப்பாற்றும்படி சொல்லிவிட்டு, அவளிடம் அவள் எவ்வளவு தூரம் வேண்டாமென்று சொல்லியும் கேளாமல் ரூபாய் 50 கொடுத்துவிட்டுக் கப்பலேறுவதற்காகப் பம்பாய்க்குப் போய் விட்டான்.

வி. பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர்,

(இன்னும் வரும்.)



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Technical Education for Rural Classes.

**க்ராம ஜனங்களுக்குத் தொழில் கல்வி.**—சென்னை கவர்னர் ஸமீபத்தில் மதனபள்ளிக்குத் போயிருந்தபோது, அவ்விடத்து ஜனங்கள் ஒரு உபசரிப்புப் பத்ரம் வாசித்துக்கொடுத்தார்கள். அதில் அவர்கள், ஜனங்களில் பெரும்பாலார் விவஸாயிகளாயிருக்கிறார்களென்றும், காலத்தில் மழை பெய்யாததால் ஜனங்கள் ரொம்ப கஷ்டப்பட வேண்டியிருக்கிறதென்றும், க்ராமங்களில் சிறுவர்களுக்கு தச்சு வேலை, நெசவு, கொல்லுவேலை முதலிய தொழில்களைக் கற்றுக்கொடுக்க தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தால், விவஸாயிகள் அந்தத் தொழில்களால் ஸௌக்யமாய் ஜீவனம் செய்ய முடியுமென்றும், கவர்ன்மெண்டார் இந்த ப்ரேரணையை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

அதற்கு கவர்னர், கைத்தொழில் கல்வியானது ரொம்ப அபிவ்ருத்தி யடையவில்லை யென்றும், இன்னும் கொஞ்சம் காலம் வரையில் பெரிய பட்டணங்களில் மாத்ரம் கைத்தொழில் கல்வியை அபிவ்ருத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அதனால் தற்போது க்ராமங்களில் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது முடியாதென்றும், ஆனால் பொது ஸ்தாபனங்களில் எவையாவது க்ராமங்களில் கைத்தொழில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க முன் வந்தால், கவர்ன்மெண்டார் அவைகளுக்குப் பண உதவி செய்வதைப்பற்றி கவனிப்பார்களென்றும் சொன்னார்.

### Educational Progress in India.

**இந்தியாவில் கல்வியின் அபிவ்ருத்தி.**—ஸுமார் 60 வர்ஷங்களாக இந்தியாவில் ஜனங்களுக்கு மேல் நாட்டுக் கல்வி கற்பித்துவந்தும், கல்வி ரொம்ப முன்னேற்றமடையவில்லையென்றும், ஸ்வல்ப ஜனங்களே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்களென்றும் ஒரு நிருபர் ஒரு இங்கிலீஷ் பத்ரிகைக்கு எழுதுகிறார். ஸமீபத்து ஸென்ஸஸ் கணக்குகளின்படி இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 6-பாகம் ஜனங்கள்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாம். இப்படியிருப்பதற்குக் காரணமென்னவென்றால், (1) இந்தியர்கள் வெகுவாய் ஏழைகள். படிப்புக்குச் செலவு செய்ய அசக்தர்களாயிருக்கிறார்கள். இதோடு, கல்வி டிபார்ட்மெண்டார் படிப்புச் செலவை அதிகமாக்கி, கல்வியபிவ்ருத்திக்குத் தடை செய்துவிட்டார்கள். (2) முன்பு இருந்த உபாத்யாயர்கள் பையன்களுடைய படிப்பு விஷயத்தில் அதிக ச்ரத்தை யெடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்போதுள்ள உபாத்யாயர்களோ அப்படியல்ல. (3) பாடங்களை இங்கிலீஷ் பாஷையில் படிக்க வேண்டியிருப்பது கல்வி அபிவ்ருத்திக்குத் தடையாயிருக்கிறது. சாஸ்த்ரம், தத்வம், தேசசரித்ரம் முதலியவைகளை அன்யபாஷையில் கற்பிக்காமல் தேச பாஷையில் கற்பித்துவந்தால், கல்வியில் ரொம்ப அபிவ்ருத்தி ஏற்படும். (4) இப்போது பரீக்ஷைகள் நடத்தும் ஏற்பாடானது பையன்களுடைய தேக ஸௌக்யத்துக்கு ரொம்ப பாதகமாயிருக்கிறது. அவர்களுடைய ஆயுஸுக்கும் கேடாக முடிகிறது.

### A School of Dyeing at Cawnpore.

**கான்பூரில் ஓர் சாயத்தொழில் பள்ளிக்கூடம்.**—கான்பூரில் இந்த மாஸம் முதல் டெம்பரரியாக ஓர் சாயத் தொழில் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்போகிறார்கள். அப்பள்ளிக்கூடத்தில், முதல் முதல் 8 மாணவர்களுக்குத் தான் இடங்கொடுக்கப்படுமாம். அதிலும் சாயத்தொழிலே பிழைப்பாக வைத்துக்கொண்டிருக்கும் நெசவு ஜாதி மாணவர்களைத்தான் உடனே தெரிந்தெடுப்பார்களாம். மாணவர்கள் மேற்படி பள்ளிக்கூடத்தில் 8 மாஸக்காலம் வரையில் படிக்க வேண்டும். பருத்தி, ஆட்டு ரோமம், பட்டு முதலிய பற்பல தினுஸு ஆடைகளுக்கு சாயம் போடுவதற்கான மார்க்கங்களைத்தும் மேற்கண்ட பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படு மென்று தெரிய வருகிறது.

### Compulsary Education in Mysore.

**மைஸூர் ஸமஸ்தானத்தில் கட்டாயப் படிப்பு.**—மைஸூர் ஸமஸ்தானம் முழுவதிலும், சிறுவர்களுக்கு கட்டாயப்படுத்தி கல்வி கற்பிக்கும் ஏற்பாட்டை மைஸூர் கவர்ன்மெண்டார் மெள்ள மெள்ள அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயலுகிறார்கள். 15 ஸ்தலங்களில் கட்டாயப்படிப்பை அனுஷ்டித்து பரீக்ஷை செய்துபார்க்கலாம் என்று வித்யா இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரல் செய்த சிபார்சை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Jeevakarunya Malai.

**ஜீவகாருண்யமாலை.**—இது கொன்னையூர் மாரியம்மையின் மேல்பாடிய ஒரு இனிய மாலையாகும். இதில் காப்பு உள்பட 33-செய்யுட்கள் இருக்கின்றன. செய்யுட்கள் தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளுக்கும் குறிப்புரை எழுதப்பட்டிருக்கிறது. மனிதர்கள் மற்ற ஜீவன்களை தம்மனோபீஷ்டப்படி நீக்கி வருத்துவது தர்மசாஸ்த்ரத்துக்கு விரோதமான தென்பதை இந்த நூல் விளக்கிக்காட்டுகிறது. இது அமராவதி புத்தூர் வித்வான் மிஸ்டர் வயி. நாக ராம. அ. ராமநாத செட்டியார் இயற்றியது. இந்த நூலிருந்து இரண்டொரு செய்யுட்களைக் கீழே தருகிறோம். இதன் விலை 1-அணு வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குளம்வெட்டி மாடாடு குடித்திடவைத் தேமென்பார்
குட்டியாட்டின் [பாரக்
களம்வெட்டித் தெறிக்குமிரத் தமும்பிடித்துக் குடிப்
கல்லாக் கள்ள
ருளம்வெட்டி வெட்டியறச் சலித்தாலு மிரக்கமென்ப
துறுமோ பொல்லாத் [யூர்த்
தளம்வெட்டி மகிடன்முடித் தலைவெட்டிக் கொன்னை
தலமுற் றுளே.

இதந்தருநா ளுசீவ வாதக்கட்டளை படித்தே
மென்பார் வெங்குற்
சிதந்தருநா ளுசீவவா தையைக்கட்டளையாகச்
செய்து புன்புற் [லாம்
புதந்தருபா ழுடம்பைமட் டுமெய்யெனக்காப் பாரெல்
பொய்யென் பாரங்
கதந்தருமெண் டோண்மாரி யேயவர்போங் கதியெதுநீ
கழறு வாயே.

(குறிப்பு) களம்—கழுத்து. தளம்—சேனை. மஹிஷாசுரன் தலைதடிந்த மஹா காருண்யவதியாகிய சத்தியாவின், மாரியன்னாய்! நீ இரங்கிக் காக்கவேண்டுமென்பது குறிப்பு.

(குறிப்பு) குற்சிதம்—அருவருப்பு. நாளுசீவ வாதம்—பல வுயிர்களைத்துன்பப்படுத்தல். புற்புதம்—நீர்க்குமிழி. அங்கதம்—ஓரணிகலம்; தோள் வலை என்று கூறுவர்.

கடலாடிக் கன்றோடு மாட்டைமறை யவர்க்களித்துக்
களித்தே மென்பார்
மடலாடி மதியுரிஞ்சக் கழுகுயருங் கொன்னையூர்
மாரி யம்மே
யுடலாடிக் காலாடி யுளமாடிக் கண்ணீரா
றோடு மாட்டைக்
குடலாடிக் குட்டியழ வெட்டியுண்பார் செயுமறமென்
கூறு வாயே.

### Aththisoodi Moral Stories.

**ஆத்திசூடி நீதிக்கதைகள்.**—இது அம்பாஸமுத்ரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மிஸ்டர் ஆர். ஹரிஹர அய்யர் எழுதியது. இதில், ஆத்திசூடியின் முதல் செய்யுளாகிய ‘அறஞ்செய விரும்பு’ முதல் ‘அஃகம் சுருக்கேல்’ ஈறாகவுள்ள 13 செய்யுட்களுக்கு தாத்பர்யமும், அந்தந்தச் செய்யுட்களுக்கேற்றவையான பற்பல நீதிக்கதைகளும் அடங்கியிருக்கின்றன. நீதிக்கதைகள் பாரதம், ராமாயணம் தமிழ்நூல்கள், பைபிள் முதலிய பற்பல கதைகளிலிருந்து எடுக்கப்பட்டவை.

இந்தப் புஸ்தகம் ஸுலபமான வசனநடையில் எழுதப்பட்டிருப்பதால் இது சிறுவர் சிறுமியருக்கு ரொம்பவும் ஏற்றதாகும். இதன் விலை அணு 8. வேண்டுவோர் பி கே. ஸ்ரீநிவாஸாச்சாரியார் தமிழ்ப்பண்டிதர், வேலூர், என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

### The Tamil Lexicon.

**தமிழ் அகராதி.**—மதுரையில் ஏற்பட்டிருக்கும் தமிழ் அகராதி ஆபீஸைச் சேர்ந்த முக்ய பண்டிதர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் பெரிய கார்யத்தை நிறைவேற்றுவதற்கு பழைய காலத்து கையெழுத்து ப்ரதிகளும் வேறு சில நூல்களும் வேண்டியிருப்பதால், அவ்வித ப்ரதிகளையும் நூல்களையும் சென்னையிலிருக்கும் கவர்ன்மெண்டு ஓரியண்டல் கையெழுத்து ப்ரதி லைப்ராரியிலிருந்து இரவலாகப்பெறுவதற்கும், அவைகளை மறுபடியும் அந்த லைப்ராரிக்கே திருப்பி அனுப்புவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கல்வி யிலாகா டிரெக்டரை கவர்ன்மெண்டார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(குறிப்பு) உரிஞ்ச—தடவ. உபயகோமுகி முதலிய தானங்களைச் செய்தமகிழும் மாந்தர்கள் கொலையைச் செய்தற்கு உடன்படுவதே மிக்கபாவமாகும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### The Cow as Chemist.

**பசுமாடு ரஸாயனியாவது.**—ஏதேனும் ஒரு விஷ ஸம்பந்தமான வ்யாதியால் கஷ்டப்படுகிற ஒருவருடைய தேகத்திலிருந்து ரத்தத்தை எடுத்து ஒருபசுவின் தேகத்தில் செலுத்தினால், அந்தப் பசுவின் பாலில் மேற்குறித்த வ்யாதியை குணப்படுத்தும் ஔஷத குணம் ஏற்படுகிறதாம். அந்த வியாதியால் வருந்துகிறவன் அந்தப் பாலை யதேஷ்டமாகக் குடித்துவந்தால் வ்யாதி ஸ்வஸ்தமாகி விடுகிறதாம். இந்த விஷயத்தை ஒரு ந்யூயார்க் டாக்டர் பரிசீலனை செய்து இந்த முறை ரொம்ப ச்லாக்யமானதென்றும், எல்லா டாக்டர்களும் அதைக் கைக்கொள்ளலாமென்றும் சொல்லுகிறார். பசுவின் தேகத்தில் ஒரு விஷத்தை ப்ரயோகித்ததும் உடனே அதன் பாலில் அந்த விஷத்தை முறிக்கக்கூடிய ஒரு மருந்து பதார்த்தம் உண்டாகிறது. ஆனால் வெகுகாலம் அப்படிப்பட்ட மருந்துப் பொருள் உண்டாகிக்கொண்டே யிருப்பதில்லையாகையால், விஷத்துக்கு முறிவு வேண்டுவோர் அடிக்கடி விஷப்பொருளை பசுவின் தேகத்தில் செலுத்தவேணடும். அமெரிக்காவில் ஐவி என்னும் விஷச் செடியொன்றிருக்கிறது. ஒரு காலேஜ்போதகர் இந்த விஷச்செடி அதிகமாயுள்ள இடத்துக்குப்போனால், அவருக்கு வ்யாதி உண்டாவதுண்டு. அவர் ஒருநாள் அந்தச் செடியுள்ள ப்ரதேசத்தில் போய் அதிக காலம் தாமஸித்தார். அதன் மேல் அவருக்கு வ்யாதிகண்டு அபாயமான நிலைமையிலிருந்தார். ஷை செடியை ஒரு பசுவுக்குத் தின்னப் போட்டார்கள். பசுக்கு யாதொரு தீங்கும் உண்டானதாகத் தெரியவில்லை. அந்தப் பசுவின் பாலை அந்த போதகருக்குக் குடிக்கக் கொடுத்துவந்ததில் சில நாழிகைகளுக்குள் அவருக்கு வ்யாதிஸ்வஸ்தமாகி விட்டது. அதற்குப் பிறகு அவருக்கு அந்த வ்யாதி மறுபடியும் வரவேயில்லையாம்.

### Coating Iron With Aluminum.

**இரும்புக்கு அலுமினியம் பூசுதல்.**— இரும்பு ஸாமான்களுக்கு அலுமினியம் பூசுவதற்கு ஒரு ஜப்பானியர் ஒரு நூதனமுறை கண்டுபிடித்திருக்கிறார். அலுமினியம் பூசவேண்டிய இரும்பு ஸாமானுக்கு முதலில் ஈயமாவது துத்தநாகமாவது பூசவேண்டும். பிறகு அலுமினியத்தை நன்றாய்க் காய்ச்சி உருக்கி, அது 700 முதல் 800-டிக்ரி வரையிலிருக்கும்போது அதில் இரும்பு ஸாமான்களை அமிழ்த்தி உருக்கால் செய்த ப்ரஷ்களால் இரும்பு ஸாமான்களின்மேல் தேய்த்து, அவைகளின் மேலுள்ள ஈயத்தை அல்லது துத்தநாகத்தை எடுத்துவிடவேண்டும். இதனால் துத்தநாகமும் ஈயமும் உருக்கின அலுமினியத்தில் கலந்துகொண்டு, அலுமினியம் இரும்பு ஸாமான்களின்மேல் ஒட்டிக்கொள்ளுகிறது. இப்படி ஒரு தடவை செய்வதில் எல்லா துத்தநாகமும் ஈயமும் இரும்பிலிருந்து எடுக்கப்பட்டுப் போவதில்லையாகையால், மறுபடியும் இரண்டு தடவை முன்சொன்ன முறைப்படி செய்ய வேண்டுமாம். இந்த முறையால் அலுமினியம் இரும்போடு நன்றாய் ஒட்டிக்கொள்ளுகிறது. ஒட்டிக்கொண்டிருக்கும் அலுமினியம் உரிந்து வந்து விடுவதில்லை; துருப்பிடிப்பதுமில்லை. அலுமினியத்தை சுரண்டியெடுக்கவும் முடியாதாம்.

### A New Race of Pigmies.

**சித்ர குள்ளர்களான ஒரு புது ஜாதியார்.**—ஆப்ரிக்காவின் மேற்கு பாகத்திலுள்ள ப்ரெஞ்ச் காங்கோவில் சித்ரகுள்ளர்களான ஒருபுது ஜாதியார் இருக்கிறதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் ரொம்ப உன்னதமானவர்கள் 4 அடி 9 அங்குலந்தானிருக்கிறார்களாம். அவர்கள் மற்ற ஜனங்களுடன் கலக்காமல் மாங்கிம்போ என்னும் ப்ரதேசத்தில் தனிமையாக வஸித்து வருகிறார்கள். அவர்கள் காடுகளில் வட்டமான குடிசைகள் கட்டி வாழ்கிறார்கள். இந்தக் குடிசைகள் காடுகளில் 5 முதல் 30 வரையில் கூட்டம் கூட்டமாக இருக்கும். அவர்கள் தங்களுக்குத் தலைவராயுள்ள ஒரு கிழவனுக்குக் கீழ்ப்பட்டு நடந்து வருகிறார்கள். அந்தத் தலைவன் இட்டதுதான் சட்டம். அந்தக் கிழவனுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் தான் இந்த ஜாதியாரை ஆண்டுவருகிறார்கள். அவர்களுள் ஸ்த்ரீகள் கிழங்குவகைகளையும் புருஷர்கள் வேட்டையாடிப் பிடித்த ப்ராணிகளையும் தின்று ஜீவித்துவருகிறார்கள். அவர்களுடைய ஐதீகப்படி ஸ்த்ரீகள் முள்ளம்பன்றியிலிருந்து உற்பவித்தார்களாம். புருஷர்கள் தேரையிலிருந்து பிறந்தவர்களாம். அவர்கள் இறந்தவர்களைப் புதைக்கிறார்கள். தங்கள் ஸ்வதந்த்ரங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் ரொம்ப ஊக்கமுள்ளவர்கள்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Jaundice.

**காமாலை.**—குழந்தைகளுக்குக் காமாலை உண்டாவதற்குக் காரணம் முக்யமாய் தாய்மார்கள் கர்ப்பந்தரித்தவுடன் மண், சாம்பல், ஓடு, லேசான கற்கள் முதலியவைகளைத் தின்பதேயென்று 'வைத்ய கலாநிதி'யில் மிஸ்டர் ஐயன்பிள்ளை எழுதுகிறார். இந்த வஸ்துக்களால் தாய்மார்களுடைய ரத்தம் கெட்டுப்போய் அதன் மூலமாய் இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளின் ரத்தமும் கெட்டுப்போகிறது. இந்தக் குழந்தைகளும் தாயின் ஸ்வபாவத்தை யனுஸரித்து ஷை வஸ்துக்களை அதிகமாகத் தின்கின்றன. இந்தப் பொருள்களால் குழந்தைகளின் அன்னாசயம் அழுக்கடைந்து ஜீர்ணம் தடைபட்டு பித்தம் கதித்து ரத்தம் கெட்டு மஞ்சள் நிறமடைந்து போவதால் இந்த ரோகமுண்டாவதாகத் தெரிகிறது.

மேற் கண்டவாறு மண் முதலியவற்றை அடிக்கடி தின்றவர்களின் குழந்தைகளுக்கு அடிக்கடி பேதிக்குக் கொடுத்து வந்து போஷணையாய் வைத்திருந்தால் குழந்தைகள் இந்த ரோகத்தால் அதிகமாய் பீடிக்கப் படமாட்டார்கள்.

காமாலை ரோகம் குழந்தைகட் குண்டாவதோடு, வயது வந்தவர்களில் தகரம், பித்தளை, ஈயம், தாம்ரம் முதலிய உலோகப் புகைபடுந் தேஹிகட்கும், நல்லெண்ணெய், நவஸாரம், தாளகம் இவைகளின் புகைபடுந் தேஹிகளிற் சிலருக்கும், ஸதா உட்கார்ந்தே ஒரு வேலையுமின்றி யிருப்பவர்களிற் சிலருக்கும், பித்தத்தையுண்டாக்கும் வஸ்துக்களையே ப்ரியமாய்ப் புஜிப்பவர்களிற் சிலருக்கும், அளவுக்கு மிஞ்சிய மனோமுயற்சியால் பித்தக் கதிப்புடையவர்களிற் சிலருக்கும் உண்டாவதாகத் தெரிகிறது.

தம்ட்ட அவரை யென்று வழங்குங் கோழியவையின் ரஸத்தைப் பிழிந்து வடிகட்டி, குழந்தைகட்கு வேளைக்கு அரைச்சங்களவும், பெரியவர்கட்கு ஒன்றரைச் சங்களவும் ஆகக் காலை மாலைதோறும் 6-வேளை கொடுத்து பசும்பால் அல்லது தயிர்சாதம் உப்பின்றிப் புஜிக்கச் செய்யவேண்டும். பறுபத்யம் 3 நாட் காக்கவேண்டும். பாலர்கட்குத் தயிரும், பெரியவர்கட்குப் பாலும் பத்யத்திற்கு உத்தமம். பத்யந் தாங்காத தேஹிகள் மறுபத்யத்தில் உப்பு மாத்ரங் கூட்டிக்கொள்ளலாம். ரோகம் மிக்க மூர்த்தன்யமா யிருக்கும்போது செய்யவேண்டிய சிகித்ஸையும் பத்யமும் இவ்வாறு ஆகும்.

ஆரம்ப ரோகத்திலும், மூர்க்கங் குறைவாயுள்ள ரோகத்திலும் 3-நாள் தொடர்ச்சியாய் மருந்தைச் செலுத்தாமல், ஞாயிற்றுக்கிழமை காலை மாலைகளில் மருந்தைக் கொடுத்து, அன்று மாத்திரம் பத்யமாயிருக்கச் செய்து, மறுநாட் காலையில் விளக்கெண்ணெயில் ஸ்நானஞ் செய்யச்சொல்லி, இச்சாபத்யமாய்ப் புஜிக்கச் செய்யவேண்டியது. அடுத்தநாள் தொடங்கிப் பத்யம் வேண்டியதில்லை. மறு ஞாயிறன்றும் முன் போலவே மருந்தும் பத்யமுங் கொள்ளவேண்டும். இவ்விதமே 3-வாரத்தில் ஒவ்வொரு நாள் வீதம் மருந்து சாப்பிட்டுப் பத்யமும் ஸ்நானமுஞ் செய்துவந்தால் ரோகம் குணப்பட்டு விடும். இம்மருந்து திடமொன்றுண்டாகுங் காமாலை ரோகத்திற்கு வெகு உபயோகமானது.

### To Overcome Sleepiness.

**தூக்கத்தைப் போக்கடிக்க.**—தூக்கம் வந்தவுடன் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பது பிசகு. தூக்கமென்பது வேலை செய்வதை நிறுத்திவிட அவச்யமென்பதைக் காட்டுவதற்கு ஒரு குறியாகும். ரொம்ப ச்ரமம் உண்டாகி தூக்கக் கலக்கமாயிருக்கும்போது வேலை செய்து கொண்டுவந்தால் வேலையை சரியாய் செய்ய முடியாது. ச்ரமமும் இன்னும் அதிகரிக்கும். மாணவர்கள் இது விஷயத்தில் ரொம்ப கவனக்குறைவாயிருக்கிறார்கள். அவர்கள் ச்ரமம் அதிகமாயிருக்கும் போதும் இரவில் 12 மணிவரையில் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதற்கு பதிலாக ச்ரமமும் தூக்கக்கலக்கமும் ஏற்பட்டவுடன் படுத்துக் கொண்டு, பிறகு அதிகாலையில் எழுந்து வாசித்தால் வாசிப்பு நன்றாய் ஓடும். ஆனால் சில ஸமயம் கார்ய அவஸரத்தால் தூங்காமலிருக்க வேண்டியிருக்கிறது. அப்போது தூக்கக் கலக்கமுள்ளவர் 20 நிமிஷம் அல்லது அரைமணிக்கு ஒரு தடவை தமது வேலையை நிறுத்தி ஜன்னலுக்குப்போய் வெளியிலுள்ள குளிர்ந்த காற்றை 15,20 தடவை உட்கொண்டால் தூக்கக்கலக்கம் குறையும். மருந்து முதலியவைகளை உபயோகித்து தூக்கக் கலக்கத்தைப் போக்குவது புத்தியைக் குறைக்குமாகையால் ஷை சொன்ன முறையே ச்லாக்யமானதாகும்.



# LAW.

## சட்டம்.

### Mortgage.

**அடமானம்.**—வாதி தமது ஸொத்துக்களை ப்ரதிவாதிகளுக்கு அடமானம் வைத்து கடன் வாங்கியிருந்தார். அடமானப்பத்ரத்தில் வாதி கடன் தொகையையும் மாஸத்துக்கு நூற்றுக்கு 1½ ரூபாய் வீதம் அதற்குள்ள வட்டியையும் ஒரு வர்ஷத்திற்குள் செலுத்திவிட வேண்டுமென்றும், அப்படிச் செலுத்தத்தவறினால், தவறின தேதியிலிருந்து மாஸத்துக்கு நூற்றுக்கு 2 வீதம் தொடர் வட்டி செலுத்த வேண்டுமென்றும் கண்டிருந்தது. வாதி குறிப்பிட்ட காலத்துக்குள் கடனைத் திருப்பிச செலுத்தவில்லை. சிறிது காலத்துக்குப்பிறகு அவர் ட்ரான்ஸ்பர் அப் ப்ராபர்ட்டி ஆக்ட் 83-வது ஸெக்ஷனின்படி கடன் தொகையையும் அதற்கு மாஸம் ஒன்றுக்கு நூற்றுக்கு 1½ வீதம் தொடர் வட்டிக்குள்ள தொகையையும் கோர்ட்டில் கட்டினார். அதன் மேல் ப்ரதிவாதிகளில் ஒருவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால் அவர் கோர்ட்டில் வந்து ஆஜராகவில்லை. அதன் மேல் வாதி தமது அடமான ஸொத்தை மீட்பதற்காக வ்யாஜ்யம் போட்டார். வாதி கடன் தொகையையும் நூற்றுக்கு மாஸம் 1-க்கு 2 வீதம் தொடர் வட்டிக்குள்ள தொகையுமாக முழுத் தொகையையும் கோர்ட்டில் கட்டாததால், பணம் கட்டினது செல்லாதென்று ப்ரதிவாதி ஆக்ஷேபித்தார். கோர்ட்டார் வாதி கட்டின தொகை போதுமான தொகையாகு மென்று தீர்மானித்தார்கள். இந்த வ்யாஜ்யம் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்ததில், கீழ்க்கோர்ட்டுகள் வாதி கட்டின தொகை போதுமானதென்று தீர்மானித்திருப்பதால், அவர் அபராத வட்டியையும் சேர்த்துக்கட்ட வேண்டியது கட்டாயமில்லையென்றும், வாதி பணங்கட்டினது சட்டப்படி செல்லுமென்றும், பணங்கட்டின தேதி முதல் வாதி அதற்கு வட்டி கொடுக்க வேண்டியதில்லையென்றும், அடமானம் வைத்தவருக்கு அந்தத் தேதிமுதல் அடமான ஸொத்தின் வரும்படியை அடையபாத்ய முண்டென்றும் தீர்ப்புச் செய்தார்கள்.—2 லா வீக்லி 585.

### Reversionary Rights.

**அனந்தரவார்ஸு பாத்யதை.**—ஒரு விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது செல்லாதென்றும், அந்த ஸ்வீகாரம்தமதுபாத்யத்தைபாதிக்காதென்றும் சொல்லி ஒரு ஸமீப அனந்தரவார்ஸு ஒரு வ்யாஜ்யம் போட்டார். அந்த வ்யாஜ்யம் ப்ரிவி கௌன்ஸிலுக்குப் போய் விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, அவர் இறந்து போய்விட்டார். அதன் மேல் அனந்தரவார்ஸாக வரக்கூடிய ஒருவர் ஸமீப அனந்தரவார்ஸாக ஆகிவிட்டார். அதாவது விதவைக்குப்பிறகு ஸொத்து அவருக்குச் சேரக் கூடியதாயிற்று. அவர் அப்பீலில் தம்மை கக்ஷிக்காரராகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டால், அவரை கக்ஷிக்காரராகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது.—2 லா வீக்லி 596.

### Partition of Joint Family Property.

**அவிபக்த குடும்பத்தை பாகம் செய்தல்.**—ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில் ஸொத்துக்களை பாகம் செய்கையில், பாகஸ்தர்களில் யாராவது ஒருவர் புத்ரனில்லாமல் இறந்து போனால், அவருடைய ஸொத்தில் அவர் செய்த பராதீனங்களுக்குச் சேர வேண்டிய பாகம் போக பாக்கியுள்ளதை உயிருடனிருக்கும் மற்ற பாகஸ்தர்கள் பங்கிட்டுக்கொள்ளலாமென்றபாக தஸ்தாவேஜில் நிபந்தனை ஏற்படுத்தலாம். இப்படி நிபந்தனை ஏற்படுத்துவது ஹிந்து சட்டத்துக்கும் ட்ரான்ஸ்பர் அப் ப்ராபர்ட்டி ஆக்ட் 6 (ஏ)ஸெக்ஷனுக்கும் விரோதமானதல்ல.—2 லா வீக்லி 533.

### Application for Execution

**நிறைவேற்று மனுப்போடுதல்.**—ஒருவர் கோர்ட்டில் நிறைவேற்று மனுப்போட்டிருந்தார். ஆனால் அந்த மனுவைத் திருத்திக்கொண்டு வரும்படி கோர்ட்டார் வாபஸு செய்தார்கள். (காலாவதி காலத்துக்குள்) அவர் அதைத்திருத்திக்கொண்டு வந்து கொடுக்கவில்லை. இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் 182-வது ஸெக்ஷனில் நிறைவேற்றுவதற்கு மனுப்போடவேண்டுமென்று மாத்ரம் சொல்லியிருப்பதால், மனுப்போடுவதற்குக் காலாவதி ஏற்படவில்லை.—2. லா வீக்லி 540.

### Guardianship of Daughter.

**புத்ரியின் கார்டியன்ஷிப் பாத்யதை.**—ஒரு மைனர் பெண்ணினுடைய தகப்பனார், தமது முதல்மனைவி யிறந்துபோன பிறகு இரண்டாவது விவாகம் செய்து கொண்டார். மாற்றாந்தாய் முதல் மனைவியின் பெண்ணாகிய மைனரை சில ஸமயங்களில் திட்டிவந்தாள். ஷை இரண்டு காரணங்களால் தகப்பனாருடைய ஸம்ரக்ஷணையில் பெண் இருக்கக்கூடாதென்று சொல்வதற்கில்லை.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Dr Dadabhai Naoroji.

**டாக்டர் தாதாபாய் நௌரோஜி.**—பம்பாய் யூனிவர்ஸிட்டியார் மிஸ்டர் தாதாபாய் நௌரொஜிக்கு டாக்டர் அப் லாஸ் என்ற பட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மிஸ்டர் நௌரொஜி இந்தியாவிலுள்ள ராஜதந்த்ரிகளுக்கெல்லாம் முதன்மையானவர் என்பது அநேகருக்குத் தெரிந்திருக்கும். அவர் முதலில் உபாத்யாயராகவும் பத்ராசியராகவும் இருந்தார். அவர் ஜனசார சீர்திருத்தத்துக்காக ரொம்பவும் பாடுபட்டு வந்தார். அவர்தான் பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் ப்ரொபஸராக (போதகர்) நியமிக்கப்பட்ட முதல் இந்தியர். அவர் ப்ரொபஸராக இருந்தகாலம் இந்தியாவில் யூனிவர்ஸிட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டதற்கு முன்னலாகும். மிஸ்டர் தாதாபாய் நௌரொஜிதான் லண்டன் யூனிவர்ஸிட்டியில் ப்ரொபஸராக நியமிக்கப்பட்ட முதல் இந்தியர். அநேக வர்ஷங்கள் வரையில் அவரை ஜனங்கள் ப்ரொபஸர் தாதாபாய் என்று அழைத்து வந்தார்கள். பிற்பாடுதான் அவருக்கு 'க்ராண்ட் ஓல்ட் மான் என்றபெயர் வந்தது. அதாவது பெரிய கிழவர் என்று அர்த்தம். பொதுஜனங்களுக்கு இலவசமாய்க் கல்வி கற்பிக்கவேண்டுமென்பது அவருடைய முக்ய கொள்கை. அவர்தான் பார்லிமெண்டில் மெம்பராயிருந்த முதல் இந்தியர்.

அவர் 1845-ம் வர்ஷமுதல் பொதுஜனக்கார்யங்களில் கலந்து கொள்ளலானார். 1907-ம் வர்ஷம் வரையில் இந்தியர்களுக்காகப் பாடுபட்டு வந்தார். அவர் ரொம்ப ஊக்கமும் சுறுசுறுப்பு முள்ளவர். அவரிடத்தில் யாதொரு குறையும் கண்டு பிடிப்பது அரிது.

### Mr. Austin Chamberlain.

**மிஸ்டர் ஆஸ்டின் சேம்பர்லெய்ன்.**—இந்தியா மந்த்ரியாகிய லார்ட் க்ரூ ஸமீபத்தில் இந்திய மந்த்ரீ ஸ்தானத்திலிருந்து விலகிக்கொண்டார். மிஸ்டர் ஆஸ்டின் சேம்பர்லெய்ன் என்னும் பார்லிமெண்ட் மெம்பர் அவருக்கு பதிலாக இந்திய மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் 1863-ம் வர்ஷம் பிறந்தார். இவர் சிலகாலம் கப்பல் படை டிபார்ட்மெண்டில் ஸிவில் லார்ட் அப் அட்மிரல்டி என்னும் உத்யோகம் வகித்து வந்தார். பிறகு பொக்கிஷ டிபார்ட்மெண்டில் பண வரவு செலவு ஸெக்ரெடரியாகவும், போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகவும், வரவு செலவு மந்த்ரியாகவும் வேலை பார்த்து வந்தார். இவர் சில வர்ஷங்களுக்கு முன்னால் இந்திய நாணய வ்யவஹாரங்களைப் பற்றிப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட ராயல் கமிஷனுக்கு சேர்மனாக இருந்தார்.

### Lord Islington.

**லார்ட் ஐலிங்டன்.**—இரண்டு வர்ஷங்களுக்கு முன்னால் ஸர்க்கார் உத்யோகங்களைப்பற்றி பரிசீலனை செய்ய ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டதென்றும், அது சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய விடங்களில் போய் இந்திய ப்ரமுகர்களையும் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களையும் விசாரணை செய்ததென்றும் பலர் அறிந்திருப்பார்கள். அந்தக் கமிஷனுக்கு லார்ட் ஐலிங்டன் சேர்மனாக இருந்தார். அவர் இப்போது உதவி இந்தியா மந்த்ரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் சில காலம் ராணுவத்தில் சேர்ந்திருந்தார். 1910-முதல் 1912-ம் வர்ஷம் வரையில் அவர் ஆஸ்ட்ரேலியாவுக்குப் பக்கத்திலுள்ள ந்யூஸீலண்ட் தீவுக்கு கவர்னராக இருந்தார்.

### The Late Zamorin of Calicut.

**காலஞ்சென்ற கள்ளிக்கோட்டை ஜாமோரின்.**—கள்ளிக்கோட்டை ஜாமொரினாகிய ராஜா ஸ்ரீ மான விக்ரம ராஜா அவர்கள் ஸமீபத்தில் காலகதியடைந்தார். அவர் சில காலமாக ச்வாஸகாஸத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். அவர் 1845-ம் வர்ஷத்தில் ஜனனமானார். இறந்தபோது அவருக்கு வயது 60, அவர் ஜாமொரின் பதவியில் 3-வர்ஷகாலந்தானிருந்தார். அவருக்கு ஸம்ஸ்க்ருதத்தில் அதிக வித்பத்தியுண்டு. அவர் ஒரு ஆயுர்வேத காலேஜ் ஸ்தாபிக்க ரொம்ப முயற்சி யெடுத்து வந்தார். யுத்தநிதிகளுக்கு தாராளமாய்ப் பணங்கொடுத்து உதவியிருக்கிறார். அவர் தமது ஸொத்துக்களை 12-வர்ஷகாலத்துக்கு கோர்ட் அப் வார்ட்ஸினுடைய மேற்பார்வையில் விட்டுவைக்க ஏற்பாடு செய்திருந்தார். அடுத்த ஸெப்டம்பர் மாஸம் 17-ந்தேதி முதல் ஜாமொரினுடைய ஸொத்துக்கள் கோர்ட் அப் வார்ட்ஸினுடைய மேற்பார்வைக்கு வந்து சேரும். அவருடைய ஸ்தானத்துக்குவரும் புது ஜாமொரினுக்கு வயது அறுபதாம்.



# SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Societies for Reforming Criminals.

**குற்றவாளிகளை நல்வழிப்படுத்துவதற்கான ஸங்கங்கள்.**—காவல் தண்டனை விதித்து ஜெயிலுக்கு அனுப்பப்படும் கைதிகளை நல்வழிப்படுத்துவதற்காக ஏற்கனவே கல்கத்தாவிலும் பம்பாயிலும் பங்கிப்பூரிலும் கைதிகளுக்கு உதவும் ஸங்கங்கள் மூன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த ஸங்கங்களைச் சேர்ந்த மெம்பர்கள் அடிக்கடி ஜெயிலுக்குப்போய் கைதிகளைப் பார்த்துப் புத்திமதி முதலானவை சொல்லித்திருத்துவதும் தவிர, பிழைப்பிற்கு வேறு மார்க்கமில்லாமல் குற்றஞ் செய்து தண்டனைக்குள்ளானவர்கள் விடுதலையாய் வந்தவுடன் அவர்கள் நல்வழிப்படவேண்டிய நோக்கத்துடன் அதற்குத் தகுந்த கனவான்களிடம் அவர்களுக்குத் தெரிந்த தொழில்களில் வேலைகளை ஸம்பாதித்துக் கொடுத்தும் மற்றப்படி தேவையான உதவி புரிந்தும் உழைத்து வருகிறார்கள் அந்த ஸங்கங்களால் ரொம்ப நன்மையுண்டாவதுகண்டு, அதுபோல இப்போது ரங்கூனிலும் ஒரு ஸங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். அதேமாதிரி ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் ஸங்கங்கள் ஏற்படும் பக்ஷத்தில் நாளடைவில் குற்றவாளிகள் அரிதாய் விடுவார்கள்—பூர்ண சந்திரோதயம்.

### The Benares Brahmana Samaja Raksha Sabah.

**காசி ப்ராம்மண ஸமாஜ ரக்ஷஸபை.**—காசிப்ராம்மணஸமாஜ ரக்ஷஸபையார், ஸமீபத்தில்கூடிய ஒரு மீட்டிங்கில் ஸம்ஸ்க்ருதத்தில், தர்க்கம், வேதாந்தம், வ்யாகரணம், வானசாஸ்த்ரம், ஆயுர்வேத சாஸ்த்ரம் ஆகிய இவைகளிலும் இன்னும் உலகத்தின் பூர்வீகசரித்ரம், தற்காலசரித்ரம், பூகோள சாஸ்த்ரம் ஆகிய இவைகளிலும் பரீட்சைகளை நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். சரித்ர நூல்களும் பூகோள சாஸ்த்ர நூல்களும் ஸம்ஸ்க்ருதத்தில் இல்லாததினால், 6-மாஸத்திற்குள் அவ்வித நூல்களை வெளிப்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மேற்கண்ட பரீட்சைகளுக்கு வரும் வித்யார்த்திகளுக்கு, தங்கப் பதக்கங்களையும், வெள்ளி பதக்கங்களையும், ஸ்காலர்ஷிப்புகளையும் கொடுப்பதாக மஹா ராஜாக்களும், ராஜாக்களும், ஜமீன் தார்களும் முன் வந்திருக்கிறார்கள். நவீன சரித்ரத்தில் நுட்ப ஆராய்ச்சி செய்யும் மாணாக்கர்களுக்கு இந்த ஸபையார் 1000-ரூபாய் சோதனை ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

### Widow Marriages.

**விதவா விவாகங்கள்.**—சென்றமாஸம் திருச்சினாப்பள்ளியில் ஹைகோர்ட்டு வக்கீலாக இருக்கும் மிஸ்டர் கே. வி. ஜம்புநாதய்யர், பால்யத்தில் விதந்து வாய்ப் போன தமது பெண்ணுக்கு இரண்டாவது தடவை விவாகம் செய்து வைத்தார். அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டவர் திருச்சினாப்பள்ளியிலுள்ள கலாசாலை யொன்றில் வாசித்து வருபவராம். ஸமீபத்தில் ராஜமஹேந்த்ரவரத்தில் கம்மவார் ஜாதியைச் சேர்ந்த ஒரு பால்ய விதவைக்கு புனர் விவாகம் நடந்தது. மாப்பிள்ளையும் அதே ஜாதியைச் சேர்ந்தவராம். இந்த ஜாதியில் இந்த விவாகந்தான் முதல் புனர் விவாகமாம்.

### Sanatana Dharma News Syndicate.

**ஸநாதனதர்ம வர்த்தமான கம்பெனி.**—இப்பெயர் கொண்ட கம்பெனி யொன்று காசியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துஸ்தானம் முழுவதிலும் நடக்கும் வைதீகஸம்பவங்களைப் பற்றியும் ஜனஸமூக ஸம்பவங்களைப் பற்றியும் ஸமாசாரங்கள் சேகரித்து பத்ரிகைகள் மூலமாய் வெளியிடுவதே இந்தக் கம்பெனியின் வேலை. லோக வ்யவஹாரங்களைப் பற்றிய ஸமாசாரங்களைசேகரித்து பத்ரிகைகளுக்கு விற்றுவரும் ராய்ட்டர் தந்திக் கம்பெனியைப்போலவே இந்தக் கம்பெனியும் வேலைகள் நடத்தும்.

### Ramayanam Kalakshepam.

**ராமாயணம் ஹரிகதா காலக்ஷேபம்.**-சென்னையில் சென்ற 16, 17 வர்ஷங்களாக ஹரிகதா காலக்ஷேபங்கள் நடத்திவரும் முத்தியாலுப்பேட்டை பக்திமார்க்க ப்ரஸங்கஸபையார் இந்த மாஸம் முதல் கும்பகோணம் மிஸ்டர் டி. எஸ். பஞ்சாபகேச சாஸ்த்ரிகளைக்கொண்டு ராமாயணம் முழுவதையும் 16 ஹரிகதா காலக்ஷேபங்களாக நடத்தி வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்தக் காலக்ஷேபங்கள் தம்புசெட்டித் தெரு 322-ம் நம்பருள்ள மண்டபத்தில் நடந்து வருகின்றன.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### To Prevent the Withering of Flowers.

**புஷ்பங்கள் வாடாமலிருக்க.** — சென்றமாஸத்து 'ஜநோபிமானி' யில் புஷ்பங்களை வாடாமல் வைத்திருக்க சில உபாயங்கள் சொன்னோம். புஷ்பங்கள் சற்றுவாடியிருந்தால் அவைகளைப் புதுப் புஷ்பங்கள்போலிருக்கும்படி செய்ய சில உபாயங்கள் தெரிவிக்கிறோம் புஷ்பங்களின் அடிக்காம்பைக் கொஞ்சம் நறுக்கிவிட்டு, கொதிக்கும் ஜலத்தில் அந்தக் காம்புகள் படும்படி வைத்து ஜலபாத்ரத்தையும் புஷ்பத்தையும் ஒரு இருட்டான அலமாரியில் வைத்துவிடவேண்டும். இதனால் அநேக புஷ்பங்கள் அப்போது பறித்தவைபோலாகிவிடும். புஷ்பங்கள் நாள்பட்டவையாயிருந்தால் கொதிக்கும் ஜலத்தில் கொஞ்சம் கர்ப்பூரத்தைப்போட்டு, அந்த ஜலத்தில் புஷ்பங்களின் காம்புகளை வைக்கவேண்டும். பழைய புஷ்பங்களை இந்த முறைகளால் புதியனபோலிருக்கும்படி செய்வதில் ஒரு ஸௌகர்யமுண்டு. இவைகள் புதுப்புஷ்பங்கள் எவ்வளவு காலம் வாடாமலிருக்குமோ அதைவிட அதிககாலம் வாடாமலிருக்கும்.

ஏதாவது விசேஷகாலங்களுக்காக சிலநாள்கள் முன்னதாகவே புஷ்பங்களை வாங்கி அந்த விசேஷகாலங்கள் வரும் வரையில் புஷ்பங்களை வாடிப்போகாமல் வைத்திருக்கவேண்டுமென்றால் அவைகளை காற்று புகாதபடி நன்றாய் மூடியுள்ள தகரப் பெட்டிகளில் வைத்து மூடுவது நல்லது. புஷ்பங்களின் இதழ்களில் அதிக ஈரமிருக்கக் கூடாது.

புஷ்பங்களை வெளியூர்களுக்கு அனுப்பவேண்டுமானால் சிலர் பெட்டிகளில் புஷ்பங்களை தூவினாற்போல் போட்டு அவைகளின்மேல் கொஞ்சம் ஜலந்தெளித்து பெட்டியைமூடி அனுப்புகிறார்கள். அப்படிச் செய்வது சரியல்ல. புஷ்பப்பெட்டிகள் வண்டிகளில் போகும்போது அவைகளிலுள்ள புஷ்பங்கள் அங்கு மிங்கும் அசைகின்றன. மேலும் குடலை, கடுதாசி அட்டையால் செய்தபெட்டிகள் முதலியவைகளில் அனுப்பினால் புஷ்பங்களிலுள்ள ஈரம் சீக்ரம் ஆவியாய் மாறிப்போகிறது. வெளியிலுள்ள காற்று உள்ளே போவதால் புஷ்பங்கள் கெட்டுப்போகின்றன. புஷ்பங்களில் ஜலம் தெளித்துவைப்பதால் அவைகளின் நிறம் கெட்டுப்போகிறது. அட்டையால் செய்த பெட்டிகளில் அனுப்புவதைவிட மரத்தால் செய்த பெட்டிகளில் அனுப்புவது நல்லது. அவைகளைவிட லேசான தகரப்பெட்டிகள் ரொம்ப ச்லாக்யமானவை. இவைகளில் புஷ்பங்களை, ஒன்றின்மேலொன்று ரொம்ப அமிழ்த்தாமலிருக்கும்படி, அதிகமாய்ப் போட்டு மூடி அனுப்பினால் ஒருவாரமானாலும் புஷ்பங்கள் வாடாமலும் கெடாமலும் இருக்கும்

### Enamelled Pans.

**பீங்கான் பாத்ரங்கள்.**—ஜலம் கொதிக்கவைத்த பீங்கான் பாத்ரங்களிலிருந்து சுடுஜலத்தைக் கொட்டிவிட்டவுடன் அவைகளில் குளிர்ந்த ஜலத்தை ஊற்றக்கூடாது. அப்படி உடனே குளிர்ந்த ஜலத்தை ஊற்றினால் பீங்கான் வெடித்துப்போகும்.

### A Remedy for Bugs.

**மூட்டுப் பூச்சியை ஒழிக்க ஒரு உபாயம்.**—ரஸத்துடனே கோழிமுட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து அடித்து இறகினாலே அதை எடுத்து கட்டில்களிலும் மற்ற விடங்களிலுமுள்ள ஓட்டை, சந்து, வெடிப்பு முதலியவைகளில் ஊற்றினால் மூட்டுப்பூச்சி சோது.—சத்தியவேத பாதுகாவலன்.

### Sewing Machines.

**தையல் யந்த்ரங்கள்** — இடைவிடாமல் வேலை நடந்து வரும் தையல்யந்த்ரங்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒருதடவை எண்ணெய் போடவேண்டியது அவசியம். எண்ணெய் போட்டபிறகு, யந்த்ரத்தை நூலில்லாமல் 5 நிமிஷநேரம் வரையில் வேகமாய் ஓட்டவேண்டும். இதனால் யந்த்ரத்தில் போட்ட எண்ணெய் படவேண்டியபாகங்களிலெல்லாம் நன்றாய்ப் பரவி விடும். மேலே வழிந்து வரும் எண்ணெய்த் துடைத்து விடவேண்டும். இப்படிச் செய்து விட்டால், பிற்பாடு துணிகள் தைக்கும்போது அவைகள் எண்ணெய்க் கறையாகாது.

### To Extract Corks from Bottles.

**ஸீஸாக்களுள் விழுந்த கார்க்குகளை எடுக்க.**—த்ரவம் நிறைந்துள்ள அல்லது காலியான ஸீஸாக்களுக்குள் விழுந்த கார்க்குகளை எடுக்க பின்வரும் முறை ச்லாக்யமான தென்று சொல்லப்படுகிறது. ஒரு பொத்தானில் ஒரு மெல்லிய உறுதியான நூலைக் கட்டி ஸீஸாவுக்குள் போட்டுவிடவேண்டும். ஒரு நீண்டகம்பியால் கார்க்கை ஸீஸாவின் கழுத்தின் கிட்டக்கொண்டு வந்து வைத்துக்கொண்டு நூலை வெளியிலிழுத்தால், பொத்தானோடு கார்க்கும் வெளியில் வந்துவிடும்.



## AGRICULTURE.

## விவஸாயம்.

### The Rearing of Chickens.

**கோழிக்குஞ்சுகளை வளர்க்கும் முறை.**—கோழிக் குஞ்சுகளை எவ்விதம் வளர்க்கவேண்டுமென்பதைப் பற்றி 'கமத் தொழில் விளக்கம்' சில குறிப்புகள் எழுதுகிறது: குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்து 24 அல்லது 36 மணிவரையில் அவைகளுக்கு இரை கொடுக்கவேண்டியதில்லை. ஏனென்றால் முட்டையிலிருந்து வெளிவருமுன் குஞ்சுகள் முட்டைக்குள் உள்ள ஒருவகையான பதார்த்தத்தை தின்பதால், குஞ்சுகளுக்கு அவ்வளவு நேரம் வரையில் பசியெடுப்பதில்லை. குஞ்சு பொரித்த இரண்டாம்நாள் முதல் அவைகளுக்கு சூடான உணவு கொடுக்கவேண்டும். பத்துநாள் வரையில் அவைகளுக்கு குடிக்க ஜலம் கொடுக்கக்கூடாது. ஏனென்றால் ஜலம் குடிப்பதால் குஞ்சுகளின் குடல்களிலே ஒருவித கெடுதி யேற்படுகிறது. குஞ்சுகளுக்குக்கொடுக்கும் உணவு சுத்தமாயிருக்கவேண்டும். உணவை சுத்தமான பலகைகளில் வைத்துக் கொடுக்கவேண்டும். தின்று மிஞ்சினதை எடுத்துவிட்டு பலகைகளை சுத்தம் செய்யவேண்டும். அசுத்தமான உணவால் குஞ்சுகளுக்கு கழிச்சல்போன்ற வ்யாதி உண்டாகிறது.

குஞ்சுகளுக்கு பிஸ்கோத்து, ஓட்ஸ்தான்யமா, ஸ்வல்பமாய் மாம்ஸவகைகள், இவைகளை உணவாகக் கொடுக்கலாம். அவைகளுக்கு வயிற்றுக்குழப்பம் உண்டாகுமானால் மாம்ஸ ஆகாரத்தை நிறுத்திவிடவேண்டும். அப்போது பாலில் ஓட்ஸ்மாவைக் கலந்து உணவாக்கொடுப்பது நல்லது. குஞ்சு பொரித்த நாலாம்நாளுக்குமேல் குஞ்சுகளுக்கு தினம் 5 தடவைக்குமேல் தீனி கொடுக்கக்கூடாது. அப்போது அவைகளின் எலும்புகள் முற்றி பலப்படவேண்டிய காலமாகையால் தான்யம் முதலியவைகள் தின்னக் கொடுக்கவேண்டும். எழெட்டு நாளுக்குப்பிறகு பருப்புவகைகளையும் தின்னப் போடவேண்டும். பத்துப்பன்னிரண்டு நாளானபிறகு ஆண் குஞ்சுகளையும் பெண் குஞ்சுகளையும் தனியாகப்பிரித்து வெவ்வேறு இடங்களில் அடைத்துவைக்கவேண்டும். குஞ்சுகளுக்குத் தக்க உணவு கொடுத்துவந்தால் ஆறுமாஸ காலத்தில் அவைகள் முட்டை போடும் பருவம் அடைகின்றன.



### Manuring Cocoanuts.

**தென்னைக்கு எரு விடுதல்.**—சிலகாலத்துக்கு முன் லங்கையிலுள்ள பேராதனை விவஸாயப்பண்ணையில் தென்னைக்கு எரு விடுதல் ஸம்பந்தமாகச் சிலர் பரீக்ஷைகள் செய்துபார்த்தார்கள். அதனால் சில விஷயங்கள் வெளியாயின.

(1) தென்னந்தோப்பில் பூமியை வர்ஷத்துக்கு இரண்டுதடவை உழுவது எரு விடுவதற்கு ஸமானமாகும்.

(2) தென்னையின் அடிமரத்தில் மாடுகளைக்கட்டி வைத்தால் மரமானது உடனே நல்ல பலனைக் கொடுக்கிறதோடு, இரண்டு வர்ஷகாலம் வரையில் மரத்தில் நல்ல பலன் கிடைத்து வருகிறது.

(3) ஜலத்தில் கரையக்கூடிய எருவை வர்ஷத்திற்கு இரண்டு தடவை போடுவதாலும், வர்ஷத்திற்கு ஒரு முறை ஸாதாரண எருப்போடுவதாலும் மரத்தில் அதிக காய்கள் காய்க்கின்றன.

(4) பசுந்தாள் எருப்போடுவதோடு பேஸிக் ஸ்லாக் என்னும் எருவையும், ஸல்பேட் அப் பொடாஷ் என்னும் எருவையும் போடுவதால் தென்னையில் நல்ல பலன் கிடைக்கிறது. ஆனால் எருவின் ப்ரயோஜனம் வர்ஷம் முழுவதும் தெரிவதில்லை.

(5) ஸாதாரண சாப்பிடும் உப்பையாவது, நைட்ரேட் அப் ஸோடாவையாவது எருவாகப் போடுவதால் யாதொரு பலனும் உண்டாவதாகத் தெரியவில்லை.

(6) எந்த உரம்போட்டாலும், எந்தவிதமான சீர்திருத்தம் செய்தாலும் மரங்களில் கிடைக்கும் தேங்காயின் அளவில் குறைவு ஏற்படுவதில்லை.

(7) நிலத்தை உழுது சீர்திருத்துவதாலும் எருப் போடுவதாலும் குரும்பைகள் விழுவது குறைவதில்லை

### Drumstick.

**முருங்கை** —முருங்கைமரம் சீக்ரமாய்க் காய்க்கவேண்டுமானால் கிளைகள் செவ்வையாய்ப் பெருத்து தொடைப் பருமனுள்ளவைகளையாவது, அவைகளைவிட சற்று ஸன்னமானவைகளையாவது வெட்டி நல்ல ஈரமுள்ள விடங்களில் நட்டுவிட்டால், அவை துளிர்த்து, அத்துளிர்கள் நீண்டு பெருத்துக் கூடாரம்போல் அக்கிளையின் தலையில் வளர்ந்து, ஒரு வர்ஷத்தில் எல்லாக்கிளைகளும் பூத்துக் காய்க்க ஆரம்பிக்கும்.—கிருஷிகன்,

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

### Yembanore Co-operative Society.

**வேம்பனூர்கோவாபரேடிவ் ஸங்கம்.**—தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலுக்கா வேம்பனூர் க்ராமத்துக் கோவாபரெடிவ் ஸங்கம் த்ருப்திகரமாக நடந்துவருவதோடு, கடன் கொடுப்பதை மட்டுமே கவனித்துவராமல் பல உபயோகமான வேலைகளையும் கவனித்து வருகிறதென்று தெரிகிறது. அந்த ஸங்கத்திலுள்ள 220-மெம்பர்களில் 46 பேர்கள் கூலிவேலைசெய்து ஜீவிக்கிறவர்கள். இவர்களில் 16-பேர்கள் பஞ்சமர்கள். இந்த ஸங்கத்தில் 5-ஸ்த்ரீகள் மெம்பர்களாக இருக்கிறார்கள்.

வேம்பனூரில் எண்ணையாட்டும் செக்குகள் கிடையா. ஸங்கத்து மெம்பர்களின் தூண்டுகோலின்மேல் ஒரு வாணியச்சி, ஸங்கத்தின் பண உதவியைக் கொண்டு ஒரு செக்கு வைத்து எண்ணை யாட்டி லாபமடைந்து வருகிறாள். இதனால் அவ்வூராருக்கு எண்ணெய்க் கஷ்டம் ஒருவாறு நீங்கிற்றென்று தெரிகிறது. அந்த ஸ்த்ரீ தனது கடனைத் தவணைப்படி தவறாமல் கொடுத்து வருகிறாளாம். இன்னொரு ஸ்த்ரீ மெம்பர் ஸங்கத்தில் கடன்வாங்கி எருமைமாடு ஒன்று வாங்கி பால் தயிர் விற்று நல்ல லாபமடைந்து வருகிறாள்.

மேற்சொன்ன 16-பஞ்சம மெம்பர்களும் முன்பு நூற்றுக்கு 35-அல்லது 40-வீதம் வட்டிக்குக் கடன்வாங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் ஸங்கத்தில் சேர்ந்துகொண்டிருப்பதால் குறைந்த வட்டியில் கடன் கிடைத்துவருகிறது. மேலும் அவர்களுக்கு ஸங்கமானது ரொக்கமாகக் கடன் கொடுக்காமல் நெல்லாகக் கொடுக்கிறது. இந்த மெம்பர்கள் அறுவடைக் காலத்தில் நெல்லாகவே திருப்பிக் கொடுத்துவிடுகிறார்கள்.

ஸங்கத்தார் அவ்வூரிலுள்ள எலிமெண்டரிப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

மேலும் இந்த ஸங்கம் ஜனங்களின் வேண்டுகோளின் மேல் ஒரு ஸப்கமிட்டி ஒன்று ஏற்படுத்தி ஊர்க்கார்யங்களை கவனித்து வருகிறதாம். கமிட்டியின் முயற்சியால் 10-வர்ஷகாலமாய்த் தூர்ந்துபோன ஒரு பாசன வாய்க்காலை வெட்டிவைத்திருக்கிறார்கள். சென்ற வர்ஷம் ஜலத்தட்டு ஏற்பட்டபோது அந்தக்கால்வாயின் உபயோகம் நன்றாய்த் தெரியவந்ததாம்.

### Co-operation in Schools.

**பள்ளிக்கூடங்களில் கோவாபரேஷன்.**—சென்ற மாஸம் நடந்த க்ருஷ்ணாஜில்லா கான்பரென்ஸில் ஆனரபில் மிஸ்டர் எல். இ. பக்லி ப்ரெஸிடெண்டாக இருந்து பேசினபோது எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்களில் கோவாபரேஷனைப் பாடமாக ஏற்படுத்துவது உசிதமல்லவென்றுசொன்னார். எலிமெண்டரிப் பள்ளிக்கூடத்துப் பையன்கள் இந்த அதிகப் படிப்பான பாடத்தால் தொந்தரவுதான் ஏற்படுகிறதென்று நினைப்பார்கள். அவர்கள் கோவாபரேஷனைப் பற்றிய விஷயங்களை ச்ரத்தையாகக் கேட்டு அறிந்து கொள்வதும் கஷ்டம். மேலும் அவர்களைக் கட்டாயப்படுத்தி பாடம் சொல்லிக்கொடுத்து வந்தால், அதில் அவர்கள் வெறுப்புக் கொள்ளவுங்கூடும்.

கோவாபரேஷனை பள்ளிக்கூடங்களில் எந்த வகுப்பில் கற்றுக்கொடுப்பதென்று நிர்ணயிப்பது ஸுலபமான கார்யமல்ல. ஹைஸ்கூல் அல்லது காலேஜில் உள்ளமாணவர்களுக்கு ஏற்கனவே பாடங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகையால் இவைகளை யுத்தேசித்து மாணவர்கள் பெரியவர்களாகி ஏதாவது ஒரு தொழிலில் அமர்ந்தோ, அமரவோ இருக்கும்போது கோவாபரேஷனைக் கற்பிப்பதுதான் நல்லது.

கோவாப்ரேஷனுடைய கொள்கைகளையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் நன்றாய் அறியக்கூடிய சக்தி ஏற்பட்டிருக்கும்போதுதான் அதைக் கற்றுக்கொடுப்பது நல்லது.—என்றார்.

### Co-operation in Sanitation.

**ஸுகாதார வேலைகளில் கோவாபரேஷன்.**—அமெரிக்காவிலுள்ள மாஸ்ஸாச்சுஸெட்ஸ் என்னும் மாகாணத்தில் 7-பட்டணங்கள் ஸுகாதார வேலைகளை கோவாபரேஷன் முறையில் ரொம்ப திறமையுடன் நடத்தி வருகின்றனவாம். இவைகளில் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஸொந்தச் செலவில் இந்த வேலைகளை நடத்தி வரமுடியாதாம். இந்த ஏழு பட்டணத்திற்கும் பொதுவாக சில உத்யோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒவ்வொரு ஊரிலும் ஸௌகர்யமுள்ள இடத்தில் ஆபீஸுகள் உண்டு. அவர்கள் அந்த ஊர்களில் தக்கவிடங்களில் மருந்து டெப்போக்கள் ஏற்படுத்தி பற்பல வ்யாதிகளுக்கு மருந்துகள் ஸப்ளை செய்கிறார்கள்.



# COMMERCE.

# வ்யாபாரம்.

### State Aid to Industry.

**கைத்தொழிலுக்கு ஸர்க்கார் உதவி.**—சென்ற ஏப்ரல் மாஸம் வடக்கே ஐக்ய மாகாணங்களில் உள்ள கோரக்பூரில் கைத்தொழில் கான்பரென்ஸ் நடந்தபோது அதன் ப்ரெஸிடெண்டாகிய ராய் பகதூர் பாபு ப்ராக் நாராயன் பார்க்கவா என்பவர் தமது ப்ரஸங்கத்தில் கைத்தொழில் விஷயத்தில் கவர்ன்மெண்டார் இன்ன விதங்களில் உதவி புரியலாமென்பதை விவரித்துச் சொன்னார்.

(1) தொழில்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படி நிபுணர்களை நியமித்து, நன்றாக ஆராய்ச்சி செய்த பிறகு, கவர்ன்மெண்டாரே ஸொந்தத்தில் புதுத் தொழில்கள் ஸ்தாபித்து சில காலம் நடத்தி வரவேண்டும். அன்ய தேசங்களின் போட்டியால் ஷை தொழில் சாலைகளுக்கு நஷ்டம் ஏற்படாதென்று ஜனங்களுக்கு நன்றாய்த் தெரிந்தபிறகு, (சென்னை கவர்ன்மெண்டார், சென்னையில் ஸொந்தத்தில் சில காலம் க்ரோம் தோல் பாக்டரியை நடத்தி வந்து பிறகு ஜனங்களிடம் விட்டது போல்) கவர்ன்மெண்டார் ஷை தொழில் சாலைகளை தொழில்களை நடத்த முன்வரும் ஜனங்களிடம் விட்டு விட வேண்டும்.

(2) கவர்ன்மெண்டார் தொழில் துறைகளைப்பற்றி வேண்டிய ஆராய்ச்சிகள் செய்து, பிறகு பொது ஜனங்களை அந்தத் தொழில்களை நடத்த கம்பெனிகள் ஸ்தாபிக்கும்படி தூண்டி, அந்தக் கம்பெனிகளில் தாராளமாய் பங்குகள் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்தக் கம்பெனிகளின் டிரெக்டர் போர்டில் தக்க உத்யோகஸ்தர்களை டிரெக்டர்களாக இருக்கும்படி நியமிக்க வேண்டும். இப்படிச் செய்வதால் பொது ஜனங்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட தொழில்களில் நஷ்டமேற்படுமோ என்று பயப்படமாட்டார்கள்.

(3) பொது ஜனங்கள் ஏதாவது புதுத்தொழில்கள் ஆரம்பித்தால், அந்தத் தொழில்களில் போடும் மூலதனத்துக்கு வட்டிக்கு ஜவாப்தாரியாக இருப்பது.

(4) தொழில்கள் நடத்தும் முதலாளிகளுக்கு குறைந்த வட்டியில் பணம் கடனாகக் கொடுத்து, கடன் பணத்தை தடவைகளுக்கு ஸ்வல்ப தொகையாக வஸூலித்துக்கொள்ளுதல்.

(5) புதிதாய் ஸ்தாபிக்கப்படும் தொழில் கம்பெனிகளில் பங்கு எடுத்திருப்பவர்களுக்கு கம்பெனிக்காரர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் ஒரு குறிப்பிட்ட டிவிடெண்டு கொடுத்து வருவதற்காக, அந்த கம்பெனிகளுக்கு இனாமாகப் பணங்கொடுத்து உதவி செய்தல்.

(6) யுத்தத்துக்குப்பிறகு அன்ய தேசத்து வ்யாபாரிகள் இந்திய வ்யாபாரிகளுடன் போட்டி வ்யாபாரம் நடத்தி இந்திய வ்யாபாரத்தை கெடுக்காமலிருக்கும்படி தக்க ஏற்பாடுகள் செய்தல்.

(7) தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை தொழில் சாலைகளுக்கு அதிகச் செலவின்றிக்கொண்டு போகவும் தொழில் சாலைகளில் செய்யப்பட்ட பொருள்களை அதிகச் செலவின்றி துறைமுகங்களுக்கும், முக்ய வ்யாபாரஸ்தலங்களுக்கும் கொண்டு போகவும் ரெயில் சார்ஜைக் குறைத்தல்.

(8) ஸர்க்கார் ஆபீஸுகளுக்கு வேண்டிய ஸாமான்களில் இந்தியாவிலே செய்யப்படும் ஸாமான்களை அன்ய தேசங்களிலிருந்து தருவிக்காமல் நமது தேசத்துத் தொழில் சாலைகளிலிருந்தே வாங்கி உபயோகித்தல்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஏப்ரல் மேமாஸங்களில் அடியில் கண்ட விவரப்படி ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| | ஏப்ரல் மாஸம். | |
| 1 | பாங்கி லேவாதேவி கம்பெனி | 1,00,000 |
| 2 | ரெயில்வே கம்பெனிகள் | 1,17,00,000 |
| 3 | மொத்தம் | 1,18,00,000 |
| | மே மாஸம். | |
| 1 | பாங்கி லேவாதேவி கம்பெனி | 2,00,000 |
| 1 | கப்பல் நடத்தும் கம்பெனி | 40,00,000 |
| 2 | அச்சடித்து ப்ரசுரம் செய்யும் கம்பெனி | 1,50,000 |
| 4 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே தவிர சொன்னவை தவிர) | 17,50,000 |
| 2 | நிலக்கரிச்சுரங்கக் கம்பெனிகள் | 3,50,000 |
| 1 | சுரங்கக் கம்பெனி (மேலே சொன்னவை தவிர) | 1,00,000 |
| 1 | நிலம், கட்டிடக் கம்பெனி | 23,50,000 |
| 12 | மொத்தம் | 89,00,000 |

## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Water Hyacinth.

**ஹையாஸிந்த் என்னும் நீர்ப்பூண்டு.**—சீனாவிற்குத் தென்மேற்கிலுள்ள ப்ரெஞ்ச் இண்டோ-சைனா என்னும் ப்ரதேசத்தில் பாயும் மெக்காங் என்னும் நதியிலும், மற்ற நதிகளிலும் வாடர் ஹையாஸிந்த் என்னும் பூண்டு ஜலத்தில் ஏராளமாய் முளைத்து, கப்பல் போக்கு வரத்தைத் தடைசெய்கிறதாம். இந்த செடியிலிருந்து ஏதேனும் விலைபோகக்கூடிய பொருள்கள் செய்யமுடியுமா என்பதைப்பற்றி அந்த ப்ரதேசத்திலுள்ள அதிகாரிகள் முயற்சி செய்து வருகிறார்கள். சென்ற நாலைந்து வர்ஷங்களாக கம்போடியாவில் ப்னும் பன் என்னும் இடத்திலுள்ள ஸெண்ட்ரல் ஜெயிலில் இந்தச் செடிஸம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். அந்த ஜெயிலில் இந்தச் செடியிலிருந்து கிடைக்கும் நாரைக்கொண்டு கயிறு, ட்வைன், பாய்கள், நெல்கட்டிவைக்க கோணிப்பைகள், பெட்டிகள், நாற்காலிகள், ஸோபாக்கள், தொட்டில்கள், இன்னும் பல உபயோகமுள்ள ஸாமான்கள் செய்திருக்கிறார்களாம். அந்த நாரைப்பட்டுடன் கலந்து கொஞ்சம் முரடான துணிகள் நெய்திருக்கிறார்களாம்.

அந்தச் செடியை ஜலத்திலிருந்து பிடுங்கி யெடுத்தவுடன் அதன் இலையைக் கழித்துவிட்டு, அதை ஒரு யந்த்ரத்தில் கொடுத்து நாரைத்தனியாகப் பிரித்தெடுத்து, நிழலில் உலர்த்துகிறார்கள். நாரை ஜாக்ரதையாகத் தயார் செய்தால், அது உறுதியாகவும், நன்றாய் வளையக் கூடியதாயும் இருக்கிறது. ஒரு அங்குலத்தில் 5-ல் ஒருபாகம் குறுக்களவும், $3\frac{1}{4}$ அடி நீளமும் உள்ள ஹையாஸிந்த் ட்வைனானது (மெல்லிய கயிறு) 108 ராத்தல் பாரம் தாங்கக் கூடியது.

ஜெயில் அதிகாரிகள் இந்த நாரைக்கொண்டு அரிசிச் சாக்குகள் தயார் செய்துபார்த்தார்களாம். இதனால் செய்யப்படும் சாக்குகள் இந்தியாவிலுள்ள சாக்குகளைப் போல ரொம்ப உறுதியாயிருக்கிறதாம். ஆனால் கொஞ்சம் கனமாயும், நன்றாய் வளையக்கூடாததாயும் இருப்பதோடு, ஸுலபமாய் ஈரத்தை க்ரஹிக்கக் கூடியனவாயுமிருக்கின்றன. இந்தக் குறைகளிருப்பதால் இந்தச் சாக்குகள் விலைபோவது கஷ்டமாயிருக்கிறதாம்.

ஆனால் இவைகளைக்கொண்டு செய்யப்படும் நாற்காலிகளும் ஸோபாக்களும் நன்றாயிருக்கின்றனவாம். இவைகள் பிரம்பு நாற்காலிகள் போலவே செய்யப்படுகின்றன. நாற்காலிகளும் ஸோபாக்களும் உட்காருவதற்கு ஸௌகர்யமாயிருக்கின்றன. இது விஷயமாக ஜெயில் அதிகாரிகள் இன்னும் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

### Cocoanut Fibre.

**தேங்காய் நார்.**—தேங்காய் நாரை பல வகையில் உபயோகிக்கிறார்கள். ஸாதாரணமாக அது ஸுமார் ஒரு அடி நீளமிருக்கும். அதை சிறு மூட்டைகளாக வெளியூருக்கு அனுப்புகிறார்கள். குறைந்த விலைபோகும் துடைப்பங்கள் இந்த நாரைக்கொண்டு செய்யப்படுகின்றன. துடைப்பத்துக்கு உதவும் நாருக்கு சில ஸமயம் கருப்புச்சாயம் பூசுவதுண்டு.

தேங்காய் நாரைக்கொண்டு பாய்பின்னுவதுமுண்டு. பாய் பின்னவேண்டுமானால், வைக்கோல் பிரிதிரிப்பது போல் முதலில் தேங்காய் நாரை கயிறாய் திரிக்கவேண்டும். பாய் நல்ல சாயமாயிருக்கவேண்டும். ஆனால் தேங்காய் நார் கொஞ்சம் மந்தமான சிவப்பு நிறமானதால், அதை வெளுப்பாக்கவேண்டும். இதற்கு மூன்று வழி உண்டு என்றும், அவைகளில் எதுவாயினும் நல்ல பலன் கொடுக்குமென்றும் சொல்லுகிறார்கள்.

### Cotton Waste.

**உபயோகமற்ற பருத்தி.**—இந்தியாவில் கிடைக்கும் பருத்தியில் உயர்ந்த பாகம்போக பாக்கியாயிருக்கும் பருத்திக் கழிவுகளை ஜெர்மனிக்கு அனுப்பி வந்தார்கள். இதற்கு பாரம் 1-க்கு 60-ரூபாய் வீதம் விலை கிடைத்து வந்தது. ஜெர்மனியில் தொழில் சாலைக்காரர்கள் இந்தப் பருத்திக்கழிவுகளிலிருந்து மட்டமான நூல்கள் நெய்து, ஜமக்காளம், போர்வை முதலிய துணிவகைகள் நெய்துவந்தார்கள். ஆனால் தற்போது யுத்தத்தால் இதன் ஏற்றுமதி நின்றுபோகவே, இதன் விலை 60 ரூபாயிலிருந்து 10-ரூபாய்க்கு இறங்கிவிட்டது. இந்தியாவிலுள்ள சில மில்காரர்கள் பருத்திக்கழிவிலிருந்து நூல்கள் நூற்றுத்துணி நெய்யும் யந்த்ரங்களை மேல் நாடுகளிலிருந்து தருவித்து பருத்திக் கழிவுகளைக் கொண்டு ஜமக்காளம், போர்வை முதலியவைகள் நெய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.



## BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### How do Bees Find Their way?

**தேனீக்கள் எப்படித் தங்களுடைய இருப்பிடத்தை யறிந்துகொள்ளுகின்றன?**—தேனீக்கள் தங்கள் கூட்டைவிட்டு இரைதேட வெளியில் வந்தபிறகு மறுபடியும் எப்படி தமது கூட்டின் இருப்பிடத்தை யறிந்துகொள்ளுகின்றன என்பதற்கு இதுவரையில் ஒருவரும் தக்க ஸமாதானம் சொல்லவில்லை. சில தேனீக்கள் தங்கள் கூட்டைவிட்டு இரண்டுமைல் தூரம் வந்துவிட்டாலும் நேராகப் பறந்துபோய் தமது கூட்டை யடைகின்றனவாம். கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு ப்ரெஞ்ச் ப்ராணி சாஸ்த்ரி ஈக்கள் விஷயமாக சில பரீக்ஷைகள் செய்துபார்த்தார். சில தேனீக்களைப் பிடித்து அவைகளுக்கு கூடு இருக்குமிடந் தெரியாதபடி ஒரு தோப்பின் மறைவில் கொண்டுபோய் விட்டதில், அவைகள் தங்கள் கூடு இருந்த இடத்தைத் தெரிந்துகொண்டு போய்ச்சேர்ந்தனவாம். அவைகளுடைய கண்களை ஒருவித கருப்பு மையால் மறைத்து தூரமான இடத்துக்குக் கொண்டுபோய் விட்டதில், அப்போதும் அவைகள் தங்கள் கூட்டுக்குப்போய்ச் சேர்ந்தனவாம்.

இதனால் அவைகளுக்கு கண்கள் சரியாயிருந்தால் தான் கூட்டைத் தெரிந்துகொள்ளுமென்பதற் கில்லையென்று ஏற்படுகிறது. தேனீக்களுக்கு வாஸனை யறிவதற்காக மெல்லிய கம்பிபோன்ற உறுப்புகள் இருக்கின்றன. சில தேனீக்களைப் பிடித்து ரொம்ப தூரமான இடத்துக்குக் கொண்டுபோய் அவைகளுக்குள்ள இந்த உறுப்புகளை நறுக்கிவிட்டு பிறகு வெளியே விட்டதில் அவைகள் தங்கள் கூட்டுக்கு நேராகப்போய்ச் சேர்ந்தனவாம். ஆகையால் தேனீக்களுக்கு மேற்கூறிய பார்வை, வாஸனை யறியும் இந்த்ரியம் ஆகிய இவைகளோடு வழி கண்டுபிடிப்பதற்காக ப்ரத்யேகமான இந்த்ரியம் ஒன்று இருக்கிறதென்று சிலர் எண்ணுகிறார்கள்.

### How An Anna Can Grow.

**ஒரு அணாவை வட்டிக்கு விட்டால் என்ன கிடைக்கும்?**—தற்போது நடக்கும் யுத்தத்துக்கு ஏராளமாய்ப் பணம் வேண்டியிருக்கிறது. வெகு காலத்துக்கு முன்னமே ஒரு உபாயம் செய்திருந்தால் இந்தப் பணம் ஸுலபமாய்க் கிடைத்திருக்குமென்று இங்க்லண்டிலுள்ள ஒருவர் ஹாஸ்யமாக எழுதுகிறார். 1066-ம் வர்ஷத்தில் கவர்ன்மெண்டார் ஒரு பென்னி அதாவது 1-அணாவை வர்ஷத்துக்கு நூற்றுக்கு 5 வீதம் தொடர் வட்டிக்கு விட்டிருந்தால் இந்தப் பணத்துக்கு கொஞ்சங்கூட ச்ரமப்பட வேண்டியதில்லையாம். இப்போது அந்த ஒரணா வட்டியும் முதலும் சேர்ந்து ஆகியிருக்கக் கூடிய தொகையினுடைய 3-நிமிஷ வட்டியை யுத்தத்துக்கு உபயோகித்தால் போதுமாம். ஒரணாவை மேற் சொன்ன வட்டி விகிதத்தின்மேல் 849-வர்ஷத்துக்கு தொடர் வட்டிக்கு விட்டால் முதலும் வட்டியுமாக 40,69,15,800,00,00,000 பவுனாகும். அதாவது 610,37,37,000,00,00,000 ரூபாயாகும். இந்தத் தொகையை 100-க்கு வர்ஷத்துக்கு 5-வீதம் வட்டிக்கு விட்டால் ஒரு வர்ஷத்து வட்டி 203,457,900,000,000 பவுனாகும். அதாவது 30,5186,850 கோடி ரூபாயாகும். ஒரு நாளைய வட்டி 27,8,609 கோடியே 45-லக்ஷமாகும்.

ஒரு மணிக்கு 34,938 கோடியே 70 லக்ஷ ரூபாயாகும். மூன்றுநிமிஷத்துக்கு 1,741 கோடியே 95 லக்ஷம் ரூபாயாகும். இப்போது இங்க்லண்டுக்கு வேண்டியிருப்பதெல்லாம் வர்ஷத்துக்கு 1699-கோடியே 8 லக்ஷம் ரூபாய்தான். ஆகவே மூன்று நிமிஷத்து வட்டியில் 1-வர்ஷத்து யுத்தச்செலவு போக கிட்டத்தட்ட 43-கோடி ரூபாய் மிச்சமாகிறது. இந்தத் தொகையும் இரண்டு வாரத்துக்கு யுத்தத்துக்குச் செலவுக்காகும். ஆகவே இரண்டு தேசத்தாரும் இது விஷயத்தில் ரொம்ப முன்யோஜனை யில்லாமலிருந் திருக்கிறார்களென்று சொல்லலாம்.

1066-ம் வர்ஷத்தில் இங்க்லண்டை ஆண்டுவந்த 1-வது வில்லியம் ஒரு பென்னியைத் தொடர் வட்டிக்குப்போட்டு, அதை ஒருவரும் எடுக்கக்கூடாதென்றிருந்தால் எவ்வளவு ஸௌகர்யமாயிருந்திருக்கும்!

### The Surface of a Sphere.

**கோளத்தின் பரப்பு.**—ஒரு கோளத்தின் பரப்பைக்கண்டுபிடிக்க, அந்தக் கோளத்தின் குறுக்களவு இவ்வளவு என்று அறிந்து அந்தத் தொகையை அதனாலேயே பெருக்கிவந்த பெருக்குத் தொகையை $3\frac{1}{7}$-ஆல் பெருக்கவேண்டும். விடை ரொம்ப சரியாக இருக்க வேண்டுமானால் $3\frac{1}{7}$-ஆல் பெருக்குவதற்கு பதிலாக 3·14159-ஆல் பெருக்கவேண்டும். நமது பூமியின் குறுக்களவு கிட்டத்தட்ட 8000 மைலாகும். இந்த எண்ணை அதனாலேயே பெருக்கி வந்த எண்ணை 3·14159-ஆல் பெருக்கினால் வரும்தொகை பூமியின்மேற் பரப்பாகும்.

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்.

### Dried Ginger.

**சுக்கு.**—உலர்ந்த இஞ்சியைக்கொண்டு வீட்டில் அவரவர்களே ஒருவித ஔஷதம் பின்வருமாறு தயார் செய்து கொள்ளலாம். சுக்கை ஒன்றிரண்டாக உடைத்து அதில் 3-பலமெடை யெடுத்து இருபது அவுன்ஸ் ப்ராந்தியில் சேர்த்து, 10-நாட்கள் வரையில் ஊற வைத்து, அப்பால் த்ரவத்தை மட்டும் வடிகட்டி ஒரு புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு தேக்கரண்டியளவோ அல்லது அதற்குச் சிறிது அதிகமாகவோ விரேசன ஔஷதங்களில் கலந்து கொடுக்கலாம்; இவ்வௌஷதம் வயிற்றில் சேர்ந்துள்ள புளிப்பைப் போக்குவதில் சிறந்த வீர்யமுள்ளது; அஜீர்ணத்தையும் வயிற்றுப்பொருமலையும் போக்குவதற்கு இதை மட்டுமோ அல்லது அவ்விதகுணமுள்ள வேறு ஔஷதசரக்குகளுடன் கூட்டியோ கொடுக்கலாம்.

ஒரு பலம் சுக்கை வறுத்து உடைத்து, அரைப்படி ஜலத்தில் போட்டு, பாத்ரத்தின் வாயைமூடி ஒரு மணிநேரம் காய்ச்சி வடிகட்டி யெடுக்கவும். இக்கஷாயத்தை வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல், வாந்தி, குடல் முதலியவற்றிலுண்டாம் உளைத்தல் என்னும் இந்நோய்களில் 1 அல்லது 2-அவுன்ஸ் அளவாக ஒரு மணிக்கு ஒரு முறை இளஞ்சூடாக உட்கொண்டுவந்தால் சீக்ரத்தில் நற்குணமுண்டாகும். உஷாக்ஷாரம் என்கிற ஸோடாவுப்பை இக்கஷாயத்தில் சிறிதளவு சேர்த்தால் முன்கூறிய இதன் குணங்கள் அதிகமாகி, உபயோகிப்பவருக்கு வெகு சீக்ரத்தில் ஸௌக்ய மேற்படும். குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டியளவு கஷாயம் போதுமானது.

ஸுமார் 6-அவுன்ஸ் ஜலத்தில் ½-பலம் சுக்கை நறுக்கிப்போட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டி யெடுக்கவும்; இதை ஆமவாதமென்னும் ஒருவித கீல்வாயுவில் இரவில் படுக்கும்போது உஷ்ணமாகவே குடிக்கக் கொடுத்து, துப்பட்டியால் உடம்பைப் போர்த்துவிட விசேஷமாக வியர்வை யுண்டாய் சீக்ரத்தில் குணமுண்டாகும்.—வைத்திய கலாநிதி.

### A Girl with Marvellous Memory.

**அபார ஞாபகசக்தியுள்ள ஒரு பெண்.**-குமாரி லக்ஷ்மாம்பாள் என்னும் 7-வயஸுள்ள ஒரு பெண் அபார ஞாபகசக்தியுள்ள வளாயிருக்கிறாளாம். பகவத்கீதை, கோபிகாகீதை முதலிய க்ரந்தங்களை பாராமல் ஒப்பிக்க முடியுமாம். ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு ஆகிய இந்த பாஷைகளில் ஸுமார் 5000-ச்லோகங்கள் பாராமல் வருமாம். அவள் எதையும் ஐந்தாறு தடவை கேட்டவுடன் க்ரஹித்துக்கொண்டு பிழையில்லாமல் சொல்லுகிறாளாம். இப்படி அபார சக்தியிருந்தும் அவளுடைய தேகஸுகத்துக்கு யாதொரு கெடுதலும் ஏற்படவில்லையாம். அவள் ரொம்ப சுறுசுறுப்பாயிருக்கிறாளாம். அவள் சற்று நேரங்கூட சும்மா உட்கார்ந்திருக்க முடிவதில்லையாம். ஆனால் அவள் தன் மனதை எந்த விஷயத்திலும் செலுத்தி அதில் சற்றுநேரங்கூட அதே ஞாபகமாய் இருக்க முடியாதாம்.

அவள் பிறந்த பத்தாவது மாஸத்திலேயே பேச ஆரம்பித்து விட்டாளாம். தனது தகப்பனார் சொல்லும் மந்த்ரங்களை தினந்தோறும் கேட்டுக் கொண்டிருந்து பாடம் பண்ணி யிருக்கிறாளாம். இப்போது அந்தப் பெண்ணை யவளுடைய தகப்பனார் காசிக்கு அனுப்பி ஸம்ஸ்க்ருதம் வாசிக்க செய்யப்போகிறாராம். ஸம்ஸ்க்ருதம் வாசித்த பிறகு அவளுக்கு இங்க்லீஷ் கற்றுக் கொடுக்க உத்தேசமாம்.

### Dont's for Mothers.

**தாய்மார்கள் செய்யக் கூடாதவைகள்.**—குழந்தைகளுக்கு வயிற்றால் போகும்போது பால் கொடுக்கக் கூடாது. குழந்தைகள் பால் குடிக்கும் பால் புட்டியில் வாயில் வைத்துக்கொள்ளும் குழாய் ரொம்ப நீண்டிருக்கக்கூடாது. குழந்தை பால் குடித்த பிறகு அதைத் தொட்டிலில் போட்டு குலுங்கும்படி ஆட்டக்கூடாது. குழந்தை கத்தும்போதெல்லாம் அதற்குப் பால் கொடுக்கக் கூடாது. ஸூர்யாஸ்தமனத்துக்குப் பிறகு குழந்தையை வீட்டுக்கு வெளியே கொண்டு போகக்கூடாது. சிறு குழந்தைகளை வெறுந்தரையிலும் ரொம்ப காற்றோட்டமுள்ள இடத்திலும் உட்காரவிடக்கூடாது. தாயோடல்லது வேறொருவருடனும் குழந்தை படுத்துத் தூங்கக்கூடாது. மழைக்காலத்தில் அஜீர்ணபேதி அதிகமாகையால் அந்தக் காலத்தில் குழந்தைகள் தாய்ப்பாலை மறக்கும்படி செய்யக்கூடாது. ரொம்ப புழுக்கமுள்ளதும் காற்றோட்டமில்லாததுமான அறையில் குழந்தையை விட்டுவைக்கக்கூடாது. வென்னீரில் போட்டு சுத்தம் செய்யாத எந்தப் பாத்ரத்திலும் குழந்தைப்பாலை விட்டு வைக்கக்கூடாது.



## INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Education for Natal Indians.

**நேட்டால் இந்தியர்களின் கல்வி.**—நேட்டாலில் உள்ள இந்தியர்கள் தங்கள் சிறுவர் சிறுமியர்களுடைய விஷயத்தில் ரொம்ப அக்கரை பாராட்டி வருவதாகத் தெரிகிறது. அவர்கள் டர்பனில் 'ஹிந்து தமிழ் இன்ஸ்டிட்யூட்' என்று பெயர்கொண்ட ஒரு வித்யாசாலையை ஸ்தாபித்திருக்கிறார்கள். அந்தப் பாடசாலையின் நோக்கம் தமிழ்ச் சிறுவர்களுக்கு தமிழ் பாஷையில் தேர்ச்சியும் அபிமானமும் ஏற்படும்படி செய்வதே. சிறுவர்கள் இங்க்லீஷ் கற்றுக்கொள்வதற்காக பகல் பொழுதில் இங்க்லீஷ் பள்ளிக்கூடங்களுக்குப்போக வேண்டியிருப்பதால், இந்தப் பள்ளிக்கூடத்தை காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் நடத்தி, அந்த வேளைகளில் சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்வி கற்பித்து வருகிறார்கள். இப்போது அந்தப்பாடசாலையில் 200 மாணவர்கள் வாசித்துவருகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தை யொட்டி ஒரு இங்க்லீஷ் பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று நெட்டாலிலுள்ளவர்கள் முயற்சிசெய்து வருகிறார்களாம். இந்தியர்களுக்கென்று ஸொந்தத்தில் இங்க்லீஷ் பள்ளிக்கூடம் ஒன்றிருந்தால் மாணவர்கள் வேறு பள்ளிக்கூடங்களுக்குப் போய் வாசிக்க வேண்டியிராது.

### War and Emigration.

**யுத்தமும் அயல் நாட்டுக்குக் குடிப்போவதும்.**—யுத்தத்தால் அயல் நாட்டுக்குக் குடியேறிச் செல்பவர்களுடைய தொகை ரொம்ப குறைந்துபோயிருக்கிறது. 1914-ம் வர்ஷத்தில் மேமாஸத்தோடு இந்தியர்கள் பிஜிதீவுக்குக குடியேறிப்போவது நின்று போய்விட்டது. அந்த வர்ஷம் 542 பேர்கள் சென்னை ராஜதானியிலிருந்து பிஜித் தீவுக்குப் போனார்கள். ப்ரிட்டிஷ் கயானாவுக்கு 312 பேர்கள் போனார்கள். சென்ற ஆகஸ்ட்செப்டம்பர் மாஸங்களில் ட்ரினிடாடுக்குப்போவதற்காக 120 பேர்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தார்கள். ஆனால் யுத்தம் ஆரம்பிக்கவே கவர்ன்மெண்டாருக்குத் துருப்புகள் கொண்டுபோகக் கப்பல்கள் வேண்டியிருந்ததால், அந்த 120 பேர்களையும் அவரவர்களுடைய ஊர்களுக்கு அனுப்பிவிடவேண்டியதாயிற்று. அந்த வர்ஷம் மொரிஷஸு (மோர்சு)க்காவது ஸெஷல்ஸ் தீவுக்காவது இந்தியர்கள் குடியேறிப்போகவில்லை.

சென்றவர்ஷம் (1914) நெட்டாலிலிருந்து 1662 இந்தியர்களும், பிஜிதீவிலிருந்து 287 பேர்களும், மொரிஷஸ் தீவிலிருந்து 155 பேர்களும் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார்கள்.

சென்ற சில வர்ஷங்களாக ப்ரெஞ்ச் குடியேற்ற நாடுகளுக்கு இந்தியர்கள் குடியேறிப் போவதில்லை. அது போலவே சென்ற 1914-ம் வர்ஷத்திலும் இந்தியர்கள் அந்த நாடுகளுக்குச் செல்ல வில்லை.

ஸ்ட்ரெய்ட்ஸ் ஸெட்டில் மெண்டுகளுக்கு 1913-ம் வர்ஷம் 1,17,983 இந்தியர்கள் குடியேறிப்போயிருக்க, 1914-ம் வர்ஷத்தில் 49,028 பேர்கள் தான் போனார்கள். இதற்குக் காரணம் யுத்தத்தால் கப்பல் போக்குவரத்துத் தடைப்பட்டுப் போனதோடு, மலையாநாடுகளிலுள்ள ரப்பர் தோட்டங்களில் அதிக கூலியாட்கள் வேண்டியிராமல் போனதே.

பர்மாவுக்கு கூலியாட்களேயன்றி ஸாதாரண ப்ரயாணிகளும் போவதால் கூலியாட்களின் தொகையைக் கணக்கிட முடியாமலிருக்கிறது.

லங்கையில் ப்ளேக் நோய் பரவியிருந்ததால் அதிக கூலியாட்கள் அங்கு போகவில்லை. 1913-ம் வர்ஷத்தில் 2,99,053 பேர்கள் போயிருக்க 1914-ம் வர்ஷத்தில் 1,44,146 பேர்கள் தான் அங்கே போனார்கள்.

### A Tamil Volunteer Corps in Kualalumpur.

**குவாலாலம்பூரில் ஒரு தமிழர் வாலண்டியர் படை.**—மலைநாடுகளில் உள்ள குவாலாலம்பூர் என்னுமிடத்திலுள்ள தமிழர்கள் ஸமீபத்தில் ஒருமீட்டிங் கூடி தங்களில் சிலர் வாலண்டியர் படையில் சேரவிரும்புவதாகவும், அதற்கு கவர்ன்மெண்டார் அனுமதிகொடுக்கவேண்டுமென்றும் தீர்மானித்து மலாய் நாடுகளின் கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். கவர்ன்மெண்டார் அந்த வேண்டுகோளுக்கு ஸம்மதம் கொடுத்திருக்கிறார்கள். வாலண்டியர் படையில் 50 தமிழர்கள் சேர்ந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. இந்தத் தமிழர்களில் பெரும்பாலார் லங்கையிலிருந்தும் சிறுபாலார் இந்தியாவிலிருந்தும் வந்தவர்கள். கோலாலம்பூரில உள்ள தமிழர்களில் ஸுமார் 100 பேர்கள் சிலகாலத்துக்கு முன்னால் ஸ்பெஷல் கான்ஸ்டபிள்களாகச் சேர்ந்துகொண்டு க்ரமமான போலீஸுக்கு உதவியாக இருந்து வந்தார்களாம்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### His Reason for Turning the Sign Post.

கைகாட்டி மரத்தைத் திருப்பி வைத்ததற்குக் காரணம்.—இங்கலண்டில் ஒரு வாலிபன் ஒரு ரோட்டின் வழியாக ஸைக்கிளின்மேல் ஏறிப் போய்க்கொண்டிருந்தான். அப்போது மழை ரொம்பப் பெய்துகொண்டிருந்தது. மேலும் இருட்டாயுமிருந்தது. அப்போது ஒரு மனிதனுடைய உருவம் தென்படவே, அவன் ஸைக்கிளிலிருந்து கீழேகுதித்து மனிதனிடம் ந்யூகாஸில் என்னும் ஊர் இன்னம் எவ்வளவு தூரமிருக்கிறதென்று கேட்டான். "வந்த பக்கமாய்ப்போனால் 10 மைலிருக்கிறது" என்று அந்த மனிதன் பதில் சொன்னான். "அந்தப்பக்கமா? கடைசியாகப் பார்த்த கைகாட்டிமரத்தில் ந்யூகாஸில் இந்தப் பக்கமாக இருக்கிறதென்று காட்டியிருக்கிறதே," என்றான். அதற்கந்த மனிதன் "ஜெர்மன் ஸெப்பலின்கள் வந்தால் என் ஊரிருக்குமிடந் தெரிந்துவிடப்போகிறதென்று கைகாட்டிமரங்களைத் திருப்பிவைத்திருக்கிறோம்" என்று பதில் சொன்னான்.

### Watching the Horse.

குதிரையைப் 'பார்த்துக்கொண்டிருத்தல்'—ஒரு நாள் ஒருப்ரபு குதிரைமேலேறிக்கொண்டுவந்து ஒரு போஸ்டாபீஸண்டை இறங்கி, அங்கேயிருந்த ஒரு பையனைப்பார்த்து "அப்பா, இந்தக் குதிரையைப் பார்த்துக்கொள். நான் ஒரு நிமிஷத்தில் போஸ்டாபீஸுக்குள் போய் வந்துவிடுகிறேன்" என்று சொன்னார். பையன் "அப்படியே, ஆகட்டும், ஐயா" என்று சொன்னான்.

ப்ரபு போஸ்டாபீஸுக்குள் போனார். இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் ஒரு மோட்டார் வண்டிவரவே, குதிரை அதைக்கண்டு பயந்து ஓட்டமெடுத்தது. குதிரை வெகுதூரம் ஓடிக்கண்ணுக்கு மறைந்துவிட்டபோதிலும், பையன் குதிரையின் பின்னால் ஓடலாமென்றிருந்தான். ஆனால் அப்போது ப்ரபு போஸ்டாபீஸிலிருந்து வரவே, பையன், "ஐயா, நல்லவேளையாய் வந்துவிட்டீர்கள். நான் குதிரையை ரொம்பநேரம் 'பார்த்துக்கொண்டிருந்திருக்க' முடியாது" என்றான்.

### Both the Same Thing.

இரண்டும் ஒன்றுதான்.—மீன் பிடிக்கக் கூடாதென்று தடுக்கப்பட்டிருந்த ஒரு குளத்தில் ஒருவன் மீன் பிடித்ததாக அவனைக் குற்றஞ்சாட்டினார்கள். மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியைப் பார்த்து, "நீ, ஏப்ரல் மாஸம் 3-தேதி யன்று குளத்தில் மீன்பிடித்ததுண்டா?' என்று கேட்டார்.

"இல்லை, யஜமானே, மீன் பிடிக்கப்போனேனே யொழிய, மீன் பிடிக்கவேயில்லை."

"மீன் பிடிப்பதும் பிடிக்கப்போவதும் எல்லாம் ஒன்றுதான். உனக்கு 5 ரூபாய் அபராதம் போட்டிருக்கிறது."

அதன் மேல் குற்றவாளி கோர்ட்டை விட்டுப் போகப் புறப்பட்டான். மாஜிஸ்ட்ரேட் அவனைக் கூப்பிடச் சொல்லி அபராதத்தைச் செலுத்தச் சொன்னார். அதற்கவன், "அபராதம் செலுத்தலாமென்று தானிருந்தேன். ஆனால் அபராதத்தைச் செலுத்துவதும் செலுத்தலாமென்றிருப்பதும் ஒன்று தானே" என்று சொன்னான்.

### Public Appreciation.

பொது ஜன மதிப்பு.—படங்கள் எழுதக்கற்றுக்கொண்டிருந்த ஒரு வாலிபர் ரொம்ப ச்ரமப்பட்டு நேர்த்தியான படமொன்றை எழுதி முடித்தார். அவர் தமது படத்தைப்பொது ஜனங்கள் எப்படி மதிக்கிறார்களென்று அறிய விரும்பி, அப்படத்தை ஜனப்போக்குவரத்து அதிகமாயுள்ள ஒரு இடத்தில் தொங்கவிட்டு, அப்படத்தின் அடியில் ஜனங்கள் அப்படத்தில் குறைவுள்ள பாகங்களை குறித்து விட்டுப்போக வேண்டுமென்று எழுதியிருந்தார். மறுநாள் காலையில் அப்படத்தை அவர் பார்க்கையில், படத்தின் எல்லா பாகங்களும் சரியாய் எழுதவில்லை யென்று அந்தந்த பாகங்களில் குறி போட்டிருந்தது. அதனால் தமது படத்தை பொது ஜனங்கள் அங்கீகரிக்கவில்லை யென்று அவர் ஏங்கியிருக்கையில், அவரது நண்பர் ஒருவர் இதை யறிந்து அதே படத்தை இன்னொரு பொது ஸ்தலத்தில் தொங்கவிடச் செய்து, அந்தப்படத்தின் கீழே, எந்தெந்த பாகங்கள் நன்றாய் வரையப்பட்டிருக்கின்றனவோ அந்தந்த பாகங்களின் மேல் ஜனங்கள் குறித்து விட்டுப்போக வேண்டுமென்று ஒரு விளம்பரம் எழுதித் தொங்கவிடச் செய்தார். மறுநாள் அந்த படத்தைப் பார்க்கையில், அதன் ஒவ்வொரு பாகத்திலும் அது நன்றாயிருக்கிறதென்று குறி போடப்பட்டிருந்தது.



## CURIOSITIES.

## விநோதங்கள்.

### Punnagavarali and a Serpent.

புன்னாகவராளி ராகமும் ஸர்ப்பமும்.—இந்த மாஸம் 3-ந்தேதியன்று திருநெல்வேலி ஜில்லா வீரவநல்லூரில் டாக்டர் என். எஸ். அப்பய்யர் வீட்டில் நிகழ்ந்த கல்யாணத்தில் அன்று இரவு ஹரி கேசவ நல்லூர் ப்ரும்ம ஸ்ரீ முத்தய்யா பாகவதரால் கதாகாலக்ஷேபம் நடத்தப்பட்டது. அக்காலக்ஷேபம் இரவு ஸுமார் 9-மணிக்கு ஆரம்பமாகி நடந்துகொண்டு வருகிற மத்தியில், பாகவதர் பாம்பாட்டி சித்தர் பாடல் ஒன்றைப் புன்னாகவராளி ராகத்தில் பாடிவிட்டு, மேற்படி ராகத்தை ஸுமார் கால்மணி நேரம் வரையில் ஆலாபனம் செய்தார். அதற்குள் கல்யாணப்பந்தலில் பாகவதர் ஸமீபத்தில் உட்கார்ந்திருந்த சிலருடைய தொடைகளில் ஏதோ ஒரு ஜந்து ஏறி இறங்கினதைத் தங்கள் தங்கள் கைகளால் தள்ளிக்கொண்டு, அது இன்ன தென்றே கவனியாமல் ஸங்கீதத்தில் லயித்திருந்தார்கள். கடைசியில் பாகவதருக்கு ஸமீபத்திலிருந்த ஒருவர் மடியிலும் ஒரு ஜந்து ஊர்வதாகத் தோன்றி அதை உடனே கீழே தள்ளவும் அது ஸுமார் ஒரு அடி நீளமுள்ள வெள்ளி நிறமான ஒரு ஸர்ப்பமாயிருக்கக் கண்டு பாகவதருள்பட எல்லாரும் தாங்கள் இருந்த இடத்தை விட்டு சற்று விலகினார்கள். ஆனாலும் அந்தப் பாம்பானது அதே இடத்தில் அசையாமலிருப்பதைக்கண்டு, எல்லாரும் ரொம்ப ஆச்சரியத்தை அடைந்தார்கள். வெகு ஜாக்ரதையாய் அந்த ஸர்ப்பத்தைப் பிடித்து வெளியில் கொண்டுபோய் விட்டார்கள்.—சுதேசமித்திரனில் ஒரு நிருபர்.

### Sale of Human Hair.

மனித ரோம விற்பனை.—ஹிந்துக்களில் பெரும்பாலார் தங்கள் குழந்தைகளுக்கு கோவில்களில் முடி இறக்குவதுண்டு. பெரியவர்களும் வேண்டுதலுக்காக முடி இறக்கிக் கொள்வதுண்டு. திருப்பதிபோன்ற பெரிய கோவில்களில் இதற்காக வர்ஷந்தோறும் ஏராளமான ஜனங்கள் போகிறார்கள். இதனால் அவ்விடங்களில் சேரும் மயிரின் அளவு அபரிமிதமாயிருக்கும். அநேகருக்கு இந்தமயிர் என்னவாகிறதென்பது தெரியாது. ஸிம்மாசலம் தேவஸ்தானத்தில் சென்றவர்ஷம் அக்டோபர்மாஸத்தில் 4318 ராத்தல் நிறையுள்ள மயிரை ஏலம்போட்டார்கள். இந்த மயிரை மெஸ்ஸர்ஸ் ரிச்சர்ட் வாட்ஸன் அண்ட் கம்பெனியார் 2050 ரூபாய்க்கு ஏலமெடுத்தார்கள். ஆனால் அவர்கள் என்ன காரணத்தாலோ முழுமயிரையும் எடுத்துக்கொண்டு போகாமல், 30 ராத்தல் மயிரைமாத்ரம் எடுத்துக்கொண்டு போய், 200 ரூபாய் மாத்ரம் செலுத்தியிருக்கிறார்கள். கொஞ்சகாலத்துக்கு முன்னால்வரையில் ஷை மயிரை அவர்கள் எடுத்துக்கொண்டு போகாததால், ஷை தேவஸ்தானத்தார் அதை மறுபடியும் ஏலம்போட உத்தேசித்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

மேல் நாடுகளில் அநேக ஸ்த்ரீகள் தங்கள் தலைமயிர்களைக் கத்தரித்து விற்றுப் பணம் ஸம்பாதிக்கிறார்கள். ஜெர்மனியிலுள்ள ஒரு ஜில்லாவில் வ்யாபாரிகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக் கொருதடவை போய் ஸ்த்ரீகளுடைய தலைமயிரைக் கத்தரித்து வாங்கிக்கொண்டு போய் வ்யாபாரம் செய்து லாபமடைகிறார்களாம்

### A Centenarian.

நூறுவயஸுக்கு மேல் பட்டவன்.—திருவாங்கூரின் வடபாகத்திலுள்ள ஒரு க்ராமத்தில் புலைய ஜாதியைச் சேர்ந்த ஒரு கிழவனுக்கு இப்போது 127-வது வயஸு நடந்து கொண்டிருக்கிறதாம். அவன் ரொம்ப திட சரீரமுள்ளவனாயிருக்கிறானாம்.

### Walking on Water.

ஜலஸ்தம்பனம்.—மதுரையிலுள்ள மீனாக்ஷி ஸுந்தரேச்வரர் கோயில் பொற்றாமரைக் குளத்தில் இந்த மாஸம் 20உ ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4½-மணிக்கு ஓர் ஸந்யாஸி தண்ணீரில் நடந்து சென்று நடுமத்தியில் படுத்துக்கொண்டு தேவாரம் திருவாசகம் முதலிய பாடல்களும் சில சுலோகங்களும் கேட்டோர் மனம் பரவசமாகும்படி சொல்லிவிட்டு எழுந்து முன்போல் நடந்து கரையேறி வெளியே சென்றாராம். அந்த அதிசயத்தைப் பார்க்கக் கணக்கில்லாத ஜனங்கள் வந்திருந்தார்களாம்.

### A New Mattress.

ஓர் நூதன மெத்தை.—படுத்துத் திரும்பும்போதெல்லாம் அந்தந்தப் பக்கத்துக்குக் காற்றை யெழுப்பி வீசிக்கொண்டிருக்கும் புதுவகை மெத்தை யொன்று அமெரிக்காவிலே செய்யப்பட்டிருக்கிறது. அது வீசுங் காற்று விசிறியால் விசிறுவதுபோல் வருகிறதாம்.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Widow Passing for Spinster.

**விதவையைக் கன்னிகை யென்றது.**—கல்யாணமான பெண்களை புருஷனிருக்கும் போதே கன்னிகையென்று சொல்லி புனர் விவாகம் செய்வதைப்பற்றியும், விதவைகளை கல்யாண மாகாதவர்களென்று ஏமாற்றிப் புனர்விவாகம் செய்விப்பதைப்பற்றியும் கதைகளில் படித்திருக்கிறோம். பின் சொன்ன வகையைச்சேர்ந்த ஒரு ஸம்பவம் வாஸ்தவமாகவே தஞ்சாவூரில் நடந்ததென்று 'சுதேசமித்திரன்' எழுதுகிறது.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஒரு தெலுங்கு ப்ராம்மணப் பெண்ணுக்கும் ஒரு வக்கீலின் குமாரனுக்கும் கொஞ்ச காலத்திற்கு முந்தி விவாகம் நடந்தது. அது பால்ய விவாகம். மணமகள் தன் தகப்பன் வீட்டிலேயே வஸித்து வந்தாள். கொஞ்சம் நாள் கழிந்த பிறகு அப்பெண்ணின் கணவன் இறந்துபோனதினால் அவள் விதவையானாள். ஹிந்து சட்டப்படி அவளுடைய மாமனாரின் ஸம்ரக்ஷணையில் இருந்து வர வேண்டிய பாத்யதை அவளுக்கு ஏற்பட்டது. அதனால் அவளுடைய மாமனார் அவளை அழைத்துக் கொண்டுபோக அவ்வூருக்கு வந்தார். பெண்ணுக்கு விவாகமான ஞாபகமே தங்களுக்கு இல்லை யென்று அப்பெண்ணின் பெற்றோர்கள் சொல்ல, அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்த அப்பெண்ணின் மாமனார் இறந்துபோன தமது மகனுடைய மனைவியைக் காப்பாற்றும் பாரம் தம்மைவிட்டு இவ்விதமாக நீங்கிப் போனதைக் கண்டு ஸந்தோஷப்பட்டு வந்த வழியைப் பார்த்துச் சென்றார். வைதவ்யத்தின் அடையாளமாகச் செய்யவேண்டிய சின்னங்கள் யாதொன்றும் அப்பெண்ணுக்குச் செய்யப்படவில்லை.

கொஞ்சம் தினங்களுக்கு முந்தி அப்பெண்ணின் ஜாதியைச் சேர்ந்த ஒரு ப்ராம்மணன் இரண்டாவது விவாகஞ் செய்து கொள்ளுவதற்கு ஒரு கன்னிகையைத் தேடிக்கொண்டிருந்தார். அவர் இச்சிறிய விதவையிருக்கும் க்ராமத்தில் வந்து இப்பெண்ணைப் பார்த்தார். அவருக்கு இந்தப் பெண் விதவையென்பது தெரியாது. அவருக்கு இப்பெண் பிடித்தபடியால், அவர் இப்பெண்ணின் பெற்றோர்களை நோக்கி, 'எனக்கு வர தக்ஷிணை வேண்டாம். வேண்டுமானால் உங்களுக்கு ஏதாவது கொஞ்சம் தொகை கொடுக்க ப்ரியமுள்ளவனாக இருக்கிறேன்" என்று சொல்லி கொஞ்சம் தொகையும் கொடுத்துவிட்டு பெண்ணை நிச்சயம் செய்து கொண்டார். விவாகம், பிள்ளை வீட்டில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விவாக முகூர்த்த நாளுக்கு முந்தின தினம் பெண்ணின் பெற்றோர்கள் பெண்ணை புதியமணமகள் கோலத்துடன் அலங்கரித்து அழைத்து வந்தார்கள். அந்தப் பெண் விதவை யென்ற ஸமாச்சாரம் மணமகனுடைய க்ராமத்திற்கு எட்டிற்று. அந்த ப்ராமணன், விதவையை விவாகஞ் செய்துகொள்ளுவதற்கு மனமில்லாது விவாகம் செய்துகொள்ளவில்லை. அதனால் பெண்ணின் பெற்றோர்கள் பெண்ணைக் கூட்டிக்கொண்டு அவர்களுடைய ஸொந்த க்ராமத்திற்குப் போக நேரிட்டது. உண்மையை வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்ததைப்பற்றி ப்ராம்மணன் ரொம்ப கோபங்கொண்டு பெண்ணின் பெற்றோர்களுக்குக் கொடுத்திருந்த பணத்தை வாப்ஸ் செய்துவிடும்படி கேட்டார். அதற்குப் பெண்ணின் பிதா அந்த ப்ராம்மணனை நோக்கி "நீர் பெண்ணை விவாகஞ் செய்து கொள்ளுவதாகவும், அதற்காகக் கொஞ்சம் பணத்தைக் கொடுப்பதாகவும் பேசினீரே யொழிய, பெண்ணைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. ஏதாவது கேட்டிருந்தால் நாங்கள் உண்மையை அறிவித்திருப்போம். தவிர நீங்கள் கொடுத்த ரூபாய் அனைத்தும் விவாககாரியங்களுக்கு வேண்டியவைகளை சேகரிப்பதிலும் ப்ரயாணத்திலும் செலவாய்விட்ட" தென்று சொன்னார்.

### The Government of India's Loan.

**இந்தியா கவர்ன்மெண்டார் வாங்கப் போகிற கடன்.**—இந்தியா கவர்ன்மெண்டார் 4½ கோடி ரூபாய் கடன் வாங்கப்போகிறார்கள். அந்தக்கடனுக்கு 1915-16-ம் வர்ஷத்து நூற்றுக்கு 4 வட்டி கடன் என்று பெயர். அந்தக்கடனை 1923-ம் வர்ஷம் நவம்பர் மாஸத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் அடைத்து விடுவார்கள். ஆனால் 1920-ம் வர்ஷம் நவம்பர் மாஸம் 30-ந்தேதிக்குப்பிறகு எப்போது வேண்டுமானாலும் 3-மாஸம் நோட்டீஸின் பேரில் கடன் முழுவதையுமோ, அதில் ஏதாவது ஒரு பாகத்தையோ கவர்ன்மெண்டார் அடைத்துவிட அவர்களுக்கு ஸ்வதந்த்ரம் உண்டு. இந்த மாகாணத்தில் கடன் கொடுக்க விரும்புகிறவர்கள் ஆகஸ்ட் மாஸம் 2-ந்தேதி முதல் 17-ந்தேதிக்குள் சென்னை அக்கௌண்டண்ட் ஜெனராலுக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்பவேண்டும். கடன் கொடுப்போர் நூற்றுக் கணக்கான தொகையைத்தான் கொடுக்கலாம். நூற்றுக்குக் குறைந்த தொகையைக்கடன் கொடுக்கக்கூடாது. முதலில் கடன் கொடுக்கும் தொகையில் 5-ல் ஒரு பாகத்தை டெபாஸிட்டாகக் கட்ட வேண்டும். பாக்கித்தொகையை அக்டோபர் மாஸம் 30-ந்தேதிக்குள் நான்கு தவணைகளில் செலுத்த வேண்டும்.

கடன் கொடுக்க விரும்புவோர்கள் போஸ்டாபீஸ் மூலமாயும் பணம் அனுப்பலாம். போஸ்டாபீஸ் மூலமாய் பணம் கடன் கொடுக்க விரும்புகிறவர்கள், ஒவ்வொருவரும் 100-க்கு குறையாமலும் 5000-த்துக்கு மேற்படாமலும் நூற்றுக்கணக்கில் முழுத் தொகையையும் போஸ்டாபீஸில் விண்ணப்பத்தோடு செலுத்த வேண்டும். இவர்கள் அக்டோபர் மாஸம் 30-ந்தேதிக்குள் பணத்தைச் செலுத்தலாம்.

### Life of the Big Gun.

**பெரிய பீரங்கிகள் உபயோகப் படக்கூடிய காலம்.**—பெரிய பீரங்கிகள் கோட்டைகளையும் மற்றவைகளையும் தாக்கி நாசம் செய்வதில் ரொம்ப உபயோகமுள்ளவை யென்றாலும், அவைகள் உபயோகப்படக்கூடியகாலம் கொஞ்சந்தானென்று சொல்லப்படுகிறது. பீரங்கிகளிலிருந்து குண்டுகள் வெளிவரும் ஒவ்வொரு ஸமயத்திலும் பீரங்கியின் உள் பாகம் கொஞ்சம் தேய்ந்து போகிறது. ஸாதாரணமாய் பீரங்கிகள் 150 தடவை வெடிதீர்த்த பிறகு அவைகள் அவ்வளவு சரியாய் வெடிதீர்ப்பதில்லையாம். சிலர் 250 தடவை வரையில் பீரங்கிகள் நன்றாய் வெடிதீர்க்குமென்று சொல்லுகிறார்கள். அதற்கப்புறம், அவைகளிலிருந்து வெளிவரும் குண்டுகள் சரியானபடி தாக்குவது முடியாது.

ஜெர்மனியிலுள்ள க்ரப் பீரங்கித் தொழில்சாலையார் ஜெர்மனியின் பெரிய பீரங்கிகள், இங்க்லீஷ், ப்ரெஞ்ச், அல்லது ரஷ்ய பீரங்கிகளை விட அதிககாலம் நன்றாய் குறிதப்பாமல் வெடிதீர்க்குமென்று சொல்லுகிறார்களாம். ஆனால் இந்த விஷயம் அனுபோகத்தில்தான் தெரியவரவேண்டும். ப்ரிட்டிஷ் பீரங்கிகள் ரொம்ப உயர்ந்ததென்று சொல்லப்படும் ப்ரிட்டிஷ் உருக்கால் செய்யப்படுகின்றனவாதலால், ப்ரிட்டிஷ் பீரங்கிகள் உபயோகப்படக்கூடிய காலம் மற்றவைகளை விடக் குறைந்ததல்லவென்று சொல்லலாம்.

### Drink in Bombay Government House.

**பம்பாய் கவர்ன்மெண்ட் ஹவுஸில் மதுபானம்.**—நமது சக்ரவர்த்தி தம் குடும்பத்தில் மதுபானம் கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவு செய்திருந்ததையறிந்து இந்தியாவின் பல பாகங்களில் ஜனங்கள் கூட்டங்கூடி இனிமேல் மதுபானத்தை விலக்கி விடுவதாகத் தீர்மானஞ் செய்தார்கள். பம்பாய், பூனா இவ்விரண்டிடங்களிலுமுள்ள கவர்ன்மெண்டு ஹவுஸில், யுத்தம் முடியும் வரையில் சாராயம் பருகுவதில்லையெனத் தீர்மானமாயிருக்கிறதாம்.

### Poison in Food.

**உட்கொள்ளும் ஆகாரத்தில் விஷம்.**—மத்ய திருவாங்கூரைச் சேர்ந்த புதுப்பள்ளி யென்ற விடத்தில் 12-வயதுள்ள ஒரு வாலிபன் உணவை உட்கொண்டதும் தலைவலியினாலும் தலைச் சுற்றலினாலும் சிறிது நேரம் அவஸ்தைபட்டு உடனே உயிர் துறந்ததாகச் சொல்லப்படுகிறது. அவனுடைய பெற்றோர்கள் அவனது ப்ரேதத்தை எடுத்துக்கொண்டு சுடுகாட்டுக்குச் சென்று செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து வீடு திரும்பி வந்து சேர்ந்ததும் இறந்து போன வாலிபனின் ஸகோதரியும் இறந்து கிடந்தாள். உடனே, அவ்வீட்டில் வஸித்து வந்த எல்லோருக்கும் மேற் சொன்ன மாதிரியாகவே தலைச்சுற்றலும் ஒரு மாதிரியான மயக்கமும் ஏற்படலாயிற்று. வைத்ய உதவியினால் அவர்கள் மரணத்தினின்று தப்புவிக்கப்பட்டார்கள். வீட்டிலுள்ள எவ்விதமான உணவு பதார்த்தத்தையும் மூடாமல் திறந்து வைப்பதானது ஆபத்தையும் துயரத்தையும் விளைவிக்கத் தக்கதாயிருக்கிற தென்பது மேற்சொன்ன த்ருஷ்டாந்தத்தினால் யாவருக்கும் தெளிவாக விளங்கும்.

### A War Yajna.

**யுத்த ஸம்பந்தமாய் ஒரு யாகம்.**—ஐரோப்பா யுத்தம் சீக்ரம் முடிவுபெறுதற் பொருட்டும், அதில் ப்ரிட்டிஷார் ஜயமடைதற் பொருட்டும் வேதோக்தமான ஒரு யாகஞ் செய்ய பம்பாயிலுள்ள ஹிந்துக்கள் முயற்சி செய்துவருகிறார்களாம். இதற்கு ஒரு லக்ஷம் ரூபாய் செலவாகுமாம். இந்தத் தொகையை பம்பாய் நகரத்திலுள்ள பெரிய ஸாவுக்கார்களும், வ்யாபாரிகளும்கொடுக்கச் ஸம்மதித்திருக்கிறார்களாம். இந்த யாகத்தை ருஷிகுல்யாவிலுள்ள ஸ்ரீ பரமஹம்ஸ ஸ்வாமி ஸச்சிதானந்த ரிஷிகள் நடத்துவார்.

**Traffic in Young Girls.**

**சிறு பெண்கள் வ்யாபாரம்.**—கல்கத்தாவில் சிலர்கள் சிறு பெண்களைக் களவாடிக்கொண்டுபோய் விற்பனை செய்கிறார்களாம். ஸமீபத்தில் இரண்டு ஸ்த்ரீகள் ஒரு பெண்ணைத் திருடிக்கொண்டு பாட்னுவுக்குப்போய் அங்கே இரண்டு மூன்று பேர்களுக்கு விற்கமுயன்றார்களாம். ஆனால் சில காரணங்களால் விற்கமுடியாமல் போகவே பெண்ணை அநாதையாக விட்டுவிட்டுப் போய்விட்டார்களாம். அந்த இரண்டு ஸ்த்ரீகளும் கொஞ்சகாலத்துக்குமுன் பத்துவயஸுள்ள ஒரு பெண்ணைத் திருடிக்கொண்டுபோய் 60-ரூபாய்க்கு விற்றார்களாம்.

**A Liquor Spring.**

**கிணற்றில் ஊறிக்கொண்டிருக்கும் ஒருவகை மதுபானம்**—வட இந்தியாவைச் சேர்ந்த காண்டுவா என்ற ஊரில் ஒரு மசூதியிருக்கிறது. அதன் ஸமீபமாகவுள்ள ஒரு கிணற்றில் தண்ணீர் ஊறுவதற்குப் பதிலாக வெண்மை நிறமுள்ள ஒருவகை மதுபானம் ஊறுகிறதாம். ஜனங்களெல்லாம் இந்த மதுபானத்தை கிணற்றிலிருந்தெடுத்து ஸ்வயமான பாலாக விருக்குலாமாவென அதைப் பரிசீலனை செய்தார்கள். அப்பானமானது பார்வைக்கு வெண்மையான பால் நிறமாகத் தோற்றப்பட்டாலும், அது பாலுடன் ஸம்பந்தப்பட்டதல்லவெனப் பரிசீலனையால் தெரியவருகிறது.

**Tinnevelly-Tiruchendur Railway.**

**திருநெல்வேலி திருச்செந்தூர் ரெயில்வே.**—திருநெல்வேலி ஜில்லா போர்டுக்காக திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்கு ஒரு ரெயில்வே போடுவதற்கு ஸாங்க்ஷனாகியிருக்கிறது. இந்த இருப்புப்பாதையின் நீளம் 38-மைல். இதை தென்னிந்திய ரெயில்வே சம்பெனியார் போட்டுக்கொடுப்பார்கள்.

# DIARY OF THE MONTH.

# மாஸ வர்த்தமானம்.

## THE WAR IN EUROPE.

## ஐரோப்பிய யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

ஜூலை 1-தேதி.

ஜெர்மானியர்கள் ஆர்கோன் ப்ரதேசத்தில் பாகடெல்லி என்னும் இடத்துக்குப் பக்கத்தில் சில இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

3-தேதி.

ஆர்கோன் ப்ரதேசத்தில் ஜெர்மானியர்கள் ப்ரெஞ்ச் துருப்புகளைத் தாக்குகிறார்கள். அவர்கள் ஹில்கென்பர்ஸ்ட் என்னுமிடத்தை பலமாகத் தாக்கினார்கள்.

7-தேதி.

ஸௌசெஸைச் சுற்றிலும் கடுமையான யுத்தம் நடக்கிறது. ஜெர்மானியர்கள் ஆராஸைத் தாக்குகிறார்கள்.

9-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸௌசஸ் என்னுமிடத்தில் சில ஜெர்மன் அகழ்களைப் பிடித்திருக்கின்றன.

10-தேதி.

பாண்டே ஸாப்டே என்னும் ப்ரதேசத்திலுள்ள பாண்டெனெல்லே என்னுமிடத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் 850 கஜம் முன்சென்றன.

14-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஜெர்மன் இளவரசருடைய ஸைன்யத்தை ஆர்கோன் ப்ரதேசத்தில் தோற்கடித்தன.

35 ப்ரெஞ்ச் ஆகாயக் கப்பல்கள் லெஸ் எஸ்பார்ஜஸ் என்னுமிடத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு ஜெர்மன் ரெயில்வே ஸ்டேஷனின்மேல் 171 வெடிகுண்டுகள் போட்டன. அநேக இடங்கள் நெருப்புப் பிடித்துக் கொண்டன.

15-தேதி.

ஜெர்மானியர்கள் ஆர்ராஸையும் ஸ்வாஸோனையும் பலமாகத் தாக்குகிறார்கள்.

யிப்ரஸுக்கு வடக்கே ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ் துருப்புகளைத் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள். அவர்கள் ஆர்ராஸையும் ஸ்வாஸோனையும் பலமான குண்டுகளால் தாக்கினார்கள். ஏன் பள்ளத்தாக்கில் பலமான பீரங்கி யுத்தம் நடைபெற்றது.

16-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸௌசெஸ் என்னுமிடத்துக்கு மேற்கே சில அகழ்களைப் பிடித்திருக்கின்றன. ஜெர்மானியர்கள் போரெய்ன் காட்டில் சில இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.



21-தேதி.

ப்ரெஞ்ச் ஆகாயக் கப்பல்கள் சாலராஞ்ச் என்னுமிடத்திலும், கோல்மார் என்னுமிடத்திலும் வெடிகுண்டுகள் போட்டன.

23-தேதி.

ம்யூஸுக்கும் மோஸல் நதிக்கும் நடுவில்பலமான யுத்தம் நடக்கிறது. வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் மன்ஸ்டர் என்னுமிடத்துக்கு வடக்கேயுள்ள விஞ்ஜ் என்னுமிடத்தை ப்ரெஞ்சுக்காரர்கள் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

வால்ஜஸ் ப்ரதேசத்தில் ப்ரெஞ்ச் துருப்புகள் பாண்ட ஸாப்ட் என்னுமிடத்தில் சில பலமான அரண்களைப் பிடித்திருக்கின்றன.

28-தேதி.

ஆல்ஸேஸில் மன்ஸ்டருக்குப் பக்கத்திலுள்ள சில குன்றுகளை ப்ரெஞ்சுத்துருப்புகள் பிடித்திருக்கின்றன.

31-தேதி

அநேக ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் ப்ரீபர்க் என்னுமிடத்தின்மேல் அநேக வெடிகுண்டுகள் போட்டன.

### ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா ஜெர்மனி இவைகளுக்கும் யுத்தம்.

ஜூலை 1-தேதி.

ஜெர்மானியர்கள் காலீஷ்யாவிலிருந்து தென்கிழக்குப் போலண்டுக்குள் போய் வார்ஸாவைத்தாக்க முயலுகிறார்கள் என்று தெரிகிறது.

பக் நதிக்கும் விஸ்டுலா நதிக்கும் இடையில் ரஷ்யர்கள் பின்வாங்கிக் கொண்டிருப்பதாக ஆஸ்ட்ரியர்கள் தெரிவிக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் ப்ராம்போல் என்னுமிடத்தில் ஒரு குன்றைப் பிடித்திருக்கிறார்களாம்.

2-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் போலண்டில் ஸாமேஸ் என்னும் இடத்தையும், விஸ்டுலா நதியின் வடக்கேயும் மேற்கேயும் உள்ள சில தாழ்ந்த பூமிகளையும்பிடித்திருக்கிறார்கள். அவர்கள் ரஷ்யர்களை டாரெள என்னும் இடம்வரையில் துரத்திச் சென்றார்கள்.

ஜெர்மானியப் போர்க்கப்பல்கள் லிபாவுக்கு 60-மைல் வடக்கே ரஷ்யாவின் கடற்கரை ப்ரதேசங்களைத் தாக்கின. ஆனால் ரஷ்யக்கப்பல்கள் அவைகளை எதிர்த்துத் துரத்திவிட்டன. ஒரு ஜெர்மன் டார்ப்பிடோ கப்பல் கடல் வெடிகுண்டில் பட்டு நாசமாயிற்று.

3-தேதி.

தென்கிழக்குப் போலண்டில் விப்ரஸ் நதிக்கும் பக் நதிக்கும் நடுவில் ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் முன் சென்று கொண்டிருக்கிறார்கள்.

ஒரு ஜெர்மன் ஸைன்யம் ரஷ்யர்களை ஸாமோஸிலிருந்து துரத்திவிட்டு, க்ராஸ்னிக் என்னுமிடத்தைப் பிடித்து விட்டது.

5-தேதி.

ஜெர்மானியக்கள் க்ராஸ்க் என்னுமிடத்துக்கு வடக்கிலும் விஸ்டுலா நதிக்குக் கிழக்கிலும் உள்ள சிலகுன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ரஷ்யர்கள் க்ராஸ்னிக் என்னுமிடத்திலிருந்து பின்வாங்கிப்போய் விட்டார்களாம்,

9-தேதி.

லூப்ளினுக்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்து 11,000 ஜெர்மானிய ஸோல்ஜர்களைக் கைது செய்திருக்கிறார்கள்.

13-தேதி.

சாம் என்னுமிடத்துக்கு 25 மைல் தெற்கேயுள்ள வாலிகா என்னும் நதிக்கரையிலிருந்த ரஷ்யர்களுடைய அகழ்களை ஜெர்மானியர்கள் பிடிக்கமுயன்றும் முடியாமல் போயிற்று.

15-தேதி.

ஜெர்மானியர்கள் வார்ஸாவுக்கு 50,60-மைல் வடக்கிலும் வடகிழக்கிலும் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிஸாநதியின் வலதுகரையில் சில ரஷ்ய அகழ்களைப் பிடித்திருக்கிறார்கள். ப்ராஸ்னிஸுக்குப் பக்கத்தில் ஏராளமான ஜெர்மன் ஸைன்யங்கள் வந்துதாக்கினதால் ரஷ்யர்கள் பின் வாங்கிப் போனார்கள். ஜெர்மானியர்கள் ப்ராஸ்னிஸைப் பிடித்திருக்கிறார்கள்.

17-தேதி.

ஜெர்மானியர்கள் வார்ஸாவை நோக்கி முன்சென்று கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் பிஸா, ஆர்ஸக் நதிகளிலிருந்து நாரூநதியின் வலதுகரைக்குப் பின் வாங்கியிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ப்ராஸ்னிஸுக்குத் தெற்கே ரஷ்யர்களைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

19-தேதி.

ஒரு ஆஸ்ட்ரோ ஜெர்மன் ஸைன்யம் விண்டவா நதியைக் கடந்து, டுக்கம், வெஸ்ட்ரிகா, ஆல்ட் ஆட்ஸ் என்

னும் இடங்களை நோக்கி முன் சென்று கொண்டிருக்கிறது.

ரஷ்யர்கள் பிஸ்ஸா நதிக்கும் விஸ்டுலா நதிக்கும் மத்தியில் நாரூ நதியை நோக்கிப் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

தென் கிழக்குப் போலண்டில் ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் விஸ்டுலா நதிக்கும் பக்நதிக்கும் மத்தியில் ரஷ்யர்களைத்தாக்கித் துரத்திக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் க்ரிஸ்டானூஸ் டௌ என்னும் பீடத்துக்குப் பக்கத்திலுள்ள குன்றுகளிலிருந்து பின் வாங்கிப் போகிறார்கள்.

20-தேதி.

ஜெர்மானியர்கள் பால்டிக்கடலில் உள்ள விண்டா என்னும் துறை முகத்தைத்தாங்கள் பிடித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் ரிகாவுக்கு 36 மைல் மேற்கே யுள்ள டுக்கம் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்ட்ரோலங்கா என்னும் ஊருக்கும் நோவா ஜார்ஜிவிஸ்க் என்னும் ஊருக்கும் மத்தியில் ரஷ்யர்களைத் தாக்கி நாரூ நதியின் அக்கரைக்கு ரஷ்யர்களைத்துரத்திவிட்டார்களாம். தென் கிழக்குப் போலண்டில் அவர்கள் க்ராஸ்நோஸ்டாவ் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள். அவர்கள் ஸோகாலுக்குப்பக்கத்தில் பக்நதியைக் கடந்து விட்டார்கள்.

21-தேதி·

ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை டுக்கம் என்னும் ஊருக்குக் கிழக்கே ரிகாவை நோக்கித்துரத்தினார்களாம். அவர்கள் ஆஸ்ட்ரோலங்கா என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள். அவர்கள் விஸ்டுலா நதிக்குத் தெற்கில் வார்ஸாவுக்கு 15 மைல் தென் மேற்கே வந்து விட்டார்கள். ஆஸ்ட்ரியர்கள் ராடம் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

22-தேதி.

ஜெர்மானியர்கள் ஆஸ்ட்ரோலங்கா என்னும் ஊரைத் தாக்குகிறார்கள்.

23-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் வார்ஸாவையும் இவான்காரோடையும் நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். ப்ஸரோ, நாவ்கா நதிகளுக்கிடையிலிருந்த ரஷ்யர்கள் வார்ஸாவின் பக்கமாய் பின் வாங்கிப்போயிருக்கிறார்கள். பக்நதிக்கும் விஸ்டுலாநதிக்கும் நடுவில் யுத்தம் பலமாக நடக்கிறது,

24-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் நாரூ நதிக்கு ரொம்ப ஸமீபத்தில் வந்து விட்டன. விஸ்டுலா நதிக்கும் பக் நதிக்கும் நடுவில் சில இடங்களில் அவைகள் ரஷ்யர்களைத் தோற்கடித்துத் துரத்தியிருக்கின்றன.

26-தேதி.

பால்டிக் மாகாணங்களில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களைப் பின்தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வார்ஸாவுக்கு வடக்கே நாரூ நதியைக்கடந்திருக்கிறார்கள். ஆனால் ஆஸ்ட்ரலங்காவுக்கும் ரோஷானுக்கும் நடுவில் நாரூ நதியைக்கடக்க முயன்றதில் அவர்களை ரஷ்யர்கள் தோற்கடித்துப் பின்தள்ளிவிட்டார்கள்.

28-தேதி.

ஜெர்மானியர்கள் நாரூ நதியை சில இடங்களில் கடந்து போயிருக்கிறார்கள்.

29-தேதி.

ஜெர்மானியர்கள் ரோஸானுக்கு ஏழுமைல் கிழக்கிலுள்ள கோவோரோவோ என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்களாம்.

30-தேதி.

நாரூ நதி யோரமாக கடுமையான யுத்தம் நடக்கிறது.

31-தேதி.

ஜெர்மானியர்கள் வார்ஸாவுக்குப் பக்கத்தில் விஸ்டுலா நதியைக் கடந்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் வார்ஸாவை விட்டு விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்களாம்.

## இட்டலி செய்யும் யுத்தம்.

ஜூலைமீ 9-தேதி.

அட்ரியாடிக் கடலின் வடபாகத்தில் ஒரு இட்டாலிய க்ரூஸர் ஒரு ஆஸ்ட்ரிய ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

18-தேதி.

இட்டலிக்கு ஸொந்தமான 'கரிபால்டி' என்னும் க்ரூஸரும் இன்னும் சில யுத்த க்ரூஸர்களும் ஆஸ்ட்ரியாவுக்கு ஸொந்தமான கட்டாரோ வைத்தாக்கிக் கொண்டிருக்கையில், 'கரிபால்டி' என்னும் கப்பல் டார்பிடோவால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

20-தேதி.

இட்டாலியர்கள் இஸான்ஸோ நதியின் கீழ்கரையிலுள்ள காரிஷியா என்னும் ஊரை பலமாய்த தாக்கினார்கள்.



24-தேதி.

இஸான்ஸோ நதியோரம் முழுவதிலும் ஆஸ்ட்ரியர்களுக்கும் இட்டாலியர்களுக்கும் யுத்தம் நடந்து வருகிறது.

ஒரு ஆஸ்ட்ரிய யுத்தக்கப்பல் அட்ரியாடிக் கடலில் உள்ள ஆர்டோனா என்னும் துறைமுகத்தைத் தாக்கிற்று.

28-தேதி.

இட்டாலியர்கள் ஸான்மினிலி என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் மான்பால்கோன் என்னுமிடத்துக்கு வடக்கேயுள்ள மாண்டி விபஸ் என்னு குன்றைப்பிடித்திருக்கிறார்கள்.

31-தேதி.

இட்டாலியர்கள் கார்ஸோ பீடபூமியில் சில அகழ்களைப் பிடித்திருக்கிறார்கள்.

## பொது விஷயங்கள்.

ஜூலைமீ 2-தேதி.

'ஆர்மீனியன்' என்னும் ப்ரிட்டிஷ் கப்பல் இங்லண்டுக்குப் பக்கத்தில் ஒரு ஜெர்மன் ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

3-தேதி.

நான்கு ப்ரிட்டிஷ் கப்பல்கள் ஜெர்மன் ஸப்மரீன்களால் மூழ்கடிக்கப்பட்டன.

5-தேதி.

ஒரு ரஷ்ய ஸப்மரீன் கப்பல் பால்டிக்கடலில் ஒரு ஜெர்மன் யுத்தக்கப்பலை டார்ப்பிடோவால் தாக்கிற்று.

10-தேதி.

ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜெர்மன் துருப்புகள் தென்னாப்ரிக்கா ஸேனாதிபதியாகிய ஜெனரல் போதாவினிடம் சரணமடைந்தன.

13-தேதி.

கிழக்கு ஆப்ரிக்காவில் அகப்பட்டுக்கொண்டிருந்த கானிக்ஸ்பர்க் என்னும் ஜெர்மன் க்ரூஸரை ப்ரிட்டிஷ் கப்பல்கள் தாக்கி நாசம் செய்துவிட்டன.

20-தேதி.

கருங்கடலில் யுத்த ஸாமான்கள் கொண்டுபோன 59 துருக்கியக் கப்பல்களை ரஷ்ய டார்ப்பிடோக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டன.

21-தேதி.

இதுவரையில் ஜெர்மானியர்கள் யுத்தத்தில் சேராத தேசங்களுக்கு ஸொந்தமான 91 கப்பல்களை மூழ்கடித்திருக்கிறார்களாம்.

25-தேதி.

ஜெர்மன் ஸப்மரீன் கப்பல்கள் ஒரு ரஷ்யக் கப்பலையும், ஒரு ப்ரெஞ்ச் கப்பலையும், 6 மீன் பிடிக்கும் கப்பல்களையும் மூழ்கடித்துவிட்டன.

# SEASON

## காலஸ்திதி

### Rainfall.

மழை.—1915ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1915ஹு ஆகஸ்ட்மீ 7உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 18·81 | 17·45 |
| வால்டேர் | 22·84 | 12·88 |
| காக்கிநாடா | 19·58 | 13·29 |
| மஸூலிப்பட்டணம் | 16·70 | 13·73 |
| நெல்லூர் | 6·33 | 5·77 |
| மதராஸ் | 11·41 | 8·74 |
| கூடலூர் | 2·51 | 7·69 |
| நாகப்பட்டணம் | 4·47 | 6·49 |
| பாம்பன் | 5·49 | 3·20 |
| கொழும்பு | 36·80 | 34·44 |
| திருவனந்தபுரம் | 44·55 | 34·39 |
| கொச்சி | 85·18 | 71·34 |
| கள்ளிக்கோட்டை | 84·87 | 81·89 |
| மங்களூர் | 73·78 | 88·71 |
| மெர்க்காரா | 80·22 | 83·90 |
| ஐதராபாத் | 20·19 | 13 54 |
| பல்லாரி | 13·49 | 6 89 |
| கர்நூல் | 8·73 | 10·82 |
| கடப்பை | 10·60 | 10·33 |
| ஹாஸ்ஸான் | 19 08 | 18·42 |
| பெங்களூர் | 16·70 | 13·65 |
| கொடைக்கானல் | 17·96 | 20.50 |
| உதகமண்டலம் | 34·82 | 27·07 |
| கோயம்புத்தூர் | 9·51 | 7·32 |
| வேலூர் | 17·78 | 13·15 |
| சேலம் | 15·79 | 15·21 |
| திருச்சிநாப்பள்ளி | 8·37 | 8·26 |
| புதுக்கோட்டை | 13·74 | 9·98 |
| மதுரை | 8·00 | 9 04 |
| திருநெல்வேலி | 5 87 | 5·39 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருததாதி | உதயலக் | அஹஸ் | துலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்ல-1091, பஸலி-1325, இங்கி-1915 ஆகஸ்டு-செப்டம்பர் } 49-ராக்ஷஸ ஹூ ஆவணிமீ { சிராவணம்-பாத்ரபதம், தக்ஷிணாய—வாஷருத ஹிஜ்ரி-1333ஹூ ஷவ்வால்-ஜுல்க்தாத்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | [காலம், ஷஷ்டயுபவாஸ, விருத்யர்க்கம |
| பிஅ | 5 8 | 3055 | 4 | 16 | 1 | தி | ஷஷ்-42-6, சித்-18-10, சுப-18-43, கவு-14-27, ரா-0-35, ஸிம்மரவி-26-40, ஸிம்மருன்யதி, விஷ்ணுபதிபுண்ய |
| சிம | 4 55 | 54 | 5 | 17 | 2 | செ | ஸப்-37-1, சுவா-15-13, சுப-12-7, கர-9-38, தி-28-27, ஸிம்மருன்யதி, சீதளாவிரதம், கரிநாள் |
| சிஅ | 49 | 52 | 6 | 18 | 3 | பு | அஷ்-31-25, விசா-11-44- ப்ரா-5-4, மா 57-41, பத்-4-16, பால-58-28, தி-21-6, ஸிம்மாஷ்டமீதி, பதாஷ்டமீ |
| சிபி | 39 | 51 | 7 | 19 | 4 | வி | நவ-25-28, அனு-7-51, வை-50-5, தை-52-25, தி-20-54, நவமீதி, வைசிரா |
| மஅபி | 29 | 50 | 8 | 20 | 5 | வெ | தச-19-21, கேட்-3-44, மூல-59-33, விஷ்-42-23, வணி-46-16, தி-22-20, ரா-25-4, திதித்வயம், வரலக்ஷ்மீ விர |
| சி | 19 | 49 | 9 | 21 | 6 | ச | ஏகா-13-12, பூரா-55-27, ப்ரீ-34-43, பவ-40-10, தி-21-53, த்வாதசீதி, ஸர்வஏகாதசீ [தம் |
| அ | 9 | 47 | 10 | 22 | 7 | ஞா | த்வா-7-15, உரா-51-46, ஆயு-27-17, கவு-34-24, தி-14-11, ப்ரதோஷம், ததிவிரதம், விஷ்ணுபவித்ராரோபம், |
| அசி | 4 0 | 46 | 11 | 23 | 8 | தி | த்ர-1-41, சசி-56-45, சிர-48-39, ஸவு-20-15, கர-29-7, தி-1-12, ரா-27-25, அவம, சிரவண உபவாஸம், சிவ |
| | | | | | | | பவித்ரா ரோபம், ருக்உபாகர்ம, ஹயக்ரீவோத்பத்தி, சிரவணகர்ம, ஸர்ப்பபலி |
| சிம | 3 50 | 45 | 12 | 24 | 9 | செ | ○-52-43, அவி-46-22, சோ-13-48, பத்-24-36, சே-2-12, கன்யாயனம்-13-46, பவித்ராரோபம், ராக்ஷாபந்தம், கரிநாள் |
| சிஅ | 40 | 43 | 13 | 25 | 10 | பு | பர-49-49, சத-45-12, அதி-8-8, பால-21-7, தி-3,53, சிராவணபகுளம் இஷ்டி, காயத்ரீஜபம் |
| சி | 30 | 42 | 14 | 26 | 11 | வி | த்வி-48-16, பூட்-45-20, சுக-3-27, திரு-59-50, தை-18-52, தி-1-6, அசூன்யசயனவிரதம் |
| சிஅ | 20 | 41 | 15 | 27 | 12 | வெ | த்ரி-48-15, உட்-46-57, சூல-57-29, வணி-8-4, தி-9-48, |
| பிசி | 11 | 39 | 16 | 28 | 13 | ச | சது-49-49, ரே-50-10, கண்-56-21, பவ-18-50, தி-18-22, மஹாஸங்கடஹரசதுர்த்தீ, பகுளா, |
| சிபி | 3 1 | 38 | 17 | 29 | 14 | ஞா | பஞ்-52-58, அசு-54-51, வ்ரு-56-27, கவு-21-13, ரா-13-20, |
| சி | 2 51 | 36 | 18 | 30 | 15 | தி | ஷஷ்-57-27, பர-60-0, துரு-57-34, கர-25-4, தி-21-6, |
| சி | 41 | 35 | 19 | 31 | 16 | செ | ஸப்-60-0, பர-0-50, வ்யா-59-25, பத்-30-6, ரா-3-37, த்ரிதினஸ்பிருக், கிருத்திகை |
| அசி | 31 | 33 | 20 | 1 | 17 | பு | ஸப்-2-56, கிரு-7-45, ஹர்-60-0, பால-35-53, ரா-22-5, கோகுலாஷ்டமீ, காலாஷ்டமீ, ஸ்ரீஜ |
| உம | 22 | 32 | 21 | 2 | 18 | வி | அஷ்-8-54, ரோ-15-7, ஹர்-1-40, தை-41-55, ரா-0-18, திவாமா யந்தீ, மன்வாதி, இராமா |
| சி | 12 | 31 | 22 | 3 | 19 | வெ | நவ-14-50, மிரு-22-21, வஜ்-3-55, வணி-47-35, ரா-15-15, தசமீதிதி |
| சி | 2 2 | 29 | 23 | 4 | 20 | ச | தச-20-7, திரு-28-55, விதி-5-45, பவ-52-22, அதிதி, வ்யசிரா |
| சி | 1 52 | 28 | 24 | 5 | 21 | ஞா | ஏகா-24-20, புன-34-24, வ்ய-6-50, கவு-55-54, தி-1-50, ரா-25-26, ஏகாதசீதிதி, ஸர்வஏகாதசீ |
| சி | 42 | 26 | 25 | 6 | 22 | தி | த்வா-27-5, பூச-38-26, வரீ-6-50, கர-57-51, ப்ரதோஷம் |
| சி | 33 | 25 | 26 | 7 | 23 | செ | த்ர-28-13, ஆயி-40-56, பரி-5-37, பத-58-10, தி-11-56, கிருஷ்ணாங்காரகசதுர்த்தசீ, மாஸசிவராத்ரி |
| சிஅ | 23 | 23 | 27 | 8 | 24 | பு | சி-27-44, மக-41-45, சிவ-3-8, சித்-59-23, சது-56-55, தி-11-30, [ரணம் புகளா, |
| சிம | 13 | 22 | 28 | 9 | 25 | வி | ●-25-44, பூர-41-11, சாத்-54-30, கிம்-54-13, தி-1 43, ரா-28-23, ஸர்வ அமாதிதி, பிண்டபிதிரு, தர்ப்பாஹ |
| சிஅ | 1 3 | 20 | 29 | 10 | 26 | வெ | ப்ர-22-25, உத்-36-22, சுப-18-40, பால-50-21, சே-2-45, ரா-29-10, திதித்வயம், பாத்ரபதசுத்தம், இஷ்டி, |
| | | | | | | | கர்க்கி ஜயந்தீ (இன்றுசந்திரதர்சனமாகாது) |
| ம | 0 53 | 19 | 30 | 11 | 27 | ச | த்வி-18-3, ஹஸ்-36-36, சுப்-42-4, தை-45-34, சே-3-30 ரா-25-12, த்ரிதீயாதி, ஸாமகோபாகர்ம, சந்திரதர்சனம் |
| சி | 44 | 17 | 1 | 12 | 28 | ஞா | த்ரி-12-56, சித்-33-9, ப்ரா-34-58, வணி-40-9, ரா-15-59, சதுர்த்சீவிரு, விநாயகசதுர்த்தீ. மன்வாதி, ஹரிதாளி } |
| அம | 34 | 16 | 2 | 13 | 29 | தி | சது-7-17, சுவா-29-17, மா-27-30, பவ-34-21, ரா-12-5, ரிஷிபஞ்சமீ, திவாமா [கா விரத, கரிநாள், இராமா ) |
| மசி | 24 | 15 | 3 | 14 | 30 | செ | பஞ்-1-23, ஷஷ்-55-30, விசா-25-17, வை-19-55, கவு-28-23, ரா-4-22, ஸிம்மஷஷ்டிதிவைசிரா, ஷஷ்டியுபவாஸ, |
| | | | | | | | அவம, சூர்யஷஷ்டி, குமாரதர்சனம் |
| அசி | 0 14 | 3013 | 4 | 15 | 31 | பு | ஸப்-49-43, அனு-21-19, விஷ்-12-22, கர-22-35, ரா-4-13, ஸிம்மஸப்தமீதி, முக்தாபரணவிரதம் |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | செ ச |
| | 7-சிம்-சு 16-சன்-பு 31-கன்-சு | | சு கே |
| ரா | | | ர-பு |
| | | | |



MISS FLORENCE NIGHTINGALE.
Attending to the Sick and Wounded.
மிஸ் ப்ளாரன்ஸ் நைடிங்கேல்
நோயாளிகளையும் காயம் பட்டவர்களையும் பராமரிப்பது.

THE GUARDIAN PRESS MADRAS



WOUNDED INDIAN IN FRANCE.
Being placed in a Motor Ambulance from a Stretcher.
ப்ரான்ஸில் காயம்பட்ட ஒரு இந்தியசிப்பாயியை
ஸ்ட்ரெட்ச்சரிலிருந்து மோட்டார் ஆம்புலன்ஸ்வண்டியில் ஏற்றுவது.


# ஜனோபிமானி

(முன்பு ‘பிழைக்கும் வழி’ யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE ‘PRACTICAL LIFE.’

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸ, ஆவணிமீ, AUGUST, 1915. — ஸஞ்சிகை 12. No. 12.


OFFICE OF THE REGISTRAR OF ... 22 OCT 1915 ... MADRAS

## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The ‘People's Friend’ is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணுக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் ‘ஜனோபிமானி’யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிரூபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்

ஜனோபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸ ௵ ஆவணி ௴. [ஸஞ்சிகை 12.

## LAND REVENUE.

## நிலத்தீர்வை

சென்றமாஸம் பல்லாரி ஜில்லா கான்பரென்ஸில் ஆனரபிள் மிஸ்டர் வி.கே. ராமானுஜாச்சாரியர் ப்ரெஸிடெண்டாக இருந்து, ப்ரஸங்கம் செய்தபோது, சென்னை சட்ட நிரூபண ஸபையில் நிலத்தீர்வையைப் பற்றி சிலகாலமாக நடந்த விவாதங்களைப் பற்றிப் பேசினார். அதன் ஸாராம்சம் பின் வருமாறு.

வட ஆற்காடு, சித்தூர் ஆகிய இந்த இரண்டு ஜில்லாக்களில் மறு ஸெட்டில்மெண்ட் செய்தபோது, ஸெட்டில்மெண்ட் வேலைகளை நடத்திய ஸெட்டில்மெண்ட் உத்யோகஸ்தர் கலெக்டர் ஆகிய இவர்கள் ஏற்படுத்தின வரிவிகிதத்தை ஏற்றுக்கொள்ளாமல், கவர்ன்மெண்டார் தீர்வையை உயர்த்தினார்கள். இந்த விஷயம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் விவாதத்துக்கு வந்தபோது, உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களெல்லாரும் தீர்வை விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை.

புதுத்தீர்வை விகிதங்களை நிர்ணயிப்பதில் கவர்ன்மெண்டார் ஸாகுபடிச் செலவைக் கணக்குப்போட்டு மொத்தவரும்படியில் கழிக்கிறார்கள். ஸாகுபடிச் செலவுக் கணக்குப் போடுவதில் அநேக முக்யமான செலவுகளைச் சேர்த்துக் கொள்வதில்லை. உதாரணமாக, விவஸாயியும், அவனது குடும்பத்தாரும் வயல்களில் வேலை செய்தால், அவர்களுடைய வேலைக்குத் தகுந்த கூலியை ஸாகுபடிச் செலவில் சேர்த்துக் கொள்வதில்லை. மேலும் செலவுகளையெல்லாம் ரொம்ப குறைவாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஒரு ஏக்கர் நிலத்துக்குப் போடப்படும் எருவின் மதிப்பு ரூ. 6-என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். பாலூர் விவஸாயப் பண்ணையிலோ ஒரு ஏக்கருக்குப் போடும் எருவின் மதிப்பு ரூ. 15-ஆகிறது. கவர்ன்மெண்டார் ஸாகுபடிச் செலவுக்குப் போட்டிருக்கும் கணக்குகளை, கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையில் ஸாகுபடி செய்து பார்த்து சரிதானா என்று பார்க்கவேண்டுமென்று மிஸ்டர் ராமானுஜா சார்யார் சொன்னார். இவைகளெல்லாம் கவர்ன்மெண்டாரின் காதில் ஏறவில்லை. கவர்ன்மெண்டார் உயர்ந்த நிலங்களுக்கு அதிகச் செல்வு ஆகிறதென்றும் தாழ்ந்த நிலங்களுக்கு ஸ்வல்ப செலவுதானாகிறதென்றும் சொல்லுகிறார்கள். இது அனுபவத்துக்கு ஒத்ததாயில்லை. இதை எடுத்துக்காட்டியும், இதற்குமுன் நிர்வாக ஸபையில் மெம்பராயிருந்த ஸர் ஜேம்ஸ் தாம்ஸன் இதே அபிப்ராயமுள்ளவராயிருந்தாரென்று எடுத்துக்காட்டியும் ஒரு பயனுமுண்டாகவில்லை. கவர்ன்மெண்டார் ஒன்றுக்கும் இணங்கவில்லை.

10 ரூபாயும் அதற்குக் குறைந்தும் தீர்வை செலுத்தும் ஏழை மிராசுதார்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்களென்றும், ஸ்வல்ப வரும்படியுள்ளவர்களுக்கு வருமானவரி போடாததுபோல, இவர்களுக்கு நிலத்தீர்வையை உயர்த்தாமல் அப்படியே விட்டுவிட வேண்டுமென்றும் உத்யோகஸ்தரல்லாத மெம்பர்கள் வற்புறுத்திச் சொன்னார்கள். வட ஆற்காடு ஜில்லாவில் உள்ள நிலஸ்வான்களில் நூற்றுக்கு 73-பேர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நிலத்திலிருந்து



மாஸம் 1-க்கு ஒருரூபாய்வீதமும் அதற்குக்குறைவாயும் வரும்படி கிடைத்து வருகிறது. இந்த ப்ரேரணையை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்ன ஆக்ஷேபனை என்னவென்றால், விலைவாசி உயர்ந்து வருவதால், நிலஸ்வான்களுக்கு அதிக வரும்படி கிடைக்கிறதென்பதே. இந்த வாதம் ஸ்வல்ப வரும்படியுள்ள நிலஸ்வான்களுக்கு ஏற்காது. ஏனென்றால் அவர்கள் தங்கள் மாஸூலை விற்காமல் ஸொந்தத்தில் உபயோகித்து விடுகிறார்கள். விலைவாசி ஏறுவதால் அவர்களுக்கு ஒரு லாபமும் கிடைப்பதில்லை.

நிலத்தீர்வையை சாச்வதமாக்குவதைப்பற்றி கவர்ன்மெண்டார் கவனிக்க மாட்டோமென்கிறார்கள். சென்ற 1913-ம் ௵ ஏப்ரல் மாஸம் (மிஸ்டர் ராமானுஜாசார்யர்) இதைப்பற்றி ப்ரஸ்தாபம் செய்தபோது, ஆனரபிள் மிஸ்டர் பட்டர்வொர்த் இது தலைபோகிற கார்யமென்றும், இதைப்பற்றி லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் பரிசீலனை செய்வதற்கில்லையென்றும் சொன்னார். ஸிவிலியன் உத்யோகஸ்தர்களுக்கு இந்த மாதிரிதான் அபிப்ராயங்கள் தோன்றும். அவர்களுக்கு இந்த விஷயத்தைப்பற்றி முன்பு நடந்த விவாதங்களும், ஏற்கனவேயுள்ள அபிப்ராயங்களும் தெரியாது. இப்போது உள்ள நிலத்தீர்வை ஏற்பாடு ஆதிகாலம் முதல் எப்போதும் இருந்துவந்ததென்றும், ஆகையால் அதை மாற்றக்கூடாதென்றும், இனிமேலும் எப்போதும் அப்படியே இருக்க வேண்டுமென்றும் அவர்கள் எண்ணியிருக்கிறார்கள். சாச்வத ஸெட்டில்மெண்ட் என்றால், ரயத்துவாரி நிலங்களுக்கு ஜமீன்தாரி நிலங்களுக்குள்ள தீர்வை விகித்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னதாக எண்ணக்கூடாது. இப்போது ரயத்துவாரி நிலங்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் நிலத்தீர்வை விகிதத்தை இனிமேல் உயர்த்தாமல் அதை அப்படியே சாச்வதமாகச் செய்யவேண்டுமென்று தான் நாம் கேட்கிறோம். தற்போது நடந்துவரும் யுத்தத்தைப் போன்ற ஸமயங்களில் கவர்ன்மெண்டுக்கு அதிக வரும்படி வேண்டியிருக்கும். அந்த ஸந்தர்ப்பங்களில், மற்றவைகளைப் போலவே, நிலத்தீர்வையையும் நூற்றுக்கு இவ்வளவு வீதமென்று உயர்த்துவது ந்யாயமாகும். ஆனால் இப்படி அதிகப்படுத்துவதென்றால், லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் இதைப்பற்றி நன்றாய் விவாதம் செய்த பிறகு இதற்கென்று ஒரு சட்டம் செய்தே வரியை உயர்த்த வேண்டும். இப்போது 30-வர்ஷத்துக்கொருதடவை கவர்ன்மெண்டார் தங்களுடைய இஷ்டம்போலும், இதைப்பற்றி கவனித்துவரும் உத்யோகஸ்தர்களுடைய நோக்கம்போலும் தீர்வையை உயர்த்திவருகிறார்கள். இப்படிச் செய்வதைத்தான் நாம் கூடாதென்கிறோம். நிலஸ்வான்களுடைய பொருளாதார நிலைமையை சீர்திருத்துவதற்காகத்தான் நாம் நிலத்தீர்வையை சாச்வதமாக்கவேண்டுமென்கிறோம். நிலஸ்வான்கள் பிற்காலத்துக்கு உதவியாக பணம் சேர்த்து வைத்துக்கொள்ளாமல் எல்லாவரும்படியையும் கண்டபடி செலவழித்து விடுகிறார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். அடிக்கடி தீர்வையை உயர்த்தி அவர்களுடைய வரும்படியைக் குறைத்துவிட்டால் அவர்கள் சேர்த்துவைப்பதற்கென்ன மிச்சமிருக்கும் ?

நிலத்தீர்வையை ஸெட்டில்மெண்ட் செய்வதற்கு முன்னால் ஸெட்டில்மெண்ட் செய்யும் ப்ரதேசத்திலுள்ள நிலஸ்வான்களுடைய பொருளாதார நிலைமை எப்படியிருக்கிறதென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று ஸமீபத்தில் ஆனரபிள் மிஸ்டர் எ.எஸ்.க்ருஷ்ணராவ் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். கவர்ன்மெண்டார் இந்தத் தீர்மானத்தை சில மாறுதல்களுடன் அங்கீகரித்தார்கள். ஸெட்டில்மெண்ட் வேலைகள் நடத்தும்போது, ஸெட்டில்மெண்ட் உத்யோகஸ்தர்கள் அந்தந்த இடங்களின் பொருளாதார நிலைமை

யைப்பற்றி பரிசீலனை செய்துவருகிறார்கள். இப்போது ஸெட்டில்மெண்ட் உத்யோகஸ்தர்கள் இன்னவிடங்களில் இன்னகாலங்களில் பொருளாதார ஸம்பந்தமாக பரிசீலனை நடத்துவார்களென்று ரயத்துகளுக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்வதாக கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படிச் செய்வதனால் ஏற்கனவே நடந்துவரும் பொருளாதார நிலைமையின் ஆராய்ச்சியில் ஒரு மாறுபாடும் ஏற்படாது. இப்படிப் பரிசீலனைசெய்யாமல் வேறு விதமாகப் பரிசீலனை செய்யவேண்டும். ஆராய்ச்சி செய்கிறவர்கள் ஒரு க்ராமத்துக்குப்போனால், அந்த க்ராமத்திலுள்ள பெரிய நில ஸ்வான்களுக்கும் ஸ்வல்ப நிலங்களுள்ளவர்களுக்கும் நிலங்களிலிருந்து என்ன வரும்படி கிடைக்கிறது ? வேறு எந்தவிதங்களிலாவது அவர்களுக்கு வரும்படி கிடைத்து வருகிறதா? அவர்களுக்குக் கடன் என்ன இருக்கிறது ? இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் கடன்களிலிருந்து மீட்டுக்கொள்ள முடியுமா ? அவர்களிடம் செலவுபோக ஏதாவது கையில் மிச்சமாக இருக்கிறதா? அவர்கள் கண்டபடி செலவுசெய்து, பின்னால் உபயோகமாகும்படி ஒன்றும் சேர்த்து வைத்துக்கொள்வதில்லையா ? அவர்களுடைய நிலைமையைச் சீர்திருத்த ஏதாவது செய்யமுடியுமா என்ற இந்த விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். இந்த மாதிரி ஆராய்ச்சி செய்வதற்குத் தக்க உத்யோகஸ்தரை நியமிக்கவேண்டும். அநேக விடங்களில் இந்த மாதிரி ஆராய்ச்சி செய்தபிறகுதான் இதைப்பற்றி பொதுவான அபிப்ராயங்கள் சொல்லமுடியும்.

சென்னை மாகாண கவர்ன்மெண்டார் தங்களுடைய வரவுசெலவு திட்டங்களை தங்களுடைய யுக்தம்போல் தாங்களே தீர்மானிக்க முடியாமலிருக்கிறார்கள். இந்தியாவில் வஸூலாகும் எல்லா வரிகளும் தங்களுக்கு ஸொந்தமானவை என்று இந்தியா கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். ஸாதாரணச் செலவுக்காக சில வரிகளை மாத்ரம் மாகாண கவர்ன்மெண்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மாகாண கவர்ன்டார் இந்த வரும்படிக்கு மேற்பட்டு ஏதாவது செலவு செய்யவேண்டுமானால், தங்களுக்கென்று விட்டிருக்கும் வரிகளிலிருந்து பணம் அதிகமாக வந்தால் தான் முடியும். இதனால்தான் அதிகாரிகள் ஸெட்டில்மெண்ட் செய்வதை நிறுத்த இஷ்டப்படுவதில்லை. இதனால்தான் போலும் நிலத்தீர்வையை சாச்வதமாக்க இவ்வளவு தயங்குகிறார்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க ஒருவழியிருக்கிறது. மாகாண கவர்ன்மெண்டார் தங்கள் வரும்படிக்கு இந்தியா கவர்ன்மெண்டாரை எதிர்பார்த்திருக்கும் ஏற்பாட்டை நீக்கிவிடவேண்டும். இதைப்பற்றி பொதுஜனங்கள் கவனம் செலுத்தவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார், உப்புவரி, இறக்குமதி ஏற்றுமதிவரி, ரெயில்வே, தபால், தந்திஇலாகா, பெரிய பாசன வேலைகள் ஆகிய இவைகளிலிருந்து வரும் வரும்படி ஆகியஇவைகளை வைத்துக்கொள்ளவேண்டும். பாக்கி வரிகளை மாகாண கவர்ன்மெண்டுகளிடம் விட்டுவிட்டு, ஒவ்வொரு மாகாண கவர்ன்மெண்டினிடமிருந்தும் ந்யாயமான வீதாசாரப்படி ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கிக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்து, மாகாணகவர்ன்மெண்டுகள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வரிகளிலிருந்து மாகாணச் செலவுகளை செய்துகொண்டு, நிலத்தீர்வை இவ்வளவுதான் வஸூலிக்கலாமென்று ஒருவரையறை ஏற்படுத்தி, அந்தந்த ஸ்தலங்களுக்கு ஏற்படும் செலவுகளுக்கு அந்தந்த விடங்களில் வரிபோட்டுக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

அந்தந்த ப்ரதேசங்களுக்கு ஏற்படும் செலவுகளுக்கு அந்தந்த ப்ரதேசங்களில் ப்ரத்யேகமாய் வரிபோட்டுக் கொள்வதென்பது ந்யாயமான ஏற்பாடுதான். ஆனால் இந்ததேசத்தில் நிலவரும்படியில் நூற்றுக்கு 50 பாகத்தை வரி



யாக எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். நிலங்களைத் தவிரவேறு மார்க்கங்களிலிருந்து வரும்படியடைகிறவர்களோ, தங்களுடைய வரும்படியில் நூற்றுக்கு 2½ பாகத்துக்குமேல் வரிசெலுத்துவதில்லை. இந்த நிலைமையில் வேறு அதிகப்படியான வரிகள் போடுவது ஒருநாளும் ந்யாயமாகாது. அப்படியிருந்தும், ரூபாய்க்கு ஓரணா வீதம் நிலஸெஸ் போட்டிருக்கிறார்கள். அதோடு ரெயில்வே ஸெஸ் என்று ரூபாய்க்குக் காலணா வீதம் வரிபோட்டிருக்கிறார்கள். இத்தனையும் போதாதென்று ஒருகலெக்டர் இன்னும் ரூபாய்க்கு அரையணா வீதம் அதிகப்படியாக வரிபோடவேண்டுமென்றும், அந்தவரிப் பணத்தை க்ராமங்களில் ரோடுகள் போடுவதற்காக வென்று தனியாய் எடுத்துவைக்க வேண்டுமென்றும் சொன்னார். ஆனால் ஜனங்கள் இதுகூடவே கூடாதென்று பலமாய் ஆக்ஷேபிக்கவே, கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தைப் பற்றி ஒரு உத்தரவும் போடாமல் நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

கவர்ன்மெண்டார் ஜில்லா போர்டுகளுக்கு ஆசைகாட்டி அதிக ஸெஸ் போடும்படி தூண்டுகிறார்கள். இப்போதுள்ள ரூபாய்க்கு ஓரணா வீதத்துக்குமேல் அதிகமாக ஸெஸ்போட்டால் அப்படி வரும் அதிகப்படிவரி எவ்வளவோ அவ்வளவு தொகையை கவர்ன்மெண்டார் கொடுத்து உதவுவதாகச் சொல்லுகிறார்கள். மலையாளம் ஜில்லாவிலும் தென் கன்னடம் ஜில்லாவிலுமுள்ள தாலுகா போர்டுகள் இவ்விதம் அதிக வரி போட்டு கவர்ன்மெண்டினிடம் பணவுதவி பெற்றுவருகின்றன. இந்தக் கொள்கை சரியானதல்லவென்று எடுத்துக்காட்டியும் கவர்ன்மெண்டார் தங்கள் அபிப்ராயத்தை மாற்ற இஷ்டப்படவில்லை.

## THE ORIGIN OF MAN.

BY S. R. ATMANATHAA IYAR.

## மனிதனின் உத்பத்தி.

இப்பூமி பூர்வத்தில் உருக்கிவார்த்த ஸ்திதியிலிருந்ததென்றும், பிறகு கொஞ்சம் கொஞ்சமாக குளிர்ந்து இறுகிக்கொண்டே வந்ததென்றும், இம்மாதிரி மாறுபட்டதற்கு வெகுகாலமாயிருக்கவேண்டுமென்றும் பூகோள உறுப்பிலக்கணத்தைக் கற்றவர்கள் கூறுகிறார்கள். பூமி குளிர்ந்து கெட்டியான பிறகுதான் ஜீவராசிகள் அதில் வஸிப்பதற்கு தகுதியாகுமல்லவா ? இவ்வாறு குளிர்ந்துகொண்டே வந்த பூமியில் ஜீவராசிகள் எப்போது எவ்வாறு உண்டாயின என்று ஒரு கேள்வி உண்டாகலாம். இதற்கு த்ருப்திகரமான பதில் சொல்வது கஷ்டமாயினும் இந்த விஷயத்தில் பாடுபட்டு ஆராய்ச்சி செய்தவர்களின் அபிப்ராயத்தை சுருக்கமாகக் கூறுவோம்.

ஜலவாயு, ப்ராணவாயு, நைட்ரொஜின், கந்தகம், கரி முதலிய வஸ்துக்கள் கலந்துள்ள ப்ரோடீட் (Proteid) என்று சொல்லப்படும் வஸ்து உயிருக்கு முக்யமான அஸ்திவாரம் என்றும், இந்த வஸ்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஜீரிக்கப்படுவதால் ப்ராணிகள் உயிர் தரித்திருக்கின்றன என்றும், ரஸாயன சாஸ்த்ரிகள் கூறுகிறார்கள். அப்போதைக்கப்போது நாம் உண்ணும் ஆகாரம், குடிக்கும் ஜலம் இவைகளில் முன்கூறின வஸ்துக்கள் இருப்பதுதான் உயிர் நிற்பதற்கு காரணம் என்று காட்டுகிறார்கள். ஆனால் இம்மாதிரியாக ஒரு உயிர்ப்ராணியின் எல்லாவிதச் செய்கைகளையும் விளக்க முடியவில்லை.

பிஸிக்ஸ் என்று சொல்லப்படும் ஜடத்வ சாஸ்த்ரம் பயின்றவர்கள் உயிர்ப்ராணியை ஒரு யந்த்ரத்திற்கு ஒப்பிடுகிறார்கள். இந்த உபமானம் சில விஷயங்களில் சரியாயிருந்தாலும், முற்றிலும் பொருந்தினதல்ல. எப்படியெனில் முதலாவது உயிருள்ள ஒரு மனிதன் அல்லவா யந்த்ரத்தை தன்னுடைய உபயோகத்தின்

பொருட்டு கருவியாக அமைத்தான். மேலும் ஒரு யந்த்ரம் அதன் அங்கங்களுக்கு கெடுதி உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவாவது, உண்டான கெடுதியை தானே தீர்த்துக்கொள்ளவாவது, தன்னைப்போன்ற யந்த்ரத்தை ச்ருஷ்டி செய்யவாவது சக்தியுடைத்தானதல்ல. உயிர் ப்ராணியோ அப்படியல்ல. ஒரு தடவை ஒரு விதமான ஸுகத்தையாவது கஷ்டத்தையாவது அனுபவித்தால், அதனால் உயிர்ப்ராணி பயன்படுகிறது. பிறகு தான் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியை யோசித்து நிச்சயித்துக் கொள்ள திறமை உடையதாயிருக்கிறது.

உயிருள்ள வஸ்து மற்றொரு உயிருள்ள வஸ்துவிலிருந்தே உற்பத்தியாயிருக்கவேண்டுமென்று வேறு சிலர் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் அநேக ந்யாயங்களை எடுத்துக்காட்டுகிறார்கள். ஆயினும் முதல் முதலில் உயிர் எப்படி தோன்றிற்று என்பதற்கு தகுந்த விடைசொல்ல அவர்களால் ஆகவில்லை.

ஆகாசத்திலிருந்து கீழேவிழும் அக்னி நக்ஷத்திரத்துடன் கலந்து உயிர் உண்டாக்கும் கரு கீழே விழுந்திருக்கவேண்டுமென்பது சிலருடைய அபிப்ராயம். ஆகாசத்திலிருந்து பூமியில் விழும் வரையில் உயிர் தரித்து இருப்பது ஸாத்யமில்லை யென்றும். உயிரில்லாத வஸ்துக்களிலிருந்தே ஜீவராசிகள் உற்பத்தியாயினவென்றும் வேறு சிலர் கூறுவர். எப்பொழுது எவ்விதமாகத் தோன்றிற்று என்கிற கேள்விக்கு உறுதியான ஸமாதானம் சொல்லக்கூடவில்லை. ஆதிகாலத்தில் உயிருடன்கூடிய முதற்பொருள் மிகச் சிறிய முளை அல்லது செடியாயிருந்திருக்க வேண்டுமென்றும், அதுவே உயிருள்ள ஸமஸ்தமான வ்ருட்சஜாதிகளுக்கும் ப்ராணிஜாதிகளுக்குப் மூலகாரணமாயிற்றென்றும் சிலர் சில ந்யாயங்களால் ஊகிக்கிறார்கள். இந்த முளையிலிருக்கும் ஒருவித வர்ணப்பசை(Pigment)பூமி,ஜலம், வாயு இந்தத்ரவியங்களிடமிருந்து ஸூர்யவெளிச்சத்தின் உதவியால் ஜீவதாதுவை சேகரித்துக் கொண்டு வளர்ந்து வ்ருத்தியடைகிறதாம். செடிகள் ப்ராணிகளைப்போலவே உணவு உட்கொண்டு வளருகின்றன. ச்வாஸம் விடுகின்றன. அவைகள் பெரும்பாலும் தூங்குவதுபோலிருப்பினும், நகருவதற்கு சக்தியுடைத்தாயிருப்பதையும், தொட்டால் சுருங்கி முதலிய சில செடிகளைத் தொடும்பட்சத்தில் அவைகள் அதை உணர்ந்து மாறுபாடு அடைவதையும் நாம் நேரில் காணலாம். இக்காரணங்களால் ஸ்தாவரவர்க்கத்தைச் சார்ந்ததென்று சொல்லப்படும் செடிகள் ஜீவவர்க்கத்தை சேர்ந்ததாகவே விவகரிக்கப்படுகின்றன. முன் கூறிய முளை படிப்படியாக அபிவ்ருத்தியடைந்து செடி, கொடி வ்ருக்ஷங்களுக்கு காரணமாயிற்று. மற்றொருவிதமாக வ்ருத்தியடைந்து சற்று நீண்ட உருண்டை வடிவமாகவும் கண்ணாடிபோல கையால் தொட்டால் வழவழப்புள்ளதும் சில ஸமயங்களில் குளங்கள் குட்டைகளில் மிதப்பதுமான ஆண் பெண் என்ற வித்யாஸமே இல்லாமலிருக்கப்பட்ட ஒரு வகை ப்ராணி ஆகிறது. இதை நாம் அநேக பாகங்களாக பிரித்தாலும் பிரிந்த அப்பாகங்களும் உயிருடன் இருக்கின்றன. அவைகள் கலப்பற்ற பதார்த்தமாதலாலும் இதர ப்ராணிகளைப்போல உடம்பு, கண், மூக்கு, வாய் முதலிய உறுப்புகள் இல்லையாகையாலும், இந்த உடம்பு உறுப்புகள் வளர்ந்து நீடித்திருப்பதற்கு காரணமான உபாயங்கள் தேடவேண்டிய அவச்யமில்லை. ஆதலாலும் அவைகளுக்கு ஸாதாரணமாக எளிதில் சாவு உண்டாகிறதில்லை. இவைகள் அநேக பாகங்களாகப் பிரியும்போது சில பாகங்கள் பெரியனவாயும், புஷ்டியுள்ளவைகளாயும் விசேஷ முயற்சியற்றவைகளாகவும், சக்தியை ஸாதாரணமாக சேர்த்து வைக்கும் குணமுள்ளவைகளாகவும் ஆகின்றன. வேறு சில பாகங்கள் சற்று சிறியவைகளாகவும், மிக முயற்சியுள்ளனவாயும், அக்காரணப்பற்றியே சக்தியை செலவு செய்யும்



குணமுள்ளவைகளாகவும் ஆகின்றன. இவைகள் தான் ஆண், பெண் என்கிற வித்யாஸத்திற்கு காரணங்களாம். மிகச் சிறிய ப்ராணிகளில் சிலவற்றை ஆண் அல்லது பெண் என்று பார்த்தமாத்ரத்தில் சொல்லமுடியாது. பூதக்கண்ணாடியால் பரிசோதித்துப் பார்த்தால்மட்டும் தெரியும். மேலும் மானிடஜன்மத்திலும், ம்ருகம், பட்சி முதலிய ஜந்துக்களிலும் எப்படி ஆண், பெண் என்று இருவகை இருக்கின்றனவோ, அம்மாதிரியே செடிகளிடத்திலும் புஷ்பம் முதலிய வகைகளிலும் ஆண் பெண் என்கிற வித்யாஸமுண்டு என்பதை நாம் மறக்கலாகாது. நாம் முன்கூறின கலப்பில்லாத சிறு ஜந்துக்கள் க்ரமமாக அபிவ்ருத்தியடைந்து கலப்பான வஸ்துக்களால் அமைக்கப்பட்டதும் சற்று உயர்ந்த ஜாதியுமான பெரிய ப்ராணிகள், சிறிய மீன்கள், பெரிய மீன்கள், மண்டையோடு உள்ளவைகள், ஜலத்திலும் நிலத்திலும் வஸிக்கத் திறமையுள்ள ஜந்துக்கள், வாயை உபயோகித்து கத்துவதற்கு சக்தியுள்ளவைகள், தரையில் ஊரும் ஜந்துக்கள், பூமியிலும் ஆகாசத்திலும் சஞ்சரிக்கும் ப்ராணிகள், மூளையுள்ளவைகள், குதிரை, யானை, எலி, அணில், பூனை, நாய் முதலியவைகள், மூளையை உபயோகித்து ஸமயத்திற்குத் தக்கவாறு தன்னிருப்பிடம், உணவு தேடிக் கொள்ளுதல், எதிரிகளிடமிருந்து தப்பி ஓடுதல், எதிர்த்துப் போராடுதல் இவைபோன்ற வேறு காரணங்களை முன்னிட்டு அப்போதைக்கப்போது மாறிக்கொண்டே கடைசியாக எல்லா விதங்களிலும் அதிக ச்ரேஷ்டமான மானிடப் பிறவியில் முடிகின்றது. இதை வாசிக்கும் நேயர்களுக்கு "என்ன, ஐயா, குரங்குகளைச் சொல்லி மனிதன் என்று சொல்லுவது குரங்குக்கும் மனிதனுக்கும் கிட்டின உறவையல்லவோ காட்டுகிறது? குரங்கு வ்ருத்தியடைந்து மனிதன் ஆய்விட்டதா என்ன?" என்று ஸந்தேகமும் ஆச்சரியமும் உண்டாகலாம். இந்த விஷயத்தைக்குறித்து பிற்பாடு எழுதுவோம்.

## PLANTAIN AND ITS USES.

BY T. K. RAMIAH.

## வாழையும் அதன் ப்ரயோஜனங்களும்.

வாழை உஷ்ண ப்ரதேசமாகிய இந்தியாவில் முக்யமாய் தென்னிந்தியாவில் ஸாதாரணமாய்ப் பயிராவதால், அதைப்பற்றி இங்கு விஸ்தரிப்பது அனாவச்யமாகும். ஆனால் அதன் நானாவித உபயோகங்கள் ஸாதாரண ஜனங்களுக்கு இன்னும் நன்றாய்த் தெரியவில்லை. தெரிந்த சிலரும் அவைகளினால் பயன்பெற முயற்சிக்கவில்லை. ஆகையால், இந்த வ்யாஸத்தில் வாழையின் பல பாகங்களின் உபயோகங்களைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

சரித்ரம்.—வாழையின் உபயோகங்களைப் பற்றிப்பேசுமுன், 'அது எவ்வாறு பயிரிடப்படுகிறது', 'அது முதன்முதலில் எங்குபயிரிடப்பட்டது; போன்ற விஷயங்கள் கவனிக்கத் தகுந்தவை. வாழை இந்தியாவில் ஸாதாரணமாயிருப்பினும், அதுதான் இத்தேசத்தில் அதிகமாய்ப் புறக்கணிக்கப்படுகிறது. விவஸாயத்தொழில்கள் எல்லாவற்றுள்ளும் வாழை பயிரிடுவதைவிட அதிக லாபகரமான தொழில் வேறு இல்லையென்றே துணிந்து கூறலாம். இத்தொழில் அனேகமாய் எழுத்துவாஸனையில்லாதவர்களும், தொழிலைப்பற்றிய அறிவு சற்றுமற்றவர்களும், உள்ளக்கிளர்ச்சியும் மூலதனமும் இல்லாதவர்களுமான ஏழைக்குடிகளிடத்திலிருப்பதால்தான் மிகுந்த வ்ருத்தியடையவில்லை. முற்காலத்திலோ ஜனங்கள் இத்தொழிலில் அதிகம் கவனம் பாராட்டி வந்ததாகத் தெரிகிறது. கோனு என்பவர் வாழை பயிரிடுவதைப்பற்றி நன்றாய் எழுதியிருக்கிறார். அவர் சொல்லுகிறபடி பயிரிடும்பட்சத்தில், 300 வாழைக்கொத்துகள் ஒரு குடும்பத்திற்கு போதிய உணவும் உடையும் கொடுத்து அதை ஸம்ரக்ஷிக்கக்கூடும். பழையகாலத்தில் இந்தியாவிலிருந்தே ஆப்கானிஸ்தானம், பாரஸீகம், திபேத்து, பர்மா, மலேயா

ஆர்க்கிபிலாசோ தீவுகள் முதலிய இடங்களுக்கு வாழை ஏற்றுமதிசெய்யப்பட்டது. மணற்பாங்கானதும் ஈரமுள்ளதுமான ஸுமத்ரா, ஜாவாதீவுகளுக்கு முதன்முதலில் இந்தியாவிலிருந்துதான் வாழைக்கன்றுகள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்று நினைப்பதற்கு தகுந்த காரணங்கள் இல்லாமற்போகவில்லை.

வாழைவேறு இடங்களிலும் காணப்படுகிறது. சிறு காய்களுடன்கூடிய காட்டுதினுஸு பிலிப்பைன் தீவுகளிலும் சிட்டகாங்கிலும் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. சிலர் இந்தக் காட்டுதினுஸுகள் வடக்கேயுள்ள காசியாமலைகளிலும், மத்யலங்கையிலுள்ள கற்பாறை மிகுந்த காடுகளிலும் வளர்வதைக் கண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

**வகைகள்.**—வாழையில் அனேக வகைகளுண்டு. இவைகளின் பழங்கள் தோற்றத்திலும் நிறத்திலும் ரொம்ப வித்தியாஸப்படுகின்றன. இந்தியாவில் பெரும் பழங்களுடன்கூடிய 3 வகையும், சிறு பழங்களுடன் கூடிய 30-வகைகளும் இருப்பதாக ஒருவர் சொல்லுகிறார். மூர் என்பவர் இலங்கைச் செடிகளின் ஜாப்தாவில் 37 வகைகளைக் குறிப்பிடுகிறார். பர்மாவில் 25 வித்யாஸமானவகைகள் அகப்பட்டதாகவும், டெனஸிரத்தில் 20-வகைகள் பயிரிடப்படுவதாகவும் சிலர் எழுதியிருக்கிறார்கள். வங்காளத்தில் மேனைவாழை, சம்பா, தாக்கை, கந்தாளி, காஞ்ச்கொல்லா, கனைபாசி, காளிபௌள, கபூலி, சதிம், மார்த்தபன், பினுங், பிட்ஜாபா, மகோன்பாசி, ராம்கெலி, அனுபன், டௌரே முதலிய வகைகளும்; சென்னை ராஜதானியில் மோர்சு, அஸ்திரி, பூவன், மொந்தன், ரஸ்தாளி, பேயன், பச்சைநாடன், செவ்வாழை, தேன்கதலி. காளி, கர்ப்பூரவாழை, மலைவாழை முதலிய வர்க்கங்களும்; பம்பாயில் பாஜாபூரி, சோளிகலே, ராய்கலே, கூலி, பம்பாய் ராட்சதன், கஸ்தூரி வாஸனை, எலச்சி, முதலை என்ற தினுஸுகளும், டாக்கா ஜில்லாவில் ஐதா, அம்ருதமான், அக்னீஸ்வர், அம்ருதஸாகர், சினிசம்பா, சபரை, நசைன், பெயதூரா, தூதசாகர், கபாரி என்ற வகைகளும்; பர்மாவில் ரகோயிங், செத்பியான்பி, மேதௌலெத்திந்தாபூ, ப்யாத்தான்ஸ், மௌங்ப்யா, பிம்வி, வெட்ஸ்வே, ஹபிக்யான், மௌங்நெட் என்ற நானாவித வித்யாஸமான வாழைகளும் அகப்படுகின்றன.

**பயிரிடும் விதம்.**—வாழை விதைகளிலிருந்து உற்பத்தியாவதில்லை; கன்றுகள் கிழங்கினின்று வெடித்து மரமாக வளர்கின்றன. தோட்டங்களில் வாழைக்கன்றுகள் நடும்போது கன்றுகளுக்கு இடையே ஸுமார் 10-அடி தூரம் விடுவது அவச்யம். கன்றுகளை நடுவதற்கு வெட்டும் குழிகள் ஒரு முழம் ஆழம் இருக்க வேண்டும். இவ்வாறு நட்டால் ஒரு ஏக்கரில் ஸுமார் 400 முதல் 450-கன்றுகள் வரையில் நடலாம். குழிகளின் ஆழம் ஒரு முழத்திற்குக் குறைந்தால் வேர்கள் நன்றாய் ஓடா; கன்றுகளுக்கு இடையிலுள்ள தூரம் குறைந்தால் செழுமையாய் வளரா. நிலம் அதிக உயரமாகவாவது அதிக தாழ்வாகவாவது இருக்கக்கூடாது. மணல் கலந்தும் ஈரமுள்ளதுமான நிலம் மேலானது. குளம் குட்டை இவைகளின் மண் வாழைக்கு தகுந்த உரமாகும். வட. இந்தியாவில் சில இடங்களில் ஜுலை மாஸத்தில் பிண்ணாக்கையும் எருவாகப்போடுகிறார்கள். வாழை நடுவதற்கு முன்பு நிலத்தை நன்றாய் உழுதுபிறகு இம்மண்ணுடன் குட்டை மண்ணை நன்றாய்க் கலக்கும்படி செய்யவும். வட இந்தியாவில் ஒரு மழைபெய்தபிறகு, ஏப்ரல் மே மாஸங்களில் வாழைக்கன்று நடுகிறார்கள். தஞ்சாவூர் ஜில்லா முதலிய தென்னிந்தியாவின் பாகங்களில் மார்கழி தை மாதங்களில் நடுவார்கள். கன்றுகளை தாய் மரத்தினின்று பெயர்த்த இரண்டொரு நாட்கள் கழித்து நடவேண்டும். வர்ஷத்தில் இருமுறை நிலத்தைக் கொத்தி பண்படுத்தவேண்டும். நடுவே முளைத்திருக்கும் களைகளையும் புல்லையும்



பிடுங்கி விடவேண்டும். இது வட இந்தியாவில் ஜுலை மாஸத்தில் நடக்கிறது. இக்காலத்தில் எரு விடலாம். வாழைக்கு சிலர்பசுஞ்சாணத்தை எருவாகப்போடுகிறார்கள். இது பிசகு. ஏனெனில், இது வாழைக்கு கெடுதலை உண்டு பண்ணக்கூடிய சில பூச்சிகளை உற்பத்தி செய்கிறது. தண்ணீர் இறைப்பது அனுவச்யம். வாழைக் கன்றுகளையும் துளிர்க்கும் இலைகளையும் ஆடுமாடுகள் தின்னாதபடி பாதுகாக்க வேண்டும். இவைகளினின்று இலைகளை அறுப்பது கூடாது. ஏனெனில், அதனால் வாழையும் அதன் காய்களும் சரியானபடி வளர்வது தடைப்படும். தாய் வாழையைச்சுற்றி அதிக கன்றுகள் வளரவிடுவதும் கூடாது. வாழை பலன் ஈன்று வெட்டப்படும் ஸமயத்தில் அதைச்சுற்றி இரண்டு பெரிய கன்றுகளுக்கு மேலிருக்கக்கூடாது. மற்றவைகளைப் பிடுங்கி விடவேண்டும். சாப்பாட்டிற்கு வேண்டிய இலைகளை இக்கீழ்க்கன்றுகளிலிருந்தே அறுக்க வேண்டும். இக்கன்றுகள் நூறு 2 ரூபாய் முதல் 3-ரூபாய் வரையில் விற்கும் பெருங்காற்றுகளில் வாழைகள் வேருடன் கீழே விழுந்து அதனால் சேதம் உண்டாவது முண்டு.

**காய்.**—வாழையில் ஒவ்வொரு பாகமும் நமக்கு உபயோகப் படக்கூடியதே. தற்பொழுது ஜனங்கள் அதிகமாய் உபயோகப்படுத்திக் கொள்வது காயும் இலையுமே. பழங்களுள் அதிகமாக உபயோகிக்கப்படுவதும், வர்ஷம் முழுவதும் கிடைக்கக்கூடியதும் மலிவானதுமானது வாழைப்பழம். இது பல வகைப்படும். வாழைப்பழம் ஐரோப்பியர்களாலும் ஏராளமாய் உபயோகிக்கப்படுகிறது. வெஸ்ட் இண்டீஸ் தீவுகளிலிருந்தும் மத்ய அமெரிக்காவிலிருந்தும் வர்ஷத்தில் ஸுமார் 60,00,000 (அறுபது லட்சம்) வாழைத்தார்கள் அதாவது ஸுமார் 93,70,00,000 (93 கோடியே எழுபது லட்சம்) வாழைப்பழங்கள் இங்கிலாந்தில் இறக்குமதியாவதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1,25,000டன் நிறையுள்ள பழம் இறக்குமதியாகிறது. ப்ரான்ஸ், ஜெர்மனி, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ரஷ்யா முதலிய ஐரோப்பிய தேசங்களில் மொத்தம் எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறதோ அவ்வளவு வாழைப்பழம் லண்டனில் மாத்ரம் இறக்குமதியாகிறது. மேலே குறிப்பிட்ட ஸங்கையை தவிர கனரித் தீவுகளிலிருந்து இருபது லட்சம் வாழைத்தார்கள் இங்கிலாந்துக்கு வருகின்றன. பழவர்க்கங்கள் ஏராளமாயும் மேலே குறித்த தேசங்களிலுண்டாவதைவிட மிகவும் நேர்த்தியாயும் அதிக ருசியுள்ளதாகவும் உண்டாகும் இந்தியா இந்த வ்யாபாரத்தில் கவனம் பாராட்டாதிருப்பது மிகவும் விஸனிக்கத்தக்கது. இந்தியர்கள் சற்று கண் விழித்துப் பார்ப்பார்களாயின் பழ வ்யாபாரத்தில் மிகுந்த லாபமடையலாம். இதற்கு மூலதனம் ஏராளமாய் வேண்டுவதில்லை. இவ்விஷயத்தில் நாம் அன்ய தேசங்களுடன் போட்டிக்குக்கூட நிற்கமுடியும். இங்கு முக்ய கேள்வி ஒன்று பிறக்கும். அதாவது பழங்கள் சீமை போய்ச் சேருவதற்கு ஸுமார் ஒரு மாஸமாகுமே; அதுவரையில் பழங்கள் கெடாமலிருப்பதெப்படி என்பதே. பழங்கள் கெடாதபடி பாக் செய்வதற்கு அனேக வழிகளுண்டு.

**வாழைமா.** — பழுக்காத காயை எடுத்து, தோலை நீக்கி, உள்ளேயுள்ள காயைத் துண்டு துண்டாக வெட்டி, வெயிலில் உலர்த்தி, நன்றாய் உலர்ந்த பிறகு உரலிலோ அல்லது யந்த்ரத்திலோ போட்டுத் தூளாக்கி, பித்தளைக் கம்பிகளுள்ள சல்லடையால் சலித்தால் வாழைமாவு கிடைக்கிறது. புதிதாக வெட்டிய காயில் 100-க்கு 40 பாகம் மாவு கிடைக்கும் என்று தெரியவருகிறது. ஒரு ஏக்கர் வாழைத் தோட்டத்தினின்று ஒரு டன்னிற்குமேல் மாவு கிடைக்கும். மேற்கு இந்திய தீவுகளில் இந்தமா முக்யமாக குழந்தைகளுக்கும், வ்யாதியாயிருந்து குணப்பட்டு வருபவர்களுக்கும் உணவாகக் கொடுக்கப்படுகிறது. இது போஷணை சக்தியுடைய தென்பதில் ஸந்தேகமில்லை.

டி. கே. ராமய்யா.

## STONE MONEY.

## கல் நாணயம்.

நாணயமென்பது தங்கம், வெள்ளி, தாம்ரம் ஆகிய இந்த லோகங்களால் செய்யப்பட்ட பணமென்று பலருக்குத் தெரியும். இவ்வித நாணயங்கள் ஏற்படுமுன் பூர்வீக ஜனங்கள் பற்பல விதமான பொருள்களை நாணயங்களாக உபயோகித்து வந்தார்கள். முன்னொரு காலத்தில் ஜனங்கள் வ்யாபாரத்தில் மாடுகளைப் பணம்போல் உபயோகித்து வந்தார்கள். ஏதாவது ஒரு ஸாமான் வேண்டியிருந்தால் அதற்கு இத்தனை மாடு அல்லது ஆடுகள் கொடுத்து வாங்குவது வழக்கமாயிருந்தது. அபிஸ்ஸீனியா என்னும் தேசத்தில் சாப்பிடும் உப்பை பணமாக உபயோகித்து வந்தார்கள். ந்யூபௌண்ட்லண்ட் தீவில் வற்றல் போட்ட காட் மீன் பணமாக உபயோகப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. இன்னும் சில தேசங்களில் தேயிலையும், புகையிலையும், சர்க்கரையும், தோலும் நாணயமாக உபயோகப்பட்டுவந்தன. அநேக வர்ஷங்களுக்குமுன் ஸ்காட்லண்டிலுள்ள ஒரு ஊரில் வேலையாட்கள் ஆணிகளைப் பணமாகக்கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய ஸாமான்களை வாங்கிவந்தார்களென்று தெரிகிறது. ஜப்பானில் ஜனங்கள் அரிசியைப் பணமாக உபயோகித்து வந்தார்களாம். நாகரீகமும் அறிவும் அபிவ்ருத்தியடையவே அநேகமாய் உலகிலுள்ள எல்லாப்ரதேசங்களிலும் தங்கம், வெள்ளி, தாம்ரம் ஆகிய இவைகளால் நாணயங்கள் செய்து உபயோகிக்கலானார்கள். இப்போது இந்த நாணயங்களில்லாதவிடங்கள் அரிது. ஆயினும் நாகரீகம் கொஞ்சமும் இல்லாத பூர்வீக ஜனங்கள் குடியிருக்கும் ப்ரதேசங்களில் பூர்வீக வழக்கங்கள் இன்னும் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன. ஆப்ரிக்காவிலுள்ள சில ஜனங்களும், வங்காளத்தில் சிலரும் சோழிகளைப் பணத்துக்குப் பதிலாக உபயோகித்து வருகிறார்களென்று தெரிகிறது. ஆனால் பெரிய சுக்கான் கற்கள் பணமாக உபயோகப்பட்டு வருவதைப்பற்றிப் பலர் கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். இந்த விநோத நாணயம் சிங்கப்பூருக்குக் கிழக்கே ஸுமார் 3000-மைல் தூரத்துக்கப்பாலுள்ள காரொலின் தீவுகளில் ஒன்றாகிய உவாப் என்னுந் தீவில் செலாவணியாகிவருகிறது.

காரொலைன் தீவுகள் பூர்வத்தில் ஸ்பெய்னுக்கு ஸொந்தமாயிருந்தன. சில வர்ஷங்களுக்கு முன் அவைகளை ஜெர்மானியர்கள் ஸுமார் 1-கோடி ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிக்கொண்டார்கள். இந்த யுத்தத்தில் ப்ரிட்டிஷ் படைகள் அவைகளைப் பிடித்துத் தங்கள் வசமாக்கிக் கொண்டன. அந்தத் தீவுகளில் ஒன்றாகிய உவாப் என்பது அந்தத் தீவுக் கூட்டங்களில் மேற்குக் கோடியில் இருக்கிறது. அதில் ஸுமார் ஐயாயிரம் முதல் ஆறாயிரம் வரையில் பூர்வீக ஜனங்கள் குடியிருக்கிறார்கள். அந்தத் தீவில் உலோகங்கள் கிடைப்பதில்லையாகையால் அவர்கள் கல்லால் நாணயங்கள்செய்து உபயோகிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட தன்மையுள்ள பெரிய சுக்கான் கல்களைக் கொண்டுவந்து தக்கபடி இழைத்து, ஒரு அடி முதல் 12-அடிவரையில் குறுக்களவுள்ள சக்கரங்களாகச் செய்கிறார்கள். இந்த அளவுக்குத் தக்கபடி அவைகளின் பருமனும் வித்யாஸப்படும். ஒவ்வொரு சக்கரத்துக்கும் நடுவில் ஒரு த்வாரமிருக்கும். சக்கரங்கள் பெரியனவாயிருந்தால் இந்த த்வாரத்தில் பலமான பெரிய கோல்களைக் கொடுத்து வேண்டிய இடங்களுக்குத் தூக்கிக் கொண்டு போவார்கள். இந்தக்கல் 'நாணயங்கள்' உவாப்தீவில் செய்யப்படுவதில்லை. இதற்கு 400-மைல் தெற்கேயுள்ள பேலவ்வாப் என்னும் தீவில் இந்த மாதிரிக்கற்கள் ஏராளமாயிருக்கின்றன. உவாப் தீவிலுள்ள சில ஜனங்கள் அந்தக்கற்களை வெட்டியெடுத்துத் தக்க விதமாகச் சீர்படுத்தி, 'நாணயங்களாகச்'ச் செய்து படகுகளில் ஏற்றி உவாப் தீவுக்குக் கொண்டுவந்து, அவைகள் ரொம்ப உயர்ந்த சரக்குகளென்றும், அவைகளை ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லி விற்றுவந்தார்கள். அது முதல் அந்தத்தீவில் இந்த நாணயமே வழங்கலாயிற்று.



இந்தக்கல் 'நாணய'த்தில் ஒரு விசேஷமென்னவென்றால் நாணயத்துக்கு உடையவன் அதைத் தன்னுடைய வசத்தில் வைத்திருக்க வேண்டுமென்பது அவச்யமில்லை. ஏதாவது ஒரு வ்யாபாரத்தில் பொருள் வாங்கினவர் ரொம்பப் பெரியதான கல் நாணயத்தைக் கொடுக்க வேண்டியிருந்து, அதை விற்றவர் தூக்கிக் கொண்டு போக முடியாவிட்டால், அந்த நாணயத்தை அதற்கு உடையவர் பொருள் வாங்கினவரிடத்திலேயே வைத்துவிட்டு, அது தம்முடையதென்பதை மாத்ரம் தெரிவித்து வந்துவிட்டால் போதும். அந்த நாணயத்தின்மேல் அதற்கு உடையவர் அது தம்முடையதென்பதற்கு ஒரு அடையாளங்கூடப் போடவேண்டியதில்லை.

இந்த நாணயங்கள் அவைகளுக்கு உடையவர் வீட்டிலாவது மற்றவர்கள் வீட்டிலாவது இருக்க வேண்டுமென்பதும் அவச்யமில்லை. ஸமுத்ரத்துக்குள் மூழ்கிக் கிடந்தாலும் பாதகமில்லை. அவைகளை மூழ்கடித்தவர் பணக்காரர்தான்.

உவாப்தீவிலுள்ள ஒரு க்ராமத்தில் ஒரு குடும்பத்தார் ரொம்ப பணக்காரர்களாம். ஆனால் அவர்களுடைய பணத்தை ஒருவரும் கண்ணால் பார்த்ததில்லை. குடும்பத்திலுள்ள எவரும் பார்த்ததில்லை. அவர்களுக்கு ஸொந்தமான ஒரு ப்ரும்மாண்டமான சுக்கான்கல் சக்ரம் இரண்டுமூன்று தலைமுறையாக ஸமுத்ரத்தில் அமிழ்ந்து கிடக்கிறது. அநேக வர்ஷங்களுக்கு முன்னால் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கல்பணம் தேடப்போய் மேற்சொன்ன கல்லை ஸம்பாதித்து அதைத் தக்கபடி சீர்படுத்தி உருவாக்கி ஒரு தெப்பத்தில் ஏற்றிக்கொண்டுவந்தார். கடலில் வரும் வழியில் ஒரு பெரும்புயல்காற்று உண்டாகவே, தெப்பத்திலிருந்தவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தெப்பங் கட்டியிருந்த கயிறுகளை யறுத்துவிட்டார்கள், கல் நாணயம் கடலில் மூழ்கிவிட்டது. தெப்பத்திலிருந்தவர்கள் தங்கள் ஊருக்குவந்ததும், கல் ரொம்ப பெரியதென்றும், அது சரியாய் உருவாக்கப்பட்டிருந்ததால் அது விலையுயர்ந்ததென்றும், தண்ணீரில் கிடந்தபோதிலும் அதைக் கொண்டுவந்தவர்க்குப் பணங் கையிலிருப்பது போலென்றும் சொன்னார்கள். மேற்படி கல்லை அந்தக் குடும்பத்தார்கள் கண்ணால் பார்க்காவிட்டாலும், அது கையிலிருப்பதுபோல் எண்ணி, அதைக் கொண்டே கொடுக்கல் வாங்கல் செய்து வருகிறார்களாம்.

இந்தக் கல் நாணயங்கள் வெகுவாய் ரொம்ப கனமுள்ளவையாகையால், அவைகளைத் திருடுவதென்பது ரொம்ப ச்ரமமான கார்யம். ஒரு பன்றிக்கு விலையாகக் கொடுக்கக்கூடிய ஒருகல் நாணயத்தை நான்குபேர்கள் சேர்ந்து தூக்கவேண்டியிருக்கும். அந்தத் தீவில் கல் நாணயங்கள் திருட்டுப்போவது அபூர்வம்.

உவாப்தீவில் வண்டிகள் கிடையா. அதனால் வண்டிகள் போகக்கூடிய ரஸ்தாக்களும் அங்கே இல்லை. ஜனங்கள் நடப்பதற்கு ஸாமான்ய பாதைகள் மாத்ரம் உண்டு. ஜெர்மானியர்கள் இந்தத் தீவுகளைத் தங்கள் வசம் அடைந்தபோது இந்த ரஸ்தாக்கள் ரொம்ப சீர்கேடான நிலைமையில் இருந்தன. ஜெர்மன் கவர்ன்மெண்டார் அந்த ரஸ்தாக்களை செப்பனிடவேண்டுமென்று அந்தத் தீவிலுள்ள ஜனத் தலைவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். ஜனத்தலைவர்கள் இதை கவனிக்கவில்லை. எத்தனை தடவை கட்டளையிட்டும் அவர்கள் சும்மாவிருந்து விட்டார்கள். அதன்மேல் கவர்ன்மெண்டார் ஜனங்களின்மேல் அபராதம் போடலாமென்று எண்ணினார்கள். எந்த மாதிரி அபராதம் போடுவது? தங்கம் அல்லது

வெள்ளியை அபராதமாகச் செலுத்துவதென்றால் அந்தத் தீவில் அவைகள் அகப்படுவது அரிது. ஜனங்களை அவர்களுடைய நாணயத்திலேயே அபராதம் செலுத்தச் சொன்னால் அபராதத்தை வஸூலிப்பதெப்படி? ப்ரும்மாண்டமான கற்களைத் தூக்கிக்கொண்டு போவதென்றால் அதற்கு ஜனத்தொகையில் பாதிப்பேர்கள் வேண்டியிருக்கும். அவைகளை வஸூலித்து வைப்பதற்கு கவர்ன்மெண்ட் கட்டிடங்களில் இடம் போதாது. கடைசியாக ஒருயோசனை தோன்றிற்று. சில ஸர்க்கார் ஸிப்பந்திகளை அனுப்பி, சொன்னபடி கேட்காத ஜனங்கள் உள்ள இடங்களில் போய் அவர்களுடைய உயர்ந்த கல் நாணயங்களில் அவைகள் ஸர்க்காருக்கு ஸொந்தமென்று காட்டுவதற்காக கருப்பு மையால் ஒரு குறிபோடச்செய்தார்கள். கல் 'நாணயங்கள்' அவரவர்கள் வீட்டிலிருந்தாலும், அந்த ப்ரதேசத்துக்கொள்கைப்படி ஸர்க்காருக்கு ஸொந்தமாகிவிட்டன. அதன்மேல் ஜனங்கள் ரொம்ப தரித்ரர்களாகி விடவே, கவர்ன்மெண்டாருக்கு இணங்கிப்போய், நேர்த்தியான ரஸ்தாக்கள் போட்டுக் கொடுத்தார்கள். பிறகு கவர்ன்மெண்டார் தமது ஸிப்பந்திகளை அனுப்பி, அக் கல் நாணயங்களில் போட்டிருந்த குறிகளை அழித்துவிடச் செய்தார்கள். அதாவது ஜனங்களுக்கு நாணயங்களைத் திருப்பிக்கொடுத்து விட்டார்கள். ஜனங்களும் தங்கள் பணத்தைத் திரும்பவும் அடைந்தவர்களாய் ஸந்தோஷமடைந்தார்கள்.

## CASH OR CREDIT ?

## ரொக்கபேரம் ச்லாக்யமா, கடன்பேரம் ச்லாக்யமா ?

பேரம் எப்படிப்பட்டதாயினும் சரியே, ஒரு வ்யாபாரி நாணயஸ்தனென்றும், காரப்புள்ளியென்றும் பேரெடுப்பானாகில், அதுதான் அவன் வ்யாபாரத்துக்கு அஸ்திவாரம். ரொக்கபேரத்துக்கும் கடன் பேரத்துக்கும் அதிக வித்யாஸமில்லை. பரஸ்பர நம்பிக்கையில்லையானால் எந்த வ்யாபாரமும் செழிக்காது. பரஸ்பர நம்பிக்கை வேரூன்றும்பொழுது கடன்பேரம் ரொக்கபேரமேதான். ஆனால் ரொக்கபேரக்காரர்களைப்போல் கடன்பேரக்காரர்களை வ்யாபாரிகள் கவனிப்பதில்லை யென்றும், மதிப்பதில்லை யென்றும் ஸகஜமாய்ச் சொல்லிக் கொள்வது வழக்கம். இது வீண்பழி. பத்துவரவுடையவர்களால் தான் கடையில்பேரம் உறுதி பெறுகிறது. ரொக்கத்துக்கு வாங்குகிறவன் இன்றைக்கொரு கடையையும் நாளைக்கொரு கடையையும் நாடிச் செல்கிறவனாதலால், ரொக்க பேரத்தை நம்பியிருப்பது மோசம். இது காரணத்தால் ஒரு வ்யாபாரி பத்துவரவு புள்ளியைத்தான் ரொக்கப்புள்ளியைப் பார்க்கிலும் மரியாதையாய் நடத்துவான்.

ரொக்கத்துக்குப் போல கடனுக்கு வேண்டிய ஸாமான் நல்லதாகக் கிடைக்காதென்ற தப்பு அபிப்ராயம் ஒன்றிருந்து வருகிறது. "கையில் வெள்ளையப்பனிருந்தால் ஒரு கடைக்குப் பத்துக் கடையாய்ப்பார்த்து தேவையானமாதிரி பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம்; ஸாமான் முதல் தரமாயிருப்பதுடன் விலை ஸாஸமாயுமிருக்கும்," என்று ஸாமான்யமாய் சொல்லிக்கொள்வதுண்டு. இது எப்படி உண்மை? வ்யாபாரி கடையைத்திறந்து ஸாமான்களை வேடிக்கைக்காகப் போட்டு வைக்க மாட்டான். நல்ல ஸாமானன்றி ஸம்சயமாயிருப்பதெதையும் வெதுவாய் கடையில் பத்துவரவுள்ளவருக்குக் கொடுக்கமாட்டான். ஏனெனில், ஏதாவது ஏமாற்றமிருந்தால் பிறகு அவருடைய பத்துவரவு நின்றுபோகும். மேலும் அடிக்கடி கடையில் பேரம் நிலையாய்ச் செய்பவர்களை அவன் அறிவானாகையால், கெட்ட அபிப்ராயம் பலரிடம் வெளியிட்டால் பேரமே கெட்டுப்போய் விடும். ரொக்கப்புள்ளிக்கு பணத்துக்கு தட்டு உண்டாகும் பொழுது மிகவும் கஷ்டம். அவன் நாய்வாய் வைத்தமாதிரி நினைத்தகடைகளிலெல்லாம் பேரஞ்செய்தபடியால், அவனை எல்லாருக்கும் தெரி



யும். கையில் பணமிருந்தால் கடனுக்கு வரமாட்டானென்பதும் தெரியும். ஆகையால் அவன் கஷ்ட நிலையிலிருக்கிறானென்பது ப்ரத்யக்ஷம். எந்த வியாபாரியும் ஒருவன் கஷ்டத்திலிருக்கும் பொழுது கடன் கொடுக்க உடன்படான். பணம் வருமென்பது உறுதியில்லை யல்லவா?

மேலும் ரொக்கபேரத்தில் லாபம் கிடைத்தாலும் ஸ்வல்பம் தான் கிடைக்கும். ரொக்கபேரமே செய்யும் வ்யாபாரி சில ஸமயங்களில் சரக்குகளை நஷ்டத்துக்கும் விற்க நேரிடும். ஏனெனில், பெரிய கம்பெனிகளிலும் பாங்கியிலும் இவனுக்குப் பத்து வரவில்லையாதலால், பண அவசிய காலத்தில் முதலுக்கே தள்ளியும் சரக்கை விற்க வேண்டிவரும். ஆயினும் ரொக்க பேரத்தில் ஸாதகங்களே யில்லாமல் போகவில்லை. கணக்குப் புஸ்தகம் க்ரமமாய் வைப்பது, கடன்கொடுத்தவர்களுக்கு சாக்குப் போக்கும் தவணையும் சொல்வது, கடன் வாங்கிக்கொண்டவர்களிடம் ஸிப்பந்திகளை அனுப்பி பணத்தை வஸூல் செய்வது, ஆகிய இவைபோன்ற ஸங்கடங்களொன்றுமேயில்லை. 'ஐஸா பைஸா' 'வாயிலே பேச்சு கையிலே காசு'.

ரொக்க பேர வ்யாபாரிகளுக்குள்ள பாதகங்களையும் இங்கு கூறவேண்டுவ தவச்யம்.

கல்யாணம், நல்லது, கெட்டது முதலியவை குடும்பத்தில் நிகழ்வது ஸகஜம். இத்தகைய ஸமயங்களில் ஒவ்வொருவரும் வேண்டியவைகளையெல்லாம் ரொக்கம் கொடுத்து வாங்குவதென்பது முடியாத காரியம். ஸாதாரணமாய்த் துணி வ்யாபாரி கடன் கொடுப்பதில்லையென்றால் எவ்வளவு கஷ்டம் பாருங்கள். அப்படியின்றி கடன் கொடுப்பதாயிருந்தால் ஒருவருக்கு ஸமயத்தில் உபகாரமாயிருப்பதுடன், சரக்கை விற்பதில் வ்யாபாரிக்கு லாபமும் கிடைக்கிறது. இப்படிச் சொல்வதால் கண்மூடித்தனமாய்க் கடன் கொடுக்க வேண்டுமென்று சொல்ல வந்ததாக அர்த்தம் செய்யக்கூடாது. புள்ளியின் யோக்யதையையும் அந்தஸ்தையும் நாணயத்தையும் விசாரித்தே கடன் கொடுக்கவேண்டும். பெரிய வ்யாபாரங்கள் இத்தகைய நம்பிக்கையில்லாவிடில் நடப்பது அஸாத்யமாய் முடியும். நம் நாட்டுக்கு ஆயிரமாயிரமைலுக்கப்பாலுள்ள வ்யாபாரிகள் சரக்குகளை ஒருமாத, இரண்டுமாதத் தவணைக்கனுப்புகிறார்கள். பெரிய கம்பெனிகளைப் பிடிக்கும் பெரிய வ்யாபாரி பல வ்யாபாரிகளுக்குச் சில்லரையில் சரக்கைக் கொடுக்கிறான். சில்லரை வ்யாபாரிகள் பத்துவரவுக்காரர்களுக்கு விற்கிறார்கள். பத்து வரவுக்காரர்கள் பலரிடமிருந்து வஸூல் செய்வதைச் சேர்த்து பெரிய வியாபாரி பெரிய கம்பனிக்கு கெடுவு ப்ரகாரம் கொடுத்து நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிறான். நாணயமில்லாவிடில் வ்யாபாரம் வ்ருத்தியாவது தடைப்படும்.

ஒரு உத்யோகஸ்தன் புதிதாக தனிக்குடித்தனம் ஏற்படுத்துகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் தனிக்குடும்பம் ஏற்படுத்தும் பொழுது வாங்கவேண்டிய அவச்யமான ஸமான்களனேகமுள. இவைகளையெல்லாம் ஒரேஸமயத்தில் ரொக்கங்கொடுத்து வாங்குவதென்பது ச்ரமமானகாரியம். ஆகையால் ஒரு வ்யாபாரி வேண்டிய ஸாமான்களைக் கொடுத்து மாஸாமாஸம் சம்பளத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பெற்றுக்கொள்வதில் உத்யோகஸ்தனுக்கு ச்ரமமிருக்கிறதில்லை, அஸௌகர்யமுமில்லை. வ்யாபாரிக்கும் இது ஸாதகமே. சரக்குகள் செலவாவதுடன், அவ்வுத்யோகஸ்தன் என்ன ஸாமான் வேண்டியிருந்தாலும் அந்த வ்யாபாரியிடமே வாங்குவான். மற்றுமொரு விஷயம். ரொக்கம் கொடுத்து வாங்குவதைவிட கடனுக்கு சரக்குகள் எடுப்பதாயிருந்தால் ஒருவன் அதிகமாக எடுக்கிறான். இது வ்யாபாரிக்கு அனுகூலம். பேரமதிக மாகிறது. நாணயமான கடை என்று பேரெடுத்த கடைகளில் ஸ்திரமான பத்துவரவுக்காரர்களால் கிடைக்கும் ஸ்வல்பலாபம் மொத்தத்தில் பெருந்

தொகையாய் விடுகிறது. யோக்யமான பத்து வரவுக்காரர்கள், கடையின் பில்கலெக்ட்டர் காலே ஓடிக்காது, தாங்களே சம்பளம் வாங்கினவுடனே ஒரு விகிதத்தை க்ரமப்படி செலுத்திவிடுகிறார்கள். இப்படி நடந்து கொள்வதால் ஸ்வல்ப வரும்படியைக் கொண்டு ஒரு உத்யோகஸ்தன் ஸகல ஸௌகர்யங்களையும் அடைவது ஸாத்யமாகிறது. வ்யாபாரிக்கும் பத்து வரவுக்காரருக்கும் அனுபோகத்தில் நேசம் பலக்கிறபடியால் ஒருவருடைய கார்யங்களில் மற்றவருக்கு அனுதாபமுண்டாகிறது. பரஸ்பர ஸகாயம் செய்து கொள்ளுகிறார்கள். ஒரு வ்யாபாரிக்கு பத்து வரவுக்காரனொருவனை இழந்துபோவதிலும் துக்கம் வேறொன்றில்லை.

ஸாதக பாதகங்களை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கடன்போமே ரொக்க போத்தைக்காட்டிலும் வ்யாபாரிக்கும் பத்துவரவுப் புள்ளிக்கும் அனுகூலமாயுள்ளதென்று புலப்படுகிறது.

## SWINDLERS AND THEIR TRICKS.

## முடிச்சவிழ்க்கிகளும் அவர்களுடைய தந்த்ரங்களும்.

ரெயில்வண்டிகளிலும், ஸ்டேஷன்களிலும், கடைத் தெருக்களிலும் அநேக போக்கிரிகள் அஜாக்ரதையாயிருக்கும் ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதிலேயே கண்ணாயிருந்துவருகிறார்கள். ரெயில்வே ஸ்டேஷன்களில் டிக்கட் வாங்குமிடத்தில் கூட்டமாயிருக்கும் ஸமயத்தில் ப்ரயாணி டிக்கட் வாங்கப்போகும்போது தமது சட்டைப்பையில் பணமெடுக்க கையைப்போட பணமில்லாமல் விழிப்பதும், இதேமாதிரி கூட்டமான கடைத்தெருக்களிலும், திருவிழாக்களிலும், ஜனங்கள் அஜாக்ரதையால் தாங்கள் கொண்டுவந்த பணம் முழுவதையும் இழந்து தவிப்பதும் அநேகருக்குத் தெரிந்த விஷயங்கள். அநேக ஜனங்கள் வேறு விதங்களிலும் தங்கள் உடைமைகளை இழந்து பரிதவிக்கிறார்கள். ஊர்விட்டு ஊர்வந்த இடங்களில் தங்களுடைய பணம் முழுவதையுமோ, அல்லது அதில் பெரும்பாகத்தையோ இழந்து விட்டால், அவர்கள் ரொம்ப ச்ரமப்படவேண்டியிருக்கும். சற்று ஜாக்ரதையாயிருந்தால் அநேகமாய் இப்படி ஏமாந்துபோகாமல் தப்பித்துக் கொள்ளலாம். மேலும் போக்கிரிகளுடைய வழிகளை சற்று அறிந்திருந்தால் அநேகமாய் அவர்களுடைய வலையில் சிக்காமல் தப்பித்துக்கொள்ளலாம். ஸமீபத்தில் வடக்கே வங்காளத்திலுள்ள ஒரு போலீஸ் உத்யோகஸ்தர் போக்கிரிகளுடைய உபாயங்களையும், அவைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழிகளையும் விரிவாய்த் தெரிவித்திருக்கிறார். அவைகளில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

**விஷமிடுபவர்கள்.**—போக்கிரிகளில் சிலர் ப்ரயாணிகளுக்கு விஷமிட்டு, அவர்களை மயக்கி, அவர்களுடைய ஸொத்துக்களை அபகரித்துக்கொண்டு போகிறார்கள். யாத்ரிகள் ரெயிலில் ப்ரயாணம் செய்யும்போதும், ஸ்டேஷன்களில் தாமஸிக்கும்போதும், சத்ரங்களில் தங்கியிருக்கும் போதும் மற்ற ப்ரயாணிகளிடம் பேச்சுத்தொடங்கி அவர்களுடன் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவர்களுடன் பேசிக்கொண்டிருப்பதால் காலம் உத்ஸாகமாகக் கழிகிறது. இவர்களில் அநேகர் கபடு சூதொன்றும் தெரியாத ப்ரயாணிகளாயிருப்பார்கள். இந்தப் போக்கிரிகள், ஸ்தலயாத்ரை செய்யும் ஜனங்கள் அடிக்கடி ப்ரயாணம் செய்யும் வண்டிகளில் ப்ரயாணம் செய்து, இத்தகைய ப்ரயாணிகள் இருக்குமிடத்துக்குவந்து தாங்களும் ப்ரயாணிகளென்று நடித்து, அவர்களை நம்பச்செய்து, அவர்களுடன் உறவாடுவார்கள். போக்கிரியானவன் தக்க ஐவேஜியுள்ள ஒரு ப்ராயாணியைத் தெரிந்தெடுத்து எப்போதும் அவனுடன் கூட இருந்து ஸகஜன்யமாய்ப் பேசிக்கொண்டிருப்பான்.

ப்ரயாணியை "எங்கு போகிறாய்?" என்று



கேட்டு, அவன் இன்ன இடத்துக்குப் போவதாகச் சொன்னதும், தானும் அங்கேயே போவதாகவும், தான் தனியாய் இருப்பதால், இருவரும் சேர்ந்துபோனால் ஒருவர்க்கொருவர் துணையாயிருக்குமென்றும் சொல்லி, இருவரும் ஸாதாரணமாகப் பேசிக்கொண்டு ப்ரயாணம் செய்வார்கள். விஷமிடுகிறவர்கள் ஸாதாரணமாய் ஆகாராதிகளில்தான் விஷத்தைக் கலந்து கொடுப்பார்கள். ப்ரயாணிகள் இது விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையாயிருக்கவேண்டும். போக்கிரியும் அவன் ஸ்நேகிதம் கொண்டாடித் தெரிந்தெடுத்த ப்ரயாணியும் ஓரிடத்தில் தங்கிச் சமையல் செய்ய ஆரம்பிக்கும்போது, போக்கிரியானவன், தானே இருவருக்கும் சேர்த்துச் சமையல் செய்துவிடுவதாகச் சொல்வான். அல்லது இருவரும் தனித்தனியாகச் சமையல் செய்தால், போக்கிரி தான் சமைத்த உணவில் கொஞ்சம் ப்ரயாணிக்குக் கொடுக்க வருவான்: கபடு சூதொன்றும் அறியாத ப்ரயாணி சரியென்று ஸம்மதித்துவிட்டால், போக்கிரி ப்ரயாணிக்குத் தெரியாமல் சாப்பாட்டில் விஷத்தைக் கலந்து கொடுத்துவிடுவான். போக்கிரிகள் ஸாதாரணமாய் உபயோகிக்கும் விஷம் ஊமத்தை விதை. ஊமத்தையின் வெண்மையான விதைகளை பொடிசெய்தோ, அப்படியே முழுதாகவோ சாப்பாட்டில் கலந்துவிட்டால், ப்ரயாணி விஷங்கலந்திருப்பதை யறியாமலே உணவைத்தின்று விடுவான்.

விஷங்கலந்த உணவைச் சாப்பிட்ட சிறிது நேரத்துக்கெல்லாம், ப்ரயாணிக்கு ஒருவிதமயக்கம் உண்டாகி கடைசியில் அவன் ப்ரஜ்ஞையற்றுப்போவான். உடனே விஷங்கொடுத்த போக்கிரி ப்ரயாணியினிடமிருந்த பணத்தையும், மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் சுருட்டிக்கொண்டு ஓடிவிடுவான். ஊமத்தை விதையால் அநேகமாய் மரணம் ஏற்படுவதில்லை. ப்ரயாணி கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ப்ரஜ்ஞையடைந்து, தன்னிடம் ஸ்நேகிதம்பாராட்டின ப்ரயாணியின் மோசத்தை யறிந்து துக்கப்படுவான். பணம்போனது மாத்ரமல்ல; சிலநாள்கள் அல்லது வாரங்கள் வரையில் ப்ரயாணிக்கு நல்ல புத்தியில்லாமல் போய், கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகையால் ப்ரயாணிகள் எப்போதும் அன்யர்களிடமிருந்து ஆகாராதிகளை வாங்கித் தின்னாமலிருக்க வேண்டும். அன்யர்களைத் தங்களுக்காகச் சமைக்கச் சொல்லவுங்கூடாது. ஆகாரவிஷயத்தில் அன்யர்களுடைய பேச்சைக்கேட்காமல் ஸொந்தத்தில் சமைத்தோ, அல்லது வாங்கிச்சாப்பிட்டோ வந்தால் விஷமிடுகிறவர்களிட மிருந்து தப்பித்துக்கொள்ளலாம். விஷமிடுகிறவர்கள் ஆண்களேயன்றி ஸ்த்ரீகளுமாவர்.

**டிக்கெட்வாங்கிக் கொடுப்பவர்கள்.**—சில போக்கிரிகள் ப்ரயாணிகளுக்கு டிக்கட் வாங்கிக்கொடுப்பதாகச்சொல்லி பணம் பறிப்பதுண்டு. ரெயில் ப்ரயாணத்தில் அதிக பழக்கமில்லாத நாட்டுப்புறத்து ஜனங்கள் பெரிய ரெயில்வே ஸ்டேஷன்களில் இன்ன விடத்தில் டிக்கட் வாங்குவதென்று தெரியாமல் விழிப்பார்கள். மேற்சொன்ன போக்கிரிகளில் ஒருவன் அவர்களிடம் வந்து ரொம்ப அன்புடனும் தயையுடனும் பேசி, இன்ன இடத்துக்கு அவர்கள் போக வேண்டுமென்பதை யவர்களிடம் கேட்டுத்தெரிந்து, அவ்விடத்துக்கு இன்ன வண்டிச்சத்தமென்று சொல்லுவதோடு, அவர்களுக்குத் தொந்தரையில்லாதபடி தான் டிக்கெட் வாங்கிகொடுப்பதாகச் சொல்லி பணத்தை வஸூலித்துக்கூட்டத்திற்குள் புகுந்து மறைந்து விடுவான். சில ஸமயங்களில் அவன் பக்கத்து ஸ்டேஷனுக்கு டிக்கெட்டுகள் வாங்கி வந்து அவைகளை அந்த நாட்டுப்புறத்தார்களிடம் கொடுத்துவிட்டு பாக்கிப்பணத்துடன் கூட்டத்தில் மறைந்து விடுவான். அவர்கள் ஸந்தேக மொன்றுங் கொள்ளாமல் ரெயிலேறி உட்கார்ந்து கொள்வார்கள். டிக்கெட் சோதிக்க வரும் இன்ஸ்பெக்டர்கள் அவர்களுடைய டிக்கெட்டுகளைப்பார்த்து வண்டியிலிருந்து

இறக்கிவிடும் வரையில் அவர்களுக்கு தாங்கள் ஏமாந்துபோனதாகத் தெரியாது.

**டிக்கேட் கலேக்டர்கள்.**—ப்ரயாணிகளிடமிருந்து டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டுபோக வரும் டிக்கெட் கலெக்டர்கள் வாஸ்தவத்தில் அந்த உத்யோகத்தை வகிப்பவர்களா என்று ப்ரயாணிகள் கவனிக்கவேண்டும். ரெயில்வே ஸிப்பந்திகள் போட்டுக்கொள்ளவேண்டிய சரியான உடையை அவர்கள் தரித்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். அநேக போக்கிரிகள் வெள்ளைச்சட்டையைத் தரித்து, சட்டையில் உலோகத்தால் செய்த பொத்தான்களைப் போட்டுக்கொண்டு, இன்ன ரெயில்வே ஸிப்பந்தியென்று காட்டும் பட்டயம் ஒன்றுமில்லாமல் ஜனங்களிடம் டிக்கட் வாங்கிப்போக வருவார்கள். ஸாதாரணமாய் சட்டைக்காரர்களில் சிலர் இந்த மாதிரி செய்வதுண்டு. அவர்கள் இரவில் டிக்கட் இல்லாமல் ப்ரயாணம் செய்துவிட்டு, தாங்கள் இறங்கவேண்டிய இடத்தில் டிக்கெட் காண்பிக்கவேண்டுமாதலால், அந்த ஸ்டேஷன் வருவதற்கு முன்னமேயே ஜனங்களை ஏமாற்றி டிக்கெட்டுகளை வாங்கிக்கொண்டு போய்விடுவதுண்டு. எவனாவது ஒரு அறையில் வந்து டிக்கெட்டுகளை வஸூல் செய்து, மற்ற அறைகளுக்குப் போகாமல் வெளியேபோக யத்தனித்தால் அவன் போக்கிரி யென்பதை யறிந்து கொள்ளலாம். உடனே அவனிடம் போய் டிக்கெட்டைத் திருப்பிக்கொடுக்கும்படி கேட்கவேண்டும்.

சில போக்கிரிகள் டிக்கெட்டுகளைப் பரிசோதிப்பதாகச் சொல்லி ப்ரயாணிகளிடமிருந்து அவைகளை வாங்கி, ஸாமர்த்யமாய் அவைகளை மறைத்து வைத்துக்கொண்டு உபயோகமற்ற டிக்கெட்டுகளையோ, அல்லது ஸ்வல்பதூரத்துக்கு வாங்கின டிக்கெட்டுகளையோ ஜனங்களிடம் கொடுத்துவிட்டு, பழைய டிக்கெட்டுகள் வைத்துக்கொண்டு ப்ரயாணம் செய்ததற்காகவும், ஸ்வல்ப தூரத்துக்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு அதிக தூரம் ப்ரயாணம் செய்ததற்காகவும் ப்ராஸிக்யூட் செய்வதாக பயமுறுத்தி, பணம் கேட்பதுண்டு. அப்படி ப்ரயாணிகளின் டிக்கெட்டுகளில் ஏதாவது மோசம் நடந்து, டிக்கெட் சோதிக்க வந்தவன் பணங்கேட்டுக் கொடுக்க நேர்ந்தால், பணத்துக்கு அச்சிட்ட நமூனாவில் ரசீது கொடுக்கும்படி கேட்கவேண்டும். ரெயில்வே ஸிப்பந்திகள் தாங்கள் வாங்கின பணத்துக்கு ரசீது கொடுக்கக் கடமைப் பட்டவர்கள். யாராவது டிக்கெட் கலெக்டர் ரசீது கொடுக்க மறுத்தால், அவன் ஒரு அயோக்யனென்று ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

**முடிச்சவிழ்ப்பவர்கள்.**—பெரிய ரெயில்வே ஸ்டேஷன்களிலும், திருவிழாக்கூட்டங்களிலும் அநேக போக்கிரிகளும், முடிச்சவிழ்ப்பவர்களும் கூட்டத்தோடுகூட்டமாயிருந்து ஜனங்களுடைய மூட்டை முடிச்சுகளையும், பணங்களையும் அபகரித்துக்கொண்டுபோய் விடுகிறார்கள். இவர்களில் சிலர் ஒருவித சிறு கத்திவைத்திருக்கிறார்கள். இந்தக் கத்தியால் சட்டைப்பைகளையும் மூட்டைகளையும் ஸாமர்த்யமாய் கிழித்து உள்ளிருக்கும் விலையுயர்ந்த ஸாமான்களையும், பணம், நகைகளையும் அபகரித்து விடுகிறார்கள். மூட்டை கொண்டுவந்தவர்களுக்கு அதை அவிழ்த்துப் பார்க்கும்போதுதான் மோசம் தெரியவருகிறது. கூட்டத்தில் போகிறவர்கள் பணத்தையும், விலையுயர்ந்த பொருள்களையும் தங்களுடைய சட்டையின் உள்பக்கத்துப் பைகளில் வைத்துக்கொள்வதுதான் நல்லது. உள்பக்கத்தில் பையில்லாமல் வெளிப்பையில் பணத்தைவைத்துக்கொள்ள வேண்டிவந்தால், கையை எப்போதும் பணம் வைத்திருக்கும் பையில் வைத்திருக்கவேண்டும். அதோடு மேலேவிழுந்து நெருக்குகிறவர்கள் என்னசெய்கிறார்களென்பதையும் கவனித்துக் கொண்டிருக்கவேண்டும்.

அநேக திருடர்கள் உத்ஸவங்களில் ஜனங்கள் நதிகளிலும், குளங்களிலும் ஸ்நானம் செய்துகொண்டிருக்கும்போது, அவர்கள் கரைமேல் வைத்திருக்கும் மூட்டைகளையும் துணிகளையும் அபகரித்து, தங்களுடைய உளவாளிகளிடம் கொடுத்து தூரமான இடத்துக்குக் கொண்டு போய் விடுவார்கள்.



## SOIL EROSION.

## ஜலம் மண்ணை அரித்துக்கோண்டு போவது.

இந்தியாவில் பருவமழை பெய்யும் இடங்கள் எல்லாவற்றிலும் மழை ஜலமானது அந்தந்தவிடத்து நிலத்தின் தன்மைக்குத் தக்கபடியும், மற்றகாரணங்களின் வேற்றுமைகளுக்குத் தக்கபடியும் ஸ்வல்பமாயோ அதிகமாயோ நிலத்திலுள்ள நயமான மண்ணை அரித்துக்கொண்டு போய்விடுகிறது.

இப்படி மண் அரிபட்டுப் போவதற்கு முக்ய காரணம் மழையானது ஒரு சீராகப்பெய்யாமல் சில ஸமயங்களில் அதிகமாயும் சில ஸமயங்களில் குறைவாகவும் பெய்வதே. பருவமழை பெய்யும் ப்ரதேசங்களில் மழையெல்லாம் சில மாஸங்களுக்குள்ளேயே பெய்துவிடுகிறது. இந்த சில மாஸங்களில் பெய்யும் மழையும் ஒரு சீராக விழுவதில்லை. சில ஸமயங்களில் ஒரே நாளில் ஆறங்குல மழைவரையில் கூடப் பெய்வதுண்டு. இவ்வளவு அதிகமாக மழைபெய்வதால் மழை ஜலம் முழுவதும் நிலத்திற்குள் சுவறிக்கொள்ள முடிவதில்லை. நிலத்தில் சுவறிக்கொள்ளாத ஜலம் நிலத்து மேல்மண்ணில் கலந்து கலக்கமடைந்து நாலாபக்கங்களிலும் ஓடி, இதரநிலங்களிலிருந்துவரும் மழை ஜலத்தோடு கலந்து ஒரு சிறு அருவியாகி, இதுவும் இதுபோன்ற மற்ற சிறு அருவிகளுடன் கலந்து சிறுகால்வாயாக ஓடி சிறுநதிகளிலும், பெரியநதிகளிலும் கலக்கிறது. நதிகள் அருகில் இல்லாவிட்டால், பக்கத்திலுள்ள தாழ்ந்த பூமிகளில்போய்ச் சேருகிறது. இந்த அருவிகளும், கால்வாய்களும் அவை புறப்படும் நிலங்களிலுள்ள மண்ணையும், அவை போகும் வழியிலுள்ள மண்ணையும் அரித்துக்கொண்டு போகின்றன. இவைகளை அப்படியே விட்டுவிட்டால் இந்தக் கால்வாய்கள் ஸ்திரப்பட்டு வர்ஷந்தோறும் பெரியனவாகவும் ஆழமானவையாகவும் ஆகின்றன.

மண் வேகமாயோ மெதுவாயோ அரிக்கப்பட்டுப்போவது அந்தந்த நிலத்தின் வாட்டத்தைப் பொறுத்தது. நிலம் அதிக வாட்டமாயில்லாவிட்டால் மண் அதிகமாக அரிக்கப்படுவதில்லை. வாட்டம் அதிகமாயிருந்தாலோ மண் ஏராளமாய் அரிக்கபட்டுப்போகிறது. வடக்கே மத்ய மாகாணங்களிலும், பண்டில்கண்ட் என்னும் ப்ரதேசத்திலும் நிலம் ரொம்ப வாட்டமாயிருப்பதால் மழை ஜலமானது வர்ஷந்தோறும் மண்ணை ஏராளமாய் அரித்துக்கொண்டுபோய், இப்போது பூமியில் அடிப்பாகத்திலுள்ள கற்பாறைகள் நன்றாய்த் தெரிகின்றன.

ஸமபூமிகளில் மண் வீணாகப்போவது வ்யக்தமாய்த் தெரியாது. ஆனால் நிலத்தின்தன்மையை நன்றாய் கவனித்துவந்தால், ஸமபூமிகளும் மழைஜலத்தால் கெடுதியடைகின்றனவென்பது தெளிவாகும்.

எவ்வளவு மண்மழையால் அரிபட்டுப்போகிறதென்பது அந்தந்த நிலத்தின்தன்மைக்குத் தக்கபடி வித்யாஸப்படும். நிலங்களின் வாட்டம் ஒரேமாதிரியாயிருந்து, பெய்யும் மழையின் அளவில் வித்யாஸமில்லாமலிருந்தால், புல புலத்த இளகலான மண்ணுள்ள நிலத்தில் அதிகமண் சேதமாகும். கெட்டியான களிமண் நிலங்களில் அதிகமண் சேதமாகாது.

இப்படி மண் கரைந்துபோவது நிலத்து பெரிய நஷ்டமாகும். ஆறுகளில் கலக்கும் வண்டல் ஜலத்திலுள்ள மண்ணானது, ஆறுகள் போகும் இடங்களில் கரையோரங்களிலும் அந்த நதி பாயும் தீரரம்பங்களிலும் படிந்துகொள்கிறது. ஆறுகளில் கலக்காத வண்டலான மழை

ஜலம் தாழ்ந்த பூமிகளிலுள்ள நெல் முதலியவை ஸாகுபடியாகும் நிலங்களில் படிந்து, அந்த நிலங்களில் ஏற்கனவே யுள்ள நயமான மண்ணை அதிகரிக்கச் செய்கின்றது. டெல்டா நிலங்களிலும், தாழ்ந்த பூமிகளிலும் இந்த மாதிரி மண் சேரவேண்டியது அவச்யமென்றும், இல்லாவிட்டால் அவைகளின் செழுமை குறைந்துபோகுமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இது வாஸ்தவமாயிருக்கும் பக்ஷத்தில், இந்தியா முழுவதையும் ஒன்றாக எண்ணிப் பார்க்கும்போது நஷ்டமேற்படவில்லையென்று ஏற்படும். ஏனென்றால், ஒருவிடத்திலுள்ள பூஸாரமானது இன்னொரு இடத்துக்கு மாறுகிறதேயொழிய வீணாகப் போவதாக ஆகாது. ஆனால் அது உண்மையல்லவென்று தெரிகிறது. தாழ்ந்தவிடத்து நிலங்கள் எப்போதும் செழுமையாயிருப்பதற்கு ஆற்றுவண்டல் வந்து படியவேண்டியது அவச்யமில்லையென்று தெரிகிறது. பூஸா ஆராய்ச்சிப் பண்ணையில் ஒரு துண்டு நிலத்தில் கோதுமை ஸாகுபடி செய்யப்பட்டுவருகிறது. இது நல்ல வடிகால் உள்ளநிலம். ஏழுவர்ஷங்களுக்கு முன்னால்வரையில் இந்த நிலத்தில், உயர்ந்த விடத்திலிருந்து வர்ஷந்தோறும் மழை ஜலம் வந்துதங்கினதால் ஏராளமாய் வண்டல் படிந்து வந்தது. சென்ற ஏழு வர்ஷங்களாக உயர்ந்த பூமிகளிலிருந்து வரும் மழை ஜலம் இதற்கு வாராதபடி தடுத்துவிட்டார்கள். இதனால் வண்டல் படிவது நின்றுவிட்டது. அப்படியிருந்தும், நிலத்தின் செழுமை குறைந்துபோனதாகத் தெரியவில்லை. இதற்கு எருவும் போடவில்லை. வளமை குறைவதற்கு பதிலாக அதிகமாகிக் கொண்டுவருகிறது.

நெல் ஸாகுபடியாகும் நிலங்களில் வெள்ள ஜலத்தால் அதிக நன்மையேற்படுவதற்குக் காரணமாயிருப்பது வெள்ள ஜலத்தால் கிடைக்கும் வண்டல்தானென்று சொல்வதற்கில்லை. முக்யமாய் பயிரின் வேர்களில் நல்ல காற்றோட்டமேற்படுவதால் தான் நல்ல மாஸூல் கிடைக்கிறதென்று சொல்லலாம். நெல் ஸாகுபடியை ஜலத்தில் பயிர் வளர்க்கும் முறைக்கு ஒப்பிடலாம். ஜலத்தில் பயிர் வளர்ப்பதில் தக்க பயிருணவுப் பொருள்களை ஜலத்தில் கலப்பதோடு, ஜலத்திற்குள் காற்றோட்டமேற்படும்படி செய்யவேண்டியது அவச்யமாகும்.

தாழ்ந்த பூமிகளிலுள்ள நெல் வயல்களில் பயிரின் வேர்களுக்குக் காற்றோட்டம் ஏற்படவேண்டுமானால், வேர்களுக்குப் பக்கத்தில் ப்ராணவாயு கலந்த புதிய ஜலம் மெதுவாய் ஓடிக்கொண்டிருக்கவேண்டும். ஜலம் தேங்கிக்கொண்டிருந்தால் நெல் பயிர் வ்ருத்தியடையாது. இதற்குக் காரணம் தேங்கியிருக்கும் ஜலத்தில் பயிரின் வேர்களுக்கு வேண்டியவளவு காற்றுக்கிடைக்காமல் போவதே. அப்படிக்கின்றி, ப்ராணவாயு கலந்த ஜலம் மெதுவாக நிலத்தில் ஓடிக்கொண்டிருந்தால், பயிரின் வேர்களுக்குப் பக்கத்திலுள்ள ஜலம் மெதுவாக மாறிக்கொண்டேயிருக்கிறது. இதனால் வேர்களுக்குக் காற்று புதிதாகக் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. நெல் வயல்களில் உள்ள ஜலத்தின்மேல் ஆல்ஜி யென்னும் பூண்டுகள் இருக்கின்றன. *இவைகள் ஆகாயத்திலுள்ள ப்ராணவாயுவை க்ரகித்து ஜலத்தில் சேர்க்கின்றன. இந்த ப்ராணவாயு வேர்களுக்குப் போகவேண்டுமானால் நிலத்தின் மேல்பாகத்தில் ஜலமானது மெதுவாய் ஓடிக்கொண்டிருக்கவேண்டும்.

இந்த விஷயங்களிலிருந்து நிலத்தில் வெள்ள ஜலம் ஓடுவதால் ஏற்படும் நன்மைகளுக்குக் காரணம் நிலத்துக்குள் நல்ல காற்றோட்டமேற்படுவதே யென்று வ்யக்தமாய்த் தெரிகிறது. ஆகையால் உயர்ந்த பூமிகளிலிருந்து தாழ்ந்த பூமிக

* இதைப்பற்றி விவரமாய் அறியவேண்டுவோர் ராக்ஷஸ வர்ஷம் ஆனி மாஸத்திய ‘ஜனாபிமானி’யில் நிலத்திற்குள் காற்றோட்டமென்னும் வ்யாஸத்தில் 530-வது பக்கத்தைப் பார்க்கவும்.



ளுக்குப் அரித்துக்கொண்டு போகப்படும் வண்டல்மண் அநேகமாய் வ்யர்த்தமாய்ப் போய்விடுகிறதென்று வ்யக்தமாய்த் தெரிகிறது.

மழைஜலம் அடித்துக்கொண்டு போகும் நயமான மண்ணில் இந்த்ரிய வஸ்துக்களும், வேறு செடியுணவுப் பொருள்களும் கலந்திருப்பதால் நிலமானது காலக்ரமத்தில் செழுமை குறைந்து போகிறது. விவஸாயிகள் நிலத்தை மறுபடியும் செழுமையாக்க ஏராளமாய் எருப்போட வேண்டியிருக்கிறது. உயர்ந்தவிடங்களில் உள்ள நிலங்கள் சீக்ரம் மணல் பாங்காக மாறிவிடுகின்றன. அவைகளில் ஈரம் வெகுகாலம் தங்கியிருக்க முடியாமல் போகிறது. அதிகமாக உரம் போட்டால்தான் நல்ல மாஸூல் கிடைக்கும். தாழ்ந்த பூமிகளில் அடிக்கடி வண்டல் படிவதால் மண் களியாகப்போய்விடுகிறது. இந்த வண்டலால் நன்மை ஏற்படுவதுமில்லை.

நல்ல வாட்டமுள்ள உயர்ந்த பூமிகளில் மேல்மண் கரைந்துபோவதை ஸுலபமாய் அறிந்துகொள்ள முடிவதுபோல ஸமபூமிகளில் மேல் மண் கரைந்துபோவதை யறிந்துகொள்வது முடியாது. மழை ஜலம் போகும்வழியில் காலக்ரமத்தில் வாய்க்கால்கள்போலப் பள்ளங் பறித்துக்கொண்டு போகும்போதுதான் மழையால் இன்னகெடுதி நேரிகிறதென்பது நன்றாய்த் தெரியவருகிறது. ஆனால் பலமாக மழை பெய்யுங்காலத்தில் நிலங்களிலிருந்து வெளிப்போகும் ஜலத்தின் தன்மையை, அதாவது அதில் எவ்வளவு மண் கலந்திருக்கிறதென்பதை அடிக்கடி கவனித்துவந்தால் இந்த விஷயம் வ்யக்தமாகத்தெரியவரும். ஸாகுபடியாகாத ப்ரதேசங்களில், மழையால் எவ்வளவு மண் சேதமாகிறதென்பதை, அவ்விடங்களிலுள்ள மரங்களின் நிலைமையால் அறிந்துகொள்ளலாம். அநேக மரங்களில் பெரிய வேர்கள் பூமிக்கு வெளியில் நன்றாய் தெரியும். மரத்தின் வேர்களை மூடிக்கொண்டிருந்த மண்ணை மழை ஜலம் காலக்ரமத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அரித்துக்கொண்டு போய்விடுகிறது. சில ஸமயங்களில் ஒரு அடி மண் வரையில் அரிக்கப்பட்டுப் போயிருக்கும்.

நிலத்து மண் கரைந்து போவதால் நிலத்தின் செழுமை குறைந்து போகிறதென்று சொன்னோம். செழுமை குறைந்தால் ஜனங்களின் பொருளாதாரநிலைமை குறைகிறது. அவர்களிடம் கடனதிகரிக்கிறது. அவர்களுக்குள் வ்யாதிகள் பரவுகின்றன. கடைசியாக க்ராமாந்தரங்களில் ஜனத்தொகை குறைந்து போகிறது. இந்தியாவில் மாஸூலை அதிகரிக்கச் செய்யவேண்டுமானால் மண் கரைந்து போவதை நிறுத்தி அந்தந்தவிடத்து மண் அந்தந்த விடத்திலேயே இருக்கும்படி செய்யவேண்டும். அது செய்யாதவரையில் விவஸாயிகளின் அபிவ்ருத்திக்கு உபயோகமாகுமென்று சொல்லப்படும் உயர்ந்த தினுஸுப்பயிர்கள், பாசன வஸதிகள், ஸுலபமான வட்டியில் கடன்கிடைக்கச் செய்வது, உயர்ந்த கால் நடை, சீர்திருந்திய விவஸாயக் கருவிகள் ஆகிய இவற்றால் பூரா ப்ரயோஜனமும் கிடைக்குமென்று சொல்வதற்கில்லை.

**நீர்த்தேக்கம்:**—நிலம் எவ்வளவு ஜலத்தைக் க்ரகித்துக்கொள்ளக்கூடுமோ அதைவிட அதிகமாக மழைபெய்தாலுஞ்சரி, அல்லது ஜலம் பாய்ந்தாலுஞ்சரி, மண்ணுக்குள் உள்ள த்வாரங்கள் ஜலத்தால் அடைப்பட்டுப் போகின்றன. மண் ரொம்ப நயமாய் வண்டலாக இருந்தால் ரொம்ப கெடுதலேற்படுகிறது. மண்ணுக்கிடையிலுள்ள த்வாரங்களில் ஜலம் புகவே அவைகளிலுள்ள காற்று வெளியே வந்து விடுகிறது. மண் இருகிக்கொண்டு கெட்டியாகி விடுகிறது. தண்ணீர் தேக்கம் ரொம்ப ஜாஸ்தியானால் அந்த நிலங்களில் ஸாகுபடியாகும் பயிர்கள் நல்ல மாஸூல் கொடுப்பதில்லை. தேக்கம் ஸ்வல்பமாயிருந்தாலும் அதற்குத் தகுந்தபடி மாஸூலும் குறைவாயே கிடைத்து வருகிறது.

தண்ணீர் தேக்கத்தால் மண்ணிலுள்ள த்வா

ரங்கள் அடைபட்டுப்போனதும் பயிரின் வளர்ச்சி குறைந்துவிடுகிறது. இலைகள் மஞ்சள் நிறமடைகின்றன. பயிர் பார்வைக்கு நோய்ப்பட்டது போல் தோற்றும். மழை ரொம்பப் பெய்யுங்காலங்களில் வேர்களுக்குக் காற்றே கிடைக்காது. அப்போது பயிரின் இலைகள் வாட்டமடைந்து கடைசியில் செடிகள் பெரும்பாலும் அழிந்து போகின்றன. இப்படி அழியாத பயிர்களில் மாஸூல் குறைவாகக் கிடைக்கிறது. அதுவும் உயர்ந்ததாயிருப்பதில்லை.

மழைகாலத்தில் மண்ணில் காற்றில்லாமல் போய், அந்த நிலைமை மழைக்காலத்துக்குப் பிறகும் இருந்து வந்தால், அப்போது பயிரிடப்படும் பயிர்களும் நன்றாய் வளருவதில்லை. இலைகள் மெல்லியதாயும் மஞ்சளாயுமிருக்கும். பயிரின் வேர்களும் நன்றாய் வளர்ந்து வெகு ஆழம் கீழே போகாமல் பூமியின் மேல் பாகத்திலேயே இருக்கும். வெயில் ஆரம்பித்ததும் பயிர்கள் அழிந்து போகின்றன. அடிமண்ணில் ஈரமிருந்தும் செடியின் வேர்கள் ரொம்ப ஆழம் போகாததால் அந்த ஈரம் செடிக்குப் பயன் படுவதில்லை.

தண்ணீர்த் தேக்கத்தால் பயிர்களுக்குக் கெடுதி யேற்படுவதற்கு இரண்டு விஷயங்கள் காரணமாயிருக்கின்றன. (1) நிலத்துக்குள் காற்றோட்டமில்லாமலிருப்பது ; (2) நிலத்திலுள்ள நைட்ரேட்டுகள் என்னும் பயிருணவுப் பொருள்கள் கெட்டுப்போவது. நிலத்துக்குள் தக்க காற்றோட்டமில்லாவிட்டால், வேர்களுக்கும், செடியுணவு தயார் செய்யும் பாக்டீரியாக்களுக்கும் வேண்டிய அளவு ப்ராணவாயு கிடைப்பதில்லை. மண்ணிற்குள் உண்டாகும், பயிருக்குக் கெடுதல்செய்வதாகிய, கரியமிலவாயு வெளியில் போக முடிவதில்லை.

மழை பெய்ய ஆரம்பித்தவுடன் நிலத்திலுள்ள பாக்டீரியாக்கள் நைட்ரோஜினைத் தயார் செய்ய ஆரம்பிக்கின்றன. இப்படித் தயார் செய்து கொண்டு வருகையில் நிலத்தில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டால், அந்த பாக்டீரியாக்களுக்கு வேண்டியவளவு ப்ராணவாயு கிடைக்காமல்போய் நைட்ரோஜின் தயார் செய்வது நின்றுபோவதோடு, இருக்கிற நைட்ரோஜினும் மழை காலத்துக்குப்பிறகு உதவாமல் போகும். அதிக மழை பெய்யும் காலத்தில் தண்ணீர் நிலத்தில் தேங்கியிராதபடி செய்தால் அடுத்துப்பயிர் செய்யப்படும் பயிருக்கு வேண்டிய அளவு நைட்ரோஜின் கிடைக்குத் தண்ணீர்ம் தேக்கத்தால் என்ன கெடுதி ஏற்படுகிற தென்பதை அறிய பூஸாவில் 1910-ம் வர்ஷத்தில் ஒரு பரீக்ஷை செய்யப்பட்டது. இரண்டு பாத்திகளுக்கு நடுவில் ஒரு பாத்தியில் ஒரு மாஸம் தண்ணீர் தேங்கியிருக்கும்படி செய்தார்கள். மூன்று பாத்திகளில் ஒவ்வொன்றிலும் நடுவில் ஒரு பாகத்தில் விதைப்பதற்கு முன்னால் ஒரு ஏக்கருக்கு 4-அந்தர் வீதம் நைட்ரேட் அப் ஸோடா எருபோட்டார்கள். முதலில் தண்ணீர் தேங்கியிருந்த பாத்தியில் நைட்ரேட் அப் ஸோடா போடாத பாகத்தில் பயிர் ரொம்ப நன்றாக வளர்ந்தது. ஆனால் பயிர் தூர்கட்டின பிறகு பயிரின் வளர்ச்சி குறைந்து போய் விட்டது.

தண்ணீர் தேங்கியிருந்த பாத்தியில் நைட்ரேட் அப் ஸோடா போட்ட பாகத்திலும், மற்ற பாத்திகளிலும் பயிர் நன்றாய் வளர்ந்தன. பின் சொன்ன பாத்திகளில் ஏகருக்கு 480-படி முதல் 680-படி கோதுமை வரையில் மாஸூல் கிடைத்திருக்க, தண்ணீர் தேங்கியிருந்த பாத்தியில் நைட்ரேட் அப்ஸோடா போடாத பாகத்தில் 300-படி கோதுமைதான் கிடைத்தது.

பாசன ஏற்பாடுகளாலும் நிலத்தில் தண்ணீர் தேக்கமுண்டாகலாம். பெரிய கால்வாய்களுக்குப் பக்கத்தில் உள்ள நிலங்களில் அடிப்பாகத்திலுள்ள ஜலத்தின் மட்டம்மேல் மண் வரையில் உயர்ந்துபோய் சில ஸமயங்களில் கெடுதல் உண்டாக்குகிறது. கோதாவரி டெல்டாவில் நிலத்துக்குள் உள்ள ஜலத்தின் மட்டம் ரொம்ப உயர்ந்து போனதால் நிலத்தின் தன்மை மாறு



பாடடைந்து கரும்புப்பயிருக்கு நோய் உண்டாக ஸாதகமேற்பட்டது. அதனால் பழைய தினுஸு கரும்புகளை விட்டுவிட்டு, நோய் பீடிக்காத புது தினுஸு கரும்புகளைப் பயிரிட வேண்டியதாயிற்று.

**மண் அரித்துப்போவதையும் தண்ணீர் தேங்குவதையும் தடுத்தல்.**—நிலத்தில் பெய்யும் மழை ஜலத்தில் வழிந்தோடும் பாகத்தை தக்கபடி தடுக்காததனாலும், வழிந்தோடும் ஜலம் போகும்போது மற்ற நிலங்களிலிருந்துவரும் ஜலத்தோடு சேர்ந்து அதிகமாகி நிலங்களின்மேல் வேகமாய்ப் போகும்படி விடுவதாலுந்தான் நிலத்திலிருந்து உயர்ந்த வளமையான மண் அரிக்கப்பட்டுப்போய் அநேக இடங்களில் தண்ணீர் தேக்கமும் ஏற்படுகிறது. மழை காலத்துக்கு முன் நிலத்தை நன்றாய் உழுதுவைத்திருந்தால் முதலில் பெய்யும் மழை முழுவதும் நிலத்திற்குள் சுவறிப் போகும். ஆகவே மழைக்காலத்தின் முதல் பாகத்தில் மண் அரிக்கப்பட்டுப் போவதுமில்லை. அனாவசியமாய்த் தண்ணீர் தேங்குவதுமில்லை.

பிற்பாடு பெய்யும் மழை ஜலத்தால் நிலத்துக்குக் கெடுதிகள் உண்டாகாமலிருக்க பூஸா ஆராய்ச்சிப் பண்ணையில் ஒருவித வடிகால் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டை பேஹாரிலுள்ள அவுரித் தோட்டக்காரர்களும், வேறு சில விவஸாயிகளும் கைக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏற்பாடு ஸ்வல்ப வாட்டமுள்ள வண்டல் நிலங்களுக்கு ஏற்றது. இந்த ஏற்பாட்டில் நிலங்களை 5 ஏக்கருள்ள வயல்களாகப் பிரிக்கிறார்கள். இந்த வயல்களைச் சுற்றிலும் வாய்க்கால்கள் வெட்டிவைக்கிறார்கள். இந்த வாய்க்கால்கள் அடிப்பாகத்தில் 2-அடி அகலமும் மேல்பாகத்தில் 4-அடி அகலமும் 1½ அடி ஆழமும் உள்ளனவாயிருக்கவேண்டும். சில விடங்களில் இந்த அளவு சற்று வித்யாஸப்படும். வாய்க்கால்களில் போகும் ஜலத்துக்குத் தகுந்தபடி அவைகளை அமைத்துக்கொள்ளவேண்டும். இந்த வாய்க்கால்களின் கரைகளிலும் உள்பக்கங்களிலும் புல் பத்தை யடிக்கவேண்டும். இல்லாவிட்டால் அவைகளில் ஜலம் வேகமாய்ப் போகும்போதும், வயல்களிலிருந்து ஜலம் வழிந்து விழும்போதும் பக்கங்களை அறுத்துவிடும். இந்த வாய்க்கால்கள் கீழ்ப்பக்கங்களிலுள்ள பெரிய கால்வாய்களில் போய் விழவேண்டும். பெரிய கால்வாய்களிலுள்ள ஜலம் தாழ்ந்தவிடங்களிலுள்ள வயல்களுக்காவது பெரியநதிகளுக்காவது போய்ச்சேரும். மேற்சொன்னபடி பிரித்த வயல்களைச் சுற்றிலும் வாய்க்காலோரமாக புல்லுள்ளதாய் ஓரடி அகலத்துக்கு வரப்புக்கட்டவேண்டும். வாய்க்கால்களுக்கும் வரப்புகளுக்கும் அருகம் புல் பத்தை யடிப்பது ச்லாக்யம்.

இந்த ஏற்பாட்டில் ஒரு வயலில் விழும் ஜலம் மற்ற வயலுக்குப் போவதில்லை. ஜலம் அனாவசியமாய் ஒரு வயலிலும் அதிகமாய்த் தங்குவதில்லை. வரப்பில் உள்ள புல் இரண்டொரு அங்குலம் வளருவதால், மழை ஜலம் அதன்மேல் மெதுவாய் வழிந்தோடி வயலோரமாய் உள்ள வாய்க்கால்களில் விழுகிறது. அப்போது ஜலத்திலுள்ள வண்டலில் பெரும்பாகம் நிலத்திலேயே படிந்துவிடுகிறது. வயலின் தாழ்ந்த பாகத்தில் வண்டல் படிந்து நிலம் உயர உயர வரப்பிலுள்ள புல்லும் வளர்ந்துகொண்டேவருகிறது. நிலத்தில் பள்ளங்களில் வண்டல் படிந்து ஸமனாகிவிடுகிறது. காலக்ரமத்தில் நிலமானது ஒரேமட்டமுள்ளதாகிறது.

முதல்வர்ஷத்தில் வரப்பில் உடைப்பெடுத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது அவச்யம். ஒருவர்ஷத்துக்குள் புல்லின்வேர்கள் மண்ணில் நன்றாய்ப் பரவிவிடுமாதலால் பிறகு கஷ்டமிராது. மழைகாலத்தில் வாய்க்கால்களில் வண்டல் படிந்துகொள்ளுமாதலால், மழை நின்ற பிறகு வண்டலை யெடுத்து விடவேண்டும். கோடைகாலத்தில் புல்லையறுத்துவிட்டால் வயல்கள் பார்வைக்கு லக்ஷணமாயிருக்கும்.

மழைக்குறைவு ஏற்படக்கூடிய காலங்களிலும் இந்த ஏற்பாடு ரொம்ப ச்லாக்யமானது. மழைக்காலத்துக்குமுன்னால் நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்திவிட்டு, வயலின் தாழ்ந்தபாகத்தில் வரப்பில் கொஞ்சம் மண்வெட்டிப்போட்டு அதை உயரமாக்கிவிட்டால், விழும் மழையெல்லாம் வயலிலேயே தங்கி சீக்ரம் நிலத்துக்குள் சுவறிக்கொள்ளும். பிறகு நிலத்தின் மேல்மண்ணைக் கொத்திப் புழுதியாக்கிவைத்தால் பூமிக்குள் ஈரம் இருந்துகொண்டேயிருக்கும். பூஸா ஆராய்ச்சிப் பண்ணையைச் சுற்றியுள்ள ப்ரதேசங்களில் மழைக்குறைவு ஏற்படும்போதெல்லாம், அந்தப் பண்ணையில் மேல்சொன்னபடி மழைஜலத்தையெல்லாம் வயலிலேயே சுவறிக்கொள்ளும்படி செய்து நல்ல மாஸூலில் அடைந்துவருகிறார்கள்.

மேலேசொன்னபடி வயலில் விழும் மழைஜலத்தை ஸௌகர்யமாக வடியச்செய்வதில் நிலத்தின் வாட்டத்துக்கேற்ப வாய்க்கால்களை யமைக்க வேண்டும். இதற்கு, மழைஜலம் ஸாதாரணமாய் எந்தப் பக்கமாய் ஓடுகிறதோ அந்த திசைகளைக் குறித்து வைத்துக்கொண்டு அதற்கேற்றபடி வாய்க்கால்களை வெட்டிவைக்க வேண்டும்.

## RED CROSS SOCIETIES.

## காயம்பட்டவர்களுக்கும் பிணியாளிகளுக்கும் உதவிசெய்யும் ஸங்கங்கள்.

யுத்தங்களில் காயம்பட்டவர்களுக்கும், பிணியாளிகளுக்கும் சிகித்ஸை செய்வதற்காக அந்தந்த கவர்ன்மெண்டுகளால் ஏற்படுத்தப்பட்ட வைத்ய ஸிப்பந்திகளோடு, காருண்யமுள்ள பொது ஜனங்களின் உதவியாலும் மேல்சொன்னவர்களுக்கு உதவிசெய்ய சில ஸங்கங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இவைகளில் முக்யமானவை 'ரெட்க்ராஸ் ஸொஸைட்டீஸ்' என்று சொல்லப்பட்டவை. இவைகள் சண்டைக்கக்ஷிகளில் சேராத பரோபகார ஸங்கங்கள் என்பதைக் காண்பிப்பதற்காக 'ரெட்க்ராஸ்' அதாவது சிவப்புச்சிலுவை அடையாளம் போட்ட கொடிகளையும் பட்டையங்களையும் கட்டிக்கொண்டு வேலை செய்பவை. இந்த ஸங்கங்களை ஏற்படுத்த முதல் முதல் ப்ரயத்தனஞ்செய்தது மிஸ் ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் என்னும் மாதுசிரோமணி. ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல் இங்கிலாந்தில் ஹாம்ஷயர் என்ற ஊரில் 1820-ம் ௵ மே௴ 15-௳ பிறந்தவள். அவளுக்கு சிறுவயதுமுதலே, பொம்மைகளுக்கும் காயம்பட்ட ம்ருகங்களுக்கும் மருந்துபோட்டுக் கட்டுவதே ரொம்ப ப்ரியம். கொஞ்சம் வயது முதிர்ந்தபிறகும் பெரிய ஆஸ்பத்ரிகளில் டாக்டர்கள் செய்யும் வழிகளையெல்லாம் பார்த்துப் படித்துவந்தாள். சிலவருஷங்களுக் கப்பால், ஐரோப்பா கண்டத்திலுள்ள பாரிஸ், பெர்லின் முதலிய பட்டணங்களிலுள்ள பெரிய ஆஸ்பத்ரிகளைப்போய்ப் பார்த்து, அதன் பிற்பாடு இங்க்லண்டிற்குத் திரும்பி வந்து, நோயினால் வருந்துவோர்க்கு சிஷ்ருஷை செய்வதையே தனது வேலையாகக் கொண்டாள்.

1854-ம் வருஷத்தில் இங்க்லண்டுக்கும் ரஷ்யாவுக்கும் நடந்த க்ரிமியன் யுத்தத்தில் ஆயிரக்கணக்காய் ஸோல்ஜர்கள் காயம்பட்டு வருந்தினார்கள். அந்தக் காலத்தில், ஸோல்ஜர்களுக்கு உதவிபுரிய யாதொருவித வைத்ய ஏற்பாடும் இல்லாமலிருந்தது. இப்படி கஷ்டங்களினால் வருந்திய இங்க்லீஷ் ஸோல்ஜர்கள் மேல் தயைபெருகி அவர்களுக்கு சிகித்ஸை செய்ய இங்க்லீஷ்கார ஜனங்கள் வேண்டிய அளவு பணம் கொடுத்தார்கள். அப்பொழுது ப்ளாரென்ஸ் நைட்டிங்கேல், வேறுசில தாதிகளைச் சேர்த்துக்கொண்டு, யுத்தகளத்திற்குப்போய் தம்மாலாகும் உதவி செய்யத் தயாரெனச்சொல்லி, கவர்ன்மெண்டின் அனுமதிபெற்று க்ரிமியாவுக்கு புறப்பட்டுப்போனாள். பலக்ளாவா, இங்கர்மன் என்ற இடங்களில் நடந்த ப்ரமாண்...



களில் வெட்டுப்பட்டு அரை குறையாய், சாகாமல் மரணாவஸ்தைப்படும் ஸோல்ஜர்களுக்கு சிஷ்ருஷை செய்ய ஸமயத்தில் அவள் அங்குபோய்ச் சேர்ந்தாள். போய்ச் சேர்ந்தவுடன், ராப்பகலாய் உழைத்து காயம்பட்டவர்களில் முக்கால் வாசியை பிழைப்பூட்டினதாக சரித்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. க்ரிமியன்யுத்தம் தீர்ந்ததற்கப்புறம், 1856-ம் வர்ஷத்தில் இங்க்லண்டிற்கு மறுபடியும் வந்து, பட்டாளங்களைச் சேர்ந்த ஆஸ்பத்ரிகளையும், அவைகளுக்கு வேண்டிய ஸுகாதார விஷயங்களையும் சீர்திருத்தஞ்செய்ய நைட்டிங்கேல் முயற்சித்து வந்தாள்.

இது தான் முதல் முதல் யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்கு உதவிபுரியச் செய்த ஏற்பாடு. ஆனால், இந்த ஏற்பாட்டை குறையின்றி சரியாய் எக்காலும் நிற்கும் ஸ்திதியில் கொண்டுவந்தது, 'ஹென்ரி ட்யூனார்ட்' என்ற ஒரு ஸ்விஸ் ராஜ்யத்துப் பரோபகாரி. 1859-ம் வர்ஷத்தில் நடந்த மஜெண்டா, ஸால்பெரினோ ஆகிய இந்தச் சண்டைகளில் 50,000 வீரர்களுக்குமேல் காயம்பட்டும், குத்துயிராயும் இறந்தும் கிடப்பதை அந்த தயாளு பார்க்க நேரிட்டதாம். அதன்மேல் அவர் ரொம்ப பரிதாபப்பட்டு, யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்கு சிஷ்ருஷை செய்ய கவர்ன்மெண்டுகள் ஏற்படுத்திய வைத்ய ஸிப்பந்திகளோடு ஒத்துழைக்க காருண்யமுள்ள பொது ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸொஸைட்டி ஏற்படுத்தவேண்டுமென்று அவர் மனதில் உதித்தது. இதைப் பற்றி விரிவாய் ஒரு துண்டுப் பத்ரிகை எழுதி ப்ரசுரஞ்செய்து ஐரோப்பாவிலுள்ள ஜனங்களுக்குள் பெரிய மனக்கிளர்ச்சியை உண்டு பண்ணினார். பிற்பாடு 1864-ம் வர்ஷத்தில் ஜெனீவாவில் நடந்த, சில ராஜாங்கங்களின் ப்ரதிநிதிகள் சேர்ந்த கான்பரென்ஸில் ட்யூனார்ட் மேற்சொன்ன விஷயத்தை ஸங்கத்தாருக்கு வற்புறுத்தினார். ஆனால் அந்த கான்பரென்ஸுக்கு ப்ரதிநிதியனுப்பின சில கவர்ன்மெண்டுகள், யுத்தஞ்செய்யும் கவர்ன்மெண்டுகள் அனுப்பும் டாக்டர்களும், தாதிகளும் இன்னும் மற்ற ஸிப்பந்திகளும் மட்டுமே பயமில்லாமல் வேலை செய்வதற்கு வேண்டிய யுத்த நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டதால், கவர்ன்மெண்டுகளால் ஏற்படுத்தப்படாத பொதுஜன வைத்ய ஏற்பாடுகள் விஷயமாய் ஒன்றும் செய்யமுடியாதென்று ஜெனீவா கான்பரென்ஸ் மெம்பர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனபோதிலும், இதன்பிறகு 'ரெட்க்ராஸ் ஸொஸைட்டிகள்' ஐரோப்பா முழுமையும் ஏற்படுத்தப்பட்டன. 1864-ல் ப்ரான்ஸிலும், ப்ரஷ்யாவிலும், 1867-ல் ரஷ்யாவிலும், 1870-ல் இங்க்லண்டிலும் மேற்படி ஸங்கங்கள் உண்டாயின. லார்ட் வாண்டேஜ் என்பவரே இங்க்லண்டில் ரெட்க்ராஸ் ஸொஸைட்டியை ஏற்படுத்தினார். ஆகிலும், ப்ளாரென்ஸ் நைட்டிங்கேலும், ட்யூனார்டுமே ரெட்க்ராஸ் ஸொஸைட்டிகளுக்கு முக்ய கர்த்தாக்கள். 1899-ம் வர்ஷத்தில் ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யம் முழுமைக்கும், ஒரு முக்ய ஸங்கம் இங்க்லண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1905-ல் மேன்மைபெற்ற அலெக்ஸான்ட்ரா சக்ரவத்தினி, இதை சீர்திருத்தி நல்ல ஸ்திதியில் கொண்டுவர வெகு ச்ரமப்பட்டான். அதன்மேல், ஏகாதிபத்யம் முழுமையும் வெவ்வேறு ப்ராஞ்சுகள், ஸங்கத்திற்கு மெம்பர்களைச்சேர்த்து வந்தன. ஸமாதான காலங்களில் இஷ்டப்படியும், சண்டை ஸமயத்தில் ஸைன்ய டிபார்ட்மெண்டாரின் அதிகாரத்திற்குள்ளாகவும், இந்த ஸொஸைட்டிகள் நடந்துவரவேண்டுமென்று நியமனம் செய்யப்பட்டது. நோயினால் வருந்துவோர்க்கு சிஷ்ருஷை செய்வது முக்யமாய் ஸ்த்ரீகளின் கடமையாதலால், அலெக்ஸான்ட்ரா சக்ரவர்த்தினி ராஜ்யத்திலுள்ள ஸ்த்ரீகளுக்கெல்லாம் உதவி புரியும்படி எழுதிக் கேட்டுக்கொண்டாள். இந்த ஸொஸைட்டியின் முக்யநோக்கங்கள் பின்வருமாறு:—

(i) யுத்தகளத்தில் நோயினால் வருந்துவோர்க்

கும், காயம்பட்டவர்களுக்கும், ராஜாங்க வைத்ய டிபார்ட்மெண்டாரால் ஆகும் உதவியைத் தவிர, தங்களால் ஆகும் உதவியைச் செய்வது.

(ii) டாக்டர்களுக்கு சிஷ்ருஷை புரிவது.

(iii) அதிவ்ருஷ்டியினாலோ, பெருவாரி நோயினாலோ, தீயினாலோ அல்லது வேறுவித கஷ்டங்களினாலோ வருந்துபவரின் கஷ்டங்களைத் தீர்த்தல்.

(iv) வைத்யம் செய்யும் ரெட்க்ராஸ் டாக்டர்கள், தாதிகள் ஆகிய இவர்கள் சண்டைக்கக்ஷிகளில் சேராதவர்களென்று எல்லா கவர்ன்மெண்டுகளையும் ஒப்புக்கொள்ளச் செய்தல். இதைக் கடைசியாக 1906-ம் வர்ஷத்தில் நடந்த ஜெனீவா கான்பரென்ஸில் எல்லா கவர்ன்மெண்டுகளும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

1912-ம் வர்ஷம் ஜூன்மாதக் கடைசியில் இந்த ஸொஸைட்டியில் இங்க்லண்ட், ஸ்காட்லண்ட், வேல்ஸ் ஆகிய இவைகளில் 14000-மெம்பர்கள் சேர்ந்திருந்தார்கள். பால்கன் யுத்தத்தில் சேர்ந்த இருகக்ஷிக்காரர்களும் ப்ரிட்டிஷ் ரெட்க்ராஸ் ஸொஸைட்டியின் உதவியை மிக மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார்கள்.

ரெட்க்ராஸின் ஒவ்வொரு பகுதியிலும், அப்பொழுது 3-டாக்டர்களும், 3-ட்ரெஸ்ஸர்களும், 6-தாதிகளும், 5-வேலைக்காரர்களும், 1-சமயல்காரனும் ஆக 18-பேர்கள் இருந்தார்கள். இப்படி மொத்தத்தில் 213-பேர்கள் அனுப்பப்பட்டார்கள்.

இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில், முதல் முதலாய் ரெட்க்ராஸின் ஒரு பாகம் பெல்ஜியத்திற்குச் சென்றது. பெல்ஜியன் கவர்ன்மெண்டின் வேண்டுகோளின்படி, 10-ஸர்ஜன்களும், 10-ட்ரெஸ்ஸர்களும், 20-தாதிகளும் சென்றார்கள். உடுப்பு சாப்பாடு இவைகளோடு ஸர்ஜனுக்கு நாளைக்கு ஒரு பவுனும், ட்ரெஸ்ஸருக்கு வாரத்திற்கு இரண்டு பவுனும், தாதிகளுக்கு வாரத்திற்கு இரண்டு பவுன் இரண்டு ஷில்லிங்கும் சம்பளம். ப்ரிட்டிஷ் ரெட்க்ராஸ் ஸொஸைட்டியிலிருந்து எப்பொழுது அவச்யமோ அப்பொழுது மேல் சொன்னபடி 40-ஆட்கள் சேர்ந்த ஒரு டிவிஷன் அனுப்பப்படுகிறது.

தாதி டிபார்ட்மெண்டை சேர்ந்த ரெஜிஸ்டர், கணக்குகளை யெல்லாம், போர்த்துகல் தேசத்து அமிலியா என்று சொல்லப்பட்ட அரசி பார்த்து வருகிறாள்.

மொத்தமாய் இந்த ஸொஸைட்டியில் 50,000 வ்யாதிக்காரருக்கு சிகித்ஸை செய்வதற்கு வேண்டிய ஸாமான்களும் படுக்கைகளும் தயாராயிருக்கின்றன. இவைகளில் ஸைன்ய டிபார்ட்மெண்டிலிருந்து எவ்விடத்தில் எத்தனை படுக்கைகள் கேட்கிறார்களோ, உடனே அவ்விடத்தில் அத்தனை படுக்கைகள் தயாராக்கப்படும்.

## ST. JOHN'S AMBULANCE ASSOCIATION.

## ஸெயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் ஸங்கம்.

இதுவும் 'ரெட்க்ராஸ்' ஸங்கத்தைப்போலவே நோயாளிக்கும் காயம் பட்டவர்களுக்கும் உதவி செய்ய ஏற்பட்ட ஒரு ஸங்கம். இது இங்க்லண்டில் 1878-ம் வர்ஷத்தில் ஏற்பட்டது. இதன் கருத்து என்னவென்றால், ரெயில்வண்டி ஓடுமிடத்திலும் பாதைகளிலும் பொதுவாய் அவரவர் இடங்களிலும் விழுந்து காயம்பட்டவர்களுக்கு ஒத்தாசைசெய்வதே. இந்த ஸங்கத்தின் கிளைகள் இங்க்லீஷ் ஏகாதிபத்யத்தின் எல்லாவிடங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. டாணக்காரர்களுக்கும், ரெயில்வேயில் வேலை செய்யும் கூலிகளுக்கும், இன்னும் கூலிவேலைக்காரர்களுக்கும், காயம்பட்டவுடன் டாக்டர் வரும்வரையில் சிகித்ஸை செய்வதற்கு வேண்டிய கல்வியை படிப்பித்து வருகிறார்கள். ரத்தம் ஓடுவதை சட்டென நிறுத்தவும் ஜலத்தில் முழுகினவர்களைப் பிழைப்பிக்கவும் அறிவைக் கற்பித்து வருகிறார்கள். தென் ஆப்ரிக்காவில் நடந்த யுத்தத்தில்



இந்த ஆம்புலன்ஸ் ஸங்க மெம்பர்கள் செய்த ஒத்தாசைக்கு கணக்கில்லை.

இங்க்லண்டில் இந்தஸங்கத்தில் 4,000-பேர்கள் தரைப்படையோடும் கப்பல் படையோடும் போயிருக்கிறார்கள். இன்னும் அநேக ஆயிரம் மெம்பர்கள் தயாராகவும் இருக்கிறார்கள். ஸெய்ன்ட் ஜான்ஸ் ஆம்புலன்ஸ் ஸங்கத்திலிருந்தும் அநேக டாக்டர்களும் தாதிகளும் பெல்ஜியத்திற்குப் போயிருக்கிறார்கள்.

## LOVE'S TRIUMPH.

BY V. P. KRISHNASWAMI AIYAR.

## காதல் வெற்றி.

(529-ம் பக்கத் தொடர்ச்சி.)

### VII.

ஸ்ரீநிவாஸன் இங்க்லண்டுக்குப் புறப்பட்ட இருபது நாளைக் கெல்லாம் அருணாசலய்யர் வீட்டில் கல்யாண யத்தனங்கள் ஆரம்பமாயின. அருணாசலய்யர் தமது தர்ம பத்னி ஸ்ரீமதி அலமேலும்மாளுடன் கலந்து யோசித்து, வாலாஜாபேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டருடைய ஸ்ரீமந்தப் புதல்வன் ஹரிஹரனுக்கு ஸௌபாக்யவதி ஸௌந்தரியை பாணிக்ரகணம் செய்துகொடுக்கத் தீர்மானித்துவிட்டார். அலமேலம்மாள் கல்யாணம் பத்துநாள் இருக்கும்போதே தன் அருமை மருமகனை அழைத்து வந்து ஸௌந்தரியுடன் ப்ரியமாய் நடக்கச் சொல்லியிருந்தாள். ஹரிஹரன் அப்பொழுது தான் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். சென்ற அரை 'மாமாங்க' மாக அவன் அந்த பெரிய பரீக்ஷைக்கே வாசித்துக்கொண்டிருந்தான். இன்னும் எத்தனை வருஷம் வாசிக்க இஷ்டப்படுகிறானோ நமக்கென்ன தெரியும்? பாவம் அவனென்ன செய்வான்! பரீக்ஷை ஸமயத்தில் ஒரு வருஷம் அஸாத்ய ஜ்வரமடித்தும், இன்னொரு வருஷம் இவனெழுதிக் கொடுத்த விடைக் காகிதங்கள் காணாமற் போயும், மற்றொரு வருஷம் மாரியும்மன் போட்டியும், அடுத்த வருஷம் 'புட்பால்' ஆடினதால் கால் ஒடிந்தும், இப்படியாக வெவ்வேறு காரணங்களுக்காக அவன் மேல்வகுப்புக்குப் போக ஸாத்யப்படவில்லை.

அவனைப்போல் 'புட்பால்' ஒருவரும் ஆடமாட்டார்கள். பஞ்சாப் பயில்வான்களோடே இவன் 'பீட்' போட்டிருக்கிறான். அழகிய கரிய மீசை அவன் முகத்தைச் சிங்காரித்தது. அதன் மேல் ஒரு எலுமிச்சம் பழத்தை வைத்தாலும் கீழே விழாது என்று பெருமைபேசிக்கொள்வான். மாஸத்துக்கு மூன்று முறை தன் தலையை வெவ்வேறு விதமாய்க் கத்தரித்து, பங்காளிகள், குஜராத்திகள், உத்தராதிகள், மலையாளிகள் முதலிய ஒவ்வொரு மாகாணத்தாரும் வைத்துக்கொள்ளுகிறபடி குடுமியை ஒழுங்குபடுத்துவான். இம்மாதிரி செய்வதினால் தான் தேசாபிமானம் பிறக்குமென்றும், ஒருவன் இந்தியாவின் ஸத்புத்ரனாயிருந்தால் இப்படித்தான் செய்யவேண்டுமென்றும்,ப்ரஸங்கிப்பான். நம் தேசத்துக்கு ஒரு பொது பாஷை வேண்டுமென்றும், இந்துஸ்தானியே பெரும் பாலும் எல்லாராலும் பேசப்படுவதால் அதையே யெல்லாரும் அங்கீகரிக்கவேண்டுமென்றும், இவன் எண்ணி, தன் தந்தை ஆபீஸ் 'ஹெட்கான்ஸ்டேபில்' மொகிதீனிடம் ஸ்நேகம் செய்து இந்துஸ்தானி கற்றுக்கொண்டான். அடிக்கடி தமிழ்ப் பதங்களுடன் இந்துஸ்தானி பாஷையைக் கலந்து, 'பைடோ' 'ஜாவ்' என்று ஸரமாரியாய்ப் பேசுவான். ஸௌந்தரி இப்படிப்பட்ட தேசாபிமானியைக் கண்டு அன்பு கொள்ளாமல் அச்சங்கொண்டு அவனை நேராக தூஷிக்க ஆரம்பித்தாள். ஆனால் ஹரிஹரன் உலக நோக்கை மிகவும் அறிந்தவன். இந்த குணம் பெண்குட்டிகளுக்கு ஸகஜமென்றும், தாலிகட்டிவிட்டால் எல்லாம் சரியாய் விடுமென்றும், தன் அத்தைக்குச் சொன்னான். இவ்வளவு ஸாமர்த்யமுள்ள மருமகனைப் பார்த்து உள்ளங் குளிர்ந்து யாராவது த்ருஷ்டி போடப்போகிறார்களென்று, ஒரு

னுக்கு மிளகாயை எடுத்து அடுப்பில் கொட்டி வீட்டிலிருக்கும் ஒவ்வொருவரையும் இனிமேல் த்ருஷ்டி போடவில்லையென்று சொல்லும்படி கடும் தண்டனை விதிப்பாள்.

கல்யாண தினமும் நெருங்கிவிட்டது. ஹரிஹரன் நாளுக்குநாள் ஸௌந்தரி தன்மேல் ப்ரியம் கொள்ளுவதாக நினைத்தான். அலமேலம்மாள் ஸௌந்தரியையே ஹரிஹரனுக்கு சாதம் போடவும், தண்ணீர் கொடுக்கவும், 'டபன்' செய்யவும், நியமித்தாள். ஒருநாள் இவள் அவனுக்குக் காப்பி கொண்டு கொடுத்தபொழுது ஹரிஹரன்,

'ஸௌந்தரி இங்கே வா, எத்தனை நாளுக்கு புது நாட்டுப்பெண்ணாயிருப்பாய்? என் பக்கத்தில் உட்கார்', என்றான்.

ஸௌந்தரி இதென்ன விபரீதமென்று ஓட ஆரம்பித்தாள். உடனே ஹரிஹரன் அவள்கையைப் பிடித்திழுக்க, அவள் திமிறிக்கொண்டு கூடத் தறையைவிட்டு வெளியில் வந்தாள். இதைக் கண்ட ஹரிஹரன் கோபங்கொண்டு அவள் புடவை முந்தாணியைப்பிடித்திழுக்க, அவள் ஓட முடியாமல் கால்தடுக்கிக் கீழேவிழுந்து விட்டாள். நெற்றியில் காயப்பட்டு விட்டது. ஹரிஹரன் வெறுப்படைந்து அத்தையினிடம் ஓடி, 'அத்தே, அத்தே! எனக்குக் கல்யாணமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம், போ. இங்கே வாம்மா என்று கூப்பிட்டேன். உடனே துள்ளிக் குதித்துக் கீழேவிழுந்து காயம்பட்டுக்கொண்டு அழுது கொண்டிருக்கிறாள். இது என்ன எனக்கு வேண்டியிருக்கு' என்று கசந்து சொன்னான்.

வந்தது கோபம் அலமேலம்மாளுக்கு. சுந்தரியின் நெற்றியிலிருந்து கொட்டுகிற ரத்தத்தைக் கவனிக்காமல், 'ஏண்டி பெண்ணே! நீ ஆடுகிற கூத்தெல்லாம் ஆடு. அந்த கட்டையிலே போகிறவன் மேலிருக்கிற கிறுக்குத் தானே உன்னை இப்படிச் செய்யச்சொல்லுகிறது. அடி, உனக்கு வெட்கமில்லையேடி! அகமுடையான் கூப்பிட்டால்? அல்லோல கல்லோலமென்ன? ஊரை ஒன்றாய்க் கூட்டுவாய் போலிருக்கே, ஐயோ பாழும் ஜன்மமே!" என்று பரிதாபப்பட்டு மருமகனுக்கு ஸமாதானம் சொல்லிப்போய்விட்டாள்.

ஸௌந்தரி ஸ்ரீநிவாஸனை நினைத்துக்கொண்டு விம்மி விம்மி யழுது களைத்துவிட்டாள். அரைமணி ஸாவகாசம் பொறுத்து எழுந்து காயத்தை அலம்பிக்கொண்டு வீட்டு வேலையில் கவனமாயிருந்தாள். நெல்குத்துவதும், மா அரைப்பதும், பந்தல் போடுவதும் ஆகிய காரியங்களில் அருணாசலய்யர் வீட்டில் ஒவ்வொருவரும் கவனமாயிருந்தார்கள். கல்யாணம் இன்னும் மூன்று நாள்தானிருந்தன. ஸம்பந்திகள் வந்திறங்கி விட்டார்கள். ஸம்பந்தி ப்ராமணருடன் அரைடஜன் கான்ஸ்டேபில்களும் வந்திறங்கிவிட்டார்கள். திருடர்கள் இனிமேல் தமக்குப் பிழைப்பு இல்லையென்று அக்ராஹாரத்தினருகாமையிலேயே வரவில்லை. ஊரிலிருக்கிற கந்தைகளெல்லாவற்றையும் சேர்த்து பெரிய தீவர்த்திகள் கட்டினார்கள். இரண்டு தங்க நாகஸ்வரக்காரர்கள் வந்திறங்கினார்கள். குயில் மங்கலம் தாஸி நான்கு நாள் முன்னதாகவே கல்யாணத்துக்காக விஜயம் செய்திருந்தாள். கல்யாணம் எவ்வளவு ஆனந்தமாய் ஆரம்பித்தது! இரட்டைக்குதிரை 'ஸாரட்டில்' பெரிய ஸரிகை தலைப்பாகையும் கரிய மீசையும் க்ருதாவும், 'பாபா ஸௌரம்' அணிந்து மாப்பிள்ளை மன்மத ஸ்வரூபமாக விளங்கினான். அவன்முகம் யாவருக்கும் தெரியும்படி இரண்டு பக்கத்திலும் பச்சை மத்தாப்பூவும் சிவப்பு மத்தாப்பூவும் போடப்பட்டன. இரண்டு கான்ஸ்டபில்கள் இரண்டு பக்கத்திலும் நின்றார்கள். பைரவி ராகத்தையெடுத்து நாகஸ்வரக்காரர்கள் வெகு ரம்யமாய் வாசித்தார்கள். தாஸியோ கம்மென்றிருக்கவில்லை. கையையும் காலையும் வளைத்து 'இஞ்சின்' ஆட ஆரம்பித்துவிட்டாள். தீவர்த்திகளின் புகையும், சந்தனத்தின் வாஸனையும் ஆகாயத்தை நிரப்பின. ஹரிஹரனுக்கு வெகு ஸந்தோஷம். இம்மாதிரி தனக்குக் கல்யாணம் நடக்கவேண்டுமென்று ஒவ்வொரு வர்ஷமும் இஷ்டப்பட்டான். எத்தனையோ தெருக்கோடிப் பிள்ளையாருக்கு தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொண்டான். ஆனால் அலமேலம்மாளைத் தவிர ஒரு தாயும் தன் பெண்ணை அவனுக்குக் கொடுக்க ஸம்மதிக்கவில்லை. இந்த அற்பகாரணம்பற்றியே அவன் விவாக மகோத்ஸவத்தை இது வரையில் அடையவில்லை.



மாப்பிள்ளை அருணாசலய்யர் வீட்டு வாசலில் இறங்கினதும் தேங்காய் சூறைவிட்டு பிறகு அவனை உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள். நிச்சயதார்த்தத்துக்கு எல்லாம் தயாராய் விட்டது. சாஸ்த்ரிகள் தட்டில் வைத்திருந்த பழம் கற்கண்டு ஜீனியைக்கண்டு மனங்குளிர்ந்து மாப்பிள்ளை மீசையை முற்றும் மன்னித்துவிட்டார்கள். மந்த்ரங்களை ஸ்வரம்போட்டு அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லவாரம்பித்தார்கள்.

'பெண் எங்கே. பெண்?' என்றார் பிள்ளை வீட்டு சாஸ்த்ரிகள். 'இதோ! நான் போய்க் கூப்பிட்டு வருகிறேன்' என்று போனார் அருணாசலய்யர். உள்ளே தேடினார். தோட்டத்தில் பார்த்தார். ஸௌந்தரி, ஸௌந்தரி, என்று கூப்பிட்டார். அலமேலம்மாளையுங் கேட்டார். ஒன்றும் பயன்படவில்லை. ஸௌந்தரியைக் காணோம். ஐயோ என்ன செய்வது! தன்னை அவமானப்படுத்தியதற்காக எங்கே வாலாஜாபேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயிலில் அடைத்து செக்கிழுக்கச் சொல்லப்போகிறாரோ என்று பயந்து, அந்த ஊர் கோவில் கோபுரத்தில் போய்ப் படுத்துக்கொண்டார். வெகு நாழிகை மாப்பிள்ளை இஞ்சி தின்ற வானரம்போல் உட்கார்ந்திருந்தான். இன்னும் தன் மனைவி வராததைப்பற்றிக் கோபங்கொண்டான். அவன் மீசைபடபடவென்று துடித்தது. உடனே என்ன செய்வதென்று தெரியாமல்,

'ஓய் சாஸ்த்ரிகளே, மந்த்ரத்தை நிறுத்தங்காணும். தலைவேதனையாயிருக்கு, உமக்குப் பைத்தியமா பிடித்திருக்கு. அர்த்தம் தெரியாமல் ஏன் உளறுகிறீர்' என்று மரியாதையாய்ச் சொல்ல, இது என்னடா அஸம்பவமாயிருக்கிறதென்று சாஸ்த்ரிகள் வாயைப் பொத்திக்கொண்டிருந்துவிட்டார்கள். இன்னும் கல்யாணப்பெண் வரவில்லை, அவளைத் தேடப்போன அருணாசலய்யரும் வரவில்லை. நான்போய் பார்த்துவிட்டுவருகிறேனென்று போலீஸ் இன்ஸ்பெக்டர் போனார். எவ்வளவு நாழிகை சாஸ்த்ரிகள் கற்கண்டு பழத்துக்குமுன்னால் கண்கொட்டாமல் நாக்கில் ஜலமூற உட்கார்ந்திருப்பார்கள்!

'அப்பா எனக்கொரு வாழைப்பழம்' என்று ஒரு சாஸ்த்ரி அழைத்துக்கொண்டு வந்த குழந்தை அழுதது.

உடனே முதலில் உட்கார்ந்திருந்த பெரிய கனபாட்டிகள் ஒரு பழத்தைப் பிய்த்து அந்தக் குழந்தையினிடம் கொடுக்க, இன்னொரு சாஸ்த்ரி தன் பிள்ளையை வெடுக்கென்று தொடையில் கிள்ளிவிட்டார். குழந்தை வீறிட்டழ, எல்லாரும் ஏதோ தேள் கொட்டிவிட்டதென்று ஸந்தேகிக்க, சாஸ்த்ரி தன் குழந்தை வாழைப்பழத்துக்குத்தான் அழுதது என்று சொன்னார். அந்தக் குழந்தைக்கும் ஒரு வாழைப்பழம் கொடுக்கப்பட்டது. அதன்மேல் அங்கே வந்திருந்த ஒவ்வொரு குழந்தையும் அழவாரம்பித்து விட்டது. சில சாஸ்த்ரிகள் தங்கள் குழந்தை இங்கே வரவில்லையென்றும், வீட்டுக்குப்போனால் கட்டாயம் அழுமென்றும், வாழைப்பழத்தை வாங்கிக்கொண்டார்கள். தன் குழந்தை வேண்டாமென்று சொன்னதாக ஒரு கனபாட்டி ஒரு பழத்தை உரித்து வாயில்போட்டுக் கொண்டார். இதைக்காரணமாகக் கொண்ட மற்ற கன பாட்டிகள் எனக்கு உனக்கு என்று காம்புகூட இல்லாமல் பழத்தட்டை காலிசெய்து விட்டார்கள். இன்னும் பெண்வரவில்லை. என்ன ஸங்கதியென்று மாப்பிள்ளை எழுந்து வாசலில்போனார். உள்ளேயிருந்த சாஸ்த்ரிகளும் அலமேலம்மாளின் ஸத்குணத்தை யறிந்

தவர்களாதலால் ஒவ்வொரு காரணங்கூறி வீட்டுக்குச்சென்று விட்டார்கள். போகும்பொழுது பலகாரத்துக்காகக் கொஞ்சம் சர்க்கரையும், பஞ்சாதி சொன்னதற்காக வெற்றிலை பாக்கும் முதலாளி இல்லாதிருப்பதைக் கண்டு தாமாகவே கொஞ்சமாக ஒரு சிறு மூட்டையில் கட்டிக் கொண்டு ப்ரயாணப்பட்டார்கள். உள்ளே ஒருவருமில்லை. குழந்தை நாகராஜன் மட்டும் ஒரு புறம் கூடத்தில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். இதுவல்லவோ ஸமயம்! குழந்தை தனியாய்ப் படுத்துத் தூங்குவதைக்கண்டு யாராவது திருடன் காப்பையும் கொலுசையும் கழற்றிக் கொண்டு போகப்போகிறானென்று ஒரு 'கான்ஸ்டெபில்' அவைகளைக் கழற்றி தன் பையிலேயே பத்ரமாக வைத்துக்கொண்டான். தட்டில் மீதியிருந்த சர்க்கரை வெற்றிலை பாக்கை எடுத்துச் சாப்பிட்டு மிகுந்தவற்றை குயில்மங்கலம் தாஸிக்குக் காணிக்கையாக வைத்துநின்றான். இன்னும் ஸௌந்தரியைக் காணோம். என்ன ஆச்சர்யம்!

ஒவ்வொருவரும் ஸௌந்தரியைத் தேட ஆரம்பித்துவிட்டார்கள். ஊரில் ஒரு குளம் கிணறு பாக்கியில்லை. எல்லாவற்றிற்கும் தூர்வாரியாய் விட்டது. ஒவ்வொருவரும் வெகு ச்ரத்தையாகத் தேடிக்கொண்டிருந்தார்கள். ஆனால், ஒருவரும் வீட்டைவிட்டுக் கூப்பிடும் தூரங்கூடப் போகவில்லை. ஸௌந்தரியைத் தேடுவதோடு அருணாசலய்யரையும் தேட ஆரம்பித்து விட்டார்கள். சில கான்ஸ்டெபில்கள் பல தீவர்த்திகளுடன் கோவிலுக்குள் புகுந்து தேடினார்கள். கோவில் மெத்தைமேல் ஏதோ சப்தம் கேட்டது. என்ன விசேஷமென்று இவர்கள் மேலே போக கோபுரத்திற்குள் ஒரு ஆள்உருவம் மறைந்தது. அங்கே வந்து எல்லாரும் நின்று விட்டார்கள். நீபோ, நீபோ, என்று ஒருவரை யொருவர் பிடித்துத் தள்ளினார்கள். ஏனெனில் அர்த்தராத்ரியில் பிசாசங்கள், ஜடா முனிகள் வாஸஞ்செய்யும் கோபுரத்துக்குள் யார் போவார்கள். இப்பொழுது கையில் ஒரு குற்றவாளி இல்லையே; இருந்தால் உள்ளே தள்ளிப்போய்ப் பார்க்கச் சொல்லலாமே யென்று ஒவ்வொருவரும் கண்ணீர் விட்டார்கள். கடைசியில் ஓ வென்று இரைந்துகொண்டு யாவரும் கும்பலாகப்போகத் தீர்மானித்துச் சென்றவுடன் மூன்றாவது அங்கணத்தில் ஒரு உருவம் படுத்திருக்கக்கண்டார்கள். உடனே எல்லா கான்ஸ்டேபில்களும் ஜடாமுனியைக் கண்டுவிட்டோம், இனிமேல் வாயினாலும் மூக்கினாலும் ரத்தம் வந்து இறக்கவேண்டியதென்று கீழே படுத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களில் தைர்யமானவன் ஒருவன் 'இதோ அகப்பட்டான்; குழந்தை காப்பைத் திருடினவன்' என்றான், உண்மையில் குழந்தைகாப்பு திருட்டுப்போனது இது வரையில் இந்த மகானைத் தவிர வேறொருவருக்கும் தெரியாது. கூடிய சீக்ரத்தில் யார்மேலாவது பழிபோடவேண்டு மென்று சொல்ல, மற்ற தைர்யஸ்தர்களும் இதற்குள் எழுந்து படுத்திருந்தவனை உதைத்து 'டேய் காமாட்டி! மாடே, எழுந்திரடா,' என்றார்கள்.

படுத்திருந்தவர் அருணாசலய்யர். போலீஸ் இன்ஸ்பெக்டர் தன்னை அகத்தியம் ஜெயிலில் அடைக்கப் போகிறாரென்று நிச்சயப்பட்டு,

'ஐயோ எனக்கு ஒன்றும் தெரியாதே! அந்தப் பெண்ணை நான் ஒன்றும் செய்யவில்லையே' என்றார்.

'அடே அண்ணே! அகப்பட்டான் திருடன், நாம் ஒன்றும் பேசாமலிருக்கும்பொழுதே பெண்ணை ஒன்றும்செய்யவில்லை யென்கிறான். விடாதேயுங்கள் இவனை,' என்று ஒவ்வொருவனும் அவரை தூஷித்து அடிக்க ஆரம்பித்தார்கள்.

'ஐயோ! நானென்ன செய்வேன்? அவளெங்கே போனாளோ, என்னை ஏன் அடிக்கிறீர்கள்?' என்று அருணாசலய்யர் வலிதாங்கமாட்டாமல் அழ ஆரம்பித்துவிட்டார்.

'டேய், நீ அவளைக் கொல்லாவிட்டால், அவளைப் பற்றி உனக்கு என்ன தெரியும், சீக்ரம் சொல், டேய், எண்ணாத்தெட்டு, இவன் வாக்குமூலத்தை எழுதிக்கொள்,' என்றான் 'ஹெட்கான்ஸ்டெபில்.'



'ஐயையோ! நான்தான் அருணாசலய்யர், உங்கள் இன்ஸ்பெக்டரின் மைத்துனன். நான் எதற்காக என் பெண்ணைக் கொலைசெய்ய வேண்டும்' என்று பரிதாபமாகச் சொன்னார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட ஒவ்வொரு 'கான்ஸ்டெபிலும்' கைகால் உதற லெடுக்க, நாக்குழறி, அருணாசலய்யர் காலில் விழுந்து, இருட்டில் தெரியாமல் செய்த அபராதத்தைப் பொறுத்தருள வேண்டு மென்றும், இன்ஸ்பெக்டரிடத்தில் ஒன்றும் சொல்ல வேண்டாமென்றும் கெஞ்சினார்கள். தயை அதிகம் உடையவராகையால் அவர்களை மன்னித்துவிட்டு அருணாசலய்யர் அவர்களுடன் வீட்டுக்குப் போனார்.

எங்கே தேடியும் ஒன்றும் ப்ரயோஜனப் படவில்லை. ஸௌந்தரி மறைந்து விட்டாள்.

## VIII.

ஸௌந்தரி நிச்சய தார்த்தத்தன்று தன் வீட்டுத் தோட்டத்துக்குள் புகுந்து ஒருவருக்கும் தெரியாமல் திருப்பாப்புலியூர் ரெயில்ஸ்டேஷனுக்குப் போய்விட்டாள். பட்டணத்துக்கு ஒரு 'டிக்கட்' வாங்கிக்கொண்டு இவள் ஒருவரும் அறியாமல் ரெயிலேறிப் புறப்பட்டாள். ஸ்வபாவத்தில் ஸௌந்தரி நல்ல புத்திசாலி யாகையால் அதிகமாக கவலைப்படாமல் தான் செய்யும் கார்யம் எள்ளளவும் தப்பிதமானதில்லை என்று எண்ணி சென்னைக்குப் போய்விட்டாள். லக்ஷ்மி அம்மாளுக்கோ ஸந்தோஷம் அளவற்றதாயிருந்தது. ஸௌந்தரிக்கு வேண்டிய ஸௌகர்யங்களை கொஞ்சமேனும் குறைவில்லாமல் நடத்திவந்தாள். ஸௌந்தரி வெளியில் எங்கும் போவது கிடையாது. லக்ஷ்மி யம்மாளுடன் பேசியும், பாடியும், வீட்டு வேலைகளைப் பார்த்தும் காலத்தைக் கழித்தாள். பத்ரிகைகளில் அருணாசலய்யர் பெண் ஸௌந்தரியைக் காணோ மென்றும், கண்டு பிடிப்பவர்களுக்கு இனாமளிக்கப்படும் என்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் விளம்பரம் செய்திருந்தார். ஆனால் ஸௌந்தரி எப்படி இவர்களுக்கு அகப்படப் போகிறாள்

சென்னைக்கு வந்த மறுநாளே ஸௌந்தரி உட்கார்ந்து இரண்டு மணி நேரம் தன் அன்பனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். தான் அவனுக்காக வீட்டைத்துறந்து விட்டதாகவும், ஒரு நாளும் தான் அவனை மறக்கமாட்டாளென்றும், நன்றாய்ப் படித்து சீக்ரம் ஊருக்கு வரவேண்டு மென்றும் எழுதினாள். ஒரு பெரிய பையில் கடிதங்களைப் போட்டு ஒட்டி மேல் விலாஸம் எழுதிப் போட்டு விடும்படி லக்ஷ்மியினிடம் கொடுத்து அவள் நாயகனிடம் கொடுக்கும்படி சொன்னாள்.

இங்கலண்டுக்குப் போன ஸ்ரீநிவாஸன் ஒரு விடுதி அமர்த்திக்கொண்டு உடனே படிக்க ஆரம்பித்துவிட்டான். மேல் நாட்டிலெல்லாம் நம் தேசம் போலில்லாமல் வீட்டிலேயே ஒரு விருந்தாளியை வைத்துக்கொண்டு, அவனுக்கு போஜனம் படுக்கை யெல்லாம் கொடுத்து, மாஸக்கடைசியில் பணம் வாங்கிக்கொள்வார்கள். இந்த வழக்கம் வெகு நன்மையானது. வீட்டுக்காரர்களுக்கு கௌரவமான ஸம்பாத்யமும் விருந்தாளிகளுக்கு ஸௌகர்யங்களும் ஸித்தி பெறும். ஸ்ரீநிவாஸன் இம்மாதிரி ஒரு வீட்டுக்கு விருந்தாளியாகப் போனான். மெத்தை மேல் இவனுக்குப் படிக்க ஒரு அறையும் படுக்க ஒரு அறையும் கொடுத்தார்கள். இவனை வீட்டுக்குள் அழைத்துக்கொண்ட பெரிய அம்மாள் வெகு நல்லவள். அவளுக்கு பதினேழுவயதிலும் பதின்மூன்று வயதிலும் இரண்டு பெண்களுண்டு. இவர்களில் பெரியவளாகிய எல்ஸி பாலன் என்னும் பெண்மணி கருங்கூந்தலும் நீலநிற விழிகளும் பொருந்திய இனியபதினேழு என்று சொல்லப்படும் ஆனந்தப்பருவத்திலிருந்தாள். இவளைப் பார்த்ததும் ஸ்ரீநிவாஸன் மதிமயங்கி விட்டான். ஸௌந்தரி ஏற்கனவே தன் காதலைத்திருடி யிருக்காவிட்டால் அகத்யம் இவன் எல்ஸி பாலன் காலில்

தன் உயிரை அடைக்கலமாக வைத்திருப்பான் என்பதற்கு ஸந்தேகமில்லை. இன்னும் ஆச்சர்யமென்னவெனில் எல்ஸி பாலேனும் இவனைக் கண்டு நேசிப்பதாக நினைத்தான். ஸகஜமாய் மேல்நாட்டுப் பெண்களெல்லாம் நம் தேசத்துப் பெண்களைப் போல் புருஷர்களைக் கண்டால் ஓடியொளிக்காமல் பேசியும் ஆடியும் பாடியும் உல்லாஸமாயிருப்பார்கள். அம்மாதிரியே இவளும் ஒரு வேளை இருந்திருக்கக்கூடும். ஆனால் ஸாதாரணமாய் இருப்பதைவிட அதிகமாய் ஸ்ரீநிவாஸன் 'ரூமுக்குப்' போவதும், அவன் ஸௌகர்யங்களைக்கவனிப்பது மாயிருந்தாள். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் அன்புடன் நடத்தி தத்தம் தேசவ்யவகாரங்களையும், ஆசாரங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். இப்படி ஒரு நாள் ஸாயங்காலம் ஸ்ரீநிவாஸன் ரூமில் மேஜையின் மேல் ஒரு பெரிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. வெளியில் ஜில்லென்று ஊதல் காற்று அடித்தது. இவர்களிருவரும் நெருங்கி உட்கார்ந்து 'டின்டர்ன் ஆபி' என்கிற ஒரு இங்க்லிஷ் செய்யுள் விருத்தத்தை வாசித்துக் கொண்டிருந்தார்கள். இந்த செய்யுள் பாலேனை மிகவும் உழுத்தியது போலும். அந்த செய்யுளை வாசிக்கும்போது தனக்கு வந்த எண்ணங்களை அடக்க முடியாமல் இவள் பெருமூச்சு விட்டுக்கண்ணைத் துடைத்துக்கொண்டாள். இவள் மனோ நிலைமை என்னமாயிருக்கலாம்? ஸ்ரீநிவாஸனுடன் இவள் அவ்வளவு விநயமாக இருப்பதற்குக் காரணமென்ன? உண்மையில் அவன்மேல் அதிக நேசமுற்றாள். நேசமுற்றிக் காதல் நெருப்பை முதல் முதல் அடைந்தாள். ஆனால் ஒரு வேளை அவன் வேறுயாரையாவது கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறானோ, அப்படி விரும்பினால் தான் என்னசெய்வதென்று தெரியாமல் கண்ணீர்விட ஆரம்பித்தாள். அந்தோ அவள் கதிதானென்ன?

இப்படி இவர்கள் வாசித்துக்கொண்டிருக்கும் பொழுது ஸௌந்தரி எழுதிய கடிதம் ஸ்ரீநிவாஸனுக்கு வந்து சேர்ந்தது. அதைக்கண்டதும் திடுக்கிட்டு எழுந்தாள் எல்ஸி பாலேன். அது ஒரு பெண் விஷயமாகத்தான் இருக்கவேண்டுமென்று அவள் நெஞ்சம் சொல்லிற்று. முகஞ் சிவந்து மயிர்க்கூச் செறிந்து, அவள் எழுந்து வெளியே போய்விட்டாள். ஸ்ரீநிவாஸன் பாலேன் தன்னை நேசிக்கிறாளென்று நினைத்தான். ஆகிலும் இவ்வளவு தூரம் அவள் நேசம் முற்றியிருக்கக்கூடுமென அவன் நினைக்கவில்லை. அவள் எழுந்து போனதும் கடிதத்தை உடைத்து ஸௌந்தரியின் எழுத்தாக இருக்கக் கண்டு ஸந்தோஷங்கொண்டு அதை வாசித்து ஸமாசாரத்தை யறிந்து கொண்டான். அவள் வீட்டை விட்டு பட்டணத்துக்கு வந்தது பற்றி இவன் உத்ஸாகங்கொண்டு கடவுளை ப்ரார்த்தித்தான். அடுத்த நிமிஷம் பேனாவை யெடுத்து ஸௌந்தரிக்கு ஒரு பெரிய கடிதம் எழுதத்தொடங்கினான்.

## IX.

வெகு நாளாகியும் ஸௌந்தரியினிடமிருந்து ஒரு கடிதமாவது இவனுக்கு வரவில்லை. ஒரு வேளை அவள் அருணாசலய்யரால் கண்டு பிடிக்கப்பட்டு ஊருக்கழைத்துக்கொண்டு போகப்பட்டாளோ வென்று ஸ்ரீநிவாஸன் மிகவும் பயந்தான். மறுபடியும் ஒரு கடிதம் அவளுக்கு வரைந்து பதிலை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தான். ஒருநாள் அவனுக்கு ஸௌந்தரியினிடமிருந்து கடிதமும் வந்தது. ஆனால் அது கோபத்துடனும் விஸனத்துடனும் எழுதப் பட்டதாக இருந்தது. அதை உடைத்து ஸ்ரீநிவாஸன் பின்வருமாறு வாசிக்க ஆரம்பித்தான்.

"5-பவழக்காரத் தெரு,
"சென்னை.

"அன்புள்ள அத்தானுக்கு அநேக நமஸ்காரம்.

"நான் உங்களுக்குக் கடிதம் போடாமலிருப்பது ஒருவேளை உங்களுக்கு விஸனத்தைத் தரலாம். ஆனால் ஒருவரைச் சொல்லுவதில் ப்ரயோஜனமென்ன? நானே உங்களை நம்பி வெளியில் வந்துவிட்டேன். இனிமேலென் கதியென்ன! எங்கேயாவது அவலிடித்தாவது, அப்பளமிட்டாவது, பிழைக்கவேண்டும். அப்படிப் பிழைப்பதில் எனக்கு ப்ரியமிருக்காதென்று உங்களுக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். ஆதலால் இந்த அநித்ய உடலை விட்டு நான் அகத்யம் ஒருநாள் போகப்போகிறேன். இதை நீங்கள் நிச்சயமாக அறியவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். உங்கள் கடிதத்தில் ஏதோ இனிய பதினேழு வயதுள்ள ஒரு சிறுக்கி உங்களை நேசிக்கிறாளென்று எழுதியிருந்தீர்கள். கொஞ்சமாவது வெட்கம், தயை, பரிதாபம் இருந்தால் எனக்கு அந்தக் கடிதம் எழுதியிருக்க மாட்டீர்கள். இதற்குத்தானா நான் மான அவமானத்தைத் துறந்து உங்களை அடைக்கலம் புகுந்தது. ஐயோ! உங்களுடைய உள்மனசை நான் ஒருநாளும் அறியாமற்போனேனே. இனிமேல் நான் என்னசெய்வேன்!

"அன்புள்ள சீமா! நான் எழுதுவதற்குக் கோபித்துக் கொள்ளாதே. இன்றையதினம் வந்தவளைப்பற்றி என்னைக் கைவிடலாமா? உன்னாலன்றோ நான் எல்லாவற்றையும் விட்டுத் திருட்டுத்தனமாய் ஒருவர் வீட்டில் மறைந்திருக்கிறேன். ஐயோ! நான் உனக்குத் தெரியாதது வேறு என்ன சொல்லப்போகிறேன்? இங்கே இவர்களுக்கும் உன் நடத்தை ஒன்றும் தெரியாது. அப்படித் தெரிந்தால் அது எனக்குத்தானே அவமானம்? இதோ இங்கே நான் முள்மேல் நிற்பதுபோல் நிற்கிறேன். அடுத்த வாரம் உன் கடிதந்தான் நான் இருக்கவேண்டுமோ இறக்கவேண்டுமோ என்பதைத்தீர்மானிக்கும். உடனே பதிலெழுதவும்.

"இப்படிக்கு,
"உன் அம்மங்காள் ஸௌந்தரி."

இந்தக்கடிதத்தை வாசித்ததும் ஸ்ரீநிவாஸன் கண்ணில் ஜலம் ததும்ப 'ஐயோ என்ன அசட்டுக்கார்யம் செய்து விட்டோம், விளையாட்டாக இந்த தேசத்துப் பெண்களின் ஆசாரங்களைப் பற்றி யெழுதினால், இப்படி அர்த்தம் செய்து கொண்டாளே ஸௌந்தரி' யென்று முகங்குருகி விஸ்தாரமாய் அவளுக்கு பதிலெழுதியனுப்பினான்.

இப்படி நாட்கள் ஓடின. வரவர எல்ஸிபாலேனுடைய மனதை இவன் அறிந்து கொண்டான். ஆனால் ஸௌந்தரியைக் கைவிடுவது மூர்க்கத்தனமன்றோ? ஆதலால் அந்த வீட்டிலேயே இருந்தால் இரண்டு பேருக்கும் கஷ்டமென்று, மற்றொரு வீடுதிக்கு மாற்றிக்கொண்டான். இவ்வளவு நாளும் ஸ்ரீநிவாஸன் புஸ்தகங்களின் மேல் வெகு ச்ரத்தையாக இருந்தான். ஸௌந்தரியின் உருவமே அவன் மனதில் படிந்து ஒரு விதமான தீய வழிகளுக்கும் போகாமல் தடுத்தது.

இப்படி இரண்டு வர்ஷ காலஞ் சென்றது. தனக்குவரும் ஸர்க்கார் உதவிச் சம்பளத்திலிருந்தே ஸௌந்தரியின் ஸம்ரக்ஷணைக்காக லக்ஷ்மி அம்மாளுக்குப் பணம் அனுப்புவான். ஸௌந்தரி ஸ்ரீநிவாஸன் இருவர்களும் அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டு ஒருவர் மனதை ஒருவர் தேற்றிக் கொண்டிருந்தார்கள். இரண்டாம் வர்ஷமுடிவில் ஐ. ஸி. எஸ். பரீக்ஷை நடந்தது. ஸ்ரீனிவாஸன் நன்றாகவே வாசித்துக்கொண்டிருந்தான். மேலும் ஸௌந்தரிக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்படுகிறோமென்று நினைக்கும் போதெல்லாம், சோகமுற்ற இவன் மனம் தார்க்கோல் போட்டதுபோல் ஊக்கமடைந்தது. பரீக்ஷையில் தேறியவர்களின் ஜாப்தாவை ப்ரசுரித்தார்கள். ஸ்ரீநிவாஸன் மூன்றாவதாக நின்றான். இதை உடனே அவன் தன் காதலிக்கு தந்தியடித்துத் தெரிவித்தான்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் ஸ்ரீநிவாஸனை கடலூர் 'அஸிஸ்டெண்ட் கலெக்டராக' நியமித்தார்கள். அவனும் போனகார்யம் ஸித்தித்ததற்காக பல தெய்வங்களைத் தொழுது கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தான். உடனே ஸௌந்தரியைப்பார்க்கச் சென்றான். அவள் இவன் வரவை

எதிர்பார்த்த வண்ணம் ஜன்னலின் வழியாக உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். ஒரு ‘கோச்’ வீட்டு வாயிலில் நிற்கவும் ஸ்ரீநிவாஸன் கீழே யிறங்கினான். இவள் ஓடோடியும் வந்து அவன் கையிலிருந்த தோல்பெட்டியை வாங்கிக்கொண்டு உள்ளே ஓடி அவனை க்கட்டிக் கொண்டாள்.

அன்று ஸாயந்த்ரமே ஸ்ரீநிவாஸன் மாத்ரம் கூடலூருக்குப் போனான். அங்கே அருணாசலய்யர் வீட்டுக்குப்போக யத்தனித்தவுடன் தாசில்தார், ஸப் மாஜிஸ்ட்ரேட், ரெவின்யு இன்ஸ்பெக்டர், மணியக்காரன், கணக்குப்பிள்ளை, தலையாரி, தோட்டிமுதலிய ஸிப்பந்திகள் யாவரும் ஸ்ரீநிவாஸனுக்குப்பின் கைகட்டி பயந்து சென்றார்கள். அக்ரஹாரத்தில் நுழைந்ததும் ஸ்ரீநிவாஸன் நாகராஜன் மண்ணில் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு அவனைக் கூப்பிட்டு கையில் பிடித்துக் கொண்டு வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான். அப்பொழுதுதான் அலமேலம்மாளுடன் யுத்தம் செய்வது ஓய்ந்து ஸமாதானம் செய்து களைத்துப்போயிருந்த அருணாசலய்யர் அவனைக் கண்டதும் எழுந்து வாய்பொத்தி நின்றாரே ஒழிய, அவன் யாரென்று அறியவில்லை. உடம்பெல்லாம் சிவப்பு மேலிட்டு நன்றாய்ப்பெருத்து வெள்ளக்காரத் தொப்பி தரித்திருந்த அவனை அவர் எப்படி அடையாளம் கண்டு பிடிப்பார்? ‘அப்பா, இது யார் தெரியலையா, சீமாத்தான்’ என்றான் நாகராஜன். அருணாசலய்யர் உடனே சுற்றும் முற்றும் பார்த்து அன்று காலையிலே தன்னை அவமானப்படுத்திய மணியக்காரன் முதல், ஸதா ‘இன்கம் டாக்ஸ்’ வரியை அதிகப்படுத்தும் தாசில்தார் வரையில் இவனைக்கண்டு அஞ்சி நிற்பதைக்கண்டு ஸந்தோஷங்கொண்டு, இனிமேல் அகாரணமாய் வாலாஜாபேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் தன்னை ஜெயிலில் அடைக்கமுடியாதென்றும், அப்படி ஹிம்ஸிக்க யத்தனித்தால் அருமை மருமகன் ஸ்ரீநிவாஸன் காப்பாற்றுவான் என்றும் பலவாறாக எண்ணினார். அப்பொழுது ஸ்ரீநிவாஸன், ‘மாமா, சுந்து ஸௌக்யமாயிருக்கிறாளா?’ என்றான்.

இந்த வார்த்தைகள் நாராசம்போல் தைத்தன அருணாசலய்யர் காதில். ஸுந்தரி காணாமற் போனதற்குக் காரணம் தான் தானென்றும், அவள் எங்கேயோ கிணறு குட்டையில் விழுந்திறந்தாளென்றும் எண்ணினார். ஆதலின் ஸ்ரீநிவாஸன் கேட்டதும் இவர் மனம் தடுமாறி,

‘அப்பா, அவள் போய்விட்டாள்; எங்கே போனாளோ தெரியவில்லை’ என்று ஸ்ரீனிவாஸனுக்குத் தெரிந்த விஷயங்களை விஸ்தாரமாகச் சொன்னார். அலமேலம்மாளுக்கும் வருத்தமதிகம். இப்பொழுது ஸுந்தரியிருந்தால் தனக்குக் கலெக்டர் மாப்பிள்ளையாக அகப்படுவானே யென்று கருதினாள். இவள் கதவோரத்தில் மறைந்துகொண்டு தலையை மாத்ரம் ஆமைமாதிரி வெளியில் நீட்டி,

‘நாகராஜா, நாகராஜா! இந்தா அத்தானுக்குக் காப்பி கொண்டுபோய்க்கொடு’ என்றாள்.

அடடா! என்ன விச்வாஸம் மருமகனிடத்தில்! அங்கேயிருந்தவர்கள் எல்லாரும் அலமேலம்மாளின் ஸத்குணத்தைக்கண்டு கண் சிமிட்டினார்கள்.

‘மாமா ஒரு வேளை இனிமேல் ஸுந்தரியை நன்றாய்த் தேடினால் என்ன?’

‘என்னப்பா வர்ஷம் மூன்றாகப் போகிறது, அவள் எங்கே அகப்படப்போகிறாள்?’

‘சரி ஒருவேளை அவள் அகப்பட்டால் எனக்கு—’ என்று முடிக்குமுன், அலமேலம்மாள் கதவு மூலையிலிருந்து தன் புருஷனுக்குக் கண் ஜாடை காட்டினாள். இதன் பொருளை உணர்ந்த அருஞ்சலய்யர், ‘அதற்கென்னப்பா, சீமா, கேட்பானேன். அவள் உயிருடன் இருந்தால் உன் பாக்யந்தான்’ என்றார்.

உடனே கல்யாணத்துக்கு யத்னம் செய்யும்படி ஸ்ரீநிவாஸன் சொல்லிவிட்டான். ஒரு சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீநிவாஸனுக்கும் ஸுந்தரிக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்துக்கு வாலாஜாபேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டரும், அவர் ஸீமந்தபுத்ரனும், அரைடஜன் ‘கான்ஸ்டேபில்களும்’ யாதுகாரணம் பற்றியோ வரவில்லை. லக்ஷ்மியம்மாளும் அவள் புருஷனும் அது முதல் ஸ்ரீநிவாஸனுடனேயே வஸித்து வந்தார்கள்.

வி. பி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.



# Departmental Notes.

## பகுதிக் குறிப்புகள்.

### EDUCATION.

### வித்யாவிஷயம்.

**Free Education in Assam.**

அஸ்ஸாம் மாகாணத்தில் இலவசப்படிப்பு.—அஸ்ஸாம் மாகாண கவர்ன்மெண்டார் அந்த மாகாணத்திலுள்ள ப்ரைமெரி ஸ்கூல்களிலும், வெர்னாகுலர் மிடில் ஸ்கூல் என்று சொல்லப்படும் தேசபாஷையிலே மிடில் ஸ்கூல் வரையிலும் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களிலும் பையன்கள் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை யென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்படி கீழ்தரப்படிப்பை இலவசமாக்கினதால் அந்த மாகாணத்தில் கீழ்தரக் கல்வியில் ரொம்ப அபிவ்ருத்தி ஏற்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. முன்பு 36 வெர்னாகுலர் மிடில் ஸ்கூல்கள் இருந்திருக்க, இப்போது 47 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் வாசித்துவந்த மாணவர்களின் தொகையும் 2796-லிருந்து 5944-ஆக உயர்ந்திருக்கிறது. பையன்களுக்கான ப்ரைமெரிஸ்கூல்களின் தொகை 3534 லிருந்து 3760 ஆக உயர்ந்திருக்கிறது. அவைகளிலுள்ள மாணவர்களின் தொகையும் 1,48,278-லிருந்து 1,61,730 ஆக உயர்ந்திருக்கிறது.

**Sanitary Education in Pudukotaoh.**

புதுக்கோட்டையில் ஸுகாதாரக் கல்வி.—புதுக்கோட்டையிலுள்ள க்ராமாந்தரப் பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவர்களுக்கு ஸுகாதாரத்தின் ப்ரதமக் கொள்கைகளைக் கற்பிக்கவேண்டுமென்றும், மாணவர்கள் தங்கள் க்ராமங்களை குப்பை செத்தையில்லாமல் சுத்தமாய் வைத்துக்கொள்ளவும், தொற்று வ்யாதிகள் பரவாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவும் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்றும் புதுக்கோட்டை கவர்ன்மெண்டார் அந்த ஸமஸ்தானத்திலுள்ள க்ராம உபாத்யாயர்களுக்கு ஒரு உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள்.

**The Smallest Village School**

ரொம்ப சிறிய க்ராமப் பள்ளிக்கூடம்.—இங்க்லண்டிலுள்ள க்ளூஸ்டர்ஷைர் என்னும் ஜில்லாவில் ஸெவிங்டன் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊர்ப்பள்ளிக்கூடந்தான் இங்க்லண்டிலுள்ள பள்ளிக்கூடங்களெல்லாவற்றையும்விட மிகச் சிறியதாம். அதில் மூன்று பையன்கள்தான் வாசிக்கிறார்களாம். அந்த ஊருக்கும் பக்கத்திலுள்ள ஸர்க்கார் பள்ளிக்கூடத்துக்கும் இரண்டு மைல்தூரமிருப்பதால், அந்த ஊர்ப்பிள்ளைகளுக்காகவென்று அந்தப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டது. அது ஸுமார் 70-வர்ஷத்துக்கு மேலாக நடந்து வருகிறதாம்.

**Failed Matriculates.**

மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறாதவர்கள்.—மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறாமலிருக்கும் உபாத்தியாயர்கள் ஸெக்கெண்டரி தரத்துப் போதனாமுறைப் பரீக்ஷைக்குப் போகப்ரியப்பட்டால் அவர்களுக்குப் ப்ரத்யேகமாக ஒரு பரீக்ஷை ஏற்படுத்தவேண்டுமென்று வித்தையிலாகா டிரெக்டர் செய்த சிபார்சை சென்னைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

**Admission to Examinations.**

பரீக்ஷைக்குச் சேர்த்துக்கொள்வது.—கல்வி இலாகா புதுச்சட்டப்ரகாரம் ஒரு மாணவன், மெட்ரிகுலேஷன், இன்டர் மீடியேட், பி ஏ முதலிய பரீக்ஷைகளுக்கு மூன்றுமுறைதான் போகலாமென்றும், மூன்று வருஷங்களிலும் பரீக்ஷையில் தேறாவிட்டால் அதற்கு மேல் அவன் பரீக்ஷைக்குப் போகக்கூடாதென்றும் இருந்த சட்டத்தை கவர்ன்மெண்டார் மாற்றிவிட்டார்கள். இனி எத்தனை முறைவேண்டுமென்றாலும் பரீக்ஷைக்குப் போகலாம்.

**Students and Smoking.**

மாணவர்களும் புகை குடித்தலும்.—திருவாங்கூர் கல்வி டிபார்ட்மெண்டார் 18-வயஸுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்கள் சுருட்டு, ஸிகரெட், பொடி முதலியவைகளை உபயோகிக்கக் கூடாதென்று ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Old Sayings on Manuring.

எருவைப் பற்றிய பழமொழிகள்.—

1 எரோட்டுவதிலும் எரு இடுதல் நன்று.
2 எருக்குழையின்றி ஏர்பிடியாதே.
3 எரு இல்லாவயல் கன்றில்லா மாட்டைப்போல.
4 அறிவிலே விளையுமா எருவிலே விளையுமா ?
5 தெய்வத்துக்குச் செய்வதும் செய்க்குரம் போடுவதும் பழுதல்ல.
6 எரு செய்வது இனத்தான் செய்யான்.
7 உரம் உதவுவது ஊரார் உதவமாட்டார்.
8 எரு மணமில்லாத பயிரும் நறுமணமில்லாத மலரும்.
9 குப்பையில்லாத வெள்ளாமை சப்பை.
10 எரு செய்வது எமை செய்யாது.
11 குப்பை உயர்ந்தால் குடி உயரும்.
12 நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடியவேண்டும்
13 பாயும் ஜலம் முழுவதும் வந்து பழைய எருவையெடுத்துக் கொட்டு.
14 ஆடு ஊடாடாக் காடு விளையாது.
15 ஆடு மிதியாக் கொல்லையும் ஆளனில்லாப் பெண்ணும் வீண்.
16 ஆடே பயிர் ஆரியமேவெள்ளாமை.
17 ஆடுமறித்த தொளியை விட்டு ஆறினதொளியை வாங்கு.
18 ஆட்டுரம் ஓராண்டு நிற்கும் ; மாட்டுரம் ஆறாண்டு நிற்கும்.
19 ஆட்டெரு அந்த வருஷம்; மாட்டெரு மறுவருஷம்
20 ஆடு அப்பூ, ஆவாரை முப்பூ.
21 ஆடு பயிர் காட்டும், ஆவாரை நெல்காட்டும்.
22 கார் ஆடு பிசானம் குழை.
23 காணிக்கு ஒரு கருவேலும் வேலிக்கு ஒருமூங்கிலும்.
24 சேரி எரு எல்லா எருவைவிட சேகரமுண்டாக்கும்.
25 ஆத்து மண்ணுக்கு வேற்றுமண் உரம்.
26 உரம் ஏற்றி உழவுசெய்.—கிருஷிகன்.

### Songs and Sories.

**கதையும் பாட்டும்.**-இது அறுப்புக்கோட்டை ரேஞ்ச் பள்ளிக்கூட ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராகிய வெ. முத்துஸாமி அய்யரும், ஷை யூர் எஸ். பி. ஜே. ஸெகண்டரி ஸ்கூல் உபாத்யாயராகிய எ. கே. ஸுப்ரமண்ய அய்யரும் இயற்றியது. இதில் சிறுவர்களுக்கேற்றவையாய் 17-கதைகளும், கதையின் விஷயங்களை யமைத்துப் பாடிய 17-பாட்டுக்களும் இருக்கின்றன. இவைகளோடு முதலில் கடவுள் வாழ்த்து, ராஜவாழ்த்து இவைகளைப் பற்றிய சில பாட்டுகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப்பாட்டுகளும் கதைகளும் சிறுவர்களுக்குப் பாடம் கற்பிப்பதில் ரொம்பவும் உபயோகமுள்ளவையாயிருக்கும். இவைகளைத் தொடர் முறைப் போதனுக்ரமத்தில் சேர்த்துக்கொள்ளலாம். புஸ்தகத்தின் கடைசியில், இந்தக் கதைகளை யனுஸரித்து இன்னின்ன விஷயங்கள் கற்பிக்கலாமென்பதற்கு ஒரு அட்டவணையும் சேர்த்திருக்கிறது.

இந்தப் புஸ்தகத்தின் விலை அணு 4. வேண்டுவோர் மதுரை புதுமண்டபம் புஸ்தக வ்யாபாரியாகிய இ. மா. கோபாலக்ருஷ்ண கோனுக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

### Notes on Matric Tamil Text, 1916.

**1916-ம் வர்ஷத்து மெட்ரிகுலேஷன் தமிழ்ப் பாடங்களின் உரை.**—இது மதுரை அமெரிக்கன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்களாகிய மெஸர்ஸ் கார்மேகக் கோனர், பி. முத்துஸாமி கௌண்டர், மதுரை ஸௌராஷ்ட்ரா ஹைஸ்கூல் தமிழ்பண்டிதர் மிஸ்டர் பி. வி. புன்னைவனநாத முதலியார் ஆகிய இவர்களால் இயற்றப்பட்டது. இந்த உரையில் விசேஷமாயுள்ள அம்சங்கள் மூலபாடங்களை ஆராய்ந்து பாடபேதங்களை விளக்கியிருப்பதும், தற்கால நவீன ஆராய்ச்சியுடையவர்களுடைய மதத்தைத் தழுவி நூலாசிரியர்களுடைய வரலாற்றையும் அவர்களிருந்த காலத்தையும் ஆராய்ச்சி செய்து எழுதியிருப்பதுமாம். இந்தப் புஸ்தகம் மாணவர்களுக்கு ரொம்பவும் பயன்படும். இதன் விலை அணு 8. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் இ. எம். கோபாலக்ருஷ்ண கோன் அண்ட் ப்ரதர்ஸுக்கு (புதுமண்டபம், மதுரை) எழுதிபெற்றுக்கொள்ளவும்.

### Ramani.

**ரமணி.**—இது ஒரு இனிய தமிழ் நாவல். சு. அ. சுப்பராயபிள்ளை எழுதியது. கதை வாசிப்பதற்கு ரஸமாயும், நடை தெளிவாயும் ஸுலபமாயும் இருக்கிறது. இதன் விலை அணு 10. வேண்டுவோர் மெஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ் என்று எழுதிப்பெற்றுத் கொள்ளலாம்,



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### The Detoxication of Coffee.

**காப்பியின் விஷகுணத்தைப் போக்குதல்.**—காப்பிக் கொட்டையில் காபீன் என்று ஒரு ஸத்து இருக்கிறது. இதனுல் தான் காப்பி குடிப்பவர்களுக்கு ஊக்கமும் சுறுசுறுப்பும் உண்டாகின்றன. காப்பிக் கொட்டையை வறுக்கும்போது விஷத்தன்மையுள்ள சில பொருள்கள் உண்டாகின்றன. இவைகளும் காப்பித் தூளில் கலந்துகொள்வதால், காப்பிக்கஷாயம் விஷத்தன்மையுடையதாகி அநேகருக்கு குடல்ஸம்பந்தமான நோய்கள் உண்டாகின்றன. இதனுல் அநேகர் காப்பி குடிக்க ப்ரியப்படுவதில்லை. ஸமீபத்தில் சிலர் வறுக்கும்போது காப்பியிலிருந்து உண்டாகும் விஷத்தைப் போக்குவதற்காக சில பரீக்ஷைகள் செய்து பார்த்தார்கள். காப்பி குடிப்பதில் சுறுசுறுப்பும் ஊக்கமும் உண்டாவதற்குக் காரணமாயிருக்கும் 'காபீன்' என்னும் ஸத்தை காப்பியிலே தங்கியிருக்கும்படிக்கும், வறுக்கும் போது உண்டாகும் விஷப்பொருள்களை நீக்கும்படிக்கும் சில யுக்திகள் செய்தார்கள். காப்பிக்கொட்டைகளின்மேல் 'கேயோலின்' என்னும் ஒருவித களிமண்ணைத் தட்வி, பிறகு வறுத்ததில், காப்பிக்கொட்டையிலிருந்து உண்டாகும் விஷத்தன்மையுள்ள எண்ணெய் வகைகளில் பெரும்பாகம் களிமண்ணுல் க்ரஹிக்கப்பட்டுப் போயின. இந்தக் காப்பிக் கொட்டைகளிலிருந்து களிமண்ணை யெடுத்துவிட்டு கஷாயம் செய்து, காப்பி குடித்தால் வயிற்றில் கோளாறுகள் உண்டாகும் 17-பெயர்களுக்குக் கொடுத்ததில் அவர்களுக்கு யாதொரு கெடுதலு முண்டாகவில்லையாம். வேறு 9-பேர்களுக்குக் கொடுத்ததில் ஸாதாரண காப்பியை விட ரொம்ப குறைவாகக் கெடுதலேற்பட்டதாம்.

### Living without Oxygen.

**ப்ராணவாயு இல்லாமல் ஜீவித்திருப்பது.**—ப்ராணவாயு இல்லாவிட்டால் ஜீவராசிகள் ஜீவித்திருக்க முடியாதென்றும், ப்ராணிகள் ச்வாஸம்விடும் கரியமிலவாயுவை மறுபடியும் உட்கொண்டால் மரணம் நேரிடும் என்றும் பலர் வாசித்திருப்பார்கள். ஒரு மேல்நாட்டு ப்ரொபஸர் இந்தக்கொள்கை சரியல்லவென்று ஸாதிக்கிறார். அவர் ஒரு குதிரையை உள்ளே காற்றுப் போகாமல் எல்லாப்பக்கங்களிலும் அடைத்த ஒரு லாயத்தில் அடைத்து வைத்தார். அதற்கு லாயத்தில் கற்கனவே யிருந்த ப்ராணவாயுவைத் தவிர புதிதாக ப்ராணவாயு வெளியிலிருந்து உள்ளே போகவில்லை. குதிரை வெளியில் விட்ட கரியமிலவாயும் அங்கேயே இருந்தது. அப்படியிருந்தும் பலநாள்கள் கழித்து குதிரையை வெளியில் கொண்டுவந்தபோது அது இறவாமல் நல்ல நிலைமையிலிருந்ததாம். இதேமாதிரி இன்னொரு குதிரையையும் அநேக நாள்கள் அடைத்துவைத்தார். அந்தக் குதிரையும் ப்ராணவாயு இல்லாமலிருந்ததோடு, கரியமிலவாயுவைச் ச்வாஸித்துக் கொண்டிருந்தது. இதனுல் குதிரைக்கு யாதொரு கெடுதலும் ஏற்படவில்லையாம்.

### Submarine Photography.

**ஜலத்தின்கீழ் படம்பிடித்தல்.**—ஜலத்தின்கீழ் மீன்களும் மற்ற ஜலராசிகளும் ஓடியாடித்திரிவதை அந்த நிலைமையிலேயே படம்பிடித்து அவைகள் ஓடியாடித்திரிவதுபோலவே ஸினிமாடோக்ராப்பில் காட்டுவதற்கு ஒரு புது புகைப்பட யந்த்ரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதைக் கண்டு பிடித்தவருடைய மகன் ஜலத்தின்கீழ் 12-அடி ஆழத்தில் ஒரு கத்தியை வைத்துக்கொண்டு ஒரு சுறு மீனுடன் சண்டைபோட்டதை அந்தப் பையனுடைய தகப்பனர் புகைப்படமெடுத்தாராம். புகைப்படங்கள் நேர்த்தியாய் விழுந்தனவாம். இவர் கண்டு பிடித்திருக்கும் யந்த்ரம் முற்றிலும் த்ருப்திகரமாயிருக்குமானுல், ஸமுத்ரத்தின் அடியிலுள்ள ஜீவகோடிகளின் வாழ்க்கையைப்பற்றி அநேக விஷயங்கள் தெளிவாகத் தெரியவரும்.

### Seeing Through Walls.

**சுவர்களுக்குப் பின்புறமுள்ளவதைப் பார்த்தல்.**—கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த வில்லியம் மார்க்கோனி யென்பவர் ஒரு நூதன யந்த்ரம் கண்டுபிடித்திருக்கிறார். அந்த யந்த்ரத்தால் ஒருவர் ஒரு செங்கற் சுவருக்குப் பின் இருப்பவைகளை நன்றாய்ப் பார்க்கலாமாம். யந்த்ரத்தை உபயோகிப்பதில் சுவர் இருப்பதும் இல்லாததும் ஒன்றாய்ப் போய்விடுகிறதாம். இப்போது இந்த யந்த்ரத்தால் சுவர்களுக்குப் பின்புறத்தில் சுவரோரமாய் இருப்பவர்கள் நன்றாய்த் தெரிகிறார்களாம். சுவரிலிருந்து எட்டி உட்கார்ந்திருந்தால் அவர்களுடைய ரூபம் நன்றாய்த் தெரிவதில்லையாம். இந்த யந்த்ரத்தை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினால் அநேக கெடுதல்கள் உண்டாகுமென்று எண்ணி அவர் அதன் அமைப்பை வெளியிட இஷ்டப்படாமலிருக்கிறாராம்.

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Treatment of Cholera.

**காலராவுக்கு சிகித்ஸை.**—எந்த விடத்திலாவது காலரா உண்டானால், அங்குள்ள கிணறு குளங்களில் பெர்மாங்கனேட் அப்பொடாஷ் என்னும் மருந்தைப் போட்டு சுத்திசெய்தல் நல்லது. ஏனென்றால் இந்த மருந்தானது ஜலத்திலுள்ள காலரா வ்யாதி க்ருமிகளைக் கொன்று அந்தவ்யாதி பரவுவதைத் தடுத்துவிடுகிறது.

காலரா கண்டவர்களுக்கும் ஷை மருந்தை உள்ளுக்குக் கொடுத்தால் வ்யாதி ஸ்வஸ்தமாகலாம். பம்பாய் கவர்ன்மெண்டார் சென்ற சில வர்ஷங்களாக ஷை மருந்தை பில்லைகளாக ஜனங்களுக்குக் கொடுத்து வந்தார்கள். இந்த மருந்து பில்லையை ஒரு சேர் ஜலத்தில் கரைத்துக் குடிக்கவேண்டியிருந்தது. ஆனால் காலராவ்யாதி கண்டவர் இந்த மருந்தை வாந்தியெடுத்துவிடுவதுண்டானையாலும், மருந்து குடலில் வேலை செய்யவேண்டியிராமல் அடிக்குடலில் பிடிக்கவேண்டியிருப்பதாலும் பம்பாய் கவர்ன்மெண்டார் ஷை மருந்தை மாத்திரைகளாகத் தயார் செய்து உபயோகித்து வருகிறார்கள். காலரா வ்யாதி காணக்கூடிய எல்லாவிடங்களிலும் ஷை மருந்தை வைத்திருந்து வ்யாதி கண்டவுடன் ஜனங்களுக்கு இனாமாகக் கொடுத்துதவ பம்பாய்கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

### Remedy for Piles.

**மூலரோகத்துக்கு சிகித்ஸை.**—தாமரைப்பூவிலுள்ள தாதுக்களை யெடுத்து வெண்ணெயில் குழைத்து நாள்தோறும் காலையில் சிறிதளவு சாப்பிட்டுவந்தால் ரத்தக் கசிவையும் ஆஸனக்கடுப்பையும் நிவ்ருத்தி செய்யும். இந்தமுறை நன்றாக ஸௌக்கியந்தரக்கூடியதென்று தமது அனுபவத்தில் தெரியவருவதாக 'வைத்திய கலா நிதி'யில் ஒரு நிருபர் எழுதுகிறார். அவர் இன்னொரு முறையும் தெரிவிக்கிறார். சேனைக்கிழங்கு 24-பலம், வெங்காயம் 12-பலம், இந்துப்பு 4-பலம் இவற்றை நன்றாக நறுக்கி, ஸுமார் 48-ஆழாக்கு ஜலத்தில் சேர்த்து, ஜலம் முழுமையும் சுண்டிப்போகும் வரையில் காய்ச்சி, அப்பால் 16-பலம் நெய் சேர்த்துத் தடுப்பால் துளாவிக்கொண்டே பக்குவம் செய்யவும்; தேன்போல் அதில் கிறமுண்டானவுடனே இறக்கி, சித்திரமூலப்பொடி 8-பலம், த்ரிபலா சூர்ணம் 6-பலம், தாமரையின் தாதுக்கள் இரண்டுபலம், கற்கண்டுப்பொடி 24-பலம் இவற்றைச் சேர்த்து நன்றாகக் கிளறி, ஆறிய பிறகு 8-பலம் தேனையும் சேர்த்துக் கலக்கவும். இரண்டொரு கழற்சியெடை தினத்திற்கு மூன்று வேளை வீதம் இதை மூன்று மாஸகாலம் உபயோகித்துவந்தால் மூல முளைகள் பெரும்பாலும் அற்றுப்போகும்.

மேற்கூறிய ஔஷதமே உள்மூலம் வெளிமூலம் இரண்டுக்கும் உபயோகப்படும்.

### The Ganges Water.

**கங்கை ஜலம்.**—கங்காநதி இமயமலையில் உற்பத்தியாகி அப்பர்வதத்திலுள்ள பலவிதமான விருக்ஷ மூலிகைகளின் வழியாகவும் பலவித தாதுப்பொருள்களின் வழியாகவும் வருகிறதினால், அந்த ஜலத்தில் ஸகலவித வ்யாதிகளையும் நிவாரணஞ் செய்யும் சக்தி இருக்கிறதென்றும், "ஔஷதம் ஜாந்ஹவிதோயம் வைத்யோ நாராயணோ ஹரிஹி" என்ற ச்லோகம் இந்த விஷயத்தை விளக்கிக் காட்டுகிறதென்றும் ஒரு பத்ரிகை எழுதுகிறது.

அந்த ச்லோகத்திற்கு அர்த்தம், கங்கோதகமே ஔஷதம்; ஸ்ரீமன் நாராயணனே வைத்யர் என்பதாம். இப்பொழுதும் மருந்து சாப்பிடுகிறவர்கள் இந்த ச்லோகத்தைச் சொல்லுவது வழக்கம். ஸமீபத்தில் ஹரித்வாரத்தில் நடந்த கும்பமேளமஹோத்ஸவ காலத்தில் காலரா நோய் பரவிற்று. அந்நோயால் பீடிக்கப்பட்ட ஒருவனுக்கு கங்கைஜலத்தில் இஞ்சிரஸத்தை விட்டுக்கலந்து கொடுத்ததில் அந்நோய் பரிகாரமாயிற்றென்று ஒருவர் இந்தியப்பத்திரிகை ஒன்றுக்கு எழுதியிருக்கிறார். இதனால் கங்கையில் ஜலத்தில் காலராவைப்போன்ற வ்யாதிகளைப் பரிகாரஞ் செய்யும் குணம் இருக்கிறதென்று ஏற்படுகிறது.

### Remedy for Sore Eye.

**கண்வலிக்கு சாந்தி.**—கோழிமுட்டை வெள்ளைக்கருவில் படிகாரத்தைத் தூள் செய்து போட்டு கோழி இறகைக் கொண்டு கடைந்து அதில் வரும் நுரையை கண் புருவத்தில் போட்டுவர குணமாகும். —**விச்வகர்ம குலோபகாரி.**



# LAW.

## சட்டம்.

### Adoption by Widows.

**விதவைகள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது.**—ஒரு ஹிந்து தமது உயிலில் தாம் ஒரு குறிப்பிட்ட பையனை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள சில காரணங்களால் முடியவில்லையென்றும், அந்தப் பையனை தமக்குப் பிறகு தமது மனைவி ஸ்வீகாரமெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கண்டிருந்தார். அந்த ஹிந்து இறந்துபோன பிறகு விதவை குறிப்பிட்ட அந்தப் பையனை ஸ்வீகாரம்செய்துக்கொண்டாள். அந்தப்பையன் இறந்துபோகவே மறுபடியும் வேறொரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். இறந்த ஹிந்து தமது ஸொத்தின் பெரும்பாகம் தமது வம்சத்தைச் சேர்ந்த ஒருவருக்குப் போய்ச் சேரவேண்டுமென்றும், தமது வம்சத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் சில ஸொத்துகள் கொடுக்க வேண்டுமென்று மெண்ணியிருந்ததாக உயிலால் வ்யக்தமாய்த் தெரிகிறது. மேலும் அவர் தமது மனைவி இரண்டாவது தடவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று சொல்வதற்கு உயிலில் ஒரு ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை. விதவைக்கு இரண்டாவது தடவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அதிகாரம் இல்லையென்றால், உயிலெழுதினவரின் நோக்கம் நிறைவேறுவதற்கில்லாமல் போகிறது. ஆகையால் இரண்டாவது தடவை ஸ்வீகாரம் செய்தது சட்டப்படி ந்யாயமானது.—2 லா வீக்லி 562.

### Widows and Management of Charity.

**விதவைகளும் தர்மங்களின் நிர்வாகமும்**—ஒருவர் ஒரு தர்மம் ஏற்படுத்திவிட்டு இறந்துபோனார். அவருடைய புத்ரர்கள் பாகம் செய்துகொண்டபோது, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பிரிவுகளின் தலைவர்களில் அவ்வப்போது யார் பெரியவரோ அவர் ஷை தர்மத்தை நிர்வகித்து வரவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டார்கள். பாகமான பிறகு புத்ரர்களில் ஒருவர் இறந்துபோனார். இறந்த புத்ரரின் மனைவி குடும்பத்தின் தலைவரல்லவாதலால், அவள் மேற்சொன்ன தர்மத்தை நிர்வகிக்க பாத்யமுள்ளவளல்ல.

### Mortgage.

**அடைமானம்**—எ. என்பவர் பி. என்பவரிடமிருந்து சில ஸ்தாவர ஸொத்துக்களை அடைமானத்துக்கு வாங்கியிருந்தார். பிறகு எ. என்பவர் அடைமான பத்ரத்தை ஸி. என்பவருக்கு மேடோவர் செய்தார். ஸி என்பவர் அடைமானத்தைத் திருப்புவதற்காக பி. என்பவர் மேல்வ்யாஜ்யம் போட்டார். ஆனால் பி. என்பருக்கு அடமானம் வைத்த ஸொத்தில் பாத்யதையில்லையென்று ஏற்படவே வ்யாஜ்யம் தள்ளுபடியாயிற்று. ஸி. என்பவர் எ. என்பவர்மேல் மேடோவர் பத்ரத்தின்மேல் ஸொத்துக்கள் தம்முடையதென்று வ்யாஜ்யம் போட்டால் அந்த வ்யாஜ்யம் செல்லாது.

### Execution for Possession and Mesne Profits.

**ஸொத்து ஸ்வாதீனத்துக்கும் மத்யகாலத்துக்குள்ள வரும்படிக்கும் நிறைவேற்று மனுப்போடுதல்.**—ஸ்தாவர ஸொத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவும் மத்யகாலத்துக்குள்ள வரும்படியை வஸூலித்துக்கொள்ளவும் டிக்ரீ வாங்கியிருக்கும் ஒருவர் முதலில் ஸொத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவும், பிறகு வரும்படியை வஸூலித்துக் கொள்ளவும் தனித்தனியாகவெவ்வேறு காலங்களில் நிறைவேற்று மனுப்போடலாம்.—2 லா வீக்லி 688.

### Right to Use River Water.

**நதி ஜலத்தை உபயோகிக்க பாத்யதை.**—வாதி பாலாறு நதியில் ஊற்றுப் பறித்து ஒரு புறம் போக்குக் கால்வாயின் மூலமாக ப்ரதிவாதியின் நிலங்கள் வழியாய் வாதியினுடைய ஊருக்கு ஸொந்தமான குளத்துக்கு ஜலம் கொண்டுபோகும் பாத்யதையை 30 வர்ஷ காலமாக அனுபவிக்காமலிருந்து வந்தாலும் அவருடைய பாத்யதை போய்விடாது. ஷை ஜலத்தைப் ப்ராத்யேகமாய் அனுபவிக்க கவர்ன்மெண்டார் ப்ரதிவாதிக்கு அனுமதி கொடுத்திருந்தாலொழிய ப்ரதிவாதிகள் வாதி வாய்க்கால் வழியாக ஜலங்கொண்டுபோவதை தடுக்கக்கூடாது.

### Guardianship.

**கார்டியன்ஷிப்.**—ஒரு மைனருடைய தகப்பனார் உயிருடனிருக்கும்போது, கோர்ட்டார், அந்தத் தகப்பனார் கார்டியனாயிருப்பதற்குலாயக்கில்லையென்று அபிப்ராயப்பட்டாலொழிய கார்டியன்ஸ் அண்ட் வார்ட்ஸ் ஆக்ட் 19-வது ஸெக்ஷன்படி வேறொருவரை மைனருக்கு கார்டியனாக நியமிக்கக்கூடாது.— 2. லா வீக்லி 531.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Hon. Mr. Surendra Nath Bannerji.

**ஆனரபிள் மிஸ்டர் ஸுரேந்ர நாத் பானர்ஜி:**—சென்ற ஜுலை மாஸம் 5-ந்தேதி யன்று அமெரிக்காவிலுள்ள ஸான்ப்ரான்ஸிஸ்கோ பட்டணத்தில் ஸர்வ தேச பத்ரிகா காங்க்ரெஸ் நடந்தது. அதற்கு ஆனரபிள் மிஸ்டர் ஸுரேந்த்ர நாத் பானர்ஜி ஒரு ப்ரதிநிதியாகப் போவதாயிருந்தார். ஆனால் சில அஸந்தர்ப்பங்களை முன்னிட்டுப் போகமுடியவில்லை. இப்போது அந்த பத்ரிகைக் காங்க்ரெஸ் மிஸ்டர் பனர்ஜியை ஒரு வைஸ்- ப்ரெஸிடெண்ட் அதாவது உப அக்ராஸனாதிபதியாகத் தெரிந்தெடுத்திருக்கிறதென்று தெரிகிறது. இது மிஸ்டர் பானர்ஜிக்கு ஒரு கௌரவமாகும். மேற்சொன்ன காங்க்ரெஸ் அடுத்த வர்ஷம் ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஸிட்னி யென்னும் பட்டணத்தில் கூடும்.

மிஸ்டர் ஸுரேந்த்ர நாத் பானர்ஜி 1848-ம்வர்ஷம் ஜனனமானார். 1868-ம் வர்ஷம் பி. எ. பரீக்ஷையில் தேறினார். 1871-ம்வர்ஷம் முதல் 1874-ம் வரையில் ஸர்க்கார் உத்யோகத்தில் அமர்ந்திருந்தார். அதன் பிறகு கல்வி ஸம்பந்தமாகவும், பொதுஜன அபிவ்ருத்தி ஸம்பந்தமாகவும் ஜனசார சீர்திருத்த ஸம்பந்தமாகவும், பாடுபட்டுவந்தார். அவர் பெங்காலி பத்ரிகையை 1879-ம் வர்ஷம் முதல் நடத்திவருகிறார். அவர் காங்க்ரெஸுக்கு இரண்டு தடவை ப்ரெஸிடெண்டாக இருந்தார். இப்போது வைஸ்ராயின் சட்டஸபையில் மெம்பராக இருக்கிறார். ஆகவே இவர் பொதுஜன விஷயங்களில் ஊக்கமெடுத்து 40-வர்ஷங்களாகிறது. மிஸ்டர் ஸுரேந்த்ர நாத் பனர்ஜி தமது 40-வர்ஷத்திய அனுபோகங்களை புஸ்தக ரூபமாக வெளியிட உத்தேசித்திருக்கிறார். இந்தப்புஸ்தகம் அடுத்த வர்ஷம் வெளியாகுமாம்.

### The Chief of Jamkhandi.

**ஜம்கந்தி ஸமஸ்தானத்தின் அரசர்:**—பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த ஜம்கந்தி ஸமஸ்தானத்து சிற்றரசராகிய பரசுராம் ராவ் ராமச்சந்த்ரராவ் என்பவர் போர்முனைக்குப்போக ப்ரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறாரென்று தெரிகிறது. தாம் வெளியில் போயிருக்கு மளவும் தமது ஸமஸ்தானத்து வேலைகளை கவனித்து வருவதற்காக சில ப்ரமுகர்களைச் சேர்த்து ஒரு கௌன்ஸில் அதாவது ஸபை ஏற்படுத்தியிருக்கிறாராம். அவர் போர்முனைக்குப்போவதாகிய விசேஷ ஸம்பவத்தை முன்னிட்டு தமது ஸமஸ்தானத்திலுள்ள ஜனங்களுக்கு சில முக்யமான நன்மைகள் செய்து கொடுத்திருக்கிறாராம்.

ஜமகந்தியின் தலைவர் ஒரு உயர்ந்த ப்ராமண வம்சத்தைச் சேர்ந்தவர். அவர்தான் போர்முனைக்குப்போக முன்வந்த முதல் ப்ராமண அரசராகும்.

### The Czar's Wealth.

**ஸாரினுடைய ஐச்வர்யம்.**—ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய ஸார் நிகோலாஸுக்கு ஏராளமான ஐச்வர்யமிருக்கிறதாம். இவ்வளவு ஸொத்து இருக்கிறதென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல அவருக்கே தெரியாதென்று சொல்லலாமாம். அவர் தரித்துக்கொள்ளும் கிரீடத்திலும் அவருடைய உடுப்பிலுமுள்ள ரத்னங்களை லக்ஷக்கணக்கில்தான் மதிப்பிட முடியுமாம். அவருடைய செங்கோலில் ஒரு பெரிய வைரமிருக்கிறது. அதைப்போல் பெரிய வைரம் உலகத்திலெங்கும் கிடையாது. அதன் மதிப்பு மாத்ரம் 50-லக்ஷம் ரூபாயாகுமாம். அவருக்கு 100 உயர்ந்த அரண்மனைகள் இருக்கின்றன.

அவருடைய ஸொத்துக்களிலிருந்து வர்ஷந்தோறும் ஏராளமாக வரும்படி கிடைத்து வருகிறதாம். அவருக்கு அநேக தங்கச்சுரங்கங்களும், வெள்ளிச் சுரங்கங்களும், வைடூர்யம் முதலிய ரத்னங்கள் அகப்படும் சுரங்கங்களும், ஸலவைக்கல் சுரங்கங்களும், கருங்கல் சுரங்கங்களும் இருக்கின்றன. அநேக தொழில் சாலைகள் இருக்கின்றன. அவருக்கு ஆயிரக்கணக்கான ஏக்கரா விஸ்தீரணமுள்ள ஸாகுபடி நிலங்கள் இருக்கின்றன.

### The Maharaja of Darbangha.

**தர்பங்கா மஹாராஜா:**—தர்பங்கா மஹாராஜா ஹிந்து யூனிவர்ஸிட்டி (ஸர்வ கலாசாலை)க்கு 1-லக்ஷம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார் ஏற்கனவே 3-லக்ஷம் ரூபாய் கொடுத்திருப்பதால் அவர் கொடுத்திருக்கும் மொத்த தொகை ரூ. 4-லக்ஷமாகும். ஸர்வ கலாசாலைக் கட்டிடத்தில் ஒரு தேவி ஆலயம் கட்டுவதற்கு அவர் இன்னொருலக்ஷம்ரூபாய் கொடுப்பாராம்.



# SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### A Gold Palanquin.

**ஒரு தங்கப்பல்லாக்கு.**—தென்கன்னடத்தில் உடுப்பி என்ற வைஷ்ணவ க்ஷேத்ரம் ஒன்று இருக்கிறது. 800 வருஷங்களுக்கு முந்தி மத்வமத ஸ்தாபனாச்சாரியரான ஸ்ரீமத் மத்வாச்சாரியரால் ஸ்ரீ க்ருஷ்ண சிலா ப்ரதிமை யொன்று அந்த உடுப்பியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த தேவ ஆலயத்திற்கு வருஷத்திற்குப் பல்லாயிரம் ரூபாய் வரும்படி வரும் பலபூமிகள் இருக்கின்றன. அந்த க்ஷேத்ரத்தைச் சுற்றியுள்ள 8 க்ராமங்களில் 8 மடங்கள் இருக்கின்றன. அந்த மடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பால ஸந்யாஸி இருக்கிறார். அவர்களில் ஒவ்வொருவரும் முறையே இரண்டு வர்ஷகாலம் உடுப்பியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ க்ருஷ்ண ப்ரதிமைக்கு பூஜை செய்து வரவேண்டுமென்றும், 2 வருஷம் கழிந்த பிறகு மற்றொரு மடாதிபதியின் வசம் அந்த பூஜை கார்யங்களை ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் செய்திருக்கும் ஏற்பாடு சென்ற 800 வருஷ காலமாக நடந்தவருகிறது அவ்வெட்டு மடங்களில் க்ருஷ்ணபுரம் மடம் என்ற ஒரு மடமுண்டு. அந்த மடத்தைச் சேர்ந்த மடாதிபதி உடுப்பியிலிருக்கும் ஸ்ரீக்ருஷ்ண உத்ஸவ ப்ரதிமைக்கு 50,000 ரூபாய் செலவு செய்து ஒரு தங்கப் பல்லக்கை செய்து வைப்பதற்காக, பணத்தை வஸூல் செய்துகொண்டிருக்கிறார். இந்தியாவின் பலபாகங்களிலுள்ள உதார குணமுள்ள ப்ராமணர்களிடமிருந்து பணம் குவிந்து கொண்டிருக்கிறது. பல்லக்குவேலை ஆரம்பமாய் விட்டதாம்.

### Dowry System among Brahmos.

**ப்ரும்ம ஸமாஜத்தார்களுக்குள் வரதக்ஷிணை வழக்கம்.**—பால்ய விவாகத்தைத் தள்ளி, கடல் யாத்ரை ஸமபந்தி போஜனம், அன்யஜாதிகளுள் கல்யாணம் செய்தல், விதவா விவாகம் செய்தல் முதலிய ஏற்பாடுகளை அனுஷ்டித்து வரும் ப்ரும்ம ஸமாஜத்தார்களுக்குள்ளும் வரதக்ஷிணை வழக்கம் இருந்து வருகிறதாகத் தெரிகிறது. ப்ரும்ம ஸமாஜத்தின் அபிவ்ருத்திக்காகப் பாடுபடுவர்களும் வரதக்ஷிணை வாங்குகிறார்களாம். ஆனால் வரதக்ஷிணை யென்று சொல்லாமல் பையன்களை படிப்புக்கு இங்லண்டுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் அதற்காக இவ்வளவு தொகை வேண்டுமென்று கேட்கிறார்களாம். இப்படிப் புதுமாதிரியாய் பணம் கேட்கும் வழக்கம் ரொம்பவும் வேகமாய் பரவி வருகிறதாம்.

### Depressed Classes Mission.

**தாழ்ந்த ஜாதியார்களை உயர்த்தும் ஸங்கம்.**—பம்பாயிலுள்ள தாழ்ந்த ஜாதியார்களை உயர்த்தும் ஸங்கத்துக்கு பெரிய பட்டணங்களிலுள்ள தனவான்களும் வ்யாபாரிகளும் வேண்டிய அளவு பணவுதவி செய்வதில்லையென்று தெரிகிறது. அநேகர் வாய்ப்பேச்சோடு நிற்கிறார்களே தவிர கார்யாம்சத்தில் பின் வாங்குகிறார்களென்று சொல்லப்படுகிறது. சென்னையிலுள்ள தாழ்ந்த ஜாதியை உயர்த்தும் ஸங்கத்துக்கும் போதுமான பணவுதவி கிடைப்பதில்லையென்று தெரிகிறது சென்ற 1914-ம் வர்ஷத்தில் சென்னை ஸங்கத்துக்கு 959 ரூபாய் தான் வஸூலாயிற்று. இந்தத் தொகையும் ஸர் சங்கரன் நாயர் இந்த ஸங்கத்தில் சேர்ந்திருப்பதனால் கிடைத்ததென்றும். அவர் சேர்ந்திராவிட்டால் இந்தத் தொகையாவது கிடைத்திருக்குமென்பது ஸந்தேகமென்றும் ஒரு பத்ரிகை எழுதுகிறது.

### A Widow's Home in Bombay.

**பம்பாயில் ஒருவிதவாச்ரமம்.**—பம்பாய் ராஜதானி ஜனசார சீர்திருத்த ஸங்கத்தார் பம்பாயில் ஒருவிதவாச்ரமம் ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இதன் நோக்கம் விதவைகளை ஆதரித்து, அவர்களுக்குக் கல்வி கற்பித்து, அவர்களில் புனர்விவாகம் செய்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொடுப்பதே. இந்த ஆச்ரமம் பரீக்ஷார்த்தமாக ஒரு குறிப்பிட்ட காலத்துக்குமாத்ரம் நடந்துவரும். ஷை ஸங்கத்தார் இதன் செலவுக்கு 2000 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இன்னும் வேண்டியிருக்கும் 3000 ரூபாயை ஷை ஸங்கத்தார் பம்பாயிலுள்ள ஜனசார சீர்திருத்தக்காரர்களிடமிருந்து வஸூல் செய்வார்களாம்.

### Nairs.

**நாயர்கள்.**—மலையாளத்திலுள்ள நாயர்கள் என்னும் ஜாதியார்கள் சூத்ரர்களல்ல வென்றும், ஸென்ஸஸ் ரிபோர்ட்டிலும் (ஜன ஸங்க்யை ரிபோர்ட்), வ்யவஹாரங்களிலும் அ[illegible] சூத்ரர்களென்று எழுதப்படுவது பிசகென்றும், அவர்கள் க்ஷத்ரியர்களென்றும் ஒருபுதுக் கொள்கை உண்டாயிருக்கிறது,

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Preserving Eggs.

**முட்டைகளைக் கெடாமல் பத்ரப்படுத்துதல்.**—முட்டைகளைக் கெடாமல் பத்ரப்படுத்தும் முறைகளின் முக்ய நோக்கம் வெளியிலுள்ள காற்று முட்டைக்குள் போகாதபடி தடுப்பதே. இப்படிச் செய்வதனால் மாத்ரம் முட்டைகள் கெடமாட்டா என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால் முட்டைகள் அழுகுவதற்குக் காரணமான அம்சங்கள் முட்டையோட்டின் த்வாரங்களில் ஏற்கனவே இருக்கின்றன.

பின்வரும் முறை ரொம்ப ச்லாக்யமானதென்று சொல்லப்படுகிறது. முதலில் முட்டைகளை நன்றாய்ப் பரிசோதித்து உடைந்த அல்லது விரிந்த முட்டைகளை தள்ளிவிட வேண்டும். பிறகு தெரிந்தெடுத்த முட்டைகளை பாரனேட் தர்மாமிட்டர்படி 95-டிக்ரிகளுள்ள ஜலத்தில் 15-நிமிஷம் வைத்திருக்கவேண்டும். 15-நிமிஷமானதும் முட்டைகளை வெளியிலெடுத்து ம்ருதுவான துணியால் நன்றாய்த் தேய்த்து அவைகளின்மேல் இருக்கக்கூடிய தூசிகளைத் துடைக்கவேண்டும். பிறகு அவைகளை ஒரு சல்லடையில் வைத்து, கொதித்துக் கொண்டிருக்கும் ஜலத்தில் 4 அல்லது 5-செகண்டுகள் அமிழ்த்தி யெடுத்து, உடனே குளிர்ந்த ஜலத்தில் அமிழ்த்திக் குளிரச் செய்து, அவைகளைத் துணியின் மேல் வைத்து காற்றில் உலரச் செய்யவேண்டும். இப்போது அவைகளை துணியால் தேய்த்து உலர்த்தக் கூடாது. அவைகளின் ஈரம் தானாகக் காயவேண்டும். முட்டைகள் காய்ந்தபிறகு பெட்டிகளின் அடியில் உமி, சிறு துண்டுகளாக நறுக்கின வைக்கோல், பழைய கயிறுகளைப் பிரித்தெடுத்த நார் முதலியவைகளைப்போட்டு அதன்மேல் முட்டைகளை வைத்து மேலே உமியகையறுக்களைப்போட்டு மூடி, பெட்டிகளை குளிர்ச்சியானதும் உலர்ந்ததுமான இடத்தில் வைக்கவேண்டும். உமி, வைக்கோல் முதலியவைகள் நன்றாய்க் காய்ந்திருக்கவேண்டும்.

முட்டைகளைக் கொதிக்கும் ஜலத்தில் 5-செகண்ட் நேரம் வைப்பதால் முட்டைகளிலுள்ள பூஞ்சண க்ருமிகளும், பாக்டீரியாக்களும் நாசமடைந்து போகின்றன. ஜலம் ரொம்ப சூடாயிருப்பதால், முட்டைகளின் ஓட்டோரமாயுள்ள மெல்லியதோல் கெட்டியாகி ஓட்டுடன் ஒட்டிக்கொண்டு, ஓட்டிலுள்ள த்வாரங்களை அடைத்துவிடுகிறது. அதனால் முட்டையிலுள்ள சருக்கள் கெடாமல் காப்பாற்றப்படுகின்றன. இந்த முறையில் ச்ரமமான பாகமெல்லாம் என்னவென்றால், முட்டைகளை நாலைந்து செகண்டுகளுக்கு மேற்படாமல் கொதிக்கும் ஜலத்தில் அமிழ்த்திவைப்பதும், உமி வைக்கோல் முதலியவைகள் முற்றிலும் உலர்ந்தவைகளாயிருக்கின்றனவா என்று பார்ப்பதுமே. 5 செக்கெண்டுகளுக்குமேல் முட்டைகளைக் கொதிக்கும் ஜலத்தில் வைத்திருந்தால் தோலின் ஓரமாயுள்ள வெண்கரு கெட்டியாய்ப்போவதோடு, முட்டையிலுள்ள பூஞ்சண க்ருமிகள் சாவதில்லையாம். ஆகவே வெந்நீரில் அமிழ்த்தியெடுக்கவேண்டிய நேரத்தைப்பற்றி ரொம்ப ஜாக்ரதையாயிருக்க வேண்டும். இந்த முறை ஸுலபமாயும் செலவில்லாதாயும் இருப்பதால் விவேகமுள்ள எவரும் கைக்கொள்ளலாம். இந்தமுறையில் பத்ரப்படுத்தின முட்டைகள் கெடாமலும், நன்றாயுமிருப்பதோடு, புதிதாக இட்ட முட்டைகளுக்கும் இவற்றிற்கும் ருசியிலாகட்டும், வாஸனையிலாகட்டும் வித்யாஸமே தெரிவதில்லையாம்.

### To Remove a Bottle Label.

**ஸீஸாவில் ஒட்டியிருக்கும் சீட்டையெடுக்க.**—ஸீஸாவில் ஒட்டியிருக்கும் சீட்டையெடுக்க வேண்டுமானால் சீட்டின் மேல் ஜலத்தைத் தடவி ஈரமாக்கி விளக்கு நெருப்பில் சிறிது நேரம் காட்டினால் சீட்டின் மேலிருக்கும் ஈரம் ஆவியாகி கடுதாசியின் வழியாய் சீட்டு ஒட்டியிருக்கும் பசையை இளக்கச் செய்து விடும். பிறகு சீட்டை ஸுலபமாய் எடுத்து விடலாம்.

### To Get Pure Silver.

**சுத்த வெள்ளியை பிரித்தெடுத்தல்:**-வெள்ளியை நைட்ரிக் ஆஸிட்டில் அதாவது அக்னி த்ராவகத்தில் கரைத்துக்கொண்டு, உப்பு தண்ணீர்விட அடியில் வெண்மையாகத் தயிர்போல் நிற்கும். இதைக் தண்ணீரில் இருப்பு பாத்ரத்தில் கொதிக்கவிட்டு வடிகட்டி, நல்ல தண்ணீரில் கழுவி உலர்த்த சுத்தவெள்ளி கிடைக்கிறது.—விச்வகர்ம குலோபகாரி.

### Glycerine.

**க்ளிஸரைன்.**—சிலருக்கு உள்ளங்கால்களிலும் உள்ளங்கைகளிலும் எப்பொழுதுமே வியர்வை விசேஷமாகக் கசிவதுண்டு. சுத்தமான க்ளிஸரைன் என்னும் மருந்தை அவ்விடங்களில் தடவி வந்தால், அருவருப்பைத்தரும் அவ்வியர்வை உண்டாகாமல் நின்றுவிடும்.—வைத்தியகலாநிதி.



## AGRICULTURE.

## விவஸாயம்.

### Sowing Groundnuts.

**வேர்க்கடலையை விதைப்பது.**—வேர்க்கடலையை விதைப்பதில் ஒரு விதைக்கும் இன்னொரு விதைக்கும் எவ்வளவு தூரமிருந்தால் ரொம்ப நல்லதென்பதை நிர்ணயிப்பதற்காக வடக்கே அலிகார் என்னுமிடத்திலுள்ள விவஸாயப்பண்ணையில் ஒரு பரீக்ஷை செய்து பார்த்தார்கள். ஒரு ஏக்கரில் பத்தில் ஒருபாகம் விஸ்தீரணமுள்ள நான்கு பாத்திகளைத் தெரிந்தெடுத்து அதில் விதைகளை வரிசை வரிசையாகப் போட்டார்கள். ஒரு வரிசைக்கும் இன்னொரு வரிசைக்கும் உள்ள தூரம் முதல் பாத்தியில் 1½-அடியாகவும், இரண்டாவது பாத்தியில் 2 அடிதூரமாகவும், 3-வது பாத்தியில் 2½-அடி தூரமாகவும், 4-வது பாத்தியில் 3-அடி தூரமாகவும் இருந்தது. எல்லாப் பாத்திகளிலும் ஒவ்வொரு வரிசையிலும், ஒரு விதைக்கும் இன்னொரு விதைக்கும் உள்ள தூரம் 6-அங்குலமாகும்.

அந்தப் பாத்திகளில் கிடைத்த மாஸூல் ஏக்கருக்கு இவ்வளவு வீதமென்பதை அடியில் கண்ட அட்டவணையில் காட்டியிருக்கிறோம்.

| பாத்திகளில் வரிசைகளுக் கிடையிலுள்ள தூரம். | | மாசூல் ஏக்கருக்கு எவ்வளவு என்பது. | |
|---|---|---|---|
| | | மணங்கு. | சேர். |
| 1. | 1½ அடி ... | 20 | 2 |
| 2. | 2 அடி ... | 16 | 15 |
| 3. | 2½ அடி ... | 22 | 22 |
| 4. | 3 அடி ... | 14 | 25 |

குறிப்பு.—ஒரு மணங்கு என்பது 80-தோலாக்கொண்ட 40 சேராகும்.

### Cultivating Plantain for Leaves.

**இலைக்காக வாழை ஸாகுபடிசெய்தல்.**—தஞ்சாவூருக்கும் திருவையாறுக்கும் மத்தியில் திருப்பூந்துருத்திக்குப் பக்கத்தில் விவஸாயிகள் இலைக்காகவென்றே வாழை ஸாகுபடி செய்கிறார்களென்று 'சுதேசமித்திர'னில் மிஸ்டர் அ. ஸேதுராமய்யர் எழுதுகிறார். அங்கே நிலங்களில் 6 அடிக்கு ஒன்றாக வாழைக் கன்றுகளைப் புதைக்கிறார்கள். ஒருதரம்போட்ட வாழை நிலத்தில் ஒரு வர்ஷந்தான் நிற்கிறது. அடுத்தவர்ஷம் அதை யழித்துப் புதிதாகக் கன்றுகளை நடுகிறார்கள். ஒருவாழையில் பக்கக்கன்றுகளிலிருந்து 100 இலைகள் கிடைக்கின்றனவாம். பட்டணங்களில் இலை நூறு 10-அணா முதல் ரூபா 1—8—0 வரையில் விலைபோகும். சராசரியில் 100-இலைக்கு 12-அணா கிடைக்கிறதென்று வைத்துக்கொள்ளலாம். தாய் வாழைமாத்ரம் தார் போடும். இது சராசரியில் நாலணா வீதம் விற்கும். ஆக 1-வாழைக்கு 1-ரூபாய் கிடைக்கிறது. ஆறடிக்கு ஒன்றாகக்கன்றுகளை நடுவதால் ஏக்கர் 1-க்கு 1000-வாழைக்குக் குறையாது. அதாவது மொத்த வரும்படி ரூ. 1000. செலவெல்லாம் போக ரூ. 500-கிடைக்கும். பட்டணங்களுக்குப் பக்கத்திலுள்ள நிலங்களில் வாழையை பழத்துக்காக ஸாகுபடி செய்வதைவிட இலைக்காக ஸாகுபடி செய்வது நல்லதென்று தோன்றுகிறதென மிஸ்டர் ஸேதுராமய்யர் எழுதுகிறார்.

### Harvesting Tobacco Leaves.

**புகையிலையைப் பறித்தல்.**—புகையிலையை அறுவடை செய்வதைப்பற்றி ஜாவாதீவில் சில பரீக்ஷைகள் செய்ததில் இலைகளை காலை நேரத்தில் பறிப்பதே உத்தமமென்று தெரிகிறது. செடியின் அடிப்பாகத்திலுள்ள இலைகளை ஒவ்வொன்றாகப் பறிப்பது நல்லதாம். ஆனால் மழை யதிகமாக உள்ள வர்ஷங்களில் செடிகளிலுள்ள இலைகள் முழுவதையும் ஒரே காலத்தில் பறிப்பது நல்லது. மேல் பாகத்திலுள்ள இலைகள் சரியாய் முற்றியிருக்கும்போது அடியிலுள்ள இலைகள் ரொம்ப முற்றியிருக்கும். அடி இலைகள் ரொம்ப முற்றியிருப்பதால் அவைகளைப் பதப் படுத்துவது ஸௌகர்யமாயிருக்கிறதாம்.

### Sugar Cane.

**கரும்பு.**—கரும்பு முளைக்காமலிருப்பதற்கு அநேக காரணங்களுண்டு: அவையாவன:

(1) கரும்புக் கரணைகள் ஜாஸ்தி முற்றிவிட்டால் அதன் முளைகள் நன்றாய் முளைக்கா.

(2) முளைகள் சற்று சேதப்பட்டிருந்தாலும், வண்டி முதலியவைகளில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு போகிறபோது வண்டிகளில் முளைகள் உராசி கெட்டுப்போனாலும் முளைக்கமாட்டா.

(3) கரணைகளை ஆழத்தில் போட்டு அல்லது நட்டு விட்டாலும் முளைக்கா.

(4) நட்டபின் தண்ணீர் ஜாஸ்தி விட்டு விட்டாலும், அதிக மழை பெய்தாலும் முளைக்கா.—கிருஷிகன்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Co-operative Dye Manufacture.

**கோவாபரேஷன் முறையில் சாயங்கள் தயார் செய்தல்.**—சென்னை ராஜதானியில் கடப்பை அவுரியிலிருந்து நல்ல நீலம் கிடைத்துவந்தது. ஒரு எக்கர் நிலத்தில் அவுரி ஸாகுபடிசெய்தால் 2-மணங்கு சாயம் கிடைத்தது. இதன்விலை 100-ரூபாயாகும். சிலவர்ஷங்களாக ஜெர்மனியிலிருந்து செயற்கைச்சாயம் வந்ததால், நாட்டுச்சாயத் தொழில் க்ஷீணித்துப்போய் விட்டது. ஜெர்மனியின் சாயப்போட்டியால் அவுரிச்சாயத்துக்கு விலை குறைந்துபோய், அவுரி ஸாகுபடியும் குறைந்து போய்விட்டது.

யுத்தத்தினால் ஜெர்மனியிலிருந்து சாயம் வருவது நின்றுபோய்விட்டதனால், சாயத்துக்கு விலையேறிவிட்டது. சாயக்குறைவை நிவர்த்திசெய்வதற்கு விவஸாயிகள் வேர்க்கடலை ஸாகுபடிசெய்தவிடங்களில் அவுரியை ஸாகுபடிசெய்ய முன்வரவேண்டும். க்ராமங்களில் அவுரி ஸாகுபடி அதிகரிக்குமானால், அவுரிச்சாயம் தயார்செய்ய சாயத்தொட்டிகள் முதலியவைகள் தயார் செய்யவேண்டும். இந்த வேலைகளை விவஸாயிகள் கோவாபரேஷன் முறையில் செய்து கொள்ளலாமென்று நீடாமங்கலம் ராவ் ஸாஹிப் அ. ஸேதுராமய்யர் ஒரு பத்ரிகைக்கு எழுதுகிறார். இந்த வேலைகளுக்கு ஸுமார் 1000 ரூபாய் பிடிக்குமாகையால், க்ராமங்களில் குறைந்தது 10-அவுரி ஸாகுபடிக்காரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபித்து, 1000 - ரூபாய்க்குப் பங்குகள் எடுத்து, அந்தப் பங்கு மூலதனத்தைக் கொண்டு, மேற்சொன்ன தொட்டிகள், கிணறுகள், கொட்டகைகள் முதலியவை போட்டுக்கொள்ளலாம். ஒரு எக்கரிலிருந்து 12000-ராத்தல் அவுரி இலைகள் கிடைக்கும். விவஸாயிகள் தங்கள் வயல்களில் கிடைக்கும் அவுரி இலையை சேகரித்து பத்ரமாக வைத்திருந்தால், ஸௌகர்யமானபோது ஒவ்வொருவராய் இலையை தொட்டிகளில் போட்டு வேலை செய்து சாயமெடுத்துக்கொள்ளலாம். தற்போது நீலத்துக்கு விலையேறி விற்பதால் ஐக்ய முறையால் தக்க லாபம் கிடைக்கலாம்.

## Co-operative Land Renting.

**ஐக்ய முறையில் நிலம் வாடகைக்கு வாங்குதல்.**—இங்க்லண்டில் அநேக இடங்களில் நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி மெம்பர்களுக்குக் கொடுப்பதற்காக அநேக கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஸங்கங்கள் நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி தங்களுடைய மெம்பர்களில் யாருக்கு நிலங்கள் குத்தகைக்கு வேண்டுமோ அவர்களுக்கு சிறு சிறு நிலங்களாக உள்குத்தகைக்கு விடுகின்றன. வேறு சில இடங்களில் ஸங்கங்கள் தங்கள் மெம்பர்கள் எல்லாருக்கும் வேண்டியிருக்கும் நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி மெம்பர்களுக்குள் பிரித்துக் கொள்ளுகின்றன.

சிலவிடங்களில் ஸங்கங்கள் மேய்ச்சல் நிலமொன்றை ஸங்கத்தின் ஸொந்தப்பொறுப்பில் குத்தகைக்கு வாங்கிக் கொள்ளுகின்றன. ஸங்கங்களின் மெம்பர்கள் தங்கள் கால் நடைகளை ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட வரி செலுத்தி ஸங்கத்தின் பொது நிலத்தில் மேய்க்கிறார்கள்.

கோவாபரேஷன் முறையில் நிலங்களை குத்தகைக்கு வாங்குமிடங்களில் அநேகமாய் மற்ற கோவாபரேஷன் ஏற்பாடுகளும் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன. உதாரணமாய் ஸங்கங்கள் விவஸாயக் கருவிகளைப் பொதுவில் வாங்கிவைத்து மெம்பர்களுக்குக் கொடுத்து உதவுகின்றன.

ராக்ஸ்டன் என்னும் ஊரிலுள்ள கோவாபரெடிவ் ஸங்கத்தார் குதிரைகளையும் விவஸாயக் கருவிகளையும் ஸங்கத்தின் செலவில் வாங்கிவைத்து மெம்பர்களுக்கு வாடகைக்கு விடுகிறார்கள். இன்னும், இந்த ஸங்கத்தார் ஒரு வேலையாளை ஒரு குறிப்பிட்ட சம்பளத்துக்கு வேலைக்கு அமர்த்திக்கொண்டு, மெம்பர்களுக்கு வேலை செய்ய அனுப்புகிறார்கள். இன்னின்ன வேலைக்கு இன்னின்ன கூலி யென்று ஸங்கத்தார் ஒரு ஜாப்தா ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த விதப்படி மெம்பர்கள் ஸங்கத்துக்கு கூலியைச் செலுத்தி வேலையாளை வேலைக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

சென்ற 1913-ம் வர்ஷத்தில் இங்க்லண்டிலும் வேல்ஸிலும் நிலம் குத்தகைக்கு வாங்கும் ஸங்கங்கள் 191 இருந்தன. அவைகளில் 14,117-மெம்பர்கள் இருந்தார்கள். இந்த ஸங்கங்கள் ஸ்தலஸ்தாபனங்களிலிருந்து 8105-ஏக்கரும் மற்ற நிலஸ்வான்களிடமிருந்து 5345-ஏக்கரும் குத்தகைக்கு எடுத்துக்கொண்டன.



# COMMERCE.

# வ்யாபாரம்.

## A Commercial Museum at Calcutta.

**கல்கத்தாவில் ஒரு வ்யாபாரப் பொருள்காட்சி சாலை.**—சில மாஸங்களுக்கு முன்னால் இந்தியா கவர்ன்மெண்டின் வ்யாபார டிபார்ட்மெண்டார் ஜெர்மனியிலிருந்தும் ஆஸ்ட்ரியாவிலிருந்தும் வரும் ஸாமான்களின் மாதிரிகளையும், அந்த ஸாமான்களில் எவையாவது இந்தியாவில் செய்யப்பட்டால் அவைகளின் மாதிரிகளையும் சேகரித்து கல்கத்தாவிலும், மதராஸிலும், இன்னும் சில வ்யாபார ஸ்தலங்களிலும் பொருள்காட்சியில் வைத்துக்காட்டினார்கள். இப்படி வ்யாபாரப்பொருள்காட்சி வைத்ததில் அதிக நன்மை ஏற்பட்டதைக்கண்டு வ்யாபார டிபார்ட்மெண்டார் கல்கத்தாவில் சாச்வதமாக ஒரு வ்யாபாரப்பொருள்காட்சி வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தக்காட்சியில் பொருள்களையெல்லாம் சேகரித்துவைப்பதற்கு சிலகாலம் செல்லும். இந்தக்காட்சி சாலையில் எல்லா அன்யதேசங்களிலிருந்தும் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும்முக்யமான ஸாமான்களில் எவைகள் இந்தியாவிலும் செய்யப்படுகின்றனவோ, அல்லது பிற்காலத்தில் செய்யப்படுமோ அவைகளின் மாதிரிகளையும், அந்த ஸாமான்களில் எவையாவது இந்தியாவில் செய்யப்பட்டால், அவைகளின் மாதிரிகளையும், அன்யநாடுகளில் விற்பனை செய்யப்பட்டுவருவதும் இந்தியாவில் செய்து அந்த அன்ய நாடுகளுக்கு அனுப்பக் கூடியவையுமான ஸாமான்களின் மாதிரிகளையும் வைக்க ஏற்பாடுசெய்வார்கள். இந்தியாவிலிருந்து தொழில்களுக்குவேண்டிய பருத்தி போன்றஸாமான்களை அன்யதேசங்களுக்கு அனுப்பி, அங்கே துணிகள்போன்ற தொழில் சாக்குகளாகச் செய்யப்பட்டபிறகு அவைகளை இந்தியாவுக்கு மறுபடியும் இறக்குமதி செய்துகொள்கிறோம். தொழில்களுக்கு வேண்டிய இந்த மூலப்பொருள்களையும், காட்சியில் வைக்க உத்தேசித்திருக்கிறார்கள். சில தொழில் மூலப்பொருள்கள் இந்தியாவில் ஏராளமாய்க் கிடைக்கின்றன. இவைகளை அன்யதேசங்களுக்கு அனுப்புவதுமில்லை, இந்தியாவிலேயே தொழில்களுக்கு உபயோகிப்பதுமில்லை. அந்த மூலப்பொருள்களிலிருந்து அன்யநாடுகளில் வ்யாபாரப் பொருள்செய்து இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். இந்த மூலப் பொருள்களையும் காட்சியில்வைக்க உத்தேசித்திருக்கிறார்கள், காட்சியில் வைக்கப்படும் பொருள்களுக்கு காடலாக்குகளும், விலை ஜாப்தாக்களும் ப்ரசுரம் செய்யப்படும். இந்தப் பொருள்களில் இந்தியாவிலும் அன்யதேசங்களிலும் எவ்வளவு வ்யாபாரம் நடக்கிறதென்பதைக் காட்டக் கணக்குகளும் ப்ரசுரம் செய்யப்படும். பற்பல வ்யாபாரங்களில் அமர்ந்துள்ள வ்யாபாரிகளின் பெயர்களையும் விலாஸங்களையும் சேகரித்து ஆபீஸில் வைத்திருந்து அவைகளைத் தெரிந்துகொள்ள விரும்பும் வ்யாபாரிகளுக்குக் கொடுத்து உதவுவார்கள். இந்தியாவிலுள்ள தொழிலாளிகள் தங்களுடைய சரக்குகளின் மாதிரிகளை பொருள்காட்சிக்கு அனுப்பிவைக்கலாம்.

## Indian Weights and Measures.

**இந்தியநிறைகளும் அளவுகளும்.**—சென்ற 1913-ம் வர்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவெங்கும் ஒரேமாதிரியான நிறைகளையும் அளவுகளையும் உபயோகிக்கும்படி செய்வதைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதற்காக ஒரு கமிட்டி நியமித்தார்கள். அந்தக் கமிட்டியார் தங்களுடைய ரிபோர்ட்டில், ப்ரிட்டிஷ் நிறைகளையாவது, ஐரோப்பாவில் சிலதேசங்களில் உபயோகிக்கப்படும் மெட்ரிக் அளவுகளையாவது உபயோகிப்பது உசிதமல்லவென்றும், நிறைகளைத் தோலாவிலிருந்து கணக்கிட்டு, ரெயில்வேக்களில் வழங்கிவரும் நிறைகளையே வழங்கிவரும்படி செய்யவேண்டுமென்றும் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் ப்ரேரிக்கும் அளவு வாய்பாடு பின்வருமாறு.

180 க்ரெய்ன் = 1-தோலா, அல்லது 1-ரூபாயெடை
80 தோலா = 1-சேர்
40 சேர் = 1-மணங்கு

## Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஜூன்மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 14-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 1 | பாங்கி லேவாதேவி கம்பெனி | 50,000 |
| 4 | வ்யாபாரக் கம்பெனிகள் | 13,53,000 |
| 1 | பருத்திமில் கம்பெனி | 15,00,000 |
| 1 | அரிசிமில் கம்பெனி | 50,000 |
| 1 | தேயிலைத் தோட்டக் கம்பெனி | 1,00,000 |
| 3 | நிலக்கரி சுரங்கக் கம்பெனிகள் | 11,68,000 |
| 1 | தங்கச்சுரங்கக் கம்பெனி | 1,50,000 |
| 2 | அப்ரகச்சுரங்கக் கம்பெனிகள் | 8,50,000 |
| 14 | | 52,21,000 |

# ECONOMIC PRODUCTS.
# விலையுள்ள பொருள்கள்.

## Loofa.

**பீர்க்கங்காய்.**—ஐரோப்பாவில் பீர்க்கங்காய்க் கூடுகள் ஏராளமாய் விலைப்போகின்றன. ஐரோப்பியர்கள் அவைகளை மேஜோடுகள் செய்வதற்கும், ஜோடுகள் செய்வதில் உள் பாகத்தில் உபயோகிப்பதற்கும், இன்னும் சில வேலைகளுக்கும் உபயோகிக்கிறார்கள். ஐரோப்பியர்கள் ஸ்நானம் செய்யும்போது ஸ்பஞ்ஜ் போல் உபயோகிக்கிறார்களாம். ஐரோப்பாவில் உபயோகமாகும் பீர்க்கங்காய்க் கூடுகள் விசேஷமாக ஆல்ஜீரியாவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் ஏற்றுமதியாகின்றன. ஜப்பானில் உண்டாகும் பீர்க்கங்கூடுகள் தான் அதிகமாக விலைப்போகின்றன. அவைகளுக்குத்தான் விலையும் அதிகமாகக் கிடைக்கிறது. இந்தியாவில் உள்ள கூடுகள் ஜப்பான் பீர்க்கங்கூடுகள்போல நீளமாயில்லாததால் அவைகளுக்கு நல்ல விலை கிடைப்பது கஷ்டம். கூடுகள் எவ்வளவுக்கவ்வளவு நீளமாயிருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவைகளுக்கு அதிகவிலை கிடைக்கின்றன. இந்தியாவில் ஜப்பான் பீர்க்கைப்போல் நீளமான பீர்க்கை விளைவிக்கக்கூடுமா என்பதைப்பற்றி வங்காளத்து விவஸாய டிரெக்டர் சில ஆராய்ச்சிகள் செய்துபார்த்தார். ஜப்பானிலிருந்து பீர்க்கம் விதைகளை வ்ரவழைத்து டாக்காவிலுள்ள பண்ணையில் பயிரிட்டுப் பார்த்ததில் காய்கள் ரொம்ப நீளமாய்க் காய்க்கவில்லையாம். கூடுகளின் நிறமும் நன்றாயில்லையாம். அவைகள் அதிக நாள் உபயோகத்துக்கு வருவதும் கஷ்டமாம். மேலும் புது தினுஸாகையால், ஜப்பான் பீர்க்கஞ்செடிகளைப்பூச்சிகள் அழிக்கின்றனவாம். அவைகளைப் பயிரிடுவதில் ரொம்ப கவனமும், வேலையும் வேண்டியிருக்கிறதாம். ஆகையால் இந்தியாவில் அவைகளைப் பயிரிட்டால் தக்க லாபம் கிடைக்குமென்று சொல்வதற்கில்லை. ஜப்பானில் எரிமலைகள் ஜாஸ்தியாதலால், அந்த விடத்துமண்ணுக்கு ஏதோ ச்லாக்யமான குணங்களிருக்கின்றவென்றும், அதனால்தான் அங்கே பீர்க்கு அவ்வளவு நன்றாய் விளைகிறதென்றும் இங்கிலண்டிலுள்ள பீர்க்கங்கூடு வ்யாபாரி ஒருவர் சொல்லுகிறார்.

## Pinney Oil.

**புன்னை எண்ணெய்.**—புன்னைக்கொட்டையின் பருப்பில் நூற்றுக்கு 30-பாகம் எண்ணெய் இருக்கிறது. யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன்னால் வரையில் இந்தியாவிலிருந்து புன்னைப்பருப்பு விசேஷமாய் ஐரோப்பாவிலுள்ள ஆண்ட்வெர்ப் என்னும் ஊருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. புன்னை எண்ணெய் மெழுகுவர்த்தி, ஸோப் முதலியவைகள் செய்வதற்கு உதவுகிறது. ப்ராணிகளின் கொழுப்புக் கென்ன விலை கிடைக்கிறதோ கிட்டத்தட்ட அதே விலை இந்த எண்ணெய்க்கும் கிடைத்து வருகிறது. இந்த எண்ணெயை சுத்தம்செய்தால் சாப்பாட்டிலும் உபயோகப்படுத்தலாமாம். தின்பண்டங்கள் செய்வதில் இது விசேஷமாய் உபயோகப்படுகிறதாம்.

சென்ற சில வர்ஷங்களாகத்தான் எண்ணெய்த் தொழில்காரர்கள் இந்த எண்ணெயைப்பற்றி கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். ஐரோப்பாவில் புன்னை விதைகளுக்கும் எண்ணெய்க்கும் நல்ல விலை கிடைத்து வருகிறதாம். ஸமீபத்தில் ஐரோப்பாவில் சுத்திசெய்த எண்ணெய்க்கு ஒரு டன் 1500-ரூபாய் வீதம் விலை கிடைத்ததாம்.

புன்னைக்கொட்டைகளை சேகரித்து, உடைத்து உள்ளிருக்கும் பருப்புகளை 3-அல்லது 4-சிறு துண்டுகளாக உடைத்து காயவைக்கவேண்டும். இந்தப் பருப்பை எண்ணெயாட்டினால் அதன் நிறையில் நூற்றுக்கு 30-பாகம் வீதம் எண்ணெய் கிடைக்கும். காய்ந்த பருப்புகள் பம்பாயில் ஒரு டன்னுக்கு 142½-ரூபாய் வீதம் விலைபோகுமாம்.

## Reclaiming Waste Products.

**கழிவு பதார்த்தங்களை உபயோகித்தல்**—வீடுகளில் உபயோகித்துப் பழையதாய்ப்போன தேக்கு மரத்துண்டுகளைக் கொண்டு தச்சர்கள் நாற்காலிகள் செய்வதுண்டு. பம்பாயில் பழைய குதிரைலாடங்களிலிருந்து ஆணிகள் செய்து படகுகள் செய்வதில் உபயோகிக்கிறார்களாம். சீனாவில் உடைந்துபோன கண்ணாடிக் குப்பிகளை உருக்கி உபயோகமுள்ள பொருள்களாகச் செய்கிறார்களாம். ஐரோப்பாவில் பழுதாய்ப்போன கார்க்குத்துண்டுகளை லினோலியம் என்னும் (தரையில் விரிக்க உபயோகிக்கும்) துணி செய்வதில் உபயோகிக்கிறார்களாம். அநேகர் உபயோகமற்றவை யென்று எறிந்துவிடும் பொருள்கள் மனிதர்களின் புத்தி சாதுர்யத்தால் பற்பல உபயோகமுள்ள ஸாமான்கள் செய்வதில் உபயோகப்படுகின்றன.



# BOYS' PAGE.
# பையன்கள் பக்கம்.

## The Administration of Laccadives.

**லட்சத் தீவுகளின் நிர்வாகம்.**—இந்தியாவின் மேற்கேயுள்ள அரபிக் கடலில் லட்சத் தீவுகள் இருப்பதை நேயர்கள் அறிவார்கள். அந்தத் தீவுகள் எல்லாம் அமீன்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அந்தத் தீவுகளின் வாஸிகளில் ஒருவரே அமீனாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அந்த அமீன்களுடைய மாஸச் சம்பளம் ரூபாய் 20-முதல் 25-ஆகும். தங்களுக்குக் கீழுள்ள தீவுகளைசரிவர நிர்வகிப்பதற்கு அந்த அமீன்கள் மலையாளம் கலெக்டருக்கு உத்தரவாதிகளாவர். ஸிவில் க்ரிமினல் முதலிய கேஸ்களை அந்த அமீன்களே விசாரித்து முடிவு செய்வார்கள். அந்தத் தீவுகளைச் சுற்றிப் பார்ப்பதற்காக ஒரு உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். வருஷத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு வருஷத்திற்கு ஒரு முறையோ, அந்த அதிகாரியானவர் தீவுகளைப் போய்ப் பார்வையிடுவார். அந்த அமீன்கள் தீர்க்கும் கேஸ்களின் அப்பீலானது, அந்த அதிகாரியால் விசாரிக்கப்படும். லட்சத்தீவுகளுக்கு அருகேயுள்ள அமீன் தீவுகள் என்பவை மணியக்காரன் என்பவரால் ஆளப்பட்டு வருகின்றன. அவர் அத்தீவுகள் ஒவ்வொன்றிலும் இரண்டு மாத காலம் தங்கியிருந்து, விசாரணைக்கு வரும் ஸிவில் க்ரிமினல் கேஸ்களை விசாரிப்பார். அவர் இல்லாத ஸமயத்தில் வரி வஸூல் முதலிய விஷயங்களை குமாஸ்தா ஒருவர் பார்த்து வருவது வழக்கம். லட்சத் தீவுகளை நிர்வகிக்கும் அமீன்களைவிட மணியக்காரர் மிகவும் படித்தவராயிருப்பதுடன் அவருக்கு அதிக சம்பளமும் உண்டு. அந்த அமீன்களைக்காட்டிலும் அதிகமான அதிகாரம் மணியக்காரருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

லட்சத் தீவுகளை நிர்வகிப்பதற்கும் மணியக்காரர்களையே நியமித்துவிடலாமாவென்று கவர்ன்மெண்டார் யோசித்துவருகிறார்களாம்.

## Animals Living without Water.

**தண்ணீர் குடிக்காமல் ஜீவிக்கக்கூடிய ஜந்துக்கள்.**—ப்ராணிகள் ஜீவித்திருப்பதற்கு தண்ணீர் குடித்தல் அவச்யமென்று உலகத்தாரால் எண்ணப்பட்டபோதிலும், தண்ணீர் குடிக்காமலே அநேக ஜந்துக்கள் வெகுகாலம் ஜீவித்திருப்பதாகத்தெரியவருகிறது. மத்ய ஆசியாவில் சில ஆடுகள் 50 நாட்கள் வரையில் தண்ணீர் குடியாமல் ஜீவித்திருக்கின்றனவாம். தண்ணீர் அகப்படாத விடங்களில் ஒட்டகை பச்சைத் தழைகளைக்கூட தின்னாமல் வெகுகாலம் ஜீவித்திருக்கும்.

வட அமெரிக்காவில் சில தினுஸு ஆடுகள் வர்ஷத்தில் 4½ மாஸம் வரை தண்ணீர் குடிக்காமல் ஜீவிக்கின்றனவாம். மெக்ஸிகோ தேசத்தில் சில பாலைவனங்களில் அநேக வருஷங்களுக்கு மழையே பெய்கிறதில்லை. நிலத்தில் ஊற்றுகளும் கிடையா. அவ்விடங்களில் சிறிய காட்டுப்பன்றிகள் ஜீவித்துக்கொண்டு ஏராளமாய் வ்ருத்தியாகி வருகின்றனவாம்.

பஸிபிக் மகா ஸமுத்திரத்தில் ஓர் நிர்மானுஷ்யமான தீவிருக்கிறது. அதில் ஜலவஸதி அடியோடு கிடையாதபோதிலும் ஒருவித எலியும், பல்லியும், நான்கு தினுஸு பட்சிகளும் ஜீவிக்கின்றனவாம். அவைகளுக்கு பனிநீர் தவிர வேறு எவ்விதத்திலும் தண்ணீர் குடிக்க வழியில்லை. தண்ணீர் குடிக்காமல் ஜீவிக்கும் ஜந்துக்களுள் ஒருவித சுண்டெலி மிகவும் விசித்ரமானதென்று தெரிகிறது. அது மூன்று வருஷத்துக்கு தண்ணீரில்லாமல் காய்ந்த தான்யங்களை சாப்பிட்டே உயிர் வைத்துக்கொண்டிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.—இந்து நேசன்.

## A Tribe of Invisible Men.

**பார்வைக்குத் தெரியாத ஒரு ஜாதியார்.**—ஆப்ரிக்காவின் மேற்கு பாகத்தில் காங்கோ என்று ஒரு ப்ரதேசமிருக்கிறது. அதன் ஒரு பாகம் பெல்ஜியத்துக்கு ஸொந்தமானது. அதில் இட்டுரி என்று ஒரு ப்ரதேசமிருக்கிறது. அந்த ப்ரதேசத்தை ஐரோப்பியர் ஒருவரும் போய்ப்பார்த்ததில்லை. சென்ற மூன்று வர்ஷங்களாக காங்கோ ப்ரதேசத்தின் நிலைமையை ஆராய்ச்சி செய்யப்போயிருந்த டாக்டர் க்ரிஸ்டி என்பவர் இட்டூரி என்னும் ப்ரதேசத்தில் ஒரு பூர்வீக ஜாதியாரைக் கண்டாராம். அவர்கள் நிர்வாணிகளாம். அவர்கள் தங்கள் தேகத்தில் பற்பல மந்தமான சிவப்பு வர்ணங்களைக் கோடுகளாக பூசிக்கொண்டிருக்கிறார்களாம். இதனால் அவர்கள் அன்யர்களுடைய கண்ணுக்குத் தென்படுவதில்லையாம். அவர்கள் காடுகளில் ம்ருகங்களை வலைபோட்டுப் பிடித்து ஜீவிக்கிறார்களாம். அவர்கள் அன்யர்களைக் கண்டால் ஓடி ஒளிக்கிறார்களாம்.

# LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்.

### Economy in Life.

**செட்டாய்க் குடித்தனம் செய்தல்.**—இந்தியாவிலுள்ள ஸ்த்ரீகள் ஸாதாரணமாய் ரொம்ப செட்டாய்க் குடித்தனம் செய்பவர்கள். ஆனால் மேல்நாட்டு நாகரீகம் பரவப்பரவ அவர்களிடம் செலவு அதிகரித்து வருகிறது. புது நாகரீகத்துக்கு ஏற்ப டம்பத்திற்காக அநேக ஸாமான்களை வாங்கி உபயோகித்து வருகிறார்கள். இந்த யுத்த ஸமயத்தில் பணத்தட்டு ஏற்படுவது ஸகஜமாகையால், ஸ்த்ரீகள் ரொம்ப அத்யாவச்யமானவைகளைத் தவிர டம்பத்திற்காக எதையும் வாங்க எண்ணக்கூடாது. இதனால் குடித்தனச் செலவு ரொம்ப குறையக்கூடும். ஜெர்மானிய ஸ்த்ரீகள் ஸ்வபாவமாகவே செட்டுள்ளவர்கள். யுத்தத்துக்குமுன்னால் அவர்கள் ஸ்வல்பபணத்தைக்கொண்டு ஜீவனம் செய்துவந்தார்கள். தற்போது யுத்தத்துக்கு ஏராளமாய்ப் பணம் வேண்டியிருக்கிறதென்று அறிந்து, தேசாபிமான உணர்ச்சி அதிகமாகி, கண்டபடி செலவு செய்யாமல் ரொம்ப செட்டாயிருந்து வருகிறார்களாம். அங்கேயுள்ள ஒவ்வொரு குழந்தையும் தான் செட்டாயிருப்பதால் ராஜாங்கத்துக்குப் பணம் அதிகமாய்க் கிடைக்குமென்றும், அதனால் கவர்ன்மெண்டார் யுத்தத்தில் பணத்துக்காக ச்ரமப்படவேண்டியிராதென்றும் அறிந்திருக்கிறது. இந்திய ஸ்த்ரீகளும் செட்டாய்க் குடித்தனம் பண்ணும் விஷயத்தில் ஜெர்மன் ஸ்த்ரீகளைப் பின்பற்றி நடக்கலாம்.

### Sucking the Fingers.

**விரல்களைச் சப்புதல்.**—குழந்தைகள் விரல்களை வாயில் போட்டுக்கொண்டால் அதுகெட்ட வழக்கமென்று குழந்தையின் விரல்களை பிடுங்கப் பார்க்கிறோம். அது மிகவும் தப்பான கார்யம். குழந்தைகள் தங்கள் விரல்களைச் சப்புவதானது அதன் தேகத்துக்கு ஸுகமும் ஜீர்ண சக்தியும் கொடுப்பதாக விருக்கிறது. பல்முளைக்க ஹேதுவாகவும் இருக்கிறது. குழந்தைகளுக்கு தூக்கம் உண்டாவதற்கு வெகு ஸௌகர்யமாகயிருக்கிறது. தெரியாத்தனத்தால் குழந்தைகள் தங்கள் விரல்களை சப்பும்போது தாய்மார்கள் விரல்களை வாயிலிருந்து பிடுங்குகிறார்கள். இது கூடாத கார்யம்.

இப்பழக்கம், குழந்தைகளுக்கு வயதாகியும் நீடித்திருக்குமோ வென்று பயப்படவேண்டியதில்லை. தாங்களாகவே காலக்ரமத்தில் விட்டுவிடும் குழந்தைகளுக்கு 2½-வயது வரையிலும் இவ்வழக்கம் நீடித்திருக்கலாம். அதற்கு மேலிருந்தால் வேப்பிலையை தண்ணீர்விட்டரைத்து அப்பசையை சப்புகிற விரல்களில் இரண்டொரு தினம் தடவ, இவ்வழக்கம் நின்றுவிடும். இதற்காக குழந்தைகளை எந்தக் காரணத்தைக் கொண்டாவது அடித்தலும் பயமுறுத்தலும் கூடாது.—பெண் கல்வி.

### What Women are Doing in England.

**இங்கிலண்டில் ஸ்த்ரீகள் செய்யும் வேலைகள்.**—இங்கிலண்டில் ஸ்த்ரீகள் பற்பல தொழில்களில் அமர்ந்திருக்கிறார்கள். இப்போது அவர்களில் பலர் ட்ராம் வேக்களில் டிக்கெட் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். சிலர் கடைகளுக்கு வரும் ஜனங்களை கடையின் இன்னின்ன பாகத்துக்குப்போனால் இன்னின்ன ஸாமான்கள் கிடைக்குமென்று வழிகாட்டும் வேலையாள்களாக அமர்ந்திருக்கிறார்கள். சிலர் புஸ்தகக் கடைகளில் குமஸ்தாக்களாகவும், ரெயில் வேக்களில் டிக்கட்வாங்குகிறவர்களாகவும், டிக்கெட் விற்பவர்களாகவும், மோட்டார் வண்டி யோட்டுபவர்களாகவும், அந்த வண்டிகளில் கார்டுகளாகவும், இருக்கிறார்கள். சிலர் கடைகளிலிருந்து பால் எடுத்துக் கொண்டுபோய் வீடுவீடாய் விற்பனை செய்பவர்களாகவும், ரெயில் வண்டிகளைத் துடைப்பவர்களாகவும், ஜன்னல் துடைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் பாடசாலைகளில் அமர்ந்திருக்கிறார்கள். சில ஸ்த்ரீகள் யுத்தத்துக்கு வேண்டிய குண்டுகள் தயார் செய்யும் சாலைகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

### A Mahomedan Girl Matriculate.

**மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிய ஒரு மகம்மதியப்பெண்.**—கல்கத்தாவில் பாரிஸ்டராக இருக்கும் மிஸ்டர் எ. ரஸூல் என்பவரின் பெண்ணாகிய மிஸ் ஜெஜினா ரஸூல் என்பவள் கல்கத்தாயூனிவர்ஸிட்டி மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள். வங்காளத்தில் இவள்தான் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிய முதல் மகம்மதியப்பெண்ணாம்.



# INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indian Indentured Labour.

**இந்திய ஒப்பந்தக் கூலி.**—இந்தியாவிலிருந்து ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் ட்ரினிடாட், ப்ரிட்டிஷ்கயானா, ஜமய்க்கா, பிஜி முதலிய இடங்களுக்கு கூலிவேலை செய்து பிழைக்கப்போகும் இந்தியர்களின் நிலைமையைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்காக இரண்டு வருஷத்துக்கு முன்னால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டதென்பதும், அந்தக் கமிட்டியார் அவ்விஷயத்தைப்பற்றிப் பரிசீலனைசெய்து ரிபோர்ட்டு எழுதி வெளியிட்டார்களென்பதும் நமது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் செய்த ப்ரேரணைகளை சென்ற தைமாஸத்து 'ஜனாபிமானி'யில் ப்ரசுரித்தோம். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி இந்தியர்களுக்குள்ள அஸௌகர்யங்களையும் ஸௌகர்யங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஸௌகர்யங்களே அதிகமாய் இருப்பதாகத் தெரியவருமென்று அவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். ஐச்வர்யம் ஸம்பாதிக்கும் விஷயத்திலும், தங்களுடைய பொருளாதார நிலைமையை வ்ருத்திசெய்துகொள்ளும் விஷயத்திலும் இந்திய ஒப்பந்தக்கூலிகள் ரொம்ப நல்ல நிலைமையிலிருக்கிறார்களென்றாலும், அவர்களுடைய ஸன்மார்க்க நிலைமை ரொம்ப தாழ்ந்ததாகவே இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இதற்கு முக்ய காரணம் ஒவ்வொரு நாட்டுக்கும் குடியேறிப்போகும் ஆண் பெண்களுடைய தொகையில் ரொம்ப வித்யாஸமிருப்பதே. இந்தியா கவர்ன்மெண்டார் 100-ஆண்களுடன் 30 ஸ்த்ரீகள் குடியேறிப்போக வேண்டுமென்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த ஏற்பாடு சென்ற 30 வர்ஷகாலமாக அமுலிலிருந்து வருகிறதென்று சொல்லப்படுகிறது. இதனால் ஒவ்வொரு குடியேற்ற நாட்டிலும் இருக்கும் இந்தியர்களுள் ஆண்களின் தொகைக்கும் ஸ்த்ரீகளின் தொகைக்கும் ரொம்ப வித்யாஸ யேற்படுகிறது.

பின்வரும் அட்டவணையில் சில குடியேற்ற நாடுகளில் உள்ள இந்தியர்களின் தொகையை ஆண் எத்தனை, பெண் எத்தனை என்று பிரித்துக் காட்டுகிறோம்.

| | ஆண் | பெண் |
|---|---|---|
| ட்ரினிடாட், டோபாகோ | 31989, | 17,159 |
| ப்ரிட்டிஷ்கயானா | 53083, | 34779 |
| ஜமெய்க்கா | 7137, | 4775 |
| பிஜிதீவுகள் | 20,062, | 8785 |

இவ்வளவு வித்யாஸமிருப்பதால் அந்த விடங்களில் இந்தியர்களிடம் கெட்ட நடத்தை ரொம்பப் பரவியிருக்கிறதென்பதில் ஸந்தேகமென்ன? ஒப்பந்தக் கூலிகளுக்குள் பெரும்பாலும் விவாகமென்பது கிடையாது. விவாகமில்லாமலே, இந்திய ஸ்த்ரீகளும் புருஷர்களும் புருஷன் பெண்சாதியாக வஸித்துவருகிறார்கள். சில ஸ்த்ரீகள் வேசைகளாகவும் காலங்கழிக்கிறார்கள். ஸ்த்ரீகளால் ஆண்களுக்குள் ஒருவர்க்கொருவர் மனஸ்தாபமும் சண்டைசச்சரவும் ஏற்படுகின்றன. குத்துக்கொலையும் நடக்கின்றன. அநேகர் தற்கொலையும் செய்து கொள்ளுகிறார்கள். ஒப்பந்தக் கூலி ஏற்பாட்டால் இந்த ஸன்மார்க்கச் சீர்கேடே யல்லாமல் வேறுசில தீமைகளும் உண்டாகின்றன. இந்தியர்கள் அவ்விடங்களில் அரைவாசி அடிமைகளாக இருக்க வேண்டியிருக்கிறது. பொதுவாய் இந்தியர்களைப்பற்றிக் குடியேற்ற நாட்டுஜனங்கள் நல்லபிப்ராயங் கொள்வதில்லை. அவர்கள் இந்தியர்களுக்கு ஸமமான பாத்யதைகள் கொடுக்க ப்ரியப்படுவதில்லை. இவைகளை யெல்லாம் உத்தேசிக்கையில் ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிடுவதுதான் மேலானதென்று அநேகர் அபிப்ராயப்படுகிறார்கள். அதோடு குடியேறிப்போகும் இந்திய ஆண்களின் தொகைக்குத்தக்கபடி ஸ்த்ரீகளின் தொகையையும் அதிகமாக்க வேண்டுமென்றும் சிலர் அபிப்ராயப்படுவதாகத் தெரிகிறது.

### Indian Labour for Jamaica.

**ஜமெய்க்காவுக்கு இந்தியக் கூலிகள்.**—யுத்தத்தினால் ஜமெய்க்காவிலுள்ள தோட்டக்காரர்கள் தங்களுடைய விவஸாய வேலைகளைக் குஸறத்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போது அங்கே கூலியாட்கள் வேண்டியதில்லையாம். அதனால் ஜமெய்க்கா கவர்ன்மெண்டார் இந்தியாவிலிருந்து ஒப்பந்தக்கூலிகள் அந்த நாட்டுக்கு வரக்கூடாதென்று தெரிவித்திருக்கிறார்கள்.

### Indians in Seychelles.

**ஸெஷல்ஸ்தீவில் இந்தியர்கள்.**—ஸெஷல்ஸ்தீவில் 1911-ம் வர்ஷத்திய ஜனஸங்க்யைப்படி 22,691 ஜனங்கள் இருக்கிறார்கள். அங்கே 423 இந்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களுள் ஒருவர் லங்கையிலிருந்து வந்தவர். மொத்தம் இந்தியர்களுள், 332 பேர்கள் ஹிந்துக்கள்; 11 பேர்கள் பௌத்தர்கள்; 75 பேர்கள் மகம்மதியர்கள்; ஒருவர் பார்ஸி; 4 பேர்கள் ப்ராமணர்கள்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### The Clever Irishman.

**விவேகமுள்ள ஐரிஷ்காரன்.**—ஐயர்லிண்டிலுள்ள ஒரு கனவான் தமது வேலையாளிடம் கொஞ்சம் தங்க நாணயங்களைக் கொடுத்து பக்கத்திலுள்ள பட்டணத்துக்குப் போய் பாங்கியில் கட்டிவரும்படி அனுப்பினார். வேலையாள் பட்டணத்தின் பக்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில், வழியில் ஒரு திருடன் அவனை வழிமறித்து, ஒரு ரிவால்வரை அவன் தலைக்குநேரே காட்டிக்கொண்டு, பணத்தைக் கொடுக்கும்படி கேட்டான். வேலையாள் பணப்பையை திருடனிடம் கொடுத்துவிட்டு, "வீட்டுக்குப்போனால் அவர்கள் என்ன சொல்லமாட்டார்கள். நானே பணத்தைத் திருடினதாகச் சொல்லுவார்கள். ஒரு காரியம் செய்யேன். எனது உடுப்புகளில் நீ துப்பாக்கியால் சுடு" என்று சொன்னான். திருடன் அப்படியே ஆகட்டுமென்று வேலையாளுடைய உடுப்புகளைக் கழற்றி அவைகளில் சுட்டான்.

பிறகு வேலையாள், "இது போதாது. எனது தொப்பியிலும் சுட்டால்தான் நல்லது" என்றான். அதற்கு திருடன் "என்னிடம் குண்டுகள் இனிமேல் இல்லை," என, வேலையாள், "இப்பொழுது பணப்பையைக் கொடுக்கிறாயா, இல்லாவிட்டால் இந்தத் தடியால் உன் மண்டையை உடைத்து விடட்டுமா" என்றான். திருடன் பணத்தைக்கொடுத்து விட்டுப்போக வேண்டியதாயிற்று.

### The Son's Education.

**பையனுடைய கல்வி.**—ஒரு அமெரிக்க வாலிபன் ஒரு ஸர்வகலாசாலையில் படித்து வந்தான். அவன் படிப்புக்கு ஏராளமாய்ப் பணம் வேண்டியிருந்தது. பயிர்த்தொழில் செய்து ஜீவித்துவந்த அவன் தகப்பனுக்கு பணத்துக்குக் கஷ்டமேற்பட்டது. வாரக்கடைசியில் பையன் வீட்டுக்கு வந்திருந்தபோது, அவன் தகப்பன் அவனிடம் பணகஷ்டத்தைதெளிவாய் எடுத்துச் சொல்ல எண்ணி, பையனைக் கூப்பிட்டு, "மகனே, நீ படிக்கப்போன பிறகு, நானும் உன் தாயாரும் எவ்வளவு செட்டாய் செலவழிக்கலாமோ அவ்வளவு செட்டாய்ச் செலவழித்து ஜீவனம் செய்துவருகிறோம். நான் காலையில் $6\frac{1}{2}$-மணிக்கு எழுந்திருந்து ஸாயந்திரம் 5 மணி வரையில் வேலைசெய்கிறேன். உனக்கோ செலவு அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதற்குப் பணம் போதாதே. என்ன செய்கிறது. நாங்கள் என்ன செய்யலாமென்று தோன்றுகிறது?" என்றார்.

பையன் சற்று யோசனையிலாழ்ந்திருந்து பிறகு, "அப்பா, நீங்கள் ராத்திரிகூட வேலை செய்யவேண்டுமென்பதைத்தவிர எனக்கு வேறொரு யோசனையும் தோன்றவில்லை." என்றான்.

### Real Cow's Milk.

**வாஸ்தவமான பசும்பால்.**—அமெரிக்காவில் பிலடல்பியா என்னும் பட்டணத்துக்குப் பக்கத்தில் ஒரு வக்கீலுக்கு ஒரு கால்நடைப் பண்ணையிருக்கிறது. கொஞ்சகாலத்துக்கு முன்னால் அவர் சில ஏழைப் பையன்களை அந்தப் பண்ணைக்குக் கூட்டிக்கொண்டு போய்க் காண்பித்தார். பையன்கள் எல்லாவற்றையும் பார்த்தபிறகு ஒவ்வொரு பையனுக்கும் கொஞ்சம் பால் குடிக்கக் கொடுத்தார். பால் ரொம்ப நேர்த்தியாயிருந்தது. அது 6000-ரூபாய் விலையுள்ள பசுவின்பால். பையன்கள் பாலைக் குடித்தபிறகு, பண்ணை மானேஜர் "பையன்களா பால் எப்படி யிருக்கிறது?" என்று கேட்டார்.

அதற்கு ஒரு பையன், "ரொம்ப இனிப்பாயிருக்கிறது. எங்கள் பால்காரனுக்கும் ஒரு பசுமாடிருந்தால் நன்றாயிருக்கு" மென்றான்.

### The Rhinoceros,

**காண்டாம்ருகம்**—ஒரு காப்டன் ஒரு சிறுபட்டாளத்தைப்பயிற்சி செய்வித்துக்கொண்டிருந்தார். பட்டாளத்து வீரர்கள் சரியாய் நடந்து போகவில்லை. காப்டன் கொஞ்சம் கோபிஷ்டர். தாம் கற்றுக்கொடுப்பதை வீரர்கள் சரியாய் கவனிக்காமலிருப்பதைக் கண்டு கோபம் கொண்டு, காப்டன் "ஏ, அடிமுட்டாள்களா, என்னைப்போன்ற காப்டன்களிடம் பயிற்சி பெற உங்களுக்கு லாயக்கில்லை. உங்களை ஒருகாண்டாம்ருகந்தான் பயிற்சி செய்விக்க வேண்டும். கழுதைக்கூட்டங்களா," என்று இறைந்து பேசினார். பிறகு தமது கத்தியை உறையில் போட்டுக்கொண்டு, "லெப்டினண்ட், இவர்களைப்பார்த்துக்கொள்ளும்," என்று சொன்னார்.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Curious Tree.

**ஒரு விநோத மரம்.**—கரூருக் கருகாமையிலுள்ள புலியூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்து 3 பர்லாங்கு தூரத்தில் சித்த வ்ருக்ஷம் என்று ஒரு விநோதமான மரம் இருப்பதாக ஒரு நிரூபர் ஒரு பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார். அவர் சொல்வதாவது "அதை ஸாமான்ய ஜனங்கள் பொதியமரம் என்று கூறுகிறார்கள். அது சரியான பெயர் ஆகாது. நான் பார்த்தமட்டிலும் கேட்டமட்டிலும் இதைப்போன்ற வ்ருக்ஷம் வேறு எந்த இடத்திலும் தென்னிந்தியாவில் கிடையாது. காசியில் இம்மாதிரியான ஒரே வ்ருக்ஷமிருப்பதாகப் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது பெரிய ஆலமரம்போல் அடி பருத்திருக்கிறது. இது கொய்யா நிறமுடையது. இலை இலவன் இலைபோல் இருக்கும். ஆனால் ஒற்றையாயிருக்கும். புஷ்பம் ஸூர்யகாந்திப் பூப்போல் வட்டமாயிருக்கும். ஆனால் இருபங்கு பெரியது. தோசைக்கற்போல் வட்டமாகவும் பெரிதாகவுமிருக்கும். இதன்நிறம் வெள்ளையும் மஞ்சளும் கலந்தது. இதில் காய் காய்த்துப் பார்த்தவர் ஒருவருமில்லை என்கிறார்கள். இலை பழுக்கிறதுமில்லை, உதிர்கிறதுமில்லை. எப்பொழுதும் பசுமையாகவே இருக்கிறது அநேகமாய்க் கொழுந்தின் நிறமாயிருக்கும். அத்தழைகளைப் பறித்து விழுதுபோல் அரைத்தால் உளுந்து அரைத்த மாதிரி வழவழப்பாயிருக்கும். உளுந்து மாவுக்குப் பதில் இவ்விழுதையே அரிசிமாவுடன் கலந்து பணியாரம் சுட்டால் உளுந்தவாஸனையாகவே இருக்கும். இலை சூட்டைத்தணிக்கும்படியான ஔஷதமாகிறது. இதின் பட்டை பலவித வ்யாதிகளுக்குதவும். இதனை உபயோகிக்க விரும்புகிற வ்யாதியஸ்தர்கள் அம்மரத்தினிடம் சென்று அதற்குத் தூபதீபம் காண்பித்துப் பூஜை செய்து அதன் பட்டையையெடுப்பது வழக்கம். பட்டை நார்போலுரியும். அதைக் கஷாயம் போட்டுச் சாப்பிட்டால் எந்த வ்யாதி தீர வேண்டுமென்று சித்தத்தில் நினைக்கிறார்களோ அந்த வ்யாதி தீருமென்று சொல்லப்படுகிறது. இந்த வ்ருக்ஷம் வெகுகாலமாயிருப்பதாகக் கூறப்படுகிறது இலை காய்கிறதேயில்லை. சித்தத்தில் நினைத்தபடி வ்யாதி தீருவதால் இம்மரத்துக்கு இப்பெயர் அமைந்தது போலும். இதனை வெட்டாமல் வேலியோரத்தில் ஒதுக்கிவிட்டிருக்கிறார்கள்."

### A Kissless People.

**முத்தமிடத் தெரியாத ஜாதியார்.**—ஆஸ்ட்ரேலியாவுக்குப் பக்கத்திலுள்ள ந்யூஸீலண்டில் உள்ள மேயோரி ஜாதியைச் சேர்ந்த ஸ்த்ரீகளுக்கு முத்தமிடத் தெரியாதாம். அவர்கள் ஒருவர்க்கொருவர் வந்தனம் செய்யும்போது ஒருவர் தமது மூக்கை மற்றவருடைய மூக்கில் வைத்துத் தேய்ப்பார்களாம். இரண்டு ஸ்நேகிதர்கள் ஸந்தித்தால் ஒருவர்க்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு தலைவணங்கி, ஒருவர் மூக்கு மற்றவருடைய. மூக்கில் படும்படி செய்து, பிறகு மெதுவாய் ஒருவர்க்கொருவர் மூக்கால் மூக்கைத் தேய்த்துக்கொள்ளுகிறார்களாம். இந்த மாதிரி அந்த ஜாதியில் ஆண்களும் மூக்குத் தேய்த்துக்கொள்வதுண்டாம். அவர்களும் ஒருவர்க்கொருவர் ஸந்தித்துக்கொள்ளும்போது மூக்கால் தேய்த்துக்கொள்ளாமலிருப்பதரிது. ஸந்தோஷத்தில் தான் இப்படிச் செய்வதென்பதில்லை. யாராவது இறந்துபோனாலும் ஸ்த்ரீகள் சேர்ந்து உட்கார்ந்துகொண்டு மூக்குத் தேய்த்துக்கொண்டே அழுவார்களாம்.

### A Clock Built of Straw.

**வைக்கோலால் செய்த ஒரு கடிகாரம்**—ஸ்விட்ஸர்லண்ட் தேசத்தில் கைக்கடிகாரங்களும் பெரிய கடிகாரங்களும் ஏராளமாய்ச் செய்யப்படுகின்றன. அங்கே கடிகாரம் செய்பவர் ஒருவர் வைக்கோல், வில்லோ என்னும் மரத்துக் குச்சிகள் இவைகளைக்கொண்டு ஒரு கடிகாரம் செய்திருக்கிறாராம். இதில் உலோக ஸாமான்கள் ஒன்றும் உபயோகிக்கவில்லையாம். மணியடிப்பதற்கு ஏற்பட்டுள்ள உபாயங்களும் வைக்கோலாலேயே செய்யப்பட்டிருக்கின்றனவாம். கடிகாரம் 9 அடி உயரமுள்ளதாம். அதில் மணிகாட்டும் டையல் 18 அங்குலம் குறுக்களவுள்ளதாம். அந்தக் கடியாரத்துக்கு ஒரு தடவை சாவிகொடுத்தால் அது 24-மணி நேரம் ஓடுகிறதாம். அதைச் செய்து முடிக்க 30 மாஸம் சென்றதாம்.

### Doves.

**புறாக்கள்.**—ருஷியர் புறாக்களை யுண்பதில்லையாம். அதற்குக் காரணம் பைபிலில் பரிசுத்த ஆவி புறாவாக விறங்கியதென்று கூறப்பட்டிருப்பதேயாம். மாம்ஸம் புசிக்கும் ஹிந்துக்களிற் சிலர் திருக்கைமீனை புண்பதில்லையாம். அதற்குக் காரணம் ஸுப்ரமணியர் திருக்கைமீனாக அவதாரஞ் செய்தாரென்பதேயாம்,

# MISCELLANEOUS NEWS.

## நானா ஸங்கதி.

### Number Two.

'இரண்டு' என்னும் எண்.—இரண்டு என்னும் எண் துரத்ருஷ்டத்தை காட்டுவதாம். மேல்நாட்டில் முற்காலத்திய தத்வ சாஸ்த்ரிகளில் சிலர் இரண்டு என்னும் எண் கஷ்டம், மரணம், விரோதம், வாக்கு வாதம், ஸுகமின்மை இவைகளைக் குறிக்குமென்று சொல்லி வந்தார்கள்.

மேல் நாட்டு தேசங்களில் ஒரே பெயருள்ள அரசர்கள் ஒருவர்க்கு மேலிருந்தால் முதல் பெயருக்கு 1-வது என்றும், இரண்டாவது பெயருக்கு 2-வது என்றும் இப்படியாக இத்தனையாவது என்பதைக் காட்டிச் சொல்வார்கள்.

உதாரணமாக ஜார்ஜ் என்னும் பெயருடைய அரசர்கள் இங்க்லண்டில் 5-பேர்கள் உண்டு. முதலில் ஆண்ட ஜார்ஜ் அரசருக்கு 1-வது ஜார்ஜ் என்றும், இரண்டாவது ஆண்ட ஜார்ஜுக்கு 2-வது ஜார்ஜ் என்றும், இப்படியே அப்பெயருள்ள ஒவ்வொரு அரசருக்கும் ஒரு வரிசை க்ரமம் ஏற்படுத்துவதுண்டு. அரசர்களுடைய ஜீவ்யங்களைப்பற்றிப் பரிசீலனை செய்த ஒருவர், தங்கள் பெயரில் இரண்டாவதாக இருந்து ஆண்ட அரசர்களெல்லாம் துரத்ருஷ்டமுள்ளவர்களாயிருந்தார்களென்று தெரிவிக்கிறார்.

தங்கள் பெயர்களில் இரண்டாவதாத வந்த அரசர்களில் சிலர் எப்படி துரத்ருஷ்டமுள்ளவர்களாயிருந்தார்களென்பதைப்பற்றிக் கீழே சில விவரங்கள் எழுதுகிறோம்.

இங்க்லண்டில் ஆண்டுவந்த இரண்டாவது எட்மண்ட் அரசர் கொலை செய்யப்பட்டார். 2-வது ஹாரோல்ட் ஹேஸ்டிங்க்ஸ் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் கொல்லப்பட்டார். 2-வது வில்லியம் தற்செயலாகக் கொல்லப்பட்டார். 2-வது ஹென்ரி துக்கத்தால் இறந்துபோனார். 2-வது எட்வர்டும் 2-வது ரிச்சர்டும் கொலை செய்யப்பட்டு இறந்து போனார்கள். 2-வது சார்லஸினுடைய அரசாட்சி துரத்ருஷ்டமுள்ளதாயும், அவமானத்துக்குள்ளானதாயுமிருந்தது. 2-வது ஜேம்ஸ் அரசர் ராஜபதவியிலிருந்து நீக்கப்பட்டார். 2-வது ஜார்ஜ் திடீரென்று இறந்து போனார்.

ப்ரான்ஸின் அரசர்களுள் தங்கள் பெயரில் இரண்டாவதாக வந்தவர்களும் துரத்ருஷ்டமுள்ளவர்களாய் இருந்தார்களென்று சொல்லப்படுகிறது.

ஜெர்மனியில் 2-வது ப்ரெடரிக் என்னும் அரசனை போப் க்ரெகரி என்னும் காத்தோலிக் குருஸ்தலவருரு இரண்டு தடவை மதப்ரஷ்டம் செய்தார். அவருடைய மகனே அவருக்கு விரோதமாக சதியாலோசனை செய்தாராம். அவர் போப்புடன் யுத்தம் செய்து கொண்டிருக்கையில் இறந்துபோனார்.

ப்ரஷ்யாவின் அரசராயிருந்த பெரிய என்னும் பட்டப்பெயருள்ள 2-வது ப்ரிடரிக் என்பவர் ஆஸ்ட்ரியாவினிடமிருந்து ஸைலீஷ்யா என்னும் மாகாணத்தைப் பிடுங்கி அதைத் தம் வசம் வைத்துக்கொள்ள வானமாய்ப்பணம் செலவழிக்க வேண்டியதாயிற்று. இதனால் தேசத்துக்கு ரொம்ப கஷ்ட மேற்பட்டது.

ப்ரஷ்யாவின் அரசராயிருந்த 2-வது ப்ரிடரிக் வில்லியம் என்பவர் ப்ரான்ஸோடு யுத்தத்துக்குப் போய் முடிவில் ஆல்ஸேஸ்-லோர்ரெய்னை ப்ரான்ஸுக்கு கொடுத்துவிட வேண்டியதாயிற்று.

இதேமாதிரியே ஸ்காட்லண்ட், ஸ்பெய்ன், போலண்ட் ஆகிய இந்த தேசங்களில் ஆண்டுவந்த அரசர்களுள்ளும் தங்கள் பெயர்களில் இரண்டாவதாக வந்த அரசர்கள் ரொம்ப அத்ருஷ்ட ஹீனர்களாக இருந்ததாகத் தெரியவருகிறது.

இவைகளின்படி பார்த்தால் ஜெர்மனியின் சக்ரவர்த்தியாகிய 2-வது வில்லியம் துரத்ருஷ்டசாலியென்று சொல்லவேண்டும்.

### A Soldier and Astrology.

ஒரு ஸோல்ஜரும் ஜோஸ்யமும்.—லண்டன் வாரப் பத்ரிகை ஒன்று அடியில் வருமாறு எழுதுகிறது:—1914-ம் வருஷம் ஜூன் மாஸத்தில் அதாவது ஐரோப்பாவில் இந்த மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு 2-மாஸங்களுக்கு முந்தியே ரெஜிமெண்டைச் சேர்ந்த ஒரு மேஜர், ஜோதிடசாஸ்த்ரத்தில் திறமையுள்ளவளென்று சொல்லப்பட்டுவந்த ஒரு ஸ்த்ரீயினிடஞ் சென்று ஜோஸியம் கேட்டார். அதற்கு அந்த ஸ்த்ரீ அந்த மேஜரை நோக்கி இன்றைக்கு 9 மாஸத்திற்குப் பிறகு நீர் "கிழக்கில்" சண்டை செய்துகொண்டிருப்பீர் என்று சொன்னார். அதற்கு அந்த மேஜர் அப்படி நடப்பது ஸாத்யமில்லை என்றார். அப்படி நடப்பது



நிச்சயம் என்ற ஜோஸ்ய ஸ்த்ரீ சொன்னார். "நிச்சயமானால் நான் உமக்கு 25 பவுன் வெகுமதிகொடுக்கிறேன்" என்று மேஜர் சொல்லிவிட்டுத் திரும்பினார். ஜோஸ்யஸ்த்ரீ சொன்னபடியே இந்த மேஜர் டார்டனல்ஸில் போர்புரியச் சென்று குண்டடிபட்டு மே மாஸத்தில் இங்கிலாந்துக்குத் திரும்பினார். ஜோஸியம் பலித்ததைப்பற்றி இவர் ரொம்ப ஆச்சரியங் கொண்டு ஜோஸ்யம் சொன்ன ஸ்த்ரீயினிடஞ் சென்று அவருக்குக் கொடுப்பதாக முந்தியே சொல்லியிருந்த வெகுமதித் தொகையான 25 பவுனைக் கொடுத்து விட்டு, இன்னொரு ஜோஸியம் சொல்லும்படிக் கேட்டார். அதற்கு அந்த ஜோஸ்யஸ்த்ரீ இந்த யுத்தம் ஸெப்டம்பர் மாஸத்திற்குள் முடிந்துவிடுமென்றார். "ஸெப்டம்பர் மாஸத்தில் இந்தயுத்தம் முடிவடையவே மாட்டாது, முடிவு அடைந்து விடும் என்பது தப்பாகுமேயன்றி ஒரு பொழுதும் நிஜமாகாது; அப்படி இந்த ஜோஸியமும் உண்மையாகும் பக்ஷத்தில் நான் உமக்கு 50-பவுன் கொடுக்கிறேன்" என்று அந்த மேஜர் சொன்னார். "நீர் கொடுக்கப்போகும் 50-பவுனை நான் வாங்கப்போகிறதில்லை. ஏனெனில் அதற்குள் நான் இறந்துபோய் விடுவேன்" என்று அந்த ஜோஸ்யஸ்த்ரீ சொன்னார். அது நடந்து இரண்டு வாரங்களுக்கெல்லாம் அந்த ஸ்த்ரீ இறந்து போனாள்.

### The German Imperial Chancellor.

ஜெர்மன் இம்பீரியல் சான்ஸலர்.—ஜெர்மெனி தேசத்தில் பல சிற்றரசுகள் அடங்கியிருக்கிறபடியால் அது எம்பயர், அல்லது ஏகாதிபத்யம் என்று சொல்லப்படுகிறது. அந்த ஏகாதிபத்யத்துச் சக்ரவர்த்தி மேற்படி சிற்றரசுகளிலொன்றாகிய ப்ரஷ்யா தேசத்தரசனே யாவார். ஆகையால் ப்ரஷ்யா அரசரும் ஜெர்மன் சக்ரவர்த்தியும் ஒரே புருஷன். இந்தச் சக்ரவர்த்திக்கு முதல் மந்த்ரியாயிருப்பவருக்கு இம்பீரியல் சான்ஸலர் என்று பெயர். யுத்தம் ஆரம்பமான காலத்தில் ஜெனரல் வான் பெட்மன் ஹால்வெக் இந்த முதல் மந்த்ரி ஸ்தானத்தை வகித்திருந்தார். அவர் தான் ப்ரிட்டிஷ் தூதரோடு ஸம்பாஷணை செய்தபோது பெல்ஜியத்தோடு செய்திருக்கும் உடன்படிக்கை உபயோகமற்ற துண்டுக் கடிதமென்று சொன்னவர். அவர் இப்போதும் இம்பீரியல் சான்ஸலராயிருக்கிறார். இப்படி உடன் படிக்கைகளை இகழ்ந்து பேசின முதல் மந்த்ரியோடு போர் செய்யும் மற்ற தேசங்கள் ஸமாதானம் செய்ய ஸம்மதிக்காதென்று எண்ணி கெய்ஸர் சக்ரவர்த்தி ஜெனரல் வான்பெட்மன் ஹால்வெக்குக்குப் பதிலாக அவருக்கு முன்னால் இம்பீரியல் சான்ஸலராயிருந்த ஜெனரல் வான் பூலோவை அந்தப் பதவியில் நியமிக்க நிச்சயித்திருக்கிறாரென்று பாரிஸ் பத்ரிகை ஒன்றுக்கு அதன் நிருபர் எழுதுகிறார்.

### Up-keep of a Prisoner.

ஒரு கைதியை நிர்வகிப்பதற்கேற்படும் செலவு.—ஒரு கைதியை நிர்வகிப்பதற்கென்னசெலவு ஏற்படுகிறதோ அதற்குக் கொஞ்சம் குறைவான தொகையை கொண்டே ஒரு குடும்பம் முழுவதையும் காப்பாற்றலாமென்ற ஒரு கல்கத்தா பத்ரிகை எழுதுகிறது. சென்ற வர்ஷம் வங்காளத்தில் கைதிகளை அடைத்து நிர்வகித்துவர கிட்டத்தட்ட 15 லக்ஷம் ரூபாய் செலவாயிற்றாம். இதன்படி ஒரு கைதி விஷயத்தில் மேற்பார்வைச் செலவுள்பட ரூ. 119—1—1 செலவு ஏற்படுகிறது. இந்தத் தொகையைக்கொண்டு கூலிவேலை செய்து ஜீவிக்கும் ஜனங்களில் ஒருவன், தானும் தனது மனைவியும் சில குழந்தைகளும் ஸௌக்யமாய்க் காலந்தள்ளலாமாம். மேற்சொன்ன தொகையில் 45-ரூபாய்தான் கைதியின் ஆகாரத்துக்காகச் செலவழிக்கப்படுகிறது. பாக்கியுள்ள தொகை அவனை ஓடிப்போகாதபடி பார்த்துக்கொள்ள சிப்பந்திகள் நியமிப்பதற்குச் செலவழிந்துபோகிறது. கடினக்காவல் தண்டனை யடைந்தவர்கள் கிட்டத்தட்ட 45 ரூபாய் வேலை அதாவது தங்கள் சாப்பாட்டுக்குச் செலவிடும் தொகைக்கு சரியான வேலையைச் செய்கிறார்களாம்.

### Mr. R. Seshasayee Aiyar.

மிஸ்டர் ஆர். சேஷசாயி ஐயர்.—திருச்சினாப்பள்ளியில், எஞ்சினரும் கண்ட்ராக்டருமான மிஸ்டர் ஆர். சேஷசாயி ஐயர் அமரிக்காவில் ஸான் ப்ரான்ஸிஸ்கோ என்னும் நகரில் பனமாபஸிபிக் காட்சியின் ஸம்பந்தமாய்நடக்கும் காங்க்ரஸுக்கு ஓர் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கொழும்பைவிட்டு புறப்பட்டு ஹாங்காங் வழியாகப்போய் ஸெப்டம்பர் மாஸம் 20-ந்தேதி அமெரிக்காவிலுள்ள ஸான்ப்ரான் ஸிஸ்கோவுக்கு போய்ச்சேருவார். அவர் அவ்விடத்தில் நடக்கும் காங்க்ரஸில் அரிசியந்த்ரத்தைபற்றியும், மின்ஸாரச் செயற்கை யந்திரத்தைப்பற்றியும் ஓர் வ்யாஸம் படிப்பார்.

# DIARY OF THE MONTH.

# மாஸ வர்த்தமானம்.

## THE WAR IN EUROPE.

## ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

ஆகஸ்ட்மீ 3-தேதி.

ஜெர்மானியர்கள் ஆர்கோனில் சில ப்ரெஞ்ச் அகழ்களில் கொதிக்கும் த்ரவத்தை ஊற்றித்தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள். அவர்கள் லெஸ் எஸ்பார்ஜஸுக்குப் பக்கத்தில் ம்யூஸ் நதியோரமாக உள்ள குன்றுகளைத் தாக்கியும் பிடிக்க முடியாமல் போயிற்று.

10-தேதி.

சென்ற ஜூலைமாஸம் 30-தேதியன்று ஹூஜுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்கள் பிடித்திருந்த அகழ்களை ப்ரிட்டிஷ் துருப்புகள் திரும்பவும் பிடித்துக்கொண்டன. 35 ப்ரெஞ்ச் ஆகாயக் கப்பல்கள் மெட்ஸுக்குக் கிழக்கிலுள்ள ஸார்ப்ரூக்கன் என்னுமிடத்திலுள்ள ஒரு தொழில்சாலையின் மேல் 164 வெடி குண்டுகள் போட்டன.

12-தேதி.

ஜெர்மானியர்கள் ஆர்கோன் ப்ரதேசத்தில் வியின்னிலி சாடோவுக்கு வடகிழக்கில் ப்ரெஞ்ச் துருப்புகளை பலமாகத் தாக்கி சில அகழ்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

16-தேதி.

19 ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் ஸான்மிங்யல் ப்ரதேசத்திலுள்ள ஒரு பூங்காவனத்திலும் ஒரு ஸைன்ய டெபோவிலும் 108 வெடி குண்டுகள் போட்டன.

24-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் சில அகழ்களைப் பிடித்திருக்கின்றன.

24-தேதி.

இரண்டு ப்ரெஞ்ச் டார்பிடோக் கப்பல்கள் ஆஸ்டெண்டுக்குப் பக்கத்தில் ஒரு ஜெர்மன் டிஸ்ட்ராயர் கப்பலை மூழ்கடித்தன.

25-தேதி.

சாம்பேனிலும் வாஸ்ஜஸிலும் பலமான யுத்தம் நடக்கிறது. ஏழு ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் டெர்க்னியர், நோயான் என்னுமிடங்களைத் தாக்கின.

26-தேதி.

டார்டனெல்ஸ் ஜலஸந்தியின் வடக்குபாகத்தில் ப்ரிட்டிஷ் துருப்புகள் 800 கஜம் முன் சென்றிருக்கின்றன.

ஒரு ப்ரெஞ்ச் ஏரோப்ளேன் ஒரு துருக்கியக் கப்பலை மூழ்கடித்தது.

### ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா ஜெர்மனிக்கும் நடக்கும் யுத்தம்.

ஆகஸ்ட்மீ 2-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் விஸ்டுலா நதிப் பக்கத்திலும், சாம்லூப்ளின் ரெயில்வேயுக்குப் பக்கத்திலும் முன்சென்று கொண்டிருக்கின்றன. பால்டிக் மாகாணங்களில் ஜெர்மானியர்கள் ரிகா பட்டணத்துக்கு 41-மைல் தெற்கேயுள்ள பாஸ்க் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் ஆ என்னும் நதியின் வலதுகரையைப் பிடித்துக் கொண்டார்கள். வார்ஸாவுக்கு மேற்கே ப்ளானி நதிக்கும் நாடர்ஸின் என்னுமிடத்துக்கும் நடுவில் பலமான யுத்தம் நடைபெற்றது. ஜெர்மானியர்கள் பாட்ஸாமி என்னும் இடத்துக்குப் பக்கத்திலுள்ள குன்றுகளைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் லூப்ளினை விட்டுவிட்டுப்போய் விட்டார்கள்.

3-தேதி.

ரிகா என்னுமிடத்துக்கு 26 மைல் தென் மேற்கிலுள்ள மிடா என்னும் ஊரை ஜெர்மானியர்கள் பிடித்திருக்கிறார்கள். ஆஸ்ட்ரொலங்காவுக்குத் தெற்கே பலமான யுத்தம் நடக்கிறது.

4-தேதி.

காவ்னோவுக்கு மேற்கில் ரஷ்யர்களுக்கும் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகளுக்கும் பலமான யுத்தம் நடந்தது. ரஷ்யர்கள் பானியவியட்ஸ் என்னுமிடத்துக்குக் கிழக்கில் பின்வாங்கிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். நாரூ நதிக்குக் கிழக்கிலும், ரோஸானுக்கு வடகிழக்கிலும், குவாரோவுக்கு 3-மைல் வடக்கிலும் பலமான யுத்தம் நடக்கிறது. ஆஸ்ட்ரியர்கள் லெஸ்னு என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்களாம். பால்டிக் கடலில் விண்டாவுக்குப் பக்கத்தில் ரஷ்ய ஆகாயக் கப்பல்கள் ஒரு ஜெர்மன் பீரங்கிக் கப்பலை தரை தட்டும்படி செய்தன.



5-தேதி.

ரஷ்யர்கள் வார்ஸாவிலும் இவான்காரொடிலும் வெளிக்கோட்டைகளிலிருந்து பின்வாங்கிப் போகிறார்கள். ஸ்ஜிக்வா நதியும் நாரூ நதியும் சேருமிடத்திலிருந்தும், விஸ்டுலா, பக்நதிகளுக்கு இடையிலிருந்தும், வ்ளாடிமோ வாலின்ஸ்கி என்னுமிடத்துக்குப் பக்கத்திலிருந்தும் ரஷ்யர்கள் பின்வாங்கிப் போகிறார்கள்.

6-தேதி.

ஜெர்மானியர்கள் காவ்னோவின் கோட்டைகளையும் ஆஸோவிக்ஸ் என்னும் ஊரையும் தாக்கினார்கள்.

8-தேதி.

ரஷ்யர்கள் வார்ஸாவையும் இவான்காரொடையும் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் விஸ்டுலா நதியைக் கடந்துபோகும் போது அதிலுள்ள பாலங்களை இடித்துவிட்டுப் போனார்கள். ஆஸ்ட்ரோவுக்குப் பக்கத்திலுள்ள ரஸ்தாக்களில் பலமான யுத்தம் நடக்கிறது. ஜெர்மானியர்கள் வ்ளாடிமிர்வாலின்ஸ்கி என்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டார்கள்.

10-தேதி.

ஒரு பெரிய ஜெர்மன் கப்பல் படை பால்டிக் கடலில் ஆலண்ட் தீவுகளையும், ரிகா வளைகுடாவையும் தாக்க முயன்றது. ரஷ்யகப்பல்களும், கரையிலிருந்த பீரங்கிகளும் ஜெர்மன் கப்பல்களைத் தாக்கவே ஜெர்மன் கப்பல்கள் ஓடிவிட்டன.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் பால்டிக் மாகாணங்களில் முன் செல்லாதபடி ரஷ்யர்கள் தடுத்துவிட்டார்கள். சில இடங்களில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகளைப் பின்னுக்குத் துரத்தியிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் 7-ந் தேதியன்று காவ்னோக் கோட்டைகளை பலமாகத் தாக்கினார்கள். ஆஸோவிக்ஸுக்குப் பக்கத்தில் பலமான பீரங்கி யுத்தம் நடந்தது. ஜெர்மானியர்கள் வார்ஸாவுக்கு எதிரிலுள்ள ப்ராகா என்னும் ஊரைப் பிடித்துக்கொண்டார்களாம்.

9 ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் 12 க்ரூஸர்களும், அநேக டிஸ்ட்ராயர் கப்பல்களும் ரிகா வளைகுடாவின் முகத்வாரத்தில் உள்ள இடங்களைத் தாக்கின. ஒரு ஜெர்மன் க்ரூஸரும் 2 டிஸ்ட்ராயர் கப்பல்களும் கடல் வெடிகுண்டுகளில் பட்டு சற்று சேதமடைந்தன.

11-தேதி.

ஜெர்மானியர்கள் லோம்ஸா என்னும் கோட்டையைப் பிடித்திருக்கிறார்கள்.

12-தேதி.

ரிகாவுக்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகளைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் காவ்னோ கோட்டையின் மேற்குப் பாதுகாப்பு வேலைகளை பலமாகத் தாக்கினார்கள். ரஷ்யர்கள் அவர்களைத் திருப்பித் தாக்கி 3-ஜெர்மன் பட்டாளங்களை நிர்மூலமாக்கினார்கள். ஜெர்மானியர்கள் ஆஸ்ட்ரொலெங்கா, ரோஸன், புல்டஸ்க் என்னுமிடங்களை நோக்கி முன்சென்று கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்களுக்குப் புது ஸைன்யங்கள் வந்துகொண்டிருப்பதால், அவர்கள் ஜெர்மானியர்களை பலமாய் தடுக்க முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோவுக்குத் தென்கிழக்கிலுள்ள ரெயில்வே ஜங்க்ஷனை ஜெர்மானியர்கள் பிடித்திருக்கிறார்களாம். வார்ஸாவுக்கு 12-மைல் வடக்கேயுள்ள நோவோ ஜார்ஜிவிஸ்க் என்னும் இடத்துக்குக் கிழக்கில் ஒரு கோட்டையையும் பிடித்திருக்கிறார்களாம்.

13-தேதி.

அநேக இடங்களில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகளை முன் செல்லாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆஸ்ட்ரியத் துருப்புகள் லூகௌ என்னுமிடத்தைப் பிடித்திருக்கின்றனவாம்.

14-தேதி.

கிழக்குப் போர் முகத்தில் வடபாகத்தில் ஜெர்மானியர்கள் முன் செல்லாதபடி ரஷ்யர்கள் தடுத்து வருகிறார்கள். மத்தியில் அவர்கள் ஏற்கனவே செய்திருக்கும் ஏற்பாட்டின்படி பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் வார்ஸாவுக்கும் ப்ரெஸ்ட் லிடாவ்ஸ்க்குக்கும் மத்தியிலுள்ள நோகோடௌ, ஸீட்லெக், லூகௌ என்னும் இடங்களை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

16-தேதி.

ஜாகோப்ஸ்டாட், ட்வின்ஸ்க் என்னுமிடங்களில் யுத்தம் கடுமையாய் நடக்கிறது. நாரூவுக்கும் பக் நதிக்கும் இடையில் ஜெர்மானியர்கள் ரொம்ப முன் சென்று கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் நொவோஜார்ஜிவிஸ்க் என்னும் ஊரை பெரிய பீரங்கிகளால் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

17-தேதி.

ஜெர்மானியர்கள் காவ்னோ கோட்டைகளில் மேற்கிலுள்ளவைகளை பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறா,

கள். அவர்கள் நாரூ நதிக்கும் பக் நதிக்கும் மத்தியில் ப்ரான்ஸ்க் என்னுமிடத்துக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

18-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் மத்தியில் முன் சென்றுகொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் காவ்னோவை பலமாகத்தாக்கி ஒரு கோட்டையைப் பிடித்தார்கள். ஆஸ்ட்ரியர்கள் டாப்ரின்கா என்னுமிடத்துக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

19-தேதி.

ஜெர்மானியர்கள் 11-நாள் யுத்தம்செய்து கோவ்னோக் கோட்டைகளில் நிமன் நதிக்கு வலது கரையிலுள்ளவைகளைப் பிடித்திருக்கிறார்கள்.

20-தேதி.

ஜெர்மானியர்கள் காவ்னோ பட்டணம் முழுவதையும் பிடித்து விட்டார்கள். ரஷ்யர்கள் கிழக்குப் பக்கமாய் பின் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆஸோவிக்ஸுக்கும் ப்ரெஸ்ட் லிடௌஸ்குக்கும் நடுவிலும், அதற்குத் தெற்கிலும் யுத்தம் பலமாய் நடக்கிறது. ஜெர்மானியர்கள் நோவோ ஜார்ஜிவிஸ்க் என்னுமிடத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

21-தேதி.

ஜெர்மானியர்கள் நோவோ ஜார்ஜிவிஸ்க் என்னும் ஊரைப்பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் ப்ரஸ்ட் லிடௌஸ்க் என்னும் இடத்துக்குப் பக்கத்தில் வந்து விட்டார்கள். ஜெர்மன் கப்பல்படை ரிகா வளை குடாவிற்குள் புகுந்து ரஷ்யக்கப்பல்களுடன் யுத்தம்செய்து கொண்டிருக்கிறது.

23-தேதி.

ஜெர்மன் கப்பல்படை ரிகா வளைகுடாவைவிட்டு வெளியேறவேண்டியதாயிற்று. 16-தி முதல் 21-தி வரையில் நடந்த ரிகா வளைகுடாச் சண்டையில் 2-ஜெர்மன் க்ரூஸர்களும் 8-டார்பிடோக் கப்பல்களும் சேதமாயின. ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் ஒரு பெரிய ஜெர்மன் யுத்தக்கப்பலை மூழ்கடித்தது.

ஜெர்மானியர்கள் பியல்ஸ்க் என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

ஜெர்மானியர்கள் ஆஸோவிக்ஸ் என்னும் ஊரையும், டிக்ஸ்ட்ரிஸ் என்னும் ஊரையும் பிடித்திருக்கிறார்கள்.

25-தேதி.

கிழக்குப்போர் முகத்தின் மத்ய பாகத்தில் ரஷ்யர்கள் மெதுவாகப் பின் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பபர் நதியின் இடது கரையிலிருந்தும், ஆஸோவிக்ஸிலிருந்தும் பின்வாங்கிப்போய் விட்டார்கள்.

26-தேதி.

டிகாகின் என்னுமிடத்துக்குத் தெற்கில் ஜெர்மானியர்கள் நாரூ நதியைக் கடந்து விட்டார்களாம்.

28-தேதி.

பபர் நதியும் ப்ரிபியாடி நதியும் உற்பத்தியாகுமிடங்களுக்கு மத்தியில் ரஷ்யர்கள் பின்வாங்கிப் போகிறார்கள்.

காவ்னோவுக்கும் க்ராட்னோவுக்கும் மத்தியில் உள்ள ஒலிடா என்னும் கோட்டையை ரஷ்யர் விட்டுப்போனதின் மேல் ஜெர்மானியர்கள் அதைப் பிடித்துக்கொண்டார்களாம்.

ப்ரஸ்ட் லிடாவ்ஸ்க் என்னுமிடத்திலுள்ள கோட்டைகளை ரஷ்யர் நாசம் செய்து விட்டுப் பின்வாங்கிப் போனார்கள்.

30-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் கிழக்கு காலீஷ்யாவில் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நீமன் நதிக்கரையின் மத்யபாகத்திலும், பபர் நதிக்கும் ப்ரிபெட் நதிக்கும் மத்தியிலும், ரஷ்யர்கள் பின்வாங்கிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். பியாலிஸ்டாக்குக்கு வடக்கில் ஜெர்மானியர்கள் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

31-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் வில்னோ, க்ராட்னோ என்னுமிடங்களை நோக்கி முன்சென்று கொண்டிருக்கின்றன.

ஜெர்மானியர்கள் க்ராட்னோவுக்கு 20 மைல் மேற்கே பபர் நதியோரமாயுள்ள லிப்ஸ்க் என்னும் கோட்டையைத் தாக்கிப் பிடித்தார்களாம்.

## இட்டாலி செய்யும் யுத்தம்.

ஆகஸ்ட்மீ 2-தேதி.

கார்ஸோ பீடபூமியில் ஆஸ்ட்ரியர்கள் இட்டாலியர்களைத் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள்.

ஆகஸ்ட்மீ 8-தேதி.

கார்ஸோ பீடபூமியில் ஆஸ்ட்ரியர்கள் சாப்பரெலியோ காட்டை பலமாகத் தாக்கினார்கள்.

12-தேதி.

கார்ஸோ பீடபூமியில் பலமாக யுத்தம் நடக்கிறது. இட்டாலியர்கள் ஒரு ஆஸ்ட்ரிய ஸப்மரீனை டார்பிடோவால் தாக்கினார்கள்.

14-தேதி.

இட்டாலியர்கள் ஒரு ஆஸ்ட்ரிய ஸப்மரீனை மூழ்கடித்தார்கள்.

17-தேதி

இட்டாலியர்கள் ஆல்ப்ஸ் ப்ரதேசத்தில் பீரங்கி யுத்தம் பலமாக நடக்கிறதென்றும், தாங்கள் ஆல்ப்ஸ் பள்ளத்தாக்கில் முன்சென்று கொண்டிருக்கிறார்களென்று தெரிவிக்கிறார்கள்.

19-தேதி.

இட்டாலியர்கள் டால்மினோவுக்குப் பக்கத்திலும் கார்ஸோ பீடபூமியிலும் முன் சென்று கொண்டிருக்கிறார்கள்.

20-ஆஸ்ட்ரியக்கப்பல்கள் பெலகோஸா என்னும் தீவைத்தாக்கின.



## பொது விஷயங்கள்

ஆகஸ்ட்மீ 2-தேதி.

ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் பால்டிக் கடலில் ஒரு ஜெர்மன் துருப்புக்கப்பலை மூழ்கடித்தது.

8-தேதி.

ப்ரிட்டிஷ் ஸப்மரீன்கள் மார்மோராக் கடலில் சில கப்பல்களை மூழ்கடித்தன.

11-தேதி.

விரோதிகளின் ஆகாயக் கப்பல்கள் இங்கிலண்டின் கிழக்குக் கரையில் உள்ள சில இடங்களில் வெடி குண்டுகள் போட்டன.

12-தேதி.

ஜெர்மனிக்கு சொந்தமான ஒரு உதவி யுத்தக் கப்பல் ஒரு சிறு ப்ரிட்டிஷ் கரை பாதுகாப்புக்கப்பலை மூழ்கடித்தது. அதை ப்ரிட்டிஷ் க்ரூஸர்கள் சூழ்ந்து கொண்டதன்மேல் தப்பி யோடுவது முடியாதென்று அதன் தலைவர் அறிந்து கப்பலில் உள்ளவர்கள் படகுகளில் ஏறிக்கொண்டபிறகு கப்பலை நாசம் செய்து விட்டார்.

12-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியாவுள்ள பெல்க்ரேடைத் தாக்கினார்கள். ஸெர்வியர்களும் ஆஸ்ட்ரிய ஸைன்யங்களைத் தாக்கினார்கள்.

13-தேதி.

'இந்தியா' என்னும் ப்ரிட்டிஷாருக்கு சொந்தமான உதவி யுத்தக்கப்பல் வடகடலில் விரோதிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

14-தேதி.

இரண்டு ஜெர்மன் ஸெப்பலின்கள் இங்கிலண்டின் கிழக்குக் கரையில் வந்து அநேக இடங்களில் வெடி குண்டுகள் போட்டன.

17-தேதி.

ஒரு ஜெர்மன் ஸப்மரீன் ஐரிஷ்கடலில் கம்பர் லண்ட் ஜில்லாவில் கடலோரமாகவுள்ள பார்ட்டன், ஹாரிங்டன், வைட்ஹேவன் என்னுமிடங்களை பீரங்கியால் தாக்கிற்று. சில கட்டிடங்களில் தீப்பிடித்தது. ஜனச்சேத மொன்றுமில்லையாம்.

19-தேதி

ஒரு ஜெர்மன் ஸெப்பலின் இங்கலண்டின் கிழக்கு ஜில்லாக்களில் வெடி குண்டுகள் போட்டது. சில வீடுகளும் வேறு கட்டிடங்களும் சேத மடைந்தன.

20-தேதி.

'அரபிக்' என்னும் ப்ரிட்டிஷ் கப்பல் ஜெர்மன் ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று.

21-தேதி.

ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் பால்டிக் கடலுக்குப்போய்க்கொண்டிருக்கையில் ஸௌண்ட் ஜலஸந்தியிலுள்ள ஸால்தெல்ம் என்னும் தீவில் கரை தட்டிப் போயிற்று.

28-தேதி.

இட்டாலி துருக்கியின்மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

## SEASON
## கால ஸ்திதி

### Rainfall.

மழை.—1915ஹு எப்ரல்மீ 1ௗ யிலிருந்து 1915ஹு ஆகஸ்ட்மீ 30ௗ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 22·69 | 23·15 |
| வால்டேர் | 28·22 | 17·12 |
| காக்கினாடா | 22·16 | 17·54 |
| மஸூலிப்பட்டணம் | 27·20 | 19·17 |
| நெல்லூர் | 8·86 | 8·53 |
| மதராஸ் | 12·13 | 12·44 |
| கூடலூர் | 9·63 | 11·10 |
| நாகபட்டணம் | 6·87 | 9·36 |
| பாம்பன் | 5·57 | 4·09 |
| கொழும்பு | 36·91 | 37·14 |
| திருவனந்தபுரம் | 45·66 | 37·49 |
| கொச்சி | 89·02 | 80·45 |
| கள்ளிக்கோட்டை | 89·25 | 92·85 |
| மங்களூர் | 83·04 | 105·40 |
| மெர்க்காரா | 88·00 | 102·16 |
| ஐதராபாத் | 29·40 | 18·80 |
| பல்லாரி | 13·95 | 8·91 |
| கர்நூல் | 10·06 | 15·11 |
| கடப்பை | 11·63 | 15·14 |
| ஹாஸ்ஸான் | 19·68 | 20·[illegible]7 |
| பெங்களூர் | 18·39 | 18·11 |
| கொடைக்கானல் | 23·83 | 26.19 |
| உதகமண்டலம் | 37·44 | 31·86 |
| கோயம்புத்தூர் | 9·57 | 8·25 |
| வேலூர் | 20·31 | 19·22 |
| சேலம் | 20·91 | 20·98 |
| திருச்சினாப்பள்ளி | 9·98 | 11·90 |
| புதுக்கோட்டை | 19·77 | 15·41 |
| மதுரை | 12·27 | 12·44 |
| திருநெல்வேலி | 5·93 | 5·94 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | உதய லக் நா | உதய லக் வி | அஹஸ் நா | அஹஸ் வி | துலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்லம்-1091, பஸலி-1325, இங்கி-1915 செப்டம்பர்-அக்டோபர் } 49-ராக்ஷஸ ஹு புரட்டாசிமீ { பாத்ரபதம்-ஆசுவினம, தக்ஷிணாயன-வாஷருது ஹிஜரி-1333 வு ஜுல்காத்-ஜுல்ஹேஜ் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா | வி | நா | வி | உ | உ | உ | | சீது, புண்யகாலம், ஜம்யஷ்டாஷ்டமீ, விருத்யர்க்கம் |
| பிசி | 5 | 4 | 30 | 12 | 5 | 16 | 1 | வி | அவ்ஷ்-44-15, கேட்-17-37, பரீ 4-59, ஆய-57-53, பத்-16-56, ரா-6-16, கன்யாரவி-26-33, கன்யாசூன்யதி, ஷட |
| அபி | 4 | 54 | | 10 | ஜுல்காத் 6 | ஸப்டம்பர் 17 | 2 | வெ | நவ-39-14, மூல-14-15, ஸஹ-51-7, பால-11-41, தி-10-28, ரா-6-52, கன்யாசூன்யதிதி |
| சி | கன்னி | 45 | | 9 | 7 | 18 | 3 | ச | தச-34-41, பூரா-11-20, சோ-44-47, தை-6-53, ரா-0-21, கன்யாதசமீதி [தேஜோத்ஸவம்,, சிரவணதீபம் |
| அ | | 35 | | 7 | 8 | 19 | 4 | ஞா | ஏகா-30-45, உரா-9-0, அதி-38-56, வணி-2-39, பவ-59-0, தி-18-40, ஸர்வஏகாதசீ, சிரவண உபவாஸ, பரிவர்த் |
| அசி | | 25 | | 6 | 9 | 20 | 5 | தி | த்வா-27-26, சிர-7-15, சுக-33-36, கவு-56-3, தி-17-1, சிரவணத்வாதசீ, ப்ரதோஷம், பயோவிரதம், வாமனஜயந்தீ |
| சிம | | 15 | | 4 | 10 | 21 | 6 | செ | த்ர-24-53, அவி-6-12, திரு-28-52, கர 53-55, தி-24-3 |
| சிஅ | 4 | 5 | | 2 | 11 | 22 | 7 | பு | சதி-23-12, சத-5-59, சூல-24-51, பத்-52-44, தி-22-4, அனந்தவிரதம், கரமணீ [ரூபயாத்ரை |
| சி | 3 | 55 | | 1 | 12 | 23 | 8 | வி | ○-22-32, பூட்-6-42, கண்-21-38, ரல-52-37, ரா-1-16, ப்ரௌஷ்டபதீசிராத்த, உமாமஹேசுவரவிரத, விசுவ |
| சிஅ | | 46 | 30 | 0 | 13 | 24 | 9 | வெ | ப்ர-23-2, உட்-8-32, வ்ரு-19-19, தை-53-45, ரா-9-52, துலாயனம்-6-43, பாத்ரபதபகு, இஷ்டி, மஹாளயபக்ஷா } |
| பிசி | | 36 | 29 | 58 | 14 | 25 | 10 | ச | த்வி-24-48, ரே-11-33, துரு-17-58, வணி-56-10, திவாமா [ரம்பம், அசூன்யசயனவிரதம், இராமா } |
| சிபி | | 26 | | 57 | 15 | 26 | 11 | ஞா | த்ரி-27-51, அசு-15-50, வ்யா-17-38, பவ-59-51, தி-5-2, ரா-11-32, ஸங்கடசதுர்த்தீ, மஹாபரணீ |
| சிம | | 16 | | 55 | 16 | 27 | 12 | தி | சது-32-10, பர-2120, ஹர்-18-16, பால-32-10, ரா-24-36, கிருத்திகை |
| சிஅ | 3 | 6 | | 54 | 17 | 28 | 13 | செ | பஞ்-37-34, கிரு-27-55, வஜ்-19-40, கவு-445 |
| சி | 2 | 56 | | 53 | 18 | 29 | 14 | பு | ஷஷ்-43-38, ரோ-35-12, ஸித்-21-49, கர-10-29, தி-12-43, ரா-21-6, கபிலாஷஷ்டீ |
| ம | | 44 | | 51 | 19 | 30 | 15 | வி | ஸப்-49-55, மிரு-42-45, வ்ய-24-12, பத்-16-48, வ்யதீபாதமஹாளயம் |
| சி | | 37 | | 49 | 20 | 1 | 16 | வெ | அஷ்-55-47, திரு-49-57, வரீ-26-25, பால-22-56, தி-6-20, கலாஷ்டமீ, மத்யாஷ்டமீ மகாலக்ஷ்மீவிருத, கரிநாள் |
| சி | | 27 | | 48 | 21 | அக்டோபர் 2 | 17 | ச | நவ-60-0, புன-56-14, பரி-28-8, தை-28-22, தி-23-14, அவிதவாநவமீ, த்ரிதினஸ்ப்ருக் |
| சி | | 17 | | 46 | 22 | 3 | 18 | ஞா | நவ-0-37, பூச-60-0, சிவ-28-44, வணி-32-29, தி-18-1 |
| சி | 2 | 7 | | 45 | 23 | 4 | 19 | தி | தச-3-57, பூச-1-4, சித்-28-7, பவ-34-57, ரா-5-11 |
| சி | 1 | 57 | | 43 | 24 | 5 | 20 | செ | ஏகா-5-28, ஆயி-4-9, சாத்-26-8, சவு-35-28, ரா-5-15, ஸர்வஏகாதசீ, யதிமஹாளயம் |
| சிஅ | | 48 | | 42 | 25 | 6 | 21 | பு | த்வா-4-58, மக-5-19, சுப-22-21, கர-33-59, தி-25-16, ப்ரதோஷம், கஜச்சாயை, யுகாதி |
| சிம | | 38 | | 40 | 26 | 7 | 22 | வி | த்ர-2-34, சசி-58-25, பூர-4-36, சுப-17-12, பத்-30-41, தி-22-2, மாஸசிவராத்ரி, சஸ்திரஹதமஹாளயம், அவம |
| சிஅசி | | 28 | | 39 | 27 | 8 | 23 | வெ | ●-52-50, உத்-210, ஹம்ஸ்-58-19, ப்ரா-10-43, சது-25-47, தி-21-58, ஸர்வஅமா, பிண்டபிதிரு, கஜச்சாயை |
| மஅ | | 18 | | 37 | 28 | 9 | 24 | ச | ப்ர-46-13, சித்-53-30, மா-3-6, வை-54-43, கிம்-19-38, தி-16-48, வைசிரா, ஆசுவினசுத்த, இஷ்டி, தௌஹித்ர ப்ரதிபத், நவராத்ராரம்பம் |
| சிஉ | 1 | 8 | | 36 | 29 | 10 | 25 | ஞா | த்வி-38-57, சுவா-48-5, விஷ்-45-50, பால-12-38, தி-6-16, சந்திரதர்சனம், வாஜிநீராஜநாரம்பம் |
| மசி | 0 | 58 | | 34 | ஜுல்ஹேஜ் 1 | 11 | 26 | தி | த்ரி-31-26, விசா-42-27, ப்ரீ-36-48, தை-5-12, வணி-57-42, தி-0-46, ரா-21-57, இராமா [விரதம், திவாமா |
| சிஉ | | 49 | | 33 | 2 | 12 | 27 | செ | சது-24-3, அனு-37-1, ஆய-27-53, பவ-50-30, ரா-20-17, சதுர்த்தீதிதி, ஷைவிரதபௌமசதுர்த்தீ, உபாங்கலளிதா |
| சிம | | 39 | | 31 | 3 | 13 | 28 | பு | பஞ்-17-7, கேட்-32-8, ஸஹ-19-22, கவு-43-53, ரா-21-6, நிதித்வயம்(பஞ்சமீக்கு, குதபவ்யாப்தி)ஷஷ்டியுபவாஸம் |
| சி | | 29 | | 30 | 4 | 14 | 29 | வி | ஷஷ்-10-52, மூல-28-1, சோ-11-24, கர-38-5, தி-24-16, ரா-21-6, ஸபதமீதிதி, கரிநாள் |
| பிசி | | 19 | | 28 | 5 | 15 | 30 | வெ | ஸப்-5-32, பூரா-24-49, அதி-4-12, சுக-57-48, பத்-33-15, ரா-14-30, கன்யாஷ்டமீதி |
| சி | 0 | 9 | 29 | 27 | 6 | 16 | 31 | ச | அஷ்-1-13, நவ-57-56, உரா-22-39, த்ருதி-52-14, பால-29-26, ரா-2-55, துலாரவி-56-25, கன்யாநவமீதி, மன் வாதி, சிரவணஉபவாஸம், ஸரஸ்வதீபூஜை, பலிதானம், அவம |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | செ ச |
| | 6-துலா-பு 9-கட-செ | | கே |
| ரா | 9-கும்-குரு 24-து-சு | | |
| | | | ர-பு ச |



FIRING, COMMUNICATING AND COVER TRENCHES

இடங்கு வரிசைகள், நின்று சுடும் இடங்குகள், வழிக்கிடங்குகள், பங்தோபஸ்துக் கிடங்குகள்.
(படத்தின் வலது புறத்தில் இடங்கு வரிசைகளின் ப்ளான், A: நின்று சுடும் இடங்குகள்,
C: வழிக்கிடங்குகள் B: பங்தோபஸ்துக் கிடங்குகள்.)

THE GUARDIAN PRESS, MADRAS.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. | ராக்ஷஸ வருஷ, புரட்டாசிமீ, SEPTEMBER, 1915. | ஸஞ்சிகை 13. No. 13.



OFFICE OF THE REGISTRAR 4 DEC 1915 MADRAS.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | | Foreign. Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 0 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸ௵ புரட்டாசி௴. [ஸஞ்சிகை 13.

## TRENCH WARFARE.

## கிடங்குகளிலிருந்து கொண்டு யுத்தம் செய்தல்.

தற்போது நடந்துவரும் யுத்தத்தில் இரு கக்ஷிக்காரர்களுடைய ஸைன்யங்களும் அநேக மைல் நீளமுள்ள போர்முகத்தில் சண்டை செய்து வருகின்றன. ஒவ்வொரு போர்முனையிலும் பல ஸைன்யங்கள் எதிரிகளின் பல ஸைன்யங்களைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. ஸாதாரணமாக ஆர்மிகோர் என்னும் ஸைன்யப் பிரிவில் 30,000 முதல் 40,000 வரையில் வீரர்களும் மற்ற ஸிப்பந்திகளும் இருப்பார்கள். இவர்கள் பல மைல் விஸ்தீரணத்தில் பரவி நிற்பார்கள். ஸாதாரணமாக அரைமைல் தூரத்திற்கு 3,000 வீரர்கள் இருக்கக்கூடும்.

இப்படிப் பல மைல் தூரத்துக்குப் பரவி நிற்கும் ஸைன்யத்தில் ஏதேனும் ஒரு பாகம், ஒரு ரெஜிமெண்டோ, அல்லது ஒரு ப்ரிகேடோ, தனது ஸாமர்த்யத்தால் வெகுதூரம் முன் செல்லக்கூடும். இந்தப் பிரிவை அப்படியே முன் சென்று கொண்டிருக்கும்படி விட்டுவிட்டால் போர்முகத்தில் இடை வெளிகள் ஏற்படக்கூடும். இந்த இடைவெளிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது அவச்யமானது. ஏனென்றால் முன் சென்ற துருப்புகளின் பக்கவாட்டில் எதிரிகள் தாக்கக்கூடும். இடைவெளிகளால் மற்ற ஸைன்யங்களுக்கும் கெடுதல்கள் ஏற்படக்கூடும்.

மேலும் ஒரு ரெஜிமெண்ட், ப்ரிகேட் அல்லது டிவிஷன் முன்சென்றதனாலேயே போரில் ஜயமேற்பட்டு விடாது. எல்லா ஸைன்யப் பிரிவுகளும் ஒன்றுக்கொன்று உதவியாயிருந்து கிட்டத்தட்ட ஒரே காலத்தில் சேர்ந்தாற்போல முன்செல்லுவதுதான் நல்லது. ஆகவே வெற்றி பெற்று சற்று முன்சென்ற ஸைன்யப் பிரிவானது அதிகமாக முன் செல்லாதபடி இருந்த விடத்திலேயே இருக்க வேண்டியதாகிறது.

சில ஸமயங்களில் ஒரு பெரிய ஸைன்யம் ஜயப்பெற்று முன்செல்லுகையில், ஜனச்சேதம் அதிகமாய் ஏற்பட்டாலும், மருந்து, குண்டுகள் குறைந்து போய்க்கொண்டிருந்தாலும் அதற்கு மேல் முன்செல்ல முடியாது. அந்த ஸமயம் அதற்காக அந்த ஸைன்யம் பின்வாங்கிப் போவது அபாயகரமாயிருக்கும். ஆகவே உதவி ஸைன்யங்களும், மருந்து, வெடி குண்டுகளும் பின்னாலிருந்து வரும் வரையில் இருந்த விடத்திலேயே இருக்கவேண்டியதாகிறது.

ஸாதாரணமாய் இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் வீரர்களும் மற்ற ஸிப்பந்திகளும் போர் நடக்குமிடங்களில் இயற்கையாகவே இருக்கக் கூடிய மறைவான இடங்களில் மறைந்துகொள்வார்கள். அப்படி மறைந்துகொள்ளாவிட்டால் எதிரிகளின் பீரங்கிகளும், துப்பாக்கிகளும் அவர்களை சீக்ரம் நாசம் செய்துவிடும். ஆனால் இயற்கையான மறைவு வஸதிகள் எல்லாருக்குமே கிடைப்ப தரிது. அநேகர் தாங்களே தங்களுடைய முயற்சியால் மறைவு தேடிக்கொள்ள வேண்டியதுதான். எதிரிகள் பலமாய் பீரங்கிகளாலும் துப்பாக்கிகளாலும் தாக்கும்போது நின்றுகொண்டோ, உட்கார்ந்துகொண்டோ இருந்தால், சீக்ரம் குண்டுகளால் தாக்கப்பட்டு காயம் பட்டோ இறந்தோ போகவேண்டியது தான். ஒவ்வொரு ஸோல்ஜரும் இப்படிப்பட்ட ஸமயங்களில் வேறு ஒருவித மறைவும் இல்லாதபோது கீழே படுத்துக்கொள்ளவேண்டும். நின்றுகொண்டோ உட்கார்ந்துகொண்டோ இருப்பதைவிட, படுத்துக்கொள்வதால் குண்டுகளால் ஏற்படக் கூடிய சேதம் குறைவாகக்கூடும்.



ஒவ்வொரு ஸோல்ஜரிடமும் கிடங்குகள் அதாவது நீண்ட பள்ளங்கள் தோண்டுவதற்கு வேண்டிய சில கருவிகள் கொடுத்திருக்கிறார்கள். ஸோல்ஜர்கள் அவைகளை மற்ற ஆயுதங்களோடு கூட எப்போதும் கொண்டுபோவார்கள்.

படுத்துக்கொண்ட வீரன் படுத்த நிலைமையில் தன்னிடமுள்ள சிறு கருவிகளைக்கொண்டு 20-நிமிஷம் முதல் 40-அல்லது 45-நிமிஷத்துக்குள் ஒரு கிடங்கு வெட்டிவிடலாம். மண்ரொம்ப தளர்த்தியாய் இருந்தால் அதிகநேரம் பிடிக்காது. ச்ரமமும் அதிகமில்லை. ரொம்ப ஸுலபமான கிடங்கை 1ம் படத்தில் பார்த்துக்கொள்ளவும். இதற்குப் படுத்துக்கொண்டிருக்கும் கிடங்கு என்று பெயர்.



படம் 1. படுத்துக்கொண்டு சுடுங் கிடங்கு.

ஸோல்ஜர் குப்புறப் படுத்துக்கொண்டபடி தன்னிடமுள்ள கருவியால் மண்ணைக் கொத்தி வெளியில் போடுவான். சில ஸமயங்களில் தன்னிடமுள்ள சனியனை உபயோகப்படுத்த வேண்டியிருக்கும். மண்ணைத் தனக்கு முன் புறத்தில் எடுத்துப்போட மண் வெட்டிகளை உபயோகிக்க முடியாவிட்டால் தன்னிடமுள்ள ஆகார டப்பாக்களின் மூடிகளால் மண்ணை எடுத்து எழுந்திருக்காமலே தனக்கு முன் புறத்தில் போடவேண்டும்.

மேற்சொன்ன படுத்துக் - கொண்டிருக்கும் கிடங்கு தோண்டுவதின் முறை ராணுவப் புஸ்தகங்களில் பின்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது. ஸோல்ஜரானவன் குப்புறப்படுத்துக் கொண்டே தனக்குப் பக்கத்தில் பதினெட்டங்குலம் அகலமுள்ளதாய் தலைமுதல் முழங்கால் நீளத்துக்கு பள்ளந்தோண்டவேண்டும். பிறகு அந்தப் பள்ளத்தில் உருண்டு அதில் படுத்துக் கொண்டு, அதை ஒட்டினாற்போல 12-அங்குலம் அகலத்துக்கு தலைமுதல் கால்நீளம் வரையில் பள்ளந்தோண்டவேண்டும். பிறகு இரண்டாவது வெட்டின பள்ளத்தில் புரண்டுவிழுந்து, அங்கு படுத்துக்கொண்டே முதலில் வெட்டின பள்ளத்தில் மீதியாயுள்ள முழங்காலிலிருந்து பாதம் வரையிலுள்ள பாகத்தையும் பறித்துக்கொள்ள வேண்டும்.

முன்பக்கம் எடுத்துக்கொட்டின மண்ணானது ஓரடி உயரத்துக்குமேல் குவிந்து இருக்கக் கூடாது. இப்படிச்செய்த கிடங்கானது 2½-அடி அகலமும், 6-அடிநீளமுமுள்ளதாயும் இருக்கும். இந்தக் கிடங்குகளில் மறைந்து இருப்பவர்களுக்கு எதிரிகளின் துப்பாக்கிக் குண்டுகளால் சேதம் ஏற்படுவது அரிது. ஆனால் எதிரிகள் ஷ்ராப்னல் குண்டுகளால் இவர்களைத் தாக்கினால் இந்த கிடங்குகளால் யாதொரு அனுகூலமும் ஏற்படாது.

ஆனால் இந்த கிடங்கில் ஒரு ஸௌகர்யமென்னவென்றால் படுத்துக்கொண்டே பள்ளந் தோண்டுவதாலும், தோண்டும் வேலை ரொம்பக் குறைவாகையாலும், தோண்ட ஆரம்பிக்கும் போதே ஸோல்ஜர்களுக்கு கொஞ்சம் மறைவு ஏற்படுகிறது.

ஸோல்ஜர்கள் முன் செல்லாமல் அதிககாலம் இருந்தவிடத்திலேயே இருக்க நேரிட்டால், அவர்களுடன்கூட வந்திருக்கும் இஞ்ஜினியர்கள் மேற்சொன்ன பள்ளங்களை ஒழுங்குபடுத்தி ஒன்றுசேர்த்து பல ஸோல்ஜர்கள் இருக்கும்படியாக வேறுவிதமான நீண்ட கிடங்குகள் அமைப்

பார்கள். இந்த இஞ்ஜினியர்களிடம் பற்பலவித கிடங்குகள் தோண்டுவதற்கு வேண்டிய ஆயுதங்கள் யாவும் இருக்கும்.

முன் செல்லும் ஒரு கக்ஷி ஸோல்ஜர்கள் மேற்சொன்ன ஸமயங்களில் தாமஸிக்கவேண்டியதற்காக கிடங்குகள் தோண்டுவதைப் போலவே, முன்சென்று கொண்டுவரும் எதிரிகளைத் தடுத்து நிற்கும் கக்ஷியாரும் தாங்கள் இருக்குமிடத்தைவிட்டு அகலாமல் அங்கேயே இருப்பதற்காக கிடங்குகள் தோண்டுவதுண்டு.

**கிடங்குகளின் வகைகள்.**—கிடங்குகளில் பல வகைகள் உண்டு. படுத்துக்கொண்டு யுத்தம் செய்யும் கிடங்கை ஏற்கனவே விவரித்திருக்கிறோம். இஞ்ஜினியர்கள் முதல் முதலில், ஸோல்ஜர்கள் ஸௌகர்யமாய் நின்று யுத்தம் செய்வதற்கேற்றவையான, 'நின்று சுடும் கிடங்குகள்' தோண்டுவார்கள்.



படம் 2. நின்றுகொண்டு சுடும் கிடங்கு.

இவைகள் ஸாதாரணமாய் ஸுமார் 3-அடி ஆழமும் 3-அடி அகலமும் உள்ளவை. பள்ளத்து மண்ணை எதிரி இருக்கும் இடத்துப் பக்கமாக $1\frac{1}{2}$-அடி உயரத்துக்கோ 1-அடி உயரத்துக்கோ கொட்டுவார்கள். ஆகவே பள்ளத்தின் அடியிலிருந்து மேலே கொட்டியிருக்கும் மண் உயரத்துக்கு $4\frac{1}{2}$-அடி உயரமாகிறது. இவ்வளவு ஆழத்திலிருந்தால் ஸோல்ஜரின் தேகம் பூமிக்குள்ளும் தலைமாத்ரம் சற்று வெளியிலுமிருக்கும். இந்த நிலைமையில் துப்பாக்கியால் சுடுவது ஸௌகர்யமாயிருக்கும்.

மேலே கொட்டியிருக்கும் மண்ணை எதிரியின் பக்கம் சரிவாய்க் கொட்டுவார்கள். எதிரியின் குண்டுகள் மண்ணை ரொம்ப தூரம் துளைத்துக் கொண்டு போகாதபடி அதை கெட்டித்துக்கெட்டியாக்குவார்கள். கிடங்கு இருப்பது எதிரிகளுக்குத் தெரியாமலிருப்பதற்காக மண்ணில் புல்லையும், பசுமையான சிறு கிளைகளையும் போட்டு வைப்பார்கள். இந்த மாதிரிக் கிடங்குகள் வெட்ட ஒரு மணிமுதல் $1\frac{1}{2}$ மணி வரையில் பிடிக்கும்.

கிடங்குகள் இருப்பது எதிரிக்குத் தெரியக் கூடாது. மேலே கொட்டியிருக்கும் மண் ரொம்ப உயரமாயும், பக்கத்து பூமியிலிருந்து செங்குத்தாய் உயர்ந்துமிருந்தால் எதிரிகளுக்கு அவை நன்றாய்த் தெரிந்துவிடக்கூடும். ஆகையால் மேல் மண்ணை கூடியமட்டும் எதிரிப்பக்கம் சரிவாகக் கொட்டிவைப்பார்கள். அதோடு, $1\frac{1}{2}$-அடி உயரம் கொட்டுவதற்கு பதிலாக 1-அடி உயரம் கொட்டி, அதற்குத் தகுந்தபடி கிடங்கை ஆழமாக்கிக் கொள்வார்கள்.

ஸாவகாசம் ரொம்ப இருந்தால் கிடங்குகளில் சண்டை செய்பவர்களேயன்றி, அவர்களுக்கு உதவியாகவரும் மற்ற வீரர்களும், காயம்பட்டவர்களை எடுத்துக்கொண்டு போகவரும் ஸிப்பந்திகளும், மற்ற ஸிப்பந்திகளும் நடமாடுவதற்கு ஸௌகர்யம் ஏற்படும் பொருட்டு, கிடங்குகளை அகலமாயும் ஆழமாயும், கட்டுவார்கள். கிடங்கில் எதிரிப்பக்கமாயுள்ள சுவரில் குறடுமாதிரி சற்று அகலமாய் ஒரு இடம் அமைப்பார்கள். இந்தக் குறட்டில் ஸோல்ஜர்கள் தங்களுக்கு வேண்டிய வெடி மருந்து, குண்டுகள் வகையறாக்களை வைத்துக்கொள்ளலாம்.



படம் 3. நின்று சுடும் கிடங்கு: பெரியதாக்கப்பட்டது.

ஸாவகாசம் இன்னும் இருந்தால், குண்டுகளால் ஸோல்ஜர்களுக்கு யாதொரு கெடுதியும்



உண்டாகாதபடி மேலே மறைவுகள் முதலிய வேண்டிய ஸௌகர்யங்கள் செய்வார்கள். இன்னும் உதவி ஸைன்யங்களும், ரிஸர்வ் வீரர்களும் தங்கியிருப்பதற்கு பின் பக்கத்தில் கிடங்குகளும், அதற்குப்பின்னால் பீரங்கிகளும் மெஷீன் பீரங்கிகளும் வைப்பதற்கு கிடங்குகளும் கட்டுவார்கள்.



படம் 4. மலைமேல் பீரங்கிவைக்கும் கிடங்கு. நேராகச் சுடும்படி பீரங்கி அமைக்கப்பட்டிருக்கிறது.



படம் 5. பீரங்கிவைக்கும் கிடங்கு: மலை சிகரத்தின்மேலே போய்ச் சுடும்படி பீரங்கி அமைக்கப்பட்டிருக்கிறது.

இவைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு போர்வீரர்களும் மற்றவர்களும் போவதற்காக கிடங்குகளாலேயே வழிகளும் அமைக்கப்பட்டிருக்கும்.

எதிரிகள் தங்களுடைய கிடங்குகளைப் பிடிக்காமல் தடுப்பதற்கும், தாங்கள் தயாராவதற்கு முன் அவர்கள் துரிதமாய் வாராமல் தடுப்பதற்கும் கிடங்குகளுக்கு முன்னால் முள்கம்பிகளால் வேலிகள் போடுவதுண்டு இந்த முள் கம்பி வேலிகள் பகல் காலங்களில் தூரத்திலிருந்து பார்த்தால் எதிரிகளுக்கு தெரியாது. ராத்ரிக் காலங்களிலோ அவைகள் எங்கேயிருக்கக் கூடுமென்று கூட எதிரிகளால் ஊஹிக்கவும் முடியாது. இருட்டில் எதிரிகள் தெரியாமல் அவைகளில் அகப்பட்டுக்கொண்டால் முன்பின் போக முடியாமல் திண்டாட வேண்டியதுதான். அவைகளை பீரங்கிகளாலாவது, துப்பாக்கிகளாலாவது நாசம் செய்வது முடியாது. அவைகளை வெட்டி அப்புறப்படுத்துவதும் கடினமான காரியம். அவைகளை வெட்டினாலோ அவைகள் வளைந்து கொண்டு காலில் சுற்றிக்கொள்ளும். இந்தக்கம்பிகளில் மின்ஸாரத்தை ஸம்பந்தப்படுத்தியிருந்தால், அவைகளைத்தொட்ட எதிரிகள் யாவரும் இறக்க நேரிடும். எதிரிகள் வருவதை சற்று நேரம் தடுத்துக்கொண்டிருக்க மரங்களை வெட்டி கிடங்குகளுக்கு முன்னால் சற்று தூரத்தில் போடுவார்கள். இவைகளைக் கடந்து வருவதற்குள் கிடங்குகளிலுள்ள வீரர்களும் அவரைச் சேர்ந்தவர்களும் யுத்தத்துக்குத் தயாராகலாம்.

கிடங்குகளுக்கு முன்னால் பூமியில் சுரங்கம் வெட்டி, அதில் வெடிமருந்துகள் போட்டு வைத்து, அதன்மேல் எதிரித் துருப்புகள் நடந்து போகும்போது வெடித்து நாசம் செய்யும்படி வேண்டிய ஏற்பாடுகளும் அமைப்பார்கள். ஆனால் இவைகளால் அதிக நன்மை ஏற்படுகிறதில்லையாம். சில ஸமயங்களில் இவைகளுக்கு எடுத்துக்கொண்ட ச்ரமம் வீணாகப் போகிறதாம். மேலும் அந்த சுரங்கங்களை எதிரிகள் கைப்பற்றிக்கொண்டு, தங்களுக்கு வேண்டிய விதமாகக் கிடங்குகளாக மாற்றிக்கொள்ள அவர்களுக்கு ரொம்ப ஸௌகர்யமாகலாம்.

இன்னும் எதிரிகள் தங்கள் பக்கமாக வருவது தெரிவதற்காக, தங்கள் கிடங்குகளுக்கு முன்னால் $\frac{1}{4}$-மைல் தூரம் வரையில் பூமியிலுள்ள மரஞ்செடி கொடிகளை வெட்டி நிலத்தை ஸமமாக்குவார்கள். பள்ளமான இடங்களை மூடி விடுவார்கள்.

பீரங்கிகளின் சக்திவரவர அதிகரித்து வருவதால், அவைகளுக்கு முன் எந்தப் பாதுகாப்பு வேலையும் தக்குவதரிது. எப்படிப் பட்ட உயர்ந்த அரண்களையும் அவை நாசம் செய்து விடும். அதனால் ராணுவ இஞ்ஜினியர்கள் பீரங்கிகளின் தன்மைக் கேற்ப கிடங்குகளை அமைத்து வருகிறார்கள். கிடங்குகளில் இருக்

கும் வீரர்களை குண்டுகள் தாக்காமல் காப்பாற்றுவதற்காக கிடங்குகளுக்கு முன்னால் மண்ணாலாவது மணலாலாவது சுவர்கள் எழுப்புவார்கள். குண்டுகள் மண்ணையும் மணலையும் தாக்கினால் அவைகள் மண்ணையும் மணலையும் உயர எழுப்புகின்றன. ஆனால் சிறிது நேரத்தில் மண்ணும் மணலும் இருந்த விடத்திலேயே விழுந்து விடுகின்றன.

போர்க்களத்துக் கிடங்குகளை பீரங்கிகள் தாக்கினால் அவைகளின் முன்னுள்ள மண் மேடுகள் ஒரு சீராயிராமல், அலங்கோலமாய் மண் கொட்டினது போலாகிவிடும். அதனால் இந்த மண் மேடுகளின் உபயோகம் குறைந்து விடாது. இப்படி சீராயில்லாததே ஒரு ஸௌகர்யமாகி விடுகிறது. கிடங்குகள் இருக்குமிடம் எதிரிகளுக்கு நன்றாய்த்தெரியாமல் போகிறது.

எதிரிகளின் பீரங்கிகள் வெகுநேரம் கிடங்குகளைத்தாக்கினால் கிடங்குகள் சீக்ரம் நாசமடைந்து விடும். அப்போது கிடங்கிலுள்ள இஞ்ஜினியர் படையைச் சேர்ந்தவர்களும், ஸோல்ஜர்களும் தங்கள் கிடங்குகளை பழுது பார்த்தும் பக்கத்தில் புதுக் கிடங்குகளை வெட்டியும், கிடங்குகளின் வரிசைகளை புது வகைகளில் ஒழுங்கு படுத்தியும் வருவார்கள். அப்போது தாக்கப்படும் கக்ஷியைச் சேர்ந்த பீரங்கிகள் கிடங்குகளுக்குப் பின்னாலிருந்துகொண்டு எதிரிகளின் பீரங்கிகளைத் தாக்கும்.

போர்க்களத்தில் கிடங்குகள் அமைப்பதில் கொஞ்சதூரத்துக்கொன்றாய் ஒன்றின்பின் ஒன்றாகப் பல கிடங்குகள் அமைப்பார்கள். இப்படி அமைத்தால் தான் முன்னாலுள்ள கிடங்கு ஒன்றை எதிரி பிடித்தாலும், போர்வீரர்கள் அதற்குப் பின்னாலுள்ள கிடங்குகளிலிருந்து யுத்தம் செய்யலாம். இப்படி எதிரிகள் முன் செல்லுவதை ஒவ்வொரு கிடங்கிலும் தடுத்துக் கொண்டிருந்தால், அதற்குள் எதிர்க்கப்படும் கக்ஷியாருக்கு உதவி ஸைன்யங்களும், பீரங்கிகளும் வந்து சேர்ந்து எதிரிகளை பலமாகத் தாக்கலாம்.

எதிரியின் கிடங்குகளையும் எதிரியின் ஸைன்யங்களையும் தாக்க முக்யமாய் பீரங்கிகளை உபயோகிப்பார்கள். பீரங்கிகளிலிருந்து வெளிவரும் குண்டுகள் வெகுதூரம் போகுமாகையாலும், அவைகளால் சரியாய்க் குறிபார்த்துச் சுட முடியுமாகையாலும், பீரங்கிகளை காலாள் படையின் பின்பக்கத்தில் ஒரு மைல் முதல் 6-மைல் தூரம் வரையில் அமைத்து அங்கிருந்து எதிரிகளின் பீரங்கிகள், கிடங்குகள், போர்வீரர்களுடைய கூட்டங்கள் ஆகிய இவைகளை தாக்குவார்கள். இப்படி ரொம்பப் பின்னாலிருப்பதால் எதிரிகளுக்கு அவையிருப்பது தெரியாது. ஆனால் எதிரியின் ஆகாயக் கப்பல்காரர்கள் மேலே பறந்துவந்து பார்த்துவிடக்கூடும். அதற்காக பீரங்கிப் படைக்காரர்கள் பீரங்கிகளை மறைவான தோப்புகளிலும் காடுகளிலும் வைத்திருப்பார்கள். இவை அருகில் இல்லாவிட்டால், பீரங்கிகளின்மேல் மரங்களின் கிளைகளையும் காய்ந்த புல்லையும் போட்டு மூடி மறைப்பார்கள்.

இவ்வளவு தூரம் பின்னால் இருப்பதால் பீரங்கியைச் சுடுபவனுக்கு எதை தாக்கவேண்டுமோ அதைப் பார்க்கமுடியாது. எந்த இடத்தை நோக்கிச் சுடவேண்டுமென்பதை பீரங்கிப்படையைச் சேர்ந்தவர்கள் ஸௌகர்யமான உயர்ந்த விடங்களிலிருந்து பார்த்து அறிந்து, அவைகளின் இருப்பிடத்தை டெலிபோன் மூலமாக பீரங்கி இருக்குமிடத்துக்குத் தெரிவிப்பார்கள். பீரங்கியை வெடிப்பவர்கள் தங்களுக்கு வந்த விஷயங்களை வைத்துக்கொண்டு பீரங்கிகளைத் தக்கபடி திருப்பிச் சுடுவார்கள்.

நின்று சுடுவதற்கேற்ற கிடங்குகளுக்குப் பின்னால், வீரர்கள் மறைந்துகொள்வதற்காக சில கிடங்குகள் வெட்டப்பட்டிருக்கும். இந்தக் கிடங்குகளை பந்தோபஸ்துக் கிடங்குகள் (Cover Trenches) என்று சொல்லலாம். இவைகளோடு



சேர்ந்தவையாய் குகைபோன்ற கிடங்குகளும் தோண்டப்படும்.

எதிரிகளின் பீரங்கிகள் பலமாகத் தாக்கும்போது நின்றுசுடும் கிடங்குகளிலும், பந்தோபஸ்துக் கிடங்குகளிலும் வீரர்கள் இருப்பது அபாயகரமாதலால் அவர்கள் குகைக்குள்போய்த் தங்குவார்கள். பந்தோபஸ்துக் கிடங்குகளிலிருந்தும் குகைகளிலிருந்தும் போர்வீரர்கள் நின்று சுடும் கிடங்குகளுக்கு வேகமாய்ப் போவதற்காக, கிடங்கு வரிசைகளுக்கு மத்தியில் வழிகளாக பற்பல கிடங்குகள் தோண்டுவார்கள் என்று எற்கனவே சொன்னோம். இந்த வழிக் கிடங்குகள் ஒரே நேராக இருந்தால் எதிரிகளின் ஷ்ராப்னல் குண்டுகள் கிடங்குகள் முழுவதிலும் உள்ள மனிதர்களைத் தாக்கிவிடலாம். இதனால் உதவி ஸைன்யங்கள் வருவது கஷ்டப்படும். இதற்காக வழிக்கிடங்குகளை வளைந்து வளைந்திருக்கும்படி அமைப்பார்கள். வழிக்கிடங்குகளை எல்லாகிடங்கு வரிசைகளுக்கும் இணைத்து வைப்பார்கள். ஏனென்றால் முன்னாலுள்ள கிடங்குகளை எதிரிகள் பிடித்துக்கொண்டாலும், அல்லது எதிரியின் பீரங்கிகள் கிடங்குகளை பலமாகத் தாக்கி நாசம்செய்து போர்வீரர்களைத் துரத்திவிட்டாலும், அவர்கள் சீக்ரம் பின் கிடங்குகளுக்குப் போகவேண்டியிருக்கும். பின்புறத்தில் இயற்கையான மறைவுகள் அதாவது குன்றுகள், மேடுகள் இருந்து வீரர்களுக்கு மறைவு கொடுக்கும் இடங்கள் வரும்வரையில் ஆழமான வழிக் கிடங்குகள் அமைக்கவேண்டும். போர்க்களத்தில் வீரர்களெல்லாம் ஆழமான கிடங்குகளுக்குள்ளேதான் நடமாட வேண்டியிருக்கும்.

ஒரு கக்ஷியார் ஜயித்து முன்சென்று எதிரிகளின் கிடங்குகளைப் பிடித்தால், அந்தக் கிடங்குகளை தங்களுக்கு வேண்டியபடி ஸௌகர்யமாக சீர்திருத்திக் கொள்வார்கள்.

சில ஸமயங்களில் இஞ்ஜினியர் படையைச் சேர்ந்தவர்கள் எதிரிகளுக்குத் தெரியாமல் தங்கள் கிடங்குகளிலிருந்து எதிரியின் பக்கமாய் பூமியில் பள்ளங்களும் சுரங்கங்களும் தோண்டிக் கொண்டு போவதுண்டு. அப்படி வெகுதூரம் பல பள்ளங்களும் சுரங்கங்களும் தோண்டிக் கொண்டு போனால் 100-கஜத்துக்கு ஒருதடவை கிடங்குவரிசைகள் அமைப்பார்கள். இப்படியாக சில ஸமயங்களில் ஒன்றன்பின் ஒன்றாய் பத்து அல்லது அதற்கதிமாக கிடங்கு வரிசைகள் ஏற்பட்டுவிடுவதுண்டு.

கிடங்குகளில் ஸௌலபமான வகைகளைத் தோண்டினவுடன், அந்தக் கிடங்குகளைச் சீர்திருத்த ஆரம்பிப்பார்கள். குண்டுகளும் வெடிகுண்டுகளும் கிடங்குகளில் உள்ளவர்களை நாசம் செய்யாதபடி கிடங்குகளில் தக்க மறைவுகள் போடுவார்கள். கிடங்குகளின் சுவர்களை காங்க்ரீட் என்னும் செங்கல், ஜெல்லி, சாந்து முதலியவை சேர்த்த கலப்புப்பொருளை உபயோகித்து பலமாய்க் கட்டுவார்கள். கிடங்குகளில் ஊறும் ஜலத்தை வெளியில் இறைப்பதற்காக வடிகால்களும், வடிகால் குழாய்களும் அமைத்து அவைகளின் வழியாக ஜலத்தை வெளியில் விடுவார்கள். சில ஸமயங்களில் கிடங்குகள் ரொம்ப ஆழமாயிருந்தால் கிடங்கின் ஓரமாய் ஒரு குழி வெட்டி ஜலத்தை அங்கே பாயச்செய்து யந்த்ரங்களால் வெளியில் இறைப்பார்கள்.

எதிர்த்து முன் செல்லாமல் இருந்த விடத்திலேயே இருந்து எதிரியைத் தடுத்து நின்று கொண்டிருக்கும் கக்ஷியாருக்கு கிடங்குகள் இருப்பதால் ஒரு பெரிய ஸௌகர்யம் உண்டு. அதாவது கிடங்குகளில் ஒரு சிறிய துருப்பைக் காவலாகவைத்துவிட்டு, மற்ற துருப்புகளை போர்முகத்தின் மற்ற பாகங்களில் எதிலாவது எதிரியைத் தாக்கவேண்டுமானால் அங்கே அனுப்பலாம். கிடங்கு வரிசைகளில் ரொம்ப முன்னாலிருக்கப்பட்ட வரிசையில் நின்று சுடும் கிடங்குகளில் சில ஸோல்ஜர்களைப் பாராக்காரர்களாக நிறுத்தி, அந்தக் கிடங்குகளுக்குப்

பின்னால் அவைகளுக்கு ஸமீபத்திலுள்ள பந்தோபஸ்துக் கிடங்குகளில் ஒரு துருப்பை கிடங்குகளுக்குக் காவலாக வைப்பார்கள். இந்தக் காவல் துருப்பானது 2-நாளுக்கு ஒரு தடவை புதிதாக மாற்றப்படும். காவல் துருப்புகள் பந்தோபஸ்துக் கிடங்குகளிலும் குகைகளிலும் இருந்துகொண்டு அங்கேயே சாப்பிட்டும் தூங்கியும் வரும். எதிரிகள் தங்களைத் தாக்குகிறார்களாவென்றும், எதிரியின் துருப்புகள் தங்கள் கிடங்குகளை நோக்கி வருகின்றனவாவென்றும் பார்ப்பது பாராக்காரர்களின் கடமை. ஆனால் இவர்களல்லாமல் முக்யமாய் ஆகாய கமனிகளும், மறைவான உயர்ந்த இடங்களிலிருந்து கவனித்து வருபவர்களுந்தான் எதிரியின் நடமாட்டங்களை அறிந்து தமது சேனைகளுக்குத் தெரிவிக்கிறார்கள். எதிரியின் துருப்புகள் தங்கள் கிடங்குகளில் வந்துவிட்டால் காவல்துருப்பும், பாராக்காரர்களும் செய்வதெல்லாம் என்னவென்றால், எதிரியின் துருப்புகளை சற்றுநேரம் முன் செல்லவொட்டாமல் தடுத்துக்கொண்டிருப்பதே. இதற்குள் பின் பக்கத்துக் கிடங்குவரிசையிலுள்ள துருப்புகள் அங்குள்ள பந்தோபஸ்து கிடங்குகளிலிருந்து நின்று சுடும் கிடங்குகளுக்கு வந்து தங்கள் இடத்திலிருந்து கொண்டு யுத்தத்துக்குத் தயாராயிருக்கும். இவைகளிலிருந்து வேண்டும்போது காவல் துருப்புகளுக்கு உதவியாகத் துருப்புகள் போகும். இந்தத் துருப்புகளுக்கும் பின்னால் துருப்புகளின் முக்யபாகம் இருந்துகொண்டிருக்கும். அந்தத் துருப்புகளிலிருந்து வேண்டும்போது முன் கிடங்குகளுக்கு உதவி ஸைன்யங்கள் அனுப்புவார்கள். ஸைன்யத்தின் பெரும்பாகத்தை கிடங்குகளுக்குப் பின் பக்கத்தில், எதிரிகளின் பீரங்கிகள் தாக்கக்கூடாத ஸௌகர்யமான இடங்களில் நிறுத்தியிருப்பார்கள்.

இந்த ஏற்பாட்டால் எதிரியின் ஸைன்யங்களை எதிர்ப்பதற்கு வேண்டிய ஸைன்யங்களை வேண்டும்போதெல்லாம் முன்னுக்கு அனுப்பிக்கொண்டேயிருக்கலாம். இந்த ஏற்பாட்டின் முக்ய நோக்கம் எதிரி முன்செல்லாமல் முற்றிலும் தடுத்து விடுவதும், அது முடியாவிட்டால் வேறு இடங்களிலிருந்து உதவி ஸைன்யங்கள் வரும் வரையில் எதிரிமுன் செல்லாதபடி கூடிய மட்டும் தடைசெய்துகொண்டிருப்பதுமே. எதிரி அநேக ஸைன்யங்களுடன் வந்து எதிர்த்தாலுங்கூட, சிறிது காலம் அவைகளைத் தடுத்துக்கொண்டிருக்கலாம். அதற்குள் இருபக்கத்திலிருந்தும் வேண்டிய அளவு புது ஸைன்யங்கள் கொண்டுவந்து எதிரிகள் தாக்கின இடத்திற்குப் பின்னால் நிறுத்தி எதிரிகளைத்தாக்கலாம்.

எதிர்த்து முன் செல்லும்போதும் ஸைன்யங்கள் எப்படி நடந்துகொள்கின்றனவென்பதை இனி விவரிக்கிறோம். கிடங்கு வரிசைகளுக்குப்பின்னால் மறைவான இடங்களில் பீரங்கிப் படைகள் இருக்குமென்று முன்னமே சொன்னோம். முதலில் எதிரிகளின் பீரங்கிகளும், கிடங்குகளும் எங்கிருக்கின்றனவென்பதைத் தெரிந்துகொள்வார்கள். தெரிந்துகொண்ட பிறகு அதற்கு முன்னாலேயே எப்பொழுது எதிரிகளைத் தாக்குவதென்று தீர்மானித்த ஒரு நேரத்தில் எதிரிகளின் பீரங்கிகள், கிடங்குகள் ஆகிய இவைகள் இருக்குமிடங்களையும், இருக்கக்கூடுமென்று ஸந்தேகிக்கும் இடங்களையும் பெரிய பீரங்கி குண்டுகளால் தாக்குவதோடு பின் பக்கத்திலிருந்து எதிரிக்கு உதவி ஸைன்யங்கள் வராமல் தடுப்பதற்காக வழிக்கிடங்குகளை ஷ்ராப்னல் குண்டால் தாக்குவார்கள்.

பெரிய பீரங்கி குண்டுகளால் கிடங்குகளும் அவைகளிலுள்ள துருப்புகளும் நாசமாவதாலும், அந்தக் கிடங்குகளுக்கு உதவி ஸைன்யங்கள் வராமல் ஷ்ராப்னல் குண்டுகள் வழிக்கிடங்குகளைத் தாக்குவதாலும், பின்னிருப்பவர்கள் முன்னுக்கு உதவிக்குவர முடியாமல் போகவும், முன்னிருந்தவர்கள் அங்கிருக்க முடியாமல் பந்தோபஸ்தான இடங்களுக்கு ஓடவும்கூடும்.



எதிரிக்கு என்ன கெடுதிகள் ஏற்பட்டனவென்றும், எதிரி ஸைன்யங்கள் என்னசெய்துகொண்டிருக்கின்றனவென்றும் பீரங்கியை தாக்க உத்தரவு கொடுப்பவர்கள் கவனித்துக்கொண்டிருப்பார்கள். அதோடு தங்களுடைய முன் கிடங்குகளில் துருப்புகளை சேகரம் செய்வார்கள். எதிரியின் காலாள் படையும் பீரங்கிப்படையும் பின்வாங்கிப் போனதாகத் தோன்றினதும், துருப்புகள் முன்செல்ல வேண்டுமென்று உத்தரவு கொடுப்பார்கள். துருப்புகள் கிடங்குகளிலிருந்து வெளியில் வந்ததும் தெரிந்தெடுக்கப்பட்ட சில வீரர்கள் முன்னால் ஓடி எதிரியின் கிடங்குகளுக்கு முன்னால் போட்டிருக்கும் முள்வேலிகளை அறுத்து, தடையாயிருக்கும் வேறு பாதுகாப்பு வேலைகளையும் நாசம்செய்வார்கள். மற்றத் துருப்புகள் எதிரியின் கிடங்குகளில் ஓடாமல் நின்றுகொண்டிருக்கும் எதிரியின் ஸோல்ஜர்களோடு கைகலந்து சண்டை செய்வதற்காக சனியன்களோடு அவர்களுக்கு பின்னாலேயே போகும். இவர்கள் முன் செல்லும்போதும் பின் பக்கத்திலுள்ள தங்கள் பீரங்கிகள் எதிரியைத் தாக்கிக்கொண்டிருக்கவேண்டும். தங்கள் கக்ஷியைச்சேர்ந்த துருப்புகள் முன்செல்லும்போது அவைகளைத் தாக்கும் எதிரி பீரங்கிகள் எங்கிருக்கின்றனவென்றறிந்து அந்த பீரங்கிகளைத் தாக்கி அங்குள்ள மனிதர்களைக் கொன்றும் காயப்படுத்தியும், அந்த பீரங்கிகளால் தங்கள் துருப்புகளுக்கு கெடுதி நேரிடாதபடி பார்த்துக் கொள்ளவும் வேண்டும். முன் சென்றுகொண்டிருக்கும் தங்கள் துருப்புகளை எதிரியின் துருப்புகள் தாக்காதிருக்கவும், எதிரி புதுஸைன்யங்கள் அனுப்பாமலிருக்கவும் தங்கள் துருப்புகளுக்கு முன்னுள்ள இடங்களை முன் சொன்ன மாதிரி பீரங்கியால் தாக்கிக்கொண்டிருக்கவேண்டும். பீரங்கிகளால் ஸாமர்த்யமாய்த்தாக்கலாம். குண்டுகளும், ஷ்ராப்னலும் வெடிப்பதற்காக வைத்திருக்கும் திரிகளை தக்க அளவு நறுக்கி பீரங்கிகளில் வைத்துச் சுட்டால் அவைகள் முன் சென்றுகொண்டிருக்கும் தங்கள் கக்ஷியைச் சேர்ந்த ஸோல்ஜர்களின் தலைக்குமேல் அவர்கள் மேல் தாக்காதபடி போய் அவர்களுக்கு முன்னால் 400-கஜதூரத்தில் விழுந்து வெடித்து அங்கு எதிரியின் துருப்புகள் இருந்தால் அவைகளை நாசப்செய்யும்.

எதிர்க்கும் துருப்புகளுக்கு பீரங்கிகள் கடைசிவரையில் ஒத்தாசை செய்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதிர்க்கும் துருப்புகளுக்கு ரொம்ப சேதம் ஏற்படும். இப்படி முன் சென்ற துருப்புகள் எதிரியின் முன் வரிசைக் கிடங்குகளையோ அல்லது பல கிடங்கு வரிசைகளையோ பிடித்துக்கொள்வார்கள். சில ஸமயங்களில் இரண்டொரு கிடங்குகளைப் பிடித்தபிறகு எதிரிகள் ரொம்ப பலமாகத் தாக்கினால் அதிகக்கிடங்குகளை பிடிக்க முடியாமல் போகும். ஒரு கிடங்கு வரிசையைப் பிடித்த பிறகு அங்கிருந்து கொண்டு, முன் போலவே அடுத்த கிடங்கைப்பிடிக்க யத்தனம் செய்வார்கள். இந்த மாதிரி யுத்தம் செய்வதில் ஸைன்யங்களின் பல பிரிவுகளும் ஒன்றுக்கொன்று ரொம்ப ஒற்றுமையாயிருந்து வேலையை நடத்த வேண்டும்.

இந்த வேலையில் ஜயித்தால் கூட ஜனச்சேதமும், குண்டுகள், மருந்துகள் இவைகளின் சேதமும் ரொம்ப ஏற்படும். துருப்புகள் தோற்றுத்திரும்பினாலோ சேதம் இன்னும் ரொம்ப அதிகமாகும். இன்ன நோக்கத்துடன் இன்ன விடத்துக்கு முன் செல்ல வேண்டுமென்று யோசித்து வைத்துக்கொண்டுகொஞ்சங் கொஞ்சமாய் முன் சென்று வந்தால் கடைசியில் ஸைன்யங்களை ஸௌகர்யமாய் நடத்தி முன் செல்ல ஸாதக மேற்படும்.

தற்காலத்தில் ஐரோப்பாவில் நடந்து வரும்

யுத்தத்தில் மேற்சொன்னவாறு, இருகக்ஷியாரும் கிடங்குகளிலிருந்து கொண்டு யுத்தம் செய்வதால், ஒரு கக்ஷியார் இன்னொரு கக்ஷியாரை கிடங்குகளிலிருந்து வெளிப்படுத்தித் தூரத்த பெரிய பீரங்கி குண்டுகளையும் ஷ்ராப்னல் குண்டுகளையும் அளவு ஸங்க்யை இல்லாமல் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இப்படி மருந்தையும் குண்டுகளையும் கணக்கு வழக்கில்லாமல் உபயோகிப்பதற்குத் தக்கபடிதான் அந்தந்தக் கக்ஷியாருக்கு ஜயமேற்படும். அப்படியிருந்தும் ஜயித்த கக்ஷியார் அடியடியாய்த்தான் முன்செல்ல வேண்டியிருக்கிறது.

## FORTS OF OLDEN DAYS.

## பழையகாலத்துக் கோட்டைகள்.

**கனமான மதில்களுள்ள கோட்டைகள்.**—ஆதிகாலத்தில் போர் செய்யும் இரண்டு கக்ஷிகளில் ஏதாவது ஒரு கக்ஷி எதிரில்நின்று சண்டை செய்ய முடியாமல் போனால், அந்தக் கக்ஷியார் தங்களைக் காத்துக் கொள்வதற்காகக் கோட்டைகளில் புகுந்து கொள்வதுண்டு. கோட்டைகளை எதிரிகள் தாக்கிப்பிடித்துக் கொள்ளாமலிருக்க அவைகளை பலமாகக் கட்டிவந்தார்கள். எதிரிகளும் கோட்டைகளைத் தாக்கிப்பிடிக்க சில ஸாதனங்களைக் கையாடி வந்தார்கள். கோட்டைகளின் மதில்களைத் தாக்கித் தகர்க்க இரண்டு யந்த்ரங்கள் அக்காலத்தில் உபயோகத்திலிருந்து வந்தன. ஒன்றுக்குக் காட்டபுல்ட் என்று பெயர். அந்த யந்த்ரத்தில் பெரிய கருங்கல் குண்டுகளைப் போட்டு ஒரு உபாயத்தால் அந்தக் கற்களை கோட்டை மதில்களின்மீது தாக்கும்படி செய்யலாம்.

இன்னொரு யந்த்ரத்துக்கு பாட்டரிங் ராம் என்று பெயர். அந்த யந்த்ரத்தின் உதவியால் இருப்புப் பூண்போட்ட பெரிய மர உலக்கைகளால் கோட்டை மதில்களை இடித்துத் தாக்கலாம். ஸாமான்யக் கோட்டைகளை இந்த யந்த்ரங்களைக்கொண்டு தகர்த்துப் பிடித்துவிடலாம். இந்த யந்த்ரங்கள் உபயோகத்துக்கு வரவே கோட்டைகள் கட்டுபவர்கள் கருங்கற்களைக்கொண்டு கோட்டைகளை ரொம்ப பலமாகக்கட்டலானார்கள். மதில்கள் 30-அல்லது 40-அடி கனமுள்ளவைகளாக கட்டப்பட்டன. எதிரிகள் மதில்களில் ஏணி வைத்து ஏறமுடியாதபடி அவைகளை ரொம்ப உயரமாய்க் கட்டினார்கள். கோட்டைகளின் மூலைகளில் பெரிய கோபுரங்கள் கட்டப்பட்டன. கோட்டையில் அடைக்கலம் புகுந்தவர்கள் இந்த கோபுரங்களிலிருந்து கொண்டு தங்களுக்கு எதிரிலுள்ள விரோதிகளின் ஸைன்யங்களையும், கோபுரங்களுக்கு இடையிலுள்ள மதில்களைத் தாக்கும் ஸைன்யங்களையும் எதிர்க்கலாம். அக்காலத்தில் இப்படிப்பட்ட கோட்டைகளைப் பிடிப்பது ரொம்ப ச்ரமமான வேலையாயிருந்தது. வெகு காலம் முற்றுகை போட்டு, கோட்டைக் குள்ளிருப்பவர்களுக்கு ஆகாராதிகள் கிடைக்காமல் செய்து அவர்களை பட்டினி கிடக்கச் செய்தால்தான் கோட்டைகளைப் பிடிக்கலாம்.

**வெடிமருந்தும் இருப்புக்குண்டுகளும்.**—14-ம் நூற்றாண்டு வரையில் மேற்சொன்ன மாதிரிக் கோட்டைகளே கட்டப்பட்டுவந்தன. அதற்குப் பிறகு வெடிமருந்து உபயோகத்துக்குவந்தது. இந்தப் புது யுத்தஸாதனத்தால் கோட்டைகளைப் பிடிப்பதற்கு ரொம்ப உதவி ஏற்பட்டுவிடவில்லை. அக்காலத்தில் பீரங்கிகள் உபயோகத்திலிருந்தாலும், போர்வீரர்களுக்கு பீரங்கியை உபயோகிக்கத் தெரியாமலிருந்ததாலும், பீரங்கிகளில் இருப்புக் குண்டுகளை உபயோகிக்காமல் கருங்கல் குண்டுகளையே உபயோகித்துவந்தாலும், பீரங்கிகளால் கோட்டைகளுக்கு அதிக கெடுதிகள் ஒன்றும் ஏற்படவில்லை. 1480-ம் வர்ஷத்தில் இரும்புக் குண்டுகள் வார்த்து பீரங்கிகளில் உபயோகிக்கலானார்கள். புது பீரங்கியால் கோட்டை மதில்களைத் தகர்ப்பது ஸுலபமாயிற்று. 15-ம் நூற்றாண்டில் ப்ரான்



ஸில் ஆண்டுவந்த 8-வது சார்ல்ஸ் என்பவர் இந்த இரும்புக்குண்டு பீரங்கிகளை எடுத்துக்கொண்டு, இட்டலியின் மேல் படையெடுத்துப் போய் அங்கிருந்த கோட்டைகளையெல்லாம் வெகு சீக்ரத்தில் பிடித்து விட்டாராம். இருப்புக் குண்டுகளுக்கு கற்களை உடைக்கும் சக்தி ரொம்ப அதிகம். அவைகளுக்கு முன் எந்த பலமான கற்சுவர்களும் நிற்கா. அதன்மேல் கோட்டை கட்டுபவர்கள் புது மாதிரியாகக் கோட்டைகள் அமைக்கலானார்கள். முதலில் கற்கோட்டைச் சுவர்களுக்கு முன் புறத்தில் மண்ணால் சுவர்கள் கட்டினார்கள். பிறகு கல் மதில்களே கட்டாமல், சுவர்களை முழுவதும் மண்ணாலேயே கட்டலானார்கள். இந்த மண் சுவர்களும் கற்சுவர்கள் போல் ரொம்ப உயரமாயில்லாமல் 15-அடி முதல் 30 அடி உயரமுள்ளவையாயிருந்தன. மதில்கள் அதிக உயரமில்லாமையால், எதிரிகளைத் தடுப்பதற்காக மண் மதில்களுக்கு முன்னால் அகழ்கள் வெட்டி வைத்தார்கள். அகழ்கள் அகலமாயும் 20-அல்லது30-அடி ஆழமாயும் இருந்தன. அகழ்களின் கரைகளில் செங்கல்லால் சிறு மதில்கள் கட்டினார்கள். இந்த மதில்களுக்குள் பல அறைகள் கட்டி, அதற்குள் போர் வீரர்களை நிறுத்தி அகழின் வழியாக வரும் எதிரிகளைத் துப்பாக்கியால் தாக்க ஏற்பாடு செய்தார்கள்.

கோட்டையின் அமைப்பிலும் சில மாறுபாடுகள் ஏற்படலாயின. அந்தக் காலத்தில் பீரங்கிக் குண்டுகள் 500-கஜ தூரம் போகக் கூடியவையாயிருந்தன. எதிரிகள் எந்த மதில்களைத் தாக்கவேண்டுமோ அதற்கெதிரில் ஏராளமாக பீரங்கிகளைக் கொண்டுவந்து வைத்து மதில்களைத் தாக்கினார்கள். எதிரிகளின் பீரங்கிப் படைகளை மதில்களிலிருந்து தாக்குவது மாத்ரம் போதாதென்று எண்ணி இரண்டு மதில்கள் சேருமிடத்தில் பாஸ்டியன் என்று சொல்லப்பட்ட கொத்தளங்களைக் கட்டலானார்கள். கொத்தளங்கள் மதில்களோடு சேர்ந்தவையானாலும் அவைகளை விட சற்று உயர்ந்திருக்கும். அவைகளுக்கு 5-பக்கங்கள் உண்டு. 2-பக்கங்கள் மதில்கள் ஓரமாயிருக்கும். இவைகளை விலாப் பக்கமென்று சொல்லலாம். 2-பக்கங்கள் மேற்சொன்ன இரண்டு விலாப் பக்கங்களுக்கு இடையிலிருக்கும். இவைகளை முன் பக்கங்கள் என்று சொல்லலாம். இன்னொரு பக்கத்துக்கு கார்ஜ் என்று பெயர். இதுதான் கோட்டையிலிருந்து கொத்தளத்துக்குள் போக வழி. கொத்தளத்தின் முன் பக்கங்களிலிருந்தும் விலாப்பக்கங்களிலிருந்தும் எதிரியின் பீரங்கிப்படைகளைத்தாக்க வேண்டிய வஸதிகள் அமைக்கப்பட்டிருக்கும். கொத்தளத்தின் ப்ரயோஜனம் என்னவென்றால், இரண்டு கொத்தளங்களுக்கு இடையிலுள்ள கோட்டை மதிலை எதிரி தாக்கினால், அந்த இரண்டு கொத்தளங்களின் முன் பக்கங்களிலிருந்தும், தாக்கப்பட்ட மதிலிலிருந்தும் தூரத்திலுள்ள எதிரியின் பீரங்கிப்படையைத் தாக்குவது ஸுலபமாயிற்று. எதிரி மதிலுக்கு ரொம்ப பக்கத்தில் வந்துவிட்டாலும், கொத்தளத்தின் விலாப்பக்கத்திலிருந்து தாக்கலாம்.

இப்படிக் கோட்டைகளை யமைத்ததால், எதிரிகள் கோட்டை மதில்களைப் பிடிக்க முயற்சி செய்வதைவிட்டு, கொத்தளத்தையே தாக்கலானார்கள். அதிலும் கொத்தளத்தில் முன் பக்கத்துச் சுவர்கள் சேரும் கோணத்துக்கு எதிரேநின்று அந்தக் கோணத்தை யொட்டினால் போலுள்ள பாகத்தைத் தாக்கினார்கள். இதன்மேல் கோட்டையிலுள்ளவர்கள் கொத்தளத்தின் ஓரமாக எதிரிகளைத் தாக்குவதற்கு ஸௌகர்யமான இடத்தில் ராவலின் என்று சொல்லப்பட்ட சில கட்டிடங்கள் கட்டி அங்கிருந்து எதிரிகளைத் தாக்கலானார்கள்.

இப்படியாக எதிரிகளை தடைசெய்யும் நோக்கத்துடன் கோட்டையிலிருந்து வெளிப்புறத்

தில் ஒன்றுக்கு முன் ஒன்றாக பல பாதுகாப்பு வேலைகள் அமைக்கப்பட்டன. கோட்டையிலுள்ளவர்கள் வெளிப்புறத்துப் பாதுகாப்பு வேலைகளில் தங்கியிருந்து, எதிரிகளோடு யுத்தஞ்செய்து பிறகு தோற்றுப்போனால், அதற்கடுத்தாற்போல் பின்புறத்திலுள்ள பாதுகாப்பு வேலைகளுக்குவந்து யுத்தம் செய்வார்கள்.

காலக்ரமத்தில் பீரங்கிகளில் சீர்திருத்தம் செய்யப்பட்டு வந்ததால், பீரங்கிக்குண்டுகள் போகக்கூடிய தூரம் வரவர அதிகரித்து 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் குண்டுகளைக் கொண்டு 800 கஜதூரத்திலுள்ள மதில்களைத் தாக்குவது ஸாத்யமாயிற்று. அதன்மேல் இஞ்ஜினியர்கள் எதிரியின் பீரங்கிப்படை ஸமீபத்தில் வந்து. கோட்டை மதில்களைத் தாக்காதபடி கோட்டையைச் சுற்றிலும் கோட்டைக்கு 1-மைல் தூரத்தில் பல சிறிய கோட்டைகள் கட்டலானார்கள். இந்தக் கோட்டையிலுள்ள படைகள் ஒன்றுக்கு ஒன்று உதவியாயிருப்பதற்காக இவைகளை ஒன்றுக்கொன்று ஸமீபத்தில் கட்டினார்கள். இந்தச் சிறுகோட்டைகளை எதிரிகள் தனியாக முற்றுகை போடக்கூடுமென்று அவைகளில் வேண்டிய படைகளையும், ஆயுதங்களையும் ஆகாராதிகளையும் சேகரித்து வைத்தார்கள்.

1859-ம் வர்ஷத்தில் புதுமாதிரியான பீரங்கிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அந்த பீரங்கிகளின் சக்தியும் அதிகரிக்கலாயிற்று. அடுத்த பத்து வர்ஷத்துக்குள் பீரங்கிகளைக் கொண்டு 4000 கஜம் அதாவது $2\frac{1}{4}$-மைல் தூரத்திலுள்ள கோட்டை மதில்களை ஸுலபமாய்த் தகர்த்துவிட ஸாத்யமாயிற்று. அதோடு கொத்தளங்களின் சுவர்கள் ரொம்ப உயரமாயிருந்ததால் அவைகளை எதிரிகள் வெகுதூரத்திலிருந்து கூடப் பார்த்து அவைகளைத் தாக்குவது ஸாத்யமாயிற்று. சிறு கோட்டைகளில் ஆயுதங்களும் மருந்துகளும் மற்ற ஸாமான்களும் அதிகமாகவும் நெருக்கமாயுமிருந்தபடியால், எதிரியின் குண்டுகள் கோட்டைக்குள் விழுந்தால், அவை மேற்சொன்னவைகளுள் எவற்றையாவது தாக்காமலிருப்பது அரிது.

இவைகளை யுத்தேசித்து, சுற்றுப்புறத்துக் கோட்டைகளை ஆடம்பரமாகக் கட்டாமல் ஸாமான்யமாய்க் கட்டி, பீரங்கிகள் மருந்துகள் முதலியவைகளை கோட்டைகளுக்கு மத்தியில் உள்ள இடைவெளியில் ஸௌகர்யமான இடங்களில் வைத்து உபயோகிக்கலானார்கள்.

## MODERN FORTIFICATIONS.

## தற்காலத்திய கோட்டைகள்.

**கோட்டைகள் கட்டுமிடங்கள்.**—மேல் நாட்டிலுள்ள ராணுவ அதிகாரிகள் தங்கள் நாடுகளை விரோதிகள் படையெடுத்து வருவதைத் தடுப்பதற்காக பற்பலவிடங்களில் கோட்டைகள் கட்டியிருக்கிறார்கள். முக்யமாக ராஜதானிப் பட்டணங்கள், பெரிய வ்யாபாரஸ்தலங்கள். பெரிய ரெயில்வே ஸ்டேஷன்கள், துறைமுகங்கள், முக்யமான பாலங்கள், மலைக்கணவாய்கள், துருப்புகள் சேர்த்துவைத்திருக்கும் ஸ்தலங்கள், யுத்தஸாமான்கள் சேகரித்துவைத்திருக்குமிடங்கள், ஆகிய இவைகளைப் பாதுகாப்பதற்காக அந்தந்த இடங்களில் கோட்டைகள் கட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு பட்டணத்தில் கோட்டைகள் கட்டுகிறதா இல்லையா என்பதை நிர்ணயிப்பதற்கு முன், அது இருக்கும் இடம் எப்படிப்பட்டது, அங்கே கோட்டைகள் கட்டவேண்டியது முக்யமா, என்னும் விஷயங்களை கவனிப்பார்கள்.

ஐரோப்பாவிலுள்ள அநேக பட்டணங்கள் பெரும் கோட்டைகளாக இருக்கின்றன. இந்தக் கோட்டைகளைச் சுற்றி, கோட்டையிலிருந்து 5-முதல் 15-மைல் தூரம் வரையில், பல கோட்டைகள் கட்டியிருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக பாரிஸ் கோட்டைகளையும், பெல்போர்ட், ஸ்ட்ராஸ்பர்க் என்னுமிடங்களையும் சொல்லலாம்,



சில பட்டணங்களைக் கோட்டைகளாகக் கட்டாமல், ஸாதாரண நகரமாக விட்டுவிட்டு, அவைகளைச் சுற்றிலும், ஒரு சுற்றோ, அல்லது இரண்டு மூன்று சுற்றுகளோ கோட்டைகள் கட்டியிருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக லீயெஜ் நகரத்தைச் சொல்லலாம்.

இந்தக் கோட்டைகளில் பெரிய பீரங்கிகள் வைத்திருக்கிறார்கள். இவைகளைக் காப்பதற்கு வேண்டிய அளவு வீரர்களும், அவர்களுக்கு அநேகநாளுக்குப் போதுமான குண்டு, மருந்து வகையறாக்களும், உணவுப் பொருள்களும் மற்றவைகளும் இருக்கும்.

**கோட்டைகளின் ப்ரயோஜனமின்மை.**—வெகு காலம்வரையில் இப்படிப்பட்ட கோட்டைகளைப் பிடிப்பதென்றால் ரொப்பநாள் முற்றுகை போடவேண்டியிருந்தது. ஆனால் தற்காலத்தில் பெரிய பீரங்கிகள் உபயோகத்துக்கு வரவே கோட்டைகளைப் பிடிப்பது ஸுலபமாகிவிட்டது. 12-அங்குலம் முதல் 17-அங்குலம் வரையில்வாய்க் குழுக்களவுள்ள பீரங்கிகளைக்கொண்டுதான் ஜெர்மானியர்கள் லீயெஜ், நாமூர், ஆண்ட்வெர்ப்பு என்னும் பெரிய கோட்டைகளைத் தாக்கிப்பிடித்தார்களாம். ஆகவே கோட்டைகளை முற்றிலும் நம்பியிருப்பதில் ப்ரயோஜனமில்லை.

கோட்டைகளை நம்பியிருப்பதில் இன்னொரு அஸௌகர்யமுண்டு. விரோதிகளின் ஸைன்யம் ஒருநாட்டைப் படையெடுத்து வருகிறதென்றும், அந்த விரோதி ஸைன்யத்தை அந்த நாட்டு ஸைன்யங்களின் ஒரு பிரிவு தாக்கிப் பின்பு பின்வாங்கவேண்டியிருந்ததென்றும் வைத்துக்கொள்வோம். யுத்தத்தால் வீரர்கள் களைத்திருக்கக்கூடும். ஆகாராதிகளும், குண்டுகள் மருந்துகள் முதலியவைகளும் போதுமான அளவு கையிருப்பில் இராமலிருக்கக்கூடும். பின்வாங்கிப்போன ஸைன்யத்தின் தலைவர் பக்கத்திலுள்ள கோட்டைக்குள்போய், வீரர்களுக்கு சற்று இளைப்பாற இடங்கொடுத்து, வேண்டிய ஆகாராதிகளையும் மருந்து, குண்டு வகையறாக்களையும் எடுத்துக்கொண்டு, சிலநாள்களில் வெளியில் வந்து மறுபடியும் எதிரியுடன் யுத்தம் செய்யலாமென்று எண்ணிப்போனால், அதற்குள், எதிரிகள் கோட்டையை முற்றுகை போட்டு விடக்கூடும். அந்தக் கோட்டையைவிட்டு வெளியில்வர வேண்டுமானால் எதிரிகளோடு போர்செய்துதான்வெளியில் வரவேண்டும். அப்படி வரும்போது ஆகாராதிகளையும் மருந்து முதலியவைகளையும் கோட்டையிலேயே விட்டுவிட்டுத்தான் வரவேண்டியதாகும். அநேக ஸமயங்களில் இதுவும் முடியாமல் போகும். அநேகமாய் கோட்டையில் அடைக்கலம் புகுந்தவர்கள் ஜயசாலிகளாய் வெளிவருவதே கிடையாது. ஆகாராதிகளும் மருந்து குண்டுவகையறாக்களும் காலக்ரமத்தில் குறைந்து போவதாலும், எதிரிகள் கோட்டைகளை பெரிய பீரங்கிகளால் தாக்குவதாலும், அவர்கள் எதிரிகளிடம் சரணமடைந்து, போர்க்கைதிகளாகப் பிடிபட்டுப் போகிறார்களென்பது அனுபவத்தில் ஏற்பட்ட விஷயம்.

இப்படி கோட்டைகளுக்குள் புகாமல், பின்வாங்கும் சேனைத்தலைவர் ஸௌகர்யமான இடங்களில் எதிரிகளோடு சண்டை செய்துகொண்டிருக்கலாம். தவிர தமது தேசமாதலால் தக்க வஸதிகள் கிடைக்கக்கூடிய இடம் அகப்படும் வரையில் தாம்போகும் இடங்களிலே வேண்டிய ஸாமான்களையும் கூடியமட்டும் சேகரித்துக் கொள்ளலாம். மேலும், விரோதிகளுக்குப் பக்கத்திலேயே இருந்து கொண்டிருந்தால் சத்ருக்களை பற்பல விதங்களில் தொந்தரவு செய்துகொண்டுமிருக்கலாம்.

ஆனால் இப்படிச் சொல்வதால் கோட்டைகளால் ப்ரயோஜனமே இல்லையென்று சொல்வதாக எண்ணக்கூடாது. சில விடங்களில் கோட்டைகளிருப்பதால் ஒரு சிறிய ஸைன்யம் பெரிய விரோதிகளின் ஸைன்யத்தை முழுவதும்

தடுத்து விடவோ அல்லது சில காலம் வரையில் விரோதிகளை முன் செல்லாதபடி தடுத்துக் கொண்டிருக்கவோ கூடும்.

தற்காலம் கோட்டைகளை முற்றுகை போடுவதென்றால் அதற்கு ஒரு சிறு சைன்யம் போதாது. ஒரு பட்டணத்தில் ஒரு கோட்டை மாத்ரமிருந்தால் அதைமுற்றுகைபோட சிறு சைன்யம் போதும். ஆனால் மேலே சொன்னபடி ஒரு பட்டணத்தைச் சுற்றிலும் ஒன்றிரண்டு சுற்றுகள் கோட்டைகள் கட்டியிருப்பதாலும், வெளிப்புறத்துக் கோட்டைகளின் சுற்றளவு ரொம்பப்பெரிதாக இருக்குமாதலாலும், ஒரு பட்டணத்தை முற்றுகை யிடுவதென்றால் அதற்கு ஏராளமான சைன்யங்கள் வேண்டியிருக்கும். வெளிப்புறத்துக் கோட்டைகளுக்கும் பட்டணத்துக்கும் ரொம்ப தூரமிருக்கும்படி வெளிப்புறத்துக் கோட்டைகளைத் தக்க இடத்தில் அமைத்திருப்பதால், வெளிப் புறத்துக் கோட்டைகளை முற்றுகை போடுகிறவர்கள் அவ்வளவு தூரத்திலிருந்து மத்தியிலிருக்கும் பட்டணத்தைத் தாக்குவது முடியாது.

தற்காலத்துக் கோட்டைகளுக்கும் முற்காலத்துக் கோட்டைகளுக்கும் ரொம்ப வித்யாஸமுண்டு.

தற்காலத்துக் கோட்டைகளிலுள்ள பீரங்கிகளுக்குத் தக்க உலோகத்தால் செய்த குபோலா என்று சொல்லப்பட்ட கவசங்கள் போட்டு எதிரிகள் நாசம் செய்யாதபடி பத்ரமாய் வைத்திருக்கிறார்கள் குபோலாக்கள் குப்புறக்கவிழ்த்த அருக்கன் சட்டிபோலிருக்கும். இவைகளில் பீரங்கி பாரல்களுக்காக த்வாரங்கள் செய்யப்பட்டிருக்கும். ஆனால் எல்லா பீரங்கிகளையும் கோட்டைகளுக்குள் வைத்திருப்பதில்லை. வெளியில் மறைவான இடங்களில் வைத்துக்கொண்டு யுத்தம் செய்கிறார்கள். மேலும் ஒரு கோட்டைக்கும் இன்னொரு கோட்டைக்கும் மத்தியில் அவைகளோடு ஸம்பந்த முள்ளனவாக கிடங்குகள் வெட்டி, அந்த கிடங்குகளில் காலாள் படையை அமர்த்தி, காலாள் படையைக் கொண்டு விரோதிகள் கோட்டைகளைப் பிடிக்காதபடி தடுக்கிறார்கள். தற்காலத்தில் கோட்டைகளைக் காப்பது முக்யமாய் காலாள் படையே. வெளிப்புறத்துக் கோட்டைகளுக்கும் மத்தியிலுள்ள கோட்டைக்கும் போக்குவரத்துக்கு யாதொரு தடையுமில்லாதபடி பார்த்துக்கொள்கிறார்கள். கோட்டைகளுக்குள் இல்லாமல் வெளியில் உள்ள பீரங்கிகளைத் தக்கபடி மறைத்து வைத்து அவைகளைக் கொண்டு எதிரிகளைத் தாக்குகிறார்கள். இதற்கேற்றாற்போல் தற்காலத்தில் புகையில்லாத வெடி மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் கோட்டை பீரங்கிகள் இருக்குமிடம் விரோதிகளுக்கு தெரிவது கஷ்டம். மேற்சொல்லியவைகளால் கோட்டைகள் முற்காலத்திய கோட்டைகள் போலில்லாமல், ஸாதாரண போர்க்களத்தில் யுத்தம் நடக்கும்போது உபயோகிக்கும், கிடங்குகள், அரண்கள் முதலியவைகளை ஒத்தவைகளாக ஆகின்றன.

## ORIGIN OF SPECIES.

BY S. R. ATMANATHA AIYAR.

## இனத்தின் ஆரம்பம்.

சார்லெஸ் டார்வின் என்று சொல்லப்பட்ட துரை ஒரு பெயர்போன இங்க்லீஷ்காரர். இவர் ஸ்தாவர ஜங்கமங்களின் தத்வங்களையும், அவைகள் முதலில் எப்படி இருந்தன, பிறகு எம்மாதிரி மாறுதல்களடைந்து நமக்கு இப்பொழுது தோன்றுகிறபடி ஏற்பட்டன, எந்த காரணங்களால் அப்படி மாறுதல்களடைந்தன என்கிற விஷயங்களையும், இதைப்போன்ற வேறு சில விஷயங்களையும் குறித்து, விசேஷமான ஆராய்ச்சி செய்து பூர்வகால ஸ்திதியைக் குறித்து நமக்கு இருக்கும் அறிவை ஜாஸ்தி செய்தார். இவருக்குப்பின் வேறு சில வித்வான்களும் இந்த விஷயத்தில் அதிக பாடுபட்டு அவர்களும் ப்ரத்



யேகமான ஆராய்ச்சிகள் செய்து டார்வின் எடுத்துக் காட்டின உண்மைகளை பொதுவாக உறுதிப்படுத்தினார்கள். அந்த விஷயங்களை நாம் இங்கு ஒருவாறு சுருக்கமாய்ச் சொல்வோம்.

ஸுமார் 80 வருஷங்களுக்கு முந்தி டார்வின் துரை தென் அமெரிக்கா தேசத்திற்கு மேற்கேயுள்ள கலப்பகாஸ் தீவுகளுக்குப் போனார். அவர் அந்த தீவுகள் ஒவ்வொன்றிலும் இருந்த பட்சிகளும் ஊரும் ஜந்துக்களும் ஒவ்வொரு இனத்தைச் சார்ந்திருப்பதைப் பார்த்தார். ஒரு தீவிலிருக்கும் பட்சிகள் அல்லது ப்ராணிகளைப் போலவே ஸமீபத்திலிருக்கும் மற்றொரு தீவில் இல்லாமல் போனாலும், சிற்சில வித்யாஸங்களுடன் அவைகளை யொத்த பட்சிகளும், ப்ராணிகளும் இருந்தனவாம். இவையல்லாமல் ஸமீபத்திலிருக்கும் பூகண்டத்திலுங்கூட இந்த ஜந்துக்களைப் போன்றவைகளிருந்தன. இவைகளைப் பார்த்து அவர் ஆச்சர்யப்பட்டார். ஏனெனில், இந்த தீவுகளிலும் ஸமீபத்திலிருந்த பூகண்டத்திலும் காணப்பட்ட ஜந்துக்களுக்கு ஒன்றுக்கொன்று ஏற்ற ஸம்பந்தம் இருந்திருக்க வேண்டுமென்றும், அவை ஒரே வகைப் பட்சி அல்லது ப்ராணியின் ஸந்ததியாயிருக்க வேண்டுமென்றும், இந்த ஸங்கதி தெரிவிக்கிறதல்லவா? இம்மாதிரியே இந்தத்தீவுகள் ஒவ்வொன்றிலும் ஒரே வகைப் பல்லி, ஆமை முதலியன இருந்ததையும் கண்டார். மேலும், வெவ்வேறாக இருக்கும் இந்தத்தீவுகள் பூர்வகாலத்தில் ஒரே தீவாக இருந்திருக்க வேண்டுமென்றும், அதற்கு முந்தி, ஸமீபத்திலிருக்கும் பூகண்டத்துடன் சேர்ந்திருக்க வேண்டுமென்றும், அந்தக்காலத்தில் இந்தப்பட்சிகள் ப்ராணிகளின் இனங்கள் மிக்க கொஞ்சமாயிருந்து, பிறகு வெவ்வேறு தீவுகளாகப் பிரிந்துபோன காலத்தில் இந்த இனங்கள் மாறுதல்களடைந்து, அநேகம் வகைகளாக பிரிந்திருக்க வேண்டுமென்றும் ஊகித்தார்.

டார்வின் துரை தென்னமெரிக்கா தேசத்தில் ஸஞ்சாரம் செய்தபொழுது கீழே வெட்டிப் பார்க்கையில் சில ப்ராணிகளின் எலும்புகள் அகப்பட்டனவாம். அவைகளைப் பரீக்ஷித்துப் பார்க்கையில், அந்தக்காலத்தில் உயிருடனிருந்த ப்ராணிகளுக்கும், கீழே வெகு காலத்திற்கு முந்தி புதைக்கப்பட்டு தான் வெளியே எடுத்த எலும்புகளுக்கு உரித்தான ப்ராணிகளுக்கும் சரீர அமைப்பிலும் வேறு விஷயங்களிலும் ஒற்றுமை யிருப்பதைக் கண்டார். இதனாலும் அந்த ஜந்துக்களுக்கு ஒன்றுக்கொன்று ரத்த ஸம்பந்த மிருக்கவேண்டுமெனக் கருதினார்.

இந்தக்காலத்தில் நாம் குதிரை என்று வழங்கும் ஜந்துவை ஒத்தப்ராணி பூர்வகாலத்தில் ஸுமார் ஒரு அடி உயரமும், முன்னங்காலில் நான்குவிரல்களும், பின் காலில் மூன்று விரல்களும், உடையதாக இருந்ததாம். பிறகு கொஞ்சங் கொஞ்சமாக உயர்ந்து கொண்டும், விரல்கள் ஒவ்வொன்றாக குறைந்துகொண்டும் வந்தனவாம். நீண்ட கழுத்தையும், பெரிய மூளையையும், புல் கொள் முதலியவற்றைத் தின்பதற்கு அனுகூலமான பற்களையும் அநேக வருஷங்களில் ஸம்பாதித்துக் கொண்டு இப்போது நாம் பார்க்கிற குதிரையாக வ்ருத்தியடைந்ததாம். இந்த மாதிரி படிப்படியாக மாறினதற்குக் காரணம் என்னவென்று யோசித்தால், முன்காலத்தில் இந்த ப்ராணிகள் புல் நிறைந்த செழிப்பான காடுகளில் ஸஞ்சரித்தன. அப்போது தீனிக்காக அதிக தூரம் செல்லவேண்டியதில்லை. ஆனதுபற்றி குட்டையாயிருந்தன. ம்ருதுவான புல்லைத் தின்பதற்கும் மழுங்கலான பற்கள்போதும். பிறகு கட்டாந்தரை அதிகரித்த காலத்தில் தீனியின் நிமித்தம் அலைந்து திரிய வேண்டியிருந்ததால், அதற்கேற்ற வேகத்தின் பொருட்டு உயர்ந்ததென்றும், வறண்ட வெளியிலிருக்கும் கெட்டியான புல்லைத் தின்பதற்குவேண்டி கூர்மையான பற்கள் ஸம்பாதித்துக் கொண்டனவென்றும், தெரியவருகிறது. மேலும் முன்னிருந்த குதிரை

போன்ற ஜந்து, தற்காலத்திலிருக்கும் குதிரையாக வ்ருத்தியடைவதற்குமுன், குறைந்தது பன்னிரண்டு திணுஸுகளாக மாறினதாம். இப்படி க்ரமமாக வ்ருத்தியடைந்ததை, நன்கு விளங்கும்படி அமெரிக்காதேசத்துப் பொருட்காட்சி சாலையில், இந்த 12-திணுஸுகளின் எலும்புகளை வரிசையாக வைத்திருக்கிறார்களாம்.

லண்டன் நகரத்துப் பொருட்காட்சி சாலையில் ஒருவித ஜந்து இருக்கிறது. அது அளவில் ஒரு காக்கைபோன்றதாம். அதன் மூளையையும் கால்களையும் பார்த்தால் ஒரு பட்சியைப் போலவும், இரண்டு தாடைகளிலும் பற்கள் இருப்பதாலும், பல்லியைப்போல் நீண்ட வாலிருப்பதாலும், அது ஒரு ஊரும் ஜந்துபோலவும் இருக்கிறது. பட்சிகளுக்கும் ஊரும் ஜந்துக்களுக்கும் சரீர அமைப்பில் அநேக ஒற்றுமைகளிருக்கின்றன. இன்னும், கர்ப்ப உத்பத்தியாய் கருமுதிர்ந்து அது குட்டி அல்லது குஞ்சு என்று சொல்லப்படுகிறவரையில் வ்ருத்தியடைகிற வழியானது பட்சிகளுக்கும் ஊரும் ஜந்துக்களுக்கும் சற்றேறக்குறைய ஸமானமாகவேயிருக்கிறது. இந்தக் காரணங்களால் ஊரும் ஜந்துக்கள் க்ரமமாக மாறுதல்களடைந்து பட்சிகளாக ஆயின, என்று கூறுகிறார்கள். ஒரு ப்ராணியினிடத்தில் ஒரு கார்யத்தைச் செய்துகொண்டிருந்த ஒரு அங்கம் அல்லது அமைப்பு அதன்வழியிலுண்டான மற்றொரு ப்ராணியினிடத்தில் கொஞ்சம் மாறுதலடைந்து வேறு கார்யத்தைச் செய்ய உபயோகப்படுகிறது. சில ப்ராணிகளிடத்தில் நுட்பமான சில சரீரபாகங்கள் ஒரு கார்யத்திற்கும் உபயோகப்படாமலிருக்கின்றன. இவைகளையெல்லாம் நாம் யோசித்துப்பார்த்தால், பூர்வகாலத்தில் ஒருவகை ப்ராணியின் மூலகாரணமான ஒரு ஜந்து பிறகு தானிருக்கும் இடத்திற்கும், தான் உயிருடனிருந்து செய்யவேண்டிய வேலைக்கும், எதிரிகளிடமிருந்து தன்னை ரட்சித்துக் கொள்ளும் பொருட்டும் அநுகூலமாகும்படி அப்போதைக்கப்போது தக்கவாறு மாறுதலடைந்து கொண்டே வந்ததென்று தெரியவருகிறது. இன்னும், ஒரு இனத்தில் சேர்ந்த ஒரு ப்ராணி முன் சொன்ன காரணங்களால் கொஞ்சம் மாறுதலடையும்போது தன்னுடைய முந்தின உருவத்தையும், அதிலிருந்து பிந்தின உருவத்திற்கு வேண்டிய உறுப்புகளின் ஆரம்பங்களையும், அடையப்பெற்று வ்ருத்தியடைந்து கொண்டே வந்ததால், சில ஸமயங்களில் ஒரு இனத்தைச்சேர்ந்த செடியினிடத்திலும், அல்லது ப்ராணியினிடத்திலும் அதற்குச் சற்றும் உபயோகமில்லாத உறுப்புகளாவது அவ்வுறுப்புகளின் அடையாளங்களாவது இருக்கின்றன என்று விளங்குகிறது. ஆனதுபற்றி உலகத்திலுள்ள அளவிறந்த செடி கொடி மரங்களையும், கணக்கில்லாத ப்ராணி கோடிகளையும் அவையவைகளுடைய சரீர அமைப்பு, உருவம், குணம், கார்யம் முதலிய காரணங்களால் ஒவ்வொருவகை செடி அல்லது ஒவ்வொருவகை ப்ராணியின் இனத்தில் சேர்த்து பற்பலவகை செடிகளாகவும் பற்பலவகை ப்ராணிகளாகவும் நாம் பகுக்கலாம் என்று தெரியவருகிறது. இம்மாதிரி பகுத்த இனங்களின் தொகை ஸுமார் பத்துலட்சமென்று சிலரும் ஜாஸ்தியென்று சிலரும் கூறுகிறார்கள்.

எஸ். ஆர். ஆத்மநாதய்யர்.

# POVERTY OF INDIA.

## இந்தியாவின் தரித்ர நிலைமை.

இந்தியர்.—வாருங்கள்! வாருங்கள்! ஏது, பார்த்து ரொம்ப நாளாகிவிட்டதே!

ஐரோப்பியர்.—ஆமாம். ஏறக்குறைய ஒரு வருஷமாகப்போகிறதே. விசேஷ மேதாவதுண்டா!

இ.—விசேஷமொன்றுமில்லை.

ஐ.—அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்! 12-மாஸத்துக்குள் ஒரு விசேஷமுமில்லாமற் போகுமா!—ஆமாம் எப்படி இருக்கும்! வீட்டு வாயில் திண்ணையைவிட்டு இறங்காமலிருந்தால் விசேஷம் எங்கிருந்துவரும்! என்னைப்பாருங்கள். ஒருவருஷத்திற்குள், அமெரிக்காவும், ஜப்பானும், என் ஜன்மதேசமாகிய இங்கிலாந்துமாகிய மூன்று தேசங்கள் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தேன்.

இ.—அங்கெல்லாம் என்ன விசேஷம்?

ஐ.—அப்படிக் கேளுங்கள்-சொல்லுவதற்கும் ஸந்தோஷமாக இருக்கிறது. நீங்கள் வீட்டை விட்டுப் பெயராதிருப்பதே உங்கள் நாட்டுத் தரித்ரத்தின் முக்ய காரணம்.

இ.—நல்லவேளை, ஞாபகப்படுத்தினீர். நீங்கள் பார்த்த தேசங்களின் விசேஷங்களை பிற்பாடு கேட்கிறேன். சென்ற வருஷம் நீங்கள் இங்கே வந்தபோது இந்தியாவின் தரித்ரதிசைக்குக் காரணங்கள் சில கூறி, மற்றவைகளை மறுபடி ஸந்திக்கும்போது சொல்வேனென்றீர்களே. அவற்றை இப்பொழுது தயவு கூர்ந்து சொல்வீரா?

ஐ.—ஆகா! சொல்லத்தடையென்ன. ஆனால் நான் முன்கூறியவைகளின் முக்யாம்சங்களைச் சொன்னால், நான் அவற்றை யொழித்து வேறு ஏதாவதிருந்தால், எடுத்துரைப்பேன்.

இ.—அயல்நாட்டுக்கு வெளியேறாமை ஒன்று. (என்ன சிரிக்கிறீர்கள்?)—அப்புறம், சோம்பேறிகளுக்குச் சோறுபோடுதல், கல்யாண காலங்களில் ஸதிர், பாணவேடிக்கை முதலிய வீண் செலவுகள் செய்தல், உத்யோகத்தின் மோப்பத்தால் கைத்தொழில், வியவஸாய முதலியவைகளை அசட்டைசெய்தல் முதலியன.

ஐ.—நல்லது. நான் ஒன்று சொல்லுகிறேன். நீங்கள் மட்டும் கோபங்கொள்ளாமலிருக்க வேண்டும்.

இ.—கோபமென்ன?

ஐ.—அப்படியில்லை. உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு கோப்பாள மென்பார்கள்.

இ.—நானாக உங்களை வற்புறுத்திக் கேட்கும்போது நான் கோபங்கொள்வது ந்யாயமன்று.

ஐ.—சரி, சொல்லுகிறேன். இந்திய மாதர்க்கு நகைப்பைத்யம் அதிகம்.

இ.—அதனால் கெடுதலென்ன!

ஐ.—சொல்லுகிறேன். அவஸரப்படாதீர்கள். இந்திய மாதர்கள் தங்கத்தையும் வெள்ளியையும், வைரத்தையும், காதிலும், மூக்கிலும், கழுத்திலும் கட்டித் தொங்கவிட்டுக் கொள்கிறார்கள். தங்கத்தைக் கட்டி கட்டியாகத் தொங்கவிட்டுக் கொண்டால்தான் அழகா? அத்தகைய நகைகள் பூணாத அயல்தேசத்து பெண்மக்கள் அழகாக இருக்கவில்லையா. மேலும் இவர்கள் அடுத்த வீட்டுக்காரியைப் பார்த்துப் பொறாமைகொண்டு, கணவனை அல்லும் பகலும் தொந்தரவுசெய்து நகை பண்ணிப் பூணுகிறார்கள். இதற்காகக் கணவன் அடிக்கடி கடன்படும்படி நேரிடுகிறது. சில நாட்கழித்துக் கடனை அடைக்கும் தருணத்தில் நகையின் மாதிரியாவது மாறிவிடுகிறது. அல்லது வேறு நகை வாங்க ப்ரயத்தனமாவது நடக்கிறது. ஆகவே கடனடையாமலொழிவதோடு வேறு கடன் வாங்கும்படி நேரிடுகிறது. இப்படியிருந்தால் குடித்தனம் எப்படி முன்னுக்குவரும்?

இ.—ஆம் நீர் சொல்வது சரியே. ஆனால்.—

ஐ.—நான் சொல்வதை முடியக்கேளும். மேலும் அப்பணத்தை பாங்கியிலோ, வர்த்தகத்திலோ, கைத்தொழிலிலோ உபயோகித்தால் எவ்வளவு சீக்ரத்தில் அது வ்ருத்தியாகும். நம்முடைய முயற்சி ஒன்றுமில்லாமல் தானாகவே பெருக்கிக் கொள்ளுமே. அன்றியும் நகையும் பணமும் வீட்டிலிருந்தால் எத்தருணம் திருடன் வந்து கொள்ளை கொள்வானோ வென்று பயந்து இரவும்பகலும் அதைப் பாதுகாப்பதற்கே பொழுது சரியாயிருக்கும். கைத்தொழில், வியவஸாயத்துக்கு உபயோகித்தால், நாம் பயன்பெறுவதன்றி, அயலார் நால்வர் அதனை

பிழைப்பார்கள். தேசத்தின் கைத்தொழில் வ்யாபாரம் முதலியவை அபிவ்ருத்தியாகுமல்லவா?

இ.—உண்மையே.

ஐ.—இந்தியாவில் நாளுக்குநாள் வ்யாஜ்யங்கள் அதிகரித்துவருகின்றன. 1902-ல் இந்தியாவில் 20-லக்ஷம் ஸிவில்கேஸ்கள் வந்ததாகத் தெரியவருகிறது. இப்பொழுது 25,30 லக்ஷம் ஸிவில் கேஸ்களுக்குக் குறைவில்லை. இதனால் நாட்டில் ஒற்றுமையில்லையென்று விளங்குகிறது. மேலும் கோர்ட்டில் வக்கீல்களும் ஜட்ஜுகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், சண்டைசச்சரவுகள் அதிகரித்து வருகின்றனவென்பது தெளிவு. கோர்ட்டுக்குச் செல்வதனால் ஸ்டாம்புக்கும் வக்கீல்களுக்கும் எவ்வளவு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிகின்றன! போட்டிக்காக ஒன்றிற்கு இரண்டு வக்கீலாக வைத்துக் காசை இறைக்கிறார்கள் சிலர். இவ்வாறாக வீண்க்ஷாத்ரம், போட்டி, வாதாடித்தனம் இவைகளால் பொருளையிழக்கும்பக்ஷத்தில், குடித்தனம் இருந்தவிடம் தெரியாமலன்றோ போய்விடும்!

இ.—அப்படியானால் தப்ப வழியென்ன?

ஐ.—சண்டையில்லாமல் ஸமாதானமாக வாழவேண்டும்.

இ.—சண்டையென்ன, விளையாட்டுக்காகவா போடுகிறார்கள்? சண்டைநேர்ந்தால் போட்டுத்தானே தீரவேண்டும்.

ஐ.—அப்படிச் சண்டைவந்தால் பஞ்சாயத்து முதலியன ஏற்படுத்தி, அதனால் தங்கள் வ்யாஜ்யங்களைச் செலவில்லாமல் தீர்த்துக்கொள்கிறது. அதற்காகக் கண் தலை தெரியாமல் பணத்தைச் செலவழித்து நாசமாகிப்போகிறதா? ஸ்டாம்புக்கும், வக்கீல்களுக்கும், ரெயிலுக்கும் மற்ற சில்லரைச் செலவுகளுக்கும் எவ்வளவாகின்றன. சற்று நீரே யோசித்துப்பாரும்.

இ.—நீர் சொல்வது எல்லாரும் அறிந்த விஷயமே.

ஐ.—பிறகு, இந்தியர்களெல்லாரும் கவர்மெண்ட் உத்தியோகம், கவர்மெண்ட் உத்யோகமென்று அதில்போய் விழுகிறார்கள். கவர்மெண்டார் பென்ஷன் கொடுக்கிறார்கள்; வாஸ்தவமே. அதற்காக எல்லாரும் தீபத்தில் போய் விழும் பூச்சிகள்போலப் போய்விழுகிறதா! கவர்மெண்டார் கொடுக்கிற சம்பளத்தைக் காட்டிலும் வெளியே அதிகமாக ஸம்பாதிக்க முடியாதா? படியாதவர்கள் போய்ச் சேர்ந்தாலுங் குற்றமில்லை. படித்தவர்களே கும்பல் கும்பலாய்ப் போய்ச் சேர்கிறார்கள். “கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு” என்றபடி ஒருவழியில்லாவிட்டாலும் மற்றொரு வழியில் ஸுகமாய்ப் பிழைக்கும் சக்தி அவர்களிடமிருக்க, இப்படி அவர்கள் போய்விழுவது விஸனிக்கத்தக்கதே. மேலும் ஒரு வேலைக்கு 30-ரூ. சம்பளம் கொடுப்பதாயிருந்து அதற்கு 300-பேர் போட்டியாக நின்றால், அந்த வேலையை 20-ரூபாய்க்கு ஒப்புக்கொள்ள அவர்களில் ஒருவனாவது இல்லாமற் போகான். ஆகவே, எல்லாரும் கவர்மெண்ட் உத்யோகத்தை நாடிச் செல்வதால், வேலைக்குத்தக்க சம்பளம் குறைவதல்லாமல், கவர்மெண்டு உத்யோகத்திற்கே ஓர் கௌரவமில்லாமற் போகிறது. அன்றியும், எல்லாரும் உத்யோகம் செய்ய ஏற்படுவதால் நாட்டின் செல்வத்திற்கு முக்ய ஆதாரங்களான விவஸாயம், கைத்தொழில், வ்யாபாரம் முதலியவை கைவிடப்பட்டு க்ஷீணதிசை அடைகின்றன. நாமிப்பொழுது கணக்கெடுத்துப் பார்க்கும்போது, கவர்ன்மெண்ட் உத்யோகத்தைக்காட்டிலும் வெளி உத்யோகங்கள் அதிகமாக இருக்கக் காண்கிறோம். அவை அதிக வருமானம் தரக்கூடியனவாகவுமிருக்கின்றன. கவர்ன்மெண்டு உத்யோகஸ்தனுக்கு வருஷம் முழுவதும் ஒரே சம்பளம் கிடைக்கிறது. ஒரு கைத்தொழிலைச்சார்ந்த உத்யோகஸ்தனுக்கோ உயர்ந்த சம்பளங் கிடைப்பதல்லாமல், லாபத்திற் சிறிதும் (Bonus) கிடைக்



கிறது. மேலும், கவர்ன்மெண்ட் உத்யோகம் நின்ற நிலையிலேயே நிற்கிறது. கைத்தொழிலோ அப்படியில்லை. வர்த்தகமும் வ்யாபாரமும் வ்ருத்தியாக வ்ருத்தியாக, அதில் மேன்மேலும் லாபங்கிடைப்பதோடு தொழிலாளிகளும் அதிகரித்துக்கொண்டு வருகிறார்கள். கவர்ன்மெண்டு உத்யோகங்கள் அவ்வளவு விரைவில் வ்ருத்தியாவதில்லை.

இ.—ஆனால், ஜனத்தொகையும், வ்யாபாரமும், கைத்தொழிலும் அதிகரிப்பதால் அதற்குத்தக்கபடி கவர்ன்மெண்ட் நியாயஸ்தலங்களும், பப்ளிக் ஆபீஸுகளும் கூடவே அதிகரிக்குமன்றோ?

ஐ.—ஆம்; நீர் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு. இப்பொழுது நாளடைவில் கவர்ன்மெண்டார் முனிஸிபாலிடிக்கும், லோகல் போர்டுகளுக்கும் மேன்மேலும் அதிகாரமும், ஸ்வயாதீனமுங்கொடுத்து வருகிறார்கள். ஆகவே மேற்கூறியவைகளின் உத்யோகஸ்தர்களும் அதிகரிப்பார்களல்லவா? கவர்ன்மெண்டைக் காட்டிலும் வெளியில் அதிகவரும்படி கிடைப்பதாலல்லவோ, அனேக பாரிஸ்டர்கள் ஜட்ஜ் வேலையையும், டாக்டர்கள் ஆஸ்பத்ரி ஸர்ஜன் வேலையையும் வேண்டாமென்று மறுத்து வருகிறார்கள்! கடைசியில் இதை மட்டும் நிச்சயமாக நம்பும். இந்தியாவில் விளையும் பஞ்சை மாத்ரம் வைத்துக்கொண்டு, நாடெங்கும் நெசவுத் தொழிற் சாலைகளேற்பட்டு வேலை செய்யப்பட்டு வருமாயின், அவைகளால் உத்யோகமும் கூலியும் பெற்று ஜீவிக்கும் ஜனத்தின் தொகை, இந்தியாவிலுள்ள ஸிவில் உத்யோகஸ்தர்களனைவரின் தொகையைக்காட்டிலும் என்றும் அதிகமாகவே இருக்குமென்று நான் உறுதியாய்க்கூறுவேன். அவ்வாறே மற்ற தொழில்களைப்பற்றியும் யோசித்துப்பாரும்.

இ.—இதுவும் உண்மையே. அப்புறம்.

ஐ.—வெளி தேசங்களுக்குக் குடியேறுமையைப்பற்றி நான் முன்பே கூறியிருக்கிறேன். 30-கோடி ஜனங்களுள் 20-கோடிக்கு மேலாக ஜனங்கள் விவஸாயத்தையே ஜீவனமாக நம்பியிருக்கிறார்கள். மற்றவர்கள் அயல் நாட்டுக்குச் சென்றாலும், இந்தியக் குடியானவன் தன் நிலத்தை விட்டுப் பெயரானென்பது திண்ணம். தன் நிலத்தில் வருகிறதை வைத்துக்கொண்டு அரைவயிறு சாப்பிட்டாவது த்ருப்தியாயிருக்கிறானேயொழிய, தன் நிலத்தை விற்றுவிட்டு வேறெவ்விதமாவது வயிறுவளர்க்க வழிதேடான். வேறு நாட்டிற்குச் செல்ல மனமில்லாதார்க்கு ஓர் வழியுண்டு. வடக்கே அஸ்ஸாம் தேசம் மிகச் செழிப்புள்ளதானாலும் அங்கே ஜன சந்ததியில்லை. ஜனத்தொகை குறைவாகவிருக்கிறது. மேலும் பஞ்சநதிதீரத்தில் (பஞ்சாப்) இதுவரையிலும் புறம் போக்காயிருந்த நிலங்களுக்கு கவர்ன்மெண்டார் நீர்ப்பாய்ச்சல் முதலிய ஏற்பாடுகள் செய்து அவைகளை மிகச் செழிப்பான நிலங்களாக்கி விட்டார்கள். ஆகவே வெளி நாட்டுக்குப் போய்க் குடியேற மனமில்லாதவர்கள் மேற் கூறியவிடங்களிலாவது போய்க் குடியேறி நிலங்களிலிருந்து நல்ல பலன்களைப்பெற்று இனிது வாழலாம். அவ்வாறே பர்மாவும் குடியேறுவதற்குத் தக்க விடமாயிருக்கிறது; ஏனென்றால் பர்மா, நிலவளம் நீர்வளம் நிரைந்துள்ளது. ஜனத்தொகையும் வெகு ஸ்வல்பம். அன்றியும் உள்நாட்டு பர்மாவாஸிகள் (பர்மன்) நல்ல உழைப்பாளிகளல்ல. அவர்கள் சோம்பேறித்தனத்தால் செழிப்புள்ள நிலங்களை உபயோகப்படுத்தாமல் வீணில் போட்டு வைத்திருக்கிறார்கள். அவ்வாறே மற்ற பாகங்களுக்கும் குடியேறினால் அனைவர்க்கும் ஸுகமுண்டாகுமென்பதில் தடையென்ன?

இ.—அப்படிச் செய்வது உசிதமாகவே தோன்றுகிறது.

ஐ.—விவஸாயத்தைப்பற்றி மற்றொரு செய்தி சொல்ல விரும்புகிறேன். நாளுக்குநாள் [illegible]

தொகை அதிகரிக்க, நிலம் முன் ஈன்ற பலனையே கொடுத்தால் போதுமா? ஒரு துண்டு நிலம் 100-மரக்கால் நெல் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். இந்நிலம் 15-20-வருஷங்கள் கழித்து, குடித்தனக்காரன் பிள்ளை குட்டி பேரன் பேர்த்திகள் பெற்ற பின்னும் 100-மரக்கால் நெல்லையே கொடுத்தால், அது ஸம்ஸாரத்துக்குப் போதுமா? ஸம்ஸாரம் (குடும்பம்) அதிகரிப்பதுபோல் நிலத்தின் பலனையும் அதிகரிக்கச்செய்யவேண்டும். முன்னோர் போனவழிப் பின்னே சென்றபடி தகப்பன் உழுதபடி பிள்ளையும் உழுவானேல் பலன் எப்படிப் பெருகும்? நிலத்தை மேன்மேலும் செழிக்கச்செய்ய அப்போதைக்கப்போது கண்டுபிடிக்கப்படும் எரு, ரஸாயன உப்புகள் முதலியவைகளை உபயோகித்தும், நாற்று நடும் விதங்களை யறிந்தும், அதன்படி உழைப்புடனும் ஊக்கத்துடனும் வேலை செய்தால் பலன் வ்ருத்தியாகும். ஸம்ஸாரமுஞ் ஸுகமடையும். இந்தியாவின் தரித்ரமும் நீங்கும்.

இ.—வியவஸாயத்தையே நம்பிக்கொண்டிருந்தால் நம் தரித்ரம் நீங்குமா?

ஐ.—ஒருக்காலும் நீங்காது. இதிலேதான் இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமுள்ள வித்யாஸம் நன்கு விளங்குகிறது. இந்தியாவில் ஸாதாரண ஜனங்கள் விளைச்சலையே நம்பியிருப்பதால், எப்பொழுதும் வானத்தையே நிமிர்ந்து பார்த்த வண்ணமாக இருக்கிறார்கள். மழை பெய்யாமற் போனால் பஞ்சமும் வ்யாதியும் உண்டாகின்றன. அதிகமாகப் பெய்தால் பயிர்நாசம்; ஆகவே குடி நாசம். ஆதலால் அதிவ்ருஷ்டியும் அநாவ்ருஷ்டியும் இன்றி, தக்க காலத்தில் போதுமான மழை பெய்தால் குடிகள் க்ஷேமமடைகிறார்கள். இங்கிலாந்திலோ அப்படியில்லை. உணவுப்பொருள்களை அயல் நாடுகளிலிருந்து வாங்குவதுடன், கைத்தொழிற்கு வேண்டிய ஸாமான்களையும் தருவிக்கிறார்கள். இவைகளை நல்ல பண்டங்களாக்கி வெளிநா[illegible]ப்புகிறார்கள். இந்தியா, பஞ்சு, நீலி தேக்கு முதலியவைகளை அயல்நாடுகளுக்கு அனுப்ப, அவை, அவற்றைப் பண்டங்களாக்கி மறுபடியும் இங்கே அனுப்புகின்றன. இதனால் வித்யாஸம் தெரிகிறதல்லவா!—பயிரை நம்பி இருக்கலாகாது. தக்ககாலங்களில் மழையின்மையாலும், வெள்ளத்தாலும், பூச்சிகளின் உபத்ரவத்தாலும் நாம் ஏமாறக்கூடும். ஆகவே விவஸாயத்தோடு கொஞ்சம் கைத்தொழிலும் கூட இருக்கவேண்டும். பயிர் தப்பினால் கைத்தொழில் கை கொடுத்துதவும். கைத்தொழிலுக்கு மழை யிருந்தாலும் இல்லாமற்போனாலும் ஒன்றே. இரண்டையும் கைப்பற்றி ஆள்கிறவனே தனவந்தனாக இருக்கிறான். மழையையே நம்பி சோம்பேறித்தனமாய் உட்கார்ந்திருப்பவன் தரித்ரதிசை யடைகிறானென்பதிற் ஸந்தேகமில்லை.

இ.—தடையென்ன. எந்த தேசத்தில் அதிகமாக ஏற்றுமதி இறக்குமதி நடக்கிறதோ அதுவே பணக்கார நாடாகும். அதில் வ்யாபாரஞ்செய்யும் வர்த்தகர்கள் ஏராளமான லாபத்தைப் பெற்று ஸுகமடைகிறார்கள். அன்றியும் கைத்தொழில் ஸாமான்களைச் செய்வதிலும், நன்செய் புன்செய் முதலியன பயிரிடுவதிலும் மேற்படி ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு வண்டி, ரெயில், கப்பல் மார்க்கமாகக் கொண்டுபோவதிலும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு வேலை கிடைக்கிறது.

ஐ.—ஆகவே கைத்தொழிலின் மகிமை நன்கு விளங்குகின்றதல்லவா! ஓர் நாட்டின் நல்ல வளப்பத்திற்கு அதன் வ்யாபாரமும், கைத்தொழிலுமே ஸாக்ஷ்யங்களாகும். கைத்தொழில் ஓர் நாட்டுக்கு லக்ஷ்மிகரத்தைத் தருகிறது. இந்தியாவில் விளையும் மூலப்பொருள்களை அதுவே வைத்துக்கொண்டு வேலை செய்துவந்தால், இப்பொழுது இறக்குமதிசெய்யும் பொருள்களைத் தருவிப்பது அநாவச்யமாகும். இவ்வாறுக் கிடைக்கும் பொருளை, உபயோகிக்கக்கூடிய



நல்ல பண்டங்களாக மாற்றியிருக்குமானால், இந்தியா இப்பொழுது அடைந்திருக்கும் தரித்ர திசையொழிந்து பணக்காரதேசமாகவிருக்கும். கைத்தொழில் வ்ருத்தியாவதனால் பட்டணங்களிலுள்ள தொழிற்சாலைகளில் அநேகர்க்கு உத்யோகமும், வேலையுங் கிடைக்கும். தற்காலத்தில் எந்த நாட்டில் வ்யாபாரமும், கைத்தொழிலும் செழித்தோங்குகின்றனவோ அதுவே உலகத்திலுள்ள தேசங்களுள் பணக்கார தேசமெனப்படும். இந்திய வேலைக்காரனொருவன் சீமை வேலைக்காரனவ்வளவு சுறுசுறுப்பாயும் புத்திசாலியாயுமிருப்பானானால், ஓர் வஸ்துவை இங்கிலாந்தில் செய்யும் எட்டிலொரு பங்கு விலைக்கு இங்கே செய்யலாம். உதாரணமாக, இந்தியாவில் விளையும் பருத்தி முழுவதும் சீமை, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குச் சென்று அங்கே இவ்விடத்தைக் காட்டிலும் அதிக செலவில் நல்ல பண்டமாக மாற்றப்பட்டு மறுபடியும் இவ்வளவு தூரம் திரும்பி வருகிறது. இந்தியாவின் பஞ்சு முழுவதையும் இங்கேயே வைத்து வேலைசெய்தால் போவதற்கும், வருவதற்குமுள்ள ரெயில்கப்பல் முதலிய சுமைக் கூலிகளொழிவதல்லாமல், ஸ்வல்ப விலைக்குத் துணிகள் இங்கே நெய்யப்பட்டு அநேக இந்தியக்கூலிகள் அதனால் பிழைப்பார்கள். ஸ்வல்ப விலைக்குக் கிடைப்பதால் நாம் மலிவாக வாங்கி லாபமடைந்து பணக்காரராவோம். இக்கைத்தொழிலிலுண்டாகும் லாபமும் இந்திய முதலாளிக்கே செல்வதால் இந்தியா நஷ்டமடைவதில்லை. இப்பொழுது இந்தியாவில் செய்யப்பட்டுவரும் கைத்தொழில்களனைத்தும் ஐரோப்பிய முதலாளிகளால் நடத்தப்பட்டுவருகின்றன. ராணிகஞ்சில் நிலக்கரிதோண்டுதல், கோலாரில் தங்கம் தோண்டுதல், பர்மாவில் கிரோஸின் எண்ணெயெடுத்தல், காகிதம் செய்தல், நீலியெடுத்தல், காபி தேயிலை பயிரிடுதல், சணல் பட்டுவேலைசெய்தல் முதலியவை ஐரோப்பியரால் நடத்தப்பட்டு வருகின்றன. டாடாபோன்ற இந்திய ஸாவ்காரர்கள் எப்பொழுது முன்வந்து முதல்போடுகிறார்களோ, அப்பொழுதுதான் தரித்ரமென்பது கதிரவன் முன்னின்ற பனிபோற் பறக்கும்.

இ.—ஆங்கிலேய அரசாட்சியின் நன்மைகளனைத்தும் பெற்றிருந்தும், நம் நாடு நமக்குக் கொடுக்கும் பலன்களை இதுகாறும் நம்மை அனுபவிக்கவொட்டாமல் தடுத்துக் குறுக்கே நிற்பது என்ன?

ஐ.—நன்றாய்க் கேட்டீர். இதோ சொல்கிறேன். நூற்றில் 10 பேர்கள்தான் பட்டணவாஸஞ் செய்கிறார்கள். அப்பத்துபேரும் கைத்தொழிலைக் கைப்பற்ற மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். மேலும் ஜனங்கள் தங்கள் மூதாதையர்கள் வாழ்ந்தபடியே தாங்களும் வாழ இச்சிக்கிறார்களேயொழிய, நாகரீகத்தையொட்டி பழையன களைந்து புதியன மேற்கொண்டு நடப்போமென்பது அவர்கள் நோக்கமன்றுபோலும். அன்றியும் சோம்பேறித்தனமும், பொறாமையும் மேலிட்டிருப்பதால், அவர்கள் ஒருவரையொருவர் நம்புகிறதில்லை. மேல் உத்யோகஸ்தன் கீழ் உத்யோகஸ்தனை நம்புவதில்லை. அடுத்தடுத்திருக்கும் கடைக்காரர்கள் ஒருவரையொருவர் நம்புகிறதில்லை. ஒருவன் தன் அடுத்த வயற்காரனை நம்புவதில்லை. அயலான் வாழ்ந்தால் 5-நாள் பட்டினி இருக்கிறேனென்கிறார்கள்.

இ.—இதற்குத்தக்க மருந்து ஒன்று சொல்லும் பார்ப்போம்.

ஐ.—மேற்கூறியவை யனைத்தும் மடமையின், அறியாமையின் சேஷ்டைகள். ஜனங்களெல்லாருக்கும் கல்விபுகட்டிப் பிழைக்கும் மார்க்கத்தைக் காண்பித்தால், அவர்கள் ம்ருக குணங்களொழிந்து அறிவாளர்களாகி, ஒருவரையொருவர் நேசித்து நாட்டுக்கு நல்ல பெயரைக்கொண்டு வருவார்கள். ஆகவே கல்வி அவச்யம். ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் மூலாதாரக்கல்வி இன்றிய[illegible]

யாதது. இதுவே எல்லாவற்றிலும் முக்யமானது. இதுவே நற்பயிர் நடுவில் கிளம்பும் புற்பூண்டு முதலிய களைகளைப்பறிக்கும் கூரிய அரிவாளாகும்......நான் வெகுநேரம் உங்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டேன். கடைசியாக ஒரேவார்த்தை சொல்லி முடித்துவிடுகிறேன்.

இ.—நீங்கள் இன்று முழுவதுஞ் சொல்லிக்கொண்டிருந்தாலும் நான் கேட்க ஸித்தமாயிருக்கிறேன்.

ஐ.—இப்பொழுது ஒருநிமிஷம் உம்மைச் சுற்றிப் பார்த்துக்கொள்ளும். உம்மிடுப்பிலுடுத்திய ஆடை எங்கு நெய்யப்பட்டது?

இ.—மான்சஸ்டெரில்.

ஐ.—அதோ மேஜையிலிருக்கும் எழுதுகோலும், மையும், கத்தியும் எங்கு செய்யப்பட்டவை?

இ.—பர்மிங்ஹாம், ஷெப்பீல்ட் என்னுமிடங்களில்.

ஐ.—உம்முடைய பையிலிருக்கும் சடிகாரம் எங்கு செய்யப்பட்டது?

இ.—ஸ்விட்ஸர்லண்ட் தேசத்தில்.

ஐ.—எதிரில் ப்ரகாசிக்கும் கண்ணாடி விளக்கு எங்கு செய்யப்பட்டது?

இ.—ஆஸ்ட்ரியாவில்.

ஐ.—அதிலிருக்கும் எண்ணெய் எங்கிருந்து வருகிறது?

இ.—அமெரிக்கா, ரஷ்யாவிலிருந்து.

ஐ.—அதை ஏற்றும் தீக்குச்சி எங்கிருந்து வருகிறது?

இ.—ஸ்வீடனிலிருந்து.

ஐ.—நீர்மேலே போட்டிருக்கும் பட்டுருமாலையும் கையில் வைத்திருக்கும் காகிதமும் எங்கு செய்யப்பட்டவை?

இ.—சீனா, ஜப்பான்.

ஐ.—மேஜைமேலிருக்கும் பகவத்கீதை எங்கு அச்சிடப்பட்டது.

இ.—லண்டனில்.

ஐ.—இவ்வாறே நான் கேள்விகள் மேல் கேள்விகள் அடுக்க ஓர் அளவில்லை பார்த்தீரா! மேற் கூறியவைகளின்றி நாம் ஸுகமாய் வாழக்கூடுமா? அவைகளை நீங்களே செய்துகொண்டு ஏன் லாபம் பெற்று ஸுகித்திருக்கக்கூடாது. அரையிலுடுக்கும் துணிக்கு முதற்கொண்டு அயலார் கையை எதிர்பார்க்கிறீர்கள். இப்படியிருந்தால் உங்கள் தரித்ரம் எப்படி நீங்கும்? இப்பொழுது தான் பஞ்சைப்பற்றிய ஸமாசாரம் முழுவதும் உமக்குச்சொன்னேன். தற்காலத்தில் நாட்டுப்புறங்களிலிருக்கும் கைக்களவர்கள் தங்கள் கைத்தறிவேலையை அபிவிருத்திசெய்து, அதிக ஊக்கங்காட்டி, ஐரோப்பாவில் நடப்பது போல் நீராவியினுதவியால் ஓடும் யந்த்ரங்களை வரவழைத்து நெசவுத் தொழிலை நடத்துவார்களானால், இவ்விந்தியா முழுவதற்கும் வேண்டிய துணிகளைச் செய்ய சிறிதும் ஸந்தேகமில்லை. அதுபோலவே பர்மாவில்கிடைக்கும் கிரோஸின் எண்ணெயை எடுத்துச் சுத்திசெய்து அத்தொழிலை அபிவிருத்தி செய்தால் இந்தியா முழுவதிற்கும் வேண்டிய எண்ணெயை உண்டாக்கத்தடையில்லை. அவ்வாறே சணல், புகையிலை, தோல் முதலிய கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்தால், நீங்கள் அயலார் உதவியை எதிர் பார்க்கவேண்டியதில்லையல்லவா! தற்காலத்தில் 30-கோடி ஜனங்களில், 10லக்ஷம் ஜனங்கள் தான் (100-க்கு ½ கூட இல்லை) கைத்தொழிலைக் கையாண்டுவருகிறார்கள். ஊக்கம், துணிவு, சாஸ்த்ர ஆராய்ச்சி, கைத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற அவா முதலியவை, உயர்ந்த ஜாதியரிடத்திற் கூட இப்பொழுது இல்லாமலிருந்தபோதிலும், ஆங்கிலேய அரசாட்சியின் உதவியால் முதலில் கல்வி கற்றுப் பிறகு நாம் கூறிய வீண்செலவுகளை யொழித்து, விவஸாயம் வ்யாபாரம், கைத்தொழில் முதலியவைகளை வ்ருத்தி செய்தால், பின்னொரு காலத்திலாவது நாடெங்கும் லக்ஷ்மீகரம் செழித்தோங்கி ப்ர



ஜைகள் பணக்காரராகி இனிது வாழாமற் போகார்களே! அக்காலமும் பகவனருளால் கூடிய சீக்கிரம் வரக்கடவது.

இ.—ததாஸ்து. உங்கள் நல்லபிப்ராயங்களை நான் அறிந்து புனிதனானேன். உம்மிடமிருந்து அநேக விஷயங்கள் கற்றுக்கொண்டேன். உம்மைப்போன்ற காருண்யம், தயை, ஸ்வயநலம் பாராட்டாமை முதலிய நற்சிந்தையும் நன்னடக்கையும் பொருந்திய ஐரோப்பியர்கள் எங்குமிருந்தால் அதுவே எங்களுக்கு லக்ஷ்மீகரம். இவ்வளவு தூரம் உங்களை உட்காரவைத்துப் பேசியதற்கு நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். மறுமுறை நீர் இங்கு வரும்போது நீர் கண்ட தேசங்களின் அதிசயங்களையும், அந்நாடுகள் முன்னுக்குவந்த வழிகளையும் எனக்கு எடுத்துரைக்க வேண்டுமென்று மிகவும் வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

## CROPS AND INSECTS.

## பயிர்களும் பூச்சிகளும்.

சென்ற ஆடிமாஸத்து 'ஜனாபிமானி' யில் பயிர்களுக்குப் பூச்சிகளினால் உண்டாகும் நஷ்டத்தைத் தடுப்பதற்காக சென்னை கவர்ன்மெண்ட் பூச்சி சாஸ்த்ரியாயிருந்த டி. ப்ரெய்ன் ப்ரிக்கி ப்ளெச்சர் தெரிவித்திருக்கும் முறைகளில் சிலவற்றை எழுதினோம். இப்போது அவர் தெரிவித்திருக்கும் முறைகளில் இன்னும் சிலவற்றை இங்கு ப்ரசுரிக்கிறோம். இவைகள் ஸமீபத்தில் விவஸாய டிபார்ட்மெண்டார் ப்ரசுரம் செய்திருக்கும் துண்டுப் பத்ரிகையில் உள்ளவை.

இந்த ஸாதனங்கள் பூச்சிகள் ஏராளமாகத் தோன்றுவதற்கு முன்பாகவாவது அல்லது அவைகள் ஜாஸ்தியாகத்தோன்றின பிறகாவது, அவைகளை மருந்து முதலிய ப்ரயோகங்களாலும், பொடிகளாலும், ஆவியினாலும் கொல்லாமல் கையினால் செய்யக் கூடியவைகளாகும். ஆனால் மருந்தின் ப்ரயோகத்தால் செய்யப்படுகிற முறைகளுக்கும் கையால் உபயோகப்படுத்தக்கூடிய ஸாதனங்களுக்கும் அதிக வித்யாஸம் உண்டென்று சொல்லமுடியாது. கையால் செய்யக்கூடிய ஸாதனங்களில் கீழே குறிப்பிட்டிருக்கிறவைகள் அடங்கும். அவையாவன:—

பூச்சிகளை கையால் பிடிப்பது; கைவலை அல்லது பெரிய வலையை உபயோகித்தல்; 'ஹாப்பர் டோஸர்' (Hopper dozer) என்று சொல்லப்பட்ட வெட்டுக்கிளிகளைப் பிடிப்பதற்கான பெட்டிகளை உபயோகித்தல்; விளக்குப் பொறி வைத்தல்; மற்றவகைப் பொறிகளைவைத்து பூச்சிகளை அவைகளிடத்திற்கு வரும்படி செய்தல்; கிடங்கு வெட்டி பூச்சிகளை ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்குள் தாண்டவொட்டாமல் செய்தல்; தீயினால் கொளுத்தி எறித்துவிடுதல்; மரத்தை சுற்றிலும் கீல் எண்ணை முதலியவைகளைத் தடவியும், தகரத்தால் செய்த குடைகள்போன்ற ஸாதனங்களை உபயோகித்தும் பூச்சி, எலி முதலியவைகளை மரத்தில் ஏறவொட்டாமல் செய்தல்; காய் பழங்களை துணி அல்லது காகிதப்பையினால் மூடி வைத்தல்; மரத்தின் தண்டுகளில் உள்ள புழுக்களை எடுத்துக்கொல்லுதல்; பட்டுப்போன மரங்களையும் அவைகளின் கிளைகளையும் அப்புறப்படுத்தல்; புழுக்களால் வெட்டப்பட்ட குருத்துகளை வெட்டி அப்புறப்படுத்தல் ஆகிய இவைகளே.

கையினால் பூச்சிகளைப்பிடிப்பது வெகு ஸுலபமான வழியாகும். மேலும் பூச்சிகள் பயிரில் தோன்றி அவைகள் ஸ்வல்பமாக இருக்கும்பொழுதே, கையினால் பிடிக்க ஆரம்பித்து இடைவிடாமல் ஒழுங்காக பிடித்துக்கொண்டே வந்தால் பூச்சிகளை வ்ருத்தியாகாமல் தடுக்கலாமென்பதற்கு ஸந்தேகமில்லை. பூச்சிகளைப் பிடிக்காமல் அவைகள் வ்ருத்தியாகும்படி விட்டுவிட்டால், வெகு சீக்ரத்தில் கையால் பிடிக்கமுடியாதபடி அவ்வளவு ஜாஸ்தியாக வ்ருத்தியாகும்.

ஆனால் பூச்சிகள் தோன்றினவுடனே அவைகளைக் கொன்று விடுவோமானால் அவைகளை வ்ருத்தியாகாமல் தடுத்துவிடலாம். உதாரணமாக 1912-ம் வருஷத்தில் கோயம்புத்தூர் விவஸாய காலேஜைச் சேர்ந்த பண்ணையில் கம்பளிப் பூச்சிகள் தோன்றின. அவைகளைக் கையால் பிடிக்கும்படி ஒரு சிறுவனை அனுப்பினதில் 4 நாளைக்குள் நூற்றுக் கணக்கான புழுக்கள் பிடிக்கப்பட்டன. இப்படிச் செய்ததில் அந்த ஸந்ததியால் நஷ்டம் ஏற்படாமலிருந்ததும் தவிர, அந்த வருஷத்தில் அப்பூச்சிகளில் வேறே ஸந்ததிகளும் தோன்றவில்லை. முதலில் தோன்றிய கம்பளிப் பூச்சிகளைப் பிடிக்காமலிருந்தால், அதே வருஷத்தில் அப்பூச்சிகளில் குறைந்தது இரண்டு ஸந்ததிகள் தோன்றி அதிக நஷ்டத்தை உண்டு பண்ணியிருக்குமென்பதற்கு ஸந்தேகமில்லை. ஏனென்றால் இவ்விதம் பூச்சிகளை முதலிலேயே பிடிக்காமல் விட்டுவிட்ட பக்கத்து ப்ரதேசத்தில் அதிக நஷ்டம் உண்டானதாகத் தெரிகிறது. ஆகையால் இப்படி ஆரம்பத்திலேயே பூச்சிகளை கையால் பிடிப்பது எல்லாரும் அனுஷ்டிக்கக் கூடியபடி இவ்வளவு லகுவாயும் ஸ்வல்ப பணச் செலவினால் ஆகக்கூடியதாயுமிருப்பதால், ஒவ்வொரு குடியானவனும் பயிருக்கு கெடுதலை உண்டாக்குகிற பூச்சிகளைப்பார்க்கும்போதெல்லாம், பயிரில் கொஞ்சமாகத் தோன்றினபோதிலும், அவைகள் ஜாஸ்தியாகக் கூடாதென்ற நோக்கத்துடன் அவைகளைப் பிடித்துக்கொல்ல வேண்டும். பூச்சிகள் ஏராளமாக வ்ருத்தியாகி பயிரையும் நன்றாய்த்தின்று அழித்த பிறகு அவைகளைக் கொல்வதற்கு ப்ரயாஸைப்படுவது கொஞ்சமேனும் உபயோகப்படாது.

இப்படி பூச்சிகளை கையால் பிடித்து கொல்லும் விதம் பூச்சிகளின் தினுஸுக்குத் தக்கப்படி வேறுபட்டிருக்கிறது. மயிரில்லாத புழுக்கள், பெரிய நவாப்பூச்சிகள், வண்டுகளில் அநேக தினுஸுகள் இவைகளை கையால்பிடித்து நசுக்கிகொல்லலாம். புழுக்கள் பெரிதாயிருந்தால் அவைகளை காலால் நசுக்கி கொல்லலாம். கம்பளிப் பூச்சியையும், ப்ளிஸ்டர் பீட்டில்ஸ் என்ற கொப்புளமெழும்பச் செய்யக்கூடிய ஒருவித ஸத்தை வெளிப்படுத்தும் வண்டுகளையும், ஒரு பாத்ரத்தில் தண்ணீரை ஊற்றி அதின்மேல் கொஞ்சம் மண் எண்ணெயை ஊற்றி அப்பாத்ரத்தில் அவைகளைப் போட்டு கொல்லலாம். பருத்திப்பயிரில் தோன்றுகிற நவாப்பூச்சிகளைப் பிடிப்பதற்கு சில வேளைகளில் ஒரு துணிப்பையின் வாயில் ஒரு தகரப் பெய்குழல் (Funnel) ஒன்றைவைத்து அதின் வழியாய் அந்தத் துணிப்பைக்குள் அப்பூச்சிகளை விழும்படி செய்வதால், அவைகள் அதிலிருந்தும் தப்பித்து வெளியேற முடிகிறதில்லை. கொஞ்சம் உயரமான செடி அல்லது மரங்களிலிருந்து பூச்சிகளைப் பிடிக்கவேண்டிய ஸந்தர்ப்பங்களில், வேறே மார்க்கம் ஒன்றும் கிடைக்காமல் போனால், தலைகீழாய் பிடிக்கப்பட்ட ஒரு குடையானது அவைகளைப்பிடிக்க ஒரு சிறந்த ஸாதனமாகும்.

வெறுங்கையால் பிடிக்க முடியாதபடி அவ்வளவு சுறுசுறுப்பாய் ஓடித்திரியக்கூடிய பூச்சிகளைப் பிடிக்க ஒரு கைவலை மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும். இந்தக் கைவலையை சுளுவாயும் சில்லை ஸகாயமாகவும் செய்துகொள்ளலாம். ஒரு சிறு கவைக்கொம்பின் இரு நுனியிலும் வளைக்கப்பட்ட பிரம்பு அல்லது ஒரு லேசான குச்சியை கவைகளின் ஒவ்வொரு நுனியிலும் தனியே கட்டி, கவையின் அடிப்புறத்தை கைபிடியாக வைத்துக்கொண்டு, வளைத்துக்கட்டப்பட்ட பிரம்பைச் சுற்றிலும் ஒரு லேசான துணிப்பையைத் தைத்துவிடவேண்டும். இப்படிப்பட்ட வலையால் பறந்து ஓடக்கூடிய பூச்சிகளாகிய நெற்பயிரில் தோன்றும் நவாப் பூச்சிகள், வண்டுகளில் அநேக தினுஸுகள் இவைகளைப் பயிரிலிருந்து பிடித்துவிடலாம். அதே வலையினால் வெட்டுக் கிளிகளையும் பிடிக்



கலாம். அவ்வலையில் பிடிக்கப்பட்ட பூச்சிகளை கையினால் அல்லது காலால் நசுக்கி அல்லது கல்லைக்கொண்டு நசுக்கிக் கொல்லலாம். அல்லது தண்ணீரும் கொஞ்சம் எண்ணெயும் கலந்து வைக்கப்பட்ட ஒரு பாத்ரத்தில் போட்டு கொல்லலாம்.

ஒரு பயிரானது வெட்டுக்கிளிகளால் பீடிக்கப்பட்டிருக்குமானால் அந்த ஸந்தர்ப்பத்தில் துணியால் செய்த ஒரு பெரிய வலையை உபயோகிக்க வேண்டும். ஏனென்றால் அவ்விதம் ஒரு பெரிய வலையைக்கட்டி இழுப்பதினால் வயல் முழுவதும் இழுக்கப்பட்டு, ஏறக்குறைய எல்லா வெட்டுக்கிளிகளையும் பிடிக்க ஸாத்யமாகிறது. மேலே சொல்லிய பெரிய வலையானது 4-அடி அகலமும், வாய்ப்புறம் 2-அடி குறுக்களவுமுள்ளது. ஆழத்தில் 5-அல்லது 6-அடியும் உள்ளது. அதன் அடிப்பாகமானது நாலு மூலைகளும் ஒரே இடத்தில் சேர்க்கப்பட்டு குவிந்திருக்கும். வேலை செய்யும்போது வாய்ப்புறம் திறந்திருப்பதற்காக அதன் வாய்ப்புறத்தில் 4-அல்லது 5-அடி நீளமுள்ள இரண்டு மூங்கில்கள் கட்டப்பட்டிருக்கும். அதே மூங்கில்களை கை பிடியாகவும் உபயோகப்படுத்தலாம். வயலில் இழுக்கப்படும்போது வலையின் அடிப்பாகம் நேராக இருப்பதற்காகவும், அது தரையோடு தொய்யாமல் சேர்ந்து வருவதற்காகவும், அதின் அடிப்பாகத்தில் மற்றோர் மூங்கிலும் கட்ட வேண்டும். வலையானது பயிரின் ஊடே இழுக்கப்படும்போது எதிர்க்காற்றினால் ஸுலபமாக தலைகீழாகத் திருப்பப்பட்டு, அதில் பிடிக்கப்பட்டிருக்கும் வெட்டுக் கிளிகள் கீழே விழாமலிருக்கும்படிக்கும், பையின் குவிந்திருக்கும் அடிப்பாகம் திரும்பி விடாமலிருக்கும்படிக்கும், அதில் கொஞ்சம் பளுவான கல் அல்லது கட்டையைக் கட்டவேண்டும். மேல் சொல்லிய வலையை இழுக்க இரண்டு பேர்கள் வேண்டும். வாய்ப்புறம் உள்ள மூங்கிலை கைபிடியாக உபயோகித்து பயிரின் ஊடே எவ்வளவு வேகமாக செல்லக்கூடுமோ அவ்வளவு வேகமாக இழுக்கவேண்டும். வலையானது இழுக்கப்படும்போது, பயிரிலுள்ள வெட்டுக்கிளிகள் அவைகள் தங்கியிருந்த இடங்களிலிருந்து கலைக்கப்பட்டு செடிகளிலிருந்தும் தாவிக்குதித்து அவைகள் தரைக்கு வருவதற்கு முன்பாகவே வலைக்குள் விழுந்துவிடுகின்றன. ஒவ்வொரு தடவையிலும் பிடிக்கப்பட்ட வெட்டுக்கிளிகளை வலையின் அடிப்புறத்தில் சேர்த்து நசுக்கி கொல்லலாம். அல்லது ஒரு பாத்ரத்தில் தண்ணீரும் கொஞ்சம் மண் எண்ணெயும் ஊற்றி அதில் போட்டு சாகும்படி செய்லாம். ஜாஸ்தி வெட்டுக்கிளிகளைப் பிடிக்க கீழே குறிக்கப்பட்ட விஷயங்களை கவனிக்கவேண்டும்.

1. வலையை தரையோடு எவ்வளவு ஒட்டி இழுக்க முடியுமோ அவ்வளவு ஒட்டி இழுக்கவேண்டும்.

2. வலையை இழுக்கிற மனிதர்கள் அதிக வேகமாய் இழுத்துக்கொண்டு ஓடவேண்டும்.

3. கூடியவரையில் வலையை காற்றுக்கு எதிராக இழுக்கவேண்டும்.

ஒரு வலையைக்கொண்டு ஒருநாளைக்கு ஏறக்குறைய 3-ஏகராபூமியை இழுக்கலாம். அதை வேலை செய்ய 3-பேர் தேவையாயிருக்கும். 2-பேர் வலையை இழுத்துக்கொண்டிருக்கவும், மூன்றாவது மனுஷன் வலை இழுத்துக்கொண்டிருப்பவர்களில் ஒருவனை முறைப்படி மாற்றிக்கொண்டிருக்கவும் வேண்டியிருக்கும். ஒரு பயிரானது வெட்டுக்கிளிகளால் அதிகமாய் பீடிக்கப்பட்டிருந்தால், அதில் அநேகந்தடவை வலையை இழுக்க வேண்டியிருக்கும். எத்தனை தடவை இழுக்க வேண்டுமென்பது வெட்டுக்கிளியின் உபாதிக்குத் தக்கபடியும், பயிரின் வளர்ச்சிக்கும் பூமியின் தன்மைக்கும் தக்கபடியும் வேறுபட்டிருக்கும். நெல் சோளம் முதலிய பயிர்கள் அதிகமாய் வளர்ந்தபிறகு அவைகளில் வலையை இழுப்பதில் உபயோகமில்லை. ஏனென்றால் வெட்டுக்கிளிகளைப்பிடிக்க வலையை தரைமட்ட

திற்கு இழுப்பது அஸாத்யமாயிருப்பதும் தவிர, பயிரின் ஊடே வலையை இழுக்கும்போது செடிகள் வலையை இழுப்பவர்களால் மிதிக்கப்பட்டு பயிருக்கு அதிக சேதமும் உண்டாகும். ஆனால் அவ்வித பயிர்கள் 3-அடி உயரத்திற்கு அதிகப் படாமலிருக்கும்போது ஸுலபமாய் வேலை செய்யலாம்.

கைவலையையும் பெரிய வலையையும் பயிரில் வெட்டுக்கிளியைப் பிடிக்க உபயோகிப்பதற்கு முன்னால், அவைகளை எண்ணெயில் நனைத்து அதன் பிறகு அவைகளை உபயோகித்தால் பூச்சிகள் அதிகமாக பிடிக்க ஸாத்யமாகிறதென்று தெரிகிறது! ஆனால் இவ்விதம் செய்வதற்கு கழிவடை எண்ணெய் வெகு ஸ்வல்ப விலையில் கிடைத்தால் மாத்ரம் செய்யலாம்.

பயிருக்கு கெடுதல் பண்ணுகிற பூச்சிகளில் அநேகத்தில் முழுதும் வளர்ந்தவைகளை விளக்குப்பொறிகளை வைத்து அவைகளிடம் அப்பூச்சிகளை வரும்படிசெய்து கொல்லலாம். விளக்குப்பொறிகள் செய்வது சுலுவு. மேலும் செலவும் குறைவு. நெல் கேப்பையைப்போன்ற பயிர்களில் தோன்றுகிற குருத்துப் பூச்சியின் தாய்ப்பூச்சியை பிடிக்க சிறந்த வழியாக ஏற்படலாம். ஒரு நாள் ராத்ரி முழுவதும் எரிவதற்கு வேண்டிய எண்ணெய் பிடிக்கக்கூடிய ஒரு ஸாதாரண லாந்தல்விளக்கே போதுமானது. அதை தண்ணீரும் எண்ணெயும் கலந்து வைக்கப்பட்ட ஒரு தட்டத்தில் வைத்தோ அல்லது அதற்குமேல் நேராகத்தொங்கவிட்டோ இருக்கவேண்டும். லாந்தல் தொங்கிக்கொண்டிருக்கும்போது தட்டத்தில் குறைந்தது ½-அடி தூரம் இடம் லாந்தலைச்சுற்றி நாற்புறமும் இருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட ஒரு விளக்குப் பொறியை பயிரினும் விதவெளிச்சம் நாற்புறமும் தெரியும்படி பயிர்ப்படி வேறுபடா உயரமாய் வைக்கவேண்டும். மண் பெரிய நவாப்பூடு தேங்காய் எண்ணெயைக் கலந்து ஸுகள் இவைகளை எரிவதோடு செலவும் குறையும். அஸ்தமனமான ஸமயத்தில் விளக்கை ஏற்றி ராத்ரி முழுவதும் எரியவிடவேண்டும். விளக்கை நோக்கிவரும் பூச்சிகள் விளக்கின் கண்ணாடியில் மோதி கீழேயிருக்கிற தண்ணீரும் எண்ணெயும் கலந்து வைக்கப்பட்ட தட்டத்தில் விழுந்து சாகும். இவ்விதமாய் ஏராளமான பூச்சிகள் கொல்லப்படும். மேலும் காற்றில்லாமல் உஷ்ணமான இருண்ட ராத்ரிகளில் இப்பூச்சிகள் இன்னும் ஜாஸ்தியாக வரும். காற்று அதிகமாக அடித்துக்கொண்டிருக்கும்போதாவது நல்ல நிலவு காயும்போதாவது விளக்குப்பொறி வைப்பது அவ்வளவு உபயோகப்படமாட்டாது.

பூச்சிகளை மற்றவித பொறிகளைவைத்து அவைகளிடத்திற்கு வரும்படி செய்யலாம். இவ்விதப் பொறிகள் அநேக வகைப்படும். அவைகளை விவரமாய் இந்த ஸந்தர்ப்பத்தில் சொல்ல ஸாத்யமில்லை. பயிரில் இராக்காலங்களில் ஸஞ்சரிக்கக்கூடிய சிலவகைப்புழுக்கள், சிள்வண்டுகள் முதலிய பூச்சிகள் பகற்காலத்தில் ஒளிந்துகொள்வதால் அவைகளைத் தேடிப்பிடிப்பது கஷ்டமாகும். ஆனால் அவைகள் வந்து திரியக்கூடிய இடங்களில் புல் பத்தைகள், பலகைகள் இவைகளைப் போட்டு, அதோடு அவைகள் தின்னும்படி பயிர்களின் இளந்துளிர்களையும் போட்டுவைத்து, மறுநாள் காலையில் அப்பலகைகளையும் புல் பத்தைகளையும் சோதிக்கவேண்டும்.

வயல்களிலும், நாற்றங்கால்களைப் போன்ற சிறுபாகங்களிலும் நகர்ந்துவரக்கூடிய புழுப்பூச்சிகள் வராமல் தடுக்க அவைகளைச் சுற்றிலும் கிடங்கு தோண்டிவைப்பதால் அப்பேர்ப்பட்ட பூச்சிகளை வெகுவாய் வராமல் தடுக்கலாம். இப்பேர்ப்பட்ட கிடங்குகளின் உள்புறத்து ஓரமானது செங்குத்தாயும், பொலபொலப்பான மண்ணுள்ளதாயுமிருந்தால் அவைகள் அதிக ஆழமும் அகலமுமாய் இருக்கவேண்டியது அவச்யமில்லை. தவிர மேல்சொல்லியபடி தோண்டப்பட்ட கிடங்கின் அடிப்பாகத்தில் கொஞ்சதூரத்



திற்கு ஒரு பள்ளமாக சில செங்குத்தான பக்கங்களுள்ள பள்ளங்களும் தோண்டினால் முதலில் தோண்டப்பட்ட கிடங்கில் விழுந்த புழுக்கள் கிடங்கின் அடிப்பாகத்தில் திரிந்துகொண்டிருந்து இந்தப் பள்ளங்களில் விழ ஹேதுவாகும். கம்பளிப்பூச்சிகள் தோன்றும்போது கிடங்குகளை அதிக அகலமாயும் ஆழமாயும் தோண்டி அதில் கொஞ்சம் புதிய இலைகளையும் தழைகளையும் போட்டால், அவைகளைத் தின்பதற்கு அப்பூச்சிகள் வருமாகையால் அவைகளை தினந்தோறும் சோதித்து ஒளிந்துகொண்டிருக்கும் பூச்சிகளைக் கொல்லலாம். ஆனால் இப்படிக் கிடங்கில் தழைகளைப்போட்டு நிரப்பும்போது அவைகளின் உதவியால் வயலுக்குள் புழுக்கள் வெகுவாய் ஏறிப்போக ஹேதுவாயிராமல், பள்ளத்திற்கு உள்ளேயே தழைகள் இருக்கும்படி போடவேண்டும். ஒரு வயலுக்கும் மற்றொரு வயலுக்கும் ஊடே தண்ணீர் ரொம்பின ஒரு பள்ளமானது நாற்புறமும் இருக்குமானால், அந்த தண்ணீரின் மேல் கொஞ்சம் எண்ணெயை ஊற்றினால், புழுக்கள் அதைத் தாண்ட முடியாமல் போகும்.

நெருப்பு மூட்டி அதனால் சில ஸந்தர்ப்பங்களில் பூச்சிகளைத் தடுக்கலாம். நெருப்பின் வெளிச்சத்திற்கு சில வகைப் பூச்சிகள் வந்து அதில் விழுந்து சாகும். சில வேளைகளில் நெருப்பு மூட்டி சரியான விதமாய் புகை போடுவதால் பூச்சிகளைத் துரத்திவிடுவது ஸாத்யமாகும். உதாரணமாக மாமரங்கள் புஷ்பிக்கும் ஸமயத்தில் அம்மரங்களின் அடியே புகையும்படி நெருப்பு மூட்டுவதால் அம்மரத்திலுள்ள தேன் பூச்சிகளை தற்காலத்திற்கேயாயினும் ஓட்டிவிடலாம். இப்பூச்சிகளை மரத்திலேயே இருக்கவிட்டால் அவைகளிலிருந்து உண்டாகிற தேனால் பூக்கள் காய்பிடியாமல் கெட்டுப்போகின்றன.

ஒட்டக்கூடிய அல்லது எண்ணெய் ஸம்பந்தமான வஸ்துவை, மரங்களின் அடிப்பாகத்தில் அகலமான பட்டையாகத் தடவுவதாலும், அல்லது அவைகளை முதலில் ஒரு துணி அல்லது காகிதத்தில் தடவி மரங்களின் அடிபாகத்தைச்சுற்றி ஒட்டவைப்பதாலும் பூச்சிகளை அம்மரங்களுக்கு போகவொட்டாமல் செய்யலாம். இவ்விதம் செய்ய ஆயில் எமல்ஷன் என்னும் மருந்தையும், கீல் எண்ணெயும் ஸமபாகமாக கலந்து உபயோகிக்கலாம். அப்பேர்ப்பட்ட மருந்து மரத்திற்கு பூச்சிகளை வரவொட்டாமலிருக்கும்படி செய்வதில் சிறந்ததாயிருப்பதும் தவிர, அதைத் தடவுவதால் மரத்துக்கு யாதொரு கெடுதலும் உண்டாவதில்லை, ஆனால் இப்படிக் கலந்து உபயோகிக்கப்பட்ட எவ்வித மருந்தும் நம்முடைய தேசத்தில் வெகு நாளைக்கு வீர்யம் கெடாமலிருக்குமென்று சொல்லமுடியாது. எலி மரநாய்கள் தென்னை மரங்களில் ஏறாமலிருக்க அடிமரத்தை சுற்றிலும், தகரத்தை குடைபோல் செய்து, அதை ஆணிகளால் மரத்தில் அடித்தால் அவைகளால் ஏற்படும் நஷ்டம் குறையும்.

உயர்ந்த தினுஸு பழவர்க்கங்களையும், காய்கறி தினுஸுகளையும், ஈக்கள் முதலிய பூச்சிபுழுக்கள் துளைக்காமலிருக்க, அவைகளை துணி அல்லது காகிதப்பைகளால் மூடிவைப்பது ஒரு லகுவான வழியாகும்.

மரங்களில் சிலவர்க்கங்கள் வண்டுகள், வண்ணாத்திப் பூச்சிகள் ஆகிய இவைகளுடைய புழுக்களால் துளைக்கப்படுவதுண்டு. அப்புழுக்கள் உயிரோடிருக்கிற அம்மரங்களின் பச்சைத் தண்டுகளில் கால்வாய்மாதிரி துளைகள் பண்ணுவதால், அம்மரங்கள் சில ஸந்தர்ப்பங்களில் பட்டுப்போவதும் உண்டு. இப்பேர்ப்பட்ட ஸமயங்களில் ஒரு கத்தியைக்கொண்டு அப்புழுவை வெட்டி எடுத்துவிடுவதே சுலுவான வழியாகும். புழுவைவெட்டி எடுத்தபிறகு அந்த இடத்திற்கு மற்றப் பூச்சிகளும் பூசணநோயும் வராதபடி, அந்த காயங்களுக்கு கீல் எண்ணெய் (தார்) பூசவேண்டும், இவ்விதம் கத்தியினால் மரத்தைவெட்டி

வை வெளியேற்றுவது மரத்திற்கு கெடுதலாயிருக்குமோ வென்று தோன்றினாலும், அவ்விதம் செய்வது தான் புழுவைத்தொலைக்க வெகு திறமான வழியாகவிருக்கிறது. ஸாதாரணமாய் மாங்களின் தண்டைத் துளைக்கிற பாடோஸிரா ரூபஸ் (Batocerá rubus) என்ற வண்டின் புழு மாமரங்களைத் துளைக்கிறதென்றும், ஆரஞ்ஜ் முதலிய மரங்களை அதே ஜாதியைச்சேர்ந்த மற்றொரு புழு நாசம் பண்ணுகிறதாகவும் நமக்கு தெரியும். சில ஸந்தர்ப்பங்களில் இப்புழுக்களை அவைகள் துளைத்திருக்கும் த்வாரங்களிலிருந்து ஒரு இரும்புக்கம்பியினால் குத்திக் கொன்று வெளியேற்றலாமென்றாலும், அவைகள் துளைத்திருக்கும் கால்வாய்களை கத்தியினால் வெட்டி, புழுக்களையும் கொன்று, அக்கால்வாய்களையும் சுத்தம்செய்வதே நல்லது. இவ்விதம் செய்வது அந்த இடத்திற்கு மற்ற பூச்சிகளை வரவொட்டாமல் தடுக்க ஹேதுவாகும். தென்னை பனை முதலிய மரங்களின் குருத்துகளை துளைக்கும் வண்டைக்கொல்ல ஒரு கூரான இரும்புக்கம்பியைக்கொண்டு அவைகள் துளைத்திருக்கும் த்வாரத்தில் விட்டு அவ்வண்டுகளைக்குத்தி இழுக்க வேண்டும். வண்டுகள் கம்பியின் நுனியில் மாட்டிக்கொண்டு வெளியே வந்து வந்துவிடும். பிறகு அந்த த்வாரங்களுக்கு கீல் எண்ணெயைப் பூச வேண்டும்.

ஒரு மரம் அல்லது அதன் பாகமானது பட்டுப்போய் அல்லது பட்டுப்போகக்கூடியதாயிருந்தால், அது அநேகவித பூச்சிகள் சங்கி ஏராளமாய் வ்ருத்தியாவதற்கு ஒரு நல்ல இருப்பிடமாகிறது. இப்பேர்ப்பட்ட செத்த அல்லது செத்து அழுகிக்கொண்டிருக்கிற மரங்களைத் தின்னக்கூடிய வண்டுகளே முக்யமாய் அம்மரங்களில் உற்பத்தியாகி வ்ருத்தியாகும். அவை [illegible] டுப்போன மரங்களில் வெண் [illegible] நிவாப்பூடு தேங்க [illegible] மல் போனால், பச்சை [illegible] கள் இவைகளை எரிவதோடு [illegible] த்தை உண்டு பண்ணவுங் கூடும். ஆகையால்பட்டுப்போன மரங்களையும், மரத்தின் கிளைகளையும், அப்புறப்படுத்தி விறகாக அல்லது வேறு விதமாகவோ உபயோகப்படுத்த வேண்டுமே ஒழிய, அவைகளை பூமியிலேயே நின்றுகொண்டிருக்கவாவது, வயலிலே கிடக்கவாவது விடக்கூடாது. முக்யமாய் அழுகிக்கொண்டிருக்கிற தென்னை பனை இவைகளின் தண்டுகளிலும் கற்றாழைகளின் அடிப்பாகங்களிலும் தென்னம் வண்டின் ஏராளமான கொழுத்த வெள்ளைப்புழுக்கள் நெளிந்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம். மேல் சொல்லிய இடங்களிலிருந்து அவைகள் முழுதும் வளர்ந்த வண்டாகக்கிளம்பி பக்கத்திலிருக்கும் தென்னை பனை முதலியவைகளை நஷ்டப்படுத்தும்.

கரும்பு, சோளம், நெல் முதலிய பயிர்கள் குருத்துப் பூச்சிகளால் பிடிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அவைகளின் குருத்து காய்ந்து போவதினால் அறிந்துகொள்ளலாம். அப்பேர்ப்பட்ட செடியின் காய்ந்த குருத்தானது கையினால் தொட்ட மாத்ரத்தில் கையோடு வந்துவிடும். இவ்விதம் நடுக்குருத்து வாடின ஒவ்வொரு செடியையும் பார்க்கும்போது அதின் தண்டை குருத்துப்பூச்சி துளைத்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் கரும்புப்பயிரிலும் அதைப்போன்ற முக்யமான பயிரிலும் புழுவடித்து குருத்து காய்ந்துபோவதாக தோன்றினவுடன், அப்புழு ஜாஸ்தியாகப் பரவாதபடி, அப்பேர்ப்பட்ட குருத்துகளை வெட்டிக் களைந்துவிட வேண்டும். ஏனென்றால் குருத்துப்புழுவினால் வெட்டப்பட்ட பயிர் உபயோகப்படமாட்டாது. ஆனால் அவ்விதம் புழுத்தோன்றினவுடன், அக்குருத்தை வெட்டி எறிந்து விட்டால், பக்கத்தில் கிளைகள் தோன்றி பயிருக்கு அதிக நஷ்டம் ஏற்படாமலிருக்கும். தவிர மேல்சொல்லிய விதம் புழு தோன்றினவுடன் குருத்துகளை வெட்டி புழுக்களைக் கொல்வதால் அந்தப் புழுக்களிலிருந்தும் வேறு ஸந்ததிகள் உண்டாகி அதிக நஷ்டம் ஏற்படாமலிருக்கவும் கூடும்.



## SWINDLERS AND THEIR TRICKS.—

## முடிச்சவிழ்க்கிகளும் அவர்களுடைய தந்த்ரங்களும்.—

சென்ற மாஸத்து 'ஜனாபிமானி'யில் முடிச்சவிழ்க்கிகளுடைய தந்த்ரங்களில் சிலவற்றைக் குறிப்பிட்டோம். இப்போது இன்னும் சில தந்த்ரங்களை விவரிக்கிறோம்.

ரெயில்வே திருடர்கள்—இவர்கள் இரவில் நல்ல உடைதரித்து வண்டிகளில் ஏறி ஜனங்களுடன் உட்கார்ந்துகொண்டு, யார்தூங்கவேண்டுமென்றாலும் தூங்கலாமென்றும், தங்களுக்கு ரயில்வண்டியில் தூக்கம் வாராததால், தாங்கள் மற்ற ப்ரயாணிகளுடைய உடைமைகளை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொண்டிருப்பார்களென்றும் சொல்வார்கள். இப்படிச் சொல்பவர்களுடைய பேச்சைக்கேட்டால், தூங்கியெழுந்தவுடன் தங்களுடைய உடமைகளைப் பறிகொடுத்து நிற்கவேண்டியது தான்.

சில திருடர்கள் நேர்த்தியாய் உடைதரித்துக் கொண்டு, இரவில் வண்டியிலேறி உட்கார்ந்துகொண்டிருந்து, மற்ற ப்ரயாணிகளுக்கு ஸௌகர்யம் செய்வதாகச் சொல்லிக் கீழே படுத்துக் கொண்டு, வஸ்த்ரத்தைபோட்டு மூடிக்கொண்டு தூங்குவதுபோலப் பாசாங்கு செய்வார்கள் இவர்கள், ஜனங்கள் உட்காரும் பலகைக்கு அடியில் வைத்திருக்கும் மூட்டைகளிருந்தும் பெட்டிகளிலிருந்தும் ஸாமான்களை ஸுலபமாய்த் திருடிக் கொண்டு, சீக்ரம் கம்பி நீட்டிவிடுவார்கள்.

வெள்ளி ஸாமான் விற்பனை.—வங்காளத்திலுள்ள முஸபர்பூர் ஜில்லாவிலும், தர்பங்கா ஜில்லாவிலும், இன்னும் சில இடங்களிலும் சோணர்கள் என்று ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். இவர்கள் தட்டார ஜாதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய ஜீவனம் ஜனங்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதே. இவர்கள் மூன்று நான்கு பேர்களாகச் சேர்ந்து ப்ரயாணம் செய்வது வழக்கம். இவர்கள் வெகுவாய் ரெயில்வே ஸ்டேஷன்களிலும், பரிசல் துறைகளிலுந்தான் தங்கள் மோசச்செயல்களைச் செய்து வருகிறார்கள். இரண்டு மூன்றுபேர் அவ்விடங்களில் திரிந்துகொண்டிருந்து ப்ரயாணிகளில் யாரை ஏமாற்றலாமென்று பார்ப்பார்கள். தக்க பேர்வழியொருவன் அகப்பட்டவுடன், இவர்களில் ஒருவன், அந்த ப்ரயாணியினிடம் போய்ப் பேச்சுக் கொடுத்து ஸ்நேகம் செய்து கொள்வான். ப்ரயாணி எங்கே போகிறான் என்று கேட்டுத் தானும் அவ்விடத்துக்கே போவதாகச் சொல்லி, இரண்டொருமணிநேரம் ஸம்பாஷித்துக்கொண்டிருப்பான். பிறகு 2-வது போக்கிரி அவர்களிருக்குமிடம் வந்து, தன்னிடம் ஒரு வெள்ளி ஸாமானிருப்பதாகவும், தனது ப்ரயாணச் செலவுக்குப் போதுமான பணமில்லாமையால், அதை விற்கவேண்டியிருக்கிறதென்றும் சொல்வான். முதலில்காட்டும் ஸாமான் ஸ்வய வெள்ளியாயிருக்கும். முதல் போக்கிரி 2-வது போக்கிரியை ஒரு அன்யனாகவே பாவித்துப் பேசுவான். முதலில் 1-வது போக்கிரி அந்த ஸாமான் வேண்டியதில்லையென்றும், ஆகையால் அவன் தன் பாட்டைப் பார்த்துக்கொண்டு போகலாமென்றும் சொல்வான், ஆனால் சிறிதுநேரம் கழித்து, அந்த ஸாமானை வாங்கிப் பரிசோதிப்பதுபோல் பாவனைசெய்து, அதற்கு இன்னவிலை கொடுக்கலாமென்பதைப் பற்றிப் பேசுவான். அதோடு அது ஸ்வயவெள்ளியாயிருக்குமென்பது ஸந்தேகமென்றும் சொல்வான், அதற்கு 2-வது போக்கிரி, "இதை எந்த சோணரிடமிடமாவது காட்டுவோம். அவன் பார்த்துச் சொல்லட்டு" மென்பான். அந்த ஸமயம் 3-வது போக்கிரி அந்தப் பக்கமாய்ப் போவான். சோணர் என்ற வார்த்தையைக் கேட்டதும் அவர்களிடம்வந்து "என்னையா இது? நான் ஒரு சோணர். என்ன செய்யவேண்டு"மென்று கேட்பான். அதற்கு மற்ற போக்கிரிகள்

வெள்ளி ஸாமானுக்கு மதிப்புப் போடவேண்டுமென்று சொல்வார்கள். 3-வது போக்கிரி அவ்விடத்திலேயே ப்ரயணியின் முன்பாக நெருப்பு மூட்டி. வெள்ளியைப் பரிசோதித்து அது ஸ்வய வெள்ளி யென்பதை ரூபித்து அதற்கு இன்ன விலை கொடுக்கலாமென்று சொல்வான். 2-வது போக்கிரி தனக்கு பணம் அவஸரமாய் வேண்டியிருப்பதால், கொஞ்சம் தள்ளிவிற்று விடுவதாகச் சொல்வான். 1-வது போக்கிரி தன்னிடம் பணமில்லை யென்றும், ஸாமானை வாங்கத் தனக்கு ஸம்மதந்தானென்றும் சொல்லி, ப்ரயாணியிடம் ரகஸ்யமாய் ப்ரயாணி இப்போது பணங்கொடுத்து உதவினால், பிற்பாடு ஊர்போய்ச் சேர்ந்தவுடன் வட்டியுடன் சேர்த்துக் கொடுத்துவிடுவதாகவும், அதுவரையில் ஜாமினாக வெள்ளி ஸாமானை ப்ரயாணியே வைத்துக்கொண்டிருக்கலாமென்றும் சொல்வான். அநேகமாய் ப்ரயாணி ஸம்மதித்துப் பணத்தைக்கொடுப்பான். ஆனால் அவன் அடையும் ஸாமானோ போலி வெள்ளியால் செய்தது. 2-வது போக்கிரி வெகு ஸாமர்த்யமாய் ஸ்வய வெள்ளி ஸாமானை மறைத்து போலி வெள்ளி ஸாமானைக் கொடுத்துவிடுவான்; இந்த வ்யாபாரம் நடந்து சிறிதுநேரமானதும் 1-வது போக்கிரி மலோபாதை கழித்து வருவதாகச் சொல்லிப் போய் விடுவான். போக்கிரி வெகுநேரமாயும் திரும்பி வாராததைக்கண்டு ப்ரயாணி பயந்து, தான் பெற்ற ஸாமானைப் பரிசோதிப்பான். பிறகு மற்ற ப்ரயாணிகளை அது ஸ்வய வெள்ளிதானா என்று கேட்பான். கடைசியில் தான் ஏமாந்ததாக அறிந்து வருந்துவான். இப்படிப்பட்ட ஸமயங்களில் உடனே போலீஸாரிடம் விஷயத்தைத் தெரிவித்தால் அநேகமாய்ப் போக்கிரிகள் பிடிபட்டு விடுவார்கள்.

**பணத்தை இருமடங்காக்கிக் கொடுப்பவர்கள்:-** அநேக போக்கிரிகள் ஜனங்களுடைய பணத்தை இரண்டுமடங்குக்கு வ்ருத்திசெய்து கொடுப்பதாகச்சொல்லி ஏமாற்றிப் பணம் பறிக்கிறார்கள். இதில் அநேக விதங்கள் உண்டு. பாட்னாவிலுள்ள ஜாடுவா ப்ராம்மணர்களில் சிலர் இவ்விதம்செய்து ஜீவிக்கிறார்களாம். அவர்கள் எவ்விதம் தங்கள் தொழிலை நடத்துகிறார்களென்பதை இங்கு விவரிக்கிறோம்.

இந்த ப்ராமணர்களுக்கு உள்ளாளாக இருக்கும் ஒரு வாலிபன் ஒரு க்ராமத்திற்கு அதிகாலையில் வந்து ஒரு காசுக்கடைக்காரன் வீட்டு வாயிலில் நின்று, ஒரு குறிப்பிட்ட நிறமுள்ள ஒரு ப்ராமணரை யாராவது அந்த க்ராமத்தில் கண்டார்களா என்று கேட்பான். ஸாதாரணமாய் அவனைப்பார்த்தால், அந்த ப்ராமணரைப் பார்ப்பதில் ரொம்ப ஆவலுள்ளவனாயிருந்தானென்று தோன்றும். அவ்வளவு ஆவலுடனிருப்பதைக் கண்ட லேவாதேவிக்காரன், (பாணியா ஜாதியைச் சேர்ந்தவன்) அந்த வாலிபனைத் தனியாயழைத்து, ரகஸ்யமாய் "எதற்காக அந்த ப்ராமணரைத் தேடிக்கொண்டிருக்கிறாய்" என்று கேட்பான். வாலிபன் முதலில் பதில் சொல்ல இஷ்டப்படாததுபோல் நடிப்பான். லேவாதேவிக்காரன் ரொம்ப வற்புறுத்திக் கேட்டதன்மேல், அந்த ப்ராம்மணரிடம் ஒரு அத்புத சக்தி யிருக்கிறதென்றும், அதனால் அவரிடம் ஏதாவது பணத்தைக் கொடுத்தால் அந்தப் பணத்தை இருமடங்காகச் செய்து கொடுத்துவிடுகிறாரென்றும், தனது க்ராமத்தில் அநேகர் அவ்விதம் செய்து தங்களுடைய ஐச்வரியத்தை வ்ருத்திசெய்துகொண்டிருக்கிறார்களென்றும், அப்படியே தானும் பணக்காரனாக இஷ்டப்படுவதால், அவரைத் தனது தகப்பனாருடைய வீட்டுக்கு அழைத்துப்போக எண்ணியிருப்பதாகவும் பதில் சொல்வான்.

லேவாதேவிக்காரன் இந்த விஷயங்களை ரொம்ப ஆவலுடன் கேட்டு, இந்த ரகஸ்யத்தை ஒருவரிடமும் சொல்வதில்லை யென்று வாலிபனிடம் வாக்களிப்பான். அதன்மேல் வாலிபன் தன்பாட்டில் போய்விடுவான். அன்று பிற்ப



வில் ரொம்ப யோக்யமாகக் காணப்படும் ஒரு வயதுசென்ற ப்ராமணன் க்ராமத்தில் நடந்து வந்து பாணிய லேவாதேவிக்காரன் வீட்டுவாயிலில் வந்து நின்று சில மந்த்ரங்கள் சொல்லிக்கொண்டிருப்பான். அவனைக்கண்ட பாணியன் அன்று காலையில் வாலிபன் சொன்ன ப்ராமணன் இவன்தானென்று நினைத்து, அவனைப் பலவிதமாக உபசரித்து வீட்டிற்குள் வரும்படி அழைப்பான். கிழவனும் ரொம்ப கால்நோவுடன் ச்ரமப்படுபவர்போல் அபிநயித்து வீட்டிற்குள் போவான். மறுநாள் காலையில் கிழ ப்ராமணன் தனக்கு பாணியன் உபசாரம் செய்ததற்காக பாணியனிடத்திலுள்ள பணம், நகைகள் யாவையும் இருமடங்காக அதிகரிக்கச் செய்வதாகச் சொல்வான்.

சில ஜனங்கள் இப்படிச் சொன்னதும் தங்கள் பணம் முழுவதையும் கொண்டுவந்து கொடுத்து இருமடங்காக்கிக் கொடுக்கும்படி வேண்டுவார்கள். சில ஜனங்கள் சற்று ஜாக்ரதையாயிருப்பார்கள். அவர்கள் ப்ராமணன் சொன்னபடி செய்யக்கூடியவனா என்று அறிவதற்காக ஸ்வல்ப பணத்தைக் கொடுத்துப் பார்ப்பார்கள். பரீக்ஷார்த்தமாகக் கொடுப்பவர்கள் இரண்டுமூன்று ரூபாய்மட்டும் கொடுத்தால், ப்ராம்மணன், தான் சொல்லும் வார்த்தையில் அவர்களுக்கு நம்பிக்கையில்லைபோலு மென்று சொல்லி, சில ஹோமங்களும் ஜபங்களுஞ்செய்து அவர்களுக்குத் தெரியாமல் தன்னிடமுள்ள ரூபாயையும் சேர்த்து அவர்கள் கொடுத்த தொகைக்கு இரட்டிப்பு மடங்கு திருப்பிக் கொடுத்துவிடுவான். இதனால் ஸந்தேகப்பட்டவர்களுக்கு ஸந்தேகம் போய்விடுகிறது. அவர்கள் தங்களிடமுள்ள பணம் நகைகள் ஆகிய எல்லாவற்றையும் கொண்டுவந்து ப்ராம்மணனிடம் கொடுப்பார்கள். ப்ராம்மணன் தான் தங்கியுள்ள வீட்டில் ஓரிடத்தில் ஹோமம் முதலியவைகள் செய்வதற்காக ஒரு மேடை போடச்சொல்லி, அதில் ஹோமம் வளர்த்து நெய் ஆகுதிசெய்து அதற்கு தூப தீப நைவேத்யங்கள் காட்டுவான். வஸூலித்த பணத்தை சிறு மூட்டையாகக்கட்டி, மேடைக்கு அடியில் ஒரு பள்ளம் செய்து அதில் வைத்து, இரண்டொரு நாள் மூட்டை அங்கேயேஇருக்கவேண்டுமென்று சொல்வான். இரவில் வீட்டிலுள்ளவர்கள் படுத்துத் தூங்கும்போது ப்ராம்மணன் மேடைக்கு அடியிலுள்ள பள்ளத்தைத் திறந்து பணத்தையெல்லாம் எடுத்து மறைத்துவைத்துக்கொண்டு, அந்தப் பள்ளத்தில் மண் கல் முதலியவை போட்டுக்கட்டிய ஒரு மூட்டையை வைத்துவிடுவான். பிறகு தான் செய்யவேண்டிய ஹோமாதிகார்யங்களெல்லாம் ஆகிவிட்டனவென்றும், இன்னும் இரண்டுநாள்கழித்து பள்ளத்தைத் திறந்து பணத்தை யெடுத்துக்கொள்ளலாமென்றும், தான் சொன்ன காலத்துக்கு முன் பணப்பையைத் தொடக்கூடாதென்றும், அதுவரையில் பணங்கொடுத்தவன் உபவாஸமிருந்து மந்த்ரம் ஜபித்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும் சொல்லிவிட்டுப் போய்விடுவான். பணம் பறிகொடுத்ததேயல்லாமல் ஏமாந்தவன் இரண்டு மூன்று நாள் உபவாஸமுமிருந்து கஷ்டப்படுவான்.

சில ஸமயம் மோசம்செய்யும் ப்ராம்மணன் பணப்பையை வீட்டில் புதைப்பதற்கு முன், ஊருக்கு வெளியில் கொண்டுபோய் ஒரு அரசமரத்தடியில் வைத்து அங்கே சில மந்த்ர கார்யங்கள் செய்யவேண்டுமென்பான். பணங்கொடுத்தவன் ஸம்மதித்து விட்டால், ப்ராம்மணன் பணத்தை எடுத்துக்கொண்டு ஊருக்கு வெளியில்போய் அங்கு வரும்படி ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த ஒரு உள்ளாளிடம் பணப்பையைக் கொடுத்துவிட்டு, அதற்கு பதிலாக மண்ணும் கல்லும் வைத்துக்கட்டின ஒரு மூட்டையை வீட்டுக்குக் கொண்டுவந்து புதைப்பான்.

சில ஸமயங்களில் இந்த ஜாடுவா ப்ராம்மணர்

கள் தாங்கள் ஏமாற்றும் மனிதர்கள் தங்களிடம் ரொம்ப நம்பிக்கைகொள்ளும்படி செய்வதற்காக தாங்கள் லக்ஷ்மியின் வரப்ரஸாதிகளென்று சொல்லி, தாங்கள் ஏமாற்றப்போகும் மனிதர்களுக்கு அந்த தேவதையைக் காட்டுவதாகத் தெரிவித்து, ராத்ரிக் காலங்களில் ஊருக்கு வெளியில் அழைத்துப்போய், அங்கே ஏற்கனவே செய்துள்ள ஏற்பாட்டின்படி வேஷம் தரித்துவந்து நிற்கும் உள்ளாளைக்காட்டி, அந்த உருவந்தான் தேவதையென்று சொல்வார்கள்.

சில ஸமயங்களில் ஜனங்களை ஏமாற்ற இன்னொரு தந்த்ரமும் செய்வதுண்டு. பணத்தை இருமடங்காக்க விரும்புகிறவனிடம் ஒருரூபாயை வாங்கி, களிமண்ணுல் ஒரு உருண்டை செய்து, அதில் அந்த ரூபாயை அமிழ்த்தியெடுத்து, பிறகு அந்த களிமண் உருண்டையை நெருப்பில் போட்டு அது நன்றாய் வெந்து குளிர்ந்த பிறகு அதையெடுத்து, ஒருவருக்கும் தெரியாதபடி வேறொரு ரூபாயைக்கையில் மறைத்து வைத்துக்கொண்டு, களிமண் உருண்டையிலிருந்து ரூபாய் எடுப்பதுபோல பாசாங்கு செய்வதுண்டு. இதனால் அநேகர் ப்ராம்மணனுக்கு வாஸ்தவத்தில் அத்புத சக்தியுண்டென்று ஏமாந்து போகிறார்கள். வடக்கே டிப்பரா ஜில்லாவில் இரண்டு வர்ஷங்களுக்கு முன்னால் ஒரு ஜடுவா ப்ராம்மணன் ஒரு க்ராமத்துக்குவந்து இந்த மாதிரி செய்துகாட்டி எல்லா ஜனங்களையும் நம்பச்செய்தான். அவர்களெல்லாரும் தங்களுடைய பணத்தையெல்லாம் ப்ராம்மணனிடம் கொண்டுவந்து கொடுத்து, இருமடங்காக்கிக் கொடுக்கும்படி கேட்டார்கள். ஸுமார் 400 ரூபாய் வரை சேர்ந்தது. அதன்மேல் ப்ராம்மணன் சற்று அஸௌக்யமாயிருப்பதாகவும் மறுநாள் காலையில் இருமடங்காக்கிக் கொடுப்பதாகவும் சொல்லி, பணத்தை மூட்டை கட்டி தலையணையின்கீழ் வைத்துவிட்டு தூங்குவது போல் பாசாங்கு செய்தான். ஜனங்கள் சரியென்று சொல்லிப்போய் விட்டார்கள். ப்ராம்மணன் இரவில் பணத்துடன் கம்பிநீட்டிவிட்டான்.

ஆள் மாறாட்டம் செய்பவர்கள்.—அநேக போக்கிரிகள் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களாக ஆள் மாறாட்டம் செய்து பணம் பறிக்கிறார்கள். வங்காளத்தில் அநேகர் போலீஸ் உத்யோகஸ்தர்களைப்போல் ஆள் மாறாட்டம் செய்கிறார்கள். இதற்கு சிவப்புத் தலைப்பாகைபோதும். இந்தத் தலைப்பாகை தரித்துக்கொண்ட போக்கிரி ஒரு குற்றமும் அறியாத ஒரு ஸாமான்யப் பட்டிக்காட்டானைப் பிடித்து அவன் இன்ன குற்றம் செய்தானென்றுஏதாவது ஒரு குற்றத்தைச்சொல்லிக் கைதுசெய்வான். பிறகு பணங் கொடுத்தால் அவனை விட்டுவிடுவதாகச்சொல்லிப் பணம் பறித்துக்கொண்டு விட்டுவிடுவான்.

சிலர் வருமானவரி விகிதம் ஏற்படுத்தும் உத்தியோகஸ்தராக நடிப்பதுண்டு. போக்கிரி நல்ல உடைதரித்துக்கொண்டு ஒரு வீட்டுக்குப்போய் வீட்டுக்காரரைக் கண்டுபேச வேண்டுமென்று சொல்வான். வீட்டுக்காரன் வந்ததும் தான் வருமானவரி விகிதம் ஏற்படுத்துபவனென்றும், வீட்டுக்காரன் கொடுத்துவரும் வரி ரொம்பக் குறைவென்று தனக்கு ஏற்கெனவே தெரியுமென்றும், தான் வரியை அதிகமாக்க வேண்டுமென்று மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் போகிறதாகவும் சொல்லி, ஜாடையாக, பத்துரூபாய் கொடுத்தால் வரியை அதிகப்படுத்தாதபடி பார்த்துக்கொள்வதாயும் சொல்வான். வீட்டுக்காரன் ரூபாயைக் கொடுத்துவிடுவான். வாஸ்தவமான வருமானவரி உத்யோகஸ்தன் வந்து வீட்டுக்காரனைப் பார்க்கிறவரையில் தான் ஏமாந்துபோனதாக வீட்டுக்காரனுக்குத் தெரியாது.

சில போக்கிரிகள் ஸிவில் கோர்ட் ப்யூன்களாக நடித்து சக்ஷிக்காரர்களுக்கு பத்ரங்களுக்கு நகல் வாங்கிக்கொடுப்பதாகச்சொல்லிப் பணம் ஸம்பாதிக்கிறார்கள்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### A Children's Museum.

குழந்தைகளுக்கான பொருள் காட்சிசாலை.—அமெரிக்காவைச் சேர்ந்த ந்யூயார்க் என்னும் பட்டணத்தில் உள்ள ஒரு சாஸ்த்ர ஸபையார் அந்தப்பட்டணத்தின் ஒருபாகமாகிய ப்ரூக்லின் என்னுமிடத்தில் குழந்தைகளுக்கென்று ப்ரத்யேகமாக ஒரு ம்யூஸியம்(பொருள் காட்சி சாலை) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அமெரிக்காவிலுள்ள போஸ்டன் என்னும் பட்டணத்திலும், இந்த மாதிரி ம்யூஸியம் ஏற்படுத்துவதால் குழந்தைகளுடைய ஸன்மார்க்கமும் கல்வியறிவும் வ்ருத்தியடையுமென்று எண்ணி, ஒரு ம்யூஸியம் ஏற்படுத்தியிருக்கிறார்களாம்.

ப்ரூக்லினிலுள்ள ம்யூஸியத்தில் சிறுவர்கள் தாங்கள் பார்க்கவேண்டிய பொருள் இன்ன இடத்திலிருக்கின்றனவென்று தெரியாது திண்டாடாதபடி, அதைச் சேர்ந்த ஒரு உத்யோகஸ்தர் குழந்தைகள் இன்ன பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார்களெனக் கேட்டு, அவைகள் இருக்குமிடத்துக்குக் கூட்டிக் கொண்டுபோய் விடுகிறார்களாம். பொருள் காட்சி எப்போதும் திறந்திருக்குமாம். பக்கத்திலுள்ள பாடசாலைகளிலுள்ள பிள்ளைகள் உபாத்யாயர்களுடன் எப்பொழுது வேண்டுமென்றாலும் வந்து பார்த்து விட்டுப் போகலாமாம். அதோடு, பொருள் காட்சிசாலையின் அதிகாரிகள் பாடசாலைகளுக்கு அவ்வப்போது வேண்டியிருக்கும் பொருள்களை அவைகளுக்கு இரவல் கொடுத்து உதவுகிறார்களாம்.

### Free and Compulsory Education.

கட்டாயப்படுத்தி இலவசப்படிப்பு சொல்லிக் கொடுத்தல்.—தேசத்தில் எல்லா விடங்களிலும் முடியாவிட்டாலும், முனிஸிபல் எல்லைக்கு உள்பட்ட பாகங்களிலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டுகளின் அதிகாரத்துக்குள்பட்ட இடங்களிலுமாவது பையன்களுக்கு இலவசமாகவும் கட்டாயப்படுத்தியும் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று பலர் சொல்லிவருகிறார்கள். சில மாஸங்களுக்கு முன்னால் நெல்லூரில் நடந்த மாகாண காண்புரென்ஸில் இதைப்பற்றி ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. சென்றமேமாஸம் சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் கூடினபோது, ஆனரபிள் மிஸ்டர் ஸைனல்லபிடின் ஸாகிப், முனிஸிபாலிடிகள் லோகல்போர்டுகள் இவைகளைப்பற்றிய ஆக்டில் கவர்ன்மெண்டார் சில திருத்தங்கள் செய்யப்போகிறார்களாதலால், முனிஸிபாலிடிகளும், ஜில்லா, தாலூகா போர்டுகளும் இஷ்டப்பட்டால் தங்கள் அதிகாரப்ரதேசத்தில் பிள்ளைகளுக்கு கட்டாயப்படுத்தி இலவசமாகக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய அவைகளுக்கு அதிகாரம் ஏற்படும்படி கவர்ன்மெண்டார் ஷை சட்டத்தில் ஒருவிதி ஏற்படுத்துவார்களாவென்றும், மகம்மதிய வகுப்பார் கல்வி விஷயத்தில் ரொம்ப தாழ்ந்திருப்பதை உத்தேசித்து, முனிஸிபாலிடிகளிலும் ஜில்லா போர்டுகளிலும் மகம்மதிய பிள்ளைகளுக்காவது கட்டாயப்படுத்தி இலவசக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வார்களாவென்றும் கேட்டார்.

கவர்ன்மெண்டார் ஷை சட்டத்தில் கட்டாய இலவசப்படிப்பு விஷயமாய் யாதொரு மாறுதலும் செய்வதாக உத்தேசமில்லையென்று பதில் சொன்னார்கள்.

### Scholarships for Muhammadans.

மகம்மதிய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்.—மகம்மதியர்களின் கல்வியபிவ்ருத்தியை உத்தேசித்து சென்னை கவர்ன்மெண்டார் அவ்வகுப்பு மாணவர்களுக்கு சில ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்க தீர்மானித்திருக்கிறார்கள். மாப்பிள்ளை, லப்பை, டிகுலர், [illegible]கன் வகுப்பைச் சேர்ந்த ஸெக்கண்டரி ஸ்கூல் மாணவர்களுக்கு 8 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். அதோடு எல்லா மகம்மதியமாணவர்களுக்கும் பொதுவாக 8 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படும். இந்த ஸ்காலர்ஷிப்புகள் இண்டர்மீடியேட் மாணவர்களுக்கானுல் 9-ரூபாய் வீதமும், பி. எ. வகுப்பு மாணவர்களுக்கானுல் 14-ரூபாய் வீதமுமாகும். ஆனர்ஸ் வகுப்பில் வாசிக்கும் 1-மாணவருக்கு ப்ரத்யேகமாய் 14-ரூபாய் மதிப்புள்ள ஒரு ஸ்காலர்ஷிப்பு கொடுக்கப்படும்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Ahaligai Venba.

**அகலிகை வெண்பா.**—இது நெல்லைச்சிலேடை வெண்பா, கோம்பிவிருத்தம், சுவர்க்க நீக்கம் முதலிய நூல்களை இயற்றியவரும், சென்னை வெடிரினெரி டிபார்ட்மெண்ட் டெபுடி ஸூபரிண்டெண்டெண்டாகிய மிஸ்டர் வெ. ப. ஸுப்ரமண்ய முதலியார் இயற்றியது. இது கௌதமரின் மனைவியாகிய அகல்யையும் இந்த்ரனும் சாபமடைந்த விஷயத்தைப் பற்றிக்கூறும் வெண்பா நூல். செய்யுட்கள் சொல் நயமும் பொருள் நயமும் பொருந்தி மனத்திற்கு இன்பம் தரத்தக்கவையா யிருக்கின்றன. செய்யுள்களிலுள்ள கடின மொழிகளுக்கு அரும்பதவுரை ஒவ்வொரு பக்கத்திலும், எழுதப்பட்டிருக்கிறது. செய்யுள்நடையில் அதிகப் பயிற்சியில்லாதவர்களுக்கு உபயோகமாயிருக்கும்படி ஆசிரியர் செய்யுள்களை விரிவாக வசனநடையில் எழுதிக் கடையில் சேர்த்திருக்கிறார். இந்த நூலின் விலை-0-8-0. வேண்டுவோர் திருநெல்வேலி ஜில்லா, சுரண்டை போஸ்ட், வெள்ளக்கால் மிஸ்டர் வே. ப. ராமலிங்க முதலியாருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

### A Collection of Essays.

**வியாசத்திரட்டு: முதல் பாகம்.**—இது மதுரை 'வித்தியாபானு' பத்ராதிபர் மு. ரா. அருணசலக் கவிராயர் மேலைச் சிவபுரி ஸன்மார்க்க ஸபை முதலிய ஸபைகளில் உபன்யஸித்தனவும் எழுதிவாசித்தனவுமான வ்யாஸங்களில் பன்னிரண்டின் தொகுப்பாகும். இவைகள் சைவ சமயத்தின் பற்பல கொள்கைகளை விளக்கிக் காட்டுகின்றன. இவை இனிய தமிழ் நடையில் அநேக மேற்கோள்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன. சைவ சமயத்தைப்பற்றி உபன்யாஸம் செய்ய விரும்புவோருக்கும், வ்யாஸங்கள் எழுதவிரும்புவோருக்கும் ப்ரயோஜனமாயிருக்கும். இதன் விலை 8-அணா. வேண்டுவோர் மதுரை தமிழ் வித்வான் மு. ரா. கந்தஸாமிக் கவிராயருக்காவது, புதுக்கோட்டையைச் சேர்ந்த கோனாபட்டு, தனவைசியன் ஆபீஸுக்காவது எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

### The Present State of Tamil.

**தமிழின் தற்கால நிலைமை.**—அநேகர் தமிழ் தற்காலம் ரொம்ப தாழ்ந்த நிலைமையில் இருக்கிறதென்றும், அதை உயர்த்த முயற்சிசெய்யவேண்டியது மிகவும் அவச்யமென்றும், அடிக்கடி சொல்லிவருகிறார்கள். ஸமீபத்தில் சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் தமிழ் ஸங்கத்தில் மகாமகோபாத்யாய வே. ஸ்வாமிநாதய்யர் தமிழின் நிலைமையைப் பற்றிப் பேசினபோது, தமிழ் நல்ல உயர்ந்த ஸ்திதியிலே தானிருக்கிறதென்றும், அதை நாமுயர்த்த வேண்டுமென்று முறையிடுதல் அறியாமையே யென்றும், நம்மை நாம் உயர்த்திக்கொள்ள வேண்டுமென்றும், பேசினார்.

### Love's Triumph.

**காதல் வெற்றி.**—சென்ற மூன்று மாஸங்களாக ஜனாபிமானியில் வெளியாகிவந்த 'காதல் வெற்றி' யென்னும் சிறு நாவல் இப்போது புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. கதையின் பொருளமைப்பும், தமிழின் நடையும் நேர்த்தியா யிருக்கிறதென்பதை நாம் வற்புறுத்த வேண்டியது அனாவச்யம். இது பெரியோர்களேயன்றி பெண்களும் சிறுவர்களும் வாசிக்க ஏற்றது. இதன் விலை அணா 4. ஜனாபிமானி சந்தாதாரர்களுக்கு மாத்ரம்விலை அணா 3. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி 3-4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Sreeman Gopala Krishna Gokale.

**ஸ்ரீமான் கோகலேயின் ஜீவ்ய சரித்ரம்.**—'ஸ்வதேசமித்திரன்' உதவிப் பத்ராசிரியரான கே. விச்வநாதய்யரால் எழுதப்பட்ட ஸ்ரீமான் கோகலேயின் ஜீவ்ய சரித்ர புஸ்தகமொன்று வரப்பெற்றோம். அதன் கடை ரொம்ப லகுவாயிருப்பது முதலில் கொண்டாடத்தக்கது. நம்மவர் அறியவேண்டிய பல அருமையான விஷயங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. பொதுநன்மையைப்பற்றிய பல விஷயங்களில் ஸ்ரீமான் கோகலே கொண்டிருந்த அபிப்ராயங்கள் வெகு விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு வர்ஷத்திய வரவுசெலவு திட்டப்பேச்சிலும் அவர் வற்புறுத்திவந்த பல திருத்தங்கள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் அழகிய படமொன்றுடன் 172 பக்கம் கொண்டது. இதன் விலை அணா 8. புஸ்தகத்தின் குணத்தை உத்தேசிக்கையில் 8-அணா மலிவென்றே சொல்லவேண்டும்.

வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, புஸ்தகவ்யாபாரிகள் 3-4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Character Inheritance.

**தகப்பனுடைய குணங்கள் மகனுக்கு ஏற்படுவது.**—தாயைப்போல் பெண்ணும் தந்தையைப்போல் பிள்ளையும் என்பது ஒரு ஸர்வ ஸாதாரணமான பழமொழி. ஆயினும் அனுபவத்தில் இது எப்போதுமே சரியாயிருப்பதில்லை. அதிமேதாவியான தகப்பனுக்குப் பிறக்கும் பிள்ளைகளில் பலர் கல்வி யறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். வேறு பல நற்குணங்கள் உள்ள தகப்பனுக்குப் பிறக்கும் பிள்ளைகளில் பலர் அவைகளுக்கு நேரான கெட்ட குணங்கள் வாய்ந்தவர்களாயிருக்கிறார்கள். இதற்குக் காரணம் பிள்ளைகள் பிறக்கும்போது தகப்பனுக்கு என்ன குணங்கள் இருந்தனவோ அந்த குணங்கள்தான் பிள்ளைகளுக்கும் உண்டாகின்றனவென்பதே யென்று ஒரு மேல்நாட்டு ஆசிரியர் ஸாதிக்கிறார்.

அவர் மனிதனுடைய வாழ்நாளைச் சில பிரிவுகளாகப் பிரிக்கிறார். 20-வயது முதல் முப்பது வயது வரையில் மனிதன் சண்டைசெய்யும் குணமுள்ளவனாகவும், அதிகாரம், செல்வம் முதலியவைகளில் ஆசையுள்ளவனாகவும், அகங்காரமுள்ளவனாகவும் இருப்பான். உலகம் முழுவதையும் தான் ஆளவேண்டுமென்னும் விருப்பமுடையவனாக இருப்பான். இந்தப் பிரிவின் கடைசியில் அதாவது 28-முதல் 30-வரையில் இந்த குணங்கள் வரவரக்குறைந்துபோய்ப் பிறகு சித்ரகலைகளில் ப்ரியமுள்ளவனாக இருக்கிறான். சித்ரகலைப் பருவம் 30 முதல் 40-வது வயது வரையில் இருக்கிறது. அந்தப் பருவத்தில் மனிதன் கவிகள், ஸங்கீதம், சித்ரம் வரைதல், கல்சிலைகள் செய்தல், இவைகளில் ப்ரியமுள்ளவனாக இருப்பான். 40-முதல் 50-வரையில் அனுபவசாலியாயிருப்பான். வீண்பேச்சு இல்லாமல் பணம் வரும் வழியில் கவனமாயிருப்பதோடு, அராட்சி முறையைச் சீர்திருத்த நோக்கமுள்ளவனாகவும், ராஜரீக விஷயங்களில் தேர்ந்தவனாகவும் இருப்பான். 50-வயஸுக்குமேல் மனிதன் தத்வ சாஸ்த்ரம், ஸன்மார்க்கம் ஆகிய இவைகளில் ப்ரியமுள்ளவனாக இருப்பான்.

மனிதனுக்கு மேற்சொன்ன பல பருவங்களில் பலவித வித்யாஸமான குணங்களிருப்பதால் குழந்தை எந்தப் பருவத்தில் பிறக்கிறதோ அந்தப் பருவத்தில் தகப்பனுக்கிருந்த குணங்களையே அடைகிறது.

குழந்தை பிறக்கும் காலத்தில் தகப்பனுக்கு என்ன குணங்களிருந்தனவோ அதே குணங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுமென்பது தேச சரித்ரத்தாலும், மகான்களுடைய ஜீவ்ய சரித்ரத்தாலும் விளங்குகிறது. யுத்த ப்ரியர்களாய் உலகமுழுவதையும் ஜயித்து அடக்கியாளவேண்டுமென்னும் அவாவுடையவர்களாய் இருந்த மகா அலெக்ஸாந்தர், (பெரிய) நெப்பொலியன் போனபார்ட், சார்லமேன், ஹான்னிபால், பாம்பே முதலானவர்கள் தங்களுடைய தகப்பனருக்கு 31-வயஸாகு முன்னமே பிறந்தவர்கள். 20-முதல் 30-வரையில் யுத்த ப்ரியம் உள்ள பருவமென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம்.

ஸங்கீதத்தில் அதிவித்பன்னர்களாக இருந்த பாக், பீதோவன் என்பவர்களும், மேல்நாட்டு நாடகக் கவிகளில் சிறந்தவராகிய ஷேக்ஸ்பியரும், சித்ரம் எழுதுபவரில் சிறந்தவரான இட்டலிதேசத்து ராபேல் என்பவரும், இலக்கியத்தில் அதிக தேர்ச்சியுள்ள கார்லைல் என்பவரும் தங்கள் தகப்பனருடைய சித்ரகலைப்பருவமாகிய 30-வது வயஸு முதல் 40-வது வயஸுக்குள் பிறந்தவர்கள். ஜெர்மனி தேசத்து ராஜதந்த்ரியாகிய பிஸ்மார்க், இங்க்லண்டு தேசத்து க்ராம்வெல், ரோமாபுரியிலிருந்த பெரிய ராஜதந்த்ரியாகிய கார்ட்டோ இன்னும் மற்ற ராஜதந்த்ரிகள் தங்கள் தகப்பனருடைய அனுபவப் பருவமாகிய 41-வது வயஸு முதல் 50-வது வயஸுக்குள் பிறந்தார்கள்.

க்ரீஸ் தேசத்து தத்வ சாஸ்த்ரியாகிய அரிஸ்டாடில், இங்க்லண்டைச் சேர்ந்த பேகன், கௌதமபுத்தர், சீனதேசத்து கான்பூஷியஸ், பைபிளில் ப்ரஸ்தாபம் செய்யப்பட்டிருக்கிற மோஸஸ், ஸாலமன் முதலிய தத்வ சாஸ்த்ரிகள் தங்களுடைய தகப்பனருக்கு 51-வயஸான பிறகே பிறந்தார்கள்.

### Increasing the Strength of Steel.

**எஃகின் பலத்தை அதிகப்படுத்தல்.**—அமெரிக்காவிலுள்ள சிகாகோ பட்டணத்திலுள்ள ஒரு வித்வான் எஃகுக்கு இப்போதுள்ளபலத்தைவிட மூன்று பங்கு பலமேற்படும்படி செய்ய ஒரு நூதன முறைகண்டு பிடித்திருக்கிறார். இந்தப் புது முறையால் தயார் செய்த உருக்கைக்கொண்டு, ரொம்பப் பெரிய பீரங்கிகளும் நாசம் செய்யமுடியாத கோட்டைகளும் கட்டலாமாம். மேலும் இந்த உருக்கால் இது வரையில் ஸாத்யமில்லை யென்று எண்ணிவந்த உயரத்துக்குக் கட்டிடங்கள் கட்டுவதும் முடியுமாம்.

## SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Some Useful Medical Hints.

**சில உபயோகமுள்ள வைத்ய முறைகள்.**—அத்திப்பாலும் சீதபேதியும்:—அத்திமரத்திலிருந்து எடுக்கப்படும் பாலையும் சர்க்கரையையும் கலந்து உட்கொள்ள, எவ்வித சீதபேதியும் தீரும். சீதபேதி கடுமையாயிருந்தால், முதலில் இரண்டு பலம் ஆமணக்கெண்ணெயையும் தேங்காய்ப் பாலையையும் கலந்து உட்கொள்ளக் கொடுத்து, நன்றாக மூன்று நான்கு முறை விரேசனமானபிறகு, அத்திப்பாலைக் கொடுக்க வயிற்றுப்போக்கும் வயிற்றுக்கடுப்பும் நிவ்ருத்தியாய்விடும். இதை தினத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவை உபயோகிக்கவேண்டும்.

**வயிற்றுப் பொருமலில் சுண்டைக்காய்.**—சுண்டைக்காயைச் சிவக்க வறுத்து, அதைப் பொடிசெய்து, ஒன்று அல்லது இரண்டு தோலா எடைக்கு இரண்டு மூன்று உப்புக்கல் வீதம் கூட்டி தினத்திற்கு மூன்று வேளை உட்கொண்டு வர அஜீர்ணம் முதலியவற்றாலுண்டாகும் வயிற்றுப்பொருமல் தீருமென்று ஒரு வைத்யர் எழுதுகிறார்.

**கக்கிருமலுக்கு சிகித்ஸை.**—கக்கிருமலால் கஷ்டப்படும் பிணியாளிக்கு அடியிற் குறிப்பிடப்படுமாறு சிகித்ஸைசெய்ய அநேக ஸமயங்களில் திருப்திகரமான பலன் உண்டாவதாகத் தெரியவருகிறது:—சுத்தமான ஒரு பாத்ரத்தில் வென்னீரைச்சேர்த்து, சிறிதளவு டர்பண்டைன் என்னும் தைலத்தையும், நாலைந்து துளி கார்பாலிக் ஆஸிடையும் (Carbolic acid) அந்த ஜலத்தில் கூட்டி, அதிலிருந்து எழும்பும் ஆவியை அப்பிணியாளி ச்வாஸிக்கவேண்டும்.—வைத்திய கலாநிதி.

### Treatment for Guinea-worm.

**நரம்புச் சிலந்திக்கு வைத்யம்.**—உயர்ந்த பால் பெருங்காயம் காலணாவுக்கு வாங்கி அதை வைப்பதற்குப் போதுமான ஒரு பிஞ்சுக் கத்தரிககாயில் குழி செய்து அதற்குள் வைத்து மூடி கங்கு நெருப்பால் நன்றாக வேகும்படி சுட்டெடுத்து ஆறினபின் தோலை உரித்துப்போட்டு காலையில் இதையே முதல் ஆகாரமாக சாப்பிடவும். அந்த வ்யாதியினால் அவஸ்தைப்படுகிறவர்கள் 7-நாள் சாப்பிடுவதில், மூன்று நாள் தொடர்ந்தும், நான்கு நாள் இரண்டு நாளைக்கு ஒரு முறையும் சாப்பிடவும். வாயு பதார்த்தம் தள்ளுபடி. வேறு பத்தியம் கிடையாது என்று ஒரு நிருபர் 'சுதேசமித்திரன்' பத்ரிகைக்கு எழுதுகிறார். அதே பத்ரிகையில் வேறொரு நிருபர் நரம்புச் சிலந்திக்கு இன்னொரு வைத்ய முறை தெரிவிக்கிறார்.

நரம்புச்சிலந்தி வ்யாதி பரவிவரும் ஊர்களில் ரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களும் ரோகமில்லாதவர்களும் காலை மாலையில் 5 க்ரெய்ன் சுத்திசெய்த வெண்காரமும், 5 க்ரெய்ன் ஸிட்ரிக் ஆஸிடும், இரண்டு அவுன்ஸ் சுத்த ஜலத்தில் கலந்து கொஞ்சம் கருப்புச் சர்க்கரையைச் சேர்த்து சாப்பிட்டுவரவும். குடிக்கும் நீரை நன்றாய்க் காய்ச்சி ஆறவைத்து உபயோகித்து வரவும். இதனால் ரத்தத்திலுள்ள க்ருமிகளெல்லாம் செத்து ரத்தம் வ்ருத்தியாகி மேற்படி வ்யாதி பூராவாய் ஸ்வஸ்தமாகிவிடும்.

### Ducks and Malaria.

**குள்ளவாத்துக்களும் மலேரியாக் காய்ச்சலும்.**—குள்ளவாத்துக்கள் கொசுக்களுடைய ஜன்ம சத்ருக்களில் முக்யமானவை. நீர்த்தேக்கமுள்ள இடங்களில் வாத்துக்கள் இருந்தால் அவ்விடங்களில் கொசுக்கள் வ்ருத்தியாகா. அதனால் மலேரியாக் காய்ச்சலும் உண்டாகாமல் தடுக்கப்பட்டுப் போகும். இதைப்பற்றிப் பரிசீலனை செய்த ஒரு மேல்நாட்டு வைத்யர் ஸம பரப்புள்ள இரண்டு குட்டையில் ஒன்றில் வாத்துக்களை விட்டார். இன்னொன்றில் மீன்களைப் போட்டார். வாத்துக்களைவிட்ட குட்டையில் இருந்த கொசுக்களையும், அதன் முட்டை; புழுக்களையும் வாத்துக்கள் வெகு சீக்ரத்தில் தின்றுவிட்டன. மீன்கள் போட்ட குட்டையில் கொசுக்களும் அவைகளின் முட்டையும் புழுக்களும் சாகாமல் இருந்தன. அந்தக் குட்டையிலும் காட்டு வாத்துக்களை விட்டதில் 24 மணி நேரத்துக்குள் கொசுக்களின் புழுக்கூடுகளெல்லாவற்றையும் வாத்துக்கள் தின்றுவிட்டன. இரண்டு நாளுக்குப் பிறகு அந்தக் குட்டையில் கொசுவின் புழுக்களே யில்லையாம். குள்ளவாத்துக்களுக்கு கொசுக்களின் முட்டையை தின்பதில் ரொம்ப ப்ரியமாம். பணக்குறைவால் வடியவைக்க முடியாத சதுப்பு நிலங்களில் வாத்துக்களை உபயோகிப்பதால், கொசுக்களின் உபத்ரவம் குறைவதோடு, அதன் மூலமாக மலேரியாக் காய்ச்சலும் குறைந்துபோகும்.



## LAW.

## சட்டம்.

### Alienation by a Widow.

**விதவை ஸொத்தைப் பாராதீனம் செய்வது.**—ஒரு ஹிந்து விதவை தனது புருஷன் செத்துப் பத்து வருஷமானபிறகு, புருஷன் பட்டிருந்த கடன்களைத் தீர்க்கவேண்டுமென்று சொல்லி அவருடைய ஸொத்துக்களை குறைந்த விலைக்கு விற்றாள். ஸொத்துக்கள் ஒற்றி வைக்கப்பட்டிருந்தன. ஸொத்தின் வரும்படியால் கடனானது கொஞ்சங் கொஞ்சமாக அடைபட்டு வந்து கொண்டிருந்தது. கடனடைக்க வேண்டுமென்று சொல்லி விற்றாலும், வாஸ்தவத்தில் பணத்தை கைவசப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன் விற்றதாகத் தெரிகிறது. மேலும் விற்பனைத் தேதியில் அடைமான உடன்படிக்கை தீருவதற்கு இன்னும் சில வர்ஷங்கள் வரையில் தவணையிருந்தது. அதோடு ஸொத்தை வாங்கினவர்கள் ஸொத்தை வாங்குவதில் சில தடைகளிருக்கின்றனவென்றறிந்தே வாங்கினார்கள். என்றால், விதவை ஸ்வல்ப கடன்கள் இருக்கிற தென்பதைக் கொண்டே ஸொத்துக்களை விற்றது ந்யாயமானதல்ல. அவள் பணத்தைத் தன் வசப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் ஸ்வய நலம் பாராட்டி விற்றாளாதலால் அந்த விற்பனை செல்லாது. அனந்தரவார்ஸுகளையும் கட்டுப்படுத்தாது.—2 லாவீக்லி 758.

### Decree Holder and Insolvents.

**டிக்ரீ வாங்கியிருப்பவர்களும் கடன் கொடுக்க சக்தியற்றவர்களும்.**—ஒருவர்கடன் வாங்கியிருந்த இன்னொருவர்மேல் வ்யாஜ்யம் போட்டு டிக்ரி வாங்கியிருந்தார். டிக்ரி வாங்கின பிறகு, கடன் வாங்கினவருடைய ஸொத்தை ஜப்தி செய்யமனுப்போடுவதற்கு முன்னால், கடன் வாங்கினவர் இன்ஸால்வண்ட் அதாவது கடனைத் திருப்பிக்கொடுக்க சக்தியற்றவரென்று கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டார். அவருடைய ஸொத்துக்கள் அபிஷியல் ரிஸீவர் வசமாயின. அப்படியானால் டிக்ரி வாங்கினவர் கடன் வாங்கினவருடைய ஸொத்துக்களை ஜப்திசெய்ய முடியாது. மற்ற கடன்காரர்களுக்கு என்ன பாத்யதை உண்டோ அவ்வளவு தான் டிக்ரீ [illegible]க்கும் உண்டு.

### Ex-partners and Debts.

**கூட்டுத் தொழிலிலிருந்து விலகினவர்களும் கடன்களும்.**—கூட்டுத் தொழில் செய்து வந்தவர்கள் கூட்டு வ்யாபாரத்தை நிறுத்திப் பிரிந்துபோன பிறகு, அவர்களில் ஒருவர் கூட்டுத்தொழிலில் பட்ட கடன்களை ஒப்புக்கொள்ள அதிகாரம் பெற்றதாக வ்யக்தமான ஸாக்ஷ்யமிருந்தாலொழிய, அவர் அப்படிக் கடன்களை ஒப்புக்கொண்டால் அந்த கடன் அவரைக் கட்டுப்படுத்துமே யொழிய மற்ற கூட்டுத் தொழிலாளிகளைக் கட்டுப்படுத்தாது. ஆனால் கூட்டுத்தொழில் ஸம்பந்தப்பட்ட நிலுவைகளை வஸூலிக்கவும் கடன்களைச் செலுத்தவும் ஒரு கூட்டாளிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால், அந்த அதிகாரத்தில் கடன்களை ஒப்புக்கொள்ளும் அதிகாரமும் அடங்கும்.

### Master and Servant.

**யஜமானனும் வேலையாளும்.**—ஒரு வேலையாள் [illegible] ரஜா கேட்காமலே வேலைக்குப் போகாமலிருந்[illegible]டான். அவன் மறுநாள் வேலைக்குப் போனதும் அவனுடைய யஜமானர் அவனை ஒரு நாளைக்கு வேலை செய்ய வேண்டியதில்லை யென்று சொல்லி நிறுத்தி விட்டார். தமது வேலையாள் ரஜாவில்லாமல் நின்று விட்டதற்காக அவன் மேல் நஷ்டத்துக்கு வ்யாஜ்யம் போடவும், வேலையில் வைத்துக்கொள்வதாகச் செய்திருக்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்து அவனை வேலையை விட்டுத் தள்ளிவிடவும் யஜமானருக்கு பாத்யதை உண்டென்று சொல்லக்கூடுமானாலும், அவனை ஒரு நாளைக்கு வேலைக்கு வரக்கூடாதென்று நீக்க அதிகாரமில்லை. வேலையாளுக்கு அந்த ஒரு நாளுக்கு உள்ள சம்பளத்தை யடைய பாத்யதை உண்டு.

### Gifts to Daughters.

**பெண்களுக்குத் தானம் செய்தல்.**—தாமும் தமது ஸகோதரனுடைய புத்ரனும் சேர்ந்த ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தின் தலைவர் தமது புத்ரிகளின் கல்யாண காலத்தில் அவிபக்த ஸொத்தில் பத்திலொரு பாகத்தை புத்ரிகளுக்கு தானமாகக் கொடுத்தால் அது சட்டப்படி செல்லும். அப்படி தானங்கொடுத்தது அவிபக்த குடும்பத்தைக் கட்டுப்படுத்தும்.—2 லாவீக்லி [illegible]

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Late Mr. Keir-Hardie.

**காலஞ்சென்ற மிஸ்டர் கீர்-ஹார்டி.**—இந்திய விஷயங்களில் அதிக ஊக்கமெடுத்து வந்தவரும், இந்தியர்களிடத்தில் அனுதாபம் காட்டிவந்தவருமான மிஸ்டர் ஜேம்ஸ் கீர்-ஹார்டி இந்த மாஸம் இறந்துபோனாரென்று கேட்டு விஸனப்படுகிறோம். அவர் 1856-ம் வர்ஷத்தில் கூலிவேலைசெய்து பிழைக்கும் குடும்பமொன்றில் ஜனனமானார். அவர் தமது 7-வது வயஸுமுதல் 24-வது வயஸுவரையில் நிலக்கரிச் சுரங்கங்களில் ஸாதாரண வேலையாளாக இருந்துவந்தார். தமது ஸாமர்த்யத்தாலும், மற்ற வேலைக்காரர்கள் மேல்கொண்ட அனுதாபத்தாலும், அவர்களது அபிப்ராயத்தில் உயர்ந்து கடைசியில் அவர்களுக்குத் தலைவராக ஆனார். 1880-ம் வர்ஷத்தில் சுரங்க வேலைக்காரர்களின் ஸங்கத்துக்கு ஸெக்ரடரியாக ஆனார். 1882-ம் வர்ஷத்தில் ஒரு பத்ரிகைக்கு பத்ராதிபராக நியமிக்கப்பட்டார். 1889-ம் வர்ஷமுதல் பார்லிமெண்டில் உள்ள, ...ண்டா வேலைசெய்து பிழைக்கும் ஜனங்களுடைய பாத்யதைகளை... கவனித்துவரும் லேபர் பார்ட்டி என்னும் கக்ஷியாருக்காக ரொம்ப ச்ரமப்பட்டு வந்தார். 1892-ம் வர்ஷத்தில் பார்லிமெண்ட் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1907-ம் வர்ஷத்தில் இந்தியாவில் அமைதிக்குறைவு ஏற்பட்டிருந்தபோது, இந்தியாவின் நிலைமையை சரியாய் அறிந்துகொள்ள வேண்டுமென்னும் நோக்கத்துடன் அவர் இந்தியாவுக்கு வந்து அநேக இடங்களுக்கு சுற்றுப்ப்ரயாணம் செய்தார். அவர் பார்லிமெண்டில் இந்திய விஷயங்களில் அதிக ஊக்கம் பாராட்டி வந்தார்.

### Sir Ali Imam.

**ஸர் அலி இமாம்.**—வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் சட்ட மெம்பராக இருந்துவரும் ஆனரபிள் ஸர் ஸையத் அலி இமாம் இந்த வர்ஷக்கடைசியில் அந்த வேலையிலிருந்து நீங்குகிறார். அவர் 1869-ம் வர்ஷம் பாட்னாவுக்குப்பக்கத்திலுள்ள ஒரு ஊரில் ஜனனமானார். அவர் இங்க்லண்டில்போய் வாசித்து பாரிஸ்டராக ஆனார். அவர் காங்ரெஸ் அபிமானி. முன்பு ராஜப்ரதிநிதியின் நிர்வாக ஸபையில் சட்ட மெம்பராக இருந்த ஸர் எஸ். பி. ஸின்ஹா அந்த உத்யோகத்திலிருந்து விலகிக்கொண்ட பிறகு, 1910-ம் வர்ஷத்தில் சட்ட மெம்பராக நியமிக்கப்பட்டார். அவர் இந்த வர்ஷம் உத்யோகத்திலிருந்து விலகிக்கொள்வதை உத்தேசித்து ஸிம்லாவிலுள்ள இந்தியர்கள் இந்த மாஸம் 17-ந்தேதியன்று ஸிம்லாவில் ஒரு விருந்துக்கச்சேரி வைத்து அவரை உபசரித்தார்கள்.

### Mr. Justice Tyabji.

**மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.**—பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்தவரும், காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தவரும், மிக ப்ரஸித்திபெற்றவருமான காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் பத்ருடின் டையாப்ஜியின் புதல்வராகிய மிஸ்டர் பெய்ஸ் ஹாஸ்ஸான் பத்ருடீன் டையாப்ஜி, 1912-ம் வர்ஷத்தில் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜாகிய மிஸ்டர் ஜஸ்டீஸ் அப்தர் ரஹீம் பப்ளிக்ஸர்விஸ் கமிஷனில் மெம்பராகப் போனபோது, அவருக்கு பதிலாக அப்ஷியேடிங் ஜட்ஜாக நியமிக்கப்பட்டார். பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் வேலை தீர்ந்துபோய் மிஸ்டர் அப்தர் ரஹீம் ஹைகோர்ட்டுக்குத்திரும்பி விட்டதால், மிஸ்டர் டையாப்ஜி இந்த மாஸம் ஜட்ஜ் வேலையிலிருந்து விலகிக் கொண்டார்.

### Mr. Justice Abdur Rahim.

**மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்தர் ரஹீம்.**—பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் மெம்பராயிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்தர் ரஹீம் டை கமிஷன் வேலை முடிந்து போனதன்மேல் இங்க்லண்டிலிருந்து ஸமீபத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவந்து இந்த மாஸம் 27-ந்தேதியன்று சென்னை ஹைகோர்ட்டில் வேலையை ஒப்புக்கொண்டார். அவர் 1908-ம் வர்ஷம் முதல் 1912-ம் வர்ஷத்தில் மேற்படி கமிஷனில் நியமிக்கப்பட்ட வரையில் சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்தார்.

### An Indian Prince at the Front.

**போர்முனையில் ஒரு இந்திய சிற்றரசர்.**—பம்பாய் ராஜதானியிலுள்ள அகால்காட் ஸமஸ்தானத்து அரசராகிய லெப்டினண்ட் படீஸிங் ராஜீ பான்ஸ்லே ராஜா ஸாகிப் சென்ற ஆகஸ்ட்மாஸம் இங்க்லண்டிலிருந்து ப்ரான்ஸுக்குப் போயிருக்கிறார். அவர் ப்ரான்ஸில் உள்ள ஒரு குதிரைப்படை டிவிஷனுக்கு ஸேனாதிபதியாகிய ஜெனரல் ரெமிங்ட்னிடம் ஏ. டி. காங்கா யிருப்பார்.



# SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### Moral Deterioration of Germany.

**ஜெர்மெனியில் ஸன்மார்க்க சீர்கேடு.**—ஜெர்மனியிலுள்ள ஒரு யூனிவர்ஸிட்டியில் வெகுகாலம் இங்க்லீஷ் பாஷை போதகராகஇருந்த ஒரு இங்க்லீஷ்காரர் ஜெர்மனியில் எல்லாவகுப்பாருள்ளும் ஸன்மார்க்கம் குறைந்துவருவதாகச் சொல்லுகிறார். அவர் இது விஷயமாய்ச் சில கணக்குகள் கொடுத்திருக்கிறார். அவர் ஜெர்மனியில் 1897-ம் வர்ஷம் முதல் 1907-ம் வர்ஷம் வரையில் 10-வர்ஷங்களிலும், இங்க்லண்டில் 1900-முதல் 1910 வரையில் 10-வர்ஷங்களிலும் சில குறிப்பிட்ட குற்றங்களை எத்தனைபேர்கள் செய்திருக்கிறார்களென்பதைக் காட்டுகிறார்.

கொலை ஜெர்மனியில் 350, இங்க்லண்டில் 97; பலாத்காரமாகக் கற்பழித்தல் ஜெர்மனியில் 9,381, இங்க்லண்டில் 216; கெட்ட எண்ணெத்துடன் பிறருக்குக் காயமுண்டாக்கல் ஜெர்மனியில் 1,72,157, இங்க்லண்டில் 1,262; விபசாரத்தால் பிறந்த குழந்தைகள் ஜெர்மனியில் 17,8,115, இங்க்லண்டில் 37,041; ஸ்த்ரீ புருஷர்கள் ஒருவர் ஒருவரை தள்ளிவைக்கப்போட்ட மனுக்களின் ஸங்க்யை ஜெர்மனியில் 20,340, இங்க்லண்டில் 965; கெட்ட எண்ணத்துடன் ஸொத்துக்குக் கெடுதி செய்தல் ஜெர்மனியில் 25,759, இங்க்லண்டில் 358.

### Hindu and Muhammadan Festivals.

**ஹிந்துக்களுடைய உத்ஸவங்களும் மகம்மதியர்களுடைய உத்ஸவங்களும்.**—ஒரு பட்டணத்தில் ஒரே நாளில் ஹிந்துக்களுடைய உத்ஸவங்களும் மகம்மதியர்களுடைய உத்ஸவங்களும் நடைபெறுவதாயிருந்தால், இருவகுப்பாருக்குள்ளும் சில ஸமயங்களில் பெருங் கலகங்கள் நேரிடுவதுண்டு. பம்பாய் கவர்ன்மெண்டார் இத்தகைய கலகங்கள் நேரிடாமலிருக்க ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். எந்தப்பட்டணத்திலாவது ஒரே நாளில் இருவகுப்பார்க்கும் உத்ஸவங்கள் நேர்ந்தால், இருவகுப்பிலுமுள்ள தலைவர்கள் தங்களுடைய ஊர்வலம் இன்னின்ன தெருக்கள் அல்லது ரஸ்தாக்கள் வழியாகப் போகுமென்பதை ஜில்லா போலீஸ் ஸூப்ரிண்டெண்டண்டுக்குத் தெரியப்படுத்த வேண்டுமாம். இதனால் ஒன்றுக்கொன்று தடையேற்படாதபடி உத்ஸவங்களை நடத்த ஏற்பாடு செய்வது ஸுலபமாகும்.

### To Distinguish Castes in Bengal.

**வங்காளத்தில் ஜாதி பேதங்களையறிதல்.**—வங்காளத்தில் பானர்ஜீ, சாட்டர்ஜி, முக்கர்ஜி என்ற பட்டங்கள் வைத்திருப்போர் ப்ராம்மண வகுப்பைச் சேர்ந்தவர்கள். கோஸ், போஸ், மிட்டர், டட், ஸின்ஹா என்ற பட்டம் பெற்றவர்களெல்லாரும் காயஸ்தவகுப்பைச் சேர்ந்தவர்கள். குப்தா, ஸென், என்றபட்டம் வகித்திருப்போர் வைத்யர்களாவர். டாக்டர் ஸர் ராஷ் பேஹாரி கோஸ், ஸர் ரோமஷ் சந்த்ர மித்தர், மிஸ்டர் ரோமஷ் சந்தர டட் முதலியவர்களெல்லாரும் காயஸ்தா வகுப்பாரைச் சேர்ந்தவர்கள். மிஸ்டர் ஸுரேந்திரநாத் பானர்ஜி ப்ராம்மணவகுப்பாரைச் சேர்ந்தவர். மிஸ்டர் மோட்டிலால்கோஸ் ஒரு காயஸ்தர். 'இந்தியன் மிர்ரர்' என்ற பத்ரிகையின் பத்ராதிபராயிருந்த காலஞ்சென்ற மிஸ்டர் நரேந்திரநாத் ஸெனும், மிஸ்டர் கேசவ சந்திர ஸேனும் வைத்யர்கள்.

### A School for Married Hindu Women.

**கலியாணமான ஹிந்து ஸ்த்ரீகளின் பாடசாலை.**—பம்பாயிலே கல்யாணமான ஹிந்து ஸ்த்ரீகள் சேர்ந்து வாசிப்பதற்கென்று மிஸ்ஸஸ் நிகாம்பே என்ற ஸ்த்ரீ 1913-ம் வர்ஷத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார். அது இப்போது பலப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. அதில் இங்க்லீஷும், தையல் வேலையும், ஸங்கீதமும், தாதித்தொழிலும் சொல்லிவைக்கப்படுகின்றன. அதில் ஜாதிபேதமின்றியும் வயது வித்யாஸம் பாராட்டாமலும் ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள்.

### Pecuniary Help to Poor Pupils.

**ஏழை ஸ்கூல் பிள்ளைகளுக்கு பண உதவி.**—ஸமீபத்தில் பாலக்காட்டில் சில கனவான்கள் சேர்ந்து கூட்டங்கூடி, ஏழை ஸ்கூல் பிள்ளைகளுக்குப் பண உதவி செய்யும்பொருட்டு ஒரு நிதி ஸ்தாபிக்கவேண்டுமென்று நிச்சயித்தார்கள். இந்த நிதிக்கு பாலக்காடு மிஸ்டர் பரமேச்வரய்யர் வருஷம் 1000-ரூபாய் வீதம் கொடுப்பதாய்ச் சொன்னார். சில விசேஷ தினங்களில் ஸ்கூல் பிள்ளைகள் வீடு வீடாய்ச் சென்று பணவஸூல் செய்து இந்த நிதியில் சேர்ப்பார்கள். இந்த நிதியின் ஐவேஜியைக் கொண்டு பாலக்காட்டு வித்யா சாலைகளில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்குப் பண உதவி செய்வதோடுகூட, பணம் அதிகமாயிருந்தால் பிள்ளைகளுக்குப் போஜனமும், வஸ்த்ரமும் இருப்பிடமும் கொடுக்கப்படும்.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Care of Watches.

**கடியாரங்களை ஜாக்ரதையாக வைத்துக்கொள்ளுதல்.**—கடியாரங்களின் வேலைப்பாடு ரொம்ப ஸூக்ஷ்மமானதால், ஜாக்ரதையாக சாவி கொடுக்கத் தெரிந்துகொண்டாலொழிய கடியாரங்கள் சரியாகக் காலங்காட்டமாட்டா. கடியாரங்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தவருமல் சாவி கொடுக்க வேண்டும். குறித்த காலத்தில் சாவி கொடுக்காமலிருந்து, அது தானுக நின்றுபோகும்படி விட்டோ, அல்லது அது நின்றுபோகும் ஸமயத்திலேயோ இனிமேல் சாவியை திருப்ப முடியாதென்னும்படிக்கு அவ்வளவு அதிகமாக சாவிகொடுத்தால் கடியாரம் சரியாக ஓடாது. தானுக நின்றுபோவதற்கு முன்னுலேயே கொஞ்சம் குறைவாக சாவி கொடுத்தால்தான் கடியாரம் நன்ருய் காலங்காட்டும்.

அநேகர் தினம் ஒருதடவை கடியாரத்துக்கு சாவி கொடுக்கிருர்கள். அப்படிச் செய்யாமல் தினம் இரண்டுமுறை குறிப்பிட்ட காலத்தில் தவருமல் சாவி கொடுப்பது நல்லது. தினம் ஒருதடவை சாவி கொடுப்பதாயிருந்தால் எத்தனைதடவை சாவியைத் திருப்பவேண்டுமோ, அதற்குப் பாதியளவுக்கு இரண்டொரு சுற்று சற்றுக் குறைவாகவே சாவி கொடுத்தால், கடியாரம், தினம் ஒருமுறை சாவி கொடுக்கப்படும் கடியாரத்தை விட ஒழுங்காக ஓடும். அதிக காலம் கெடாமலிருக்கும். காலமும் சரியாகக் காட்டும்.

ரொம்ப குளிரும் ரொம்ப உஷ்ணமும் இல்லாமல் சீதோஷ்ணம் நடுத்தரமாயிருக்கும் காலத்தில் கடியாரத்துக்கு சாவி கொடுப்பதுதான் நல்லது. இதனுல் கடியார 'ஸ்ப்ரிங்' அதிக காலம் கெடாமலிருக்கும். இதற்கு காலை நேரமும் மாலை நேரமுமே ஏற்றது.

இடி இடித்து மின்னும்போதும், மின்ஸாரவண்டியிலேறிப் போகும்போதும் கடியாரத்துக்கு சாவி கொடுப்பது கெடுதலாகும்.

சில கடியாரங்களுக்கு 8 நாளுக்கு ஒருதடவை சாவி கொடுக்கவேண்டியிருக்கும்: அப்படிப்பட்ட கடியாரங்களுக்கு வாரத்துக்கு 2 தடவை முறை தப்பாமல் சாவி கொடுப்பதால் கடியாரம் சரியாய்க் காலங்காட்டும். இந்தக் கடியாரங்களுக்கு எத்தனை சுற்று சாவி கொடுக்க வேண்டுமென்பதை அனுபவ பூர்வமாய் அறிந்து, வாரத்தில் பாதிகாலத்துக் கொருதடவை அந்தச் சுற்றுக்களில் பாதியளவு சாவி கொடுக்கவேண்டும்.

இவ்விதம் கடியாரங்களுக்கு சாவி கொடுத்துவந்தால் அது வெகுகாலம் கெடாமலிருப்பதோடு, சரியாகவும் காலங்காட்டும்.

### To Separate Postage Stamps.

**போஸ்டேஜ் ஸ்டாம்புகளைப் பிரிக்க.**—போஸ்டேஜ் ஸ்டாம்புகள் ஒன்ருேடொன்று ஒட்டிக்கொண்டு விட்டால் அவைகளைப் பிரித்தெடுக்க ஜலத்தில் நனைக்க வேண்டியதில்லை. அவைகளின்மேல் மெல்லிய கடுதாசியைப் பரப்பிவைத்து, அந்தக் கடுதாசியின்மேல் ரொம்பசூடான இரும்பால் ஒருதடவை தேய்த்தால், ஸ்டாம்புகள் பிரிந்துபோய்விடும். அவைகளை ஸுலபமாகப்பிரித்து எடுத்துவிடலாம். ஸ்டாம்பிலும் பசை அப்படியேயிருக்கும். ஸ்டாம்புகளை ஜலத்தில் நனைத்தால், அவைகளிலுள்ள பசை வீணுய்ப்போய் மறுபடியும் பசை உபயோகிக்க வேண்டியிருக்கும்.

### Testing Milk.

**பாலைப்பரீக்ஷித்தல்:**—பாலில் ஜலம் கலந்திருக்கிறதா என்று பார்க்க பின் வரும் முறை ச்லாக்யமானதென்று சொல்லப்படுகிறது. ரொம்ப பளபளப்பான தையல் ஊசியை அதிகபால்உள்ள ஆழமான பாத்ரத்தில் அமிழ்த்தி, உடனே செங்குத்தாய் வெளியிலெடுக்க வேண்டும். பாலில் ஜலம் கலந்திராவிட்டால், பால் ஊசியில் ஒட்டிக்கொண்டிருக்கும். பாலில் ஸ்வல்ப ஜலம் கலந்திருந்தாலும் பால் ஊசியில் ஒட்டவே ஒட்டாது.

### Driving away Mosquitoes.

**கொசுக்களை ஓட்ட.**—கிணறுகளிலும் நீர்த்தொட்டிகளிலும் பெண் கொசுக்கள் முட்டையிடுவதுண்[illegible] நாப்தலீன் மருந்தை ஒரு பையில் போ[illegible] கிணறு அல்லது தொட்டியில் ஜலத்துக்குமேல் [illegible] விட்டால் பெண் கொசுக்கள் முட்டையிட வராவாம். அவைகளிலுள்ள ஜலம் நாற்றமெடுப்பதில்லையாம், ருசியும் கெடுவதில்லையாம்.



## AGRICULTURE.

## விவஸாயம்.

### Nitrate of Soda for Sugar Cane.

**கரும்புப் பயிருக்கு நைட்ரேட் அப் ஸோடா.**—கரும்புபயிருக்கு நைட்ரேட் அப் ஸோடா என்னும் வெடியுப்புக் கார எருவைப் போடுவதால் என்ன பயனுண்டாகிறதென்பதையறிய மத்ய மாகாணங்களில் உள்ள தார்ஸா விவஸாயப் பண்ணையில் சில பரீக்ஷைகள் செய்தார்கள். ஒரு ஏக்கருக்கு 20-மணங்கு பிண்ணாக்கும் $1\frac{1}{2}$-மணங்கு முதல் 3-மணங்கு வரையில் நைட்ரேட் அப்ஸோடா எருவும் கலந்து போட்டதில் பின்வருமாறு மாஸூல்கிடைத்தது.

| [illegible] | ஏக்கருக்கு எரு. மணங்குகள் | கரும்புகளின் எண்ணிக்கை | கரும்புகளின் எடை; ராத்தல் | சாற்றின் எடை; ராத்தல் | ஏக்கருக்கு செலவு நீக்கி லாபம் ரூ. அ. ப. |
|---|---|---|---|---|---|
| 1 | 20-பிண்ணாக்கு; $1\frac{1}{2}$- வெடியுப்பு கார எரு | 36550 | 33170 | 21837 | 61 0 9 |
| 2 | 20-பிண்ணாக்கு; 2- வெடியுப்பு கார எரு | 39602 | 36173 | 23918 | 85 4 3 |
| 3 | 20-பிண்ணாக்கு; $2\frac{1}{2}$- வெடியுப்பு கார எரு | 41882 | 52911 | 35181 | 186 12 9 |
| 4 | 20-பிண்ணாக்கு; 3- வெடியுப்பு கார எரு | 54804 | 63391 | 42216 | 230 4 0 |

கரும்புப்பயிர் செய்வதில் நமது ராஜதானியில் கிடைக்கும் லாபத்தைவிட இது குறைவென்று 'கிருஷிகன்' எழுதுகிறது. இருந்தாலும் இதில் முக்யமாய் நாம் கவனிக்கவேண்டிய அம்சம் என்னவென்றால் ஏக்கருக்கு 20-மணங்கு பிண்ணாக்குடன் $1\frac{1}{2}$-மணங்கு வெடியுப்பு கார எருவை உபயோகித்ததற்கும், அதே அளவுள்ள பிண்ணாக்குடன் 3-மணங்கு வெடியுப்பு கார எருவை உபயோகித்ததற்கும் உள்ள தாரதம்யந்தான். $1\frac{1}{2}$ - மணங்கு வெடியுப்பு கார எருவிற்குப் பதிலாக 3-மணங்கு வெடியுப்பு கார எருவை உபயோகித்ததில் அதிகமாய் உபயோகித்த $1\frac{1}{2}$-மணங்கு வெடியுப்பு கார எருவின் விலையைக் கழித்தபின்னும் ரூ. 169-3-3 அதிக லாபம் கிடைத்ததே முக்யமாய் கவனிக்கத்தக்கது.

### Castration.

**காயடித்தல்.**—காளை மாடுகளுக்கு இளவயதிலேயே காயடிப்பது ரொம்ப ஸௌகர்யமானதென்று பம்பாய் விவஸாய டிபார்ட்மென்டின் துண்டுப்பத்ரிகையொன்ருல் தெரியவருகிறது.

(1) நாள் கழித்து விதையடித்தாலும் அல்லது காளைகள் சிறியதாயிருக்கும்போது விதையடித்தாலும், அவைகளின் நிறையில் வித்யாஸ மேற்படுவதில்லை.

(2) இளவயதில் காளைகளுக்குக் காயடித்தால், அவைகளினுடைய தேகத்தில் பின்பாகங்கள் ரொம்ப வளர்ச்சி யடைகின்றன.

(3) இளவயதில் காயடிப்பதில் காளைகளுக்கு பலம் குறைவதில்லை

(4) அப்படிக்காயடித்த காளைகள் ரொம்ப ஸாதுவாக இருக்கின்றன.

(5) அவைகள், வயஸான பிறகு காயடித்த காளைகளை விட, அதிக சுறுசுறுப்பாயிருக்கின்றன.

(6) நாள் கழித்துக்காயடிக்கப்படும் காளைகள் சீக்ரம் காயடிக்கப்படும் காளைகளை விட அதிக தேக உறுதியுள்ளவை யென்று சொல்ல ஆதார மொன்றுமில்லை.

### Wood Ashes as Manure.

**மரச்சாம்பல் எருவாவது.**—மரச்சாம்பலும் மற்ற தாவரப் பொருள்களின் சாம்பலும் எருவாக உபயோகப்படுவதற்கு முக்யகாரணம் அவைகளில் பொடாஷ் என்னும் ஸத்து இருப்பதே. சாம்பலில் பாதிபாகம் கார்பனேட் அப் பொடாஷ் என்னும் ஸத்தாகும். அதோடு கூட மரச்சாம்பலில் ஸ்வல்ப அளவு பாஸ்பாரிக் ஆஸிடும், சுண்ணும்பும் இருக்கின்றன. கார்பனேட் அப் பொடாஷ் என்னும் ஸத்து ஜலத்தில் ஸுலபமாய்க் கரையக் கூடியது. இந்த ஸத்தும் பாஸ்பாரிக் ஆஸிடும் சுண்ணும்பும் சேர்ந்து நிலத்தின் புளிப்புத் தன்மையை மாற்றுகின்றன.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

### Madura Ramnad Co-operative Conference.

**மதுரை ராமநாதபுரம் கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.**—மூன்றாவது மதுரை ராமநாதபுரம் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் இந்த மாஸம் 20ந்தேதி யன்று மதுரையில் கூடிற்று. மிஸ்டர் ரங்கஸாமி அய்யர் உபசரிப்புக் கமிட்டியின் சேர்மனாக இருந்து ப்ரஸங்கம் செய்தபோது, கவர்ன்மெண்டார் ஸங்கங்களை தணிக்கை செய்து வருகிறார்களென்னும் விஷயம் கோவாபரேடிவ் முயற்சியைப் பரவச் செய்வதற்கு ஸாதகமாயிருப்பதால், இன்னும் அநேக வர்ஷங்கள் வரையில் கவர்ன்மெண்டாரே தணிக்கை விஷயங்களை பார்த்துவரவேண்டுமென்றும், ஆனால் கோபரேடிவ் ஏற்பாட்டை ஸர்க்கார் நடத்திவரும் ஒரு தொழிலாக ஆகும்படி செய்வது கூடாதென்றும், ஸெண்ட்ரல் பாங்கிகள் தாங்கள் பணம் கொடுத்து உதவும் ஸங்கங்களின் நிலைமையை நன்றாய் ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்றும், சரியான கார்யங்களுக்காக மெம்பர்களுக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றனவா வெனவும்; மெம்பர்கள் கடன்களை தவணைப்படி செலுத்துகிறார்களா வெனவும் பார்க்கவேண்டியது அவச்யமென்றும் சொன்னார்.

மதுரை கலெக்டராகிய மிஸ்டர் பாடிஸன் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தபோது, உத்யோகஸ்தர்கள் இன்றைக்கு ஓரிடம் நாளைக்கு இன்னொரு இடமாக இருந்து உத்யோகம் செய்து வருவதால், கோவாபரேஷன் ஸம்பந்தமாக தொடர்ச்சியாய் சலியாமல் ஒரு வேலையும் செய்ய அவர்களால் முடிவதில்லையென்றும், மேலும் அவர்களுக்கு வேலைத்தொந்தரவு அதிகமாயிருப்பதோடு, ஸாவகாசமும் குறைவாயிருப்பதால், அவர்கள் இவ்விஷயங்களில் ரொம்ப ஸாவகாசமெடுத்து வேலைசெய்ய முடிவதில்லையென்றும், ஆகையால் உத்யோகஸ்தர்களல்லாதவர்களே இது விஷயமாய் ரொம்பப் பாடுபடவேண்டுமென்றும், இந்த முயற்சி கடைத்தேறவேண்டுமென்றால், மெம்பர்கள் கடன்களைத் தவணை ப்ரகாரம் செலுத்தும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், பெரிய விபத்துகள் நேர்ந்தோ, எதிர் பாராத கஷ்டங்கள் நேர்ந்தோ, மெம்பர்கள் வருந்தினாலொழிய கடன் தொகையை கண்டிப்பாக வஸூல் செய்ய வேண்டுமென்றும், ஸங்கங்களை மேற்பார்வை செய்ய தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் சொன்னார். மதுரையிலுள்ள கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் என்னும் பண்டகசாலையார் மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள க்ராம ஸங்கங்களுக்கு விவஸாய ஸம்பந்தமான ஸாமான்களை ஸப்ளை செய்து, அந்த ஸங்கங்களிலிருந்து மதுரை வாஸிகளுக்குத் தேவையான ஸாமான்களைத் தருவிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஷை கான்பரென்ஸில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. மிஸ்டர் பாடிஸன் இது விஷயமாய் (தமது ப்ரஸங்கத்தில்) பேசினபோது, திடீரென்று பெரிய அளவில் இந்த வ்யாபாரத்தை நடத்தக்கூடாதென்றும், பரீக்ஷார்த்தமாக சில ஸங்கங்களோடு வ்யாபாரம் நடத்திப் பார்த்து, நன்றாய் நடந்து வந்தால் பிறகு வ்ருத்தி செய்யலாமென்றும் சொன்னார்.

### Borrowing.

**கடன்வாங்குதல்.**—கடன் வாங்குவதில் முக்யமாய் கவனிக்கவேண்டிய 5-விஷயங்களாவன.

1. கடன்வாங்கி உபயோகிக்கும் தொழில்களில் வரும் வரும்படியானது கடனும் அதன் வட்டியும் சேர்ந்த தொகையைவிட அதிகமாக இருக்குமா என்று பார்க்கவேண்டும். கடன் வாங்கிப்போட்டுத் தொழில் செய்ததில் திருப்பிக்கொடுக்க வேண்டிய தொகையை விடக் குறைவாக வரும்படி கிடைத்தால் கடன்வாங்குவதால் நஷ்டமேயொழிய ஸௌகர்யமில்லை.

(2) விவஸாயிகள் கடன் வாங்கும்போது, எந்த ஸமயத்தில் திருப்பிக்கொடுக்க அவர்களிடம் மாஸூல் முதலியவற்றின் விற்பனைப் பணம் கிடைக்குமோ, அந்த காலத்தில் கடனைத்திருப்பிக் கொடுப்பதாக ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும்.

(3) எவ்வளவுகாலம் கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கலாமென்பது, அந்தக் கடன் பணத்தால் எவ்வளவு காலம் வரும்படி கிடைத்து வருமென்பதை அனுஸரித்ததாயிருக்கவேண்டும்.

(4) அஸல் தொகையைக் கொஞ்சங்கொஞ்சமாய் திருப்பிச் செலுத்திவிட ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

(5) எவ்வளவு குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கலாமோ அவ்வளவு குறைந்த வட்டிக்குக் கடன் வாங்க வேண்டும்.



# COMMERCE.
## வ்யாபாரம்.

### Pencil Manufacture.

**பென்ஸில் செய்தல்.**—மைஸூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த ஷிமொகா டிவிஷன் காடுகளில் பென்ஸில்கள் செய்வதற்கேற்ற மரங்கள் கிடைக்குமோவென்று சோதித்துப் பார்த்துச்சொல்ல மைஸூர் கைத் தொழில் கமிட்டியார் போன வர்ஷம் மிஸ்டர் ஹூபர் என்ற பென்ஸில் நிபுணரை நியமிக்க, அவர் ஷிமொகா காடுகளிலுள்ள மரங்களைச் சோதித்துப் பார்த்து விட்டு பென்ஸில் செய்வதற்கேற்ற மரங்கள் ஏராளமாயிருக்கின்றனவென்று சொன்னாராம். அதன் மேல் அந்தக்கமிட்டியார் கணக்குகள் போட்டுப் பார்த்து பென்ஸில் தொழிற் சாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டால் லாபம் கிடைக்குமென்றும், கவர்ன்மெண்டாரே ஒரு தொழிற் சாலை ஸ்தாபிக்கலாமென்றும் சிபார்சு செய்தார்கள். இடையே ஐரோப்பிய யுத்தம் நேர்ந்துவிடவே மைஸூர் கவர்ன்மெண்டார் அவ்விஷயத்தைப்பற்றிக் கவனிக்க முடியவில்லை. இருந்தாலும் அவர்கள் இப்போது கைத்தொழில் கமிட்டியாரது சிப்பார்சின் மேல் செய்திருக்கும் உத்தரவில், ஸொந்த முதலாளிகள் அத்தொழிலைச்செய்ய முன்னுக்கு வராவிட்டால் கவர்ன்மெண்டாரே பென்ஸில் தொழிற்சாலை யொன்று ஸ்தாபித்து நடத்து வதைப்பற்றி யோசிப்பதாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். ஸாதாரணமாய் யந்த்ரம் முதலியவைகளின் உதவியும் நிபுணர்களின் உதவியும் வேண்டியிருக்கும் தொழில்களை செய்ய ஸொந்த முதலாளிகள், அவர்கள் எவ்வளவு செல்வ வான்களாயிருந்தாலும் படித்தவர்களாயிருந்தாலும், பயப்படுகிற படியால், அத்தொழில்களை கவர்ன்மெண்டாரே முதலில் செய்து காட்டி, பின்னால் அவைகளை ஸொந்த முதலாளிகளின் வசம் விட்டு விடுதல் நலமாகும் என்று 'சுதேசமித்திரன்' எழுதுகிறது.

### The Groundnut Trade.

**வேர்க்கடலை வ்யாபாரம்.**—யுத்தத்துக்கு முன்னால் வேர்க்கடலை ரொம்ப விலையேறி விற்றுவந்தது. ஒரு கண்டிக்கு ரூ 40-க்கு மேல் கிடைத்து வந்தது. யுத்தம் ஆரம்பித்தவுடன் ப்ரான்ஸில் உள்ள மார்ஸேல்ஸில் எண்ணெயாட்டுந் தொழில் நின்று போய் விட்டதால், வேர்க்கடலைக்கு விலை ரொம்ப குறைந்துபோய், கடைசியில் கண்டி 1-க்கு ரூபா 18-வரைக்கு வந்தது மார்ஸேல்ஸில் முதலில் எண்ணெயாட்டுந் தொழில் நின்று போனாலும், பிறகு வேலை ஆரம்பமாகிவிட்டது. ஆயினும் ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டார் பிண்ணாக்கை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுத்து விட்டதால், எண்ணெய் வ்யாபாரிகள் முன்போல அதிகமாக எண்ணெயாட்டவில்லை. அதற்குப்பிறகு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டாருக்கும் கடிதப் போக்கு வரத்துகள் நடந்ததின்பேரில் ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டார் இங்கிலண்டுக்கும், நடுநிலைமைத் தேசங்களுக்கும் பிண்ணாக்கை ஏற்றுமதி செய்யலாமென்று உத்தரவு செய்தார்கள். அதன் மேல் மார்ஸேல்ஸில் எண்ணெயாட்டுந் தொழில் வ்ருத்தியானதோடு, வேர்க்கடலையின் விலையும் அதிகரிக்கலாயிற்று. சென்ற ஜூன் மாஸக்கடைசியில் வேர்க்கடலையின் விலை இந்தியாவில் பாரம் 1-க்கு ரூ. 28-ஆக இருந்தது. மார்ஸேல்ஸிலோ யுத்தத்துக்கு முன்னிருந்த விலைக்கும் ஜூன்மாஸக் கடைசியிலிருந்த விலைக்கும் அதிக வித்யாஸமில்லை. இப்போது கொஞ்சந்தான் குறைவாக விற்கிறது. இந்தியாவின் விலைக்கும் மார்ஸேல்ஸின் விலைக்கும் இவ்வளவு வித்யாஸ மிருப்பானேனென்றால், கப்பல் சார்ஜ் முன்னிருந்ததற்கு மூன்று மடங்காக இருப்பதே. இக்கப்பல் சத்தம்தான் இந்த வித்யாஸத்துக்கு முக்ய காரணமாயிருக்கிறது. கைத்தொழில் டிரெக்டர் சென்ற ஜூன்மாஸத்தில் கவர்ன்மெண்டுக்கு அனுப்பின ஒரு ரிபோர்ட்டில், கப்பல் சத்தம் தற்போது குறையுமென்று எண்ணுவதற்கில்லை யென்றும், இப்போது வேர்க்கடலைக்கு நல்ல க்ராக்கியிருக்கிறதென்றும், கப்பல் சத்தத்தையும் கவனித்துப் பார்க்கும் போது வேர்க்கடலைக்குக் கிடைக்கும் விலை ரொம்ப அதிகந்தானென்றும், ஆகையால் விவஸாயிகள் தங்கள் மாஸூலை கூடியமட்டும் விற்க முயலுவது நல்லதென்றும் தெரிவித்திருக்கிறார்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஜூலை மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 7 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் | 1,50,000 |
| 1 | இன்ஷூரன்ஸ் கம்பெனி | 20,000 |
| 1 | கப்பல் கம்பெனி | 3,00,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | 25,00,000 |
| 2 | வ்யாபாரக்கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 15,00,000 |
| 7 | | 44,70,000 |

## ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

**Prickly Pear.**

**சப்பாத்திக்கள்ளி.**—சப்பாத்திக்கள்ளி உபயோகமற்ற செடியென்று பலர் எண்ணிவந்தாலும், அது சில ஸமயங்களில் ஜனங்களுக்கு உதவக்கூடுமென்று பலர்சொல்லிவருகிறார்கள். காலமழை தவறிப்போய்க் கால்நடைகளுக்குத் தீனி கிடைக்காதபோது, அதன் பசுமையான பாகங்களை மாடுகளுக்குத் தீனியாகப்போடலாமென்று அவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். சப்பாத்திக்கள்ளியில் பெரிய முட்களும் சுணையென்ற நுட்பமான முட்களும் இருப்பதுதான் அதை ஏராளமாய் உபயோகிப்பதற்கு ஒரு பெரிய தடையாயிருக்கிறது. கொஞ்சகாலத்துக்கு முன்னால் வடக்கிலுள்ள ஒரு வ்யவஸாய நிபுணர் அந்த முட்களை ஸுலபமாய் அதிகச் செலவில்லாமல் எரித்துவிட்டு சப்பாத்தியை மாத்ரம் மாடுகளுக்கு உபயோகிப்பதைப்பற்றி சில பரீக்ஷைகள் செய்தார். ஸ்டவ் என்று சொல்லப்படும் கிரஸின் எண்ணெய் அடுப்பைக் கொண்டு ஸுமார் 1450-முதல் 1500-ராத்தல் நிறையுள்ள இரண்டு காளைமாடுகளுக்குப் போதுமான 1-சப்பாத்திக்கள்ளியை $1\frac{1}{2}$ அணு எண்ணெய்ச்செலவில் முள்ளெடுக்கலாமென்றும், அப்படி முள்ளெடுத்த சப்பாத்திக்கள்ளியுடன் $3\frac{1}{4}$ அணு பருத்திக்கொட்டையையும் கலந்து மாடுகளுக்கு ஒருநாளைக்குத் தீனியாகப்போடலாமென்றும், அந்தப் பரீக்ஷையால் தெரியவந்தது. ஆகவே ஒரு ஜோடி காளைமாடுகளுக்கு தினம் $4\frac{3}{4}$-அணு போதுமானது. ஒரு ஸ்டவ் அடுப்பைக்கொண்டு பத்து ஜோடி மாடுகளுக்கு சப்பாத்திக்கள்ளி தயார்செய்யலாமாம். சப்பாத்திக்கள்ளியை அடுப்பின்மேல் வாட்டுவதால் அதிலுள்ள முட்கள் எரிந்துபோகின்றன. இதை மா ஜிரி யென்னுமிடத்தில் மாடுகளுக்கு ஆறுமாஸகாலம் உபயோகித்துப் பார்த்ததில் அவைகளுக்கு யாதொரு கெடுதலும் ஏற்படவில்லையாம். கால்நடைத் தீனி அகப்படாத காலங்களிலும் அது ரொம்ப விலையேறி விற்குங்காலங்களிலும் சப்பாத்திக்கள்ளியை கால்நடைத்தீனியாக உபயோகித்தால் கால்நடைகளைக் காப்பாற்றுவது ஸாத்யமாவதோடு தீனிச்செலவும் குறையுமென்று சொல்லப்படுகிறது.

பர்மாவில் முள்ளில்லாத சப்பாத்திக்கள்ளிஜாதியொன்றிருக்கிறதாம். அதில் சில செடிகளில் மாத்ரம் இரண்டொரு சிறிய சுணைகளிருக்கின்றனவாம். அது ரொம்ப ம்ருதுவாயிருப்பதால், கையால் தேய்த்து முள்ளை எடுத்துவிடலாமாம். அதைத்தக்கபடி பயிர் செய்தால் முள்ளில்லாத ஜாதியாக வளருமென்று சொல்லப்படுகிறது.

பர்மாவில் கால்நடைகளுக்குத் தீனிக்கஷ்டமில்லாததால், அதைப்பற்றி ஒருவரும் கவனிக்கவில்லையென்று சொல்லப்படுகிறது. இந்தியாவின் மற்ற பாகங்களிலுள்ள விவஸாய டிபார்ட்மெண்டுகள் அதைப்பற்றிப் பரிசீலனைசெய்ய எண்ணினால் அந்த சப்பாத்தி ஜாதியில் சில செடிகளை வெட்டியனுப்புவதாக அங்குள்ள ஒரு உத்யோகஸ்தர் எழுதியிருக்கிறார்.

சப்பாத்திக்கள்ளிச் செடியிலிருந்து கடுதாசிசெய்ய முயற்சிசெய்யலாமென்று ஒரு நிருபர் ஒரு பத்ரிகைக்கு எழுதுகிறார். அவர் தஞ்சாவூர் ஜில்லாவில் கடற்கரையோரமாக உள்ள ஒரு க்ராமத்தில் கடற்கரையோரமாகப் போய்க்கொண்டிருந்தபோது, சப்பாத்திக்கள்ளியின் வலைக்கூடு ஒன்றைக் கண்டாராம். அது வெகுகாலம் ஸமுத்ரஜலம் ஸம்பந்தப்பட்டிருந்ததால், அதன் மேல்தோலும் உள்ளேயுள்ள சதையான பாகமும் முட்களும் அழுகிப்போய் உள்ளேயுள்ள நார்ப்பாகம் மாத்ரம் தனியாக இருந்தது. நார் ரொம்ப நீளமாகவும் வளையக்கூடியதாகவும் இருந்ததால், அது கடுதாசிசெய்ய உபயோகப்படுமோவென்று அறியவிரும்பி, அதை எடுத்துக்கொண்டுபோய் அநேக மணிநேரம் அதை ஜலத்தில் வேகவிட்டுப் பிறகு உரலில் போட்டு இடித்து மறுபடியும் ஸோடாவைச் சேர்த்துக்காய்ச்சி, கிடைத்த குழம்பு போன்ற பொருளை ஒரு கடுதாசியின்மேல் பரப்பி நிழலில் காயவைத்ததில் நல்ல காய்ந்த மாக்கூழ் கிடைத்ததாம். அதை தக்கபடி வெளுத்தால் அதை கடுதாசி செய்ய உபயோகிக்கலாமென்று அவர் சொல்லுகிறார். ஆனால் தானாக சதைப்பொருளும், தோலும், முள்ளும்போன சப்பாத்தி நார் கிடைப்பது கஷ்டமாகையால், சப்பாத்தியிலிருந்து நார்ப்பொருளை ஸுலபமாய்ப் பிரித்தெடுக்க ஒருமுறை கண்டுபிடிக்க வேண்டுமென்று அவர்சொல்லுகிறார்.



## BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

**Ants bake Biscuits.**

**எறும்புகள் பிஸ்கோத்து சுடுகின்றனவாம்.**—எறும்புகள் விசித்ரமான ஜந்துக்கள். அவைகள் வெகு விசித்ரமான கார்யங்கள் செய்கின்றனவென்று அவைகளின் செய்கைகளைக் கவனித்து வரும் ப்ராணி சாஸ்த்ர வித்பன்னர்கள் சொல்லிவருகிறார்கள். ஒரு ஜாதி எறும்புகள் கோதுக்காய் விதைகளைக் கொண்டுவந்து தங்கள் வளைகளில் முளைக்கப் போடுகின்றனவாம். விதையுள் இருக்கும் முளை முளைத்து மேல் தோலி விரித்ததும், எறும்புகள் அவைகளை எடுத்துக்காயவைத்துப்பிறகு அவைகளை வாயில் போட்டு மென்று மாவாக்குகின்றனவாம். மாவை சிறுபிஸ்கோத்துகளாகச் செய்து வெயிலில் காயவைத்து எடுத்து பத்ரமாய் கூடுகளில் வைத்துக்கொண்டு வேண்டும்போது தின்கின்றனவாம்.

இன்னொரு ஜாதி எறும்பு, தனது குஞ்சுகள் புழுப்பருவமாயிருக்கும்போது, அந்தப்புழுக்கள் உண்டாக்கும் பட்டுப்போன்ற நூலைக்கொண்டு இலைகளைத் தைத்து இலைகளாலேயே கூடுகள் அமைக்கிறதாம். இலைகளின் ஓரங்களை ஒன்றோடொன்று சேர்ப்பதற்காக, சில ஸமயங்களில் இந்த எறும்புகளில் ஐந்தாறு சேர்ந்து ஒன்றையொன்று சங்கிலி போல் பிடித்துக்கொண்டு, சங்கிலியின் ஒரு ஓரத்திலுள்ளது இலையின் ஒரு ஓரத்தையும், இன்னொரு ஓரத்திலுள்ளது இலையின் இன்னொரு ஓரத்தையும் பிடித்துக்கொண்டு மெதுவாக இலையின் ஓரங்களை ஒன்றோடொன்று நெருக்குகின்றன. சில ஸமயங்களில் அநேக எறும்புக் கூட்டங்கள் ஒரு இலையைச் சேர்ப்பதற்காக சங்கிலி போல் சேர்ந்துகொண்டு அநேக மணி நேரம் முயற்சி செய்யுமாம்.

**Hooka.**

**ஹுக்கா.**—'கல்கத்தா ரெவ்யூ' என்னும் பத்ரிகையில் ஒரு நிருபர் புகையிலை ப்ரிட்டிஷ் ஜனங்களால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதென்று தெரிவிக்கிறார். ஜிஹாங்கிர் ராஜ்யபாரம் செய்த காலத்தில்தான் அது இந்தியாவுக்கு வந்ததாம். ஸர் தாமஸ் ரோ என்பவர் ஜிஹாங்கிர் சக்ரவர்த்தியைப் பார்க்கவந்தபோது அநேக வெகுமதிகள் கொண்டுவந்தார். அவைகளில் புகையிலை ஒன்று. சக்ரவர்த்தி அது இன்னதென்றும், அதன் உபயோகமின்னதென்றும் கேட்டுத் தெரிந்துகொண்டு பரீக்ஷித்துப் பார்க்கவிரும்பி, அதை உபயோகித்துப் புகைகுடித்தார். உடனே தலைமயக்கமுண்டாகி கஷ்டப்படவே, இனிமேல் அதை தமது அரண்மனையில் உபயோகிக்கவே கூடாதென்று கட்டளையிட்டார். ஆனால் கொஞ்சகாலத்துக்குப் பிறகு அதைப்பற்றி ஞாபகம் வரவே, தமது வைத்யர்களைக் கூப்பிட்டு, புகையிலையைப் பரீக்ஷை செய்து பார்த்து அபிப்ராயம் சொல்லச்சொன்னார். அவர்கள் அதைப் பரிசோதித்து அதன் குணங்களை யறிந்து, அதன் புகையைக் குடிக்க 'ஹுக்கா' வைத் தயார்செய்தார்கள். அதுமுதல்தான் ஹுக்கா குடிக்கும் வழக்கம் ப்ரபலமாயிற்று.

**Bad Habits.**

**கெட்ட பழக்கங்கள்.**—கெட்ட பழக்கங்கள் எத்தனையோ சுலுவாய் மனிதனுடைய உள்ளத்தில் நுழைந்து வேரூன்றின பிறகு அம்மனிதனுக்கு நல்லுணர்வு பிறந்து அவற்றை வேரோடு பிடுங்கி நல்லெண்ணங்களை நாட்ட அளவிறந்த அவாக்கொண்டவனாயிருப்பினும் ஸாதாரணமாய், அது கூடாத கார்யமாகவே போவது அனுபவ ஸித்தியால் யாவரும் அறிந்தவிஷயமே.

இவ்வண்ணமே அநேக துர்ப்பழக்கங்கள் சிறுவரிடத்தில் ஸுலபமாய் போய்ச்சேர்ந்து வேரூன்றி, பின்னர் அவர்களை வெகுவரய் பீடிக்கின்றன. பிறகு அவர்கள் இவற்றாலுண்டாகும் த்ரவிய நஷ்டத்தையோ, தேக அசௌக்யத்தையோ, மானக்குறைவையோ நன்குணர்ந்து, தங்களை யிறுக்கக் கட்டியிருக்கும் தளைகளாகிய துர்ப்பழக்கங்களை அறுத்தெறிய வெண்ணி, என்ன முயற்சி செய்தும் பலிக்காமல், தாங்கள் முதலில் விளையாட்டுப்போலிடங்கொடுத்த வினைகளுக்கு அடிமைகளாகி மடிகிறார்கள். இப்போது புகைச்சுருட்டு உபயோகிக்கும் பெரியவர்களில் எத்தனையோ பெயர்கள் சிறுவயதில் ஸ்நேகிதர்கள் இப்படி குடிக்கிறார்களே, நாமும் குடிப்பதால் மோசமென்ன வென்று தொடங்கிய பழக்கமதுவென்று ஒப்புக்கொள்வார்கள். இப்படியே கள் குடித்தல், சூதாடல், கொள்ளைவிரும்பல் ஆகிய வெவ்வேறு கெட்ட பழக்கங்கள் இளவயதிலே லகுவாய் வந்தடைந்து கஷ்டப்படுத்துவனவாகையால் துர்ச்செய்கையென்று கண்டவுடன் அவற்றை விட்டொழித்துவிட வேண்டும்—விவேகசிந்தாமணி.

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்.*

### Kakkai Kolli.

காக்கைக் கொல்லி —இது தாவிப்படரும் செட்டியான காம்புள்ள ஒரு பூண்டு ; சாம்பல் நிறமாகவும், உட்புறமாக வெடிப்புள்ளதாகவும் காணப்படும் ; இதன் இலைகள் குண்டாகவும் தடித்தும், கசக்கினால் நுரையுண்டாக்குவதாயுமிருக்கும்.

இதன் விதைகளுக்குப் பூச்சிகளைக் கொல்லும் குணம் உண்டு ; ஆகவே தலையிலுண்டாகும் ஈர்களையும் பேன்களையும் அழிப்பதற்கு இவ்விதைகளை உபயோகிக்கலாம் ; இதற்கு 80-நெல்லெடை வித்துக்களை களையெடுத்து, உடைத்துப் பருப்புகளை மாத்ரம் எடுத்துக்கொண்டு, அவற்றை ஒரு கல்வத்திலிட்டு நன்றாகக் களிமாதிரி அரைத்து, அப்பால் ஒன்றரை அல்லது இரண்டு பலம் மெழுக்கை அல்லது கொழுப்பைச் சேர்த்துக் கலந்து, நெய்யையும் சிறிதளவு சேர்த்துக் குழைத்து, சிரஸலில் தடவலாம். ஆனால் இதைத் தடவும்போது தலையில் சிரங்காவது, வேறுவிதவெடிப்பு முதலிய ரணமாவது இல்லையாவென்று கவனிக்க வேண்டும் ; இது ஒருவித விஷப்பொருளாகையால், ரணங்களில் ஸம்பந்தித்ததும் ரத்தத்தில் சேர்ந்து விஷத்தன்மையைக் காட்டும். பேன்களையும் ஈர்களையும் அழிக்க இது மிகச் சிறந்த சரக்கென்று அநுபவத்தில் அறியப்பட்டிருக்கிறது.—வைத்திய கலாநிதி.

### Women in the Army.

ராணுவத்தில் ஸ்த்ரீகள்.—சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் இங்க்லண்டில் ஸ்த்ரீகள் இன்னின்ன வேலைகளில் அமர்ந்திருக்கிறார்களென்பதைக் குறிப்பிட்டோம். இப்போது அவர்களை ராணுவத்தில் சாச்வதமாக இல்லாமல் தற்கால ஏற்பாடாகச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ராணுவத்தில் நான்-கமிஷண்ட் ஆபிஸர்கள் உத்யோகம் கொடுக்கப்படும். இப்போது ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்போகிற ஸ்த்ரீகள் பாடசாலைகளில் க்ருஹ பரிபாலனம் செய்யும் முறைகளைக் கற்பிக்க நியமிக்கப்பட்ட ஆசிரியர்களாக இருந்தார்களாம். அவர்கள் ராணுவச் சமையலறைகளில் வீண் சேதமேற்படாமலிருக்கும்படி சமையல்காரர்களுக்கு சமையல் முறைகளைக் கற்பிக்க முன்வந்திருக்கிறார்கள். சீக்ரம் அவர்களை அநேக ராணுவ காம்புகளுக்கு அனுப்புவார்களாம். அவர்கள் அந்தக் காம்புகளிலுள்ள சமையல்காரர்களுக்கும் ஆர்டர்லிகளுக்கும் செட்டாய் சமையல் செய்யும் முறைகளைக் கற்றுக் கொடுப்பார்களாம்.

### A Gift for Female Education.

பெண் கல்விக்கு ஒரு நன் கொடை.—ஹிந்து ஸ்த்ரீகளின் கல்வி அபிவ்ருத்தியை உத்தேசித்து பரோடா மஹாராணியார்ஹிந்து ஸ்த்ரீமாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்காக 1½-லக்ஷம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை ப்ரத்யேகமாய் எடுத்து வைத்திருக்கிறார். இந்த சொத்தை மேற்பார்வை பார்ப்பதற்காக சில கனவான்களை ட்ரஸ்டீக்களாக நியமித்திருக்கிறார். 29-ஸ்த்ரீ மாணவர்களுக்கு ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்கப்படும். அவர்களில் 16-பேர்களுக்கு 5-ரூபாய் வீதமும், 10-பேர்களுக்கு 8-ரூபாய் வீதமும் 4-பேர்களுக்கு 25-ரூபாய் வீதமும், ஒருவருக்கு 35 ரூபாய் வீதமும் உபகாரச் சம்பளங்கள் கொடுப்பார்கள்.

### Noting Things Needed.

வேண்டிய ஸாமான்களைக் குறித்துவைத்தல்.—ஸ்த்ரீகள் சமையலறையிலோ, வேறு ஸௌகர்யமான விடத்திலோ, ஒரு ஆணியில் ஒரு ஸ்லேட்பலகையாவது, சில காகிதத்துண்டுகளை நூலில்கோத்துக்கட்டி அவைகளையாவது தொங்கவிட்டு, வீட்டுக்கு வேண்டிய ஸாமான்களை தோன்றியபோது அதில் எழுதிவைத்தால், தங்கள் புருஷர்கள் கடைக்குப்போகும்போது என்ன ஸாமான் வேண்டுமென்று கேட்டவுடன், ஒரு ஸாமானையும் மறக்காமல் ஜாப்தாவைப் பார்த்துச் சொல்லிவிடலாம். குறித்துவைத்துக்கொள்ளாவிட்டால், மறதியினால் அஸௌகர்யங்கள் ஏற்படும்.

### Sauce Powder.

குழம்புப் பொடி. — உளுத்தம் பருப்பு 5-பலம், தேய்த்த எள் 5-பலம், வெந்தயம் 1-பலம், மிளகாய் 2-பலம், கொத்துமல்லி விதை 5-பலம், கடுகு ½-பலம், ஜீரகம் 1-பலம், எடுத்துக்கொண்டு மிளகாயை நல்லெண்ணெய் விட்டும், மற்றவற்றை வெவ்வேறாக எண்ணெயில்லாமலும் வறுத்து எல்லாவற்றையுமொன்றாகக் கலந்து நன்றாய் அரைத்து வாஸனைபோகாமல் மூடிவைத்துக் கொள்ளவேண்டும்.—விச்வகர்மன்.



## INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indians in Fiji.

பிஜித்தீவுகளில் இந்தியர்கள்.—பிஜி தீவுகள் பஸிபிக் மகா ஸமுத்ரத்திலிருக்கின்றன. அவைகளின் ஜனத்தொகை 1913-ம் வர்ஷத்தில் 15,3704. இவர்களில் ஐரோப்பியர்கள் 4244-பேர்கள். இந்தியர்கள் 52675-பேர்கள். மற்றவர்கள் அந்தத் தீவுகளைச் சேர்ந்த ஸ்வதேசிகளும் பக்கத்துத் தீவுகளிலிருந்து வந்தவர்களுமாகும். பிஜி தீவுகளின் முக்ய பட்டணம் ஸூவா என்பது. இது வரையில் ஸூவா முனிஸிபாலிட்டியிலும் மற்ற பட்டணங்களிலும் ஐரோப்பியர்களும், இந்தியர்களும், மற்றவர்களும் யாதொரு வித்யாஸமின்றி வோட்டுக்கொடுக்க பாத்யதை யடைந்திருந்தார்கள். இப்போது பிஜி கவர்ன்மெண்டார் இந்தியர்களுடைய வோட்டு பாத்யதையைக் குறைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்த ஏற்பாட்டின்படி இங்க்லீஷ் பாஷையை எழுதவும், படிக்கவும், பேசவும், தெரியாத இந்தியர்களுக்கு வோட்டுக்கொடுக்கும் பாத்யதை போய்விடும். அங்குள்ள இந்தியர்கள் இந்த ஏற்பாட்டை ஆக்ஷேபித்து பிஜித்தீவுகளின் கவர்னருக்கும், இந்தியா மந்திரிக்கும் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இந்தியர்களில் நூற்றுக்கு 94-பேர்களுக்குத்தான் எழுதப்படிக்கத் தெரியும். இந்தியர்கள் அதிகமாக வரி செலுத்தி வந்தாலும் அவர்களுக்குக் கல்வி விஷயத்தில் ஸௌகர்யங்கள் செய்யப்படவில்லை யென்று தெரிகிறது. இந்திய மாணவர்கள் ஸர்க்கார்ப் பள்ளிக்கூடங்களில் இதர வகுப்புப்பிள்ளைகளுடன் சேர்ந்து வாசிக்கக்கூடாதாம். அந்தப் பள்ளிக்கூடங்களில் இந்தியச் சிறுவர்களுக்கு இங்க்லீஷ் பாஷை கற்பிக்க கவர்ன்மெண்டார் யாதொரு ஏற்பாடும் செய்யவில்லையாம். பிஜித்தீவுகளில் இப்போதுள்ள வித்யா விஷயமான ஏற்பாட்டால் இந்தியர்களுக்கு கல்வி ஸம்பந்தமாய் யாதொரு ஸாதகமும் கிடைப்பதில்லை யென்று சொல்லப்படுகிறது. 1909-ம் வர்ஷத்தில் அங்கே கல்வியின் நிலைமை எப்படியிருக்கிறதென்பதைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய ஒரு கமிஷன் நியமித்தார்கள். அந்தக்கமிட்டியார் மற்ற வகுப்பாரைவிட இந்தியர்களுக்குக் கல்வி விஷயத்தில்ரொம்ப குறைகள் இருக்கின்றனவென்றும், அவர்களுக்கு கவர்ன்மெண்டார் பாடசாலைகள் ஸ்தாபித்து, உபாத்யாயர்களை நியமிக்க வேண்டுமென்றும், பொது ஜனங்கள் அவர்களுக்காக பாடசாலைகள் ஸ்தாபிக்க முன் வந்தால் அவர்களுக்கு க்ராண்டுகள் கொடுக்க வேண்டுமென்றும் சிபார்சுகள் செய்தார்கள். இந்த சிபார்சுகளுக்கு ப்ரிட்டிஷ் குடியேற்று நாட்டு மந்த்ரி இன்னும் அனுமதி கொடுக்க வில்லை.

பிஜி தீவுகளை ஆஸ்ட்ரேலியாவோடு சேர்த்து விடப்போகிறார்களென்று ஒரு வதந்தி ஸமீபத்தில் ஏற்பட்டது. அது உண்மை யெல்லவென்று இந்தியா மந்த்ரி தெரிவித்திருக்கிறார்.

### Indians in Natal.

நேட்டாலில் இந்தியர்கள்.—தென்னாப்ரிக்காவில் ஸுமார் 5000 சிறுவர்களும் சிறுமியர்களும் இருக்கிறார்கள். அங்குள்ள இந்தியர்கள் மெட்ரிகுலேஷன் பரிக்ஷை வரையிலும் தான் படிக்கலாமாம். அங்குள்ள யூனிவர்ஸிட்டியிலாகட்டும், டெக்னிகல் காலேஜிலாகட்டும் இந்தியர்களைச் சேர்த்துக்கொள்வதில்லையாம். இந்தியர்களுக்கு உயர்ந்த உத்யோகங்கள் கிடைப்பது அரிது. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த உத்யோகங்களெல்லாம் கோர்ட்டுகளில் த்வி பாஷிவேலை, ரெயில்வே ஆபீஸ்களில் குமஸ்தாவேலை, வக்கீல் உத்யோகம், உபாத்யாயர் வேலை ஆகிய இவைகளே. சில இந்தியர்கள் தான் பாரிஸ்டர்களாகவும், டாக்டர்களாகவும் இருக்கிறார்கள். டாக்டர்களாக இருக்க இஷ்டப்படுகிறவர்கள் இங்க்லண்டில் போய்ப் படித்துத் தேறிப் பட்டம் பெற்றவர்களாக இருக்க வேண்டுமாம். இந்தியாவில் வைத்யப் பரீக்ஷையில் தேறிப் பட்டம் பெற்றவர்களுக்கு வைத்யத் தொழில் நடத்த தென்னாப்ரிக்கா கவர்ன்மெண்டார் அனுமதி கொடுப்பதில்லையாம்.

### South African Indians and the War.

தென்னாப்ரிக்கா இந்தியர்களும் யுத்தமும்.—தென்னாப்ரிக்கா இந்தியர்களில் பலர் ஸமீபத்தில் போர்க்களத்திலிருந்து காயம்பட்டவர்களை ஹாஸ்பிடல்களுக்குக் கொண்டு போகும் ஆம்புலன்ஸ் ஸிப்பந்திகளாகப் போகத் தயாராயிருப்பதாக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்தார்களென்றும், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியர்களுடைய உதவியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களென்றும் தெரிகிறது.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Stories about the Emperor of Austria.

**ஆஸ்ட்ரியச் சக்ரவர்த்தியைப்பற்றிய கதைகள்.**—ஜெர்மனியிலுள்ள சில பத்ரிகைகள் ஆஸ்ட்ரியாதேசத்துச் சக்ரவர்த்தியாகிய ப்ரான்ஸிஸ் பர்டினண்டுக்கு சித்தம் ஸ்வாதீனத்திலில்லையென்றும், ஆஸ்ட்ரியாவின் ராஜாங்க வேலைகளையெல்லாம் கெய்ஸரே கவனித்து வருகிறாரென்றும், ஆகவே கெய்ஸர் ஆஸ்ட்ரியாவுக்கும் சக்ரவர்த்தியாவரென்றும் சொல்லிவருகின்றன. இதற்காக ஆஸ்ட்ரிய சக்ரவர்த்தியைப்பற்றி சிலகதைகளையும் வெளியிட்டு வருகின்றன. இக்கதைகள் மெய்யோ பொய்யோ நமக்குத்தெரியாது. சில ஆஸ்ட்ரிய உத்யோகஸ்தர்கள், போர்வீரர்களுக்கான ஆஸ்பத்ரிகளை சக்ரவர்த்தி போய்ப் பார்வையிடவேண்டியது அவச்யமென்று எண்ணி, அவ்விஷயத்தை சக்ரவர்த்திக்குத் தெரிவித்தார்கள். பார்வையிடுவதற்குத் தேதியும் குறிப்பிடப்பட்டது. சக்ரவர்த்தி ஆஸ்பத்ரிகளுக்குப் போய்க்கொண்டிருக்கும்போது அவருடன் கூடச் சென்ற ஒரு உத்யோகஸ்தர், சக்ரவர்த்தி ஸோல்ஜர்களைக் கண்டவுடன் அவர்கள் ராஜவிச்வாஸத்துடன் யுத்தம் செய்ததற்காக அவர்களுக்கு வந்தனம்சொல்லி, அவர்கள் சீக்ரம் ஸ்வஸ்தமடையும்படி அவர் கடவுளை வேண்டுவதாகச் சொல்லவேண்டுமென்று சொல்லிக்கொடுத்தாராம். சக்ரவர்த்தி தலையை அசைத்துக்கொண்டு "எனக்குத்தெரியும்; எனக்குத் தெரியு" மென்று சொன்னாராம். ஹாஸ்பிடலுக்குப் போனதும் நூற்றுக்கணக்கான ஸோல்ஜர்கள் இருந்த ஒரு ஹாலுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். அவர் உள்ளே நுழைந்ததும் சற்று நின்று, முன்பு பொருள்காட்சிசாலைகளை அடிக்கடி திறந்துவைத்திருந்தவராகையால், அந்த வழக்கம் ஞாபகமாக தமது வலதுகையைத்தூக்கி, "இந்தக் காட்சிசாலையைத் திறந்துவைக்கிறேன்" என்று சொன்னாராம்.

ப்ரிஸிமிஸல் பட்டணத்தை ரஷ்யர்கள் பிடித்துவிட்டார்களென்ற விஷயத்தை சக்ரவர்த்திக்குத் தெரிவிக்க வேண்டி ஒரு உத்யோகஸ்தர் அவரிடம் "ப்ரஸிமிஸல் விழுந்துவிட்டது: (டான்) என்று சொன்னார். விழுந்துவிட்டது என்னும் பொருள்கொண்ட ஆஸ்ட்ரிய பதத்துக்கு பிடிக்கப்பட்டது, போரில் இறந்துவிட்டான், என்று பலபொருள்கள் உண்டு. மேலும் படர்க்கை ஒருமைவினைமுற்று ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் ஒன்றன்பாலுக்கும் பொது. ஆகவே ப்ரஸிமிஸல் ரஷ்யர்களால் பிடிபட்டுப் போயிற்று என்று சொன்னதும், சக்ரவர்த்தி ப்ரஸிமிஸல் என்பது ஒரு க்யாதிபெற்ற போர்வீரனுடைய பெயரென்றெண்ணி, "பாவம், அவன் நல்ல ஸோல்ஜர்" என்று பதில் சொன்னாராம்.

### The Painter's Trick.

**சித்ர வேலைக்காரனுடைய தந்த்ரம்.**—ஓர் ஆடுமாடு வ்யாபாரி தனது உருவத்தை சித்ரமாக எழுதுவிக்கவேண்டி, ஒரு சித்ரக்காரனிடம் கேட்டான். சித்ரக்காரன் அதற்கு உடன்பட வ்யாபாரி: "சாயல் சற்றும் வித்யாஸமாகக்கூடாது" என்றான். அப்பொழுது படம் வரைவோன்: "நல்லது, கொஞ்சமேனும் பக்ஷபாதமில்லாத ந்யாயாதிபதியால் அதற்கு ந்யாயம் கொடுப்பேன். உமது நாயே எனது படத்தின் உண்மையைப்பற்றி ந்யாயம் தீர்க்கட்டும். நாம் படத்தை அதற்குக் காண்பிப்போம். அது படத்தைக்கண்டு உமது படம் என்று அறிந்தால் கூலிகொடும். இல்லாவிடில் வேண்டாமென்றான். அப்படியே படம்முடிந்தது. அதை வ்யாபாரி வீட்டிற் கொண்டுவந்து தரையிலே வைத்து நாயைக் கூப்பிட்டான். அது உடனே படத்தின் கிட்டவந்து வாலை ஆட்டி ஆட்டி ஸந்தோஷமாய்ப் படத்தை நக்கிற்று. வ்யாபாரி ஆனந்தமயனாகி சித்ரக்காரன் கேட்ட பணத்தை உடனே கொடுத்துவிட்டான். ஆனால் தனது படம் முழுவதிலும் சித்ரக்காரன் பன்றிமாம்ஸம் தடவியிருந்ததை அவன் அறியவில்லை.

### Grammar.

**இலக்கணம்.**—(இங்க்லீஷ் பள்ளிக்கூடத்தில் ஒரு) உபாத்யாயர்:—ராமா, முட்டை என்ன சொல்?

பையன்:—பெயர்ச்சொல்

உபாத்யாயர்:—என்ன பால்

பையன்:—குஞ்சு பொரித்தானபிறகுதான் சொல்லவேண்டும்.

(குறிப்பு. இங்க்லீஷ் பாஷையில் திணை கிடையாது. பால் என்பது, ஒரு சொல் ஆணா, பெண்ணா, ஆண் பெண் வித்யாஸமில்லாததா, அல்லது இரண்டிற்கும் பொதுவானதா என்பதைக்காட்டும். அஃறிணைச் சொற்களையும் ஆண் பெண் பிரித்துச் சொல்வதுண்டு. சாவலை ஆண்பாலாகவும், பெட்டையைப் பெண்பாலாகவும் கூறுவது வழக்கம்.)



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Fire 27-Years Old.

**வருஷம் 27-ஆகியும் அவியாதிருந்த நெருப்பு.**—ஒருநாள் ஸர் ஹெர்பர்ட் மாக்ஸ்வெல் என்பவர் தம்முடைய ஸ்நேகிதரான ஒருவரோடு காலப்போக்காக மீன் பிடிக்க இங்க்லண்டிலுள்ள சதுப்பு நிலமொன்றிலிருந்த ஓர் ஏரிக்குப்போனார். ஆனால் திடீரெனப் பெரிய மழை பெய்யத்துவக்கினவுடனே, இருவரும் பக்கத்திலிருந்த குடிசையிற் போய்த் தங்கினார்கள். சற்றுப்பொறுத்துக் கொஞ்சம் சாப்பிடுவதற்காக அக்குடிசையிலிருந்த பெண்பிள்ளையினிடத்தில் சில சிற்றுண்டிகள் செய்துகொடுக்கக் கேட்டுக்கொள்ளவே, அவள் அடுப்பண்டை போய் மண்டிபோட்டுக்கொண்டு அதில் குவியலாய்க் கிடந்த சாம்பலையெல்லாம் ஊதி ஊதி அப்புறப்படுத்தினாள். அடிச்சாம்பலோ செந்நிறமாய்த் தணலாயிருக்கக்கண்டு, அவர்களில் ஒருவர் அவளைப் பார்த்து, "நீ அடுப்புப் பற்றவைத்து எந்நேரமிருக்கும்?" என்று வினவ, அதற்கவள் "நான் அடுப்புப் பற்றவைத்து இப்போது 27-வருஷமாயிற்று. நானும் என் புருஷனும் இந்த வீட்டுக்குவந்த அந்தக் காலத்திலே மூட்டின அடுப்பு இன்னும் அணைந்துபோகவில்லை" யென்றாளாம்.

### Twin Girls.

**இரட்டைப் பெண்கள்.**—ஜோட்ப்பூர் ஸமஸ்தானத்திலுள்ள பாலோடி ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒரு ஊரில் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்த இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றன. அவைகள் பிறந்து ஸுமார் ஆறுமாஸமாகிறது. அவைகள் இரண்டும் தொப்புளுக்குப் பக்கத்திலும் அதற்குப் பக்கமாயுள்ள அடிவயிற்றிலும்ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கின்றன. அவைகளுடைய மற்ற அவயவங்கள் ஒன்றோடொன்று சேராமல் தனியாயிருக்கின்றன. அவைகளில் யாதொரு ஹீனமும் கிடையாதாம். அந்தப் பெண்களின் தாயார் ஒரு மகம்மதிய ஸ்த்ரீயாம். ப்ரஸவமானபோது தாய் ரொம்பவும் வேதனைப்பட்டாளாம். முதலில் ஒரு குழந்தையின் தலையும், பிறகு இன்னொரு குழந்தையின் தலையும், பிறகு குழந்தைகளின் மற்ற அங்கங்களும் வெளிவந்தனவாம். அவைகளின் பெற்றோர்கள் இந்த விநோதப் பிறவியை ஜனங்களுக்குக்காட்டிப் பணம் ஸம்பாதித்து வருகிறார்களாம்.

### Food of Insects.

**பூச்சிகளின் உணவு.**—உருளைக்கிழங்குப் பயிரைத் தாக்கும் வண்டுக்கு எவ்வளவு பசியுண்டோ அவ்வளவு பசி ஒரு கைக்குழந்தைக்கு இருக்குமானால், அது (குழந்தை) ஒரு நாளுக்கு 50 ராத்தல் முதல் 100 ராத்தல் வரையில் ஆகாரம் சாப்பிடும். ஒரு கம்பளிப் பூச்சிக்குள்ள பசி குதிரைக்கிருக்குமானால், குதிரை தினம் 1 டன் காய்ந்த புல் தின்னும். (ஒரு டன் என்பது 2240 ராத்தலாகும்.) ஒரு கம்பளிப்பூச்சி தினந்தோறும் தனது நிறைக்கு இரண்டு மடங்கு இலை தின்னுகிறது. ஒரு உருளைக்கிழங்கு வண்டு தினந்தோறும் தனது நிறைக்கு 5 மடங்கு நிறையுள்ள இலைகளைத் தின்னுகிறது. ஆனால் வெட்டுக்கிளியோ, நல்ல தேகஸ்திதியிருந்தால், தினந்தோறும் தனது நிறைக்கு 10 மடங்கு நிறையுள்ள இலைகளைத் தின்னுகிறது. இவ்வளவு பெருந்தீனியுடைய பூச்சிகள் பயிரில் தோன்றினால் பயிர் சீக்ரமழிந்து போகுமென்பதற்குக் கேட்பானேன்.

### Five Children in a Birth.

**ஒரு ப்ரஸவத்தில் 5 குழந்தைகள்**—பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு ஊரில் ஒரு மஹாராஷ்ட்ர ஸ்த்ரீக்கு ஸமீபத்தில் இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தனவென்றும், அக்குழந்தைகளின் அங்கங்களெல்லாம் நல்ல ஸ்திதியிலிருக்கின்றனவென்றும் 'பம்பாய் க்ரானிகிள்' பத்ரிகை கூறுகிறது. அதே ஸ்திரீக்கு சென்றவருஷம் ஒரே தடவையில் மூன்று குழந்தைகள் பிறந்தனவாம். அவைகள் ஜனித்த மூன்று மாஸங்களுக்குள் இறந்துவிட்டனவாம். தற்போது ஜனித்த குழந்தைகளெல்லாம் இன்னும் உயிரோடிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### A Centenarian.

**நூறு வயஸுக்கு மேற்பட்டவன்.**—மத்ய திருவாங்கூரில் நூரநாடு என்னும் ஊரில் ஒருவனுக்கு 110-வது வயஸு நடந்து கொண்டிருக்கிறதாம். அவன் தினம் நான்குமணிநேரம் நெசவு வேலை செய்வதோடு, மற்ற லாபகரமான வேலைகளையும் செய்து வருகிறானும்.

## MISCELLANEOUS EEWS.

## நாநா ஸங்கதி.

### Losses in the Armies of Belligerents.

**யுத்தத்தில் சேர்ந்துள்ள தேசச்சேனைகளின் சேதம்.**—யுத்தத்தில் ஸம்பந்தப்பட்டுள்ள தேசச் சேனைகளுக்குச் சென்ற வர்ஷத்தில் நேர்ந்த சேதம் பின்வருமாறுகுமென்று லண்டனில் ப்ரசுரமாகும் பத்ரிகையொன்று சொல்லுகிறது.

| | |
|---|---|
| **க்ரேட் பிரிட்டன்.** | |
| கொல்லப்பட்டவர்கள் | 69,000 |
| காயமடைந்தவர்கள் | 1,96,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 63,000 |
| ஆகமொத்தம் (3-லட்சத்து 28-ஆயிரம்) | 3,28,000 |
| **ப்ரான்ஸ்.** | |
| கொல்லப் பட்டவர்கள் | 410,000 |
| காயமடைந்தவர்கள் | 1,100,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள். | . 490,000 |
| ஆகமொத்தம் (20-லட்சம்) | 20,00,000 |
| **ரஷ்யா.** | |
| கொல்லப் பட்டவர்கள் | 805,000 |
| காயமடைந்தவர்கள் | 22,00,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 930,000 |
| ஆகமொத்தம் (39-லட்சத்து 35-ஆயிரம்) | 39,35000 |
| **ஜெர்மனி.** | |
| கொல்லப்பட்டவர்கள் | 9,70,000 |
| காயமடைந்தவர்கள் | 18,00,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 3,60,000 |
| ஆகமொத்தம் (31-லட்சத்து 30-ஆயிரம்) | 31,30,000 |
| **ஆஸ்ட்ரியா.** | |
| கொல்லப்பட்டவர்கள் | 11,00,000 |
| காயமடைந்தவர்கள் | 19,00,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள். | 609,000 |
| ஆகமொத்தம் (36-லட்சத்து 9 ஆயிரம்) | 36,09,000 |
| **ஸெர்வியா.** | |
| கொல்லப்பட்டவர்கள் | 80,000 |
| காயமடைந்தவர்கள் | 210,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள். | 130,000 |
| ஆகமொத்தம் (4 லக்ஷத்து 20 ஆயிரம்) | 420,000 |
| **பெல்ஜியம்.** | |
| கொல்லப்பட்டவர்கள் | 38,000 |
| காயமடைந்தவர்கள் | 1,20,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 37,000 |
| ஆகமொத்தம் (1 லக்ஷத்து 95 ஆயிரம்) | 1,95,000 |
| **துருக்கி.** | |
| கொல்லப்பட்டவர்கள் | 20,000 |
| காயமடைந்தவர்கள் | 60,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 10,000 |
| (ஆக மொத்தம் 90 ஆயிரம்) | 90,000 |

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் மட்டுந்தான் தங்கள் சேனையில் ஏற்பட்ட சேதத்தை இத்தனை யென்று உத்யோக முறையில் அறிவித்திருக்கிறார்கள். மற்ற கவர்ன்மெண்டார்கள் அவ்வாறு அறிவிக்கவில்லை. ஆயினும், மேலே கண்ட விவரங்கள் தகுந்த ஆதாரங்களிலிருந்து கணக்கெடுக்கப்பட் டிருக்கிறபடியால், அவ்விவரங்கள் அநேகமாய் சரியாயிருக்கும்.

**மொத்தச் சேதம்**

ஆகவே மேலே கண்டபடி 8 தேசங்களுக்குமாக நேர்ந்திருக்கும் மொத்தச் சேதம் பின் வருமாறு:—

கொல்லப்பட்டுப் போனவர்கள்.—34 லக்ஷத்து 92 ஆயிரம்.

காயமடைந்தவர்கள்.—75 லக்ஷத்து 86 ஆயிரம்.

காணுமலோ கைதியாகவோ போனவர்கள்.—26 லக்ஷத்து 29 ஆயிரம்.

மொத்தமாக நேர்ந்த சேதம் ஒரு கோடியே 37 லக்ஷத்து 7 ஆயிரம்.—சுதேசமித்திரன்.

### Anonymous Letters.

மொட்டைக் கடிதங்கள்.—சில நாள்களுக்கு முன் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த அம்பாலா என்னுமிடத்தில் அட்டர் பஜாரிலுள்ள ஒரு கம்பெனியின் அதிபரான ஷப்புமால் நிஹால் சந்த் என்பவருக்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்தது. அக்கடிதத்தில் அவரை, ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட தேதியில் ரூ. 5000 டிபாஸிட் செய்து வைக்கும் படிக்கும், அவ்வாறு செய்யத்தவறினால் அவர் கொலைசெய்யப் படுவதன்றி அவரது ஸொத்துக்களும் நீக்கிரையாக்கப்பட்டு பூமி மட்டத்திற்கு கொண்டுவந்து வைக்கப்படுமென பயமுறுத்தி எழுதியிருந்தது.

இதற்கு முன்னால் டில்லியில் ஒரு மோட்டார் கம்பெனி வர்த்தகரைப் பயமுறுத்தி ஒரு மொட்டைக் கடிதம் வந்ததாம். அவர் அக்கடிதத்தை அசட்டை செய்து, அதன் ப்ரகாரம் ஒரு குறிப்பிடப்பட்ட தொகையை கள்வர்களுக்கு போய் சேருவதற்கான மார்க்கத்தைச் செய்யாததினால், அவரது வீட்டில் மறுநாள் பெருத்த தீ விபத்து நேர்ந்ததாம்.

அம்பல்லாவில் கிடைத்த ஷை கடிதத்திற்கும் டில்லிவாஸிக்கு கிடைத்த கடிதத்திற்குமுள்ள வித்யாஸங்களைப் போலீஸார் ஆராய்ந்து வருகிறார்களாம்,



## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

#### ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்.

ஸெப்டம்பர்மீ 2-தேதி.

மேற்கு யுத்த களத்தில் ஜெர்மானியர்கள் ப்ரெஞ்ச் துருப்புகளை வாஸ்ஜஸ் ப்ரதேசத்தில் பலமாகத் தாக்கியும் அவர்களைத் துரத்த முடியவில்லை. ப்ரெஞ்ச் ஆகாய கமனிகள் மிடில்கெர்க் என்னும் ஊரிலிலுள்ள ராணுவச் சாலைகளையும் தோரௌட் என்னுமிடத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷனையும் தாக்கினார்கள். விரோதி ஆகாயக்கப்பல்கள் லூனிவில்லி என்னுமிடத்தைத் தாக்கின.

7-தேதி.

மேற்குப் போர்முகத்தில் எல்லாவிடங்களிலும் பீரங்கி யுத்தம் நடக்கிறது.

8-தேதி.

ப்ரெஞ்ச் பீரங்கிப் படையும் ப்ரிட்டிஷ் கப்பல் படையும் பெல்ஜியன் கடல் கரையிலுள்ள ஜெர்மன் பீரங்கிப்படைகளைத் தாக்கின.

9-தேதி.

ஜெர்மானியர்கள் மேற்கு ஆர்கோன் ப்ரதேசத்தில் ப்ரெஞ்சுத் துருப்புகளை பலமாகத் தாக்கி சில விடங்களில் ப்ரெஞ்ச் கிடங்குகளைப் பிடித்திருக்கிறார்கள். ப்ரெஞ்ச் ஆகாயக் கப்பல்களும், ப்ரிட்டிஷ் ஆகாயக்கப்பல்களும் ஆஸ்டெண்டிலுள்ள ஆகாயக் கப்பல் கொட்டகைகளைத் தாக்கின.

11-தேதி.

ஆர்கோன் ப்ரதேசத்திலும் வாஸ்ஜஸிலும் பலமான யுத்தம் நடைபெற்றது. ஜெர்மானியர்கள் முதலில் ஜயமடைந்தாலும் பிற்பாடு தோற்றுப்போனார்கள்.

14-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஜெர்மானியர்கள் தங்கியிருக்குமிடங்களை பீரங்கிகளால் தாக்குகிறார்கள். 19-ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் ட்ரீவ்ஸ் என்னுமிடத்துக்குப் பறந்துபோய் 100 வெடி குண்டுகள் போட்டன.

15-தேதி.

ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் மெட்ஸுக்குத் தென்மேற்கில் உள்ள ஒரு ரெயில்வே ஜங்க்ஷனைத் தாக்கின.

18-தேதி.

மேற்கு யுத்த களத்தில் பீரங்கி யுத்தம் இடைவிடாது நடந்து கொண்டிருக்கிறது.

20-தேதி.

ப்ரிட்டிஷ் கப்பல் படை, ப்ரெஞ்ச் பீரங்கிப்படையுடன் சேர்ந்துகொண்டு, பெல்ஜியன் கடல்கரையிலுள்ள ஜெர்மன் பாதுகாப்பு வேலைகளைத் தாக்கிற்று. ப்ரெஞ்ச் போர்முகம் முழுவதிலும் பீரங்கி யுத்தம் பலமாய் நடந்தது.

23-தேதி.

சில ப்ரெஞ்ச் ஏரோப்ளேன்கள் ஸ்டட்கார்ட்டுக்குப் போய் வுர்டம்பர்க் அரசரின் அரண்மனையில் அநேக வெடிகுண்டுகள் போட்டன. வெர்டுனுக்கும் மெட்ஸுக்கும் மத்தியில் பீரங்கி யுத்தம் நடை பெற்றது.

25-தேதி.

போர் முகம் முழுவதிலும் பலமான பீரங்கி யுத்தம் நடக்கிறது.

27-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் 15-மைல் நீளமுள்ள போர்முகத்தில் ஜெர்மானியர்களைத் தாக்கி ½-மைல் முதல் 2½-மைல் வரையில் முன் சென்று 12,000 ஜெர்மானியர்களைக் கைதிசெய்திருக்கின்றன.

ப்ரிட்டிஷ் துருப்புகள் 5-மைல் நீளமுள்ள போர்முகத்தில் 4000-கஜம் முன் சென்றிருக்கின்றன. அவைகள் 2600-ஜெர்மானியர்களைக் கைதுசெய்திருக்கின்றன.

ப்ரிட்டிஷ் துருப்புகள் லாபாஸ்ஸி கால்வாயின் தெற்கிலும், க்ரினே, வெர்மிலிஸ் என்னு மிடங்களுக்குக் கிழக்கிலுமுள்ள ஜெர்மானியர்களைத் தாக்கி, ஹலச் என்னு மிடத்தின் வெளிப்பாகங்களையும், லூஸ் என்னும் ஊரையும், 70-ம் நம்பர் குன்றையும் பிடித்தன. ப்ரெஞ்ச் துருப்புகள் ஸௌசஸ் என்னும் ஊரைப் பிடித்திருக்கின்றன.

28-தேதி.

சாம்பேன் ப்ரதேசத்தில் யுத்தம் பலமாக நடக்கிறது.

29-தேதி.

லூஸைச் சுற்றிலும் அதற்கு வடக்கிலும் யுத்தம் பலமாயிருக்கிறது. ஜெர்மன் துருப்புகள் 70-ம் குன்றை மறுபடியும் பிடித்திருக்கிறார்கள்.

30-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸௌசஸுக்குக் கிழக்கில் முன் சென்றுகொண்டிருக்கின்றன. சாம்பேன் ப்ரதேசத்தில் யுத்தம் பலமாக நடக்கிறது. மேற்கு யுத்தகளத்தில் சென்ற சிலநாள்களாக நடந்த யுத்தத்தில் ஜெர்மானியர்களுக்கு 1-ஆர்மி கோர் நஷ்டமாம். அதில் 23,000 பேர்கள் ப்ரெஞ்ச் துருப்புகளால் கைதி செய்யப்பட்டிருக்கிறார்கள்.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா ஜெர்மனிக்கும் யுத்தம்.

ஸெப்டம்பர்மீ 1-தேதி.

ஜெர்மனியர்கள் சற்று முன் சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் ரஷ்யர்கள் அவர்களை கூடியமட்டும் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ப்ரிட்ரிக்ஸ்டாட் என்னுமிடத்தில் ட்விநாநதியை ஜெர்மானியர்கள் கடக்க முயன்றதை ரஷ்யர்கள் தடுத்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் நாரு நதியின் வடபாகத்தைக் கடந்து ப்ருஷானி என்னும் இடத்தை நோக்கி முன்சென்றுகொண்டிருக்கிறார்களாம்.

2-தேதி.

வில்னாவுக்கு மேற்கில் விலியா நதியின் வலதுகரையில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தாக்கி முன் சென்று கொண்டிருக்கிறார்கள். வில்னாவுக்கும் க்ராட்னோவுக்கும் மத்தியிலுள்ள ஓராஸ் என்னும் இடத்தை ஜெர்மானியர்கள் வசப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் லஸ்க் என்னும் கோட்டையைப் பிடித்திருக்கிறார்களாம்.

3-தேதி.

ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை அநேக இடங்களில் பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். க்ராட்னோவுக்குத் தென்பாகத்தில் ரஷ்யர்கள் பின்வாங்கியிருக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்கள் ப்ராடி என்னுமிடத்தைப் பிடித்து இன்னும் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

4-தேதி.

ரஷ்யர்கள் இன்னும் பின்வாங்கிப்போய்க்கொண்டிருக்கிறார்கள். ரிகாட்-வின்ஸ்க் போர்முகத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை ரொம்ப பலமாகத்தாக்கித் தடுத்துக்கொண்டிருந்து பிறகு, ட்வின்ஸ்க் நதியின் வலதுகரைக்குப்பின் வாங்கினார்கள். ஸ்வெண்டா நதிக்கும் விலியா நதிக்கும் மத்தியில் ரஷ்யர்கள் சற்று முன்னுக்குப் போயிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் க்ராட்னோவைப் பிடித்திருக்கிறார்களாம்.

6-தேதி.

ரஷ்யர்கள் இன்னும் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ட்விநா நதியின் வலது கரைக்குப் பின் வாங்கியிருப்பதோடு, ப்ரிட்ரிக்ஸ்டாட் என்னுமிடத்தை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். 2-ந் தேதியிலும் 3-ந்தேதியிலும் டொராஜ்னோவுக்கும் நீஸ்டருக்கும் மத்தியில் நடந்த யுத்தத்தில் ரஷ்யர்கள் 3500-ஜெர்மானியர்களைக் கைதி செய்தார்கள்.

7-தேதி.

கிழக்குப் போர்முகத்தின் வடபாகத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை முன் செல்லாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்ய பாகத்தில் ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் முன்சென்று கொண்டிருக்கின்றன.

ரஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய ஸார் நிக்கலாஸ், இதுவரையில் ரஷ்யஸைன்யங்களுக்கு ஸேனாதிபதியாக இருந்த க்ராண்ட் ட்யூக் நிக்கலாஸை காகஸஸ் ப்ரதேசத்துக்கு வைஸ்ராயாகவும், ஸேனாதி[illegible]வும் நியமித்துவிட்டு, தாமே தரைப்படைக்கும் கப்பல்படைக்கும் தலைமை ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார். இப்படிச் செய்ததற்குக் காரணம் விரோதிகள் ரஷ்யாவின் உள்பாகத்துக்கு வந்துவிட்டதேயென்று ஸார் தெரிவித்திருக்கிறார்.

8-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் மத்யபாகத்திலும் தெற்கிலும் சற்று முன்சென்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களை ரஷ்யர்கள் பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். வால்காவிக் ஜில்லாவிலும், அதற்குத் தெற்கில் ருஷானி - ஸ்லோனின் ரோட் வரையிலும் யுத்தம் கடுமையாயிருக்கிறது. கோப்ரினுக்கு 25-மைல் கிழக்கே ரஷ்யர்கள் எதிரிகளைத் தடைசெய்து கொண்டிருக்கிறார்கள். ஸ்டிர் நதியின் மேல்பாகத்தில் பலமான யுத்தம் நடந்தது. அவ்விடத்திலிருந்து ரஷ்யர்கள் ரோவ்னோவுக்குப் பின்வாங்கியிருக்கிறார்கள்.

9-தேதி.

லாட்வி நதியின் வலதுகரையிலிருந்து ரஷ்யர்கள் சற்றுப் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் தாங்கள் வால்காவிக் என்னும் பட்டணத்தைப் பிடித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். கலீஷ்யாவில் ரஷ்யர்கள் டார்னோபோலுக்கு ஸமீபத்தில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்துத் துரத்தி 8000-த்துக்குமேல் ஜெர்மானியர்களைக் கைதுசெய்திருக்கிறார்கள்.



10-தேதி

ஸ்னுட்வி நதிக்கும் ஜகாப்ஸ்டாட்டுக்கும் மத்தியில் பலமான யுத்தம் நடக்கிறது. நீமன் நதிக்கும் ப்ரிபெட் நதிக்கும் மத்தியில் ரஷ்யர்கள் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ரோவ்னாவை நோக்கி முன் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

11-தேதி.

வடக்கிலும் தெற்கிலும் ரஷ்யர்கள் எதிரிகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ட்விநா நதிக்குக் கிழக்கிலுள்ள ப்ரதேசத்தில் ரிகாவுக்கும் ப்ரிடரிக்ஸ்டாட்டுக்கும் மத்தியில் ரஷ்யர்கள் முன் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஜேகப்ஸ்டாட்டுக்கு மேற்கில் யுத்தம் பலமாக நடக்கிறது. ட்வின்ஸ்குக்கும் கோவ்னாவுக்கும் மத்தியிலும் வில்னாவுக்கு 25-மைல் வடமேற்கிலுள்ள ப்ரதேசத்திலும் ஜெர்மானியர்கள் பலமாகத் தாக்கி வருகிறார்கள்.

கிழக்கு கலீஷ்யாவில் ரஷ்யர்கள் ட்ரெம்ஸ்லாவுக்கு வடக்கிலும், சார்ட்காப் ஜில்லாவிலும் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்து 5000-வீரர்களைக் கைது செய்தார்கள்.

13-தேதி.

ரஷ்யர்கள் வடக்கிலும் தெற்கிலும் எதிரிகளைத் தாக்கி அவர்களை முன் செல்லாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வில்கோமிருக்கும் உஷியானிக்கும் மத்தியிலுள்ள ரோட்டில் ஜெர்மானியர்கள் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். டார்னோபோல் ஜில்லாவில் ரஷ்யர்கள் 4200-எதிரி ஸோல்ஜர்களைக் கைது செய்தார்கள்.

14-தேதி.

கிழக்குப் போர்க்களத்தின் தென்பாகமாகிய காலீஷ்யாவில் ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகளை பின்னுக்குத் துரத்தியிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் மத்தியிலும் வடக்கிலும் சற்று முன் சென்றிருக்கிறார்கள். ஜாகோப்ஸ்டாட்டுக்கு மேற்கிலும் தென்மேற்கிலும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. ட்வின்ஸ்குக்கு மேற்கிலும் தென்மேற்கிலும் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாகத் தாக்குகிறார்கள்.

ரஷ்யர்கள் வில்னாவுக்கு 28-மைல் வடகிழக்கிலுள்ள [illegible]ப்ரோஸ் என்னும் இடத்தின் ஸமீபத்துக்குப்பின் வாங்கியிருக்கிறார்கள். ஸ்கிடலுக்குக் கிழக்கில் ஜெர்மானியர்கள் புது ஸைன்யங்களுடன் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

காலீஷ்யாவில் டார்னோபோல் ஜில்லாவில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைப் பின்னுக்குத் துரத்தியிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் வடதிசையை நோக்கிப்பின் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

15-தேதி.

ரஷ்யர்கள் மத்ய பாகத்தில் பின்வாங்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மானியர்கள் ஓரானி ஜில்லாவிலிருந்து முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகளை பின்னுக்குத் துரத்திக்கொண்டு போய் கோரின் நதியைக் கடந்துவிட்டார்கள்.

16-தேதி.

ரஷ்யர்கள் தென்பாகத்தில் எதிரிகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிழக்கு காலீஷ்யாவில் ஆஸ்ட்ரியர்களை ஸ்ட்ரிபா நதிக்கு அப்பால் துரத்தி அநேக கிடங்குகளைப் பிடித்திருக்கிறார்கள்.

17-தேதி.

ஜெர்மானியர்கள் மத்யபாகத்தில் முன் சென்றுகொண்டிருக்கிறார்கள். வில்னாவின் வடகிழக்கில் அவர்கள் வில்னா நதியைக் கடந்துபோய் வில்னா பட்டணத்துக்கு 12 மைலுக்குப் பக்கத்தில் வந்துவிட்டார்கள்.

டார்னோபோலுக்கு மேற்கில் ரஷ்யர்கள் எதிரிகளை பின்னுக்குத் துரத்தியிருக்கிறார்கள்.

18-தேதி.

ஜெர்மானியர்கள் ட்வின்ஸ்குக்கு 31 மைல் தெற்கிலுள்ள விட்ஸி என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்களாம். அவர்கள் வில்னா-ட்வின்ஸ்க் ரெயில்வேக்கு 16 மைல் முதல் 25 மைல் வரையில் கிழக்கில் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஸெவன்டியானி யென்னுமிடத்துக்கு வடக்கில் ஒரு ஊரைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் விலீஸா என்னுமிடத்துக்குப் பக்கத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஷாரா பட்டணத்துக்குப் பக்கத்தில் ஷாரா நதியைக் கடந்திருக்கிறார்கள். பின்ஸ்க் என்னுமிடத்துக்கு 7 மைல் மேற்கிலுள்ள ரெயில்வே ஸ்டேஷனில் யுத்தம் நடக்கிறது.

20-தேதி.

ஜெர்மானியர்கள் வில்னா பட்டணத்தைப் பிடி[illegible]விட்டார்கள். ட்வின்ஸ்க்கு மேற்கிலுள்ள [illegible]

தில் பலமான யுத்தம் நடக்கிறது. ரஷ்யர்கள் ராவ்ஷேவுக்கு 40 மைல் வடமேற்கில் உள்ள கோல்கி யென்னுமிடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

**21-தேதி.**

ரீகா ப்ரதேசத்தில் இக்கா நதியோரமாக பலமான பீரங்கி யுத்தம் நடை பெற்றது. ரஷ்யர்கள் விட்ஸி யென்னு மிடத்திலிருந்து ஜெர்மானியர்களைத் துரத்தி விட்டார்கள்.

**22-தேதி.**

ரஷ்யர்கள் வில்னா ப்ரதேசத்திலிருந்தும் மத்யப் போர் முகத்திலிருந்தும் பின் வாங்கிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். ட்வின்ஸ்குக்கு 15-மைல் தென் மேற்கிலும் வில்னா ட்வின்ஸ்க் ரெயில்வேயின் பக்கத்திலும் யுத்தம் நடக்கிறது. ஸ்லோனிம் என்னு மிடத்துக்கு 25-மைல் கிழக்கே ஸ்லோனிம், நவோக்ராடக் என்னு மிடங்களுக்கு மத்தியிலுள்ள இடங்களுக்கு ஜெர்மானியர்கள் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். கிழக்கு கலீஷ்யாவில் ஸார்ட்காப் என்னுமிடத்துக்குக் கிழக்கில் ரஷ்யர்கள் எதிரிகளை ட்ஜாரின் நதிக்குப் பின்னால் துரத்தியிருக்கிறார்கள்.

**23-தேதி.**

ஜெர்மானியர்களை முன் செல்லவிடாமல் ரஷ்யர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர்கள் வில்னாவிலிருந்து பின்வாங்கிப் போய்விட்டார்கள். ட்வின்ஸ்குக்கு 12-மைல் தென் மேற்கில் கொடிய யுத்தம் நடக்கிறது. ரஷ்யர்கள் ஸ்மார்கன் என்னும் ஊரைத்திரும்பவும் பிடித்திருக்கிறார்கள். ஸ்லோனியத்துக்கு 30-மைல் தென் மேற்கிலுள்ள ஆஸ்டராப் என்னுமிடத்தைத் தாங்கள் பிடித்து விட்டதாக ஜெர்மானியர்கள் சொல்லுகிறார்கள்.

**24-தேதி.**

ரிகாவுக்கு 24-மைல் மேற்கிலும் 30-மைல் தென் மேற்கிலும்உள்ள இரண்டு க்ராமங்களை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள். ஸ்மார்கன் என்னும் ஊரைச் சுற்றிலும் பலமான யுத்தம் நடக்கிறது.

**25-தேதி.**

ரஷ்யர்கள் வில்னாவுக்கு 64-மைல் கிழக்கேயுள்ள விலீக்காவையும் லக் பட்டணத்தையும் ரஷ்யர்கள் திரும்பப் பிடித்திருக்கிறார்கள். ட்வின்ஸ்க் ப்ரதேசத்தில் பலமான பீரங்கி யுத்தம் நடக்கிறது.

**27-தேதி.**

ரஷ்யர்கள் ட்வின்ஸ்க் என்னு மிடத்துக்கு 14-மைல் தெற்கில் உள்ள ட்ரிவியாடி என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள். விலீகாவைச் சுற்றிலும் பலமான யுத்தம் நடக்கிறது.

**28-தேதி.**

ரிகாவுக்கு 25-மைல் தெற்கேயுள்ள எக்கா என்னும் இடத்துக்கு ஸமீபத்தில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களைத் தாக்கினார்கள். ட்வின்ஸுக்குத் தென்மேற்கிலும், விலீகாவுக்கு மேற்கிலும் ஸ்டிர் நதிக்கரையிலும் யுத்தம் கடுமையாயிருக்கிறது.

**29-தேதி.**

ட்வின்ஸ்குக்குத் தென்மேற்கில் யுத்தம் கடுமையாயிருக்கிறது. ஜெர்மானியர்கள் ஸ்டிர் நதியைக் கடந்து விட்டார்கள். ரஷ்யர்கள் தெற்கில் பின்வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

**30-தேதி**

ஜெர்மானியர்களின் குதிரைப்படையொன்று விலீகாவுக்குக் கிழக்கில் பின்வாங்கிற்று. ரஷ்யர்கள் அந்தப் பட்டணத்தை நோக்கி முன்சென்றுகொண் டிருக்கிறார்கள்.

## இட்டலி செய்யும் யுத்தம்

**ஸெப்டம்பர்௴ 3-தேதி.**

இட்டாலியர்கள் கார்ஸோ பீடபூமியில் ஆஸ்ட்ரியர்களை பலமாகத் தாக்கினதால் ஆஸ்ட்ரியர்கள் தங்கள் கிடங்குகளில் பலவற்றை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

**4-தேதி.**

இட்டாலியர்கள் ட்ரேவ் நதிக்கும் வெல்டிகான்ஸ் என்னுமிடத்துக்கும் நடுவில் உள்ள ஒரு மலையைப் பிடித்திருக்கிறார்கள்.

**7-தேதி.**

அடீஜ் நதிப்பள்ளத்தாக்கில் இட்டாலியர்கள் சில ஆஸ்ட்ரிய அரண்களைப் பிடித்திருக்கிறார்கள்.

**9-தேதி.**

இட்டாலியர்கள் காடோர் ப்ரதேசத்தில் ஸ்யூஸ் மலைக்குப் பக்கத்தில் ஆஸ்ட்ரியர்களைத் தாக்கி சில முக்யமான இடங்களையும் கிடங்குகளையும் கைப்பற்றிக் கொண்டார்கள்.



**15-தேதி.**

11-தேதியும் 12-ந் தேதியும் நடந்த சண்டையில் இட்டாலியர்கள் ப்ளெஸ்ஸோ ப்ரதேசத்தில் உள்ள சில ஆஸ்ட்ரிய கிடங்குகளைப் பிடித்திருக்கிறார்கள்.

**18-தேதி.**

இட்டாலியர்கள் எதிரிகளை பீரங்கிகளால் தாக்கிப் பின் தள்ளினார்கள். ட்ரீஸ்டுக்குப் போகும் ரெயில் வேயை இட்டாலிய ஆகாயக்கப்பல்கள தாக்கின.

**20-தேதி.**

கார்ஸோ பீடபூமியில் ஸான்மிகிலி ப்ரதேசத்திலுள்ள காட்டை இட்டாலியர்கள் பிடித்திருக்கிறாகள்.

## பொது விஷயங்கள்.

**ஸெப்டம்பர்௴ 7-தேதி.**

கருங்கடலில் இரண்டு ரஷ்ய டார்ப்பிடோக் கப்பல்கள் துருக்கிக்கு ஸொந்தமான ஹமிடியே என்னும் க்ரூஸரைத்தாக்கி ஓடச்செய்தன. க்ரூஸரோடு இருந்த 4-நிலக்கரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

**15-தேதி.**

13-தேதி இரவன்று ஒரு ஜெர்மன் ஸெப்பலின் கப்பல் இங்க்லண்டின் கிழக்குக் கரைக்கு வந்து பல வெடி குண்டுகள் போட்டது.

**17-தேதி.**

இ-7-என்னும் ப்ரிட்டிஷ் ஸப்மரீன் டார்டனல்லில் எதிரிகளால் மூழ்கடிக்கப்பட்டது.

**19-தேதி.**

ஆஸ்ட்ரியர்கள் டான்யூப் நதியோரமாகவும் ஸெவ் நதியோரமாகவும் ஸெர்வியர்களைத் தாக்கினார்கள்.

**23-தேதி.**

பல்கேரிய கவர்ன்மெண்டார் தங்கள் ஸைன்யங்களை சேகரம் செய்ய உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**25-தேதி.**

பல்கேரியா தனது சேனையைச் சேகரம் செய்ய உத்தரவிட்டிருப்பதை உத்தேசித்து கிரீஸின் கவர்ன்மெண்டும் தனது சேனைகளை சேகரம் செய்ய உத்தரவிட்டிருக்கிறது.

**30-தேதி.**

ஆஸ்ட்ரிய ஆகாயக்கப்பல்கள் ஸெர்வியாவில் பறந்து போய் சிலவிடங்களில் வெடிகுண்டுகள் போட்டன. ஆஸ்ட்ரியர்கள் ட்ரினா நதியைக் கடக்க முயன்றும்

## SEASON

## கால ஸ்திதி

**Rainfall.**

மழை.—1915௵ ஏப்ரல்௴ 1௳யிலிருந்து 1915௵ ஸெப்டம்பர்௴ 29௳ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 32·73 | 30·71 |
| வால்டேர் | 33·50 | 24·32 |
| காக்கிநாடா | 24·93 | 23 58 |
| மஸூலிப்பட்டணம் | 35·39 | 24·97 |
| நெல்லூர் | 11·86 | 13·01 |
| மதராஸ் | 19·99 | 17.53 |
| கூடலூர் | 12 89 | 17·30 |
| நாகப்பட்டணம் | 11·82 | 13.05 |
| பாம்பன் | 10·11 | 5·23 |
| கொழும்பு | 43·72 | 41·65 |
| திருவனந்தபுரம் | 60·18 | 41·30 |
| கொச்சி | 102·40 | 89·13 |
| கள்ளிக்கோட்டை | 100·26 | 100·04 |
| மங்களூர் | 89·62 | 116·44 |
| மெர்க்காரா | 98·12 | 113·35 |
| ஐதராபாத் | 41·15 | 25 80 |
| பல்லாரி | 23·54 | 13.32 |
| கர்நூல் | 16·83 | 21·59 |
| கடப்பை | 15·73 | 21·45 |
| ஹாஸ்ஸான் | 21·64 | 24·81 |
| பெங்களூர் | 28·28 | 24·67 |
| கொடைக்கானல் | 30·27 | 32.78 |
| உதகமண்டலம் | 47·49 | 37·58 |
| கோயம்புத்தூர் | 13·31 | 9·64 |
| வேலூர் | 27·47 | 27·07 |
| சேலம் | 29·86 | 27·45 |
| திருச்சினாப்பள்ளி | 16·31 | 16·20 |
| புதுக்கோட்டை | 22·89 | 19·34 |
| மதுரை | 19·48 | 17·60 |
| திருநெல்வேலி | 6·32 | 7·06 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி யோக | உதயலக் நா வி | அஹஸ் நா வி | துலு உ | இங் உ | தமி உ | வாரம் | கலி-5017, சாலி-1838, மகால்ல-1091 ; பஸலி-1325, இங்கி-1915-அக்டவம்பர்மீ } 49-ராக்ஷஸ ஹு ஐப்பசிமீ { ஆசுவின-கார்த்திக, தக்ஷிணயனம-சரத்ருது ; ஹிஜரி-1333ஷு ஜுல்ஹெஜ்-34-மொஹரம்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | [யாத்ரை, பட்டாபிஷேகம, இராமா, விருத்யாக்கம் |
| அம | 5 11 | 2925 | 7 | 17 | 1 | ஞா | தச-55-44, சிர-21-30, சூல-47-32, தை-26-42, ரா-2-0, துலாதசமீதிதி, விஷுவத்புண்யகால, விஜயதசமீ, விஜய |
| சி | 5 1 | 24 | 8 | 18 | 2 | தி | ஏகா-54-31, அவி-21-23, கண்-43-36, வணி-25-0, ரா-10-8, ஸர்வஏகாதசீ, திவாமா |
| ம | 4 50 | 22 | 9 | 19 ஐப்பசி | 3 | செ | த்வா-54-16, த-22-13, விரு-40-27, பவ-24-16, ரா-9-14 |
| அசி | 40 | 21 | 10 | 20 | 4 | பு | த்ர-54-58, பூட்-24-0, துரு-38-1, கவு-24-31, ரா-19-35, ப்ரதோஷம் |
| சி | 30 | 19 | 11 | 21 | 5 | வி | சதி-56-36, உட்-26-40, வ்யா-36-18, கர-24-40, ரா-29-0 |
| அ | 19 | 18 | 12 | 22 | 6 | வெ | ○-59-12, ரே-30-14, ஹர்-35-19, பத்-27-47, சே-2-20, கார்த்திகஸ்னாநாரம்பம், கோஜாகரீவிரத, ஆசுவயுஜீகர்ம, அன்னாபிஷேகம், உல்காதானம், அபத்யநீராஜனம், கரிநாள் |
| சி | 4 9 | 17 | 13 | 23 | 7 | ச | ப்ர-60-0, அசு-34-47, வஜ்-35-5, பால-30-53, தி-23-57, ஆசுவினபகுள, த்ரிதினஸ்பிருக், இஷ்டி |
| பிசி | 3 58 | 15 | 14 | 24 | 8 | ஞா | ப்ர-2-50, பர-40-17, விதி-35-37, தை-35-0, தி-0-53, விருச்சிகாயன-28-35, அசூன்யசயனவிரதம் |
| மஅ | 48 | 14 | 15 | 25 | 9 | தி | த்வி-7-26, கிரு-46-43, வ்ய-36-54, வணி-40-6, தி-13-24, வ்யசிரா, கிருத்திகை [த்தீ, காக்சதுர்த்தீ, பௌமசதுர்த் |
| அசி | 38 | 13 | 16 | 26 | 10 | செ | த்ரி-12-58, ரோ-53-54, வரீ-38-46, பவ-46-0, ரா-2-13, சதுர்த்தீதி, அலப்யம், ஸங்கடசதுர் |
| சி | 27 | 11 | 17 | 27 | 11 | பு | சது-19-12, மிரு-60-0, பரி-41-7, கவு-52-28, தி-9-40, அதிதி |
| ம | 17 | 10 | 18 | 28 | 12 | வி | பஞ்-25-46, மிரு-1-33, சிவ-43-32, கர-59-0, தி-25-15, பஞ்சமீதிதி |
| சி | 3 6 | 9 | 19 | 29 | 13 | வெ | ஷஷ்-32-6, திரு-9-12, சித்-45-45, வணி-32-9, ரா-13-46 |
| சி | 2 56 | 7 | 20 | 30 | 14 | ச | ஸப்-37-48, புன-16-26, சாத்-47-17, பத்-5-7, ரா-9-29 |
| சி | 46 | 6 | 21 | 31 | 15 | ஞா | அஷ்-42-8, பூச-22-29, சுப-47-47, பால-10-10, ரா-27-57, காலாஷ்டமீ, ராதாஜயந்தீ |
| சிம | 35 | 5 | 22 | 1 நவம்பர்மீ | 16 | தி | நவ-44-39, ஆயி-26-53, சுப-46-51, தை-13-39, சே-1-3, ரா-29-18 |
| சி | 25 | 3 | 23 | 2 | 17 | செ | தச-45-4, மக-29-22, ப்ரா-44-18, வணி-15-9, சே-2-23, ரா-20-39 |
| அ | 14 | 2 | 24 | 3 | 18 | பு | ஏகா-43-16, பூர-29-41, மா-40-1, பவ-14-27, ரா-18-19, ஸர்வஏகாதசீ, இராமா |
| மசி | 2 4 | 1 | 25 | 4 | 19 | வி | த்வா-39-22, உத்-27-58, வை-34-3, கவு-11-34, ரா-18-55, வைசிரா, கோவத்ஸத்வாதசீ, திவாமா |
| அசி | 1 54 | 29 0 | 26 | 5 | 20 | வெ | த்ர-33-36, ஹஸ்-24-27, விஷ்-26-35, கர-6-42, ரா-13-49, ப்ரதோஷம், மாஸசிவராத்ரி, நரகசதுர்த்தசீ, இரவு தீபாவளிஸ்நானம், யமதீபம், கோத்ரிராத்ரவிரதாரம்பம், கரிநாள் [உல்காதானம்) |
| மஅ | 43 | 2858 | 27 | 6 | 21 | ச | சதி-26-23, சித்-19-8, ப்ரீ-17-51, பத்-0-9, சது-52-21, ரா-2-45, சதுர்த்தசீதி, போதாயனஅமா, யமதர்ப்பணம், } |
| சிஉ | 33 | 57 | 28 | 7 | 22 | ஞா | ●-18-7, சவா-12-49, ஆயு-8-8, ஸவு-57-58, கிம்-43-43, தி-25-14, திதித்வயம், பிண்டபிதிரு, இஷ்டி, கேதார விரதம், பலிபூஜை, அலப்யம் [யை, சந்திரதர்சனம்) |
| மசிசி | 22 | 56 | 29 | 8 | 23 | தி | ப்ர-9-14, விசா-5-53, அனு-58-49, சோ-47-36, பால-34-44, தி-14-42, த்விதீயாதி, கார்த்திகசுத்த, யமத்விதீ } |
| உஅ | 12 | 55 | 1 1334-மொஹரம்மீ | 9 | 24 | செ | த்வி-0-16, த்ரி-51-37, கேட்-52-3, அதி-37-23, தை-25-53, தி-11-12, அவம |
| மஅ | 1 2 | 53 | 2 | 10 | 25 | பு | சது-43-43, மூல-46-2, சுக-27-44, வணி-17-34, தி-தி-9-58, ரா-13-30, சதுர்த்தீவிரதம் |
| சி | 0 51 | 52 | 3 | 11 | 26 | வி | பஞ்-36-53, பூரா-41-6, திரு-18-51, பவ-10-9, தி-7-55, ரா-30-52 |
| சிம | 41 | 51 | 4 | 12 | 27 | வெ | ஷஷ்-31-23, உரா-37-30, சூல-10-59, கவு-3-58, கர-59-12, சே-3-45, ரா-18-12, ஷஷ்ட்யுபவாஸம், ஸ்கந்தஷஷ்டீ |
| சி | 31 | 50 | 5 | 13 | 28 | ச | ஸப்-27-24, சிர-35-23, கண்-4-17, வ்ரு-58-48, பத்-55-58, ரா-16-21, சிரவணஉபவாஸம், கல்பாதி |
| மசி | 20 | 49 | 6 | 14 | 29 | ஞா | அஷ்-24-56, அவி-34-47, துரு-54-31, பால-54-16, ரா-24-5, கோபாஷ்டமீ |
| சி | 0 10 | 2847 | 7 | 15 | 30 | தி | நவ-23-59, சத-35-38, வ்யா-51-23, தை-54-2, ரா-23-19, விருச்சிகரவி-55-35, துலாநவமீதி, யுகாதி |

| | | | |
|---|---|---|---|
| | | | ச |
| குரு | 11-கன்-பு<br>17-விரு-சு<br>19-துலா-பு | | செ<br>கே |
| ரா | | | |
| | | ர-பு<br>சு | |



**THE LATE SIR HENRY COTTON.**

காலஞ்சென்ற ஸர் ஹென்ரி காட்டன்.


# ஜனாபிமானி

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்ற வழங்கிய)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸ, ஐப்பசிமீ, OCTOBER, 1915. — ஸஞ்சிகை 14. No. 14.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy | 0 6 0 | ... ... | 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | |
|---|---|---|---|
| 1 Page | ... | 5 0 0 | per month. |
| ½ do | ... | 2 8 0 | do |
| ¼ do | ... | 1 4 0 | do |
| 1/10 do | ... | 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 | ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு எஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | 5 0 0 |
| ½ ,, | ,, | ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, | ,, | 1 4 0 |
| 1/10 ,, | ,, | ,, | 1 0 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்க[ளை]ப் பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்பு[க்]கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு [வ்யாஸ]த்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒரு பாதி [இடம்] விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். [ஸுலபமான] தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உலாகல் [வேண்டாம். ஸம்]பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை [...] எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வே[ண்டுமானாலும்] மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு [என்று] நேயர்கள் அறியவேண்டும்.

[...]றனவென்றும், [...] ஆகை[யால்] [...] ஜி. எ. வைத்யராமன் அ[...] [...]மாக வைத்துக்கொண்டு [...] 3 & 4, கொண்[டி] [...]

ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸஸூ ஐப்பசிமீ. [ஸஞ்சிகை 14.

## VILLAGE PANCHAYATS IN MADRAS.

## சென்னை ராஜதானியில் க்ராமப் பஞ்சாயத்துகள்.

ஐந்தாறு வர்ஷங்களுக்கு முன்னால் இந்திய ராஜாங்க நிர்வாக முறைகளைப்பற்றிப் பரிசீலனை செய்த அதிகாரப் பிரிவினைக் கமிட்டியார், ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி பல ப்ரேரணைகள் செய்தார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் 1910-ம் வர்ஷத்தில் அந்த ப்ரேரணைகளை மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பி, அவைகளை அவைகளுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவித்ததன்மேல், இந்தியா கவர்ன்மெண்டார் சில மாஸங்களுக்கு முன்னால் ஸ்தல ஸ்வய ஆட்சியை இன்னவிதத்தில் அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றும், இன்னின்ன விஷயங்களில் மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய யுக்தப்போல் ...யலாமென்றும் தெரிவித்து ஒரு தீர்மானம் ...ட்டார்கள். அந்தத் தீர்மானத்தின் முக்ய ...ங்களை சென்ற மே, ஜூன் மாஸத்து ...ி'யில் வெளியிட்டோம். சென்னை ...ார், மேற்சொன்ன தீர்மானத்தை ...சாயத்துகள் விஷயமாய் ஒரு ...ருக்கிறார்கள். அதன் ஸாராம் ...ிறோம்.

அதிகாரப் பிரிவினைக் கமிஷனின் அபிப்ராயம்.—அதிகாரப் பிரிவினைக் கமிட்டியார் க்ராமங்களின் வேலைகளை நிர்வகிக்க க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றதன் நோக்க மென்னவென்றால், ராஜாங்க அதிகாரங்களை பற்பல ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக் கொடுப்பதோடு, ஜனங்களை அரசாட்சி வேலையில் சேர்த்துக்கொள்வதே. அந்தக் கமிட்டியார் மேற்சொன்ன பஞ்சாயத்துகளை முற்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த பஞ்சாயத்துகளைப்போல் ஸ்தாபிக்கவேண்டுமென்று அபிப்ராயப் படுவதாகத் தெரிகிறது. ஆனால் அவைகளைக் கொஞ்சங் கொஞ்சமாகவும், சாச்வதமல்லாத தற்கால ஏற்பாடுகளாகவும் ஸ்தாபிக்க வேண்டுமெனவும், அவைகளை அந்தந்த ஊர்களுக்கு ஏற்றவைகளாக இருக்கும்படி அமைக்க வேண்டுமெனவும், அவைகளை ரொம்ப ஜாக்ரதையோடும், பொறுமையோடும், அபிவ்ருத்தி செய்யவேண்டு மெனவும், அவைகள் கடைத்தேறுமா, கடைத்தேறுவா வென்பது ஜில்லா அதிகாரிகள் அனுதாபத்துடன் அவைகளுக்காக உழைக்கிறார்களா என்பதைப் பொறுத்திருக்கு மெனவும் ஷெ கமிட்டியார் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள்.

மேலும் அவர்கள் சொல்லுவதாவது: ஒவ்வொரு க்ராமத்துக்கும் ஒரு பஞ்சாயத்திருக்க வேண்டும். அதன் மெம்பர்களை மற்ற ஸ்தல ஸ்தாபனங்களில் ரூல்படி எலெக்ஷன் பண்ணி தெரிந்தெடுப்பதுபோல் தெரிந்தெடுக்காமல், ஒரு ஸுமாராய்ப் பார்த்துத் தெரிந்தெடுக்க வேண்டும். க்ராமமுன்ஸிப் லாயக்குள்ளவராயிருந்தால், அவரையே பஞ்சாயத்துக்கு சேர்மனாக நியமிக்க வேண்டும்; சிறு ஸிவில், க்ரிமினல் கேஸுகளை விசாரிக்க பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். கிணறுவெட்டுதல், ரஸ்தாக்கள் போட்டு நிர்வகித்தல், பாடசாலைகள், சந்தைகள்,



க்ராம ஸுகாதாரம் ஆகிய இவைகளை கவனித்து இவைகளுக்காக செலவுசெய்ய பஞ்சாயத்துகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். ஆனால் அவைகளுக்கு புதிதாக வரிகள்போட அதிகாரம் கொடுக்கக்கூடாது. க்ராமப் பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய பணத்துக்கு, நில ஸெஸ் பணத்திலிருந்து பணம் கொடுத்தும், சந்தைகளில் வரி வஸூல் செய்யவும், ஸிவில் வ்யாஜ்யங்களில் பீஸ் வாங்கவும் அனுமதிகொடுத்தும், லோகல்போர்டுகளிலிருந்து இவைகளுக்கு க்ராண்டுகள்கொடுக்க ஏற்பாடுசெய்தும் உதவிசெய்யவேண்டும். இந்தப் பஞ்சாயத்துகள் ஜில்லா போர்டுகளுக்காவது தாலுக்கா போர்டுகளுக்காவது கீழ்ப்பட்டிருக்கக் கூடாது. இப்போதுள்ள லோகல்பண்ட் யூனியன் பஞ்சாயத்துகளை எடுத்துவிட்டு, அவைகளுக்கு பதிலாக க்ராம பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும். எந்த க்ராமத்துக்காவது பட்டணங்களின் லக்ஷணமிருந்தால், அவைகளுக்கு சிறியதாக ஒரு முனிஸிபல் கௌன்ஸில் அல்லது பட்டணத்துப் பஞ்சாயத்து ஸ்தாபிக்க வேண்டும். இவைகள் அதிகாரப் பிரிவினைக் கமிட்டியாரின் அபிப்ராயங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டின் அபிப்ராயம்.—இந்தியா கவர்ன்மெண்டார் ராயல்கமிஷனின் ப்ரேரணைகளை மாகாணகவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பினபோது, அவர்கள் (இந்தியா கவர்ன்மெண்டார்) பஞ்சாயத்து ஸ்தாபிப்பதில் கெடுதிகள்நேரிடாதபடி ஜாக்ரதையோடு முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்த முயற்சிகளை ஜில்லா அதிகாரிகளின் மேற்பார்வையில் நடத்தவேண்டுமென்றும், எந்த க்ராமங்களின் நிலைமை பஞ்சாயத்து ஸ்தாபிப்பதற்கு ஸௌகர்யமாயிருக்குமோ அந்த க்ராமங்களில் பஞ்சாயத்துஸ்தாபிக்க வேண்டுமென்றும், க்ராமங்களில் கக்ஷி ப்ரதிக்கக்ஷிகள் இருந்தால், இருகக்ஷியாருக்கும் மனஸ்தாபம் ஏற்படுமாகையாலும், ஒருக் கக்ஷியாருக்கு முக்யமாய் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் அதிகாரம் கிடைத்தபோது அந்தக் கக்ஷியார் மற்றக் கக்ஷியாரைக் கஷ்டப்படுத்துவார்களாகையாலும், அவ்வித கெடுதல்களை நீக்கும் பொருட்டு ஐந்தாறு க்ராமங்களை ஒன்றாய்ச் சேர்த்து அவைகளுக்குப் பொதுவாய், ஒரு பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டுமென்றும், சிறு ஸிவில் க்ரிமினல் கேஸுகளை பஞ்சாயத்துகள் விசாரிக்கும்படி விடவேண்டுமென்றும், ஆனால் எந்த ஜில்லாக்களில் க்ராமமுன்ஸிப் கோர்ட்டுகள் த்ருப்திகரமாக நடந்து வருகின்றனவோ அவைகளில், க்ராமமுன்ஸிப் கோர்ட்டுகளைத் தள்ளிவிட்டு பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்துவதில் ரொம்ப ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். மேலும் கமிஷனுடைய மற்ற ப்ரேரணைகளை அவர்கள் ஆதரிப்பதாயும், ஆனால் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வரும் லோகல்பண்ட்யூனியன் பஞ்சாயத்துகளை நிறுத்திவிடக்கூடாதென்றும், அந்தந்த ஊர்ச் செலவுகளுக்கு பஞ்சாயத்துகள் வரி போட்டுக் கொள்ள கொஞ்சம் அதிகாரம் கொடுக்கலாமென்றும் தெரிவித்தார்கள்.

மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய அபிப்ராயங்களை இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பின பிறகு, இந்தியா கவர்ன்மெண்டார் இந்தவர்ஷத்தில் ஸ்தலஸ்வய ஆட்சியைப்பற்றிய தீர்மானத்தை வெளியிட்டார்கள். அதில் க்ராமப்பஞ்சாயத்தைப்பற்றி ப்ரஸ்தாபம் செய்த போது, பஞ்சாயத்து என்பது இந்தியாவில் அநேக பாகங்களில் ஜனங்களுக்கு நன்றாய்த் தெரிந்ததென்றும், தாழ்ந்த ஜாதிகளுக்குள் ஜாதி விஷயங்களைப்பற்றித் தீர்மானிக்க பஞ்சாயத்துகள் இருந்து வருகின்றனவென்றும், இன்னும் அநேக இடங்களில் லோகல் ப... யூனியன்கள், க்ராம ஸுகாதாரக் கமி... கல்விக்கமிட்டிகள், க்ராமப் பஞ்சாய... முதலியவைகள் இருக்கின்றனவென்றும், ...யால் இவைகளை ஆதாரமாக வைத்துக்...

பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கலாமென்றும், எந்த இடங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கலாமென்று தோன்றுகிறதோ அங்கே, மாகாண கவர்ன்மெண்டுகள் ஒப்புக்கொள்ளும் முறைகளில் பரீக்ஷார்த்தமாக பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

**பஞ்சாயத்துகளைப்பற்றிய சில பொதுவான கொள்கைகள்.**—இந்தியா கவர்ன்மெண்டார் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கும் விஷயத்தைபற்றி மாகாண கவர்ன்மெண்டுகள் தங்கள் யுக்தம்போல் தீர்மானிக்கட்டுமென்று சொல்லிவிட்டு, சில பொதுக் கொள்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைகளாவன:—

1. பரீக்ஷார்த்தமாகப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதில் ஜனங்கள் ஸம்மதிக்கிற க்ராமங்களிலும், க்ராமங்களை விடப்பெரியதான ப்ரதேசங்களிலும் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவைகளில் பஞ்சாயத்துகளை ஸ்தாபிக்கவேண்டும்.

2. பஞ்சாயத்துகள் ஸம்பந்தமாகச் சட்டஞ் செய்யவேண்டியிருந்தால், அந்தச் சட்டத்தின் நிபந்தனைகளை பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரலாமென்றிருக்கவேண்டும். பஞ்சாயத்தின் அதிகாரங்களும் கடமைகளும் ஒவ்வொரு க்ராமத்திலும் ஒரே மாதிரியாய் இருக்க வேண்டியதில்லை. அப்படி இருப்பதும் கூடாது.

3. எந்த ப்ரதேசத்திலாவது நீதி செலுத்தும் அதிகாரங்களும் நிர்வாக அதிகாரங்களும் கொடுக்க வேண்டுமானால், அவைகளை ஒரே பஞ்சாயத்து ஸபைக்குக் கொடுக்கவேண்டும்.

4. ஏற்கனவே ஸ்தாபிக்கப் பட்டுள்ள க்ராம ஸுகாதார கமிட்டிகளையும், கல்விக் கமிட்டிகளையும் பஞ்சாயத்துகளோடு சேர்த்துவிடவேண்டும்.

5. நீதி வ்யவஹாரங்களில் பஞ்சாயத்துகளுக்கு இன்ன அதிகாரங்கள் உண்டென்பதை ஏற்படுத்தும்போது, அந்த அதிகாரங்களை பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் மட்டும் வகிக்கும்படி சட்டம் அமைக்கவேண்டும். கக்ஷிக்காரர்கள் தங்கள் வழக்குகளை பஞ்சாயத்தாரிடம் விசாரிக்கக் கொண்டுவருவதற்காக அவர்களுக்கு ஸ்வல்பமான கோர்ட் 'பீஸ்', சீக்ரமாக வழக்குகளை முடிவு செய்தல் முதலிய ஸாதகங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

6. பஞ்சாயத்துகள், வேண்டுமானால் மாகாண கவர்ன்மெண்டின் மேற்பார்வைக்கு உள்பட்டு, வரிகள்போட சட்டம் ஏற்படவேண்டும்.

7. பஞ்சாயத்துகளுக்கும் மற்ற நிர்வாக ஸ்தாபனங்களுக்கும் உள்ள ஸம்பந்தம் இன்னதென்பதை வ்யக்தமாக தீர்மானிக்கவேண்டும். ஜில்லா போர்டுகளும் தாலுக்கா போர்டுகளும் பஞ்சாயத்துகளுக்குப் பண உதவி செய்தால் அந்த போர்டுகள் பஞ்சாயத்துகளின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யலாம்.

**சென்னை கவர்ன்மெண்டின் அபிப்ராயம்**—சென்னை கவர்ன்மெண்டார் அதிகாரப் பிரிவினைக் கமிஷனுடைய ப்ரேரணைகளையும், இந்தியா கவர்ன்மெண்டாருடைய ப்ரேரணைகளையும் கவனித்துப்பின்வருமாறு அபிப்ராயப் பட்டிருக்கிறார்கள். சென்னை ராஜதானியில் யூனியன் பஞ்சாயத்துகள் என்று சொல்லப்படும் க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதற்கு மதராஸ் லோகல் போர்ட்ஸ் ஆக்ட், 5-வது அத்யாயம் இடங்கொடுக்கிறது. அவைகளுக்கு சில அதிகாரங்களையும் கடமைகளையும் கொடுப்பதற்கும் இடங்கொடுக்கிறது. பஞ்சாயத்துகளுக்கு இன்னவேலைகளும் கடமைகளும் கொடுக்கலாமென்பது ஷை ஆக்ட் 141-வது ஸெக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன. (1) பொதுரஸ்தாக்களுக்கு விளக்குப்போடுவது; (2) பொதுரஸ்தாக்கள், சாக்கடைகள், குளங்கள், கிணறுகள், ஆகிய இவைகளையும் மற்ற பொதுஸ்தலங்களையும் சுத்தப் படுத்துதல்; (3) ஆஸ்பத்திரிகள், மருந்துச்சாலைகள், பள்ளிக்கூடங்கள் ஆகிய இவைகளை ஸ்தாபித்து நடத்துதல்; (4) ரஸ்தாக்கள் போடுகல்,



சாக்கடைகள் கட்டுதல், இவைகளை நிர்வகித்தல்; (5) கிணறுகள், குளங்கள் வெட்டுதல்; அவைகளைப் பழுதுபார்த்தல்; ஜலாதார ஸம்பந்தமான மற்ற வேலைகளைச் செய்தல்; (6) பொது ஜனங்களின் ஸுகாதார ஸம்பந்தமான மற்ற வேலைகளைச்செய்தல். சென்னை கவர்ன்மெண்டார் மேற்சொன்ன ஸெக்ஷனில் குறிப்பிட்ட வேலைகளுள் பஞ்சாயத்துகள் செய்யக்கூடிய, க்ராம ஸௌக்யத்துக்கேற்ற பலவேலைகள் அடங்கியிருக்கின்றனவென்றும், அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சொல்லுகிறபடி இந்தப் பஞ்சாயத்துகளை நிறுத்திவிட இஷ்டப்படவில்லையென்றும், தற்போது கிட்டத்தட்ட 400-பஞ்சாயத்துகள் வரையில் இருக்கின்றனவென்றும், அப்படித் தள்ளிவிடுவதானது சென்ற முப்பது வர்ஷங்களாகச் செய்துவந்த வேலையைத்தள்ளி விடுவதாகுமென்றும், ஆனால் இப்போதுள்ள பஞ்சாயத்து ஏற்பாட்டை ரொம்பவும் சீர் திருத்தக்கூடுமென்றும், சொல்லுகிறார்கள்.

**யூனியன்களிலுள்ள குறைகளும், அவைகளை நிவர்த்திக்கும் வழிகளும்:—(1) யூனியன்களின் அமைப்பு.**—லோகல் போர்ட்ஸ் ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சாயத்துகள் இதுவரையில் முற்றிலும் த்ருப்திகரமாக நடந்து வராததற்கு சில காரணங்கள் இருக்கின்றன. அவைகளை இனிமேல் நீக்கிவிடக்கூடும்.

யூனியன் பஞ்சாயத்துகளுக்கு போதுமான வரும்படி கிடைக்கும்படி செய்வதற்காக இரண்டு அல்லது அதற்கதிகமான க்ராமங்களை ஒன்றாய்ச் சேர்ப்பது வழக்கமாயிருந்து வருகிறது. ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் தனித்தனியாயும் தூரமாயும் உள்ள க்ராமங்களை ஒன்றாய்ச் சேர்த்து யூனியனாக ஸ்தாபித்தால், சிலவிடங்களில் பஞ்சாயத்தார்கள் ரொம்ப முக்யமான க்ராமத்தின் ஸௌகர்யத்தைப்பற்றி அதிகமாகக் கவனிக்க ஹேதுவாகிறது. மற்ற க்ராமங்களைப்பற்றி பஞ்சாயத்துகள் அதிகமாக கவனிப்பதில்லை. இதனால் இந்த மற்ற க்ராமங்கள் தாங்கள் கொடுக்கும் வரிகளுக்கேற்ப ஸௌகர்யங்களை அடைவதில்லை. ஆகையால் இவைகளிலுள்ள ஜனங்கள் அத்ருப்தியடைகிறார்கள். ப்ரத்யேகமாயுள்ள இரண்டு அல்லது அதற்கதிகமான க்ராமங்களைச் சேர்ப்பது இயற்கையானதல்ல; ஏனென்றால் ஒரே க்ராமத்திலுள்ள ஜனங்களிடம் எப்படி ஒற்றுமையுணர்ச்சி இருக்குமோ, அப்படிப்பட்ட உணர்ச்சி பல தனி க்ராமங்கள் சேர்ந்த பஞ்சாயத்தினிடம் இராது. ஆகையால் இனிமேல் ஒவ்வொரு ப்ரத்யேகமான ரெவின்யூ க்ராமத்துக்கும், அதைச் சேர்ந்த உள் க்ராமங்களை அதோடு சேர்த்துக்கொண்டு, ப்ரத்யேகமாப் யூனியன் பஞ்சாயத்து ஸ்தாபிக்கவேண்டுமென்றும் அப்படி ஒரு தனி க்ராமத்துக்கு பஞ்சாயத்து ஸ்தாபிப்பதுகூடாதென்பதற்குத் தகுந்த காரணங்களிருந்தால் மட்டும் இரண்டு மூன்று க்ராமங்களை ஒன்று சேர்க்கலாமென்றும் சென்னை கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.

**(2) ஆபீஸ் கட்டிடமும், ஸிப்பந்திச் செலவும்:**—அநேக இடங்களில் யூனியன்களுக்குக் கிடைக்கும் வரும்படியில் பெரும்பாகம் யூனியன்களுக்கு ஆபீஸ் கட்டுவதற்கும், ஆபீஸ் ஸிப்பந்திச் செலவுக்கும் போய்விடுகிறது. சென்னை கவர்ன்மெண்டார், ஆபீஸ் நடத்துவதற்கு கட்டிடங்கள் கட்டவேண்டுமென்றாவது, அல்லது கட்டிடங்களை வாடகைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்றாவது பஞ்சாயத்துகளைக் கட்டாயப்படுத்தக் கூடாதென்றும், க்ராம பஞ்சாயத்தார் தங்களுடைய மீட்டிங்குகளை க்ராமப் பள்ளிக்கூடத்திலாவது, சாவடியிலாவது, க்ராம முன்ஸிபினுடைய வீட்டிலாவது, அல்லது ஸௌகர்யமான வேறு எந்தக் கட்டிடத்திலாவது நடத்திக்கொள்ளலாமென்றும், பஞ்சாயத்துக்காகத் தனியாக குமாஸ்தக்கள் நியமிக்க வேண்டியதில்லையென்றும், க்ராம

உபாத்யாயர், கர்ணன், போஸ்ட்மாஸ்டர் முதலியவர்களை மீட்டிங்குகளினுடைய நடவடிக்கைகளை எழுதவும் மற்ற எழுத்துவேலைகளை செய்யவும் வைத்துக்கொள்ளலா மென்றும் சொல்லுகிறார்கள்.

வரிகளை வஸூல் செய்வதற்கு, பஞ்சாயத்தார் வேண்டிய ஸிப்பந்திகளை, தங்களுக்கு ஸௌகர்யமான சம்பளத்தில் நியமித்துக்கொள்ளலாம். வரி வஸூலுக்கு க்ராம உத்யோகஸ்தர்களையும் வைத்துக்கொள்ளலாம். வஸூலான தொகையில் நூற்றுக்கு இவ்வளவு என்று ஒரு விகிதம் ஏற்படுத்தி அந்த விகிதப்படி க்ராம உத்யோகஸ்தர்களுக்கு ப்ரதி ப்ரயோஜனம் கொடுக்கலாம். ஆனால் இப்படிச் செய்வதற்கு, க்ராம உத்யோகஸ்தர்களும், டிவிஷனல் ஆபிஸரும் ஸம்மதிக்கவேண்டும்.

**3. வரிபோடுவதிலும், செலவு செய்வதிலும் நிர்ப்பந்தங்கள் இருப்பது.**-சிலயூனியன்கள் ஜனங்களுக்குப் பிடிக்காமல் போவதற்கு ஒரு காரணம் வரிபோடும் விஷயத்திலும், பணத்தை செலவு செய்யும் விஷயத்திலும் அவைகளுக்கு ரொம்ப நிர்ப்பந்தங்களிருப்பதேயென்று சொல்லலாம். இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் சில ஸௌகர்யங்கள் செய்யத் தயாராயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். லோகல் போர்ட்ஸ் ஆக்டில் சொல்லியிருக்கும் வரையறைக்கு மேற்படாமல், வேண்டிய பணத்துக்குத் தகுந்தபடி பஞ்சாயத்துகள் தங்களுடைய யுக்தம்போல் வரி விதிக்கலாம். ஷை ஆக்ட் 141-வது ஸெக்ஷனில் சொல்லியிருக்கிற பாபத்துகளில் எந்தச் செலவுக்கு எவ்வளவு பணம் எவ்விதமாக செலவழிக்க வேண்டுமென்று பஞ்சாயத்தார் அபிப்ராயப்படுகிறார்களோ அவ்விதமாகச் செலவுசெய்யலாம். சில க்ராமங்களில் க்ராம ரஸ்தாக்கள்போடுவது அவச்யமாயாவது, ஜனஸம்மதமாயாவது இருக்கும். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் தாலுக்கா போர்டார் ஆக்ஷேபனை செய்யவேண்டியதில்லை. ஸாதாரணமாய் க்ராமங்களில் ஸுகாதாரவேலைகளைத்தான் மற்றவேலைகளைவிட அதிகமாகக் கவனிக்கவேண்டியிருக்கும். எந்த யூனியனாவது ஒரு க்ராமவேலைக்கு அதிகபணம் செலவழித்து அதனால் மற்ற வேலைகளுக்கு பணத்தட்டு ஏற்பட்டால், தாலுகா போர்டார் செலவுக்குக் குறையும்பணத்தைக் கொடுத்து உதவ முடியாது. உதாரணமாக ஒரு யூனியன் விளக்குப்போடுவதற்காகப் பணத்தைச் செலவுசெய்துவிட்டு, தெருக்களை சுத்தம்செய்யவும், சாக்கடை கட்டவும் பணம் கொடுத்து உதவும்படி தாலுக்கா போர்டைக் கேட்கக்கூடாது.

யூனியன்கள் தங்கள் வேலைகளை சரியாய் நிர்வகிக்காமல்போய், தொத்து வ்யாதிகள் உண்டாவதுபோன்ற ரொம்ப பெரிய கெடுதிகள் நேரிட்டால், அப்போது மாத்ரம் தாலுகா போர்டுகள் யூனியன்களுடைய நிர்வாகத்தில் தலையிட வேண்டிவரும்.

**4. பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுப்பது.**—பஞ்சாயத்துகள் இன்னும் அதிக ஜனஸம்மதா யிருப்பதற்கு மெம்பர்கள் தெரிந்தெடுக்கும் முறையில் ஒரு சீர்திருத்தம் செய்யப்போகிறார்கள். அதாவது இப்போது செய்வதுபோல பஞ்சாயத்து மெம்பர்களை ரூல்படி தெரிந்தெடுக்காமல் வேறு விதமாய்த் தெரிந்தெடுப்பதே. யூனியன்களின் விஸ்தீரணத்துக்கும் ஜனத் தொகைக்கும் தகுந்தபடி அவைகளில் ஒவ்வொன்றிலும் 5-முதல் 16-மெம்பர்கள்வரை இருக்கலாம். க்ராம முன்ஸிப் அதில் ஒரு மெம்பராயிருப்பார். மற்ற மெம்பர்களை ரயத்துகளும் வரி செலுத்தும் மற்றவர்களும் தெரிந்தெடுக்க வேண்டும். இவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு, தெரிந்தெடுப்பவர்களின் ஜாப்தா, தெரிந்தெடுப்பவர்கள் மற்ற எலெக்ஷன்களில் தெரிந்தெடுப்பதுபோல் தெரிந்தெடுத்தல், எலெக்ஷன்களைப் பற்றி பெடிஷன்களும் அப்பீல்களும், போடுவதற்கும் அவைகளை விசாரிப்பதற்கும் சட்ட



மேற்படுத்துதல் முதலிய எலெக்ஷன் நிபந்தனைகளை ஏற்படுத்துவது இப்போது அவச்யமானதல்ல. பஞ்சாயத்தார்களைத் தெரிந்தெடுப்பதற்கு செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால், தாலுகா போர்ட் ப்ரெஸிடெண்ட், எந்த க்ராமத்தில் பஞ்சாயத்து நியமிக்க உத்தேசித்திருக்கிறதோ, அந்த ஊரில் பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்க இன்னதேதியில் மீட்டிங் கூடுமென்று முன்னாடியே அறிவித்து, அந்தத் தேதியில் க்ராமத்துக்குப் போய் வரி செலுத்துவோரின் மீட்டிங் ஒன்று கூட்டி, தமக்கு எது ரொம்ப யுக்தமானதென்று தோன்றுகிறதோ அந்த வழியில் பஞ்சாயத்துக்கு இன்னின்னாரை க்ராமத்தார் தெரிந்தெடுக்க விரும்புகிறார்களென்று தெரிந்து நிச்சயிக்கவேண்டும். இதே மாதிரிதான் பஞ்சாயத்தின் சேர்மனையும் தெரிந்தெடுக்கவேண்டும். தாலுகா போர்டு ப்ரெஸிடெண்டுகள் தங்களுடைய அபிப்ராயப்படி க்ராமவாஸிகள் நடக்கவேண்டுமென்று வற்புறுத்தக்கூடாது. அவர் செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால் ரொம்பஸுலபமானமுறையில் க்ராமத்தாருடைய அபிப்ராயங்களின்னவென்பதை யறிந்து, அவைகளை அப்படியே தாக்கல் செய்துகொள்ள வேண்டியது. ஏதாவது சில ஸந்தர்ப்பங்களில்ப்ரெஸிடெண்டானவர் க்ராமத்தார் தெரிந்தெடுத்த பஞ்சாயத்தாரை விட்டு வேறொருவரை பஞ்சாயத்தாராக நியமிக்கலாம்; அல்லது மறுபடியும் வேறொரு மெம்பரைத் தெரிந்தெடுக்கும்படி க்ராமத்தாருக்குச் சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட ஸமயங்களில் அவர் தாமப்படிச் செய்ததற்குக் காரணமின்னதென்பதை எழுதிவைக்கவேண்டும். அவர் அப்படிச் செய்தது சரியா என்பதை ஜில்லாபோர்ட் ப்ரெஸிடெண்ட் தீர்மானிப்பார். ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டினுடைய தீர்மானம் முடிவானது.

**யூனியன்களுக்குப் பண உதவி.**—சிறிய யூனியன்களுக்கு தாலுக்கா போர்டார் பணங்கொடுத்து உதவுவது உசிதமாயிருக்கும். யூனியன்களுக்கு வீட்டுவரியிலிருந்து கிடைக்கும் தொகையில் நாலில் ஒரு பாகத்துக்கு மேற்படாமல் தாலுக்கா போர்டுகள் பணஉதவிசெய்யலாம். ஆனால் உதவியாகக் கொடுக்கும் பணத்தை யூனியன்கள் இன்னவேலைக்குத்தான்உபயோகிக்க வேண்டுமென்று தாலுக்கா போர்டுகள் நிபந்தனை ஏற்படுத்தக்கூடாது. ஏற்கனவேயுள்ள யூனியன்களில் முன் சொன்னபடி சிறியனவாயிருப்பவைகளுக்கும் பண உதவி செய்வது நல்லது. ஆனால் ஸாதாரணமாய் 8000 அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள க்ராமங்களுக்கு பண உதவி செய்வதுகூடாது. இந்த க்ராமங்கள் பட்டணங்களின் லக்ஷண முள்ளவைகளென்று சொல்லலாம். இவைகள் தங்களுடைய ஊரில் வரிமுதலியவைகள் போடுவதாலேயே போதுமான பணம் சேகரம் செய்யவேண்டும். எந்த ஜில்லாவிலாவது சிறு யூனியன்களுக்குப் பண உதவிசெய்வதால் அந்த ஜில்லா போர்டுக்கு அதன் வரும்படியைவிட அதிக செலவு ஏற்பட்டால், அந்த ஜில்லா போர்டுக்கு மாகாண கவர்ன்மெண்டார் பணஉதவி செய்வதைப்பற்றி ஆலோசனை செய்வார்கள்.

லோகல் போர்டு ஆக்டின்படி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துகளின் ஏற்பாட்டில் உள்ள, மேற்சொன்ன குறைகளை நீக்கிவிட்டால், அவைகள் ஜனங்களுக்கு ரொம்ப பிடிக்குமென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. வரிப்பணத்தை ஜனங்கள் எந்த விதத்தில் செலவழிக்க இஷ்டப்படுகிறார்களோ அந்த விதத்தில் செலவழிக்கவிட்டால், பஞ்சாயத்துகளை அதிகப்படுத்துவதற்கு ஜனங்கள் ஸம்மதிப்பார்களென்று நம்பலாம். 3000-அல்லது அதற்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ளவும், கூடியமட்டும் அதிகபரவலாயில்லாமல் நெருக்கமாயுள்ளவுமான எல்லாரெவின்யூக்ராமங்களின் நிலைமையையும் கலெக்டர்கள் ஆராய்ச்சி செய்து, அவ்வூர்களில் லோகல் போர்டு ஆக்

டின்படி பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதற்கு ஏதாவது ஆக்ஷேபனைகள் இருக்கின்றனவா என்பதை கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கவேண்டும். கலெக்டர்கள் கவர்ன்மெண்டுக்கு பதில் அனுப்பும் போது அப்படிப்பட்ட க்ராமங்களின் பூர்த்தியான ஜாப்தா ஒன்றையும் சேர்த்தனுப்பவேண்டும். தாலுகாபோர்டு ப்ரஸிடெண்டுகள் தங்கள் அதிகாரத்துக்குள்பட்ட க்ராமங்களுக்கு நேரில் போய், அங்குள்ள முக்ய க்ராமவாஸிகளை ஒன்று கூட்டி, அந்த க்ராமங்களில் பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பதாக உத்தேசித்திருக்கிற தென்று அவர்களுக்குத் தெரிவித்து, க்ராமத்தார்களுடைய அபிப்ராயத்தை அறிந்து கலெக்டர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். கலெக்டர்கள் தாங்கள் அனுப்பும் பதில்களில், தெரிந்தெடுத்த க்ராமங்களின்ஜனங்கள் பஞ்சாயத்துஸ்தாபிப்பதற்கு இஷ்டப்படுகிறார்களா என்பதையும், அந்த க்ராமங்களில் பஞ்சாயத்துகளுக்கு என்ன வருமானம் கிடைக்கும் என்பதையும், தெரிவிப்பதோடு ஒவ்வொருக்ராமத்திலும் பஞ்சாயத்து ஸ்தாபிக்கலாம், கூடாதென்பதைப் பற்றி தங்களுடைய (கலெக்டர்களுடைய) அபிப்ராயத்தையும் ப்ரேரணைகளையும் தெரிவிக்கவேண்டும்.

சட்டப்படியல்லாத பஞ்சாயத்துகள்.—பெரிய க்ராமங்களில் லோகல் போர்டு ஆக்டின்படி சீர்திருந்திய பஞ்சாயத்துகள்ஸ்தாபிப்பதோடு, சிறு க்ராமங்களில், சட்டத்தின் உதவியின்றி, ஸ்வதாவாக சட்டத்தின் கட்டுப்பாடுகளில்லாமல் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்க கவர்ன்மெண்டார் முயற்சி செய்யத் தயாராயிருக்கிறார்கள். இந்தப் பஞ்சாயத்துகளுக்கு வரிபோடும் ஸ்வதந்தரம் இராது. இவைகள் காலக்ரமத்தில் பெரிய யூனியன் பஞ்சாயத்துகளாக வ்ருத்தியடைந்து வரிபோடும் ஸ்வதந்தரத்தை அடையலாம். இவை ஒரு ரெவின்யூ க்ராமத்துக்கு ஒரு பஞ்சாயத்து வீதம் ஸ்தாபிக்கப்படும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் குறைந்தது 5-மெம்பர்கள் இருப்பார்கள். ஆனால் அந்தந்த ஊரின் நிலைமைக்குத் தக்கபடி அந்த ஸங்க்யையை உயர்த்தலாம். இந்தப் பஞ்சாயத்துக்கு க்ராம முன்ஸிப் சேர்மனாக இருப்பார். மற்றவர்களைத் தெரிந்தெடுக்க தாஸில்தாரோ, டிவிஷனல் ஆபிஸரோ, க்ராமத்து ஜனங்களை ஒரு மீட்டிங்கில் கூட்டி, அந்த மீட்டிங்குக்குத் தாம் ப்ரெஸிடென்டாக இருந்து, ஜனங்களைக் கொண்டு பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்கச் செய்வார். பஞ்சாயத்து மெம்பர்கள் மூன்று வர்ஷகாலம் தங்கள் உத்யோகத்தை வகித்து வருவார்கள். எந்தப் பஞ்சாயத்து மெம்பராவது அக்ரமம் செய்பவராயோ, வேலைசெய்ய முடியாதவராயோ, அல்லது வேறெந்த விதத்திலாவது வேலைக்கு லாயக்கில்லாதவராயோ இருந்தால் அவரை டிவிஷனல் ஆபீஸர் வேலையிலிருந்து தள்ளிவிடலாம். பஞ்சாயத்துகளின் நிர்வாக அதிகாரங்கள் எல்லா க்ராமங்களிலும் ஒரே மாதிரியாயிருக்க வேண்டுமென்பதில்லை. அந்தந்த இடத்தின் நிலைமைகளுக்குத் தகுந்தபடி வித்யாஸப்படலாம். அவைகளின் முக்ய நோக்கம் ஒப்புக்கொள்ளப்பட்ட பொதுக் கார்யங்களை பொது முயற்சியில் நடத்துவதாக இருக்க வேண்டும். உதாரணமாக,

1. க்ராம ஸௌகாதார நிர்வாகம்.

2. அம்மை குத்துவதைக் கட்டாயப்படுத்துவது.

3. ரொம்ப முக்யமில்லாத அந்தந்த ஊர் வேலைகளைச் செய்து முடித்தல்.

4 மாட்டுப்பட்டி, கடைகள், சந்தைகள் ஆகிய இவைகளை நிர்வகிப்பது.

5. க்ராமப் பள்ளிக்கூடக்கட்டிடங்களைக் கட்டி நிர்வகிப்பது.

6. குளம், மீன்பிடிக்கும் துறைகள், மாடு நிற்கும் இடங்கள், போரடிக்களங்கள், ஆகிய இவைகளையும் இன்னும் க்ராமத்துக்குப் பொதுவான மற்ற இடங்களையும் ஸொத்துக்களையும் பராமரிப்பது.



7. நீர்ப்பாய்ச்சல் முறையை நிர்வகிப்பது.

8. அந்தந்த ஊர் வேலையாட்களைக்கொண்டு ஜலாதாரங்களை பழுது பார்த்து நிர்வகித்தல்.

9. மேய்ச்சல் காடுகளையும், விறகு வெட்ட விடப்பட்டிருக்கும் காடுகளையும் க்ராமப் படுகைகள், காடுகள் ஆகிய இவைகளையும் நிர்வகிப்பது

இந்தப்பஞ்சாயத்துகள் ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸர், கலெக்டர் ஆகிய இவர்களுடைய மேற்பார்வையில் இருக்கும். கலெக்டருக்கு அவச்யமென்றுதோன்றினால் அவர் எந்தப்பஞ்சாயத்தை வேண்டுமானாலும் ஸஸ்பெண்ட் செய்துவைக்கலாம். எல்லா ஜில்லாக்களிலும் கலெக்டர்கள் சட்ட முறைப்படியல்லாத பஞ்சாயத்துகளைப் பரீக்ஷார்த்தமாய் ஸ்தாபிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். முதலில் பரீக்ஷார்த்தமாக ஸ்தாபிப்பதற்கு, எந்த க்ராமம் கக்ஷி ப்ரதிகக்ஷிகள் இல்லாமலிருந்து அதன் ஜனங்கள் புத்திசாலிகளாயிருக்கிறார்களோ, எந்த க்ராமத்தில் ஸ்தாபித்தால் பஞ்சாயத்து நன்றாய் நடைபெறுமோ, அதோடு எந்த க்ராமத்தில் பல விஷயங்களிலும் ஒற்றுமையுண்டோ அந்த க்ராமத்தையே தெரிந்தெடுக்க வேண்டும்.

நீதி அதிகாரங்கள்.—முறைப்படி ஸ்தாபிக்கப்படாத பஞ்சாயத்துகளுக்கு நீதியிலாகா அதிகாரங்களும் வேலைகளும் கொடுக்கமாட்டார்கள். சிறு க்ரிமினல், ஸிவில் கேஸுகளை ஸாதாரண கோர்ட்டுகளுக்குப் போகவிடுவதால் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கவேண்டியது அவச்யமென்பதை சென்னை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சிறு கேஸ்களை க்ராமங்களிலேயே விசாரித்து முடிவுசெய்ய ஏற்கனவே முயற்சிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இது ஸம்பந்தமான கணக்குகளைப் பார்த்தால், மற்ற மாகாணங்களைவிட சென்னை ராஜதானியானது இதுவிஷயத்தில் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருக்கிறதென்று தெரியவரும். இருந்தாலும் க்ராமக்கோர்ட்டுகளின் அதிகார ப்ரதேசத்தை அதிகப் படுத்துவதற் கிடமிருக்கிறதென்று சென்னை கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள். எந்தவிதத்தில் க்ராமக் கோர்ட்டுகளை அபிவ்ருத்தி செய்ய வேண்டுமென்பதைப்பற்றி சென்னை கவர்ன்மெண்டார் ப்ரத்யேகமாய் ஆலோசனை செய்து வருகிறார்கள். தற்போது, ஸிவில் வ்யாஜ்யங்களில் உபய கக்ஷிகளும் மனுசெய்துகொண்டால் க்ராமப் பஞ்சாயத்துகள் ஏற்படுத்துவதற்கும், க்ராம பெஞ்ச் கோர்ட்டுகள் ஸ்தாபிப்பதற்கும், 1816 ம் வர்ஷத்து சென்னை க்ராமப்பஞ்சாயத்து ரெகுலேஷனும், 1886-ம் வர்ஷத்து மதராஸ் க்ராமக் கோர்ட்டு ஆக்டும் இடந்தருகின்றனவென்பதை கவர்ன்மெண்டார் பொது ஜனங்களுக்கும் ஜில்லா கலெக்டர்களுக்கும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஜில்லா அதிகாரிகள் கூடுமான இடங்களில் மேற்குறித்த இரண்டு சட்டங்களின் உபயோகத்தை அபிவ்ருத்தி செய்ய முயலவேண்டும்.

க்ராம முன்ஸிப்.—க்ராமப் பஞ்சாயத்துகளின் அபிவ்ருத்திக்கு ரொம்ப முக்யமானதாய் இன்னொரு விஷயமும் இருக்கிறது. அதாவது க்ராமமுன்ஸிப் உத்யோகத்துக்கு தக்க மனிதர்களை நியமிக்கவேண்டுமென்பதே. அதிகாரப் பிரிவினைக் கமிட்டியார், க்ராம உத்யோகஸ்தர்கள் நீதிதவறி நடக்கிறார்களென்பதையும் அவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்கப்படுவதில்லையென்று அநேகர் சொல்வதையும், மாகாண கவர்ன்மெண்டுகள் கவனிக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். க்ராமப்பஞ்சாயத்துகள் கடைத்தேறுவதென்பது க்ராமமுன்ஸிபினுடைய நிலைமையைப் பொறுத்திருக்கிறது. கமிட்டியார் சொன்ன விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ததில் க்ராமவாஸிகள் க்ராமமுன்ஸிபினிடம் நம்பிக்கைவைப்பதில்லையென்று தெரியவருகிறது. ஜனங்கள் க்ராமக் கோர்ட்டுகளை நாடாமலிருப்பதற்குக் காரணம், இப்போதுள்ள முறைப்படி

க்ராமமுன்ஸிபுகளைத் தெரிந்தெடுப்பதில், வேலைக்கு லாயக்குள்ளவர்கள் அவ்வேலைக்கு வருவதற்கில்லையென்பதே யென்று பலர்சொல்லுகிறார்கள். அநேக ஜில்லாக்களில் க்ராமமுன்ஸிப் உத்யோகத்துக்கு, முன்பு க்ராம முன்ஸிபாயிருந்தவர்களின் ஜேஷ்ட புத்ரர்களையே நியமிக்க வேண்டுமென்று கண்டிப்பான விதியிருப்பதால், டிவிஷனல் ஆபிஸர்கள் தக்க க்ராமவாஸிகளை க்ராம முன்ஸிபாக நியமிக்க முடிவதில்லை யென்று கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். க்ராம முன்ஸிப் நியமனத்தைப்பற்றிய சட்டத்தைத் திருத்துவதைப்பற்றி கவர்ன்மெண்டார் தனியாக ஆலோசித்து வருகிறார்கள். சிலர், தன் மதிப்புள்ள ஜனங்கள் அவ்வேலைக்குப் போவதில்லையென்றும், ஏனென்றால், க்ராமமுன்ஸிப் பல யஜமானர்களுக்கு ஸேவகம் செய்யவேண்டியிருக்கிறதென்றும், தாழ்ந்த ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் அவர்களை ரொம்ப தாழ்மையாக நடத்துகிறார்களென்றும், க்ராமமுன்ஸிப் என்ற பதவிக்கும், க்ராமப் பஞ்சாயத்தின் சேர்மன் என்ற பதவிக்கும் ஒத்ததாயிராத அநேக ஸாமான்ய வேலைகளையும் அவர் செய்யவேண்டியிருக்கிறதென்றும், சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டின் ப்ரதிநிதி யென்ற முறையிலும், வரி வஸூல் செய்பவர் என்ற முறையிலும் க்ராம முன்ஸிப் செய்யும் வேலைகளில் எதுவும் அவருடைய கௌரவத்தைக் குறைக்கக்கூடியதல்லவென்றும், ஆனால் கீழ்த்தர ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் க்ராம முன்ஸிபை சில ஸமயங்களில் சரியாய் நடத்துவதில்லை யென்பதும், அவர்கள் அவரை அனுவச்யமாக பற்பல வேலைகளைச் செய்யும்படி சொல்லுகிறார்களென்பதும் சற்று வாஸ்தவமாயிருக்கலாமென்றும் கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்கள். ஆகையால் அவர்கள் (கவர்ன்மெண்டார்) எல்லா ஜில்லா உத்யோகஸ்தர்களும் க்ராம முன்ஸிப் ஸம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் அவருடைய கௌரவத்தைக் குறைக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அவருடைய அந்தஸ்துக்கும் மதிப்புக்கும் குறைவுவரக் கூடியதாக எந்த வகையிலும் நடக்கக்கூடாதென்றும் வற்புறுத்துகிறார்கள்.

**பஞ்சாயத்தைப்பற்றி மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்காரின் அபிப்ராயம்.**—ஸமீபத்தில் வேலூரில் நடந்த வடஆற்காடு ஜில்லா கான்பரென்ஸில் சென்னை ஹைகோர்ட்டு வக்கீலாகிய மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தபோது மேலே விவரித்த பஞ்சாயத்துத் தீர்மானத்தைப் பற்றிப் பின் வருமாறு பேசினார்.

சென்னை கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் ப்ரசுரம்செய்த க்ராமப் பஞ்சாயத்துத் தீர்மானம் சில விஷயங்களில் த்ருப்திகரமாயில்லை. (1) எலெக்ஷன்களை முறைப்படி நடக்கவிடாமல், முறையின்றி நடத்துவது சரியல்ல. தாலூகா போர்ட்டு ப்ரெஸிடெண்டானவர் ஜனங்கள் யாரை பஞ்சாயத்து மெம்பர்களாக தெரிந்தெடுக்க விரும்புகிறார்களென்பதை, தமக்கு யுக்தமென்று தோன்றுகிறவிதத்தில் தெரிந்துகொள்ளலாமென்று ஏற்படுத்தினால், க்ராமப் பஞ்சாயத்து ஏற்படுத்துவதின் நோக்கமே கைகூடாமல்போகும். இதற்கு பதிலாக பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிந்தெடுக்க ஒரு ஸுலபமான முறை ஏற்படுத்துவது நல்லது.

2. ரொம்ப அத்யாவச்யமான ஸந்தர்ப்பங்களில்தான் ஜில்லாபோர்டார் க்ராமப் பஞ்சாயத்துகளின் வேலைகளில் தலையிட்டுக்கொள்ளலாமென்றும், இன்ன ஸந்தர்ப்பங்களில், இன்ன விதங்களில் ஜில்லா போர்டுகள் தலையிட்டுக் கொள்ளலாமென்றும் சட்டம் செய்யவேண்டும்.

3. யூனியன் பஞ்சாயத்துகளை 3000 ஜனமும் அதற்குமேலும் உள்ள க்ராமங்களில் மாத்ரம் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருப்பது க்ராமாந்தரங்களிலுள்ள ஜனங்களுக்குள் பொது ஜன வேலைகளில் தகுந்தபடி ஊக்க மேற்படுவ



தற்கு ஏற்றதாயில்லை. 1911-ம் வர்ஷத்து ஸென்ஸஸ் ரிபோர்ட்டால் சென்னை ராஜதானியில் பெரும்பாலார் க்ராமவாஸிகளென்று தெரிகிறது. கிழக்குக் கரை ஜில்லாக்களில் ஜனத்தொகையில் 1000-ல் 841-பேர்கள் க்ராமங்களில் வஸிக்கிறார்கள். இவர்களுள்ளும் பெரும்பான்மையோர் 500-முதல் 2000-வரையில் ஜனத்தொகையுள்ள க்ராமங்களில் வஸிக்கிறார்கள். கிழக்குக்கரை ப்ரதேசத்தின் மத்யபாகத்தில் பட்டணத்தில் வஸிப்பவர்களின் தொகை இன்னும் குறைவாயிருக்கிறது. க்ராமவாஸிகள் அநேகமாய் சிறுக்ராமங்களில்தான் வஸிக்க ப்ரியப்படுகிறார்கள். சென்னை ராஜதானியில் 2000 முதல் 5000 ஜனம்வரையில் உள்ள க்ராமங்கள் 1911-ம் வர்ஷத்தில் 3718-இருந்தன. 1000 முதல் 2000 ஜனம் வரையிலுள்ள க்ராமங்கள் 7947 இருந்தன. 100 அல்லது 2000 ஜனங்களும் அதற்கு மேலும் உள்ள க்ராமங்களுக்கு பஞ்சாயத்து ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லாமல், 3000 ஜனங்களும் அதற்கு மேலும் உள்ள க்ராமங்களுக்கு யூனியன் பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னதால், அதிகமான க்ராமங்கள் பஞ்சாயத்தால் ஏற்படக்கூடிய நன்மைகளை அடைவதற்கில்லை.

முறைப்படியல்லாத பஞ்சாயத்துகள் வ்ருத்தியடையுமா வென்பது உத்யோகஸ்தர்கள் இடைவிடாது அவைகளை ஆதரித்து மேற்பார்வை செய்வதைப் பொறுத்திருக்கிறது. தக்க ஆதரிப்பு இருந்தால் அவைகள் வ்ருத்தியடையமாட்டாவென்று சொல்லுவதற்கில்லை. இதில் ஒருமுக்ய ஆக்ஷேபணை யென்னவென்றால் ஜனங்கள் ஸ்வதாவாகச் சேர்ந்து ஸ்தாபிக்கும்பஞ்சாயத்துகளை டிவிஷனல் ஆபீஸரின் மேற்பார்வையில் விட்டிருப்பதே. அப்படிச் செய்வதற்கு பதிலாக ஜில்லா போர்டுமெம்பர்களில் சிலரை ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி அதன் மேற்பார்வையில் இவைகளை விடவேண்டும்.

## CULTIVATION OF MARUKOLUNDU.

BY. P. D. RATNAM PILLAI.

## மருக்கொழுந்து சாகுபடி.

**முன்னுரை.**—"மருக்கொழுந்து" என்பது ஒரு வாஸனைப் புல். இது ஆதிகாலந்தொட்டு நமது நாட்டில் வழங்கிவரும் பயிர்களில் ஒன்று. இதை நமது நாட்டு ஜனங்கள் அதிகமாக விரும்பி புஷ்பத்தைப்போல் உபயோகித்து வருகிறார்கள். நமது நாட்டுப் பெண்மணிகள் தலையில் அணிந்துகொள்ளுகிறார்கள். கடவுள் பூஜைக்கும் மிக உரித்தானது. ஆகையால் இது நமது நாட்டில் அதிகம் செலவாகிறது. இதனாலே இதை நாம் ஒரு வ்யாபாரப் பயிராகச் சொல்லலாம். நமது நாட்டில் விசேஷ தினங்களி உத்ஸவகாலங்களிலும் அதிகமாகச் செலவா இயல்புள்ளது இது தஞ்சைமாநகரிலும், கொள்ளிடக்கரைப் படுகையிலும் காவேரிப்படுகையிலும் அபரிமிதமாகப் பயிராகிறது. இவ்விடங்களில் அநுஸரிக்கப்படும் முறையை இங்கு விவரிப்போம்.

**மண்.**—பெருமணலுடன் வண்டல் படிந்த களிவாய் மண்ணும், தஞ்சைப் பக்கங்களிலுள்ள செம்பூரான் மண்ணும் மிக உரித்தானவை. களிவாய் ஸம்பந்தமில்லாத பெருமணலும் நடுத்தரமாக உள்ளது.

**பயிர்செய்யும் காலம்.**—ஆடி, தைமாஸங்களே மிகவும் அநுகூலமானவை.

**நில விஸ்தீரணம்.**—முப்பதுஸெண்டு நிலம் எடுத்துக்கொள்ளுவோம். நான்கு பக்கங்களையும் நன்றாக வேலியடைத்து ஆடு மாடு நுழையாத விதம் செய்யவேண்டியது முக்யம். பிறகு இந்த நிலத்தைக் குறுக்கும் நெடுக்குமாக உழுது, புல் பூண்டு முதலியவைகளை நீக்கி இரண்டு அடி ஆழம் நன்றாய்க் கொத்தி கல் முதலியவைகள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.

பிறகு ஒருவாரம் வரையில் நிலத்தைக் காற்றுட விடவேண்டும்.

**மருக்கோழுந்து விதை விடல்.**—இப்படிச் செய்நேர்த்திசெய்த நிலத்தில் ஒரு பக்கத்தில் மறுபடியும் கொத்தி வாங்கி இரண்டு அடி அகலம் மூன்று அடி நீளமுள்ளதாகப் பாத்திகள் கட்ட வேண்டும். பாத்தியை மேடுபள்ளமில்லாமல் ஸமனாக நிரவவேண்டும். நிரவின பிற்பாடு சின்னப்படியால் வீசம்படி விதையையெடுத்து ஸமனாகப் பாத்திகளில் விதைக்கவேண்டும். அதின்பேரில் பக்கத்திலுள்ள மண்ணை, கட்டியில்லாமல் நன்றாய்த்தூள்செய்து, விதைத்த விதை மறையும்படி தூவவேண்டும். பிறகு புகன்பேரில் மண் மறையும்படியாய் வைக்கோல் யெசுடவேண்டும். பிறகு தகரப்புனலினால் தண்யஜ்விடவேண்டும். குடத்தினால் மொண்டு யிற்றினால் மண் குழிபறிந்து விதைகள் ஒன்று சேர்ந்துவிடும். முளை காணும் வரையில் அதிக ஜாக்ரதையாகப் பார்த்து தண்ணீர் ஊற்றிக்கொண்டு வரவேண்டும். ஏழாம்நாள் முளை நன்றாய்க் காணும். முளைகண்ட பிறகு வைக்கோலை வெகு ஜாக்ரதையாக முளை முறியாமல் நீககவேண்டும். இதுவரையில் தினம் ஸாயரட்சையில் தண்ணீர் ஊற்றிவரவேண்டும். பதினைந்து நாள்களுக்குள் ஸுமார் இரண்டு அங்குல உயரம் கன்றுகள் வளர்ந்துவிடும். இதற்குள் நான்கு நாளைக்கு ஒருமுறை வீதம் பாத்திகளிலுள்ள புல்பூண்டு முதலியவைகளை நீக்க வேண்டும். இப்படி ஒருமாஸகாலமானவுடன் கன்றுகள் பிடுங்கி நடும்படியான பக்வத்தையடையும்

**கன்றுகளை நடுதல்.**—பக்வமானவுடன் முன் செய்நேர்த்தி செய்திருந்த நிலத்தை மறுபடியும் ஒருமுறை கொத்தி வாங்கி, புல்பூண்டு முதலியவைகளை முழுவதும் நீக்கி, சாணி எரு, வெளவால் புழுக்கை முதலியவைகளை அந்த நிலத்திவிட்டு, மறுபடியும் கொத்திவாங்கி மூன்று அடி அகலம் நான்கு அடி நீளமுள்ளவைகளாக பாத்திகள் கட்டவேண்டும். பாத்திகள் கட்டிமுடிந்த பிற்பாடு ஸாயரட்சை வேளையில் கன்றுகளைப் பிடுங்கி, வேரிலுள்ள மண்ணை நன்றாய் அலசி, நான்கு அங்குலத்திற்கு ஒரு கன்றுவீதம் ஓர் கூர்க்கழியினால் பூமியில் குத்தி அதில் வேர் அறுமல் வைக்கவேண்டும். இப்படி வைத்தான பிறகு தண்ணீர் கொஞ்சங் கொஞ்சமாய் ஊற்றிக்கொண்டு வரவேண்டும். இவ்வாறு கன்றுகள் வேர் ஊன்றி பசுமை நிறம் கொண்டவுடன் தண்ணீர் பாய்ச்சலாம். முதல் ஒருமாஸத்திற்கு நான்கு நாளைக்கு ஒருமுறையும் பிறகு ஆறு நாளைக்கு ஒருமுறையும் தண்ணீர் பாய்ச்சி வர வேண்டியது. ஆனால் மழையின்றிக் கடும்வெயில் எறிக்குங் காலத்தில் தண்ணீர் அதிகமாக இறைத்தும், மழைகாலத்தில் நிறுத்தியும் வர வேண்டியது முக்யம்.

**களையெடுத்தல்.**—பதினைந்து நாளைக்கு ஒருமுறை வீதம் களைக்கொட்டு (சிறு மண்வெட்டி) கொண்டு கன்றுகள் கெடாமல் கொத்திவாங்கி புல் பூண்டு முதலியவைகளை நீக்கவேண்டும். பிறகு ஒருமாஸத்துக்கு ஒருமுறை களையெடுத்தால் போதுமானது. களையெடுக்கும்போதெல்லாம் கூடியமட்டில் எருப்போட்டு வரவேண்டும்.

**கொழுந்துகிள்ளுதல்.**—கன்றுகள் நட்ட நாற்பத்தைந்து நாளைக்கெல்லாம் ஆறு அங்குலமுதல் 12 அங்குலம் வரையில் வளர்ந்து பக்கத்தில் போத்துகள் வெடித்துக்கொண்டு கப்புங்கிளையுமாக இருக்கும். இப்பொழுது கொழுந்துகளை பக்கத்துக் கிளைகளிலிருந்து கிள்ளி விற்பனைக்குக் கொண்டுபோகலாம். தினம் ஸுமார் பத்து சேர் கொழுந்துவீதம் கிள்ளலாம்.

**மருக்கோழுந்தின் விலை.**—சேர் ஒரு அணா முதல் 6 அணா வரையில் விற்கும். சராசரி இரண்டணா வைத்துக்கொண்டாலும் தினம் ஒன்றுக்கு ரூபா 1-4-0 க்கு மோசமில்லை. இப்படி ஆறுமாஸம் வரையில் கொழுந்து கிள்ளத்



தடையில்லை. மாஸம் ஒன்றுக்கு 37½ ரூபாய் வீதம் ஆறுமாஸத்திற்கு ரூ. 225-0-0 கிடைக்கும். ஆக இதுவொன்பது மாஸப் பயிர். மாஸம் 6 ரூ. வீதம் ஒரு தோட்டக்காரனை நியமித்தால் போதுமானது. 45 ரூ. தான் செலவாகும். இன்னும் சில்லரைச் செலவுக்காக ரூ. 20 வைத்துக்கொள்ளலாம் ஆக ரூ. 65 போக ரூ. 160 லாபமுள்ளது. சீட்டாட்டத்திலும் வீண் வம்புப் பேச்சிலும் காலங்கழிக்கும் நம் சோம்பேறி ஜனங்கள் இவ்விதப் பயிர்களைச் செய்து ஸுலபமாக பெருத்த லாபத்தை யடைந்து வயிறுறவுண்டுடுத்து காலங்கழிக்கலாம். தஞ்சாவூரில் அநேக ஜனங்கள் பூக்காரத்தெருவில் இந்தத் தொழிலைக்கொண்டு காலங்கழித்து வருகிறார்கள். இதைப் பின்பற்றி அநேக ஜனங்கள் இந்தத் தொழிலைச் செய்து லாபம் பெறுவார்கள் என்றே இந்த வ்யாஸத்தை எழுதலானேம்.

**விதையின் விலை.**—பட்டணம் படி 1-க்கு ரூ. 6 முதல் 12 வரையில் விற்கிறது.

பு. து. ரத்னம் பிள்ளை.

## DISTRICT CONFERENCES.

## ஜில்லா கான்பரேன்ஸுகள்.

### வட ஆற்காடு ஜில்லா கான்பரேன்ஸ்.

வடஆற்காடு ஜில்லா கான்பரன்ஸ் அக்டோபர் மாஸம் 23வ யன்று வேலூரில் கூடிற்று. கான்பரென்ஸினுடைய உபசரணைக் கமிட்டியின் சேர்மனுயிருந்த மிஸ்டர் வி. எல். கோவிந்தராஜ முதலியார் ப்ரதிநிதிகளை வரவேற்று ப்ரஸங்கம் செய்தபோது கவர்ன்மெண்டார் வேலூர் தாலூகா போர்டு ப்ரெஸிடெண்டு ஸ்தானத்துக்கும், வட ஆற்காடு ஜில்லா போர்டு வைஸ் ப்ரெஸிடெண்ட் ஸ்தானத்துக்கும் உத்யோகஸ்தரல்லாத கனவான்களை நியமித்திருப்பதைப் பற்றி ஸந்தோஷப்படுவதாகவும், கூடிய சீக்ரத்தில் அந்த ஸ்தானங்களுக்கு மெம்பர்களை தெரிந்தெடுக்க அதிகாரம் கொடுக்கும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்வதாகவும் சொன்னார்.

க்ராமங்கள்தான் இந்திய ஜன ஸமூக வாழ்க்கைக்கு அஸ்திவாரமா யிருப்பவை. இந்த விஷயத்தைப் பலர் மறந்துவிட்டார்கள். இதனால் நேர்ந்த பலன் என்னவென்றால் க்ராமங்களின் க்ஷேமத்தை கவனிக்காமல் பட்டணங்களின் ஸெளகர்யத்தையே யாவரும் கவனித்து வருகிறார்கள். பட்டணங்களை விசாலப்படுத்துவதற்கும், அவைகளின் ஸுகாதாரத்தை அபிவ்ருத்தி செய்வதற்கும், பட்டண வாஸிகளினுடைய வ்யாதி நிவாரணத்திற்கும் ஏராளமாகப் பணம் செலவழித்து வருகிறார்கள். க்ராமாந்தரங்களில் வாந்தியோ, ப்ளேகோ உண்டானால் தான் க்ராமவாஸிகளுக்கு ஸர்க்கார் வைத்ய உதவி கிடைத்துவருகிறது. மற்ற காலங்களில் அவர்களுக்கு ஸர்க்கார் வைத்ய உதவி என்பதே கிடையாது.

ஆனால் எல்லா க்ராமங்களிலும் மருந்துசாலை ஏற்படுத்துவதென்பது முடியாத கார்யம். தாலூகா ஹெட்க்வார்ட்டர் ஸ்தலங்களிலெல்லாம் ஒரு ஆஸ்பத்ரியோ மருந்துசாலையோ இருக்கிறது. ஆனால் அவைகள் எல்லா க்ராமங்களுக்கும் உபயோகப்படுவதில்லை. நமது ராஜதானியில் சில இடங்களில் ஊர் ஊராய்ப் போகும் மருந்துசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஊர் ஊராய்ப் போகும் வைத்யர் ஜனங்களுக்கு சற்று உபகாரம் செய்யலாமென்றாலும், அவர் அதிகமான ஜனங்களுக்கு வைத்யம் செய்யமுடியாது. ஆகையால், க்ராம ஜனங்களுக்கு வைத்ய உதவி கிடைக்கச் செய்வதற்காக, பெரிய க்ராமங்களில் மருந்து சாலைகள் ஸ்தாபித்து, அவைகளில், மருந்து சேர்க்கவும், ஸாமான்ய வ்யாதிகளுக்கு வைத்யம் செய்யவும், திடீரென்று நோய் கண்டால் பெரிய வைத்யர்கள் வருவதற்குமுன் ப்ரதம உதவி செய்யவும் தெரிந்திருக்கும் வைத்யர்களை நியமித்து, அந்

மருந்துச் சாலைகளை ஜில்லா வைத்ய அதிகாரிகளின் மேற்பார்வையில் விட்டுவைக்கவேண்டும். இந்த சிறு வைத்யசாலைகளை நிர்வகிப்பதற்கு அதிக செலவு ஏற்படாது.

இன்னும் மிஸ்டர் முதலியார் மூலாதாரக் கல்வியை இலவசமாகவும் கட்டாயப்படுத்தியும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், க்ராமப் பஞ்சாயத்துகளுக்கு சிறு ஸிவில் க்ரிமினல் கேஸ்களை விசாரிக்க அதிகாரம் கொடுக்க வேண்டுமென்றும், சொன்னார்.

ப்ரெஸிடெண்டின் ப்ரஸங்கம்.—சென்னை வக்கீலாகிய மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அதில் ராஜாங்கச் சீர்திருத்தத்தைப் பற்றிய பாகத்தின் ஸாராம்சம் பின்வருமாறு.

ராஜாங்கச் சீர்திருத்தம்.—இந்த யுத்தம் முடிந்தபிறகு, இந்தியாவின் அரசாட்சி முறையை ஸ்வய ஆட்சியுள்ள குடியேற்ற நாடுகளின் அரசாட்சி முறைக்குக் கிட்டத்தட்ட சரியாயிருக்கும்படி மாற்றுவதற்காக இந்திய ராஜாங்க அமைப்பில் சில சீர் திருத்தங்கள் செய்யப்படுமென்று இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாரும் எண்ணிவருகிறார்கள். ஜாதிகளுக்குள் ஒன்றுக்கொன்று விரோதம் ஏற்படும்படியாகவும், இந்தியர்கள் யுத்தத்தில் மனமொப்பிச் சேர்ந்து உதவி வருவதைக் குறைக்கும்படியாகவும் உள்ள எந்த விதமான வாதங்களையும் இப்போது கவனிப்பதற்கில்லை. ஆனால் சீர் திருத்தம் செய்வதற்குக் காலம் வரும்போது நமக்கு இன்னின்ன சீர் திருத்தங்கள் வேண்டுமென்பதைத் தெரிவிக்க, அதற்கு முன்னாலேயே அவைகளைப்பற்றி ஸாவதானமாய் கவனித்து வரவேண்டியது அவச்யமாகும். சீர் திருத்தங்கள் விஷயத்தில் நமக்கு முக்யமாய் 3-விஷயங்கள் அவச்யமென்று எல்லாரும் ஒப்புக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. அவையாவன.—(1) லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் மெம்பர்கள் எல்லாரும் தெரிந்தெடுக்கப் பட்டவர்களாக இருக்கவேண்டும், நிர்வாக ஸபை மெம்பர்களும் அதில் மெம்பர்களாக இருக்கவேண்டும். (2) நிர்வாக ஸபைகளில் பாதிப்பேர்கள் இந்தியர்களாக இருக்கவேண்டும் (3) வரிபோடுதல், செலவு செய்தல் ஆகிய இவைகளைப்பற்றிய விஷயங்களை சில அவச்யமான நிபந்தனைகளுடன் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களுக்கு விட்டுவிட வேண்டும். இந்த மூன்று விஷயங்கள் இருந்தால்தான் ஜனங்கள் ராஜாங்க விஷயத்தில் அபிவ்ருத்தியடைய முடியும். அரசாட்சி சீர்திருத்த விஷயத்தைப்பற்றி பம்பாயில் நடக்கப்போகிற காங்க்ரெஸ் ஸபை கவனிக்க வேண்டியது அவச்யம். க்ராமப் பஞ்சாயத்துகளைப் பற்றி அவர் பேசியதை க்ராமப் பஞ்சாயத்துகள் என்ற வ்யாஸத்தின் கீழ் ப்ரசுரித்திருக்கிறோம்.

தீர்மானங்கள்: இந்தக் கான்பரென்ஸில், (வட ஆற்காடு) செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்கள் பின்வருமாறு. (30 வர்ஷங்களுக்கொருதடவை) நிலவரி ஸெட்டில் மெண்ட் செய்வது குடிகளின் க்ஷேமத்துக்கு ஏற்றதாயில்லை. தேசம் பூராவும் பொருளாதார நிலைமையை அபிவ்ருத்தி செய்வதற்கு நிலவரியை சாச்வதமாகச் செய்யவேண்டியது அவச்யமாகும். இந்த ஜில்லாவின் 5 தாலுக்களுக்கு ஸமீபத்தில் ஸெட்டில் மெண்ட் செய்ததில் ஜனங்களுக்கு ரொம்ப பாதகமேற்பட்டிருக்கிறது.

நிலவரி வஜா செய்வதற்கான ரூல்கள் ரொம்ப நிர்ப்பந்தமானவைகளாக இருக்கின்றன. அவைகளை அமுலுக்குக் கொண்டுவருவதில் அதிகாரிகள் தாராள சிந்தையோடு இருப்பதில்லை. ரெமிஷன் (தீர்வை வஜா) கொடுக்கும் விஷயத்தில், ஸாதாரணமாய் கிடைக்கும் மாஸூலில் 3-ல் ஒரு பாகத்துக்கும் குறைவாக ஒரு வயலில் மாஸூல் கிடைத்தால் பயிர் முற்றிலும் சாவியாய்ப்போனதாகக் கொள்ளவேண்டும்,



ரிஸர்வ் காடுகளிலிருந்தும், ரிஸர்வாயில்லாத காடுகளிலிருந்தும் குடிகள் எருவுக்குத் தழை வெட்டிக்கொள்வதற்கும், குடும்ப உபயோகத்துக்கும் விவஸாயக் கருவிகள் செய்வதற்கும் அந்தக் காடுகளிலிருந்து விறகு, மரம் முதலியவை வெட்டிக்கொள்வதற்கும் கவர்ன்மெண்டார் ந்யாயமாய் வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கவேண்டும். இந்த ஜில்லாவில் கால்நடைகள் மேய்வதற்கு ஸௌகர்யங்கள் இல்லாததால், க்ராமங்கள் ஓரமாயிருக்கும் ரிஸர்வ் காடுகளில் அந்தக் காடுகள் அழிந்துபோகாமலிருப்பதற்கு வேண்டிய நிபந்தனைகளுடன் கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

முனிஸிபாலிடிகள் யூனியன் பஞ்சாயத்துகள் ஆகிய இவைகளின் ஆதீனத்துக்குள்பட்ட ப்ரதேசங்களில் மூலதாரக்கல்வியை இலவசமாகக் கற்றுக் கொடுக்கவேண்டும். நெசவுத்தொழிலும், உலோக வேலையும் கற்றுக்கொடுப்பதற்காக கவர்ன்மெண்டார் இந்த ஜில்லாவில் ஒரு டெக்னிகல் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கவேண்டும்.

## கர்நூல் ஜில்லா கான்பரென்ஸ்.

கர்நூல் ஜில்லா கான்பரென்ஸ் இந்த மாஸம் 23-ந்தேதியன்று கூடிற்று. அந்தக் கான்பரென்ஸினுடைய உபசரிப்புக் கமிட்டியின் சேர்மனாகிய மிஸ்டர் டி. ஸுப்பராவ், மூலாதாரப்படிப்பை அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றும், சிறுவர்களுக்குக் கல்விகற்பிக்க முயற்சிசெய்வதோடு வயதானவர்களுக்கும் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், கர்நூல் ஜில்லாவில் நூற்றுக்கு 51-பேர்கள் பகல் வேளையில் வேலை செய்யவேண்டியிருப்பதால் அவர்கள் பகல் பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியாதென்றும், அவர்களுக்காக ராத்ரிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து அவர்களுக்கு கல்வி கற்பிக்கவேண்டுமென்றும் ஆரம்பத்தில் 2000-ஜனங்களும் அதற்கு மேலும் உள்ள க்ராமங்கள் ஒவ்வொன்றிலும் ராத்ரிபாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், சொன்னார்.

ப்ரெஸிடெண்டின் ப்ரஸங்கம்.—ஆனரபிள் ராவ்பகதூர் பி. என். சர்மா கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர், இந்தியர்களை ராணுவத்தில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் கைத்தொழில்களை அபிவ்ருத்திசெய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும், ராஜதானியில் இன்னும் சில ஸர்வகலாசாலைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொன்னார்.

இன்னும், யுத்த ஸந்தர்ப்பமென்று இந்திய அரசாட்சி முறையைப்பற்றிய விஷயங்களை கவனிக்காமலிருக்கக் கூடாதென்றும், ஸமீபத்தில் இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று சிலர் இந்தியா மந்த்ரியைக் கேட்டபோது, அவர் இந்தியர்களுக்கே அதுவிஷயத்தில் ஆவல் இல்லையெனவும், இந்தியர்கள் அவ்விஷயத்தைப்பற்றி கவர்ன்மெண்டாரை ஒன்றும் கேட்கவில்லையெனவும் சொன்னாரென்றும், ஆகையால் நமக்கு இன்னின்ன சீர்திருத்தங்கள் அவச்யம் வேண்டியவை என்று இப்போதே தீரயோசித்து, கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்காவிட்டால், யுத்தத்துக்குப் பிறகு கவர்ன்மெண்டார் இந்தியாவின் அரசாட்சி முறையையும் இந்தியாவுக்கும் மற்ற ப்ரிட்டிஷ் நாடுகளுக்கும் உள்ள ஸம்பந்தங்களையும் சீர்திருத்த ஆலோசிக்கும்போது, பெண் கல்வி விஷயமாய் இந்தியா மந்த்ரி பதில் சொன்னதுபோல் கவர்ன்மெண்டார், இந்தியர்கள் இவைகள் விஷயமாய் ஆவலுள்ளவர்களாகத் தெரியவில்லையென்று சொல்லுவார்களென்றும் சொன்னார்.

தீர்மானங்கள்.—இந்த ஜில்லா கான்பரென்

ஸில் செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்களாவன:

ரயத்துவாரி நிலங்களுக்குத் தீர்வையை சாச்வதத் தீர்வையாக ஏற்படுத்தவேண்டும். ஜில்லாவின்ஜனங்கள் ஏழையாயிருப்பதை உத்தேசித்து நிலஸெஸ்ஸை உயர்த்தாம லிருக்கவேண்டும்.

நந்தியால், மார்க்காபூர் தாலுகா போர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாதவர்களை ப்ரெஸிடெண்டுகளாக நியமிக்கவேண்டும். நந்தியால் முனிஸிபல் கௌன்ஸிலுக்கும் ஜில்லாவிலுள்ள யூனியன்களுக்கும் சேர்மனைத் தெரிந்தெடுக்கும் அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். ஜில்லா போர்டுகளிலும் தாலுகாபோர்டுகளிலும் உத்யோகஸ்தர்கள் மெம்பராக வருவதைத் தடுக்கவேண்டும். அதிகாரப்பிரிவினைக் கமிஷனுடைய அபிப்ராயத்தை அனுஸரித்து க்ராமப் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும். 2500-ஜனங்களும் அதற்கதிகமும் உள்ள க்ராமங்களில் வைத்யசாலைகள் ஏற்படுத்தவேண்டும்.

ஜில்லாவில் பையன்கள் பெண்கள் இவர்களுக்கான எலிமெண்டரி பாடசாலைகள் இன்னும் அதிகமாக ஸ்தாபிக்கவேண்டும். மாணவர்களுக்கு இலவசமாய் கல்விகற்றுக்கொடுக்கவேண்டும். க்ராமங்களில் புஸ்தகசாலைகளும், பத்திரிகா வாசகசாலைகளும் ஏற்படுத்தவேண்டும். இவைகளுக்கு லோகல் போர்டுகள் பணங்கொடுத்துதவும்படி அவைகளுக்கு கவர்ன்மெண்டார் அதிகாரம்கொடுக்கவேண்டும்.

## தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸ்.

இந்தக் கான்பரென்ஸ் இந்த மாஸம் 23-ந்தேதியன்று மாயவரத்தில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் பி. வி. நரஸிம்மய்யர் அதற்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்யவேண்டுமென்று இந்தியர்கள் கேட்கும் சீர்திருத்தங்கள் இன்னின்னவென்பதைப் பற்றியும் ஸ்தல ஸ்வய ஆட்சியைப் பற்றியும் சொன்னவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

**ராஜாங்க சீர் திருத்தங்கள்.**—ப்ரிட்டிஷ் ப்ரதம மந்த்ரியும், ராஜப்ரதிநிதியும், இனிமேல் இந்தியாவானது ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தில் ஸமபாத்யதையுள்ள பாகமாக இருக்க ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஏகாதிபத்யத்தில் ஒரு பாகமாயிருப்பதென்றால் என்ன ஸ்வதந்தரங்கள் நமக்கு வேண்டுமென்பதை இந்தியர்கள் வெளியிடவேண்டும். சில்லரை விஷயங்களில் இந்தியர்களுக்குள் அபிப்ராய பேதமிருந்த போதிலும், முக்யமான விஷயங்களில் இந்தியர்களெல்லாரும் ஏகோபித்த அபிப்ராய முடையவர்களாக இருப்பார்களென்று சொல்லலாம். நாம் இன்ன ஸ்வதந்தரங்கள் வேண்டுமென்கிறோமென்பது ப்ரிட்டிஷ் ராஜதந்த்ரிகளுக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம். இந்தியாவானது ஏகாதிபத்யத்தில் ஒரு கீழ்ப்பட்ட நாடாயிராமல் ஏகாதிபத்யத்தைச் சேர்ந்த மற்றவைகளைப்போல் ஸமபாத்யதையுள்ள நாடாக இருக்கவேண்டும். அதாவது காங்க்ரெஸ் ஸபை பலவர்ஷங்களாகச் சொல்லி வருவதுபோல், குடியேற்ற நாடுகளுக்குள்ள ஸ்வய ஆட்சி இந்தியாவுக்கும் இருக்கவேண்டும். உள்நாட்டு வ்யவஹாரங்கள் ஸம்பந்தப்பட்ட மட்டில் நமக்கு ஹோம் ரூல் அதாவது ஸ்வய ஆட்சி வேண்டும். அன்ய தேச வ்யவஹாரங்களில் இந்தியாவானது க்ரேட்ப்ரிட்டனுடனும் குடியேற்ற நாடுகளுடனும் சேர்ந்துகொள்ளவேண்டும். இவ்விதம் இந்தியாவுக்கு மற்ற ப்ரிட்டிஷ் நாடுகளுடன் ஸமத்வமும், ந்யாயமும் கொடுத்தால்தான், இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் மற்ற பாகங்களுக்கும் சாச்வதமான கூட்டுறவு ஏற்படக்கூடும். இவைகள்தான் முக்யமான பெரிய விஷயங்கள்.

இவ்விதம் ஸ்வயஆட்சி வேண்டுமென்றால் இன்னின்ன சீர்திருத்தங்கள், வேண்டுமென்



பதை விரிவாய்ச் சொல்வோம். இந்தியா மந்த்ரி ஸபையை நீக்கிவிடாமல் இன்னும் அப்படியே வைத்திருப்பதானால், அதையும், நிர்வாக ஸபைகளையும், சட்டநிரூபண ஸபைகளையும், இந்தியன் ஸிவில் ஸர்விஸ் ஏற்பாட்டையும் சீர்திருத்தவேண்டும். ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷை தேறியவர்களுக்கென்று தனியாய் விட்டிருக்கும் உத்யோகங்களுக்கு இந்தியர்களை நியமிக்கவேண்டும். சட்ட நிரூபண ஸபைக்கு ஸ்வயாதீனம் கொடுக்கவேண்டும். அவைகளிலுள்ள மெம்பர்களின் தொகையை இருமடங்காக்கவேண்டும். அந்த ஸபைகளில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், மெஜாரிடியாக, அதாவது நியமிக்கப்பட்டவர்களைவிட அதிகமாக, இருக்கும்படி செய்யவேண்டும். எல்லா சட்ட ஸபைகளிலும் ஜனப்ரதிநிதிகளுக்கு வாஸ்தவத்தில் அதிகாரமும், பொறுப்பும் இருக்கும்படி செய்யவேண்டும்.

**ஸ்தல ஸ்வய ஆட்சி.**—இந்தியாவில் முன்பு வைஸ்ராயாயிருந்த லார்ட் ரிப்பன் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி ஒரு தீர்மானம் வெளியிட்டு, அது ஸம்பந்தமாக லோகல் போர்ட்ஸ் ஆக்ட் என்று ஒரு சட்டமும் செய்து ஸுமார் 30-வர்ஷத்துக்கு மேலாகியும், அந்தத் தீர்மானத்தின் நோக்கமும், ஆக்டிலுள்ள நல்ல நிபந்தனைகளும் யாதொரு ப்ரயோஜனமும் செய்யாமல்போயின. லோகல் போர்ட்ஸ் ஆக்டின்படி ஜில்லாபோர்டுகளுக்கு உத்யோகஸ்தரல்லாதவர்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்கலாம்; அல்லது தெரிந்தெடுக்கலாம். ஆனால் இதுவரையில் எந்த ஜில்லாபோர்டுக்கும் உத்யோகஸ்தரல்லாத கனவானை ப்ரெஸிடெண்டாக நியமித்ததும், தெரிந்தெடுத்ததும் கிடையாது. ஆனால், தற்போதைய நிலைமையில் கலெக்டரே ஜில்லா போர்டின் ப்ரெஸிடெண்டாக இருக்கவேண்டியது அவச்யமென்று அதிகாரப்பிரிவினைக் கமிட்டியாரும், கவர்ன்மெண்டாரும் அபிப்ராயப்படுகிறார்கள். அதற்குப் பின்வரும் காரணத்தை சொல்லுகிறார்கள். கலெக்டரை ஜில்லாபோர்டு ப்ரெஸிடெண்டாக நியமிக்காவிட்டால் ஜில்லாவின் பொதுக்கார்யங்களாகிய ரஸ்தாக்கள், கல்வி, ஸுகாதாரம், வடிகால், ஜலவஸதி முதலியவைகளில் அவருக்கு யாதொரு ஸம்பந்தமும் இல்லாமல் போகுமென்கிறார்கள். இன்னும் அவருக்கு கல்வியறிவுள்ள உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் என்ன சொல்கிறார்கள் என்பது தெரியாமல் போகுமாம். முதலாவது கலெக்டர்கள் ஜில்லா போர்டு ப்ரெஸிடெண்டாக இருப்பதால் எவ்வளவு தூரம் உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களுடன் கலந்துகொள்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். ஜில்லா போர்டார் மாஸாந்தர மீட்டிங்கு நடக்கும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் லோகல்பண்ட் விஷயங்களைப் பற்றி மாத்ரம் ப்ரஸ்தாபிக்கிறார்கள். ஸாதாரணமாய் மற்ற விஷயங்களைப்பற்றி ஒன்றும் பேசுவதில்லை. அப்படிக்கில்லாமல், பட்டணங்களிலும் க்ராமங்களிலுமுள்ள கனவான்கள் தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கலாமென்றும், அவர்களைத் தாம் மரியாதையாய் நடத்துவாரென்றும் கலெக்டர் சொன்னால், அவர் உத்யோகஸ்தரல்லாத கனவான்களுடைய அபிப்ராயங்களை அறிந்துகொள்வதற்கு ரொம்ப ஸாதகமேற்படும். ரயத்துகளைக் கான்பரென்ஸில் கூட்டி அவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்பதாலும் இன்னும் ரொம்ப ப்ரயோஜனம் ஏற்படும். கலெக்டர்களுக்கு லோகல்பண்ட் விஷயங்களில் சற்றுப் பயிற்சியும் அனுபோகமும் ஏற்படவேண்டுமென்பதை வைத்துக்கொண்டு, ஜனங்களுக்கு ஸ்தல ஸ்வய ஆட்சியில் பயிற்சி கொடுக்காமலிருப்பது சரியல்ல. ஜில்லா கலெக்டர் ஜில்லா போர்டின் ப்ரெஸிடெண்டாகஇருப்பதனால்தான் அநேக ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஜில்லா போர்டுகளில் மெம்பர்களாவதற்கு ப்ரயத்தனப்பட்டு, உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களோடு போட்டியாய் நின்று, அவர்களுக்கு மெம்பர்

ஸ்தானங்கள் கிடைக்காமல் செய்து, தாங்களே அந்த ஸ்தானங்களை அடைகிறார்கள். ஜில்லாவினுடைய ஸ்தல ஸ்வய ஆட்சிக்கு ஒரு உத்யோகஸ்தரல்லாத கனவான் தலைவராக இருந்தால், ஸ்தல ஸ்வய ஆட்சி வேலைகளெல்லாவற்றையும் உத்யோகஸ்தரல்லாதவர்களைக்கொண்டே நடத்த ஜனங்கள் முயற்சிசெய்வார்கள். கவர்ன்மெண்டார் முனிஸிபாலிடிகளின் வர்ஷாந்தர நிர்வாக ரிபோர்ட்டை தாராளமாய் விமர்சனம் செய்து தங்களுடைய அபிப்ராயங்களைத் தெரிவிக்கிறார்கள். ஜில்லா போர்டுகளுக்குக் கலெக்டர்கள் ப்ரெஸிடெண்டாக இருப்பதால் அவைகளினுடைய ரிபோர்ட்டுகளை வெகுவாய் கண்டித்து அபிப்ராயம் கொடுப்பதில்லை.

ஜில்லா போர்டுகளுக்கு ப்ரெஸிடெண்டாக இருப்பதற்கு உத்யோகஸ்தரல்லாத தகுந்த கனவான்கள் கிடைக்கமாட்டார்கள் என்று கவர்ன்மெண்டார் இனிமேலும் சொல்வார்களானால் அது சரியல்ல. முனிஸிபாலிடிகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும் தக்க உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் சேர்மன்களாகக் கிடைக்கும்போது ஜில்லா போர்டுகளுக்கு மாத்ரம் தக்க கனவான்கள் கிடைக்காமல் போவானேன்? ராஜப்ரதிநிதியின் நிர்வாக ஸபைக்கும், மாகாணங்களின் நிர்வாக ஸபைகளுக்கும், இந்தியா மந்த்ரியின் ஸபைக்கும் தக்க கனவான்கள் கிடைக்கும்போது ஜில்லாபோர்டு ப்ரெஸிடெண்டு ஸ்தானத்துக்குத்தானா உத்யோகஸ்தரல்லாத கனவான்கள் கிடைப்பது கஷ்டம்? தகுந்த கனவான்கள் கிடைப்பதில்லையென்பது கொஞ்சங்கூட சரியல்ல. கவர்ன்மெண்டார் கமிஷனுடைய மற்ற சிபார்சுகளில் சிலவற்றை ஏற்றுக் கொள்ளாமலிருந்ததுபோல, ஜில்லாபோர்டுகளுக்கு ப்ரெஸிடெண்டு நியமிக்கும் விஷயத்திலும் அவர்களுடைய அபிப்ராயத்தை ஏற்றுக்கொள்ளாமல் உத்யோகஸ்தரல்லாத கனவான்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்க வேண்டும்.

**தீர்மானங்கள்.**—இந்தக் கான்பரென்ஸில் (தஞ்சாவூர்) செய்யப்பட்ட முக்யமான தீர்மானங்கள் சுருக்கமாய்ப் பின்வருமாறு.

ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ப்ரதிநிதி இருக்கும்படி சட்டஸபை மெம்பர்களின் தொகையை அதிகப்படுத்தவேண்டும்; நிலவரியை ஒரு குறிப்பிட்ட காலத்துக் கொருதடவை உயர்த்தாமல் சாச்வதமாக்கவேண்டும். பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். தேசத்தின் கைத்தொழில்களை அபிவ்ருத்திசெய்ய முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டும். நாகப்பட்டணத்தில் ஒரு டெக்னிகல் பாடசாலை ஏற்படுத்தவேண்டும். காங்க்ரெஸைச் சேர்ந்த மிதவாதிகள் அமிதவாதிகள் என்னும் இரண்டு கக்ஷியாரும் ஒன்றுசேர வேண்டும். மிஸ்ஸஸ் பெஸண்ட் இந்திய ஸ்வய ஆட்சியைப்பற்றி ப்ரஸ்தாபித்துவரும் ப்ரேரணையை கான்பரென்ஸ் ஆதரிக்கிறது; கவர்ன்மெண்டார் 500 ஜனங்களும் அதற்குமேலும் உள்ள க்ராமங்களில் யூனியன் பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டும்.'

## THE ART OF DECEPTION IN WAR.

## யுத்தத்தில் எதிரிகளை ஏமாற்றுதல்.

உலகத்திலுள்ள ப்ராணிகளில் அநேகமாய் எல்லாவற்றிற்கும், அவைகளை சத்ருக்கள் அறிந்துகொள்ளாமலிருப்பதற்காக, இயற்கையிலேயே, வர்ணங்கள் முதலிய பல ஸாதனங்கள் அமைந்திருக்கின்றன. இவைகளைப்பற்றி சென்ற ஜனவரிமாஸத்து 'ஜனோபிமானி'யில் விரிவாய் எழுதியிருக்கிறோம்.

அமெரிக்காவிலுள்ள 'கல்லிமா' என்ற ஒரு ஜாதி வண்ணாத்திப் பூச்சிக்கு மேல்பாகமெல்லாம் இலைபோன்ற வர்ணமாயிருக்கிறதாம். இலையிலுள்ளனவற்றைப்போல் நரம்புகளும் அதில் காணப்படுகின்றனவாம். அதோடு இலையில் ஏதாவது ஒரு பாகம் அழுகியோ பூச்சியரித்தோ



போயிருந்தால் இலை எப்படியிருக்குமோ, அப்படியே சாணும்படிக்கும் வண்ணாத்திப் பூச்சியின் மேல் பாகம் காணப்படுமாம். இதனால் அந்தப் பூச்சி தனது சிறகுகளை மடக்கி மரத்தினுடைய ஒரு கிளையின் தண்டில் உட்கார்ந்தால், பார்ப்பவர்களுக்கு அது ஒரு இலைபோலவே இருக்குமாம். மற்ற இலைகளுக்கும் இந்தப் பூச்சிக்கும் யாதொரு வித்யாஸமும் தெரியாதாம். இதுபோலவே இலையைத் தின்னும் இன்னொருஜாதி பூச்சி இலைகளுக்கு நடுவில் உட்கார்ந்திருக்கும்போது, அது ஒரு சிறு கிளைபோலவே தோன்றுகிறதாம். சில பக்ஷிகளுக்கு மரத்தினுடைய பட்டைகளைப்போல் வர்ணமிருப்பதால், அவைகள் மரத்தில் உட்கார்ந்திருக்கும்போது பக்ஷி வேட்டைக்காரர்களுக்கு அவையிருப்பது தெரிவதில்லையாம். இன்னும் சில ப்ராணிகள் பருவ காலத்துக்குத் தகுந்தபடி நிறம் மாறுகின்றன. வடக்கு த்ருவத்திலுள்ள ப்ராணிகளில் அநேகமாய் எல்லாம் பனி காலம் வரும்போது பழுப்பு நிறத்திலிருந்து முற்றிலும் வெண்மை நிறமாக மாறுகின்றன. அப்படி மாறுவதால் அந்த ம்ருகங்களுக்கும் பனிக்கட்டிக்கும் வித்யாஸமில்லாமல் போய், அவையிருப்பது மற்ற ப்ராணிகளுக்காவது, மனிதர்களுக்காவது தெரியாமலிருக்கும். மீன்களில் சில ஜாதிகள் காலத்திற்கேற்றவாறு தங்களுடைய தேக வர்ணத்தை மாற்றிக்கொள்வதேயல்லாமல், கடலின் அடித்தரையின் தன்மைக் கேற்றவாறும் மாற்றிக் கொள்ளுகின்றனவாம்.

இந்த விஷயங்களை அறிந்த மனித ஜாதியாரும் ஆதிகாலந்தொட்டு தங்களுடைய ஸௌகர்யத்துக்குத் தக்கவாறு வேஷம் போட்டுவந்திருக்கிறார்கள். முன்காலத்தில் வேடர்கள் பசுமையான ஆடைகள் தரித்து தாங்கள் இருப்பது ம்ருகங்களுக்கு தெரியாதபடி செய்துகொண்டு வேட்டைக்குப் போய்வந்தார்கள். ஆப்ரிக்காவைச் சேர்ந்த காங்கோ என்னும் ப்ரதேசத்திலுள்ள ஒரு பூர்வீக ஜாதியார், தாங்கள் இருப்பது மற்ற ஜனங்களுக்குத் தெரியாமலிருப்பதற்காக மந்தமான சிவப்பு வர்ணங்களைக் கோடுகளாகப் பூசிக் கொள்ளுகிறார்களென்று சென்ற ஆகஸ்ட்டு மாஸத்து ஜனோபிமானியில் (661-ம் பக்கம்) தெரிவித்தோம். இப்படிப்பிறரை ஏமாற்றுவது ஸமாதான காலங்களிலேயன்றி, யுத்த காலங்களிலும் ஆதிகாலந்தொட்டு ஸகஜமாயிருந்து வந்திருக்கிறது. மேலும் தற்காலத்தில் ஏரோப்ளேனும் ஆகாயக் கப்பல்களும் யுத்த ஸாதனங்களாக ரொம்பவும் உபயோகத்துக்கு வரவே, எதிரிகளை ஏமாற்றுவதென்பது அத்யாவச்யமாய் விட்டது. இன்னும் தற்காலம் தூரத்ருஷ்டிக் கண்ணாடியால் வெகு தூரத்திலுள்ளவைகளை மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடுமாகையாலும், யுத்தம் செய்பவர்கள் தங்களையும் தங்களுடைய யுத்தக் கருவிகளையும் ரொம்ப ஸாமர்த்யமாய் மறைத்து கொள்ளவேண்டியது அவச்யமாகிறது.

போயர் யுத்தத்தில்தான் எதிரிகளுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்வதென்பது ஒரு ஏற்பாடாக ஆரம்பமாயிற்று. அப்போதுதான் முதல் முதலாக காக்கியென்னும் பழுப்பு நிறமான உடை உபயோகத்துக்கு வரலாயிற்று. அதற்குப் பிறகு ராணுவ அதிகாரிகள் பசுமை கலந்த பழுப்பு நிறமுள்ள உடைகளையும், லேசான பழுப்பு நிறமுள்ள உடைகளையும் உபயோகத்துக்குக் கொண்டுவரலானார்கள். இந்த மாதிரி உடைகளைத் தரித்திருக்கும் வீரர்களை எதிரிகள் கண்டுபிடிப்பது ச்ரமம். ரொம்ப பகட்டான வர்ணங்களுள்ள உடைகள் வெகுவாய் உபயோகத்திலில்லை. அதிலும் முக்யமாய் போர்க்களத்தில் உபயோகிப்பது ரொம்பவும் அபூர்வம்.

ஜெர்மானியர்களும் ஆஸ்ட்ரியர்களும் பகட்டான நிறங்களுள்ள உடைகளை விட்டுவிட்டு, அதிகமாய்எடுத்துக்காட்டாத சாம்பல் நிறமான

உடைகளைத் தரித்துக்கொள்கிறார்கள். அதோடு தங்களுடைய தலைகளுக்குப் போட்டுக்கொள்ளும் தொப்பி போன்ற கவசத்திலுள்ள பொத்தான்களையும், உலோகத்தால் செய்த விருதுகளையும் மறைத்துக் கொள்வதில் ரொம்ப கவனமாயிருக்கிறார்களாம்.

ப்ரெஞ்ச் ஸைன்யம் ஒன்றுதான் பழைய காலத்து உடைகளை உபயோகித்து வருகிறது. ப்ரெஞ்ச் குதிரைப்படைகளில் சில இன்னும் மார்புக் கவசங்களையும், பக்ஷி இறகுகள் அமைத்த தலைக்கவசங்களையும் உபயோகித்து வருகின்றன. சில ப்ரெஞ்ச் துருப்புகள் இன்னும் சிவப்பு கால் சட்டைகளை அணிந்துவருகின்றன.

ஜெர்மனியிலும் ஆஸ்ட்ரியாவிலு முள்ள ராணுவ அதிகாரிகள் பனிக்காலம் வந்தவுடன், ஸோல்ஜர்களி னுடைகளை அந்தக்காலத்தின் தன்மைக்கேற்றபடி மாற்றிவிடுகிறார்கள். ஆஸ்ட்ரியா மலைப்ரதேசங்களில் குளிர்காலத்தில் தரையெல்லாம் பனிக்கட்டியாக இருக்குமாததால், பனிக்கட்டிக்கும் ஸோல்ஜர்களுடைய உடைக்கும் நிறத்தில் யாதொரு வித்யாஸமும் இல்லாமலிருக்கும்படிக்கும், அதனால் அவர்கள் இருப்பது எதிரிகளுக்குத் தெரியாமலிருக்கும்படிக்கும், ஸோல்ஜர்களுக்கு வெண்மையான உடைகள் கொடுக்கிறார்கள்.

இவ்விதம் போர்வீரர்களை எதிரிகளின் கண்ணுக்குத் தென்படாமல் செய்வதோடு, யுத்தக் கருவிகளையும் பற்பல வழிகளில் எதிரிகளுக்குத் தெரியாதபடி மறைக்கிறார்கள். ரஷ்யோ—ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியர்கள் தங்களுடைய ஸாமான் வண்டிகளை எதிரிகள் தூரத்ருஷ்டிக்கண்ணாடியால் பார்த்து விடாதபடி, அவைகளின் மேல் இலை யடர்ந்த கிளைகளை சாதுர்யமாய்ப் போட்டு வைத்தார்கள். அந்த வண்டிகளை தூரத்திலிருந்து பார்த்தால் அவைகள் ஒன்றுக்கொன்று தூரமாயுள்ள மரவரிசைகளென்று தோன்றும்.

இந்த யுத்தத்தில் ஏரோப்ளேன்கள் ரொம்பவும் உபயோகப்பட்டுவருவதால், மேற்சொன்னபடி யுத்தக்கருவிகளை மறைத்துவைக்கவேண்டியது ரொம்ப அவச்யமாகிறது. ஜெர்மானியர்கள் தங்களுடைய மூட்டை யிழுக்கும் மோட்டார் வண்டிகளின்மேல் மரங்களின் கிளைகளைப் போட்டு, உயரவிருந்து பார்த்தால் வாஸ்தவமான மரங்கள்போலிருக்கும்படி செய்கிறார்கள். இந்த வண்டிகள் மெதுவாய்ப் போவதால் ஆகாய விமானங்களிலிருந்து பார்ப்பவர்களுக்கு, இவைகள் பக்கத்திலுள்ள காட்டைச் சேர்ந்த மரங்களென்றே தோன்றும்.

ஸாதாரணமாய் ஆகாய விமானிகளுக்குக் குதிரைப்படைக்கும் குதிரை பீரங்கிப்படைக்கும் வித்யாஸம் தெரிவதில்லை. மேற்சொன்ன வண்டிகளில் பெரிய பீரங்கிகளை ஏற்றி அவைகளை இலைகளுள்ள மரக்கிளைகளால் மறைத்துவிட்டால் அவைகள் ஆகாயகமனிகளுக்குத் தென்படாவென்று சொல்லவும் வேண்டுமா?

ஆகாய விமானிகளை ஏமாற்ற ஏற்பாடு செய்யவேண்டியது அவச்யமென்பதை ராணுவ அதிகாரிகள் பல வர்ஷங்களாக அறிந்திருக்கிறார்கள். ஜெர்மனியில் ஸைன்யங்களுக்குள் போலிச்சண்டை நடத்தும்போது, துருப்புகளை, ஆகாயவிமானிகளின் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்ளும்படி பழக்குகிறார்களாம். ஸைன்யப் பிரிவுகளைத் தக்கபடி பிரித்து நிறுத்துவதாலும், புதர்களிலும், தோப்புகளிலும் மறைந்துகொள்வதாலும் ஆகாயவிமானிகளை ஏமாற்றிவிடலாம்.

ராணுவ அதிகாரிகள் வெண்மையான அல்லது தூரத்திலிருந்து பார்த்தால் நன்றாய்த் தெரியக்கூடிய வர்ணமுள்ள குதிரைகளை வெகுவாய் வாங்க ப்ரியப்படுவதில்லை. ஆனால் இவர்களுக்குப் பிடித்த வர்ணங்களுள்ள குதிரைகளின் தொகை ரொம்பக் குறைவாயிருக்குமாதலால், அநேக ஸமயங்களில் அவர்களுக்கு பிடிக்காத வர்ணங்களுள்ள குதிரைகளை வாங்கவேண்டி



யிருக்கும் ஜெர்மானியர்கள் தாங்கள் வாங்கும் வெள்ளைக் குதிரைகளின் மயிர்களுக்கு தக்க சாயம் பூசிவைக்கிறார்களாம். குளிர்காலங்களில் பனிக்கட்டியுள்ள ப்ரதேசங்களில் போகும்போது, குதிரைகள் இருப்பது எதிரிகளுக்குத் தெரியாமலிருக்க ராணுவக் குதிரைகளுக்கு வெண்மை நிறம் பூசுவதுமுண்டு.

புகையில்லாத வெடிமருந்து உபயோகத்துக்கு வந்ததில் எதிரிகளை ஏமாற்றுவது ஸுலபமாயிற்று. இந்த மருந்து இல்லாமல் புகையுண்டாக்கும் வெடிமருந்தை உபயோகிப்பதென்றிருந்தால், அந்தப் புகையைக்கொண்டு பீரங்கி யிருக்குமிடத்தை யறிந்துவிடலா மாதலால், பீரங்கிகளை எதிரியின் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவைப்பதால் ப்ரயோஜன மேற்படாது. இப்போது பீரங்கிகளை மரங்களால் மறைத்து வைப்பதால் எதிரிகள் அவைகளைக் கண்டுபிடிப்பது முடிவதில்லை. தக்கபடி அடர்த்தியாய் மரங்களைப்போட்டு மறைத்தால் பீரங்கிவெடி தீர்க்கும்போது ஸ்வல்ப நேரத்துக்கு உண்டாகும் வெளிச்சமும் எதிரிக்குத் தெரியாது.

கடல் யுத்தத்திலும் எதிரிகளை ஏமாற்ற உபாயங்களைக் கையாடுகிறார்கள். முன் காலத்தில் மலேயா நாட்டுக் கடல்கொள்ளைக்காரர்கள் இங்க்லீஷ் கப்பல்களைக் கொள்ளையிடாமலிருப்பதற்காக, அந்தக் கப்பல்களின் வெளிப்பக்கத்தில் பீரங்கி த்வாரங்கள் இருப்பதுபோல் சித்ரங்கள் வரைந்து, அவைகளைப் பா[illegible]த்தால் யுத்தக் கப்பல்கள் போலிருக்கும்படி செய்வார்களாம். மலேயா நாட்டுக் கடல் கொள்ளைக்காரர்கள் யுத்தக்கப்பல்களென்று எண்ணி அவைகளை ஒன்றுஞ் செய்யாமல் ஓடிவிடுவார்களாம்.

தற்காலத்திலும் யுத்தக்கப்பல்களில் சில எதிரிகளை ஏமாற்ற தந்த்ரம் செய்கின்றன. ‘எம்டன்’ என்னும் ஜெர்மன் க்ரூஸர் கப்பல் அரபிக்கடலிலும், வங்காளக்குடாக் கடலிலும் வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்து வந்ததல்லவா? அதைப் பிடிப்பதற்காகப் பல யுத்தக்கப்பல்கள் முயற்சி செய்தன. அப்போது அதன் காப்டன் தனது கப்பலுக்கு மூன்று புகைப்போக்கிக் குழாய்கள் இருப்பதைக்கொண்டு எதிரிக்கப்பல்கள் அதைக் கண்டுபிடித்து விடக்கூடுமென்று நினைத்து, இன்னொரு போலி புகைப்போக்கிக் குழாயை கப்பலின்மேல் மற்ற குழாய்களுடன் வைத்துவிட்டார். இதனால் எதிரிக்கப்பல்கள் ‘எம்டனை’ அறிந்துகொள்வது கஷ்டமாயிற்றாம்.

‘காணிக்ஸ்பர்க்’ என்ற ஜெர்மன் க்ரூஸரும் எதிரிக்கப்பல்களை ஏமாற்றி வந்ததாம். அது கிழக்கு ஆப்ரிக்காவில் வ்யாபாரக் கப்பல்களை மூழ்கடித்துத் திரிந்துவந்தது. அதைப் பிடிப்பதற்காக ப்ரிட்டிஷ் கப்பல் படை அதிகாரிகள் வேகமாய்ப் போகக்கூடிய சில யுத்தக்கப்பல்களை கிழக்கு ஆப்ரிக்காவுக்கு அனுப்பினார்கள். ‘காணிக்ஸ்பர்க்’கானது ஜெர்மன் கிழக்கு ஆப்ரிக்காவில் ருபிஜி நதியில் கடலிலிருந்து ஆறுமைல் தூரத்தில் ஆழம் குறைவான இடத்தில் மறைந்துகொண்டிருந்தது. ப்ரிட்டிஷ் யுத்த க்ரூஸர்களில் ஒன்றாகிய ‘சாத்தம்’ அது இருக்குமிடமறிந்து அதனருகில் போகமுயன்றது. ஆனால் ருபிஜி நதி ரொம்ப ஆழமாயில்லாததால் அது நதி வழியாக ‘காணிக்ஸ்பர்க்’கினிடம் போக முடியவில்லை ‘சாத்தம்’ கடலி லிருந்துகொண்டே காணிக்ஸ்பர்க்கை நோக்கி பீரங்கியால் தாக்கினதில் பீரங்கிக்குண்டுகள் ரொம்பதூரம் போகவில்லை. குண்டுகள் ‘காணிக்ஸ்பர்க்’கின் பக்கத்தில் விழுந்தன. உடனே ‘காணிக்ஸ்பர்க்’கானது இன்னும் 5-மைல் தூரம் நதியை எதிர்த்துச் சென்று, அங்கே தங்கிற்று. அது அங்கேயிருப்பதை ஒருவரும் அறிந்து கொள்ளாமலிருப்பதற்காக அதிலிருந்த வீரர்கள் பாய்மரங்களின்மேல் பனைமட்டைகளைக் கட்டிவிட்டார்கள். ஸமுத்ர ஜலத்தின் மட்டம் உயர்ந்து அதனால் ‘சாத்தம்’ கப்பல் நதியில் போக முடிந்தபோது,‘காணிக்ஸ்பர்க்’ கப்பல் எங்கிருந்ததென்பதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாயிற்றாம். ஒருகால் ‘காணிக்ஸ்பர்க்’ கப்பல் தூர இருந்து பார்த்தவர்களுக்கு, நதியின் நடுவில் பனைமரங்களுள்ள ஒரு சிறு தீவுபோல் தோன்றி யிருக்கலாம்.

## WAR USES OF THE MOTORCYCLE.

## யுத்தத்தில் மோட்டார் ஸைக்கிளின் உபயோகங்கள்.

தற்போது நடந்துவரும் ஐரோப்பிய யுத்தத்தில் மோட்டார் ஸைக்கிளானது ரொம்ப உபயோகமுள்ளதாக இருந்துவருகிறது. அது அநேக வேலைகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. முன்காலத்தில், எதிரிகளின் இருப்பிடத்தையும் அவர்களுடைய நடமாட்டத்தையும் அறிந்துவர குதிரைப்படையை அனுப்பி வந்தார்கள். தற்போது சிலஸமயங்களில் மோட்டார்ஸைக்கில் வீரர்களை இந்த வேலைக்கு அனுப்புகிறார்கள். மோட்டார் ஸைக்கிள் குதிரையைவிடரொம்ப வேகமாய்ப்போகும். அதோடு மோட்டார் ஸைக்கிளில் இன்னொரு ஸௌகர்யமும் இருக்கிறது. குதிரைப்படை வீரர்கள் எதிரியிருக்கும் இடத்தை நோக்கிப் போகையில் சில வேளைகளில் அவர்கள் குதிரைகளை விட்டிறங்கி, எதிரிகளுக்குத் தெரியாமல் படுத்துத் தவழ்ந்துகொண்டோ அல்லது வேறு விதமாய் மறைந்துகொண்டோ போக நேரிடும்போது, அந்தக்குதிரைகளை ஓரிடத்தில் விட்டுவிட்டு, அவைகளுக்குக் காவலாக தங்களில் சிலரையும் நிறுத்திவிட்டுப் போகவேண்டும். இதனால், எதிரிகளை நோக்கிப் போகும் வீரர்களின் தொகை குறைந்து போகிறது. குதிரைகளை மறைத்து வைப்பதும் அநேக ஸமயங்களில் கஷ்டமாகிறது. மோட்டார் ஸைக்கிள் வீரர்களுக்கு இவ்வித தொந்தரவு ஒன்றும் இல்லை. அவர்கள் தங்களுடைய வண்டிகளை நினைத்த இடத்தில் கீழே படுக்க வைக்கலாம், அல்லது மறைவான இடமிருந்தால் அங்கே அவைகளைசேர்த்து வைத்திருந்து, வேலை முடிந்ததும் அங்கே வந்து எடுத்துக்கொண்டு போகலாம். மேலும் 100-மோட்டார் ஸைக்கிளை மறைத்து வைப்பதற்கு, ஒரு டஜன் குதிரைகளுக்கு வேண்டிய இடத்தையும் விடக் குறைவான இடம்போதும். மோட்டார் ஸைக்கிளை ஒருவரும் காவல் காத்துக்கொண்டிருக்க வேண்டியதுமில்லை.

மோட்டார் ஸைக்கிள்காரர்கள் இப்போது குதிரை வீரர்கள் செய்துவந்த வேலைகளெல்லாவற்றையும் செய்து வருகிறார்கள். துருப்புகளின் ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்துக்கு ஸமாசாரம் கொண்டு போகிறார்கள். யுத்தம் நடக்குமிடத்துக்குப் பின்னுள்ள ரோடுகளில் இவர்கள் போலீஸ்காரர்களாக இருந்து வருகிறார்கள். மோட்டார் ஸாமான் வண்டிகள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப்போகும்போது, இந்த ஸைக்கிள்காரர்கள் அவைகளுக்கு முன்னால் போய் பாலங்கள் சரியாயிருக்கின்றனவாவென்றும், ரோட்டில் ஏதாவது தடைகள் இருக்கின்றனவாவென்றும் பார்த்துவருகிறார்கள்.

மோட்டார் ஸைக்கிள் ஸாதாரணமாக மணிக்கு 40-அல்லது 60-மைல் வேகம் போகக்கூடும். குதிரை வீரர்கள் இவ்வளவு வேகம் போவதென்பது முடியாது. மோட்டார் ஸைக்கிளில் ஒரு அஸௌகர்யம் மாத்ரம் உண்டு. அதாவது ரஸ்தாக்கள் ரொம்ப கெடுதலாயிருந்தாலும், மரங்கள் அல்லது தந்திக் கம்பங்கள் ரஸ்தாவின் குறுக்கே விழுந்து வழியை அடைத்து விட்டாலும், மோட்டார் ஸைக்கிள் போவதுகடினம்.

**ஸைட்காருள்ள மோட்டார் ஸைக்கிள்.**—சில மோட்டார் ஸைக்கிள்களின் பக்கவாட்டில் ஒருவர் அல்லது இரண்டு பேர் உட்காரக்கூடிய ஒரு வண்டி இணைத்திருப்பதை அநேகர் பார்த்திருக்கலாம். இந்தப் பக்கவாட்டு வண்டிக்கு ஸைட் கார் என்று பெயர். போர்க்களத்தில் மோட்டார் ஸைக்கிள் ஸைட் காரானது ரொம்ப உபயோகமுள்ளதாயிருக்கிறது. மோட்டார் ஸைக்கிள்காரர் ஸைட்காரில் சில்லரை ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றவிடத்துக்குக் கொண்டுபோவதேயன்றி, போர்க்களத்திலுள்ள வீரர்களையும், ஆபீஸர்களையும் வேண்டும்



போது ஏற்றிக்கொண்டு போகலாம். ஒரு ப்ரெஞ்ச் மோட்டார் ஸைக்கிள்காரர் தமது நாயை ஸைட்காரில் ஏற்றிக்கொண்டு எதிரிகளின் நிலைமையை அறிந்துவரப் போவதுண்டாம். ஏதாவது முக்யமான செய்தியை ராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டியிருந்து, தமது வேலையைச் செய்துகொண்டே போகவேண்டியிருந்தால் தெரிவிக்க வேண்டிய விஷயத்தை ஒரு துண்டுக் கடுதாசியில் எழுதித் தமது நாயின் கழுத்துப்பட்டையில் கட்டி, அனுப்பி விடுவாராம். நாயானது அதிகாரிகளிருக்கு மிடத்துக்கு ஓடிப்போய் கடிதத்தைக் கொடுக்கிறது.

**ஸைட்காரில் மெஷீன் பீரங்கிகள்.**—ஸைட்காரில் மெஷீன் பீரங்கிகளை அமைத்து போரில் உபயோகிக்கிறார்கள். அப்போது பீரங்கி வைப்பதற்கும், சுடுபவர் உட்காருவதற்கும் போதுமான இடம் இருக்கும்படி ஸைட்காரைக் கட்டுகிறார்கள். பீரங்கி வைக்கும் மோட்டார் ஸைக்கிளில் இரண்டுபேர்கள் ஏறிச் செல்வார்கள். ஒருவர் வண்டியை ஓட்டுவார். இன்னொருவர் ஸைட்காரில் உட்கார்ந்துகொண்டு பீரங்கியைச் சுடுவார். மெஷீன் பீரங்கிகள் நிமிஷத்துக்கு ஸுமார் 450 தடவை வீதம் வெடிதீர்க்கும். சில ஸமயங்களில் மெஷீன் பீரங்கிகளை ஸைட்காரில் வைத்துக்கொண்டு உபயோகிக்காமல் தரையிலோ அல்லது வேறு ஸௌகர்யமான இடங்களிலோ வைத்து உபயோகிக்கவேண்டியிருக்கும். அதற்காக பீரங்கியை வைப்பதற்கு ஏற்ற மடக்கு மூக்காலியையும் ஸைட்காரில் கொண்டுபோவார்கள். இங்கிலீஷ்காரர்கள் உபயோகிக்கும் மோட்டார் ஸைக்கிள்களில், பீரங்கியை உபயோகிப்பவனுக்கும் ஸைக்கிளை ஓட்டுபவனுக்கும் எதிரிகளினு[illegible] துப்பாக்கிகளால் யாதொரு கெடுதலும் [illegible]படாதபடி தக்க இரும்பு மறைப்புகள் [illegible]க்கப்பட்டிருக்கின்றன. ஸைக்கிளின் சக்கரங்களை குண்டுகள் பொத்துவிடாதபடி தக்க மறைப்புகளும் போட்டிருக்கிறார்கள். சில மாஸங்களுக்கு முன்னால் இங்க்லண்டிலிருந்து 18-மோட்டார் மெஷின் பீரங்கி வண்டிகள் போர்முகத்துக்குப் போயினவாம். இவைகளுள் ஆறில் மெஷின் பீரங்கிகளும், இன்னும் ஆறில் அதிகப்படியாக பீரங்கி பீடங்களும், மற்ற ஆறில் குண்டு வகையறாக்களும் ஏற்றியிருந்தார்களாம்.

**ஸைட்காரும் காயம்பட்டவர்களும்.**—மோட்டார் ஸைக்கிள்கள் ஸைன்யங்களுக்கு உதவி செய்வதேயல்லாமல், யுத்த ஆஸ்பத்திரிகளுக்கும் உதவி செய்கின்றன. மோட்டார் ஸைக்கிளின் ஸைட்காரில் இரண்டு நோயாளிகள் படுத்துக்கொள்வதற் கேற்றதாக இரண்டு படுக்கைகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு படுக்கைகளிலும் இரண்டு வீரர்கள் படுத்துக் கொள்ளலாம். மழை பெய்தால் நோயாளிகள் நனையாதபடி படுக்கைகள்மேல் தக்க மறைவுகளும் கட்டியிருக்கிறார்கள். அதோடு, வண்டியோட்டுபவரும் அவருக்கு உதவியாக ஒரு சிப்பந்தியும் உட்காருவதற்கும் இடம் அமைக்கிறார்கள். நோயாளிகளைக் கொண்டுபோக மோட்டார் காரைவிட மோட்டார் ஸைக்கிள் அதிக ஸௌகர்யமுள்ளதாயிருக்கிறதாம். மோட்டார் ஸைக்கிளை ஸ்வல்ப அகலமுள்ள பாதைகளிலும் திருப்பி ஓட்டலாம். மோட்டார்கார் போகுமிடங்களிலெல்லாம் ஸைக்கிள் போவதோடு, மோட்டார்கார் போகமுடியாத அநேக இடங்களிலும் அது தாராளமாய்ப் போகும். மோட்டார் ஸைக்கிள் போவதைத் தடுக்கக்கூடிய ஸமான்ய தடைகளை மோட்டார் ஸைக்கிளை ஓட்டுபவரும் அவருடன் கூடப்போகும் சிப்பந்தியும் அப்புறப்படுத்திவிட்டு ஸைக்கிளை ஓட்டிக்கொண்டு போகலாம். ஸைக்கிளானது மோட்டார் காரைப்போல் சேறான இடங்களில் அகப்பட்டுக்கொள்வது ரொம்ப குறைவு. அப்படி [illegible]

றில் அகப்பட்டுக் கொண்டாலும், ஸைக்கிள் ஓட்டுபவரும் ஸிப்பந்தியும் சேர்ந்துகொண்டு ஸைக்கிளை சேற்றிலிருந்து தள்ளிக்கொண்டு போக முடியும். மேலும் மோட்டார் ஸைக்கிளுக்குப் பிடிக்கும் எண்ணெய்ச் செலவும் ரொம்பகுறைவு. மோட்டார்காருக்கு ஒரு மைலுக்கு எவ்வளவு எண்ணெய் பிடிக்குமோ அதில் கால் பாகந்தான் மோட்டார் ஸைக்கிளுக்குப் பிடிக்கிறதாம்.

## OBSERVATION.

BY K. THIRUVENGADA NAYAKER.

## உற்று நோக்குதல்.

கல்விக்கு கவனித்தல் அல்லது உற்றுநோக்குதல் என்பது அவசியமாயிருக்கிறது. கவனித்தல் என்பதும் ஓர்வித படிப்பேயாம். எவ்விதமெனில் புஸ்தகங்களிற் படித்தறியாத அநேக விஷயங்களை கவனித்தலினால் அறிகிறார்கள். கவனித்தல் அல்லது உற்றுப்பார்த்தல் என்ற விஷயத்தை கடைபிடித்துள்ள ஒருவனுக்கு பிறர் சொல்லவேண்டிய விஷயங்கள் ஒன்றுமேயிராது. அவ்வித கவனித்தல் என்பதா லுண்டாகும் தேர்ச்சியை அடைய நாம் பெரியவர்களானபின் தான் ப்ரயத்தனம் செய்யவேண்டுமென்பது கருத்தல்ல. அவ்வித தேர்ச்சி பயன் தரவுமாட்டாது. ஓர் சிறு செடியானது கோணலாய் முளைத்திருந்தால் அதை சிறு வயதிலேயே நிமிர்த்தவேண்டுமே யல்லாமல் பெரிய மரமாய் வளர்ந்தபின் அவ்விதம் செய்ய இயலாது. அதுபோலவே கவனித்தல் அல்லது உற்றுநோக்குதல் என்ற அப்யாஸத்தை பிள்ளைகள் சிறு குழந்தைகளா யிருக்கும்போதே பெற்றோர்கள் தகுந்த விதமாய் அப்யஸிக்கச் செய்யவேண்டும்.

நம்முடன் பேசத்தெரியாத ஓர் குழந்தையினெதிரில் ஓர் ரோஜாப்பூவை வைத்து இதை கவனி என்றால் அதற்கென்ன தெரியும் என்று ஸந்தேகங் சொல்லலாகாது. சிறு குழந்தைக்கு பேசத்தெரியா திருந்தபோதிலும், அதன் எதிரில் ஷை பூவைக்கொண்டுபோனால், அதைக் கண்ட குழந்தை எவ்வளவு ஆவலுடன் எட்ட முயல்கிறது, பாருங்கள். அதை அக்குழந்தையினிடம் கொடுத்தோமானால் மூக்கில் வைத்தும், பல்லினால் கடித்தும், சப்பியும், தரையில் தேய்த்தும், பிய்த்தும் பார்க்கிறதன்றோ! அவை யனைத்தும் குழந்தைக்குள்ள உய்த்துணரும் சக்தியை வெளிப்படுத்தவில்லையா? அதுவன்றி சிறு குழந்தையினருகில் அதன் தாயேனுந் தந்தையேனும் போனால் எவ்வளவு ஆவலுடன் திரும்பித் திரும்பி பார்க்க முயல்கிறது.

சிறு குழந்தைக்கு உற்றுநோக்கும் சக்தி யில்லாவிட்டால் தொட்டிலில் அழுதுக்கொண்டிருக்கும் குழந்தையினெதிரில் பல வர்ணங்களுடைய துணிகளாற் செய்யப்பட்ட கிளிகளையாவது ரஸ குண்டுகளையாவது கட்டினால், குழந்தை தன் அழுகையை நிறுத்தி அப்பொருள்களை உற்றுநோக்குமோ?

சிறு குழந்தை நம்மைப்போல் தன் மனதை பல காரியங்களிற் சிதறவிடாமல் ஒருமையோடிருக்கிறது. அப்பொழுதுதான் அவற்றிற்கு உற்றுநோக்கும் சக்தி அதிகமாய் அமைந்திருக்கும்.

இன்னும் குழந்தைகளுக்கு பிறந்த 36-மாஸங்கள் வரையில் பல விஷயங்களை கவனித்து உணர்ந்துகொள்ளும் சக்தி ஏற்பட்டிருப்பதாக டாக்டர் மைல்ஸ் என்பவரும் மற்றும் பல அறிவுடையோரும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை நன்கு யோசித்தால் அவ்விதமே குழந்தைகளிடம் தோற்றுகின்றமையால் நாம் நமது சிறுவர்களது குழந்தைப்பருவ முதற்கொண்டே உற்றுநோக்குதலை விருத்திசெய்து வரவேண்டுமென்றேற்படுகிறது. அப்படி விருத்தி செய்வதற்கு நம் வீடுகளில் பல மிருகங்கள், பக்ஷிகள் அல்லது அவற்றின் படங்கள், பூஞ்செடிகள், பல வர்ணங்களா லமைந்த தேவதைகளின் படங்கள் முதலியவற்றை வைத்து அவைகளை கவனிக்கச்செய்தல் நலமாகும்.

அவ்விதம் ஏழைகளாகிய பலர் செய்ய இயலாதாகையால் சிறுகுழந்தைகள் விசேஷமாய்ப் பழகும் எலிமெண்டரி பாடசாலைகளில் மேற்சொன்னவற்றுடன் தோட்டம் முதலியவற்றையும் வைத்து பிள்ளைகளின் அறிவைத் தூண்ட வேண்டியது அவச்யமாகும்.

இன்னும் குழந்தைகளை மண், தூசு, குப்பை முதலிய அசுத்தமான இடங்களில் விளையாடவிடலாகாது. அப்படி விடுவதால் தேகத்தில் அழுக்குப்படிவது மன்றி சிறு குழந்தைகளுள் சச்சரவும் ஏற்படுகிறது. ஆனால் நல்ல காற்று வீசும்படியானதும் பசும்புற்கள் நிறைந்ததுமான மைதானங்களுக்கு அழைத்துப்போய் தினந்தோறும் ஒருமணி நேரமேனும் விளையாட விட வேண்டும். அப்படிவிடுகையில் பக்கங்களிலிருக்கும் மரங்களையும், புற் பூண்டு செடிகொடி முதலியவற்றையும், இன்னும் பலவர்ணங்களமைந்த பக்ஷிகளையும் அவற்றின் குரலோசையையும் ஆகாயத்திலுண்டாகும் மேகக்கூட்டங்களையும் காண்பித்து, அவற்றைப் பற்றிய பொது விஷயங்களை அவ்வபோது போதித்துவருதல் நலம். இதன் பொருட்டே கல்வியிலாகா அதிகாரிகள் பிள்ளைகளை வெளியில் கூட்டிக்கொண்டு (எஸ்கர்ஷன்) போகத்தூண்டுகிறார்கள்.

கவனிப்பதற்கும் எஸ்கர்ஷன் போவதற்கும் தகுதியானவைகளாவன,—

அழகான தோட்டங்கள், பசுமையான வயல்கள், செடிகொடி புற்பூண்டு மரங்களடர்ந்த குன்றுகள், நீரோடைகள், தாமரை அல்லி இவைகள் நிறைந்திருக்கும் குளங்கள், ஏரிகள், ஆறுகள், (அருகிலிருந்தால்) கடற்கரை, பக்ஷிகள் வாஸஞ்செய்யும் தோப்புகள், பாடசாலையிருக்கும் க்ராமம் அல்லது பட்டணத்திலிருக்கும் பெயர்பெற்ற கோவில்கள், பெரிய கட்டிடங்கள், க்ராமச்சாவடி, போலீஸ்சாவடி, தபால் ஆபீஸ், ரெயில்வே ஸ்டேஷன் இவைகளே.

இப்படிக் கூட்டிக்கொண்டு போவதன் பயன் யாது?

ஓர் கோவிலுக்கு குழந்தைகளை அழைத்துப் போவதாக வைத்துக்கொள்வோம். அங்கு மதிற்சுவர்களைப் பிளந்து செடிகளின் வேர்கள் ஊடுருவிச் செல்வதைக்காட்டி "பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்" என்ற செய்யுளை வெகு ஸுலபமாய் போதிக்க ஹேதுவாகும்.

உற்றுநோக்குதல் என்பதால் அடைந்த நன்மைகளுக்காக இரண்டொரு த்ருஷ்டாந்தங்களை இங்கு வெளியிடுவோம். ப்ரான்ஸ் தேசத்தில் பீட்டர் என்ற ஒருவாலிபன் சிறு வயஸு முதல் கவனிப்பதிலேயே தன்மனத்தைச் செலுத்தியிருந்தான். அவன் இரவில் படுத்துறங்கும் ஸமயத்தில் அடிக்கடி வெளியே எழுந்துபோய் ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்ரங்கள் முதலியவற்றை கவனித்துவருவான். ஒருநாள் மாலையில் அவனும் மற்றுஞ் சில பிள்ளைகளும் வெளியே உலாவச்சென்றார்கள். அந்த ஸமயம் பாலர்களுக்குள் ஓர் விவாதம் ஏற்பட்டது. அது யாதெனில் ஆகாயத்தில் ஓடுவது சந்தரனு, மேகங்களா? என்பதே! கடைசியாய் பையன்கள் ஓடுவது சந்த்ரனே என்றார்கள். அதுகேட்ட பீட்டரோ ஓடுவதுமேகங்களே என்று ஸாதித்தான். அதை நிரூபிக்கவேண்டினார்கள். அவ்வாறே ஓர் வ்ருக்ஷத்தின்கீழ் அவர்களை நிறுத்தி மரக்கிளைகளில் இலைகளுக்கிடையிலுள்ள த்வாரத்தின் மூலமாய் சந்த்ரனை கவனிக்கும்படி செய்து ஓடுவது மேகங்களே என விளக்கினான். அவனுக்கு அவ்வித யுக்தியைக்கொடுத்தது கவனித்தலே.

ராஜா ரவிவர்மா அநேக நேர்த்தியான படங்கள் எழுதியதற்கு காரணம், அவருக்கும் கவனித்துப் பார்க்கும் வழக்கம் பயன்பட்டதென்பதேயென்று தெரிகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கவனித்தல் அல்லது உற்று நோக்கலை சிறு குழந்தைகளின் உபாத்யாயர்கள் கடைப்பிடித்து தங்களிடம் ஒப்புவிக்கப்படும் குழந்தைகளையும் அப்யஸிக்கச் செய்வது அவர்களுடைய முக்ய கடமையாகும்.

கே. திருவேங்கட நாயக்கர்.

# THE DUMB ACCUSER.

BY R. HARI ROW.

## ஒரு ம்ருகம் குற்றத்தை வெளிப்படுத்தியது.

அநேக வர்ஷங்களுக்குமுன் ஐரோப்பா கண்டத்திலுள்ள ப்ரான்ஸ் என்னும் தேசத்தில் ஐந்தாவது 'சார்லஸ்' என்ற அரசனொருவன் அரசாட்சி செய்துவந்தான். அவனது அரண்மனையில் அவனை எவ்வகைத் தீங்கினின்றும் காப்பாற்றிவரும் மெய்க் காவலர்கள் (Body-guards) அநேகரில் இருவர் பகையாளிகள். அவர்களிலொருவன் 'மாகேர்' (Macair) என்பவன். மற்றொருவன் 'ஆப்ரே' (Aubrey) என்பவன். 'மாகேர்,' 'ஆப்ரே' யைக்கண்டால், சுடர்விட்டுக்கொண்டெரியும் நெருப்பு, காற்று அடித்தால் எப்படி எரியுமோ, அவ்வாறே நெருப்பில்லாமலேயே எரிவான். அவனுடைய பகையானது கடைசியில் 'ஆப்ரே'யைக் கொன்றுவிடும்படி ஓர் துர்ப்புத்தியை அவனதுமனதில் தூண்டிவிட்டது. ஆகையால், 'மாகேர்' தனது பகையாளியைக் கொல்ல, எப்பொழுது சரியான ஸமயம் வாய்க்கும் என்று வெகு ஆவலோடு காத்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கேற்ப ஒரு ஸமயமும் வாய்த்தது. ஒருநாள் 'ஆப்ரே' தனது நாயையும் அழைத்துக்கொண்டு அருகிலுள்ள காட்டில் வேட்டையாடப் போயிருந்தான். அப்பொழுது, (ஐயோ பாவம்! 'ஆப்ரே'யிக்கு வாழ்நாட்கள் கழிந்துவிட்டனபோலும்! அவனது விதியே அவனை காட்டிற்கு வேட்டையாடத் தூரத்திவிட்டது போலும்! விதியின்பயனை வெல்ல யாரால் முடியும்!) 'ஆப்ரே'யிக்கு எதிரியாகிய 'மாகேர்' அவன் எதிரில் தோன்றி திடீரென்று தனது கூர்மையான வாளுக்கு 'ஆப்ரே'யை இரையாக்கி விட்டான். பிறகு, அதே இடத்தில் ஒரு பள்ளந்தோண்டி, அதில் அவனைப் புதைத்துவிட்டுத் தனது இருப்பிடத்தை அடைந்தான் 'மாகேர்.' இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தது 'ஆப்ரே'யின் நாய். அதனது கண்களோ கோபத்தினால் நெருப்புப்பொரி பறந்தன. அதன் வாய்க்கோ வாய்ப்பூட்டு போட்டிருந்தது. (இதனாலேயே நாய் எவ்வளவு ஸாது என்று தெரிந்து கொள்ளலாம்!).

'ஐயோ! நம்மால் நமது யஜமானனைத் தீங்கினின்றும் தப்புவிக்க முடியவில்லையே!' என்று தவித்தது. அந்த வாய்ப்பூட்டு மாத்ரம் இல்லாவிட்டால், 'மாகேர்' மேல் விழுந்து, அவனைப் பிராண்டி, தனது விஷப்பற்களினால் அவனைக் கடித்து, அங்கேயே பிணம் புரட்டியிருக்கும்.

இந்த அலங்கோலத்தைப்பார்த்து விட்டு, நாய், இறந்து போன தனது யஜமானன் ஸ்னேகிதனொருவன் வீட்டுச் சமயலறைக்கு ஓட்டமாய் ஓடிற்று. அங்கே வேண்டியளவு உண்ட பிறகு தனது யஜமானன் புதைக்கப்பட்ட இடத்திற்கு ஓட்டமாய் ஓடி, அங்கே உட்கார்ந்து கொண்டு அதிக விஸனமாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. இந்த மாதிரி தினமும் யஜமானன் ஸ்னேகிதன் வீட்டில் சாப்பிடுவதும், பிறகு ஓட்டமாய் ஓடி யஜமானன் ஸமாதியில் போய் உட்காருவதுமாயிருந்தது.

'தினமும், சாப்பிடும் வேளைக்கு சரியாய் வருவதும், உண்டியான பிறகு ஒரே திசையில் ஓடுவதுமாயிருக்கிறதே! இது என்னவாயிருக்கக்கூடும்! ஒரு நாள், நாமும் அதைப் பின் தொடர்ந்து ஸமாசாரம் என்னவென்பதைத் தெரிந்துகொண்டு வருவோம்' என்ற எண்ணம் 'ஆப்ரே'யின் நண்பன் மனதில் பிறந்தது.

ஒருநாள் வழக்கம்போலவே உண்டியான பிறகு நாய் ஓடும்பொழுது 'ஆப்ரே'யின் நண்பனும் அதைப் பின்தொடர்ந்து சென்றான். அது வேகமாய் ஓடி 'ஆப்ரே' புதைக்கப்பட்ட இடத்தில் போய் நின்று, அழுவதுபோல் ஊளையிட்டுக்கொண்டு மண்ணைத் தோண்டிற்று, 'ஓஹோ!



ஏதோ விசேஷமிருக்கிறது போலும்!' என்று எண்ணி 'ஆப்ரே'யின் நண்பன் அந்த இடத்தை உடனே தோண்டிப் பார்க்கையில், ரத்தக்கறையுடன் ஒரு ப்ரேதம் அகப்பட்டது. அதை நன்றாய் உற்று நோக்குகையில் தனது நண்பன் 'ஆப்ரே'யினது ப்ரேதமே என்று தெரிந்து கொண்டான்.

'ஆப்ரே' இருந்தாற்போலிருந்து மறைந்த காரணம் ஒருவருக்கும் தெரியவில்லை. 'என்னடா! நேற்று அரண்மனையில் இருந்தானே! இப்பொழுது எங்கே போயிருப்பான்?' என்றொருவன். மற்றொருவன், 'முந்தாநாள் கடைத்தெருவில் பார்த்தேனே, நான்' என்றான். அதற்குள் மற்றொருவன், 'நீ முந்தானாள் விஷயமல்லவா சொல்லுகிறாய். நேற்றயதினம் அவன் தனது நாயுடன் வேட்டையாடப் போனதைப் பார்த்தேனடா, நான்!' என்றான். கடைசியில், 'வேட்டையில்தான் 'ஆப்ரே' யிக்கு ஏதாவது தீங்கு நேர்ந்திருக்கக்கூடும்' என்று தீர்மானித்தார்கள்.

இப்படியிருக்க, கொலையாளியாகிய 'மாகேர்' தெருவில்போய்க்கொண்டிருப்பதை 'ஆப்ரே'யின் நாய் கண்டால், அது உடனே அவனைப் பார்த்துக் குலைத்து, அவன்மேல் பாய யத்தனிக்கும். ஒருவேளை இவன்தான் ஏதாவது 'ஆப்ரே' யிக்குத் தீங்கு இழைத்திருக்கக் கூடுமோ! தெருவில் இத்தனைபேர் போய்க்கொண்டிருக்க அவர்களை யெல்லாம் விட்டு விட்டு இவனையே பார்த்துப் பிடித்து, உபத்ரவம் செய்ய யத்தனிக்கிறதே" என்று ஸந்தேகிப்பதற்கு இடங் கொடுத்தது.

இவையெல்லாம் அரசன் காதுக்கெட்டின. உண்மையைக் கண்டறியும் பொருட்டு, ஒரு திறந்த வெளியில், 'மாகேரையும்,' 'ஆப்ரே'யின் நாயையும் சண்டைக்கு நிறுத்தினார்கள். இந்த வேடிக்கையைப் பார்ப்பதற்காக திரள் திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள். நாயானது அதிக தொந்திரவு செய்தால் அதை அடித்து விலக்குவதற்காக 'மாகேர்' கையில் ஒரு தடியைக் கொடுத்திருந்தார்கள். அதுபோலவே, நாய்க்கும், 'மாகேர்' அதிகமாய் அடித்தால், ஒளிந்துகொள்வதற்காக ஓர் பீப்பாய் கொடுத்திருந்தார்கள்.

நாயின் ஸூக்ஷ்ம புத்தியே புத்தி. தன்னையும் மாகேரையும் இன்ன காரணத்தால் நிறுத்தியிருக்கிறார்கள் என்றும், தனது யஜமானனைக் கொன்ற பாதகனை பழிக்குப் பழிவாங்க இதுதான் ஸமயம் என்றும் எண்ணி அவன்மேல் திடீரென்று பாய்ந்தது.

இரண்டு மூன்று தரம் 'மாகேர்' நாயை விலக்கிப்பார்த்தான். முடியவேயில்லை. ஒரே குரங்குப்பிடியாய் அவன் மோவாய்க்கட்டையைப்பிடித்து விட்டது. 'தப்புவதற்கு வழியில்லை, இனிமேல் சாவுதான்' என்று எண்ணி 'மாகேர்,' நான்தான் 'ஆப்ரேயை'க் கொன்றவன்' என்று ஒப்புக்கொண்டான், ' நீ, நாயினால் சாக வேண்டாம். சட்டங்களினால் சரியாக தண்டிக்கப்பட்டு இறப்பாயாகா' என்று சொல்லி 'மாகேரை' நாயினின்றும் விலக்கினார்கள்.

வாயிருந்தும், பேசுவதற்கும், தனது மனதிலிருக்கிறதை வெளியில் சொல்வதற்கும் முடியாமல் போனாலும் யஜமானன் இந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கிறான் என்று ஜாடையாய்க் காட்டினது ஓர் ஆச்சரியமே. தனது யஜமானனைக்கொன்ற பாதகன் இவன்தான் என்று அவனைப்பார்த்தவுடன் குலைப்பதாலும் பாயயத்தனிப்பதாலும் காண்பித்ததும் ஆச்சரியப்படத்தக்கதே. தன்னையும் மாகேரையும் திறந்த வெளியில் நிறுத்தினபோது 'வேடிக்கைக்கு நிறுத்தவில்லை. சண்டைக்குத்தான்; இதுதான் சரியான ஸமயம் பழிக்குப் பழிவாங்குவதற்கு. என்று அதற்குத் தோன்றியதும் ஆச்சரியமே.

ஆர். ஹரிராவ்.

# SWINDLERS AND THEIR TRICKS.

## முடிச்சவிழ்க்கிகளும் அவர்களுடைய தந்த்ரங்களும்.

'ஜனாபிமானி'யின் சென்ற ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகைகளில் முடிச்சவிழ்க்கிகளுடைய தந்த்ரங்களில் சிலவற்றைக் குறிப்பிட்டோம். இப்போது இன்னும் சில தந்த்ரங்களை விவரிக்கிறோம்.

**கரன்ஸிநோட்டுகள் செய்து கொடுப்பதாகச் சொல்பவர்கள்.**—சில போக்கிரிகள் பணத்தாசை பிடித்த சில ஜனங்களிடம் கரன்ஸிநோட்டுகளை ஒன்றுக்கு இருமடங்காக்கிக் கொடுப்பதாகச் சொல்லி ஏமாற்றிப் பணம் பறிப்பதுண்டு. இந்தப் போக்கிரிகள் முதலில் ஜனங்களுக்கு நம்பிக்கை வருவதற்காகப் பின்வருமாறு செய்வார்கள். போட்டக்ராப் படம் பிடிப்பதில் உபயோகிப்பதைப் போன்ற மருந்து பூசியிருப்பதும், வெளிச்சத்தால் சீக்ரம் மாறக்கூடியதுமான 'ஸென்ஸிடைஸ்ட் பேபர்' என்னும் கடுதாசியை ஏற்கனவே தயார்செய்துவைத்திருப்பார்கள். போக்கிரியானவன்தான் தெரிந்தெடுத்த மனிதனிடம் கரன்ஸிநோட்டைப்போல் வேறு கரன்ஸிநோட்டுகள் செய்துகொடுக்க முடியுமென்றும், வேண்டுமானால் ஸ்வல்ப மதிப்புள்ள ஒரு கரன்ஸிநோட்டைக் கொடுத்தால் அவனெதிரிலேயே செய்து காட்டுவதாகவும் சொல்லுவான். ஏமாறப் போகிறவன் ஒரு நோட்டை எடுத்துக்கொடுக்க போக்கிரி ப்ரின்டிங் ப்ரேம் என்று சொல்லப்படும் போட்டக்ராப் படத்துக்கு நகல்கள் எடுக்கும் சட்டத்தில் ஏற்கனவே தயார்செய்து வைத்திருக்கும் ஸென்ஸிடைஸ்ட் பேபரை வைத்து அதின்மேல் கரன்ஸிநோட்டைவைத்து வெயிலில் வைப்பான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஸென்ஸிடைஸ்ட் கடுதாசியில் கரன்ஸிநோட்டைப் போன்ற உருவம் மங்கலாகத்தெரியும், உடனே அதை பணத்தாசை பிடித்தவனுக்குக்காட்டி, இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் நல்ல கரன்ஸிநோட்டு கிடைக்குமென்று சொல்வான். பிறகு போக்கிரி மற்றவனுக்குத் தெரியாதபடி அவன் வேறெங்காவது பார்த்துக்கொண்டிருக்கும்போது ஸென்ஸிடைஸ்ட் பேபரை வெளியிலெடுத்து மறைத்துக்கொண்டு, தன்னிடமுள்ள ஒரு நிஜகரன்ஸி நோட்டைப் போட்டக்ராப் சட்டத்தில் வைத்துவிட்டு கொஞ்சநேரமான பிறகு சட்டத்தைப் பிரித்து கரன்ஸிநோட்டு செய்தாய்விட்டதென்று காட்டுவான். போக்கிரியின் ஸாமர்த்யத்தைக் கண்ட பணத்தாசை பிடித்தவன் தன்னிடமுள்ள கரன்ஸிநோட்டுகளையெல்லாம் கொண்டுவந்து போக்கிரியினிடம் கொடுப்பான். சிலஸமயங்களில் அயலார்களிடமிருந்து நோட்டுகள் கடன்வாங்கி வந்து கொடுப்பதுமுண்டு. போக்கிரி நோட்டுகளை ப்ரிண்டிங்க் ப்ரேமில் வைப்பதுபோல் பாசாங்கு செய்து சட்டத்தில் ஸாதாரணக் கடுதாசிகளை வைத்து சட்டத்தை அந்த மனிதனிடமே கொடுத்து, அதை இரண்டு மூன்று நாள் அமிழ்த்தி வைத்து வெயிலில் காயவைக்கவேண்டுமென்றும், பிறகுதான் அதைத் திறந்து நோட்டுகளை எடுக்கவேண்டுமென்றும் சொல்லிவிட்டு நிஜ கரன்ஸி நோட்டுகளை எடுத்துக்கொண்டு போய்விடுவான். சில ஸமயங்களில் சட்டத்தில் உள்ள மரத்துக்கும் கண்ணாடிக்கும் நடுவில் சில த்ராவகங்களை ஊற்றும்படி சொல்லிவிட்டுப் போவான். த்ராவகங்களை ஊற்றினால் உள்ளிருக்கும் கடுதாசிகளை த்ராவகம் தின்றுவிடுகிறது. பணம் பறிகொடுத்தவன் போக்கிரியைக் கண்டுபிடித்து ஏன் மோசம் செய்தாயென்று கேட்டால், அவன் (போக்கிரி) தான் சொன்ன வார்த்தைகளின்படி சரியாய்ச் செய்யாத்தால் அவனுடைய நோட்டுகள்கூட நாசமாய்ப்போய் விட்டனவென்று சொல்லித் தப்பித்துக் கொள்வான். ஏமாந்தவர்கள் போலீஸாரிடம் தெரிவிப்பதாகச் சொன்னால்; போக்கிரிகள், கவர்ன்மெண்ட் கரன்ஸி நோட்டைப் போர்ஜரி செய்ய யத்தனித்ததற்காகப் போலீஸார் அவர்களையே குற்றஞ்சாட்டி தண்டிக்க ஏற்பாடு செய்வார்களென்று சொல்லி பயமுறுத்துவார்கள். இதனால் ஏமாந்தவர்கள் இம்மோசங்களை போலீஸுக்கு வெளியிடுவதில்லை. 1907-ம் வர்ஷத்தில் வடக்கே டம்ரான் என்னுமிடத்திலுள்ள ஒரு பணக்காரன் பத்து ஆயிர ரூபாய் நோட்டுகளை இவ்விதம் கொடுத்து இழந்தானாம்.

**ஒன்றுக்கு இரண்டு கொடுக்கும் பாங்கிகள்.**—சில போக்கிரிகள் கூட்டமாய் ஒரு க்ராமத்துக்கு வந்து ஒரு வீட்டை குடிக்கூலிக்கு அமர்த்திக்கொண்டு அதில் ஒரு பாங்கி ஏற்படுத்தி நடத்துவதாக பாவனை செய்வார்கள். அந்த பாங்கியில் யார் பணம் போட்டாலும் போட்ட தொகைக்கு இருமடங்கு கொடுப்பதாகச் சொல்வார்கள். முதல் முதலில் போடுகிறவர்களுடைய தொகைகளுக்கு இரட்டிப்பு மடங்கு தொகை செலுத்திவிடுவார்கள். இவ்விஷயம் ஊர் முழுவதும் பரவவே, ஊரிலுள்ளோரெல்லாம் தங்களிடமுள்ள பணம் முழுவதையும் கொண்டுவந்து பாங்கியில் போடுவார்கள். பணம் ஸுமாராய்ச் சேர்ந்தவுடன் போக்கிரிகள் ஸமயம் பார்த்துக் கம்பி நீட்டிவிடுவார்கள். இந்த மோசத்தைச் செய்பவர்கள் பக்கிரிகளில் ஒரு ஜாதியாராவர்.

**ஆள் மாறாட்டம் செய்பவர்கள்.**—சிலர் ஒரு நல்ல இன்ஷூரன்ஸ் கம்பெனியின் ஏஜெண்டென்று சொல்லிக்கொண்டு, ஜனங்களை இன்ஷூர் செய்யச்சொல்லி முதல் ப்ரீமியத்தை வஸூல் செய்துகொண்டு போய்விடுகிறார்கள். இன்ஷூரென்ஸ் கம்பெனியின் ஏஜெண்டென்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் வாஸ்தவத்தில் குறிப்பிட்ட இன்ஷூரென்ஸ் கம்பெனியின் ஏஜெண்டுகளா என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்ட பிறகுதான் ஜனங்கள் ப்ரீமியத்தை அந்த ஏஜெண்டுகளிடம் கொடுக்கவேண்டும்.

சில போக்கிரிகள் பாடசாலை ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களாக நடித்து ஸாமான்ய பாடசாலைகளுக்குப்போய் அங்குள்ள உபாத்யாயர்களுக்கு பற்பல உபகாரங்கள் செய்து கொடுப்பதாகச் சொல்லிப் பணம் பறிக்கிறார்களாம்.

சிலர் ஸானிடரி இன்ஸ்பெக்டர்களாக ஆள் மாறாட்டம் செய்கிறார்கள். அவர்கள் தங்களை காலரா டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு, கக்கூஸுகள் ஸுகாதாரக்குறைவாக இருக்கின்றன என்பது முதலான பல குற்றங்களை எடுத்துக்காட்டி கேஸ்கொண்டுவருவதாக பயமுறுத்தி ஜனங்களிடம் பணம் பறிக்கிறார்கள். வேறு சிலர் அம்மைகுத்தும் இன்ஸ்பெக்டர்களாக நடித்து, பணங்கொடுத்தால் குழந்தைகளுக்கு அம்மைகுத்தக் கட்டாயப்படுத்தாமலிருப்பதாகச் சொல்லிப் பணம் ஸம்பாதிக்கிறார்கள்.

சிலர் உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுக்கும் போலி ஏஜென்ஸிகள் ஸ்தாபித்து அதனால் பணம் ஸம்பாதிக்கிறார்கள். உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுப்பதற்காக மோசடியில்லாத வாஸ்தவமான ஏஜென்ஸிகள் சில இந்தியாவில் இருக்கின்றன. போலி ஏஜென்ஸிகளின் விளம்பரங்கள் ரொம்ப ஆசை காட்டி ஜனங்களை மயக்கக்கூடிய விதமாய் எழுதப்பட்டிருக்கும். உத்யோக ஏஜென்ஸிகளுக்குப் பணம் கொடுப்பதற்கு முன்னால் வாஸ்தவத்தில் அந்த ஏஜென்ஸிகள் நடந்து வருகின்றனவாவென்று விசாரிக்கவேண்டும். கூடுமானால் ஏஜென்ஸிகளின் உதவியால் உத்யோகம் பெற்றவர்களின் பெயரைத் தெரிந்துகொண்டு தக்கபடி விசாரித்துப் பிறகு தான் ஏஜென்ஸிகளிடம் உத்யோகம் ஸம்பாதித்துக் கொடுக்கப் பணம் கொடுக்க வேண்டும்.

சில போக்கிரிகள் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களாக ஆள் மாறாட்டம் செய்து, பற்பல டிபார்ட்மெண்டுகளுக்கு உத்யோகஸ்தர்கள் சேர்ப்பதாகச் சொல்லி, உத்யோகத்துக்கு வருபவர்களிடம் ப்ரீமியம் என்று பெரும் தொகைகள்

வஸூல் செய்து லாபம் அடைகிறார்கள். கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் யாருக்காவது உத்யோகம் செய்துகொடுத்தால் அவரிடமிருந்து பணமொன்றும் வஸூல் செய்யக்கூடாது. இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் எவரும் இந்தமாதிரிப் போக்கிரிகளிடம் அகப்படாமல் தப்பலாம்.

**திருட்டுத்தனமாய் உண்டியல்களைத் திருத்துபவர்கள்:** சிலர் உண்டியல்களிலும் ரெயில்வே ரசீதுகளிலும் உள்ள தொகைகளைத் திருத்தி அதனால் வ்யாபாரிகளை ஏமாற்றுகிறார்கள். இவைகளில் ஒருவிதத்தை விவரிப்போம். போக்கிரி ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் ஒருமூட்டை அரிசியை 'கூட்ஸ்' வண்டியில் ஏற்றி, இன்னொரு ரெயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்புவான், அந்த மூட்டைக்கு ரெயில்வே அதிகாரிகளிடமிருந்து வாங்கின ரெயில்வே ரசீதில் ஒருமூட்டையென்றிருப்பதை 1000-மூட்டையென்று மாற்றி, அதற்கேற்றபடி, நிறை, ரெயில்வே சத்தம் முதலியவைகளையும் மாற்றுவான். அதன்பிறகு அரிசி போகும் இடத்திலுள்ள வ்யாபாரிகளுக்கு அரிசிமேல் தனக்குள்ள பாத்யதையை விற்றுவிடுவதாகச் சொல்வான். யாராவது ஒரு வ்யாபாரி அதை வாங்க ஸம்மதித்து விலைபேசி, க்ரயத்தைப் போக்கிரியினிடம் கொடுத்துவிட்டு, ரெயில்வே ரசீதை தன் பெயருக்கு "எண்டார்ஸ் செய்து" வாங்கிக்கொள்வான். வ்யாபாரி தான் ஏமாந்த விஷயத்தை அறிந்து கொள்வதற்குள், போக்கிரி கம்பி நீட்டிவிடுவான்.

**தர்மகார்யங்களுக்காகப் பணம் சேர்ப்பவர்கள்.**- சிலபோக்கிரிகள் தர்ம கார்யங்களுக்குப் பணம் வஸூல் செய்வதாகச்சொல்லி ரொம்ப புத்திசாலிகளையும் ஏமாற்றிப் பணம் பறிக்கிறார்கள். இவர்கள் ஸன்யாஸிகளின் உடைதரித்து, இன்னவிடத்தில் கோ சாலைகள் ஸ்தாபிக்கப் போவதாகவும், நடத்தை கெட்டுப்போன ஸ்த்ரீகளை நல்வழியில் கொண்டுவர ஆச்ரம ஸ்தாபிக்கப் போவதாகவும் சொல்லி பணக்காரர்களிடம் பணம்பறிக்கிறார்கள். கொஞ்சகாலத்துக்கு முன்னால் இப்படிப்பட்டபோக்கிரி ஒருவன் ஒரு பட்டணத்துக்கு வந்து மேற்சொன்ன கார்யங்களுக்காக பணம் வேண்டுமென்று சொல்லி அங்கிருந்த வக்கீல்களுள் அநேகமாய் எல்லாரிடத்திலும் பணம் வாங்கினான். அவன் ஒரு காலி நிலத்தில் சில மூங்கில்களைக் கொண்டு வந்து போட்டுவைத்தான். கோசாலை ஸ்தாபிக்க அவன் செய்ததெல்லாம் அவ்வளவுதான். கெட்டுப்போன ஸ்த்ரீகளின் ஆச்ரமமென்று அவன் சொன்னது சற்று நிஜக்கலப்பாயிருந்தது. கல்கத்தாவில் சித்பூர் ரோடில் அப்படிப்பட்ட ஒரு ஆச்ரமமிருந்தது. ஆனால் அங்கிருந்த ஸ்த்ரீகள் முன்போலவே கெட்ட நடத்தையில் ப்ரவர்த்தித்துக் கொண்டிருந்தார்கள். போக்கிரி தான் வஸூல்செய்த பணத்தை அவர்களைச் சீர்திருத்துவதற்காக உபயோகிக்கவேயில்லை. போலீஸார் போக்கிரியைப் பிடித்து கோர்ட்டுக்குக் கொண்டுவந்தபோது முன்சொன்ன பட்டணத்திலுள்ள வக்கீல்கள் முதலில் ஸாக்ஷ்யம் சொல்லப் பின்வாங்கினார்கள். தாங்கள் ஏமாந்துபோனதை ஒப்புக்கொள்ள அவர்கள் இஷ்டப்படவில்லை. ஆனால் கடைசியில் அவர்கள் ஸாக்ஷ்யம் சொல்லவே போக்கிரி இரண்டு வர்ஷம் சிக்ஷையடைந்தான்.

சிலர் கோவில் கட்டிவைப்பதாகச் சொல்லிப் பணம் வஸூலிப்பதுண்டு. எவரும் பணங்கொடுப்பதற்கு முன் கோவில் கட்டப்போவது வாஸ்தவமென்றும், கொடுக்கும் பணம் கோவில் செலவுக்கே உபயோகிக்கப்படும் என்றும் நிச்சயமாய்த் தெரிந்தாலொழிய, பணங்கொடுக்கவே கூடாது.

**கடைகளை மோசம்செய்பவர்கள்**—சிலர் ஜமீன்தார்களின் ஏஜெண்டுகள் என்று சொல்லிக் கடைக்காரர்களைப் பலவிதங்களில் ஏமாற்றுவதுண்டு. இவர்களில் ஒருவன் நல்ல உடை



தரித்து ஒரு பெரிய கடைக்குப்போய், பக்கத்துத் தெருவில் ஒரு ஜமீன்தார் வந்திருக்கிறாரென்றும், அவருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு ஸாமான்கள் வேண்டியிருக்கின்றனவென்றும், அவர் சில நமூனுகளை மாதிரிக்கு பார்க்க ப்ரியப்படுவதால், அவைகளை அவருடைய வீட்டுக்கு அனுப்பினால், ஸௌகர்யமாயிருக்குமென்றும் சொல்வான். இதற்கு முன்னால் போக்கிரி ஒரு பெரிய வீட்டைக் குடிக்கூலிக்கு வாங்கி ஒரு மைனர் ஜமீன்தாருக்குள்ள லக்ஷணங்களெல்லாமிருக்கும்படிக்கு அவ்வீட்டில் ஸேவகர்களை ஏற்படுத்தி, மற்ற ஸாமான்களையும் அமைத்து வைத்திருப்பான். சில ஸமயங்களில் கடைக்காரன் போக்கிரியோடு போய் அந்த வீட்டைப்பார்த்து த்ருப்தியடைவான். பிறகு அவன் அந்த வீட்டுக்கு தனது ஸாமான்களை மாதிரியாக அனுப்பி வைப்பான். சில ஸமயங்களில், ஜமீன்தாருக்கு பாங்கியிலிருந்து பணம் வருவதற்கு சற்றுத் தாமஸமாகுமென்று . ஏஜெண்டு சொன்னால், கடைக்காரன் கொஞ்சம் பணத்தையும் கைமாற்றாகக் கொடுப்பான். அதன் பிறகு போக்கிரிகள் ஸமயம் பார்த்துக் கம்பி நீட்டிவிடுவார்கள்.

மறுநாள் காலையில் கடைக்காரன் 'மைனர் ஜமீன்தார்' வீட்டுக்குப்போனால் வீடு காலியாயிருக்கும்.

கொஞ்சகாலத்துக்கு முன்னால் ஒரு போக்கிரி கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய ஐரோப்பிய கடைக்குப்போய், தான் ஒரு பணக்கார ஜமீன்தாருடைய ஏஜெண்டென்று சொல்லி, மேஜை நாற்காலி முதலிய ஸாமான்களுக்கு ஏராளமாய் ஆர்டர் கொடுத்தான். அந்தக் கம்பெனியில் ஆர்டர் கொடுத்ததற்குக்கமிஷனாக அவன் கடையினிடம் ரூ. 60-பெற்றுக்கொண்டு போய்விட்டான். கடைக்காரர்கள் ஸாமான்களை அனுப்பினபோதுதான் மோசம் வெளியாயிற்று.

**கல்யாண தரகர்கள்.**—சிலபோக்கிரிகள் கல்யாணம் முடித்துக்கொடுக்கும் ஏஜெண்டுகளென்று சொல்லிக்கொண்டு, பெண்கள் அதிகமாயில்லாத ஜில்லாக்களில் கல்யாணமாகாதவர்களுக்கும், தாரமிழந்தவர்களுக்கும் பெண்கள் ஸம்பாதித்துக்கொடுப்பதாகவும், பிள்ளைகள் அதிகமாயில்லாத ஜில்லாக்களில் பெண்களுக்கு வரன் தேடிக்கொடுப்பதாகவும் சொல்லி, பெண் வேண்டுவோரிடமும், பிள்ளை வேண்டுவோரிடமுமிருந்து பணம் ஸம்பாதிப்பதுண்டு. சிலர் கல்யாணத்துக்கிருக்கும் பெண்கள் அல்லது பிள்ளைகளின் ஸொந்தக்காரர்களென்று சொல்லி, கல்யாணப் பேச்சுகளை பணம் கிடைக்கும் வரையில் வெகு காலம் நடத்திக்கொண்டு வருவார்கள். சில ஸமயங்களில் இவர்கள் தாழ்ந்த ஜாதிப் பெண்களையும், வேசைகளையும் தகுந்த பெண்களென்று ஏமாற்றி உயர்ந்த ஜாதிப்பிள்ளைகளுக்குக் கல்யாணம் செய்விப்பதுமுண்டு.

**மாந்த்ரீகர்கள்.**—மாந்த்ரீகம் செய்வதாகச் சொல்லித் திரியும் போக்கிரிகள் இந்தியாவில் எங்கும் உண்டு. இவர்கள் ஜனங்களுள் எல்லா வகுப்பாரையும் ஏமாற்றுகிறார்கள். இவர்கள் ஸன்யாஸிகளாகவாவது, அல்லது ரொம்ப தெய்வ பக்தியுள்ளவர்களாகவாவது நடித்து, ஜனங்களுக்கு உண்டாகக்கூடிய எல்லா வ்யாதிகளையும் போக்கடிக்கக் கூடியவர்களென்றும், ஸ்த்ரீகளுக்கு மலட்டுத்தனத்தைப் போக்கடிக்க முடியுமென்றும், ஆண்களுக்கு நபும்ஸகத்தை ஸ்வஸ்தம் செய்ய முடியுமென்றும், கணவர்களுடைய ப்ரியத்தை இழந்த ஸ்த்ரீகளுக்கு புருஷர்களை வசியப்படுத்திக் கொடுக்க முடியுமென்றும், சோரநாயகர்களையும் அப்படியே வசியப்படுத்த முடியுமென்றும் சொல்லி வருவார்கள். இவர்கள் பேச்சை யாராவது நம்பினால், இவர்கள் ஒரு பூஜை செய்யவேண்டுமென்றும், அதற்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், கங்கா ஜலம் முதலிய ஸாமான்ய பொருள்கள் போதுமென்றும் சொல்வார்கள். ஏமாந்த

ஸ்த்ரீயோ, புருஷனோ மாந்தரீகனை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போய், பூஜை செய்ய வீட்டில் ஒரு இடம் கொடுப்பார்.

பூஜை நடக்கும்போது, மாந்தரீகன், தங்கம் கொண்டுவந்து தேவதைக்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென்றும் எவ்வளவு அதிகமாகத் தங்கம் பூஜையில் வைக்கிறாரோ அவ்வளவு சீக்ரமாய் கார்யஸித்தி ஏற்படுமென்றும் சொல்லுவான். ஏமாந்தவர் தம்மிடமுள்ள தங்கத்தையும், தாம் கடன் வாங்கிச் சேகரித்த தங்கத்தையும் கொண்டுவந்து மாந்தரீகனிடம் கொடுப்பார். மாந்தரீகன் அதைப் பூஜைசெய்யுமிடத்தில் ஒரு பள்ளம் பறித்து ஏமாந்தவர்கொடுத்த தங்கநகைகள், நாணயங்கள் ஆகிய இவைகளையெல்லாம் அந்தப் பள்ளத்தில் வைத்து மூடுவான். அல்லது இவைகளை ஒரு துணியில் கட்டி பூஜைக்குப் பக்கத்தில் வைத்து, பூஜைமுடியும் வரையில் ஒருவரும் அதைத் தொடக்கூடாதென்று சொல்வான். தங்கம் இல்லாவிட்டால் வெள்ளி நகைகளையும், நாணயங்களையும் கொண்டுவரச் சொல்லுவான். பிறகு ஸமயம் வாய்த்தவுடன் நகை நாணயங்களுடன் ஓடிவிடுவான்.

**புதையல் வாங்கிக்கொடுப்பவர்கள்.**—இவர்கள் வெகுவாய் பணக்காரர்களையே ஏமாற்றுகிறார்கள். இவர்களுள் ஒரு போக்கிரி ஒரு பணக்காரனிடத்தில்போய், ரகஸ்யமாய், சில கூலியாட்கள் குளம் வெட்டிக்கொண்டிருந்தபோது, ஒரு பெரிய புதையலைக் கண்டெடுத்தார்களென்றும், புதையல் முழுவதும் தங்க மோகராக்கள் என்றும், அவர்கள் மோகராக்களை ரகஸ்யமாய் விற்றுக்கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லி, அவ்விஷயம் வாஸ்தவமென்பதை ரூபிக்க, சில நிஜ மோகராக்களைக் காட்டி, அவைகளின் வாஸ்தவமான விலையைவிடக் குறைவான ஒரு விலையைச் சொல்லி, அந்த விலைக்கு வாங்கிக்கொள்வதாயிருந்தால் புதையலில் கிடைத்த மோகராக்கள் எல்லாவற்றையும் விலை பேசித் தீர்த்துவிடுவதாகவும் சொல்வான். பணக்காரன் நம்பி மோகராக்களை வாங்கிக்கொள்ள ஸம்மதித்தால், அவ்விஷயத்தை அவர் ரகஸ்யமாய் வைத்திருக்கவேண்டுமென்றும், விலைப் பணத்தை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு ராத்ரிவேளையில் எடுத்துக்கொண்டு வந்தால் மோகராக்கள் கொடுக்கப்படுமென்றும் போக்கிரி சொல்வான். குறிப்பிட்ட காலத்தில் பணக்காரன் பணத்துடன் குறிப்பிட்ட இடத்துக்கு இரவில் போவான். போக்கிரி ஒரு ஜாடியில் பாதியளவுக்கு மண்ணையும் அதன்மேல் புதுக் காசுக்களையும் போட்டு மேலே சில தங்க மோஹராக்களை பரப்பி பணக்காரனிடம் கொடுத்து, அதற்கு விலையாக பணக்காரன் கொண்டுவந்த பணத்தைப் பெற்றுக்கொண்டு மறைந்துவிடுவான். பணக்காரன் ஏதாவது ஸந்தேகங்கொண்டு மோகராக்கள் விஷயத்தில் தகராறு செய்தால், போக்கிரி அவனை அடித்துத் தொந்தரவுசெய்து பணத்தைப் பிடுங்கிக்கொள்வான்.

**தந்தி மணியார்டர் போக்கிரிகள் :**—இவர்கள் ஸாதாரணமாய் பெரிய வ்யாபார ஸ்தலங்களிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்களில் சுற்றிக்கொண்டிருப்பார்கள். யாராவது அவ்வூருக்குப் புதிதாகவந்தால், அவருடன் ஸ்நேகிதம்செய்து, அவருடைய சொந்த ஊரிலுள்ள அவருடைய பந்துக்களுடைய பெயர்களையும் அவர்களுடைய நிலைமைகளையும் அறிந்துகொண்டு, பிறகு, புதிதாகவந்தவன் பெயரால், அவருடைய ஊரிலுள்ள ஒரு பந்துவுக்கு, எதிர்பாராத அவஸரமான சில கார்யங்களுக்காக உடனே தந்திமூலமாகப்பணம் அனுப்பும்படி தந்தியடித்துப் பணம் வந்தவுடன் பெற்றுக்கொண்டு போய்விடுவார்கள்.

தந்திமணியார்டர் போக்கிரித்தனத்தில் இன்னொருவிதமும் உண்டு. போக்கிரியானவன் ஒரு ஊரிலிருந்துகொண்டு, அங்குள்ள ஒரு ப்ரபல வ்யாபாரியின் பேரால், தூரமான இன்னொரு ஊரிலுள்ள அவருடைய ஏஜெண்டுக்கு, ஒரு குறிப்பிட்ட பெயருள்ள ஒரு மனிதன் வந்து கேட்கும்போது ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டுமென்று தந்தி யடிப்பான். ஏஜெண்டுக்குத் தந்திபோய்ச் சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம், போக்கிரியோ, அவனைச் சேர்ந்த உள்ளாளோ ஏஜெண்டினிடம் போய் பணத்தை வாங்கிக்கொண்டு போய்விடுவான்.



# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Instruction through Vernaculars.

**தேசபாஷைகளின் மூலமாய் கல்வி கற்பிப்பது.**—சென்ற ஜூன்மாஸத்து ‘ஜனாபிமானியில் தேசபாஷைகள் மூலமாகக் கல்விகற்பிப்பது விஷயமாய் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் நடந்த விவாதத்தைப் பற்றி எழுதினோம். இந்தியாவிலன்றி வேறு எந்த தேசத்திலும் தேசபாஷையில்தான் கல்வி கற்பிப்பது வழக்கமாயிருந்து வருகிறதென்று பலர் சொல்லுகிறார்கள். ஈஜிப்ட்தேசத்தின் ராஜதானி பட்டணமாகிய கெய்ரோவில் ஒரு உயர்ந்த விவஸாயக் கலாசாலையிருக்கிறது. அதில் மாணவர்களுக்கு அரபிபாஷையில் தான் கல்விகற்பித்து வருகிறார்கள். ஸமீபத்தில் அங்குள்ள சில மாணவர்கள் இனிமேல் இங்க்லீஷிலேயே விவஸாயப் பாடங்களைக் கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்கு மனுசெய்து கொண்டார்கள். அதற்கு அவர்கள் சொல்லிய காரணமாவது, இங்க்லீஷ் பாஷையில் தான் உயர்ந்ததும், ரொம்ப ஸமீபத்தில் வெளியான விஷயங்களையுடையதுமான விவஸாய புஸ்தகங்கள் வெளியாகி விற்பனைக்குக் கிடைக்கின்றன; இங்க்லீஷில் கல்வி கற்பித்தால், மாணவர்கள் அந்தப் புஸ்தகங்களை வாங்கி வாசிக்க ஹேதுவாகும் என்பதே. அந்த நாட்டு விவஸாய மந்த்ரி இதைப்பற்றி ஆலோசனை செய்து, அரபி பாஷையே அந்த தேசத்து பாஷையாயிருப்பதால், கல்வியும் அந்த பாஷையில்தான் கற்றுக்கொடுக்கப்படவேண்டுமென்றும், புஸ்தகங்கள் அகப்படாக்குறையை நிவர்த்திக்க இங்க்லீஷில் உள்ள சில உயர்ந்த விவஸாய புஸ்தகங்களை மொழிபெயர்த்து வெளியிடும்படி ஏற்பாடு செய்வாரென்றும் பதில் சொன்னார்.

### The Hindu University.

**ஹிந்து** ஸர்வகலாசாலை.—சென்ற ஏப்ரல் மாஸத்து ‘ஜனாபிமானி’யில் காசியில் ஹிந்து ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டின் கல்வியிலாகா மெம்பர் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறாரென்றும், அந்த யூனிவர்ஸிட்டியின் முக்ய லக்ஷணங்களின்னவை யென்றும் தெரிவித்தோம். இந்த மாஸம் அந்த மசோதா சட்டமாக நிறைவேறியிருக்கிறது. இப்போது ஸர்வகாலாசாலை அபிமானிகள் அது ஸம்பந்தமான வேலைகளை முடிக்க முயற்சிசெய்து வருகிறார்கள். ஸர்வ கலாசாலைக் கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை ராஜப்ரதிநிதி அடுத்த பிப்ரவரிமாஸத்தில் நாட்டுவார் அடுத்த வர்ஷத்திலேயே கோடை காலத்துக்கு பிறகு அதாவது ஜூலை மாஸத்தில் ஸர்வ கலாசாலையில் கல்விக் கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்யப் போகிறார்களாம். ஸ்திரமான கட்டிடம் கட்டியாகிறவரையில் ஸர்வ கலாசாலையை காசியிலுள்ள ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ் கட்டிடத்திலேயே நடத்திவரலாமா என்று அதன் அபிமானிகள் யோசித்துவருகிறார்கள். ஹிந்து யூனிவர்ஸிட்டி (ஸர்வ கலாசாலை) ஸங்கத்தார் ஸமீபத்தில் ஒரு மீட்டிங்குகூடி மாணவர்கள் வஸிப்பதற்கு இடம் அமைப்பதையும், ஸர்வகலாசாலைக்கு வித்யாஸம்பந்தமாய் வேண்டியிருப்பவைகளையும் நிர்ணயிப்பதற்கு ஒரு கமிட்டி நியமித்தார்கள். தற்போது யூனிவர்ஸிட்டிக்கு 52 லக்ஷம் ரூபாய் சொத்து இருக்கிறது.

### Education of Mudaliar Boys.

**முதலியார் வதுப்புப் பையன்களின் கல்வி.**—முதலியார் வகுப்புப் பையன்களின் கல்வியை அபிவ்ருத்தி செய்யும் நோக்கத்துடன், மைஸூர் சீப்கோர்ட்டில் ரெஜிஸ்ட்ராராக இருந்து காலஞ்சென்ற டி. எ. ராஜரத்ன முதலியாரின் மனைவி 10,000 ரூபாய் நன்கொடையளித்திருக்கிறார். கல்வி விஷயமாய் ஒரு தென்னிந்திய ஹிந்துமாது இவ்வளவு அதிகமான தொகையை உபகாரம் செய்திருப்பது ரொம்ப ச்லாகிக்கத்தக்கது.

### A Weaving School.

**ஒரு நெசவுப் பள்ளிக்கூடம்.**—கோயம்புத்தூர் ஜில்லா காங்கயத்துக்குப் பக்கத்திலுள்ள சிவன்மலையென்னும் ஊரில் ஒரு நெசவுப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Proverbs on Meanness.

அற்பகுணத்தைப்பற்றிய பழமொழிகள்.—ஸமீபத்தில் வெளிவந்த 'விவேகசிந்தாமணி' யில் அற்பகுணத்தைப்பற்றி சில பழமொழிகளும் அவற்றை விளக்க சில குறிப்புகளும் வெளிவந்திருக்கின்றன. இங்கு அந்தப் பழமொழிகளை எடுத்தெழுதுகிறோம்.

1. காற்றுக்கு எதிரில் துப்பினால் முகத்தில் விழும்.

2. குதிரையின் குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடுக்கவில்லை.

3. குதிரை ஏறி என்ன! கோணக்கொம்பு ஊதி என்ன? வீணர்க்கும் கீர்த்திக்கும் வெகுதூரம்.

4. குறைகுடம் ததும்பும்; நிறைகுடம் ததும்பாது.

இதற்கு நேரான பழமொழி "அறைகுடம் ததும்பும்; நிறைகுடம் ததும்பாது" என்பதாம்.

5. கொட்டிக் கொட்டி அளந்தாலும் குருணி பதக்காகாது.

6. குருணி மை தானிட்டாலும் குருடு குருடே.

7. சீவரத்து பார்ப்பான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான். (சீவரம் என்பது காஞ்சீபுரத்துக்கு ஸமீபத்திலுள்ள ஒரு ஊர்.)

8. தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை வேண்டும்.

9. நடு ஊரில் நச்சுமரம் பழுத்தென்ன.

10. நரி கொழுத்தென்ன, காஞ்சிரம் பழுத்தென்ன.

11. நரிக்குப் பெரியதனம் கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு கேட்கும்.

12. நாறல்மீனை பூனை பார்ப்பதுபோல.

13. நாறல் சாணியை மிதிப்பானேன்; நல்ல தண்ணீர் வார்த்துக் கழுவுவானேன்.

14. நாற்றச் சோற்றுக்கு பதம் பார்ப்பானேன்.

15. நாற்கலக்கூழுக்கு நானே அதிகாரி.

16. நிலத்திற்குத் தகுந்த களியும் குலத்திற்கு தகுந்த குணமும்.

17. நீண்டபுல் நிற்க நிழலாமா.

18. பனிபெய்து கடல் நிரம்புமா.

19. பனிபெய்து குளம் நிரம்புமா.

20. பனிப்பொருக்கிலே கப்பல் ஓட்டலாமா."

21. பனியைநம்பி ஏர்பூட்டினதுபோல.

22. பாடிப்பாடிக் குத்தினாலும் பதரில் அரிசி யில்லை.

23. பிடாரி வரங்கொடுத்தாலும் ஓச்சன் வரங் கொடுத்தலரிது.

24. புழுக்கை சலம்கழுவித் தின்னாது.

25. பித்தளை நாற்றமறியாது.

26. புழுக்கைப்புத்தி பிடாரியிலே.

27. முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா.

28. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.

### Rajamony.

ராஜாமணி.—இது கி. பி. சேஷாத்ரி அய்யங்கார் இயற்றிய துப்பறியும் நாவலாகும். இது இங்க்லிஷில் கோனன் டாயில் என்பவர் இயற்றிய ஒரு துப்பறியும் கதையை ஆதாரமாகக்கொண்டு இயற்றப்பட்டதாகும். இதன்நடை ஸுலபமா யிருக்கிறது. ஸ்த்ரீகளும் சிறுவர்களும் வாசிக்க ஏற்றது. இதன்விலை அணா 8. வேண்டுவோர் ஜி. எ. வைத்யாராமன் அண்ட் கம்பெனியார், 3, 4, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Saraswati Stotra Manjari.

ஸரஸ்வதீஸ்தோத்ரமஞ்சரி.—இது பொம்பூர் எஸ் எ. வி. ஸ்கூல் உபாத்யாயராகிய மிஸ்டர் எம். வி. ஈச்வரய்யர் தொகுத்ததாகும். இதில் கம்பர் செய்த ஸரஸ்வதி அந்தாதி, குமரகுருபரஸ்வாமி செய்த ஸகலகலாவல்லிமாலை முதலிய பல ஸரஸ்வதி ஸ்தோத்ரங்கள் அடங்கியிருக்கின்றன. புஸ்தகத்தின் கடைசியில் அரும்பதவுரை ஒன்றுசேர்க்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு கற்பிக்க இது ஒரு நல்ல புஸ்தகமாகும். இதன் விலை அணா 4. வேண்டுவோர் ஜி. எ. வைத்யாராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Lalita.

லலிதா.—இது பொறுத்தவர் பூமி யாள்வாரென்னும் நீதிவாக்யத்தை விளக்கும் ஒரு சிறு கதை. இது சிறுவர் சிறுமியர்கள் வாசிப்பதற்கேற்றவிதமாக ஸுலபமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதை எழுதியவர் கும்பகோணம் டௌன் ஹைஸ்கூல் உபாத்யாயராகிய மிஸ்டர் எஸ். எக்ஞஸாமி. இதன் விலை அணா 4. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யாராமன் அண்ட் கம்பெனி 3, 4, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



# SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

### Scientific Progress in Germany.

ஜெர்மனியில் சாஸ்த்ர அபிவ்ருத்தி.—ப்ரிட்டிஷ் கப்பல் படையின் ஊக்கத்தால் ஜெர்மனிக்கு அத்யாவச்யமாய் வேண்டியிருக்கும் யுத்தப்பொருள்கள் அந்த நாட்டுக்கு இப்போது போகமுடிவதில்லை. பீரங்கிகளும், தோட்டாக்களும், இன்னும் மற்ற யுத்தக்கருவிகளும் செய்வதற்கு தாம்ரமும் பித்தளையும் வேண்டியதவச்யம். இப்போது இந்த இரண்டு உலோகங்களும் கிடைக்காததால், ஜெர்மானியர்கள் அவைகளில்லாமலே யுத்தக் கருவிகளைச்செய்ய முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. ஸாதாரண இரும்புடன் ஸ்வல்பபாகம் செம்பையும் வேண்டிய அளவு நாகத்தையும் சேர்த்து ஒரு புது முறையால் ஒரு கலப்பு உலோகம் செய்து பீரங்கி முதலியவைகள் செய்கிறார்களாம்.

தங்களிடமிருக்கும் அலுமினியம் செலவழிந்து போய்விட்டால் என்னசெய்கிறதென்று பயந்து, ஜெர்மானியர்கள் களிமண்ணிலிருந்து அந்த லோகத்தைத் தயார்செய்ய ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களாம்.

பீரங்கிகளுக்கும் வெடி குண்டுகளுக்கும் வேண்டிய வெடிமருந்து செய்வதற்கு நைட்ரிக் ஆஸிட் என்னும் அக்னி த்ராவகம் வேண்டியது அவ்ச்யமென்றும், நைட்ரிக் ஆஸிட் செய்வதற்கு சிலி என்னும் தேசத்திலிருந்து கிடைக்கும் நைட்ரேட்டுகள் வேண்டுமென்றும், இங்க்லீஷார் அதை ஜெர்மனிக்குப் போகாமல் தடுத்துவிட்டதால் ஜெர்மானியர்களுக்குக் கஷ்டமேற்படுமென்றும் சொல்லப்படுவதாக சென்ற வர்ஷம் அக்டோபர் மாஸத்து 'ஜனோபிமானி'யில் எழுதியிருந்தோம். இப்போது ஜெர்மானியர்கள் ஆகாயத்திலிருந்து நைட்ரிக் ஆஸிட் தயார் செய்ய முயற்சி செய்வதாகச் சொல்லப்படுகிறது.

### Reclaiming Printed Paper.

அச்சடித்த கடுதாசியிலிருந்து புதிய கடுதாசி செய்தல்.-ஒரு அமெரிக்கர் அச்சடித்த கடுதாசியிலிருந்து மையைப்போக்கி, அதிலிருந்து வெண்மையான மரக்கூழ் செய்யஒரு வழிகண்டு பிடித்திருக்கிறார். முதலில் கடுதாசிகளை ஜலத்தில் அலம்பி சிறு துண்டுகளாக நறுக்கி, ஒருவித ஸோப் கரைத்த ஜலத்தில் போட்டு, நன்றாய்க் கலக்கிறார். இதனால் கடுதாசியிலுள்ள மையானது கடுதாசியை விட்டுப் பிரிந்து ஜலத்தில் சேர்ந்துகொள்ளுகிறது. கடுதாசியும் நார் நாராகப் பிரிந்து வெண்மையான கடுதாசிக் கூழாகிறது. பிறகு இந்தக் கூழை சுத்தஜலத்தில் அலம்பிவிட்டால் சுத்தமான கூழ்கிடைக்கிறது. இதில் கூழ் கொஞ்சமும் சேதமாய்ப் போவதில்லையாம். இந்தக் கூழைக்கொண்டு ஸாதாரண முறையால் நல்ல கடுதாசி செய்யலாமாம்.

### Betel-nut Cutting Machine.

கொட்டைப்பாக்கு வெட்டும் யந்த்ரம்.—வங்காளத்திலுள்ள ஒரு இங்க்லீஷ்காரரும், மிஸ்டர் ஜோதீந்த்ர நாத் போஸ் என்ற வங்காளி கனவானும் ஒரு புதுப் பாக்குவெட்டும் யந்த்ரம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த யந்த்ரத்தைக்கொண்டு வெகு சீக்ரமாய் பாக்கை நறுக்கிவிடலாமாம். நறுக்கின துண்டுகள் ரொம்ப ஸன்னமாகவும், ஒரே சீராகவும் இருக்குமாம். இந்த யந்த்ரத்தின் விலை ரூ. 10. இதை ஒரு மேஜையிலாவது நாற்காலியிலாவது வைத்து, மேஜை நாற்காலிகளில் அசையாமல் பிடித்துக்கொள்ளும்படி செய்யலாமாம். இது வார்ப்பு இரும்பால் செய்யப்பட்டிருக்கிறதாம். ரொம்ப உறுதியானதாம். எளிதில் கெடாதாம். இதன் நிறை $6\frac{1}{4}$-ராத்தல். இந்த யந்த்ரங்களை ஏராளமாகச் செய்வதற்காக இங்க்லண்டிலுள்ள பர்மிங்ஹாம் என்னும் பட்டணத்தில் ஒரு தொழில் சாலை கட்டப்பட்டு வருகிறதாம்.

### Coloured Cotton.

நிறமுள்ள பருத்தி.—பருத்தி வெண்மையா யிருப்பதால், அதன் நூலுக்கு சாய மேற்றவேண்டி யிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஒரு பருத்தித் தோட்டக்காரர் பசுமையான பருத்தி விளைவித்திருக்கிறாராம். கறுப்பு நிறமுள்ள பருத்தி விளைவிக்கவும் பரீக்ஷைகள் செய்து வருகிறாராம்.

### A Camera to Photograph the Stomach.

குடலைப் போட்டோ பிடிக்க ஒரு யந்த்ரம்.—ஒரு மேல்நாட்டு கனவான் ஒரு சிறு போட்டோ படம்பிடிக்கும் யந்த்ரம் (காமரா) கண்டுபிடித்திருக்கிறாராம். அது ரொம்ப சிறியதாயிருப்பதால் அதை வாயில்போட்டு விழுங்கிவிடலாமாம். அது குடலில் போய், உள்பாகத்தை போட்டோ பிடிக்குமாம்.

## SANITATION AND MEDICINE.

## ஸௌகாதாரமும் வைத்யமும்.

**Cataract Couching.**

**கண்ணிலுள்ள பூவை யெடுத்தல்.**—கண்ணில் பூவிழுந்தால் அதை ஸ்வஸ்தப்படுத்த இரண்டு முறைகளிருக்கின்றன. ஒன்று மேல்நாட்டு வைத்யமுறை. இதன்படி வைத்யர்கள் கண்ணின் உள்பாகத்திலுள்ள பூவை கண்ணிலிருந்து அடியோடு எடுத்து விடுகிறார்கள்.

இரண்டாவது நாட்டு வைத்யர்களுடைய முறை. நாட்டு வைத்யர்கள் கண்ணிலிருந்து பூவை வெளியிலெடுக்காமல், கண்ணில் வேறொரு பாகத்தில் உள்ளே தள்ளி விடுகிறார்கள். இதில் வ்யாதிப்பட்டபாகத்தை உள்ளே தள்ளி விடுவதால், அது அங்கேயே இருந்துகொண்டு சில ஸமயங்களில் வேறு கெடுதல்களை உண்டாக்குகிறது. சில ஸமயங்களில் பார்வை முற்றிலும் கெட்டுப்போவதுமுண்டு. மேல் நாட்டு வைத்யமுறைப்படி நோய்ப்பட்டபாகத்தை வெளியிலெடுத்து விடுவதால் கண்ணுக்குப் பிற்காலத்தில் கெடுதி ஏற்படுவதற்கில்லை. இதுவே சிறந்த முறையென்று சொல்லப்படுகிறது.

இது விஷயமாய் சென்னை கண்ணாஸ்பத்ரியில் செய்த பரீக்ஷைகளால் நாட்டு வைத்யமுறைப்படி வைத்யம் செய்ததில் நூற்றுக்கு 21-பேர்கள் வீதமே ஸ்வஸ்தமடைந்திருக்க, இங்க்லீஷ்வைத்ய முறைப்படி சிகித்ஸை செய்ததில் 100-க்கு 90-பேர்கள் ஸ்வஸ்தமடைந்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் கண்ணில் பூவிழுந்து கஷ்டப்படுகிறவர்கள் மேல்நாட்டு வைத்ய முறையையே நாடவேண்டும்.

**Health Exhibition and Lectures.**

**ஸௌகாதாரப் பொருள் காட்சியும், உபன்யாஸங்களும்.**—வருகிற டிஸம்பர் மாஸம் சென்னை பீபிள்ஸ் பார்க்கில் நடக்கும் வேடிக்கைகளோடு, ஸௌகாதாரம், தேக ஸௌக்கியம் ஆகிய இவைகள் ஸம்பந்தமாக ஒரு பொருள் காட்சி நடத்தவும், உபன்யாஸங்கள் செய்யவும் ஏற்பாடாயிருக்கிறது. சென்னை கவர்னர் இது விஷயமாக கவனம் செலுத்திவருகிறார். உபன்யாஸங்கள் சென்னை விக்டோரியா ஹாலில் நடைபெறும். உபன்யாஸங்களை இங்க்லீஷிலும், தேசபாஷைகளிலும் ப்ரசுரிக்கவும், வேண்டியானால் வெளியூர்களில் இந்த உபன்யாஸங்களை நடத்தவும், உபன்யாஸங்களுக்கு வேண்டிய மாஜிக்லாண்டர்ன் கண்ணாடிகள் தயார்செய்யவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

**Why it Pays to lie down.**

**படுத்துக்கொள்வதின் ப்ரயோஜனம்.**—ச்ரமம் அதிகமாகும்போது நாம் படுத்துத் தூங்குகிறோம். தூங்கி எழுந்தவுடன் களைப்பில்லாமலிருக்கிறது. இதனால் நாம் தூங்கவேண்டியது அவச்யமென்று ஏற்படுகிறது. எவ்வளவுக்கு வயஸு குறைவோ அவ்வளவுக்கு அதிகம் தூங்கவேண்டும். வயஸு அதிகயாக ஆக தூக்கத்தின் அளவு குறைகிறது.

சிலர் பகல்பநேரம் தூங்கினால் போதுமென்றும், அதனால் தங்களுக்கு யாதொருகெடுதலும் மேற்படவில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

நின்றுகொண்டிருக்கும்போது ஸாதாரணமாய் நாடி எத்தனை தடவை அடிக்கிறதோ அதைவிட படுத்துக்கொண்டிருக்கும்போது ஸுமார் 8 தடவை குறைவாய் அடிக்கிறது. இதன்படி 1 மணிக்கு ஸுமார் 500 அடி குறைந்துபோகிறது. ஒரு நாளுக்கு 12,000 குறைகிறது. இப்படிக் குறைவதால் ஹ்ருத்யத்துக்கு வேலை குறைந்து அதற்கு பலமதிகமாகிறது. இன்னும் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தால் ஹ்ருதயத்துக்கு ச்ரமம் ரொம்ப குறையும் என்று ஒரு மேல்நாட்டு வைத்யர் சொல்லுகிறார்.

**Banana Juice for Snake Bite.**

**பாம்புக்கடிக்கு வாழைப்பட்டைச் சாறு.**—ஒருவர் பாம்பு கடித்தவுடன் வாழைப்பட்டைச் சாற்றை அதிகமாய்க் குடித்தால் இறக்காமல் தப்பித்துக்கொள்ளலாமென்றும், இது அனுபவத்துக்கு ஒத்த முறையாக இருக்கிறதென்றும் சிலர் தெரிவிப்பதாக சென்ற 1913-ம் வர்ஷம் அக்டோபர்மீ'த்து 'பிழைக்கும் வழி'யில் 535-ம் பக்கத்தில் எழுதியிருந்தது நமது நேயர்களில் பலருக்கு ஞாபகமிருக்கலாம். தென்னாப்ரிக்காவிலுள்ள ஒருவர் இது விஷயமாய் சில பரீக்ஷைகள் செய்து பார்த்தாரம். சில ம்ருகங்களை கொடிய விஷமுள்ள பாம்புகளைக் கொண்டு கடிக்கச்செய்து, அந்த ம்ருகங்களுக்கு கடிக்குமுன்னும், கடிக்கும்போதும், கடித்தபிறகும் வாழைப்பட்டைச் சாற்றை யதேஷ்டமாய்க் குடிக்கக்கொடுத்தும் அவைகள் இறந்துபோயினவாம். பாம்பு கடித்த அநேக ப்ராணிகளின் தேகத்தில் கொல்லுவதற்கு வேண்டிய அளவு விஷம் ரக்தத்தில் சேருவதில்லையென்றும், அதனால் அவைகள் யாதொரு சிகித்ஸையுமின்றியே பிழைத்துவிடுகின்றன வென்றும், வாழைப்பட்டைச் சாற்றால் பிழைத்தவர்களுடைய தேகத்தில் வேண்டிய அளவு விஷம் சேராமலிருந்ததே அவர்கள் பிழைத்ததற்குக் காரணமென்றும் அவர் சொல்லுகிறார்.



## LAW.

## சட்டம்.

**Suit by Reversioner.**

**அனந்தரவார்ஸ் வ்யாஜ்யம் கொண்டு வருவது.**—ஒரு ஹிந்து ஆண் வார்ஸில்லாமல் 1876-ம் வர்ஷத்தில் இறந்து போனார். அவருடைய புத்ரி அவருக்குப் பிறகு உயிருடன் இருந்தாள். அவர் இறக்குமுன்னமேயே இறந்து போன அவருடைய புத்ரனின் மனைவி அந்த ஹிந்துவின் ஸொத்துக்களைத் தன் வசமடைந்து பெண்ணினுடைய பாத்யதைக்கு எதிரிடையாக அனுபவித்து வந்தாள். பிறகு அந்த நாட்டுப்பெண் அந்த ஸொத்துக்களை 1-ம் ப்ரதிவாதியின் தகப்பனாருக்கு விற்று விட்டாள். அவள் 1901-ம் வர்ஷத்தில் இறந்து போனாள். புத்ரி ஒரு ஸ்வீகார புத்ரனை வைத்துவிட்டு 1907-ம் வர்ஷத்தில் இறந்து போனாள் ஸ்வீகார புத்ரன் நிலங்களை 1911-ம் வர்ஷம் ஜனவரிமீ 5-தேதியன்று வாதிக்கு விற்றார். வாதி ஸொத்துக்கள் தம்வசம் சேரவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். 1908-ம் வர்ஷத்து லிமிடேஷன் ஆக்ட் 141-வது ஸெக்ஷன்படி ஒரு ஹிந்து அனந்தரவார்ஸுக்கு, ஒரு ஸ்த்ரீ இறந்து போனபிறகு அந்த ஸ்த்ரீயின் ஸொத்துக்களுக்கு பாத்யதை ஏற்பட்டு அதன்மேல் அந்த அனந்தரவார்ஸ் வ்யாஜ்யம் போட்டால், அந்த வ்யாஜ்யத்துக்கு அந்த ஸ்த்ரீ இறந்து போனதன்மேல் புதிதாக வ்யாஜ்ய மூலம் ஏற்படுகிறது. இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் 144-வது ஸெக்ஷன்படி காலவதி ஏற்பட்டு விட்டதென்று சொல்லுவதற்கில்லை. 2-லா வீக்லி 751.

**Compromise and Joint Family.**

**ராஜிசெய்துகொள்வதும் அவிபக்தகுடும்பமும்.**—தகப்பனும் ஒரு புத்ரனும் சேர்ந்த ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தில் தகப்பன் நல்லெண்ணத்துடன், குடும்ப க்ஷேமத்தை யுத்தேசித்து பிறருடன் ராஜி செய்துகொண்டால், அவ்விதம் ராஜி செய்துகொண்டது புத்ரனையும் கட்டுப்படுத்தும். அப்படியில்லாமல் போனால் புத்ரனைக் கட்டுப்படுத்தாது.

தகப்பன் செய்துகொண்ட ஒரு ராஜியின்படி நிறைவேற்று மனுப்போட்டு அவிபக்த குடும்ப ஸொத்துகளை ஜப்திசெய்தபோது, அந்த ராஜி ஏற்பாடானது புத்ரனைக் கட்டுப்படுத்தாதென்று ஏற்பட்டால், அப்படி ஜப்தி செய்ததானது அவிபக்த குடும்ப ஸொத்தில் தகப்பனாருக்குள்ள பாகத்தைப் பற்றினமட்டில் ந்யாயமானது.

**Withdrawing Suits.**

**வ்யாஜ்யங்களை வாப்ஸு வாங்கிக்கொள்வது.**—வாதி ப்ரதிவாதிகளிடமிருந்து வரவேண்டிய சில தொகைகளை யடைவதற்காக ஒரு வ்யாஜ்யம் போட்டார். வ்யாஜ்யம் விசாரணையி லிருந்தபோது, வாதி இன்னொரு வ்யாஜ்ய மூலத்தைச் சேர்த்து தமது ப்ளையிண்டை மாற்றினார். அதன்மேல் வாதி, மறுபடியும் புதிதாக வ்யாஜ்யம் போட உத்தரவு பெற்று வ்யாஜ்யத்தை வாப்ஸு வாங்கிக்கொண்டார். பிறகு புதிதாக வ்யாஜ்யம் போட்ட தேதியில் சில தொகைகளுக்குள்ள பாத்யதை காலாவதியாகிவிட்டது. முதலில் போட்ட வ்யாஜ்யமானது கோர்ட்டாரால் முடிவுபெறாமல், வாதியின் ஸ்வயேச்சையான கார்யத்தால் முடிவு பெற்றதனால், காலாவதியாகிப்போன தொகைகளை அடைய அவருக்கு பாத்யதை கிடையாது.—2 லா வீக்லி 1002.

**Alienation by a Daughter.**

**புத்ரீ ஸொத்தைப் பராதீனம் செய்வது.**—ஒரு ஹிந்து புத்ரனில்லாமல் இறந்துபோனதன்மேல் அவருடைய ஸொத்துக்கள் அவருடைய புத்ரிவசமாயின. அவள், சிலபேர்களுடன் ராஜி செய்துகொண்டு, தனது ஸொத்தில் சிலவற்றைப் பராதீனம் செய்தாள். அப்படிப் பராதீனம் செய்ததற்கு பராதீனம் செய்தகாலத்தில் இருந்த ஒரே அனந்தர வார்ஸாகிய அவளுடைய வயது வந்த புத்ரனும் ஸம்மதம் கொடுத்திருந்தான். அப்படியானால் அவள் பராதீனம் செய்தது நல்லெண்ணத்துடன் செய்ததாகும். அதற்கு சட்டப்படி செல்லக்கூடிய காரணமும் இருந்ததென்று ஏற்படும். அப்படி யில்லையென்பதற்குத் தகுந்த அத்தாக்ஷியில்லாவிட்டால், அந்தப் பராதீனமானது, புத்ரி இறந்துபோன பிறகு அனந்தரவார்ஸு பாத்யம் பெற்றவரைக் கட்டுப்படுத்தும்.—2 லாவீக்லி 1025.

**Justice T. V. Seshagiri Aiyar.**

**ஜட்ஜ் சேஷகிரி அய்யர்.**—சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்து தற்போது வைஸ்ராயின் நிர்வாக ஸபைக்குப் போயிருக்கும் ஸர் சங்கரன் நாயருடைய ஸ்தானத்தில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் காயமான ஜட்ஜாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இதற்கு முன்னால் டெம்பரரி ஜட்ஜாக இருந்தார்.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### The Late Sir Henry Cotton.

**காலஞ்சென்ற ஸர் ஹென்றி காட்டன்.**—இங்லண்டில் இந்தியர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்து வரும் இங்க்லீஷ் கனவான்களில் ஒருவராகிய ஸர் ஹென்றி காட்டன் இந்த மாஸம் இறந்துபோனாரென்று கேட்டு விஸனிக்கிறோம். ஸர் ஹென்றி காட்டன் 1845-ம் வர்ஷம் ஸெப்டம்பர் மாஸம் 13-ந் தேதி கும்பகோணத்தில் ஜனனமானார். இவருடைய முழுப் பெயர் ஹென்றி ஜான் ஸ்டெட்மான் காட்டன், காட்டன் வம்சத்தார் 5-தலைமுறையாக இந்தியன் ஸிவில் ஸர்விஸ் உத்யோகத்தில் இருந்து வந்திருக்கிறார்கள். அவருடைய தகப்பனார் சென்னை ராஜதானியில் ஒரு ஸிவிலியன் உத்யோகஸ்தராக இருந்தார். ஸர் ஹென்றி காட்டனுடைய புத்ரர்களில் ஒருவர் கோதாவரியில் ஜில்லா ஜட்ஜாக இருந்துவருகிறார்.

ஸர் ஹென்றி காட்டனுக்கு 3-வது வயஸு நடந்துகொண்டிருந்தபோது, அவர் இங்கலண்டுக்கு அனுப்பப்பட்டார். அங்கே சில கலாசாலைகளில் வாசித்து தேர்ச்சியடைந்து ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையிலும் தேறி 1867-ம் வர்ஷத்தில் உத்யோகம் செய்ய இந்தியாவுக்கு வந்தார். அவர் முதலில் வங்காளத்தில் மிட்னாபூரில் அஸிஸ்டெண்ட் கலெக்டராக வேலை பார்த்தார். பிறகு படிப்படியாக ஸ்மால்காஸ் கோர்ட் ஜட்ஜாகவும், கவர்ன்மெண்ட் அண்டர் ஸெக்ரெடரியாகவும், கல்கத்தா ஹைகோர்ட் ரெஜிஸ்ட்ராராகவும், போலீஸ் கமிஷனராகவும், வேலை பார்த்துவந்தார். பிறகு காலக்ரமத்தில் உத்யோகத்தில் உயர்ந்து அஸ்ஸாம் மகாணத்தின் சீப் கமிஷனராக வேலை பார்த்தார். ஸர் ஹென்றி காட்டன் ஜனங்களிடத்தில் அனுதாபம் உள்ளவர். அஸ்ஸாமில் வேலை பார்த்தபோது முக்யமாய் தோட்டங்களில் கூலிவேலைசெய்யும் கூலியாட்களை ஆதரித்துவந்தார். இதனால் அவருக்கும் அநேக இங்க்லீஷ்காரர்களுக்கும் மனஸ்தாபம் நேர்ந்தது. அப்போது லார்ட் கர்ஸன் வைஸ்ராயாக இருந்தார். அவருக்கும் ஸர் ஹென்றி காட்டனுக்கும் அபிப்ராய பேதம் ஏற்பட்டதால், இருவருக்கும் பிடிக்காமல்போய் 1902-ம் வர்ஷத்தில் ஸர் ஹென்றி காட்டன் பென்ஷன் பெற்றுக்கொண்டு உத்தியோகத்திலிருந்து விலகி இங்கலண்டுக்குப் போனார். இங்கலண்டில் அவர் சிறிது காலம் பார்லிமெண்டில் மெம்பராக இருந்து இந்தியர்களுக்காக உழைத்துவந்தார். 1904-ம் வர்ஷத்தில் பம்பாயில் நடந்த காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

1902-ம் வர்ஷத்தில் அவருக்கு கே. ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுக்கப்பட்டது. அவர் ப்ரிட்டிஷ் காங்க்ரெஸ் கமிட்டியில் ஒரு மெம்பராக இருந்துவந்தார். இந்தியர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவந்த அவர் இறந்துபோனது இந்தியாவுக்கு ஒரு பெரிய நஷ்டமாகும்.

### General Alexieff.

**ஜெனரல் அலெக்ஸியப்.**—கிழக்குப் போர்முகத்தில் ரஷ்ய ஸைன்யங்களை நடத்திவந்த க்ராண்ட் ட்யூக் நிகலஸ் காகஸஸ் ப்ரதேசத்துக்கு வைஸ்ராயாகவும், ஸேனாதிபதியாகவும் அனுப்பப்பட்டபிறகு அவருடைய ஸ்தானத்துக்கு ஜெனரல் அலெக்ஸியப் என்னும் தளகர்த்தர் வந்திருக்கிறார். தற்போது ரஷ்ய ஸைன்யங்களின் தலைமையை ரஷ்ய சக்ரவர்த்தியே நிர்வகித்து வருகிறார். ஜெனரல் அலெக்ஸியப் அவருக்குக்கீழே முக்ய ராணுவ அதிகாரியாக இருந்துவருகிறார்.

இவர் 1843-ம் வர்ஷம் ஜனனமானார். இவர் உயர்ந்த அந்தஸ்துள்ள வம்சத்தில் பிறக்கவில்லையாகையால் இவர் சீக்ரம் உயர்ந்த பதவியை அடையவில்லை. இவர் ஸெண்ட்பீடர்ஸ்பர்கிலுள்ள கப்பல்படை ஸ்கூலில் சேர்ந்து பயிற்சியடைந்து, கப்பல் படையில் சேர்ந்தார். இவர் கப்பல் படையில் சில சீர்திருத்தங்கள் செய்தார். முக்யமாய் ரஷ்ய மாலுமிகளினிடம் ப்ரபலமாயிருந்த குடிவழக்கத்தை நிறுத்த முயற்சிசெய்தார். இவர் ரொம்ப கண்டிப்பானவர். குற்றம் செய்தவர்களை தயாதாக்ஷிண்யமின்றி கடுமையாய் தண்டித்துவருவார்.

இவர் தமது மனஸை தக்கவிதம் அடக்கி ஸ்வாதீனப்படுத்துவதில் பேர்போனவர். அகத்தினழகு முகத்தில் தெரியுமென்னும் வாக்யத்துக்கு விரோதமாக, இவர் தமது மனஸிலுள்ள எண்ணங்கள் பிறருக்குத் தெரியாதபடி அவைகளை அடக்கி மறைத்துக்கொள்வதிலும், அனாவச்யமாகப் பேசாமல் இருப்பதிலும் ஸமர்த்தர்.

### Sir Harcourt Butler.

**ஸர் ஹார்கோர்ட் பட்லர்.**—வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் கல்வி மெம்பராகவிருந்த ஸர் ஹார்கோர்ட் பட்லர் பர்மாவின் லெப்டினண்ட் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.



# SOCIETY AND RELIGION.

## ஜன ஸமூகமும் மதமும்.

### The Aryan Brotherhood Conference.

**ஆர்ய ஸகோதரத்வ கான்பரென்ஸ்.**—பம்பாயில் ஆர்ய ஸகோதரத்வ ஸங்கமென்ற ஒரு ஸங்கம் 1910-ம் வர்ஷத்தில் ஸர் நாராயண சந்தாவர்க்கர், ஸர் ராமக்ருஷ்ண பந்தார்க்கர் முதலிய ப்ரமுகர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த ஸங்கத்தின் கான்பரென்ஸ் ஸமீபத்தில் பம்பாயில் கூடிற்று. அந்தக்கான்பரென்ஸைத்திறந்து வைத்துப்பேசிய ஸர் நாராயண சந்தாவர்க்கர் ஜாதிப்பிரிவினையால் இந்தியாவுக்கு நேரிடும் கெடுதிகளைப்பற்றிப் பேசினார்.

முதலில் அவர் தென்னாப்ரிகா போன்ற குடியேற்ற நாட்டார் இந்தியர்களை ஜாதி விலக்கு செய்யப்பட்டவர்களையொப்ப ப்ரிட்டிஷ் குடிகளுக்குரிய ஸ்வதந்த்ரங்களுக்கு அவர்களுரியரல்லரென்று நினைத்து அவர்களை நடத்துகிறார்களென்றால், நாம் நமது தேசத்திலேயே நம்மைச் சேர்ந்தவர்களை எப்படி நடத்துகிறோமென்றார். குடியேற்ற நாடுகளிலே அன்யர்கள் நம்மவர்களை அநீதமாய் நடத்துகிறார்கள். இந்தியாவிலோ நாம் நம்மவர்களையே ஜாதிப் பிரிவினை செய்து அநீதமாய் நடத்துகிறோம். அயல் நாடுகளில் நம்மவர்களுக்கு ஏற்பட்டுள்ள முறைப்பாடுகளைப்பற்றித் துக்கிக்கும் நாம் நம் நாட்டிலேயே நம்மவர்களுடைய முறைப்பாடுகளைப்பற்றி வருத்தப் படுவதேயில்லை. இந்தியாவின் பொருளாதாரங்களையும் தொழிலாதாரங்களையும் பெருக்கி இந்தியாவை உயர்த்த விரும்புகிறோம். ஆனால் இந்தியாவில் தொன்று தொட்டு ஏற்பட்டிருக்கும் ஜாதிப்பிரிவினை நமது தொழிற் பெருக்கத்துக்கு ஒரு பெரிய இடைறு கட்டையாயிருந்து வருகிறது. இந்தியா ஒரு கண்டமாகுமென்று சொல்லும்படி அவ்வளவு பெரிய தேசமாயிருப்பதால், அதில் ஒரு ஜனம் என்ற ஜாதிக்கட்டு ஏற்படுவது அஸாத்யமென்று பலர் இன்னும் எண்ணிவருகிறார்கள். ஆனாலும் இப்போதைய யுத்த நெருக்கடியில் குலமும், மதமும், பாஷையும், ஜாதிக்கட்டுக்கு அடையாளங்களல்லவென்றும், ஸமூகப் பொதுவுணர்ச்சிகளும் ராஜீயப் பொது உணர்ச்சிகளுமே ஜாதிக்கட்டுக்கு அடையாளங்களென்றும தெரிந்துகொள்ளப்பட்டு வருகிறது. இருந்தாலும் ஜாதிப்பிரிவினை அச்சின்னங்களை உருக்குலைக்கும் தொத்து வ்யாதியாயிருந்து வருகிறது. ப்ரிட்டிஷ் குடிகள் என்ற முறையில் நாம் ஒருஜனத்தார் என்ற அபிப்ராயம் மேலோடி வருவதால் ஜாதிக்கட்டுணர்ச்சி நம்மில் சிறுகச் சிறுகப் பலப்பட்டு வருகிறது என்று ஸர் நாராயண சந்தாவர்க்கர் பேசினார்.

கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாக இருந்த ஸர் ராமக்ருஷ்ண பந்தார்க்கர் தமது ப்ரஸங்கத்தில் மேல்நாட்டிலும் பண்டைக்காலத்தில் இப்போது இந்தியாவிலிருப்பதுபோலவே ஜாதி வேற்றுமைகளிருந்தனவென்றும், ஆனால் தேச உணர்ச்சியும் ராஜீய உணர்ச்சிகளும் வ்ருத்தியாகவே ஜாதி வேற்றுமைகள் குறைந்துபோயின வென்றும், ஆனால் இந்தியாவில் தேச உணர்ச்சியும், ராஜீய உணர்ச்சியும் ஏற்படாததால் ஜாதிவேற்றுமைகள் ரொம்பவும் வ்ருத்தி யடைந்து பலத்துவிட்டனவென்றும், இந்தியாவானது ப்ரிட்டிஷ் ராஜ்யத்தின் மற்ற பாகங்களோடு ஸ்நேகமுள்ள பாகமாக ஆவதற்கு இந்தியர்கள் ஒரே மனமுடையவர்களாக ஆகவேண்டுமென்றும், இதற்கு ஹிந்துக்களுக்குள் ஜாதி வித்யாஸத்தைத் தொலைத்து ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஐக்யபாவம் ஏற்படும்படி செய்ய வேண்டுமென்றும் பேசினார்.

### Early Marriage.

**பால்யவிவாகம்.**—பம்பாயிலுள்ள சில ஜாதிகளில், பெற்றோர்கள் மாப்பிள்ளைகளிடமிருந்து பணம் ஸம்பாதிப்பதற்காக தங்களுடைய பெண்களையும், தங்களுடைய ஆதீனத்திலுள்ள சிறுபெண்களையும் அவர்கள் ரொம்ப சிறியவர்களா யிருக்கும்போதே, கல்யாணம் செய்து கொடுத்துவிடுகிறார்களாம். இவ்வழக்கம் வரவர அதிகரித்து வருகிறதாம். சிலஸமயங்களில் பெற்றோர்கள் தங்களுடைய பெண்களினுடைய இஷ்டத்துக்கு விரோதமாக கல்யாணம் செய்துகொடுத்து விடுகிறார்களாம் ஸமீபத்தில் பம்பாயில் ஸுமார் 5,000 ஹிந்துக்கள் ஒரு மீட்டிங்கில்கூடி இந்த வழக்கத்தைக் கண்டித்துப்பேசினார்கள். மீட்டிங்குக்கு வந்திருந்தவர்களில்சிலர் பால்யவிவாகத்தைத் தடுக்க கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இந்த வழக்கத்தை முற்றிலும் தடுக்கத்தக்கவழி தேட வேண்டுமென்று அந்த மீட்டிங்கில் தீர்மானம் செய்யப்பட்டது.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Reviving Faded Flowers.

வாடின புஷ்பங்களை புதியவைபோல் செய்தல்.—சில ஜனங்கள் வீடுகளில் மேஜைமேல் அலங்காரமாக பூங்கொத்துகளை வைப்பதுண்டு. இந்தப் புஷ்பங்கள் வாடிப்போனால், இவைகளை எறிந்துவிடுகிறார்கள். மேலும் வெளியூரிலிருந்து வரும் புஷ்பங்களை கட்டியனுப்பும்போது வேண்டிய வளவு ஜலம் தெளிக்காததால் அவைகள் வாடியிருப்பதுண்டு. இவைகளை வெகுவாய் உபயோகிப்பதில்லை. வாடின புஷ்பங்களை எறிந்துவிடாமல் சில உபாயங்களால் புதியவைபோல் செய்து மறுபடியும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு புஷ்பம் அல்லது புஷ்பக்கொத்தின் அடிக் காம்பில் சிறிதளவு நறுக்கிவிட்டு, ரொம்ப சூடான (ஆனால் கொதித்துக்கொண்டிராத) ஜலத்தை ஒரு கிண்ணத்தில் ஊற்றி, அந்த ஜலத்தில் புஷ்பங்களின் காம்புகளை வைக்கவும். அரைமணிநேரங்கழித்து ஜலம் நன்றாய்க் குளிர்ந்துபோனவுடன் புஷ்பங்கள் அன்று மலர்ந்தன போலிருக்கும். இவைகளை கொஞ்சம் சுத்த ஜலமுள்ள பாத்ரத்தில் வைத்திருந்தால் வெகு நேரம் கெடாமலிருக்கும். அந்த சுத்த ஜலத்தில் ஸோடாமா ஒரு சிட்டிகை சேர்த்தால் புஷ்பக்காம்புகள் ஸோடாவின் உதவியால் ஜலத்தை க்ரஹித்துக்கொண்டு புஷ்பத்தை வாடாமல் காப்பாற்றும்.

### To Get rid of Cockroaches.

கரப்புகளை ஒழிக்க.—கரப்புகள் அதிகமாயுள்ள இடங்களில் ஒரு பாகம் வெண்காரத்தைப் பொடி செய்து, அதோடு மூன்று பாகம் சோகலேட் மிட்டாயைப் பொடி செய்து சேர்த்து தூவினால், கரப்புகளின் உபத்ரவம் நீங்கும். வெண்காரத்தை தனியாகப் பொடி செய்தும் தூவலாம்.

வெல்லத்தையாவது சர்க்கரையையாவது பாகு காய்ச்சி அதில் வெண்காரத்தைத் தூள்செய்து போட்டு கரப்புகள் நடமாடும் இடத்தில் வைத்து வருவதாலும் கரப்பு களின் உபத்ரவம் நீங்கும்.

தகரத்தால் 3-அங்குல உயரத்துக்கு மூடியில்லாத ஒரு பெட்டி செய்து, அதன் உள்புறத்தில் நாற்ற மெடுத்த வெண்ணெயையாவது, நெய்யையாவது தடவி கரப்புகள் உள்ள இடத்தில் இரவில் வைத்துவிட்டால் அவைகள் அதில் வந்து விழும், பெட்டியின் உள்பக்கங்களில் நெய் தடவியிருப்பதால் வழவழப்பாயிருக்கும். இதனால் கரப்புகள் வெளியே தப்பியோட முடியாது. மறுநாள் காலையில் பெட்டியை எடுத்து சுடுதண்ணீருள்ள பாத்ரத்தில் உதறினால் கரப்புகள் வெந்நீரில் விழுந்து சாகும். மறுபடியும் அடுத்த ராத்ரி புதிதாக வெண்ணெய் அல்லது நெய் தடவாமலே பெட்டியை உபயோகப்படுத்தலாம்.

### Treatment of Burns.

நெருப்புப் புண்களுக்கு சிகித்ஸை.—தேகத்தின் ஏதாவது பாகத்தில் நெருப்புப்பட்டு, புண்ணானால், உடனே ஸோப்பைக்கொண்டு சுத்தம் செய்தால் வலி தீர்ந்துவிடும். பிறகு புண்ணின்மேல் லின்ஸீட் எண்ணெயைத் தடவி அதன்மேல் கோதுமை மாவைத் தூவவும். லின்ஸீட் எண்ணெயும் மாவும் சேர்ந்து கெட்டியாகி உலர்ந்தவுடன் மறுபடியும் எண்ணெயும் மாவுமாகப் போட்டுவரவும். தோல் நன்றாய் மூடிப் போகும்வரையில் இப்படிப் போடவேண்டும், பிறகு அந்த மா தானாகக்காய்ந்து கீழே விழுகிற வரையில் அதை ஒன்றும் செய்யக்கூடாது. இப்படிச் செய்தால் புண் ஆறி புதுத்தோல் உண்டாகும்போது புண்ணின் தழும்பு ஒன்றுமிருக்காது.

### To Clean Dirty Carpets and Flannel.

அழுக்குக் கம்பளங்களையும் ப்ளானல்களையும் சுத்தம் செய்ய.—அழுக்கான கம்பளங்களை நன்றாய் உதறி பிறகு அவைகளை மாசிக்காய் அரைத்து கலக்கியிருக்கும் தண்ணீரில் நனைக்கவும். உடனே அவைகளைக் கசக்கி அலசி ஆறப்போடவும். இப்படிச்செய்தால் கம்பளங்கள் சுத்தமாயும் பளபளப்பாயும் இருக்கும். ப்ளானல்களை சுத்தம்செய்ய, வடித்த கஞ்சியைத் தனியாக எடுத்து வைத்து, கைபொறுக்கிற சூடாயிருக்கும்போது ப்ளானல்களை நன்றாய் ஊறவைத்து துவைக்கவும்.—பெண்கல்வி

### Cleaning Iron Bedsteads.

இரும்புக் கட்டில்களை சுத்தம்செய்ய.—ஒரு கிண்ணம்பாலில் ஒரு தேயிலைக்கரண்டி டர்பெண்டைன் எண்ணெயைக் கலந்து ஒரு சுத்தமான துணியில் எடுத்து இரும்புக் கட்டிலின் பாகங்களின்மேல் தடவிப்பிறகு ஒரு ப்ளானல் துணியால் நன்றாய்த் தேய்க்கவும்,



# AGRICULTURE.

## விவஸாயம்.

### Rhinoceros Beetle.

தென்னம் வண்டு.—இது கருப்பு நிறமான பெரிய வண்டு. இது தென்னைக் குருத்து விரியுமுன், அதையும் பாளையின் அடிப்பாகத்தையும் தின்று அவைகளின் வழியாக மரத்தின் மிருதுவான பாகத்துக்குப் போய், அதையும் தின்று நாசப்படுத்துகிறது. தென்னம் வண்டு பீடித்த மரங்கள் வெகுவாய்ப்பட்டுப் போகின்றன. அப்படிப்பட்டுப் போகாமலிருந்தாலும், மரம் நோய்ப்பட்டது போலிருந்து நல்ல பலன் கொடுப்பதில்லை.

பெண்வண்டு ராத்ரிக் காலங்களில் சாணிக் குவியல்களிலும் அழுகிக்கொண்டிருக்கும் தாவரப்பொருள்களிலும் முட்டையிடுகிறது. அது தடவைக்கு ஸுமார் 10-முட்டைகள் இடும். முட்டைகளிலிருந்து வெண்மையான புழு உற்பத்தியாகிறது. இந்தப்புழு அழுகிப் போன வஸ்துக்களைத்தின்று ஜீவித்து ஸுமார் 3-அங்குலம் நீளம் வளருகிறது. அதற்குப் பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் வண்டாக மாறி தென்னை பனை மரங்களைத் தாக்குகிறது. இந்த வண்டுகள் ஸாதாரணமாக ஏப்ரல் மாஸம் முதல் நவம்பர் மாஸம் வரையில் தான் அதிகமாக இருக்கின்றன. இந்த வண்டுகளைத் தொலைக்க நவம்பர் மாஸக்காலத்தில் சாணிக் குவியல்களைப் பரிசோதித்து அவைகளிலுள்ள வண்டுகளை நாசம் செய்யவேண்டும். வண்டுகள் ராத்ரிக் காலங்களில் வெளிச்சமிருக்கும் இடத்தை நோக்கி வருமாகையால், ராத்ரிக்காலங்களில் விளக்குப் பொறி வைத்துப் பிடித்து விடலாம். இதன் விவரத்தை சென்ற மாஸத்து ‘ஜனாபிமானி’ யில் பயிரும் பூச்சிகளும் என்ற வ்யாஸத்தில் கண்டு கொள்ளலாம். இதற்கு காற்றில் அணையாத ஹரிக்கேன் லாம்ப் என்னும் லாந்தரை உபயோகிக்க வேண்டும். விளக்குக்கு அடியிலுள்ள தண்ணீர்ப் பாத்ரத்தில் கிரஸின் எண்ணெயும் ஜலமும் கலந்து வைக்கலாம். பெரிய தென்னந் தோப்புகளில் இரவில் நெருப்பு மூட்டினால் வண்டுகள் வெளிச்சத்தைக் கண்டு வந்து நெருப்பில் விழுந்து சாகும். மரத்திலுள்ள வண்டுகளை கெட்டியான கம்பிகளால் குத்தி வெளியிலெடுத்து, அந்த த்வாரத்தில் காய்ந்தபுல்லை கீல் எண்ணெயில் தோய்த்து அடைக்கவேண்டும்.



### Raising Tobacco Seedlings.

புகையிலையை நாற்று விடுதல்.—புகையிலையை நாற்றுவிடுவதற்கு நாற்றங்கால் நல்ல செழிப்புள்ளதாயும், நீர் தேங்காததாயும் இருக்கவேண்டும். நாற்றங்காலை எப்படித் தயார்செய்யவேண்டுமென்பதைப்பற்றி ‘கமத்தொழில் விளக்கம்’ சில குறிப்புகள் எழுதுகிறது.

தேங்காய் மட்டை அல்லது பழைய விறகுகளை நாற்றங்காலில் அடுக்கி நெருப்புமூட்டி எரித்தால், புகையிலைச் செடிக்கு வேண்டிய பொடாஷ் என்னும் மா உணவு ஸத்து நிலத்தில் சேரும். மேலும் நெருப்பு மூட்டுவதால் நிலத்திலுள்ள புழுப்பூச்சிகளின் முட்டைகளும் புல்பூண்டுகளின் விதைகளும் நாசமாகின்றன. மண்ணில் சாம்பல் நன்றாய்க் கலக்கும்படி நிலத்தை நன்றாய்க் கொத்திவிடவேண்டும்.

சாம்பல் நிலத்திற்கு நல்ல எருவாயிருப்பதோடு மண்ணையும் புலபுலப்பாக்குகிறது. நிலத்தைக் கொத்தி, மண் கட்டிகளை உடைத்து தூளாக்கி நிலத்தை ஸமனாகச் செய்யவேண்டும்.

நாற்றங்காலுக்கு நன்றாய் மட்கின பழைய எருவையே உபயோகிக்கவேண்டும். எரு அதிக காலம் மட்கியிருந்தால் அதிலிருக்கக்கூடிய புல்பூண்டுகளின் விதைகள் அழுகிப்போயிருக்கும்

புகையிலை விதைகளில் நல்ல காத்ரமாயிருப்பவற்றையே விதைக்கவேண்டும். விதைகளைக் காற்றில் தூற்றி லேசான விதைகளைப் பிரித்தெடுத்து கனமான விதைகளையே உபயோகிக்கவேண்டும். 45-சதுர அடி உள்ள பாத்திக்கு ஒரு தேயிலைக் கரண்டி விதை போதுமானது. விதைப்பதற்குமுன் விதைகளை சாம்பலோடு கலந்து தெளிப்பது நல்லது. அப்போது விதைகள் பாத்தியில் பரவலாய் விழும்.

பாத்தியின் பக்கங்களில் களைகள் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும் அவைகள் இருந்தால் பூச்சி புழுக்கள் அவைகளிடம் தங்கியிருந்து, புகையிலை முளைத்தவுடன், பயிரை நாசம் செய்யும். இதே காரணத்தை உத்தேசித்து பாத்தியில் நிழலுக்காக ஓலை முதலியவைகளைப் போட்டு வைப்பதற்கு பதிலாக அவைகளைப் பாத்தியின்மேல் பந்தலாகப் போட்டுவைத்தால் புழுப்பூச்சிகளின் உபத்ரவம் அதிகமாக ஏற்படாதென்று சொல்லலாம்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Co-operative Dairy Farming.

**கோவாபரேடிவ் பால் சாலை.**—பம்பாய் கோவாபரேடிவ் ஸங்கங்களின் அஸிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ராகிய மிஸ்டர் கோன்ஹாலி என்பவர் கோவாபரேடிவ் பால் சாலை ஸ்தாபிப்பது விஷயமாக சில விஷயங்கள் சொல்லுகிறார். பால் விற்பனைக்காக மாடுவைத்துக்கொண்டு ஜீவிக்கும் இடையர்களை ஒன்றுசேர்த்து கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். பாலைக்கறப்பது, சேர்த்துவைப்பது, விற்பது முதலிய வேலைகளை ஸாதாரண முறைகளிலேயே செய்யலாம். ஆனால் இந்த வேலைகளை ஸெக்ரெடரியின் மேற்பார்வையில் செய்யவேண்டும். பாலை ஐக்ய முறையிலேயே விற்கவேண்டும். அப்பொழுதுதான் பாலை ஜனங்களுக்கு ஸ்வயமாய் கலப்படமில்லாமல் விற்கக்கூடும். முனிஸிபாலிடிகள் பட்டணங்களில் நல்ல பால் கிடைக்கச்செய்வதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்வதாயிருந்தால், அவைகள் பின்வரும் வேலைகளைச்செய்யவேண்டும். பட்டணங்களிலுள்ள இடையர்களை ஒன்றுசேர்த்து ஒன்று அல்லது அதற்கதிகமாக கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். மாடுகளை பட்டணத்துக்கு வெளியில் கட்டிவைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும், பட்டணத்துக்குப் பக்கத்திலுள்ள க்ராமங்களிலிருந்து பட்டணத்துக்குப் பால் விற்பனைக்கு வந்தால், அந்த க்ராமங்களில் முக்யமானவற்றுள் கோவாபரேடிவ் பால் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். எல்லா ஸங்கங்களுக்கும் பொதுவாக ஒரு பால் விற்பனை ஸங்கம் ஸ்தாபிக்கவேண்டும். இடையர்கள் ஸங்கங்களுக்காக மாட்டுக் கொட்டில்கள்கட்டிக்கொடுக்கவேண்டும். க்ராம ஸங்கங்களுக்கு பால் கறக்கும் கொட்டகைகள் கட்டிக்கொடுக்கவேண்டும்.

## A Vegetable Growers' Association.

**கறி காய் பயிர் செய்வோரின் ஸங்கம்.**—மார்க்கெட்டில் விற்கப்படும் கறி காய்களைப் பயிர் செய்பவர்களுக்காக சில தினங்களுக்கு முன்னால் பெங்களூரில் ஒருகோவாபரேடிவ் ஸங்கம்ஸ்தாபிக்கப்பட்டதாக தெரிகிறது. இந்த ஸங்கத்தில் சேரும் மெம்பர்கள் தலைக்கு ரூபா 5-வீதம் பங்கு வாங்கவேண்டுமென்றும், 20-பங்குக்கு அதிகமாய் ஒருவரும் பங்கு வாங்கக்கூடாதென்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஸங்கத்தின் உதவியால் கறிகாய்த் தோட்டங்கள் அபிவ்ருத்தியாகி ஸாதாரண கறிகாய்களும், முக்யமாய் உருளைக்கிழங்கும் பழவகைகளும் பயிர் செய்யப்படுமென்று சொல்லப்படுகிறது.

## Co-operation in Travancore.

**திருவாங்கூரில் கோவாபரேஷன்.**—திருவாங்கூரிலுள்ள கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ரார், ஸங்கங்கள் ஸ்தாபிக்கும் விஷயத்தில் சில புது முறைகளைக் கைக்கொள்ளப்போகிறார். அவர் முதலில் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதற் கேற்றதான ஸ்வல்ப விஸ்தீரணமுள்ள ஒரு ப்ரதேசத்தில் ஒரு குறிப்பிட்டகாலத்துக்குள் 12-முதல் 20-வரையில் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்று சொல்லுகிறார். இப்படி ஒரு குறிப்பிட்ட ப்ரதேசத்தில் சில கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதன் நோக்கமென்னவென்றால் கவர்ன்மெண்டார் தமது மேற்பார்வையைக் கூடியமட்டும் குறைப்பதும், ஸங்கங்களுக்கு நிறைமை ஏற்பட்டதும், அவைகளைக்கொண்டே அவைகளுடைய கணக்குகளை தணிக்கைசெய்து நடவடிக்கைகளை மேற்பார்வைசெய்துகொள்ள ஏற்பாடு செய்வதுமே ;இதற்கு ஸங்கங்கள் ஒன்றுசேர்ந்து தங்களுக்குப் பொதுவாக ஒரு யூனியன் ஸ்தாபித்துக் கொள்ளவேண்டுமாம். இந்த யூனியன் தான் பிற்காலத்தில் ஸங்கங்களின் கணக்குகளைத் தணிக்கைசெய்து, அவைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும்.

ரெஜிஸ்ட்ரார் செய்யப்போகிற இரண்டாவதுவேலையாவது ஜனங்களுக்கு கோவாபரேஷனைப்பற்றிய கொள்கைகளையும் முறைகளையும் கற்பிப்பது. அவர், தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஸங்கம் ஸ்தாபித்து ரெஜிஸ்டராகிறவரையில் அந்த விடங்களுக்குப்போய் முயற்சிசெய்து வருவார்.

இன்னும் அவர், மற்ற டிபார்ட்மெண்டுகளிலுள்ள உத்யோகஸ்தர்கள் கோவாபரேடிவ் முயற்சிவிஷயத்தில் ரொம்ப அனுதாபம் காட்டவேண்டுமென்றும் க்ராமப் பள்ளிக்கூடத்து உபாத்யாயர்கள் இந்த ஸங்கங்களில் சேர்ந்துகொள்வதைப்பற்றி ஏதாவது நிர்பந்தங்கள் இருந்தால் அவைகளை நீக்கிவிடவேண்டுமென்றும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்.

ரெஜிஸ்ட்ராருடைய மேற்சொன்ன ப்ரேரணைகளை திருவாங்கூர் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.



# COMMERCE.

# வ்யாபாரம்.

## Helping Minor Industries.

**சிறுதொழில்களுக்கு உதவிசெய்தல்.**—ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார் அந்த மாகாணங்களில் சிறு கைத்தொழில்களில் அமர்ந்துள்ளவர்களுக்கு உதவியாக சில ஏற்பாடு செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். சிறுதொழிலாளிகளுக்கு தங்களுடைய ஸாமான்களை விற்கவேண்டிய ஸௌகர்யங்களில்லாமையால், அந்தந்த ப்ரதேசத்து ஸாமான்களை அந்தந்த ப்ரதேசத்திலேயே விற்கவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு போதுமான மூலதனமில்லாமையால் அவர்கள் தங்கள் ஸாமான்களை ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யவாவது, இந்தியாவிலேயே நன்றாய் விலைப்போகக்கூடிய வேறு இடங்களுக்கு அனுப்பி அதிகலாபத்திற்கு விற்கவாவது முடிவதில்லை. இன்னின்ன விடங்களில் இன்னின்ன ஸாமான்கள் செய்யப்படுகின்றன என்று பொதுஜனங்களுக்குத் தெரியப்படுத்தினால் அவைகளுக்கு நல்ல க்ராக்கி ஏற்படக்கூடும். இப்போது ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ஜில்லாவிலும் கௌரவ வ்யாபார நிருபர்கள் என்று சில கனவான்களை நியமிக்கப்போகிறார்கள். இந்த கனவான்கள் அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்வது விஷயமாய் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைப்பற்றி கைத்தொழில் டிரெக்டருக்குத் தெரிவிப்பார்கள்.

தொழிலாளிகளுக்கு உபயோகப்படக்கூடிய பல விஷயங்களை இந்த நிருபர்கள் மூலமாக தொழிலாளிகளுக்குத் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். வ்யாபாரச் சரக்குகளை எந்தவிடங்களில் கொண்டுபோய் விற்றால் அதிகலாபம் கிடைக்கும் என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள்செய்து அப்படியே வேறிடங்களில் விற்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள்செய்ய முயற்சிசெய்வார்கள்.

## A Motor Car Company.

**ஒரு மோட்டார்கார் கம்பெனி.**—நாகப்பட்டணத்திலிருந்து திருவாரூருக்குப் போவதறகாக தென்னிந்தியா ரெயில்வே அதிகாரிகள் மோட்டார் வண்டி கம்பெனி ஒன்றை பரீக்ஷார்த்தமாக வைத்துப்பார்க்க உத்தேசித்து சென்ற மாஸம் மோட்டார் வண்டியை விட ஆரம்பித்தார்கள். நாகப்பட்டணத்திலிருந்து திருவாரூருக்கும், திருவாரூரிலிருந்து நாகப்பட்டணத்திற்கும் மோட்டார் வண்டிகள் விடப்பட்டன. இது அனுகூலமாகும் பக்ஷத்தில் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணத்திற்கும் மோட்டார் வண்டிகளை விட அக்கம்பெனியார் உத்தேசித்திருக்கிறார்கள். இந்த மோட்டார் வண்டிகள் ரெயில் தண்டவாளத்தின் மீதே ஓட்டப்படும். இதனால் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணத்திற்கு இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் ஷட்டில் வண்டிகள் நின்று போகக்கூடும். இந்த மோட்டார் வண்டிகளில் 70-பேர் வரையிலும் உட்கார்ந்து ப்ரயாணஞ் செய்யலாம்.

## Tinnevelly-Tiruchendur Railway.

**திருநெல்வேலி திருச்செந்தூர் ரெயில்வே.**—இந்த மாஸம் 23-தேதி யன்று போர்ட் அப் ரெவின்யூ மெம்பராகிய மிஸ்டர் எல். இ. பக்லி, திருநெல்வேலிக்கும் திருச்செந்தூருக்கும் போடப்படும் ரெயில்வேயின் வேலைகளை ஆரம்பித்து வைத்தார். இந்த ரெயில்வேயை திருநெல்வேலி ஜில்லா போர்டார் ஸொந்தத்தில் போட்டு வைக்கிறார்கள். இதற்குப்பிடிக்கும் செலவு 17-லக்ஷம் ரூபாயாகும். இந்த ரெயில் பாதை போட்டு முடிந்ததும் இதை தென்னிந்திய ரெயில்வே கம்பெனியார் நிர்வகித்து வருவார்கள்.

## Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஆகஸ்ட் மாஸத்தில் அடியில்கண்ட விவரப்படி 12-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| 1 | அச்சடித்து ப்ரசுரம் செய்யுங் கம்பெனி | 1,00,000 |
| 5 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 13,26,000 |
| 1 | பருத்தி மில் கம்பெனி | 2,00,000 |
| 1 | மாவரைக்கும் மில் கம்பெனி | 6,00,000 |
| 1 | மரமறுக்கும் கம்பெனி | 75,00,000 |
| 2 | தேயிலைத் தோட்டக்கம்பெனி | 2,00,000 |
| 1 | நிலங்கட்டிடக் கம்பெனி | 60,000 |
| 12 | மொத்தம் | 99,86,000 |

# ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

### Bamboo.

**மூங்கில்.**—மூங்கில் க்ராமவாஸிகளுக்கு ரொம்ப உபயோகமுள்ள ஒரு பயிர். இது அநேக வேலைகளுக்கு உதவுகிறது. ஆனால் இது அதிகமாயுள்ள காடுகளுக்கு ஸமீபத்தில் உள்ள ப்ரதேசங்களில்தான் ஏராளமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது. காடுகளில் உள்ள மூங்கில்களை தூரமான இடங்களுக்குக் கொண்டுபோக அதிக செலவு பிடிப்பதால், அவ்விடங்களில் அதிகமாக உபயோகிக்கப்படுவதில்லை. மைஸூரில் ‘கிரிபிதரு’ என்று பெயருள்ள ஒரு ஜாதி மூங்கில் பயிராகி வருகிறது. இது அநேகமாய் எல்லாவகைநிலங்களிலும் பயிராகக்கூடியது. ஸாதாரண மூங்கில்களோ நீர்த்தாங்கலான பள்ளங்களிலும், குளக்கரைகளிலும் மாத்ரம் விளையும். மைஸூர் திணுஸு அப்படியல்ல. விவஸாயிகள் தங்கள் தோட்டங்களில் இதை முப்பதடிக்கு ஒரு கொத்தாக வேலியோரங்களில் பயிரிடலாம். இது 20-முதல் 30-அடி உயரந்தான் வளரும். இதனால் தோட்டத்துப் பயிர்களுக்கு நிழல் கட்டாது. இதைப் பயிரிடும்போது ஆரம்பத்தில் இதன் இலைகளை ஆடுமாடுகள் தின்று அழித்துவிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

### Artificial Butter Powder.

**செயற்கை வெண்ணெய்ப் பொடி.**—ஜெர்மானியர்கள் இயற்கைப் பொருள்களுக்கு பதிலாக செயற்கைப் பொருள்கள் கண்டுபிடிப்பதில் பேர்போனவர்கள். தற்காலம் யுத்தத்தில் உணவுப் பொருள்களின் விலை ரொம்ப உயர்ந்துவிட்டதனால், அந்த உணவுப்பொருள்களைப் போல் செயற்கை உணவுப் பொருள்கள் செய்வதைப்பற்றி அவர்கள் ரொம்ப கவனம் செலுத்திவருகிறார்கள். அவர்கள் தற்போது ஸ்வய வெண்ணெய்க்கு பதிலாக ஒரு நூதன பொடி கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தப் பொடியில் 4 அணு விலையுள்ளதை அரைப்படி ஜலத்தில் சேர்த்துக்கரைத்தால் ஒரு ராத்தல் வெண்ணெய் கிடைக்கிறதாம். இந்த வெண்ணெய் ரொம்ப நேர்த்தியாயிருப்பதால் யாவரும் உபயோகிக்கலாமாம். செயற்கை வெண்ணெயுடன் ஸ்வய வெண்ணெயை சரிக்கு சரிகலந்து கொள்வது நல்லது. ஆனால் இப்படிச் செய்யவேண்டுமென்பது அவசியமானதல்ல. வ்யாபாரிகள் ஸ்வயவெண்ணெயுடன் விலைமலிவான செயற்கை வெண்ணெயைக் கலந்து விடக்கூடுமாதலால், ஆகாரங்களைச் சோதிக்கும் இன்ஸ்பெக்டர்கள் இது விஷயத்தில் ரொம்ப கவனமுள்ளவர்களாயிருக்கவேண்டுமாம்.

### Kapok Seed.

**இலவம் விதை.**—ப்ரான்ஸிலுள்ள மார்செல்ஸில் இலவம் விதையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். இதற்கு வேண்டிய விதையின் பெரும்பாகம் இந்தியாவிலிருந்து போகிறது. மற்றவிதைகளிலிருந்து எண்ணெயெடுப்பது போலவே இதிலிருந்தும் எண்ணெய் எடுக்கிறார்கள். ஸாதாரணமாய் வித்தையிலிருந்து ஒரு தடவைதான் எண்ணெய் எடுக்கிறார்கள். சில ஸமயங்களில் முதல் தடவை எண்ணெயாட்டிய பிறகு, கிடைக்கும் பிண்ணாக்கில் வெந்நீரை ஊற்றி, மறுபடியும் மெஷீன்களில் கொடுத்து, எண்ணெ யிறக்குகிறார்கள். பிறகு எண்ணெயை வடிகட்டுகிறார்கள். எண்ணெயின் நிறத்தையாவது, வாஸனையையாவது போக்க எந்த வேலையும் செய்வதில்லை. மார்ஸேல்ஸில் விதையிலிருந்து 100-க்கு 15 பாகம் வீதம் எண்ணெய் கிடைக்கிறது. அங்கே இலவம் எண்ணெயைக் கைத்தொழில்களில் தான் உபயோகிக்கிறார்கள். அது முக்யமாய் ஸோப் செய்வதில் உபயோகப்படுகிறது. பிண்ணாக்கு நிலத்துக்கு உரமாக உபயோகப்படுகிறது.

### Paper Shirts.

**கடுதாசி ஷர்ட்டுகள்.**—ஜப்பானில் கடுதாசியினால் ஷர்ட் முதலிய உள்சட்டைகள் செய்கிறார்களாம். இந்த கடுதாசிகளில் ஜலம் ஊறுவதில்லையாம். இந்தக் கடுதாசி செய்வதில், இரண்டு மெல்லிய கடுதாசிகளை ஒரு ரகஸ்யமான பசையினால் ஒட்டிச் சேர்த்துக் காயவைக்கிறார்கள். காய்ந்த பிறகு, அவைகளை கொதிக்கும் ஜலத்தில் போடுகிறார்கள். ஜலத்தில் போடுவதால் பசை முழுவதும் கடுதாசிகளுக்குள் ஊறிக்கொள்கிறது. பிறகு கடுதாசியை எடுத்து, ஜலத்தில் அலம்பி மறுபடியும் மேற்சொன்ன ரகஸ்யப் பசையைத் தடவிக் காயவைக்கிறார்கள். இந்தக் கடுதாசிகள், துணிகள்போலவே 21 கஜம் நீளமும், 55 அங்குலம் அகலமும் உள்ள பீஸ்களாக செய்யப்படுகின்றன. இந்தக் கடுதாசிகளைக் கொண்டு, ஷர்ட், காலுக்கு உள்சட்டை முதலியவைகள் செய்யலாமாம்.



# BOYS' PAGE.

## பையன்கள் பக்கம்.

### A Walking Tour round the world.

**கால் நடையாக பூப்ரதக்ஷிணம்.**—ஹாலண்ட் தேசத்தைச் சேர்ந்த இரண்டு பேர்கள் பந்தயம் போட்டுக்கொண்டு கால் நடையாக பூப்ரதக்ஷிணம் செய்து வருகிறார்கள். அவ்விதம் செய்தால் அவர்களுக்கு 12,000-ரூபாய் வெகுமதி கிடைக்குமாம். அவர்கள் ஸமீபத்தில் கல்கத்தாவுக்கு வந்தார்கள். பந்தயத்தின் நிபந்தனை என்னவென்றால் அவர்கள் ஒருவரையும் பண உதவிகேட்கக்கூடாது. ஆனால் தங்களுடைய போட்டோக்கள் உள்ள கார்டுகளை ஜனங்களுக்கு விற்று பணம் ஸம்பாதித்து தங்கள் செலவுக்கு வைத்துக்கொள்ளலாம். இந்தியாவிலிருந்து அவர்கள் ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா, இங்க்லண்ட், ஆப்ரிக்கா, இட்டலி முதலிய விடங்களுக்குப்போய், அதற்குள் யுத்தம் முடிந்துபோனால் ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, ரஷ்யா, ஸ்வீடன் நார்வே என்னும் தேசங்களுக்குப் போய்க் கடைசியில் தங்கள் ஜன்மதேசத்துக்குப் போவார்கள்.

### Two well known Wrestlers

**இரண்டு பேர்பெற்ற மல்லர்கள்**—மேல்கண்ட குறிப்பில் ப்ரஸ்தாபம் செய்திருக்கும் இரண்டு ப்ரயாணிகளில் ஒருவராகிய எம். எ. வான் டென் எண்டென் என்பவர் மல்யுத்தம் செய்வதில் ப்ரஸித்தி பெற்றவர். அவர் சென்ற செப்டம்பர் மாஸம் 12-ந் தேதி யன்று, கல்கத்தாவில் ப்ரபல மல்யுத்தக்காராகிய மிஸ்டர் ஸுபோத க்ருஷ்ண போஸ் என்பவருடன் மல்யுத்தம் செய்தாராம். அந்த மற்போரில் மிஸ்டர் போஸ் ஜயித்தாராம். வான் எண்டன் ஹாலண்டிலுள்ள மல்லர்களில் முதன்மையானவர். ஐரோப்பா முழுவதும் அவருடைய பெயர் ப்ரபலமாய் விளங்கி வருகிறது. ஸமீபத்தில் அவர் ஜாவாவில் மல் யுத்தம் செய்து ஜயமடைந்து விருதுகள் பெற்றிருக்கிறார்.

மிஸ்டர் போஸ் இந்தியாவில் அநேக மல்லர்களுடன் போர் செய்து ஜயம் பெற்றிருக்கிறார். அவருடைய ப்ரதாபத்தைக்கேட்ட அநேக இங்க்லீஷ் மல்லர்கள் அவரை மற்போருக் கழைத்திருந்தார்களாம். அவர் இங்க்லண்டுக்குப் போக எண்ணியிருக்கையில் யுத்தம் நேர்ந்துவிட்டதால், அங்கே போகமுடியாமல் போயிற்று. வான் எண்டனும், மிஸ்டர் போஸும் மறுபடியும் மல் யுத்தம் செய்வதாக இருந்தார்களாம். ஆனால் வான் எண்டன் சீக்ரம் இந்தியாவை விட்டுப் போக நேரிடவே, அவர், தாம் மிஸ்டர் போஸினிடம் தோற்றுப் போனதாக அவருக்கு ஒரு கடிதமெழுதி தமது விருதுகளையும் மெடல்களையும் அனுப்பினாராம்.

மிஸ்டர் போஸ் தமது திறமையை அபிவ்ருத்தி செய்து வருவதோடு அநேக வாலிபர்களையும் மல் யுத்தத்தில் பயிற்சி செய்வித்து வருகிறாராம். அவருக்கு ஸுமார் 200 சிஷ்யர்கள் இருக்கிறார்களாம். மிஸ்டர் போஸ் ஒரு உயர்ந்த வம்சத்தில் பிறந்தவர்.

### Swimming Babies.

**நீந்துங் குழந்தைகள்.**—அமெரிக்காவுக்கு மேற்கில் பஸிபிக் மஹா ஸமுத்ரத்தில் உள்ள ஹாவெய் தீவுகளில் குழந்தைகளுக்கு நடக்கத் தெரிவதற்குமுன் நீந்தத் தெரியுமாம். இந்த விஷயத்தை முதல் முதலில், ஹாவெய் தீவுகளிலிருந்து அமெரிக்காவுக்கு வந்த ஒரு ப்ரபு தெரிவித்தார்.

இவ்விஷயம் முற்றிலும் வாஸ்தவமென்று ஒரு அமெரிக்கப் பத்திரிகை தெரிவிக்கிறது. அமெரிக்காவிலும் அநேக குழந்தைகளுக்கு நீந்தத் தெரியுமாம். 5-வயஸுக்கும் குறைந்த குழந்தைகள் நன்றாய் நீந்துகின்றனவாம். 10-வயஸுப் பெண்கள் ரொம்ப வேகமாயும், அதிக நேரம் ச்ரமமில்லாமலும் நீந்துகிறார்களாம். 12 முதல் 15-வயஸு வரையிலுள்ள பையன்கள் வயஸு சென்றவர்களுடன் நீந்துவதில் போட்டிபோட்டு ஜயிக்கிறார்களாம்.

ஸமீபத்தில் பிலடல்பியாவில் $4\frac{1}{2}$-வயஸுள்ளதும், 33-ராத்தல் நிறையும் 3-அடி உயரமுமுள்ளதுமான ஒரு பெண் குழந்தை யாதொரு ச்ரமமுமின்றி $13\frac{1}{2}$-நிமிஷ நேரத்தில் 320 கஜம் நீந்திச் சென்றதாம்.

### Words of Advice.

**நீதி மொழிகள்.**—ஈவிரக்கமின்றி முரடனாயிருக்க வேண்டாம். தயைசெய்து, வந்தனம் என்ற சொற்களை அடிக்கடி சொல்ல ஒருபோதும் மறக்கக்கூடாது, ஒருவருக்கும் பொல்லாங்கு நினைக்கவேண்டாம். அன்பாகவே பேசவேண்டும். குழந்தைகள், கிழவர்கள், மெலிந்தவர்கள் ஆகிய யாவரையும் ஆதரிக்கவேண்டும்.

சண்டை சச்சரவு ஒருபோதும் வேண்டாம் அடக்கம் ஆயிரம் பெறும். ஸ்வய நலத்தையே பெரிதாகப் பார்க்கக் கூடாது. பரோபகாரமே பெரிது.—விவேகபோதினி.

## LADIES' PAGE.
## ஸ்த்ரீகள் பக்கம்.

### Female Education in India.

**இந்தியாவில் பெண் கல்வி.**—இந்தியாவின் அபிவ்ருத்தியில் அபிமானங்கொண்டிருக்கும் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் என்பவர் இந்தியாவில் பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்வதைக்குறித்து இந்தியா மந்திரியைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று எண்ணி லண்டனில் இந்தியர்களுள்பட சில கனவான்களை ஒரு கமிட்டியாகச் சேர்த்து இந்தியா மந்திரியைக் கண்டுவர ஏற்பாடு செய்தார். இந்தக் கமிட்டியால் டெபுடேஷனாக அனுப்பப்பட்ட ப்ரமுகர்கள் இந்தியா மந்திரியைக் கண்டு, இந்தியாவில் படித்த பெண்கள் தொகை ரொம்ப குறைவாயிருக்கிறதென்றும், படித்தபையன்களின் தொகைக்குத் தகுந்தபடி பெண்களின் தொகையுமிருக்க வேண்டுமென்றும், இந்திய ஸ்த்ரீகளை உபாத்யாயர்களாய் பயிற்சி பெறத் தூண்டும் பொருட்டு அவர்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்துப் படிக்கச்சொல்லவேண்டுமென்றும், பெண் கல்வியின் நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்து அது விஷயமாய் ப்ரேரணைகள் செய்யும்படி இந்திய கனவான்களும் ஸ்த்ரீகளும் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்கள்.

அதற்கு இந்தியா மந்த்ரி, பெண் கல்வியை அபிவ்ருத்தி செய்யவேண்டியது அவச்யமென்றாலும், அது விஷயமாய் இந்தியர்கள் கவர்ன்மெண்டாருக்கு யாதொரு விண்ணப்பமும் அனுப்பியிருப்பதாகத்தெரியவில்லையென்றும், டெபுடேஷன் மெம்பர்கள் சொன்ன மாதிரி கமிட்டியொன்று நியமிக்கத் தமக்கு இஷ்டமில்லையென்றும், ஆனால் அவர்களுடைய விண்ணப்பத்தை இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்புவாரென்றும் சொன்னார்.

### Industrial Education for Women.

**ஸ்திரீகளுக்குத் தொழில் கல்வி.**—பேஹார் ஒரிஸ்ஸா கவர்ன்மெண்டார், ஸ்த்ரீகளுக்குக் கைத்தொழில் கல்வி கற்றுக் கொடுப்பதைப் பற்றி ஆலோசித்து வருகிறார்கள். அவர்கள் பாட்னாவில் சரிகை வேலை, சித்ரத் தையல்வேலை ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுக்க ஒரு பாடசாலை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இது புது முயற்சியாகையாலும், இந்தப் பள்ளிக்கூடத்தில் தாழ்ந்த வகுப்பு ஸ்த்ரீகளே படிப்பார்களாகையாலும், அவர்கள் அதிகமாக சம்பளம் செலுத்துவதென்பது முடியாதாகையாலும், கவர்ன்மெண்டார் அந்தப் பள்ளிக்கூடத்தை ஸொந்தச் செலவில் நடத்துவதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம். இதற்கு அதிக செலவு பிடிக்காதென்று சொல்லப்படுகிறது. சில வர்ஷங்கள் சென்றால் பள்ளிக்கூடம் பிறர் உதவியின்றி நடந்துவரக்கூடுமாம். அதாவது, அங்கே செய்யப்படும் சரிகை வேலைகளையும் தையல் வேலைகளையும் விற்றுக் கிடைக்கும் பணத்தைக்கொண்டே பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கலாம். பள்ளிக்கூடத்தை சரியான முறைகளில் நடத்துவதற்காக ஒரு ஆலோசனை கமிட்டி ஏற்படுத்தி அதில், பேஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களிலுள்ள ப்ரபல கனவான்களை மெம்பர்களாய் நியமித்து, அந்தக் கமிட்டியின் ஆலோசனைகளையும் கேட்டுக்கொள்வார்கள். பள்ளிக்கூடத்தை ஸாதாரண வித்யாசாலையாக நடத்தாமல், ஒரு தொழில்சாலை போல் நடத்துவதாக உத்தேசமாம். இதற்கு, மாணவர்கள் செய்தவேலைகளை விற்பதில் உதவி செய்யும்படி ஆலோசனைக் கமிட்டி மெம்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுவார்கள்.

### Children's Sleep.

**குழந்தைகளின் தூக்கம்.**—ஸுக சரீரமுள்ள குழந்தை பிறந்த 2 மாஸங்கள் வரையில், பசியெடுக்கும் போது தவிர மற்ற காலமெல்லாம் தூங்கும். பசியெடுத்தபோது மாத்ரம் அழும். குழந்தைகள் தினமொரு முறை நன்றாயழவேண்டுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஏனென்றால் அழுதால்தான் குழந்தைகளின் நுரையீரல்கள் நன்றாய் விரிந்து பலமடையுமாம். ஸாயந்தர வேளைகளில் குழந்தைகளைத் தூங்கவிடக்கூடாது. அப்போது குழந்தைகளை விழித்துக்கொண்டிருக்கும்படி செய்தால், அவைகள் இரவில் வெகுநேரம் நன்றாய்த் தூங்கும்.

குழந்தைக்கு ஆறுமாஸமானதும், அது தினந்தோறும் 16 மணி நேரம் தூங்கவேண்டும். இப்படி அப்த பூர்த்தியாகிறவரையில் தூங்கவேண்டும். அதற்கு பிறகு 5-வது வயஸுவரையில் குழந்தை 14 மணி நேரம் தூங்கினால் போதுமானது. அதற்குப் பிறகு 7-வது வயஸுவரையில் 12 மணி நேரம் தூங்கவேண்டும். அநேகமாய் இந்த வயதில் குழந்தைகள் பகல் பொழுதெல்லாம் விழித்திருந்து இரவு நேரம் முழுமையும் தூங்கும். 7-வது வயஸுக்குப்பிறகு 10-அல்லது 11-வயஸுவரையில் குழந்தைகள் 11-மணி நேரம் தூங்கவேண்டும்.



## INDIANS ABROAD.
## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indians in Zanzibar.

**ஸான்ஸிபார் தீவில் இந்தியர்கள்.**—ஸான்ஸிபார் என்பது ஆப்ரிக்காவின் கிழக்குக்கரையோரமாக உள்ள ஒரு தீவு. அங்கே அநேக இந்தியர்கள் குடியேறியிருக்கிறார்கள். ஸுமார் 8-அல்லது 10-வர்ஷங்களுக்கு முன்னால் வரையில் ஸான்ஸிபாரில் ஜலந்தூக்குவதற்கும் ஜலம் கொட்டி வைப்பதற்கும் இந்தியாவிலிருந்து மண் பாண்டங்கள் அந்தத் தீவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன, அதற்குப் பிறகு இந்தியாவிலிருந்து குயவர்கள் குடியேறிப்போய் ஸான்ஸிபார் பட்டணத்திலும் அதற்குத் தெற்கிலுள்ள க்ராமங்களிலும் குடியிருந்து கொண்டு மண்பாண்டங்களைச்செய்து விற்று ஜீவித்துவருகிறார்கள். இந்தியாவிலுள்ள கட்ச் தீவிலிருந்தும் மற்றவிடங்களிலிருந்தும் ஸுமார் 30-இந்திய தட்டார்கள் அங்கே குடியேறியிருக்கிறார்கள். அவர்கள் நகைகள், கத்திப்பிடிகள், விநோத ஸாமான்கள் முதலியவைகள் செய்து ஜீவிக்கிறார்கள். அங்கே 60,000 ஏக்கர் நிலங்களில் லவங்கம் ஸாகுபடியாகி வருகிறது. இந்த நிலங்களில் ஸ்வல்ப பாகந்தான் இந்தியர்களுக்கு ஸொந்தமாயிருக்கிறது. ஆனால் லவங்கம் ஸாகுபடி செய்யும் அநேக ஆரேபிய நிலஸ்வான்களுடைய நிலங்கள் இந்திய வ்யாபாரிகளுக்கு ஒற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியர்கள் வ்யாபாரிகளாயிருக்க ப்ரியப்படுகிறார்களேயொழிய, நிலங்களில் பணம்போட ப்ரியப்படுவதில்லையாம்.

அங்குள்ள ஸர்க்கார்ப் பள்ளிக்கூடங்களில் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்பட்டுவருகிறது. ஆனால் அவைகளில் இந்திய மாணவர்கள் ஸ்வல்பமாகத்தான் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். ஸான்ஸிபாரில் உள்ள ஹைஸ்கூலிலும் இந்தியர்களை சேர்த்துக்கொள்ளுகிறார்களாம். இவைகளைத்தவிர வேறு சில பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன.

### Indentured Emigration.

**ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் அயல்நாடுகளுக்குக் குடிப்போவது.**—பிஜி தீவிலுள்ள கரும்புத் தோட்டங்களில் ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டின்மேல் வேலைசெய்து வரும் இந்தியக் கூலியாட்களின் நிலைமை ரொம்ப சீர்கேடாயிருக்கிறதென்று தெரிவதாலும், அதற்கேற்றாற்போல அங்குள்ள இந்தியர்களுக்குள் தற்கொலை அதிகரித்து வருவதாலும், அவர்களின் நிலைமையை நேரில்போய் ஆராய்ச்சிசெய்து வருவதற்காக ரெவரண்ட் ஸி. எப். ஆண்ட்ரூஸ் என்பவரும், மிஸ்டர் பியர்ஸன் என்பவரும் இந்தியாவிலிருந்து பிஜித்தீவுக்குப் புறப்பட்டுப்போயிருக்கிறார்கள். மிஸ்டர் ஆண்ட்ரூஸினுடைய அபிப்ராயமென்னவென்றால், ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிடவேண்டும் அவ்விதம் செய்வதுதான் இந்தியாவுக்கு கௌரவமும் ந்யாயமும் கிடைக்கச்செய்வதாகும். ஒப்பந்தக்கூலி ஏற்பாடு இருக்கிறவரையில் குடியேற்ற நாட்டார் இந்தியர்களை தங்கள் ஜனங்களுடன் ஸமமாக நடத்துவார்களென்று எதிர்பார்ப்பதில் ப்ரயோஜனமில்லை.

### Emmigration to Jamaica.

**ஜமெய்க்காவுக்கு குடியேறிப்போவது.**—சென்ற 1913-1914-ம் வர்ஷத்தில் ஜமெய்க்கா தீவுக்கு 293-இந்தியர்கள் குடியேறிப்போனார்கள். இவர்கள் 1903-ம் வர்ஷம் அக்டோபர்மாஸம் 10-ந்தேதி கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டுப்போய், டிஸம்பர்மாஸம் 1-ந்தேதி ஜமெய்க்காவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். முதலில் புறப்பட்டவர்களின் தொகை ஆண்கள் 199, ஸ்த்ரீகள் 81, குழந்தைகள் 14; ப்ரயாணத்தில் ஜனனமானது ஆண் 1, பெண் 4; ப்ரயாணத்தில் இறந்தவர்கள் ஸ்த்ரீகள் 2, குழந்தைகள் 4; ஆகவே ஜமெய்க்காவுக்குப் போய்ச் சேர்ந்தவர்களின் தொகை ஆண்கள் 199, ஸ்த்ரீகள் 79, குழந்தைகள் 15, ஆகமொத்தம் 293.

### Indians in Malaya.

**மலேயாநாடுகளில் இந்தியர்கள்.**—மலேயாநாடுகளில் 'மலே ஸ்டேட்ஸ் கைட்ஸ்' என்னும் இந்தியர்கள் சேர்ந்த படையொன்று இருக்கிறது. அது யுத்தத்தில் போர்முகத்துக்குப் போக ப்ரியப்படுவதாக கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்ததன்மேல் கவர்ன்மெண்டார் அதற்கு ஸம்மதித்திருக்கிறார்கள். அங்குள்ள போலீஸ் இலாகாவைச்சேர்ந்த ஸுபேதார் மேஜர் பால்ஸிங் என்பவரை கவர்ன்மெண்டார் ஜஸ்டிஸ் அப் பீஸ் என்னும் கௌரவ ந்யாயாதிபதியாக நியமித்திருக்கிறார்களாம்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாகதைகளும்.

### A Story about Lord Carmichael.

**லார்ட் கார்மிகேலைப்பற்றிய ஒரு கதை.**—வங்காளத்தின் கவர்னராகிய லார்ட் கார்மிகேலைப்பற்றி ஒரு கதை வழங்கிவருகிறது. கொஞ்சகாலத்துக்கு முன்னால் நடந்த ஒரு பந்தய ஓட்டத்தைப் பார்க்க அவர் போயிருந்தாராம். ஒரு ரங்கூன் வ்யாபாரி கப்பல் சார்ஜ் விஷயமாய் பி. ஐ. எஸ். என். கப்பல் கம்பெனியாரைச்சேர்ந்த மிஸ்டர் கார்மிகேல் என்னும் கனவானுடன் பேச எண்ணி, பந்தயம் நடக்கும் இடத்துக்கு வந்து 'கார்மிகேல்' எங்கிருக்கிறாரென்று பக்கத்திலிருந்த தமது ஸ்நேகிதரைக் கேட்டார். அவர் லார்ட் கார்மிகேலையாவது,மிஸ்டர் கார்மிகேலையாவது பார்த்ததில்லை. பக்கத்திலிருந்தவர் ஏதோ ஞாபகமாயிருந்ததால், கார்மிகேல் என்ற வார்த்தையைக் கேட்டதும், லார்ட் கார்மி கேலைச் சுட்டிக்காட்டினார்.

ரங்கூன் வ்யாபாரி கவர்னரிடம் போய் "நீங்கள்தானே கார்மிகேல்?" என்று கேட்டார். கவர்னரோ வ்யாபாரியானவர் ஆள் அடையாளம் தெரியாமல் தம்மோடு பேசவந்திருக்கிறாரென்றுகண்டு, வேடிக்கையாக "ஆம்" என்றார்.

ர. வ்யாபாரி.—"ரங்கூனிலிருந்து கப்பல்சார்ஜ் விஷயமாய்த்தான் கேட்கவந்தேன். அது விஷயமாய் ஒருவர்க்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதில் ப்ரயோஜனமென்ன?"

லார்ட். கார்மிகேல்.—"ஒன்றுமில்லை"

ர. வ்.—"இது விஷயமாய் நாம் இருவரும் ஒத்துப் போய்விடலாமே."

லா. கா.—"ஆகா, அப்படியே செய்யலாம்."

ர. வ்.—"சரி, இது விஷயமாய் உங்களுக்கு கடிதம் எழுதுகிறேன்."

லா. கா.—"அப்படியே செய்யுங்கள்."

இப்படிப் பேசிவிட்டு, ரங்கூன் வ்யாபாரி தமது ஸ்நேகிதரிடம் வந்து, கப்பல் சார்ஜு தகராரை கார்மிகேலிடம் ஒருவாறு தீர்த்துவிட்டதாகச் சொன்னதும், ஸ்நேகிதர், கப்பல் சார்ஜு தகராருக்கும், கவர்னருக்கும் என்ன 'ஸம்பந்தமென்று கேட்டாராம். அப்போது வ்யாபாரிக்கு எவ்வளவு ஆச்சர்யம் ஏற்பட்டிருக்கும்!

### The Amatour Doctor.

**கற்றுக்குட்டி வைத்யம் செய்தது.**—ஹெண்டெர்ஸன் என்னும் ஒருவாலிபன் வைத்ய சாஸ்த்ரங் கற்றுத் தேறி அப்பொழுதே நூதனமாக வைத்யம் செய்ய வெளிவந்தான். எந்த விஷயமானாலும் அவற்றிற்குத் தன்னுடைய அபிப்ராயத்தைவெளியிட அவன் மிகவும் ஆவலுள்ளவன். ஒருநாள் சிறிது வயதுமுதிர்ந்த ஒரு ஸ்த்ரீ அவ்வைத்யனிடம் தனக்குள்ள குறையைச் சொல்லிக்கொள்ள நேரிட்டது. ஸ்த்ரீ—"என்னுடைய வாழ்நாட்களில் எனக்குண்டாயிருக்கும் விஸனங்களுக்குள் எனக்கு ஒரு குழந்தைகூட ஜனிக்கவில்லையே யென்பதுதான் மிகவும் முக்யமானது! என் செய்வேன்!" என்றாள்.

டாக்டர் ஹெண்டெர்ஸன், என்ன சொல்லலாம் என்று சிறிது யோசித்தான்; பிறகு "ஓ! ஒருக்கால் இது உன்னுடைய வம்சத்தைச் சேர்ந்த தோஷமாயிருக்கலாம்; உன் தாயாருக்கு ஏதாவது குழந்தையிருக்கிறதா?" என்றான்.

### The Poet's Reply.

**கவியின் பதில்.**—எட்டியாபுர ஸமஸ்தான வித்வானாயிருந்த கடிகை முத்துப் புலவர் தம்மனைவி திவசத்தின் பொருட்டுக் கடைவீதியிலிருந்து வேண்டிய ஸாமான்களும் பண்டங்களும் வாங்கி தலைமேல் வைத்துச் சுமந்துகொண்டு வீடு நோக்கி வரும்போது, அவ்வூர் மகாராஜா வெளிபுலாச் செல்கையில் புலவரை அக்கோலத்துடன்கண்டு 'என்ன விசேஷம்?' என்று கேட்க, புலவர் 'தலைவிதிவசம்' என்றாராம். இவ் விநோதமான பதில், இவ்வாறு சுமப்பது தலைவிதி-வசம் எனவும், இப்பண்டங்களைக்கொண்டு வந்தது தலைவி திவசத்துக்காக எனவும் பொருள் தருதல் காண்க.

### A Yakil and a Witness.

**வக்கீலும் ஸாக்ஷியும்.**—(குறுக்கு விசாரணையில் ஸாக்ஷிகளைக் கலைத்துவிடுவதில் மஹா நிபுணர்) சண்டை நடந்த இடத்திற்கும் குற்றவாளியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரமிருக்கும்!

ஸாக்ஷி.—இருபது கஜம், இரண்டடி பதினோரங்குலம்.

வக்கீல்.—இதை எதற்காக நீங்கள் இவ்வளவு சரியானபடி கணக்கு எடுத்து வைத்திருக்கிறீர்கள்?

ஸாக்ஷி.—யாராவது ஒரு மடையன் அனாவச்யமாக இதைக் கேட்டால் என்ன செய்வதென்று அளந்து வைத்துக்கொண்டேன்.

இதைக் கேட்ட வக்கீல் தலைகுனிந்தார்.



# CURIOSITIES.

## விநோதங்கள்.

### A Curious Species of Ants

**எறும்புகளில் ஓரு விசித்ர ஜாதி.**—அமெரிக்காவில் உஷ்ண ப்ரதேசங்களில் ஸௌபா என்று ஒருவகை எறும்புண்டு. இந்த ப்ரதேசங்களில் பிரயாணஞ் செய்தவர்கள் ஒவ்வொருவரும், இவை பெருங்கூட்டமாய் மரத்தினின்றுங் கீழே இறங்கிக் காட்டின் வழியாய் ஒவ்வொரு எறும்பும் ஒரு வட்ட இலையை வாயிற் கவ்விக்கொண்டு வெகுதூரம் ஒழுங்காக வளைக்குட் செல்வதை பார்த்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இவ்விலை குடைபோல அவ்வெறும்பை மறைக்கும். இவை வரிசையாகச் செல்லும்போது ஓராறு செல்வது போலவும், அதன்மேல் இலைகள் மிதந்து போவனபோலவும் தோற்றுமாம். இந்த எறும்புகள் அந்த இலைகளை என்ன செய்கின்றன என்பது ஸுலபத்தில் விளங்கவில்லை. அவ்விலையை இவை ஆகாரத்துக்கும் வளைக்குள் பரப்புவதற்கும் உபயோகப் படுத்துகின்றனவென்று சிலர் ஊகிக்கிறார்கள். ஆனால் நன்கு ஆராய்ந்து பார்த்தவர்கள் கூறுவதாவது, இவ்வெறும்புகள் அவ்விலைகளை வளைக்குள் சேர்த்து வைத்து அவை அழுகின் பிறகு அதன்மேல் காளான்முளைக்கும்படி செய்து அக்காளானை தம் புழுக்களுக்கு உணவாக உபயோகப் படுத்துகின்றன. இவ்விதக்காளான் இவ்விலைகளின் ஸத்துமுழுவதையும் க்ரகித்த பிறகு இவ்வெறும்புகள் ஸாரமற்ற அந்த இலைகளை வேறு அறைகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அங்கே அவற்றை வேறு வண்டுகளின் புழுக்கள் புசிக்கும். இவ் வெறும்புகள் தங்கள் வளைக்குள் வேறு வண்டுகள் வரும்படி இடங் கொடுப்பது வழக்கம். இக்காளான் உண்டாகும் அறைக்கு வேண்டும்போது வெளிக்காற்று வரும்படியாகவும் வேண்டாதபோது அடைத்துக் கொள்ளும்படியாகவும் கதவுகள் உண்டு. ஸமயத்துக்குத் தக்கபடி உஷ்ணமோ குளிர்ச்சியோ உண்டுபண்ணிக் கொள்ளுமாம்.

### A Race which does not use Salt.

**உப்பை உபயோகப் படுத்தாத ஜாதியார்.**—"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது நம் பழமொழி. மனிதர்கள் எவ்வளவு நாகரிக மற்றவர்களாயினும் உண்ணும்போது உப்பில்லாமல் உண்ணார்கள். பழனிமலை முதலிய ப்ரதேசங்களில் சில காட்டு ஜாதியாரிருக்கிறார்கள். அவர்கள் கிழங்குகளை வேகவைத்து உப்பில்லாமலே புசித்து வருகிறார்கள். தேனும் தினைமாவும் சாப்பிடும் வேடர்களைப் பற்றி நாம் படித்ததுண்டு. ஆனால் ஒரு பெருங்கூட்டத்தார் இக்காலத்தில் உப்பில்லாமல் உணவை உட்கொள்ளுகிறார்கள் என்றால் அது மிகவும் ஆச்சரியமே. தென்னாப்ரிக்காவில் டார்னரா என்று சொல்லப்பட்ட ஒருவகை காப்பிரி ஜாதியார் உண்டு. அவர்கள் உப்பை உபயோகிப்பதே இல்லையாம். ச்ருஷ்டியின் அற்புதங்களில் இதுவும் ஒன்றே.

### A Thief and a Tortoise.

**திருடனும் ஆமையும்.**—வடக்கே டிப்பரா ப்ரதேசத்தில் ஒரு ஊரில் ஒரு திருடன் திருடுவதற்காக இரவில் ஒரு வீட்டுக்குள் புகுந்தான். அவன் இருட்டில், அகப்படக்கூடிய ஸாமான்களைத் தேடிக்கொண்டிருக்கையில், அங்கிருந்த ஒரு ஆமை அவனுடைய கை விரலொன்றைக் கௌவிக்கொண்டது. ஆமை வாயிலிருந்து விரலை எடுக்க என்னமுயன்றும் அவனால் முடியவில்லை. கடைசியில் அவன் வலிபொறுக்க மாட்டாமல் வீட்டுக்காரனைக் கூப்பிடவே, வீட்டுக்காரன் விழித்து எழுந்து ஸங்கதியை அறிந்து போலீஸாருக்கு அறிவித்தான். போலீஸார் திருடனுடைய கைவிரலை வெட்டிவிட்டு, அவனை ஆமையினின்றும் விடுவித்தார்கள்.

### Seeing both ways.

**இருபுறமும் பார்த்தல்.**—பாரிஸ் நகரத்தில் ஓர் போலீஸ் உத்யோகஸ்தர், தம் கீழ் உத்யோகஸ்தர்களின் உபயோகத்திற்காக ஒரு மூக்குக்கண்ணாடி கண்டுபிடித்திருக்கிறாராம். அதை போட்டுக்கொண்டால் அதன் மூலமாய் எதிரிலிருப்பவைகளோடு கூட அதே ஸமயத்தில் தன்பின்னாலிருப்பவைகள்கூட நன்றாய்த் தெரிகின்றனவாம்.

### Four Calves in a Birth.

**ஒருதடவையில் 4 கன்றுக் குட்டிகள்.**—தென்னாற்காடு ஜில்லா கள்ளக்குரிச்சி போஸ்டாபீஸைச் சேர்ந்த உலகங்காத்தான் க்ராமத்துக்கு ஸமீபத்திலுள்ள ஒரு குப்பத்தில் ஸுமார் ஒரு மாஸத்துக்கு முன்பு ஒரு பசு நான்கு கன்றுகள் ஈன்றதாம். அந்தக் கன்றுகள் பிறந்த நான்குநாளுக்கெல்லாம் இறந்துபோயினவாம்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### பால்கன் ப்ரதேசத்தில் யுத்தம்.

பல்கேரியா ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டிருக்கிறது. அதுவும், ஆஸ்ட்ரியா ஜெர்மனி ஆகிய இவைகளும் ஸெர்வியாவைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. ரோமானியாவும் க்ரீஸும் எந்தக் கக்ஷியிலும் சேராமல் தனித்திருக்கின்றன.

அக்டோபர் 4-தேதி.

ரஷ்யா பல்கேரியாவுக்கு ஒரு கடைசிப் பேச்சுக்கடிதம் அனுப்பியிருக்கிறது. பல்கேரிய ராணுவ மந்த்ரியின் ஆபிஸிலும் ஸைன்யங்களிலும் ஜெர்மானிய ராணுவ உத்யோகஸ்தர்களும், ஆஸ்ட்ரிய ராணுவ உத்யோகஸ்தர்களும் இருக்கிறார்களென்றும், பல்கேரியாவானது ஸெர்வியா ஓரமாயுள்ள தனது எல்லை ப்ரதேசத்தில் ஸைன்யங்களை சேகரித்து வைத்திருக்கிறதென்றும், அது ஜெர்மானியர்களிடமிருந்து ஏராளமாய்ப் பணவுதவி வாங்கியிருக்கிறதென்றும், இந்த விஷயங்களால் பல்கேரிய ராணுவ முயற்சிகளின் நோக்கமின்னதென்பது தெளிவாய்த் தெரிகிறதென்றும், ராணுவத்தில் சேர்ந்திருக்கும் எதிரி உத்யோகஸ்தர்களை உடனே வேலையை விட்டுத் தள்ளிவிடவேண்டுமென்றும் ரஷ்யா கவர்ன்மெண்டார் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ஸெர்வியாவில் டான்யூப் நதியோரமாக எதிரிகள் (ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள்) ஸெர்வியர்களைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

6-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ட்ரினாநதி யோரமாக ஸெர்வியாவுக்குள் புகுந்திருக்கிறார்களாம். நேசத்துருப்புகள் க்ரீஸிலுள்ள ஸாலொனிகாவில் இறங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பல்கேரியா ரஷ்யாவின் கடிதத்துக்கு இன்னும் பதில் அனுப்பவில்லை.

7-தேதி.

பல்கேரியா ரஷ்யாவுக்கு அனுப்பின பதில் ரஷ்யர்களுக்கு த்ருப்திகரமாயில்லையாம். இரண்டு தேசங்களுக்கும் நேசப்பேச்சுகள் நின்றுபோயின.

க்ரீஸில் ப்ரதம மந்த்ரியாயிருந்த மா. வெனிஸிலாஸ், ஸெர்வியாவுக்கு உதவிசெய்வது விஷயமாய் க்ரீஸ் அரசருடன் அபிப்ராய பேதப்பட்டதால் அவர் (மந்த்ரி) தமது வேலையை ராஜிநாமா செய்துவிட்டார்.

8-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ட்ரினா, ஸேவ், டான்யூப் என்னும் நதிகளை அநேக இடங்களில் கடந்து ஸெர்வியாவில் புகுந்திருக்கின்றன.

11-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸெர்வியாவில் பெல்க்ரேடையும், அதற்குத் தென்கிழக்கிலும் தென்மேற்கிலுமுள்ள குன்றுகளையும் பிடித்திருக்கின்றன.

12-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸெமண்ட்ரியாவுக்கும் க்ராடிஸ்ட்ச் என்னுமிடத்துக்கும் மத்தியில் டான்யூப் நதியைக் கடந்தன.

பல்கேரியர்கள் க்னியாஷிவாட்ஸ் என்னுமிடத்தைத் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

13-தேதி.

நேசத்துருப்புகளை பல்கேரியாவிலுள்ள டாடியாயாகாட்ச் என்னும் துறைமுகத்துக்கு அனுப்ப ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறதாக ஜெர்மன் பத்ரிகைகள் சொல்லுகின்றன.

பல்கேரியா ஸெர்வியாவின் மேல் படையெடுத்துப் போயிருக்கிறது.

14-தேதி.

பால்கன் நாடுகளுக்குள் யுத்தம் நேர்ந்து அதில் க்ரீஸ், ஸெர்வியா இவைகளுள் ஏதாவது ஒன்று சேர நேரிட்டால், ஒன்று மற்றொன்றுக்கு உதவி செய்வதற்காக, அந்த இரண்டு தேசங்களும் ஒரு உடன் படிக்கை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்போது ஸெர்வியாவுக்கும் பல்கேரியாவுக்கும் நேர்ந்திருக்கும் யுத்தம் பால்கன் யுத்தமாயிராமல், ஐரோப்பிய யுத்தத்தின் ஒரு பாகமாயிருப்பதால், க்ரீஸ் ஸெர்வியாவுக்கு உதவி செய்வதற்கில்லையென்று சொல்லிவிட்டதாக் ஸமாசார மெட்டுகிறது.

பல்கேரியர்கள் நிஷுக்கு 40-மைல் வடக்கிலுள்ள ஸீட்சார் என்னுமிடத்துக்குத் தெற்கில் ஸெர்வியர்களைத்தாக்குகிறார்கள். அவர்கள் நிஷைச்சுற்றி வளைத்துக் கொள்ள முயலுகிறார்களென்று தோன்றுகிறது.



15-தேதி.

ஸெர்வியா பல்கேரியாவின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

16-தேதி.

ஜெர்மானியர்கள் ஸெர்வியாவில் போஸராவாட்ஸ் என்னும் கோட்டையுள்ள பட்டணத்தைப் பிடித்திருக்கிறார்களாம்.

17-தேதி.

ப்ரான்ஸ், பல்கேரியாவின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

18-தேதி.

நேசத்துருப்புகள் ஸெர்வியாவுக்குள் போய்க்கொண்டிருக்கின்றனவாம்.

ஸெர்விய துருப்புகளும் நேசத்துருப்புகளும் ஸ்ட்ரம்னிட்ஸா என்னுமிடத்தையும் இன்னும் சில இடங்களையும் பிடித்திருக்கின்றன.

பல்கேரியர்கள் நிஷ்-உஸ்கப் ரெயில்வேயைப்பிடிக்க பலமாக யுத்தம் செய்கிறார்கள். வ்ரான்யாவிலும் ஸிபிட்சேயிலும் யுத்தம் பலமாக நடந்தது. பல்கேரிய ஸைன்யங்களை ஜெர்மானிய ராணுவ உத்யோகஸ்தர்கள் நடத்தி வருகிறார்கள்.

பல்கேரியர்கள் பைரட் ப்ரதேசத்தில் சில இடங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸேவ் நதியோரமாயும் பெல்க்ரேடைச் சுற்றிலும் ஸெர்வியர்களை ஆறுதடவை தாக்கியும் ரொம்ப சேதத்துடன் பின்தள்ளப்பட்டார்கள்.

நமதரசருக்கும் பல்கேரியாவுக்கும் யுத்தம் ஆரம்பமாகி விட்டதென்று வைஸ்ராய் தெரிவிக்கிறார்.

19-தேதி,

ஸெர்வியப் போர்முகங்களிலெல்லாம் பலமான யுத்தம் நடக்கிறது. பெல்க்ரேடுக்கு ஸமீபத்திலுள்ள ஸெர்விய ஸைன்யமானது, எதிரிகள் பீரங்கிகளால் பலமாகத் தாக்கினதால், தெற்குப்பக்கமாக சற்றுப் பின் வாங்கிற்று.

இட்டலி பல்கேரியாவின் மேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ப்ரெஞ்ச்சுகாரர்களும் ஸெர்வியர்களும் சேர்ந்த ஒரு படை பல்கேரியாவில் ஸ்ட்ரம்னிட்ஸா என்னுமிடத்தைப் பிடித்திருக்கிறது.

20-தேதி,

வ்லாஸ்நா பள்ளத்தாக்கில் பலமான யுத்தம் நடக்கிறது. நிஷுக்கு 60-மைல் தெற்கிலுள்ள வ்ரானியா மென்னுமிடத்தில் பல்கேரியர்கள் ரெயில்வேயை நாசம் செய்திருக்கிறார்கள்.

ஸெர்வியாவின் வடபாகத்தில் ஜெர்மானியார்கள் பீரங்கிகளைக்கொண்டு பலமாகத்தாக்கினதால் ஸெர்வியர்கள் பின் வாங்கிப்போயிருக்கிறார்கள். ஸெமிண்ட்ரியாவுக்குத் தெற்கிலுள்ள ஸெர்விய ஸைன்யம் இன்னும் தெற்கில் பின்வாங்கிப் போயிருக்கிறது. பல்கேரிய எல்லை ப்ரதேசத்துக்குப் பக்கத்தில் லாஸினா பள்ளத்தாக்கில் வ்ரானியாவுக்கும் ரிஸ்டோவாட்ஸுக்கும் மத்தியில் யுத்தம் நடக்கிறது.

21-தேதி.

பல்கேரியர்கள் மாஸிடோனியாவிலுள்ள இஷ்டிப், ராடோவிஷ்ட் என்னுமிடங்களைப் பிடித்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

ஸாலோனிகா ரெயில்வேயில், நிஷுக்கும உஸ்கப்புக்கும் மத்தியிலுள்ள வ்ரானியா என்னும் ஊரைத் தாங்கள் பிடித்திருப்பதாக பல்கேரியர்கள் சொல்லுகிறார்கள்.

பல்கேரியாவின் முக்ய பட்டணமாகிய ஸோபையாவைச் சுற்றிலும் பல்கேரியர்கள் கிடங்குகள் தோண்டி முள் வேலிகள் போட்டுவருகிறார்களாம்.

ஸெர்வியர்கள் கோச்னாவையும் இஷ்டிப்பையும் விட்டுவிட்டுப் போய்விட்டதாக ஒரு பத்ரிகை நிருபர் சொல்லுகிறார்.

22-ந்தேதி.

பல்கேரியாவைச் சேர்ந்த டெடியாகாச்சிலிருந்து போர்டோ லாகாஸ் பட்டணம் வரையில் ஈஜியன் கடல் கரையை நேசப் போர்க்கப்பல்கள் தாக்கிக்கொண்டிருக்கின்றன.

பல்கேரியர்கள் உஸ்கப்புக்கு 22-மைல் வடகிழக்கிலுள்ள குமானோவாவைப் பிடித்திருக்கிறார்களாம்.

ஆஸ்ட்ரியர்கள் ஸெர்வியாவில் மொரேவியா நதியின் இருகரையிலும் முன்சென்றுகொண்டிருக்கிறார்களாம். பல்கேரியர்கள் பைரட்டுக்கு மேற்கில் நிஷ் திக்கை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்களென்றும் அவர்கள் வ்ர்டார்நதிப் பள்ளத்தாக்கில் புகுந்துவிட்டார்களென்றும் ஆஸ்ட்ரியர்கள் சொல்லுகிறார்கள்,

23-தேதி.

ஆட்ரியர்கள் மொரேவியாவின் இருகரையிலும் முன் சென்று கொண்டிருக்கிறார்கள். பல்கேரியர்கள் வார்டார் பள்ளத்தாக்கில் வ்ரானியா, குமனுவா, வேல்ஸ் என்னும் இடங்களைப்பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

பெல்க்ரேடுக்குப் பக்கத்தில் யுத்தம் பலமாக நடக்கிறது.

25-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் ஸ்ட்ரம்னிட்ஸாவுக்குத் தெற்கில் பல்கேரியர்களைத் தாக்கி நாபோவா என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டன. நேசத்துருப்புகள் டிடியாகாச்சில் இறங்கியிருக்கின்றன. அவைகள் ஸாலோனிகா அட்ரியானோபிள் ரெயில்வேயைக் கெடுக்கப் போகின்றனவாம்.

'கோபன்' என்னும் யுத்தக்கப்பல் வார்னாவுக்குப் போயிருக்கிறதாம்.

உஸ்கப் பட்டணத்தை பல்கேரியர்கள் பிடித்திருக்கிறார்கள்.

26-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் டான்யூப் நதியை ஆர்ஸோவா பட்டணத்தில் கடந்துவிட்டதால் அவர்கள் தாராளமாய் பல்கேரியாவுக்குள் போக முடியுமென்று புகாரஸ்டியிலுள்ள லண்டன் டைம்ஸ் நிருபர் தெரிவிக்கிறார்.

ஸெர்வியாவின் மேற்கில் எதிரிகள் விஷிக்ராடுக்குப் பக்கத்தில் ட்ரினாநதியைத் தாண்டியிருக்கிறார்களாம். ஸெர்வியர்கள் க்னியாவாட்ஸுக்குப் பக்கத்தில் பின் வாங்கிப் போயிருக்கிறார்கள். பல்கேரியர்கள் உஸ்கபைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

ஸெர்வியர்கள் குப்ருலு என்னும் ஊரைத் திருப்பிப் பிடித்திருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ப்ரெஞ்ச் துருப்புகளோடு சேர்ந்து க்ரீஸுக்குப் பக்கமாக ஸெர்வியாவின் எல்லை ப்ரதேசத்தில் யுத்தம் செய்துகொண் டிருக்கின்றனவென்று பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. லெப்டினண்ட் ஜெனரல் ஸர் ப்ரையான் மேஹான் என்பவர் ஸெர்வியாவிலுள்ள ப்ரிட்டிஷ் துருப்புகளுக்குத் தலைவராக இருக்கிறார்.

ரஷ்யக்கப்பல்படை இன்று பல்கேரியாவைச்சேர்ந்த வார்னா, பர்காஸ் என்னும் துறைமுகங்களைத் தாக்கின.

ஆஸ்ட்ரியர்கள் தாங்கள் விஷிக்ராடிலிருந்து கிழக்கு நோக்கிப் போய்க்கொண் டிருப்பதாகவும், ஸெர்வியாவின் வடமேற்கில் வாலிவோவைப் பிடித்துவிட்டதாகவும் சொல்லுகிறார்கள்.

28-தேதி.

ஸெர்வியாவின் வடகிழக்குமூலை எதிரியின் வசமிருப்பதாகத் தெரிகிறது. ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகளும் பல்கேரியத் துருப்புகளும் இவ்விடத்தில் ஒன்று சேர்ந்துகொண்டதாக ஜெர்மானியர்கள் தெரிவிக்கிறார்கள்.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் பெல்க்ரேடுக்கு 40-மைல் தெற்கே வந்திருக்கின்றன.

ஸெர்வியர்கள் குப்ருபுலுவைப் பிடித்ததன்மேல் இஷ்டிபியை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்களாம்.

29-தேதி.

ரஷ்யக் கப்பல்படை வார்னாவை மறுபடியும் தாக்கிற்று. எதிரியின் ஸப்மரீன் ஒன்று பிடிபட்டது.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் க்ருகுரிவாட்ஸ் என்னும் ஊருக்கு 15-மைல் பக்கத்தில் வந்துவிட்டன. ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் விர்க்கெம்ராடிலிருந்து கிழக்குநோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. பல்கேரியர்கள் க்னியாஷிவாட்ஸைப் பிடித்திருக்கிறார்கள்.

30-தேதி.

ரஷ்யர் துருப்புகள் ஒடெஸ்ஸாவிலிருந்து கருங்கடல் வழியாகப் பல்கேரியாவுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம். பல்கேரியர்கள் குப்ருலுவைத் திரும்பிப் பிடித்திருக்கிறார்களாம்.

31-தேதி.

ஸெர்வியத் துருப்புகள் பிரட்டுக்குப் பின்னால் பின் வாங்கிப்போயிருக்கின்றன.

## ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் யுத்தம்.

1-தேதி.

ப்ரெஞ்ச் பீரங்கிப்படையும் ப்ரிட்டிஷ் கப்பல் படையும் பெல்ஜியத்தின் கடற்கரையிலுள்ள ஜெர்மன் பீரங்கிப்படைகளைத் தாக்கின.

5-தேதி.

வெஸ்டெண்டிலுள்ள ஜெர்மன் பீரங்கிகளை ப்ரெஞ்சுக்காரர்களுடைய பெரிய பீரங்கிப்படையும், ப்ரிட்டிஷ் கப்பல் படையும் தாக்கின.

இங்க்லீஷ்காரர்கள் முன்பு பிடித்திருந்த ஹோஹன்



ஸால்லர்ன் ரிடௌட் என்னும் அரணில் பெரும்பாகத்தை ஜெர்மானியர்கள் திரும்பப் பிடித்திருக்கிறார்கள்.

7-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் சாம்பேனிலுள்ள டாஹூர் என்னும் க்ராமத்தைப் பிடித்திருப்பதோடு டாஹூர் குன்றுக்கும் போயிருக்கின்றன.

9-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் டாஹூர் க்ராமத்துக்குத் தென் கிழக்கே ரொம்ப முன் சென்றிருக்கின்றன.

12-தேதி.

லென்ஸ் போர்முகத்தில் ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ் துருப்புகளை பலமாய்த்தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள்.

14-தேதி.

கிவன்சி காட்டில் ஜெர்மானியர்கள் சில ப்ரெஞ்ச் இடங்குகளைப்பிடித்தார்கள். டாகூர் க்ராமத்துக்குத் தெற்கில் ப்ரெஞ்ச் துருப்புகள் முன் சென்று கொண்டிருக்கின்றன.

18-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் சற்றுமுன் சென்றிருக்கின்றன. அவைகள் ஹார்ட்மான்ஸ்வீலர்காப் என்னுமிடத்து மலையையும் வாஸ்ஜஸில் ஒரு கோட்டையையும் பிடித்திருக்கின்றன.

20-தேதி.

ஜெர்மானியர்கள் புது ஸைன்யங்களுடன் ஹால்லுச்சில் ப்ரிட்டிஷாரை பலமாகத்தாக்கினார்கள். ரீம்ஸுக்குக் கிழக்கில் ஜெர்மானியர்கள் பலமாகத்தாக்கி முன் சென்றும் கடைசியில் பின் தள்ளப்பட்டார்கள்.

21-தேதி.

மேற்குப் போர்க்களத்தில் பீரங்கியுத்தம் நடந்தது. ரீம்ஸுக்குக் கிழக்கில் ஜெர்மானியர்கள் நேசத்துருப்புகளை பலமாகத் தாக்கினார்கள்.

22-தேதி.

ஜார்ஜ் அரசர் போர்க்களத்திலுள்ள ஸைன்யத்தைப் பார்வையிடுவதற்காக ப்ரான்ஸுக்குப் போயிருக்கிறார். அவர் நேசத் துருப்புகளையும் பார்க்க உத்தேசித்திருக்கிறாராம்.

26-தேதி.

ப்ரெஞ்சுத்துருப்புகள் சாம்பேன் தேசத்தில் மெஸ்னில் என்னும் இடத்துக்கு வடக்கில் ஒரு பெரிய ஜெர்மன் பாதுகாப்பு வேலையைப் பிடித்தன.

28-தேதி.

ஜார்ஜ் அரசர் ப்ரான்ஸில் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களைப்பார்வையிடுகையில், அவர் ஏறியிருந்த குதிரை மிரண்டது; அரசர் கீழேவிழுந்து காயமடைந்தார். அவருடைய காயங்கள் குணமடைந்து வருகின்றனவென்று தெரியவருகிறது.

30-தேதி.

டாஹூருக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்களுடைய வசத்திலிருக்கும் ஒரு பெரிய அரணைப்பிடிப்பதற்காக ப்ரெஞ்சுக்காரர்கள் பலமாக யுத்தம்செய்து வருகிறார்கள். அவர்கள் சில ஜெர்மன் கிடங்குகளைப் பிடித்தார்கள்.

## ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா, ஜெர்மனி இவைகளுக்கும் யுத்தம்.

1-தேதி.

வில்னாவுக்குக் கிழக்கிலும் ஸ்மார்கனைச் சுற்றிலும் யுத்தம் நடக்கிறது. ரஷ்யர்கள் லக்கை விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

2-தேதி.

ட்வின்ஸ்குக்கு 36-மைல் தென்கிழக்கிலுள்ள ஷெரிலாவிட்சி யென்னும் ஊரை ரஷ்யர்கள் பிடித்திருக்கிறார்கள்.

4-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் தாக்கி முன் செல்லுவதைத் தடுத்து, தாங்களே அவர்களைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ட்வின்ஸ்குக்கு 10-மைல் தென்கிழக்கில் ஒரு பலமான யுத்தம் நடந்தது. கோவல்-ஸார்னி ரெயில்வே ஸ்டிர்நதியைக் கடக்குமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைப் பின்னுக்குத் தள்ளியிருக்கிறார்கள்.

8-தேதி.

ட்வின்ஸ்குக்கு 12-மைல் வடமேற்கில் நடந்த யுத்தத்தில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களுடைய கிடங்குகளைப் பிடித்திருக்கிறார்கள். ரஷ்யர்கள் ஸ்டிர் நதியின் இடது கரையில் ஒரு க்ராமத்தைப்பிடித்து ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகளைத் துரத்தியடித்தார்கள்.

11-தேதி.

ட்வின்ஸ்குக்கு வடமேற்கில் யுத்தம் பலமாக நடக்

கிறது. எதிரிகள் ஸ்டிர் நதியைத் தாண்டிக் கிழக்குக் கரைக்கு வந்துவிட்டார்கள்.

13-தேதி.

ஜெர்மானியர்கள் ட்வின்ஸ்குக்கு 14-மைல் வடமேற்கில் சில அகழ்களைப் பிடித்தார்கள். கிழக்கு காலிஷ்யாவில் ட்ரெம்பௌலாவுக்கு மேற்கில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்து ஸ்ட்ரிபா நதிக்கப்பால் துரத்தி 2000-பேர்களைக் கைதுசெய்தார்கள்.

15-தேதி.

ட்வின்ஸ்குக்கு வடமேற்கில் பலமான யுத்தம் நடக்கிறது. ஸ்டிர் நதிக்கு மேற்கிலும் ப்ரிபெட்டுக்கு தெற்கிலும் உள்ள ஒரு க்ராமத்தை ரஷ்யர்கள் பிடித்தார்கள். காலிஷ்யாவில் ஸ்டிர் நதியின் இருகரையிலும் பலமான யுத்தம் நடக்கிறது.

18-தேதி.

ரிகாவுக்கு 21-மைல் தெற்கிலுள்ள ரெயில்வேயுக்குப் பக்கத்திலும். ட்வின்ஸ்குக்கு வடமேற்கிம் பலமாக யுத்தம் நடக்கிறது. பால்டிக்கடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் 5-ஜெர்மன் ஸாமான் கப்பல்களை மூழ்கடித்து இன்னொன்றைத் தரை தட்டும்படி செய்தது.

21-தேதி.

ரிகாவுக்கு 12-மைல் தென்மேற்கிலும் ட்வின்ஸ்குக்கு 10-மைல் தென்மேற்கிலும் யுத்தம் நடக்கிறது. ஸ்டர் நதியின் மேற்குக்கரையில் ரஷ்யர்கள் எதிரிகளைத் தோற்கடித்துத் துரத்தினார்கள்.

22-தேதி.

ரிகாவுக்குப் பக்கத்தில் ஜெர்மானியர்கள் ட்வினா நதியின் வலதுகரையைப் பிடித்திருக்கிறார்களாம். போர் முகத்தின் தென்பாகத்தில் ரஷ்யத்துருப்புகள் ஏராளமாய் வந்து தாக்கினதால் ஜெர்மானியர்கள் பின்வாங்கினார்கள்.

23-தேதி.

கிழக்கு காலிஷ்யாவில் ரஷ்யர்கள் டார்னபோலுக்கு வடக்கில் எதிரிகள்வசமிருந்த சில இடங்களைப் பிடித்ததோடு 7000-எதிரி ஸோல்ஜர்களையும் கைதிசெய்திருக்கிறார்கள்.

26-தேதி.

ட்வின்ஸ்கைச் சுற்றிலும் பலமானயுத்தம் நடக்கிறது. அதற்கு 12-மைல் வடமேற்கிலுள்ள இல்லக்ஸ்ட் என்னுமிடத்தை ஜர்மானியர்கள் பிடித்திருக்கிறார்கள்.

28-ந்தேதி.

ட்வின்ஸ்குக்கு வடமேற்கில் ஜெர்மானியர்கள் ரஷ்யர்களை பலமாகத் தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள். ஸ்டிர்நதிக்குப்பக்கத்தில் ஜெர்மானியர்கள் முன் செல்லுவதை ரஷ்யர்கள் தடுத்துவிட்டார்கள்.

## பொது வர்த்தமானம்.

அக்டோபர்மீ 6-ந்தேதி.

ஆல்ப்ஸ் மலை ப்ரதேசங்களிலும் கார்ஸோ பீடபூமியிலும் சிறு சண்டைகள் நடந்தனவென்று இட்டாலியர்கள் தெரிவிக்கிறார்கள்.

11-ந்தேதி.

பால்டிக் கடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் ஒரு ஜெர்மன் கப்பலை மூழ்கடித்துவிட்டது.

13-தேதி.

காமரூன்ஸ் ப்ரதேசத்திலுள்ள வும்பிகாஸ் என்னுமிடத்தை ப்ரிட்டிஷ் படைகள் பிடித்திருக்கின்றன.

ப்ரான்ஸின் அன்ய தேச வ்யவஹார மந்த்ரியாகிய மாஸ்யே டெல்காஸெ தமது உத்யோகத்தை ராஜிநாமா கொடுத்துவிட்டார். ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரியாகிய மா. ரெனெ விவியானி தமது ப்ரதம மந்த்ரி உத்யோகத்தோடு, அன்யதேச வ்யவஹார மந்த்ரி வேலையையும் கவனித்து வருவார்.

ஆஸ்ட்ரியர்கள் கார்ஸோ பீடபூமியைத் தாக்கினார்கள். அதில் இருகக்ஷியாரும் பீரங்கி யுத்தம் பலமாகச் செய்தார்கள். கடைசியில் ஆஸ்ட்ரியர்கள் பின் தள்ளப்பட்டார்கள்.

15-தேதி.

பால்டிக் கடலில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் 2-ஜெர்மன் டிஸ்ட்ராயர் கப்பல்களை மூழ்கடித்தது.

19-தேதி

ஒரு ஜெர்மன் டார்பிடோ கப்பல் பால்டிக் கடலில் ஒரு ஸ்டீமரில் மோதி மூழ்கிவிட்டதாகத் தெரிகிறது.

21-ந் தேதி.

டைரோல் - ட்ரெண்டினோ ப்ரதேசத்தில் இட்டலியர்கள் ரொம்ப முன் சென்று கொண்டிருக்கிறார்கள். இஸான்ஸோ நதிப்ரதேசத்திலும் கார்ஸோ பீட பூமியிலும் பீரங்கியுத்தம் நடக்கிறது.



23-ந் தேதி.

டைரோல் ட்ரெண்டினோ ப்ரதேசத்தில் பலமாக யுத்தம் நடக்கிறது. டாவோன் பள்ளத்தாக்கில் இட்டாலியர்கள் நன்றாய்ப் பாதுகாக்கக் கூடிய ஒரு இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். கார்ஸோபீட பூமியில் அவர்கள் அநேக இடங்களில் எதிரிகளைத் தோற்கடித்தார்கள்.

25-தேதி.

பால்டிக்கடலில் லிபாவுக்குப் பக்கத்தில் ஒரு ப்ரிட்டிஷ் ஸப்மரீன் கப்பல் ஒரு ஜெர்மன் ஸப்மரீனை மூழ்கடித்தது.

26-தேதி.

கார்டா ப்ரதேசத்திலும் அடீஜ் பள்ளத்தாக்கிலும் இட்டாலியர்கள் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

இட்டாலியர்கள் எதிரிகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். லெட்ரோ பள்ளத்தாக்கில் அநேக இடங்களை அவர்கள் பிடித்திருக்கிறார்கள். இஸான்ஸோ போர் முகத்தில் கடுமையான பீரங்கியுத்தம் நடக்கிறது.

28-ந்தேதி.

ஆர்கில் என்னும் ப்ரிட்டிஷ் க்ரூஸர் ஸ்காட்லண்டின் கிழக்குக்கரையில் தரைதட்டிப்போயிற்று.

ப்ரான்ஸின் மந்த்ராலோசனை ஸபை ராஜீநாமாக் கொடுத்துவிட்டது. புதுஸபையொன்று ஏற்படுத்தப்படும்.

30-ந்தேதி.

ப்ரான்ஸில் புது மந்த்ராலோசனை ஸபை கூடியிருக்கிறது. மா. ப்ரயாண்ட் ப்ரதமமந்த்ரியாயும், அன்ய தேசவ்யவஹார மந்த்ரியாயும் இருக்கிறார். மா. விவியானி நீதியிலாகா மந்த்ரியாகிறார். பாரிஸின் ராணுவ கவர்னராயிருந்த மா. காலியனி யுத்த மந்த்ரியாகிறார்.

ஜப்பான், மற்ற நேசராசுகளோடு சேராமல் தனியாக எதிரிகளோடு ஸாதானம் செய்யாதென்று லண்டனிலுள்ள ஜப்பான் தூதர் தெரிவித்திருக்கிறார்.

இட்டாலியர்கள் ட்ரெண்டினோ ப்ரதேசத்திலும் இஸான்ஸோ நதியின் மேல்பாகத்திலும் முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

# SEASON

## கால ஸ்திதி

### Rainfall.

மழை.—1915ஹு எப்ரல்மீ 1உ யிலிருந்து 1915ஹு நவம்பர்மீ 5உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 43·79 | 40·57 |
| வால்டேர் | 43·76 | 32·21 |
| காக்கிநடா | 33·24 | 33 60 |
| மஸூலிப்பட்டணம் | 40·51 | 35·33 |
| நெல்லூர் | 13·50 | 23·15 |
| மதராஸ் | 26·20 | 31·89 |
| கூடலூர் | 13 41 | 31·69 |
| நாகபட்டணம் | 13·20 | 27.63 |
| பாம்பன் | 13 36 | 16·95 |
| கொழும்பு | 63·11 | 59·07 |
| திருவனந்தபுரம் | 72 02 | 53·47 |
| கொச்சி | 113·79 | 104·40 |
| கள்ளிக்கோட்டை | 107·81 | 111·43 |
| மங்களூர் | 98·45 | 124·50 |
| மெர்க்காரா | 106·94 | 123·09 |
| ஐதராபாத் | 51·41 | 29·67 |
| பல்லாரி | 25·65 | 18.23 |
| கர்நூல் | 19·46 | 25·49 |
| கடப்பை | 19 56 | 27·57 |
| ஹாஸ்ஸான் | 29·36 | 32 57 |
| பெங்களூர் | 31·51 | 32·25 |
| கொடைக்கானல் | 34·93 | 45·07 |
| உதகமண்டலம் | 53·90 | 47·21 |
| கோயம்புத்தூர் | 16·22 | 16·88 |
| வேலூர் | 29·60 | 35·46 |
| சேலம் | 37 38 | 35·44 |
| திருச்சிநாப்பள்ளி | 22·26 | 24·58 |
| புதுக்கோட்டை | 26·25 | 26·25 |
| மதுரை | 29 66 | 27·76 |
| திருநெல்வேலி | 13·96 | 14·69 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | உதய லக் | அஹஸ் | துலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்ல-1091, பஸலி-1325, இங்கி-1915-நவம்பர்-டிசம்பர் } 49-ராக்ஷஸ ஹூ கார்த்திகைமீ { கார்த்திகம்-மார்க்கசிரம், தக்ஷிணாயனம்-சரத்ருது ஹிஜ்ரி-1334ஹூ மொஹரம்-ஸபர்மீ |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | |
| மஅ | 5 26 | 2846 | 8 | 16 | 1 | செ | தச-24-25, பூட்-37-48, ஹர்-49-16, வணி-55-6, விருச்சிகதசமீதி,விஷ்ணுபதிபுண்யகாலம்,ஸமார்க்கம், கரிநாள் |
| சிஉ | 15 | 45 | 9 | 17 | 2 | பு | ஏகா-26-6, உட்-41-7, வஜ்-48-3, பவ-57-19, தி-3-0, ஸர்வ-கைசிக-ஏகாதசீ,பீஷ்மபஞ்சகவிரதாதி |
| சிஅ | 5 4 | 44 | 10 | 18 | 3 | வி | த்வா-28-56, ரே-45-27, வ்யதீ-47-36, பாவ-28-56, தி-13-11, ப்ரதோஷம், மன்வாதி, துளஸீவிவாஹம், ப்ரபோதோத்ஸவம், சாதுர்மாஸ்யவிரதபூர்த்தி |
| அசி | 4 53 | 43 | 11 | 19 | 4 விருச்சிக | வெ | த்ர-32-31, அசு-50-37, வ்ய-47-49, கவு-0-29, ரா-10-58, வ்யசிரா, விஷ்ணுவைகுண்டசதுர்த்தசீ |
| சிஅ | 42 | 42 | 12 | 20 | 5 | ச | சசி-37-0, பர-56-32, வரீ-48-37, கர-4-41, தி-16-55, சிவவைகுண்டசதுர்த்தசீ, பரணிதீபம் |
| சி | 31 | 41 | 13 | 21 | 6 | ஞா | ○-42-13, கிரு-60-0, பரி-49-58, பத்-9-32, ரா-1-3, மன்வாதி, ஆகாமாவை, கிருத்திகை, ஸர்வாலயதீபம் |
| மஅ | 20 | 40 | 14 | 22 | 7 | தி | ப்ர-48-6, கிரு-3-8, சிவ-51-46, பால-15-5, ரா-19-11, கார்த்திகபகுள, இஷ்டி |
| அசி | 4 9 | 39 | 15 | 23 | 8 | செ | த்வி-54-29, ரோ-10-18, சித்-53-57, தை-21-15, தி-26-3, சாபாயன-20-52, அசூன்யசயன விரதம் |
| சி | 3 58 | 38 | 16 | 24 | 9 | பு | த்ரி-60-0, மிரு-17-53, சாத்-56-19, வணி-27-47, ரா-12-57, த்ரிதினஸ்பிருக் |
| மஅ | 47 | 37 | 17 | 25 | 10 | வி | த்ரி-1-7, திரு-25-36, சுப-58-39, பவ-34-26, ரா-30-48, ஸங்கடசதுர்த்தீ, கரிநாள் |
| சிஉ | 36 | 37 | 18 | 26 | 11 | வெ | சது-7-42, புன-33-6, சுப-60-0, கவு-40-48, சே-3-25, ரா-26-54, இராமஉ |
| சிம | 25 | 36 | 19 | 27 | 12 | ச | பஞ்-13-45, பூச-39-58, சுப-0-39, கர-46-26, ஷஷ்டீதி, திவாமா |
| சிம | 14 | 35 | 20 | 28 | 13 | ஞா | ஷஷ்-18-51, ஆயி-45-41, ப்ரா-2-0, பத்-50-49, தி-15-13, அதிதி, அப-அஷ்டம்-22-52 |
| | 3 3 | 34 | 21 | 29 | 14 | தி | ஸப்-22-24, மக-49-48, மா-2-17, பால-53-30, தி-17-58, ஸப்தமீதி, அப-ஆதி-17-8, வைசிரா, காலபைரவாஷ்டமீ |
| சிஅ | 2 52 | 33 | 22 | 30 | 15 | செ | அஷ்-24-6, பூர-51-58, வை-1-15, விஷ்-58-37, தை-54-8, தி-10-45 |
| அம | 41 | 32 | 23 | 1 | 16 | பு | நவ-23-39, உத்-52-0, ப்ரீ-54-16, வணி-52-34, தி-10-13, நவமீதி |
| சி | 29 | 32 | 24 | 2 டிசம்பர் | 17 | வி | தச-20-59, ஹஸ்-49-56, ஆயு-48-13, பவ-48-51, தி-12-31, திதித்வயம், இராமா, கரிநாள் |
| சி | 18 | 31 | 25 | 3 | 18 | வெ | ஏகா-16-14, சித்-45-55, ஸவு-40-35, கவு-43-9, தி-8-48, ரா-30-13, த்வாதசீதி, ஸர்வஏகாதசீ, திவாமா |
| அசி | 2 7 | 31 | 26 | 4 | 19 | ச | த்வா-9-41, சுவா-40-17, சோ-31-36, கர-35-48, சே-2-44, ரா-24-16, சனிப்ரதோஷம் |
| உம | 1 56 | 30 | 27 | 5 | 20 | ஞா | த்ர-1-39, சசி-52-37, விசா-33-27, அதி-21-37, பத்-27-14, ரா-13-44, மாஸசிவராத்ரீ, அவம |
| சி | 45 | 29 | 28 | 6 | 21 | தி | ●-43-3, அனு-25-56, சுக-10-54, கிரு-59-53, சது-17-53, ரா-9-37, ஸர்வஅமா, பிண்டபிதிரு,ப்ரதக்ஷிணம் |
| உஅ | 34 | 29 | 29 | 7 | 22 | செ | ப்ர-33-24, கேட்-18-9, சூல-48-56, கிம்-8-0, பால-52-43, ரா-7-5, மார்க்கசிரசுத்த, இஷ்டி |
| மஅ | 23 | 28 | 30 | 8 | 23 | பு | த்வி-24-12, மூல-10-38, கண்-38-25, தை-49-51, தி-7-7, ரா-3-18, த்விதீயாதி, சந்திரதர்சனம் [சதுர்த்திவிரதம் |
| சி | 12 | 28 | 1 | 9 | 24 | வி | த்ரி-15-48, பூரா-3-49, உரா-58-11, வ்ரு-28-43, வணி-42-2, தி-21-4, திதித்வயம், த்ரிதீயைக்குருதபவ்யாப்தி, |
| மசி | 1 1 | 27 | 2 | 10 | 25 | வெ | சது-8-38, சிர-54-0, துரு-20-6, பவ-55-37, தி-7-23, பஞ்சமீதி, சிரவணஉபவாஸம், நாகபஞ்சமீ |
| சிஅ | 0 50 | 27 | 3 ஸபர் | 11 | 26 | ச | பஞ்-3-1, ஷஷ்-59-9, அவி-51-33, வ்யா-12-45, கவு-30-51, தி-3-28, ஷஷ்டியுபவாஸம், சம்பாஷஷ்டீ, அவம |
| சி | 39 | 27 | 4 | 12 | 27 | ஞா | ஸப-57-9, சத-50-53, ஹர்-6-49, கர-27-54, தி-9-10, மித்ரஸப்தமீ, சூர்யவிரதம் |
| சி | 28 | 26 | 5 | 13 | 28 | தி | அஷ்-57-0, பூட்-52-3, வஜ்-2-21, வதீ-59-20, பத்-26-52, தி-7-2 |
| அசி | 17 | 26 | 6 | 14 | 29 | செ | நவ-58-33, உட்-54-51, வ்ய-57-36, பால-27-33, தி-17-0, விருச்சிகநவமீதி, வ்யசிரா, கல்பாதி |
| உம | 0 6 | 2826 | 7 | 15 | 30 | பு | தச-60-0, ரே-59-8, வரீ-57-1, தை-29-54, தி-26-50, சாபரவி-31-30, விருசசிகசூன்யதி, சாபதசமீதி, ஷடசீதி புண்யகாலம், த்ரிதினஸ்பிருக் |

| | | | |
|---|---|---|---|
| | | | ச |
| குரு | 9-சிம்-செ<br>11-விரு-பு | | செ கே |
| ரா | 11-2னு-சு<br>30-தனு-பு | | |
| | ர-சு | பு | |

SUPPLEMENT TO "THE PEOPLE'S FRIEND."
"ஜனோபிமானி"க்கு அனுபந்தம்.



THE LATE SIR PHEROZESHAH MEHTA.
காலஞ்சென்ற ஸர் பிரோஸிஷா மேட்டா.


# ஜனோபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 7. Vol. 7. ராக்ஷஸஹு, கார்த்திகைமீ, NOVEMBER, 1915. ஸஞ்சிகை 15. No. 15.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. A. P. | Foreign. Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 ... | ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 ... | ... 0 8 0 |
| Sample copy | 0 6 0 ... | ... 0 8 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |
| 1/16 do | ... 1 0 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion, republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Kondi Chetty Street, George-town, Madras.

## ஜனோபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனோபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்ய நாடு. |
|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 0 0 ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 6 0 ... | 0 8 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில். அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ ,, | ,, ,, | 2 8 0 |
| ¼ ,, | ,, ,, | 1 4 0 |
| 1/16 ,, | ,, ,, | 1 0 0 |

**வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை.**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேண்டுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்,

# ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸ௵ கார்த்திகைமீ. [ஸஞ்சிகை 15.


## THE BALKAN PEININSULA.

## பால்கன் தீபகல்பம்.

(இந்த வ்யாஸத்தை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.)

ஐரோப்பாவின் தென்கிழக்கில் பால்கன் தீபகல்பமென்று ஒரு ப்ரதேசமிருக்கிறது. அதில் டால்மேஷ்யா, பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா, மாண்டிநிக்ரோ, ஸெர்வியா, பல்கேரியா, ருமேனியா, க்ரீஸ், அல்பேனியா, மாஸிடோனியா, துருக்கி ஆகிய இந்த தேசங்கள் அடங்கியிருக்கின்றன. இந்த தீபகல்பத்தின் வடக்கெல்லையாவது, இட்டலிக்குக் கிழக்கிலுள்ள ஏட்ரியாடிக் கடலின் வடக்கில் ஆஸ்ட்ரியாவின் கரையிலுள்ள ட்ரீஸ்ட் என்னும் பட்டணத்திலிருந்து, கருங்கடலில் போய் விழும் டான்யூப் நதியின் முகத்வாரத்துக்கு உத்தேசமாய் ஒரு கோடு இழுத்தால், அந்தக் கோடே இந்த பால்கன் ப்ரதேசத்துக்கு வடக்கெல்லையாகும். இதன் மேற்கில் ஏட்ரியாடிக் கடலும், ஐயோனியன் கடலும் இருக்கின்றன. தெற்கில் மத்யதரைக் கடலும் ஈஜியன் கடலும், மார்மோராக் கடலும் இருக்கின்றன. கிழக்கில் கருங்கடலும் ரஷ்யாவும் இருக்கின்றன. வடக்கில் ஆஸ்ட்ரியா-ஹங்கேரி என்னும் ராஜ்யம் இருக்கிறது.

துருக்கியர்கள் 14-ம் நூற்றூண்டின் பின்பாதியிலிருந்து தொடங்கி, 15-ம் நூற்றூண்டின் மத்யகாலத்துக்குள்ளாக பால்கன் தீபகல்பத்தைச் சேர்ந்த நாடுகளில் அநேகமாய் எல்லாவற்றையும் ஜயித்துவிட்டார்கள்.

அவர்கள் 1389-ம் வர்ஷத்தில் ஸெர்வியா ராஜ்யத்தையும், 1396-ம் வர்ஷத்தில் பல்கேரியாவையும், 1430-ம் வர்ஷத்தில் மாஸிடோனியா என்ற ப்ரதேசத்தையும், 1431-ம் வர்ஷத்தில் அல்பேனியாவையும் பிடித்துக்கொண்டார்கள். கான்ஸ்டான்டிநோபிளும் அதைச்சுற்றிலுமுள்ள சில ப்ரதேசங்களும் முன்பு பைஸான்டைன் ராஜ்யமாக இருந்தன. அவைகளை துருக்கியர்கள் 1453-ம் வர்ஷத்தில் பிடித்துக் கொண்டார்கள். 1456-ம் வர்ஷமுதல் 1460-ம் வர்ஷத்துக்குள் க்ரீஸையும் வசப்படுத்திக்கொண்டு விட்டார்கள். ருமேனியாவின் பெரும்பாகம் 15-ம் நூற்றூண்டின் ஆரம்பத்தில் துருக்கியின் ஆட்சிக்கு உள்பட்டுவிட்டது. மாண்டிநிக்ரோ தேசம் முன்பு ஸெர்வியாவைச் சேர்ந்திருந்தது. துருக்கியர்கள் ஸெர்வியாவை வசப்படுத்தின பிறகு, மாண்டிநிக்ரோவையும் தங்களுடைய ஆட்சிக்குக் கீழ்ப்பட்டதெனச் சொல்லிவந்தார்கள். ஆனால் மாண்டிநிக்ரர்கள் துருக்கியின் ஆட்சிக்கு உள்பட ப்ரியமில்லாமல் மாண்டிநிக்ரோவின் மலைப்ரதேசங்களுக்கு ஓடிப்போய் அங்கே ஸ்வயாதீனமாக இருந்துவந்தார்கள். இருந்தாலும், துருக்கியர்கள் அந்த தேசம் தங்களைச் சேர்ந்ததென்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா என்னும் ப்ரதேசங்கள் இரண்டும் சேர்ந்து 14-ம் நூற்றூண்டில் ஒரு ஸ்வயாதீனமுள்ள தனிராஜ்யமாக இருந்தன. இவைகள் 15-ம் நூற்றூண்டில் துருக்கியர் வசம் சேர்ந்தன.

டால்மேஷ்யா என்னும் தேசம்மாத்ரம் துருக்கியர்களால் பிடிபடவில்லை. அது ப்ரான்ஸ், ஹங்கேரி, வெனிஸ், ஆஸ்ட்ரியா, முதலிய தேசங்களுள் ஒன்றின் வசமிருந்து இன்னொன்றின் வசம்மாறி, கடைசியில் 1814-ம் வர்ஷத்தில் ஆஸ்ட்ரியாவின் வசம் போய் நாளது வரையில்



ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்ததாகவே இருந்துவருகிறது.

15-ம் நூற்றூண்டின் மத்ய காலத்துக்குள்ளாக பால்கன் ப்ரதேசத்தின் பெரும்பாகத்தைக் கைப்பற்றின துருக்கியர்கள் பல வர்ஷங்கள் வரையில் அவைகளை தங்கள் வசமே வைத்திருந்தார்கள். துருக்கியர்கள் தங்கள் வசமிருந்த தேசங்களிலுள்ள ஜனங்களை ரொம்பவும் கொடுமையாக நடத்திவந்ததால், அந்த ஜனங்கள் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். மேற்சொன்ன தேசங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வோர் காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக துருக்கியின் ஆட்சியிலிருந்து விடுவித்துக்கொண்டு விட்டது.

ஸெர்வியா.—18-ம் நூற்றூண்டின் கடைசி பாகத்தில் ஸெர்வியர்கள் துருக்கியர்களுக்கு விரோதமாகக் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். ரஷ்யர்கள் ஸெர்வியர்கள் பக்கம் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு ரஹஸ்யமாய் உதவி செய்தார்கள். ஸெர்வியர்கள் 1807-ம் வர்ஷத்தில் ஸெர்வியாவின் தலைப்பட்டணமாகிய பெல்க்ரேடைப் பிடித்துக்கொண்டு, தமது தேசத்தை ஸ்வயாதீனமுள்ள நாடாக்கிக் கொண்டார்கள். ஆனால் 1812-ம் வர்ஷ வாக்கில் ரஷ்யர்கள் ப்ரான்ஸோடு யுத்தம்செய்ய நேர்ந்ததால், அவர்கள் ஸெர்வியர்களுக்கு உதவிசெய்ய முடியாமல் போகவே, அந்த ஸமயம் துருக்கி ஸெர்வியாவில் அது இழந்த ப்ரதேசங்களை யெல்லாம் பிடித்துக்கொண்டது. ஆனால் சில வர்ஷங்களுக்குப்பிறகு, துருக்கி ரஷ்யாவுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டது. அதன்படி, ஸெர்வியாவைக் காப்பாற்ற ரஷ்யாவுக்கு அதிகாரமுண்டென்பதை ஒத்துக்கொண்டதோடு, துருக்கி ஸெர்வியாவுக்கு மதவிஷயங்களில் ஸ்வதந்தரமும், உள்நாட்டு விஷயங்களில் ஸ்வய ஆட்சியும் கொடுக்க ஸம்மதித்தது. ஆனால், அது சொன்ன வார்த்தையை நிறைவேற்றவில்லை. அதன்மேல் ரஷ்யா துருக்கியுடன் யுத்தம் செய்ய ஆரம்பித்தது. அந்த யுத்தத்தின் கடைசியில், 1829-ம் வர்ஷத்தில், துருக்கியர்கள் முன் சொன்னபடி ஸெர்வியாவை நடத்துவதாக ஒப்புக்கொண்டதோடு, ஸெர்வியர்களின் தலைவராகிய மிலாஷ் ஆப்ரினுவிட்ச் என்பவருக்கும் அவருடைய வம்சத்தாருக்கும் ப்ரின்ஸ் என்ற பட்டத்தைக் கொடுத்தார்கள். ஆயினும், ஸெர்வியா இன்னும் துருக்கிக்குக் கீழ்ப்பட்ட தேசமாகவே இருந்தது. துருக்கிய ஸைன்யங்கள் ஸெர்வியாவில் அநேக இடங்களில் தங்கியிருந்தன. ஆனால் துருக்கிக்கு தனக்குள்பட்ட தேசங்களை அடக்கி ஆளமுடியாமல் சக்தி குறைந்துகொண்டேவந்தது. இதைக்கண்ட ரஷ்யா தேசத்து அரசர், முதலாவது நிக்கலெஸ், 1844-ம் வர்ஷத்தில் இங்க்லண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் துருக்கியை தங்களுக்குள் பாகித்துக் கொள்வதைப் பற்றி பேச்சுவிட்டார். ஆனால் இதை இங்க்லண்டும் ப்ரான்ஸும் வெறுத்துத் தள்ளிவிட்டன. ஆயினும், எப்போது ஸமயம் கிடைக்கப்போகிறதென்று பார்த்துக் கொண்டுவந்த ரஷ்யா, மத ஸம்பந்தமான ஒரு அல்ப காரணத்தைக்கொண்டு, துருக்கி ராஜ்யத்திலுள்ள க்ரீக் சர்ச் கிறிஸ்தவர்கள் எல்லாரையும் பராமரித்து வர தனக்கு அதிகாரமுண்டென்று ஒப்புக்கொண்டு ஒரு உடன்படிக்கைசெய்துகொடுக்கும்படி துருக்கியைக்கேட்டது. இதற்கு துருக்கி மறுக்கவே, ரஷ்யா துருக்கியின்மேல் யுத்தம் தொடங்கிற்று. இதற்கு 1854-56-ம் வர்ஷத்து க்ரிமியன் யுத்தமென்று பெயர். அதன்மேல் துருக்கி இங்க்லண்டையும் ப்ரான்ஸையும் ஒத்தாசை கேட்டு அதைப் பெற்றது. 1856-ம் வர்ஷத்தில் அந்த யுத்தக் கடைசியில் நடந்த பாரீஸ் உடன்படிக்கையின்படி, ரஷ்யாவுக்கு ஸெர்வியாவின்மேல் இருந்த மேற்பார்வை பாத்யதைபோய்விட்டதோடு, துருக்கி தனது ஸைன்யங்களை ஸெர்வியாவில் வைத்திருக்கலாமென்றாலும், அது, உடன்படிக்கை செய்த மற்ற அரசுகளின் ஸம்மதமில்லாமல்

ஸெர்வியாவின்மேல் யுத்தம் செய்யக்கூடாதென்று ஏற்பட்டது. 1877-ம் வர்ஷம் வரையில் ஸெர்வியா இந்த நிலைமையிலேயே இருந்தது.

**மான்டிநிக்ரோ.**—முன் சொன்னபடி மான்டிநிக்ரோ துருக்கியருடைய ஆட்சிக்கு உள்படாமலிருந்தாலும் துருக்கியர்கள் அந்த தேசம் தங்களுடையதென்றே சொல்லி வந்தார்கள். 1714-ம் வர்ஷத்தில் துருக்கியர்கள் அதன்மேல் படையெடுத்துப்போய் அதை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டார்கள். ஆனால் சீக்ரத்தில் துருக்கியர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேபோகவே, மான்டிநிக்ரர்கள் மறுபடியும் ஸ்வயாதீனமடைந்தார்கள். இப்படியாக, மான்டிநிக்ரோ சிலகாலம் துருக்கியர்களால் வசப்படுத்தப்பட்டும், சிலகாலம் பேருக்குமட்டும் துருக்கிக்கு ஸொந்தமென்றும், உண்மையில் ஸ்வாதீனமுள்ளதாகவும், இருந்து வந்தது. ஆனால் 1862-ம் வர்ஷத்தில் துருக்கிக்கும் மான்டிநிக்ரோவுக்கும் மறுபடியும் யுத்தம் நேர்ந்ததில், மான்டிநிக்ரர்கள் தோற்றுப்போய், துருக்கியர்களுடைய ஆட்சியை ஒப்புக்கொள்ள நேரிட்டது. ஆனால் உள்நாட்டு விஷயங்களில் மான்டிநிக்ரோ ஸ்வய ஆட்சி உடையதாக இருந்தது.

**க்ரீஸ்.**—15-ம் நூற்றாண்டில் துருக்கியர்வசமடைந்த க்ரீஸானது 17-ம் நூற்றாண்டின் கடைசிப்பாகம் வரையில் அவர்களிடமே இருந்து வந்தது. இட்டலியின் வட பாகத்திலிருந்த வெனீஷ்யர்கள் 17-ம் நூற்றாண்டின் கடைசியில் க்ரீஸின்மேல் படையெடுத்துப் போய், அதில் ஒரு பாகத்தைப்பிடித்து, 1718-ம் வர்ஷம் வரையில் தங்கள் வசம் வைத்திருந்தார்கள். பிறகு, துருக்கியர்கள் அந்த பாகத்தைப்பிடித்துக்கொண்டார்கள். வெகுகாலமாக ரஷ்யர்கள் க்ரீஸைத் துருக்கியர்களிடமிருந்து விடுவிக்க முயற்சி செய்து வந்தார்கள். ஆனால் அந்த முயற்சிவெகுகாலம் பயன்படவில்லை.

க்ரீஸ் ஜனங்கள் 1821-ம் வர்ஷம்முதல் 1829-ம் வர்ஷம் வரையில் கலகங்கள் செய்து துருக்கியரோடு யுத்தம் செய்தார்கள். யுத்தத்தின் கடைசியில் க்ரீக்கர்கள் தோற்றுப்போவார்கள் போலிருந்தபோது, மற்ற ஐரோப்பிய அரசர்கள் ஒன்று சேர்ந்து துருக்கியோடு யுத்தம் செய்து, துருக்கியைத் தோற்கடித்தன. அந்த யுத்தத்தின் கடைசியில் 1830-ம் வர்ஷத்தில் நடந்த ஒரு உடன்படிக்கையின்படி க்ரீஸ் ஒரு ஸ்வயாதீனமுள்ள தனி ராஜ்யமாயிற்று.

**ருமேனியா.**—ருமேனியாவின் ஒரு பாகம் 15-ம் நூற்றாண்டில் துருக்கியின் வசமடைந்ததென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். இந்த பாகம் வல்லேச்சியா என்னும் மாகாணம். இது முன்பு ஒரு சிறு தனி ராஜ்யமாக இருந்தது. ருமேனியாவின் இன்னொரு பாகமாகிய மால்டேவியா என்பதும் வெகு காலம் தனி ராஜ்யமாக இருந்தது. அதன் அரசருடைய வேண்டுகோளால் அது 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்வதாவாகவே துருக்கிக்குக் கீழ்ப்பட்ட ராஜ்யமாயிற்று. அதன் பிறகு இவைகள் சிலவர்ஷங்கள் ஸ்வயாதீனமாகவும் மற்ற காலங்களில் துருக்கியின் ஆட்சிக்குள்பட்டும் இருந்தன.

1821-ம் வர்ஷத்தில் துருக்கிய கவர்ன்மெண்டார் அந்த இரண்டு மாகாணங்களும் ஸ்வதாவாக தங்களுடைய அரசர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாமென்று அனுமதி கொடுத்தார்கள். ஆனால் அந்த இரண்டு மாகாணங்கள் துருக்கிக்குக் கீழ்ப்பட்ட நாடுகளாக இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தினார்கள். அதன்மேல் 1859-ம் வர்ஷம் வரையில் இரண்டு மாகாணங்களும் துருக்கிக்குக் கீழ்பட்டனவாய் இரண்டு தனி ராஜ்யங்களாக இருந்து வந்தன. 1859-ம் வர்ஷத்தில் இந்த மாகாணங்களின் ஜனஸபைகள் தங்களுக்கு அரசனைத்தெரிந்தெடுக்கையில் இரண்டு மாகாணத்தாரும் ஒரே அரசரைத் தெரிந்தெடுக்கவே, இரண்டு மாகாணங்களும் ஒரே ராஜ்யமாயின.



**துருக்கிக்கு விரோதமான கலகங்களும் யுத்தங்களும்.**—பாஸ்னியா-ஹெர்ஸிகோவினா ஆகிய இந்த இரண்டு மாகாணங்களும் 15-ம் நூற்றாண்டில் துருக்கியர் வசம் போயினவென்று மேலே சொன்னோம். இவைகளிலுள்ள ஜனங்கள் 1875-ம் வுர்ஷத்தில் துருக்கியர்களுக்கு விரோதமாக கலகம் செய்தார்கள். இந்த கலகத்தால் துருக்கியிலுள்ள மற்ற ஜனங்களும் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்தக் கலகம் பல்கேரியா என்னும் மாகாணத்தில் அதிகமாயிருந்தது. அதை அடக்குவதற்காக துருக்கி பல்கேரியாவிற்குள் ஸைன்யங்களை அனுப்பி, அங்குள்ள க்ராமங்களை யழித்து, ஜனங்களைக் கொலைசெய்து, ரொம்ப அக்ரமங்கள் செய்தது. இப்படி பல்கேரிய கிறிஸ்தவர்கள் கஷ்டப்படுவதைப்பார்த்து 1876-ம் வர்ஷத்தில் ஸெர்வியா துருக்கியர்களோடு யுத்தம்தொடங்கிற்று. ஆனால் அது அந்த யுத்தத்தில் தோற்றுப்போயிற்று.

ரஷ்யாவானது, பால்கன் ப்ரதேசத்திலுள்ள கிறிஸ்த்வ ஜனங்களைத் துருக்கியின் ஆட்சியிலிருந்து விடுவிப்பதற்காக துருக்கியுடன் யுத்தம் செய்ய உத்தேசித்து, ஆஸ்டிரியாவையும் இங்கிலண்டையும் கேட்டது. ரஷ்யா துருக்கியை ஜயித்து விட்டால், அது, மத்யதரைக்கடலுக்கு வந்து, இங்கிலண்டுக்கு அதிகப் பற்றுள்ள ஈஜிப்ட், இந்தியா முதலிய தேசங்களில் தொந்தரவு செய்யும். இதை உத்தேசித்து 1854-ம் வருஷம் க்ரிமியன் யுத்தத்தில் செய்ததுபோல துருக்கியோடுசேர்ந்து ரஷ்யாவுக்குவிரோதமாக யுத்தம் செய்யலாமென்றாலோ, துருக்கி தன் ராஜ்யத்திலுள்ள கிறிஸ்தவர்களை அக்ரமம் செய்கிறது. இவைகளை உத்தேசித்து, ஈஜிப்டில் சண்டை நடக்காமலிருந்து, ரஷ்யா துருக்கியின் தலைநகராகிய கான்ஸ்டான்டிநோப்பிலைப்பிடித்து அங்கு ரஷ்யத்துருப்புகள் தாமஸிக்காமலிருந்தால், யுத்தத்தில் சேருவதில்லை என்று இங்கிலண்டு சொல்லிவிட்டது.

ஆஸ்ட்ரியாவின் அரசராகிய ப்ரான்ஸிஸ் ஜோஸெபும், பால்கன் நாடுகளில் ஸ்லாவ் ஜாதியார் பலத்துவிட்டால் ஆஸ்ட்ரியாவுக்குக் கெடுதலாகுமென்றும், அப்படி ஏதாவது நேரிடும் பட்சத்தில் தாம் பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா ஆகிய இந்த மாகாணங்களில் ப்ரவேசிக்க வேண்டிவருமென்றும் சொல்லி, துருக்கியோடு யுத்தஞ் செய்ய ஸம்மதிக்கவில்லை. பிறகு, ரஷ்யா தான் தனியாக யுத்தஞ்செய்ய விரும்புவதாகவும், அப்படிச்செய்தால் ஆஸ்ட்ரியா ஸம்மதிக்குமா வென்றும் கேட்டதற்கு, ரஷ்யா யுத்தத்தில் ஜயித்து துருக்கியின் ப்ரதேசங்களை பங்குபோட நேர்ந்தால், ரஷ்யா முன்பு க்ரிமியின் யுத்தத்தில் பெஸரேபியாவில் இழந்த பாகத்தை எடுத்துக்கொண்டு, பாஸ்னியாவையும் ஹெர்ஸிகோவினாவில் ஒரு பாகத்தையும் தனக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று ஆஸ்ட்ரியா கேட்டது. இந்தப்படி ஸம்மதித்து இரண்டு அரசுகளும் உடன்படிக்கை செய்துகொண்டன. அதன்மேல் ரஷ்யா துருக்கியின்மேல் யுத்தம் செய்தது. அந்த யுத்தத்தில், ஸெர்வியா, க்ரீஸ், மாண்டிநீக்ரோ, ருமேனியா ஆகிய இந்த தேசங்களும், ரஷ்யாவோடு சேர்ந்துகொண்டன. யுத்தத்தில் துருக்கி தோற்றுப் போய், 1878-ம் வர்ஷத்தில் ஸான்ஸ்டிபானோ என்னுமிடத்தில் ரஷ்யாவுடன் ஸமாதான உடன்படிக்கை செய்துகொண்டது.

இந்த உடன்படிக்கையின்படி, ருமேனியாவை ஸ்வயாதீனமுள்ள ராஜ்யமாக்கினார்கள். ஸெர்வியாவுக்கு ஏராளமான ப்ரதேசங்கள் கிடைத்தன, மான்டிநிக்ரோவுக்கு முன்னிருந்த ப்ரதேசத்தை விட இரண்டுமடங்கு அதிகமான ப்ரதேசங்கள் கிடைத்தன. பல்கேரியா ப்ரதேசத்தை துருக்கிக்குக் கீழ்ப்பட்ட ஒரு ராஜ்யமாக ஆக்கினார்கள். பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா என்னும் மாகாணங்களை துருக்கிக்குக் கீழ்ப்பட்டனவாய் ஒரு ஸ்வய ஆட்சியுள்ள ராஜ்யமாக்கினார்கள்.

இந்த உடன்படிக்கையால் பால்கன் தீபகல்பத்தில் புல்கேரியா வலுவான ராஜ்யமாகி, ஸ்லாவ் ஜாதியார் பலத்து, ரஷ்யாவுக்கு செல்வாக்கும் ஆதீனமும் அதிகமாகிவிடும், பால்கன் தீபகல்பத்தில் ஸ்லாவ் ராஜ்யங்கள் பலத்தால் தன் ராஜ்யத்துக்குக் கேடாகுமென்று பயந்து, ரஷ்யாவோடு செய்துகொண்ட உடன்படிக்கைப்படி பாஸ்னியாவும், ஹெர்ஸிகோவினாவும் கிடைக்காததால் வருத்தப்பட்ட ஆஸ்ட்ரியாவும், பால்கன் தீபகல்பத்தில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகமானால் ஈஜிப்ட், இந்தியா முதலிய இடங்களில் தொந்தரவு ஏற்படுமென்று பயந்த இங்கிலண்டும், ஸான்ஸ்டிபானோ உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளவில்லை. இதன்மூலமாய் இங்கிலண்டுக்கும், ஆஸ்ட்ரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் யுத்தம் நேரிடும் போலிருந்ததால், ஐரோப்பிய வல்லரசுகள் சேர்ந்து உடன்படிக்கையின் ஷரத்துகளை தீர்மானிக்கட்டுமென்று ரஷ்யா விட்டுவிட்டது. அதன்மேல் ஐரோப்பிய வல்லரசுகளின் ப்ரதிநிதிகள் ஜெர்மனியின் ராஜதானியாகிய பெர்லினில் அந்த தேசத்து மந்த்ரியாகிய ப்ரின்ஸ் பிஸ்மார்க்கின் அக்ராஸனத்தின்கீழ் கூடி ஸான்ஸ்டிபானோ உடன்படிக்கையில் மாறுபாடு செய்தார்கள். அதற்கு பெர்லின் உடன்படிக்கையென்று பெயர். அந்த உடன்படிக்கையின்படி, ஸெர்வியா, மாண்டிநிக்ரோ, ருமேனியா என்னும் ராஜ்யங்கள் ஸ்வயாதீனமுள்ள நாடுகளாக ஒப்புக்கொள்ளப்பட்டன. பாஸ்னியா, ஹெர்ஸிகோவினா என்னும் மாகாணங்களை ஆஸ்ட்ரியர்கள் ஆட்சிசெய்து வரவேண்டுமென்றும், ஆனால் அவைகள் துருக்கிக்குக் கீழ்ப்பட்ட தேசங்களாக இருக்கவேண்டுமென்றும் ஏற்பட்டது. ஸான்ஸ்டிபானோ உடன்படிக்கைப்படி ஏற்பட்ட பல்கேரியாவை மூன்றாக உடைத்து டான்யூப் நதிக்குத் தெற்கேயும் பால்கன் மலைகளுக்கு வடக்கேயுமுள்ள ப்ரதேசத்தை பல்கேரியா என்று ஒரு தனி ராஜ்யமாக்கி, அதற்கு உள்நாட்டு வ்யவஹாரங்களில் ஸ்வய ஆட்சிகொடுத்து, அதற்கு தானே அரசரைத் தெரிந்தெடுக்க அதிகாரமும் கொடுத்து, துருக்கிக்கு கீழ்ப்பட்டதாக அமைத்தார்கள். அந்த நாட்டுக்குத் தெற்கே கிழக்கு ருமீலியா என்னும் ஒரு மாகாணத்தை ஏற்படுத்தி, அதற்கு கொஞ்சம் ஸ்வய ஆட்சி கொடுத்தார்கள். அந்த மாகாணத்துக்கு துருக்கி கவர்ன்மெண்டார் ஒரு கிறிஸ்தவ கவர்னர் ஜெனரலை நியமிக்க வேண்டுமென்றும் ஏற்படுத்தினார்கள். பாக்கி பாகத்தில், மாஸிடோனியாவும் த்ரேஸ் என்னும் மாகாணமும் இருந்தன. இவைகளையும், அல்பேனியா முதலிய மற்ற பால்கன் ப்ரதேசங்களையும் துருக்கியினிடமே விட்டுவிட்டார்கள்.

இதன் பிறகு 1885-ம் வர்ஷத்தில் கிழக்கு ருமீலியாவில் ஒரு கலகம் ஏற்பட்டது. அந்தக் கலகத்தின் ப்ரமுகர்கள் அந்த மாகாணத்தை பல்கேரியாவுடன் சேர்க்கவேண்டுமென்று எண்ணவே, அப்படியே பல்கேரியாவின் அரசர் அந்த மாகாணத்தை தமது தேசத்தோடு சேர்த்துக் கொண்டார்.

1908-ம் வர்ஷத்தில் துருக்கியில் உள்நாட்டில் ராஜாங்கப் புரட்சி ஏற்பட்டு கலகமானபோது ஆஸ்ட்ரியாவானது தன்னுடைய மேற்பார்வையில் விடப்பட்டிருந்த பாஸ்னியா ஹெர்ஸிகோவினா என்னும் மாகாணங்களை தன் தேசத்தோடு சேர்த்துக் கொண்டது. அதோடு, பல்கேரியாவும் ஸ்வயாதீனமுள்ள ராஜ்யமென்று சொல்லி துருக்கியின் ஆட்சியிலிருந்து விலகிக் கொண்டது.

பெர்லின் உடன்படிக்கையில் துருக்கியின் பூரா ஆட்சியில் விடப்பட்ட மாஸிடோனியா, அல்பேனியா முதலிய சில ப்ரதேசங்களில் உள்ள கிறிஸ்தவ ஜனங்களை துருக்கியர்கள் ரொம்பவும் கொடுமையாய் நடத்திவந்தார்கள். 1908-ம் வர்ஷத்தில் துருக்கியில் ராஜாங்கமாறுபாடு ஏற்பட்ட போது, துருக்கியின் ஆட்சிக்குள்பட்ட கிறிஸ்



தவர்களுக்கு கதிமோக்ஷம் பிறக்குமென்று மற்ற பால்கன் நாடுகள் எண்ணின. ஆனால் அவர்களுக்கு யாதொரு ஸௌகர்யமும் ஏற்படவில்லை. பல்கேரியாவானது வெகு காலமாய் மாஸிடோனியாவை துருக்கியின் ஆட்சியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று எண்ணி வந்தது. 1912-ம் வர்ஷத்தில் க்ரீஸ், மாண்டிநிக்ரோ, ஸெர்வியா, பல்கேரியா ஆகிய இந்த நான்கு தேசங்களும் துருக்கியின் கீழுள்ள கிறிஸ்தவர்களை விடுவிப்பதற்காக ஒன்று சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு, துருக்கியின்மேல் படையெடுத்து, அதை தோற்கடித்து, ஐரோப்பாவில் அதற்கு ஸொந்தமான தேசங்களில் பெரும் பாகத்தைப் பிடித்துக்கொண்டன. இதற்கு முதல் பால்கன் யுத்தமென்று பெயர். அதன்மேல் ஐரோப்பிய வல்லரசுகள் ஸமாதானஞ் செய்யப் புகுந்து, லண்டனில் 1913-ம் வர்ஷத்தில் ஒரு கான்பரென்ஸ் கூட்டின. அந்த கான்பரென்ஸின்படி அல்பேனியா ஒரு தனி ராஜ்யமாக்கப்பட்டது. மாஸிடோனியா முதலிய ப்ரதேசங்களை ஸெர்வியா, க்ரீஸ், பல்கேரியா, மாண்டிநிக்ரோ ஆகிய இந்த தேசங்கள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளும்படி வல்லரசுகள் விட்டன. இந்த யுத்தத்திற்கு முன்னால் ஸெர்வியாவும் பல்கேரியாவும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருந்தன. அதன்படி மாஸிடோனியாவை இன்னவிதமாய் பங்கிட்டுக்கொள்வதென்று ஏற்பாடு செய்துகொண்டிருந்தன. அதன்படி மாஸிடோனியாவில் ஒரு பாகம் கொடுக்கவேண்டுமென்று பல்கேரியா கேட்டது. ஆனால் ஸெர்வியா அதற்கு இஷ்டப்படவில்லை. மேற்சொன்ன லண்டன்கான்பரென்ஸில் வல்லரசுகள் பால்கன்நாட்டு நாலு அரசுகளையும் பங்கிட்டுக்கொள்ளும்படி விட்டதில், பல்கேரியாவுக்கு ஸெர்வியாவோடு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி ப்ரதேசங்கள் கிடைக்காததால், பல்கேரியா ஸெர்வியாவின்மேல் யுத்தம் தொடங்கிற்று. இதற்கு இரண்டாம் பால்கன் யுத்தமென்று பெயர்.

க்ரீஸும், ருமேனியாவும் ஸெர்வியாவுடன் சேர்ந்துகொண்டன. இவை மூன்றும் பல்கேரியாவோடு சண்டை செய்து, அதைத் தோற்கடித்தன. அதன்மேல் பல்கேரியா ஸமாதானத்துக்கு உடன்படவே, ருமேனியாவின் தலைநகராகிய புகரெஸ்டில் ஒரு உடன்படிக்கை வல்லரசுகளால் செய்யப்பட்டது. அதன்படி, பல்கேரியா சில ப்ரதேசங்களை இழந்ததோடு, மாஸிடோனியாவில் அது விரும்பிய பாகமும் அதற்குக் கிடைக்காமல் போயிற்று. க்ரீஸின் ப்ரதேசங்கள் அதிகமாயின. ஸெர்வியாவுக்கும் ருமேனியாவுக்கும் அதிக ப்ரதேசங்கள் கிடைத்தன.

## BULGARIA AND THE WAR.

## பல்கேரியாவும் யுத்தமும்

சென்ற அக்டோபர் மாஸம்முதல் பல்கேரியா ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டு, இங்கிலண்டுக்கும் அதைச்சேர்ந்த நேச அரசுகளுக்கும் விரோதமாக யுத்தம் செய்துவருகிறது. அது அவ்விதம் செய்ததன் காரணத்தையும் பல்கேரியா நேச அரசுகளோடாவது எதிரிகளோடாவது சேர்ந்தால்இரண்டு கட்சிகளுக்கும் இன்னஸாதகபாதகங்கள் ஏற்படுமென்பதையும் பார்ப்போம்.

பல்கேரியா நேச அரசுகளோடு சேர்ந்திருந்தால், நேச அரசுகளின் ஸைன்யங்களும் பல்கேரிய ஸைன்யங்களும் சேர்ந்து துருக்கியைத் தாக்கி, டார்டனல்ஸ் ஜலஸந்தியை வசப்படுத்தி, கடைசியில் துருக்கியைத் தோற்கடிக்கலாம். அப்படி அடித்தால், ரஷ்யாவுக்கு வேண்டியிருக்கும் குண்டுகளையும் மருந்துகளையும் டார்டனல்ஸ் வழியாய் கருங்கடலில் கொண்டுபோய் ரஷ்யாவுக்கு ஸுலபமாய் கொடுக்கலாம். கடைசியாக ஜெர்மனி தோற்றுப்போவது ஸுலபமாகும்

ஜெர்மனியோடு, ஆஸ்ட்ரியாவும் துருக்கியும் சேர்ந்திருக்கின்றன. இந்த மூன்று தேசங்க

ளின் சேர்க்கையில் ஒரு குறை யென்னவென்றால், துருக்கிக்கு மற்ற இரண்டு தேசங்களுடன் போக்குவரத்து ஸௌகர்ய மில்லாமல் அது தனித்திருப்பதே. டார்டனல்ஸ் ஜலஸந்தியில் ப்ரிட்டிஷ் படைகள் வந்து தாக்குவதைத்தடுக்க, துருக்கிக்குப் போதுமான யுத்தக் கருவிகள் இல்லை. இவைகள் ஜெர்மனியி லிருந்துதான் வரவேண்டும். சில காலமாக ஜெர்மனியானது ருமேனியா வழியாக குண்டு மருந்துகளை அனுப்பிவந்தது. ஆனால், நேச அரசுகள் வற்புறுத்தினதன்மேல், ருமேனியாவானது, அந்த நாட்டின் வழியாய் ஜெர்மனி துருக்கிக்கு மருந்து குண்டுகள் முதலியன அனுப்பக்கூடாதென்று சொல்லித் தடுத்துவிட்டது. ஆகவே, துருக்கிக்கு மருந்து குண்டுகளில்லாமல் போய், நேச ஸைன்யங்களால் தோற்கடிக்கப்பட்டு, அது டார்டனல்ஸ் ஜலஸந்தியையும் கான்ஸ்டாண்டி நோபிளையும் இழந்துவிடக்கூடும். ஆகையால், ஜெர்மனியானது வேறு வழியில் துருக்கிக்கு உதவி செய்ய முயன்றது. அந்த வேறு வழியாவது, ஸெர்வியாவின்மேல் படை யெடுத்துப் போய் அதைத் தோற்கடித்து பல்கேரியாவின்ஸம்மதத்தின் மேல் பல்கேரியாநாட்டின் வழியாக துருக்கிக்குமருந்து குண்டுகளை அனுப்புவதே. ஆகவே நேச அரசுகளும் ஜெர்மெனியும் பல்கேரியாவைப் பக்வப்படுத்தி தம்கக்ஷியில் சேர்த்துக் கொள்வது அவச்யமாயிற்று.

பல்கேரியா, மாஸிடோனியா தனக்குகிடைக்காத விஷயத்தில் அத்ருப்தியுடனிருந்து வந்ததென்று 'பால்கன் தீபகல்பம்' என்னும் வ்யாஸத்தில் சொல்லியிருக்கிறோம்.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்தவுடன் நேச அரசுகள் பல்கேரியா இப்படி மனஸ்தாபத்துடன் இருப்பது பின்னுக்குக் கெடுதலாய் முடியுமென்று எண்ணி, பால்கன் நாடுகளுக்குள் ஒற்றுமை உண்டாக்குவதைப்பற்றி முயற்சிசெய்தன. பால்கன் நாடுகளில் ஒவ்வொன்றினுடைய தேசீய விருப்பங்களை த்ருப்தி செய்விக்கவும், அதற்காக ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுக்குப் பரஸ்பரம் ப்ரதேசங்களைக்கொடுத்து, அதனால் அவைகளுக்குள் உள்ள மனஸ்தாபங்களை ஒழிக்கவும், முயற்சிசெய்துவந்தன.

மேலே சொன்னபடி பல்கேரியா மாஸிடோனியா வேண்டுமென்றதால், அந்த ப்ரதேசத்தை ஸெர்வியாவினிடமிருந்து வாங்கிக்கொடுக்க நேச அரசுகள் முயன்றன. அப்படித் தனது ப்ரதேசத்தில் ஒருபாகத்தை இழப்பதற்காக, யுத்தம் முடிந்தபிறகு, ஆஸ்ட்ரியா ஹங்கேரியில் ஒருபாகத்தை ஸெர்வியாவுக்குக் கொடுப்பதாகவும் நேச அரசுகள் ஸெர்வியாவுக்குத் தெரிவித்தன. ஸெர்விய கவர்ன்மெண்டார் தங்கள் வசமிருக்கும் மாஸிடோனியாவின் பாகத்தை பல்கேரியாவுக்கு விட இசைந்தாலும், ஸெர்வியாவின் ராணுவ அதிகாரிகள் அதற்கு ஸம்மதிக்கவில்லையாம். ஆனால், கடைசியில் ஸெர்வியாவானது நேச அரசுகளின் விருப்பத்துக்கு இணங்கி மாஸிடோனியாவின் தன் பாகத்தைக் கொடுத்துவிட ஸம்மதித்துவிட்டது. பல்கேரியா தனக்கு வேண்டுமென்ற மாஸிடோனியாவில் ஒருபாகம் க்ரீஸின் வசத்திலிருக்கிறது. பல்கேரியாவை த்ருப்திப் படுத்துவதற்காக நேச அரசுகள் க்ரீஸினிடம் அதன்வசமுள்ள மாஸிடோனியாவின் பாகத்தை பல்கேரியாவுக்கு விட்டுவிட முடியுமா என்று கேட்டன. க்ரீஸும், யுத்தம் நேச அரசுகளுக்கு ஸாதகமாய் முடிந்தால், அதற்கு வேறு தேசங்களில் இடங்கள் கிடைக்குமென்று நம்பி, தன்வசத்திலிருக்கும் மாஸிடோனியாவின் பாகத்தை பல்கேரியாவுக்குக் கொடுக்க ஸம்மதப்படுவதாக க்ரீக் கவர்ன்மெண்டார் தெரிவித்தார்கள்.

ஆனால் பல்கேரியா கவர்ன்மெண்ட் நேச அரசுகளின் பற்பல ப்ரேரணைகளுக்கு தக்கபடி பதில் சொல்லாமல், இன்னும் ப்ரேரணைகளை விவரமாய்த் தெரிவிக்க வேண்டுமென்று சொல்



லித் தாமஸப்படுத்தி வந்தது. இதோடு, அது ஜெர்மனியோடு பேச்சுகள் தொடங்கிப் பேசிக்கொண்டு வந்தது.

பல்கேரியா ஒருகக்ஷியிலும் சேராமலிருக்குமானால், மாஸிடோனியாவைக் கொடுப்பதோடு துருக்கியினிடமிருந்து சில ப்ரதேசங்களை வாங்கிக் கொடுக்க ப்ரயத்தனப்படுவதாகவும், பல்கேரியா ஜெர்மனி பக்கமாக யுத்தத்தில் சேர்ந்துகொண்டால், ஸெர்வியாவின் வேறு சில பாகங்களையும் பல்கேரியாவுக்குக் கொடுப்பதாகவும் ஜெர்மனி வாக்களித்ததாம்.

பல்கேரியா ஜெர்மனியின் வார்த்தைகளில் நம்பிக்கைகொண்டுவிட்டது. இந்த வேலைகளுக்காக அது, ஸெர்வியாவின் ஆதீனத்திலுள்ள மாஸிடோனியாவைப் பெற்றுக்கொள்ளவும் ஜெர்மனியோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறதென்று தெரிகிறது. அதன்படி, பல்கேரியா தனது ரெயில்வேக்களை ஜெர்மனி அதன் இஷ்டப்படி உபயோகித்துக்கொள்ள இடம் கொடுக்கிறது. தவிர பல்கேரியா ஸெர்வியாவையும் தாக்கும்.

பல்கேரிய ப்ரதம மந்த்ரியானவர் துருக்கியினிடமும் பேச்சுகள்தொடங்கி, அதோடும் ஒரு உடன் படிக்கை செய்திருக்கிறாராம். அந்த உடன் படிக்கையின்படி துருக்கி சில ப்ரதேசங்களையும் ரெயில்வேயையும் பல்கேரியாவுக்குக் கொடுத்துவிடுமாம். பல்கேரியாவானது துருக்கி விஷயத்தில் ஒருகக்ஷியிலும் சேராத நேசதேசமாக இருக்கவேண்டுமாம். அதோடு, பல்கேரியா ஸெர்வியாவின் மேல் படையெடுத்துப் போகவேண்டுமாம்.

ஸெர்வியாவானது பல்கேரியா கேட்ட ப்ரதேசங்களைக் கொடுக்க ஸம்மதப்படுவதாக நேச அரசகள் பல்கேரியாவுக்குத் தெரிவித்தபோதுதான், பல்கேரியா துருக்கியோடு மேற் சொன்னபடி உடன்படிக்கை செய்துகொண்டது. அப்படி எதிரியினுடன் உடன்படிக்கை செய்வானேனென்று கேட்டதற்கு, பல்கேரியா கவர்ன்மெண்டார் பதில்சொல்லாமல் ஸைன்யங்களை சேகரம் செய்ய உத்தரவிட்டார்கள். அதன் மேல் க்ரீஸும் அதன் சேனைகளை சேகரம் செய்ய உத்தர விட்டது.

இதற்குப் பிறகு, பல்கேரியாவின் செய்கைகள் அது ஜெர்மனியின் பக்கம் சேருகிற மாதிரியாக மாறின. அதன்மேல் ரஷ்யா கவர்ன்மெண்டார் இந்த வர்ஷம் அக்டோபர் மாஸம் 4-ந்தேதி பல்கேரியாவுக்கு ஒரு கடைசிக் சடிதம் அனுப்பினார்கள். அதன் ஸாராம்சம் பின் வருமாறு. பல்கேரியாவில் நடக்கும் கார்யங்களெல்லாம்,பல்கேரிய கவர்ன்மெண்டார் ஜெர்மனியோடு சேர்ந்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறார்களென்பதைக் காட்டுகின்றனவா யிருக்கின்றன. பல்கேரியாவின் யுத்தமந்த்ரியின் ஆபீஸிலும், ஸைன்யங்களிலும் ஜெர்மன் உத்யோகஸ்தர்களும், ஆஸ்ட்ரிய உத்யோகஸ்தர்களும் இருந்து வருகிறார்கள். பல்கேரிய ஸைன்யங்கள் ஸெர்வியா ஓரமாயுள்ள பல்கேரிய ப்ரதேசத்தில் சேகரம் செய்துவைக்கப்பட் டிருக்கின்றன. பல்கேரிய கவர்ன்மெண்டார் எதிரிகளினிடமிருந்து ஏராளமான பண உதவி அடைந்திருக்கிறார்கள். இவைகளைப் பார்த்தால், பல்கேரியாவின் ராணுவ ப்ரயத்தனங்களின் நோக்கமின்னதென்பது தெளிவாகிறது. நேச அரசுகள், பல்கேரியாவின் லக்ஷ்யங்கள் நிறைவேற வேண்டுமென்று விரும்பியிருக்கிறார்கள். அப்படியிருக்க, பல்கேரியா ஸெர்வியாவுக்கு விரோதமாய் ஏதாவது செய்தால், அந்தச் செய்கையானது தங்களை நோக்கிச் செய்யப்பட்டதென்று அவைகள் எண்ணுமென்று பலதடவை, அந்த அரசுகள் பல்கேரியாவின் மந்த்ரிக்குத் தெரிவித்திருக்கின்றன. ஆகையால், பல்கேரியாவானது இந்தக் கடிதம் கிடைத்த 24-மணி நேரத்துக்குள், ஆஸ்ட்ரியா-ஜெர்மனி ஆகிய இவைகளுக்கு விரோதமாகயுத்தம் தொடங்கி, எதிரிகளின் ராணுவ உத்யோ

கஸ்தர்களை அந்த நாடுகளிலிருந்து வெளியே அனுப்பிவிடாவிட்டால், ரஷ்யாவின் தூதர் பல்கேரியாவிலிருந்து புறப்பட்டுவிடுவார்.

இந்தக் கடிதத்துக்கு பல்கேரியா த்ருப்திகரமான பதில் சொல்லவில்லை. அதன்மேல் ரஷ்யா பல்கேரியாவின்மேல் யுத்தம் தொடங்கிற்று.

பல்கேரியாவானது ஸெர்வியாவுக்கு ஒருகடிதம் எழுதி, அது மாஸிடோனியாவைக் கொடுத்துவிடவேண்டுமென்றும், இல்லாவிட்டால் அதன்மேல் யுத்தம் செய்வதாகவும் தெரிவித்து, பிறகு அதன்மேல் படையெடுத்துப் போயிற்று. அதன்மேல், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஸெர்வியாவை எதிரிகள் அழிக்கும்படி விடுவது கூடாதென்று எண்ணி, அவர்களும், ப்ரான்ஸ், இட்டலி, ஸெர்வியா ஆகிய இந்த தேசங்களும் பல்கேரியாவின்மேல் யுத்தம் செய்வதாகத் தெரிவித்தன.

## க்ரீஸ்

க்ரீஸானது வெகு காலம் வரையில் யுத்தத்தின் போக்கை கவனித்து வந்துகொண்டிருந்தது. க்ரீஸில் மா. வெனிஸிலாஸ் ப்ரதமமந்த்ரியாயிருந்தபோது, க்ரீக் கவர்ன்மெண்ட் ஸெர்வியாவுக்கும் நேச அரசுகளுக்கும் ஸாதகமாக இருந்துவந்தது. க்ரீஸுக்கும் ஸெர்வியாவுக்கும் ஏற்கனவே ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி, பால்கன் ப்ரதேசத்தில் ஏதாவது யுத்தமுண்டாகி, அதில் ஸெர்வியா சேர நேரிட்டால், க்ரீஸ் அதற்கு உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறது. வெனிஸிலாஸின் கக்ஷியார் ஸெர்வியாவுக்கு உதவிசெய்யவேண்டுமென்று அபிப்ராயபபட்டிருக்கிறார்களென்று தோன்றுகிறது. ஆனால், க்ரீஸின் அரசரும் அவரைச் சேர்ந்த ப்ரமுகர்களும் ஜெர்மனிக்கு ஸாதகமாயிருக்கிறார்களாம். அவர்கள் மேற்சொன்ன உடன்படிக்கையின்படி க்ரீஸ் ஸெர்வியாவுக்கு உதவிசெய்ய வேண்டியதில்லையென்கிறார்கள். ஏனென்றால், இப்போது ஸெர்வியாவுக்கும் பல்கேரியாவுக்கும் நடக்கும் யுத்தமானது பால்கன் யுத்தமாயிராமல், பொது ஐரோப்பிய யுத்தத்தில் புதிதாகத் தோன்றிய ஒரு அம்சமாகுமென்று வாதிக்கிறார்கள். க்ரீஸின் அரசரும் மா. வெனிஸிலாஸுடம் அபிப்ராய பேதப்பட்டதால் மா. வெனிஸிலாஸ் தமது ப்ரதமமந்த்ரி வேலையை ராஜிநாமாக் கொடுத்துவிட்டார். அதன்மேல் க்ரீஸின் கவர்ன்மெண்டாரும் மேற்சொன்னபடி க்ரீஸுக்கும் ஸெர்வியாவுக்குமுள்ள உடன்படிக்கைப்படி க்ரீஸ் ஸெர்வியாவுக்கு உதவிசெய்யக் கட்டுப்படவில்லையென்று தெரிவித்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் தங்கள் தேசத்தின் வழியாக நேசஅரசுகள் தங்கள் ஸைன்யங்களை ஸெர்வியாவின் உதவிக்கு அனுப்புவதற்கு இடங் கொடுத்திருக்கிறார்கள்.

ருமேனியா நாளது வரையில் எந்தக் கக்ஷியிலும் சேராமல் நடுநிலைமையிலிருந்து வருகிறது.

## SIR PHEROZESHAH MEHTA.
## ஸர் பிரோஸ்ஷா மேட்டா.

உயர்ந்த தேசாபிமானியும், பொது ஜன விஷயங்களில் அதிக ஊக்கமும் விடாமுயற்சியும் உடையவரும், இந்தியாவின் அபிவ்ருத்திக்காக ரொம்ப உழைத்து வந்தவருமான பம்பாயைச் சேர்ந்த ஸர் பிரோஸ்ஷா மேட்டா என்பவர் நவம்பர்மீ 5-ந்தேதியன்று காலகதியடைந்தாரென்று கேட்டு வருத்தப்படுகிறோம். அவர் ஒரு காங்க்ரெஸ் அபிமானி. பம்பாய் முனிஸிபாலிடியில் வெகுகாலம் உழைத்து அதை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

ஸர் பிரோஸ்ஷா மேட்டா 1845-ம் வர்ஷம் ஆகஸ்ட் மாஸம் 4 தேதியன்று பம்பாயில் ஜனனமானார். அவர் பார்ஸி ஜாதியைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனார் நடுத்தரமான ஸொத்துள்ள ஒரு வ்யாபாரி. தகப்பனருக்கு கல்வியபிமானம் அதிகமுண்டு. மேலும் வ்யாபாரத்தில் விசேஷ அனுபவ அறிவுண்டு. காலக்ரமத்தில் பிரோஸ்ஷா மேட்டா பள்ளிக்கூடத்தில் சேர்ந்து 1861-ம் வர்ஷத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினர். பிறகு பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் சேர்ந்து வாசித்து 1864-ம் வர்ஷத்தில் பி. ஏ. பரீக்ஷையில் தேறினர். அதற்குப் பிறகு ஆறுமாஸங்கழித்து எம். ஏ. பரீக்ஷையில் தேறினர். அவர் இந்தப் பரீக்ஷையில் தேறினபோது வயது 19-தாயிற்று. அவர்தான் பார்ஸிகளுக்குள் முதல் எம். ஏ. அவர் கலாசாலையில் வாசித்துவந்தபோது, கலாசாலையின் ப்ரின்ஸிபலாகிய ஸர் அலெக்ஸாண்டர் க்ராண்ட் என்னும் உயர்ந்த ஆசிரியரிடத்தில் பயிற்சிபெற்று, அதிக தேர்ச்சியடைந்தார். ஸர் அலெக்ஸாண்டர் க்ராண்ட் சீக்ரத்தில் அவர் திறமையுள்ளவரென்பதை யறிந்து அவருக்கு பலவிதங்களில் உதவிசெய்து வந்தார். கலாசாலைப் படிப்பு முடிந்ததும், அந்த ப்ரின்ஸிபல் பிரோஸ்ஷாவை இங்க்லண்டுக்கு அனுப்புவது நல்லதென்று அவருடைய தகப்பனரிடம் வற்புறுத்தினர். தகப்பனர் முதலில் ஸம்மதிக்காவிட்டாலும், கடைசியில் அவருடைய யோசனையை ஏற்றுக்கொண்டு, பிரோஸ்ஷாவை பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிப்பதற்காக இங்க்லண்டுக்கு அனுப்பினர். மேட்டா இங்க்லண்டில் மூன்று வர்ஷகாலம் சட்டப்பரீக்ஷைக்குப் படித்துக் காலக்ரமத்தில் பாரிஸ்டராக ஆனர். இங்க்லண்டிலிருந்தபோது அவர் தம்மைப்போலவே கல்வி யபிவ்ருத்திக்காக இங்க்லண்டுக்கு வந்திருந்த டபள்யு. ஸி. பானர்ஜி, பத்ருடீன் டையாப்ஜி, மனமோஹன் கோஸ் என்னும் இந்தியர்களுடன் ஸ்நேகிதம் கொண்டார். இவர்கள் பிற்காலத்தில் மேட்டாவைப் போலவே தேச க்ஷேமத்துக்காக ரொம்ப உழைத்து வந்து கீயாதி பெற்றார்கள். மேட்டா இங்க்லண்டிலிருந்தபோது, மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி இங்க்லண்டில்வாஸம் செய்துகொண்டிருந்தார். அவர் அதற்குமுன் 20-வர்ஷகாலமாக தேச நன்மைக்காக உழைத்து வந்திருந்தவர். அவர் முக்யமாய் படிப்புக்காக இங்க்லண்டுக்கு வரும் இந்தியர்களுடைய க்ஷேமத்தில் ரொம்ப கவனம் செலுத்திவந்தார். அந்த மாணவர்களுக்கு அவ்வப்போது தக்க புத்திமதிகள் சொல்லியும், முக்யமான விஷயங்களில் யோசனை சொல்லியும் அவர்களுக்கு உதவி செய்து வந்தார். இன்னும் அவர், இங்க்லண்டுக்கு வரும் சிறுவர்களை பொதுஜன வேலைக்குப் பயிற்சி செய்விப்பதற்காக மிஸ்டர் மேட்டா, மிஸ்டர் பானர்ஜி ஆகிய இருவர்களுடைய உதவியைக்கொண்டு ஒரு ஸங்கம் ஸ்தாபித்து அதில் சீமைக்கு வாசிக்க வந்திருந்த இந்திய வாலிபர்களைச் சேரும்படி தூண்டி வந்தார். இந்த ஸங்கந்தான் தற்போது ஈஸ்ட் இண்டியா அஸோஸியேஷன் என்று வழங்கிவருகிறது. இந்த ஸங்கம் ஸ்தாபித்ததற்கு இன்னொரு நோக்கமும் உண்டு. அதாவது இங்க்லீஷ் ஜனங்களுக்கு இந்திய விஷயங்களில் அதிக ஊக்கம் ஏற்படும்படி செய்வதே. இந்த ஸங்கத்தில் வாலிபர்கள் இந்தியா ஸம்பந்தமாக பல வ்யாஸங்களை எழுதி வாசித்து, தங்களுடைய அறிவை அபிவ்ருத்தி செய்துவந்தார்கள். மேட்டா, இந்த ஸங்கத்தில் "பம்பாய் ராஜதானியின் கல்வி ஏற்பாடு" என்று ஒரு வ்யாஸம் வாசித்தார். அதில் அவர் மூலாதாரக் கல்வியைவிட உயர்தரக்கல்வி விஷயத்தில்தான் கவர்ன்மெண்டார் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று வாதித்தார். அந்த வ்யாஸம் ரொம்ப நேர்த்தியாயிருந்ததைக் கொண்டு, அவ்வளவு சிறு வயதிலேயே அவர் எவ்வளவு அனுபவசாலியாயிருந்தாரென்று ஊகிக்கலாம்.

இங்க்லண்டிலிருந்து திரும்பி வந்ததும், ஸர் பிரோஸ்ஷா மேட்டா பாரிஸ்டர் உத்யோகத்தில் அமர்ந்தார். அவர் க்ரிமினல் வ்யவஹாரத்தில் ரொம்ப பேர்போனவர். அவர் விசேஷமாய் பம்பாய்ப் பட்டணத்தில் வேலை பார்க்காமல் வெளியூர் கேஸ்களையே அதிகமாகக் கவனித்துவந்

தார். அவருக்கு வரும்படி ஏராளமாய்க்கிடைத்து வந்தது. அவர் அநேக ஸமயங்களில் பம்பாய்ப் பக்கத்திலுள்ள அநேக ஸ்வதேச ராஜ்யங்களுக்கு வக்கீலாக இருந்து வந்தார். அவர் வக்கீல் வேலையில் அமர்ந்த சிலகாலத்துக்கெல்லாம் கவர்ன்மெண்டார் அவருக்கு உயர்தர ஸப் ஜட்ஜ் வேலை கொடுப்பதாகவும், ஸமயம் நேர்ந்தவுடன் ஹைக்கோர்ட் ஜட்ஜ்வேலை செய்துகொடுப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் மிஸ்டர்மேட்டாவோ, தேச நன்மைக்குழைப்பதே தமக்கு விருப்பமென்றும், ஆகையால் ஹைகோர்ட் ஜட்ஜு வேலைக்கு ஆசையில்லையென்றும் சொல்லி மறுத்துவிட்டார். தேச க்ஷேமத்துக்காக உழைக்க வேண்டுமென்பதை உத்தேசித்துத்தான் அவர் பம்பாய் ஹைக்கோர்ட்டில் ஒரிஜனல் ஸைட் கேஸுகளில் கவனம் செலுத்தாமல் வெளியூர் கேஸுகளையே கவனித்து வந்தார். இதனால் அவருக்குப் பொதுவிஷயங்களை கவனிக்க அதிக ஸாவகாசம் கிடைத்தது. அந்த ஸாவகாசம் போதாதென்று எண்ணி அவர் சில காலத்துக்கெல்லாம் வெளியூர் வேலையையும் வரவரக்குறைத்துவிட்டார்.

ஆதிமுதல் அவர் கவனம் செலுத்திவந்த பொது ஜன விஷயம் பம்பாய் முனிஸிபாலிடியே. அவர் தமது 27-வது வயஸில் பம்பாய் முனிஸிபாலிடியில் ஒரு மெம்பராகச்சேர்ந்தார். அது முதல் அவர் இந்தமாஸம் இறந்துபோனது வரையில் அந்த முனிஸிபாலிட்டியின் விஷயங்களில் இடைவிடாது கவனம் செலுத்தி வந்தார். பம்பாய் முனிஸிபாலிடி தற்போது உயர்ந்த நிலைமையை அடைந்திருப்பதற்கு ஸர் பிரோஸ்ஷா மேட்டாவே காரணமென்று சொல்லாம். பம்பாய் முனிஸிபாலிடியின் அமைப்பில் சில முக்ய மாறுபாடுகள் செய்வதற்கு அவர் காரணமாக இருந்தார். அவர் 4 தடவை கார்ப்பரேஷனுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். மூன்றும் தடவை ப்ரெஸிடெண்டாக இருநதபோது அவர் அப்போது ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் ஆக இருந்த நமது அரசரை பம்பாய்க்கு வரவேற்றார். அவர் பம்பாய் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் சென்ற 22 வர்ஷகாலமாக பம்பாய் கார்ப்பரேஷனுடைய ப்ரதிநிதியாக இருந்துவந்தார். சட்டஸபையில் பம்பாய் கார்ப்பரேஷனுடைய ப்ரதிநிதியாகத் தெரிந்தெடுக்கப்படுவதற்குமுன், அவரை பம்பாய் கவர்ன்மெண்டார் சட்டஸபையில் ஒரு மெம்பராக நியமித்தார்கள். ஆக பொத்தத்தில் அவர் 25-வர்ஷகாலம் சட்டஸபை மெம்பராக இருந்தார். இதனால் பம்பாய் வாஸிகள் அவரிடத்தில் எவ்வளவு மதிப்புவைத்திருந்தார்களென்பது தெரியவரும்.

ஸர் பிரோஸ்ஷா மேட்டா பம்பாய் பட்டணத்தின் பொது விஷயங்களை மட்டும் கவனித்துவரவில்லை. இந்தியாவின் பொது நன்மையைக் குறித்தும் பாடுபட்டு வந்தார். பம்பாயில் பொது ஜனங்களுடைய அபிப்ராயத்தை தைர்யமாய் எடுத்துச் சொல்ல ஒரு ஸபையுமில்லாதிருந்த குறையை நீக்கவேண்டி, காலஞ்சென்ற மிஸ்டர் டிலாங், பத்ருடீன் டையாப்ஜி, இவர்களுடன் சேர்ந்து பம்பாய் ப்ரெஸிடென்ஸி ஸங்கமென்று ஒரு ஸங்கம் ஸ்தாபித்தார்.

இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் ஸபையை ஸ்தாபிப்பதற்கு இவர் மற்றவர்களுடன், அதிக முயற்சி யெடுத்து உழைத்தார். இவர் காங்க்ரெஸ் தலைவர்களில் ஒருவராவர். அல்லது இவரையே காங்க்ரெஸின் தலைவரென்றும் சொல்லலாம். காங்க்ரெஸ் விஷயங்களில் அவருடைய பேச்சுத்தான் வெகுவாய் ஏறும். மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியுங்கூட ஸர் பிரோஸ்ஷா மேட்டாவின் பேச்சின்படியே நடப்பாராம். காங்க்ரெஸே அவர், அவரே காங்க்ரெஸ் என்றும் சிலர் சொல்லுவதுண்டு. அவர் 1890-ம் வர்ஷம நடந்த கல்கத்தாகாங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாகஇருந்தார். அப்போது அவர் செய்த ப்ரஸங்கம் ரொம்ப நேர்த்தியாயிருந்தது.



1894-ம் வர்ஷத்தில் அவர் வைஸ்ராயின் சட்ட ஸபையில் ஒரு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அங்கே அவர் மூன்று வர்ஷகாலம் மெம்பராக இருந்தார். அவர் கவர்ன்மெண்ட் மெம்பர்களுக்கு பயப்படுகிறவரல்ல. இவருக்கு முன்னாலிருந்த சில மெம்பர்களைப்போல் அதிகாரிகள் சொல்லுவதற்கெல்லாம் தலையாட்டிக்கொண்டிராமல், தமக்கு எது யுக்தமென்று தோன்றுமோ, அதை அவர்களுக்கு பயப்படாமல் எடுத்துச்சொல்லிவந்தார். அவர் வாதாடுவதில் ரொம்ப ஸாமர்த்யசாலி. விஷயங்களைத் தெளிவாய் எடுத்துரைப்பதில் ரொம்ப கெட்டிக்காரர். 1895-96-ம் வர்ஷத்திய வரவு செலவு கணக்கைப்பற்றிய வாதத்தில் அவர் செய்த ப்ரஸங்கம் மிக நேர்த்தியானது. அவர் சட்ட ஸபையில் திறமையுடன் பேசியதற்காக கல்கத்தா வாஸிகளும் பம்பாய் வாஸிகளும் அவருக்கு ஒரு உபசரிப்புப் பத்ரம் வாசித்துக் கொடுத்தார்கள். மூன்று வர்ஷகாலம் மெம்பராக இருந்தபிறகு, தம்மைவிட வயதில் சிறியவர்களும் சட்ட ஸபைக்குப்போவது ஸுலபமாவதற்காக, தாம் இனி சட்ட ஸபைக்கு அபேக்ஷகராக இருப்பதில்லையென்று சொல்லி மறு எலெக்ஷனுக்கு நிற்காமலிருந்துவிட்டார்.

மேற்சொன்ன வேலைகளில் அவர் கவனம் செலுத்திவந்ததோடு, அவர் பம்பாய் ஸர்வகலாசாலையின் ஸினேட்டில் ஒரு மெம்பராக இருந்து கல்வி ஸம்பந்தமாக ரொம்ப பாடுபட்டு வந்தார். கவர்ன்மெண்டார் அவருக்கு 1894-ம் வர்ஷத்தில் ஸி. ஐ. இ. பட்டமும், 1904-ம் வர்ஷத்தில் கே. ஸி. ஐ. இ. பட்டமும் கொடுத்தார்கள்.

ஸர் பிரோஸ்ஷா மேட்டா ரொம்ப மனஉறுதியும் தைர்யமும் உடையவர். உத்யோகஸ்தர்கள் ஏதாவது தவறுகள் செய்ததாக அவருக்குத் தோன்றினால் அதை எடுத்துக்காட்ட பயப்படமாட்டார். 1904-ம் வர்ஷத்தில் பம்பாய் சட்ட ஸபையில் அவர் ஒரு மெம்பராக இருந்தபோது, பம்பாய் கவர்ன்மெண்டார் குடிகளுக்கு பாதகமான ஒரு நிலத்தீர்வை மசோதாவை சட்டமாக்கக் கொண்டுவந்தார்கள், உத்யோகஸ்தரல்லாத மெம்பர்களெல்லாம் அந்த மசோதாவை ஆக்ஷேபித்து, அதைப்பற்றிப் பின்னால் கவனித்துக் கொள்ளலாமென்று சொன்னார்கள். அதிகாரிகள் அவர்கள் சொன்னதைக் கேட்கவில்லை. அதன்மேல் ஸர்பிரோஸ்ஷா மேட்டா மசோதாவைத் தாம் ஆக்ஷேபிப்பதாகவும், ஆகையால் அந்த மசோதாவைப்பற்றிப் பின்னால் கவனித்துக் கொள்ளலாமென்றும் வெகுதூரம் சொல்லியும் கவர்ன்மெண்டார் கேட்காததால், தாம் அந்த ஸபையில் இருப்பதுகூட சரியல்லவென்று சொல்லி, மிஸ்டர் கோகலேயையும் இன்னும் சில மெம்பர்களையும் கூட்டிக்கொண்டு ஸபையை விட்டு வெளியில் போய்விட்டார்.

இன்னொரு ஸமயத்தில் பம்பாய் சட்ட ஸபையில் பம்பாய் நிலத்தீர்வை நிர்வாகத்தைப்பற்றி விவாதம் வந்தபோது ஆனரபிள் மிஸ்டர் கோகுலதாஸ் பரேக் என்பவர் அதைப்பற்றி ரொம்பவும் கண்டித்துப் பேசினார். அந்த ஸமயம் அவர் பேசியதால் மனக்கொதிப்படைந்த ஒரு உத்யோகஸ்தர், குடிகள் வர வர அதிகாரத்துக்கு அடங்கி நடக்காமல் செருக்குடன் இருந்து வருகிறார்களென்றும், அதற்காரணம், அவர்களுடைய ஸௌகர்யத்தை கவனித்துவரும் சட்ட ஸபை மெம்பர்களும் மற்றவர்களும் குடிகளுக்கு அயோக்யர்களின் நடத்தையைக் கற்பித்து வருவதேயென்றும் சொன்னார், அவர் பேசி முடிந்த பிறகு, ஸர்பிரோஸ்ஷா மேட்டா பேச வேண்டிய முறைவந்தது. அப்போது அவர்நிலத்தீர்வைபலவர்ஷங்களாக எப்படிவஸூல் செய்யப்பட்டு வந்ததென்று சரித்ர பூர்வமாகச் சொல்லி, இன்னின்ன ஸந்தர்ப்பங்களில் ரெவின்யூ அதிகாரிகள் குடிகளை நிர்ப்பந்தப்படுத்தி வந்தார்களென்றும், குடிகளைக் காப்பாற்றுவதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் பம்பாய் கவர்ன்மெண்டின்

நிர்வாகத்தில் தலையிடவேண்டியிருந்ததென்றும், சொல்லிப் பிறகு உரத்த குரலுடன் "குடிகளிடம் அயோக்யர்களின் நடத்தையை பழக்குவதைப் பற்றியோ என்றால், அந்தக் குற்றத்தை அதை முதலில் சொன்னவர்பேரிலேயே சாட்டுகிறேன்." என்று ஆத்ரத்துடன் சொன்னார்.

ஒரு ஸம்யம் பம்பாயில் நடந்த காங்க்ரஸில் விஷய ஆலோசனைக் கமிட்டி கூடியிருந்தபோது ஒரு பஞ்சாப் கனவான், வர்ஷந்தோறும் மேட்டதான் காங்க்ரெஸுக்கு அதன் அமைப்பைப் பற்றி ரூல்கள் ஏற்படுத்த வேண்டுமென்பதைத் தடுத்துவந்திருக்கிறார் என்று சொன்னார். அதற்கு ஸர்பிரோஸ்ஷா மேட்டா, "அவ்வப்போது என்னை யேன் கேட்டிருக்கக்கூடா" தென்று பதில் சொன்னார். அதற்கு பஞ்சாப் கனவான், "உம்மைப் பார்த்தாலே மலைப்பாயிருக்கிறது. உம்மைக் கேட்பதெங்கே" யென்றார். அதற்கு ஸர்பிரோஸ்ஷா "ஆளைப்பார்த்தா பயந்தீர்? அதற்கு நானென்ன செய்யட்டு" மென்றார்.

## WATER HAYACINTH.

## வாடர் ஹயஸிந்த் என்னும் ஓர் பூண்டு.

சென்ற ஆடிமீ த்து ஜனாபிமானியில் 604-ம் பக்கத்தில் வாடர் ஹயஸிந்த் என்னும் பூண்டானது ப்ரெஞ்ச் இண்டோ - சைனா என்னும் ப்ரதேசத்திலுள்ள நதிகளில் ஏராளமாய் முளைத்து நதியில் போக்குவரத்தைத் தடை செய்வதாக எழுதியிருக்கிறோம். இந்தப்பூண்டானது நமது ராஜதானியிலும் சில விடங்களில் முளைத்து ஜலாதாரங்களைக் கெடுத்துவருவதாகத் தெரிகிறது. அவைகள் அதிகமாகப் பரவிவிட்டால் பிறகு அவைகளைத் தொலைப்பது கஷ்டமாகையால், முன்னாலேயே ஜாக்ரதை யெடுத்துக் கொள்ளவேண்டியது அவச்யமாகும். இதைப் பற்றி விவஸாய டிபார்ட்மெண்டார் ஒரு துண்டுப்பத்ரிகை ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஹயஸிந்த் பூண்டு எப்படியிருக்கு மென்பதை யறியவேண்டுவோர் விவஸாய டிபார்ட்மெண்டார் ப்ரசுரித்துள்ள மேற்சொன்ன துண்டுப் பத்ரிகையை வரவழைத்து, அதில் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ள வர்ணப்படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தப் பூண்டுக்கு இங்க்லீஷ் பாஷையில் "வாடர் ஹயஸிந்து" அல்லது "லைலெக் டெவில்" என்று பெயர். தென் அமெரிக்காவின் உஷ்ணபாகந்தான் இதன் ஸ்வதேசம். அங்கிருந்து அமெரிக்கா ஐக்ய நாடுகளுக்கும் ஆஸ்ட்ரேலியாவுக்கும் இது கொண்டுபோகப்பட்டது. தற்காலம் இதை இந்த ராஜதானியிலும் கூட பலவிடங்களில் காணலாம். இதன் வெகு அழகிய நீல புஷ்பங்களினாலும், தளசப்புள்ள தடித்த இலைகளினாலும் எவரும் இப்பூண்டை எளிதில் அறியலாம். மனதைக் கவர்ந்துகொள்ளு மவ்வளவு அழகைப்பெற்றதாயினும் இதை மனிதர்களுக்கு விரோதிகளில் ஒன்றாகவே எண்ண வேண்டும். கிணறுகளிலும், குட்டைகளிலும், ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் மற்றும் ஜலமுள்ள எல்லாவிடங்களிலும் இது வெகு விரைவாய் வளருகிறது. இலைக்காம்புகளில் ஓர் பாகத்தில் காற்று நிறைந்திருப்பதால் அப்பாகம் பருமனாய்க் காணப்படுகிறது; இதனால் இலைகளும் மிதக்கும். செடியும் ஜலம் அதிகமில்லாதிருந்தாலும் அல்லது ஆழமாகவிருந்தாலும் வாழ்ந்து வளரும். இச்செடியானது விதைகளிலிருந்தும், பக்கக் கன்றுகளிலிருந்தும் வ்ருத்தியாகிறது. விதையும் பக்கக்கன்றுகளும் லேசாயிருப்பதனால் இவை காற்றில் அடித்துக்கொண்டு போகப்படுகின்றன. ஆனால் இது வெகு விரைவில் பரவுவது பக்கத்திலுண்டாகும் அநேக புதிய சிறு செடிகள் கிளம்புகிற சிறு கிளைகளினால்தான். அபரிமிதமான இலைகளினாலும், நெருங்கிய வளர்ச்சியினாலும், வேர்களுக்குள்ள ஜலத்தை க்ரஹிக்கும் சக்தியினாலும் இது நீரோட்டத்தைத் தடுப்பதோடு சிறு குளங்களை முழுதும் தூர்த்து



விடும். அமெரிக்காவில் சில பாகங்களில் சில நதிகளில் இது பரவியிருப்பதனால் சப்பல்களின் போக்குவரத்து தடுக்கப்பட்டதாம். பர்மாவின் சில பாகங்களில் வெகு நெருக்கமாய் வளர்ந்திருப்பதனால் இதைப் பெருந்துண்டுகளாக வெட்டி சிறு புகைப்படகுகளினால் இழுத்துக்கொண்டு போய் ஸமுத்ரத்தில் போடுகிறார்கள்.

அமெரிக்காவின் உஷ்ணபாகத்தில் வெகு விரைவாய் இப்பூண்டு பரவியதினால் ஆறுகளிலிருந்தும் ஓடைகளிலிருந்தும் இதைத் தொலைப்பதற்கு அநேக ஆயிரம் பவுன்கள் செலவு செய்ய வேண்டியதாயிற்று. நம் ராஜ்யத்தில் இது பரவினால் ஜனங்களுக்கு ஸுகத்துக்குக் காரணமாயும், பயிர்களுக்குப் பாய்ச்சலுக்கு வேண்டியதாயுமிருக்கும் ஜலத்தைக் குறைத்துவிடும். இந்த ராஜதானியின் க்ஷேம லாபங்களும், ஸுகமும் ஜல ஸமர்த்தியைப் பொருத்தவை. செங்கல்பட்டில் இப்பூண்டு அதிகமாய் நெருங்கிவளர்வதனால் கொசுக்கள் தங்கி வ்ருத்தியடைவதற்கு இது மிக வஸதியான விடமாகிறதென்று தெரிய வருகிறது. நமது லாபம், ஸுகாதாரம் இவற்றின்பொருட்டு எல்லோரும் ஒருங்குகூடி இதை ஒழிக்கவேண்டும்.

இந்தப் பூண்டானது சென்னையில் அடையாற்றுக்கருகிலும், தென்னாற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களிலும், முக்யமாய் சிதம்பரம், மாயவரத்தின் அருகாமையிலுள்ள வாய்க்கால்களிலும், செங்கற்பட்டில் அகழ்களிலும், செங்கற்பட்டு, காஞ்சீபுரம், வந்தவாசிக்கு மிடையிலும் காணப்படுகிறபடியால் இதை வெறும் எச்சரிக்கையாக எண்ணக்கூடாது. மாயவரத்தில் சில பழைய கிணறுகளிலும், மலையாளம் ஜில்லாவில் அநேகவிடங்களில் மாப்பிள்ளைமார் மசூதிகளின் குளங்களிலும் இது காணப்படுகிறது.

இதை இளம்பருவத்திலேயே வாரியெடுத்து உலர்த்திக் கொளுத்திப்போடுவது எளிது. ஈரமான மண்ணில் இதன் விதைகள் அதிவேகமாய் முளைப்பதனால் இதை நசிக்குமென்று கண்டவிடத்திலும் அழுகவிடக்கூடாது. யாராவது தன் ஆதீனமான இடங்களில் ஜலத்தில் இப்பூண்டைக் கண்டால் உடனே அதை வேருடன் பிடுங்கி கொளுத்திவிடவேண்டியது அவச்யம். பர்மாவில் இது வெகு கெடுதி விளைக்கக் கூடிய அவ்வளவு வேகமாய் பரவிக்கொண்டு வருகிறது. ஆகையால் இதர தேசங்களில் இதனாலுண்டாகும் கெடுதியினாலும் அத்தேசத்தாரின் அனுபோகத்தினாலும் நம் ராஜதானியில் இதைப் பரவவொட்டாமல் தடுக்கவேண்டும். எல்லா கனவான்களும் இதை ஒழிப்பதற்கு உதவிபுரியவேண்டும். இதைத் தடுக்காமல் பரவவிட்டுவிட்டாலோ இது வெகு நஷ்டத்துக்குக் காரணமாகும். முக்யமாய்த் தேங்கியிருக்கிற அல்லது மெதுவாயோடுகின்ற சுத்த ஜலத்தில்தான் இது செழித்து வளருகிறது.

## THE ORGANISATION OF THE RURAL COMMUNITY.

## க்ராம ஸமூகத்தை ஒழுங்குபடுத்துவது.

விவஸாயிகளினுடைய பொருளாதார நிலைமையையும், மற்ற க்ராமவாஸிகளுடைய நிலைமையையும் உயர்த்த முயற்சிசெய்யவேண்டியது அவச்யமென்றும், அதற்காக கோவாபரெடிவ் முயற்சியை அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்றும், க்ராமப் பஞ்சாயத்துகளும், பாசன விஷயங்களைப்பற்றிய பஞ்சாயத்துகளும், காடுகளின் நிர்வாகத்தைப்பற்றிய பஞ்சாயத்துகளும், இன்னும் மற்ற வகை ஸங்கங்களும் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் பல தேசாபிமானிகள் சொல்லிவருகிறார்கள். மேற்சொன்ன வழிகளிலேயன்றி சில இடங்களில் வேறு வகைகளிலும் முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கும்.

அமெரிக்க ஐக்ய மாகாணங்களில் உள்ள க்ராமவாஸிகளை ஒன்றுசேர்த்து அவர்களுக்குள் பல ஸங்கங்கள் ஸ்தாபித்து, இன்னின்ன வழிகளில்

அவர்களுக்கு ஸௌகர்யங்கள் ஏற்படும்படி முயற்சிக்கவேண்டுமென்பதைப்பற்றி அமெரிக்காவிலுள்ள ஒரு பொருளாதார சாஸ்த்ர நிபுணர் சில யோசனைகள் சொல்லுகிறார். நம்முடைய தேசத்தில் க்ராம வாஸிகளுடைய நிலைமையை உயர்த்த எண்ணுகிறவர்கள் அவைகளை கவனிப்பது நல்லதென்று அந்த யோசனைகளை இங்கே சுருக்கமாய் எழுதுகிறோம்.

ஒவ்வொரு பெரிய க்ராமம் அல்லது க்ராமத் தொகுதிக்கு ஒரு பொது ஸங்கம் இருக்கவேண்டும். அந்த ஸங்கத்தின்கீழ், பல கமிட்டிகள் ஸ்தாபிக்கவேண்டும். ஸங்கத்தின் மெம்பர்கள் எந்தக் கமிட்டியின் வேலை தங்களுக்குப் பிடித்திருக்கிறதோ அந்த கம்மிட்டியில் மெம்பர்களாகச்சேர்ந்து கொள்ளவேண்டும். பொதுஸங்கம், கமிட்டி. ஆகியஇவைகளின் வேலைகளை நிர்வகித்துவர ஒரு நிர்வாகக் கமிட்டியை ஏற்படுத்துவது அவச்யம். இந்த நிர்வாகக்கமிட்டியில் பொது ஸங்கத்தின் ப்ரெஸிடெண்ட், ஸெக்ரடரி, ட்ரெஷரர், ஆகிய இவர்களும், முன்சொன்ன கமிட்டிகளின் சேர்மன்களும் மெம்பர்களாயிருக்கவேண்டும். இந்த நிர்வாகக்கமிட்டி கவனிக்கவேண்டிய வேலைகள் பின்வருமாறு. பொது ஸங்கமும், அதன் கிளை கமிட்டிகளும் இன்ன நோக்கத்துடன் உழைக்கவேண்டுமென்பதை நிர்ணயித்தல்; ஸங்கத்துக்கு ஸொந்தமாக வாங்கின நிலங்களையும், குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நிலங்களையும் தனதுவசத்தில் வைத்து நிர்வகித்தல்; செய்ய வேண்டிய வேலைகளுக்கு வேண்டியிருக்கும் பணத்தை சேகரம்செய்து, தன்வசத்தில் வைத்துக்கொண்டு, எப்படிச் செலவுசெய்ய வேண்டுமென்பதைத் தீர்மானித்து, அதன்படி செலவு செய்தல்; வேண்டுமானால் சம்பளம்கொடுத்து உத்யோகஸ்தர்களை நியமித்தல்; இந்த ஸங்கத்தைப்போன்ற ஸங்கங்களுடனும், வ்யாபாரிகள், லேவாதேவிக் கம்பெனிகள், தொழில்சாலைகள், ரெயில்வே கம்பெனிகள் முதலியவைகளுடனும் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளுதல்.

மேற்சொன்னபடி ஸங்கத்தையும் அதன் கிளைகளையும் ஸ்தாபிப்பதில் ஒருமுக்யமான விஷயத்தை கவனிக்கவேண்டும். ஸங்கத்தை ஸ்தாபித்து அதற்குப் பிறகு இன்னவேலை செய்வதென்று யோசிப்பதில் ப்ரயோஜனமில்லை. க்ராமவாஸிகளுடைய நன்மையை உத்தேசித்து இன்ன வேலைகள் செய்யவேண்டியது அவச்யமென்பதை முதலிலேயே யோசித்து, அந்த வேலைகளுக்காக ஸங்கம் ஸ்தாபிக்க வேண்டியது அவச்யமென்று நிச்சயப்பட்ட பிறகுதான் ஸங்கத்தை ஸ்தாபிக்கவேண்டும். கிளைக்கமிட்டிகளில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட கார்யத்தை கவனித்து வரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

மேற்சொன்ன அமெரிக்க நிபுணர் அமெரிக்காவிலுள்ள க்ராமவாஸிகளுக்கு ஏற்றவையாய், ஸாதாரணமாய் கவனிக்க வேண்டியவையான பத்து விஷயங்களைக் குறிப்பிடுகிறார். இந்த விஷயங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு கமிட்டி ஸ்தாபித்து, அந்தக் கமிட்டி அதற்கேற்பட்ட அலுவலை கவனித்து வரவேண்டுமென்று சொல்லுகிறார். ஆனால் சில க்ராமங்களில் இந்தப் பத்து விஷயங்களையும் கவனிக்கவேண்டியிராது. சில க்ராமங்களில் சில விஷயங்களை மாத்ரம் கவனித்தால் போதும். அந்தந்த க்ராமத்து ஜனங்கள் தங்களுக்கு எவை முக்யமானவையென்று தோன்றுகின்றனவோ, அவைகளை மாத்ரம் கவனித்துவர கமிட்டிகள் ஏற்படுத்தவேண்டும். மேற்சொன்ன பத்து விஷயங்களையும் இரு வகையாகப் பிரிக்கலாம்

**(I) தொழில் ஸம்பந்தமாய் கவனிக்க வேண்டியவை:**—இதைச்சேர்ந்தவையாவன. (1) சீர்திருந்திய முறையில் பயிர்த்தொழில் செய்தல். (2) விவஸாயப் பொருள்களை லாபமேற்படும்படி விற்பனை செய்தல். (3) விவஸாயிகள் தங்களுக்கு வேண்டியிருக்கும் பொருள்களை லாபகரமாயும் ஸௌகர்யமாயும் அடையும்படி செய்தல். (4) குறைந்த வட்டியுடனும் மற்ற ஸௌகர்யங்களுடனும் விவஸாயிகளுக்குக் கடன் கிடைக்கும்படி செய்தல். (5) போக்குவரவுக்குரிய ஸாதனங்களை அபிவ்ருத்தி செய்தல்.



**II. ஜன ஸமூக ஸம்பந்தமாய் கவனிக்க வேண்டியவை:**—இந்தப் பிரிவில் அடங்கியவையாவன: (1) வித்யா ஸாதனங்களை வ்ருத்திசெய்தல். (2) ஸுகாதார நிலைமையை சீர்திருத்தல். (3) பொழுது போக்குக்கான மார்க்கங்களை அபிவ்ருத்தி செய்தல். (4) க்ராமாந்தரத்தை பார்ப்பதற்கு அழகாக வைத்திருக்க ஏற்பாடு செய்தல். (5) ஜனங்களுக்குள்ள குடும்ப நிர்வாக அறிவை அபிவ்ருத்தி செய்து, குடும்ப ஸௌகர்யங்களுக்கேற்ற ஏற்பாடுகள் செய்தல்.

இனி ஒவ்வொரு கமிட்டியும் இன்னின்ன வேலைகளைச் செய்யவேண்டுமென்பதை இங்கு குறிப்பிடுகிறோம்.

**1. விவஸாயக்கமிட்டி:**—இது என்ன முறைகளை அநுஸரித்தால் அதிக மாஸூல் கிடைக்குமென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும். நிலத்தின் தன்மையைப் பரிசோதிக்க வேண்டும். அந்தந்த நிலங்களுக்கு இன்னின்ன பயிர்கள் ஏற்றவையென்பதை ஆராய்ச்சி செய்யவேண்டும். வயல்களில் பயிரிலிருந்து விதைக்காக நல்ல தான்யங்களைப் பொறுக்கி சேகரித்து விதைக்கு உபயோகிக்கும்படி விவஸாயிகளைத் தூண்டவேண்டும். எரு சேகரிக்கும் முறைகள், விதை மாற்றல் முதலியவைகளையும் பற்றி அந்தக் கமிட்டி ஆராய்ச்சிகள் செய்யவேண்டும்.

**2. விற்பனைக்கமிட்டி:**— இந்தக் கமிட்டியார் மாஸூலை அதிக செலவில்லாமல் லாபம் வரும்படி விற்பதற்கான முறைகள், ஜனங்களுக்கு இன்னின்ன விதமான பொருள்கள் வேண்டியிருக்கின்றனவென்பது ஆகிய இவைகளைப்பற்றியும், விற்பனைக்குத் தயாரான பொருள்களை தரம் வாரியாகப் பிரிக்கும் முறைகள், அவைகளை விளம்பரம் செய்வது, ஆகிய இவைகளைப்பற்றியும், ஸாமான்களைக் கொட்டிவைப்பதற்காக கோவாபரெடிவ் பண்டக சாலைகள் ஸ்தாபிப்பதைப் பற்றியும், ரயில் மூலமாயும் தபால் மூலமாயும் ஸாமான்களை விற்பதைப்பற்றியும் கவனிக்கவேண்டும். இவைகளோடு, பற்பல ஊர்களில் விற்பனை ஏஜெண்டுகளை நியமித்தும், விற்பனை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியும் வரவேண்டும்.

**3. விவஸாயிகளுக்கு வேண்டிய ஸாமான்களை வாங்கிக்கொடுப்பதைப் பற்றிய கமிட்டி** —இந்தக் கமிட்டியார் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன.—ஸாமான்கள் வாங்கும் முறைகள், பலர் ஒன்று சேர்ந்து மொத்தமாக வாங்குவது, தொழில் சாலைக்காரர்களிடமிருந்து நேராக ஸாமான்களைத் தருவித்தல், ஸாமான்கள் வாங்குவதற்கு தக்க ஏஜெண்டுகளை நியமிப்பது, விவஸாயத்துக்கு வேண்டிய கருவிகளை உள்ளூர் வேலையாட்களைக்கொண்டே செய்துகொள்வது, அதாவது கயிறு, தோல், ஜேணம், நாற்காலி, பெஞ்ச், முதலிய தட்டுமுட்டு ஸாமான்கள், முதலிய ஸாமான்யமான ஸாமான்களை உள்ளூரிலேயே செய்துகொள்ள ஏற்பாடு செய்வது, விவஸாயத்துக்கு உபயோகப்படும் யந்த்ரங்களை ரிபேர் செய்துகொடுக்க கோவாபரெடிவ் யந்த்ரசாலைகளை ஸ்தாபிப்பது ஆகிய இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வது.

**4. பணவஸதிக்கமிட்டி:**— இதன் வேலைகள் பின் வருமாறு. எந்தெந்த வேலைகளுக்குப் பண உதவி வேண்டியிருக்கும், எவ்விதத்தில் அந்த வேலைகளுக்கு மூலதனம் சேர்த்துக் கொடுக்கலாம் என்னும் விஷயங்களை அது கவனிக்கவேண்டும். ஸ்வல்பகாலத் தவணைக் கடன், நீண்டகாலத்தவணைக் கடன், கடனைத் திருப்பி அடைப்பதற்கான ஏற்பாடுகள், கட்டிட ஸங்கங்கள், ஐக்யநாணய ஸங்கங்கள், கணக்குவைத்துக் கொள்ளும் விதங்கள், ஆகிய இவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும். இவைகளோடு, எல்லாவித

மான நஷ்டத்துக்கும் ஈடுசெய்வதற்காக எவ்விதம் க்ராமவாஸிகளுக்குள் பரஸ்பர இன்ஷூரன்ஸ் ஏற்படுத்தி நடத்துவதென்பதைப் பற்றியும் கவனம் செலுத்தவேண்டும்.

6. **வித்யா ஸம்பந்தமான கமிட்டி:—** இந்தக் கமிட்டியின் நோக்கம் பின்வரும் விதமாக இருக்கவேண்டும். பள்ளிக்கூடங்கள், வித்யாஸங்கங்கள், உபந்யாஸ ஏற்பாடுகள், ஸினிமாடோக்ராப் என்னும் அசையும் படங்கள், புஸ்தகசாலைகள், பத்ரிகா ஸங்கங்கள், பாடசாலைத் தோட்டங்கள் ஆகிய இவைகளை அபிவ்ருத்தி செய்தல்; விவஸாய டிபார்ட்மெண்டாரினுடைய புஸ்தகங்களையும், துண்டுப் பத்ரிகைகளையும் விவஸாயிகள் வாசித்துப் பயனடையும்படி ஏற்பாடுசெய்தல்; பால பாலிகைகளினுடைய பலவகையான ஸங்கங்களை அபிவ்ருத்திசெய்தல்; க்ராமப்பள்ளிக்கூடங்களை தக்கவிதமாக இன்பெக்டர்கள் சோதிக்கும்படி ஏற்பாடுசெய்தல்.

7. **ஸுகாதாரக்கமிட்டி:—** இதன் வேலைகளாவன; வ்யாதிகளின் உத்பத்திக்கு ஆதாரமாயிருப்பவைகளாகிய ஜலம், பால், முதலியவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்தல்; பள்ளிக்கூடத்து மாணவர்களுடைய பற்கள், பார்வை, தொண்டை, மூக்கு முதலியவைகளை வைத்யர்களைக்கொண்டு சோதிப்பது; சாக்கடை, வடிகால், வீடுகளின் காற்றோட்ட வஸதி ஆகிய இவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வது; காயம்பட்டவர்களுக்கு வைத்யர் வருவதற்குமுன் சிகித்ஸை செய்தல், வ்யாதிஸ்தர்களுக்கு சிச்ருஷை செய்தல், குழந்தைகளைப் பராமரித்தல் ஆகிய இவைகளைப்பற்றி ஜனங்களுக்கு உள்ள அறிவை அபிவ்ருத்தி செய்தல்.

8. **பொழுது போக்குக்கான கமிட்டி:—** இந்தக் கமிட்டியின் வேலைகளாவன. க்ராமவாஸிகளுக்கேற்றவையான விளையாட்டுகளை ஆதரித்து அபிவ்ருத்தி செய்தல்; விளையாடும் ஸ்தலங்கள், பூங்கா வனங்கள் முதலிய பொழுது போக்குக்கான இடங்களைச் சீர்திருத்தி நல்ல நிலைமையில் வைத்துக் கொள்ளல். க்ராமத்திருவிழாக்களை நடத்தி ஆதரித்தல் ஆகிய இவ்விஷயங்களை கவனிக்க வேண்டும்.

9. **க்ராமாந்தரத்தை அழகு படுத்தும் கமிட்டி:—** இது வீடுகளுக்கும் மற்ற கட்டிடங்களுக்கும் பக்கத்திலுள்ள பசும்புல் தரைகளையும், புஷ்பத் தோட்டங்களையும், நிழலுக்காக வைக்கும் மரங்களையும் கண்ணுக்கு அழகாயிருக்கும்படி அமைப்பித்தும், மனஸுக்கு ஸந்தோஷம் தரக்கூடிய ஸாதனங்களை உபயோகிக்கும்படி ஜனங்களைத் தூண்டியும் வரவேண்டும்.

10. **குடும்ப ஸௌகர்யக் கமிட்டி.—** இந்தக் கமிட்டி, வீடுகளுக்கு ஜலவஸதி ஏற்படுத்துதல், கோவாபரேஷன் முறையில் துணி ஸலவை செய்தல், ரொட்டிக்கிடங்குகள் ஏற்படுத்துதல், ஆகிய இவைகளைப்பற்றி கவனிப்பதோடு, ஆகாரப்பொருள்களின் குணாகுணங்கள், எல்லா ஆகார அம்சங்களும் சரியாயிருக்கும்படியான உணவு இன்னதென்று தீர்மானித்தல், பானவகைகள் ஆகிய இவைகளைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும். இன்னும் குடும்பஸம்பந்தமான வேறு முக்யமான விஷயங்களையும் கவனிக்கவேண்டும்.

## TAMIL NOVELS.

BY T. V. SUNDARA AIYAR.

## தமிழ் நாவல்கள்.

நம் தேசத்தாருக்கு ஆங்கிலேய அரசாட்சியும் ஆங்கிலேயக் கல்வியும் பலவிதமான பலன்களைக் கொடுத்திருக்கின்றன. தற்காலத்தில் கல்வி இல்லாமை என்ற இருளை ஸூர்யனைக்கண்டபனி போல விலக்கிக்கொண்டு வருவது ஆங்கிலேய கல்வியே. நம் நாட்டிலுள்ளவர்களெல்லோரும் ஆங்கிலேய பாஷையிலும் மற்ற பாஷைகளிலுமுள்ள விஷயங்களை ஆங்கிலேய பாஷையிலேயே தெரிந்துகொள்ளுவது என்பது அஸாத்யமாகையால், அந்தந்த தேசபாஷையில், ஆங்கிலேய



பாஷையிலும் மற்றும் பல பாஷைகளிலுமுள்ள விஷயங்களை எடுத்துச் சொல்வது அவச்யம். தென்னிந்தியாவில் முக்யமான பாஷைகளில் தமிழ் ஒன்று. ஆனதினால் அநேக தமிழ்கலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டும் அநேக புஸ்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டும் வருகின்றன. ஆங்கிலேய புஸ்தகங்களில் "நாவல்" கள் என்றொரு வகுப்புண்டு. பெரும்பாலும் இந்தப் புஸ்தகங்கள் அவைகள் எழுதப்பட்டகாலத்திலுள்ள ஜனங்களின் நடவடிக்கைகளையும் வித்தையின்மையினாலும் இன்னும் பலகாரணங்களினாலும் உண்டாயிருக்கிற பிறர் பரிகாஸஞ் செய்யக்கூடிய கோட்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் கதாநாயகர்களின் ஸம்பாஷணையின்மூலமாய் எடுத்துக்காட்டும். இந்நாவல்கள் அநேகமாய் எளியநடையிலும், சோகம், வீரம், பரிகாஸம் முதலான ரஸங்களால் நிரம்பியனவாகவும், ஸாதாரணமாய் ஏழை ஜனங்கள் கூடவாங்கி வாசிக்கக்கூடியனவாகவும் இருப்பதால் சிலர்பொழுது போக்குக்காகவும், சிலர் அந்தந்தக்காலத்து நாகரீகத்தை நன்குணரும்பொருட்டும், வாங்கி வாசிக்கின்றனர். ஆங்கிலேயத்திலும், இன்னும் மற்ற பாஷைகளிலும் எழுதியிருக்கும் நாவல்களை வாசித்தே நம் தேசத்தவரும் மற்ற பாஷையிலுள்ள நாவல்களை மொழி பெயர்க்கவும், ஸ்வயமாகவே தங்கள் தேசத்து நடவடிக்கைகளிலுள்ள குற்றங்களைக் கண்டித்தும், ஏளனஞ்செய்தும் நல்ல சட்டதிட்டங்களைப் புகழ்ந்தும் எழுதத்துணிந்தனர் என்று எண்ணுகிறோம்.

நம் இந்தியாவில் மிகவும் புகழ்த்தக்க ராமாயணம், பாரதம், காளிதாஸன், ஔவை முதலிய பல பெரியோர்களின் கவிகள், நாடகங்கள், ஞான வாக்யங்கள், சாஸ்த்ரங்கள் முதலானவைகளைப்பற்றி நாம் செருக்கடைய இடமிருந்தபோதிலும், நாவல் என்று சொல்லும்படியான நூல்கள் நம்மிடத்திலிருந்ததாகத் தெரியவில்லை. நாவல் எழுவது என்பது நம்தேசத்தாருக்கு ஆங்கிலேயரால் புகட்டப்பட்ட கல்வியின் பயன்களிலொன்று. தமிழ் நாவல்கள் எழுதத்தொடங்கியது ஸுமார் ஐம்பது ஆண்டுகளுக்குள்ளாகவே தானிருக்கும். அதிலும் சென்ற இருபது வருஷங்களாகத்தான் தமிழ் நாவல்கள் அதிகமாய் ப்ரசுரிக்கப்படுகின்றன.

தற்காலத்திய நாவல்களில் பெரும்பான்மை வீட்டுக்கார்யங்களைப்பற்றியும், மாமியார் நாட்டுப் பெண் இருவருக்குமுள்ள உறவைப்பற்றியும் முக்யமாய் எழுதப்பட்டிருக்கின்றன. சில நாவல்களிலே தான் தற்காலத்திய கவர்ன்மெண்ட், ஆண், பெண் இவர்களின் கல்வி, போலீஸார், ந்யாயாதிபதிகள் இவர்களின் நடத்தை, முதலிய அநேக விஷயங்களைப்பற்றி நன்கு எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். தற்காலத்திய நாகரிகத்தை நன்கு எடுத்துச் சொல்வதிலும், சீர்திருத்தம் பெறவேண்டிய விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதிலும் மகாதேவய்யா என்பவரால் எழுதப்பட்ட நாவல்கள் சிறந்தவை என்பதற்கு ஐயமில்லை. உதாரணமாக "குசிகன்" என்று கையொப்பமிடப்பட்டு ஆங்கிலேயத்தில் எழுதப்பட்ட சிறு கதைகளையும், பத்மாவதி சரித்ரத்தையும் சொல்லலாம்.

தமிழ் நாவல்கள் பெரும்பாலும் எளிய நடையிலும், கொச்சையான தமிழிலும், ஒரு நாவலின் கதையின் வரலாற்றைப்போல மற்றவைகளுடையதும் சற்றேறக்குறைய சரியாயுமிருப்பதால், இரண்டு மூன்று நாவல்களைப் படித்தவுடன் படிப்பவர் மனதில் இன்னும் அநேகத் தமிழ்நாவல்கள் வாசிக்கவேண்டுமென்கிற ஆசை ஏற்படாமல் ஒருவிதமான தெவிட்டலும், மற்றத் தமிழ் நாவல்களும் இவ்விதந்தானோ என்ற எண்ணமும் உண்டாகின்றன. மிக்க மேன்மையான பண்டிதர் நடேசசாஸ்த்ரிகளின் நாவல்களை வாசிப்பதனால்தான் முன் கூறின எண்ணம் விலகுகின்றது. அநேகநாவல்கள் நல்ல செந்தமிழில்லாமலும், வாசிப்பவர் மனதைக் கவராமலும் ஒரேவித

மான கதையின் வரலாற்றை யுடையனவாகவும் இருப்பதற்குக் காரணம் நன்றாய்த் தமிழில் தேர்ச்சியடையாத பேர்களும், பள்ளிக்குப்போகும் மாணாக்கரும் நாவல் எழுதத்தொடங்குவது தான் என்று எண்ண இடமிருக்கிறது. ஆகையால் தமிழ் நாவல்களை வாசிக்கத் தொடங்குமுன் அவை யாரால் எழுதப்பட்டவை என்பதை அறிந்துகொள்ளுவது மிக்க அவசியமென்று தோன்றுகின்றது. இந்த மாதிரி எண்ணம் ஆங்கிலேயருக்கும் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்தது என்று தெரியவருகிறது.

நல்ல நாவலை வாசிப்பதனால் அந்த நாவல் எழுதப்பட்ட காலத்தில் அந்த தேசத்து ஜனங்களிடத்தில் இருக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்னின்னவென்று அறிந்து கொள்ளுவது மன்றி நமக்குத் தமிழில் இருக்கப்பட்ட தேர்ச்சியும் அதிகமாகின்றது. வீணாகவும் காலம் கழியாமலிருக்கிறது. இந்நாவல் சொல்லியபடி சீர்திருத்தங்கள் நடைபெறவேண்டியது அவசியமென்று தோன்றினால் அச் சீர்திருத்தங்களை அனுபவத்திற்குக் கொண்டுவர முயலுகின்றோம். ‘முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்’ ஆதலால், சில சீர்திருத்தங்கள் அனுபவத்திற்கு வந்து ஜனங்களுக்கு நன்மையைத் தருகின்றன. இப்பேர்ப்பட்ட நாவல்களை ஸ்த்ரீகள் வாசிப்பதினால் பலர் அசசியாயிருக்கும் காரியத்தை விட்டு நல்லொழுக்கத்திற்கும், நற்க்ரியைக்கும் இருப்பிடமாகி, கணவன் முதலானவர்களுக்கு ஸந்தோஷத்தைத்தருகிறார்கள். ஆகையால் வீட்டிலுள்ள ஸ்த்ரீகளுக்கு தகுந்த நாவல்களைத் தெரிந்து எடுத்துக் கொடுப்பது புருஷரின் கடமை. நம் நாட்டில் நம்மைச்சுற்றிலு மிருக்கப்பட்ட பல ஜாதியாரின் ஒழுக்கங்களைத் தெரிந்துகொள்ள தமிழ் நாவல்களைப் படிப்பது அவச்யமாயினும், நல்லநாவல்களை பொறுக்கி வாசிக்க வேண்டியது மிக்க அவச்யம். ஆதலால் மிகச் சிறந்த நாவல்கள் ஏழை ஜனங்களுக்கும் கிட்டும்படி கூடுமானவரையில் ஸ்வல்ப விலைக்கு ப்ரசுரஞ் செய்யவேண்டியது நாவல் எழுதுகிறவர்களின் முயற்சியா யிருக்கவேண்டும்.

டி. வி. ஸுந்தரய்யர்.

## BULGARIA'S ARMY.

## பல்கேரியாவின் ஸைன்யம்.

பல்கேரியாவில் எல்லா ஆண்களும் ராணுவ ஸேவகம் செய்யக் கடமைப்பட்டவர்கள். ஆனால் மகம்மதியர்களை மாத்ரம் ராணுவ ஸேவகத்துக்குக் கட்டாயப்படுத்துவதில்லை. அவர்களை கட்டாயப்படுத்தாமலிருப்பதற்காக அவர்கள் வரி செலுத்தவேண்டும். ராணுவ ஸேவகத்தினின்றும் விலக்கப்பட்ட மற்றவர்களுங்கூட வரி செலுத்தவேண்டும்.

ஆண்களை 20-வது வயஸுமுதல் ராணுவத்திற்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். காலாள் படையில் சேர்ந்தால் அவர்கள் 2-வர்ஷகாலம் படைகளில் சேர்ந்திருக்கவேண்டும். அதற்குப் பிறகு 18-வர்ஷகாலம் படையைச் சேர்ந்த ரிஸர்வாக இருக்கவேண்டும். குதிரைப்படை, பீரங்கிப்படை முதலிய மற்றபடைகளில் சேர்ந்தால் 3-வர்ஷகாலம் படைகளிலும், 16-வர்ஷகாலம் ரிஸர்விலும் இருக்கவேண்டும். ரிஸர்வ் வீரர்கள் வர்ஷந்தோறும் 3-வாரம் ராணுவப்பயிற்சிக்காக கூப்பிட்டால் போகவேண்டும். மேற்சொன்ன ரிஸர்வுகாலம் முடிந்ததும் வீரர்கள் ஆபால்செனி யென்னும் டெரிடோரியல் ஆர்மியைச் சேர்ந்தவர்களாகிறார்கள். இதில் காலாள் படைவீரர்கள் 6-வர்ஷகாலமும், மற்றவீரர்கள் 7-வர்ஷமும் இருக்கவேண்டும். ஆக மொத்தத்தில் எல்லா வகை வீரர்களும் 26-வர்ஷகாலம் ராணுவத்தில் சேர்ந்திருக்கவேண்டும்.

தற்போது பல்கேரியாவில் 36-ரெஜிமெண்ட் காலாள்படைகள் இருக்கின்றன. ஒவ்வொரு ரெஜிமெண்டிலும் ஸமாதான காலத்தில் 2-பட்



டாளங்கள் இருக்கும். யுத்தகாலங்களில் ஒவ்வொரு ரெஜிமெண்டிலும் 4-பட்டாளங்கள் இருக்கும். பல்கேரியாவில் ஒரு பீரங்கி பாட்டரி யென்பது 4-பீரங்கிகள்கொண்டது. அப்படிப்பட்ட பாட்டரி 3 கொண்டது 1-டிவிஷனாகும். இரண்டு டிவிஷன் கொண்டது ஒரு (பீரங்கிப் படை) ரெஜிமெண்ட். இப்படிப்பட்ட பீரங்கி ரெஜிமெண்டுகள் 9-இருக்கின்றன. யுத்தகாலத்தில் ஒவ்வொரு பீரங்கி ரெஜிமெண்டுக்கும் 3-டிவிஷன்கள் இருக்கும். இவைகளைத் தவிர 12 மலை பீரங்கி பாட்டரிகளும், கோட்டைகளைக் காக்க 3-பீரங்கிப் பட்டாளங்களும் இருக்கின்றன. பல்கேரியாவுக்கு 11-ரெஜிமெண்ட் குதிரைப்படை இருக்கிறது. யுத்தகாலங்களில், ஏற்கனவேயுள்ள ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த ரிஸர்வ் வீரர்களைச் சேர்த்து ஒவ்வொரு ரெஜிமெண்டுக்கும் ஒரு ரிஸர்வ் ரெஜிமெண்ட் ஏற்படுத்துவார்கள். இந்த ரிஸர்வ் ரெஜிமெண்டில் 4-பட்டாளங்கள் இருக்கும்.

இவைகளைத் தவிர இஞ்ஜினீயர்படைகளும் வேறு சில்லரைப்படைகளும் உண்டு.

யுத்தகாலங்களிலும், ஸைன்யங்களைச் சேகரம் செய்யும்போதும், ஆபல்செனி யென்னும் டெரிடோரியல் ஆர்மியைச் சேர்ந்தவர்களை படைகளாகச் சேர்ப்பார்கள். அந்தப் படைகளின் ஸங்க்யை 36-முழுப் பட்டாளங்களும், 36-அரைப் பட்டாளங்களுமாகும்.

ஸைன்யம் சேகரம் செய்கையில் படைகளுக்கு வேண்டிய ரிஸர்வ் வீரர்கள் போக பாக்கியாயுள்ள ரிஸர்வ் வீரர்களை தனியாக டெபோக்களில் வைத்திருந்து, யுத்தத்தில் ஜனச்சேதம் மேற்படும்போது, அந்தக் குறைவை சரிப்படுத்த அந்த பாக்கியாயுள்ள ரிஸர்வ் வீரர்களை அனுப்புவார்கள்.

பல்கேரியா 9-ராணுவ ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஒரு முழு டிவிஷன் ஸைன்யம் கிடைக்கும். அதாவது ஒவ்வொரு டிவிஷனிலும் காலாள் படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, இஞ்ஜினீயர்படை முதலிய எல்லாவகை படைகளும் இருக்கும். ஸமாதான காலங்களில் 9-டிவிஷன் மாத்ரமிருந்தபோதிலும், யுத்தகாலங்களில் முன் சொன்னபடி ஒவ்வொரு ரெஜிமெண்டிலும் பட்டாளங்களின் தொகை அதிகமாவதாலும், ரிஸர்வ் வீரர்களைப் படைகளாகச் சேர்ப்பதாலும் யுத்தகாலங்களில் டிவிஷன்களின் தொகை அதிகமாகும். 1913-ம் வர்ஷத்தில் ஸைன்யத்தை சேகரம் செய்தபோது 13-டிவிஷன்கள் இருந்தனவாம். தற்போது 18-டிவிஷன்கள் பல்கேரியாவுக்கிருக்கின்றனவென்று சொல்லுகிறார்கள்.

ஸமாதான காலங்களில் பல்கேரியாவின் ஸைன்யத்தொகை 3,900-ஆபிஸர்களும் 56,000 வீரர்களுமாகும். யுத்தகாலத்தில் குறைந்தது 280,000-க்ரமமான ஸைன்யங்கள் கிடைக்குமாம். இவைகளைத்தவிர போக்குவரத்து பாதைகளைக்காக்க ப்ரத்யேகமான ஸைன்யங்களும், வேறு சில துருப்புகளுமுண்டாம். மொத்தத்தில் பல்கேரியாவுக்கு 4-லக்ஷம் போர்வீரர்கள் கிடைக்குமென்று சொல்லுகிறார்கள்.

சில வர்ஷங்களுக்கு முன்னால் நடந்த பால்கன் யுத்தங்களில் பல்கேரியா ராணுவத்தைச் சேர்ந்த உத்யோகஸ்தர்களின் தொகை ரொம்ப குறைந்து போயிற்று. பல்கேரியாவில் தற்போது இரண்டு ராணுவ பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் அநேக வீரர்கள் பயிற்சி பெற்று படைகளை நடத்த திறமையடைந்திருக்கிறார்களாம். இதனால் மேற்சொன்ன ஆபீஸர்களின் குறைவு நிவர்த்தியாயிருக்கிறதென்று ஒரு பல்கேரிய ராணுவ உத்யோகஸ்தர் சொல்லுகிறார்.

## INDIA AND COMMERCIAL EDUCATION.

T. LAKSHMI NARAYANA AIYANGAR, B.A.

## இந்தியாவும் வர்த்தகப் படிப்பும்.

இந்தியாவைத் தவிர நாகரிகமடைந்த ஒவ்வொரு தேசத்திலும் வர்த்தகத்தை பொதுஜன க்ஷேமத்திற்கு முக்ய காரணங்களுள் ஒன்றாகக்கொண்டு, அந்தந்த தேசத்து ராஜாங்கத்தார் தங்கள் தேசக்கல்வி ஏற்பாட்டில் அதை மிகவும் ச்லாகித்து, அதன் போதனை முறைகளையும் நன்றாய் கவனித்து வருகிறார்கள். மேலும், அநேகமாய் அந்த தேசத்துஜனங்களும் வ்யாபாரத்தில் ஊக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள். சென்ற இருநூறு வர்ஷங்களாக இவர்களுள் பெரும்பான்மையரோடு இந்தியரும் பலவிதத்தில் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆங்கிலேயருக்கும் நமக்கும் இப்படி வ்ருத்தியாகிய சேர்க்கை இப்போது நம்மிருவருடைய க்ஷேமத்துக்கும் இன்றியமையாததாய் விட்டது. மற்றெல்லா தேசத்தாரிலும் வ்யாபாரத் திறமை அதிகமாயுள்ள ஆங்கிலேயருடன் கலக்க நேரிட்டது நமது பாக்யந்தான்.

ஐரோப்பிய பள்ளிக்கூடங்களில் போதிக்கும் பாடங்களின் முறைகள் பொதுவாய் வ்யாபாரப் போக்கை யுடையன.. ஸர்வகலாசாலைகளின் பரிக்ஷைகளிலும், வ்யாபாரப் படிப்பில்தேறி, உயர்ந்த பட்டங்கள் பெற இடமுண்டு. பிள்ளைகள் தங்களைச் சுற்றிலும் மிகவும் சுறுசுறுப்பாய் வர்த்தகம் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறார்கள். வ்யாபாரிகளும் தங்கள் கார்யங்களுக்கு அநுகூலமாக பழகிய சிறுவர்களின் ஸகாயத்தை எதிர் பார்க்கிறார்கள். இச்சிறுவர்கள் வர்த்தகக் கூட்டத்திற்குள் புகுந்து, சில காலம் நேராகப் பயிற்சியடைந்து, பின்பு தாங்களே வர்த்தக ப்ரபுக்களாகிறார்கள். இவர்கள் போன்றவர்களின் பலத் தொகுதியன்றோ தேசபலம் என்று வழங்குவது.

இவர்களைப்பார்த்து நம்மையும் பார்த்தால் நம்முடையஸ்திதி சற்றும் த்ருப்திகரமாகவேயில்லை. வர்த்தகாநுகூலப் படிப்பைப்பற்றி இப்போதுதான் ஏதோ சற்று நம் நாட்டில் சிலபாகங்களில் கேள்விப்படுகிறோம். அதுவும், முக்யமாய் பம்பாயில்தான் கௌரவப்படுத்தப் படுவதாகத் தெரிய வருகிறது. அநேக பார்ஸீ கனவான்கள் ஐரோப்பிய நடையில் வர்த்தகம் செய்யத் தொடங்கி ப்ரத்தியேகமான கலாசாலைகள் ஏற்படுத்தி, அவைகளில் தங்களுக்கு அநுகூலமாயிருக்கும்படி சிறுவர்களை ஐரோப்பிய வ்யாபார முறைகளைக்கற்கச் செய்திருக்கிறார்கள். தென்னிந்தியாவில் கள்ளிக்கோட்டையிலுள்ள ஸர்க்கார் கமர்ஷியல் பாடசாலையைத்தவிர வேறொன்றும் கிளம்பவில்லை. சென்னையில் ஸர்க்காரே ஒன்று ஸ்தாபிக்க ப்ரயத்தனம் செய்து கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இப்போது புதிதாய் ஏற்படுத்தியிருக்கும் S. S. L. C. படிப்பில், பிள்ளைகள் தங்கள் போக்குக்குத் தகுந்தபடி பாடங்கள் எடுத்துக் கொள்ளவும், அந்தப்பாடங்களில் வர்த்தகாநுகூல விஷயங்களைப்பற்றியவைகளை கற்றுக்கொள்ளவும் இடம் கொடுத்திருக்கிறார்கள். இந்தப்பாடங்களை போதிக்கதகுந்த உபாத்யாயர்கள் போதுமானபடி இல்லாமையால், சென்னை கவர்ன்மெண்டார் சென்ற மூன்று வர்ஷகாலமாய் கள்ளிக்கோட்டையிலுள்ள கவர்ன்மெண்டு கமர்ஷல் பாடசாலையில் தக்க உபாத்யாயர்களை பயிற்சி செய்திருக்கிறார்கள். நமது காருண்யமுள்ள துரைத்தனத்தார் இவ்வளவு தூரம் செய்திருக்க, இந்தப்பாடங்களைக் கற்பது கௌரவக்குறைவென்று எண்ணி அலக்ஷியம் செய்யும் பெரும்பான்மையோரைக் குறித்து விஸனிக்கவேண்டியதாயிருக்கிறது. பள்ளிக்கூட அதிகாரிகள் வர்த்தகப்படிப்பின் அவச்யத்தை உணரவேண்டும். இதர பாடங்களின் நடுவே ஸமயம் வந்தபோதெல்லாம் வ்யாபாரத்தையும் அதன் பெருமையையும் பற்றி பிள்ளைகளுக்குச் சொல்ல



வேண்டும். ஆங்கில சரித்ரம், பூகோளம் முதலானவைகளைப் போதிக்கும்போது அவர்கள் வர்த்தகத்தையும் அதன் வ்ருத்தியையும் எடுத்துரைக்கலாம் இப்படிச் செய்வதனால் பிள்ளைகளுள் சிலர் இவைகளில் உத்ஸாகங்கொண்டு மேலே தெரிந்துகொள்ள விரும்புவார்கள். அப்பொழுது அவர்களுக்கு வேண்டிய புஸ்தகங்களைக்காட்டி அந்தப் போக்கில் செலுத்தினால், அவர்கள் பின்னால் வர்த்தகப்படிப்பில் புகுந்து அதன் நன்மையை அடைவார்கள்.

பிறகு, இங்கிலாந்தில் போல இந்தியாவிலும் பல பெரிய ஊர்களில் ஸாதாரண பள்ளிக்கூடங்களோடு, வர்த்தகாநுகூலப் படிப்புக்காக ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஏற்படவேண்டும். முனிஸிபாலிடி, லோகல் போர்ட் முதலிய பொதுக்கூட்டத்தாரால் இவ்விஷயம் நன்றாகக் கவனிக்கத்தக்கது. வ்யாபாரிகளினது நலத்தைக் கருதி அவர்கள் சிறுவர்களுக்கு ஸாதாரணமாக நம் நாட்டுக்கோ, அல்லது அந்தந்த ஊருக்கோ சிறப்பான வ்யாபாரத்தின் வழிகளையும், ஐரோப்பிய வர்த்தகத்தின் சுருக்கமான விவரத்தையும் அவர்களுக்குள்பட்ட பள்ளிக்கூடங்களில் கற்பிக்கவேண்டும். இப்படி பழகிய சிறுவர்கள் தங்கள் தொழில்களை தங்கள் மூதாதையோர்களைவிட சிறப்பாகச் செய்வார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை.

பின்னும், இப்பாடங்களை சிறுவர்களுக்குஅவர்கள் பேசும் பாஷை மூலமாகத்தான் போதிக்கவேண்டும். இப்பொழுது பொதுவாய் கலாசாலைகளிலும் நம் பாஷை மூலமாகத்தான் கல்வி கற்பிக்கவேண்டுமென்பது நம்மவரில் அநேகம்பெரியோர்களது அபிப்ராயம். ஆங்கிலம் நம் பாஷைகளைவிட கற்கக் கடினமானது. ஸாதாரணமாக பதினைந்து வர்ஷம் பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் கற்று வெளிவந்த சிறுவர்களில் சரியாக அப்பாஷையில் எழுதவும் பேசவும் முடியாத அநேகர் உண்டு. ஆங்கிலத்தில் உழைத்து வீணாக்காமல் நமது ப்ரயாஸத்தை உபயோகமுள்ள மார்க்கங்களில செலவழிப்பது நலம். மேலும், முன்னுக்கு வந்திருக்கும் ஜப்பான் முதலிய தேசத்தாரெல்லாம் ஆங்கிலத்தினாலா வ்ருத்தியடைந்திருக்கிறார்கள் ? ஜர்மானியர்தங்கள் பாஷையில்லாமல் ஆங்கிலத்திலா போதிக்கிறார்கள்? நமக்கு மாத்ரம் ஏன் இது முடியாது ? முப்பதுகோடி ஜனங்களுக்கும் ஆங்கிலம் தெரியுமா ? அல்லது எப்போதாவது இவர்கள் எல்லோரும் தொன்று தொட்டுவந்த தங்கள் பாஷைகளைவிட்டு ஆங்கிலம் பேசுவார்கள் என்பது ஸாத்யமா? பல பாஷைகள் பேசும் ஆஸ்ட்ரியா ஹங்கெரி முதலிய தேசங்களில் அரசாட்சியும், வர்த்தகமும் நடைபெற வில்லையா! பெரும்பான்மையோருடைய நலத்தையன்றி ஆங்கிலங்கற்ற சிலருடைய மனப்போக்கையும் ஸௌகரியத்தையும் கருதுதல் தகுதியன்று. நம் பாஷைகளின் அவச்யத்தைப்பற்றி சொல்லும்போது ஆங்கிலத்தை குறைகூறுவதாகவும், அதன் அபிவ்ருத்தியை மறுப்பதாவும் நினைக்கக்கூடாது. ஆங்கிலம் நம் நாட்டிற்கு அநேகவிஷயங்களில் உபயோகமானது. ஆனால் ஜனங்கள்பேசும் பாஷைகளல்லது மற்றெப்பாஷை மூலமாகவும் வ்யாபாரப்படிப்பை போதிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் ப்ரயாஸமெல்லாம் அநேகமாய் வீணாய்முடியும்; ஏனென்றால் இப்போதனைகள் பொது ஜனங்கள்வரையில் எட்டுவது அஸாத்யமானது. முடியாதென்றே சொல்லிவிடலாம்.

ஆகையால், வர்த்தகவிஷயங்களைப் பற்றியுள்ள அநேக புஸ்தகங்களை ஆங்கிலம்முதலிய ஐரோப்பிய பாஷைகளினின்று பெரும்பான்மையோருக்குத் தெரியும் பாஷையில் மொழிபெயர்க்கத் தொடங்கவேண்டும். இவ்வாறு புஸ்தகங்கள் அநேகமாய் வெளிவர வில்லையென்றும், வந்த பிறகு பார்த்துக்கொள்ளலாமென்றும் இருப்பது நீந்தக் கற்றுக்கொண்ட பிறகுதான் தண்[illegible]

கால்வைக்கவேண்டும் என்று இருப்பதுபோலாகும். மொழிபெயர்ப்பதோடுகூட, இந்திய வர்த்தக விஷயமாய் இந்திய வர்த்தக சரித்ரம், பூகோளம், வர்த்தகமுறை, கணக்குவைத்தல் முதலானவைகளைப்பற்றியும் ஐரோப்பிய வர்த்தக புஸ்தகங்களை யொட்டி நம் பாஷைகளிலும் புஸ்தகங்கள் வெளிவரவேண்டும். இன்னும் ஐரோப்பிய வர்த்தகத்தில் கார்யங்களை ஜரூர்ப்படுத்த சுருக்கெழுத்து (Shorthand), அச்செழுத்து(Typewriting) முதலிய ஸௌகர்யங்கள் ஏற்பட்டிருப்பதுபோல நமது தமிழ்முதலிய பாஷைகளிலும் அவைகளைச் சார்ந்தபடி கண்டு பிடிக்கப்பட்டுள்ள மேற்படி ஸௌகர்யங்களையும் நமது வ்யாபாரிகள் கையாண்டுவந்தால், நூற்றுக்கணக்கான கடிதங்கள் எழுதுவதும், அவைகளுக்கு காப்பி எடுப்பதும் அதிகமாக ப்ரயாஸையில்லாமலும், வெகு சீக்ரத்திலும், கச்சிதமாய் வேலைகள்முடியும்.

இவைகளை யெல்லாம்விட முக்யமானது, நம் சிறுவர்கள் தேசாந்தர யாத்ரை செய்து நேருக்கு நேராக ஆங்காங்குள்ள வ்யாபார விநோதங்களையும், வர்த்தக ரகஸ்யங்களையும், சுறுசுறுப்பான முதலாளிகளையும் கண்டு களித்து, நம் நாட்டுக்குத் திரும்பி வந்தால், இந்த தேசம் வர்த்தகத்தில் எவ்வளவு க்ஷீணதசை யடைந்துள்ள தென்பதை, உணர்ந்து மற்ற தேசங்களோடு வர்த்தகத்தில் போட்டி போட்டு தம் செல்வத்தைப் பெருக்கும் மார்க்கங்களை தெரிந்தவர்களாய் தங்களாலியன்ற அளவு சீர்திருத்த முயற்சி செய்வார்கள்.

பின்பு, தொன்று தொட்டு வரும் ஞானத்திற்கு பிறப்பிடமும் இருப்பிடமுமாகிய நம் பாரதமாதா செல்வத்தில் தலை யெடுத்து மற்ற தேசங்களின் இடையில் ஓங்கி நிற்பர்.

டி. லக்ஷ்மிநாராயண ஐயங்கார், பி. ஏ.

## HABITS OF THRIFT.
## சிக்கன வழக்கம்.

அநேக ஜனங்கள் தங்கள் குடும்பத்துக்கு வேண்டிய பொருளை ஸம்பாதித்துக் கொண்டு ஸௌக்யத்தில் இருக்கலாம். ஆனால் இந்த நிலைமையை அடைவதற்கு தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். கூலிவேலை செய்பவர்களுங்கூட முதலாளிகளாகி இதர ஜனங்களையும் வ்ருத்திக்குக் கொண்டுவரலாம். ஆனால் இவ்வித மேல்பதவியை அடைவதற்கு உழைப்பும், முயற்சியும், ஸத்யமும், சிக்கனமும் அவச்யமாய் இருக்கவேண்டும்.

2. தற்காலம் ஜனங்கள் கஷ்டப்படுகிறது பணமில்லாததால் அல்ல; குணமில்லாததால் தான் கஷ்டப்படுகிறார்கள். பணமிருந்தும் பணத்தை வீண் செலவிடுவதால் தான் கஷ்டப்படுகிறார்கள். பணம் ஸம்பாதிப்பது சுளுவு; ஆனால் ஸம்பாதித்த பணத்தை க்ரமமாய் செலவிடும் வழியை அறிவது தான் கஷ்டம். ஒரு மனிதன் ஸம்பாதிப்பதெல்லாம் அவன் ஆஸ்தியாகமாட்டாது; அவன் ஸம்பாதித்த பொருளை செட்டும் கட்டுமாயிருந்து சேமிக்கும் உபாயம்தான் அவன் ஆஸ்தியாகும். எவன் தன் உழைப்பினால் தனக்கும் தன் குடும்பத்துக்கும் போதுமானதைவிட அதிகம் ஸம்பாதிக்கும்போது, பிற்காலத்தில் உதவும்படி கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம்பிடித்து ஸ்வல்ப ஆஸ்தி சேர்த்துவருகிறானோ, அவன் தான் குடும்ப ஸௌக்யத்தின் ரகஸ்யத்தை அறிந்தவனாவான். அவன் சேமித்த பொருள் ஸ்வல்பமாக இருந்தாலும், அவன் ஸ்வாதந்தரியமாய் ஜீவிப்பதற்குப் போதுமானதாகும். உயர்ந்த கூலிவாங்கும் வேலைக்காரர்கள் தங்கள் கூலியில் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம்பிடித்து பிற்காலத்துக்கு உதவும்படியாக ஏன் முதல் சேர்த்துக் கொள்ளக்கூடாது? இதற்கு மனம் போனபடி விடாமல், தன்னடக்கமும் சிக்கனமும் தான்



வேண்டியவை. உண்மையில் இப்பொழுது கைத்தொழில்சாலைகளில் முதலாளிகளாக இருப்பவர்கள் அநேகமாய் கீழ்ப்படியிலிருந்து வந்தவர்களே தான். அனுபோக ஞானமும் திறமையுமுள்ள வேலைக்காரர்கள் முதலாளிகளாக உயருகிறார்கள். இவையில்லாத வேலைக்காரர்கள், கூலி வேலைக்காரர்களாக கீழ்ப்படியிலேயே கிடக்கிறார்கள். இவர்களுக்குள்ள வித்யாஸம் இதுதான். ஸம்பாத்யத்தில் மிச்சம் பிடித்து முதல் சேர்ப்பதும் வேலைக்காரன்தான். ஸம்பாத்யத்தை பூராவும் வீணாக்கிக்கொண்டு பிறகு திண்டாடுவதும் வேலைக்காரன் தான். அவன் சேமித்து வைத்துக்கொண்டால், ஸமயங்களில் அவனுக்கு உபயோகமாகும்.

காப்டன் துரை (Cobden) தன் ஊராருக்கு ஒரு கதை சொன்னார் "நான் லங்காஸ்டர் பட்டணத்துக்குப் போனகாலத்தில் நானும் இன்னும் சில கனவான்களும் ஒரு பஞ்சு ஆலையைப் பார்க்கப்போனோம். அந்த ஆலைக்கு ஸொந்தக்காரன் ஒருவன். அவன்பெயர் சொல்லமாட்டேன். அவனை ஸ்மித் துரை என்று கூப்பிடுவோம். ஸுமார் 300-400, வேலைக்காரர்கள் அதில்வேலை செய்து வந்தார்கள். ஒரு கட்டிடத்தில் ஸுமார் 700-விசைத்தறிகள் இருந்தன. நாங்கள் திரும்பி வருகையில் என் ஸ்நேகிதர்களில் ஒருவர் ஆலையின் ஸொந்தக்காரனைத் தோளில் தட்டிக்கொடுத்து சொன்னதாவது 'ஸ்மித் துரை 25-வருஷத்துக்குமுன் கூலி வேலைக்காரனாக உழைத்தவர் தான். இவ்வளவு பாக்யத்துக்கும் காரணம் இவருடைய முயற்சியும் சிக்கனமுந்தான்' இதற்கு ஸ்மித் துரை கபடமின்றி உடனே பதில் சொன்னதாவது 'அப்படியல்ல, இவ்வளவு பாக்யத்துக்கும் நானே பூராவும் காரணமல்ல; ஆஸ்தியுடைய ஒரு மனைவியை மணம்புரிந்தேன்; எவ்வளவு ஆஸ்தி என்றாலோ, அவள் என்னை மணம்புரிந்தபோது அவளும் விசைத்தறியில் வாரம் ஒன்றுக்கு 9½-ஷில்லிங் (7-ரூ.) ஸம்பாதித்துவந்தாள்."



3. காலத்தை வீணாக்காமல் சேமிப்பதும் பணத்தை வீணாக்காமல் சேமிப்பதும் ஸமமே. "காலம்தான் கனகம்". பணம் ஸம்பாதிப்பதற்கு காலத்தை க்ரமமாய் உபயோகிக்கவேண்டும். பல நற்செய்கைகளிலும் காலத்தை செலுத்தலாம். வித்தையிலும், படிப்பிலும், கலைகளிலும், சாஸ்த்ரங்களிலும், காவ்யங்களிலும் காலத்தை செலவழிக்கலாம். முன் ஏற்பாட்டினால், காலத்தை வீணாக்காமல் சிக்கனப்படுத்தலாம். அந்தந்த காலத்தில் அந்தந்த கார்யங்களைச் செய்யவேண்டுமென்று செய்யவேண்டிய கார்யங்களை க்ரமமாய் பிரித்து வேலைசெய்தால் காலம் வீணாகமாட்டாது: ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இடம் வேண்டும்; ஒவ்வொன்றும் அந்தந்த இடத்தில் இருக்கவேண்டும். அப்படியே ஒவ்வொரு கார்யத்துக்கும் ஒருகாலம் நியமிக்கவேண்டும், ஒவ்வொரு கார்யமும் குறித்த காலத்தில் செய்யவேண்டும்.

4. சிக்கனமாயிருப்பது நலமென்பதை ரூபிக்கவேண்டியதில்லை. சிக்கனமாக இருக்கலாம் என்பதையும் எவரும் மறுக்கவில்லை. அநேக த்ருஷ்டாந்தங்களை நாம் கண்முன் பார்த்துவருகிறோம். பலபேர் செய்திருப்பதை மற்றவர்களும் ஏன் செய்யக்கூடாது? மேலும் சிக்கனமாயிருப்பது கஷ்டமானது மல்ல. அதல்லாமலும், சிக்கனமாயிருத்தலால் மனுஷனுக்கு துன்பமும் அவமானமும் நேரிடாது. சிக்கனமாயிருப்பவன் தன் மனம்போனபடி செலவிடாமல் தன்னை தான் அடக்கிக்கொள்ள பழகவேண்டும். ஆனால் சிக்கனமா யிருப்பவன் ந்யாயமான ஸுகத்தை அனுபவிப்பதில் யாதொரு தடையுமில்லை. ஊதாரித்தனத்தால் அடையக்கூடாத அநேக ந்யாயமான ஸுகங்களை சிக்கனத்தால் நாம் அடையலாம்.

5. சிக்கனப்படுத்த முடியாதென்று எவனும் சொல்லவேண்டாம். மாஸம் ஒன்றுக்கு கொஞ்சம் பணமாவது மிச்சம் பிடிக்கக்கூடாதவர்

எங்கும் காணோம். மாஸம் ஒன்றுக்கு 3-ரூ மிச்சம் பிடித்து வந்தால் 20-வருஷத்தில் வட்டி சேர்ந்து குறைந்தபக்ஷம் ஸுமார் 1000-ரூபா யாகும். இன்னும் 10-வருஷத்தில் வட்டிசேர்ந்து 1500-ரூபாய்க்குமேல் ஆகக்கூடும். மாஸம் ஒன்றுக்கு அவ்வளவு பணம் மிச்சம்பிடிக்க முடியாதென்று சிலர் சொல்லக்கூடும். சரிதான்; அப்படியானால் 2-ரூபாயாவது மிச்சம்பிடி ; இதுவும் ஸாத்யமில்லாவிட்டால், ஒரு ரூபாயாவது மிச்சம் பிடி ; அல்லது அரை ரூபாயாவது மிச்சம் பிடி; எப்படியாவது எவ்வளவு சிறு தொகையாவது மிச்சம்பிடிக்க ஆரம்பிக்கவேண்டும். சேம நிதியில் (ஸேவிங்ஸ்பாங்கி) மாஸம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் போட்டுவந்தால், இது 20-வருஷத்தில் 300-ரூபா யாகும். 30 வருஷத்தில் 500-ரூபா யாகும். சிக்கனகுணத்தையும் தன் அடக்கத்தையும் பழக்கவேண்டியதுதான் முக்யம்.

6. சிக்கனமா யிருப்பதற்கு விசேஷ தைர்யம் தேவையில்லை. விசேஷ புத்தியும் தேவையில்லை; விசேஷகுண ஸம்பத்தும் தேவையில்லை. சாதாரண புத்தியும் இந்த்ரிய ஸுகங்களை நீக்க சக்தியும் மாத்ரம் இருந்தால் போதுமானது. உண்மையில் நாம் ப்ரதிதினம் செய்யும் கார்யங்களை விவேகமாய்ச் செய்வதுதான் சிக்கனம். சிக்கனத்துக்கு தீவிரமான தீர்மானம் தேவையில்லை. கொஞ்சம் பொறுமையும் தன் அடக்கமும் தான் தேவை. சிக்கனகுணம் படிவதற்கு முதல்படி சிக்கனத்தை துவக்கவேண்டும். சிக்கனத்தைப் பழக்கப் பழக்க சிக்கனமாயிருப்பது ஸுலபமாகும். சிக்கனப் பயிற்சியால் தான் பட்ட ஸ்வல்ப கஷ்டத்துக்கு சீக்ரத்தில் தக்க கைம்மாறு பெறுகிறான்.

7. சிலர் இந்த கேள்வியை கேட்கலாம். ஸ்வல்ப கூலிக்கு வேலை செய்கிறவனுக்கு தான் ஸம்பாதிக்கும் ஒவ்வொரு பைஸாவும் தன் குடும்ப ஸம்ரக்ஷணைக்கு தேவையா யிருக்கும். போது அவன் எவ்விதம் பணம் மிச்சம்பிடித்து சேம நிதியில் போடுகிறது? ஆனால் உழைப்பும் சாராய வெறுப்புமுள்ள அநேக கூலிக்காரர்கள் இவ்வண்ணம் தங்கள் இந்த்ரிய ஸுகங்களை விலக்கி ஸ்வல்ப ஸம்பாத்யத்தில் ஸ்வல்பமாக மிச்சம்பிடித்து சேமநிதிகளில் போட்டுவருவதை நாம் கண்ணுற் பார்த்துவருகிறோம். இப்படிச்செய்வது சிலருக்கு ஸாத்யமாயிருந்தால், அதே நிலைமையிலுள்ள மற்றவர்களும் ஏன் இவ்வண்ணம் செய்யமுடியாது? அவர்களுடைய ஸௌக்யத்துக்கு ஒருவித குறைவின்றி இப்படிச் செய்துகொள்ளலாம்.

8 நல்ல சம்பளம்பெறும் ஒருவன் தன் ஸம்பாத்யம் பூராவையும் தனக்கே செலவிட்டாலும், அல்லது அவன் குடும்பத்தலைவனாக யிருந்தால் மாஸாமாஸம் மிச்சம் சேர்க்காமல் ஸம்பாத்யம் பூராவும் செலவிட்டாலும், அவன் எவ்வளவு இரக்கமற்ற பாவியாக இருக்கவேண்டும்? நல்ல சம்பளத்தி லிருந்தவர்கள் தங்கள் பெண்சாதி பிள்ளைகளுக்கு ஒன்றும் வைக்காமல் நிர்க்கதியாக விட்டுவிட்டு திடீரென்று இறந்துவிட்டதாக நாம் கேள்விப்படுகிறோமல்லவா? இப்படிப்பட்டவர்களை இரக்கமற்ற மகா ஊதாரிகள் என்றே நாம் சொல்லவேண்டும். இப்படி அநேகம் நடக்கின்றன. ஆனால் ஜனங்கள் இவ்விஷயங்களை அவ்வளவாக ஆலோசித்துப்பார்க்கிறதில்லை. இப்படி திக்கற்றுப்போனவர்கள் பிச்சைக்கு புறப்படுகிறார்கள் ; கொஞ்சம் பணம்கிடைத்தாலும் கிடைக்கும் ; ஒன்றுமில்லாமல் போனாலும் போகும். இறந்துபோனவர்களின் குடும்பத்தார்கள் வறுமையில் முழுகிப்போகிறார்கள்.

9. ஆனால் கொஞ்சம் முன்ஜாக்ரதை யிருக்கும் பக்ஷத்தில் அநேகமாய் இவ்வித கேடு வந்திராது. இந்த்ரிய ஸுகங்களில் எதையாவது ஒன்றை நிறுத்தினாலும், அதாவது சாராயத்தில் ஒரு கோப்பை அளவையாவது, சுருட்டில் ஒரு சுருளையாவது நிறுத்தினாலும், இதில் கூடிவரும் பணம் சில வருஷத்தில் ஒரு முதலாகி குடும்பத்



துக்கு உதவியாகும். ஒவ்வொருவனுக்கும், வ்யாதியும் கஷ்டமும் கொஞ்சமேனும் எதிர்பாராத காலத்தில் திடீரென்று நேரிடுவதால், மிக எளியவன்கூட தனக்கும் தன் குடும்பத்துக்கும் கஷ்டகாலத்தில் உதவும்படி முந்தியே தன் ஸம்பாத்யத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மிச்சம் பிடித்து சேர்த்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

10. ஆகிலும் சிலபேர்கள்தான் பணக்காரர்களாக ஆகக்கூடும். ஆனால் அநேகப்பேர்கள் தங்கள் உழைப்பாலும் சிக்கனத்தாலும் தங்கள் குடும்ப ஸௌக்யத்துக்கு போதுமானதை சேர்த்துக்கொள்ள சக்தியுடையவர்களே. மூப்பு காலத்தில் வறுமையின்றி பிழைப்பதற்குக்கூட போதுமான பொருளை அவர்கள் ஸம்பாதித்துக் கொள்ளலாம். சிக்கனத்துக்கு இடையூறாக நிற்பது ஸம்பாதனைக் குறைவல்ல ; மனோதைர்யத்தின் குறைவுதான். அநேகப்பேர்கள் கையாலும் மூளையாலும் இடைவிடாமல் உழைக்கிறார்கள். ஆனால் ஸம்பாதித்த பொருளை தாறுமாறுமாய்ச் செலவிடாமலும் அந்தஸ்துக்கு மீறி வாழாமலும் செட்டும் கட்டுமாயிருக்க போதுமான மனோதைர்யமில்லாமல் இருக்கிறார்கள்.

11 பெரும்பான்மையோர்,விஷய ஸுகத்தை வெறுத்து தன்னடக்கம் பழகாமல் தற்கால விஷய ஸுகத்தையே தேடுகிறார்கள். பாமர ஜனங்களுக்கு விஷயஸுகமே ப்ரதானம். அநேகமாய் அவர்கள் சம்பாதனை பூராவையும் அதிலே செலவழித்து விடுகிறார்கள். ஆனால் இப்படி ஊதாரிகளாயிருப்பது கூலி வேலைக்காரர்கள் மாத்ரமல்ல. அநேகவருஷமாக நூற்றுக்கணக்காக ஸம்பாதித்து செலவிட்டுவந்தவர்களும் தங்கள் குடும்பத்தை நிராதரவாக விட்டுவிட்டு திடீரென்று இறந்து போய்விட்டதாக நாம் பல தடவைகளில் கேட்டிருக்கிறோம். இது ஒவ்வொருவருக்கும் நேரில் தெரிந்த விஷயமே. அவர்கள் மரண காலத்தில் குடியிருந்த வீட்டிலுள்ள ஸாமான்களே பிறருக்குச் சொந்தமாயிருந்தன. இவர்களுடைய இழிவான கார்யங்களுக்கும் இவர்களின் ஊதாரிக் குடித்தனத்தில் பட்ட கடனுக்கும் இந்த ஸாமான்களை விற்றுக்கொடுக்கும்படி நேரிடுகிறது.

12. பணத்தால் பெறக்கூடிய அநேக பொருள்கள் உண்மையில் உபயோகமற்றனவாயிருந்தும், பணத்தில் ஒரு விசேஷ பெருங்குணம் அமைந்திருக்கிறது. அதாவது பணமிருப்பவன் பிறர் கையைப்பார்க்காமல் ஸ்வாதந்தரியமாய் ஜீவிக்கலாம். ஆகையால்தான் பொருள் சேர்ப்பது ஒரு முக்யமான விஷயம்.

## RE-SETTLEMENT OF MADURA DISTRICT.

## மதுரை ஜில்லா மறு ஸெட்டில்மெண்ட்.

நவம்பர் மாஸம் 27-ந்தேதி நடந்த சென்னை சட்ட ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் ராமய்யங்கார் மதுரை ஜில்லாவில் ஸெட்டில்மெண்ட் செய்வதில் புன்செய் நிலங்களுக்கும், பெரியாறு பாசனத்துக்குள்பட்ட புது நன்செய் நிலங்களுக்கும் தீர்வையை அதிகமாக்கக்கூடாதென்றும், மற்ற நிலங்களுக்கு நூற்றுக்கு 6-க்கு மேல் தீர்வையை அதிகமாக்கக்கூடாதென்றும் ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அதை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவில்லை. அது விஷயமாய் ஆனரபில் மிஸ்டர் வி. கே. ராமானுஜாச்சார்யார் 'சுதேசமித்திரன்' பத்ரிகைக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

மதுரை ஜில்லா மறு ஸெட்டில்மெண்டைப் பற்றி நவம்பர் மாதம் 27-ந்தேதி சனிக்கிழமையன்று சென்னை சட்டஸபையில் நடந்த வாதத்திலிருந்து ஏழை மிராசுதார்களின் கஷ்டங்களை கவர்ன்மெண்டார் நன்றாயறிய வில்லையென்று தெரிகிறது. தான்யங்களின் விலை உயர்ந்திருப்பதைப் பொறுத்து மறு ஸெட்டில்மெண்டு செய்யப்படுகிறது ; ஆனால் தான்யவிலை உயர்ந்திருப்பதிலிருந்து மிராசுதார்களுக்கு மிச்சமே

வில்லையென்று மிராசுதார்கள் பக்கத்தில் பேசினவர்கள் சொன்னார்கள். தன்னுடைய காலக்ஷேபத்துக்காக மிராசுதார் மாஸூலை உபயோகித்து விடுவதால், விற்க தான்யம் பாக்கி இல்லை; ஆகையினால் நெல்விலை உயர்ந்திருப்பதன் ப்ரயோஜனம் அவனுக்கு உண்டாகவில்லை என்று சொல்லப்பட்டது. இப்பொழுதுள்ள வரியைச்செலுத்துகிறதற்காகமிராசுதார் மாஸூலில் ஒரு பாகத்தை விற்கவேண்டியவனாயிருப்பதால், மேற்சொன்ன வாதம் தப்பென்று கனம் மிஸ்டர் கார்டியூ அபிப்ராயப்பட்டார். வரியைச் செலுத்தவேண்டியதற்காக இப்பொழுது எவ்வளவு நெல்லை விற்கிறானோ அவ்வளவு நெல்லையே உயர்ந்த விலைக்கு விற்று, புதிதாக ஏற்படும் அதிகத் தீர்வையைச் செலுத்திவிடலாமென்று அவர் சொன்னார். அந்தப் பிரஸ்தாபத்தை ஒட்டிக் கடைசியாகப் பேசினவர் அவரேயானதால், அவருடைய வாதம் தப்பென்று சட்ட சபையில் சொல்ல ஸந்தர்ப்பமில்லை. ஆகையினால் மிராசுதார்கள் பக்கத்தில் சொல்லவேண்டிய ந்யாயங்களை இப்பத்ரிகை வாயிலாக வெளியிடுகிறேன்.

கனம் மிஸ்டர் கார்ட்யூ என்ன சொன்னாரென்பதை ஒரு உதாரணத்தைக்கொண்டு விளக்கிக் காட்டுகிறேன். ஒருமிராசுதாருக்கு 3-ஏக்கர் நன்செய் நிலமிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். ஏக்கர் ஒன்றுக்கு எட்டரை ரூபாய் வீதம் மூன்று ஏக்கருக்கும் இருபத்தைந்தரை ரூபாய் அவன் வரிசெலுத்துகிறான். இந்தத் தொகை கிடைப்பதற்கு மகசூலில் ஒரளவை அவன் விற்கவேண்டியவனாயிருக்கிறான். பழைய திட்டப்படி அந்த மூன்று ஏக்கரிலும் விளையும் மகசூலின் மதிப்பு ரூபா 90. இப்பொழுது ஸெட்டில்மெண்டு ஆபீஸர் ஏற்படுத்தியிருக்கிற கணக்குப்படி அந்த மூன்று ஏக்கரிலும் விளையும் மகசூலின் க்ரயம் ரூபா 150. முன்பு $25\frac{1}{2}$-ரூபாய்க்கு விற்ற லை இப்பொழுது $42\frac{1}{2}$-ரூபாய்க்கு விற்கக் கூடும். ஆனால் இப்பொழுது மறு ஸெட்டில்மெண்டுப்படி அந்த மூன்று ஏக்கருக்கும் ஏற்படும் தீர்வை ரூ. 31—14—0. ஆகையால் மறு ஸெட்டில்மெண்டுப்படி ஏற்படும் அதிகத் தீர்வையைக் கொடுத்துவிட்டு, ரூ. 10—10—0 மிராசுதாருக்கு மிச்சப்படுமென்று கூட கனம் மிஸ்டர் கார்டியூ சொல்லுவார் போலும். ஆகையால் இந்த வாதத்தைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். இப்பொழுதிருக்கும் ஸெட்டில்மெண்டுப்படி 90-ரூபாய் வரும்படியிலிருந்து ஸர்க்காருக்கு மிராசுதார் $25\frac{1}{2}$-ரூபாயைக் கொடுத்துவிட்ட பிறகு, $64\frac{1}{2}$-ரூபாய் அவனுக்கு மிச்சப்படுகிறது. அதாவது மாதமொன்றுக்கு ரூ 5-6-0. இந்த வரும்படியைக் கொண்டு மிராசுதார் தானும் காலட்சேபஞ் செய்து கொண்டு, ஸாகுபடிச்செலவையும் செய்யவேண்டும். இந்த நிலைமையிலிருக்கிறவனுக்கு வரிவிதித்ததே தப்பல்லவோ? இப்பொழுது விலையுயர்ந்திருந்தாலும், அதேமிச்சம் அவனுக்குக் கிடைப்பதல்லாமல், ரூ. 10-10-0, வேறுகிடைக்குமாம். இதைக்கொண்டு அதிகமாகிவிட்ட காலட்சேபச் செலவுகளையும் அவன் செய்துகொண்டு, அதிகமாகி விட்ட சாகுபடிச் செலவையும் செய்து கொள்ளவேண்டும். கூலியாட்கள் அன்யதேசங்களுக்குப்போய் விடுவதாலும், மதுரைப்பட்டணத்திற்குப்போய்க் கூடுவதாலும், பெரியாற்றுப்பாசனத்திலுள்ள நிலங்கள் நன்செய் நிலங்களாக மாறிவருகிறபடியாலும், மதுரை ஜில்லாவிலுள்ள நாட்டுப்புறங்களில்கூலியாட்கள் அரிதாய்விட்டதாக கனம் மிஸ்டர் ராமய்யங்கார் சொன்னார். ஆகையினால் ஆட்களுக்கு மிராசுதார் முன்னிலும் அதிகமாகக் கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. மாட்டின் விலையும் ஏறிவிட்டது. பழைய க்ரயத்துக்கு இப்பொழுது எரு கிடைக்கவில்லை. இத்யாதி காரணங்களால் தான்ய விலை உயர்ந்திருப்பதிலிருந்து மிராசுதாருக்கு யாதொரு ப்ரயோஜனமும் மேற்படவில்லை. முன்னிலும் ஏழ்மைத்தனம்



தான் அதிகரித்திருக்கிறது. கவர்ன்மெண்டாரோவென்றால் இக்காரணங்களைக் கவனிக்காமல் தான்ய விலை உயர்ந்திருப்பதில் தங்களுக்குப் பங்கு வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். கனம் மிஸ்டர் கார்டியூ சொன்ன பதில் த்ருப்தியாயிருக்கிறதாவென்பதை 'மித்திரன்' நேயர்கள் இப்பொழுது யோசித்துப் பார்க்கட்டும்.

நாம் உதாரணத்துக்கு எடுத்துக்கொண்ட மிராசுதார்களைப்போன்ற மிராசுதார்கள் வேறு வேலைகளைச் செய்து தங்களுடைய வரும்படியை அதிகப்படுத்திக் கொள்ளுகிறார்களென்று ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் பரம்பரையாகச் சொல்வது வழக்கமாயிருக்கிறது. அவர்களுடைய காலக்ஷேபத்துக்குக் குறைந்தது எவ்வளவு தேவையோ அவ்வளவு அவர்களுக்குக் கிடைக்கும்படி கவர்ன்மெண்டார் விடுகிறதில்லை என்ற வாதத்துக்கு மேற்சொன்ன வாதம் பதிலாகாது. ஆனால் இந்த வாதமும் சரியான ஆதாரத்தின் மேல் ஏற்பட்டதல்ல. ஸ்வல்ப மிராசுதார்கள் எல்லோருமே கூலிவேலை செய்யக்கூடியவர்களல்ல; அவர்கள் நிலத்தண்டையிருக்கவேண்டுமேயல்லாது பட்டணங்களில் கூலிவேலை அகப்படுமா என்று தேடிப்போக முடியாது; நாட்டுப்புறங்களிலும் வேலை கிடைக்காது; ஏனென்றால் நடவுகாலத்திலும் அறுப்பு காலத்திலுந்தான் கூலியாட்களுக்கு க்ராக்கி உண்டு. க்ராக்கியிருக்கிற காலத்தில் தங்கள் நிலத்தில் உழைக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள்; ஆகையினால் வயிற்றுக்கில்லாமல் அநேகம் ஏழைகள் குற்றங்களைச் செய்யத் துணிந்துவிடுவது ஆச்சரியமல்ல.

நிலவிலை உயர்ந்திருப்பதைப்பற்றி கனம் மிஸ்டர் கார்ட்யூ ப்ரமாதமாக ஒரு ஜாப்தாவைப் படித்தார். ஆனால் இந்தக் காலத்தில் நிலம் வாங்குகிறவர்கள் யார் என்று அவர் விசாரித்தாரோ? கனம் மிஸ்டர் ராமய்யங்கார் சொன்னதுபோல் அநேகம் ஜனங்கள் ரங்கூனுக்கும், சிங்கப்பூருக்கும், ஸிலோனுக்கும் போய்விடுகிறார்கள். அங்கே அவர்களுள் செத்துப்போய்விட்டவர்களும் துன்மார்க்கிகளாய் விட்டவர்களும் போக பாக்கியுள்ளவர்கள் தங்கள் ஸம்பாத்யத்தில் மிஞ்சினதைக் கொண்டுவந்து நிலம் வாங்குகிறார்கள். உடனே அவர்களை கஷ்டம் பிடித்துக் கொள்ளுகிறது. நிலத்தில் கிடைக்கும் மகசூலானது தங்களுடைய காலட்சேபம், ஸர்க்கார் கிஸ்தி, இரண்டுக்கும் போதாதென்பது அவர்களுக்கு அனுபோகத்தில் தெரியவருகிறது. கடன் வாங்க ஆரம்பித்துக் கடனில் மூழ்கிப்போகிறார்கள். வெகு ப்ரமைப்பட்டு வாங்கின நிலத்தை விற்றுவிடவேண்டி நேருகிறது. அக்கரைச் சீமைகளிலிருந்து புதிதாகத் திரும்பி வந்தவர்கள் அதை வாங்கத் தயாராகவிருக்கிறார்கள். இவ்விதமாகக் காரியங்கள் சுழன்றுகொண்டே இருக்கின்றன. சிறிது ஸம்பாதிக்கிறான், உடனே நிலம் வாங்குகிறான், உடனே கடன் படுகிறான், கடைசியாக நிலத்தை விற்றுவிடுகிறான். இந்தச் சுற்று ஒரு தடவை சுழன்றுவர வெகு நாளாகிறபடியால், மேலெழுந்தபடி பார்க்கிறவர்களுக்கு அது கண்ணில் படாது. ஐரோப்பிய உத்யோகஸ்தர்கள் அநேகமாக மேலெழுந்த பார்வை பார்க்கிறவர்கள்தான்; க்ராமங்களில் ஜனங்களுடன் வாழ்ந்து விஷயங்களை கவனித்தால்தான் மேற்சொன்னபடி நடக்கிறதாகத் தெரியும். தஞ்சாவூர் ஜில்லாவில் இம்மாதிரி எத்தனையோ பெயர்கள் வாங்கினதும் விற்றதும் எனக்குத் தெரியும். மதுரையிலும் வேளாண்மையின் நிலைமை தஞ்சாவூரிலிருப்பதுபோல் இருப்பதால் அங்கும் அப்படித்தானிருக்கும். இவ்விஷயமாக கனம் மிஸ்டர் ராமய்யங்கார் விசாரணை செய்யும்படி செய்வாரென்று நம்புகிறோம்.

இம்மாதிரி ஆவலுடன் நிலம் வாங்குகிற வேறொரு வகுப்பாரும் உண்டு. அவர்கள் அன்ய தேசங்களுக்குப் போய் ஸம்பாதித்துக்கொ[illegible]

வந்தவர்களல்ல ; ஸர்க்கார் உத்யோகம் செய்தும், லாபகரமான வ்யாபாரத் துறையிலும் ஸம்பாதித்தவர்களை நான் குறிப்பிடுகிறேன். பாங்கிகள் முறிந்து போய், ஜனங்களுக்குப் பயமேற்பட்டவுடன், அவர்கள் நிலம்வாங்க ஆரம்பித்தார்கள். அந்த பயம் இப்பொழுது தணிந்து வருகிறதாயினும், மேற் சொன்னவர்களில் பலர் நிலம் வாங்கிக்கொண்டுதா னிருக்கிறார்கள், ஆனால் மதுரை ஜில்லாவில் மொத்தம் மிராசுதார்களில் 100-க்கு 2-பெயர்தான் மேற் சொன்ன வகுப்பார் நிலம் வாங்குகிறவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் கையிலுள்ள ஸொத்தை யெல்லாம் நிலத்தில் போட்டுவிடுகிறதில்லை. வட்டி பென்ஷன் முதலிய வரும்படி அவர்களுக்கிருந்து கொண்டேயிருப்பதால், அதைக்கொண்டு ஸர்க்கார் கிஸ்தியைச் செலுத்திவிட்டு தங்களுடைய இஷ்டப்படி விலை வருகிறகாலத்தில் நெல்லை விற்றுக் கொள்ளுகிறார்கள், நிலமில்லாத கூலியாட்கள் அவர்கள் சொன்னதைக் கேட்க வேண்டியவர்களாக விருக்கிறார்கள். நீர்த்தட்டேற்படக்கூடாத நல்ல இடங்களிலேயே அவர்கள் நிலம் வாங்குகிறார்கள். மேற் சொன்ன காரணங்களால் அவர்களுக்குக் கூலியாட்கள் தட்டாமல் கிடைக்கிறார்கள். இக்காரணத்தால் தான் பெரிய தொகைக்குக் குத்தகை விடக்கூடியவர்களாயிருக்கிறார்கள். இந்த வகுப்பு மிராசுதார்கள் தேசத்துக்கு முற்றிலும் நன்மையுண்டாக்கக் கூடியவர்களல்ல வென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் ; அவர்கள் போட்டிருக்கிற முதலுக்குத் தகுந்த லாபம் அவர்களுக்குக் கிடைக்கவேண்டியிருப்பதால் எவ்வளவு உயர்ந்த குத்தகைக்கு நிலத்தை அடைக்கலாமோ அவ்வளவு உயர்ந்த குத்தகைக்கு அடைக்கிறார்கள், இந்தக் காரணத்தால்தான், கவர்ன்மெண்டார் அவர்களுக்குக் கனமான வரி விதிக்க உத்தேசிக்கிறார்கள் போலும். ஸெட்டில்மெண்டு செய்யும் பொழுதெல்லாம், கவர்ன்மெண்டுக்கும் உழுகிறவனுக்கும் நடுவிலுள்ள மிராசுதாரே கவர்ன்மெண்டினுடைய கண்ணில் பெரிதாகப்படுகிறான். ஆனால் இந்தமாதிரி மிராசுதார் ஒருவன் இருப்பானானால் 100-பெயர்கள் ஸ்வல்ப நிலமுள்ள மிராசுதார்களாய் இருக்கிறார்கள் என்பதையும், அந்த ஒருவனுக்கேற்படும் தீர்வை மற்ற 100-பெயர்களையும் நசுக்கிவிடு மென்பதையும் கவர்ன்மெண்டார் மறந்துபோய்விடுகிறார்கள். ஆகையினால் செய்யவேண்டிய பரிகாரம் ஒன்றேயுள்ளது ; அடிக்கடி நிலத் தீர்வையை உயர்த்துவதை ஒழித்துவிட வேண்டும் ; நிலத்துக்கு மிதமான ஒரு தீர்வையை விதிக்கவேண்டியது; பணக்கார மிராசுதார்களிடமிருந்து இன்கம்டாக்ஸ் (வருமான வரி) வஸூலித்துக்கொள்ளட்டும் ; நிலவரும்படிக்கு வருமானவரி கிடையாதென்கிற விதியை ரத்து செய்து விடட்டும் ; இந்த யோசனையை கவர்ன்மெண்டார் ஆழ்ந்த கருத்துடன் சிந்தித்துப் பார்ப்பார்களாக. இது ஸம்பந்தமாக பாக்கி ஒரு விஷயத்தை மாத்ரம் சொல்லிவிடுகிறேன் ; குத்தகைப் பத்ரப்படி குத்தகைத் தொகை பெரிதாகத்தா னிருக்கிறது. ஆனால் வஸூலாகிறதுதான் கொஞ்சமாக விருக்கிறது.

சென்ற 27-ந்தேதி நடந்த வாதத்திலிருந்து, நிலவரியைத் திருத்தும் விஷயத்தில் நிர்வாக அதிகாரிகளின் அதிகாரத்தைச் சட்ட பூர்வமாக அடக்கவேண்டியது அவச்யமென்று விளங்குகிறது. மிராசுதார்கள் எப்படி தங்களுடைய வருமானம் அதிகப்படவேண்டுமென்று நினைக்கிறார்களோ, அதேமாதிரி கவர்ன்மெண்டும் தங்களுடைய வருமானம் அதிகப்படவேண்டுமென்று நினைக்கிறார்கள். இப்பொழுதிருக்கிற "எஸ்டேட் லாண்டு ஆக்ட்" என்ற சட்டத்தைச் செய்வதற்காக ஸர் ஜியார்ஜ் போர்ப்ஸ் சட்டசபையில் ஒரு மசோதாவை ஆஜர் செய்த பொழுது, ஜமீன்தார்கள் ஓடும் நீரோட்டத்துக்கு ஸமானமென்றும், அவர்களுடைய குடிகள் அந்த



நீரோட்டத்தின் இருகரைக்கும் ஸமானமென்றும் சொன்னார் ; ஆறானது கொஞ்சங் கொஞ்சமாகக் கரைகளை அறுத்துவிடுவதுபோல், ஜமீன்தார்களும் கொஞ்சங் கொஞ்சமாகக் குடிகளின் லாபத்தை அரித்துவிடுகிறார்கள் என்று சொன்னார். இந்த உபமானம் கவர்ன்மெண்டாருக்கும் நன்றாகப் பொருந்துகிறதென்று நான் நினைக்கிறேன். ஜமீன்தார்கள் சிற்றாறுகளுக்கு ஸமானம்; ஆனால் கவர்ன்மெண்டாரோ வென்றால், உடைப்பெடுத்து விஸ்தாரமான பூமிகளைப் பாழாக்கிவிடும் கங்கைபோன்ற பெரிய நதிகளுக்கு ஸமானம் ; ஜமீன்தார்களை அடக்க கவர்ன்மெண்டார் என்ன விதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்களோ அவைகளை விடக் கண்டிப்பான விதிகள் அவர்களுக்கே அவச்யம். சட்டத்தினால் நிர்வாக அதிகாரிகளின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்பதற்கு இன்னொரு காரணமுண்டு. ஸெட்டில்மெண்டு என்ன நியமத்தின் மேல் ஆதியில் ஏற்பட்டதென்பதை மறந்து விடுகிறார்கள். ஒவ்வொரு ஸெட்டில்மெண்டின் பொழுதும், ஒவ்வொரு புதுக் காரணம் சொல்லுகிறார்கள். வடஆற்காடு ஜில்லாவில் மறு ஸெட்டில்மெண்டு செய்யப்பட்டபொழுது, தன்னுடைய நிலத்தை ஒருவன் தானே சாகுபடி செய்து கொள்ளும் செலவைக் கணக்கில் சேர்க்கவில்லை. அது பிசகென்று சட்ட சபையில் சொல்லப்பட, அப்பொழுது, பிசகென்று கவர்ன்மெண்டு ஒப்புக்கொள்ள வில்லையாயினும், பிறகு ஒப்புக்கொண்டார்கள். சித்தூர் ஜில்லாவில் மறு ஸெட்டில்மெண்டு செய்யப்பட்டபொழுது, உழுகிறவனுக்கும், கவர்ன்மெண்டுக்கும் நடுவிலுள்ள மிராசுதாரனைப் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவந்து அவனுடைய க்ஷேமத்தைப் பற்றித் தாங்கள் கவலைப்படவில்லை யென்றார்கள். ஆனால் தானே உழுது சாகுபடி செய்கிறவனுடைய பளுவை அதிகப் படுத்தாமல், நடுவிலுள்ள மிராசுதாருக்கு மாத்ரம் எப்படி அதிக வரி விதிக்கிறதென்று அவர்களுக்கு யோசனை தெரியவில்லை மதுரை ஜில்லா மறு ஸெட்டில்மெண்டில் ஒரு புதிய காரணம் கிளம்பியிருக்கிறது. செலவு போக மிச்சத்தில் பாதி சர்க்காருக்கு சேரவேண்டுமென்று லார்டு கர்ஸன் பிடிவாதம் செய்த முறையைக் கைவிட்டு விட்டார்கள். ஸெட்டில்மெண்டு ஆபீஸர் சொல்வதானது பின்வருமாறு சொல்வதுபோலிருக்கிறது :—

"நூறு ரூபாயாகவிருந்த விலை இப்பொழுது, 160-ரூபாயாக உயர்ந்திருக்கிறது. நீங்கள் சௌக்கியமாக விருக்கிறதாக எனக்குத் தெரிகிறது. ஆகையினால் இப்பொழுதுள்ள தீர்வையை நான் கால் பங்கு உயர்த்துகிறேன். இந்தக் கால்பங்கானது முதல்தர நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 10-10-0 ஆகின்றது. மொத்த வரும்படி 50-ரூபாயிலிருந்து இதைக் கழித்து உங்களுக்கும் அவ்வளவு கழித்தால் மொத்தம் ரூபா 24-4-0 - ஆகிறது. ஆகையால் உங்களுக்கு 28-12-0-மிச்சப்படுகிறது ; அதாவது பாதிக்கு மேலாகிறது. எவ்வளவு தாராளம் பாத்தீர்களா."

இந்த தாராளத்தைக் கனம் மிஸ்டர் கார்டியூவும் சட்டஸபையில் எடுத்துச் சொன்னார். இப்பொழுது ஏற்படும் அதிகத் தீர்வையானது மொத்த வரும்படியில் ஐந்தில் ஒரு பங்காய் விடும். நான் சொல்வது என்ன வென்றால், தயவுகாட்ட வேண்டாம்; ந்யாயம் மாத்ரம் போதும்; சாகுபடிச்செலவை ஜாக்ரதையாக கணக்கிட்டுப் பாருங்கள் ! பிறகு மிச்சத்தில் பாதி என்ன என்று கண்டுபிடியுங்கள். கனம் மிஸ்டர் ராமய்யங்கார் ஒரு கணக்குத் தயார் செய்திருக்கிறார். அதன்படி தண்ணீர் தீர்வை தவிர மற்றச்செலவுகள் எல்லாம் சேர்ந்து ஒரு ஏகருக்கு ரூ 37-12-0 ஆகிறது. தண்ணீர்த் தீர்வை அவர் போட்டிருப்பது ஜாஸ்திதான். மற்றச் செலவுகளை கவர்ன்மெண்டு தரப்பில் ஆட்சேபிக்கவில்லை. பக்கத்து ஜில்லாக்களில் சாகுபடிச் செலவு இ

ஆகிறதென்று சொன்னார்கள். மதுரை ஜில்லாவின் நிலைமை மற்ற ஜில்லா நிலைமையைப் போலல்லவென்று கனம் மிஸ்டர் ராமய்யங்கார் எடுத்துச் சொன்னது வெகு சரி. அவருடைய கணக்கை ஒப்புக்கொண்டால், செலவுபோக மிச்சத்தின் க்ரயம் ஏகர் ஒன்றுக்கு ரூபாய் 12-4-0 ஆகும். அதில் பாதி ரூபாய் 6-2-0. இந்தக் கணக்குப்படி இப்பொழுதிருக்கிற தீர்வையைக் குறைக்கவேண்டுமே யல்லாது, உயர்த்தக் காரணமில்லை.

ஆகையால், சொல்லியிருக்கிற விஷயங்களை 'மித்திரன்' நேயர்கள் நன்கு ஆலோசிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விஷயம் மதுரை ஜில்லாவை மாத்ரம் பொருத்ததல்ல. இந்த வாதங்களை கவர்ன்மெண்டார் மற்ற ஜில்லாக்களுக்கும் ப்ரயோகிக்கலாம். ஆகையால் கவர்ன்மெண்டாருக்கு நிச்சயத்தை உண்டுபண்ணக்கூடிய விஷயங்களை அறிவிக்க வேண்டியது அவச்யம். வருத்தத்தின்மேல் நான் இக்கடிதத்தை எழுதவில்லை. ஜனங்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய கவர்ன்மெண்டார் கவலையுடையவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் ஜனங்கள் பணக்காரர்களென்றும், கொடுக்கக் கூடியவர்களென்றும் ஒரு நிரந்தரமான அபிப்ராயம் அவர்களுக்கிருக்கிறது. இந்த அபிப்ராயத்தை மாற்ற, வாதங்களை எடுத்துச் சொல்வது போதாது; விஷயங்களை உரு உருவாய்க் காட்டவேண்டும். இவ்விஷயத்தைப் பத்ராதிபரும் பத்ரிகையை வாசிப்போரும் கவனிப்பார்களாக.

## COUNTERFEIT COINS.

**போலி நாணயங்கள்.**—எவரும் போலி நாணயங்கள் தங்கள் கையில் வராதபடி பார்த்துக்கொள்வதில் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். எப்போதும் ரூபாயை தட்டியோ, சுண்டியோதான் வாங்கவேண்டும். வாங்கும்போது ரூபாயை நன்றாய் சோதித்து வாங்குவது நல்லது. செலாவணியிலிருந்து வரும் போலி ரூபாய்களில் சில, வாஸ்தவமான ஸர்க்கார் ரூபாயைப் போலவே இருக்கின்றன. ஆனால் அவைகள் ரொம்ப ஸ்வல்பம். வார்ப்பு ரூபாய்கள் தான் ரொம்ப செலாணிவயிலிருந்து வருகின்றன. இவைகளை யாவரும் சற்று உற்றுப்பார்த்து சோதித்துத் தட்டி சத்தம் சரியாயிருக்கிறதா என்று பார்ப்பதாலேயே கண்டு பிடித்துவிடலாம்.

போலிநாணயம் செய்பவர்களில் சிலர் நாணயங்களை ஜனங்களிடம் கொடுக்கப் பின் வருமாறு செய்கிறார்களாம். தப்பு ரூபாய் செய்பவன் கடைத்தெருவுக்குள் போய் கடைக்காரர்களினிடத்தில் தன்னிடம் செம்பு நாணயங்கள் ஏராளமாயிருக்கின்றன வென்றும், ரூபாய்க்கு 17 அணா வீதம் கொடுப்பதாகவும் சொல்லுவான். வெகுவாய் கடைத்தெருவில் இருக்கும், பார்வை குறைந்த கிழவிகளினிடத்தில் தான் இப்படி சொல்வது வழக்கம். ஓரணா அதிகமாய் வருகிறதென்று ஸந்தோஷங்கொண்ட கிழவி செம்பு நாணயங்களை எண்ணி வாங்கிக்கொண்டு, தன்னிடமுள்ள ஸ்வய ரூபாயைக் கொடுப்பாள். அவன் ரூபாயைப் பரிசோதிப்பவன்போல் பாசாங்குசெய்து, பிறகு அந்த ரூபாய் தனது நாட்டில் செல்லாதென்றும், ஆகையால் ரூபாய் வேண்டாமென்றும், "செம்பு நாணயங்களைத் திருப்பிக் கொடுத்து விடலாமென்றும் சொல்லி கிழவிகொடுத்த ரூபாயை மறைத்துக்கொண்டு தன்னிடமுள்ள போலி ரூபாயை அவளிடம் கொடுத்து, செம்பு நாணயங்களை வாங்கிக்கொள்வான்.



# Departmental Notes.
# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.
## வித்யாவிஷயம்.

### A New Type of Agricultural School.

ஒருபுதுமாதிரியான விவஸாயப் பள்ளிக்கூடம்.—பரம்பரையாக விவஸாயம் முதலிய தொழில்கள் செய்துவரும் ஜனங்களுடைய பிள்ளைகளுக்கு ஸாதாரணக் கல்வி கற்றுக் கொடுத்தால் அந்தப்பிள்ளைகள், கல்வியினால் வீண் பெருமைகொண்டு தங்களுடைய முன்னோர்களின் தொழில்களைப் பின்பற்ற ப்ரியமில்லாதவர்களாயிருக்கிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு ஸாதாரண மூலாதாரப் படிப்போடு, அந்தப் பிள்ளைகளின் முன்னோர்கள் செய்துவந்த தொழில்களையும் கற்றுக்கொடுத்து வந்தால், அவர்களுக்கு ஜாதித்தொழில்களில் வெறுப்பு ஏற்படாமலிருக்கலாமென்று தோன்றுகிறது. பம்பாய் ராஜதானியில் கொலாபா ஜில்லாவைச்சேர்ந்த வெஷ்வி என்னும் ஊரில் சில ப்ரமுகர்கள் இந்த அபிப்ராயத்துடன் 1912-ம் வர்ஷத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார்கள். இது இப்போது ரொம்ப த்ருப்திகரமாக நடந்துவருகிறதென்று தெரியவருகிறது. இந்தப் பள்ளிக்கூடத்தில் கணிதம், பாஷைப்பாடம் ஆகிய இவைகளைக் கற்றுக்கொடுப்பதோடு விவஸாயத்தையும் அனுபவரீதியாகக் கற்றுக்கொடுக்கிறார்கள். அதோடு பிள்ளைகளுக்கு இயற்கைப்பாடத்தில் ப்ரியமும் ஊக்கமும் ஏற்படும்படி முயற்சிசெய்து வருகிறார்கள். பள்ளிக்கூடம் ஆரம்பித்தபோது அந்த ஊரிலிருந்தும் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஸுமார் 40-பிள்ளைகள் அதில் சேர்ந்தார்கள். முதலில் 3-வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 2. உபாத்யாயர்கள் நியமிக்கப்பட்டார்கள். 1913-ம் வர்ஷத்தில் விவஸாயத்தில் உயர்ந்த பரீக்ஷையில் தேறிய ஒரு உபாத்யாயரை அந்தப் பள்ளிக்கூடத்துக்கு தலைமை உபாத்யாயராக நியமித்தார்கள். தற்போது அதில் 5-வகுப்புகள் இருக்கின்றன. வேண்டிய அளவு உபாத்யாயர்களும் இருக்கிறார்கள். சில பிள்ளைகளுக்கு உபகாரச்சம்பளமும் கொடுத்து வருகிறார்கள். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலேயே வஸிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் வேண்டிய வஸதிகளை அமைத்திருக்கிறார்கள். ஸாதாரண பாடங்களோடு, விவஸாய சாஸ்த்ரம், விவஸாய முறைகள் (இவைகளை அனுபவ ரீதியாய்ச் செய்து காட்டுகிறார்கள்), கோழிவளர்த்தல், பூச்செடிகள் வளர்த்தல், மூங்கில்களைக்கொண்டு ஸாமான்கள் செய்தல், கயிறுசெய்தல், தச்சுவேலை, பால், வெண்ணெய் தயார்செய்தல், ஆகிய இவைகளைப்பற்றியும் கற்றுக்கொடுத்து வருகிறார்கள்.

இந்தப் பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்களின் தொகை ரொம்ப அதிகரித்திருக்கிறது. அந்த ஊரிலும் பக்கத்து க்ராமங்களிலும் உள்ள சிறுவர்களில் சிலபேர்கள்தான் பள்ளிக்கூடத்தில் சேராமலிருக்கிறார்களாம்.

இந்தப் பள்ளிக்கூட ஏற்பாட்டில் ஒரு விசேஷமென்னவென்றால், இதை நடத்த அதிக செலவு பிடிப்பதில்லையாம். எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் முதலில் கட்டிடம் முதலியவற்றிற்கு செலவு ஏற்படுவதுபோலவே இதற்கும் செலவு ஏற்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்துக்கு விவஸாயத்திலும் மற்ற தொழில்களிலும் கிடைக்கும் வரும்படியானது நிலத்தின் குத்தகை, ஸாகுபடிச் செலவு ஆகிய இவைகளைவிட ரொம்ப அதிகமாயிருக்கிறதாம். இப்படி ஏற்படும் லாபத்தால் பள்ளிக்கூடச் செலவு ரொம்ப குறைந்து விட்டதென்று தெரிகிறது. பிள்ளைகளும் விவஸாயத்தில் அதிக ஊக்கமுள்ளவர்களாயிருக்கிறார்களாம். நமது ராஜதானியிலுள்ள தனவந்தர்கள் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தால் விவஸாய அபிவ்ருத்திக்கும், கல்வியபிவ்ருத்திக்கும் ரொம்ப ஸாதகம் ஏற்படும்.

### A University for Mysore.

மைஸூரில் ஒரு ஸர்வகலாசாலை.—மைஸூர் மகாராஜாவும் அவருடைய திவானும் பங்களூரில் ஒரு ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதைப்பற்றி கவனம் செலுத்திவருகிறார்களாம். மைஸூர் கவர்ன்மெண்டார் யூனிவர்ஸிட்டியைப்பற்றி ஒரு ஸ்கீம் தயார் செய்திருக்கிறார்களாம். ஸமீபத்தில் மைஸூர் திவான் ஸிம்லாவுக்குப் போயிருந்தபோது அவர் இந்தியா கவர்ன்மெண்டாரோடு இதைப்பற்றிப் பேசினாராம். சீக்ரம் யூனிவர்ஸிட்டி ஸ்தாபிக்கப்படுமென்று சொல்லுகிறது.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

**Sangeetha Prakasika.**

**ஸங்கீத ப்ரகாசிகை.**—இது ஸங்கீத வித்வான் கே. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரால் நடத்தப்பட்டுவரும் ஸங்கீதம், பரதசாஸ்த்ரம் முதலியவை ஸம்பந்தமான ஒரு மாஸப் பத்ரிகை. இதில் ராகங்களின் லக்ஷணங்கள், ஸங்கீத வித்வான்களின் சரித்ரக்குறிப்புகள், கீர்த்தனங்கள் முதலியவை வெளிவருகின்றன. இதில் எல்லா விஷயங்களும் தெலுங்கு தமிழ் ஆகிய இரண்டு பாஷைகளில் எழுதப்படுகின்றன. தமிழ் மாத்ரம் தெரிந்தவர்கள் அன்ய பாஷைக் கீர்த்தனைகளை சரியான உச்சரிப்போடு வாசிக்க ஒரு ஸுலபமான முறையில் அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இது இந்தப் பத்ரிகையின் ஒரு சிறந்த லக்ஷணமாகும். ஸங்கீத ரத்னாகரம் என்னும் ஸங்கீத சாஸ்த்ரம் மொழிபெயர்ப்புடன் இதில் வெளிவருகிறது. இதன் வர்ஷ சந்தா ரூ. 6. வேண்டுவோர் கே. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், பத்ராதிபர், ஸங்கீத ப்ரகாசிகை, போஸ்ட் பாக்ஸ் 199, ஜி. பி. ஒ., மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**On the Date of "Sri Manickkavachakar".**

**மாணிக்கவாசகர் கால வாராய்ச்சி.**—இது திருவாங்கூரைச்சேர்ந்த கே.ஜி.சேஷய்யரால் எழுதப்பட்டு, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 13-ம் வர்ஷத்து மீட்டிங்கில் வாசித்த வ்யாஸமாகும். இதை ராமநாதபுரம் ஜில்லா கொத்தமங்கலத்தைச்சேர்ந்த வி.எ.வி. காசிநாதன் செட்டியார் புஸ்தக ரூபமாக ப்ரசுரித்திருக்கிறார். இதில் மிஸ்டர் சேஷு அய்யர், மாணிக்கவாசகருடைய காலத்தைப்பற்றிப் பற்பல வித்வான்கள் சொல்லியிருக்கும் அபிப்ராயங்களை ஆராய்ச்சிசெய்து, மாணிக்கவாசகர் கி. பி. நான்காவது நூற்றூண்டிற்குப் பின்பட்டவரல்லவென்றும், ஒருவேளை 3-ம் நூற்றூண்டில் இருந்திருக்கக் கூடுமென்றும் சொல்லுகிறார். இந்த நூல் தமிழபிமானிகளுக்கும் சரித்ர ஆராய்ச்சிக்காரர்களுக்கும் ரொம்பவும் பயன்படும். வேண்டுவோர் ராமநாதபுரம் ஜில்லா, கொத்தமங்கலம், வி. எ. வி. காசிநாதன் செட்டியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Nalinakshi.**

**நளினாக்ஷி**—இது கே. பி. சேஷாத்ரி அய்யங்கார் இயற்றிய ஒரு நாவல். இதில் பெண்களைக் கிழவர்க்குக் கல்யாணம் செய்வதால் ஏற்படக்கூடிய கெடுதிகளைப்பற்றியும், பதிவ்ருதாதர்மத்தின் மேன்மையைப் பற்றியும் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஆங்காங்கே ஸமயோசிதமாக இனிமையான செய்யுள்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் நடை இனிமையாயிருக்கிறது. இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஜி.எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3,4, கொண்டி செட்டித் தெரு, என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்,

**Bharatha.**

**பரதன்.**—இது தனது தமையனாகிய ஸ்ரீராமனிடத்தில் அதி விச்வாஸம்கொண்டு, தனது கடமையைச் செய்து வந்த பரதருடைய சரித்ரமாகும். இதை இயற்றியவர் வரகவி-திரு-அ. ஸுப்ரமண்ய பாரதியார். இதன் நடை ஸுலபமாகவும், இனிமையாகவும் இருக்கிறது. பள்ளிக்கூடத்து பிள்ளைகள் யாவரும் வாசிக்கவேண்டிய புஸ்தகங்களில் ஒன்று. இது துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை 5-அணா. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டிசெட்டித் தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**Biographies of Great Women of India.**

**இந்திய மாதர் சரித்ரம் (முதல் பாகம்)**—இது தமிழ்ப்பண்டிதர் வா. பி. வெங்கடராமசாஸ்த்ரியார் எழுதியது. இதில் நமது தேசத்தில் பிறந்த உத்தமத ஸ்ரீகளில் 17-பேர்களுடைய ஜீவ்ய சரித்ரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகத்தின் நடை தெளிவாயும் ஸுலபமாயும் இருக்கிறது. எல்லா ஸ்த்ரீகளும் இதை வாசித்துப் பயனடையலாம். புஸ்தகத்தின் விலை அணா 5. வேண்டுவோர் ஆர். திருமலை அண்ட் கம்பெனி, 114, பழவக்காரத் தெரு, சென்னை என்றெழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

**Chintamani.**

**சிந்தாமணி.**—இது கும்பகோணம் வக்கீல் எஸ். எஸ். ராஜகோபாலய்யங்கார் எழுதிய ஒரு நாடகமாகும். இது பஞ்ச காவ்யங்களில் ஒன்றாகிய ஜீவகசிந்தாமணி என்னும் நூலை ஒருவாறு அனுஸரித்து எழுதப்பட்டிருக்கிறது. இதில் பற்பல பாட்டுகளும் செய்யுள்களும் ஸமயோசிதமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் நடை கொச்சையாயில்லாமல் நல்ல தமிழாயிருக்கிறது. இதன் விலை அணா 12. வேண்டுவோர், ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



## SCIENCE AND INVENTION.

## சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

**Invisible Aeroplane.**

**கண்ணுக்குத் தெரியாத ஏரோப்ளேன்.**—ஜெர்மானியர்கள் கண்ணுக்குத்தெரியாத சிறகுகளுள்ள ஒரு ஏரோப்ளேன் (ஆகாயக்கப்பல்) கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் சிறகுகள் கண்ணாடியைப்போல் வெளிச்சம் ஊடுருவிச் செல்லக்கூடியவை. அதனால் ஏரோப்ளேன் ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும்போது கீழிருப்பவர்களுக்கு அதன் சிறகுகள் கண்ணுக்குத் தெரிவதில்லையாம். ஸாதாரண ஏரோப்ளேன் பறந்துகொண்டிருக்கும்போது எதிரியின் ஆகாயக்கப்பல் அதைத் தாக்க வந்தால், ஏரோப்ளேனின் சிறகுகள், அதை ஓட்டுபவருக்கு எதிரிக் கப்பல் தெரியாதபடி மறைத்துக்கொள்ளும். அதனால் எதிரி ஆகாயக் கப்பல்கள் அதைத் தாக்குவது ஸுலபமாகும்.

புது மாதிரி ஏரோப்ளேனிலோ சிறகுகள் கண்ணாடிபோலிருப்பதால், அதில் உட்கார்ந்திருப்பவர் சிறகுகளின் வழியாக எதிரி ஏரோப்ளேன்கள் வருவதையறிந்துகொள்ளலாம். அது உயரப் பறந்துகொண்டிருக்கும்போது ஏரோப்ளேனை ஓட்டும் யந்த்ரமும் ஓட்டுபவனும் மாத்ரம் கண்ணுக்குத் தெரிவதாலும், அவர்கள் ரொம்ப சிறிதாகத் தெரிவார்களாதலாலும் அவர்களை நோக்கிச் சுடுவது கஷ்டம். குண்டுகள் சிறகுகளைத் தாக்கினாலும், அதிக கெடுதல் ஏற்படுவதில்லை.

**The Qualities of the First Born.**

**முதற்பிறந்த குழந்தைகளின் குணங்கள்.**—சில வர்ஷங்களுக்கு முன்னால் ஒரு மேல்நாட்டு டாக்டர் எந்தக் குடும்பத்திலாவது க்ஷயரோகம் இருந்து வந்தால், அந்த ரோகம் வெகுவாய் அந்தக் குடும்பத்தில் முதற்பிறந்த குழந்தைகளுக்கே வருகிறதென்று தெரிவித்தார். ஜெர்மனி, இங்க்லண்ட் முதலிய தேசங்களில் செய்த ஆராய்ச்சிகளால் இக்கொள்கை சரியென்று தெரிய வந்தது. தற்போது ஒரு வைத்யர், க்ஷயரோகமாத்ரமல்ல, பைத்யமும், குற்றம் செய்யும் குணமும் ஒருவருகிருந்தால், அந்த லக்ஷணங்கள் அவருடைய வம்சத்தில் வெகுவாய் முதற்பிறந்த பிள்ளைகளுக்குத்தான் ஏற்படுகின்றனவென்று தெரிவிக்கிறார். மேலும் முதலில் பிறந்த குழந்தைகளுக்கு அதிகமாய்ச் செல்லங்கொடுத்து கண்டபடி தின்னக் கொடுப்பதாலும், அவைகளை இஷ்டப்படி நடக்கவிட்டுக் கெடுப்பதாலுந்தான் அவைகளுக்கு கெட்ட குணங்கள் உண்டாகின்றனவென்று அவர் சொல்லுகிறார்.

**Waterproofing Uniforms.**

**உடைகளை ஈரமாகாதபடி செய்தல்.**—ப்ரெஞ்ச் ராணுவ அதிகாரிகள், தங்கள் ஸோல்ஜர்களுக்கு ஈரம் தாக்கக்கூடாத உடைகள் ஸப்ளை செய்வதைப்பற்றி சிலகாலமாக யோசனை செய்துவந்தார்கள். ஒரு ப்ரெஞ்ச் ரஸாயன சாஸ்த்ரி அவ்வித உடைகள் செய்வதற்கு ஒருவழி கண்டுபிடித்திருக்கிறாராம்.

ஆட்டு ரோமத்தை சுத்தம் செய்யும்போது அதிலிருந்து ஒருவித கொழுப்பு கிடைக்கிறது. அந்தக் கொழுப்பை சில த்ரவங்களுடனும் மருந்துகளுடனும் கலந்து அதில் ஆடைகளைப் போட்டு சில நிமிஷநேரம் ஊறவைத்துப்பிறகு எடுத்து காயவைத்தால் அவைகளில் ஈரம் தாக்குவதில்லையாம். இவ்விதம் தயார்செய்வதில் உடைகளின் நிறமும் நூலின் உறுதியும் கெடுவதில்லையாம்.

**Heat of Slaked Lime.**

**தாளித்த சுண்ணும்பின் உஷ்ணம்.**—சுண்ணும்புக் கல்லை தாளிக்கும்போது ரொம்ப சூடு உண்டாகிறது. ரொம்பதாழ்ந்த சுண்ணும்புக்கல்லை தாளிக்கும்போது ஸெண்டிக்ரேடு தெர்மாமிடர் படி 300-டிக்ரி உஷ்ணம் உண்டாகிறது. அதாவது ஜலம் கொதிக்கும்போது என்ன உஷ்ணம் ஏற்படுமோ அதைப்போல் 3-மடங்கு உஷ்ணம் ஏற்படும். உயர்ந்த சுண்ணும்புக்கல்லைத் தாளிக்கும்போது ஸெண்டிக்ரேட் தெர்மாமிட்டர் படி 400-டிக்ரி சூடு ஏற்படும். இந்தச் சூட்டினால் மரங்கள் சுட்டுக் கரியாகி விடுமாதலால், சுண்ணும்புக்கல்லை கப்பல், படகுகள் மூலமாக, மரத்தினால் செய்த பீப்பாய்களில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு அனுப்புவது நல்லதல்லவாம்.

**Seeing by Wire.**

**தந்திக்கம்பி மூலமாய்ப் பார்த்தல்.**—மின்ஸாரத் தந்தியேற்பாடு வரவர அபிவ்ருத்தியடைந்து வருகிறது. தற்போது தந்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி, கம்பியில்லா டெலிபோன் முதலிய ஸாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திலிருந்து வருகின்றன. கொஞ்சகாலத்துக்கு முன்னால் படங்களைத் தந்தி மூலமாக அனுப்ப ஒரு ஸாதனம் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது ஒரு மேல்நாட்டு வித்வான் தந்தி மூலமாய் தூரமான விடங்களிலுள்ளவைகளைப் பார்ப்பதற்கு ஒரு ஸாதனம் கண்டுபிடித்திருக்கிறார். இந்த ஸாதனத்தை எல்லாருக்கும் பயன்படும்படி சீர்திருத்த இன்னும் ஒருவர்ஷம் பிடிக்குமாம். 100-மைல் தூரத்துக்கு தந்திக் கம்பிகள் போட்டு, தூரத்திலுள்ளவைகளைப்பார்ப்பதற்கு வேண்டிய மற்ற யந்த்ரங்கள் அமைக்க கிட்டத்தட்ட 2-கோடி ரூபாய்

# SANITATION AND MEDICINE.

## ஸுகாதாரமும் வைத்யமும்.

### Evils of Drink.

1. மதுபானத்தினால் உண்டாகும் கேடுகள்.—நீ எப்போதும் தாகமுள்ளவனாயிருக்க விரும்பினால் மதுவைக் (கள், சாராயம் முதலியவை) குடிக்கப்பழகு; அப்பொழுது உன் தாகம் ஒருபோதும் தீராது.

2. உன் உற்றார் ஸ்நேகிதர் உன்னை இவ்வுலகத்தில் பெரியவனாக்கச் செய்யும் ப்ரயத்தனங்களையும், அவர்கள் உன்னைப்பற்றிக் கொண்டிருக்கும் நல்லெண்ணங்களையும் அழித்துப்போடவேண்டுமென்றால் மதுவைக் குடிக்கப் பழகு; அப்பொழுது அவர்கள் ஆசை நாசமாகும்.

3. நீ பிச்சைக்காரனாவதற்கு மனமுள்ளவனாயிருந்தால் மதுவைக் குடிக்கப் பழகு; அப்பொழுது வெகு சீக்ரத்தில் உண்ண போஜனமும் உடுக்கத் துணியுமில்லாமல் நீ எங்கும் அலைந்து திரிய இடமுண்டாகும்.

4. உன் பெண்சாதி பிள்ளைகளை ஆதாவற்றவர்களாக்கிப் பட்டினியாய் வைக்க விரும்பினால் மதுவைக் குடிக்கப்பழகு; அப்பொழுது அவர்களைச் சீக்ரத்தில் அநாதைகளாக்கிவிடுவாய்.

5. நீ உன் பெண்சாதி அணிந்துகொள்ளும் ஆபரணங்களுக்கும் அவளுடைய காணிபூமிகளுக்கும் நாசம் வருவிக்க விரும்பினால், மதுவைக் குடிக்கப்பழகு; அப்போது நீ எண்ணிய ப்ரகாரம் எல்லாம் நாசமாகும்.

6. நீ மூடனாயிருக்க மனமிருந்தால் மதுவைக் குடிக்கப்பழகு; அப்பொழுது ஒரு கழுதையிலும் அதிக மூடத்தனமுள்ளவனாயிருப்பாய்.

7. நீ கொலை அல்லது தற்கொலை செய்பவனாய் இருக்க விரும்பினால் மதுவைக் குடிக்கப் பழகு.

8. உன் ஸுகத்தைக் கெடுத்துப் பலஹீனனாயிருக்க விரும்பினால் மதுவைக் குடிக்கப்பழகு.

9. ஸகல மனிதருக்குள்ளும் உன் துர்நடத்தைகளையும், உன் ரகஸ்யங்களையும் வெளிப்படுத்த விரும்பினால் மதுவைக் குடிக்கப்பழகு. அப்பொழுது உன் தொண்டைக்குள் மதுபானம் ஓடுகிறதுபோல அவ்வளவு தாராளமாய் அவைகள் வெளிவரும்.

10. உன் பணத்தை எவ்விதமாய்ச் செலவழித்தா[illegible]னக்குத் தெரியாமலிருப்பதற்கு விரும்பினால் மதுவைக் குடிக்கப்பழகு. அப்பொழுது உன் ஆஸ்திகளெல்லாம் உனக்குத் தெரியாத விதமாய்ப் பறந்து போய்விடும்.

11. நீ உன் குற்றங்களைவிட்டு நல்லவனாகிறதற்கு மனமில்லாதவனாயிருந்தால், மதுவைக் குடிக்கப் பழகு. அப்பொழுது உன் ஸ்நேகிதர் சொல்லும் புத்திமதிகளைக் குறித்துக் கவலைப்படமாட்டாய்.

12. உனக்குக் கேடு சீக்ரத்தில் வருவதற்கு மனமுள்ளவனாயிருந்தால் மதுவைக் குடிக்கப்பழகு. அப்பொழுது உன் ஆஸ்திகளுக்கும், சரீரத்துக்கும் மகா விலையுயர்ந்த ஆத்மாவுக்கும் வெகு சீக்ரத்திற் கேட்டை வருவித்துக்கொள்ளுவாய்.--சத்தியவேதபாதுகாவலன்.

### Lemons for Consumption.

க்ஷயரோகத்துக்கு எலுமிச்சம்பழம்.—க்ஷயரோகத்தால் கஷ்டப்படுகிறவர்கள் எலுமிச்சம்பழரஸத்தை சாப்பிடுவதால் குணமடைவார்களென்று ஒரு டாக்டர் தெரிவிக்கிறார். அதைத் தயார்செய்து சாப்பிடும்முறை பின் வருமாறு. 12-எலுமிச்சம்பழங்களை அறுக்காமல் முழுசாக குளிர்ந்த ஜலத்தில்போட்டு, கொதிக்கவைத்து ஸுமாராய் வெந்து ம்ருதுவாய்ப் போனவுடன், பழங்களை எடுத்து நசுக்கி சாறுமுழுவதையும் பிழிந்தெடுத்து, அதில், குடிக்கக் ருசியாயிருப்பதற்கு வேண்டிய அளவு சர்க்கரையைக் கலந்து குடித்துவிடவேண்டும். தினந்தோறும் 12-பழத்துக்குக் குறையாமல் உபயோகிக்க வேண்டும். அதனால் தேகத்தில் வலியாவது, அதிக மலப்ரவ்ருத்தியாவது உண்டானால், பழங்களைக் குறைவாய் உபயோகிக்கலாம். மேற்சொன்ன கோளாறுகள் நீங்கும்வரையில் தினந்தோறும் ஐந்தாறுபழங்கள் சாப்பிடலாம். 60-அல்லது 70-பழங்கள் உபயோகித்தவுடன் நோயாளிகளுக்கு தேகபலம் அதிகரிப்பதோடு, பசி தீபனமும் உண்டாகும். வரவர க்ஷயரோகம் குறைவடையும். ஸ்வஸ்தமாக ஆக பழங்களின் தொகையைக் குறைத்துக்கொண்டு வரலாம். வ்யாதி முற்றின இரண்டு க்ஷயரோகிகளை ஸாதாரண வைத்யம் பார்த்துவந்ததில் வைத்யர்கள் கைவிட்டுவிட்டார்கள். அவர்கள் மேற்சொன்ன முறைப்படி செய்துவந்ததில் சீக்ரம் ஸ்வஸ்தமடைந்தார்களாம்.



# LAW.

## சட்டம்.

### Major Represented as Minor.

மேஜரை மைனரென்று சொல்வது—வாஸ்தவத்தில் மேஜரான அதாவது சட்டப்படி வயதான ஒரு பையனை அவனது தாயார் அவன் பார்ட்டியாக ஸம்பந்தப்பட்ட ஒரு வ்யாஜ்யத்தில் மைனர் என்று தெரிவித்து, அவனுக்குக் கார்டியனென்று சொல்லி வ்யாஜ்யத்தை நடத்திவந்தான். வ்யாஜ்யம் பையனுக்கு பாதகமாக முடிந்து, அவனுக்கு விரோதமாக டிக்ரியும் செய்யப்பட்டது. நிறைவேற்று மனுக்களிலும் பையன் மைனராகவே கருதப்பட்டு வந்தான். அவனுடைய ஸொத்துகள் விற்பனை செய்யப்பட்டு, ஏலவிற்பனையில் வாங்கினவர் வசம் சேர்க்கப்பட்டன. அதற்குப் பிறகு பையன் கோர்ட்டில் ஏலவிற்பனையாகி வாங்கினவன் வசம் சேர்ந்த ஸொத்துகள் தனக்குச் சேரவேண்டுமென்று ஒரு வ்யாஜ்யம் போட்டான். அவன் அதற்கு சொல்லிய காரணமென்னவென்றால் தான் வாஸ்தவத்தில் மேஜராயிருக்க, தன்னை மைனரென்று சொல்லி கேஸைவிசாரித்து டிக்ரி கொடுத்ததும், அந்த டிக்ரியின்மேல் நிறைவேற்றினதும் கோர்ட்டின் அதிகாரவரம்புக்குள்பட்டனவல்ல. ஆகையால், மேற்படி டிக்ரியும், நிறைவேற்று நடவடிக்கைகளும் தன்னைக் கட்டுப்படுத்தமாட்டா.

இந்த இரண்டாவது வ்யாஜ்யம் ஹைக்கோர்ட்டுக்கு விசாரணைக்கு வரவே ஹைக்கோர்ட்டார் பின்வருமாறு அபிப்ராயப்பட்டார்கள். டிக்ரியும் நிறைவேற்று நடவடிக்கைகளும் முற்றிலும் செல்லாவென்று சொல்வதற்கில்லை. ஆனால் அவைகளை மறுபடியும் வ்யாஜ்யம் போட்டு செல்லாதபடி செய்துகொள்ளலாம். விற்பனையான ஸொத்துக்களை வாங்கினவர் நல்லெண்ணத்துடன் வாங்கியிருப்பதால், கீழ்க்கோர்ட்டுக்கு டிக்ரீ போடவும், ஸொத்துக்களை விற்கவும் அதிகாரமில்லையென்றாவது, அல்லது வாதி முந்தின வ்யாஜ்யத்தில் சரியான்படி கக்ஷிக்காரராகச் சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்றாவது சொல்லுவதற்கில்லை. வாதி சரியானகாலத்தில் வ்யாஜ்யம் போட்டு விற்பனையை ரத்து செய்யவில்லையாகையால், வ்யாஜ்யமானது லிமிடேஷன் ஆக்ட் 12-வது ஸெக்ஷனின்படி காலாவதியாகிவிட்டது.

### Notice of Relinquishment of Lands.

நிலத்தை விட்டுவிடுவதாக நோட்டீஸ் கொடுத்தல்.—1904-ம் வர்ஷம் மார்ச்சுமாஸம் 30-தேதியன்று வாதி சில நிலங்கள் தம்வசம் சேருவதற்கும், ப்ளெய்ண்ட் தேதியிலிருந்து நிலத்தின்வருமானம் தமக்குக் கிடைப்பதற்கும் கோர்ட்டில் டிக்ரீ பெற்றார். ஸொத்துக்கள் 1904-ம் வர்ஷம் ஆகஸ்ட்மாஸம் 1-தேதி ப்ரதிவாதிகளில் ஒருவருடைய வசத்திலிருந்தது. அந்த ப்ரதிவாதி அந்த தேதியில் நிலங்களை வாதியினிடம் விட்டுவிடுவதாக நோட்டீஸ் கொடுத்தார். வாதி, அந்த வர்ஷம் ஸாகுபடிசெய்ய பருவம்தப்பி விட்டதென்று சொல்லி நிலத்தை வாங்கிக்கொள்ளவில்லை. பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் வாதியானவர் ப்ளெய்ண்ட் தேதியிலிருந்து நிலம் தம்வசம் வந்தவரையில் நிலத்தின் வருமானம் தமக்குச் சேரவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார். ப்ரதிவாதி, தாம் நோட்டீஸ்கொடுத்த வர்ஷத்துக்கு வரும்படிப்பணம் செலுத்தவேண்டியதில்லையென்று வாதித்தார். வாதி தமக்குச் சேரவேண்டிய வரும்படிப் பணத்துக்கு 3-வர்ஷத்துக்கு மேலும் வட்டி கிடைக்கவேண்டுமென்று வாதித்தார். இதை விசாரித்த ஸப்ஜட்ஜ், நிலத்தை பெற்றுக்கொள்ள வாதிக்கு நோட்டீஸ் கொடுத்த வர்ஷத்தில் ஸாகுபடிக்கு பருவம் தப்பிவிட்டதால், ப்ரதிவாதி அந்தவர்ஷத்துக்கு பாதிவரும்படியை வாதிக்குச் செலுத்தவேண்டுமென்றும், வரும்படிப்பணத்துக்கு 3-வர்ஷத்துக்குமேல் வட்டி கொடுக்க வேண்டியதில்லையென்றும் தீர்ப்புச்செய்தார்.

இந்த வ்யாஜ்யம் அப்பீலுக்கு வரவே, ஹைக்கோர்ட்டார் பின்வருமாறு அபிப்ராயப்பட்டார்கள். வரும்படித் தொகை செலுத்தக் கடமைப்பட்டவர், ஸாகுபடி செய்யப் பருவம் தப்பிப்போனபோது, நிலத்தை வாங்கிக்கொள்ளும்படி வாதிக்கு நோட்டீஸ் கொடுத்ததனாலேயே அந்தக் கடமையிலிருந்து விடுபடமாட்டார். அதாவது அவர் வரும்படியை செலுத்தக் கடமைப்பட்டவரே. வரும்படித்தொகைக்கு மூன்றுவர்ஷத்துக்கு மேல் வட்டி கொடுக்கலாமா வேண்டாமா என்பதை கோர்ட்டார் தங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி செய்துகொள்ளலாம்.

# PERSONAL NOTES.

# மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

## The Nepal Premier's Nephew.

**நேபாள ப்ரதம மந்த்ரியினுடைய ஸகோதரருடைய புத்ரன்.**—நேபாள ராஜ்யத்தின் ப்ரதம மந்த்ரியாகிய மகாராஜா சந்த்ர ஷாம்ஷர் ஜங் என்பவருடைய ஸகோதரரின் புத்ரராகிய ராணு ஜோடாஜங் என்பவர் சிலகாலமாக ப்ரிட்டிஷ் ஸைன்யத்தில் சேர்ந்து யுத்தம் செய்துவருகிறார். அவர் அக்டோபர் மாஸம் 13-தேதியன்று பெல்ஜியத்தில் யுத்தம் செய்து கொண்டிருந்தபோது காயமடைந்தார். அவர் 1913-ம் வர்ஷத்தில் இம்பீரியல் காடட் கோர் என்னும் படையில் சேர்ந்து, இரண்டாவது லெப்டினண்டாக இருந்து வந்தார். அவர் யுத்தம் ஆரம்பித்தபோது டெஹ்ரி ஸமஸ்தானத்தில் உள்ள இம்பீரியல் ஸெர்விஸ் ஸாப்பர்ஸ் என்னும் படைக்குத் தலைவராக இருந்தார். யுத்தம் ஆரம்பித்ததும், தாம் போர்முனைக்குப் போக ப்ரியப்படுவதாகச் சொல்லவே, அவரை ராணுவ அதிகாரிகள் கார்வாலிஸ் ரெஜிமெண்டோடு சேர்த்து ஐரோப்பாவுக்கு அனுப்பினார்கள். அவர் அங்கே தைர்யத்துடனும் மன அமைதியுடனும் யுத்தம் செய்துவந்ததாகத் தெரிகிறது. சென்ற அக்டோபர் மாஸம் 12-ந்தேதியன்று கையில் காயமடைந்தார். அப்படியிருந்தும் சண்டையை விட்டு வர மனமில்லாமல் மறுபடியும் யுத்தம் செய்துவந்தார். அடுத்தநாள் ஒரு பெரிய குண்டின்துண்டு அவர் கழுத்தில் பட்டுக் காயம் உண்டாக்கிற்று. அதன்மேல் வைத்ய அதிகாரிகள் அவரை இங்க்லண்டுக்குக் கூட்டிக் கொண்டுபோய் தொண்டையிலிருந்த ஒரு இரும்புக் குண்டை வெளியிலெடுத்தார்கள். அவர் இப்போது ஸௌக்யமாயிருப்பதாகத் தெரிகிறது. அவர் டெஹ்ரி ராஜ்யத்து ராணியின் ஸகோதரராவர்.

## The Raja of Pudukotah.

**புதுக்கோட்டை ராஜா.**--சிலகாலமாக வெளி தேசங்களில் ப்ரயாணம் போயிருந்து சில மாஸங்களுக்கு முன்னால் ஒரு ஆஸ்ட்ரேலிய ஸ்த்ரீயைக் கல்யாணம் செய்து கொண்ட புதுக்கோட்டை ராஜா, தமது மனைவியோடு நவம்பர் மாஸம் 22-ந்தேதி யன்று புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அந்த ஸமயம் புதுக்கோட்டை முனிஸிபல் கௌன்ஸிலும், பிறகு புதுக்கோட்டை [illegible]ங்களும் அவரை நல்வரவேற்றார்கள். புதுக் [illegible] ராஜா தாம் தமது ராஜ்யத்துக்குத்திரும்பி வந்ததின் ஞாபகார்த்தமாக ஜனங்களுக்கு பின்வரும் ஸாதகங்கள் செய்திருக்கிறார்.

கணக்குப் பிள்ளைகளின் ஸெஸ், ஸமஸ்தானம் முழுவதிலும் சாச்வதமாய் எடுத்துவிடப்படும். டவுனில் த்ருப்திகரமான வடிகாலை அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்யப்படும். ஜனப்ரதிநிதி ஸபைக்கு தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்களின் தொகை 9-ஆக இருப்பது இனி 15 - ஆக உயர்த்தப்படும். ஒவ்வொரு யூனியன் பஞ்சாயத்திலும் ஒரு மெம்பர் தெரிந்தெடுக்கப்படுவார். முனிஸிபாலிட்டியில் இப்பொழுது தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்களின் தொகை இரண்டிலிருந்து நாலுக்கு உயர்த்தப்படும் பெண்களின் படிப்புக்கு 5,000-ரூபாயும், க்ராமங்களின் ஸுகாதார அபிவ்ருத்திக்கு 10,000-ரூபாயும் கொடுக்கப்படும்.

## Sir Dinshaw Petit.

**ஸர் டின்ஷா பெடிட்:**—இந்த வர்ஷக்கடைசியில் பம்பாயில் நடக்கப்போகிற இந்திய கைத்தொழில் கான்பரென்ஸின் உபசரணைக் கமிட்டிக்கு ஸர்டின்ஷா பெடிட் சேர்மனாக இருக்க ஸம்மதித்திருக்கிறார். அவர் ஒரு வ்யாபாரி. அவருக்கு ஸொந்தமாக பம்பாயில் ஒரு பருத்திமில் சாலையிருக்கிறது. 1890 - ம்வர்ஷத்தில் அவருக்கு பாரொனட் பட்டம் கொடுக்கப்பட்டது.

## An Indian Title for Lord Carmichael.

**லார்டு கார்மிகேலுக்கு ஒரு இந்தியப்பட்டம்.**—வங்காள கவர்னராகிய லார்ட் கார்மிகேல் ஸமீபத்தில் வங்காளத்திலுள்ள நவத்வீபத்துக்குச் சுற்றுப்ரயாணம் போயிருந்த பொழுது அவ்வூர்ப் பண்டிதர்கள் அவருக்கு நீதிரஞ்சன் என்ற பட்டத்தை யளித்தார்கள். முதல் தடவையாக இப்போது தான் அவர்கள் ஒரு மாகாண கவர்னருக்குப் பட்டமளித்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பட்டங்களைப் பெறுதற்குரிய வர்களாயிருப்போருக்கன்றி மற்றவர்களுக்கு கொடுப்பதில்லையாம்.

## Late Mr. Rajagopala Pillai.

**காலஞ்சென்ற மிஸ்டர் ராஜகோபாலபிள்ளை.**—புதுக்கோட்டை ஸமஸ்தானத்து சீப்கோர்ட்டில் சென்ற 8-வர்ஷகாலமாக சீப் ஜட்ஜாக இருந்து வந்த மிஸ்டர் வி. ராஜகோபாலபிள்ளை சென்ற ஸெப்டம்பர் மாஸம் 29-தேதியன்று காலகதியடைந்தார். இவர் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் எக்ஸ் - அபிஷியோ கௌன்ஸிலராக இருந்துவந்தார். இவர் 20-வர்ஷகாலம் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்திருக்கிறார்.



# SOCIETY AND RELIGION.

# ஜன ஸமூகமும் மதமும்.

## The Gujarati Hindu Stree Mandal.

**குஜராத்தி ஹிந்து ஸ்த்ரீ மண்டலம்.**—இப்பெயர்கொண்ட ஸ்த்ரீகளுக்கான ஸபை யொன்று 1903-ம் வர்ஷத்தில் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் முதலில் 50-மெம்பர்கள்தானிருந்தார்கள். தற்போது 550-மெம்பர்களிருக்கிறார்கள். இது ரொம்ப அபிவ்ருத்தியடைந்துவருகிறதென்று தெரிகிறது. இந்த ஸங்கத்தின் நோக்கமென்னவென்றால் குஜராத்திய ஹிந்து ஸ்த்ரீகளுக்கு தேகப்பயிற்சியும், கல்வியும் கற்றுக்கொடுப்பதும், அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதுமாகும். சென்ற இரண்டு வர்ஷங்களாக அந்த ஸபையார் தங்கள் ஸபையைச்சேர்ந்த ஸ்த்ரீகளுக்கும், மற்றவர்களுக்கும், யாதொரு சம்பளமுமில்லாமல் ஸம்ஸ்க்ருதம், குஜராத்திபாஷை, இங்க்லீஷ்பாஷை, ஸங்கீதம், தையல்வேலை, பூப்போடுதல் முதலியவைகளைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதோடு அந்த ஸபையின் மெம்பர்கள் பற்பல விஷயங்களைப் பற்றி ப்ரஸங்கங்கள் செய்துவருகிறார்கள். அவர்கள் அநேக ஸமயங்களில் பஜனைகளும் நடத்திவருகிறார்கள்.

## The Nizam and Drink.

**நிஜாம் அரசரும் மதுபானமும்.**—நிஜாம் அரசர் ஸமீபத்தில் நடந்த மொஹரத்தில், அது நடந்த நாட்களிலெல்லாம், தமது ராஜ்யத்தில் மதுபானங்கள் விற்கக்கூடாதென்று உத்தரவிட்டார். இதனால் அவருடைய கவர்ன்மெண்டுக்கு 3-லக்ஷம்ரூபாய் வரும்படி குறைந்து போய்விட்டதாம். அவர் தமது ஜனங்களின் நன்மையைக்கருதி நஷ்டத்தைப் பாராட்டாமல் இவ்விதம்செய்தது மிகவும் ச்லாகிக்கத்தக்கது.

அவர் இன்னொரு ச்லாகிக்கத்தக்க கார்யமும் செய்தார். பக்ரீத் பண்டிகையின்போது மகம்மதியர்கள் பசுக்களைப் பலியிடுவதுண்டு. இந்தச் செய்கை ஹிந்துக்களுடைய மனஸுக்கு வருத்தத்தை உண்டுபண்ணக்கூடியது. சில இடங்களில் இதன் காரணமாக இரு மதஸ்தருக்குள்ளும் கலகங்கள் ஏற்படுகின்றன. நிஜாம் அரசர் சென்ற பக்ரீத் பண்டிகையில் தமது ஸமஸ்தானத்தில் எவரும் பசுக்களை பலியிடக்கூடாதென்று உத்தரவிட்டார். இது அவருடைய ஹிந்து ப்ரஜைகளுக்கு ரொம்ப ஸந்தோஷத்தை உண்டுபண்ணி யிருக்குமென்பதில் தடையில்லை.

## Caste in England.

**இங்க்லண்டில் ஜாதி வித்யாஸம்.**—நமது தேசத்தில்தான் ஜாதி அல்லது மதத்வேஷங்கள் இருக்கின்றனவென்பதற்கில்லை. இங்க்லண்டிலும் ஜாதித்வேஷம் இருக்கிறதாம் இங்க்லண்டிலுள்ள கிறிஸ்தவர்களில் சிலர் யூதஜாதியாரைக் கண்டால் த்வேஷிக்கிறார்களாம். அவர்களுக்கு சாப்பாடு போடுவதற்குக்கூட ஸம்மதிப்பதில்லையாம். ஸமீபத்தில் யுத்தத்தில் வீரத்துடன் யுத்தம்செய்து விக்டோரியா க்ராஸ்பெற்ற ஒரு யூதரை அவரது நண்பர்கள் ஒரு ஹோட்டலில் விருந்துக்கழைத்தார்களாம். அவர் அங்கே போனபோது அந்த ஹோட்டலின் ஸொந்தக்காரர், வந்தவர் யூதரென்றும் ஆகையால் அவருக்குச் சாப்பாடு போடமுடியாதென்றும் சொல்லிவிட்டாராம்.

## Schools for Panchamas.

**பஞ்சமர்களுக்குப் பாட சாலைகள்.**—ஸமீபத்தில் மைஸூர் பட்டணத்தில் பஞ்சமர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகள் ரொம்ப அபிவ்ருத்தியடைந்து வருகின்றனவாம். அநேக சிறுவர்கள் ஆவலுடன் அவைகளில் சேரவருகிறார்களாம். ஒரு பள்ளிக்கூடத்தில் சேர ப்ரியப்பட்ட பிள்ளைகளெல்லாருக்கும் போதுமான இடமில்லாதிருந்ததால் அநேக பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள முடியாமல் போயிற்றாம். அந்த ஊரில் மொத்தத்தில் 13-பஞ்சமர் பாடசாலைகளிருக்கின்றனவாம். இவைகளில் மொத்தம் 25-உபாத்யாயர்களும், ஒரு ப்ராமண ஸ்த்ரீ உபாத்யாயரும், ஸங்கீதம் கற்றுக்கொடுக்க ஒரு உபாத்யாயரும், பிரம்புவேலை, நெசவு,இவைகளைக் கற்றுக்கொடுக்க இரண்டு உபாத்யாயர்களும் இருக்கிறார்கள்.

## Tanjore Varnasrama Dharma Sabah.

**தஞ்சாவூர் வர்ணாச்ரம தர்ம ஸபை**—ஸமீபத்தில் தஞ்சாவூரில் வர்ணாச்ரம தர்ம ஸபை யென்று ஒரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதன் நோக்கம் வர்ணாச்ரம தர்மங்களையும், ஜனஸமூக தர்மங்களையும் ஹிந்து மதத்தையும் கெட்டுப்போகாமல் காப்பாற்றுவதே. இது வடஇந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவரும் பாரத தர்ம மகா மண்டல் என்னும் ஸபையைப் போல் வேலை நடத்திவரும். பாரத தர்ம மகா மண்டல ஸபை நாளது மார்கழி மாஸத்தில் காசியில் கூடப்போகிறது. இந்த ஸபைக்கு, கும்பகோணம் சங்கராச்சாரியார் ஒரு ப்ரதிநிதியை அனுப்பப்போகிறார்.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Preventing Death from Burns.

**நெருப்புத் தாக்குவதாலுண்டாகும் மரணங்களைத் தடுத்தல்.**—சிறுவர் சிறுமியர்கள் அபாயகரமான வாண முதலியவைகளோடும், விளக்கு முதலியவைகளோடும் விளையாடுவதால் அவர்களில் பலருடைய உடைகளில் தீப்பிடித்து அதனால் அவர்களின் தேகம் வெந்து போகவும், அநேக ஸமயங்களில் அவர்கள் இறந்துபோகவும் நேரிடுகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் விஷயத்தில் எப்போதுமே ஜாக்ரதையாக இருக்க முடிவதில்லை. அவைகளை அடிக்கடி கண்டித்து வந்தாலும் அநேக ஸமயங்களில் பெற்றோர்களுக்குத் தெரியாமல் நெருப்போடு விளையாடுவதால் ஆபத்துகள் அடிக்கடி நேரிடுகின்றன. 'வைத்திய கலாநிதி' யில் ஒரு வைத்யர், குழந்தைகளின் உடைகளை நெருப்புப்பிடிக்காத படி தயார் செய்துவிட்டால் நெருப்பினால் அதிக உபத்திரவம் நேரிடாதென்று ஒரு மேல்நாட்டு வைத்யர் தெரிவிப்பதாக எழுதுகிறார். உடைகளைத் தயார் செய்யும் முறை பின் வருமாறு.

ஒரு ராத்தல் அளவு அமோனியம் பாஸ்பேட் என்னும் சரக்கை 2½-படி குளிர்ந்த ஜலத்தில் கரைத்து, உடைகளை அத்தெளிவான த்ரவத்தில் ஐந்து நிமிஷ நேரம் நனைத்து ஊறவைத்தெடுத்து உலர்த்திவிட வேண்டும். இவ்வாறு செய்த வஸ்த்ரங்களில் நெருப்புப் பற்றுவதில்லையாம். இம்முறையை அனைவரும் கையாளுவது அநேக ஸமயங்களில் அருமைக்குழந்தைகளை அக்னியினிடமிருந்து காப்பாற்றுவதற்கு மிக்க உபயோகமாயிருக்கிறதாம். இந்த த்ரவம் வஸ்திரம் முதலியவைகளை எவ்விதத்திலும் கெடுக்கக்கூடாததாயிருப்பதால், ஸாதாரண ஜலத்தில் நனைப்பதுபோலவே இந்த த்ரவத்திலும் வஸ்த்ரங்களைத் தடையின்றி நனைக்கலாம். இவ்வாறு ஒரு முறை நனைத்தால் மீண்டும் அநேக நாள் வரையில் அத்துணிகளை அதில் நனைக்க வேண்டிய அவச்ய மேற்படுவதில்லை. இது ஒருவித விஷகுணத்தையும் உண்டாக்காது. அமோனியம் பாஸ்பேட் என்னும் சரக்கு ஸாதாரணமான வெளுத்த சிறு படிகங்களைப் போன்ற சூர்ணம். அது எல்லா இங்க்லீஷ் மருந்துக் கடையிலும் வெகு மலிவாகக் கிடைக்கக்கூடியது. இப்பதார்த்தத்தைக்கொண்டு முற் கூறியவாறு ... பதன் செய்யப்பட்ட வஸ்துவை ஜலத்தில் தோய்த்துக் கழுவினுலொழிய அதில் தீப்பற்றி எரியமாட்டாது.

இப்படிப்பதம் செய்த துணியை எவரும் நெருப்பில் பரீக்ஷித்துப்பார்க்கலாம். மேற் குறித்த மேல்நாட்டு டாக்டர் இது விஷயமாய்ப் பின்வருமாறு பரீக்ஷை செய்து பார்த்தாராம்.

வெகு ஸாதாரணமாய் நெருப்புப் பட்டவுடன் நொடிப்பொழுதில் எரிந்து சாம்பலாய் விடக்கூடிய ஸல்லாத்துணியை இவ்வாறு தயார் செய்த த்ரவத்தில் நனைத்து உலர்த்தியபிறகு, அதன் முன்றானையில் சில நிமிஷங்கள் வரையில் மெழுகுவர்த்தியைக்கொளுத்திப் பற்றவைத்தார். அந்தத் துணியின் ஓரங்கள் அவ்விதம் கொளுத்தப்பட்டும் ஒருவாறு கறு நிறமடைந்தனவே யொழிய கொஞ்சங்கூட தீப்பற்றி எரியவில்லை. ஓரங்களைத் தவிர மற்ற பாகங்கள் நிறம் மாறுபாடடையாமல் நன்றாகவே இருந்தனவாம்.

### How to Test a Diamond.

**வைரத்தைப்பரிசோதித்தல்.**-வைரம் ஸ்வயமானதா அல்லது போலியா என்று கண்டுபிடிக்கப் பின்வருமாறு செய்யலாம். (1) அரத்தால் வைரத்தின்மேல் இழுத்தால் போலிவைரமானால், அதில் அரத்தை இழுத்த அடையாளம் தெரியும். ஸ்வய வைரமானால் அதை அரம் ஒன்றும் செய்யாது. அரத்தை இழுத்த அடையாளமே தெரியாது. (2) ரொம்ப ப்ரகாசமுள்ள ஸ்வய வைரத்தின மேல் ஒரு துளி ஜலத்தை விட்டு, அந்தத் துளியை ஒரு பென்ஸிலின் கூர்மையான நுனியால் தொட்டு அழுத்தினால், ஜலம் நாலாபக்கமும் ஓடாமல் வட்டமான உருவத்துடன் அப்படியே இருக்கும். வைரத்தை சாய்த்தால் ஜலம் அதில் ஒட்டாமல் வெளியே ஓடிவிடும்.போலிவைரத்திலோ அப்படியல்ல.அதில் ஜலம் நன்றாய் ஒட்டிக்கொண்டு, நாலாபக்கங்களிலும் பரவும். (3) ஸ்வய வைரத்தை ஜலத்தில் போட்டால் அது இருப்பது நன்றாய்த் தெரியும். ஆனால் போலி வைரத்தை ஜலத்தில் வைத்தால் அது நன்றாய்த் தெரியாது. (4) ஒரு துண்டுக்கடுதாசியில் ஒரு கறுப்புப் புள்ளியிட்டு, அதை வைரத்தின் மூலமாகப்பார்த்தால் ஒரே புள்ளிதான் தெரியும். ஆனால் அதே புள்ளியை போலி வைரத்தின் வழியாகப் பார்த்தால் அநேக புள்ளிகளாவது, ஒரு பெரிய கருப்புக்கறையாவது தெரியும். போலி வைரங்கள் புஷ்பராகம், ஸ்படிகக் கல், கண்ணாடி முதலியவைகளால் செய்யப்படுகின்றன



## AGRICULTURE.

## விவஸாயம்.

### Hens and Egg Production.

**பெட்டைகளும், முட்டையிடுதலும்**—அமெரிக்காவில் ஒரு விவஸாயி கோழிகள் அதிக முட்டையிடுவதற்காக ஒரு முறையைக் கையாடிவருகிறார். மாரி காலத்தில் பகற்பொழுது குறைவாகையால், பெட்டைகள் அதிக நேரம் ஓடியாடித் திரிவது முடியாது. பெட்டைகள் நன்றாய் ஓடியாடித்திரியாவிட்டால் அவைகள் அதிகமாக முட்டையிடமாட்டாவாம். அதற்காக அவர் பெட்டைகளை அதிக நேரம் ஓடியாடித் திரியும்படி செய்வதற்காக, தமது பெட்டைக்கோழிகள் இருக்கும் இடத்தில் சில மின்ஸார விளக்குகள் வைத்திருக்கிறார். தினந்தோறும் ஸூர்யோதயத்துக்கு சில நாழிகைகள் முன்னதாகவே அவர் அந்த விளக்குகளை ஏற்றிவிடுகிறார். கோழிகளெல்லாம் பொழுது விடிந்ததென நினைத்து எழுந்து அங்குமிங்கும் அலைகின்றன. ஸூர்யோதயமானவுடன் தானாகவே வெளிச்சம் ஏற்பட்டுவிடுகிறதால், விளக்குகளை யெல்லாம் நிறுத்திவிடுகிறார். அந்த தேசத்தில் மாரிகாலத்தில் ஸாயந்திரம் 4-மணிக்கே அஸ்தமித்துவிடுகிறது. அந்தநேரத்தில் விளக்குகளை ஏற்றிவிடுகிறார். பெட்டைகள் இன்னும் அஸ்தமிக்கவில்லை யென்றெண்ணி அலைந்து திரிந்துகொண்டிருக்கின்றன. 9-மணியானதும் அவர் ஸ்வல்பப்ரகாசமுள்ள 2-விளக்கைத்தவிர மற்றவைகளையெல்லாம் நிறுத்திவிடுகிறார். அப்போது அஸ்தமித்தது போலிருக்குமாம். உடனே பெட்டைகள் பொழுது போயிற்றென எண்ணித் தம் கூட்டுக்குள் போய்விடுகின்றன. இரவு முழுவதும் அந்த 2 விளக்குகளையும் எரிய விட்டு விடுகிறார். இதனால் இரவில் ஏதாவது கோழி இரைதேட எண்ணினால் அது தாராளமாய் வெளியில்வந்து இரை தேடலாம்.

இப்படிச் செய்ததனால் உண்டான லாபம் என்னவென்றால், விளக்கு போடுவதற்குமுன் தினந்தோறும் சராசரியில் 26-முட்டைகள் கிடைத்துக்கொண்டிருக்க, விளக்குப்போட்ட 11-நாள்கள் கழித்து சராசரியில் தினந்தோறும் 83-முட்டைகள் கிடைத்தனவாம்.

### Sann-hemp as Cattle Fodder.

**சடம்பைக் கால்நடைகளுக்குத் தீனியாகப்போடுவது.**—சடம்புப் பயிரை புஷ்பித்த வுடனாவது அல்லது அதற்குபின் சிலநாள் கழித்தாவது அறுத்து இலை உதிராமல் காயவைத்து, அதைத்தனிப்போர் போட்டாவது அல்லது இதரவைக்கோல் சோளத்தட்டு முதலியவைகளுடன் கலந்து போர் போட்டாவது, தீவனமாய் உபயோகித்தால் கால்நடைகளுக்கு யாதொரு கெடுதியும் சம்பவிக்கமாட்டாது என்று 'க்ருஷிகன்' எழுதுகிறது. ஜனங்கள், அதை உபயோகித்தால் மாடுகளுக்கு ரத்த கழிச்சல் உண்டாகுமென்று சொல்வது பிசகு. அனுபவமில்லாமல் சொல்லும் வீண்வார்த்தைதான். கோயம்புத்தூர் விவஸாயபண்ணையில் இதை உபயோகித் திருக்கிறார்கள். நெல்லூர், குண்டூர், க்ருஷ்ணா, கோதாவரி முதலிய ஜில்லாக்களில் இதை கால் நடைகளுக்கு தீவனமாய் உபயோகிக்காத க்ருஷிகர் கிடையாது. நெல்லூர்மாடுகளின் சிறந்த வளர்ச்சிக்கு இது ஒரு காரணம்.

### Indigo Seeth.

**அவுரிச்சக்கை.**—அவுரியிலையிலிருந்து சாயமெடுத்த பிறகு நிற்கும் சக்கையானது புகையிலைப் பயிருக்கு ரொம்ப ச்லாக்யமான எருவாகும். இந்த எருவைப் போடுவதால் நிலத்திற்குள் நல்ல காற்றோட்ட மேற்படும். புகையிலையின் வேர்களுக்கு யதேஷ்டமாய் காற்று கிடைக்கும். புகையிலை பயிரிடும் நிலத்தில் ஓடுகளின் துண்டுகளைப்போட்டு, உழுது, பிறகு அவுரிச்சக்கையைப் போடுவதானால், அவுரிச்சக்கையை குறைவாய்ப் போட்டால் போதும். இப்படி நிலங்களுக்கு ஓடுகளின் துண்டுகளைப் போடுவதற்கு அதிக செலவும் பிடிக்காது. வடக்கே பூஸாவில் இவ்விதம் ஒரு நிலத்தைப் பண்படுத்தினதில், அந்த நிலம் சென்ற 9-வர்ஷமாக மற்ற பூமிகளைவிட அதிகமான மாஸூல் கொடுத்துவருகிறது.

### Selection of Seed Cocoanuts.

**தென்னை நெற்றுகள் தெரிந்தெடுத்தல்.**—ரொம்ப முதிர்ந்த மரத்திலிருந்தும், ரொம்ப இளமரத்திலிருந்தும் தென்னம் நெற்றுகள் பறிக்கக்கூடாதென்றும், நடுத்தர வளர்ச்சியுள்ள மரத்திலிருந்துதான் நெற்றுகள் பறிக்கவேண்டுமென்றும் பலர் அபிப்ராயப்பட்டுவருகிறார்கள். இங்கிலண்டில் ஸமீபத்தில் வெளியான ஒரு விவஸாய பத்ரிகையில் இளமரத்தின் நெற்றுகளை சாற்றுவது கூடாதென்று சொல்லுவதற்கு போதுமான ஆதாரமில்லையென்றும், மரம் காய்க்கத்தொடங்கின 3-வது அல்லது 4-வது வர்ஷத்தில் நெற்று பிடுங்குவது பாதகமில்லையென்றும் சொல்லியிருக்கிறது. இவ்விதம் தெரிந்தெடுத்த நெற்றுகளை மேற்கு இந்திய தீவுகளில் முளைக்கப்போட்டதில் தென்னம்பிள்ளைகள் 4-வர்ஷம் 4-மாஸமானவுடன் காய்க்கத் தொடங்கினவாய்

## CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Co-operation and Middlemen.

**கோவாபரேஷனும் நடுவிலுள்ள வ்யாபாரிகளும்.**—விவஸாயிகள் தங்களுடைய மாஸூலை நேராகக் கடைகளில் விற்காமல் நடுவிலுள்ள வ்யாபாரிகளுக்கு விற்பதால் அந்த விவஸாயிகளுக்கு தக்கலாபம் கிடைப்பதில்லை. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபத்தில் ஒரு பாகத்தை நடுவிலுள்ள வ்யாபாரிகள் அடித்துக் கொண்டுபோகிறார்கள். இதற்கு ஒரு உதாரணமாக வங்காளத்தில் சணல்பயிர்செய்யும் விவஸாயிகளுடைய நிலைமையைச் சொல்லலாம். வங்காளத்தில் சணல் பயிர்செய்யும் விவஸாயிகள் தங்களுடைய மாஸூலில் ஒரு குறிப்பிட்ட அளவுள்ளதை ரூ. 7-க்கு விற்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அந்த மாஸூலை முதலில் தரகனும், பிறகு அவனிடமிருந்து வாங்கும் வ்யாபாரியுமாக படிப்படியாக இரண்டு மூன்று பேர்கள் வாங்கிவிற்கிறார்கள். ஒவ்வொரு வ்யாபாரியும் தன் லாபத்தின்பொருட்டுத் தான்வாங்கும் சரக்கின்விலையை அதிகப்படுத்துகிறான். அந்தச் சரக்கு கல்கத்தா மில்லுக்கு விற்கப்படுமுன், சணலின் விலை க்ராமத்தில் 7-ரூபாயா யிருந்தது கல்கத்தாவில் பத்து ரூபாயாகிவிடுகிறது. நடுவிலுள்ள இந்த வ்யாபாரிகளுக்கு விற்காமல் க்ராமவாஸிகள் கல்கத்தா மில்களுக்கு நேரே விற்பார்களானால் நடுவிலுள்ள வ்யாபாரிகள் பெற்ற 3-ரூபாயும் அவர்களுக்கே கிடைக்கும். இப்படி விவஸாயிகள் லாபமடைய வேண்டுமானால் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டுமென்று வடக்கிலுள்ள ஒரு உத்யோகஸ்தர் சொல்லுகிறார். அவர் தெரிவிப்பதாவது, விவஸாயிகளின் விளை பொருள்களை ஒன்றாய்ச் சேர்த்து விற்பதற்காக க்ராம ஸங்கங்கள்கூடி கட்டுப்பாடு செய்துகொண்டு ஒரு கிடங்கு ஸ்தாபித்து அந்தக்கிடங்கில் க்ராம ஸங்கங்களைச்சேர்ந்த மெம்பர்களிட மிருந்து சணலை வாங்கிவைக்க வேண்டும். அந்தச் சணலை ஜாமீனாகப் பெற்று விவஸாயிகளுக்குக் கடனாகப் பணம்கொடுக்க வேண்டும். இப்படி சேர்த்துவைக்கப்பட்ட சணலை நடுவிலுள்ள வ்யாபாரிகள் எவருமில்லாமல் மில்களுக்கு நேராக விற்க வேண்டும். இப்படிச் செய்தால், விற்கும் விவஸாயிகளும் வாங்கும் மில்களும் யோக்யமான வ்யாபாரம் [illegible]ர்கள், அயோக்யர்களான நடுவிலுள்ள வ்யாபாரிகள் ஏற்படமாட்டார்கள். இருவருக்கும் லாபம் கிடைக்கும். விவஸாயிகளையும் மில்களையுந் தவிர, கடைசியில் சணலால் செய்யப்படும் ஸாமான்களை வாங்கி உபயோகிப்பவர்களும் லாபம் பெறுவார்கள். இதேமாதிரி பர்மாவிலுள்ள விவஸாயிகள் செய்கிறார்களாம். அங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் க்ராம ஸங்கங்கள் விவஸாயிகளிடத்தில் நெல்லையும் வேர்க்கடலையையும் வாங்கி, அவர்களுக்கு வேண்டிய பணத்தைக் கடனாகக்கொடுத்து, வாங்கின பொருள்களை நடுவிலுள்ள வ்யாபாரிகளுக்கு விற்காமல் நேரே ரங்கூன் கப்பல் வ்யாபாரிகளுக்கு விற்கின்றன. கல்கத்தா ஆறுகளில் மீன் பிடிக்கும் வலையர்கள் மீன்களைப் படகில்கொண்டு வந்து கரையில் சேர்க்கும்போது, கரையில் காத்திருக்கும் தரகர்கள் அந்த மீன்களை வாங்கி விலையை ஒன்றுக் கிரண்டாக்கி மார்க்கெட்டுகளில் விற்கிறார்கள். மீன்பிடிக்கும் வலையர்கள் புத்திமான்களானால் மேற்கண்ட உபாயத்தைக் கைக்கொண்டு தரகர்களின் தொந்திரவில்லாமல் மார்க்கெட்டில் நேராக விற்று தரகர்கள் பெறும் லாபத்தை அவர்களே பெறலாம்.

### Co-operation in Denmark.

**டென்மார்க்கில் கோவாபரேஷன்.**—டென்மார்க்கில் கோவாபரேஷன் ரொம்ப அபிவ்ருத்தியடைந்திருக்கிறது. அங்கேயுள்ள விவஸாயிகள் ஸ்வல்ப நிலங்களுடைய சிறு விவஸாயிகளே. ஆனால் கோவாபரேஷனுடைய உதவியால் அவர்கள் ரொம்ப பணக்காரர்களாக இருக்கிறார்கள். பத்து ஏக்கர் நிலமுள்ளவர்களுங்கூட 20,000-முதல் 30,000-ரூபாய் வரையில் பணம் மிச்சமாகச் சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

அந்த தேசத்தில் 1190-கோவாபரேடிவ் பால் சாலைகள் இருக்கின்றன. பன்றி மாம்ஸம் தயார்செய்ய 45 கோவாபரெடிவ் தொழில்சாலைகள் இருக்கின்றன. கோவாபரெடிவ் ஸ்டோர்ஸ் என்னும் விற்பனை ஸங்கங்கள் 1,300-வரையில் இருக்கின்றன. இந்த விற்பனை ஸங்கங்களுக்கெல்லாம் தலைமையாக அந்த தேசத்தின் தலைநகராகிய கோபன்ஹேகனில் ஒரு விற்பனை ஸங்கமிருக்கிறது. இந்த விற்பனை ஸங்கங்களில் வீட்டுக்கு வேண்டிய ஸாமான்கள் எல்லாம் விற்கப்படுகின்றன. ஒவ்வொரு விற்பனை ஸங்கமும் கோபன்ஹேகனிலுள்ள பெரிய ஸங்கத்தில் மெம்பராகச் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட தொகைக்குப் பங்குகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.



## COMMERCE.

## வ்யாபாரம்.

### A Subscriber's Doubt.

**சந்தாதாரின் ஸந்தேகம்.**—சந்தாதார் (சாஸ்த்ரி) ஒருவர் ஒருநாள் நமது பத்ரிகையைப் பார்க்கப் பிரிக்கும்போது, அதிலிருந்து ஒரு சிலந்திப் பூச்சி வெளியில் ஓடி வந்தது ; அதைப் பார்த்த உடன் அவருக்கு இது நல்ல சகுனமா கெட்ட சகுனமா ; என்று ஸந்தேகம் ஏற்பட்டு, சாஸ்த்ரங்களில் இதைக்கண்டெழுதவில்லையே, என்றாலும், அல்ப விஷயங்கள் பெரும் காரியங்களை ஸூசிக்கக் கூடுமே, இதுவிஷயமாக அனுபவத்தில் ஏதாவது ஏற்பட்டிருக்கிறதோ, அறிவோம், என்று உடனே பத்ராதிபருக்கு ஒரு நிருபம் எழுதி விஷயத்தைச் சொல்லிப்பலனைக் கேட்டார். பத்ராதிபர் உடனே பின் வருமாறு பதிலனுப்பினர். "சிலந்திப் பூச்சி பத்ரிகையிலிருந்து வெளிக்கிளம்பியது தங்களுக்கு ஒருவித சகுன ஸூசனையுமில்லை. சிலந்திப் பூச்சி பத்ரிகையைப்பார்க்க வந்த விஷயம் வேறு. இந்தியாவில் வ்யாபார|முன்னேற்றத்தை யுத்தேசித்து ஜனங்களுக்கெல்லாம் கவலையும் ச்ரத்தையும் ஏற்பட்டு வருகிறது. ஆனால் தற்கால வ்யாபாரத்திற்கு விளம்பரமே முக்யாதாரமென்று யாவருமறியார். ஆகையால் நமது பத்ரிகையில் விளம்பரம் செய்யாத வ்யாபாரிகளினுடைய கடைகளின் வாயிலில் நாம் நூல் நூற்று இடம் கட்டிக்கொண்டால் நமக்கு கவலையின்றி ஸ்வயேச்சையாயிருக்கலாமென்று கருதி சிலந்திப் பூச்சி நமது பத்ரிகையில் யார் யார் விளம்பரம் செய்யவில்லை என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தது."—சுதேசமித்திரன்.

### Paper Pulp Industry in Mysore.

**மைஸூரில் காகிதக் கூழ் செய்யும் தொழில்.**—மைஸூர் ராஜ்யத்தில் காகிதக்கூழ் செய்வதைப்பற்றி ஆராய்ச்சிகள் சுறுசுறுப்பாய் நடந்து வருகின்றன. காகிதக்கூழ் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இன்னவிடத்திலிருக்கின்றன, அவைகளை எவ்விதம் உபயோகிக்கலாமென்பதைப் பரிசீலனை செய்ய ப்ரத்யேகமான உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம். அந்த ராஜ்யத்திலுள்ள புல்வகைகளிலிருந்தும், மூங்கில்களிலிருந்தும் மரக்கூழ் செய்து, அதற்கு என்ன செலவு பிடிக்குமென்பதை யறிவதற்கு, கவர்ன்மெண்டார் மிஸ்டர் ரெய்ட் என்னும் ஒரு தொழில் நிபுணரை நியமித்திருக்கிறார்களாம். மூங்கிலைத் தக்கபடி பக்வப்படுத்தி மாதிரிக்கு 20-டன் மூங்கிலை இந்தியாவிலுள்ள ஒரு தொழில் சாலைக்கு அனுப்பி, அங்கே மரக்கூழ் செய்து கொடுக்கும்படி அந்தத் தொழில்சாலையோடு ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். மாக்கூழ் செய்வதற்கு வேண்டிய 'லைம்ஸ்டோன்' என்னும் சுண்ணாம்புக்கல்லை சேகரித்து உபயோகிப்பதைப்பற்றி மைஸூர் பூதத்வ சாஸ்த்ர டிபார்ட்மெண்டார் கவனம் செலுத்தி வருகிறார்கள். இவை காகிதக்கூழ் செய்வதைப்பற்றிய முயற்சிகள். மூங்கிலிலிருந்து காகிதம் செய்வதற்கும் மைஸூரில் தனியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.**—இந்தியாவில் சென்ற ஸெப்டம்பர் மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 14-ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 2 | பாங்கிலேவாதேவிக் கம்பெனிகள் | 100,000 |
| 2 | ரெயில்வே, ட்ராம்வேக் கம்பெனிகள் | 3,500,000 |
| 5 | வ்யாபாரக் கம்பெனிகள், மேலே சொன்னவை தவிர | 900,000 |
| 1 | பஞ்சமில் | 1,200,000 |
| 1 | அரிசிமில் | 100,000 |
| 2 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 80,000 |
| 1 | நிலம் கட்டிடக் கம்பெனி | 1,000,000 |
| 14 | மொத்தம். | 6,880,000 |

### Plantain Fibre Extractor.

**வாழை நாரெடுக்கும் யந்த்ரம்.**—மைஸூரில் தொழில் டிரெக்டராயிருந்து வரும் மிஸ்டர் சாட்டர்ட்டன் என்பவர் வாழைமட்டையிலிருந்து நார் எடுக்க ஒரு யந்த்ரம் கண்டு பிடித்திருப்பதாகத் தெரியவருகிறது. இதன் உதவியால் எடுக்கப்படும் நார் ரொம்ப வெண்மையாயும் உறுதியாயும் இருக்கிறதாம். யந்த்ரத்தின் விலை ஐந்தாறு ரூபாய்க்கு மேலில்லையாம். அதைக் கொண்டு கற்றாழை முதலியவைகளிலிருந்தும் நாரெடுக்க முடியுமாம். ஸ்திரீகளுங்கூட அந்த யந்த்ரத்தை உபயோகிக்கக் கற்றுக்கொள்ளக்கூடுமாம்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### The Papaw Juice.

**பப்பாளிக்காயின் பால்.**—பப்பளிக்காயின் பால் மருந்து வகைகளில் உபயோகப்படுகிறது. இந்தப் பாலுக்கு மாம்ஸ உணவை ஜீர்ணம் செய்யும் குணம் உண்டு. ஜீர்ணக் குறைவிலும், குடல் வெந்துபோயிருக்கும் போதும் இன்னும் ஜீர்ண ஸம்பந்தமான வ்யாதிகளிலும் இது உபயோகமுள்ளதென்று தெரிகிறது. ஜமெய்க்காவிலும் லங்கையிலும் இந்தப் பாலைத் தயார் செய்து பக்வப்படுத்தி ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களுக்கு அனுப்புகிறார்கள். இந்தப் பாலைத் தயார்செய்யும் விதம் பின்வருமாறு. காலைநேரத்தில் ரொம்ப முற்றாத பப்பாளிக்காயில் ஸுமார் அரைக்கால் அங்குல நீளமுள்ளதாக நீளப்போக்கில் 10, 12 இடங்களில் கீறிவிடவேண்டும். ஒரு வெட்டுக்கும் அடுத்த வெட்டுக்கும் ½ அங்குலம் முதல் முக்காலங்குலம் தூரம் இடைவெளியிருக்கவேண்டும். இந்த வெட்டுகளிலிருந்து வெண்மையான பால் வடியும். இந்தப் பாலை கண்ணாடி அல்லது பீங்கான் பாத்ரத்தில் ஏந்தி எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படி ஒருநாள்விட்டு ஒருநாளாக 7-தடவை காய்களிலிருந்து பாலெடுக்கலாம். பாலை வெகுநேரம் அப்படியே வைத்திருந்தால் கெட்டுப்போகுமாதலால், அதை நல்ல மஸ்லின் துணியில் வடிகட்டி யெடுத்து அதற்கு இரண்டு மடங்கு ரெக்டிபைட் ஸ்பிரிட் என்னும் சாராயத்தில் கலந்து, கலந்த த்ரவத்தை சில மணிநேரம் அப்படியே வைத்திருந்து, பிறகு அதிலிருந்து சாராயத்தைமாத்ரம் வடிகட்டி எடுத்துவிட்டு, பாலைக் காயவைக்க வேண்டும்.

இன்னொரு முறையாவது, காய்களிலிருந்து எடுத்த பாலை உடனே வெயிலில் நன்றாய்க் காயவைத்து கெட்டியாக்கவேண்டும். சீக்ரமாயும் நன்றாயும் காயவைக்காவிட்டால் பால் கெட்டுப்போகும். கெட்டிப்பாலை உடைத்தால் தூளாகும். இந்தத் தூளோடு பார்மலீன் என்னும் மருந்தைச் சேர்த்து கண்ணாடி ஜாடிகளில் போட்டு வெளியூர்களுக்கு அனுப்பலாம்.

காயிலிருந்து பாலெடுப்பதால் காய் கெட்டுப்போவதில்லையாம். அப்படிக்கின்றி காய்கள் சீக்ரம் மூடிக்கொள்கின்றனவாம். அதோடு அதன் ருசி அதிகர்க்கிறதென்று சொல்லுகிறார்கள். பால் சற்று கசப்புள்ளது. இந்தப் பாலை எடுத்துவிடுவதால், காயிலுள்ள கசப்பு நீங்குகிறதென்று சொல்லப்படுகிறது.

### Copra.

**தேங்காய்ப்பருப்பு.**—காய்ந்த தேங்காய்ப் பருப்பின் விலை வரவர அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதன் விலை இன்னும் ரொம்ப அதிகரிக்குமாம். ஐரோப்பாவிலுள்ள அநேகவ்யாபாரிகள் இதை அதிகமாகவாங்கமுன்வந்திருக்கிறார்களாம். யுத்தம் முடிந்தபிறகு இதன் விலை இன்னும் ரொம்பஅதிகமாகக் கூடுமாம். ஏனென்றால் யுத்தத்தில் ஸைன்யங்களுக்கு ஆகாரம் கொடுக்கவும் இன்னும்மற்ற கார்யங்களுக்கும் ஏராளமாக மாடுகளைக் கொன்று விடுகிறார்களாதலால், வெண்ணெய் கிடைப்பது அரிதாகிவிடும். தேங்காயிலிருந்து செயற்கை வெண்ணெய்செய்யலாமாகையால் ஐரோப்பாவில் இந்தப்பொருளுக்கு ரொம்ப க்ராக்கி ஏற்படுமாம். கொழும்பிலுள்ள ஒரு கம்பெனி அடுத்த வர்ஷத்தில் கண்டி 1-க்கு 75 ரூபா முதல் 80-ரூபா வரையில் 10,000-கண்டி காய்ந்த தேங்காய்ப் பருப்பை (கொப்பரை) ஐரோப்பிய வர்த்தகர்களுக்கு விற்க ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

### Paper Coal.

**கடுதாசி நிலக்கரி.**—ஜெர்மனியில் நிலக்கரி குறைந்து போனதால் அங்குள்ள ஏழைகள் கடுதாசியை அடுப்பெரிக்கப் போகிறார்களாம். கடுதாசியைப் பின்வருமாறு தயார் செய்ய வேண்டுமாம். அதை 36-மணி நேரம் ஜலத்தில் ஊறவைத்து பிறகு எடுத்து பந்தைப்போலிருக்கும்படி கெட்டியாக உருட்டிப் பிறகு அப்படியே காயவிடவேண்டும். நன்றாய்க் காய்ந்தபிறகு அந்தக் கடுதாசி உருண்டை மரத்தைப்போல் கெட்டியாகிவிடுகிறது. அதை எரியவிட்டால் கொழுந்துவிட்டு எரிவதில்லையாம். ஆனால் நிலக்கரியைப்போல் சிவப்பு நிறமான தணலுடன் மெதுவாய் எரிகிறது. அது ரொம்ப உஷ்ணங்கொடுக்கக்கூடியதாம். நிலக்கரித்தூளை கீல் எண்ணெயுடன் கலந்து செங்கலைப்போன்ற உருவமுள்ள துண்டுகளாக கெட்டியாக்கி வைத்து, அதை மேற்சொன்ன கடுதாசி உருண்டையுடன் உபயோகிக்கலாமாம். 3-கடுதாசி உருண்டையும் 1-நிலக்கரித்தூள் சேர்த்துச் செய்த துண்டும் 1-ராத்தல் மாம்ஸத்தை பக்வம் செய்யப் போதுமான விறகாகுமாம்.



# BOYS' PAGE.
## பையன்கள் பக்கம்.

### Children and the War.

**குழந்தைகளும் யுத்தமும்.**—இந்த யுத்த ஸந்தர்ப்பத்தில் இங்க்லண்டில் எல்லாரும் செட்டாய்ச் செலவு செய்ய முயற்சிசெய்துவருகிறார்கள். சிலர் சிறுவர் சிறுமிகளிடத்திலும் செட்டாய்ச் செலவுசெய்யும் வழக்கம் படிவதற்காக முயற்சி செய்துவருகிறார்கள். இங்க்லண்டில் வெளியாகும் ஒரு பத்ரிகை செட்டாய் செலவு செய்து மிச்சம் பிடிப்பதைப்பற்றியும், பணம் சேர்ப்பதைப்பற்றியும் ஒரு வ்யாஸப்போட்டி ஏற்படுத்திற்று. ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியர்கள் அது விஷயமாய் வ்யாஸம் எழுதினார்கள். அந்த வ்யாஸங்களை எழுதினவர்களில் ஒரு பையனுடைய வ்யாஸம் ரொம்ப நேர்த்தியாயிருந்ததால் அதற்கு வெகுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பையன் செட்டாய்ச் செலவுசெய்து மிச்சம் பிடிப்பதற்குச் சொல்லும் வழியாவது. "நான் க்ராமாந்தரத்திலுள்ள ஒரு சிறு பையனாகையால், எனக்கு நல்ல வேலைகிடைப்பது அரிது. என்றாலும், ஒவ்வொரு சனிக்கிழமையிலும் நான் ஒரு குடியானவனுக்கு உதவி செய்துவருகிறேன். அவனுக்கு ஆள்கள் அதிகமாயில்லை. நான் அவனுடைய குதிரைகளை வீட்டிலிருந்து வயல் முதலியவைகளுக்கு ஒட்டிக்கொண்டு போகிறேன். எங்கேயாவது, யாருக்காவது ஸமாசாரங்கள் தெரிவிக்கச்சொன்னால் நான் அவ் வேலையைச் செய்து வருகிறேன்.

இன்னும் பணம் ஸம்பாதிக்க பின் வரும் வேலைகளை நான் செய்யவேண்டும். (1) வயல்களிலுள்ள ஆட்களுக்கு சாப்பாடு கொண்டுபோய்க் கொடுக்கலாம். (2) குழந்தைகளை வைத்துக்கொண்டிருக்கலாம். (3) தோப்புகளிலுள்ள சுள்ளிகள், ஓக் மரத்தின் விதைகள் முதலியவைகளை சேகரிக்கலாம். (4) போரடிக் களங்களிலும், வயல்களிலும், தான்யங்கொண்டுபோகும் வண்டிகளிலும் சிந்தியிருக்கும் தான்யங்களைப் பொறுக்கி கோழிகளுக்குப் போடலாம். (5) கிணறுகளிலிருந்து ஜலம் எடுத்துக்கொடுக்கலாம்.

இன்னும் பின் வரும் விதமாக செலவைக்குறைக்கலாம். (1) பார்ஸல்களில் கட்டியிருக்கும் கயிறுகளை அறுக்காமல் அவிழ்த்தெடுத்து மறுபடியும் உபயோகிக்கலாம். (2) தெருக்களில் விழுந்து கிடக்கும் பொத்தான்களை எடுத்து மறுபடியும் உபயோகிக்கலாம். (3) நெருப்புப்பெட்டிகளை சேகரித்து வைத்தால் அடுப்புப் பற்றவைக்க உதவும். (4) தேயிலையிலும், கொக்கோவிலும் சர்க்கரை போடாமல் குடிக்கலாம். (5) சுவர்களின் மேல் ஏறுதல், அபாயம் உண்டாகக்கூடிய விளையாட்டுகள் ஆகிய இவைகளை நிறுத்திவிடலாம். (6) ஆடைகளை அழுக்காக்காமலும் கிழிக்காமலும் வைத்துக்கொள்ளலாம். (7) பக்ஷணங்கள், மிட்டாய்கள் முதலியவைகள் வாங்கித்தின்னாமலிருக்கலாம்."

### The Childhood of Animals.

**ம்ருகங்களின் பால்யகாலம்.**—ம்ருகங்களின் பால்யகாலமானது அந்தந்த ம்ருகங்களின் பூர்ண ஆயுஸு, அவைகளின் பரிமாணம், ம்ருக வகைகளில் அவை எவ்வளவு தூரம் உயர்ந்தவையாயிருக்கின்றன என்பவைகளைப் பொறுத்திருக்கின்றன. அதிக காலம் ஜீவித்திருக்கும் ம்ருகங்களுக்கும், பெரிய ம்ருகங்களுக்கும், புத்தி அதிகமாயுள்ள ம்ருகங்களுக்கும் பால்ய காலம் ரொம்ப அதிகம். நாகரீகம் மிகுந்த மனிதனுக்கு பால்யப்பருவம் (அதாவது பூரா வளர்ச்சியடைவதற்கு ஏற்பட்டகாலம்) 20-வர்ஷமாகும். நாகரீகமற்ற காட்டு ஜாதியாருக்கு பால்யப்பருவம் 15-வது வர்ஷத்தோடு முடிந்துவிடுகிறது. அதிக அறிவுள்ள கொரில்லா, உராங் உடாங் என்னும் குரங்குகள் பூரா வளர்ச்சி யடைவதற்கு 12-முதல் 14-வர்ஷ காலம் பிடிக்கிறது. பாபூன் என்னும் குரங்குக்கு 8-வர்ஷகாலம் பால்யப்பருவமாகும். தாழ்ந்த ஜாதிக்குரங்குகள் நான்கு வர்ஷத்துக்குள் பூர்ணமாக வளர்ந்து விடுகின்றன.

புத்தி குறைவான பூனை யினத்தைச்சேர்ந்த பெரிய ம்ருகங்கள் அதாவது சிங்கம், புலி ஆகிய இவைகளின் பால்யப்பருவம் நாலைந்து வர்ஷந்தான். அறிவு குறைவான சாகபக்ஷணிகளாகிய எருமை, ஆண்டிலய் என்னும் மான்போன்ற ம்ருகம் ஆகிய இவைகள் சீக்ரம் பூர்ணவளர்ச்சியை யடைகின்றன. இவைகளுடைய பால்யப்பருவம் 2-வர்ஷகாலமாகும்.

ரொம்ப பெரியதும் புத்தி கூர்மையுள்ளதுமான யானையோ 20-முதல் 24-வர்ஷம் கழித்துத்தான் பூர்ண வளர்ச்சியை யடைகிறது. எல்லாபக்ஷிகளும் ஸ்வல்ப காலத்துக்குள்ளேயே பூர்ண வளர்ச்சியை யடைந்துவிடுகின்றன. அவைகள் ஸாதாரணமாய் 3-வாரமுதல் 3-மாஸக் காலத்துக்குள் தங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ளத் திறமையடைந்து விடுகின்றன. 1 முதல் 4-வர்ஷத்துக்குள் பூர்ணவளர்ச்சியை அடைந்து விடுகின்றன.

# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Warrior Women.

**போர் செய்யும் ஸ்த்ரீகள்.**—ரஷ்யாவில் தற்போது 400-ஸ்த்ரீகள் படைகளில் சேர்ந்து யுத்தம் செய்து வருகிறார்கள். இவர்கள் ஆண் உடைதரித்து, ஆண்கள் போல நடித்து ஸைன்யங்களில் சேர்ந்து கொண்டார்களாம். இவர்கள் போரில் காயம்பட்டு சிகித்ஸைக்கு வந்தபோது தான் இவர்கள் ஸ்த்ரீகள் என்பது தெரியவந்ததாம். இதனால் ரஷ்யாவில் ஸ்த்ரீகள் எவ்வளவு தேசாபிமான முள்ளவர்களாயிருக்கிறார்களென்பது தெரியவரும்.

காக்கவ்ட்விலா என்னும் பெயருள்ள ஒரு ஸ்த்ரீ ஒரு ரெஜிமெண்டில் கர்னலாக இருக்கிறாளாம். இவள் கிழக்கு ப்ரஷ்யாவில் யுத்தம் செய்து கொண்டிருந்தபோது இரண்டு தடவை காயமடைந்தாளாம். இவள் ரொம்ப தைர்யமாய் யுத்தம் செய்ததற்காக இவளுக்கு ஒருவிருது கொடுக்கப்பட்டிருக்கிறது. இவளுக்கு கவர்ன்மெண்டார் ராணுவப் பென்ஷன் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்களாம்.

அலெக்ஸாண்ட்ரா என்ற ஒரு பெண் ராணுவத்தில் காஸக்ஸ் என்னும் குதிரைப்படையில் சேர்ந்திருக்கிறாள். அவளையும் இன்னும் ஆறு பெயரையும் ஜெர்மானியர்கள் கைதி செய்து ஒரு மாதாகோவிலில் அடைத்து விட்டார்கள். அந்த ஸ்த்ரீ அவளோடு அடைபட்டிருந்த மற்ற ஆறு பேர்களுடன் கோவிலின் ஜன்னலை உடைத்து வெளியில் வந்து பாராக்காரனைச்சுட்டுக்கொன்றாள். அவர்கள் தங்களுடைய குதிரைகளிருந்த இடத்துக்குப்போய் குதிரைகளில் ஏறிக்கொண்டு, தப்பியோட முயலும்போது 18-ஜெர்மன் குதிரை வீரர்கள் அவர்களை எதிர்த்தார்கள். அவர்கள் சாதுர்யமாய் ஜெர்மன் வீரர்களைக் கைது செய்து, அவர்களிடமிருந்த முக்யமான தஸ்தாவேஜிகளை எடுத்துக்கொண்டு போய் ஸேனாதிபதியினிடம் கொடுத்தார்களாம்.

### Government College for Women.

**ஸ்த்ரீகளுக்கான கவர்ன்மெண்ட் காலேஜ்.**—சென்ற $1\frac{1}{2}$-வர்ஷகாலமாக நடந்து வரும் கவர்ன்மெண்ட் ஸ்திரீ காலேஜுக்காகக் கட்டப்பட்டிருக்கும் புதுக்கட்டிடம் இந்த மாஸம் சென்னை கவர்னரால் வேலைவக்கப்பட்டது. இந்த காலேஜில் தற்போது 44-ஸ்திரீகள் வாசித்துவருகிறார்கள். மாணவர்களும் உபாத்யாயர்களில் சிலரும் காலேஜ்கட்டிடத்திலேயே வஸித்துவருவதற்கு வேண்டிய வஸதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காலேஜ் ஸம்பந்தமான பல விஷயங்களைப்பற்றி யோசனை சொல்ல பற்பல மதஸ்தர்கள் சேர்ந்த ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்த காலேஜ் மாணாக்கர்களுக்கு மதஸம்பந்தமான கல்வி கற்பிப்பதைப்பற்றி மேற்சொன்ன கமிட்டி ஆலோசனை செய்யுமாம். ராவ் ஸாகிப் ராமானுஜம் செட்டியார் அந்தக் காலேஜில் வாசிக்கும் ஒரு ஹிந்து ஸ்திரீக்கும், ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கும் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 25-ரூபாய் வீதம் 4-வர்ஷத்துக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

### Spinach Gives Beauty.

**பசளைக்கீரை அழகைக் கொடுக்கும்.**—மனோஹரமான முகநிறத்தைவிரும்பும் ஸ்த்ரீகள் பசளைக்கீரையை ஸாத்யமானவரையில் அதிக அளவில் புஜித்துவரலாம் என்று சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறினார்கள். அவ்விதமே அதை இப்பொழுது உபயோகித்துப் பார்த்ததில், அக்கீரை நரம்புகளுக்கு பலம் கொடுக்கக்கூடியதென்றும், முகத்தில் தேஜஸ்ஸை உண்டாக்கக்கூடியதென்றும் தெரியவருகிறது. விலையில் மலிவாக இருக்கும் சாகவர்க்கத்தை நமது வீடுகளில் அலக்ஷ்யமாக சமையலுக்கு உபயோகிப்பதில்லை. சாஸ்த்ர நிபுணர்கள் இக்கீரையை உணவுப்பொருட்களில் முதல் தரமானதென்றும், ஜனங்கள் இதை அதிகமாக உபயோகிப்பது நலமென்றும் எண்ணுகிறார்களென ஒரு பத்ரிகை கூறுவதாக 'வைத்திய கலாநிதி' எழுதுகிறது.

### Cocoanut 'Vadam'.

**தேங்காய் வடாம்.**—அரைப்படி அவலைக் கொஞ்சம் ஜலத்தில் ஊறவைத்திருந்து, பின்பு ஜலத்தை நன்றாய் வடித்துவிட்டு உலர்ப்போட்டு, முதிர்ந்த தேங்காய்த் துருவல் ஒருவீசை அதிற்கொட்டி அரைத்து எடுத்து, ஈயம் பூசியதோர் பாத்ரத்தில் வைத்துக்கொள்ளவும். $\frac{1}{2}$ பலம் மிளகாய் 1 பலம் உப்பு $\frac{1}{2}$ பலம் பெருங்காயம் இவைகளைத் தனித்தனியே பொடி செய்து கலந்து மறுபடியும் பொடிசெய்து, அரைத்து வைத்திருக்கும் தேங்காய் விழுதில் கலந்து 8 எலுமிச்சம் பழத்தின் ரஸத்தை அதில் பிழிந்து ஒன்றாய்க்கலந்து நன்றாய்ப் பிசைந்து மற்ற வடாம்போல் இட்டு உடயோகிக்கவும்.—விச்வகர்மன்.



# INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### How Labourers are Recruited.

**கூலியாட்களை எப்படிச்சேகரிக்கிறார்கள்.**—அநேக இந்தியர்களுக்குத் தங்களுடைய ஸொந்த ஜில்லா அல்லது சுற்றுப்புறத்து ஜில்லாக்களைத் தவிர வேறு நாடுகளைப்பற்றி ஒன்றும் தெரியாது. அந்த ஜில்லாக்களைப்பற்றியும் ஒன்றும் செவ்வையாய்த் தெரியாதென்னலாம். மேலும் அவர்கள் பயந்த ஸ்வபாவமுள்ளவர்களாயும், தைர்யக்குறைவுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். அப்படியிருக்க அநேக ஸ்திரீகள் தனியாக, அநேக ஆயிர மைல்களுக்கப்பாலுள்ள தீவுகளுக்குப்போக எப்படித் துணிந்தார்களென்று பலர் அறியவிரும்பலாம். 'உதய தாரகை'யின் இங்க்லீஷ் பதிப்பில் இது ஸம்பந்தமாய் சில விஷயங்கள் வெளியாகின்றன. மிஸ் டட்லி என்னும் ஒரு பாதிரி ஸ்த்ரீ பிஜித்தீவில் இந்தியர்களை உயர்த்துவதற்காகப்போய் அங்கே தங்கி வருகிறார். அவருக்கும் மேற்சொன்ன ஸந்தேகம் ஜனித்து கூலியாட்களைக் கேட்டதில் ஒரு ஸ்த்ரீ பின்வருமாறு சொன்னாளாம். அவள் தனது கணவனோடு சண்டைபோட்டுக்கொண்டு கோபத்தில் தனது பிறந்தவீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கையில், கூலியாள் சேர்க்கும் ஒருவன் அவளை வழியில்கண்டு விசாரித்து, அவளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய்விடுவதாகச் சொல்லி, ஒப்பந்தக் கூலியாள்கள் சேர்த்து வைத்திருக்கும் டெபோவுக்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டானாம்.

இன்னொரு ஸ்திரீயின் புருஷன் அயலூரில்போய் வேலைசெய்து பிழைத்துக்கொண்டிருந்தானாம். அவன் தன் மனைவியை வரும்படி சொல்லியனுப்ப அவள் புருஷனிருந்த ஊருக்குப் புறப்பட்டுப் போனாள். வழியில் கூலியாள் சேர்க்கும் ஒருவன் அவளைக்கண்டு விசாரித்து, தனக்கு அவளுடைய புருஷனைத்தெரியுமென்றும், தான் அவளைபுருஷனிடம் கூட்டிக்கொண்டு போய்விடுவதாகவும் சொல்லி, ஏமாற்றி ஒப்பந்தக் கூலியாட்கள் சேகரித்து வைத்திருந்த ஓரிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய்விட்டான். அவள் வழியில் தன் புருஷனைக்கண்டு அவனைக் கூப்பிடுகையில், ஆள்சேர்ப்பவன் அவளை ஹிம்ஸித்துப் பேசாமலிருக்கும்படி செய்துவிட்டானாம். இன்னொரு ஆள் சேர்ப்பவன் ஒரு பெண்ணை அல்லாபண்டிகை பார்க்க அழைத்துக்கொண்டு போய் கடைசியில் ஏமாற்றி டெபோவுக்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டானாம். இன்னொரு பெண் ஸ்நானத்துக்கு ஆற்றங்கரைக்குப் போய்க்கொண்டிருக்கையில் கூலியாள் சேர்ப்பவனுக்கு உள்ளாளாக இருந்த ஒரு ஸ்த்ரீ அவளை ஏமாற்றி கூலியாள் சேர்த்துவைத்திருக்கும் டெபோவுக்குக் கூட்டிக்கொண்டு போய்விட்டாள். ஒப்பந்தக் கூலியாள் சேர்க்கும் ஏஜெண்டுக்கு அவன் சேர்த்துக் கொடுத்த கூலியாள் ஒவ்வொருவருக்கும் 25-ரூபாய் வீதம் பணம் கிடைப்பதால், அவன் எப்படியாவது ஏமாற்றிக் கூலியாள் சேர்ப்பதிலேயே கண்ணாயிருக்கிறான்.

### Indentured Emigration.

**ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டில் அயல் நாடுகளுக்குப் போவது.**—இந்திய ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டைப் பற்றிப் பரிசீலனை செய்த மெஸ்ஸர்ஸ் மாக்னீல், சிம்மன்லால் என்ற இருவர்களுடைய ரிபோர்ட்டைப்பற்றி ஏற்கனவே ஜனவரி மாஸத்து 'ஜனோபிமானி' யில் ப்ரஸ்தாபம் செய்திருக்கிறோம். இந்தியா கவர்ன்மெண்டார் அந்த ரிபோர்ட்டைமாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்பி அவர்களுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டதன்மேல் மாகாண கவர்ன்மெண்டுகளும் அபிப்ராயங்களைத் தெரிவித்தன. இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் இவைகளைப்பற்றி ஆலோசித்து ஒப்பந்தக்கூலி விஷயமாய் ஒரு கடிதம் எழுதி இந்தியா மந்த்ரிக்கு அனுப்பியிருக்கிறார்களென்று தெரிகிறது. இந்தியா கவர்ன்மெண்டார் ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று அபிப்ராயப்படுகிறார்களாம். இது விஷயத்தில் வைஸ்ராய் அதிக ஊக்கம் காட்டி வருகிறாராம். இந்தியா மந்த்ரி இது விஷயமாய் என்னவிதமாகத் தீர்மானிப்பாரோ தெரியவேண்டும்.

### Indian Mahomedans in Transvaal.

**ட்ரான்ஸ்வாலில் இந்திய மகம்மதியர்கள்.**—ஸமீபத்தில் தென்னாப்ரிக்காவைச் சேர்ந்த ட்ரான்ஸ்வாலிலுள்ள ஜோகன்னஸ்பர்க்கில் இந்திய மகம்மதியர்கள் ஒரு பெரிய மீட்டிங்கில் கூடி ட்ரான்ஸ்வால் இந்திய மகம்மதியர்களின் காங்க்ரெஸ் ஒன்று ஸ்தாபித்தார்கள். ட்ரான்ஸ்வாலிலுள்ள இந்திய மகம்மதியர்களின் மதம், ஜனஸமூக விஷயம், ராஜரீக ஸம்பந்தம் ஆகிய இவைகளைப்பற்றி கவனித்து அவர்களுடைய க்ஷேமத்தை வ்ருத்திசெய்வதே இந்தக் காங்க்ரெஸின் நோக்கமாகும்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாகதைகளும்.

### A Nice Way of Criticising.

**நாகரிகமாய்க் கண்டித்தல்.**—இரண்டு ஸ்நேகிதர்கள் நாடகம் பார்க்கச் சென்றிருந்தார்கள். கொஞ்ச நேரமானவுடன் ஒரு மனிதன் அவர்களுடைய முன்னிலையில் நின்றுகொண்டிருந்தமையால், நாடக மேடையில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்க்க முடியாமலிருந்தது. அவ்விதம் நிற்கும்மனிதனை நகர்ந்துகொள்ளும்படியும் சொல்லவேண்டும்; அவ்விதம் சொல்வது நாகரிகமாகவும் இருக்கவேண்டுமென்று கண்ட அவர்களுள் ஒருவன் அந்தமனிதனைத் தன்னுடைய கைப்பிரம்பால் மெதுவாய் ஸ்பர்சித்து, "நண்பரே, நாடக மேடையில் ஏதேனும் வேடிக்கை நடந்தால் இன்னது நடந்ததென்று தயைசெய்து சொல்லிவிடுங்கள். என்னவோ இந்த ஒத்தாசை நீங்கள்தான் செய்யவேண்டும்." என்றான். இதன் கருத்தை யறிந்தமனிதன் மெதுவாக விலகிப்போனான்.

### The Sergeant's Advice.

**ஸார்ஜண்டினுடைய புத்திமதி.**—புதிதாக ஸைன்யத்தில் சேர்ந்த ஒருவனை ஒரு பெரிய பட்டணத்துக்குப் பயிற்சிக்காக அனுப்பினார்கள். அவன் அந்தப் பட்டணத்துக் கருகாமையில் ஸைன்யம் தங்குவதற்கேற்பட்ட இடத்தில் தங்கியிருந்தான். அவன் அந்த ஊருக்குவந்த சிலநாள்களுக்கெல்லாம் பட்டணத்தைச் சுற்றிப்பார்க்க எண்ணி அவனுக்குமேல் உள்ள ஸார்ஜண்டினிடம் அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டு ஊரில் சுற்றித்திரிந்தான். பிறகு ஸைன்யம் தங்கியிருக்குமிடம் வரும்போது வழிதப்பிவிட்டது. ரொம்ப நேரங்கழித்து அவன் ஸைன்யம் தங்கியிருக்கும் இடத்துக்குவந்தான். வந்தவுடன் அவனுடையமேலதிகாரியாகிய ஸார்ஜண்ட் 'ஏன் தாமஸித்து வந்தா'யென்று கேட்டான்.

வீரன்.—"வழி தப்பிவிட்டது"

ஸார்.—"வழியா தப்பிவிட்டது?"

வீரன்.—"ஆம், ஐயா."

ஸார்.—"அப்படியானால், நீ பட்டணம் முழுவதும் உனக்கு நன்றாய்த்தெரிகிற வரையில், இந்த விடத்தைவிட்டுப் பட்டணத்துக்குள் போகவேண்டாம்."

### The Doctor with a Business Instinct.

**தொழிலில் நிபுணரான ஒரு டாக்டர்.**—டாக்டர் ரோ... : "உம்மிடம் வரும் பிணியாளிகளைப் பார்த்து, ...ளும் வா...

...ர்கள். அ...

வ்யாதி எவ்வளவு ஸாதாரணமாயிருந்தபோதிலும், அவர்களுடைய ஆஹாராதிகளையும் வாழ்க்கையின் வகைகளையும் பற்றி எப்பொழுதும் அவ்வளவு குறிப்பிட்டு ஏன் விசாரிக்கிறீர்? வ்யாதி நிதானத்தில் அவ்விஷயங்கள் அவ்வளவு அவசியமா?"

டாக்டர் ராபர்ட்ஸன்: "அதல்ல விஷயம்; தொழிலில் உமக்கு அவ்வளவு அநுபவம் போதாது; அவ்வித கேள்விகள் எனக்கு மற்றொரு விஷயத்தில் உதவுகின்றன; பிணியாளியின் அந்தஸ்துக்களை இதனால் அறிந்து கொள்வேன்; பிறகல்லவோ ஏற்றவாறு பீஸ் ஏற்பாடு செய்துகொள்ளலாம்?"—வைத்தியகலாநிதி.

### A Lamb's Help in War.

**யுத்தத்தில் ஓர் ஆட்டுக்குட்டியினுதவி.**—பெர்ஸாகிளியரி என்னும் இட்டாலியப்படைகள் ஆஸ்ட்ரியப் பீரங்கிப்படைகளோடு யுத்தஞ்செய்கையில் ஓர் ஆட்டுக்குட்டி யகப்பட்டது. பெர்ஸாகிளியரி வீரன் ஒருவன், அதை அன்புடன் வளர்த்து வந்ததனால் அவனை விட்டுப் பிரியாமலிருந்தது. ஒருநாளிரவு, ஆஸ்ட்ரியப் படைகள், காவலைத்தாண்டி பெர்ஸாகிளியரிப் படைகளிடம் வந்து விட்டார்கள். ஆஸ்ட்ரியர்களைக்கண்ட ஆட்டுக்குட்டி பயந்து கத்தவே, இட்டாலியர் விழித்து எதிரிகளைத் தாக்கி ஜயமடைந்தனராம்.

### Reason for His Fear.

**பயப்படக்காரணம்.**—நல்ல மழைபெய்து நின்றவுடன் ஒரு தனவான் தனது தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து வருகையில் "இன்றைய தினம் பெய்த மழையால் பூமி செழித்துத் தன்னிடத்திலுள்ள ஸகலத்தையும் மனிதர்களுக்குக் கொடுக்கும்." என்று கூறினார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த தோட்டக்காரன் "எஜமானே அப்படிச் சொல்லாதீர்கள். நான் இங்கே புதைத்துவிட்ட ராக்ஷஸியான என் பெண்சாதியையும் இந்த பூமி வெளியே கொண்டுவந்துவிட்டால் என் கதி அதோகதி தான்." என்று பயந்து கூறினான்.

### A Merchant and Priest.

**வ்யாபாரியும் குருவும்.**—ப்ரான்ஸிலுள்ள ஒருவூரில் ஒரு வ்யாபாரி ஏளனமாய் ஒரு குருமாரைப்பார்த்து, "பாரிஸ்மாநகரில் ஒரு குருமாரைத் தூக்கில் போடும்போது ஒரு கழுதையையும்கூடப் போடுவார்களென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றான். அதற்கு அவர், "ஆம், நல்லவேளையாய் நாமிருவரும் அங்கில்லாததைப் பற்றி ஸந்தோஷம்," என்றார்.



காவுக்குத் ெ...

நக்கிறார்...

# CURIOSITIES.

## விநோதங்கள்.

பக்கத்

### ...nds.

...ருக்கி...ந்துதல்.—அமெரிக்கா ஐக்ய நாடுகளின் ...ரதி... விருந்து முதலிய உபசரிப்புகள் நடத் ...வது மனைவியும் கூட இருப்பது வழக் ...மயம் வந்திருக்கும் அமெரிக்கர்கள் எல் ...ரிடம் சென்று அவளுடைய கையைக் ...ம். உபசரிப்புக்குத் திரளான ஜனங்கள் ...ர்களாதலால், அத்தனைபேரும் அவளுடைய ...லுக்கினால் கை நோவெடுக்கும். விக்டோரி ...த்தினி பட்டத்துக்கு வந்தபோது ஒரு ...டந்தது. அப்போது 3000-பேர்கள் ...ர் கையைக் குலுக்கினார்களாம். அதனால் ...கை சிறிது காலம் ஸ்வாதீன மில்லாமல் ...து போலாயிற்றாம். அமெரிக்கா ஐக்ய ... தற்போது ப்ரெஸிடெண்டாக இருக்கும் ...வில்ஸன் ஸமீபத்தில் மிஸ்ஸஸ் நார்மன் ...னும் ஸ்த்ரீயைக் கல்யாணஞ் செய்துகொண் ...யாணமான பின்பு நடக்கும் உபசரிப்பு ...ல் ஸுமார் 6,000-பேர்கள் அவருடைய மனைவியைக் குலுக்குவார்களாம். பிறர் தமது கை ...லுக்கும்போது என்ன செய்யவேண்டுமென்று ...தலிலேயே கற்றுக் கொள்ளாவிட்டால் அவர் கஷ்டப்பட்டிருப்பார்.

...டுக்காமலிருக்கும்படி கைகுலுக்க வேண்டிய ...ன்னவென்றால், தமது கையைப்பிடித்துக் ...வருபவருடைய கையைத் தாமே முதலில் ...ாய்ப் பிடித்துக் குலுக்கிவிடுவது. முன்பு ...நாடுகளின் ப்ரெஸிடெண்டாக இருந்த ...ின் ஹாரிஸனுடைய மனைவி இந்த யுக்தியைக் ...காள்ள முயன்று முடியாமல், உபசரிப்புகள் ஒவ்வொரு ஸமயத்திலும், ஒரு கையில் புஷ்தம், இன்னொரு கையில் விசிறியும் வைத்...டிருந்தானாம். இதனால் ஒருவரும் அவரு...பக்குலுக்க முன்வர முடியவில்லையாம்.

### ...Play.

...ளையாட்டு.—வடக்கே பாரிட்பூர் ஜில்லா ...ம் ஊரில் சில பையன்கள் ... செய்ய

...யின் பெயர் இங்க்லீஷ் கக்ஷி. இன்னொரு கக்ஷியின் பெயர் ஜெர்மனி கக்ஷி. இரண்டு கக்ஷியாரும் சண்டை செய்து, அதில் எந்தக்கக்ஷியாவது தோற்றுப்போனால், தோற்ற கக்ஷியின் தலைவனுடைய காதை அறுத்துவிடவேண்டுமென்று பந்தயம் போட்டுக்கொண்டார்கள். யுத்தம் சிலகாலம் நடந்தது. கடைசியில் இங்க்லீஷ் கக்ஷியார் தோற்றார்கள். முன் ஏற்படுத்தின நிபந்தனையின்படி இங்க்லீஷ் கக்ஷியின் தலைவனுடைய காதை கட்டாயப்படுத்தி யறுத்துவிட்டார்கள். இவ்விஷயம் அந்த ஊர் ஸப் டிவிஷனல் ஆபீஸருக்குத் தெரிந்ததன்மேல், அவர் ஜெர்மன் கக்ஷியின் தலைவனுக்கு ஸம்மன்ஸ் அனுப்பினாராம்.

### A Kid with a Human Face.

**மனிதத் தலையோடு ஒரு ஆட்டுக்குட்டி.**—சென்ற நவம்பர் 7வ சைதாப்பேட்டை கடைத்தெருவில் ஒரு ஸ்த்ரீ அவ்வூர் கசாப்புக்கடையிலிருந்து ஆட்டின் குடலை வாங்கிவந்தாள். வீட்டிற்கு வந்து அரிந்து பார்த்தபொழுது, அதற்குள் முகம் மாத்ரம் மனித முகத்தோடு கூடியதாய் ஒரு ஆட்டுக்குட்டி இருக்கக் கண்டாள். மற்ற அவயவங்கள் யாவும் ஆட்டின் உருவந்தான். இரண்டொரு நிமிஷம் மாத்ரம் அது உயிருடன் இருந்ததாம். பிறகு அதை மதராஸ் ம்யூஸியத்திற்கு அனுப்பிவிட்டதாகத் தெரிகிறது.

### The Book-lover.

**புஸ்தக ப்ரியர்.**—"புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" மென்ற வசனத்தை தற்கால நாகரீகத்தையொட்டி, "புஸ்தகம் அலமாரி பூஷணம்" மென்று மாற்றிவிடவேண்டும் போலிருக்கிறது. இங்க்லண்டில் ஸ்த்ரீகளுக்கென்று வெளியாகும் ஒரு பத்ரிகையில் ஒருவர் பின்வருமாறு விளம்பரம் செய்திருக்கிறார். "லைப்ரரி புஸ்தக அலமாரிகளில் வைப்பதற்கு கோர்த்தியாய் பைண்டுசெய்த ... கங்கள் தேவை. பைண்டிங் நன்றாயிருந்தால் போ... புஸ்தகத்தில் உள்ள விஷயம் எப்படியிருந்தா... பாதகமில்லை."

### Three Sisters Widowed at the Same Time.

**மூன்று ஸகோதரிகள் ஒரே காலத்தில் விதவையாயினர்.**—டாக்காவில் ஒரு ப்ராமணன் தனதுமூன்று பெண்களுக்கும் தக்க வரன்கள் கிடைக்காததனால் ஒரு வரனுக்கே எல்லாப் பெண்களையும் கல்யாணம் செய்துகொடுத்தான். மாப்பிள்ளை ஸமீபத்தில் க... மாகிவிடவே மூன்று ஸகோதரிகளும் ஏக காலத்... ...ார்கள்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ஆஸ்ட்ரியா-ஜெர்மனி இவைகளுக்கும் ரஷ்யாவுக்கும் யுத்தம்.

நவம்பர் 2-தேதி.

ரஷ்யர்கள் கலீஷ்யாவில் டார்னுபோல் என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

3-தேதி.

ரஷ்யர்கள் ட்வின்ஸ்குக்கு மேற்கில் முன்சென்று கொண்டிருக்கிறார்கள். லக்குக்கு 37-மைல் வடமேற்கில் ஸ்டர் நதியோரமாக ஜெர்மானியர்கள் தோற்றுப் போனார்கள். ஸ்ட்ரிபா நதியோரமாக ரஷ்யர்கள் 3,500-ஆஸ்ட்ரியர்களைக் கைதி செய்தார்கள்.

4-தேதி.

ரஷ்யர்கள் ட்வின்ஸ்குக்கு 8-மைல் தென்மேற்கில் 2-குன்றுகளைப் பிடித்தார்கள். காலீஷ்யாவில் அவர்கள் 5,000-ஆஸ்ட்ரியர்களைக் கைதி செய்தார்கள்.

8-தேதி.

ரிகாவுக்குத் தென்மேற்கில் உள்ள ஒரு க்ராமத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தார்கள். கலீஷ்யாவில் ஸ்ட்ரிபாநதி யோரமாக பலமான யுத்தம் நடக்கிறது.

9-தேதி.

ரஷ்யர்கள் ரிகாவுக்கு 19-மைல் மேற்கில் ப்ரான் சென்டார்ப், பாவஸ்ஸெரு என்னும் ப்ரதேசங்களைப் பிடித்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் மிடாவை நாக்கியும், ட்வின்ஸ்குக்கு மேற்கிலும் முன்சென்று காண்டிருக்கிறார்கள்.

·0-தேதி.

ரஷ்யர்கள் ரிகாவுக்கு மேற்கிலுள்ள கெம்மரு என்ற ஜில்லாவையும் ஜகோப்ஸ்டாடுக்குப் பக்கத்திலுள்ள ...புகின் என்ற ஊரையும் பிடித்திருக்கிறார்கள்.

1-தேதி.

ரஷ்யர்கள் ஒடெனி யென்னும் ஊரைப பிடித்திருக்கிறார்கள். அவர் ஸ்டர் நதிக்... ...ஊரையும் ...

13-தேதி.

ரஷ்யர்கள் செம்மரின், ஆண்டிங் என்... பிடித்திருக்கிறார்கள்.

15-தேதி.

ரஷ்யர்கள் கெம்மரான் என்னும் ஊரு... ஜெர்மானியர்களைத் துரத்திக்கொண்டி... ப்ரிபெட் நதிக்குப்பக்கத்தில் பலமான ய... கிறது. சார்ட்டாரிஸ்குக்கு வடமேற்கில் ... தோற்றுப்போனதாக ஜெர்மானியர்கள் ஒ...கள்.

16-தேதி.

ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை ரிகாவுக்... துரத்திக்கொண்டிருக்கிறார்கள். ரஷ்யர் ...வாரம் 49,000-ஜெர்மானியர்களைக் கை... கள். ஸ்டிர் நதி ப்ரதேசத்தில் ஜெர்மானி... முன்சென்று கொண்டிருக்கிறார்கள்.

20- தேதி.

செர்டோரிஸ்குக்குப் பக்கத்தில் ஸ்டர் நதி... கரையில் ரஷ்யர்கள் பின்வாங்கினார்கள். ...ரிஸ்கு என்னும் ஊர் எதிரிகள் வசம் இருக்கி... தோன்றுகிறது.

22-தேதி.

ரிகா போர்முகத்தில் பீரங்கியுத்தம் ...யிருக்கிறது. ட்வீன்ஸ்குக்கு மேற்கில் ஜெ...கள் பின்வாங்கினார்கள். ரஷ்யர்கள் ஸ்டர் ... மேற்குக் கரையில் ஸார்ட்டோரிஸ்கு என்னு... மறுபடியும் பிடித்திருக்கிறார்கள்.

23-தேதி.

ரிகாவுக்குத் தென்கிழக்கில் ரஷ்யர்கள் எ... பின்னுக்குத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள். கலீஷ்யாவில் எதிரிகள் ஸ்ட்ரிபா நதியை... ...திருக்கிறார்கள்.

24-தேதி

ரஷ்யர்கள் ஒரு சிறிய ஜெர்மன் க்ரூஸ... கடலில் மூழ்கடித்தார்கள்.

25-தேதி.

ரிகா போர்... ...



...காவுக்குத் தென்கிழக்கில் உள்ள குன்...ருக்கிறார்கள்.

...பக்கத்தில் பலமான பீரங்கியுத்தம் நடந்...கள் இரண்டு ஜெர்மன் ஜெனரல்களைக் ...ருக்கிறார்கள்.

...தேதி.

எதிரிகளை ப்ரெடரிக்ஸ்டாட்டுக்கும் ...ராட்டுக்கும் மத்தியில் தோற்கடித்தார்கள். ...ரிகளை க்ரியாஸ்குக்கு தென் மேற்கில் ...ார்கள்.

...நம் எதிரிகளுக்கும் நடந்த சண்டைகள் ...ஸாதகமாக முடிந்தன.

...ரிகாவுக்கு வடக்கில் ட்வினாநதியைக் ...ப பின் தள்ளப்பட்டார்கள்.

... ப்ரதேசத்திலும் ரிகாப்ரதேசத்தி...நதது.

...கு தெற்கில் சில சண்டைகள் நடந்த ...ருக்கு ஸாதகமாய் முடிந்தன.

### ஸெர்வியாவில் யுத்தம்.

...தேதி.

...ரவாயை எதிரிகள் பிடித்து விட்ட... சொல்லுகிறார்கள்.

...ம்மைல் தூரத்திலுள்ள க்ராகுவாட்ஸ் ... ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ...ன. இந்தப் பட்டணத்தில் தான் ...த்த ஆயுதங்கள் செய்துவந்தனர். ...மைல் கிழக்கிலுள்ள சில குன்றுகளை பிடித்திருக்கிறார்கள். க்ரிவலக்கைச் ...களை ப்ரெஞ்ச் துருப்புகள் பிடித்தி...

ஜெர்மானியர்கள் யுத்தம் செய்துவருகிறார்கள். பல்கேரியர்கள் நிஷைநோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

4-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ஸெர்வியாவில் சற்று முன்சென்றிருக்கின்றன. அவைகள் உஸிஸ் பட்டணத்தில் நுழைந்திருக்கின்றன. காகாக் என்னுமிடத்துக்கு தென்கிழக்கில் யுத்தம் நடக்கிறது.

5-தேதி.

ஜெர்மன் துருப்புகள் காகோடினுவுக்குள் போயிருக்கின்றன. பிரட்டுக்கு தென்மேற்கில் பல்கேரியர்கள் முன்சென்றுகொண்டிருக்கிறார்கள்.

8-தேதி.

விலிஸுக்கும் ப்ரிலெப்புக்கும் மத்தியில் இஸ்வார் என்னுமிடத்தில் ஸெர்வியர்கள் ஒரு பல்கேரிய ஸைன்யத்தைத் தோற்கடித்தார்கள். ஸெர்வியர்கள் நிஷாவா நதியின் இடதுகரையில் தென்மேற்குமுகமாய்ப் பின்வாங்கிப்போய்க்கொண்டிருக்கிறார்கள்.

ஸெர்வியாவின் வடக்கில் ஜெர்மன் ஸைன்யங்களும் ப்ரெஞ்ச் ஸைன்யங்களும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. எதிரிகள் க்ரிலிவோ என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள்.

9-தேதி.

ஜெர்மானியர்கள் மேற்கு மொரேவியாவில் க்ருஷிவாட்ஸ் என்னும் ஊரைப்பிடித்திருக்கிறார்கள். அவர்கள் க்ராலிவோவுக்குத் தெற்கிலுள்ள குன்றுகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

10-தேதி.

பல்கேரியர்கள் போர்முகம் முழுவதிலும் முன்சென்று மொரேவியாநதிக்குப் போய்ச்சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அந்த நதியைக்கடக்க ப்ரயத்தனங்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்நதியோரமாக உள்ள அலெக்ஸிநாஸ் முதலிய பட்டணங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

ப்ரெஞ்ச் துருப்புகள் குப்ருலுவை மறுபடியும் பிடித்திருக்கின்றன.

பல்கேரியர்கள் மொரேவியா நதி யோரமாயு... அலெக்ஸினஸ் பட்டணத்தையும் இன்னும் சில ...களையும் பிடித்திருக்கிறார்கள்.

11-தேதி.

கவர்ன்மெண்டார் ஏற்கனவே ...

479

...ருங்கள்."

...ப்நாட்டில் (இந் ...ா கம்பனி ரோ ...ர்" அன்னிய ...க்கிலும் தனிர் ...த்தியும், அழ ...ளிலுமுண்டு ... 5-0-0.

...புனி, ...ஸ்ரீ காசி. ...res City.

...ணம்.— ...ரப் பத் ...றுபாயத் ...பசுகின்ற ...ருக்கும் ...வண்டிய ...முதலாக ...ந்த நிரை ... தோன் ...

... Gilt.)

T... periodical in this Presidency whic... ...ines and which makes the discussion of agric..., industrial, commercial and economic topics, its chief nature.

...e in welcom... ...riodical Litera... ...ginally designed ...nthly, edited and ..., B.A. Mr. Vaidya ...s for the educative ...do by means of this ...ife" is amply justified ...e very opening number ... not be the slightest ...object in view will be ...ambers. It is to be ...ade, industry, citizen... ...d technical education. ... industrial, commercial ... to nothing. If it is so ...asses, how much more is ... such an interest that the magazine apparently aims at creating and developing.

யிருந்தார்கள். இப்போது அவர்கள் அங்கிருந்து க்ருஷியோ என்னும் பட்டணத்துக்குப் போயிருக்கிறார்களாம்.

வார்டார் நதியிலிருந்து பல்கேரியாவிலுள்ள ஸ்ட்ரம்னிட்ஸா என்னும் பட்டணம் வரையில் நேசத் துருப்புகளுக்கும் பல்கேரியர்களுக்கும் கடுமையான யுத்தம் நடக்கிறது.

12-தேதி.

ப்ரிட்டிஷ் துருப்புகள் ஸெர்வியாவில் டோரியனுக்கு வடக்கிலுள்ள ப்ரதேசத்தைக் கைப்பற்றியிருக்கின்றன. ஆஸ்ட்ரியர்கள் மாண்டிநிக்ரோவின் ஒரு பெரிய ஸைன்யத்தை நோவிபஜாருக்கு 33-மைல் தூரம் வரையில் வந்திருக்கிறார்கள்.

13-தேதி.

ஸெர்வியர்கள் மேற்குப்பக்கமாய் ஒன்று சேரப்பின் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

15-தேதி.

ஸெர்விய துருப்புகள் மிட்ரோவிட்ஸாவை நோக்கிப் பின்வாங்கிப் போகின்றன. பல்கேரியர்கள் விலிஸூக்குத் தென்மேற்கில் ஸெர்னு நதியின் மேற்குக் கரையில் ப்ரெஞ்ச் துருப்புகளைத் தாக்கினதில் அவர்கள் தோற்றுப்போனார்கள்.

16-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் நிஷூக்கு 17-மைல் தென்மேற்கிலுள்ள ப்ரோகுப்ல்ஜி யென்னும் ஊருக்கு வந்திருக்கின்றன. பல்கேரியர்கள் உஸகப்புக்கு மேற்கில் உள்ள டிடோலா என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்களாம். அவர்கள் ஸெர்னு நதியின் இடது கரையில் ப்ரெஞ்ச் துருப்புகளைத் தாக்குகிறார்கள்.

17-தேதி.

ஆஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகளும் பல்கேரியர்களும் ஸெர்வியர்களை வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகள் நோவிபஜாருக்கு 5-மைல் தூரத்துக்குள் வந்துவிட்டன. ஸெர்னு நதியின் இடதுகரையில் பல்கேரியர்கள் ப்ரெஞ்ச் துருப்புகளால் தோற்கடிக்கப்பட்டார்கள். ஸலோனிகாவில் ...ட்டிஷ் துருப்புகளும் ப்ரெஞ்ச் துருப்புகளும் வந்...றங்கிக்கொண்டிருக்கின்றன

...தேதி.

...ஸ்ட்ரோ - ஜெர்மன் துருப்புகள் ஸெர்...

...வசமாயிரு... ...டிருக்கின்...

மேற்கில் ஸெர்னுநதியின் இடது கரை... கள் ப்ரெஞ்ச் துருப்புகளோடு 3-ந... செய்து பிறகு சண்டை செய்வதை... கள்.

20-தேதி.

பல்கேரியர்கள் ஸ்ட்ரம்னிட்ஸாவில் ... புகளால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

ஸெர்வியர்கள் மொனஸ்டரை நோ... கிறார்கள். மொனஸ்டரிலுள்ள ஜனங்... விட்டு விட்டுப் போகிறார்களாம். பல்... டினுவுக்கு 12-மைல் தூரத்துக்கு வந்து...

22-தேதி.

ஆஸ்ட்ரோ-ஜெர்மன் துருப்புகள் ப... முழுவதையும் இப்போது கைப்ப... ஜெர்மானியர்கள் நோவிபஜாரையு... கைப்பற்றியிருக்கிறார்கள்.

23-தேதி.

இபார் பள்ளத்தாக்கில் முக்யமா... யங்களுக்குப் பின்னுலுள்ள பா... னது மிட்ரோவிட்ஸாவை நோக்கி... டது. ஆஸ்ட்ரியர்கள் மாண்டிநிக்... செய்து வருகிறார்கள். பல்கேரிய... தென்கிழக்கிலும் முன்சென்று வருகி...

24-தேதி.

மிட்ரோவிட்ஸாவுக்கு வடக்கிலும் வடக்கிலும் வடகிழக்கிலும் ஜெர்மா... யர்களுடைய ஸைன்யங்களைத் ... தள்ளியிருக்கிறார்களாம். ப்ரிஷ்ட... கில் பல்கேரியர்கள் ஸெர்வியர்க... ளாம்.

25-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் நோவிபஜாருக்... வியர்களை மாண்டிநிக்ரோ பக்கமாக... டிருக்கிறார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் மிட்ரோவிட்ஸா... கிறார்கள். ஜெர்மானியர்கள் ப... திருக்கிறார்கள். ஸெர்விய கவ... ரிக்குப் போயிருக்கிறார்கள்.

26-தே...



KRISHNAGIRI,

1—1—10.

Dear Sir,

I read your "Practical Life" with pleasure. It seems to me a *very interesting and very useful magazine*. I wish you much success in your efforts. Kindly register my name and send me a copy per. V. P. P. from this month and oblige.

Yours,

(Sd.) G. MANICKAM CHETTY.


"நீங்களே நினைத்துப் பாருங்கள்."

நம்மவர்களால் (இந்தியர்) நம் தாய்நாட்டில் (இந்தியா) நம் தேசத்திலுள்ள சுத்தமான கம்பளி ரோமத்தால் நிசவு செய்த "**போர்வைகள்**" அன்னிய நாட்டு கம்பளிப்போர்வைகளைப் பார்க்கிலும் **குளிர்** தாங்கும் சக்தியும், நாணயமும், நேர்த்தியும், அழகும், சரசமுமுள்ளது. சகல நிறங்களிலுமுண்டு 6 முழ நீளம் 3 முழ அகலம் 1-க்கு ரூபா 5-0-0.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.

கேட்லாக் இனமாக அனுப்புவோம்.] Benares City.


**சத்தியவேத பாதுகாவலன், யாழ்ப்பாணம்.**— "**பிழைக்கும் வழி**" என்பது ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதன் பெயர் காட்டுகிறபடி சீவனோபாயத்தைச்சேர்ந்த விஷயங்களையே எடுத்துப்பேசுகின்ற ஒரு பத்திரிகை யாதலால் எல்லா வகுப்பாருக்கும் பிரயோசனமானது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இது தமிழிலே முதன் முதலாக வந்த எடுப்பு என்றெண்ணுகிறோம். இந்த நிரையிலே வேறு பத்திரிகைகள் இதுவரையிலே தோன்றியதில்லை என்பதே எமது அபிப்பிராயம்.


**The Complete Letter Writer** 2nd Edition Revised and Enlarged.

**BY HARI CHARAN DAS.** Price Re. 1. *(Full Cloth, Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

*To be had of*—M. L. DAS & CO., *122, Baitakkana Road, Calcutta.*

"முதல் தேவை யில்லை."

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

தென் இந்தியா முழுவதிலும் எங்கள் பட்டு பீதாம்பரங்கள், வெண்பட்டு தினுசுகள், உருத்திராக்ஷம், கஸ்தூரி, பால் பெருங்காயம் முதலிய தினுசுகளுக்கு ஆர்டர் வாங்கி அனுப்ப சுறுசுறுப்பும், வல்லமையுமுள்ள "**ஏஜெண்டுகள்**" தேவை. போதுமான கமிஷன் கொடுக்கப்படும். விபரங்கள் எழுதி தெரிந்துகொள்ளவும்.

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீ காசி.

Benares City.


**THE MADRAS MAIL.**—There is no other Tamil periodical in this Presidency which is designed on these lines and which makes the discussion of agricultural industrial, commercial and economic topics, its chief nature.

**THE HINDU.**—We have much pleasure in welcoming to the ranks of Indian Vernacular Periodical Literature, this new, interesting and very originally designed and excellently executed Tamil monthly, edited and published by G. A. Vaidya Raman, B.A. Mr. Vaidya Raman possesses rare qualifications for the educative work which he has undertaken to do by means of this novel magazine. The "Practical Life" is amply justified by the assortment of matters in the very opening number which is before us, and there need not be the slightest doubt, that the original aim and object in view will be lost sight of in the succeeding numbers. It is to be devoted mainly to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education. Popular interest in agricultural, industrial, commercial and economic matters is next to nothing. If it is so among the English educated classes, how much more is it among the masses? It is such an interest that the magazine apparently aims at creating and developing.

**லோகோபகாரி.**—"பிழைக்கும் வழி" என்பது இச்சென்னையில் ஜி. ஏ. வைத்தியராமன் கம்பெனியாரால் நடத்தப்பட்டுவரும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இப்பத்திரிகையானது தன் பெயரளவில் நில்லாது உண்மையிலேயே மனித சமூகத்தாரின் பிழைப்புக்கு ஏதுவாக விருக்கும் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் கல்வி, உலகவிவகாரம் முதலியவைகளை ஆரம்பித்துக்கல்வி பயின்ற சிறுவர் சிறுமிகளும் படித்தறியத்தக்க எளிய தமிழ் நடையில் விளக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் இது போன்ற பத்திரிகை வெளிவந்ததில்லை யென்றே சொல்லவேண்டும். இதற்கு வருஷசந்தா ரூபாய் நான்காக இருந்தபோதிலும், இப்பத்திரிகையில் அமைந்துள்ள விஷயங்களின் விசேஷமும் அபிவிருத்தியின் நோக்கமுமாக இதன் சொந்தக்காரர் காட்டும் அக்கரையும் பார்த்தறிபவர்களுக்கு அத்தொகை பெரிதாகமாட்டாது. இப்பத்திரிகை நம் தமிழ் நாட்டாரால் பெரும்பாலும் ஆதரித்து வரப்படும் என நம்புகிறோம்.

**கோயமுத்தூர் கலாநிதி.** நல்ல கடிதத்தில் நல்ல பதிப்பாகப் பதிப்பித்த இவ்வளவு உபயோகமான பத்திரிகையின் வருஷ சந்தா ரூபாய் நான்காகையால், அதிக லோபத்துவ முள்ளவர்களும் வாங்கி வாசிக்கக் கூடியதாகவும், இருக்கிறது.

**ஜனானுகூலன்.**—"பிழைக்கும் வழி," பெயருக்குத் தக்கவாறு சங்கதிகளு மிருக்கின்றன. இதில் விவசாயம் வர்த்தகம், கைத்தொழில், கல்வி, சாஸ்திரம், வைத்தியம், சிறுவர்க்கான சமாசாரங்கள், இன்னும் பல தேச வர்த்தமானங்கள் அடங்கி யிருக்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகையை யாவரும் வாசித்துவரில் பல நன்மைகளை அடையலாம்.


## பார்வைத்தோட்டம்

**நல்ல செடிகள் வேண்டுமா !**
**புது விதைகள் வேண்டுமா ! !**

சேலம் ஒட்டுமாங்கன்றுகள், அநேகஜாதி பழவகை ஒட்டு செடிகள், புஷ்பம், காய்கறி விதைகளின் 1909-ம் வருஷத்திய புதியக் கேட்லாக் அரையணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ச கோ. இ. அப்துல் ரகிமான் சாயபு,
விதைகள், மாங்கன்று வியாபாரி, **சேலம்.**

## Dr. H. L. Batliwalla, Dadar, Bombay.

| | |
|---|---|
| குளிர் ஜுரத்திற்கு மாத்திரைகள் | 1-0-0 |
| விஷபேதிக்கு | 1-0-0 |
| நரை மயிருக்கு | 3-0-0 |
| பலஹீனத்திற்கு மாத்திரைகள் | 1-8-0 |
| பல் பொடி | 0-4-0 |
| சயை ஒரே நாளில் சொஸ்தப்படுத்த புட்டி | 0-4-0 |

எங்கும் விற்கப்படுகிறது.

CLASSIFIED COMMERCIAL DIRECTORY.

## வியாபார பகுதி விலாசங்கள்.

COLOUR PENCIL MANUFACTURER.
**கலர் பென்சில் செய்கிறவர்கள்.**
K. P. RAMASWAMY IYER,
15, Solayappa Mudali Street,
*KUMBAKONAM.*

SILK MERCHANTS.
**பட்டு வியாபாரிகள்.**
**பட்டு பீதாம்பர கம்பெனி,**
காசி (பனாரீஸ்.)

BRUSH MANUFACTURE.
**புருஷ் செய்தல்.**
B. V. K. CHETTY & CO.,
No. 22, Broadway, Madras.

## விளம்பரம்.

**ஜோதிப் பிரகாச எண்ணெய் 1-புட்டி இனாம் !**
**பரிமள ரோமசங்காரி ஸோப்.**

தேகத்தின் எந்தப்பாகத்திலும் இந்த ஸோப்பை உபயோகித்தால் யாதொரு கெடுதியுமின்றி ரோமங்களைச் சங்காரஞ்செய்துவிடும். 6-மீஸத்திற்கு உபயோகிக்கக்கூடிய கட்டி 1-க்கு விலை 6-அணா; டஜன் ரூ. 4, வி. பி. சார்ஜ் 1-முதல் 3-க்கு 4-அணா.

**பரிமள ரோமப் பிசின்.**

இப்பிசின் நரைத்த மயிரை இரண்டு நிமிஷத்துக்குள் பழையபடி கறுப்பாக்கிவிடும் கெடுதி செய்யக்கூடியது ஒன்றும் இதில் கிடையாது. 1-புட்டி 3-மீஸத்திற்குப் போதுமானது. டைரக்ஷன் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு விலை 12-அணா; டஜன் 1க்கு ரூ. 8. 1-முதல் 3-புட்டிக்கு வி. பி. சார்ஜ் அணா 4.

☞ சுறுசுறுப்பும் பழக்கமுமுள்ள ஏஜண்டுகள் தேவை. தேவையுள்ளோர் ¼ அணா லேபிலுடன் அப்ளிகேஷன் அனுப்பவும்.

J. SUR & Co.,
No. 233/1, Upper Chitpore Road,
P. O. P. Bagh-bazaar, Calcutta.


162070